Koviloor Digital Library

2/3

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

KOVILOOR ANDALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

சுத்தசைவராகிய

ஸ்ரீ பரஞ்சோதிமாமுனிவர்

அருளிச்செய்த

திருவிளையாடற்புராணம்

கூடற்காண்டம், திருவாலவாய்க்காண்டம்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 3138

கயிலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனமகாவித்துவான்

ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

மாணாக்கராகிய

சென்னைக் கவர்ன்மெண்டு நார்மல்பாடசாலைத் தமிழ்ப்புலவராயிருந்த

சோடச அவதானம்

தி-சு. சுப்பராயசெட்டியாரால்

தாம் இயற்றிய உரையோடு

சென்னை:

பா. சோமையரவர்களது

ஆதிகலாநிதியச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.


சர்வசித்து ௵ மேடரவி. 1947


Registered Copy-right.

விலை ரூபா-எ, அணா-அ.

Koviloor Digital Library

Koviloor Digital Library






Koviloor Digital Library

நான்மாடக்கூடல் திருவிளையாடல்-

Koviloor Digital Library



ானவைநலம்புனல்கனற்பின்-காற்றுமெனலாம்" என்பதில் "போற்றுமிவைபித்த மியல்பாமிவைபுணர்ப்பே" எனவும் "ஒத்துறுபுணர்ச்சியி னுருக்கள்பலவாகும்" எனவும் "நிலம்புனலனல்காலா ணிறுத்திடுமழிக்குமாக்கும்-பலந்தருமொருவனிங் குப்பண்ணிடவேண்டாவென்னில்" எனவும் "பூதமானவைபித்தமென்று புகன்ற தென்னையுருக்களாய் - ஆதலோடழிவாகுமாதலினுக்குவோரவர்வேண்டிடும்" எனவும் "நூறுகாயடைகூடும்வேறொருவன்றனுலெனநோக்கிநீ - தேறுபூதசெயற்கும் வேண்டுமொருத்தனென்றுதெளிந்திடே" எனவும் "இலங்கியதோற்றநிற்ற லீறி வையிசைதலாலே - நலங்கிளர்தோற்றநாசந் தனக்கிலாதான்வேண்டும்" எனவும் லோகாயதன்கூற்றும், மறுப்பும்; சங்கற்பநிராகரணத்தில் "செயலுறுபூட்டைப் பலவகையுறுப்புமிலங்கியதொழில்போல் - ஐம்பொறிபுலன்களின்புறமன்றே" எனவும் "அஞ்சுமொருகாற்றுஞ்சாதறிற்கழிவென்" எனவும் "ஒன்றின்பயனன்றியொன் யாதால்" எனவும் சங்கிராந்தவாதியின்கூற்றும், மறுப்பும் "மூலம்புரியட்டக கிர்தியாகிமூன்றாய்ப்பிரகிருதி - நூலதுக்கம்பரமாயச்சுத்தபுருடன்சந்நிதியில் - லன்சேட்டைபுரிந்துலகம்யோனிபலவாய்ப்பரந்தொடுங்கும்" எனவும் "இரண்டி யும் - அருடனுருவாய்ச்சேட்டிப்பித்தறியுமமலனரனேயாம்" எனவும் சாங்கிய கூற்றும், மறுப்பும் "இனையவாய்தலினிகழ்தருபயனவை - அந்தக்கரணமுந்தியு ணர்ந்திடும் - இவையகல்வுழிஇயைம்பொறிபுலனிகழா" எனவும் "மனுதியுமெய்யு யிர்ச்செயலுந் - நுனக்கிலை" எனவும் சங்கிராந்தவாதியின்கூற்றும், மறுப்பும் "கண் ணுலோசையுங்கந்தமுங்கருத் - ஒண்ணுதென்னு முணர்வுடைமையினுல் - அவ்வப்பு ன்கட்கவ்வப்பொறிகள் - செவ்விதினிறுவிச்சேர்ந்தவைறுகரும்" எனவும் "அறி திடுமான்மாவொன்றையொன்றினுலறிதலாறும் - அறிந்தவைமறத்தலாறுமறிவிக் கவறிதலானும் - அறிந்திடுந்தன்னையுந்தா னறியாமையானுந்தானே - அறிந்திடுமறி வொன்றுமறிவிக்கவறிவனன்றே" எனவும் ஈஸ்வரவவிகாரியின்கூற்றும், மறுப்பும்; மயைமாமாயைக்கு அப்பாற்பட்டுநின்ற நிட்களசிவத்தினிலக்கணம் "அப்பாலைக்கப் லைக்கப்பாலானையாரூரிற்கண்டடியேனயர்த்தவாறே" என்றும் உண்மைத்திருவா ம் ஆகிய இவ்வேதுக்களால் உணர்க. "எவையுந்தா றாய்" என்ற மாயாவாதியின் றை மறுத்து நிட்களசிவத்தினிலக்கணத்தை வற்புறுத்தியதெனக் கொள்ளலும் று. இதுபிறர் தம்மதமேற்கொண்டு களைவு என்றுமதம். "அல்லையீதல்லையீதெ மறைகளுமன்மைச் - சொல்லினுற்றுதித்திளைக்கு மிச்சுந்தரநாடற்கு" என முன் க்கூறியசெய்யுளின்கருத்தும் இதுவேயெனக்கொள்க. (க)

சிவசத்திவணக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்

திருமகள்வலக்கண்வாக்கின்சேயிழையிடக்கண்ஞானப்
பெருமகணுதற்கணாகப்பெற்றுவான்செல்வங்கல்வி
யருமைவீடளிப்பாள்யாவளவளுயிர்த்துணைவன்காண
வொருமுலைமறைத்துநாணியொசிந்தபூங்கொம்பினின்றுள்.

(இ-ள்.) திரு மகள் வலக் கண் - பூமகளே வலக்கண்ணும், வாக்கின் சேயி ழை இடக்கண் - நாமகளே யிடக்கண்ணும், ஞானப் பெருமகள் நுதற் கண் ஆகப் பெற்று - பராஞானமாதே நெற்றிக்கண்ணுமாகப்பெற்று, வான் செல்வம் கல்வி அரு மை வீடு அளிப்பாள் யாவள் - பெருஞ் செல்வத்தையுங் கல்வியையும் பெறுதற்க ரிய மோட்சத்தையும் கொடுப்பவள் எவள், அவள் - அவ்விறைவியே, உயிர்த்துணை

Koviloor Digital Library

வன் காண - தனதுயிர்போன்ற தலைவனாகிய சிவபெருமான் நோக்கியருள, ஒரு முலை மறைந்து நாணி ஒசிந்த பூங் கொம்பின் நின்றாள் - மூன்று திருத்தனங்களில் ஒரு திருத்தனமறைந்து நாணமிக்கூர்ந்து துவண்ட பூங்கொம்பைப்போல நின்றரு ளினாள்.

"பரையாதிவிருப்பறிவுதொழிலாகி யுலகமெலாம்படைத்தருக்காத்தா - வரை யாதுதுடைத்துமறைத்தருளியவை நின்றுந் தன்வடிவுவேறாய் - உரையாதி பொரு ள்கடந்தவொருமுதல்வி" எனக்கூறியவாறு நின்ற சிற்சத்தி படைப்பாதித் தொழி கட்கு மனோன்மனிமுதலிய சத்திகளாகப் பல வேறுவகைப்பட்டு நிற்றலால் இவை பற்றிப் பூமகளை இச்சாசத்தியாக வுபசரித்து ஆன்மாக்களுக்குக் கன்மகழியும் வண்ணம் அதனை நுகர்விக்கும் நிலைத்தொழிலும், கன்மவொப்பு வருவிக்க மலங்களை முதிர்விக்கு மறைப்புத்தொழில் அந்நிலைத்தொழிலு ளடங்குதலால் அம்மறைப்பு தொழிலும் ஆகிய இருதொழில்களையும் ஒருசேர வுடைமை நோக்கித் திருமகளை லக்கண் எனவும், நாமகளைக் கிரியாசத்தியாக வுபசரித்து அந்த ஆன்மாக்களுக் கன்மங்கழியுமுகத்தால் மலபாகம்வரச்செய்யும் படைப்புத்தொழிலொன்றேயுடை மைநோக்கிக் கலைமகளை யிடக்கண் எனவும், பந்தம் விடுவிக்கும் அருட்டொழி அதனுளடங்கும் இளைப்பாற்றல் என்னும் சங்காரத்தொழிலும் ஆகிய இத்தொழி லையும் ஒருசேரவுடைமைநோக்கி ஞானமாதை நுதற்கண்ணெனவும், இவ்வைந் தொழில்களையும் ஆன்மாக்களுக்கு மலபாகம்வருவித்து உய்வித்தற் பொருட்டுடைய முதல்வி ஒருமுலைமறைந்து நின்றவளாதலாலவளைநோக்கி வான் செல்வங் கல்வி-- ருமைவிடளிப்பாள் யாவளவள் எனவுங்கூறினார். படைப்பு முதலிய ஐந்தொழில் லையும் அவற்றால்வரும் பயன்களையும் "அழிப்பிளைப்பாற்றலாக்கமவ்வவர்கன்மெ ல்லாம் - கழித்திடற்குகரச்செய்தல் காப்பதுகன்மவொப்பிற் - றெழித்திடன்மலங் ளெல்லாமறைப்பருள்செய்திதானும்-பழிப்பொழிபந்தம்விடு பார்த்திடினருளே லெ ல்லாம்" எனவருஞ் சித்தியாருட்காண்க. (௬

நூல்.

கதிர்மதிமிலைந்தவேணிக்கண்ணுதல்வருணனேய
வதிர்கடல்வறப்பச்செய்தவாடலீதனையானேய
முதிர்மழையேழின்மேலுமுன்னைநான்முகிலும்போக்கி
மதுரைநான்மாடக்கூடலாக்கியவண்ணஞ்சொல்வாம்.

(இ-ள்.) கதிர் மதி மிலைந்த வேணி கண்ணுதல் - விளங்குஞ் சந்திரனை யணிந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், வருணன் ஏய அதிர் கடல் வறப்ப செய்த ஆடல் ஈது - வருணனேவிய ஒலிக்குங் கடல்வற்றச்செய்தருளிய திருவிளையாடலிது, அனையான் ஏய முதிர் மழை எழின்மேலும் முன்னை நால் முகிலும் போக்கி - அவ்வருணனேவியருள்முதிர்ந்த எழுமேகங்களின்மேலும் முன்புபோல புட்கலாவர்த்தமுதலிய நான்குமேகங்களையும்செலுத்தி, மதுரை நான்மாடக் கூட லாக்கியவண்ணம் சொல்வாம் - மதுரையை நான்மாடக்கூடலாகச்செய்தருளியதிருவிளையாடலை இனிக்கூறுவாம்.

சரணடைந்தோரைக் காக்குங் கருணைக்கடல் என்றுங் கருத்துத்தோன்றக் கதிர்மதிமிலைந்தவேணிக்கண்ணுதல் என்றார். இது கருத்துடையவணி. ஏவிய ஏயதெனத் திருத்தல். (௧.

Koviloor Digital Library

எற்றுதெண்டிரைநீர்ச்சேர்ப்பன்றன்செயலிழுக்கிநாண
முற்றிருகண்ணுஞ்சேப்பவுடன்றெழுகோபச்செந்தீப்
பற்றிடவாகம்வெம்பிப்பரவையும்யாறும்வெந்து
வற்றிடவெகுண்டுநின்றான்மானமும்வலியுங்குன்றான்.

(இ-ள்.) எற்று தெண் திரை நீர் சேர்ப்பன் தன் செயல் இழுக்கி நாணம் உற்று - (கரையொடு) மோதுந் தெள்ளிய அலையையுடைய கடற்றுறைக்கு இறைவனாகிய வருணன் தனதுசெயலுக்குத் தவறுபாடுவந்தமையால் நாணங்கொண்டு, இரு கண்ணும் சேப்ப உடன்று எழு கோபச் செந் தீ பற்றிட - இரண்டு கண்களுஞ் சிவக்கக் கொதித்தெழுந்த கோபமாகிய செவந்தநெருப்புமூள, ஆகம் வெம்பி - உடல்கருகி, பரவையும் யாறும் வெந்து வற்றிட - கடலும் ஆறும் (அத்தீப்பற்றுதலால்) வெந்து வற்ற, மானமும் வலியும் குன்றான் - (தனது) மானமும் வன்மையுமாகிய இவற்றில் சிறிதும் குறையானாகி, வெகுண்டு நின்றான் - கோபித்துநின்றான்.

நெருப்புத் தான்பற்றிய பொருளைக் கருகச்செய்தல் அதற்கு இயல்பு ஆதலால் தன்மையணிதோன்றக் கோபச்செந்தீபற்றிட ஆகம் வெம்பியெனவும், அத்தீ வடவாமுகாக்கினிபோல வுள்ளது என்பதுதோன்றப் பரவையும் யாறு வெந்து பற்றிட எனவும், அடியார்க்கு எளியன் என்பது மேகங்களையேவிய தனது செயலாற்றெளிந்து மீளவுங் கோபங்கொண்டது கன்மவொப்பு வருவிக்க மலங்களை முதிர்விக்கும் இறைவனது திரோதாயிசத்தியா லென்பதுதோன்ற வெகுண்டு நின்றான் எனவுங்கூறினர். இழுக்கி காரணப்பொருளில்வந்த வினையெச்சம். (௪)

நளிர்புனன்மதுரைமூதூர்நாயகனாடறன்னைத்
தெளிகிலனாகிப்பின்னுஞ்செழுமுகிலேழுங்கூவிக்
குளிர்கடல்வறந்ததென்னக்குடித்தெழுந்திடித்துப்பெய்யா
வொளிவளர்மதுரைமுற்றுமொல்லெனக்களைமினென்றான்.

(இ-ள்.) நளிர் புனல் மதுரை மூதூர் நாயகன் ஆடல் தன்னை தெளிகிலனாகி - பெரிய நீர்சூழ்ந்த மதுரையென்னும் தொன்று தொட்டுள்ள திருநகரில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலைச் சிறிதும் தெளியானாகி, பின்னும் செழு முகில் ஏழும் கூவி - மீளவும் குறைவில்லாத எழுமேகங்களையும் அழைத்து, குளிர் கடல் வறந்தது என்ன குடித்து எழுந்து இடித்து பெய்யா - குளிர்ந்த கடல் சுவறியதென்று கண்டோர்சொல்ல நீர்குடித்து மேலெழுந்து இடித்துப் பெய்து, ஒளி வளர் மதுரை முற்றும் ஒல்லெனக் களைமின் என்றான் - புகழ்மிக்க மதுரையென்னுந் திருநகர்முழுமையும் விரைந்து சென்று அழியுங்களென்று ஏவினான்.

ஒளிபோலப்புகழும் பலருமறிய நிற்லால் புகழை ஒளியென்றது உவமையாகுபெயர். (௫)

பொள்ளெனமேகமேழும்புகுந்துபார்தெரியமுந்நீர்ப்
பள்ளமும்வறப்பமுற்றப்பருகிமெய்சுருகியின்னித்
தெள்ளருந்திசையும்வானுஞ்செவிடுறப்பிலமும்பாரும்
விள்ளமால்வரைகளெட்டும்வெடிபடமேருச்சாய.

(இ-ள்.) மேகம் எழும் பொள்ளென புகுந்து - எழுமேகங்களும் விரைந்து கடலிற்சென்று, பார்தெரிய-நிலந்தோன்ற, முந்நீர் பள்ளமும் முற்ற வறப்பபருகி-

Koviloor Digital Library

டலாகியபள்ளமும் முற்றவற்ற நீர்குடித்து மேல் எழுந்து, மெய் கருகி மின்னி- உடல்கருகி மின்னல்வீசி, தென்னரும் திசையும் வானும் செவிடு உற - (கட்புலன்களுக்குத்) தோன்றுதற்கரிய எட்டுத்திசைகளும் வானுலகமும் செவிடுபடவும், பிலமும் பாரும் விள்ள - பாதலமும் நிலவுலகும் பிளவுபடவும், மால்வரைகள் எட்டும் வெடிபட - பெரிய அட்டகுலபர்வதங்களும் அள்படவும், மேருசாய - மகமேரு வேர்பறியவும்.

சேய்மைக்கண்ணதாதலால் தென்னருந்திசை என்றார். (௬)

ஊழிநாள்வெடிக்குமண்டகடாகத்தினொலிபோலார்த்துப்
பாழிவாயுருமுவீழப்பணாடவிமணிகள்சிந்தி
யாழிநீர்ஞாலந்தாங்குமராவுடனெளியத்திக்கிற்
குழிமால்யானைநின்றநிலைகெடத்துளுக்கங்கொள்ள,

(இ-ள்.) ஊழிநாள் வெடிக்கும் அண்ட கடாகத்தின் ஒலிபோல் ஆர்த்து பாழிவாயுருமு வீழ - ஊழிக்காலத்தில் பிளவுபட்டுடையும் அண்டகடாகத்தின் ஒலிபோலக் கோஷித்துப் பெரிய இடியேறுகள்விழவும், ஆழி நீர் ஞாலம் தாங்கும் அரவபணாடவி மணிகள் சிந்தி உடல் நெளிய - கடல்சூழ்ந்த உலகைச்சுமக்கும் ஆதி சேடன் ஆயிரம்படங்களிலுமுள்ள இரத்தினங்களை (திக்குகள்தோறும்) சிதறி நிலை பெயராத தனது உடலை நெளிக்கவும், திக்கில் குழிமால் யானை நின்ற நிலைகெட துளுக்கம் கொள்ள - திக்குகள்தோறும் நின்ற முகபடாத்தையுடைய பெரிய அட்டகஜங்கள் தாம் கலங்காது நின்ற நிலைகெடும்படி நடுக்கங்கொள்ளவும்.

நெளிய முதனிலை திரியாதவந்த பிறவினை வினையெச்சம் " குடிபொன்றி " எனவருதலிற்காண்க. (௭)

வெள்ளியநிறம்பூத்தமுழவெனவிங்குகாய்போற்
றெள்ளியவாலிசிந்தத்திரண்டதிண்பளிக்குத்தூண்போ
லொள்ளியதாரைசோரவும்பர்மீன்கணங்களோடுந்
துள்ளியதிரையிலாடுமீன்கணந்துடித்துவீழ.

(இ-ள்.) வெள்ளிய நிறம்பூத்த முழவு என விங்கு காய்போல் தெள்ளிய ஆலி சிந்த - வெண்ணிறத்தையுடைய சித்தியைப் புறத்திற்பூத்த மத்தளத்தைப்போலப் பருத்தபூசணிக்காய்போலத் தெளிந்த மழைத்துளிகளைச்சிந்தவும், திரண்ட திண் பளிக்குத் தூண்போல் ஒள்ளிய தாரை சோர - திரண்ட திண்ணியபளிங்காலாகிய தூண்களைப்போல ஒளிவாய்ந்ததாரைகள்சோரவும், உம்பர் மீன் கணங்களோடும் துள்ளிய திரையிலாடும் மீன்கணம் துடித்து வீழ - மேலிடத்துள்ள நக்ஷத்திரங்களாகிய மீன்கூட்டங்களோடும் துள்ளிச்செல்லும் அலைகளிலாடும் மீன்கூட்டங்கள் தாவிவிழவும்.

வெள்ளியநிறம்பூத்த என்னுங் குறிப்பால் காய் - என்றதைக் கல்யாணபூசணிக்காய் எனக்கொள்க. (௮)

ஆர்த்தெழுகொண்மூவேழுஞ்சராசரமனைத்துஞ்சூழ்ந்து
போர்த்தனஞாலமுன்னைப்புக்கதோர்வடிவங்கொண்ட
நீர்த்தனில்விசும்பும்பாருந்திசைகளுந்தெரியாவாகப்
பார்த்தகண்ணுழையாவாகப்பரந்திருள்கான்றவன்றே.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆர்த்து எழுகொண் மூ ஏழும் சராசரம் அனைத்தும் சூழ்ந்து போர்த்தன - கோஷித்து மேலெழுந்த சப்தமேகங்களும் இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய எல்லா உயிர்களையும் சூழ்ந்து புறத்திற்போர்த்தன, ஞாலம் உண்ண புக்கது ஓர் வடிவம் கொண்ட தீர்த்தனில் - உலகமுற்றும் அழிக்கும்படி சென்ற ஓர் திருவுருவத்தைக் கொண்டருளிய பிரளயகால உருத்திரமூர்த்தியைப் போல, விசும்பும் பாரும் திசைகளும் தெரியா ஆக பார்த்தகண் நுழையா ஆக பரந்த இருள் கான்ற - விண்ணுலகமும் நிலவுலகமும் எட்டுத்திக்குகளும் மறைபடவும் பார்த்தகண் இருள் நெருக்கத்தாற் செல்லாதொழியவும் பரவிய இருளை யம்மேகங்கள் வெளிப்படுத்தின.

இல் ஒப்புப்பொருளில்வந்த ஐந்தனுருபு. (௯)

பைஞ்சுடரெறிக்கும்பச்சைகாரொளிபரப்புநீலம்
புஞ்சவாளுடுக்களன்னநித்திலம்பொன்னங்குப்பை
செஞ்சுடர்மணிகடுப்புச்சிதறுவகணவரோடும்
விஞ்சையர்மகளிரூடிவெறுத்தெறிகலன்கள்போல.

(இ-ள்.) பைஞ்சுடர் எறிக்கும் பச்சை - பசியகிரணங்களைவீசு மரகதங்களையும், கார் ஒளி பரப்பு நீலம்-கரிய ஒளியைவீசும் நீலங்களையும், புஞ்சம் வாள் உடுக்கள் அன்ன நித்திலம் - திரண்ட ஒள்ளிய நக்ஷத்திரங்களையொத்த முத்துகளையும், பொன்னங்குப்பை - பொற்குப்பைகளையும், செஞ்சுடர் மணிகள் துப்பு - செவந்த கிரணங்களையுடைய பதுமராகங்களையும் பவளங்களையும், விஞ்சையர் மகளிர் கணவரோடும் ஊடி வெறுத்து எறிகலன்கள் போல சிதறுவ - விஞ்சைஸ்திரீகள் தத்தமக்குரிய கணவர்களோடும்பிணங்கி வெறுத்துக்கழற்றிவீசின ஆபரணங்களைப்போல (எழுமேகங்களும் திசைகள்தோறுஞ்) சிந்தின.

மரகதம், நீலம், முத்து, பொன், பதுமராகம், பவளம், பொன் இவைகளைச் சொரிந்தன என்றமையால் எழுமேகங்களுள் சம்வர்த்தம், புட்கலாவர்த்தம் என்னும் இரண்டுமேகங்களும் எனக்கொள்க. (௧௦)

கடியகாலுதைப்பப்பெய்யுங்கடுஞ்செலவெழிலிமாடக்
கொடியநீணகரைச்சூழ்ந்துபுதைத்தலுங்கோலொன்றோச்சிப்
படியெலாம்புரக்குங்கோனுநகருளார்பலருஞாலம்
மடியுநாளிதுவேயென்னுமயங்கினாருயங்கினாரே.

(இ-ள்.) கடியகால் உதைப்ப கடும் செலவு பெய்யும் எழிலி - அச்சத்தைத் தரும் பெருங்காற்றடித்துத்தாக்க விரைந்துசெல்லும் செலவினையுடையவாகிப் பெய்யாநின்ற எழுமேகங்களும், கொடிய மாடம் நீள் நகரை சூழ்ந்து புதைத்தலும் - கொடிகளையுடைய மாடங்கள் நெருங்கிய அகன்ற மதுரைநகர்ப்புறத்தைச்சூழ்ந்து போர்க்க, கோல் ஒன்று ஓச்சி படி எல்லாம் புரக்கும் கோனும் நகர் உள்ளார் பலர் உம் - ஒப்பில்லாத செங்கோலைச்செலுத்தி உலகமுற்றும் பாதுகாக்கும் அபிடேகபாண்டியனும் அந்நகரிலுள்ளோர் எவரும், ஞாலம் மடியுநாள் இதுவே என்னு மயங்கினார் உயங்கினார் - உலகமுற்றும் அழியும் சங்காரகாலம் இக்காலமே என்று மயங்கிச்சோர்ந்தார்கள்.

கடிய, கொடிய உரிச்சொல்லடியாகவும் பொருளடியாகவும்பிறந்த குறிப்புவினைப்பெயரொச்சங்கள். கடிச்செலவு - கடுஞ்செலவு உரிச்சொற்றிரிபு. (௧௧)

Koviloor Digital Library

கண்ணுதன்மூர்த்திதானேயின்னமுங்காக்குமென்றுப்
புண்ணியநகராரோடும்பொருக்கெனக்கோயிலெய்தி
விண்ணிழிவிமானவாழ்க்கைவிடையவனடிக்கீழ்வீழ்ந்தா
னண்ணலாராடன்முன்னுமறிந்துகைகண்டவேந்தன்.

(இ-ள்.) அண்ணலார் ஆடல் முன்னும் அறிந்து கைகண்ட வேந்தன்-(தனது நிமித்தம்) சோமசுந்தரக்கடவுள் செய்தருளிய திருவிளையாடலை முன்னமேதெரிந்து கைவந்த அபிடேகபாண்டியன், கண்ணுதல் மூர்த்தி தானே இன்னமும் காக்கும் என்று-நெற்றியின்கண் அழற்கண்ணையுடைய அச்சோமசுந்தரமூர்த்தியே இன்னமுங் காத்தருளுவாரென்று, புண்ணியநகராரோடும் பொருக்கென கோயில் எய்தி - புண்ணியதலமாகிய மதுரையிலுள்ளோரோடும் விரைந்து திருக்கோயிலையடைந்து, விண் இழி விமானவாழ்க்கை விடையவன் அடிக்கீழ் வீழ்ந்தான் - விண்ணுலகினின்றும் வந்த இந்திரவிமானத்தின்கண் பெருவாழ்க்கையையுடைய அச்சோமசுந்தரக்கடவுளினுடைய திருவடிக்கீழ்த் தண்டாகாரமாக வீழ்ந்தான்.

மேகங்க ளொருசேரப் பெய்தலைநோக்கி இது ஊழிக்காலமோ என்று சிறிது மயங்கியபாண்டியன் இடுக்கண் யாதவரினும் அதனைச்சென்று முறையிடுதற்கு முன்னே யொழிக்கும் இறைவன் ஒருவன் நமக்கு உளன் என்பதை முன்னமேதெரிந்துணர்ந்தவன் ஆதலால் அண்ணலாராடல்முன்னே யறிந்துகைகண்டவேந்தன் எனவும், அவ்விறைவன் தனது குறையை முற்றுந் தவிர்த்தொழித்தல் திண்ணம் ஆதலால் அடிக்கீழ் வீழ்ந்தான் எனவுங்கூறினர். (௪௨)

விடையினையாலமுண்டமிடற்றினைகங்கைதாங்குஞ்
சடையினைகூற்றைவென்றதாளினைமேருச்சாபப்
படையினையடியேந்துன்பப்பாட்டினைநீக்கியாளு
நடையினையாகியெங்கணல்லுயிர்காத்தல்வேண்டும்.

(இ-ள்.) விடையினை-இடப வாகனத்தையுடையாய், ஆலம் உண்ட மிடற்றினை-விடமுண்ட ஸ்ரீகண்டத்தையுடையாய், கங்கைதாங்கும் சடையினை - கங்கையைச் சுமந்த சடாமகுடத்தையுடையாய், கூற்றைவென்ற தாளினை - இயமனையுதைத்த திருவடியை யுடையாய், மேருச்சாபப் படையினை - மகாமேருவாகிய விற்படையையுடையாய், அடியேம் துன்பப்பாட்டினை நீக்கி ஆளும் நடையினை ஆகி-அடியேமாகிய எங்களது துன்பமிகுதியைநீக்கியாட்கொண்டருளும் நடையையுடையாயாகி, எங்கள் நல் உயிர் காத்தல்வேண்டும் - எங்களது நல்ல உயிர்களைக் காத்தருளுதல்வேண்டும்.

விடையினை, ஆலமுண்டமிடற்றினை, கங்கைதாங்குஞ்சடையினை, கூற்றைவென்றதாளினை, மேருச்சாபப்படையினை என்றதனால் அபிப்பிராயத்தோடுகூடிய விசேஷியங்களை அரசன் கூறியது குடிகளோடு தான்படுந் துன்பத்தைநீக்கிக் காத்தருளவேண்டும் என்றுங்கருத்தை யுட்கொண்டிருத்தலால் கருத்துடையடைகொளியணி. தேயுப்பிரளயத்திலழிதற்கு அஞ்சியடைந்த அறக்கடவுளை விடையாகக்கொண்டனன் எனவும், திருமால்முதலிய தேவர்களுய்ய ஆலமுண்ட கண்டன் எனவும், உலகம் யாவும் அழிதற்கஞ்சிச் சரண்புகுந்த அயன்முதலியோர்பொருட்டுக் கங்கை தாங்குஞ் சடையன் எனவும், இயமனின்று மார்க்கண்டேயரைத் தப்புவித்தற்பொருட்டுக் கூற்றைவென்ற தாளினன் எனவும், அயன்முதலியபலர்க்கும் திரிபுராதிகள்செய்யுந் துன்பங்களையொழித்தற்பொருட்டு மேருச்சாபப்படையினன் என

Koviloor Digital Library

வும் வருதல் விசேஷியங்கள். இங்குக்கூறிய வரலாறுகள் முன்னர்ப்பல இடங்களி லும் வருதல்காண்க. (கங)

என்னலுந்தென்னர்க்கென்றுமெய்தியவிடுக்கண்டீர்க்கு
முன்னவன்முன்போனான்குமுகிலையுநோக்கியின்ன
தொன்னகரெல்லைநான்குஞ்சூழ்ந்துநான்மாடமாகி
யிந்நெடுமாரிபேழும்விலக்குமினெனவிடுத்தான்.

(இ-ள்.) என்னலும் - என்று முறையிடவும், தென்னர்க்கு என்றும் எய்திய இடுக்கண் தீர்க்கும் முன்னவன்-பாண்டியர்களுக்கு எப்பொழுதும் வரும் துன்பத்தைத் தீர்த்தலையே கடனாகக்கொண்ட சோமசுந்தரக்கடவுள், முன்போல் நான்கு முகிலையும் நோக்கி - முன்புபோலப் புட்கலாவர்த்தமுதலிய நான்குமேகங்களையும்பார்த்தருளி, இன்னதொல் நகர் நான்கு எல்லையும் சூழ்ந்து நான்மாடமாகி-தொன்றுதொட்டுள்ள இந்த மதுராநகரின் நான்குதிசை எல்லையிலும் புறத்திற்சூழ்ந்து நான்குமாடங்களாகி, இ நெடு மாரி ஏழும் விலக்குமின் எனவிடுத்தான் - இந்த ஏழு பெரியமேகங்களையும் விலக்குங்களென்று ஏவியருளினர். (கச)

வந்துநான்மாடமாகிவளைந்துநாற்றிசையுஞ்சூழ்ந்து
சந்துவாய்தெரியாதொன்றித்தாமொருகுடிலாய்மாடப்
பந்திகோபுரஞ்செய்குன்றங்கால்கள்போற்பரிப்பப்போர்த்த
விந்துவார்சடையோனேயவெழிலிமாநகரமெங்கும்.

(இ-ள்.) இந்துவார் சடையோன் ஏவ எழிலி வந்து-சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் ஏவிய நான்கு மேகங்களும்வந்து, நான்மாடமாகி வளைந்து நாற்றிசையுஞ் சூழ்ந்து - நான்குமாடங்களாகி (இரண்டுயோசனைதூரம்) வளைந்து நாற்றிசையிலுஞ் சூழ்ந்து, தாம் ஒரு குடிலாய் சந்து வாய்தெரியாது ஒன்றி-தாம் ஒருகுடிசையாகிப் பொருந்துவாய் சிறிதும் தெரியாமல் ஒன்றுபட்டு, மாடப்பந்தி கோபுரம் செய்குன்றம் கால்கள்போல் பரிப்ப - மாடவரிசைகளும் கோபுரங்களும் செய்குன்றங்களும் கால்கள்போலச்சுமக்க, மாநகரம் எங்கும் போர்த்த - பெரிய அந்நகர்முற்றும் போர்த்தன. (கரு).

அன்னநான்மாடத்துள்ளுநகருளாரமைச்சர்வேந்தன்
றன்னநாற்கருவித்தானைசராசரம்பிறவுந்தாழ்ந்து
முன்னைநாடனினுமின்பமூழ்கிநன்கிருந்தாருழிற்
பொன்னனாள்பாகன்றாளிற்புக்கமர்ந்திருந்தாரொத்தார்.

(இ-ள்.) அன்ன நான் மாடத்து உள்ளும்-அந்தநான்மாடங்களினுள்ளும், நகருளார் அமைச்சர் - அந்நகரிலுள்ளாரும் மந்திரிகளும், வேந்தன் தன்னநாற் கருவித்தானை - அரசனும் அவனுடைய நான்குசேனைகளும், சராசரம் பிறவுந் தாழ்ந்து-இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமான சரம் அசரங்களும் மற்றுள்ளனவுந் தங்கி, முன்னை நாள் தனினும் இன்பம் மூழ்கி நன்கு இருந்தார்-முன்னாளில் உண்டாகிய இன்பத்தினும் அளவறுத்தற்கரிய இன்பத்திலமுந்தி யிடையூறின்றி இருந்தாராதலால், பொன் அன் னாள்பாகன் தாளில் ஊழின் புக்கு அமர்ந்திருந்தார் ஒத்தார்-உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சிவபிரான் திருவடிக்கீழ் முறைப்படி. இரண்டறக்கலந்தவரையொத்தவராயினர்.

Koviloor Digital Library

வருணன்விட்டகடலை வற்றச்செய்தகாலத்தில் வந்தமகிழ்ச்சியிலும் பெரிதாதலின் முன்னினோன்தவிரும் எனவும், சரியைமுதலிய சிவபுண்ணிய முதிர்ச்சியால் இருவினையொப்பு மலபாகம்வந்து திருவருள்மேலிட்டாற் கூடுவதாதலின் ஊழின் எனவுங்கூறினர். அசைவுருபு பன்மைப்பொருட்கண்வந்த ஆறனுருபு. (கசு)

கழைகெழுவரையினுச்சிகவிழ்கின்றபுயல்போற்கார்சூழ்ந்
திழைமணிமாடத்தும்பரெறிதுளியுடைந்துதுள்ளத்
தழைகடல்வறப்பவாங்கித்தம்முடல்வறப்பப்பெய்து
மழைகளும்வெள்கிநின்றவருணனும்வெள்கின்றான்.

(இ-ள்.) கழைகெழு வரையின் உச்சி கவிழ்கின்ற புயல்போல் - மூங்கில்கள் நெருங்கிய மலையிலுச்சியிற்பெய்கின்ற மழைத்துளிகள் உடைந்து துள்ளுவது போல, கார்சூழ்ந்து - மேகங்கள்சூழ்ந்து, மணி இழை மாடத்து உம்பர் எறி துளி உடைந்து துள்ள - இரத்தினங்களிழைத்த மாடங்களின்மேல் பெய்யும் மழைத்துளிகள் உடைந்து சிதறித்துள்ள, தழைகடல் வறப்பவாங்கி தம் உடல் வறப்பப் பெய்து மழைகளும் வெள்கி நின்ற - பெருக்குறுகடல்வற்றமுகந்து தமதுசரீரங்களின் பசையறச்சொரிந்த மேகங்களும் நாணிநின்றன, வருணனும் வெள்கினான் - (தனதுசெயல் முற்றாமையால்) வருணனும் நாணமேலிட்டு அசைவறநின்றுவிட்டான்.

உவமைக்கும் பொருட்கும் ஒற்றுமையுண்மையால் பொருளின் தொழிலை யுவமைக்கு ஏற்றிக்கூறினும். (கஎ)

நடுங்கினன்கழிந்தவச்சநாணமீதூரமான
மொடுங்கினனுள்ளத்துள்ளோருவகைவந்தெய்தப்பொற்பூந்
தடங்கரைகுறுகாமுன்னோய்தணிந்துபின்றோய்ந்துபாச
மடங்கினன்மடங்காவன்பின்வள்ளலைப்பூசைசெய்வான்.

(இ-ள்.) நடுங்கினன் கழிந்த அச்சம் நாணம்மீதூர மானம் ஒடுங்கினன்-நடுங்கி மிகுந்த அச்சமும் நாணமும் அதிகரிக்கத் தனது மானம் ஒடுங்கி, உள்ளத்துள் ஓர் உவகை வந்து எய்த-தனது மனத்துள்ளே தன்னையறியாத ஒருமகிழ்ச்சி இடையுறுதலைய, பொற்பூந்தடம் கரை குறுகாமுன் நோய்தணிந்து - பொற்றாமரைத்தீர்த்தக்கரையை யடைதற்குமுன்னே நோயினின்றும் நீங்கி, பின்தோய்ந்து பாசம் மடங்கினன் - பின்பு நீராடித் தன்னினின்றுநீங்காத அவிச்சையுங்கெட நீங்கி, மடங்கா அன்பின் வள்ளலைப்பூசைசெய்வான் - நிலைதளராத பேரன்போடு சோமசுந்தரக்கடவுளைப் பூசிக்கத்தொடங்கினான்.

நடுங்கினன் ஒடுங்கினன் மடங்கினன் முற்றெச்சங்கள். (கஅ)

புனிதநீறுடிக்கண்டிபூண்டுவான்கங்கையாதி
வனிதையர்பசும்பொற்கும்பவாசநீர்வடித்துநீட்டப்
பனிமலர்சந்தங்கந்தமணிக்கலம்பசும்பொன்னாடை
யினியனபிறவுமின்றுகற்பகமெடுத்துக்காட்ட.

(இ-ள்.) புனிதம் நீறுடி கண்டி பூண்டு-மாசில்லாத திருநீறணிந்து உருத்திராட்சக்கண்டிகைதரித்து, வான் கங்கை ஆதி வனிதையர் பசும்பொற் கும்பம் வாசம் நீர்வடித்து நீட்ட - ஆகாயகங்கைமுதலிய பெண்கள் பசியபொன்னாலாகிய கல

Koviloor Digital Library

சத்தில் வாசம் ஊட்டிய நீரைவடித்து ஒருபால்தரவும், பனிமலர் சந்தம் கந்தம் மணிக்கலம் பசும் பொன் ஆடை இனையன பிறவும் ஈன்று கற்பகம் எடுத்துக்காட்ட - தண்ணிய மலரையும் சந்தனக்குழம்பையும் வாசனைத்திரவியங்களையும் இரத்தினமழுத்திய பொன்னாபரணங்களையும் பசியபீதாம்பரத்தையும் இவைபோன்ற பிறவற்றையும் பெற்றுக் கற்பகம் ஒருபால் எடுத்துக்கொடுக்கவும்.

கம்மைமுதலியவற்றை முன்னர்க்காண்க. (௧௯)

ஐங்கனியமுதமைந்துகௌவியமமுதுதூபஞ்
செங்கதிர்விளக்கமின்னதேவரான்கொடுப்பச்சேற்க
ணங்கைதன்பதியைப்பூசித்தாயிரநாமங்கூறிப்
பைங்கதிர்முத்தஞ்சாத்தித்தொழுதடிபணிந்துநின்றான்.

(இ-ள்.) ஐங்கனி அமுதம் ஐந்து கௌவியம் அமுது தூபம் செங்கதிர் விளக்கம் இன்ன தேவர் ஆன்கொடுப்ப - வாழைக்கனிமுதலிய ஐந்துகனிகளும் பஞ்சாமிர்தங்களும் பஞ்சகௌவியங்களும் திருவமுதும் தூபமும் செவந்த ஒளியையுடைய தீபமும் ஆகிய இவைகள்போன்ற பிறவற்றைக் காமதேனு ஒருபால் வழங்கவும், சேற்கண் நங்கை தன்பதியை பூசித்து - அங்கயற்கண்ணியார் இறைவராகிய சோமசுந்தரக்கடவுளைப் பூசனைசெய்து, ஆயிரம் நாமம் கூறி பைங்கதிர் முத்தம் சாத்தி தொழுது அடிபணிந்து நின்றான் - ஆயிரந்திருநாமங்களையும் எடுத்துக்கூறி ஒவ்வொரு திருநாமங்களுக்குப் பசிய ஒளிவாய்ந்த முத்துகளைச்சாத்தித்துதித்துத் திருவடியைவணங்கி (அவ்வருணன்) நின்றான்.

ஐந்துகனி-வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி, இவற்றோடுதக்க இரண்டு கனிகளைக் கூட்டிப் பொருள் கொள்க. (௨௦)

அருச்சனையுவந்தவாதியமலனீயாதுவேண்டிற்
றுரைத்தியென்றோதநீர்க்கோனொல்லைதாழ்ந்தொன்றினாலுங்
களைத்திடவரியவிந்தக்கடியவென்வயிற்றுநோய்நின்
றிளைத்தடமாடியின்னேதீர்ந்திடப்பெற்றேனெந்தாய்.

(இ-ள்.) அருச்சனை உவந்த ஆதி அமலன்-(அவன்செய்த) அருச்சனையை விரும்பியருளிய சோமசுந்தரக்கடவுள், நீ வேண்டிற்று யாது உரைத்தி என்று ஓத - நீ விரும்பியது யாது சொல்வாய் என்றுவினவ, நீர் கோன் ஒல்லை தாழ்ந்து - அவ்வருணன் விரைவில்வணங்கி, ஒன்றினாலுங் களைத்திட அரிய இந்தக் கடிய என்வயிற்றுநோய்-மணிமந்திர ஔஷதமுதலியவற்றில் ஒன்றினாலும் நீங்குதலில்லாத இந்தக் கொடிய எனது வயிற்றுநோய், எந்தாய் - என்தந்தையே, நின் திரை தடம் ஆடி இன்னே தீர்ந்திடப் பெற்றேன்-உனது அலைதலையுடைய பொற்றாமரைத்தீர்த்தத்தில் நீராடி இப்பொழுதே தீரப்பெற்றேன்.

அருச்சனை அருள்செய்யும் இறைவனது பணியாய் ஒழுக்கமுதலிய அங்கங்கட்கு அங்கியாய்நிற்றலால் அவனேயதனையேற்று அருள்புரிகின்றவனாதலால் உவந்த ஆதி என்றார் "மனமதுநினையவாக்கு வழுத்தமந்திரங்கள்சொல்ல, இனமலர் கையிற்கொண்டங் கிச்சித்ததெய்வம்போற்றிச், சினமுதலகற்றிவாழுஞ் செயலறமானாலியார்க்கு, முனமொருதெய்வமெங்குஞ் செயற்குமுன்னிலையாமன்றே" என வருஞ்சித்தியாரிற்காண்க. இன்னே இனியென்னும் இடைச்சொல்லின் திரிபு.(௨௧)

Koviloor Digital Library

ஷ. வேறு.

வேதமுதல்கலைகாட்சிமுதலளவைவிரிஞ்சன்முதல்விண்ணோர்செய்யுஞ்
சோதனையுளகப்படாச்சோதியுனைச்சோதிக்கத்துணிந்தேனந்தோ [னைச
பேதைமையேனிடத்தென்னகுணங்கண்டென்பிணிதீர்த்தென்பெற்றாயா
சோதமிலாய்குற்றமேகுணமாகக்கொள்வதுநின்குணமோவையா.

(இ-ள்.) வேதமுதல் கலை காட்சி முதல் அளவை விரிஞ்சன் முதல் விண்ணோர் செய்யும் சோதனை உள் அகப்படாத சோதி - வேதமுதலிய நூல்களும் காட்சியும் முதலிய அளவைகளால் பிரமன்முதலிய தேவர்களாராயும் ஆராய்ச்சியுள் அகப்படாத பேரொளியே, அந்தோ உன்னை சோதிக்க துணிந்தேன் - ஐயோ உனது நிலைமையை ஆராய நான் துணிந்தேன், பேதைமையேன் இடத்து என்ன குணம் கண்டு என்பிணிதீர்த்து என்பெற்றாய் - (அத்தன்மையையுடைய) அறிவில்லேனிடத்து என்னகுணத்தைக்கண்டு என்னுடைய நோயைத்தீர்த்து என்னபயன்பெற்றாய், ஆசை சோதம் இலாய் - விருப்பும் வெறுப்புமில்லாத பெருமானே, ஐயா குற்றமே குணம் ஆக கொள்வது நின்குணமோ - ஐயனே (அடியார்கள்செய்யும்) குற்றத்தைக் குணமாகக்கொண்டருள்வது நினதுகுணமோ (கூறாய்.)

அளவை பலவகைப்படினும் காட்சி, அநுமானம், ஆகமம் என மூன்றனுள் அடங்குதலால் வேதமுதல்கலை என்றது ஆகமவளவையையும், முதலளவை என்றது அநுமானத்தையும் எனக்கொள்க. முதல் விண்ணோர் என்றது திருமாலையும், இந்திரனையும் எனக்கொள்க. அயன்முதலிய இவர்கள் தத்தம் போதச்செயலால் சோதிக்கத்தொடங்கினவர் என்பான். செய்யுஞ்சோதனையு ளகப்படாச்சோதியெனவும், யானும் என்போதத்தால் சோதிக்கத்துணிந்தேனென்பான் துணிந்தே னந்தோ எனவும், அவிச்சைவசத்தனாயுள்ள என்னிடத்து ஒழுக்கமுதலிய பதினாறு குணங்களுள் யாதுகண்டாய் என்பான் பேதைமையேனிடத்தென்னகுணங்கண்டென் பிணிதீர்த்தென்பெற்றாய் எனவும், நீ விருப்பு வெறுப்பு இயல்பாகவே யிகந்தோய் ஆதலால் அடியார்செய்யும் அபராதத்தைக் குணமாகக்கொள்வது உன்கடமையென்பான் ஆசைசோதமிலாய் குற்றமே குணமாகக்கொள்வது நின்குணமோ வையா எனவுங் கூறினான். "அவையெல்லாம் அளவைகாண்டல் கருதனுமானமென் றிம்மூன்றினடங்கிடுமே" எனவும் "மறைபுகழ்நாயகன்மாலோன் மனத்திறன்வாக்கான்மற்றுங், குறைவிலாவளவிறந்த சுகோதயனாகிநின்ற, இறைவனார்"எனவும், "ஒழுக்கமன்பருளாசாரமுபசாரமுறவுசீலம், வழுக்கிலாத்தவந்தானங்கள் வந்தித்தல்வணங்கல்வாய்மை, அழுக்கிலாததுறவடக்க மறிவோடர்ச்சித்தலாதி, இழுக்கிலாவறங்களானால் இரங்குவான்பணியறங்கள்" எனவும், "ஆரணிக்கன்பர்செய்யும் பாவமேயறமதாகும், பாரணிக்கன்பிலாதார் புண்ணியம்பாவமாகும், வாமுடைத்தக்கன்செய்த மாவேள்விதீமையாகி, பாரினிற்பாலன்செய்த பாதகநன்மையாய்த்தே" எனவும் சித்தியாரில் வருதலை முறையேகாண்க. (௨௨)

பொன்னகரான்காலந்தாழ்த்துனை யருச்சித்தயர்ச்சியொடும்போன
வாறு, மென்னெனயான்வினவியதும்வலாரியிறைகொடுத்ததுமவ்விறைக்
குநேர்வான், பின்னைவினவியதுமவன்சொல்வழியுன்னைச்சோதித்தபெற்றி
தானும், முன்னவனேயுன்னருளாலென்பிணிக்குமருந்தாயிமுடிந்தவாறே.

(இ-ள்.) பொன் நகரான் காலம் தாழ்த்து உனை அருச்சித்து அயர்ச்சியொடும் போன ஆறும் - பொன்னுலகையுடைய இந்திரன் அமைய நோக்கி யுன்னை யரு

Koviloor Digital Library

ச்சலைசெய்து சோர்வோடும் தன்னைரத்திற்குச் சென்றவகையும், என் என யான் வினவியதும் - அச்சோர்வுநோக்கிக் காரணமென்னவென்று நான் வினவியதும், வலாரி இறைகொடுத்ததும் (அதற்கு) இந்திரன் விடைகொடுத்ததும், அ இறைக்கு நேர் யான் பின்னைவினுயதும் - அந்தவிடைக்குநேராக யான் மீளவினவியதும், அவன் சொல்வழி உன்னைசோதித்த பெற்றிதானும் - அவன்யிடைவழியில்நின்று உன்னைச்சோதித்த தன்மையும் ஆகிய இவற்றுளொவ்வொன்றுமே, முன்னவனே உன் அருளால் என்பிணிக்கு மருந்து ஆகி முடிந்த ஆறு-யாவர்க்கு முதல்வனே யுன து திருவருளால் எனது நோய்க்கு மருந்தாய் முடிந்தவகையாம்.

இந்திரன் விடைகொடுத்தது பதியிலக்கணமும் பதியினருள்வழிப்படும் அடியாரிலக்கணமும் ஆதலால் புண்ணியமுதிர்ச்சியால் விரும்பிக்கேட்டலும், வினவியது அதில் ஏகாக்கிரசித்தனாய்நின்று அடியார்க்கு அருளும் பதியினுண்மையை யாராய் தலினாலாதலில் சிந்தித்தலும், சோதித்தது பதியினுண்மை யித்தன்மையதென்று ஆராய்ந்தவழிப் பசுஞான சுதந்தரமின்மையுடையது எனத் தெளிதலாதலில் தெளிதலும் ஆகிய இம்மூன்றும் உண்மைஞானங்கள் ஆதலால் உடற்பிணியுமின்றி யுயிர்ப்பிணியையும் அதனுள் அடக்கி யொவ்வொன்றும் என்பிணிக்கு மருந்தாகி முடிந்தவாறேஎனவும், இம்மூன்று நிகழ்தற்கு ஞானாசிரியனையின்றி நிகழாவாதலால் அவன் சொல்வழி யுன்னைச்சோதித்த பெற்றியெனவுங்கூறினான், "கேட்டலுடன்சிந்தித்த றெளிதனிட்டை ளத்தலெனவீரிரண்டாங்ளைக்கின்ஞானம், விட்டையடைந்திடுவார்" எனச்சித்தியாரில் வருதல்காண்க. (உஉ)

ஆறுமதிமுடியணிந்தவருட்கடலேவயிற்றுநோயன்றிமேனாண்
மாறுபடுமிருவினையுமலவலியுங்கெடவீட்டின்வழியும்பெற்றேன்
வேறினிமந்திரமென்னைமணியென்னைமருந்தென்னைமெய்ம்மையாகத்
தேறுமவர்க்கிப்புனிததீர்த்தமேபிணியனைத்துந்தீர்ப்பதன்றே.

(இ-ள்.) ஆறுமதிமுடி அணிந்த அருள் கடலே வயிற்று நோய் அன்றி - கங்கையையும் சந்திரனையும் சடையிலணிந்த கிருபாசமுத்திரமே எனது வயிற்றுநோயல்லாமலும், மேல் நாள் மாறுபடும் இருவினையும் மலவலியும் கெடவீட்டின் வழியும்பெற்றேன் - அனாதியே என்னுடன் மூண்ட இருவினைகளும் மலவன்மையுங்கெட மோட்சவழியையும்பெற்றேன், இனிவேறு மந்திரம் என்னை மணி என்னை மருந்து என்னை - இனிவேறு மந்திரம் யாதுளது மணி யாதுளது மருந்து யாதுளது, மெய்மையாக தேறுமவர்க்கு இப்புனிததீர்த்தமே பிணி அனைத்தும் தீர்ப்பது அன்றே - உண்மையாகத் தெளிந்தவர்க்கு இந்தப்பரிசுத்தமாகிய பொற்றாமரைத்தீர்த்தமே நோய்முற்றுந்தீர்ப்பதல்லவா.

நோயுற்ற ஒருவனுக்கு அந்நோய்தீர்த்தற்கு மணி, மந்திரம், ஔடதம், சாதனம் ஆதலால் வேறினி மந்திரமென்னை மணியென்னை மருந்தென்னையென்றான். மணி என்றது நோயுற்றான் நோய்தீர்த்தற்குச் செபித்தலெனச் சிலர்கூறுவர். மந்திரமே செபித்தலிலடங்குதலின் மணி என்பது செபித்தல் அன்று நோய்தீர்க்கும் ஒருவகைக்கல்லெனச் சிலர் கூறுவர். இவ்விரண்டும் ஒக்கும். (உச)

ஷை வேறு.

அடியனேன்முன்னஞ்செய்தவபராதமிரண்டுந்திரும்
படிபொறுத்தருள்வாயென்றுபன்முறைபரவித்தாழ்ந்து
மடிவிலாமகிழ்ச்சிபொங்கவரங்களுஞ்சிறிதுவேண்டிக்
கடியதன்னகரம்புக்கான்குடதிசைக்காவல்வேந்தன்.

Koviloor Digital Library

(இ-ள்.) அடியனேன் முன்னஞ்செய்த அபராதம் இரண்டும் நீரும் படிபொறுத்து அருள்வாய் என்று - அடியேன் முன்பு அறியாதுசெய்த இரண்டு அபராதங்களையும் பொறுத்துக் கருணைசெய்வாயென்று, பல்முறை பரவிதாழ்ந்து மடிவு இலா மகிழ்ச்சிபொங்க - பலதடவையுந் துதித்துவணங்கி அழிவில்லாத மகிழ்ச்சிமேலெழுந்தோங்க, வரங்களும் பெறுதுவேண்டி - வரங்களையும் பெறுது குறையிரந்துபெற்று, குடதிசைக் காவல் வேந்தன் - மேற்றிசைக்காவல் பூண்டவருணன், கடியதன்னகரம் புக்கான் - ஒளியையுடைய தன்னகரிற்சென்றான்.

அபராதம் இரண்டு அவன முன்னர் மதுரையையழிக்கக் கடலையேவியதும், அதுகெடுடைமையாது பின்னர் மேகங்களை யேவியதும் எனக்கொள்க. (உடு)

வன்றிறல்வருணன்விட்டமாரியைவிலக்கவீசன்
மின்றிகழ்சடையினின்றுநீங்கியமேகநான்குங்
குன்றுபோனிவந்துநான்குகூடமாக்கூடலாலே
யன்றுநான்மாடக்கூடலானதான்மதுரைமூதூர்.

(இ-ள்.) வன்றிறல் வருணன்விட்ட மாரியைவிலக்க - வன்மை வாய்ந்த வருணன் ஏவிய ஏழுமேகங்களையும் விலக்கும்பொருட்டு, ஈசன் மின்றிகழ் சடையினின்று நீங்கியமேகம் நான்கும் - சிவபெருமான் தனது மின்னல்போல விளங்கும் சடையினின்று நீங்கிய புட்கலாவர்த்தமுதலிய நான்குமேகங்களும், குன்றுபோல் நிவந்து நான்கு கூடமாக கூடலாலே - மலைபோல மேல்நிவந்து நான்குகூடங்களாய்க் கூடுதலாலே, மதுரை மூதூர் - மதுரையாகிய தொன்றுதொட்டுள்ள நகரம், அன்று நான் மாடக்கூடலானது-அக்காலந்தொட்டு நான்மாடக்கூடலென்னும் பேர் பெற்றது.

வன்றிறல் இன்னிசைதருதற்குவந்த ஒருபொருட்கிளவி. ஆக என்னும் வினையெச்சத்திரிபுதொக்கு ஆனதென்றது. (உசு)

நான்மாடக்கூடலானபடல முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கூகூஉ.

இருபதாவது.

எல்லாம்வல்லசித்தரானபடலம்.

கலிநிலைத்துறை.

சத்தநான்மறைப்பொருள்வரைதன்னுநின்முடிமேல்
வைத்தகார்களுன்மாடமாமதுரைமேல்வருணா
னுய்த்தமாரியைத்தடுத்தவாறுரைத்துமேலுயர்த்தோர்
சித்தராய்விளையாடியசெயல்சிறிதுரைப்பாம்.

(இ-ள்.) சத்தம் நான் மறைப் பொருள் வரை தன்னும் நின் முடி மேல்-ஒலிவடிவமாகிய நான்குவேதங்களின் பொருளினெல்லையைக்கடந்த நீண்டசடாமுடியின்மேல், வைத்த கார்கள் நான் மாடம் ஆக-அணிந்த புட்கலாவர்த்தமுதலிய மேகங்

Koviloor Digital Library

எல்லாம்வல்ல சித்தர் திருவிளையாடல்-



Koviloor Digital Library

Koviloor Digital Library

கள் (தமது ஆணைவழிநின்று) நான்குமாடமாக, மதுரைமேல் வருணன் உய்த்த மாரியை தடுத்த ஆறு உரைத்தும்-மதுரையின்மேல் வருணன் செலுத்திய எழுமேகங்களையுஞ் சோமசுந்தரக்கடவுள் தடுத்த திருவிளையாடலைக்கூறினோம், ஏறு உயர்த்தோர் சித்தராய் விளையாடிய செயல் சிறிது உரைப்பாம்-இடபக்கொடியையுயர்த்திய அச்சோமசுந்தரக்கடவுள் சித்தமூர்த்திகளாய் விளையாடியருளிய திருவிளையாடலை இனிச் சிறிது கூறுவாம்.

பரஞானத்தாலன்றி விந்து சத்தியின்காரியமாகிய அபரஞானத்தா லாராய்தற்கு அரிதென்பார் சத்தநான்மறைப்பொருள் வரைதள்ளுநீண்முடி என்றார். (க)

தேடருங்கதிர்மணிமுடிச்செழியனும்பாண்டி
நாடருந்திருவெய்திமேனல்லவீடெய்தக்
கூடலம்பதிமேவியகுணங்குறிகடந்த
வேடரங்கொருசித்தமெய்வேடராய்வருவார்.

(இ-ள்.) தேடரும் கதிர் மணி முடி செழியனும் - தேடிக்கொள்ளுதற்கரிய ஒளிவாய்ந்த நவமணிகளழுத்தியகிரீடத்தை உடைய அபிடேகபாண்டியனும், பாண்டிநாடரும் திரு எய்தி மேல் நல்ல வீடு எய்த - பாண்டிநாட்டிலுள்ள அனைவரும் இம்மையிற் பெருஞ்செல்வத்தையடைந்து மறுமையில் நல்ல மோட்சவீட்டை யடைய, கூடல் அம்பதி மேவிய குணம் குறி கடந்த வேடர்-மதுரைத் திருநகரில் எழுந்தருளிய குணத்தையும் குறியையுங் கடந்த திருவேடத்தையுடைய பெருமானார், அங்கு ஒருசித்த மெய் வேடராய் வருவார் - அந்நகரில் ஒரு சித்தவடிவமாகிய திருவேடமுடையவராய் வருகின்றார்.

மலநோய்க்கு மருந்தினைப்பெற்றவர் என்பார் திருவெய்தி எனவும், அம்மருந்தால் மலநோய்நீர்ந்தவர் பெறும்பேறு சிவானந்தப்பெரும்பேறு என்பார் நல்லவீடு எய்த எனவுங் கூறினார். குணங்குறிகடந்த என்ற குறிப்பால் வேடர் என்றது நிட்களசிவத்தை எனவுணர்க. குணம் என்றது முக்குணங்களை. குறி என்றது ஆண் பெண் என்னும் பகுப்பினை. அம் அழகெனப் பொருள்கொள்ளாது வேண்டாவழிவந்தசாரியையெனினும் அமையும். (உ)

வட்டவார்சடைக்குஞ்சியும்பூணநூன்மார்பு
மிட்டநீறணிதிலகமுமிணைக்குழைதூங்க
விட்டவெள்ளைமுத்திரையுந்தோல்விரித்தபட்டிகையுஞ்
சுட்டவெண்பொடிப்பொக்கணந்தூக்கியதோளும்.

(இ-ள்.) வட்டம் வார் சடை குஞ்சியும் - வட்டமாகக் கட்டிய நீண்டசடையாகியசிகையையும், பூண நூல் மார்பும்-உபவீதமணிந்த திருமார்பையும், இட்ட நீறு அணி திலகமும் - இட்ட திருநீற்றின்மேலணிந்த திலதத்தையும், இணைக்குழை தூங்கவிட்ட வெள்ளை முத்திரையும் - பொருத்தநலையுடைய குண்டலங்கள் தொங்கியசையவிட்ட சங்காலாகிய தோடுகளையும், தோல் விரித்த பட்டிகையும் - புலித்தோலாற்செய்த யோகபட்டிகையையும், சுட்ட வெண் பொடி பொக்கணம் தூக்கிய தோளும் - நீற்றியவிபூதியைத் தருதற்கமைந்த பொக்கணத்தை நான்றவிட்ட திருத்தோளையும்.

பொக்கணம் பிறர்க்கு விபூதியைத்தருதற்கு இப்பிவடிவாகத் தலையோட்டாலமைத்ததொருகருவி. "சுத்தியபொக்கணத்தென்பணிகட்டங்கம்" எனவருந் திரு

க்கோவையார்க்கு நச்சினார்க்கினியர் எழுதியவுரையிற்காண்க. ஐந்துமுகங்கள் தலையிற்பொருந்தச்செய்த வட்டவடிவாகிய ஓர்வளையும் பொருள்கொள்ளுதலும் ஒன்று. (அ)

தூயவெண்பொடியழிந்துமெய்செவந்திடச்சுவடு
செய்யும்வெண்டிரட்படிகநின்மாலையுஞ்செவந்த
கையிலங்குகட்டங்கமுங்கண்டவர்மனஞ்சென்
றுய்யவன்புறவிக்கியவுதரபந்தனமும்.

(இ-ள்.) தூய வெண் பொடி அழிந்து மெய் செவந்திட சுவடு செய்யும் வெண் திரள் படிகம் நின் மாலையும்-புனிதமாகிய வெள்ளிய திருநீறழிந்து திருமேனி செவக்கச் சுவடுசெய்யாநின்ற வெள்ளிய திரண்ட படிகமணிகள்கோத்த நீண்டமாலையையும், செவந்த கை இலங்கு கட்டங்கமும்-செவந்த கையில் விளங்கும் மழுவையும், கண்டவர் மனம் சென்று உய்ய வன்பு உற விக்கிய உதரபந்தனமும்-பார்த்தவர்கள் மனஞ்சென்று பதிந்து பிழைக்கச் சிக்கெனக்கட்டிய திருவுதரபந்தனத்தையும்.

அட்டவேங்கையீருரிவைகீண்டசைத்தகோவணமு
மொட்டவிக்கியபுலியதளுடுக்கையுமிடத்தோ
ளிட்டயோகபட்டிகையும்பொன்னிடையிடைகட்டப்
பட்டசுஃறொலிவேத்திரப்படைக்கையும்படைத்து.

(இ-ள்.) அட்ட வேங்கை ஈர் உரிவை கீண்டு அசைத்த கோவணமும் - தான் கொன்ற வேங்கையினின்று ஈர்த்த தோலைத் துண்டுசெய்து கட்டிய திருக்கோவணத்தையும், ஒட்ட விக்கிய புலி அதள் உடுக்கையும் - (இடையில்) பொருந்தக் கட்டிய புலித்தோலாகிய உடையையும், இடத் தோள் இட்ட யோகபட்டிகையும் - இடத்தோளிலிட்ட யோகபட்டிகையையும், பொன் இடை இடை கட்டப்பட்ட சுஃறொலி வேத்திரப்படை கையும் படைத்து - பொற்கம்பியால் இடை இடையே கட்டப்பட்ட சுஃறென்னும் ஒலிக்குறிப்பையுடைய பிரம்பாகிய ஆயுதத்தை ஏந்திய திருக்கரத்தையும்கொண்டருளி.

சுஃறொலி - பிரம்பைவீசும்போதுண்டாகும் ஓர்வகைக்குறிப்போசை. (௯)

வேதமின்மணிசிலம்புசூழ்ந்தடிகளின்மிழற்ற
வோதரும்பதமுளரியூறருண்மதுவொழுகப்
போதவானந்தமதுநசர்ந்தலர்முகம்பொலியப்
பாதபங்கயமுபநிடப்பாதுகைசூட.

(இ-ள்.) வேதம் மின் மணி சிலம்பு சூழ்ந்து அடிகளில் மிழற்ற - வேதமே சதங்கையாகவும் சிலம்பாகவும் சூழ்ந்து திருவடிகளிலொலிக்கவும், ஓது அரும் பதம் முளரி ஊறு அருள் மது ஒழுக - சொல்லுதற்கரிய அப்பாததாமரையினின்று சுரக்கின்ற திருவருளாகிய தேன்சிந்தவும், போத ஆனந்தமது நசர்ந்து அலர் முகம் பொலிய - ஞானானந்தமாகிய தேன்றுதைந்து அலர்ந்த திருமுகம் விளங்கவும், பாத பங்கயம் உபநிடம் பாதுகை சூட - அந்தத் திருவடித்தாமரைகள் உபநிடதமாகிய பாதுகையைச்சூடவும்.

தனதுதிருவடியைத் தமதுபோதத்தாலுணராது தடுமாறி யேக்கற்று நின்ற வேதமும் உபநிடதமும் தான் ஆன்மாக்களுக்கு அருளுதற்பொருட்டு யோகமூர்த்தி

Koviloor Digital Library

யாய்ச் சகளீகரித்தருளியகாலையில் அவ்வேதமும் உபநிடதமும் ஆனந்தமேலீட்டால் அணிகலமாகவும் பாதுகையாகவு முருமாறிச் சூழ்ந்து சூடியன என்பார் வேதமென் னிசிலம்புசூழ்ந்தடிகளின்மிழற்ற எனவும், பாதபங்கயமுபநிடப்பாதுகைசூடஎன வும் கூறினர். பலமூர்த்தங்களாகச் சகளீகரித்தல் ஆன்மாக்களுக்கு அருளுதற்பொ ருட்டு என்பது "போகியாயிருந்துயிர்க்குப்போகத்தைப்புரிவதோரார் - யோகியா யோகமுத்தியுதவுதலதுவுமோரார்- வேகியானுற்போற்செய்தவினையினைவீட்டலோ ரார் - ஊகியாமூடரெல்லாமும்பரினொருவனென்பார்" எனச் சித்தியாரில் வருதல் காண்க. (௬)

சிறுநமூர லும்வெயர்வையுந் திருமுகத்தரும்பக்
குறுகியாவணஞ்சித்திரகூடநாற்சந்தி
மறுகுசூளிகையுபரிகைமாளிகைவாயி
லறுகுசூழ்திணைதெற்றியிவ்விடந்தொறுமடைந்து.

(இ-ள்.) சிறிது மூரலும் வெயர்வையும் திரு முகத்து அரும்ப குறுகி-சிறிது புன்னகையும் வேர்வும் திருமுகத்திற்றோன்றச் சென்று, ஆவணம் சித்திரகூடம் நா ற்சந்தி மறுகு சூளிகை உபரிகை மாளிகை வாயில் அறுகு திணை சூழ் தெற்றி இவ்வி டந்தொறும் அடைந்து - கடைவீதியும் சித்திரகூடமும் நாற்றெருக்கூடுமிடமும் வீ தியும் இறப்பினையுடைய உபரிகையும் மாளிகையின் வாயிலும் சிங்கத்தால் வரிசை யாகச் சுமக்கப்பட்ட திண்ணையும் ஆகிய இந்த இடங்கள்தோறும் சேர்ந்து.

அறுகு - சிங்கம். (௭)

தெற்கிருப்பவர்போல்வடதிசைவயிற்சென்று
புக்கிருப்பதுங்கிழக்குளார்போலமேற்றிசையி
னக்கிருப்பதும்யாவருநாடினரறியத்
தக்கதன்றியேயிந்திரசாலமாத்தணந்தும்.

(இ-ள்.) தெற்கு இருப்பவர் போல் வடதிசை வயின் சென்று புக்கு இருப்ப தும் - தெற்கிலிருப்பவர்போல வடதிசையிற்சென்று சேர்ந்திருத்தலும், கிழக்கு உ ள்ளார்போல மேற்றிசையில் நக்கு இருப்பதும் - கீழ்த்திசையி லுள்ளார்போல மே ற்றிசையிற் சென்று நகைத்திருத்தலும், யாவரும் நாடினர் அறியத்தக்கது அன்றி யே இந்திரசாலம் ஆக தணந்தும் - இமைகொட்டாது பார்த்துநின்ற எவரும் மீளத் தேடி அறியக்கூடாதவண்ணம் இந்திரசாலமாக மறைந்தருளியும்.

தக்கதன்றியே யிந்திரசாலமாத்தணந்தும் என்றது அதிசயம். (௮)

சேயவெற்பினையணியதாச்செய்துமற்றணித்தாய்
மேயவெற்பினைச்சேயதாவிடுத்துமெய்முதுமூப்
பாயமக்களையிளையவராக்கியுங்குதலை
வாயமக்களைக்கழிமுதுமக்களாவகுத்தும்.

(இ-ள்.) சேய வெற்பினை அணியது ஆகச்செய்தும் - தூரத்திலுள்ள மலை யைச் சமீபத்திலுள்ளதாகச் செய்தும், அணித்தாய் மேய வெற்பினை சேயது ஆக விடுத்தும்-சமீபித்ததாய்ப் பொருந்திய மலையைத் தூரத்திலுள்ளதாகச்செய்தருளி யும், மெய் முது மூப்பு ஆய மக்களை இளையவராக்கியும் - உடல்முதிர்ந்த மூப்புவா

Koviloor Digital Library

ய்ந்தவிருத்தரை இளைஞராக்கியும், குதலைவாய மக்களை கழிமுது மக்களாக வகுத்து ம்-இளங்குதலைபேசும் வாயையுடைய பாலர்களை மிக்கவிருத்தராகச்செய்தருளியும்.

செயபெற்பிளையணியராச்செய்தும் என்றது ஆகருஷணம். மெய்முதுமுப் பாயமக்களையிளையவராக்கியுங்குதலை-வாயமக்களைக்கழிமுதுமக்களாவகுத்தும் என் றது வயஸ்தம்பம். மற்றுவினை மாற்றுப்பொருளில் வந்தது. (௯)

ஆணைப்பெண்ணுருவாக்கியும்பெண்ணையாணுருவ
மாணக்காட்டியுமலடியைமகப்பெறச்செய்துங்
கோணற்கூன்செவிடூமைகண்குருடுபங்கெவருங்
காணத்தீர்த்துநாலுலோகமுங்கனகமாச்செய்தும்.

(இ-ள்.) ஆணை பெண்ணுரு ஆக்கியும் - ஆணினைப் பெண்வடிவமாகச் செய் தும், பெண்ணை ஆண் உருவம் மாணக் காட்டியும் - பெண்ணினை யான்வடிவமாக மாட்சிமைப்படச்செய்தும், மலடியை மகபெறச் செய்தும் - மலடியைப்பிள்ளைபெ றச்செய்தும், கோணல் கூன் செவிடு ஊமை கண் குருடு பங்கு எவரும் காணத்தீர் த்தும் - (முறைகு) வளைந்த கூனரும் செவிடரும் ஊமைகளும் அந்தகரும் முடவரு மாகிய இவர்களுடைய அவயவக்குறைபாடுகளை எவரும்பார்க்கத் தீர்த்தருளியும், நாலு லோகமும் கனகமாகச் செய்தும் - வெள்ளி முதலிய நான்கு லோகங்களையும் பொன்னாகச்செய்தும்.

நாலுலோகங்கள் வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம். இவை கனகமாகச் செய் தல் வாதம். (௧0)

செல்வர்தம்மனைப்பொருளெலாம்வறுமையிற்சிறந்தோ
ரில்லமெய்தவுநட்டவரிகலின்றித்தம்மின்
மல்லுவெஞ்சமரிழைப்பவுங்காஞ்சிரமரத்தி
னல்லதிங்கனிபழுப்பவும்விஞ்சைகணயந்தும்.

(இ-ள்.) செல்வர் தம் மனை பொருள் எல்லாம் வறுமையில் சிறந்தோர் இல் லம் எய்தவும் - செல்வரது வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் தரித்திரத்திற் குறை வின்றி நிறைந்தோர்வீட்டிலடையவும், நட்டவர் தம்மில் இகலின்றி மல்லு வெஞ் சமர் இழைப்பவும் - சினேகித்தோர் சிறிதும் பகையின்றியே (தம்முள்) மல்லாகிய கொடிய போரைச்செய்யவும், காஞ்சிரமரத்தில் நல்ல தீங்கனி பழுப்பவும்-எட்டிம ரத்தில் நல்ல சுவை பழுத்த கனிகள் பழுக்கவும், விஞ்சைகள் நயந்தும்-(இவ்வாறு) வித்தைகளைச்செய்தருளியும். (௧௧)

பருவமாறியபருவத்தில்வையைநீர்பரந்து
வருவதாக்கியுமீளவும்வறந்திடச்செய்தும்
பொருவிறிஞ்சுவையோடையும்பொய்கையுமுவர்ப்புத்
தருவவாக்கியுமுவரியின்சுவையதாத்தந்தும்.

(இ-ள்.) பருவம் மாறிய பருவத்தில் வையை நீர்பரந்து வருவது ஆக்கியும்- நீர்வறக்கும் முதிர்வேனிற்காலத்திலும் வையைநதிபெருக்கெடுத்து வரச்செய்தரு ளியும், மீளவும் வறந்திடச்செய்தும் - மீளவும் அப்பெருக்கு வற்றச்செய்தருளியு ம், பொருவு இல் தீஞ்சுவை ஓடையும் பொய்கையும் உவர்ப்பு தருவ ஆக்கியும்-ஒப் பில்லாத இனியசுவையமைந்த ஓடைநீரும் பொய்கைநீரும் உவர்ப்புத்தருவனவாகச்

Koviloor Digital Library

3138 R65(4??)

செய்தருளியும், உவரி இன்சுவையதாகதந்தும் - கடலின் உவர்நீர் இனியசுவையினை யுடையதாகச்செய்தருளியும். (௧உ)

வீசிமாத்திரைக்கோலினை விண்ணினட்டதன்மே
லூசிநாட்டியிட்டூசிமேற்பெருவிரலூன்றி
யாசிலாடியுமூசிமேற்றலைகிழக்காக
மாசில்சேவடிப்போதுவான்மலர்ந்திடச்சுழன்றும்.

(இ-ள்.) மாத்திரைக்கோலினை விண்ணில் வீசிநட்டு அதன்மேல் ஊசிநாட்டியிட்டு-மாத்திரைக்கோலை விண்ணின்மேல் வீசிநட்டு அம்மாத்திரைக்கோலின்மேல் ஊசியைநாட்டி, ஊசிமேல் பெருவிரல் ஊன்றி ஆசு இல் ஆடியும்-அவ்வூசியின்மேல் பெருவிரலையூன்றிக் குறைபாடில்லாம லாடியருளியும், ஊசிமேல் தலை கிழக்கு ஆக மாசு இல் சேவடி போதுவான் மலர்ந்திட சுழன்றும்--அவ்வூசியின்மேல் தலைகிழாகப் பரிசுத்தமாகிய தமது செவந்த திருவடித்தாமரைகள் ஆகாயத்தில் மலரச்சுழன்றுடியருளியும். (௧௩)

சண்டவெம்பணிப்பகையெனப்பறந்துவிண்டாவிக்
கொண்டலைப்பிடித்திடியொடுங்குடித்தநீர்பிழிந்து
கண்டவர்க்கதிசயம்பெறக்காட்டியுங்காண
விண்டலத்தினிற்பண்டுபோலிறைகொளவிடுத்தும்.

(இ-ள்.) வெம் சண்ட பணிப்பகை எனப்பறந்து - கொடியவேகத்தையுடைய கருடனைப்போலப்பறந்து, விண் தாவி கொண்டலைப் பிடித்து இடியொடும் குடித்த நீர்பிழிந்து - வானில் தாவி மேகத்தைப்பிடித்து இடியோடும் அவைகுடித்தநீரைப்பிழிந்து, கண்டவர்க்கு அதிசயம்பெறக் காட்டியும் - பார்ப்போர்க்கு அதிசயம் உண்டாக அம்மேகங்களைக்காட்டியருளியும், காண விண் தலத்தினில் பண்டு போல் இறைகொள விடுத்தும் - (பலரும்) காண அந்தவானில் முன்போல உலாவி வசிக்கவிடுத்தருளியும். (௧௪)

எல்லிடைப்படும்பொருள்களையிராவெழப்பார்த்து
மல்லிடைப்படும்பொருள்களைப்பகல்வரவமைத்தும்
வல்லழற்புனலுளர்வளிவலிகெடப்பார்த்து
நல்லபோதுகாய்கனியிலாநாள்படக்கண்டும்.

(இ-ள்.) எல் இடை படும் பொருள்களை இரா எழப்பார்த்தும்-பகற்காலத்திற்றோன்றும் சூரியன்முதலிய பொருள்களை இராக்காலத்தில் வரப்பார்த்தருளியும், அல் இடைப்படும் பொருள்களை பகல்வர அமைத்தும் - இரவிற்றோன்றும் சந்திரன் முதலியபொருள்களைப் பகற்காலத்தில் வரப்பார்த்தருளியும்,வல் அழல் புனல் உளர் வளிவலிகெடப்பார்த்தும் - கொடியநெருப்பும் நீரும் சஞ்சரிக்கும் காற்றும் ஆகிய இவைகளின் வேகவன்மைகள்கெட நோக்கியருளியும், நல்லபோது காய்கனி இல்லாத நாள்பட கண்டும் - வாசமிக்கமலர்களும் காய்களும் கனிகளும் இல்லாத பருவங்களில் அவைமலரவும் காய்க்கவும் பழுக்கவும்செய்தருளியும். (௧௫)

பிணைகால்விழிக்கிழவனைப்பிரம்பினால்வருடிக்
காளையாட்வராக்கியக்கணவருக்கிசைய
விளைவாய்முதுகற்பினூர்கருவடைந்திளமை
யாளவேத்திரம்வருடிநிறளித்தருள்செய்தும்.

Koviloor Digital Library

(இ-ள்.) பிணிகால் விழி கிழவரை பிரம்பினால்வருடி காளை ஆடவராக்கி - பிணித்தல் கண்களையுடைய காலஞ்சென்ற விருத்தர்களைத் தாம் ஏந்திய பிரம்பினால் தடவிக் காளைப்பருவத்தையுடைய வாலிபர்களாகச்செய்தருளி, அக்கணவருக்கு இசைய பிணிவாய் முதாட்டியர் கரு அடைந்த இளமை ஆக-(வாலிபர்களாகிய) அத்தக்கணவர்கள் குருத்திற்கிசைய பிணிவாய்ந்த வாயையுடைய கிழத்தன்மைவாய்ந்த இல்வாழ்க்கைக்குரிய மாதர்கள் கருப்பமெய்தி மங்கைப்பருவத்தையடைய, வேத்திரம் வருடி நீறு அளித்த அருள்செய்தும் - பிரம்பால்தடவி திருநீறுதந்து திருவுபகரித்தருளியும்.

விளை ஒருவகைபோல். (௧௬)

அகரமாதிமூன்றாகியவாகருடணமே
புகரிலாவதிரிச்சியமஞ்சனம்பொருவில்
வகரமாதிமூன்றாகியவசியமேவாத
மிகலிலாவயத்தம்பமென்றின்னவைசெய்தும்.

(இ-ள்.) அகரம் ஆதிமூன்றாகிய - அகரத்தை முதலிலுள்ள மூன்றாகிய, ஆகருடணம் புகர் இல்லா அதிரிச்சியம் அஞ்சனம் - ஆகருஷணமும் குற்றமில்லாத அதிரிசியமும் அஞ்சனமும், பொருவு இல் வகரம் ஆதி மூன்றாகிய - ஒப்பில்லாதவகரத்தை முதலிலுள்ள மூன்றாகிய, வசியம் வாதம் இகல் இல்லாத வயத்தம்பம் என்ற இன்னவை செய்தும்-வசியமும் வாதமும் தம்முள் மாறுபடாத வயஸ்தம்பமும் என்று சொல்லப்பட்ட இவைபோல்வனவற்றைச்செய்தருளியும்.

அகரத்தின்விகாரமே ஆகாரம் ஆதலால் ஆகாரத்தை அகரத்துள்ளடக்கி அகரமாதி எனவும், வா என்னும் உயிர்மெய்யெழுத்தும் வகரமெய்யின்மேலேறிய அகரத்தின்விகாரம் ஆதலால் வா என்னும் உயிர்மெய்யெழுத்தை வகரத்துளடக்கி வகரமாதியெனவுங்கூறினர். ஆகருடணம், அதிரிச்சியம், அஞ்சனம் இவற்றினுள்ள முதலெழுத்துகள் அகரம் ஆதலாலும், வசியம், வாதம், வயத்தம்பம் இவற்றினுள்ள முதலெழுத்துகள் வகரம் ஆதலாலும் அகரமாதி வகரமாதி என்றார். ஆகருடணம் தூரத்திலுள்ளதைச் சமீபத்தில்வருவித்தல். அதிரிச்சியம் கண்களுக்குப் புலப்படுவதைப் புலப்படாமற்செய்தல். அஞ்சனம் மறைந்துகிடக்கும்பொருள்களை விளக்கிக்காட்டுதல். வசியம் பகைவரைத் தன்வயப்படுத்துதல். வாதம் இரும்புமுதலிய உலோகங்களைப் பொன்னாக்குதல், வயத்தம்பம் பாலனைப்பாலனாகவே இருக்க வயதை நிறுத்துதல். அன்றி விருத்தனை இளைஞனாகவும், இளைஞனை விருத்தனாகவும் நிலைபெறச்செய்தலெனினும் அமையும். (௧௭)

வேதநூறெளியார்க்கெக்கலைகளும்விளங்கப்
பூதிராவினிற்செறியும்பூழியன்காதன்
மாதராரோம்பயில்புதுமணமலர்க்காவிற்
காதநீண்டகோட்டெங்கிளைக்கரும்பனைசெய்தும்.

(இ-ள்.) வேதம் நூல் தெளியார்கள் - வேதநூல்வழியுள்ள கலைகளைச்சிறிதும் அறிந்து தெளியாதவர்களுக்கு, எக்கலைகளும் விளங்க பூதிராவினில் செறியும் - அறுபத்துநான்குகலைகளும் ஐயந்திரிபின்றி விளங்கத் திருநீற்றை அவர்கள் நாவிற் செறியும், பூழியன் காதல் மாதரார் ஒம்பயில் புதுமண மலர் காவில் - அபிடேக பாண்டியன் தனதில்வாழ்க்கைக்குரிய மனைவியோடும் சஞ்சரித்தலையும் அன்றலர்

Koviloor Digital Library

ந்த மணமிக்க மலர்கணிறைந்த பூஞ்சோலையிலுள்ள, காதம் நீண்டகோள் தெங்கி னை கரும்பனை செய்தும் - காதநூரம் உயர்ந்து ஓங்கிய வயிரம்வாய்ந்த தென்னமரத்தினைக் கரியபனைமரமாகச்செய்தருளியும். (கஅ)

ஏனைவான்றருக்குலங்களைப்புட்களையிருகோட்
டானையாதிப்பல்விலங்கினையொன்றையொன்றாக
ஞானநோக்கினானோக்கியுநாடியவிளையோர்
மானினோக்கியராகிலோமெனவெழில்வாய்ந்தும்.

(இ-ள்.) ஏனைவான் தருக்குலங்களை புட்களை - அது ஒழிந்த பெரியவிருட்சக்கூட்டங்களையும் பட்சிகளையும், இருகோடு ஆனை ஆதி பல்விலங்கினை-இரண்டுகொம்பினையுடைய யானைமுதலிய பலமிருகங்களையும், ஒன்றை ஒன்றாக ஞான நோக்கினால் நோக்கியும் - ஒருபொருளை மற்றொருபொருளாக ஞானநோக்கால் நோக்கியருளியும், நாடிய இளையோர் மானினோக்கியர் ஆகிலோம் என எழில் வாய்ந்தும் - (யாவரும்) விரும்பிநோக்கும் கட்டழகையுடைய காளையரும் மான்போலும் மருண்ட நோக்கையுடைய மங்கையர்கள் ஆனோம் அல்லம் என்று மனம்வருந்தப் பேரழகு வாய்ந்தருளியும்.

எழில்வாய்ந்தும் என்றது வசியம். (சக)

நாகநாடுபொன்னாட்டுளபொருளுமந்நகரு
ளாகவாக்கியுமின்னணம்விச்சைகளனந்த
மாகநாயகன்மலைமகளாயகன்மதுரை
யேகநாயகன்றிருவிளையாடல்செய்திருந்தான்.

(இ-ள்.) நாகநாடு பொன்னாடு உள்ள பொருளும் அந்நகருள் ஆக ஆக்கியும்-பாதலத்திலுள்ள பொருள் வானுலகத்திலுள்ள பொருள்களாகவும், வானுலகத்திலுள்ள பொருள் பாதலத்திலுள்ளபொருள்களாகவும் செய்தருளியும், இன்னணம் அனந்தம் விச்சைகள் - இவ்விதமாக அளவில்லாத ஆகருடணமுதலியவித்தைகளை, மாகநாயகன் மலைமகளாயகன் மதுரை ஏகநாயகன் திருவிளையாடல் செய்திருந்தான் - சிவலோகத்திற்கு இறைவரும் உமாதேவியாரிறைவரும் மதுரையிலெழுந்தருளிய ஒப்பில்லாத இறைவருமாகிய சித்தமூர்த்திகள் திருவிளையாடல்களாகச் செய்திருந்தருளினார்.

நாகநாட்டுள்ளபொருள் பொன்னாட்டுள்ள பொருளும், பொன்னாட்டுள்ள பொருள் நாகநாட்டுப்பொருளும் எனமாற்றிப் பொருள்கொள்க. ஏகம் என்பதற்கு ஒப்பின்மை எனச் சிந்தாமணியில் நச்சினார்க்கினியர் கொண்டனர். (உ0)

சித்தயோகிகள்செய்கின்றவாடன்மேற்செலுத்தி
வைத்தகண்களுஞ்சிந்தையும்வாங்கலர்திகைத்துத்
தத்தமாள்வினைத்தொழின்மறந்திருந்தனர்தகைசான்
முத்தவேதியராதியமுதுநகர்மாக்கள்.

(இ-ள்.) தகை சால் முத்த வேதியர் ஆதிய முது நகர் மாக்கள் - பெருந்தன்மைமிக்க முத்தத்தன்மைவாய்ந்த அந்தணர்முதலிய தொன்றுதொட்டுள்ள மதுரைநகரிலுள்ள நான்குவருணத்தாரும், சித்த யோகிகள் செய்கின்ற ஆடல் மேல் செலுத்தி வைத்த கண்களும் சிந்தையும் வாங்கலர் - சித்தயோகிகள் செய்தருளுகின்ற

Koviloor Digital Library

திருவிளையாடல்களின்மேல் செலுத்திய தமது கண்களும் மனங்களும் மீளத் தம்வ, சமாக்க வலிமையில்லாதவராய், திகைத்து தத்தம் ஆள்வினை தொழில் மறந்து இருந்தனர்-மயங்கித் தத்தம்வருணங்களுக்குரிய நித்தியகருமங்கள் முதலியவற்றை யுமறந்து தம்பித்திருந்தார்கள்.

முத்தத்தன்மை அவ்து பெத்தத்தில் சிவன் தோற்றமற்று ஆன்மாவின்தோற்றமாய் நிற்றல்போல் ஆன்மாவின் தோற்றமற்றுச் சிவத்தோற்றமாய்நிற்றல். (உக)

இனையசெய்தியையுழையராலிறைமகனறிந்தா
னனையசித்தனையிங்ஙனந்தருகெனவடுத்தார்
தனையகற்றினன்சித்தனைச்சார்ந்தவர்தாமும்
வினையைவென்றவராடலைவியந்துகண்டிருந்தார்.

(இ-ள்.) இனைய செய்தியை உழையரால் இறைமகன் அறிந்தான் - இந்த அற்புதச்செய்தியை வேவுகாரரால் அபிடேகபாண்டியன் தெரிந்து, அனைய சித்தனை இங்ஙனம் தருக என அடுத்தார் தனை அகற்றினன் - அந்த அற்புதச்செயல்களையுடைய சித்தமூர்த்திகளை இவ்விடத்து வருவிக்கக்கடவரெனத் தன்னை யடுத்துநின்ற அவ்வேவுகாரர்களை யேவினன், சித்தனைச் சார்ந்தவர் தாமும் வினையை வென்றவர் ஆடலை வியந்து கண்டு இருந்தார்-(அந்த அரசன் ஏவலால்) சித்த மூர்த்திகளை யடைந்தவரும் இயல்பாக வினையினின்று நீங்கிய அந்தச்சித்தமூர்த்திகளின் திருவிளையாடலை வியந்து நோக்கி அதன்வசத்தராயிருந்தார்கள்.

அடுத்தார்தனைகட்டுரைச் சுவைப்பொருள்படவந்த தான் என்னும் அசைநிலையிடைச்சொல் தன் எனக் குறுகிநின்றது. (உஉ)

அமைச்சர்தங்களைவிடுத்தனனமைச்சருஞ்சித்தர்
தமைச்சரண்பணிந்தரசன்முன்வருகெனத்தவத்தோ
ரெமக்குமன்னனாலென்பயனெனமறுத்திட-மண்
சுமக்குமன்னவன்றம்மவர்தொழுதனர்போனார்.

(இ-ள்.) அமைச்சர் தங்களை விடுத்தனன்-(சென்றவேவுகாரர்கள் வாராமையைக்கண்டு) மந்திரிகளையேவினான், அமைச்சரும் சித்தர் தமை சரண் பணிந்து அரசன் முன் வருக என - அம்மந்திரிகளும் சித்தமூர்த்திகளைவணங்கி எமதரசர்முன்வரக்கடவீரென்றுகூற, தவத்தோர் எமக்கு மன்னனால் என் பயன் என மறுத்திட - அச்சித்தமூர்த்திகள் (அந்த அரசனால்) எமக்கு வரும் பயன் யாதுளதென்று மறுக்க, மண் சுமக்கும் மன்னவன் தம்மவர் தொழுதனர் போனார்-நில உலகபாரத்தைச் சுமக்கும் அபிடேகபாண்டியன் உறவினராகிய மந்திரிகள் வணங்கிச்சென்றார்கள்.

மந்திரிகள் அரசனாணையை மேற்கொண்டு தாமேநடத்துவோர் ஆதலால் மன்னவன்தம்மவர் என்றார். வருக அரசவிற தொகுத்தல். சித்தர்தமை தாம் என்னும் படர்க்கைப் பன்மைப்பெயர் தம் எனக் குறுகிநின்றது. (உ௩)


அறுசீரடியாசிரியவிருத்தம்.

மன்னவன்முனமைச்சர்சித்தர்மறுத்துரைமாற்றங்கூற
முன்னவனருள்பெற்றிம்மைமறுமையுமுனிந்தயோக
ரின்கிலவேந்தர்மட்டோவிந்திரனயன்மாலேனோர்
தன்னையுமதிப்பரோவென்றிருந்தனன்றருமவேந்தன்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

கல்லானைக்குக்கரும்பருத்திய திருவிளையாடல்.



Koviloor Digital Library

(இ-ள்.) அமைச்சர் மன்னன் முன் சித்தர் மறுத்துரை மாற்றங் கூற - (செ ன்று) மந்திரிகள் பாண்டியன்முன்பூவந்து சித்தமூர்த்திகள் மறுத்துக் கூறிய வார்த் தையைச்சொல்ல, முன்னவன் அருள் பெற்று இம்மை மறுமையும் முனிந்த யோ கர் -(பிரமன் முதலிய எத்தேவர்கட்கும்) முன்னவனுகிய சோமசுந்தரக்கடவுளினு டைய திருவருளைப்பெற்று இம்மைப்போகத்தையும் சுவர்க்காதி போகத்தையும் வெ றுத்தயோகிகள், இந் நில வேந்தர் மட்டோ - இந்த நிலஉலகையாளும் அரசர்மட்டு மா, இந்திரன் அயன் மால் ஏனோர் தன்னையு மதிப்பரோ என்று தருமவேந்தன் இருந்தனன் - இந்திரனையும் பிரமனையும் திருமாலையும் அவரொழிந்த மற்றத்தேவர் களையும் ஓர் பொருளாகக் கருதுவார்களோ வென்று சிவபுண்ணிய வடிவாகிய அபி டேகபாண்டியன் வாளாவிருந்தனன்.

தனதிச்சையால் பிரபஞ்சத்தோற்றத்திற்குத் திருமேனிகொண்டருளினவ னுதலால் முன்னவன் எனவும், பரஞானத்தாற் பரத்தினைத் தரிசித்தவர் அப்பரத்தி னையே யுணர்ந்து நின்று ஏனைப்பொருள்களைநோக்கார் ஆதலால் அருள்பெற்றிம்மை மறுமையுமுனிந்தயோகர் எனவும், இம்மைமறுமையின்பங்களை யருவருத்தொழித்த வர் அயன் மால் முதலியோரையும் ஓர்பொருளாகக்கொள்ளார் ஆதலால் இந்நிலவே ந்தர்மட்டோ விந்திரனயன்மாலேனோர் தன்னையுமதிப்பரோ வென்றிருந்தனன் என வுங் கூறினர் "முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே" எனவும், "பர ஞானத்தாற்பரத்தைத்தரிசித்தோர் பரத்தைப்பார்த்திருப்பர் பதார்த்தங்கள்பாரார்" எனவும், "கொள்ளேன்புரந்தரன்மாலயன்வாழ்வு" எனவும் வரும் உண்மைத் திரு வாக்குகளாலுணர்க. (உச)

எல்லாம்வல்லசித்தரானபடலமுற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கஅ௵சு.

இருபத்தோராவது.

கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம்.

கலிநிலைத்துறை.

செல்லார்பொழில்சூழ்மதுராபுரிச்சித்தரெல்லாம்
வல்லாரவராடலையாருரைசெய்யவல்லா
ரெல்லாரும்வியப்புறவித்தனிச்சித்தசாமி
கல்லானைதின்னக்கரும்பீந்தகதையுஞ்சொல்வாம்.

(இ-ள்.) செல் ஆர் பொழில் சூழ் மதுரா புரி எல்லாம் வல்லார் சித்தர் அவர் ஆடலை உரை செய்ய வல்லார் யார்-மேகங்கள்நிறைந்த சோலைசூழ்ந்த மதுராபுரியில் எழுந்தருளிய எல்லாம்வல்லராகிய சித்தமூர்த்திகள் அவர் (செய்தருளிய) திருவிளை யாடலை யெடுத்துச் சொல்லவல்லவர் யார், எல்லாரும் வியப்பு உற இத் தனி சித்த சாமி-எல்லாவரும் அதிசயங்கூர இந்த ஒப்பில்லாத சித்தமூர்த்திகள், கல்லானை

நின்ற சுரும்பு ஈந்த கதையும் சொல்வாம்-கல்லானைதின்றும்படி கரும்பைக்கொடுத்தருளிய திருவிளையாடலையும் இனி யெடுத்துக்கூறுவாம்.

சித்தமூர்த்திகள் விளையாடிய திருவிளையாடல் முற்றும் தமக்கு எடுத்துக்கூற வன்மையில்லை என்பார் அவராடலை யாருரைசெய்யவல்லார் என்றார். (௧)

பின்னையமச்சம்பெருகப்பெரியோரையென்று
தென்னையெளியாரெனயானிகழ்ந்திங்ஙனீண்டச்
சொன்னேனவர்க்கென்குறையென்னிற்றருவிநானே
தந்நேரிலாதார்தமைக்காணத்தகுவதென்று.

(இ-ள்.) பின் நேயம் அச்சம் பெருக - பின்பு (சித்தமூர்த்திகளிடத்துத்தமது புதல்வனைக்கண்டாலொத்த) அன்பும் (அரசர்மக்களைக்கண்டாலொத்த) அச்சமும் மேலெழுந்தோங்க, என்னே - இது என்ன, பெரியோரை என்றது எளியார் என இகழ்ந்து யான் இங்ஙன் ஈண்ட சொன்னேன் - பெரியோரைச் சிறிதும் நன்கு மதியாது எளியார்போல அவமதித்து யான் இவ்விடத்துவரும்படி (அமைச்சர்முன்னிலையில்) தெரிவித்தேன், அவர்க்கு என்னில் குறை என் - அவர்க்கு என்னிடத்தில் பெறும் குறைபாடு யாதொன்று, நானே தருவி தம் நேரில்லாதார் தமை காண தகுவது என்று - (குறைபாடுடையேன்) யானே (ஆகையால் அவரைத்) தேடித் தமக்கொப்பில்லாதாராகிய அச்சித்தமூர்த்திகளைக் காணக்கடவேனென்றுகருதி.

தமக்கோர்குறைபாடில்லார் பிறரைநாடி யடையும் வழக்கின்மையால் அவர்க்கு என்னிற்குறையென் எனவும், தமக்கோர் குறைபாடுடையார் பிறரை நாடியடையும் வழக்குண்மையால் தருவிநானே - தந்நேரிலாதார்தமைக் காணத்தகுவது எனவுங் கூறினன். (௨)

ஆனந்தசித்தர்தமைக்காண்பலென்றன்புகூர்ந்த
மீனந்தரித்தகொடிவேந்தன்குறிப்புநோக்கி
மோனந்தரித்தசிவயோகருமுந்தித்தம்பொன்
மானந்தனக்குவடமேற்றிசைவந்திருந்தார்.

(இ-ள்.) ஆனந்த சித்தர் தமைக் காண்பல் என்று அன்பு கூர்ந்த - பேரின்ப வடிவமாகிய சித்தமூர்த்திகளைக் காண்பேனென்று அன்புமிக்க, மீனம் தரித்த கொடிவேந்தன் குறிப்பு நோக்கி - கயற்கொடியையேந்திய அபிடேகபாண்டியனுடைய உள்ளக்குறிப்பையுணர்ந்து, மோனம் தரித்த சிவயோகரும் முந்தி - மௌனநிலையைமேற்கொண்ட அந்தச்சிவயோகமூர்த்திகளும் (அப்பாண்டியனுக்கு) முற்பட்டு, தம் பொன் மானம் தனக்கு வடமேற்றிசை வந்திருந்தார் - தமது பொன்னுலாகிய இந்திரவிமானத்துக்கு வடமேற்றிசைப்பக்கத்தில் வந்திருந்தருளினர்.

எல்லாம்வல்லாராதலால் குறிப்புநோக்கி என்றார். (௩)

அருகாதசெல்வத்தவனன்றுதைத்திங்கடோற்றம்
வருகாலமாகமதுரேசனைவந்துவந்தித்
தருகாதரத்தாற்கழிந்துள்வலமாகமீள
வருவானவன்முன்வருகாஞ்சுகிவன்கண்மாக்கள்.

(இ-ள்.) அன்று தைத் திங்கள் தோற்றம் வரு காலம் ஆக - அந்நாள் மகர மாதப்பிரவேசம் வருங்காலமாக, அருகாத செல்வத்தவன் வந்து மதுரேசனை வந்

Koviloor Digital Library

தித்து - நிறைந்த செல்வத்தையுடைய அபிடேகபாண்டியன் வந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கி, உருகு ஆதரத்தால் கழிந்து உள்வலமாக மீள வருவான் அவன் முன் வரு காஞ் சுகி வன்கண் மாக்கள்-மனமுருகுதற்கேதுவாகிய அன்பால் ஆசை மிகுந்து உள்ளே பிரதட்சிணமாக மீளவரும் அப்பாண்டியன் முன்பு கோலால் விலக்கிச்செல்லும் கஞ்சுகிகளாகிய தறுகண்மையையுடைய மெய்காப்பாளர்.

கழிந்து என்னும் எச்சத்திற்கு வினைமுதல்வேண்டும் ஆதலால் ஆசை எனக் கொண்டாம் "அன்பீனுமார்வமுடைமை" என்பதனுற்காண்க. ஆல் உருபு ஏதுப் பொருட்டு. கஞ்சுகமுடையோன் கஞ்சுகி. இது காஞ்சுகி எனவருதல் நீட்டும்வழி நீட்டல். கஞ்சுகம் சட்டை. (௪)

சீறிட்டவேங்கையதட்சேக்கையர்சீறியைந்தும்
பாறிட்டவேடர்யோகபட்டத்தர்கட்டங்கத்தி
லேறிட்டகையரிறுமாந்திருப்பாரைநோக்கி
மாறிட்டுநீக்கியெழப்போகெனவந்துசொன்னர்.

(இ-ள்.) சீறிட்டவேங்கை அதள் சேக்கையர் - கோபித்த வேங்கையினது தோலை ஆசனமாக உடையவராகி, சீறி ஐந்தும் பாறிட்ட வேடர் - கோபித்து ஐம்புலன்களையும் வெற்றிகொண்ட தவவேடத்தையுடையவராகி, யோகபட்டத்தர் - யோகப்பட்டிகையையுடையவராகி, கட்டங்கத்தில் ஏறு இட்ட கையர் - மழுவாயுதத்தின்மேல் வைத்த கையையுடையவராகி, இறுமாந்திருப்பாரை நோக்கி - இறுமாப்புற்றிருக்கும் சித்தமூர்த்திகளைப்பார்த்து, மாறிட்டு நீக்கி எழ போக என வந்து சொன்னர் - கோல் நீட்டி அங்கு நின்றும் நீங்கி யெழப்போகக்கடவீரென்று வந்து சொன்னர்கள்.

கட்டங்கம் கடங்கம் என்னும் வடசொற்றிரிபு. ஆலாஸ்யமகாத்மியத்தில் கட்டுவாங்கம் என இருத்தலால் கட்டங்கம் கட்டுவாங்கம் என்னும் வடசொற்றிரிபு எனக்கொள்ளில் கட்டிற்கால் வடிவமாகவுள்ள ஒருவகை ஆயுதம் எனக்கொள்க. (௫)

பின்னுவருதென்னர்பிரான்பெரியோரைநோக்கி
யெந்நாடுநுந்நாடுமக்கென்வரும்யாதுவேண்டு
நுந்நாமமேதுநுவன்மின்னெனவையரெந்த
நன்னாடுமெந்தநகருள்ளுந்திரிவமப்பா.

(இ-ள்.) பின் ஆக வரு தென்னர் பிரான் - (மெய்காப்பாளருக்குப்) பின்னுக்வரும் அபிடேகபாண்டியன், பெரியோரை நோக்கி நும் நாடு எ நாடு - அச்சித்தமூர்த்திகளைப்பார்த்து உமது நாடு எந்தநாடு, உமக்கு என் வரும் - உமக்கு யாது கைவரும், யாது வேண்டும் - (என்னுல்) உமக்கு என்னவேண்டும், நும் நாமம் ஏது நுவன் மின் என - உமது பேர் யாது சொல்லுங்களென்று வினவ, ஐயர் அப்பா எந்த நல் நாடும் எந்த நகருள்ளும் திரிவம்-அச்சித்தமூர்த்திகள் (அப்பாண்டியனைநோக்கி) அப்பனே எந்த நல்ல நாட்டினுள்ளும் எந்த நகரினுள்ளும் சஞ்சரிப்போம். (௬)

ஆனாலுமிப்போதனிகான்மிரநாட்டிற்காசி
தானுமிருக்குந்தலமாகுநாத்தனி
யானதபிச்சைப்பெருவாழ்வுடையார்நமா
நானாரும்விஞ்சைநடாஅய்த்திரிசித்தரோம்யாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆரூரம் - ஆயிரம், இப்போது அணி காஸ்மீர நாட்டில் காசிநகர் நாம் இருக்குந் தலமாகும் - இப்போது அழகுமிக்க காஸ்மீரநாட்டிலுள்ள காசிநகரந்தான் நாம் வசிக்குந்தலமாகும், நாதன் ஆதி அநாத பிச்சை பெருவாழ்வு உடையார் நமராம் (பிரமன் முதலிய பசுக்களுக்குப்) பதியாகி நீங்காத பிச்சையாகிய பெரிய வாழ்வினையுடைய சிவபெருமான் அடியார்களே நமது உறவினராம், யாம் நாள் நாளும் விஞ்சை நடாய் திரிசித்தரேம் - நாம் எந்நாளும் ஆகருஷண முதலிய வித்தைகளை நடத்தித்திரிகின்ற சித்தராம்.

இதனுல் நாடும் நகருந் தொழிலுங் கூறப்பட்டன. நாள்நாள் என்றும் அடுக்கு பன்மைப்பொருளில் வந்தது. (எ)

ஆனந்தகானந்தொடுத்திங்குளவானசைவந்
தானம்பலவுந்தொழுந்தப்பரமாகிவந்தே
ஞானந்தருமிந்நகரிம்மையிற்சிவன்முத்தி
மானந்தமானபரமுத்திமறுமைநல்கும்.

(இ-ள்.) ஆனந்த கானம் தொடுத்து இங்கு உள ஆன சைவத் தானம் பலவும் தொழும் தப்பரமாகி வந்தேம் - காசிதொட்டுத் தென்பாலுள்ள சைவத்தலங்கள் பலவற்றையும் வணங்கும் அதுவே பிரயோசனமாய்ச் சஞ்சரிக்கின்றேம், ஞானந் தரும் இந்நகர் (அடைந்தோர்க்குத்) திருவருள் ஞானத்தைப் பாலிக்கும் இந்த மதுரைநகரமானது, இம்மையில் சிவன் முத்தி - இப்பிறப்பிற் சீவன்முத்தியையும், மறுமை மான் அந்தமான பரமுத்தி நல்கும் - மறுமையில் பிரகிருதி மாயைக்கு அப்பால் பட்ட பரமுத்தியையுந் தந்தருளாநிற்கும்.

தற்பரம் தத்பரம் என்னும் வடசொற்றிரிபு. தத் அது, பரம் பிரயோசனம். மான் என்றமையால் இதற்குக் காரணமான விந்துமோகினியை உபலக்கணத்தாற் கொள்க. தத்துவ முப்பத்தாறும் நீங்கின இடத்தே முத்தியாகையால் காரியத்தைக் காரணமாக வுபசரித்து மானந்தமான என்றார். மால் நந்தமான எனச் சொல்வலைசெய்து பாசமாகிய மயக்கங்கெட்ட எனப் பொருள்கொண்டு நுகர்வோன்றொழிலை நுகர்ச்சிமேலேற்றிக் கொள்ளுதலும் ஒன்று. (அ)

ஈண்டுள்ளவர்க்கெம்விளையாடலைக்காட்டியிச்சை
வேண்டும்பலசித்தியுநல்குவம்வேதமாதி
மாண்டங்குமெண்ணெண்கலைஞானமும்வல்லமல்லாற்
சேண்டங்குமெல்லாப்பொருளும்வலசித்தரோம்யாம்.

(இ-ள்.) ஈண்டு உள்ளவர்க்கு எம் விளையாடலை காட்டி - இங்குள்ளவர்க்கு எமது திருவிளையாடல்களை முன்னர் உணர்த்தி, இச்சை வேண்டும் பல சித்தியும் நல்குவம் - (அவைவண்டெம்மை வழிபடுவோர்க்கு) அவரவரிச்சைவழியே வேண்டிய பல சித்திகளையும் தந்தருள்வோம், வேதம் ஆதி மாண் தங்கும் எண்ணெண் கலைஞானமும் வல்லம் - வேதமுதலிய மாட்சிமைதங்கிய அறுபத்துநான்கு கலைஞானங்களின் தேர்ச்சியிலும் வன்மையையுடையேம், அல்லால் - இவையுமன்றி, யாம் சேண் தங்கும் எல்லாப் பொருளும் வல்ல சித்தரேம் - நாம் தூரத்திலுள்ள எல்லாப்பொருளையும் அழைத்தலில்வல்ல ஆக்கிரு சித்தரெனப் பெயரும் உடையேம்.

சேண்டங்குமெல்லாப்பொருளும் வல்ல சித்தர் என்றமையில் ஆக்கிரு சித்தர் எனப் பேர் போந்தமையால் இதனுற் பெயர் கூறப்பட்டது. (கூ)

Koviloor Digital Library

உன்னானமக்குப்பெறல்வேண்டுவதொன்றுமில்லை
தென்றுவெனவுண்ணகைசெய்தனர்சித்தயோகர்
மன்னுமிவர்தம்மிறுமாப்புஞ்செருக்கும்விறு
மென்னுலளவிட்டறிவேனெனவெண்ணித்தேர்வான்.

(இ-ள்.) சித்தயோகர் தென்னு - அந்தச் சித்தமூர்த்திகள் பாண்டியனே, உன்னால் நமக்குப் பெறல் வேண்டுவது ஒன்றுமில்லை என உள் நகை செய்தனர் - உன்னால் நமக்குப் பெறும்பொருள் சிறிதுமில்லையென்று புன்னகை செய்தருளினார், மன் ஆம் இவர் தம் இறுமாப்பும் செருக்கும் - நிலைபெற்ற இவரது இறுமாப்பையும் அகங்காரத்தையும், விறும் என்னால் அளவிட்டு அறிவேன் என்ன எண்ணி தேர்வான்-நிகரன்றியுள்ள என்னளவைகளால் அளந்தறிவேனென்று ஆராய்ந்தறிவானாயினன்.

இதனால் யாதுவேண்டும் என்னும் வினாவிற்கு விடை கூறப்பட்டது. (௧௦)

தேரும்பொழுதோருழவன்னொருசெல்வக்கன்ன
லாருங்கமுகென்னவயிர்ப்புறக்கொண்டுதாழப்
பாருந்திசையும்புகழ்பங்கயச்செங்கைதாங்கி
நீரும்பிறையுங்கரந்தார்தமைநேர்ந்துசொல்வான்.

(இ-ள்.) தேரும்பொழுது ஓர் உழவன் - அவ்வாறு ஆராயுங்காலையில் உழுதொழிலையுடைய ஒருவன், ஒரு செல்வக்கன்னல் ஆரும் கமுகு என்ன அயிர்ப்பு உறக்கொண்டு தாழ - செழித்தோங்கிய ஒரு கரும்பைக் கண்டோரெவரும் இது கமுகமரமோவென்று ஐயங்கொள்ளக் (கையுறையாகத்) தாங்கிவணங்க, பாரும் திசையும் புகழ் பங்கயம் செங்கை தாங்கி - நிலவுலகும் எட்டுத்திக்கும் புகழும் தாமரை போன்ற தனது சிவந்த கையிலெடுத்து, நீரும் பிறையும் கரந்தார் தமை நேர்ந்து சொல்வான் - கங்கையையும் சந்திரனையும் ஒளித்துவந்தருளிய சித்தமூர்த்திகளை எதிர்ந்து சொல்லுகின்றான்.

கைம்மாறு கருதாது கொடுக்குங் கரம் ஆதலால் இடத்தினிகழ்பொருளின் தொழில் தந்து பாருந்திசையும் புகழ்பங்கயச்செங்கை என்றார். செல்வம் என்னுங் குறிப்பால் செழித்தோங்கும் எனப் பொருள்கொண்டாம். "குழைகொண்டுகோழியெறியும்வாழ்க்கையள்" என்பதனுலுணர்க. (௧௧)

வல்லாரில்வல்லேமெனவும்மைமதித்தநீரிக்
கல்லானைக்கிந்தக்கரும்பையருத்தினெல்லாம்
வல்லாருநீரேமதுரைப்பெருமானும்நீரே
யல்லாலெவர்நும்மனம்வேட்டதளிப்பனென்றான்.

(இ-ள்.) வல்லாரில் வல்லேம் என உம்மை மதித்த நீர் - வல்லவருள் யாம் வல்லேம் என்று தம்மைத்தாமே நன்கு மதித்த நீர், இக்கல்லானைக்கு இந்த கரும்பை அருத்தின் - இங்கு நிற்குங் கல்லானைக்கு இந்தக்கரும்பினை ஊட்டின், எல்லாம் வல்லாரும் நீரே மதுரைப்பெருமானும் நீரே அல்லால் எவர் - எல்லாம் வல்லவரும் நீரே மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளும் நீரேயன்றி யாருள்ளார், நும் மனம் வேட்டது அளிப்பன் என்றான் - உமது மனத்திற்கருதியது எதுவோ அதனைத் தடையின்றிக்கொடுப்பேன் என்று கூறினான்.

Koviloor Digital Library

எழுற்றுருபுகூட்டிப் பிரித்தற்கண்வந்தது. தாம் என்னும் படர்க்கைப்பெயர் முன்னிலையில் உபசாரப்பொருட்டின்மேல் நிற்றலால் தம்மைத்தாமே எனப் பொருள்கொண்டாம். (௪௨)

என்றுமுகிலைத்தளையிட்டவன்கூறக்கேட்டுத்
தென்றுவருதியெனப்புன்னகைசெய்துசித்தர்
நின்றால்வருவதெமக்கேதுநினக்குநாமே
யுன்றுசைநிரத்தருகின்றதலாமலுண்டோ.

(இ-ள்.) என்று முகிலை தளை யிட்டவன் கூற கேட்டு - என்று மேகங்களைத் தளையிட்ட பாண்டியன் சொல்லக் கேட்டருளி, தென்று வருதி என புன்னகை செய்து - பாண்டியனே இங்கு வருவாயென்று புன்னகையரும்பி, சித்தர் நின்றால் வருவது எமக்கு ஏது - அச்சித்தமூர்த்திகள் உன்னால் வரும் பயன் எமக்கு என்ன உள்ளது, நினக்கு - உனக்கு, நாமே உன் ஆசை நிர தருகின்றது அல்லாமல் உண்டோ - நாமே உனது ஆசை நிரம்படி தருவதல்லாமல் (யான்பெறுவது) வேறுண்டோ (உன்பால் ஒன்றுமில்லை என்றபடி.)

ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது. (௪௩)

செல்லாவுலகத்திறுஞ்சென்றொருவித்தைகற்றோர்
பல்லாருநன்குமதிக்கப்பயனெய்துவார்க
ளெல்லாமறிந்தவெமக்கொன்றிலுமாசையில்லை
கல்லானைகன்னற்கறிக்கின்றதுகாண்டியென்றார்.

(இ-ள்.) ஒரு வித்தை கற்றோர்-(ஆகருஷண முதலிய ஆறனுள்) ஒரு வித்தையைக் கற்றவர்கள், செல்லா உலகத்திறும் சென்று பல்லாரும் நன்கு மதிக்க பயன் எய்துவார்கள்-அடைதற்கரிய உலகத்திலுஞ்சென்று பலரும் (அதனை) நன்குமதிக்கக் காட்டிப் பயனடைவார்கள், எல்லாம் அறிந்த எமக்கு ஒன்றிலும் ஆசை இல்லை-எல்லாவற்றையும் அறிந்த எங்களுக்கு ஒருபொருளிலும் விருப்பமில்லை, கல்லானை கன்னல் கறிக்கின்றது காண்டி என்றார்-கல்லானையானது கரும்பைக்கடித்துச் சுவைத்தலைக் காண்பாயென்றார்.

ஆகருஷணமுதலிய அறுவகைத்தொழில்மேலும், தனது எண்குணத்துள் முற்றுமுணர்தல் மேலுஞ்செல்ல எல்லாமறிந்த என்றார். காண்டி எனத் தெளிவுபற்றி எதிர்காலத்தை இறந்தகாலமாகக் கூறியது காலவழுவமைதி. (௪௪)

கடைக்கண்சிறிதேகுறித்தார்முன்கடாக்கல்யானை
யடைக்கண்டிறந்துமதமூன்றும்வழியவின்வா
யடைக்கும்படிவாய்திறந்தார்த்துப்புழைக்கைநீட்டித்
தொடைக்குன்றதன்கைச்சுவைத்தண்டைப்பறித்ததன்றே.

(இ-ள்.) சிறிதே கடைக்கண் குறித்தார் முன் - சிறிது கடைக்கண்செய்தருளிய சித்தமூர்த்திகளின்முன், கடாக் கல்யானை - மதஞ்சிந்தும் கல்யானையானது, மடைக்கண் திறந்து மதம் மூன்றும் வழிய - மடைக்கண்போலக் கண்திறந்து மூன்று மதங்களும் ஒழுக, விண் வாய் அடைக்கும்படி வாய் திறந்து ஆர்த்து - மேகத்தின் வாயடையும்படி தனது வாயைத்திறந்தொலித்து, புழைக்கை நீட்டி தொடைக் குன்று அன்றுன்கைச் சுவைத்தண்டை பறித்தது - துவாரம்பொருந்திய துதிக்கை

Koviloor Digital Library

யை நீட்டி மாலையையணிந்த மலையைப்போலத் திண்மைவாய்ந்த பாண்டியனது கையிலுள்ள கரும்பினைப்பறித்தது.

கல்லாற்சமைந்த யானையாயினும் யானை என்றமையால் சாதியடைதந்து டோக்கல்யானை என்றார். மாலையையணிந்ததோர் மலையின்மையால் தொடைக்குன் றனுன் என்றது இல்பொருளுவமையணி. (௧௫)

பறித்துக்கடைவாய்வழிசாறளிபாய்ந்துநக்கக்
கறித்துக்குதட்டிப்பருகிக்கரமூசலாட
நெறித்துத்தருக்கிநிழல்சீறிநிமிர்ந்துநிற்ப
மறித்துக்கடைக்கண்குறித்தார்பினுமாயம்வல்லார்.

(இ-ள்.) பறித்து கடை வாய் வழி சாறு அளிபாய்ந்து நக்க - (பாண்டியன் கையினின்றும்) பறித்துக் கடைவாயின் வழி ஒழுகுஞ் சாற்றினை வண்டுகள் பாய்ந்து சுவைபார்க்க, கறித்து குதட்டி பருகி - கடித்துக் குதட்டிச் சுவைத்து, கரம் ஊசலாட நெறித்து - (தனது) துதிக்கை ஊசல்போலாடப் பிண்டிசெய்து, தருக்கி நிழல் சீறி நிமிர்ந்து நிற்ப - அகங்கரித்துத் தனது நிழலைக்கோபித்து நிமிர்ந்து நிற்க, பின்னும் மாயம் வல்லார் மறித்துக் கடைக்கண் குறித்தார் - பின்னும் மாயைவித் தையில்வல்ல சித்தமூர்த்திகள் மீளவுஞ் சிறிது கடைக்கணித்தருளினர்.

கறித்தலும் குதட்டுதலும் பருகுதலும் கரமூசலாடலும் நெறித்தலுந் தருக்குதலும் நிழல்சீறுதலும் நிமிர்ந்து நிற்றலும் யானைக்குரிய தொழிலாதலால் தொழி ற்றன்மையணி. (௧௬)

மட்டுற்றதாரான்கழுத்திற்கண்டமாலைதன்னை
யெட்டிப்பறித்ததிகல்காஞ்சுகிமாக்கள்சீறிக்
கிட்டிக்களிற்றைப்புடைப்பான்கிளர்கோல்கொண்டோச்சச்
சிட்டத்தவர்கண்சிவந்தானையைச்சிறிநோக்க.

(இ-ள்.) மட்டு உற்றதாரான் கழுத்தில் கண்டமாலை தன்னை எட்டிப்பறித் தது - வாசமிக்க மாலையையணிந்த பாண்டியனுடைய கழுத்திலணிந்த கண்டாவளி யை யெட்டிப்பறித்தது, இகல் காஞ்சுகி மாக்கள் சீறி கிட்டி களிற்றை புடைப்பான் கிளர் கோல்கொண்டு ஓச்ச - போர்செய்யும் மெய்காப்பாளர் மிகவும் கோபித்து நெருங்கி யானையை யடிக்கும்படி தமது கையில் விளங்குங் கோலை மேலெடுக்க, சிட்டத்தவர் கண் சிவந்து ஆனையைச் சிறிநோக்க - யார்க்கும் மேலாகிய சித்தமூர்த்திகள் கண்கள் சிவந்து யானையைக் கோபித்துப்பார்த்தருள.

கண்டாவளி, கண்டாவலி யென்னும் வடசொல் திரிபு. கண்டத்திலணிந்த முத்தின் வரிசையாலாகிய கோவை. ஏகாவலியென வடநூலிற் கூறப்பட்டது. (௧௭)

கண்டாவளியைக்களிறுண்டதுகண்கள்சேப்புக்
கொண்டானரசன்சிவயோகரிற்கோபமூளத்
தண்டாவரசன்றமருட்டறுகண்ணர்சீறி
வண்டாரிதழிமறைத்தாரையடிக்கவந்தார்.

(இ-ள்.) கண்டாவளியை களிறு உண்டது-கழுத்திலணிந்த கண்டாவளியை ப் பறித்த யானையானது (அதனை) உண்டது, அரசன் கண்கள் சேப்புக் கொண்டா ன் - அரசன் கண்கள் சிவந்து, சிவயோகரில் கோபம் மூள - சிவ்யோகர்களாகி ய சித்தமூர்த்திகளிடத்துக் கோபம் மேலெழுந்தோங்க, தண்டா அரசன் தமருள் -

Koviloor Digital Library

(அஞ்சுகின்றும்) நீக்காத பாண்டியனுடைய பரிசனராயுள்ள மெய்காப்பாளர்களில், தறு கண்ணர் சீறி வண்டு ஆர் இதழி மறைத்தாரை அடிக்க வந்தார் - அஞ்சாமையையுடைய வீரர்கள் கோபித்து வண்டுகளிறைந்த கொன்றைமாலையை மறைத்தருளிவந்த அச்சித்தமூர்த்திகளை யடிக்கும்படி வந்தார்கள்.

நோக்க என்னும் வினையெச்சம் உண்டு என்னும் பிறவினையின் முதனிலை கொண்டது. செப்புக்கொண்டான் ஒருசொல். இந்த அற்புதச்செய்தியைநோக்கி மெய்காப்பாளரும் அஞ்சினர் என்பார் தமருட்டறுகண்ணர் என்றார். (௧௮)

அப்போதிளமூரலரும்பியசித்தசாமி
கைப்போதமைத்துக்கடிந்தோர்தமைநின்மினென்ன
மைப்போதகமன்னவர்வைத்தடிபேர்க்கலாற்று
தொப்போதரியநிலையோவியம்போலநின்றார்.

(இ-ள்.) அப்போது இளமூரல் அரும்பிய சித்தசாமி - அக்காலையில் புன்னகைசெய்தருளிய சித்தமூர்த்திகள், கைப்போது அமைத்து கடிந்தோர் தமை நின்மின் என்ன - தமது கைத்தாமரையை மறித்துக்கோபித்து (தம்மை) அடிக்கவந்தவர்களை நில்லுங்களென்று கூறியருள, மை போதகம் அன்னவர் வைத்த அடிபேர்க்கல் ஆற்றாது - கரிய யானையை ஒத்த வீரர்கள் வைத்த காலைப் பேர்த்துவைக்க முடியாது, ஒப்பு ஓது அரிய நிலை ஓவியம்போல நின்றார் -(தனக்கு ஒன்றும்) உவமையின்மையால் உவமை கூறுதற்கரிய நிலையியற்பொருளாகிய சித்திரம்போல நின்றார்கள். வைத்த என்னும் பெயரெச்சத்தின் அகரவிறுதொகுத்தல். (௧௯)

மத்தக்களிற்றான்வெகுளித்தழன்மாறியன்பு
பொத்தப்புதைந்தமனத்தற்புதம்பொங்கிச்சோரச்
சித்தப்பெருமானடிமாமுடிதீண்டப்பாச
பெத்தத்தமியேன்பிழையைப்பொறுமென்றுவீழ்ந்தான்.

(இ-ள்.) மத்தம் களிற்றான் வெகுளி தழல் மாறி - மதமயக்கமுடைய ஆனைச்சேனையையுடைய பாண்டியன் கோபாக்கினி பற்றறநீங்கி, அன்பு பொத்த புதைத்த மனத்து அற்புதம் பொங்கிச் சோர - அன்பானது சிறிது மிடமின்றிப்போர்க்க (அதனால்) மூடப்பட்ட மனத்தினிடத்து (அடைதற்கரிய) அதிசயம் பொங்கி வழிதலால், சித்தப்பெருமான் அடிமா முடி தீண்ட-சித்தமூர்த்திகளினுடைய திருவடிகளைத் தனது பெரிய மணிமகுடந்தீண்ட, பாச பெத்தத் தமியேன் பிழையைப் பொறுமென்று வீழ்ந்தான் - பாசத்தாலாகிய பந்தத்திற் கட்டுண்ட தமியேன்செய்த குற்றங்களைப் பொறுத்தருளுமென்று தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கினான்.

சோர என்னும் வினையெச்சங் காரணகாரியப்பொருள்மேல் நிற்றலால் வழிதலால் என்னும். பாசபெத்தம் இரண்டும் வடசொல்லாதலால் வருமொழி வல்லெழுத்தியல்பாயிற்று. அற்புதம் என்றமையால் அடைதற்கரிய என்னும். பாசம் ஆணவமுதலிய மலங்கள்மேல் நிற்றலால் சாதியொருமை. (௨௦)

அன்புக்கிரங்குங்கருணைக்கடலானவைய
ரின்புற்றுவேண்டும்வரங்கேளெனத்தாழ்ந்துவேந்த
னன்புந்திரப்பேறருள்வாயெனநல்கிச்செங்கை
வன்புற்றவேழமிசைவைத்தருணோட்டம்வைத்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) அன்புக்கு இரங்கும் கருணைக்கடலான ஐயர்-(அடியவர்களது) அன்புக்குக்கனிந்தருளும் கிருபைக்கடலாகிய சித்தமூர்த்திகள்,இன்பு உற்று வேண்டும் வரம் கேள் என-மகிழ்கூர்ந்து வேண்டியவரத்தைக் கேளாயென்றருள,வேந்தன் தாழ்ந்து நன் புத்திரப்பேறு அருள்வாய் என நல்கி-அபிடேகபாண்டியன் வணங்கி நல்ல புத்திரப்பேற்றை அருள்செய்வாயென்று குறையிரக்கக் கொடுத்தருளி, செங்கை வன்பு உற்ற வேழமிசை வைத்து அருள் நாட்டம் வைத்தார்-(தமது) செவந்த திருக்கரத்தை வலிமைமிக்க யானையின்மேல் வைத்துக் கிருபாநோக்கம் வைத்தருளினார்.

இரங்குவானது பணியாதலால் அன்புக்கிரங்கும் எனவும், கல்லானை என்பது தோன்ற வன்புற்ற வேழம் எனவுங் கூறினார். (உக)

கலிவிருத்தம்.

தழைக்குநீள்கதிர்த்தண்முத்தமாலையைப்
புழைக்கைநீட்டிக்கொடுத்ததுபோதக
மழைக்கைநீட்டினன்வாங்கினனீதியிற்
பிழைக்கலாதபெருந்தகைவேந்தனே.

(இ-ள்.) தழைக்கும் நீள் கதிர் தண் முத்த மாலையை - பரந்த மிக்க கிரணத்தையுடைய தண்ணிய கண்டாவளியாகிய முத்துமாலையை, போதகம் புழைக்கை நீட்டி கொடுத்தது - (விழுங்கிய) கல்லானையானது (மீளவும் தனது) துவாரம்பொருந்திய துதிக்கையால் நீட்டிக்கொடுக்க, நீதியில் பிழைக்கலாத பெருந்தகை வேந்தன் - மனுநீதியினின்று சிறிதும் தவறாத பெருந்தகைமையையுடைய அபிடேகபாண்டியன், மழைக்கை நீட்டினன் வாங்கினன் - மேகம்போலப் பிரதியுபகாரங்கருதாது கொடுக்கும் தனது கையைநீட்டி வாங்கினான்.

செங்கோல் சிறிதுங் கோடாதவன் என்பார் நீதியிற் பிழைக்கலாத என்றார். கொடுத்தது முற்றெச்சம். (உஉ)

முத்தமாலிகைவாங்குமுன்முன்னின்ற
சித்தசாமிதிருவுருக்கண்டிலன்
மத்தயானைவடிவமுமேனைய
வொத்ததாகவுரவோன்வெருவினான்.

(இ-ள்.) முத்த மாலிகை வாங்கு முன் - முத்தமாலையைக் கைநீட்டி வாங்குதற்குமுன், முன் நின்ற சித்த சாமி திருவுரு கண்டிலன் - தன் முன்னின்றருளிய சித்தமூர்த்திகளினுடைய திருவுருவைக்காணானாகி, மத்தம் யானை வடிவமும்-மதமயக்கத்தையுடைய யானையின் வடிவமும், ஏனைய ஒத்தது ஆக உரவோன் வெருவினான் - (அங்குநின்ற) மற்றைய கல்லானைகளை ஒத்திருக்க அன்பிற்பெரியோனாகிய அபிடேகபாண்டியன் அச்சமுற்றான்.

கண்டிலன் முற்றெச்சம். (உ௩)

இந்தவாடலெமக்குயிராயவிவ்
வந்தமில்லியருள்விளையாட்டெனு
முந்தைவேதமுதல்வனைமீளவும்
வந்துவந்தனைசெய்தனன்மன்னனே.

Koviloor Digital Library

(இ-ள்.) இந்த ஆடல் எமக்கு உயிராய இ அந்தம் இல்லி அருள் விளையாட்டு என்று - இந்தத் திருவிளையாடல் எமதுயிர்க்கு உயிராய் நிலவிய இந்த இறுதியில்லாத சோமசுந்தரமூர்த்தியின் அருள் விளையாடலென்று கருதி, மூன்றை வேத முதல்வனை மன்னன் மீளவும் வந்து வந்தனை செய்தனன் - யாவருக்கும் முற்பட்டவருகிய அச்சோமசுந்தரக்கடவுளை அரசன் மீளவும் வந்து வந்தித்தான். (உச)

முழுதுணர்ந்தமுதல்வநின்றாடலை
யிழுதையேனறியாதளந்தேனென
வழுதிறைஞ்சியபராதமீந்துகை
தொழுதுநின்றுதுதிக்கத்தொடங்கினான்.

(இ-ள்.) முழுதும் உணர்ந்த முதல்வ - முற்றுமுணர்ந்தருளிய முதல்வனே, நின் ஆடலை இழுதையேன் அறியாது அளந்தேன் என்று - உனது திருவிளையாடலை அறிவில்லேனாகிய நான் அறியாமையால் அளந்தறியத் தொடங்கினேனென்று, அழுது இறைஞ்சி அபராதம் ஈந்து கைதொழுது நின்று துதிக்க தொடங்கினான்-அழுது வணங்கி அடியேன் பேரபராதி ஆதலால் (அவ்வபராதத்தைப் பொறுத்தருள்கவென) அபராதத்தை இறுத்துக் கைகூப்பிநின்று துதிக்கத்தொடங்கினான்.

அறியாமையாற் பிழைசெய்தோர் அறிந்தவழி அது தீர்த்தற்பொருட்டு அபராதமிறுத்தல் முறைமையாதலால் அபராதமீந்து என்றார். முழுது என்பதனிறுதியில் முற்றும்மை தொகுத்தல். (உரு)

கொச்சகக்கலிப்பா.

வேதியாய்வேதவிளைபொருளாய்வேதத்தி
னீதியாய்நீதிநெறிகடந்தநீளொளியா
யாதியாயீருய்நடுவாயவைகழிந்த
சோதியாய்நின்றாயென்சோதனைத்தோநின்னியல்பே.

(இ-ள்.) வேதியாய் - வேதத்தில் வல்ல அந்தணனே, வேதம் விளைபொருளாய் - (நன்றுணர்வுடையோர் ஆராயுந்தோறும்) வேதத்தில் விளையும் பொருளாய் உள்ளவனே, வேதத்தின் நீதியாய் - அவ்வேதத்துளடங்கிய நீதிவடிவானவனே, நீதி நெறி கடந்த நீள் ஒளியாய்-அந்த நீதியின் நெறியைக்கடந்துநின்ற மிக்க ஒளி வடிவாயுள்ளாய், ஆதியாய் ஈறாய் நடுவாய் அவை கழிந்த சோதியாய் நின்றாய் - முதலாயுள்ள தோற்றமும் இறுதியாயுள்ள ஒடுக்கமும் நடுவாயுள்ள நிலையும் அவற்றைக் கழிந்துநின்ற சோதியும் ஆகி நின்றாய், நின் இயல்பு என் சோதனைத்தோ - (இவ்வாறு நின்ற) உனது தன்மை எனது சோதனையிலகப்பட்டதோ.

அயன் முதலிய யாவருக்கும் வேதாகமங்களைத்தந்து அவற்றின் பொருளை விரித்தருளுதலால் அந்தணனாய் நின்றான் என்பான் வேதியாய் எனவும், வேதத்தில் ஆன்மாக்கள் தரத்திற்கேற்ப ஆங்காங்குப் பலகடவுளரைத் தான் கூறியிருப்பினும் அக்கடவுளர்பால் அன்புபூண்டு வழிபட்டொழுகு மான்மாக்களுக்கு, அரசன் தன்னாணையைத் தன்னேவல்வழி நிற்கு மந்திரி முதலாயினாரிடத்து வைத்துக் குடிகளைக் காக்குமாறுபோலத் தன்னாணையைத் தன்னேவல்வழி நிற்கும் அக்கடவுளரிடத்து வைத்துப் பயன் கொடுத்தருளு முதற் கடவுள் சிவனேயாதலால் அவ்வேதத்திற் கூறும் பொருளெல்லாம் அவனே என்பான் வேதவிளைபொருளாய் எனவும், தானருளிய வேதாகமங்களின்வழி யொழுகாத ஆன்மாக்களைத் தனது சத்தியால் நரகத்திற்புகுத்தியும், அவற்றின்வழி யொழுகும் ஆன்மாக்களைச் சுவர்க்காதி யுலகிற் செலு

Koviloor Digital Library

த்தியும் நிற்பது அவனது அருட்குணம் என்பான் வேதத்தினீதியாய் எனவும், மனவாக்கிற்கதீதன் என்பான் நீதிநெறிகடந்த எனவும், சோமசூரியாக்கினி முதலிய ஒளிகளுக்கெல்லாம் ஒளிதரும் பேரொளியாய் நின்றான் என்பான் நீளொளியாய் எனவும், ஆன்மாக்களுக்கு மலபாகம் வருவித்தற்பொருட்டுத் தோற்றமும் நிலையும் இறுதியுமாய்த் தனது சத்திகளால் நின்றான் என்பான் ஆதியாயீறாய் நடுவாய் எனவும், அவை அவனுக்கு இல்லை என்பான் அவை கழிந்த எனவும், அவற்றுட்படாதவனாதலால் அளவை கடந்தவன் என்பான் என் சோதனைத்தோ நின்னியல்பே எனவுங் கூறினான். "யாதொருதெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியாங்கே - மாதொருபாகனார்தாம்வருவர்" எனவும், "மறைகளீசன்சொலச்சொல்வழி வராவுயிரைவைக்கும் - சிறைகள்மாநிரயமிட்ட பணிசெய்வோர்செல்வத்தோடும் - உறையுமாபதிகளும்பருலகங்கள் யோனிக்கெல்லாம் - இறைவனாணையினாலின்பதுன்பங்களியைவவாகும்" எனவும், "நாயகன்கண்ணயப்பானாயடி புதைப்பவெங்கும்-பாயிருளாகிமூடப் பரிந்துலகிறுக்குநெற்றித் - தூயநேத்திரத்தினாலே சுடரொளிகொடுத்தபண்பிற் - றேயமாரொளிகளெல்லாஞ் சிவனுருத்தேசதென்னார்" எனவும், "மெய்ச்சுடருக்கெல்லாம் - ஒளிவந்தபூங்கழல்" எனவும் வரும் உண்மைத்திருவாக்குகளாலுணர்க.(௨௬)

நின்னான்மொழிந்தமறைநின்னடிகள்வந்தித்தும்
பன்னாளருச்சித்தும்பாதந்தலைசுமந்து
முன்னாமம்வாசித்துமுன்னையறியேனென்று
சொன்னாலடியனேன்சோதனைத்தோநின்னியல்பே.

(இ-ள்.) நின்னால் மொழிந்த மறை நின் அடிகள் வந்தித்தும் - உன்னால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட வேதங்கள் உனது திருவடிகளை வந்தனைசெய்தும், பல்நாள் அருச்சித்தும்-பலநாளும் உன்னை அருச்சனைசெய்தும், பாதம் தலை சுமந்தும்-உனது திருவடிகளைத் தலைமேற்சுமந்தும், உன் நாமம் வாசித்தும் உன்னை அறியேன் என்று சொன்னால் நின் இயல்பு அடியனேன் சோதனைத்தோ - உனது திருநாமங்களைக்கூறியும் உன்னை யறியேனென்று முறையிட்டால் உனது தன்மை யடியேனுடைய சோதனையுளகப்பட்டதோ.

விகாரங்கட்குக் காரணமாகிய பரதந்திரமுதலிய உபாதைகள் தனக்குச் சிறிதுமின்றி நின்ற அநாதிமுத்தசித்துருவாகிய இறைவன் அருளே திருவுருவாகக்கொண்டு, ஆன்மாக்களுய்தற்பொருட்டும் குருபரம்பரை விளங்குதற்பொருட்டும் வேதாகமங்களைக் கூறியருளினமையால் நின்னால் மொழிந்த மறை எனவும், வேதாரணியமென்னும் திருப்பதியில் அருச்சித்தும் வந்தித்தும் வழிபட்டமையால் பன்னாளருச்சித்தும் வந்தித்தும் எனவும், பாதுகையாகிச் சுமத்தலால் பாதந் தலைசுமந்தும் எனவும், அவ்விறைவனது திருநாமங்களே கூறப்படுதலால் உன்னாமம் வாசித்தும் எனவும், விந்துசத்தியின் காரியப்பாடாய்ச் சொற்பிரபஞ்சமாய் நின்ற வேதம் அவ்விறைவனை விச்சுவாதிகனெனவும் கூறுதலால் உன்னை யறியேனென்று சொன்னாலெனவுங் கூறினான். அருளே திருவுருவாகக்கொண்டு என்பது. "உருவருள்குணங்களோடு முணர்வருளுருவிற்றோன்றும் - கருமமுமருளரன்றன் கரசரணாதிசாங்கம் - தருமருளுபாங்கமெல்லாம் தானருடனக்கொன்றின்றி - யருளுருவுயிருக்கென்றே யாக்கினன்சிந்தனன்றே" என்பதனாலும், ஆன்மாக்களுய்தற்பொருட்டுங் குருபரம்பரை விளங்குதற்பொருட்டும் என்பது "ஆரணமாகமங்க ளருளினாலுருவுகொண்டு - காரணனருளானாகிற் கழிப்பவரில்லையாகும் - நாரணன்முதலாயுள்ள சு

Koviloor Digital Library

ரர்சுரர்க்கெல்லாம் - சேணிகுருசந்தானச் செய்தியுஞ்சென்றிடாவே" என்பதனாலும், இறைவனை விச்சுவாதிகன் என வேதங்கூறும் என்பது "உலகினையிறந்து நின்ற தாரனுமென்பதோரார்" என்பதனாலும் உணர்க. செய்யுளாதலால் 'வந்தித்தும் பன்னருச்சித்தும் என மாறிக்கூறினர். உபாதைகள் ஆவன பரதந்திரம், சிற்றறிவு, சிறுசெயல், விருப்பு, வெறுப்பு. (உ௭)

பெரியதிலும்பெரியதுமாய்ச்சிறியதிலுஞ்சிறியதுமா
யரியதிலுமரியதுமாயெளியதிலுமெளியதுமாய்க்
கரியதுமாய்க்காண்பானுங்காட்சியுமாயவைகடந்த
துரியமுமாய்நின்றாயென்சோதனைத்தோநின்னியல்பே.

(இ-ள்.) பெரியதிலும் பெரியதும் ஆய் - மகத்திலும் மகத்துமாய், சிறியதிலும் சிறியதும் ஆய் - அணுவிலுமணுவுமாய், அரியதிலும் அரியதும் ஆய்-அரிய பொருளினும் அரிய பொருளுமாய், எளியதிலும் எளியதுமாய் - எளிய பொருளிலும் எளிய பொருளுமாய், கரியதும் ஆய் - நேரின்றுணர்த்துஞ் சாட்சிப்பொருளுமாய், காண்பானும் காட்சியுமாய்-ஆன்மாவும் உணரும் விடயப்பொருளுமாய், அவை கடந்த துரியமும் ஆய் நின்றாய்-அவற்றைக்கடந்த காட்டுவானுமாகியும் நின்றவனே, நின் இயல்பு என் சோதனைத்தோ - உனது தன்மை என் சோதனையிலகப்பட்டதோ. (இல்லை என்றபடி.)

அளவிறந்தப்பரந்த அண்டங்கள் யாவுந் தன்றாள் வியாப்பியமாகத் தான் வியாபகமாயெங்கு நிறைந்து நிற்றலால் பெரியதிலும் பெரியதமாய் எனவும், மலபாகம் வருவித்தருளுதற்கு அணுக்களாகிய உயிர்கட்குள்ளிருந்து அதிசூக்கும ஐந்தொழிலு நடத்துதலால் சிறியதிலுஞ் சிறியதமாய் எனவும், உழுவலன்பிற் றலைப்படாத அயன் முதலிய தேவர்கட்கும் அரியனாய் நிற்றலால் அரியதிலு மரியதமாயெனவும், அவ்வன்பிற்றலைப்பட்ட அடியார்க்கெளியனாதலால் எளியதிலுமெளியதமாய் எனவும், முற்றுமுணர்தற்றன்மையால் எவ்வெப்பொருள்களினுட்கோளையு முணர்ந்து அதற்கேற்ப நேரின்று அவ்வவ்வினைப்பயன்களை யருத்துதலால் கரியதமாய் எனவும், நிமித்தகாரணனாய் நின்றதன் அநந்தர் சீகண்டர் முகத்தால் அதனைக் கூட்டுதற்கண் கலப்பினால் ஒன்றாய் நிற்றலால் காண்பானுங் காட்சியுமாய் எனவும், பொருளால் வேறாய் நிற்றலால் அவை கடந்த எனவும், சித்தமுஞ் செல்லாத சேட்சியனாகிய இறைவனை இயைபுபற்றிச் சித்தமுஞ்செல்லாச் சேட்சியதாகிய துரியமுமாய் எனவுங்கூறினான். "அண்டப்பகுதியினுண்டைப்பிறக்கம்-அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி - யொன்றனுக்கொன்று நின்றெழில்பகரின் - நூற்றொருகோடியின் மேற்படவிரிந்தன - இன்னுழைகதிரின் றுன்னணுப்புரையச் - சிறியவாகப்பெரியோன்" எனவும், "அருக்கருந்தன்மையினையோன்காண்க" எனவும், "கனவிலுந்தேவர்க்கரியாய்போற்றி" எனவும், "நனவிலும்நாயேற்கருளினைபோற்றி" எனவும், "பல்லுயிரெல்லாம் பயின்றனனாகி" எனவும், "சித்தமுஞ்செல்லாச் சேட்சியன்காண்க" எனவும் வரும் மேற்கோளாலுணர்க. (உ௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றுபலமுறைபழிச்சிமனையெய்திவிக்ரமனையின்றுபன்னாட்
டொன்றுமுறைகோலோச்சிவிக்கிரமன்சுவன்மிசைப்பார்சுமத்திப்பாசம்
வென்றவர்க்கருட்சித்தசாமிதிருவருளோக்கால்வினைபேரின்ப
மன்றமதுவிழ்வண்டிற்கலந்திருந்தானபிடேகமாறன்மன்னோ.

Koviloor Digital Library

Koviloor Digital Library

யானையெய்ததிருவிளையாடல் -



Koviloor Digital Library

(இ-ள்.) என்று பல முறை பழிச்சி மனை எய்தி விக்ரமனை ஈன்று - என்று பலதரம் துதித்துத் தனது கோயிலையடைந்து விக்கிரமபாண்டியனைப்பெற்று, பல்நாள் தொன்று முறை கோல் ஓச்சி விக்கிரமன் சுவல் மிசை பார் சுமத்தி-பலநாளும் பண்டுபோல மநுநூல் முறைப்படி செங்கோல் செலுத்தி அவ்விக்கிரமபாண்டியனுடைய பிடர்மேல் பூபாரத்தைச்சுமத்தி, பாசம் வென்று களைந்து-பாசத்தொடக்கை வென்று பற்றறக்களைந்து, அருள் சித்தசாமி திருவருள் நோக்கால் விளைபேரின்பம்-(தனக்கு ஆசிரிய மூர்த்தமாய் வந்தருளிய) அருள்வடிவாகிய சித்தமூர்த்தியின் திருவருட்பார்வையால் விளையும் பேரின்பத்தில், மது வீழ் வண்டில் - மதுவில் வீழ்ந்த வண்டைப்போல, மன்ற அபிடேக மாறன் கலந்திருந்தான் - தேற்றமாக அபிடேகபாண்டியன் இரண்டறக்கலந்திருந்தான்.

விக்கிரமன் பராக்கிரமத்தையுடையவன். சித்தமூர்த்திகள் திருவருளாற் பெற்றவன் என்பார் பலமுறை பழிச்சி விக்கிரமனையீன்று எனவும், அம்மூர்த்திகள் திருவருள்நோக்கால் பாசக்ஷயம் பெற்றுப் பரமுத்தியடைந்தான் என்பார் தாப்பிசைப் பொருள்படச் சித்தசாமி திருவருள் நோக்கால் எனவும் கூறினர். (௨௧)

கல்லானைக்குக்கரும்பருத்தியபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௧௩௮௫.

இருபத்திரண்டாவது

யானையெய்தபடலம்.

கலிவிருத்தம்.

கட்டவிழ்கடுக்கையர்கலானைகழைதின்ன
விட்டதிதுபஞ்சவனிடத்தமணரேவி
விட்டமதயானைவிழமேவலர்புரத்தைச்
சுட்டகணைவிட்டுயிர்தொலைத்தமுறைசொல்வாம்.

(இ-ள்.) கட்டு அவிழ் கடுக்கையர் கல்லானை கழை தின்ன இட்டது இது - முறுக்கவிழ்ந்த கொன்றைமலர்மாலையையணிந்த சித்தமூர்த்திகள் கல்லானையானது கரும்புதின்னக் கொடுத்தருளியது இந்தத்திருவிளையாடல், பஞ்சவன் இடத்து அமணர் ஏவிவிட்ட மதயானைவிழ - விக்கிரமபாண்டியன்மேல் சமணர்களேவிய மதமயக்கத்தையுடைய யானையானது சாய்ந்து வீழ்ந்திறக்க, மேவலர் புரத்தை சுட்டகணை விட்டு உயிர்தொலைத்த முறை சொல்வாம்-பகைவர் திரிபுரங்களை நீறுபடுத்திய பாணத்தினை ஏவி யதனுயிரைமாய்த்தருளிய திருவிளையாடலை யினிக்கூறுவாம்.

உயிர் தொலைத்தலாவது உடம்பின்வாழ்க்கையைப்போக்குதல். (௧)

விக்கிரமபாண்டியன்வெலற்கரியசெங்கோ
றிக்குமிலனுந்திறைகொள்செல்வநிறைவெய்த
வக்கிரமவெங்கலியரும்பகையொதுங்கச்
சக்கரமுருட்டியிடர்சாய்த்துமுறைசெய்வான்.

Koviloor Digital Library

(இ-ள்.) விக்கிரமபாண்டியன் வேலற்கு அரிய செங்கோல்-விக்கிரமபாண்டியன் செலுத்தும் (பிறரால்) தடுத்தற்கரிய செங்கோலானது, திக்கும் நிலனும் திறைகோள் செல்வம் நிறைவு எய்த-எட்டுத்திக்கிலுமுள்ள இந்திரன்முதலியோரும் நிலவுலகிலுள்ள அரசர்களும் இறுக்குந் திறையாலாகிய செல்வத்தின் நிறைவடைந்தோங்க, அக்கிரமவெங்கலி அரும்பகை ஒதுங்க சக்கரம் உருட்டி-நீதி நிறம்புதலென்னும் கொடியகலியாகிய அரியபகைமுதுகிட்டோடத் தனது ஆஜ்ஞையாகிய சக்கரத்தையுஞ் செலுத்தி, இடர் சாய்த்து முறை செய்வான்-(அப்பகையால் தன்கோற்கீழ்வாழுங் குடிகள்) துன்பத்தை யடையாமற்காத்து வருவானாயினன்.

தனது பெயர்ப்பொருளை விளக்கினனென்பார் அவனது செங்கோற்கு வெலற்கரிய எனத் தொழிலடைதந்தும், அப்பெயர்ப்பொருளாலாகிய பயனை உருவத்தானும் அருவத்தானும் அடைந்தானென்பார் திக்குநிலனும் திறைகொள் செல்வநிறைவெய்த எனவும், இடர்சாய்த்து எனவுங்கூறினர். திக்கு நிலன் இடவாகுபெயர். (உ)

புத்தரமணாதியபுறக்களையகழ்ந்து
சித்தமறையாகமநெறிப்பயிர்வளர்த்து
மெய்த்தவிதிபத்தியின்விளைந்தபயன்யாருந்
துய்த்திடமறத்தொழினடத்திவருதூயோன்.

(இ-ள்.) புத்தர் அமண் ஆதியபுறக்களை அகழ்ந்தும்-புத்தருஞ் சமணரும் முதலாகிய புறமதக்களை களைவேரோடு களைந்தும், சித்தம் மறை ஆகம நெறி பயிர் வளர்த்தும்-அழியாத்தன்மையையுடைய வேதநெறியும் ஆகமநெறியுமாகிய பயிர்கள்மேலெழுந்தோங்க வளர்த்தும், மெய்த்தவிதிபத்தியின் விளைந்த பயன் யாரும் துய்த்திட-(அவ்வேதப்பயிரினும் ஆகமப்பயிரினும்) மெய்ம்மையையுடைய விதியும் பத்தியுமாக விளைந்தபயன்களை எவரும் நுகர்ந்தனுபவிக்க, மறத்தொழில் நடத்திவரு தூயோன் - மறநூல் முறைமையை நடத்திவரும் பாண்டியன்.

வைதிகசைவங்களை விருத்திசெய்தானென்பார், சித்தமறையாகமப்பயிர் வளர்த்துமெனவும், அவற்றிற்குப் பெரும்பகையாயுள்ள புத்தமுதலிய புறமதங்களைக் களைந்தானென்பார். புத்தரமணாதிய புறக்களையகழ்ந்துமெனவும், அப்பயிர்களால் விளையும்பயன்கள் விதியும் பத்தியும் ஆதலால் மெய்த்தவிதிபத்தியின் விளைந்தபயன் எனவும், அப்பயன்களைத் தன் கோற்கீழ்வாழுங் குடிகள் நுகரமறநீதி நடத்தினன் என்பார் யாருந்துய்த்திட எனவும், இவ்வாறிருமைப்பயன்களையுங் குடிகளுக்கு உண்பிப்போன் மனத்தூயனாவோன் வேண்டும் என்பார் தூயோன் எனவுங்கூறினார். விதியாவது தருமநோக்காது அறத்தினையிட்டல். பத்தியாவது அந்த அறத்தின் முதிர்ச்சியால் அருள்வழி நிற்றல். இன் வேண்டாவழிச்சாரியை. (௩)

மருவிதழியானுறையும்வானிழிவிமானத்
தருகுவடபக்கமுறவாலயமெழுப்பி
யுருவருவிரண்டினையுமொருவிவருசித்தர்
திருவுருவுகண்டுபணிசெய்தொழுகுநாளில்.

(இ-ள்.) மரு இதழியான் உறையும் வான் இழிவிமானத்து அருகு-வாசமிக்க கொன்றைமலர் மாலையையணிந்த சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளிய விண்ணுலகினின்றும்வந்த இந்திரவிமானத்தின் பக்கத்தில், வடபக்கம் உற ஆலயம் எழுப்பி-(சிற்பநூல்விதிப்படி) வடபாலில் ஓராலயங்கட்டுவித்து, உரு அரு இரண்டினையும் ஒருவி

Koviloor Digital Library

வரு சித்தர் திருவுருவுகண்டு - உருவும் அருவுமாகிய இரண்டினையும் நீக்கி அருவுருவங் கொண்டுவந்த சித்தமூர்த்திகளது திருவுருவைத் (தனது பிதாவின் கட்டளையின்படி) நியமித்து, பணிசெய்து ஒழுகும்நாளில் - பூசித்து நடந்துவருங்காலையில்.

பஞ்சபூத பரிணாமமாகிய தூலவுருவும் மூலப்பகுதியின் காரியமாகிய சூக்குமவுருவு மாயா காரியமாதலால் அதனைக் கடந்து அருவுருவாய் வந்தார் என்பார் உருவரு விரண்டினையும் ஒருவி வருசித்தர் எனவும், சித்தமூர்த்திகள் வரத்தால் தோன்றினமையால் அவன் பிதா இட்ட கட்டளையென்பார் ஆலயம் எழுப்பி சித்தர் திருவுருவுகண்டு பணிசெய் தொழுகுநாளில் எனவுங் கூறினார். தூலவுடம்பு தோன்றுதற்குச் சூக்குமவுடம்பு காரணமாதலால் காரியமுன்னுங் காரணம் பின்னுமாக வைத்தார். " தூலமாமுருவுதோன்றச்சூக்குமமுதல்" என்ற ஏதுவாலுணர்க. (௪)

செய்யகதிரோன்வழியசெம்பியனொருத்தன்
கையனவன்வென்றிபயில்காஞ்சிநகருள்ளான்
பொய்யமணர்கட்டுரைபுறத்துறையினின்றான்
மையின்மதிமாறனொடுமாறுபடநின்றான்.

(இ-ள்.) செய்ய கதிரோன்வழிய செம்பியன் ஒருத்தன் - சூரியன் மரபின் வழிவந்த சோழனொருவனுள்ளான், கையன் - அவனோ நீ வழிப்பட்டு நடப்பவன், அவன் வென்றி பயில் காஞ்சிநகருள்ளான் - அச்சோழனோ வெற்றிமிக்க காஞ்சிநகரத்தில் வசிப்பவன், பொய் அமணர்கட்டுரை புறத்துறையில் நின்றான் - பொய்மையொழுக்கினையுடைய சமணர்மதமாகிய புறமார்க்கத்தினின்றவன், மை இல் மதிமாறனொடு மாறுபட நின்றான்-(அவன்) குற்றமில்லாத சந்திரன்மரபிற் றோன்றிய பாண்டியனோடு முரணிமாறுபட்டு நின்றான்.

குலவிரோதம் முன்னமே உள்ளது தோன்றச்செய்ய கதிரோன்வழிய செம்பியன் எனவும், மையின்மதிமாறனெனவும், இடையிற் சமயவிரோதம் உள்ளதென்பது தோன்றப் பொய்யமணர்கட்டுரை புறத்துறையினின்றான் எனவும், இவற்றால் இறுதியில் நின்றது பகைமையென்பது தோன்ற, மாறுபட நின்றான் எனவும் கூறினார். (௫)

முடங்கன்மதிசெஞ்சடைமுடித்துவிடையேறும்
விடங்காதுசேவடிவிழுங்கியமனத்து
மடங்கனிகர்தென்னனெதிர்வந்துபொரலாற்றா
தடங்கலனோர்வஞ்சனையினாலடமதித்தான்.

(இ-ள்.) முடங்கல் மதி செஞ்சடை முடித்து விடை ஏறும் - வளைந்த சந்திரனைச்செவந்த சடாமுடியிற்சூடி இடபத்தி லாரோகணித்தருளும், விடங்காது சேவடிவிழுங்கிய மனத்து - சோமசுந்தரக்கடவுளினுடைய செவந்த திருவடிகளை யிடையறாது பதித்தமனத்தையுடைய, மடங்கல் நிகர் தென்னன் எதிர்வந்து பொரல் ஆற்றாது - சிங்கத்தையொத்த விக்கிரமபாண்டியனெதிரேவந்து போர்செய்யமுடியாது, அடங்கலன் ஓர்வஞ்சனையினால் அடமதித்தான் - பகைவனாகிய சோழன் ஒரு சூழ்ச்சியாற் கொல்லக்கருதினான்.

பலதரம்வந்து போர்செய்ய ஆற்றாது முதுகிட்டோடினவனாதலால் பொரலாற்றாது ஓர் வஞ்சனையினால் அடமதித்தான் என்றார். (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அஞ்சனங்கவுஞ்சங்கோவத்தனந்திரிகூடங்காஞ்சி
குஞ்சரசையமேமகூடமேவிந்தமென்று
மஞ்சிவர்வரைகளெட்டும்வைகுறுமமணர்தம்மி
லெஞ்சலில்குரவர்க்கோலைவேறுவேறெழுதிவிட்டான்.

(இ-ள்.) அஞ்சனம் கவுஞ்சம் கோவத்தனம் திரி கூடம் காஞ்சி - அஞ்சனமும் கிரவுஞ்சமும் கோவத்தனமும் திரிகூடமும் காஞ்சியும், குஞ்சரசையம் ஏம கூடம் விந்தம் என்னும் மஞ்சு இவர்வரைகள் எட்டும் வைகுறும் அமணர்தம்மில் - யானைகள் சஞ்சரிக்கும் சையமும் ஏமகூடமும் விந்தமுமென்று சொல்லப்பட்ட மேகங்கள் சஞ்சரிக்கும் அட்டகுல பர்வதங்களிலும் தங்கிய சமணர்களில், எஞ்சலில் குரவர்க்கும் வேறுவேறு ஓலை எழுதிவிட்டான்-குறைதலில்லாத ஆசிரியத்தன்மை வாய்ந்த எண்ணாயிரஞ்சமணர்களுக்கும் ஓலையைத் தனித்தனி யெழுதியனுப்பினான்.

சையம் என்பது சகிக்கத்தக்கதென்னும் பொருட்டு. வைகுறும் ஒருசொல். இல்லுருபு கூட்டிப் பிரித்தற் பொருளில்வந்தது. முற்றும்மை தொகுத்தல். (எ)

வடிவுபோலுள்ளமெல்லாமாசிருள்புதையநின்ற
வடிகண்மாராவாரென்றுயிரவருமார்த்தார்வேய்ந்த
முடிகெழுவேந்தன்விட்டமுடங்கலைநிமிர்த்துவாசித்
திடிகெழுகார்போற்குன்றினிழிந்துவேறிடத்திற்செல்வார்.

(இ-ள்.) வடிவுபோல் உள்ளம் எல்லாம் மாசு இருள் புதைய நின்ற அடிகண்மாராவார் என்றுயிரவரும் - தமதுருவம் கருநிறம் வாய்ந்திருத்தல் போலத் தமதிருதய முற்றிலும் அஞ்ஞானமாகிய இருள்பொத்த நின்ற அடிகண் மாராவாராகிய என்றுயிரஞ் சமணர்களும், ஆர்த்தார்வேய்ந்த முடிகெழுவேந்தன் விட்ட முடங்கலை நிமிர்த்து வாசித்து - ஆத்திமாலையைச்சூடிய கிரீடந்தரித்த சோழனனுப்பிய ஓலையைப் பிரித்து வாசித்து, இடிகெழுகார்போல் குன்றின் இழிந்து வேறிடத்தில் செல்வார் - இடியோசைமிக்க மேகம்போல அம்மலைகளினின்றிறங்கிக் காஞ்சிநகரத்திற்குச் செல்வாராயினர்.

சமணருள் ஆசிரியர்க்கு அடிகள் என்பது சிறப்புப்பெயராதலால் மார் என்னும் பன்மை விகுதிதந்து அடிகள் மாராவார் எனவும், அம்மலைகளே தமக்குரிய இருக்கைகளாக உடையராதலால் காஞ்சிநகரத்தை வேறிடமெனவும் கூறினர். உவமைக்கும் பொருட்கும் ஒத்தமையுண்மையால் பொருளின் குணத்தை வடிவுபோலென்பதற்சேர்த்தியும் உவமையின் குணத்தை விரித்து ஆரவாரத்தோடு எனப் பொருட்சேர்த்தியும் கூறினும். (அ)

யாவருமொருங்குகூடியிருள்வழிகொள்வதேய்ப்பக்
காவல்வல்லரணஞ்சூழ்ந்தகாஞ்சிமாநகரத்தெய்திப்
பூவலர்தாரான்கோயிற்புறங்கடைபுகுந்தவேந்த
னேவலர்விடுப்பவுள்போயிறைமகனிருக்கைபுக்கார்.

(இ-ள்.) யாவரும் ஒருங்குகூடி இருள் வழி கொள்வது ஏய்ப்ப-அடிகள் மாராவார் யாவரும் ஒருசேரக்கூடி இருட்கூட்டம் ஒருவழிப்பட்டுச் செல்வதற்கு ஒப்ப, காவல் வல் அரணஞ் சூழ்ந்த காஞ்சிமாநகரத்து எய்தி - காவலாக வலிய மதில் சூழ்ந்த காஞ்சியென்னும் பெரிய நகரத்தையடைந்து, பூ அலர் தாரான் கோயில்

Koviloor Digital Library

புறங்கடை புகுந்து, ஆத்திமலரால் விளங்கும் மாலையையணிந்த சோழனது கோயிலின் தலைவாயிலையடைந்து, வேந்தன் ஏவலர் உள்விடுப்ப போய் இறைமகன் இருக்கை புக்கார் - அச்சோழனது வாயில் காப்போர் உள்ளே விடுப்பச் சென்று அச்சோழனுடைய அரசிருக்கையை யடைந்தார்.

பூ என்னும் பொதுப்பெயர் தாராவென்னும் சார்பாற் பொதுமைநீங்கி ஆத்திமலர் மேனின்றது. (௯)

மன்னவன்முடிமேற்பீலிவைத்தனராக்கங்கூற
வன்னவனவரைநோக்கிவசியமுன்னாறும்வல்லீர்
தென்னனையாபிசாரஞ்செய்துயிர்செகுத்தாலுங்கட்
கென்னதுநாடுபாதிதருவல்போயியற்றுமென்றான்.

(இ-ள்.) மன்னவன் முடிமேல் பீலி வைத்தனர் ஆக்கங்கூற - சோழனுடைய கிரீடத்தின்மேல் (தாமேந்திய) மயிற்றோகைகளை வைத்து ஆசிவசனங்கூற, அன்னவன் அவரை நோக்கி - அச்சோழன் அவ்வடிகள்மாரைப்பார்த்து, வசியம் முன் ஆறும் வல்லீர் - வசிய முதலிய ஆறுதொழிலினும் வன்மையையுடைய அடிகள்மாரே, தென்னனை - விக்கிரமபாண்டியனை, ஆபிசாரஞ் செய்து உயிர் செகுத்தால்-ஆபிசார வேள்விசெய்து உயிர்கொன்றால், உங்கட்கு என்னது நாடு பாதி தருவல்போய் இயற்றும் என்றான் - உங்களுக்கு எனது நாட்டிற் பாதி கொடுப்பேன் போயதனைச் செய்யுங்களென்று ஏவினான்.

அடிகள் மாராவார்க்கு மயிற்றோகை ஏந்துதல் குறியீடாகையால் பீலி எனவும், தம்மை வழிபடுவோரைக்காணில் ஆசிவசனங் கூறும்போது மயிற்றோகை வைத்துக்கூறுதல் வழக்காதலால் முடிமேல் வைத்தனர் ஆக்கங்கூற எனவுங்கூறினார். வசியமுன் ஆறுமென்றது வசியம், வயஸ்தம்பம், வாதம், அதிரிசியம், அஞ்சனம், ஆகருஷணமுமாம். இவற்றின் பாகுபாடுகளை எல்லாம்வல்ல சித்தரானபடலத்திற் காண்க. ஆபிசாரமாவது சத்துரு மரணமடையும்படி செய்யும் ஒரு கொடுந்தொழில். (௫௦)

தவம்புரிந்தவமேசெய்வார்தாமதற்குடன்பட்டேகி
நிவந்ததெண்டிரைநீர்ப்பாலிநெடுங்கரைக்காதமூன்றிற்
கவர்ந்தகன்சாலைகோலியோசனையகலங்கல்லி
யவம்படுவேள்விக்குண்டங்கோணமெட்டாகக்கண்டார்.

(இ-ள்.) தவம் புரிந்து அவமே செய்வார் தாம் அதற்கு உடன் பட்டு ஏகி - (புறத்தில்) தவத்தைச்செய்து அகத்தில் அவத்தையே செய்யும் எண்ணாயிரஞ் சமணர்களும் அந்நீத்தொழிலுக்கு உடன்பட்டுச்சென்று, நிவந்த தெண்டிரை நீர் பாலி நெடுங்கரை - பெருக்கெடுத்தோங்கிவரும் தெள்ளிய அலையையும் நீரையுமுடைய பாலியாற்றினது நெடிய கரையில், காதமூன்றில் கவர்ந்த அகன் சாலை கோலி - மூன்றுகாதவழி பரந்த இடத்தையுடைய யாகசாலையொன்று கோலி, யோசனை அகலம் அவம்படு வேள்விக்குண்டம் கல்லி - ஒருயோசனை யகலம் தீமைமிக்க ஒருயாககுண்டந்தோண்டி, கோணம் எட்டாகக்கண்டார் - அக்குண்டத்தை எண்கோணமாகச்செய்து.

தாம் செய்யுந் தீத்தொழிலை மறைத்தற்குத் தவத்தொழிலை மேற்கொண்டாரென்பார், தவம் புரிந் தவமே செய்வார் என்றார். கவர்ந்த என்னும் பெயரெச்சத்

தின் ஈற்றகரம் "பெற்றெனுயர்த்த பெருமான்" என்றாற்போல ஈறுதொக்கு நின்றது. அம் அன் இறுதி நிலைப்பேறலி. கண்டார் முற்றெச்சம். (௧௧)

விடம்பொதிகாட்டம்பெய்துநிம்பநெய்விராயநஞ்சி
னுடம்புடையுயிரின்கோழூன்கறிப்பொடிபூறுமென்னெ
யிடம்படவாயங்காந்தவெரிக்குழிபுதையப்பெய்து
கொடும்பழிவேள்விசெய்தார்கொல்லாதவிரதம்பூண்டார்.

(இ-ள்.) விடம் பொதி காட்டம் பெய்து - விஷம் நெருங்கிய எட்டி முதலிய சமித்தை இட்டு, நிம்ப நெய்விராய - வேப்பெண்ணெயிற்கலந்த, நஞ்சின் உடம்பு உடை உயிரின் கோழ் ஊன் - நஞ்சு பொருந்திய சரீரத்தையுடைய சர்ப்பத்தின் கொழுவிய தசையையும், கறிப்பொடி ஊறும் எண்ணெய் - மிளகின் பொடியூறும் தில்நெய்யையும், இடம்படவாய் அங்காந்த எரிக்குழி புதையப்பெய்து - விசாலமாக வாயைத்திறத்தல்போலக் கொழுந்துவிட்டெரித்தெழுதலையுடைய யாகக்குழி புதைபடும்படிபெய்து, கொல்லாதவிரதம்பூண்டார் - கொல்லாமையையே விரதமாகப்பூண்ட என்றுயிரவரும், கொடும்பழி வேள்விசெய்தார் - கொடியபழிவாய்ந்த அபிசாரயாகத்தைச்செய்தார்கள்.

கொல்லாமையே விரதமெனக் கூறவேண்டுவதை விரதம் பயனிலையாகக் கொல்லாத விரதமெனக்கூறுவது வடநூலார் தருமதருமி அபேதமென்பார். இதனைத்தமிழ்நூலார் உபசாரவழக்கு என்பார். பெய்து எனப் பொதுவினைதந்தார். ௧௨

மாடுளபொதும்பர்நந்தாவனமுளசோலையுள்ள
காடுளகருகிச்சாயக்கயலுளவோடையுள்ள
கோடுளவாவியுள்ளகுளமுளவறப்பத்தாவிச்
சேடுளமுகிலுந்தீயச்சிகையெழுகுண்டத்தீவாய்.

(இ-ள்.) பொதும்பர் மாடு உள்ள-மரக்கூட்டங்களிடத்துள்ள உயிர்களும், நந்தாவனம் உள்ள - நந்தவனங்களிலுள்ள உயிர்களும், சோலை உள்ள-சோலைகளிலுள்ள உயிர்களும், காடு உள்ள - காட்டிலுள்ள உயிர்களும், கருகிசாய-கருகி இறக்கவும், கயல் உள்ள ஓடை உள்ள - கயல்மீன் உள்ள ஓடைகளில் உள்ளனவும், கோடு உளவாவியுள்ள - கரையுள்ள தடாகங்களிலுள்ளனவும், குளம் உள்ள - குளத்திலுள்ளனவும், வறப்ப-வற்றித்தீயவும், தாவி சேடு உள்ள முகிலும் தீய - மேலெழுந்து பெரிய மேகபடலங்களும் தீந்து சாயவும், சிகை எழுகுண்டம் தீவாய்-கொழுந்துவிட்டெழுந்த யாககுண்டத்துள்ள தீயினிடத்து.

மாடுள பொதும்பர் முதல் காடுளவென்பது காறும் உள்ள உயிர்கள் ஓரறிவுள்ள உயிர்முதல் ஐயறிவுயிர்காறுமுள்ளனவும், ஓடையுளவென்பதுமுதல் குளமுளவென்பதுகாறும் மலரும் ஏனையுயிர்களும் ஆதலால் கருகி, வறப்ப எனப் பொதுவினைதந்து கூறினர். (௧௩)

கூற்றெழுதோற்றம்போலவஞ்சனக்குன்றம்போலக்
காற்றெழுசெவியுகால்வாய்கௌவியமருப்புமாறு
நூற்றெழுமதமுமுசலாடியவொற்றைக்கையு
மேற்றெழுவிடம்போற்சீறியெழுந்ததோர்தறுகண்யானை.

Koviloor Digital Library

(இ-ள்) கூற்று எழு தோற்றம்போல - இயமன் உதித்தெழுந்த காட்சிபோலவும், அஞ்சனக்குன்றம்போல - ஒரு அஞ்சனமலை முளைத்தெழுந்த காட்சிபோலவும், ஏற்று எழுவிடம்போல் - கடலிற்பொருந்தி எழுந்த விஷம்போலவும், காற்று எழுசெவியும்-காற்றை வீசாநின்றசெவியையும், நால்வாய் கௌவியமருப்பும்-தொங்கியசையும் வாயிற்பொருந்திய கொம்புகளையும், மாறு ஊற்று எழுமதமும்-மாறுமற்சுரந்தெழாநின்ற மதத்தையும், ஊசல் ஆடிய ஒற்றைக்கையும் - ஊசலைப்போலாடாநின்ற துதிக்கையையும் உடையதாகி, ஓர் தறுகண்யானை சீறி எழுந்தது - ஒரு அஞ்சாமையையுடைய யானையானது கோபித்தெழுந்தது.

யானையானது தனித்தனி கொல்லுதற்றொழிலினும் ஒருசேரக் கொல்லுதற்றொழிலினும் வல்லதென்பது தோன்றக் கூற்றெழுதோற்றம்போலெனவும், ஏற்றெழுவிடம்போல் எனவும், நிலைகலங்காத உன்னத தோற்றமுடையதென்பது தோன்ற அஞ்சனக்குன்றம்போல எனவுங் கூறினார். (௧௪)

அந்தமாவேள்வித்தீயுமவியமும்மதமுஞ்சோர
வந்தமாகளிற்றைநீபோய்வழுதியைமதுரையோடுஞ்
சிந்தவேதொலைத்தியென்னத்தென்றிசைசெல்லவேவி
முந்தவேவிடுத்தமாசுமூழ்குடலமணப்பேய்கள்.

(இ-ள்.) அந்தமா வேள்வித் தீயும் அவிய மும்மதமுஞ் சோர வந்த மா களிற்றை - அந்தப்பெரிய ஆபிசாரயாகத்தில் கொழுந்துவிட்டெரிந்த தீயும் அவியும்படி மும்மதங்களுஞ்சோரத் தோன்றியெழுந்த பெரியயானையை (நோக்கி) நீபோய் வழுதியை மதுரையோடும் சிந்தவேதொலைத்தி என்ன - நீசென்று விக்கிரமபாண்டியனை மதுரையிலுள்ளாரோடும் கெடும்படி அழிப்பாயென்று, தென்றிசைசெல்லஏவி-தென்றிசைநோக்கிச் செல்லஏவி, முந்தவே விடுத்தமாசு மூழ்கு உடல் அமணப்பேய்கள்-தம்மில் முற்பட அனுப்பிய கரியநிறமிக்க சரீரத்தையுடைய எண்ணாயிரஞ் சமணராகிய பேய்களும்.

தோன்றும்பொழுதே யந்தக் கொடிய யாகத்திலுங் கொடியதாய்த் தோன்றியதென்பார் அந்தமாவேள்வித்தீயு மவியமும்மதமுஞ்சோர வந்தமாகளிறு என்றார். (௧௫)

ஷ வேறு.

அருளற்றிருளுடலிற்புதையமணக்கயவர்களுட்
டெருளற்றருமறையிற்படர்செயலற்றிகபரமெய்ப்
பொருளற்றவனனிகத்தொடுபுறமொய்த்திடமதமா
வெருளற்றிடிகுரலிற்படிவெடிபட்டிடவருமால்.

(இ-ள்.) அருள் அற்று இருள் உடலில் புதை அமணக்கயவர்களுள் (அகத்தில்) சிவகருணையாகிய ஒளி சிறிதுமின்றி மறத்தொழிலாகிய இருளே தமதுடம்பின் காரொளிபோலப் பொதிந்த சமணராகிய கீழ்மக்களுள், தெருள் அற்று அருமறையின் படர் செயல் அற்று இகபரம் மெய்ப்பொருள் அற்றவன் அனிகத்தொடு - அறிவின்றி நீங்கி அரியவேத நெறிப்பட்டுச்செல்லும் செயலொழித்து இகபோகத்தையும் பரபோகத்தையும் அடைதற்குரிய அறத்தொழிலையும் ஒழிந்த சேரமறுடைய சேனைகளோடு, புறம்மொய்த்திட-புறத்திற்சூழ்ந்துவர, மதமாவெருள் அற்று

இடிக்குரலின் படி வெடி பட்டிடவரும் - யானையானது அச்சமொழித்து இடியின் ஒலிபோன்ற தனது முழக்கத்தால் உலகம் வெடிபட வாராநிற்கும்.

அறத்தொழில் சிறிதுமின்றி மறத்தொழிலே பெரிதும் உடையரென்பார் ஒப்புப்பொருளில்வந்த ஐந்தாருருபுதந்து அருளற்றிருளுடலிற்புதை என்றார். இம்மை இன்பத்தையும் சுவர்க்காதி இன்பத்தையும் தருதற்குரியது அறமாதலாலும் தெருளற்றருமறையிற்படர் செயலற்று என்ற குறிப்பேதுவாலும் மெய்ப்பொருளென்பதற்கு அறமென்றும். உள் என்றும் ஏழனுருபுகூட்டிப் பிரித்தற்கண்வந்தது. அமணப்பேய்கள் என்றும் விலைமுதல்மொய்த்திட என்றும் பயனிலையைக்கொண்டு முடிதலாற் குளகம். (௧௬)

அடியின்னளவகல்பாதலமுடியின்னளவண்ட
மிடியின்னளவெழுகார்செவியெறிகாலளவகில
மடியும்மளவுளர்கான்மதமழையின்னளவுலக
முடிவின்னெழுகடல்கண்ணழலளவாமுதுவடவை.

(இ-ள்.) அகல் பாதல அளவு அடியின் அளவு - அகன்ற பாதாளவுலகத்தினளவு அந்த யானையினது காற்சுவட்டின் அளவினதாம், அண்டம் அளவு முடியின் அளவு - வானுலகளவு அதனது தலையின் அளவினதாம், எழுகார் அளவு இடியின் அளவு - சத்தமேகங்களினொலியளவு அதனது முழக்கத்தின் அளவினதாம், அகிலம் மடியும் உளர் கால் அளவு செவி எறி கால் அளவு - எல்லாவுலகங்களுமடிய எறியும் சஞ்சரிக்கும் ஊழிக்காற்றினது அளவு அதனது காதவீசும் காற்றினளவினதாம், உலகமுடிவின் எழுகடல் அளவு மதமழையின் அளவு - உலகமுடிவிற் புடைபெயர்ந்தெழாநின்ற கடலினளவு அதனது மதமாகிய வெள்ளத்தின் அளவினதாம், முதுவடவை அளவு கண் அழல் அளவாம் - பெரிய வடவாமுகாக்கினியினளவு அதனது கண்களிற் சிந்தும் கோபாக்கினியினளவினதாம்.

பாதலத்தினளவு யானையின் அடியினளவெனவும், வானுலகத்தினளவு அதன் சென்னியினளவு எனவும், சத்தமேகங்களி னொலியளவு அதன் முழக்கத்தினளவு எனவும், ஊழிக்காற்றினளவு அதன் காதவீசுங் காற்றினளவு எனவும், ஊழியினிலை பெயருங் கடலளவு அதனது மதவெள்ளத்தினளவெனவும், வடவாமுகாக்கினியினளவு அதனது கோபாக்கினியினளவெனவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதிருக்கச் சம்பந்தங் கற்பித்துக் கூறினமையால் தொடர்புயர்வு நவிற்சியணி. அதிசய அணியெனினுமொக்கும். மடியும்மளவு என்றதொடரிலுள்ள அளவு முன்னும் பின்னுஞ் சென்றதனால் இடைநிலைத்தீவகவணி. செய்யுளாதலால் பின்முன்னாக வந்தன.

கூற்றஞ்சிடவருமிக்கரிகுரலஞ்செவிமுழைவா
யேற்றஞ்செயமடக்குஞ்செவியெறிகால்வழிவிழித்தீ
யூற்றஞ்செயமடைவாயுடைத்தொழுகுங்கடமதநீர்
நாற்றஞ்செயத்திசைவேழமுநடுக்கஞ்செய்தானவியும்.

(இ-ள்.) கூற்று அஞ்சிடவரும் இக்கரி குரல் - இயமனும் கண் புதைத்தஞ்சும்படி வாராநின்ற இந்த யானையினது முழக்கமானது, அஞ்செவி முழைவாய் ஏற்றஞ் செய - தமது அகஞ்செவியாகிய முழையினிடத்துத் தாக்குதலாலும், மடங்குஞ் செவி எறி கால் வழி - அதனது மடங்கிய காதுகள் வீசும் காற்றின்வழியே, விழித்தீ ஊற்றம் செய - தமது கண்களிலுள்ள கோபாக்கினி முன்டெரிதலாலும், மடைவாய் உடைத்தொழுகும் கடமத நீர் நாற்றஞ் செய - நீர்மடைவாய் உடைபட்டொழு

Koviloor Digital Library

கும் வெள்ளம்போலக் கரடங்கள் திறந்தொழுகும் மதப்பெருக்கானது நாற்றஞ்செய்தலாலும், திசை வேழமும் நடுக்கஞ்செய்து நலியும்-திக்குகள்தோறுமுள்ள அந்த அட்டகஜங்களும் நடுநடுங்கிச் சோரச்செய்து வருத்தாநிற்கும்.

இதனால் இந்த யானையின் ஒலி திக்குயானைகளின் காதில் சென்றதெனவும், இதனது காது வீசுங்காற்றால் அந்த யானைகளின் கோபத்தீ மூண்டதெனவும், இதனது மதநீர் வாசனை திக்குகள்தோறுமுள்ள யானைகட்குப்பகைமைதோன்றக் கமழ்ந்ததெனவும் கூறினமையால், திக்கஜங்களையும் வென்றதென்பார் திசைவேழமும் நடுக்கஞ்செய்து நலியும் என்றார். (௧௮)

இடிக்கும்புயல்வயிற்றைக்கிழித்திடியேற்றினையுதிர்க்கும்
வெடிக்கும்பிளிறொலியாற்றிசைவிழுங்கிச்செவிடாக்குந்
துடிக்கும்புழைக்கையோச்சிவிண்டொடுகுன்றினைச்சுற்றிப்
பிடிக்குங்கடல்கலக்குந்தனிப்பெருமத்தெனத்திரிக்கும்.

(இ-ள்.) இடிக்கும் புயல் வயிற்றைக் கிழித்து இடியேற்றினை உதிர்க்கும் - ஒலிக்காநின்ற மேகத்தின் வயிற்றைக்கிழித்து இடியேற்றை யுதிர்க்காநிற்கும், வெடிக்கும் பிளிறு ஒலியால் - முழங்காநின்ற பேரொலியினால், திசை விழுங்கிச் செவிடாக்கும் - எட்டுத்திக்குகளையும் விழுங்கிச் செவிடுபடச்செய்யும், துடிக்கும் புழைக்கை ஓச்சி-துடிக்காநின்ற துதிக்கையைவீசி, விண் தொடு குன்றினை சுற்றி பிடிக்கும்-விண்ணினை அளாவ உயர்ந்த மலைகளை வேரோடுபறித்துச் சுற்றிப்பிடிக்கும், கடல் கலக்கும் தனி பெருமத்தென திரிக்கும் - கடலைக்கலக்கும் ஒப்பில்லாத பெரிய மத்தாகிய மந்தரகிரியைப்போல அம்மலையைச் சுழற்றும். (௧௯)

உருமுக்குரலொலியிற்றுளரொலிவிட்டெறிசெவியிற்
றிருமுட்பிறையெயிற்றழலெறிகட்டிருளுடலிற்
றருமுக்கடவருவித்துரலடியிற்றெனநிலமேல்
வருமுக்கிரவடவைக்கனல்வரினொப்பதமதமா.

(இ-ள்.) உருமு குரல் ஒலியிற்று - இடிபோன்ற முழக்கத்தையுடையது, உளர் ஒலி விட்டு எறிசெவி யிற்று-சஞ்சரிக்குங் காற்றை வீசும் செவியினையுடையது, இருமுள் பிறை எயிற்று-இரண்டு முட்போலும் முனைகூரிய இளம்பிறைபோன்ற தந்தங்களையுடையது, அழல் எறி கட்டு - கோபாக்கினியை வீசும் கண்களையுடையது, இருள் உடலிற்று - அந்தகாரம்போன்ற கரியசரீரத்தையுடையது, அரு முக்கட அருவித்து - சொல்லுதற்கரிய மும்மதமாகிய அருவியையுடையது, உரலடி யிற்று என-உரல்போலும் வட்டவடிவாகிய காலையுடையதென்று கண்டோர் சொல்ல, நிலமேல் உக்கிரம் வரும் வடவை கனல் வரின் அ மதமா ஒப்பது - நிலவுலகின்மேல் கொடுமைவாய்ந்த வடவாமுகாக்கினி வந்தால் (அதனை) அந்த மதத்தையுடைய யானை ஒக்கும். (இல்லையாயின் வேறுவமையில்லை) என்றபடி.

ஒலியிற்று செவியிற்று உடலிற்று அருவித்து அடியிற்று இவை யிடையில் இன்சாரியை பெற்றுவந்த ஒன்றன்பாற்படர்க்கைக் குறிப்பு வினைமுற்றுகள். கட்டு சாரியை பெறாதுவந்த குறிப்புவினைமுற்று. இவ்வாறில்லாத வொன்றை யுவமையாக்கிக்கூறினமையால் இல்பொருளுவமையணி. (௨௦)

Koviloor Digital Library

தெழிபட்டதிக்கயத்தின்செவிநியப்பகையோடும்
வழிபட்டொருகடுகூற்றெனவருகுஞ்சரவரவை
விழிபட்டவர்மொழியாலுணர்விரைபட்டலர்வேம்பன்
சுழிபட்டலைபுனல்போன்மனஞ்சுழன்றுளினைந்தழன்றான்.

(இ-ள்.) தெழி பட்ட திக்கயத்தின் செவி நிய - தனது முழக்கந்தாக்கிய திக்குயானைகளின் காதுகள் கிழிந்தழிய, பகை யோடும் வழி பட்டு ஒரு கடு கூற்று எனவரு குஞ்சரம் வரவை - பகைவராகிய சமணரோடும் ஒருவழிப்பட்டு ஒப்பில்லாத கொடியயமனைப்போல வருகின்ற யானையின்வரவை, விழிபட்டவர் மொழியால் உணர் விரைபட்டு அலர் வேம்பன் - கண்டோர்கூறுஞ் சொற்களால் அறிந்த வாசமிக்கலர்ந்த வேப்பமாலையையுடையபாண்டியன், சுழிபட்ட அலை புனல் போல் மனம் சுழன்றான் நினைந்து அழன்றான் - சுழியிற்பட்டு ஓடுதலைத்தவிர்ந்து சுழலும் நீரைப்போலத் தனது மனம் குடியோம்புதலைத்தவிர்ந்து சுழன்று (அதனது வேகவரவை) நினைந்து வருந்தி.

சுழன்றான், அழன்றான் முற்றெச்சங்கள். உவமையும் பொருளும் ஒற்றுமை யுண்மையால் உவமையின் றொழிலைப் பொருட்கேற்றிக் கூறினும். (௨௧)

மைப்போதகம்பொறையாற்றியமணிக்கோயின்முன்குறுகாக்
கைப்போதகமுரித்தான்கழற்காற்போதகமுறத்தாழ்ந்
திப்போதகந்தனையுந்தொலைத்தெனைக்காத்தியென்றிரந்தா
னப்போதகல்வானின்றொருதிருவாக்கெழுந்தன்றே.

(இ-ள்.) மை போதகம் பொறை ஆற்றிய மணிக்கோயில் முன் குறுகா - கரிய திக்கஜங்களால் சுமக்கப்பட்ட இரத்தினங்களழுத்திய இந்திரவிமானத்தின் முன்சென்று, கைப்போதகம் உரித்தான் கழல் கால் போது அகம் உற தாழ்ந்து - துதிக்கையையுடைய யானையை உரித்தருளிய சோமசுந்தரக்கடவுளுடைய வீரகண்டையையணிந்த திருவடித்தாமரைமலரைத் தனது மனத்தில் பொருந்தவணங்கி, இ போதகம் தனையும் தொலைத்து எனை காத்தி என்று இரந்தான் - இந்தயானையையுங்கொன்று என்னைக்காப்பாயென்று குறையிரந்தான், அப்போது அகல்வான் நின்று ஒரு திருவாக்கு எழுந்தன்று - அக்காலையில் பரந்த ஆகாயத்தினின்று ஒரு அசரீரி எழுந்தது.

கடலையு மேகத்தையுந் தொலைத்தருளியதுபோல இந்தயானையையுந் தொலைத்தருள்வாய் என்பான் இறந்தது தழீஇய எச்சவும்மையும் கூட்டும் தந்து இப்போதகந்தனையும் என்றான். குறுகா செய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். எழுந்தன்று அன் சாரியை பெற்றுவந்த வினைமுற்று. (௨௨)

விட்டார்வலிகெடநாமொருவிற்சேவகனாகி
யொட்டார்விடவருவெங்கரியுயிர்வௌவுதுமுதனின்
மட்டார்பொழிற்கடிமாநகரயற்கீழ்த்திசைமருங்கோ
ரட்டாலமண்டபஞ்செய்யெனவதுகேட்டெழுந்தரசன்.

(இ-ள்.) விட்டார் வலி கெட நாம் ஒருவில் சேவகன் ஆகி - பகைவர்களுடைய வலிமைகெட நாம் ஒருவில்லையேந்திய சேவகனாகி, ஒட்டார் விட வரு வெங்கரி உயிர் வெளவுதும் - அப்பகைவர் ஏவவருகின்ற கொடியயானையின் உயிரைக்கொள்ளை கொள்ளுவோம், முதல் நின் மட்டு ஆர் பொழில் கடி மா நகர்

Koviloor Digital Library

அயல் கீழ் திசை மருங்கு - முதலில் உனது தேனிறைந்த சோலையின் மணம்மிக்க பெரியநகரின் அயலில் கீழைத்திசைப்பக்கத்தில்,ஓர் அட்டாலை மண்டபம் செய் என- ஒரு அட்டாலை மண்டபஞ்செய்யா யென்று திருவாக்கருள, அது கேட்டு அரசன் எழுந்து - அத்திருவாக்கை அரசன் கேட்டெழுந்து.

புறத்தன்றி அகத்தும் திராப்பகையுளதென்பார் ஒட்டார் என்றார். (உங)

அகங்கவ்வியகளிப்பெய்திவந்தட்டாலைமண்டபம்பொன்
னகங்கவ்வியதெனத்தூணொருநாலுநான்கினிலெடுத்தே
சகங்கவ்வியபுகழான்செயத்தறுகட்கணைமதமா
முகங்கவ்வியவிற்சேவகன்வருவானதுமொழிவாம்.

(இ-ள்.) அகம் கவ்விய களிப்பு எய்தி வந்து - மனத்தில் இடைவிடாது பொருந்த மகிழ்ச்சியடைந்து (சந்நிதானத்தினின்று) வந்து, சகம் கவ்விய புகழான் அட்டாலை மண்டபம் ஒன்று பொன் நகம் கவ்வியது எனத் தூண் ஒரு நால் நான்கினில் எடுத்தே செய்ய - உலகிற்பரந்த புகழையுடைய விக்கிரமபாண்டியன் அட்டாலைமண்டபம் ஒன்றை மகமேருவே தூணமாக உருமாறிச் சுமந்ததென்று சொல்லும்படி பதினாறு தூண்களாற் சுமக்கப்படும்படி எடுத்துக்கட்டி முடிக்க, தறுகண் கணை மதமா முகம் கவ்விய வில் சேவகன் வருவான் அது மொழிவாம் - (சிவபெருமான்) கொலைத்தொழிலையுடைய அம்பானது யானையின் முகத்திற் றைத்தருவ வில்லையேந்திய சேவகனாகி வருகின்றான் அதனைக் கூறுவாம்.

முதலினும் இறுதியினும் நின்ற கவ்விய என்னும் எச்சங்கள் செய்திய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். (உச)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நீனிறநீத்தநீந்துநிழன்மதியிரண்டுண்டென்ன
வானிறவலயச்சங்கவார்குழைநுழைவித்தம்பூம்
பானிறவெகினங்காணப்படர்சடைமறைத்துத்தோற்றுங்
கானிறைகுஞ்சிச்சூட்டிற்களிமயிற்கலாபஞ்சூடி.

(இ-ள்.) நீல் நிறம் நீத்தம் நீந்தும் நிழல் மதி இரண்டு உண்டேல் என்ன- நீலநிறத்தையுடைய கடலை நீந்திச்செல்லும் ஒளியையுடைய சந்திரனிரண்டுண்டாயி னவற்றையொப்ப, வால் நிறம் வலயம் சங்கம் வார் குழை நுழைவித்து-வெள்ளிய நிறத்தையுடைய வட்டவடிவாகிய சங்காற்செய்த நீண்டகுண்டலங்களைத் திருச்செவியில் நுழைவித்து, அம்பூம்பால் நிறம் எகினம் காணு படர்சடை மறைத்து - அழகிய தாமரைமலரில் வசிக்கும் வெள்ளிய நிறத்தையுடைய பிரமனாகிய அன்னத்தால் காணப்படாத படர்ந்த சடாபாரத்தை மறைத்தருளி, தோற்றும் கான் நிறை குஞ்சி சூட்டில் களி மயில் கலாபம் சூடி - கண்களுக்குப் புலப்படும் வாசநிறைந்த சிகையாலாகிய சுடிகையில் களிக்கும் மயிலினது இறகைச்சூடி..

பறவைகளைத் தேடித்திரியும் மறத்தொழிலையுடைய வேட்டுவக்கோலம்போலன்று என்பார் பூம்பானிறவன்னங்காணு எனவும், அருளுருவவேட்டுவக்கோலம் என்பார் சடைமறைத்து, களிமயிற் கலாபஞ்சூடி யெனவுங் கூறினார். நீலநிறம் நீனிறம் கடைக்குறை. உண்டென்ன தொகுக்கும்வழி தொகுத்தல் இதுவும் இல் பொருளுவமையணி, என்ன என் உவமவுருபிடைச்சொற்பகுதி. (உரு)

Koviloor Digital Library

கருங்கடன்முளைத்தசெக்கர்க்கதிரெனக்குருதிக்கச்சை
மருங்குறவிசித்துச்சேரிவாயுடைவாளுங்கட்டி
யிரங்குநான்மறைகளெங்கவிருகிலக்கின்றுதாளிற்
பொருங்கழல்வளைத்துவாளிப்புட்டிலும்புறத்துவீக்கி.

(இ-ள்.) கருங் கடல் முளைத்த செக்கர் கதிர் என - கரியகடல்மேல் முளைத்த செவ்விய கிரணத்தையுடைய சூரியனைப்போல, குருதி கச்சை மருங்கு உற விசித்து - உதிரநிறம்வாய்ந்த கச்சையை இடையிற் பொருந்தக்கட்டி, சேரிவாய் உடைவாளுங்கட்டி - உதிரங்கக்கும் வாயையுடைய உடைவாளையும் அதன்புறத்துச்சேர்த்து, இரங்கு நான்மறைகள் ஏங்க இருகிலம் நின்று தாளில் பொருங்கழல் வளைத்து - ஈறுதவருந்தும் நான்குவேதங்களும் அலறத் தான் செய்த பெருந்தவத்தால் பெரியவகிலவுலகு பரிசிக்கும் திருவடியில் போர்செய்தற் குறிப்பையுணர்த்தும் வீரகண்டையையணிந்து, வாளிப்புட்டிலும் புறத்துவீக்கி - அம்பறாத்தூணியையும் முதுகிற்கட்டியருளி. (உசு)

விங்கியதடந்தோளிட்டவார்சிலைவில்லினேடும்
பாங்குறையிமையப்பாவைபாதியேயன்றிமுற்றும்
வாங்கியவண்ணம்போன்றுமல்லதுமாலுமோர்பா
லோங்கியவண்ணம்போன்றுமொளிநிறம்பசந்துதோன்றி.

(இ-ள்.) விங்கிய தடம் தோள் இட்ட வார் சிலை வில்லினேடும் - பருத்த பெரிய தோளில் சாத்திய நீண்ட வில்லினேடும், பாங்கு உறை இமையப்பாவை பாதியே அன்றி முற்றும் வாங்கிய வண்ணம் போன்றும் - இடப்பாதியில் வசிக்கும் உமாதேவியார் அவ்விடப்பாதியேயல்லாமல் அத்திருமேனி முழுமையும் தமக்குக் காணியாகக்கொண்டாலொத்த பசிய நிறத்தைபொத்தும், அல்லது மாலும் ஓர்பால் ஓங்கிய வண்ணம்போன்றும் - அதுவன்றித் திருமாலும் ஓர்வலப்பாலில் வசித்ததும் நிறத்தையொத்தும், ஒளிநிறம் பசந்துதோன்றி - காரொளிபடைத்து.

இவிற சித்தமென்றுஞ் செய்யுள்முதல் இச்செய்யுள்காறும் வேடுருக்கொண் டுவந்தானென்பதுதோன்ற அச்சாதித்தொழிற் பண்புகளைக் கூறினர். (உஎ)

காமனுங்காமுற்றஞ்சுங்காளையாம்பருவந்தோன்றத்
தாமுலகளந்தவென்றித்தனிவிற்சேவகனாய்த்தோன்றி
மாமறைமகுடமன்னமண்டபத்தேறித்தென்னர்
கோமகனிடுக்கண்டீர்ப்பான்குஞ்சரவரவுநோக்கா.

(இ-ள்.) காமனுங் காமுற்று அஞ்சும் காளையாம் பருவம் தோன்ற - மன்மதனும் விரும்பி இவ்வடிவம் நமக்கில்லையேயென்று பொறாமைகொண்டஞ்சும் காளைப்பருவம்வாய்க்க, உலகம் தாம் அளந்த வென்றி தனிவில் சேவகன் ஆய் தோன்றி - உலகமுற்றும் தன்கீழ்ப்படுத்திய வெற்றிவாய்ந்த ஒப்பில்லாத வில்லையேந்திய வேட்டுவீரனா யெழுந்தருளி, மாமறை மகுடம் அன்ன மண்டபத்து ஏறி - மகத்தாகிய வேதபுருடன் சூடிய கிரீடத்தையொத்த மண்டபத்தின்மேலேறி, தென்னர்கோமகன் இடுக்கண் தீர்ப்பான் - பாண்டியர் மரபிற்றேன்றிய விக்கிரமபாண்டியனுடைய துன்பத்தைத் தீர்த்தற்பொருட்டு, குஞ்சரம் வரவு நோக்கா - (சோழனேவிய) யானையைப் பார்த்தருளி.

காமனும் என்பதில் நின்ற உம்மை உயர்வு சிறப்பு. (உஅ)

அஞ்சுகூவிளிச்சேய்த்தென்னவதுவரவறனிலாதான்
வெஞ்சினக்கோலினோன்றாண்மிதித்துமெய்குழையவாங்கிச்
செஞ்சிலைநெடுநாண்பூட்டித்திருவிரறெறித்துத்தாக்கிக்
குஞ்சரமெட்டுமஞ்சக்கோளரிமுழக்கங்காட்டி.

(இ-ள்.) அஞ்சு கூவிளிச்சேய்த்து என்ன அது வர - அஞ்சுகூப்பிடுதூரத்தில் அந்தயானைவர, அறன் இலாதான் வெஞ் சினக் கோலின்-(குடிகளைப்பாதுகாக்கும்) தருமநெறியினில்லாத அரசனது கொடியகோபத்தையுடைய கொடுங்கோலைப்போல, செஞ்சிலைநோன் தாள் மிதித்து மெய் குழையவாங்கி - செவ்வேயுள்ள வில்லைத்தனது வலியதிருக்காலால் மிதித்துத் தனது திருமேனியும் வளையவளைந்து, நெடு நாண் பூட்டி - நெடியநாணினை விற்கடையிற்பூட்டி, திருவிரல் தெறித்து தாக்கி - தனது திருவிரல்களால் தெறித்துக் குணத்தொனிசெய்து, குஞ்சரம் எட்டும் அஞ்ச கோளரி முழக்கம் காட்டி - எட்டுத்திக்கிலுமுள்ள அஷ்டகஜங்களும் மனந்திடுக்கிட்டஞ்சச் சிங்கம்போல வீரகோஷஞ்செய்து.

அஞ்சுகூவிளிச்சேய்த்து ஒருகுரோசம். நோன்றாள் மிதித்து மெய்குழைய வாங்கி தொழிற்றன்மையணி. உடையவன்றொழிலை யுடைமைமேலேற்றி வெஞ்சினக்கோல் என்றார். கோள் அரிவன்மையை யுணர்த்தும் அடையோடுகூடி நின்ற ஒருசொல். (௨௯)

இங்கிதநெடுங்கோதண்டமிடங்கையிலெடுத்துநார
சிங்கவெங்கணைதொட்டாகந்திருகமுன்னிடத்தாள்செல்ல
வங்குலியிரண்டாலையன்செவியுறவலித்துவிட்டான்
மங்குலின்முழங்கும்வேழமத்தகங்கிழிந்ததன்றே.

(இ-ள்.) இங்கு இதம் நெடுங்கோதண்டம் இடங்கையில் எடுத்து - இம்மதுரையிலுள்ளோர்க்கு இன்பஞ் செய்தற்பொருட்டு நீண்ட வில்லினை இடக்கையிற்பிடித்து, நாரசிங்க வெங்கணை தொட்டு - கொடிய நாரசிங்கபாணத்தைக் குதையிலேறிட்டு, ஆகம் திருக முன் இடத்தாள் செல்ல இரண்டு அங்குலியால் ஐயன்செவி உற வலித்து விட்டான்-தனது திருமேனி திருகும்படி (வலக்கால்மண்டலித்து) முன்னே தனது இடக்கால்செல்ல இரண்டு திருவிரல்களால் வேட்டுருவாய்வந்த சிவபிரான் தனது செவியளவு விருத்தாகாரமாக நாணைவலித்துப் பிரயோகம்பண்ணியருள, மங்குலின் முழங்கும் வேழம் மத்தகம் கிழிந்தது - மேகம்போல முழங்கிவந்த யானையினது மத்தகம் கிழிபட்டது.

செய்தற்பொருட்டு இசையெச்சம். விட்டான் முற்றெச்சம். விற்றொடுத்து அம்பினை யெய்வார்க்குரிய நிலைகள் நான்குள் ஆலீடநிலை வலக்கால் மண்டலித்து இடக்கால் முந்துறலாதலால் முன்னிடத்தாள் செல்ல என்றார். நான்கு நிலைகளாவன- பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடமுமாம். (௩௦)

கொண்டலினலறிச்சீறிவீழ்ந்ததுகொடியவேழம்
பிண்டதுபாருஞ்சேடன்சென்னியும்பிளந்ததண்டம்
விண்டதுபோலுமென்னத்துண்ணெனவெருவிப்போன
பண்டையதருக்கும்வீறும்படைத்தனதிசைமால்யானை.

(இ-ள்.) கொடிய வேழம் கொண்டலின் அலறிச் சீறி வீழ்ந்தது - கொடிய யானையானது மேகம்போலக்கதறிச்சீறி நிலத்தின்மிசை விழுந்தது, பாரும் பிண்டது-(அதனால் அப்பாரத்தைச் சுமக்கலாற்றாது) நிலவுலகமும் பிளந்தது, அண்டம்

Koviloor Digital Library

விண்டதுபோலும் என்ன அன்னனை வெருவி சேடன் சென்னியும் பிளந்தது-அண்டம் பிளவுபட்டதுபோலுமென இடிக்குரற்கு அஞ்சி ஆதிசேடனுடைய ஆயிரஞ்சிரங்களும் பிளவுபட்டன, போன-புறங்காட்டியோடிய, திசை மால் யானை-திக்குகளிலுள்ள மதமயக்கத்தையுடைய யானைகள், பண்டைய தருக்கும் வீறும் படைத்தன - (கோபித்து வந்தயானை இறந்ததென்று தமக்கு) முன்னுள்ள செருக்கையும் இறுமாப்பையும் அடைந்தன.

சென்னி-சாதியொருமை. நிலவுலகமுதலியன பிளவுபடுதலாலாகிய கோஷத்தையுணர்ந்ததென்பார். பண்டைய தருக்கும் வீறும் படைத்தன எனவும், தான்சுமக்கும் அண்டம் பிளவுபட்டதென்றும் அச்சத்தால் தலைமிழிந்ததென்பார். அண்டம் விண்டதுபோலுமென்ன அன்னனை வெருவி யெனவுங் கூறினார். இது ஒன்றற்கொன்று காரணகாரியமாய் நிற்றலால் காரணமாலையணி. (௯௧)

புதைபடக்கரித்தோல்போர்த்தபுண்ணியமூர்த்திதாளா
லுதைபடக்கிடந்தகூற்றமொத்ததுமத்தயானை
சுதைபடுமதிக்கோவேந்தன்றொழுகுலச்சிறுவனொத்தான்
பதைபடுமமணர்காலபடரெனப்படரிற்பட்டார்.

(இ-ள்.) புதை பட கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால் உதை பட கிடந்த கூற்றம் - (தனது திருமேனி) புதைய யானையினது தோலைப்போர்த்தருளிய சிவபெருமான் தனது திருவடியால் உதைக்கச்சாய்ந்த இயமனை, மத்தம் யானை ஒத்தது - மதமயக்கத்தையுடைய யானையானது ஒத்துச் சாய்ந்தது, சுதை படு மதிக்கோ வேந்தன் தொழுகுலம் சிறுவன் ஒத்தான் - அமுதம்பொருந்திய சந்திரன் மரபிற்றோன்றிய விக்கிரமபாண்டியன் (உழுவலன்பால்) அந்தணர்குலத்திற் பிறந்த மார்க்கண்டேயனை ஒத்தான், பதை படும் அமணர் கால படர் என படரில் பட்டார் - (யானை சாய்ந்ததைக்கண்டு) பதைக்குஞ் சமணர்கள் இயமன் சாய்ந்ததைக்கண்ட காலபடரடையுந் துன்பம்போலத் துன்பத்தி லழுந்தினார்கள்.

தனது மெய்யன்பர் வசிக்குந் திசையிலுஞ் செல்லுதலொழிக வென்ற சிவபிரானாணையைக் கடந்தமையால் புண்ணியமூர்த்திதாளா லுதைபட எனவும், அடியருளத்துக் குடிகொண்ட அப்பெருமான் முன்னோர்காலையில் தனது இனத்தில் ஓர் யானையைமாய்த்து அறிவுறுத்த அதனது தோலைப்போர்த்தருளியதும் உணராமல் அவனடியாரைக் கொல்லச்சென்ற யானையாதலால் மத்தயானை கூற்றம் ஒத்தது எனவும், ஏனைக்கடவுளர்போல் தோற்றக்கேடின்றி யருளுருக்கொண்ட அப்பெருமான் திருவடிக்கு அன்புபூண்டொழுகுதலாற் றொழுகுலச்சிறுவன் எனவும், பாண்டியனும் அவ்வாறுடைமையால் அன்புடைமைதோன்றச் சுதைபடுமதிக்கோவேந்தன் ஒத்தானெனவும், தம்முதல்வனுக்கோ ரிடையூறுவரின் அவன் பரிசனமாயுள்ளார் அந்த இடரைத் தாமும் அடைவார் ஆதலாற் காலபடர் எனவும், தாம் ஏவிய யானையையே பற்றுக்கோடாகப்பற்றிப் பின்சென்றவராதலால் பதைபடுமமணர் படரிற்பட்டார் எனவும் தெளிவுபடக் கூறினமையால் தெரிதருதேற்றவுவமையணி. ௯௨

இருள்கிடந்தனையதானைமிட்டசிந்தூரங்கார்மாலை
யிருண்முகத்தொதுங்கிச்செல்லுமிரவிசெங்கிரணம்போன்ற
திருண்முழுதுண்ணக்காலையெழுகதிர்வட்டமன்ன
திருவினைமறைத்தகண்டனெய்தவாய்ப்பெய்யுஞ்செந்நீர்.

Koviloor Digital Library

(இ-ள்.) யானை இருள் கிடந்தது அனையது - (சாய்ந்த) யானையானது இருட்படலம் ஒருசேர நிலவுலகின் மேற்சாய்ந்ததை யொத்தது, இட்ட சிந்தூரம் - அந்தயானையி னெற்றியிலிட்ட சிந்தூரம், கார் மாலை இருள் முகத்து ஒதுங்கிச் செல்லும் இரவி செங்கிரணம் போன்றது - கரியமாலைக்காலத்திலுள்ள இருள்முகத்தில் ஒதுங்கிச்செல்லாநின்ற சூரியனது சேவந்த கிரணத்தையொத்தது, இருளினை மறைத்த கண்டன் எய்த வாய் பெய்யும் செந்நீர் - இருள்ஒளியை மழுக்கும் கரியகளகண்டத்தையுடைய சிவபெருமான் எய்தவாயிற் பெய்யும் உதிரம், இருள் முழுதும் உண்ண காலை எழு கதிர் வட்டம் அன்னது - இருள்முற்றையும் ஒருசேர உண்ண உதையகாலத்திலெழும் சூரியனை ஒத்திருந்தது.

முழுது என்பதனிறுதியில் முற்றும்மை தொகுத்தல். கிடந்தனையது தொகுக்கும்வழி தொகுத்தல். முதலிலுள்ளனவற்றையே தொடர்புபடக் கூறுதலால் சந்தானவுவமையணி. (ருஈ)

பொய்யருமனத்தார்தேற்றும்புன்னெறியொழுக்கம்பூண்ட
வெய்யகோன்கொடுங்கோறன்னைவெண்மருப்பாகத்தாங்கி
மையன்மாவடிவங்கொண்டுவந்தவெங்கலியைத்தென்னன்
செய்யகோலையன்சிங்கவாளியாய்ச்சிதைத்ததன்றே.

(இ-ள்.) பொய் அரு மனத்தார் தேற்றும் புல் நெறி ஒழுக்கம் பூண்ட வெய்ய கோன் கொடுங் கோல் தன்னை - பொய்யொழுக்கம் அருதமனத்தையுடைய சமணர்கள் (மெய்போலத்தேற்றிய) பாபநெறியின் ஒழுக்கத்தைக் கைக்கொண்ட கொடிய சோழனுடைய கொடுங்கோலை, வெள் மருப்பு ஆக தாங்கி - வெள்ளிய கொம்பாக ஏந்தி, மையல் மாவடிவங்கொண்டு வந்த வெங்கலியை - மதமயக்கத்தையுடைய யானையின் உருவுகொண்டுவந்த கொடியகலியை, தென்னன் செய்ய கோல் - விக்கிரமபாண்டியனது செங்கோலானது, ஐயன் சிங்க வாளியாய் சிதைத்தது - சிவபெருமானுடைய நாரசிங்கபாணமாய்ச் சென்றழித்தது.

வேதாகமநெறியோடு மாறுபட்ட சமணநெறியில் நிற்றலால் அவன் பற்றிய கோல் கொடுங்கோல் எனவும், அதனால் அவனுட்டிலுள்ளது என்றும் கலிஎனவும், வேதாகமநெறி நிற்றலால் பாண்டியன்பற்றியகோல் செங்கோல் எனவும், அதனால் அவனுட்டிலுள்ளது என்றும் அறம் எனவும் குறிப்பாற் போதரலால் உதாரவணி.

உருமுவிழ்ப்புண்டகுன்றினும்பன்மாவம்புதொட்ட
பெருமுழைவாயும்வாயும்பெருகினவருவிச்சோரி
கருமுகின்மானச்சேனங்கழுதுகள்பூதமொய்த்த
திருமணித்தடந்தோள்விங்கத்தென்னவனுவகைபூத்தான்.

(இ-ள்.) உருமு வீழ்ப்புண்ட குன்றின்-இடிவிழ்ந்தமலையையொத்த, உம்பல் மா அம்புதொட்ட பெருமுழை வாயும் வாயும்-யானையின்மேலம்புதைத்துப் பிளந்த பெரியமலைக்குகையையொத்த வாயினின்றும் (அந்தயானையின்) வாயினின்றும், அருவி சோரி பெருகின - அருவியாகிய உதிரவெள்ளங்கள் பெருக்கெடுத்தோடின, கருமுகில் மான-சூற்கொண்ட கரியமேகத்தையொப்ப, சேனம் கழுதுகள் பூதம் மொய்த்த - பருந்துகளும் பசாசுகளும் பூதங்களும் (தசையுண்ண) நெருங்கின, திருமணி தடந்தோள் விங்க தென்னவன் உவகை பூத்தான் - வீரலட்சுமி வசிக்கும் அழகிய பெரியதோள்கள் பருத்தோங்கப் பாண்டியன் மகிழ்கூர்ந்தான்.

Koviloor Digital Library

வீழ்ப்புண்ட என்னும் பெயரெச்சத்தில் வீழ்ப்பு என்னுந் தொழிற்பெயர் உண் என்னும் வினைப்பகுதியோடுகூடி ஓர் பகுதியளவாய் நின்றது. இன் ஒப்புப்பொருட்டு. (௯௫)

ஆனையின்புண்ணீருண்ணவடுத்தகாருடற்பேயென்னச்
சேனைபின்செல்லப்போந்ததிணியிருளமணர்தம்மை
மீனவன்கண்டுசீறவேந்தவன்குறிப்பினிற்கு
மானவெஞ்சினவேன்மன்னர்வல்லைபோய்முடுக்கலுற்றார்.

(இ-ள்.) ஆனையின் புண் நீர் உண்ண அடுத்த கார் உடல் பேய் என்ன - ஆனையினது உதிரத்தை உண்ண அடுத்து நெருங்கிய கரியவுடலையுடைய பேய்க்கூட்டம்போல, சேனை பின் செல்ல போந்த திணி இருள் அமணர்தம்மை - சேனை தமது பின்றொடர யானையின்றொடர்ந்த வலிய கரியமுருட்டுச்சமணர்களை, மீனவன் கண்டு சீற - விக்கிரமபாண்டியன் பார்த்துக்கோபிக்க, வேந்தவன் குறிப்பில் நிற்கும் மானம் வெஞ்சினம் வேல் மன்னர் வல்லை போய் முடுக்கலுற்றார் - அப்பாண்டியன் குறிப்பின்வழி நிற்கும் மானத்தையும் கொடியகோபத்தையும் உடைய வேலையேந்திய வீர அரசர்கள் விரைந்தோடித் தாக்கத் தொடங்கினார்கள்.

மானம் ஆவது தமது பேரரசுக்கு வந்தநிங்கு தமதாகக் கருதுதல். (௯௬)

எடுத்தனர்கையிற்றண்டமெறிந்தனர்மறிந்துசூழ்போய்த்
தடுத்தனர்கரகந்தூளாத்தகர்த்தனர்பீலியோடுந்
தொடுத்தனருடுத்தபாயைத்துணிபடக்கிழித்துக்கால்வாய்
விடுத்தனர்மானம்போக்கிவிட்டனர்சில்லோர்தம்மை.

(இ-ள்.) கையில் தண்டம் எடுத்தனர் சில்லோர் தம்மை எறிந்தனர் - கையில் தண்டத்தையெடுத்துச் சிலசமணரை அடித்தார்கள், மறிந்து சூழ் போய் சில்லோர் தம்மைத் தடுத்தனர் - குறுக்காகச்சூழ்ந்து சென்று சிலரைத்தடுத்து, கரகம் தூளாக பீலியோடும் தகர்த்தனர்-(அவர்களேந்திய) கரகங்கள் தூளாக மயிற்றோகையோடும் பொடிபடுத்தினார்கள், சில்லோர் தம்மை தொடுத்தனர் உடுத்த பாயை துணிபட கிழித்து கால்வாய் விடுத்தனர் - சிலர்களை யவர்கள் தொடுத்துடுத்தபாயைத் துண்டுபடக்கிழித்துக் கால்வாயில் விடுத்தார்கள், சில்லோர் தம்மை மானம் போக்கிவிட்டனர் - சிலரை அவமானப் படுத்திவிட்டார்கள்.

எடுத்தனர், தடுத்தனர், தொடுத்தனர் முற்றெச்சங்கள். (௯௭)

எறியுண்டுசெய்தமாயமிழப்புண்டுசேனையோடு
முறியுண்டுநடுக்கம்பாவமூழ்குண்டுமாழ்கிச்சாம்பிப்
பறியுண்டதலையர்யாரும்பழிப்புண்டுபாயுந்தாமு
முறியுண்டகரகந்தோடுமொதுங்குண்டுபதுங்கிப்போனார்.

(இ-ள்.) எறி உண்டு - (பாண்டியன் வழிநின்ற அரசர்களால்) அடிபட்டு, செய்த மாயம் இழப்புண்டு - (மதயானையைத்தாமழிக்கச்) செய்த வஞ்சனையாகிய யானையை இழந்து, சேனையோடு முறி உண்டு-(தமக்குத் துணையாகவந்த) சேனைகளோடு முறிபட்டு, நடுக்கம் பாவம் மூழ்குண்டு மாழ்கி - நடுக்கத்திலும் பாவத்திலும் மூழ்கி மயங்கி, பறி உண்ட தலையர் யாரும் சாம்பிப் பழிப்புண்டு - உரோமம் பறிக்கப்பட்ட தலையையுடைய சமணர்கள் யாரும் வருந்திப் பழிப்படைந்து, பாயும்

Koviloor Digital Library

தாமும் உறியுண்ட் கரகத்தோடும் ஒதுங்குண்டு பதுங்கிப்போனூர் - பாயும் தாமும் உறியிற்பொருந்திய கமண்டலத்தோடும் ஒளித்துப் பதுங்கி ஒடினூர்கள்.

தாம் செய்த வஞ்சத்தால்வந்த யானையாதலால் மாயமெனக்காரணத்தைக் காரியமாக உபசரித்தார். மதுரையை அழிக்கத் தாமாக்கிய உயிர் தம்மால் கொலைசெய்யப் படுதலால் பாவமூழ்கி எனவும், சுவேதசமாகிய உயிர்கள் கருவியால் உயிர்போகாதிருத்தற்பொருட்டு கரகத்தாற் பதித்தலால் பதியுண்ட தலையர் எனவும், தாம் என்னும் உயர்திணைப்பன்மைப் பெயரோடு பாய் என்னும் அஃறிணைப்பெயரும் விரவி வருதலால் சிறப்பால் போனூரெனவும் கூறினூர். எறி, மூறி, மூழ்கு, ஒதுங்கு என்னும் வினைப்பகுதியோடு உண் என்னும் செயப்பாட்டுவினை விகுதிகள்வந்து வேறு பொருள்தந்து நின்றன. பதியுண்டு செயப்பாட்டுவினை வினையெச்சம். (௩௮)

மாதங்கந்தடிந்தட்டாலைமண்டபத்திருந்தவீரன்
பாதங்கள்கையாற்பற்றிப்பாண்டியனிரந்துவேண்டிப்
போதங்கள்கடந்தாயென்றும்பொலியவிங்கிருத்தியென்ன
வேதங்கட்கருத்தஞ்சொன்னவேதியனதற்குநேர்ந்தான்.

(இ-ள்.) மாதங்கம் தடிந்து அட்டாலை மண்டபத்து இருந்த வீரன் பாதங்கள் - யானையைக்கொன்று அட்டாலைமண்டபத்தின்மேலிருந்தருளிய வேட்டுவ உருக்கொண்டுவந்த சிவபெருமானுடைய திருவடிகளை, பாண்டியன் கையால் பற்றி இரந்து வேண்டி-பாண்டியன் தனது கைகளாற்பற்றிக்குறைகூறி, போதங்கள் கடந்தாய் என்றும் இங்கு பொலிய இருத்தி என்ன - (பிரமன்முதலியோர்) சுட்டறிவிற்கு அப்பாற்பட்டு நின்றோய் எந்நாளும் இவ்விடத்தில் விளங்க இருப்பாயென்று வேண்ட, வேதங்கட்கு அருத்தம் சொன்ன வேதியன் அதற்கு நேர்ந்தான்-(கண்ணுவர்முதலிய முனிவர்கட்கு) வேதத்தின்பொருளை விதித்தருளிய வேட்டுவவடிவாய்நின்ற அந்தணன் அவ்வேண்டுகோளுக்கு உட்ன்பட்டருளினூன்.

குறைபாடொழிந்த பாண்டியன் பின்னுங் குறைகூறினூன் என்றார், அட்டாலைமண்டபத்தில் இத்திருவுருவோடெழுந்தருளித் தன்போலப்பலரும் கருணைக்கிலக்காகி யுய்யுந்திறத்தை விரும்பினவனூதலால். அடியார் குறைகூறுதற்குக் கருணைசெய்யும் பேரருளனூதலால் அதற்கு நேர்ந்தான் எனக் கூறினூர். (௩௯)

பின்னுஞ்சில்வரங்கணல்கப்பெற்றுநான்மாடக்கூடன்
மன்னுஞ்சின்மயனைவந்துவந்தித்துவருநாட்காம
னென்னுஞ்சின்மலர்பூந்தண்டாரிராசசேகரனைப்பெற்று
மின்னுஞ்சில்லியந்தேர்வேந்தன்மேதினிபுரக்குமன்னோ.

(இ-ள்.) பின்னும் சில் வரங்கள் நல்கப் பெற்று - பின்னுஞ் சிலவரங்கள் தந்தருளப்பெற்று, நான்மாடக்கூடல் மன்னுஞ்சின் மயனை வந்து வந்தித்து வருநாள் - நான்மாடக்கூடலில் எழுந்தருளிய ஞானவடிவாகிய சோமசுந்தரக்கடவுளை நாள்தோறும் வந்து வந்தனைசெய்து வருநாளில், காமன் என்னும் சில் மலர் பூந் தண்டார் இராசசேகரனைப் பெற்று - கண்டோர் மன்மதனென்று சொல்லும் மெல்லிய மலராலாகிய பொலிவையுடைய தண்ணியமாலையையணிந்த இராசசேகரனைப்பெற்று, மின்னுஞ் சில்லி அம் தேர் வேந்தன் மேதினிபுரக்கும் - விளங்காநின்ற உருள்பூண்ட அழகிய தேரையுடைய விக்கிரமபாண்டியன் உலகினைப் பாதுகாத்து வராநின்றூன்.

Koviloor Digital Library

அபிடேகபாண்டியன் சித்தமூர்த்திகள் திருவருளால் தன்னைப்பெற்றதுபோல, விக்கிரமபாண்டியன் வேட்டுருக்கொண்டுவந்த பெருமான் திருவருளால் இராசசேகரபாண்டியனைப் பெற்றான் என்பார் வந்தித்து வருநாள் இராசசேகரனைப்பெற்று என்றார். (௫௦)

வம்புளாய்மலர்ந்தவாரான்வரவிடுமத்தக்குன்றிற்
சிம்புளாய்வடிவங்கொண்டசேவகனேவல்செய்த
வம்புளாய்த்தூணம்விள்ளவன்றவதரித்தவாபோற்
செம்புளாய்கொடியநாரசிங்கமாயிருந்ததன்றே.

(இ-ள்.) வம்பு உள் ஆய் மலர்ந்த ஆரான் - வாசந்தனதகத்துக் கமழமலர்ந்த ஆத்திமாலையையுடைய சோழன், வரவிடு மத்தம் குன்றில் - ஏவிய மதமயக்கத்தையுடைய மலைபோன்ற யானையின் மத்தகத்தில், சிம்புள் ஆய் வடிவம் கொண்ட சேவகன் ஏவல் செய்த அம்பு உள்ளாய் - (நரசிம்மத்தின் இறுமாப்பொழிக்கச்) சரபப்புள்ளாய்த் திருவுருவங்கொண்டருளிய சிவபெருமானுடைய ஏவல்வழிநின்ற நாரசிங்கபாணமானதைத்து அதனுள்ளாகி, தூணம் விள்ள அன்று அவதரித்த ஆறுபோல் - (பிரகலாதன்பொருட்டுத் திருமால் இரணியாட்சன்சுட்டிய) தூணம் பிளவுபட அன்று நரசிம்மமூர்த்தியாய் அவதரித்த வகைபோல, செம்புள் ஆய் கொடிய நாரசிங்கம் ஆய் இருந்தது - பருந்து பின்றொடர்ந்து ஆராயும் உக்கிரத்தையுடைய நரசிம்மமூர்த்தியாய் எழுந்தருளியிருந்தது.

விநாயகக்கடவுளும் முருகக்கடவுளும் வயிரவக்கடவுளும் வீரபத்திரக்கடவுளும் திருமால் அவதாரங்களுள் சில அவதாரங்களிலொறுத்துக் கருணைசெய்தருளிய செயல்கள் சிவபெருமான் செயல்களே யாதலால் வீரபத்திரக்கடவுள் கொண்ட சரபமூர்த்தத்தைச் சிவபெருமான்மேலுபசரித்துச் சிம்புளாய்வேடங்கொண்டசேவகன் எனவும், என்றும் நாராயணனே என்ற பிரகலாதன்பொருட்டு இரணியன் கட்டிய தூணத்தில் திருமால் அவதரித்தமையால் தூணம் விள்ள அன்றவதரித்தவாபோல் எனவும், அந்த நாரசிங்கபாணஞ் சென்றவழியெல்லாம் பிணக்காடாய்முடியும் ஆதலால் செம்புளாய் எனவுங் கூறினார். கூர்மாவதாரத்தில் விநாயகக்கடவுள் ஒறுத்தனர் எனவும், மச்சாவதாரத்திலும் வராகாவதாரத்திலு முருகக்கடவுள் ஒறுத்தனர் எனவும், வாமனாவதாரத்தில் வயிரக்கடவுள் ஒறுத்தனர் எனவும், நரசிம்மாவதாரத்தில் வீரபத்திரக்கடவுள் ஒறுத்தனர் எனவும் வருதலைக் காஞ்சிப்புராணத்திலும், கூர்மபுராணத்திலும், திருவாரூர் லீலையிலுங் காண்க. "மறுக்கடற்பரப்பகட்டினிலெற்றுகூர்மத்த- னுறுக்கரும்பெருஞ்சேற்றிடையொளிப்பனமுன்னுள்-நறுந்துழாயணியாமையை நகையுறப்பற்றிக் - குறும்படக்கியபிரான் வருதிறன்குறித்தனபோல்" எனவும், "மாயன்கண் விழிபறித்தவன்முன் வருமிளவல்" எனவும் காஞ்சிப்புராணத்தில் வலம்புரி விநாயகப்படலத்தில் வருதல்காண்க. ஏனையவை மேற்காட்டிய நூல்களில் உணர்க. ஆய் செயவென வெச்சத்திரிபு. (௫௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

உலகெலாமழித்துமிளவுண்டாக்குமுருத்திரன்வீரசத்தியினிற்
றிலதரித்திறவாவவுணன்மார்பிடந்தசிங்கநாயகனையங்கெய்தி
யலகின்மாதவஞ்செய்துரோமசன்றன்பேரறியவோர்தீர்த்தமுண்டாக்கி
யிலகுபேறடைந்தான்பிரகலாதனுமொத்திதிலாப்பெருவரமடைந்தான்.

Koviloor Digital Library

3138

Koviloor Digital Library

விருத்தகுமாரபாலரான திருவிளையாடல்.



Koviloor Digital Library
3138
023

(இ-ள்.) உலகு எல்லாம் அழித்து மீள உண்டாக்கும் உருத்திரன் வீரசத்தியினில் சில தரித்து - எல்லாஉலகங்களையும் ஒடுக்கிமீளவும் தனது சத்தியாற்படைத்தருளும் உருத்திரமூர்த்தியினது வீரசத்திகளுள் சிலசத்திகளை யவனருளால் தரித்து, இறவாத அவுணன் மார்பு இடந்த சிங்கநாயகனை-இறவாத இரணியாட்சனுடைய மார்பினைப்பிளந்த உக்கிர நரசிம்மமூர்த்தியை, உரோமசன் அங்கு எய்தி அலகு இல் மாதவம் செய்து தன்பேர் அறிய ஓர் தீர்த்தம் உண்டாக்கி இலகு பேறு அடைந்தான் - உரோமசமுனிவன் அத்தலத்தையடைந்து அளவில்லாத பெரியதவத்தைச் செய்து தனது பேர்விளங்க ஒருதீர்த்தம் தொட்டுவிளங்கும் பெரும்பேறடைந்தான், பிரகலாதனும் நோற்று ஈறு இல்லாத பெருவரம் அடைந்தான் - பிரகலாதனும் தவஞ்செய்து பெரியவரங்களை அம்மூர்த்தியாற் பெற்றான்.

திருமால் இரணியாட்சனை நாரசிம்மமூர்த்தியாய் வதைத்தது உருத்திரப் பெருமான் அருட்பேற்றால் என்பார் உருத்திரன் வீரசத்தியினிற் சிலதரித்திறவாவவுணன் மார்பிடந்த என்றார். (௬௨)

யானையெய்தபடல முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௧௬௨௭.

இருபத்துமூன்றாவது

விருத்தகுமாரபாலரானபடலம்.

கலிநிலைத்துறை.

தழையுலாங்கையரேவியதந்திமேல்விடைமே
லழகர்சேவகஞ்செய்தவாறறைந்தனமவரே
கிழவனாகிப்பின்காளையாய்க்கிஞ்சுகச்செவ்வாய்க்
குழவியாய்விளையாடியகொள்கையைப்பகர்வாம்.

(இ-ள்.) தழை உலாம் கையர் ஏவிய தந்தி மேல் - மயிற்றோகையையேந்திய கையையுடைய சமணர்கள் ஏவிய யானையின்மேல், விடை மேல் அழகர் சேவகம் செய்த ஆறு அறைந்தனம் - இடபத்தின்மே லாரோகணித்தருளும் பேரழகு வாய்ந்த சோமசுந்தரக்கடவுள் சேவகஞ்செய்த திருவிளையாடலைக்கூறினும், அவரே - அச்சோமசுந்தரக்கடவுளே, கிழவன் ஆகி பின் காளை ஆய் கிஞ்சுகம் செவ்வாய் குழவி ஆய் விளையாடிய கொள்கையை பகர்வாம் - முதலில் விருத்தராகி இடையில் காளைப்பருவமுடையவராகி முடிவில் முள்முருக்கமலர்போன்ற செவந்தவாயையுடைய மதலையாகி விளையாடியருளிய திருவிளையாடலை யினிக்கூறுவாம்.

கிழவனாகி, காளையாய், குழவியாய் என்றது சொன்முறையணி. (௧)

தென்னன்விக்கிரமன்புயத்திருநிலச்செல்வி
மன்னிவாழுநாண்மதுரையின்மறையவனொருவ
னன்னவன்விருபாக்கனுமவன்குடிவாழ்க்கை
மின்னனாள்வடமீனனாள்பெயர்சுபவிரதை.

Koviloor Digital Library

(இ-ள்.) தென்னன் விக்கிரமன் புயத்து இருநிலச்செல்வி மன்னிவாழும் நாள் - விக்கிரமபாண்டியனுடைய புயத்தில் பெரியபூதேவி நிலைபெற்று வாழுங்காலையில், மதுரையில் மறையவன் ஒருவன் - மதுராநகரில் அந்தணன் ஒருவன் உள்ளான், அன்னவன் விருபாக்கன் ஆம் - அம்மறையவன் விருபாக்கனென்னும் பெயரையுடையவனும், அவன் குடிவாழ்க்கை மின் அன்னாள் - அவன் இல்வாழ்க்கைக்குரிய மனைவியானவள், வட மீன் அன்னாள் - அருந்ததிபோலுங் கற்பினையுடையாள், சுபவிரதைபெயர் - பெயரோ சுபவிரதை யெனப்பட்டவள்.

மின் அன்னாள் - மின்னலையொத்தவள். விருபாக்கன் - சிவபெருமான் திருநாமங்களுள் ஓர் திருநாமமே தனக்குப்பெயராய் வழிப்பட்டொழுகிநின்றவன் என்பார் அன்னவன் விருபாக்கனாம் எனவும், அவனொழுக்கிற்குத்தக்க நல்ல விரதங்களையுடையாள் என்பார் பெயர் சுபவிரதை எனவும் கூறினார். விருபாக்கன்மேல் நோக்கிய திருக்கண்ணையுடையவன். (௨)

அனையர்தங்களுக்கரும்பெறன்மகவின்றியனந்தம்
புனிதநல்லறஞ்செய்தொழிலொழுக்கமும்பூண்டு
நனையவார்குழலன்னையரெழுவர்பானண்ணி
யினியமாதவஞ்செய்தொருபெண்மகவீன்றார்.

(இ-ள்.) அனையர் தங்களுக்கு அரும் பெறல் மகவு இன்றி-அவ்விருவர்களுக்கும் அடைதற்கரிய புத்திரப்பேறில்லாமல், அனந்தம் புனிதம் நல் அறம் செய்தொழில் ஒழுக்கமும் பூண்டு-அளவில்லாத குற்றமற்ற சிவதருமமே செய்துவரும் தொழிலையும் சோமசுந்தரக்கடவுளையும் அங்கயற்கண்ணம்மையையும் வழிபடும் நல்லொழுக்கத்தையுமேற்கொண்டு, நனையவார்குழல் அன்னையர் எழுவர்பால் நண்ணி - தேன் சிந்தும் நீண்ட கூந்தலையுடைய சத்தகன்னியர்கள் சந்நிதியையடைந்து, இனியமாதவம் செய்து ஒருபெண்மகவு ஈன்றார் - இனியபெரியதவத்தைச்செய்து ஒருபெண் குழந்தையைப்பெற்றார்கள்.

பண்டு புத்திரப்பேற்றுக்குரிய நற்கருமமில்லையென்பார் அரும்பெறன்மகவின்றி யெனவும், இம்மையில் எண்ணியாங்கே தரவல்லது சிவபுண்ணியம் என்பார் புனிதநல்லறம் எனவும், ஏனைக்கடவுளர்பாற்செய்யும் வழிபாட்டினும் சிவபெருமான்பாற்செய்யும் வழிபாடே வேண்டியாங்கே தரவல்லது என்பார் விசேடண அன்று வயக்கொண்டு புனிதநல்லொழுக்கமுமெனவும், உமாதேவியார்கூறுகள் பலசத்திகளாதலால் அன்னையர் எழுவர் எனவுங்கூறினார். சத்தகன்னியர்களாவார் அபிராமி, மகேஸ்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி. (௩)

பெருங்கௌரியென்றழைத்தனர்பிராயமோரைந்திற்
சாருங்கௌரியும்பிறவிநோய்தணிப்பதற்குறுதி
தேருஞ்சிந்தையாடந்தையைவணங்கிச்சௌனன
மிருந்தெய்வதமந்திரமியாவெனவினவ.

(இ-ள்.) பெரும் கௌரி என்று அழைத்தனர் - (அங்கயற்கண்ணம்மையார் திருவருளாற்பிறந்தமையால்) பெருங் கௌரியென்றிட்டழைத்தார்கள், பிராயம் ஓர் ஐந்தில் சாரும் கௌரியும் - ஐந்துபிராயத்தையடைந்த அக்கௌரியும், பிறவி நோய் தணிப்பதற்கு உறுதி தேரும் சிந்தையாள் - (இனிவரும்) பிறவியாகிய நோயைத்தணிக்க உமாதேவியார் திருவருட்பயனை ஆராயும்மனத்தையுடையவளாகி, தந்தையை வணங்கி இ சௌனம் நரும் தெய்வதம் மந்திரம் யா என வினவ-

Koviloor Digital Library

தனது பிதாவைவணங்கி இப்பிறவிநோயையொழிக்கும் தெய்வமும் அத்தெய்வத்தை வழிபடுமந்திரமும் எவையென்றுகேட்க.

உறுதி தொழிலாகுபெயராய்ப் பயன்மேல் நிற்றலால் திருவருட்பயன் என்றும். தெய்வதம் பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால் தெய்வதம் மந்திரம் என்னும் வினைமுதல்களுக்கு யா எனப் பலவறிசொற்பயனிலை தந்து முடித்தார். (௪)

அந்தணாளனுமதிசயித்தரும்பெறன்மகட்குச்
சிந்தையார்வமோடிறைவிதன்மநுவினைச்செப்பத்
தந்தைபாலதுதெளிந்துநாத்தழும்புறப்பயின்றுண்
முந்தைநாளருந்தவக்குறைமுடித்திடவந்தாள்.

(இ-ள்.) அந்தணாளனும் அதிசயித்து - விருபாட்சனும் அதிசயங்கூர்ந்து, அரும்பெறல் மகட்கு சிந்தை ஆர்வமோடு இறைவிதன் மநுவினை செப்ப - பெறுதற்கரிய தனதுபுத்திரிக்கு மனத்திற்பொங்கியெழுந்த அன்போடு பராசத்தியினது திருமந்திரத்தைக்கூற, முந்தை நாள் அருந்தவக்குறை முடித்திடவந்தாள் - முற்பிறப்பிற்செய்த அரியதவத்தில் விடப்பட்ட குறையை இப்பிறப்பில்முடிக்க அவதரித்த கௌரியானவள், தந்தைபால் அதுதெளிந்து நா தழும்பு உற பயின்றாள் - தனது பிதாவினிடத்து அதனைக்கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து நாவில் தழும்புபடப் பழகிவந்தாள்.

ஐந்துபிராயத்தில் சனனத்தைப்போக்குங்கடவுளையும் அக்கடவுளை வழிபட்டுச்செபிக்கும் மந்திரத்தையும் வினவியதால் அதிசயித்தெனவும், அப்புதல்வி அவனது தவப்பேறாயிருத்தலால் அரும்பெறல் எனவும், ஆசைக்கு அன்புகாரணமாதலால் காரணத்தைக் காரியமாக உபசரித்து ஆர்வமெனவும், பராசத்திதிருமந்திரம் இருடி தெட்சணாமூர்த்தியாகவும் சந்தஸ் காயத்திரியாகவும் உடையதாய்ப் பிறவியைப் போக்குதற்குரியதாதலால் இறைவிதன் மநுவினைச்செப்ப எனவும், கேட்டல்மாத்திரம் அமையாது, சிந்தித்தலும் தெளிதலும் ஆசிரியனிடத்திருந்தே அமைவுபெற வேண்டியவாதலால் உபலக்கணத்தால் சிந்தித்தலையும் தழுவித் தந்தைபாலது தெளிந்து எனவும், தனக்கு உபதேசமாகிய திருமந்திரத்திற்குரிய பராசத்தியை-பாசமும், அங்குசமும், வரதமும், அபயமும் ஆகிய இந்நான்கையுங்கொண்டருளிய திருக்கரங்களையும், தாமரையும் அமுதகலசத்தையும் ஏந்திய இரண்டு திருக்கரங்களையும் உடைய இருதிறத்துமூர்த்தமாகக்கொண்டு செபித்தலால் நாத்தழும்புறப்பயின்றாள் எனவுங்கூறினார். (ரு)

தாதைதன்றவக்கொழுந்தினுக்கிசையமாசைவ
மாதவத்தனுயாதியாச்சிரமத்தில்வழங்கும்
வேதவித்துமாய்மரபினான்மேம்படுவானைப்
போதுபோதுமென்றுளத்தொடுபுகன்றுகொண்டிருந்தான்.

(இ-ள்.) தாதைதன் தவக்கொழுந்திறுக்கு இசைய - விருபாட்சன் தனது பெறுதற்கரிய தவக்கொழுந்துபோன்ற புத்திரிக்குப்பொருந்த, மாசைவ மாதவத்தனாய் - மகாசைவத்தின்வழிநின்ற பெரியதவத்தையுடையவனாய், ஆதி ஆச்சிரமத்தில் வழங்கும் வேதவித்தும் ஆய் - பிரமசரிய ஆச்சிரமத்தில் செல்லும் வேதவித்துமாய், மரபினால் மேம்படுவான் - கோத்திரம் சூத்திரங்களால் மேம்பட்டமண

அ

Koviloor Digital Library

வாளன், எப்போது போதும் என்று உளத்தொடு புகன்று கொண்டு இருந்தான்- அக்காலையில் வருவானென்று தனதுமனத்தில் இடைவிடாது கருதியிருந்தான்.

வைதிகப்பிராமணருள் சிவதீட்சைபெற்று அவ்விதிவழிநடப்போன்வேண்டும் என்பான் மாசைவ மாதவத்தனாய் எனவும், வேதம்பயிலுதற்குரிய ஆச்சிரமம் பிரமசரியம் ஆதலால் வேதம் நிரம்பப்பயின்றவன் வேண்டுமென்பான் ஆதி ஆச்சிரமத்தில் வழங்கும் வேதவித்தமாவெனவும், தன்குடிப்பிறப்போடொத்தவன்வேண்டுமென்பான் மரபினால் மேம்படுவோன் எனவுங்கருதினான்.

போதும் என்பது, புகு என்னும் அடிப்பாட்டடியாகப்பிறந்த செய்யுமென்னும் வினைமுற்று, ஒடு உருபுமயக்கம், புகன்றென்பது மனத்திற்குக் கூறுதலின் மையால்விட்ட இலக்கணை. (௬)

பருவநாலிரண்டாகமேற்கடிமணப்பருவம்
வருவதாகவங்கொருபகல்வைணவப்படிவப்
பிரமசாரியாய்க்கடைதொறும்பிச்சைபுக்குண்பா
னொருவன்வந்தனன்பலிக்கவனயற்புலத்துள்ளான்.

(இ-ள்.) பருவம் நாலிரண்டாக-எட்டுப்பிராயமாக, மேல் கடிமணப்பருவம் வருவது ஆக - அக்காலையில் நிகழுங்கல்யாணப்பருவம்வர, அங்கு ஒருபகல்-அக்காலையில் ஒருநாள், வைணவப்படிவம் பிரமசாரியாய் - வைணவவடிவம்வாய்ந்த பிரமசரிய ஆச்சிரமத்தையுடையவனாய், கடைதொறும் பிச்சைபுக்குஉண்பான் ஒருவன் அவண் பலிக்கு வந்தனன் - (அந்தணர்கள்) வீட்டுவாயில்தோறும் (சென்று) பிச்சைவாங்கியுண்ணும் ஒருவன் அவ்விடத்தப்பலிக்குத் தன்வீட்டுக்குவந்தான், அயல் புலத்து உள்ளான் - (அம்மறையவன்) வேற்றூரிலுள்ளவன்.

எட்டாவதுபிராயம் மணஞ்செய்தற்குரிய கன்னிகைப்பருவமாதலால் மேற்கடிமணப்பருவம் என்றதற்கு, அக்காலையில் நிகழும் எனப்பொருள் கூறினும். அங்கு என்ற இடைச்சொல்லின் அடிப்படையாகிய அகரம் காலத்தின்மேல் நின்றது. வாங்குதலென்னும் பொருளிகழ்ச்சிதோன்றப் புகுதலென்னும் தொழிலிகழ்ச்சியால் புக்கென உபசரித்தார் "பிச்சைபுக்குண்பான்பிளிறுமை" எனவும் வருதல் காண்க. (௭)

பிச்சைவேண்டினனவற்குத்தன்பெண்ணினைக்கொடுப்பா
னிச்சைகூர்ந்தருந்தவத்தினால்வருந்தியீன்றெடுத்த
விச்சைவேதியன்மனையொடுசுற்றமும்வினவா
தச்சமின்றிநீரெடுத்தவனங்கையிற்பெய்தான்.

(இ-ள்.) பிச்சைவேண்டினன் அவற்கு தன்பெண்ணினை கொடுப்பான் இச்சை கூர்ந்து - பிச்சைவேண்டிவந்த அப்பிரமசாரியனுக்குத் தனது பெண்ணைக்கொடுக்க விருப்பங்கொண்டு, அருந்தவத்தினால் வருந்தி ஈன்று எடுத்த விச்சை வேதியன் - அரியதவச்செய்கையால் உடல்மெலிந்து பெற்றெடுத்த கல்வியில்வல்ல விருபாட்சன், மனையொடு சுற்றமும் வினவாது - தன்மனைவியாகிய சுபவிரதையோடு சுற்றத்தாரையும் வினவி ஆராயாது, அச்சம் இன்றி நீர் எடுத்து அவன் அங்கையில் பெய்தான் - அச்சம் சிறிதுமில்லாமல் நீரையெடுத்து அப்பிரமசாரியன்கையில் என் கன்னிகையைக் கொடுத்தேனென்று தாரைவார்த்தான்.

மனைவி சுற்றத்தார்சீற்றம் தன்பால்வருமென்று சிறிதும் நினையானாயினானென்பார் அச்சமின்றி எனக்கூறினர். (௮)

Koviloor Digital Library

சலிக்குநூபுரச்சிறடிக்கன்னிதன்விதியும்
பலிக்குவந்தவனல்வினைப்பகுதியுந்துரப்ப
வொலிக்குமந்திரச்சிரகநீரொழுக்கினுன்முந்திச்
சலிக்குமன்னையுந்தமர்களுங்கேட்டுளந்தளர்வார்.

(இ-ள்.) கலிக்கும் நூபுரம் சீறடி கன்னி தன் விதியும் பலிக்கு வந்தவன் நல் வினைப்பகுதியும் துரப்ப - ஒலிக்காநின்ற சிலம்பையணிந்த சிற்றடியையுடைய கன்னிப்பருவத்தையுடைய கௌரியின்போகூழ்ப்பயனும் பிச்சைக்குவந்த பிரமசாரியினுடைய ஆகூழ்ப்பயனும் செலுத்த, முந்தி ஒலிக்கும் மந்திரம் சிரகம் நீர் ஒழுக்கினுன் - முற்பட்டு உச்சரிக்கும் மந்திரத்தோடு கரகத்தில் நிரப்பியநீரைத் தாரைவார்த்தான், சலிக்கும் அன்னையும் தமர்களும் கேட்டு உளம் தளர்வார் - மனம் வருந்தும் சுபவிரதையும் நெருங்கிய சுற்றத்தார்களும் கேள்வியுற்று மனத்தளர்ச்சியடைவாராயினர்.

அப்பிரமசாரியன் வைணவ ஒழுக்கினனாதலால் கன்னிபோகூழ்ப்பகுதியெனவும், வறியன் வைப்புநிதியை எதிர்ந்ததுபோலப் பெண்ணரசியாகிய கௌரியைப்பெற்றமையால் பலிக்குவந்தவன் நல்வினைப்பகுதி யெனவும், மனைவியோடும் சுற்றத்தாரோடும் வினவாது தத்தஞ்செய்தலால் அவை துரப்ப முந்தியெனவுங் கூறினர். நல்வினைப்பகுதி என்றமையால் விதிஎன்றதைப் போகூழ்ப்பயன் என்றும்.(௬)

குலனுமோர்கிலன்கோத்தி.மோர்கிலன்குடிமை
நலனுமோர்கிலனெழுக்கமுங்கல்வியுநண்ணுந்
தலனுமோர்கிலன்கன்னியைத்தத்தஞ்செய்தானெப்
புலனுமோர்ந்தவன்விதிவழிமதியெனப்புலந்தார்.

(இ-ள்.) குலனும் ஓர் கிலன் கோத்திரம் ஓர்கிலன் - அவன் இன்னகுலத்தினன்எனவும் உணராது குலம் உணர்ந்தவழிக்கோத்திரம் உணரவேண்டுதலின் அதனையும் உணராது, குடிமையும் நலனும் ஓர்கிலன் - அதனையுணர்ந்தவழிக் குடிப்பிறப்பின் சிறப்பையுணரவேண்டுதலின் அதனையும் உணராது, ஒழுக்கமும் கல்வியும் நண்ணும் தலனும் ஓர்கிலன் - அதனையுணர்ந்தவழி அவன்சமய ஒழுக்கத்தையும் கல்வித்திறமையையும் அவன்வசிக்கும் தலத்தையும் உணரவேண்டுதலின் அவற்றையும்உணராது, கன்னியை தத்தஞ்செய்தான் - தன்கன்னிகையை (என்றும்அறியாத பிரமசரியனுக்குத்) தத்தஞ்செய்துவிட்டனன், எப்புலனும் ஓர்ந்தவன் - (இவனோ) எல்லாநூல்களையுங் கற்றவன், விதி வழி மதி எனப்புலந்தார் - விதியின்வழிமதியென்னும் பழமொழி இவன்பாற் புலப்பட்டதென்று மனைவிமுதலிய சுற்றத்தார் வருந்தினர்கள்.

"விதியேமதியாய்விடும்" என்ற ஏதுவாலுணர்க. (௭0)

மற்றவன்குடிகோத்திரஞ்சூத்திரமற்று
முற்றறிந்துநம்மரபினுக்கொக்குமான்மாயோன்
சொற்றதந்திரவயினவத்தொடக்குண்டுதிரியுங்
குற்றமொன்றினிமறுப்பதென்கொடுப்பதென்றிசைந்தார்.

(இ-ள்.) அவன் குடி கோத்திரம் சூத்திரம் மற்றும் முற்றும் அறிந்து - அப்பிரமசரியனுடைய குடிமையையும் கோத்திரத்தையும் சூத்திரத்தையும் மற்றுள்ள

Koviloor Digital Library

லவற்றையும் முழுதும் அவனுலறிந்து, நம்மாபிற்கு ஒக்கும் - நம்முடையமரபிற்கு ஒருவனையொத்திருக்கின்றன், மாயோன் சொற்ற தந்திர வழியைத் தொடக்குண்டு திரியுங் குற்றம் ஒன்று-திருமால்கூறிய பாஞ்சராத்திரத்தின்வழிப்பட்ட வைணவக்கட்டுண்டு திரியாநின்ற குற்றமொன்றுதான் இவனிடத்துளது, இனிமறுப்பதென் - (முன்னரே தந்தற்செய்தமையால்) இனி நாம்மறுக்கக்கடவது என்னவுள்ளது, கொடுப்பது என்று இசைந்தார் - கொடுப்பதுதான் இனிக்கடமையென்று சுபவிரதைமுதலியோர் உடன்பட்டார்கள்.

மற்றென்றும் இடைச்சொற்களில் முன்னது அசைநிலை. பின்னது பிறிதென்னும் பொருள்மேல்நின்றது. சூத்திரமென்பது, போதாயனம், ஆபஸ்தம்பம், ஆஸ்வலாயனம், திராயாயணம், காத்தியாயனம், சத்தியாஷாடம், பிறிதென்றது குலமும் கல்வியும் முதலியன. தமது ஒழுக்கத்துக்கு அவனது ஒழுக்கம்முரணுடையதென்பார். வைணவத் தொடக்குண்டுதிரியும் குற்றமொன்றெனவும், முரணிய இவர்க்கு மகட்கொடைநேர்தல் தவறென்பார் இனிமறுப்பதென்னெனவுங் கூறினர். முற்றுஎன்பதனிறுதியில் முற்றும்மைதொகுத்தல். (கக)

தாயுமொக்கலுமொத்தபின்றாதையும்வேதத்
தாயுமெண்மணத்தாதியாமறநிலையாற்றூற்
றேயுநுண்ணிடைக்கன்னியைச்செம்பொனாற்புனைந்துக்
காயுமாரழன்முன்னரக்காளைக்குக்கொடுத்தான்.

(இ-ள்.) தாயும் ஒக்கலும் ஒத்தபின் - சுபவிரதையும் சுற்றத்தாரும் மனம் ஒத்தபின், தாதையும் வேதத்து ஆயும் எண் மணத்து ஆதியாம் அற நிலை ஆற்றால் - விருபாக்கனும் எட்டுவிவாகத்துள் பிரமவிவாகமாகிய அறநிலையின்வழியால், தேயும் நுண் இடை கன்னியை செம்பொனால் புனைந்து - (தனத்தோற்றத்தால்) மெலிந்துவரும் நுண்ணியஇடையையுடைய கன்னிகையாகிய தனதுபுதல்வியைச்செவந்த பொன்னாற்செய்த ஆபரணத்தால் உடல் தோன்றாமல் அலங்கரித்து, காயும் ஆர் அழல் முன்னர் அக்காளை கொடுத்தான் - வெம்மைமிகும் நிறைந்த ஓமாக்கினிமுன் பிரமசாரியாய் வந்த அப்பிராமணனுக்கு மணமுடித்தான்.

அறநிலை மறநிலையென்னும் இரண்டனுள் அறநிலையிற் பிரமமென்னும் விவாகமடங்குதலால் காரியத்தைக் காரணமாக வுபசரித்து அறநிலையாற்றூல் எனவும், அறநிலையுள் இன்னதென்பது புலப்பட ஆயுமெண்மணத்தாதியாம் எனவும், மங்கல வேள்வித் தீயாயிரும் தீயாதலாற் சாதியடைதந்து காயும் எனவும் கூறினர். செம்பொனென்றது அடையடுத்தகாரண ஆகுபெயராய்க் காரியமாகிய ஆபரணத்தின் மேல்நின்றது. எண் மணம் ஆவன பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம். இவற்றுள் பிரமம் ஆவது பிரமசாரிக்குக் கன்னியைத்தீ முன்னர்க்கொடுத்தல். (கஉ)

தெய்வமங்கலவரிசைகள்செய்துதான்பயந்த
மௌவலங்குழற்கன்னியைமணமகனோடுந்
கௌவையம்புனல்வேலிசூழ்கடிநகர்விடுத்தான்
சைவமங்கலவேதியத்தாபதனிப்பால்

(இ-ள்.) தெய்வ மங்கல வரிசைகள் செய்து - தங்குலத்திற்குரிய மங்கலவரிசையினை நடத்தி, தான் பயந்த மௌவல் அம் குழல் கன்னியை - தான்பெற்ற

Koviloor Digital Library

முல்லைமாலையையணிந்த யழகியகூந்தலையுடைய புதல்வியை, சைவமங்கல வேதியத்தாபதன்-சைவத்தின் சிறப்புவாய்ந்த தவவேடத்தையுடைய விருபாட்சன், மணமகனோடும் கௌவை அம்புனல் வேலி சூழ் கடி நகர் விடுத்தான் - வைணவனாகிய மணவாளனோடும் ஒலியையுடைய நீர்வளமிக்க வயல்சூழ்ந்த காவல்பூண்ட அவனது நகரத்திற்கு அனுப்பினான், இப்பால் - இப்புறம்.

புனல்வேலியென்றமையால் வயல்என்றும், பூசுரராதலால் தெய்வமங்கல வரிசையெனவும், கற்புடையவளாதலால் மௌவலங்குழலெனவும், சைவவேடத்திற் சிறந்தவனாதலால் சைவமங்கலத்தாபதனெனவுங் கூறினார். (௧௩)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இல்லார்க்குக்கிழியீடுநேர்பட்டாலெனப்பல்லாரில்லந்தோறுஞ்
செல்லாநின்றிரந்துண்டுதிரிந்தமகன்மணமகனாய்ச்செல்வநல்க
வல்லாளைமணந்துவருவான்போற்றம்மனைபுகுதவன்கட்சீலப்
பொல்லாராய்வைணவத்துப்புக்கொழுகுதாய்தந்தைபொறார்களாகி.

(இ-ள்.) இல்லார்க்கு கிழியீடு நேர்பட்டால் என-வறுமையுற்றவர்க்குத் தைவிகமாய்ப் பொன்முடிப்புக் கிடைத்தாற்போல, பல்லார் இல்லந்தோறும் செல்லாநின்று இரந்து உண்டு திரிந்த மகன் மணமகன் ஆய்செல்வம் நல்கவல்லாளை மணந்துவருவான்போல் தன்மனை புகுத - பலஅந்தணர்களுடைய வீடுகள்தோறுஞ் சென்றுயாசகித்து உண்டுதிரிந்த வைணவப்பிரமசாரியன் மணவாளனாக இடையறாத பெருஞ்செல்வத்தைக்கொடுக்கவல்ல இலட்சுமியை மணஞ்செய்துவருகின்றவனைப்போலக் கௌரியை மணஞ்செய்து தன்னுடைய இல்லிற்சென்று புகுத, வன் கண்சீலப் பொல்லாராய் வைணவத்து புக்கு ஒழுகு தாய் தந்தை பொறார்கள் ஆகி - கொடுமையையே சீலமாகப் பூண்டுகொடியவராய் வைணவமதமேற்கொண்டு அதன்வழிப்பட்டொழுகும் தாயும் தந்தையும் மனம்பொறாதவர்களாய்.

கௌரியை மனைவியாகப்பெற்றது அவனது பெருஞ்செல்வப் பேறென்பார். இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டால் எனவும், அக்கௌரியை மணவினைமுடித்தது அவனது பெருந்தவப்பேறென்பார் செல்வ நல்க வல்லாளை மணந்துவருவான்போலெனவும், வைணவருள்ளும் மிகக்கொடியரென்பார் வன்கட்சீலப்பொல்லாராய் ஒழுகுஎனவும் கூறினார். (௧௪)

வந்தமணவாட்டிசிவசிந்தனையுஞ்சைவதவவடிவுநோக்கி
வெந்தவுடல்போன்மனமும்வெந்தவளைவேறொதுக்கிவேண்டாராகி
நிந்தனைசெய்தொழுகுவாரவளையொருநாணீத்துநீங்கிவேற்றூர்த்
தந்தமர்மங்கலங்காண்பான்றனியேவைத்தகம்பூட்டித்தாங்கள்போனார்.

(இ-ள்.) வந்த மணவாட்டி சிவசிந்தனையும் சைவ தவம் வடிவும் நோக்கி - (தமதில்லிற்கு) வந்த மணக்கோலத்தையுடைய மருகியின் சிவசிந்தையையும் சைவ தவவேடப்பொலிவையும் பார்த்து, வெந்த உடல்போல் மனமும் வெந்து - (தமது மதக்கொள்கையால்) வெந்த தமது உடம்புபோல மனமும் வெந்து, அவளை வேறு ஒதுக்கி வேண்டார் ஆகி நிந்தனை செய்து ஒழுகுவார் - அந்தக் கௌரியை வேறிடத்திற் குடியேற்றிச் சிறிதும் வேண்டாதவர்களாய் என்றும் நிந்தைசெய்து நடக்கும் அவனது தாய் தந்தையர்கள், அவளை ஒருநாள் நீத்து நீங்கி - அக்கௌரியை ஒருநாள் தம்மினின்றும் நீக்கித் துறந்து, வேற்றூர் தம் தமர் மங்கலம் காண்பான் தனி

Koviloor Digital Library

யே வைத்து அகம் பூட்டி தாங்கள் போனார் - அயலாரில் தமது சுற்றத்தார் மனைவியை வைக்கரணைத் தனியே ஓரிடத்தில் வைத்துத் தமது வீட்டிற்குப் பூட்டிட்டுத் தாங்கள் சென்றார்கள்.

முன்னரே புறத்தில் வெந்தோர்க்கு அகத்தும் வேறலை உடைத்தாதல் வழக்காதலால் மனைவாட்டி சிவசின்னத்தையும் சைவதவவடிவுநோக்கி வெந்த உடல்போல மனமும் வெந்து எனவும், தமது கருமங்கட்குக் கௌரியை யுடன்படுத்த இசையாதவராயிருத்தலால் வேறொருதக்கி எனவும் அமையாத வேண்டாராகியெனவும், தங்கட்குத் தீராப்பகைமை யுடைமைபோலக் கருதினவராதலால் நிந்தனை செய்தென வுங் கூறினார். (௧௫)

உண்மாசுகழுவுவதுநீறென்றேயுபநிடதமுரைப்பக்கேட்டு
மண்மாசுபடப்பூசும்வடிவுடையாரகன்றதற்பின்மனையில்வைகும்
பெண்மாசுகழியவொருசிவனடியார்தமைக்காணப்பெறாமலின்றென்
கண்மாசுபடுவதெனக்கனிந்தொழுகுதலையன்பாற்கவலைகூர்வாள்.

(இ-ள்.) நீறே உள் மாசு கழுவுவது என்று உபநிடதம் உரைப்பக் கேட்டும் - (நீர்புறத்தழுக்கைப்போக்கித் தூய்மை செய்தல்போலத்) திருநீறே அகத்தழுக்காகிய மலங்களைப்போக்கித் தூய்மை செய்வதென்று வேதத்தின் சிகையாகிய பிரபலச்சுருதி கூறக்கேட்டிருந்தும், மண் மாசு படப் பூசும் வடிவுடையார் அகன்றதன்பின் - தமது தேகத்தில் மண்ணை யழுக்குப்படப் பூசும் வடிவினையுடையவர்கள் தமது இல்லினின்று நீங்கியபின், மனையில் வைகும் பெண் மாசு கழிய-அவர்கள் மனையில் வசிக்கும் கௌரி தனது குற்றமொழிய, ஒரு சிவனடியார் தமை காண பெறாமல் இன்று என் கண் மாசுபடுவது என-ஒரு சிவன் அடியார் திருவேடத்தைக்காண இதுகாறும் பெறாமல் இப்பொழுது என் கண்மாசு படுகின்றதென்று, கனிந்து ஒழுகுதலை அன்பால் கவலை கூர்வாள்-பழுத்தொழுகும் தலையன்பினால் கவலைகூரத் தொடங்கினாள்.

நெல்லிற்கு முளை தவிடு உமிபோல ஆன்மாக்களைப்பந்தித்து முறையே போகம், பந்தம், போத்திருத்துவம் பண்ணுவன மும்மலங்கள் என்பார் உண்மாசு எனவும், புறமுகமாய் நோக்குவோர்க்கு ஆமெவிதிப்படி நீற்றுதலையுடையது என்றும் பொருள் படினும் அகமுகமாய் நோக்குவோர்க்கு மலங்களை நீற்றுவதென்றும் பொருள்படும் என்பார் தேற்றேகாரந்தந்து கழுவுவது நீறென்றே எனவும், திருநீற்றின் மான்மியத்தை வேறோர்தம் விரிந்து கூறுவதென்பார் உபநிடதமுரைப்ப எனவும், கேட்டற்குரிய அதிகாரிகள் என்பார் கேட்டும் எனவும், அவ்வாறு கேட்டிருந்தும் வேதவிருத்தமாகிய செய்கைகளில் ஒழுகுவோர் என்பார் மண்மாசுபடப்பூசும் எனவும், இவளில்லிற்கு வந்தோர் காலத்தாறும் வைணவ தவவேடத்தையன்றிச் சைவ தவவேடத்தையுடைய சிவனடியாரைக் கண்டிலள் என்பார் சிவனடியார் தமைக்காணப் பெறாமலின்று என் - கண்மாசுபடுவது எனவும், தலையன்பு என்றமையாற் கனிந்தொழுகு எனவுங் கூறினார். நெல்லிலுள்ள முளைத்தற் சத்தி முளையைத் தோற்றுவிக்கும் வகைபோல ஆன்மாக்களிடத்துச் சுதந்தரமில்லை முதற்காரணமாய் நின்று கன்மமலந் தோற்றுவித்தலும், முளைத்தற்கு அநுகூலஞ்செய்து உடனிற்குந் தவிடுபோல அந்தச் சுதந்தரமெப்பிடத்துத் தோன்றுவதற்குத் துணைக்காரணமாய்த் தன் காரியமாகிய தநுகரண முதலியவற்றையும் உயிரையும் மாயாமலங் கூட்டுவித்து நிற்கும் எனவும், அம்முளை யவ்விடத்துத் தோன்றுவதற்கு நிமித்தகாரணமாகிய உமிபோல அத்தோற்றத்திற்கு நிமித்தகாரணமாய் அவற்றை முறுகுவித்து அச்சுக

Koviloor Digital Library

துக்கங்களை யான்மா நுகர ஆணவமலம் நிலைபெறுத்தும் எனவும் வருதல். "மும்ம லநெல்லினுக்கு முளையொடுதவிடுமிப்போல் - மம்மர்செய்தணுவினுண்மை வடிவினை மறைத்துநின்று-பொய்மைசெய்போகபந்த போத்திருத்துவங்கள்பண்ணும்" என்ற ஏதுவால் உணர்க. (சுசு)

சிவனடியார்க்கன்பிலாச்சிந்தையேயிரும்பேவல்செய்துநாளு
மவனடியார்திறத்தொழுகாவாக்கையேமரஞ்செவிகண்ணாதியைந்தும்
பவனடியாரிடைச்செலுத்தாப்படிவமேபாவைமறைபரவுஞ்சைவ
தவநெறியல்லாநெறியேபவநெறியென்றளியளாய்த்தளர்வாள்பின்னும்.

(இ-ள்.) சிவனடியார்க்கு அன்பு இல்லாத சிந்தையே இரும்பு - சிவபெருமா னடியவரிடத்து அன்பு சிறிதுமில்லாத மனமே இரும்பாம், ஏவல் செய்து நாளும் அவன் அடியார் திறத்து ஒழுகாத ஆக்கையே மரம் - அவரேவிய ஏவலைச்செய்து எந்நாளும் அச்சிவபெருமா னடியவர் திறத்திற்செல்லாத சரீரமே மரமாம், செவி கண் ஆதி ஐந்தும் பவன் அடியார் இடைச் செலுத்தாத படிவமே பாவை - செவி கண் முதலிய இந்திரியங்களைந்தையும் ஆன்மாக்களுக்குப் பந்தம் அருளும் அச்சிவ பெருமானது அடியவர்களிடத்துச் செலுத்தாத உருவமே பதுமையாம், மறை பர வுட் சைவ தவநெறி அல்லாத நெறியே - வேதங்கள் துதிக்கும் சைவத்தின் தவமா ர்க்கமல்லாத மற்றைச் சமயமார்க்கங்களே, பவநெறி என்று அளியள் ஆய் தள ர்வாள் - ஆன்மாக்களுக்குப் பாவத்தைத்தரு மார்க்கங்களென்று அன்புடையவளா ய்த் தளர்வாளாயினாள், பின்னும் - மீளவும்.

சிவபெருமான் தனது அடியவர் திருவேடத்தையே ஆதாரமாகக்கொண்டு நின்று ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டிற்கேற்ப அருள் செய்து நிற்பான் என்பாள் சிவனடியார்க் கன்பிலாச்சிந்தையே எனவும், அவனடியார் திறத்தொழுகா வாக்கை யே எனவும், செவிகண்ணாதி யைந்தும் பவனடியாரிடைச்செலுத்தாப் படிவமே எ னவும், நிலையியற்பொருளாகிய தாவரத்தில் உலோகங்களுள் ஒரு சார்பொருட்கு இ ரும்பு என்றல் உபசாரம் என்பாள் பிரிவிலை யேகாரந்தந்து சிந்தையே யிரும்பு என வும், உற்பிசத்தில் ஒருசார்பொருட்கு மரம் என்றல் உபசாரம் என்பாள் ஆக்கையே மரம் எனவும், செயற்கைப்பொருள்களுள் ஆண், பெண் பகுப்புத்தோன்றச்செய்த உருவத்தைப் பாவை என்றல் உபசாரம் என்பாள் படிவமே பாவை எனவும், முத்தி பெறுதற்கு ஏதுக்களாகிய சோபானங்களை மலைவுபடாது முறைப்படக்கூறி யந்நிலை களில் நிற்கும் ஆன்மாக்களுக்கு அம்முத்திதருஞ் சமயம் சைவசமயம் என்பாள் மறைபரவுஞ் சைவதவநெறி எனவும், உய்திபயக்கும் பொருள்கள்போல உய்தியில் பொருள்களைப் பலபடக்கூறுவன ஏனைச்சமயங்கள் என்பாள் அல்லாநெறியே பவ நெறி எனவுங் கூறினாள். சிவபெருமான் அடியவர் திருவேடத்தையே ஆதாரமாகக் கொண்டு நின்றருளுவன் என்பதற்கு "தாவரசங்கமங்க ளென்றிரண்டுருவினின் று-மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்" என்ற ஏதுவால் உணர்க.

எனைத்துயிர்க்குமுறுதியிகபரமென்பவவைகொடுப்பானெல்லாந்தானா
யனைத்துயிர்க்குமுயிராகுமரனென்பவவனறிவார்க்கங்கம்வாக்கு
மனத்துறுமெய்ப்பத்திவழிவருமென்பவப்பத்திவழிநிற்பார்க்கு
வினைத்துயர்தீர்த்திடவெடுத்தவடிவென்பதவனடியார்வேடமன்றே.

(இ-ள்.) எனைத்து உயிர்க்கும் உறுதி இகபரம் என்ப - எல்லா உயிர்களுக்கும் பயனுபுள்ளன இம்மைப்போகமும் மறுமைப்போகமும் என்று கூறுவார்கள், அவை கொடுப்பான் எல்லாம் தான் ஆய் அனைத்து உயிர்க்கும் உயிராகும் அரன் என்ப

Koviloor Digital Library

(அவ்வுயிர்களுக்கு) அவற்றைக்கொடுப்பவன் எல்லாந் தானுகி எல்லா உயிர்களுக்கும் உயிராய் நின்றருளும் சிவபெருமானென்று கூறுவார்கள், அவன் அறிவார்க்கு அங் கம் வாக்கு மனத்து உறு மெய் பத்தி வழிவரும் என்ப-(அங்ஙனங்கொடுத்தருளும்) அச்சிவபெருமானை ஆகமவழியாலுணர்ந்து வழிபடக்கருதினவர்க்கு மனம்வாக்குக் காயமென்றும் இவற்றால் வழிபடும் உண்மையாகிய சிவபத்திநெறி முதிருமென்று கூறுவார்கள், அப்பத்திவழி நிற்பார்க்கு - (அவற்றால் முதிர்ந்த) அப்பத்தியின்வழி நிற்பவர்க்கு, வினைத்துயர் தீர்த்திட எடுத்த வடிவு என்பது அவன் அடியார் வேடம் அன்றே-இருவினைகளால் வருந் துன்பங்களைத் தீர்க்க எடுத்த (திருவுருவென்பது) அச்சிவபெருமானுடைய அடியவர் திருவேடமல்லவா.

மலபந்தத்தையுடைய நான்முதல் சராசிருகவுள்ள பசுவர்க்கங்கள் என்பார் எனைத்துயிர்க்குமெனவும், அப்பசுவர்க்கங்களின் மலநோய் ஒழித்தற்கு இம்மைப்போகமு மறுமைப்போகமும் பரமௌடதம் என்பார் உறுதிபோமென்ப எனவும், அப் பரமௌடதங் கொடுக்கு மலவயித்தியன் இயல்பாகவே அம்மலங்களினீங்கிய பதியாவான் என்பார் அவை கெடுப்பான் அரன் எனவும், மாயையினின்று கலாதிமுதலாகத்தோன்றிய காரியப்பிரபஞ்சத்திற்கும், அதன் தோற்றமாகிய ஆண் பெண் அலியென்றும் பரிணாமத்திற்கும் நிமித்தகாரணனாய் அநந்தர் சிகண்டர் முகத்தால் அவற்றைக் காரியப்படுத்தலால் கலந்து ஒன்றாய் நிற்பான் என்பார் எல்லாந்தானாய் எனவும், அவற்றைச் செலுத்தக் கடவுளாய் நிற்பான் என்பார் அனைத்துயிர்க்குமுயிராகும் எனவும், ஞானநூல்களைக் கற்றுக் கேட்டும் சிந்தித்தும் பசுவையும் பாசத்தையுங்கூட்டிச் சேட்டிப்பவன் பரமபதியே எனத் தெளிந்தவர் என்பார் அவனறிவார்க்கு எனவும், அவ்வாறறிந்தவர்க்கு அவன் திருவடியைக் கூடுகைக்கு மனத்தாற் சிந்தித்தலும், வாக்கால் துதித்தலும், காயத்தால் வழிபடுதலுமாகிய சார்புபற்றிய மெய்ப்பத்தி தோன்றும் என்பார் அங்கம் வாக்கு மனத்துறு மெய்ப்பத்தி வழிவரும் என்ப எனவும், நல்வினையால்வருஞ் சுவர்க்காதிபோகங்களும் பொன்விலங்குபோலும் என்பார் அதனையும் அடக்கிப் பொதுப்பட வினைத்துயர் எனவும், அம் மெய்ப்பத்தியில் வழுவாது நிற்பவர்க்கு அப்பத்தியையேற்றுப் பரமுத்தியருள அவருறைவிடமாகக்கொண் டெழுந்தருளியிருக்குமிடம் அடியவர் திருவேடம் என்பார் அப்பத்திவழி நிற்பார்க்கு வினைத்துயர்தீர்த்திட வெடுத்தவடிவென்ப தவனடியார் வேடமன்றே எனவுங் கூறினர். (௧௮)

என்னவிருந்தலமருவா ளிருக்குமிடத்தவளுள்ளத்தெண்ணியாங்கே
தென்னவனாயிருந்தரசுசெய்தபிரானவட்கருளுஞ்செவ்விநோக்கிக்
கன்னமுரங்கரஞ்சிரந்தோள்கண்டமுங்கண்டிகைபூண்டுகையிற்றம்போற்
பன்னெடுநாட்பழகியதோர்தனிப்பெரியபுத்தகமும்பக்கஞ்சேர்த்தி.

(இ-ள்.) என்ன இருந்து அலமருவாள் இருக்குமிடத்து - என்று இவ்வாறு கூறி வருந்தும் கௌரி இருக்குமிடத்தில், அவள் உள்ளத்து எண்ணிய ஆங்கு-அக் கௌரி மனத்திற்கருதியபடி, தென்னவன் ஆய் இருந்து அரசுசெய்த பிரான்-சௌந்தரபாண்டியனாயிருந்து அரசுசெய்த சோமசுந்தரக்கடவுள், அவட்கு அருளும் செவ்வி நோக்கி - அக்கௌரிக்கு அநுக்கிரகஞ் செய்யும் அமையம் கருதி, கன்னம் உரம் கரம் சிரம் தோள் கண்டமும் கண்டிகை பூண்டு-காதிலும் மார்பிலும் கையிலும் தலையிலும் தோளிலும் கழுத்திலும் உருத்திராட்சக் கண்டிகையைத்தரித்து, கையில் தம்போல் பல் நெடு நாள் பழகியது ஓர் தனிப் பெரிய புத்தகமும் பக்கம் சேர்த்

Koviloor Digital Library

தி - தமது திருக்கரத்தில் தம்மைப்போலப் பலநாளும் நீங்காதிருக்கும் ஒப்பில்லாத சிவஞானபுத்தகத்தையும் அத்திருக்கரத்தின்கண்தரித்து.

பராசத்தியை வழிபட்டொழுகினமையால் பாகம்வாய்ந்ததென்பார் உள்ளத்தெண்ணியாங்கே - அவட்கருளுஞ் செவ்விநோக்கினவும், சிவபெருமானைப்போல் என்றும் உள்ளது என்பார் தம்போற் பன்னெடுநாட்பழகியதோர் தனிப்பெரிய புத்தகமும் எனவும், ஆசிரியத்திருக்கோலங் கொண்டுவந்தனர் என்பார் கன்னமுராங்காஞ்சிரந்தோள் கண்டமுங்கண்டிகைபூண்டு எனவுங்கூறினார். (கக)

கரிந்தநீள்கயன் முள்ளினரையுமுதுதிரைகவுளுங்கனைக்குநெஞ்சுஞ்
சரிந்தகோவணவுடையுந்தலைப்பனிப்புமுத்தரியந்தாங்குதோளும்
புரிந்தநூல்கிடந்தலையும்புண்ணியநீறணிமார்பும்பொலியநீழல்
விரிந்ததோர்தனிக்குடையுந்தண்டூன்றிக்கவிழ்ந்தசையுமெய்யுந்தாங்கி.

(இ-ள்.) கரிந்த நீள் கயல் முள்ளின் நரையும் - கருநிறம்வாய்ந்த நீண்டகயலினது முள்ளை யொத்த நரையும், முது திரை கவுளும் - மிகவும் திரைத்த கபோலமும், கனைக்கும் நெஞ்சம் - அடிக்கடிகனைக்கும் மார்பும், சரிந்த கோவண உடையும் - சரிந்தகோவணம்போக்கிய ஆடையும், தலைப்பனிப்பும் - தலைநடுக்கமும், உத்தரியம் தாங்கு தோளும் - உத்தரியந்தாங்கிய திருத்தோளும்; புரிந்த நூல் கிடந்த அலையும் புண்ணியநீறு அணி மார்பும் - முப்புரியாகச்செய்த உபவீதம் கிடந்தசையும் விபூதியணிந்த திருமார்பும், நீழல் பொலிய ஓர் விரிந்தது தனிக்குடையும் - நிழல்விளங்க விரிந்த ஒப்பில்லாதகுடையும், தண்டு ஊன்றிக்கவிழ்ந்து அசையும் மெய்யும் தாங்கி - தண்டினையூன்றி அதனோடுகவிழ்ந்து அசையும் திருமேனியும் ஆகிய இவைகளைக்கொண்டருளி. (உ0)

ஒருத்தராயுண்டிபலபகல்கழிந்தபசியினர்போலுயங்கிவாடி
விருத்தவேதியராய்வந்தகம்புகுதக்கண்டெழுந்துமீநூரன்பின்
கருத்தளாய்த்தவிசிருத்திக்கைதொழுதுசிவனையிங்குக்காணவென்ன
வருத்தமாதவமுடையேனெனமுனிவர்பசித்துன்பால்வந்தேமென்றார்.

(இ-ள்.) ஒருத்தர் ஆய் பலபகல் உண்டிகழிந்த பசியினர்போல் உயங்கி வாடி விருத்தவேதியர் ஆய்வந்து அகம் புகுத - (தனக்கோர்பற்றுக்கோடாயுள்ளவர் இல்லாத)ஒருவராய்ப் பலநாள் உணவையொழிந்த பசியையுடையவர்போலமயங்கிவாடி முதுமைப்பைஉடைய அந்தணர்திருக்கோலம் உடையவராய்வந்து தனதுஇல்லிற்புக, கண்டு எழுந்து மீநூர் அன்பின் கருத்தளாய் - கண்டுவிரைந்தெழுந்து மேலெழுந்தோங்கிய அன்பினையுடைய மனத்தையுடையவளாய், தவிசு இருத்தி கைதொழுது சிவனை இங்குகாண என்ன வருத்நம் மாதவம் உடையேன் என - ஆசனத்தில் எழுந்தருளி இருக்கச்செய்து கைகூப்பிச் சிவபெருமானை இவ்விடத்திற்காண என்னவருந்திச்செய்த பெரியதவத்தையுடையேன் என்றுசொல்ல, முனிவர் பசித்து உன்பால் வந்தேம் என்றார் - (வந்த) முனிவர் மிகவும்பசித்தலால் உன்னிடத்துவந்தேனென்று கூறியருளினார்.

பசித்து என்னும் வினையெச்சம் காரணகாரியப் பொருள்மேல் நிற்றலால் பசித்தலாலென்றும். (உக)

இற்பூட்டிப்போயினொமரங்களெனக்கௌரியியம்பமேரு
விற்பூட்டிப்புரம்பொடித்தவேதியர்நின்கைதொட்டுவிடுமுன்யாத்த

Koviloor Digital Library

கோற்பூட்டுவிடுமிற்றெரிந்துகடிதடியில்சமைத்தியெனக்குமரிநாளி
லற்பூட்டுமடவாருமவ்வாறேயட்டில்புகுந்தடிசிலாக்கி.

(இ-ள்.) இல்பூட்டி எமரங்கள் போயினர் என கௌரி இயம்ப - இல்லினை ப்பூட்டி எம்முடைய மாமிமுதலானவர்கள் வேற்றூர்க்குப்போனார்களென்று கௌரி கூற, மேருவில் பூட்டி புரம்பொடித்த வேதியர் - மேருவில்லில் சேடனாகிய நாணைப்பூட்டித் திரிபுரத்தை நீறுபடுத்திய அந்தணராய்வந்த சோமசுந்தரக்கடவுள், நின்கை தொட்டுவிடுமுன் யாத்தகோல் பூட்டு திறந்துவிடும் - உனதுகையால் பரிசித்தற்குமுன் பதித்தகோல்களுக்கேற்ற பூட்டுத்திறக்கும், கடிது அடிசில் சமைத்தி என - விரைந்துபுகுந்து திருவமுதமைப்பாயென்றருள, குமரிநாளில் அன்பு பூட்டு மடவாரும் அவ்வாறே அட்டில் புகுந்து அடிசில் ஆக்கி - அக்கயற்கண்ணியார் திருவடியில் அன்புசெலுத்தும் அக்கௌரியும் அவ்வண்ணமேசெய்து சமையல்வீட்டிற்சென்று திருவமுதமைத்து.

சொல் என்றும் சாதிப்பண்பு சொல்லின்மேல் நிற்றலால் பண்பாகுபெயர். ஈறுதொக்கு நின்றதெனினும் அமையும். (உஉ)

தையன்மாதவக்கொழுந்துபுறம்போந்துசிரகநீர்தளிர்க்கைதாங்கி
யையனேயமுதுசெயவெழுந்தருளுமெனவெழுந்தவடிகள்பாதச்
செய்யதாமரைவிளக்கியந்நீர்தன்சென்னியின்மேற்றெளித்துப்பாச
மையன்மாவிருள்கழுவியகம்புகுவித்தாசனமேல்வைத்துப்பின்னர்.

(இ-ள்.) தையல் மா தவக்கொழுந்து புறம்போந்து-பெண்களுள் பெரியதவக்கொழுந்தபோன்ற அக்கௌரி அட்டிலினின்று புறத்துவந்து, சிரக நீர் தளிர் கை தாங்கி - கரகநீரைத் தனது தளிர்போன்ற மெல்லியகைகளிலேந்தி, ஐயனே அமுது செய எழுந்தருளும் என்ன - ஐயனே திருவமுதுசெய்ய எழுந்தருளுமென்றிரக்க, எழுந்த அடிகள் பாதம் செய்ய தாமரை விளக்கி - எழுந்தருளிவந்த சிவவேடம்பூண்ட அந்தணருடையதிருவடியாகியசெவந்ததாமரைகளை (அக்கரகநீரால்)விளக்கி, அந்நீர் தன் சென்னியின்மேல் தெளித்து - அந்நீரைத் தனது சிரசின்மேல் புரோக்ஷித்து, பாசம் மையல் மா இருள் கழுவி அகம்புகுவித்து ஆசனமேல்வைத்து - பாசமாகிய மயக்கத்தைவிளைக்கும் மல இருளைக்கழுவித் தனது இல்லிறுட் புகுவித்து ஆசனத்தின்மேலெழுந்தருளி யிருக்கச்செய்து, பின்னர்-பின்பு. (உ௩)

நகைமலரிட்டருச்சித்துநல்லபரிகலந்திருத்திநறுவிமுல்லை
முகையனையபாலடிசில்வெள்ளிமலையெனப்பருப்புமுதுகிற்செய்பொற்
சிகரமெனப்பல்வேறுகறிபுறத்தூழ் இக்கிடந்தசிறுகுன்றிட்ட
வகையெனநெய்யருவியெனப் படைத்தனையசிற்றுண்டிவகையும்பெய்து.

(இ-ள்.) நகைமலர் இட்டு அருச்சித்து நல்ல பரிகலம் திருத்தி - விளக்கமுடையமலர்கொண் டருச்சனைசெய்து ஒளிவாய்ந்த உண்கலத்தைத்திருத்திவைத்து, நறவி முல்லை முகை அனையபால் அடிசில் வெள்ளிமலை என - நறுமணங்கமழும் மலர்க்க முல்லையரும்பையொத்த பாற்சோற்றுச்சமைத்த திருவமுது வெள்ளிமலையைப்போலவும், பருப்பு - அதன்புறத்திட்டபருப்பு, முதுகில் செம்பொன் சிகரம் என - அச்சோற்றின்புறத்திருந்த மகமேருவைப்போலவும், பல்வேறு கறிகள் - (அதனைச்சூழப்படைத்த பலவேறுவகைப்பட்ட பொரிக்கறியின்வகைகள், புறம் தழுவி கிடந்த சிறுகுன்று ஈட்டவகை என்ன-(அம்மகாமேருவின்)புறத்தைத்தழுவிக்கிடந்த

Koviloor Digital Library

நிஷதமலைமுதலியவற்றின் கூட்டத்தை வேரோடுபெயர்த்துவைத்த வகையைப்போல வும், செய் அருவி என படைத்து - அத்திருவமுதில்வாக்கிய நெய் அத்திருக்கையிலி னின்றிழியும் அருவியைப்போலவும்படைத்து, அனைய சிற்றுண்டி வகையும்பெய்து- அதுபோலவே யேனைச்சிற்றுண்டிவகைகளையுஞ் சூழவைத்து.

திருத்தி மங்கலவழக்கு. (உச)

செய்யவாயிடையிடையேமுகமனுரையின்னமுதுசெவியினூட்டத்
தையலாள்வளைக்கையறுசுவையமுதுவாயூட்டத்தளர்ந்தயாக்கை
யையர்தாந்திருவமுதுசெய்தமுதுண்டவரெனமூப்பகன்றுபூவிற்
கையதேமலர்வாளிக்காளைவடிவாயிருந்தார்கன்னிகாண.

(இ-ள்.) செய்யவாய் இடை இடையே முகமன் உரை இன் அமுது செவியில் ஊட்ட - செவந்த தனது வாயால் இடைக்கிடையே உபசாரவார்த்தையாகிய இனியவமுதமைத்து (விருந்தாகவந்த) முதுவேதியர் திருச்செவியில் உண்பிக்கவும், தையலாள்வளைக்கை அறுசுவை அமுது வாய் ஊட்ட - கௌரி தனது வளையலணிந் தகையால் அறுசுவையமைந்த அன்னத்தையும் அவர்திருவாயிலுண்பிக்கவும், தளர்ந்த யாக்கை ஐயர் தாம் - முதுமூப்பால் தளர்ச்சியடைந்த திருமேனியையுடைய அவ்வேதியர், திரு அமுது செய்து அமுது உண்டவர் என மூப்பு அகன்று - திருவமுதுசெய்தருளித் தேவாமிர்தம் உண்டவரைப்போலத் தமது மூப்பினின்றுநீங்கி, பூவில் கையதே மலர்வாளி காளைவடிவாய் கன்னிகாண இருந்தார் - மலர்வில்லையேந்திய கையிலுள்ள தேன்சிந்தும் மலர்க்கணையையுடைய மன்மதன்வடிவமாகி அக்கௌரிகாண இருந்தனர்.

அமுதபானஞ்செய்தவர் மூப்பகலுதலால் அமுதுண்டவரென மூப்பகன்று எனவும், தேவர்மேலெய்யும்வில் மலர்வில்லாதலால் மூப்பகன்று எனவுங்கூறினார். முதுமை முதியோர்மேனிற்றலால் பண்பாகுபெயர். (உரு)

பூசியவெண்ணீறுபோய்க்கலவையாய்க்கண்டிகைபோய்ப் பொன்செய்பூ
காசணிபொற்குண்டலமுங்கடகமாய்மூப்புப்போய்க்காளையான [றுங்
தேசுருவங்கண்டுநடுநடுங்கிவளைக்கரநெரித்துத்திகைத்துவேர்த்துக்
கூசியொருபுறத்தொதுங்கிநின்றுளக்கற்புமலர்க்கொம்பரன்னாள்.

(இ-ள்.) பூசிய வெள் நீறுபோய் கலவை ஆய் - திருமேனியிற்பூசிய வெள்ளிய திருநீறு உருமாறிக் கலவைச்சந்தனமாகியும், கண்டிகைபோய் - உருத்திராட்ச கண்டிகை உருமாறி, பொன்செய் பூணும் காசு அணிபொன் குண்டலமும் கடகமும் ஆய்-பசும்பொன்னாற்செய்த ஆபரணங்களும் இரத்தினமிழைத்த பொன்னாலாகிய குண்டலங்களும் கடகமுமாகி, மூப்புப்போய் காளையான தேசு உருவம்- முதுமூப்புமாறிக் காளைப்பருவமானவிளக்கம் அமைந்தவேதியரது திருவுருவத்தை, அ கற்பு மலர் கொம்பர் அன்னாள் - அந்தக்கற்பாகியமலர்களையுடைய பூங்கொம்புபோன்ற கௌரியானவள், கண்டு நடுநடுங்கி வளைக்கரம் நெரித்து திகைத்து வேர்த்துகூசி ஒருபுறத்து ஒதுங்கி நின்றாள் - பார்த்து நடுநடுக்கமுற்று வளையலணிந்த தனதுகைகளைநெரித்து மயங்கி வேர்வரும்பிக்கூசி ஒருபால் அஞ்சி ஒதுங்கிநின்றனள்.

வெண்ணிறவிபூதியளவில்லாத புண்ணியத்தைவிளைத்தலால் வெண்ணீறு என்றார். கருநிறவிபூதி நோயையுண்டாக்குதலும், செந்நிறவிபூதி கீர்த்தியைப்போக்குதலும், புகைநிறவிபூதி ஆயுளைக்குறைத்தலும், பொன்னிறவிபூதி சம்பத்தைக்கெடுத்

Koviloor Digital Library

நது முடைமையால் அவற்றைக்களையவேண்டும் என்பது ஆகமவிதி "கறுப்புச்செவப்புக்குடையதொருநாமம் - வெறுப்புடனேவிட்டுவிடு" எனச்சைவசமயநெறியின் பொதுவிலக்கணத்தில் உணர்க. (௨௬)

ஆனபொழுதருக்கடிநன்மணங்குறித்தமனையிற்றீர்ந்தயனூர்புக்க
தேனொழுகுதுழாயலங்கற்றீர்த்தனுக்கன்புடையார்போற்றிரியும்வஞ்ச
மானமுடையார்மீண்டுமனைபுகவும்பதினறுவயதின்மேய [ன்.
பாலன்மணிகண்டனுதற்காப்பணிந்தோர்பசுங்குழவிப்படிவங்கொண்டா

(இ-ள்.) ஆன பொழுது - இத்திருவுருவம் கொண்டருளிய காலையில், அருக்கடி நல் மணம் குறித்த மனையில் தீர்ந்து - மிக்கவிளக்கம் அமைந்த நல்லவிவாகத்தைக்குறித்துத் தனது வீட்டினின்றும் நீங்கி, அயலூர் புக்க தேன் ஒழுகு துழாய் அலங்கல் தீர்த்தனுக்கு அன்பு உடையார்போல் திரியும் வஞ்சம் மானம் உடையார் மீண்டு மனைபுகவும் - வேற்றூர்க்குச்சென்ற தேன்சிந்தும் துழாய்மாலையையணிந்த திருமாலுக்கு மெய்யன்புடையவர்போல நடித்துத்திரியும் வஞ்சத்தையும் சமயமானத்தையுமுடைய மாமிமுதலியோர் திரும்பித் தமதுமனையில்வர, பதினறுவயதில் மேய பாலன் மணி கண்டன் நுதல் காப்பணிந்து ஓர் பசுங்குழவி படிவம் கொண்டான் - பதினறுவயதினையுடைய நீலோற்பலம்போன்ற கரிய ஸ்ரீகண்டத்தையுடைய வேதியராகிய சோமசுந்தரக்கடவுள் நெற்றியில் திலப்பொட்டணிந்த ஒப்பில்லாத பச்சைக்குழந்தையின் உருவத்தைக் கொண்டருளினர்.

திருமாலுக்கு மெய்யன்புடையவரல்லர் என்பார் அன்புடையார் போற்றிரியும் வஞ்ச மானமுடையார் எனக்கூறினர். பசுமை என்றும் பண்பு அருமைமேல் நின்றது. (௨௭)

எழுதரியமறைச்சிலம்புகிடந்துபுறத்தலம்பவன்பரிதயமென்னுஞ்
செழுமலரோடையின்மலர்ந்தசிவானந்தத்தேன்றதும்புதெய்வக்கஞ்சத்
தொழுதகுசிற்றடிப்பெரியவிரல்சுவைத்தமைக்கனிர்துளும்பவாய்விட்
டழுதணையாடையிற்கிடந்தானனைத்துயிருமீன்றுகாத்தழிக்குமப்பன்.

(இ-ள்.) எழுத அரிய மறை சிலம்பு கிடந்து புறத்து அலம்ப - எழுதுதற்கரிய வேதமாகிய சிலம்புகள் சூழ்ந்துகிடந்து புறத்தில்ஒலிக்க, அன்பர் இதயம் என்னும் செழுமலர் ஓடையில் மலர்ந்த சிவானந்தத்தேன் ததும்பு தெய்வம் கஞ்சம் தொழுதகு சிற்றடி பெரியவிரல் - அடியாருடைய இருதயமென்கின்ற அன்றலர்ந்த மலர்களையுடைய ஓடையில் மலர்ந்த சிவானந்தமாகிய தேன்ததும்பும் தெய்வத்தன்மையையுடைய தாமரைபோன்ற துதிக்கத்தக்க சிற்றடியிலுள்ள பெருவிரலை, அனைத்து உயிரும் ஈன்று காத்து அழிக்கும் அப்பன் - எல்லாவுயிர்களையும் படைத்தும் காத்தும் ஒடுக்கியும் அருளும் அப்பனாகிய சோமசுந்தரக்கடவுள், சுவைத்தமைக் கனிர் துளும்ப வாய்விட்டு அழுது அணை ஆடையில் கிடந்தான் - சுவைத்தமை பெருகியவண்கனிர் நீர்ததும்பவாய் திறந்தழுது அணையாகப்பரப்பிய ஆடையின் மேல் கிடந்தருளினான்.

ஓடைக்குரிய அடைதந்து செழுமலர் ஓடையெனக் கூறினர். (௨௮)

தாய்விட்டுப்போனதொருதனிக்குழவியெனக்கலங்கித்தாங்கித்தேடி
யாய்விட்டுப்பிரமனுமமரருமன்புடையாளன்பிற்பட்டு

Koviloor Digital Library

வாய்விட்டுக்கிடந்தழுதமகவினைக்கண்டணங்கனையாண்மாமியென்னுங்
காய்விட்டுமதக்கொடியாளிம்மகவேதெனக்கேட்டாள்கௌரிதன்னை.

(இ-ள்.) தாய் விட்டு போனது ஒரு தனிச்குழவி என கலங்கி - தாய்கைவிட்டுப்போன ஒப்பில்லாத ஒருகுழந்தையைப்போல அறிவுகலங்கி, தாங்கி தேடி ஆய் விட்டு பிரமன் அழ மறைகள் அழ - சிரத்தில் தாங்கித்தேடி ஆராய்ந்து பிரமனும் வேதங்களும் ஒருபால்அலற, அன்புடையாள் அன்பில் பட்டு வாய் விட்டு கிடந்து அழுத மகவினை கண்டு - அன்புமிக்க கௌரியினுடைய அன்பிலகப்பட்டு வாய் திறந்து அணையின்மேற்கிடந்து அலறுங் குழந்தையைக்கண்டு, அணங்கு அனையாள் மாமி என்னும் காய் விட்டு மதக்கொடியாள் - இலட்சுமியையொத்த அக்கௌரியினது மாமியாகிய கோபமிக்க வைணவமதக்கொடியவள், கௌரி தன்னை இம்மகவு ஏது எனக்கேட்டாள் - கௌரியைநோக்கி இக்குழந்தை 'யேதென்றுகேட்டனள்.

ஆய்விட்டு ஒருசொல்லாதலால் ஆராய்ந்து என்றும். ஆய்விடு என்பது காறுமுதனிலை. விட்டு ஆரியச்சிதைவு. (௨௯)

நத்தனயன்றனக்கரியநாயகனுக்கன்புடையாணவில்வாடேவ
தத்தனயந்தருமனைவியொடுபோந்துசிறுபோதுதையலாயீண்
டித்தனையன்றனைப்பார்த்துக்கோடியெனவைத்தகன்றுனென்னுமுன்னஞ்
சித்தநயனங்கலங்கச்சீறிமணவாட்டி தன்மேற்செற்றங்கொண்டாள்.

(இ-ள்.) நத்தன் அயன் தனக்கு அரிய நாயகனுக்கு - சங்கினையேந்திய திருமாலுக்கும் பிரமனுக்கும் தேடுதற்கரிய சிவபெருமானுக்கு, அன்பு உடையாள் நவில்வாள் - பேரன்பினையுடைய கௌரிகூறுகின்றாள், தேவ தத்தன் நயம் தரு மனைவியொடு போந்து-தேவதத்தனென்னு மந்தணன் தனக்கு இன்பந்தரும் மனைவியாகிய சிதேவியோடுமிங்குவந்து, சிறுபோது-சற்றுநேரம், தையலாய்-பெண்ணே, ஈண்டு இத்தனையன் தனைபார்த்து கோடிஎன வைத்து அகன்றான் என்னுமுன்னம்-இப்பொழு திக்குழந்தையைப் பார்த்துக்கொள்ளாயென்று வைத்து நீங்கினான் என்றுசொல்லுமுன்னமே, சித்தம் நயனம் கலங்க சீறி - தனதுமனமும் கண்களும் கலங்கக்கோபித்து, மணவாட்டி தன்மேல் செற்றம் கொண்டாள் - தன்மணவாட்டியாகிய மருகியின்மேற் கோபங்கொண்டாள்.

குறிப்பில்லாத ஒருவரைக் குறிப்படக் கூறவேண்டின் தேவத்தன் எனவும் சிதேவியெனவுங் கூறுதல் வழக்காதலால் தேவதத்தன் என்று கூறினாரேனும் நயந்தருமனைவி என்றது சிதேவியை யாதலால் சீதேவி என்றும். (௩௦)

என்புபூண்டிடுகொட்டிற்பொடியாடுமுருத்திரனுக்கிடையறுத
வன்புபூண்டான்மகவுக்கன்புடையாய்நீயுமெமக்காகாயென்று
முன்புபூண்டயர்வாளைமகவையுங்கொண்டகத்தைவிடத்துரத்தினார்கள்
வன்புபூண்டொருவைணவம்பூண்டுபொறையிரக்கமானநீத்தார்.

(இ-ள்.) என்பு பூண்டு இடுகாட்டில் பொடியாடும் உருத்திரனுக்கு - எலும்பினைப்பூண்டு சுடுகாட்டிலுள்ள நீறுபூசியாடிய வுருத்திரமூர்த்திக்கு, இடையறுத அன்பு பூண்டான் மகவுக்கு அன்பு உடையாய் - நீங்காதஅன்புபூண்ட அத்தேவதத்தன் குழந்தைபாலன்பினையுடையாய், நீயும் எமக்கு ஆகாய் என்று - (அவன் மேக்

கு ஆதரவாற்போல) நீயுமெங்களுக்காகாய் என்றுசொல்லி, ஒழுகு வன்பு பூண்டு - இடையறாத சிநேகம் கொண்டு சீலத்தை மேற்கொண்டு, வைணவம் பூண்டு - வைண வ தேதியைக்கைக்கொண்டு, பொறை இரக்கம் மானம் நீத்தார் - பொறுமையையும் இரக்கத்தையும் மானத்தையும் பற்றறநீக்கிய மயிமுதலியோர், அன்பு பூண்டு அய ர்வாளை - அன்புமுற்று வருந்துங் கௌரியை, மனைவையும் கொண்டு அகத்தைவிடத் தாத்திருர்கள் - அப்பிள்ளையையுமோட்டித் தமது இல்லினின்றும் நீங்க வோட்டினு ர்கள்.

ஆன்மாக்களைப் பாதுகாத்தற்பொருட்டு, பிரமனையுந் திருமாலையும்படைத்து அவர்களாற் சிருட்டித்துக் காத்தும் இறுதியில் அவைகளை யெல்லாம் இளைப்பு நீங்க வொடுக்கி யப்பிரமன்முதலியோரையுமழித்து மீளவும் அவர்களையுண்டாக்கும்பெரு மான், தாவிறைவனெனவுணர்த்தற்கு அவர்க ளெலும்பைப்பூண்டும் அவர்களைநி றுபடுத்தியும் அர்ச்சிறைப்புசிச் சர்வசங்காரகாலத்தில் யாவுமயானம் ஆதலாதலால தனின்று ஆடியருளியது அவர்கள்மேற்கொண்ட திருவருளாயிருக்க, என்புபூண்டி யோட்டிற்பொடிபாடும் என இழித்தக்கூறுதலால் வன்புபூண்டு எனவும், குழந்தை முகத்தைபேறும் பாராது தாத்தினைமையால் பொறை யிரக்க மான நீத்தார் எனவு ங்கூறினார் "நிலவுநின்றதன்னருருக்கொண்டிடுநிமலன்-தலைமைபெற்றிடுபுங்கவர் தம்மைமுன்றாந்தே - உலகம்யாவையுமளித்தருள்செய்திடவுதவி - அலகிலாவுயிர்யா வையுமயன்கணின்றளிப்பான்" "மாபவன்கணின்றவையெலாம்போற்றிமற்றவைக் குந் - அயதப்புரவருத்திபேமேல்வினைதொலைச்சி - யாயிரத்திலோர்பற்பலவீடுறவ ருளி - மேயவாருயிருலகெலாம்பின்னரோடுக்கிடும்" "அன்னவேலையிலவையெலாம ழிந்தபினளிப்போர் - என்னநின்றவர்தம்மையு மொடுக்குறுமிதற்பின் - முன்னருள் எதோரேகமாயுறையுமெய்ம்மூர்த்தி - பின்றுமிம்முறைபுரிந்திடுமென்றுமிப்பெற்றி" "பரமனிவ்வகையடுக்தொறுமடுக்தொறும்டலவாம் - பிரமனாதியோரென்பினைத்தரி க்கும்" "அம்மதக்கவர்தங்களைமுத்தலையயிலான் - மேல்வேயெடுத்தேந்திடுமவர் தலைமிழியாத் - தொல்லைகள்ளிற்றாக்கியும்புனைந்திடும்" "ஆதலாற்றனைவியப்பதற் கன்றவைவனிதல் - ஈதலாதொருநிறமுணாதியாவர்க்குமேவர்க்கும்-காதனேயிவனெ ன்றுதன்பாக்கோரணித் - தெளிதலாமொரிஇமுத்திபெற்றுய்ந்திடுஞ்செயலே" என க்காந்தம் தக்ஷகாண்டம் ததீசியுத்தரப்படலத்தில் வருதல்காண்க. (௯௧)

தாயிலாப்பிள்ளைமுகந்தனைநோக்கித்தெருவினிடைத்தளர்வாளுள்ளங்
கோயிலாக்கொண்டுறையுங்கூடலுநாயகனைமனக்குறிப்பிற்கண்டு
வேயிலாக்கியதடந்தோட்கௌரிதிருமந்திரத்தைவிளம்பலோடுஞ்
சேயிலாக்கிடந்தமுதகுழவிவிசும்பிடைவிடைமேற்றெரியக்கண்டாள்.

(இ-ள்.) தாய் இல்லாத பிள்ளை முகம் தனை நோக்கி - தாயில்லாத பிள்ளையி ன்முகத்தைப்பார்த்து, தெருவின் இடை தளர்வாள் - தெருவினின்றும்பரிதவிக்கும் கௌரி, உள்ளம் கோயிலாக கொண்டு உறையும் கூடல் நாயகனை - தனதுமனத்தை த் திருக்கோயிலாகக்கொண்டெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை, மனக் குறிப்பில் கண்டு - மனக்கண்ணூற்றரிசித்து, வேயில் ஆக்கிய தடம் தோள் கௌரி திரு மந்தி ரத்தை விளம்பலோடும் - மூங்கிலாலமைத்தலொத்த பெரிய திருத்தோளையுடைய உமாதேவியார்திருமந்திரத்தை யுச்சரித்தலோடும், சேய்மை இல்லாமல் கிடந்த அ முத குழவி - தனக்கு அண்மையிற்கிடந்த வாய்நீரொழுகு இளம்பிள்ளை, விசும்பு இடை விடைமேல் தெரிய கண்டாள் - ஆகாயத்தினிடத்து இடபவாகனத்தின்மேற் றோன்றியருளத் தரிசித்தாள்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

மாறியாடின திருவிளையாடல்.



Koviloor Digital Library

செய்மை இல்லாமல் என்றமையால் அண்மையென்றும். செய்மையில்லாமல் - தூரமில்லாமல் என்பதுபொருள். அண்மை - சமீபம். மனக்குறிப்பால் என்றமையால் மனக்கண் என்றும். (கூஉ)

மழவுருநீத்தடலேற்றின்வருவார்தம்மிடத்தணைந்தின்மனுவையோதிப்
பழையபார்ப்பனமகளைப்பார்ப்பதியின்வடிவாக்கிப்பலருங்கண்டு
தொழவிடைமேலேற்றிவிசும்பாறுகமலர்மாரிசுரர்கடூற்ற
வழகரெழுந்தருளினார்களிதூங்கியதிசயித்தாரவனிமாக்கள்.

(இ-ள்.) மழ உரு நீத்து அடல் ஏற்றின் வருவார் தம் இடத்து அணைந்தின் மனுவை ஓதி பழைய பார்ப்பன மகளை - குழந்தைத்திருவுருவத்தை நீக்கியருளிவெற்றியையுடைய இடபவாகனத்தின்மேல் வந்தருளிய சிவபெருமானார் தமது இடப்பாகத்திலமர்ந்த வுமாதேவியார்திருமந்திரத்தை யுச்சரித்துக் கைவந்தகௌரியை, பார்ப்பதியின் வடிவாக்கி - உமாதேவியார் சாருபந்தந்தருளி, பலரும் கண்டுதொழ விடைமேல் ஏற்றி - பலருங் கண்டுவணங்கத் தமது இடபத்தின்மே லிருக்கச்செய்தருளி, விசும்பு ஆறுக - ககனமார்க்கமாக, சுரர்கள் மலர் மாரி தூற்ற அழகர் எழுந்தருளினார் - தேவர்கள் புட்பமாரிசிந்த அப்பெருமானார் எழுந்தருளினார், அவனி மாக்கள் களி தூங்கி அதிசயித்தார் - (அதனைக்கண்ட) நிலவுலகினிலுள்ள மக்கள் யாவரும் பெருமகிழ்ச்சியிலழுந்தி என்றுங்கூறாத அதிசயங்கூர்ந்தார்கள்.

சாருபத்தை விரும்பித் தன்பிதாவினிடத்திற்பெற்ற பராசத்தி திருமந்திரத்தை மூன்றிலட்சம்செபித்தவளாதலால் மனுவை யோதிப் பழைய பார்ப்பனமகளைப் பார்ப்பதியின்வடிவாக்கி என்றார். ஒருலட்சஞ்செபித்தால் சாமீபமுத்தியும், இரண்டிலட்சஞ்செபித்தால் சாலோகமுத்தியும், மூன்றிலட்சஞ் செபித்தால் சாருபமுத்தியும், நான்கிலட்சஞ்செபித்தால் சாயுச்சியமுத்தியுமாம். (கூகூ)

விருத்தகுமார பாலரானபடல முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கசகூ0.

இருபத்துநான்காவது

கான்மாறியாடினபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருத்தராய்மதுராபுரிமேவியசித்தராகியசெல்வர்
விருத்தராயிளையவருமாய்மழவுமாய்வேடங்கொண்டடலேற்றி
னெருத்தராய்விளையாடியவாடலையுரைத்தனமினிமன்று
ணிருத்தராயவர்மாறிநின்றாடியதில்லெசிறிதுரைசெய்வாம்.

(இ-ள்.) திருத்தர் ஆய் மதுராபுரி மேவிய சித்தர் ஆகிய செல்வர் - களங்கமில்லாதவராய் மதுரையிலெழுந்தருளிய சித்தமூர்த்திகளாய்வந்த அருட்செல்வத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், விருத்தர் ஆய் இளையவரும் ஆய் மழவும்

ஆய் வேடம் கொண்டு - விருத்தருமாகிக் காளையுமாகிப் பாலருமாகி யிவ்வாறு திருவேடக்கொண்டு, அடல் ஏற்றின் ஒருத்தர் ஆய் விளையாடிய ஆடலை உரைத்தனம் - வெற்றியையுடைய விடபவூர்தியின்மே லொருவராய் விளையாடியருளிய திருவிளையாடலைக்கூறினும், மன்றுள் நிருத்தராயவர் - பதஞ்சலி வியாக்கிரபாதர்பொருட்டு வெள்ளியம்பலத்தின் நடனமூர்த்தியாய் நின்ற பெருமானார், மாறி நின்று ஆடிய நிலை - கான்மாறிநின்று ஆடியருளியதிருவிளையாடலை, இனி சிறிது உரைசெய்வாம் - இனிச்சிறிதெடுத்துக் கூறுவாம்.

விருத்தர்முதலிய மூவருந்தொண்டவர் ஒருவராய் நின்றார் என்பார் அடலேற்றினொருத்தராயென்றார், விருத்தராயிளையவருமாய் மழவுமாயென்றது பொருண்முரணணி. (௧)

வேந்தன்மீனவன்கொடியவனாகியவிக்கிரமன்றன்றோ
ளேந்துமன்பொறையிராசசேகரன்புயத்திறக்கியைந்தருநாடன்
பூந்தண்மாமலர்வேதியன்மாதவன்புரத்தின்மேற்பொலிந்தோங்குஞ்
சாந்தநீறெனச்சண்ணித்தபுண்ணியத்தனிமுதனகர்சார்ந்தான்

(இ-ள்.) வேந்தன் மீனம் வன் கொடியவன் ஆகிய விக்கிரமன் - அரசனும் வலிய கயலெழுதிய கொடியையுடையவனுமாகிய விக்கிரமபாண்டியன், தன் தோள் ஏந்து மண் பொறை இராசசேகரன் புயத்து இறக்கி - தனதுபுயத்தி லேந்திய பூபாரத்தை யிராசசேகரபாண்டியனுடைய் புயத்திலேற்றி, ஐந்தரு நாடன் - பஞ்சதருக்களையுடைய வானுலகையுடைய இந்திரனும், பூந் தண் மா மலர் வேதியன் - பொலிவையுடைய தண்ணிய பெருமையையுடைய தாமரைமலரில் வசிக்கும் பிரமனும், மாதவன் - இலக்குமிநாயகனாகிய திருமாலும், (ஆகியவிவர்களுடைய) புரத்தின்மேல் பொலிந்து ஓங்கும் - நகரங்களின்மேல் மகுடம்போலப் பொலிந்துவிளங்கும், நீறு சாந்தம் என சண்ணித்த புண்ணியத் தனி முதல் நகர் சார்ந்தான் - திருநீற்றைச் சந்தனமாகப் பூசியருளிய புண்ணியவடிவாயுள்ள வொப்பில்லாத சிவபெருமானுடைய சிவலோகத்தை யடைந்தான்.

சிவலோகம் பூலோகமுதல் திருமாலுலக மிறுதியாகிய வுலகங்களுக்குமேலிருத்தலால் புரத்தின்மேற்பொலிந்தோங்கும் தனிமுதனகர் என்றார். இதனைப்புவலோகங்கடந்து என முன்னர்வந்த செய்யுளிற்காண்க. ஓங்கும் என்னும் பெயரெச்சம் நகர் என்பதனோடு முடிந்தது. (௨)

கண்ணகன்புவிராசசேகரன்பொதுக்கடிந்துசெங்கோலோச்சி
வண்ணவெண்குடைநிழற்றுவானுணர்ந்தவடிவமாய்த்தனிமன்று
ளண்ணலாடியதிருநடத்தன்பினாலாடலொழித்தேனை
யெண்ணிமூவிருபத்துமூக்கலையுங்கற்றிறைமுறைசெயுநாளில்.

(இ-ள்.) இராசசேகரன் - இராசசேகரபாண்டியன், கண் அகன் புவி - இடம்பரந்த நிலவுலகை, பொது கடிந்து - தனக்கே யுரித்தாக்கி, செங்கோல் ஓச்சி வண்ணம் வெண் குடை நிழற்றுவான் - செங்கோல் செலுத்தி நிறம்வாய்ந்த வெண்குடையா லன்மாக்களுக்கு நிழலைச்செய்கின்றவன், உணர்ந்த வடிவம் ஆய் தனி மன்றுள் அண்ணல் ஆடிய திருநடத்து அன்பினால் - பேரின்பவடிவாய் ஒப்பில்லாத வெள்ளியம்பலத்தின் சோமசுந்தரக்கடவுளாடியருளிய திருநடனத்தினிடையுள்ள அன்

பிறுவல், ஆடல் நூல் ஒழித்து வகை என்று மூவிருபத்து முக்கலையும் கற்று - பரத நூலொன்றுமட்டு மொழித்து அஃதொழிந்த வறுபத்துமூன்று கலைகளையுங் கற்று, இறை முறை செயும் நாளில் - அரசியலை மனுநூன்முறைப்படி செய்யுங்காலத்தில்.

கண்ணகன் - ஒருபொருட்கிளவி. இறைநடுநிற்றல், அது அரசியல்மேனின்றது "இறைதிரியானேரோக்கல்வேண்டும்" என்பதனானுணர்க. ஆனந்தவடிவமாய் என்றமையால் திருநடம் என்றது ஆனந்தநடனம் எனக்கொள்க. (௫)

சிலம்பிவாயினூலிழைத்திடுபந்தரிற்செங்கண்மாறொழவைகு
மலம்புதெண்டிரைப்பொன்னியந்தண்டுறையானைக்காவிறைக்கன்பு
கலந்தசிந்தையான்மூவிருபத்துநாற்கலைகளும்பயின்றுள்ள
மலர்ந்தவன்கரிகாற்பெருவளத்தவன்வையகம்புரக்கின்றான்.

(இ-ள்.) சிலம்பி வாயில் நூல் இழைத்திடு பந்தரில் - சிலம்பிப்பூச்சியானது தனது வாயால் நூலாற்செய்த பந்தலின்கீழ், செங்கண் மால் தொழ வைகும் - (தாமரைமலர்போலுஞ்) செவந்தகண்களையுடைய திருமால்வணங்க வெழுந்தருளிய, அலம்பு தெண் திரை பொன்னி அம் தண் துறை யானைக்கா இறைக்கு - ஒலிக்குந் தெள்ளியஅலைகளையுடைய காவிரியினது அழகிய தண்ணியதுறையையுடைய திருவானைக்காவிலெழுந்தருளிய சிவபெருமானுக்கு, அன்பு கலந்த சிந்தையான் - அன்புமிக்க மனமுடையவனும், மூவிரு பத்து நாற்கலைகளும் பயின்று உள்ளம் மலர்ந்தவன் - அறுபத்துநான்குகலைகளையுங்கற்று மனந்தெளிந்தவனுமாகிய, கரி கால் பெருவளத்தவன் வையகம் புரக்கின்றான் - கரிகாற்பெருவளவனென்னும் ஒருசோழன் (அந்நாளில்) நிலவுலகத்தைப் பாதுகாத்துவருகின்றவனாயினான்.

திருவானைக்காவின் வடமேற்றிசையிலுள்ள சுவேதமலையினின்று ஒரு சுவேதயானை இரையின்பொருட்டுப் பலவிடங்களிலுஞ்சென்று அந்த ஞானபூமியில்வந்தடுக்க மெய்யறிவுதோன்றி யினாயாராய் தலைவிட்டு, வெண்ணாவலின்கீழ் எழுந்தருளிய சிவலிங்கப்பெருமானைக்கண்டு மெய்யன்பு வாய்ந்து பணிந்தெழுந்து இனி நாமுத்தி யடைதற்பொருட்டு இப்பெருமானைப் பூசிக்கவேண்டுமென்றுங் கருத்தெழுந்து அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி மலர்கொய்து கிடைத்த காய்கனிகளைக் கொண்டுவந்து சிவபெருமான் சந்நிதியிலுள்ள உலர்ந்துவீழ்ந்த சருகுமுதலியவற்றை யொதுக்கிப் பூசித்துவருங்காலையில், அங்கொருமரத்திருந்த சிலம்பி நல்வினைவந்தடுத்தலால் அம்மரத்தைவிட்டு வெண்ணாவலில்வந்து தனக்கொரு வீடிழைத்து மேலுங்கீழும் இறங்கும்போது அங்கெழுந்தருளிய அப்பெருமானைக் காண்டலும் மெய்யன்பு தலைசிறப்பப்பணிந்து நமதுபெருமானைச் சிறிதும் பிரியேனெனக்கருத்தெழுந்து திருக்கோயிலும் திருமண்டபமும் திருப்பிரகாரமும் தனதுநூலாலிழைத்தது என்பதைத் திருவானைக்காப்புராணம் கோசாரணியப்படலத்திலும், கரிகாற்பெருவளவன் உறையூரிலிருந்தரசுபுரிந்த சோழன். அவன் இளம்பருவத்தில் ஒருமுனிவரால் காக்கப்பட்டு வருங்கால், மண்மாரியாலழிந்த உறையூர் திருத்தப்பட்டு அரசின்மையால் மந்திரி முதலாயினோர் ஆலோசித்து ஒரு யானையை விடுக்க, அது அந்த முனிவரிருக்குமிடஞ்சென்று விளையாடிய அவ்வரசிளங்குமரனையெடுக்க வன்மையின்றித் திகைத்து நிற்றலை அக்குமரனோடு விளையாடிய முனிவர்சிறுர்கள் சென்று சோழன் பெருமாட்டியாரிடத்துக்கூற, அப்பெருமாட்டி மனங்கலங்கித் தன்னைக்காத்த முனிவர்பாற்சென்று, எந்தையே உமது திருவருளால் யான் காவிரியாலொதுக்கப்பட்ட அந்நாள் முதல் இந்நாள்காறும் ஓரிடையூறு சிறிதுமின்றி யிருந்தேன், இன்றும்மாற்

Koviloor Digital Library

பாதுகாக்கப்பட்ட என்னருமைப்புதல்வனுக்குப் பெருந்துன்பம்வந்ததென நிகழுஞ் செய்தியைக்கூறலும், அம்முனிவர் கேட்டு அன்னாய் நின் புதல்வனுக்குப் பெருவாழ்வுவந்தது அஞ்சற்க அம்மகவின் காலிற் கரிக்கோடிடுகவென விடுக்க, அவ்வாறே யிடவிருந்தினமையால் அந்த யானை யெடுத்துச் சிங்காதனத்தில் வைத்தது. அக் காரணம்பற்றிக் கரிகால்வளவன் எனக் காரணப்பெயராய் நின்றது. இதனைச் செவ்வந்திபுராணத்திற் காண்க. வளவன் என்னும் பதம் வளத்தவன் எனவந்தது. வளமையையுடையானென்னும் பொருளின்மேற்று. செழுமையையுடைமையாற் செழியன் எனப் பாண்டியனுக்குக்காரணப்பெயர்போந்ததும்வருமிடங்களிற்காண்க. ௪

பொன்னிநாடவன்வாயிலுள்ளானொருபுலவன்வந்தலர்வேம்பின்
கன்னிநாடனைக்கண்டுமுன்பரவுவான்கனைகழற்கரிகாலெம்
மன்னவற்கறுபத்துநாற்கலைகளும்வரும்வராதுனக்கொன்று
தென்னரேறனையாயதுபரதநூறெரிந்திலையெனச்சொன்னான்.

(இ-ள்.) பொன்னி நாடவன் வாயில் உள்ளான் ஒரு புலவன் வந்து - சோழநாட்டரசனாகிய அக்கரிகாற்பெருவளவனுடைய வாயிலிலுள்ள வொரு கவிஞன் பாண்டிநாடுவந்து, அலர் வேம்பின் கன்னிநாடனை கண்டு முன் பரவுவான்-வேப்பமலர்மாலையையணிந்த பாண்டிநாட்டனாகிய இராஜசேகரபாண்டியனைப்பார்த்து முன்னேநின்று புகழ்கின்றவன், கனை கழல் கரி கால் எம் மன்னவற்கு அறு பத்து நாற் கலைகளும் வரும் - ஒலிக்கும் வீரகண்டையையுடைய எமது கரிகாற்பெருவளவனுக்கு அறுபத்துநான்கு கலைகளும் கைவரும்; தென்னர் ஏறு அனையாய் உனக்கு ஒன்று வராதது - பாண்டியருள் ஆண்சிங்கம் போன்றவனே உனக்கு அக்கலைகளுள் ஒன்று கைவராதது, அது பரத நூல் - (அக்கலை வேறுவொன்றில்லை) பரதநூல், தெரிந்திலை என சொன்னான் - (அதனைக்) கற்றுணர்ந்திலை யென்று கூறினான்.

பொன்னி - பொன்னையுடையது என்னும் பொருளின்மேற்று. (௫)

கேட்டமீனவன்மறுபுலவிஞ்சையன்கிளத்தசொல்லிகன்மான
முட்டவாகுலமூழ்கியமனத்தனாய்முதுமறைச்சிரமன்று
ணாட்டமூன்றுடைநாயகனாடலைநானுமாடுதற்குள்ளம்
வேட்டதேகொலாமிதுவுமெம்பிரானருள்விதியெனவதுகற்பான்.

(இ-ள்.) கேட்ட மீனவன் - அதனைக்கேட்ட பாண்டியன், மறு புலம் விஞ்சையன் கிளத்த சொல் - மறுநாட்டிலுள்ள கவிஞன் சொல்லியவார்த்தை, இகல் மானம் முட்ட-பகைமையையும் மானத்தையும் மூள்விக்க, ஆகுலம் மூழ்கிய மனத்தன் ஆய்-துன்பத்திலழுந்திய மனத்தையுடையவனாகி, முது மறை சிரம் மன்றுள் நாட்ட மூன்று உடை நாயகன் ஆடலை நானும் ஆடுதற்கு உள்ளம் வேட்டதே கொலாம் - தொன்றுதொட்டுள்ள வேதசிரசாகிய பிரபல சுருதியின் வடிவாயுள்ள வெள்ளியம்பலத்தில் மூன்றுகண்களையுடைய சிவபெருமான் திருநடனத்தை நானுமாடுதற்கு எனது மனம்விரும்பியதேயாம், இதுவும் எம்பிரான் அருள் விதி என - இவ்வாறுதோன்றிய வெண்ணமும் எமது பெருமானுடைய திருவருளின் விதிப்பே என்று, அதுகற்பான் - அந்நூலைக் கற்கும் பாண்டியன்.

சோழர்கள் தமக்குப் பகைவராயுள்ளாராதலால் அச்சோழன் வாயில் வித்துவான் அவனைப்புகழ்ந்து பேசியவார்த்தை தனக்குத் துன்பத்தைவிளைக்கும் ஆதலால் மறுபுலவிஞ்சையன்கிளத்தசொல்லிகன்மானம் முட்டவாகுலமூழ்கிய மனத்தனா

Koviloor Digital Library

ய் எனவும், அந்நூல்கற்க மனமில்லானுயினும் யாவும் சிவபெருமான் றிருவருள்வசத்தன என்றுணர்ந்தவனுதலால் எம்பிரானருள் விதியெனவுங்கூறினுன். (சு)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஆட்ணூல்வரம்புகண்டவராகியவ்வழியாடலும்பயின்ற
நாடகநடைதேர்புலவரைத்துருவிநண்ணியவவர்க்கெலாமகிழ்ச்சி
விடருஞ்சிறப்பாலறுவையும்பூணும் வெறுக்கையும்வெறுத்திடக்கொடுத்
துப், பாடல்வண்டரற்றுந்தாரினுன்பரதப்பனுவலுங்கசடறப்பயில்வான்.

(இ-ள்.) ஆடல் நூல் வரம்பு கண்டவர் ஆகி - பரதநூலின் எல்லையைக்கண்டவர்களாகி, அவ்வழி ஆடலும்பயின்ற நாடகநடைதேர் புலவரை துருவி - அந்நூலின்வழியே யாடலையுங்கற்றுவல்ல நாடகநடையின்றேர்ச்சியையுடைய அறிஞரைத்தேடி, நண்ணிய அவர்க்கு எல்லாம் மகிழ்ச்சிவிடு அரும் சிறப்பால் - வந்தவர்களுக்கு எல்லாம்மகிழ்ச்சியொழியாதவரிசையால், அறுவையும் பூணும் வெறுக்கையும் வெறுத்திடகொடுத்து - ஆடையும் ஆபரணமும் பொன்னும் அவர்களாசை மிதப்பக்கொடுத்து, பாடல் வண்டு அரற்றும் தாரினுன் - பாடலையுடைய வண்டுகளொலிக்கும்மாலையையுடைய இராசசேகரபாண்டியன், பரதப்பனுவலும் கசடு அற பயில்வான் - பரதநூலையுங் குற்றமறக்கற்பானுயினுன்.

ஆடல்நூலைக்கற்றல்மாத்திரம் அமையாதென்பார் ஆடலும் பயின்றவெனவும், அவர்கள் கரவாது பயிற்றுவிக்கக்கருதினுன் என்பார் வெறுத்திடக்கொடுத்து எனவுங்கூறினுர். (எ)

பாவமோடராகந்தாளமிம்மூன்றும்பகர்ந்திடுமுறையினுற்பரத
மாவயினங்கமுபாங்கமேபிரத்தியாங்கமேயலர்முகராக
மோவறுசீர்சால்கரப்பிரசாரமுவமையில்சிரக்கரகருமந்
தாவறுகரகேத்திரங்கரகரணந்தானகமேசுத்தசாரி.

(இ-ள்.) பாவமோடு - பாவகத்தோடு, அராகம் தாளம் இம் மூன்றும் - அராகமும் தாளமுமாகிய விந்தமூன்றையும், பரதம் முறையினுல் பகர்ந்திடும்-பரதநூலானது முறைப்படி கூருநிற்கும், ஆவயின் - அந்நூலினிடத்து, அங்கம் உபாங்கம் பிரத்தியாங்கம் - அங்கமும் உபாங்கமும் பிரத்தியாங்கமும், அலர் முகராகம் - தன்மைமிக்க முகராகமும், ஓவு அறு சீர் சால் கரப் பிரசாரம் - ஒழிதலில்லாத சிறப்பமைந்த கரப்பிரசாரமும், உவமை இல் சிரக்கர கருமம் - ஒப்பில்லாத சிரக்கரகருமமும், தாவு அறு கரகேத்திரம் கரகரணம் - கெடுதலில்லாத கரகேத்திரமும் கரகரணமும், தானகம் சுத்த சாரி - தானகமும் சுத்தசாரியும்.

பரதநூல் தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என மூவகைகூறும், அவற்றுள் தாண்டவமும் நிருத்தமும் அகக்கூத்து எனவும், நாட்டியம் புறக்கூத்து எனவும் கூறப்படும், ஆயினும் ஒவ்வொன்றுட் கூறப்படும் அங்கமும் உபாங்கமும் பிரத்தியாங்கமும் ஏனையவற்றுள் விரவியும் வரும். பரதம் என நூற்குப் பெயர் வந்தது பாவம், அராகம், தாளம் என இம்மூன்றையுமுணர்த்துங்காரணத்தால். பாவம் என்பது சத்துவம் பத்துளடங்கும். அது வெகுண்டோனவிநயமுதலாக இருபத்தொன்குவகைத்து. அவையாவன வெகுண்டோனவிநயம், ஐயமுற்ருேனவிநயம், சோம்பினுன், களித்தோன், உவந்தோன், அழுக்காறுடையோன், இன்பமுற்ருேன், தெய்வமுற்ருேன், அஞ்ஞையுற்ருேன், உடன்பட்டோன், உறங்கினேன், துயிலுணர்

க்தோன், செத்தோன், வருத்தமுற்றோன், கண்ணோவுற்றோன், தலைநோயுற்றோன், அழுத்திறப்பட்டோன், தெமுற்றோன், மழைபெய்யப்பட்டோன், பனித்தலைப்பட்டோன், வெயிற்றலைப்பட்டோன், நாணமுற்றோன், நஞ்சுண்டோன், வெப்பினன். "வெகுண்டோனவிநயம்விளம்புங்காலை - மடித்தவாயுமலர்ந்தமார்புந் - துடித்தபுருவமுங்கட்டியபிறவும் - கன்றினவுள்ளமொடுகைபுடைத்திடுதலும் - அன்னநோக்கமொடயர்த்தனர்கொளலே" என முதலியவாக வருஞ் சூத்திரங்களால் இருபத்துநான்கையுமுணர்க. சத்துவம் பத்தாவன மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், நடுக்கமெடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விளித்தல், வெம்பல், சாக்காடு, குரற்சிதைவு. பாவகம், அவிநயம், அரகம், பைரவிமுதல் குறிஞ்சியீறாகவுள்ள முப்பத்திரண்டென வரையறைப்படிலும் இவ்வரையறையுளடங்காத நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை யென்னும் எட்டுத் தானங்களினின்று, எடுத்தல், படுத்தல், நலிதல், கும்பித்தல், குடிலம், ஒலி, உருடு, தாக்கு என்னும் எட்டுக்கிரியைகளால் பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு வகைப்படும். இவையெல்லாங் காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தியுடங்கும்- அவற்றுள் காட்டாளத்தி யச்சுடனிகழும், நிறவாளத்தி நிறங் குலையாமற்பாவனையுடனிகழும், பண்ணாளத்தி பண்ணையே கருதி வைக்கப்படும். ஆளத்தி ஆவது "குன்றுக்குறிலொற்றுங்கோடாநெடிலொற்றும் - நின்றுர்தமனவமெய்யொடு - நன்றாக, நீத்தாவெழுந்தாளத்தானின்றியக்க - ஆளத்தியாமென்றறி." என்பதனு லறிக. தாளம்-பாணியெனினுந் தாளம் எனினும் தம்முளொக்கும் "கொட்டுமசையுந்தூக்குமாவும் - ஒட்டப்புணர்ப்பதுபாணியாகும்" என்பதனாலறிக. கொட்டு அரைமாத்திரை அதற்கு வடிவு (எ) அசை ஒருமாத்திரை அதற்குவடிவு (ஒ) தூக்கு இரண்டுமாத்திரை அதற்கு வடிவு (உ) அளவு மூன்றுமாத்திரை அதற்கு வடிவு (ஃ) "ககரங்கொட்டோரைமசையே - உகரந்தூக்கேளவேயாய்தம்" என்பதனாலறிக. கொட்டாவது - அமுக்குதல், அசையாவது - தாக்கியெழுதல், தூக்காவது - தாக்கித்தூக்குதல், அளவாவது தாக்கினவோசை நேரே மூன்றுமாத்திரை பெறுமளவும் வருதல். அரைமாத்திரையுடைய வேகதாளமுதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதிலோசனமீறாகக்கூறும் நாற்பத்தொருதாளங்களும் புறக்கூத்திற்குரியன. ஆறன்மட்டம் என்பனவும், எட்டன்மட்டம் என்பனவும், தாளவோரியலென்பனவும், அதனிலையோரியலென்பனவும், ஒன்றன்பாணி முதலாக வெண்கூப்பாணி யீறாகக்கிடந்த பதினொருபாணி விகற்பங்களும் இவைமுதல் கடைவார முதலாயின அகக்கூத்திற்குரியன. இத்தாளங்களின்வழி வருவன தூக்குகள் அவை செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுதூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு என எழுவகைப்படும் "ஒருசீர்செந்தூக்கிருசீர்மதலை, முச்சீர்துணிபுநாற்சீர்கோயில்-ஐஞ்சீர்நிவப்பறுசீர்கழாலே - எழுசீர்நெடுந்தூக்கென்மனார்புலவர்" என்பதனால்உணர்க. அங்கம், நேரங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் எனப்படும். அவற்றுள் நேரங்கம் தேந்தக்கு வாசிப்பது, நிருத்தாங்கம் நிருத்தத்துக்கு வாசிப்பது, உபயாங்கம் இரண்டிற்கும் வாசிப்பது. தனித்தனி யொவ்வொன்றிற்கும் எழுதப்புகில் விரியும் ஆதலால் வேண்டும் இடங்களில்மட்டும் எடுத்துக்காட்டுதுமென்றும். (அ)

பிண்டிபாத்தேசிசாரியெனியாயம்விருத்தியெபிரவிசாரம்பூ
மண்டலமூடனுகாசமண்டலமேமாபில்சுத்தக்கரணஞ்சீர்
கண்டவுற்புவிதகாணமெயங்ககாரமெயிரேசிதமென்னக்
கொண்டவாலித்தபேதமுங்கற்றுக்கோதறப்பயின்றபினவற்றுள்.

Koviloor Digital Library

(இ-ள்.) வீண்டிடாத தேசிசாரியே - நீங்காத தேசிசாரியும், நியாயம் விருத்தி பிரவிசாரம் - நியாயமும் விருத்தியும் பிரவிசாரமும், பூ மண்டலம் உடன் ஆகாச மண்டலம் - பூமண்டலத்தோடு ஆகாசமண்டலமும், மாசு இல் சுத்தக் கரணம்-குற்றமில்லாத சுத்தக்கரணமும், சீர் கண்ட உற்புலித கரணம் - சிறப்பமைந்த வுற்புலிதகரணமும், அங்ககாரம் இரேசிதம் என்ன - அங்ககாரமும் இரேசிதமும் என்று, கொண்ட நால் ஐந்து பேதமும் கற்று - கூறுநின்ற இருபதுபேதங்களாகிய பொது விலக்கணங்களையுங் கற்று, சோது அற பயின்ற பின் - குற்றமறத் தெரிந்தபின்பு, அவற்றுள் - அவைகளுள். (௯)

வருத்தமின்மனோபாவாதியாமெட்டுவகைநிருத்தங்களிற்சாரி
நிருத்தமாகியதாண்டவமகமார்க்கநிகழ்த்திடுந்தேசியேவடுகே
யருத்தமாகியசிங்களமெனமூன்றுமதுநிலையாறுமூவிரண்டு
திருத்தமாம்பதமுந்திகழிரேகாதிசெப்பியவங்கமீரெட்டும்.

(இ-ள்.) வருத்தம் இல் மனோபாவ ஆதியாம் எட்டு வகை நிருத்தங்களில்-(சிறப்பிலக்கணங்களாகிய) வருத்தமில்லாத மனோபாவமுதலாகிய வெட்டுவகைநடனங்களில், சாரி நிருத்தமாகிய தாண்டவம் அகமார்க்கம் - சாரிநடனமாகியதாண்டவமானது அகமார்க்கமாம், நிகழ்த்திடும் தேசியே வடுகே அருத்தம் ஆகிய சிங்களம் என மூன்றும் - சொல்லாநின்ற தேசிக்கூத்தெனவும் வடுகுக்கூத்தெனவும் பொருளமைந்த சிங்களக்கூத்தெனவும் மூன்றுவகைப்படும், அது நிலை ஆறு மூவிரண்டு-அதன் பேதங்கள் பன்னிரண்டுவகையாம், திருந்தமாம் பதமும் - திருத்தமாகியபதங்களும், திகழ் இரேகை ஆதி செப்பிய அங்கம் ஈர் எட்டும் - விளங்காநின்ற இரேகை முதலாகக் கூறுநின்ற பதினாறு அங்கங்களும்.

தாண்டவம், நிருத்தம் அகக்கூத்து என முன்னர்க்கூறியிருக்கின்றும், அகமார்க்கம் என்பதும் அது. இந்த அகக்கூத்து அல்லியமுதல் கொடுகொட்டியீறாகப் பதினொருவகைப்படும் அல்லியம், கடையம், பேடு, மரக்கால், குடை, குடம், துடி, மல்லாடல், பாவை, பாண்டரங்கம், கொடுகொட்டி. கஞ்சனனுப்பிய யானையின் கொம்பைமுறித்தற்குக் கண்ணமூர்த்தியாடிய ஆட்டம் அல்லியம். இந்திராணி வாணனகரின் வடக்குவாயிலினின்று ஆடிய ஆட்டம் கடையம். தன்மகனை வாணன் சிறையிட்டதை மீட்கக் காமன் பெண்கோலத்தோடு ஆடியகூத்து பேடு. அசுரர்கள் போர்செய்ய ஆற்றாது வஞ்சத்தால் வெல்லக்கருதிப் பாம்பு தேள் முதலியனவாகவர, அவற்றைத் துற்கையுணர்ந்து மரக்கால்கொண்டு ஆடியஆட்டம் மரக்கால். முருகக்கடவுள் அசுரர் புறங்காட்டியோடத் தன் குடையைச் சாய்த்து ஆடிய ஆட்டம் குடை. காமன்மகனாகிய அநிருத்தனைத் தன்மகள்நிமித்தமாக வாணன் சிறையிட்டபோது திருமால் குடத்தின்மேலாடிய ஆட்டம் குடம். சூரன் வேற்றுருவாகிக் கடலில் நின்றகாலையில் அவ்வஞ்சனையைக்கடத்தற்கு அக்கடலின் அலையில் நின்று துடிகொட்டி ஆடிய ஆட்டம் துடி. வாணாசுரனை வெல்லுதற்குத் திருமால் மல்லனாய்ச்சென் றறைகூவியெதிர்த் தவனுடலைநெரித்துத் தொலைக்க ஆடிய ஆட்டம் மல்லாடல், அசுரர்கள் போர்க்கோலத்தை யொழித்து மோகிக்க இலக்குமி மோகினிவடிவங்கொண்டாடிய ஆட்டம் பாவை. திரிபுரதகனத்திற்குச் செல்லுங்காலையில் நேர்நடத்திய பிரமன், கலைமகள் பிரிவாற்றாது வருந்துதலைநோக்கி இறைவன் வெண்ணீறணிந்து அவன்முன்னின்றாடிய ஆட்டம் பாண்டரங்கம். திரிபுரதகனஞ்செய்த ஞான்று உமையவள் தாளஞ்செலுத்த இறைவன் கைகொட்டி யாடிய ஆட்டம் கொடுகொட்டி. அல்லியம் ஆறங்கமுடையது, கடையம் ஆறங்கமுடையது, பேடு நான்கங்கமு

Koviloor Digital Library

டையது, மரக்கால் நான்கடிப்புமுடையது, குடை நான்கங்குமுடையது, குடம் ஐந்தங்குமுடையது, கடி ஐந்தங்குமுடையது, மல்லாடல் ஐந்தடிப்புமுடையது, பாவை இரண்டங்குமுடையது, பாண்டரங்கம் ஆறங்குமுடையது, கொடுகொட்டி நான்கங்குமுடையது. இவைகளை விரிப்பிற் பெருகும். புறக்கூத்து புறமார்க்க மெனப்படும். அது பெருநடை, பிரமரி முதலியவாகப் பலவகைப்படும். இருவகைக்கூத்துள் சாந்திக்கூத்தில் தேசி, வடுகு, சிங்களம் என்று மூன்றுகூத்துமடங்கும், இருவகைக்கூத்துக்களாவன சாந்திக்கூத்து விநோதக்கூத்து "அவைதாம்சாந்திக்கூத்தும் விநோதக்கூத்துமென் - றாய்ந்துறவகுத்தனனகத்தியன்முனே" என்றுஞ் சூத்திரத்தாலுணர்க. அவற்றுள் சாந்திக்கூத்து சொக்கம், மெய், அவிநயம், நாடகம் என நான்குவகைப்படும் "சாந்திக்கூத்தேதலைவனவிநயம் - ஏந்திநின்றுடியவீரிருநடமவை - சொக்கமெய்யேயவிநயநாடகம் - என்றிப்பாற்படுமென்மனார்புலவர்" என்பதனாலுணர்க. அவற்றுள் சொக்கம் என்பது சுத்தநிருத்தம் அது நூற்றெட்டுக்கரணமுடையது. தேசி, வடுகு, சிங்களம் இம்மூன்றும் மெய்த்தொழிற்கூத்துகளாதலால் மெய்த்தொழிற்கூத்து. இவை அகச்சுவைபற்றிநிற்றலால் அகமார்க்கம் எனப்படும், அகச்சுவையாவன இராசதம், தாமதம், சாத்துவிதமாம் "குணத்தின்வழியகக் கூத்தெனப்படுமே" எனக் குணநூலுட்கூறப்படும் "அகத்தெழுசுவையாலகமெனப்படுமே" எனச் சயந்தநூலுட்கூறப்படும். அவிநயக்கூத்து நிருத்தக்கைதழுவாது பாட்டினதுபொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக்கூத்து. நாடகம் கைதழுவிவருங்கூத்து. விநோதக்கூத்து "குரவைகலிநடங்குடக்கூத்து - கரணம் நோக்குத்தோற்பாவையென்ப" இவைகளை விரிக்கிற்பெருகும். தேசி, வடுகு, சிங்களம் கூறுகின்றாம். தேசியாவது நேத்தத்துக்கு அடிசாரிமுதலாகக் காற்சுற்றுதல் எறிதல் முதலியன. வடுகுகால்களும் உடற்றாக்குமுதலிய வுடல்வர்த்தனையுமுடையது. சிங்களம் இவ்விரண்டிலக்கணங்களையுமுடையது. இவற்றை மெய்த்தொழிற்கூத்து என்றது காரணமுங் காற்புரிகையு முடைமையால் அப்பெயர்த்தாயிற்று. கரகாணம்-பதாகை, திரிபதாகை, கத்திரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முஷ்டி, கடகம், பதமகோசம், குசி, காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பசாசம் (மூகவிலைப்பசாசம், அகநிலைப்பசாசம், உபிர்நிலைப்பசாசம் என அடங்கும்.) முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னதம், மண்டிலம், சதுரம், மான்றலை, சக்கு, வண்டு, கபோதம், இலத்ததை, மகரமுகம், வலம்புரி எனவிருப்பத்துமூன்றுவகைப்படும். இவற்றை "பதாகை யென்பது பதருங்கால் - பெருவிரல்குஞ்சித்தல்லாநான்கும் - மருவிநிமிருமரபினவென்ப" முதலிய சூத்திரங்களாலுணர்க. காற்புரிகை காற்சுற்று, காலெதல்முதலியனவாகப் பதினுறுவகைப்படும். இவைகளை விரிக்கிற் பெருகும். (௪௦)

நால்வகைத்தாகுங்கரணமுமேலோர்நாட்டியவிருவகைக்கரமும்
கால்வகைபுரிகைமுதற்பதினாறுங்கவான்மனையாதியாமிரண்டும்
பாலதுமடிப்புவகையெழுநான்கும்பழிப்பறுசுத்தசாரியெறு
மேலறுபூசாரிகள்பதினாறுமித்துணைக்ககனசாரிகளும்.

(இ-ள்.) நால் வகைத்து ஆகும் கரணமும் - நால்வகைப்படுவதாகிய கரணமும், மேலோர் காட்டிய இரு வகை கரமும் - மேலோர் வரையறுத்த இருவகைப்பட்ட கரங்களும், கால் வகை புரிகை முதல் பதினாறும் - கால்களாற்செய்கைமுதலிய பதினாறுவகைகளும், கவான் மனை ஆதியாம் இரண்டு - கவான் மனை முதலாகிய விரண்டும், பாலது மடிப்பு வகை எழுநான்கும் - பகுப்பினையுடைய விருபத்தெட்

Koviloor Digital Library

டு மடிப்புவகைகளும், பழிப்பு அறு சுத்த சாரி எனும் ஏல் உறு பூசாரிகள் பதினாறும் - நிந்தையில்லாத சுத்தசாரியென்றும் மேன்மைமிக்க பூசாரிகள் பதினாறுவகைகளும், இத்துணை ககன சாரிகளும் - இப்பதினாறுவகையினையுடைய ககனசாரிகளும்.
இருவகைக்கரம் எழிற்கை, தொழிற்கை. (கசு)

ஏற்றதிக்கிராந்தமாதியாமுப்பத்திருவகைத்தேசிசாரிகளுங்
காற்றினுங்கடுந்தேர்ச்சக்கரமுதலாங்ககனசாரிகைகளேழைந்துஞ்
சாற்றுவித்துவற்பிராந்தமாதியவாஞ்சாரிபத்தொன்பதுமாகப்
போற்றிவையனைத்துமுட்படப்புட்பபுடத்திலக்கணமுதற்பொருள்கள்.

(இ-ள்.) ஏற்றதிக் கிராந்தம் ஆதியாம் முப்பத்திருவகை தேசிசாரிகளும் - பொருந்திய திக்கிராந்தமுதலிய முப்பத்திரண்டுவகைப்பட்ட தேசிசாரிகளும், காற்றினும் கடுந்தேர் சக்கர முதலாம் ககன சாரிகைகள் ஏழைந்தும் - காற்றினுங் கடிய வேகத்தையுடைய தேர்ச்சக்கரம் முதலிய ககனசாரிகைகள் முப்பத்தஞ்சும், சாற்று வித்து வற்பிராந்தம் ஆதிய ஆம் சாரி பத்தொன்பதும் ஆக - சொல்லாநின்ற வித்து வற்பிராந்த முதலாகிய சாரி பத்தொன்பதுமாக, போற்று இவை அனைத்தும் - முன்னர்க்கூறிய இப்பன்னிரண்டும், உட்பட புட்ப புடத்து இலக்கணம் முதல் பொருள்கள் - தன்றுட்படப் புட்பபுடத்தி னிலக்கணங்களாகிய முதன்மையாயுள்ள பொருள்களாம். (கஎ)

ஆசவாத்தியமுன்பொருண்முதல்களாசமாதியாம்பாடபேதங்கள்
பேசியபதினறொன்பதும்படகபேதமொன்றொழிந்நாலைந்து
மாசறுமளகமாதியாம்பாடவகைகளுலேழுமற்றவற்றிற்
பூசல்வார்த்திகந்தொட்டைவகைச்சச்சபுடாதியாந்தாளமாத்திரையும்.

(இ-ள்.) ஆசவாத்திய முன் பொருள் முதல் களாசம் ஆதியாம் பாடபேதங்கள் - ஆசவாத்தியமும் முன்பொருளும் முதலிய களாசம் முதலாகிய பாடபேதங்களென, பேசிய பதினறு ஒன்பதும் - பரதநூலுட்கூறப்பட்ட விருபத்தைந்தும், படகபேதம் ஒன்று ஒழிந்த நால் ஐந்தும்-படகபேதங்கள் பத்தொன்பதும், மாசு அறும் அளகம் ஆதியாம் பாட வகைகள் நால் ஏழும் - குற்றமற்ற அளகம் முதலாகிய பாடவகைக ளிருபத்தெட்டும், அவற்றில் - அவைகளுள், பூசல் வார்த்திகம் தொட்டு ஐவகை சச்ச புடம் ஆதியாம் தாளம் மாத்திரையும் - பூசல்வார்த்திகந்தொட் டைந்துவகைப்பட்ட சச்சபுட முதலாகிய தாளமாத்திரைகளும். (கஅ)

கிளந்தமாத்திரையின்கதிகளுஞ்சொல்லுங்கீதமும்பாடமுமெழுத்தும்
வளந்தருமணிபந்தாதிகீதத்தின்வகுத்தகட்டளையெழுநான்கு
மளந்திடுசரளியாதிகட்டளையேழைந்துநன்கமைந்தபாவாதி
விளம்பியமூன்றுகலப்புமீருகவிளைத்திடுங்கூத்தகமார்க்கம்.

(இ-ள்.) கிளந்த மாத்திரையின் கதிகளும் - சொல்லப்பட்ட மாத்திரையின் கதிகளும், சொல்லும் கீதமும் பாடமும் எழுத்தும்-சொற்களும் கீதங்களும் பாடங்களும் எழுத்துகளும், வளம் தரு மணி பந்தம் ஆதி கீதத்தின் வகுத்த கட்டளை எழு நான்கும் - வளமிக்க மணிபந்தம் முதலிய கீதத்தின்கண் வகுத்த கட்டளைகளிருபத்தெட்டும், அளந்திடு சரளி யாதி கட்டளை ஏழைந்தும் - அளவறுக்கப்பட்ட சரளிகள் முதலிய கட்டளைகள் முப்பத்தைந்தும், நன்கு அமைந்த பாவாதி விளம்பிய மூன்று கலப்பும் ஈருக - நன்ருக வமைவுபெற்ற பாவமுதலாகக்கூறிய மூன்றுகலப்பு

மிதமியாக, வியந்திடும் கூத்து அசமார்க்கம் - செய்யுங்கூத்து அசமார்க்கமெனப் படும்.

மத்திமை யென்றது தாளமாத்திரைகளை. எழுத்து ஆளத்திக்குக்கூறிய எழுத்துகள். இவை முன்னர்க் கூறியிருக்கின்றும். சொல் உட்சொல், புறச்சொல், ஆகாயச்சொல். அவற்றுள் உட்சொல் நெஞ்சொடு கூறல், புறச்சொல் கேட்போர்க் குரைத்தல், ஆகாயச்சொல் தானே கூறல். "நெஞ்சொடு கூறல் கேட்போர்க்குரைத்தல் - தஞ்சம்வரவறிவு தானேகூறலென் - றம்மூன்றென்ப செம்மைச்சொல்லே" என்பதனால் உணர்க. இது விலக்குறுப்புப் பதினான்கனுளொன்று. கீதம் யாழ், வங்கியம் முதலாகக் கூறப்படும். ஏனையவை வருமிடங்களிற் காண்க. (௪௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உரைத்தவிக்கூத்துக்கற்கும்போதுதன்னுடம்பிற்சால
வருத்தநோயெய்தியிந்தவருத்தநான்மறையுந்தேறு
வருத்தமாயறிவாய்வெள்ளியம்பலத்தாடிநின்ற
திருத்தனார்தமக்குமுண்டேயென்பதுநினைவிற்கொண்டான்.

(இ-ள்.) உரைத்த இக்கூத்து கற்கும்போது - இங்குக்கூறிய இந்த அசமார்க்கக்கூத்தினைக் கற்குங்காலையில், தன் உடம்பில் சால வருத்தம் நோய் எய்தி-தன்னுடம்பில் மிகவும் வருத்தங்கூர்ந்து, இந்த வருத்தம் - இந்த ஆடல்நோய் வருத்தம், நான்மறையும் தேறா அருத்தம் ஆய் - நான்கு வேதங்களுந் தெளிதற்கரிய பொருளாய், அறிவு ஆய் வெள்ளியம்பலத்து ஆடிநின்ற திருத்தனார் தமக்கும் உண்டே என்பது - ஞானவடிவாய் வெள்ளியம்பலத்தாடி நின்றருளிய திருக்கூத்தினர்க்கு முளதே என்பதை, நினைவில் கொண்டான் - எண்ணங் கூர்ந்தான்.

சத்தத்தையுணர்ந்த வழிப்பொருள் வேறாய் நிற்றலால் விந்துசத்தியின்காரியமாகிய சொற்பிரபஞ்சத்தா லளத்தற்கரியவன் என்பார் நான்மறையுந் தேறா அருத்தமாய் எனவும், அவ்வாறு நின்ற தன்னைத் தன்னருளாலுணர்ந்தோர் உணர்வாய் நின்றுன் என்பார் அறிவாய் எனவும் கூறினர். (௪௫)

கரியதாமரைக்கண்ணானுங்கமலநான்முகனுங்காண்டற்
கரியதாளொன்றேநோவவாற்றநாணிற்பதந்தோ
வுரியதாமிதனைக்கற்றுவருத்தமுற்றோர்ந்துமீது
தெரியநானிருப்பதேயோவறனெனச்சிந்தைநோவான்.

(இ-ள்.) கரிய தாமரை கண்ணானும் - கருநிறம் வாய்ந்த தாமரைமலர்போலும் கண்களையுடைய திருமாலும், கமலம் நான்முகனும் - தாமரையில் வசிக்கும் பிரமனும், காண்டற்கு அரிய தாள் ஒன்றே நோவ - காணுதற்கரிய வொரு திருவடியே வருந்த, அந்தோ ஆற்ற நாண் நிற்பது - ஐயோ அநேககாலமாடி நிற்கின்றது, உரியதாம் இதனை கற்று வருத்தம் உற்று ஓர்ந்தும் - (அவ்வருத்தத்தை யறிதற்கு) உரிய இப்பரதநூலைக்கற்று வருத்தமுற்று ஆராய்ந்தும், ஈது தெரிய நானிருப்பதேயோ அறன் என -இது தெரிந்து நான் வாளாவிருப்பதோ தருமமென்று, சிந்தை நோவான் - மனம் வருந்தத் தொடங்கினன்.

பரதநூல்கற்றதஞ் சிவபெருமான் திருவருளேயென்றுங் கருத்தினனாதலால் கற்றதற்றான் வருத்தமுற்றவழி திருவடிநோமே யென்றெழுந்த பேரன்பமும் அவனருளே யென்பார் ஈது தெரிய நானிருப்பதேயோ வறனெனச் சிந்தைநோவான் என்றார். தெரிய தெரிந்து என்றும் வினையெச்சத்திரிபு. (௪௬)

வடுப்படுபிறவிப்பௌவவரம்புகாண்கின்றநாள்வந்
தடுப்பவர்யாவரேனுமவர்க்கெலாம்போகம்வீடு
கொடுப்பவர்செய்யுமிந்தக்கூத்தையெப்படிநாஞ்சென்று
தடுப்பதுதகாதன்றேனும்வருந்துமேசரணமென்னா.

(இ-ள்.) வடுப்படு பிறவி பௌவம் வரம்பு காண்கின்ற நாள் வந்து அடுப்பவர் யாவர் ஏனும் - குற்றம் மிக்க பிறவிக்கடலின் வரம்பினைக் காணுநாள் வரப்பெற்றவர் யாவராயினும், அவர்க்கு எல்லாம் போகம் வீடு கொடுப்பவர் செய்யும் இந்த கூத்தை - அவர்களுக்கெல்லாம் பந்தத்தையும் மோக்ஷத்தையுங் கொடுக்கும் பெருமானார் செய்தருளு மிந்தத் திருக்கூத்தை, எப்படி நாம் சென்று தடுப்பது - எவ்வாறு நாஞ்சென்று தடுக்கக்கூடும், தகாது அன்று ஏனும் - தடுக்கத் தகாதல்லதாயினும், சரணம் வருந்துமே என்னா - திருவடி வருந்துமே என்று கருதி.

அழுக்காலழுக்கை யொழித்தல்போலப் பசுக்கள் பிறவிநோய் ஒழித்தற்குப் பந்தமருந்தாதலாலும், அது தேய்ந்து ஆயனுயவழி வீடாதலாலும் போகம் வீடு கொடுப்பவர் எனவும், அப்பசுக்களுள் நாமொருவனாதலால் அப்பதிசெய்யுந் திருக்கூத்தைத் தடுத்தற்கரிதென்று கருதினனாதலால் தகாதெனவும், ஆயினும் அன்பின் மேலீட்டால் தடுக்கக்கருதினனாதலால் அன்றேனும் வருந்துமே சரணம் எனவுங் கூறினார். அழுக்காலழுக்கை யொழித்தல் என்றது "எழுமுடல்கரணமாதியிவைமலமலமலத்தாற் - கழுவுவனென்றுசொன்ன காரணமென்னையென்னிற் - செழுநவவறுவைசாணி யுவர்செறிவித்தழுக்கை - முழுவதுங்கழிப்பன்மாயை கொடுமலமழிப்பன்முன்னோன்" எனவரும் உண்மைத்திருவாக்காலுணர்க. (௧௭)

இதற்கிதுதுணிவென்றுன்னியெழுந்துபோய்ச்சிவனிராவிற்
கதக்களிற்றொருத்தலேந்துங்கதிர்மணிக்குடுமிக்கோயின்
மதக்கரியுரியினாற்குவரம்பறச்சிறந்தபூசை
விதப்படயாமநான்கும்விதிவழியியற்றல்செய்யா.

(இ-ள்.) இதற்கு இது துணிபு என்று உன்னி எழுந்து போய் - இதற்கிதுநான் துணிபென்று எழுந்துசென்று, சிவன் இராவில் - சிவராத்திரியில், கதம் களிறு ஒருத்தல் எந்தும் கதிர் மணி குடுமிக்கோயில் - கோபத்தையுடைய அஷ்டகசங்கள் தாங்கும் விளக்கமமைந்த இரத்தினமழுத்தியசிகரத்தையுடைய திருக்கோயிலிலெழுந்தருளிய, மதம் கரி உரியினாற்கு - மதஞ்சிந்தும் யானைத்தோற்போர்வையையுடைய சோமசுந்தரக்கடவுளுக்கு, வரம்பு அற சிறந்த பூசை-அளவில்லாமற் சிறந்தபூசையை, விதப்பட யாமம் நான்கும் விதிவழி இயற்றல் செய்யா - முறைப்பட நான்கு சாமங்களிலும் ஆகம விதிவழியே செய்து.

பாண்டியன் கொண்ட கருத்து முற்றுதற்குக் காலம்வாய்ந்ததென்பார் இதற்கிது துணிபென்றுன்னி சிவனிரா சிறந்த பூசை. விதப்பட யாமநான்கும் விதிவழியியற்றல் செய்யா என்றார். (௧௮)

விண்டகமலர்த்தாளேத்திவெள்ளியம்பலத்துளன்பர்
தொண்டகமலரநின்றசோதிமெய்ஞ்ஞானக்கூத்தைக்
கண்டகமகிழ்ந்துதாழ்ந்துகட்புனல்சோரச்செங்கை
முண்டகமுடிமேலேற்றிமுகிழ்த்துநின்றிதனைவேண்டும்.

Koviloor Digital Library

(இ-ள்.) அகம் விண்ட மலர்த்தாள் ஏத்தி - தனது இதயத்தில் மலர்ந்த தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கி, வெள்ளியம்பலத்து உள் அன்பர் தொண்டு அகம் மலர நின்ற சோதி - வெள்ளியம்பலத்தின்கண் அடியாருடைய தொண்டு பூண்ட இதயத்தின்கண் விளங்கநின்ற பேரொளியாகிய பரமபதியினுடைய, மெய்ஞ்ஞானக்கூத்தை - உண்மைஞானமாகிய திருக்கூத்தினை, கண்டு - தரிசித்து, அகம் மகிழ்ந்து தாழ்ந்து - மனமகிழ்ந்து வணங்கி, கண் புனல் சோர - கண்களினின்று ஆனந்தபாஷ்பஞ்சிந்த, செம் கை முண்டக முடிமேல் ஏற்றி முகிழ்த்து நின்று இதனை வேண்டும் - செவந்த கைத்தாமரைகளைத் தனது தலைமேலேற்றிக் குவித்து நின்று இதனை வேண்டாநின்றான்.

மெய்ஞ்ஞானக்கூத்தென்றது முத்தியருளு ஞானநடனத்தை "ஊனநடன மொருபாலொருபாலாம்-ஞானநடந்தானடுவேநாடு" என்ற திருவருட்பயனானுணர்க.

நின்றதாளெடுத்துவீசியெடுத்ததாணிலமீதூன்றி
யின்றுநான்காணமாறியாடியென்வருத்தமெல்லாம்
பொன்றுமாசெய்தியன்றேற்பொன்றுவலென்றுவன்பிற்
குன்றனான்சுரிகைவாண்மேற்குப்புறவிழ்வேனென்னா.

(இ-ள்.) நின்றதாள் எடுத்துவீசி - ஊன்றியதிருவடியை மேலெடுத்துவீசி, எடுத்ததாள் நிலமீது ஊன்றி - எடுத்தருளிய திருவடியை நிலத்தின்மீதூன்றியருளி, இன்று நான் காண - இன்று நான்கண்டு தரிசிக்க, மாறி ஆடி என்வருத்தம் எல்லாம் பொன்றும் ஆறுசெய்தி - கான்மாறி நடித்தருளி யடியேன்கொண்ட வருத்தங்களியாவு மழியும்வண்ணஞ் செய்தருள்வாய், அன்றேல்-செய்தருளாதுவிடில், பொன்றுவல் என்று - இறப்பேனென்று, அன்பில் குன்று அன்னான் - அன்பின்மலையையொத்த இராசசேகரபாண்டியன், சுரிகை வாள்மேல் குப்புற வீழ்வேன் என்னா- உடைவாள்மேற் குப்புறவிழ்ந்து இறப்பேனென்றுகூறி.

தான்கொண்ட உறுவலன்பில் ஊழிபெயரினுஞ் சிறிது நிலைகலங்கானென்பார் அன்பிற்குன்றனான் எனவும், அவ்வன்பால் தான்கொண்டகருத்தை முற்றுவிப்பான் என்பார் அன்றேல் சுரிகைவாண்மேற் குப்புறவிழ்வே னென்னுவென்னவுங் கூறினார். (உ0)

நாட்டினன்குதித்துப்பாயநன்றுமுன்னிடத்தாளூன்றி
நீட்டினன்வலத்தாள்வீசித்திருமலன்மாறியாடிக்
காட்டினன்கன்னிநாடன்கவலையும்பாசமூன்றும்
வீட்டினன்பரமானந்தவேலையுள்வீட்டினானே.

(இ-ள்.) நாட்டினன் குதித்து பாய நன்றுமுன் - உடைவாளைநாட்டி அதன்மேற்பாயச்செல்லுமுன், திருமலன் இடத்தாள் ஊன்றி - சிவபெருமான் எடுத்தருளிய இடக்காலையூன்றியருளி, வலத்தாள் நீட்டினன் வீசி - ஊன்றியருளியவலக்காலை எடுத்துவீசி, மாறி ஆடி காட்டினன் - (இவ்வாறு) கான்மாறியாடிக்காட்டியருளினன், கன்னிநாடன் - பாண்டிநாடன், கவலையும் பாசம் மூன்றும் வீட்டினன்-திருவடியோமே என்றுகொண்ட வருத்தமும் ஆணவமாயை காமியமென்ற மும்மலங்களையுமொழித்து, பரமானந்தவேலையுள் வீட்டினன் - பேரின்பக்கடலுள் தன்னை அழுத்தினன்.

ஊனநடனத்தாற் பாசத்தைவீட்டி ஞானநடனத்தால் பேரின்பத்திலழுந்துவித்தலால் பாசமூன்றும் வீட்டினன் பரமானந்தவேலையுள் வீட்டினனே என்றார்.

Koviloor Digital Library

விளைகள்வாய்விழ்ந்தவண்டின்மெய்யறிவின்பமென்று
மளவிலாமுந்நீர்வெள்ளத்தாழ்ந்தவனெழுந்துபின்று
முளமும்வாசகமுமெய்யுமுடையவனதுவேயாகப்
பளகிலாவன்புதானேபடிவமாய்ப்பழிச்சலுற்றான்.

(இ-ள்.) விளைகள் வாய் விழ்ந்தவண்டின் - இனிமைமிக்க மதுவில்விழுந்த வண்டைப்போல, மெய் அறிவு இன்பம் என்றும் அளவு இல்லாத முந்நீர் வெள்ளத்து ஆழ்ந்தவன் - உண்மையறிவானந்தமென்றுந் தனக்கோர் வரம்பில்லாத மூத்திறப்பட்ட வெள்ளத்திலழுந்திய இராசசேகரபாண்டியன், எழுந்து பின்றும் - (அவ்வெள்ளத்திளின்று) மேலெழுந்துமீளவும், உளமும் வாசகமும் மெய்யும் - மனமும் வாக்கும் காயமும், உடையவ னதுவே ஆக - தன்னையாளாக வுடையவனுடைமைப்பொருளாக, பளகு இல்லாத அன்புதானே - குற்றமில்லாத அன்பே, படிவம் ஆய் பழிச்சல் உற்றான் - தனக்கோருருவாகத்துதிக்கத்தொடங்கினன்.

மதுவில்விழ்ந்தவண்டு தன்வசமிழந்திருத்தல்போலச் சிவபோகத்திலழுந்திய பாண்டியன் தன்வசமிழந்திருந்தானென்பார் விளைகள்வாய்விழ்ந்தவண்டின் வெள்ளத்தாழ்ந்தவன் எனவும், உண்மையறிவானந்தமே திருவுருவாகவமைந்த ஒருபொருள் என்பார் முந்நீர் வெள்ளம் எனவும், இவனது மனவாக்குக்காயங்கள்மூன்றும் அவற்றையருளியபெருமான் திருநடனத்தின் வசத்தவாயினவென்பார் உளமும் வாசகமு மெய்யுமுடையவனதுவேயாகவெனவும், அவற்றைக்கைவிட்டோனுக்கு ஓர் வடிவம் வேண்டுதலால் பளகிலாவன்புதானே படிவமாய் எனவுங்கூறினர். (உ௨)

கலிவிருத்தம்.

பெரியாய்சரணஞ்சிறியாய்சரணங்
கரியாகியவங்கணனேசரண
மரியாயெளியாயடிமாறிநடம்
புரிவாய்சரணம்புனிதாசரணம்.

(இ-ள்.) பெரியாய் சரணம் சிறியாய் சரணம் - மகத்திலும் மகத்தாயுள்ளா யுனக்கு அடைக்கலம் அணுவிலும் அணுவாயுள்ளா யுனக்கடைக்கலம், கரி ஆகிய அங்கணனே சரணம் - சாட்சியாயுள்ள அழகியதிருக்கண்களை யுடையவனேசரணம், அரியாய் எளியாய் - பிரமன்முதலிய தேவர்க்கரியவனே அடியவருக்கெளியவனே, அடிமாறி நடம்புரிவாய் சரணம் - கான்மாறித் திருநடனஞ்செய்கின்றவனேசரணம், புனிதா சரணம் - புனிதனேசரணம்.

பெரியதினும் பெரியதுமாய் எனவந்த செய்யுளுக்குக்கூறியகருத்துகளை யிங்குக்கொள்க. பிரமன்மாற்கரியனாய் நின்றான் தனக்கெளியனாய்க் கான்மாறியாடியருளினமையால் அரியாயெளியாய் என்றான். (உ௩)

நதியாடியசெஞ்சடையாய்நகைவெண்
மதியாய்மதியாதவர்தம்மதியிற்
பதியாய்பதினெண்கணமும்பரவுந்
துதியாய்சரணஞ்சுடரோசரணம்.

(இ-ள்.) நதி ஆடிய செம் சடையாய் - கங்கைவிளையாடுஞ் சிவந்தசடையையுடையவனே, நகைவெண்மதியாய் - விளங்கும்பிறையையுடையவனே, மதி

யாதவர்தம் மதியிற்பதியாய் - தன்னைக்கருதாதவர்கள் எண்ணத்திற் பொருந்தாதவனே, பதினெண்கணமும் பரவும் துதியாய் - பதினெட்டுத்தேவகணங்களும் துதிக்குந்துதியையுடையவனேசரணம், சுடரேசரணம் - பேரொளியாயுள்ளவனேசரணம்.

மகத்தாயுள்ள வெவற்றையும் தன் திருவருளாற்சுருக்கும் வன்மையையுடையாய் என்பான் உலகமுற்றையுமழிக்கப்பரந்த கங்கையைச்சுருக்க அணிதலால் நதியாடிய செஞ்சடையாய் என்வும், அணுவாயுள்ளவற்றையு மகத்தாக்கும் வன்மையையுடையாய் என்பான் கலைகள்யாவுமிழந்து ஓர்கலையோடுகூடிநின்ற சந்திரன் அக்கலைகள்முற்றும் அடைய அணிதலால் கலைவெண்மதியாய் எனவும், சுருக்கவும் பெருக்கவும் வன்மையையுடைய இறைவன் தான் என்பதை யான்மாக்களுணர்ந்துய்ய அதிகுறியாக அவற்றைக்கொண்டருளியும் உணரார்பாலடையாய் என்பான் மதியாதவர்தம் மதியிற்பதியாய் எனவுங்கூறினன். (உ௪)

பழையாய்புதியாய்சரணம்பணிலக்
குழையாய்சரணங்கொடுவெண்மழுவா
ளுழையாய்சரணம்முருகாதவர்பால்
விழையாய்சரணம்விகிர்தாசரணம்.

(இ-ள்.) பழையாய் புதியாய்சரணம் - முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாயுள்ளவனே பின்னைப்புதுமைக்கும் பின்னைப்புதியவனாயுள்ளாய்சரணம், பணிலம் குழையாய் சரணம் - சங்குகுண்டலத்தையுடையவனேசரணம், கொடுவெண்மழுவாள் உழையாய்சரணம் - கொடியதீயைந்தோய்ந்த மழுவையும்மானையுமுடையவனேசரணம், உருகாதவர்பால் விழையாய் - கல்லினும் வல்லென்றமனமுடையவரிடத்து இரங்காதவனேசரணம், விகிர்தாசரணம் - விகிர்தனேசரணம்.

யாவுந் தன்சத்திமாத்திரையிற்றோன்றுதற்குமுன் உள்ளானாதலால் பழையாய் எனவும், தனதுசத்தியாற்றோன்றிய திருமால்முதலியோர் மூப்பவும் தான் ஒருபெற்றியனாய் என்று மிருத்தலால் புதியாய் எனவும், உலகமீன்றகன்னியைத்தான் ஒருபால்மணந்தும் சற்றுங்கலக்காத மாதவனாதலால் பணிலக்குழையாய் எனவும், தன்னைப்பொருளெனக்கருதாது வேள்வியே பொருளெனக்கருதிய தாருகவனத்துமுனிவர் கொல்லவேவிய மழுவையு மானையுமேந்தியவர்கள் தன்னைப்பொருளெனக்கருதி வழிபடக்கொண்டோனாதலால் மழுவாளுழையாய் எனவும், பல ஏதுக்களால் தான் பொருளெனவுணர்ந்தும் தன்னைவழிபடாரிடத்து விருப்பமிலனாதலால் உருகாதவர்பால் விழையாய் எனவும், தன்னை வழிபடுவோரிடத்து உவப்பும் தனை வழிபடாரிடத்து வெறுப்புமுடைய வேறுபாடுடையனாதலால் விகிர்தாசரணம் எனவுங்கூறினன். விகிர்தன் வேறுபாடுடையவன். "முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே-பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே" எனவும் "மூப்பாலிளையவன்முன்னவன்பின்னவன்" எனவும்வரும் உண்மைத்திருவாக்குகளாலுணர்க. (உ௫)

இருளாய்வெளியாய்சரணம்மெனையும்
பொருளாகநினைந்துபுரந்தரன்மா
தெருளாதநடந்தெரிவித்தெனையா
ளருளாய்சரணம்பரகாசரணம்.

(இ-ள்.) இருளாய் வெளியாய் சரணம் - இருளாயுள்ளவனே வெளியாயுள்ளவனேசரணம், எனையும் பொருளாகநினைந்து - புல்லியனாக நாயினுங்கடைப்பட்ட

என்னையு மொருபொருளாகக்கருதி, புரந்தரன்மால் தெருளாத நடம்தெரிவித்து-இந்திரனும் திருமாலும் தெளிந்துணர்தற்கரிய திருநடனத்தைத் தரிசிப்பித்து, எனையாள் அருளாய்சரணம் - என்னையடிமைகொண்டருளும் பேரருளனேசரணம், அழகாசரணம் - பேரழகையுடையவனேசரணம்.

பிரகிருதிதத்துவமுடம்பாக மூலாதாரத்திற்சென்றொடுங்கி யாணவமலமறைப்பால் தன்னிச்சாஞானக்கிரியைகளி னிகழ்ச்சி சிறிதுமின்றி யான்மா தான் மாத்திரையாய் நிற்கும் இருளாகிய கேவல அவதரத்தில் தானு மவ்வாறு நின்றருளுதலால் இருளாய் எனவும், ஆன்மா தனுகரணாதியோடுங்கூடி யவையொருபுடை விளங்கும் சகல அவதரத்தில் தானுமவ்வாறு நின்றருளுதலால் வெளியாய் எனவும், சத்தாதிவிடயங்களை விரும்புதல் கழிதற்கேதுவாகு மிருவினையொப்பும்,போகபோக்கியத்தின்செறிவு கழிதற்கேதுவாகுஞ் சத்திநிபாதமுமுடைமையுந்தோன்ற எனையும் பொருளாகநினைந்து எனவும், உருக்கழிதற்கேதுவாகும் குருவருளும் எல்லாயோனிகளிலுஞ்சென்றுழலுதல் கழிதற்கேதுவாகும் ஞானசாதனமும்,சென்றுதிரிதரலாகிய ஏகதேசத்தன்மைகழிதற்கேதுவாகு மும்மலநீக்கமும் சத்தாதிவிடயத்தினுகர்ச்சி கழிதற்கேதுவாகும் வாதனைநீக்கமும் பாசவறிவிச்சைசெயல்கழிதற்கேதுவாகும் ஞானப்பெருக்கமும் கிடைத்தவைதோன்றப் புரந்தரன்மால் தெருளாதநடந்தெரிவித்தெனையாள் எனவுங்கூறினன். இவற்றால் கேவலசகலசுத்தம் என்னுங்காரணாவத்தை மூன்றுங்காண்க. "அறிவிலனமூர்த்தனித்தனராகாதிகுணங்களோடுஞ், செறிவிலன்கலாதியோடுஞ்சேர்விலன்செயல்களில்லான், குறியிலன்கருத்தாவல்லன்போகத்திற்கொள்கையில்லான், பிறிவிலன்மலத்தினோடும்வியாபிகேவலத்திலான்மா. "உருவினைக்கொண்டுபோகபோக்கியத்துன்னல்செப்பல், வருசெயன்மருவிச்சத்தமாதியாம்விடயந்தன்னிற், புரிவதுஞ்செய்திங்கெல்லாயோனியும்புக்குழன்று, திரிதருஞ்சகலமானவவத்தையிற்சீவன்சென்றே" "இருவினைச்செயல்களொப்பினீசன்றன் சத்திதோயக், குருவருள்பெற்றுஞானயோகத்தைக்குறுகிமுன்னைத், திரிமலமறுத்துப்பண்டைச்சிற்றறிவொழிந்துஞானம், பெருகிநாயகன்றன்பாதம் பெறுவதுசுத்தமாமே" எனவரும் ஏதுக்களால் அவ்வவத்தைகளின் முறையைக்காண்க. (உகூ)

அயனத்தனெனப்படுமாடரவச்
சயனத்தவனைத்தருதத்துவநால்
வயனத்தவவானவர்வானவசே
னயனத்தவணாயகனேசரணம்.

(இ-ள்.) அயனை-பிரமனையும், நத்தன் எனப்படும் - சங்கேந்தினவனென்று சொல்லப்படும், ஆடு அரவச் சயனத்தவனை தருதத்துவ - ஆடாநின்ற சர்ப்பசயனத்தையுடைய திருமாலையும் தந்தருளும் தத்துவசொருபத்தனே, நால் வயனத்தவ - நான்கு வேதங்களாகிய திருவாக்குகளையுடையவனே, வானவர் வானவ - தேவர்களுக்குத் தேவனே, சேல் நயனத்தவள் நாயகனே சரணம்-அங்கயற்கண்ணியம்மையா ரிறைவனே சரணம்.

ஆன்மாக்களுக்கு மலபாகம் வருவித்தற்பொருட்டுத் தனது அதிகாரசத்திகளாற் சிருட்டியாதித்தொழில்களை யியற்றப் பிரமனையுந் திருமாலையுந் தந்தருளினவனென்பார் அயனத்தனெனப்படுமாடரவச் - சயனத்தவனைத்தரு எனவும், சுத்தவித்தை முதலிய ஐந்து தத்துவங்களும் அநந்ததேவர் முதலியோர் வாயிலாக அன்றி

Koviloor Digital Library

த் தன்னாலதிட்டிக்கப்படுதலால் அவை அவனது வடிவமென்பார் தத்துவ எனவுங் கூறினர் "விந்தையோமசர்சாதாக்கியஞ்சத்திசிவங்களைந்தும் - சுந்தரத்துவஞ்சிவன்றன்சுதந்திரவடிவமாகும்" எனவரும் ஏதுவால் உணர்க. (உஎ)

கதவெங்கரியின்றுரியாய்சரண
முதலந்தமிலாமுதலேசரணென்
றதிர்பைங்கழனூபுரவண்டலறும்
பதபங்கயமுன்புபணிந்தரசன்.

(இ-ள்.) கதம் வெம் கரியின் உரியாய் சரணம் - கோபத்தையுடைய கொடிய யானையின் தோற்போர்வையையுடையவனே சரணம், முதல் அந்தம் இல்லாத முதலே சரண் என்று - ஆதியும் அந்தமுமில்லாத முதல்வனே யடைக்கலமென்று, அதிர் பைங்கழல் நூபுர வண்டு அலறும் பதபங்கய முன்பு அரசன் பணிந்து - ஒலிக்கும் பசிய வீரகண்டையுஞ் சிலம்புமாகிய வண்டுகள் ஒலிக்கும் திருவடித்தாமரையின் முன்னே நின்று பாண்டியன் வணங்கி.

அருவம் உருவமாய்த் தோன்றலும் உருவம் அருவமாயொழிதலுமுடைமையால் அருவம், உருவம், அருவுருவம் என முத்திறப்படும் விருத்தி, பரிணாமம், விவர்த்தனமென்பவற்றுள் ஒன்றன்பாலும் படாதவனாதலால் முதலந்தமிலா முதலே என்றான். "பந்தமும்வீடுமாய பதபதார்த்தங்களல்லான் - அந்தமுமாதியில்லான்" எனவரும் சித்தியாராலுணர்க. (கஅ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றுமிப்படியேயிந்தத்திருநடம்யாருங்காண
நின்றருள்செய்யவேண்டுநிருமலமானவெள்ளி
மன்றவவடியேன்வேண்டும்வரமிதுவென்றுதாழ்ந்தா
னன்றுதொட்டின்றுமெங்கோனந்நடநிலையாய்நின்றான்.

(இ-ள்.) என்றும் இப்படியே இந்த திருநடம் யாரும் காண நின்று அருள் செய்ய வேண்டும் - எக்காலத்தும் இந்தப்படியே எவருங்கண்டு தரிசிக்க நின்று அருள்செய்யவேண்டும், நிருமலம் ஆன வெள்ளி மன்றவ - மலரகிதமான வெள்ளியம்பலத்தையுடையவனே, அடியேன் வேண்டும் வரம் இது என்று தாழ்ந்தான் - அடியேன் வேண்டிய வரமிதுதானென்று பணிந்தான், அன்று தொட்டு இன்றும் - அக்காலந்தொட்டு இக்காலப்போறும், எங்கோன் அந்நடம் நிலையாய் நின்றான் - எமது பெருமான் அத்திருநடன நிலையனாகி நின்றருளினான்.

தன்னைப்போல் எவரும் இப்பேறு பெறுங்கருத்தினனாதலால் யாருங்காண நின்றருள்செய்யவேண்டும் எனக் கூறினான். (உகூ)

கான்மாறியாடினபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உட்படத் திருவிருத்தம் - கசஅக.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பழியஞ்சின திருவிளையாடல்.



Koviloor Digital Library

இருபத்தைந்தாவது.

பழியஞ்சினபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஈறிலான்செழியனன்புக்கெளியவனாகிமன்றுண்
மாறியாடியகூத்தென்சொல்வரம்பினதாமேகங்கை
யாறுசேர்சடையான்றானோரரும்பழியஞ்சித்தென்னன்
றேறலாமனந்தைத்தேற்றுந்திருவிளையாடல்சொல்வாம்.

(இ-ள்.) ஈறு இல்லான் - தனக்கோர் இறுதியில்லாத சோமசுந்தரக்கடவுள், செழியன் அன்புக்கு எளியவன் ஆகி - இராசசேகரபாண்டியன் உழுவலன்பின் வசத்தனாகி, மன்றுள் மாறி யாடிய கூத்து என் சொல் வரம்பினது ஆமே - வெள்ளியம்பலத்துள் கான்மாறி யாடியருளிய திருக்கூத்து என் சொல்லி னெல்லையிற்பட்டதா, கங்கை ஆறு சேர் சடையான் தான் - கங்காநதியையணிந்த சடையையுடைய அக்கடவுள், ஓர் அரும் பழி அஞ்சி - ஒரு கொடும்பழியை யஞ்சி, தென்னன் தேறலாத மனத்தை தேற்றும் திருவிளையாடல் சொல்வாம் - குலோத்துங்கபாண்டியனுடைய தெளியாத மனத்தினைத் தெளிவித்த திருவிளையாடலைக் கூறுவாம்.

இறைவனென்றும் பொருளாற்றல் தோன்ற ஈறிலான் எனவும், அன்புக்கெளியவனாகியென்னுஞ் சொல்லாற்றலுக் கியைபுதோன்ற மாறியாடிய கூத்து எனவும், அன்புக்கெளியனாதல் சொல்லினெல்லை கடந்ததென்பதுதோன்ற என் சொல் வரம்பினதாமே யெனவும், ஆன்மாக்களிடத் தென்றும் இரக்கமுள்ளவனென்பது தோன்றப் பழியஞ்சித்தென்னன்றேறலா மனத்தைத் தேற்றும் எனவும் கூறினார்.()

இனையநாள்சிறிதுசெல்லவிராசசேகரன்றன்காதற்
றனையனுங்குலோத்துங்கற்குத்தன்னரசிருக்கைநல்கி
வினையெலாம்வென்றுஞானவெள்ளியம்பலத்துளாடுங்
கனைகழனிழலிற்பின்னிக்கலந்துபேரின்பமுற்றான்.

(இ-ள்.) இனைய நாள் சிறிது செல்ல - இப்படி சிலநாள் கழிய, இராசசேகரன் தன் காதல் தனையனும் குலோத்துங்கற்கு - இராசசேகரபாண்டியன் தனது காதற்புதல்வனாகிய குலோத்துங்கபாண்டியனுக்கு, தன் அரசு இருக்கை நல்கி - தனது அரசியலைத்தந்து, வினை எல்லாம் வென்று - இருவினையொப்பும் மலபரிபாகமும் வாய்ந்து, ஞான வெள்ளி அம்பலத்துள் ஆடும் கனை கழல் நிழலில் பின்னிக் கலந்து பேரின்பம் உற்றான் - ஞானவடிவாயுள்ள வெள்ளியம்பலத்துள் நடித்தருளும் ஒலிக்கும் வீரகண்டையையணிந்த திருவடிநிழலி லிரண்டறக்கலந்து பேரின்பத்திலழுந்தினான்.

வினையெனப் பொதுப்படக் கூறினமையால் இருவினையொப்பும் மலபாகமும் என்றும், வினை கன்மமலத்துளடங்குதலின், உடலும் உயிருந் தம்முளொன்றுபட்டறியும் அறிவும், கண்ணொளியும் ஆதித்தனொளியும் தம்முளொன்றுபட்டு நிற்குந் தன்மையும் பிரிக்கவொண்ணாவாறுபோலக் கலந்தான் [என்பார் பின்னிக்கலந்து என்றார். (உ)

குரவன்செங்கோல்கைக்கொண்டகுலோத்துங்கவழுதிசெங்க
ணரவங்கம்பூண்டகூடலாதிநாயகனைநித்தம்

Koviloor Digital Library

பரவன்பின்வழிபாடாறுபத்திமைநியமம்பூண்டா
னிரவஞ்சுங்கதுப்பினல்லாரீரையாயிரவருள்ளான்.

(இ-ள்.) குரவன் செங்கோல் கைக்கொண்ட குலோத்துங்க வழுதி - தனது பிதாவின் செங்கோலைத் தன் கையிற்கொண்ட குலோத்துங்கபாண்டியன், செம் கண் அரவு அங்கம் பூண்ட கூடல் ஆதிநாயகனை - சிவந்த கண்களையுடைய சர்ப்பத்தைத் தனது திருமேனியி லாபரணமாகப்பூண்ட மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை, நித்தம் அன்பின் பரவு வழிபாடு ஆறாத பத்திமை நியமம் பூண்டான் - நித்தமும் அன்பாற்றுதிக்கும் வழிபாட்டையும் நீங்காத பத்தித்திறமையையும் கடமையாகப் பூண்டுள்ளான், இரவு அஞ்சும் கதுப்பின் நல்லார் ஈரையாயிரவர் உள்ளான் - இருளஞ்சுங் கூந்தலையுடைய பதினாயிரம் பெண்களை மனைக்கிழத்தியாக வுடையவன். (அ)

கோச்சகக்கலிப்பா.

அப்பதினாயிரவர்க்குமோவ்வொருத்திக்கவ்வாறா
யொப்பரியவறுபதினாயிரங்குமாருளரவருட்
செப்பரியவல்லாண்மைச்சிங்கவிளவேறனையான்
வைப்பனையான்முதற்பிறந்தமைந்தன்பேரனந்தகுணன்.

(இ-ள்.) அப்பதினாயிரவர்க்கும் - அந்தப் பதினாயிரம் பெண்களுள்ளும், ஒவ்வொருத்திக்கு அவ்வாறு ஆய் ஒப்பு அரிய அறுபதினாயிரம் குமரர் உளர் - ஒவ்வொருத்திக்கு மவ்வாறாக ஒப்பில்லாத அறுபதினாயிரம் புதல்வர் உளர், அவருள் - அவ்வறுபதினாயிரம் புதல்வருள், செப்பு அரிய வல்லாண்மை சிங்க இள ஏறு அனையான் - சொல்லுதற்கரிய வலிமையையும் ஆண்மைத்தன்மையையுமுடைய இளஞ்சிங்க வேற்றை யொத்தவன், வைப்பு அனையான் - வைப்புநிதியைப் (பெற்றோர்க்கு) ஒத்தவன், முதல் பிறந்த மைந்தன் - (அவன் யாரென்னில்) அப்புதல்வருள் முதற்பிறந்த புதல்வன், பேர் அனந்தகுணன் - அவன்பெயர் அனந்தகுணனென்போன்.

ஏழனுருபு நிற்கவேண்டியவிடத்து நான்கனுருபு வந்தது உருபுமயக்கம். (கூ)

கலைபயின்றுபரிநெடுந்தேர்கரிபயின்றுபலகைவாள்
சிலைபயின்றுவருகுமரர்திறநோக்கிமகிழ்வேந்த
னலைபயின்றகடலாடைநிலமகளையடலணிதோண்
மலைபயின்றுகுளிர்தூங்கமகிழ்வித்துவாழுநாள்.

(இ-ள்.) கலை பயின்று - மறைநூல் முதலிய நூல்களைக்கற்று, பரி நெடும் தேர் கரி பயின்று - குதிரையேற்றமும் நெடிய தேரேற்றமும் யானையேற்றமுங் கற்று, பலகை வாள் சிலை பயின்று வரு குமரர் திறம் நோக்கி - கேடகவரிசையையும் வாள் வரிசையையும் வில் வரிசையையும் கற்றுவாராநின்ற அறுபதினாயிரம் புதல்வரது திறங்களைப்பார்த்து, மகிழ் வேந்தன் - மகிழ்ச்சி கூரும் குலோத்துங்கபாண்டியன், அலை பயின்ற கடல் ஆடை நிலமகளை - அலைகள் போக்குவரவு செய்கின்ற கடலை யாடையாக வுடுத்த பூதேவியை, அடல் அணி தோள் மலை பயின்று குளிர் தூங்க மகிழ்வித்து வாழும் நாள் - வீரத்தையே ஆபரணமாகவணிந்த தனது தோளாகிய மலையில் இடைவிடாது சஞ்சரித்து வெம்மை நீங்க மகிழச்செய்து வாழுங்காலையில்.

தன்றோடேயிப்பாரேற்றுவரு மிலரென்பார் நிலமகளையடலணிதோண்மலைபயின்றுகுளிர்தூங்க மகிழ்வித்து வாழுநாள் எனக் கூறினர். (௰)

Koviloor Digital Library

செய்யேந்துதிருப்புத்தூர்நின்றுமொருசெழுமறையோன்
பையேந்துமரவல்குன்மனைவியொடும்பாலனல்வாய்க்
கையேந்துகுழவியொடுங்கடம்புகுந்துமாதுலன்பால்
மையேந்துபொழின்மதுரைநகர்நோக்கிவருகின்றான்.

(இ-ள்.) ஒரு செழுமறையோன் - ஒரு அந்தணன், செய் ஏந்து திருப்புத்தூர் நின்றும் - (தான் வசிக்கும்) வயல் சூழ்ந்த திருப்புத்தூரினின்றும், அரவு ஏந்தும் பை அல்குல் மனைவியொடும் - பாம்புவிரிக்கும் படத்தையொத்த வல்குலையுடைய தனது மனைவியோடும், பால் நல் வாய் கை ஏந்து குழவியொடும் கடம் புகுந்து - பால்மணக்கும் நல்ல வாயையுடைய கையிலேந்து மிளம்பிள்ளையோடும் காட்டுவழிச்சென்று, மாதுலன் பால் - தனது மாமன் வீட்டிற்கு, மை ஏந்து பொழில் மதுரை நகர் நோக்கி வருகின்றான் - மேகந்தவழுஞ் சோலைசூழ்ந்த மதுரைத்திருநகரை நோக்கி வராநின்றான். (௬)

வருவானுண்ணீர்வேட்டுவருவாளைவழிநிற்கும்
பெருவானந்தடவுமொருபேராலினிழலின்கீ
ழொருவாதபசுங்குழவியுடனிருத்திநீர்தேடித்
தருவான்போய்மீண்டுமனையிருக்குமிடந்தலைப்படுமுன்.

(இ-ள்.) வருவான் - காட்டுவழிவருமந்தணன், உண் நீர் வேட்டு வருவாளை - உண்ணும் நீரைவிரும்பிவருந் தன்மனைவியை, வழி நிற்கும் பெரு வானம் தடவும் ஒரு பேர் ஆலின் நிழலின் கீழ் - அக்காட்டுவழியில் நிற்கும் பெரியவிண்ணுலகத்தைத்தோயுமொரு பெரியஆலமரத்தின்கீழ், ஒரு வாத பசும் குழவி உடன் இருத்தி - தன்கையினின்றும் நீங்காத இளம்பிள்ளையோடு இருக்கச்செய்து, நீர் தேடி தருவான் போய் மீண்டு மனை இருக்கும் இடம் தலைப்படு முன் - நீரைத்தேடிக்கொண்டுவரச்சென்று அந்நீரைக்கொண்டு திரும்பித் தன்மனையாளிருக்குமிடத்தை அடைதற்கு முன்; (௭)

இலைத்தலையபழுமரத்தின்மிசைமுன்னாளெய்ததொரு
கொலைத்தலையகூர்வாளிகோப்புண்டுகிடந்ததுகா
லலைத்தலையவீழ்ந்தும்மைவினையுலப்பவாங்கிருந்த
வலைத்தலையமானோக்கிவயிறுருவத்தைத்தன்றால்.

(இ-ள்.) இலை தலைய பழுமரத்தின் மிசை - இலைகளையிடங்கள்தோறுமுடைய வாலமரத்தின்மேல், முன் நாள் எய்தது கொலை தலைய ஒரு கூர் வாளி கோப்புண்டு கிடந்தது - (கிளியை இலக்காகக்கொண்டு ஒருவேடன்) முன்னாளிலெய்த கொலையைத் தலையிலுடைய ஒரு கூரிய அம்பு சிக்கிக்கிடந்தது, கால் அலைத்து அலைய வீழ்ந்து - காற்று அசைத்து அலைக்க அந்த அம்பு கீழேவிழ்ந்து, உம்மை வினை உலப்ப - முற்பிறப்பிற்றேடிய வினைப்பயன்முடிய, ஆங்கு இருந்த வலை தலைய மான் நோக்கி வயிறு உருவ தைத் தன்று - அவ்விடத்திருந்த வலையினிடத் தகப்பட்ட மான் போலும் பார்வையையுடைய அப்பார்ப்பனியினுடைய வயிறுருவும்படி தைத்தது.

தன்னுடம்பிற் சிறிதும் நோயில்லாளாதலால் அவளுயிரைக்கவர யமபடரோ காற்றுவடிவாய்ச்சென் றலைத்தலால் பிறவினைப்பொருள்பட அலைய எனவும், வினைப்பயனளவுந் தேகமிற்றலால் வினையுலப்ப வயிறுருவத்தைத்தன்று எனவுங் கூறினர். (அ)

Koviloor Digital Library

அவ்வாறவ்வணங்கனையாளுயிரிழந்தாளவ்வேலைச்
செவ்வாளியேறிட்டசிலையுடையானொருவேடன்
வெவ்வாளியேறனையான்வெயிற்கொதுங்குநிழறேடி
யவ்வாலநிழலெய்தியயனின்றானிளைப்பாற.

(இ-ள்.) அ ஆறு அ அணங்கு அனையாள் உயிர் இழந்தாள் - அவ்வகையாக அந்தக் கொல்லியம்பாவையையொத்த பார்ப்பனி தன்னுயிர் நீங்கினாள், அ வேலை - அக்காலையில், ஒரு வேடன் செவ் வாளி ஏறிட்ட சிலையுடையான் - ஒருவேடனானவன் உதிரந்தோய்தலால் செந்நிறம்வாய்ந்த அம்பினை யேறிட்டவில்லினை யுடையவனும், வெம்மை ஆளி ஏறு அனையான் - கொடிய யாளியேற்றை யொத்தவன், இளைப்பு ஆற வெயிற்கு ஒதுங்கும் நிழல் தேடி - இளைப்பாறும்படி வெயிலிற்கொதுங்கும் நிழலைத்தேடிச் (செல்வான்,) அ ஆல நிழல் எய்தி அயல் நின்றான் - அங்குள்ள ஆலமரத்தினிழலையடைந்து அம்மரத்தின்பக்கல் நின்றான். (௯)

தண்ணீர்க்குப்போயாவிதலைப்பட்டமறையவனு
முண்ணீர்கைக்கொண்டுமீண்டொருங்கிருந்தகுழவியொடும்
புண்ணீர்வெள்ளத்தாழ்ந்துயிரைப்புறங்கொடுத்த
பண்ணீரமழலைமொழிப்பார்ப்பனியைக்கண்ணுற்றான்.

(இ-ள்.) தண்ணீர்க்கு போய் ஆவி தலைப்பட்ட மறையவனும் - தண்ணீர்க்குச்சென்று நீரோடையை யடைந்த அந்தணனும், உண் நீர் கை கொண்டு மீண்டு - உண்ணும்நீரைக் கைக்கொண்டு திரும்பி, ஒருங்கு இருந்த குழவியொடும் புண் ணீர் வெள்ளத்து ஆழ்ந்து - ஒருசேரத் தன்னோடு இருந்த பிள்ளையோடும் உதிரவெள்ளக் கடலிலழுந்தி, உயிரை புறம் கொடுத்த பண் நீர மழலை மொழி பார்ப்பனியை கண்ணுற்றான் - உயிரையிழந்த பண்ணைப்போலும் இனிமைத்தன்மையையுடைய மழலைச்சொல்லையுடைய தனதுமனைவியைப் பார்த்தான். (௧௦)

அயில்போதுங்கணையேறுண்டவ்வழிபுண்ணீர்சோர
மயில்போலவுயிர்போய்க்கிடக்கின்றாண்மருங்கணைந்தென்
னுயிர்போல்வாயுனக்கிதுவென்னுற்றதெனமத்தெறிதண்
டயிர்போலக்கலங்கியறிவழிந்துமனஞ்சாம்பினான்.

(இ-ள்.) அயில் போதும் கணை தைத்து - வேல்போலும் கூர்மைவாய்ந்த அம்பு தைத்து, அ வழி புண் ணீர் சோர மயில் போல உயிர் போய் கிடக்கின்றாள் மருங்கு அணைந்து - அவ்விடத்தில் உதிரநீர்சோர மயிலைப்போல உயிர்போய்க்கிடக்கின்ற தன்மனைவிபக்கல்சேர்ந்து, என் உயிர் போல்வாய் உனக்கு இது என் உற்றது என - என்னுயிரையொப்பாய் உனக்கு இது என்ன வந்தடைந்ததென்று இரங்கிட்டு, மத்து எறி தண் தயிர்போல கலங்கி - மத்தாலுடைந்த தண்ணிய தயிரைப்போல மனங்கலங்கி, அறிவு அழிந்து மனம் சாம்பினான் - உணர்வழிந்து மனமடிந்தான்.

அறிவழிதற்கு மனங்கலங்கல் காரணமாதலாலும், மனமடிதற்கு அறிவழிதல் காரணமாதலாலும் காரணகாரியப் பொருள்பட முறையே வைத்தலால் காரணமாலையணி. (௧௧)

Koviloor Digital Library

இனையதோர்பெண்பழியையாரேற்றாரெனத்தேர்வா
னனையதோர்பழுமரத்தின்புறத்தொருசாரழல்காலு
முனையதோர்கணையோடுமுடக்கியகைச்சிலையேந்தி
வினையதோர்ந்தெதிர்நின்றவிறல்வேடன்றனைக்கண்டான்.

(இ-ள்.) இனையது ஓர் பெண் பழியை ஏற்றார் யார் என தேர்வான் - இப்படிப்பட்டவொருபெண்பழியை ஏற்றவர் யார் என்று ஆராய்கின்ற அந்தணன், அனையது ஓர் பழு மரத்தின் புறத்து ஒரு சார் - அந்த ஆலமரத்தின்புறத்து ஒருபக்கத்தில், அழல் காலும் முனையது ஓர் கணையோடு கை முடக்கிய சிலை ஏந்தி - அழலைக் கக்கும் முனையையுடைய வொருபாணத்தோடு கையில் வளைந்த வில்லையேந்தி, வினையது ஓர்ந்து எதிர் நின்ற விறல் வேடன் தனை கண்டான் - மிருகங்களைக் கொல்லுதலை யாராய்ந்து தன்னெதிர்நின்ற வெற்றியையுடைய வேடனைப்பார்த்தான்.

அது பகுதிப்பொருள் விகுதி. எல்லாப்பழிகளுள்ளும் பெண்பழிபெரிதாதலால் இனையதோர்பெண்பழியையாரேற்றார் என்றான். (கஉ)

கலிநிலைத்துறை.

காப்பணிதாளன்வாளொடுவீக்கியகச்சாளன்
கூர்ப்பகழிக்கோலேறிடுவில்லன்கொலைசெய்வா
னேற்பனகைக்கொண்டிவ்விடைநின்றானிவனேயென்
பார்ப்பனியைக்கொன்றின்னுயிருண்டுபழிபூண்டான்.

(இ-ள்.) காப்பு அணி தாளன் வாள் ஒடு வீக்கிய கச்சாளன் - தொடுதோலணிந்த காலையுடையவனும் வாளொடுகட்டிய கச்சையையுடையவனும், கூர் பகழி கோல் ஏறிடு வில்லன் - கூரிமையுடைய அம்பை ஏறிட்ட வில்லையுடையவனும், கொலை செய்வான் ஏற்பன கைக்கொண்டு இவ்விடை நின்றான் - கொலைசெய்தற்கேற்ற கருவிகளைக் கையிற்கொண் டிவ்விடத்தினின்றான், இவனே என் பார்ப்பனியை கொன்று இன் உயிர் உண்டு பழி பூண்டான் - இவனே என்னுடைய மனைவியைக்கொன்று இனியவுயிரைக்குடித்துப் பழிபூண்டவன்.

கொலைசெய்தற்குரிய சன்னத்தனாய்நிற்றலால் இவனே யென்பார்ப்பனியைக்கொன்று எனத் தேற்றேகாரந்தந்துகூறினான், தாளன், கச்சாளன், வில்லன் என்னுங் குறிப்புவினைமுற்றுகள் எச்சங்களாய் வான் இறுதியைப்பெற்றுவந்த செய்வான் என்னும் எச்சத்தைத் தனித்தனி கொண்டன. (கங

என்னமதித்தேயேடாவேடாவென்னேழை
தன்னைவதைத்தாய்நீயேயென்னாத்தழல்கால்கண்
மின்னலெயிற்றுக்கூற்றெனவல்வாய்விட்டார்த்து
மன்னவனாணைப்பாசமெறிந்துவலித்தேகும்.

(இ-ள்.) என்ன மதித்தே - என்ன கருதி, ஏடா வேடா - ஏண்டாவேடனே, என் ஏழை தன்னை வதைத்தாய் - என்னுடைய மனைவியைக் கொன்றாய், நீயே என்னா - கொன்றவனீயேயன்றி மற்றொருவ னல்லனென்று, தழல் கால் கண் மின்னல் எயிறு கூற்று என - அக்கினியைக் கக்குங் கண்களையும் மின்னைப்போன்ற பற்களையுமுடைய இயமனைப்போல, வல் வாய் விட்டு ஆர்த்து - வலியவாய்பிளந்து கோஷித்து, மன்னவன் ஆணை பாசம் எறிந்து வலித்து ஏகும் - அரசனது ஆணையாகிய கயிற்றைவீசி இழுத்துச் செல்லுவான்.

Koviloor Digital Library

அரசனாணையின் வெவ்வுயிருங் கட்டுப்பட்டொழுகுதலால் மன்னவனாணைப் பாசமெறிந்து வலித்து என்றார். (கச)

மாண்டவளைத்தன்வெரிநிடையிட்டான்மகவொக்கற்
றாண்டவணைத்தான்றாய்முலைவேட்டழுதன்சேயைக்
காண்டொறும்விம்மாக்கண்புனல்சோரக்கடிதேகா
வாண்டகைமாறன்கூடலணைந்தானளியன்றான்.

(இ-ள்.) மாண்டவளை தன் வெரிந் இடை இட்டான் - இறந்ததன்மனைவியைத் தனது முதுகின்மேலிட்டு, மகவு ஒக்கல் தாண்ட அணைத்தான்-தன்பிள்ளையைப்பக்கத்திற்பொருந்த அணைத்து, தாய்முலைவேட்டு அழுதன்சேயை காண் தொறும் கண் புனல் சோர விம்மா - தாய்முலைப்பாலைவிரும்பியழாநின்ற தனது பிள்ளையைப்பார்க்குந்தோறும் கண்களினின்று நீர்சோரவழுது, கடிது ஏகா - விரைந்துசென்று, அளியன் தான் - அந்த அந்தணன் - ஆண்டகைமாறன் கூடல் அணைந்தான் - ஆண்டன்மையையுடைய பாண்டியனது மதுராநகரத்தையடைந்தான்.

இட்டான், அணைத்தான், முற்றெச்சங்கள். (கரு)

மட்டவிழ்தாரான்வாயின்மருங்கேவந்தெய்தா
வுட்டுகளில்லாவேடனைமுன்விட்டுயிரன்னாள்
சட்டகநேரேவிட்டெதிர்மாறன்றமர்கேட்பக்
கட்டுளிசிந்தாமுறையிடுகின்றான்கையோச்சா.

(இ-ள்.) மட்டு அவிழ் தாரான் வாயில் மருங்கு வந்து எய்தா - வாசம்பரந்த மாலையையுடைய பாண்டியனது கோயில்வாயிலின்பக்கத்துவந்து அடைந்து, உள் துகள் இல்லாத வேடனை முன் விட்டு - மனத்தில் சிறிதுங் களங்கமில்லாத வேடனை முன்னேவிட்டு, உயிர் அன்னாள் சட்டகம் நேரேவிட்டு - தன் உயிரையொத்த மனைவியினது சரீரத்தை நேரேபோட்டு, எதிர் மாறன் தமர்கேட்ப - எதிரேபாண்டியன் உறவினராகிய மந்திரிமுதலியோர்கேட்க, கை ஓச்சா - கையைமேலேயோச்சி, கண் துளிசிந்தா முறையிடுகின்றான்-கண்ணினின்றும் நீர்சிந்தி முறையிடாநின்றான்.

கோமுறைகோடாக்கொற்றவரேறேமுறையேயோ
தாமரையாள்வாழ்தன்கடிமார்பாமுறையேயோ
மாமதிவானோன்வழிவருமைந்தாமுறையேயோ
தீமைசெய்தாய்போற்செங்கைகுறைத்தாய்முறையேயோ.

(இ-ள்.) கோமுறை கோடாத கொற்றவர் ஏறே - மனுநீதிமுறைமை சிறிதுங்கோணாத பாண்டியருள் ஆண்சிங்கம் போல்வாய், முறையேயோ - (உன்னாட்டில் இவ்வாறு நடந்தது) முறையோ, தாமரையாள் வாழ் தண் கடி மார்பா முறையேயோ - தாமரைமலரின் வாழ்க்கையளாகிய இலட்சுமி வசிக்கும் தண்ணிய விளக்கமமைந்த மார்பையுடையவனே முறையோ, மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ - பெருமையமைந்த சந்திரன் மரபிற்றோன்றிய மைந்தனே முறையோ, தீமை செய்தாய் போல் செங்கை குறைத்தாய் முறையேயோ - கொடுமைசெய்தவனைப்போலத் தனது சிவந்த கையைத் தறித்தவனே முறையோ.

மநுநூன்முறை சிறிதுங்கோடாத அரசர்களுள் மிக்கோய் என்பான் கோமுறைகோடாக் கொற்றவரேறே எனவும், அதனால் எல்லாவுலகமுந் தன்னடிக்கீழ்ப்படு

Koviloor Digital Library

த்திறாய் என்பான் தாமரையாள்வாழ் தண்கடிமார்பா எனவும், தன்குடைக்கீழ்த் தங்கிய எல்லாவுயிரிடத்தும் ஒருபெற்றித்தாய தண்ணளியையுடையா யென்பான் மாமதிவாழோன் வழிவருமைந்தா எனவும், ஓர் பாண்டியன் நகரி காவற்பொருட்டு இரவிற் காவலாளர் சோராது காக்கின்றாரோவென்பதை யறிதற்பொருட்டு அவரறி யாமலுருக்கரந்து சோதித்துச் செல்லுவான் ஓர்காலையில், மறையவர் வீதியில் வருங்கால் அன்றிரவில் ஓரந்தணன் தன் மனைவியைநோக்கி நான் காசிக்குச்சென்று நீராடிவருங்காறும் நின்னைப் பாதுகாத்தொழுகுவாயெனக் கூற, அதைக்கேட்ட அவன் மனைவி யெவ்வாறு என்னைக் காத்தொழுகல் கூடுமென்ற தன் மனைவியை நோக்கிச் சிறிதும் அஞ்சற்க பாண்டியன் செங்கோல் உன் கற்பைக்காக்குமென அவள் மனத்தைத்தேற்றிக் காசிக்குச்சென்றனன், அவன் வருங்காறும் இரவில் நகரிசோதனைசெய்து அம்மறையவன் மனைவியைக் காத்தற்பொருட்டு அம்மனையின்புறத்திற்றங்கி விடியளவுங் காத்துத் தன்னரசிருக்கைக்கு மீள்வோன், ஓர்நாளிரவில் காசிக்குச்சென்ற மறையவன் தன்னில்லிற்கு வந்து மனையாளோடு நிகழ்ந்த செய்திகளைப்பேசி மகிழ்கூர்ந்திருக்குங்காலையில், அவ்வழிவந்த பாண்டியன் அவ்வில்லில் நிகழும் அரவத்தைக்கேட்டு என்றும் நிகழாத புதுமை யின்று கண்டோமெனச் சிறிது கவலைகூர்ந்து ஒருவாறு தன் மனத்தைத்தேற்றி யுண்மை யறிதற்பொருட்டு அவ்வீட்டின் கதவைத்தட்ட, அம்மறையோன் அவ்வில்லிற்குரியனாதலால் யாரவன் என்று வினவியபோது சோரபுருடனல்லனெனப் பாண்டியனறிந்து காசிக்குச்சென்றுவந்த மறையவனுக்குத் தினந்தோறும் இந்நாள்போல நம்மனையவள் பக்கல் சோரபுருடன் வருகின்றான் என அவனுக்கு ஐயம் விளைத்தோமே இதென்ன பெரும்பாவம் எனப் பெருங்கவலைகூர்ந்து, அம்மறையவன் அவ்வையத்தை யொழிப்பான் அவ்வீதியிலுள்ள அந்தணரில்லத்தின் கதவங்களையெல்லாம் அன்றிரவில் தட்டித் தன்னரசிருக்கைக்குச்சென்றான், அன்றே மறையவரெல்லாம் ஒருசேரக்கூடி என்றும் நிகழாத ஒரற்புதம் இன்று நிகழ்ந்த காரணம்யாதோ, இதை நம்மிறைவனுக்கு அறிவிப்பாமென ஒருங்கேகூடி வைகறையில் தங்கள் கடன்களையொழித்து அரசன் பக்கல் வந்து குறைகூறினார்கள், அதுகேட்ட பாண்டியன் உங்களுக்கெல்லாம் ஒருசேரத் தீமைசெய்தது என் கையேயென்று அதனைத்தறித்தனன் அவன் மரபில்வந்த நீதியையுடையாயென்பான் நீமைசெய்தாய்போற் செங்கைகுறைத்தாய் என்வுங் கூறினான்.

பிறங்குங்கோலான்மாறடுகொற்றம்பெறுவேந்த
னுறங்கும்போதுந்தன்னருளாணையுலகெங்கு
மறங்குன்றாவாக்காப்பதையென்பவஃதியாதிம்
மறங்குன்றாதான்செய்கொலைகாவாவழியென்றான்.

(இ-ள்.) பிறங்கும் கோலான் மாறு அடு கொற்றம் பெறுவேந்தன்-விளங்கும் செங்கோலை யுடையவனும் பகைவரைக்கொல்லும் வெற்றிவாய்ந்த பாண்டியன், உறங்கும்போதும் தன் அருள் ஆணை - உறங்குங்காலத்தும் அவனது அருளாணையானது, உலகு எங்கும் அறம் குன்றாவாக காப்பது என்ப - (உலகமுற்றும்) தருமங்குன்றாமல் காப்பதென்று அறிவுடையோர் கூறுவர், அஃது - அந்த அருளாணை, இமறம் குன்றாதான் செய் கொலை காவாத வழி - இக்கொலைத்தொழில் சிறிதுங் குறையாத வேடன்செய்த கொலைத்தொழிலைச் சிறிதுங் காக்காதவகை, யாது என்றான் - யாதுகாரணமோ வென்று முறையிட்டான்.

ஐ சாரியை. (௧௮)

Koviloor Digital Library

வாயிலுளார்தமன்னவன்முன்போய்மன்னாநங்
கோயிலின்மாடோர்வேதியன்மாதைக்கொலைசெய்தா
னாயினனென்றோர்வேடனைமுன்விட்டவிந்தாளைத்
தாயினன்வந்திங்கிட்டயர்கின்றானமியென்றார்.

(இ-ள்.) வாயில் உளார் தம் மன்னவன் முன் போய் - வாயில் காப்போர் தம்மரசன் முன் சென்று, மன்னா - பாண்டியனே, நம் கோயிலின் மாடு ஓர் வேதியன் - நமது கோயிலின் பக்கலில் ஓர் அந்தணன், மாதை கொலை செய்தானாயினன் என்று ஓர் வேடனை முன்விட்டு - தன்னுடைய மனைவியைக் கொலைசெய்தான் என்று ஒரு வேடனை முன்னே விட்டு, அவிந்தாளை தாயினன் வந்து இங்கு இட்டு தமியன் அயர்கின்றான் என்றார் - இறந்த தன் மனைவியை யெடுத்துவந்து இங்கே போட்டுத் தனியனாய் வருந்துகின்றானென்று கூறினார்கள்.

செய்தானாயினன் ஒருசொல், தாயினன் முற்றெச்சம். (௧௯)

இறைமகனஞ்சாவென்குடைநன்றாலென்காவ
லறமலிசெங்கோலஞ்சுபயந்தீர்த்தரசாளு
முறைமையுநன்றாமண்கலிமூழ்காமுயன்றேந்தும்
பொறைமையுநன்றாலென்றுபுலர்ந்துபுறம்போந்தான்.

(இ-ள்.) இறைமகன் அஞ்சா - பாண்டியனது கேட்டஞ்சி, என் குடை நன்று-(உயிர்களுக்கு நிழல்செய்யும்) எனது தவளவட்டக்குடை நன்றாய் இருந்தது, என் காவல் அறம் மலி செங்கோல் - எனது காப்பாகிய தருமமிக்க செங்கோலானது, அஞ்சு பயம் தீர்த்து - (குடிகளுக்கு நேரிடும்) ஐந்துபயங்களையுந் தீர்த்து, அரசு ஆளும் முறைமையும் நன்று-அரசியல் நடத்தும் முறைமையும் நன்றாயிருந்தது, மண் கலி மூழ்கா முயன்று ஏந்தும் பொறைமையும் நன்று என்று - நிலவுலகம் கலியில் மூழ்காமல் தளர்ச்சியின்றி நான் தாங்கும் பொறுமைத்தன்மையும் நன்றாயிருந்த தென்று, புலர்ந்து புறம் போந்தான் - மனம் புலர்ந்து அரசிருக்கையினின்று புறத்தில் வந்தான்.

நன்றென்றது - இழிப்புமேற் போந்தது குறிப்பெச்சம். ஐந்துபயங்களாவன குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாராலும், பகைவராலும், கள்வராலும், ஏனை விலங்கு முதலிய உயிர்களாலும் வருங்கேடுகள் "மாநிலங்காவலனாவான் மன்னுயிர்காக்குங்காலைத் - தானதனுக்கிடையூறு தன்னாற் றன்பரிசனத்தால் - ஊனமிகுபகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால் - ஆனபயமைந்துந்தீர்த் தறங்காப்பானல்லனோ" என்ற திருவிருத்தத்தால் உணர்க. (௨௦)

வேதியனிற்குந்தன்மைதெரிந்தான்மெலிவுற்றான்
சாதியின்மிக்காய்வந்ததுனக்கென்றளர்கின்றா
யோதுதியென்னக்காவலனைப்பார்த்துரைசான்ற
நீதியுளாய்கேளென்றுரைசெய்வானிகழ்செய்தி.

(இ-ள்.) வேதியன் நிற்கும் தன்மை தெரிந்தான் மெலிவு உற்றான் - அந்தணன் மெலிந்து நிற்கும் தன்மைதெரிந்து மெலிந்து, சாதியில் மிக்காய் உனக்கு வந்தது என் - நான்கு வருணங்களுள் மேம்பட்டோய் உனக்கு வந்தது யாது, தளர்கின்றாய் ஓதுதி என்ன-(நீ யாதுகருதி) வருந்துகின்றாய் அது கூறாய் என்று வினவ, காவலனைப்பார்த்து - அந்தணன் பாண்டியனைப்பார்த்து, உரை சான்ற நீதியுளாய்

Koviloor Digital Library

கேள் என்று சிறழ்செய்தி உரை செய்வான் - புகழ் அமைந்த நீதியுள்ளவனே கேளாய் என்று நடந்த செய்தியைச்சொல்லுவான்.

தெரிந்தான், மெலிவுற்றான் முற்றெச்சங்கள். (உக)

இன்றிவளைக்கொண்டோர்வடநிழலிடையிட்டுச்
சென்றுதணிர்கொண்டியான்வருமுன்னிச்சிலைவேடன்
கொன்றயனின்றானென்றுலையூட்டுங்கொலைவேல்போல்
வன்றிறன்மாறன்செவிநுழைவித்தான்மறையோனால்.

(இ-ள்.) இன்று இவளை கொண்டு ஓர் வடநிழல் இடை இட்டு சென்று - இப்பொழுது இந்த இறந்த வென்மனைய வளைக்கைக்கொண்டு ஒரு பெரிய ஆலமரத்தின் நிழலில் இருக்கச்செய்து இவள் தாகவேட்கை தீரப்போய், யான் தண் நீர் கொண்டு வருமுன் இச்சிலைவேடன் கொன்று அயல்நின்றான் என்று - யான் தண்ணிரைக் கொண்டுவருவதற்குமுன் இந்த வில்லையேந்திய வேடன் கொலைசெய்து அந்த ஆலமரத்தின் பக்கல் நின்றான் என்று, உலை ஊட்டும் கொலைவேல்போல் - உலையிற்காய்ச்சிய கொலைத்தொழிலையுடைய வேலைச் செவியில் நுழைவிப்பதுபோல, மறையோன் - அந்தணன், வன் திறல் மாறன் செவி நுழைவித்தான் - வன்மையையுடைய பாண்டியன் காதிற் செலுத்தினான்.

மிகவும் கொடியது என்பார் நுழைவித்தான் என்றார். (உஉ)

அந்தணன்மாற்றந்தன்னையுமுட்கொண்டறநோக்குஞ்
சந்தனவெற்பன்மறவனைநோக்கத்தாழ்ந்தன்னு
னெந்தைபிரானேநாயடியேனின்றெய்ப்பாற
வந்துபுகுந்தேனந்தமரத்தின்மருங்கோர்சார்.

(இ-ள்.) அந்தணன் மாற்றம் தன்னையும் உட்கொண்டு - மறையவன் கூறிய வார்த்தையையும் தன்னுட்கொண்டு, அறம் நோக்கும் சந்தன வெற்பன் - தருமநெறியையுங் கூர்ந்துபார்க்கும் பொதியமலையையுடைய பாண்டியன், மறவனை நோக்க - வேடனைப்பார்க்க, அன்னான் தாழ்ந்து - அந்தவேடன் வணங்கி, எந்தை பிரானே - எனது தந்தையாகிய இறைவனே, நாய் அடியேன் - நாயினுங் கடைப்பட்டவடியேன், இன்று எய்ப்பு ஆற - இப்பொழுது இளைப்பாறும்படி, அந்த மரத்தின் மருங்கு ஓர் சார வந்து புகுந்தேன் - அந்த ஆலமரத்தின் ஓர்பக்கல்வந்து புகுந்து நின்றேன்.

ஓர்பால் நின்று மற்றொருபாற்கோடி. அந்தணன்வார்த்தையைக் கேட்டவுடனே வேடனை யொறுத்திலனென்பார் அறநோக்கும் சந்தனவெற்பன்மறவனைநோக்க என்றார். (உங)

ஐயேநானுங்கொன்றவனல்லேன்கொன்றானைக்
கையேன்வேறுங்கண்டிலனென்றானிவனாகத்
தெய்யேறுண்டவாறெவனென்றாரெதிர்நின்றார்
மெய்யேயையாயானறியேனிவ்வினையென்றான்.

(இ-ள்.) ஐயே நானும் கொன்றவன் அல்லேன் - ஐயே நானுங் கொலைசெய்தவனல்லேன், கொன்றானை கையேன் வேறும் கண்டிலன் என்றான் - கொலைசெய்தவனைக் கீழ்மகனாகிய யானும் வேறுகாணேன் என்று கூறினான், எதிர் நின்றார் இவன் ஆகத்து எய் ஏறுண்ட ஆறு எவன் என்றார் - எதிரே நின்றவர்கள் இவளது சரீரத்தி

Koviloor Digital Library

க் கம்புதைத்தருளியவனையோ தை என்று வினவினர், ஐயா மெய்யே யான் அறியே ன் இ வினைவு என்றான் - ஐயனே சத்தியமாகவே இச்செய்தியையானறியேன் என் று கூறினான்.

ஐயே - என்பது அச்சாதியிற்கூறும் மரியாதை வார்த்தை. எய் என்று முத னிலைத்தொழிற்பெயர் அம்பின்மேல் நின்றது தொழிலாகுபெயர். (உச)

இக்கொலைசெய்தான்யானலலென்றுளனென்னத்
தக்கவனேயோதறுகண்மறவனுரைமெய்யோ
ஒக்கவொறுத்தாலல்லதையுண்மைசெப்பானென்
றொக்கவுரைத்தார்மந்திருள்ளார்பிறரெல்லாம்.

(இ-ள்.) இக் கொலை செய்தான் யான் அலன் என்று உளன் என்ன தக்க வனேயோ - இந்தக் கொலையைச்செய்தவன் நான் அல்லேன் என்று பொய்கூறுகற செய்தேன் என்று மெய்கூறத்தக்க மரபிற் றோன்றினவனோ, தறு கண் மறவன் உரை மெய்யோ-(இவன் இயற்கையாகவே) கொலைத்தொழிலையுடையவேடன் இவன் கூறும்வார்த்தை யுண்மையோ, ஒக்க ஒறுத்தால் அல்லது உண்மை செப்பான் என்று - கடுமையாகத் தண்டித்தாலன்றி யுண்மைகூறுவானென்று, மந்திரர் உள்ளார் பிறர் எல்லாம் ஒக்க உரைத்தார் - அமைச்சரும் மற்றையாவரும் பொருந்தக் கூறினார்கள்.

மன்னன்றானுமற்றதுசெய்மின்னெனமள்ளர்
பின்னந்தண்டஞ்செய்தனர்கேட்கப்பிழையில்லான்
முன்னஞ்சொன்னசொற்பெயரானுமொழியாநின்
றின்னந்நிரந்தேருமினென்றானென்செய்வான்.

(இ-ள்.) மன்னன் தானும் மற்றது செய்மின் என - அரசனும் அதைச்செய் யுங்கள் என்று கூற, மள்ளர் பின்னம் தண்டம் செய்தனர் கேட்க - ஒறுப்பவரும் பி ன்பு ஒறுத்துக்கேட்க, பிழையில்லான் முன்னம் சொன்ன சொல் பெயரானும் மொ ழியாநின்றான் - குற்றமில்லாத அவ்வேடன் முன்புசொல்லிய சொல்லினின்றும்நீங் காதவனாகி நான் கொன்றேன் அல்லேன் என்றுகூறுகின்றான், இன்னம் நிர தேரு மின் என்றான் என்செய்வான் - இன்னமும் முற்றும் பார்த்தறியுங்கள் என்று பாண் டியன் கூறினான் (இதவன்றியாதுசெய்யவல்லான்.)

தண்டித்தற்கு உடன்படான் என்பான் மற்றதுசெய்மின் என்றான். மொழி யாநின்று என எதுநோக்கு நின்றது "கட்டில்வழிச்சேறனல்கூர்ந்தன்று" என்ற முதுமொழிக்காஞ்சியால் உணர்க. (உரு)

ஆற்றவொறுக்குந்தண்டமுமஞ்சானறைகின்ற
கூற்றமுமொன்றேகொன்றகுறிப்புமுகந்தோற்றான்
மாற்றவரேயோமாவோபுள்ளோவழிவந்த
கோறமெழுதுடையைக்கொன்றேன்பெறவல்லான்கொலைசெய்வான்.

(இ-ள்.) ஆற்ற ஒறுக்கும் தண்டமும் அஞ்சான் - மிகவும் தண்டிக்கும் தண் டத்தையுஞ் சிறிதுமஞ்சான், அறைகின்ற கூற்றமும் ஒன்றே - (தண்டத்திற்கஞ்சிச் சிறிதும் பிறழாது) இவன் கூறுகின்ற வார்த்தையுமொன்றே, கொன்ற குறிப்பும் மு கம் தோற்றான் - கொலைசெய்த குறிப்பினையும் சிறிதும் தன்முகத்திற் காட்டான், (ஆதலால்) ம ாற்றலரேயோ-(அந்நகரின்புறத்தவர்) பகைவரோ, மாவோ புள்ளோ

Koviloor Digital Library

அன்றிமிருகமோ பறவையோ, கொலை செய்வான் - கொலைசெய்யுமிவ்வேடன், வழிவந்த கோல் தொடியை கொன்று என் பெற வல்லான் - வழியில்வந்த இப்பெண்ணைக்கொன்று யாதுபயன்பெறவல்லான் (ஒன்றுமில்லையே.)

கோற்றொடி - கோல்போலத் திரண்ட வளையலையணிந்த முன்கையை யுடையாள் என நிற்றலால் விட்ட அன்மொழித்தொகை. (உஎ)

கைதவனுமிக்கானவனேயோபிறரோயோ
செய்தவர்யாரோவிக்கொலைவேட்டஞ்செய்தோர்மா
வெய்தவிலக்கிற்றப்பியகோறானேறுண்டிம்
மைதவழ்கண்ணாண்மாய்ந்தனளேயோவறியேனால்.

(இ-ள்.) இக் கொலை செய்தவர்-இந்தக்கொலைசெய்து முடித்தவர், கைதவன் ஆம் இ கானவனேயோ-வஞ்சகனாகிய இவ்வேடனோ, பிறரேயோ-பிறரோ, யாரோ-எவரோ, வேட்டஞ் செய்தோர் மா எய்த இலக்கில் தப்பிய கோல் தான் ஏறுண்டு-வேட்டையாடினவர்கள் மிருகத்தைக் குறியாகக்கொண்டெய்த குறியினின்றும் தப்பிய அம்பானது தைத்தருவுதலால், இ மை தவழ் கண்ணாள் மாய்ந்தனளேயோ - இத்தகைமையெழுதிய கண்களையுடைய பார்ப்பனி இறந்தாளோ, அறியேன்-(யான்) ஒன்றுமறியேன். (உஅ)

என்றுமுன்னித்தென்னவனின்னமிதுமுன்னூ
றன்றாலாயத்தக்கதெயென்றான்றகவிற்றம்
மன்னாரந்நூலாய்ந்திதுநூலாலமையாதான்
மன்னுதெய்வத்தாலேதேறும்வழியென்றார்.

(இ-ள்.) என்று முன்னி - என்றுகருதி, தென்னவன் - குலோத்துங்கபாண்டியன், இன்னம் இது முன் நூல் தன்னால் ஆய தக்கது என்றான் - இன்னமுமிதனை முதனூலால் ஆராய்ந்தறியத்தக்கது என்றுகூறினான், தகவில் தம் அன்னார் அந்நூல் ஆய்ந்து - தகுதியினால் தம்மையொத்த மூதறிவுடையோர் அந்த முதனூலை யாராய்ந்து, இது நூலால் அமையாது-இதனை அம்முதனூலால் ஆராய்ந்தமைதல்முடியாது, மன்னு தெய்வத்தாலே தேறும் வழி என்றார் - பாண்டியனே தெய்வத்தாலாராய்ந்தறியும் வழி இதுவென்று கூறினார்கள்.

முன்னூல் - வேதத்தைத்தழுவிய சோதிடநூல். அதனைப் பிறழ வுணர்ந்தார் என்பார் ஆய்ந்திதுநூலாலமையாது என்றார். ஐ சாரியை. (உகூ)

வேந்தர்கள்சிங்கம்வேதியனைப்பார்த்திதுநீர
வாய்ந்துனதுள்ளக்கவலையொழிப்பேனஞ்சேனின்
னேந்திழையிமக்கடனிறுவிப்போதென்றேவித்
தேந்துணர்வேம்பைத்தார்மறவோனைச்சிறைசெய்தான்.

(இ-ள்.) வேந்தர்கள் சிங்கம் வேதியனை பார்த்து - அரசர்களுள் ஆண்சிங்கம் போன்ற பாண்டியன் அந்தணனைப் பார்த்து, இது நீர ஆய்ந்து உனது உள்ளம் கவலை ஒழிப்பேன் - இந்தச்செய்தியைத் திரவாராய்ந்து உனது மனக்கவலையையொழிப்பேன், அஞ்சேல் - (நீசிறிதும்) அஞ்சாதே, இப்போது நின் ஏந்திழை ஈமம் கடன் நிறுவு என்று ஏவி - இப்போது உன்மனைவிக்குச்செய்யும் தகனமுதலிய ஈமக்கட

Koviloor Digital Library

ன்கலை டைத்தென்றேவி, வெங்கை தேம் தணர் தார்மறவோனை சிறை செய்தா ன் - வேங்கைமரத்தின் தேன்சிந்தும் பூக்கொத்தாலாகிய மாலையையணிந்த வேட னைச் சிறைச்சாலையில் அடைவித்தான். (கூ0)

மின்னனையாடன்செய்கடன்முற்றுமீண்டோனைத்
தன்னமர்கோயிற்கடைவயின்வைத்துத்தானேகித்
கொன்னவில்வேலான்றங்கள்குடிக்கோர்குலதெய்வ
மென்னவிருந்தாரடிகள்பணிந்தானிதுகூறும்.

(இ-ள்.) மின் அனையாள் தன் செய் கடன் முற்று மீண்டோனை - மின்னலை யொத்த தன்மனைவிக்குச் செய்தற்குரிய கடன்களைச் செய்துமுடித்துத் திரும்பியவ ந்தனை, தன் அமர் கோயில் கடை வயின் வைத்து - தன்னால் விரும்பப்பட்டகோ யிலின் கடைவாயிலில்வைத்து, கொல் நவில் வேலான் தான் ஏகி - கொலைத்தொழி ல்செய்யும் வேலையேந்தியபாண்டியன் தான்சென்று, தங்கள் குடிக்கு ஓர் குலதெய் வம் என்ன இருந்தார் அடிகள் பணிந்தான் இது கூறும் - தமதுகுடிக்கு ஒருகுலதெ ய்வமாகவிருந்த சோமசுந்தரக் கடவுளுடைய திருவடிகளைவணங்கி இது கூறுகின் றான்.

பாண்டியர்களுக்கு ஓரிடையூறுவரின் முன்சென்றுதவிர்க்குங் கடவுள் சோ மசுந்தரக்கடவுள் ஆதலால் தங்கள்குடிக் கோர் குலதெய்வமென்ன இருந்தார் என் றார். அதனை முன்னும் பின்னுங் கூறியிருத்தலைக்காண்க. (கூக)

கொச்சகக்கலிப்பா.

மன்றாடுமணியேயிம்மறவன்றான்பார்ப்பனியைக்
கொன்றானோபிறர்பிறிதாற்கொன்றதோவிதுவறநூ
லொன்றாலுமளப்பரிதாக்கிடந்ததாலுன்னருளா
லென்றாழ்வுகெடத்தேற்றாயென்றிரந்தானவ்வேலை.

(இ-ள்.) மன்று ஆடும் மணியே - வெள்ளியம்பலத்துள் நிருத்தஞ்செய்யும் மாணிக்கமே, இ மறவன் தான் பார்ப்பனியை கொன்றானோ - இந்தவேடன்தான் பார்ப்பனியைக் கொலைசெய்தவனோ, பிறர் பிறிது ஆல் கொன்றதோ-(இவனன்றிப்) பிறர் வேறுகாரணத்தினாற் கொலைசெய்ததோ, இது அற நூல் ஒன்றாலும் அளப்பு அரிதாக கிடந்தது - இச்செய்தி மிகவும் சோதிடநூலுள் ஒருநூலாலாகிலும் அளந் தறிதற்கரியதாக விருந்தது, உன் அருளால் என் தாழ்வுகெட தேற்றாய் என்று இர ந்தான் - உனது திருவருளாலே எனது குறைவுதீரத் தெளிவிப்பாய் என்று குறை இரந்தான், அ வேலை - அக்காலையில்.

இம்மறையவனுக்கு வழிப்பகையாயுள்ளவன் அதுவாயிலாகவந்து தனித்தவ ழிக் கொலைசெய்தானோவென் றையங்கொண்டான் என்பார் பிறர்பிறிதாற்கொன்ற தோ எனவும், உபாய நான்கனுள் தண்டம் கொடிதாதலால் என்றாழ்வுகெட எனவு ங்கூறினன். (கூஉ)

திருநகரின்புறம்பொருசார்குலவணிகத்தெருவின்க
ணொருமனையின்மணமுளதங்கதனாலேபொருந்துநீ
வருதியுனதுளங்கொருமாற்றமேலாந்தேற்றுதுமென்
றிருவிசும்பினகமிழித்தெழுந்ததாலொருவாக்கு.

Koviloor Digital Library

(இ-ள்.) திரு நகரின் புறம்பு ஒரு சார் வணிகர் குலம் தெருவின் கண்-இந்த மதுராநகரின் புறம்பே யொருபக்கத்தில் வணிகர்குலத்தெருவில், ஒரு மனையில் மணம் உளது - ஒருவீட்டில் கல்லியாணம் நடக்கின்றது, அங்கு அந்தணன் ஓடு ஒருங்கு நீ வருதி - அங்கு மறையவனோடு ஒருசேர நீவருவாய், உனது உளம் தேறாத மாற்றம் எல்லாம் தேற்றுதும் என்று - உன்மனந்தெளியாத செய்தியையெல்லாம் தெளிவிப்பேமென்று, இரு விசும்பின் அகடு கிழித்து ஒரு வாக்கு எழுந்தது - பெரியஆகாயத்தின் வயிற்றைக் கிழித்து ஒரு அசரீரி எழுந்தது. (௩௩)

திருவாக்குச்செவிமடுத்துச்செழியன்றன்புறங்கடையிற்
பெருவாக்குமறையவனோடொருங்கெய்திப்பெரும்பகல்போய்க்
கருவாக்குமருண்மாலைக்கங்குல்வாய்த்தன்னைவேற்
றுருவாக்கிக்கடிமனைபோயொருசிறைபுக்கினிதிருந்தான்.

(இ-ள்.) செழியன் திரு வாக்கு செவி மடுத்து - பாண்டியன் அந்த அசரீரியைத் தனது செவிநிரம்பக்கேட்டு, தன் புறம் கடையில் பெரு வாக்கு மறையவனோடு ஒருங்கு எய்தி-தனது கடைவாயிலிலுள்ள (சிவபெருமான்) பெருவாக்காகிய வேதத்தையுணர்ந்த அந்தணனோடு ஒருசேர விருந்து, பெரும் பகல் போய் - பெரிய பகற்பொழுது கழிந்து, கருவாக்கும் மருள் மாலை கங்குல் வாய் - கருநிறத்தைப்பெருக்கும் மயக்கும் மாலைக்காலத்தில்வந்த இராப்போதில், தன்னை வேறு உருவாக்கி கடி மனை போய் - தன்னை வேற்றுவடிவஞ்செய்து வணிகத்தெருவிலுள்ள கல்லியாணவீட்டிற்சென்று, ஒரு சிறை புக்கு இனிது இருந்தான் - ஒருபக்கத்தில் மறைந்து புகுந்து இடையூறின்றி யிருந்தான்.

அரசனமையத்தை மாற்றவர்மறைந்தொழுகி நாடித்திரிவாராதலால் தன்னை வேற்றுருவாக்கி என்றார். (௩௪)

அன்றிறைவனருளாலங்கவர்கேட்கவம்மனையின்
மன்றன்மகன்றனக்களந்தநாளுலப்பமறலியிருட்
குன்றமிரண்டெனவிடுத்தகொடும்பாசக்கையினர்வாய்
மென்றுவருஞ்சினத்தவரிலொருவனிதுவினவுமால்.

(இ-ள்.) அன்று இறைவன் அருளால் - அக்காலையில் சோமசுந்தரக்கடவுள் திருவருளால், அங்கு அவர் கேட்க - அவ்விடத்திற் பாண்டியனும் மறையவனுங்கேட்கும்படி, அ மனையில் மன்றல் மகன் தனக்கு அளந்த நாள் உலப்ப - அந்தக்கல்லியாணவீட்டில் மணமகனுக்கு வரையறுத்த ஆயுள்நாள்முடிய, மறலி-இயமனானவன், இருள் குன்றம் இரண்டு என்ன விடுத்த - கரிய விரண்டுமலைகளை யேவியதுபோலேவிய, கொடும் பாசம் கையினர் - கொடியபாசத்தை யேந்திய கையினரும், வாய் மென்றுவரும் சினத்தவரில்-வாயைமென்றுவரும் கோபமுமுடைய காலபடர்களுள், ஒருவன் இது வினவும் - ஒருவ னிது வினவுகின்றான்.

வினைப்பயன் தொலைந்ததென்பார் அளந்தநாளுலப்ப எனவும், கன்றிய கோபமுடையவர் என்பார் வாய் மென்றுவருஞ் சினத்தவர் எனவுங்கூறினார். (௩௫)

இன்றேயிங்கிவனுயிரைத்தருதியொனுமிரும்பகட்டுக்
குன்றேறுங்கோனுரையாற்கொள்வதெவன்பிணியுடம்பி

லொன்றேனுமிலனொருகாரணமின்றியுயிர்கொள்வ
தன்றேயென்செய்துமெனமற்றவனீதறைகிற்பான்.

(இ-ள்.) இன்றே இங்கு இவன் உயிரை தருதிர் என்றும் - இப்பொழுதே இம்மதுரையில் ஒரு குரோசத்துக்கப்பாலுள்ள இம்மணமகனுடைய வுயிரைக் கொடுப்பீர் என்றதுவும், இரும் பகடு குன்று ஏறும் கோன் உரையால் கொள்வது எவன் - பெரிய வெருமைக்கடாவாகிய மலையின்மேல் ஏறிவரும் தமது அரசனுடைய கட்டளையால் கவர்வது எவ்வாறு, பிணி உடம்பில் ஒன்றேனும் இலன் - இவனோ நோய் தன்னுடம்பில் சிறிதேனும் இல்லான், ஒரு காரணம் இன்றி உயிர் கொள்வது அன்றே - ஒருகாரணமுமில்லாமல் ஒருவனுயிரைக் கவர்வதல்லவே, என் செய்தும் என - நாம் யாதுசெய்வோமென்று கூற, மற்றவன் - வேறொருபடன், ஈது அறைகிற்பான் - இதனைக் கூறுகின்றான்.

காசியில் சிவசந்நிதிக்கு ஐந்துகுரோசத்துக்கப்பாலும், காளாஸ்திரியில் அவ்வாறும், சிதம்பரத்தில் இரண்டுகாதவழிக்கப்பாலும், மதுரையில் ஒரு குரோசத்துக்கப்பாலும் இயமன் சஞ்சரிக்கக்கூடுமாதலால் ஒரு குரோசத்துக்கப்பால் என்றும்.()

ஆற்றாலேறுண்டகணையருகொதுங்கும்பார்ப்பனியைக்
காற்றால்வீழ்த்தெவ்வாறுகவர்ந்தேமப்படியிந்தச்
சாற்றாரவாரத்திற்றாம்பறுத்துப்புறநின்ற
வீற்றாவைவெருளவிடுத்திவனாவிகவர்கென்றான்.

(இ-ள்.) ஆறு ஆல் ஏறுண்ட கணை - வழியில் நின்ற ஆலமரத்திற் சிக்குண்ட அம்பினை, அருகு ஒதுங்கும் பார்ப்பனியை - அவ்வாலமரத்தின் அருகில் நிழலிற்கொதுங்கிய பார்ப்பனப்பெண்ணை, காற்றால் வீழ்த்து எ ஆறு கவர்ந்தேம் - நாம் கொண்ட காற்றுவடிவால் அலைத்து வீழ்த்து எப்படி உயிர் கவர்ந்தோம், அப்படி - அப்படியே, புறம் நின்ற ஈற்று ஆவை - புறத்திற் கட்டுண்டுநின்ற ஈற்றுப்பசுவை, இந்த சாறு ஆர வாரத்தில் தாம்பு அறுத்து - இந்தக்கலியாண ஆரவாரத்தினால் சிக்கெனக்கட்டிய தாம்பினையறுத்து, வெருள விடுத்து இவன் ஆவி கவர்க என்றான் - அது வெருண்டோடத் தாக்கி இவனுடைய உயிரைக் கொள்ளை கொள்ளக்கடவோமென்று கூறினான்.

காற்றுக் காலபடர்வழியாயிருத்தலின்மையால் நாம்கொண்ட காற்றுவடிவால் எனப் பொருள்கூறினும். (கஎ)

அந்தமொழிகேட்டரசனருமறையோய்கேட்டனையோ
விந்தமொழியெனப்பனவனிவ்வாறிறந்தாலென்
பைந்தொடியாளிறந்ததுமப்படியேயென்மனக்கவலை
சிந்தவிதுகாண்பேனென்றொருங்கிருந்தான்றென்னனெடும்.

(இ-ள்.) அரசன் அந்த மொழி கேட்டு - பாண்டியன் யமபடர் தம்முட்கூறிய அந்தவார்த்தையைக்கேட்டு, அரு மறையோய் இந்த மொழி கேட்டனையோ என - அரியவேதங்களையுணர்ந்த அந்தணனே யிந்தவார்த்தையைக் கேட்டாயோ வென்றுகூற, பனவன் இவன் இப்போது இறந்தால் - வேட்டவந்தணன் இந்த மணமகன் இந்த வகையாக் செத்தால், என் பைந்தொடியாள் இறந்ததும் அப்படியே - என் மனைவி செத்ததுவுமப்படியே, என் மனக் கவலை சிந்த இது காண்பேன் என்று - என்ம

Koviloor Digital Library

னவருத்தங்கெட இக்காட்சியையும் நான் காண்பேனென் றுகூறி, தென்னன் ஒடும் ஒருங்கு இருந்தான் - பாண்டியனோடும் அவ்விடத்தி லொருசேரவிருந்தான்.

அசரீரி யுண்மையை யறியாததலால் என் மனக்கவலைசிந்த விதுகாண்பேன் என்றான். (கஅ)

ஒட்டியபல்கிளை துவன்றியொல்லொலிமங்கலந்தொடங்கக்
கொட்டியபல்லியமுழங்கக்குழுமியவோசையின்வெருண்டு
கட்டியதாம்பிறப்புனிற்றுக்கற்றுவொன்றெதிர்ந்தோடி.
முட்டியதான் மணமகனைமுடிந்ததாலவனுவி.

(இ-ள்.) ஒட்டிய பல் கிளை துவன்றி ஒல்லொலி மங்கலம் தொடங்க - விடாது தொடர்ந்துவந்த பலசுற்றத்தாரும் தம்முள் நெருங்கி ஒல்லென்றுமொலியோடு மங்கலச்செயல்களை ஒருபால் தொடங்கவும், கொட்டியபல் இயம் முழங்க-தாக்கிய பலவாச்சியங்கள் ஒருபால்முழங்கவும், குழுமிய ஓசையின் வெருண்டு - (இவ்வாறு) ஒருசேரத்திரண்ட வோசையால் பயந்து, கட்டிய தாம்பு இற - பிணித்தகயிறு அற, புனிறு கன்று ஆ ஒன்று எதிர்ந்து ஓடி மணமகனை முட்டியது - ஈனுமையையுடைய கன்றையுடைய பசுவொன்று எதிர்ந்துசென்றோடி மணமகனை முட்டியது, அவன் ஆவி முடிந்தது - அம்மணமகன் பிராணன் ஒழிந்தது.

என்றுங் கேட்டறியாத முழக்கமாதலால் குழுமிய வோசையின் வெருண்டு என்றார். (ககூ)

மணமகனேபிணமகனாய்மணப்பறையேபிணப்பறையா
யணியிழையார்வாழ்த்தொலிபோயழுகையொலியாய்க்கழியக்
கணமதனிற்பிறந்திறுமிக்காயத்தின்வரும்பயனை
யுணர்வுடையார்பெறுவருணர்வொன்றுமிலார்க்கொன்றுமிலை.

(இ-ள்.) மண மகனே பிண மகனாய் - மணமகனே உயிர்கழிந்த பிணமாய் மணப்பறையே பிணப்பறை ஆய் - மணத்திற்குரிய வாச்சியமே சாக்காட்டுப்பறையாய், அணி இழை யார் வாழ்த்தொலி போய் - அணிந்த வாபரணங்களையுடைய சுபமங்கலிகள் வாழ்த்தொலி கழிந்து, அழுகை ஒலி ஆய் கழிய - அந்த மணமனை முற்றும் அழுகை யொலி யாய் முடிய, கணம் அதனில் பிறந்து இறும் இக்காயத்தின் வரும் பயனை-ஒருகணப்பொழுதில் (நீர்க்குமிழிபோற்) றோன்றி அழியும் இந்தச் சரீரத்தால்வரு பிரயோசனத்தை, உணர்வு உடையார் பெறுவர் - அறிவுடையவர் அடைவார், உணர்வு ஒன்றும் இல்லார்க்கு ஒன்றும் இல்லை - அறிவுசிறிதும் இல்லார்க்குச் சிறிதும் பெறுதலில்லை.

கணமதனிற் பிறந்திறுமிக்காயம் என்றமையால் நீர்க் குமிழிபோற் றோன்றியழியும் என்றும். "மன்றற்கறைக்க மணப்பறையாயின - அன்றவர்க்காங்கே பிணப்பறையாய்ப்-பின்றையொலித்தலு முண்டாமென்று" என்ற நாலடியை இது புதுக்கியதாதலால் அதனிற் கூறியபொருளை இங்கு விரித்தும் "உய்ந்தபோமாறே-வலிக்குமாமாண்டார்மனம்" என்பதின் பொருள்தோன்ற இக்காயத்தின் வரும்பயனை உணர்வுடையார்பெறுவருணர் வொன்றுமிலார்க்கொன்றுமிலை என்பதனால் விரித்தும் கூறினார். உயிர்கழிந்த வுடம்பைப் "படுமகன்கிடக்கைகாணூஉ" என்றாற்போலப் பிணமகனாய் என்றார். (உ0)

கண்டானந்தணனென்னகாரியஞ்செய்தேனெனத்தன்
வண்டார்பூங்குழன்மனைவிமாட்சியிறுங்கழிதுன்பங்
கொண்டான்மற்றவனொடுந்தன்கோயில்புகுந்தலர்வேப்பந்
தண்டாரானமைச்சர்க்கும்பிறர்க்குமிதுசாற்றினான்.

(இ-ள்.) அந்தணன் கண்டான் - மறையவன் பார்த்தான், என்ன காரியம் செய்தேன் என - யானென்ன காரியஞ்செய்து முடித்தேனென்று, தன் வண்டு ஆர் பூங்குழல் மனைவி மாட்சி இறும் - தனது வண்டுகள் மொய்த்த மலரையணிந்த கூந்தலையுடைய மனைவி மாண்டதினும், கழி துன்பம் கொண்டான் - மிக்க துன்பத்தையடைந்தான், அலர் வேப்பம் தண் தாரான் - வேப்பமலரால் ஆகிய தண்ணிய மாலையையணிந்த பாண்டியன், மற்று அவனொடும் தன் கோயில் புகுந்து - அக்கலையோனான அந்தணனொடும் தனது கோயிலுட்சென்று, அமைச்சர்க்கும் பிறர்க்கும் இது சாற்றினான் - மந்திரிகளுக்கும் அவரொழிந்த ஏனையோர்க்கும் இந்த வியப்பினையெடுத்துக் கூறினான்.

மாட்சி - மாட்சி என்னுந் தொழிற்பெயரின் முதனிலை மாள் ஆதலால் - மாண்டதினும் என்று பொருள் கூறினும். ஒன்றுமுணராத வேடனுக்குத் தான் பெருந்துன்புறுத்தியது பெரும்பாதகமாதலால் மனைவிமாட்சியிறுங்கழி துன்பங்கொண்டான் என்றார். (௪௧)

மறையவனையின்றுமொருமணமுடித்துக்கோடியென
நிறையவரும்பொருளீந்துநீபோதியெனவிடுத்துச்
சிறையழுவத்திடைக்கிடந்தசெடித்தலையவிடிக்குரல
கறையுடல்வேடனைத்தொடுத்தகால்யாப்புக்கழல்வித்து.

(இ-ள்.) மறையவனை இன்றும் ஒரு மணம் முடித்துக் கோடி என - அந்தணனை நோக்கி இன்றுமொரு விவாகத்தை முடித்துக்கொள்வாய் என்று, அரும்பொருள் நிறைய ஈந்து - அரியபொருளை நிறையத்தந்து, நீ போதி என விடுத்து - நீ போவாய் என்று விடைகொடுத்து, சிறை அழுவத்து இடை கிடந்த - சிறைக்கூடமாகிய கொடியநிலத்தில் அழுந்திக்கிடந்த, செடி தலைய விடி குரல - முடை நாற்றம் பொருந்திய தலையையுடைய இடிபோன்ற குரலையுடைய, கறை உடல் வேடனை - கரியசரீரத்தையுடைய வேடனை, தொடுத்த கால் யாப்பு கழல்வித்து - பூட்டிய கால் விலங்கைத்தறித்து.

வேறு [illegible] தலைய, குரல என்னும் வினையடியாகப் பிறந்த குறிப்பு வினைப் பெயரெச்சங்கள் வேடன் என்னும் பெயரைத் தனித்தனி கொண்டன. கறையுடல் என்பது இடைப்பிறவரல். (௪௨).

தெளியாதேயாமிழைத்ததீத்தண்டம்பொறுத்தியென
விளியாவின்னருள்சுரந்துவேண்டுவனநனிநல்கி
யளியூறுமனத்தரசனவ்வயவனைவிடைச்செலுத்திக்
களியானைவிழவெய்தகோளரியைப்போய்ப்பணிவான்.

(இ-ள்.) யாம் தெளியாதே இழைத்த தீத்தண்டம் பொறுத்தி என - யாம் அறியாமற்செய்த கொடுந்தண்டத்தைப் பொறுப்பாய் என்று, விளியா இன் அருள் சுரந்து - அழிவில்லாத இனிய அருள்செய்து, வேண்டுவன நனி நல்கி - அவன் வே

ண்டுவனவற்றை நிரம்பத்தந்து, தனி ஆளுத மனத்து அரசன் - தன்னனிங்காத மனத்தையுடைய பாண்டியன், அவனை அவன் இடை செலுத்தி-அந்தவேடனை அவனிருக்குமிடத்திற் செலுத்தி - கனியானைவிழ எய்த கௌரியனை போய் பணிவான்-சமணரேவிய மதமயக்கத்தையுடைய யானைபட அம்புதொட்ட சௌந்தரபாண்டியராகிய சோமசுந்தரக்கடவுளைத் திருக்கோயிலுட்சென்று வணங்குவான்.

மநுநீதி கோடாத அரசனாதலால் தனியானு மனத்தரசன் எனவும், அத்தன்மையுடையோனாதலால் யாமிழைத்த நீர்தண்டம் பொறுத்தியென இன்சொற்கூறியும், அவனுக்குத் நீத்தண்டத்தால் வந்தகவலையாற வேண்டுவன கொடுத்தலால் தனி நல்கி எனவும், இவற்ருற் சாமதானேபாயங்கள் செய்தமை தோன்ற அவனை யவனிடைச் செலுத்தியெனவுங் கூறினர். (சங)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

ஆதரம்பெருகப்பாவியேன்பொருட்டெம்மடிகணீரும்பழியஞ்சு
நாதராயிருந்தீரெந்தையார்க்குண்டேநான்செயத்தக்கதொன்றென்னுக்
காதலிற்புகழ்ந்துபன்முறைபழிச்சிக்கரையின்மாபூசனைசிறப்பித்
தேதமதகற்றியுலகினுக்குயிராயிருந்தனனிறைகுலோத்துங்கன்.

(இ-ள்.) எம் அடிகள் நீர்-எமது அடிகளே நீவிர், ஆதரம் பெருக பாவியேன் பொருட்டு-அன்புமிக்கூரப் பாவியேனுகிய என் நிமித்தமாக, அரும்பழி அஞ்சு நாதர் ஆய் இருந்தீர் - அரியபழி யஞ்சிய நாதராய் இருந்தீர். எந்தை யார்க்கு நான் செயத்தக்கது ஒன்று உண்டோ என்னு - என் தந்தையாராகிய தேவரீர்க்கு என்னுற் செய்யத்தக்கது ஒரு கைமாறுளதோவென்று, காதலில்புகழ்ந்து - பேரன்பால்புகழ்ந்து, பல் முறை பழிச்சி கரையில் மாபூசனை சிறப்பித்து - பலதரம்துதித்து அளவிறந்த மகாபூசனையை ஆதி மறையவர்களால் சிறக்கச்செய்து, உலகினுக்கு ஏதம் அது அகற்றி உயிராய்-குடிகளுக்குவரும் ஐந்துகுற்றங்களையுமொழித்துத் தானொரு உயிராய், இறை குலோத்துங்கன் இருந்தனன்-அரசனுகிய குலோத்துங்கபாண்டியன் களிகூர்ந்திருந்தான்.

பாண்டியன் யாதோர் குற்றமுமில்லாத வேடனைத் தெரிது கடுந்தண்டஞ் செய்தமையால், அவனுக்கு அறியாமையால் வரும் அரும்பழியை யஞ்சி யோம்பினமையின் இத்திருவிளையாடலால் அரும்பழி யஞ்சுநாதர் என ஒரு திருப்பெயர் போந்தமையின் அரும்பழி யஞ்சுநாதராயிருந்தீர் எனவும், என்னைப்பழிக்கடலினின்று கரையேற்றிய தேவரீருக்கு என்னுற்செய்யுங் கைம்மாறு சிறிதுமின்மையால் எந்தையார்க்குண்டே நான் செயத்தக்கதொன்றென்னு என அவன் கூற்ருகவும் சிவபிரானு வப்பச்செய்யும் பணி துதித்தலும் பூசனையுமாதலாற் புகழ்ந்து பன்முறை பழிச்சிக் கரையின் மாபூசனை சிறப்பித்து எனவுங் கூறினர். (சச)

பழியஞ்சினபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கருருரு.

Koviloor Digital Library

இருபத்தாறாவது.

மாபாதகந்தீர்த்தபடலம்.

கலிவிருத்தம்.

வேதநாயகன்வெம்பழியஞ்சிய
நாதனானநலனிதுநல்கிய
தாதையைக்கொலைசெய்ததனயன்மா
பாதகந்தனைத்தீர்த்தமைபாடுவாம்.

(இ-ள்.) வேதம் நாயகன் - வேதங்கட்கிறைவனாகிய சோமசுந்தரக்கடவுள், வெம்பழி அஞ்சிய நாதன் ஆன நலன் இது - அரும்பழிக்கஞ்சிய நாதனாகிய திருவிளையாடலிது, நல்கிய தாதையை கொலை செய்த தனயன் - தன்னைப்பெற்றபிதாவைக் கொலைசெய்த யந்தணனுடைய. மாபாதகந்தனை தீர்த்தமைபாடுவாம் - மகாபாதகத்தைத்தீர்த்த திருவிளையாடலை இனிக்கூறுவாம்.

விதிவிலக்கமைந்த வேதத்துக்கு இறைவனாதலால் வெம்பழியஞ்சிய நாதனானார் என்பார் வேதநாயகன் எனவும், வினைத்தலங்களிலொழிந்தற்கரிய மாபாதகம் இத்தலத்திலொழியுமென்பார் மாபாதகந்தனைத் தீர்த்தமை யெனவுங் கூறினர்.(க)

விரைசெய்மாலைக்குலோத்துங்கமீனவன்
திரைசெய்நீர்நிலஞ்செங்கோல்செலத்தனி
யரசுசெய்யுமந்நாளிலவந்தியென்
றுரைசெய்மாநகரானொருபூசுரன்

(இ-ள்.) விரை செய் மாலை குலோத்துங்க மீனவன் - வாசம் வீசும் மலர் மாலையை யணிந்த குலோத்துங்க பாண்டியன், திரை செய் நீர் நிலம் செங்கோல் செல்ல-அலைவீசும் கடல்சூழ்ந்த நிலவுலகமுற்றும் தனது செங்கோல் செல்ல, தனி அரசு செய்யும் அந்நாளில்-ஒப்பில்லா வரசியலை நடாத்துமக்காலையில், அவந்தி என்று உரைசெய்மாநகரான் - அவந்தியென்று கூறும் பெரிய நகரிலுள்ளான், ஒரு பூசுரன் - ஒருவந்தணன். (உ)


வெருவுங்காய்சினமாறியவேதியன்
மருவுங்காதன்மனையெனும்பேரினா
டிருவுங்காமன்றன்றேவியுமன்புனை
யுருவுங்காமுறுமொப்பில்வனப்பினாள்.

(இ-ள்.) வெருவும் காய் சினம் மாறிய வேதியன் - கண்டோர் அஞ்சுங்கொடிய கோபம் நீங்கிய அந்த அந்தணனுடைய, காதல் மருவும் மனை என்னும் பேரினாள் - விரும்பப்பட்ட மனைவியென்பவள், திருவும் காமன் தன் தேவியும்-இலட்சுமியும் மன்மதன் மனைவியாகிய இரதியும், மன் புனை உருவும் காமுறும் ஒப்பு இல் வனப்பினாள்-சுதையாற்செய்த பதுமையும் தனக்கு ஒப்பில்லாத அழகினையுடையவள்.

தன்புதல்வன் செய்த ஆற்றுதற்கரிய பேரபராதத்தையும் அடக்கியொழுகிய பெருஞ்சாந்தனென்பார் காய் சினமாறிய வேதியன் எனவும், அவன் எல்லையில்லாத சாந்தகுணம்போல் அவன் மனையாளும் நிலையியற்பொருளும் விரும்பும்

Koviloor Digital Library

மகாபாதகம் தீர்த்த திருவிளையாடல்.



Koviloor Digital Library

Koviloor Digital Library

எல்லேயில்லாத அழகுடையவள் என்பார் மண்புனையுருவுங்காமுறும்நுப்பில்வனப்பினுள் எனவுங் கூறினர் "மண்மாண்புனைபாவையற்று" என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் சுதையால் மாட்சிமைப்படப்புனைந்த எனப் பொருள்கூறியிருத்தல் காண்க. (௩)

படியிலோவியப்பாவையொப்பாகிய
வடிவினுளவள்பான்மகனென்றொரு
கொடியபாவிபிறந்துகொலைமுதல்
கடியபாவக்கலன்போல்வளருநாள்.

(இ-ள்.) படி யில் ஓவியம் பாவை ஒப்பாகிய வடிவினுள் - நிலவுலகில் சித்திரித்த பதுமையையொத்த வடிவினையுடையவள், அவள் பால்-அவ்வடிவுவாய்ந்த பார்ப்பனியிடத்து, மகன் என்று ஒரு கொடிய பாவி பிறந்து - மகனென்று ஒரு கொடும்பாவிபிறந்து, கொலை முதல் கடிய பாவம் கலன் போல் வளரும் நாள் - கொலைமுதலிய கடும்பாவங்கள் கொள் கலம்போல அவன்வளருங்காலையில்.

கொலை, களவு, கள், காமம், குருத்துரோகம் என்னும் பஞ்சமாபாதகங்கள் என்பார் கொலைமுதல் கடியபாவம் என்றார். (௪)

கோடிகோடியடுஞ்சிலைகோட்டியே
கோடிகோடிகொடுங்கணைபூட்டியே
கோடிகோடிவிகாரமுங்கூட்டியே
கோடிகோடியனங்கரெய்தார்கொலோ.

(இ-ள்.) அடும் சிலை கோடி கோடி கோட்டி - கொல்லும்வில்லை அநேகங்கோடிவளைத்து, கொடுங்கணை கோடி கோடி பூட்டி-கொடியபாணங்களை அநேகங்கோடி யவற்றிலேறிட்டு, கோடி கோடி விகாரமும் கூட்டியே - அநேகங்கோடி சுப்பிரயோகமுதலிய விகாரங்களையு மப்பாணங்களோடுசேர்த்து, கோடி கோடி அனங்கர் எய்தார் கொலோ - அநேகங்கோடி மன்மதர்கள் அப்பாதகன்மேற் பிரயோகஞ்செய்தார்களோ (யாம் அறியோம்.)

விகாரங்களாவன - சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம்; சுப்பிரயோகமாவது - சொல்லும்நினைவும் மாறுபடுதல், விப்பிரயோகமாவது - பெருமூச்செறிந்துவருந்துதல், சோகமாவது - வெதும்புதல், உண்பன தெவிட்டல்; மோகமாவது - வருந்துதல், சொற்பலபிதற்றல்; மரணமாவது - அயர்த்தல், மயங்கல்; இவைமுறையே தாமரை, மாம்பூ, அசோகு, முல்லை, நீலோற்பலம் என்னும் ஐந்துபாணங்களால்வருவன. (௫)

இளமைச்செவ்வியயாக்கையன்மையல்கூர்
வளமைக்காமமும்வல்வினையுந்நிறைத்
தளைவிட்டீர்த்தலிற்றன்னைவயிற்றிடை
விளைவித்தீன்றவடன்னைவிரும்பினன்

(இ-ள்.) இளமை செவ்விய யாக்கையன்-இளமைப்பருவத்தையுடைய சரீரமுடையபாதகன், மையல்கூர் வளமை காமமும் வல்வினையும்-மயக்கமிக்க குறைவில்லாத காமமும் தீவினையும், நிறை தளைவிட்டு ஈர்த்தலின் - நிறையாகியபாசத்தை

விட்டு இருத்தலால், தன்னை வயிறு இடை விளைவித்த ஈன்றவள் தன்னை விரும்பி னன் - தன்னைத் தன்வயிற்றில்தோன்றச்செய்த பெற்றதாயைவிரும்பினன்.
இறையாவது-காமமும் தீவினையும் தத்தம்வழி யவன்மனத்தை இழுத்துதல்.

அன்னையென்றுமழிதகையாளகத்
தின்றுயிர்த்துணையும்மனக்காவலாய்
மன்றுநாணமடமுதலால்வருந்
தன்னைநீங்கலிற்றுறுமொத்தாளரோ.

(இ-ள்.) அன்னை என்றும் அழிதகையாள் - தாயென்றுசொல்லப்படும் அழி தற்புடையவள், அகத்து - தன்மனத்தில், இன் உயிர் துணையும் - தனது இனிய உயி ர்க்கோர்துணையையும், மனக்காவலாய் மன்றும் நாணம் மடம் முதல் நால்வரும்- தன்மனத்துக்கோர் காவலாயுள்ளபெற்ற நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்குகாவற்காரரும், தன்னை நீங்கலில் தானும் ஒத்தாள் - தன்னைவிட்டு நீங்குத லால் தானுமதற்குடன்பட்டாள்.
நாணம் ஆவது - தன்கணவனையன்றி மற்றெல்லாக்காளையும் நாணல், மடம் ஆவது-தன்கணவன்குணத்தையன்றி மற்றையோர்குணத்தை அறியாமை, அச்சமா வது - ஆமைபோலத் தன்கணவன்முன்னன்றி பேடையோர்சாயைதோன்றினும் கர சரணாதிகளொடுக்கிப் பதுக்கல், பயிர்ப்பு ஆவது - தன்கணவன்சுகத்தையன்றியே னையோர்சுகத்தை மலத்தைக்கண்டு அருவருத்தல். (எ)

இன்பமோசிறிதாகுமிதில்வருந்
துன்பமோகரையில்லாத்தொடுகட
லென்பதாருமிவனலறியவிவ்
வன்பதானவினையால்வருந்துவான்.

(இ-ள்.) இன்பமோ சிறிதாகும் - காமத்தால்வரும் இன்பமோ அற்பமாகும், இதில் வரும் துன்பமோ கரை இல்லாத தொடுகடல் என்பது - இதனால்வருந்துன்ப மோ கரையில்லாதசமுத்திரமாமென்னும்பழமொழியை, ஆரும் இவனால் அறிய-எவ ரும் இவனால் அறிய, இ வன்பு ஆன வினையால் வருந்துவான் - இந்தக்கொடியதீவி னையால் வருந்தத்தொடங்கினான்.
வன்பது அது பகுதிப்பொருள்விகுதி. (அ)

மையலாகமதியைவிழுங்கவக்
கையனையைக்கலந்தொழுகுஞ்செய
லையன்முன்குறிப்பாற்கண்டயற்செவிக்
குய்யலாவண்ணமுள்ளத்தடக்கினன்.

(இ-ள்.) மையல் ராகம் - காமமயக்கமென்னும் இராகுவென்னும்பாம்பான து, மதியை விழுங்க - தனது அறிவாகிய சந்திரனைவிழுங்க, அ கையன் - அந்தச் சண்டாளன், அனைய கலந்து ஒழுகும் செயல் - தனதுதாயைப்புணர்ந்து நடக்கும் செய்தியை, ஐயன் தான் குறிப்பால் கண்டு - அவனதுபிதா குறிப்பாலுணர்ந்து, அ யல் செவிக்கு உய்யலாத வண்ணம் - பிறர்செவியிலேறாதவண்ணம், உள்ளத்து அட க்கினன் - தனதுமனத்திலடக்கியொழுகினன்.

Koviloor Digital Library

அடிபெயர்த்துவைக்கலாற்றாத மானக்கேடு என்பார் அயற்செவிக்குய்யலா வல்லை முள்ளத்தடக்கினான் என்றார். (௯)

வேற்றோர்வைகல்வெளிப்படக்கண்டறஞ்
சாற்றுநாவினன்வேறொன்றுஞ்சாற்றிலன்
சீற்றமேல்கொடுசெல்வன்கொல்வேனென
வேற்றெழுந்தனனீன்றாள்விலக்குவாள்.

(இ-ள்.) அறம் சாற்று நாவினன் - தருமவொழுக்கைவிதந்து கூறும்நாவை யுடையவந்தணன், வேறு ஓர் வைகல் வெளிப்பட கண்டு - (குறிப்பாகவுணர்ந்ததுமன்றி) வேறொருதினம் வெளியாகக்கண்டு, வேறொன்றும் சாற்றிலன் - வேறொன்றுங்கூறாது வாளாவிருந்தனன், செல்வன் சீற்றம் மேல் கொடு - (கொடும்பாவியாகிய) புத்திரன்கோபத்தைமேற்கொண்டு, கொல்வேன்என ஏற்று எழுந்தனன் - (பிதாவைக்) கொலைசெய்வேனென்று கொலைமேற்கொண்டு எழுந்தான், ஈன்றாள் விலக்குவாள் - பெற்றவள்விலக்குகின்றாள்.

தீராப்பாவியென்னும் இழிபுதோன்றச் செல்வன் என்னும் சொல்லாற்றல் படக்கூறினார். (௧௦)

தாயினின்பநுகர்ந்தனை தந்தையைக்
காயிலென்பெறுவாயெனக்காமுகர்க்
காயிலன்னையிலப்பனில்லென்பய
னேயிலின்னருளென்னறமென்னென்றான்.

(இ-ள்.) தாயில் இன்பம் நுகர்ந்தனை - தாயினிடத்து இன்பமநுபவித்தாய், தந்தையை காயில் என்பெறுவாய் என - பிதாவைக்கொன்றால் யாது பயன்பெறுவாய் என்றுகூற, காமுகர்க்கு ஆயில் அன்னையில் அப்பன் இல் பயன் என் - காமிகளுக்காராய்ந்தபார்க்கில் தாயாற்பயன் என்ன தந்தையாற்பயன் என்ன, நேயில் என் - அன்பால்விளையும்பயன் என்ன, இன் அருளில் என் - இனியசிவகருணையால் விளையும் பயனென்ன, அறத்தில் என் என்றான் - தருமத்தால்விளையும் பயனென்ன என்று கூறினான்.

ஏதுப்பொருளில்வந்த இல்லென்னும் ஐந்தனுருபை அருள் அறம் என்பவற்றோடும், என் என்னும் வினாவினைக் குறிப்புமுற்றை அன்னையில் நேயில் என்பவற்றோடும் கூட்டுக. நே-அன்பு. (௧௧)

மண்தொடுங்கருவிப்படைவன்கையிற்
கொண்டுதாதைகுரவனென்றோர்கிலான்
றுண்டமாகத்துணித்தானுய்வாய்முகந்
துண்டகாமநறவாலுணர்விலான்.

(இ-ள்.) மண் தொடும் கருவி படை-மண்வெட்டுங்கருவியை, வன் கையில் கொண்டு - தனதுமுருட்டுக்கையிற்கொண்டு, தாதை குரவன் என்று ஓர்கிலான்- தனதுபிதாவை ஐந்துகுரவருள் ஒருகுரவனென்றுணராது, ஆய் வாய் முகந்து உண்ட காமநறவால் உணர்வு இல்லான் - தனதுதாயின்வாயில் முகந்துண்ட காமமென்னுமதுவால் அறிவிழந்தபாவி, துண்டமாக துணித்தான் - துண்டுபடவெட்டினான்.

ஐங்குரவராவார் - அரசன், உபாத்தியாயன், பிதா, தமையன், ஆசாரியன். இவர்கட்குத் தவறுசெய்தல் மாபாதகம் என்பர். தாதை குரவனென்றோர்கிலான் என்றார். "ஐங்குரவராணைமறுத்தலும்" எனப்பிறர்கூறுதல்காண்க. (௧௨)

மைக்கருங்கங்குல்வாய்க்கொன்றதாதைக்குத்
தக்கதித்தவிசிட்டன்னைதன்னொடுங்
கைக்கடங்குபொருளொடுங்கன்னெறி
புக்கனன்புடைசூழ்ந்தார்புளிஞரே.

(இ-ள்.) மைக்கரும் கங்குல்வாய்-மைபோலும் கருநிறம்வாய்ந்தஇராப்போதில், கொன்றதாதைக்கு - தன்னால்கொல்லப்பட்ட பிதாவுக்கு, தக்கதி தவிசு இட்டு-(அவ்விராப்போதிலேயே) பொருந்திய நீர்க்கடன்முடித்து, அன்னை தன் ஒடும் கைக்கு அடங்கு பொருளொடும் - தனதுதாயோடும் தான்சுமத்தற்கமைந்த திரவியத்தோடும், கல் நெறி புக்கனன் - பாலைவழியாகச்சென்றனன். புளிஞர் புடைசூழ்ந்தார் - ஆறலைக்கும்வேடர் அவன்புறத்தில்வந்து சூழ்ந்தார்கள்.

பருக்கைக்கல்நெருங்கியநிலம் பாலையாதலால் கன்னெறியென்பதற்குப் பாலைவழியாக என்றாம். (௧௩)

எய்யுங்கோறொடுவில்லரிடிக்குநேர்
செய்யுஞ்சொல்லினர்செல்லலைநில்லெனக்
கையிலுள்ளவுங்கைக்கொண்டுகாரிகைத்
தையறன்னையுந்தாங்கொடுபோயினார்.

(இ-ள்.) எய்யும் கோல்தொடு வில்லர் - எய்யுமம்பினை யேறிட்டவில்லையும், இடிக்கு நேர்செய்யும் சொல்லினர் - இடியையொத்த சொல்லையுமுடையவராகி, செல்லலை நில் என - செல்லுதல் ஒழிக என்றதட்டி, கையில் உள்ளவும் கைக்கொண்டு - அவன்கையிலுள்ள பொருள்முற்றும் கொள்ளைகொண்டு, காரிகை தையல் தன்னையும் தாம் கொடுபோயினர் - அவனன்னையாகிய பார்ப்பனியையும் தாம் கவர்ந்துசென்றார்கள்.

ஐ விகுதி-வியங்கோட்பொருட்டாதலால் செல்லலை எதிர்மறை வியங்கோள் வினைமுற்று காரிகை தையல் ஒருபொருட்கிளவி. (௧௪)

சென்றுசேணிடைச்சிக்கறவாழலா
மென்றவெண்ணமொன்றெய்தியவண்ணமொன்
றென்றுநாமெண்ணத்தெய்வமொன்றெண்ணிய
தென்றவார்த்தையிவனிடைப்பட்டதால்.

(இ-ள்.) சேண் இடை சென்று-தூரநாட்டிற் சென்று, சிக்கு அற வாழலாம் என்ற எண்ணம் ஒன்று - சிக்கின்றிவாழலாமென்று மாபாதகன்கருதிய வெண்ணமொன்று, எய்தியவண்ணம் ஒன்று - அவனுக்கிடையில்வந்தவகையொன்று, (ஆதலால்) நாம் ஒன்று எண்ண தெய்வம் ஒன்று எண்ணியது என்றவார்த்தை-நாமொன்றுகருதத் தெய்வமொன்றுகருதியதென்றபழமொழி, இவன் இடைபட்டது-இந்த மாபாதகனிடத்திற் புலப்பட்டது.

தொடங்கியவொருபொருளைமுடித்தற்கு உலகவழக்கைவிதந்து கூறினமையால் வேற்றுப்பொருள்வைப்பணி. (௧௫)

Koviloor Digital Library

தாதைதன்றனையற்கினியார்துணை
மாதர்யாயைமறவர்கைக்கொள்ளவிப்
போதுதான்றுணையென்பவன்போன்றுமா
பாதகத்துருவாய்வந்துபற்றினான்.

(இ-ள்.) தாதை தன் தனயற்கு துணை இனியார் - (தன்மகனால் வெட்டப்பட்ட)அந்தணன்தனதுபுத்திரனுக்குத்துணையினியார், மாதர் யாயை மறவர்கைக்கொள்ள-(துணையாய் இருந்த) அழகிய அவனதுதாயை ஆறலைக்கும் வேடர்கைக்கொள்ளுதலால், இ போதுதான் துணை என்பவன் போன்று-துணை இழந்தவிக்காலையில் தானேதுணை என்று தொடர்ந்தவனையொத்து, மாபாதகத்து உருவாய் வந்து பற்றினான்-அவன்செய்த பிரமபாவத்தால் பிரமகத்திசாயையாய் அவனைவந்துபிடித்தான்.

யாய்தாய் இதுபுணர்ச்சியில் விகாரமாய் யகரங்கெட்டு ஆய் எனவும் வழங்கும்.

ஆவவென்றுமழுஞ்சிவதாவென்றும்
பாவம்பாவம்பழியிதுவோவைய
கோவெனுங்கைகுலைத்தெறியுந்நிழற்
பாவைபோலவிடாதுபின்பற்றுமால்.

(இ-ள்.) ஆவ என்றும் - அய்யோவென்று அலறும், அழும் - அழாநிற்கும், சிவதா என்றும் - நீ எனக்கபயமென்று கூறும், பழி இதுவோ பாவம் பாவம் - பிரமகத்தியாகிய விதுவோ பெரும்பாவம், ஐயகோ என்னும் - ஐயகோவென்று முறையிடும், கை குலைத்து எறியும்-கையசைத்து நிலத்தில் மோதும், நிழல் பாவைபோல விடாது பின்பற்றும் - அவனது தேகசாயையைப்போலச் சிறிதும் விடாது பின்பற்றிச்செல்லும். (கஎ)

ஷை வே று.

நல்லதீர்த்தஞ்சிவதலநலோர்பக்கமுஞ்
செல்லவொட்டாதரன்சீர்த்திநாமஞ்செவிப்
புல்லவொட்டாதுளம்புகுதவொட்டாதுநாச்
சொல்லவொட்டாதுகண்டுயிலவொட்டாதரோ.

(இ-ள்.) நல்ல தீர்த்தம் சிவதலம் நல்லோர் பக்கமும் செல்ல ஒட்டாது - (இப்பிரமபாவம்கழிய) நல்ல தீர்த்தமாடவும் நல்ல சிவதலம் தரிசிக்கவும் நல்லோர் பக்கஞ்சென்று சேவிக்கவும் (அவன் கருதி அடிபெயர்க்கிலிடையிற்புகுந்து) செல்லவொட்டாது தடுக்கும், அரன் சீர்த்தி நாமம் செவி புல்ல ஒட்டாது - சிவசரிதையும் சிவன் திருநாமமும் (கேட்கப்புகில் செவியிலேறவொட்டாமல்) தடுக்கும், உளம் புகுத ஒட்டாது - (ஒருவாறு கேட்பினும்) அவன் மனத்திலிறங்கவொட்டாமல் தடுக்கும்,நா சொல்லவொட்டாது- (ஒருவாறுஇறங்கினும்) நாச்சொல்ல வெழுந்தால் சொல்லவொட்டாமற் றடுக்கும், கண் துயில ஒட்டாது - (அதற்கஞ்சிக்) கண்மூடித் துயிலினும் நித்திரை செய்யவொட்டாமல் தடுக்கும். (கஅ)

சுற்றுமுன்பின்புறச்சூழ்ந்துதன்கொடுக்கிறப்
பற்றிநின்றீர்க்குமாபாதகத்தாலலைந்
தெற்றினிச்செய்வதென்றுற்றலாதிட்டுழந்
துற்றுவேறுலகெலாமச்சமுற்றுழலுமால்.

Koviloor Digital Library

(இ-ள்.) சுற்றமுன் பின்பு உற சூழ்ந்து - எப்பக்கஞ்செல்லினு மப்பக்கத்தில் முன்னும் பின்னும் விடாது சூழ்ந்து, தன் கொடுங்கு இறப்பற்றி நின்று ஈர்க்கும் - (நியமமிழியிற்செல்லத்) தனது கொய்சகமனைத்து அவிழ்ந்த அலையப்பற்றி நின்று இழுக்கின்ற, மா பாதகத்தால் அலைந்து - மாபாதகத்தாலலைந்து திரிந்து, இனி எற்று செய்வது என்று ஆற்றலாது - இனி யாதுசெய்வதென்று சிறிதுமாற்றாது, இடர் உழந்த-துன்பத்தில் அவன் வருந்தி, வேறு உலகு எல்லாம் அச்சம் உற்று உழலும்- தன்னைப்பற்றிய பிரமகத்திக்கஞ்சிச் சுழலாநிற்பான். (க௯)

உறுகணோயாற்றநாளுற்றுழன்றுலகெலா
மறுகவேதிரியுமாபாதகன்வலியெலாஞ்
சிறுகுவான்சிவனருட்செயலினிப்பாதகங்
குறுகுநாள்குறுகுநாள்கூடலைக்குறுகினான்.

(இ-ள்.) உற்ற நாள் உறுகண் நோய் உற்று உழன்று - (இவ்வாறு) அநேக நாள் துன்பநோய் அடைந்து சுழன்று, உலகு எல்லாம் மறுகவே திரியும் மாபாதகன் வலி எல்லாம் சிறுகுவான் - உலகில் கண்டோர் எல்லாம் வருந்தத் திரிந்தலையா நின்ற மகாபாதகன் வலிமை முற்றும் தேய்ந்து சிறுகலால், சிவன் அருள் செயல்- சிவபெருமான் திருவருட்செயலால், இனி பாதகம் குறுகுநாள் குறுகுநாள் கூடலை குறுகினான் - இனிப் பாதகக்குறும் பொழியுநாள் வருங்காலையில் மதுரையை யடைந்தான்.

குறுகல் என்றதில் முன்னது குன்றுதல் மேலும் பின்னது அடைதல் மேலும் நின்றன. சிறுகுவான் காரணப்பொருளில்வந்த எதிர்காலவினையெச்சம். (உ0)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அழிதகன்குறுகுவான்முன்னங்கயற்கண்ணிதந்தக்
குழையிருகாதுங்கோத்துக்கொலைசெழுபுலிப்பற்றாலி
நுழைமயிர்நெடுநாண்பின்னனுன்பிடரலைப்பப்பூண்டோர்
பழிதகையாதவேடப்பாவையாய்ப்படிவங்கொள்ள.

(இ-ள்.) அழிதகன் குறுகுவான் முன் - அழிதகையுடையோன் வருவதற்கு முன், அங்கயற்கண்ணி - அங்கயற்கண்ணியம்மையார், தந்தம் குழை இருகாதும் கோத்து - தந்தத்தாலாகிய குண்டலங்களை இரண்டுகாதிலும் நுழைவித்து, கொலை செழு புலி பல் தாலி நுழை - கொலைத்தொழிலில் மேம்பட்ட புலியின் பல்லாகிய தாலிகோத்த, மயிர் பின்னல் நெடு நாண் - மயிராற்பின்னிய நெடிய மங்கலசூத்திரம், கோன்பிடர் அலைப்ப பூண்டு - வலியபிடரில் அசைந்தலையத்தரித்து, ஓர் பழி தகையாத வேடப்பாவையாய் படிவம் கொள்ள - குலத்திற்குரிய பழித்தொழில் சிறிதும் தடுத்தலில்லாத ஒரு வேட்டுவப்பெண்ணுருப்பத் திருவுருவங்கொள்ள.

வேட்டுவவுருவங்கொண்டிரும் அக்குலத்திற்குரிய கொலைத்தொழில் சிறிதுமில்லையென்பார் பழிதகையாத என்றார். (உக)

கொலையிரும்பழிக்கன்றஞ்சாய்கூடலெம்பெருமான்கொன்றை
மிலையிருங்குஞ்சிவெய்கைவெல்லிணார்க்கண்ணிவேய்ந்து
கலையிருமருப்பிற்கோடிக்காதளவோடுந்தாடி
சிலையிருந்தடக்கைவேடத்திருவுருக்கொண்டுதோன்றி.

Koviloor Digital Library

(இ-ள்.) கொலை இரும் பழிக்கு அன்று அஞ்சும் கூடல் எம்பெருமான் - தைவிகமாய் நேரிட்ட கொலைத்தொழிலால் வந்த பெரும்பழிக்கு அப்பொழுதஞ்சிய எமது பெருமானாராகிய சோமசுந்தரக்கடவுள், கொன்றை மிலை இரும் குஞ்சி வேங்கை மெல் இணர் சன்னி வேய்ந்து - கொன்றைமலர்மாலையையணிந்த பெரிய சிகையில் வேங்கையினது மெல்லிய பூங்கொத்தாலாகிய மாலையைச்சூடி, கலை இரு மருப்பில் கோடி காதளவு ஓடும் தாடி - கலைமானினது முறுக்கினையுடைய இரண்டு கொம்பின் வளைவுபோல முறுக்குள்ளதாய் வளர்ந்து காதுமட்டுஞ் சென்ற மீசையையும், சிலை இரும் தடக்கை - வில்லையேந்திய நீண்ட பெரிய கையையுமுடைய, வேடத்திரு உருக்கொண்டு தோன்றி - வேடத்திருவுருவந் தான் கொண்டெழுந்தருளி.

பழிக்கஞ்சிய நாதராதலால் இப்பெரும்பாதகத்துக்கும் அஞ்சினார் என்பார் வேடத்திருவுருக்கொண்டு தோன்றி என்றார். (உஉ)

கொண்டல்கண்படுக்குமாடக்கோபுரமருங்கிற்போந்தின்
கண்டகக்கருக்குவாயகுரைக்குநாய்கதுவிக்காப்பப்
புண்டலைவாளிவில்லோர்புறங்கிடந்திமைப்பத்திங்கட்
டுண்டவாணுதலாளோடுஞ்சூதுபோராடல்செய்வான்.

(இ-ள்.) கொண்டல் கண் படுக்கும் மாடம் கோபுரம் மருங்கில் - மேகங்கள் கண் துயிலும் மாடங்கள் நெருங்கிய கோபுரவாயிலின் பக்கத்தில், போந்தின் கண்டகம் கருக்குவாய குரைக்கு நாய் கதுவிக்காப்ப - பனையினது முள்வாய்ந்த கருக்கினையொத்த வாயையுடைய குலைக்கின்ற நாயானது புறத்திற் சிறிதும் நீங்காது ஒருபாற்காத்து நிற்கவும், புண் தலை வாளி வில் ஓர்புறம் கிடந்து இமைப்ப - மாமிசத்தை நுனியிலுடைய அம்பும் வில்லும் ஓர்பால் கிடந்து விளங்கவும், திங்கள் துண்டம் வாள் நுதலாள் ஓடும்-(தம்மைப்போல வேட்டுருவங்கொண்ட) அர்த்தசந்திரனையொத்த நெற்றியையுடைய வுமாதேவியாரோடும், சூது போர் ஆடல் செய்வான்-சூதாடலாகிய போர்த்தொழிலைச் செய்வாராயினார். (உ௩)

வெருவருவேழமுண்டவெள்ளில்போல்வறியனாகிப்
பருவரலுடனாங்கெய்தும்பாதகன்வரவுநோக்கி
யொருவருமுள்ளத்தாலுமுன்னருங்கொடியபாவி
வருவதுகாண்டியென்னுமாதரைநோக்கிக்கூறும்.

(இ-ள்.) வெருவு அரு வேழம் உண்ட வெள்ளில் போல் வறியன் ஆகி - அச்சமில்லாத யானை யுண்ட விளங்கனிபோலச் சிறிதும் உள்ளீடு இல்லாதவனாகி, பருவரல் உடன் ஆங்கு எய்தும் பாதகன் வரவுநோக்கி - துன்பத்தோடு அவ்விடத்து வரும் மகாபாதகன் வருகையைப் பார்த்து, ஒருவரும் உள்ளத்தாலும் உன்னருங் கொடிய பாவி - ஒருவரும் தமது மனத்தாலும் நினைத்தற்கரிய கொடிய மகாபாவி, வருவது காண்டி என்னு மாதரை நோக்கி கூறும் - வருதலைக்காண்பாய் என்று உமாதேவியாரைப் பார்த்துக் கூறுகின்றார்.

யானையுண்ட விளங்கனியென்பது யானை நோய்விழுந்த விளங்கனியென்பதுபொருள், அந்நோய்விழுந்தால் அம்மரக்கனி சிறிதும் உள்ளீடின்றியிருத்தலால்.

அணங்குநோயெவர்க்குஞ்செய்யுமனங்கனலலைப்புண்டாவி
யுணங்கின்றுள்ளஞ்செல்லுமிடனறிந்தோடிச்செல்லா

குணங்குலனொழுக்கங்குன்றல்கொலைபழிபாவம்பாரா
விணங்குமின்னுயிர்க்குமாங்கேயிறுதிவந்துறுவதென்னா.

(இ-ள்.) அணங்கு நோய் எவர்க்கும் செய்யும் அனங்கன் ஆல் அலைப்புண்டு - காமநோயையெவர்க்குஞ்செய்யு மன்மதனால் அலைக்கப்பட்டு, ஆவி உணர்கிலர் உள்ளம்-உயிர்சோர்ந்தவர்கள் மனமானவை, செல்லும் இடன் அறிந்து ஒடிச் செல்லா - தாம் செல்லுமிடமறிந்து சென்றசாரா, குணம் குன்றல் - குணத்தின்குறைபாட்டையும், குலம் குன்றல் - குலத்தின்குறைபாட்டையும், ஒழுக்கம் குன்றல்- ஒழுக்கத்தின்குறைபாட்டையும், கொலை பழி பாவம் பாரா - கொலைத்தொழிலையும் அதனால்விளையும் பழியையும் பாவத்தையும்பாரா, இணங்கும் இன் உயிர்க்கும் ஆங்கே இறுதிவந்து உறுவது என்னா - பொருந்தியதமது இனிய உயிர்க்கும் அவ்விடத் தழிவுவருதலைச் சிறிதுங்கருதா.

உள்ளம் என்றும் எழுவாய் செல்லா, பாரா, என்னா என்னும் பயனிலைகளைக்கொண்டது. (உரு)

கள்ளுண்டல்காமமென்பகருத்தறைபோக்குச்செய்வ
தெள்ளுண்டகாமம்போலவெண்ணினிற்காணிற்கேட்கிற்
றள்ளுண்டவிடத்தினஞ்சந்தலைக்கொண்டாலென்னவாங்கே
யுள்ளுண்டவுணர்வுபோக்காதுண்டபோதழிக்குங்கள்ளுண்.

(இ-ள்.) கள் உண்டல் காமம் என்ப - கள்ளுண்ணுதலும் காமங்கொள்ளுதலும் என்றுசொல்லுமிருதொழிலும், கருத்து அறை போக்கு செய்வது-(உண்டோர் காமங்கொண்டோர்) கருத்தினையோட்டஞ்செய்தலுடைமையால் (தம்முளொத்திருப்பினும்) எள் உண்ட காமம்போல - நிந்தித்துவிலக்கப்பட்டகாமத்தைப்போல, எண்ணினில் காணில் கேட்கில் தள்ளுண்ட இடத்தில் - கள்ளானது தன்னையொருவன் கருதினும் காணினும் தனதுதன்மையைக்கேட்பினும் தாமிருக்குமிடத்திற்செல்லினும், நஞ்சம் தலைகொண்டால் என்ன - நஞ்சுதலைக்கேறியதுபோல, ஆங்கே - அப்பொழுதே (காமம்போல) உள் உண்ட உணர்வுபோக்காது - அகத்திலுள்ள அறிவைச்சிதைக்காது, கள் உண் உண்டபோது அழிக்கும்-அம்மதுவானது தன்னையுண்டால்மட்டு மறிவைச்சிதைக்கும் (ஆதலால் காமம்பெரிது)

ஒருசொற்றன்மைப்பட்டுநின்ற தள்ளுண்டவினைப்பகுதி, இடத்து எதிர்காலத்தின்மேல்நின்ற எச்சவிகுதி, வகரமெய்சந்தி, எண்ணினின், இடத்தின் என்ற இடங்களில் இன்வேண்டா வழிச்சாரியை. கள்ளையுங் காமத்தையும் ஒருபொருளாக வைத்துப் பின்னர்க் கள்ளைவிலக்கிக் காமத்தை மேம்படக்கூறுதலால் விலக்கியல் வேற்றுமையணி. (உசு)

காமமேகொலைகட்கெல்லாங்காரணங்கண்ணோடாத
காமமேகளவுக்கெல்லாங்காரணங்கூற்றமஞ்சுங்
காமமேகள்ளுண்டற்குங்காரணமாதலாலே
காமமேநரகபூமிகாணியாக்கொடுப்பதென்றான்.

(இ-ள்.) காமமே கொலைகட்கு எல்லாம் காரணம் - காமமேகொலைத்தொழில்களுக்கெல்லாக்காரணமாம், கண்ணோடாத காமமே - தாக்ஷிணியமில்லாதகாமமே, களவுக்கு எல்லாம் காரணம் - களவுகளுக்கெல்லாங்காரணமாம், கூற்றம்

Koviloor Digital Library

அஞ்சும் காமமே கள் உண்டற்கும் காரணம்-இயமனஞ்சுங்காமமே கள்ளுண்டற்கு ங்காரணமாம், ஆதலால் - ஆகையால், காமமே-காமமொன்றே, நரகபூமி காணியா க்கொடுப்பது என்முன் - அவைகள்தரும்பயன்கள் எல்லாமொருசேர நரகபூமியை யே யுரிமையாகக்கொடுப்பது என்றுகூறினர்.

பஞ்சமாபாதகங்களுள் காமம் பெரும்பாதகம் ஆதலால் பிரிவில ஏகாரந் தருகூறினர். (உஎ)

கொலைப்பழிகோட்பட்டாங்கேகுருமியான்முகங்கண்டேட
வலைப்படருழந்துசாம்பியழிவதென்பார்ப்பானென்னக்
கலைப்படுதிங்கள்வேணிக்கானவனருட்கணோக்கந்
தலைப்படச்சிறிதுபாவந்தணிந்துதன்னறிவுதோன்ற.

(இ-ள்.) கொலைபழி கோட்பட்டு ஆங்கேகுருமியான் முகம் கண்டு - பிரா மணக்கொன்ற பிரமகத்தியால் விழுங்கப்பட்டுத் தம்சன்னிதியில் எதிர்ந்த மகாபாத கனுடையமுகத்தைநோக்கி, ஏட அலைபடர் உழந்து சாம்பி அழிவது என் பார்ப்பான் என்ன - ஏடா அலைத்தலையுடைய பெருந்துன்பத்தால் வருந்திச்சோர்ந்து அழிவது யாது பார்ப்பானே என்றுவினவியருள, கலைப்படு திங்கள் வேணி கானவன் அருள் கண் நோக்கம் சிறிது தலைப்பட - ஒருகலைபொருந்திய சந்திரனையணிந்த சடாமுடி யையுடைய வேட்டுவவடிவாய்வந்த சோமசுந்தரக்கடவுளுடைய திருவருட்பார்வை சிறிதுதாக்குதலால், பாவம் தணிந்து தன் அறிவுதோன்ற - மகாபாதகங்குறைந்து தன்னியற்கையறிவுதோன்ற.

ஏட என்பது இக்காலத்து ஏண்டா என மருவியது. (உஅ)

முற்பகலிழைத்தபாவமுதிர்ச்சியாற்பிறந்துதந்தை
தற்பகையானவாறுந்தாதையைவதைத்தவாறும்
பிற்பகலந்தப்பாவம்பிடித்தலைத்தெங்குந்திரா
திப்பதிபுகுந்தவாறுமெடுத்துரைத்திரங்கிநின்முன்.

(இ-ள்.) முன் பகல் இழைத்த பாவமுதிர்ச்சியால் பிறந்து - முன்னாள் செ ய்த பாவமுதிர்ச்சியால் மைந்தனாகப்பிறந்து, தந்தை தற்பகை ஆன ஆறும் - தனது பிதாவிற்குத் தான் பகைவனான வகையையும், தாதையை வதைத்த ஆறும்-அதனால் தனது பிதாவைக்கொன்ற வகையையும், பின் பகல் அந்த பாவம் பிடித்து அலைத்து எங்கும் தீராது இப்பதி புகுந்த ஆறும் - பின்னாளில் அந்தப்பாவமானது பிரமகத்தி வடிவாய்ப்பிடித்து வருத்துதலால் எங்கும் தீராமல் இத்தலத்தையடைந்த வகையை யும், எடுத்து உரைத்து இரங்கி நின்முன் - எடுத்துச்சொல்லி வருந்திநின்முன்.

தல்பகன் என்னும் வடசொற்றிரிபாகிய தற்பகன் எனப் பாடங்கொள்வாரு முளர். அதற்குத் தந்தை சயனத்திற்குரியவன் எனப் பொருள்கொள்க. (உகூ)

மறப்பெரும்படிவங்கொண்டுமனத்தருள்சுரந்துநின்ற
வறப்பெருங்கருணைமூர்த்தியழிதகையவனைப்பார்த்தித்
திறப்பழியாங்குச்சென்றுமிங்கன்றித்தீராதென்றக்
கறைப்பழிதிரும்வண்ணங்கருதியோருறுதிகூறும்.

(இ-ள்.) பெருமறம் படிவம் கொண்டு - (புறத்தில்) பெரிய பாவத்தொழிலை யுடைய வேட்டுவவடிவ்கொண்டு, மனத்து அருள் சுரந்து நின்ற அறப்பெரும் கருணை

Koviloor Digital Library

மூர்த்தி-உள்ளே யருள்சுரந்து நின்ற தருமவடிவாயுள்ள பெரிய தயாமூர்த்தி, அழி தகைச் அவனை பார்த்து - அழிதகைமையையுடைய மகாபாதகனைப்பார்த்து, இ நிறம் பழி ஆக்கு சென்றும் ஈக்கு அன்றி நீராது என்று-இந்தப் பெரும்பாதகம் எத்தலத் துச்சென்றாலும் இத்தலத்தன்றித் தீராதென்று கூறி, அக்கறை பழி நீரும் வண்ணம் கருதி ஓர் உபாயம் கூறும் - அந்தக் கரிய பெரும்பழி நீரும்படி திருவுளங்கொண்டு ஒ ரு பெரும்பயன் தருவனவற்றை யெடுத்துக் கூறுகின்றார். (௩0)

வருதிநின்னாமஞ்சொன்னோர்வருக்கமுநரகில்விழக்
கருதிநிசெய்தபாவங்கழிப்பவரெவர்யாநோக்கந்
தருதலாலெளிதிற்றீரச்சாற்றுதுமையங்கையேற்
றொருபொழுதுண்டியீசனுறுதவவேவல்செய்தி.

(இ-ள்.) வருதி - இங்கு வருவாய், நின் நாமம் சொன்னோர் வருக்கமும் நர கில் விழ - உன்றுடைய பெயரைக் கூறினோர் தம்மட்டன்றி யவரது மரபிலுள்ளோ ரும் நரகில் விழும்படி, நீ கருதிச்செய்த பாவம் கழிப்பவர் எவர் - நீ புத்திபூர்வமா கச் செய்துமுடித்த மகாபாதகத்தைத் தொலைப்பவர் யார், யாம் நோக்கம் தருதலால் எளிதில் தீரச் சாற்றுதும் - யாம் திருவருள் நோக்கஞ்செய்தமையால் அப்பாதகம் எளிதிற்றொலையக் கூறுகின்றோம், ஐயம் கை ஏற்று ஒரு பொழுது உண்டி - கையே புண்கலமாகப் பிச்சைவாங்கி ஒருபொழுதுண்பாய், ஈசன் உறுதவர் ஏவல் செய்தி - சிவபெருமான் விரும்பும் தவவேடத்தையுடைய வடியாரது வேலைச்செய்வாய்.

சத்ததத்துவ புவனத்தில் வசிக்குந் தம்மை யான்மாக்கள் கண்டு பூசனை செய் தற்கலாதலின் எளிதிற்கண்டு பூசனைசெய்தற்கு அடியார் திருவேடத்திலமர்தலா ல் ஈசனுறுதவரேவல் செய்தி என்றார். "தாவரசங்கமங்க ளென்றிரண்டுருவினின் று - மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்" எனவும் "அருதிமலமு த்தவன்சிலுயிர்கட்குமிராயலாதே விளைப்பயன்களருத்திமலமறுப்பன் - மனு நிலுற்கெட்டதோவெனமதித்துத்தம்முன் மனனுலவாழ்வுறவவன்றாள்கண்டவர் நான்வணங்கி - எருதியிலெனவெண்ணியொருபகற்பூசனையை யியற்றினர்களொரு நிகழுறவியற்றினார்கள் - முன்னோதியவாறொழிந்தோர்தாமுற்றியமாபாவமுட்டாம லியற்றினர்கள்விட்டார்நிமுழுதும்" என்ற தைக்களாலுணர்க.

செங்கதிர்க்கடவுள்வானந்திண்டுமுன்னெழுந்துநிந்தண்
பைங்கதிரறுகுகொய்துபசுக்களையருத்தியார்வம்
பொங்கமுப்போதுங்கோயிற்புறத்தொட்டித்தீர்த்தமாடிச்
சங்கரன்றனைநூற்றெட்டுமெய்வலஞ்சாரச்செய்தி.

(இ-ள்.) செங்கதிர்க் கடவுள் வானம் தீண்டு முன் எழுந்து-சூரியன் உதை யஞ்செய்தற்கு முன்னெழுந்து, நீ தண் பைங்கதிர் அறுகு கொய்து பசுக்களை அருத்தி - இனிய தண்ணிய பசிய கிரணத்தையுடைய அறுகினைக்கொய்து பசுக்க ளை (வணக்கி) உண்பிப்பாய், ஆர்வம் பொங்க முப்போதும் கோயில் புறத்தொட் டி தீர்த்தம் ஆடி-அன்புமூளக் காலை யுச்சிமாலை என்று முப்பொழுதிலும் திருக்கோ யிலின் புறத்துள்ள தீர்த்தத்தொட்டியிலுள்ள தீர்த்தமாடி, சங்கரன் தன்னை நூற்றெ ட்டு மெய் வலம் சார செய்தி - சிவபெருமானை நூற்றெட்டுத்தரம் அங்கபிரதக்ஷி ணம் பொருந்தச்செய்வாய்.

Koviloor Digital Library

பசுக்களைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கிப் புல்லருத்துவோர் இருவினைத் தளைகழன்று சிவபுரத்தில் தமது சுற்றத்தாரோடு வசித்தலால் அறுகுகொய்து பசுக்கலை யருத்தியெனவும், திருக்கோயிற் புறத்தொட்டித்தீர்த்தம் கங்காதீர்த்தமாதலால் கோயிற்புறத்தொட்டித் தீர்த்தமாடியெனவும், தாம் ஆன்மாக்களுய்யத் திருக்கோயிலுள் திருமேனிகொண்டமர்ந்தருளுதலால் சங்கரன்றனை நூற்றெட்டு மெய் வலஞ்சாரச் செய்தியெனவுங் கூறினார். "வலஞ்செய்தாக்கலைவாழ்த்திவணங்கியே-நலஞ்செய்தார் புல்லுநாவிற்கொடுத்துடல் - விலங்கைவிட்டுவிமலன்புரத்துளே - யிலங்கிச்சுற்றத்தொடுமிருப்பார்களே" எனவும் மேற்காட்டிய "தாபரசங்கமங்கள்" என்ற ஏதுக்களாலும் அறிக. (௩௨)

இத்தவநெறியினின்றாலிப்பழிகழியுமென்னாச்
சித்தவன்புடையவேடத்திருவுருக்கொண்டகொன்றைக்
கொத்தவனுரைத்தான்கேட்டுக்கொடிச்சியாயிருந்தவம்மை
மத்தவன்கரித்தோல்போர்த்தமறவனைவினவுகின்றாள்.

(இ-ள்.) இத்தவ நெறியில் நின்றால் - இத்தத்தவநெறியில் நீ நிற்கில், இப்பழி கழியும் என்னா - இந்த மகாபாதகந் தொலையுமென்று, சித்தம் அன்பு உடைய வேடத் திருவுருகொண்ட கொன்றை கொத்தவன் உரைத்தான் - திரு உளத்தில் ஆன்மகோடிகளிடத்தி லன்புமிக்க வேடத்திருவுருவங்கொண்ட கொன்றையின் பூங்கொத்தினையணிந்த சோமசுந்தரக்கடவுள் கூறியருளினார், கேட்டு கொடிச்சியாய் இருந்த அம்மை - அதனைக் கேட்டருளி வேட்டுவச்சித் திருவுருவங்கொண்ட வங்கயற்கண்ணியம்மையார், மத்தம் வல் கரித்தோல் போர்த்த மறவனை வினவுகின்றாள்-மதமயக்கத்தையுடைய வலிய யானையின் றோற்போர்வையைப் போர்த்தருளிய வேட்டுவத்திருவுருவங்கொண்ட சோமசுந்தரக்கடவுளை வினவி யருளுகின்றார்.

வேட்டுவவடிவுக்கேற்ப இரக்கமில்லாத சிந்தையையுடையவரல்லர் என்பார் சித்தவன்புடைய என்றார். (௩௩)

ஐயவிக்கொடியோன்செய்தபாவத்துக்களவில்காலம்
வெய்யநாலேழுகோடிநரகிடைவீழ்ந்தானேனு
முய்வகையிலாதபாவியிவனுக்கென்னுய்யுந்தேற்றஞ்
செய்வகையென்றுகேட்பச்செங்கண்மால்விடையோன்செப்பும்.

(இ-ள்.) ஐய இக்கொடியோன் செய்த பாவத்துக்கு அளவில்காலம்-ஐயனே இந்த மாபாதகன் செய்த பெரும்பாதகத்துக்கு எல்லையில்லாத காலங்காறும், வெய்ய நாலேழு கோடி நரகு இடை வீழ்ந்தான் ஏனும் - கொடிய விருபத்தெட்டுக்கோடி நரகத்தில் வீழ்ந்து அழுந்தினானாயினும், உய்வகை இலாத பாவி - பிழைக்கும் வகையில்லாத மகாபாவி, இவனுக்கு உய்யும் தேற்றம் செய்வகை என் என்றுகேட்ப - இப்படிப்பட்டவனுக்குக் கடைத்தேறும் நேர்ச்சிசெய்யும் வகை யாது என்று வினவ, செம் கண்மால் விடையோன் செப்பும் - சிவந்த திருக்கண்களையுடைய திருமாலாகிய விடபவூர்தியையுடைய பெருமானார் கூறுகின்றார். (௩௪)

அடுபழியஞ்சாநீசாராயினுநினைக்கினச்சம்
படுபழியஞ்சான்செய்தபாதகத்தொட்க்குண்டெங்கும்
விடுவதையின்றிவேறுகளைகளுமின்றிவியக்
கடவனைக்காப்பதன்றோகாட்பென்றான்கருணைமூர்த்தி.

(இ-ள்.) அடுபழி யஞ்சா நீசர் ஆயினும் - கொல்லும் பழித்தொழிலுக்குச் சிறிதுமஞ்சாத நீசராயிருப்பினும், நினைக்கின் அச்சம் படுபழி அஞ்சான் செய்த பாதகத்தொடக்கு உண்டு - நினைக்கினும் அவர்களுக்கும் அச்சமுறத்தகும் பழிக்கஞ்சாது இச்செய்த மாபாதகத்திற் கட்டுண்டு, எங்கும் விடுவது இன்றி உம் வேறு களைகண் இன்றி உம் விய கடவனை காப்பது அன்றோ - எத்தலத்திற்செல்லினும் அப்பாதகம் தன்னை விடுதலில்லாமலும் வேறு பற்றுக்கோடு இல்லாமலும் அழியக்கடவோனைப் பாதுகாப்பதல்லவா, கருணை மூர்த்தி காப்பு என்றான் - கிருபாமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுள் பாதுகாப்பு என்று கூறியருளினார்.

களைகண் என்பதனிறுதியிலுள்ள உம்மையைப்பிரித்து இன்றியென்பதனோடு கூட்டிப் பொருள்கொள்க. (கரு)

நெய்தற்போதனையவுண்கணேரிழைநீயாதொன்று
செய்தற்குஞ்செய்யாமைக்கும்வேறொன்றுசெயற்குமாற்றன்
மெய்தக்ககருணைவள்ளல்வேண்டினெவ்வினைஞரேனு
முய்தக்கோராதல்செய்கையுன்னருள்விளையாட்டன்றோ.

(இ-ள்.) நெய்தல் போது அனைய உண் கண் நேரிழை - குவளைமலரையொத்த மையெழுதிய கண்களையுடைய வங்கயற்கண்ணியார், நீ யாது ஒன்று செய்தற்கும் செய்யாமைக்கும் - நீ யாதொரு கருமத்தைச் செய்தற்கும் அதனைச் செய்யாமைக்கும், வேறு ஒன்று செயற்கும் ஆற்றல் மெய் தக்க கருணை வள்ளல் - அதைவிட்டு மற்றொன்று செய்தற்கும் வன்மையின் உண்மை மிக்க கிருபாவள்ளல், வேண்டின் எவ்வினைஞர் ஏனும் உய்தக்கோர் ஆதல் செய்கை - நீ திருவுள்ளங்கொள்ளில் எவ்வகைத் தீத்தொழிலாரேனும் பிழைக்கும் வகை யோராகச்செய்கை, உன் அருள் விளையாட்டு அன்றோ - உனது திருவருளின் திருவிளையாட்டல்லவா.

ஆன்மாக்களுய்தற்பொருட்டுக்கொண்டருளிய கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அந்நியதாகர்த்தத்துவம் என்று மூன்றிறைமைக்குணங்களுள். அந்நியதாகர்த்தத்துவம் அணுவை மேருவாகவும் மேருவை யணுவாகவும் செய்யுங் கர்த்தத்துவமாதலால் பாதகனைப் புண்ணியவடிவனாகவுஞ் செய்யவல்லீர் என்பார் வேண்டினெவ்வினைஞரேனும் - உய்தக்கோராதல் செய்கையுன்னருள்விளையாட்டன்றோ என்று கூறினர். (கசு)

என்றகமகிழ்ச்சிபொங்கவியம்பினளியம்பலோடுங்
குன்றககாட்டவேட்குழகனுமறைந்துவெள்ளி
மன்றகநிறைந்தான்மேகமறைந்திடமறைந்துசெல்லு
மின்றகவிடாதுபின்போம்விளங்கிழைமடந்தையோடும்.

(இ-ள்.) என்று அகம் மகிழ்ச்சி பொங்க இயம்பினள் - என்று மனமகிழ்ச்சி மீதூரக்கூறியருளினார், இயம்பல் ஒடும் - அவ்வாறு கூறியருள, குன்று அகம் நாட்ட வேட்குழகனும் மறைந்து வெள்ளிமன்று அகம்-மலைநாட்டிலுள்ள வேட்டுவத்திருவுருவக்கொண்ட சோமசுந்தரக்கடவுளுந் திருவுருவங்கரந்து வெள்ளியம்பலத்தில், மேகம் மறைந்திட மறைந்து செல்லும் மின்தக - மேகம் மறையத்தானும் மறைந்துசெல்லும் மின்னலைப்போல, விடாது பின் போம் விளங்கிழை மடந்தையோடும் நிறைந்தான் - தன்னைவிடாது பின்றொடர்ந்துவரும் விளங்குமாபரணத்தை

Koviloor Digital Library

யணிந்த வேட்டுவத் திருவுருவங்கொண்ட வங்கயற்கண்ணியாரோடும் மறைந்தருளினார்.

இது தொழிலுவமையணியாதலால் மேகமறைந்திட மறைந்துசெல்லும் மின்றகவிடாது பின் போமென்றார். (கஎ)

ஆதனுங்கதுகண்டாறுவற்புதமடைந்துகூட
றாதனார்நவின்றவாற்றானன்னெறிவிரதச்செய்கை
மாதவவொழுக்கந்தாங்கிவருமுறைமதியமூன்றிற்
பாதகங்கழிந்துதெய்வப்பார்ப்பனவடிவமானான்.

(இ-ள்.) ஆதன் - அறிவில்லானாகிய அந்தணன், ஆங்கு - அவ்விடத்தில், அது கண்டு ஆறாத அற்புதம் அடைந்து - தனக்குப் புலப்பட்டு மறைந்தருளியதைக்கண்டு நீங்காத ஆச்சரியத்தையடைந்து, கூடல் நாதனார் நவின்ற ஆறு ஆல் - மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் கூறியருளிய முறைமையால், நல் நெறி விரதம் செய்கை மாதவம் ஒழுக்கம் தாங்கி - (உதியடையும்) நன்னெறிக்கேதுவாகிய நோன்பினையும் பெரிய தவவொழுக்கத்தையு மேற்கொண்டு, வருமுறை - செய்தொழுகுமுறையால், மதியம் மூன்று இல் - மூன்றுமாதத்தில், பாதகம் கழிந்து தெய்வம் பார்ப்பன வடிவம் ஆனான்-தனது மகாபாதத்தினின்று நீங்கித் தெய்வத்தன்மையையுடைய முன்னுள்ள பார்ப்பன வடிவமாயினான்.

ஐயங்கையேற்றொருபொழுதுண்டலும் பசுக்களுக்குப் புல்லருத்தூதலும் நோன்பாதலாலும், ஈசனுக்குதவரோவல்செய்தலும் கோயிற்புறத்தொட்டித் தீர்த்தமாடுதலும் மாதவமாதலாலும் நன்னெறிவிரதச்செய்கை மாதவவொழுக்கம் எனவும், நீசத்தன்மையொழிந்தமையால் தெய்வப்பார்ப்பன வடிவமானான் எனவுங்கூறினார்.

சொற்பதங்கடந்தவெந்தைச்சுந்தரநாதன்றாளிற்
பற்பலவடசொன்மாலைபத்தியிற்றொடுத்துச்சாத்தித்
தற்பரவறிவானந்தத்தனியுருவுடையசோதி
பொற்பதமருங்கிற்புக்கான்புண்ணியமறையோனம்மா.

(இ-ள்.) சொல் பதம் கடந்த எந்தை சுந்தரநாதன் தாளில் - சொல்லளவையைக்கடந்த வெனது பிதாவாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவடியில், பல் பல வட சொல் மாலை பத்தியில் தொடுத்து சாத்தி-பற்பல வடசொற்களாகிய மலர்களாகிய மாலையைப் பத்திபடத்தொடுத்துச்சாத்தி, தற்பரம் அறிவு ஆனந்தம் தனி உருவுடைய சோதி-உண்மையறிவானந்தமென்னு மொப்பில்லாத திருவுருவத்தையுடைய சோமசுந்தரக்கடவுளுடைய, பொன் பதம் மருங்கில் புண்ணிய மறையோன் புக்கான் - பொன்போலுமரிய திருவடிகீழ்ச் சார்பில் (திருவருள்நோக்கால் மகாபாதம் தொலைந்து) சிவபுண்ணிய வடிவான அந்தணன் அடைந்தான்.

சிவபெருமான் அருளிய சிவபுண்ணியவழியில் நின்றமையால் புண்ணியமறையோன் என்றார். அறிவு ஆனந்தம் என்றமையால் தத்பரம் என்னும் வடமொழித்திரிபாகிய தற்பரம் என்றுஞ் சொற்கு உண்மையென்றும். (ஙக)

அன்னையைப்புணர்ந்துதாதைகுரவனுமந்தணாளன்
றன்னையுங்கொன்றபாவந்தணித்துவிடளித்ததென்றாற்

பின்னைநீரிழிநோய்குட்டம்பெருவயிறீளைவெப்பென்
றின்னநோய்தீர்க்குந்தீர்த்தமென்பதோவிதற்குமேன்மை.

(இ-ள்.) அன்னைய புணர்ந்து - தாயைப்புணர்ந்து (அதுமட்டும் அமையாது,) தாதை குரவனும் அந்தணன் தன்னையும் கொன்ற பாவம்தணித்து - தனக்குப் பிதாவும் குருவுமாகிய மறையவனைக் கொலைசெய்த பாவத்தைத்தொலைத்து, வீடு அளித்தது என்றால் - (அத்திருத்தொட்டித் தீர்த்தம்) மோக்ஷத்தையுந் தந்ததென்று சொன்னால், பின்னை நீர் இழி நோய் குட்டம் பெருவயிறு ஈளை வெப்பு என்று - பின்பு நீரிழிநோய் குட்டநோய் பெரியவயிற்றுநோய் இருமல் சுரம் என்று சொல்லப்பட்ட, இன்ன நோய் தீர்க்கும் தீர்த்தம் என்பதோ இதற்கு மேன்மை - இவைபோன்ற நோய்களையுந்தீர்க்கும் தீர்த்தமென்று கூறுவதோ இந்தத் தீர்த்தத்திற்கோர் மேம்பாடு (இல்லை யென்றபடி.)

ஈளை ஒருவித இருமல். (௪௦)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அழிந்தவேதியன்மாபாதகந்தீர்த்ததறிந்துவேந்தமைச்சரூருள்ளா
ரொழிந்தபாருள்ளார்வானுள்ளார்வியப்பமுற்றுநல்லுரையுணர்வெல்லாங்
கழிந்தபேரருளிக்கயவன்மேல்வைத்தகாரணம்யாதெனக்கண்ணீர்
வழிந்துநான்மாடக்கூடனாயகனைவழுத்தினார்மகிழ்ச்சியுட்டிளைத்தார்.

(இ-ள்.) அழிந்த வேதியன்மாபாதகம் தீர்த்தது அறிந்து - வேதியத்தன்மையழிந்தவனுடைய மாபாதகத்தைத் தீர்த்தருளியதை யுணர்ந்து, வேந்து அமைச்சர் ஊர் உள்ளார் ஒழிந்தபார் உள்ளார் வான் உள்ளார் முற்றும் வியப்ப - அரசனும் மந்திரிகளும் மதுரையிலுள்ளவர்களும் ஏனைநாட்டிலுள்ளவர்களும் விண்ணுலகிலுள்ளவர்களும் ஒருசேர அதிசயிப்ப, நல் உரை உணர்வு எல்லாம் கழிந்த பேர் அருள் - நல்லசொல்லளவைக்கும் அவ்வளவையால் உணரும் உணர்ச்சிக்கும் அப்பாற்பட்ட பெரிய திருவருளை, இக்கயவன்மேல்வைத்த காரணம் யாது என - இந்தப் பாதகன்மேல் வைத்தருளிய காரணம் யாதோவென்று, கண் நீர்வழிந்து நான்மாடக்கூடல் நாயகனை வழுத்தினர் - ஆனந்தக்கண்ணீர்வார நான்மாடக்கூடலில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளைத் துதித்தார்கள், மகிழ்ச்சியுள் திளைத்தார் - இன்பக்கடலுள் அழுந்தினார்கள்.

எந்தக் கழுவாயாலும் ஒழித்தற்கரிய மகாபாதகத்தை ஒழிக்கப், பக்குவர்க்கருமையாக்கிடைத்த திருவருளை அந்த அந்தணன்மேல் வைத்தற்குத் தமக்குக்காரணம் புலப்படாமையால் யாவரும் பரவசத்தராயினர் என்பார் வழுத்தினர் மகிழ்ச்சியுட்டிளைத்தார் என்றார். வழிந்து செயவெனெச்சத்திரிபு. (௪௧)

மாபாதகந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௬௫௪.

Koviloor Digital Library

Koviloor Digital Library



அங்கம்வெட்டின திருவிளையாடல்.

Koviloor Digital Library

இருபத்தேழாவது.

அங்கம்வெட்டினபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வேதகந்தரித்தமுக்கண்வேதியன்மறையோன்செய்த
பாதகம்தவிர்த்தவாறுபகர்ந்தனம்விஞ்சையீந்த
போதகன்மனைக்குத்தீங்குபுந்திமுன்னாகச்செய்த
சாதகன்றனைப்போராற்றித்தண்டித்ததண்டஞ்சொல்வாம்.

(இ-ள்.) வேதகம் தரித்த முக்கண் வேதியன் - வேதித்தலைக் கைக்கொண்டருளிய திரிநேத்திரங்களையுடைய சோமசுந்தரக்கடவுள், மறையோன் செய்தபாதகம் தவிர்த்த ஆறு பகர்ந்தனம் - அந்தணன்செய்த மகாபாதகத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடலைக்கூறினோம், விஞ்சை ஈந்த போதகன் மனைக்கு-வாட்போர் கற்பித்த ஆசிரியன் மனைவிக்கு, தீங்கு புந்தி முன் ஆகச்செய்த சாதகன் தன்னை-தீமையைப் புத்திபூர்வமாகச்செய்த மாணாக்கனை, போர் ஆற்றி தண்டித்ததண்டம் சொல்வாம், போர்செய்து ஒறுத்ததண்டமாகிய திருவிளையாடலை இனிக் கூறுவாம்.

வேதகம் என்றது இரதகுளிகை. அது செம்பினையுருக்கித் தன்னோடுகூட்டி வேதித்துப் பொன்னாக்கியும் தான் பொன்னியல்பைக் காட்டாது தன்னுளடக்கி நிற்கும் வகைபோல, தான் பசுக்களை யவ்வாறுசெய்தும் அவற்றினியல்பு சிறிதுந் தோன்றாது அறிவுதந்துநிற்கும் வண்ணந் தன்வியாபகத்துளடக்கி நிற்றலால் வேதகந் தரித்த என்றார். (௧)

கூர்த்தவெண்கோட்டியானைக்குலோத்துங்கவழுதிஞாலங்
காத்தரசளிக்குநாளிற்கடிமதிலுடுத்தகூடன்
மாத்தனிநகருள்வந்துமறுபுலத்தவனாயாக்கை
மூத்தவனொருவன்வைகிமுனையவாள்பயிற்றிவாழ்வான்.

(இ-ள்.) கூர்த்த வெள் கோடு யானை குலோத்துங்க வழுதி - கூரியவெள்ளியகொம்பினையுடைய யானைச்சேனையையுடைய குலோத்துங்கபாண்டியன், ஞாலம் காத்து அரசு அளிக்கும் நாளில் - நிலவுலகத்தையோம்பி அரசுசெய்து வருங்காலையில், கடி மதில் உடுத்த கூடல் மாதனி நகர் உள் - காவலமைந்த மதில்சூழ்ந்த மதுரையாகிய பெரியவொப்பில்லாத திருநகரத்தில், மறு புலத்தவன் ஆய் யாக்கை மூத்தவன் ஒருவன்வந்து வைகி-அயல்நாட்டில் உள்ளவனாய் மூப்பால்முதிர்ந்த சரீரத்தையுடை ஒருவிஞ்சையன் வந்து குடியேறி, முனைய வாள் பயிற்றி வாழ்வான் - கூர்மைவாய்ந்த வாள்வித்தையைக் கற்பித்து வாழ்வானாயினான். (௨)

வாள்வினைக்குரவனன்னான்வல்லமண்விடுத்தவேழந்
தோள்வினைவலியாலட்டசுந்தரவிடங்கன்றன்னை
யாள்வினையன்புந்தாளும்வைகலுமடைந்துதாழ்ந்து
மூள்வினைவலியைவெல்லுமூதறிவுடையனம்மா.

(இ-ள்.) வாள் வினை குரவன் அன்னான் - வாள்வித்தையைக் கற்பிக்கும் ஆசிரியனாகிய அம்முதியோன், வல் அமண் விடுத்த வேழம் - வலியசமணர் ஏவிய யானையை, தோள் வினை வலியால் அட்ட சுந்தரவிடங்கன் தன்னை - தமது திருத்

Koviloor Digital Library

தோளின் போர்த்தொழிலின் வன்மையால் வென்றருளிய சோமசுந்தரக்கடவுளை, ஆர்வமும் அன்பும் தானும் ஆக-சிவபணிவிடையும் சிவநேயமும் தானுமாக, வைக லும் அடைந்து தாழ்ந்து-நாள்தோறும் அடைந்து சென்றுவணங்கி, முன் வினை வலி யை வெல்லும் மூதறிவு உடையான் - இடையில் ஏறும் ஆகாமிய வினையின்றன் மையை வெல்லும் பேரறிவுடையோன்.

நாளுமவைத்த முனிவரோடிய பழவினையினுங் கொடியதென்பதுதோன்ற, தொ ல்வினைவலியை யெனவும், பாரத்துவம் புசிக்கச்செய்யிடையிலேறும் வினையென்ப துதோன்ற மூள்வினையெனவும், அதனை வெல்லுதற்குச் சாதனமாகிய தாழ்தல் இர ங்குவான் பணியறம் என்பதுதோன்ற வைகலுமடைந்து தாழ்ந்து எனவுங் கூறினர்.

கைவினைமறவாள்வித்தைக்காவலனவனைத்தாழ்ந்து
தெவ்வினைவெல்வான்கற்குஞ்சிங்கவேறனையார்தம்மு
ளுய்வினையுணராப்பாவிசித்தனென்றொருவனுள்ளா
னவ்வினைநிரம்பக்கற்றானாழ்வலியாலன்னான்.

(இ-ள்.) மறம் வாள் கைவினை வித்தை காவலன் அவனை தாழ்ந்து - கொலை த்தொழில்வாய்ந்த வாளேந்தியகைத்தொழில் வித்தையில் வல்லோனாகிய முதி யோனை வணங்கி, தெவ்வினை வெல்வான் கற்கும் சிங்க ஏறு அனையார் தம்முள் - பகைவர் செய்யும் போர்த்தொழிலை வெல்ல வாள்வித்தை கற்கும் ஆண்சிங்கத்தை யொத்த மாணாக்கருள், உய்வினை உணராத பாவி சித்தன் என்று ஒருவன் உள்ளா ன் - பாவத்தினின்று தப்புதலையறியாத மகாபாவியாகிய சித்தனென்னும் பேரை உடைய ஒருவனுளன், அன்னான் - அச்சித்தன், ஆழ் வலியால் அவ்வினை நிரம்ப கற்றான் - ஆழ்ந்த வன்மையால் அசிதேறு முதலிய அந்த வித்தைகளைக் குறைவின்றி க்கற்றான்.

அசிதேறு வாளைப்பற்றி வித்தையில் ஒருவகை. (ச)

மானவாள்வித்தையாலேதன்னைநன்குமதிக்கத்தக்க
தானதோர்செருக்கினுற்றன்றாசிரியற்குமாறாய்த்
தானுமோர்வித்தைக்கூடஞ்சமைத்துவாள்பலருங்கற்க
வூறுலாம்படைவல்லாளினூதியமிதப்பக்கொள்வான்.

(இ-ள்.) மானம் வாள் வித்தையாலே-மானம்வாய்ந்த வாள்வித்தையாலே, தன்னை நன்கு மதிக்க தக்க தானது ஓர் செருக்கினுல் - தன்னைப் பலரும் மெச்சத்த க்கதான இறுமாப்பினால், தானும் தன் ஆசிரியற்கு மாறாய் ஓர் வித்தைக் கூடம் ச மைத்து - தானும் தன்னாசிரியனுக்கு விரோதமாய் ஒரு வித்தை கற்பிக்கும் வித்தைக் கூடத்தை ஏற்படுத்தி, வாள் பலரும் கற்க - வாள்வித்தையைப் பலரும் தன்னிடத் தில் வந்து கற்க, ஊறு உலாம் படை வல்லாளின் - பிணம்நெருங்கிய ஆயுதவரிசை யில் வல்ல தன்னாசிரியனிலும், ஊதியம் மிதப்பக் கொள்வான் - வருவாய் அதிகமா கப் பெறுவான் ஆயினன்.

ஒருத்தனேயிருவர்வாளின்விருத்தியுமொருங்குகொள்ளுங்
கருத்தனுய்விருத்தனூரிற்கழிவதுகருதியன்னான்
வருத்துவாளினனுர்தன்பால்வரமனந்திரித்துநாளும்
விருத்தமேசெய்வான்றுமையிரும்பிணேற்றனையோனன்னான்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஒருத்தனே - சித்தன் தானொருவனுமே, இருவர் வாளின் விருத்தியும் - தன்னாசிரியனும் தானும் அடைந்துவரும் வாட்பயிற்சியின் ஊதியத்தையும், ஒருங்கு கொள்ளும் கருத்தனாய்-ஒருசேர அடையும் கருத்தையுடையவனாய், விருத்தன் ஊரில் கழிவறு கருதி - தன்னாசிரியனாகியமுதியோன் மதுரையினின்றும் தன்னூர்க்குச்செல்லுதலை எண்ணி, அன்னான் வருந்த வாள் இளைஞர் - அம்முதியோன் கற்பிக்கும் வாள்வித்தையைக் கற்கும் இளையர்கள், தன்பால் வர மனந்திரித்து நாளும் விருத்தமே செய்வான் - தன்னிடத்திற் கற்கும்படிவர அவர்கள் மனத்தை வேறுபடுத்தி எந்நாளும் வேறுபாடு செய்யும் சித்தன், தாயை விரும்பினோற்கு இளையோன் அன்னான் - தாயைவிரும்பித் தந்தையைக் கொலைசெய்த மாபாதகனுக்குக் கொடுந்தொழிலாற் சகோதரனை யொத்தவனாயினான்.

வருவாயில்லாது செய்யில் ஊரினின்றுங் கழிவானாதலால் தன்பால்வர மனந்திரித்து நாளும் விருத்தமே செய்வான் எனவும், மகாபாதகத்தில் தாயைவிரும்பிய அந்தணனுக்கு மேற்பட்டாரின்மையால் தாயை விரும்பினோற் கிளையோனன்னான் எனவுங் கூறினர். (௬)

தொடத்தொடப்பொறுக்குந்திண்மைத்தொன்னிலமனையானில்லா
விடத்தவன்றேவிபாற்போயிடனுண்டேயிடனுண்டேயென்
றடுத்தடுத்தஞ்சாதென்றுங்கேட்டுக்கேட்டகல்வானாக
நடைத்தொழிற்பாவையன்னநங்கைவாளாவிருந்தாள்.

(இ-ள்.) தொட தொட பொறுக்கும் திண்மை தொல்நிலம் அனையான்-தோண்டத்தோண்டப் பொறுத்து இடம் கொடுக்கும் திண்ணிய தொன்றுதொட்டுள்ள பூமியைப்பொறுமையில் ஒத்த முதியோன், இல்லாத இடத்து அவன் தேவிபால் போய்- இல்லாத இடத்தில் அவன் மனைவியாகிய மாணிக்கமாலையிடத்துச்சென்று, இடன் உண்டே இடன் உண்டேஎன்று அடுத்து அடுத்து அஞ்சாது என்றும்கேட்டு கேட்டு அகல்வானாக - சமயமுண்டா சமயமுண்டாவென்று நாள்தோறும் அடுத்துச் சிறிதும் அஞ்சாமல் கேட்டுக்கேட்டுப் போக, நடை தொழில் பாவை அன்ன நங்கை வாளா இருந்தாள் - நடக்கும் தொழிலையுடைய ஒரு பதுமையை ஒத்த அம்மாணிக்கமாலை ஒன்றும்பேசாமல் மவுனமாயிருந்தாள்.

தன்னைப் பலகாலும் சித்தன் நிந்தித்தொழுகுதலைக்கேட்டும் பொறுத்திருந்தலால் தொடத்தொடப் பொறுக்குந் திண்மைத்தொன்னிலமனையான் எனவும், உருவத்திற் பதுமையொப்பாதலால் இல்பொருளுவமையணிபட நடைத்தொழிற்பாவையன்ன எனவுங் கூறினர். இடனுண்டே இடனுண்டே, அடுத்தடுத்து, கேட்டுக் கேட்டு பன்மைப்பொருளில்வந்த அடுக்குத்தொடர்கள். "அகழ்வாரைத்தாங்குநிலம் போலத்தம்மை - இகழ்வார்ப்பொறுத்தல்" என்றார். (௭)

பின்னொருபகல்போய்ச்செங்கைபிடித்தனன்வலிப்பத்தள்ளி
வன்னிலைக்கதவநூக்கித்தாழக்கோல்வலித்துமாண்ட
தன்னிலைக்காப்புச்செய்தாடனிமனக்காவல்பூண்டா
ளந்நிலைபிழைத்தநீயொன்னங்கத்தைவெதுப்பப்போனான்.

(இ-ள்.) பின் ஒரு பகல் போய் செங்கை பிடித்தனன் வலிப்ப - பின்பு ஒரு நாள் சென்று குருபத்தினியின் செவந்த கையைத் தொட்டிழுக்க, தனி மனம் காவல் பூண்டாள்-ஒப்பில்லாத தனது மனத்தைக் கற்புக்கு ஆளாகக்கொண்ட மாணிக்

கமாலை, தன்னில் வல் நிலை கதவம் நூக்கி தாழக்கோல் வலித்து - அவனைத்தன்னி வலி ய நிலையில் பூட்டிய கதவைச்சாத்தித் தாழ்போட்டு, மாண்ட தன் நிலை காப்பு செய் தாள்-மாட்சிமைப்பட்ட தனது கற்பினைக் காத்துக்கொண்டாள், அ நிலை பிழைத்த தீயோன் அனைத்தேதி வெறுப்ப போனான் - (அதனால்) அப்பொழுது தவறுசெய்த கொடியசித்தன் காமாக்கினி சுட்டு வருத்தச்சென்றான்.

அந்நிலை பிழைத்த என்றதற்கு அச்சமயந்தவறிய எனப் பொருள் கொள்ளு தலும் ஒன்று. மனத்தைப் பொறிவழிப்போக்காதவள் என்பார் தனிமனக்காவல் பூண்டாள் எனவும், புறத்துக்காவல் செய்தாள் என்பார் வன்னிலைக்கதவநூக்கித் தாழக்கோல்வலித்து எனவுங் கூறினார். (அ)

அறங்கடைநின்றாருள்ளுமாற்றவுங்கடையனாகிப்
புறங்கடைநின்றான்செய்தபுலைமைதன்பதிக்குந்தேற்றாள்
மறந்தவிர்கற்பினாடன்மனம்பொதிந்துயிர்கடோறு
நிறைந்தநான்மாடக்கூடனிமலனைநினைந்துநொந்தாள்.

(இ-ள்.) அறங்கடை நின்றாருள்ளும் ஆற்றவும் கடையனாகி புறங்கடை நின்றான் செய்த புலைமை - பாபத்தில் நின்ற மகாபாதகருள்ளும் மிகவும் கடைப்பட்ட வனாகிப் புறம்பாய் நின்ற சித்தன்செய்த நீசத்தன்மையை, மறம் தவிர் கற்பினாள் - அறக்கற்பினை உடைய மாணிக்கமாலை, தன் பதிக்கும் தேற்றாள் மனம் பொதிந்து - தன்னுடைய நாயகனுக்கும் தெரிவியாது தன் மனத்தில் வைத்து, உயிர்கள் தோறும் நிறைந்த நான்மாடக் கூடல் நிமலனை நினைந்து நொந்தாள் - உயிர்கள்தோறும் வியாபித்த மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளைச் சிந்தித்து வருந்தினாள்.

உயிர்கட்கறிவிப்போனாதலால் உயிர்கடோறு நிறைந்த எனவும், அவன் முற்றுமுணர்வோனாதலால் நிமலனைநினைந்த எனவும், கற்பு-அறக்கற்பு, மறக்கற்பு என விருவகை. அறக்கற்பு தன்னை வழிபடுவோரைப் பரிக்கிரகிக்குங்கற்பும். மறக்கற்பு தனக்குத் தீங்குசெய்வோரை நிக்கிரகிக்குங் கற்பும் ஆதலால் மறந்தவிர்கற்பினாள் எனவுங் கூறினார். (௯)

தாதகநிறைந்தகொன்றைச்சடையவன்புறம்புசெய்த
பாதகமறுக்குங்கூடற்பகவனெவ்வுயிர்க்குந்தானே
போதகனாகித்தேற்றும்புண்ணியன்புலைஞன்செய்த
தீதகமுணர்ந்துதண்டஞ்செய்வதற்குள்ளங்கொண்டான்.

(இ-ள்.) அகந்தாது நிறைந்த கொன்றை சடையவன் - உள்ளே மகரந்தம் நிறைந்த கொன்றைமாலையையணிந்த சடையையுடையவனும், புறம்பு செய்த பாதகம் அறுக்கும் கூடல் பகவன் - அயல்நாட்டில் செய்த மாபாதகத்தையுந் தொலைத்தருளிய மதுரையில் எழுந்தருளிய பகவனும், எவ்வுயிர்க்கும் தானே போதகனாகி தேற்றும் புண்ணியன் - எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் தானே யுணர்த்துவோனாகி உணர்த்தும் புண்ணிய சொரூபியும் ஆகிய சோமசுந்தரக்கடவுள், புலைஞன் செய்த தீது அகம் உணர்ந்து - நீசனாகிய சித்தன் செய்த கொடுமையைத் தனது திருவுளத்தில் அறிந்து, தண்டம் செய்வதற்கு உள்ளங்கொண்டான் - அவனை ஒறுத்தற்குத் திருவுளம் கொண்டருளினார்.

எல்லாவற்றிற்கும் இறைவன் என்பதை யுணர்த்தற்குக் கொன்றைமாலை ஓர் திருவடையாளம் என்பார் தாதகம்நிறைந்த கொன்றைத்தாரினான் எனவும், அவ்வி

வறமைக்குணங்கள் முற்றுமுடையோன் என்பார் ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியமென்னும் பொருள்மேல் நின்ற பகவன் எனவும், பிரமமே யுயிரென்றுகூறும் மாயாவாதமறுதலையென்பார் எவ்வுயிர்க்குந்தானே போதகனாகித் தேற்றும் புண்ணியனெனவும், எல்லாப் புண்ணிய தலங்களினுஞ் சிறந்த தலம் இது என்பார் புறம்புசெய்த பாதகமறுக்குங் கூடல் எனவுங் கூறினர். (௬0)

கோளுடைக்குரவனேபோற்சித்தனைக்குறுகிச்சித்தா
காளையாநீயுஞ்சாலக்கழியமுப்படைந்தயாமும்
வாளமராடிநந்தம்வலிகளுமளந்துகாண்டு
நாளைவாவருதுநாமுநகர்ப்புறத்தொருசாரென்றான்.

(இ-ள்.) கோள் உடைய குரவனே போல் சித்தனை குறுகி - வலிமையை உடைய ஆசிரியனைப்போலத் திருஉருவங்கொண்டு சித்தனை அடைந்து, சித்தா - சித்தனே, காளையாம் நீயும் சால கழிய மூப்பு அடைந்த யாமும் - காளைப்பருவத்தை உடைய நீயும் மிக்க முதுமைப்பருவத்தை உடைய நாமும், வாள் அமர் ஆடி - வாட்போர் செய்து, நம் தம் வலிகளும் அளந்து காண்டும் - நமக்குள்ள வலிமைகளையும் வரைசெய்து காண்போம், நகர் புறத்து ஒரு சார் நாளை வா நாமும் வருதும் என்றான் - நகரின்புறத்து ஒருபக்கத்தில் நாளைக்குப் போர்க்குவா நாமும் வருவோம் என்று கூறி அருளினர். (௬௧)

நாதனாங்குரவன்கூறநன்றெனவுவந்துநாலாம்
பாதகனதற்குநேர்ந்தான்படைக்கலக்குரவன்மீண்டு
போதருமளவில்வையம்புதையிருள்வெள்ளத்தாழ
வாதவன்வையமுந்நீர்வெள்ளத்துளாழ்ந்ததம்மா.

(இ-ள்.) நாதன் ஆம் குரவன் கூற நன்று என உவந்து - இறைவனாகிய ஆசிரியன் கூறியருள ஓம் என்று விரும்பி, நாலாம் பாதகன் அதற்கு நேர்ந்தான் - நான்காம்பாதகமாகிய காமத்திற்கு ஓர் கொள்கலமாகிய சித்தன் அதற்கு உடன்பட்டான், படைக்கலம் குரவன் மீண்டுபோதருமளவில் - ஆயுதங்கள் ஏந்திய ஆசிரியன் திரும்பி வருமளவில், வையம் புதை இருள் வெள்ளத்து ஆழ - நில உலகமானது நிறைந்த அந்தகாரமாகிய வெள்ளத்தில் அழுந்த, ஆதவன் வையம் முந்நீர் வெள்ளத்துள் ஆழ்ந்தது - சூரியனுடைய தேரானது கடலாகிய வெள்ளத்தில் அழுந்தியது.

சூரியன் தேர் கடலிலாழ்தலால் நிலவுலகிருளிலாழ்ந்தது என்றமையால் செம்மொழிச்சிலேடையில் வந்த காரகவேதுவணி. (௬௨)

ஆசினன்குரவற்கின்னாவாற்றினோன்பாவம்போல
மாசிருட்டிணிந்தகங்குல்வலிகெடவடிவாள்விஞ்சைத்
தேசிகனொருவனன்னான்பிணியுடல்சிதைப்பத்திட்டுங்
காய்சினவாள்போற்கிரைக்கல்பிடைமுளைத்தான்வெய்யோன்.

(இ-ள்.) ஆசு இல் நன் குரவற்கு இன்னா ஆற்றினோன் பாவம்போல - குற்றமில்லாத தனது நல்ல ஆசிரியனுக்குத் துன்பம் செய்த சித்தனுடைய பாவத்தின் வலிமை கெடுதல்போல, மாசு இருள் திணித்த கங்குல் வலிகெட - கரிய இருள்மிக்க இரவின் வலிமைகெட, வடிவாள் விஞ்சை தேசிகன் ஒருவன்-வடித்த வாள்வித்தையில்வல்ல ஆசிரியனாகிய முதியோன், அன்னான் பிணி உடல் சிதைப்ப திட்டும் காய்

னைம் வாள்போல் - அச்சித்தனுடைய வலிய சிரத்தை யழிக்கத் தீட்டிய கொல்லு ம் கோபமிக்க வாளைப்போல, வெய்யோன் எழு கல் இடை முளைத்தான் - சூரியன் உதயகிரியில் உதயம் செய்தான்.

உவமையும் பொருளும் ஒத்தமையுண்மையால் பொருளின்றொழிலே யுவமைக்கேற்றிப் பகைவத்தின் வலிமைகெட என்றும். முன்னது தொழிலும் பின்னது பயனும் ஆதலால் தொழிலும் பயனும் விரவிவந்த வுவமையணி. (கங)

நன்றியைக்கொன்றுநின்றோனாயகனாணைக்கஞ்சும்
வன்றிறலரிமானூர்தித்தெய்வதம்வழிபட்டேத்தி
வென்றிவாள்பரவிக்கச்சுவீக்கிவாள்பலகையேந்திச்
சென்றுவாளுழவன்சொன்னசெருக்களங்குறுகினானே.

(இ-ள்.) நன்றியை கொன்று நின்றோன் - ஆசிரியன் செய்த நன்றியைச் சிதைத்த சித்தன், நாயகன் ஆணைக்கு அஞ்சும் வல் திறல் அரிமான் ஊர்தி தெய்வதம் வழிபட்டு ஏத்தி - சோமசுந்தரக்கடவுளுடைய ஆணைக்கு அஞ்சி வழிபட்டொழுகும், வலிமையையுடைய சிங்கவாகனத்தை உடைய துர்க்கையை வழிபட்டு வணங்கி, வென்றி வாள் பரவி - வெற்றியை உடைய வாளினை வணங்கி, கச்சு வீக்கி வாள் பலகை ஏந்தி சென்று - கச்சினைக்கட்டி வாளையும் கேடகத்தையும் ஏந்திப்போய், வாள் உழவன் சொன்ன செருக்களம் குறுகினான் - வாளையேந்திய தனது ஆசிரியன் வடிவங்கொண்ட சோமசுந்தரக்கடவுள் கூறிய போர்க்களத்தை யடைந்தான்.

செய்நன்றிசிதைத்தோன் பெருஞ்சாதனங்களுடையானாயினும் அவை பலியா என்பார் நாயகனாணைக்கஞ்சும் தெய்வதம் எனக்கூறினார். (கச)

மதுகைவாளமர்க்குநென்னல்வந்தறைகூவிப்போன
முதுகடும்புலியேறன்னமுடங்குடற்குரவன்றானு
மதிர்கழல்வீக்கிக்கச்சுமசைத்துவெண்ணீறுஞ்சாத்தி
யெதிர்கொள்வாள்பலகைதாங்கிக்கயவனுக்கெதிரேவந்தான்.

(இ-ள்.) மதுகை வாள் அமர்க்கு - வலிய வாள் ஏந்திச்செய்யும் போர்க்கு, நென்னல் வந்து அறை கூவி போன - நேற்றைப்போதில் வந்து போர்க்கு அழைத்துப்போன, முதுகடும் புலி ஏறு அன்ன முடங்கு உடல் குரவன் தானும் - முதிய கடிய புலியேற்றை ஒத்த கூனிய சரீரத்தை உடைய முதிய ஆசிரியன் வடிவமாகவந்த சோமசுந்தரக்கடவுளும், அதிர் கழல் வீக்கி கச்சும் அசைத்து - ஒலிக்கும் வீரகண்டையைக்கட்டிக் கச்சினையும் அரையிற்கட்டி, வெள் நீறும் சாத்தி - வெள்ளிய திருநீற்றையும் திருநுதலில் புண்டரித்து, எதிர்கொள் வாள் பலகை தாங்கி - ஒளிவீசும் வாளையும் கேடகத்தையும் திருக்கரத்தில் ஏந்தி, கயவனுக்கு எதிரே வந்தான் - கீழ்மகனாகிய சித்தனுக்கு எதிரே போர்க்கு வந்தருளினார். (கரு)

மடங்கலேறொன்றும்பைங்கணரியொன்றுமலைந்தாலென்ன
முடங்கல்வான்றிங்களொன்றுமுக்கணுநான்குதோளும்
விடங்கலுழ்மிடறுந்தோற்றுவென்றிவாள்விஞ்சைவேந்த
மடங்கலன்முறுநேரிட்டாடமராடல்செய்வார்.

(இ-ள்.) மடங்கல் ஏறு ஒன்றும் பைங்கண் அரி ஒன்றும் மலைந்தால் என்ன - ஆண்சிங்கமொன்றும் பசிய கண்களையுடைய அரி ஒன்றும் தம்முள் போர்செய்தாற்

போல, வான் முடங்கல் திங்கள் ஒன்றும் - ஆகாயத்தில் சஞ்சரிக்கும் வளைந்த இளம்பிறை ஒன்றும், முக்கண்ணும் நான்கு தோளும் - திரிநேத்திரங்களும் நான்கு திருத்தோள்களும், விடம் கலுழ் மிடறும் தோற்று வென்றி வாள் விஞ்சை வேந்தும் - விஷம் விளங்கும் திருமிடறும் புலப்படுத்தாது வந்தருளிய வெற்றியை உடைய வாள்வித்தையில் வல்ல அரசாகிய சோமசுந்தரக்கடவுளும், அடங்கலன் தானும் நேரிட்டு - பகைவனாகிய சித்தனும் தம்முள் எதிர்ந்து, ஆடு அமர் ஆடல் செய்வார் - வெற்றியோடு தம்முள் போர்செய்யத் தொடங்கினார்கள். (கசு)

எதிர்ப்பர்பின்பதிவர்நேர்போயெழுந்துவானேறுபோல
வதிர்ப்பர்கேடகத்துட்டாழ்வுற்றடங்குவர்முனைப்பர்வாளை
விதிர்ப்பர்சாரிகைபோய்வீசிவெட்டுவர்விலக்கிமீள்வர்
கொதிப்பர்போய்நகைப்பராண்மைகூறுவர்மாறிநேர்வர்.

(இ-ள்.) எதிர்ப்பர் பின் பதிவர் - ஒருவரை ஒருவர் எதிர்ந்து பின் போவார்கள், நேர் போய் எழுந்து வானேறு போல அதிர்ப்பர் - தம்முள் எழுந்து துள்ளி இடியேறுபோலக்கோஷிப்பார், கேடகத்துள் தாழ்வுற்று அடங்குவர் - கேடகத்துள் மறைந்து அடங்குவார்கள், முனைப்பர் - பின்பு வெளிப்படுவர், வாளை விதிர்ப்பர் - ஏந்தியவாளை யசைப்பர்கள், சாரிகை போய் வீசி வெட்டுவர் - இடசாரி வலசாரியாகச்சென்று வாள்வீசி ஒருவரை ஒருவர் வெட்டுவார்கள், விலக்கி மீள்வர் - அவ்வாள்வெட்டை விலக்கித் திரும்புவார்கள், கொதிப்பர் போய் நகைப்பர் - கோபிப்பார் பின்பு சென்று அட்டகாசம் செய்வார்கள், ஆண்மை கூறுவர் - நெடுமொழி கூறுவார்கள், மாறி நேர்வர் - தம்முள் இடசாரி வலசாரியாக மாறியெதிப்பார்கள். கஎ

வெந்திடுவார்போற்போவர்வட்டித்துவிளித்துமீள்வர்
கொன்னிடுவாண்மார்பேற்பர்குறிவழிபிழைத்துநிற்ப
ரிந்நிலைநாலைங்கன்னலெல்லைநின்றாடல்செய்தா
ரந்நிலையடுபோர்காண்பாரனைவருங்கேட்கவையன்.

(இ-ள்.) வெந் இடுவார் போல் போவர் - புறங்காட்டிச் செல்வார்போலப் போவார்கள், வட்டித்து விளித்து மீள்வர் - சுழன்றுவந்து ஒருவரை யொருவர் போர்க்கழைத்துத் திரும்புவார்கள், கொன் இடுவாள் மார்பு ஏற்பர் - கூர்மைவாய்ந்த வாள்வெட்டைத் தமது மார்பின்மேல் ஏற்பார்கள், குறி வழி பிழைத்து நிற்பர்- தாம்கொண்ட இலக்கின் நெறியைத்தப்பி நிற்பார்கள், இந்நிலை - இவ்வாறு, நாலைங் கன்னல் எல்லை நின்று ஆடல் செய்தார் - இருபதுநாழிகைகாறும் நின்று போர்செய்தார்கள், அந்நிலை அடு போர் காண்பார் அனைவரும் கேட்க - அப்பொழுது போர்த்தொழிலைக் காணவந்தவர் எவரும்கேட்க, ஐயன் - சோமசுந்தரக்கடவுள்.

வாட்போரிலக்கணங்களாதலால் அவைமுறைபட எதிர்ப்பர் என்பது முதல் குறிவழிபிழைத்து நிற்பர் எனவும், தாம் முதியோன்பொருட்டு வந்தவர் ஆதலால் அவைபலர்க்கும்விளங்க நாலைங்கன்னலெல்லைநின்றாடல்செய்தார் எனவுங்கூறினார்.

குரத்தியைநினைத்தநெஞ்சைக்குறித்துரைநாவைத்தொட்ட
கரத்தினைப்பார்த்தகண்ணைக்காத்தனைகோடியென்றென்
றுரைத்துரைத்தவற்றுக்கெல்லாமுறைமுறைதண்டஞ்செய்து
சிரத்தினைத்தடிந்துவிட்டித்திருவுருமறைந்துநின்றான்.

Koviloor Digital Library

(இ-ள்.) குரத்தியை நினைத்த நெஞ்சை - ஆசிரியன் மனைவியை விரும்பிக் கருதியமனத்தையும், குறித்து உரை நாவை - குறித்துக் காமமிக்க கழிபடர்கிளவி கூறிய நாவினையும், தொட்ட கரத்தினை - பிடித்தகையையும், பார்த்த கணினை - குறித்துப்பார்த்த கண்ணினையும், காத்தினை கோடி என்று என்று உரைத்து உரைத்து - இவைகள் எல்லாம் தீத்தொழிற்குக் குடன்பட்டமையால் அவைகளைக் காத்துக்கொள்ளாய் காத்துக்கொள்ளாய் என்று அடுத்தடுத்துக்கூறி, அவற்றுக்கு எல்லாம் உறுமுறை தண்டம் செய்து-அவ்வவையவங்களுக்கெல்லாம் தருமநூலிற் கூறிய முறைப்படி தண்டித்து, சிரத்தினை தடிந்து விட்டி திரு உரு மறைந்து நின்றான்-அவனது தலையைப் பின் தண்டித்து வீழ்த்துத் திருவுருமறைத்தருளினார்.

முற்றமுணர்தற்றன்மையால் யாவுமுணர்ந்தான் என்பார் உரைத்துரைத்து எனவும், தீத்தொழிற்குடன் பட்டவைகளை யொறுத்தல் அறநூல் முறைஎன்பார் நெஞ்சை, நாவை, கரத்தினை, கண்ணையுமுறைதண்டஞ்செய்து எனவும், நிக்கிரகஞ்செய்வதுபோலப் பரிக்கிரகஞ் செய்தார் என்பார் சிரத்தினைத்தடிந்து வீட்டியெனவுங் கூறினர். (௧௯)

போர்கெழுகளங்கண்டாருட்பொருபடைக்கேள்விச்செல்வர்
வார்கெழுகழற்காலானைக்கண்டிலர்மனையிற்றேடி
யேர்கெழுகற்பினாளையெங்குற்றான்குரவனென்னக்
கூர்கெழுவடிவேற்கண்ணாள்போயினார்கோயிற்கென்றாள்.

(இ-ள்.) போர் கெழு களம் கண்டார் உள் - போர்த்தொழில் நடக்கும் போர்க்களத்துள்பார்த்தவருள், பொரு படை கேள்வி செல்வர் வார் கெழுகழல் காலானை கண்டிலர் - போர்செய்யும் ஆயுதப்பயிற்சிநூலின் ஆராய்ச்சியையுடைய மாணாக்கர்கள் வாரிற்கோத்த வீரகண்டையைக்கட்டிய காலையுடைய தமது ஆசிரியனைக்காணாராகி, மனையில் தேடி - வீட்டிற்குத் தேடிச்சென்று, ஏர் கெழு கற்பினாளை குரவன் எங்கு உற்றான் என்ன-அழகுமிக்க கற்பினையுடைய மாணிக்கமாலையை நோக்கி ஆசிரியர் எங்குச்சென்றார் என்று வினவ, கூர் கெழு வடி வேல் கண்ணாள் கோயிற்கு போயினார் என்றாள் - கூர்மைவாய்ந்த வடித்தவேல்போன்ற கண்களையுடைய அம்மாணிக்கமாலை கோயிற்குச் சென்றார் என்று கூறினாள்.

முதியோன்பாற்கற்ற மாணாக்கர் என்பார் வார்கெழுகழற்காலானைக் கண்டிலர் என்றார். (௨௦)

என்றவப்போதேகோயிற்கேகினான்மீண்டான்றேடிச்
சென்றவர்சித்தன்றன்னைச்செருக்களத்தடுபோர்செய்து
வென்றனையேபின்னந்தவெங்களத்தெங்குந்தேடி
நின்றனைக்காணதிங்குசேர்ந்தனம்யாங்களென்றார்.

(இ-ள்.) என்ற அப்போதே - என்றுகூறிய வப்பொழுதே, கோயிற்கு ஏகினான் மீண்டான் - கோயிற்குச்சென்ற முதியோன் தன்வீட்டுக்குத் திரும்பினான், தேடி சென்றவர் சித்தன் தன்னை செருக்களத்து அடு போர் செய்து வென்றனையே - தேடிச்சென்ற மாணாக்கர்கள் சித்தனைப் போர்க்களத்தில் கொலைத்தொழிற்குரிய போர்த்தொழில் செய்து வென்றாயே, பின் அந்த வெம் களத்து எங்கும் தேடி நின்தன்னை காணாது இங்கு யாங்கள் சேர்ந்தனம் என்றார் - பின்பு அந்தப் போர்க்களத்தில் எவ்விடத்தும் தேடிக் காணாமல் இவ்விடத்தில் நாங்கள் தேடிவந்தோமென்றார்கள். (௨௧)

Koviloor Digital Library

விரைசெய்தாரவன்யானங்கம்வெட்டினேனல்லேனிங்க
ளுரைசெய்வதெவன்யாரென்போற்சித்தனையுடன்றுமாய்ந்து
வரைசெய்தோள்விந்தைக்கீந்தார்மற்றிதுசுற்றும்வைகைத்
திரைசெய்நீர்க்கூடலெந்தைதிருவுளச்செயல்கொலென்றான்.

(இ-ள்.) யான் விரை செய்தா ரவன் அங்கம் வெட்டினேன் அல்லேன் - நான்வாசம்வீசும் மாலையையணிந்த சித்தனுடைய சரீரத்தைத் துண்டித்தேனல்லேன், நீங்கள் உரை செய்வது எவன் - நீங்கள் இவ்வாறு சொல்லுவது யாது; யார் என்போல் சித்தனை உடன்று மாய்த்து வரை செய்தோள் விந்தைக்கு ஈந்தார் - யார் என்னைப்போல வந்து சித்தனைக் கோபித்துக்கொன்று மலையையொத்த அவனது தோளைத்தறித்துத் துர்க்கைக்குக் கொடுத்தவர்; இது சுற்றும் திரை செய் நீர் வைகை கூடல் எந்தை திரு உளம் செயல் கொல் என்றான் - இச்செயல்சூழ்ந்த அலைவீசும் நீர்மயமாகிய வைகையையுடைய மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுடைய திருவுளச்செயலோ என்று கூறினான்.

சித்தன் தன்னை யிகழ்ந்தொழுகுதலைத் தன்னை யாளாகவுடைய பெருமானார் பொறுத்திலரோவென்று கருதினானாதலால் எந்தை திருவுளச்செயல்கொல் என்றான் எனக் கூறினார். (உஉ)

மட்டித்தகலவைக்கொங்கைமனைவியுஞ்சித்தன்றன்னைக்
கிட்டிப்பல்காலும்வந்துகேட்டதுநெருநல்வாய்வந்
தொட்டித்தன்கையைப்பற்றியீர்த்ததுமுள்ளம்வெந்து
தட்டிப்போய்க்கதவந்தாழிட்டிருந்ததுஞ்சாற்றினாளே.

(இ-ள்.) மட்டித்த கலவை கொங்கை மனைவியும் - பூசிய கலவையையுடைய கொங்கையையுடைய மாணிக்கமாலையும், சித்தன் தன்னை கிட்டி பல் காலும் வந்து கேட்டதும் - சித்தனானவன் தன்னை நெருங்கிப் பலதரமும் வந்து இடமுண்டாவென்றுகேட்டுச்சென்றதும், நெரு நல் வாய் வந்து ஒட்டி தன்கையை பற்றி ஈர்த்ததும்-நேற்றைப்பொழுதுவந்து நெருங்கித் தனதுகையைப்பிடித்து இழுத்ததும், உள்ளம் வெந்து தட்டிப்போய் கதவம் தாழ் இட்டு இருந்ததும் சாற்றினாள் - மனம்வெதும்பி அவனினின்று நீங்கிக் கதவினைத்தாழ்போட்டிருந்ததுங் கூறினாள்.

தனதுள்ளக்கருத்தை வள்ளலுக்கொப்புவித்தவளாதலால் தன்பொருட்டு இறைவர் ஒறுத்தனர் என்று கருதினாள் என்பார் நிகழ்ந்த செய்தி முறைப்படச் சாற்றினாள் என்றார். (உ௩)

அம்மனையருளிச்சொன்னபடியெலாமருளிச்செய்த
தெம்முனையடுவாள்வீரர்சித்தனைமாய்த்தாரீது
மெய்ம்மையாமென்றுகண்டமைந்தரும்விளம்பக்கேட்டா
னெம்மையாளுடையகூடலிறைவிளையாட்டேயென்றான்.

(இ-ள்.) அம்மனை அருளிச் சொன்னபடி எல்லாம் - தமது தாயாகிய மாணிக்கமாலை யார்வாய்மலர்ந்து கூறிய அவையெல்லாம், அருளி செய்த தெவ் முனை அடு வாள் வீரர் சித்தனை மாய்த்தார் - திருவாய்மலர்ந்தருளிப் பகைவர்முனையை மாய்க்கும்வாள் ஏந்திவந்த வீரர்சித்தனைக் கொலைசெய்தார், ஈது மெய்ம்மை யாம் என்று கண்ட மைந்தரும் விளம்பக் கேட்டான் - இது உண்மை யாமென்று பார்த்த

தன்மாணாக்கருஞ் சொல்லக்கேட்டமுநியோன், எம்மை ஆள் உடைய கூடல் இறை விளையாட்டே என்றான் - எம்மை யாளாகவுடைய மதுரையின்கணெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலே இது என்று கூறினான்.

ஆசிரியன் மனைவி தாய் ஆதலால் அம்மனையெனவும், மனைவியன்றிக் கண்டு கேட்ட மாணாக்கருங் கூறினமையால் இறந்தது தழீஇய எச்சவும்மை கொடு மைந்தரும் எனவுங்கூறினார். தெவ் முனை கிளமொழி ஈற்றிலுள்ள வகரமெய் வருமொழி முதலெழுத்தாகத் திரிந்தது. (உச)

கொடியையேரிடையாளோடுங்கொற்றவாளிளைஞரோடுங்
கடியநான்மாடக்கூடற்கண்ணுதலடிக்கீழ்த்தாழ்ந்து
நெடியநான்முகனுந்தேருநெறியதுசிறியவேழை
யடியனேனளவிற்றோநின்னருள்விளையாடலென்றான்.

(இ-ள்.) கொடியை நேர் இடையாள் ஒடும் - பூங்கொடியை யொத்த இடையையுடைய தனது மனைவியோடும், கொற்றவாள் இளைஞர் ஒடும் - தன்னிடத்தில் வெற்றியையுடைய வாள்பயிலும் மாணாக்கரோடும், கடியநான் மாடக்கூடல் கண்ணுதல் அடிக்கீழ் தாழ்ந்து - காவல்பூண்ட மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவடிக்கீழ் வணங்கி, நெடியனும் நான்முகனும் தேருநெறியது - திருமாலும் பிரமனுந் தெளிந்துணராத நெறியதாகிய, நின் அருள்விளையாடல் - உனது அருள் விளையாட்டு, சிறிய ஏழை அடியனேன் அளவிற்றோ - சிறியவேழையடியேனது அளவினதோ, என்றான் - என்றுகூறித்துதித்தான்.

மலர்மிசையிருப்புண்டோராதலால் நெடியனுநான்முகனுந்தேரு எனவும், சுட்டுணர்வித்தெட்டாததாதலால் நின் அருள்விளையாடல் அடியனேனளவிற்றோவெனவுங்கூறினான். (உரு)

தன்மதிவழிவந்தோருநகருளோர்தாமும்பாதி
வெண்மதிமிலைந்தவேணிவிடையவனாடனோக்கிக்
கண்மலர்வெள்ளந்தாழ்ந்தாகழலடியிற்றாழ்ந்து
பண்மலர்த்தேம்பாடியாடினர்பழிச்சிநின்றார்.

(இ-ள்.) தன்மதி வழிவந்தோரும் நகர் உள்ளோர் தாமும் - தண்ணியசந்திரன்மரபில்வந்த குலோத்துங்கபாண்டியனும் மதுரைநகரிலுள்ளவரும், பாதி வெண்மதி மிலைந்தவேணி விடையவன் ஆடல் நோக்கி - அர்த்தசந்திரனையணிந்த சடாமுடியையுடைய இடபவாகனத்தையுடைய சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலைத் தமது மனத்தில் ஆராய்ந்து கண்டுற்று, கண்மலர் வெள்ளத்து ஆழ்ந்து - தமது கண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர்வெள்ளத்திலழுந்தி, கழல் அடியின் தாழ்ந்து - ஒலிக்கும் வீரகண்டையணிந்த திருவடியிலே வணங்கி, பண்மலர் தேம்பாடி ஆடினர் பழிச்சி நின்றார் - இசைநிறைந்த தேன்போன்ற பாடல்களைப்பாடியாடி வணங்கினார்கள்.

தமது அடியார்க்கெளியார் என்பது இதனால் விளக்கினார் என்றும் ஆரா அன்பால் எளிதுணர்பாவரும் அவசமாயினார் என்பார் கண்மலர்வெள்ளத்தாழ்ந்து கழலடியிற்றாழ்ந்து-பண்மலர்த்தேம்பாடியாடினர் என்றார். (உசு)

அடியவருக்கெளியரிவரெனத்தெரிக்கவன்றுவிழுந்தேத்தி
வடியயில்வேற்குலோத்துங்கன்மாளிகைக்காலையெனுமனையாளோடுங்
கொடியணிநோன்முதுமகனைக்கலிநேற்றிசாளவலஞ்சூழ்வித்திப்பான்
முடியணிவித்தனந்தருணபாண்டியற்குத்தன்னிறைமைமுழுதுமீந்தான்.

(இ-ள்.) அடியவருக்கு எளியர் இவர் - அடியவருக்கெளியராகிய இச்சோமசுந்தரக்கடவுள், பரதேசிகாவலர் என்று அடிவீழ்ந்து ஏத்தி - தமக்கோர்களைகணில்லாதவரைக் காத்தலில் வல்லோர் என்று திருவடியில் விழுந்தவணங்கி, வடி அயில் வேல் குலோத்துங்கன் - வடித்த கூரியவேலையேந்திய குலோத்துங்கபாண்டியன், மாணிக்கமாலை என்னும் மனையாள் ஒடும்-மாணிக்கமாலை என்னும் நாமத்தையுடைய அவன்மனைவியோடும், தொடியணிதோள் முதுமகனை களிறு ஏற்றி - வாகுவலயமணிந்த தோளையுடைய முதுமகனை யானையின்மேலேற்றி, நகரை வலம் சூழ்வித்து- மதுரைநகரைப் பிரதக்ஷிணஞ்செய்வித்து, இப்பால்—இப்புறம், அனந்தகுணபாண்டியற்கு முடியணிவித்து தன் இறைமை முழுதும் ஈந்தான் - அனந்தகுணபாண்டியனுக்கு மகுடஞ்சூட்டித் தனது அரசியல்முற்றுங்கொடுத்தான்.

பரதேசி-ஓர் இடத்து நிலையில்லாமல் சஞ்சரிப்போர் மேற்றுதலால், தமக்கோர் களைகணில்லாதவர் என்றும். அரசுள்ளபொழுதேயுள்ள இளவரசு அன்றென்பார் தன்னிறைமைமுற்றுமீந்தான் எனவும். தமக்கெழுந்த ஆராக்காதலால் அம்மையப்பனென அவரைக்கருதி யவர்க்குச்செய்யும் சிறப்பினையவர்கட்குச்செய்தான் என்பார் மாணிக்கமாலையெனு மனையாளோடுந்தொடியணிதோண்முதுமகனைக் களிறேற்றி நகரைவலஞ்சூழ்வித்து எனவுங்கூறினர். (உஎ)

நிலைநிலையாப்பொருளுணர்ந்துபற்றிகந்துகரணமொருநெறியேசெல்லப்
புலனெறிநீத்தருள்வழிபோய்ப்போதமாந்தன்வலியைப்பொதிந்நின்ற
மலவலிவிட்டகலவராவுமிழ்ந்தமதிபோல்விளங்கிமாறியாடுந்
தலைவனடிநிழற்பிரியாப்பேரின்பக்கதியடைந்தான்றமிழர்கோமான்.

(இ-ள்.) நிலைநிலையா பொருள் உணர்ந்து - நிலைப்பொருளையும் நிலையில்லாப் பொருளையுமுணர்ந்து, பற்று இகந்து கரணம் ஒருநெறியே செல்ல - இருவகைப்பற்றினின்றும் நீங்கி அந்தக்கரணங்களொருவழிப்பட்டேசெல்ல, புலன் நெறி நீத்து அருள்வழிபோய் - ஐம்புலன்களின் நெறிநின்றுநீங்கித் திருவருள்வழிச்சென்று, போதம் ஆம் தன்வலியை பொதிந்நின்ற மலம் வலிவிட்டகல-போதமாகிய தனது வலியை மறைத்துநின்ற ஆணவமலவலிகழன்றொழிய, அரா உமிழ்ந்த மதிபோல் விளங்கி - விழுங்கிய இராகுவென்னும் பாம்புமிழ்ந்த சந்திரனைப்போலவிளங்கி, மாறி ஆடும் தலைவன் அடிநிழல் பிரியாத பேர் இன்பம் கதி-கான்மாறியாடிய சோமசுந்தரக்கடவுளின் திருவடிநிழலாகிய விரவிய பேரின்பந்தருஞ் சிவகதியை, தமிழர்கோமான் அடைந்தான் - குலோத்துங்கபாண்டியன் அடைந்தான்.

சுட்டறிவாலுணரப்படாது திருவருளா லுணரப்படுஞ் சிவம் என்பார் நிலைப்பொருள் எனவும், தோன்றும்பொழுதே யில்லையாய்த்தோன்றி வேறுரும் இந்திரசாலம்போலவும், முற்றும் நிகழாது இடையிலழியுங் கனாக்காட்சிபோலவும், ஒரு காரணங்காட்டி யழியும் பேய்த்தேர்போலவும் நிலவுலகவாழ்வும் இந்திரன்முதலியோர் பதவிவாழ்வும் உள்ளன என்பார் நிலையாப்பொருள் எனவும், இதுநித்தியம் இது அநித்தியம் என்றும் மெய்யுணர்வு நிகழ்ந்தவழி யிகபரபோகவிச்சை கழலுதற்கேதுவாகும் யானெனது என்றும் இருவகைப்பற்றுங் கழலும் எனபார் பற்றிகந்து எனவும், இவைகழன்றமையால் தான்செல்லும் திருவருளின்வழித்தாய் உட்கருவிகளாகிய அந்தக்கரணங்களும் புறக்கருவிகளாகிய இந்திரியங்களுந் தந்தமக்குரிய செயல்களையொழிந்துசெல்லும் என்பார் கரணமொருநெறியேசெல்லப்புலனெறிநீத்து எனவும், அத்திருவருளால் செம்பிற்காளிதம்போல ஆன்மாவோடு விரவி யவ்வான்மபோதத்

ஞைதமறைத்த ஆணவமலவலி அகலும் என்பார் போதமார்ந்தன் வலியைப் பொத்திநி ன்ற மலவலிவிட்டகல எனவும், அதாசமுழ்ந்தவழி அத்திருவருண்ஞானம் விளங்கும் என்பார் அராவுமிழ்ந்தமதிபோல்விளங்கி எனவும், அதனுற் சிவாநுபவங்கூடும் என் பார் மாதியாடுந் தில்லைவனடிநிழல் பிரியாப் பேரின்பத்தெய்தினான் எனவுங் கூறி னர். "சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந்திருப்பெருந்துறையுறை சிவனே" எனவரும் உண்மைத்திருவாக்கா லுணர்க. (உ௭)

அங்கம்வெட்டினபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கசoஉ.

இருபத்தெட்டாவது.

நாகமெய்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

செங்கண்மால்விடைமேல்விடங்கர்செருக்களத்திடைவாளெடுத்
தங்கம்வெட்டியசேவகத்தையறைந்தனந்தமிழ்மாறன்மேற்
சங்கையிட்டமணர்சாற்றியதறுகண்வேள்விமுளைத்ததோர்
வெங்கண்வாளரவைத்தணித்தயிலித்தவாறும்விளம்புவாம்.


(இ-ள்.) செம் கண் மால் விடைமேல் விடங்கர் - செவந்த கண்களையுடைய திருமால் ஆகிய இடப வூர்திமேல் ஆரோகணித்தருளிய பேரழகை உடைய சோமசு ந்தரக்கடவுள், செருக்களத்து இடைவாளெடுத்து - போர்க்களத்திடத்துவாளேந்தி, அங்கம் வெட்டிய சேவகத்தை அறைந்தனம் - (சித்தனுடைய) உடம்பைத் துண்டு படுத்திய திருவிளையாடலைக் கூறினோம், தமிழ் மாறன் மேல் - தமிழ்வளர்த்தபாண் டியன்மேல், சங்கை யிட்டு அமணர் சாற்றிய தறுகண் வேள்வி முளைத்தது - ப கைகொண்டு சமணராகிய கொடியோர்செய்த தியயாகத்தில் தோன்றிய, ஓர் வெங் கண் வாள் அரவைத் தணித்தயிலித்த ஆறும் விளம்புவாம் - ஒரு கொடிய கண்களை உடைய ஒளிபொருந்திய பாம்பினைத் தணிப்பித்து கொன்றருளிய திருவிளையாட லையும் இனிக்கூறுவாம்.

முளைத்தது என்றும் வினைமுற்றுப் பெயரெச்சத்தில் வந்தது. (க)

கோதிலாதகுணத்தனந்தகுணப்பெருந்தகைமீனவ
னாதிநாயகனுருவமாகியவைந்தெழுத்தொடுகண்டிவெண்
பூதிசாதனமாவதேபொருளென்றுபத்திமைபூண்டுதன்
முதையேமுதலாயமன்னவர்தம்மினுந்தலையாயினன்.

(இ-ள்.) கோது இல்லாத குணத்த அனந்த குணப் பெருந்தகை மீனவன் - குற்றமில்லாத குணத்தை உடைய அனந்தகுணன் என்னும் பெருந்தன்மையை உ டைய பாண்டியன், ஆதி நாயகன் உருவமாகிய ஐந்தெழுத்தொடு - சோமசுந்தரக் கடவுள்உடைய திருவுருவமாகிய ஸ்ரீபஞ்சாட்சரத்தோடு, கண்டி வெண் பூதி சாத

Koviloor Digital Library



நாகமெய்த திருவிளையாடல்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

னம் ஆவதே - உருத்திராட்சகண்டிகையும் வெள்ளியவிபூதியும் ஆகிய சிவசாதனமாவதே, பொருளென்று பத்திமை பூண்டு - உண்மைப் பொருளென்று சிவநேயம் பூண்டு, தன் தாதையே முதலாய மன்னவர் தம்மினும் தலையாயினான் - தனது பிதாவே முதலாகிய பாண்டியர்களினும் அப்பத்திமையிற் சிறந்தவனாயினான்.

அனர்தகுணன் என்னும் பெயர்க் காரணத்தாற் குற்றமின்மை விளங்குதலால் கோதிலாத குணத்து எனவும், சிவபெருமான் திருவுருவம் ஸ்ரீபஞ்சாக்கரமாதலால் ஆதிநாயகனுருவமாகிய வைந்தெழுத்தெனவும், இம்மூன்றுஞ் சிவசாதனமாதலால் ஒருமையிறுதந்த சாதனமாவது எனவும், அது முத்திக்கரையை யடைதற்கு ஓர் புணையாதலால் பொருளென்று பத்திமைபூண்டு எனவும், அதனிற் சிறிதும் வழுவாதொழுகினனாதலால் தன்தாதையே முதலாய மன்னவர்தம்மினுந் தலையாயினான் எனவுங்கூறினார். பத்திமை எனக் குணியைக் குணமாகக்கூறியது ஓர்மரபு வழுவமைதி. (உ)

இத்தகைச்சிவசாதனந்தனிலன்புமிக்கவனொழுகலா
லத்தன்மெய்த்திருவைந்தெழுத்தொலியாலுநீற்றொளியாலுமுட்
பைத்தவல்லிருளும்புறத்திருளுஞ்சிதைந்துபராபரன்
வித்தகத்திருவேடமாயினமீனவன்றிருநாடெலாம்.

(இ-ள்.) இத்தகை சிவ சாதனம் தன்னில் அன்பு மிக்கு அவன் ஒழுகலால் - இத்தன்மையையுடைய சிவசாதனத்தில் அன்புகூர்ந்து அநந்தகுணபாண்டியன் நடத்தலால், அத்தன் மெய் திரு ஐந் தெழுத்து ஒலியாலும் - சிவபெருமானுடைய உண்மை ஆகிய ஸ்ரீபஞ்சாட்சரத்தின் ஓசையாலும், நீறு ஒளியாலும் - திருநீற்றின்விளக்கத்தாலும், உள் பைத்தவல் இருளும் புறத்து இருளும் சிதைந்து - உயிர்களின் அகத்தில் பரந்த வலிய அஞ்ஞான இருளும் புறம்பே உள்ள பூதஇருளும் கெட்டு, மீனவன் திருநாடு எல்லாம் பராபரன் வித்தகம் திருவேடம் ஆயின - அப்பாண்டியனுடைய அழகிய பாண்டிநாடெல்லாம் சிவபெருமானுடைய ஞானப்பெருக்கையுடைய திருவேடமாகப் பொலிந்தன.

ஐந்தெழுத்தொலியால் அகவிருளும் நீற்றொளியால் புறவிருளுஞ் சிதைந்து என முறைநிரனிறையாகக்கொள்க. (௩)

நாயினுங்கடையானமாசுடனள்ளிருட்புனைநெஞ்சரொன்
றாயிரஞ்சமண்வேடரன்னதறிந்துகொண்டுவெகுண்டழற்
றோயிரும்பெனமானவெங்கனல்சுட்டிடத்தரியார்களாய்
மாயிருந்தமிழ்மாறனைத்தெறவஞ்சவேள்வியியற்றுவார்.

(இ-ள்.) நாயினும் கடையான மாசு உடல் நள் இருள் புனை நெஞ்சர் - நாயினுங்கடைப்பட்ட கரியசரீரத்தை உடைய மிக்க விருளையொத்த மனத்தையுடைய, என்றாயிரம் சமண் வேடர் அன்னது அறிந்து கொண்டு வெகுண்டு - எண்ணாயிரம் சமணகுரவர்களும் அதனையறிந்து கோபித்து, அழல் தோய் இரும்பு என மானம் வெங் கனல் சுட்டிட தரியார்கள் ஆய் - நெருப்பிற் காய்ச்சிய இரும்புபோல மானமாகிய கொடியநெருப்புச் சுட்டவருத்தப் பொறுதவர்களாய், மாயிரும் தமிழ் மாறனைத்தெற - பெரிய தமிழ்வளர்க்கும் பாண்டியனைக் கொலைசெய்ய, வஞ்சம் வேள்வி இயற்றுவார் - அபிசாரயாகம் ஒன்றுசெய்யத்தொடங்கினார்கள்.

Koviloor Digital Library

பொய் பொருக்கினர் என்பார் சமண் வேடர் எனவும், சிவசாதனப்பேரொளியால் தமது சமயவொளி குன்றியதறிந்தார் என்பார் வெகுண்டழற்றே யிரும்பெணமானவெங்கனற்கட்டிடத்தரியாரெனாய் எனவுங்கூறினர். அறிந்துகொண்டு தற்பொருட்டுப் பொருளில்வந்த வினையெச்சம். (ச)

எல்லைகாதமளந்துசாலையெடுத்தழற்படுகுண்டமுங்
கல்லியாரழலிட்டெழும்புகைகெளவியெண்டிசைகளுமுறச்
செல்லவானவுடுக்களும்பொரியிற்பொரிந்தனசிதறநீண்
டொல்லைதாவிவிசும்புதைவரவொட்டிவெங்கனன்மூட்டினார்.

(இ-ள்.) காதம் எல்லை அளந்து சாலை எடுத்து - ஒருகாத எல்லைகாறும் வரையறுத்துச் சாலைசெய்து, அழல் படு குண்டமும் கல்லி - தீவளர்க்கும் யாககுண்டமும் தோண்டி, ஆர் அழல் இட்டு - நிறைந்த தீயை அக்குண்டத்திலிட்டு, எழும் புகை கெளவி எண் திசைகளும் உற செல்ல - அக்குண்டத்தினின்று மெழுந்த புகையானது விடாது பரந்து எட்டுத்திசைகளிலும் பொருந்தச் செல்லவும், வானம் உடுக்களும் பொரியில் பொரிந்தன சிதற - ஆகாயத்திற்பூத்த நக்ஷத்திரங்களும் பொரிபோலப் பொரிந்து சிதறவும், நீண்டு ஒல்லை தாவி விசும்பு தைவர - ஓங்கி விரைந்துதாண்டி விண்ணுலகத்தைத் தடவவும், ஒட்டி வெம் கனல் மூட்டினார் - இடைவிடாமல் நின்று யாகாக்கினியை மூளச்செய்தார்கள்.

பொரிந்தன முற்றெச்சம். (ரு)

அந்தழன்றெரிகுண்டநின்றுமகன்பிலத்தெழுவானெனப்
பைத்தநஞ்சிருள்வாயும்வாயிருபாலும்வாலியபிறைமதிக்
கொத்தடுஞ்சினமொழுகுபற்களுமூழியாரழல்விழிகளும்
வைத்தசைந்தொருவெற்புவந்தெனவந்துளானொருதானவன்.

(இ-ள்.) அழன்று எரி குண்டம் நின்றும் - அந்தக் கொதித்து எரியாநின்ற யாககுண்டத்தினின்றும், அகன் பிலத்து எழுவான் என - இடமகன்றபாதலத்தினின் றெழுவானைப்போலவும், பைத்த நஞ்சு இருள் வாயும் - பரந்த நிலைபெற்ற இருள்நிறைந்தவாயையும், வாய் இரு பாலும் - வாயின் இரண்டு பக்கங்களிலும், வாலிய பிறை மதி கொத்து அடும் சினம் ஒழுகு பற்களும் - வெள்ளிய அர்த்தசந்திரர்களைவென்ற கோபமிக்க வக்கிரதந்தங்களையும், ஆர் ஊழி அழல் விழிகளும் - நிறைந்த ஊழித் தீச்சோதிக்கண்களையும், வைத்து அசைந்து ஒரு வெற்பு வந்தால் என்ன - கொண்டு அசைந்து ஒருமலைவந்தால்போலவும், ஒரு தானவன் வந்து உள்ளான் - ஒரு அசுரன் தோன்றினான்.

குண்டம் நின்றும் வந்துளானென முடிக்க. நின்றும் ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு. என என்றும் உவமவுருபிடைச் சொல்லடியாகப்பிறந்த வினையெச்சத்தினிறுதியில் என்றும்மைதொகுத்தல், இது பலபொருளுவமையணி. (சு)

உதித்தசெங்கணரக்கவஞ்சனுருத்தெழுந்தெரிவடவையிற்
கொதித்தடும்பசிதாகமுங்கொடிதாலெனக்கொடியோனைநீர்
விதித்திடும்பணியாதெனக்கெனமீனவன்றன்மதுரையோ
டெதிர்த்தெடுத்துவிழுங்குவேனெனவேவிருடனேகினான்.

Koviloor Digital Library

(இ-ள்.) உதித்த செம் கண் அரக்க வஞ்சன் உருத்து எழுந்து - தோன்றிய சிவந்தகண்களையுடைய இராக்ஷதன் கோபித்தெழுந்து, எரி வடவையில் கொதித்து - எரியும் ஊழித்தீயைப்போலப் பொங்கி, அடும் பசி தாகமும் கொடிது என - சொல்லாநின்ற பசியோடு தாகமும் கொடிதாயுள்ளதென்று, கொடியோரை - கொடிய சமணர்களை (நோக்கி,) நீர் விதித்திடும் பணி யாது எனக்கு என - நீங்கள்விதிக்கும்பணி எனக்கு யாதென்றுவினவ, மீனவன் தன்னை மதுரையோடு எதிர்த்து எடுத்து விழுங்கிவா என ஏவினர் - பாண்டியனை மதுரையோடு எதிர்த்து எடுத்து விழுங்கிவாவென்று ஏவினார்கள், உடன் ஏகினான் - அவ்வசுரன் விரைந்துசென்றான். (எ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பாயுடையவர்விடவிடநாகப்படிவுகொணிசிசரனிலனண்டந்
தோயுடலினனுடல்விடமூறிச்சொரிதுளையெயிறினன்வடவைச்செந்
தீயுடையனவெனவெரிகண்ணன்றிணியிருள்வரைமுழையெனவிண்ட
வாயுடையவனெடுநெறிமுன்னிமழைநுழைவரையெனவருகின்றான்.

(இ-ள். பாயுடை யவர்விட - பாயை யுடையாக உடைய சமணர்கள் ஏவ, விடம் நாகம் படிவுகொள் நிசிசரன் - விஷத்தையுடைய சர்ப்பத்தின்வடிவங்கொண்ட இராக்ஷதன், நிலன் அண்டம் தோய் உடலினன் - நிலவுலகினின்று விண்ணுலகு காறும் அளாவும் சரீரமுடையவனாகி, உடல் விடம் ஊறி சொரி துளை எயிறினன் - வருத்தும் விடஞ் சுரந்து சிந்தும் துளைபொருந்திய வக்கிரதந்தங்களை யுடையவனும், வடவை செம் தீ உடையன என எரிகண்ணன் - செவந்தவடவாநலமுடையவவென்று சொல்லும்படி தீக்கொப்புளிக்குங் கண்களையுடையவனாகி, திணி இருள் வரை முழை என விண்ட வாய் உடையவன் - திணிந்த விருள்நிறைந்த மலையின் குகையைப் போலப் பிளந்தவாயையுடையவனாகி, நெடு நெறி முன்னி மழை நுழை வரை என வருகின்றான் - நீண்டவழியில் முற்பட்டு மேகங்கள் சஞ்சரிக்கு மலையைப்போலவருகின்றவனாயினான்.

கச்சினன் கழலினன் செச்சைக்கண்ணியன் என்றாற்போல உடலினன், எயிறினன், கண்ணன், உடையவன் என்னுங் குறிப்புவினைமுற்றுகள் வேறுபல அடுக்கிய எச்சங்களாய்த் தனித்தனிவருகின்றான் என்னும் வினைமுற்றின் முதனிலைகொண்டன. (அ)

அரவிறையுறைபிலம்வெளிகாணவரையுடல்புதைபடநிலம்விள்ள
வருவிழியழலெழவுயிர்கான்முன்வளியுளர்கிளர்வலிவிளிவெய்தப்
பொருசினவிழியெதிர்படுபைங்கூழ்புகையெழவனமரைபொரிபொங்கர்
கருகிடமுதுசினையிறைகொள்ளுங்ககநிரைசிறைசுருள்படவீழ.

(இ-ள்.) அரவு இறை உறை பிலம் வெளி காண - பாம்புகளுக்கு அரசனாகிய ஆதிசேடன்வசிக்கும் பாதலம்பிளவுபடும்படி, வரை உடல் புதை பட - மலைபோன்ற தனது சரீரம்புதைதலால், நிலம் விள்ள - நிலஉலகம் பிளவுபடவும், வரு விழி அழல் எழ - தீப்பொருந்திய கண்களினின்றுங் கோபாக்கினி யெழும்படி, உயிர் கால் முன் - உயிர்க்கும் பெருமூச்சின்முன், உளர் வளி கிளர் வலி விளிவு எய்த - சஞ்சரிக்குங் காற்றினது விளங்கும் வன்மைகெடவும், பொரு சினம் விழி எதிர் படு பைங் கூழ் புகை எழ - போர்த்தொழிற்குரிய கோபம் மிக்க கண்களுக்கெதிர்ப்பட்ட பசியபயிர்கள் புகைந்துவாடவும், வனம் பொரி அரை பொங்கர் கருகிட -

Koviloor Digital Library

கனிப்பொருள்களைப் பொருந்திய நுனையுடைய மரச்செறிவுகளுங் கருகவும், முறு கின்ற இறை கொளும் ககங்கள் சிறை கருள் பட வீழ - பெரிய மரக்கிளைகளில் வசிக் கும் பக்ஷிசாலங்கள் சிறை கருகிச்சுருண்டு நிலத்தின்மீது விழவும்.

வீங்கள் செயவெனெச்சத்திரிபு. அனை பொரி இரண்டாம்வேற்றுமைப்பொ ருள்படச்சொல் பின்று மூன்றுமாகமொழித் தொக்கதொடர். (௯)

அகனிலம்வெருவுறநிலனேந்தரவிறைவெருவுறவெயில்காலும்
பகன்மதிவெருவுறவிவைகொளவும்பணிகளும்வெருவுறவகறிக்கின்
புகர்மலைவெருவுறவடுதண்டப்புரவலன்வெருவுறவருசெங்கண்
ணகைமதிபுரையெயிறவன்மாடநகரெதிர்குடவயின்வருமெல்லை.

(இ-ள்.) அகல் நிலம் வெருவுற - அகன்ற நிலவுலகம் அஞ்சவும், நிலன் ஏ ந்தும் அரவு இறை வெருவுற - அந்நிலவுலகைச் சுமக்கும் ஆதிசேடன் அஞ்சவும், வெயில் காலும் பகல் மதி வெருவுற - கிரணத்தைவீசும் சூரியனும் சந்திரனும் அ ஞ்சவும், இவை கொளவும் பணிகளும் வெரு வுற - இச்சூரிய சந்திரர்களைப்பற்றும் இராகு கேதுக்களும் அஞ்சவும், அகல் திக்கின் புகர் மலை வெரு வுற - அகன்றதிக் குகளில் உள்ள புள்ளிதங்கிய அட்டபருவதங்கள் அஞ்சவும், அடு தண்டம் புரவ லன் வெரு வுற - கொல்லாநின்ற தண்டாயுதத்தையேந்திய இயமன் அஞ்சவும், வரு செங்கண் நகை மதி புரை எயிறவன் - வராநின்ற சிவந்தகண்களையும் விளங் கும் அர்த்தசந்திரனையொத்த பற்களையும்உடைய இராட்சதன், மாடம் நகர் எதிர் குட வயின் வரும் எல்லை - மாடங்கள் நெருங்கிய மதுரைத் திருநகரின்எதிரே மேலைத்தி சையை நோக்கிவருங்காலையில். (௧௦)

கண்டவர்கடிநகர்கடிதோடிக்கௌரியனடிதொழுதடிகேணங்
கொண்டல்கண்வளர்மதில்வளிகுடற்குடவயினொருபெருவிடநாக
மண்டமுமகிலமுமொருவாயிட்டயிறரவருவதையெனநீள்வாய்
விண்டுகொண்டிவ்வதையெனவோடும்வெருவலன்மதிகுலமறவீரன்.

(இ-ள்.) கண்டவர் கடி நகர் கடிது ஓடி - பார்த்தவர்கள் காவல்பூண்ட மது ரைத்திருநகரில் விரைந்துசென்று, கௌரியன் அடி தொழுது - பாண்டியனுடைய பாதங்களைவணங்கி, அடிகேள் - அடிகளே, நம் கொண்டல் கண் வளர் மதில் வளி குடல் குட வயின் - மேகமேகங்கள் கண்படுக்கும் மதில்சூழ்ந்த மதுரையின் மே லைத்திசை(நோக்கி,) ஒரு பெரு விடம் நாகம்-ஒருபெரியவிஷத்தையுடைய சர்ப்பமா னது, அண்டமும் அகிலமும் ஒருவாயிட்டு அயில் தர வருவது என - அண்டங்களை யும் நிலவுலகங்களையும் ஒருவாயிற்போட்டுண்ண வருவதுபோல, நீள் வாய் விண்டு கொண்டு இவ்வதை எனவோடும் - நீண்டவாய்பிளந்து வருகின்றதென்று கூறவும், மதி குலம் மற வீரன் வெரு வலன் - சந்திரன் மரபிற்றோன்றிய பாண்டியன் அது கேட்டுச் சற்றும்அஞ்சாதிருந்தான்.

வெரோயம் பெரிதுமுடையாருக்கின் அதபற்றித் தன்தாதைமுதலியோர் போல அச்சஞ் சிறிதுமிலன்என்பார் மறவீரன் வெருவலன் என்றார். (௧௧)

மற்றிதுழுனைமதநகரிவிட்டோர்வரவிடவருவதையெனவெண்ண
முற்றிதுதனையும்விளித்தற்கொடுமுடையவர்விடையவர்விடநாகந்
சுற்றியசடையினுறையொன்றுக்குரலிமிகுடலோனகிற்குங்
கற்றனியிடையுறையிறைமுன்போய்க்கனைழலடிதொழுதறைகிற்பான்.

Koviloor Digital Library

(இ-ள்.) இது முன்னம் மத கரி விட்டோர் வர விட வருவது என எண்ணம் உற்று- இந்தச் சர்ப்பம்முன்னே யானையையேவிய சமணர்கள் ஏவவருவது என்று எண்ணங்கொண்டு, இது தனையும் விளித்தற்கு - இச்சர்ப்பத்தையுங் கொல்லுதற்கு, எம்முடையவர் விடையவர்விட நாகம்சுற்றிய சடையினர் உளர் என்று - எம்மை யாளாகவுடையவரும் இடபவூர்தியையுடையவரும் விஷம்பொருந்திய சர்ப்பஞ்சூழ்ந்த சடையையுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள் தனையாயுள்ளாரென்று, சுரர் உலகு இழி சுடர் என நிற்கும் கல் தளி இடை உறை இறை முன் போய் - தேவருலகினின்று மிறங்கிய சூரியனைப்போல விளங்கிநிற்கும் மாணிக்கத்தாலமைந்த விமானத்தில்எழுந்தருளிய இறைவர்சந்நிதிசென்று, கனை சழல் அடி தொழுது அறைகிற்பான் - ஒலிக்கும் வீரகண்டையையணிந்த திருவடியைவணங்கிக் கூறுகின்றான்.

சுடரெனநிற்கும் என்ற குறிப்பால் கற்றளி என்றதற்கு மாணிக்கத்தாலமைந்ததளி என்றும். (கஉ)

வழிவழியடிமைசெய்தொருபோதுமறவலன்வழிபடுமடியேனின்
மொழிவழிமுறைசெய்துவருவேனிம்முதுநகரடையவுமமணீச
ரழிவதுகருதினர்விடுநாகமடைவதுனருள்வழியதனுயிர்
கழிவதுகருதியவடியேனைக்கருணைசெய்தருளிதுகடனென்றான்.

(இ-ள்.) வழி வழி அடிமை செய்து ஒரு போதும் மற வலன் வழி படும் அடியேன் - எனது மரபின் வழியேநின்று அடிமைசெய்து ஒருபோது மறவாது தொண்டுபட்டொழுகும் அடியேன், நின் மொழி வழி முறை செய்து வருவேன் - உனது திருவார்த்தைகளாகிய வேதாகமங்களின் வழியே யரசியல் செய்துவரா நின்றேன், அமண் நீசர் இம்முது நகர் அடையவும் அழிவது கருதினர் விடு நாகம் அடைவது - சமணர்களாகிய சண்டாளர்கள் இந்தத் தொன்றுதொட்டுள்ள மதுரைத்திருநகர் முற்றும் அழிதலைக்கருதி ஏவியசர்ப்பம் வராநின்றது, உன் அருள் வழி - உனது திருவருளின்வழியே, அதன் ஆவி கழிவது கருதிய அடியேனை - அந்தச் சர்ப்பத்தின் உயிர்கழிதலைக்கருதிய அடியேனாகிய எனக்கு, கருணைசெய்தருள் - திருவருள் செய்தருளாய், இது கடன் என்றான் - இதுதான் உனதுகடனென்று குறையிரந்து தொழுதான்.

எனது மரபிலுள்ளார் உனதுதொத்தடிமையாயுள்ளார் என்பான் வழிவழியெனவும், உனது திருவாக்குகளாகிய வேதாகமங்களிற்சிறிதும் பிறழ்ந்திலேனென்பான் நின்மொழி வழியெனவும், யான்வெல்லக் கருதியது உன் திருவருட்டிறத்தாலென்பான் அருள்வழியெனவும், அதுமுடிதல் எளிதென்பான் இது கடனெனவுங் கூறினான். நான்காம்வேற்றுமை யுருபு நிற்கும் நிலைக்களத்து இரண்டனுருபுநிற்றலால் உருபுமயக்கம். (கங)

அறுமதிகொடுதொழுதிறைபாதமகமதிகொடுபுறனடைகின்ற
பனிமதிவழிவருதமிழ்மாறன்பசழியொடடுபிலையினனேவிக்
குனிமதிதவழ்தருமதினிடுங்கொடியணிகுடகடைகுறுகாமுன்
றனிவரையெனவிகர்தருகோபத்தழல்விழியரவினையெதிர்கண்டான்.

(இ-ள்.) அறு மதி கொடு தொழுது - விடைபெற்று மீளவும் வணங்கி, இறை பாதம் அகமதி கொடு புறன் அடைகின்ற பனி மதி வழி வரு தமிழ் மாறன் -

Koviloor Digital Library

சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளைத் தனதுமனத்திற் கருதிக்கொண்டு புறத்திற் செல்கின்ற குளிர்ந்தசந்திரன் மரபில்வந்த அனந்தகுணபாண்டியன், பகழியொடு அடு சிலை வளைத்து - பாணத்தோடு கொல்லுந்தொழிற்குரிய வில்லையேந்திய யுத்தசன்னத்தனாய்ச் சென்று, குனி மதி தவழ் தரு மதில் நிடும் கொடி அணி குடகடை குறுகா முன் - வளைந்த அர்த்தசந்திரன் தவழாநின்ற மதிலில் ஓங்கியதுவசக்கட்டிய மேற்றிசைவாயிலை அடைதற்குமுன், தனி வரை என நிகர் தரு கோபம் தழல் விழி அரவினை எதிர் கண்டான் - ஒப்பற்ற மலையென்றுசொல்ல ஒத்த கோபாக்கினியெரிக்கும் கண்களையுடைய சர்ப்பத்தை எதிரே பார்த்தான்.

மதிலென்றுமுதனிலை வினையெச்சப் பொருள்மேல் நிற்றலால் மதி கொடுதற் பொருட்டில்வந்த வினையெச்சம். (கஎ)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பல்பொறிப்பருவாய்ப்படம்புடைபரப்பிப்பக்கமெண்டிசையொடுவிசும்பி
செல்கதிர்புதைத்துத்திணியிருள்பரப்பித்திங்களின்பகிர்புரைநஞ்சம் [ற்
பில்லெயிறதுக்கிப்பெரிதுயிர்த்தகல்வாய்பிளந்துமாநகரெலாமொருங்கே
வொல்லெனக்கௌவிவிழுங்குவான்சிறியுருத்தனனுரகவாளவுணன்.

(இ-ள்.) பல் பொறி பரு வாய் படம் புடை பரப்பி - பலபுள்ளிகளமைந்த பெருத்தவாயையுடைய படங்களைப்பரப்பி, பக்கம் எண் திசை யொடு விசும்பில் செல் கதிர் புதைத்து - பக்கங்களிலுள்ள எட்டுத்திக்குகளோடு ஆகாயத்திற்செல்லுஞ் சூரியனையுமறைத்து, திணி இருள் பரப்பி - நெருங்கிய இருளைப்பரப்பி, திங்களின்பகிர் புரை நஞ்சம் பில்கு எயிறு அதுக்கி பெரிது உயிர்த்து - அர்த்தசந்திரனையொத்த நஞ்சொழுகும் வக்கிரதந்தங்களை அதுக்கிப் பெருமூச்செறிந்து, அகல் வாய்பிளந்து மாநகர் எல்லாம் ஒருங்கே ஒல்லென கௌவி விழுங்குவான் - அகன்றவாயைப்பிளந்து பெரியநகரமெல்லாம் ஒருசேரக்கௌவிவிழுங்க, வாள் உரக அவுணன் சீறி உருத்தனன் - ஒள்ளியசர்ப்பவடிவாய்வந்த இராக்ஷதன்சீறிக் கோபித்தான்.

விசும்பினிறநிமிர் எதிரது தழிஇய எச்சவுமைமை விரைத்தாற்றெக்கது. கரு

அடுத்தனனரசசிங்கவேறிடியேற்றஞ்சவார்த்தங்கையிற்சாப
மெடுத்தனனெடுநாணிருத்தலைக்கியெரிமுகக்கூர்ங்கணைதொடுத்து
விடுத்தனன்விடுத்தசரமெலாமுரகன்வெறுந்துகள்படக்கறித்துமிழ்ந்து
படுத்தனன்பொருதுபஞ்சவன்புராரிபங்கயச்சேவடிநினையா.

(இ-ள்.) அரசசிங்க ஏறு அடுத்தனன் - அரசருள் ஆண்சிங்கம்போன்ற அனந்தகுணபாண்டியன் அடுத்து, இடி ஏறு அஞ்ச ஆர்த்து - இடியேறு அஞ்சும்படிகோஷித்து, அங்கையில் சாபம் எடுத்தனன் - அழகியதனதுகையில் வில்லையேந்தி, நெடுநாண் இருத்தலைக்கி - வில்லின்நுட்டியாகிளைச் செவ்வேவலிந்து, எரிமுகம் கூர்கணைதொடுத்து விடுத்தனன் - நிச்செரிப்புமிக்கும் முனைதையுடைய கூரிய அம்பைத் தொடுத்துவிடுத்தான், விடுத்தசரம் எல்லாம் உரகன் வெறுந்துகள்பட கறித்து உமிழ்ந்து படுத்தனன் - விடுத்த அம்புகளையெல்லாம் பாம்பின்வடிவாகவந்த இராக்ஷதன் வெறுந்தூளாகக்கடித்து உமிழ்ந்து நிறைத்தான், பஞ்சவன் பொருது புராரிபங்கயம் சேவடி நினையா - பாண்டியன் அதனைவெல்ல மாட்டாமல் சோமசுந்தரக்கடவுளுடைய தாமரைமலர்போன்ற செவ்விய திருவடிகளைச்சிந்தித்து. (கஅ)

Koviloor Digital Library

கொடியதோர்பிறைவாயம்பினைவிடுத்துக்கோளராவலையுட றுணித்தா
னிடியதோவெனவார்த்தெரிநிறக்குருதியிரங்கிவீழருவியிற்கவிழ
நெடியதோருடலம்புரள்படக்கூர்வாளொளிதரவிளிபவன்மேலைக்
கடியதோராலாகலவெள்ளம்போலக்கக்கினான்கறையிருணஞ்சம்.

(இ-ள்.) கொடியது ஓர்பிறைவாய் அம்பினைவிடுத்து - கொடியவொரு அர்த்தசந்திரபாணத்தையேவி, கோள் அராவலை உடல் துணித்தான் - வலியபாம்பினது வலிந்தசரீரத்தைத் துண்டுபடுத்தினான், இடியோ என ஆர்த்து எரிநிறம் குருதி-இடியோவென்று சொல்லக்கோஷித்துத் தீப்போலுஞ் செந்நிறம்வாய்ந்த உதிரம், இரங்கிவீழ் அருவியில் கவிழ - ஒலித்துவீழும் அருவியைப்போலக்கவிழவும், நெடியது ஓர் உடலம் புரள்பட கூர்வாள் நெளிதர விளிபவன் - நெடியவொப்பில்லாத சரீரம் புரளவும் கூரியவால் நெளியவும் இறக்கும் இராக்ஷதன், மேலை கடியது ஓர் ஆலாகல வெள்ளம்போல கறை இருள் நஞ்சம் கக்கினான்-முன்னாளிற்றோன்றிய கடிய ஒப்பில்லாத விஷப்பிரவாகம்போலக் கரிய இருள்போன்ற நஞ்சினைக்கக்கினான்.

பாற்கடலிற்றோன்றிய நஞ்சம்போல என்பார் மேலைக்கடியதோராலாகல வெள்ளம்போல என்றார். அது பகுதிப்பொருள்விகுதி. (கஎ)

தீவிடமுருத்துத்திணியிருள்கடுப்பத்திருநகரெங்கணுஞ்செறிந்த
காவிடங்கூவல்கயந்தலைசதுக்கங்கழகமாவணமகழிஞ்சி
கோவிடமாடமுபரிகைமேடைகோபுரமரங்கெலாம்பரந்து
தாவிடமயங்கியுறங்கினார்போலச்சாம்பினார்தனிநகர்மாக்கள்.

(இ-ள்.) தீவிடம் உருத்து திணி இருள் கடுப்ப திருநகர் எங்கணும்-தீப்போன்றவிஷங்கோபித்து எழுந்துதிணிந்த இருளை ஒப்ப மதுரைத்திருநகர்முற்றிலும், செறிந்தகா இடம் கூவல் கயந்தலை சதுக்கம் கழகம் ஆவணம் அகழ் இஞ்சி - நெருங்கியசோலையும் கிணறும் குளமும் நாற்றெருக்கூடுமிடமும் கல்விச்சாலையுங் கடைவீதியும் அகழியும்மதிலும், கோ இடம் மாடம் உபரி கைமேடை கோபுரம் அரங்கு எல்லாம் பரந்து தாவிட - அரசன்கோயிலும் மாடமும் உபரிகையும் மேடையும் கோபுரமும் நாடகசாலையுமாகிய எல்லாவற்றிலும் பரந்துதாவ, தனிநகர் மாக்கள் மயங்கி உறங்கினார் போல சாம்பினார் - ஒப்பில்லாத நகரிலுள்ள மக்கட்கூட்டங்கள் விடத்தால் மயங்கி உறங்கின அயன்முதலியதேவர்போல வாடினார்கள்.

மேலைக் கடியதோராலாகலவெள்ளம்போல என முன்னர்க்கூறினமையால் மயங்கியுறங்கினார்போல என்றதற்கு விடத்தால் மயங்கியுறங்கிய அயன்முதலியோர்போல என்றும். (கஅ)

நிலைதளர்ந்துடலந்திமிர்ந்துவேர்வரும்பிநிறைபுலன்பொறிகரணங்க
டலைதடுமாறியுரைமொழிகுழறித்தழுதழுப்படைந்துநாவுணங்கி
மலைதருகபமேனிமிர்ந்துணர்வழிந்துமயங்கிமூச்சொடுங்கியுள்ளாவி
யலைதரவூசலாடினார்கிடந்தாரன்னதொன்னகருளாரெல்லாம்.

(இ-ள்.) நிலைதளர்ந்து உடலந்திமிர்ந்து வேர்வு அரும்பி - நிலைகெட்டு உடல் கம்பித்து வேர்வையெழுந்து, நிறைபுலன் பொறி கரணங்கள் தலைதடுமாறி உரை மொழிகுழறி தழுதழுப்பு அடைந்து நா உணங்கி - குறைவின்றிநிறைந்த புலன்க

ளும் இந்திரியங்களும் அந்தக்கரணங்களுந் தந்தமக்குரிய இடம் தடுமாறுதலால் சொற்கள்குழறித் தழுதழுப்பெய்தி நாப்புலர்ந்து, மலிதருகபம் மேல் நிமிர்ந்து உணர்வு அழிந்த மயக்கி மூச்சு ஒடுங்கி - பொருந்தியகபம் மேல் எழுந்து அறிவழிந்த மயக்கிப் பெருமூச்சுவிட்டு, அன்னதொல் நகர் உள்ளார் எல்லாம் உள் ஆவி அலைதர ஊசலாடினர் கிடந்தார் - அத்தத்தொன்றுதொட்டுள்ள நகரிலுள்ளாரெல்லாரும் உள்ளேயுள்ளபிராணன் ஊசல்போலலைந் தாடிக்கிடந்தார்கள்.

அன்னகட்டுத்திரிபு. (௧௧)

தென்னவன்விடங்கண்டஞ்சுமால்போலச்சிவகரமடைந்துதாழ்ந்தெந்தா
முன்னவவாதிமுதல்வவித்தின்றிமுளைத்தவமுடிவிலாமுனிவ [ய்
வென்னவவன்பர்க்கெளியவயார்க்குமிறையவவிந்நகர்க்கென்று
மன்னவவநாதிமறையவமுக்கண்வானவநினைச்சரணடைந்தேன்.

(இ-ள்.) தென்னவன் - அனந்தகுணபாண்டியன், விடம் கண்டு அஞ்சுமால் போல சிவகரம் அடைந்து தாழ்ந்து - விடத்தைக்கண்டஞ்சிக் கைலையைச்சரண் அடைந்த திருமால்போலத் திருக்கோயிலையடைந்து வணங்கி, எந்தாய் - என்தந்தையே, முன்னவ-யாவர்க்கு முற்பட்டவனே, ஆதிமுதல்வ - ஆதியாகியமுதல்வனே, வித்து இன்றிமுளைத்தவ - மூலமில்லாமல் தோன்றினவனே, முடிவு இல்லா முனிவ-தனக்கோர் இறுதியில்லாதமுனிவனே, என் நவ-எனக்குப்புதுமையைவிளைப்பவனே, அன்பர்க்கு எளியவ-அடியார்க்கெளியவனே, யார்க்கும் இறையவ-அயன் முதலிய எல்லாத்தேவர்களுக்குந்தலைவனே, இந்நகர்க்கு என்றும் மன்னவ - இம்மதுரைத்திருநகர்க்கு எப்பொழுதும் அரசாயுள்ளவனே, அநாதி மறையவ - அநாதியாயுள்ளமறையவனே, முக்கண்வானவ - திரிநேத்திரங்களையுடையதேவனே, நினை சரண் அடைந்தேன் - உன்னைப்புகலடைந்தேன்.

எல்லையில்லாத தன் சந்நிதியில் யாவுந்தோன்றநின்றவனே என்பான் முன்னவ ஆதிமுதல்வ எனவும், ஆன்மாக்களுக்கு மலபாகம்வருவித்து முத்தியிற்கூட்டுதற்பொருட்டுத் தனது திருவருளையே திருமேனியாகக்கொண்டவனே என்பான் வித்தின்றி முளைத்தவ எனவும், இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவனே என்பான் முடிவிலா முனிவ எனவும், எனக்கு நவமான இன்பத்தைவிளைப்பவனே என்பான் என்னவ எனவும், பிரமன்மாற்கரியோனே என்பான் அன்பர்க்கெளியவ எனவும், அனைத்தையும் தன்னுள்ளடக்கியவனே என்பான் யார்க்குமிறையவ எனவும், தனது தாதை முதலியோர்க்குவந்த இடையூறுகளைத்தவிர்த்து முன்னின்றுகாத்தவனே என்பான், இந்நகர்க்கென்று மன்னவ எனவும், குருபரம்பரைவிளக்க வேதங்களைத் தந்தருளினவனே என்பான் அநாதிமறையவ எனவும், சூரியன் முதலிய முச்சுடர்களுக்கும் ஒளியைத்தரும் திரிநேத்திரங்களையுடையவனே என்பான் முக்கண்வானவ எனவும், அடைந்தோர்துன்பங்களை நீயொழிப்போனாதலின் நின்னைப்புகலடைந்தேனென்பான் நின்னைச்சரணடைந்தேன் எனவுங்கூறினான்.

அடுத்தவர்தமக்குமாழியைத்துரந்தமாழியுண்டேழுமொன்றாகத், தொடுத்தவர்தமக்கும்பெருமழைதடுத்துந் துணைக்கைவின்றுமாயவெண்பிறைக்கோ, கெடுத்தவர்தமக்குக்களிற்றினைவிளித்துமிந்நகர்புரந்தனையின்று, மடுத்தவர்தமக்கும்விடத்தினின்மயக்கும்வருத்தமுங்களைதியென்றிரந்தான்.

Koviloor Digital Library

(இ-ள்.) அடுத்துவந்து அலைக்கும் ஆழியை தூர்ந்தும்-அடுத்துவந்துவருத்துங் கடலைச் சுவறச்செய்தும், ஆழி உண்டு எழும் ஒன்று ஆக தொடுத்துவந்து அலைக்கும் பெருமழை தடுத்தும் - கடல்பருகி எழுமேகங்களும் ஒன்றாகத்திரண்டுவந்து பெய்துவருத்தும் பெருமழையைத்தடுத்தும், துளைக்கை விண் துழாவ வெண்பிறை கோடு எடுத்துவந்து அலைக்கும் களிற்றினைவிளித்தும் - துதிக்கையை விண்ணுலகைத்துழாவ வெள்ளிய அர்த்தசந்திரனையொத்த கொம்பினிடையே மேலெடுத்துவந்துவருத்தும் யானையைக்கொன்றும், இந்நகர் புரந்தனை - இந்தமதுராத்திருநகரைப் பாதுகாத்தாய், இன்றும் அடுத்துவந்து அலைக்கும்விடத்தினால் மயங்கும் வருத்தமும் களைதி என்று இரந்தான் - (அவைபோல) இக்காலத்தும் அடுத்துவந்து வருத்தும் விஷத்தினால் மயங்கும் வருத்தத்தையும் களைவாய் என்றுயாசகித்தான்.

ஒன்று குறையிரப்போன் தனக்காயினும் தன்மரபிலுள்ளோர்க்காயினும் உபகரித்தமைகூறிப் பழமைபாராட்டல் வழக்காதலால் அடுத்துவந்தலைக்கும் ஆதியீறாக இந்நகர்புரந்தனையெனவும், அவ்வாறுகூறித் தன்குறையையுங்கூறுதல் முறையாதலால் விடத்தினால்மயக்கும் வருத்தமுங் களைதியெனவுங்கூறினான். (உக)

அருட்கடலனையவாதிநாயகன்றனவிர்சடையணிமதிக்கொழுந்தின்
பெருக்கடையமுதத்தண்டுளிசிறிதுபிலிற்றினான்பிலிற்றிடலோடும்
பொருக்கெனவெங்கும்பாலினிற்பிரைபோற்புரையறக்கலந்துபண்டுள்ள
திருக்கிளர்மதுராநகரமாப்புனிதஞ்செய்ததச்சிறுதுளியம்மா.

(இ-ள்.) அருள் கடல் அனைய ஆதிநாயகன் - சித்தமூர்த்தியாய்வந்தருளிய கருணைக்கடலையொத்த சோமசுந்தரக்கடவுள், தன் அவிர்சடை அணிமதி கொழுந்தின் பெருக்கு அடையமுதம் தண் துளிசிறிது பிலிற்றினான் - தனதுவிளங்குஞ் சடையிலணிந்த சந்திரனது பெருக்கமைந்த அமுதத்தின் தண்ணியதிவலை சிறிதுசிந்தினார், பிலிற்றிடலோடும் - அவ்வாறுசிந்த, பொருக்கென எங்கும் பாலினில் பிரை போல் புரை அற கலந்து - விரைந்து எவ்விடத்தும் பாலிற்பிரைபோலக்குற்றமறக் கலந்து, பண்டு உள்ள திருகிளர் மதுராநகரம் ஆக - முன்னமைந்த செல்வமிக்கமதுராநகரமாக, அச்சிறுதுளி புனிதம் செய்தது-அந்தச்சிறிய அமுததிவலை புனிதஞ்செய்தது.

சிவபெருமான் அவனிரக்குங் குறைபாட்டிற்கு அருள்கூர்ந்தான் ஆதலால் அருட்கடலனைய எனவும், கூர்ந்த அருளுக்கு ஒப்புயர்வில்லையாதலால் ஆதிநாயகன் எனவும், முன்னர் அமுதத்தால் மதுரமாகிய மதுராநகரமானது இன்றுவிடத்தின்மயமானமையால் அதுநீங்கி முன்னுள்ளபடி இப்போது சிந்திய அமுதாக்கியதாதலின் பண்டுள்ள திருக்கிளர் மதுராநகரமாப் புனிதஞ்செய்ததெனவுங்கூறினார். உஉ

இரவிமுன்னிருளதெனவிறையருண்முன்னிருண்மலவலியெனவெங்கும்
பரவியவமுதால்விடமகன்றவசப்படிவொழிந்தியாவருமின்பம்
விரவியகளிப்பின்மேவினாரிருந்தார்மீனவர்பெருந்தகைவேந்த
னரவணிசடையார்க்கன்புறுத்தானேயாகிமண்காவல்செய்திருந்தான்.

(இ-ள்.) இரவிமுன் இருளது என்ன - சூரியன்முன்னிருள் ஓடுதல்போலவும், இறை அருள்முன் இருள் மலவலி என - சிவபெருமான் திருவருளின்முன் ஆணவமலத்தின்வலிமை சிதைதல்போலவும், எங்கும் பரவிய அமுதால் விடம் அக

Koviloor Digital Library

ன்று - எவ்விடத்தும்பரவிய வமுதால் விஷத்தினின்றும்நீங்கி, யாவரும் அவசம்படிவம் ஒழிந்து - எவரும் துக்கசொருபம்நீங்கி, இன்பம்விரவிய களிப்பின் மேவினுர் இருந்தார் - இன்பங்கலந்தசந்தோஷத்தில் பொருந்தி இருந்தார்கள், மீனவர் பெருந்தகைவேந்தன் - பாண்டியருள் பெருந்தகைமையமைந்த அனந்தகுணபாண்டியன், அரவு அணி சடையார்க்கு அன்பு உருதானே ஆகிமண் காவல்செய்து இருந்தான் - சர்ப்பத்தையணிந்த சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள்பாற்கொண்ட அன்பே ஒருவடிவமாகி நிலவுலகைப் பாதுகாத்திருந்தான்.

அமுதத்தின்முன் விடத்தின்வலிமைகெடுதற்குச் சூரியன் சந்நிதியில் இருள் வலிகெடுதலையும் சிவபெருமான் சந்நிதியில் ஆணவமலிவலிகெடுதலையும் எடுத்துக் கூறினமையால் எடுத்துக்காட்டுவமையணி. (உ௩)

நாகமெய்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கசுஉ௫.

இருபத்தொன்பதாவது.

மாயப்பசுவைவதைத்தபடலம்.

கலிநிலைத்துறை.

சுருதியின்புறத்தவர்விடுமராவினைச்சுருதி
கருதரும்பரனருளுடைக்கௌரியன்றுணித்த
பரிசிதங்கதுபொறாதமண்படிறர்பின்விடுப்ப
வருபெரும்பசுவிடையினுன்மாய்த்ததும்பகர்வாம்.

(இ-ள்.) சுருதியின் புறத்தவர் விடும் அரவினை - வேதவொழுக்கத்தின்புறத்தினராகிய சமணர்களேவியசர்ப்பத்தை, சுருதி கருதரும் பரன் அருள் உடைய கௌரியன் துணித்தபரிசு இது - அவ்வேதஞ் சிந்தித்தற்கரிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளையுடைய வனந்தகுணபாண்டியன் துண்டுபடுத்தின தன்மை யித்திருவிளையாடல், அங்கு அது பொறாத அமண் படிறர் - அங்கு அச்செயலைக்கண்டு மனம்பொறாத சமணர்களாகியவஞ்சகர், பின்விடுப்பவரு பெரும்பசு-பின்னேவந்த பெரியபசுவை, விடையினுல் மாய்த்ததும் பகர்வாம்-அதிகாரநந்திநாயனுரால் (சோமசுந்தரக்கடவுள்) அதனை வலிமை சிதைத்தருளிய திருவிளையாடலையு மினிக்கூறுவாம்.

புறச்சமயத்தருள் ஒருதிறத்தினர் என்பார் சுருதியின்புறத்தவர் என்றார். (க)

பணப்பெரும்பருவாயுடைப்பாந்தளையனந்த
குணப்பெருந்தகைதுணித்தபின்பின்வருகுண்டர்
தணப்பருங்குழாங்காயெனுற்றனன்றுண்டுசெல்லுங்
கணப்பெரும்புயல்போலுடைந்தோடினகலங்கி.

Koviloor Digital Library



மாயப்பசுவைவதைத்திருவிளையாடல்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

(இ-ள்.) பணம் பெரும் பகுவாய் உடைய பாந்தளை - படம்பொருந்திய பெரியபிளந்தவாயையுடைய சர்ப்பத்தை, அனந்தகுணன் பெருந்தகை தனித்தபின் - அனந்தகுணபாண்டியன் துண்டுசெய்து சிதைத்தபின்பு, பின்வரும் தலைப்பு அரும் குண்டர் குழாம் - சர்ப்பத்தின்பின்னேவந்த நீக்குதலில்லாத சமணக்கூட்டம், காலின் ஆல் தள்ளுண்டு செல்லும் பெரும்புயல் கணம்போல் - காற்றினால் கலக்குண்டு சிதைந்தோடும் பெரியமேகபடலம்போல, உடைந்து கலங்கி ஓடின - புறகிட்டு நிலைகலங்கியோடின. (உ)

உடைந்துபோனவரனைவருமோரிடத்திருள்போ
லடைந்துநாமுன்புவிடுத்தமால்யானைபோலின்று
தொடர்ந்தபாம்பையுந்தொலைத்தனர்மேலினிச்சூழ்ச்சி
மிடைந்துசெய்வதையாதெனவினையமொன்றோர்வார்.

(இ-ள்.) உடைந்த போனவர் அனைவரும் ஓர் இடத்து இருள்போல் அடைந்து - புறங்காட்டியோடிய சமணர்களெல்லோரும் ஓரிடத்தி லிருள்செறிந்ததுபோலச் செறிந்து, நாம் முன்பு விடுத்தமால் யானைபோல் இன்றுதொடர்ந்த பாம்பையும் தொலைத்தனர் - நாம் முன்பு ஏவிய மதமயக்கத்தையுடைய யானையைச்சிதைத்ததுபோல இப்பொழுதேவியபாம்பையும் சிதைத்தார்கள், இனிமேல் மிடைந்து சூழ்ச்சிசெய்வது யாது என வினையம் ஒன்று ஓர்வார் - இனிமேல் நாம் ஒருசேரநெருங்கி யாலோசனைசெய்வது யாதளதென்று ஒருவினையத்தை யாலோசிக்கத்தொடங்கினர்கள்.

முன்னர்ச்சூழ்ந்தசூழ்ச்சிகள் பயனின்றிமுடிந்தன இன்று சூழுஞ்சூழ்ச்சியாவது பயன்படக்கருதவேண்டும் எனக்கருதினரென்பார் இனிச்சூழ்ச்சி மிடைந்து செய்வதையாதென வினையமொன்றோர்வார் என்றார். (ங)

ஆவையூறுசெய்யார்பழியஞ்சுவாரதனை
யேவுவாமிதுவேபுணர்ப்பென்றுசூழ்ந்திசைந்து
பாவகாரிகள்பண்டுபோற்பழித்தழல்வளர்த்தார்
தாவிலாவுருவாகியோர்தானவன்முளைத்தான்.

(இ-ள்.) ஆவை ஊறுசெய்யார் பழி அஞ்சுவார் - நாம் ஒருபசுவையே வின் அதற்கு இடையூறு செய்யார் செய்யக்கருதும் பழிக்குமஞ்சுவார், அதனை ஏவுவாம் இதுவே புணர்ப்பு என்று சூழ்ந்து இசைந்து - இதுவே யாலோசனையென்று சூழ்ச்சிசெய்து யாவருமனமொத்து, பாவகாரிகள் பண்டுபோல் பழிதழல் வளர்த்தார் - பாவகாரிகளாகிய சமணர்கள் முன்போல அபிசாரயாகஞ்செய்தார்கள், தாவில் ஆ உரு ஆகி ஓர் தானவன் முளைத்தான் - கெடுதலில்லாத பசுவின்வடிவாகி ஒரு அசுரன்தோன்றினன்.

தேவர்வடிவாய்ப் பசுவிருத்தலால் அதனைக்கொல்லச் சிறிதுங்கருதார் எனக் கருதினராதலால் இதுவே புணர்ப்பென்று சூழ்ந்து என்றார். அதனை முன்னர்க்கூறியிருத்தலுணர்க. (ச)

குண்டழற்கனின்றெழுந்தவக்கொடியவெம்பசுவைப்
பண்டுபோலவர்விடுத்தனர்கூடலம்பதிமே
லுண்டுமில்லையுமெனத்தடுமாற்றநூலுரைத்த
மிண்டியாறுனாகொண்டுழல்பேயமண்குண்டர்.

(இ-ள்.) குன்றி அழல் கண் நின்று எழுந்த அ கொடியவெம் பசுவை-யாகத்தீயினின்றுமெழுந்த அக்கொடியபசுவினை, உண்டு எனவும் இல்லை எனவும் தடுமாற்றம் ஆம் உரைத்த பிண்டியான் உரைகொண்டு உழல் பேய் அமண் குண்டர்-அஸ்தி எனவும் நாஸ்தி எனவுங் கூறுந்தடுமாற்றத்தையுடைய பூர்வாகமமுதலியநூலைக்கூறிய அசோகமரநிழலில்வசிக்கும் அருகனுடையபொய்யுரையை மெய்யுரையாகக்கொண்டு திரியும் பேய்க்குணமமைந்த சமணராகிய கீழ்மக்கள், கூடல் பதிமேல் பண்டுபோல் அவர் விடுத்தனர் - மதுரைத்திருநகரின்மேல் முன்போல அக்கீழ்மக்கள் ஏவினார்கள்.

அம் சாரியையிடைச்சொல், பூர்வாகமமுதலியநூல் பூர்வாகமம், அங்காகமம், வெகுசுருதிமுதலியநூல். அஸ்திதான் கூறிய துள்ளதெனவும், நாஸ்தி நரகம், சுவர்க்கம், கர்த்தா இல்லையெனவுங்கூறல். அதனால்வேதநெறியோடு முரணுதலால் தடுமாற்ற முரைத்த என்றார். (ரு)

கலிவிருத்தம்.

மாடமலிமாளிகையிலாடுகொடிமானக்
கோடுகளிலோடுமுகில்குத்தியிசைகோத்துச்
சேடன்முடியுங்கதிர்கொள்சென்னிவரையுந்தா
ளாடவடியிட்டுலவையஞ்சவுயிர்த்தே.

(இ-ள்.) மாடம் மலிமாளிகையில் ஆடுகொடிமான - மேன்மாடம் நிறைந்த மாளிகையி லசைந்தகொடியையொப்ப, கோடுகளின் ஓடுமுகில் குத்தியிசைகோத்து-தனது கொம்புகளினால் ஆகாயத்திலோடும் மேகங்களைக்குத்தி அவற்றின்மேற்கோத்து, சேடன் முடியும் கதிர்கொள் சென்னிவரையும் - ஆதிசேடன்முடியும் விளக்கமமைந்த சிகரத்தையுடைய மகமேருவும், தாள் ஆட அடி இட்டு - தாள்படக்கால் வைத்து, உலவை அஞ்சிட உயிர்த்து - காற்றஞ்சப்பெருமூச்செறிந்து. (சு)

விடுத்திடுமுயிர்ப்பினெதிர்பூளைநறைவிபோ
லடுத்திடுசராசரமனைத்துமிரிவெய்தக்
கடுத்திடுசினக்கனலிறுக்குலகமெல்லா
மடுத்திடுதழற்கடவுள்வார்புனலைமான.

(இ-ள்.) விடுத்திடும் உயிர்ப்பின் எதிர் அடுத்திடு சராசரம் அனைத்தும்-விடும் பெருமூச்சுக்கெதிர்ப்பட்ட நிலையியற்பொருளும் இயங்கியற்பொருளுமாகியஉயிர்யாவும், பூளை நறைவிபோல் இரிவெய்த-பூளையினது தேன்சிந்தும் பூவைப்போலப் பறக்கவும், கடுத்திடுசினக் கனலிறுக்கு-மிக்ககோபாக்கினிக்கு, உலகம் எல்லாம் மடுத்திடுதழல் கடவுள் - உலகம்யாவையும் அழிக்கப்பார்த்த தீக்கடவுள், வார் புனலைமான-வெப்பங்குறைந்துபெருகிய நீர்வெள்ளத்தையொப்பத் தண்ணிதாகவும்.

இதனதுகோபாக்கினிக்கு வடவானலங்குளிர்ந்ததென்பார் உலகமெல்லாமடுத்திடு தழற்கடவுள் வார்புனலை மான என்றார். (எ)

உடன்றிறைகொள்புள்ளொடுவிலங்கலறியோட
மிடைந்தபழுவந்தொடுவிலங்கலைமருப்பா
லிடக்கெறிமருத்தெனவெறிந்தளவிலோரைத்
தொடர்ந்துடல்சிதைத்துயிர்தொலைத்திடியினார்த்தே.

Koviloor Digital Library

(இ-ள்.) உடன்று இறைகொள் புள்ளொடு - தம்முள்போர்செய்து வசிக்கும்பறவைகளோடு, விலங்கு அலறி ஒடமிடைந்த பழுவத்தொடு விலங்கலை - மிருகங்களும் கதறியோட நெருங்கிய சோலையோடு மலைகளையும், மருப்பால் இடந்து-கொம்பினால் வேரோடுபறித்து, எறி மருத்து என எறிந்து - வீசுஞ்சண்டமாருதத்தைப்போல எங்குஞ்சிதறவீசி, அளவிலோரை தொடர்ந்து உடல் சிதைத்து உயிர்தொலைத்து இடியின் ஆர்த்து - அநேகரையெதிர்ந்து சரீரத்தையழித்து உயிர்போக்கி யிடிபோலக்கோஷித்து. (அ)

மறலிவருமாறெனமறப்பசுவழிக்கொண்
டறலிவர்தடம்பொருநையாறுடையமாறன்
றிறலிமலர்மங்கையுறைதென்மதுரைமுன்னு
விறலிவருகின்றததுமீனவனறிந்தான்.

(இ-ள்.) மறலிவரும் ஆறு என மறப்பசு வழிக்கொண்டு - இயமன் வரும் வகைபோலக் கொலைத்தொழிலையுடைய பசுவழிக்கொண்டு, அறல் இவர் தடம் பொருநை ஆறு உடைய மாறன் - கருமணல்பரந்த விசாலித்த தாமிரபர்ணியையுடைய அனந்தகுணபாண்டியனுடைய, திறலி மலர்மங்கை உறை தென்மதுரை - வறுமையோடுபகைத்து வென்று இலட்சுமிவசிக்குந் தென்திசையிலுள்ள மதுரையை, முன்னுவிறலி வருகின்றது - முற்பட்டு எதிர்ப்பட்ட யாவரையும் வெற்றிகொண்டுவாராநின்றது, அது மீனவன் அறிந்தான் - அதனைப்பாண்டியனுணர்ந்தான்.

திறலி பெயரடியாகப்பிறந்த வினையெச்சம் ஆதலால் வறுமையொடுபகைத்து எனப்பொருள்கூறினும். "சுரும்பிவர்" கோவைத் திருவாசகத்தில் இவர் என்பதற்கு நச்சினார்க்கினியர் எழுதியதுகாண்க. (கூ)

மீனவனுமாநகருண்மிக்கவருமுக்கண்
வானவனைமாமதுரைமன்னவனைமுன்னோர்
தானவனையாழிகொடுசாய்த்தவனையேத்தா
வானதுரைசெய்துமெனவாலயமடைந்தார்.

(இ-ள்.) மீனவனும் மாநகருள் மிக்கவரும் - பாண்டியனும் பெரியமதுரை நகரிலுள்ள பெரியோரும், முக்கண் வானவனை - திரிநேத்திரத்தையுடைய தேவதேவனை, மாமதுரை மன்னவனை - பெரியமதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை, முன் ஓர் தானவனை ஆழிகொடு சாய்த்தவனை ஏத்தா - முற்காலத்தோர் அசுரனைச் சக்கரங்கொண்டு கொன்றவனைத்துதித்து, ஆனது உரைசெய்தும் என ஆலயம் அடைந்தார்-நிகழ்ந்தசெய்தியைக்கூறுவோமென்று திருக்கோயிலையடைந்தார்.

சலந்தராசுரனென்னும் ஓரசுரன் சிவபெருமானிடத்து வரம்பெற்றுப் பிரமன்முதலியோரைவென்று திருமாலைச்சிறையிலிட்டுச் சிவபெருமானிடத்துப்போர்க்குச்சென்று, அவன் திருவடியுமிரால்வகுத்தசக்கரத்தால் உயிர்மாண்டானென்பது புராணவரலாறு. "பரிதிமண்டலமாயிரமெனக்கதிர்பரப்பும், உருவவாழியொன்றுக்கினனொளிருமப்படையாற், பொருவலித்திறற்சலந்தரன்பொன்றினனாதலை, வெருவினிளிடைக்கண்டுமீண்டித்தலைப்போந்தேன்" எனக்காஞ்சிப்புராணம் சலந்தரீசப்படலத்திற்காண்க. (௧0)

நாதமுறையோபொதுவின்மாநிடமாடும்
பாதமுறையோபலவுயிர்க்குமறிவிக்கும்
போதமுறையோபுனிதபூரணபுராண
வேதமுறையோவெனவிளித்துமுறையிட்டார்.

(இ-ள்.) நாதமுறையோ - நாதனேயபயம், பொதுவில் மாறி நடம் ஆடும் பாதமுறையோ - வெள்ளியம்பலத்துள் கான்மாறியடித்தருளிய திருவடியையுடையாய் அபயம், பல உயிர்க்கும் அறிவிக்கும் போத முறையோ - பல ஆன்மகோடிகளுக்கும் உணர்த்தும்போதனே யபயம், புனிதபூரண புராணவேத முறையோ என விளித்து முறை இட்டார் - மாசில்லாதவனே எங்கும்நிறைந்தவனே எப்பொழுதும் பழம்பொருளாயுள்ளவனே வேதசொரூபியே என்று கூவிக்குறை இரந்தார்கள்.

அடியர்வேண்டுகோளுக்கிரங்கி யருள்செய்பவனே என்பார் பொதுவில்மாறிநடமாடும்எனவும், எல்லாவுயிர்க்கும் இறைவனாதலால் எங்களைச்சந்தவிர்த்தருளுவது உன்திருவடியையன்றி வேறில்லையென்பார் பாதமுறையோ எனவும், நீயுணர்த்தவுணரும் சிற்றறிவுடையோமாய் நின்றுனை வழிப்பட்டொழுகும் எங்கட்கு நின்னையன்றி யொருபற்றுக்கோடு மில்லையென்பார் பலவுயிர்க்கு மறிவிக்கும் போதமுறையோவெனவுங்கூறினர். (௧௬)

நின்றுமுறையிட்டவரைநித்தனருணோக்கா
னன்றருள்சுரந்திடபநந்தியைவிளித்துச்
சென்றமணரேவவருநிப்பசுவைநீபோய்
வென்றுவருவாயெனவிளம்பினன்விடுத்தான்.

(இ-ள்.) நின்று முறை இட்டவரை நித்தன் அருள் நோக்கால் நன்று அருள் சுரந்து - நின்றுமுறை யிரந்தவர்களுக்குச் சோமசுந்தரக்கடவுள் திருவருட்பார்வையால் மிகவுங்கருணைசெய்து, இடபநந்தியை விளித்து - தன்னருகிலுள்ள அதிகாரநந்திராயனை யழைத்து, அமணர் ஏவ சென்று வருநி பசுவை - சமணர்கள் ஏவ வாநின்ற கொடியபசுவினை, நீபோய் வென்று வருவாய் என விளம்பினன் விடுத்தான் - நீபோய்வென்று வருவாய் என்றுகூறி ஏவியருளினர்.

நான்கனுருபு நிற்குமிடத்து இரண்டனுருபுநிற்றலால் உருபுமயக்கம். (௧௭)

கலித்துறை.

தண்டங்கெழுகூற்றமுமஞ்சத்தறுகட்செங்கட்
குண்டந்தழன்றுகொதிப்பக்கொடுநாக்கெறிந்து
துண்டந்துழாவக்கடைவாய்நுரைசோர்ந்துசென்னி
யண்டந்துழாவவெழுந்தன்றடலேறுமாதோ.

(இ-ள்.) தண்டம் கெழு கூற்றமும் அஞ்ச - தண்டாயுதத்தையேந்திய இயமனுமஞ்சும்படி, தறுகண் செங்கண் குண்டம் தழன்று கொதிப்ப - கொடுமையையுடைய சிவந்தனவாகிய குழிகள் சுவாலித்துக்கொதிக்கவும், கொடுநாக்கு எறிந்து துண்டம் துழாவ - வளைந்தநாவினைவெறிந்து மூக்கினைத்துழாவவும், கடைவாய் நுரைசோர்ந்து - கடைவாயில் நுரைசோரவும், சென்னி அண்டம் துழாவ - சிரசானது வானுலகத்தைத்தடவவும், அடல் ஏறு எழுந்தன்று - வெற்றியையுடைய அதிகார நந்திராயனுர் எழுந்தருளினர்.

சோர்ந்து செயவெனெச்சத்திரிபு. (௧௮)

Koviloor Digital Library

நெற்றித்தலியோடைநிமிர்ந்துமறிந்தகோட்டிற்
பற்றிச்சுடர்செம்மணிப்பூண்பிறைபையநாகஞ்
சுற்றிக்கிடந்தாலெனத்தோன்றவெள்ளாழியின்ற
கற்றைக்கதிர்போற்பருமம்புறங்கௌவிமின்ன.

(இ-ள்.) நெற்றி தவி ஓடை நிமிர்ந்து - நெற்றியிற்கட்டிய ஒப்பற்றபட்டமா னது மேற்பட்டுவிளங்கவும், மறிந்தகோட்டில் பற்றி சுடர் செம்மணி பூண்-வளைந்த கொம்பினைப்பொருந்தி விளங்காநின்ற செவந்தமாணிக்கத்தாலாகிய பூணானது, பி றைபைய நாகம் சுற்றிகிடந்தால் என தோன்ற - மூன்றாம்பிறையைப் படத்தையு டைய கேதுவென்னும் பாம்பானது சுற்றிக்கிடந்தாற்போலத் தோன்றவும், வெள் ஆழி ஈன்ற கற்றை கதிர்போல் பருமம் புறம் கௌவிமின்ன - வெள்ளியபாற்கடல் பெற்ற நெருங்கிய கிரணத்தையுடைய சூரியனைப்போலப் பொன்னாற்செய்தகவச மானது உடம்பின்புறத்தைவிடாது பொருந்திவிளங்கவும்.

கேது செம்பாம்பு ஆதலால் செம்மணிப்பூண்பிறை பையநாகஞ்சுற்றிக்கிடந் தாலென என இல்பொருளுவமையணிதந்துகூறினார். பூண் சாதியொருமை. பைய சி னையடியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயரெச்சம். விடை வெண்ணிறமுடையது. ஆ தலால் வெள்ளாழியீன்ற கற்றைக்கதிர்போற்பருமம் என்றது பண்பு பண்புபற்றி வந்த வுவமை. நிமிர்ந்து செயவெனெச்சத்திரிபு. (கச)

கோட்டுப்பிறைகால்குளிர்வெண்கதிர்க்கற்றைபோலச்
சூட்டுக்கவரித்தொடைத்தொங்கலுநெற்றிமுன்னுப்
பூட்டுத்தாளமுகவட்டும்பொலியப்பின்னன்
மாட்டுச்சதங்கைத்தொடைகல்லெனவாய்விட்டார்ப்ப.

(இ-ள்.) கோடு பிறை கால் குளிர் வெண்கதிர் கற்றைபோல - கொம்பாகிய மூன்றாம்பிறை கக்குங்குளிர்ந்த வெள்ளியகிரணத்திரட்சிபோல, சூட்டு கவரி தொ டைதொங்கலும் - உச்சியிற்சூட்டிய கவரியின் மயிராற்றொடுக்கப்பட்ட தொங்கணி யும், நெற்றி முன்னு பூட்டு தாளமுகவட்டும் பொலிய - நெற்றிக்கு முற்படப்பூட்டு தலையுடைய முத்தாலாகிய முகவட்டும்பொலிந்து விளங்கவும், பின்னல் மாட்டுச் சதங்கைதொடை கல்லென வாய்விட்டு ஆர்ப்ப - வெள்ளியபின்னலில்கோத்த மா ட்டுச்சதங்கைமாலை கல்லென்று வாய்விட்டுக்கோஷிக்கவும்.

பூட்டுத்தாளமாவது பருத்தமுத்து முற்படப்புனைதல். காட்டரண் என்றாற் போலக் கோட்டுப்பிறையெனப் பண்புத்தொகையில் நிலைமொழி இரட்டியது.(கரு)

பணிநாவசைக்கும்படியென்னக்கழுத்தில்வீர
மணிநாவசைப்பநகைமுத்தின்வருத்ததண்டை
பிணிநாண்சிறுகிண்கிணிபிப்பலமாலைத்தொங்க
லணிநாணலம்பச்சிலம்பார்ப்பவடிகளுன்றும்.

(இ-ள்.) பணிநா அசைக்கும்படி என்ன - பாம்பு நாவசைக்கும்வகைபோல, கழுத்தில் வீரமணி நா அசைப்ப - கழுத்தில் வீரகண்டை நாவசைத்துக்கோஷிக்கவு ம், நகைமுத்தின் வருத்ததண்டை-விளக்குமுத்தினைப் பருக்கைக்கல்லாகவுடைய த ண்டையும், நாண் பிணி சிறுகிண்கிணி - கயிற்றிற்கோத்த சிறுசதங்கைகளும், பிப்

Koviloor Digital Library

பலம் மாலை தொங்கல்-அரசிலைவடிவாக மாலைகளாபடச்செய்த ஆபரணமும், அணி நாண் அலம்ப - ஒருவகையணியாக முறுக்கமைந்த கயிறும் ஒலிக்கவும், அடிகள் நான்கும் சிலம்பு ஆர்ப்ப - நான்குகால்களிலும் சிலம்புகள்முழங்கவும்.

அரசிலை வடிவமாகச்செய்த மாலையோடு முறுக்கமைந்த கயிறுகளும் அமைந்திருத்தலால் அதன்பின்னர் அணிநாண் என்றார். (கசு)

அடியிட்டுநிலம்பிளந்தண்டமெண்டிக்கும்போர்ப்பப்
பொடியிட்டுயிர்த்துப்பொருகோட்டினிற்குத்திக்கோத்திட்
டிடியிட்டதிர்காரெதிரேற்றெழுந்தாங்குநோக்கிச்
செடியிட்டிருகண்ணழல்சிந்தநடந்ததன்றே.

(இ-ள்.) அடியிட்டு நிலம் பிளந்து - காலிட்டுப் பூமியைப்பிளந்து, அண்டம் எண்டிக்கும் போர்ப்ப பொடி யிட்டு - அண்டமும் எட்டுத்திக்கும் புதைபடத் தூளியாடி, உயிர்த்து - பெருமூச்செறிந்து, பொரு கோட்டினில் குத்தி கோத்திட்டு - போர்செய்யும் தனது கொம்புகளால் அந்நிலவுலகைக் குத்திக் கோத்து, இடி யிட்டு அதிர் கார் எதிர் ஏற்று எழுந்தால் ஆங்கு நோக்கி - முழங்கிக் கோஷிக்கும் மேகத்தோடு எதிர்த்து எழுந்தாற்போலப் பார்த்து, செடி யிட்ட இரு கண் அழல் சிந்த நடந்தது - ஒளிமிக்க இரண்டுகண்களும் கோபாக்கினி சிந்த நடந்தது.

போர்க்கெழுந்த இடபம் மேகத்தைத் தலையெடுத்துநோக்கித் துள்ளிச்செல்லுதல் இயல்பாதலால் காரெதிரேற்றெழுந்தாங்குநோக்கி நடந்தது என்றார். செடியிட்ட பெயரெச்சத்தின் அகரவீறு தொக்குநின்றது. (கஎ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பால்கொண்டநிழல்வெண்டிங்கட்பகிர்கொண்டமருப்பிற்கொண்மூச்
சூல்கொண்டவயிற்றைக்கீண்டுதள்ளிப்போர்வெள்ளிக்குன்றங்
கால்கொண்டுநடந்தாலென்னக்கடிந்துடன்றுவைச்சீற்ற
மேல்கொண்டுநாற்றம்பற்றிவிக்குயிர்ப்பெறிந்துகிட்டா.

(இ-ள்.) பால் கொண்ட நிழல் வெண் திங்கள் பகிர் கொண்ட மருப்பில்-வெள்ளிய ஒளிமிக்க அர்த்தசந்திரனை யொத்த கொம்பினால், சூல் கொண்ட வயிற்றை கீண்டு தள்ளி - சூல்கொண்ட மேகத்தினது வயிற்றைக்கிழித்து மேலே எழுந்து தள்ளி, ஓர் வெள்ளிக் குன்றம் கால் கொண்டு நடந்தால் என்ன கடிந்து - ஒரு வெள்ளியமலை கால்கொண்டு நடந்தாற்போல விரைந்து சென்று, உடன்று - பகைத்து, ஆவை சீற்றம் மேல் கொண்டு நாற்றம் பற்றி விக்கு உயிர்ப்பு எறிந்து கிட்டா - பசுவினைக் கோபித்து நாற்றம்பற்றி விக்குயிர்ப்பெறிந்து கிட்டி.

வெள்ளிக்குன்றம் கால்கொண்டு நடந்தால் என்ன இல்பொருளுவமையணி.

குடக்கதுகுணக்கதென்னக்குணக்கதுகுடக்கதென்ன
வடக்கதுதெற்கதென்னத்தெற்கதுவடக்கதென்ன
முடுக்குறுமருப்பிற்கோத்துமுதுகுபிற்பாகத்தள்ளு
மெடுக்குறுமலையைக்கால்பேர்த்தெனத்திசைப்புறத்துவீசும்.

(இ-ள்.) குடக்கது குணக்கது என்ன குணக்கது குடக்கது என்ன - மேலைத்திசையில் உள்ள பசு அன்றே கீழைத்திசையில் உள்ளதென்றுசொல்லவும் கீழைத்

Koviloor Digital Library

திசையில் உள்ளது அன்றே மேலைத்திசையில் உள்ளதென்று சொல்லவும், வடக்கது தெற்கது என்ன தெற்கதை வடக்கது என்ன முடிக்குறும் - வடக்கில் உள்ளது அன்றே தெற்கில் உள்ளதென்று சொல்லவும் தெற்கில் உள்ளது அல்றே வடக்கில் உள்ளது என்றுசொல்லவு முடிக்கும், மருப்பில் கோத்து முதுகு கிழாகதள்ளும் எடுக்குறும் - கொம்பினுல் கோத்து முதுகு கிழாகத் தள்ளும் எடுக்கும், மலையை கால் பேர்த்தால் என்ன - மலையைக் காற்றுப் பேர்த்துவிசினுற்போல, திசைப் புறத்து வீசும் - திசைகளின் புறத்தில்வீசும்.

குடக்கது, குணக்கது, வடக்கது, தெற்கது குறிப்பு வினைமுற்றுப்பெயர்கள்.

கொழுமணிச்சிகரகோடிசிதைபடக்குவட்டில்வீசும்
பழுமரச்செறிவில்வான்றேய்பணையிறவெறியும்வானின்
விழுமறப்பசுப்போல்வீழவேலைவாய்வீசுமிங்ஙன்
செழுமதிக்கோட்டுநந்தித்தேவிளையாடல்செய்து.

(இ-ள்.) கொழு மணி சிகர கோடி சிதை பட குவட்டில் வீசும் - உருவமுதிர்ந்த இரத்தினங்கள் நிறைந்த சிகரபந்திகள் தூள்பட எடுத்து மலையின்மேல் வீசும், பழு மரம் செறிவில் வான் தோய் பணை இற எறியும் - ஆலமரங்களின் நெருக்கிலுள்ள வானுலகத்தை அளாவிய கொம்புகள் முறிய அவற்றின்மேல் வீசும், வானின்விழும் அறம் பசு போல் - விண்ணுலகினின்று கடலில் விழுந்து மறைந்தகாமதேனுவைப்போல, வேலை வாய் வீசும் - கடலில் விழ எடுத்துவீசும், இங்ஙன் செழு மதி கோடு நந்திதே விளை யாடல் செய்து - இவ்வாறு அர்த்தசந்திரனையொத்தகொம்பினையுடைய நந்திநாயனுர் போர்விளையாட்டுச்செய்து.

துருவாசமுனிவன் கோபத்தால் இந்திரனுடைய செல்வங்கள் முற்றுங் கடலிலொளித்தமையால் வானின்விழு மறப்பசுப்போல் வீழ என்றார். இங்ஙனம் ஈறுதொகுத்தல். கொழுமணி என்றமையால் உருவமுதிர்ந்த என்றும். (உ0)

பூரியரெண்ணியாங்கேபொருதுயிருற்றஞ்செய்யா
தாரியவிடைதன்மாண்டவழகினைக்காட்டக்காமுற்
றீரியநறும்பூவாளியேறுபட்டாவியோடும்
வீரியம்விடுத்துவிழ்ந்துவெற்புருவாயிற்றன்றே.

(இ-ள்.) பூரியர் எண்ணிய ஆங்கே பொருது உயிர் ஊற்றம் செய்யாது - சமணர்களாகிய கீழ்மக்கள்எண்ணியபடியேபோர்செய்துஉயிர்கவராது, ஆரியம் விடை தன் மாண்ட அழகினை காட்ட காமுற்று - அழகிய இடபமானது தனது மாட்சிமைப்பட்ட வழகினைக்காட்ட அப்பசுவிரும்பி, ஈரிய நறும் பூவாளி ஏறு பட்டு - குளிர்ந்த நல்ல மலர்ப்பாணம் பாய்தலால், ஆவியோடும் வீரியம் விடுத்து வீழ்ந்து வெற்பு உரு ஆயிற்று - பிராணனேடு வீரியம்விட்டு நிலத்தின்மீதுவிழுந்து (வடபக்கத்தில்) ஒருமலையின்வடிவாய் விளங்கியது.

எண்ணிய ஈறுதொகுத்தல். வஞ்சனையால் வெல்லக்கருதினவராதலால் பூரியர் என்றார். (உக)

வாங்கினபுரிசைமாடமாநகரானுவின்பர்
தூங்கினவரவாய்வேம்பின்றேடவிழ்தாரான்றிண்டோள்

வீங்கினவிரவிதோன்றவிட்டிருளுடைந்ததென்ன
நீங்கினகணமோடீண்டியவமண்குழாங்களெல்லாம்.

(இ-ள்.) வாங்கின புரிசை மாடம் மாநகர் அனைத்தும் இன்பம் தாங்கின — வளைந்த மதில்சூழ்ந்த மாடங்கள் நெருங்கிய பெரியநகரிலுள்ளோர் நீங்காதவின்பத்தி லழுந்தினார்கள், ஆரம் வாய் வேம்பின் தோடு அவிழ் தாரான் திண் தோள் வீங்கின — ஆரம்போல இருபக்கங்களிலும் வாயுள்ள இலைகள்நெருங்கிய வேம்பினது பூவிதழவிழ்ந்த மாலையையுடைய அனந்தகுணபாண்டியனுடைய திண்ணியதோள்கள் பருத்தன, இரவி தோன்ற விட்டு இருள் உடைந்தது என்ன — சூரியனுதயஞ் செய்ய மிக்கவிருள் புறங்கொடுத்ததுபோல, கணம் ஓடு ஈண்டிய அமண் குழாங்கள் எல்லாம் நீங்கின — கணத்தோடு பந்திபந்தியாயுள்ள சமணக் கூட்டங்களெல்லாம் புறங்கொடுத்தோடின.

அமண்குழாங்களெல்லாம் என வினைமுதலாக்கி நீங்கின என்னும் பயனிலையைக்கூட்டி முடிக்க. சினைக்குமுதலுக்கும் ஒற்றுமையுண்மையால் சினையின்வடிவை முதல்மேலேற்றி ஆரவேம்பு என்றார். (உஉ)

உலகறிகரியாத்தன்பேருருவினையிடபக்குன்றாக்
குலவுறநிறுவிச்சூக்கவடிவினாற்குறுகிக்கூடற்
றலைவனைவணங்கவீசன்றன்னருள்சார்ந்துபண்டை
யிலகுருவாகியிங்ஙனிருக்கெனவிருத்தினானே.

(இ-ள்.) உலகு அறி கரியாக தன்பேர் உருவினை இடபக் குன்றாக குலவுற நிறுவி — உலகோரறிதற்குச் சாட்சியாகத் தனது பெரிய தூலவடிவத்தை அவ்விடப க்குன்றில் இடபமலையாக விளங்கநிறுத்தி, சூக்க வடிவினால் குறுகி கூடல் தலைவனை வணங்க — சூக்குமவடிவத்தோடுஞ் சென்று மதுரையி லெழுந்தருளிய இறைவனை வணங்க, ஈசன் தன் அருள் சார்ந்து பண்டை இலகு உருவாகி இங்ஙன் இருக்க என இருத்தினான் — அவ்விறைவன் தன்னுடைய திருவருள்சார்ந்து முன்புள்ள விளங்கும் உருவத்தையடைந்து இவ்விடத்தி லிருக்கவென இருக்கச்செய்தருளினான்.

போர்செய்யக் கெடுத்துச்சென்ற வுருவாதலால் பேருருவினை நிறுவி யெனவும், இயற்கைவடிவு சூக்குமவடிவாதலால் சூக்கவடிவினாற் குறுகியெனவும், சிலைவடிவாகவே இருந்ததலால் பண்டை எனவுங்கூறினார். இருக்க என்னும் வியங்கோள் விகுதிகெட்டது. சூக்குமம் சூக்கம் பிராகிருதச் சிதைவு. (உ௩)

அங்கிலைநகருளாருமரசனுமகிழ்ச்சிதூங்கிச்
சன்னிதியிருந்தநந்திதாளடைந்திறைஞ்சிப்போக
மின்னவிர்சடையானந்திவென்றிசால்விறனோக்கி
பின்னமுதனையாளோடுங்களிசிறந்திருந்தானால்.

(இ-ள்.) அங்கிலை நகர் உள்ளாரும் அரசனும் மகிழ்ச்சி தூங்கி — அப்பொழுது நகரிலுள்ளவர்களும் அனந்தகுணபாண்டியனும் களிப்பிலாழ்ந்து, சன்னிதி இருந்த நந்தி தாள் அடைந்து இறைஞ்சி போக — அருகிலிருந்த அதிகாரநந்திதேவருடைய திருவடியையடைந்து வணங்கிச்செல்ல, மின் அவிர் சடையான் நந்தி வென்றி சால் விறல் நோக்கி — மின்னைப்போலும் விளங்குஞ்சடையையுடைய சோமசுந்தரக்கடவுள்

Koviloor Digital Library

அந்தநாயனாருடைய வெற்றியின் மிக்க இறுமாப்பைநோக்கி, இன் அமுது அனையாள் ஓடும் களி சிறந்து இருக்கும் நாளில் - இனியவமுதினை யொத்த அங்கயற்கண்ணியாரோடுங் களிகூர்ந்திருக்குங்காலையில்.

உமையார் ஓடுங் கலந்து நோக்கி என்றமையால் காவல் நந்திநாயனார் என்றது அதிகாரநந்திநாயனார் என்றும். வென்றி தனது பராசத்தியின் திறங்களுளொன்றாதலால் வென்றிசால்வீறுநோக்கி இன்னமுதனையாளோடுங் களிசிறந்தென்றார்.

அவ்விடைவரைமேன்முந்நீரார்கலியிலங்கைக்கேகுந்
தெவ்வடுசிலையிராமன்வானரசேனைசூழ
மைவ்வரையனையதம்பிமாருதிசுக்கிரீவ
னிவ்வடல்வீரரோடுமெய்தியங்கிறுத்தான்மன்னோ.

(இ-ள்.) அ விடை வரை மேல் முந் நீர் ஆர் கலி இலங்கைக்கு ஏகும் தெவ் அடு சிலை இராமன் - அந்த இடபமலையின்மேல் கடல்சூழ்ந்த விலங்கைக்குச்செல்லும் பகைவரைவென்ற வில்லையேந்திய இராமமூர்த்தி, வானர சேனை சூழ - வானரப்படை புடைசூழ, மை வரை அனைய தம்பி மாருதி சுக்கிரீவன் - நீலமலையையொத்த இலட்சுமணனும் அநுமனும் சுக்கிரீவனுமாகிய, இ அடல் வீரர் ஓடும் எய்தி அங்கு இறுத்தான் - இந்த வெற்றியையுடைய வீரர்களோடுமடைந்து வசித்தான்.

கடலிடைக் குறையாதலால் முந்நீர் ஆர்கலி என்றதற்குக் கடல்சூழ்ந்த இலங்கையென்றும். வானரசேனை இரண்டும் வடசொல் ஆதலால் வருமொழிமுதல் வல்லெழுத்து இயல்பாயிற்று. (உரு)

அன்னதுதெரிந்துவிந்தமடக்கியமுனியங்கெய்தி
மன்னவற்காக்கங்கூறிமழவிடைக்கொடியோன்கூடற்
பன்னரும்புகழ்மையோதுபனுவலையருளிச்செய்ய
முன்னவன்பெருமைகேட்டுமுகிழ்த்தகைமுடியோனாகி.

(இ-ள்.) அன்னது தெரிந்து விந்தம் அடக்கிய முனி அங்கு எய்தி - அதனைத்தெரிந்து விந்தமலையை யடக்கிய அகத்தியமுனிவர் அவ்விடபமலையை யடைந்து, மன்னவன் கு ஆக்கம் கூறி - இராமமூர்த்திக்கு ஆசிவசனங்கூறி, மழவிடை கொடியோன் கூடல் பன் அரும் புகழ்மை ஓதும் பனுவலை அருளிச் செய்ய - இளமைபொருந்திய இடபக்கொடியையுடைய சோமசுந்தரக் கடவுளுடைய திருவாலவாயின் சொல்லுதற்கரிய மான்மியத்தைக்கூறும் நூலைத் திருவாய்மலர்ந்தருள, முன்னவன் பெருமை கேட்டு முகிழ்த்த கை முடியோன் ஆகி - அவ்விறைவனது பெருமையைக் கேட்டுக் கூப்பியகரங்கசேறிய முடியையுடையவனாகி.

தருமசொரூபி என்பார் மழவிடைக்கொடியோன் என்றார். (உசு)

முனியொடுகுறுகிச்செம்பொன்முளரியுண்மூழ்கியாதித்
தனிமுதலடியைவேனிமுடியுறத்தாழ்ந்துவேத
மனுமுறைசிவாகமத்தின்வழிவழாதருச்சித்தேத்திக்
கனிவுறுமன்பிலாழ்ந்துமுடிமிசைக்கரங்கள்கூப்பி.

(இ-ள்.) முனி ஓடு குறுகி செம் பொன் முளரி உள் மூழ்கி - அகத்தியமுனிவரோடுசென்று பொற்றுமரைத்தீர்த்தத்தில் நீராடி, ஆதி தனி முதல் அடியை வே

ணி முடி உற தாழ்ந்து - ஆதியாகிய ஒப்பற்ற முதல்வனுடைய திருவடியைத் தனது சடாமுடிபொருந்தவணங்கி, வேத மறை முறை சிவாகமத்தின்வழி வழாது - வேதமந்திரத்தின்முறையும் சிவாகமத்தின் நெறியும் வழுவாமல், அருச்சித்து ஏத்தி - அருச்சனைசெய்து வணங்கி, கனிவுறும் அன்பின் ஆழ்ந்து - கனிந்தபேரன்பிலழுந்தி, முடிமிசை கரங்கள் கூப்பி - தனது தலையின்மேல் கைகளைக்குவித்து.

வேதம் உடலும் ஆகமம் உயிரும் ஆதலால் வேதமறைமுறை சிவாகமத்தின்வழி வழாது என்றார். (உஎ)

புங்கவசிவன்முத்திபுராதிபபுனிதபோக
மங்கலமெவற்றிருக்குங்காரணவடிவமான
சங்கரநினதுதெய்வத்தானங்களனந்தமிந்த
வங்கண்மாஞாலவட்டத்துள்ளனவவைகடம்மில்.

(இ-ள்.) புங்கவ - பிரமன்முதலிய எல்லாத் தேவர்களுக்கும் மேற்பட்டவனே, சிவன் முத்தி புராதிப - சிவன்முத்திபுரத்திற்கு அதிபனே, புனித போகம் மங்கலம் எவற்றிருக்கும் காரணவடிவம் ஆன சங்கர - (ஆன்மாக்களுடையும்) மாசில்லாத எல்லாப்போகங்களுக்கும் காரணவடிவாயுள்ளசங்கரனே, நினது தெய்வம் தானங்கள் அனந்தம் - உனது தெய்வத்தன்மையையுடைய தலங்க ளளவுபடாமல், இந்த அம் கண் மா ஞாலம் வட்டத்து உள்ளன - இந்தஅழகிய இடம்பரந்த பெரியநிலவுலகிலுள்ளன, அவைகள் தம்மில் - அத்தலங்களுள்.

ஆன்மாக்களுக்குப் போகமருளுதற்பொருட்டுத் திருவருளையே திருவுருவமாகக்கொண்டருளுதலால் புனிதபோக - மங்கலமெவற்றிருக்குங் காரணவடிவமான சங்கர என்றார். சங்கரன் என்னும்பதம் சுபந்தருவோன் என்னும்பொருட்டு "உருவருள் குணங்களோடு முணர்வருளுருவிற்றோன்றக் - கருமமுமருளரன்றன்கர சரணாதிசாங்கந் - தருமருள்பாங்கமெல்லாந் தானருடனக்கொன்றின்றி - அருளுருவுயிருக்கென்றே யாக்கினனசிந்தனற்கே" என்னும் திருவாக்கு முணர்க. (உஅ)

கலிநிலைத்துறை.

அற்புதப்பெரும்பதியித்தமதுரையிதாற்றப்
பொற்புடைத்தென்பதெவன்பலபுவனமுநின்பாற்
கற்புவைத்துயர்செய்தகருமத்தின்விருத்தம்
வெற்புருக்களாய்ப்புடைநின்றுவிளங்கலான்மன்னே.

(இ-ள்.) அற்புதம் பெரும்பதி இந்த மதுரை ஈது ஆற்ற பொற்பு உடைத்து என்பது - ஞானவடிவமாய்ப் பெரியதலமாயுள்ள இந்தமதுரையாகியவிது மிகவுஞ் சிறந்ததென்று கூறுதல், எவன் - யாதுகாரணமென்று வினவில், பல புவனமும் நின்பால் கற்பு வைத்து உய்ய - பலவுலகங்களு முன்னிடத்து உறுதிவைத்துப்பிழைக்க, நீ செய்த கருமத்தின் விருத்தம் - நீசெய்த திருவிளையாடலின் சரித்திரம், வெற்பு உருக்களாய் புடை நின்று விளங்கலால் - மலைகளின் உருவங்களாய்ப் பக்கங்களினின்று விளங்குதலால்.

இத்தலம் எல்லாத்தலங்களினு மிகவுஞ்சிறந்ததென்பது காட்சிப்பிரமாணத்தால் விளங்குமென்பான் நீசெய்த கருமத்தின்விருத்தம்வெற்புருக்களாய்ப் புடைநின்று விளங்கலால் என்றார். (உகூ)

Kovilоor Digital Library

கண்டவெல்லையிற்றுன்பங்கள்களைதற்குமளவைக்
கண்டரும்பெருஞ்செல்வங்களளித்தற்குங்கருணை
கொண்டுநீயுறைசிறப்பினுற்குளிர்மதிக்கண்ணி
யண்டவாணவிவ்விலிங்கத்துக்கொப்புவேருமோ.

(இ-ள்.) கண்ட எல்லை இல் துன்பங்கள் களைதற்கும் - தெரிசித்தவப்பொழுதே துன்பங்களைக் களைதற்கும், அளவைக்கு அண்ட அரும் பெரும் செல்வங்கள் அளித்தற்கும் - அளத்தற்கரிய இந்திரன்முதலியோர் பெருஞ்செல்வங்களைத் தந்தருளுதற்கும், கருணை கொண்டு நீ உறை சிறப்பினுல்-திருவருள்கொண்டு நீஇடைவிடாது வசித்தருளுஞ் சிறப்பினுல், குளிர் மதி கண்ணி அண்ட வாண - குளிர்ந்த மூன்றும் பிறையை மாலையாகவணிந்த தேவதேவனே, இ இலிங்கத்துக்கு ஒப்புவேருமோ - இந்த இலிங்கமூர்த்தத்துக்கு வேருக வேர்இலிங்கமூர்த்த முளதோ.

தனதுமனைவியைப்பிரிந்த பெருந்துன்பத்தாலாற்ருது நிலைகலங்கிய இராமமூர்த்தி அத்துன்பம் தெரிசித்தபொழுதே யொழிந்தனனென்பான் கண்டவெல்லையிற் றுன்பங்கள் களைதற்கும் எனவும், பிரிந்தமனைவியை இன்றேபெற்றேன் என்பான் அளவைக்கண்டரும் பெருஞ்செல்வங்களளித்தற்கும் எனவும், இவ்வாறுஅடியார் வேண்டியாங்கே பெறுதல் இம்மூர்த்தத்தன்றி வேறுமூர்த்தத்தில்லையென்பான் இவ்விலிங்கத்துக் கொப்புவேருமோ எனவுங் கூறினுன். (௫0)

தோய்ந்திடும்பொழுதிட்டியதொல்வினைப்படல
மாய்ந்திடும்படிமாய்த்துநின்மங்கலபோக
மீந்திடும்படிக்கிருந்தமாதீர்த்தத்தினியல்பை
யாய்ந்திடும்பொழுதகற்கொருதீர்த்தமொப்பாமோ.

(இ-ள்.) தோய்ந்திடும் பொழுது - நீராடுங்காலையில், ஈட்டிய தொல் வினை படலம் மாய்ந்திடும்படி மாய்த்து - பிறவிகள்தோறுஞ் சேகரித்த தொன்றுதொட்டுள்ள சஞ்சிதவினையின் திரட்சிகெடும்படி சிதைத்து, நின் மங்கலபோகம் ஈந்திடும்படிக்கு இருந்தமாதீர்த்தத்தின் இயல்பை - உனது மங்கலகரமாகிய சிவபோகத்தைக் கொடுக்கும்படிக்கு அமைந்த பொற்றுமரைத்தீர்த்தத்தி னிலக்கணத்தை, ஆய்ந்திடும் பொழுது அதற்கு ஒரு தீர்த்தம் ஒப்பாமோ - ஆராய்ந்து நோக்குங்காலையில் அத்தீர்த்தத்துக்கொத்த வொருதீர்த்தமும் நிலவுலகில் உள்ளதோ (இல்லையென்றபடி.)

சிவஞானப்பேற்ருற்கழியும் சஞ்சிதமும், திருவருளாலடையுஞ் சிவபோகமும் எளிதிற்றருவது இத்தீர்த்தம் என்பான் தோய்ந்திடும்பொழுதிட்டிய தொல்வினைப்படலம் - மாய்ந்திடும்படிமாய்த்துநின் மங்கலபோகம் ஈந்திடும்படிக்கிருந்தமாதீர்த்தம் எனவும், அந்தத் தீர்த்தத்தின்மான்மியத்தை நுண்ணியஅறிவால் நோக்குவார்க்கு ஒப்புயர்விகந்தது என்பான் இயல்பை ஆய்ந்திடும்பொழுதகற்கொரு தீர்த்தமொப்பாமோ எனவுங்கூறினுன். (௫௧)

எத்தலத்திலுமொவ்வொன்றுவிழுமிதாமிந்த
மெய்த்தலத்திலெம்மூவகைவிழுப்பமும்விளங்கு
மத்தவாதலாலித்தலமடைந்தவரெவர்க்குஞ்
சித்தசுத்தியும்பல்வகைச்சித்தியும்பயக்கும்.

(இ-ள்.) எத்தலத்திலும் ஒவ்வொன்று விழுமிதாகும் - எந்தச் சிவதலங்களிலும் மூர்த்தி தலம் தீர்த்தமென்ற மூன்றினுள் ஒவ்வொன்று மேலாய்விளங்கும், இந்த மெய்த்தலத்தில் இ மூவகைவிழுப்பமும் விளங்கும் - இந்தவுண்மையாகியதலத்தில் இம்மூவகைச்சிறப்பும் மேம்பட்டுவிளங்கும், அந்த - இறைவனே, ஆதலால் இத்தலம் - ஆகையாலிந்த தலமானது, அடைந்தவர் எவர்க்கும் சித்தசத்தியும் பலவகை சித்தியும் பயக்கும் - தன்னையடைந்தோ ரெவர்க்கும் சித்தசுத்தியையும் அணிமாமுதலிய பலவகைச்சித்திகளையுங் கொடுக்காநிற்கும்.

சித்தசுத்தியாவது - நித்தநைமித்திககருமங்களை ஈசுவரார்ப்பணமாகச்செய்தலால்வரும்பேறு. பலவகைச்சித்திகளாவன - அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம். இவற்றின் செயல்களை அட்டமாசித்தியுபதேசித்த படலத்திற்காண்க. (கஉ)

அடியனேனென்றுங்கருமமுஞ்சரதமேயாக
முடியுமாவரிதச்செயன்முடியுமெப்படியப்
படிபுரிந்தருள்கடிதெனப்பணித்தனன்பரனு
நெடியவான்படுமமுதெனவெதிர்மொழிநிகழ்த்தும்.

(இ-ள்.) அடியனேன் என்றும் கருமமும் சரதமே ஆக முடியுமாறு அரிது - அடியேனெண்ணியடைந்த கருமமும் உண்மையாகமுடியும் வண்ணமரியதோ, அச்செயல்முடியும் - அந்தக்கருமம் எளிதாகமுடியும், எப்படி அப்படி கடிது புரிந்தருள் என பணித்தனன் - (எனதுதிருவருள்) எவ்வாறோ அவ்வாறு செய்தருளாய் என்று வணங்கினன், பரனும் நெடிய வான் படும் அமுது என எதிர்மொழி நிகழ்த்தும் - சோமசுந்தரக்கடவுளும்பரந்த வாகாயத்திற்றோன்று மமுதம்போல ஓர் அசரீரிகூறியருளுகின்றார்.

உனது திருவருளோடிசைந்துசெய்ய எனதுசெயல் முடிவது எளிதென்பான் அச்செயல்முடியும் எனவும், உனது அருளாணையின் வழிப்பட்டேன் என்பான் எப்படியப்படி புரிந்தருள்கடிதெனப்பணித்தனன் எனவுங்கூறினான். (கங)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இரவிதன்மரபின்வந்தவிராமவேளெமக்குத்தென்கீழ்
விரவியதிசையிற்போகிவிரிகடற்சேதுகட்டிக்
கரவியவுள்ளக்கள்வன்கதிர்முடிபத்துஞ்சிந்தி
யரவமேகலையிறைவியருஞ்சிறையழுவநீக்கி.

(இ-ள்.) இரவி தன் மரபில் வந்த இராம வேள் - சூரியனுடைய மரபில்வந்த இராமனென்பவனே, எமக்கு தென் கீழ் விரவிய திசையில் போகி - எமக்குத் தெற்குங் கிழக்குமாய்க்கலந்த தென்கீழ்த்திசையிற்சென்று, விரி கடல் சேது கட்டி - விரிந்த கடலில் சேதுபந்தனஞ்செய்து, கரவிய உள்ளம் கள்வன் கதிர் முடி பத்தும் சிந்தி - கள்ளமமைந்த மனத்தையுடைய இராவணனது விளக்கமமைந்த பத்துத்தலைகளையுந் துண்டித்து, அரவம் மேகலை இறைவி அரும் சிறை அழுவம் நீக்கி - ஒலிக்கு மேகலையையுடைய சானகியை அடைதற்கரிய சிறைக்கூடமாகிய கடுங்குழியிடத்தினின்றும் நீக்கி.

தென்கிழக்கு தெற்குங் கிழக்குங் கூடிய ஒரு கோணமாதலால் தெற்குங் கிழக்குமாய்க் கலந்த தென் கீழ்த்திசையென்றும். (கச)

மீண்டுநின்னயோத்தியெய்திவிரிகடலுலகம்பன்னா
ளாண்டினிதிருந்துமேனாள் வைகுண்டமடைவாயாக
வீண்டுநீகவலைகொள்ளேலெனுமசரீரிகேட்டு
நீண்டவன்மகிழ்ந்துதாழ்ந்துநிருத்தனைவிடைகொண்டேகி.

(இ-ள்.) மீண்டும் நின் அயோத்தி எய்தி-மீளவு முனது அயோத்தியை யடைந்து, விரி கடல் உலகம் பல் நாள் ஆண்டு இனிது இருந்து - விரிந்த கடல்சூழ்ந்த உலகினைப் பலநாளும் அரசியனடத்தி இடையூறின்றி யிருந்து, மேல் நாள் வைகுண்டம் அடைவாய் ஆக - அதன்மேல் நீ வைகுண்டத்தை யடைவாயாக, ஈண்டு நீ கவலை கொள்ளேல் எனும் அசரீரி கேட்டு-இவ்விடத்தில் நீ கவலைகொள்ளாதே என்றுகூறு மசரீரியைக்கேட்டு, நீண்டவன் மகிழ்ந்து தாழ்ந்து நிருத்தனை விடைகொண்டு ஏகி - இராமமூர்த்தி மகிழ்கூர்ந்துவணங்கிச் சோமசுந்தரக்கடவுளினிடத்து விடைபெற்றுச்சென்று.

பதினோராயிரம் வருடம் என்பார் பன்னாளாண்டு எனக்கூறினர். (௩௫)

மறைப்பொருளுரைத்தோன்சொன்னவண்ணமேயிலங்கையெய்தி
யறத்தினைத்தின்றபாவியாவிதின்றனையான்செல்வத்
திறத்தினையிளவற்கீந்துதிருவிராமேசங்கண்டு
கறைப்படுமிடற்றினானையருச்சித்துக்கருணைவாங்கி.

(இ-ள்.) மறைப்பொருள் உரைத்தோன் சொன்னவண்ணமே இலங்கை எய்தி - வேதத்திற்குப் பொருள்கூறியருளிய சோமசுந்தரக்கடவுள் சொன்னபடியே இலங்கையையடைந்து, அறத்தினை தின்ற பாவி ஆவி தின்று - தருமத்தை வேரோடு களைந்த பாவியாகிய இராவணனுடைய உயிர்குடித்து, அனையான் செல்வம் திறத்தினை இளவற்கு ஈந்து - அவ்விராவணனுடைய செல்வப்பகுதியை அவன்தம்பியாகிய விபீஷணனுக்குக்கொடுத்து, திரு இராமேசம் கண்டு கறை படு மிடற்றினானை அருச்சித்து கருணை வாங்கி-இராமேச்சரமென்னுந்திருப்பதியைக் கந்தமாதனத்தினருகே பிரதிட்டைசெய்து விஷம்பொருந்திய ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானை நிறுவி அருச்சனைசெய்து அவர்திருவருளைப்பெற்று.

இராவண னுயிர்வாங்கிய பிரமகத்தியைப் போக்கக் கந்தமாதனத்தி னெல்லையில் இராமேச்சரம் என்னும் ஓர் திருப்பதியாக்கி ஓர் சிவலிங்கதாபனஞ் செய்து, இராமமூர்த்தி யருச்சித்துப் பேறுபெற்றான் என்பது புராணவரலாறு. "ஏர்பயில் ஸ்ரீ ராமனன்றிராமநாதனும், பேர்பயிலீசனைப்பிரதிட்டையாற்றியே, சீர்பயிலருச்சனை செய்தவெல்லையாங், கார்பயில்சாரல்சூழ்கந்தமாதனம்" எனவருதல் சேதுபுராணத்திற் காண்க. (௩௬)

பற்றியபழியினீங்கியிந்திரன்பழியைத்தீர்த்த
வெற்றிகொள்விடையினானைமீளவும்வந்துபோற்றி
யற்றிரளனையகோதைக்கற்பினுக்கரசியோடுந்
சுற்றியசடையிராமன்முன்னகரடைந்தானிப்பால்.

(இ-ள்.) பற்றிய பழியின் நீங்கி - தன்னைப்பற்றிய பிரமகத்தியினின்றுநீங்கி, இந்திரன் பழியை தீர்த்த வெற்றி கொள் விடையினானை மீளவும் வந்து போற்றி-தே

Koviloor Digital Library

வேந்திரனுடைய பிரமகத்தியையொழித்த வெற்றிமிக்க இடபமூர்த்தியையுடையசோமசுந்தரக்கடவுளை மீளவும் வந்து வணங்கி, அல் திரள் அனைய கோதை கற்பினுக்கு அரசிறும் - இருளின் திரட்சியையொத்த கூந்தலையுடைய கற்புக்கரசியாகிய சீதையோடும், சுற்றிய சடை இராமன் தொல் நகர் அடைந்தான் - வட்டமாகச்சுற்றியசடையையுடைய இராமமூர்த்தி தொன்றுதொட்டுள்ள அயோத்தியை யடைந்தான், இப்பால் - இப்புறம்.

சோமசுந்தரக்கடவு ளருளியவண்ணமே பேறுபெற்றமையால் மீளவும் வந்து போற்றி யென்றார். (௬௭)

கலிநிலைத்துறை.

செங்கோலனந்தகுணமீனவன்றேயங்காப்பக்
கொங்கோடவிழ்தார்க்குலபூடணன்றன்னையின்று
பொங்கோதைஞாலப்பொறைமற்றவன்பாலிறக்கி
யெங்கோனருளாற்சிவமாநகரேறினானே.

(இ-ள்.) செங்கோல் அனந்தகுண மீனவன் - செங்கோலையேந்திய அனந்தகுணபாண்டியன், தேயம் காப்ப கொங்கு ஒடு அவிழ்தார் குலபூடணன் தன்னை ஈன்று - இவ்வுலகைக்காக்க மகரந்தத்தோடு அவிழ்ந்தமாலையையணிந்தகுலபூடணனைப் பெற்று, பொங்கு ஓதை ஞாலம் பொறை அவன் பால் இறக்கி - தான்சுமந்தவிங்குக் கடல்சூழ்ந்த பூபாரத்தை அக்குலபூடணன்இடத்து இறக்கி, எங்கோன் அருளால் சிவமாநகர் ஏறினான் - சோமசுந்தரக்கடவுளின் திருவருளால் சிவபுரத்திற் குடியேறினான்.

அரசன்கண்ணே யிமைகாத்தல்போல உயிர்களைச் சோராது காக்கவேண்டுதலின் ஞாலப்பொறையெனவும், இறக்கியெனவுங் கூறினார். (௬௮)

மாயப்பசுவைவதைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௧௬௬௬.

முப்பதாவது

மெய்க்காட்டிட்டபடலம்.

கொச்சகக்கலிப்பா.

பாவமெனவடிவெடுத்தபடிற்றமணர்பழித்தழல்செய்
தேவவருமறப்பசுவைவேறுயர்த்தோன்விடைநந்திக்
காவலனைவிடுத்தழித்தகதையுரைத்துமட்டாலைச்
சேவகன்மெய்க்காட்டிட்டுவிளையாடுந்திறமுரைப்பாம்.

(இ-ள்.) பாவம் என வடிவு எடுத்த படிறு அமணர் பழி தழல் செய்து ஏவவரும் மறப்பசுவை - பாவமேவடிவெடுத்தாலொத்த வஞ்சனையையுடைய சமணர்க

Koviloor Digital Library



மெய்க்காட்டிட்டதிருவிளையாடல்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ள் அபிசாரயாகஞ்செய்து ஏவவந்த கொலைத்தொழிலையுடைய பசுவை, ஏறு உயர்த்தோன் விடை நந்தி காவலனை விடுத்து அழித்த கதை உரைத்தும் - இடபக்கொடியையுயர்த்திய சோமசுந்தரக்கடவுள் இடபவடிவாயுள்ள அதிகார நந்திநாயனுரை ஏவிஅழித்த திருவிளையாடலைக் கூறினேம், அட்டாலை சேவகன் மெய்காட்டிட்டு விளையாடும் திறம் உரைப்பாம் - அட்டாலைச்சேவகனுய்வந்த சோமசுந்தரக்கடவுள் திருமேனிகாட்டியருளிய திருவிளையாடலைக் கூறுவாம்.

இங்குக்குதிரைவீரராக எழுந்தருளினமையால் அட்டாலைச் சேவகன் என்ருர். அதனை முன்னர்க்காண்க. (க)

வெவ்வியமும்மதயானைவிறற்குலபூடணன்சமண
ரவ்வியவஞ்சனைகடந்தவனந்தகுணச்செழியன்பாற்
செவ்வியசெங்கோல்வாங்கித்திகிரிதிசைசெலவுருட்டி
வவ்வியவெங்கலிதுரந்துமண்காத்துவருகின்ருன்.

(இ-ள்.) வெவ்விய மும்மதம் யானை விறல் குலபூடணன் - கொடிய மும்மதங்களையுடைய யானைச்சேனையின் வெற்றிமிக்க குலபூடணபாண்டியன், சமணர் அவ்வியம் வஞ்சனை கடந்த அனந்தகுணம் செழியன் பால் - சமணர்களதுபொருமையால் விளைந்த வஞ்சத்தைக் கடந்த அனந்தகுண பாண்டியனிடத்து, செவ்விய செங்கோல் வாங்கி திகிரி திசை செல உருட்டி - கோடாத செங்கோலைத் தனது கையில் வாங்கித் தனது ஆணையாகிய சக்கரத்தைத் திசைகள்தோறுஞ் செல்லச் செலுத்தி, வவ்விய வெம் கலி துரந்து மண் காத்து வருகின்ருன் - உலகினைத் தன்வசப்படுத்திய கொடிய கலியினையோட்டி நிலவுலகைக் காத்துவருகின்றவனுயினன்.

பாண்டிநாட்டை யழிக்கப் பசுவையேவியது பொருமையால் விளைந்ததாதலால் காரியத்தைக் காரணமாக உபசரித்து அவ்விய வஞ்சனையெனவும், கோடாத செங்கோலால் கலியொழிதல் சரதமாதலால் வெங்கலிதுரந்து எனவுங்கூறினர். (உ)

சவுந்தரசாமந்தனெனத்தானைகாவலனெருவன்
செவந்தசடைமுடியண்ணலடியவரோசிவமாகக்
கவர்ந்தொழுகியருச்சிக்குங்கடப்பாட்டினெறிநின்ருே
னுவந்தரசற்கிருமைக்குந்துணையாகியொழுகுநாள்.

(இ-ள்.) சவுந்தர சாமந்தன் என தானை காவலன் ஒருவன் - சுந்தரசாமந்தர் என ஒரு சேனுபதி யொருவர், செவந்த சடை முடி அண்ணல் அடியவரோ சிவமாக கவர்ந்து ஒழுகி - செவந்த சடாமுடியை யுடைய சிவபெருமான் அடியவரையே அச்சிவபெருமானுகத் தனது இருதயத்தில் இடைவிடாதுகொண்டு அக்கொள்கைக்கேற்கப் பத்திமைபூண்டு, அருச்சிக்கும் கடப்பாட்டின் நெறி நின்ருேன் - அருச்சித்து வழிபடும் உறுதியின் வழியினின்றவராய், உவந்து அரசற்கு இருமைக்கும் துணை ஆகி ஒழுகுநாள் - விரும்பிக் குலபூடணபாண்டியனுக்கு இகபோகத்துக்கும் பரபோகத்துக்கும் துணைவனுய் நடக்குங்காலையில்.

பாண்டியன் பொருளைப் பலவழியாலும் சிவபெருமான் திருப்பணிக்கும், அவனடியவரை யுபசரித்தற்கும் பயன்படுத்தினமையால் உவந்தரசற்கிருமைக்குந் துணையாகி யொழுகுநாள் எனக்கூறினர். (ங)

Koviloor Digital Library

வல்வேடர்க்கதிபதியாய்வருசேதிராயனென்றும்
வில்வேடனொருவனவன்விறல்வலியான்மேலிட்டுப்
பல்வேறுபரிமான்றேர்ப்பஞ்சவன்மேற்படையெடுத்துச்
செல்வேனென்றுறவலித்தான்றென்னர்பிரானஃதறிந்தான்.

(இ-ள்.) வல் வேடர்க்கு அதிபதியாய் வரு சேதிராயன் என்றும் வில்வேடன் ஒருவன் - வலியவேடர்களுக் கரசனாயுள்ள சேதிராயனென்னும் பெயரையுடைய வில்லையேந்திய வேடனொருவனுள்ளான், அவன் விறல் வலியால் மேலிட்டு - அச்சேதிராயன் வெற்றியின்வலிமையால் இறுமாப்படைந்து, பல் வேறு பரி மான் தேர் பஞ்சவன் மேல் படை எடுத்து செல்வேன் என்று உறவலித்தான் - பலவேறுவகைப்பட்ட குதிரைகள் பூண்டதேரையுடைய குலபூஷணபாண்டியன்மேல் தண்டெடுத்துச் செல்வேன் என்று மிகவும் மனவுரங்கொண்டு எழுந்தான், தென்னர் பிரான் அஃது அறிந்தான் - அப்பாண்டியன் அதனையுணர்ந்து.

பாண்டியன் சேனையின் சிறுமையைநோக்கிப் போர்க்கெழுந்தான் என்பார் படையெடுத்துச்செல்வேனென்றுறவலித்தான் என்றார். அடியில்வரும் செய்யுளில் என்றான் என்ற முற்றொடுமுடிதலின் அறிந்தான் முற்றெச்சம். (௪)

தன்னதுதாணிழனின்றசாமந்தன்றனைப்பார்த்தெம்
பொன்னறைதாழ்திறந்துநிதிமுகந்தளித்துப்புதிதாக
இன்னமுநீசிலசேனையெடுத்தெழுதிக்கொள்கென்றா
னன்னதுகேட்டீசனடிக்கன்புளானென்செய்வான்.

(இ-ள்.) தன்னது தாள் நிழல் நின்ற சாமந்தன் தனைப் பார்த்து - தனது தாணிழலின்கீழ் நின்ற சுந்தரசாமந்தனைப் பார்த்து, எம் பொன் அறை தாழ் திறந்து நிதி முகந்து அளித்து - எமது கருவூலத்தின் தாழைத்திறந்து பொருளை வேண்டியவாறு எடுத்துச் செலவுசெய்து, இன்னமும் புதிதாக நீ சில சேனை எடுத்து எழுதிக்கொள்க என்றான் - இன்னமும் புதிதாக நீ சிலசேனைகளை யீட்டி நமக்கு உரிமையாகப் பதிவுசெய்துகொள்ளக்கடவாய் என்றுகூறினான், அன்னது கேட்டு ஈசன் அடிக்கு அன்புள்ளான் என் செய்வான் - அதனைக்கேட்டுச் சிவபெருமான் திருவடிக்கு அன்பு பூண்ட அச்சுந்தரசாமந்தர் என்னசெய்வார் என்னில்.

தனதுநிழலில் நிற்பவர் ஆதலால் தாணிழனின்றசாமந்தன் என்றார். (௫)

தென்னவர்கோன்பணித்தபணிபின்றள்ளச்சிந்தையிலன்
புன்னவரனருள்வந்துமுன்னிற்பவொல்லைபோய்ப்
பொன்னறைதாழ்திறந்தறத்தாறீட்டியபொற்குவையுட்
டன்னுளத்தவாவனையத்தக்கதிகைக்கவரா.

(இ-ள்.) தென்னவர் கோன் பணித்த பணி பின் தள்ள - குலபூடணபாண்டியன் ஏவிய ஏவல் பின்னேநின்று தள்ளுதலால், சிந்தையில் அன்பு அரன் அருள் வந்து உன்ன முன் நிற்ப - தனதுமனத்திலுள்ள சிவநேயமும் சிவபெருமான் திருவருளும் [illegible] முன்னின்றிழுக்க, ஒல்லை போய் பொன் அறை தாழ் திறந்து அறத்து ஆறு ஈட்டிய பொற்குவையுள் - விரைந்துசென்று கருவூலத்தின்தாழைத்திறந்து தருமத்தின்வழி தேடியதிரவியக்குப்பையுள், தன்னது உ

Koviloor Digital Library

ரத்து அவா அமைய நக்க நிதிகை கவரா - தனது மனத்திலெழுந்த ஆசைக்கமைய அளவிறந்தபொருளைக் கொள்ளைகொண்டு.

அரசனுக்கு உறுதிபயக்குங் காரியங்களிற்சிறிதும் வேசறாதுநின்று அதனை முட்டின்றிமுடிப்போன் ஆதலால்பின் தள்ளவெனவும், அவ்வரசன் பொருள்முற்றும் இரங்குவான் பணிபறங்களிற் செலுத்தினமையால் அரனருள்வந்து முன்னிர்ப்பனவும்,ஆறிலொருகூறு,அரசன் குடிகள்பாற்பெற்றோங்கியசெல்வமாதலால் அறத்தாறிட்டியிடும் பொற்குவையும் எனவுங் கூறினார். (௬)

எண்ணிறந்தகளிப்பினொடுந்திருக்கோயிலிடத்தணைந்து
கண்ணிறைந்தபொன்முளரிக்கயந்தலைநீர்படிந்துதன
துண்ணிறைந்தமெய்யன்பினொளியுருவாய்முளைத்தெழுந்த
பண்ணிறைந்தமறைப்பொருளைப் பணிந்திறைஞ்சியிதுவேண்டும்

(இ-ள்.) எண் இறந்த களிப்பின் ஒடும் திருக்கோயில் இடத்து அணைந்து - எல்லையில்லாத மகிழ்ச்சியோடுந் திருக்கோயிலையடைந்து, கள் நிறைந்த பொன் முளரி கயந்தலை நீர்படிந்து - தேன்நிறைந்த பொற்றாமரைத்தீர்த்தத்தில் நீராடி, தனது உள்நிறைந்த மெய் அன்பின் ஒளி உருவாய் முளைத்து எழுந்த - தன்னது மனத்தில்நிறைந்த மெய்யன்பின் ஒளிவடிவமாய் முளைத்துத்தோன்றிய, பண் நிறைந்த மறை பொருளை பணிந்து இறைஞ்சி இது வேண்டும் - இசைநிறைந்த வேதத்தின்பொருளாயுள்ள சோமசுந்தரக்கடவுளை வணங்கி இதனை வேண்டாநின்றார்.

வாக்குமனாதீத கோசரனாகித் திருவருளையே திருமேனியாகக்கொண்டு சுத்ததத்துவபுவனத்தில்வசிக்கும் இறைவன், தன்னைவழிப்படும் ஆன்மாக்களுக்கு அருளுதற்பொருட்டுப்புறத்தே திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியையே ஆதாரமாகக்கொண்டமர்ந்தருளுதலால் உண்ணிறைந்த மெய்யன்பினொளியுருவாய் முளைத்தெழுந்த என்றார். (௭)

பண்ணியனான்மறைவிரித்தபரமேட்டியெங்கோமா
னெண்ணியகாரியமுடிப்பாயிவையுனக்குமுன்னடிக்கீ
ழண்ணியமெய்யடியவர்க்குமாதக்கவெனவிரந்தப்
புண்ணியமாநிதிமுழுதுமவ்வழியேபுலப்படுப்பான்.

(இ-ள்.) பண் இயல் நால் மறை விரித்த பரமேட்டி - இசைமயமாகிய நான்குவேதத்தின் பொருள்களையும் கன்றுவர்முதலிய முனிவர்களுக்கு விரித்தருளிய பரமேட்டியே, எம் கோமான் எண்ணியகாரியம் முடிப்பாய் - எமது கோமானாகிய குலபூடணபாண்டியன் எண்ணியகாரியங்களை யிடையூறின்றி முடிப்பாய், இவை உனக்கும் உன் அடிக்கீழ் அண்ணிய மெய் அடியவர்க்கும் ஆதக்க என இரந்து - இப்பொருள்கள் உனக்கும் உனது திருவடிக்கீழ்க்கலந்த மெய்யன்பினையுடைய அடியவர்க்கும் ஆகக்கடவனவென்று குறையிரந்து, அப்புண்ணிய மாநிதி முழுதும் அவ்வழியே புலப்படுப்பான் - அந்தப்புண்ணிய வழியால் ஈட்டிய பெரியபொருள் முற்றும் தான்குறையிரந்தவழியே செலுத்துவானாயினான்.

பரமேட்டி உயர்ந்தநிலையிலுள்ளவன். திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியை ஆதாரமாகக் கொண்டமர்ந்தருளுதலுமன்றி அடியார் திருவேடத்தையும் ஆதாரமாகக் கொண்டமர்ந்தருளுதலால் உன்னடிக்கீழண்ணிய மெய்யடியவர்க்கும் ஆதக்

Koviloor Digital Library

கவென்றார் "தாமரைச்செங்கண்ணென்றிரண்டுருவினின்று-மாபரன்பூசைகொண்டு ம ற்றுயிர்க்கருளைவைப்பன்" என்றதனாலுணர்க. (அ)

அண்டமுகடுரிஞ்சிநிமிர்கோபுரமுமாயிரக்கால்
மண்டபமுங்கண்டிகையும்வயிரமணிக்கோளகையுங்
குண்டலமுந்தண்டரளக்குடைநிரையுங்கொடிநிரையுங்
கண்டனன்முன்னவனருளாற்பிறப்பேழுங்கடைகண்டோன்.

(இ-ள்.) அண்டம் முகடு உரிஞ்சி நிமிர் கோபுரமும் - வானின்முகட்டையுரி ஞ்சி நிமிர்ந்தகோபுரத்தையும், ஆயிரக்கால் மண்டபமும்-ஆயிரக்கால் மண்டபத்தை யும், கண்டிகையும் வயிரமணி கோளகையும்-கண்டிகைகளையும் வயிரத்தாற்செய்த வாகுவலயத்தையும், குண்டலமும் தண் தரளம் குடைநிரையும் கொடி நிரையும் - குண்டலங்களையும்தண்ணிய முத்தாலமைந்த குடையின் பந்திகளையும் துவசபந் திகளையும், முன்னவன் அருளால் பிறப்பு ஏழும் கடை கண்டோன் கண்டனன்- சோமசுந்தரக்கடவுளின் திருவருளால் எழுபிறப்பாகிய எழுகடலையுங்கடைகண்ட சு ந்தர சாமந்தர்செய்தமைத்தார்.

இரக்குவான் பணிபறங்கள் பிறவிக் கடலைக்கடப்போர்செயல்கள் ஆதலால் முன்னவனருளாற் பிறப்பேழுங்கடை கண்டோன் கண்டனனென்றார். (௯)

வானாடர்க்கவியுணவின்வகைமுந்நூன்மன்றன்முத
னானாஞ்சிறுவேள்விநான்மறையோர்க்கறுசுவையி
னூறாதபேருண்டிதுறவடைந்தோர்க்கருத்துபலி
தானாதிபலவேறுதருமமலிதழைவித்தான்.

(இ-ள்.) வானாடர்க்கு அவி உணவின் வகை - தேவர்களுக்கு அவியுணவு உ ண்பிக்கும் பெரியயாகங்களையும், முந்நூல் மன்றல் முதல் நானாம் சிறு வேள்வி- உபவீதகல்யாணமுதலிய பலவகைப்பட்ட சிறியவேள்விகளையும், நான் மறையோர் க்கு அறு சுவையின் ஊறாத பேர் உண்டி-அந்தணருக்கு அறுசுவையமைந்தகறியினி ன்றும் நீங்காத பெரியவுணவுகளையும், துறவடைந்தோர்க்கு அருத்து பலி தானம் ஆ தி வேறு பல தருமம்-துறவிகளுக்கு உண்பிக்கும் பிச்சையையும் பூதானமுதலாகப் பலவகைப்பட்ட தருமங்களையும், மலி தழைவித்தான் - மிகவும் பெருகச்செய்துவ ந்தார்.

உபவீத கல்யாண முதலியன வேள்விக்கு அருகராக்குதலின் முந்நூல்மன் றன் முதல் நானாஞ் சிறுவேள்வி என்றார். (௧௦)

எவரேனுமுருத்திரசாதனங்கண்டாலெதிர்வணங்கி
யவரேநம்பிறப்பறுக்கவடிவெடுத்தவரனென்று
கவராதவன்புள்ளங்கசிந்தொழுகவருச்சித்துச்
சுவையாறினமுதருத்தியெஞ்சியவின்சுவைதெரிவான்.

(இ-ள்.) எவரேனும் உருத்திர சாதனம் கண்டால் எதிர் வணங்கி - யாவ ராயினும் சிவசாதனம் தரித்திருப்பின் அவரை யெதிரேவணங்கி, அவரே நம் பிற ப்பு அறுக்க வடிவு எடுத்த அரனென்று - அவரே நம்முடையபிறப்பினை வேரோட றுக்கத் திருவுருவெடுத்தருளிவந்த சிவபெருமானென்று, கவராத அன்பு உள்ளம்

Koviloor Digital Library

கசிந்து ஒழுக அருச்சித்து - பிளவுபடாத அன்பால் மனம்நெக்குவிட்டுருக வழிப ட்டருச்சித்த, சுவை ஆறின் அமுது அருந்தி எஞ்சிய இன்சுவை தெரிவான் - அறு சுவையமைந்த திருவமுது உண்பித்துப் பரிகலத்தில்எஞ்சிய இனியசுவையமைந்த சேடத்தை உண்பாராயினர்.

எக்குலத்தராயிருப்பிறும் என்பார் எவரேனும் எனவும், அவர்கள் விபூதிமு தலிய சிவசாதனங்களுடையராயின் என்பார் உருத்திரசாதனங்கண்டால் எனவும், அவரே சிவபெருமானுர் என்பார் அவரே நம்பிறப்பறுக்கவடிவெடுத்த வரன்எனவு ம், அவரை யருச்சித்தல் சிவபெருமானை யருச்சித்தலை யொக்குமென்பார் கவராத அன்புள்ளங் கசிந்தொழுக வருச்சித்து எனவும், அவரையுண்பித்தல் சிவபெருமாறு க்குண்பித்தலை யொக்கும் என்பார் சுவை யாறி னமுதருந்தியெனவும், கன்மமலத தைக்கெடுத்துப் பாகம்வருவிக்கும் என்பார் எஞ்சிய இன்சுவை தெரிவான்எனவுங் கூறினர். எவரேனும் உருத்திரசாதனங்கண்டால் என்பதற்கு "சங்கநிதிபதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடுவானாளத்தருவரேனும் - மங்குவாரவர்செல்வமதிப்போ மல்லோ மாதேவர்க்கேகாந்தரல்லராகில் - அங்கமெல்லாங்குறைந்தழுகுதொழுநோ யாரா யாவுரித்துத்தின் றுழலும்புலையரேனும்-கங்கைவார்சடைகரந்தார்க்கன்பராகி லவர்கண்டீர்நாம்வணங்குங்கடவுளாரே" எனவரும் ஆளுடையரசுகள் திருப்பாசுர த்தாலும், அவரையருச்சித்தலும் அவரையுண்பித்தலும் சிவபெருமானை யருச்சித்த லையும் உண்பித்தலையும் ஒக்கும் என்றதற்கு "அருத்துகவமலன்றன்னை யகத்துணர் ந்தவரையன்னங் - கருத்திருந்தவர்க்குச்செய்த பூசனைகடவுள்கொள்வன் - ஒருத்த னுக்குபசாரங்க ளுடலிடையுலகர்செய்வர் - பிரித்துடலுயிரைப்பேணும் பெற்றியை யாரேபெற்றார்" எனவரும் சிவதருமோத்தரத்தாலும் உணர்க. (கக)

இன்றைக்காயிரநாளைக்கிருமடங்குவருநாட்கு
மன்றைக்கன்றிருமடங்காவரசனதுபொருளெல்லாங்
கொன்றைச்செஞ்சடையார்க்குமடியார்க்குங்கொடுப்பதனைத்
தென்றற்கோன்செவிமடுத்தான்சேனைக்கோனிதுசெய்வான்.

(இ-ள்.) இன்றைக்கு ஆயிரம் நாளைக்கு இருமடங்கு - இன்றைக்கு ஆயிரம் பொன் நாளைக்கிரண்டாயிரம்பொன், வருநாட்கும் அன்றைக்கு அன்று இருமடங் கு ஆக - இனிவரும் நாள்களுக்கும் அன்றைக்கன்று இவ்விருமடங்காக, அரசனது பொருள் எல்லாம் - பாண்டியனது பொருள்களையெல்லாம், கொன்றை செஞ்ச டை யார்க்கும் அடியார்க்கும் கொடுப்பதனை - கொன்றைமாலையை அணிந்த செவ ந்தசடையையுடைய சிவபெருமானுர்க்கும் அவரது அடியார்க்கும் மாறுதகொடுத் துவருதலை, தென்றல் கோன்செவி மடுத்தான் - தென்றற்காற்றுந்தோன்றும் பொ தியமலைக்கு அரசனுகிய பாண்டியன் கேள்விப்பட்டான், சேனைக்கோன் இது செ ய்வான் - சேனுபதியாகிய சுந்தரசாமந்தர் பின்வருங் காரியங்களைச் செய்யத்தொ டங்கினர்.

ஒவ்வொருநாளும் இவ்விருமடங்காகச் செய்துவந்தாராதலால் அன்றைக்கன் றிருமடங்கா எனவும், தென்றல், தானமாகிய பொதியமலையையுணர்த்தி நிற்றலால் தென்றற்கோன் எனவுங் கூறினர். (கஉ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காவலனவையத்தெய்திக்காரியஞ்செய்வாரோடு
மேவினன்பிறநாட்டுள்ளாவீரர்க்குவெறுக்கைபோக்கிச்

Koviloor Digital Library

சேவகம்பதியவோலைசெலவிடுத்தழைப்பான்போலப்
பாவகஞ்செய்துநிட்டிப்பட்டிமையோலையுய்ப்பான்.

(இ-ள்.) காவலன் அவையத்து எய்தி காரியம் செய்வாரோடு மேவினன் - பாண்டியனுடைய சபையையடைந்து அரசகாரியம் செய்வாரோடு கலந்து, பிற நாடு உள்ள வீரர்க்கு வெறுக்கை போக்கி - பிறதேசங்களிலுள்ள சேனாவீரர்க்குப் பொருளனுப்பி, சேவகம் பதிய ஓலை செலவிடுத்து அழைப்பான் போல - சேவகத்திற் பதிவுசெய்யத் திருமுகம் அனுப்பியழைப்பார்போல, பாவகஞ் செய்து - பாவனைகாட்டி, பட்டிமை ஓலை நிட்டி உய்ப்பான் - வஞ்சனையாகத் திருமுகமெழுதி அனுப்புவாராயினர்.

சிவபெருமானே எடுத்தகாரியத்தை முடிக்கவல்லார் எனத்துணிந்து கவர்ந்தபொருள் முற்றும் அவர் வழிச்செலவிட்டவராதலால் அரசனுக்குத்திண்ணந்தோன்றச்செய்தார் என்பார் பாவகஞ்செய்து நிட்டிப் பட்டிமையோலையுய்ப்பான் என்றார். (க௩)

எழுதுகதெலுங்கர்க்கோலையெழுதுககலிங்கர்க்கோலை
யெழுதுகவிராடர்க்கோலையெழுதுகமராடர்க்கோலை
யெழுதுககொங்கர்க்கோலையெழுதுகவங்கர்க்கோலை
யெழுதுகதுருக்கர்க்கோலையென்றுபொய்யோலைவிட்டான்.

(இ-ள்.) தெலுங்கர்க்கு ஓலை எழுதுக - தெலுங்குநாட்டிலுள்ள சேனாவீரர்க்கு ஓலையெழுதக்கடவீர், கலிங்கர்க்கு ஓலை எழுதுக - கலிங்கநாட்டிலுள்ள சேனாவீரர்க்கு ஓலையெழுதக்கடவீர், விராடர்க்கு ஓலையெழுதுக - விராடதேசத்துச் சேனாவீரர்க்கு ஓலையெழுதக்கடவீர், மராடர்க்கு ஓலையெழுதுக-மராடநாட்டிலுள்ள சேனாவீரர்க்கு ஓலையெழுதக்கடவீர், கொங்கர்க்கு ஓலையெழுதுக - கொங்குநாட்டிலுள்ள சேனாவீரர்க்கு ஓலையெழுதக்கடவீர், அங்கர்க்குஓலை துருக்கர்க்கு ஓலை எழுதுக என்று - அங்கநாட்டிலுள்ள வீரர்க்கும் துருக்கநாட்டிலுள்ள வீரர்க்கும் ஓலையெழுதக்கடவீர் என்று, பொய் ஓலை விட்டான் - பொய்த்திருமுகம் அனுப்பினார். (கச)

எங்குமிப்படியேயோலைசெலவிடுத்திருப்பவாறு
திங்களினளவுமந்தச்சேவகர்வரவுகாணா
தங்கதிர்வேலான்சேனைக்கரசனையழைத்துநாளை
வெங்கதிர்படுமுன்சேனையாவையும்விளித்தியென்றான்.

(இ-ள்.) எங்கும் இப்படியே ஓலை செல விடுத்து இருப்ப - எவ்விடத்தும் இவ்வாறே திருமுகம்அனுப்பி வாளாவிருக்க, ஆறு திங்களின் அளவும் அந்த சேவகர் வரவு காணாது - ஆறுமாதம்வரையும் அப்பத்திரயத்துச் சேனாவீரர்கள் வருகையைக் காணாமல், அம் கதிர் வேலான் சேனைக்கு அரசனை அழைத்து - அழகிய ஒளிவாய்ந்த வேலையேந்தியபாண்டியன் சேனாபதியாகிய சுந்தர சாமந்தனை அழைத்து, நாளை வெங்கதிர் படு முன் சேனை யாவையும் விளித்தி என்றான் - நாளைத்தினம் சூரியன் அத்தமித்தற்குமுன் சேனாவீரரனைவரையும் அழைப்பாயென்று கட்டளையிட்டான்.

காலந்தாழ்த்தலைத்தான் பொய்யுற்றது திண்ணம் எனத்தேர்ந்தானாதலால் காலைவெங்கதிர்படுமுன் சேனையாவையும் விளித்தி யென்றான் என்றார். (கரு)

Koviloor Digital Library

என்றமன்னவனுக்கேற்கச்சாமந்தனிசைந்துவெள்ளி
மன்றவனடிக்கீழ்வீழ்ந்துவள்ளலேயரசனீந்த
குன்றுறழ்நிதியமெல்லாங்கொண்டெனைப்பணிகொண்டாயே
வன்றிறற்சேனையீட்டும்வண்ணம்யாதென்னநின்றான்.

(இ-ள்.) என்ற மன்னவனுக்கு ஏற்க - என்றுகூறிய குலபூடணபாண்டியனுக்குப் பொருந்த, சாமந்தன் இசைந்து - சுந்தரசாமந்தர் உடன்பட்டு, வெள்ளி மன்றவன் அடிக்கீழ் வீழ்ந்து-வெள்ளியம்பலத்தில் நடித்தருளும் இறைவனது திருவடிக்கீழ்வீழ்ந்து, வள்ளலே அரசன் ஈந்த குன்று உறழ் நிதியம் எல்லாம் கொண்டு என்னை பணிகொண்டாயே-எனது வள்ளலே சேனையீட்டுதற்கு அவ்வரசன் கொடுத்த மலையை ஒத்த பொருளையெல்லாம் கொள்ளைகொண்டு என்னைக் குற்றேவலனாகக்கொண்டாயே, வன்திறல் சேனை ஈட்டும் வண்ணம் யாது என்ன நின்றான் - வலியசேனையைச்சேகரிக்கும் வகையாதென்று குறையிரந்துநின்றார்.

எனதுடல்பொருளாவிமுற்றும் நின்னவேயென்பார் நிதியமெல்லாங்கொண்டெனைப்பணிகொண்டாயே எனவும், அதையீட்டுதற்கு ஓர் இடையூறுவரின் அது நினதேயென்பார் சேனையீட்டும்வண்ணம் யாதென்னநின்றான் எனவுங்கூறினார். (௧௬)

அடியவர்குறைவுதீர்த்தாண்டருள்வதேவிரதம்பூண்ட
கொடியணிமாடக்கூடற்கோமகன்காமற்காய்ந்த
பொடியணிபுராணப்புத்தேட்புண்ணியனருளினாலே
யிடியதிர்விசும்புகீறியெழுந்ததோர்தெய்வவாக்கு.

(இ-ள்.) அடியவர் குறைவுதீர்த்து ஆண்டு அருள்வதே விரதம்பூண்ட கொடி அணி மாடம் கூடல் கோமகன் - தனது அடியவர்குறைவைத்தவிர்த்து அடிமைகொண்டருள்செய்தலையே விரதமாகக்கொண்டருளிய துவசம்கட்டிய மாடங்கள் நெருங்கிய மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளும், காமன் காய்ந்தபொடி அணி புராணம் புத்தேள் புண்ணியன் அருளினால்-மன்மதனை நீறாக்கிய விபூதியையணிந்த பழம்பொருளாகிய தெய்வத்தன்மைபொருந்திய தருமக்கடலாகிய இறைவனுடைய திருவருளினால், ஓர் தெய்வவாக்கு—ஒரு அசரீரி, இடி அதிர் விசும்பு கீறி எழுந்தது - இடிமுழங்கும் ஆகாயத்தின் வயிறுகிழித்து எழுந்தது.

பத்தவற்சலனாதலால் அடியவர்குறைவுதீர்த்தாண்டருள்வதே விரதம்பூண்ட என்றார். (௧௭)

சூழ்ந்தெழுசேனையோடுந்தோற்றுதுநாளைநீயும்
வீழ்ந்தரசவையத்தெய்திமேவுதியென்னவிண்ணம்
போழ்ந்தெழுமாற்றங்கேட்டுப்பொருநரேறுவகைவெள்ளத்
தாழ்ந்தனன்முந்நீர்வெள்ளத்தலர்கதிரவனுமாழ்ந்தான்.

(இ-ள்.) சூழ்ந்து எழு சேனையோடும் நாளைதோற்றுதும் - நம்மைச்சூழ்ந்தெழுந்த சேனாவீரர்களோடு நாளைக்குவருகின்றோம், நீயும் அரசு அவையத்து வீழ்ந்து எய்தி மேவுதி என்ன - நீயும் அரசனுடைய சபையைவிரும்பி அடைய நாளைக்குவருவாயென்று, விண்ணம் போழ்ந்து எழும் மாற்றம் கேட்டு-ஆகாயத்தின் வயிற்றைக்கிழித்து எழுந்த அசரீரியைக்கேட்டு, பொருநர் ஏறு உவகைவெள்ளத்து ஆழ்ந்தனன் - போர்வீரராகிய யானைகளுக்கு ஆண்சிங்கம்போன்ற சுந்தர சாமந்தர் சந்

தோஷக்கடலில் அழுந்தினர், மூன்றாம் வெள்ளத்து அலர்கதிரவனும் ஆழ்ந்தான்-கடற்பெருக்கில் பரந்தகிரணத்தை உடைய சூரியனும் அழுந்தினன் (அத்தமித்தான்) என்றபடி.

எய்தி செயவெனெச்சத்திரிபு. (க௰)

மீனவன்கானமேருவில்லிதன்றமரைவன்கண்
மானவேன்மறவராக்கிவாம்பரிவீரனாகத்
தானுமோர்கூத்துக்கோலஞ்சமைந்துவந்தாடவிட்ட
நீனிறவெழினிபோலக்காரிருணிவந்ததெங்கும்.

(இ-ள்.) மீனவன் கான - கயற்கொடியையுடைய குலபூடணபாண்டியன்காண, மேரு வில்லி தன் தமரை வன்கண் மானம் வேல் மறவர் ஆக்கி - மகாமேருவை வில்லாக உடைய சோமசுந்தரக்கடவுள் தனது பிரமதகணங்களை அஞ்சாமையையுடைய மானமிக்கவேலையேந்திய வீரராக்கி, தானும் ஓர்வாம்பரிவீரன் ஆக-தானும் ஒருதாவுங்குதிரைச்சேவகனாக, கூத்துக்கோலம் சமைந்து வந்து ஆட இட்ட-திருக்கூத்துசெய்யும் திருக்கோலம்பூண்டுவந்து ஆடப்போட்ட, நீல் நிறம் எழினி போல எங்கும் கார் இருள் நிவந்தது - நீலநிறத்தையுடைய கரந்துவரல் எழினியைப்போல எவ்விடத்தும் கரிய இருள் நிரம்பியது.

பிரமன்முதலியோர் தலைப்பெய்தசெய்யும் போர்முகத்தும் அஞ்சாவீரர் என்பார் வன்கண்மறவர் எனவும், சிறந்தவீரர் என்பார் உடையவர்தொழிலை யுடைமைமேலேற்றி மானவேல் எனவும், அடியர்க்கெளியர் என்பார் வாம்பரிவீரனாகத் தானும் ஓர் கூத்துக்கோலஞ்சமைந்து எனவும், நன்மாக்களுய்தற்பொருட்டு என்பார் உவந்தாட எனவும் கூறினர். எழினி மூன்றனுள் கரந்துவரலெழினி என்றது கோலமறைத்து வருமிடத்திடும் திரைச்சீலை. எழினி மூன்று என்றது ஒருமுகவெழினி, பொருமுக எழினி, கரந்துவரலெழினியை. எழினி திரைச்சீலை. ` சூரியனுதயாத்தமனங்கூறுதல் பெருங்காப்பியத்திலக்கணமாதலால் இதனுற் சூரியனத்தமனங்கூறப்பட்டது. கவி இருள் பரவியதைச் சிவபெருமானார் தாமோர் குதிரைவீரராகத் திருக்கோலஞ்சமைந்து திருவிளையாடல்செய்ய முன்பிட்ட நீலத்திரைச்சீலையாகப்பெயர்ச்சியில் பொருள்மேலேற்றிக்கூறியமையால் தற்குறிப்பேற்றவணி. (கக)

புண்ணியமனையிற்போகிப்புலர்வதெப்போழ்தென்றெண்ணி
யண்ணல்சாமந்தன்றுஞ்சானடிக்கடியெழுந்துவானத்
தெண்ணிறைமீனநோக்கிநாழிகையெண்ணியெண்ணிக்
கண்ணுதலெழுச்சிகாண்பானலந்தனன்கங்குலெல்லாம்.

(இ-ள்.) புண்ணிய மனையில்போகி - சிவபுண்ணிய நிலைபெற்ற தன்து இல்லில் சென்று, எப்பொழுது புலர்வது என்று எண்ணி - எப்பொழுது விடியும் என்று கருதி, அண்ணல் சாமந்தன் துஞ்சான் அடிக்கடி எழுந்து - பெருமையிற்சிறந்த சுந்தரசாமந்தன் துயில்கூராமல் அடிக்கடி நித்திரையில் நின்றுமெழுந்து, வானத்து எண் நிறை மீனம் நோக்கி நாழிகை எண்ணி எண்ணி-வானத்திற்பூத்த அளவில்லாத நட்சத்திரங்களைப்பார்த்து நிகழும் நாழிகையை வரையறுத்து, கண்ணுதல் எழுச்சி காண்பான் கங்குல் எல்லாம் அலந்தனன் - சிவபெருமான் எழுந்தருளும் திருக்கோலத்தைக்கண்டு களிகூர இராமுற்றும் அலைவுசெய்தனன்.

என்றுஞ் சிவனடியார்களை உபசரித்துப் பூசித்துவருதற்கோர் தானமாயிருத்தலின் புண்ணியமனையெனவும், அரசன்கடமையை முற்றச்செலுத்துங் கருத்தின

Koviloor Digital Library

ரும் சிவபெருமான் திருவருள்வடிவைக்கண்டு தரிசிக்கும் பேரவாவுடையவரும் ஆதலில் கந்துலெல்லாம் அளந்தனன் எனவுங்கூறினர். (உ0)

தெருட்டருமறைகடேருச்சிவபரஞ்சுட்ரோனன்பன்
பொருட்டொருவடிவங்கொண்டுபுரவிமேற்கொண்டுபோது
மருட்படையெழுச்சிகாண்பான்போலவார்கலியின்மூழ்கி
யிருட்டுகள்கழுவித்தூயவிரவிவந்துதயஞ்செய்தான்.

(இ-ள்.) தெருள் தரும் மறைகள் தேருச் சிவபரஞ்சுட்ரோன் - தெளிவுமிக்கவேதங்கள் தெளிந்துணராத சிவபரஞ்சுடராகிய சோமசுந்தரக்கடவுள், அன்பன் பொருட்டு ஒருவடிவங்கொண்டு புரவிமேல்கொண்டுபோதும் அருள்படை எழுச்சி காண்பான்போல - தனதன்பராகிய சுந்தரசாமந்தர்பொருட்டு ஒருதிருவுருவங்கொண்டு குதிரைமேல் எழுந்துவரும் திருவருட்படை எழுச்சியைக்காண்பவனைப்போல, ஆர்கலியில் மூழ்கி - கடலில்மூழ்கி, இருள் துகள் கழுவி தூய இரவிவந்து உதயம் செய்தான் - இருளாகிய அழுக்கினைப்போக்கிப் புனிதமாகியசூரியன் கீழைக்கடலில் வந்து உதயஞ்செய்தான்.

ஆன்மாக்கள் விதிவிலக்குகளை யையந்திரிபறவுணர்ந்துய்ய அறியாமையைப் போக்குதலால் தெருட்டருமறைகள் எனவும், இவை பாசஞானமாகிய சொற்பிரபஞ்சம் ஆதலால் தேரு எனவும், இறைவனைத்தரிசிப்போர்க்கு அகத்தூய்மையுமின்றிப் புறத்தூய்மையும் வேண்டும் ஆதலால் ஆர்கலியின்மூழ்கி யிருட்டுகள் கழுவியெனவுங்கூறினர். இதுவும் பெருங்காப்பியத்தின் ஒருறுப்பு. இதுபெயர்பொருட்டற்குறிப்பேற்றவணி.

பொருநரேறனையானேர்ந்துபோந்துநான்மாடக்கூடற்
கருணைநாயகனைத்தாழ்ந்துகைதொழுதிரந்துவேண்டிப்
பரவிமீண்டொளிவெண்டிங்கட்பன்மணிக்குடைக்கிழேகிக்
குருமதிமருமான்கோயில்குறுகுவான்குறுகுமெல்லை.

(இ-ள்.) பொருநர் ஏறு அனையான் நேர்ந்து போந்து-வீரர்களுள் ஆண்சிங்கம்போன்ற சுந்தரசாமந்தர் மனமிசைந்துசென்று, நான்மாடக்கூடல் கருணைநாயகனை தாழ்ந்து கைதொழுது இரந்துவேண்டி பரவிமீண்டு - நான்மாடக்கூடலாகிய மதுரையில் எழுந்தருளிய கிருபாமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுளைப்பணிந்து கைகூப்பிக் குறைகூறிவேண்டித் துதித்துத்திரும்பி, ஒளிவெண் திங்கள் பல்மணி குடைக்கீழ் ஏகி - விளங்கும் வெள்ளியசந்திரனை ஒத்த அளவில்லாத விலையுடைய முத்துகளை வரிசைபட விளிம்பிற்கோத்த தவளவட்டக்குடை நிழற்கிழ்ச்சென்று, குருமதிமருமான்கோயில் குறுகுவான் - சிறந்தங்கிய சந்திரன்மரபிற்றோன்றிய பாண்டியனது கோயிலுக்குச்செல்லுவானாயினன், குறுகும் எல்லை - அவ்வாறுசெல்லுங்காலையில்.

சிவபெருமான் திருவாக்கால் மனந்தெளிந்தவராதலால் நேர்ந்து எனவும், தமக்குரியவரிசையோடுஞ் சென்றனராதலால் வெண்டிங்கட் பன்மணிக்குடைக்கீழேகியெனவுங் கூறினர். (உஉ)

கனைமதியெயிற்றுச்சங்குகன்னன்முன்றனவென்றிப்
பிரமதகணமுங்குண்டட்பெருவயிற்றொருவனுறி

Koviloor Digital Library

வரைபுரைகுறுந்தாட்பூதமறவருங்குழுமிவிக்கு
குரைகழல்வலியநோன்றாட்கோளுடைவயவராகி.

(இ-ள்.) கரைமதி எயிறு சங்கு கன்னன்முன் ஆனவென்றி பிரமதகணமும்- பலருக்கூறும் அர்த்தசந்திரனையொத்த வக்கிரதந்தங்களையுடைய சங்குகன்னன் முதலாகிய வெற்றியையுடைய பரிசனமாயுள்ள சிவகணங்களும், குண்டம் பெருவயிறு ஒருவனை ஆதி - ஆழ்ந்தபெரியவயிற்றினையுடைய குண்டோதரன்முதலாகிய வரை புரை குறும் தாள் பூத மறவரும் குழுமி - மலையையொத்த சிறியகால்களையுடைய பூதவீரர்களும் தம்முள்நெருங்கி, விக்கு குரைகழல் வலிய நோன் தாள் கோள் உடைவயவராகி-கட்டிய ஒலிக்கும் வீரகண்டையையுடைய வலியகாலையும் வன்மையையுமுடைய வீரர்களாகி. (உ௩)

நெட்டிலைவடிவாள்குந்தந்தோமரநேமிநெய்த்தோ
ரொட்டியகணிச்சிசாபமுடம்பிடிமுதலாவெண்ணப்
பட்டவெம்படைமூவாறும்பரித்தசெங்கையர்காலிற்
கட்டியகழலர்காலிற்கடியராய்ப்புறம்புகாப்ப.

(இ-ள்.) நெடு இலை வடிவாள் குந்தம் தோமரம் நேமி - நெடிய தகட்டுவடிவாகிய வடித்தவாளும் பெருஞ்சவளமும் எறியாயுதமும் சக்கரமும், நெய்த்தோர் ஒட்டிய கணிச்சி சாபம் உடம்பிடி முதலாக - உதிரம்பொருந்திய மழுவும் வில்லும் வேலும் முதலாக, எண்ணப்பட்ட வெம்படை மூ ஆறும் பரித்தசெங்கையர்-வரையறுத்தெண்ணப்பட்ட கொடிய பதினெட்டாயுதங்களையும் ஏந்திய செவந்தகையையுடையவரும், காலில்கட்டிய கழலர் - காலிற்கட்டிய வீரகண்டையையுடையவரும், காலில் கடியர் ஆய் புறம்பு காப்ப - காற்றினும் விரைந்துசெல்லும் நடையையுடையவருமாய்ப் புறம்பிற்காத்துச் சூழ்ந்துவரவும். (உ௪)

வார்கெழுகழற்கானந்திமாகாளன்பிருங்கிவென்றித்
தார்கெழுநிகும்பன்கும்போதரன்முதற்றலைவர்யாரும்
போர்கெழுகவசந்தொட்டுப்புண்டரநுதலிற்றீட்டிக்
கூர்கெழுவடிவாளேந்திக்குதிரைச்சேவகராய்ச்சூழ.

(இ-ள்.) வார்கெழு கழல் கால் நந்தி மாகாளன் பிருங்கி வென்றி தார்கெழு நிகும்பன் கும்போதரன் முதல் தலைவர் யாரும் - வாரிற்கோத்த வீரகண்டைகட்டிய காலையுடைய நந்தியும் மகாகாளனும் பிருங்கியும் வெற்றிமாலையையணிந்த நிகும்பனும் கும்போதரனும் முதலிய சிவகணத்தலைவரெல்லாம், போர்கெழு கவசம் தொட்டு - போரிற்குரிய கவசம்பூண்டு, புண்டரம் நுதலில் தீட்டி - திரிபுண்டரத்தை நெற்றியிலணிந்து, கூர்கெழு வடிவாள் ஏந்தி - கூர்மைமிக்க வடித்தவாளினையேந்தி, குதிரைச்சேவகராய் சூழ - குதிரைவீரராய்ச்சூழ்ந்துவரவும். (உ௫)

கற்றைச்சாமரைகள்பிச்சங்கவிகைபூங்கொடிக்காடெங்கு
முற்றக்காரொலியுகாணைத்தூரியமுழுதமேங்கக்
கொற்றப்போர்விடையைத்தாளேறுரங்குளப்பரியாமேற்கொண்
டொற்றைச்சேவகராய்மாறியாடியவொருவர்வந்தார்.

(இ-ள்.) கற்றை சாமரைகள் பிச்சம் கவிகை பூம் கொடிக்காடு எங்கும் முற்ற - நெருங்கிய சாமரைகளும் பீலிக்குடைகளும் தவளக்குடைகளும் பொலிவையுடைய துவசக்காடுகளும் எங்கும் சூழ்ந்துவரவும், கார் ஒலியும் காண தூரியம் முழு

Koviloor Digital Library

தும் எங்க - மேகத்தின் முழக்கமும் நாண வாச்சியமுற்றும் ஒலிக்கவும், கொற்றம் போர்விடையை தானே - வெற்றியையுடைய போர்க்குரிய இடபவூர்தியையே, குரங்கு உளைபரியா மேற்கொண்டு - வளைந்த புறமயிரையுடைய குதிரையாக ஆரோகணித்தருளி, ஒற்றைச்சேவகராய் மாறியாடிய ஒருவர்வந்தார் - ஒப்பில்லாதவீரராய்க் கால்மாறியாடிய பெருமானார்வந்தருளினர்.

தமக்குத்தருமமே யூர்தியாதலால் விடையைத்தானே குரங்குளைப்பரியா மேற்கொண்டு எனவும், ஒப்புயர்விலர்தோராதலால் ஒற்றைச்சேவகராய் எனவுங் கூறினர். (உசு)

பல்லியமொலிக்குமார்ப்பும்பாய்பரிகலிக்குமார்ப்புஞ்
செல்லொலிமழுங்கமள்ளர்தெழித்திடுமார்ப்புமொன்றிக்
கல்லெனுஞ்சும்மைத்தாகிக்கலந்தெழுசேனைமேனாண்
மல்லன்மாநகர்மேற்சீறிவருகடல்போன்றதன்றே.

(இ-ள்.) பல் இயம் ஒலிக்கும் ஆர்ப்பும் - பலவாச்சியங்கள் ஒலிக்குங்கோஷமும், பாய்பரி கலிக்கும் ஆர்ப்பும் - பாய்ந்துசெல்லுங்குதிரைகள் கோஷிக்குமுழக்கமும், செல் ஒலி மழுங்க மள்ளர் தெழித்திடும் ஆர்ப்பும் ஒன்றி - மேகத்தின் ஒலிமழுங்க வீரர்பேரொலிசெய்யும் அரவமுந் தம்முட்பொருந்தி, கல்லெனும் சும்மைத்து ஆகி கலந்து எழுசேனை - கல்லெனும் ஆரவாரத்தையுடையதாகிக் கலந்தெழுந்தசேனைவருகை, மேல் நாள் மல்லல் மாநகர்மேல் சீறி வருகடல் போன்றது - (வருணனேவ) முன்னாள் வளப்பந்தங்கிய பெரியமதுரைநகர்மேற்கோபித்து வாராநின்ற கடலையொத்தது.

சேனைபெருக்கினும் விரைவினுஞ் சிறந்ததென்பார் மல்லன் மாநகர்மேற்சீறி வருகடல்போன்ற தன்றேயென்றார். (உஎ)

சேனையின்வரவுநோக்கித்திருமகன்றிருமுன்னேகுந்
தானையர்தலைவன்றென்னன்றாணிழல்குறுகிக்கூற
மீனவனுவகைபூத்தவெயின்மணிக்கடையிற்போந்தங்
கானமண்டபத்திற்செம்பொனரியணைமீதுவைகி.

(இ-ள்.) சேனையின் வரவுநோக்கி திருமகன் திருமுன் ஏகும் தானையர் தலைவன் - சேனையின்வருகையை நோக்கிக் குலபூடணன் திருமுன்சென்ற சேனைத்தலைவர்கட்குத் தலைவராகிய சுந்தரசாமந்தர், தென்னன் தாள் நிழல் குறுகி கூற-அப்பாண்டியனது பாதநிழலையடைந்து சேனையின்வரவை எடுத்துக்கூற, மீனவன் உவகை பூத்து வெயில்மணி கடையில் போந்து - பாண்டியன் மகிழ்கூர்ந்து விளக்கமமைந்த இரத்தினமழுத்திய கடைவாயிலில்வந்து, அங்கு ஆன மண்டபத்தில் செம்பொன் அரி அணைமீது வைகி - அவ்விடத்தமைந்த மண்டபத்தில் செவந்தபொன்னாலாகிய சிம்மாசனத்தின்மேல்தங்கி.

மணி பொன்முதலிய பெருஞ்செல்வத்தினனாதலால் அரசனைத் திருமகன் என்றார். (உஅ)

தெவ்வடுமகிழ்ச்சிபொங்கச்சேனையின்செல்வநோக்கி
யெவ்வெத்தேயத்திலுள்ளாரிவரெனவெதிரேநின்று
கௌவையின்மனச்சாமந்தன்கையிற்பொற்பிரம்புநீட்டி
யவ்வவர்கொருதியெல்லாமணியணிநிறுவிக்கூறும்.

Koviloor Digital Library

(இ-ள்.) தெவ் அடு மகிழ்ச்சிபொங்க சேனையின் செல்வம் நோக்கி - சேதி ரயைநுங்ப படைவலைக்கோல்லும் மகிழ்ச்சிமிக்கூரச் சேனையின்பெருக்கத்தைப்பார்த்து, இவர் எப்வெத்தேயத்தில் உள்ளார் என - இவர்கள் எந்தெந்தத்தேசத்திலுள்ள சேனைவீரர்களென்றுவினவ, கௌவை இல் மனச்சாமந்தன் எதிரேநின்று-வருத்தமில்லாத மனத்தையுடைய சுந்தரசாமந்தர் பாண்டியன் எதிரேநின்று, கையில் பொன் பிரம்பு நீட்டி அவ்வவர் தொகுதி எல்லாம் அணி அணி நிறுவிகூறும் - கையிலேந்திய பொற்கட்டமைந்த பிரம்பினைநீட்டி அச்சேனைவீரர்கள் கூட்டங்களை எல்லாம் வரிசை வரிசையாக நிறுத்திக்கூறுகின்றார்.

அரசனுக்குச் சேனையையென்றிறப்போம் என்னும் கவலையொழிந்தனராதலால் கௌவையின் மனச்சாமந்தன் என்றார். (உக)

கலிவிருத்தம்.

கொங்கரிவரையகுருநாடரிவரைய
கங்கரிவரையகருநாடரிவரைய
வங்கரிவரையவிவராரியர்களைய
வங்கரிவரையவிவர்மாளவர்களைய.

(இ-ள்.) ஐய இவர் கொங்கர் - ஐயனே இவர்கள் கொங்குநாட்டினர், ஐய இவர் குருநாடர் - ஐயனே இவர்கள் குருநாட்டினர், ஐய இவர் கங்கர்-ஐயனே இவர்கள் கங்கர்கள், ஐய இவர் கருநாடர் - ஐயனே இவர்கள் கருநாடர், ஐய இவர் அங்கர் - ஐயனே இவர்கள் அங்கநாட்டினர், ஐய இவர் ஆரியர்கள் - ஐயனே இவர்கள் ஆரியநாட்டினர், ஐய இவர் வங்கர் - ஐயனே இவர்கள் வங்கநாட்டினர், ஐய இவர் மாளவர்கள் - ஐயனே இவர்கள் மாளவநாட்டினர்கள். (நடO)

குலிங்கரிவரையவிவர்கொங்கணர்களைய
தெலுங்கரிவரையவிவர்சிங்களர்களைய
கலிங்கரிவரையகௌடத்தரிவரைய
வுலங்கெழுபுயத்திவர்களொட்டியர்களைய.

(இ-ள்.) ஐய இவர் குலிங்கர் - ஐயனே இவர்கள் குலிங்கர்கள், ஐய இவர் கொங்கணர்கள் - ஐயனே இவர்கள் கொங்கணநாட்டினர்கள், ஐய இவர் தெலுங்கர் - ஐயனே இவர்கள் தெலுங்கநாட்டினர்கள், ஐய இவர் சிங்களர்கள் - ஐயனே இவர்கள் சிங்களநாட்டினர்கள், ஐய இவர் கலிங்கர் - ஐயனே இவர்கள் கலிங்கநாட்டினர்கள், ஐய இவர் கௌடத்தர் - ஐயனே இவர்கள் கௌடநாட்டினர்கள், ஐய உலம் கெழுபுயத்த இவர்கள் ஒட்டியர்கள் - ஐயனே திரண்டகல்லையொத்த புயத்தையுடைய இவர்கள் ஒட்டியநாட்டினர்கள். (நக)

கொல்லரிவரையவிவர்கூச்சரர்களைய
பல்லரிவரையவிவர்பப்பரர்களைய
வில்லரிவரையவிவர்விதேகரிவரைய
கல்லொலிசெழும்புளிந்கடாரரிவரைய.

(இ-ள்.) ஐய இவர் கொல்லர் - ஐயனே இவர்கள் கொல்லர்கள், ஐய இவர் கூச்சரர்கள் - ஐயனே இவர்கள் கூச்சரர்கள், ஐய இவர் பல்லர்-ஐயனே இவர்கள் பல்லர்கள், ஐய இவர் பப்பரர்கள் - ஐயனே இவர்கள் பப்பரநாட்டினர்கள், ஐய

Koviloor Digital Library

இவர் வில்லர் - ஐயனே இவர்கள் வில்லர்கள், ஐய இவர் இவர் விதேகர் - ஐயனே இவர்கள் பரந்த விதேகநாட்டினர்கள், ஐய இவர் கல் ஒலி கழல் புனை கடாரர் - ஐயனே இவர்கள் கல்லென்று மொலியையுடைய வீரகண்டையை யணிந்த கடாரர்கள். (௯௨)

கேகயர்களாலிவர்கள்கேழ்கிளர்மணிப்பூண்
மாகதர்களாலிவர்மராடரிவர்காஞ்சி
நாகரிகராலிவர்கணம்முடையநாட்டோ
ராகுமிவர்தாமெனமெய்க்காட்டியறிவித்தான்.

(இ-ள்.) இவர்கள் கேகயர்கள் - இவர்கள் கேகயநாட்டினர்கள், இவர் கேழ்கிளர் மணி பூண் மாகதர்கள் - இவர்கள் நிறங்கொண்டுவிளங்கும் இரத்தினமமுத்திய ஆபரணத்தையணிந்த மாகதநாட்டினர்கள், இவர் மராடர் - இவர்கள் மராடநாட்டினர்கள், இவர்கள் காஞ்சி நாகரிகர் - இவர்கள் காஞ்சி நாட்டிலுள்ள நாகரிகத்தையுடையவர்கள், இவர்தாம் நம்முடைய நாட்டோர் ஆகும் என - இவர்கள் தாம் நம்முடைய நாட்டினராவரென்று, மெய்க் காட்டி அறிவித்தான் - அவரவர்களுடைய உருவத்தைக்காட்டி அறிவித்தான். (௯௩)

இத்தகையசேட்புலனுளாரையிவனுய்த்த
வித்தகமையென்னெனவினவியருள்செய்யே
லத்தநினரும்பொருளனைத்தும்வரையாதே
யுய்த்தலினடைந்தனர்களாலெனவுரைத்தான்.

(இ-ள்.) இத்தகைய சேண் புலன் உள்ளாரை - இத்தன்மையுள்ள தூரநாட்டிலுள்ளவர்களை, இவன் உய்த்த வித்தகமை என் என வினவி அருள் செய்யேல் - இவ்விடத்து வருவித்த சதுரப்பாட்டை யாதென்று வினவியருளவேண்டாம், அத்த நின் அரும் பொருள் அனைத்தும் வரையாதே உய்த்தலின் அடைந்தனர்கள் என உரைத்தான் - எமதுபெருமானே உனது பெறுதற்கரிய பொருள்முற்றும் வரை அறை செய்யாது செலவிட்டதினால் வந்தார்கள் என்று கூறினான்.

அரசன்பணிக்கிழ்த் தாம் அடங்கிநிற்றலும், சேனையிட்டுதற்கு அவன் பொருண்முற்றும் வரையாதகொண்டமையுந் தோன்ற இவனுய்த்தவித்தகமையென்னெனவினவியருள்செய்யேல் என்றார். (௯௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அந்நெடுஞ்சேனைதன்னுட்சேணிடையடன்மாவூர்ந்து
பின்றுறநிற்குமொற்றைச்சேவகபிரானைநோக்கி
மன்னவனிவர்யாரென்னச்சாமந்தன்வணங்கியைய
வின்னவர்சேனைவெள்ளத்தியாரையென்றறிவதென்றான்.

(இ-ள்.) அ நெடும் சேனை தன்னுள் சேண் இடை - அந்த நெடிய சேனையுள் தூரத்தில், அடல் மா ஊர்ந்து பின் உற நிற்கும் ஒற்றைச் சேவகப் பிரானை மன்னவன் நோக்கி - வெற்றியையுடைய குதிரையைச்செலுத்திப் பின்னே பொருந்தி நிற்கும் ஒப்பில்லாத வீரத்தையுடைய சோமசுந்தரக்கடவுளைக் குலபூடணபாண்டியன் பார்த்து, இவர் யார் என்ன - இவர் யாரென்று வினவ, சாமந்தன் வணங்கி - சுந்த

Koviloor Digital Library

ரசாமந்தர்வணங்கி, ஐய இன்னவர் சேனைவெள்ளத்து யாவர் என்று அறிவது என்றான் - ஐயனே இவர் இந்தச்சேனைப்பெருக்கில் யாரென்று நான் தெரிந்து கூறுவது என்று கூறினர்.

சிவபெருமான் அளத்தற்கரிய பெருமையும் தமது பணிவுந் தோன்ற அன்னவர்சேனைவெள்ளத்தியாவரையென்றறிவது என்றுகூறினர். (கரு)

அவரையிங்கழைத்தியென்றானரசன்றன்வழிச்செல்வார்போற்
கவயமிட்டவரும்போந்தார்காவலன்களிகூர்ந்தம்பொன்
னவமணிக்கலன்பொன்னாடைநல்கினானுள்ளத்தன்பு
தவறிலான்பொருட்டுவாங்கித்தரித்துத்தன்றமர்க்குமீந்தார்.

(இ-ள்.) அவரை இங்கு அழைத்தி என்றான் - அவரை இவ்விடத்தில் அழைப்பாயென்று பாண்டியன் கூறினன், அரசன் தன் வழி செல்வார் போல் கவயம் இட்டவரும் போந்தார் - அப்பாண்டியனுடைய வழிப்பட்டுச் செல்வார்போலப் போர்க்குரிய கவசஞ்சாத்திவந்த பெருமானும் சென்றார், காவலன் களி கூர்ந்து அம் பொன் நவமணிக் கலன் பொன் ஆடை நல்கினான் - பாண்டியன் மகிழ்ச்சி கூர்ந்து அழகிய பொன்னாலாகிய நவமணிகளழுத்திய ஆபரணங்களையும் பீதாம்பரத்தையுங்கொடுத்தான், உள்ளத்து அன்பு தவறிலான் பொருட்டு வாங்கி தரித்து தன் தமர்க்கும் ஈந்தார் - தமது மனத்தில் அன்பிற்குரிய வழிபாட்டினின்று சிறிதுந் தவறுபடாத சுந்தரசாமந்தர்பொருட்டு அவற்றை வாங்கித் தரித்துத் தன்பரிசனமாயுள்ளவர்களுக்குங் கொடுத்தருளினர்.

அரசன்வழிச்செல்லுதலும், அவன் பரிசாகத்தந்த ஆபரண முதலியவற்றைப்பெற்றமையும் தமது அடியார்நிமித்தம் என்பார் போந்தார் எனவும், உள்ளத்தன்பு தவறிலான்பொருட்டு வாங்கித்தரித்துத் தன்றமர்க்குமீந்தார் எனவுங்கூறினர்(கசு)

ஆய்ந்தவெம்பரிமாத்தூண்டியைங்கதிநடத்திக்காட்டி
யேய்ந்ததஞ்சேனைவெள்ளத்தெய்தினாரெய்துமெல்லை
வேய்ந்ததார்ச்சேதிராயன்வேட்டைபோய்ப்புலிகோட்பட்டு
மாய்ந்தனனென்றோரொற்றன்வேந்தன்முன்வந்துசொன்னான்.

(இ-ள்.) ஆய்ந்த வெம் பரி மா தூண்டி ஐங்கதி நடத்தி காட்டி - அசுவங்களுள் ஆராய்ந்தெடுத்த உத்தம அசுவத்தைச்செலுத்தி ஐந்துகதிகளையுநடத்திக்காண்பித்து, ஏய்ந்த தம் சேனை வெள்ளத்து எய்தினார் - பொருந்திய தமதுசேனாவெள்ளத்திற்சென்றருளினர், எய்தும் எல்லை - அவ்வாறு சென்றருளுஞ் சமயத்தில், தார் வேய்ந்த சேதிராயன் வேட்டைபோய் புலி கோட்பட்டு மாய்ந்தனன் என்று - வெற்றிமாலையை அணிந்த சேதிராயன் வேட்டைமேற்சென்று புலியினாற் கவ்வப்பட்டு இறந்தானென்று, ஓர் ஒற்றன் வேந்தன் முன் வந்து சொன்னான் - ஒருதூதுவன் பாண்டியன்முன்வந்து கூறினன். (கஎ)

முரசதிரவிகநோக்கிமுகமலர்ந்துவகைபூத்த
வரசனுமமரிகவேந்தற்களவில்சிர்த்தலைமையோடும்
வரிசைகண்மிதப்பநல்கிவந்துமெய்க்காட்டுத்தந்து
பரிபதாதித்தம்பதிபுகச்செலுத்துகென்றான்.

Koviloor Digital Library

(இ-ள்.) முரசு அதிர் அனிகம் நோக்கி முகமலர்ந்து உவகை பூத்த அரசனும்- முரசொலிக்குஞ் சேனையைப்பார்த்து முகமலர்ச்சிகொண்டு மகிழ்பூத்த பாண்டியனும், அனிகம் வேந்தற்கு அளவு இல் சீர் தலைமை யோடும் வரிசைகள் மிதப்ப நல்கி- சேனைத்தலைவராகிய சுந்தரசாமந்தர்க்கு அளவில்லாத சிறப்பமைந்த சேனைத்தலைமையின்றி ஏனைவினைகளுக்குரிய தலைமையோடும் வரிசைகளை மனம்வெறுப்பக் கொடுத்து, வந்து மெய்க்காட்டு தந்து பரசிய பதாதி தத்தம் பதிபுகச் செலுத்துக என்முன்- வந்து மெய்க்காட்டுக் கொடுத்து யாவருந் துதிக்கநின்ற சேனைகள் தத்தம் ஊர்க்குச்செல்ல விடைகொடுக்க என்று பாண்டியன் கூறினன்.

அளவில்சீர்த்தலைமையோடும் என்றமையால் சேனைத்தலைமையின்றி யேனைவினைகளுக்குரிய தலைமையோடும் என்றும். (கூஅ)

அறைந்தவார்கழற்காற்சேனைக்காவலனவரிகந்தத்தஞ்
சிறந்தசேணாட்டிற்செல்லச்செலுத்துவான்போன்றுநிற்ப
நிறைந்தநான்மாடக்கூடனிருத்தனங்கிலேநின்றுங்கே
மறைந்தனன்மனிதவேடங்காட்டியமறவரோடும்.

(இ-ள்.) அறைந்த வார் கழல் கால் சேனை காவலன் - ஒலிக்கும் நீண்ட வீர கண்டை கட்டிய காலையுடைய சேனைத் தலைவராகிய சுந்தரசாமந்தர், அனிகம் தத்தம் சிறந்த சேண் நாட்டில் செல்ல செலுத்துவான் போன்று நிற்ப - சேனை தத்தமக்குரிய சிறந்த தூரதேசத்துக்குச் செல்ல விடைகொடுப்பவர்போன்று வாளாநிற்ப, நிறைந்த நான்மாடக் கூடல் நிருத்தன் - வளப்பம்நிறைந்த நான்மாடக்கூடலாகிய மதுரைத்திருப்பதியி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், மனித வேடம் காட்டிய மறவரோடும் அங்கிலை நின்றால் ஆங்கே மறைந்தனன் - மனிதவேடங்கொண்டு வந்த சிவகணங்களோடும் அப்பொழுதே அவ்விடத்தி னின்றருளினாற்போலவே மறைந்தருளினார்.

இந்திரசாலம்போல என்பார். அங்கிலைநின்றுங்கே என்றார். நின்றுங்குதொகுத்தல். (கூகூ)

கண்டனன்பொருநைநாடன்வியந்தனன்கருத்தாசங்கை
கொண்டனன்குறித்துநோக்கியீதுநங்கூடன்மேய
வண்டர்தம்பெருமான்செய்தவாடலென்றெண்ணிக்கண்ணீர்
விண்டனன்புளகம்போர்ப்பமெய்யன்புவடிவமானான்.

(இ-ள்.) பொருநை நாடன் கண்டனன் வியந்தனன் கருத்து ஆசங்கை கொண்டனன் - தாமிரபர்ணிசூழ்ந்த பாண்டிநாட்டையுடைய குலபூடணன் கண்டு அதிசயித்து மனத்தில் ஐயங்கொண்டு, குறித்து நோக்கி - ஆராய்ந்து பார்த்து, ஈது நம் கூடல் மேய அண்டர்தம் பெருமான் செய்த ஆடல் என்று எண்ணி- இது நம்முடையமதுரையில் எழுந்தருளிய சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல் என்று கருதி, கண் நீர் விண்டனன் புளகம் போர்ப்ப மெய் அன்பு வடிவம் ஆனான் - ஆனந்த பாஷ்பஞ்சிந்தி மயிர்க்கூச்செறிய மெய்யன்பே ஓர்வடிவமாகிநின்றான்.

ஐயங்கொண்டவன் ஒருவழித்துணிந்தான் என்பார் குறித்துநோக்கியெனவும், துணிந்தவழி ஆராமைமேலிட்டதென்பார் கண்ணீர்விண்டனன் புளகம்போர்ப்ப எனவும், அவ்வாராமை மேலிட்டால் பசுகரணமொழிந்து சிவகரணம் ஆயினான் எ

Koviloor Digital Library

ன்பார் மெய்யன்புவடிவமானான் எனவுங் கூறினார். கண்டவன், வியந்தவன், விண்டவன் முற்றெச்சங்கள். (௩0)

தனக்குயிர்த்துணையாகின்றசாமந்தன்றன்னைநோக்கி
யுனக்கெளிவந்தார்கூடலுடையநாயகரோவென்று
லெனக்கவராவார்நீயேயென்றவற்கியாவுநல்கி
மனக்கவல்பின்றிவாழ்ந்தான்மதிவழிவந்தமைந்தன்.

(இ-ள்.) தனக்கு உயிர்த் துணையா நின்ற சாமந்தன் தன்னை நோக்கி - தனக்கு உயிர்த்துணைவராயிருந்த சுந்தரசாமந்தரைப் பார்த்து, கூடல் உடைய நாயகரோ உனக்கு எளிவந்தார் என்றால் - மதுரைத் திருப்பதியையுடைய சோமசுந்தரக்கடவுளோ உமக்கு எளிதில்வந்தருளினாரென்றால், நீயே எனக்கு அவர் ஆவார் என்று - நீரே எனக்கு அச்சோமசுந்தரக்கடவுள் என்று, மதி வழி வந்த மைந்தன் அவற்கு யாவும் நல்கி மனக்கவல்பு இன்றி வாழ்ந்தான் - சந்திரன்மரபில் வந்த பாண்டியன் அச்சுந்தரசாமந்தர்க்கு வேண்டியவைவெல்லாந் தந்து மனத்திற் சிறிதுங் கவலையில்லாமல் அரசியல்நடத்திவந்தான்.

சிவபெருமானார் அடியவரிடத்து வசித்தலால் அவ்வடியவரை யுபசரித்தலே யவரை யுபசரித்தலாமெனக் கருதினானென்பார் எனக்கவராவார் நீயேயென்றவற்கியாவுநல்கி யென்றார். "தாவரசங்கமங்களென்றிரண்டுருவினின்று - மாபரன்பூசைகொண்டுமன்னுயிர்க்கருளைவைப்பன்" என்ற திருவாக்கால் உணர்க. (௩௧)

மெய்க்காட்டிட்டபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உட்படத் திருவிருத்தம் - ௧௭0௪.

முப்பத்தொன்றாவது

உலவாக்கிழியருளியபடலம்.


அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடியார்பொருட்டுப்பரிவயவராகிச்செழியன்காணவிடைக்
கொடியார்வந்துமெய்க்காட்டுக்கொடுத்தவண்ணமெடுத்துரைத்துங்
கடியார்கொன்றைமுடியாரக்கன்னிநாடன்றனக்கிசைந்த
படியாருலவாக்கிழிகொடுத்தபடியையறிந்தபடிபகர்வாம்.

(இ-ள்.) அடியார் பொருட்டு பரிவயவர் ஆகி - சுந்தரசாமந்தர் பொருட்டுக் குதிரைச்சேவகராகி, செழியன் காண - குலபூடணன் தரிசிக்க, விடை கொடியார் வந்து மெய்க்காட்டு கொடுத்த வண்ணம் எடுத்து உரைத்தும் - இடபதுவசத்தை யுடைய சோமசுந்தரக்கடவுள் வந்தருளி மெய்க்காட்டுக் கொடுத்தருளிய வகையை யெடுத்துக்கூறினோம், கடியார் கொன்றை முடியார் - வாசநிறைந்த கொன்றை மாலையையணிந்த சடாமுடியையுடைய அக்கடவுள், அக் கன்னி நாடன் தனக்கு இசை

Kovilnoor Digital Library

உலவாக்கிழியருளிய திருவிளையாடல்.



Koviloor Digital Library

Koviloor Digital Library

ந்த படியால் - அப்பாண்டியன் தமக்கு மனமொத்த அன்பனானபடியால், உலவாக் கிழி கொடுத்தபடியை - உலவாக்கிழி யருளிய திருவிளையாடலை, அறிந்தபடி பகர்வாம் - தெரிந்த வண்ணம் எடுத்துக் கூறுவாம். (௪)

வள்ளல்குலபூடணன்றிங்கள்வாரந்தொடுத்துச்சிவதரும
முள்ளவெல்லாம்வழாதுநோற்றொழுகும்வலியாற்றன்னாட்டி
லெள்ளலில்லாவேதியரையிகழ்ந்தானதனான்மழைமறுத்து
வெள்ளமருகவளங்குன்றிவிளைவஃகியதுநாடெல்லாம்.

(இ-ள்.) வள்ளல் குலபூடணன் - கொடுத்தலிற்சிறந்த குலபூடண பாண்டியன், திங்கள் வாரம் தொடுத்து சிவதருமம் உள்ள எல்லாம் வழாது நோற்று ஒழுகும் வலியால் - சோமவாரவிரதந் தொடுத்துச் சிவதருமமாகஉள்ள விரதங்களை யெல்லாம் தவறாது நோற்று நடக்கும்வன்மையால், தன் நாட்டில் எள்ளல் இல்லாத வேதியரை இகழ்ந்தான்-தன்னுடைய பாண்டிநாட்டிலுள்ள நிந்தையில்லாத அந்தணர்களை இகழ்ந்தொழுகினான், அதனால் - அக்காரணத்தினால், மழை மறுத்து வெள்ளம் அருக - மழைவளங்குன்றியதால் இடை அறாது ஒழுகும் நீர்வெள்ளம்குன்ற, நாடு எல்லாம் வளம் குன்றி விளைவு அஃகியது - பாண்டிநாடெல்லாம் வளங் குறைந்து விளைவுசுருங்கியது.

அட்டமி, சதுர்த்தசிவிரத முதலியவற்றையடக்கிச் சிவதருமமெல்லாம் என்றார். (௨)

அறவோரெல்லாநிரப்பெய்தியாகங்கிடந்தநூலன்றி
மறைநூலிழந்துமுனிவேள்விவானோர்வேள்விதென்புலத்தி
னுறைவோர்வேள்வியிழந்திழிந்ததொழில்செய்தாற்றாதுயிர்வளர்ப்பான்
புறநாடணைந்தார்பசியாலேபுழுங்கியொழிந்தகுடியெல்லாம்.

(இ-ள்.) அறவோர் எல்லாம் நிரப்பு எய்தி - அந்தணரெல்லாம் வறுமையடைந்து, ஆகம் கிடந்த நூல் அன்றி மறைநூல் இழந்து - மார்பிற்கிடந்த உபவீத நூலன்றி வேதமாகிய பெருநூலை இழந்து, முனி வேள்வி வானோர் வேள்வி தென் புலத்தின் உறைவோர் வேள்வி இழந்து - முனிவர்யாகம் தேவர்யாகம் பிதிரர்யாகம் ஆகிய இவ்வேள்விகளையிழந்து, இழிந்த தொழில்செய்து ஆற்றாது - விலக்கியதொழிலைச்செய்து அத்தொழிலால் உய்தியறியாது, உயிர்வளர்ப்பான் புறநாடு அணைந்தார் - (தமக்குவிதித்த தொழில் அல்லாதனவற்றைச் செய்து) தமது உயிரையோம்பப்புறநாட்டிற் சென்றார்கள், ஒழிந்த குடி எல்லாம் பசியாலே புழுங்கி - அந்தணரொழிந்த குடிகளெல்லாங் கொடியபசியினாலே மனம்புழுங்கி.

மறைநூல் ஓதுதலின்மையால் முனிவர்வேள்வியும், ஓமம்வளர்த்தலின்மையால் வானோர்வேள்வியும், நீர்க்கடனாற்றலின்மையால் தென்புலத்தினுறைவோர் வேள்வியும் இழந்தென்றார். ஆகங்கிடந்தநூலன்றி மறைநூலிழந்து என்றது தத்தம் நிலைக்குரிய ஒழுக்கத்தையிழத்தலை யுணர்த்தினமையாற் குறிப்பணி. (௩)

எந்நாடணைவோமெனவிரங்கவிரங்கிமதிக்கோன்மதிநாளிற்
பொன்னாண்முளரித்தடங்குடைந்துசித்திக்களிற்றைப்பூசித்துத்
தன்னாதரவாற்கயற்கண்ணிதலைவன்றன்னையருச்சித்து
முன்னாவிழ்ந்துகரமுகிழ்த்துப்பழிச்சிமகிழ்ந்துமொழிகின்றான்.

Koviloor Digital Library

(இ-ள்.) எங்ஙனம் அடைவோம் என இரங்க-எத்தேசத்திற்குச் செல்வோமென் றலறுந்த, மதிக்கோன் இரங்கி-(அதுநோக்கி) சந்திரன் மரபிற்றோன்றிய குலபூஷணன் மனம்வருந்தி, மதிநாளில் நள் பொன் முளரிநடம் குடைந்து சித்திக்களிற்றை பூசித்து - சோமவாரத்தில் அன்றலர்ந்த பொற்றாமரைத்தீர்த்தத்தில் நீராடிச் சித்திவிநாயகரைப்பூசித்து, தன் ஆதரவால் கயல்கண்ணி தலைவன்றன்னை அருச்சித்து - தன்றுடையபேரன்பால் அங்கயற்கண்ணியார் தலைவராகிய சோமசுந்தரக்கடவுளை ஆகமவிதியால் அருச்சனைசெய்து, முன்னு விழ்ந்து கரம் முகிழ்த்து பழிச்சி மகிழ்ந்து மொழிகின்றான் - சந்நிதிமுன்விழ்ந்து கைகூப்பித்துதித்து மகிழ்கூர்ந்து கூறுகின்றான்.

தம்மக்கள்நோய்க்குப் பரிவுகூருந்தாயர்போலத் தன்கோற்கீழ்வாழுங் குடிகள்வருத்தத்திற்கு அரசன் பரிவுகூர்தல் கடனாதலால் இரங்கியெனவும், தான்கொண்டகருமம் முட்டின்றிமுடிதற்கு மூத்தபிள்ளையாரை முன்பு பூசித்தல் முறையாதலால் சித்திக்களிற்றைப்பூசித்து எனவும், வழிபாட்டினின்ற தனக்கோர்குறைவுறின் அக்குறைபாட்டினை யொழிப்பார் சோமசுந்தரக்கடவுளேயாதலால் கரமுகிழ்த்துப் பழிச்சி மகிழ்ந்து மொழிகின்றான் எனவுங்கூறினர். (௪)

அத்தவுலகிலுயிர்க்குயிர்நீயல்லையோவவ்வுயிர்பசியா
லெய்த்தவருத்தமடியேனைவருத்துமாறென்யானீட்டி
வைத்தபொருளுந்தருமத்தின்வழியேசென்றதினியடிகள்
சித்தமலர்ந்தென்னிடும்பைவினைதீரவருட்கண்செய்கவென.

(இ-ள்.) அத்த-இறைவனே, உலகில் உயிர்க்கு உயிர்நீ அல்லையோ - உலகிலுள்ள உயிர்களுக்கு உயிர்நீ அல்லவோ, அவ்வுயிர் பசியால் எய்த்த வருத்தம் அடியேனை வருத்தும் ஆறு என்-அந்தவுயிர்கள் பசியால்வருந்திய வருத்தம் (தேவரீரைச் சாராது) அடியேனை வருத்துங்காரணம் யாது, யான் ஈட்டிவைத்த பொருளும் தருமத்தின்வழியேசென்றது - யான்தேடிவைத்தபொருளுஞ் சிவதருமத்தின்வழியேசென்றது, இனி அடிகள் சித்தம்மலர்ந்து என் இடும்பை வினைதீர அருள்கண்செய்க என்ன-இனித்தேவரீர் திருவுளமிரங்கி எனது துன்பநோய் நீங்கும்வண்ணம் திருவருட்கண் செய்தருளுகவென்று இரக்க.

உயிர்க்குயிராய் நின்று அறிவிக்குஞ் சூக்குமவைந்தொழிலு முடையாய் என்பான் உயிர்க்குயிர் நீயல்லையோவெனவும். அவ்வுயிர்கள்வருந்தும் வருத்தத்தை யுணர்ந்தொழித்தல் தேவரீர் கடனாயிருக்க என்னைவருத்துவது யாதுகாரணம் என்பான் அவ்வுயிர் பசியாலெய்த்தவருத்த மடியேனைவருத்துமாறென்னெனவுங்கூறினான். (ரு)

கோளாடரவமரைக்கசைத்தகூடற்பெருமான்குறையிரக்கு
மாளாமரசன்றவறுசிறிதகங்கொண்டதனைத்திருச்செவியிற்
கேளார்போலவாளாதேயிருப்பமனையிற்கிடைத்தமலன்
றுளாதரவுபெறநினைந்தணையிற்கிடந்துதுயில்கின்றான்.

(இ-ள்.) கோள் ஆடு அரவம் அரைக்கு அசைத்த கூடல் பெருமான் - வன்மையோடு ஆடாநின்றசர்ப்பத்தை இடையிற் கட்டியருளிய சோமசுந்தரக்கடவுள், குறை இரக்கும் ஆளாம் அரசன் தவறு சிறிது அகம் கொண்டு - தனது குறைகூறி இரக்குந் தமதடியோனாகிய பாண்டியன் தவறுபாட்டைச் சிறிது திருவுள்ளத்தி

Koviloor Digital Library,

ற்கொண்டு, அதனை திரு செவியில் கேளார் போல வாளாதே இருப்ப - அதனைத் தமது திருச்செவியில் கேளாதவர்போல வாளாவிருப்ப, மனையில் கிடைத்து அமலன் தாள் ஆதரவு பெற நினைந்து தனையில் கிடந்து துயில்கின்றான் - தனது கோயிலிற் சென்று சிவபெருமான்திருவடியை அன்புமிகச் சிந்தித்து நிலமிசைகிடந்து நித்திரை செய்கின்றவனாயினன்.

பாம்பின்குற்றத்தைநோக்காது குணமாகக்கொண்ட பெருமானார் அரசன்குற்றத்தை நோக்கிலர் என்பார் தவறு சிறிதகங்கொண்டு எனவும், கேளார்போலஎனவுங்கூறினார். (சு)

அங்கண்வெள்ளியம்பலத்துளாடுமடிகளவன்கனவிற்
சங்கக்குழையும்வெண்ணீறுஞ்சரிகோவணமுந்தயங்கவுரன்
சிங்காதங்கிடந்தசையச்சித்தவடிவாயெழுந்தருளி
வெங்கண்யானைத்தென்னவர்கோன்முன்னின்றிதனை விளம்புவார்.

(இ-ள்.) அங்கண் - அப்பொழுது, வெள்ளி அம்பலத்துள் ஆடும் அடிகள் அவன் கனவில் - வெள்ளியம்பலத்திலாடியருளிய சோமசுந்தரக்கடவுள் அப்பாண்டியன் சொப்பனத்தில், சங்கக் குழையும் வெள் நீறும் சரி கோவணமும் தயங்க-சங்ககுண்டலமும் வெள்ளிய திருநீறும் சரிந்தகோவணவுடையும் விளங்கவும், உரன் சிங்காதம் கிடந்து அசைய - திருமார்பில் சிங்காதமென்னும் வாச்சியம் ஒருபாற்கிடந்து அசையவும், சித்த வடிவாய் எழுந்தருளி வெம் கண் யானை தென்னவர் கோன் முன் நின்று இதனை விளம்புவார் - சித்தமூர்த்தியாய் எழுந்தருளி அஞ்சாமையையுடைய யானைச்சேனையையுடைய குலபூடணன்முன்னின்று இதனைக் கூறியருளுகின்றார்.

சிங்காதம் கொம்பினாற்செய்த ஒருவகை வாச்சியம். (எ)

ஏடாரலங்கல்வரைமார்பவெம்பாலென்றுமன்புடைமை
வாடாவிரதவிழுச்செல்வமுடையாய்வையமறங்கடிந்து
கோடாதளிக்குஞ்செங்கோன்மையுடையாயுனக்கோர்குறையுளதுன்
வீடாவளஞ்சேர்நாட்டிந்நாள்வேள்விச்செல்வமருகியதால்.

(இ-ள்.) ஏடு ஆர் அலங்கல் வரை மார்ப - இதழ்நிறைந்த மாலையையணிந்த மலைபோன்ற மார்பினையுடையவனே, எம் பால் என்றும் அன்பு உடைமை வாடா விரதம் விழு செல்வம் உடையாய் - எம்மிடத்தில் எப்பொழுதும் அன்புடைமையும் கெடாத சிவவிரதமுமாகிய பெருஞ்செல்வத்தையுடையாய், வையம் மறம் கடிந்து கோடாது அளிக்கும் செங்கோன்மை உடையாய் - நிலவுலகைக் கலிதீர்ந்து நடுநிலைமையினின்றோம்பும் செங்கோலினையுடையாய், உனக்கு ஓர் குறை உள்ளது - உன்னிடத்திலோர்குறையுண்டு, உன் வீடாத வளம் சேர் நாடு இந்நாள் வேள்விச் செல்வம் அருகியது - (அதனால்) உனது கெடாதவளமிக்க பாண்டிநாட்டில் இப்பொழுது வேள்விச்செல்வங் குறைந்தது.

குடிகள் உய்தற்கு மழைகாரணமும், அம்மழைபெய்தற்கு வேள்விகாரணமும், அவ்வேள்வியை நடத்தற்கு அரசன் செங்கோல்காரணமும் ஆதலால் அரசன் அதனைக் குறியாதிருந்ததே குறையாதலால் உனக்கோர் குறையுளதென்றார். (அ)

மறையேநமதுபிடிகையாமறையேநமதுபாதுகையா
மறையேநமதுவாகனமாமறையேநமதுநூபுரமா

Koviloor Digital Library

மறையேநமதுகோவணமாமறையேநமதுவிழியாகு
மறையேநமதுமொழியாகுமறையேநமதுவடிவாகும்.

(இ-ள்.) மறையே நமது பீடிகை ஆம் - வேதமே நமது ஆசனமாம், மறையே நமது பாதுகையாம் - வேதமே நமது திருவடிநிலையாம், மறையே நமது வாகனம் ஆம் - வேதமே நமது ஊர்தியாம், மறையே நமது நூபுரம் ஆம் - வேதமே நமது சிலம்பாம், மறையே நமது கோவணம் ஆம் - வேதமே நமது கோவணவுடையாம், மறையே நமது விழி ஆகும் - வேதமே நமது திருக்கண்ணும், மறையே நமது மொழி ஆகும் - வேதமே நமது திருவாக்காம், மறையே நமது வடிவு ஆகும்-வேதமே நமது திருவுருவமாகும்.

ஆன்மாக்கள் நம்மை யுணர்ந்துய்யக் கூட்டிக் கருவிநூலாதல் அவையே நமக்குப் பீடிகைமுதலாக வெல்லாமுடையோம் என்பார் இவ்வாறுகூறினர். "அவன்றன்வடிவிலாவடிவினையுணர்த்தும்" என முன்னர்க்கூறியிருத்தல் உணர்க. (௯)

வேதந்தானேநமதாணைச்சத்திவடிவாய்விதிவிலக்காய்ப்
போதங்கொளுத்திநிலைநிறுத்திப்போகங்கொடுத்துப்பல்லுயிர்க்கும்
பேதஞ்செய்யும்பிணியவிழ்த்தெம்பிரியாவீடுதருவதுதே
னாதஞ்செய்யுந்தார்வேந்தேநமதுசெங்கோலதுவாகும்.

(இ-ள்.) வேதம் தானே நமது ஆணை சத்தி வடிவாய் விதி விலக்கு ஆய்-வேதமே நமது ஆணையாகிய சத்திவடிவாகியும் விதிவிலக்குகளாகியும், பல் உயிர்க்கும் போதம் கொளுத்தி நிலை நிறுத்தி போகம் கொடுத்து - பல ஆன்மகோடிகளுக்கும் அறிவுகொளுத்தி நன்னிலையினிறுத்திப் போகமுந்தந்து, பேதம் செய்யும் பிணி அவிழ்த்து எம் பிரியாவீடு தருவது - ஐயந்திரிபுகளை விளைவிக்கும் பந்தங்களைக் கெடுத்து எம்மினின்றும் பிரியாமையாகிய மோக்ஷத்தைத்தருவது, தேன் நாதம் செய்யும் தார்வேந்தே நமது செங்கோல் அது ஆகும் - (அதனால்) வண்டுகள் தேனுண்டொலிக்கும் மாலையையணிந்த பாண்டியனே நமதுசெங்கோலும் அவ்வேதமாம்.

வேதம் நமது திருவாக்கு ஆதலால் நமதாணைச்சத்திவடிவாய் எனவும், அது ஆன்மாக்களுய்தற்கு விதிவிலக்குகளா யிருத்தலால் விதிவிலக்காய் எனவும், அவ்விதிவிலக்குகள் அறிவினைப் பெருக்குதலால் போதங்கொளுத்தி யெனவும், அவ்வறிவின்மேலிட்டு தத்தமக்குரிய நிலையினிறுத்துதலால் நிலைநிறுத்தியெனவும், அந்நிலைநிற்றல் இருவகைப்போகமுந் தருதலால் போகங்கொடுத்து எனவும், அப்போகம் மலத்தற்கு மருந்தாதலால் அதனில் உவர்ப்பு வந்தவழி யவிச்சை கெடுத்தலால் பேதஞ்செய்யும் பிணியவிழ்த்து எனவும், அவ்வவிச்சைகெடுதலே திருவருள்மேலிடாதலால் எம்பிரியாவீடு தருவது எனவும், உயிர்க்குறுதிதரும் அப்பெரும்பேறே தமதுநீதியாதலால் நமது செங்கோலதுவாகும் எனவுங்கூறினர் "மறைப்பொருளறிதருனேனாந்தமில்லாதபோகப்பயனுக்குந்தையும்பாச, பந்தனைகழிக்கும்வீட்டின்பயனுக்குங்கருவியாகும்" என முன்னர் வருதல்காண்க. (௧௦)

அந்தமறைகடமக்குறுதியாவாரந்நால்வழிகவிரோய்
சிந்தமகத்திவளர்த்தெம்பாற்சிந்தைசெலுத்துமந்தணரா
மிந்தமறையோர்வெவ்விமறைக்கேதுவாகுமிவர்தம்மை
மைந்தவிகழ்ந்துகைவிட்டாயதனன்பாரிமறுத்தன்றால்.

Koviloor Digital Library

(இ-ள்.) அந்த மறைகள் தமக்கு உறுதி ஆவார் - அந்த வேதங்களுக்கு உறுதியாயுள்ளோர், அந்நூல் வழி கலி நோய் சிந்த மகம் திவளர்த்து எம் பால் சிந்தை செலுத்தும் அந்தணர் - அந்த வேதநூல்வழியே கலிநோய்கெட யாகாக்கினியோம்பி எம்மிடத்தில் மனஞ்செலுத்தும் மறையவராம், இந்த மறையோர் வேள்வி மழைக்கு ஏது ஆகும் - இவ்வாறுள்ள இந்த அந்தணர்செய்யும் யாகம் மழைக்குக் காரணமாம், மைந்த இவர் தம்மை இகழ்ந்து கைவிட்டாய் அதனால் மாரி மறுத்தன்று-நம அபுத்திரனே இவர்களை அவமதித்துக் கைவிட்டாய் அக்காரணத்தினால் மழைவளங் குன்றியது.

வேதங்கள் ஆன்மாக்களுக்குப் பயன்தருதல் மறையோராலாதலால் அந்தமறைகள் தமக்குறுதியாவார் எனவும், அம்மறையவர்செய்யும் வேள்விக்குத் தாமிறைவராதலால் மகத்திவளர்த்தெம்பாற்சிந்தைசெலுத்துமந்தணர் எனவும், அவரையிகழ்ந்தமை யெம்மை யிகழ்ந்தமையோடொக்குமாதலால் அதனால் மாரி மறுத்தன்று எனவுங் கூறினர். "புங்கவரொவர்க்குநல்கும்புவிபுகழவிகொள்வானும், அங்கியின் முதலும்வேள்விக்கதிபனுமளிக்கின்றானும், சங்கரன்றனேவேதஞ்சாற்றுமால்" எனக்காந்தம் தநிசியுத்தரப்படலத்தில் வருதல்காண்க. (கக)

மும்மைப்புவனங்களுமுய்யமுத்தீவேட்குமிவர்தம்மை
நம்மைப்போலக்கண்டொழுகிநாளுநானுவறம்பெருக்கிச்
செம்மைத்தருமக்கோலோச்சித்திகிரியுருட்டிவாழ்தியென
வும்மைப்பயன்போலெளிவந்தாருலவாக்கிழியொன்றுதவுவார்.

(இ-ள்.) மும்மை புவனங்களும் உய்ய முத்தீ வேட்கும் இவர் தம்மை - மூன்றுலகங்களும் பிழைக்க மூன்றக்கினியையும் வளர்க்கும் இந்த அந்தணர்களை, நம்மை போல கண்டு ஒழுகி நாளும் நானு அறம் பெருக்கி - நம்மைப்போலச் சிந்தித்து நடந்து எந்நாளும் பலதருமங்களையும் பெருகச்செய்து, தருமம் செம்மை கோல் ஓச்சி திகிரி உருட்டி வாழ்தி என - தருமவடிவான செங்கோல் செலுத்தி யாணையாகியசக்கரத்தைச் செலுத்தி வாழ்வாயென்று, உம்மை பயன் போல் எளி வந்தார் உலவாக்கிழி ஒன்று உதவுவார் - முற்பிறப்பிற்செய்த நல்வினைப்பயன்போல எளிதில்வந்தருளிய பெருமானார் உலவாக்கிழி ஒன்று கொடுத்தருளுவார்.

மூன்றுலகங்களாவன பூமி அந்தர சுவர்க்கங்கள். (கஉ)

இந்தக்கிழியிலெத்துணைப்பொன்னெடுத்துவழங்குந்தொறுநாங்க
டந்தவளவிற்குறையாததன்மைத்தாகுமதுகொண்டு
வந்தவிலம்பாடகற்றென்றுகொடுத்துவேந்தன்மனக்கவலை
சிந்தத்திருநீறதுசாத்திமறைந்தாரையர்திருவுருவம்.

(இ-ள்.) இந்த கிழியில் எத்துணை பொன் எடுத்து வழங்கும் தொறும் - இந்தவுலவாக்கிழியில் எவ்வளவு பொன்னாயினும் நீ எடுத்துக்கொடுக்குந்தோறும், நாங்கள் தந்த அளவில் குறையாத தன்மைத்து ஆகும் - அது நாம் கொடுத்த அளவினின்றுஞ் சுருங்காத தன்மையை யுடையதாகும், அது கொண்டு வந்த இலம்பாடு அகற்றுஎன்று கொடுத்து-அந்தப் பொருளைக்கொண்டு (அந்தணர்முதலியோர்க்கு) நேரிட்ட துன்பத்தை யொழிப்பாயென்று கொடுத்து, வேந்தன் மனக் கவலை சிந்த திருநீறுசாத்தி - பாண்டியனுடைய மனத்துன்பநீங்கத்திருநீறிட்டு, ஐயர் திரு உருவம் மறைந்தார் - சோமசுந்தரக்கடவுள் சித்தமூர்த்தமாகவந்த தமது திரு உருவமறைந்தருளினர்.

Koviloor Digital Library

இத்தமுடிப்பினின்று எவ்வளவு பொன்னை யெடுத்துச் செலவு செய்யினும் இம்முடிப்பு முன்னிருந்தபடித்தாயே யிருக்கும் என்பார் நாங்கள் தந்தவளவிற் குறையாததன்மைத்தாகும் என்றார். நாங்கள் கள் பகுதிப்பொருள்விகுதி. இலம்பாடு இன்மைபடுதல் என்னும் பொருள்மேல் நிற்றலால் முதனிலைதிரிந்ததொழிற்பெயர்.

கண்டகனவுநனவாகத்தொழுதானெழுந்துகௌரியர்கோ
னண்டர்பெருமான்றிருவடிபோலம்பொற்கிழியைமுடித்தலைமேற்
கொண்டுமகிழ்ச்சிதலைசிறப்பநின்றோர்முகூர்த்தங்கூத்தாடித்
தண்டாவமைச்சர்படைத்தலைவர்தமக்குங்காட்டியறிவித்தான்.

(இ-ள்.) கௌரியர் கோன் கண்ட கனவு நனவு ஆக எழுந்து தொழுதான் - பாண்டியன் தான்கண்டசொப்பனம் நனவாகப் பயன்படத் துயிலுணர்ந்து வணங்கி, அண்டர் பெருமான் திரு அடிபோல் அம் பொற் கிழியை முடித்தலை மேல் கொண்டு - சோமசுந்தரக்கடவுளுடைய திருவடியைத் தனதுமுடியிற் சூடுவதுபோல அழகிய உலவாக்கிழியைத் தனதுமுடிமேற்சூடி, மகிழ்ச்சி தலை சிறப்ப நின்று ஓர் முகூர்த்தம் கூத்து ஆடி - களிப்பு மேலோங்க நின்று ஒருமுகூர்த்தம் ஆனந்தக்கூத்தாடி, தண்டாத அமைச்சர் படைத்தலைவர் தமக்கும் காட்டி அறிவித்தான் - நீங்காத மந்திரிகளுக்குஞ் சேனைத்தலைவர்க்கும் காட்டி நிகழ்ந்தசெய்தியைத் தெரிவித்தான்.

கனவு நனவுபோலப் பயன்படுதலின் கனவு நனவாக எனவும், மனந்தெளிதல் துயிலெழுங்காலத்தாகலின் எழுந்து தொழுதான் எனவும், சிவபெருமான் திருவருள் கிடைத்ததுபோலக் கிடைத்தமையால் அண்டர்பெருமான்றிருவடிபோலம்பொற்கிழியை முடித்தலைமேற்கொண்டு எனவுங்கூறினார் "கொழுநற்றொழுதெழுவாள்" என்பது எழுந்து கொழுநற்றொழுவாள் என முன்பின்னாகப் பொருள்படும் எனப்பிரயோக விவேகநூலார் கூறியிருத்தலால் எழுந்து தொழுது என்றும். தொழுதான் முற்றெச்சம். (கச)

செங்கணரிமான்பிடர்சுமந்ததெய்வமணிப்பூந்தவிசேற்றிச்
சங்கமுழங்கமறைமுழங்கச்சாந்தந்திமிர்ந்துதாதொழுகத்
தொங்கலணிந்துதசாங்கவிரைத்தூபநறுநெய்ச்சுடர்வளைத்துக்
கங்கைமிலைந்தகடவுளெனக்கருதிப்பூசைவினைமுடித்தான்.

(இ-ள்.) செம் கண் அரிமான் பிடர் சுமந்த தெய்வ மணி பூம் தவிசு ஏற்றி - சிவந்தகண்களையுடைய சிங்கத்தின் பிடர்சுமந்த தெய்வத்தன்மையையுடைய இரத்தினத்தின் பொலிவையுடைய ஆசனத்திலேற்றி, சங்கம் முழங்க மறை முழங்க சாந்தம் திமிர்ந்து தாது ஒழுக தொங்கல் அணிந்து - சங்கமொருபால்முழங்கவும் வேதகோஷமொருபால் முழங்கவும் சந்தனக்குழம்பு அப்பி மகரந்தஞ்சிந்த மாலைசூட்டி, தசாங்கம் விரை தூபம் நறும் நெய் சுடர் வளைத்து - தசாங்கோபசாரத்தோடு வாசனைத்தூபமும் நறுமணக்கமழும் நெய்த்தீபமும் வளைத்து, கங்கை மிலைந்த கடவுள் என கருதி பூசை வினை முடித்தான் - கங்கைசூடிய சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுளைப்போல உலவாக்கிழியைச் சிந்தித்துப் பூசனைசெய்து முடித்தான்.

தசாங்கோபசாரமாவன ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேநுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புட்பதானம்

Koviloor Digital Library

ஐந்துவிரைத்தூபமாவன குங்குருக்கம், பச்சைக்கருப்பூரம், காரகில், வெண்சந்தனம், கருஞ்சிதாரி. நறுநெய் என்றமையால் கபிலைப்பசுநெய் எனக்கொள்க. (கரு)

அடுத்துவணங்கிவலஞ்செய்திட்டம்பொற்கிழியைப்பொதிநீக்கி
யெடுத்துமுத்தீவினைஞர்க்கும்யாகங்களுக்கும்யாவர்க்கு
மடுத்துநாளும்வளையாதுவழங்கவழங்கவடியார்க்குக்
கொடுக்கக்குறையாவீட்டின்பமாயிற்றையர்கொடுத்தகிழி.

(இ-ள்.) அடுத்து வணங்கி வலம் செய்திட்டு - சமீபித்து வணங்கிப் பிரதக்ஷிணஞ்செய்து, அம் பொற் கிழியை பொதி நீக்கி எடுத்து - அழகிய உலவாக்கிழியை முடிப்பினின்று நீக்கிப் பொன்னையள்ளி, முத்தீ வினைஞர்க்கும் யாகங்களுக்கும் யாவர்க்கும் மடுத்து நாளும் வளையாது வழங்க வழங்க - முத்தீ யோம்பும் அந்தணர்களுக்கும் யாகங்களுக்கும் ஏனையோர்க்கும் அவர்களோடளவளாவி எந்நாளும் வளையாது கொடுக்கக்கொடுக்க, ஐயா கொடுத்த கிழி - சோமசுந்தரக்கடவுள் கொடுத்தருளிய வுலவாக்கிழி, அடியார்க்கு கொடுக்க குறையாத வீடு இன்பம் ஆயிற்று-தமது அடியார்க்குக் கொடுக்கக் குன்றாத மோட்ச இன்பம்போல என்றுங்குறையாது ஒருபடித்தாயிருந்தது.

வழங்க வழங்க பன்மைப்பொருளில்வந்த வடுக்குத்தொடர். அடியார்க் கருளுந்தோறுங் குன்றுதொருபடித்தா யிருத்தலால் அடியார்க்குக் கொடுக்கக்குறையா வீட்டின்பம் என்றார். (கசு)

ஆயபொதியில்வளைபொன்னாலசும்புசெய்துவிசும்பிழிந்த
கோயிலதனையகம்புறமுங்குயின்றுஞானக்கொழுந்தனைய
தாயிலறுகாற்பீடிகைவான்றடவுகொடியநெடியபெரு
வாயில்பிறவுமழகெறிப்பவேய்ந்தான்மறையின்வரம்பறிந்தான்.

(இ-ள்.) மறையின் வரம்பு அறிந்தான் - வேதத்தின் எல்லையையறிந்த பாண்டியன், ஆயபொதியில் வளைபொன்னால் - உலவாக்கிழியினின்றுமெடுத்த வளைந்தபொன்னால், அசும்பு செய்து விசும்பு இழிந்தகோயில் அதனை - ஒளிவீசி விண்ணுலகினின்றுவந்த இந்திரவிமானத்தை, அகம் புறமும் குயின்று-அகத்தும் புறத்தும் இழைத்து, ஞானம் கொழுந்து அனைய தாய் இல் அறுகால் பீடிகை வான் தடவு கொடிய நெடிய பெருவாயில் பிறவும் அழகு எறிப்ப வேய்ந்தான் - ஞானக்கொழுந்தையொத்த அங்கயற்கண்ணியார் திருக்கோயிலும் அறுகாற்பீடிகையும் விண்அளாவுங்கொடியையுடைய நெடிய பெரியதிருக்கோபுரத்தின் வாயிலும் மற்றுள்ளனவும் அழகுவீசப் பொற்றகடுவேய்ந்தான்.

வளை பொன் ஓடுபொன். (கஎ)

முந்திக்குறையாநிதிக்கடலைமுகந்துமுகந்துநாடோறுஞ்
சிந்திக்குலபூடணக்கொண்டறெய்வதருமப்பயிர்வளர்ப்பப்
பந்தித்திரைமுந்நீர்மேகம்பருகிச்சொரியப்பல்வளனு
நந்திக்கன்னிநாடளகைநகர்போற்செல்வந்தழைத்தன்றே.

(இ-ள்.) குலபூடணக்கொண்டல் - குலபூஷணனாகியமேகம், குறையாநிதிகடலை முந்தி முகந்து முகந்து நாள்தோறும் சிந்தி - குறையாததிரவியமென்னுங்கடலை முற்பட்டு மொண்டுமொண்டு நாள்தோறும்பெய்து, தெய்வம் தருமம் பயிர்வளர்ப்ப - தெய்வத்தன்மையையுடைய தருமமாகிய பைங்கூழைவளர்த்துவர, பந்தி

Koviloor Digital Library

நிரை முகிற் மேகம் பருகிசொரிய பல்வளனும் நந்தி - வரிசைவரிசையாய்வரும் அலைகளையுடைய கடல்நீரை மேகம்பருகிச் சொரியப் பலவளங்களும் குறையாதோ ங்கி, தென்னாடு அளகைநகர்போல் செல்வந்தழைத்தன்று - பாண்டிநாடு குபேரன் அளகைநகரம்போலச் செல்வந்தழைத்தோங்கியது.

பல்வளனுவது நிருபா நெல்வளர்தல்முதலியன. முகந்து முகந்து மிகுதிப் பொருளில்வந்த அடுக்குத்தொடர். (கஅ)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வையாகரணர்களையாயிகர்மறைவல்லோர்மறைமுடிசொல்லாய்வோர்
மெய்யாமிருதிகள்பொய்யாவிரதிகள்வேள்வித்தழல்களைவாழ்விப்போர்
பையாடரவணியையானனனுரைபகர்வோருலகியலகல்வோர்க
ளெய்யாதுறைதலினையாதளகைபதென்னப்பொலிவதுதென்னாடு.

(இ-ள்.) வையாகரணர்கள் நையாயிகர்மறை வல்லோர் மறைமுடி சொல் லாய்வோர் - வியாகரணங்கற்றவர்களும் நியாயநூல்கற்றவர்களும் வேதநூலுணர்ந் தவர்களும் உபநிடதத்திற்பொருளை யாராய்வோரும், மெய் ஆம் மிருதிகள் பொய் யாவிரதிகள் வேள்வி தழல்களை வாழ்விப்போர் - உண்மையாகிய ஸ்மிருதிநூலுண ர்ந்தவர்களும் பொய்க்காதவிரதிகளும் யாகாக்கினியை யோம்புவோர்களும், பை ஆடு அரவு அணி ஐயானனன் உரைபகர்வோர் உலகு இயல் அகல்வோர்கள் எய் யாது உறைதலின் - படம்விரித்தாடாநின்ற சர்ப்பத்தையணிந்த ஐந்துமுகங்களையு டைய சிவபெருமான் உரைத்தருளிய ஆகமநூலைக்கற்றுணர்ந்தவர்களும் பாசபந்த மொழிந்தவர்களும் வறுமையால் வருந்தாது வசித்தலால், தென் நாடு நையாத அ ளகை அது என்ன பொலிவது - பாண்டிநாடு வறுமையால்வருந்தாத அளகாபுரி போல் விளங்காநின்றது.

வையாகரணர் வியாகரணங்கற்றவர். நையாயிகர் நியாயநூல் கற்றோர் இ வை தத்திதாந்தபதங்கள். சொல்பொருள்மேல் நிற்றலால் சொல்லாகுபெயர். வியா கரணமும் நியாயமும் வேதநூலுணர்தற்குக் கருவியாதலால் மறைவல்லோர் என்ப தற்கு முன்னும், பிரபலசுருதியின்பொருளை யுணர்தற்குக் கருமகாண்டமும் ஞான காண்டமும் வேண்டியாதலால் மறைமுடிசொல்லாய்வோர் என்பதற்கு முன்னும், இ தற்கு அநுகுணமாதலால் மிருதிகள் எனவும், இவற்றை யையந்திரிபற வுணர்ந் தோர் விரதம் ஒம்புதற்கு உரியராதலால் அதன்பின் பொய்யாவிரதிகள் எனவும், இந்நிலையில்நிற்போர் வேள்விசெய்தற் குரியராதலால் வேள்வித்தழல்களை வாழ்விப் போர் எனவும், வேதம் உடலும், ஆகமமுயிரும் ஆதலால் அவற்றிற்குப் பின் ஐயா னனுரைபகர்வோர் எனவும், ஆகமத்திறனுண்மையுணர்ந்தோர் எல்லாவற்றினுஞ் சிற ந்தோர் ஆதலால் உலகியலகல்வோர்கள் என, அவற்றினிறுதியிலுஞ்சிறப்ப முறைபட க்கூறினர். (க௯)

உலவாக்கிழிபருளியபடலம் முற்றிற்று.

—:o:—

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கஎஉ௯.

Koviloor Digital Library

Koviloor Digital Library

வளையல்விற்றதிருவிளையாடல்



Koviloor Digital Library

முப்பத்திரண்டாவது

வளையல்விற்றபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வேதந்தனதுவடிவென்றுவிண்ணின்றிழிந்தவிமானமறைக்
கீதன்செழியன்றனக்குலவாக்கிழிதந்தளித்தவழியிதுவப்
போதங்கடந்தபொருள்வணிகப்புத்தேண்மாடமணிமறுகு
பாதந்தடவநடந்துவளைபகர்ந்தபரிசுபகர்கிற்பாம்.

(இ-ள்.) வேதம் தனது வடிவு என்று விண் நின்று இழிந்த விமானம் மறை கீதன் - வேதமே தனது திருவுருவமென்று கூறியருளி விண்ணுலகினின்றும்வந்த இந்திரவிமானத்தி லெழுந்தருளிய சாமவேதகீதனாகிய சோமசுந்தரக்கடவுள், செழியன் தனக்கு உலவாக்கிழிதந்து அளித்த வழி இது - குலபூடணபாண்டியனுக்கு உலவாக்கிழிகொடுத்தருளிய திருவிளையாடல் இது, அப்போதம் கடந்த பொருள் வணிகப்புத்தேள் - அந்தச்சுட்டறிவிற்கெட்டாத கடவுள்வணிகராய், மாடம் மணி மறுகு பாதம் தடவ நடந்து வளைபகர்ந்தபரிசு பகர்கிற்பாம் - மாடங்கள்நெருங்கிய அழகியவீதியில் தமதுதிருவடிதோயநடந்து வளையல்விற்ற திருவிளையாடலை யினிக் கூறுவாம்.

விமானத்துக்கு, வேதந்தனது வடிவென்று விண்ணின்றிழிந்த என்பதை அடையாக்கி, வேதமே தனதுவடிவமென்று விண்ணுலகினின்றும்வந்த விமானம் எனப் பொருள்கூறுதலும் ஒன்று. (க)

இறைவன்குலபூடணன்றிகிரியிவ்வாறுருட்டுநாண்முன்னாட்
சிறைவண்டறையுந்தாருவனதெய்வமுனிவர்பன்னியர்தந்
நிறையன்றளந்துகாட்டுகெனநெடியோன்மகனைப்பொடியாக்கு
மறவன்றானோர்காபாலியாகிப்பலிக்குவருகின்றான்.

(இ-ள்.) இறைவன் குலபூடணன் திகிரி இவ்வாறு உருட்டு நாள்-அரசனாகிய குலபூடணபாண்டியன் தனது ஆணையாகிய சக்கரத்தை யிவ்விதமாகச் செலுத்துங் காலையில், முன் நாள் சிறைவண்டு அறையும் தாருவன தெய்வ முனிவர் பன்னியர் தம் நிறை அன்று அளந்து காட்டுக என - முன்னாளில் சிறைகளையுடைய வண்டுகளொலிக்கும் தாருகவனத்தில் வசிக்குந் தெய்வத்தன்மைபொருந்திய முனிவர்களது மனைவியர்களுடைய கற்புநிலையை அக்காலையில் அளந்துகாட்டக்கடவேனென்று நெடியோன்மகனை பொடியாக்கும் மறவன் தான் ஓர்காபாலி ஆகி பலிக்குவருகின்றான் - திருமால்மகனாகிய மன்மதனை நீறாக்கிய வீரனாகிய சிவபெருமான் ஒருகபாலத்தையேந்தினவனாகிப் பலிக்குவருகின்றவனாயினான்.

பிரமன்புதல்வராதலால் தெய்வமுனிவர் எனவும், அவர்கள் தமக்குநேர்ந்த சாபத்தால் பரசிவத்தைக்கைவிட்டு வேள்வியைப் பொருளெனக்கொண்டிறுமாக்குஞ்செருக்கையும், அவர்கள் மனைவியர்கள் தமதுகற்பைப்போல் இலக்குமிமுதலியோர்கற்புச் சிறந்ததின்றென இறுமாக்குஞ்செருக்கையும் ஒழிக்கப்போந்தமையால் பன்னியர்தம் நிறையன்றளந்து காட்டுகென எனவும், தான் ஓர்பால் உமாதேவியாரோடு கூடியிருந்தருளியுங் காமனைநீறுக்கிய பெருந்துறவினனாதலால் நெடியோன் மகனைப்பொடியாக்கு மறவன் எனவுங்கூறினார். கபாலம் ஏந்ினவன் காபாலி இது தத்திதாந்தபதம். (உ)

Koviloor Digital Library

வேதமசைக்குங்கோவணமுமெய்யினீறுமுள்ளாளக்
கீதமிசைக்குங்கனிவாயுமுள்ளேநகையுங்கிண்கிணிசூழ்
பாதமலரும்பாதுகையும்பலிகொள்கலனுங்கொண்டிரதி
மாதுகணவன்றவவேடமெடுத்தாலொத்துவருமெல்லை.

(இ-ள்.) வேதம் அசைக்கும் கோவணமும் - வேதமாகியகட்டுக் கோவணமும், மெய்யில் நீறும் - திருமேனியில் வெண்ணீறும், உள்ளாளம் கீதம் இசைக்கும் கனிவாயும்-உள்ளாளமென்னுங்கீதத்தையிசைக்காநின்ற கோவைக்கனிபோன்ற திருவாயும், உள்ளே நகையும் - அத்திருவாயுள் அரும்பியபுன்னகையும், கிண்கிணிசூழ் பாதமலரும் பாதுகையும் பலிகொள்கலனும் கொண்டு - சதங்கையணிந்த பாததாமரையும் பாதுகையும் பலிவாங்குகலனுங்கொண்டு, இரதி மாது கணவன் தவவேடம் எடுத்தால் ஒத்துவரும் எல்லை - இரதிமாதுகணவனாகிய மன்மதன் ஒருதவவேடத்தை எடுத்துவந்தா லொத்துவருங்காலையில்.

உள்ளாளக்கீதம் என்றது ஒற்றின்மாத்திரைதோன்ற உள்ளேயிசைக்கும் ஆளத்தி. அதனை வழக்கிற்கனம் என்பர். (ரு.)

விள்ளுங்கமலச்சேவடிசூழ்சிலம்பினொலியுமிடறதிரத்
துள்ளுங்கீதவொலியுங்கைத்துடியினொலியுந்துளைச்செவிகீண்
டுள்ளம்பிளந்துநிறைகளைந்தீர்த்தொல்லைவருமுன்வல்லியர்கள்
பள்ளங்கண்டுவருபுனல்போற்பலிகொண்டில்லின்புறம்போந்தார்.

(இ-ள்.) விள்ளும் கமலம் சேவடிசூழ் சிலம்பின் ஒலியும் மிடறு அதிர துள்ளும் கீதம் ஒலியும் - மலர்ந்ததாமரைபோன்ற செவந்ததிருவடிமேற்சூழ்ந்த சிலம்பின் ஓசையும் கண்டத்தின்கண் அசையாது அதிரத்துள்ளாநின்ற கீதவோசையும், கைத்துடியின் ஒலியும் - திருக்கரத்திலேந்திய தமருகத்தினோசையும், செவி துளை கீண்டு உள்ளம் பிளந்து நிறைகளைந்து ஈர்த்து ஒல்லைவருமுன்-செவித்துளையைப்பெருந்துளைசெய்து உள்ளேசென்று மனத்தைவெளியாக்கிக் கற்பினைக்கொள்ளைகொண்டு இழுத்து விரைந்து வருதற்குமுன், வல்லியர்கள் பள்ளம் கண்டு வருபுனல் போல் பலிகொண்டு இல்லின்புறம்போந்தார் - தாருகவனமுனிவர் பன்னியர்கள் பள்ளத்தைக்கண்டு மேட்டினின்றுவரும் வெள்ளம்போலப் பலியையேந்தி வீட்டினின்று புறம்போந்தார்கள்.

ஒலி காதின்வழிச்செல்லுதற்குரியதாதலால் துளைச்செவிகீண்டு எனவும், அது மனத்தைக்கிழித்துச்செல்லுதலால் உள்ளம்பிளந்து எனவும், அது அங்குள்ளபொருள்களைப் பற்றறக்கவர்ந்தமையால் நிறைகளைந்தீர்த்து எனவும், மேட்டினின்றுவரும்பெருக்குப் பள்ளத்தைக் காணின் ஞெரேலென விரைந்துபாய்தல்போல மனம் வெளியானமையின் விரைந்தவர்களாதலால் பள்ளங்கண்டு வருபுனல்போற் பலிகொண்டு எனவுங்கூறினர். (சு)

௸ வேறு.

ஐயங்கொண்டலையாவாளையர்பரிகலத்தையன்றிக்
கையம்பொன்வளையும்பெய்வார்கருத்துநாணன்றிக்காசு
செய்யும்பொன்மருங்குநூலுமிழப்பர்வெள்ளிலையம்பன்றிக்
கொய்யுந்தண்மலர்க்கணம்புங்கொய்யைகயிற்சொரியச்சோர்வார்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஐயம் கொண்டு உலைவார் ஐயர் பரிகலத்து ஐயம் அன்றி கை அம் பொன் வளையும் பெய்வார் - பல்கோண்டுவெருமுனிவர் பன்னியர் ஐயரது பரிகலத்தில் ஐயமல்லாமலும் கையில் அணிந்த அழகிய பொன்னாலாகிய வளையலையுமிடுவார், கருத்து நாண் அன்றி காசு செய்யும் பொன் மருங்குல் நாணும் இழப்பர்- மனத்திலுள்ள நாணல்லாமலும் இரத்தினமிழைத்த பொன்னாலாகிய இடையிலணிந்த நாணையுமிழப்பர், வேள் சிலை அம்பு அன்றி கொய்யும் தண்மலர்க்கண் அம்பும் கொங்கையில் சொரிய சோர்வார் - மன்மதன் தனது வில்லிலேதொட்ட மலரம்பல்லாமல் கொய்யாநின்ற தண்ணிய தாமரைமலர்போன்ற தமது கண்க ளம்பினையுந் தனத்தின்மேற்சிந்த நிலைதளர்வார்கள்.

நாண் முன்னது நாற்குணங்களுள் சிறந்தநாண். பின்னது மேகலை. சிலையம்பு வில்விலேதொட்டபாணம். கண்ணம்பு கண்ணீர். இவை செம்மொழிச்சிலேடைகள். பெய்தல், இழத்தல், சொரிதல் இவை தம்முள் விரோதமின்றிக் கூடத்தக்கவைகளாயிருத்தலால் கூட்டவணி. சிறந்தநாண் என்றது மடம், அச்சம், பயிர்ப்பு என்ற முக்குணங்களும் அதன்வழித்தாதலால் "தாயிற்சிறந்தன்றுநாண்" என்றுந் திருக்கோவையாரில் உணர்க. (ரு)

மடமயிலனையாரெங்கள்வளையினைத்தருதிரென்றார்
கடல்விடமயின்றானுங்கள்கந்தரத்துள்ளதென்றான்
றடமதிக்கொம்பனாரெங்கலையினைத்தருதிரென்றார்
முடமதிமிலைந்தானுங்கண்முகமதியிடத்ததென்றான்.

(இ-ள்.) மடமயில் அனையார் எங்கள் வளையினை தருதிர் என்றார்-இளமைதங்கிய மயிலினையொத்த பெண்கள் எங்கள்வளையைக்கொடுங்களென்றார்கள், கடல் விடம் அயின்றான் நுங்கள் கந்தரத்து உள்ளது என்றான் - கடலிற்றோன்றிய விடத்தையுண்டருளிய பெருமானார் உங்கள்கண்டத்தில் உள்ளதென்று விடையருளினார், தடம் மதி கொம்பு அன்னார் எம் கலையினை தருதிர் என்றார் - பூரணசந்திரோதயஞ்செய்த பூங்கொம்புபோன்ற பெண்கள் எமது கலையைக்கொடுங்களென்று வினவினார்கள், முடம் மதி மிலைந்தான் நுங்கள் முகம் மதி இடத்தது என்றான்-வளைந்தபிறையையணிந்த பெருமானார் உங்கள் முகமாகிய சந்திரனிடத்துள்ளதென்று பணித்தருளினார்.

வளைமுன்னது வளையல், பின்னது சங்கு, கலைமுன்னது ஆடை, பின்னது சந்திரன்கலை. உம்மிடத்துக்கொண்ட காமவேட்கையால்மெலிந்து வளையுங்கலையுஞ் சோர்ந்தோமென்று கூறியமுனிவர் பன்னியர்கருத்துணர்ந்து உம்மிடத்து அக்காமவேட்கை,யாஞ்சிறிதுமில்லோமென்பது புலப்பட உங்கள் கந்தரத்துள்ளது உங்கள் முகமதியிடத்ததென எதிர்மொழிகொடுத்தலால் நட்பவணி. (சு)

இடையறிந்தெம்மைச்சேர்மினென்றனரிளையரெங்கோன்
கடலமுதனையீர்நுங்கட்கிடையினிக்காணாதென்றான்
மடநலாரின்றேற்பண்டைவண்ணமீந்திலிற்செல்ல
விடையளித்தருண்மினென்றார்வேலைபுக்குறங்குமென்றான்.

(இ-ள்.) இளையர் இடை அறிந்து எம்மை சேர்மின் என்றனர்-மங்கைப்பருவத்தையுடைய முனிவர் பன்னியர் இடையறிந்து எங்களைச் சேருங்களென்றுகூறினர், எம் கோன் கடல் அமுது அனையீர் நுங்கட்கு இடை இனி காணாது என்றான்-

Koviloor Digital Library

எமதுபெருமானார் கடலிற்றோன்றிய அமுதினையொத்தபெண்களே உங்களுக்கு இடை இப்பொழுது தோன்றுதென்று பணித்தார், மடம் நல்லார் அஃதேல் பண்டை வண்ணம் ஈந்து இல்லில் செல்ல விடை அளித் தருள்மின் என்றார் - இளமைப்பருவத்தையுடைய பெண்கள் அஃதாயில் முன்னுள்ள நிறத்தைத்தந்து எமது இல்லிற்கு நாங்கள்செல்ல விடைகொடுத்தருளுமென்று கூறினார், வேலைபுக்கு உறங்கும் என்றான் - கடலிற்புகுந்து அறிதுயில்கொள்ளுமென்று பணித்தருளினார்.

இடைமுன்னது சமையம், பின்னது மருங்குல், விடைமுன்னது உத்தரம், பின்னது திருமால். தமக்குத்திருமாலே விடையூர்தியாதலால் வேலைபுக்குறங்கும் என்றருளினார். இப்போது பெண்கள் பசலைபூத்திருத்தலால் இவ்வண்ணத்தோடுசெல்லின் எமதலைவர் கோபிப்பார் என்பார் பண்டைவண்ணமீந் தில்லிற்செல்ல விடையளித்தருண்மின் என்றார். இப்போதியாங்கள் உயிரிழக்கும் சமையத்தினராயிருத்தலால் சேர்ந்துயிர்தரவேண்டுமெனவும், எங்கள் தேகநிறம் வேறுபட்டமையால் அவ்வேறுபாடொழியப் புணரவேண்டும் என்றுமுனிவர் பன்னியர்கருத்துணர்ந்து முன்னர்க்கூறியது புலப்பட எதிர்மொழிகொடுத்தலால் இதுவும் அவ்வணி. (எ)

நங்கையர்கபாலிக்கென்றுநடுவிலைபோலுமென்றா
ரங்கணனடுவிலாமைநம்மனோர்க்கடுத்ததென்றான்
மங்கையரடிகணெஞ்சம்வலியகற்போலுமென்றார்
கொங்கலர்கொன்றையானுங்கொங்கையேவன்கலென்றான்.

(இ-ள்.) நங்கையர் கபாலிக்கு என்றும் நடு இலை போலும் என்றார்-முனிவர் பன்னியர் கபாலியாகிய உமக்கு ஒருக்காலும் நடுவில்லைபோலுமென்று கூறினார், அங்கணன் நடு இலாமை நம்மனோர்க்கு அடுத்தது என்றான்-சிவபெருமான் நடுவில்லாத்தன்மை நம்போலியர்க்கேயன்றி எம்போலியர்க்கு அடுத்ததன்று என்று விடையருளினார், மங்கையர் அடிகள் நெஞ்சம் வலியகல் போலும் என்றார்-அம்முனிவர் பன்னியர் அடிகளுடைய நெஞ்சம் வலிய கல்லையொக்குமென்று கூறினார், கொங்கு அலர் கொன்றையான் நுங்கொங்கையே வன்கல் என்றான் - மகரந்தத்தோடு மலர்ந்த கொன்றைமாலையையணிந்த சிவபெருமான் உமது தனமே வலியகல்லென்று பணித்தருளினார்.

நடுமுன்னது நடுவுநிலைமை, பின்னது இடை. மன்மதன் எங்களிடத்துச் சலஞ்சாதித்தலை யுணர்ந்தும் உணராதவர்போலத் தன்பமொழிக்காது நிற்கின்றீர் எனவும், அதனால் உமதுமனம் கல்லெனவும் கூறிய முனிவர் பன்னியர்கருத்துணர்ந்து முன்னர்க்கூறியது புலப்பட எதிர்மொழிகொடுத்தலால் இதுவும்அவ்வணி. (அ)

காதுவேலன்னகண்ணார்கங்கைநீர்சுமந்ததேதுக்
கோதுமினென்றார்நும்பாலுண்பலியேற்கவென்றா
னேதுபோலிருந்ததையனிசைத்தசெப்பென்றாரீசன்
கோதறுமமுதன்னீர்நுங்கொங்கைபோலிருந்ததென்றான்.

(இ-ள்.) காது வேல் அன்ன கண்ணார் கங்கைநீர் சுமந்தது எதற்கு ஓதுமின் என்றார் - கொல்லும்வேலை ஒத்த கண்ணையுடைய முனிவர் பன்னியர் கங்கையை நீர் சுமந்திருப்பது யாதுநிமித்தஞ் சொல்லும் என்று வினவினார், நும்பால் உண்பலி ஏற்க என்றார் - உம்மிடத்தின்றும்பலி ஏற்கச்சுமந்தோமென்று விடையருளினார், ஐயன் இசைத்த செப்பு எதுபோல் இருந்தது என்றார் - பெருமானார்கூறிய செப்பு

Koviloor Digital Library

யாதுபோலிருந்ததென்று அதிசயித்துக்கூறினர், ஈசன் கோது உறு அமுது அன்னீர் நம்கொங்கைபோல் இருந்தது என்றான் - பெருமானுர் குற்றமில்லாத அமுதத்தை யொத்த பெண்களே அச்செப்பு உமது தனத்தைப்போலிருந்ததென்று பணித்தருளினர்.

கங்கைநீர் முன்னது கங்காநீர், பின்னது கம்-பிரமகபாலம், கை-கரம் எனச் சொல்வகைசெய்து நீர் கபாலத்தைக் கையில் எனவும், செப்பு முன்னது விடை, பின்னது சரண்டகம் எனவும் பொருள்கொள்க. காமவெப்பத்தை யாற்றுதற்கன்றோ கங்கைநீர் சுமந்நீர் என்றுங் கருத்தினராய்க் கங்கைநீர்சுமந்த தேதுக்கோதுமினெனவினவத் தமக்கு அது இல்லாமைதோன்ற தும்பாலுண்பலியேற்கவெனவும், நாம்கூறின வினவிற்கு விடையில்லையேயென்னுங் கருத்தினராய் ஏதுபோலிருந்ததை யனிசைத்த செப்பென்றதற்குக் காமமயக்குடையவர்க்கு விடைகொடுப்பது தமக்குக் கருத்தின்மைதோன்ற நுங்கொங்கைபோலிருந்தது எனவுங்கூறினர். இதுவும் அவ்வணி. (௯)

கறுத்ததையெவன்கொலைகந்தரமென்றார்வேளை
வெறுத்தவன்மாரிபெய்தற்கென்றனன்விழியால்வேலை
யொறுத்தவர்யாவதென்றிருத்தரமென்றார்கூற்றைச்
செறுத்தவன்றென்பானின்றுநோக்கினுற்றெரிவதென்றான்.

(இ-ள்.) ஐய கந்தரம் கறுத்தது எவன்கொல் என்றார் - ஐயனே யுமது கந்தரங்கறுத்தது யாதுகாரணமென்று வினவினர், வேளை வெறுத்தவன் மாரிபெய்தற்கு என்றனன் - மன்மதனை நீறாக்கிய பெருமானுர் மழைபெய்தற்கென்று விடையருளினர், விழியால்வேலை ஒறுத்தவர் யாவது என்றீர் உத்தரம் என்றார்-தமதுகண்களால் வேலைவென்ற முனிவர் பன்னியர் எங்கள் வினவுக்கு யாதென்றுகூறினீர் உத்தரமென்று கேட்டார், கூற்றை செறுத்தவன் தென்பால் நின்றுநோக்கினுல் தெரிவது என்றான் - இயமனையுதைத்தருளிய அப்பெருமானுர் தென்றிசைக்கணின்றுநோக்கினுல் நீங்கள்கூறிய உத்தரம் தெரியுமென்று பணித்தருளினர்.

கந்தரம் முன்னது கண்டம், பின்னது மேகம், உத்தரம் முன்னது விடை, பின்னது வடதிசை, தம்பால் இரக்கமிலராதலால் கறுத்தநெஞ்சினரென்று முட்கோளினராய்க் கறுத்ததை யெவன் கொலை கந்தர மென்று முனிவர் பன்னியர் வினவத் தமது ஸ்ரீகண்டம் கறுத்தது பிரமன்முதலியோரைக் காத்தற்பொருட்டாதலால் மேகத்தின்மேலேற்றி மாரிபெய்தற்கெனவும், தாம் கூறியதற்கு உத்தரமில்லையேயென்னுங் கருத்தினராய் உத்தரம் யாதென்றார்க்குத் தென்பால்நின்று நோக்கில் உத்தரம் தெரியும் எனவுங்கூறினர். (௧0)

செக்கரஞ்சடையான்கண்ணிற்றம்முருத்தெரியநோக்கி
யிக்கொடியார்போற்கண்ணுளெம்மையுமிருத்திரென்றார்
நக்கனுந்தனையன்னார்கண்ணிடைக்கண்டுநகைத்துநம்மின்
மிக்கவர்நுங்கனுள்ளார்விழித்தவர்க்காண்மினென்றான்.

(இ-ள்.) செக்கர் அம் சடையான் கண்ணில் தம் உரு தெரியநோக்கி-சிவந்த அழகிய சடாமுடியையுடைய சிவபெருமான் திருக்கண்ணிற் றமதுருவம் புலப்படப்பார்த்து, இக்கொடியார்போல் கண்ணுள் எம்மையும் இருத்திர் என்றார் - இந்தக் கொடிபோன்ற இடையையுடைய பெண்களையிருத்தியதுபோல உமது திருக்கண்

Koviloor Digital Library

ளுள் எம்மையு மிருக்கச்செய்யும் என்றிரந்தார், நக்கறும் தன்னை அன்னார் கண் ணிடை கண்டு நகைத்து - அச்சிவபெருமானும் தன்னை அப்பெண்கள் கண்ணிடத்து ப்புலப்படக்கண்டு நகைத்து, நம்மின் மிக்கவர் நம் கண் உள்ளார் விழித்து அவர் காண்மின் என்றான் - நம்மினும் பேரழகுடையவர் உமது கண்களிலிருக்கின்றார் சரிவரவிழித்து அவரைவிளங்கக் காணுங்களென்று பணித்தருளினார்.

காமமயக்கினராதலால் சிவபெருமான் திருக்கண்ணிற் றம்முருப்பிரதி பிம்பி த்ததைநோக்கி வேற்றுமகளிரா யிருத்தியதுபோல எம்மையிருத்துதல் ஓர்பாரமோ வென்ற முனிவர் பன்னியர்க்குத்தாம் இயல்பாகவே காமமயக்கங் கழன்றோர் ஆத லால் நகைத்து எனவும், நம்மின்மிக்கவர் நுங்கணுளளார் விழித்தவர்க்காண்மின் எனவுங் கூறினார். இருத்திர் முன்னிலைப்பன்மை யேவற்பிறவினைமுற்று. (௬௧)

அஞ்சலிப்போதுபெய்வார்சரணமென்றடியில்வீழ்வார்
தஞ்செனத்தளிர்க்கைநீட்டித்தழுவியகிடைக்குந்தோறு
மெஞ்சுவானெஞ்சாதேத்தியெதிர்மறையெட்டுந்தோறும்
வஞ்சனுயகல்வான்மையல்வஞ்சியர்க்கணியனாமோ.

(இ-ள்.) அஞ்சலி போதுபெய்வார் - அஞ்சலித்து மலரைச்சூட்டுவார், சர ணம் என்று அடியில் வீழ்வார் - அடைக்கலமென்று திருவடியின்மேல்வீழ்வார்கள், தஞ்சம் என தளிர்கை நீட்டி தழுவிய கிடைக்குந்தோறும் எஞ்சுவான் - நீரோ எமக் கோர் பற்றுக்கோடென்று தளிர்போன்ற மெல்லிய கைகளைநீட்டித்தழுவ அவர்க ளுக்குக் கிட்டுந்தோறும் கிட்டாது அப்பாற்படுவான், எதிர் எஞ்சாது ஏத்தி மறை எட்டுந்தோறும் வஞ்சனாய் அகல்வான்-எதிர்நின்று குறைபடாதுவணங்கி வேதங்கள் தொடுந்தோறும் அணுகற்கரியனாய் நீங்கும்பெருமான், மையல் வஞ்சியர்க்கு அணி யன் ஆமோ - மயக்கவலையிற்பட்ட பெண்களுக்குச் சமீபித்தவனாவானோ.

தஞ்சம் சுறுதொருத்தல். அஞ்சலித்து மலர்சூட்டிநும் அடைக்கலமென்று திருவடிமேல்விழினும் மையல்வஞ்சியர் ஆதலால் தழுவியகிடைக்குந்தோறும் எஞ்சு வான் எனவும், பதிஞானமுணர்தற்குக் கருவியாகியவேதம் பாசஞானமாயிருத்தலா ல் அதற்கு அணியனாகாதவன் இவர்க்கு அணியனுதல் கூடாமையின்,மையல் வஞ்சி யர்க்கணியனாமோ எனவுங்கூறினார் " புறத்தார்க்குச்சேயோன் " எனவரும் பெரி யோர்திருவாக்காருணர்க. அஞ்சலி என்று முதனிலை இறந்தகால வினையெச்சத்தின் மேல்நின்றது. எஞ்சாதேத்தி யெதிர்மறையெட்டுந்தோறும் - வஞ்சனுயகலவான் மையல்வஞ்சியர்க்கணியனாமோ என்றது வேற்றுப்பொருள் வைப்பணி. (௬௨)

அடுத்தெமைத்தழாதிரேனிரவிழ்ந்தபூங்கலையைமீள
வுடுத்துமிறும்பால்யாங்கண்மையனோயுழப்பநோக்கிக்
கடுத்தெமர்முனியாமுன்னங்கழற்றியவளையுங்கையி
லெடுத்திடுமென்றார்காளையிடுதுமென்றேகினனே.

(இ-ள்.) நீர் அடுத்து எமை தழாதிரேல் - நீர் அடுத்து எம்மைத் தழுவாதிரு ப்பீராகில், அவிழ்ந்த பூ கலையை மீள உடுத்துமின் - சரிந்த அழகிய வுடையையா யினு மீள எடுத்து உடுத்தும், நும் பால் யாங்கள் மையல் நோய் உழப்ப நோக்கி- உம்மிடத்தில் நாங்கள் மயக்கநோயில்வருந்த அதனைப்பார்த்து, எமர் கடுத்து முனி யா முன்னம் - எம்முடையகணவர் கோபித்து வெறுக்காததற்குமுன்னம், கழற்றிய வளையும் கையில் எடுத்து இடும் என்றார் - முன்பு கழற்றிய வளையலையாயினும் எம

Koviloor Digital Library

று கையில் எடுத்திடுங்களென்றார், நாளை இடுதும் என்று எகினன் - நாளைக்கிடுவோ மென்று சென்றருளினர்.

வளைகழலுதல் சிவபெருமானைக்கருதியதன்மேல் நிகழ்ந்தசெய லாதலால் அச்சிவபெருமான்மேல் ஏற்றிக் கழற்றியவளையெனவும், இப்பெண்கள் சாபத்தால் வணிகுலக் கன்னியராயவதரித்தலால் நாளையிடுதுமென்றேகினன் எனவும், பரிசித்தலாலாயினும் மயக்கொழிவாமென்னுங் கருத்தினராதலால் உடுத்துமின் எனவும், எடுத்திடும் எனவுங் கூறினர். (கங)

பிள்ளைவெண்டிங்கள்வேய்ந்தபிரான்கொண்டுபோனநாணு
முள்ளமுமீட்கலாற்றாதுயங்கினர்கலையுஞ்சங்குந்
துள்ளவைங்கணையான்வாளிதுளைப்பவெம்பசலையாகங்
கொள்ளைகொண்டுண்ணநின்றாரந்நிலைகொழுநர்கண்டார்.

(இ-ள்.) பிள்ளை வெண் திங்கள் வேய்ந்த பிரான் கொண்டு போன நாணும் உள்ளமும் மீட்கல் ஆற்றாது உயங்கினர் - இளமைத்தன்மையையுடைய வெள்ளிய பிறையையணிந்த சிவபிரான் கைக்கொண்டுசென்ற நாணத்தையும் தமதுமனத்தையும் மீட்கமுடியாது மயங்கியமுனிவர் பன்னியர், கலையும் சங்கும் துள்ள - ஆடையும் வளையுஞ் சோரவும், ஐங்கணையான் வாளி துளைப்ப - பஞ்சபாணங்களையேந்திய மன்மதன்பாணங்கள் துளைக்கவும், வெம் பசலை ஆகம் கொள்ளை கொண்டு உண்ண நின்றார் - காமவிருப்பாலாகிய பசலை தமதுமார்பைக்கவர்ந்து படரவும் நின்றார்கள், அந்நிலை கொழுநர் கண்டார் - அவ்வாறு நின்ற நிலைமையைத் தாருகவன முனிவர் பார்த்தார்கள். (கச)

பொய்தவவடிவாய்வந்துநம்மனைப்பொன்னினன்னார்
மெய்தழைகற்பைநாணைவேரொடுங்களைந்துபோன
கைதவன்மாடக்கூடற்கடவுளென்றெண்ணித்தேர்ந்தார்
செய்தவவலியாற்காலமூன்றையுந்தெரியவல்லார்.

(இ-ள்.) செய் தவம் வலியால் காலம் மூன்றையும் தெரிய வல்லார் - செய்யுந்தவவன்மையால் திரிகாலங்களில் நிகழுஞ்செய்திகளையும் அளந்தறியவல்ல முனிவர்கள், பொய் தவம் வடிவாய் வந்து- பொய்த்ததவவடிவாய்வந்து, நம் மனை பொன்னின் அன்னார் மெய் தழை கற்பை நாணை வேரொடும் களைந்துபோன கைதவன்- நமது இல்வாழ்க்கைக் குரிய பன்னியரது உடலோடு வளர்ந்த கற்பையு நாணையும் வேரோடுங் களைந்துசென்ற வஞ்சகன், மாடம் கூடல் கடவுள் என்று எண்ணி தேர்ந்தார் - மாடங்கணெருங்கி யோங்கிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளே என்று சிந்தித்துணர்ந்தார்கள்.

முனிவர் பன்னியர் கற்பினிலையளந் தறிதற்பொருட்டே தவவடிவினராய்வருதலின் பொய்தவவடிவாய் எனவும், உயிர்க்குயிராய்க் கரந்துறைதலிற் கைதவன் எனவுங்கூறினர். (கரு)

மேற்படி வேறு.

கற்புத்திரிந்தார்தமைநோக்கிக்கருத்துத்திரிந்திர்நீளாழி
வெற்புத்திரிந்தமதிற்கூடன்மேயவணிகர்கன்னியராய்ப்

பொற்புத்திரியாதவதரிப்பிர்போமென்றிட்டசாபங்கேட்
டற்புத்திரிந்தாரெங்களுக்கிதகல்வதெப்போதெனமுனிவர்.

(இ-ள்.) கற்பு திரிந்தார் தமை நோக்கி கருத்து திரிந்தீர் - கற்பினின்றுவேறுபட்ட தமது பன்னியரைப்பார்த்து நீங்களோ மனவேறுபட்டீர்கள், நீள் ஆழி வெற்பு திரிந்த மதில் கூடல் மேய வணிகர் கன்னியராய் - நீண்ட சக்கரவாளகிரி தனதுருத்திரிந்துவந்த மதில்சூழ்ந்த மதுரையில்வசிக்கும் வணிகப் பெண்களாய், பொற்பு திரியாது அவதரிப்பீர் போம் என்று இட்ட சாபம் கேட்டு - இப்போதுள்ள அழகிற் சிறிதுங்குறைபடாது பிறக்கக்கடவீர் இங்குநின்று போமென்று இட்ட சாபத்தைக்கேட்டு அஞ்சி, அற்பு திரிந்தார் எங்களுக்கு ஈது அகல்வது எப்போது என - இல்வாழ்க்கைக்குரிய அன்பினின்று வேறுபட்ட பெண்கள் எங்களுக்கு இச்சாபம் நீங்குவது எப்போதென்றுவினவ, முனிவர் - தாருகவனத்துமுனிவர்கள். (கசு)

அந்தமாடமதுரைநகர்க்கரசாகியசுந்தரக்கடவுள்
வந்துநும்மைக்கைதீண்டும்வழியிச்சாபங்கழியுமெனச்
சிந்தைதளர்ந்தபன்னியருந்தென்னர்மதுரைத்தொன்னகரிற்
கந்தமுல்லைத்தார்வணிகர்காதன்மகளிராய்ப்பிறந்தார்.

(இ-ள்.) அந்த மாடம் மதுரைநகர்க்கு அரசாகிய சுந்தரக்கடவுள் வந்து-மாடப்பெருக்கமிகுந்த அந்தமதுரைத் திருநகர்க்கு அரசாயிருந்த சோமசுந்தரக்கடவுள் மானிடத்திருவுருவங்கொண்டுவந்து, நும்மை கை தீண்டும் வழி இச்சாபம் கழியும் என - உங்களைக் கைதீண்டுமளவில் இந்தச்சாபம் கழியுமென்றனுக்கிரகிக்க, சிந்தை தளர்ந்த பன்னியரும் - அதுகேட்டு மனந்தளர்ந்த முனிவர்பன்னிமாரும், தென்னர் மதுரை தொல் நகரில் கந்தம் முல்லை தார் வணிகர் காதல் மகளிராய் பிறந்தார்- அச்சோமசுந்தரக்கடவுளுடைய மதுரையாகிய தொன்றுதொட்டுள்ள திருநகரத்திலுள்ள வாசனைநிறைந்த முல்லைமாலையையணிந்த வணிகர்க்கு விருப்பமிக்க புத்திரிகளாய்ப் பிறந்தார்கள்.

தென்னர் என்பதின் முதலில் அகரச்சுட்டுத் தொக்குநின்றது. (கஎ)

வளர்ந்துபேதையிளம்பருவமாறியல்குற்புடையகன்று
தளர்ந்துகாஞ்சிமருங்கொசியத்ததும்பியண்ணாந்தரும்புமுலை
கிளர்ந்துசெல்லும்பருவத்திற்கிடைத்தாராகவிப்பான்மண்
ணளந்தவிடையான்வந்துவளைபகரும்வண்ணமறைகிற்பாம்.

(இ-ள்.) வளர்ந்து பேதை இளம் பருவம் மாறி - (அப்பெண்கள்) வளர்ந்து பேதைப்பருவமாறி, அல்குல் புடை அகன்று தளர்ந்து காஞ்சி மருங்கு ஒசிய ததும்பி அண்ணாந்து அரும்பு முலை கிளர்ந்து செல்லும் பருவத்தில் கிடைத்தார் ஆக - அல்குல் புடைபரவக்காஞ்சியென்னும் ஆபரணத்தைத்தரித்த இடைதளர்ந்து ஒசியமுகங்கொண்டு மேலெழுந்தண்ணாந்துதோன்றிய முலைபருத்தோங்கு மங்கைப்பருவத்தில்வர, இப்பால் மண் அளந்த விடையான் வந்து வளை பகரும் வண்ணம் அறைகிற்பாம் - இப்புறம் நிலவுலகையளந்த இடபவூர்தியையுடைய சோமசுந்தரக்கடவுள் மானிடத்திருவுருவங்கொண்டுவந்து வளையல்விற்ற திருவிளையாடலைக் கூறுவாம்.

மங்கைப்பருவத்திற்குரிய குறிகளாதலால் அல்குற்புடையகன்று மருங்கொசியத்ததும்பி யண்ணாந்தரும்புமுலை கிளர்ந்துசெல்லும் எனக்கூறினர். (கஅ)

Koviloor Digital Library

கங்கைகரந்துமணிகண்டங்கரந்துநுதற்கண்கரந்தொருபால்
மங்கைவடிவுங்கரந்துமையுமழுவுங்கரந்துமழவிடையூ
ரங்கணழகர்வளைவணிகராகியேனமளந்தறியாச்
செங்கமலச்சேவடியிரண்டுந்திரைநீர்ஞாலமகள்சூட.

(இ-ள்.) கங்கை கரந்து மணி கண்டம் கரந்து நுதல் கண் கரந்து ஒருபால் மங்கை வடிவும் கரந்து உமையும் மழுவும் கரந்து - முடியிற்சூடிய கங்கையையும் ஸ்ரீகண்டத்தையும் நெற்றிக்கண்ணையும் இடப்பாலுள்ள உமாதேவியார் திருவுருவத்தையும் ஏந்திய மானையு மழுவையும் ஒளித்து, மழவிடை ஊர் அங்கண் அழகர் வளை வணிகர் ஆகி - இளமைதங்கிய விடையை நடத்தும் சோமசுந்தரக்கடவுள் வளையல்பகரும்வணிகராய், ஏனம் அளந்து அறியாத செம் கமலம் சேவடி இரண்டும் திரை நீர் ஞாலம் மகள் சூட - திருமால்வராக மூர்த்தமாய் நிலவுலகம்கிண்டு சென்றுமுணராத செந்தாமரைபோன்ற செவந்த திருவடிகளிரண்டையும் கடலையாடையாகச்சூழ்ந்த நிலமகள் சூடும்பொருட்டு.

பிரமன்முதலிய ஆன்மாக்க ளுய்தற்பொருட்டுத் தாம்கொண்ட திருவுருக்கரந்துவந்தனர் என்பார் கங்கைகரந்து உமையுமழுவுங் கரந்தெனவும், வந்த திருக்கோலமும் அருளுதற்பொருட்டாதலால் வளைவணிகராகி யெனவுங் கூறினர். (கரு)

பண்டுமுனிவர்பன்னியர்பாற்கவர்ந்தவளையேபட்டுவட்டங்
கொண்டுதொடுத்துமீண்டவர்க்கேயிடுவேமெனுமுட்கோளினர்போற்
றொண்டர்தொடுத்தவைவண்ணத்துணர்த்தார்போலத்தோள்சுமந்து
மண்டுவளையைவிலைபகர்ந்துவணிகமறுகில்வருகின்றார்.

(இ-ள்.) பண்டு முனிவர் பன்னியர் பால் கவர்ந்த வளையே பட்டு வட்டம் கொண்டு தொடுத்து - முன்பு முனிவர் பன்னியரிடத்துக் கொள்ளைகொண்ட வளையலையே பட்டுவடத்திற் கோவைசெய்து, மீண்டு அவர்க்கே இடுவோம் என்னும் உட்கோளினர் போல் - மீளவும் அவர்க்கே தொடுப்போமென்னும் உட்கருத்தினர்போலவும், தொண்டர் தொடுத்த ஐவண்ணம் துணர் தார்போல தோள் சுமந்து - தமது அடியார்சாத்திய ஐந்துநிறங்களையுடைய பூங்கொத்தாலமைத்த மாலைபோலவும் தமது திருத்தோளிற்சுமந்து, மண்டு வளையை விலை பகர்ந்து வணிக மறுகில் வருகின்றார் - அடுக்காய் நெருங்கிய வளையலை விலைகூறி வணிகர்வீதியில் வருவாராயினர்.()

மன்னுமறையின்பொருளுரைத்தமணிவாய்திறந்துவளைகொண்மி
னென்னுமளவிற்பருவமுகிலிமிழின்னிசைகேட்டெழுமயில்போற்
றுன்னுமணிமேகலைமிழற்றத்தூயவணிகர்குலமகளிர்
மின்னுமணிமாளிகைநின்றும்வீதிவாயிற்புறப்பட்டார்.

(இ-ள்.) மன்னும் மறையின் பொருள் உரைத்த மணிவாய் திறந்து வளை கொண்மின் என்னும் அளவில் - நிலைபெற்றவேதத்தின்பொருளைக் (சனகாதிமுதலிய முனிவர்களுக்குச்) கூறியருளிய அழகிய திருவாய்மலர்ந்தருளி வளைவாங்குமின் என்றுகூறும் அளவில், பருவம் முகில் இமிழ் இன் இசை கேட்டு எழும் மயில் போல் - கார்காலத்திற் சூற்கொண்ட மேகம் ஒலிக்குமினிய ஒலியினைக்கேட்டு ஆடச் சிறைவிரித்தெழு மயில்போல, துன்னும் மணி மேகலை மிழற்ற - நெருங்கிய இரத்தினமிழை

Koviloor Digital Library

த்த மேகலையொலிக்க, தூய வணிகர் குலமகளிர் - களங்கமில்லாத வணிகர் குலப் பெண்கள், மின்றும் மணி மாளிகை நின்றும் வீதி வாயில் புறப்பட்டார் - விளங்கா நின்ற இரத்தினமழுத்திய மாளிகையினின்றும் வீதியிற் புறப்பட்டார்கள்.

வளைகொண்மினென்ற திருவாய் வேதத்தின்பொருளுணர்த்த அருமைத் திருவாயென்பார் மன்றுமறையின் பொருளுணர்த்த மணிவாய் என்றார். (உக)

வளைகளிடுவாரெனத்தங்கண்மனமெல்லாந்தம்புடையொதுங்கத்
தளைகளிடுவார்வருகின்றார்தம்மைக்கொம்மைவெம்முலையார்
துளைகளிடுநிக்குழலிசைபோற்சுரும்புபாடக்கருங்குழன்மேல்
விளைகளொழுகநுடங்கிவருமின்போலடைந்துகண்டார்கள்.

(இ-ள்.) வளைகள் இடுவார் என தங்கள் மனம் எல்லாம் தம்புடை ஒதுங்க தளைகள் இடுவார் வருகின்றார் தம்மை-வளைகளைத்தொடுப்பவரைப்போலத் தங்களுடைய மனமெல்லாம் தம்பாலொதுங்க விலங்கிடுவாராகி வருஞ் சோமசுந்தரக்கடவுளை, கொம்மை வெம் முலையார் துளைகள் இடு நிம் குழல் இசை போல் சுரும்பு பாட கரும் குழல் மேல் விளைகள் ஒழுக- திரண்ட விருப்பத்தைத் தருமுலைகளையுடைய வணிககுலப்பெண்கள் துளைகள்பொருந்திய இனிய வேய்ங்குழலி னிசையைப் போல வண்டுகள்பாடவும் கரியகூந்தலினின்றுந் சுரக்குமதுச்சிந்தவும், நுடங்கிவரும் மின் போல் அடைந்து கண்டார்கள் - (நிலவுலகின்மேல்) துவண்டுவரு மின்னலைப்போலச் சென்று தரிசித்தார்கள்.

எழுதற்கரிய நல்லெழில் வாய்ந்தபெண்கள் என்பார்பாட, ஒழுக நுடங்கிவருமின்போலென இல் பொருளுவமையணிதந்து கூறினார். (உஉ)

கண்டவடிவாற்றிளைப்பதற்குக்கழிபேரன்புகாதல்வழிக்
கொண்டுசெல்லவொருசார்தங்குணநாணமுதனான்கு
மண்டியொருசார்மறுதலைப்பமனமுமுழன்றுதடுமாற
வண்டர்பெருமான்விளையாடற்கமையச்சூழ்ந்தாரமுதனையார்.

(இ-ள்.) கண்ட வடி வால் திளைப்பதற்கு - அவரைத் தரிசித்த திருவுருவத்தோடுகூடி அநுபவித்தற்கு, கழி பேர் அன்பு - எழுந்தமிக்க பெரியஅன்பு, காதல் வழிக்கொண்டு ஒருசார் செல்ல -(தமது மனத்தை) காமவிருப்பத்தின் வழியேகொண்டு ஒருபக்கம் செலுத்தவும், ஒரு சார் தம் குணன் ஆம் நாணமுதல்நான்கும் மண்டி மறுதலைப்ப-ஒருபக்கம் தமது குணமாகிய நாணமுதலியநான்கும் தம்முள் கலைகலந்து முரணவும், மனமும் உழன்று தடுமாற-காதல்வழிச்சென்ற அம்மனமும் நிலைநிற்காதடுமாறவும், அண்டர் பெருமான் விளையாடற்கு அமுத அனையார் அமையசூழ்ந்தார் - தேவர்பிரானாகிய அச்சோமசுந்தரக்கடவுள் திருவிளையாடல் செய்தற்குக்கடலிற்றோன்றிய அமுதபோன்ற வணிகர்குலப்பெண்கள்பொருந்தப் புறம்பில் மொய்த்தார்கள்.

ஆசைக்குக்காரணம் அன்பாதலால் அன்புகாதல் வழிக்கொண்டு செல்லவெனவும், காமமேலிட்டால் நாணமுதலிய நற்குணமும் நிலைகலங்கும் ஆதலால் மறுதலைப்பனவும்,அவைகளெங்கேவழிமனம் ஒருவழிப்பட்டு நில்லாதாதலால் மனமுழு

Koviloor Digital Library

மூன்று தடமோற எனவுங் கூறினர். நாற்குணங்களாவன நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. (உங)

கலிவிருத்தம்.

இரங்குமேகலைசிலம்பன்றியேனைய
விரும்பியகுழைதொடிமின்செய்கண்டிகை
மருங்கிறச்சுமப்பினும்வளைகைக்கில்லெனி
னரும்பியமுலையினர்க்கழகுண்டாகுமோ.

(இ-ள்.) இரங்கு மேகலை சிலம்பு அன்றி - ஒலிக்குமேகலையுஞ் சிலம்புமல்லாமல், ஏனைய விரும்பிய குழை தொடி மின் செய் கண்டிகை மருங்கு இற சுமப்பினும் - அவையொழிந்த விரும்பப்பட்ட குண்டலமும் சூடகமும் விளங்குங் கண்டிகையும் ஆகிய இந்த வாபரணங்களை யிடைமுறியச் சுமந்தாலும், அரும்பிய முலையினர்க்கு - தாமரை அரும்புபோல முகிழ்த்த தனங்களையுடைய பெண்களுக்கு, வளை கைக்கு இல்லெனின் அழகு உண்டாகுமோ - வளையல் கைகளுக்கு இல்லையாயின் அழகுண்டாகுமோ (இல்லையென்றபடி.)

மங்கலஞ் செய்தற்குரியது வளையன்றி யேனையணியன்மையால் வளைகைக்கில்லெனில் - அரும்பிய முலையினர்க் கழகுண்டாகுமோ என்றார். (உச)

செல்வநல்வணிகிரொஞ்செங்கைக்கேற்பன
நல்வளைதெரிந்திடுமென்றுநாய்கர்முன்
வல்வளரிளமுலைமகளிர்மின்னுமிழ்
கல்வளர்கடகமென்காந்தணீட்டினர்.

(இ-ள்.) செல்வம் நல்வணிகிர் - செல்வத்தையுடைய நல்லவணிகரே, எம் செம் கைக்கு ஏற்பன நல்வளை தெரிந்து இடும் என்று - எமது செவந்தகைகளுக்குப் பொருந்தும் வளையல்களுள் நல்ல வளையல்களைத் தெரிந்து தொடுங்களென்று, நாய்கர் முன் வல் வளர் இள முலை மகளிர்-வணிகத் திருக்கோலங் கொண்டுவந்த அச்சோமசுந்தரக்கடவுள்முன் சூதாடு கருவியைப்போல் குவிந்துவளர்ந்த இளமைதங்கிய தனத்தையுடைய பெண்கள், மின் உமிழ் கல் வளர் கடகம் மென் காந்தள் நீட்டினர் - ஒளிவீசும் இரத்தினமழுத்திய கடகமணிந்த மெல்லிய காந்தண்மலர்போன்ற கைகளை நீட்டினர்கள்.

கணந்தோறுங் காமமேலீட்டாற் றமது தேகம் படிப்படி மெலிந்து வருதலை யொழிப்பீரொன்றும் பொருள்தோன்ற எம்செங்கைக் கேற்பன நல்வளைதெரிந்திடும் எனப்பிறி தொருவகையாற் கூறுதலால் பிறிதிறுவற்சியணி. (உரு)

பண்டருகிளவியங்கயற்கட்பாவைகைத்
தண்டளிர்பற்றியதடக்கைமாதர்கைம்
முண்டகம்பற்றியேமுகிழ்த்துப்பல்வரி
வண்டுகளேற்றுவார்மையலேற்றுவார்.

(இ-ள்.) பண் தரு கிளவி அம் கயல் கண் பாவை கைதண் தளிர் பற்றிய தடக்கை - இசையையொத்த சொற்களையுடைய அங்கயற்கண்ணியம்மையார் திருக்கரமாகிய தண்ணியதளிரைத்தொட்ட நீண்டதிருக்கரத்தால், மாதர் கை முண்டகம்

பற்றிய முகிழ்த்து - வணிககுலப்பெண்களின் கைத்தாமரைகளைப்பிடித்து முன்பு சேர்த்த, பல் வரி வண்டுகள் ஏற்றவார் மையல் ஏற்றவார் - பலவரிகளையுடைய வளையல்களைச் சேர்ப்பவர்போலக் காமமயக்குத் தலைக்கேறச் செய்வார்.

ஆன்மாக்கள் தத்தம் வினைப்பயன்களை நுகர்ந்து பரிபாகம் அடைதற்பொருட்டுப் பராசத்தி திருக்கரந்தொட்ட திருக்கரமென்பார் கங்கணபற்கட்பாவை கைத்தண்டனிற் பற்றிய தடக்கையெனவும், அத்திருக்கரங்களால் முனிவர் பன்னியர் நுகருஞ் சாபங்கழித்தருளுவர் என்பார் மாதர்கைம்முண்டகம் பற்றியேமுகிழ்த்து மையலேற்றவார் எனவுங்கூறினர். (உசு)

புங்கவனிடுவளைபுடைத்துமீளவந்
தெங்களுக்கிடவிலையிடுதிராவெனக்
கொங்கவிழ்பைங்குழலெருத்தங்கோட்டிநின்
றங்கரநீட்டுவாராசைநீட்டுவார்.

(இ-ள்.) புங்கவன் இடுவளை புடைத்து மீளவந்து - வணிகர்குலப்பெருமான் இட்ட வளையலைத் தகர்த்துத் திரும்பவந்து, எங்களுக்கு இட இலை இடுதிர் என-எங்களுக்குத் தொடுக்கவில்லை தொடுமென்று, கொங்கு அவிழ் பைங்குழல் எருத்தம் கோட்டி நின்று - மகரந்தம்பரந்த பசிய கூந்தல் சரிந்த பிடரை வளைத்து நின்று, அங்கரம் நீட்டுவார் ஆசை நீட்டுவார் - அழகிய கைகளை நீட்டுவார்போலத் தமது ஆசைப்பெருக்கினை நீட்டுவார்கள்.

முன்பு வளையல் தொடுக்கப்பட்ட பெண்களாதலால் பரிசவின்பங்கருதி வளையலைத்தகர்த்துத் தமதுருக்கேட்டாது வந்து கைநீட்டினாராதலால் எருத்தங்கோட்டி நின்றங்கரநீட்டுவார் என்றார். (உஎ)

எமக்கிடுகெமக்கிடுமெனப்பின்பற்றியே
யமைத்தடந்தோளினாரனங்கன்பூங்கணை
தமைத்துளைபடுத்தவோர்சார்பிலாமையாற்
கமைப்புறுநான்முதல்காப்புநீங்கினார்.

(இ-ள்.) அமை தடம் தோளினார் - மூங்கிலையொத்த பருத்த தோளையுடைய வணிகுலப்பெண்கள், எமக்கு இடும் எமக்கு இடும் என பின்பற்றி - எமக்குத்தொடும் எமக்குத்தொடும் என்று ஒருவர்பின் ஒருவர் வந்து, அனங்கன் பூம் கணை தமை துளைபடுத்த ஓர் சார்பு இல்லாமையால்-மன்மதனது மலர்ப்பாணந் தம்மைத்துளைக்க அதை நீக்குவதற்குத் தமக்கோர் பற்றுக்கோடில்லாமையால், கமைப்பு உறு நான்முதல் காப்பு நீங்கினார் - தமக்குச்சார்பாயுள்ள நாணமுதலிய நாற்குணங்களின் காவலினின்றும் நீங்கினார்கள்.

வளைவணிகர் பற்றுக்கோடொருப்பில் நாணமுதலிய நாற்குணங்களின் காவலினின்றும் நீக்கார் என்றும் பொருள் போதராமைக் குறிப்பெச்சம். (உஅ)

முன்னிடுவளையெலாங்கழலமுன்புகுழ்ந்
தின்னவைபெரியவேறிடுமென்றிட்டபி
னென்னவுமளையவேயாகமீளவந்
தின்னமுஞ்சிறியவாமிடுமென்றேந்துவார்.

Koviloor Digital Library

(இ-ள்.) முன் இடுவளை எல்லாம் சுழல - முன்பு தொடுத்த வளையலெல்லாஞ்சோர, முன்பு சூழ்ந்து இன்னவை பெரிய - முன்பு சென்று சூழ்ந்து இப்போது தொடுத்த வளையல்கள் அளவிற் பெரியனவாயிருத்தலினாற் (கழன்றன) வேறு இடும் என்று - கையளவிற்கேற்ப வேறு வளையல் தொடுமென்று கூறி, இட்டபின்-தொடுத்த பின்பு, அன்னவும் அனையவே ஆக - அவ்வளையலு மத்தன்மையனவாகவே சோர, மீளவந்து இன்னமும் சிறிய ஆக இடும் என்று ஏந்துவார் - மீளவும் வந்து இவ்வளையலினுஞ் சிறியனவாகத் தொடுமென்று கையை நீட்டுவார். (உக)

பின்னிடுவளைகளுஞ்சரியப்பேதுறு
முன்னெதிர்குறுகிநீர்செறித்தமொய்வளை
தன்னொடுகலைகளுஞ்சரிவதேயென
மின்னெனநுடங்கினார்வேனெடுங்கணார்.

(இ-ள்.) பின் இடும் வளைகளும் சரிய பேது உறு - பின்பு இட்ட வளையல்களும் அவ்வாறேசரியமயங்கி, முன் எதிர் குறுகி நீர் செறித்த மொய்வளை தன்னொடு- தம்முன்னே வந்து நீர் தொடுத்த நெருங்கிய வளையலோடு, கலைகளும் சரிவதே என - மேகலைகளுஞ் சரிகின்றதேயென்று, வேல் நெடும் கண்ணார் மின் என நுடங்கினார் - வேல்போன்ற நீண்ட கண்களையுடைய வணிககுலப்பெண்கள் மின்னலைப்போலத் துவண்டார்கள். (ங0)

இவ்வளைபோல்வனயாமுன்கண்டிலே
மெய்வளைவணிகிரிவ்வரியவெள்வளை
யெவ்வயினுள்ளவின்றினியவாகியெம்
மெய்ம்மயிர்பொடிப்பெழவீக்கஞ்செய்தவே.

(இ-ள்.) மெய்வளை வணிகிர் - கூனிய சரீரத்தையுடைய வணிகரே, இ அரிய வெள்வளை எவ்வயின் உள்ள - இந்தப் பெறுதற்கரிய வெள்ளிய வளையல்கள் எவ்விடத்துள்ளன, இன்று இனிய ஆகி எம் மெய் மயிர் பொடிப்பு எழ வீக்கம் செய்த - இன்று எங்கள் மனத்துக்கினியனவாகி எம்முடம்பிலுள்ள மயிர் முற்றும் புளகிக்கக் காமப்பெருக்கைச் செய்தன, (அதனால்) இவ்வளை போல்வன யாம் முன் கண்டிலேம் - இந்த வளையல்போன்ற வளையல்களை யாம் முன்பு ஒருபோதும் பார்த்திலேம்.

சிவபெருமான் பரிசிக்குந்தோறும் தமக்கு ஆராவின்பம் மேலிடுதலால் இவ்வளைபோல்வன யாமுன் கண்டிலேம் எனவும், வளையலுக்கு இக்குணமின்மையால் இவ்வரியவெள்ளை-எவ்வயினுள்ள எனவும் கூறினார்கள். (ஙக)

நாளையும்வளையிடநண்ணுமிங்கென்பார்
கோள்வளைவிலையிதுகொண்டுபோமென்பார்
வாள்விழியீர்பினாள்வாங்கிக்கோடுமென்
றுளரிபேறனாரடிப்போயினார்.

(இ-ள்.) நாளையும் வளை இட இங்கு நண்ணும் என்பார்-நாளைக்கும் வளையல் தொடுக்க இங்குவாருமென்பார்கள், கோள் வளை விலை இது கொண்டுபோம் என்பார்-நாங்கள் கொண்ட வளையலுக்குத் தருமிது விலைப்பொருள் அதனைப் பெற்றுப்போமென்று சிலர் கூறுவார், வாள் விழியீர் பின் நாள் வாங்கி கோடும் என்று - வாள்

Koviloor Digital Library

போன்ற பிறழ்ச்சியையுடைய கண்களையுடைய பெண்காள் பின்னுளில் வாங்கிக் கொள்வோமென்று கூறி, ஆள் அரி ஏறு அன்னுர் ஏகி போயினர் - நரசிங்கத்துக் கோர் ஆண்சிங்கம்போன்ற வணிகப்பெருமானர் இவ்வாறு திருவிளையாடல் செய்து சென்றருளினர்.

பெருவிலைகொடுப்பின் நாளையும் விலையிடவருவர் என்னுங் கருத்தால் வளை விலை யிதுகொண்டுபோம் எனக்கூறினர்கள். (கூஉ)

போயினவணிகர்தம்புடையின்மின்னெனப்
பாயினமகளிரும்பலருங்காணமுன்
மேயினவிண்ணிழிவிமானத்துள்ளொளி
யாயினதிருவுருவாகித்தோன்றினர்.

(இ-ள்.) போயின வணிகர் தம்புடையில் மின் என பாயின மகளிரும் பலரும் காண - சென்ற வணிகப்பெருமானும் தமது பக்கத்தில் மின்னலைப்போலப் பரவிய பெண்களு மேனையோரும் கண்டுவியக்க, முன் மேயின விண் இழி விமானத்துள் ஒளி ஆயின திரு உருவு ஆகி தோன்றினர்-முன்பு தாம் எழுந்தருளிய விண்ணுலகத்தினின்றுவந்த இந்திரவிமானத்துள் ஒளிமயமாகிய திருவுருவமாகித் தோன்றியருளினர். (கூங)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மட்டலம்புகோதையார்முன்வளைபகர்ந்தவணிகர்தாம்
பட்டிசைந்தவல்குனங்கைபாகராகுமெனவியந்
துட்டதும்புமுவகைவெள்ளமுற்றெழுந்தகுமிழிபோற்
கட்டதும்புபுனலிலாழ்ந்துகளியடைந்தநகரெலாம்.

(இ-ள்.) மட்டு அலம்பு கோதையார் முன் வளை பகர்ந்த வணிகர் தாம் - தேன் சிந்த மாலையை அணிந்த பெண்கள் முன் வளையல் பகர்ந்த வணிகத்திருவுருவினர், பட்டு இசைந்த அல்குல் நங்கை பாகர் ஆகும் என வியந்து - செம்பட்டணிந்த அல்குலையுடைய உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய சோமசுந்தரக்கடவுளாமென்று அதிசயங்கூர்ந்து, உள் ததும்பும் உவகை வெள்ளம் உற்று எழுந்த குமிழிபோல்-மனத்துள் ததும்பிய ஆனந்தவெள்ளத்தில் பொருந்தி யெழுந்த குமிழியைப்போல, நகர் எல்லாம் கண் ததும்பு புனலில் ஆழ்ந்து களியடைந்த - நகரத்திலுள்ளோரெல்லாம் கண்களில் மொக்குளித்தெழுந்த ஆனந்தநீர் வெள்ளத்திலழுந்திக் களிப்படைந்தார்கள்.

வளைபகர்ந்த வணிகர் தமக்கென வோருருவிலரென்பார் பட்டிசைந்த வல்குல் நங்கை பாகராகும் எனவும், அவர் இவர்கள்பொருட்டு ஒருருக்கொடுவந்தனர் என்பார் வியந்து எனவும், அதனாற் பரவசமாயினர் என்பார் உட்டதும்பு முவகை வெள்ளமுற்றெழுந்த குமிழிபோற் கட்டதும்புபுனலிலாழ்ந்து எனவுங் கூறினர்.()

உருவிலாளியுடல்பொடித்தவொருவர்கூடலிருவரான்
மருவிலார்திருக்கைதொட்டுவளைசெறித்தநீர்மையாற்
கருவின்மாதராகிநாய்கர்கன்னிமார்கண்மின்றுவேற்
பொருவில்காளையெனவரம்பில்புதல்வரைப்பயந்தனர்.

KOVILOOR MADALAYAM
Koviloor Digital Library
KOVILUR-630 307
MANAGIRI VIA

(இ-ள்.) உருவிலாளி உடல் பொடித்த ஒருவர் - மன்மதனுடைய சரீரத்தை நீறுபடுத்திய ஒருவரும், கூடல் இருவரால் மருவிலார் - மதுரையி லெழுந்தருளிய பிரமவிஷ்ணுக்களால் தேடியறிதற்கரியவருமாகிய சோமசுந்தரக்கடவுள், திருக்கை தொட்டு வளை செறித்த நீர்மையால்-தமது திருக்கரங்களால் தொட்டு வளையல்தொடுத்த தன்மையால், நாய்கர் கன்னிமார்கள் கருவின் மாதர் ஆகி - வணிகர்குலப்பெண்கள் கருப்பம் வாய்ந்த பெண்களாய், மின்னு வேல் பொருவு இல் காளை என வரம்பு இல் புதல்வரை பயந்தனர் - விளங்காநின்ற வேலேந்திய ஒப்பில்லாத முருகக்கடவுளைப்போல அளவில்லாத அழகுவாய்ந்த புத்திரர்களைப் பெற்றார்கள்.

ஒருபாகம் பெண்ணுருவாய்ந்தும் காமனைவென்றோர் ஆதலால் ஒருவர் எனவும், இயற்கைபிற்பற்றிகந்தசுட் டறிவிற்படாதவராதலால் காமவயத்தினராய்ச் சுட்டறிவிற்பட்ட பிரமவிஷ்ணுக்களால் அறிதற்கரியராதலால் இருவரால் மருவிலார் எனவும், ஆன்மாக்கள் கருதி யாங்கருள்பவராதலால் திருக்கைதொட்டு வளைசெறித்தநீர்மையால் வரம்பில்புதல்வரைப்பயந்தனர் எனவுங் கூறினர். (ருரு)

பிறந்தமைந்தரளவிறந்தபெருமைகொண்டபெருமிதஞ்
சிறந்தவீரமாற்றலேற்றதிறல்புனைந்துவைகினர்
மறந்ததும்புவேனெடுங்கண்வணிகமாதர்சிறிதுநா
டுறந்தரன்றனருளடைந்துதுணையடிக்கண்வைகினர்.

(இ-ள்.) பிறந்த மைந்தர் அளவு இறந்த பெருமை கொண்ட் பெருமிதம் சிறந்த வீரம் ஆற்றல் ஏற்ற திறல் புனைந்து வைகினர் - பிறந்த புத்திரர்கள் வரம்புகடந்த பெருமைமிக்க பெருமிதத்தையும் சிறந்த ஆண்மையையும் வன்மையையும் தக்க வெற்றியையும் சூடி வசித்தார்கள், மறம் ததும்பு வேல் நெடும் கண் வணிக மாதர் சிறிது நாள் துறந்து - கொலைத்தொழில்மிக்க வேல்போன்ற நீண்டகண்களையுடைய வணிககுலப்பெண்கள் சிறிதுநாள் கழித்து, அரன் தன் அருள் அடைந்து துணை அடிக்கண் வைகினர் - சிவபெருமானுர்திருவருளைப்பெற்று அத்திருவருள்வழித்தாய் அவரது இரண்டுதிருவடிநிழற்சாரிபில் கலந்தார்கள்.

அநாதிமுத்த சிவபெருமானுர் திருவுருப்பொலிவில் காமமிக்க பெண்கள் பெற்ற புதல்வர்களாதலால் அளவிறந்த பெருமிதம் சிறந்த வீரமாற்றலேற்றதிறல்புனைந்துவைகினர் எனவும், அவர் தமதுகரந்தொட்ட பரிசதீக்கையால் திருவருளடைந்தனராதலால் அரன்றனருளடைந்து எனவும், அத்திருவருட்சார்பால் பாமுத்தியடைந்தனராதலால் துணையடிக்கண்வைகினர் எனவுங்கூறினர். (ருசு)

வளையல்விற்றபடலம் முற்றிற்று.

—:o:—

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - சளஙசு.

Koviloor Digital Library

முப்பத்துமூன்றாவது

அட்டமாசித்தியுபதேசித்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கொத்திலங்குகொன்றைவேய்ந்தகூடலாதிமாடநீள்
பத்தியம்பொன்மறுகணைந்துவளைபகர்ந்தபரிசுமுன்
வைத்தியம்பினாமியக்கமாதர்வேண்டவட்டமா
சித்திதந்ததிறமினித்தெரிந்தவாறுசெப்புவாம்.

(இ-ள்.) இலங்கு கொன்றை கொத்து வேய்ந்த கூடல் ஆதி - விளங்காநின்ற கொன்றைமலர்க் கொத்தைச் சூடிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், நீள் மாடம் பத்தி அம் பொன் மறுகு அணைந்து - ஓங்கிய மாடபந்திகளையுடைய அழகிய பொற்பாகமமைந்த அம்மதுரைத் திருநகர்வீதியிற்சென்று, வளைபகர்ந்த பரிசு முன் வைத்து இயம்பினாம் - வளையல்விற்ற திருவிளையாடலை முன்னெடுத்துக்கூறினோம், இயக்க மாதர் வேண்ட - யக்ஷஸ்திரீகள் குறையிரக்க, அட்டமா சித்தி தந்த திறம் - அட்டமாசித்தியருளிய திருவிளையாடலை, இனி தெரிந்த ஆறு செப்புவாம் - இனித் தெரிந்த அளவிற் கூறுவாம்.

செல்வமலிந்த திருவீதியென்பார் அம்பொன்மறுகென்றார். (க)

மின்னலங்கல்வாகைவேல்விழுப்பெருங்குலத்தினிற்
றென்னவன்றனாணைநேமிதிசையெலாமுருட்டுநாண்
முன்னைவைகலூழிதோறுமோங்குமொய்வரைக்கணே
மன்றுதன்பராரையாலநிழன்மருங்குமறைமுதல்.

(இ-ள்.) மின் வாகை அலங்கல் வேல் - மின்னலையொத்த வெற்றிமாலையைச்சூடிய வேலையேந்திய, விழு பெரும் குலத்தினில் - மேன்மைமிக்க பாண்டியர்மரபிற்றோன்றிய, தென்னவன் தன் ஆணை நேமி திசை எல்லாம் உருட்டும் நாள் - குலபூடணபாண்டியன் தனது ஆஞ்ஞாசக்கரத்தை எல்லாத்திசைகளிலுஞ் செல்லச்செலுத்துங்காலத்தில், முன்னை வைகல் ஊழி தோறும் - கழிந்த பொழுதாகிய ஊழிக்காலந்தோறும், ஓங்கும் மொய் வரைக் கண் - சிறிது சிறிது ஓங்கும் வலிய கயிலையின்கண், மன்று தன் பராரை ஆலம் நிழல் மருங்கு - நிலைபெற்ற தமது பருத்ததாளையுடைய கல்லாலமரத்தினிழலின்கீழ், மறை முதல் - வேதத்திற்கு முதல்வராகிய சிவபெருமானார்.

பிரமன் முதலியோர் பதங்கள் அழிதற்குரிய காலம் திருக்கயிலை வளர்ச்சிக்குரிய காலமாதலின் அக்காரணத்தால் கயிலையென்பார் முன்னைவைகலூழிதோறு மோங்குமொய்வரையென்றார் "ஊழிதோறூழி முற்றுமுயர் பொன்னொடித்தான்மலையே" என்ற ஆளுடையநம்பிகளருளிய திருப்பாசுரத்தாலுணர்க. (உ)

அடுப்பமாசில்வெள்ளிவெற்பருகிருக்குமரகதங்
கடுப்பவாமமிசையிருந்துகனகவெற்பன்மகளெனும்
வடுப்படாதகற்பினாண்மடித்தவெள்ளிலைச்சுருள்
கொடுப்பநேசமுறுபோககுரவனாகிவைகினான்.

Koviloor Digital Library

அட்டமாசித்தியுபதேசித்ததிருவிளையாடல்,



Koviloor Digital Library

Koviloor Digital Library

(இ-ள்.) மாசு இல் வெள்ளி வெற்பு அருகு அடுப்ப - களங்கமில்லாத வெள்ளிமலையினருகில் பொருந்த, இருக்கும் மரகதம் கடுப்ப - இருக்கு மரகதத் திரட்சியையொப்ப, வாமம் மிசை இருந்து - இடப்பாகத்திலிருந்து, கனக வெற்பன் மகள் என்னும்-மலையரையன் புத்திரியாராகிய, வடுப்படாத கற்பினாள் - மறுவில்லாத கற்பையுடைய உமாதேவியார், வெள்ளிலை சுருள் மடித்து கொடுப்ப - வெற்றிலைச் சுருள் மடித்துக்கொடுக்க, நேசம் ஊறு போகம் குரவன் ஆகி வைகினான் - அன்புமிக்க போககுருமூர்த்தமாகி எழுந்தருளியிருந்தனர்.

இறைவன் கொண்டருளுந் திருவுருவங்களில் இத்திருவுருவம் போகவுருவம் ஆதலால் வடுப்படாதகற்பினாள் மடித்த வெள்ளிலைச் சுருள்கொடுப்ப எனவும், ஆன்மாக்களுக்குப் போகம் அருளுதலும் அநுக்கிரகமாதலால் போககுரவனாகி எனவுங்கூறினார். (௩)

பிருங்கிநந்தியேமுதல்பெருந்தகைக்கணத்தரு
மருங்கிருந்தசனகனாதிமாதவத்தர்நால்வரு
மொருங்கிறைஞ்சியுண்ணவுண்ணவமுதமூறுசிவகதைக்
கரும்பருந்தவாய்மலர்ந்துகருணைசெய்யுமெல்லைவாய்.

(இ-ள்.) பிருங்கி நந்தி முதல் பெருந்தகை கணத்தரும் - பிருங்கி நந்தி நாயனார்முதலிய பெருந்தன்மையையுடைய சிவகணத்தலைவரும், மருங்கு இருந்த சனகன் ஆதி மாதவத்தர் நால்வரும்-அருகிலிருந்த சனகர் முதலிய பெரிய நான்குதபோதனர்களும், ஒருங்கு இறைஞ்சி-ஒருசேர வணங்கி, உண்ண உண்ண அமுதம் ஊறு சிவகதை கரும்பு அருந்த (செவியென்னும் வாயால்) உண்ணுந்தோறும் அமுதமூற்றெடுக்கும் சிவகதையாகிய கரும்பினைத்தின்ன, வாய் மலர்ந்து கருணைசெய்யும் எல்லைவாய் - தமதுதிருவாய்மலர்ந்து திருவருள்செய்யுங் காலையில்.

பருகுந்தோறுந் தெவிட்டுதலின்மையால் உண்ண வுண்ண வெனவும், ஏனைக் கரும்புபோலன்றி முற்றும் ஆராவின்பஞ் சுரத்தலால் அமுதமூறும் எனவும், என அடைகொடுத்துச் சிவகதைக்கரும்பு என்றுருவகஞ்செய்தார். உண்ண வுண்ண பன்மைப்பொருளில் வந்த அடுக்கு. (௪)

பௌவமூழ்குசூர்தடிந்தபாலனுக்குமுலைகொடுத்
தெவ்வமாயவினைகடீரியக்கமாதரறுவருந்
தெய்வநீறுமுழுதணிந்துசெய்யவேணிகண்டிகைச்
சைவவேடமாதவந்தரித்துவந்துதோன்றினார்.

(இ-ள்.) பௌவம் மூழ்கு சூர் தடிந்த பாலனுக்கு - கடலின் ஒளித்த சூரபன்மனதுயிர்வாங்கிய முருகக்கடவுளுக்கு, முலை கொடுத்து எவ்வம் ஆய வினைகள் தீர் - முலைப்பாலூட்டித் துன்பமாகிய இருவினைத்தொடக்கினின்று நீங்கிய, இயக்கமாதர் அறுவரும் - யக்ஷஸ்திரிகள் அறுபேரும், தெய்வம் நீறு முழுது அணிந்து - தெய்வத்தன்மையையுடைய திருநீற்றைத் தமதுமேனிமுற்றும் பூசி, செய்ய வேணி கண்டிகை - செவந்தசடையும் உருத்திராக்ஷகண்டிகையுமாகிய, சைவம் வேடம் - சைவவேடத்தையுடைய, மா தவம் தரித்து வந்து தோன்றினார் - பெரியதவத்தைமேற் கொண்டுவந்து தோன்றினார்கள்.

குறையிரந்த இந்திரன்முதலியோர் துன்பநீங்குதற்பொருட்டுத் தந்தருளிய மூர்த்தமாதலால் முலைகொடுத்தெவ்வ மாயவினைகடீர் என்றார். (௫)

Koviloor Digital Library

மந்திரச்சிலம்பலம்புமலரடிக்கன்வந்திசெய்
தெந்தையட்டசித்திவேண்டுமெங்களுக்கெனத்தொழா
வந்தளிர்க்கையவரிரப்பவண்ணறன்மடித்தலந்
தந்திருக்குமாதையங்கைசுட்டியிதுசாற்றுமால்.

(இ-ள்.) மந்திரம் சிலம்பு அலம்பு - வேதச்சிலம்பொலிக்கும், மலர் அடிக்கண் வந்தி செய்து - தாமரைமலர்போன்ற திருவடியை வணங்கி, எந்தை - எமது தந்தையே, எங்களுக்கு அட்ட சித்தி வேண்டும் என தொழா - எங்களுக்கு அட்டமாசித்தி வேண்டுமென்று வணங்கி, அம் தளிர் கையவர் இரப்ப - அழகிய தளிர்போன்ற கையையுடைய அம்மாதர்கள் குறையிரப்ப, அண்ணல் - சிவபெருமானார், தன் மடித்தலம் தந்திருக்கும் மாதை - தமது மடித்தலத்தி லெழுந்தருளிய உமாதேவியாரை, அம் கை சுட்டி இது சாற்றும் - அழகிய திருக்கரத்தினாற்சுட்டி இதனைக்கூறியருள்கின்றார்.

வேதம் மந்திரவடிவமாயிருத்தலால் மந்திரச்சிலம்பலம்பும் என்றார். இரண்டனுருபு நிற்குமிடத்து ஏழனுருபு நின்றது உருபுமயக்கம். (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அலர்பசும்பொலங்கொம்பன்னவணங்கிவணிறைவாலெங்கு
மலர்பராசத்தியாகிமகேசையாயணிமாவாதிப்
பலர்புகழ்சித்தியெட்டும்பணிந்துகுற்றேவல்செய்யுஞ்
சிலதியராகிச்சூழ்ந்துசேவகஞ்செய்யவைகும்.

(இ-ள்.) அலர் பசும் பொலம் கொம்பு அன்ன அணங்கு இவள் - மலர்ந்த பசிய பொற்கொம்பையொத்த இந்த உமாதேவி, நிறை வால் எங்கும் மலர் பரா சத்தி ஆகி மகேசை ஆய் - தமது நிறைவால் எங்கும் வியாபித்த பராசத்தியாகியும் மகேசையாகியும், அணிமா ஆதி பலர் புகழ் சித்தி எட்டும் - அணிமாமுதலிய பலரும்புகழும் அட்டமாசித்திகளும், பணிந்து குற்றேவல் செய்யும் சிலதியர் ஆகி சூழ்ந்து சேவகம் செய்ய - வணங்கிக் குற்றேவல்செய்யும் தாதியராகி இடைவிடாதுசூழ்ந்து தமக்குரிய பணிகளைச் செய்யாநிற்க, வைகும் - இருக்கின்றனள்.

பராசத்தியுடம்பாகப் பரசிவநிற்கையால் அப்பரசிவத்தின்நிறைவே அச்சத்தியினிறைவாதலால் அணங்கிவணிறைவாலெங்கு மலர்பராசத்தியாகி யெனவும், அச்சத்தியே யான்மாக்களுக்குப் பாசம்வருவித்துத் தமதுதிருவடியிற் கூட்டுகைக்குத் திரோதாயிசத்தியாய் நிற்கையால் மகேசையாய் எனவுங் கூறினார் "எத்திறனின்றானீசனத்திறமவளுநிற்பள்" எனவும் "அதுபரிந்து - மாகமாநதிமதியம்பொதிசடையானடியே - நாடும்வகைகருணைமிகநயக்குந்தானே" எனவும் வரும் ஏதுக்களோர்ந்துணர்க. (௭)

இவளைநீர்சிந்தித்தான்முன்னிட்டபயினையைநீக்கித்
தவலருஞ்சித்தியெட்டுந்தருமெனக்கருணைபூத்துச்
சிவபரஞ்சோதியெட்டுச்சித்தியுந்தெளித்தல்செய்தா
னவர்துமறந்தாரும்மையாழ்வினைவலத்தான்மன்றே.

Koviloor Digital Library

(இ-ள்.) இவளை நீர் சிந்தித்தால் - இவ்வுமாதேவியை நீர் சிந்திக்கில், முன் ஈட்டிய வினையை நீக்கி - முன்பு நீங்கள் தேடிய இருவினைத்தொடக்கையும் நீக்கி, தவல் அரும் சித்தி எட்டும் தரும் என - கெடுதலில்லாத அட்டமாசித்திகளையுந் தருவாளென்று, கருணை பூத்து - திருவருள்செய்தருளி, சிவபரம் சோதி - சிவபெருமானார், எட்டு சித்தியும் தெளித்தல் செய்தான் - அட்டமாசித்திகளையு முபதேசித்தருளினார், உம்மை ஆழ்வினை வலத்தால் - முற்பிறப்பிற்செய்த கடிய போகூழ்வன்மையால், அவர் அது மறந்தார் - அப்பெண்கள் அச்சித்திகளை மறந்தார்கள்.

முன்னீட்டியவினை என்றமையால் உம்மையாழ்வினைவலத்தால் என்றார்.(அ)

செழுமதிப்பிளவுவேய்ந்ததேவுமக்குற்றநோக்கி
முழுமதிமுகத்தினாரைமுனிந்துநீர்பட்டமங்கைப்
பழுமரமுதலஞ்ஞானப்பாறையாய்க்கிடமினென்னக்
கழுமலுற்றவர்தாழ்ந்தென்றுகழிவதிச்சாபமென்றார்.

(இ-ள்.) செழுமதி பிளவு வேய்ந்த தேவும் - ஒளிவீசும்பிறையை அணிந்த சிவபெருமானாரும், அக்குற்றம் நோக்கி - அப்பிழையைநோக்கி, முழுமதி முகத்தினாரை முனிந்து - பூரணசந்திரனையொத்த முகத்தையுடைய பெண்களைக்கோபித்து, நீர்-நீங்கள், பட்டமங்கை பழுமரம் முதல் - பட்டமங்கையென்னுந்தலத்திலுள்ள ஆலமரத்தினடியில், அஞ்ஞானம் பாறையாய் கிடமின் என்ன - கருங்கற்பாறையாய்க்கிடங்களென்று சபிக்க, கழுமல் உற்றவர் தாழ்ந்து என்று கழிவது இச்சாபம் என்றார் - (சாபமேற்றுத்) துன்பமுற்ற அப்பெண்கள் அஞ்சிவணங்கி எப்பொழுது கழிவது இந்தச்சாபமென்று வினவினார்கள்.

நிக்கிரகித்தலுங் குற்றந்தீர்த்தற்பொருட்டாதலால் அக்குற்ற நோக்கி முனிந்து எனவும், அதன்றீர்வு பாறையாய்க்கிடத்தலாதலால் அஞ்ஞானப்பாறையாய்க்கிடமின் எனவுங்கூறினார். அஞ்ஞானம் ஒன்றும் அறியாமை யாதலால் கருங்கல்லென்றும் "நிக்கிரகங்டாறும் நேசத்தாலீசன்செய்வன், அக்கிரமத்தாற்குற்றமடித்துத் தீர்த்து" எனவரும் ஏதுவாலுணர்க. (கு)

இப்படிக்கருங்கலாகிக்கிடத்திராயிரம்யாண்டெல்லைக்
கப்புறமதுரைநின்றுமடுத்துமைத்தொடுத்தசாபத்
துப்பறநோக்கிநுங்கடொல்லுருநல்கிச்சித்தி
கைப்படுகனிபோற்காணக்காட்டுதும்போதிரென்றான்.

(இ-ள்.) இப்படி கரும் கல் ஆகிக்கிடத்திர் - இவ்வாறு கருங்கற்பாறையாய்க்கிடமின்கள், ஆயிரம் யாண்டு எல்லைக்கு அப்புறம் - ஆயிரந்தேவவருடவளவுக்கப்பால், மதுரை நின்றும் அடுத்து-மதுரையினின்றும் நாம்வந்து,உம்மைதொடுத்த சாபத்துப்பு அறநோக்கி - உம்மைவிடாதுபற்றிய சாபத்தின்வன்மைகெடக் கடைக்கணித்து, நுங்கள் தொல் உரு நல்கி - உங்கள் பண்டையவடிவத்தைக்கொடுத்து, சித்திகை படுகனிபோல் காண காட்டுதும் - அட்டமாசித்திகளை உள்ளங்கையிற்பொருந்திய நெல்லிக்கனிபோல ஐயமறத்தெளியத்தெளிவிப்போம், போதிர் என்றான்- போமின்களென்று விடையருளினார்.

தாம்வந்தருளும் பரிக்கிரகத்துக்குக் கருங்கலாய்க்கிடத்தல் காரணம் என்பார் ஆயிரம்யாண்டெல்லைக் கருங்கலாய்க்கிடத்திர் எனவும், அப்பால் யாம் வந்தரு

Koviloor Digital Library

ளுவம் என்பார் தோலுருவிச் சித்திரைப்படு கனிபோற் காணக்காட்டுறும் என
வுக்கூறினர். கைப்படுகனியெனப் பொதுப்படக்கூறினரேனும் புறத்திலுள்ளவரை
அகத்திலு முள்ளதெனவுணர்தற்கு உள்ளங்கை நெல்லிக்கனியாதலால் உள்ளங்
கையிற்பொருந்திய நெல்லிக்கனியென்றும் "பட்டமங்கையிற்பாங்காயிருந்தவ், கட்
டமாசித்தியருளியவதுவும்" எனவரும் உண்மைத்திருவாக்காலுணர்க. (௫௦)

வஞ்சிவிருத்தம்.

கொடியனார்களறுவரு, நெடியவானிமிர்ந்துகார்
படியும்பட்டமங்கையா, லடியிற்பாறையாயினர்.

(இ-ள்.) கொடி அன்னார்கள் அறுவரும்-பூங்கொடியையொத்த ஆறுபெண்களும், நெடிய வான் நிமிர்ந்து - பரந்தவிண்ணுலகமட்டு முயர்ந்தோங்குதலால், கார் படியும் பட்ட மங்கை ஆல் அடியில் - மேகந்தவழும் பட்டமங்கையிலுள்ள ஆலமரத்தினடியில், பாறையாயினர் - கருங்கற்பாறையாய்க்கிடந்தார்கள்.

நிமிர்ந்து காரணப்பொருளில்வந்த வினையெச்சம். (௫௧)

கதிர்கலம்பெய்காட்சிபோ, லுதிர்பழத்தினுடலெல்லாம்
புதைபடக்கிடந்தனர், மதரரிதடங்கணார்.

(இ-ள்.) மதர் அரி தடம் கணார் - மதர்த்த செவ்வரிபரந்த விசாலித்தகண்களையுடைய பெண்களறுவரும், கதிர் கலம் பெய் காட்சிபோல் - விளங்கும் ஆபரணத்தையணிந்த காட்சியைப்போல, உதிர் பழத்தின் - ஆலமரத்தினின்றும் உதிர்ந்த பழங்களால், உடல் எல்லாம் புதைபடக் கிடந்தனர்-தமது சரீரமுற்றும் புதைபடக் கருங்கற்பாறையாய்க் கிடந்தார்கள்.

ஆலம்பழம் செந்நிறமாதலால் பதுமராகமிழைத்த ஆபரணம் என்பார் கதிர் கலம்பெய் காட்சிபோல் என்றார். (௫௨)

பருவமாயிரங்கழிந், தொருவமாடமதுரையெங்
குரவனெண்குணத்தினன், றிருவுளந்திரும்பினான்.

(இ-ள்.) ஆயிரம் பருவம் கழிந்து ஒருவ - ஆயிரம்வருடஞ்சென்றொழிய, மாடம் மதுரை எம் குரவன் எண் குணத்தினன் - மாடங்கணெருங்கிய மதுரையிலெழுந்தருளிய எமது ஆசிரியரும் எண்குணங்களையு முடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள், திரு உளம் திரும்பினான் - தமது திருவுளந்திரும்பியருளினார்.

எண்குணங்களாவன பரதந்திரனாகாது சுதந்திரனாயிருத்தலின் தன்வயத்தனாதலும், விசுத்ததேகியாதலின் தூயவுடம்பினனாதலும், நிராமயான்மா ஆதலால் இயற்கையுணர்வினனாதலும், சர்வஞ்ஞத்துவமுடைமையால் முற்றுமுணர்தலும், அநாதிமுத்தத்தன்மையுடைமையால் இயல்பாகவே பாசங்களினீங்குதலும், அலுத்த சத்தியுடைமையால் பேரருளுடைமையும், அனந்தசத்திகளுடைமையால் முடிவிலாற்றலுடைமையும், பூர்த்தியுடைமையால் வரம்பிலின்பமுடைமையுமாம். (௫௩)

தன்னதிச்சைகொண்டதோ, ரின்னருட்குரவனா
யந்நெடுங்கலாயினார், முன்னர்வந்துதோன்றினான்.

(இ-ள்.) தன்னது இச்சை கொண்டது - தமதிச்சையாற் கொண்டருளிய, ஓர் இன் அருள் குரவன் ஆய் - ஒப்பில்லாத இனிய ஞானசாரியராய், அ நெடும்

Koviloor Digital Library

கல் ஆயினர் முன்னர்வந்து - அந்த நெடிய கருங்கற்பாறையாகிய பெண்கள்முன் வந்து, தோன்றினன் - திருவுருக்கொண்டு தோன்றியருளினர்.

சுதந்திரனதலால் தன்னை இச்சைகொண்டது என்ருர். (கச)

இருட்டதும்புகோதையார், மருட்டதும்புவினைகெட
வருட்டதும்புகண்ணினற், றெருட்டதும்பநோக்கினன்.

(இ-ள்.) இருள் ததும்பு கோதையார் - அந்தகாரத்தையொத்த கூந்தலையுடைய பெண்களது, மருள் ததும்பு வினைகெட - அவிச்சைநிறைந்த கன்மமலங்கெட, அருள் ததும்பு கண்ணினல் - திருவருள்நிறைந்த திருக்கண்களால், தெருள் ததும்ப நோக்கினன் - திருவருண்ஞானமேலிடப்பார்த்தருளினர்.

கன்மமலம்போக முறுத்ததற்கு முதற்காரணமாய் நிற்றலால் மருட்டதும்பு வினையெனவும், அவ்வினைக்கேடு அருணோக்காலாதலால் வினைகெடநோக்கினன் எனவுங்கூறினர். (கரு)

அடிகணோக்கவம்புயங், கடிகொணெய்தல்காந்தள்பைங்
கொடிகொண்முல்லைகுமுதமேற், படியப்பூத்தபாறையே.

(இ-ள்.) அடிகள் நோக்க - சிவபெருமான் பார்த்தருள, அம்புயம் கடிகொள் நெய்தல் காந்தள் - தாமரைமலரும் வாசமிக்க குவளைமலரும் காந்தள்மலரும்,பைங் கொடிகொள் முல்லை குமுதம் - பசியகொடியாகப்படர்ந்த முல்லையரும்பும் ஆம்பல் மலரும், மேல்படிய - தம்மேற்பொருந்த, பாறை பூத்த - அக்கருங்கற்பாறைகள் பூத்தன.

அம்புயம் நெய்தல் காந்தள் முல்லை குமுதம் என்னும் உவமானச்சொற்களால் முகம் கண் கை பல் வாய் என்னும் உபமேயங்களை யிலக்கணையாகச்சொல்லுதலால் உருவகவுயர்வு நவிற்சியணி. (கசு)

தாக்கவேதகத்திரும், பாக்கமுற்றபொன்னென
நீக்கமற்றவிருண்மல, வீக்கமற்றுவிட்டதே.

(இ-ள்.) இரும்பு-இரும்பானது, தாக்கு அ வேதகத்து - தாக்கிய அவ்வேதகத்தினல், ஆக்கம் உற்ற பொன் என - ஆகிய பொன்னைப்போல, நீக்கம் அற்ற இருள் மலம் வீக்கம் - (நெல்லின் உமிபோல) நீங்குதலில்லாத ஆணவமலவீக்கம், அற்றுவிட்டது - கழன்றது.

அடிகணோக்க என்பது இங்குக்கூட்டப்படுதலால் அருணோக்கம் வேதகமாகவும், இரும்பு மாசுகழிந்து பொன்னுதல்போல் ஆணவமாசுகழிந்து ஆன்மா திருவருள்வசத்ததாகவும் நின்றவெனப்பொருள்கொள்க. (கஎ)

நிறையுமன்பெனுந்நதி, பொறையெனுங்கரைகடந்
திறைவனின்னருட்கடற், றுறையின்வாய்மடுப்பவே.

(இ-ள்.) நிறையும் அன்பு என்னும் நதி - நிறைந்த அன்பென்றநதி (பெருகி) பொறை என்னும் கரை கடந்து - பொறுமையென்னுங் கரையைக்கடந்து, இறைவன் இன் அருள் கடல் துறையின்வாய்-சிவபெருமானுடைய இனியதிருவருளென்னும் கடற்றுறையில், மடுப்ப-கலந்துபாய.

Koviloor Digital Library

றதிமுதலியவை மிகக் குறைவின்றிச் சமனுச்சொல்லுதலால் அவையி சொற்றுமையுருவகவணி. (கஅ)

எழுந்திறையடிக்கணை, யழுந்துநேசமொடுதவக்
கொழுந்தனர்களறுவரும், விழுந்திறைஞ்சினரரோ.

(இ-ள்.) தவம் கொழுந்த அன்னார்கள் அறுவரும் எழுந்து - தவக்கொழுந்தையொத்த அறுபெண்களும் எழுந்து, இறை அடி கண் அழுந்து நேசமொடு - சிவபெருமானுர் திருவடியிலழுந்திய அன்போடு, விழுந்து இறைஞ்சினர் - தண்டாகாரமாக விழுந்துவணங்கினார்கள் (கக)

குமரற்கூட்டுமிளமுலை, யுமையொப்பார்கள்சென்னிமே
லமலச்சோதியங்கையாங், கமலப்போதுசூட்டினன்.

(இ-ள்.) குமரற்கு ஊட்டும் இளம் முலை உமை ஒப்பார்கள் - முருகக்கடவுளுக்கூட்டிய இளமைதங்கிய தனத்தையுடைய உமாதேவியாரையொத்த பெண்களுடைய, சென்னிமேல் - சிரத்தின்மேல், அமலம் சோதி - சிவபெருமானுர், அம் கையாம் கமலம் போது சூட்டினன் - தமது திருக்கரமாகிய தாமரைமலரைச்சூட்டி அருளினுர்.

சட்சுதிட்சையால் சன்மமலத்தினின்றுநீக்கிப் பராரத்துவவாதனையொழித்தற்பொருட்டுப் பரிசதிட்சைசெய்தாரென்பார் அங்கை யாங்கமலப்போது சூட்டினுர் எனவும், சோதிமயமாக்குதற்பொருட்டுத் தாம் சோதியாயிருந்தார் என்பார் அமலச்சோதியெனவுங்கூறினுர். (உ0)

சித்தியெட்டுமங்கலார், புத்தியிற்கொளுத்தவே
கைத்தலத்தில்வைத்தநேரோர், முத்தெனத்தெருட்டுவான்.

(இ-ள்.) சித்தி எட்டும் - அட்டமாசித்திகளையும், அங்கலார் புத்தியில் கொளுத்த - அப்பெண்களது அறிவிற்பொருந்த, கை தலத்தில் வைத்தது - உள்ளங்கையிலேந்திய, ஓர் முத்து என தெருட்டுவான் - ஒரு முத்தைப்போலத் தெளிவித்தருள்வார்.

முத்தின் விலை வரம்பறுக்கக் கையிலேந்துவதுபோல அட்டமாசித்திகளும் பதியத்தெற்றினுர் என்பார் பொருந்த கைத்தலத்தின் வைத்தநேரோர் முத்தெனத்தெருட்டுவான் என்றுர். சித்தியெட்டு முன்பின்னுக மாறித்தொக்க பண்புத்தொகை பையரவல்குல் என்றுற்போலவந்தது. (உக)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அணிமாமகிமாவிலகிமாவரியகரிமாபிராத்திமலப்
பிணிமாசுடையோர்க்கடைவரியபிராகாமியமீசத்துவமெய்
துணிமாயோகர்க்கெளியவசித்துவமென்றெட்டாமிவையுளக்கண்
மணிமாசறுத்தோர்விளையாட்டின்வகையாமவற்றின்மரபுரைப்பாம்.

(இ-ள்.) அணிமா மகிமா இலகிமா - அணிமாவும் மகிமாவும் இலகிமாவும், அரிய கரிமா பிராத்தி - பெறுதற்கரிய கரிமாவும் பிராத்தியும், மலம் பிணி மாசு உடையோர்க்கு அடைவு அரிய பிராகாமியம் ஈசத்துவம் - மலபந்தமாகிய களங்கத்

Koviloor Digital Library

தையுடையவர்க்கு அடைதற்கரிய பிராகாமியமும் ஈசத்துவமும், மெய் துணிமா யோகர்க்கு எளிய வசித்துவம் என்று எட்டாம் - உண்மையைத் துணிந்த பெரிய யோகிகளுக்கு எளியவசித்துவமுமென்றுசித்தி எட்டுவகைப்படும், இவை - இவ்வெட்டும், உளம் கண் மணி மாசு அறுத்தோர் விளையாட்டின் வகையாம் - மனத்தில் கரியகளங்கத்தையறுத்த பெரியோர் திருவிளையாடலின்வகையாம், அவற்றின் மரபு உரைப்பாம் - அவ்வெட்டுச்சித்திகளின் முறைகளைக்கூறுவாம்.

ஈசத்துவம் என்பதற்கு ஈசிதையெனவும், வசித்துவம் என்பதற்கு வசிதையெனவுங்கூறுவர். (உ௨)

அறவுஞ்சிறியவுயிர்தொறுந்தான்பரமகாட்டையணுவாய்ச்சென்
றுறையுஞ்சிறுமையணிமாவாமுவரிஞாலமுதன்மேலென்
றறையுஞ்சிவாந்தமாறுறுமுள்ளும்புறனுமகலாதே
நிறையும்பெருமைதனையன்றோமகிமாவென்னுநிரம்பியநூல்.

(இ-ள்.) அறவும் சிறிய உயிர் தொறும் - மிகவுஞ்சிறிய வுயிர்கள்தோறும், தான் பரமகாட்டை அணுவாய் சென்று - தான் மிகவுநுண்ணிய அணு அளவாய்ச் சென்று, உறையும் சிறுமை அணிமா ஆம் - இருக்கும் அதிநுண்மை அணிமா என்னும் சித்தியாம், நிரம்பிய நூல் - பொருள் நிரம்பிய நூல்கள், உவரி ஞாலம் முதல் - கடல்சூழ்ந்த பிருதிவிதத்துவமுதல், மேல் என்று அறையும் சிவாந்தம் ஆறுறும் - அதன்மேலுள்ள தத்துவமென்றுகூறும் சிவதத்துவம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவங்களினும், உள்ளும் புறனும் அகலாதே - அகத்தும் புறத்தும் நீங்காது, நிறையும் பெருமைதனை அன்றோ மகிமா என்னும் - வியாபித்திருக்கும் பெருமையையல்லவோ மகிமா என்று கூறும்.

மிகச்சிறிது என்பார் பரமகாட்டை என்றார். காட்டை பதினைந்துநிமிஷம், அக்காலவளவையினும் சிறிது பரமகாட்டை. (உ௩)

இலகுமேருபாரம்போலிருக்கும்யோகிதனையெடுத்தா
லிலகுவானபரவணுப்போலிருப்பதிலகிமாவாகு
மிலகுவானபரவணுப்போலிருக்கும்யோகிதனையெடுத்தா
லிலகுமேருபாரமெனவிருப்பதன்றோகரிமாவாம்.

(இ-ள்.) இலகு மேரு பாரம்போல் இருக்கும் யோகிதனை எடுத்தால் - விளங்காநின்ற மகமேருவின் பாரம்போலக் கனமாக இருக்கும் சிவயோகியை எடுத்தால், இலகுவான பர அணுப்போலிருப்பது - லகுவான பரவணுவைப்போல எடுத்தற்கெளிதாயிருத்தல், இலகிமா ஆகும் - இலகிமா என்னுஞ் சித்தியாம், இலகுவான பர அணுபோல் - லகுவாயுள்ள பரவணுவைப்போல, இருக்கும் யோகிதனை எடுத்தால் - இருக்குஞ்சிவயோகியை எடுத்தால், இலகு மேரு பாரம் என இருப்பது அன்றோ கரிமா ஆம் - விளங்காநின்ற மகமேருவின் பாரம்போலக் கனத்திருத்தலல்லவா கரிமா என்னுஞ் சித்தியாம். (உ௪)

பிலத்திலிருந்தோனயனுலகிற்புகுதன்மீண்டும்பிலமடைதல்
பலத்தின்மிருந்தபிராத்தியதாம்பரகாயத்தினண்ணுதல்வான்
புலத்தினியங்கலிச்சித்தபோகமனைத்துந்தானிருக்குந்
தலத்தினிளைந்தபடிவருதல்பிராகாமியமாந்தவக்கொடியீர்.

Koviloor Digital Library

(இ-ள்.) தவக்கோடியீர் - பெருந்தக்கசிறப்பவமாகிய கொடிபோன்றபெண்களே!, பிலத்தில் இருந்தோன் - பாதலத்திலிருந்த ஒருவன், அயன் உலகில் புகுதல்- பிரமனுலகிற்குச்செல்லுதலும், மீண்டும் பிலம் அடைதல் - மீளவும் பாதலத்திற்செல்லுதலும், பலத்தின் மிகுந்த பிராத்தி ஆம் - பலவின்மிக்க பிராத்தியாம், பரகாயத்தில் ஏன்றுதல் - பரகாயத்திற் பிரவேசித்தலும், வான்புலத்தின் இயக்கல் - விண்ணுலகிற் சஞ்சரித்தலும், இச்சித்தபோகம் அனைத்தும் - விரும்பியபோகமுற்றும், தான் இருக்கும் தலத்தில் நினைந்தபடி வருதல் - தானிருக்கு மிடத்தில் நினைத்தவண்ணம் வருதலும், பிராகாமியம் ஆம் - பிராகாமியமென்னுஞ் சித்தியாம்.

அது பகுதிப்பொருள்விகுதி. (உரு)

விண்ணிலிரவிதன்னுடம்பின்வெயிலாலனைத்தும்விளக்குதல்போன்
மண்ணிலுளவாம்பொருள்பலவுங்காலமூன்றும்வானத்தின்
கண்ணிலுளவாம்பொருளுந்தன்காயத்தொளியாலிருந்தறித
லெண்ணிலிதுவுமறையொருசார்பிராகாமியமென்றியம்புமால்.

(இ-ள்.) விண்ணில் இரவி - ஆகாயத்திற் சஞ்சரிக்குஞ்சூரியன், தன் உடம்பின் வெயிலால் அனைத்தும் விளக்குதல் போல் - தன்சரீரத்திலுள்ள விளக்கத்தால் எப்பொருள்களுங் கட்புலங்களுக்குப் புலப்பட விளக்குதலுமன்றி அச்சூரியன் தன்னையுமுணர்த்துதல்போல, மண்ணில் உள ஆம் பொருள் பலவும்-நிலவுலகிலுள்ள பொருள் முற்றும்,காலம் மூன்றும் வானத்தின் கண்ணில் உள ஆம் பொருளும் - திரிகாலங்களும் விண்ணுலகிற்பொருந்திய பொருளுமாகிய இவைகளை, தன்காயத்து ஒளியால் இருந்து அறிதல்-தனது சரீரத்தினொளியினால் பிறர்க்கு விளக்குதலின்றித் தானும் இருந்த இடத்திலிருந்து அறிதலும், எண்ணில் இதுவும் - ஆலோசிக்கில் இத்தொழிலையும், மறை ஒருசார் பிராகாமியம் என்று இயம்பும் - வேதங்கள் ஒருபட்சம் பிராகாமியமென்று கூறுகிற்கும். (உசு)

ஈசனெனமுத்தொழிலுந்தன்னிச்சைவழிசெய்தெழுபுரவித்
தேசன்முதல்கோள்பணிகேட்பத்திகழ்வதீசத்துவமாகும்
பூசலவுணர்புள்விலங்குபூதமனிதர்முதலுலகும்
வாசவாதியெண்மருந்தன்வசமாக்கொள்கைவசித்துவமாம்.

(இ-ள்.) ஈசன் என முத்தொழிலும் - உருத்திரமூர்த்தியைப்போலச் சிருட்டிமுதலிய முத்தொழில்களையும், தன் இச்சைவழிசெய்து - தனது இச்சையின்வழியேசெய்து,எழு புரவி தேசன் முதல் கோள் பணிகேட்ப - ஏழுகுதிரைகளையுடைய சூரியன்முதலிய நவகோள்களுந்தான் ஏவும்பணி கேட்டு ஒருபால் நிற்க, திகழ்வது ஈசத்துவம் ஆகும் - விளங்குதல் ஈசத்துவமென்னுஞ் சித்தியாம், பூசல் அவுணர்- போர்த்தொழிலையுடைய அசுரரையும், புள் விலங்கு பூதம் மனிதர் முதல் உலகும்- பறவைகளையும் மிருகங்களையும் பூதங்களையும் மனிதர்முதலிய உலகிலுள்ள சீவகோடிகளையும், வாசவன் ஆதி எண்மரும் - இந்திரன்முதலிய திக்குப்பாலர்கள் எண்மரையும், தன் வசம் ஆக்கொள்கை வசித்துவம் ஆம் - தன்வசமாகக்கொண்டாளுகை வசித்துவமென்னுஞ் சித்தியாம். (உஎ)

எம்மையுணர்ந்தயோகியர்களிவற்றைவிரும்பாரெனினுமவர்
தம்மைநிழல்போலடைந்துலகர்க்கனையார்பெருமைதனையுணர்த்துஞ்

Koviloor Digital Library

செம்மையுடையவிவையென்னச்சித்தியெட்டுந்தெளிவெய்தக்
கொம்மைமுலையாரறுவருக்குங்கொளுத்தினானெண்குணச்செல்வன்.

(இ-ள்.) எம்மை உணர்ந்த யோகியர்கள் - எம்மையறிந்த சிவயோகியர்கள், இவற்றை விரும்பார் எனினும் - இச்சித்திகளை விரும்பாராயினும், அவர் தம்மை நிழல் போல் அடைந்து - அவரைத் தேகச்சாயல்போல் விடாது தொடர்ந்து, உலகர்க்கு - உலகினுள்ளவர்களுக்கு, அனையார் பெருமை தனை உணர்த்தும் செம்மை உடைய - அவர்கள் பெருமையை அறிவிக்கும் நீதியையுடையன, இவை என்ன - இவைகளென்று, சித்தி எட்டும் - எட்டுச்சித்திகளையும், தெளிவு எய்த - ஐயமின்றித் தெளிந்துணர, எண் குணம் செல்வன் - எட்டுக்குணங்களையுடைய பெருமானார், கொம்மை முலையார் அறுவருக்கும் சொளுத்தினான் - திரண்ட தனங்களையுடைய பெண்களறுவருக்கும் உபதேசித்தருளினார்.

தம்மினின்றும் நீங்காத திருவருள்காட்டத் தம்மையுணர்ந்தோர் என்பார் எம்மையுணர்ந்த யோகியர்கள் எனவும், எம்மைத் தரிசித்துச் சிவபோகத்தழுந்தும் யோகியர் இச்சித்திகளை யோர்பொருளாகக் கருதார் என்பார் இவற்றை விரும்பார் எனவும், விரும்பாராயினும் அவை அவர்மகிமையை யேனையோருணர்ந்து வழிபட்டுய்ய அவர்களைவிடாது பின்றொடர்ந்துநிற்கும் என்பார் அவர்தம்மை நிழல்போலடைந்துலகர்க்கனையார்பெருமைதனையுணர்த்தும் எனவுங்கூறினார். (உஅ)

மேற்படி வேறு.

தேவதேவுபதேசித்தசித்தியைச்சிலம்பன்செல்வி
பாவனைவலத்தானன்குபயின்றுவான்வழிக்கொண்டேகிப்
பூவலர்கதுப்பினல்லாரறுவரும்புரமூன்றட்ட
காவலனிரம்பிவைகுங்கயிலைமால்வரையிற்புக்கார்.

(இ-ள்.) பூ அலர் கதுப்பின் நல்லார் அறுவரும் - பூக்களலர்ந்த கூந்தலையுடைய பெண்களறுவரும், தேவ தே உபதேசித்த சித்தியை - தேவதேவனுபதேசித்தருளிய அட்டமாசித்திகளை, சிலம்பன் செல்வி பாவனை வலத்தால் - மலையரையன் புத்திரியாகிய உமாதேவியின் சிந்தனையின் வன்மையால், நன்கு பயின்று - மிகவும் பழகி, வான் வழி கொண்டு ஏகி - விண்ணின்வழிக்கொண்டு சென்று, புரம் மூன்றும் அட்ட காவலன் நிரம்பி வைகும் - திரிபுரங்களை நகைத்தெரித்த சிவபெருமான் அருள்வடிவங்கொண் டெழுந்தருளிய, கைலை மால் வரையில் புக்கார் - பெரிய கைலையங்கிரியிற் சென்றார்கள்.

சிவபெருமானார் அருட்சத்தியின் வழிப்பட்டு எண்சித்தியும் நிற்றலால் செல்விபாவனைவலத்தா னன்குபயின்று என்றார். இவனை நீர் சிந்தித்தால் முன்னீட்டிய வினையைநீக்கித் - தவலருஞ் சித்தியெட்டுந் தருமென, முன்னர்க் கூறிப்போந்தது காண்க. (உகூ)

அட்டமாசித்தி யுபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கஎஅஅ.

Koviloor Digital Library

முப்பத்துநான்காவது

விடையிலச்சினையிட்டபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

சந்துசூழ்மலயச்சிலம்பர்தவம்புரிந்தவியக்கிமார்க்
கந்தநாலிருசித்திதந்ததறைந்தனந்தனதடிதொழா
வந்துமீள்வளவன்பொருட்டுவடாதுவாயிறிறந்தழைத்
திந்துசேகரன்விடையிலச்சினையிட்டவாறுவிளம்புவாம்.

(இ-ள்.) சந்து சூழ் மலயம் சிலம்பர் - சந்தனவிருக்ஷஞ் சூழ்ந்த பொதியமலையையுடைய சவுந்தரபாண்டியராகிய சிவபெருமானார், தவம் புரிந்த இயக்கிமார்க்கு - தவஞ்செய்த யக்ஷிணிகளாகிய அறுவருக்கும், அந்த நாலிருசித்திதந்தது அறைந்தனம் - அந்த எட்டுச்சித்திகளையு மருளிய திருவிளையாடலைக்கூறினோம், தனது அடி தொழா - வந்து தமது திருவடிகளைவணங்கி, மீள்வளவன்பொருட்டு - தனது நாட்டிற்குச்செல்லுஞ்சோழன்பொருட்டு, வடாது வாயில் திறந்து அழைத்து-வடக்குவாசலைத்திறந்து அழைத்து, இந்து சேகரன் - சந்திரமௌலியாராகிய அப்பெருமானார், விடை இலச்சினை இட்ட ஆறு விளம்புவாம் - விடையிலச்சினையிட்டருளிய திருவிளையாடலை இனிக்கூறுவாம்.

வடக்குள்ளதுவடாது. (க)


தோடுவெட்டிமலைத்துவாள்விதிர்துணைவிழிக்குயிலிளமுலைக்
கோடுவெட்டியகுறிகொண்மேனியர்குடிகொண்மாநகர்கடிகொள்பைங்
காடுவெட்டியகாரணக்குறிகாடுவெட்டியசோழனென்
றேடுவெட்டியமண்டுசூழ்பொழிலெயில்கொள்கச்சியுளானவன்.

(இ-ள்.) தோடு வெட்டி மலைத்து - காதிலணிந்த தோட்டினைவெட்டிப்போர்செய்து, வாள் விதிர் துணை விழி குயில் - வாளையசைத்தலையொத்த கண்களையுடைய குயிலிசைபோன்ற சொல்லையுடைய உமாதேவியாரது, இளமை முலை கோடு வெட்டிய குறிகொள் மேனியர் - இளமைதங்கிய தனங்களாகிய கொம்பு உழுதகுறி பூண்டருளிய திருமேனியையுடைய பெருமானார், குடிகொள் மாநகர் - எழுந்தருளிய பெரியகாஞ்சியில், கடிகொள் பைம் காடு வெட்டிய காரணம் குறி - (காண்போர்க்கு) அச்சஞ்செய்யும் பசியகாட்டை வெட்டித் திருத்திய காரணக்குறியால், காடுவெட்டியசோழன் என்று - காடுவெட்டிய சோழனென்று, ஏடு எட்டிய மண்டு சூழ் பொழில் - மலரிதழ்பொருந்த நெருங்கிச்சூழ்ந்த சோலைகளையுடைய, எயில் கொள் கச்சி உளான் - மதில்சூழ்ந்த கச்சிநகரிலுள்ளவன், அவன்-அச்சோழன்.

உமாதேவியார் சிவபெருமானார் திருக்கண்புதைத்தருளிய காலையில் யாவுமிருண்டமையின் எவ்வுயிரும் துன்பத்திலழுந்தியதறிந்த அச்சிவபெருமானார் அருளையால் காஞ்சித்திருநகரெய்தி யப்பெருமானை விதிப்படிபூசிக்க, அவர் அருள்செய்தற்பொருட்டு எல்லாத்தீர்த்தங்களும் ஒருசேரத்திரண்டு கம்பையாற்றொடு கலந்து பெருக்கெடுத்தவரச்செய்தருள, அவ்வுமாதேவியார் எமது கணவர்மேலுஞ்செல்லுமேயென்றஞ்சி யெழுந்த வலக்கொழுன்றித் தழுவிக்கொள்ள, அச்சிவபெருமானார் தனக்குறியையும் திருவளைக்குறியையும் பூண்டருளினார் என்பது காஞ்

Koviloor Digital Library

விடையிலச்சினையிட்ட திருவிளையாடல்.



Koviloor Digital Library

Koviloor Digital Library

சிப்புராணம் தழுவக்குழைந்த படலத்தில் "விழுமியவண்டத்துள்ளும் புறத்தினும் விரவுந்நீர்த்த, முழுவதுமொருங்குநண்ண முன்னினார்முன்னலோடும், ஒழுகுநீர்க்க ம்பையாற்றி னுடன்விராய்க்கடைக்கால்வெள்ளம், எழுவதுகடுப்பவெல்லாப்புனலு ம்வந்திறுத்தவன்றே." "துன்புறநோக்கிநெஞ்சந் துண்ணெனத்துளங்கியாவா, உம் பர்வான் நடவிச்செல்லு மொப்பரும்பெருநீர்வெள்ளம், எம்பிரான்மிசையேநண்ணு மினிச்செய்வதென்னேயென்று, தம்பிரானார்பாலன்பு தழைத்தெழுமுள்ளத்தோடு ம்." "ஒருகொடியெழுந்துசெம்பொனுயர்வரைக்குவடுதன்னை, இருகொழுந்திருபா ற்போக்கித் தழீஇயெனவெழுந்துவல்லே, முருகலர்வேதியும்பர்த் தன்வலமுழந்தா ளூன்றிக், கருமணிப்பாவையன்னாள் கணவரைத்தழுவிக்கொண்டாள்." "மணிமுலை க்குவட்டினோடு வளைக்கையானெருக்கிப்புல்லித், தணிவருங்காதல்விம்மக் காதலித ழுவலோடுந், திணியிருளறுக்குஞ்சோதித் திருவுருக்குழைந்துகாட்டி, அணிவளைத்த ழும்பினோடு முலைச்சுவடணிந்தாரையர்." எனவருஞ்செய்யுள்களாலுணர்க. (உ)

உத்தமச்சிவபத்தரிற்பெரிதுத்தமன்புதுவிரைகலன்
மித்தையென்றுவெணீறுகண்டிகையாரமென்றணிமெய்யினு
னித்தவேதபுராணமாதிநிகழ்த்திடும்பொருள்கண்ணுத
லத்தனேபரதத்துவப்பொருளென்றளந்தறிகேள்வியான்.

(இ-ள்.) உத்தமம் சிவபத்தரில் பெரிது உத்தமன் - உத்தமத்தன்மைவாய்ந்த சிவபத்தர்களுள் மிகவும் உத்தமத்தன்மைவாய்ந்த சிவபத்தன், புது விரை கலன் மித்தை என்று - வாசமிக்க சந்தனக்குழம்பும் ஆபரணங்களும் அநித்தியப்பொரு ளென்று கருதி, வெள் நீறு கண்டிகை - வெள்ளியதிருநீற்றையுங் கண்டிகையையும், ஆரம் என்று அணி மெய்யினன் - நித்தியமாகிய சந்தனக்குழம்பென்று முத்தார மென்றுங் கருதிப்பூண்ட சரீரத்தையுடையவன், நித்த வேதம் புராணம் ஆதி நிகழ்த் திடும் பொருள்-அழியாதவேதமும் புராணமும் முதலியநூல்கள் கூறும்பொருள், க ண்ணுதல் அத்தனே-சிவபெருமானே, பரதத்துவம் பொருள் என்று - (ஆதலால் அவ னே) பரதத்துவப்பொருளாயுள்ளானென்று, அளந்து அறி கேள்வியான் - அவற்று ல் அளந்தறிந்த நூற்கேள்வியையுடையவன்.

சிவனடியவரில் மிக்கோன் என்பார் உத்தமச்சிவபத்தரிற் பெரிதுத்தமனெ னவும், புதுவிரையும் கலனும் அநித்தியபோகத்திற்குரியவென்பார் அவற்றை மித் தையெனவும், வெண்ணீறுங்கண்டிகையும் நித்தியமுத்திக்குரிய சாதனங்களென் பார் வெண்ணீறு கண்டிகை யாரமென்றணிமெய்யினன் எனவும், வேதமும் புரா ணமும் சிவபெருமானை யளந்துணர்தற்குரிய கருவிகளென்பார் நித்தவேதபுராண மாதி நிகழ்த்திடும்பொருள்கண்ணுத லத்தனேயெனவும், அக்கருவிகளால் ஏனைக்கட வுளர் கடவுளரல்லர் அச்சிவபெருமானே கடவுள் என்றுணர்ந்தோன் என்பார் பர தத்துவப்பொருளென் றளந்தறிகேள்வியான் எனவுங்கூறினார். ஆரம் சந்தனக்குழ ம்பு, முத்துவடம். (௩)

அங்கமாறொடுவேதநான்குமறிந்துமெய்ப்பொருளாய்ந்துளஞ்
சங்கைகொண்டனுதினமரன்புகழ்சாற்றுசைவபுராணநூல்
பொங்குமின்சுவையமுதுதன்செவிவாய்திறந்துபுகட்டவுண்
டெங்கணாயகனடியிணைக்கணிருத்துமன்புகருத்துளான்.

(இ-ள்.) அங்கம் ஆறு ஒடு வேதம் நான்கும் அறிந்து - ஆறு அங்கங்களோடு நான்குவேதங்களையும் ஐயந்திரிபற உணர்ந்து, மெய் பொருள் ஆய்ந்து - உண்மைப்

Koviloor Digital Library

பொருளை ஆராய்ந்து, உளம் சங்கைகொண்டு - தனது மனம் அதன்மேற்செல்லுதலால், அருந்தனம் அரன்புகழ் சாற்று சைவ புராணம் நூல் - எக்காலும் சிவபெருமான் கீர்த்தியைக்கூறும் சைவபுராணங்களாகிய நூல்களின், பொங்கும் இன்சுவை அமுதை - விளங்கு மினியசுவையமைந்த அமுதினை, புகட்ட தன் செவிவாய் திறந்து உண்டு - (அறிவின்மிக்கோர்) ஊட்டத் தனது செவியாகிய வாய்திறந்துண்டு, எங்கள் நாயகன் அடி இணைக்கண் - எமது நாயகனாகிய அப்பெருமானது இரண்டுதிருவடியின்கண்ணும், இருத்தும் அன்பு கருத்து உளான் - நிலைபெறச்செய்யும் அன்புமிக்க இருதயமுடையவன்.

நான்குவேதங்களையு முணர்தற்கு ஆறங்கங்களுங் கருவியாதலால் அங்கமாறொடு வேதநான்கு மறிந்து எனவும், அவ்வேதங்களாலுணர்த்தும் பொருள் பரசிவமேயெனத்தெளிதலால் அறிந்த மெய்ப்பொருளாய்ந்து எனவும், ஆராய்ந்துணர்ந்த அப்பரசிவத்தையென்றுஞ் சிந்தித்தலால் உளஞ்சங்கைகொண்டு எனவும், அச்சிந்தனைவழுவாதிருக்க என்றுங்கேட்டலால் சைவபுராணநூல் அமுது தன்செவிவாய்திறந்துண்டு எனவும், அப்பாவனைவலத்தால் ஆன்மபோதஞ் சிவியாது திருவடிஞானங் கைகூடினமையால் எங்கணாயக னடியிணைக்கணிருத்துமன்பு கருத்துளான் எனவுங்கூறினார். இச்செய்யுளால் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டையென்னும் முத்திசாதனங்கள் கூறப்பட்டன. (௪)

முக்கணாயகன்முப்புரத்தைமுனிந்தநாயகன்மங்கையோர்
பக்கநாயகன்மிக்கவானவர்பரவுநாயகனரவணிச்
சொக்கநாயகனாடலுஞ்செவியான்முகந்துசுவைத்தருந்
தக்கபாலொடுதேன்கலந்துதருக்கியுண்பவனாயினான்.

(இ-ள்.) முக்கண் நாயகன் முப்புரத்தை முனிந்த நாயகன் - திரிநேத்திரத்தையுடைய இறைவனும் திரிபுரங்களைக் கோபித்தெரித்த இறைவனும், மங்கை ஓர் பக்கம் நாயகன் - உமாதேவியாரை இடப்பாகத்திலுள்ள இறைவனும், மிக்கவானவர்பரவு நாயகன் - மேம்பட்டபிரமன் முதலிய தேவர்கள் துதிக்குமிறைவனுமாகிய, அரவு அணி சொக்க நாயகன்-சர்ப்பாபரணத்தையுடைய சொக்கலிங்கப்பெருமானுடைய, ஆடலும் - திருவிளையாடலாகிய அமுதினையும், செவியால் முகந்து - தனது காதாகிய கருவியால் மொண்டு, சுவை தரும் தக்க பால் ஒடு தேன் கலந்து - (சிவநேசமாகிய) சுவைமிக்க பரிசுத்தமாகிய தேன்பாலொடுகூட்டி, தருக்கி உண்பவன் ஆயினான் - உண்டுகளிப்பவனாயினான்.

சிவபெருமான் திருவிளையாடலைக்கேட்டற்குச் சிவநேசம் வேண்டுகையால் சுவைத்தருந்தக்க பாலொடு தேன்கலந்து என்றார். சுவைத்தரும் எனச்செய்யுளின்பம் நோக்கி விரிக்கும்வழி விரித்தல் என்பதனால் வல்லெழுத்துமிக்கது. செவிமுதலியவற்றை யவடகளா வுருவகஞ்செய்து திருவிளையாடலை யமுதென உருவகஞ்செய்யாமையால் அதனை யமுதென உருவகஞ்செய்தது சிறப்புருவகவணி. (௫)

அங்கயற்கண்மடந்தைபாகனடித்தலந்தொழுமாசைமேற்
பொங்கிமிக்கெழுமன்பனாய்மதுரேசன்மின்னுபொலங்கழற்
பங்கயப்பதமென்றுநான்பணிவேனெனப்பரிவெய்தியே
கங்குலிற்றுயில்வான்கயற்புரைகண்ணிபங்கனையுள்ளியே.

Koviloor Digital Library

(இ-ள்.) அங் கயல் கண் மடந்தை பாகன் - அங்கயற்கண்ணம்மையை இடப்பாகத்திலுடைய சோமசுந்தரக்கடவுளது, அடி தலம் தொழும் ஆசை - திருவடியைவணங்கும் ஆசை, மேல் பொங்கி மிக்கு எழும் அன்பனாய் - மேலெழுதலால் அதிகரித்தெழும் அன்பனாகி, மதுரேசன் மின்னு பொலம் கழல் பங்கயம் பதம் - அச்சோமசுந்தரக்கடவுளினுடைய விளங்காநின்ற பொன்னாலாகிய வீரகண்டைகட்டிய தாமரைமலர்போன்ற திருவடிகளை, என்று நான் பணிவேன் என பரிவு எய்தி - எப்பொழுது நான் வணங்குவேனென்று வருத்தமடைந்து, கயல் புரை கண்ணி பங்கனை உன்னி - அந்த அங்கயற்கண்ணியாரை இடப்பாகத்திலுடைய அக்கடவுளைக் கருதி, கங்குலில் துயில் வான் - இரவில் நித்திரைசெய்வானாயினன். (சு)

அன்றுசெம்பியர்கோமகன்கனவின்கணேயருள்வெள்ளிமா
மன்றுணின்றவர்சித்தராயெதிர்வந்துமன்னவநின்னுளத்
தொன்றுமஞ்சலொருத்தனாகியுருத்திரிந்துதனித்துவந்
தின்றுவந்தனைசெய்துபோதியெனப்புகன்றனரேகினர்.

(இ-ள்.) அன்று - அக்காலையில், செம்பியர் கோமகன் கனவின் கண்ணே - சோழர்களுட்சிறந்த காடுவெட்டிய சோழனுடைய சொப்பனத்தினிடத்தே, அருள் வெள்ளி மா மன்றுள் நின்றவர் - அருள்மூர்த்தமாய்ப் பெரிய வெள்ளியம்பலத்தினின்றருளிய பெருமான், சித்தர் ஆய் எதிர் வந்து - சித்தமூர்த்தியா யெதிரே வந்தருளி, மன்னவ - சோழனே, நின் உளத்து ஒன்றும் அஞ்சல் - உனது மனத்திற் சிறிதுமஞ்சாதே, ஒருத்தன் ஆகி உரு திரிந்து-நீ ஒருவனாய் மாறுவேடங்கொண்டு, தனித்து வந்து இன்று வந்தனை செய்து போதி என - துணையின்றிவந்து இப்பொழுது வணங்கிப்போவாயென்று, புகன்றனர் ஏகினர் - கூறிச்சென்றருளினான்.

சோழன் என்றும் தனது திருவடிஞானநிட்டை யுடையவனாயிருத்தலால் கனவின்கண்ணே சித்தராயெதிர்வந்து எனவும், உனக்குத் துணையாய்வருவேனாதலால் நின்னுளத்தொன்றுமஞ்சல் எனவும், பாண்டியன்காணில் இடர்ப்படுப்பானாதலால் ஒருத்தனாகி யுருத்திரிந்து தனித்து எனவுங் கூறியருளினான். (எ)

கேட்டுவேந்தன்விழித்துணர்ந்துகிளர்ந்தவற்புதனாகியே
யீட்டுசேனையமைச்சுளார்பிறர்யாருமின்றிவழிக்கொளீஇ
நாட்டமூன்றவனாமவாள்கொடுநல்லருட்டுணையாய்வழி
காட்டவன்பெனுமிவுளிமேல்கொடுகங்குல்வாய்வருவானரோ.

(இ-ள்.) வேந்தன் கேட்டு விழித்து உணர்ந்து - சோழன்கேட்டு விழித்தறிந்து, கிளர்ந்த அற்புதன் ஆகி - மேலெழுந்த வியப்புடையவனாகி, ஈட்டு சேனை அமைச்சு உளார் பிறர் யாரும் இன்றி - நெருங்கிய சேனைகளும் மந்திரிகளும் அவரொழிந்த பிறரும் என்னும் இவருள் ஒருவருந்துணையின்றி, வழிக்கொளீஇ - வழிச்சென்று, நாட்டம் மூன்றவன் நாமம் வாள் கொடு - திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானது நாமத்தை வாளாகக்கொண்டு, நல் அருள் துணையாய் - அவனது நல்லதிருவருளே துணையாகி, வழி காட்ட - (தான் முன்னறியாதவனாதலால்) முன்னின்று வழியுணர்த்த, அன்பு எனும் இவுளி மேல் கொடு - அன்பென்னுங் குதிரைமேலேறி, கங்குல்வாய் வருவான் - இராப்போதில் வருவானாயினன்.

நிராமத்தை வாளாகவும் திருவருளைத் துணையாகவும், அன்பினைக் குதிரையாகவும் மிககுறைவின்றிச் சமனாக உருவகஞ்செய்தமையால் அவயவியுருவகவணி. (௮)

கல்லுமாரழலத்தமும்பலகலுழியுங்குணகனைகடற்
செல்லுமாநதிபலவும்வானிமிர்கன்னலுஞ்செறிசெந்நெலும்
புல்லுமாநிலனுங்கழிந்துபுறங்கிடக்கநடந்துபோய்
வல்லுமாமுலையார்கணம்பயில்வையையந்துறையெய்தினான்.

(இ-ள்.) கல்லும் ஆர் அழல் அத்தமும் - மலைகளும் நிறைந்த நெருப்புமிழும் பாலைநிலங்களும், பல கலுழியும் - பலகாட்டாறுகளும், குணக்கு கனை கடல் செல்லும் மா நதி பலவும் - ஒலிக்கும் கீழைக்கடலிற்சென்று கலக்கும் பெரியநதிகள்பலவும், வான் நிமிர் கன்னலும் செறி செம் நெலும் - விண்ணுலகமட்டும் நிமிர்ந்து ஓங்கிய கரும்பும் நெருங்கிய செந்நெற்பயிரும், புல்லும் மா நிலனும் கழிந்து புறம் கிடக்க - பொருந்திய வளமிக்க மருதநிலமும் பிற்பட்டுப் புறத்திற்கழிய, நடந்துபோய் - நடந்துசென்று, வல்லு மா முலையார் கணம் பயில் வையை அம் துறை எய்தினான் - சூதாடு கருவியையொத்த பெரியமுலையையுடைய பெண்கள்கூட்டம் நீராடிச்சஞ்சரிக்கும் வையைநதியின்றுறையை அடைந்தான். (௯)

குறுகுமுன்னரதிர்ந்துவையைகொதித்தகன்கரைகுத்திவேர்
பறியவன்சினைமுறியவிண்டொடுபைந்தருக்களையுந்தியே
மறுகிவெள்ளமெடுத்தலைத்தரமன்னவன்கரைதன்னினின்
றிறுதியில்லவனைத்தொழற்கிடையூறிதென்றஞரெய்துவான்.

(இ-ள்.) குறுகு முன்னர்-அடைதற்கு முன்னே, வையை கொதித்து அதிர்ந்து அகன் கரை குத்தி-வையைநதி பெருக்கெடுத்துக் கோஷித்துப் பொங்கி இடம்பரந்த கரைகளை அகழ்ந்து, வேர் பறிய வன் சினை முறிய - வேர்த்தொடக்கறவும் வலியகொம்புகள் முறியவும், விண் தொடு பைம் தருக்களை உந்தி - விண்ணுலகத்தை யளாவிய பசியமரங்களைச் சாய்த்து, வெள்ளம் எடுத்து மறுகி அலைத்தர - அவ்வையையெடுத்துச் சுழன்றலைக்க, மன்னவன்-சோழன், கரை தன்னில் நின்று-கரையினின்று, இறுதி இல்லவனை தொழற்கு - தனக்கோரிறுதியில்லாத சோமசுந்தரக்கடவுளைவணங்க, இது இடையூறு என்று அஞர் எய்துவான் - இது ஒரு பெருந்தடையென்று துன்பமடைவானாயினான். (௧௦)

இழுதொடுஞ்சுவையமுதுபொற்கலனிட்டுணாதிருகண்கணீர்
வழியவந்துவிலக்குவாரின்வளைந்ததாறுபகற்செயும்
பொழுதெழும்பொழுதோமறுக்கம்விளைக்குமேயிகல்பூழியன்
வழுதியன்றியும்வையையும்பகையானதென்றுவருந்தினான்.

(இ-ள்.) இழுது ஒடும் சுவை அமுது - தம்மிடத்துள்ள நெய்யோடும் சுவையமைந்த கறியையும் அமுதையும், பொன் கலன் இட்டு உணாது - பசிவந்தபோது பொற்பாத்திரத்தில் இட்டுண்ணாமல், இரு கண்கள் நீர் வழிய - இரண்டுகண்களினின்றும் நீர்சிந்த, வந்து விலக்குவாரின்-இடையேவந்து விலக்குங் கொடியவரைப்போல, ஆறு வளைந்தது - வையைநதி இடையே பெருக்கெடுத்து வளைந்து நம்மைத்தடைபடுத்தியது, பகல் செய்யும் பொழுது எழும் பொழுதோ - விளக்கஞ் செய்யும் சூரி

Koviloor Digital Library

யன் உதயஞ்செய்யுங்காலத்திலோ, இகல் பூழியன் மறுக்கம் விளைக்கும் - போர் செய்யும் பாண்டியன் (காணின்) நமக்குப் பெருந்துன்பஞ்செய்வான், வழுதியும் அன்றி வையையும் பகை ஆனது என்று வருந்தினான் - பாண்டியனுமல்லாமல் வையைநதியும் இப்பொழுது நமக்குப் பகையாய் முடிந்ததென்று வருத்தமுற்றான்:

வழுதியன்றியும் என இறுதியில் நின்ற வும்மையை வழுதி யென்பதனோடு கூட்டிப் பொருள்கொள்க "புணரியனிலையிடைக்குறுகலுமுரித்தே" உம்மையை இடையென்னுஞ்சொல்லொடுகூட்டிப் பொருள்கொள்ளுதல்காண்க. (௧௧)

வெள்ளநோக்கியழுங்குசெம்பியன்மெலிவுநோக்கிவிரைந்தெழீஇக்
கள்ளநோக்கிலகப்படாதவர்கனவுபோலவனனவில்வந்
துள்ளநோக்குடையன்பருக்கருளுருவமாகியசித்தர்தாம்
பள்ளநோக்கிவரும்பெரும்புனல்வற்றநோக்கினர்பார்த்தரோ.

(இ-ள்.) வெள்ளம் நோக்கி அழுங்கு செம்பியன் மெலிவு நோக்கி - வெள்ளத்தைப்பார்த்து மனம்வருந்துஞ் சோழனது மெலிவைப் பார்த்து, கள்ள நோக்கில் அகப்படாதவர் விரைந்து எழீஇ - வஞ்சித்தற் பொருட்டுப் புறத்தில் பொய்வேடமுடையவர்பால் அகப்படாத பெருமான் விரைந்து எழுந்து, கனவு போல் அவன் நனவில் வந்து - கனவுபோல அச்சோழன் நனவில்வந்தருளி, உள்ளம் நோக்கு உடைய அன்பருக்கு - தமதகப்பார்வையாற் றரிசிக்கும் அடியார்களுக்கு, அருள் உருவம் ஆகிய சித்தர்தாம் - திருவருள்வடிவாய் வந்தருளுஞ் சித்தமூர்த்தி, பள்ளம் நோக்கி வரும் பெரும் புனல் வற்ற - கடலைநோக்கிப் பெருக்கெடுத்துவரும் பெரிய வையைநதிவற்ற, பார்த்து நோக்கினர் - பார்த்தருளினார்.

புறச்சமயிகளாதலால் பொய்வேடமுடையவர் என்றும். கனவில் சித்தமூர்த்தியாய் வந்தருளியதுபோலச் சோழன் மனவருத்தம் நீக்க நனவிலும்வந்தருளினார் என்பார் கனவுபோலவனனவில்வந்து என்றார் "புறத்தார்க்குச்சேயோன்றன்பூங்கழல்கள்வெல்க" என்ற உண்மைத்திருவாக்காலுணர்க. (௧௨)

வறந்தவாறுகடந்துவந்துவடக்குவாயிறிறந்துபோய்
நிறைந்தகாவல்கடந்துவீதிகணீந்திநேரியர்வேந்தனைச்
சிறந்தவாடகபுனிதபங்கயதிப்பியப்புனலாடுவித்
தறந்தவாதறைசாமகண்டர்தமாலயம்புகுவித்தரோ.

(இ-ள்.) வறந்த ஆறு கடந்து வந்து - (சோழனோடு) வற்றிய ஆற்றைக் கடந்துவந்து, வடக்கு வாயில் திறந்து போய் - மதிலின் வடக்குவாயிற்கதவைத் திறந்துசென்று, நிறைந்த காவல் கடந்து - நிறைந்துள்ள போர்ச்சேவகர்கள் காவலைக்கடந்து, வீதிகள் நீந்தி - அந்தணர்முதலியோர் வீதிகளைக் கடந்து, நேரியர் வேந்தனை - சோழனை, சிறந்த புனித ஆடகம் பங்கயம் திப்பியப் புனல் ஆடுவித்து - மேம்பட்ட புனிதமாகிய பொற்றாமரையாகிய திவ்வியதீர்த்தத்தில் நீராடச்செய்து, அறம் தவாது அறை சாம கண்டர் தம் ஆலயம் புகுவித்து - சிவதருமங் கெடாமல் நிலைபெறக் கூறும் சாமகீத கண்டத்தையுடைய சிவபெருமான் தனது ஆலயத்திற் செல்லச் செய்து.

ஆன்மாக்கள் சிவபுண்ணியத்தைக் கடைப்பிடித்துய்யச் சாமகீதம் பாடுவோனாதலால் அறந்தவாதறைசாமகண்டர் என்றார். திப்பியம் திவ்ய என்னும் வட்சொற்றிரிபு. (௧௩)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வெம்மைசெய்கதிர்கால்செம்பொன்விமானசேகரத்தின்மேய
தம்மையும்பணிவித்தெண்ணில்சராசரமனைத்துமீன்ற
வம்மையங்கயற்கணாளாமணங்கையும்பணிவித்துள்ளஞ்
செம்மைசெய்தின்பவெள்ளத்தழுத்தினார்சித்தசாமி.

(இ-ள்.) சித்தசாமி - வந்தருளிய சித்தமூர்த்தி, வெம்மை செய் கதிர் கால் - வெப்பஞ்செய்யுங் கிரணத்தைவீசும், செம் பொன் விமான சேகரத்தில் மேய தம்மையும் பணிவித்து - சிவந்த பொன்னாலாகிய விமானங்களுக்குக் கிரீடம்போன்ற இந்திரவிமானத்தில் எழுந்தருளிய தன்னையும் வணங்கச் செய்து, எண் இல் சராசரம் அனைத்தும் ஈன்ற அம்மை - அளவில்லாத சராசரங்கள் யாவையும் பெற்றருளிய அம்மையாராகிய, அம் கயற் கண்ணாள் ஆம் அணங்கையும் பணிவித்து - அங்கயற்கண்ணியாரையும் வணங்கச்செய்து, உள்ளம் செம்மை செய்து இன்பம் வெள்ளத்து அழுத்தினார் - ஆன்மாவை விடாது பற்றிய ஆணவமலத்தை யொழித்துப் பேரின்பப்பெருக்கில் அழுச்செய்தருளினான்.

உள்ளம் என்றது ஆன்மாவை. "உளத்தறிவடங்க" என்பதனால் உணர்க. ()

எண்ணியவெண்ணியாங்கேயான்பெறமுடித்தாய்போற்றி
பண்ணியன்மறைகடேறும்பான்மொழிமணாளபோற்றி
புண்ணியர்தமக்குவேதப்பொருளுரைபொருளேபோற்றி
விண்ணிழிவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி.

(இ-ள்.) எண்ணிய எண்ணிய ஆங்கு யான்பெற முடித்தாய் போற்றி - எண்ணியவற்றை எண்ணினபடியே யான்பெற்றுமகிழமுடித்தவனே உன்னைவந்திக்கக்கடவேன், பண் இயல் மறைகள் தேறு பால்மொழி மணாளபோற்றி - பண்ணமைந்த வேதங்களுணர்தற்கரிய பாலின்சுவைபோன்ற சொல்லினையுடைய அங்கயற்கண்ணியார் தலைவனேபோற்றி, புண்ணியர் தமக்கு வேதம் பொருள் உரை பொருளே போற்றி - சனகாதிமுதலிய முனிவர்களுக்கு வேதப்பொருளை விரித்துரைத்தருளிய மெய்ப்பொருளேபோற்றி, விண் இழி விமானம் மேய சுந்தர விடங்கபோற்றி - விண்ணுலகினின்றுவந்த இந்திரவிமானத்தி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளே யுன்னை வந்திக்கக்கடவேன்.

சிவபெருமானை வணங்கக்கருதியது, வையையைக் கடக்கக்கருதியது இவற்றை முடித்தருளினமையால் பன்மையிற்கூறி எண்ணிய எண்ணியாங்கே யான்பெறமுடித்தாய் எனவும், விந்துசத்தியின் காரியப்பாடாகிய பாசஞானமாதலால் பண்ணியன் மறைகடேறு எனவும், பாசஞானமாயினும் அது தன்னை யுணர்த்துதற்குக் கருவியாதலால் புண்ணியர் தமக்குவேதப் பொருளுரைபொருளே யெனவும், அக்கருவியால் தன்னையுணர்ந்து வழிபடுவார்க் கருள்செய்யக்கொண்டருளிய திருவுருவாதலால் விண்ணிழி விமானமேய சுந்தரவிடங்கபோற்றி யெனவுங்கூறினான். (௧௫)

எவ்வுடலெடுத்தேன்மேனுமெண்ணிலாப்பிறவிதோறு
மவ்வுடலெல்லாம்பாவமறப்பொருட்டாகவன்றே
தெவ்வுடல்பொடித்தாயுன்றன்சேவடிக்கடிமைபூண்ட
விவ்வுடலொன்றேயன்றேவெனக்குடலானதையா.

Koviloor Digital Library

(இ-ள்.) மேல் நாள் எண் இல்லாத பிறவிதோறும் - முன்னாளில் அளவில்லாத சனனங்கடோறும், எ உடல் எடுத்தேன் - எந்தெந்தச்சரீரங்களை யெடுத்தேனோ, அ உடல் எல்லாம் - அந்தந்தச்சரீரங்களெல்லாம், பாவம் அறம் பொருட்டு ஆக அன்றோ - புண்ணியபாவங்கள் பொருட்டாகவல்லவா, தெவ் உடல் பொடித்தாய் - மன்மதனுடைய உடலை நீருக்கிய பெருமானே, உன் தன் சேவடிக்கு அடிமை பூண்ட இ உடல் ஒன்று அன்றோ - உனது திருவடிகட்கு ஆட்பட்ட இந்தச் சரீரமொன்றல்லவா, ஐயா எனக்கு உடல் ஆனது - ஐயனே எனக்குரிய சரீரமாயிருந்தது.

எண்ணிலாப்பிறவி என்றது எண்பத்துநான்கு நூறுயிரயோனிபேதங்களை "ஊர்வபதினொன்றுமொன்பது மானுடம், நீர்பறவைநாற்காலோர்பப்பத்தாம்-சீரிய, பந்தமாந்தேவர்பதினாலயன்படைத்த, அந்தமில்சீர்த்தாவரநாலைந்து." எனவருஞ் செய்யுளால் அறிக. பிறவிக்குவித்துக் கன்மமலமாதலால் எண்ணிலாப்பிறவிதோறும் எவ்வுடலெடுத்தேன் எனவும், ஆன்மாக்களுள்ளவன்றே கன்மமலமுளதாதலால் மேனாள் எனவும், ஆன்மாக்கள் எடுத்ததேகந்தோறும் வடிவு, நிறம், சாதி, ஒழுக்கம், நெறி, உணவு, சுகம், துக்கம், ஆயுள் என அக்கன்மமலம் பலவகைப்படுதலால் பிறவிக்கும் இவற்றிற்கும் பொதுமையில் எண்ணிலா எனவும், அது புண்ணியபாவமென இருவகைப்படுதலால் பாவமறம் பொருட்டாக எனவும், அப்புண்ணியபாவங்களின்பயனை நுகர்தற்கு எடுத்ததேகங்கள் சுவர்க்கநரகங்களிற் செல்லுதற்குரிய தேகங்களாதலால் அவ்வுடலெல்லாம் எனவும், அக்கன்மமலம் வறுத்தநெல்லில் உமியிருந்தும் முளைபெழாததுபோலச் சிவபுண்ணியமேலிட்டால் விட்டு நீங்குவதாதலால் உன்றன்சேவடிக் கடிமைபூண்ட விவ்வுடலொன்றேயன்றோ வெனக்குடலானதையாவெனவுங் கூறினான். "நண்ணியிடுமுருவதனுக்கேதுவாகி நானுபோகங்களாய் நாசோற்பத்தி, பண்ணிவருமாதலாலநாதியாகிப் பலவாகியனுக்கடொறும்படர்வதாகி, யெண்ணிவருமனவாசகன்மத்தா லியற்றுமியல்பினதாய்மதிகதமாயிருபயனும் பாவ, புண்ணியமாய்" எனவும் "விச்சுக்கேடுபொய்க்காகாதென்றிங்கெனைவைத்தாய்" எனவரும் ஏதுக்களாலுணர்க. (௧௬)

இன்னனபலவுமேத்தியிறைஞ்சிப்பல்வரமும்வேண்டு
மின்னருவேலினானைவேந்தநீபோந்தவண்ணந்
தென்னவனறிந்தாலேதஞ்செய்யுமென்றூர்த்தார்க்கண்ணி
மன்னனைச்சித்தசாமியுத்தரவழிக்கொண்டேகா.

(இ-ள்.) இன்னன பலவும் ஏத்தி இறைஞ்சி - இவைபோன்றன பலதுதிகளையுந்துதித்துவணங்கி, பல் வரமும் வேண்டும் மின் நருவேலினானை - பலவரங்களையுங் குறையிரக்கும் மின்னல்போல விளங்கும் வேலையேந்தியசோழனை, வேந்த - அரசனே, நீபோந்த வண்ணம் தென்னவன் அறிந்தால் ஏதம் செய்யும் என்று - நீவந்தவகையைப் பாண்டியன் அறிந்தால் துன்பஞ்செய்வானேயென்று, ஆர் தார் கண்ணி மன்னனை - ஆத்திமாலையை அணிந்த சோழனை, சித்தசாமி உத்தரம் வழி கொண்டு ஏகா - சித்தமூர்த்தி அந்த உத்தரவழிக்கொண்டு சென்று.

அவனுக்குவரும் இடையூறு தன்னதெனக்கருதினானாதலால் தென்னவனறிந்தாலேதஞ்செய்யும் எனவும், பாண்டியனும் தனது திருவடிக்கன்பனாதலால் உத்தரவழிக்கொண்டேகா எனவுங்கூறினார். (௧௭)

Koviloor Digital Library

மன்னிலைவளர்க்கும்வையைவடகரையளவுநண்ணிப்
புண்ணியநீற்றுக்காப்புப்புண்டரநுதலிற்சாத்தி
யுன்னிறைகருத்துக்கேற்பவுறுதுணையுனக்குண்டாகி
நன்றுகவென்றுபொன்னிநாடனைவிடுத்துமீண்டு.

(இ-ள்.) மன்னிலை வளர்க்கும் வையை வடகரை அளவும் நண்ணி - நிலவுல கிலுள்ள உயிர்களையூட்டிவளர்க்கும் வையையினது வடபாலுள்ள கரைகாறும் அவனுடன்சென்று, காப்பு புண்ணியம் நீறு புண்டரம் நுதலில் சாத்தி - அவனுக் கோர் காவலாகப் புண்ணியவடிவாகிய திருநீற்றுப்புண்டரத்தை நெற்றியிலிட்டு, உன் நிறை கருத்துக்கு ஏற்ப உனக்கு உறுதுணை உண்டாகி நன்றுக என்று - உனது மனத்தில் நிறைந்த சிவநேசத்துக்குப் பொருந்த இத்திருநீறே உனக்குமேம்பட்ட துணையாகிக் கூடச்செல்கவென்று, பொன்னி நாடனை விடுத்து - சோழனை யனுப்பி மீண்டு - மீள.

திருநீறு பாசத்தைப்போக்கும் பெருங்காப்பு ஆதலால் புண்ணியநீற்றுக்காப் பு எனவும், அதுவே புத்திமுத்திக்குரிய சாதனமாதலால் உறுதுணையுனக்குண்டாகி நன்றுகவெனவுங் கூறினர் "ஆனந்தக்கவசமடையப்புனைமின்கள்" எனவும், "அருத்தமதாவதுநீறு அவலமறுப்பதுநீறு - வருத்தந்தணிப்பதுநீறு" எனவும் "முத்திதருவதுநீறு" எனவும்வரும் தேவாரங்களாலுணர்க. (கஅ)

கலிவிருத்தம்.

காப்புச்செய்தகதவில்விடைக்குறி
யாப்புச்செய்தமைத்தீர்ஞ்சடைச்சித்தர்போய்த்
தூம்புக்கைவரைசூழ்வடமேருவிற்
கோப்புச்செய்தபொற்கோயிலின்மேயினார்.

(இ-ள்.) காப்பு செய்து - (முன்னாளைப்படி) திறந்த கதவத்தைச்சாத்தி, கத வில் விடைக் குறி யாப்பு செய்து அமைத்து - அக்கதவத்தைத் தனது முத்திரையாகிய இடபமுத்திரையையிட்டு, ஈர்ம் சடை சித்தர் போய் - குளிர்ந்த சடாமுடியை யுடைய சித்தமூர்த்தி சென்று, தூம்பு கை வரை சூழ் - துவாரம்பொருந்திய துதிக்கையை யுடைய அஷ்டகஜங்கள் சூழ்ந்து காக்கும், வட மேருவின் - வடபாலுள்ள மேரு வைப்போல, கோப்பு செய்த பொன் கோயிலில் மேயினார் - கோவைசெய்தமைத்த பொற்றகடுவேய்ந்த திருக்கோயிலையடைந்தருளினான்.

மேருவின் இன் ஒப்புப்பொருளில்வந்த ஐந்தனுருபு. தூம்பு துப்புவலிக்கும் வழிவலித்தல். (கக)

கங்குலின்கருங்கைகுறைப்பானெனச்
செங்கைநீட்டித்தினகரன்றோன்றலு
மெங்கணாயகனிட்டகுறியதிர்
தங்கள்வாயிறிறப்பவரையுமே.

(இ-ள்.) கங்குலின் கருங்கை குறைப்பான் என - இரவின் கரியகையைத் த றிப்பவன்போல, செம் கை நீட்டி தினகரன் தோன்றலும் - செவந்த தனது கரங்க ளை நீட்டிச் சூரியன் உதயஞ்செய்ய, எங்கள் நாயகன் இட்ட குறி அதிர்ந்து-எங்கள்

Koviloor Digital Library

பெருமானாகிய சோமசுந்தரக்கடவுள் இட்டருளிய இடபமுத்திரையைத்தெரிந்து, அம் கண் வாயில் திறப்ப வர் ஐயுறு - அந்த வடக்குவாசற்கதவைத் திறப்பவர்கள்சந்தேகித்து.

கருங்கை - செங்கை சொன்முரணணி. சூரியன்கிரணத்துக்குக் கரம் என்பது ஓர்பரியாயநாமமாதலால் செங்கை யென்றார். (உ0)

மற்றைவாயில்கண்மூன்றினும்வல்லைபோ
யுற்றுநோக்கினர்தாநென்னலொற்றிய
கொற்றமீனக்குறிபிழையாமைகண்
டெற்றிதாங்கொலென்றேந்தன்முனெய்தினார்.

(இ-ள்.) மற்றை வாயில்கள் மூன்றினும் வல்லை போய் - மற்ற மூன்றுதிசைகளிலுமுள்ள வாசல்களிலும் விரைந்து சென்று, தாம் உற்று நோக்கினர் - தாம் உற்று நோக்கி, நென்னல் ஒற்றிய கொற்றம் மீனம் குறி பிழையாமை கண்டு - நேற்றிட்ட வெற்றியையுடைய கயன்முத்திரை பிறழாமலிருப்பதைப் பார்த்து, இது எற்றாம் கொல் என்று - இம்முத்திரை யாதாய்முடியுமோவென்று, ஏந்தல் முன் எய்தினார் - பாண்டியன்முன் வாயிற்காவலர் சென்றார்கள். (உ௧)

போற்றிமன்னநம்பொன்னங்கயற்குறி
மாற்றியுத்தரவாயிற்கதவதி
லேற்றிலச்சினையிட்டனர்யாரையென்
றாற்றல்வேந்தவறிகிலம்யாமென்றார்.

(இ-ள்.) மன்ன போற்றி - அரசனே யுன்னை வந்திக்கக்கடவேம், நம் பொன் அம் கயல் குறி மாற்றி - நமது அழகிய கயல்முத்திரையைமாற்றி, உத்தரம் வாயில் கதவு அதில் ஏற்று இலச்சினை இட்டனர் - உத்தரதிசைவாயிற் கதவில் இடபமுத்திரையிட்டவர், யாரை என்று - யாரென்று, ஆற்றல் வேந்த - வெற்றியையுடைய் பாண்டியனே, யாம் அறிகிலம் என்றார் - யாமறியோமென்று கூறினார்கள்.

கண்ணிமைபோற் காத்தலில் வல்லோம் என்பார் யாரையென்றறிகிலம் யாமென்றார். ஐ தவிர்வழிவந்த சாரியை. அது பகுதிப்பொருள்விகுதி. (உஉ)

வையைநாடனும்வந்ததுநோக்குறீஇ
யையவின்னதோரற்புதமாயையைச்
செய்யவல்லவர்யாரெனத்தேர்கிலா
னையமெய்தியகன்மனைநண்ணினான்.

(இ-ள்.) வையை நாடனும் வந்து - வையைநாட்டையுடைய பாண்டியனும் வந்து, அது நோக்கு உறீஇ - அக்குறியைப்பார்த்து, இன்னது ஓர் அற்புதம் மாயையை செய்ய வல்லவர் யார் என தேர்கிலான் - இப்படிப்பட்ட ஓர் அதிசயம் விளைக்கும் மாயைத்திறத்தைச் செய்ய வல்லவர் யாரோ என்று சற்றுந்தெளியாது, ஐயம் எய்தி அகல் மனை நண்ணினான் - சந்தேகமடைந்து இடம்பரந்த தனது கோயிலை அடைந்தான்.

தேர்கிலான் முற்றெச்சம். ஐய அதிசயத்தையுணர்த்தும் ஓரிடைச்சொல்.()

Koviloor Digital Library

மறுத்தவுண்டியன்மாமலர்ப்பாயலை
வெறுத்தகன்றரைமேற்பள்ளிகொள்ளவும்
பொறுத்தனன்றுயின்றனிருட்போழ்தினிற்
கறுத்தகண்டர்கனவினிற்கூறுவார்.

(இ-ள்.) மறுத்த உண்டியன் - உண்டி மறுத்து, மாமலர் பாயலை வெறுத்து - மணமிக்க மலர்பரப்பிய பாயலைவெறுத்து, அகன் தரை மேல் பள்ளி கொள்ளவும் - இடம்பரந்த நிலத்தின்மேற் பள்ளிகொள்ள, பொறுத்தனன் துயின்றான் - பரிசவின்பங் கருதாது நித்திரைசெய்தான், இருள் போழ்தினில் கறுத்த கண்டர் கனவில் கூறுவார் - இருட்காலத்தில் கறுத்த சிகண்டத்தையுடைய பெருமான் கனவில் வந்து கூறியருளுகின்றான்.

தனதுமரபின்வழிவந்தோர்க் கோரிடையூறுவரி னவ்விடையூறு தவிர்ப்பவன் சோமசுந்தரக்கடவுளாதலால் அவனே நமக்குணர்த்துவன் என்னுந் துணிவினன் என்பார் மறுத்தவுண்டியன்மாமலர்ப்பாயலை - வெறுத்தகன்றரைமேற்பள்ளிகொள்ளவும் பொறுத்தனன்றுயின்றான் என்றார். பொறுத்தனன் முற்றெச்சம். (உச)

மட்டலம்பியதாதகிமாலையா
னுட்டதும்பியொழுகியவன்பினாற்
கட்டிலங்கெயிற்கச்சியிற்காடெலாம்
வெட்டிநம்புடைவித்தியபத்தியான்.

(இ-ள்.) மட்டு அலம்பிய தாதகி மாலையான் - தேன்சிந்தும் ஆத்திமலர்மாலையையணிந்த சோழன், உள் ததும்பி ஒழுகிய அன்பினால் - அகத்தினின்றுததும்பி வழிந்த சிவநேசத்தால், கட்டு இலங்கு எயில் கச்சியில் காடு எல்லாம் வெட்டி - காவலாகவிளங்கு மதில்சூழ்ந்த காஞ்சியிலுள்ள காடுகளையெல்லாம் வெட்டி, நம்புடை வித்திய பத்தியான் - நம்மிடத்துச்செலுத்தும் பத்தியாகிய விதையைவித்தினவன்.

கச்சியிலுள்ளகாடு நாடாக்கிச் சிவபோகம்விளையச் சிவநேசமென்னும் வித்து வித்தினான் என்பார் வித்தியபத்தியான் என்றார். (உரு)

வந்துநம்மைவழிபடவேண்டினா
னிந்தவாயிற்றிறந்தழைத்தின்னரு
டந்துமீளவிடுத்துப்பின்றாட்கொளீஇ
நந்தமால்விடைநாம்பொறித்தேமென.

(இ-ள்.) வந்து நம்மை வழிபட வேண்டினான் - இங்குவந்து நம்மைத்துதிக்கவிரும்பினான், இந்த வாயில் திறந்து அழைத்து - இந்த வடக்குவாயிலைத்திறந்து அழைத்து, இன் அருள் தந்து - (நாமே அவனுக்கு) இனிய அருள்செய்து, மீளவிடுத்து - திரும்பவும் அவன் தன்னாட்டுக்குச்செல்ல (அவ்வழியே) அனுப்பி, பின் தாழ் கொளீஇ - பின்பு தாழிட்டு, நம் தம் மால்விடை நாம்பொறித்தேம் என - நமது பெரிய இடபமுத்திரையை நாம் இட்டோமென்று.

வழிபடவேண்டி யடைந்தோர்க்குத் தான் முற்பட்டருள்சுரந்து நிற்றலால் இந்தவாயிற்றிறந்தழைத் தின்னருடந்து என்றார் "அடைந்தவர்க்கருளுமப்பாபோற்றி" என்ற உண்மைத்திருவாக்கால் உணர்க. (உசு)

Koviloor Digital Library

அருளினனையந்தேற்றியகன்றபின்
மருளினீங்கிமலர்க்கண்விழித்தெழீஇ
வெருளினன்வெயர்த்தான்விம்மினன்பல
பொருளினற்றுதித்தான்குலபூடணன்.

(இ-ள்.) ஐயம் தேற்றி அருளினன் - சந்தேகத்தைத் துடைத்தருளி, அகன்ற பின்-நீங்கினபின், குலபூடணன் மருளின் நீங்கி - குலபூடணபாண்டியன் அவ்வையத்து நின்று நீங்கி, மலர் கண் விழித்து எழுந்து - தாமரைமலர்போன்ற கண்டுயிலுணர்ந்து, வெருளினன் வெயர்த்தான் விம்மினன் - அஞ்சிவெயர்த்து உடல்பூரித்து, பலபொருளினல் துதித்தான்-பலநுண்பொருளமைந்த பாடல்களால் துதித்தான்.

அருளினன், வெருளினன், வெயர்த்தான், விம்மினன் முற்றெச்சங்கள். ()

வள்ளலன்புக்கெளிவந்தமாண்புகண்
டுள்ளவுள்ளநின்றூற்றெழுமற்புத
வெள்ளமும்பரமானந்தவெள்ளமுங்
கொள்ளைகொண்டுதன்கோமனைநீங்கினன்.

(இ-ள்.) வள்ளல்-சிவபெருமான், அன்புக்கு எளிவந்த மாண்பு கண்டு-தனது அன்புக்கு எளியனாய்வந்த மாட்சிமையைநோக்கி, உள்ள உள்ள-நினைக்குந்தோறும், நின்று ஊற்று எழும் - இடைவிடாது நின்று சுரந்து எழாநின்ற, அற்புதம் வெள்ளமும் பரமானந்த வெள்ளமும் - சிவஞானப்பெருக்கையும் சிவபோகப்பெருக்கையும், கொள்ளைகொண்டு தன்கோமனை நீங்கினன் - கவர்ந்துகொண்டு தன் அரண்மனையினின்று நீங்கினன்.

பத்திவலையிற் படுவோனாதலால் அன்புக்கெளிவந்த மாண்புகண்டு எனவும், கனவிலுந்தேவர்க் கரியவன் கருணைத்திறம் அளத்தற்கரிய பெருமையதாதலால் உள்ள உள்ள எனவும், அக்கருணையால்விளைந்த சிவஞானமும் சிவபோகமும் எல்லையில்லனவாதலால் ஊற்றெழு மற்புதவெள்ளம் எனவும், பரமானந்தவெள்ளம் எனவும், அவற்றி லழுந்தினனாதலால் கொள்ளைகொண்டு எனவுங்கூறினர். உள்ள வுள்ள மிகுதிப்பொருளில்வந்த அடுக்குத்தொடர். (உஅ)

அளியருமனத்தன்புடையன்பருக்
கெளியராடலையார்க்கும்வெளிப்படத்
தெளியுமாறுதெளிவித்துத்தன்னைப்போல்
விளிவிலாவின்பவெள்ளத்தழுத்தினன்.

(இ-ள்.) அளி அருத மனத்து அன்பு உடைய அன்பருக்கு-சாந்தத்தினின்று நீங்காதமனத்தில் சிவநேசத்தையுடைய அடியவர்களுக்கு, எளியர் ஆடலை-எளியவராகிய சோமசுந்தரக்கடவுளுடைய திருவிளையாடலை, யார்க்கும் வெளிபட தெளியும் ஆறு தெளிவித்து-எவர்க்கும் புலப்படத் தெளியும்வண்ணம் தெளிவித்து, தன்னை போல்-இன்பத்திலழுந்திய தன்னைப்போல, விளிவு இல்லாத இன்பம் வெள்ளத்து அழுத்தினன் - அழிதலில்லாத பேரின்பவெள்ளத்தில் (பிறரும்) அழச்செய்தான்.

ஒடுங்கியமனம் என்பார் அளியருமனம் எனவும், அடியார்க்கெளியர் என்பார் அன்பருக்கெளியர் எனவுங்கூறினர் "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்" எனவரும் இறைவன் திருவாக்காலுணர்க. (உக)

Koviloor Digital Library

கொச்சகக்கலிப்பா.

கோடாதசெங்கோலும்வெண்குடையுங்கோமுடியு
மேடாரலங்கலிராசேந்திரற்களித்துத்
தோடாரிதழியான்றாட்கமலஞ்சூடிவா
னாடாளரசுரிமைபெற்றானரபதியே.

(இ-ள்.) நரபதி - குலபூடணபாண்டியன், கோடாத செம் கோலும்-கோணுதல் இல்லாத செங்கோலையும், வெண்குடையும் கோமுடியும் - தவளவட்டக்குடையையும் அரசிலக்கணத்துக்குரிய கிரீடத்தையும், ஏடு ஆர் அலங்கல் இராசேந்திரற்கு அளித்து - இதழ்நிறைந்த வெற்றிமாலையையணிந்த இராசேந்திரபாண்டியனுக்குக்கொடுத்து, தோடு ஆர் இதழியான் தாள் கமலம் சூடி-இதழ்நிறைந்த கொன்றைமலர்மாலையையணிந்த சோமசுந்தரக்கடவுளுடைய திருவடித்தாமரையைச்சூடி, வான் நாடு ஆள் அரசு உரிமை பெற்றான் - விண்ணுலகத்தையாளும் இந்திரபட்டத்தைப்பெற்றான்.

செங்கோல் வெண்குடையெனப் பிறிதோடியையு நீக்கிய விசேடணங்களானும், கோமுடியெனத் தன்னோடியையின்மை நீக்கியவிசேடணத்தானும் விசேடித்துக்கூறியது பாண்டியன் பகைப்புலக்கடிந்து நிலவுலகைப்பொதுநீக்கித் தனதடிக்கீழ்ப்படுத்தியதன்மேல் நின்றது. (௫0)

விடையிலச்சினையிட்டபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கஅகஅ.

முப்பத்தைந்தாவது

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சம்புமதுரைப்பரனிரவுதனியேவந்துதனைப்பணிந்த
வெம்புகதிரோன்மருமானைவிடுத்துமீண்டுதாழிறுக்கி
யம்பொற்கதவின்விடைபொறித்ததறைந்துந்தென்னன்படைக்கு
வம்புமலர்தோய்புனற்பந்தர்வைத்துக்காத்தவகைசொல்வாம்.

(இ-ள்.) சம்பு மதுரை பரன் - சம்புவாகிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், இரவு தனியே வந்து தனை பணிந்த - இரவில் துணையின்றிவந்து தன்னைவணங்கிய, வெம்பு கதிரோன் மருமானை விடுத்து - சூரியன் மரபில்வந்த சோழனை அவனாட்டிற்கனுப்பி, மீண்டு தாழ் இறுக்கி - மீளவுந் தாழ்கொளுவி, அம்பொன் கதவின் விடை பொறித்தது அறைந்தும் - அழகிய பொற்றகடுவேய்ந்த கதவத்தில் இடபமுத்திரையிட்ட திருவிளையாடலைக்கூறியும், தென்னன் அடுபடைட்

Koviloor Digital Library

தண்ணீர்ப்பந்தல்வைத்ததிருவிளையாடல்.



Koviloor Digital Library

Koviloor Digital Library

க்கு - இராசேந்திரபாண்டியனுடைய கொலைத்தொழிற்குரிய சேனைக்கு, வம்பு மலர் தோய் புனல் பந்தர்வைத்து - வாசமிக்க மலரளாவிய தண்ணீர்ப்பந்தல்வைத்து, காத்தவகை சொல்வாம் - காத்தருளிய திருவிளையாடலை இனிக்கூறுவாம்.

பாண்டியன் சேனை அளவிற் சிறியதேனும் மடங்காவீர முடையதென்பார் அடுபடை யெனவும், வாசமூட்டிய நீர் என்பார் வம்புமலர்தோய் எனவுங்கூறினர்.

தென்னனரசபுரந்தரன்கோல்செலுத்துநாளிற்காடெறிந்த
மன்னன்பின்னர்வெளிப்படையாப்போந்துபோந்துமதுரேசன்
பொன்னங்கமலத்தாள்வணங்கிப்போவான்முன்னிப்பொரும்பொருனைக்
கன்னிநாடன்கேண்மைபெறவிடுத்தான்வரிசைக்கையுறையே.

(இ-ள்.) தென்னன் அரசன் புரந்தரன் கோல் செலுத்தும் நாளில்-பாண்டியனாகிய இராசேந்திரன் செங்கோலைச்செலுத்திவருங்காலையில், காடு எறிந்த மன்னன் - காடுவெட்டியசோழன், பின்னர் வெளிப்படை யாக போந்து போந்து - பின்பு யாவருங்காண வந்துவந்து, மதுரேசன் பொன் அம் கமலம் தாள்வணங்கி போவான் முன்னி - மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் பொன்போலும் அரிய அழகிய தாமரைபோன்ற திருவடிகளைவணங்கிச் செல்லக்கருதி, பொரும் பொருனை கன்னிநாடன் கேண்மைபெற - கரையொடுமோதும் தாமரபர்ணிசூழ்ந்த பாண்டிநாட்டையுடைய இராசேந்திரனது நட்பினைவிரும்பி, வரிசை கையுறை விடுத்தான் - வரிசையாகக் கையுறையனுப்பினான்.

செலுத்து நாள் என்றமையால் கோல் என்றது செங்கோல் எனவும், சிவபெருமானை நாடோறும் இடையூறின்றி வந்து வணங்கிச்செல்லக் கருதினனாதலால் கேண்மைபெறவிடுத்தான் வரிசைக்கையுறை யெனவுங் கூறினர். (உ)

பொன்னிநாடன்வரவிடுத்தபொலம்பூணாடைமுதல்பிறவுங்
கன்னிநாடன்கைகவர்ந்துதானுங்கலக்குந்தொடர்பினு
லுன்னிவேறுகையுறையுய்த்துறவுசெய்யவுவப்பெய்திச்
சென்னிகாதன்மகட்கொடுப்பானிசைந்தானந்தச்செழியற்கு.

(இ-ள்.) பொன்னி நாடன் வர விடுத்த - காவிரிநாடனாகிய சோழன் அனுப்பிய, பொலம் பூண் ஆடைமுதல் பிறவும் - பொன்னாலமைந்த ஆபரணமும் ஆடையு முதலிய பிறபொருளையும், கன்னிநாடன் கைகவர்ந்து - இராசேந்திரபாண்டியன் கைக்கொண்டு, தானும் கலக்கும் தொடர்பினால் உன்னி - தானுமவனோடு அளவளாவும் தொடர்ச்சியால் நட்பைக்கருதி, வேறு கையுறை உய்த்து உறவுசெய்ய - வேறுகையுறை அனுப்பி அவனோடுறவுகொள்ள, சென்னி உவப்பு எய்தி-சோழன் மகிழ்கூர்ந்து, காதல் மகள் அந்த செழியற்குக் கொடுப்பான் இசைந்தான்-விருப்பமிக்க தனது புத்திரியை அந்த இராசேந்திரபாண்டியனுக்குக்கொடுக்க வுடன்பட்டான்.

சிவபெருமான் கனவில் வந்தருளும் மெய்யன்பினனாதல் அச்சோழன் நட்பைத் தானும் பெறவிரும்பினான் என்பார் வேறுகையுறையுய்த்துறவுசெய்ய எனவும், உரிமைச்சுற்றங்கொள்ளக்கருதினன் என்பார் மகள்கொடுப்பானிசைந்தான் எனவுங்கூறினர். (ங)

Koviloor Digital Library

செழியன்றனக்குவளையறுத்தசெய்திகேட்டுச்செம்பியர்கோன்
கழியன்புடையகுலமகளைத்தான்போய்க்கொள்வான்கருதிமதி
வழிவந்தவற்குத்தம்பியெனவந்தவரசசிங்கமெனும்
பழியஞ்சாதான்வஞ்சித்துப்பழனக்காஞ்சிப்பதிபுகுவான்.

(இ-ள்.) செழியன் தனக்கு வளை அறுத்த செய்தி கேட்டு - தனக்குமூத்தோனாகிய இராசேந்திரனுக்கு மகட்கொடைநேர்ந்து வளையறைசெய்த செய்தியைக்கேட்டு, செம்பியர் கோன் கழி அன்பு உடைய குலமகளை - சோழனது மிக்க அன்புடைய குலகன்னிகையை, தான்போய் கொள்வான் கருதி - தான்சென்று மணமுடிக்கநினைத்து, மதிவழிவந்தவற்கு தம்பி எனவந்த - சந்திரன் மரபில்வந்த அவ்விராசேந்திரனுக்குத் தம்பியாகப் பின்வந்த, அரச சிங்கம் என்னும் - அரசசிங்கபாண்டியனென்னும் பெயரையுடைய, பழி அஞ்சாதான் வஞ்சித்து - பழிக்கஞ்சாதவன் தன் மூத்தோனைவஞ்சித்து, பழனம் காஞ்சி பதிபுகுவான் - வயல்சூழ்ந்த காஞ்சிநகர்க்குச்செல்வானாயினன்.

தன்மூத்தோனுக்குத் தெரியாது சென்றமையால் வஞ்சித்து எனவும், மூத்தோன்மனைவி தனக்கு அன்னையெனக் கருதிலனாதலால் பழியஞ்சாதான் எனவுங் கூறினர். (௪)

காஞ்சிப்பதிமுன்குறுகுமிளங்காவலோனைக்கடற்சேனை
தாஞ்சுற்றியவந்தெதிர்கொடுபோய்த்தன்முன்றனக்கென்றிருந்தமக
ளாஞ்சிற்றிடையைமணம்புணர்த்தியந்தமருகற்கரசுநிலை
வாஞ்சித்தரசபுரந்தரனைப்பிடிக்கமதித்தான்வளமெறிந்தான்.

(இ-ள்.) காஞ்சி பதிமுன் குறுகும் இளமை காவலோனை - காஞ்சிநாட்டுக்கு முற்பட்டுச் செல்லும் இளவரசாகிய அரசசிங்கபாண்டியனை, கடல் சேனை தாஞ் சுற்றியவந்து - கடல்போன்றசேனை தன்னைச்சூழ்வர, எதிர்கொடுபோய் - எதிர்கொண்டுசென்று, தன்முன் தனக்கு என்று இருந்த மகளாம் சிற்றிடையை - அவன் மூத்தோனுக்கென்று வளையறுத்திருந்த தனதுபுத்திரியை, மணம் புணர்த்தி - கல்யாணமுடித்து, அந்த மருகற்கு - அந்த அரசசிங்கபாண்டியனுக்கு, அரசுநிலைவாஞ்சித்து - அவன்மூத்தோன் அரசியலை (கவர) விரும்பி, அரச புரந்தரனை பிடிக்க - அவ்விராசேந்திரபாண்டியனைப்பிடிக்க, வளம் எறிந்தான் மதித்தான் - காடுவெட்டிய சோழன்கருதினான்.

தான் வளையறுத்த செய்கையினின்று முறைபிறழ்ந்தானாதலால் அரசபுரந்தரனைப் பிடிக்கமதித்தான் என்றார். வந்து செயவெனெச்சத்திரிபு. (ரு)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மருமகன்றனுடனெழுந்துமாமனானவளவர்கோன்
பொருமகன்றசேனையானைபுடைநெருங்கமதிவழித்
திருமகன்றன்மேலுயர்த்திறைக்குறித்துமுரசறைந்
தருமகன்றபல்லியம்மொலிப்பவந்துளானரோ.

(இ-ள்.) மருமகன் தன் உடன் எழுந்து - மருகனாகிய இராசேந்திரனொடு போர்க்கெழுந்து, மாமன் ஆன வளவர்கோன் - மாமனாகிய காடுவெட்டியசோழன்

Koviloor Digital Library

பொரும் அகன்ற சேனை யானை புடை நெருங்க-போர்செய்யும் பரந்தசேனையோடு யானையுந் தனதுபக்கம் நெருங்கிவரவும், மதிவழி திருமகன் தன்மேல் அமர் திறம் குறித்து - சந்திரன் மரபிற்றோன்றிய அந்த இராசேந்திரபாண்டியன் மேற்போர்த்திறங்குறித்த, முரசு அறைந்து - முரசுகொட்டி, உரும் அகன்ற பல் இயம் ஒலிப் பவந்து உள்ளான் - இடிபோலப் பலவாத்தியங்கள் ஒலிக்கவும்வந்தான்.

சேனையுட்சிறந்தது யானைச்சேனையாதலால் சேனையென்றமையாது யானையெனவும், பாண்டியன் சேனையின் சிறுமையைக்கருதி வெல்லத் துணிந்தனனாதல் புடைநெருங்கமுரசறைந்துவந்துளான் எனவுங் கூறினார். (௬)

திரண்டதிர்ந்தெழுந்துவந்தசென்னிசேனைதன்னகர்க்
கிரண்டுயோசனைப்புறத்திறுக்குமுன்னரொற்றராற்
றெருண்டுதென்னன்மாடநீடுகூடன்மேயசிவனதாள்
சரண்புகுந்துவேண்டுகென்றுசார்ந்துதாழ்ந்துகூறுவான்.

(இ-ள்.) திரண்டு அதிர்ந்து எழுந்து வந்த சென்னி சேனை - நெருங்கிக்கோஷித்துப் போர்க்கு எழுந்துவந்த சோழனுடையசேனை, தன் நகர்க்கு இரண்டு யோசனை புறத்து இறுக்கு முன்னர் - தன்னகரத்திற்கு இரண்டுயோசனைத் தூரத்திற்கு அப்பால் பாடிவீடுகொண்டு வசிப்பதற்குமுன், ஒற்றரால் தென்னன் தெருண்டு - வேவுகாரரால் பாண்டியனுணர்ந்து, மாடம் நீடு கூடல் மேய சிவன தாள் சரண் புகுந்து - மாடங்கள் நெருங்கிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவடியில் அடைக்கலம் புகுந்து, வேண்டுக என்று சார்ந்து தாழ்ந்து கூறுவான் - குறையிரக்கக்கடவேனென்று வந்து பணிந்து கூறுவானாயினான்.

சோழன் தனது வழிபாட்டைச் சிறிதுங் கருதாதெழுந்தான் என்பார் அதிர்ந்தெழுந்துவந்த எனவும், தன்பகையைத் தனக்கோர் கிளையாகக் கூட்டி முடித்தவர் சோமசுந்தரக்கடவுளாதலால் அவர்பாற்சென்று குறையிரக்க எழுந்தான் என்பார் சிவனதாள் சரண்புகுந்து வேண்டுகென்று சார்ந்து எனவுங்கூறினார். (௭)

அன்றுபாதியிரவில்வந்துனடிபணிந்ததமியனாய்ச்
சென்றசென்னியென்றுநின்னதிருவடிக்கணன்பினா
னென்றுமந்நிலையனாயெனக்குவேண்டுவனவிடுத்
தொன்றுகேண்மைபுரிகுவானுளத்திலொன்றையுன்னினான்.

(இ-ள்.) அன்று பாதி இரவில் வந்து - அக்காலையில் பாதிராத்திரியில்வந்து, உன் அடி பணிந்து தமியனாய் சென்ற - உனது திருவடியைப்பணிந்து தனியனாய்ப் போன, சென்னி என்னும் நின்ன திரு அடிகண் அன்பினான் - காடுவெட்டியசோழனென்னும் உன்னுடைய திருவடியிலன்புடையோன், என்றும் அந்நிலையனாய் எனக்கு வேண்டுவன விடுத்து - எப்பொழுதும் அந்நிலையை யுடையவனாக எனக்குவேண்டும் வரிசைகளையனுப்பி, ஒன்று கேண்மை புரிகுவான் - மனமொத்த நட்பை விரும்பினவன், உளத்தில் ஒன்றை உன்னினான் - (இப்பொழுது) மனத்தில் வேறொன்றைக்கருதினான்.

Koviloor Digital Library

உனது திருவருளால் எனது நாட்டுக்குளஞ்சாது வந்துசென்முன் என்பான்-அன்று பாதியிரவில் வந்து தமியனாய் எனவும், அவனது திருவடிக்கண் முந்திய நேயன் என்பான் நின்னதிருவடிக்கணன்பிலான் எனவும், அந்நேயம் என்றும் நிலை பெற்று ஓங்காதிருத்தற்கு வேண்டினான் என்பான் என்று மந்நிலையனு பெனக்குவேண்டுமெனவிரத்தொன்றுகேண்மைபுரிகுவான் எனவும், இன்று உன்திருவடிக்குப் பிழைத்தான் என்பான் உளத்திலொன்றையுன்னினான் எனவுங்கூறினார். (அ)

அறத்திறுக்குளாகியன்றுநின்றநீயவன்செயு
மறத்திறுக்குளாகியின்றுவன்மைசெய்வதேயறப்
புறத்தினார்புரம்பொடித்தபுண்ணியாவெனக்கனாந்
துறைத்துவேண்டினனவேலையும்பர்நாதனருளினால்.

(இ-ள்.) அறத்திறுக்கு உள் ஆகி அன்று நின்ற நீ - தருமத்துக்குட்பட்டு அக்காலையில் அவனுக்குத் துணையாய்நின்ற நீ, அவன் செயும் மறத்திறுக்கு உள்ளாகி இன்று வன்மை செய்வதே-அவன்செய்யுங் கொடுந்தொழிலுக்கு இணங்கி இப்பொழுது அவனுக்குத் துணைசெய்வதோ, அறம் புறத்தினார் புரம் பொடித்த புண்ணியா என கனாந்து - பாவத்தின்வழிநின்ற திரிபுராதிகளின் திரிபுரங்களை நீறுபடுத்திய புண்ணியனல்லவோ நீ என்றுகூறி, உறைத்து வேண்டினான்-வலிந்துகுறையிரந்தான், அவ்வேலை உம்பர் நாதன் அருளினால் - அக்காலையில் சோமசுந்தரக்கடவுளின் திருவருளினால்.

சிவபுண்ணியத்தின்வழி நின்றோர்க்கு நீ யன்மையனென்பான் அறத்திறுக்குளாகி யெனவும், அப்புண்ணியத்தின் புறத்து நின்றோர்க்கு நீ சேயனென்பான் விழுப்பொருள்பட அவன்செயுமறத்திறுக்குளாகி யின்றுவன்மைசெய்வதே எனவும், தனதுட்கருத்தைப்புலப்படச் சிவபுண்ணிய நிலைபெறுத்தற்கு அப்புண்ணியத்தினின்று வழுவினோர்புரத்தை நீறுசெய்தவன் நீயன்றோ என்பான் அறப்புறத்தினார் புரம் பொடித்தபுண்ணியா எனவுங்கூறினான். அறப்புறத்தினார்புரம்பொடித்தபுண்ணியா என அபிப்பிராயத்தோடுகூடிய விசேடணத்தைக் கூறுதலால் கருத்துடை யடையணி. (கூ)

மெய்துறந்தவாய்மைபொன்றுவிண்ணினின்றுமன்னவே
யைதுநுங்கள்சேனையோடுமாகவத்துநாளைநீ
யெய்திவந்ததெவ்வரோடெதிர்ந்துருந்துநின்றுபோர்
செய்திவென்றிநின்னதாதல்செய்துமென்றெழுந்ததால்.

(இ-ள்.) விண்ணின் நின்றும் மெய் துறந்த வாய்மை ஒன்று-ஆகாயத்தினின்றும் அசரீரியொன்று, அன்னவே - பாண்டியனே, ஐது நுங்கள் சேனையோடும்-அழகிதாக உங்கள்சேனையோடும், ஆகவத்து - போர்க்களத்தில், எய்தி வந்த தெவ்வரோடு நாளை நீ எதிர்ந்து உருத்து நின்று போர் செய்தி - அடைந்துவந்தபகைவரோடு நாளைக்கு நீ எதிர்த்துக்கோபித்துநின்று போர்த்தொழில்செய்வாய், வென்றி நின்னது ஆதல் செய்தும் என்று எழுந்தது - வெற்றி யுன்னுடையதாகச் செய்வோமென்று எழுந்தது.

Koviloor Digital Library

பாண்டியன் வேண்டுகோளுக்கு உடன்பட்டாராதலால் நாளை போர்செய்தி யெனவும், உனக்குத் துணையாய்நிற்போம் அஞ்சற்க என்றனராதலால் வென்றி நி ன்னதாதல் எனவுங் கூறினர். மெய்துறந்தவாய்மை என்றமையால் அசரீரியென்று ம். மெய் சரீரம். (க0)

காயவாணிசெவிநுழைந்தகாலைவேந்தரிந்திர
னாயனாரடிக்கணேநயந்தவன்புமுவகையு
மாயவேலைவீழ்ந்துதாழ்ந்தகன்றுதன்னிருக்கைபோய்
மேயினானிமிர்ந்தகங்குல்விடியுமெல்லைநோக்குவான்.

(இ-ள்.) காயம் வாணி செவி நுழைந்த காலை - ஆகாசவாணி செவியில் நுழைந்தகாலத்தில், வேந்தர் இந்திரன் - இராசேந்திரன், நாயனார் அடிக்கண்ணே நய ந்த அன்பும் உவகையும் ஆய வேலை - சோமசுந்தரக்கடவுள் திருவடியில் எழுந்தநே யமும் அதனாலெழுந்த களிப்பும் ஆகியகடலில், வீழ்ந்து தாழ்ந்து அகன்று-விழுந்து மூழ்கி அதனினின்றுநீங்கி, தன் இருக்கை போய் மேயினான்-தன்கோயிலில் சென்று அடைந்து, நிமிர்ந்த கங்குல் விடியும் எல்லை நோக்குவான் - எழுந்தோங்கிய இராப் போது விடியுமளவைப் பார்ப்பவனாயினான்.

சிவபெருமான் திருவடியிற்கொண்ட நேயம் பிழையாமையாலும் தன்கருத் து முற்றினமையாலும் துன்பங் கழிந்து பேரின்பம்பெற்றான் என்பார் அன்புமுவ கையுமாயவேலைவீழ்ந்துதாழ்ந்து என்றார். (கக)

கழித்தகங்குலிறவிசும்புகண்விழிக்குமுன்னரோ
விழித்தெழுந்துசந்தியாதிவினைமுடித்துவானநீர்
சுழித்தலம்புவேணியண்ணலாயபூசைசெய்தெழீஇத்
தெழித்தெழுந்தசேனையோடுசெருநிலத்தைநண்ணினான்.

(இ-ள்.) கழித்த கங்குல் இற - மிக்க இராப்போது கெட, விசும்பு கண் வி ழிக்கும் முன்னர் - ஆகாயம் கண்திறக்குமுன், விழித்து எழுந்து - தான்துயிலுணர் ந்து, சந்தி ஆதி வினை முடித்து - நித்தியகடன்முதலிய கருமங்களைச் செய்துமுடித் து, வானம் நீர் சுழித்து அலம்பு வேணி அண்ணல் - கங்கை சுழித்து ஒலிக்குஞ் ச டாமுடியையுடைய சிவபெருமானாரது, தூய பூசை செய்து எழீஇ - பரிசுத்தமாகிய பூசையைச்செய்து எழுந்து, தெழித்து எழுந்த சேனை ஓடு செரு நிலத்தை நண்ணி னான் - அதட்டிப் போர்க்கெழுந்த சேனையோடு போர்க்களத்தை அடைந்தான்.

தான் கருதிய கரும முற்றியதாதலால் துணிந்தானென்பார் சேனையோடுசெ ருநிலத்தைநண்ணினார் என்றார். உலகிற்குக் கண்ணாதலால் கண் என்றது உவமை யாகுபெயராய்ச் சூரியன்மேல் நின்றது "வான்கண்விழியாவைகறையாமத்து"என வருதல்காண்க. (கஉ)

அலைசிறந்தசலதிமீதொராறுசெல்லுமாறுபோன்
மலைசிறந்தநேரிவெற்பன்மள்ளர்சேனைவெள்ளமேற்
கலைசிறந்தமதிநிறைந்தகன்னிநாடுகாவலான்
சிலைசிறந்தசிறியசேனைசென்றலைத்துநின்றதே.

Koviloor Digital Library

(இ-ள்.) அலை சிறந்த சலதி மீது - அலைமிக்க கடலின்மேல், ஓர் ஆறு செல்லும் ஆறு போல் - ஓர்நதிசெல்லும் வகையைப்போல, மலை சிறந்த நேரி வெற்பன் - மலைகளிற்சிறந்த நேரிமலையையுடைய சோழனது, மள்ளர் சேனை வெள்ளம்மேல் - வீரர்சேனாசமுத்திரத்தின்மேல், கலை சிறந்த மதி நிறைந்த - அறுபத்துநான்கு கலைகளின் தேர்ச்சியில் மேம்பட்ட, கன்னி நாடு காவலன் - பாண்டிநாட்டரசனாகிய இராசேந்திரன், சிலை சிறந்த சிறிய சேனை சென்று அலைத்து நின்றது - வில்லிற் சிறந்த சிறியசேனையானது போரிற்சென்று வருத்திநின்றது.

சோழன்சேனையின் பெருமையையும், பாண்டியன்சேனையின் சிறுமையையுமுணர்த்தற்குக் கூறிய உவமையாதலால் பண்புபற்றிவந்த வுவமையணி. சிறிய சேனை என்றமையால் பெரியசேனையெனக்கொள்க. (௧௩)

உருமுவன்னகுரலினருலவையன்னசெலவினர்
வெருவுதீயின்வெகுளியார்வெடித்தவீரநகையினர்
செருவின்மானவணியினர்சினைஇமடித்தவாயின
ரிருவர்சேனைமள்ளருமெதிர்ந்துகைகலந்தனர்.

(இ-ள்.) உருமு அன்ன குரலினர் - இடியையொத்த குரலையுடையவரும், உலவை அன்ன செலவினர் - காற்றையொத்த நடையையுடையவரும், வெருவு தீயின் வெகுளியார் - அஞ்சுந் தீயையொத்த கோபமுடையவரும், வெடித்த வீர நகையினர் - தம்மை அறியாது எழுந்த வீரநகையையுடையவரும், செருவில் மான அணியினர் - போரில் புறக்கொடாமையாகிய மானாபரணத்தையுடையவரும், சினைஇ மடித்த வாயினர் - கோபித்து மடித்த வாயினையுடையவருமாகி, இருவர் சேனை மள்ளரும் எதிர்ந்து கை கலந்தனர் - சோழபாண்டியர்களுடைய சேனாவீரரும் தம்முள் எதிர்த்து கைகலந்தார்கள்.

இருவருந் தம்முளொத்த ஆற்றலும் புறங்காட்டாத தறுகண்மையுமுடையவர் என்பார் இவ்வாறுகூறினர். (௧௪)

மன்றலந்தெரியனேரிமலையவன்றமர்க்கெலாந்
தென்றலம்பொருப்பினன்றிரண்டநான்குகருவியு
மின்றயங்குசெய்யவேணிவிடையவன்றனருளினா
லொன்றனந்தமாகவந்துருத்தெதிர்ந்துதோன்றுமால்.

(இ-ள்.) மன்றல் அம் தெரியல் நேரி மலையவன் தமர்க்கு எல்லாம் - வாசமிக்க மாலையை அணிந்த நேரிமலையையுடைய சோழனது சேனாவீரர்களுக்கெல்லாம், தென்றல் அம் பொருப்பினன் திரண்ட நான்கு கருவியும் - பொதியமலையையுடைய பாண்டியனது திரண்ட நான்குசேனையும், மின் தயங்கு செய்யவேணி விடையவன் தன் அருளினால் - மின்னல்போல்விளக்குஞ் செவந்தசடையையுடைய சோமசுந்தரக்கடவுளின் திருவருளினால், ஒன்று உரு அனந்தம் உரு ஆக வந்து தெரிந்து தோன்றும் - ஓர் உரு அனந்த உருவாகவந்து புலப்பட்டுத் தோன்றாநிற்கும்.

Koviloor Digital Library

சிவபெருமான் திருவருளால் ஒன்றனந்தமாகப் பல்கியதென்பார் தோன்றும் என்றார். (கரு)

தேரினோதைகந்துகஞ்சிரிக்குமோதைசொரிமதக்
காரினோதைபேரியங்கறங்குமோதைமறவர்தம்
போரினோதைவீரர்தோள்புடைக்குமோதையோடுமுந்
நீரினோதையொன்றெனக்கலந்தொடுங்கநின்றதே.

(இ-ள்.) தேரின் ஓதை - தேரின்கம்பலையும், கந்துகம் சிரிக்கும் ஓதை - குதிரைகள் கனைக்குமோதையும், சொரிமதம் காரின் ஓதை - மதத்தைப்பொழியும் யானையின் அரவமும், பேர் இயம் கறங்கும் ஓதை - பெரிய வாச்சியங்கள் ஒலிக்குங் கோஷமும், மறவர் தம் போரின் ஓதை - இரண்டுசேனைவீரர்களும் தம்முள் போர் செய்யும் ஆரவாரமும், வீரர்தோள் புடைக்கும் ஓதை ஓடு - அவ்வீரர்கள் தமது தோளைக்கொட்டி ஒலிக்கும் முழக்கத்தோடு, முந்நீரின் ஓதை ஒன்று என கலந்து ஒடுங்க நின்றது - கடலொலியோடொன்றென்று சொல்லத் தம்முள்கலந்து அடங்கின்றது.

அளவிறந்த சேனையாயிற்றென்பார் முந்நீரினோதை யொன்றெனக்கலந்தொடுங்க நின்றதே என்றார். (கசு)

சிலைபயின்றவீரரோடுசிலைபயின்றவீரரே
கலைபயின்றவாளரோடுகலைபயின்றவாளரே
கொலைபயின்றவேலரோடுகொலைபயின்றவேலரே
மலைபயின்றமல்லரோடுமலைபயின்றமல்லரே.

(இ-ள்.) சிலைபயின்ற வீரர் ஓடு சிலைபயின்ற வீரரே - விற்றொழிற்பயிற்சியையுடைய வீரர்களோடு விற்றொழிற்பயிற்சியையுடையவீரர்களே, கலைபயின்றவாளர் ஓடு கலைபயின்றவாளரே - சஸ்திரநூல்வழிபயின்ற வாள்வீரரோடு சஸ்திரநூல்வழி பயின்ற வாள்வீரர்களே, கொலைபயின்ற வேலர் ஓடு கொலைபயின்றவேலரே - கொலைத்தொழில்பயின்ற வேல்வீரரோடு கொலைத்தொழில்பயின்ற வேல்வீரர்களே, மலைபயின்ற மல்லர் ஓடு மலைபயின்ற மல்லரே - மற்போரிற்பயின்ற மல்லர்களோடு மற்போரிற்பயின்ற மல்லர்களே.

மல் பகுதிப்பொருள்விகுதி யேற்றுத்தொகுக்கும் வழித்தொகுத்தலாய் மலை யென நின்றது. (கஎ)

கரியுகைத்தபாகரோடுகரியுகைத்தபாகரே
பரியுகைத்தமறவரோடுபரியுகைத்தமறவரே
கிரியுகைத்தவலவரோடுகிரியுகைத்தவலவரே
யெரியுகைத்தெதிர்ந்தகாலெனக்கலந்துமலைவரால்.

(இ-ள்.) கரி உகைத்தபாகர் ஓடு கரி உகைத்தபாகரே - யானையைச்செலுத்திய பாகரோடு யானையைச்செலுத்தியபாகர்களே, பரி உகைத்த மறவர் ஓடு பரி உகைத்த மறவரே - குதிரையைச்செலுத்தும் வீரர்களோடு குதிரையைச்செலுத்தும்வீரர்களே, கிரி யுகைத்த வலவர் ஓடு கிரி உகைத்தவலவரே - தேராகிய மலையைச்

Koviloor Digital Library

செலுத்திய பாகரோடு தேரோடியமல்லையைச்செலுத்தியபாகர்களோ, எரி உகைத்த எதிர்ந்த கால் என கலந்து மலைவர் - (இவ்வாறு) வடவாமுகாக்கினியை மூட்டியெ ழுந்த சண்டமாருதம்போலத் தம்முட்கலந்து போர்செய்வார்கள்.

போர்வீரர் தம்முளொத்த போர்வீரரோடு போர்செய்தல் போர்த்தொழில் முறையாதலால் சிலைபயின்றவீரரே யென்பது முதல்கிரியுகைத்த வலவரோயென மு றைபடக்கூறினர். எரி உவமையாகுபெயர். (கஅ)

விடுக்கும்வாளியெதிர்பிழைப்பர்வெய்யவாளியெய்துபின்
றொடுக்கும்வாளிவில்லொடுந்துணிப்பர்பின்கணிப்பற
மடுக்கும்வாளிமார்புதைப்பவாங்கிமற்றைவாளிகொண்
டடுக்குமேவலாரையெய்தடர்ப்பர்கிள்ளிமள்ளரோ.

(இ-ள்.) கிள்ளி மள்ளர் - சோழனுடைய சேனைவீரர்கள், விடுக்கும் வாளி எதிர்பிழைப்பர் - (பாண்டியன் சேனைவீரர்கள்) தொடுக்கும் பாணங்களுக்கு எதிர் நின்று தப்பி, வெய்ய வாளி எய்து - கொடிய அம்புகளைத் தாம்தொடுத்து, பின் தொ டுக்கும் வாளி வில் ஒடும் துணிப்பர் - பின்பு அவர்கள் தொடுக்கும் அம்புகளை வில் லோடுந் துண்டுபடுத்துவர், பின் கணிப்பு அற மடுக்கும் வாளிமார்பு தைப்பவாங்கி- பின்பு அளவில்லாமல் அவர்கள்தொடுக்கும்பாணங்கள் தமது மார்பில்தைத்திருக்க அவற்றைவாங்கி, வாளி கொண்டு அடுக்கும் ஏவலாரை எய்து அடர்ப்பர் - மீளவும் அம்புகொண்டு போர்க்குவரும் பகைவர்மேலெய்க்கொல்லுவார்கள்.

தமது மார்பிற்றைத்த அம்புகளைப்பிடுங்கி மீளவும் எய்தனர் எனக்கூறியது நூழிலாட்டு என்றதுறை "களங்கழுமியபடையிரிய, உளங்கழிந்தவேல்பறித்தோ ச்சின்று" என்பதனாலுணர்க. (கக)

சோனைமாரியிற்சரஞ்சொரிந்துநின்றுதள்ளுவா
ரானவாளியெதிர்பிழைத்தொதுங்கிநின்றழற்சரங்
கூனல்வாளிசிலையிறத்தொடுத்தெதிர்ந்துகூவுவார்
மீனகேதனத்துவேந்தன்வீரர்சென்னிவீரர்மேல்.

(இ-ள்.) மீனம் கேதனத்து வேந்தன் வீரர் - கயற்கொடியையுடைய பாண்டி யன்சேனைவீரர்கள், சென்னி வீரர்மேல் - சோழன்சேனைவீரர்கள்மேல், சோனைமாரியில் சரம் சொரிந்து நின்று தள்ளுவார் - சோனைமழையைப்போலப் பாணங்களைச்சொரி ந்துநின்று தள்ளுவார்கள், ஆன வாளி எதிர்பிழைத்து ஒதுங்கி நின்று - பகைவர்க ள் எய்யும் பாணங்களுக்கு எதிரேதப்பி யொதுங்கிநின்று, அழல் சரம் - நெருப்பு உமிழும் தமதுபாணங்களை, வாளி கூனல் சிலை இற தொடுத்து எதிர்ந்து கூவுவார்- அவர்களுடைய அம்புகள் ஏறிட்ட வளைந்தவில் துண்டுபடப் பிரயோகஞ்செய்து துன்புறுத்தி வீரகோஷஞ்செய்வார்கள்.

இடைவிடாது சொரிந்தார் என்பார் சோனைமாரியெனவும், வெற்றிதமதா யிற்றெனக்கருதினாரென்பார் தள்ளுவார் எனவும், பகைவர் எய்யும் பாணத்துக்கொ ல்கார் என்பார் ஆனவாளி யெதிர்பிழைத்து எனவும், தமது விற்றிறங்காட்டினர் என்பார் சிலையிறத்தொடுத்தெதிர்ந்தெனவுங் கூறினர். (உ0)

Koviloor Digital Library

தறிந்ததாடகர்ந்தசென்னிதரையுருண்டவரையெனச்
செறிந்ததோள்சரிந்ததேர்சிதைந்தபல்படைக்கலம்
முறிந்தயானைகையிருமுழங்கிவீழ்ந்தசெம்புனல்
பறிந்தபாறுபாரிடங்கள்பைத்தகூளிமொய்த்தவே.

(இ-ள்.) தாள் தறிந்த - (சேனவீரர்கள்) கால்கள் முறிபட்டன, தகர்ந்த சென்னி - அறுபட்டதலைகள், தரை உருண்ட - நிலவுலகின்மேலுருண்டன, வரை என செறிந்த தோள் - மலையைப்போல நெருங்கித்திரண்டதோள்கள், சரிந்த - துண்டுபட்டுச்சரிந்துவிழ்ந்தன, தேர்சிதைந்த - தேர்கள் அழிந்தன, பல் படைக்கலம் முறிந்த - பலவகைப்பட்ட ஆயுதங்களு முறிபட்டன, யானை கை இரு - யானைகள் துதிக்கை துண்டுபட்டு, முழங்கி வீழ்ந்த - அலறிவீழ்ந்து சாய்ந்தன, செம் புனல் பறிந்த-உதிரவெள்ளம் எங்கும்பரந்தன, பாறு-கழுகுகளும், பாரிடங்கள்-பூதங்களும், பைத்தகூளி-பரவியபசாசுகளும், மொய்த்த-போர்க்களம் (எங்கும்) நெருங்கின.

தகர்தல் உடைபடல். உருண்ட என்றமையால் அறுபட்ட என்றும். (உக)

மடலினீடுதாரலங்கன்மன்னர்சேனையின்னவா
றுடலினீழலடியகத்தொடுங்கவும்பருச்சியிற்
கடலினீடுகதிர்பரப்புகடவுளெய்துமளவுநின்
றடலினீடியிடைவிடாமலமருழந்தவாலரோ.

(இ-ள்.) மடலின் நீடு தார் அலங்கல் - இதழ்களால் மணமிக்க மாலையயணிந்த, மன்னர் சேனை - சோழபாண்டியர்கள் சேனைகள், இன்ன ஆறு-இவ்வகையாக, உடலின் நீழல் - தேகத்தினிழல், அடி அகத்து ஒடுங்க - தமதுகாற்கீழொடுங்கிநிற்க, உம்பர் உச்சி இல் - ஆகாயத்தின்மத்தியில், கடலின் நீடு கதிர்பரப்பு - கடல்போல அளவின்றிப்பரந்த கிரணங்களைவீசும், கடவுள் எய்தும் அளவும் நின்று-சூரியனடையும் நண்பகற்போதகாறும் நின்று, அடலின் நீடி - வலிமையில் தளர்வின்றி, இடைவிடாமல் அமர் உழந்த - சற்று நீங்காது போர்செய்து நின்றன.

உச்சிப்போதில் தேகநிழல் காற்கீழொடுக்குதலால் உடலினீழலடியகத் தொடுங்க என்றார். இன் ஒப்புப்பொருள்மேல் நின்ற ஐந்தனுருபு. (உஉ)

அந்தநாளனைத்தையும்மழிக்கநின்றவாறனுதல்
சிந்துதீயெனக்கனன்றுறுத்துநின்றுதெறுதலால்
எந்தயாறுமறவறப்பவிம்பரன்றியும்பரும்
வெந்துவானயாறும்வற்றவேனில்வந்திறுத்ததால்.

(இ-ள்.) அந்தம் நாள் - முடிவுகாலில், அனைத்தையும் அழிக்க நின்ற - எல்லாப்பொருள்களையும் அழிக்கும்படிநின்றருளிய, அரன் நுதல் - உருத்திரமூர்த்தியினெற்றிக்கண், சிந்து தீ என - சிந்தும் தீயைப்போல, கனன்று உருத்து நின்று தெறுதலால் - கொதித்து உஷ்ணித்து நின்று -(சூரியகிரணங்கள்) வாட்டுதலால், எந்த யாறு உம் - எவ்வகைப்பட்டநதிகளும், அறவறப்ப - மிகவும்வற்றவும், இம்பர் அன்றி - இந்நிலவுலகுமன்றி, உம்பரும் வெந்து - விண்ணுலகும் கருகுதலால், வான யாறும் வற்ற - ஆகாயகங்கைவறப்பவும், வேனில் வந்து இறுத்தது - வேனிற்போதுவந்து நிலைபெற்றது.

அந்த என, திரிந்து நின்ற சுட்டுச்சொல்லமையயுணர்த்துதலால் அந்தநாள் எனக்கொண்டு முடிவுநாள் எனப்பொருள்கொள்ளுதலும் அமையும். வற்றுத சரக்கும் தெய்வநதிகளும் என்பர் எந்தயாறும் என்றார். தனது அதிகாரசத்தியைப் பிரமன்மாலிவர்கள்பால்வைத்துத் தோற்றியுங்காத்தும் இறுதியிலியாவையும் அழித்துநிற்றலால் அந்தநாளனைத்தையும் அழிக்கின்ற அரன் என்றார். "நிலவுகின்றதன் னருளுருக்கொண்டிடுநிமலன். தலைமைபெற்றிடு புங்கவர்தம்மைமுன்றந்தே, உலகம்யாவையுமழித்தருள்செய்திடவுதவி, அலகிலாவுயிர்யாவையுமயன்கணின்றளிப்பான்." "மாயவன்கணின்றவையெலாம்போற்றிமற்றவைக்குத், தூயதுப்புரவருத்தியேமேல்வினைதொலைச்சி, யாயவற்றிலோர்பற்பலவீடுறவருளி, மேயவாருயிருலகெலாம் பின்னரேவிட்டும்." "அன்னவேலையிலவையெலாமழித்தபினளிப்போர், என்னநின்றவர்தம்மையுமொடுக்குறும்" எனக்காந்தம் தக்ஷகாண்டம் ததீசியுத்தரப்படலத்தில் வருதல்காண்க. நுதல் இடவாகுபெயராய்க் கண்மேல்நின்றது. (௨௫)

மண்பிளந்துபிலநுழைந்துவரைபிளந்துநிரையவாய்
எண்பிளந்துநின்றபொங்கரிலையுகப்பிளந்துமேல்
விண்பிளந்துபரிதிநீடுவெங்கரங்கள்யாரையுங்
கண்பிளந்தழன்றுவீசுகானலெங்குமானதே.

(இ-ள்.) பரிதி-சூரியனுடைய, நீடு வெங்கரங்கள் - மிக்ககொடியகிரணங்கள், யாரை உம் - எவரையும், கண்பிளந்து - கண்கூச, அழன்று வீசு கானல் - கொதித்து வீசுங்கானல், மண்பிளந்து - நிலவுலகைப்பிளந்து, பிலம் நுழைந்து-பாதலவுலகிற்சென்று, வரை பிளந்து - மலைகளைப்பிளந்து, நிரைய ஆய் - ஒழுங்குபட்டனவாய், எண்பிளந்துநின்ற - அளவைகடந்துநின்ற, பொங்கர் இலை உக பிளந்து- சோலையிலுள்ள இலைகள் சிந்த எரித்து, மேல்விண்பிளந்து - மீதுள்ளவிண்ணுலகைப்பிளந்து, எங்கும் ஆனது - எவ்விடத்தும் பரவியது.

சூரியகிரணவெம்மையே கானலானதால் வெங்கரங்கள் வீசுகானல் எனவும், அதுமிகக் கொடியதாயிருத்தலால் யாரையுங் கண்பிளந்து எனவும், சூரியகிரணம் தோயுமிடமுற்றும் பரவியதாதலால் எங்குமானது எனவுங்கூறினார். கண்பிளந்து செயவெனெச்சத்திரிபு. (௨௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆயிடையலகைத்தேருமடைந்தவர்வெயர்வுமன்றித்
தூயநீர்வறந்தவந்தச்சுடுபுலந்தோய்ந்தகாலும்
வியுயர்மதிநிலாவும்வெய்யவாய்ச்சுடுநல்லோரும்
தீயவர்தம்மைச்சேர்ந்தாற்றீயவராவரன்றே.

(இ-ள்.) ஆயிடை - அவ்விடத்துள்ள, அலகைத்தேரும் - கானற்சலமும், அடைந்தவர் வெயர்வும் அன்றி - அங்கடைந்தவர்வேர்வையுமல்லாமல், தூய நீர் வறந்த - புனிதமாகிய நீரும்வற்றின, அந்த சுடுபுலம் தோய்ந்தகாலும் - அந்தச்சுட்டெரித்தும் நிலத்தில் அளாவியகாற்றும், வி உயர் மதி நிலாவும் - விண்ணுலகில் உயர்ந்த விளங்கும் சந்திரன்கிரணமும், வெய்ய ஆய் சுடும் - கொடியனவாகிச்சுடாநிற்கும், நல்லோரும் தீயவர்தம்மை சேர்ந்தால் - நல்லவருங் கெட்டவரைச்சேர்ந்தால், தீயவர் ஆவர் அன்றே - கெட்டவராவாரல்லவா.

Koviloor Digital Library

தண்ணியதென்றற்காற்று என்பார் தோய்ந்தகாலும் வெய்யவாய்ச்சுடும் என வும், எங்கும் நீர்ப்பசையொழிந்தன என்பார் ஆயிடையலகைத்தேரு மடைந்தவர் வெயர்வுமன்றித் அயநீர்வறந்த எனவுங்கூறினர். நல்லோருந் தியவர்தம்மைச்சேர் ந்தால் தியவராவரன்றே என்னும்பொருளால் சுடுபுலந்தோய்ந்தகாற்றும் சந்திர னும் தன்மைக்குணமாறி வெய்யவாய்ச்சுடுமென வர்ணியமாகிய சிறப்புப்பொருள் சாதிக்கப்படுதலால் வேற்றுப்பொருள்வைப்பணி. (உ௫)

விளைமதவூற்றுமாறிவெகுளியுஞ்செருக்குமாறித்
தொளையுடைக்கைம்மான்றூங்குநடையவாய்ச்சாம்பிச்சோர்ந்த
உளர்தருமூழிக்காலினோடுவாம்புரவியெய்த்துத்
தளர்நடையுடையவாகித்தைவருதென்றல்போன்ற.

(இ-ள்.) விளைமத ஊற்றும் மாறி - இடைவிடாதொழுகு மதத்தின்சுரப்பு மாறி, வெகுளியும் செருக்கும்மாறி - கோபமும் இறுமாப்புமாறி, தொளை உடைய கைமான் - தொளைபொருந்திய துதிக்கையையுடைய யானைகள், தூங்கு நடைய ஆய்-மந்தநடையை யுடையனவாகி, சாம்பி சோர்ந்த - வாடிச்சோர்ந்தன, உளர் தரும் ஊழிக்காலின் - சஞ்சரிக்கும் ஊழிக்காற்றைப்போல, ஓடுவாம்புரவி எய்த்து-வி ரைந்தோடுந் தாவாநின்ற குதிரைகள்சோர்ந்து, தளர்நடை உடைய ஆகி - தளர்ந்து நடக்கும் நடையையுடையனவாகி, தைவருதென்றல்போன்ற - தவழ்ந்துசெல்லுந் தென்றலையொத்தன.

இதனுல் கானலின்மிகுதியையெடுத்துக்கூறினமையால் மிகுதிநவிற்சியணி.

கானலந்தேர்மேற்சூறைக்காலெனும்பாகன்றூண்ட
வேனில்வேந்தேறிச்சீறிவெப்பமாம்படைகள்வீச
மாநிலங்காவல்பூண்டமானவரிருவர்தங்கள்
தானையுமுடைந்துதண்ணீர்நசைசுடச்சாம்பிற்றன்றே.

(இ-ள்.) கானல் தேர்மேல் - கானலாகிய தேரின்மேல், சூறைக்கால் என் னும் பாகன் தூண்ட - சூறைக்காற்றென்னும் பாகனிருந்துசெலுத்த, வேனில் வேந் து ஏறி சீறி - வேனிற்காலமென்னும் அரசனேறிக் கோபித்து, வெப்பம் ஆம்படைக ள்வீச-வெம்மையாகிய ஆயுதங்களையெறிய, மாநிலம் காவல் பூண்ட - பெரியநிலவு லகைக்காக்கும், மானவர் இருவர் தங்கள் தானையும் - சோழபாண்டியர்களுடைய சேனையும், உடைந்து - (அவ்வெம்மைக்குத்) தோற்று, தண்ணீர்நசைசுட - நீர்வேட் கைவருத்த, சாம்பிற்று - சோர்ந்தது.

வெம்மைக்குத்தோற்றமையால் தண்ணீர்நசைசுடச் சாம்பிற்று என்றூர். கா னல் தேர் ஆகவும், சூறைக்காற்றுப்பாகனாகவும், வேனில்வேந்தாகவும், வெப்பம்ப டைகளாகவும் மிகைகுறைவின்றிச் சமனாகவுருவகஞ்செய்தமையால் அவையவியு ருவகவணி. (உ௭)

இரக்கமில்கொடியசெல்வர்மருங்குபோயிரப்பார்போல
உருப்பமொண்டிறைக்குங்கள்ளிநீழல்புக்கொதுங்குவாரும்
தருக்கறநிரப்பாலெய்த்தோர்தம்மினும்வறியர்பாற்சென்
றிரப்பர்போலிலைதிந்துக்கமரநிழலெய்துவாரும்.

Koviloor Digital Library

(இ-ள்.) இரக்கம் இல் கொடியசெல்வர் மருங்குபோய் - இரக்கமில்லாத தீயசெல்வத்தையுடையவரிடத்தச்சென்று, இரப்பார்போல-இரப்பவர் சிறிது தீயபலனையடைதல்போல, உருப்பம் மொண்டு இறைக்கும் கள்ளி நிழல்புக்கு - வெப்பத்தைமொண்டுவீசுங் கள்ளிமரத்தினிழலிற்புகுந்து, ஒதுங்குவாரும் - நிழலுக்கொதுங்கி வெம்மையையடைகின்றவர்களும், தருக்கு அற இரப்பால் எய்த்தோர் - களிப்பில்லாமல் வறுமையிலிளைத்தவர்கள், தம்மின் உம் வறியர்பால்சென்று - தம்மைப்பார்க்கிலு மிக்கவறியவரிடத்துச்சென்று, இரப்பர்போல் - இரப்பிற் பயன்பெறாமை போல, இலைதீர்ந்த உக்கமரம் நிழல் எய்துவாரும் - இலைகருகியுதிர்ந்த மரத்தினிழலில் நிழலுக்கடைந்து நிழல்பெறாதவரும்.

உவமைக்கும் பொருட்கும் ஒற்றுமையுண்மையால் உருப்பமொண்டிறைக்கும் என்றும் பொருளின்றொழிலால் தீயவழியினின்றீட்டிய பொருளுடையாரிடத்துச் சென்று இரப்பவர்சிறிது பயன்பெறினும் அது அவர்க்குத்தீமையை விளைவித்தலால் தீயபலன் எனவும், இரக்கமில் என்றமையால் சிறிது எனவும், உவமையின்றொழிலைப் பொருட்கேற்றி நிழல்பெறாதவரும் எனக்கூறினும். இவ்விரண்டும் தொழிலுவமையணிகள். (உஅ)

கொல்லிபம்பரிமான்றேரின்குறுநிழலொதுங்குவாரும்
அல்லிருள்வட்டத்தோல்வெண்கவிகையுளடங்குவாரும்
செல்லிடம்பிறிதுகாணார்வீரவான்சென்றோர்நின்ற
கல்லுடனிழல்செல்வாருமாயினர்களமரெல்லாம்.

(இ-ள்.) கொல் இபம் - கொல்லாநின்றயானையும், பரிமான் தேரின் - குதிரைபூண்ட தேருமாகிய இவற்றின், குறுநிழல் ஒதுங்குவாரும் - சிறியநிழலிற்சென்று நிழலுக்கொதுங்குகின்றவர்களும், அல் இருள் வட்டத்தோலுள் - அந்தகாரம் போலும் இருண்டகேடகத்துள்ளும், வெண் கவிகையுள்-தவளவட்டக்குடையுள்ளும், அடங்குவாரும் - நிழலுக்கடங்குகின்றவர்களும், செல் இடம் பிறிதுகாணார்-நிழலுக்கொதுங்கும் வேறிடங்காணாராகி, வீரவான் சென்றோர் நின்ற - வீரசுவர்க்கஞ் சென்றோர் பெயர்பொறித்துநட்ட, கல் உடன் நிழல்செல்வாரும்-கற்களின்கீழ் நிழலுக் கொதுங்கச்செல்லுகின்றவர்களுமாக, களமர் எல்லாம் ஆயினர் - இரண்டுசேனைவீரர்களும் ஆயினர்கள்.

போர்க்களத்திற் புறங்கொடாதுயிர்விட்ட வீரர்போர்த்திறத்தைக் கல்லிலெழுதி யப்போர்க்களத்தில் நடுதல் வழக்காதலால் வீரவான்சென்றோர் நின்றகல் எனவும், பூதவுடம்பழியினும் பிரதாபவுடம்பழியாமையால் நின்ற எனவுங்கூறினர் "நுந்தைகன்னின்றன்" எனவருதல்காண்க. உடன் ஏழனுருபு நிற்குமிடத்து மூன்றனுருபுநின்றது உருபுமயக்கம். (உகூ)

ஆயதோரமையந்தன்னிலளவிலாவுயிர்க்குமீன்ற
தாயனார்துலைபோலியார்க்குஞ்சமநிலையாயகூடல்
நாயனார்செழியன்றனைநனந்தலைவேதநாற்கால்
பாயதோர்தண்ணீர்ப்பந்தர்பரப்பியப்பந்தர்நாப்பண்.

(இ-ள்.) ஆயது ஓர் அமையம் தன்னில் - இவ்வாறானசமையத்தில், அளவு இல்லாத உயிர்க்கும் - எல்லையில்லாத எல்லாவுயிர்களுக்கும், ஈன்றதாய் அன்னார் - பெற்றதாயைப்போலப் பெருங்கருணையையுடையவரும், துலைபோல் - துலையின்நா

Koviloor Digital Library

வைப்போல, யார்க்கும் சமநிலை ஆய - எவர்க்கு நடுநிலையாயுள்ள, கூடல் நாயனார்- மதுரையிலெழுந்தருளிய நாயனாருமாகிய சோமசுந்தரக்கடவுள், செழியன் தானை னந்தலை - இராசேந்திரபாண்டியனுடைய சேனையின் நடுவில், வேதம் நாற்கால் பாயது ஓர் தண்ணீர்ப்பந்தர்பரப்பி - வேதநான்கும் நான்குகால்களாக நிலைபெற்ற தண்ணீர்ப்பந்தல்வைத்து, அ பந்தர் நாப்பண் - அப்பிரபையின் நடுவில்.

கொடியவரைத்தண்டித்தலும் காத்தலாதலால் அளவிலாவுயிர்க்குமீன்ற தாயனார் எனவும், தனதிடத்துள்ள பொருள்களின் குறை மிகுதிகளைக் கொடுப்போனுக்கும் கொள்வோனுக்கும் நடுநின்று ஐயமறப் புலப்படுக் குந்துலைநாப்போலப்பகை நொதுமல் நட்பு என்னு மூவகைத்திறத்தையும் நோக்காது பாண்டிய சோழர்களுடைய குணங்குற்றங்களை நடுநின்று பலர்க்கும் புலப்படுத்தியருளினமையால் யார்க்கும் சமநிலையாய எனவும், பாண்டியன் நீதியையுடையோனாதலால் செழியன்தானை னந்தலை தண்ணீர்ப்பந்தர்பரப்பிய எனவுங்கூறினார். (௩௦)

புண்டரநுதலுங்காதின்புறத்தணிமலரும்பாத
முண்டகமலர்மேலொற்றைக்கிண்கிணிமுழக்குங்கச்சியாப்
புண்டதோலுடையுங்கண்டோருள்ளமுங்கண்ணுங்கொள்ளை
கொண்டபுன்னகையுமுள்ளக்கருணையின்குறிப்புந்தோன்ற.

(இ-ள்.) புண்டரம் நுதல் உம் - திரிபுண்டரமணிந்தநெற்றியும், காதின் புறத்து அணிமலரும் - காதின்துளைப்புறத்தணிந்தமலரும், பாதம் முண்டகமலர்மேல்- பாததாமரைமலர்மேலணிந்த, ஒற்றைக்கிண்கிணி முழக்கு உம் - ஒற்றைச்சதங்கையின் கோஷமும், கச்சு யாப்புண்டதோல் உடையும் - கச்சைகட்டிய புலித்தோலாடையும், கண்டோர் உள்ளமும் கண்ணும் - பார்த்தோர்மனத்தையுங் கண்ணையும், கொள்ளை கொண்ட புன் நகையும் - கொள்ளைகொள்ளும் மந்தகாசமும், உள்ளம் கருணையின் குறிப்பும் - திருவுளத்திலெழுந்த அருளின்குறிப்பும், தோன்ற - (காண்போர்க்கு) புலப்பட.

தமதிச்சைக்கேற்ற திருவுருவங்கொண்டுவந்தனர் என்பார் இவ்வாறு கூறினார். (௩௧)

அருமறையகத்துணின்றாங்கருந்தவராகிவேணிப்
பொருபுனல்பூரித்தாங்கோர்புண்ணியச்சிரகந்தாங்கி
யொருவருக்கொன்றேயாகியிலக்கருக்கிலக்கமாகித்
தருகுறும்புழையால்வாக்கித்தணித்தனர்தண்ணீர்த்தாகம்.

(இ-ள்.) அருமறை அகத்துள் நின்றது ஆங்கு - அரியவேதத்தினுள் கரந்து நின்றருளு நிலையைப்போல, அருந்தவர் ஆகி - (புறத்திலும்) அரியதவவேடமுடையவராகி, வேணி பொருபுனல் பூரித்தது ஆங்கு - (தமது) சடையிலணிந்த கரையொடுமோதும் கங்கைநீரை நிரப்பியதுபோல, ஓர் புண்ணியம் சிரகம் தாங்கி - (நீர் நிரப்பிய) ஒப்பில்லாத புண்ணியவடிவாகிய நீர்க்கரகத்தையேந்தி, ஒருவருக்கு ஒன்றே ஆகி - ஒருவர்வந்தால் அவர்க்கு ஒன்றாய், இலக்கருக்கு இலக்கம் ஆகி - இலட்சம்பேர்வந்தால் அவர்களுக்கு இலட்சமாகி, தருகுறும்புழை ஆல் வாக்கி-தோன்றும் சிறியதுவாரங்களால் தண்ணீர்வார்த்து, தண்ணீர்த்தாகம் தணித்தனர் - (பாண்டியன்சேனைக்கு) தண்ணீர்வேட்கையொழித்தருளினார்.

Koviloor Digital Library

வேதத்தில் பெருந்தவமுடையவர் என்று கூறப்பட்டிருத்தலால் அருமறையகத்தவின்றுங் கருந்தவராகியெனவும், தண்ணிதாயெவர்க்கும் நீர்வேட்கைமாற்றிக் குறைபாடின்றியிருத்தலால் வேளிப்பொருபுனல் பூரித்தாங்கோர் புண்ணியச்சிரகமெனவும், சிரகம் ஒன்றேயாயினும் பலர்க்கும் பயன்படுதல் சிவபெருமான்மாயையின்வன்மையாலாதலால் ஒருவருக்கொன்றேயாகி யிலக்கருக்கிலக்கமாகித், தருகுரம்புழையால்வாக்கித் தண்ணீர்த்தாகம் தணித்தவர் எனவுங்கூறினர். (கஉ)

சுந்தரப்புத்தேள்வைத்தநறுமலர்வாசத்தெண்ணீர்ப்
பந்தர்புக்கடைந்துநன்னீர்பருகியெய்ப்பகலவாற்றல்
வந்தபின்செழியன்றன்னோர்வளவன்மேலெறிச்சீறி
அந்தமிலனிகஞ்சிந்தித்தும்பைவேய்ந்தடுபோர்செய்தார்.

(இ-ள்.) சுந்தரப் புத்தேள் வைத்த - சோமசுந்தரக்கடவுள் வைத்தருளிய, நறு மலர் வாசம் - மணமிக்க மலராலவாசமூட்டிய, தெள் நீர் பந்தர் புக்கு அடைந்து - தெள்ளிய தண்ணீர்ப்பந்தலிற்சென்றடைந்து, நல் நீர் பருகி - தண்ணிய நீர் குடித்து, எய்ப்பு அகல - இளைப்பு நீங்க, ஆற்றல் வந்த பின் - (நீர்வேட்கையால் முன்னிழந்த) வலிமைவந்தபின்பு, செழியன் தன்னோர் - பாண்டியனுடைய சேனைவீரர்கள், வளவன் மேல் எறி - காடுவெட்டிய சோழன்மேல் போர்க்கெழுந்து, சீறி - கோபித்து, அந்தம் இல் அனிகம் - எல்லையில்லாத அவன்சேனைகளை, சிந்தி - புறங்காண, தும்பை வேய்ந்து - தும்பைமாலை சூடி, அடு போர் செய்தார் - கொல்லும் போர்த்தொழில்கள் செய்தார்.

வாசமூட்டியது பூவாலென்பார் நறுமலர் எனவும், இழந்தவன்மைவந்தது பந்தலின் தண்ணிழலாலும் நீரின் தண்மைக்குணத்தாலும் என்பார் பந்தர்புக்கடைந்து நன்னீர்பருகி யெனவும்கூறினர். தமர் என்றாற்போலச் செழியன் என்னும் ஒருமைக்கேற்பத் தன்னோர் எனவந்தது. போர்செய்தற் குறியை யுணர்த்துவது தும்பை மாலையாதலால் தும்பைவேய்ந்து என்றார். "அதிரப்பொருவது தும்பையாம்" என்பதனாலுணர்க. சிந்தி செயவெனெச்சத்திரிபு. (கங)

கடலுடைந்தென்னப்பொன்னிக்காவலன்றானைசாய
மடலுடைவாகைவேய்ந்துவளவனைமருகனோடு
மிடலுடைத்தறுகட்சேனைவீரர்வெங்கையாற்பற்றி
அடலுடைக்கன்னிநாடர்க்கரசன்முன்கொண்டுபோந்தார்.

(இ-ள்.) கடல் உடைந்தது என்ன - கடற்பெருக்கு நிலைகடந்து புறத்திற்செல்வதுபோல, பொன்னி காவலன் தானை சாய - காவிரித்துறைநாடனாகிய சோழன் சேனை புறங்கொடுக்க, மடல் உடைய வாகை வேய்ந்து - இதழ்நெருங்கிய வாகைமாலைசூடி, வளவனை மருகனோடும் - அச்சோழனை யவன்மருகனாகிய இராசசிங்கபாண்டியனோடு, மிடல் உடைய தறு கண் சேனைவீரர் - வன்மையை யுடைய அஞ்சாமைமிக்க பாண்டியன் சேனைவீரர்கள், வெம் கையால் பற்றி - தமது முருட்டுக்கைகளாற்பிடித்து, அடல் உடைய கன்னிநாடர்க்கு அரசன் முன் - வெற்றியையுடைய பாண்டிநாட்டார்க் கரசனாகிய இராசேந்திரபாண்டியன்முன், கொண்டுபோந்தார் - கொண்டுசென்றார்கள்.

Koviloor Digital Library

தண்ணிழலும் தண்ணீரும் பெருமையால் சோழன்சேனை தோல்வியுற்றதென்பார் சாய எனவும், சிவபெருமான் திருவருளால் வெற்றியடைந்ததென்பார் மிடலுடைவாகைவேய்ந்து எனவும், தமதரசனுக்குப் பெருமகிழ்ச்சி தந்தனர் என்பார் வளவனை மருகனோடுவெங்கையாற்பற்றிக் கன்னிநாடர்க்கரசன்முன் கொண்டுபோந்தார் எனவுங்கூறினார். வாகைமாலைவெற்றி குறிப்பதற்கோரறிகுறி "போர்க்களந் துமிக்கோர் - செருவென்றதுவாகையாம்" என்பதனாலுணர்க. (௬௪)

கொடுவந்தவளவன்றன்னைக்கோப்பெருஞ்செழியர்கோமான்
வடுவந்ததம்பியோடுமாடநீள்கூடன்மேய
கடுவந்தமிடற்றான்முன்போய்விடுத்தெந்தைகருத்தியாதென்ன
நடுவந்தநிலையான்கேட்பநாயகனிகழ்த்துமன்னே.

(இ-ள்.) கொடுவந்த வளவன் தன்னை - தனது சேனாவீரர்கள் பற்றிவந்த சோழனை, கோ பெருஞ் செழியர் கோமான் - அரசியலையுடைய பெரியபாண்டியர்களுட் சிறந்த இராசேந்திரன், வடு வந்த தம்பியோடு - (தனது குடிப்பிறப்பிற்கு) குற்றம் வருவித்த தனது தம்பியோடு, மாடம் நீள் கூடல் மேய - மாடங்களுயர்ந்த மதுரையிலெழுந்தருளிய, கடு வந்த மிடற்றார் முன் போய் விடுத்து - விஷந்தங்கிய ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் சந்நிதியிற்சென்று விடுத்து, எந்தை - என் தந்தையே, கருத்து யாது என்ன - நின்திருவுளம் யாதென்று, நடு வந்த நிலையான் கேட்ப - நடுநிலைமையையுடைய அப்பாண்டியன் குறையிரக்க, நாயகன் நிகழ்த்தும் - அச்சோமசுந்தரக்கடவுள் கூறுகின்றார்.

மூத்தோனுக்கென வரையறுத்த சோழன்புதல்வி தனக்கு அன்னையாகக் கருதாது அவனறியாதுசென்று மணம்புணர்ந்ததும் அமையாது மூத்தோனரசியலையுங் கவரக்கருதினானாதலால் வடுவந்ததம்பியெனவும், தனக்குவந்த வெற்றி சிவபெருமான் திருவருளாலாதலால் கடுவந்தமிடற்றான்முன்போய்விடுத்து எனவும், சிவநேயம் உள்ளவழி அரசியலுக்குரிய நடுநிலைமையு நிரம்பும் ஆதலால் நடுவந்தநிலையான்கேட்ப எனவுங்கூறினார். (௬௫)

அறவனியல்லையோவுன்னகத்தினுக்கிசைந்தசெய்கென்
றிறைவனதருளால்வானின்றெழுமொழிகேட்டுவையைத்
துறைவனுமறத்தினாற்றாற்சோழனைச்சிலமால்யானை
மறவயப்பரிபூண்மற்றும்வழங்கினான்விடுத்தான்பின்னர்.

(இ-ள்.) நீ அறவன் அல்லையோ - நீ மநுநீதியினின்று பிறழாதவனல்லவோ, உன் அகத்தினுக்கு இசைந்த செய்க என்று - உன் கருத்துக் கிசைந்த காரியத்தைச் செய்யக்கடவாயென்று, இறைவனது அருளால் - இறைவன்திருவருளால், வான் நின்று எழு மொழி கேட்டு - ஆகாயத்தினின்றெழும் அசரீரியைக் கேட்டு, வையைத் துறைவனும் - வையைத்துறையையுடைய பாண்டியனும், அறத்தின் ஆறு ஆல் - மநுநூலிற்கூறிய அறத்தின்வழியால், சோழனை - காடுவெட்டிய சோழனுக்கு, சில மால் யானை - (அவனிழந்த) மதமயக்கத்தையுடைய சிலயானைகளையும், மறம் வயம் பரி - வெற்றியையும் வன்மையையுமுடைய சிலகுதிரைகளையும், பூண் - ஆபரணங்களையும், மற்றும் - வேறுள்ளனவற்றையும், வழங்கினான் விடுத்தான் - கொடுத்தனுப்பினான், பின்னர் - பின்பு.

சிவபுண்ணியமேலிட்டினனென்பார் அறவனியல்லையோயெனவும், அப்புண்ணியமுடையோன் சிறிதுந் தீமைகருதானென்பார் அகத்தினுக்கிசையசெய்க வென

யும், சோழன் சிவநேயமுடையவனும் அவனுக்கு மாமனும் ஆதலால் அச்சிவபெருமானருளிய வழியின்று இடையூறுசெய்யாது உபகரித்தனன் என்பார் சிலமால் யானை மறவயப்பரிபூண்மற்றும் வழங்கினான்விடுத்தான் எனவுங்கூறினார். சோழனை ஐ உருபுமயக்கம். விடுத்தான் முற்றெச்சம். (௩௬)

வள்ளறன்றம்பியென்னுமன்னவர்சிங்கந்தன்னைத்
தள்ளருந்தறுகணாண்மைத்தருக்கறத்தானாள்செல்வம்
உள்ளனசிறிதுமாற்றியொதுக்கியெவ்வுயிர்க்குந்தாயாய்ப்
பள்ளநீரகலங்காத்துப்பல்வளம்பழுக்கவாழ்ந்தான்.

(இ-ள்.) வள்ளல் - இராசேந்திரபாண்டியன், தன் தம்பி என்னும் மன்னவர் சிங்கம் தன்னை - தனது தம்பியாகிய அரசசிங்கத்தை, தள்ளரும் தறுகண் - நீங்குதலில்லாத அஞ்சாமையும், ஆண்மைத் தருக்கு அற - ஆண்மைச்செருக்கும்(அவனுக்கு) நீங்க, தான் ஆள் செல்வம் உள்ளன - தானாளுஞ் செல்வமாயுள்ள நிலமுதலியபொருள்களுள், சிறிது ஆற்றி ஒதுக்கி - சிறிதுகொடுத் தொதுக்கி, எ உயிர்க்கும் தாய் ஆய் - எல்லாவுயிர்களுக்குந் தான் தாயாகி, பள்ளம் நீர் அலகம் காத்து - கடல்சூழ்ந்த நிலவுலகைக்காத்து, பல் வளம் பழுக்க வாழ்ந்தான் - பலவளங்களும் (தனதுகுடிகளுக்குக்) கைகூடிவாழத் தானும் வாழ்ந்தான்.

தன்னெறிமுறைநின்றானாயினும் மூத்தோன் தன்பின்னோனை நல்வழிப்படுத்த ஒருவாறு ஒறுக்கவேண்டுதலால் தருக்கறத்தானாள்செல்வம் உள்ளனசிறிதுமாற்றி யெனவும், அதனால் உரிமைகெடுதலால் ஒதுக்கி யெனவும், தன்கோற்கீழ்வாழுங் குடிகள் முட்டின்றிவாழ்தலே யரசன் பெருவாழ்வாதலால் பல்வளம்பழுக்கவாழ்ந் தானெனவுங் கூறினார். தானாள்செல்வமுள்ளன என்றது பொன், பூண், ஆடை,தேயமுதலியன "கோள்வேந்தன்றன்னாடு - வாட்டானன்றென்றல்வனப்பு" என்பதனால் உணர்க. உம்மை அசைநிலை. (௩௭)

தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உட்படத் திருவிருத்தம் - ௧௨௫௫.

முப்பத்தாறாவது

இரசவாதஞ்செய்தபடலம்.


கலித்துறை.

வரதன்மீனவன்படையிடைவந்துநீர்ப்பந்தர்
விரதனாகிநிருத்தியவிளையுளாசெய்தும்
பாதநூலியனாடகப்பாவையாளொருத்திக்
கிரதவாதஞ்செய்தருளியவாடலையிசைப்பாம்.

(இ-ள்.) வரதன் - வள்ளலாகிய சோமசுந்தரக்கடவுள், மீனவன் படை இடை வந்து - இராசேந்திரபாண்டியன் சேனையில் வந்து, நீர்ப்பந்தர் விரதன்

Koviloor Digital library

இரசவாதஞ்செய்த திருவிளையாடல்.



Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆகி - தண்ணீர்ப்பந்தல்வைத்த தவவேடமுடையவராகி, நீர் அருத்திய வினை-நீர்பருகுவித்த திருவிளையாடலை, உரை செய்தும் - கூறினோம், பரத நூல் இயல் - பரதநூலிலக்கணமமைந்த, நாடகம் பாவையாள் ஒருத்திக்கு - நாட்கத்தில்வல்ல பதுமைபோன்ற ஒருபெண்பொருட்டு, இரதவாதம் செய்தருளிய ஆடலை - ரசவாதஞ்செய்தருளிய திருவிளையாடலை, இசைப்பாம் - இனிக்கூறுவாம்.

தம்மையடைந்தவர்க்குப் பெருங்கொடையையுடையவர் என்பார் வரதன் எனவும், அப்பெயர்ப்பொருளைப் பாண்டியனிடத்துப் புலப்படப் பலர்க்குமுணர்த்தினார் என்பார் படையிடைவந்து நீரருத்திய எனவுங் கூறினர். (௧)

பருங்கைமால்வரைப்பூழியன்பைந்தமிழ்நாட்டின்
இரங்குதெண்டிரைக்கரங்களாலீர்ம்புனல்வையை
மருங்கினந்தனமலர்ந்தபன்மலர்கடூஉய்ப்பணியப்
புரங்கடந்தவனிருப்பதுபூவணநகரம்.

(இ-ள்.) பருங் கை - பருத்த துதிக்கையையுடைய, மால் வரை - கரியமலைபோன்ற யானைச்சேனையையுடைய, பூழியன் பைந்தமிழ் நாட்டின் - இராசேந்திர பாண்டியனுடைய பாண்டிநாட்டில், ஈர்ம்புனல் வையை - குளிர்ந்த நீர்மயமாகிய வையைநதியானது, இரங்கு தெள் திரை கரங்களால் - ஒலிக்குந் தெள்ளிய அலைகளாகிய கைகளால், மருங்கில் - பக்கத்திலுள்ள, நந்தனம் மலர்ந்த பல் மலர்கள் தூய் - நந்தவனங்களில்மலர்ந்த பலமலர்களைச்சிந்தி, பணிய - வணங்க, புரம் கடந்தவன் இருப்பது - திரிபுரங்களை நகைத்தெரித்தருளிய பெருமானார் எழுந்தருளியிருக்குமிடம், பூவண நகரம் - திருப்பூவணமென்னும் நகரமாம்.

பிரமன் முதலிய பலரும் வழிபட்டுய்தற்குரிய பெருமானார் என்பது தோன்ற வையைதெண்டிரைக்கரங்களால் மலர்கடூஉய்ப்பணிய என்றார். (உ)

எண்ணிலங்குறைசராசரமிலிங்கமென்றெண்ணி
விண்ணினாள்களுங்கோள்களும்விலங்குவதியாக்கைக்
கண்ணினான்கதிர்முதல்பலகடவுளர்பூசை
பண்ணிவேண்டியநல்வரமடைந்ததப்பதியில்.

(இ-ள்.) அங்கு உறை - அங்குவசிக்கும், எண் இல் - அளவில்லாத, சராசரம் - சராசரங்களை, இலிங்கம் என்று எண்ணி - இலிங்கமூர்த்தங்களென்று கருதி, விண்ணின் நாள்களும் கோள்களும் விலங்குவது - ஆகாயத்திற் சஞ்சரிக்கும் நட்சத்திரங்களும் சூரியன்முதலிய நவகோள்களும் (பாதபரிசம்படாமல் மேலே) பிரதக்ஷிணம்செய்யும்படி யுள்ளது, யாக்கைக் கண்ணினான் கதிர் முதல் பல கடவுளர் - இந்திரன் சூரியன்முதலிய பலதேவர்களும், பூசை பண்ணி - பூசைசெய்து, வேண்டிய நல் வரம் அடைந்தது - (தத்தமக்கு) வேண்டிய நல்லவரங்களைப் பெறவுள்ளது, அ பதியில் - (அத்தன்மையையுடைய) அந்நகரில்.

அத்திருநகரெல்லைக்குளுள்ள சராசரங்கள் யாவும் சிவலிங்கத்தோற்றமாதலால் பாதபரிசம்படாமல் பிரதட்சிணம்செய்வதென்பதுதோன்ற விலங்குவதெனவும், சிவபெருமான் திருநாமம் சூரியநாதர் என்பதுதோன்றக் கதிர்முதல் பலகடவுளர்பூசைபண்ணி நல்வரமடைந்தது எனவுங்கூறினர். (௩)

கிளியுளார்பொழிற்பூவணக்கிழவர்தங்கோயிற்
றளியுளார்தவப்பேறனாட்டாதுகுபூந்தார்

Koviloor Digital Library

அளியுளார்குழலணங்கனாளந்தரத்தவர்க்குங்
களியுளார்தரமயக்குறாஉங்கடலமுதனையாள்.

(இ-ள்.) ஒளி உள் ஆர்பொழில் - ஒளிகள் தன்னுள்ளே நிறைந்துவசிக்குஞ் சோலைசூழ்ந்த, பூவணக்கிழவர் தம் கோயில் தளியுள்ளார் - திருப்பூவணத்திலெழுந் தருளிய பெருமானார் திருக்கோயிற் புறப்பணியினின்ற பரத்தையர்கள் (வருந்திச் செய்த) தவப்பேறு அன்னாள் - தவப்பலனையொத்தவளும், தாது உகு பூந்தார்-மகரந்தஞ்சிந்து மலர்மாலையில், அளி உள் ஆர்குழல் அணங்கு அன்னாள் - வண்டுகளுள்ளேபொருந்தி யிசைபாடும் கூந்தலையுடைய கொல்லியம்பாவையையொத்தவளும், அந்தரத்தவர்க்கும் - விண்ணுலகில்வசிக்குந் தேவர்களுக்கும், உள் களி ஆர்தர-மனத்திற் களிப்புமிக, மயக்குறும் கடல் அமுது அனையாள்- மயக்குங்கடலிற்றோன்றிய அமுதத்தையொத்தவளும்.

எல்லாப்போகங்களுள்ளும் தேவர்களுக்கு அமிர்தம் பெரும்போகம் ஆதலால் கடலமுதனையாள் என்றார். (௪)

நரம்பினேழிசையாழிசைப்பாடலுநடநூல்
நிரம்புமாடலும்பெண்ணலநீர்மையும்பிறவும்
அரம்பைமாதரையொத்தனளறனெறியொழுகும்
வரம்பினாலவர்தமக்குமேலாயினாண்மன்னோ.

(இ-ள்.) நரம்பின் ஏழிசை யாழ் இசைப்பாடலும் - நரம்பின்கண்ணமைந்த குரல்முதலிய ஏழிசைகளையுடையயாழ்வழிப்படும் இசைநிரம்பியபாடலினும், நடம் நூல் நிரம்பும் ஆடலும் - பரதநூலின்விதியினிரம்பிய ஆடலினும், பெண் நலம் நீர்மையும் - பெண்ணிலக்கணத்தன்மையினும், பிறவும் - அவையொழிந்தனவற்றினும், அரம்பைமாதரை ஒத்தனள் - அரம்பையரையொத்தவளும், அறன் நெறி ஒழுகும் வரம்பினால் - சிவபுண்ணியவழியிற்செல்லும் கடப்பாட்டால், அவர் தமக்கு மேல் ஆயினாள் - அவ்வரம்பையர்க்கு மேற்பட்டவளும்.

குரல்முதலிய ஏழிசைகளுக்குந் தானம் நரம்புகளாதலால் நரம்பினேழிசை யெனவும், அவ்விசையினின்று எழும்பண்கள் அகநிலை மருதமும் புறநிலைமருதமும் அருகியன்மருதமும் பெருகியன்மருதமும் என நால்வகைப்பட்டுப் பருந்தினிழல் போலப் பாடலொடுசெல்லுதலால் இசைப்பாடலும் எனவும், சுரங்களின்கணிதமாகிய என்றும், குற்றெழுத்துமுதலிய எழுத்துக்களும், சுரதமுதலிய ஐந்திலக்கணங்களும், அகநிலைமருதமுதலிய நான்குபண்களும், அல்லியமுதலிய பதினொரு கூத்தும் அவளாட்டில் விதிவழிநிற்றலால் நடநூல் நிரம்பும் ஆடலும் எனவும், இவற்றொடு பெண்ணிலக்கணமுடைமை யரிதாதலால் பெண்ணல நீர்மையும் எனவும், இவற்றிற்குரிய நடைமுதலியன வேண்டுதலால் பிறவும் எனவும், இவற்றையொரு சேரவுடைமையால் அரம்பைமாதரை யொத்தனள் எனவும், அவர்கள்போல அதனையே பொருளெனக்கருதித் தருக்கடையாது சிவபுண்ணியத்தின் வழிநடக்குங் கடப்பாட்டால் அவர்தமக்குமேலாயினாள் எனவுங்கூறினார். குரல்முதலிய ஏழிசைகளாவன குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். (௫)

ஆயமாதர்பேர்பொன்னனையாளென்பவவடன்
வேயவாயமோடிரவிருளிங்குமுன்னெழுந்து
தூயநீர்குடைந்துயிர்புரைசுடர்மதிக்கண்ணி
நாயனாரடியருச்சனைநியமமுநடத்தி.

Koviloor Digital Library

(இ-ள்.) ஆயமாதர்பேர் பொன்னனையாள் என்ப - ஆகிய அப்பெண்ணின் பெயர் பொன்னனையாளென்று கூறுவர், அவள் தன் நேயம் ஆயம் ஒடு - அவள்தன்னுடைய அன்பிற்சிறந்த தோழியர்கூட்டத்தோடு, இரவு இருள் நீங்குமுன் எழுந்து - இராவின் இருள்புலர்தற்குமுன் துயிலுணர்ந்து, தூய நீர்குடைந்து - தெளிந்து புனிதமாகியநீரில்மூழ்கி, உயிர்புரை சுடர்மதிக்கண்ணி நாயனார் - உயிரையொத்தவிளங்கும் சந்திரனைமாலையாகவணிந்த சிவபெருமானாருடைய, அடி அருச்சனைநியமமும் நடத்தி - திருவடிக்கருச்சனைபுரியுங் கடப்பாட்டையுமுடித்து.

மனம் சலனமின்றி நிற்றற்குரியகாலம் வைகறையாதலால் இரவிருணீங்கு முன்னெழுந்து எனவும், கன்மமலத்தைப்போக்கி யுயிர்க்குறுதிபயப்பது சிவார்ச்சனையாதலால் நீர்குடைந்து நாயனாரடி யருச்சனைநியமமு நடத்தியெனவுங்கூறினர்.

திருத்தர்பூவண வாணரைச்சேவித்துச்சுத்த
நிருத்தமாடிவந்தடியரைப்பொருளெனநினையுங்
கருத்தளாயருச்சித்தவர்களிப்பவின்சுவையூ
ணருத்தியெஞ்சியதருந்துவாளஃதவணியமம்.

(இ-ள்.) திருத்தர் பூவண வாணரை சேவித்து - புனிதமுடையவராகிய திருப்பூவணநகரில்வசிக்கும் சிவபெருமானாரைவணங்கி, சுத்த நிருத்தம் ஆடி வந்து-(நியமமாக) சுத்தநடனம் சந்நிதியில் ஆடிமுடித்து, அடியரை பொருள் என நினையுங் கருத்தளாய் - சிவனடியவரைச் சிவமென நினைக்குங் கருத்துடையவளாய், அருச்சித்து அவர் களிப்ப - அருச்சனைசெய்து அவர்கள் மகிழ்கூர, இன் சுவை ஊண் அருத்தி - இனியசுவையமைந்த கறிகளோடு அமுதுசெய்வித்து, எஞ்சியது அருந்துவாள் - சேடமாயுள்ளதை யுண்பாள், அவள் நியமம் அஃது - அப்பொன்னனையாள் கடமை யதுவாம்.

சுத்தநிருத்தம் நூற்றெட்டுக் கரணமுடையதாய்ச் சாந்திக்கூத்துள் ஒன்றாகிய சொக்கம் ஆதலால் சுத்தநிருத்தம் ஆடிவந்து எனவும், சுத்ததத்துவ புவனத்திலிருக்கு மிறைவன் புறத்தே ஆன்மாக்கள் தன்னையுணர்ந்து வழிபட்டுய்ய அடியவர் திருவேடத்துவசித்தருளுதலால் அடியரைப் பொருளென நினையுங் கருத்தளாய் எனவும், அடியாரிடத்து அன்புடையோர் சிவபெருமானிடத் தன்புடையவராதலால் அருச்சித்தெனவும், யாதுகுறையுளதெனினும் நால்முகத்தாலன்றி அன்றேகழிவதாதலால் அவர்களிப்பவின்சுவையூணருத்தியெனவும், பிறவிப்பிணிக்கு மருந்தாதலால் எஞ்சியதருந்துவாளெனவுங் கூறினர் "ஈசனுக்கன்பில்லா ரடியவர்க்கன்பில்லார்" எனவரும் வதுவாலுணர்க. (எ)

மாதரிந்நெறிவழங்குநாண்மற்றவளன்பைப்
பூதலத்திடைத்தெருட்டுவார்போன்மலைவல்லி
காதலனயகர்திருவுருக்காணியவுள்ளத்
தாதரங்கொடுத்தருளினார்பூவணத்தையர்.

(இ-ள்.) மாதர் - பொன்னனையாள், இந்நெறி வழங்கும் நாள் - இச்சிவனடியார் திறத்துப் பத்திபூண்டொழுகும்வழியில் சிறிதுந் தவறாது நடக்குங்காலத்தில், பூவணத்து ஐயர் - திருப்பூவணத்திலெழுந்தருளிய இறைவர், அவள் அன்பை பூதலத்து இடை தெருட்டுவார் போல் - அப்பொன்னனையாள் அடியர்பாற்கொண்ட பத்தியை யுலகினரறிந்துய்யத் தெளிவிப்பவர்போல, மலை வல்லி காதல் நாயகர் - உ

Koviloor Digital Library

மாதேவியாரது விருப்பமிக்க தலைவராகிய அச்சிவபெருமானார், திரு உரு காணிய- தமது திருவுருவம் சமைக்க, உள்ளத்து ஆதரம் கொடுத்தருளினார்-அவள்மனத்தில் பெரியவிருப்பந் தந்தருளினார்.

மாதர் இருநிதியைப் போலியாதலால் அவள் என ஒருமையீறு தோன்றக் கூறினார். (அ)

ஐயர்தந்தபேரன்புருவாயினாண்மழுமான்
கையர்தந்திருவுருவினைக்கருவினாற்கண்டு
மையகண்ணினாள்வைகலும்வருபொருளெல்லாம்
பொய்யிலன்புகொண்டன்பர்தம்பூசையினேர்வாள்.

(இ-ள்.) மைய கண்ணினாள் - மையெழுதிய கண்களையுடைய பொன்னனையாள், ஐயர் தந்த பேர் அன்பு உரு ஆயினாள் - திருப்பூவணப்பெருமானார் தந்தருளிய பெரிய அன்பே ஒருவடிவுடையவளாகி, மழு மான் கையர் தம் திரு உருவினை-மழுவையு மானையு மேந்திய திருக்கரங்களையுடைய அப்பெருமானாரது திருவுருவத்தை, கருவினால் கண்டு - கருக்கட்டி, வைகலும் வரு பொருள் எல்லாம் - (ஆடல்பாடல்களால்) நாள்தோறும் வரும் பொருள்களையெல்லாம், பொய் இல் அன்பு கொண்டு-மெய்யன்பால், அன்பர் தம் பூசையின் நேர்வாள் - அடியவர்பூசைத்திறத்திற் செலுத்துவாள்.

சிவபெருமானார் திருவுருவம்என்று முடிப்போம்என்னும் ஏக்கறவுடைமையால் அன்புருவாயினாள் என்றார். (௯)

அடியர்பூசனைக்கன்றியெஞ்சாமைபாலடிகள்
வடிவுகாண்பதெப்படியென்றுமடியிலச்செழியற்
கொடியில்பொற்கிழிநல்கியவள்ளலையுன்னிப்
பிடியனாளிருந்தாளஃதறிந்தனன்பெருமான்.

(இ-ள்.) பிடி அன்னாள் - பெண்யானையையொத்த நடையையுடைய பொன்னனையாள், அடியர் பூசனைக்கு அன்றி - சிவனடியவர் நிறத்துச் செய்யும் பூசைக்கல்லாமல், எஞ்சாமையால் - மிதிப்படாமையால், அடிகள் வடிவு காண்பது எப்படியென்று - சிவபெருமானார் திருவுருச்சமைப்பதெவ்வாறென்று, மடி இல் அ செழியற்கு - (சிவசேவைத்தில்) சோம்பாத அந்தக் குலபூஷண பாண்டியனுக்கு, ஒடிவு இல் பொற் கிழி நல்கிய வள்ளலை உன்னி - எடுக்கக் குறையாத பொற்கிழியருளிய சோமசுந்தரக்கடவுளைக்கருதி, இருந்தாள்-இருந்தனள். பெருமான் அஃது அறிந்தனன்- அப்பெருமானார் அதனைத் திருவுளத்திற்கொண்டனர்.

தன் கோற்கீழ்வாழுங் குடிகள் வருத்தங்கண்டு பெருங்கவலையுற்றபாண்டியன் வறுமையொழித் தருளியதுபோலத் தன்குறைபாடொழித்தருளக் கருதினளென்பார் மடியிலச்செழியற்-கொடியில்பொற்கிழிநல்கியவள்ளலையுன்னியெனவும், உயிர்க்குயிராய் நிற்பார் என்பார் அஃதறிந்தனன்பெருமான் எனவுங் கூறினார். (௧௦)

துய்யநீறணிமெய்யினர்கட்டங்கர்தொட்ட
கையர்யோகபட்டத்திடைக்கட்டினர்பூதிப்
பையர்கோவணமிசையசையுடையினர்பவளச்
செய்யமேனியரங்கொருசித்தராய்வருவார்.

Koviloor Digital Library

(இ-ள்.) தூய்ய நீறு அணி மெய்யினர் - களங்கமில்லாத திருநீறணிந்த திருமேனியையுடையவரும், கட்டங்கம் தொட்ட கையர் - மழுவேந்திய திருக்கரத்தையுடையவரும், யோகபட்டத்து இடைக் கட்டினர் - யோகபட்டிகையால் இடைக்கட்டையுடையவரும், பூதி பையர் - திருநீற்றுப்பையையுடையவரும், கோவணம் மிசை அசை உடையினர் - கோவணமீதசைத்த ஆடையையுடையவரும், பவளம் செய்ய வேணியர் - பவளம்போலச் செந்நிறம்வாய்ந்த சடையையுடையவருமாய், அங்கு ஒரு சித்தர் ஆய் வருவார் - அவ்விடத்து ஒரு சித்தமூர்த்திகளாகவந்தருளுவார்.

ஆய் செயவெனெச்சத்திரிபு. (௧௧)

வந்துபொன்னனையாண்மணிமாளிகைகுறுகி
யந்தமின்றிவந்தமுதுசெய்வாரொடுமணுகிச்
சிந்தைவேறுகொண்டடைந்தவர்திருவமுதருந்தா
துந்துமாளிகைப்புறங்கடையொருசிறையிருந்தார்.

(இ-ள்) வந்து - (அத்திருவுருவோடு) வந்தருளி, பொன்னனையாள் மணிமாளிகை குறுகி - பொன்னனையாளுடைய அழகிய வீட்டினைச் சமீபித்து, அந்தம் இன்றி வந்து அமுது செய்வார் ஒடும் அணுகி - எல்லையில்லாதுவந் தமுதுசெய்யும் அடியவரோடும் வந்து, சிந்தை வேறுகொண்டு அடைந்தவர் - திருவுளத்தில் மற்றொன்று கருதி யடைந்த சித்தமூர்த்திகள், திரு அமுது அருந்தாது - திருவமுதுண்ணாது, உந்து மாளிகை புறங் கடை - ஒளிவீசு மாளிகையின் கடைவாயிலில், ஒரு சிறை இருந்தார் - ஒருபக்கத்திருந்தார்.

தமது திருவுருவஞ் சமைக்கப் பொன்னனையாள் மனையிலுள்ள உலோகங்களைப் பொன்னாக்கி யருளவந்தவராதலால் சிந்தைவேறுகொண் டடைந்தவர் என்றார். (௧௨)

அமுதுசெய்தருந்தவரொலாமகலவேறிருந்த
வமுதவாரியையடிபணிந்தடிச்சியரைய
வமுதுசெய்வதற்குள்ளெழுந்தருள்கெனவுங்க
ளமுதனானையிங்கழைமினென்றருளலுமனையார்.

(இ-ள்.) அருந்தவர் எல்லாம் அமுது செய்து அகல - செய்தற்கரிய தவத்தையுடையவரெல்லாம் திருவமுதுசெய்து செல்ல, வேறு இருந்த அமுத வாரியை - வேறிடத்திருந்த அமுதவெள்ளமாகிய சித்தமூர்த்திகளை, அடிச்சியர் அடி பணிந்து - குற்றேவல்செய்யும் பெண்கள் திருவடிவணங்கி, ஐய - ஐயனே, அமுது செய்வதற்கு உள் எழுந்தருள்க என - அமுதுசெய்தருளுதற்கு உள்ளெழுந்தருளக் கடவீரென்று வேண்ட, உங்கள் அமுது அன்னானை - உங்கள் அமுதமொத்த உருவம்வாய்ந்த பொன்னனையாளை, இங்கு அழைமின் என்றருளலும் - இங்கு அழையுங்க ளென்று கூறியருள, அனையார் - குற்றேவல்செய்யும் அப்பெண்கள்,

தமது அடியவர்க் கினியவளாதலால் அமுதன்னாள் என்றார். (௧௩)

முத்தராமுகிழ்வாணகையல்குலாய்முக்க
ணத்தரானவர்தமரொலாமமுதுசெய்தகன்றார்
சித்தராயொருதம்பிரான்சிறுநகையினரா
யித்தராதலத்தரியராயிருக்கின்றாரென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) முத்து - முத்தினையொத்த, வாள் - ஒள்ளிய, முகிழ்நகை - புன்ன கையையும், அரா அல்குலாய் - பாம்பின் படத்தையொத்த அல்குலையுமுடைய எமது தலைவியே, முக்கண் அத்தர் ஆனவர் தமர் எல்லாம் - திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானு ரடியவரெல்லாம், அமுது செய்து அகன்றார் - திருவமுதுசெய்து சென்றருளினார்கள், சித்தர் ஆய் ஒரு தம்பிரான் - சித்தமூர்த்திகளாய்வந்த ஒருதம் பிரானார், சிறு நகையினர் ஆய் - புன்னகையுடையவராய், இத் தராதலத்து அரியர் ஆய் - இந்நிலவுலகில் கிடைத்தற்கரியவராய், இருக்கின்றார் என்றார் - இருக்கின்ற ரென்று கூறினார்கள்.

பெறுதற்கரிய திருவுருவாய்ந்து வந்தனராதலால் இத்தராதலத்தரியராய் எனவும், தம்பிரான் உயர்திணை யியற்பெயர் ஆதலால் சிறுநகையினராய் எனவுங் கூறினார். "கோவந்தான், கோவந்தார்" எனவருதல் காண்க. (௧௪)

நவமணிக்கலன்பூத்தபூங்கொம்பரினடந்து
துவரிதழ்க்கனிவாயினுல்சுவாகதங்கிலவென்
றுவமையற்றவர்க்கருக்கியமாசனமுதவிப்
பவமகற்றியவடிமலர்முடியுறப்பணிந்தாள்.

(இ-ள்.) நவ மணிக் கலன் பூத்த பூங் கொம்பரின் - நவமணிகளழுத்திய ஆபரணமலர்ந்த பூங்கொம்புபோல, நடந்து - சென்று, துவர் இதழ் கனி வாயினால் - பவளம்போன்ற இதழையுடைய கோவைக்கனிபோன்ற தனதுவாயால், சுவாகதம் கில என்று - (உமதுவரவு) நல்லவரவல்லவா என்று, உவமை அற்றவர்க்கு - ஒப்பில்லாத சித்தமூர்த்திகளுக்கு, அருக்கியம் ஆசனம் உதவி - அருக்கியத்தையும் ஆசனத்தையுங் கொடுத்து, பவம் அகற்றிய அடிமலர் - (அடைந்தவர்) பிறப்பை யொழிக்கும் திருவடித்தாமரைகளில், முடி உற பணிந்தாள் - தனது தலைகுடப்பணிந்தனள்.

அருக்கியம் என்றது உவாபாத்தியம், ஆசமனியமுங்கொள்க. தம்மை யடைந்தோர் பிறவிக்கடல் கடத்தற் கோர்மரக்கலம் ஆதலால் பவமகற்றிய வடிமலர் என்றார் "பிறவிப்பெருங்கடனீந்துவர்நீந்தார்-இறைவனடிசேராதார்" என்ற துவா முணர்க. நவமணிக்கலன்பூத்த பூங்கொம்பர் என்றது இல்பொருளுவமையணி.(௧௫)

எத்தவஞ்செய்தேனிங்கெழுந்தருளுதற்கென்னுச்
சித்தர்மேனியும்படிவெழிற்செல்வமுநோக்கி
முத்தவாணகையரும்பநின்றஞ்சலிமுகிழ்ப்ப
வத்தர்நோக்கினாருட்கணாலருள்வலைப்பட்டாள்.

(இ-ள்.) அருள் கண்ணால் அருள் வலைப் பட்டாள் - சித்தமூர்த்திகள் திருவருட்பார்வையினால் அவரது அருள்வலையி லகப்பட்ட பொன்னனையாள், இங்கு எழுந்தருளுதற்கு - அடியேன் சிறுகுடிலுக்கு எழுந்தருள, எத் தவம் செய்தேன் என்று - என்னதவஞ்செய்து முடித்தேனென்று, சித்தர் மேனியும் - சித்தமூர்த்திகள் திருமேனியையும், படிவம் எழில் செல்வம் உம் - திருவுருவத்தினழகின்பெருக்கையும், நோக்கி (கண்குளிர) பார்த்து, முத்தம் வாள் நகை அரும்ப நின்று-முத்தினையொத்த ஒள்ளிய புன்னகைதோன்ற நின்று, அஞ்சலி முகிழ்ப்ப - தனதுகரங்குவிக்க, அத்தர் நோக்கினார் - சித்தமூர்த்திகள் பார்த்தருளினார்.

பார்த்தற்கரிய திருவுருவத்தைப் பார்த்து வியப்படைந்தனளென்பார் முத்தவாணகையரும்பநின்று என்றார். (௧௬)

Koviloor Digital Library

ஐயவுள்ளெழுந்தருளுகவடிகணீரடியே
னுய்யவேண்டியபணிதிருவுளத்தினுக்கிசையச்
செய்யவல்லனென்றஞ்சலிசெய்யவுண்ணகையா
மையனோக்கியைநோக்கிமீனேக்கிதன்மணாளன்.

(இ-ள்.) அடிகள் நீர் - அடிகளே நீங்கள், உள் எழுந்தருளுக - உள்ளெழுந்தருளக்கடவீர், அடியேன் உய்ய வேண்டிய பணி - அடியேனாகிய யான் பிழைக்க வேண்டிய பணிவிடையை, திரு உளத்தினுக்கு இசைய செய்யவல்லன் என்று-உமது திருவுளத்திற்குப் பொருந்தச்செய்யவல்லேனென்று, அஞ்சலி செய்ய-கைகூப்ப, உள் நகையா-திருவாயுள் புன்னகையரும்பி, மீனோக்கி தன் மணாளன்-அங்கயற்கண்ணியார் தலைவராகிய சோமசுந்தரக்கடவுள், மையல் நோக்கியை நோக்கி-பிறர்க்கு மையலூட்டும் பார்வையையுடைய பொன்னனையாளைப் பார்த்தருளி.

காமனும் விரும்புந் திருவுருவத்தில் விருப்புற்றனள் என்னுங் குறிப்புத் தோன்றமையனோக்கியென்றார். ஐய அசைநிலை. (௧௭)

வடியைநேர்விழியாய்பெருவனப்பினைசிறிதுன்
கொடியைநேரிடையெனவிளைத்தனையெனக்கொன்றை
முடியினனடியாரமென்முகிழ்முலைக்கொடிதாழ்ந்
தடியனேற்குவேறுயொருமெலிவிலையையா.

(இ-ள்.) வடியை நேர் விழியாய் - மாவடுவின் பிளவை யொத்த கண்களையுடையாய், பெரு வனப்பினை - நீ பேரழகுடையாய், உன் கொடியை நேர் இடை என்ன சிறிது இளைத்தனை என - உனது கொடியையொத்த இடையைப்போலச் சிறிது அழகு இன்றி மெலிந்தாய் அது யாதுகாரணமென்றுவினவ, மெல் முகிழ் முலை கொடி - மெல்லிய அரும்பாகிய தனமுகிழ்த்த பூங்கொடியை யொத்த அப்பெண்-கொன்றைமுடியினன் அடி ஆர தாழ்ந்து - கொன்றைமலர் மாலையை யணிந்த சடாமுடியையுடைய சித்தமூர்த்திகளுடைய திருவடியை முட்டின்றி வணங்கி, ஐயா-ஐயனே, அடியனேற்கு - அடியேனாகிய வெனக்கு, வேறாய் ஒரு மெலிவு இல்லை-வேறாக ஒருகுறையில்லை.

அவள்மேற் கழிபேரன்புடைமைதோன்ற அறியார்போலவினவியினார் என்பார் பெருவனப்பினை சிறிதுன்கொடியை நேரிடையெனவிளைத்தனை யெனவும், அவளறியாளாதலால் தன்குறைகூறத்தொடங்கின ளென்பார் அடியாரத் தாழ்ந்து அடியனேற்கு வேறுயொருமெலிவிலை யெனவுங் கூறினார். (௧௮)

எங்கணாயகர்திருவுருக்காண்பதற்கிதயந்
தங்குமாசையாற்கருவுருச்சமைத்தனன்முடிப்பேற்
கிங்குநாடொறுமென்கையில்வருபொருளெல்லா
முங்கள்பூசைக்கேயல்லதையொழிந்திலவென்றாள்.

(இ-ள்.) எங்கள் நாயகர் திரு உரு காண்பதற்கு - எங்களிறைவராகிய சிவபெருமானார் திருவுருச்சமைக்க, இதயம் தங்கும் ஆசையால் - எனதுமனத்தில் நிலைபெற்ற மிக்கவிருப்பத்தால், கரு உரு சமைத்தனன் முடிப்பேற்கு - கருக்கட்டி முடிக்கக்கருதிய வெனக்கு, இங்கு நாள் தோறும் - இவ்விடத்து நாள்தோறும், என் கையில் வரு பொருள் எல்லாம் - எனது கைமுயற்சியால்வரும் பொருளியாவும்,

Koviloor Digital Library

உங்கள் பூசைக்கு ஏ அல்லது - உங்கள்பூசனைக்கேயன்றி, ஒழிந்தில என்றாள் - சேடமானவை யில்லையென்று கூறினாள்.

இவளது அன்பின்திறத்தை யுலகினருணர்ந்துய்யச் சிவபெருமான்மூட்டிய விருப்பாதலால் இதயந்தங்கும் ஆசையென்றார், திருவுருச்சமைத்தற்கெஞ்சுவதின் மையால் உங்கள்பூசைக்கேயல்லதை யொழிந்திலவெனக் கூறினாளெனக்கூறினார்.

அருந்துநல்லமுதனையவளன்புசித்திக்கத்
திருந்துதேனெனவிரங்குசொற்செவிமடுத்தையர்
முருந்துமூரலாய்செல்வமெய்யிளமைநீர்மொக்கு
ளிருந்தவெல்லையுநிலையிலவென்பதுதுணிந்தாய்.

(இ-ள்.) அருந்து நல் அமுது அனையவள் - உண்ணும் இனிய அமுதையொத்த வுருவத்தையுடையவள், அன்புசித்திக்க-தனதுபேரன்பு கைகூட, திருந்துதேன் என - வடித்த தேன்சுவைபோல, இரங்கு சொல் செவி மடுத்து - இழுமென இசைக்குஞ் சொல்லைக்கேட்டு, ஐயர் - சித்தமூர்த்திகள், முருந்து மூரலாய் - மயிலிறகினடியையொத்த பற்களையுடையவளே, செல்வம் மெய் இளமை - செல்வமும் சரீரமும் இளமைப்பருவமும், நீர் மொக்குள் இருந்த எல்லை உம் - நீரிற்றோன்றிய குமிழிநின்றவளவும், நிலை யில என்பது - நிற்கும் அளவினவல்ல என்பதை, துணிந்தாய்- நீ ஐயந்திரிபின்றி யுணர்ந்திருக்கின்றாய்.

சிவபெருமானார் திருவுருச் சமைக்கக் கொண்டகருத்து முற்றிய தாதலால் அன்புசித்திக்க வெனவும், பெற்றோர்க்குத் தம்மக்கள் மழலைச் சொற்போல அடியவர்கூறுஞ்சொற்கள் அவர்க்கு இனியன ஆதலால் திருந்ததேனெனச்செவிமடுத்து எனவும், அடியவர் பூசை...பேறே நிலையுடையதெனக் கருதினவள் ஆதலால் செல்வ மெய்யிளமை நீர்மொக்குள் இருந்தவெல்லையும் நிலையிலவென்பது துணிந்தாயெனவுங்கூறினார். (உO)

அதிகநல்லறநிற்பதென்றறிந்தனையறத்து
ளதிகமாஞ்சிவபுண்ணியஞ்சிவார்ச்சனையவற்று
ளதிகமாஞ்சிவபூசையுளடியவர்பூசை
யதிகமென்றறிந்தன்பரையருச்சனைசெய்வாய்.

(இ-ள்.) அதிகம் நல் அறம் - (செல்வமுதலிய மூன்றனுள்) மேம்பட்ட நல்லபுண்ணியம், நிற்பது என்று அறிந்தனை - நிலையுளதென்றறிந்தாய், அறத்துள் சிவபுண்ணியம் அதிகமாம் - அப்புண்ணியத்துள் சிவபுண்ணியம் மேம்பட்டதாம், அவற்றுள்-அச்சிவபுண்ணியங்களுள், சிவார்ச்சனை அதிகமாம்-சிவபூசை மேம்பட்டதாம், சிவபூசையுள் அடியவர் பூசை அதிகம் என்று அறிந்து - அச்சிவபூசையுளடியவர்பூசனை மேம்பட்டதென்றறிந்து, அன்பரை அருச்சனை செய்வாய் - சிவனடியவரை (நாள்தோறும்) அருச்சனைசெய்து வருகின்றாய்.

வேதாகமங்களையுணர்ந்து அருள்வழி நில்லாதொழுகுதல் அறம் ஆதலால் அருள்வழி நிற்குஞ் சிவபுண்ணியம் அறத்துளதிகமாம் எனவும், சிவபுண்ணியம் பத்துள் சிவார்ச்சனையென்னும் புண்ணியம் சன்மமலத்தைப்போக்கிப் பிறப்பொழித்தலால் சிவார்ச்சனை யவற்றுளதிகமாம் எனவும், அச்சிவபூசையுள் அவனடியார் பூசனை சிறந்ததாதலால் சிவபூசையு ளடியவர்பூசை யதிகம் எனவுங் கூறினார். "அயிக்கிதை

Koviloor Digital Library

பொறையேமெய்மை யறைதலேயரியநாணே-உயர்ந்தவாதரவேயுள்ள மொடுக்கலே கொடுக்கைதானே - வியந்தவர்ச்சனையேமெய்யூன் வெறுத்தறுதவமேமேனி- நயந் தபாவனையேயென்னத் தசமிவைநன்றெந்நாளும்" என்னும் ஏதுவால் சிவபுண்ணிய த்தையும், "படியிறுவின்படியிப்படியிடை - முடிவிலன்புமுதிருபுஞற்றும்வெண் - பொடிகொள்மேனியன்பூசையினும்மவன் - அடியர்பூசையதிகமதிகமே" என்னும் ஏதுவால் அடியவர்பூசை யதிகம் என்பதையும் அறிக. (உக)

உறுதியெய்தினையிருமையுமுன்பெயர்க்கேற்ப
விறுதியில்லவன்றிருவுருவீகையாற்காணப்
பெறுதியாகநின்மனைக்கிடைப்பித்தளையீய
மறுதியானபல்கலன்களுங்கொணர்தியென்றறைந்தார்.

(இ-ள்.) இருமையும் உறுதி எய்தினை - (அதனால்) இகத்திற்கும் பரத்திற்கு முரிய பயனையடைந்தாய், உன் பெயர்க்கு ஏற்ப-உனதுபெயர்க்குப் பொருந்த, இறு தி இல்லவன் திரு உரு-தமக்கோரீறில்லாத பெருமானுர் திருவுருவத்தை, ஈகை ஆல் காண பெறுதியாக-பொன்னுற் செய்யப்பெறும்படி, நின் மனை கிடை பித்தளை ஈயம் அறுதியான பல்கலன்களும்-உனது மனையில் கிடையாயுள்ள பித்தளையாலும் ஈயத் தாலும் ஏனையுலோகத்தாலும் செய்த பல பாத்திரங்களையும், கொணர்தி என்று அறைந்தார் - கொண்டுவருவாயென்று கூறியருளினுர்.

அடியவர்பூசையாற் பெறும்பேறு அளப்பரிதென்பார் இருமையு முறுதியெய் தினையெனவும், உன்பெயர் ஏமநாதையாதலால் அப்பெயர்க்குத் தக்கதாகச் சிவபெ ருமானுர் திருவுருவத்தைப் பொன்னுல் முட்டின்றிச் செய்யப் பெறுவாய் என்பார் உன்பெயர்க்கேற்ப இறுதியில்லவன் திருவுருவீகையாற் காணப்பெறுதியாகவெனவு ம், நாம் இரசவாதஞ்செய்தலில் வல்லோமாதலால் பயன்படாது உன்வீட்டிற் கி டையாயொழிந்த பித்தளை முதலிய உலோகங்களாலாகிய பழங்கலங்களைப் பொன் னுக்கக் கொண்டுவருவாயென்பார் கிடைப்பித்தளை யீயமறுதியான பல்கலன்களுங் கொணர்தியெனவுங் கூறினுர். பெறுதியென்னும் வினைமுற்ருேடு ஆகவென்னும் இடைச்சொற்புணர்ந்து வினையெச்சப்பொருளில் நின்றது. "இன்னவாறன்பியற்றி யடியர்பால் - மின்றூசைவிளைக்குமவர்கள்பால் - மன்னிவாழ்குவர்மாதொருபாக னுர் - என்னபோகமுமீத்துமகிழ்ந்தரோ" எனச் சூதசங்கிதையில் அடியார் பூசா விதியும் அவரைப்போற்றினோர் பேறும் உரைத்த அத்தியாயத்திற்காண்க. (உஉ)

ஈயஞ்செம்பிரும்பிரசிதமென்பவும்புணர்ப்பாற்
றோயும்பித்தளைவெண்கலந்தராமுதற்றொடக்கத்
தாயும்பல்வகையுலோகமுங்கல்லெனவலம்பத்
தேயுஞ்சிற்றிடைகொண்டுபோய்ச்சித்தர்முன்வைத்தாள்.

(இ-ள்.) ஈயம் செம்பு இரும்பு இரசிதம் என்பவும் - ஈயமுஞ் செம்பும் இரு ம்பும் வெள்ளியும் என்று சொல்லப்படுவனவும், புணர்ப்பு ஆல் தோயும் பித்தளை வெண்கலம் தராமுதல் தொடக்கத்து - (ஒன்ருேடொன்றின்) சம்பந்தத்தாலாகிய பித்தளையும் வெண்கலமும் தராவுமுதலிய தொடக்கத்தையுடைய, ஆயும் பல்வகை உலோகமும் - ஆராயும் பலவகைப்பட்ட உலோகங்களும், கல்லென அலம்ப - கல் லென்ருெலிக்க, தேயும் சிற்றிடை கொண்டுபோய் - மெலிந்த சிறிய இடையையு டைய பொன்னனையாள் (குற்றேவல் செய்யும் பெண்களால்) கொண்டுசென்று, சி த்தர் முன் வைத்தாள் - சித்தமூர்த்திகள் திருமுன் வைத்தனள்.

Koviloor Digital Library

தாங்கேண்ட கருமமுற்றியதென்னுங் கருத்தினளாதலால் நல்லென வலம்பத்தேயுஞ் சிற்றிடை கொண்டுபோய்ச் சித்தர்முன் வைத்தாளென்றார். (உ௩)

வைத்தவேறுவேறுலோகமுமழுவுழைகரந்த
சித்தசாமிகணீற்றினைச்சிதறினர்பாவித்
தித்தைநீயிராவெரியிலிட்டெடுக்கினன்பொன்னா
மத்தைநாயகன்றிருவுருக்கொள்கெனவறைந்தார்.

(இ-ள்.) மழு உழை கரந்த சித்தசாமிகள் - மழுவையு மானையு மொளித்து வந்தருளிய சித்தமூர்த்திகள், வைத்த வேறு வேறு உலோகமும் - (பொன்னனையாள் கொண்டுவந்து) வைத்த பலவேறுவகைப்பட்ட உலோகங்களின்மேலும், பாவித்து நீற்றினை சிதறினர் - (பொன்னாகக்கடவதென்று) திருவுளஞ்செய்து திருநீற்றைத் தெறித்து, இத்தை நீ இரா எரியில் இட்டு எடுக்கில் நன்பொன் ஆம் - இவ்வுலோகத்தை நீ இரவில் நெருப்பில் புடம்போட்டெடுத்தால் மாற்றுயர்ந்த பொன்னாகும், அத்தை - அதனால், நாயகன் திரு உரு கொள்க என - சிவபெருமான் திருவுருவத்தைச் செய்யக்கடவாயென்று, அறைந்தார் - கூறியருளினார்.

தாம் கூறியருளியதைக் கட்டப்பாடாகக்கொண்டு துணிந்தனள் ஆதலால் எரியிலிட்டெடுக்கினன் பொன்னாமென வறைந்தார் எனக் கூறினார். சிதறினர் முற்றெச்சம். (உ௪)

மங்கைபாகனைமடந்தையுமிங்குநீர்வதிந்து
கங்குல்வாயமுதருந்தியிக்காரியமுடித்துப்
பொங்குகாரிருள்புலருமுன்போமெனப்புகன்றா
ளங்கயற்கணாடனைப்பிரியாரதற்கிசையார்.

(இ-ள்.) மங்கைபாகனை - உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய பெருமானை, மடந்தையும் - பொன்னனையாளும், இங்கு நீர் வதிந்து - இவ்விடத்தில் நீர் தங்கியருளி, கங்குல்வாய் அமுது அருந்தி - இவ்விராப்போதில் திருவமுதுசெய்து, இக்காரியம் முடித்து - இந்தக்காரியத்தை முடித்து, பொங்கு கார் இருள் புலருமுன்போம் என புகன்றாள் - மிக்க கரிய இருட்போது புலர்தற்குமுன் எழுந்தருளுங்களென்று வணக்கிக்கூறினாள், அங்கயற்கணாள் தனைப்பிரியார் - அங்கயற்கண்ணம்மையாரைச் சற்றும் பிரியாத அப்பெருமானார், அதற்கு இசையார் - அவ்வார்த்தைக்குடன்படாது.

பகலில் வசித்தருளியதுபோல இரவிலும் பெருமானார் வசித்தருளக் கழிபேரன்புடையவளென்பார் இங்கு நீர் வதிந்து காரிருள் புலருமுன்போ மெனப் புகன்றாள் எனவும், திருவருளைப் பிரிந்தறியார் என்பார் அங்கயற்கணாடனைப் பிரியாரதற்கிசையார் எனவுங்கூறினார். (உ௫)

சிறந்தமாடநீண்மதுரையிற்சித்தர்யாமென்று
மறைந்துபோயினார்மறைந்தபின்சித்தராய்வந்தா
ரறைந்தவார்கழலலம்பிடவெள்ளிமன்றுடி
கிறைந்தபேரொளியாயுறைநிருத்தனென்றறிந்தாள்.

(இ-ள்.) சிறந்த மாடம் நீள் மதுரையில் - சிற்பநூல் வழிவிதித்த மாடங்கள் உயர்ந்தோங்கிய மதுரைத்திருநகரிலுள்ள, சித்தர் யாம் என்று மறைந்துபோயினார் - சித்தமூர்த்திகள் யாமென்று திருவுருக்கரந்து சென்றருளினார், மறைந்தபின் - மறை

Koviloor Digital Library

ந்தருளியபின், சித்தர் ஆய்வந்தார் - சித்தமூர்த்திகளாய் வந்த பெருமானார் - அறை
ந்த வார்கழல் அலம்பிட - (பலரும்) புகழும் நீண்ட வீரகண்டை யொலிக்க, வெள்
ளி மன்று ஆடி - வெள்ளியம்பத்தில் திருநடனஞ்செய்து, நிறைந்த பேர் ஒளியாய்
உறை நிருத்தர் என்று அறிந்தாள் - எங்கும் நிறைந்த பெருஞ்சோதியா யெழுந்தரு
ளிய திருத்தாண்டவமூர்த்திகளென் றறிந்தனள்.

மதுரையிலுள்ளோமென்று மறைந்தருளினமையால் வார்கழலலம்பிட வெ
ள்ளிமன்றாடியுறை நிருத்தரென்றறிந்தனளெனவும், எல்லாவொளிக்கும் ஒளிதரும்
பேரொளியாய் நிற்றலால் நிறைந்த பேரொளியாயுறை எனவுங்கூறினர் "மெய்ச்
சுடருக்கெல்லாம் ஒளிவந்த பூங்கழல்" எனவரும் தேவாரமுணர்க. (உசு)

மறைந்துபோயினானெனச்சிறிதயர்ச்சியுமனத்தி
னிறைந்ததோர்பெருங்கவற்சியைநீக்கினானென்னாச்
சிறந்ததோர்பெருமகிழ்ச்சியுமுடையளாய்ச்சித்த
ரறைந்தவாறுதீப்பெய்தனளுலோகங்களனைத்தும்.

(இ-ள்.) மறைந்துபோயினார் என - மறைந்து சென்றருளினாரென்று, சிறிது
அயர்ச்சியும் - சிறிது துன்பத்தையும், மனத்தில் நிறைந்தது ஓர் பெருங்கவற்சியை
நீக்கினார் என்னா-(திருவுருவமுடியாமையால் என்றும்) தன் மனத்தில் இடைவிடாது
ள்ள துன்பத்தை நீக்கியருளினாரென்று, சிறந்தது ஓர் பெருமகிழ்ச்சியும் உடையளா
ய்-மேலெழுந்தோங்கிய ஒப்பில்லாத பெருமகிழ்ச்சியையு முடையவளாகி, சித்தர்
அறைந்த ஆறு - சித்தமூர்த்திகள் கூறியருளியவண்ணம், உலோகங்கள் அனைத்தும்
தீபெய்தனள் - உலோகங்கள் முற்றும் தீயிற்புடம்போட்டனள்.

இறைவரது திருவுருவத்திற் கழிபேரன்புடையளாதலால் மறைந்துபோயினா
ரெனச் சிறிதயர்ச்சியும் எனவும், தான்கொண்ட கருமத்தை முடித்தனராதலால்
மனத்தில் நிறைந்ததோர் பெருங்கவற்சியை நீக்கினாரென்னாச் சிறந்ததோர் பெரும
கிழ்ச்சியுமுடையளெனவுங் கூறினர். (உஎ)

அழலடைந்தபினிருண்மலவலிதிரிந்தரன்றா
ணிழலடைந்தவர்காட்சிபோனீப்பருங்களங்கங்
கழலவாடகமானதாலதுகொண்டுகனிந்த
மழலையீர்ஞ்சொலாள்கண்டனள்வடிவிலான்வடிவம்.

(இ-ள்.) அழல் அடைந்தபின் -(உலோகம்) நெருப்பினைச்சேர்ந்தபின்பு, அர
ன் தாள் நிழல் அடைந்தவர்-சிவபெருமானார் திருவடி ஞானச்செல்வத்தையடைந்
த மெய்யன்பர், இருள் மலம் வலிதிரிந்த காட்சிபோல்-(என்றும் நீங்காத) ஆணவ
மலத்தின் வலிமைகெட்ட தோற்றம்போல, நீப்பு அருங்களங்கம் கழல-நீங்காத மா
சுகழிய, ஆடகம் ஆனது - பொன்னாகியது, அதுகொண்டு-அப்பொன்னைக்கொண்டு,
கனிந்த மழலை ஈர்ஞ்சொலாள்-சுவைபழுத்த தண்ணிய மழலைச்சொற்களையுடைய
பொன்னனையாள், வடிவிலான் வடிவம் கண்டனள் - தமக்கோ ருருவமில்லார்க்
கோர் திருவுருவத்தை வார்த்தனள்.

திருவடிஞானச்செல்வம் என்றது திருவருண்ஞானச்செல்வத்தை. சூரியனொ
ளியால் இருளிரிதல்போலத் திருவருண்ஞானமேலிட்டால் மலங்கெடுதலாலும், ஆண
வம் மாயை காமியங்களுள் காமியம் சுகதுக்கங்களைத் தோற்றுகிறதற்கு முதற்கா
ரணமாகியும், மாயை அச்சுகதுக்கங்கள் எங்குந் தோன்றுதற்குத் தன்காரியமாகிய
தநுகரணங்களையும் உயிரொடு மியைவித்து நிற்றற்குத் துணைக்காரணமாகியும், ஆண

வம் அவற்றைக் காரியப்படுத்தற்கு நிமித்தகாரணமாகியும் நிற்றலால் இருண்மலம் என்றது ஆணவமலமாதலின் இருண்மல வலிதிரிந்தரன்றாள் நிழலடைந்தவர் காட்சிபோல் என்றார். "சுத்தமாஞ்சத்திஞானச் சுடராகுஞ்சிவமொழிந்தச்-சத்திதானின்றுமுன்னைத் தவிராமலங்கள்வாட்டி - அத்தனையருளுமெங்கு மடைந்திடுமிருளசத்தி - வைத்திடுமிரவிகாட்டும் வளரொளிபோன்மகிழ்ந்தே" எனவரும் எதுவா லுணர்க. (உஅ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மழவிடையுடையான்மேனிவனப்பினைநோக்கியச்சோ
வழகியபிரானேயென்றுவள்ளிமுத்தங்கொண்டன்பிற்
பழகியபரனையானுப்பரிவினாற்பதிட்டைசெய்து
விழவுதேர்நடத்திச்சின்னாள்கழிந்தபின்வீடுபெற்றாள்.

(இ-ள்.) மழவிடை உடையான் மேனி வனப்பினை - இளமைதங்கிய இடப்வாகனத்தையுடைய பெருமானார் திருவுருவத்தின்பொலிவை, நோக்கி - பார்த்து, அழகிய பிரானே என்று - அழகிய பிரானேயென்று, அள்ளி முத்தங்கொண்டு - (தனது கைகளால் திருக்கவுளை) அள்ளி முத்தமிட்டு, அன்பில் பழகிய பரனை-தனது மெய்யன்பினிடைவிடாதிருந்த பெருமானை, ஆனாத பரிவினால் பதிட்டைசெய்து-நீங்காத பேரன்பினால் பிரதிட்டைசெய்து, விழவு தேர் நடத்தி - நித்த நைமித்திகங்களு மகோற்சவமு நடத்தி, சில்நாள் கழிந்தபின் - (இவ்வாறு) சிலநாள் கழிந்த பின்பு, வீடுபெற்றாள் - சிவகதியும் அடைந்தனள்.

சிவபெருமான் திருவுருவினையென்று காண்போமென்றெழுந்த பேரன்பினளாதலால் அன்பிற்பழகிய பரனையெனவும், அப்பேரன்பாலடையும் பயன் வீடுபேறாதலால் வீடுபெற்றாளெனவுங் கூறினார். அச்சோ வியப்பிடைச்சொல். (உக)

மையுறநண்ணிடையினாளந்நாயகன்கபோலத்திட்ட
கையுகிர்க்குறியுஞ்சொன்னகாரணக்குறியுங்கொண்டு
வெய்யவெங்கதிர்கால்செம்பொன்மேனிவேறாகிநாலாம்
பொய்யுகத்தவர்க்குத்தக்கபொருந்துருவாகிமன்னும்.

(இ-ள்.) மையும் நண் இடையினாள் - இளைத்த நண்ணிய இடையையுடைய பொன்னனையாள், அந்நாயகன் கபோலத்து இட்ட கை உகிர்க்குறியும் - அப்பெருமானார் கபோலத்திலள்ளிய நகக்குறியையும், சொன்ன காரணக்குறியும் கொண்டு - அழகிய பிரானேயென்று சொன்ன காரணப்பெயரையுங்கொண்டு, வெய்ய வெங்கதிர் கால் - விரும்பத்தக்க சூரியன் கிரணத்தைப்போலக் கிரணம் வீசும், செம்பொன் மேனி வேறு ஆகி - சிவந்த பொன்னுருவாகிய திருமேனி வேறுபட்டு, நாலாம் பொய் உகத்தவர்க்கு - கலியுகத்தவர்க்கு, தக்க பொருந்து உரு ஆகி - தக்க பொருந்திய திருவுருவமாகி, மன்னும் - எழுந்தருளியிருக்கின்றனர்.

அள்ளி முத்தங்கொண்டமையால் கபோலத்தில் நகக்குறியும், திருவுருப்பொலிவின் மிகுதியால் அழகிய பிரானெனப் பொன்னனையாள் கூறிய காரணப்பெயரும் இக்கலியுகத்துமுள்ளன வென்பார் கொண்டு மன்னும் என்றார். (௩௦)

இரசவாதஞ்செய்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - கஅஅ௩.

Koviloor Digital Library

Koviloor Digital Library

சோழகா [illegible]



Koviloor Digital Library

முப்பத்தேழாவது

சோழனைமடுவில்வீட்டியபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்னனையார்பூங்கொன்றைவேணியரிரதவாதம்
பொன்னனையாண்முன்செய்துபோந்ததுபுகன்றேமார்த்தார்
மன்னனைமடுவில்வீட்டிமலரடிக்கன்பனான
தென்னனையமரிற்காத்ததிருவிளையாடல்சொல்வாம்.

(இ-ள்.) மின் அனைய ஆர் பூங்கொன்றை வேணியர் - மின்னலையொத்த ஆத்திமலர்மாலையையும் பொலிவையுடைய கொன்றைமலர்மாலையையும் அணிந்த சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள், இரதவாதம் - ரசவாதத்தை, பொன்னனையாள் முன் செய்து போந்தது புகன்றேம் - பொன்னனையாள்முன் செய்து சென்றருளிய திருவிளையாடலைக் கூறினேம், ஆர்தார் மன்னனை மடுவில் வீட்டி - ஆத்திமாலையயணிந்த சோழனை மடுவில் தள்ளி, மலர் அடிக்கு அன்பன் ஆன தென்னனை - தமது தாமரைமலர்போன்ற திருவடிக்கு மெய்யன்பனாகிய சுந்தரேசபாதசேகரனாகியபாண்டியனை, அமரில் காத்த திருவிளையாடல் சொல்வாம் - போரிற்காத்தருளிய திருவிளையாடலை யினிக்கூறுவாம்.

சித்தமூர்த்திகளாய்க்காட்சிதந்து மறைந்தருளினமையால் மின்னனையார் என்பதற்கு மின்னலையொத்தவரும் எனப் பொருள்கொள்ளுதலும் ஒன்று. அடியவரைப்பாதுகாத்தலும், அவரொடு மாறுபட்டவரை யொறுத்தலும் சிவபெருமான் திருவிளையாட்டென்பதை இப்படலத்தால் உணர்த்துதலால் ஆர்த்தார் மன்னனை மடுவில் வீட்டி மலரடிக்கன்பனான தென்னனை யமரிற்காத்த என்றார். அனைய என்னுங் குறிப்பு வினைப்பெயரொச்சத்தின் அகரவீறுதொக்கது. (க)

பொன்னெடுந்தேரிராசபுரந்தரன்புரந்தராதிப்
பன்னெடுந்தேவரேத்தப்பரனுலகடைந்தானிப்பா
லந்நெடுந்தகையோன்மைந்தனடலிராசேசனென்போ
னிந்நெடுந்தகையோன்மைந்தனிராசகம்பீரனென்போன்.

(இ-ள்.) பொன் நெடுந்தேர் இராசபுரந்தரன் - பொன்னாலாகிய பெரிய தேரையுடைய இராசேந்திரபாண்டியன், புரந்தரன் ஆதி பல் நெடுந்தேவர் ஏத்த-இந்திரன் முதலிய பல தேவர்களும் துதிக்க, பரன் உலகு அடைந்தான் - சிவலோகத்தையடைந்தனன், இப்பால் - இப்புறம், அ நெடுந்தகையோன் மைந்தன் - அந்தப் பெருந்தகைமையையுடைய இராசேந்திரபாண்டியனுடைய புத்திரன், அடல் இராசேசன் என்போன் - வெற்றியையுடைய இராசேசபாண்டியனென்று சொல்லப்படுவான், இ நெடுந்தகையோன் மைந்தன் - இந்த இராசேசபாண்டியனுடைய புத்திரன், இராசகம்பீரன் என்போன் - இராசகம்பிர பாண்டியனென்று சொல்லப்படுவான்.

இராசேசபாண்டியன் பல அரசர்களையும் வென்று திறைகொண்டு நிலவுலகமுற்றுந் தனதடிக்கீழ்ப்படுத்தி நெடுநாளரசியல்செய்து வந்தானென்பதுதோன்ற அடல் என விசேடணந்தந்தும், அரசருளாழ்ந்த சிவநேயமுடையவனென்னும் பெயர்ப்பொருட்காரணந்தோன்றத் தனது நாட்டிலுள்ள கிராமமுற்றும் சிவலிங்கப்பிரதிட்டையும் வீடுகள்தோறும் சிவார்ச்சனை நடக்கவுஞ் செய்வித்தவனாதலால் இராசகம்பீரன் எனக் காரணப்பெயர் தந்துங்கூறினார். (உ)

Koviloor Digital Library

மற்றிவன்குமரன்பாண்டிவங்கியதிபனன்னான்
பொற்றிணிதடந்தோண்மைந்தன்புரந்தரசித்தாமன்னான்
வெற்றிகொள்குமரன்பாண்டிவங்கியபதாகன்வீரம்
பற்றியசுந்தரேசபாதசேகரனவன்சேய்.

(இ-ள்.) இவன் குமரன் - இந்தப்பாண்டியனுடைய புத்திரன், பாண்டி வங்கிய திபன் - பாண்டிய வங்கிய திபபாண்டியனென்று சொல்லப்படுவான், அன்னான் பொன் திணி தடந்தோள் மைந்தன் - அப்பாண்டியனுடைய பொன்னிறம் வாய்ந்த திண்ணிய பெரிய தோளையுடைய புத்திரன், புரந்தரசித்து ஆம் - புரந்தரசித்துப் பாண்டியனும், அன்னான் வெற்றிகொள் குமரன் - அப்பாண்டியனுடைய வெற்றி கொண்ட புத்திரன், பாண்டி வங்கிய பதாகன் - பாண்டி வங்கிய பதாகபாண்டிய னென்று சொல்லப்படுவான், அவன் சேய் - அப்பாண்டியனுடைய புத்திரன், வீரம்பற்றிய சுந்தரேச பாதசேகரன் - வீரமிக்க சுந்தரேச பாதசேகர பாண்டியனென்று சொல்லப்படுவான்.

பாண்டிய வம்சத்துள் புறச்சமய இருளைப்போக்கிச் சைவசமயவொளியைப் பெருக்கிய காரணந்தோன்றப் பாண்டி வங்கிய திபன் எனவும், பாண்டியருள் உக்கிரகுமார பாண்டியனையன்றி யிவனும் இந்திரனைப் போரிலெதிர்ந்து வென்றனன் என்றுங் காரணந்தோன்ற புரந்தரசித்தெனவுங் கூறினர். (௩)

பலர்புகழ்சுந்தரேசபாதசேகரனாந்தென்ன
னலைபுனலுடுத்தகூடலடிகளுக்கன்பனாகிக்
கொலைபுணர்வேலால்வெங்கோற்குறும்பெனுங்களைகடீர்த்து
மலர்தலையுலகமென்னும்வான்பயிர்வளர்க்குநாளில்.

(இ-ள்.) பலர் புகழ் சுந்தரேச பாதசேகரன் ஆம் தென்னன் - பலரும் புகழும் அச்சுந்தரேச பாதசேகரனாகிய பாண்டியன், அலை புனல் உடுத்த கூடல் அடிகளுக்கு அன்பன் ஆகி - அலைபொருமோதும் நீர்சூழ்ந்த மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுக்கு மெய்யன்பு பூண்டவனாகி, கொலை புணர் வேலால் - கொலைத்தொழில் மிக்க வேலினால், வெங்கோல் குறும்பு என்னும் களைகள் தீர்த்து - கொடுங்கோலையுடைய குறுநிலமன்னரென்னுங் களைகளைக்களைந்து, மலர்தலை உலகம் என்னும் - பரந்த இடத்தையுடைய புவியில் வசிக்கும் உயிர்களாகிய, வான் பயிர் வளர்க்கும் நாளில் - பெரிய பயிரை வளர்க்குங் காலையில்.

சுந்தரேசபாதசேகரன் என்றுந் தன்பெயர்க் காரணந்தோன்ற நின்றானென்பார் சுந்தரேசபாதசேகரனாந் தென்னன்கூடலடிகளுக்கன்பனாகி யெனவும், அன்பர்கள் மக்களுயிர்க்குறுதிபயக்கும் அறத்தினின்றுஞ் சிறிதுந்தவறார் என்பதுதோன்றக் குடிகளைவருத்துந் தனது பகைவராகிய குறுநிலமன்னர் என்னுந் தியரை முன்னர்க்களைந்தான் என்பார் வெங்கோற்குறும்பெனுங் களைகடீர்த்து எனவும், களைப் பகையையுமொழித்துக் குடிகளை யோம்பினானென்பார் வான்பயிர் வளர்க்குநாளில் எனவுங்கூறினர். “மாங்லங்காவலனாவான் மன்னுயிர்காக்குங்காலை - தானதனுக்கிடையூறு தன்னாற்றன்பரிசனத்தால்-ஊனமிகுபகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால் - ஆனபயமைந்துந்தீர்த் தறங்காப்பானல்லனோ” எனவரும் தேவாரவுணர்க. (௪)

பத்துமான்றடந்தேர்நூறுபனைக்கைமாநூற்றுப்பத்துத்
தத்துமானயுதமள்ளர்தானையிவ்வளவேயிட்டி

Koviloor Digital Library

யித்துணைக்கேற்பநல்கியெஞ்சியபொருள்களெல்லாஞ்
சித்துருவானகூடற்சிவனுக்கேசெலுத்துமன்றே.

(இ-ள்.) மான் தடம் தேர் பத்து - குதிரைபூட்டிய தேர்பத்தும், பனை கை மா நூறு - பனைபோன்ற துதிக்கையையுடைய யானை நூறும், தத்து மான் நூற்றுப் பத்து - தாண்டிச்செல்லுங் குதிரைகள் ஆயிரமும், மள்ளர் அயுதம்-காலாட்கள் பதினாயிரம்பேரும், இவ்வளவே தானை ஈட்டி-இவ்வளவாகவே சேனைகளைச் சேகரித்து, இத்துணைக்கு ஏற்ப நல்கி-இவ்வளவுக்குப் பொருந்தப் பொருளுதவி, எஞ்சிய பொருள்கள் எல்லாம் - சேடமான எல்லாப்பொருள்களையும், சித்து உருவான கூடல் சிவனுக்கே - அறிவே திருவுருவமான மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் திருப்பணிக்கே, செலுத்தும் - செலவுசெய்து வருவானாயினன்.

ரதகசதுரகபதாதிகள் போரில் அரசனைச் சூழ்ந்தரிக்றற்கும், அரசன் வருகின்றானென்பதை யுணர்த்தும் ஓரறிகுறிக்குமேயன்றி வெற்றிகொடுப்பதற்கன்றெனக் கருதினானென்பார் பத்துமான்றடந்தேர்நூறு பனைக்கைமாநூற்றுப்பத்துத் - தத்துமானயுதமள்ளர் தானையிவ்வளவேயீட்டி யெனவும், வெற்றிவாய்ப்பதுதெய்வசகாயத்தாலெனக்கருதினானென்பார் எஞ்சியபொருள்களெல்லாம் - சித்துருவான கூடற்சிவனுக்கேசெலுத்தும் எனவுங்கூறினார். (ரு)

கண்டிகைமகுடமாதிக்கலனிரைகுயின்றுந்திங்கள்
மண்டலமிடறுஞ்சென்னிக்கோபுரமாடமாதி
யெண்டிசையிருள்கால்சிப்பவெரிமணியிழைத்துவேய்ந்துந்
திண்டிறலுடையானின்னதிருப்பணிபிறவுஞ்செய்தான்.

(இ-ள்.) கண்டிகை மகுடம் ஆதி கலன் நிரை குயின்றும் - கண்டிகை கிரீடமுதலிய ஆபரணபந்திகளைச் செய்தும், திங்கள் மண்டிலம் இடறும் சென்னி கோபுரம் மாடம் ஆதி - சந்திரமண்டிலத்தை யிடறியோங்கிய சிகரத்தையுடைய கோபுரமும் திருமாளிகையு முதலியனவற்றை, எண் திசை இருள் கால் சிப்ப - எட்டுத்திசையிலுமுள்ள இருளைத் தமது ஒளியாகிய காலாற்சித்தக்கெடுக்க, எரிமணி இழைத்து வேய்ந்தும் - நெருப்புப்போல ஒளிவீசும் மாணிக்கமிழைத்து அலங்கரித்தும், திண் திறல் உடையான் - வன்மையையுடைய சுந்தரேசபாதசேகர பாண்டியன், இன்ன திருப்பணி - இவைபோன்ற திருப்பணிகளையும், பிறவும் - இவையொழிந்தனவற்றையும், செய்தான் - செய்துவந்தனன்.

பிற என்றது நித்த நைமித்திய முதலிய கடன்களை. (சு)

கல்லுமாறகன்றமார்பன்கருவியின்சிறுமைநோக்கி
மல்லுமாறுததிண்டோள்வளவர்கோனொருவன்காலிற்
செல்லுமாயிரம்பரிக்கோர்சேவகனென்போன்றானே
வெல்லுமாறெண்ணிவஞ்சிவேய்ந்துகொண்டெழுந்துபோந்தான்.

(இ-ள்.) கல்லும் மாறு அகன்ற மார்பன் - மலையும் பகையொழிந்து நட்புக்கொள்ளும் மார்பையுடைய சுந்தரேசபாதசேகர பாண்டியனுடைய, கருவியின் சிறுமை நோக்கி - சேனையின் சிறுமையைப்பார்த்து, மல்லு மாறுத திண் தோள் - மற்றொழிலினீங்காத திண்ணிய தோள்களையுடைய, வளவர்கோன் ஒருவன் - சோழனொருவன், காலில் செல்லும் ஆயிரம் பரிக்கு ஓர் சேவகன் என்போன் - காற்றைப்போல விரைந்து செல்லும் ஆயிரங் குதிரைவீரர்களுக்கு ஒரு குதிரை வீரனென்று சொல்லப்படுவோன், தானே வெல்லும் ஆறு எண்ணி - அவனே யப்பாண்டியனை

Koviloor Digital Library

வெல்லும் வகையைக்கருதி, வஞ்சி வேய்ந்துகொண்டு - வஞ்சிமாலையைச்சூடி, எழுந்த போனன் - போர்க்கெழுந்து சென்றனன்.

ஆயிரக்குதிரைவீரர்களைத் தாமொருவனாகவேநின்று கொல்லும் வீரனாதலால் ஆயிரம் பரிக்கோர் சேவகன் எனவும், ஏனையரசர்கள் துணையின்றித் தாமொருவனே வெல்லக் கருதினானாதலால் தானேவெல்லுமாறெண்ணி யெனவும், பகைவர்மேற் போர்க்குச் செல்வதற்கு ஓரறிகுறியாதலால் வஞ்சிவேய்ந்து எனவும் கூறினார். "வட்கார்மேற்செல்லுதல் வஞ்சியாம்" என்பதனால் உணர்க. (எ)

பல்வகைக்கருவியீட்டப்படையொடும்பரவைசீறிச்
செல்வதுபோலக்கன்னித்திம்புனனாடுநோக்கி
மல்வரையாததோளான்வரவறிந்தெழுந்துமேருக்
கல்வரிசிலையான்முன்போய்க்கைதவன்றாழ்ந்து கூறும்.

(இ-ள்.) பல்வகை - பலவகைப்பட்ட, கருவி ஈட்டப் படையொடும் - ஆயுதங்களையேந்திய சேனாகூட்டத்தோடும், பரவை சீறி செல்வதுபோல - கடல் கொதித்துப் புடை பெயர்ந்து வருதல்போல, திம்புனல் கன்னி நாடு நோக்கி - இனிய நீர் சூழ்ந்த பாண்டிநாட்டை யெதிர்நோக்கி, வரையாத மல் தோளான் வரவு அறிந்து - அளவறுத்தற்கரிய மற்போர் மிக்க தோளையுடைய சோழனது வருகையையறிந்து, கைதவன் எழுந்து - பாண்டியன் (சிம்மாசனத்தினின்று) எழுந்து, மேருக்கல் வரி சிலையான் முன்போய் - மேருமலையாகிய கட்டமைந்த வில்லையேந்திய சோமசுந்தரக்கடவுள்முன் சென்று, தாழ்ந்து கூறும் - வணங்கிக் கூறுவான்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகக்கொண்டு கருவியாகிய படையெனப் பொருள்கொள்ளலும் ஒன்று. (அ)

பொன்னனையவேணிப்புனிதவிப்பூமிநேமி
யுன்னதுவலத்திறலேயுருட்டுமென்வலத்தைநோக்கான்
றன்னதுவலத்திறலென்றானையின்சிறுமைநோக்கி
யென்னதுதேயங்கொள்வானெண்ணினான்போலுமன்றே.

(இ-ள்.) பொன் அனைய வேணி புனித - பொன்னையொத்த சடாமுடியையுடைய புனிதனே, இ பூமி-இப்பூமியில், உன்னது வலத்திறல் நேமி உருட்டும் என் வலத்தை நோக்கான் - உன்றுடைய திருவருள் வலத்திறல் ஆக்கினாசக்கரத்தைச் செலுத்தும் எனது வன்மையைச் சற்றும் நோக்காது, தன்னது வலத்திறல் - தனது பெருஞ்சேனையின் வன்மையால், என் தானையின் சிறுமை நோக்கி - என்றுடைய சேனையின் சிறுமையைப்பார்த்து, என்னது தேயம் கொள்வான் எண்ணினான் போலும் - என்றுடைய நாட்டைக் கைக்கொள்ளக் கருதினவன்போலும்.

முன்னமே யுனது திருவருளைப் போர்வந்தபொழுது துணையென்று கருதி யொழுகினேனென்பான் நேமி உன்னது வலத்திறலே யுருட்டுமென் வலத்தையெனவும், சேனைப்பெருக்கே தனக்கு வெற்றிதருவதெனக் கருதினானென்பான் தன்னது வலத்திறலென்றானையின் சிறுமைநோக்கி யென்னது தேயங்கொள்வானெண்ணினன் எனவுங் கூறினான். (க)

காவிரிநாடன்சேனைக்கடலிடையெரிபோன்மூண்டு
மேவினனென்றுகூறிமீனவன்வேண்டவாளிற்
பூவிரிவாகைசூடியேபுனையநாம்பொருதுமென்று
நாவிரியாதமாற்றநாயகன்கூறக்கேட்டான்.

Koviloor Digital Library

(இ-ள்.) காவிரி நாடன் (இவ்வாறுகருதிய) சோழன், சேனை கடல் இடை எரிபோல் - தனது சேனையாகிய கடலிடத்து எழுந்த வடவைத்தீப்போல, மூண்டு மேவினன் என்று கூறி - கோபமூண்டு வந்தானென்று சொல்லி, மீனவன் வேண்ட - பாண்டியன் குறையிரக்க, வானில் - ஆகாயத்தில், பூவிரி வாகை நீயே புனைய-பூக்களலர்ந்த வெற்றிமாலையை நீயே சூட, நாம் பொருதும் என்று - நாம் துணையாக வந்து போர் செய்வோமென்று, நாயகன் நாவிரியாத மாற்றம் கூற-சோமசுந்தரக்கடவுள் அசரீரி கூறியருள, கேட்டான் - (சுந்தரேசபாதசேகரபாண்டியன்) கேட்டனன்.

போர்வந்தகாலையிற் சிவபெருமான் திருவருள் துணையாய் நிற்குமெனக் கடைப்பிடித்தொழுகினவனாதலால் பூவிரிவாகைநீயே புனைய நாம் பொருதுமென்று-நாவிரியாத மாற்றநாயகன் கூறக் கேட்டான் என்றார். (௧0)

எல்லியங்கமலச்செவ்வியெனமுகமலர்ந்துநாத
னல்லியங்கமலச்செந்தாளகந்தழீஇப்புறம்புபோந்து
பல்லியந்துவைப்பத்தானைப்பரவையுட்பரிமாவூர்ந்து
கொல்லியம்பொருப்பன்சேனைக்கடலெதிர்குறுகினானே.

(இ-ள்.) எல்லி - விடியற்போதில் (மலர்ந்த,) கமலம் செவ்வி என - தாமரையின் பொலிவைப்போல, முகமலர்ந்து - முகமலர்ச்சியுற்று, நாதன் அல்லி அம் கமலம் செம் தாள் - சோமசுந்தரக்கடவுளுடைய அகவிதழையுடைய அழகிய தாமரைமலர்போன்ற செவந்த திருவடிகளை, அகம் தழுவி புறம்புபோந்து - தனது மனத்திற்பதித்துப் புறம்பேவந்து, பல் இயம் துவைப்ப - பலவாத்தியங்களும் ஒலிக்க, தானை பரவை உள் பரிமா ஊர்ந்து - தனது சேனைப்பரப்பினடுவில் குதிரையை நடத்தி, கொல்லி அம்பொருப்பன் சேனைக்கடல் எதிர் குறுகினான் - கொல்லிமலையையுடைய சோழனது சேனாசமுத்திரத்தினெதிரே (போர்க்கு) வந்தனன்.

அசரீரியால் வெற்றி தனக்கேயெனத் துணிந்தனனாதலால் கொல்லியம்பொருப்பன் சேனைக்கடலெதிர்குறுகினான் என்றார். இறுதியிலு முதலிலும் நின்ற அம் சாரியையிடைச்சொல். (௧௧)

பண்ணுதலிசைவண்டார்க்கும்பசுந்தொடைச்செழியன்றானை
யெண்ணுதலிலவாஞ்சென்னியிரும்படைக்கடனேராறாய்
நண்ணுதலெனப்போய்ப்பொன்னிநாடவன்றமர்கட்கெல்லாங்
கண்ணுதலருளாலங்கோர்கடலெனத்தோன்றிற்றம்மா.

(இ-ள்.) பண் நுதல் இசை வண்டு ஆர்க்கும் - பண்ணோடமைந்த இசையை வண்டுகள் பாடும், பசுந்தொடை செழியன் தானை - வாடுதலில்லாத வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியனுடைய சேனையானது, எண்ணுதல் இலவாம் சென்னி இரும்படை கடல் நேர் - கணக்கில்லாதனவாகிய சோழனுடைய பெரிய சேனையாகிய கடலுக்கு நேரே, ஆறு ஆய் நண்ணுதல் என போய்-ஓராறுசெல்லுதல்போலச் சென்று, பொன்னி நாடவன் தமர்கட்கு எல்லாம் - சோழனுடைய சேனைகளுக்கெல்லாம், கண்ணுதல் அருளால் - சோமசுந்தரக்கடவுளின் திருவருளால், அங்கு ஓர் கடல் என தோன்றிற்று - அவ்விடத்தில் ஓர் பெருங்கடல் வந்ததுபோலப் புலப்பட்டது.

சிவபெருமான் திருவருளால் ஒரு சிறு துரும்பும் பிரமன் முதலியோராயுதத்திற்கு ஒல்காதிருக்கில் அளவிற்சிறிய சேனை பெரிய சேனைக்குப் பெரிதாகப்புலப்

Koviloor Digital Library

படல் ஓர் வியப்பன்றென்பார் கன்றுதலருளா லங்கோர் கடலெனத் தோன்றிற்று என வாளா கூறினர். (கஉ)

கடலெனவருமாவூர்ந்துகைதவன்சேனைமுன்போ
யடலணிமேருக்கோட்டியாலவாய்நெடுநாண்பூட்டி
மடலவிழ்துழாய்க்கோனாட்டிவாயெரிபுரத்திலூட்டி
மிடலணிகூடற்கோமான்வேடுருவாகிநின்றான்.

(இ-ள்.) அட்ல் அணி மேருகோட்டி - வலிமைமிக்க மகமேருவை வில்லாகவளைத்து, ஆலவாய் நெடுநாண் பூட்டி - வாசுகியாகிய நெடுநாணேற்றிட்டு, மடல் அவிழ் துழாய் கோல் நாட்டி - இதழவிழ்ந்த துழாய்மாலையையணிந்த திருமாலாகிய அம்பினை யேறிட்டு, வாய் எரி புரத்தில் ஊட்டி - அந்த அம்பின் வாயிலுள்ள தீக்கடவுளைத் திரிபுரத்திற்செலுவி, மிடல் அணி கூடல் கோமான் - வெற்றிபூண்ட மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், வேடு உரு ஆகி - வேட்டுவத்திருவுருவங்கொண்டு, கடல் என வருமா ஊர்ந்து - புடைபெயர்ந்த கடல்போல விரைந்து செல்லுங் குதிரையைச்செலுத்தி, கைதவன் சேனை முன் போய் நின்றான் - பாண்டியன் சேனையின் முன்னணியிற் சென்று நின்றருளினார்.

வெற்றிகொள்ளுதலில் வலியர் என்பார் மேருக்கோட்டி ஆலவாய் நாண்பூட்டித்துழாய்க்கோனாட்டி வாயெரிபுரத்திலூட்டியெனவும், அவரே யிங்கும் வெல்லக்கருதினர் என்பார் வேடுருவாகிநின்றான் எனவுங்கூறினர். ஆலவாய் விடத்தையுடைய வாயையுடையதென நிற்றலால் உருபும் பயனுந்தொக்க இரண்டாம்வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகைநிலைத்தொடர். துழாய்க்கோல் என்றது திருமால்மேல் நிற்றலால் முன்மொழியிற் பொருணிலையல். (கங)

கங்குல்வாய்த்திங்கள்போலக்காதணிதந்தத்தோடுங்
கங்குல்வாய்முளைத்தமீன்போற்கதிர்முத்தவடமுங்குஞ்சிக்
கங்குல்வாய்ச்சிலைபோல்வெட்சிக்கண்ணிசூழ்கலாபச்சூட்டுங்
கங்குல்வாய்கிழிக்குந்தந்தக்கடகமுமின்னுக்கால.

(இ-ள்.) கங்குல் வாய் திங்கள்போல - இரவில் நிலவிய சந்திரனைப்போல விளங்கும், காது அணி தந்தம் தோடு உம் - காதிலணிந்த தந்தத்தாலாகிய தோடும், கங்குல் வாய் முளைத்த மீன்போல் - இராப்போதில் முளைத்த நட்சத்திரத்தைப்போல, கதிர் முத்த வடமும் - விளங்கு முத்தமாலையும், குஞ்சி கங்குல் வாய் - சிகையாகிய இரவில், சிலைபோல் - (எழுந்த) இந்திரதனுசுபோல, வெட்சி கண்ணி சூழ் கலாபம் சூட்டும் - வெட்சிமாலைசூழ்ந்த மயிலிறகணிந்த உச்சிக்கொண்டையும், கங்குல் வாய் கிழிக்கும் மின்போல் - இருட்போதைக்கிழித்து விளங்கும் மின்னல்போல, தந்தக்கடகமும் - தந்தத்தாலாகிய கடகமும், கால - ஒளிவீச.

திருவுருவம் இருள்போல மிக்க கருநிறம் வாய்ந்திருத்தலால் காதணிதந்தத்தோடு திங்கள்போல வெனவும், முத்தவட மீன்போலெனவும், வெட்சிமாலை சூழ்ந்த மயிலிறகணிந்த உச்சிக்கொண்டை சிலைபோலெனவும், தந்தக்கடகம் மின்னல் போலெனவும் ஏற்ற உவமையணிபடக் கூறினர். (கச)

அண்டத்தாரமரர்நாயமன்றுதொட்டடையத்தோற்று
கண்டத்தாரிருளேயெங்குங்கலந்தெனக்கறுத்தமேனி
கொண்டத்தாராரிறைற்கோர்கூற்றெனக்கொல்வேலேந்திச்
சண்டத்திபெள்ளநின்றான்காவிரித்தலைவன்காண.

Koviloor Digital Library

(இ-ள்.) அண்டத்து ஆர் அமரர் - விண்ணுலகில் வசிக்கும் தேவர்கள், நாமம் அன்றுதொட்டு அடைய - அச்சத்தை (விடமுண்டருளிய) காலந்தொட்டடைய, தோற்று கண்டத்து ஆர் இருளே-தோற்றியருளிய ஸ்ரீகண்டத்தில் நிறைந்த விடவிருளே, எங்கும் கலந்தால் என்ன - எவ்விடத்துங் கலந்தாற்போல, கறுத்த மேனி கொண்டு - கறுத்த திருமேனியைக்கொண்டு, அதார் ஆரினுற்கு - அந்த ஆத்திமாலையையணிந்த சோழனுக்கு, ஓர் கூற்று என்ன - ஒரு யமனைப்போல, கொல் வேல் ஏந்தி - கொல்லும் வேலையேந்தி, சண்டத்தீ என்ன நின்றான் - வடவைத்தீப்போல நின்றருளினர், காவிரித்தலைவன் காணு - (அதனை) சோழன்கண்டு.

சிவபெருமானுரைத் தம்மிலொருவராகக்கருதி யிறுமாந்திருந்த பிரமன் முதலிய தேவர்கள் விடம்தோன்றிய பொழுதஞ்சி யடைந்தகாலையில் அதனை யுண்டருளி யந்நாள் முதலவர்க்குத் தம்மிடத்தச்சந்தோன்ற விஷத்தைக் கண்டத்தில் நிறுத்திய முதல்வனெச்பார் அண்டத்தாரமரர் நாமமன்று தொட்டடையத்தோற்று கண்டத்தார் என்றார். (கரு)

சீறியாயிரம்பரிக்கோர்சேவகன்வந்தேனென்னுக்
கூறினனெதிர்த்தான்வெள்ளிக்குன்றவன்பத்துநூறு
மாறிலாப்பரிக்குமட்டோர்வயவனீயன்றேவெண்ணி
லீறிலாப்பரிக்குமொற்றைச்சேவகன்யானேயென்றான்.

(இ-ள்.) சீறி - கோபித்து, ஆயிரம் பரிக்கு ஓர் சேவகன் வந்தேன் என்று - ஆயிரங்குதிரைகளுக்கு ஒரு சேவகன் வந்தேனென்று, கூறினன் எதிர்த்தான்-சொல்லிச் சோழனெதிர்த்தான், வெள்ளிக்குன்றவன் - வெள்ளிமலையையுடைய சிவபெருமானர், நீ மாறு இல்லாத பத்துநூறு பரிக்குமட்டு ஓர் வயவன் அன்றே - நீ பகைமையில்லாத ஆயிரங்குதிரைகளுக்குமட்டும் ஒரு வீரனல்லவா, எண்இல் ஈறு இல்லாத பரிக்கு உம் - கணக்கில்லாத தமது வன்மைகளுக்கு ஓர் முடிவில்லாத குதிரைகளுக்கும், யானே ஒற்றைச் சேவகன் என்றான்-நானே யொரு சேவக னென்று கூறினர்.

நீ ஆயிரம்பரிக்கோர் சேவகனென்றிறுமாந்தாய் யானே எண்ணில்லாத குதிரைவீரர்களை வெல்லவல்ல ஒரு வீரனெனத் தம்மைச் சிவபெருமானர் புகழ்ந்து கூறினமையால் நெடுமொழிவஞ்சித்துறை. கூறினன் முற்றெச்சம். (கசு)

என்றசொல்லிடியேறென்னவிருசெவிதொளைப்பக்கேட்டு
நின்றவனெதிரேமின்னுநீட்டிச்சென்மேகம்போலச்
சென்றுவேல்வலந்திரித்துச்செயிர்த்தனனயிர்த்துச்சிற
வன்றிறனூற்றுப்பத்துவயப்பரிக்கொருவனஞ்சா.

(இ-ள்.) என்ற சொல் - என்று வேடுருவாய்வந்த சிவபெருமானர் கூறியருளிய சொல், இடியேறு என்ன - இடியேற்றினொலியைப்போல, இருசெவி தொளைப்ப கேட்டு நின்றவன் எதிரே - தனது இரண்டு செவிகளுந் தொளைபடக்கேட்டுநின்ற சோழனெதிரே, மின்னு நீட்டி செல் மேகம்போல சென்று - மின்வலைவீசிச்செல்லு மேகம்போலச்சென்று, வேல்வலம் திரித்து செயிர்த்தனன் - வேலை வலப்பாற்றிரித்துக் கோபித்து, அயிர்த்து சிற - மாறுபட்டுச்சிற, வன் திறல் நூற்றுப்பத்து வயப்பரிக்கு ஒருவன் அஞ்சா - வன்மையையும் வெற்றியையுமுடைய ஆயிரங்குதிரைகளுக்கு ஒருவனுகிய சோழன் அஞ்சி.

Koviloor Digital Library

முன்னர்க்கூறிய சொல்லாலஞ்சித் தன்னை மறந்துநின்ற சோழனுக்கெதிரே மின்னல்போல வேலைத்திரிக்க அதனாற் கட்புலனுங்கலங்கிப் பின்னிட்டான் என்பார் நூற்றுப்பத்து வயப்பரிக்கொருவனஞ்ச என்றார். (௧எ)

யாமினியிந்தவேலாலிறப்பதற்கையமில்லை
யாமெனவகன்றான்மாவோடாயிரம்பரிக்கோர்மள்ளன்
காமனைவெகுண்டவேடன்மறைந்தனன்கங்குற்சோதி
மாமகனதுகண்டோடும்வளவனைத்துரந்துசென்றான்.

(இ-ள்.) இனி யாம் இந்த வேலால் இறப்பதற்கு ஐயம் இல்லை யாம் என்ன-இனிநாமிந்த வேலினாற்சாதற்குச் சந்தேகமில்லையாமென்று, ஆயிரம் பரிக்கு ஓர் மள்ளன் மாவோடு அகன்றான்-ஆயிரங்குதிரைகளுக்கு ஒரு வீரனாகிய சோழன் புறங்கொடுத்து ஓடினான், காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன் - மன்மதனையெரித்தருளிய வேடுருக்கொண்டுவந்த சிவபெருமானார் மறைந்தருளினர், கங்குல் சோதி மாமகன் அது கண்டு-இரவில் விளங்கும் சந்திரன் மரபிற்றோன்றிய சுந்தரேசபாதசேகரபாண்டியன் பார்த்து, ஓடும் வளவனை துரந்து சென்றான் - புறங்காட்டியோடும் அச்சோழனைத் துரத்திப்போயினான்.

வெற்றி பாண்டியன் வசத்ததாதலால் காமனை வெகுண்ட வேடன் மறைந்தனன் எனவும், ஓடுகிறவன் துரத்துவோருக் கெளியனாதலால் கங்குற்சோதி மாமகன் வளவனைத் துரந்துசென்றான் எனவுங் கூறினார். (௧அ)

துரந்திடுமளவிலோடுஞ்சோழனுந்திரும்பிநோக்கிக்
கருந்தடங்கண்ணிபாகங்கரந்தவேடுவனைக்காணான்
வருந்துயரச்சந்தீர்ந்தான்மதுரையினளவும்பற்றிப்
புரந்தரற்புறங்கண்டானைப்புறங்கண்டுமுடுக்கிப்போனான்.

(இ-ள்.) துரந்திடும் அளவில் ஓடும் சோழனும் திரும்பி நோக்கி-பாண்டியன் துரத்துங்காலத்தில் புறங்காட்டியோடும் சோழனுந் திரும்பிப்பார்த்து, கருந்தடம் கண்ணிபாகம் கரந்த வேடுவனை காணான் - கரிய பரந்த கண்களையுடைய உமாதேவியின் பாகத்தை மறைத்துவந்த வேட்டுவ மூர்த்தியைக் காணாமையால், வரும் துயர் அச்சம் தீர்ந்தான் - வந்த துன்பமும் பயமு நீங்கி, மதுரையின் அளவும்பற்றி - மதுரையெல்லைவரைம்பற்றி, புரந்தரன் புறங்கண்டானை புறங்கண்டு முடுக்கி போனான்-இந்திரனைப் புறங்கண்ட பாண்டியனை முதுகுகண்டு விரைந்து துரத்திப்போயினான்.

ஓடிய சோழன் தன்னுயிர்க்கு உய்திவந்ததோ இன்றே எனப்பார்த்தான் என்பார் சோழனுந் திரும்பி நோக்கியெனவும், வேடுவமூர்த்தியாய்வந்த பெருமானைக் காணாமையால் இழந்த வீரம் வந்ததென்பார் துயரச்சந்தீர்த்தான் புறங்கண்டு முடுக்கிப்போனான் எனவுங்கூறினார். (௧௯)

காலொன்றுமுடுக்கப்பட்டகனலொன்றுநடந்தாலொத்து
வேலொன்றுதடக்கைநேரிவேந்தனன்முடுக்குண்டோடுஞ்
சேலொன்றுகொடியினான்றன்செழுநகர்விரைந்துசெல்வான்
மாலொன்றுகளிற்றினுக்கோர்மதுமலர்க்கிடங்கில்வீழ்ந்தான்.

(இ-ள்.) கால் ஒன்று முடுக்கப்பட்ட - காற்றொன்றினால் விரைந்து மூட்டப்பட்ட, கனல் ஒன்று நடந்தால் ஒத்து-நெருப்பொன்று விரைந்து நடந்தாலொத்து,

Koviloor Digital Library

வேல் ஒன்று தடம் கை நேரி வேந்தனல் - வேலையேந்திய நீண்ட கையையுடைய சோழனல், முடிக்குண்டு ஓடும் சேல் ஒன்று கொடியினன் - துரத்தப்பட்டுப் புறங் காட்டியோடுங் கயற்கொடியையுடைய பாண்டியன், தன் செழுநகர் விரைந்து செல்வான் - தனது வளமிக்க மதுரையில் விரைந்து செல்லுகிறவன், மால் ஒன்று களிற்றின் - மதமயக்கத்தையுடைய யானை வீழ்ந்ததுபோல, ஆங்கு ஓர் மதுமலர் கிடங்கில் வீழ்ந்தான் - மதுரைத்திருநகரிலுள்ள ஒப்பில்லாத தேன் சிந்துந் தாமரைமலர்ந்த அகழியில் விழுந்தான்.

அச்சமிகுதியா லுணர்வழிந்திருத்தலின் மாலொன்று களிற்றின் எனவும், அகழியில் பாண்டியன் விழுந்தது சிவபெருமானுர் திருவருளாதலின் மதுமலர்க்கிடங்கில் வீழ்ந்தான் எனவுங் கூறினர். (உ0)

மீனவன்மதுரைமூதூர்மேற்றிசைக்கிடங்கில்வீழ
மானவெம்புரவியோடும்வளவனும்வீழ்ந்தான்கூடற்
கோனவனருளால்வானேர்குரைகடல்கடையத்தோன்று
மானையினெழுந்தான்றென்னன்கோழிவேந்தாழ்ந்துபோனன்.

(இ-ள்.) மீனவன் மதுரை மூதூர் மேல் திசை கிடங்கில் வீழ - பாண்டியன் மதுரையென்னுந் தொன்றுதொட்டுள்ள திருநகரத்தின் மேற்றிசையிலுள்ள அகழியில் விழ, மானம் வெம்புரவி யோடும் வளவனும் வீழ்ந்தான் - மானத்தையுடைய கொடிய குதிரையோடும் சோழனும் அந்த அகழியில் வீழ்ந்தனன், கூடல் கோனவன் அருளால்-அம்மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளருளினுல், வானேர்- தேவர்கள், குரை கடல் கடைய தோன்றும் ஆனையின் - ஒலிக்கும் கடலைக் கடையத் தோன்றிய வெள்ளையானையைப்போல, தென்னன் எழுந்தான் - பாண்டியனெழுந்தனன், கோழி வேந்து ஆழ்ந்து போனன் - உறையூர்க்கரசனுகிய சோழன் அவ்வகழியி லாழ்ந்திறந்தான்.

வீராவேசத்தாலுயிர்க்கிறுதியும் நோக்கானுயினன் என்பார் வளவனும் வீழ்ந்தான் எனவும், பாண்டியனுக்கு வெற்றிகூட்டுதல் பெருமானர் கடன் என்பார் தென்னனெழுந்தான், கோழிவேந்தாழ்ந்துபோனன் எனவுங்கூறினர். மானம் தன்னிலையிற்றாழாதுநிற்றலும், தாழ்வுவந்தவிடத்து உயிர்விடுதலுமாம். (உக)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பிலத்தளவாழ்ந்தகடிமலர்க்கிடங்கிற்பெருந்தகையவிந்தவன்றுகில்பூண்
கலத்தரும்பேழைபடைபரிமான்றேர்கரியெலாங்கவர்ந்துதன்பொருநைத்
தலத்தவன்றங்கணுயகராணியத்தக்கதூசணிகலனல்கி
நலத்தகையவர்பேரருட்கடற்கன்புநதியெனப்பெருகிவீற்றிருந்தான்.

(இ-ள்.) பிலத்து அளவு ஆழ்ந்த கடிமலர் கிடங்கில் - பாதலத்தினளவு ஆழ்ந்துள்ள வாசமிக்க தாமரைமலர்கள் நெருங்கிய அகழியிலாழ்ந்தெழுந்த, பெருந்தகை - பாண்டியன், அவிந்தவன் துகில் பூண் - ஆழ்ந்திறந்த சோழனுடைய ஆடையும் பூணும், கலத்து அரும் பேழை படை பரிமான் தேர் கரி எல்லாம் கவர்ந்து - ஆபரணங்களை வைத்த பெறுதற்கரிய பெட்டியும் சேனையும் குதிரையும் தேரும் யானையுமாகிய இவைகளையெல்லாங் கைக்கொண்டு, தன் பொருநை தலத்தவன்-தண்ணிய தாமிரபர்ணி சூழ்ந்த பாண்டிநாட்டையுடைய அந்தச் சுந்தரேசபாதசேகரபாண்டியன், தங்கள் நாயகர் அணிய தக்க தூசு அணிகலன் நல்கி-தங்களிறைவராணியத் தான்

Koviloor Digital Library

கவர்ந்தவற்றுள் தக்க ஆடையையும் ஆபரணங்களையுந்தந்து, நலத்தகையவர் பேர் அருட்கடற்கு - அவ்விறைவரது பெரிய திருவருளென்னுங் கடலிறுக்கு, அன்பு நதியென பெருகி - தான்கொண்ட அன்பு நதியைப்போல உவட்டெடுக்க, விற்றிருந்தான் - வீற்றிருந்தான்.

பாண்டியன் என்றுந் தானிட்டும் பொருள்களுள் எஞ்சியதைச் சோமசுந்தரக்கடவுள் திருப்பணிக்குச் செலுத்தக்கருத்தை முட்டின்றி முடித்தவந்தானென்பது தோன்ற அணியத்தக்க அசனிக்லனல்லி அருட்கடற்கன்பு நதியெனப்பெருகி வீற்றிருந்தான் என்றார். பெருகி செயவெனெச்சத்திரிபு. (௨௨)

சோழனைமடுவில்வீட்டியபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௧௬௦௭.

முப்பத்தெட்டாவது
உலவாக்கோட்டையருளியபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மின்பனிக்கதிர்வேணிவானவன்மீனவன்றனைமானவேன்
முன்பனிக்கவலந்திரித்துமூடுக்கிநேரியடுக்கலான்
பின்பனிக்கமலத்தடத்திறவிட்டவாறிதுபெருமைசா
லன்பனுக்குலவாதகோட்டையளித்தவாறுகிளத்துவாம்.

(இ-ள்.) மின்பனி கதிர் வேணி வானவன் - மின்னலைப்போல ஒளிவீசுதலையுடைய விளங்கும் சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள், மீனவன் தனை - பாண்டியன்பொருட்டு, மானம் வேல் - மானமிக்க வேலினை, பனிக்க முன் வலம் திரித்து மூடுக்கி - நடுக்கமுற எதிரே வலப்பால் திரித்துத் தாக்கி, நேரி அடுக்கலான் நேரிமலையையுடைய சோழன், பின்பனிகமலம் தடத்து இறவிட்ட ஆறு இது - பின்பு குளிர்ந்த தாமரை நெருங்கிய அகழியில் வீழ்ந்திறக்கச்செய்தருளிய திருவிளையாடலிது, பெருமைசால் அன்பனுக்கு உலவாத கோட்டை அளித்த ஆறு - பெருமைமிக்க தமது அன்பராகிய அடியார்க்கு நல்லார்க்கு உலவாக்கோட்டையருளிய திருவிளையாடலை, கிளத்துவாம் - இனிச் சொல்லுவாம்.

மீனவன்றனையென என்றனுருபு நிற்குமிடத்து இரண்டனுருபு நின்றது உருபு மயக்கம். (௧)

கலித்துறை.

பொடியார்க்குமேனிப்புனிதர்க்குப்புனிதவேற்றுக்
கொடியார்க்குவேதக்குடுமிக்கிளையானகூடற்
படியார்க்குஞ்சீர்த்திப்பதியேருழவோருனல்லா
னடியார்க்குநல்லானறத்திற்கும்புகழ்க்குநல்லான்.

(இ-ள்.) பொடி ஆர்க்கும் மேனி புனிதர்க்கு - திருநீறுநிறைந்த திருமேனியையுடைய மாசில்லாதாராகிய, புனித ஏறு கொடியார்க்கு - தருமவிடையெழுதிய

உலவாக்கோட்டையளித்த திருவிளையாடல்.



Kevinoor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

கொடியையுடைய சோமசுந்தரக்கடவுளுக்கு (உறையுளாகிய,) வேதக்குடிமிக்கு இணையான கூடல் - பிரபலசுருதிக்கொத்த மதுரையென்றும், படி ஆர்க்கும் சீர்த்தி பதி ஏர் உழவோருள் நல்லான் - நிலவுலகைத் தன்வசமாக்குங் கீர்த்தி நிறைந்த மதுரையில் வசிக்கும் வேளாளர் குலத்திற்றோன்றிய நல்லொழுக்கமுடையவராய், அடியார்க்கு நல்லான்-சிவனடியவர்க்கும் நல்லவராயிருத்தால் (அடியார்க்கு நல்லான் என்னும் அப்பெயர் பூண்டு,) அறத்திற்கும் புகழ்க்கும் நல்லான்-புண்ணியத்திற்கும் அவற்றால் வரும் கீர்த்திக்கும் நல்லவராய் ஒருவருள்ளார்.

புனிதர்க்கு, புனிதவேற்றுக்கொடியார்க்கு என ஒருபொருண்மேல்வந்த பலபெயர். இதனிறுதியில் பயனிலை எஞ்சிநின்றது. அடியார்க்கு நல்லராவார் அறத்திற் சிறிதுங் குன்றாராதலாலும் புகழ்தேடிவந்தடைய நிற்றலாலும் அறத்திற்கும் புகழ்க்கு நல்லான் என்றார். (உ)

அனையானறத்திற்கருள்போன்றவளான்றகற்பின்
மனையாண்மரபின்வழுவாததருமசீலை
யெனையாருநன்குமதிக்கவிருக்குநீரா
டனையாள்பதிக்குக்கதிக்குத்தனிச்சார்புபோல்வாள்.

(இ-ள்.) அனையான் அறத்திற்கு அருள்போன்றவள்-அந்த அடியார்க்கு நல்லவர் மேற்கொண்டொழுகும் புண்ணியத்தை வளர்த்தற்கு ஓரருளையொத்த, ஆன்ற கற்பின் மனையாள்-அமைந்த கற்பினையுடைய மனைவி, மரபின் வழுவாததருமசீலை-தனது மரபிற்குரிய ஒழுக்கத்தினின்றுந் தவறாத தருமசீலையென்பவள், எனையாரும் நன்குமதிக்க இருக்கும் நீராள்-(அவள்) தன்கணவனொழிந்த மற்றை யெவரும் நன்குமதித்துப்போற்ற மனையறத்தில் வழுவாது நிற்குந் தன்மையுடையவளும், தன்னை ஆள் பதிக்கு - தன்னைக்கொண்ட கணவ னடைதற்குரிய, கதிக்கு தனி சார்பு போல்வாள் - சிவகதிக்கு ஒப்பில்லாத ஒருபற்றுக்கோடா யுள்ளவளுமாயிருந்தனள்.

அறத்தை வளர்த்தற்கு அருளுடைமை இன்றியமையாச் சிறப்பினதாதலால் தன்கணவன்கொண்ட சிவபுண்ணியத்தை வளர்ப்பவளென்பார் அவள் அனையானறத்திற்கருள்போன்றவள் எனவும், இல்லறத்திற்குரிய கடன்களைத் தனது கணவன் சொல்வழிநின்று முட்டின்றி முடிப்பவளென்பார் ஆன்ற கற்பின் மனையாள் எனவும், தத்தம் வருணச்சிரம தன்மத்துக்குரிய வொழுக்கத்தினின்றுஞ் சிறிதுந்தவறுதவளென்பார் மரபின் வழுவாத எனவும், அக்காரணத்தால்வந்த பெயரினளென்பார் தருமசீலையெனவும், தனது நற்குண நற்செய்கைகளால் பலரும்புகழ மேம்பட்டவளென்பார் எனையாரு நன்குமதிக்க விருக்குநீராள் எனவும், இத்தன்மைப்பட்ட நற்குணநற்செய்கைகளால் தனது கணவன் கதிசேர்தற்கு ஓர் சோபானமாயிருப்பவளென்பார் தனையாள் பதிக்குக் கதிக்குத் தனிசார்பு போல்வாள் எனவுங் கூறினர்.

பல்லேருழவின்றொழில்பூண்டுபயன்கள்கொள்வான்
வில்லேருழவன்கடன்கொண்டுமிகுந்தவெல்லாம்
இல்லேருழத்திமடைச்செல்வமியற்றியேந்த
அல்லேறுகண்டனடியாரையருத்துநீரான்.

(இ-ள்.) பல் ஏர் உழவின் தொழில் பூண்டு - பல ஏர்களாலுழுதொழில்பூண்டு, பயன்கள் கொள்வான் - பெரும்பயனடைய முயலும் அடியார்க்கு நல்லார், வில் ஏர் உழவன் கடன் கொண்டு மிகுந்த எல்லாம் - வில்லாகிய ஏரால் பகைப்புலத்தை யுழும் அரசன்கொள்ளும் இறையிறுத்து, மிகுந்த எல்லாம் - மிகுந்த எல்லாப்பொரு

Koviloor Digital Library

லையும், இல் ஏர் உழத்தி - இல்லறமாகிய ஏரால் விருந்தின்புலத்தைத் திருத்தும் தருமத்தில், மடைச்செல்வம் இயற்றி ஏந்த-அமுதாகிய செல்வத்தைப் பாகம்செய்தேந்த, அல் ஏறு கண்டன் அடியாரை அருத்தும் நீரான் - விடம்பொருந்திய ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானடியவரை யுண்பிக்கும் தன்மையுடையவர்.

ஆறிலொருகூறு அரசற்கிறுக்குங்கடனுதலால் வில்லேருழவன் கடன்கொண்டு எனவும், எஞ்சிய ஐந்து கூற்றையும் தென்புலத்தவர் முதலிய ஐவருள் விருந்தினர்க்கே யுண்பித்தலால் அல்லேறுகண்ட னடியாரையருத்து நீரான் எனவுங் கூறினர். வில்லேருழவன், இல்லேருழத்தி இயைபுருவகவணி.

தொகைமாண்டதொண்டர்சுவையாறுதழீஇயநான்கு
வகைமாண்டமாறுபடுமுண்டிமறுத்தருந்த
நகைமாண்டவன்பின்றலையாயவனல்கநல்கப்
பகைமாண்டசெல்வமணற்கேணியிற்பல்குநாளின்.

(இ-ள்.) தொகைமாண்டதொண்டர் - அளவிறந்த அடியார்கள், ஆறுசுவை தழுவிய நான்குவகைமாண்ட மாறுபடும் உண்டி - அறுசுவைமிக்க நான்கு வகையாய் மாட்சிமைப்பட்டமைந்த தம்முள் மாறுதலையாகிய வுணவுகளுள், மறுத்து அருந்த குடிலாததை மறுத்துக் குடுள்ளதை யுண்ண, நகை மாண்ட அன்பின் தலையாயவன் நல்க நல்க - மகிழ்ச்சிமாருத அன்பிற்சிறந்த அடியார்க்கு நல்லவர் ஊட்டுந்தோறும், பகைமாண்ட செல்வம் - வெர்க்கு மனமிசைந்த செல்வமானது, மணல்கேணியில் - (எடுக்குந்தோறும்) மணற்கேணி நீர் சுரத்தல்போல, பல்கும்நாளில் - செல்வம் குறையாதோங்குங்காலத்தில்.

நான்குண்டியாவன நக்கல், பருகல், உண்ணல், தின்னல் இவை செய்கையால் வேறுபடுதலால் மாறுபடு முண்டியெனவும், படைத்ததில் முற்சிலைமாற்றிப் பிற்சிலையுண்ணுதல் முறையாதலால் மறுத்தருந்த எனவும், அடியார்க் கிவ்வாறூட்டிவருவதால் பகைமாண்டசெல்வம் எனவும், குறைபடாமல் வளர்ந்தோங்குதல் சிவபெருமானுர் திருவருளாலாதலால் மணற்கேணியிற் பல்கு நாளின் எனவுங் கூறினுர். (௫)

இந்நிரவாயவளங்குன்றினுமின்மைகூராத்
தன்னீர்மைகுன்றுனென்றுந்தன்மைபிறர்க்குத்தேற்ற
நன்னீர்வயலின்விளைவஃகிநலிவுசெய்ய
மின்னீரவேணிமதுரேசர்விலக்கினுரே.

(இ-ள்.) இ நீர ஆய வளம் குன்றினும் - இத்தன்மையவாகிய பெருஞ்செல்வக்குறைவினும், இன்மை கூராத தன் நீர்மை குன்றுன் என்னும் தன்மை - வறுமையடையாத தனது பத்தித்திறம் சிறிதுங் குறையானென்னுந் தன்மை, பிறர்க்கு தேற்ற - பிறர்க்குவிளக்க, நல் நீர் வயலின் விளைவு அஃகி நலிவு செய்ய - தெள்ளிய நீர்வளமிக்க வயலின் விளைவுகுறைந்து வருத்த, மின் நீர வேணி மதுரேசர் விலக்கினுர் - மின்னலைப்போலும் ஒளியமைந்த சடாமுடியையுடைய சோமசுந்தரக் கடவுள் அவ்விளைவை விலக்கியருளினுர்.

நாம்பெருந்த தேகம் வற்றினும் அடியவர்திறத்து அன்புசெய்தொழுகும் வழிபாட்டினின்றும் வழுவுதல் கூடாதென்பது ஆன்மாக்களுணர்ந்துய்யக் கருதினுர் என்பார் நன்னீர்வயலின் விளைவஃகி நலிவுசெய்ய - மின்னீரவேணி மதுரேசர் விலக்கினுர் என்றுர். (௬)

Koviloor Digital Library

குன்றாவிருத்திக்கடன்கொண்டுகொண்டன்பர்பூசை
நன்றாகநடத்தத்தொடுத்தான்கடன்றானுங்கிட்டா
தொன்றாலுங்கொண்டவிரதத்துக்குறுதியின்றி
நின்றானுடம்பையொறுக்கின்றநியமம்பூண்டான்.

(இ-ள்.) குன்றாத - குறைவுபடாத, விருத்திக்கடன் கொண்டு கொண்டு - வட்டிக்குக் கடன்வாங்கிவாங்கி, அன்பர் பூசை நன்றாக நடத்த தொடுத்தான் - அடியவர் பூசையைக் குறைவின்றி நடத்தத்தொடங்கி, கடன் தானும் கிட்டாது - கடனும் கிடையாமல், கொண்ட விரதத்துக்கு ஒன்றாலும் உறுதி இன்றி - தாம் மேற்கொண்ட விரதமுடித்தற்கு மற்றொன்றினாலும் பற்றுக்கோடில்லாமல், நின்றான் - வாளாநின்றார், உடம்பை ஒறுக்கின்ற நியமம்பூண்டான் (அடியருண்டெஞ்சியதை யுண்ணுங் கடப்பாட்டையுடையவராதலால்) தமதுடம்பை வருத்துகின்ற நியமத்தைப் பூண்டனர்.

விருத்திக்கடன் என்றமையால் வட்டிக்குவாங்குங்கடன் என்றாம். தொடுத்தான் முற்றெச்சம். (எ)

கொடுப்பாரவரேவிளைவுங்கடன்கோளுமாற்றித்
தடுப்பாரெனின்மற்றதையாவர்தடுக்கவல்லா
ரடுப்பார்விழுமங்களைவாரடியார்க்குநல்லூண்
மடுப்பானியமந்தடைபட்டுவருந்துகின்றான்.

(இ-ள்.) அடுப்பார் விழுமங்களைவார் - தம்மையடைந்த அடியார்தன்பங்களைக் களைந்தருளும்பெருமானார், கொடுப்பார் அவரே-(அடியவர்க்குவேண்டியாங்கு) கொடுப்பவரும் அவரே, விளைவும் கடன்கோளும் மாற்றி தடுப்பார் எனின்-அவரே விளைவையும் கடன்கோடலையுமாற்றித் தடுப்பாராயின், அதை தடுக்கவல்லார் யாவர்-அதனையிடையிற்புகுந்து தடுக்கவல்லவர்யார் (அதனால்) அடியார்க்கு நல் ஊண் மடுப்பான் - அடியவர்க்குச்சுவையமைந்த நல்லதிருவமுதையுண்பிக்கும் அடியார்க்கு நல்லார், நியமம் தடைபட்டு வருந்துகின்றான் - (தாம்மேற்கொண்ட) கடப்பாடு தடைபட்டு வருந்துகின்றவராயினார்.

தமதாணைவழிச்செல்லும் வினைப்போகங்களை யுயிர்க்குயிராய்நின்று ஊட்டுமிறைவரே ஊட்டாதொழியில் உண்பிப்பவர் வேறின்மையால் மற்றதை யாவர்தடுக்கவல்லார் என்றார். (அ)

விண்ணாறுசூடும்விடையான்றமர்க்கூட்டியன்றி
யுண்ணாதவன்றன்னுயிர்க்குத்துணையாயகற்பிற்
பண்ணார்மொழிதன்னொடும்பட்டினிவிட்டுநெஞ்சம்
புண்ணாகவாகம்பசித்தீயிற்புழுங்கப்பட்டான்.

(இ-ள்.) விண் ஆறு சூடும் விடையான் - ஆகாயகங்கைசூடிய சடாமுடியையுடைய பெருமானாருடைய, தமர்க்கு ஊட்டி அன்றி உண்ணாதவன் - அடியவர்க்குத்திருவமுதுசெய்வித்தல்லாமல் உண்ணாத அடியார்க்குநல்லவர், தன் உயிர்க்கு துணையாயகற்பின் - தமதுயிரடையும்பேற்றுக்கு ஒருபற்றுக்கோடாகநின்ற கற்பினையும், பண் ஆர்மொழிதன் ஒடும் பட்டினிவிட்டு - இசையையொத்த சொல்லினையுமு

Koviloor Digital Library

டைய மனைக்கிழத்தியோடும் பட்டினியிருந்து, நெஞ்சம் புண் ஆக-தமது நெஞ்சம்பு ண்ணுபமுங்க, ஆகம் பசித்தியில் புழுங்கப்பட்டான் - சரீரம்பசியாகிய நியால்சுட்டு வருந்தப்பட்டார்.

அடியருண்டெஞ்சியதுண்போராதலால் பட்டினிவிட்டுப் பசித்தீயிற்புழுங்க ப்பட்டான் என்றார். (கூ)

இறக்குமுடம்பாற்பெறும்பேறினியாவதென்னு
வறக்குன்றனையான்மனையோடுமடைந்திச்செய்தி
நிறக்கின்றசெம்பொற்சிலையார்க்குநிகழ்த்தியாவி
துறக்கின்றதுவேதுணிவென்றுதுணிந்துபோனான்.

(இ-ள்.) அறம் குன்று அனையான் - சிவபுண்ணியத்தில் மலைபோலக் கலங் காநிலைமையையுடைய அடியார்க்கு நல்லவர், இறக்கும் உடம்பால் - நில்லாதிறக்கு ம் இச்சரீரத்தால், இனிபெறும்பேறு யாவது என்னு - (வறுமைமேலீட்டால்) இனி நமடையும்பயன் யாதென்றுகருதி, மனையோடும் அடைந்து - தமது மனைக்கிழத்தி யோடுஞ்சென்று சரணடைந்து, இ செய்தி - இந்தச்செய்தியை, நிறக்கின்ற செம் பொன் சிலையார்க்கு நிகழ்த்தி - விளக்குகின்றமேருவை வில்லாகவுடைய பெருமா னுக்குக்கூறி, ஆவிதுறக்கின்றதுவே துணிவு என்று துணிந்துபோனான்-உயிரைவி டுவதே தக்கதென்று துணிந்துசென்றார்.

நெடுந்தூரத்திருள்ளோரால் காணப்படுந்தோற்றமும், ஒருவராலும் அசை க்கப்படாத நிலைமையயுமுடையவராதலால் அறத்திற்குன்றனையான் எனவும்,நிலை யில்லாத சரீரத்தால் பெறும்பேறு அச்சரீரத்தாலாகிய அறப்பயனுதலால் இறக்கு முடம்பாற் பெறும்பேறினியாவதென்னுவெனவும், உயிர்க்குயிராய்நிறைந்த பெரு மானூர் யாவுமுணர்வாராதலால் இச்செய்தி நிறக்கின்ற செம்பொற்சிலையார்க்கு நிக ழ்த்தியாவி - துறக்கின்றதுவே துணிவென்று எனவுங்கூறினார். (௪0)

ஐயன்றிருமுன்னரடைந்தடிதாழ்ந்துவானோ
ருய்யும்படிநஞ்சமுதுண்டவொருவவுன்றன்
மெய்யன்பர்பூசைக்கிடையூறுவிளையவென்றன்
செய்யும்புலமும்விளைவின்றிச்சிதைந்தவென்னு.

(இ-ள்.) ஐயன் திருமுன்னர் அடைந்து - சோமசுந்தரக்கடவுள் சந்நிதியை யடைந்து, அடிதாழ்ந்து - திருவடிவணங்கி, வானோர் உய்யும்படி நஞ்சு அமுது உ ண்ட ஒருவ - தேவர்களுய்ய நஞ்சினை யமுதுசெய்தருளியபெருமானே, உன் தன் மெய் அன்பர்பூசைக்கு இடையூறு விளைய - உனது பொய்யிலன்பர்பூசனைக்குத்த டையுண்டாக, என் தன் செய்யும்புலமும் விளைவு இன்றி சிதைந்த என்னு - என து நன்செய்யும் புன்செய்யும்விளைவு சுருங்கிக்கெட்டன.

குறைவிரந்ததேவர்களுய்யும்படி யவர்களைக்கொல்லவெழுந்த நஞ்சினை யமு துசெய்துகாத்த முதல்வனாதலால் உனது அடியார்க்கு யான்செய்யும்பணிகுன்ற வெழுந்தவறுமையை யொழித்துக்காப்பது உன்கடமையென்பதுதோன்ற உய்யும் படி நஞ்சமுதுண்டவொருவ என்றார்; இதுகருத்துடையடையணி. (௪௧)

Koviloor Digital Library

விடனல்குசூலப்படையாய்கடன்வேறுகாணேன்
கடனல்கவல்லார்தமைக்காட்டுதிகாட்டிலாயேன்
மடனல்குமிந்தவுடம்பின்சுமைமாற்றுவேனென்
றுடனல்குகற்புக்குரியாளொடும்வேண்டுமெல்லை.

(இ-ள்.) விடன் நல்கு சூலப்படையாய் - விடஞ்சிந்துஞ் சூலாயுதத்தையுடைய பெருமானே, கடன் வேறு காணேன் - (யான் சிற்றறிவுடையேனுதலால்) கடன்கொடுக்கவல்லாரிவரொன வொருவரையும் காணேன், கடன் நல்கவல்லார் தம்மைகாட்டுதி - (நீயெல்லாம்வல்லனுதலால்) கடன்கொடுக்கவல்லாரிவரொன வொருவரைக்காட்டுவாய், காட்டிலாயேல் - காட்டாவிடில், மடன் நல்கும் இந்த உடம்பின் சுமை மாற்றுவேன் என்று - அறியாமைமிக்க இந்தவுடற்பாரத்தையொழிப்பேனென்று, உடன் நல்கு கற்புக்கு உரியாள் ஒடும் வேண்டும் எல்லை - தம்மொடு நின்ற மனைக்கிழத்தியாகிய தருமசீலையோடு குறையிரக்குங்காலையில்.

கொண்டகருமத்தைக் கடன்வாங்கியாயினு முட்டின்றி முடிக்கக்கருதினேனென்பார் கடன்வேறுகாணேன் எனவும், நீ குபேரனை நண்பனுகவுடைமையால் இடைவிடாது கடன்கொடுக்கும் பெருஞ்செல்வமுடையோரை யுணர்ந்திருப்பாயென்பார் கடனல்கவல்லார் தமைக்காட்டுதியெனவும், எடுத்தவுடம்பாலாகிய பயனை முட்டின்றி முடிக்கப்பெருவிடில் இந்தவுடம்பாற் பயனில்லையென்பார் இந்தவுடம்பின்சுமை மாற்றுவேன் எனவுங்கூறினர். (௧௨)

பஞ்சாதிவேதப்பொருள்சொன்னபரமன்வாக்கொன்
றஞ்சாதிவேளாண்டலைவாவுனகத்திலின்றோர்
செஞ்சாதியாயசெழுவாலரிக்கோட்டையுய்த்தே
மெஞ்சாதிருக்குமெடுக்குந்தொறுமென்றுமாதோ.

(இ-ள்.) பஞ்சாதி - பஞ்சாதியென்னும் ஒருறுப்பையுடைய, வேதப்பொருள் சொன்ன - வேதத்திற்குப்பொருள்கூறிய, பரமன்வாக்கு ஒன்று - சோமசுந்தரக்கடவுள் திருவாக்காகிய அசரீரியொன்று, வேளாண்தலைவா - வேளாளர்குலத்திற்றோன்றிய தலைவனே, உன் அகத்தில் இன்று - உன்வீட்டிலிப்பொழுது, ஓர் செஞ்சாதி ஆய - ஒப்பில்லாத செந்நெல்லாலாகிய, செழுவால் அரிக்கோட்டை உய்த்தேம் - முனைமுரியாத களங்கமற்ற அரிசிக்கோட்டையொன்று செலுத்தினேம், அஞ்சாதி - அஞ்சுதலொழிவாய், எடுக்குந்தொறும் என்றும் எஞ்சாதிருக்கும் - நீ யெடுக்குந்தோறும் எப்பொழுதும் அது குறையாதிருக்கும்.

பஞ்சாதி சந்தைகூட்டி வேதாத்தியயனஞ்செய்வோர் நிறுத்துதற்கு வகுத்த ஐம்பதுபதங்கொண்ட ஓர் முடிபு. (௧௩)

நீநாளும்பூசித்ததில்வேண்டியகொண்டுமித்த
மானுதவன்பர்க்கமுதூட்டியெவர்க்குமன்ன
தானுதிநானுதருமங்களுஞ்செய்திவீடு
மேனுளளிக்கின்றனமென்றுவிசும்பிற்கூற.

(இ-ள்.) நீ நாளும் பூசித்து - நீ தினந்தோறும் அருச்சித்து, அதில் வேண்டிய கொண்டு - அவ்வரிசிக்கோட்டையில் (நாளொன்றுக்கு) வேண்டுமளவு அரிசிகொ

Koviloor Digital Library

ண்டு; நித்தம்-தினமும்; ஆறுத அன்பர்க்கு அமுது ஊட்டி - சிவநேயம்நீங்காத அடியார்க்கு அமுதருத்தி, எவர்க்கும் அன்னதானம் ஆதி - அவரொழிந்தயாவர்க்கும் அன்னதானமுதலிய, நாறுதருமங்களும் செய்தி - பலதருமங்களையுஞ்செய்வாய், வீடு மேல் நாள் அளிக்கின்றனம் என்று - சிவகதியை யிறுதியில் தந்தருளுகின்றேமென்று, விசும்பில் கூற - ஆகாயத்திற்கூறியருள.

எவர்க்கும் அந்தணர்முதலியோர் பலர்க்கும் எனக்கொள்க. (௧௪)

கேட்டின்பமெய்திக்கிளர்விம்மிதனுகிவேதப்
பாட்டின்பயனைப்பணிந்தில்லமடைந்துபண்டை
யிட்டுந்தவப்பேறெனக்கண்டனன்றொண்டர்க்கெந்தை
கூட்டுங்கதிபோலுலவாமற்கொடுத்தகோட்டை.

(இ-ள்.) கேட்டு - (அதனை) கேள்வியுற்று, இன்பம் எய்தி - இன்பமடைந்து, கிளர் விம்மிதன் ஆகி - மேலெழுந்தவியப்புடையவராகி, வேதப்பாட்டின் பயனை பணிந்து - வேதவாக்கியத்தின் பொருளாயுள்ள சோமசுந்தரக்கடவுளைவணங்கி, இல்லம் அடைந்து (தமது) வீட்டையடைந்து, பண்டை ஈட்டும் தவப்பேறு என்ன - முன்புதேடிய தவப்பயன்போல, தொண்டர்க்கு - அடியவர்க்கு, எந்தை - எமதுபெருமானுர், கூட்டும் கதிபோல் - அடைவிக்கும் பேரின்பம் (குறையாது என்றும் ஒருபடித்தாயிருத்தல்) போல, உலவாமல் கொடுத்தகோட்டை கண்டனன் - அழியாதிருக்கக்கொடுத்தருளிய அரிசிக்கோட்டையைப்பார்த்தனர்.

வேதம் ஒவ்வொருகாரணம்பற்றிப் பலகடவுளரைக்கூறினும் அரசனைப்போலத்தமது சத்திகளை யவர்கள்பாற்பதித்து அவரவர்காரியங்களை நிகழ்த்துமிறைவர் சிவபெருமானேயாதலால் வேதப்பாட்டின்பயன் எனக்கூறினர். (௧௫)

வானாறுசூடிதருகோட்டையைவைகறோறும்
பூநாறுசாந்தம்புகையொண்சுடர்கொண்டருச்சித்
தானுதசெவ்வியடிசிற்குமதற்குவேண்டு
நானுகருவிவிலைக்குமதுநல்கவாங்கா.

(இ-ள்.) வான் ஆறு சூடி - கங்கைசூடிய சோமசுந்தரக்கடவுள், தருகோட்டையை - தந்தருளிய அரிசிக்கோட்டையை, வைகல் தோறும் - தினந்தோறும், பூ நாறு சாந்தம் புகை ஒண்சுடர்கொண்டு அருச்சித்து - மலராலும் நறுமணங்கமழுஞ் சந்தனத்தாலும் தூபத்தாலும் ஒள்ளியதீபத்தாலும் அருச்சனைசெய்து, செவ்வி ஆறுத அடிசிற்கும் - பதம்நீங்காத அன்னத்திற்கும், அதற்குவேண்டும் - அவ்வன்னத்திற்கு வேண்டிய, நானுகருவிவிலைக்கும் - பலவிதவுபகரணங்களைப்பெறும்விலைப்பொருட்கும், அது நல்க - அக்கோட்டைகொடுக்க, வாங்கா - கைக்கொண்டு.

சிவபெருமானர்கூறிய வழிபாட்டினின்றுங் கடவாதொழுகினர் என்பார் வைகறோறும் பூநாறுசாந்தம் புகையொண்சுடர்கொண்டருச்சித்து என்றார். (௧௬)

மின்றூர்சடையான்றமராய்ந்தவர்வேதச்செல்வர்
தென்னுடர்தெய்வம்விருந்தொக்கல்செறிந்துநட்டோர்
முன்னுமெவர்க்குமுகில்போல்வரையாமனல்கி
பெர்நாளுநோயின்றனகாதிபனென்னவாழ்ந்தான்.

Koviloor Digital Library

(இ-ள்.) மின் ஆர் சடையான் தமர் - மின்னலையொத்த சடாமுடியையுடைய பெருமானாரடியவரும், ஆய்ந்தவர் - ஆகம ஆராய்ச்சியையுடைய சைவரும், வேதச்செல்வர்-அந்தணரும், தென்னாடர்-பிதிரரும், தெய்வம் விருந்து ஒக்கல் செறிந்த நட்டோர் - தெய்வமும் விருந்தினரும் சுற்றத்தாரும் ஒன்றுபட்டுச்சிநேகித்தவரும், முன் ஆம் எவர்க்கும் - முதலாகியயாவர்க்கும், முகில்போல் வரையாமல் நல்கி - மேகம்போலப் பிரதியுபகாரங் கருதாதகொடுத்து, எந்நாள் உம் நோய் இன்று-எப்பொழுதும் வறுமையின்றி, அளகாதிபன் என்ன - குபேரனைப்போல, வாழ்ந்தான் - குறையாதசெல்வராய் நீடித்திருந்தார்.

அடியார்திருவேடத்தில் ஆன்மாக்கள் வழிபட்டுய்யச் சிவபெருமானார் வசித்தருளுதலின் அவரே யிவராமென்பர் சடையான் தமர் எனவும், அவ்வடியவரிடத்துக்கொண்ட அன்பு என்றும் ஒருபடித்தாய் நிற்க வற்புறுத்தும்பேரறிஞர் வேதாகமங்களையுணர்ந்தோர் என்பார் ஆய்ந்தவர் வேதச்செல்வரெனவும், இவர்களையும்வழிபட்டொழுகுதல் ஒருதலையென்பார் பின்னர்க்கூறுதற்குமுற்படவும், அவர் இல்லறவொழுக்கத்திலும் சிறிதும் வழுவாது நின்றனர் என்பார் தென்னாடர் தெய்வம் விருந்தொக்கல் செறிந்த நட்டோர் எவர்க்கும் நல்கியெனவும், இறைவர் தந்தருளியது எடுக்கக்குறைபடாப்பெருஞ்செல்வம் என்பார் நோயின்றளகாதிபனென்னவாழ்ந்தான் எனவுங்கூறினர். (கஎ)

மேற்படி வேறு.

அன்பன்னடியார்க்கினியானனிநாளளந்தல்கித்
தன்பன்னியோடுமயலார்சுற்றந்தமரோடும்
பின்பந்நிலையேயிமவான்மகளைப்பிரியாத /
வின்பன்னுருவாய்ச்சிவமாநகர்சென்றிறைகொண்டான்.

(இ-ள்.) அன்பன் - சிவநேயராகிய, அடியார்க்கினியான் - அடியார்க்கினியார், நனி நாள் அலந்து அல்கி - அநேகநாளிருந்து ஆயுள்முடிந்து, தன் பன்னியோடும் - தமதுமனைவியோடும், அயலார் சுற்றம் தமர் ஓடும் - தமது ஏவல்செய்வோரும் சுற்றத்தாரும் தமக்குரிய கிளைஞருமாகிய இவர்களோடும், பின்பு அந்நிலையே - பின்பு இவ்வுலகில்நின்றபடியே, இமவான்மகளை பிரியாத இன்பன் உருவாய்-உமாதேவியாரைப் பிரிந்தறியாத சிவபெருமானார் சாரூப்பியம்பெற்று, சிவமாநகர் சென்று இறைகொண்டான் - சிவபுரத்திற்சென்றுவசித்தார்.

ஏவல்வழிநிற்போர் அவர்மரபினரல்லராதலால் அயலார் எனவும், தமர்என்றது தாய்வழி தந்தைவழி மனைவிவழியராதலால் அவரொழிந்தோரைச் சுற்றம் எனவும், இந்நிலவுலகில் நின்றபடியே சாரூப்பியம்பெற்றுச்சென்றனர் ஆதலால் அந்நிலையே யெனவும், சிவபெருமானார் திருவருளேயாதலால் இமவான்மகளைப்பிரியாதவின்பன்னுருவாய் எனவுங்கூறினர். (கஅ)

உலவாக்கோட்டையருளியபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ககூஉரு.

Koviloor Digital Library

முப்பத்தொன்பதாவது

மாமனாகவந்துவழக்குரைத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தாமநாறிதழியார்தந்தமர்க்கன்பன்வறுமைப்பட்டோ
னாமநாளுலவாக்கோட்டையருளியமுறையிதையன்
றேமனாண்முல்லைத்திந்தார்ச்சிறுதலைவணிகற்காக
மாமனாம்படிவங்கொண்டுவழக்குரைவண்ணஞ்சொல்வாம்.

(இ-ள்.) தாமம் நாறு இதழியார் - மணம்வீசுங் கொன்றைமாலையையணிந்தபெருமானார், தம் தமர்க்கன்பன் வறுமைப்பட்டோன் ஆம் அந்நாள் - தமதடியார்க்கடியார் வறுமைப்பட்ட அந்நாளில், உலவாக்கோட்டை அருளியமுறை ஈது- உலவாக்கோட்டையருளிய திருவிளையாடலிது, ஐயன் - அச்சோமசுந்தரக்கடவுள், தேமன் நாள் முல்லை திந்தார் - தேனிலைபெற்ற அன்றலர்ந்த இனிய முல்லைமலர்மாலையையணிந்த, சிறுதலை வணிகற்கு ஆக - பிள்ளைப்பருவத்தையுடைய ஒருவணிகனுக்காக, மாமன் ஆம் படிவம் கொண்டு - அவன்மாதுலன் திருவுருவங்கொண்டு, வழக்கு உரைவண்ணம் சொல்வாம் - வழக்குப்பேசி ஞாதிகளை வென்றருளிய திருவிளையாடலை யினிக்கூறுவாம்.

பிரணவப்பொருள் தாம் என்பதுணர்த்துதற்கு ஓரறிகுறியாக அணிந்தனர் என்பார் தாமநாறிதழியார் என்றார். (க)

கன்னிநான்மாடக்கூடற்கடிநகர்வணிகமாக்க
டன்னின்மாநிதிக்கோனன்னான்றனபதியென்னும்பேரான்
மன்னினனனையான்கற்பின்மடவரல்சுசிலையென்பாள்
பொன்னினாண்முளரிச்சேக்கைப்புண்ணியத்திருவினன்னாள்.


(இ-ள்.) கன்னி நான் மாடக்கூடல் கடிநகர் - என்றுமழியாத மதுரையென்னுங்காவல்பூண்ட திருநகரில்வசிக்கும், வணிகமாக்கள் தன்னில் - வணிகருள், மாநிதிக்கோன் அன்னான் - குபேரனையொத்த, தனபதி என்னும் பேரான் மன்னினன் - தனபதியென்னும் பெயரையுடைய ஒருவணிகனிருந்தனன், அனையான் கற்பின் மடவரல் - அவ்வணிகனது கற்பினையுடைய மனைக்கிழத்தி, சுசிலை என்பாள்- சுசிலையென்னும் பெயரையுடையவள் (அழகில்) பொன்னின் நாள் முளரிசேக்கை- பொன்போலன்றலர்ந்ததாமரைத்தவிசில் வசிக்கும், புண்ணியம் திருவின் அன்னாள்- புண்ணியவடிவாகிய இலட்சுமியையொத்தவள்.

மதுரைக்குக் கன்னிநாடு என்பது ஒருதிருநாமமாதலால் கன்னிநாடாகிய நான்மாடக்கூடல் என்று பொருள்கூறுதலும் ஒன்று. குபேரனையொத்திருத்தல் தனதுபெயர்க்காரணத்தால் விளக்கினான் என்பார் தனபதியெனவும், அவன்மனைவி கற்பின்மிகுதியைத் தனதுபெயர்க்காரணத்தால் விளக்கினாள் என்பார் சுசிலையெனவுங் கூறினார். (உ)

எனவிவர்தமக்குமைந்தற்பேறின்றியிரங்குநாளிற்
றனபதிமருகன்றன்னைத்தகவுசான்மகவாக்கொண்டு
மனமகிழ்சிறப்பானல்கமனைவியுந்தொழுதுவாங்கிப்
புனைவனபுனைந்துபோற்றிப்பொலிவுறவளர்த்துக்கொண்டாள்.

Koviloor Digital Library

மாமனாகவந்து வழக்குரைத்த திருவிளையாடல்.



Koviloor Digital Library

Koviloor Digital Library

(இ-ள்.) என இவர் தமக்கு - என்றுசொல்லப்பட்ட இவர்களுக்கு, மைந்தன்பேறு இன்றி இரங்கும் நாளில் - புத்திரப்பேறில்லாமல் வருந்துங்காலத்தில், தனபதி - தனபதியென்னும்வணிகன், மருகன் தன்னை - தனது தங்கையின்புத்திரனுகிய மருகனை, தகவுசால் மகவு ஆகக்கொண்டு - நல்லொழுக்கமிக்க புத்திரனாகக்கொண்டு, மனம் மகிழ்சிறப்பான் நல்க - மனமகிழ்ந்துசிறப்போடுகொடுக்க, மனைவியும் தொழுது வாங்கி - மனைவியுங் கைகூப்பிவாங்கி, புனைவன புனைந்துபோற்றி-பிள்ளைப்பருவத்திலணியும் ஆபரணங்களையணிந்து பாதுகாத்து, பொலிவுற வளர்த்துக் கொண்டாள் - நாளுக்குநாளோங்க வளர்த்துவந்தனள்.

புத்திரப்பேறு பரபோகத்திற்கோர் துணையாதலால் மைந்தற்பேறின்றியிரங்குநாள் எனவும், அதனைப் பொருளினு மிக்கதாகத்தேடவேண்டுவதாதலால் மருகன்றன்னைத் தகவுசான்மகவாக்கொண்டு எனவும், சிவிகாரங்கொள்ளுங்காலையில் பலருமறிய விழாக்கொண்டாடுதலாஃ மனமகிழ்சிறப்பால் எனவுங்கூறினர். (௩)

தனபதிமகப்பேறற்றானுயினுந்தணவாக்காதன்
மனைவிமேல்வைத்தவாசைமயக்கினுல்வருந்தியீன்ற
தனையனைமகவாத்தந்ததங்கைமேற்றீராப்பூசல்
வினைவிளைத்தொழுகவோர்நாளினையளும்வெகுண்டுசொல்வாள்.

(இ-ள்.) தனபதி - தனபதியென்னும் வணிகன், மகபேறு அற்றான் ஆயினும்- புத்திரப்பேறில்லாதவனானுலும், தணவாதகாதல்-நீங்காதவிருப்பத்தையுடைய, மனைவிமேல் - தனதுமனைக்கிழத்தியின்மேல், வைத்த ஆசைமயக்கினுல் - கொண்டகாதல்மயக்கத்தால், வருந்தி ஈன்றதனையனை - தான்வருந்திப்பெற்றபுத்திரனை, மக ஆக தந்த தங்கைமேல் - தனக்குப்புத்திரனாகத்தந்ததங்கையின்மேல், தீராத பூசல்வினை விளைத்து ஒழுக - நீங்காதபோர்செய்துவர, ஓர் நாள் - ஒருதினம், இளையளும் வெகுண்டு சொல்வாள் - அவன்தங்கையும்கோபித்து (தனக்கு மூத்தோனைநோக்கி) கூறுகின்றாள்.

கற்பின்வழிநிற்பவள் ஆதலால் தணவாக்காதல் எனவும், அவன் மனைவிமேல் வெறுப்பிலனுதலால் வைத்த ஆசைமயக்கினுல் எனவுங்கூறினர். (௪)

பெருமிதமுனக்கேன்பிள்ளைப்பேறற்றபாவிநீயென்
னருமைநன்மகனுலன்றோவிருமையுமடைவாயென்னப்
பெரிதுநாணடைந்துமேலைக்காயினும்பிள்ளைப்பேறு
தருதவம்புரிவேனென்னுத்தனபதிதவமேற்செல்வான்.

(இ-ள்.) உனக்கு பெருமிதம் ஏன் - உனக்குவந்த இறுமாப்பு என்ன, நீபிள்ளைபேறு அற்றபாவி - நீபுத்திரப்பேறில்லாதபாவி, என் அருமை நல் மகனுல் அன்றோ - என்றுடையபெறுதற்கரிய நல்லபுத்திரனாலல்லவா, இருமையும் அடைவாய் என்ன - இகபோகத்தையும் பரபோகத்தையும் அடையப்போகின்றாயென்றுகூற, பெரிதும் நாண் அடைந்து - மிகவுநாணங்கூர்ந்து, மேலைக்கு ஆயினும் - வருபிறப்பிற்காயினும், பிள்ளை பேறு தருதவம் புரிவேன் என்னு - புத்திரபாக்கியத்தைத்தரும் தவத்தைச்செய்வேனென்று, தனபதி தவம் மேல் செல்வான் - தனபதி தவஞ்செய்யப்போவாருயினன்.

Koviloor Digital Library

முற்பிறப்பில் தான்செய்ததவத்தில் புத்திரப்பேறு தருந்தவத்தைச்செய்யா தவறுதலால் பெரிதுகவலையடைந்து எனவும்; தனதுதங்கை சொல்மேல் தவஞ்செய்யக்கருதினனாதலால் மேலைக்காயினும் பிள்ளைப்பேறு தருதவம்புரிவேனென்றுத் தனபதி தவமேற்செல்வான் எனவுங்கூறினார். (ரு)

தன்பெருஞ்செல்வமெல்லாமருமகன்றனக்கேயாக்கி
யன்புகொண்மனைவியோடுமருந்தவநெறியிற்சென்றான்
பின்பவன்வரவுதாழ்ப்பமருமகன்பெற்றவெல்லாம்
வன்பினால்வழக்குப்பேசிவெளவினார்தாயமாக்கள்.

(இ-ள்.) தன்பெருஞ் செல்வம் எல்லாம் - தன்னுடைய அளவறுத்தற்கரிய செல்வத்தையெல்லாம், மருமகன் தனக்கே ஆக்கி - தனதுமருகனுக்கே யுரியதாக்கி, அன்புகொள் மனைவியோடும் - அன்புமிக்க தனது மனைவியோடும், அருந்தவம் நெறியில் சென்றான் - செய்தற்கரிய தவஞ்செய்தலின் மேற்சென்றவன், பின்பு - பின்னர், அவன்வரவுதாழ்ப்ப - (தவமேற்சென்ற) அத்தனபதியின்வருகைநீட்டிக்க, மருமகன் பெற்ற எல்லாம் - மருகன் (தன்மாதுலனாகிய தனபதியிடத்துப்) பெற்ற பெருஞ்செல்வத்தையெல்லாம், வன்பினால் வழக்கு தாய மாக்கள் பேசி - நீதிகோடிச்சழக்கிலைத் தனபதிஞாதிகள்பேசி, வெளவினார் - கவர்ந்துகொண்டார்கள்.

சுவிகாரங்கொண்டவன்றேயாவும் அவனுக்குரியனவாயினும் அவை இன்ன இன்னவென வரையறுத்துக்காட்டவேண்டுதலால் அவையிவையெனக்காட்டினான் என்பார் தன்பெருஞ்செல்வமெல்லாமருமகன்றனக்கேயாக்கியெனக் கூறினார்.(சு)

விளைநிலனடிமைபைம்பூண்வெறுக்கைநன்பசுக்களேனை
யவளனுமாற்றவர்கைக்கொள்ளவன்சிறையிழந்தபுட்போற்
றளர்வுறுமகனுந்தாயுஞ்சார்பிலார்தம்மனோர்க்கோர்
களைகணாயிருக்குங்கூடற்கடவுளேசரணமென்று.

(இ-ள்.) விளை நிலன் அடிமை - கழனியும் அடிமையாளும், பைம்பூண் வெறுக்கை நன்பசுக்கள் - பசிய ஆபரணமும் திரவியமும் நல்லபசுக்களும், ஏனைவளனும்-மற்றைப்பொருள்களுமாகிய இவைகளை, மாற்றவர் கைக்கொள்ள - பகைவர்கள் கவர, வன்சிறை இழந்த புள்போல் - வலியசிறையிழந்த பறவையைப்போல, தளர்வுறும் மகனும் தாயும் - வருந்தும்பிள்ளையுந்தாயும், சார்பில்லார் தம்மனோர்க்கு - ஒருபற்றுக்கோடுமில்லாத தம்போலியர்க்கு, ஓர் களைகணாய் இருந்தகூடல் கடவுளே - ஒருபற்றுக்கோடாயுள்ள மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளே, சரணம் என்று - அடைக்கலமென்றுருகி.

அவர்க்கோர் துணையில்லையென்பார் வன்சிறையிழந்தபுட்போல் எனவும், யாருமில்லார்க்குத் தெய்வந்துணையென்பது வழக்கென்றான் என்பார் சார்பில்லார் தம்மனோர்க்கோர் களைகணாயிருந்த கூடற்கடவுளே சரணம் எனவுங்கூறினார். சார்பில்லார் என்றும் வினைமுற்றுப்பெயரெச்சமாய்நின்றது. (எ)

வந்துவானகம்போழ்ந்தமணிமுடிவிமானக்கோயிற்
சுந்தரநாதன்பாதத்துணைதொழுதிறைஞ்சியார்க்குந்
தந்தையுந்தாயுமாகுந்தம்பிரானீரேயெங்கட்
கெந்தையும்யாயுமென்றுவிரங்கிநின்றினையசொல்வாள்.

Koviloor Digital Library

(இ-ள்.) வான் அவே போழ்ந்து வந்த - விண்ணுலகின்வயிற்றைக்கிழித்து வந்த, மணிமுடி விமானம் கோயில் - இரத்தினமிழைத்த சிகரமோங்கிய இந்திர விமானமாகிய திருக்கோயிலுளெழுந்தருளிய, சுந்தரநாதன் பாதத்துணை தொழுது இறைஞ்சி - சோமசுந்தரக்கடவுளுடைய இரண்டுதிருவடிகளையுங் கைகூப்பிவணங்கி, யார்க்கும் தந்தையும் தாயும் ஆகும் தம்பிரான் நீரே - எவ்வுயிர்க்கும் அம்மையப்பராகிய இறைவர்நீரே, எங்கட்கும் எந்தையும் யாயும் என்று - (ஆதலால் அவ்வுயிர்களுள் ஒருவராகிய) எங்களுக்குந் தந்தையுந் தாயுமாவார் நீரேயென்றுகூறி, இரங்கி நின்று இனையசொல்வாள் - வருந்திநின்று இத்தன்மையையுடைய குறைபாடுகளைச் சொல்லா நின்றனள்.

எவ்வுயிர்க்கும் வினைவழி அநந்தர் சிகண்டர்முகத்தா லூட்டுவோனாதலால் யார்க்குந் தந்தையுந் தாயுமாகுந் தம்பிரானிரேயெனவும், அவ்வுயிர்களுள் தாமும் அடங்கிநிற்றலால் எங்கட்கெந்தையும்யாயுமென்றுவெனவும், அன்னோர்பால் குறையிரத்தல் தக்கதாதலால் இரங்கிநின்றினையசொல்வாள் என்னவுங் கூறினர் "செய்தவேள்வியர்" என்றாற்போலவந்து போழ்ந்த எனவந்தது. (௮)

என்மகன்றன்னைமைந்தனின்மையாலெவருங்காணத்
தன்மகனாகக்கொண்டுதகுதியாலன்றேகாணி
பொன்மனைபிறவுநல்கிப்போயினனெம்முனிப்பால்
வன்மையாற்றாயத்தார்களவையெலாம்வௌவிக்கொண்டார்.

(இ-ள்.) மைந்தன் இன்மையால் என்மகன்றன்னை - தனக்குப்புத்திரனில்லாமையால் என்புத்திரனை, எவரும் காண - யாவருமறிய, தன்மகன் ஆக கொண்டு - தனக்குப்புத்திரனாகக்கொண்டு, தகுதியால் — நடுநிலைமையோடு, அன்றே - அப்பொழுதே, காணி பொன் மனை பிறவும் எம்முன் நல்கி - தனக்கு ஆட்சியாயுள்ள நிலங்களையும் திரவியத்தையும் வீடுகளையும் ஏனைப்பொருள்களையும் என் மூத்தோன் என் மகனுக்குக்கொடுத்து, போயினன் - (தவத்தின்மேல்) சென்றான், இப்பால் - சிறிதுநாள்கழிந்தபின், தாயத்தார்கள் - (அவன்) ஞாதிகள், வன்மையால் - கொடுவழக்குப்பேசி, அவை எல்லாம் வவ்விக்கொண்டார் - அப்பொருள்களையெல்லாங் கவர்ந்துகொண்டார்கள்.

சிவிகாரத்திற் கேற்பத்தனக்குரியனவெல்லாந் தருதல் முறையாதலால் தகுதியால் என்றாள். (௯)

ஒருத்திநானொருத்திக்கிந்தவொருமகனிவனுந்தேறுங்
கருத்திலாச்சிறியன்வேறுகளைகணுங்காணேனைய
வருத்திசாலறவோர்தேறுமருட்பெருங்கடலேயெங்கு
மிருத்திநீயறியாய்கொல்லோவென்றுபார்படியவீழ்ந்தாள்.

(இ-ள்.) ஐய-ஐயனே, நான் ஒருத்தி - நானே ஒருத்தி, ஒருத்திக்கு இந்த ஒரு மகன் - துணையின்றிநின்ற எனக்கு இந்தப்பிள்ளையோ ஏகபுத்திரன், இவனும் - இப்பிள்ளையும், தேறும் கருத்து இல்லாத சிறியன் - நன்றுதீது பகுத்தறியுங்கருத்துவராத சிறுபிள்ளை, வேறு களைகணுங்காணேன் - வேறொருபற்றுக்கோட்டையு முன்னையன் றியறியேன், அருத்திசால் அறவோர் தேறும் - அன்புமிக்க அடியவர்தெளிந்துணரும், பெரு அருள் கடலே - பெரியகருணைசமுத்திரமே, எங்கும் நீ இருத்தி - எவ்விடத்

தம் நிறைந்திருக்கின்றாய், அறியாய் சொல் ஓ என்று - நீயறியாததொன்றுளதோ வென்று, பார்ப்படிய வீழ்ந்தாள் - நிலமீது தனது தேகந்தோயத் தண்டாகாரமாக வீழ்ந்தனள்.

என்குலத்தினருள்ளும் துணையாயுள்ளாரொருவரும் இலன் என்பாள் ஒருத்திநான் எனவும், எனக்குள்ள ஏகபுத்திரனும் மிகவுஞ் சிறியன் என்பாள் இவனுந் தேறுங்கருத்திலாச் சிறியன் எனவும், ஆதலால் உன்னையன்றி வேறுதரவு இல்லையென்பாள் வேறுகளைகணுங் கணேன் எனவும், நான் கூறுவதுபொய்யாயின் நீயறியாததொன்றுளதோ என்பாள் எங்கும் நீயிருந்தறியாய் சொல்லோவெனவுங் கூறினள். (௪௦)

மாறுகொள்வழக்குத்தீர்க்கவல்லவரருளினாலே
சீறுகொள்வடிவேற்கண்ணாள்சிறுதுயிலடைந்தாண்மெய்யி
லூறுகொள்கரணமைந்துமுற்றறிகனவிற்கங்கை
யாறுகொள்சடையார்வேதச்செல்வராயடுத்துச்சொல்வார்.

(இ-ள்.) மாறுகொள் வழக்குத்தீர்க்கவல்லவர் - மாறுபட்டகொடுவழக்கைத் தீர்க்கவல்ல பெருமானார், அருளினால் - கருணையினால், சீறுகொள் வடிவேல் கண்ணாள் - கோபங்கொண்ட வடித்தவேல்போன்ற கண்களையுடையவள், சிறுதுயில் அடைந்தாள் - சிறுதுயில்செய்தனள், மெய்யில் ஊறுகொள் கரணம் ஐந்தும்-தேகத்தில் பரிசமுதலிய ஐம்புலன்களையும், உற்று அறி கனவில் - (அறிவுவாயிலாக) மனஞ்சென்றறியும் சொப்பனத்தில், கங்கை யாறுகொள் சடையார் - கங்கையையணிந்த சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள், வேதச்செல்வர் ஆய் அடுத்துசொல்வார் - அந்தணர் திருவுருவங்கொண்டுவந்து கூறுகின்றனர்.

இந்திரன்முதலியோர் நாம்பெரியோம் நாம்பெரியோம் என்றிறுமாந்தகாலத்தில் ஒருசிறுதுரும்பால் அவர்கள் பெரியரல்லரென அவர்களிறுமாப்பினையும், பிரமனும் திருமாலும் நாம் கடவுளரென இறுமாந்தகாலத்தில் சோதித்தம்பமாயெழுந்து, அவர்களிறுமாப்பினையும் ஒழித்துத் தமது இறைமைத்தன்மையைநாட்டினவராதலால் மாறுகொள்வழக்குத் தீர்க்கவல்லவர் எனவும், சொப்பனாவத்தையில் வாயுமுதலிய இருபத்தைந்து தத்துவங்களுளவாதலால் மெய்யிலூறுகொள்கரணமைந்து முற்றறிகனவிலெனவுங்கூறினார். (௪௧)

புலர்ந்தபின்றாயத்தோரைப்புரவலனாணையாற்றால்
வலந்தருமன்றத்தேற்றிமறித்தனையிருத்தியாம்போந்
தலந்தருமறிவான்மூத்தோரனைவருமிசையவந்தச்
சலந்தருவழக்குத்தீர்த்துத்தருகுவம்போதியென்றார்.

(இ-ள்.) புலர்ந்தபின் - விடிந்தபின், தாயத்தோரை - தனபிதாதிகளை, புரவலன் ஆணையால் - அரசனாணைவழியால், மறித்தனை - மறித்து, வலம் தருமன்றத்து ஏற்றி இருத்தி - வெற்றிமிக்கசபையிலேற்றியிருப்பாய், யாம் போந்து - நாம் வந்து, அலம் தரும் அறிவால் மூத்தோர் அனைவரும் இசைய - அமைந்த அறிவில்மூத்த யாவருமிசைய, அந்த சலம் தருவழக்கு தீர்த்து தருகுவம் - அந்தக்கொடுவழக்கினையொழித்து (உன்பொருளையுனக்கு) வாங்கித்தருவோம், போதி என்றார் - போவாயென்றுகூறியருளினார்.

Koviloor Digital Library

தம்புதல்வருள் ஒருவனைச்சிவிகாரங்கொள்ளாது தனது தங்கையின்புத்திரனைச் சிவிகாரங்கொண்டானேயென்று ஞாதிகளுக்கு எழுந்த மாற்சரியத்தால் ஆதலால் சலந்தருவழக்கு என்றார். மதித்தனை முற்றெச்சம். (கஉ)

வேரியங்குவளையுண்கண்விழித்தனள்வியந்துகெட்டே
னாருமில்லார்க்குத்தெய்வந்துணையென்பதறிந்தேனென்னாக்
காரிருங்கயலுண்கண்ணாள்கணவனைத்தொழுதுவாழ்த்திச்
சீரிளங்குமரனோடுந்தெரிவைதன்மனையிற்சென்றாள்.

(இ-ள்.) வேரி அம் குவளை உண்கண் விழித்தனள் - தேனொழுகும் அழகிய குவளையைவென்ற கண்கள்விழித்து, வியந்துகெட்டேன் - அதிசயித்து நான்கெட்டேன், ஆருமில்லார்க்குத் தெய்வம் துணை என்பது - ஆருமில்லார்க்குத் தெய்வம் துணையென்னும் பழமொழியை, அறிந்தேன் என்னா - இன்று அறிந்தனனென்று, கார் இருங்கயல் உண் கண்ணாள் கணவனை - கரியபெரிய கயலைவென்ற கண்களையுடைய அங்கயற்கண்ணியார் தலைவராகிய சோமசுந்தரக்கடவுளை, தொழுதுவாழ்த்தி-தொழுதுவணங்கி, சீர் இளங்குமரன் ஓடும் - அழகிய தனது புத்திரனோடும், தெரிவை - தனபதிதங்கை, தன்மனையில் சென்றாள் - தன்வீட்டிற்குச்சென்றனள்.

கெட்டேன் வியப்பிடைச்சொல். விழித்தனள் முற்றெச்சம். (கங)

சென்றவள்கங்குலெல்லைதெரிந்தபினெழுந்துவெள்ளி
மன்றவன்கோயில்வாயில்வந்துவந்தனைசெய்தம்பொற்
குன்றவனுரைத்தவாற்றாற்கொடுமைசால்வழக்குப்பூட்டி
வென்றவரிருக்கையெய்திவிளம்புவாள்பலருங்கேட்ப.

(இ-ள்.) சென்றவள் - சென்றதனபதிதங்கை, கங்குல் எல்லை தெரிந்தபின் எழுந்து - விடிந்தபின்னெழுந்து, வெள்ளி மன்றவன் கோயில் வாயில்வந்து-வெள்ளியம்பலத்திலெழுந்தருளிய பெருமானார் திருக்கோயிலின் வாசலில்வந்து, வந்தனைசெய்து - வணங்கி, அம்பொன் குன்றவன் உரைத்த ஆறு ஆல் - அழகியமகமேருவை வில்லாகவுடைய பெருமானார் கூறியருளியவகையால், கொடுமைசால் வழக்கு பூட்டிவென்றவர் - கொடுமைமிக்க வழக்கினைப்பூட்டிவென்ற ஞாதிகளுடைய, இருக்கை எய்தி - இருக்கையையடைந்து, பலரும் கேட்ப விளம்புவாள் - பலருமறியக்கூறுகின்றாள்.

திருவருட்டுணையடைந்தோர்க் கெதுவும் எளிதாதலால் கொடுமைசால்வழக்குப்பூட்டி வென்றவரிருக்கையெய்தி விளம்புவாள் என்றார். (கச)

அட்டில்வாய்நெருப்பிடேலோரடியிடேலறத்தாறன்றிப்
பட்டிமைவழக்கால்வென்றுபோகவொட்டேன்பலருங்கேட்க
விட்டனனரசனாணையறத்தவிசேறியான்றோ
ரொட்டியபடிகேட்டெங்களுரிப்பொருடந்துபோமின்.

(இ-ள்.) அட்டில் வாய்-சமைக்குமிடத்தில், நெருப்பிடேல் - தீமூட்டுதலொழிக, ஓர் அடியிடேல் - (புறத்திற்செல்ல) ஓரடியெடுத்துவைத்தலொழிக, அறத்து ஆறு அன்றி - (மநுநூலிற்கூறிய) தருமத்தின்வழியல்லாமல், பட்டிமை வழக்கால் வென்று - வஞ்சக்கொடுவழக்கால் எங்களைவென்று, போக ஒட்டேன் - (நீங்கள்

போக உடன்படேன், பலரும் கேட்க அரசன் ஆணை இட்டனன் - பலருமறிய அரசன்மே லாணையிட்டேன், அறத்தவிசு ஏறி - நியாயபீடத்திற்குவந்து, ஆன்றோர் ஒட்டியபடிகேட்டு - நியாயாதிபதிகள் இருவர்வழக்கையும் ஆய்ந்துரைத்த முடிபைக்கேட்டு, எங்கள் உரிப்பொருள் தந்துபோமின் - எங்களுக்குரிய பொருளைக்கொடுத்துச் செல்லுங்கள்.

குடிகள் அரசனாணையின்வழிநின்றொழுகுதலாதலால் இட்டனனரசனாணை என்றான். (௬௫)

என்றனன்மறித்தலோடுமிழுக்குரையாடிவைது
வன்திறல்வலியார்தள்ளியடித்தனர்மைந்தனோடுஞ்
சென்றனன்முறையோவென்றுதிருந்தறத்தவிசினோர்மு
னின்றுரையாடினான்கேட்டறிந்தனர்நீதிநூலோர்.

(இ-ள்.) என்றனன் மறித்தலோடும் - என்று அரசனாணைகூறிமறிக்க, வன்திறல் வலியர் - வன்மைமிக்கஞாதிகள், இழுக்கு உரை ஆடி வைது தள்ளி - தவறு வார்த்தைபேசிவைது பிடர்பிடித்துத்தள்ளி, மைந்தன் ஓடும் அடித்தனர் - புத்திரனோடும் (அவனை) அடித்தார்கள், முறையோ என்றுதிருந்து அறத்தவிசினோர் முன் சென்றனன் நின்று - இது முறையோவென்று புலம்பிக்கூவித் திருந்தியநியாயபீடத்திருந்தோர் முன்சென்றுநின்று, உரையாடினான் - குறைகூறினான், நீதி நூலோர் கேட்டு அறிந்தனர் - மநுநூலுணர்ந்த அந்நியாயாதிபதிகள் அதனைக்கேட்டுணர்ந்தார்கள்.

அரசனாணைக்குமஞ்சாத கொடியர் என்பார் வன்திறல் வலியர் என்றார். ௬௬

அறத்தவிசிருப்போரேவலாடவரோடும்போந்து
மறித்தவைக்களத்திற்கூட்டிவந்தனள்வந்தவெல்லை
யறக்கொடிபாகர்வெள்ளியம்பலவாணர்தாமத்
திறத்தனபதியேயென்னத்திருவுருக்கொண்டுசெல்வார்.

(இ-ள்.) அறத்தவிசு இருப்போர் - நியாயபீடத்திருப்பவர், ஏவல் ஆடவரோடும் போந்து - ஏவியசேவகாரரோடுஞ்சென்று, மறித்து (ஞாதிகளைச்செல்லவொட்டாது) மறித்து, அவைக்களத்தில் கூட்டிவந்தனன் - நியாயதலத்திற்கு உடன்கொண்டு சென்று, வந்த எல்லை - அடைந்தகாலையில், அறக்கொடிபாகர் வெள்ளியம்பலவாணர் தாம் - உமாதேவியை யிடப்பாகத்தி லுடையவராகிய சோமசுந்தரக்கடவுள், அதிறம் தனபதியே என்ன திரு உரு கொண்டு செல்வார் - (தவமேற்சென்ற) அந்தத்தனபதியேபோலத் திருவுருவங்கொண்டருளி வருவாராயினார்.

முப்பத்திரண்டறமும்வளர்த்தவர் ஆதலால் அறக்கொடி என்றார். (௬௭)

கலிவிருத்தம்.

பெருவிலைக்குண்டலம்பிடரிற்பத்திபாய்ந்
தெரிகதிர்கவிழ்ப்பவாளெறிக்குமங்கத
மருவரைத்தோள்கிடந்திமைப்பவாகமேற்
குருமணிக்கண்டிகைகுலாய்ப்பின்கோட்டவே.

(இ-ள்.) பெருவிலை குண்டலம் - அளவற்றதாகிய விலையையுடைய குண்டலமானது, பிடரில் பத்திபாய்ந்து எரிகதிர் கவிழ்ப்ப - பிடரில் நிரைபடப்பரவிவிள

Koviloor Digital Library

க்குங் கிரணத்தை ஒருபாற்பரப்பவும், வாள் எறிக்கும் அங்கதம் - கிரணத்தைவீசும் வாகுவலயம், அருவரைதோள் கிடந்து இமைப்ப - பெரியமலைபோன்ற தோளிற்கி டந்து ஒருபால் விளங்கவும், ஆகம் மேல் - மார்பின்மேல், குருமணி கண்டிகை கு லாய் பின்கோட்ட - நிறந்தங்கிய முத்தக்கண்டிகைவிளங்கிப் பின்புறத்து ஒருபால் வளைந்துவிளங்கவும்.

தனபதியுருவங்கொண்டடையும் பெருமானுர் அத்தனபதி குபேரனையொத் த பெருஞ்செல்வத்தை யுடையனுதலால் அச்செல்வத்துக்கேற்ற திருக்கோலங்கொ ண்டடைந்தார் என்பார் இவ்வாறுகூறினுர். (கஅ)

முரலளிபுறவிதழ்மொய்ப்பச்செய்யதா
மரைசிறிதலர்ந்தெனமணிசெய்மோதிரக்
கரதலம்வீசியோர்கடுங்கணேறெனப்
பெருமிதநடைகொடுநடக்கும்பெற்றியார்.

(இ-ள்.) முரல் அளி புற இதழ் மொய்ப்ப - இசைபாடும் வண்டுகள் புறவி தழில்நெருங்கி மொய்க்க, செய்ய தாமரை சிறிது அலர்ந்தது என்ன - செந்தாமரை சிறிது மலர்ந்ததையொப்ப, மணி செய் மோதிரம் கரதலம் வீசி - நில இரத்தினங்க ளிழைத்த மோதிரத்தையணிந்த கைகளைவீசி, ஓர் கடுங் கண் ஏறு என்ன - ஒப்பில் லாதகோபம்பரந்த கண்களையுடைய இடபம்போல, பெருமித நடை கொண்டு நடக் கும் பெற்றியார் - பெருமித நடையோடு நடக்குந் தன்மையையுடையராகி.

இடைக்குறையாய் நின்றகொண்டு என்னுஞ் சொல்லுருபு உட்னிகழ்ச்சிப் பொருளில்வந்தது. பெற்றியார் குறிப்பு முற்றெச்சம். (கக)

வாடியமுளரிபோன்மாறிட்டாரிடத்
தூடியுமலர்ந்தபோதொப்பமைந்தன்மே
னாடியதண்ணளிநயந்துமுட்கிடை
கூடியமுகத்தினர்குறுகுவாரவை.

(இ-ள்.) வாடிய முளரி போல் - முகஞ்சாம்பிய தாமரையைப்போல, மாறி ட்டார் இடத்து ஊடியும் - பகைகொண்டெழுந்த தமது ஞாதிகளிடத்துச் சிறுதனி கொண்டெழுந்த வாட்டமும், மலர்ந்த போது ஒப்ப - அன்றலர்ந்த தாமரைமலரை யொப்ப, மைந்தன் மேல் நாடிய தண் அளி நயந்தும் - (தாம் சிவிகாரங்கொண்ட) புத்திரன்மேலெழுந்தலர்ந்த தண்ணிய கிருபாநயப்பும், உள் கிடை கூடிய முகத்தி னர் - தம்மனத்திற்கிடந்தபடி தோன்றிய திருமுகத்தையுடையவராய், அவை குறுகு வார் - நியாயசபைக்குவரும் பெருமானுர்.

மனத்திலுள்ளதை முகங்காட்டும் என்பது "அடுத்ததுகாட்டும்பளிங்குபே னெஞ்சம் - கடுத்ததுகாட்டுமுகம்" என்றதனாலுணர்க. (உ0)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அரசனிங்கில்லைகொல்லோவான்றவரில்லைகொல்லோ
குரைகழல்வேந்தன்செங்கோல்கொடியதோகோதினூல்க
ளுரைசெயுந்தெய்வந்தானுமில்லைகொலுறுதியான
தருமமெங்கொளித்ததேகொலென்றறத்தவிசிற்சார்வார்.

Koviloor Digital Library

(இ-ள்.) இங்கு அரசன் இல்லைகொல் ஓ - இந்நாட்டிலரசனில்லையோ, ஆன்றவர் இல்லைகொல் ஓ - அறிவாலமைந்த முதியோரில்லையோ, குலா கழல் வேந்தன் செங்கோல் கோடியதோ - ஒலிக்கும் வீரகண்டையை யுடைய அரசனது செங்கோல் கொடுங்கோலாயிற்றோ, கோது இல் நூல்கள் - குற்றமில்லாத வேதாகமமுதலிய நூல்கள், உரை செய்யும் தெய்வம் தானும் இல்லைகொல் ஓ - கூறும்தெய்வமும் எங்குக் குடிபுகுந்ததோ, உறுதியான தருமம் எங்கு ஒளித்ததே கொல் என்று - (மக்களுயிர்க்குப்) பெரும்பயனுமுள்ள அறக்கடவுளும் எவ்விடத்தொளித்ததோ வென்று புலம்பி, அறத்தவிசில் சார்வார் - நியாயபீடத்திற்கு எதிரேவந்தருளுகின்றார்.

குடிகளைக்காத்தற்கு அரசனுளனாயின் இந்நிச்செயல் நிகழாதேயென்பார் அரசனிங்கில்லைகொல்லோ வெனவும், முதியோரிருப்பி னிடையிற் புகுந்து இந்நிச் செயல் நிகழாது தடுப்பார் என்பார் ஆன்றவரில்லை கொல்லோ எனவும், கொடுங்கோலரசனுளனோ என்பார் குலாகழல்வேந்தன் செங்கோல் கோடியதோ எனவும், ஒறுத்தற்கு அரசன் மேல் தெய்வம் ஒன்றுளதாதலால் அத்தெய்வமும் நடுவொழிந்ததோ என்பார் கோதினூல்களுரைசெயுந் தெய்வந்தானுமில்லைகொல் எனவும், பொறுத்தற்கரிய தீமைகளையும் அறக்கடவுள்பொறுத்திருந்தலால் அக்கடவுள் இல்லையோ என்பார். உறுதியான தருமமெங்கொளித்ததேகொல் எனவும், ஒறுக்கவந்த தெய்வம் தாமாதலால் ஞாதிகள்செவியிலேறமுறையிட்டார் என்பார் என்றறத்தவிசிற்சேர்வார் எனவுங்கூறினர். (உக)

தனபதிவரவுநோக்கிவஞ்சனைத்தாயத்தார்க
ளினைவுறுமனத்தராகிவிம்மிதமெய்திவெல்லு
மனவலியிழந்துபண்டுவழக்கலாவழக்கால்வென்ற
வினைநினைந்துள்ளமச்சநாணினால்விழுங்கப்பட்டார்.

(இ-ள்.) தனபதி வரவு நோக்கி - தனபதியென்னும் வணிகன் வருகையைப் பார்த்து, வஞ்சனை தாயத்தார்கள் - வஞ்சமுள்ள ஞாதிகள், இனைவு உறு மனத்தர் ஆகி - வருத்தமிக்க மனத்தை யுடையவராகி, விம்மிதம் எய்தி - அதிசயங் கூர்ந்து, வெல்லும் மனவலி இழந்து - (வழக்கினை) வெல்லக்கருதிய மனத்தின்வன்மையை யொருசேர இழந்து, பண்டு - முன்பு, வழக்கு அல்லாத வழக்கு ஆல் வென்ற வினை நினைந்து - கொடுவழக்கால் தனபதி தன்னையவென்ற கொடுந்தொழிலைநினைத்து, உள்ளம் - தமது மனம், அச்சம் நாணினால் விழுங்கப் பட்டார் - (அரசனறியினெவ்வாறுமுடியுமோவென்றும்) பயத்தாலும் நாணத்தாலும் விழுங்கப்பட்டார்கள்.

தமதுவழக்கு இழுக்கடைந்ததே யென்னுங் கருத்தினராயினர் என்பார் இனைவுறுமனத்தராகி யெனவும், இச்சமயத்தில் அவன்வருகை நன்றாயிருந்ததென்றெண்ணினர் என்பார் விம்மிதமெய்தி எனவும், இவனால் நமது களவு வெளிப்படுமே யென்று கருதினர் என்பார் பண்டு வழக்கலாவழக்கால் வென்ற வினைநினைந்து எனவும், அரசனறியின் ஒறுப்பானே யென்றும் அச்சமும், அது தமதுகுடிக்குப் பழிவிளைக்குமே யென்றும் நாணமும் அடைந்தனர் என்பார் உள்ளமச்சம்நாணினால் விழுங்கப்பட்டார் எனவுங்கூறினர். (உஉ)

மாதுலராகிவந்தோர்மருகனைத்தம்பின்வந்த
தாதுலராதகோதைதன்னொடுந்தழீஇத்தங்கண்ட
மீதுலராதசாமவேதமார்ப்பவர்போல்வாய்விட்
டாதுலராவிரந்தோவையவென்றழுதணைந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மாதலராகி வந்தோர் - மாமனாகத் திருவுருவங்கொண்டுவந்த பெருமானார், மருகனை - தமது மருகனையும், தம் பின் வந்த தாது உலராத கோதை தன்னொடு தழுவி - தமக்குப்பின்னேவந்த மகரந்தம்வாய்ந்த கூந்தலையுடைய தங்கையோடு தழுவி, தம் கண்டம் மீது உலராத சாமவேதம் ஆர்ப்பவர் போல்-தமதுதிருக்கண்டத்தா லழியாத சாமவேதத்தைப் பாடுவார்போல, வாய் விட்டு - வாய்திறந்து, ஆதலர் ஆனீர் - (நீங்கள்) வறியர்களானீர், அந்தோ ஐய என்று அழுது நைந்தார் - ஐயகோவென்று புலம்பி அழுது வருந்தினார்.

தனபதியே இவனெனப் பலருந் தெரிய நடித்தனராதலால் வாய்விட்டாதுலரானீரந்தோவையவென்றழுதுநைந்தார் என்றார். அந்தோ ஐய இரக்கப்பொருளில்வந்த இடைச்சொற்கள். (உ௩)

குடங்கையினெடுங்கணாளுங்குமரனும்வணிகர்தாளிற்
றடங்கணீராட்டவிழ்ந்தார்தடக்கையாலெடுத்துப்புல்லி
மடங்கலேறனையார்தாமுமற்றவர்தமைத்தங்கண்ணீர்
நெடுங்கடல்வெள்ளத்தாழ்த்திக்குமரனைநேர்ந்துநைவார்.

(இ-ள்.) குடங் கையின் நெடுங் கண்ணாளும் - உள்ளங்கையைப்போலப்பரந்த நெடியகண்களையுடைய தனபதிதங்கையும், குமரனும் - சிவிகாரபுத்திரனும்,வணிகர் தாளில் தடங் கண்ணீர் ஆட்ட விழ்ந்தார்-(வந்தருளிய)வணிகமூர்த்தியின்திருவடியைத் தமதுபரந்தகண்ணீரால் அபிடேகஞ்செய்ய(அத்திருவடிமேல்)விழ்ந்தனர்கள், தடக்கையால் எடுத்துப் புல்லி - தமது நீண்ட திருக்கரங்களாலெடுத்துத்தழுவி,மடங்க லேறு அனையார் தாமும் - சிம்மேற்றையொத்த அவ்வணிகமூர்த்தியும், அவர்தம்மை தடம் கண் நீர் நெடுங் கடல் வெள்ளத்து ஆழ்த்தி - அவர்களைத் தமதுகண்ணீராகிய பெருங்கடற்பெருக்கிலழுத்தி, குமரனை நேர்ந்து நைவார் - அச்சிவிகாரபுத்திரனைப்பார்த்து மனம்வருந்துவாராயினார்.

தாளில்-இரண்டனுருபு நிற்கவேண்டுமிடத்து ஏழனுருபுவந்துநின்றது உருபுமயக்கம். தடங்கணீர் தட உரிச்சொல்லாதலால் சிறப்பு விதியால் வருமொழி வல்லினத்துக்கு இனவெழுத்தும், தடக்கையால் பொதுவிதியால் வருமொழிவல்லினமிகுந்தும்வந்தன. (உ௪)

ஐம்படைமார்பிற்காணேன்சிறுசிலம்படியிற்காணேன்
மொய்ம்பிடைமதாணிகாணேன்முகத்தசைசுட்டிகாணேன்
மின்படுகுழைகள்காணேன்வெற்றுடல்கண்டேனப்பா
வென்பெறுமென்றுபிள்ளைப்பணிகளுங்கவர்ந்தாரென்று

(இ-ள்.) ஐம் படை மார்பில் காணேன் - (பூண்ட) பஞ்சாயுத அணியை மார்பினிடத்துக் கண்டறியேன், சிறு சிலம்பு அடியில் காணேன் - சிறுசிலம்பினைக் காலிற்கண்டறியேன், மொய்ம்பு இடை மதாணி காணேன் - தோளிற்பூண்ட வாகுவலயத்தைக் கண்டறியேன், முகத்து அசை சுட்டி காணேன் - முகத்தில் தொங்கியசையுஞ் சுட்டியைக்கண்டறியேன், மின் படு குழைகள் காணேன் - விளக்கமமைந்த குண்டலங்களைக் காதிற்கண்டறியேன், அப்பா வெற்றுடல் கண்டேன் - அப்பனே (இப்பொழுது) பொலிவிழந்த உனது சரீரத்தைப்பார்த்தேன், என் பெறும் என்று-என்னவிலை பெறுமென்று, பிள்ளை பணிகளும் கவர்ந்தார் என்று - குழந்தைக்குப்பூட்டிய சிறிய ஆபரணங்களையுங் கொள்ளையாடினார்களென்று.

Koviloor Digital Library

ஐம்படை-காக்குங் கடவுள் திருமால் ஆதலாற் பிள்ளைப்பருவத்திற் காத்தற் பொருட்டு அவரது சங்கு சக்கர கதா கட்க கோதண்டம் என்னும் பஞ்சாயுதவடிவமாகச்செய்யும் ஒருவகையாபரணம். பெருஞ் செல்வத்தைக் கவர்ந்தோர்க்கு இது ஒரு பொருளன்றே என விரங்கினர் என்பார் என்பெறுமென்று பிள்ளைப்பணிகளுஞ் சேர்த்தசொன்னு என்றார். (உ௬)

அனைவருமிரங்கவாய்விட்டழுதவரிளையாட்டன்னைத்
தனையனைக்கண்ணீர்மாற்றித்தடக்கையான்முதுகுதைவந்
தினையன்மின்னென்முன்வேறொன்றெண்ணன்மினென்னுவஞ்ச
வினைஞர்வல்வழக்குச்சோர்ந்துவிடுவதுகாண்மினென்னு.

(இ-ள்.) அனைவரும் இரங்க - கண்டோர் யாவரு மனமிரங்க, வாய்விட்டழுதவர் - வாய்திறந்தழுத வணிகமூர்த்திகள், இளையாள் தன்னை தனையனை கண்ணீர் மாற்றி - இளையவளையும் சிவிகரேபுத்திரனையுங் கண்ணீர்துடைத்து, தடக்கையால் முதுகுதை வந்து - தமது நீண்ட திருக்கரத்தால் அவர்கள் முதுகினைத் தடவி, இனையன்மின்-வருந்துதலொழியக்கடவீர், என்முன் வேறொன்று எண்ணன்மின் என்னு-என்முன்னே மற்றொன்றைக் கருதுதலொழியக்கடவீரென்று வற்புறுத்தி, வஞ்சவினைஞர் வல் வழக்கு சோர்ந்து விடுவது காண்மின் என்னு - வஞ்சிக்குங்கொடுந்தொழிலையுடைய எனது ஞாதிகள் கொடுவழக்குச் சோர்ந்துவிடுதலைக் காணுங்களென்று கூறி.

நான் தலைகாட்டிய அன்றே எனதுஞாதிகள்வழக்குத் தோற்றது என்றுதேற்றினர் என்பார் என்முன் வேறொன்றெண்ணன்மின் என்றார். (உ௬)

நட்பிடைவஞ்சஞ்செய்துநம்பினோர்க்கூன்மாறுட்டத்
துட்படக்கவர்ந்துமேற்றோர்க்கிம்மியுமுதவாராயும்
வட்டியின்மிதப்பக்கூறிவாங்கியுஞ்சிலர்போலீட்டப்
பட்டதோவறத்தாறிட்டநம்பொருள்படுமோவென்னு.

(இ-ள்.) நட்பு இடை வஞ்சம் செய்தும் - (தம்மைநம்பி) சிநேகித்தவரிடத்தில் வஞ்சனை செய்தும், நம்பினோர்க்கு ஊன் மாறுட்டத்து - நம்பியடைந்தவர்க்கு மயக்கங்கலந்த வுணவூட்டி, உட்பட கவர்ந்தும் - தமது வசப்பட அவர்கள் பொருளைக்கவர்ந்தும், ஏற்றோர்க்கு இம்மியும் உதவாராயும் - (தம்பால்வந்து)இரப்பவர்க்கு இம்மியளவுங் கொடாதவராகியும், வட்டியும் மிதப்ப கூறி வாங்கியும் - வட்டியும் வரம்பில்லாதுபேசி வாங்கியும், சிலர் போல் ஈட்ட பட்டதோ - சிலர்தேடுதல்போல நமது பொருள் தேடப்பட்டதோ, அறத்து ஆறு ஈட்டும் நம் பொருள் படுமோ என்னு - அறத்தின்வழி தேடிய நமதுபொருள் கெடுமோவென்றுகூறி.

நூல்விலக்கினின்றிட்டும் பொருள் இன்னவை என்பார் சிலர்போ லீட்டப்பட்டதோவெனவும், நூல்விதியினின் றீட்டும்பொருள் என்றும் அழியாதென்பார் அறத்தாறிட்ட நம்பொருள்படுமோவென்னு எனவுங்கூறினர். (உஎ)

மங்கலமாடமோங்குமதுரைநாயகனைநோக்கிச்
செங்கரஞ்சிரமேற்கூப்பிமாவணிக்கந்தேற்றிவிற்கு
மெங்குலவணிகரேறேயெம்மனோர்வழக்கையிந்தப்
புங்கவரிடறுத்திர்த்துத்தருகெனப்புலம்பியார்த்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மங்கலம் மாடம் ஓங்கும் மதுரை நாயகனை நோக்கி - விழவருத உபரிகைகளோங்கிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை நோக்கி, செம் கரம் சிரம் மேல் கூப்பி-தமது செவந்தகைகளைச் சிரத்தின்மேற்குவித்து, மாணிக்கம் தேற்றி விற்கும் எம் வணிக குல ஏறே - மாணிக்கத்தினிலக்கணத்தைத் தெளிவித்து விற்றருளிய எமதுவணிகமரபிற்கு ஓராண்சிங்கமே, எம்மனோர் வழக்கை - எம்போலிகள்வழக்கை, இந்த புங்கவர் இடன் ஆக தீர்த்து தருக என - (நியாயசபையிலுள்ள) இந்தப்பெரியோ ரிடத்துத் தீர்த்துத் தரக்கடவாயென்று, புலம்பி ஆர்த்தார்- புலம்பிக் கதறினார்.

அரசியலுக் கோர் பங்கம் வருமேயென்றஞ்சி எமது வணிகுலமூர்த்தியாய்த் திருவுருச் சமைந்துதேடுதற்கரிய இரத்தினங்களைக் கொடுவந்து அவற்றினிலக்கணங்களைத் தேற்றிவிற்றபெருமானார் நீர் ஆதலால் எமது வழக்கி லுண்மையை இந்த நியாயாதிபதிகளுக்குத் தேற்றித் தீர்த்தருளுதல் அரிதன் றென்பார் மாணிக்கந்தேற்றிவிற்கும் எங்குலவணிகரேறே யெம்மனோர்வழக்கையிந்தப் - புங்கவரிடனாத்தீர்த்துத்தருகென என்றார். இது கருத்துடையடையணி. (உஅ)

ஆவலித்தழுதகள்வர்வஞ்சனைவெகுண்டுநோக்கிக்
காவலன்செங்கோனுண்ணூல்கட்டியதருமத்தட்டி
னாவெனுந்துலைநாவிட்டெம்வழக்கையுநமராய்வந்த
மேவலர்வழக்குந்தூக்கித்தெரிகெனவிதந்துசொன்னார்.

(இ-ள்.) ஆவலித்து அழுத கள்வர் - வாய்திறந்தழுத பொய்வேடமுடைய பெருமானார், வஞ்சனை வெகுண்டு நோக்கி - தமது ஞாதிகளைக்கோபித்துப்பார்த்து, காவலன் செங் கோல் நுண் நூல் கட்டிய - பாண்டியனுடைய செங்கோலாகிய நுண்ணியநூல்கொண்டு கட்டிய, தருமம் தட்டில் - தருமமாகிய துலாக் கோலில், நா என்னும் துலை நா இட்டு - உங்கள் நாவைத் துலைநாவாகச்சேர்த்து, எம் வழக்கையும் - எமதுவழக்கென்னும் பொருளையும், நமராய் வந்த மேவலர் வழக்கும் தூக்கி- எம்முடையவராய்வந்த பகைவர்கள் வழக்கென்னும் பொருளையு மிட்டுச் சீர்தூக்கி, தெரிக என விதந்து சொன்னார் - அளந்தறியக்கடவீரென்று எடுத்து (நியாயாதிபதிகளுக்கு) கூறினார்.

சமன்செய்தலும் சீர்தூக்கலும் அமைதலும் ஒருபாற்கோடாமையும் துலாக்கோலி னிலக்கணமாதலால் அவையிலியுருவக வணிபடச் செங்கோனுண்ணூல் கட்டிய தருமத்தட்டில் - நாவெனுந் துலைநாவிட்டெனவும், தொடை விடைகளால் வழக்கினைக் கேட்டு அதனை யுள்ளபடி யறிதலும், அதனை மறையாது பகை நொதுமல் நட்பென்னு மூன்றுதிறத்தார்க்கு மொப்பக் கூறுதலும் நியாயாதிபதிகளுக்கிலக்கணமாதலால் எம் வழக்கையும் நமராய்வந்த மேவலர்வழக்குந்தூக்கித் தெரிகென எனவுங்கூறினார். (உக)

நரைமுதுபுலியன்னான்சொற்கேட்டலுநடுங்கிச்சான்றோ
ரிருவர்சொல்வழக்குமேற்கொண்டறவதித்திரண்டுநோக்கித்
தெரிவழியிழுக்குஞாதிவழக்கெனச்செப்பக்கேட்டு
வெருவினர்தாயத்தார்கள்வலியரின்வேறுசொல்வார்.

(இ-ள்.) நரை முது புலி அன்னான் சொல் - நரைத்த முதுபுலிப் போத்தை யொத்த தனபதிசொல்லை, சான்றோர் கேட்டலும் நடுங்கி -பெரியோர்கேட்டலு நடு

நடு

கேட்டு, இருவர் சொல் வழக்கும் மேற்கொண்டு - இருவருங்கூறும் வழக்கினைக்கேட்டு, அநுவதித்து - பின்பு அநுவாதஞ்செய்து, இரண்டும் நோக்கி தெரிவழி - இரண்டிடமுள்ள குணகுற்றங்களைப் பார்த்துச் சோதிக்குமிடத்து, ஞாதிவழக்கு இழுக்கு என செப்ப கேட்டு - ஞாதிகள்வழக்கு இழுக்கெனக்கூறக்கேட்டு, தாயத்தார்கள் வெருவினர் - அந்தஞாதிகளஞ்சி, வலியரின் வேறு சொல்வார் - புறத்திலஞ்சாதவர்போல வேறு கூறுகின்றார்கள்.

தாம் நீதிகோடாதவராயினும் வந்த வணிகர்கூறிய நீதிமொழி தமக்கு அச்சமுறுத்துதலால் கரைமுதுபுலியன்னான் சொற்கேட்டனுகடுங்கி யெனவும், தொடைவிடைகளால் முறைப்படி கேட்டவற்றை யுட்கொள்ளவேண்டுதலால் இருவர்சொல் வழக்குமேற்கொண்டு எனவும், இருவர்கூறும் வழக்கையும் தாம் பின்னர் எடுத்துக் கூறுதலால் அநுவதித்து எனவும், உத்தேசம் இலக்கணம் சோதனையென்னும் போதப்பிரகாரங்களால் ஆராயவேண்டுதலால் இரண்டு நோக்கித் தெரிவழியெனவும், அப்பிலக்கிய விசேஷணங்களாற் கண்டித்தலால் இழுக்குஞாதிவழக்கெனச்செப்ப எனவுங்கூறினர். இலக்கியம் ஆவது உத்தேசம். இதனைத் திருமணப்படலத்தில் "ஆதியுத்தேசத்தாலும்" என்னும் செய்யுளிற்காண்க. (௯௰)

தவலருஞ்சிறப்பினான்றதனபதிவணிகரல்ல
ரிவரெனவவையங்கேட்பவிருகையும்புடைத்துநக்குக்
கவளமானுரித்துப்போர்த்தகண்ணுதல்வணிகர்கோமா
னவரவர்குடிப்பேர்பட்டங்காணிமற்றனைத்துங்கூறும்.

(இ-ள்.) அவையும் கேட்ப - நியாயசபையிலுள்ளோர் கேட்கும்படி, இவர் தவலரும் சிறப்பின் ஆன்ற தனபதி வணிகர் அல்லர் என்ன - இங்கு நிற்பவர் கேடுதலில்லாத சிறப்பமைந்த தனபதியென்னும் வணிகரல்லரென்று கூற, இருகையும் புடைத்து நக்கு - தமதிரண்டு கைகளையுங் கொட்டிச்சிரித்து, கவளம் மான் உரித்து போர்த்த கண்ணுதல் வணிகர் கோமான் - யானையின் றோலையுரித்துப் போர்வையாகப் போர்த்தருளிய சோமசுந்தரக்கடவுளாகிய வணிகர் பெருமானார், அவர் அவர் குடிப்பேர் பட்டம் காணி - அவரவர்களுடைய குடிப்பேரும் பட்டமுங் காணியுமாகிய, அனைத்தும் கூறும் - யாவுமுறையாகக் கூறத்தொடங்கினார்.

தாம் தனபதி வணிகரல்லரென்று ஞாதிகள் கூறுதலால் அவர் தாமே யிவரென அவையிலுள்ளோர் தணியத் தந்தை தாய் முதலியோர்க்குரிய உரிமைகளைக் கூறல் முறையாதலால் அவரவர் குடிப்பேர்பட்டங் காணி மற்றனைத்துங் கூறும் என்றார். (௯௧)

தந்தைதாய்மாமன்மாமிதாயத்தாரவரையீன்றார்
மைந்தர்களுடன்பிறந்தார்மனைவியர்கிளைஞர்மற்று
மந்தமில்குணங்கள்செய்கையாதியவடையாளங்கண்
முந்தையின்வழுவாவண்ணமுறையினான்மொழிந்தான்முன்னோன்.

(இ-ள்.) தந்தை தாய் மாமன் மாமி - தந்தையுந் தாயு மாமனு மாமியும், தாயத்தார் - அவரவர் ஞாதிகளும், அவரை ஈன்றார் - அவர்களைப் பெற்றவர்களும், மைந்தர்கள் உடன்பிறந்தார் - அவரவர்கள் பிள்ளைகளும் சகோதரர்களும், மனைவியர் கிளைஞர் - மனைவிமார்களும் சுற்றத்தாரும், அந்தம் இல் குணங்கள் செய்கை ஆதிய அடையாளங்கள் - அளவில்லாத அவர் குணங்களும் தொழில்களுமுதலிய

Koviloor Digital Library

அடையாடங்களை, முந்தையின் வழுவாத வண்ணம் - முன்றுள்ள முறையில் சிறிதுந் தவறுதபடி, முன்னோன் - வணிகராய்வந்த முதல்வர், முறையினால் மொழிந்தான் - முறையாகக் கூறியருளினார். (௯௨)

அனையதுகேட்டவான்றோரனைவருநோக்கியந்தத்
தனபதிவணிகர்தாமேயிவரொனச்சாற்றலோடு
மனவலித்தாயத்தார்தம்வழக்கிழுக்கடைந்ததீது
நனைவழிவேம்பன்றேரிற்றண்டிக்குநம்மையென்று.

(இ-ள்.) அனையது கேட்ட ஆன்றோர் அனைவரும் நோக்கி - அதனைக் கேட்ட பெரியோர் யாவரும் ஆராய்ந்து, இவர் அந்த தனபதி வணிகர் தாமே என்ன சாற்றலோடும் – இவர் அந்தத் தனபதி வணிகரே யெனக்கூற, மனம் வலி தாயத்தார் தம்வழக்கு-மனவன்மையையுடைய தனபதி ஞாதிகள் தமது வழக்கு, இழுக்கு அடைந்தது - குற்றமடைந்தது, ஈது - இதனை, நனை வழி வேம்பன் தேரில் - தேனொழுகும் வேப்பமலர் மாலையையணிந்த பாண்டியனறியில், நம்மை தண்டிக்கும் என்று - நம்மைத் தண்டிப்பா னென்றஞ்சி.

தந்தை தாய் முதலியோர் குடிப்பெயர் முதலியவற்றைக் கூறக்கேட்ட பெரியோர் அவரே யிவரொனத் துணிந்தார் என்பார். தனபதி வணிகர்தாமே யிவரொனச் சாற்றலோடும் எனவும், அரசன் செங்கோலுக்கு இழுக்கு விளைத்தோமெனக் கருதி யஞ்சினரொன்பார். வேம்பன்றேரிற் றண்டிக்கு நம்மை யென்றுவெனவுங் கூறினர். (௯௩)

இல்லிறுக்கேகிமீள்வன்யானென்றுங்குளத்திற்கேகி
யொல்லையில்வருவேனென்றுமொவ்வொருவார்த்தையிட்டு
வல்லெழுவனையதோளாரனைவரும்வன்காறள்ளச்
செல்லெழுமுகில்போற்கூட்டஞ்சிதைந்தனரொளித்துப்போனார்

(இ-ள்.) யான் இல்லிறுக்கு ஏகி மீள்வன் என்றும்-நான் வீட்டிற்குப்போய் விரைந்து வருவேனென்று சிலர் கூறியும், குளத்திற்கு ஏகி ஒல்லையில் வருவேன் என்றும்-(சிலர்) குளத்திற்குச்சென்று விரைந்து வருவேனென்றும், ஒவ்வொரு வார்த்தையிட்டு-(இவ்வாறு) ஒவ்வொரு வார்த்தைகூறி, வல் எழு அனைய தோளார் அனைவரும்-வலியதூணையொத்த தோளையுடைய ஞாதிகளெல்லோரும், வன் கால் தள்ள-பெருங்காற்றடித்துத் தள்ள, எழு செல் முகில் போல்-எழுந்து சிதறிச்செல்லு மேகம் போல, கூட்டம் சிதைந்தனர் ஒளித்து போனார் - தாம் கூடிய கூட்டத்துள் ஒவ்வொருவராயச் சிதறிக் கரந்துபோனார்கள்.

அரசனறியின் ஒறுப்பானே யென முன்னர் அஞ்சினவராதலால் தம்மைக் காத்தற்பொருட்டு மறைந்தனர் என்பார். வன்காறள்ளச் செல்லெழு முகில்போற் கூட்டஞ் சிதைந்தன ரொளித்துப்போனார் என்றார். (௯௪)

அனையவர்போகநின்றவறனவின்மன்றத்துள்ளோர்
தனபதிவணிகர்தந்ததனமெலாந்தத்தமைந்தற்
கெனமனையெழுதிவாங்கியீந்தனரிந்தவெல்லை
மனமொழிகடந்தநாயகர்மறைந்துதங்கோயில்புக்கார்.

(இ-ள்.) அனையவர் போக - ஞாதிகள் (போக்குக்காட்டி) ஒழிந்துபோக, நின்ற அறன் நவில் மன்றத்துள்ளோர் - ஒழியாதுநின்ற மறநூல்வழி அறத்தை

பெடுத்துக் கூறும் நியாயத்தலத்திலுள்ளவர், தனபதி வணிகர் தந்த தனம் எல்லாம் - தனபதி வணிகர் தாமுன்பு தந்தபொருள் யாவும், தந்தம் மைந்தற்கு என்ன மனை எழுதி வாங்கி ஈந்தனர் - சிவிகாரபுத்திரனுக்கே யுரியதென்று அவராற் சாதனமெழுதி வாங்கிக் கொடுத்தார்கள், ஈந்த எல்லை - கொடுத்த சமயத்தில், மனம் மொழி கடந்த வணிகர் மறைந்து - மனவாக்கிறந்த வணிகத் திருவுருக் கொண்டுவந்த சோமசுந்தரக்கடவுள் அத்திருவுருக்கரந்து, தம் கோயில் புக்கார் - தமது திருக்கோயிலு ளெழுந்தருளினார்.

தனபதி யுருக்கொண்டு வந்தவராயினும் சுட்டறிவிற் கெட்டாதவர் என்பார். மனமொழிகடந்த வணிகர் என்றார். (௩௫)

இம்மெனப்பலருங்காணமறைந்தவரிருந்தண்கூடற்
செம்மலென்றறிந்துநாய்கச்சிறுவனுக்குவகைதூங்க
விம்மிதமடைந்துவேந்தன்வரிசையுள்வெறுப்பநல்கிக்
கைம்மறிவணிகர்கோயில்புதுக்கினன்கனகங்கொண்டு.

(இ-ள்.) இம் மென பலரும் காண மறைந்தவர் - இம்மெனும் அளவில் யாவருமறிய மறைந்தருளிய வணிகர், இருந்தண் கூடல் செம்மல் என்று அறிந்து - பெரிய தண்ணிய மதுரையி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளே யென்று (நியாயாதிபதிகளால்) தெரிந்து, வேந்தன் - சுந்தரேசபாதசேகரபாண்டியன், விம்மிதம் அடைந்து - பெருவியப்புக்கொண்டு, நாய்கச் சிறுவனுக்கு உவகை தூங்க - செட்டிப்பிள்ளைக்குக் களிப்புமிக, வரிசை உள் வெறுப்ப நல்கி - பலவரிசைகளையும் அவன் மனம் வெறுக்கக் கொடுத்து, கைமறி வணிகர் கோயில் - திருக்கரத்தில் மானேந்திவந்த பெருமானார் திருக்கோயிலை, கனகம் கொண்டு புதுக்கினன் - பொன்னாற் புதுக்கினன்.

முன் செய்த மகிழ்ச்சியினும் அரசன் செய்த மகிழ்ச்சி யெல்லையில்லாத தென்பார் நாய்கச் சிறுவனுக்குவகைதூங்க வரிசையுள் வெறுப்பநல்கி யென்றார்.

கலித்துறை.

பூதநாயகன்பூரணசுந்தரப்புத்தேள்
பாதசேகரன்வரகுணபாண்டியன்புயத்தி
லோதநீருலகின்பொறைசுமக்கவைத்தும்பர்
நாதர்சேவடித்தாமரைநகைநிழலடைந்தான்.

(இ-ள்.) பூதம் நாயகன் - பஞ்சபூதங்களுக்கும் இறைவராகி, பூரணம் - அவற்றுள்ளும் புறம்பும் நிறைந்த, சுந்தரப்புத் தேள் பாத சேகரன் - சோமசுந்தரபாதசேகரபாண்டியன், வரகுணபாண்டியன் புயத்தில் - வரகுணபாண்டியன் தோளில், ஓதம் நீர் உலகின் பொறை சுமக்க வைத்து - கடல்சூழ்ந்த பூபாரத்தைத் (தனது தோளினின்று மிறக்கி) ஏற்றி, உம்பர் நாதர் - சிவபுரத்தின் தலைவராகிய பெருமானுருடைய, தாமரை சேவடி நகை நிழல் அடைந்தான் - தாமரைமலர்போன்ற செவ்விய திருவடியின் விளக்கு நிழற்கீழ்க் கலந்தனன்.

பூதநாயகர் என்பதற்குப் பூதகணத்தலைவர் எனப் பொருள் சொல்லுதலும் ஒன்று, அவை தாங்கள்வழி நிற்பதென்பார். பூதநாயகனெனவும், அவற்றின் குணங்களாயவரிவக்கு இயங்குவன வென்பார். பூரணசுந்தரப்புத்தேள் எனவும், மக்களுயிர்க்குக் கோடை வெப்பாற்றும் மாநிழல்போலப் பிறவி வெப்பாற்றும் திருவடிநிழல் இ

Koviloor Digital Library

வாருணனுக்குச் சிவலோகங்காட்டிய திருவிளையாடல்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

ருண்டீதன் றென்பார் சேவடித் தாமரை நகைநிழல் எனவுங் கூறினர். பூதநாயகர் பூரணசுந்தரப்புத்தேள் என்பதற்கு பாரிடையைந்தாய்ப்பரந்தாய்போற்றி-நீரிடை நான்காய்நிகழ்ந்தாய்போற்றி-தீயிடைமூன்றாய்த்திகழ்ந்தாய்போற்றி-வளியிடையிர ண்டாய்மகிழ்ந்தாய்போற்றி-வெளியிடையொன்றாய் விளைந்தாய்போற்றி எனவும், திண்டிறற்றீயின் வெம்மைசெய்தோன் பொய்தீர் - வானிற்கலப்புவைத்தோன்மே தகு - காலினூக்கங் கண்டோனிழறிகழ்-நீரிலின்சுவை நிகழ்ந்தோன்வெளிப்பட- ம ண்ணிற்றிண்மைவைத்தோன் எனவரும் ஏதுக்களால் உணர்க. (௬௭)

மாமனாகவந்து வழக்குரைத்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௧௧௬௨.

நாற்பதாவது

வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பண்கொண்டவேதமுதலிடையீறுநாடரிய பரமாமனாகியொருவணி க, னெண்கொண்டகாணிபொருள்கவர்ஞாதி மாதலரையெதிரேறிவென் றபடியிதுவாந், தண்கொண்டநேமிவரகுணதேவனெய்துபழிதன்னைத்து டைத்தவையமனவன், கண்கொண்டுகாணவுயர்சிவலோகமதுரைதனில்வ ருவித்தகாதையினிமொழிவாம்.

(இ-ள்.) பண்கொண்ட வேதம்-இசையமைந்த வேதங்களால், முதல் இடை ஈறு நாடு அரிய பரம் - தமது முதலும் நடுவும் இறுதியும் நாடுதற்கரிய இறைவரா கிய சோமசுந்தரக்கடவுள், மாமன் ஆகி-தனபதியுருக்கொண்டருளி, ஒருவணிகன்- ஒரு செட்டிப்பிள்ளையின், எண் கொண்ட காணி பொருள் கவர் ஞாதி மாதலரை- வரையறைப்பட்ட நிலங்களையும் பொருளையும் அபகரித்த தனபதி ஞாதிகளாகிய மாமன்மார்களை, எதிர் ஏறி வென்றபடி இது ஆம் - எதிர்த்து நியாயதலத்தில் வெ ன்ற திருவிளையாடலிதுவாம், தண்கொண்ட நேமி வரகுண தேவன் - தண்ணிய ஆக் கினைசக்கரத்தையுடைய வரகுண தேவபாண்டியன், எய்து பழி தன்னை துடைத்து- அடைந்த பிரமகத்தியை யொழித்து, அனைய மன்னவன் கண் கொண்டு காண - அ ப்பாண்டியன் தனது கண்களாற் கண்டு தரிசிக்க, உயர் சிவலோகம் - எல்லாவுலக ங்களிலும் உயர்ந்த சிவலோகத்தை, மதுரை தன்னில் வருவித்த காதை - மதுரை யில்வருவித்துக்காட்டியருளிய திருவிளையாடலை, இனி மொழிவாம் - இனி யெடுத் துக்கூறுவாம்.

வேதத்தின் முதலும் இடையும் இறுதியும் நாடுதற்கரிய என்ப் பொருள் கொ ள்ளுதலும் ஒன்று. சுட்டறிவிற் கெட்டாதவனாதலால் சொற்பிரபஞ்சமாய் எல்லா ப்பொருள்களினியல்களையு மளந்தறிதற்கோர் கருவியாகிய வேதவளவையாலளந் திதற்கரியனென்பார் வேதமுதலிடையிறு நாடரிய பரம் எனவும், தனபதிபோல

Koviloor Digital Library

அவன் ஞானிகளும் அச்சிறைவருக்கு மாதுலர் என்பார் ஞானிமாதுலர் எனவும், அர
சனது ஆணை குடிகளுக்குத் துன்பவெப்பொழிப்ப தென்பார் தண்கொண்ட நேமி
யெனவும் கூறினார். (௬)

இயமானனிந்திரவியெரிவானிலஞ்சலில மெறிகாலெனும்பகுதியிரு
நான்மயமானசுந்தரனைமனவாய்மெய்யன்பினிறை வழிபாடடைந்தவர
குணனாய்ச், சயவேளைவென்றவடிவினனீறில்வென்றிபெறுசதவேள்வியி
ந்திரனைநிகர்வோ, னியன்மேனிகொண்டவொளியினிலேழ்பசும்புரவியி
னதேசுவென்றவரகுணனே.

(இ-ள்.) இயமானன் இந்து இரவி - ஆன்மாவுஞ் சந்திரனுஞ் சூரியனும், எரி
வான் நிலம் சலிலம் எறிகால் என்னும் - நெருப்பும் ஆகாயமும் நிலமும் சலமும் வீசு
ங் காற்றுமாகிய, இருநான்கு பகுதி மயம் ஆன சுந்தரனை - எட்டுப்பகுதியின் மயமா
ன சோமசுந்தரக்கடவுளை, மனம் வாய் மெய் அன்பின் நிறை வழிபாடு அடைந்த வ
ரகுணன் ஆய் - மனவாக்குக்காயங்களால் மெய்யன்பு நிறைந்த வழிபடுதல் பூண்ட
காரணத்தினால் சிரேஷ்டமான குணத்தையுடையவனாகி, இயல் மேனி கொண்ட
ஒளியினில் - இலக்கணமமைந்த தனது மேனியிலுள்ள ஒளியால், ஏழ் பசும்புரவி
இனன் தேசுவென்ற வரகுணன் - பசிய ஏழு குதிரைகள் பூட்டிய தேரையுடைய
சூரியனது ஒளியை வென்ற வரகுணபாண்டியன், வடிவின் சயம் வேளை வென்றவ
ன் - தனது வடிவத்தால் வெற்றியமைந்த மன்மதனை வென்றவன், ஈறு இல் வெ
ன்றி பெறு சதவேள்வி இந்திரனை நிகர்வோன் - முடிவில்லாத வெற்றிபெற்ற நூறு
யாகத்தால் தேவேந்திரனை யொத்தவன்.

ஆன்மா முதலிய எட்டுப்பொருள்களும் இறைவனது மூர்த்தம் என்பார் இரு
நான்மயமான சுந்தரனை யெனவும், அவ்விறைவனது திருவடிக்குத் திரிகரண சுத்தி
யோடு மெய்யன்பால் வழிபாடுபூண்ட மேன்மைக்குணத்தால் வந்த காரணப்பெயர்
என்பார் வரகுணன் எனவும், உருவத்திற்கு முன்னுள்ள மன்மதனினும் மேம்பட்ட
அழகினன் என்பார் சயவேளை வென்ற வடிவினன் எனவும், எங்காடுகளையுந் தன்
கோற்கீழாக்கினவனென்பார் வென்றிபெறு சதவேள்வி யிந்திரனை நிகர்வோனென
வுங் கூறினார். (௨)

மறையாதிகலைபலவுமகமாதிபலவினையும் வழுவாதுநிறுவுதலின்மல
ர்மே, லிறையாகிமலர்வனிதைபிரிவானதிருமகளி ரிகபோகம்விளையமு
றைசெயலாற், கறையாழிவளைகளணிகரனாகியிகல் செய்பொறிகரனாகிய
கைகளையுநெறியா, லறைவாய்மையுரையின்முழுதுணர்வாலெவ்வுயிருநி
றை யரனாகியுலகுமுறைசெயுநாள்.

(இ-ள்.) மறை ஆதி கலை பலவும் - வேதமுதலிய நூல்கள் பலவற்றையும்,
மகம் ஆதி பலவினையும் - யாகமுதலிய பல கருமங்களையும், வழுவாது நிறுவுதலின்-
வழுவாமல் நிலைபெறச்செய்தலால், மலர்மேல் இறை ஆகி - தாமரையில் வசிக்கும்
பிரமனாகியும், மலர் வனிதை பிரிவான திருமகளிர் - தாமரையில் வசிக்கும் இலட்சு
மியின் கூறான அன்னலட்சுமிமுதலிய திருமகளிரால், இகபோகம் விளைய முறை
செயலால் - இகபோகமாகிய பெருவாழ் விளைய அரசு செலுத்துதலால், கறை ஆழி
வளைகள் அணிகரன் ஆகி - உதிரந்தோய்ந்தசக்கரத்தையும் சங்கையுமேந்திய திரு

Koviloor Digital Library

க்கரங்களையுடைய திருமாலாகியும், இகல் செய் பொறிகரணம் ஆதி பகைகளையும் செறியால் - தம்முள் மாறுபடும் இந்திரியங்களும் அந்தக்கரணமுமுதலிய பகைகளை க்களையும் நல்லொழுக்கத்தாலும், அறைவாய்மை உரையின் முழுது உணர்வால் - வேதமுதலிய நூல்கள் கூறும் பொருளால் முற்றுமுணரு முணர்ச்சியாலும், எவ்வுயிரும் நிறை அரன் ஆகி - எல்லாவுயிர்கள்தோறு நிறைந்த அபரசிவமாகியும், உலகு முறைசெய்யும் நாள் - உலகினை (மநுநூல்வழி) ஓம்பி வருங்காலையில்.

வேதமுதலிய நூல்களையும் யாகமுதலிய கருமங்களையும் பிரமன் வளர்த்தல் போல வளர்த்தலும், இலட்சுமியின் அம்சபூதரான அன்னலட்சுமி முதலிய எண்வகையினர்போகமு மிக்கோங்கத்திருமால் காத்தல்போலக் காத்தலும், இந்திரிய முதலிய தத்துவங்களைக் களைந்தறிற்றலையு முற்றுமுணர்தலையும் உருத்திரமூர்த்தி யுடைமைபோல உடைத்தாதலும் ஒருசேர வரகுணபாண்டியனுடைமையால் மலர்மேலிறையாகி, ஆழிவளைகளணிகரனாகி, அரனாகியென ஏது உருவகவணிபடக் கூறினார்.()

வேட்டஞ்செய்காதலொருநாட்டங்கவேகிவன மேட்டெங்குமாதட்
வியெரியா, நாட்டஞ்செய்காயுழுவைநீட்டுங்கை யானைமுகநாட்டும்பலே
னமிவைமுதலா, வோட்டஞ்செய்தேரிரவிகோட்டின்கணேறியிருளூட்ட
ந்திமாலைவருமள்வாக், கோட்டஞ்செய்வார்சிலையின்மாட்டம்பினூறியுயி
ர்கூட்டுண்டுமாநகரில்வருவான்.

(இ-ள்.) வேட்டம் செய்காதல்-வேட்டையாடும் விருப்பம், ஒரு நாள் தங்க ஏகி-ஒருநாள் தனக்குண்டாகச்சென்று, வனமேடு எங்கும் மாதடவி - காடாகிய மேட்டுநிலமுழுதும் மிருகங்களை நாடி, எரி ஆம் நாட்டம் செய் - கோபாக்கினி பரக்கும் கண்களையுடைய, காய் உழுவை - வருத்தும் புலியும், நீட்டும் கையானை, நீட்டிய துதிக்கையையுடைய யானையும், முகம் நாட்டு உம்பல் ஏனம் இவை முதல் ஆக - முகத்தால் நிலத்தையுழும் ஆண்பன்றியுமாகிய இம்மிருகங்கள் முதலாக, ஓட்டம் செய்தேர் இரவி-(மேற்றிசைநோக்கி) செல்லும் தேரையுடைய சூரியன், கோட்டின்கண் ஏறி இருள் ஊட்டு அந்திமாலைவரும் அளவாக - அத்தமனபர்வதத்திற்சென்று இருளைப் பரப்பும் அந்திமாலைப்பொழுதுவரும் அளவாக, கோட்டம் செய்வார் சிலையில் மாட்டு அம்பின் நூறி-வளைத்த நீண்ட வில்லிற்பூட்டிய அம்புகளினாற்கொன்று, உயிர் கூட்டுண்டு மாநகரில் வருவான் - உயிர்களைக் கொள்ளைகொண்டு பெரிய நகரினை நோக்கி வருவானாயினன்.

ஆகூழ்ப்பயனுகரும்போது போகூழ்ப்பயனிடையில் வருதல் கூடுமாயின் ஒருவரையும் விடாதென்பார் வேட்டஞ்செய்காத லொருநாட்டங்க என்றார். (ரு)

காலிற்கடும்புரவிமேலிற்கடிந்துவரு காலக்கடந்தனிலொர்மறையோ
ன், மாலுற்றயர்ந்துமுகம்வேர்வைக்குறுந்திவலை வாரக்கிடந்துவிழிதுயி
ல்வோன், மேலக்கடும்புரவிகால்வைப்பவந்தணனும் வீவுற்றவிந்தனனத
றியான், கோலிற்செலும்பரியின்மீனத்தனுந்தனது கோயிற்புகுந்தனன
வளவே.

(இ-ள்.) காலில் கடும் புரவி மேலில் கடிந்து வருகால் - காற்றைப்போல விரைந்துசெல்லும் குதிரையின்மேல் அதிவிரைவாய் வருங்காலையில், கடம் தனில் ஓர் மறையோன் - அக்காட்டில் ஒரு அந்தணன், மால் உற்று அயர்ந்து முகம் வேர்வை

Koviloor Digital Library

குதர்த்திவலைவாரமெடுத்த விழி துயில்வோன் மேல் - நித்திரைமயக்கங்கொண்டு சோர்ந்த முகத்தில் வேர்வையாகிய சிறிய துளிசிந்தக் கிடந்து கண்டுயில்கொள்ளுகின்றவன்மேல், அ கடும் புரவி கால் வைப்ப-அந்த அதிவேகத்தையுடைய குதிரை தனது கால்வைத்துச்செல்ல, அந்தணனும்-அம்மறையவனும், விழுந்து இறந்தனன் - அறிவழிந்திறந்தான், அது அறியான் - அதனைப் பாண்டியனறியாது, கோவில் செலும் பரியின் - அம்புபோல விரைந்து செல்லுங் குதிரையோடு, மீனத்தனும் தனது கோயில் புகுந்தனன்-பாண்டியனுந் தனது கோயிற்குச் சென்றனன், அவ்வளவு - அச்சமயத்தில்.

பரியின் என்பதனிறுதியில் ஒடு உருபு தொக்குநின்றது. அறியான் முற்றெச்சம். (௫)

ஷ வேறு.

கனவட்டத்தடியிடறப் பொறிவிட்டுப்புலனவியக் கரணத்துட்பொதியுயிர்விட்டவனாகந், தனையொக்கற்பனவரொடுத் தனர்கிட்டிக்குரிசில்கடைத்தலையிட்டத்திறமொழியத்தமிழ்மாற, னினைவுற்றுப்பனவர்கையிற் கனகக்குப்பைகணிறைவித் தெமதிக்குற்றவனையெடுத்தெரிமாலை, புனைவித்தக்கடன்முடிவித்தனன்மற்றப்பழிபடரிற் புதையப்பற்றியதிடைவிட்டகலாதே.

(இ-ள்.) கனவட்டத்து அடி இடற-குதிரையின் காலிடறுதலால், பொறிவிட்டு புலன் அவிய-இந்திரியங்களிற் செல்லுதலொழிந்து ஐம்புலன்களுங்கெட, கரணத்துள் பொதி உயிர் விட்டவன் ஆகம் தன்னை - மனமுதலிய அந்தக்கரணங்களுள் பொதிந்த உயிரிழந்த அந்தணனுடைய சரீரத்தை, ஒக்கல் பனவர் எடுத்தனர் - (அவனது) கிளைஞராகிய அந்தணரெடுத்து, குரிசில் கடைத்தலை கிட்டி இட்டு - பாண்டியனுடைய வாயிலையடைந்து (அச்சடலத்தை) இட்டு, அ திறம் மொழிய - அந்தச்செய்தியைக்கூற, தமிழ்மாறன் நினைவுற்று - தமிழ் வளர்க்கும் பாண்டியன் (அதுகேட்டு) வருத்தமுற்று, பனவர் கையில் கனகக்குப்பைகள் நிறைவித்து - அந்த மறையவர் கையிற் பொற்குவை நிறையத்தந்து, எமதிக்கு உற்றவனை எடுத்து எரிமாலை புனைவித்து அக்கடன் முடிவித்தனன் - யமபுரியை யடைந்தவனை யெடுத்துத் தகனக்கிரியையை முற்றுவித்தான், படரில் புதைய அ பழி இடைவிட்டு அகலாது பற்றியது-(அப்பாண்டியன்) துன்பத்திலழுந்த அப்பிரமகத்தி இடையறாது பிடித்தது.

போதுசென்றதெனத் தனது கோயிற்குவரக் குதிரையை விரைந்து செலுத்திய அபராதத்தால் விளைந்த தீங்காதலால் அப்பழி படரிற் புதையப்பற்றிய திடைவிட்டகலாதது என்றார். (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பற்றியபழிக்குத்தீர்வுபழமறைக்கிழவர்சொன்ன
பெற்றியினவேறுண்டிகழிக்காபெருநூற்கேள்வி
முற்றியமறையோர்க்கித்துழுவராந்தாருவேந்தைச்
சுற்றியுந்தார்வைகொய்துசராகேள்சுவைக்கவிந்தும்.

(இ-ள்.) பற்றிய பழிக்கு தீர்வு-தன்னைப்பிடித்த பிரமகத்திக்குக் கழுவாயாக, பழமறைக்கிழவர் சொன்ன பெற்றியின் - தோன்றுதொட்டுள்ள வேதத்திற்குரிய அந்தணர் கூறிய தன்மையின்படி, ஐவேறு உண்டி - கக்கல் முதலிய ஐந்துவகைப்பட்

Koviloor Digital Library

டவுணவுகளை, நதிகளை - புண்ணிய நதிநீரத்தில், பெருநூல் கேள்வி முற்றிய மறையோர்க்கு ஈந்தும் - வேதநூற் கேள்வியிற் கைபோன அந்தணர்க்குக் கொடுத்தும், மூவர் ஆம் தாரு வேந்தை சுற்றியும் - திரிமூர்த்திகளின் வடிவமாகிய அரசமரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்தும், ஆர்வை கொய்து சுரபிகள் சுவைக்க ஈந்தும் - அறுகினைக்கொய்து பசுக்களருந்தக்கொடுத்தும்.

ஐவேறுண்டி நக்கல், பருகல், உண்டல், தின்னல், உரிஞ்சல். அந்தணர் கூறியகழுவாய் வேதத்திலுள்ளது என்பார் பழமறைக்கிழவர் எனவும், மற்றைத் தலங்களினும் புண்ணியதலம் அதிகம், புண்ணியதலங்களினும் சிவதலம் அதிகம், சிவதலங்களினும் திருவாலவாயதிகம் ஆதல்போல அதனிற் செய்யும் புண்ணியங்களும் ஒன்றுக்கொன்றதிகமாதலால் திருவாலவாயில்லேயே செய்தனன் என்பார் நதிக்கை பெருநூல்கேள்வி முற்றிய மறையோர்க்கீந்தும் எனவும், முதற்பாகம் பிரமன்மூர்த்தமும் இடைப்பாகம் திருமால்மூர்த்தமும், இறுதிப்பாகம் உருத்திரமூர்த்தமும் என்பார் மூவராந்தாருவேந்து எனவும்,தேவர் வசிக்கும் உறுப்புகளையுடைய பசுக்களுக்குப் புல்லருத்துவோர் எல்லாப்பாவமுங் கழல்வார் என்பார் ஆர்வைகொய்து சுரபிகள் சுவைக்கவீந்தும் எனவுங் கூறினர். "தீண்டப்பாவங்கள் தேய்ந்தறுநல்வினை - ஈண்டும்புற்றனை யீயவிரங்கியே" எனவருஞ் சிவதருமோத்தரத்தால் உணர்க.

அகமருடணத்தாலோமமாற்றியுமானைந்தாவி
னகைமணிக்கோடுதோய்ந்தகளிர்புனல்குடித்துந்தான
வகைபலகொடுத்துநீங்காவலியதாயிழுதுபெய்த
புகையழலெனமேலிட்டுப்புலப்படவளைந்ததன்றே.

(இ-ள்.) அகமருடணத்தால் ஓமம் ஆற்றியும் - அகமருடணமந்திரத்தாலோமஞ்செய்தும், ஆன் ஐந்து - பஞ்சகவ்வியத்தையும், ஆவின் நகைமணி கோடு தோய்ந்த களிர் புனல் - பசுவினது விளங்கும் அழகிய கொம்பு தோய்ந்த குளிர்ந்த நீரையும், குடித்தும் - பருகியும், பலதான வகை கொடுத்தும் - அன்னதான முதலாகப் பலவகைப்பட்ட தானங்களைக்கொடுத்தும், நீங்காத வலியது ஆய் - நீங்காதவன்மையையுடையதாய், இழுது பெய்த புகை அழல் என்ன - நெய்வார்த்த மூட்டிய புகையையுடைய நெருப்பு மூண்டெழுதல்போல, புலப்பட மேலிட்டு வளைந்தது - (கண்களுக்கு) புலப்பட (பிரமகத்தி) எழுந்தோங்கிச் சூழ்ந்தது.

அகமருடணமந்திரம் பாவத்தைப்போக்குமந்திரம். கட்கமென்னும் ஓர் மிருகம் பசுவைப்போலப் புண்ணிய மிருகமாதலால் அதன் கொம்பால் முகந்த தீர்த்தமெனப் பொருள்கொள்ளினும் அமையும். அம்மிருகத்திற்கும் கோவென்பது ஓர் பரியாய நாமமாதலா லதுபற்றி ஆவெனக்கொண்டார் என்க. கோசலத்தால் செல்வமுண்டாதலும், கோமயத்தால் நோய் கெடுதலும், பாலால் சத்துரு நாசமாதலும், தயிரால் புத்திரருண்டாதலும், நெய்யால் யாவராலும் பூசிக்கப்படுதலுமுடைமையால் ஆனைந்து குடித்தும் எனவும், பசுவின் கொம்பினடியில் திருமாலும் பிரமனும், நுனியில் கோதாவரி முதலிய புண்ணிய தீர்த்தங்களும் வசித்தலால் ஆவினகைமணிக் கோடுதோய்ந்த களிர்புனல் குடித்தும் எனவும், புண்ணியதலங்களிற் செய்த பாவம் சிவதலங்களினும்,சிவதலங்களிற்செய்த பாவம் திருவாலவாயினிலும் ஒழியும், திருவாலவாயினிற்செய்த பாவம் போக்குதற்கு வேறிடமின்மையால் செய்த புண்ணியம் ஒன்று அநந்தமாதல்போலப் பாவமும் ஒன்றனந்தமாதலால் நீங்காவலியதாயிழுதுபெய்த - புகையழலென மேலிட்டுப் புலப்பட வளைந்ததன்றேயெனவுங் கூறி

Koviloor Digital Library

ஞர். "வேதாவுங்கரியவனுமாலின்தை கோட்டடியின்விளங்கிவாழ்வார் - கோதாவி முதற்றீர்த்தங் கோட்டிறுதிச்சராசரமுங்கூடிநிற்கும்" எனவருஞ் சிவதருமோத்தரத்தானுணர்க. (௮)

கலிநிலைத்துறை.

ஏங்கும்பெருமூச்செறியுங்கையெறியுங்குன்றி
னோங்குஞ்சிறுகுமுடன்றார்த்திடுமுன்னும்பின்னும்
பாங்குந்தொடருஞ்சிரிக்கும்பகுவாயைமெல்லு
நீங்குங்குறுகும்பழிதாவெனநேர்ந்துபற்றும்.

(இ-ள்.) ஏங்கும் - இரங்கும், பெருமூச்சு எறியும்-பெருமூச்சுவிடும், கையெறியும்-கைகொட்டும், குன்றின் ஓங்கும் - மலையைப்போலெழுந்தோங்கும், சிறுகும்-(அணுவைப்போல) சிறுத்துத்தோன்றும், உடன்று ஆர்த்திடும் - கோபித்துக் கோஷிக்கும், முன்னும் பின்னும் பாங்கும் தொடரும் - ஒருகால் முன்பக்கத்திலும் ஒருகால் பின்பக்கத்திலும் ஒருகால் இடைப்பக்கங்களிலும் தொடர்ந்து நிற்கும், சிரிக்கும் - அட்டகாசஞ்செய்யும், பகுவாயை மெல்லும் - (பழிக்குப் பழிவாங்குவேனென்று) தனது பிளந்த வாயினை மெல்லும், நீங்கும் - (சிறிதுபொழுது) நீங்கி நிற்கும், குறுகும் - (பின்பு) சமீபிக்கும், பழிதா என நேர்ந்து பற்றும் -பழிக்குப் பழிகொடுவென்று எதிர்த்துப் பாண்டியனைப்பிடிக்கும். (௯)

மாசுண்டதெய்வமணிபோற்பணிவாயிற்பட்ட
தேசுண்டதீந்தண்மதிபோலொளிதேம்பிவண்டு
மூசுண்டதானமுகமாவுண்டவெள்ளில்போலக்
காசுண்டபூணனறைபோயகருத்தனானான்.

(இ-ள்.) மாசு உண்ட தெய்வம் மணிபோல் - சாணைபிடியாத தெய்வத்தன்மையையுடைய மாணிக்கத்தைப்போலவும், பணிவாயில் பட்ட-இராகுவென்னும் பாம்பின் வாயிலகப்பட்ட, தேசு உண்ட தீம் தண் மதிபோல் - ஒளியிழந்த இனிய தண்ணிய சந்திரனைப்போலவும், ஒளி தேம்பி - தனது பொலிவிழந்து, வண்டு மூசு உண்ட தானம் முகமா உண்ட வெள்ளில் போல - வண்டுமொய்த்த மதம் பொருந்திய முகத்தையுடைய யானையுண்ட விளங்கனிபோல, காசு உண்ட பூணன் - இரத்தினமிழைத்த ஆபரணங்களையணிந்த வரகுணபாண்டியன், அறை போய கருத்தன் ஆனான் - ஓட்டையான மனமுடையவனாயினன்.

மதத்தினை வண்டுகளுண்ணுதலால் வண்டு மூசுண்டதானம் எனவும், யானை நோயை யானையெனக்கூறுதல் நூல்வழக்காதலால் வண்டு மூசுண்டதான முகமா வெனவும், யானைநோய் விழுந்த விளங்கனி உள்ளீடிழத்தல்போல இவனும் அறிவென்னும் உள்ளீடிழத்தலால் வெள்ளில்போல அறைபோய கருத்தனானான் எனவுங் கூறினர். (௧௦)

மறையோர்கள்பின்றும்பழிமேலிடுவண்ணநோக்கி
யிறையோயிதுநான்முகன்சென்னியிறுத்தகூட
லறவேதியனைத்தினமாயிரத்தெண்காற்றொழ
அறவேயொழிக்கப்படுமின்னமுறைப்பக்கேட்டி.

(இ-ள்.) மறையோர்கள்-அந்தணர்கள், பின்றும் பழி மேல் இடும் வண்ணம் நோக்கி (அப்புண்ணியங்களால் ஒழியாது) மீளவும் பிரமகத்தி மேன்மேலோங்கி

Koviloor Digital Library

வளரும் வகையைப்பார்த்து, இறை யோய் - அரசனே, இது - இப்பிரமசாயை, நான் முகன் சென்னி இறுத்த கூடல் அறம் வேதியனை - பிரமனது தலையைக்கொய்த மதுரையிலெழுந்தருளிய தருமக்கடலாகிய சோமசுந்தரக்கடவுளை, தினம் - நாள்தோறும், ஆயிரத்து எண்கால் சூழல் உறவே ஒழிக்கப்படும் - ஆயிரத்தெட்டுத்தரம் பிரதக்ஷிணஞ் செய்தா லொழிக்கப்படும், இன்னம் உரைப்ப கேட்டி - இன்னமுங் கூறக்கேட்பாய்.

பிரமன் நானே யிறைவனென இறுமாந் தகங்கரித்தலால் வந்த நிராக்குற்றத்தை யொறுத்துத் தீர்த்தருளினமையால் பரமகாருணியர் என்பார் அறவேதியன் எனவும், பிரமன் சிரத்தைக்கொய்த அவரை வழிபட்டாலன்றி யிப்புண்ணியங்களாலொழியாதென்பார் தினமாயிரத் தெண்காற்சூழ லுறவே யொழிக்கப்படுமெனவுங் கூறினார். (கக)

ஆறுவிரதநெறியாலிரண்டைந்துவைகல்
வாறுடனையம்முறையால்வலஞ்செய்துவந்தா
யானலதற்குவழிகாட்டுமென்றையர்கூறப்
போனனரசன்புனிதன்றிருக்கோயில்புக்கான்.

(இ-ள்.) ஆறு விரத நெறியால் - நீங்காத விரதநெறிமுறையில் நின்று, இரண்டைந்துவைகல் - பத்துநாள், வாறுடனை - சோமசுந்தரக்கடவுளை, அம்முறையால் வலம் செய்து வந்தாய் ஆனல் - அந்த முறைப்படி பிரதக்ஷிணஞ்செய்து வருவாயானல், அதற்கு வழி காட்டும் என்று ஐயர் கூற-அப்பிரமசாயைக்குத் தீர்வுகாட்டியருளுவரென்று, ஐயர் கூற - அந்தணர்க ளெடுத்துச்சொல்ல, அரசன் போனன் - (கேட்ட) வரகுணபாண்டியன் சென்று, புனிதன் திரு கோயில் புக்கான் - அச்சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயிலை யடைந்தனன்.

அதிவிரதம் என்பார் ஆறுவிரதம் என்றார். போனன் முற்றெச்சம். (கஉ)

விழியாயிரத்தோன்பழிதீர்த்தனைவேதியன்றன்
கழியாதமாபாதகந்தீர்த்தனைகௌவைக்கங்கைச்
சுழியாறலைக்குஞ்சடையாயெனைத்தொட்டலைக்கும்
பழியானதுந்தீர்த்தருளென்றுபணிந்துவீழ்ந்தான்.

(இ-ள்.) விழியா யிரத்தோன் பழி தீர்த்தனை - ஆயிரங் கண்களையுடைய இந்திரனது பிரமசாயையை யொழித்தருளினாய், வேதியன் தன் கழியாத மாபாதகம் தீர்த்தனை - ஓரந்தணனுடைய (ஒருவராலும்) நீக்குதற்கரிய மாபாதகத்தினை யொழித்தருளினாய், கௌவை - ஒலியையுடைய, கங்கை சுழி ஆறு அலைக்கும் சடையாய் - கங்கையென்னும் சுழித்தலையுடைய நதிப்பெருக்கலைக்குஞ் சடையையுடைய பெருமானே, என்னை தொட்டு அலைக்கும் பழி ஆனதும் தீர்த்தருள் என்று - (உன்னைச் சரணடைந்த) என்னைப்பற்றி வருத்தும் பழியையுந் தீர்த்தருளாயென்று, பணிந்து வீழ்ந்தான் - வணங்கித் தண்டாகாரமாக நிலமீது விழுந்து.

இந்திரனும் ஓரந்தணனும் புத்தி பூர்வத்தாற் செய்த கொலையால் வந்த பிரமசாயையைப் போக்கிய தேவரீருக்கு அபுத்தி பூர்வத்தால் எனக்கு அடைந்த பிரமசாயையைப் போக்கி யருளுதல் அரிதன்றே யென்பான் பழியானதுந் தீர்த்தருளென்று பணிந்து வீழ்ந்தான் எனக் கூறினனென்றார். விழியாயிரத்தோன் பழிதீர்த்த

Koviloor Digital Library

ளை, வேதியன்றன் கழியாத மாபாதகந்தீர்த்தனை என விசேஷணங்களை வாக்கியரூபமாகக்கூறிய கருத்துடையடையணி. (௧௩)

என்றும்படியம்முறையால்வளைந்தேத்தவையன்
விண்ணின்றியம்புமரசேபரிமேதவேள்வி
நன்றும்பயனோரடிவைப்பினினன்னவெம்மைப்
பன்றும்வலத்தான்மகிழ்ந்தேம்பழியஞ்சன்மன்னே.

(இ-ள்.) அமுறை யால் என்றும்படி வளைந்து ஏத்த - அம்முறைப்படி நின்றென்னைப் பிரதக்ஷிணஞ் செய்து துதிக்க, ஐயன்-சோமசுந்தரக்கடவுள், விண் நின்று இயம்பும் - ஆகாயத்திலிருந்து கூறியருளுவார், அரசே-அரசனே, ஓரடி வைப்பினின் நன்னா - (பிரதக்ஷிணஞ் செய்வோமென்று) ஓரடியெடுத்து வைக்கில், பரி மேத்த வேள்வி பயன் நன்றும் (அவ்வோரடிக்கு) அசுவமேதயாகப் பயன்கிட்டும், எம்மை பன்றும் வலத்தால் மகிழ்ந்தேம் - எம்மைச் செய்யும் பிரதக்ஷிணத்தினால் மகிழ் கூர்ந்தேம், பழி அஞ்சல் - பழிக்கு அஞ்சுதலொழிவாய்.

தினமொன்றுக்கு ஆயிரத்தெட்டு என்றும் எண்வழுவாத பிரதக்ஷிணஞ்செய்தாரென்பார் என்றும்படி யம்முறைபால் வளைந்து எனவும், ஓரடிக்கு அசுவமேதப்பயன் கைகூடுதலால் பிரமசாயை குன்றியது அஞ்சற்கவெனச் சோமசுந்தரக்கடவுள் கூறியருளினார் என்பார் எம்மைப்பன்றும் வலத்தால் மகிழ்ந்தேம் பழியஞ்சலெனவுங் கூறினார். (௧௪)

பொன்னோடுமுத்தங்கொழிக்குந்துறைப்பொன்னிநாட
னின்னோடமராற்றநினைந்தெழுநீயுநேர்வா
யன்னோனுனக்குப்புறமிட்டகன்றோடுநீயும்
பின்னோடியெட்டிப்பிடிப்பாரிற்றுரத்துமெல்லை.

(இ-ள்.) பொன் ஒடு முத்தம் கொழிக்கும் துறை பொன்னி நாடன் - பொற்கட்டிகளோடு முத்துகளை யலைகளொதுக்கும் துறையையுடைய காவிரிசூழ்ந்த நாட்டையுடைய சோழன், நின்னோடு அமர் ஆற்ற நினைந்து எழும் - உன்னோடு போர்செய்ய நினைந்து போர்க்குவருவான், நீயும் நேர்வாய் - நீயும் அவனோடு போர்செய்ய எதிர்ப்பாய், அன்னோன் உனக்கு புறமிட்டு அகன்று ஓடும் - அச்சோழனுனக்குப் புறங்காட்டிப் போர்க்களத்தினின்றி யோடுவான், நீயும் பின் ஓடி எட்டிப் பிடிப்பாரில் துரத்தும் எல்லை - நீயும் அவன் பின்சென்று எட்டிப் பிடிப்பவரைப்போலத் துரத்துங் காலையில். (௧௫)

எமையாமருச்சித்திருக்குந்தலத்தெய்துவாயா
லமையாதவன்கட்பழிமாற்றுதுமென்னச்சேற்க
ணுமையாண்மணாளனருள்வாழ்த்தியுரகனுச்சிச்
சுமையாறுதோளான்முழுதான்றனிருக்கைபுக்கான்.

(இ-ள்.) எம்மை யாம் அருச்சித்து இருக்கும் தலத்து எய்துவாய் - எம்மை நாமே யருச்சனைசெய்து வழிபட்டிருக்குந் தலமாகிய திருவிடைமருதூரில் வருவாய், அமையாதவன்கண் பழி மாற்றுதும் என்ன - பொறுத்தற்கரிய கொடிய பழியை யொழிப்போமென்றருள, சேல் கண் உமையாள் மணாளன் அருள் வாழ்த்தி -

Koviloor Digital Library

அங்கயற்கண்ணியார் கணவராகிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளைத்துதித்து, உரகன் உச்சி சுமை ஆறு தோளான் - ஆதிசேடன் தனது உச்சியின்சுமை யாறுதற் கெல்லையாகிய தோளையுடைய வரகுணபாண்டியன், தொழு தான் தன் இருக்கை புக்கான் - வணங்கித் தனதரசிருக்கையையடைந்தனன்.

எமக்குமேல் ஒரிறைவனில்லை யென்பது ஆன்மாக்களுணர்ந்து தம்மை வழிபட்டுய்தல் தோன்ற எமையா மருச்சித்திருக்குந் தலத்து எனவும், திருவாலவாயிற் செய்தபாவ மொழித்தற்கு வேறுதலமின்மையால் அத்தலக் கடவுளே யருள்செயில் தீருமென்பது தோன்ற எய்துவாயேல் அமையாதவன் கட்பழி மாற்றுதுமென்ன எனவுங் கூறியருளினார். அகத்திய முனிவராணையின்படி காசிபர்முதலிய முனிவர்கள் சரஸ்வதியை நோக்கித் தவஞ்செய்து வேதாகமங்களி னுண்மைப் பொருளையுணர்ந்து இலட்சுமியைநோக்கித் தவஞ்செய்து சிவபூசனைக்குவேண்டும் பெருஞ் செல்வத்தை யடைந்து சிவபெருமானாரைத் தரிசித்தற்கு அவர் திருவருளாகிய உமாதேவியாரா லருள்பெறுதற்கு ஓர் சண்பகவனமொன்றுண்டாக்கித் தவஞ்செய்யுங் காலையில் அவ்வுமாதேவியா ரெழுந்தருளிக் காட்சிதந்தருள, அம்முனிவர்கள் அன்னாய் சிவபெருமானாரையுந் தரிசிப்பித்தருளல் வேண்டுமெனக் குறையிரக்க, அவ்வுமாதேவியார் கருணை கூர்ந்தருளித் தமது இதயகமலத்தில் பெருமானாரைத் தியானிக்க, அப்பெருமானார் சோதிமயமான மகாலிங்கமூர்த்தமாய் எழுந்தருளி நின்று அபயவரதாஸ்தங்களோடு ஏகாயகமூர்த்தியாய்க் காட்சிதந்தருளினர், பின்னர் அவ்வுமாதேவியாரை நோக்கி நாம் இப்போ தெழுந்தருளிய சோதிமயமாகிய இவ்விலிங்கத்தோடு அநாதியாய் இத்தலத்திலுள்ள நமது திருவுருவாகிய இலிங்கத்தைக்கூட்டி, யாவரும் பூசித்துய்ய நாம் பூசித்தருளுகின்றேமென்று கூறியருளிக் கலப்பித்துப் பூசித்தருளினார் என்பது புராணவரலாறு. (௧௬)

ஆர்த்தார்முடியோன்சிலநாள்கழித்தாற்றலேற்ற
போர்த்தாவுவேங்கைக்கொடித்தானைபுடவிபோர்ப்பப்
பேர்த்தார்கலிவந்தெனப்பேரியமார்ப்பக்கன்னிப்
பார்த்தாமவேன்மீனவனாட்டிற்படர்ந்தவெல்லை.

(இ-ள்.) ஆர் தார் முடியோன் சிலநாள் கழித்து - ஆத்திமாலையையணிந்த கிரீடத்தையுடைய சோழன் சிலநாள் சென்று, ஆற்றல் ஏற்ற போர் தாவு வேங்கைக் கொடி தானை - வன்மைமிக்க போரின்மேற்செல்லும் புலிக்கொடியையுயர்த்திய சேனையானது, புடவி போர்ப்ப-நிலவுலகம் புதைபட, ஆர் கலி பேர்த்து வந்தால் என்ன-கடல்நிலை பெயர்ந்து வந்தாற்போல, பேர் இயம் ஆர்ப்ப-பெரியபோர்முரசொலிக்க, கன்னி பார் தாமம் வேல் மீனவன் நாட்டில் - கன்னிநாடாளும் வெற்றிமாலை புனைந்த வேலையேந்தியபாண்டியனாட்டில், படர்ந்த எல்லை - வந்தகாலையில். (௧௭)

மிடைந்தேறுநேரிப்பொருப்பன்படைவேலைமேற்சென்
றடைந்தேறிமீனக்கொடியானமராட்வாழி
கடைந்தேறுவெற்பிற்கலங்கிற்றெனக்கிள்ளிசேனை
உடைந்தேகவெந்நிட்டுடைந்தோடினனுள்ளம்வெள்கா.

(இ-ள்.) மிடைந்து ஏறு நேரி பொருப்பன் - (போர்க்களத்தில்) நெருங்கிப் போர்க்குவந்த நேரிமலையையுடைய சோழனது, படை வேலை மேற்சென்று அடைந்

Koviloor Digital Library

உததி - செறுசமுத்திரத்தின்மேற்சென்று போர்க்கெழுந்த, மீனக்கொடியான் அமர் ஆட - கயற்கொடியையுடைய பாண்டியன் போர்செய்ய, ஆழி கடைந்தேறு வெற்பில் கலக்கிற்று என - பாற்கடலானது கடைய எழுந்த மந்தரகிரியால் நிலைகலக்கியதுபோல, கிள்ளி சேனை உடைந்து ஏக - சோழன் சேனையானது நிலைகலங்கியோட, உள்ளம் வெள்கா - (அதுகண்டு சோழன்) மனம் நாணி, உடைந்து வென்கிட்டு ஓடினன் - நிலைகலங்கிப் புறங்காட்டி யோடினான்.

சோழன் சேனையைக் கடலாகவும், வரகுணபாண்டியனை மந்தரகிரியாகவுங் கொண்டு அம்மந்தரகிரியால் கடல் நிலை கலங்கியதுபோல அப்பாண்டியனால் சோழன் சேனை நிலைகலங்கிச் சிதறியது என விற்றலால் தொழிலுவமையணி. (கஅ)

சுறவக்கொடியண்ணறுரந்துபின்பற்றிச்செல்வோன்
புறவக்கடிமுல்லையுந்தாமரைப்போதுமேந்தி
நறவக்கழிநெய்தலங்கானலின்ஞாங்கர்மொய்த்த
இறவப்புலவுகழுவிர்ந்துறைப்பொன்னிசேர்ந்தான்.

(இ-ள்.) சுறவம் கொடி அண்ணல் துரந்து பின்பற்றி செல்வோன் - கயற்கொடியையுடைய வரகுணபாண்டியனால் துரத்திப் பின்பற்றிச் செல்லப்பட்ட சோழன், புறவம் கடி முல்லையும்-முல்லைநிலத்திலுள்ள வாசமிக்க முல்லைமலரையும், தாமரைபோதும் ஏந்தி - தாமரைமலரையுமேந்தி, நறவம் கழி நெய்தல் கானலின் ஞாங்கர்-தேன்மிக்கதும் கழிசூழ்ந்த நெய்தனிலத்திலுள்ள சோலையின்பக்கத்தில், மொய்த்த இறவம் புலவு கழுவு ஈர்ந்துறை பொன்னி சேர்ந்தான்-நெருங்கிய இறாலின்புலால் நாற்றத்தைப்போக்கும் குளிர்ந்த துறையையுடைய காவிரிநதியை யடைந்தனன்.

பூசத்துறையிற்புகுந்தாடியப்பொன்னித்தென்சார்
வாசத்திடைமாமருதைப்பணிதற்குவையைத்
தேசத்தவன்கிழ்த்திசைவாயில்கடந்துசெல்லப்
பாசத்தனையும்பழியும்புறநின்றவன்றே.

(இ-ள்.) வையை தேசத்தவன் - வையைசூழ்ந்த பாண்டிநாட்டையுடைய வரகுணன், பூசத்துறையில் புகுந்து ஆடி - பூசத்துறையிற்சென்று நீராடி, அ பொன்னி தென்சார் வாசத்து இடைமாமருதை - அக்காவிரிநதியின் தக்ஷணதீரமாகிய திருவிடைமாமருதி லெழுந்தருளிய பெருமானாரை, பணிதற்கு - வணங்க, கீழ்த்திசை வாயில் கடந்து செல்ல - கீழைத்திசைவாயிலைக் கடந்துள்ளே செல்ல, பாசம் தனையும் பழியும் புறம் நின்ற - பாசமாகிய பந்தமும் பிரமசாயையும் (உடன்செல்லாது) புறத்தில் நின்றன.

தைமாதத்தின் பருவம் என்பார் பூசத்துறையிற் புகுந்தாடியெனவும், சிவபெருமானார் திருக்கோயிலே மருதமரவடிவா யிருக்கின்றது என்பார் பொன்னித் தென்சார் வாசத்திடை மாமருதைப்பணிதற்கு எனவும், முதன்மருதங் கடைமருது முன்னவென்பார் இடைமாமருத எனவும், பழியொடு மும்மலங்களும் அற்றன வென்பார் பாசத்தனையும் பழியும் புறநின்ற எனவுங் கூறினர். (உ0)

கருதிச்சுரும்புபுறஞ்சூழ்ந்துகுழறத்தெய்வ
மருதிற்சிறந்தபெருந்தேனைக்கண்வாய்க்கார்ந்து

Koviloor Digital Library

பருகிப்படிந்துதழல்வாய்வெண்ணெய்ப்பாவையொப்ப
வுருகிச்செயலற்றுரையற்றுணர்வாகிநின்றான்.

(இ-ள்.) சுருதி சுரும்பு புறம் சூழ்ந்து குழற - வேதங்களாகிய வண்டுகள் புறத்திற்சூழ்ந்திசைபாட, தெய்வம் மருதில் சிறந்த பெருந்தேனை-தெய்வத்தன்மையையுடைய இடைமருதிற் சிறந்து நிறைந்த தெவிட்டாத தேனினை, கண் வாய் அங்காந்து படிந்து பருகி - கண்ணாகிய வாயைத்திறந்து படியப்பருகி, தழல் வாய் வெண்ணெய் பாவை ஒப்ப உருகி - நெருப்பிலிட்ட வெண்ணெயாற்செய்த பதுமை உருகுவதுபோல வுருகி, செயல் அற்று உரை அற்று - செயலொழிந்து வசனித்தலொழிந்து, உணர்வு ஆகி நின்றான் - அறிவு வடிவாகி நின்றான்.

மரத்தில் தேனடையிருத்தல் வழக்காதலால் சிவபெருமான் திருக்கைலையே மருதமரம் ஆதலின் தெய்வமருதிற் சிறந்த தேன் எனவும், தேனைப்பருகினார்க்கு நாவொன்றே சுவைவடிவா யிருத்தல்போலாது இத்தேனைப் பருகினோர்க்கு ஐம்புலன்களும் ஒருசேரச் சுவைவடிவாயிருத்தலால் தேன் என்னாது பெருந்தேனெனவும், தேனுள்ளவிடத்து வண்டுகளுளவாதலால் சுருதிச் சுரும்பு புறஞ்சூழ்ந்து குழற எனவும், இத்தேனைப் பருகும் வாய் கண்ணாதலால் கண்வாயங்காந்து பருகியெனவும், அத்தேன் சுவைகண்ட மட்டுமே இத்தேன் சுவைமுற்றுமாதலால் படிந்து எனவும், அழலிற்பட்ட வெண்ணெய்ப்பதுமை உருத்தோன்றாதழிதல்போல இத்தேனுற்றற் போதமழிதலால் தழல்வாய் வெண்ணெயொப்ப வுருகியெனவும், அத்தேனையுண்டவர் தமது செயலும் உரையுமழிந்து அதன் குணமடுத்து நிற்றல்போல இத்தேனைப் பருகினமையால் செயலும் சொல்லுமிழந்து தமோறிச் சிவபோதமேலிட்டு நிற்றலால் செயலற்றுரையற்றுணர்வாகி நின்றான் எனவுங் கூறினார். உமாதேவியார் ஓர்காலத்துச் சிவபெருமானை வணங்கித் தேவரீர் நிலவுலகத்திலெழுந்தருளியிருக்கும் திருப்பதிகளைக் காட்டியருளல் வேண்டுமென வணங்க, அதற்குத் திருவுளங்கொண்டு அவ்வுமாதேவியாரோடும் எழுந்தருளித் தாமெழுந்தருளியிருக்குந் தலங்களைக்காட்டிக் காவிரிநதியின் தென்கரையிலுள்ள திருவிடைமருதூர்க்கு நேரேயெழுந்தருளுகையில் தமது பிரிவாற்றாது திருக்கைலையானது மருதவிருக்ஷவடிவாக நிற்கக்கண்டு அதனிழலில் சிவபெருமானார் உமாதேவியாரோடு எழுந்தருளி நின்றனர் என்றது திருவிடைமருதூர்ப் புராணத்திற்காண்க. மருதிற்சிறந்த பெருந்தேன் என்றது " அந்தவிடைமருதி லானந்தத்தேனிருந்த - பொந்தைப்பரவிநாம் பூவல்லி கொய்யாமோ " எனவரும் ஏதுவாலுணர்க. (உ௬)

நிராமயபரமானந்தநிருத்தநான்மாடக்கூடற்
பராபரவிமையாமுக்கட்பகவபார்ப்பதிமணாள
புராதனவகிலநாதபுண்ணியமருதவாண
அராவணிசடையாவென்றென்றளவிலாத்துதிகள்செய்தான்.

(இ-ள்.) நிராமய - பிணியில்லாதவனே, பரமானந்த நிருத்த-(தெரிசித்தோர்க்கு) பேரானந்தத்தைத்தரும் திருக்கூத்தையுடையவனே, நான்மாடக் கூடல் பராபர - மதுரையிலெழுந்தருளிய பராபரனே, இமையாத முக்கண் பகவ - இமையாத திரிநேத்திரங்களையுடைய பகவனே, பார்ப்பதி மணாள - உமாதேவியார் கணவனே, புராதன - (திருமால் முதலிய தேவர்களுக்கும்) மூத்தவனே, அகில நாத - அகில புவனங்களுக்கும் இறைவனே, புண்ணிய - புண்ணியமூர்த்தியே, மருதவாண-இடை

மருதில் வசிப்பவனே, அரா அணி சடையா என்று என்று - பாம்பையணிந்த சடையையுடையவனேயென்றிடையறாது, அளவு இல்லாத துதிகள் செய்தான் - எல்லையில்லாத துதிகள் செய்தான்.

இறப்பும் பிறப்புமில்லான் என்பான் நிராமய எனவும், அவையில்லாதவனே பேரின்பந்தரும் இறைவன் என்பான் பரமானந்த நிருத்த எனவும், எல்லா லிலிங்கங்கட்கும் மூலலிங்கம் என்பான் நான்மாடக்கூடற் பராபர எனவும், ஐசுவரிய முதலிய அறுவகைக்குணங்களையுந் தனக்கே யுரிமையாகவுடையவன் என்பான் முக்கட்பகவ எனவும், உமாசகித சுந்தரன் என்பான் பார்ப்பதிமணாள எனவும், அயன் முதலிய யாவர்க்கு மூத்தோன் என்பான் புராதன எனவும், அவனே யெல்லாவற்றிற்கும் இறைவன் என்பான் அகிலநாத எனவுங் கூறினார். நிராமயன் நோயில்லாதவன். பராபரன் பராசத்திக்கு மேலானவன். ஐசுவரியமுதலிய அறுவகைக்குணங்களையு முன்னர்க்காண்க. (உஉ)

சொற்பதங்கடந்தசோதிதுதித்தடிபணிந்தவேந்தை
மற்பெருந்தோளாய்கீழைவாயிற்பிரமசாலை
நிற்பதந்நெறியாற்செல்லேலனிழன்மதியுரிஞ்சுமேலைப்
பொற்பெருவாயினீங்கிப்போதிநம்மதுரைக்கென்றான்.

(இ-ள்.) சொல் பதம் கடந்த சோதி - சொல்லளவையைக்கடந்துநின்ற ஒளிமயமாகிய பெருமானார், துதித்து அடி பணிந்த வேந்தை - தம்மைத்துதித்து வணங்கிய வரகுணபாண்டியனை (நோக்கி,) மல் பெருந் தோளாய் - மற்போர் நிறைந்த பெரிய தோளையுடையாய், கீழை வாயில் பிரமசாலை நிற்பது - (நிவந்த) கீழைவாயிலில் பிரமகத்தி நிற்கின்றது, அ நெறியால் செல்லேல் - அவ்வழியிற்செல்லாதே, நிழல் மதி உரிஞ்சு மேலை பொன் பெருவாயில் நீங்கி - ஒளியமைந்த சந்திரமண்டலத்தைத்தடவும் மேற்றிசையிலுள்ள பொன்னாலாகிய பெரிய வாயிலினின்று நீங்கி, நம்மதுரைக்கு போதி என்றான் - நமது மதுரைத் திருநகர்க்குச் செல்வாயென்று கூறியருளினார்.

உமாதேவியார் வேண்டுகோளுக்கிசைய அளவறுத்தற்கரிய சோதிமயமாயெழுந்தருளுதலால் சொற்பதங்கடந்தசோதி என்றார். (உங)

வரகுணனதுகேட்டையன்மருதினைவளைந்துநீங்கற்
கருமையால்வாயிறோறுமடிக்கடிவீழ்ந்துவீழ்ந்து
வரைதொலைத்தன்னமேலைவாயிலாற்போவானன்ன
திருமணிக்கோபுரந்தன்பெயரினாற்செய்துசின்னாள்.

(இ-ள்.) வரகுணன் அது கேட்டு-வரகுணபாண்டியன் அத்திருவார்த்தையைக் கேட்டு, ஐயன் மருதினை வளைந்து - சிவபெருமானார் வசிக்கும் இடை மருதினைப் பிரதக்ஷிணஞ்செய்து, நீங்கற்கு அருமையால் - பிரிதற்கருமையால், வாயில் தோறும் அடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து - வாயிலிடந்தோறும் அடிக்கடி வீழ்ந்து பணிந்தெழுந்து, வரை தொலைத்தால் அன்ன-மலையைத்தொலைத்தாலொத்த. மேலைவாயிலால்போவான் - மேலைவாயிலின் வழியாகச் செல்லுகின்றவன், அன்ன திருமணி கோபுரம் - அந்த வாயிலிற் பொலிவுமிக்க இரத்தினமிழைத்த கோபுரமொன்றை, தன் பெயரினால் செய்து-தனது பெயராற்கட்டுவித்து, சில் நாள்-சிலநாள் (அங்கிருந்து.)(உச)

Koviloor Digital Library

திருப்பணிபலவுஞ்செய்துதென்றிசைவழிக்கொண்டேகிச்
சுருப்பணிநெடுநாண்பூட்டுஞ்சுவைத்தண்டச்சிலையாற்காய்ந்த
மருப்பணிசடையான்கோயில்வழிதொறுந்தொழுதுபோற்றிப்
பொருப்பணிமாடக்கூடற்பொன்னகரடைந்தான்மன்னே.

(இ-ள்.) திருப்பணி பலவும் செய்து - ஏனைத்திருப்பணி பலவற்றையுஞ் செய்துமுடித்து, தென் திசை வழிக்கொண்டு ஏகி - தென்றிசையின் வழிக்கொண்டு (மதுரையைநோக்கி) சென்று, சுரும்பு அணி நெடுநாண் பூட்டும் சுவைத்தண்டம் சிலையான் காய்ந்த - வண்டினிரையாகிய நெடிய நாண்பூட்டிய கரும்பு வில்லையேந்திய மன்மதனை எரித்தருளிய, மருப்பு அணி சடையான் கோயில் - வராகத்தின் கொம்பினையணிந்த சடாமுடியையுடைய மருதவாணர் திருக்கோயில் (தனது கண்களுக்குப் புலப்படுதலால்,) வழிதொறும் தொழுது போற்றி - வழிதோறும் வணங்கித் துதித்து, பொருப்பு அணி மாடம் கூடல் பொன் நகர் அடைந்தான் - மலைகளின் வரிசைபோல (நெருங்கியோங்கிய) மாடங்களையுடைய மதுரையென்னுந் திருநகரைச்சேர்ந்தனன்.

சிவபிரான் அனுஞ்ஞையால் வலஞ்செய்தற்குக் கைலையங்கிரியின் சிகரத்தையொப்ப ஒருமதில் கட்டுவித்தும், திருக்கோயிலிற்கு வடக்கே சோமசுந்தரக்கடவுளுக்கு ஓராலயஞ்செய்வித்தும், ஒரு கள்வனைக் கொலைசெய்வித்தற்பொருட்டுத் தண்டஞ்செய்வோர் கட்டிக்கொண்டுபோக அவன் நெற்றியில் திருநீறிருக்கக்கண்டு கட்டவிழ்த்துவிட்டு இனி, அவன் களவு செய்யாதிருக்கவேண்டிய பொருளைக்கொடுத்தும், இரவில் நரிகள் ஊளையிடுதலைக்கேட்டு ஆலவாயானை யழைக்கின்றனவென்று மனமிளகி யவைகளைப்பிடித்துவரச்செய்து அவைகளுக்கு நல்ல வஸ்திரங்களாற் போர்வை செய்வித்துப் போர்த்தும், தடாகத்தில் தவளை யொலித்தலைக்கேட்டு இவைகள் அரகரவென்று ஒலிக்கின்றனவென்று இரத்தினங்களையும் பொற்கட்டிகளையும் அத்தடாகத்தில் வாரியிறைத்தும், திருமஞ்சன தைலத்திற்காக உலர்த்தும் எள்ளைக்கோயிற் பணிசெய்வோனொருவன் வாரியுண்பதைக்கண்டு நீ யிதை யுண்ணுவது தக்கதோவென்று கேட்க "எள்ளுண்டகடன் தீர்க்கவேண்டும்" என்னும் பழமொழி யொன்றுண்டன்றோ அதனால் மறுமையிலும் மருதவாணர்க்கு அடிமையாவான் தின்கின்றேனெனச்சொல்ல, அங்ஙனமாயில் சிறிதுகொடுவென்று எச்சிலெள்ளைவாங்கியுண்டும், திருவிடைமருதூரெல்லையில் தலையோடொன்று கிடக்கக்கண்டு தனது கையாலெடுத்துக் கண்ணீர்வெள்ளத்திலாட்டி உன்னைப்போல் என் தலையோடுமித்தலத்திற் கிடக்குமோவென்று மனமுருகியும், திருக்கோயிலின்முன் நாய்மலங் கிடத்தலைப்பார்த்து இதனை யெடுப்போர்க்கு என் தேயத்திற் காற்கூறு கொடுப்பேனென்று முதற்பிரதக்ஷிணத்திலும், அரைக்கூறு கொடுப்பேனென்று இரண்டாம் பிரதக்ஷிணத்திலும், முக்காற்கூறு கொடுப்பேனென்று மூன்றாம் பிரதக்ஷிணத்திலும், முழுக்கூறுங் கொடுப்பேனென்று நாலாம் பிரதக்ஷிணத்திலும் கூறி, யெடுக்கப்படாமையால் என் தேயமுற்றும் நானே யுடையனென்று அதைத் தனது திருக்கரத்தாலெடுத்துப் புறத்தேயெறிந்தும், திருவீதிப்பிரதக்ஷிணஞ்செய்துவருங்கால் வேப்பமரம் பழுத்து வெயிலில் நிற்றலைக்கண்டு ஐயோ சிவலிங்கப்பெருமானையொத்த திருவுருவங்கள் பலவற்றையுஞ்சுமந்து வெதும்புகின்றனவேயென்று மனம் வருந்தி யம்மரங்களுக்கெல்லாம் மேற்கட்டி கட்டுவித்தும், தனது மனைவியை யிரவில் அந்தப்புரத்திற்கண்டு இப்பெண்கள் சிகாமணி மருதவாணர்க்கே யுரியளென்று ஒருவரும் அறியாவண்ணம் அழைத்துக்கொண்டு திருக்கோயிலிற்குச்சென்று திருக்கதவைத்தட்

டச் சிவபெருமான் இறந்து வருதியென்றருள, அக்காலையில் வணங்கி யிப்பெண்மணியை யங்கீகரித்தருள்கவெனக் குறையிரப்ப வலக்கைமாத்திரம் வெளிப்பட்டு நிற்க உட்கொண்டருளினர், அதுகண்டஞ்சி அடியேனாற் றீண்டப்பட்டதென்றோ நீக்கியருளினீர் என்று மனங்கவல்கூர உலகத்தார் உண்மையன்பை யுணரும்படி நானே யங்கீகரிப்போமென்றுட்கொள்ளும்படி வழிபாட்டினின்றும், பத்தியின் பெருக்கைக் காட்டினமையால் திருப்பணி பலவுஞ் செய்தும் என்றார். "வெள்ளைநீறுமெய்யிற்கண்டு - கள்ளன்கையிற்கட்டவிழ்ப்பித்தும் - ஒடும்பன்னரியூளைகேட்டரனைப் - பாடினவென்றுபடாம்பலவளித்தும் - குவளைப்புனலிற்றவளையரற்ற - வீசன்றன்னையேத்தினவென்று - காசும்பொன்னுங்கலந்துவிசியும் - வழிபடுமொருவன்மஞ்சனத்தியற்றிய-செழுவிரைவெள்ளைத்தின்னக்கண்டு - பிடித்தனுமவனிப்பிறப்புக்கென்ன-இடித்துக்கொண்டவனெச்சிலைநுகர்ந்தும் - மருதவட்டத்தொருதனிக்கிடந்த - தலையைக்கண்டுதலையுறவணங்கி - உம்மைப்போலவெம்மித்தலையும் - கிடத்தல்வேண்டுமென்றடுத்தடுத்திரந்தும் - கோயின்முற்றத்துமிசைக்கிடப்ப - வாய்த்தனவென்று நாய்க்கட்டமெடுத்தும் - காம்புதுத்தநிர்த்தகளியுருக்கண்டு - வேம்புகட்கெல்லாம்விதானமமைத்தும் - விரும்பினகொடுக்கைபரம்பரற்கென்று - புரிகுழற்றேவியைப் பரிவுடன்கொடுத்த - பெரியவன்பின்வரகுணதேவரும்" எனப் பட்டினத்துப்பிள்ளையார் கூறியருளிய மும்மணிக்கோவையிற்காண்க. மருப்பணி என்றதை முன்னர்க் கூறியிருத்தலுணர்க. (உரு)

தொடுபழிதொலைவித்தாண்டசுந்தரத்தோன்றல்பாதக்
கடிமலரடைந்துநாளுங்கைதொழுதுலகமெல்லாம்
வடுவறுசெங்கோலோச்சும்வரகுணனறவோர்நாவா
லடுசுவையமுதமன்னவரன்புகழ்செவிமடுப்பான்.

(இ-ள்.) தொடுபழி தொலைவித்து ஆண்ட சுந்தரத் தோன்றல் பாதம் கடிமலர் அடைந்து-விடாதுதொடர்ந்த பிரமசாயையைப்போக்கி யடிமைகொண்ட சோமசுந்தரக்கடவுளுடைய வாசமிக்க திருவடித்தாமரையையடைந்து, நாளும் கைதொழுது - எப்பொழுதுங் கைகூப்பிவணங்கி, உலகம் எல்லாம் - உலகமுற்றும், வடு அறு செங்கோல் ஒச்சும் வரகுணன் - குற்றமற்ற செங்கோல்நடாத்தும் வரகுணபாண்டியன், அறவோர் நாவால் அடுசுவை அமுதம் அன்ன அரன்புகழ் செவிமடுப்பான் - அந்தணர்கள்தமது நாவா லட்டசுவைமிக்க அமிர்தத்தையொத்த சிவபெருமான் திருப்புகழமுதைக் காதாருஞ் செவியாய நாவாலருந்துவானாயினன்.

விடாதபழியென்பார் தொடுபழியெனவும், கடலிற்றோன்றிய அமுதம் சிவபோகம் விளைக்காதென்பார் அறவோர் நாவால் - அடுசுவையமுதமன்ன வரன்புகழ் செவிமடுப்பான் எனவுங்கூறினார். (உசு)

வேதமாகமம்புராணமிருதிகண்முதலாநூலு
மோதுவதுலகின்மிக்கதுருத்திரவுலகமென்னும்
போதமதகங்கொண்டந்தப்பொற்பதிகாணவேண்டுங்
காதல்செல்வழியேயீசன்கங்குலிற்கோயிலெய்தா.

(இ-ள்.) வேதம் ஆகமம் புராணம் மிருதிகள் முதல் ஆம் நூலும் ஓதுவது-வேதமும் ஆகமமும் புராணமும் மிருதிகளு முதலாகிய நூல்கள்யாவும் எடுத்துக்கூறுவது, உலகில் மிக்கது உருத்திரவுலகம் என்னும்-பிரமலோகமுதலிய உலகங்களு

Koviloor Digital Library

க்குமேற்பட்டது உருத்திரவுலகமேயென்று வற்புறுத்தும், போதம் அகம் கொண்டு - அப்போதத்தைத் தன்றுட்பதித்து, அந்தபொன்பதி காணவேண்டும் காதல்செல்வழியே - அந்த அழகிய சிவபுரத்தைத் தரிசிக்கவேண்டிய விருப்பஞ்சென்றவழியே, ஈசன் கங்குலிற் கோயில் எய்தா - சிவராத்திரியிற் சோமசுந்தரக்கடவுளின் திருக்கோயிலையடைந்து.

பிரமனுலகுமுதலிய வுலகங்களுக்கு ஓர்மணிமுடி கவித்ததுபோல அவற்றின்மீதிருத்தலால் ஓதுவநுலகின்மிக்க வுருத்திரவுலகமென்னும் என்றார். அது பகுதிப்பொருள் விகுதி. (உஎ)

கலிநிலைத்துறை.

மாழைமான்மடநோக்கிதன்மணாளனைவணங்கிப்
பீழையேழ்பவங்கடந்துநின்னடிநிழல்பெற்றோர்
சூழநீசிவபுரத்தில்வீற்றிருப்பதுதொழுதற்
கேழையேற்கொருகருத்துவந்தெய்தியதெந்தாய்.

(இ-ள்.) மாழை மான் மடநோக்கி தன்மணாளனைவணங்கி - பொன்னிறம்வாய்ந்த மான்போன்ற மருட்பார்வையையுடைய அங்கயற்கண்ணியார்கணவராகிய சோமசுந்தரக்கடவுளைப்பணிந்து, பீழை ஏழ்பவம் கடந்துநின் அடிநிழல் பெற்றோர்சூழ - துன்பத்தைத்தரும் எழுபிறப்பென்னுங் கடலைக்கடந்து உனது திருவடிஞானச்செல்வத்தைப்பெற்றோர் புடைசூழ, நீ சிவபுரத்தில் வீற்றிருப்பது தொழுதற்கு - தேவரீர் நிகரின்றியெழுந்தருளியிருத்தலைக்கண்டு வணங்குதற்கு, எந்தாய் - என்தந்தையே, ஏழையேற்கு ஒருகருத்துவந்து எய்தியது - ஏழையேனாகிய அடியேனுக்கு ஒரு எண்ணம்வந்து மூண்டது.

ஆத்மிகம், தெய்விகம், பௌதிகம் என்னு மூன்றுதாபங்களையுந் தருதலால் பீழையேழ்பவம் எனவும், திருவருண்ஞானம் அவனது திருவடியைக்கூட்டுவிக்கு ஞானம் ஆதலால் நின்னடிநிழல்பெற்றோர் எனவுங்கூறினார். (உஅ)

என்றகாவலனன்பினுக்கெளியராய்வெள்ளி
மன்றவாணரவ்வுலகையிவ்வுலகிடைவருவித்
தின்றுகாட்டுதுமிவற்கெனத்திருவுளத்தெண்ண
மொன்றினாரஃதுணர்ந்ததாலுருத்திரவுலகம்.

(இ-ள்.) என்றகாவலன் அன்பினுக்கு எளியராய் - என்றுகுறையிரந்த வரகுணபாண்டியனன்புக்கு உடன்பட்டவராய், வெள்ளிமன்ற வாணர் - வெள்ளியம்பலத்தில் திருக்கூத்தாடிய சோமசுந்தரக்கடவுள், இவற்கு அ உலகை இ உலகு இடைவருவித்து இன்று காட்டுதும் என - இவ்வரகுணனுக்கு அந்தச்சிவபுரத்தை யிவ்வுலகத்தினிடத்தில் அழைப்பித்து இப்போது காட்டுவோமென்று, திரு உளத்து எண்ணம் ஒன்றினார் - தமது திருவுளத்தி லெண்ணங்கொண்டருளினார், உருத்திரவுலகம் அஃது உணர்ந்தது - அச்சிவபுரம் அதனையறிந்தது.

பத்திவலையிற்படுவோர் ஆதலால் அன்பினுக்கெளியராய் என்றார். (உகூ)

கோடிமாமதிக்கட்வுளர்குழுஉச்சுடர்பரப்பி
நீடியோரிடத்துதித்தெனமின்மினிகர்த்து
வாடிவானிருசுடரொளிமழுங்கவானிழிந்து
தேடினார்க்கரியானுறைசிவபுரந்தோன்ற.

Koviloor Digital Library

(இ-ள்.) கோடிமமேதிக் கடவுளர் - அநேகங்கோடி சந்திரர்கள், குருசுடர் பரப்பி நீடி ஒரிடத்து உதித்தால் என்ன - நிறந்தங்கிய கிரணத்தைப்பரப்பிக் குறைவின்றி யோரிடத்தில்தோன்றினாற்போல, வான் இருசுடர் ஒளி மின்மினி நிகர்த்து வாடிமழுங்க - விண்ணிற்சஞ்சரிக்கும் சந்திரசூரியர்களினொளி மின்மினியையொத்து நிறங்குன்றிமழுங்க, தேடினார்க்கு அரியான் உறை சிவபுரம் வான் இழிந்ததோன்ற - தேடியபிரமன்மாலுக்கு அரிய சிவபெருமானெழுந்தருளிய சிவபுரமானது விண்ணினின்றுமிழிந்து திருக்கோயிலுள்விளங்க.

தண்ணிய ஒளியையுடையதென்பார் மதிக்கடவுளர் குருஉச்சுடர்பரப்பி-நீடி யோரிடத் துதித்தென எனவும், அளவில்லாத ஒளியையுடையது என்பார் மின்மினி நிகர்த்து வாடி வானிருசுடரொளிமழுங்க எனவுங்கூறினார். (௯0)

ஆண்டநாயகனந்தியையழைத்தெமக்கன்பு
மாண்டகாதலான்வரகுணவழுதிநம்முலகங்
காண்டல்வேண்டினான்காட்டெனக்கருணையாலேவல்
பூண்டவேத்திரப்படையினான்றொழுதனன்போந்தான்.

(இ-ள்.) ஆண்ட நாயகன் - (நம்மை) அடிமைகொண்ட சோமசுந்தரக்கடவுள், நந்தியை அழைத்து-நந்திதேவனையழைத்து, எமக்கு அன்புமாண்ட காதலான் - எம்பா லன்புமிக்க விருப்பத்தையுடையவனாகிய, வரகுணவழுதி - வரகுணபாண்டியன், நம் உலகம் காண்டல் வேண்டினான் காட்டு என - நமதுசிவலோகத்தைத் தரிசிக்கவிரும்பினான் (அவனுக்கு) காட்டாயென்றருள, கருணையால் (அச்சோமசுந்தரக்கடவுள்) திருவருளால், ஏவல் பூண்ட வேத்திரப்படையினான் - (தேவர்கள் நெருக்கையொதுக்கும்) திருப்பணிமேற்கொண்ட வேத்திரப்படையையேந்திய அந்நந்திதேவனார், தொழுதனன் போந்தான் - வணங்கிப்புறத்துவந்து.

வேத்திரப்படை பிரம்பாகிய ஆயுதம். பந்தமுத்திகளிலும் ஆன்மாக்களிடத்து அருளுடையர் என்பார் ஆண்டநாயகன் எனவும், எம்பாற் கழிபேரன்புடையவன் என்றருளினார் என்பார் எமக்கன்புமாண்டகாதலான் எனவும் கூறினார். தொழுதனன், போந்தான் முற்றெச்சங்கள். (௯௧)

வருதியாலெனப்பணிந்தெழுவரகுணற்கொடுபோய்க்
கருதியாயிரம்பெயருடைக்கடவுணான்முகத்தோன்
சுருதியாதியீறளப்பருஞ்சொயம்பிரகாசப்
பரிதியான்சிவபுரமிதுபாரெனப்பணித்தான்.

(இ-ள்.) வருதி என - வருவாயென்றருள, பணிந்து எழு வரகுணன் கொடு போய் - வணங்கியெழுந்த வரகுணபாண்டியனைக்கொண்டுசென்று, ஆயிரம் பெயர் உடையகடவுள் நான்முகத்தோன் கருதி - சகஸ்திரநாமங்களையுடைய திருமாலும் பிரமனும் எண்ணி, சுருதி ஆதி - வேதமுதலிய அளவைகளால், ஈறு அளப்பு அரும் சொயம்பிரகாசம் பரிதி ஆன் - தனதுமுடிவை யளத்தற்கரிய, சொயம்பிரகாசம் பரிதி ஆன் - சொயம்பிரகாசத்தையுடைய ஞானசூரியனாகிய சோமசுந்தரக்கடவுள் ஆண்டருளும், சிவபுரம் இது - சிவபுரமிதுவாம், பார் எனபணித்தான் - பாராயென்று பணித்தருளினார்.

சூரியன்முதலிய எல்லாப்பொருள்களுக்கும் ஒளிதரும் பேரொளியாதலால் ஈறளப்பருஞ்சொயம்பிரகாசப்பரிதி என்றார். (௯௨)

Koviloor Digital Library

கருப்புரங்கமழ்ந்துளர்பசுங்கால்களாலுதையுண்
டருப்பினஞ்சிதைந்தாயிரப்பத்தியோசனைபோய்
மருக்கமழ்ந்துநூறாயிரம்வாலிதழ்க்கமல
மிருக்குமோடைகள்புடைதொறுந்தழுவியயாறும்.

(இ-ள்.) கருப்புரம் கமழ்ந்து உளர் பசுங்கால்களால் - கருப்புரவாசங்கமழ்ந்து சஞ்சரிக்கும் தென்றற்காற்றுகளால், உதையுண்டு-மொத்துண்டு, அரும்பு இனம் சிதைந்து - அரும்பின் கூட்டங்கள் முறுக்கவிழ்ந்து, ஆயிரப்பத்து யோசனைபோய் மருகமழ்ந்து - பதினாயிரம்யோசனைதூரஞ்சென்று வாசம்வீசி, வால் நூறாயிரம் இதழ் கமலம் இருக்கும் ஓடைகள் புடைதொறும் தழுவிய யாறும்-வெள்ளியலட்சம் இதழ்களையுடைய வெண்டாமரைகளிருக்கும் ஓடைகள் பக்கங்கள்தோறும் தழுவிய ஆறுகளும். (கூங)

வரம்பின்மாதரார்மதுரவாய்திறந்துதேன்வாக்கு
நரம்பினேழிசையாழிசைநகைமலர்த்தருவின்
சுரும்பினேரிசைநாரதர்தும்புருவிசைக்கு
மிரும்புநீர்மெழுகாக்கியவின்னிசையெங்கும்.

(இ-ள்.) வரம்பு இல் மாதரார் - அளவில்லாததெய்வப்பெண்கள், மதுரம் வாய்திறந்து - இனியவாயைத்திறந்து, தேன்வாக்கும் - தேனைக்கவிழ்க்கும், நரம்பின் ஏழிசை - நரம்பின்கண்ணமைந்த ஏழிசைகளையுடைய, யாழ் இசை - வீணையொடுபாடும் இசையும், நகைமலர் தருவின் சுரும்பின் நேர் இசை - மலர்ந்தவிளங்கு மலர்களையுடைய விருக்ஷங்களில் வண்டுகள்பாடும் தம்முளொத்த இசையும், நாரதர் தும்புரு இசைக்கும் - நாரதரும் தும்புருவும்பாடும், இரும்புநீர் மெழுகு ஆக்கிய இன் இசை - இரும்பின்கடினத்தன்மையை மெழுகுபோல இளகுந்தன்மையதாகச் செய்யும் இனிய இசையும், எங்கும் - எவ்விடத்திலு முள்ளனவாம்.

எல்லாவுயிர்களையுந் தன்மயமாக்கும் இசையென்பார் இரும்புநீர் மெழுகாக்கிய இன்னிசை என்றார். (கூச)

அமுதவாவியும்பொன்மலரம்புயத்தடமுங்
குமுதவாயரமாதராங்குயிலினம்பயிலு
நிமிரவாள்விடுமரகதநெடியபைங்காவுந்
திமிரமாசறக்கழுவியதேவர்வாழ்பதமும்.

(இ-ள்.) அமுதம் வாவியும் - அமுதநிரம்பிய நடைக்கிணறும், பொன்மலர் அம்புயம் தடம் உம் - பொன்போலமலர்ந்த தாமரைகளையுடைய தடாகங்களும், குமுதம் வாய் - ஆம்பல்போன்ற வாயையுடைய, அரமாதர் ஆம் குயில் இனம்பயிலும்- அரமகளிராகிய குயிற்கூட்டங்கள் சஞ்சரிக்கும், நிமிரவாள்விடும் - நிரம்ப ஒளிவீசும், மரகதம் நெடியபைங்காவும் - மரகதமாகிய நெடியபசியசோலையும், திமிரம் மாசு அற கழுவிய - இருளாகிய களங்கமொழிய ஒளிவீசும், தேவர்வாழ்பதமும்- தேவர்கள்வாழும் பதமும்.

தேவர்கள் சிவபுரத்தின் வடதிசைக்கண் வாழ்தலால் தேவர்வாழ் பதமும் என்றார். (கூரு)

Koviloor Digital Library

அலம்புபாற்கடல்போற்புறத்தமுதநீரகழும்
பொலஞ்செய்ஞாயில்சூழ்புரிசையும்பொன்செய்கோபுரமு
நலங்கொள்பூவியல்வீதியுநவமணிகுயின்ற
துலங்குமாளிகைப்பந்தியுஞ்சூளிகைநிரையும்.

(இ-ள்.) அலம்பு பால் கடல் போல் - ஒலிக்கும் பாற்கடல்போல, புறத்து அமுதம் நீர் அகழும் - புறத்தில் அமுதமயமாகிய நீர்நிறைந்த அகழியும், பொலம் செய் ஞாயில் சூழ்புரிசையும் - பொன்னாற்செய்த வறுப்புகளமைந்தமதிலும், பொன்செய்கோபுரமும் - பொன்னாற்செய்த கோபுரங்களும், நலம் கொள் பூ இயல் வீதியும் - அழகுமிக்க பொலிவமைந்த வீதிகளும், நவமணிகுயின்ற துலங்குமாளிகை பந்தியும் - ஒன்பதுவகை இரத்தினங்களையுமிழைத்துவிளங்காநின்ற உபரிகையின் வரிசைகளும், சூளிகை நிரையும் - அவற்றினிறப்பின்வரிசைகளும். (௩௬)

ஐம்புலன்களும்வைகலும்விருந்ததாவருந்த
வெம்புநால்வகையுண்டியும்வீணையுஞ்சாந்துஞ்
செம்பொனாரமுமாடலின்செல்வமுந்தெய்வப்
பைம்பொன்மேகலையோவியப்பாவையொப்பாரும்.

(இ-ள்.) ஐம்புலன்களும் - பஞ்சேந்திரியங்களும், வைகலும்-நாள்தோறும், விருந்தது ஆக அருந்த - விருந்தாகவுண்ண, வெம்பு நால்வகை உண்டியும் - சிகையயுள்ள நால்வகையுணவும், வீணையும் - வீணையிசையும், சாந்தும்-கலவைச்சந்தனமும், செம்பொன் ஆரமும் - செவந்தபொன்னாற்செய்த ஆரங்களும், ஆடலின்செல்வமும் - பரதநாட்டியச்செல்வங்களும், தெய்வம் - தெய்வத்தன்மையையுடைய, பைம்பொன்மேகலை - பசியபொன்னாற்செய்த மேகலையையணிந்த, ஓவியப்பாவை ஒப்பாரும் - சித்திரப்பதுமையையொத்த பெண்களும் (உள்ளன.)

ஐம்புலன்களாவன - மெய், வாய், கண், மூக்கு, செவி, மெய்யால் நுகரும் பொருள் ஓவியப்பாவையொப்பார். வாயால் நுகரும்பொருள் நால்வகையுண்டி. கண்ணால் நுகரும்பொருள் செம்பொனாரம். ஆடலின்செல்வம். மூக்கால் நுகரும்பொருள் சாந்து. செவியால் நுகரும்பொருள் வீணை. மிகுதியால் அஃறிணை முடிபுதந்தாம். (௩௭)

படர்ந்தவார்சடையுருத்திரர்பணைத்திறுமாந்த
வடங்கொள்பூண்முலையுருத்திரமகளிரோடமரு
மிடங்கொண்மாளிகைப்பந்தியுமிகல்வினைதுன்பங்
கடந்தசெல்வமுங்கவலையில்போகமுங்காட்டி.

(இ-ள்.) படர்ந்த வார் சடை உருத்திரர் - பரவிய நீண்டசடையையுடைய உருத்திரர்கள், பணைத்து இறுமாந்த வடம் பூண் கொள் முலை உருத்திர மகளிரோடு அமரும் - பெருத்து இறுமாந்த முத்துவடமாகிய ஆபரணத்தையணிந்த தனங்களையுடைய பெண்களோடுவசிக்கும், இடம் கொள் மாளிகை பந்தியும் - இடம்பரந்த உபரிகையின் வரிசையையும், இகல் வினை துன்பம் கடந்த செல்வமும் - பகைமையும் (பிராரத்வினையும்) துன்பமுமொழிந்த செல்வத்தையும், கவலை இல் போகமும் - கவலையில்லாத போகங்களையும், காட்டி - (தனித்தனி) காண்பித்து. (௩௮)

முண்டகாசனன்பதமிதுமுவுலகளந்த
தண்டுழாயவன்புரமிதுதனிமுதல்வடிவங்

Koviloor Digital Library

கொண்டுவீறுசாலுருத்திரர்கோப்பதியின்ன
வெண்டிசாமுகங்காவலருறைவிடமிவைகாண்.

(இ-ள்.) முண்டகாசனன் பதம் இது - பிரமன்வாழும் பதமிது, மூவுலகு அளந்த தண்துழா யவன் புரம் இது - மூன்றுலகங்களையு மளந்த தண்ணிய துழாய்மாலையணிந்த திருமால்வாழும் பதமிது, தனி முதல் வடிவம் கொண்டு - ஒப்பற்ற சிவபிரான் திருவுருவங்கொண்டு, வீறு சால் உருத்திரர் கோபதி இன்ன - பெருமைமிக்க உருத்திரர்கள் வசிக்கும் அரசத்தன்மையுடைய பதியிவை, எண் திசா முகம் காவலர் உறை விடம் இவை காண் - எட்டுத்திசைகளையுங் காக்கும் இந்திரன்முதலிய திக்குப்பாலகர் வசிக்குமிடங்க ளிவையாம்.

சிவபுரத்தின் தென்றிசைவாயிலில் பிரமனும், வடதிசை வாயிலில் திருமாலும் உருத்திரரும் வசித்தலால் முண்டகாசனன்பதமிது உருத்திரர் கோப்பதி இன்ன என்றார். "வியன்கமலத்தயன்றென்பால்விரவ எனவும், உத்தரத்திற்றிருமாலுமுருத்திரரும்பரிதியருமுள்ளாரன்றே" எனவரும் விதுக்களாலுணர்க. (௩௯)

புலருமுன்புனலாடிநீறுடிநம்புனித
னிலகுமாலயம்விளக்கிநந்தனப்பணியியற்றி
மலர்கொய்தாய்ந்தனர்தொடுத்தரன்புகழ்செவிமடுத்திவ்
வுலகவாணராய்ப்போகமுற்றுறைகுநரிவர்காண்.

(இ-ள்.) புலரு முன் புனல் ஆடி - விடியுமுன் நீராடி, நீறு ஆடி-(விதிப்படி) விபூதியணிந்து, நம் புனிதன் இலகும் ஆலயம் விளக்கி - நமதுபெருமான் எழுந்தருளிவிளங்குந் திருக்கோயிலுக்குத் திருவலகிட்டு, நந்தனம் பணி இயற்றி - நந்தவனத்திருப்பணிசெய்து, மலர் கொய்து ஆய்ந்தனர் தொடுத்து - மலர்கொய்து ஆராய்ந்து தொடுத்து, அரன் புகழ் செவி மடுத்து - சிவபெருமான் திருப்புகழைத்தமது காதிற்றேக்கி, இ உலக வாணர் ஆய் - இந்நிலவுலக வாசிகளாய், போகம் உற்று உறைகுநர் இவர் காண் - (இறுதியிலிங்கு) போகம் நுகர்ந்து வசிப்பவர்கள் இவர்கள் பாராய்.

தாதமார்க்கமாகிய சரியையைச் செய்தோரை யிங்குக் கூறினார் "தாதமார்க்கஞ்சாற்றிற்சங்கரன்றன்கோயிற் - றலமலகிட்டிலகுதிருமெழுக்குஞ்சாத்திப்- போதுகளுங்கொய்துபூந்தார்மாலைகண்ணி புனிதற்குப்பலசமைத்துப்புகழ்ந்துபாடித்-தீதிருவிளக்கிட்டுத்திருநந்தவனமும் செய்து திருவேடங்கண்டாலடியேன்செய்வ - தியாதுபணியீரென்றுபணிந்தவர்தம்பணியுமியற்றுவதிச்சரியைசெய்தோரீசனுலகிருப்பர்" எனவரும் விதுவாலுணர்க. (௪௦)

தூயராகியைஞ்சுத்திசெய்தகம்புறமிரண்டி
னேயராய்விதிநெறியினான்முகமனீரெட்டாற்
காயம்வாய்மனவொருமையாலர்ச்சித்துக்கடவு
ளுயனாருகுறைபதநண்ணினாரிவர்காண்.

(இ-ள்.) தூயர் ஆகி - புனிதமுடையவராகி, ஐஞ் சுத்தி செய்து - பஞ்சசுத்திசெய்து, அகம் புறம் இரண்டின் நேயர் ஆய் - உள்ளும் புறம்புஞ் சிவநேயமுடையவராய், விதி நெறியின் ஆல் - ஆகமவிதிமுறையாலும், முகமன் ஈரெட்டால்-சோடசவுபசாரத்தாலும், காயம் வாய் மனம் ஒருமையால் - மனவாக்குக்காயங்களின்

Koviloor Digital Library

ஒருப்பாட்டாலும், அர்ச்சித்து-அருச்சனைசெய்து, கடவுள் நாயனார் அருகு உறை பதம் - எல்லாக்கடவுளர்க்கும் இறைவராகிய சோமசுந்தரக்கடவுளின் பக்கலில் உள்ள சாமீபத்தை, நண்ணினார் - அடைந்தவர்கள், இவர் காண் - இவர்கள்காணாய்.

பஞ்சசுத்தியாவன - பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி,இலிங்கசுத்தியாம். பூதசுத்தியாவது - தத்துவங்கள் நாமல்ல அவை சடமென்றுணர்தல்; ஆன்மசுத்தி - அவ்வாறுணர்தல் ஆன்மபோதத்தாலன்று திருவருளாலென் றுணர்தல்; திரவியசுத்தி - ஆன்மாவுக் குணர்வில்லையென்றுணர்ந்து கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியும் பொருள்முற்றும் திருவருளென்றுணர்தல்; மந்திரசுத்தி - ஸ்ரீபஞ்சாக்கரத்தை முறைப்படி மாறி யுச்சரித் ததனுண்மையுணர்தல்; இலிங்கசுத்தி - அநாதிமுத்தசித்துருவாகிய சிவம் பசுபாசங்களிற் பிரிவறநின்று அவற்றைச் சேட்டிப்பிக்குந் தன்மையுணர்ந்து அச்சிவம் இலிங்கத்தினு மெழுந்தருளி யிருக்குமென் றுணர்தல். அகம்புறமிரண்டினையுமாய் என்றது அகத்தொழில் புறத்தொழி லிரண்டினு மன்புடையர் எனக்கொள்க. சோடசவுபசாரம் என்றது முன்னர்க்காண்க. புத்திரமார்க்கமெனிய கிரியையை இங்குக் கூறினார். "புத்திரமார்க்கம்புகலிற்புதியவிரைப்போது புகையொளிமஞ்சனமமுதமுதல்கொண்டைந்து - சுத்திசெய்தாசனமூர்த்தி மூர்த்திமானாஞ்சோதியையும் பாவித்தாவாகித்துச்சுத்த - பத்தியினலருச்சித்துப்பரவிப் போற்றிப் பரிவினொடுமெரியில்வருகாரியமும்பண்ணி - நித்தலுமிக்கிரியையினையியற்றவோர்கள் நின்மலன்றனருகிருப்பர்நினையுங்காலே." எனவரும் அதுவால் உணர்க.

கிளர்ந்தகாலினாலங்கியைநிமிர்த்துமேற்கிடைத்து
வளர்ந்தபிங்கலையிடைநடுவழியுகுமதியின்
விளைந்தவின்னமுதுண்டுநம்விடையவன்வடிவங்
குளந்தனிற்குறித்தவனுருக்கொண்டவரிவர்காண்.

(இ-ள்.) கிளர்ந்த காலின் ஆல் - மேலெழுந்த பிராணவாயுவால், அங்கியை நிமிர்த்து - (இதயகமலத்தில் சஞ்சரிக்கும்) அக்கினியை மேலேயெழுப்பி, மேற்கிடைத்து - மேற்சென்று, வளர்ந்த இடை பிங்கலை நடு வழி - குன்றாத இடைகலை பிங்கலைக்கு நடுவிலுள்ள சுழுமுனையின்வழியாக, உகும் - சிந்தாநின்ற, மதியின் விளைந்த இன் அமுது உண்டு - சோமமண்டிலத்தில் விளைந்த இனிய அமுதபானம்பண்ணி, நம் விடையவன் வடிவம் - நமது சிவபெருமான் திருவுருவத்தை, குளம் தனில் குறித்து - லலாட தானத்திற் சிந்தித்து, அவன் உருக் கொண்டவர் இவர்காண் - அவனது சாரூப்பியத்தையடைந்தவ ரிவர்கள் பாராய்.

இந்திரியங்களை யொடுக்கி இடைகலையால் வாயுவை இரேசித்துப் பதினாறுமாத்திரையளவு பூரித்து அறுபத்து நான்கு மாத்திரையளவு கும்பித்த அவ்வாயுவைப் பிங்கலையால் அறுபதுமாத்திரையளவு இரேசித்துச் சுழுமுனையிற் செலுத்துதலால் கிளர்ந்தகாலினால் எனவும், உடலமத்தியில் அக்கினிமண்டிலமாதலின் வன்னிபீசத்தால் அவ்வக்கினியைத் தோய்தலால் அங்கியை நிமிர்த்து எனவும், நாசிநுனியிற் செல்லவேண்டுதலால் மேற்கிடைத்து எனவும், அதுவே சந்திரவிம்பமாதலால் அமுதாரங்களையுந் தெரிசித்து அதன்வழிச்சிந்தும் அமுதினைப் பருகவேண்டுதலால் நடுவழியுகுமதியின்விளைந்தவின்னமுதுண்டு எனவுங் கூறினார். "சகமார்க்கம்புலனொடுக்கித் தடுத்துவளியிரண்டுஞ்சலிப்பற்றுமுச்சதாமுதலாதாரங்கள், அகமார்க்கமறிந்தவற்றினரும்பொருள்களுணர்ந்தங் கணைந்துபோய்மேலேறியலர்மதிமண்டிலத்தின், முகமார்க்கவமுதுடலமுட்டத்தேக்கிமுச்சோதிநினைந்திருத்தன்முதலாகவினைகள், உக

மார்க்கவட்டாங்கயோகமுற்று'முழத்தலுழந்தவர்சிவன்றனுருவத்தைப்பெறுவர்" எனவரும் ஏதுவால் சகமார்க்கமாகிய யோகத்தினிலையையுணர்க. (சஉ)

முக்கணாயகன்பொருட்டெனவேள்விகண்முடித்துத்
தொக்கவேதியரிவர்புனற்சாலையித்தொடக்கத்
தக்கபேரறம்புகழ்பயன்றமைநன்குமதிக்கும்
பொக்கமாறியநிராசையாற்புரிந்தவரிவர்காண்.

(இ-ள்.) முக் கண் நாயகன் பொருட்டு என - திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் பிரீதியாக, வேள்விகள் முடித்து - யாகங்களைச்செய்துமுடித்து, தொக்க வேதியர் இவர் - சிவபதம் அடைந்த அந்தணர்களிவர்கள், புனல் சாலை இத் தொடக்கம் தக்க பேர் அறம் - தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலிய தகுந்த பெரிய புண்ணியங்களை, புகழ் பயன் தமை நன்கு மதிக்கும் - புகழையும் பயன்களையு நன்குமதித்துச்செய்யும், பொக்கம் மாறிய நிராசையால் - குற்றம் நீங்கிய நிராசையோடு, புரிந்தவர் இவர் காண் - செய்தவர்களிவர்கள் பாராய்.

புகழையும் பயனையுங் கருதிச்செய்யும் புண்ணியம் ஆரவாரங்கருதியதாதலால் பொக்கமாறியஎனவும், இவற்றைக்கருதாது சிவபிரீதியாகச்செய்தல் நிராசையாதலால் நிராசையாற்புரிந்தவர் எனவுங்கூறினார். ஆறுருபு உடனிகழ்ச்சிக்கண்ணது.

மறையினாற்றினாற்றந்திரமரபினான்மெய்யி
னிறையுநீற்றினர்நிராமயனிருத்தனைந்தெழுத்து
மறையுநாவினர்பத்தராயரன்புகழ்கேட்கு
முறையினாலிவர்வினைவலிமுருக்கினர்கண்டாய்.

(இ-ள்.) மறையின் ஆற்றினால் - வேதநெறியாலாவது, தந்திரம் மரபினால் - ஆகமவிதியினாலாவது, மெய்யில் நிறையும் நீற்றினர் - தமது உடம்பிலணிந்த விபூதியையுடையவரும், நிராமயன் - நோயில்லாதவனாகியும், நிருத்தன் - (ஆன்மாக்களுய்யும்பொருட்டு) இருவகைநடனங்களை யுடையவனாகியு முள்ள சிவபெருமானது, ஐந்து எழுத்தும் - ஸ்ரீபஞ்சாக்கரத்தையும், அறையும் நாவினர் - (முறைப்படி) உச்சரிக்கும் நாவையுடையவருமாய், பத்தர் ஆய் - சிவபெருமானுக்கு அடியவராகி, அரன் புகழ் கேட்கும் முறையினால் - அச்சிவபெருமான் திருப்புகழைக்கேட்கு முறைமையினால், இவர் வினை வலி முருக்கினர் - இவர்கள் வினையின்வன்மையைக் கெடுத்தவர்கள், கண்டாய் - காணாய். (சச)

மறைகளின்சதவுருத்திரமந்திரநவின்றோர்
நிறைகொள்கண்டிகைநீறணிநீரரியாரேனுங்
குறிகுணங்குலன்குறித்திடாதன்பனாச்சிவனென்
றறியுமன்பினாற்பிறவிவேரறுத்தவரிவர்காண்.

(இ-ள்.) மறைகளின் சதவுருத்திர மந்திரம் - வேதங்களிலுள்ள சதவுருத்திரமந்திரத்தை, நவின்றோர் - உச்சரித்த, நிறை கொள் கண்டிகை நீறு அணி - சிவபுண்ணியமமைந்த உருத்திராக்ஷகண்டிகையையும் திருநீற்றையும்அணிந்த, நீரர் - தன்மையையுடையோர், யாரேனும் - எவராயிருப்பினும், குறி குணம் குலன் குறித்திடாது - அவர்கள் பெயரையும் குணத்தையுஞ் சாதியையுங் குறியாது, அன்பனா

Koviloor Digital Library

சிவன் என்று அறியும் அன்பினால்-அடியவனைச் சிவனேயென்றுணரும் அன்பினால், பிறவி வேர் அறுத்தவர் - பிறவியின் வேரை யறுத்தவர்கள், இவர் காண் - இவர்கள் பாராய்.

வேதங்கள் பிரமன்முதல் சதாசிவமீறாக முறையே யேற்றங் கூறுவதால் அவற்றுள் நடுக்கண்டமான சதவுருத்திரமனுக்களை யோககாமத்தால் உருத்திரகணங்களைச் சங்காரக்கிரமத்தின்வைத்து அதிதசிவபரியந்தம் வரைப்படுத்திக் கூறுதல் சதவுருத்திரமந்திரமாதலால் மறைகளின் சதவுருத்திரமந்திரம் என்றார். (சரு)

ஆனஞ்சாடியபரஞ்சுடரிறைசிவஞான
தானஞ்செய்தவர்தருப்பணஞ்செய்தவர்சாம
கானஞ்செய்தவற்காலயங்கண்டுதாபித்தோ
ரூனஞ்சேர்பிறப்பறுத்துவாழுத்தமரிவர்காண்.

(இ-ள்.) ஆன் அஞ்சு ஆடிய பரஞ் சுடர் இறை சிவஞான தானம் செய்தவர் - பஞ்சகவ்வியமாடிய சிவபெருமானுடைய சிவஞானதானஞ் செய்தவரும், தருப்பணம் செய்தவர் - தருப்பணஞ் செய்தவரும், சாம கானம் செய்தவற்கு - சாமகானம் பாடும் சிவபிரானுக்கு, ஆலயம் கண்டு தாபித்தோர் - ஆலயத்தைச் சிற்பநூல் விதிவழிதாபித்தவரும் ஆய், ஊனம் சேர் பிறப்பு அறுத்து வாழ் உத்தமர் - குற்றமடைந்த பிறப்பினை யொழித்துவாழும் நல்லோர், இவர்காண் - இவர்கள் பாராய்.

சிவஞானமாவது பரஞானம், அபரஞானம் என இருவகைப்படும். பரஞானம் சிவனோடிரண்டற்று அபேதரூபமாயிருத்தல். அபரஞானமாவது காமிகமுதலிய திவ்வியாகமங்கள். சிவஞானதானமாவது ஆகமத்தி னுண்மையைப் பக்குவர்க்குக் கூறுதலும், ஆகமம் தருதலும், அதனை யெழுதற்கு அலேகந்தருதலுமுதலியன. தருப்பணம் சிவப்ரீதியாகத் தருப்பணஞ்செய்தல். (சசு)

சிவனையர்ச்சனைசெய்பவர்க்கிசைவனசெய்தோ
ரவனெனக்குறித்தடியவரைப்பூசைசெய்தாறு
சுவையயின்னமுதருத்தினோர்தொண்டர்தம்பணியே
தவமெனப்புரிந்துயர்ச்சியைச்சார்ந்தவரிவர்காண்.

(இ-ள்.) சிவனை அர்ச்சனை செய்பவர்க்கு - சிவபெருமானை யருச்சிப்பவர்க்கு, இசைவன செய்தோர் - இசையுங்காரியங்களைச் செய்துவந்தவரும், அடியவரை அவன் எனக்குறித்து - அடியவரை யச்சிவபெருமானே யென்றுகருதி, பூசைசெய்து - பூசனைசெய்து, ஆறுசுவைய இன் அமுது அருத்தினோர் - அறுசுவையமைந்த இனிய உணவையுண்பித்தவருமாய், தொண்டர்தம்பணி தவம் எனப்புரிந்து-சிவனடியவர்க்குச்செய்யுங் குற்றேவலே பெருந்தவமென்று விரும்பிச்செய்து, உயர்ச்சியைசார்ந்தவர் - உயர்ச்சியையடைந்தவர்கள், இவர்காண் - இவர்கள்பாராய். (சஎ)

ஆதிசுந்தரக்கடவுளுக்காலயம்பிறவு
நீதியாலருச்சனைபிறபணிகளுநிரப்பிப்
பூதிசாதனவழிநிலம்புரந்திவணடைந்த
கோதிலாதநின்குடிவழிக்கோற்றவரிவர்காண்.

(இ-ள்.) ஆதி சுந்தரக்கடவுளுக்கு - (எல்லாக்கடவுளர்க்கும்) முதல்வராகிய சோமசுந்தரக்கடவுளுக்கு, ஆலயம் பிறவும் - ஆலயமு மற்றுள்ளனவும், நீதியால்

Koviloor Digital Library

அருச்சனை - முறைப்படி அருச்சனைகளும், பிறபணிகள் உம் - ஏனைத்திருப்பணிகளு மாகிய இவைகளை, நிரப்பி-முட்டின்றிமுடித்து, பூதிசாதனம் வழி - திருநீற்றையும் ஸ்ரீபஞ்சாக்கரத்தையு முறைப்படிகொண்டு, நிலம் புரந்து - நிலவுலகினைக்காத்து, இவண் அடைந்த கோது இல்லாத நின்குடிவழிகொற்றவர் - இச்சிவலோகமடைந்த குற்றமில்லாத நின்னுடைய குடியிற்ருேன்றிய அரசர்கள், இவர்காண் - இவர்கள் பாராய். (௪அ)

என்றுவேத்திரங்கொடுகுறித்தெம்மிறைநந்தி
கொன்றைவேணியனடியர்தங்குழாத்தினைத்தேற்றி
நின்றுவீழ்ந்துவீழ்ந்தஞ்சலிமுகிழ்த்திடநெறியே
சென்றுவானவர்நாயகன்றிருமுன்புவிடுத்தான்.

(இ-ள்.) என்று - என்றுகூறி, வேத்திரம் கொடு குறித்து - பிரம்பாற்சுட்டி, எம் இறை நந்தி - எமது இறைவராகிய நந்திநாயனுர், கொன்றைவேணியன்-கொன்றைமாலையையணிந்த சடாமுடியையுடைய சிவபெருமானது, அடியர்தம் குழாத்தினை தேற்றி - அடியவர்கூட்டத்தி னியல்பைவிளக்கி, நெறியே நின்று வீழ்ந்து வீழ்ந்து அஞ்சலி முகிழ்த்திட - முறைவழியே வரகுணனின்று தண்டாகாரமாகவீழ்ந்து வீழ்ந்து கைகூப்ப, சென்று - (அந்நந்திநாயனுர்) சென்று, வானவர் நாயகன் திருமுன்புவிடுத்தான் - தேவதேவனுகிய சிவபெருமான்சந்நிதியில் (அவ்வரகுணனை) செலுத்தினுர்.

பிரமன் முதலாகப் பாண்டியரீருக அங்குவசிப்பவர்கள் சிவனடியவர்களாதலால் அடியர்தங்குழாத்தினைத்தேற்றியென்ருர். (௪௯)

மறைகளாகமம்வடிவெடுத்திருபுடைவாழ்த்த
நறைகொள்யாழ்தழீஇத்தும்புருநாரதர்பாட
வறைகொள்வண்டிமிர்கொம்பரினரம்பையராடக்
குறைகொள்வானவர்பதங்கிடையாதிறைகொள்ள.

(இ-ள்.) மறைகள் ஆகமம் வடிவு எடுத்து இரு புடை வாழ்த்த - வேதங்களும் ஆகமங்களும் உருவங்கொண்டிருபால்களினும் நின்று வாழ்த்தவும், நறைகொள் யாழ் தழுவி - இனிய இசையமைந்தவீணையை யிடப்பால் தழுவி, தும்புரு நாரதர் பாட - தும்புருவும் நாரதரும் ஒருபால் நின்று பாடவும், அறைகொள் வண்டு இமிர் கொம்பரின் - இசைபாடும் வண்டுகளொலிக்கும் பூங்கொம்பைப்போல, அரம்பையர் ஆட - அரம்பையர்கள் ஒருபால் ஆடவும், குறை கொள் வானவர் - குறையிரக்குந் தேவர்கள், பதம் கிடையாது இறை கொள்ள - சமையம்பெருது ஒருபால் தங்கவும். (௫0)

மதங்கவிழ்க்குமால்வரைமுகமைந்தனுஞ்சூரன்
கதங்கவிழ்த்தவேற்கந்தனுங்கருதலன்வேள்வி
விதங்கவிழ்த்தவாள்வீரனும்வெயின்முடித்தார்தேன்
பதங்கவிழ்ப்பவீழ்ந்தேயினபணிவழிநிற்ப.

(இ-ள்.) மதம் கவிழ்க்கும் மால் வரை முகம் மைந்தனும் - மதத்தைச் சிந்தும் யானைமுகக்கடவுளும், சூரன் கதம் கவிழ்த்தவேல் கந்தனும்-சூரபன்மனுடையகோபத்தைக் கெடுத்த வேலையேந்திய முருகக்கடவுளும், கருதலன் வேள்வி விதம்

Koviloor Digital Library

கவிழ்த்த வாள் வீரரும் - தக்கனுடையயாக வகையைச் சிதைத்த வாளையேந்திய வீரபத்திரக்கடவுளும், வெயில் முடி தார் தேன் பதம் கவிழ்ப்ப வீழ்ந்து - விளங்குங் கிரீடத்திலணிந்த மாலையானது தேன்சிந்த வீழ்ந்து வணங்கி, ஏயின பணி வழி நிற்ப - ஏவினதிருப்பணியின் வழியில் ஒருபால் நிற்கவும். (௩௧)

தூங்குதானையையொதுக்கிவாய்துணைக்கரம்பொத்தி
யோங்குமாலயன்றங்குறையொதுங்கிநின்றுரைப்ப
வாங்குவான்சிலையிந்திரன்முதற்றிசைவாணர்
தாங்கடாம்புரிகாரியக்குறைநின்றுசாற்ற.

(இ-ள்.) தூங்கு தானையை ஒதுக்கி - முன்அசையும் ஆடையை யொருபுறம் ஒதுக்கி, வாய் துணைக்கரம் பொத்தி - தமது வாயை இரண்டுகைகளாலு மமைத்து, ஓங்கும் மால் அயன் - (எல்லாத் தேவர்களிலும்) உயர்ந்த திருமாலும் பிரமனும், தம் குறை ஒதுங்கி நின்று உரைப்ப - தமது குறைபாடுகளை ஒருபால் ஒதுங்கித் தாழ்ந்துநின்று கூறவும், வாங்கு வான் சிலை இந்திரன் முதல் திசை வாணர் - வளைந்த இந்திரதனுசேந்திய இந்திரன்முதலிய திக்குப்பாலகர்கள், தாங்கள் தாம் புரி காரியம் குறை - தாங்கள் செய்யுங் காரியங்களிலுள்ள குறைபாடுகளை, நின்று சாற்ற - ஒருபால் நின்று கூறவும். (௩௨)

எழுவினோடுதண்டேந்திவாய்மென்றெயிறதுக்கிக்
குழுமுபாரிடத்தலைவருங்கோடிகூற்றொதுங்கி
விழுமமுழ்கிமெய்பனித்திடவிதிர்க்குமுக்குடுமிக்
கழுமுனேந்தியகணத்தவர்கடைதொறுங்காப்ப.

(இ-ள்.) எழு வின் ஓடு தண்டு ஏந்தி - வளைதடியினோடு தண்டாயுதத்தையு மேந்தி, வாய் மென்று எயிறு அதுக்கி - வாயினைமென்று பற்களையதுக்கி, குழுமு பாரிடம் தலை வரும் - நெருங்கிய பூதகணத்தலைவரும், கோடி கூற்று ஒதுங்கி விழுமம் மூழ்கி மெய் பனித்திட - அளவில்லாத இயமர்கள் அஞ்சி யொதுங்கித் துன்பத்தி லழுந்தி யுடல்நடுங்க, விதிர்க்கும் முக்குடுமி கழு முன் ஏந்திய கணத்தவர் - அசைக்கு மூன்று சிகையையுடைய சூலத்தை யேந்திய சிவகணங்களும், கடை தொறும் காப்ப - வாயில்தோறுங் காத்தற்றொழில் பூண்டுநிற்கவும். (௩௩)

சித்தர்வானவர்தானவர்சாரணர்திணிதோள்
வைத்தயாழினர்கின்னரர்மாதவரியக்கர்
பைத்தபாரிடர்காருடர்பாதலவாணர்
சுத்தயோகியர்முதல்கணத்தொகையெலாம்பரவ.

(இ-ள்.) சித்தர் வானவர் - சித்தரும் தேவர்களும், தானவர் சாரணர் - அசுரரும் சாரணர்களும், திணி தோள் வைத்த யாழினர் - திண்ணிய தோளிற்சாத்திய வீணையையுடைய விஞ்சையரும், கின்னரர் மாதவர் இயக்கர் - கின்னரர்களும் பெரிய தபோதனர்களும் யக்ஷர்களும், பைத்த பாரிடர் - பரவிய பூதகணத்தலைவரும், காருடர் பாதலவாணர் - கருடர்களும் நாகலோகத்தவர்களும், சுத்த யோகியர் - களங்கமில்லாத யோகியர்களும், முதல் கணத்தொகை எல்லாம் பரவ - முதலிய ஆயவகைகளெல்லாம் (ஒருபால் நின்று) வணங்கவும். (௩௪)

Koviloor Digital Library

இனிவரும்பிறப்பறுத்தெமைக்காத்தியாலெனத்தங்
கனிவரும்பியவன்பெழுகருணையாரமுதைப்
பனிவருந்தடங்கண்களாற்பருகிமெய்பனிப்ப
முனிவர்சங்கரசிவசிவவெனமுறைமுழங்க.

(இ-ள்.) இனி வரும் பிறப்பு அறுத்து எம்மை காத்தி என - இனி வராநின்ற மறுமையை யொழித்து எம்மைக் காப்பாயென்று, தம் கனிவு அரும்பிய அன்பு எழு - தமது கனிந்த அன்பென்றும்வெள்ளத்தில் எழுந்த, கருணை ஆர் அமுதை - அருணிறைந்த சிவமாகிய அமுதினை, பனிவரும் தடங் கண்களால் பருகி - ஆனந்த பாஷ்பஞ் சிந்தும் பரந்த தமது கண்களாகிய வாயாற்பருகி, மெய் பனிப்ப - உடல் கம்பிக்க, முனிவர் சங்கர சிவசிவ என மறை முழங்க - முனிவர்கள் சங்கர சிவசிவ வென்று (ஒருபால்) வேதகோஷஞ் செய்யவும். (௫௫)

வரந்தவாதனயாவர்க்கும்வரன்முறைவழங்கி
முருந்தவாநகைமலைக்கொடிமுகிழ்நகையரும்பத்
திருந்தவாயிரங்கதிர்விடுசிங்கமெல்லணைமே
லிருந்தநாயகனிருக்கைகண்டிறைஞ்சினனிறைவன்.

(இ-ள்.) வரம் தவாதன - தாம் அருளும் வரங்கள் பிறழாமல், யாவர்க்கும் வரன் முறை வழங்கி - எவர்க்கு முறையாகத் தந்தருளி, முருந்து அவாம் நகை மலைக்கொடி முகிழ் நகை அரும்ப - மயிலிறகினடியை நட்புக்கொண்ட தந்தபந்திகளையுடைய உமாதேவியார் (இடப்பாலில்) புன்னகை செய்தருள, திருந்த ஆயிரம் கதிர் விடு - முறைமுறையாக எல்லையில்லாத கிரணங்களை வீசும், சிங்கம் மெல் அணைமேல் - சிங்கத்தாற் சுமக்கும் மெல்லிய ஆசனத்தின்மேல், இருந்த நாயகன் இருக்கை கண்டு, எழுந்தருளிய சிவபெருமானது இருப்பினைத் தரிசித்து, இறைவன் இறைஞ்சினன் - வரகுணபாண்டியன் வணங்கினன்.

அவரவர்தகுதிக்கேற்ப அருளுதலால் பிறழாமல் என்றும். தவாதன முற்றெச்சம். (௫௬)

உரைகளுந்தடுமாறமெய்யுரோமமுஞ்சிலிர்ப்பக்
கரையிறந்தவின்னருட்பெருங்கடலிலன்பென்னுந்
திரையிறந்தவாறீர்த்திடமிதந்துபோய்ச்செப்பின்
வரையிறந்தவானந்தவாரமுதைவாய்மடுத்தான்.

(இ-ள்.) உரை கள் தடு மாறவும் - தான் பேசுஞ்சொற்கள் (நாத்தழு தழுத்தலால்) தடுமாறவும், மெய் உரோமம் சிலிர்ப்பவும் - உடம்பில் உரோமங்கள் புளகிக்கவும், கரை இறந்த இன் அருள் பெருங்கடலில் - கரைகடந்த அருளாகிய பெரியகடலில், அன்பு என்னும் திரை இறந்த ஆறு ஈர்த்திட - அன்பாகிய அலையொழிந்த நதியானது (தன்னை) இழுத்துச் செல்ல, மிதந்து போய் - அந்நதியில் மிதந்து சென்று, செப்பின் வரை இறந்த ஆநந்த ஆர் அமுதை - சொல்லளவையைக்கடந்த பேரின்பமாகிய அரிய அமுதை, வாய் மடுத்தான் - தேக்கெறியப்பருகினன்.

சிவபெருமான் திருவருளாற் சிவநேயம் விளைதலால் அருட்பெருங்கடலில் என முன்னும், அதனால் விளைந்த சிவநேயம் சலனமின்றி நிலைபெறவேண்டுதலால் திரையிறந்தவாறு எனப் பின்னும், அதனாற் பருகுவது சிவபோகம் ஆதலால் ஆநந்த

Koviloor Digital Library

வாரமுது என அதன் பின்று முறைப்படக் கூறினர். " அவனருளாலே யவன்றாள் வணங்கி " எனவரும் எதுவால் உணர்க. சிவபெருமான் திருவருள் எல்லையின்றி யிருத்தலால் அருட்பெருங்கடல் எனவும், கடலிற்சென்று பாய்தல் ஆறுதலால் அன் பென்னும் ஆறெனவும், கடலில் விளையும் விழுப்பொருள் அமுதாதலால் ஆநந்தவா ரமுதெனவும் மிகைகுறையின்றிச் சமனாக உருவகஞ் செய்தலால் அவையவி யுரு வகவணி. (௫௭)

தன்புலன்களுங்கரணமுந்தன்னவேயாக்கி
யன்புடம்புகொண்டவனெதிருட்சிவலோகம்
பின்புபண்டுபோன்மதுரையாப்பிராட்டியுந்தானு
முன்பிருந்தவாறிருந்தனன்சுந்தரமூர்த்தி.

(இ-ள்.) தன் புலன்களும் கரணமும் தன்னவே ஆக்கி - தனது இந்திரியங் களையும் அந்தக்கரணங்களையும் தன்னுடையனவாகவே செய்து, அன்பு உடம்பு கொண்டவன் எதிர்-அன்பே யொருசரீரமாகக்கொண்டுநின்ற வரகுணபாண்டியனுக் கெதிரே, அருள் சிவலோகம்-அருள்வடிவாகிய சிவபுரமானது, பின்பு பண்டு போல் மதுரையாக - பின்னர் முன்புபோல மதுரையாக, சுந்தரமூர்த்தி-சோமசுந்தரக்கட வுள், தானும் பிராட்டியும் முன்பு இருந்த ஆறு இருந்தனன் - தானும் அங்கயற்க ண்ணியாருமாக முன்னிருந்த வண்ணமே யிருந்தருளினன்.

ஏனைய விடயங்களிற் செல்லாது புலன்களுங் கரணங்களும் அன்பின் வடி வாக நின்றன என்பார் புலன்களுங் கரணமுந் தன்னவே யாக்கி யென்றார். (௫௮)

வேந்தர்சேகரன்வரகுணன்விண்ணிழிகோயி
லேந்தல்சேவடியிறைஞ்சிநின்றிறையருட்பெருமை
யாய்ந்தவாவுதன்னகம்புகவின்பமோடன்பு
தோய்ந்துதாரைநீர்துளும்பநாக்குழறிட்துதிப்பான்.

(இ-ள்.) வேந்தர் சேகரன் வரகுணன் - அரசர்களுக்கு முடிபோன்ற வரகு ணபாண்டியன், விண் இழி கோயில் ஏந்தல் சேவடி இறைஞ்சி நின்று - விண்ணுல கினின்றும் இழிந்த இந்திரவிமானத்தி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுடைய செவந்த திருவடிகளைவணங்கிநின்று, இறை அருள் பெருமை - அவ்விறைவனுடைய திருவருட்பெருமையானது, ஆய்ந்து அவாவு தன் அகம் புக - ஆராய்ந்து விரும்புந் தனது மனத்தில் பிரவேசிக்க, இன்பம் அன்பு தோய்ந்து-பேரின்பத்திலும் சிவநே யத்திலுமழுந்தி, தாரை நீர் துளும்ப - கண்களில் ஆனந்தபாஷ்பம் ததும்பவும், நா குழறிட - நாக்குழறவும், துதிப்பான் - வணங்குவானாயினன்.

தாரைகண். அடைதற்கரிய சிவபெருமான் திருவருள் நாயிற்கடைப்பட்ட தன்பால் எளிவந்த பெருமை கனவுபோலத் தனக்குக் காணப்பட்டதால் ஆய்ந்த வாவு தன்னகம்புக எனவும், பசுகரணமொழிந்த சிவகரணமாய் ஆராயுந்தோறும் பேரின்பமோடு சிவநேயம் பெருகுதலால் இன்பமோடன்பு தோய்ந்து என்வும், பே ய்பிடிக்கப்பட்டவன்போல அவற்றின் மயமாய் நிற்றலால் நீர்துளும்ப நாக்குழறி ட எனவுங் கூறினர். ஓடு எண்ணிடைச்சொல். (௫௯)

கொச்சகக்கலிப்பா.

நாயினேனென்னைநடுக்கும்பழியகற்றித்
தாயினேராகித்தலையளித்தாய்தாள்சரணஞ்

Koviloor Digital Library

சேயினேன்காணச்சிவலோகங்காட்டிப்பின்
கோயினேர்நின்றவருட்குன்றேநின்றாள்சரணம்.

(இ-ள்.) நாயினேன் என்னை - இழிந்த நாய்போன்ற என்னை, நடுக்கும் பழி அகற்றி - வருத்தும் பிரமசாயையினின்று நீக்கி, தாயின் நேராகி - (கருணை செய்வதில்) தாயையொத்து, தலை யளித்தாய் தாள் சரணம் - தலையளிதந் தாண்டவனேயுன் திருவடிக்கு வந்தனம், சேயினேன் காண - உனக்கு அண்மையனல்லாத யானுங்கண்டு தரிசிக்க, சிவலோகம் காட்டி - சிவபுரத்தைக் காட்டியருளி, பின் - பின்னர், கோயில் நேர் நின்ற அருள் குன்றே - திருக்கோயிலில் என்னெதிர் நின்றருளிய திருபாமலையே, நின் தாள் சரணம் - உன் திருவடிக்கு வந்தனம்.

செய்யுளாரம். கருணையில் தாய்போல்பவன் என்பான் தாயினேராகி யெனவும், நின்னைத் தரிசிக்க அருகனல்ல னென்பான் சேயினேன் எனவும், யான் தரிசித்தற் கருகனல்லனாயினும் நீ என்பாற்செய்த அருள் பெரிதென்பான் அருட்குன்றே யெனவும் கூறினான். (௬0)

மாழாந்துசெய்யும்வினைவழிபோய்வன்னரகிற்
றாழாதடியனேற்கன்புதந்தாய்தாள்சரண
மேழாகிநான்குவகையாயெழுபிறப்பும்
பாழாகவென்னைப்பணிகொண்டாய்தாள்சரணம்.

(இ-ள்.) மாழாந்து செய்யும் வினை வழி போய் - மயங்கிச் செய்யும் வினை வழிச்சென்று, வல் நரகில் தாழாது - கொடிய நரகிலழுந்தாமல், அடியனேற்கு அன்பு தந்தாய் தாள் சரணம் - அடியனேனாகிய எனக்கு அன்புதந் தாண்டவனே யுன்திருவடிக்கு வந்தனம், ஏழாகி நான்கு வகையாய் எழு பிறப்பும் பாழாக - எழுவகைப்பட்டு நான்குவகையு ளடங்கிப் பரந்த பலபிறப்புகளும் என்னிடத்துப் பாழ்பட, என்னை பணி கொண்டாய் தாள் சரணம் - என்னைக் குற்றேவல் கொண்டோயுன் திருவடிக்கு வந்தனம்.

தன்னுடையனவல்லாத விடயங்களைத் தன்னுடையவாகக் கருதுதலால் மாழாந்து செய்யும் எனவும், அதனால் ஏறும் ஆகாமியம் மறுமைக்குக் காரணமாதலால் வினைவழிபோய் எனவும், தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுபிறப்பும் அண்டசம், சுவேதசம், சராயுசம், உற்பிசம் என்னும் நால்வகையு ளடங்குதலால் ஏழாகி நான்குவகையா யெழுபிறப்பும் எனவுங் கூறினான். (௬௧)

வெங்கட்பழியின்வினையேனைவேறாக்கித்
திங்கட்குலக்களங்கந்தீர்த்தாய்நின்றாள்சரண
மங்கட்சிவபுரமுண்டன்புடையார்க்கென்பதையின்
றெங்கட்குக்காட்டியிசைவித்தாய்தாள்சரணம்.

(இ-ள்.) வெங்கண் பழியின் - கொடியபழியினின்று, வினையேனை வேறாக்கி - இருவினைச்சிமிழ்ப்புடைய என்னை வேறுபடுத்தி, திங்கள் குலம் களங்கம் தீர்த்தாய் - எமது சந்திரமரபிற்கு நேர்ந்த குற்றத்தைத்தீர்த்தவனே, நின் தாள் சரணம் - உன் திருவடிக்குவந்தனம், அன்பு உடையார்க்கு - சிவநேயமுடையவர்க்கு, அங்கண் சிவபுரம் உண்டு என்பதை - அவ்விடத்துச் சிவபுரமுண்டு என்று ஆ

Koviloor Digital Library

கமங்கூறுவதை, இன்று எங்கட்கு காட்டி இசைவித்தாய் - இப்பொழுது எங்களுக்குக்காட்சியளவையாலுணர்த்தித் தெளிவித்தவனே, தாள் சரணம் - உன்திருவடிக்குவந்தனம்.

பாண்டியர்மரபு ஈடேறச் சவுந்தரபாண்டியராய்த் தேவரீர் முடிகவித்தரசாண்ட வுரிமையால் அம்மரபிற்கோர் பழிவராமற்காத்தல் உமதுகடமை என்பான் வினையேனைவேருக்கித் திங்கட்குலக்களங்கந்தீர்த்தாய் எனவும், அடியார்க்குச் சிவபுரம் உண்டென ஆகமம் வளவையாற் கூறப்படுவதை யுலோகாயதன்முதலியோர்மதம்பட இன்று என்போலியர்க்குக் காட்சியளவையா லுணர்த்தினையென்பான் எங்கட்குக்காட்டி யிசைவித்தாயெனவுங்கூறினான். (௬௨)

கலிநிலைத்துறை.

என்னவேத்தியின்னருண்முகந்தீறிலாவன்பாற்
பின்னர்வேறுபல்பூசையும்பிறக்குவித்திருந்தான்
மன்னரேறடையார்க்கொருமடங்கலேறடல்வேற்
றென்னரேறெனத்தோன்றியவரகுணதேவன்.

(இ-ள்.) என்ன ஏத்தி - என்றுதுதித்து, இன் அருள் முகந்து - இனியதிருவருளைவேண்டி யாங்கடைந்து, ஈறு இல்லாத அன்பால் - அளவிலடங்காதபேரன்பினால், பின்னர் - பின்பு, வேறுபல் பூசையும் பிறக்குவித்து இருந்தான் - பலவகைப்பட்ட பூசனைகளையும் விளங்கச் செய்வித்திருந்தனன், மன்னர் ஏறு - (அவன்யாரொன்னில்) அரசர்களாகியயானைகளுக்கு ஓராண்சிங்கம்போல்பவனும்; அடையார்க்கு ஒருமடங்கல் ஏறு - பகைவர்க்கோ ரிடியேறுபோல்பவனும், அடல் வேல் தென்னர் ஏறு என - கொலைத்தொழிலையுடைய வேலையேந்திய பாண்டியர்களுள் ஆண்சிங்கம்போல்பவனு மென்றுசொல்ல, தோன்றிய வரகுணதேவன் - அவதரித்தவரகுணதேவனென்னும்பாண்டியன்.

சிவபெருமானை மனமொருப்பட்டுத்துதித்தலால் அடையும்பேறு திருவருளாதலால் இன்னருண்முகந்து எனவும், பகைவருயிரைக் கவர்வோனாதலால் குவ்வுருபு பகைதொடர்பொருள்பட அடையார்க்கொருமடங்கலேறு எனவும், பாண்டியருட் சிறந்தவனாதலால் கூட்டிப்பிரித்தற் பொருள்படும் ஏழனுருபுதொக்குநிற்ப அடல்வேற்றென்னரேறெனத் தோன்றிய எனவுங்கூறினார். (௬௩)

என்றதென்மலைமுனிவனையிருடிகணோக்கி
யன்றுவாசவன்பழிகரிசாபமந்தணனைக்
கொன்றுதாயொடுங்கூடியகொடுவினைமுதலாத்
துன்றுபாவமுமதுரையிற்றொலைத்தனனன்றே.

(இ-ள்.) என்றதென் மலைமுனிவனை - என்றுகூறியருளிய அகத்தியமுனிவனை, இருடிகள் நோக்கி - முனிவர்கள்பார்த்து, அன்று-அக்காலையில், வாசவன் பழி - இந்திரனுடைய பிரமசாயையும், கரிசாபம் - வெள்ளையானையின்சாபமும், அந்தணனை கொன்று தாயொடுங்கூடிய கொடுவினைமுதலாக - தனதுபிதாவைக்கொன்று தாயொடுங்கலந்த மாபாதகன் பாதகமுமுதலாக, துன்றுபாவமும் - நெருங்கியபாவங்களியாவையும், மதுரையில் தொலைத்தனன் - (சோமசுந்தரக்கடவுள்) மதுரையிலேயேதொலைத்தருளினார்.

Koviloor Digital Library

பிறதலங்களிற்செய்த கொடும்பழிகளைத்தீர்த்தருளுவது இத்தலம் என்பது இதனுற்கூறப்பட்டது. (௬௪)

பரமனெண்குணன்பசுபதிவரகுணற்பற்றும்
பிரமவன்பழியிடைமருதிடைவிட்டுப்பெயர
வரமளித்தவாறென்னைகொல்வள்ளலேயிதனைத்
திரமுறப்புகலெமக்கெனமுனிவர்கோன்செப்பும்.

(இ-ள்.) பரமன் எண்குணன் பசுபதி - பரமனும் எட்டுக்குணங்களை யுடையவனும் பசுபதியுமாகிய சோமசுந்தரக்கடவுள், வரகுணன் பற்றும் பிரமவன்பழி-வரகுணனைப்பற்றிய வலியபிரமசாயை, இடைமருது இடைவிட்டுப்பெயர வரம் அளித்த ஆறு என்னைகொல் - திருவிடைமருதில் விட்டுநீங்க வரம் அருளியவகை யாது, வள்ளலே - (எங்கட்கு) அருட்கொடையாளராகிய முனிவரே, இதனை எமக்கு திரம் உற புகல் என்ன - இதனையெங்களுக்கு ஐயந்திரக்கூறி யருளாயென்றிரக்க, முனிவர்கோன் செப்பும் - அகத்தியமுனிவர் கூறியருளுகின்றார்.

ஆன்மாக்களுக்கு மோட்சந்தருபவன் என்பார் பரமன் எனவும், தன்வயத்தனுதல் முதலிய எண்குணங்களையுந் தனக்கே யுரிமையாகவுடையவன் என்பார் எண்குணன் எனவும், பிரமன்முதலியோர் ஆணவமலத்திற் சிமிழ்ப்புண்டு பரதந்திரராய் நிற்றலாலும் தான் அவ்வாறின்றிச் சுதந்திரனுய் நிற்றலால் அப்பசுக்களுக்கு இறைவனுவான் என்பார் பசுபதியெனவுங் கூறினர். (௬௫)

பூதநாயகன்சுந்தரன்புண்ணியமூர்த்தி
யாதலாலன்னதலத்துறைபடியவரஞ்சிப்
பாதகஞ்செயாதொழுகுறூஉம்படிநினைந்தினைய
தீதுறூஉம்பழிதனையிடைமருதினிற்றீர்த்தான்.

(இ-ள்.) பூதநாயகன் சுந்தரன் - பஞ்சபூதங்களுக்கு இறைவராகிய சோமசுந்தரக்கடவுள், புண்ணியமூர்த்தி ஆதலால் - தருமசொரூபி ஆதலால், அன்னதலத்து உறை அடியவர் அஞ்சி பாதகம் செய்யாது ஒழுகுறும்படி நினைந்து-அந்தத்திருவாலவாயிலில் வசிக்கும் அடியவர் அஞ்சிப் பாதகஞ்செய்யாமல் நல்லொழுக்கத்திலொழுகத் திருவுளங்கொண்டு, இனையதீது உறும்பழிதனை - இந்தக்கொடியபாதகத்தை, இடைமருதினில் தீர்த்தான் - திருவிடைமருதில் வரகுணபாண்டியனுக்குத் தீர்த்தருளினார்.

பூதநாயகன் பூதகணங்களுக்குத்தலைவன் எனப்பொருள்கொள்ளுதலும் ஒன்று. செய்தபுண்ணியமோங்கல்போலப் பாவமுமோங்குமென்பதுதோன்ற அஞ்சிப் பாதகஞ்செயாதொழுகுறும்படி யெனவும், இடைமருதினிற்றீர்த்தான் எனவுங்கூறினர். அன்ன - இனையசுட்டுத்திரிபுகள். (௬௬)

என்றகத்தியமுனியிறையிறைகொடுத்தியம்ப
நன்றெனச்சிரம்பணித்துமெய்ஞ்ஞானவானந்தந்
துன்றிநற்றவர்சுந்தரச்சோதிசேவடிக்கீ
ழொன்றுமற்புதவானந்தவுததியுட்களித்தார்.

(இ-ள்.) என்று அகத்தியமுனி இறை - என்று அகத்தியமுனிசிரேஷ்டர், இறைகொடுத்தியம்ப - விடைகொடுத்தருள, நல் தவர் - (கேட்ட) நல்லமுனிவர்கள்,

Koviloor Digital Library

நன்று என சிரம்பனித்து - நக்கதென்று சிரக்கம்பஞ்செய்து, மெய்ஞ்ஞானம் ஆனந்தம் துன்றி-சிவபெருமான்றிருவுருவாகிய உண்மை அறிவானந்தத்தில்தோய்ந்து, சுந்தரச்சோதி சேவடிக்கீழ் ஒன்றும் - சோமசுந்தரக் கடவுளுடைய செவந்ததிருவடியின்கீழ்ப்பொருந்திய, அற்புத ஆனந்த உததி உள் களித்தார்-அற்புதம்விளைக்கும் பேரின்பமாகிய கடலுள்மூழ்கிக் களிகூர்ந்தார்கள்.

சிவபெருமான் உண்மையிலேயைக் கேட்டறிந்தாராதலால் நன்றெனச்சிரம்பனித்துமெய்ஞ்ஞானவானந்தந்துன்றி எனவும், அதனால் தம்வசம் அழிந்து ஆநந்தத்திலழுந்தினராதலால் அற்புதவானந்தவுததியுட்களித்தார் எனவுங்கூறினர். (௬௭)

கொச்சகக்கலிப்பா.

அன்னதனித்தொன்மதுரையன்றுதொடுத்தின்றெல்லை
தன்னனையதாயகிலதலங்கள்சிகாமணியாகிப்
பொன்னகரின்வளஞ்சிறந்துபூவுலகிற்சிவலோக
மென்னவிசைபடப்பொலிந்ததேழிரண்டுபுவனத்தும்.

(இ-ள்.) அன்னதனி தொல் மதுரை - அந்த ஒப்பில்லாத தொன்றுதொட்டுள்ள மதுரைத்திருநகரமானது, ஏழிரண்டு புவனத்தும் - பதினான்குலகங்களிலும், அன்றுதொடுத்து இன்று எல்லை - அந்நாள் தொட்டு இந்நாள் காறும், தன் அனையது ஆய் - தனக்குத்தானேயொத்ததாய், அகிலதலங்கள் சிகாமணி ஆகி - எல்லாச் சிவதலங்களுக்கும் ஓர்சிகாமணியாய், வளம் பொன் நகரின் சிறந்து - வளமையால் தேவருலகினு மேம்பட்டு, பூவுலகில் சிவலோகம் என்ன இசைபடப் பொலிந்தது-பூலோகசிவலோகமென்று புகழுண்டாக விளங்கியது.

பூலோக சிவலோகம் எனத் திருவாலவாய்க்குப் போந்த பெயர்க்காரணம் இதனாற்கூறப்பட்டது. (௬௮)

வரகுணனுக்குச்சிவலோகங்காட்டியபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௨0௬0.

நாற்பத்தொன்றுவது


விறகுவிற்றபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நெடியவன்பிரமன்றேடநீண்டவன்றென்னற்கேழின்
முடியதாஞ்சிவலோகத்தைக்காட்டியமுறையீதையன்
படிமிசைநடந்துபாடிப்பாணன்றன்விறகாளாகி
யடிமையென்றடிமைகொண்டவருட்டிறமெடுத்துச்சொல்வாம்.

(இ-ள்.) நெடியவன் பிரமன் தேட நீண்டவன் - திருமாலும் பிரமனுந் தனதிருவடியையும் திருமுடியையுந் தேடிக்காண அவர்கட்குப்புலப்படாது ஒளிப்பி

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

மும்பாய் நின்ற சோமசுந்தரக்கடவுள், தென்னற்கு ஏழின்முடியது ஆம் சிவலோகத்தைக் காட்டிய முறை ஈது - வரகுணபாண்டியனுக்கு ஏழுலகினுக்கும் ஓர்மகுடமாகிய சிவபுரத்தைக்காட்டியருளிய திருவிளையாடலிது, ஐயன் - அச்சோமசுந்தரக்கடவுள், படிமிசை விறகாளாகி நடந்துபாடி - நிலவுலகின்மேல் விறகுசுமக்கும் ஆளாய்த் திருவுருவங்கொண்டு நடந்து இசைபாடி, பாணன் தன் அடிமை என்று அடிமைகொண்ட - பாணபத்திரருடைய அடிமையென்றுகூறி யவனையடிமைகொண்டருளிய, அருள் திறம் எடுத்து சொல்வாம் - திருவருளின்திறத்தை யுணர்த்துந் திருவிளையாடலை இனியெடுத்துக்கூறுவாம்.

ஏனையோர்க்கரியன் அடியார்க்கெளியன் என்பதை நெடியவன்பிரமன்றேட நின்டவன் என்பதனாலும், விறகாளாகி யடிமையென்றடிமைகொண்ட என்பதனாலு முணர்த்தினர். ஏழின்முடியதாஞ் சிவலோகம் என்றது, புவலோகங்கடந்தபோய் எனவருஞ்செய்யுளால் உணர்க. (க)

மன்றலந்தெரியன்மார்பன்வரகுணன்செங்கோலோச்சிப்
பொன்றலங்காவலானிற்பொலியுநாளேமநாத
னென்றொருவிறல்யாழ்ப்பாணன்வடபுலத்திருந்தும்போந்து
வென்றிகொள்விருதினோடும்விஞ்சைசூழ்மதுரைசார்ந்தான்.

(இ-ள்.) மன்றல் அம் தெரியல் மார்பன் வரகுணன் - வாசமிக்க அழகிய வேப்பமலர்மாலையையணிந்த மார்பையுடைய வரகுணபாண்டியன், செங்கோல் ஓச்சி பொன் தலம் காவலானில் - செங்கோல்செலுத்தி விண்ணுலகைக்காக்கும் இந்திரனைப்போல, பொலியும் நாள் - விளங்குங்காலையில், ஏமநாதன் என்று விறல் ஒருயாழ்ப்பாணன் - ஏமநாதனென்று வெற்றியையுடைய ஒருயாழ்ப்பாணன், வட்புலத்து இருந்தும் போந்து - வடதிசையினின்றும்வந்து, வென்றிகொள் விருதினோடும் - வெற்றிகொண்டவிருதுகளோடும், விஞ்சைசூழ் மதுரைசார்ந்தான் - கல்விமிக்கமதுரையையடைந்தான்.

பலவரசர்கள் சபையிலும்சென்று தன்னிசைநூல் வன்மைகாட்டி யங்குள்ள இசைநூற்புலவரைவென்று அவ்வரசர்களால் ஆங்காங்கோர்சின்னம்பெற்றவன் என்பார் வென்றிகொள் விருது என்றார். (உ)

பூழியர்பெருமான்கோயில்புகுந்துவேத்தவையத்தெய்திச்
சூழிமால்யானையானைத்தொழுதுபல்புகழ்கொண்டாடி
யேழிசைமழலைவீணையிடந்தழீஇச்சுருதிகூட்டி
வாழியின்னிசைத்தேன்மன்னனஞ்செவிவழியப்பெய்தான்.

(இ-ள்.) பூழியர் பெருமான் கோயில் புகுந்து - பாண்டியருள் பேரரசனாகிய வரகுணபாண்டியன் கோயிலிற்சென்று, வேந்து அவையத்து எய்தி - அரசசபையையடைந்து, சூழிமால் யானையானை தொழுது -முகபடாத்தையணிந்த யானைச்சேனையையுடைய அப்பாண்டியனைவணங்கி, பல்புகழ் கொண்டாடி - பலதிறத்துந்தோன்றுதொட்டுவந்த அவன்புகழைப்புகழ்ந்து, மழலை ஏழிசை வீணை இடம் தழுவி - மழலைச்சொற்போல இனிமைவாய்ந்த ஏழிசையமைந்தவீணையை யிடப்பால் தழுவி, சுருதிகூட்டி இன் இசை தேன் - அதனுற்சுருதிகூட்டி இனிய இசையாகியதேனை, மன்னன் அகம் செவி வழிய பெய்தான் - அவ்வரசனுடைய செவியினுள் நிரம்பி வழியவார்த்தினன்.

Koviloor Digital Library

நிலவுலகமுற்றும் தன்னடிக்கீழ்ப்படுத்தினவனென்பார் பூழியர் பெருமான் என்றார். (௩)

முகையுடைந்தவிழ்ந்தமாலைமுடித்தலைதுளக்கித்தூசு
பகலவிர்மணிப்பூணல்கிப்பல்லுணுக்கருவிநல்கி
யகன்மனைவேறுகாட்டியரசர்கோன்வரிசைசெய்ய
விகலறுகளிப்பினோடுமிசைவல்லானில்லிற்புக்கான்.

(இ-ள்.) முகை உடைந்து அவிழ்ந்தமாலை முடிதலை துளக்கி - அரும்பின்முறுக்குடைந்தவிழ்ந்த மாலைசூடிய கிரீடத்தைத்தரித்த தலையையசைத்து, தூசுபகல் அவிர்மணி பூண் நல்கி - ஆடையையும் சூரியனைப்போலவிளங்கும் இரத்தினமழுத்திய ஆபரணங்களையுந்தந்து, பல் உணுக்கருவிநல்கி - பலவகைப்பட்ட வுணவுக்கமைந்த வுபகரணங்களையுந்தந்து, அகன்மனை வேறுகாட்டி - இடம்பரந்தவீடொன்றைத் தனியேகொடுத்து, அரசர்கோன் வரிசைசெய்ய - வரகுணபாண்டியன் வரிசைகள் செய்ய, இகல் அறு களிப்பின் ஓடும் - பகையகன்ற செருக்கினோடும், இசைவல்லான் இல்லில் புக்கான் - இசைநூலில்வல்ல ஏமநாதன் தனக்குக்காட்டிய அவ்வில்லத்திற்சென்றான்.

அரசன்செய்தவரிசைகளால் தன்னோடிசைபாடவல்லோரிங்கில்லையெனக்கருதினான் என்பார் இகலறுகளிப்பினோடும் என்றார். (௪)

மீனவன்வரிசைபெற்றசெருக்கினும்விருதினானு
மானமேல்கொண்டுதன்னோடின்னிசைபாடவல்ல
தானயாழ்ப்புலவர்வேறிங்கில்லெனத்தருக்குஞ்செய்தி
கோனறிந்துழையர்க்கூவிப்பத்திரற்கொணர்கென்றான்.

(இ-ள்.) மீனவன் வரிசைபெற்ற செருக்கினும் விருதினானும் - பாண்டியன் செய்த வரிசைகளைப்பெற்ற செருக்கினாலும் (பல அரசர்கள்கொடுத்த) விருதினாலும், மானம் மேல் கொண்டு - மானமீக்கூர்ந்து, தன்னோடு இன் இசை பாடவல்ல - தன்னோடு இசைபாடுதலில்வல்ல, தானம் யாழ்ப்புலவர் - தானமமைந்த யாழ்வல்லோர், இங்கு வேறு இல் என தருக்கும் செய்தி - இந்த அரசனவையத்தில் வேறொருவரில்லையென் றிறுமாக்குஞ்செய்தியை, கோன் அறிந்து உழையர்கூவி-வரகுணபாண்டியன்தெரிந்து வேவுகாரரையழைத்து, பத்திரன் கொணர்திர் என்றான் - பாணபத்திரரைக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டான்.

தானம் சத்தசுரங்களும் எழுமிடம். (௫)

உழையரால்விடுக்கப்பட்டபத்திரனுவரிவென்றோன்
கழல்பணிந்தருகுநிற்பக்கௌரியனோக்கிப்பாணி
பழகிசைவல்லானோடும்பாடுதிகொல்லோவென்ன
மழலையாழிடந்தோளிட்டபாணர்கோன்வணங்கிச்சொல்வான்.

(இ-ள்.) உழையரால் விடுக்கப்பட்ட பத்திரன் - வேவுகாரரால் செலுத்தப்பட்ட பாணபத்திரர், உவரிவென்றோன் கழல்பணிந்து அருகு நிற்ப - கடலைவென்ற வரகுணபாண்டியனுடைய பாதத்தைவணங்கிப் பக்கலில்நிற்க, கௌரியன் நோக்கி-அப்பாண்டியன் பார்த்து, பாணி பழகு இசைவல்லானோடு பாடுதியோ என்ன - தா

Koviloor Digital Library

ளங்களிற்பழகிய ஏமநாதனோடு பாடவல்லையோவென்று வினவ, மழலை யாழ் இடம் தோளிட்ட பாணர்கோன் - மழலைச்சொற்போல இனிமைவாய்ந்த வீணையை இடத்தோளிலிட்ட பாணர்க்கரசராகிய பத்திரர், வணங்கி சொல்வான் - பணிந்து கூறுகின்றார்.

உக்கிரகுமாரப்பெருவழுதியார் கடல்சுவறச்செய்த வென்றி அவர் மரபின் வழிவந்தோர்க்கும் உரியதாதலால் உவரிவென்றோன் என்றார். தாளம் கொட்டு, அசை, தூக்கு, அளவு என நான்குவகைப்படும். கொட்டு ஆவது அமுக்குதல், அசையாவது தாக்கியெழுதல், தூக்கு ஆவது தாக்கித்தூக்குதல், அளவு ஆவது தாக்கின ஓசை நேரே மூன்றுமாத்திரை பெறுமளவும் வருதல். (சு)

தென்னவர்பெருமயானுன்றிருவுளவலனுங்கூடன்
முன்னவனருளுமூட்டுமுயற்சியான்முயன்றுபாடி
யன்னவன்விருதுவாங்கியவனைவீறழிப்பனென்றான்
மன்னவனாளைப்பாடுபோகெனவரைந்துசொன்னான்.

(இ-ள்.) தென்னவர் பெரும - பாண்டியர்களுட்சிறந்த அரசனே, யான் - அடியேன், உன் திருவுளவலனும் - உனது திருவுளக்கருத்தின் வன்மையும், கூடல் முன்னவன் அருளும் - மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளும், மூட்டும் முயற்சியால் - கூட்டிமுடிக்கும் நன்முயற்சியின்வழியே, முயன்று பாடி - சென்று இசைபாடி, அன்னவன் விருதுவாங்கி - அந்த ஏமநாதனுடைய விருதினைவாங்கி, அவனை வீறு அழிப்பன் என்றான் - அவனைச் செருக்கழிப்பேனென்றுகூறினார், மன்னவன் - வரகுணபாண்டியன், நாளை பாடு போக என வரைந்து சொன்னான் - நாளைக்குவந்து அவனோடுபாடு இன்றைக்குப் போகக்கடவாயென்று காலவரையறைசெய்துகூறினான்.

அரசன்பாற் பணிசெய்வோராதலால் உன்திருவுளவலனும் எனவும், சிவபிரான் திருவருளாலன்றி யொன்றுங் கைகூடாதாதலால் கூடல் முன்னவனருளும் எனவும், தம்மாலாவதொன்றில்லையென்பாராதலால் மூட்டுமுயற்சியால் முயன்று பாடியெனவும், இவற்றால் அவனைவெல்லுதல் எளிதென்பாராதலால் விருதுவாங்கி அவனை வீறழிப்பன் எனவுங்கூறினார். (எ)

இற்கண்ணேயிசைவல்லான்போயிருந்துழியனையான்பாங்கர்க்
கற்கும்பாண்மக்கண்மல்லலாவணங்கவலைமன்றம்
பொற்குன்றமனையமாடமறுகெங்கும்போகிப்போகிச்
சொற்குன்றாவகையாற்பாடித்திரிந்தனர்வீறுதோன்ற

(இ-ள்.) இல் கண் ஏ இசைவல்லான் போய் இருந்த உழி - தமதில்லினிடத்துப் பாணபத்திரர்சென்று இருந்த இடத்தில், அனையான் பாங்கர் கற்கும் பாண் மக்கள் - அந்த ஏமநாதன்பக்கலில் இசைகற்கும்பாணர்கள், மல்லல் ஆவணம் கவலை மன்றம் - வளமிக்க கடைவீதியிலும் முத்தெருக்கூடுமிடத்திலும் அம்பலத்திலும், பொன் குன்றம் அனைய மாடமறுகு எங்கும் - மேருவையொத்த மாடங்களையுடைய வீதிகளி னெவ்விடங்களிலும், போகி போகி - சென்று சென்று, சொல் குன்றா வகையால்பாடி - இசைநூலிற்குரிய சொற்கள் தத்தமக்குரிய மாத்திரைகளிற் குறைபடாதபடிபாடி, வீறுதோன்ற திரிந்தனர் - தமது இசைநூலின்வன்மை யாவர்க்கும் புலப்படத்திரிந்தார்கள்.

Koviloor Digital Library

இசைநூற்குரியசொற்கள் இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொற்களாம். குன்றாதவகையாற்பாடுதல் அச்சொற்களிலுள்ள எழுத்துக்கள் தத்தமக்குரிய மாத்திரைகளிற்குன்றாதவண்ணந் தோன்றப்பாடுதல். (அ)

இவ்விசைகேட்டுநன்றென்றதிசயித்திசைவல்லான்பால்
வவ்விசைமைந்தர்பாடும்வண்ணமீதென்னைகெட்டேன்
அவ்விசைவல்லான்பாடுமுறையெற்றோவவனைநானைச்
செவ்விசைபாடிவெல்வதெவனெனத்திவவுக்கோலான்.

(இ-ள்.) திவவு கோலான் - வார்க்கட்டமைந்த வீணையில்வல்ல பாணபத்திரர், இ இசை கேட்டு நன்று என்று அதிசயித்து - இந்த இசையைக் கேட்டுக் கெட்டி கெட்டி யென்று வியந்து, இசை வல்லான் பால் வவ்வு இசை மைந்தர் பாடும் வண்ணம் ஈது என்னை கெட்டேன் - இசைநூலில் வல்ல ஏமநாதனிடத்துக்கற்கு மாணாக்கர்கள் பாடும் வகை யிதுவாயின் யான் கெட்டேனே, அ இசை வல்லான் பாடும் முறை எற்றோ - அந்த ஏமநாதன் பாடும்வகை யெவ்வாறுள்ளதோ, அவனை நானை - அவனை நாளைக்கு, செவ்விசை பாடி வெல்வது எவன் என - செவ்விய இசையைப் பாடிவெல்வது எவ்வாறென்று.

கெட்டேன் வியப்பிடைச்சொல். (௧)

மையணிமிடற்றினானைமதுரைநாயகனைவந்தித்
தையனேயடியேற்கின்றுனருட்டுணைசெய்யல்வேண்டு
மெய்யனேயென்றுபோற்றிவேண்டுகொண்டன்புதோய்ந்த
பொய்யறுமனத்தானில்லம்புக்கினிதிருந்தானிப்பால்.

(இ-ள்.) மை அணி மிடற்றினானை - விஷத்தையணிந்த ஸ்ரீகண்டத்தையுடைய பெருமானாகிய, மதுரை நாயகனை - சோமசுந்தரக்கடவுளை, வந்தித்து - வணக்கஞ்செய்து, ஐயனே - எமதுபெருமானே, அடியேற்கு இன்று உன் அருள் துணை செய்யல் வேண்டும் - அடியேனாகிய எனக்கு இப்பொழுது உன்திருவருள் முன்னிற்க வேண்டும், மெய்யனே என்று போற்றி வேண்டு கொண்டு - உண்மைவடிவா யுள்ளவனே யென்று துதித்துவேண்டி, அன்பு தோய்ந்த - சிவநேயத்திற் கலந்த, பொய் அறு மனத்தான்-மெய்ம்மை வாய்ந்த மனத்தையுடைய பாணபத்திரர், இல்லம் புக்கு இனிது இருந்தான் - தமதில்லிற்குச் சென்று கவலையின்றி யிருந்தார், இப்பால் - இப்புறம்.

திருவருளால் யாவுங்கைகூடும் எனக்கருதினாராதலால் அருட்டுணை செய்யல் வேண்டும் எனவும், சிவபெருமான் சந்நிதியில் தங்குறைபாட்டை யொப்புவித்தமையால் அக்குறைபாட்டைக் களையுங்கடமை யவனுக்கே யெனக்கருதி யிருந்தனரொன்பார் இல்லம்புக்கினி திருந்தான் எனவுங்கூறினார். (௧0)

கலித்துறை.

வருத்தனாகிவந்திரந்தவனிசைப்பகைமாற்ற
விருத்தனும்விறகாளொனவிண்ணிழிவிமானத்
தொருத்தனாரறிவாகியவுண்மையானந்தத்
திருத்தனார்தமதிச்சையாற்றிருவுருக்கொள்வார்.

(இ-ள்.) வருத்தன் ஆகி வந்து இரந்தவன் இசைப் பகை மாற்ற - வருத்தமுடையவராகிவந்து தமது குறைகூறி யிரந்த பாணபத்திரர்க்குப் பகைவனாகிய ஏம

Koviloor Digital Library

நாதனைக் குடியோட்ட, விருத்தன் ஆம் விறகு ஆள் என - விருத்தவடிவாகிய விற காளைப்போல, விண் இழி விமானத்து ஒருத்தனார் - விண்ணுலகினின்று மிழிந்த இந்திரவிமானத்திலெழுந்தருளிய ஒப்பில்லாதவரும், உண்மை அறிவு ஆநந்தம் ஆகிய திருத்தனார் - சத்துச் சித்து ஆநந்தவடிவுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுள், தமது இச்சையால் திரு உரு கொள்வார் - தமது சுதந்திர இச்சையினால் திருவுருவங்கொள்வாராயினார்.

அன்புதோய்ந்த பொய்யறுமனத்தான் என்றமையின் அவர்கொண்ட அன்பே சிவமாதலால் விருத்தனும்விறகாளெனத் திருவுருக்கொள்வார் எனவும், செய்யுளாதலால் அறிவாகியவுண்மையாநந்தத்திருத்தனார் எனவுங்கூறினார். அன்பே சிவம் என்றது "அன்புசிவமிரண்டென்பரறிவிலார்-அன்பேசிவமாவதாருமறிகிலர் - அன்பேசிவமாவதாருமறிந்தபின் - அன்பேசிவமாயமர்ந்திருப்பாரே" எனவருந் திருமந்திரத்தால் உணர்க. (௧௧)

அழுக்குமூழ்கியசிதரசைத்தவிர்சடையமுத
மொழுக்குவெண்மதிவாங்கியேசெருகியதொப்ப
மழுக்குகூனல்வெள்வாய்க்குயம்வலம்படச்செருகி
யிழுக்குதேய்செருப்பருமறைகடந்ததாளேற்றி.

(இ-ள்.) அழுக்கு மூழ்கிய சிதர் அசைத்து - அழுக்குமயமாகிய கந்தையையுடுத்தி, அவிர் சடை - விளங்கும் சடையில் அணிந்த, அமுதம் ஒழுக்கு வெள் மதி வாங்கியே - அமுதைச்சிந்தும் வெள்ளியபிறைையைவாங்கி, செருகியது ஒப்ப - பின்புறத்திற் செருகியதைநிகர்க்க, மழுங்கு கூனல் வெள் வாய் குயம் வலம்பட செருகி - மழுங்கிய வளைந்த வெள்ளியவாயையுடைய கொடுவாளை வலப்பாற்செருகி, இழுக்கு தேய் செருப்பு - இழுத்துத் தேய்ந்த செருப்பினை, அரு மறை கடந்த தாள் ஏற்றி - அரிய வேதமுடியைக்கடந்த திருவடியில் தொடுத்து.

வெட்டிமழுங்கிய வாய்வெள்ளியதாதலால் மழுக்குகூனல்வெள்வாய்க்குயம் எனவும்,இழுத்துச் செல்லுதலால் தேய்செருப்பு எனவுங்கூறினார். மழுக்குவலிக்கும்வழிவலித்தல். (௧௨)

பழையதோர்பொல்லம்பொத்தியபத்தர்யாழ்க்கோறோ
ளுழையதாகவிட்டெருத்தலைத்தூசலாடியவொண்
குழையகாதினிற்களவிணர்க்குறியகாய்தூக்கித்
தழையும்வார்சிகைசரிந்திடச்சுமையடைதாங்கி.

(இ-ள்.) பழையது ஓர் பொல்லம் பொத்திய பத்தர் யாழ்க்கோல் - பழையதாகிய ஒப்பில்லாத பொல்லம் பொருத்திய பத்தரையுடைய வீணையானது, தோள் உழையது ஆகவிட்டு - தோளினிடத்ததாகத் தொங்கவிட்டு, எருத்து அலைத்து ஊசல் ஆடிய ஒண் குழைய காதினில் - பிடரையலைத்து ஊசல்போலசைந்தாடிய ஒள்ளியகுண்டலத்தையணிந்த காதினில், களவிணர் குறிய காய் தூக்கி-களாவின் பூங்கொத்தோடு அதன் சிறிய காய்க்கொத்தையுந் தொங்கவிட்டு, தழையும் வார் சிகை சரிந்திட - தழைந்த நீண்டசிகைசரிய, சுமை யடை தாங்கி - சும்மாடுதாங்கி.

பத்தர் வீணதண்டத்தின் கோட்டின்புறத்திலுள்ள சுரைக்குடுக்கை. அது வீணையிறுப்புகளுள் ஒன்று, அதுபழையதாதலால் பொல்லம்பொத்தியஎன்றார். வீ

Koviloor Digital Library

ளையின் உறுப்பாவன "கோடேபத்தா ஆணிநரம்பே - மாட்க மெனவரும் வகையி லதாகும்" எனவரும் ஏதுவாலுணர்க. (கந)

தறிந்தவிந்தனந்தினந்தொறுந்தாங்கிநீள்பங்கி
பறிந்துதேய்ந்தழுந்தியதலையுடையராய்ப்பரிந்து
மறிந்தகங்கையும்பங்குறைமங்கையுங்காணு
தெறிந்தவிந்தனச்சுமைதிருமுடியின்மேலேற்றி.

(இ-ள்.) தறிந்த இந்தனம் தினம் தொறும் தாங்கி - முறிபட்டவிறகைத்தி னந்தோறுஞ் சுமத்தலால், நீள் பங்கி பறிந்து தேய்ந்து அழுந்திய தலை உடையர் ஆய் - நீண்ட உரோமங்கழிந்து தேய்ந்து அழுந்திய தலையையுடையவராய், பரிந்து- அன்புகூர்ந்து, மறிந்த கங்கையும் - (அலைகளால்) மடங்கிவருங் கங்கையும், பங்கு உறை மங்கையும் காணுது - இடப்பாலில் வசிக்கும் உமாதேவியாருங்காணமல், எறிந்த இந்தனச் சுமை - வெட்டிய விறகுசுமையை, திரு முடியின் மேல் ஏற்றி - தமது திருமுடியின்மேல்வைத்து.

அவர்கள்காணி லித்திருவுருக்கோடற் கிசையாதாதலால் காணுது எனவும், "அடியார்க்கெளியன்சிற்றம்பலவன்கொற்றங் - குடியார்க்கெழுதுகைத்தீட்டு" எனத் தாம் திருவாய்மலர்ந்தருளியது யாருமுணர்ந்துய்யத் திருவுளங்கொண்டன ராதலால் எறிந்தவிந்தனச்சுமை திருமுடியின்மேலேற்றி எனவுங்கூறினர். (கச)

என்புதோன்றியூனின்றியேயிளைத்தயாக்கையரா
யன்புதோன்றியேகண்டவரகங்கனிந்திரங்க
வன்புதோன்றியமனமொழிகடந்ததாண்மலர்பார்
முன்புதோன்றியதவத்தினுன்முடிமிசைசூட.

(இ-ள்.) என்பு தோன்றி - எலும்புகள் காணப்பட்டு, ஊன் இன்றியே இளைத்த யாக்கையர் ஆய் - சிறிதுந் தசையின்றி இளைத்தசரீரத்தை யுடையவராய், கண்டவர் அன்பு தோன்றி அகம் கனிந்து இரங்க - பார்த்தவர்கள் அன்புகொண்டு மனநெக்குவிட்டிரங்க, வன்பு தோன்றிய மனம் மொழிகடந்த தாள் மலர் - தம்பா லருகுதலில்லாத மனத்தையும் வாக்கையுங் கடந்துநின்ற பாததாமரைகளை, பார் முன்பு தோன்றிய தவத்தினுல் முடி மிசை சூட - நிலமகள் முன்புசெய்த தவத்தால் தனது முடிமேற்சூடவும்.

சுட்டறிவிற்பட்ட மனமொழியென்பார் வன்புதோன்றிய மனமொழியென் ருர். (கரு)

திருமுகத்துவேர்வரும்பவாய்குவித்தொலிசெய்ய
வருவர்கற்சுமைதாங்கிமேற்சார்த்துவர்மடுநீர்
பருகுவாரெடுப்பார்தலைவெம்மைவேர்பறிய
விருகையாலடிக்கடியெடுத்தேந்திழூர்புகுவார்.

(இ-ள்.) திரு முகத்து வேர்வு அரும்ப வாய் குவித்து ஒலி செய்ய வருவர்- தமது திருமுகத்தில் வேர்வைதோன்றத் திருவாய்குவித்தொலிசெய்ய வாராநிற்பர், கல் சுமை தாங்கி மேல் சார்த்துவர்-கல்லாலாகிய சுமைதாங்கிமேற் சார்த்தாநிற்பர், மடு நீர் பருகு வார் - மடுவிலுள்ள நீரைப் பருகாநிற்பர், எடுப்பார் - எடுத்துத் தம

Koviloor Digital Library

து திருமுடிமேல் வைப்பார், தலை வெம்மை வேர் பறிய - தலையில் உஷ்ணத்தாலா கிய வேர்வைகழிய, இரு கையால் அடிக்கடி எடுத்து ஏந்தி - தமது இரண்டு திருக் கரங்களாலும் சுமையை அடிக்கடி மேலேயெடுத்தேந்தி, ஊர் புகுவார் - ஊரிற்செ ல்லாநிற்பர்.

விறகாள்திருவுருக்கொண்டு வந்தனராதலால் தொழிற்றன்மையணிபடக்கூ றினார். (௪௬)

நடந்துகொள்ளுநர்க்கருவிலைபகர்ந்துநான்மாட
மிடைந்தவீதியுங்கவலையுமுடுக்கருமிடைந்து
தொடர்ந்தவேதமும்பிரமன்மால்சூழ்ச்சியும்பகலுங்
கடந்துபோகியவ்விசைவலான்கடைத்தலைசெல்வார்.

(இ-ள்.) நடந்து கொள்ளுநர்க்கு அரு விலை பகர்ந்தும் - வாங்குவோர்க்கு அளவுக்குமேற்பட்ட விலைகூறியும், நால் மாடம் மிடைந்த வீதியும் கவலையும் முடுக்கரும் - பலவகைப்பட்ட மாடங்கள்நெருங்கிய வீதியையு முத்தெருக்கூடுமிடத்தையும் முடுக்குச்சந்திகளையும், மிடைந்து தொடர்ந்த வேதமும் பிரமன் மால் சூழ்ச்சியும்- நெருங்கிப் பின்பற்றிய வேதத்தையும் பிரமன் திருமாலிவர்களுடைய ஆலோசனை யையும், பகலும் - பகற்பொழுதையும், கடந்து போகி - கடந்து சென்று, அ இசை வல்லான் கடைத்தலை சேர்வார் - அந்த இசைநூலில்வல்ல ஏமநாதன் கடைவாயிலி ல் அடைவாராயினர்.

விறகுவிற்கவந்தவரல்லராதலால் அருவிலைபகர்ந்தும் எனவும், ஏமநாதன்விற குசுமையோடு காணச் சென்றவராதலால் அவ்விசைவலான் கடைத்தலைசேர்வார் எனவும், விந்துசத்தியின் காரியப்பாடாகிய சொற்பிரபஞ்சமாதலால் வேதத்தையும் எனவும், மலச்சிமிழ்ப்புடையராதலால் பிரமன் மால்சூழ்ச்சியும் எனவும், இரவிற் சென்று பாடவேண்டும் என்னும் திருவுளத்தினராதலால் பகலுங்கடந்து எனவுங் கூறினார். (௪௭)

வரவுநோக்கழைப்பவரெனவாம்பல்வாய்மலர
விரவுகான்றுவெண்மதிநகைத்தெழவுயிர்த்துணைவர்
பிரிவுநோக்கினரெனக்கணீர்பில்குதாமரையி
னிரைகள்கூம்பிடக்கதிரவன்குடகடனீந்த.

(இ-ள்.) வரவு நோக்கு அழைப்பவர் என - சந்திரன் வருகையைநோக்கி ய ழைப்பவர்போல, ஆம்பல் வாய் மலர - ஆம்பல்கள் வாய்மலர, இரவு கான்று வெ ண் மதி நகைத்து எழ - இராப்பொழுதை வெளிப்படுத்தி வெள்ளியசந்திரன் புன்ன கையரும்பி யுதயஞ்செய்யவும், உயிர்த் துணைவர் பிரிவு நோக்கினர் என - தமது உயிர்போன்ற கணவர்களுடைய பிரிவைநோக்கி வருந்திய பெண்களைப்போல, கண் ணீர் பில்கு தாமரையின் நிரைகள் கூம்பிட - கண்ணீரைச் சிந்தும் தாமரைகள் குவி ய, கதிரவன் குட கடல் நீந்த - சூரியன் மேலைக்கடலில் நீந்திச்செல்லவும்.

கண்ணீர் கள் நீர் எனப் பிரித்துக் கள்ளாகிய நீரை யெனப் பொருள்கொள் க. ஒருபாலின்பமும் ஒருபாற்றுன்பமு முண்டாதல் உலகியல் என்பார்! ஆம்பல்வாய் மலர நகைத்தெழ எனவும், தாமரையினிரைகள் கூம்பிடக் கதிரவன்குடகடல்நீந்த எனவுங்கூறினார். (௪௮)

Koviloor Digital Library

பறவைவாயடைத்தருகணைபார்ப்பொடும்பெடையைச்
சிறகாலணைத்திரும்பொழிற்குடம்பையுட்செறிய
நறவவாய்ப்பெடையுண்டதேனக்கிவண்டோடைப்
பொறைகொட்டாமரைப்பள்ளியுட்புகுந்துகண்படுக்க.

(இ-ள்.) பறவை வாய் அடைத்து - ஆண்பறவைகள் கூவாது, அருகு அணை பார்ப்பு ஒடும் பெடையை சிறகால் அணைத்து - பக்கலில்வந்த குஞ்சுகளோடும் பெண்பறவைகளைச் சிறகுகளால் தழுவி, இரும் பொழில் குடம்பையுள் செறிய-பெரிய சோலைகளிலுள்ள கூடுகளிலடையவும், பெடை வாய் உண்ட நறவம் தேனை வண்டு நக்கி - பெண்வண்டுகள் வாயாலுண்ட தேனினை யாண்வண்டுகள்நக்கி, ஓடை பொறை கொள் தாமரை பள்ளியுள் புகுந்து கண் படுக்க - ஓடைகளிலுள்ள இதழ்ப்பாரத்தையுடைய தாமரைகளாகிய படுக்கையிற்சென்று துயிலவும். (௧௯)

புல்லெனீணிலைக்குரங்கினம்பொதும்பர்புக்குறங்க
முல்லையாய்மகாருய்த்தரக்கன்றுள்ளிமுந்திக்
கொல்லையானிரைமனைதொறுங்குறுகிடச்சிறுபுன்
கல்விமாணவச்சிறார்பயில்கணக்கொலியடங்க.

(இ-ள்.) குரங்கு இனம்-குரங்கின் கூட்டங்கள், புல்லென்-விரைந்து, பொதும்பர் நீள் நிலை புக்கு உறங்க - சோலையிலுள்ள உயர்ந்த மரங்களில் சென்று துயில் கூரவும், முல்லை ஆய் மகார் உய்த்தர - முல்லைநிலத்திலுள்ள ஆயச்சிறுவர்கள் செலுத்த, கன்று உள்ளி - தமது கன்றுகளைக்கருதி, கொல்லை ஆனிரை முந்தி மனை தொறும் குறுகிட - அம்முல்லைநிலத்திலுள்ள பசுக்கள் முற்பட்டுத் தமது வீடுகள் தோறுஞ் செல்லவும், சிறுபுன் கல்வி மாணவச் சிறார் பயில் கணக்கு ஒலி அடங்க- இளங்கல்விபயிலும் மாணுக்கச் சிறுவர்கள் இடைவிடாது கூறும் நெடுங்கணக்கொலியடங்கவும்.

"ஓலைக்கணக்கர்" என்றார் பிறரும். நீணிலை வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகைநிலைத்தொடர். (௨௦)

புனைந்தவாழ்கடற்கரும்படாமுடம்பெலாம்போர்த்து
வனைந்தபூண்முலைநிலமகடுயில்வதுமானக்
கனைந்தகாரிருண்மெல்லெனக்கவிதரப்பிரிவால்
இனைந்தகாதலர்நெஞ்சில்வாளெரிகணைநாட்ட.

(இ-ள்.) புனைந்த - (தன்னை) சூழ்ந்த, ஆழ் கடல் கரும் படாம் உடம்பு எல்லாம் போர்த்து - ஆழ்ந்த கடலாகிய கரியபோர்வையை உடல் முற்றும் போர்த்து, பூண் வனைந்த முலை நிலமகள் துயில்வது மான - ஆபரணத்தையணிந்த தனங்களையுடைய பூதேவி கண்டுயில்கூர்தலையொப்ப, கனைந்த கார் இருள் மெல்லென கவிதர- மிக்க கரிய இருளானது மெல்லெனவந்து உலகினைப்போர்க்கவும், பிரிவால் இனைந்த காதலர் நெஞ்சில் - கணவர் பிரிவால் வருந்திய மகளிருடைய மனத்தில், வாள் எரி கணை நாட்ட - விளங்கும் நெருப்பினையொத்த அம்புகளை மன்மதன் நாட்டவும்.

தலைவர்க்கு ஓதற்பிரிவு முதலிய பிரிவுகளுள ஆதலால் பிரிவால் என்றார். ()

திங்கள்வாளறுதன்முயற்கறைத்திலகமுஞ்செவந்த
மங்குலாடையுமயங்கிருளோதியும்வான்மீன்

Koviloor Digital Library

பொங்குமாரமும்பொலிந்துதன்கொண்கனைப்பொருப்பன்
மங்கைதேடிவந்தாளெனவந்ததுமாலை.

(இ-ள்.) திங்கள் வாள் நுதல் - சந்திரனாகிய வொள்ளிய நெற்றியில், முயல் கறை திலகமும் - களங்கமாகிய திலதமும், செவந்த மங்குல் ஆடையும் - செவ்வானமாகிய உடையும், மயங்கு இருள் ஓதியும் - மிகவுங் கரிய அந்தகாரமாகிய கூந்தலும், வான்மீன் பொங்கும் ஆரமும் - நட்சத்திரங்களாகிய விளங்காநின்ற முத்துமாலையுமாகிய இவைகளால், பொலிந்து - விளங்கி, தன் கொண்கனை பொருப்பன் மங்கை தேடி வந்தாள் என - தமது கணவனை உமாதேவியார் தேடிவந்ததையொப்ப, மாலை வந்தது - மாலைக்காலம் வந்தது.

என்றும் பிரிந்தறியாத தமதுபெருமானார் பிரிவாரயில் உமாதேவியார் பிரிவாற்றலரிதாதலால் பொருப்பன் மங்கை தேடிவந்தாளென என்றார். முயற்கறை இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். (உஉ)

எடுத்தவிந்தனமொருபுறத்திறக்கியிட்டூன்றி
யடுத்தவன்புறந்திண்ணைமீதமர்ந்திளைப்பாறித்
தொடுத்தவின்னிசைசிறிதெழீஇப்பாடினார்சுருதி
மடுத்தியாரவன்பாடுவானென்றிசைவல்லான்.

(இ-ள்.) எடுத்த இந்தனம் ஒருபுறத்து இறக்கி இட்டு ஊன்றி - எடுத்த விறகின்சுமையை யொருபுறத்திலிறக்கி நிலத்திலூன்றி, அடுத்தவன் புறம் திண்ணைமீது அமர்ந்து இளைப்பாறி - வந்த ஏமநாதனுடைய வீட்டின்புறத்திலுள்ள திண்ணைமேலிருந்து சற்றிளைப்பாறி, தொடுத்த இன் இசை சிறிது எழீஇ பாடினார் - இடைவிடாது பாடும் இனிய இசையைச் சிறிதெழுப்பிப் பாடினார், சுருதி மடுத்து - அச்சுருதியைக்கேட்டு, பாடுவான் அவன் யார் என்று இசை வல்லான் - பாடுகின்ற அவன் யாரென்று இசைநூலில் வல்ல ஏமநாதன்.

பாணபத்திரர் கருத்து முற்றவந்தவராதலால் அடுத்தவன் புறந்திண்ணைமீதமர்ந்து எனவும், ஒருக்காலு மிளைப்பறியா இறைவர் தமது அடிவர்பொருட்டு இளைப்புற்றவர்போ லிருத்தலால் இளைப்பாறியெனவும், அடியவர்கொண்ட நேயமே தாம் ஆதலின் அவர்பொருட்டுப் பாடுபடுவோர் ஆதலால் இன்னிசை சிறிதெழீஇப் பாடினார் எனவுங் கூறினார். நேயமே சிவம் என்பது "தேறலின்றெளிவேசிவபெருமானேதிருப்பெருந்துறையுறைசிவனே - ஈறிலாப்பதங்களியாவையுங்கடந்தஇன்பமேயென்னுடையன்பே" எனவரும் உண்மைத்திருவாக்கால் உணர்க. (உங)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வண்டறைகொன்றையான்முன்வந்துநீயாரையென்றான்
பண்டருவிபஞ்சிபாணன்பத்திரனடிமையென்றான்
முண்டகமலரோன்மாயோன்புரந்தரன்முதன்மற்றேனை
யண்டருந்தன்குற்றேவலடிமையாக்கொண்டவம்மான்.

(இ-ள்.) வண்டு அறை கொன்றையான் முன் வந்து நீ யாரை என்றான் - வண்டுகளொலிக்குங் கொன்றைமாலையையணிந்த சிவபெருமானார்முன்வந்து நீயாரென்றுவினவினான், பண் தரு விபஞ்சி - இசையமைந்த யாழ்வல்லோய், பாணபத்திரன் அடிமை என்றான் - பாணபத்திரனடிமையென்று கூறினார், முண்டக மலரோன்

Koviloor Digital Library

மாயோன் புரந்தரன் முதல் என்ன அண்டரும் - பிரமனும் திருமாலும் இந்திரனுமு தலிய மற்றைத்தேவர்களையும், தன் குற்றேவல் அடிமையாக் கொண்ட அம்மான் - தமது குற்றேவல்செய்யும் அடிமைகளாகக்கொண்ட அப்பெருமானார்.

தம்மைச் சரணடைந்தவரைப் பெருமைப்படுத்தவோ ரென்பார் பாணபத்தி ரனடிமையென்றான் எனவும், பசுபதியென்னும் பெயர்க்காரணத்தால் அவர் எல் லாவுயிர்கட்கும்இறைவர் என்பார் முண்டகமலரோன்மாயோன் புரந்தரன்முதன்ம ற்றேனை - அண்டருந்தன்குற்றேவலடிமையாக்கொண்டஅம்மான் எனவுங்கூறினார். "எப்புன்மையவரையுமிகவேயுயர்த்தி விண்ணோரைப்பணித்தியண்ணாவமுதே" என்று ம் உண்மைத்திருவாக்கால் உணர்க. (௨௪)

கனியிசைக்கிழவன்றன்கீழ்க்கற்பவரனேகர்தம்மு
ளினியிசைக்கிழமைவேட்டுநாளுமவ்வினைஞனேன்
றனியிசைக்கிழவனோக்கித்தசையெலாமொடுங்கமூத்தா
யினியிசைக்கிழமைக்காகாயென்றெனைத்தள்ளிவிட்டான்.

(இ-ள்.) கனி இசை கிழவன் கீழ் கற்பவர் அநேகர் உள் - சுவை கனிந்த இசையில்வல்ல பாணபத்திரர் கீழ் இசைகற்போரநேகருள், இனி இசை கிழமை நாளும் வேட்டு அ வினைஞன் ஆனேன் - சிறந்த இசைநூல்கற்கும் உரிமையை நாளும் விரும்பிக் கற்குந்தொழிலுடையவனாயினேன், தனி இசை கிழவன் நோக்கி-ஒப்பில்லாத இசைநூலில்வல்ல அப்பாணபத்திரர்பார்த்து, தசை எல்லாம் ஒடுங்க மூத்தாய் - (உடம்பில்) சிறிதுந் தசையில்லாதொழிய விருத்தனானாய், இனி - ஆதலால் இனி, இசைக் கிழமைக்கு ஆகாய் என்று - இசைநூல்கற்கும் உரிமைக்குஉதவாயென்று, என்னை தள்ளி விட்டான் - என்னைக் கற்போரினின்று தள்ளிவிட்டனன்.

பாணபத்திரர் கீழிசைகற்றவன் நானொருவனல்லன் என்பார் கனியிசைக்கிழவன்றன்கீழ்க்கற்பவரனேகர் எனவும், மாணாக்கர் பலராதலால் என்னையருவருத்துத் தள்ளினரென்பார் தசையெலாமொடுக்கமூத்தா யினியிசைக்கிழமைக்காகாயென்றெனைத்தள்ளிவிட்டான் எனவுங்கூறினார். (௨௫)

வெவ்விறகெறிந்துகட்டிவிலைபகர்ந்தேனுமைய
விவ்வயிறோம்புகேனென்றித்தொழில்பூண்டேனென்ன
நைவளந்தெரிந்தவேமநாதனும்விறகுமள்ளா
அவ்விசையொருகாலின்னும்பாடெனவையன்பாடும்.

(இ-ள்.) ஐய - ஐயனே, வெவ்விறகு எறிந்து கட்டி விலை பகர்ந்தேனும் - உலர்ந்த விறகினை வெட்டி விற்றாயினும், இ வயிறு ஓம்புகேன் என்று-இந்தவயிற்றையோம்பக்கடவேனென்று, இத் தொழில் பூண்டேன் என்ன - இவ்விறகுவிற்குந்தொழிலைப் பூண்டேன் என்றுகூற, நைவளம் தெரிந்த ஏமநாதனும் - அந்த இசைநூலில் வல்ல ஏமநாதனும், விறகு மள்ளா - விறகுசுமக்குந் திண்ணியா, அ இசை ஒருகால் இன்னும் பாடு என - அந்தத் தேவகாந்தாரத்தை ஒருதரம் இன்னும் பாடாயென்று கூற, ஐயன் பாடும் - பெருமானார் பாடுகின்றார்.

ஆசிரியன்சொல்வழி மாணாக்கனொழுகல் கடனாதலால் அவ்விசைத்தொழிலைச்செய்யாது இத்தொழிலைச் செய்கின்றேன் என்பார் வெவ்விறகெறிந்துகட்டி விலைபகர்ந்தேனுமைய - இவ்வயிறோம்புகேனென்றித்தொழில்பூண்டேன் எனவும், நுண்மையாலன்றி யிவ்வாறு பாடுவோரை யிதுகாறுங் கண்டுங் கேட்டும் அறியானாதலால் அவ்விசையொருகாலின்னும்பாடு என எனவும், தாம்பாடிய தேவகாந்தாரம் முற்றும்பாடினாரல்லாராதலால் ஐயன்பாடும் எனவுங்கூறினார். (௨௬)

Koviloor Digital Library

குண்டுநீர்வறந்திட்டன்னநெடுங்கொடிக்குறுங்காய்ப்பத்தர்த்
தண்டுநீணிறத்தநல்யாழிடந்தழீஇத்தெறித்துத்தாக்கிக்
கண்டுமாடகந்திரித்துக்கௌவியதிவவிற்பாவ
விண்டுதேனொழுகிற்றென்னவீக்கிமென்சுருதிகூட்டி.

(இ-ள்.) குண்டு நீர் வறந்திட்டால் அன்ன - மடுவிலுள்ள நீர்வறந்தாற்போல, நெடுங் கொடி குறுங்காய் பத்தர் தண்டு நீள் நிறத்த நல் யாழ் - நீண்ட கொடியிலுள்ள சிறியகாயாகிய குடுக்கையைப் பின்புறத்திலுள்ள தண்டையுடைய மிக்கநிறமமைந்த நல்லவீணையை, இடம் தழுவி தெறித்து தாக்கி கண்டு - இடப்பால்தழுவி நரம்பினைத்தெறித்துத் தாக்கிப் பார்த்து, மாடகம் திரித்து - முறுக்காணியைத்திரித்து, கௌவிய திவவில் பாவ-அதில் விடாதுபற்றிய கட்டிற்பரவ, தேன் விண்டு ஒழுகிற்று என்ன வீக்கி - தேன்மலரினின்றும் ஒழுகியதுபோல நரம்பினைவீக்கி, மென் சுருதிகூட்டி - மெலிவுபடச் சுருதியையெழுப்பி.

திவவு நரம்பின்கட்டமைதி பெறக் கட்டும் வார்க்கட்டு. குற்றந்தீர்ந்த யாழ் என்பார் நல்யாழ் எனவும், நிறம் ஐந்தும் அமைந்த யாழ் என்பார் நிறத்த யாழ் எனவும்,நரம்பின் வீக்கு மலரினின்றொழுகிய தேனொழுக்குப்போ லிருக்கவேண்டும் என்பார் விண்டுதேனொழுகிற்றென்னவீக்கி யெனவுங் கூறினார். "குற்றம் ஆவன செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம் என நான்குவகைப்படும் அவற்றை "இன்னிசைவழியதன்றியிசைத்தல்செம்பகையதாகும் - சொன்னமாத்திரையினோங்கவிசைத்திடுஞ்சுருதியார்ப்பே - மன்னியஇசைவராதமழுங்குதல்கூடமாகும் - நன்றுதல்சிதறவுந்தலதிர்வெனநாட்டினாரே" எனப் பஞ்சபாரதியத்தில் வருஞ் செய்யுளாலும். இந்நான்குகுற்றமுமரக் குற்றத்தால்வரும் என "நீரிலேநிற்றலழுகுதல்வேதனிலமயக்கும்-பாரிலேநிற்றலிடிவீழ்தல்நோய்மரப்பாற்படல்கோள் - சேரிலேசெம்பகையார்ப்பொடுகூடமதிர்வுநிற்றல் - சேரினேர்பண்கணிலமயக்கப்படுஞ்சிற்றிடையே" எனச்சீவகசிந்தாமணி காந்தருவதத்தையார் இலம்பகத்திற்காட்டிய மேற்கோளாலும், ஐந்நிறம் ஆவன "மாத்திரைகளொன்பானுந் தானங்களெட்டானும் - ஏத்துங்கிரியை யெண்ணிரண்டும் - கோத்துப்-பதின்மூன்றெழுத்தாற் றொழிலைந்தும்பண்ணின்-மதியோர்களைந்தநிறமாம்" என இசைமரபுடையார் கூறிய செய்யுளாலும், விண்டுதேனொழுகிற்றென்னவீக்கி என்றது "பசும்பொன்யாழ் - நரம்புதேனார்த்தென" என ஷை இலம்பகத்தில் வருஞ்செய்யுளாலும் உணர்க. (௨௭)

விசையொடுதானந்தோறும்விரனடந்தூசலாட
விசைமுதலேழிற்பல்வேறின்னிசையெழுஞ்சாதாரி
யசையொடுவீதிப்போக்குமுடுகியலராகம்யார்க்கும்
நசைதருநரம்புகண்டமொற்றுமைநயங்கொண்டார்ப்ப.

(இ-ள்.) தானம் தோறும் - சுரங்களெழூந் தானங்கள்தோறும், விசையொடு விரல் நடந்து ஊசல் ஆட - விசையொடு விரல்சென்று போக்குவரவு செய்ய, இசை முதல் ஏழில்-குரல்முதலிய ஏழிசைகட்குமுதலாயுள்ள சத்தசுரங்களில், பல்வேறு இன் இசை எழும் சாதாரி - பலவேறுவகைப்பட்ட இனியஇசைகளில் ஒன்றாயெழும் ஓர்வகைப்பண்ணும், அசை வீதிப் போக்கு முடுகியல் அராகம்- அசையும் வீதிப்போக்கும் வண்ணமும் திறமும் ஆகிய இவைகளால், யார்க்கும் நசை தரும் நரம்பு கண்டம் - எவர்க்கும் விருப்பந்தரும் நரம்பினோசையும் சாரீரவோசையும், ஒற்றுமை நயம் கொண்டு ஆர்ப்ப - தம்முள் வேறின்றி யொலிக்க.

Koviloor Digital Library

அசைதாளம், அது கொட்டு, அசை, தூக்கு, அளவு என்னும் நான்கனுள் ஒன்று. அது ஒருமாத்திரையளவுபடத்தாக்கியெழுதல் "கொட்டுமசையுந்தூக்குமளவும்-ஒட்டப்புணர்ப்பதுபாணியாகும்" என்பதனால் அறிக. விதிப்போக்காவது ந, த முதலிய நாலெழுத்துகள் நேராய்ச்செல்லுதல். முடுகியலாவது வண்ணம் அது பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணம் என மூன்று வகைப்படும். அராகம் ஆவது யாழ்த்திறம். இவை வீணையோசை சாரீரவோசைகளுக்கு உரியனவாதலால் இவைகளால் என்றும். அசைவு என்றும் பாடத்தை அசையெனக்கொள்க. (உஅ)

வயிறுகுழியவாங்கலழுமுகக்காட்டல்வாங்குஞ்
செயிரறுபுருவமேறல்சிரநடுக்குறல்கண்ணாடல்
பயிரறுமிடறுவிக்கல்பையெனவாயங்காத்த
லெயிறுகாட்டலின்னவுடற்றொழிற்குற்றமென்ப.

(இ-ள்.) வயிறு குழிய வாங்கல் - (பாடும்பொழுது) வயிறுகுழிபட மேல்வாங்குதலும், அழு முகங் காட்டல் - அழுமுகங்காட்டுதலும், வாங்கும் செயிர் அறு புருவம் ஏறல் - வளைந்த குற்றமில்லாத புருவம் நெற்றிமேற்செல்லுதலும், சிரம் நடுக்குறல்-தலையசைத்தலும், கண் ஆடல் - கண்ணாடுதலும், பயிர் அறும் மிடறு விக்கல்-குற்றமில்லாதகண்டம் விக்குதலும், பை யென வாய் அங்காத்தல்-பையைப்போல வாயைத்திறத்தலும், எயிறு காட்டல் இன்ன - பற்களைக் காட்டுதலுமுதலிய இவை போல்வனவற்றை, உடல் தொழிற் குற்றம் என்ப - சரீரத்தொழிலால் வருங் குற்றமென்று இசைநூலார் கூறுவர்.

சிவபெருமானார்பாடியது தேவகாந்தாரமாதலால் அக்கந்தருவம் பாடும்பொழுது இக்குற்றங்களொழியப் பாடுவது முறை ஆதலால் உடற்றொழிற் குற்றம் என்றார் "கண்ணிமையாதெண்டத்தடியாகோடிறலசையா - பண்ணளவும்வாய்தோன்றுபற்றெரியா - என்னிலவை - கள்ளார்நறுந்தேனிபற்கைதவனேகந்தருவர் - உள்ளாளப்பாடலுரை, உள்ளாளம்விந்தவுடலுதமெலிபுருட்டுந் - தள்ளாததாக்கெடுந்தனுன் படுத்தல - மெள்ளக் - குருதிரவித்தல்கம்பித்தல்குடிலம் - ஒருபதின்பேயலான்றென்றுரை" என இசைமரபுடையார் கூறிய செய்யுள்களால் உணர்க. "விரலுன்கமைத்தவணிருல்விக்காது - கம்மறைதன்றும்வாய்பிளவாது - கடியுள்ளுணர்ந்து நோக்கமோடாது - பிதிர்வென்மணிதுழ்முடிநடுக்காது - வயிறுகுழிவாங்கியழுமுகங் காட்டாது" எனக் கல்லாடத்திலும் வருதல்காண்க. அது பகுதிப்பொருள்விகுதி.()

வெள்ளைகாகுளிகீழோசைவெடிகுரற்கூசியின்ன
வெள்ளியவெழாலின்குற்றமெதிர்ந்துநின்றிரட்டலெல்லை
தள்ளியகழிபோக்கோசையிழைத்தனெட்டுயிர்ப்புத்தள்ளித்
துள்ளலென்றின்னபாடற்றொழிற்குற்றம்பிறவுந்தீர்ந்தே.

(இ-ள்.) வெள்ளை காகுளி கீழோசை வெடிகுரல் கூசி இன்ன - சிறப்பில்லாத வெள்ளோசையும் காகுளிப்பாட்டும் கீழிசையும் வெடித்தகுரலும் கூசிப்பாட்டு முதலிய இவைபோல்வன, எள்ளிய எழாலின் குற்றம்-இசைநூலார் இகழ்ந்த சாரீரவோசையின் குற்றமாம், எதிர்ந்து நின்று இரட்டல் - எதிர்ந்து நின்று இரட்டலும், எல்லை தள்ளிய கழி போக்கு - அளவுகடந்தகழிபோக்கும், ஓசை இழைத்தல் - ஓசையிழைத்தலும், நெட்டுயிர்ப்பு - பெருமூச்செறிதலும், தள்ளி துள்ளல் என் இன்ன - ஒழுப்ப மோட்டலு மென்று சொல்லப்பட்ட இவை முதலான, பாடல் தொழில்

Koviloor Digital Library

குற்றம் - பாடுந்தொழிற் குற்றத்தினும், பிறவும் தீர்ந்து - பிறகுற்றத்தினும் நின்று நீங்கி.

நிறமில்லாத வெள்ளோசையென்றதில் நிறம் முன்னர்க்கூறியிருத்தலாலுணர்க. காகுளி பேய் கத்தினாற்போற்பாடுதல். கீழோசை நிறமுந் தானமுங் குறைபடுங்கட்டையிசை. நாசிப்பாட்டு ஒருதானத்தேபாட ஒருதானத்தில் நழுவுவது. எறிந்துநின்றிரட்டல் ஒருபண்ணைப்பாட வேறொருபண்ணிலேவிலங்கிநின்றிரட்டல். கழிபோக்கு ஓரோசையானதன்மைநீங்கிப் பலவோசையாய்வருதல். ஓசையிழைத்தல் காகங்கத்தினாற்போலக்கத்துதல். ஒருபுறம் ஒட்டல் பாடுந்திறத்தை யொதுக்கிப்பாடுதல். பிற என்றது அசைவுமுதலியன. அசைவு சோம்பல். தானம் - நெஞ்சு மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணுக்கு, உதடு, பல், தலை. குற்றந்தெரிந்து என்னும் பாடத்தைக் குற்றமெறிந்து நின்று எனவும், ஓசையிளைத்த நெட்டுயிர்ப்பு என்னும் பாடத்தை ஓசையிழைத்த நெட்டுயிர்ப்பு எனவும் பாடங்கொள்க. இவ்வாறு பாட வேறுபாடுகள் பலவுள அவற்றை யாங்காங்குணர்க. "நாசிகாகுளிவெடிகுரல்வெள்ளை, பேசாக்கீழிசையொருபுறமோட்டல், நெட்டுயிர்ப்பெறிதலெறிந்துநின்றிரட்டல், ஓசையிழைத்தல்கழிபோக்கென்னப், பேசுறுகுற்ற மசைவொடுமோற்றி" எனக்கல்லாடத்தினும் வருதல் உணர்க. (௩௦)

எழுதுசித்திரம்போன்மன்னியிழுமெனுமருவியோதை
முழவொலிகஞ்சநாதம்வலம்புரிமுரலுமோசை
கொழுதிசைவண்டின்றாரியெனவிசைக்குணனும்வேரல்
விழுமிலைசிரன்மீன்மேல்வீழ்வீழ்ச்சிபோற்பாட்பண்பும்.

(இ-ள்.) எழுது சித்திரம் போல் மன்னி - (ஓவியநூலோர்) எழுதிய சித்திரம்போலப் பதுமாசனத்திலிருந்து, இழுமெனும் அருவி ஓதை - இழுமென்றொலிக்கும் அருவியினோசையும், முழவொலி - முழவின்முழக்கமும், கஞ்சம் நாதம்-கஞ்சக்கருவியினோசையும், வலம்புரி முரலும் ஓசை - வலம்புரிச்சங்கு முழங்குமுழக்கமும், கொழுது இசை வண்டின் தாரி என - மலர்களை மூக்காலுழுதுபாடும் வண்டின்முழக்கமும்போல, இசைக்குணனும் - இசைக்கும் இசையின்குணமும், வேரல் விழும் இலை - மூங்கிலினின்று விழாநின்ற இலையின்வீழ்ச்சியும், சிரல் மீன்மேல்வீழ் வீழ்ச்சி போல் - மீன்எறிபறவை மீன்மேல்விழும் வீழ்ச்சியும்போல, பாடல் பண்பும்-பாடும்பாட்டின்குணமும்.

ஓவியநூலுட்கூறிய விருத்தியொன்பதுள் பதுமாசனமுதல்விருத்தி "பதுமகமுற்கட்டிதமேயொப்படி, இருக்கைசம்புட மயமுகம்சுவத்திகம், தனிப்புடமண்டிலமேகபாதம், உளப்படவொன்பதும், ஆகுஞ்சித்திரவில்லாதிருக்கை" எனச்சிலப்பதிகாரத்திற்காட்டிய மேற்கோளாலுணர்க. இவற்றுள் வலம்புரிநாதமும் வண்டினோசையும் உத்தமமான ஓசைகள் "துய்யமொழிமென்குயிலும் சோலைவரிவண்டினமும், வையமுழங்கும்வலம்புரியும் - கைவைத்த, தும்புருவும்நாரதரும் பாடியமுவோசையென, நம்புநீர்நால்வேதத்துள், பிச்சிலிபூவைகுடமுழக்கஞ்செம்மைத்தாம், உச்சிமலைநீர்விழுக்காடொண்பருந்து - பச்சைநிற, வேயினிலைவீழ்ச்சியுடன்வெண்காளிழற்பறவை - ஏயுங்காலோசையியம்பு" என இசைமரபுடையார்கூறியநூலுட்காண்க. இன்னும் பருந்தின்வீழ்ச்சி, பூனையின்புணர்ச்சி, வானம்பாடிசிற்கும்நிலை, குயிலோசை முதலியனவுங்கொள்க. "வண்டின்றாரியுங் கஞ்சநாதமும்-சிரல்வானிலையுங் கழையிலைவீழ்வதும்-அருவியோசையு முழவின்முழக்கமும்-வலம்புரிச்சத்தமும்

Koviloor Digital Library

வேறுபின்புணர்ச்சியும்-இன்றுமென்றிசைப்பப் பன்னியவிதியொடு" எனக் கல்லாடத்திலும் வருதல்காண்க. (௬௧)

பொருந்தமந்தரத்தினோடுமத்திமைதாரம்போக்கித்
திருந்தியதுள்ளறூங்கன்மெலிவதுசிறப்பச்செய்து
மருந்தனசெய்யுளோசையிசையோசைவழாமல்யார்க்கும்
விருந்தெனச்செவியின்மாந்தப்பாடினார்வேதகீதர்.

(இ-ள்.) பொருந்த - இசைய, மந்தரத்தினோடு - படுத்தலோசையோடு, மத்திமை தாரம்போக்கி - சமனோசையும் எடுத்தலோசையுமாகிய இவற்றில் அவைகளை யடக்கி, திருந்திய துள்ளல் தூங்கல் மெலிவது சிறப்பசெய்து - திருத்தமாகத் துள்ளப்படுதலும் தூக்கப்படுதலும் மெலிக்கப்படுதலுமாகிய இவை சிறந்து நிற்கச்செய்து, மருந்து அன்ன செய்யுள் ஓசை இசை ஓசைவழாமல் - அமுதத்தையொத்த பாடலினோசையும் இசையினோசையும் தம்முள்வழுவாமல், வேத கீதர் - சாமவேதகீதராகிய பெருமானார், யார்க்கும் விருந்து என்ன செவியில் மாந்த பாடினார் - எவர்க்கும் விருந்துபோலக் காதாற்பருகப் பாடியருளினார்.

மந்தரம்படுத்தல், மத்திமைநலிதல், தாரம் எடுத்தல், இவை இசைநூலுள் வரும் ஓசை வேறுபாடுகள் "கிடவுக்குறுகவும் நிவப்புந்தூக்கிப் - பாடியபுலவர் என்றார் ஐயனாரிதனாரும். மந்தரமுதலியவற்றிலடக்கித் துள்ளல்முதலியன செய்துபாடுதல் "சுருக்கலைக்குன்றிற்றேன்மழைகான்றது" போல ஆதலால் மருந்தனசெய்யுளோசை யிசையோசையெனவும், பாவும் பண்ணும் வேறன்மையால் செய்யுளோசை இசையோசையெனவும், சாமவேதகீதராதலால் யார்க்கும் விருந்தெனப்பாடினார் எனவுங்கூறினார் "பாவோடணைதலிசையென்றார் பண்ணென்றார், மேவார்பெருந்தானமெட்டானும்-பாவாய், எடுத்தன்முதலாவிருநான்கும்பண்ணிப், படுத்தமையாற்பண்ணென்றார்" எனவரும் தெவால் உணர்க. மந்திரத்தினோடு மத்திமதாரம் என்னும்பாடத்தை, மந்தரத்தினோடு மத்திமைதாரம்போக்கி எனப்பாடங்கொள்க.

காற்சீரால் இடைமடக்காய்வந்த ஒருபோகு கொச்சகம்.

கந்தருவம்.

விரைசார்மலரோனறியாவிகிர்த
னரசாய்மதுரையமர்ந்தானென்னே
யரசாய்மதுரையமர்ந்தானவனென்
புரைசார்மனனும்புகுந்தானென்னே.

(இ-ள்.) விரைசார் மலரோன் அறியாவிகிர்தன் - வாசமிக்க தாமரைமலரில் உதிக்கும் பிரமனறியாத வேறுபாட்டையுடையபெருமான், அரசு ஆய் மதுரை அமர்ந்தான் என்னே - பாண்டியர் திருக்கோலங்கொண்டு மதுரையில் வீற்றிருந்தனன் அது யாதுகாரணமோ, அரசு ஆய் மதுரை அமர்ந்தான் - அரசனாய் அம்மதுரையில் வீற்றிருந்த, அவன் என்புரைசேர் மனனும் புகுந்தான் என்னே - அப்பெருமான் என்னுடைய குற்றமமைந்த மனத்தினுங் குடிபுகுந்தான் அது யாதுகாரணமோ அறியேன்.

தம்மையொருபொருளாக நன்குமதித் திறுமாப்போரறிதற்கரிய விகுர்தியுடையவன் என்பார். விரைசார்மலரோனறியாவிகிர்தன் எனவும், அவர்க்கன்றியன் பர்க்கெளியன் என்பார் அரசாய்மதுரை யமர்ந்தான் எனவும், அவ்வாறுதல் பெரு

வியப்பு என்பார் என்னேயெனவும், திருவருட்போர்தத்தால் மலபந்தம் நீங்கினும் இங்குவிருந்தபாண்டம்போல ஒருகால் அதுவந்து தாக்கும் என்பார் புரைசேர்மனனும் எனவும், அம்மனத்திலுங் குடிபுகுந்தது அஃதினும் ஓர் பெரியவியப்பு என்பார் புகுந்தானென்னேயெனவுங் கூறினர். "மூவராலுமறியொணாமுத லாயவானந்தமூர்த்தியான், யாவராயினுமன்பரன்றி யறியொணாமலர்ச்சோதியான்" எனவும் " போதமேலாகப்பண்டே புல்லியமலங்கடீர்ந்தும், வாதனைதாக்குமாபோல் " எனவும் வரும் ஏதுக்களாலுணர்க. (௩௩)

பாடன்மறையுந்தெளியாப்பரமன்
கூடல்கோயில்கொண்டானென்னே
கூடல்போலக்கொடியேனகமு
மாடலரங்காவமர்ந்தானென்னே.

(இ-ள்.) பாடல் மறையும் தெளியாத பரமன் - பாடலமைந்தவேதங்களுந் தெளிந்துணராத இறைவன், கூடல் கோயில் கொண்டான் என்னே - மதுரையில் திருக்கோயில்கொண் டெழுந்தருளினன் அது யாதுகாரணம், கூடல்போல கொடியேன் அகமும் - அம்மதுரையைப்போலக் கொடுந்தொழிலையுடைய என்மனத்தையும், ஆடல் அரங்கு ஆக அமர்ந்தான் என்னே - ஆடுதற்றொழிலமைந்த நாடகசாலையாகக்கொண்டு வீற்றிருந்தருளினன் அது யாது காரணமோ அறியேன்.

சுட்டறிவிற்பட்ட பாசஞானமாகிய சொற்பிரபஞ்சமாதலால் பாடன்மறையுந்தெளியாப் பரமன் எனவும், சுட்டறிவிற்படாது சுத்ததத்துவபுவனத்து வசிக்குமிறைவன் இங்குள்ளோர் தரிசித்துய்தற்குத் திருக்கோயிலுள் திருமேனிகொண்டெழுந்தருளியிருத்தலால் கூடல்கோயில் கொண்டான் எனவும், அடியவர் மனத்திடையருது வசிப்பவனுதலால் கூடல்போலக் கொடியேனகமும் ஆடலரங்கா அமர்ந்தான் எனவுங்கூறினர். " தாவரசங்கமங்களென்றிரண்டுருவினின்று, மாபரன்பூசைகொண்டுமன்னுயிர்க்கருளைவைப்பன்"எனவும்"நெக்குநெக்குநினைப்பவர்நெஞ்சுளே, புக்குநிற்கும்பொன்னார்சடைப்புண்ணியன் " எனவும்வரும் ஏதுக்களால் உணர்க. ()

நீலவண்ணன்றேருநிமல
னாலவாயிலமர்ந்தானென்னே
யாலவாயானலரில்வாசம்
போலென்னுளமும்புகுந்தானென்னே.

(இ-ள்.) நீலவண்ணன் தேருநிமலன் - கரியநிறத்தையுடைய திருமால் தேடியுணராத பெருமான், ஆலவாயில் அமர்ந்தான் என்னே - திருவாலவாயி லெழுந்தருளியிருந்தனன் அது யாதுகாரணமோ, ஆலவாயான் - அத்திருவாலவாயிலெழுந்தருளிய பெருமான், அலரில் வாசம்போல்-மலரில் மணம் அபேதமாயிருத்தல்போல, என் உளமும் புகுந்தான் என்னே - ஏழையேன்மனத்திலுங்குடிபுகுந்தான் யாதுகாரணமோ அறியேன்.

அன்புஞ் சிவமும் அபேதமாயிருத்தலால் அலரில்வாசம்போ லென்னுளமும் புகுந்தான் எனக்கூறினர் " மாறிநின்றென்னை மயக்கிடும்வஞ்சப் புலனைந்தின்வழியடைத்தமுதே, ஊறிநின்றென்னுளெழுபரஞ்சோதி யுள்ளவாகாணவந்தருளாய், தேறலின்றெளிவேசிவபெருமானே திருப்பெருந்துறையுறைசிவனே, ஈறிலாப்பதங்களியாவையுங்கடந்த வின்பமேயென்னுடையன்பே" என்னுந் திருப்பாசுரத்துள் என்னுடையன்பே என்னும் ஏதுவால் அபேதமாயிருத்தல் காண்க. (௩௫)

Koviloor Digital Library

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பாணர்தம்பிரானைக்காப்பான்பருந்தொடுநிழல்போக்கென்ன
யாணரம்பிசைபின்செல்லவிசைத்தவின்னிசைத்தேனண்ட
வாணர்தஞ்செவிக்காலோடிமயிர்த்தொளைவழியத்தேக்கி
யாணரின்னமுதயாக்கையிசைமயமாக்கிற்றன்றே.

(இ-ள்.) பாணர் தம்பிரானை காப்பான் - பாணருள் தலைவராகிய பத்திரனைக் காக்க, பருந்து ஒடு நிழல் போக்கு என்ன - பருந்தினொடு நிழல் செல்லுதல்போல, யாழ் நரம்பு இசை பின்செல்ல - வீணைநரம்பிலெழுந்த இசையின்பின்செல்ல, இசைத்த இன் இசைதேன் - பாடிய இனிய இசையாகியதேன், அண்டவாணர்தம் செவிக்கால்ஒடி - ஆகாயவாசிகளாகிய விஞ்சையர்முதலியோருடைய காதாகிய கால்வாய் வழியேசென்று, மயிர்தொளைவழியதேக்கி - உரோமங்களின் தொளைவழியாய் நிரம்பிவடியநிரப்பி, யாணர் இன் அமுதம் யாக்கை இசை மயம் ஆக்கிற்று - உண்ணுந்தோறும் புதுமைவிளைக்கும் இனிய அமுதத்தாற்பெருகிய அவர்கள் சரீரத்தை யிசைமயமாகச் செய்தது.

பருந்தொடு அதனிழல் பின்பற்றிச்செல்லுதல்போல வீணையோசையின்பின் சாரீரவோசைசெல்லுதலால் பருந்தொடுநிழல்போக்கென்ன என்றார் "பருந்துமத னிழலும் பாட்டுமெழாலும்" என ஷை காந்தருவதத்தையார் இலம்பகத்தில் வருஞ் செய்யுளுக்குப் பருந்து பறக்கின்றவிடத்து முறையேயுயர்ந்து தன்னிலத்தின்கட்டாழ்ந்து பின்று மம்முறையே மேன்மேலுயர்கின்றாற்போலப் பாடவேண்டுதலினுவமையாயிற்றென்றார் நச்சினார்க்கினியர். யாழ்நரம்பு யாணரம்பு, வாழ்நர் வாணர் என ஈறுகெட்டு நகரம் ணகரமாகத் திரிந்து நின்றன. (௩௬)

தருக்களுஞ்சலியாமுந்நீர்ச்சலதியுங்கலியாநீண்ட
பொருப்பிழியருவிக்காலுநதிகளும்புரண்டுதள்ளா
வருட்கடல்விளைத்ததேவின்னிசையமுதமாந்தி
மருட்கெடவறிவன்றீட்டிவைத்தசித்திரமேயொத்த.

(இ-ள்.) தருக்களும் சலியா - ஓரறிவுயிர்களாகிய மரங்களும் அசையாவாய், முந்நீர்ச்சலதியும் கலியா - முத்தொழிலையுடைய கடலும் ஒலியாவாய், நீண்டபொருப்பு இழி அருவிக்காலும் நதிகளும் புரண்டுதள்ளா - உயர்ந்த மலையினின்றிழியும் அருவியாகிய கால்களும் நதிகளும் அலைகளாற்புரண்டு தள்ளாவாய், அருள்கடல்விளைத்த தேம் இன் இசை அமுதம்மாந்தி - கிருபாசமுத்திரமாகிய இறைவர்பாடிய இனிய இசையாகிய அமுதத்தைப்பருகி, மருள்கெட (பார்ப்போர்) மயக்கம்நீங்க, அறிவன் றீட்டிவைத்த சித்திரமே ஒத்த - சிற்பநூலில்வல்ல ஓவியப்புலவன் எழுதிவைத்த சித்திரங்களையே யொத்திருந்தன.

சலிக்கும்தருக்கள் முதலியன சித்திரித்த தருக்கள் முதலியனபோல அசைவற்று நின்றன என்பார் சித்திரமேயொத்த என்றார். முத்தொழில்களாவன சிருட்டி, திதி, சங்காரங்கள். (௩௭)

வீணைவகைவழுக்கிச்சோர்வார்சிலர்சிலர்விரனடத்தும்
பாணரம்பெழாலுங்கண்டத்தெழாலும்வேறுகவேர்ப்பார்
நாணமோடுவகைதள்ளநாத்தலைநடுக்கித்தங்கள்
மாணிழையவர்மேல்வீழ்வார்விஞ்சையர்மயங்கிச்சில்லோர்.

Koviloor Digital Library

(இ-ள்.) சிலர் - (இசைகேட்டகின்னரருள்) சிலர், வீணை கைவழுக்கி சோர்வார் - ஏந்திய வீணை கையினின்றும் வழுவிவிழச் சோர்வடைவார்கள், சிலர் - கந்தருவருட்சிலர், விரல்நடத்தும் யாழ்நரம்பு எழாலும் - விரல்கள்சென்றுலாவும் வீணையினரம்பிலெழுந்த ஓசையும், கண்டத்து எழாலும் வேறுகவேர்ப்பார் - கண்டத்தோசையும் வேறுபட வெயர்வரும்புவார்கள், விஞ்சையர் சில்லோர் - விஞ்சையருட்சில்லோர், நாணம் உவகைதுள்ள - நாணமொருபாலும் மகிழ்ச்சியொருபாலுமேலோங்க, நாத்தலம் நடுங்கி மயங்கி - நாக்குழறிமதிமயங்கி, தங்கள் மாணிழையவர்மேல் வீழ்வார் - தங்கள் மனைவியர்மேற் சோர்ந்து வீழ்வார்கள்.

இதனால் இசைகேட்ட வீணையில்வல்ல கின்னரர் முதலியோர் தத்தந்தொழிலிழந்தனர்கள் என்பது கூறப்பட்டது. ஒடு எண்ணுப்பொருட்டு. (௩அ)

போதுளான்பரமன்பாதப்போதுளானானன்வேலை
மீதுளான்பரமாநந்தவேலைமீதுள்ளானானன்
தாதுளாங்கமலக்கண்போற்சதமகனுடலமெல்லாம்
காதுளானல்லேனென்றான்கண்ணுளான்கானங்கேட்டு.

(இ-ள்.) கண்ணுளான் கானம் கேட்டு - நுதற்கண்ணுடைய சிவபெருமான் பாடிய தேவகானங்கேட்டு, போது உள்ளான் - தாமரைமலரில் வசிக்கும் பிரமன், பரமன் பாதம் போது உள்ளான் ஆனான்-அச்சிவபெருமான் திருவடித்தாமரையின் கீழுள்ளவனானான், வேலை மீது உள்ளான் - திருப்பாற்கடலிலறிதுயில் கூருந் திருமால், பரமாநந்த வேலை மீது உள்ளான் ஆனான் - பேரின்பக்கடல்மேலுள்ளவனானான், சதமகன் - இந்திரன், தாது உள் ஆம் கமலக்கண்போல் - மகரந்த நிறைந்த தாமரைமலர்போன்ற கண்கள்போல, உடலம் எல்லாம் காது உள்ளான் அல்லேன் என்றான் - உடலமுற்றும் செவிகளுடையவனல்லனாயினேனென்று கவலையுற்றான்.

பிரமன் - கேட்ட இசையின்பத்தோடிரண்டற்றபேதமாயிருத்தலால் சார்புபற்றிப் போதுளான் பரமன்பாதப் போதுளான் எனவும், திருமாலும் இசையின்பத்தால் விழுங்கப்படுதலின் சார்புபற்றி வேலைமீதுள்ளான் பரமாநந்தவேலைமீதுள்ளான் எனவும், இந்திரன் இசைகேட்டற்குத் தனதிரண்டு செவிகளும் போதா ஆதலால் கண்போலுடலமெல்லாங் காதுளானல்லேனென்றான் எனவுங்கூறினார். (௩௯)

முனிவருந்தவத்தராதிமுத்தர்மாசித்தரன்பின்
றுனிவரும்பழங்கண்டீர்ப்பான்சுந்தரத்தோன்றல்கீதங்
கனிவருங்கருணையென்னுங்கடலிலன்பென்னுமாற்றிற்
பனிவருங்கண்ணீர்வெள்ளம்பாய்ந்திடவின்பத்தாழ்ந்தார்.

(இ-ள்.) முனிவு அரும் தவத்தர் ஆதி - வெறுப்பில்லாத மாதவத்தினர் முதலிய, முத்தர் மாசித்தர் - முத்தரும் பெரிய சித்தரும், அன்பின் துனிவரும் பழங்கண் தீர்ப்பான்-அன்பினையுடைய பாணபத்திரர் கொண்ட நடுக்கமிக்க துன்பத்தையொழித்தற்பொருட்டு, சுந்தரத்தோன்றல் கீதம் - சோமசுந்தரக்கட்வுள் பாடிய தேவகானம், கனிவரும் கருணை என்னும் கடலில்-(பாணபத்திரரிடத்து) கனிந்த கிருபையென்னுங் கடலாதலா லதன்கண், அன்பு என்னும் ஆற்றின்-அன்பென்னும் நதியோடு, பனிவரும் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட - துளிக்கும் ஆநந்தபாஷ்பமுங் கலந்து பாய, இன்பத்து ஆழ்ந்தார் - இன்பக்கடலிலழுந்தினார்கள்.

அன்பினர் என்பது அன்பின் என ஈறுதொக்குநின்றது. பாணபத்திரர் கொண்ட அன்பால் அவரிடத்துக் கருணைநிகழ்ந்ததென்பார் சுந்தரத்தோன்றல் கீதம் க

னிவரும் கருணையென்னுங் கடல் எனவும், அக்கருணையால் அன்புமுதிர்ந்த தேற்றம் என்பார் அன்பென்னுமாற்றில் எனவும், அவ்வன்பால் ஆனந்தபாஷ்பம் பொழிதலும் தம்வசமழிதலும் நிகழும் என்பார் பனிவருங் கண்ணீர்வெள்ளம் பாய்ந்திட இன்பத்தாழ்ந்தார் எனவுங் கூறினர். சிவபெருமான் திருவருளால் பத்தியுண்டாம், பத்திதோன்றில் அச்சிவபெருமான் திருவருளுண்டாம் என்பதற்கு "ஆங்கவனருளாற்பத்திமையுண்டாம் பத்தியாலவனருளுண்டாம்" என வாயுசங்கிதையினும் "நேசவருள்புரிந்துநெஞ்சல்வஞ்சங்கெடப்-பேராதுநின்றபெருங்கருணைப்பேராறே" எனத் திருவாசகத்தினும், அன்பால் ஆனந்தபாஷ்பஞ் சிந்தலுக்கும் தம்வசமழிதலுக்கும் "மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன் விரையார்கழற்கென்கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பி" எனவும் "முனியாவன்பென்புருகவோலமிட் - டலைகடற்றிரையினார்த்தார்த்தோங்கித் - தலைதடுமாறாவிழுந்துபுரண்டலறிப் - பித்தரின்மயங்கிமத்தரின்மதித்து - நாட்டவர்மருளவுங்கேட்டவர்வியப்பவும் - கடக்களிறேற்றாத்தடப்பெருமதத்தின்-ஆற்றேனாகவவயஞ்சுவைதரு-கோற்றேன்கொண்டுசெய்தனன்" எனவரும் திருவாசகத்தினும் உணர்க. (௪௦)

ஊடிவேறொதுங்கித்துன்பவுவரியுட்குளித்தார்தம்மிற்
கூடிவேறற்றவின்பக்குளிர்கடல்வெள்ளத்தாழ்ந்தார்
நாடிவேறிடைப்பிரிந்தார்மேன்மனநடத்திமேனி
வாடிவேளலைப்பச்சோர்ந்துமம்மர்நோயுழந்தார்மண்ணோர்.

(இ-ள்.) மண்ணோர்-நிலவுலகத்துள்ளவர்களுள், ஊடி வேறு ஒதுங்கி - பிணங்கிவேறிடத்தொதுங்கி, துன்ப உவரி உள் குளித்தார்-துன்பக்கடலில் முழுகிய பெண்கள், தம்மில் கூடி - தமது கணவரோடு கலந்து, வேறு அற்ற இன்பம் குளிர் கடல் வெள்ளத்து ஆழ்ந்தார் - தம்முளொன்றுபட்ட இன்பமாகிய தண்ணிய கடல்வெள்ளத்திலழுந்தினார்கள், நாடி - (பொருள்முதலியவற்றை) நாடி, வேறு இடை பிரிந்தார் மேல் மனம் நடத்தி - மறுபுலத்துச்சென்ற கணவர்மேல் தமது மனத்தைச் செலுத்தி, மேனி வாடி - உடல் மெலிந்து, வேள் அலைப்ப சோர்ந்து - மன்மதன் வருத்த வுணர்வழிந்து, மம்மர் நோய் உழந்தார் - காமநோயில் வருந்தினார்கள்.

ஊடிய மகளிர் இசைகேட்டலவ நீங்கிக் கூடினர் என்றதனால் மெய்ப்பாடு மகிழ்ச்சியும், கணவர்ப்பிரிந்த மகளிர் ஓதற்பிரிவு முதலியவற்றின்மேற் பருவம் வரார்த கூறிச் சென்ற தத்தம் கணவர்மேல் மனஞ்செலுத்துதலால் மெய்ப்பாடு அவலமும் எனக்கொள்க. (௪௧)

பைத்தலைவிடவாய்நாகம்பல்பொறிமஞ்ஞைநால்வாய்
மத்தமானரிமான்புல்வாய்வல்லியமருட்கையெய்தித்
தந்தமாறறியாவாகித்தலைத்தலைமயங்கிச்சோர
இத்தகைமாவும்புள்ளுமிசைவலைப்பட்டவம்மா.

(இ-ள்.) பைதலை விடம் வாய் நாகம் - படம்பொருந்திய தலையையும் விஷம் பொருந்திய வாயையுமுடைய பாம்பும், பல் பொறி மஞ்ஞை நால்வாய் மத்த மான் - பலபொறிகள்வாய்ந்த மயிலும் தொங்கியசையும் வாயையுடைய யானையும்; அரி மான் புல் வாய் வல்லியம் - சிங்கமு மானும் புலியும், மருட்கை எய்தி - மயங்கி, தத்தம் ஆறு அறியா ஆகி - தத்தமக்குரிய செல்லுநெறியுணராதனவாகி, தலைத்தலைமயங்கி சோர - இடங்கள்தோறுந் தலைதடுமாறி மயங்கிச்சோர்ந்து நிற்றலால்,

Koviloor Digital Library

இதகை மாவும் புள்ளும் இசை வலைப்பட்ட - இத்தன்மையையுடைய மிருகமும் பறவைகளும் இசையாகிய வலையிலகப்பட்டன.

ஓரறிவுடைய தருக்கள் முதலியனவே யன்றியை யறிவுடையனவாய்ப் பகுப்புணர்ச்சியினறி நின்ற மிருகமும் பறவையும் தாம் செல்லும் நெறியையும் தத்தம் பகைமையையும் நோக்காது சலிப்பின்றி நின்றனவென இசையின்றெழிற் குணங் கூறுவார் வியப்பிடைச்சொற்றந்து இசைவலைப்பட்டவம்மா என்றார். "வானவர் மக்கள்நரகர் விலங்குபுள் - ளாதிசெறியறிவோடையறிவுயிரோ" என்பதனால் ஐயறிவுடையன என்பதுணர்க. (௬௨)

வன்றரைகிழியவீழ்போய்வான்சினைகரியநின்ற
வொன்றறிமரங்களெல்லாஞ்செவியறிவுடையவாகி
மென்றளிரீன்றுபோதுவிரிந்துகண்ணீருஞ்சோர
நன்றறிமாந்தர்போலநகைமுகமலர்ந்தமாதோ.

(இ-ள்.) வன் தரை கிழிய வீழ் போய் - வலியநிலங் கிழிபட விழுதுவிழ்த்தி, வான் சினை கரிய நின்ற - பெரிய கிளைகள் கரிந்துபோக நின்ற, ஒன்று அறி மரங்கள் எல்லாம் - பரிசமென்னும் ஓரறிவையுடைய மரங்கள் யாவும், செவி அறிவு உடைய ஆகி - (ஓசையுணரும்) செவியுணர்ச்சியையுமுடையனவாகி, மென் தளிர் ஈன்று - மெல்லிய தளிர்தளிர்த்து, போது விரிந்து - அரும்பிமலர்ந்து, கண்ணீரும் சோர - கண்ணீருஞ் சிந்த, நன்று அறி மாந்தர் போல - நன்றுதீது பகுத்துணருமக்கள்போல, நகைமுகம் மலர்ந்த - நகையொடு முகமலர்ந்தன.

"புன்மரமுதலவுற்றறியு மோரறிவுயிர்" என்றதனால் ஒன்றறிமரங்கள் என்றார். கண்ணீர் கள் நீர் எனப்பிரித்துக் கள்ளாகிய நீர் எனக்கொள்க. நகை ஒளி, சிரிப்பு. கரிந்தமரந்தளிர்த் தரும்பிமலர்ந்துகள்ளொழுக்கி நிற்பச்செய்வது இசையின் பண்பாதலால் அதன்பண்பை யவற்றின்மேலேற்றிச் செவியறிவுடையவாகி நன்றறிமாந்தர்போல நகைமுகமலர்ந்தவன்றே என்றார். (௬௩)

வாழியவுலகின்வானோர்மனிதர்புள்விலங்குமற்றும்
ஆழியகரணமெல்லாமசைவறவடங்கவையன்
ஏழிசைமயமேயாகியிருந்தனவுணர்ந்தோருள்ளம்
ஊழியிலொருவன்றாள்புக்கொடுங்கியதன்மையொத்த.

(இ-ள்.) உலகின் வானோர் மனிதர் - பொன்னுலகிலும் நிலவுலகிலுமுள்ள தேவர்களும் மனிதர்களும், புள் விலங்கு மற்றும் - பறவையுமிருகமும் ஏனைப்பொருள்களும், ஆழிய கரணம் எல்லாம் அசைவு அற அடங்க - ஆழ்ந்த மனமுதலிய கரணங்களெல்லாம் சலனமின்றி யொருப்பட்டுநிற்க, ஐயன் ஏழிசை மயமே ஆகி இருந்தன - சோமசுந்தரக்கடவுள் பாடியருளிய ஏழிசையின் மயமாய் முடிந்திருந்ததலால், உணர்ந்தோர் உள்ளம் - பரஞானமுடையோர் உள்ளம், ஊழியில் ஒருவன் தாள் புக்கு ஒடுங்கிய தன்மை ஒத்த - ஊழிகாலத்தினு முலவாதுள்ள சிவபெருமான் திருவடியில் சென்றொடுங்கிய தன்மையை யொத்திருந்தன.

ஆக்கல் காத்தற்பொருட்டுப் பிரமனையுந் திருமாலையுந் தந்து அவர்கள் பாலதிகார சத்தியைவைத் தூழியிலொடுக்கித் தானொருமுதலாய் நிற்றலால் ஊழியிலொருவன் எனவும், அப்பெருமானார் திருவடியிற் சென்றொடுங்கிய உள்ளம் இரண்டறஅபேதமாய் நிற்றலால் தாள்புக்கொடுங்கிய தன்மையொத்த எனவுங் கூறினார்.

Koviloor Digital Library

“ நிலவுநின்ற தன்னருளுருக்கொண் டிடுநிமலன்-தலைமைபெற்றிடு புங்கவர்தம்மைமுன்றந்தே - உலகம் யாவையு மளித்தருள் செய்திட வுதவி - அலகிலாவுயிர்யாவையுமயன்க ணின்றளிப்பான் எனவும், மாயவன்கணின்றவையெலாம்போற்றி”எனவும், அன்னவேலையி லவையெலாமழித்தபி னளிப்போர் - என்னநின்றவர் தம்மையுமேடுக்குற மிதற்பின் - முன்னருள்ளதோ ரேகமாயுறையுமெம்மூர்த்தி ” எனவுங் காந்தத்திலும் “ இறுதியாங் காலந்தன்னி லொருவனேயிருவர் தாமும் - உறுதியாய்நின்றொன்னி லிறுதிநாளுண்டாகாதாம் - அறுதியிலரனே யெல்லாமழித்தலா லவனின்றும் - பெறுதாமக்கனேக்கம் பேரதிகரணத்தாலே” எனச் சித்தியாரிலும் வருதல்காண்க. (௪௪)

கண்ணிறைநுதலோன்சாமகண்டத்தினெழுந்தமுல்லைப்
பண்ணிறைதேவகிதஞ்சராசரவுயிரும்பாரும்
விண்ணிறைதிசைகளெட்டும்விழுங்கித்தன்மயமேயாக்கி
யுண்ணிறையுயிருமெய்யுமுருக்கியதிசைவல்லானை.

(இ-ள்.) கண் நிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த - தீக்கண்பொருந்திய நெற்றியையுடைய சோமசுந்தரக்கடவுளின் சாமகீதநிறைந்த ஸ்ரீகண்டத்தினின்று மெழுந்த, முல்லைப்பண் நிறை தேவகீதம் - சாதாரிப்பண்ணாகிய நிறைந்த தேவகானம், சராசரவுயிரும் பாரும் - சராசரங்களையும் நிலவுலகத்தையும், விண்ணும் நிறை திசைகள் எட்டும் - விண்ணுலகத்தையும், நிறைந்த எட்டுத்திசைகளையும், விழுங்கி தன்மயமே ஆக்கி - விழுங்கித் தன்மயமாகச்செய்து, இசை வல்லானை - இசைநூலில் வல்ல ஏமநாதனை, உள் நிறை உயிரும் மெய்யும் உருக்கியது - உள்ளேநிறைந்த உயிருமுடலும் நெக்குவிட்டுருகச் செய்தது. (௪௫)

கலித்துறை.

சிந்தைதோயுமைம்பொறிகளுஞ்செவிகளாப்புலன்கள்
ஐந்துமோசையாவிசைவலானிருந்தனனாகப்
பந்தநான்மறைநாவினாற்பத்திரனாளாய்
வந்துபாடினானிந்தனச்சுவையொடுமறைந்தார்.

(இ-ள்.) சிந்தை தோயும் ஐம்பொறிகளும் செவிகள் ஆக - மனத்தின்வழியிலுஞ் மெய்முதலிய ஐந்துபொறிகளும் செவிகளாகவும், புலன்கள் ஐந்தும் ஓசை ஆக-சத்தமுதலிய ஐம்புலன்களும் சத்தவுணர்ச்சியாகவும், இசை வல்லான் இருந்தனனாக-இசைநூலில் வல்ல ஏமநாதனிருக்க, பத்திரன் ஆளாய் வந்து - பாணபத்திரர் அடிமையாய் வந்து, பந்தம் நான் மறை நாவினால் பாடினார். கட்டமைந்த நான்குவேதங்களையும் தமது திருநாவாற் பாடியருளிய சோமசுந்தரக்கடவுள், இந்தனச்சுவையொடு மறைந்தார் - விறகின் சுமையோடு மறைந்தருளினார்.

பதம், நிரை, பாழி, சாகை, பஞ்சாதி, அநுவாகம் என உறுப்புகளுடைய என்பார் பந்த நான்மறை யெனவும், மனம் இசை வழித்தாய் நிற்றலால் மனம் வாயிலாகச்செல்லும் ஐம்பொறிகளும் அவ்வழியால்நின்றன வென்பார், ஐம்பொறிகளுஞ் செவிகளா எனவும், ஒருணர்ச்சி யதிகரித்தெழுங்கால் ஏனையுணர்ச்சிகள் சுருங்கு மென்பார். புலன்களைந்துமோசையா எனவுங் கூறினார். (௪௬)

யானறிந்தசாதாரியன்றிப்பருளிதனை
நானறிந்ததென்றெருவருநயின்றிலர்தேவ

Koviloor Digital Library

கானமீதிவற்குணர்த்தினேன்கடவுளேயன்றி
ஏனைமானிடர்வல்லரோவிதுவியப்பென்னு.

(இ-ள்.) யான் அறிந்த சாதாரி அன்று - இது நான்தெரிந்த சாதாரிப்பண்ணல்ல, இம்பருள் இதனை நான் அறிந்தது என்று ஒருவரும் நவின்றிலர்-இந்நிலவுலகில் இப்பண்ணினை யான் கேட்டறிந்துளேனென்று ஒருவருங் கூறிற்றிலர், ஈது தேவகானம் - விறகாள் பாடிய இது தேவகானமாம், இவற்கு உணர்த்தினேன் கடவுளே அன்றி - இவனுக்குக் கற்பித்தவன் கடவுளேயல்லாமல், ஏனை மானிடர் வல்லர் ஓ - (அவரொழிந்த) மானிடர் கற்பிக்க வல்லரோ, இது வியப்பு என்னு - இது அற்புதமான செய்தியென்று.

இப்பண் நிலவுலகில் வழங்கிறும் ஈது தேவகானம் என்றமையால் யானறிந்த சாதாரியன்று எனவும், இதனை நானறிந்ததென்றொருவரும் நவின்றிலர் எனவும், இவன் மானிடனாதலின் கற்பித்தவன் கடவுளாவான் வேண்டுமாதலால் கடவுளேயன்றி யேனைமானிடர் வல்லரோ எனவுங்கூறினன். (௪௭)

இழுக்கிவிட்டவிக்கிழமகனிசையிதேலந்த
வழுக்கில்பத்திரன்பாடலெற்றேவெனமதியா
வழுக்கமுற்றெழுந்திசைவலானடுத்ததன்பண்டர்
குழுக்களுங்குலைகுலைந்திடவிருள்வழிக்கொண்டான்.

(இ-ள்.) இழுக்கி விட்ட இக் கிழமகன் இசை இதேல் - (பாணபத்திரனால்) தள்ளிவிட்ட இந்தமுதுமகன்பாடும்இசை யிதுவாகில், அந்த வழுக்கு இல் பத்திரன் பாடல் எற்றே என மதியா-அந்தக்குற்றமில்லாத பாணபத்திரன் பாடும் பாடலெத்தன்மையதோவென்றுகருதி, இசை வல்லான் - இசைநூலில்வல்ல ஏமநாதன், அழுக்கம் உற்று எழுந்து-கவலையுற்றெழுந்து, அடுத்த தன் பண்டர் குழுக்களும் குலை குலைந்திட - தன்கீழ்க்கற்ற பாடல்மக்கள்கூட்டங்களும் தலைதடுமாறிச்செல்ல, இருள் வழி கொண்டான் - பாதிராத்திரியிற் கரந்தோடத்தலைப்பட்டான். (௪௮)

மடக்குபல்கலைப்பேழையுமணிக்கலம்பிறவு
மடக்குபேழையுங்கருவியாழ்க்கோலுமாங்காங்கே
கிடக்கமானமுமச்சமுங்கிளர்ந்துமுன்னீர்த்து
நடக்கவுத்தரதிசைக்கணேநாடினனடந்தான்.

(இ-ள்.) பல் கலம் மடக்கு பேழையும் - பலவகைப்பட்ட ஆபரணங்கள்வைத்த மடக்குப்பெட்டியும், மணிக் கலம் பிறவும் அடக்கு பேழையும் - இரத்தினமழுத்திய ஆபரணங்களையு மற்றுள்ளனவற்றையும் அடக்கிய பெட்டிகளும், கருவி யாழ்க்கோலும் ஆங்கு ஆங்கு கிடக்க - வீணையும் வைத்த இடந்தோறும் அவ்வாறேயிருக்க, மானமும் அச்சமும் கிளர்ந்து முன் ஈர்த்து நடக்க - மானமும் பயமு மேலெழுந்து முன்னிழுத்துச் செல்ல, உத்தர திசைக் கண்ணே நாடினன் நடந்தான்-வடதிசையின்கண்ணே நாடிச்சென்றான்.

பாணபத்திரரோடு பாடில் தனக்கு மானக்கேடு வரும் என்பதோர் அச்சங் கொண்டானாதலால் மானமும் அச்சமுங் கிளர்ந்து முன்னீர்த்துநடக்க வெனவும், அவற்றால்வைத்த யாவுமறந்தனனாதலால் ஆங்காங்கேகிடக்க எனவுங்கூறினர்.(௪௯)

சிவிகையோர்வழிவிறலியரோர்வழிசெல்லக்
கவிகையோர்வழிகற்பவரோர்வழிகடுகக்

Koviloor Digital Library

குவிகையேவலரொருவழிகூடநாணுள்ளத்
தவிகையோவருமொருவழியகன்றிடவகன்றான்.

(இ-ள்.) சிவிகை ஓர் வழி விறலியர் ஓர் வழி செல்ல - பல்லக்கு ஓர்வழியிலும் பாடும்பெண்களோர்வழியிலு மயங்கிச் செல்லவும், கவிகை ஓர் வழி கற்பவர் ஓர் வழி கடுக - குடை ஓர்வழியிலும் தன்புகழ் கற்பவரோர்வழியிலும் விரைந்துசெல்லவும், குவிகை ஏவலர் ஒரு வழி கூட - கூப்பிய கைகளையுடையவராய்க் குற்றேவல் செய்யும் பணிமக்கள் ஓர்வழியிற்செல்லவும், உள்ளத்து நாண் அவிகை ஓவரும் ஒரு வழி அகன்றிட - தமதுமனத்தில் நாணொழிந்தபாடற் றொழிலாளரும் ஒருவழியிற் செல்லவும், அகன்றான் - தானொருவழியிற் சென்றான். (௫௰)

அன்றுபத்திரன்கனவில்வந்தாடலேறழகர்
இன்றுபத்திரவிசைவலாளிடைவிறகாளாய்ச்
சென்றுபத்திரனடிமையாமென்றுபாண்செய்து
வென்றுபத்திரஞ்செய்துநின்வேண்டுகோளென்றார்.

(இ-ள்.) ஆடல் ஏறு அழகர் - வெற்றிவாய்ந்த இடபவூர்தியையுடைய சோமசுந்தரக்கடவுள், அன்று பத்திரன் கனவில் வந்து - அப்பொழுது பாணபத்திரர் சொப்பனத்தில் வந்து, இன்று - இப்பொழுது, பத்திர - பத்திரனே, இசைவல்லான் இடை - ஏமநாதனிடத்து, விறகாளாய் சென்று - விறகுசுமையாளாய்ச்சென்று, யாம் பத்திரன் அடிமை என்று பாண் செய்து வென்று - நாம் பாணபத்திரனடிமையாமென்று இசைபாடிவென்று, நின் வேண்டுகோள் - உனது வேண்டுகோளால், பத்திரம் செய்தும் என்றார் - நின்னைக் காவல்செய்தோமென்றுகூறியருளினார்.

அடியவர்க்கெளியராதலால் விறகாளாய்ச்சென்று பத்திரனடிமையாம் எனவும், அடியவர்வேண்டிற் றருள்பவர் ஆதலால் நின்வேண்டுகோள் பத்திரஞ்செய்தும் எனவுங் கூறியருளினார் "அளவறுப்பதற்கரியவ னிமையவர்க்கெளியானங்-களவறுத்துநின்றாண்டமை கருத்திருட்கெடுத்தனர்ந்திருந்தேயும்" எனவரும் திருவாசகத்தாலும் "சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கல்லால் - நலமிலனாடோறுநல்குவானலன்" எனவரும் திருநாவுக்கரசுநாயனார் தேவாரத்தாலும் உணர்க. (௫௧)

குஞ்சிநாண்மலர்க்கொன்றைபாரங்னைங்கூறு
நெஞ்சினானினைப்பரியசொற்கேட்டலுநெஞ்ச
மஞ்சினானிதுசெய்யவோவடியனேன்மறைகட்
கெஞ்சினாயின்றிரந்தவாறென்றுகண்விழித்தான்.

(இ-ள்.) குஞ்சி நாள் மலர் கொன்றையார் - சிகையில் அன்றலர்ந்த கொன்றைமலர்மாலை யணிந்த சிவபெருமானார், அங்ஙனம் கூறும் நெஞ்சினால் நினைப்பரிய சொல் கேட்டலும் - அவ்வாறுகூறியருளும் மனத்தாலும் நினைத்தற்கரியசொல்லைக்கேட்ட அப்பொழுதே, நெஞ்சம் அஞ்சினான் - மனந்தளர்க்குற்றார், இதுசெய்யவோ - இந்த இழிதொழிலைச் செய்யவா, அடியனேன் - நாயினுங் கடைப்பட்ட அடியேன், மறைகட்கு எஞ்சினாய் - வேதங்களுக்குந் தொடத்தொட நீண்ட பெரியவனே, இன்று இரந்த ஆறு என்று கண் விழித்தான் - இப்பொழுது குறைகூறியிரந்தவகையென்று கண்விழித்தெழுந்தார்.

நெஞ்சினானினைப்பரியசொல் என்பதுதோன்ற அங்ஙனங்கூறும் எனவும், இழிதொழிலென்பது தோன்ற இதுசெய்யவோ எனவும், வாக்கிறந்து நின்ற இறைவர்

Koviloor Digital Library

என்பதுதோன்ற மறைகட்கெஞ்சினர் எனவும், இவ்வாறு கூறுதற்கும் செய்தற்கும் அன்றோ இரந்ததென்பதுதோன்ற இன்றிரந்தவாறு எனவும், இது தமக்குப் பேரபராதமாய் விளைந்ததென்பது தோன்ற நெஞ்சமஞ்சினன் எனவுங்கூறினர். (௬உ)

கண்மலர்ந்தெழுபத்திரன்கரையிலாவுவகை
யுண்மலர்ந்தெழுமன்புகொண்டூக்கவெங்கதிரோன்
விண்மலர்ந்தெழுமுன்புபோய்விசும்பிழிகோயிற்
பண்மலர்ந்தநான்மறைப்பொருளடித்தலம்பணிந்தான்.

(இ-ள்.) கண் மலர்ந் தெழு பத்திரன் - துயிலுணர்ந்தெழுந்த பாணபத்திரர், கரை இல்லாத உவகை உள் மலர்ந்து எழும் அன்பு கொண்டு ஊக்க - எல்லையில்லாத மகிழ்ச்சியை யுள்ளே பெருக்கி யெழுந்த அன்புசெலுத்த, வெங் கதிரோன் விண் மலர்ந்து எழு முன்புபோய் - சூரியன் ஆகாயத்திலுதயஞ்செய்து எழுதற்குமுன்சென்று, விசும்பு இழி கோயில் - விண்ணுலகத்தினின்று மிழிந்த இந்திரவிமானத்திலெழுந்தருளிய, பண் மலர்ந்த நான் மறைப் பொருள் - இசையமைந்த நான்கு வேதங்களின் பொருளாயுள்ள சோமசுந்தரக்கடவுளின், அடித்தலம் பணிந்தான் - திருவடியைவணங்கினர்.

அன்பால் மகிழ்ச்சிபெருகுதலின் உவகையுண்மலர்ந்தெழுமன்பு எனவும், அன்பாற்சிந்தித்தலும் சேவித்தலும் உளவாதலின் அன்புகொண்டூக்க வடித்தலம்பணிந்தான் எனவுங்கூறினர். "அன்பினாலடியேனாவியோடியாக்கையானந்தமாய்க்கசிந்துருக" எனவும் "சிந்தனைநின்றனக்காக்கிநாயினேன்றன் - கண்ணிணைநின்திருப்பாதப்போதுக்காக்கி - வந்தனையுமம்மலர்க்கேயாக்கிவாக்குன் - மணிவார்த்தைக்காக்கியைம்புலன்களார - வந்தனை" எனவும் வரும் திருவாசகத்தால் உணர்க. (௬௩)

கடியகானகம்புகுதவோகட்டியவிறகை
முடியிலேற்றவோமுண்டகத்தாள்கணொந்திடவந்
தடியனேன்பொருட்டடாதசொற்பகரவோவஞ்சக்
கொடியனேன்குறையிரந்தவாவிளைந்ததேகுற்றம்.

(இ-ள்.) கடிய கானகம் புகுதவோ - வெப்பமமைந்த காட்டிற்செல்லவோ, கட்டிய விறகை முடியில் ஏற்றவோ - கட்டிய விறகு சுமையைத் திருமுடியிலேற்றவோ, முண்டகம் தாள்கள் நொந்திட வந்து-தாமரைமலர்போன்ற திருவடிகள் நோவ நடந்தருளி, அடியனேன் பொருட்டு அடாத சொல் பகரவோ - குற்றடியேனிமித்தம் பாணபத்திரனடிமையென்று தகாத சொல்லைக்கூறவா, வஞ்சக்கொடியனேன்- வஞ்சக்கொடுந்தொழிலையுடையேன், குறை இரந்த ஆறு - குறைகூறி யிரந்தவகை, குற்றம் விளைந்தது - (அதனால்) பெரும்பிழை யடியேனுக்கு விளைந்தது.

அடியேன் குறையிரந்தது காட்டிற்சென்று கட்டிய விறகைத் திருமுடியிலேற்றித் திருவடிநோவ நடந்து விலைகூறிப்பத்திரனடிமையென்றுகூறுதற்கா,ஐயோ நானிரந்தது கொடிது என்பார் விளைந்ததே குற்றம் என்றார். (௬௪)

நெடியனேமுதல்வானவர்நெஞ்சமுஞ்சுருதி
முடியனேகமுங்கடந்தநின்முண்டகப்பாதஞ்
செடியனேன்பொருட்டாகவிச்சேணிலந்தோய்ந்த
வடியனேற்கெளிதாயதோவையநின்பெருமை.

(இ-ள்.) நெடியனே முதல் வானவர் நெஞ்சமும் - திருமால் முதலிய தேவர்களினிதயங்களையும், சுருதிமுடி அனேகமும் கடந்த - பல பிரபல சுருதிகளையுங் கடந்துநின்ற, நின் முண்டகம் பாதம் - உனது தாமரைமலர்போன்ற திருவடிகள், செடியனேன் பொருட்டாக - இழிதொழிலையுடையேனை நிமித்தமாக, இ சென் நிலம் தோய்ந்த - இந்தப் பெரிய நிலவுலகிற்றோய்ந்தன, ஐய நின் பெருமை - ஐயனே யளத்தற்கரிய உனது பெருமை, அடியனேற்கு எளிதாயதோ - புழுத்தநாயினேனை யளவிலாக்கின்றதோ.

மலபந்தமுடைமையாலும், பாசஞானமாகிய சொற்பிரபஞ்சமாதலாலும் மனவாக்கிறந்து நின்றவையென்பார் நெடியனேமுதல் வானவர் நெஞ்சமுஞ் சுருதிமுடியனேகமுங் கடந்தநின் முண்டகப்பாதம் எனவும், நின்னடியவர் குழுவுட் புழுத்தநாயினுங் கடைப்பட்ட சிறியேன் பொருட்டோ நிலவுலகில் தோயவேண்டும் என்பார் செடியனேன் பொருட்டாக விச்சென்னிலந் தோய்ந்தவெனவும், மெய்யன்பர்க்கன்றி யென்பாலவ்வாறுதல் தக்கதன்றென்பார் எதிர்மறைப்பொருள் படும் ஓகாரம் புணர்த்தி ஐயநின்பெருமை அடியனேற்கெளிதாயதோ எனவுங் கூறினார் "பரவுவாரிமையோர்கள் பாடுவனநால்வேதம்-குரவுவார்குழன்மடவாள் கூறுடையாளொருபாகம் - விரவுவார்மெய்யன்பினடியார்கள் மேன்மேலுன் - அரவுவார்கழலடிகள் காண்பாரோவரியானே" எனவரும் திருவாசகத்தால் உணர்க. (௫௫)

நாதவந்தமுங்கடந்தமெய்ஞ்ஞானவானந்த
போதமென்பரஃதின்றொருபுடவிமாநுடமா
யாதபந்தெறத்தறிந்தவிந்தனஞ்சுமந்தடியேன்
பேதையன்பளவாயதோபெருமநின்னுருவம்.

(இ-ள்.) பெரும - பெருமானே, நின் உருவம் - தேவரீர் திருவுருவம், நாத அந்தமும் கடந்த - நாதாந்தத்தையுங் கடந்த, மெய் ஞானம் ஆனந்தபோதம் என்பர் - உண்மையறிவானந்தமென்று கூறுவர், அஃது - அத்திருவுருவம், இன்று ஒருபுடவி மாநுடம் ஆய் - இப்பொழுது நிலவுலகி லொரு மானிடத்திருவுருவமாய், ஆதபம் தெற - வெயில் சுட்டு வருத்தலால், தறிந்த இந்தனம் சுமந்து - முறிபட்ட விறகினைச்சுமந்து, பேதை அடியேன் அன்பு அளவாயதோ-பேதைமைத்தன்மையுடைய அடியேனன்பென்றும் எல்லையிலடங்கியதோ.

நின்மலசொரூபம் என்பார் நின்னுருவம் எனவும், குடிலையென்பார் நாதவந்தம் எனவும், அந்நின்மலசொரூபமாகிய சிவம் தனது சத்தியை விரித்து அதுவேயுடம்பாகநின்று பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தற்பொருட்டுத் தன் சத்தியால் அக்குடிலையுபாதானமாகத் தோற்றிய நாதம், விந்து, சாதாக்கியம், ஈஸ்வரம், சுத்தவித்தையென்னும் ஐந்து தத்துவங்களும் கொள்ளவேண்டும் என்பார் இறந்ததழிஇய எச்சவும்மை தந்து நாதவந்தமும் எனவும், அந்நின்மலசொரூபம் அவற்றைக்கடந்து நின்றது என்பார் கடந்த மெய்ஞ்ஞானவானந்தபோதம் என்பர் எனவும், மலபந்தராகிய ஆன்மாக்கள் உய்தற்பொருட்டுத் தனது சத்தியால் திருமேனிகொண்டருளியதுபோல அவ்வான்மாக்களுள்ளொருவனாகிய ஏழையேன்பொருட்டும் திருவருளால் மானிடத்திருவுருக்கொண்டு போந்ததென்பார் இன்றொருபுடவிமாநுடமாய் எனவும், பத்திவலைப்படுதலா லடியேன் றரத்துக்கேற்ப ஆண்டுகொண்டருள எளிவந்ததென்பார் ஆதபந்தெறத்தறிந்தவிந்தனஞ் சுமந்தடியேன் - பேதையன்பளவாயதோவெனவுங்கூறினார். தனது சத்தியால் திருமேனிகொண்டருளியது என்பதற்கு

Koviloor Digital Library

"பொன்மைநிலாதிவன்னம்பொருந்திடப்பளிங்கவற்றின்-தன்மையாய்நிற்குமாபோற் சத்திதன்பேதமெல்லாம்-நின்மலன்ருனுய்த்தோன்றி நிலைமையொன்றாயேநிற்பன்-முன்னருட்சத்திதன்பான் முகிழ்க்குந்தான்முளையானன்றே" எனவருஞ் சித்தியாரினும், என்றரத்துக்கேற்ப என்றதற்கு "எப்பெருந்தன்மையும் எவ்வெவர்திறமும் - அப்பரிசதனாலாண்டுகொண்டருளி" எனவரும் திருவாசகத்தினும் உணர்க. (௩௬)

மறிந்ததெண்டிரைகிடந்தவனுந்தியில்வந்தோ
னறிந்ததன்றரும்பொருள்வரம்பகன்றெழுவிசும்புஞ்
செறிந்தவண்டமுங்கடந்ததுசிறியனேன்பொருட்டாத்
தறிந்தவிந்தனஞ்சுமந்ததோதம்பிரான்முடியே.

(இ-ள்.) மறிந்த தெண்டிரை கிடந்தவன் உந்தியில் வந்தோன் - மடங்கிவருந் தெள்ளிய அலைகளையுடைய திருப்பாற்கடலி லறிதுயில்கூருந் திருமாலும், உந்தியில் வந்தோன் - அவனுந்தியில் வந்த பிரமனும், அறிந்தது அன்று - உணர்ந்ததுமன்று, அரும்பொருள் வரம்பு அகன்று - அணுவளவையுங்கடந்து, எழுவிசும்பும் - பரந்த விண்ணுலகத்தையும், செறிந்த அண்டமும் கடந்தது - (அதுவொழிந்த) ஏனையண்டங்களையுங்கடந்து நின்றது, தம்பிரான் முடி - தேவரீர் திருமுடி, சிறியனேன் பொருட்டாக-(அது) கடைப்பட்ட வறிவிற் சிறியேன் நிமித்தம், தறிந்த இந்தனம் சுமந்ததோ - முறிபட்ட விறகுசுமையைச் சுமந்து திரிந்ததோ. (இஃதோர் பெருவியப்பு.)

தம்பிரான் அண்மைவினி "பிரமன்மால்காணுப்பெரியோன்" என்பார் மறிந்ததெண்டிரை கிடந்தவனுந்தியில்வந்தோன் அறிந்ததன்று எனவும், அணுவுக்கணுவென் என்பார் அரும்பொருள் வரம்பகன்று எனவும், மகத்துக்கு மகத்தென்பார் எழுவிசும்புஞ்செறிந்த வண்டமும் கடந்தது எனவும், அது அடியவர்க்கெளியது என்பார் சிறியனேன் பொருட்டாத்தறிந்த இந்தனஞ் சுமந்ததோ எனவுங்கூறினர். "அறுத்தருந்தன்மையிலேயோன்" எனவும் "அண்டப்பகுதியினுண்டைப்பிறக்கம்-அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி - ஒன்றனுக்கொன்று நின்றெழில்பகரின் - நூற்றொருகோடியின் மேற்படவிரிந்தன - இன்னுழைகதிரின் றுன்னணுப்புரையச்-சிறியவாகப்பெரியோன்" எனவும் வருந் திருவாசகத்தால் உணர்க. (௩௭)

என்னவந்தனைசெய்துநின்றேத்தியங்கயற்கண்
மின்னமர்ந்தபங்கொருவனைவலங்கொடுமீண்டு
மன்னர்தம்பிரானுகியவரகுணதேவன்
றன்னைவந்தடிபணிந்தனன்றந்திரிக்கிழவோன்.

(இ-ள்.) என்ன - என்று, வந்தனை செய்து நின்று ஏத்தி - வணங்கிநின்று துதித்து, அங்கயற்கண் மின் அமர்ந்த பங்கு ஒருவனை-அங்கயற்கண்ணியார் குடிகொண்ட பாகத்தையுடைய சோமசுந்தரக்கடவுளை, வலங்கொண்டு மீண்டு - பிரதக்ஷிணஞ்செய்து திரும்பி, மன்னர் தம்பிரான் ஆகிய வரகுணதேவன் தன்னை - அரசர்களுக்கரசனாகிய வரகுணதேவபாண்டியனை, தந்திரிக்கிழவோன் வந்து அடிபணிந்தனன்-வீணையில்வல்ல பாணபத்திரர் வந்து பாதங்களை வணங்கி யொருபால் நின்றனர்.

தந்திரி வீணையினரம்பு அது வீணைமேல் நிற்றலால் விட்டவாகுபெயர்.(௩௮)

வந்தவேழிசைத்தலைமகன்வரவறிந்தரச
னந்தவேழிசைக்கிழவனையழையெனவுழையோர்

பந்தயாழ்மகனிருக்கைபோய்ப்பார்த்தனர்காணார்
சிந்தையாகுலமடைந்தவன்போனவாதெளியார்.

(இ-ள்.) அரசன் வந்த எழிசைத் தலை மகன் வரவு அறிந்து - அந்த வரகுணதேவபாண்டியன் தன்பால் வந்த எழிசையில் வல்ல யாழ்ப்பாணர் வருகையை யறிந்து, அந்த எழிசைக்கிழவனை அழையென - (வடபுலத்திருந்துவந்த) அந்த எழிசையில்வல்ல ஏமநாதனை யழையுமென்று பணிக்க, உழையோர் - வேவுகாரர், பந்தம் யாழ் மகன் இருக்கை போய் பார்த்தனர் - நரம்பின் கட்டமைந்த வீணையில்வல்ல ஏமநாதனுடைய விடுதியிற்சென்று பார்த்து, காணார் - அவனைக்காணாது, சிந்தை ஆகுலம் அடைந்தவன் - மனத்தில் வருத்தமுற்றொழிந்த ஏமநாதன், போன ஆறு தெளியார் - போனவழி தெளியாதவர்களாய்.

பார்த்தனர் காணார் முற்றெச்சங்கள். ஆறு இடப்பெயர்ச்சொல் ஈறுதொக்குநின்றது. (௫௯)

எங்குளானெனத்தேடுவாரிவரெதிரயல்வா
யங்குளார்சிலரறிந்தவாறறைகுவாரவனேற்
றிங்குளான்விறகெடுத்தொருமுதுமகனிவன்பாற்
பொங்குமேழிசைப்பத்திரனடிமையாய்ப்போந்தான்.

(இ-ள்.) எங்குளான் என தேடுவார் இவர் எதிர் - எங்கொளித்தானென்று தேடித்திரியும் வேவுகாரர் எதிரே, அயல் வாய் அங்கு உள்ளார் சிலர் - (அவன்விடுதியின்) பக்கலி லங்கு வசிப்பவருட்சிலர், அறிந்த ஆறு அறைகுவார் - தெரிந்தவகையை யெடுத்துக் கூறுவர், அவன் நேற்று இங்கு உள்ளான் - அவன்நேற்றைப்பொழுதிலிருந்தான், ஒரு முது மகன் விறகு எடுத்து - ஒருவிருத்தன் விறகுசுமை யெடுத்து, இவன் பால் - இந்த ஏமநாதனிடத்து, பொங்கும் எழிசை பத்திரன் அடிமையாய் போந்தான் - விளங்கும் எழிசையில்வல்ல பாணபத்திர ரடிமையென்று வந்தனன். (௬0)

பாடினான்பின்புபட்டதுதெரிகிலேம்பாதி
யோடினானெனக்கேட்டதுமொற்றர்போய்க்கொற்றஞ்
சூடினானவையடைந்தவர்சொல்லியவாறே
யாடினார்வியப்படைந்தநுமானமுற்றரசன்.

(இ-ள்.) பாடினான் - பாடினன், பின்பு பட்டது தெரிகிலேம் - பின்நிகழ்ந்த செய்தியை யறியோம், பாதி நாள் ஓடினான் என கேட்டதும் - பாதியிரவில் ஓடினானென்று கூறக்கேட்ட அன்றே, ஒற்றர் போய் - வேவுகாரர்சென்று, கொற்றம் சூடினான் அவை அடைந்து - வெற்றிமாலையைச் சூடிய வரகுணபாண்டியனது சபையையடைந்து, அவர் சொல்லிய ஆறே ஆடினார் - அங்குள்ளோர் கூறியபடியேகூறினார், அரசன் வியப்பு அடைந்து அநுமானம் உற்று - அவ்வரகுணபாண்டியன் அதிசயங்கொண்டு அநுமானித்து.

இசையில் மிகவும் வல்ல ஏமநாதன் பாணபத்திர னடிமையென்று போந்த ஒரு முதுமகன் பாடலைக்கேட்டு ஓடினான் எனக்கேட்டதால் ஒருபெருவியப்பும், பாணபத்திரர் தம்பலைவென்றிய ஏமநாதனை யாழில்வல்ல ஒரு முதுமகனைக் கொண்டு வென்றாரோவென்று கருதுதலால் அநுமானமும் அரசன்கொண்டனன் என்பார் வியப்படைந்தநுமானமுற்று என்றார். (௬௧)

Koviloor Digital Library

தன்னடைந்தவத்தந்திரித்தலைவனைநோக்கி
யென்னவாறவன்போனவாறிங்கினும்போன
பின்னையாதுநீசெய்தனையெனவிசைப்பெருமான்
றென்னர்கோனடிதொழுதுதன்செய்தியைமொழிவான்.

(இ-ள்.) தன் அடைந்த அதந்திரி தலைவனை நோக்கி - தன்பால்வந்த அந்த யாழில்வல்ல பாணபத்திரரைப் பார்த்து, என்ன ஆறு அவன் போன ஆறு - என்ன வகை அவன் சென்றவிதம், இங்கினும் நீ போனபின்னை யாது செய்தனை என-இங்குநின்றும் நீ போனபின்பு என்னசெய்தாயென்றுவினவ, இசைப்பெருமான்-இசைநூலில்வல்ல பாணபத்திரர், தென்னர் கோன் அடி தொழுது - பாண்டியர்பெருமானாகிய அவ்வரகுணன் பாதங்களைவணங்கி, தன் செய்தியை மொழிவான் - தம்மிடத்து நிகழ்ந்த செய்தியைச் சொல்லுவாராயினர்.

இன்னுருபு நீக்கப்பொருள்மேல் நின்ற ஐந்தனுருபு. (௬௨)

நென்னல்வாயடியேனினதாணிழனிங்கிப்
பின்னல்வார்சடைமௌலியெம்பிரானடிபணிந்தே
னின்னலார்குறையிரந்துமீண்டிருக்கைபுக்கிருந்தேன்
கன்னலார்மொழிபங்கரென்கனவில்வந்தருளி.

(இ-ள்.) நென்னல் வாய் - நேற்றைப் பொழுதில், அடியேன் நினதாள் நிழல் நீங்கி - அடியேன் உமது திருவடிநிழலினின்றும் நீங்கி, பின்னல் வார் சடை மௌலி எம்பிரான் அடி பணிந்தேன்-பின்னிய நீண்டசடாமகுடத்தையுடைய யெமதுபெருமானாராகிய சோமசுந்தரக்கடவுள்திருவடியைவணங்கி, இன்னல் ஆர் குறை இரந்து - துன்பமிக்க எனதுகுறைபாடுகளை யிரந்து, மீண்டு இருக்கை புக்கு இருந்தேன் - (அங்குநின்றும்) திரும்பி யென்விடுதியிற் சென்றிருந்தேன், கன்னல் ஆர் மொழி பங்கர் என் கனவில் வந்தருளி - கரும்பின் சுவையையொத்த சொற்களையுடைய உமாதேவியை யிடப்பாகத்திலுடைய அச்சோமசுந்தரக்கடவுள் என்கனவில் வந்தருளி.

அடியவர் குறை முடிப்பவர் சோமசுந்தரக்கடவுளாதலால் அவர்திருவடிக்கீழ் என்குறை யொப்புவித்தேன் என்பார் எம்பிரானடிபணிந்தேன் - இன்னலார் குறையிரந்துமீண்டிருக்கைபுக்கிருந்தேன் என்றார் "காதலர்க்கெய்ப்பினில்வைப்புவாழ்க" எனத் திருவாசகத்தில் வருதல்காண்க. (௬௩)

ஓடியுன்பொருட்டாகநாம்விறகெடுத்துழன்று
வாடிநின்பகைபுறங்கடைவந்துசாதாரி
பாடிவென்றுநின்பகைவனைத்துரந்தனமெனச்சொல்
லாடினார்விழித்தேனிதுநிகழ்ந்ததென்றறைந்தான்.

(இ-ள்.) ஓடி உன் பொருட்டாக-காட்டிற்சென்றுன்நிமித்தமாக, நாம் விறகு எடுத்து உழன்று வாடி-நாம் விறகுசுமையெடுத் துழன்றுவருந்தி,நின் பகை புறங்கடை வந்து-நின்பகைவனாகிய ஏமநாதனுடைய தலைவாயிலில்வந்து,சாதாரி பாடி வென்று - சாதாரிப்பண்பாடி வெற்றிசெய்து, நின் பகைவனை துரந்தனம் என சொல்லாடினார் - உனது பகைவனை யோட்டினோமென்று கூறியருளினார், விழித்தேன்-(அடியேன்)துயிலொழிந்தனன், இது நிகழ்ந்தது என்று அறைந்தான்-இது தானடந்தசெய்தியென்று கூறினார்.

Koviloor Digital Library

தஞ்சரணடைந்தவர் நயமொழித்தல் அவர்பரமாதலால் ஒடியும்பொருட்டா கவாட்விறகெடுத்தழன்றுபாடிவென்று நின்பகைவனைத்துறந்தனம் என்றார். பகை- சொல்லால் அஃறிணையேனும் பொருளால் உயர்திணையாதலால் வருமொழி வல்லெ ழுத்து இயல்பாயின்றது. முன்னம்மடியேனறியாமையினான் முனிந்தென்னைநலிந் தமுடக்கிவிடப் - பின்னையடியேனுமக்காளும்பட்டேன் சுடுகின்றதுசூலைதவிர்த்தரு ள்வீர் - தன்னையடைந்தார் வினைதீர்ப்பதன்றோதலையா யவர்தங்கடனாவதுதான்-அன் னநடையார்தில்லைக்கெடிலவீரட்டானத் துறையம்மானே" என வரும் ஆளுடைய ரசுகள் தேவாரத்தால் உணர்க. (௬௪)

ஏவன்மைந்தர்போய்விளங்கிவந்திசைத்ததும்வீணைக்
காவலன்கணுநிகழ்ச்சியுமொத்தலிற்கைக்கும்
பூவலங்கலானிஃதுநம்பொன்னகர்க்கூடற்
றேவர்தம்பிரான்றிருவிளையாட்டெனத்தெளிந்தான்.

(இ-ள்.) ஏவல் மைந்தர் போய் விளங்கி வந்து இசைத்ததும் - வேவுகாரர்செ ன்று தெரிந்துவந்து கூறியசெய்தியும், வீணைக் காவலான் கனு நிகழ்ச்சியும் ஒத்தலி ல் - வீணையில் வல்ல பாணபத்திரர்கண்ட கனவிநிகழ்ச்சியும் தம்முளொத்தலால், கைக்கும் பூ அலங்கலான் - வேப்பமலர் மாலையையணிந்த பாண்டியன், இஃது - இவ்வாறு நிகழ்ந்தது, நம் பொன் நகர் கூடல் தேவர் தம்பிரான் - நமது அழகிய நகரமாகிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின், திருவிளையாட்டு எ ன தெளிந்தான் - திருவிளையாட்டேயென்று தெளிந்துணர்ந்தனன்.

இதனால் அநுமானமொழிந்த துணிந்தனன் என்பார் இஃது நம்பொன்னகர் க்கூடல்தேவர்தம்பிரான் திருவிளையாட்டெனத்தெளிந்தான் என்றார். (௬௫)

இகழ்ந்தகூற்றெறிசேவடிக்கிடையறுநேசந்
திகழ்ந்தபத்திரனன்பையுந்தேவரைக்காப்பா
னகழ்ந்தவாழிநஞ்சுண்டவனருளையும்வியந்து
புகழ்ந்துபோய்மதுராபுரிப்புனிதனைப்பணியா.

(இ-ள்.) இகழ்ந்த கூற்று எறி சேவடிக்கு - அவமதித்தெதிர்ந்த இயமனை யு தைத்தருளிய செவந்த திருவடிகளுக்கு, இடையறுத நேசம் திகழ்ந்த பத்திரன் அ ன்பையும் - சிறிதும் நீங்காத சிவநேயத்தால் விளங்கிய பாணபத்திரருடைய பத்தி மையையும், தேவரை காப்பான் - பிரமன்முதலிய தேவர்களைக் காத்தற்பொருட்டு, அகழ்ந்த ஆழிநஞ்சு உண்டவன் அருளையும் - (சகரர்) தோண்டிய கடலிற்றோன்றி ய நஞ்சினையமுது செய்தருளிய பெருமானுடைய திருவருளையும், வியந்து புகழ்ந்து போய் - மெச்சிப்புகழ்ந்து சென்று, மதுராபுரி புனிதனை பணியா - மதுரையிலெழு ந்தருளிய சோமசுந்தரக்கடவுளை வணங்கி.

தன்னை யடைந்தோர் நயமொழித்தலில் வல்லது என்பார் இகழ்ந்த கூற்றெ றி சேவடியெனவும், அச்சேவடிக்கீழ் செலுத்தும் அன்பே எல்லாந்தரவல்லது என்பார் பத்திரனன்பையும் எனவும், அந்த அன்பு பல பிறவிகளிலும் சேர்ந்த சிவ புண்ணிய முதிர்ச்சியால் வந்ததென்பார் இடையறுநேசம் திகழ்ந்த எனவும், கரு ணாசமுத்திரம் என்பதற்கு ஈதன்றியொரு காட்டில்லையென்பார் தேவரைக்காப்பான் அகழ்ந்த ஆழிநஞ்சுண்டவன் எனவும், கொண்ட அன்பால் விளைந்தது என்பார் அரு ளையும் வியந்து எனவுங்கூறினார். இயமனையுதைத்ததும் நஞ்சுண்டது முன்னர்க்கூறி

மிருத்தலால் உணர்க. "அந்தணாளனுன்னடைக்கலம்புகுத வவனைக்காப்பதுகாரணமாக - வந்தகாலன்றனுருயிரதனைவவ்வி னுய்க்குன்றன்வண்மைகண்டடியேன்-என்றைநியெனைநமன்றமர்நலியிலிவன்மற் றென்னடியானெனவிலக்கும் - சிந்தையால் வந்துன்றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே" எனவரும் ஆளுடைநம்பிகள் தேவாரத்தால் சேவடியின்பெருமையையும், "புல்லாகிப்பூடாய்ப் புழுவாய்மரமாகிப் - பல்விருகமாகிப்பறவையாய்ப்பாம்பாகிக் - கல்லாய்மனிதராய்ப்பேயாய்க்கணங்களாய் - வல்லசுரராகிமுனிவராய்த்தேவராய்ச் - செல்லாநின்றவித்தாவரசங்கமத்துள் - எல்லாப்பிறப்பும்பிறந்திளைத்தே னெம்பெருமான் - மெய்யேயுன்பொன்னடிகள்கண்டின்றுவீடுற்றேன்" எனவரும் திருவாசகத்தால் சிவபுண்ணியமுதிர்ச்சியால் வந்ததென்பதும், "செற்றுலமுயிரனைத்துமுண்டிடவேநிமிர்ந்தெழலுஞ்சிந்தைமேற்கொள் - பற்றுலங்கதுநுகர்ந்துநான்முகனேமுதலோர்தம்பாவைமார்க்குப் - பொற்றாலிதனையளித்தோன்" எனவரும் காந்தத்தால் தேவரைக் காப்பான் நஞ்சுண்டவன் என்பதும், "ஆங்கவனருளாற்பத்திமையுண்டாம் பத்தியாலவனருளுண்டாம்" என முன்னர்க்காட்டிய செய்யுளால் அன்பால் விளைந்தது அருள் என்பதும் உணர்க. (௬௬)

பத்தர்யாழிசைக்கிழவனைப்பனைக்கைமானெருத்தில்
வைத்துமாடநீணகர்வலஞ்செய்வித்துமலர்ந்த
சித்தமாழ்ந்திடவரிசைகண்மிதப்புறச்செய்து
தத்துமான்றொடைத்தேரினுன்றன்மனைபுகுவான்.

(இ-ள்.) பத்தர் யாழ் இசைக்கிழவனை - பத்தரமைந்த வீணையில்வல்ல பாணபத்திரனை, பனைக்கை மான் எருத்தில் வைத்து - பனந்துண்டை யொத்த துதிக்கையையுடைய யானையின் பிடரின்மேல் வைத்து, மாடம் நீள் நகர் வலம் செய்வித்து - உபரிகைகணிறைந்த மதுரைநகரினைப் பிரதக்ஷிணம் செய்வித்து, மலர்ந்த சித்தம் மாழ்ந்திட வரிசைகள் மிதப்புற செய்து - சிவநேயத்தில் மலிந்த அவரது மனமுமயங்கப் பல வரிசைகளையும் வெறுக்கக்கொடுத்து, தத்துமான் தொடை தேரினுன் தன்மனை புகுவான்-தாவிச்செல்லுங் குதிரையைப்பூட்டிய தேரையுடைய வரகுணபாண்டியன் தனது கோயிலுக்குச் செல்லுவோன். (௬௭)

தேவருந்தவமுனிவருந்தேவரிற்சிறந்தோர்
யாவருந்தமக்காட்செயவிருப்பவரிருதா
ளோவவந்துமக்காட்செய்துநுங்குறைமுடித்தா
ராவரோலுமக்கனைவருமேவலரன்றோ.

(இ-ள்.) தேவரும் தவமுனிவரும் - தேவரும் தவத்தையுடையமுனிவர்களும், தேவரில் சிறந்தோர் யாவரும் - தேவருட் சிறந்த பிரமன் முதலிய எல்லோரும், தமக்கு ஆள் செய இருப்பவர் - தமது குற்றேவல்செய்ய இருக்கும் பெருமானார், இருதாள் நோவ வந்து உமக்கு ஆள் செய்து நும் குறை முடித்தார் ஆவரோல் - தமது இரண்டுதிருவடிகளும் வருந்த வந்து உமக்கு அடிமைசெய்து உமது குறைபாட்டையொழித்தருளுவராயில், உமக்கு அனைவரும் ஏவலர் அன்றோ - உமக்கு அத்தேவர் முதலிய எல்லோரும் குற்றேவல்செய்யும் ஏவன்மக்களல்லவோ.

தேவர்முதலியோர் தத்தம் அதிகாரத்தில் மேம்படக் குற்றேவல்செய்து வழிபடநிற்கும் இறைவர் என்பான் தேவருந்தவமுனிவருந் தேவருட்சிறந்தோர் யாவ

Koviloor Digital Library

ருந்தமக்காட்செயவிருப்பவர் எனவும், அவரே திருவடிகள்நோவ விறகுசுமந்து பத்திரனடிமையென்று உமது குறைமுடிப்பாராயின் பிரமன்முதல் பிபீலிகாந்தங்காறுமுமக்கேவல்செய்யும் பசுக்களன்றோ என்பான் உமக்கனைவரும் ஏவலரன்றோ எனவுங்கூறினன் "வாழ்த்துவதும்வானவர்கடாம்வாழ்வான்மனநின்பால் - தாழ்த்துவதுந்தாமுயர்ந்துதம்மையெல்லாந்தொழவேண்டி" எனவருந் திருவாசகத்தால் யாவருந்தமக்காட்செயவிருப்பவர் என்பதுணர்க. (௬௮)

ஆதலாலெனக்குடையர்நிருமக்குநானடியே
னீதலாலெனக்குமொடுவழக்குவேறிலைநா
னோதலாவதோர்குறையுளதின்றுதொட்டுமக்கு
வேதநாதனைப்பாடலேகடனெனவிடுத்தான்.

(இ-ள்.) ஆதலால் எனக்கு உடையர் நீர் - ஆகையாலென்னை யாளாகவுடையவர் நீரே, உமக்கு நான் அடியேன் - உமக்கு நானடிமை, ஈது அல்லால் எனக்கு உம்மொடு வேறு வழக்கு இல்லை - இதுவன்றி யெனக்கு உம்மொடு வேறு தொடுவழக்கின்று, நான் ஓதல் ஆவது ஓர் குறை உள்ளது - அடியேன் உம்மிடத்துக்கூறும் ஒரு குறைபாடுள்ளது, (அதாவது) இன்று தொட்டு - இந்நாள் தொட்டு, வேதநாதனை பாடலே உமக்கு கடன் என விடுத்தான் - நான்மறைகளுக்கும் இறைவனாகிய சோமசுந்தரக்கடவுளைப் பாடுதலே யுமக்குக் கடமையென அனுப்பினான்.

நீர் ஆண்டாளும் நானடிமையும் ஆதலால் என்பால்வந்து பாடுதல் தவிர்க என்பான் ஈதலாலெனக்கும்மொடு வழக்குவேறிலையெனவும், உமதிறைவன்பாற் சென்று பாடுதலே யுமதுகடப்பாடேன்பான் ஓதலாவதோர் குறையுளதெனவுங் கூறினன். (௬௯)

அரசனல்கியவெறுக்கைபூணாடைகள்பிறவும்
பரசுநாவலர்மாணவர்யாவர்க்கும்பகிர்ந்து
வரிசையாலிசைக்கிளையொடுமனையில்வந்தெய்திக்
கரைசெயாமகிழ்சிறந்திசைக்காவலனிருந்தான்.

(இ-ள்.) அரசன் நல்கிய வெறுக்கை பூண் ஆடைகள் பிறவும் - வரகுணபாண்டியன் கொடுத்த திரவியமும் ஆபரணமும் ஆடைகளும் அவையொழிந்த மற்றுள்ளனவுமாகிய பொருள்களையும், பரசு நாவலர் மாணவர் யாவர்க்கும் பகிர்ந்து - தம்மை வணங்கும் கவிஞரும் இசை கற்கு மாணாக்கர்களுமாகிய எவர்க்கும் அவற்றைப் பங்கிட்டுக்கொடுத்து, வரிசையால் - (அரசன்செய்த) வரிசையோடு, இசைக்கிளையோடு மனையில் வந்து எய்தி - (சூழ்ந்த) இசைநூல்வல்லாரோடு தம் வீட்டில் வந்தடைந்து, கரை செய்யாத மகிழ்சிறந்து - அளவிடற்கரிய மகிழ்ச்சிகூர்ந்து, இசை காவலன் இருந்தான் - இசைநூலில்வல்ல பாணபத்திரர் இருந்தனர்.

உயிர்ச்சார்பும் பொருட்சார்புமாகிய பற்றொழிந்தவராதலால் யாவர்க்கும் பகிர்ந்து எனவும், சிவபெருமானடியவர்பாற்கொண்ட திருவருளை யுள்ளுந்தோறும் ஆராமகிழ்ச்சி மிக்கூர்தலால் கரைசெயாமகிழ்சிறந்து எனவுங்கூறினர். (௭௦)

விறகுவிற்றபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உட்படத் திருவிருத்தம் - ௨௬௦௦.

Koviloor Digital Library

வைகலுங்கொடுப்போர்பின்னுண்மறுத்தனராகப்போய்ப்போய்க்
கைதொழுதிறைஞ்சிவாளாவருமவன்கலியின்மூழ்கி
யுய்வகைவேறுகாணுதொக்கலுமொக்கவாடிக்
கையறவடையநோஞதுறங்கினுன்கனவினெல்லை.

(இ-ள்.) வைகலும் கொடுப்போர் - நாள்தோறுங் கொடுத்துவரும் பெருமானூர், பின் நாள் மறுத்தனராக - வருநாளில் மறுக்க, போய் போய் கைதொழுது இறைஞ்சி வாளாவருமவன் - (நாள்தோறுஞ்) சென்று சென்று கைகூப்பிவணங்கி யிசைபாடி ஒன்றும் பெறுதுவரும் பாணபத்திரர், கலியில் மூழ்கி - வறுமையிலழுந்தி, உய் வகை வேறு காணுது - பிழைக்கும் வகைவேறென்று முணராது, ஒக்கலும் ஒக்க வாடி - தமது சுற்றத்தோடு மொருசேர வாடி, கையறவு அடைய - துன்பமிக, நோஞது உறங்கினுன் - அதற்கு ஆற்றுதுகண்டுயில் கூர்ந்தார், கனவின்எல்லை - (அவர்) சொப்பனத்தில்.

உதவுவோர் மறுக்கில் உய்வகைவேறின்மையால் உய்வகைவேறு காணுதென்றூர். (௬)

சித்தவெம்பெருமான்வந்துசெப்புவானப்பாநிம்பத்
தொத்தவன்கோசந்தன்னிற்றும்பியுண்கனியின்வெளவி
யித்தனமின்றுகாறுமீந்தனமெம்பாலன்பு
வைத்தவனறிந்தாற்சங்கைமனத்தனுய்விகற்பங்கொள்வான்.

(இ-ள்.) சித்த எம் பெருமான் வந்து செப்புவான் - சித்தமூர்த்திகளா யெமது பெருமானூர் வந்துகூறுவார், அபபா - அப்பனே, நிம்பம் தொத்தவன் கோசந்தன்னில் - வேப்பமலர் மாலையையணிந்த பாண்டியனுடைய கருவூலத்தில், தும்பி உண் கனியின் வெளவி - யானை நோயுண்ட விளாங்கனியிலுள் ளீடின்மைபோலக் கருவூலம் வறப்ப அதிலுள்ள பொருளைக் கவர்ந்து, இதனம் இன்று காறும் ஈந்தனம் - இப்பொருளையிந்நாள்காறுங் கொடுத்து வந்தனம், எம்பால் அன்பு வைத்தவன் அறிந்தால் - எம்மிடத்து நின்போ லன்புவைத்த வரகுணபாண்டியனுணர்ந்தால், சங்கை மனத்தன் ஆய் விகற்பம் கொள்வான் - ஆசங்கைகொண்ட மனமுடையவனுய் வேறுபாடுகொள்வான்.

யானை நோய்விழுந்த விளங்கனி கனிபோலப் பிறர்க்குப் புலப்பட்டுள்ளீடில்லாதிருத்தல்போலக் கருவூலம் சேமித்தகபன் முத்திரையோடும் பிறர்க்குப் புலப்பட்டு உள்ளிருந்ததனம் சிதிதுமின்றி வறிதாகக் கவர்ந்தோம் என்பார் கோசந் தன்னிற்றும்பியுண்கனியின் வெளவி இத்தனமின்றுகாறு மீந்தனம் எனவும், வரகுணபாண்டியன் உன்னைப்போல எம்மிடத்துக் குறைபடாத நேயமுடையவன் என்பார் எம்பா லன்புவைத்தவன் எனவும், அவனுணர்ந்தால் எமது இறைவர்பொருளைக் கவர்ந்தனர் யாரோ என்செய்கேன் எனப் பெருந்துயருறுவான் அது கண்டு யாம் ஆற்றேம் நின் துயர் களைந்ததுபோல அவன் துயர்களையவரும் என்பார் அறிந்தாற் சங்கைகொண் மனத்தனுய் விகற்பங்கொள்வான் எனவும் அருளினுர். (எ)

மயலறக்கற்புக்காக்குமகளிர்போற்றுறவுகாக்க
முயலும்யோகரிலுட்காப்புமுரசெறிபுறந்தரூம்காப்புங்
கயலிலச்சினையுநிற்கக்கவர்ந்ததற்புதமிக்கவ்வ
னுயிர்தொறுமொளித்தகள்வனொருவனேயடியேனென்பான்.

Koviloor Digital Library

(இ-ள்.) மயல் அற கற்பு காக்கும் மகளிர் போல் - மயக்கமறக் கற் காக்குங் கற்புடைமகளிர் போலவும், துறவு காக்க முயலும் யோகரில் - துறவைக் காக்க முயலுஞ் சிவயோகிகளைப்போலவும், உள் காப்பும் - நின்றநிலை யராத அகக்காவலும், முரசு எறி புறம் சூழ் காப்பும் - முரசெறிந்து புறஞ்சூழ்ந் வரும் புறக்காப்பும், கயல் இலச்சினையும் நிற்க - இட்டகயலிலச்சினையிட்டபடியே யாயுமிருக்க, கவர்ந்தது அற்புதம்-(கருவூலத்திலிருந்தபொருளை) வௌவியது அருவியப்பு (நினைக்கில்) இகள்வன் - இந்தக்கள்வன், உயிர் தொறும் ஒளித்த கள் ஒருவனோ - உயிர்கள்தோறுந் தன்னிலை தோன்றாதொளித்த கள்வனாகிய இறைவனோ, அறியேன் என்பான் - நானறியேனென்று கூறிவையுறுவான்.

கற்புடைமகளிர் தமது கற்பைக்காத்தற்கின்றியமையாத நாணம்,மட சம்,பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் ஒருங்கேயுடைமையும், துறவினர்த ண்ட துறவைக்காத்தற்குவிட்ட பாசத்தொடக்குவாதனை மீட்டும் வந்து தா பொறிவாயிலாகச்செல்லு மனத்தைத் தம் வசப்படுத்துகைக்குக் குருலிங்கசங்கமங்களை வழிபடுகைமுதலிய சற்காரியங்களை யொருங்கே யுடைமையும் அவர்கட்கு உட்காப்பு ஆதல்போல, வில்வாள்முதலிய படைக்கலங்களை யேந்தி யிமைகொட்டாது நின்ற நிலைபெயராதுகாக்கும் திண்ணியவீரர் காப்புஎன்பார் உட்காப்பு எனவும், பறையறைந்து புறஞ்சூழ்ந்து திரியுங் காப்புஎன்பார் முரசெறிபுறஞ்சூழ் காப்புஎனவும், இருவகைக்காப்பும் அன்றிஇட்ட இலச்சினை இட்டவாறே யிருக்கக் கருவூலத்திருந்த பொருளைக் கவர்ந்தவன் உயிர்க்குயிராய் நின்றூட்டும் இறைவனோஎன ஆசங்கை கொள்வான் என்பார் இக்கள்வனுயிர்தொறு மொளித்த கள்வனொருவனோவறியே னென்பான் எனவுங் கூறியருளினர். (அ)

கோமகனிளையசெய்தியறியுமேற்கோசங்காப்போர்க்
காமுறுந்தண்டநின்போலன்பகத்தெம்மைவைத்த
தேமருபோந்தின்கண்ணிச்சேரமான்றனக்கிப்போது
நாமொருமுடங்கறீட்டிநல்குவம்போதியென்று.

(இ-ள்.) கோமகன் இனைய செய்தி அறியுமேல் - பாண்டியனிச்செய்தியை யுணர்வானாயில், கோசம் காப்போர்க்கு தண்டம் ஆமுறும் - கருவூலங் காப்பவர்க்குத் தண்டனையுண்டாம், நின்போல் - உன்னைப்போல, அன்பு அகத்து எம்மை வைத்த - அன்பால் தம்மனத்திலென்றும் எம்மை நீங்காதுவைத்த, தேம் உறு போந்தின் கண்ணி சேரமான் தனக்கு - தேன்மிக்க பனமாலையையணிந்த சேரமான்பெருமானாகிய கழறிற்றறிவார் நாயனார்க்கு, இ போது நாம் ஒரு முடங்கல் தீட்டி நல்குவம்போதி என்று - இன்று நாமோரோலைவரைந்து கொடுப்போம்போவாயென்று.

அன்பேதாமாயிருத்தலால் அகத்தெம்மைவைத்த என்றார். சேரர்குலத்தவதரித்து அரசியல் வெறுத்துத் திருவஞ்சைக்களத்திற்சென்று சிவபிரான் திருவடிக்கன்பூண்டொழுகியும், தமது பிதா அரசியல்துறந்து தவஞ்செய்ய வனத்திற்குச்சென்றகாலையில் அமைச்சர் முதலியோர் வந்து குறையிரப்பச் சிவபெருமான் அருளையால் முடிசூடியும், சிவபெருமான் திருமுன்னர்ச்சென்று வணங்கி யானைமேல் பிரதக்ஷிணம் வருங்காலையில் தான் கொண்டுவந்த உவர்மண்-மழையால் நனைந்து தேகமுற்று மொழுகி யுலர்ந்ததால் வெண்ணிறம்வாய்ந்த ஓர் ஈரங்கொல்லி தம்மெதிர் வரக்கண்டு சிவனடியனென்று யானையைவிட்டிழிந்து வணங்க, அவ்வீரங்கொல்லி ப

Koviloor Digital Library

ஊ ந்தாக்கண்டுமதிகலங்கியெதிர்வணங்கி யடியேன் அடிவண்ணானென்றுகூற, அடியேன் அடிச்சேரன் திருநீற்றுத்திருவேடத்தை நினைப்பித்தீர்வருந்தாது செல்லுமினெனமொழிந்தும், நடராசப்பெருமான் திருவடிக்கு வழிபட்டு நாடோறும் அர்ச்சித்துத்திருச்சிலம்பொலிகேட்டு வகைகூர்ந்துவருங்காலையில் ஒருகால் அத்திருச்சிலம்பொலி தாழ்ப்ப, யாது தவறு திருவடிக்கிழைத்தேனோ வென்று உயிர்விட உடைவாளுருவித் தமது மார்பினூட்டியும் மெய்யன்பிற் றலைப்பட்டு நின்றமையால் நின்போலன்பகத் தெம்மைவைத்த - தேமுறுபேரன்பின் கண்ணிச் சேரமான் எனவுங் கூறியருளினர். " மண்மேற் சைவநெறி வாழவளர்ந்து முன்னை வழியன்பாற் - கண்மேல்விளங்கு நெற்றியினார் கழலேபேறுங் கருத்தினராய் - உண்மேவிய அன்பினராகி யுரிமை யரசர் தொழில்புரியார் - தெண்ணீர்முடியார் திருவஞ்சைக்களத்திற் றிருந்தொண்டே புரிவார்" எனவும், வந்த மரபினரசளிப்பான் வனஞ்சார் தவத்தின் மருவியபின் - சிந்தைமதிநூறே ரமைச்சர் சிலநாளாய்ந்து தெளிந்தநெறி - முந்தை மரபின் முதல்வர் திருத்தொண்டு முயல்வார் முதற்குக-இந்துமுடியார் திருவஞ்சைக்களத்திலவர்பா லெய்தினார், எய்தியவர் தம்மெதிரிறைஞ்சி யிருந்தண் சாரன்மலைநாட்டுச் - செய்திமுறைமையா லுரிமைச் செங்கோலரசுபுரிவதற்கு - மைதீர்நெறியின்முடி சூடியருளு மரபால்வந்ததெனப் - பொய்தீர்வாய்மை மந்திரிகள்போற்றிப் புகன்றபொழுதின்கண், இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் கிடையூறாக விவர் மொழிந்தார் - அன்புநிலை மெய்வழுவாமை யரசுபுரக்க மருளுண்டேல் - என்புமாவும் புனைந்தாரை விடைபெற்றறிவே னெனப்புக்கு - முன்பு தொழுது விண்ணப்பஞ்செய்தார் முதல்வரருளினால் எனவும், தம்பிரானார் கோயில்வலங்கொண்டு திருமுன்றூழ்ந்தெழுந்து - கும்பயானைமேல் கொண்டுகொற்றக் குடையுஞ் சாமரையும் - நம்புமுரிமையவர் தாங்க நலங்கொண்டார் சூழ்வலஞ் கொள்வார் - மொய்ம்பினுவரின் பொதிசுமந்தோர் வண்ணான்முன்னே வரக்கண்டார், மழையிற்கனாந் தங்குவரூறி மேனிவெளுத்த வடிவினால் - உழையிற்பொலிந்த திருக்கரத்தாரடியார் வேடமென்றுணர்ந்தே - இழையிற்செறிந்த வோடைநுதல் யானைக்கழுத்தினின்றிழிந்து - விழைவிற்பெருகுங் காதலினால் விரைந்துசென்று கைதொழுதார், சேரர்பெருமான் றொழக்கண்டு சிந்தைமயங்கி முன்வணங்கி - யாரென்றடியேனைக்கொண்டதடியேனடிவண்ணானென்னச் - சேரர்பிரானுமடிச் சேரனடியேனென்று திருநீற்றின் - வாரவேட நினைப்பித்தீர் வருந்தாதேகுமென மொழிந்தார் எனவும், நீடுமுரிமைப்பேரரசானிகழும் பயனுநிறைதவமும் - தேடும்பொருளும் பெருந்துணையுந் தில்லைச்சிற்றம் பலத்துள் - ஆடுங்கழலேயெனத் தெளிந்த வறிவாலெடுத்த திருப்பாதங் - கூடுமன் பினர்ச்சனைமேற் கொண்டார் சேரர்குலப்பெருமான், வாசத்திருமஞ்சனம்பள்ளித்தாமம் சாந்தமணித்தூபம் - தேசிற்பெருகுஞ் செழுந்தீப முதலாயினதூந் திருவமுதும் - ஈசர்க்கேற்ற பரிசினாலர்ச்சித் தருளவெந்நாளும் - பூசைக்கமர்ந்த பெருங்கூத்தர்பொற்பார் சிலம்பினொலியளித்தார், வானக்கங்கைநதிபொதிந்த மல்குசடையார் வழிபாட்டுத் - தூநற்சிறப்பினர்ச்சனையாந் தொண்டுபுரியார் தமக்கொருநாட் - டேனக்கலர்ந்த கொன்றையினாராடற்சிலம்பினொலி முன்போல் - மானப்பூசை முடிவின்கட் கேளாதொழிய மதிமயங்கி, பூசைகடிது முடித்தடியேனென்னேபிழைத்ததெனப்பொருமி - யாவையும்பான் மற்றினி வேறடையு மின்பமியாதென்று - தேசின்விளங்குமுடை வாளையுருவித் திருமார்பினிலூட்ட - ஈசர்விரைந்து திருச்சிலம்பி னோசைமிகவு மிசைப்பித்தார்" எனவும் கழறிற்றறிவார் நாயனார்புராணத்தில் வருதல் காண்க. (௫)

Koviloor Digital Library

மறைக்குரைசெய்தவாக்கான்மதிமலிபுரிசையென்றுஞ்
சிறப்பியல்சீர்சால்செய்யுட்பாசுரஞ்செப்பித்தீட்டிப்
பிறைச்சடைப்பெருமானல்கிமறைந்தனன்பெரும்பாண்செல்வ
னுறக்கநீத்தாடிப்பாடியுவகைமாகடலிலாழ்ந்தான்.

(இ-ள்.) மறைக்கு உரை செய்த வாக்கால்-வேதத்திற்குப் பொருள்கூறியருளிய திருவாக்கினால், மதி மலி புரிசைஎன்றும் சிறப்பியல் சீர் சால் செய்யுள் பாசுரம் செப்பி தீட்டி-"மதி மலி புரிசை" என்னும் சிறப்புமிக்கசீர் அமைந்த செய்யுளாகிய திருப்பாசுரமொன்று திருவாய்மலர்ந்து வரைந்தருளி, பிறை சடை பெருமான் நல்கி மறைந்தனன்-பிறையையணிந்த சடையையுடைய பெருமானார் கொடுத்து மறைந்தருளினார், பெரும் பாண் செல்வன் உறக்கம் நீத்து ஆடி பாடி-பெரிய பண்பாடுதலில் வல்ல பத்திரர் துயிலினின்று மெழுந்து - (ஆனந்தமேலீட்டால்) ஆடியும் பாடியும், உவகை மாகடலில் ஆழ்ந்தான் - மகிழ்ச்சியென்னும் பெரியகடலி லழுந்தினார்.

"மதிமலிபுரிசை மாடக்கூடற் - பதிமிசை நிலவும் பானிறவரிச்சிறை - அன்னம்பயில் பொழிலாலவாயின் - மன்னிய சிவன்யா மொழிதருமாற்றம் - பருவக்கொண் மூப்படியெனப் பாவலர்க் - குரிமையி னுரிமையி னுதவியொளிதிகழ் - செருமாவுகைக்குஞ் சேரலன்காண்க - பண்பால் யாழ்வல்ல பாணபத்திரன் - தன் போலெம்பாலன்பன் றன்பால் - காண்பது கருதிப் போந்தனன் - மாண்பொருள் கொடுத்தவர விடுப்பதுவே" சோமசுந்தரக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய திருப்பாசுரம். சொல்லமைதியும் பொருளமைதியுமுட்டின்றி நிறைந்துள்ளதென்பார் சிறப்பியல் எனவும், செய்யுளின்பங் குறைபாடிலதென்பார் சீர் சால் எனவும், தேவர் கோமான் திருவாக்காதலினது தன்மையின் பெருமைதம்மால் விதத்தலரிதென்பார் செய்யுள் என்றமையாது பாசுரம் எனவுங் கூறினார். மதி மலி புரிசை - சிற்பநூல்வல்லோர் நன்றுணர்வின் வரம்புகடந்த மதில்சூழ்ந்த, மாடக்கூடல்பதி - நான்மாடக்கூடல் என்றுந் திருநாமமாகிய, மிசைநிலவும்பால் நிறம்வரிசிறை - மேலே பறத்தலவும் வெள்ளியநிறமும் அழகின் வரிகளுமமைந்த சிறையையுடைய, அன்னம்பயில்பொழில் - அன்னங்கள் சஞ்சரிக்குஞ் சோலைசூழ்ந்த திருவாலவாயிலில் மன்னியசிவன்யாம் - என்றுமுள்ள சிவன் - யாம், மொழிதருமாற்றம் - கூறியருளுமணிவார்த்தை, பருவம் கொண்மூ படி என் - கார்கால மேகம்போல, பாவலர்க்கு - நற்கவிகளில் வல்லார்க்கு, உரிமையின் உரிமையின்உதவி - தனதுரிமையினின்று அவர்களுக்குரிமைப்பட வுதவி, ஒளி திகழ் செருமா உகைக்கும் - தேவமணி முதலிய இலக்கணங்களால் ஒளிவாய்ந்து விளங்கிப் பகைவர் போர்முனையில் அஞ்சாது பாய்ந்துசெல்லுங் குதிரையைச் செலுத்தும், சேரலன் காண்க - சேரமான் எதிர்கொண்டு காண்க, பண்பால் யாழ்வல்ல பாணபத்திரன் - இசைத்தொழிற் பண்பால் யாழ் வாசித்தலில் வல்ல பாணபத்திரன், தன்போல் எம்பால் அன்பன் - தன்னைப்போல எம்மிடத்தி லன்புமிக்கோன், தன்பால் காண்பது கருதிபோந்தனன் - தன்னைக் காணக் கருதிவந்தனன், மாண் பொருள் கொடுத்து வர விடுப்பது - அறத்தின் மதிப்பிட்டிய பொருள்கொடுத்து என்னிடத்து வரவிடுக்க. என்பது பதப்பொருள். ஒப்பொருளால் தம்மாலமைந்த திருநாமங்களையுடைய திருப்பதி என்பார் மாடக்கூடல் ஆலவாய் எனவும், யாம் என்றுந் தோற்றக் கேடிலம் என்பார் மன்னிய எனவும், நம்மால் வரையாதுகொடுக்கும் வள்ளன்மையையும் பகைமுகத் தஞ்சாதுசெல்லும் வீரத்தையும் உடையனென்பார் பருவக்கொண்மூப்படியெனப் பாவலர்க்குரிமையினுரிமையினுதவி எனவும்,செருமாவுகைக்குஞ்சேரலன் எனவும்,

பண்முறைவழாதுபாடுதலில்வல்லோன் என்பார் பண்பால்யாழ்வல்ல எனவும், பேரன்பில்மிக்கோய் என்றும் உயர்வுதோன்ற முன்னிலைப்பொருள்படப் படர்க்கையையுபசரித்துத் தன்போல் எனவும், தமது அனுஞையால் வந்தனன் என்பார் காண்பது கருதிப்போந்தனன் எனவும், அறத்தின்வழிஈட்டியநிகரில் பொருள் என்பார் மாண்பொருள் எனவும், அவனிடத்து என்றும் இசைகேட்கும் விருப்புடையோம் என்பார் வியங்கோட்பொருள்பட வரவிடுப்பதுவே எனவுங் கூறினார். "மேவுமுரிமையரசளித்தேவிரும்பு காதல்வழிபாடும் - யாவும்யாருங் கழறினவுமறியு முணர்வுமீறிலாத் - தாவில்விறலுந் தண்டாதகொடையும் படைவாகனமுதலாங் - காவன்மன்னர்க்குரியனவுமெல்லாங் கைவந்துறப்பெற்றார்" என் ௸ நாயனார்புராணத்தில் வருதல்காண்க. "அதிர் கழலுதியர்வேந்தற்கருள்செய்த பெருமையாலே - எதிரில்செல்வத்துக்கேற்ற விருநிதிகொடுக்கவென்று - மதிமலிபுரிசையென்னும் வாசகம்வரைந்தவாய்மை - கதிரொளிவிரித்ததோட்டுத் திருமுகங்கொடுத்தார்கான" எனத் திருமுகப்பாசுரம் தந்தருளினமை ௸ புராணத்திலும் காண்க. (௧௦)

கலிவிருத்தம்.

வாங்கியதிருமுகமணிப்பட்டாடையிட்
டாங்கிறையடிபணிந்தகன்றுபத்திர
னோங்கியகோயிலைவலங்கொண்டொல்லென
நீங்கிமேல்வரைப்புலநெறிக்கொண்டேகுவான்.

(இ-ள்.) வாங்கிய திரு முகம் - தாம் வாங்கிய திருமுகத்தை, மணிப் பட்டாடை இட்டு - அழகிய பட்டுடையில்வைத்து, இறை அடி பணிந்து - சித்தமூர்த்திகளாய் வந்தருளிய சோமசுந்தரக்கடவுள் திருவடியைவணங்கி, பத்திரன் ஆங்கு அகன்று - பாணபத்திரர் அங்குநின்றும் நீங்கி, ஓங்கிய கோயிலை வலங் கொண்டு - (விண்ணளவ) ஓங்கிய திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து. ஒல்லென நீங்கி - விரைந்துநீங்கி, மேல் வரைப்புலம் நெறிக்கொண்டு ஏகுவான் - மேற்றிசைக்கணுள்ள மலைநாட்டின் வழிக்கொண்டு செல்லத்தொடங்கினார்.

சங்கப்புலவருள் முதற்புலவரருளிய திருமுகமாதலால் மணிப்பட்டாடையிட்டெனவும், விரைவிற்செல்க எனக் கட்டளையாதலால் ஒல்லெனநீங்கியெனவுங்கூறினார். "சங்கப்புலவர்திருமுகந்தலைமேற்கொண்டு" எனவும் "வேண்டிற்றெல்லாங்குறைவின்றித் - தரவெம்மோலைதருமென்றேர் தாழாதேகிவருகென்று" எனவும் மேற்படி புராணத்தில் வருதல்காண்க. (௧௧)

கொல்லையுங்குறிஞ்சியுங்கொதிக்கும்வெம்பரற்
கல்லதரத்தமுங்கடந்துமுட்புறப்
பல்சுளைக்கனியடியிடறப்பைப்பைய
நல்வளங்கெழுமலைநாடுநண்ணினான்.

(இ-ள்.) கொல்லையும் குறிஞ்சியும் - முல்லைநிலத்தையுங் குறிஞ்சிநிலத்தையும், கொதிக்கும் வெம் பரல் கல் அதர் அத்தமும் கடந்து - (முறுகிய வெம்மையால்) கொதிக்கின்ற வெய்யபரற்கல்நிறைந்த வழியையுடைய பாலைநிலத்தையுங் கடந்து, முள் புறம் பல் சுளை கனி அடி இடற - முள்ளைப்புறத்தேயுடைய பலசுளைகளமைந்த (மூக்கூழ்த்தவிழ்ந்த) பலாக்கனிகள் தமது காலிலிடற, பைப்பைய - மெல்லமெல்லச்சென்று, நல் வளம் கெழு மலை நாடு நண்ணினான் - நல்லவளமிக்க மலைநாட்டை யடைந்தனன்.

Koviloor Digital Library

மழைவளஞ்சிறந்த மலைநாடென்பார் முட்புறப்-பல்சுளைக் கனியடியிட ற எ
ன்றார். (கஉ)

அலைகடனெடுந்துகிலந்தநாடெனுந்
தலைமகடனக்குவான்றடவுகுன்றுபூண்
முலையெனவிளங்கினமுகத்திற்றீட்டிய
திலதமேயானதுதிருவஞ்சைக்களம்.

(இ-ள்.) அலை கடல் நெடுந் துகில் அந்த நாடு என்னும் தலை மகள் தனக்கு - அலைக்குங் கடலாகிய நெடிய ஆடையையுடுத்த அந்த மலைநாடென்னுந் தலைமகளுக்கு, வான் தடவு குன்று - வானளாவிய மலைகளே, பூண் முலை என விளங்கின - ஆபரணமணிந்த முலைகளைப்போல விளங்கின, முகத்தில் தீட்டிய திலதமே ஆனது - அத்தலைமகள் முகத்திலிட்ட திலதமாக விளங்கியது, திரு அஞ்சைக்களம் - திருவஞ்சைக்களமென்னுந் திருநகரம்.

எல்லாவுறுப்புகளினும் சிறந்தது முகம் அதனைவிளக்குவது திலதம் ஆதல்போல எல்லாநாடுகளிற்சிறந்தது சேரநாடு என்பார் முகம் எனவும், அந்நாட்டில் சிறந்த பொலிவது திருவஞ்சைக்களம் என்பார் முகத்திற்றீட்டிய திலதமே யானதெனவுங் கூறினர். (கங)

அறமகளாக்கமுமலரின்மேயசெந்
திறமகளாக்கமுநீதிசான்றபோர்
மறமகளாக்கமும்வடசொற்றென்கலைத்
திறமகளாக்கமுஞ்சிறந்தவந்நகர்.

(இ-ள்.) அற மகள் ஆக்க மும்-தருமமாதாலாகிய ஞானச்செல்வமும், அலரில் மேய செந்திற மகள் ஆக்கமும் - தாமரைமலரில் வசிக்கும் இலட்சுமியாலாகிய பொருட்செல்வமும், நீதி சான்ற போர் மறம் மகள் ஆக்கமும் - நீதியின்வழியமைந்த போர்த்தொழிற்குரிய வீரலக்ஷுமியினாலாகிய பிரதாபச்செல்வமும், வடசொல் தென் கலை திற மகள் ஆக்கமும் - ஆரியம் தமிழென்னும் பகுப்பமைந்த கலைமகளாலாகிய கல்விச் செல்வமும், அந்நகர் சிறந்த - அத்திருநகரிற் சிறந்து பொலிந்தன.

ஞானச்செல்வம் தருமத்தாலாதலால் அறமகளாக்கமும் எனவும், அறத்தால்வரும் பொருட்செல்வம் திருமகளாலாதலால் அலரின்மேய செந்திறமகளாக்கமும் எனவும், பொருளால்வரும் பிரதாபச்செல்வமும் வீரலட்சுமியாலாதலால் நீதிசான்றபோர் மறமகளாக்கமும் எனவும், அறமுதலியவற்றைத் தருதல், கல்விச்செல்வமாதலால் வடசொற்றென் கலைத்திறமகளாக்கமும் சிறந்த என்றார். (கச)

மன்புகழ்நகர்மறுகின்மாடொரு
தண்புனற்சாலையிற்சார்ந்துளாரிப்பால்
விண்புகழ்நிதியவ்வேந்தற்கன்பிராக்
கண்புனைநுதலினார்கனவிற்றோன்றினர்.

(இ-ள்.) மன் புகழ் அந்நகர் மறுகின் மாடு - நிலவுலகு புகழும் அத்திருநகர் வீதியிலுள்ள, ஒரு தண் புனல் சாலையில் சார்ந்துள்ளான் - ஒரு தண்ணீர்ப்பந்தலைப் பாதுகாத்திருந்தவர், இப்பால் - இப்புறம், விண் புகழ் நிதி அ வேந்தற்கு - விண்ணுலகு புகழுமது நிதியையுடைய அச்சேரமான்பெருமானார்க்கு, அன்

Koviloor Digital Library

று இரா - அன்றிரவில், கண் புனை நுதலினர் கனவில் தோன்றினர் - நுதற்கண்ணுடைய பெருமானார் சொப்பனத்தி லெழுந்தருளினர். (௧௫)

தென்னவன்மதுரையிலிருக்குஞ்சித்தர்யா
நின்னிடைவந்துளேநின்னைக்கண்டுதா
னன்னிதிவேண்டநம்மோலைகொண்டுநம்
மின்னிசைப்பாணபத்திரனிங்கெய்தினன்.

(இ-ள்.) தென்னவன் மதுரையில் இருக்கும் சித்தர் யாம் - பாண்டியனரசுபுரியு மதுரையிலிருக்கும் சித்தர்நாம், நின் இடை வந்துள்ளேம் - நின்பால் வந்தோம், நின்னை கண்டு தான் நல் நிதி வேண்ட நம் ஓலை கொண்டு - உன்னைக்கண்டு தான் மிக்க பொருளைப் பெற நமது திருமுகங்கொண்டு, நம் இன் இசை பாணபத்திரன் இங்கு எய்தினன் - நம்பாலன்புள்ள இனியஇசையில் வல்ல பாணபத்திரனிங்கு வந்திருக்கின்றனன். (௧௬)

மற்றவற்கருநிதிகொடுத்துமன்னநீ
தெற்றெனவரவிடுகென்றுசித்தர்தாஞ்
சொற்றனர்போயினர்சுரக்குந்தண்ணளி
யொற்றைவெண்குடையினனுறக்கநீங்கினன்.

(இ-ள்.) மன்ன அவற்கு அரு நிதி கொடுத்து - அரசனே யப்பாணபத்திரனுக்குப் பெறுதற்கரிய பொருள்கொடுத்து, தெற்றென வரநீ விடுக என்று - விரைந்து அவன் எம்பால்வர நீ அனுப்புக என்று, சித்தர் தாம் சொற்றனர் போயினர் - சித்தமூர்த்திகள் சொல்லிச் சென்றருளினர், தண் அளி சுரக்கும் ஒற்றை வெண் குடையினன் உறக்கம் நீங்கினன் - தண்ணிய கருணைசுரக்கும் ஒப்பில்லாத தவளவட்டக்குடையையுடைய சேரமான்பெருமானர் துயிலுணர்ந்தனர். (௧௭)

கங்குல்வாய்க்கண்டவக்கனவைப்பெண்ணையந்
தொங்கலான்றமரொடுசொல்லிச்சேற்கணாள்
பங்கினன்றிருமுகங்கொணர்ந்தபத்திர
னெங்குளான்கொல்லெனத்தேடவெண்ணுவான்.

(இ-ள்.) கங்குல் வாய் கண்ட அக்கனவை - இரவிற்கண்ட அச்சொப்பனத்தை, அம் பெண்ணை தொங்கலான் தமரொடு சொல்லி-அழகிய பனைமாலையணிந்த சேரமான்பெருமானர் தமதுறவினராகிய அமைச்சரோடு கூறி, சேற் கணாள் பங்கினன் திரு முகம் கொணர்ந்த - அங்கயற்கண்ணியாரை யிடப்பாகத்திலுடைய சோமசுந்தரக்கடவுளருளிய திருமுகத்தைக் கொண்டுவந்த, பத்திரன் எங்குள்ளான் என்ன தேட எண்ணுவான் - பாணபத்திர ரெங்குளரோ வென்று தேடக் கருதுவார்.

சிவபெருமான் திருவருட்பெருமை தம்முளடங்காது மேலிட்டதாலமைச்சரொடு கூறினர் என்பார் தமரொடுசொல்லி என்றார். (௧௮)

மற்றவர்தமைத்துரீஇவருகதில்லெனக்
கொற்றவனேவலோர்குறுகிமாடமுந்
தெற்றியுங்கியமுமன்றுஞ்சென்றுசென்
றெற்றிகழ்மணிநகரெங்குந்தேடுவார்.

Koviloor Digital Library

(இ-ள்.) அவர் தம்மை தருதி நில்லென வருக என - அப்பாணபத்திரரை விரைந்து தேடிவிரைந்து வருகவென்றேவ, கொற்றவன் ஏவலோர் குறுகி-பாண்டியனுடைய ஏவலாளர் பலவிடங்களிலுஞ்சென்று, மாடமும் தெற்றியும் நியமமும் மன்றம் சென்று சென்று-மாடங்களிலும் திண்ணைகளிலும் கடைவீதிகளிலும் அம்பலங்களிலும் போய்ப்போய், எல் நிகழ் மணி நகர் எங்கும் தேடுவார்-சூரியனைப்போல விளக்கும் அழகிய நகரமெங்கும் தேடுவாராயினார்கள்.

என்று தரிசிப்போம் என்று எழுந்த பேராவலினுற்றலால் நில்லென வருக என்றார் என்றார். நில் என்னும் இடைச்சொல்காலத்தின்மேல் நிற்றலால் விரைந்து என்னும் "விரைவேகாலமொழிவிசைக்கிளவியென் - றம்மூன்றென்ப நில்லைச்சொல்லே" என்பது சூத்திரம். (௧௯)

தருமநீர்ப்பந்தரிலிருக்குந்தந்திரி
வருமிசைக்கிழவனைக்கண்டுவல்லைபோய்த்
திருமகற்குணர்த்தினார்சேனையோடெழீஇப்
பெருமகன்பாணர்தம்பிரானைநண்ணினான்.

(இ-ள்.) தருமம் நீர்ப் பந்தரில் இருக்கும் தந்திரி வரும் இசைக் கிழவனை கண்டு - அறத்தின்பொருட்டமைத்த தண்ணீர்ப்பந்தலில் (இளைப்பாற)வசிக்கும் வீணையில்வல்ல பாணபத்திரரைப்பார்த்து, வல்லை போய் திரு மகற்கு உணர்த்தினார் - விரைந்து சென்று சேரமான் பெருமானார்க்குக் கூறினார்கள், சேனை யோடு எழீஇ - தமதுசேனையோடெழுந்து, பெரு மகன் பாணர் தம்பிரானை நண்ணினான் - அன்பிற் பெரிய அச்சேரமான்பெருமானார் பாணர்பெருமானாராகிய பத்திரரையடைந்தனர்.

அருட்செல்வம்போல அரசியற்குரப்பாகிய பொருட்செல்வத்திலும் பெரியர் என்பதுதோன்றத் திருமகன் என்றமட்டும் அமையாது பெருமகன் என்றார். (௨௦)

கண்டனன்முகிழ்த்தகைக்கமலஞ்சென்னிமேற்
கொண்டனன்பாடினன்கூத்துமாடினன்
றண்டெனவீழ்ந்தனன்பிற்றண்ணறு
வண்டெனமகிழ்ந்தனன்மன்னர்மன்னனே.

(இ-ள்.) மன்னர் மன்னன் கண்டனன் - அரசர்களுக்கரசாகிய சேரமான் பெருமானார்கண்டு, அன்பின் - அன்பால், முகிழ்த்த கைக்கமலம் சென்னிமேல் கொண்டனன் - கூப்பிய கைத்தாமரைமலரைத் தமது சிரத்தின்மேற் குவித்து, பாடினன் கூத்தும் ஆடினன் தண்டு என்ன வீழ்ந்தனன் - பாடி யானந்தக்கூத்தாடித் தண்டம்போல நிலமிசைவீழ்ந்து, தண் நறு வண்டு என்ன மகிழ்ந்தனன் - தண்ணிய தேனைக்கண்ட வண்டுபோலப் பத்திரரைக்கண்டு மகிழ்கூர்ந்தனர்.

சேய்மைக்கட்கண்டபோதே திரியாங்கஞ்செய்துவணங்கினர் என்பார் முகிழ்த்தகைக்கமலஞ் சென்னிமேற்கொண்டனன் எனவும், தீப்பசி சுட்டுவருத்த இரைதேடித்திரிந்துழன்ற வண்டு தேனைக்காணின் ஆராமகிழ்ச்சியி லழுந்துதல்போலப் பாணபத்திரரை என்று காண்போமென ஏக்கற்றுநின்ற நெறித்தறிவாராகிய பெருமானார் கண்டவுடன் தலையன்பாற் பரவசமாகிப் பாடி யாடி நிலமிசை அட்டாங்கமாகத் திருவடியில் வீழ்ந்து வணங்கி ஆராவின்பம் அடைந்தனர் என்பார் தண்ணறு வண்டெனமகிழ்ந்தனன் மன்னர்மன்னனே எனவுங்கூறினார். கண்டனன், கொண்டனன், பாடினன், ஆடினன், வீழ்ந்தனன்முற்றெச்சங்கள் "கேட்டபொழுதேகைதலை

Koviloor Digital Library

மேற்கொண்டுகிளர்ந்தபேரன்பால் - நாட்டம்பொழிநீர்வழிந்திழிய வெழுந்துநடுக்க மிகவெய்தி - ஓட்டந்தம்பொன்மாளிகையின்புறத்திலுருகுஞ்சிந்தையுடன் - பாட்டின்றலைமைப்பாணனார் பாதம்பலகாற்பணிகின்றார்" என ஷை புராணத்தில் வருதல் காண்க. திரியாங்கத்திற்கு "சிரமேகாங்கம்வலக்கரத்தைச் சிரத்திற்குவித்தல்துவிதாங்கம் - சிரமேல்வாமகரத்தினையுஞ் சேர்த்ததிரிவிதாங்கமதாம் - சிரநீள்கரஞ்சானுக்கணிலந்தீண்டிற்பஞ்சாங்கமதாகும்-சிரமோவாய்காதுகைசானு செகத்திற்படிதலட்டாங்கம்" எனவருஞ் சிவபுண்ணியத்தெளிவால் உணர்க. (௨௧)

வாங்கினன்றிருமுகமலர்க்கணொற்றினன்
றாங்கினன்முடிமிசைத்தாமம்போன்மகிழ்
தூங்கினன்றடங்கணீர்துளிப்பமெய்யெலாம்
வீங்கினன்பொடிப்பெழவேந்தர்வேந்தனே.

(இ-ள்.) வேந்தர் வேந்தன் - அரசர்க்கரசாகிய சேரமான்பெருமானார், திருமுகம் வாங்கினன் மலர் கண் ஒற்றினன் - திருமுகத்தைவாங்கித் தமது மலர்போன்றகண்களிலொற்றி, முடி மிசை தாமம் போல் தாங்கினன் - சிரத்தின்மேல் மலர்மாலைபோலச்சூடி, மகிழ் தூங்கினன் - மகிழ்ச்சி கூர்ந்து, தடம் கண் நீர் துளிப்ப பொடிப்பு எழ மெய் எல்லாம் வீங்கினன் - பரந்தகண்களினின்றும் ஆநந்தபாஷ்பம் சிந்தவும் புளகரும்பவும் உடல்முற்றும் விம்மினார்.

நாயிற்குத் தவிசிட்டனம்போல்க் கடைப்பட்ட என்னையும் ஓர்பொருளாகத்திருவுளத்திற்கொண்டருளி மேம்படுத்தற்கன்றோ திருமுகங்கொடுத்தருளினமை யெனக்கருதினாராதலால் "வாங்கினன்றிருமுகமலர்க்கணொற்றினன் - தாங்கினன்முடிமிசைத்தாமம்போன்மகிழ் - தூங்கினன்றடங்கணீர் துளிப்பமெய்யெலாம் - வீங்கினன்பொடிப்பெழ என்றார் "அடியேன்பொருளாத்திருமுகங்கொண்டணைந்ததென்னவவர்தாமும் - கொடிசேர்விடையார்திருமுகங்கை கொடுத்துவணங்கக்கொற்றவனார் - முடிமேற்கொண்டுகூத்தாடி மொழியுங்குழறிப்பொழிகண்ணீர் - பொடியார்மார்பிற்பரந்துவிழப்புவிமேற்பலகால்வீழ்ந்தெழுந்தார்" என ஷைபுராணத்தில் வருதல்காண்க. (௨௨)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

மின்னவிருஞ்செம்பொன்மணிமாடக்கூடன் மேயசிவன்யாமெழுதிவிடுக்குமாற்ற, நன்னர்முகிலெனப்புலவர்க்குதவுஞ்சேர நரபாலன்காண்கதன்போனம்பாலன்ப, னின்னிசையாழ்ப்பத்திரன்றன் மாடேபோந்தானிருநிதியங்கொடுத்துவரவிடுப்பதென்னத், தென்னர்பிரான்றிருமுகத்தின்செய்திநோக்கிச் சேரர்பிரான்களிப்பெல்லைதெரியானாகி.

(இ-ள்.) மின் அவிரும் செம் பொன் மணி மாடம் கூடல் மேய சிவன் யாம் - ஒளிவிளங்கும் செம்பொன்னாலாகிய மாடங்கள்நெருங்கிய மதுரையி லெழுந்தருளிய சிவபெருமான்யாம், எழுதி விடுக்கும் மாற்றம்-திருக்கைதொட்டுவரைந்தனுப்புந் திருமுகம், நன்னர் முகில் என புலவர்க்கு உதவும் சேர நரபாலன் காண்க-(உலகிற்கு) நன்மைபயக்கு மேகம்போலக் கற்றறிந்தபுலவர்க்கு நன்மைபயக்கும் சேரமானரபதியே காணக்கடவாய், தன் போல் நம் பால் அன்பன்-நின்னைப்போல நம்மிடத்து அன்பனாகிய, இன் இசை யாழ்ப்பத்திரன் தன் மாடே போந்தான்-இனிய இசையமைந்த யாழில்வல்ல பாணபத்திரன் நின்னிடத்து வந்தனன், இருநிதியம்

Koviloor Digital Library

கொடுத்த வர விடுப்பது என்ன - (அவர்க்குப்) பெருநிதிகொடுத்து வரவிடுக்க வென்ன, தென்னர் பிரான் திரு முகத்தின் செய்தி நோக்கி - பாண்டியர் பெருமானாராகிய சோமசுந்தரக்கடவுள் வரைந்தருளிய திருமுகத்தின் செய்தியைப்பார்த்து, சேரர் பிரான் களிப்பு எல்லை தெரியான் ஆகி - சேரர்பெருமானார் எழுந்த மகிழ்ச்சியில் வரம்பு தெரியாதாகி.

திருமுகத்தின் செய்தியை முறைப்படி வழிபட்டுவணங்கி யுணர்ந்தனர் என்பார் தென்னர்பிரான் திருமுகத்தின்செய்தி நோக்கியெனவும், சிவபிரானார் என்னையும் ஒரு அடியவனாகக் கொண்டருளக்கருதிய திருவருள் எல்லையில்லது எனக்கருதினர் என்பார் களிப்பெல்லைதெரியானாகி யெனவுங்கூறினர் "பரிவிற்போற்றித்திருமுகத்தைப்பலகாற்றொழுதுபடியெடுக்க - உரியவனையோலெடுத்தோதியும்பர்பெருமானருள்போற்றி" "கூனல்வெண்பிறைக்கண்ணிமுடியாரடிமைகொண்டருளும் - பான்மையருளின்பெருமையினையினைந்துபலகாற்பணிந்தேத்தி" என டி புராணத்தில் வருதல்காண்க. சேரமான்பெருமைவிளி. (௨௩)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பொன்னின்றவிசைமிசைவைத்துப்புழைக்கைமதமான்றலையேற்றி
மன்றுங்கொளையாழ்ப்புலவனைமுன்வைத்துப்பின்னேதானிருந்து
மின்றுங்கதிர்காலிணைக்கவரிவீசிப்பல்வேறியங்கலிப்பத்
தென்னென்றளியார்இசைத்தாரான்திருமாநகரைவலஞ்செய்யா.

(இ-ள்.) பொன்னின் தவிசை மிசை வைத்து - பொன்னாலாகிய தவிசின் மேல்வைத்து, புழைக்கை மத மான் தலை ஏற்றி - தொளைபொருந்தியதுதிக்கையையும் மதத்தையுமுடைய யானையின்மத்தகத்தின்மேலேற்றி, மன்றும் கொளை யாழ்ப் புலவனைமுன் வைத்து பின்னே தான் இருந்து - நிலைபெற்ற இசையமைந்த யாழில்வல்ல பாணபத்திரனை முன்னர்வைத்துத் தான் பின்னிருந்து, மின்றும் கதிர் கால் இணைக் கவரி வீசி - விளங்குகின்ற ஒளிவீசும் இணைக்கவரிகளைவீசி, பல் வேறு இயம் கலிப்ப - பலவேறுவகைப்பட்ட வாச்சியங்கணொலிக்க, தென் என்று அளி ஆர் இசை தாரான் - தென்னென்றிசைபாடி வண்டுகளார்ந்த மாலையையுடைய சேரமான்பெருமானார், திரு மா நகரை வலஞ் செய்யா - பெரிய அழகிய திருநகரினை வலஞ்செய்வித்து.

சிவனடியவரைச் சிவமேயெனவுணர்ந்த ஆரா அன்பினர் என்பார் முன்வைத்துப் பின்னேதானிருந்து-மின்றுங்கதிர்காலிணைக்கவரிவீசி எனக்கூறினார். "தேசிகர்தம்மைச்சிவனேசர்தம்மையும் - ஈசனெனவேயுளத்தெண்ணி" எனச் சைவசமயநெறியில் வருதல் காண்க. (௨௪)

பஞ்சுதடவுஞ்சிறடியார்பலமங்கலங்கொண்டெதிர்போத
மஞ்சுதடவுநின்குடுமிமாடமனையிற்கொடுபோகி
நஞ்சுதடவுமணிகண்டனன்பன்றனைநன்னிராட்டி
பஞ்சுதடவிபோவியஞ்செய்தமைத்தமணிமண்டபத்தேற்றி.

(இ-ள்.) பஞ்சு தடவும் சிறு அடியார் பல மங்கலம் கொண்டு எதிர் போத - செம்பஞ்சுக்குழம்புதடவிய சிற்றடியையுடைய சுமங்கலைப்பெண்கள் கண்ணாடி முதலிய அட்டமங்கலம் ஏந்தி எதிர்வர, மஞ்சு தடவு நீள் குடுமி மாடம் மனையில் கொடு போகி - மேகமளாவிய நீண்டசிகரத்தையுடைய உபரிகையையுடைய தமது கோ

Koviloor Digital Library

யிற்குக்கொண்டு சென்று, நஞ்சு தடவு மணி கண்டன் அன்பன் தன்னை - நஞ்சம் பொருந்திய ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுளினன்பராகிய பாணபத்திரரை, நல் நீராட்டி - வாசமமைந்த நீரால் திருமஞ்சனஞ்செய்வித்து, அஞ்சு தடவி ஓவியம் செய்து அமைத்த - பஞ்சவன்னங்களாற் சித்திரம் செய்தமைத்த, மணி மண்டபத்து ஏற்றி - இரத்தினமழுத்திய மண்டபத்தில் இருந்தருளச்செய்து.

அட்டமங்கலங்கள், கண்ணடி, இடபம், விளக்கு, ஸ்ரீவற்சம், கவரி, சங்கு, சுவத்திகம், நிறைகுடம், வாசநீர் இன்னவகையினது என்பது திருமணப்படலத்திற் காண்க. (௨௫)

அம்பொற்றவிசிட்டருச்சனைசெய்தாறுசுவையின்னமுதருத்திச்
செம்பொற்கலவைநறுஞ்சாந்தந்நிம்பூவாதிமுகவாசம்
பைம்பொற்கலத்துவெள்ளிலைநீம்பழுக்காய்பிறவுமுறைநல்கி
யும்பர்க்கிறைவன்றிருமுகத்திலுய்ப்பதெனலாலுய்த்துமென.

(இ-ள்.) அம் பொன் தவிசு இட்டு-அழகிய பொன்னாலாகிய ஆசனந்தந்து, அருச்சனை செய்து - அருச்சித்து, ஆறு சுவை இன் அமுது அருத்தி - அறுசுவையமைந்த இனிய அமுதுண்பித்து, செம் பொன் கலவை நறுஞ்சாந்தம்-செவந்த பொன்னிறம் வாய்ந்த கூட்டுவர்க்கமாகிய நறுமணங்கமழுஞ் சந்தனமும், நிம் பூ ஆதி முகவாசம் - இனிய மலர் முதலிய தூபமும், பைம்பொன் கலத்து வெள்ளிலை நீம் பழுக்காய் பிறவும் முறை நல்கி - பசிய பொற்றட்டில் வெற்றிலையும் சுவையமைந்த பாக்கும் மற்றுள்ளனவு முறையாகக்கொடுத்து, உம்பர்க்கு இறைவன் திருமுகத்தில் உய்ப்பது எனலால் - தேவர்கட்கிறைவராகிய சோமசுந்தரக்கடவுள் வரைந்தருளிய திருமுகத்தில் அனுப்புவது என்றிருத்தலால், உய்த்தும் என - (அவ்வாறே) அனுப்புவோமென்று.

சிவனடியவரை யச்சிவனைப்போலக்கருதி யருச்சித்து வழிபடல் முறையாதலால் அம்பொற்றவிசிட்டருச்சனைசெய்து எனவும், வந்தவழியினைப்பாற உபசரித்தலால் அறுசுவையின்னமுதருத்தி "செம்பொற்கலவை நறுஞ்சாந்தந் நிம்பூவாதி முகவாசம்-பைம்பொற்கலத்து வெள்ளிலைநீம் பழுக்காய்பிறவுமுறைநல்கி" எனவுங்கூறினர். (௨௬)

செம்பொனறையைத்திறந்தழைத்துக்காட்டியினையதிருவெல்லா
மும்பர்பெருமானடியீர்நீருடையீர்கவர்ந்துகொண்மினென
விம்பர்நிழற்றும்வெண்குடையானிசைப்பவெதிர்தாழ்ந்திசைக்கிறைவ
னம்பனருளுக்குரியீர்நீர்நல்கிற்றமையுமெனக்கென்ன.

(இ-ள்.) செம்பொன் அறையை திறந்து - கருவூலத்தைத்திறந்து, அழைத்து காட்டி - அழைத்துக்காண்பித்து, இனைய திரு எல்லாம் - இச்செல்வம் யாவையும், உம்பர் பெருமான் அடியீர்-தேவர்பெருமானடியவரே, நீர் உடையீர்-நீரேயுடையீர், கவர்ந்து கொண்மின் என இம்பர் நிழற்றும் வெண் குடையான் இசைப்ப - கைக்கொள்ளுங்களென்று இந்நிலவுலகிற்கு நிழல் செய்யும் வெள்ளிய தவளவட்டக்குடையையுடைய சேரமான் பெருமானார் கூற, இசைக்கிறைவன் எதிர் தாழ்ந்து - பாணபத்திரர் எதிர்வணங்கி, நீர் நம்பன் அருளுக்கு உரியீர் - நீர் சிவபெருமான் திருவருளுக்குரியீர், நல்கிற்று எனக்கு அமையும் என்ன - நீர் கொடுப்பதெனக்குப் போதுமென்று. (௨௭)

மன்னன்றானெண்ணியவாற்றால்வழங்கவழங்கமறுத்துமறுத்
தின்னறீருமிசைக்கிழவனிலங்கும்பொலம்பூணிருநிதியம்
பொன்னஞ்சிவிகைகரிபரிமான்பொற்பட்டாடைபலபிறவுந்
தன்னவென்றுமளவாற்றாற்றானேகொள்ளத்தார்வேந்தன்.

(இ-ள்.) மன்னன் தான் எண்ணிய ஆற்றால் வழங்க வழங்க மறுத்து மறுத்து - சேரமான்பெருமானார் கருதியபடியே கொடுக்குந்தோறும் போதும் போதுமென்று மறுத்து, இன்னல் தீரும் இசைக்கிழவன் - வறுமை நீங்கிய பாணபத்திரர், இலங்கும் பொலம் பூண் இருநிதியம் - விளங்கும் பொன்னாலாகிய ஆபரணமும் பெரிய தனமும், பொன் அம் சிவிகை கரிபரிமான் பொன் பட்டாடை பிற பலவும் - பொன்னாலாகிய அழகிய பல்லக்கும் யானையும் குதிரையும் பீதாம்பரமும் அவையொழிந்த பலவும், தன்ன என்றும் அளவு ஆற்றால் - சிறியனவென்னும் அளவின் வகையால், தானே கொள்ள - பாணபத்திரரே கைக்கொள்ள, தார்வேந்தன்-பனைமாலையையுடைய சேரமான்பெருமானார்.

தமது சேனைமுதலியவற்றையும் அரசியலையுந் தந்தனர் என்பார் மன்னன்றானெண்ணியவாற்றால் வழங்கவழங்க எனவும், அரசுறுப்பையும் அரசியலையும் பாணபத்திரர் ஒழித்தனர் என்பார் மறுத்துமறுத்து எனவும், அங்கு வழங்கியது வரம்பிலதாயினும் சேரமான்பெருமானார் கருத்திற்குச் சிறிது என்பார் தன்னவென்னுமளவாற்றானேகொள்ள எனவுங்கூறினார். "பரந்தநிதியின்பரப்பெல்லாம் பாணனார்பத்திரனார்க்கு - நிரந்தனங்கள்வெவ்வேறு நிரைத்துக்காட்டிமற்றிவையும் - உரந்தங்கியவெங்கரிபரிசின் முதலாவுயிருள்ளனதமும் - புரந்தவரசுங்கொள்ளுமென மொழிந்தார்பொறையர்புரவலனார், பாணனார்பத்திரனாரும் பைம்பொன்மௌலிச் சேரலனார்-காணக்கொடுத்தவிவையெல்லாங் கண்டுமகிழ்வுற்றதிசயித்துப் - பேணவேண்டுவன வடியேன்கொள்ளப்பெற்றேன்-ஆணையரசுமரசுறுப்புங் கைக்கொண்டருளுமெனவிறைஞ்சி, இறைவராணைமறுப்பதறுக் கஞ்சியிருந்தாரிகல்வேந்தர்" என பெ. புராணத்தில் வருதல்காண்க. தன்னத்த தொகுக்கும் வழித்தொகுத்தல். தன்னது என்னும் பாடத்தைத் தன்னளக்கொள்க. (உஅ)

பின்னேழடியோசேட்சென்றுபெருமைசான்றவரிசையினாற்
றன்னேரிசையான்றனைவிடுத்துமீண்டானாகத்தமிழ்மதுரை
மின்னேர்சடையாரிசைத்தொண்டன்றானுமீண்டுவெயில்விரிக்கும்
பொன்னேர்மௌலிநிதிக்கிழவன்போலமதுரைநகர்புக்கான்.

(இ-ள்.) பின் ஏழடியோ - பின்பு ஏழடி அளவோ (சென்றது,) சேண் சென்று - நகரின்புறத்தாரும் பின்சென்று, பெருமைசான்ற வரிசையினால் தன் நேர் இசையான் தனை விடுத்து மீண்டான் ஆக - பெருமைமிக்க வரிசையோடு தம்மையொத்த இசையில்வல்ல பாணபத்திரரையனுப்பி (அவர் அனுமதியால்) சேரமான்பெருமானார் மீள, தமிழ் மதுரை மின் நேர் சடையார் இசைத்தொண்டன் தானும் - தமிழ் வழங்கு மதுரைத்திருநகரி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுக்கு இசைத்தொண்டுபூண்ட பாணபத்திரரும், மீண்டு-அங்கு நின்றுந்திரும்பி, வெயில் விரிக்கும் பொன் நேர் மௌலி நிதிக்கிழவன் போல-சூரியனைப்போல ஒளிவிரிக்கும் பொலிவமைந்த முடியையுடைய குபேரன்போல, மதுரை நகர் புக்கான் - மதுரைத்திருநகரிற் சேர்ந்தார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பலகையிட்ட திருவிளையாடல்.



Koviloor Digital Library

தமதில்லிற்குவந்து மீளும் பெரியோர் பின் ஏழடித்தூரஞ்சென்று விடுத்தல் முறையாக இவர் ஆராஅன்பால் நகர்ப்புறங்காறும் பின்சென்றனர் என்பார் பின்னேழடியோ சேட்சென்று எனவும், அப்பெரியோர் விடுக்கவருதல் முறையாதலால் விடுத்து மீண்டாளுக எனவும், யாழ்மேற்போந்தாராதலால் பொன்னேர் மவுலி நிதிக்கிழவன்போல மதுரைநகர்புக்கான் எனவுங் கூறினர். பதினான்கடி பின்னே செல்லவேண்டும் எனல் "போம்பொழுதுபின்னே பதினான்கடிபோக - நாம்பெற்றேமென்றெண்ணிநன்று" எனவரும் சைவசமயநெறியிற்காண்க. "பண்புபெருகும்பெருமாளும் பாணனார்பத்திரனார்பின் - கண்கள்பொழிந்தகாதனீர் வழியக்கையாற்றொழுதணைய - நண்புசிறக்குமவர்நம்மை நகரின்புறத்துவிடைகொண்டு எனவும், அறைமும்மதத்துக்களிறுபரியுள்ளிட்டனவேண்டுவகொண்டோர் - பிறைவெண்கோட்டுக்களிற்றுமேல்கொண்டு போந்தார்பெரும்பாணர்" எனவும் ஷ்ஷ புராணத்தில் வருதல் காண்க. (௨௯)

வந்துமதுரைப்பெருமானை வணங்கிக்கொணர்ந்தநிதியெல்லா
மிந்துமருமானகருள்ளார்யாருமறியயாவர்க்கு
முந்தைவேதமுதல்வர்க்கும்புலவோர்தமக்குமுறைநல்கிச்
சந்தயாழினிசைப்பாணர்தருமமனையான்வைகினான்.

(இ-ள்.) வந்து மதுரைப்பெருமானை வணங்கி - அங்குவந்து மதுரைத்திருநகரிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை வணங்கி, கொணர்ந்த நிதி எல்லாம்-கொண்டுவந்த பொருள் யாவையும், இந்து மருமான் நகர் உள்ளார் யாரும் அறிய - சந்திரமரபில்வந்த வரகுணபாண்டியன் மதுரைத் திருநகரிலுள்ளவரெவரும் உணர, யாவர்க்கும் முந்தை வேத முதல்வர்க்கும் புலவோர் தமக்கும் முறை நல்கி-தம்பாற்கற்கு மாணாக்கரெவர்க்கும் முற்பட்டவேத நூலுணர்ந்த முதற்குலத்தினராகிய அந்தணர்களுக்கும் கற்றறிந்த வல்லவர்க்கு முறையேதந்து, சந்தம் யாழினிசைப் பாணர் தருமம் அனையான் - சந்தமமைந்த வீணையினிசையில்வல்ல பாணர்கள் செய்த புண்ணியத்தையொத்த பாணபத்திரர், வைகினான் - மகிழ்வோடு இருந்தனர்.

உலகினர் தாமடைந்த பொருளைப் பிறர்க்குதவியுய்யும்பொருட்டுத் தாம் கொடுத்துக் காட்டினர் என்பார் யாருமறிய முறைநல்கி என்றார். (௩0)

திருமுகங்கொடுத்தபடலம் - முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௨௧௩0.

நாற்பத்துமூன்றாவது

பலகையிட்டபடலம்.

கொச்சகக்கலிப்பா.

கருந்துழாய்முகிலொருபாற்கலந்தவர்பத்திரற்குநிதி
திருந்துதாருதியனிடைத்திருமுகமீந்தளித்ததிறம்
வருந்தியாழவனிசைப்பமறைதூங்குநள்ளிரவி
லிருந்துபாடெனப்பலகையிட்டதூஉமினிப்பகர்வாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) கருந்துழாய் முகில்-கரிய துழாய்மாலையையணிந்த மேகம்போலக் கருநிறம்வாய்ந்த திருமாலை, ஒருபால் கலந்தவர் - வலப்பாகத்திற்கொண்ட பெருமானார், பத்திரற்கு - பாணபத்திரர்க்கு, திருந்து தார் உதியன் இடைத் திருமுகம் ஈந்து நிதி அளித்தது இது - திருந்திய பனைமாலையை யணிந்த சேரமான் பெருமானாரிடத்துத் திருமுகங்கொடுப்பித்துத் திரவியங் கொடுத்தருளிய திருவிளையாடலிது, வருந்தி யாழவன் இசைப்ப - (மழையில்) வருத்தமுற்று வீணையில்வல்ல பாணபத்திரரிசைபாட, மழை தூங்கு நள் இரவில் - மழைபொழியும் நடுராத்திரியில், இருந்து பாடு என - இருந்து பாடாயென்று, பலகை இட்டதும் - பலகைதந்தருளிய திருவிளையாடலையும், இனி பகர்வாம் - இனி யெடுத்துக்கூறுவாம்.

சிவபெருமான் தாருகாவனமுனிவர்களுய்தற்பொருட்டுப் பன்னிரண்டு தேவவருடம் பலிபெற்றுலவியகாலையில், உமாதேவியாரைக் கவரவந்த பிரகலாதன் புத்திரனாகிய அந்தகாசுரனைப் புறங்கண்ட மகளிர் வடிவாய்க் காவற்றொழில் பூண்டு நின்ற திருமால் புணர்த்திய நூறசத்திகளும் சிவபிரானை வணங்கி வினவத் திருவாய்மலர்ந்தருளிய "உலகெலாமின்றுங்காவல்புரிந்துமீட்டொடுக்குகின்ற - அலகிலாவிச்சைக்கென்றுங்காரணமாகியொன்றாய் - இலகுபேரொளியாயென்றனிட்டமருங்கொளிருஞ்செல்வி - நிலவுநான்மறையுமேத்துநிகரில்சிற்சத்தியாமால், வலப்புறமதனின்மேயவண்டேண்படுக்குங்கூந்தல் - உலப்பருங்காலாதீதவுருவமாயொளியாயொன்றாய்க் - கலப்பிலவ்வியத்தந்தோன்றுங்காரணமாகியாளு - நலத்தகுகுணக்குன்றாகுநாரணனுருமன்றே" எனும் விடையைக் கூர்மபுராணம் அந்தகாசுரன் சாரூபம் அடைந்த அத்தியாயத்திற்காண்க. (க)

முன்புடையநாயகனைமுப்போதும்புகுந்திறைஞ்சி
யின்புறமேழிசைக்கிழவனிருநிதியமருளியபின்
அன்புசிறந்தராயிரவுமடைந்துபணிந்தடல்விடையின்
பின்புறநின்றேழிசையும்பாடிவரும்பேறடைவான்.

(இ-ள்.) முன்பு உடைய நாயகனை - முன்னாளில் தம்மை யாளாகவுடைய சோமசுந்தரக்கடவுளை, முப்போதும் புகுந்து இறைஞ்சி - காலைமுதலிய மூன்று காலத்திலும் சென்று வணங்கி, இன்பு உறும் ஏழிசைக் கிழவன் - மகிழ்ச்சிகூரும் பாணபத்திரர், இரு நிதியம் அருளிய பின் - (சேரமான்பெருமானால்) எல்லையில்லாதபொருளைத் தந்தருளியபின், அன்பு சிறந்து - தலையன்பிற்பட்டு, அரா இரவும் அடைந்து பணிந்து - நடுநிசியிலுஞ் சென்று வணங்கி, அடல் விடையின் பின் புறம் நின்று - வெற்றியையுடைய அதிகாரநந்தி நாயனார் பின்னேநின்று, ஏழிசையும் பாடி வரும் பேறு அடைவான் - குரல்முதலிய ஏழிசைகளையும் நாள்தோறும் பாடிவரும்பயனையடைவாராயினார்;

உணர்ந்தோர்பாலன்றி மற்றோர்பால் ஒருவன் கற்ற கல்வி பயன்படாதாதலால் வீணையிலிசைத்தலும் அந்நிலைமைத்திறத்தை யுணர்பவருமாகிய சிவபிரான் திருமுன்னர்ச்சென்று பாடுதலின் தாம் கற்ற கல்வித்திறத்தாலாய பயனை யடைந்தனர் என்பார் பாடிவரும் பேறடைவான் என்றார் "இன்னிசைவீணையிலிசைந்தோன் காண்க-அன்னதொன்றவ்வயினறிந்தோன்காண்க" எனவருந் திருவாசகத்தால் உணர்க. (உ)

தொழுந்தகையன்பருந்தேவர்தொகுதிகளுந்தொழத்திங்கட்
கொழுந்தலையநதியலையக்குளிக்கின்றதளிக்கடவுள்

Koviloor Digital Library

செழுந்தரளச்சிவிகையின்மேற்றேவிதிருப்பள்ளியறைக்
கெழுந்தருளும்போதுபணிந்தேத்துவானோரிரவில்.

(இ-ள்.) தொழும் தகை அன்பரும் - யாவரும் வணங்கும் பெருந்தகைமையையுடைய அடியார்களும்,தேவர் தொகுதிகளும் தொழ-வானவர்கூட்டங்களும் வணங்கவும், திங்கள் கொழுந்து அலைய-இளஞ்சந்திரன் ஒருபாலசையவும், நதி அலைய - கங்கை யொருபாலசையவும், குனிக்கின்ற தனிக்கடவுள் - வெள்ளியம்பலத்துள் திருநடனஞ்செய்தருளும் ஒப்பில்லாத பெருமானார், செழுந்தரளம் சிவிகையின் மேல் - பருத்த முத்துகளாலமைந்த சிவிகையின்மேல், தேவி திருப்பள்ளி அறைக்கு - உமாதேவியார் திருப்பள்ளியறைக்கு, எழுந்தருளும் போது - எழுந்தருளுங்காலையில், ஓர் இரவில் - ஒரு நடுநிசியில், பணிந்து ஏத்துவான் - வணங்கித்துதிக்க.

ஏத்துவான் வினையெச்சம். போகாங்கபூசனகாலமாதலால் ஓரிரவில் எனவும், ஏனைக்கால தரிசனங்களிலும் விசேடதரிசனமாதலால் பணிந்தேத்துவான் எனவுங்கூறினர். (௩)

இன்னிசையாழ்ப்பெரும்பாணனெவ்விடையூறடுத்தாலுந்
தன்னியமநெறியொழுக்கந்தவானென்பதுலகறியப்
பொன்னியலுஞ்சடைமௌலிப்புராணர்திருவிளையாட்டா
லன்னிலையிற்கருங்கொண்மூவார்த்தெழுந்ததிசையெல்லாம்.

(இ-ள்.) இன் இசை யாழ் பெரும் பாணன் - இனிய இசையமைந்த யாழில் வல்ல பாணபத்திரர், எ இடையூறு அடுத்தாலும் - எவ்வகைப்பட்ட இடையூறு வரினும், தன் நியமம் ஒழுக்கம் நெறி தவான் என்பது-தமது நடப்பாடாகிய வொழுக்கநெறியினின்றுஞ் சிறிதுந்தவறானென்பதை, உலகு அறிய-உலகினரறிய,பொன் இயலும் சடை மௌலி புராணர் திருவிளையாட்டால்- பொன்னையொத்த செவந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் திருவிளையாட்டினால், அல் நிலையில்-இராப்போதில், திசை எல்லாம்-எண்டிசைமுற்றிலும், கருங் கொண் மூ ஆர்த்து எழுந்த-சூற்கொண்டமேகங்கள் இடித்தெழுந்தன.

மெய்யன்பின் வழியொழுகுவோர் தமதுயிர்க்கிறுதிவரினும் அந்நிலையினின்றுந் தவறார் என்பது உலகினரறிந்துய்யத் திருவுளங்கொண்டார் என்பார் திருவிளையாட்டால் கொண்மூவார்த்தெழுந்த திசையெல்லாம் என்றார். (௪)

தடித்துநிரைபுடைபரப்பித்தடுமாறித்திசைமயங்கத்
துடித்துவிடவாயரவஞ்சோர்ந்துசுருண்டளையொதுங்க
விடித்துடுவின்கணம்புதைப்பவிருள்கான்றுசலபதிமுன்
முடித்திடுவான்வரவழைத்தமுகிலேழும்வளைந்ததென.

(இ-ள்.) தடித்து நிரை புடை பரப்பி - மின்வரிசைகளை யயலிற்பரப்பி, தடுமாறி திசைமயங்க-எண்டிசையிலுள்ளவர்கள் தலைதடுமாறிமயங்கவும், விடம் வாய் அரவம் - விடமமைந்த வாயையுடைய பாம்புகள், துடித்து சோர்ந்து சுருண்டு அளை ஒதுங்க - உடல்துடித்துச் சோர்ந்து சுருண்டு பிலங்களிற்புகவும், இடித்து-இடியிடித்து, உடுவின் கணம் புதைப்ப இருள் கான்று - நட்சத்திரக் கூட்டங்கள் புதைபட இருளைவீசி, சலபதி - வருணன், முன் முடித்திடுவான் - முன்பு மதுரையையழிக்க,

Koviloor Digital Library

வர அழைத்த எழு முகிலும் விளர்த்தது என - அனுப்பிய சத்தமேகங்களும் அம்மது ரையை வளைத்ததுபோல வளைந்து.

முடித்திடுவோன் வினையெச்சம். (௫)

கருங்கட்டிலவிசும்பெடுத்துக்கவிழ்ப்பதெனவெண்டாரை
நெருங்கிருளிளிருப்புக்கோனிரைத்ததெனநிறங்கருக
வொருங்குசொரிந்துள்ளுணராருள்ளம்போலுட்புறம்பு
மருங்கொடுகீழ்மேலென்றுந்தெரியாதமயங்கிருள்வாய்.

(இ-ள்.) கருங் கட்டில் விசும்பு எடுத்து கவிழ்ப்பது என்ன - கரியகட்டில் ஆகாயந் தலைகீழாகவெடுத்துக் கவிழ்ப்பது போலவும், நெருங்கு இருளின் - அள்ளிக் கொள்ள அமைந்த இருளில், இருப்புக்கோல் நிரைத்தது என்ன-நாராசங்களை யொருங்குபட வைத்ததுபோலவும், வெண் தாரை நிறம் கருக-வெள்ளிய மழைத்தாரைகள் நிறந்திரிந்துதோன்ற, ஒருங்கு சொரிந்து-ஒருசேர வருஷித்து, உள் உணரார் உள்ளம் போல்-தம்மை அறியாதவர் மனம் இருண்டிருத்தல்போல, உள் புறம்பு மருங்கு கீழ் மேல் என்றும் தெரியாத-உள்ளென்றும் புறமென்றும் அயலென்றும் கீழென்றும் மேலென்றும் பகுத்தறிதற்கரிய, மயங்கு இருள்வாய்-இருண்ட இருட்போதில்.

இருளோடுகூடிய கண் இருள்மயமாய் நிற்றல்போலப் பாசத்தோடு கூடிய ஆன்மா அப்பாசமயமாய் நிற்றலால் உள்ளுணரா ருள்ளம்போல் என்றார். ஒடு எண்ணிடைச்சொல். (௬)

மாமாரியிடைநனைந்துவருவானம்மாரிதனைப்
பூமாரியெனநினைந்துதிருக்கோயில்புகுந்தெய்திக்
காமாரிதனைப்பணிந்துகருணைமாரியினனைந்து
தேமாரிபொழிவதெனத்தெள்விளியாழ்வாசிப்பான்.

(இ-ள்.) மா மாரி இடை நனைந்து வருவான் - பெருந்தாரைகளாய் விழு மழையில் நனைந்துவரும் பாணபத்திரர், அமாரி தன்னை பூமாரி என்ன நினைந்து-அந்த மழையை மலர்மழைபோலக்கருதி, திருக் கோயில் புகுந்து எய்தி - திருக்கோயிலைச் சென்றடைந்து, காமாரி தன்னை பணிந்து - சோமசுந்தரக்கடவுளைவணங்கி, கருணை மாரியில் நனைந்து - அவர் திருவருள்மழையால் நனைந்து, தே மாரி பொழிவது என-தேன்மழைபொழிந்ததுபோல, தெள் விளி யாழ் வாசிப்பான் - தெள்ளிய இசையமைந்த வீணைவாசிக்கத்தொடங்கினார்.

திருவருண்ஞானமுடையோர்க்கு எவ்விடையூறுவரினும் அதுவும் அத்திருவருளேயெனக் கருதுவாராதலால், அம்மாரிதனைப் பூமாரியென நினைந்து எனவும், அத்திருவருளொன்றே பெரும்பேறெனக் கருதுவாராதலால் கருணைமாரியினனைந்து எனவுங்கூறினார். "பொன்னோன்புரந்தரன் மாலயன்வாழ்வுகுடிகெடினும் - நன்னோனினதடியாரோடல்லால் நரகம்புகினும் - என்னோன்திருவருளாலேயிருக்கப் பெறின்இறைவா" என்றும் ஈதவால் உணர்க. (௭)

விடைக்கடவுள்பின்னின்றுவிளையாடித்தோள்கிட்டிப்
புடைத்துநரம்பெறிந்தமிடற்றொலிபோக்கிப்பொலங்கொன்றைச்
சடைக்கடவுள்செவிவழிபோயருட்பைக்கூழ்தலையெடுப்பத்
தொடைத்தமிழினிசைப்பாணிச்சுவையமுதமடைதிறந்து.

(இ-ள்.) விடைக் கடவுள் பின் நின்று - அதிகார நந்திநாயனார் பின்னே நின்று, வீணை இடத்தோள் கிடத்தி-வீணையை யிடத்தோளிற் சேர்த்து, நரம்பு புடைத்து எறிந்து - வீணையினரம்பைத் தாக்கித் தடவி, மிடறு ஒலி போக்கி - சாரீரத் தொனியெழுப்பி, பொலம் கொன்றை சடை கடவுள் செவி வழி போய் - பொன்னிறம்வாய்ந்த கொன்றைமாலையையணிந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் திருச்செவியாகிய கால்வழிச்சென்று, அருள் பைங்கூழ் தலை எடுப்ப-திருவருளாகிய பயிரானது தலையெடுத்தோங்க, தமிழின் தொடை இசைப்பாணி - தமிழாற் றொடுத்த இசைப்பாடலாகிய, சுவை அமுதம் மடை திறந்து - சுவைகனிந்த அமுதமானது மடையுடைத்து.

சிவபெருமான் கீதப்பிரியராதலால் திருச்செவியைக் கால்வாயாகவும், திருவருளைப் பைங்கூழாகவும், இசைப்பாடலை யமுதவெள்ளமாகவும் உருவகஞ்செய்தமையால் அவை யியையுருவகவணி. "அன்னதொன்றவ்வயி னறிந்தோன்காண்க" என்னுந் திருவாசகத்தா லுணர்க. (அ)

நரம்புநனைந்திசைமழுங்கநனைந்துடலம்பனிப்பவிசை
வரம்பொழுகுவிரன்மிறைத்துவலிவாங்கமயிர்சிலிர்ப்ப
நிரம்பியசேறடிபுதைப்பநின்றுநிறையன்பிசையா
யரும்புதல்போலென்புருக்குமமுதவிசைபாடுமால்.

(இ-ள்.) நரம்பு நனைந்து இசை மழுங்க - நரம்பு மழையால் நனைந்து இசை குன்றவும், உடலம் நனைந்து பனிப்ப - தமது சரீரம் அம்மழையால் நனைந்து நடுங்கவும், இசை வரம்பு ஒழுகு விரல் மிறைத்து வலி வாங்க - குரல் முதலிய இசையினெல்லை கடவாது செல்லும் விரல்கள் விறைத்து வலிவாங்கவும், மயில் சிலிர்ப்ப-(குளிரால்) மயிர்கள் சிலிர்க்கவும், நிரம்பியசேறு அடி புதைப்ப-நிரம்பிய சேறு தமது காலைப் புதைக்கவும், நின்று (உடலம்) கம்பியாது நின்று, நிறை அன்பு இசையாய் அரும்புதல்போல்-நிறைந்த அன்பே இசை வடிவாய்ப் பொங்கி மேலெழுதல்போல, என்பு உருக்கும் அமுதம்இசை பாடும் - எலும்பினையு முருக்கும் அமுதம்போலச் சுவைகனிந்த இசைபாடுவாராயினர்.

எனைத் தசை முதலிய பொருள்களை யுருக்குவதுமன்றியென நிற்றலால் என்பு என்பத னிறுதியில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொக்கு நின்றது. பெருமழையால் தம் வசமழிந்து நிற்றலால் நிறையன்பிசையா யரும்புதல்போல் என்றார். (௯)

இடைமடக்காய் அறுசீரான்வந்த
ஒருபோகுகொச்சகம்.

மாதர்நகையாய்மதுரேசருண்பலிக்கெம்மனைவாய்வந்து
காதன்முகத்தரும்பிக்காட்டியென்சிந்தைகவர்ந்தார்போலும்
காதன்முகத்தரும்பக்கையறவுநிரக்கலப்பேன்பாதி
மேபதையுருவாயிருந்தார்நாணிவிழித்தாவிபிழைத்தேன்போலும்.

(இ-ள்.) மாதர் நகையாய் - அழகிய தந்தபந்திகளையுடைய தோழியே, மதுரேசர் - மதுரையி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், உண் பலிக்கு - உண்ணும் ஐயத்தின் பொருட்டு, எம்மனை வாய் வந்து - எமது இல்லில் வந்து, காதல் முகத்து அரும்பி காட்டி - புணர்ச்சிக் குறிப்பைத் தமது திருமுகத்தில் தோற்றுவித்து, என் சிந்தை கவர்ந்தார் போலும் - எனது மனத்தைக் கைக்கொண்டார்போலும்,

Koviloor Digital Library

காதல் முகத்து அரும்ப - அக்குறிப்பு என்முகத்திலுந் தோன்ற, கையறவு நீ கலப் பேன் - காமவாதை நீக் கலக்கத் தொடங்கினேன், பாதி பேதை உருவாய் இருந் தார் - தமது திருமேனியிற் பாதி பெண்வடிவாயிருந்தனர், நாணி விழித்து - (அத ஞல்) கலத்த லொழிந்து விழித்து, ஆவி பிழைத்தேன் - உயிர் படைத்தேன்.

களவு நிலையுரைத்தல் என்னுந் துறைப்பொருள்மேல் வைத்துத் தலைவி கூற் முகக் காமச்சுவை பயப்பக்கூறினும், அது-பதியே தலைவனும் பசுவே தலைவியும் திருவ ருளே யுயிர்த்தோழியுமாகக் கொண்டு கூறிய குறிப்பின்மேல் நின்று, உண்பலிக்கு என்றது சாதாரமாகிய திருமேனிகொண்டு சகலர்க் கருளுதற்பொருட்டு உடல் பொருள் ஆவி கோடன் மேலும், காதன்முகத்தரும்பி யென்றது அச்சகலர்க்கருளு ம்பாவனை நிட்டைமேலும், கலப்பேன் என்றது நின்மல சொப்பனத்தின்மேலும்; விழித்து என்றது நின்மல சாக்கிரத்தின்மேலும் நிற்றலால் பிறிதுறவற்பிரயணி. போலும் என்றும் இரண்டனுள் பின்னது ஒப்பில்போலி யிடைச்சொல். (௬௦)

ஒன்னுதலாய்வெண்டலைகொண்டுண்பலிக்குநம்மனையினூடேகூடற்
கன்னுதலாருள்ளாளக்காளமிசைத்தென்னுள்ளங்கவர்ந்தார்போலுங்
கன்னுதலார்பாடுமவிநயங்கண்டாகங்கலப்பேன்பாதி
பெண்ணுருவமாயிருந்தார்வெள்கிவிழித்தாவிபெற்றேன்போலும்.

(இ-ள்.) ஒன் நுதலாய் - ஒள்ளிய நெற்றியையுடைய தோழியே; வெள் தலை கொண்டு - பசைகழிந்த கபாலத்தையேந்தி, உண்பலிக்கு - உண்ணும்பலியின் பொருட்டு, நம் மனையின் ஊடே - நமது இல்லின்கண்ணே, கூடல் கன்னுதலார் - மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், உள்ளாளக்காளம் இசைத்து - தே வகாந்தருவம்பாடி, என் உள்ளம் கவர்ந்தார் போலும் - என் மனத்தைக் கொள்ளை கொண்டார்போலும், கன்னுதலார் பாடும் அவி நயம் கண்டு - அச்சோமசுந்தரக்க டவுள் பாடிய அவிநயத்தைப்பார்த்து, ஆகம் கலப்பேன் - அவரது திருமார்பிற் கலக்கத் தொடங்கினேன், பாதி பெண் உருவமாய் இருந்தார் - தமது திருமேனியி ற் பாதி பெண்வடிவமாயிருந்தனர், வெள்கி விழித்து - அதனுல் கலத்தலொழிந்து விழித்து, ஆவிபெற்றேன் - உயிர்பிழைத்தேன்.

உள்ளாளக்காளம் என்றது உபதேசநிட்டையின்மேல் நின்றது. இதுவும் அவ்வணி. (௬௧)

ஐயரியுன்கண்ணாய்திருவாலவாயுடையாரையங்கொள்வான்
மையனகைசெய்தென்வனமுலையின்மேற்செங்கைவைத்தார்போலு
மையனகைசெய்தென்வனமுலைமேற்கைவைப்பமாழ்கிச்சோர்வேன்
றையலிடங்கண்டெடுகெடுங்கிவிழித்தாவிதரித்தேன்போலும்.

(இ-ள்.) ஐயரி உண் கண்ணாய் - பஞ்சரேகை படர்ந்த கண்களையுடையவ ளே, திருவாலவாய் உடையார் ஐயம் கொள்வான் - திருவாலவாயென்னு மதுரைத் திருப்பதியையுடைய சோமசுந்தரக்கடவுள் பலியேற்கும்பொருட்டு, மையல் நகை செய்து - காமக்குறிப்புணர்த்தும் புன்னகையரும்பி, என் வனம்முலையின்மேல் செங் கை வைத்தார்போலும் - எனது சந்தனக்கோலத்தையுடைய தனத்தின்மேல் தமது செவந்த திருக்கரத்தைவைத்தனர்போலும், மையல் நகை செய்து - அப்புன்னகை யரும்பி, என்வனம்முலைமேல் கைவைப்பமாழ்கி சோர்வேன் - எனது சந்தனக்கோ லத்தையுடைய தனத்தின்மேற் கைவைக்க மயக்கிச்சோரும் யான், தையல் இடம்

Koviloor Digital Library

கண்டு நடுநடுங்கி விழித்து - உமாதேவியாரிடப்பாகத்தைக்கண்டு நடுக்குற்று விழித்து, ஆவி தரித்தேன் - உயிர் பிழைத்தேன்.

என் வனமுலையின்மேற் செங்கைவைத்தார் என்றது பரிசநிட்சையின்மேல் நின்றது. இதுவும் அவ்வணி. (௧௨)

மேற்படி வேறு.

பாடுவாரிருவர்க்கன்றுபரிசிலாக்கொடுத்தசங்கத்
தோடுவார்செவியிலூட்டுந்தொண்டுகண்டிதன்மேனின்று
பாடுவாயுனக்கேயிந்தப்பலகையென்றாழ்ந்தவன்பி
னாடுவார்விசும்பிற்கூறிநகைமணிப்பலகையிட்டார்.

(இ-ள்.) பாடுவார் இருவர்க்கு - பாடுந் தும்புரு நாரத ரிருவருக்கும், அன்று பரிசில் ஆக கொடுத்த - அக்காலையில் கொடையாகக் கொடுத்தருளிய, சங்கம் தோடு வார் செவியில் ஊட்டும் தொண்டு கண்டு - சங்கத்தோடணிந்த நீண்ட திருச்செவியிலூட்டும் இசைத்தொண்டை யுணர்ந்து, இதன்மேல் நின்று பாடுவாய் - இந்தப்பலகையின்மேல் நின்று பாடுவாய், உனக்கே இந்த பலகை என்று - உனக்கேயிந்தப் பலகை யுரியதென்று, ஆழ்ந்த அன்பின் நாடுவார் - மெய்யன்பினை நாடியருளும் பெருமானார், விசும்பில் கூறி நகை மணி பலகை இட்டார் - அசரீரி கூறிவிளங்கும் இரத்தினமழுத்திய பலகையொன்று கொடுத்தருளினார்.

சங்கத்தோட்டின் வடிவாகநின்று தும்புரு நாரத ரிருவரும் கீதம்பாடத் தமது திருச்செவிகளைக் காணியாகக்கொடுத்த பெருமானார் சேற்றிற்கால் புதைய நின்று பாணபத்திரர் கீதம்பாட இசைவரோ என்பார் நகைமணிப்பலகையிட்டார் என்றார் "தோடுடைய செவியன்" என ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தில் முதற்கண் விதந்தகுறிப்பும், நக்கீரதேவர் திருவெழுகூற்றிருக்கையில் "இரண்டுநின்குழையே யொன்றுநின்னேறே" என்று விதந்த குறிப்பும் அது. (௧௩)

இறையருளாணையஞ்சியிட்டபொற்பலகையேறி
நறைகெழுமதுரகீதம்பாடிநான்மறைகள்சூடு
மறைகழலகத்துட்கொண்டுபலகையுமங்கைகொண்டு
மறைவழியாழ்வல்லோன்றன்மனைவயிற்செல்லுமெல்லை.

(இ-ள்.) இறை அருள் ஆணை அஞ்சி - இறைவரருளிய ஆணையை யஞ்சி, இட்ட பொன் பலகை ஏறி - கொடுத்தருளிய பொன்னாலாகிய பலகையின்மேலேறி நறை கெழு மதுரகீதம் பாடி - தேனினிமைபோன்ற இனியகீதத்தைப்பாடி, நான் மறைகள் சூடும் அறை கழல் அகத்துள் கொண்டு - நான்கு வேதங்களுஞ் சூடிய ஒலிக்கும் வீரகண்டைகட்டிய திருவடியைத் தமது மனத்திற் பதித்து, பலகையும் அங்கை கொண்டு (கொடுத்தருளிய) அப்பலகையையுந் தமது கையிலேந்தி, மறை வழி யாழ் வல்லோன் - வேதத்தின் வழியாழ் வாசித்தலில் வல்ல பாணபத்திரர், தன்மனைவயின் செல்லும் எல்லை - தமது வீட்டிற்செல்லுங் காலையில்.

"நான் மறைப்பயனு மேழிசை" என்றமையால் மறைவழி யாழ்வல்லோன் எனவும், ஏறுதற்கு அஞ்சினராதலால் இறையருளாணை யஞ்சியிட்ட பொற்பலகையேறி எனவுங் கூறினார். (௧௪)

மின்றுமாமேகநீங்கிவிசும்புவாய்விளங்கித்தென்றன்
மன்றுமாமலையின்மேயமாதவன்குடித்தவைகற்

Koviloor Digital Library

பொன்றுமாமணியுமுத்தும்புலப்படக்கிடந்தவேலை
யென்னமின்விளங்கித்தோன்றவேகியில்புகுந்தானிப்பால்.

(இ-ள்.) தென்றல் மன்று மாமலையில் மேய - மந்தமாருதம் நிலைபெற்ற பெரிய பொதியமலையிற் பொருந்திய, மாதவன் குடித்த வைகல் - அகத்தியமுனிவர் பருகிய காலையில், பொன்றும் மாமணியும் முத்தும் புலப்பட கிடந்த வேலை என்ன - பொன்றும் பெரிய இரத்தினங்களும் முத்தங்களுங் கண்களுக்குப் புலப்பட இருந்த கடல்போல, மின்றும் மாமேகம் நீங்கி - மின்னல் வீசும் பெரிய மேகங்கள் நீங்குதலால், விசும்பு வாய் விளங்கி மீன் விளங்கி தோன்ற - ஆகாயத்தின்வாய் விளங்க நட்சத்திரங்கள் விளங்கித்தோன்ற, ஏகி இல் புகுந்தான் - (வழிதெரிந்து) சென்று தமது இல்லிற்சென்றார், இ பால் - இப்புறம்.

விசும்பு கடல்போலவும் நட்சத்திரங்கள் பொன்றும் இரத்தினங்களும் முத்தங்களும் போலவும் எனக்கூறியது பண்புவமை. விளங்கி செயவெனெச்சத்திரிபு.

பாயிருட்படலங்கீண்டுபரிதிகண்விழித்துச்செங்கை
யாயிரம்பரப்பிமுந்நீரலைகடனீந்துமெல்லை
மாயிருஞாலங்காக்கும்வரகுணனிரவுதங்க
ணாயகன்பாடற்கீந்தநல்லருட்பரிசில்கேட்டான்.

(இ-ள்.) பரிதி கண் விழித்து பாய் இருள் படலம் கீண்டு - சூரியன் கண்விழித்துப்பரவிய இருட்கூட்டத்தைக் கிழித்து, செங்கை ஆயிரம் பரப்பிமுந்நீர் அலைகடல் நீந்தும் எல்லை - சிவந்த ஆயிரங்கரங்களைப் பரப்பி மூன்று தொழிற்குணங்களையுடைய அலைக்குங் கீழைக்கடலை நீந்திச்செல்லுங் காலையில், மாயிரு ஞாலம் காக்கும் வரகுணன் - பெரிய நிலவுலகைக் காக்கும் வரகுணபாண்டியர், இரவு - நடுநிசியில், தங்கள் நாயகன் பாடற்கு ஈந்த - தங்கள் குலதெய்வமாகிய சோமசுந்தரக் கடவுள் பாணபத்திரர் பாடலுக்குக் கொடுத்தருளிய, நல் அருள் பரிசில் கேட்டான் - நல்ல அருட்கொடையைக் கேள்வியுற்றனர்.

உதயஞ் செய்தலும் இருளொழித்தலும் கிரணங்களை வீசுதலுங் கீழைக்கடல் கடத்தலுமாகிய சூரியன் செயல்களை விழித்து, கீண்டு, செங்கையாயிரம் பரப்பி முந்நீரலை கடனீந்தும் எனக் கூறியது குணவணி. (௧௬)

இன்னிசைக்கரசையிட்டபலகைமீதிருத்திமன்னர்
மன்னவனிவனேயெங்கண்மதுரைநாயகனென்றுன்னி
மின்னிவர்மணிப்பூணல்கிவிளைநிலமிகவுநல்கி
நன்னிதிவெறுப்பநல்கிவரிசையாநடத்திவந்தான்.

(இ-ள்.) இன் இசைக்கு அரசை - இனிய இசையில் வல்ல பாணபத்திரரை, இட்ட பலகை மீது இருத்தி - கொடுத்தருளிய அந்தப் பொற்பலகையின்மேல் எழுந்தருளச்செய்து, மன்னர் மன்னவன்-வரகுணபாண்டியர், இவனே எங்கள் மதுரை நாயகன் என்று உன்னி - இவரே யெங்கள் குலதெய்வமாகிய சோமசுந்தரக்கடவுளென்று கருதி, மின் இவர் மணி பூண் நல்கி - ஒளிபரந்த இரத்தினமழுத்திய ஆபரணங்களைக்கொடுத்து, விளை நிலம் மிகவும் நல்கி - விளைவு சுருங்காத கழனிகளையு மிகவுங்கொடுத்து, நல் நிதி வெறுப்ப நல்கி - இன்பம் விளைக்குந் தனங்களையும் ஆ

Koviloor Digital Library

Koviloor Digital Library

இசைவாதுவென்றதிருவிளையாடல்.



Koviloor Digital Library

சைகெடக் கொடுத்த, வரிசையா நடத்தி வந்தான் - என்றும் இவ்வாறே வரிசை யாகக்கொடுத்து நடத்திவந்தனர். (௬௭)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

இறையருள்வரிசைபெற்றபத்திரனுமேறுயர்த்தவனைநாற்போது
முறையினல்வழிபட்டொழுகுவானுகமுடிகெழுவரகுணவேந்து
மறைமுதலடிகள்வந்துவந்தனையால்வழுத்துவான்சில்பகல்கழிய
நிறைபெருஞ்சுடரோன்றிருவுருவடைந்துநெறியினாற்சிவபுரமடைந்தான்

(இ-ள்.) இறை அருள் வரிசை பெற்ற பத்திரனும் - வரகுணபாண்டியர் கொடுத்த வரிசைபெற்ற பாணபத்திரரும், ஏறு உயர்த்தவனை - இடபக்கொடியை யுயர்த்திய சோமசுந்தரக்கடவுளை, நாற் போதும் - நான்குகாலத்தும், முறையினால் வழிபட்டு ஒழுகுவானாக - ஆகமமுறைப்படி வழிபட்டு நடந்துவர, முடி கெழு வரகுண வேந்தும் - கிரீடஞ்சூடிய வரகுணபாண்டியரும், மறை முதல் அடிகள் வந்து வந்தனையால் வழுத்துவான் - வேதமுதல்வராகிய சோமசுந்தரக்கடவுளை வலம்வந்து வந்தனையோடு துதிப்பவர், சில் பகல் கழிய - சிலநாள் செல்ல, நிறை பெருஞ்சுடரோன் திரு உரு அடைந்து - சாரூபம் பெற்று, நெறியினால் சிவபுரம் அடைந்தான் - சிவபெருமானார் திருவருள் வழித்தாகச் சிவபுரத்தை யடைந்தனர்.

நாற்போதுகாலை, நண்பகல், மாலை, நடுநிசி. நிறைபெருஞ்சுடரோன் எங்கும் நிறைந்த பேரொளியா யுள்ளவர். (௬௮)

பலகையிட்டபடலம் - முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உ௧௬௮.

நாற்பத்துநான்காவது
இசைவாதுவென்றபடலம்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

கூடலம்பதியிலாடகமேருக்கொடியவிற்குரிசிலடியவனுக்குப்
பாடலின்பரிசிலாகியசெம்பொற்பலகையிட்டபடிபாடினமன்னான்
வீடரும்பொருவில்கற்புடையாளோர்விறலியைப்பரமனிறையருள்பற்றி
மாடகஞ்செறியும்யாழ்வழிபாடிவாதுவென்றவரலாறுமிசைப்பாம்.

(இ-ள்.) கூடல் அம்பதியில்-மதுரைத்திருநகரில், ஆடகம் மேரு கொடியவில் குரிசில்-பொன்மேருவாகிய வெற்றிக்கொடிகட்டிய வில்லையேந்திய சோமசுந்தரக்கடவுள், அடியவனுக்கு-பாணபத்திரருக்கு, பாடலின் பரிசில் ஆகிய - (அவர்பாடிய) பாடலுக்குப் பரிசிலாக, செம்பொன் பலகை இட்டபடி பாடினம்-செம்பொன்னாலாகிய பலகையைத் தந்தருளிய திருவிளையாடலைக் கூறினோம், அன்னான் வீடு அரும் பொருவில் கற்பு உடையாள் - அப்பத்திரருடைய அழியாத ஒப்பற்ற கற்பினையுடை

Koviloor Digital Library

ய மனைவியார், பரமன் நிறை அருள் பற்றி-சிவபிரான் திருவருளையோர் பற்றுக்கோடாகப் பற்றி, மாடகம் செறியும் யாழ் வழி பாடி - மாடக மமைந்த வீணையின்வழியே பாடி, ஓர் விறலியை - ஒருபாடினியை, வாது வென்ற வரலாறும் இசைப்பாம் - வாதில்வென்ற திருவிளையாடலையும் இனிக் கூறுவாம்.

மாடகம் நால்வகை விரலளவான பாலிகைவடிவாய் நரம்பை வலித்தல் மெலித்தல் செய்யும் கருவி. ஆகிய செய்யிய வென்றும் வினையெச்சம். (௧)

வரகுணன்கதியடைந்தபினம்பொன்மௌலிசூடியவிராசவிராசப்
புரவலன்புவிமடந்தையைவேட்டுப்புயந்தழீஇக்கொடுநயந்தருநாளிற்
பரவுமன்பதைபுரந்தொழுகந்தப்பஞ்சவற்குரியரஞ்சனவுண்கண்
மரபின்வந்தமடவார்பலரோளைமையல்செய்யுமடவார்பலர்மாதோ.

(இ-ள்.) வரகுணன் கதி அடைந்த பின் - வரகுணபாண்டியர் சிவகதியடைந்த பின்னர், அம்பொன் மௌலி சூடிய இராச இராசப்புரவலன் - அழகிய பொன்னாலாகிய கிரீடஞ்சூடிய இராசராச பாண்டியன், புவி மடந்தையை வேட்டு புயம் தழீஇ கொடு நயம் தரு நாளில்-பூதேவியை மணந்து புயத்தில் தழுவி (தன் கோற்கீழ்வாழுங் குடிகளுக்கு) இன்பந்தந்து வருங்காலையில், பரவும் மன்பதை புரந்து ஒழுகு அந்த பஞ்சவற்கு - பரவிய மக்கட்பரப்பைப் பாதுகாத்து மநுநூல்வழி நடக்கும் அந்தப்பாண்டியனுக்கு, உரியர் - உரியபெண்கள், மரபின் வந்த அஞ்சனம் உண் கண் மடவார் பலர் - தனது மரபில் வந்த மையெழுதிய கண்களையுடைய பெண்கள் பலர், ஏனை மையல் செய்யும் மடவார் பலர் - அவரொழிந்த மயக்கஞ்செய்யுங் காமக்கிழத்தியர் பலர். (௨)

அன்னபோகமடவாருளொருத்தியரசனுக்கமுதமாவியுமாகு
மின்னனாண்மதுரகீதமிசைக்கும்விஞ்சையின்றுறைவலாளவளுக்கும்
பன்னகாபரணனின்னிசைபாடும்பத்திரன்பொருவில்கற்புடையாட்கு
மன்றுகீதவினையாலிகன்மூளவழுதிகாதன்மடமாதுபொருளாய்.

(இ-ள்.) அன்னபோக மடவார் உள் ஒருத்தி-அந்தக் காமக்கிழத்தியருளொருத்தி, அரசனுக்கு அமுதம் ஆவியும் ஆகும் மின் அன்னாள் - இராசராசபாண்டியனுக்கு உணவு முயிருமாகிய மின்னலையொத்த பேரழகுவாய்ந்தவள், மதுரகீதம் இசைக்கும் விஞ்சையின் துறை வல்லாள் - இனிய கீதம்பாடும் கல்வியின் துறையில் வல்லவள், அவளுக்கும் - அக்காமக்கிழத்திக்கும், பன்னகாபரணன் இன் இசை பாடும் பத்திரன் பொருவு இல் கற்பு உடையாட்கும் - சர்ப்பாபரணத்தை யணிந்த சிவபிரான் சந்நிதியிலினிய இசைபாடும் பத்திரருடைய ஒப்பில்லாத கற்பினையுடைய மனைக்கிழத்திக்கும், மன்று கீதம் வினையால் இகல் மூள் - நிலைபெற்ற கீதத்தொழிலா லொருவர்க்கொருவர் பகையுண்டாக, வழுதி காதல் மடமாது பொருளாய் - அப்பாண்டியனுடைய காமக்கிழத்தி பிணங்கொண்டு. (௩)

பாடினிக்கெதிரோர்பாடினிதன்னைப்பாடவிட்டிவள்படைத்தசெருக்கை
யிடழிப்பலெனவெண்ணியெழிஇத்தன்னிறைமகற்கஃதிசைத்தலுமந்தத்
தோடிறப்பொருகயற்கணிருடான்சொன்னவாறெழுகுமன்னவர்மன்ன
ருடியத்தகையவிறலியையீழநாட்டினும்வரவழைத்துவிடுத்தான்.

(இ-ள்.) பாடினிக்கு எதிர் ஓர் பாடினி தன்னை பாடவிட்டு - பாணபத்திரருடைய மனைவிக்கு எதிரே யொரு பாடினியைப் பாடவிட்டு, இவள் படைத்த செருக்

கை ஈடு அழிப்பல் என எண்ணி எழீஇ - இப்பாணபத்திரன் மனைவி படைத்த கர்வத்தை யடியோடழிப்பேனென்று கருதி யெழுந்து, தன் இறைமகற்கு அஃது இசைத்தலும் - தனது தலைவனாகிய பாண்டியனுக்கு அதனைக்கூற, அந்த தோடு இறபொரு கயல் கண்ணினாள் தான் - (காமக்கிழத்தியருட்சிறந்த) தோடு புறங்காட்டப் போர்செய்யும் கயல்போன்ற கண்களையுடைய அந்தக்காமக்கிழத்தி, சொன்ன ஆறு ஒழுகுமன்னவர் மன்னவன்-சொன்னவண்ணம் (அவள் மேற்கொண்ட காதலால்) நடக்கும் அப்பாண்டியன், நாடி - ஆராய்ந்து, அ தகைய விறலியை-வெல்லும் அத்தகைமையையுடைய பாடினியை, ஈழநாட்டினும் வர அழைத்து விடுத்தான் - ஈழநாட்டினின்றும் வரவழைத்தனன். (௪)

பந்தயாழ்முதுகுதைவரவிட்டுப்பாடலாயமிருபக்கமும்மொய்ப்ப, வந்த
பாடினிமடந்தையுமன்னர் மன்னனைத்தொழுதொர்கின்னரமாதிற், சந்த
வேழிசைமிழற்றினணின்று டன்னைநோக்கியொருமின்னிடையாண்மேற்,
சிந்தைபோக்கிவருதீப்பழிநோக்காத்தென்னருக்கரசனின்னதுசெப்பும்..

(இ-ள்.) பந்தம் யாழ் முதுகுதை வரவிட்டு - கட்டமைந்த வீணைமுதுகைத் தடவத் தொங்கவிட்டு, பாடல் ஆயம் இருபக்கமும் மொய்ப்ப - பாடுந்தோழிகளிருபக்கலினுஞ் சூழ்ந்துவர, வந்த பாடினி மடந்தையும் - மரக்கலத்தினின்றும் வந்த பாடினியும், மன்னர் மன்னனை தொழுது - இராசராசபாண்டியனை வணங்கி, ஒர் கின்னரமாதில் - ஒரு கின்னரப்பெண்போல, சந்தம் ஏழிசை மிழற்றினள் நின்றாள் தன்னை நோக்கி - பண்ணுக அமைந்த ஏழிசைகளையும் பாடிநின்ற ஈழப்பாடினியை நோக்கி, ஒரு மின் இடையாள்மேல் சிந்தைபோக்கி - ஒரு காமக்கிழத்திமேல் தன் மனத்தைச்செலுத்தி, வரு தீ பழி நோக்காத-அதனால் வரும் கொடும்பழியை நோக்காத, தென்னருக்கு அரசன் இன்னது செப்பும்- பாண்டியர்க்குள் வீரம் வாய்ந்த அப்பாண்டியன் இது கூறுகின்றான். (௫)

பத்திரன்மனைவிதன்னையெம்முன்னர்ப்பாடுதற்கழையதற்கவளாற்றாது
த்தாஞ்சொலினும்யாமவள்சார்பாயுனைவிலக்கினும்விடாதுதொடர்ந்தே,
சித்தநாணமுறவஞ்சினமிட்டுச் செல்லனில்லென வளைந்துகொளென்னா,
வெய்த்தநுண்ணிடையினளையிருக்கைக்கேகிநாளைவருகென்றுவிடுத்தான்.

(இ-ள்.) பத்திரன் மனைவி தன்னை எம்முன்னர் பாடுதற்கு அழை - பாணபத்திரனுடைய மனைவியை யெமது முன்னே பாடுதற்கு அழையாய், அதற்கு அவள் ஆற்றாது உத்தரம் சொலினும் - அவள் (உன்னோடுபாட ஆற்றாமல்) போக்குச்சொன்னாலும், யாம் அவள் சார்பு ஆய் உன்னை விலக்கினும்-யாம் அவள் பக்கமாய் நின்று உன்னைத்தடுத்தாலும், விடாது தொடர்ந்து-நீ விடாமல் பின்றொடர்ந்து, சித்தம் நாணம் உற-அவள் மனத்தில் நாணமீளர, வஞ்சினம் இட்டு-சபதங்கூறி, செல்லல் - போகாதே, நில் என வளைந்து கொள் என்னா-நில்லென்று தடுப்பாயென்று, எய்த்த நுண் இடையினளை - இளைத்த நுண்ணிய இடையையுடைய ஈழப்பாடினியை, இருக்கைக்கு ஏகி நாளைவருக என்று விடுத்தான் - (இன்றுனக்குவிடுத்த) விடுதிக்குச்சென்று நாளைக்கு வரக்கடவாயென்று அனுப்பினான். (௬)

கலிநிலைத்துறை.

பின்னரின்னிசைப்பத்திரன்பெருந்தகைவிறலி
தன்னையங்கழைத்துளத்தொன்றுபுறத்தொன்றுசாற்று

Koviloor Digital Library

யென்றெடின்னிசைபாடுவாருளர்கொலோவிங்கென்
றன்னிவந்திருக்கின்றனளிசைவலாளொருத்தி.

(இ-ள்.) பின்னர் இன் இசைபத்திரன் பெருந்தகை விறலி தன்னை அங்கு அழைத்து - பின்பு இனிய இசைபாடுதலில்வல்ல பாணபத்திரருடைய கற்புவாய்ந்த மனைக்கிழத்தியைத் தன் சமுகத்திலழைத்து, உளத்து ஒன்று புறத்து ஒன்று சாற்றும்-அகத்தொன்றும் புறத்தொன்றுமாகக் கூறுகின்றான், இங்கு என்னொடு இன் இசை பாடுவார் உளரோ என்று - இச்சபையில் என்னோடிசைபாடுதலில் வல்லாருளரோவென்று, இசைவல்லாள் ஒருத்தி - இசைநூலில்வல்ல பெண்ணொருத்தி, உன்னி வந்திருக்கின்றனள் - கருதி யகங்கரித்து வந்திருக்கின்றாள்.

பத்திரர் மனைவியை வெல்லுதற்பொருட்டு ஈழநாட்டினின்றும் ஒருவல்ல பாடினியைத் தானழைப்பித்திருந்தும் ஒன்றும் உணரான்போல என்னொடின்னிசைபாடுவாருளர்கொலோ விங்கென்றுன்னி வந்திருக்கின்றனள் என்றலமையால் உளத்தொன்று புறத்தொன்று சாற்றும் என்றார். (எ)

ஆடமைத்தடந்தோளினாயவளொடுங்கூடப்
பாடவல்லையோபகரெனப்பாடினிபகர்வாள்
கோடருந்தகைக்கற்புமிக்கூடலெம்பெருமான்
வீடருங்கருணையுமெனக்கிருக்கையால்வேந்தே.

(இ-ள்.) ஆடு அமை தடம் தோளினாய் - அசையும் மூங்கிலையொத்த பெரிய தோளினையுடையாய், அவளொடும் கூட பாடவல்லையோ பகர் என - மரக்கலத்தில் வந்த பாடினியோடும் நீ கூடநின்று பாடவல்லாயோ கூறென்று வினவ, பாடினி பகர்வாள் - பாணபத்திரர் மனைவி கூறுகின்றார், வேந்தே-அரசனே, கோடு அருந்தகை கற்பும் - மாறுபடுதலில்லாத பெருந்தகைமையையுடைய கற்புநிலையும், இ கூடல் எம்பெருமான் வீடு அருங்கருணையும் - இந்த மதுரையிலெழுந்தருளிய வெமது சோமசுந்தரக்கடவுளின் அழிதலில்லாத திருவருளும், எனக்கு இருக்கையால் - எனக்குக் கைகூடியிருத்தலால்.

கொழுநன் வழிநிற்குங் கற்புடைமடவார்க்கு அக்கொழுநனையன்றி வேறு தெய்வமின்றாயினும் தங்கணவர் சொல்வழித் திருவாலவாயுடையார்க்கு அன்புபூண்டொழுகினர் என்பார் கோடருந்தகைக் கற்பும் என முன்னர் விதந்து கூறியும், அப் பெருங்கற்புபோல மெய்யன்பும் பெரிதுடைமையால் பெற்ற திருவருள் பெரிதென்பார் வீடருங்கருணையும் எனப் பின்னர் விதந்துங் கூறினார். (அ)

பாடிவெல்வதேயன்றிநான்பரிபவமுழந்து
வாடுவேனலேனென்றுரைவழங்கலுமதுக்கா
லேடுவார்குழலவளையுமிருக்கையுய்த்திருந்தா
னீடுவார்திரைப்பொருநையந்தண்டுறைநிருபன்.

(இ-ள்.) நான் பாடி வெல்வதே அன்றி - நான் பாடி வெற்றிகொள்ளுதலே யல்லாமல், பரிபவம் உழந்து வாடுவேன் அல்லேன் என்று உரைவழங்கலும்-(தோல்வியால்) துன்பமுற்று வாட்டமுறேனென்று கூற, அது கால் ஏடு வார் குழல் அவளையும் இருக்கை உய்த்து - தேன் சிந்து மலர்தழை யணிந்த நீண்ட கூந்தலையுடைய பாணபத்திரர் மனைவியையும் அவர் இல்லிற்குச்செலுத்தி, நீடு வார் திரை பொரு

Koviloor Digital Library

ணை அம் தண் துறை நிருபன் இருந்தான் - நீடிய பெரிய அலைகளையுடைய தாமிரபர்ணியின் அழகிய தண்ணிய துறையையுடைய பாண்டியனிருந்தனன்.

அவற்றின் மிகுதியால் வெல்வதே திண்ணம் என்பார் பாடி வெல்வதேயன்றி நான் பரிபவமுழந்து வாடுவேனலேன் என்றார், (௯)

மற்றைவைகலவ்விருவரைப்பஞ்சவன்மதுரைக்
கொற்றவன்றனதவையிடையழைத்துநேர்கூட்டிக்
கற்றவேழிசைகேட்குமுன்கலத்தினும்போந்த
வெற்றிவேன்மதர்நெடுங்கணாள்விறலியைவைதாள்.

(இ-ள்.) மற்றை வைகல் - பின்னாளில், அவ்விருவரை பஞ்சவன் மதுரைக் கொற்றவன் தனது அவை இடை அழைத்து, அந்த இரண்டு பாடினிகளையும் மதுரைக்கு அரசனாகிய பாண்டியன் தனது சபையில் வருவித்து, நேர்கூட்டி கற்ற ஏழிசை கேட்கு முன் - இருவரையுஞ் சந்திப்பித்து அவர்கள்கற்ற குரல் முதலிய ஏழிசைகளையுங்கேட்பதற்குமுன், கலத்தினும் போந்த- மரக்கலத்தினின்றும் வந்த, வெற்றி வேல் மதர் நெடுங்கண்ணாள் விறலியை வைதாள்-வெற்றிவாய்ந்த வேல்போன்ற மதர்த்த நெடிய கண்களையுடை பாடினி பாணபத்திரர் மனைவியை வைதனள். ()

குற்றமெத்தனையெத்தனை குணங்கள்யாழ்க்கோலுக்
குற்றதெய்வம்யாவிசைப்பதெவ்வுயிருடம்புயிர்மெய்
பெற்றவோசையெவ்வளவவைக்குத்தரம்பேசி
மற்றென்னோடுபாடில்லையேல்வசையுனக்கென்றாள்.

(இ-ள்.) யாழ்க் கோலுக்கு எத்தனை குற்றம் எத்தனை குணங்கள் - வீணைக்கு எவ்வளவு குற்றங்கள் எவ்வளவு குணங்கள், உற்ற தெய்வம் யா - பொருந்திய தெய்வங்கள் யாவை, இசைப்பது எவ்வுயிர் எவ்வுடம்பு எவ்வுயிர் மெய் - ஒலிப்பது எந்தவுயிரெழுத்து எந்தமெய்யெழுத்து எந்த வுயிர்மெய்யெழுத்து, பெற்ற ஓசை எவ்வளவு - (அவைகட்கு) அமைந்த ஒலி யெவ்வளவின, அவைக்கு உத்தரம் பேசி - அவைகட்கு விடைகூறி, மற்று என்னோடு பாடு - பின்பு என்னோடுபாடு, இல்லையேல் உனக்கு வசை என்றாள் - இல்லையாயின் உனக்குக் குற்றம் விளையும் என்றனள்.

குற்றம் ஆவன செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு இவை பிறத்தற்குரிய நீரிலே நின்றிளகியதும், மெல்கியதும், வெந்ததும், தக்கநிலத்திற் பிறவாததும், இடிவீழ்ந்ததும், நோயுற்றதுமான மரங்களாம். நோயாவன வெயிலுங் காற்று நீரு நிழலு மிகுதல். செம்பகையாவது பண்ணோடுவராத இன்பமில்லாத ஓசை. ஆர்ப்பாவது மாத்திரை கடந்தொலித்தல். கூடம்ஆவது இசைவழிப்படாது மழுங்குதல் அதிர்வு ஆவது இருமெனும் ஓசையின்றிச் சிதறியுரைக்கும் உச்சரிப்புடையது "இன்னிசை வழியதன்றி யிசைத்தல் செம்பகையதாகும் - சொன்னமாத்திரையினேங்க விசைத்திடுஞ் சுருதியார்ப்பே - மன்னியவிசைவாராது மழுங்குதல் கூடமாகும் - நன்றுதல் சிதறவுந்தலதிர்வென நாட்டினாரோ "நீரிலேநிற்றலழுகுதல் வேதனில மயங்கும் - பாரிலே நிற்றலிடிவிழ்தல் நோய்மரப்பாற் படல்" எனவரும் எதுக்காளாலுணர்க. குணங்கள் ஆவன கொன்றை, கருங்காலி, முருக்கு, குமிழ், தணக்கு அக்குற்றங்களொழிந்த மரங்களாம் "சொல்லிய கொன்றை கருங்காலி மென்முருக்கு - நல்லகுமிழுந்தணக்குடனே - மேல்லியலாய். உத்தமமான மரங்களிவையென்றார்

வித்தகயாழோர்வித" "இருநிலமடந்தை யிற்றதிரு விசும்பென்றுங் கைத்தாய் - திருநிலமின்றுப் பொன்றுன்முதின்முலை மாரித்திம்பால் - ஒருநலக் கவினியூட்டவு ண்டுகேய் நான்கு நிக்தி - அருநலக் கவினிவாள்வா யரிந்திதுவந்ததென்றுன்" என்ற தெக்கோருணர்க. தெய்வங்களாவன விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன். தெய்வம்பொருளா லுயர்திணையேனும் சொல்லாலஃறிணையாதலால் யா என்னும் அஃறிணைப் பன்மைப்பயனிலை தந்தார்.

இருமையும்பெறுகற்பிஞளியம்புவாள்கலத்தின்
வருமரும்பெறற்கல்வியும்வாதின்மேலூக்கப்
பெருமையும்பலர்விரும்புறுபெண்மையின்செருக்குந்
திருமகன்சவையறியவாய்திறக்கவேண்டாவோ.

(இ-ள்.) இருமையும் பெறு கற்பிஞள் இயம்புவாள் - இகத்தையும் பரத்தையும் பெறுதற்குரிய கற்பினையுடைய பத்திரர் மனைவியார் கூறுகின்றனர், கலத்தின் வரும் அரும் பெறல் கல்வியும் - மரக்கலத்தினின்று மிக்குவந்த பெறுதற்கரிய கல்வியையும், வாதின் மேல் ஊக்கப் பெருமையும் - வாதின்மேற் சென்ற ஊக்கத்தின் பெருமையையும், பலர் விரும்புறு பெண்மையின் செருக்கும் - பலரும் விரும்புமுறை பெண்ணலத்தின் செருக்கையும், திரு மகன் சவை அறிய வாய் திறக்க வேண்டாவோ - இப்பாண்டியன் சபையிலுள்ளோர் அறிய வாய்திறக்க வேண்டாமா.

இம்மையிற் புகழையு மறுமையிற் பதமுத்தியையும் பெறுதற்குரிய சாதனம் கற்பாதலால் இருமையும்பெறு கற்பிஞள் எனவும், மரக்கலத்தின்மேல் வந்தது ஈழப்பாடினிதெற்ற கல்வியால் ஆதலால் உடைமைமேலேற்றி அரும்பெறற் கல்வியும் எனவும், அதனுலெழுந்த செருக்கு ஆதலால் வாதின்மேனூக்கப் பெருமையும் எனவும், பலரும்விரும்பும் பொதுமகளாதலால் பெண்மைச் செருக்கும் எனவும், இவற்ருல் பொருள்வரவேண்டுதலால் திருமகன் சவையறியவாய் திறக்கவேண்டாவோ எனவுங் கூறிஞர். (௧௨)

நெய்யுண்பூக்குழன்மடவாளின்னெடும்வாது
செய்யும்பூசலுக்கெதிரலாற்றியவாய்திறந்து
வையும்பூசலுக்கெதிரலேன்மானம்விற்றுன்போ
லுய்யும்பாவையரேயதற்கெதிரெனவுரைத்தாள்.

(இ-ள்.) நெய் உண் பூக்குழல் மடவாரல் - நெய்பூசிய மலரையணிந்த கூந்தலையுடைய ஈழப்பாடினியே, நின்னெடும் வாது செய்யும் பூசலுக்கு எதிர் அல்லால் - உன்னுடைய இசைவாது செய்யும் போருக்கு நான் எதிரேயல்லாமல், தீயவாய் திறந்து வையும் பூசலுக்கு எதிர் அல்லேன் - கொடிய வாயைத்திறந்து கொடுஞ்சொற்களைப் பேசும்போருக்கு நான் எதிரல்லேன், மானம் விற்று உன்போல் உய்யும் பாவையரே அதற்கு எதிர் என - மானத்தைவிற்று உன்னைப்போல உயிர்பிழைக்கும் விலைமாதர்களே யக்கொடுஞ்சொற்களுக்கு எதிராவார்களென்று, உரைத்தாள் - கூறிஞர். (௧௩)

வென்றிமீனவன்வியக்குவான்போலெதிர்வியக்கித்
தன்றுதார்க்குழன்மடந்தைமீர்பாடுமின்ருேற்ருேர்
வென்றமாதரார்க்கடிமையாய்விடுவதேசபத
மென்றுமானமுண்டாக்கலுமீழநாட்டரிவை.

Koviloor Digital Library

(இ-ள்.) வென்றி மீனவன் - வெற்றியையுடைய பாண்டியன், விலக்குவான் போல் எதிர் விலக்கி - விலக்குவானைப்போல எதிரேகின் திருவரையும் விலக்கி, துன்று தார் குழல் மடந்தை மீர் பாடு மின் - நெருங்கிய மாலையையணிந்த கூந்தலையுடையபெண்காள் பாடுங்கள், தோற்றோர் வென்ற மாதரார்க்கு அடிமையாய் விடுவதே சபதம் என்று - தோல்வியுற்றபெண்கள் வென்ற பெண்களுக்கு அடிமையாய் விடுதலே யுங்களுக்குள் சபதமென்று, மானம் உண்டாக்கலும் - இருவருக்கு மானத்தை மூட்டலும், ஈழ நாடு அரிவை - ஈழநாட்டினின்றும் வந்த பாடினி. (௪௪)

முந்தியாழிடந்தழீஇக்குரல்வழிமுகிழ்விரல்போ
யுந்தவேபெருமிதநகையுட்கிடந்தரும்பச்
சந்தவேழிசையிறைமகன்றாழ்செவிக்கன்பு
வந்தகாதலாண்மழலையினமுதெனவார்த்தாள்.

(இ-ள்.) முந்தி - தான் முற்பட்டு, யாழ் இடம் தழுவி - வீணையை யிடத்தோளில் தழுவி, குரல்வழி - குரல் என்னும் நரம்பின்வழியே, முகிழ் விரல் போய் உந்த - முகிழ்த்த விரல்சென்று தாக்கவும், பெருமிதம் நகை உள் கிடந்து அரும்ப - பெருமிதப் புன்னகையானது உள்ளிருந்து முகிழ்ப்பவும், சந்தம் ஏழிசை-பண்ணுக வமைந்த ஏழிசைகளையும், இறை மகன் தாழ் செவிக்கு-இராசராசபாண்டியனுடைய வார்ந்து தாழ்ந்தகாதில், அன்பு வந்த காதலாள் - அவனன்பு கைவந்த காமக்கிழத்தியின், மழலை இன் அமுது என வார்த்தாள் - மழலைச் சொல்லாகிய இனிய அமுதம்போல வார்த்தனள்.

அரசன் தன்பால் நன்குமதிப்புடைமையால் முந்தியெனவும், பெருமிதநகையுட் கிடந்தரும்ப எனவும், காமக்கிழத்தியர் பலருள்ளும் இசைநூலில்வல்ல காமக்கிழத்திசொல்லே பாண்டியனுக்கு ஏறுதலால் அன்புவந்த காதலாள் மழலையின்னமுதெனவுங் கூறினார். (௪௫)

வீணைவாங்கினண்மாடகமுறுக்கினள்விசித்து
வாணரம்பெறிந்திருசெவிமடுத்தனரியக்கர்
நாணமெல்விரனடைவழிநாவிளையமுதம்
பாணர்கோமகன்விறலியும்பலர்செவிநிறைத்தாள்.

(இ-ள்.) வீணை வாங்கினள் மாடகம் முறுக்கினள் - வீணையை யெடுத்து மாடகத்தை முறுக்கி, விசித்து வாள் நரம்பு எறிந்து - கட்டமைத்து ஒள்ளிய நரம்புகளைத் தடவி, இரு செவி மடுத்தனர் இயக்கர் நாண - தமது இரண்டு காதாலுமடுத்து யக்ஷர்களும் நாண மீதூர, மெல் விரல் நடை வழி - மெல்லிய விரல்கள் அந்நரம்புகளில் நடத்தலின் வழியே, நாவிளை அமுதம் - தமது நாவால் விளைக்கும் இசையமுதத்தை, பாணர் கோமகன் விறலியும் - பாணர்தலைவராகிய பத்திரர் மனைவியாரும், பலர் செவி நிறைத்தாள் - பலர்செவிக்கும் ஊட்டினார்.

அரசனை யொருபொருளாகக் கருதிலர் என்பார் பலர் செவிநிறைத்தாள் என்றார். வாங்கினன் முறுக்கினள் மடுத்தனர் முற்றெச்சங்கள். இயக்கர் என்பதனிறுதியில் எச்சவும்மை தொகுத்தல். (௪௬)

அரசனுட்கிடையறிந்திலரவைக்களத்துள்ளார்
விரைசெய்வார்குழற்பாடினிபாடலைவியந்தார்
புரைசைமானிரைப்புரியனிலங்கையிற்போந்த
வரைசெய்குங்குமக்கொங்கையாள்பாடலைமகிழ்ந்தான்.

(இ-ள்.) அவைக் களத்துள்ளார் அரசன் உட்கிடை அறிந்திலர் - சபையிலுள்ளவர்கள் அரசனுள்ளக் கருத்தை யறியாதவராய், வினை செய் வார் குழல் பாடினி பாடலை வியந்தார் - வாசங்க மழுத்தெட்ட கூந்தலையுடையபாணபத்திரர் மனைவியின் பாடலை மெச்சினார்கள், புனைவசை மான் நிரை பூழியன்-கழுத்திற் கயிறுபூண்ட யானைக்கூட்டங்களையுடைய பாண்டியன், இலங்கையில் போந்த வனை செய் குங்குமம் கொங்கை யாள் பாடலை மகிழ்ந்தான் - இலங்கையினின்றும் வந்த மலையயொத்த குங்குமக்குழம் பணிந்த தனத்தையுடைய ஈழப்பாடினியின் பாடலை மெச்சினான்.

புரவை புனைவசை இடைநிலைப்போலியாய் நின்றது. (௬௭)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தென்னவனுட்கோளெல்லைதெரிந்தனரவையத்துள்ளா
ரன்னவன்புகழ்ந்தவாறேபுகழ்ந்தனரவளைத்தானே
முன்னவனருளைப்பெற்றுமும்மையுந்துறந்தோரோனு
மன்னவன்சொன்னவாறேசொல்வதுவழக்காறன்றோ.

(இ-ள்.) அவையத்து உள்ளார் - சவைக்களத்திலுள்ளவர், தென்னவன் உள் கோள் எல்லை தெரிந்தனர் - பாண்டியனுடைய உள்ளக் கருத்தையுணர்ந்து, அவளைத் தானே - அந்த ஈழப்பாடினியையே, அன்னவன் புகழ்ந்த ஆறே புகழ்ந்தனர் - பாண்டியன் புகழ்ந்த வண்ணமே புகழ்ந்தார்கள், முன்னவன் அருளை பெற்று - சிவபெருமான் திருவருளைப் பெற்று, மும்மையும் துறந்தாரோனும் - ஈடணாத்திரயங்களையுங் கைவிட்டவராயினும், மன்னவன் சொன்ன ஆறே சொல்வது வழக்கு ஆறு அன்றோ - அரசன் சொல்லியவழியே சொல்லுதல் வழக்கல்லவா.

ஈடணாத்திரயங்கள் மண், பெண், பொன். உம்மை அரசன்கோற் கீழ்வாழுங் குடிகளுமன்றி யென நிற்றலால் இறந்தது தழீஇய எச்சப்பொருட்டு, முன்னர்க் கூறிய தலைவற்புறத்தற்கு நீர்சென்ற வழிப்புனை செல்லுதல். வழக்காதல்போல அரசன் சொன்னவழிக் குடிகளும் செல்லுதல் வழக்காதலால் மன்னவன் சொன்னவாறே சொல்லுதல் வழக்காறன்றோ எனக் கூறியது வேற்றுப்பொருள் வைப்பணி. (௬௮)

பொன்றவிரளைபாண்மையற்புதுமதநுகர்ந்துநிறு
நன்றறியாதகன்னிநாடவனவையைநோக்கி
யின்றொருநாளிற்றேரத்தக்கதோவிதுவென்றந்த
வென்றடுவேற்கணாளைப்போமெனவிடுத்தான்மன்னோ.

(இ-ள்.) பொன் தவிர் அளை யாள் மையல் புது மது நுகர்ந்து - பொன் தவிர்த்தலொத்த மேனியையுடைய காமக்கிழத்தி தருங் காமமாகிய புத்தம் புதிய தேறலைப்பருகி, நன்று நிறு அறியாத கன்னி நாடவன் அவையை நோக்கி - நன்மை நிலைமையைப் பகுத்தறியாத பாண்டியன் சபையிலுள்ளோரைப்பார்த்து, இது இன்று ஒருநாளில் தேரத்தக்கதோ என்று - இவ்வினைத்திறத்தை யிப்போதே யொருநாளில் ஆராய்ந்தறியக்கூடியதோ வென்றுகூறி, அந்த வென்று அடுவேல் கண்ணாளை போம் என விடுத்தான் - அந்த இரண்டுபாடினிகளையும் போகக்கடவீரென விடை கொடுத்தான்.

Koviloor Digital Library

வென்று அடுவேல்கண்ணார் பகைவரை வெற்றிகொள்ளும் வேல்போன்ற கண்களையுடையவர். விடுத்தல் விடையாதலால் விடுத்தான் என்றார்-காமமுங் கள்ளுங் கொண்டோரும் பருகினோரும் ஒருசேர அறிவிழந்து குணக் குற்றங்களைப் பகுத்தறிதலின்மை ஒருதலையாதலால் மையற்புறுமது எனவுருவகஞ் செய்தார். (௧௯)

மருவியவாயமேத்தவிருந்தினாண்மனைவந்தெய்திப்
புரவலன்றனதுபாட்டைப்புகழ்ந்ததேபுகழ்ந்ததாகப்
பெருமிதந்தலைக்கொண்டாறாப்பெருங்களிப்படைந்துமஞ்சத்
திருமலரணைமேலார்வந்திளைத்தினிதிருந்தாளிப்பால்.

(இ-ள்.) மருவிய ஆயம் ஏத்த - தன்னைச் சூழ்ந்த பெண்கள் கூட்டம் வாழ்த்த, விருந்தினாள் மனை வந்து எய்தி - ஈழத்தினின்றும் வந்த புதிய பாடினிதன்விடுதியில் வந்தடைந்து, புரவலன் தனது பாட்டை புகழ்ந்ததே புகழ்ந்ததாக - பாண்டியன் தனது பாடலைப் புகழ்ந்ததே புகழ்ச்சியாகக்கொண்டு, பெருமிதம் தலைக் கொண்டு ஆறா பெருங் களிப்பு அடைந்து-இறுமாப்புமேற்கொண்டு நீங்காதபெருஞ் செருக்கடைந்து, மஞ்சம் திருமலர் அணை மேல் - மஞ்சத்திற் பரப்பிய அழகிய புஷ்பசயனத்தின்மேல், ஆர்வம் திளைத்து இனிது இருந்தாள் - மகிழ்ச்சியிடையறாதோங்கக் குறைவின்றிருந்தாள்.

பின்னிகழுந் தெய்வச்செயலை முன்னரறியாத இகழ்ச்சி தோன்றப் புரவலன் றனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்ததாகப் பெருமிதந் தலைக்கொண்டு என்றார். (௨௦)

வணங்குறுமருங்கிற்கற்பின்மடவரன்மதங்கிதானு
மணங்கிறைகொண்டநெஞ்சளங்கயற்கண்ணிபாகக்
குணங்குறிகடந்தசோதிகுரைகழலடிக்கீழெய்தி
யுணங்கினள்கலுழ்கண்ணீரளொதுங்கிநின்றிதனைச்சொன்னாள்.

(இ-ள்.) வணங்குறு மருங்கின் கற்பின் மடவரல் மதங்கி தானும் - வளையுமிடையையும் கற்பினையுமுடைய பத்திரர் மனைவியரும், அணங்கு இறை கொண்ட நெஞ்சள் - துன்பங் குடிகொண்ட மனமுடையவராய், அங்கயற் கண்ணி பாகம் - அங்கயற்கண்ணியாரை இடப்பாலுடையவராய், குணம் குறி கடந்த சோதி-குணங் குறிகளைக்கடந்த பேரொளியாகிய சோமசுந்தரக்கடவுளுடைய, குரை கழல் அடிக்கீழ் எய்தி உணங்கினள் கலுழ் கண்ணீரள் - ஒலிக்கும் வீரகண்டை புனைந்த திருவடிக்கீழடைந்து புலர்ந்துசிந்தும் கண்ணீருடையவராகி, ஒதுங்கி நின்று இதனை சொன்னாள் - ஒருபாலொதுங்கி நின்று இதனைக் கூறுகின்றார்.

பிரமன் முதலிய பசுக்களுய்தற்பொருட்டுச் சகளமூர்த்தியாய் அங்கயற்கண்ணியாரை யிடப்பாலிலுடையராயினும் தமக்கோர் விகாரமின்மையின் நிட்களசொருபியே யென்பார் அங்கயற்கண்ணிபாகக் குணக் குறிகடந்த சோதியென்றார்.

தென்னவனாகிவையஞ்செய்யகோல்செலுத்திக்காத்த
மன்னவன்வழுதிவாரவழிவழக்குரைப்பதானா
னன்னவன்கருத்துக்கேற்பவவையருமனையரானார்
பின்னடுநிலைமைதூக்கிப்பேசுவார்யாவரையா.

Koviloor Digital Library

(இ-ள்.) தென்னவன் ஆதி - பாண்டியர் மரபிற்றோன்றி, வையம் செய்ய கோல் செலுத்தி காத்த மன்னவன் வழுதி - உலகினைச் செங்கோல் செலுத்திக் காக்கும் அரசனாகிய பாண்டியன், வாரம் அழி வழக்கு உரைப்பது ஆனால் - நடுநிலைமையைக் கைவிட்டு அழிவழக்கைப் பேசுவதானால், அன்னவன் கருத்திற்கு ஏற்ப - அப்பாண்டியனுட்கிடைக்கியைய, அவையரும் அனையர் ஆனார் - சபையிலுள்ள பெரியோரும் அத்தன்மையராயினார், ஐயா பின் நடு நிலைமை தூக்கி பேசுவார் யாவர் - ஐயனே பின்பு நடுநிலைமையினின்று சீர்தூக்கிப் பேசுமாக்கள் யாருளர்,

பாண்டியர் மரபிற்றோன்றினோர் யாரும் நடுநிலைமையையுடையவர்களே யென்பார் தென்னவனாதி யெனவும், அதற்கியையக் குடிகளை யோம்புதலால் செங்கோலுடையவன் என்பார் செய்ய கோல் செலுத்திக்காத்த மன்னவன் வழுதியெனவும், அக்குடிகளுள் என்னிடத்துமட்டுங் கொடுங்கோலன் என்பார் வாரவழி வழக்குரைப்பதானால் எனவும், அரசன் சென்ற வழிக்குடிகளுஞ் செல்லுதல் வழக்கு என்பார் அவையருமனையரானார் எனவும், அரசன்மேற் றெய்வம் உளது ஆதலால் தேவரீரன்றிப் பேசுவாரிலர் என்பார் பின்னடு நிலைமைதூக்கிப் பேசுவார் யாவரையா எனவுங் கூறினார். (௨௨)

உன்னருட்டுணைசெய்தென்பாலுறுகணோய்துடைப்பதென்ன
மின்னனாய்நீயேநாளைவெல்லுமாசெய்துமஞ்சே
லென்னவாகாயவாணியீறிலானருளாற்கேட்டு
மன்னருங்கற்பினாடன்மனைபுகுந்திருந்தாண்மன்னோ.

(இ-ள்.) உன் அருள் துணை செய்து - உனது திருவருட்டுணை செய்து, என்பால் உறு கண் நோய் துடைப்பது என்ன - என்னிடத்துள்ள துன்பநோயை யொழிக்கக்கடவாயென்றிரக்க, மின் அன்னாய் நீயே நாளை வெல்லும் ஆறு செய்தும் - மின்னலைப்போன்றவளே நீயே நாளைக்கு வெல்லும் வண்ணஞ் செய்வோம், அஞ்சேல் என்ன - சிறிதும் அஞ்சாதே என்று, ஆகாயவாணி ஈறிலான் அருளால் கேட்டு - (எழுந்த) அசரீரியைச் சோமசுந்தரக்கடவுளின் திருவருளாற்கேட்டு, மன் அருங்கற்பினாள் தன் மனை புகுந்து இருந்தாள் - நிலைபெற்ற அரிய கற்பினையுடைய பத்திரர் மனைவியார் தமது இல்லிற்சென்றிருந்தனர்.

அடியவர்க்கிடையூறுவரின் அவ்விடையூற்றையன்றே யொழிக்குங் கருணாநிதியாதலால் மின்னனாய் நீயே நாளை வெல்லுமா செய்துமஞ்சேல் - என்னவாகாய வாணியீறிலானருளாற்கேட்டு என்றார். "காதலர்க்கெய்ப்பினில் வைப்புவாழ்க" என்றுந் திருவாசகத்தால் உணர்க. துடைப்பது துவ்விகுதியிற்று வியங்கோள்வினை முற்று. "சொன்னப்படாது மறப்பதறிவிலன்கூற்றுக்களே" எனவரும் ஏதுவால் உணர்க. (௨௩)

அன்றுபோன்மற்றைஞான்றுமழைத்தனன்பாடல்கேட்டுக்
குன்றுபோற்புயத்தானென்னற்கூறியவாறேகூற
மன்றுளார்பலருமன்னவண்ணமேசொன்னார்கேட்டு
நின்றபாண்மடந்தைபாண்டிநிருபனைநோக்கிச்சொல்வாள்.

(இ-ள்.) அன்று போல் மற்றை ஞான்றும் அழைத்தனன் - சென்ற நாள் போல் மறுநாளிலும் அவ்விரண்டு பாடினிமாரையு மழைப்பித்து, பாடல் கேட்டு - அவர்கள் பாடும் பாடலைக்கேட்டு, குன்று போல் புயத்தான் என்னல் கூறிய ஆறே

. Koviloor Digital Library

கூற - மலைபோல உயர்ந்த புயத்தையுடைய பாண்டியன் நேற்றுங் கூறியதுபோல வே யின்றுங்கூற, மன்று உள்ளார் பலரும் அன்ன வண்ணமே சொன்னார் - சபையிலுள்ள பெரியோர் பலரும் அரசன் கூறிய அவ்வண்ணமே கூறினார்கள், கேட்டு - அதனைக்கேட்டு, நின்ற பாண் மடந்தை - அங்கு நின்ற பத்திரர் மனைவியார், பாண்டி நிருபனை நோக்கி சொல்வாள் - பாண்டிநாட்டரசனைப்பார்த்துக் கூறுகின்றார். சொல்வான் எதிர்காலத்தில் வந்த நிகழ்காலம். (௨௪)

தென்னரேறனையாய்ஞாலமறுவழிச்செங்கோலோச்சு
மன்னரேறனையாய்வாரவழக்கினையாதலானீ
சொன்னவாறவையுஞ்சொல்லத்துணிந்தது துலைநாவன்ன
பன்னகாபரணர்முன்போய்ப்பாடுகேம்பாடுமெல்லை.

(இ-ள்.) தென்னர் ஏறு அனையாய் - பாண்டியர்களுள் ஆண்சிங்கத்தையொத்தவனே, ஞாலம் மறுவழி செங்கோல் ஓச்சும் மன்னர் ஏறு அனையாய் - உலகில் மறுநூல்வழிச் செங்கோல் நடாத்தும் அரசர்களுள் ஆண்சிங்கம் போன்றவனே, வாரவழக்கினை ஆதலால் - நடுநிலைமையிகந்த வழக்கினையுடையாயாதலால், நீ சொன்ன ஆறு அவையும் சொல்ல துணிந்தது - நீ சொன்னபடி சபையுஞ் சொல்லத்துணிந்தது, துலை நா அன்ன பன்னக ஆபரணர் முன் போய் பாடுகேம் - துலையின் முள்ளையொத்த சர்ப்பாபரணத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் சந்நிதியிற்சென்று நாங்களிருவரும் பாடுகின்றோம், பாடும் எல்லை - பாடுங்காலையில்.

ஒருபாற்கோடாது துலைநாப்போல நடுநின்று குணங் குற்றங்களைச் சீர்தூக்கியுணரும் நீ என்பாற் கோடிநின்றனையென்பார் நீ வாரவழக்கினையாதலால் எனவும், நீ கோடினும் யாவருக்கும் இறைவராகிய சோமசுந்தரக்கடவுள் திருமுன் ஆன்மாக்களிடத்துத் துலைநாப்போல ஒருதன்மையதாய் என்றுங் கோடாதுநிற்பது ஆதலால் அதுவே குணங் குற்றங்களை யளந்தறிதற்பாலது என்பார் துலைநாவன்ன பன்னகாபரணர்முன் போய்ப்பாடுகேம் எனவுங் கூறினார். (௨௫)

இருவரோம்பாட்டுங்கேட்டுத்துணிந்திவள்வென்றாளென்று
வொருவர்சந்நிதியிற்சொன்னாற்போதுமென்றுரைத்தாள்பாண்டித்
திருமகனனையவாறேசெய்மினீர்செய்மினென்ன
மருவளர்குழலினார்தமனைபுகுந்திருந்தார்பின்னாள்.

(இ-ள்.) இருவரோம் பாட்டும் கேட்டு - எங்களிருவருடைய பாட்டையுங் கேட்டு, ஒருவர் துணிந்து - ஒருவர் மனந்துணிந்து, இவள் வென்றாள் என்று சந்நிதியில் சொன்னால் போதும் என்று உரைத்தாள் - இருவருள் இவள்தான் வென்றாளென்று (சோமசுந்தரக்கடவுள்) சந்நிதியிற்சொன்னால் அமையுமென்று கூறினார்; பாண்டி திருமகன் அனைய ஆறே நீர் செய்மின் செய்மின் என்ன - பாண்டிநாட்டரசனாகிய இராசராசபாண்டியன் அப்படியே நீங்கள் செய்யுங்களென்றுகூற, மருவளர் குழலினார் தம்மனை புகுந்து இருந்தார் - வாசமிக்க கூந்தலையுடைய பாடினிமாரிருவரும் தமது இல்லிற்சென்றிருந்தார்கள், பின்னாள் - மறுநாளில்.

சந்நிதியில் முன்போலக் குணங்குற்றங்களை நோக்காது துணிந்து இவள் வென்றனளென்று கூறல் யாவர்க்கும் அச்சம்என்பார் துணிந்திவள் வென்றாள் என்று ஒருவர் சந்நிதியிற் சொன்னாற்போதும் என்றார். செய்யுளாதலால் செய்மினீர் செய்மின் என்றார். செய்மின் செய்மின் துணிவுப்பொருளில்வந்த அடுக்குத்தொடர்.()

கலிவிருத்தம்.

தென்றனாடனுமந்திரச்செல்வரு
நன்றுதிருணர்நால்வகைக்கேள்வியோ
ரொன்றவேயிசையொளிவிடுவெள்ளிமா
மன்றவாணர்மாமண்டபத்தெய்தினர்.

(இ-ள்.) தென்றல் நாடனும் மந்திரச் செல்வரும் - பாண்டியனும் அமைச்சர்களும், நன்று தீது உணர் நால்வகைக் கேள்வியோர் ஒன்ற இசை - இசையிலுள்ள குணங்குற்றங்களைப் பகுத்துணரும் நான்குவகைப்பட்ட கேள்வி நிறைந்த இசைநூற் புலவர்கள் தம்மைச் சூழ்ந்துவரச்சென்று, ஒளி விடு வெள்ளி மாமன்ற வாணர் மாமண்டபத்து எய்தினர் - ஒளிவீசும் வெள்ளியம்பலவாணர் மகாமண்டபத்திலடைந்தார்கள்.

நால்வகைக் கேள்விகளாவன தேசிஞானம், இலயஞானம், சுருதிஞானம், தாளஞானங்களாம். (௨௭)

எய்தியம்மடமாதனையிங்குறச்
செய்திரென்னத்திருமகனேவலோர்
நொய்தினோடிநொடித்தழைத்தாரொடு
மைதிகழ்ந்தவிழியார்வருவரால்.

(இ-ள்.) எய்தி - அடைந்து, அ மடமாதனை இங்கு உற செய்திர் என்ன - அந்தப்பாடினியை யிங்குவரச் செய்யுங்களென்று பணிக்க, திருமகன் ஏவலோர் நொய்தின் ஓடி - பாண்டியன் ஏவல் வழி நிற்கும் வேவுகாரர் விரைந்தோடி, நொடித்து அழைத்தாரொடு - அரசன் கட்டளையைக்கூறி யழைத்த வவ்வேவுகாரரோடு, மைதிகழ்ந்த விழியார் வருவர் - மைவிளங்கிய கண்களையுடைய பாடினிகள் வரா நிற்பர். (௨௮)

படிமையார்தவப்பாடினிவந்தெனக்
கடிமையாவளின்றையமின்றுலெனக்
கொடுமையார்மனக்கோட்டச்செருக்கொடுங்
கடுமையாகவந்தாள்கலத்தின்வந்தாள்.

(இ-ள்.) தவப்படிமை ஆர் பாடினி வந்து எனக்கு இன்று அடிமை ஆவள் - தவவேடமுடைய பாடினி வந்து எனக்கு இப்போது அடிமையாவாள், ஐயம் இன்று என - அதற்கோர் ஐயமில்லையென்று, கொடுமை ஆர் மனம் கோட்டம் செருக்கொடும் - கொடுமை மிக்க மனக்கோணலால் வந்த செருக்கினோடும், கலத்தின் வந்தாள் - மரக்கலத்தில் வந்த பாடினி, கடுமையாக வந்தாள் - விரைந்துவந்தனள்.

அரசன் தன்பாற் சார்பாக நிற்றலால் அடிமையாவளின்றையமின்றால் எனவும், சக்தியாதலால் முன்போலக் கூறுமெனக் கருதிலளாதலால் கொடுமையார் மனக்கோட்டச் செருக்கொடுங் கடுமையாகவந்தாள் எனவுங் கூறினர். (௨௯)

கற்புமிக்கெழுகற்புங்கருத்தினிற்
சிற்பரஞ்சுடர்சேவடிமேல்வைத்த
வற்புமிக்கெழமெல்லவந்தாளரோ
பொற்புமிக்குளபத்திரன்பொன்னனாள்,

Koviloor Digital Library

(இ-ள்.) கற்பு மிக்கு எழு கற்பும் - கல்வியறிவால் மேம்பட்டு விளங்கும் கற்பும், கருத்தினில் - தமது மனத்தில், சிற்பரஞ்சுடர் சேவடிமேல் வைத்த அற்பும் மிக்கு எழ - சோமசுந்தரக்கடவுளுடைய செவந்த திருவடிமேல் வைத்த பத்திமையும் பொலிந்து தோன்ற, பொற்புமிக்கு உளபத்திரன் பொன் அன்னாள் மெல்ல வந்தாள் - அழகு மிக்க பத்திரருடைய மனைவியார் பைய வந்தனர்.

கற்புமன்றிச் சிவநேயமுமிக்குடையார் என்பது தமது நடையாற் பலர்க்குந்தோன்ற வந்தனர் என்பார் மெல்லவந்தாள் என்றார். (௩௦)

அலங்குமாரமோட்டங்கதமாதிபல்
கலன்கடாங்கிக்கலைஞர்குழாத்திடை
யிலங்குமாடமதுரைக்கிறைவரும்
புலங்கொணாவலர்போல்வந்துவைகினார்.

(இ-ள்.) இலங்கு மாடம் மதுரைக்கு இறைவரும் - விளங்கு மாடங்கணெருங்கிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளும், அலங்கும் ஆரமோடு அங்கதம் ஆதி பல் கலன்கள் தாங்கி - விளங்கு முத்தாரத்தோடு வாகுவலய முதலிய ஆபரணங்களையணிந்து, கலைஞர் குழாத்து இடை - இசைப்புலவர் கூட்டத்துள், புலம் கொள் நாவலர் போல் வந்து (இசைநூலில்) உணர்வுமிக்க புலவர் போல வந்து, வைகினார் - தங்கியருளினார். (௩௧)

அந்தவேந்தவைதன்னிலருங்கலம்
வந்தவேய்ந்தடந்தோளிசைமாதராண்
முந்தவேத்திசைபாடினண்முந்தையோர்
சிந்தைவேட்டொன்றுஞ்செப்பினரில்லையால்.

(இ-ள்.) அந்த வேந்து அவை தன்னில் - அந்த அரசசபையில், அருங்கலம் வந்த வேய் தடம் தோள் இசை மாதராள் - தொழின்முற்றிய மரக்கலத்தில் வந்த மூங்கில்போன்ற பருத்த தோளையுடைய பாடினி, முந்த ஏத்திசை பாடினள் - முற்பட நால்வகை வருணவாழ்த்தும் பாடினாள், முந்தை யோர் சிந்தை வேட்டு ஒன்றும் செப்பினர் இல்லை - (அச்சபையிலுள்ள) முதியோர் மனம் விரும்பிச் சிறிதும் ஒன்றுங் கூறிற்றிலர்.

நால்வகை வருணவாழ்த்தாவது நால்வகைவருணப் பூதரைச் சிறுதேவப்பிராணியாற்றுதித்து மூவடி முக்கால் வெண்பாவால் அவர் அணியையு மாலையையும் ஆடையையும் நிறத்தையுங் கொடியையுந்துதித்து அவர்களாலொன்று பெறுதல் "அந்தணர்வேள்வியோடருமறைமுற்றுக - வேந்தன்வேள்வியோடியாண்டுபல்வாழ்க-வணிகரிருநிதிநிதிதழைக்க - பதினெண்கூலமுமுழவர்க்குமிகுக - அரங்கியற்கூத்துநிரம்பிவினைமுடிக - வாழ்கநெடுமுடிகூர்கவென்வாய்ச்சொலென் - றிப்படிபலிகொடுத்திறைவனிற்றெருக்குச் - சேட்படவமைத்துச்செழும்புகைகாட்டிச் - சேவடிதேவரையேத்திப்பூதரை - மூவடிமுக்கால்வெண்பாமொழிந்து - செவியிமுக்குறுமைவேந்தனையேத்திக் - கவியொழுக்கத்துநின்றுழிவேந்தன் - கொடுப்பனகொடுக்கவமையுமென்ப" என மதிவாணனார் இசைநூலுள் வருதல் காண்க. (௩௨)

வீணைதோளிடனேந்தியவெண்மலர்
வாணிபாட்டிருக்கையின்வைகியே
யாணரம்பெறிந்தின்னிசையோர்ந்தெறிஇப்
பாணர்கோமகன்பண்ணியும்பாடுமால்.

Koviloor Digital Library

(இ-ள்.) விளை இடன் தோள் ஏந்திய வெண் மலர் வாணி பாடு அ இருக்கையின் வைகி - வீணையை யிடத்தோளிலேந்திய கலைமகள் பாடும் அவ்வாசனத்தில் தானுமிருந்து, யாழ் நரம்பு எறிந்து இன் இசை ஓர்ந்து எழீஇ - வீணையினரம்பைத் தட்டி யின்னிசையை யாய்ந்தெழுப்பி, பாணர் கோமகன் பன்னியும் பாடும் - பாணர்க்கரசாகிய பத்திரனுடைய மனைவியாரும் பாடலுற்றார்.

வாணியிருக்கையாவது ஒன்பது விருத்தியுள் பதுமாசனம் அது காலடிகளை மாற்றிக் குதிமேலாயிருத்தல் "பதுமுகமுற்கட்டிதமேயொப்படி - இருக்கைசம்புடமயமுஞ் சுவத்திகம் - தனிப்புடமண்டிலமேகபாதம் - உளப்படவொன்பதும்-ஆருந் திரிதரலில்லாவிருக்கை" எனவருஞ் சூத்திரத்தால் ஒன்பது விருத்தியுங்காண்க. அகரச்சுட்டுப் பதுமாசனத்தின் உயர்ச்சிமேல் நின்றது. (௩௩)

இடைமடக்காய் அடிசிரான்வந்த ஒருபொருளோச்சகம்.

கந்திருவம்.

குடங்கைநீரும்பச்சிலையுமிடுவார்க்கிமையாக்குஞ்சரமும்
படங்கொள்பாயும்பூவணையுந்தருவாய்மதுரைப்பரமேட்டி
படங்கொள்பாயும்பூவணையுந்தருவாய்கையிற்படுதலைகொண்
டிடங்கடோறுமிரப்பாயென்றேசுவார்க்கென்பேசுவனே.

(இ-ள்.) குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு - உள்ளங்கையளவு நீரையும் பசிய இலையையும் இட்டுவழிபடும் அடியார்க்கும், இமையாத குஞ்சரமும் படம் கொள்பாயும் பூ அணையும் - ஐராவதத்தையும் படத்தையுடைய சர்ப்பசயனத்தையும் தாமரைத்தவிசையும், மதுரை பரமேட்டி தருவாய் - மதுரையிலெழுந்தருளிய பெருமானே தந்தருளுவாய், படம் கொள் பாயும் பூ அணையும் தருவாய் - (வழிபடும் அடியவர்க்கும்) சர்ப்பசயனத்தையுந் தாமரைத்தவிசையுந் தந்தருளு நீயே, கையில் படுதலை கொண்டு - திருக்கரத்தில் கபாலத்தையேந்தி, இடங்கள் தோறும் இரப்பாய் என்று - (தாருகவனமுனிவர்) இல்லந்தோறும் இரக்கின்றாயென்று, ஏசுவார்க்கு என் பேசுவன் - இகழும் புறச்சமயிகளுக்கு (யான்) யாது கூறுவேன்.

அடியார்க்கு என்பதினிறுதியில் தொக்குநின்ற எதிரதுதழீஇய எச்சவும்மையால் சிலந்திமுதலிய அஃறிணைப்பொருள்களுக்கும் எனக்கொள்க. இந்திரனும் திருமாலும் பிரமனும் அடைந்தவாழ்வு சிவபிரானை வழிபட்ட வழிபாட்டால் என்பது தோன்றநிற்றலால் குறிப்பெச்சம். உதாரணம் எனினும் அமையும். அச்சமயிகள் தாருகவனமுனிவர் கௌதமர் சாபமொழிந்துய்தற்பொருட்டென அவர் திருவருளைப்பாராட்டி மகிழ்வர். புறச்சமயிகள் இவ்வுண்மையுணராது பழிப்பாராதலால் ஏசுவார்க்கென்பேசுவனே என்றார். சிலந்தி முதலிய என்றது நக்கீரதேவர் அருளிய கோபப்பிரசாதத்தில் சீர்மலிசிலந்திக்கின்னரசளித்தும்" எனவரும் ஏதுவாலும், இந்திரன் முதலியோர் அடைந்தவாழ்வு சிவபிரானை வழிபட்டமையால் என்றது "வாழ்த்துவதும்வானவர்கடாம் வாழ்வான்மனநின்பால் தாழ்த்துவதுந்தாமுயர்ந்து தம்மையெல்லாந்தொழவேண்டி" எனவருந் திருவாசகத்தாலும் உணர்க. தாருகவனமுனிவர் பன்னிரண்டுவருட மழையின்மையால் கௌதமரில்லிற்சென்று அவருபசரிக்க வுயிர்வாழ்ந்து வருங்கால் மழைவளம்பெருகி நாடுசெழிக்கத் தமதில்லிற்குச்செல்லக்கருதி, அம்முனிவர்கள்-மாயையால் ஒரு பசுவை யமைத்துவிட, அப்பசு நாய்பு தோன்ற இளைத்து நிற்றற்கிரங்கிக் கௌதமர் அதனைப் பாதுகாத்தற்கருகு சென்று நின்றவும், அதனை யாற்றுதப் பசு வீழ்ந்துயிர்மாளவே தாருகவனமுனிவர்

Koviloor Digital Library

பசுவைக்கொன்றேனில்லில் உயிர்வாழ்தல் தக்கதன்றெனக்கூறித் தமதில்லிற்குச் சென்றனர். அதனாற் றன்புற்றழுந்த அக்கௌதமர் ஞானக்கண்ணால் நோக்கி யிவர்கள் செய்த மாயையென்றுணர்ந்து வேதவொழுக்கமுஞ் சிவநேயமுமாறி நரகில் விழக்கடவர்களெனச் சபித்தனர். அவ்வாறே யவையொழிந்து துயருறுந் தாருகவனமுனிவர் திருமாற்குக்கூற, இவர்கள் செய்த தீங்கை யுணர்ந்து அந்தோ இது பெரும்பாவமெனத் திருவுளத்திற்கொண்டு நித்தியகன்மமே பொருளெனக்கொள்ளும் ஓர் பொய்ந்நூலை யமைத்துத்தர, அதனிற் றொடக்குண்டுழலும் அம்முனிவர்க்கிரங்கி யருளுதற்பொருட்டுப் பன்னிரண்டுவருடந் தாருகவனத்திற் பலியேற்றுலவினர் என்பது "அன்னநூலின்வழிநூல்கள் முனிவரோதியஞொய்தி - யின்னற்கடலுள்வீழ்ந்திடவு மெம்மானதறக்குளமிரங்கிப்-பன்னுமறையோர்துயர்தீர்ப்பான் பலியேற்றுண்ணறலைக்கீடாய்-மன்னுமுயர்தாருகவனத்தி னன்னோர்சாலைமருங்கடைந்தான்" "அன்னகாலைமுனிவர்க ளமருமுயர்தாருகவனத்திற் - பன்னீராண்டுநல்லருளிற் பயின்றுலாவி" எனக் கூர்மபுராணம் அந்தகாசுரன் சாரூபமடைந்த அத்தியாயத்தில் வருதல் காண்க. (௩௪)

தேனார்மொழியார்விழிவழியேசெல்லாதவர்க்கேவீடென்று
நானாவேதப்பொருளுரைத்தாய்நீயேமதுரைநம்பரனே
நானாவேதப்பொருளுரைத்தாய்நீயேபாதிநாரியுரு
வானாயென்றுபிறர்பழித்தாலடியேன்விடையேதறைவேனே.

(இ-ள்.) மதுரை நம்பரனே - மதுரையிலெழுந்தருளிய நமது பரமனே, தேன் ஆர் மொழியார் விழி வழியே செல்லாதவர்க்கே வீடு என்று - தேன்சுவையையொத்த சுவை நிரம்பிய சொற்களையுடைய பெண்களின் கட்பார்வையின் வழியே செல்லாத சிவயோகிகளுக்கே மோட்சமென்று, நானா வேதப்பொருள் நீயே உரைத்தாய் - பலவகைப்பட வேதப்பொருளை விரித்து நீயே கூறினாய், நானா வேதப்பொருள் உரைத்தாய் நீயே - பலவகைப்பட வேதப்பொருளினை விரித்துக் கூறிய நீயே, பாதி நாரி உரு ஆனாய் என்று பிறர் பழித்தால் அடியேன் விடை ஏது அறைவேன் - இடப்பாதி முற்றும் பெண்ணுருவானாய் என்று புறச்சமயிகளிகழில் அடியேன் யாது விடைகூறுவன்.

மண் பொன்னால்வரும் இன்பங்களினும் பெண்ணின்பம் பெரிதாகலினதனை விடுதலே வீடென்பார் தேனார் மொழியார் விழிவழியே செல்லாதவர்க்கே வீடென்று எனவும், அது ஞானகாண்டத்திற் கூறப்படுவதென்பார் நானாவேதப்பொருளுரைத்தாய் நீயேயெனவும், வேதம் விச்சுவரூபியெனக் கூறுதற்கியைய ஆன்மாக்களுக்கு வீடருளுதற்பொருட்டுப் பந்தமருளப்பாதிநாரி யுருவானாயென்று அகச்சமயிகள் பேரின்புறுவர், அவ்வுண்மையுணராத புறச்சமயிகள் இகழ்வரோ வென்பார் பிறர்பழித்தா லடியேன் விடையேதறைவேனே எனவுங் கூறினார். "தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன் - பெண்பாலுகந்தான் பெரும்பித்தன்காணேடீ - பெண்பாலுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர் - விண்பாலியோகெய்தி வீடுவர்காண்சாழலோ", எனவரும் ஏதுவால் உணர்க. (௩௫)

வரதனாகியெவ்வுயிர்க்குமாயாவிருத்திவலியடக்கிச்
சரதமானவீட்டின்பந்தருவாய்மதுரைத்தனிமுதலே
சரதமானவீட்டின்பந்தருவாய்வீடுபெறுவார்போல்
விரதயோகநிலையடைந்தாயென்பார்க்கென்னான்விளம்புவனே.

Koviloor Digital Library

(இ-ள்.) மதனா தனி முதலே - மதனாயிலெழுந்தருளிய ஒப்பிலாத முதல் வனே, வரதன் ஆகி எவ்வுயிர்க்கும் மாயா விருத்தி வலி அடக்கி - அருட்கொடை யையுடையவனாகி யெல்லாவுயிர்களுக்கும் மாயாமலத்தின் றொழிலெழவொட்டாம ல் தடுத்த, சரதம் ஆன வீடு இன்பம் தருவாய் - என்றும் நித்தியமான மோட்சவி ன்பத்தைத் தந்தருளுகின்றாய், சரதம் ஆன வீடு இன்பம் தருவாய் - என்றும் நித்தி யமான மோட்சவின்பத்தைத் தருகின்ற நீயே, வீடு பெறுவார் போல் - மோட்சவி ன்பத்தைப் பெற முயலும் சிவயோகிகளைப்போல, விரத யோக நிலை அடைந்தாய் என்பார்க்கு - நோன்புபோல யோகநிலையினைக் கைக்கொண்டருளினை யென்றும் பு றச்சமயிகளுக்கு, நான் என் விளம்புவன் - நானென்ன விடைகூறுவன்.

மாயாமலத்தின் றொழிலாவது தனுகரணபுவன போகங்களாய்க் கன்மத்து க்கேற்ற சரீரங்களைக் கொடுத்தல். வலியடக்கலாவது அழுக்கைக்கொண்டே யழு க்கையொழித்தல்போல மாயையைக்கொண்டே யந்தமாயையை யொழித்தல். முத் தி நிலை வாய்த்திருந்ததாதலால் சனகர் முதலிய நால்வருமுணர வுணர்த்திய சிவயோக நிலையென அகச்சமயிக ளுணர்வர், புறச்சமயிக ளவ்வுண்மையுணரா ராதலால் விர தயோக நிலையடைந்தா யென்பார்க்கென்னென் விளம்புவனே என்றார். "உருவாதிச தவிதமாய்" எனவும் "கன்மமாராறுக்களிபார்க்கு மாவாரமாய்" எனவும் "மா யையைக்கொண்டேமலமொழிப்பன் முன்னோன்" எனவும் "நன்றாகால்வருக்கு நான்மறை யினுட்பொருளை - அன்றாலின்கீழிருந்தங் கறமுரைத்தான்காணேடி - அன்றாலின்கீ ழிருந்தங் கறமுறைத்தானேயிடினுங் - கொன்றான்காண்புரமூன்றுங் கூட்டோடே சாழலோ" எனவும் எடுத்துக்காட்டுணர்க. (௩௩)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கன்றுதன்மதனாப்பிரானையிவ்வாறுகருதியபாணியாற்கனிந்து
பன்றுநல்பரிவட்டணைமுதலிசைநூல்பகர்முதற்றொழிலிருநான்கு
மென்றுறுவார்தல்வடித்திடன்முதலாமெட்டிசைக்கரணமும்பயப்ப
மண்ணவர்செவிக்கோவானவர்செவிக்கும்வாக்கினுறுவிளையமுதம்.

(இ-ள்.) கன்றுதல் மதனா பிரானை - செற்றிக் கண்ணையுடையவராகிய சோமசுந்தரக்கடவுளை, இ ஆறு கருதிய பாணியால் கனிந்து - இவ்வகையாகப் பொருளமைந்த பண்ணிறால் மனக்கனிந்து, பன்றுதல் பரி வட்டணை முதல் - ப ன்றுதல் பரிவட்டணைமுதலாக, இசை நூல் பகர் முதல் தொழில் இரு நான்கும் - இசைநூல்கூறும் முதற்றொழில்களாகிய எட்டும், என்றுறு வார்தல் வடித்திடல் முதல் ஆம் எட்டு இசைக்கரணமும் - எண்ணிவிற்கும் வார்தல் வடித்தல் முதலிய எவ்வகைப்பட்ட இசைக்கரணமும், பயப்ப - நிலைத்துப் பயன்பட, மண்ணவர் செவிக்கோ - நிலவுலகினர் செவிக்குமட்டோ, வானவர் செவிக்கும் நாவின் அ முதம் வாக்கினுள் - தேவர்களது செவிக்கும் தமது நாவாலட்ட இசையமுதத்தை வார்த்தார்.

முதற்றொழில் எட்டாவன பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, குறும்போக்கு. பண்ணலாவது இணை, கிளை, பகை, ந ட்பு, ஆனநரம்புகள் பெயருந்தன்மை மாத்திரையறிந்து வீக்குதல். பரிவட்டணை வி க்கினநரம்பை விரல்களால் அகமும் புறமுங் கரணஞ்செய்து தடவிப்பார்த்தல். ஆ ராய்தல் ஆரோகண அவரோகண வகையாலிசையைத்தெரிதல். தைவரல் சுருதியே ற்றல். செலவு ஆளத்தியிலே நிரம்பப்பாடுதல். விளையாட்டுபாடலினைத்த வண்ணத்திற்

Koviloor Digital Library

சந்தத்தை விடுத்தல். விளையாட்டு வண்ணத்திற்செய்த பாடல்களை யின்பமாகப்பாடுதல். குறும்போக்கு குடகச்செலவு தள்ளாற் செலவுபாடுதல். வார்தல் வடித்தல் முதலிய எட்டிசைக்கரணங்களாவன வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை. வார்தல், எடுத்தல், வடித்தல், படுத்தல், உந்தல், நலிதல், உறழ்தல், கும்பித்தல், உருட்டல், உருட்டு, தெருட்டல், ஒலி, எள்ளல், குடிலம், பட்டடை, துக்கு. (௩௭)

இடையினோடேனைப்பிங்கலையியக்கமிகந்துமூலந்தொடுத்தியக்கி
நடுவுறுதொழிலாற்பிரமரந்திராந்தநடைபெறவிசைக்குமுள்ளாள [ராள்
மிடறுவீங்காள்கண்ணிமைத்திடா ளெயிறுவெளிப்படாள்புருவமேனிமி
கொடிறதுதுடியாள்பாடலுமதுகேட்டனைவருங்குதுகுலமடைந்தார்.

(இ-ள்.) இடையினோடு - இடைகலையோடு, ஏனை பிங்கலை இயக்கம் இகந்து அதுவொழிந்த பிங்கலையினும் இயங்கும் சஞ்சரிப்பொழிந்து, மூலம் தொடுத்து இயக்கி - மூலாதாரத்தினின்றும் வாயுவை எழுப்பி, நடு உறு தொழிலால்-சுழுமுனையின் றொழிலால், பிரமரந்திராந்தம் நடை பெற இசைக்கும் உள்ளாளம் - பிரமரந்திர முடிவுகாறுஞ் செல்லப்படும் தேவகாந்தருவத்தை, மிடறு வீங்காள் கண் இமைத்திடாள் - கண்டம் வீங்காதும் கண்ணிமை கொட்டாதும், எயிறு வெளிப்படாள் புருவம் மேல் நிமிராள் - பற்கள் தோன்றாதும் புருவமேலேறாமலும், கொடிறு அது துடியாள் பாடலும் - கபோலந்துடியாமலும் பாட, அதுகேட்டு அனைவரும் குதுகுலம் அடைந்தார் - அத்தேவகாந்தருவத்தைக் கேட்டு எல்லோரும் களிப்படைந்தார்கள்.

பதினொருவகையாற் பாடும் உள்ளாளம் பாடுங்கால் இடைகலை பிங்கலை யியக்கமறுத்து மூலாதாரமுதல் பிரமரந்திரங்காறும் வாயுவை யியக்கி நடுவுதொழில் வரப்பாடுவதாதலால் இடையினோடேனைப் பிங்கலையியக்க மிகந்து மூலந்தொடுத்தியக்கி - நடுவுறுதொழிலாற் பிரமரந்திராந்த நடைபெறவிசைக்கு முள்ளாளம் என்றார். பதினொருவகையாவன "உள்ளாளம் விந்து வுடனாத மொலியுருட்டுத் - தள்ளாததூக்கெடுத் தருன்படுத்தல் - மெள்ளக் - கருதிநலிதல் கும்பித்தல் குடிலம் - ஒருபதின்மே லொன்றென்றுரை" என்னும் ஏதுவால் உணர்க. (௩௮)

கன்னிநாடுடையான்கைதவனெனும்பேர்க் காரணந்தேற்றுவானென
னத்தா,னின்னிசையறிஞனாகியுமுன்போலியம்புவானொருப்படுகின்றான்,
முன்னவனருளாற்றன்மனக்கோட்ட முரண்கெடப்பொதுமையானோக்கி,
யின்னவடானேவென்றனளென்றா னினையவாறனைவருமொழிந்தார்.

. . (இ-ள்.) கன்னி நாடு உடையான்-பாண்டிநாட்டையுடைய இராசராசபாண்டியன், கைதவன் எனும் பேர் காரணம் தேற்றுவான் என்ன (தனக்குவந்த) கைதவன் என்னும்பெயர்க்கு ஒருவாறு காரணத்தைப் பலர்க்குந்தெளிவிப்பவனைப்போல, தான் இன் இசை அறிஞன் ஆகியும் - தானினிய இசைநூலில் வல்ல புலவனாகியும், முன் போல் இயம்பு வான் ஒருப்படு கின்றான் - முன்புபோலக் கூற உடன்படுகின்றவன், முன்னவன் அருளால் - சோமசுந்தரக்கடவுள் திருவருளினால், தன் மனம் கோட்டம் முரண் கெட - தனது மனக்கோணலின் மாறுபாடு கெட, பொதுமையால் நோக்கி - நடுநிலைமையினின்று சீர்தூக்கி, இன்னவள் தானே வென்றனள் என்றான் - இந்தப் பாணபத்திரன் மனைவியே வெற்றிகொண்டனளென்று கூறினான், இனைய ஆறு அனைவரும் மொழிந்தார் - இப்படியே அங்குள்ள பெரியோர் யாவருங் கூறினார்கள்.

Koviloor Digital Library

கைதவன் தவக்கை கூடினவன் எனப் பொருள்பட நின்ற தொடர்மொழி ஒருசொல்லாய் வஞ்சமுடையவன் என இவன் பாற்காரணக் தோற்றநிற்றலால் ஒருபாது என்றும். சிவபெருமான் திருவருளால் மனக்கோட்டம் ஒழிதலால் நடுநிலை நின்றான் என்பார் போதமையால் நோக்கி என்றார். (௫௯)

கரியுரைமொழிந்தகைதவனிலங்கைக்கைதவப்பாடினிகழுத்திற்
புரிகுழன்மாதையிருத்தெனவிருத்தும்போதுமையிடங்காந்திருந்த
வரியநாவலரீதற்புதமீதற்புதமெனவறைந்தவைகாண
விரிகதிர்மின்போன்மறைந்தனர்யாரும்வியந்தனர்பயந்தனன்வேந்தன்.

(இ-ள்.) கரி உரை மொழிந்த கைதவன் - சாக்ஷி மொழிகூறிய பாண்டியன், இலங்கை கைதவம்பாடினி கழுத்தில்-இலங்கையினின்றும் வந்த வஞ்சனையையுடைய பாடினியின் கழுத்தில், புரி குழல் மாதை இருத்து என இருத்தும் போது - கட்டமைந்த கூந்தலையுடைய பத்திரர் மனைவியை இருத்தாயென்றேவ வேவற்பெண்களிருத்துங் காலையில், உமை இடம் காந்து இருந்த - உமாதேவியாரிடப்பாகத்தைக் காந்து மாணிடத் திருவுருவங் கொண்டிருந்த, அரிய நாவலர் - அரிய இசைநூலில் வல்ல நாவலர் பெருமானாராகிய சோமசுந்தரக்கடவுள், ஈது அற்புதம் ஈது அற்புதம் என அறைந்து - இச்செயலற்புதமென்று கூறி, அவை காண விரி கதிர் மின் போல் மறைந்தனர் - சபையிலுள்ளோருணர விரிந்த கிரணத்தையுடைய மின்னலைப்போல மறைந்தருளினர், யாரும் வியந்தனர் - கண்டோரெவரும் அதிசயித்தனர், வேந்தன் பயந்தனன் - இராசராசபாண்டிய னச்சங் கூர்ந்தனன்.

பாண்டிய னடுநிலைமையைக் கைவிட்டு முன்னர் மனக்கோட்டமுற்றவனாயிருத்தலால் வேந்தன் பயந்தனன் எனவும், தமது திருவருளாலின்று பாண்டிய னடுநிலைமையினின்றமையால் உவகைப்பொருள் பயப்ப ஈதற்புதமீதற்புதமெனவுங் கூறினர். (௬௦)

செங்கணேறழகராடலீதென்றேயாவருந்தெளிந்தனரேத்தி
யங்கணாயகர்தங்கருணையின்றிறனுமடியவரன்பையுந்தூக்கித்
தங்கணாருவிபெருகவானந்தத்தனிப்பெருஞ்சலதியிலாழ்ந்தார்
வங்கமேல்வந்தாள்பீடர்மிசையிருந்தமாணிழைவிறலியைமன்னன்.

(இ-ள்.) செங்கண் ஏறு அழகர் ஆடல் ஈது என்று - செவந்த கண்களையுடைய விடைமேலழகர் திருவிளையாட லிதவென்று, யாவரும் தெளிந்தனர் ஏத்தி - எவருந்தெளிந்து துதித்து, அங்கண் நாயகர்தம் கருணையின் திறனும் அடியவர் அன்பையும் தூக்கி - அவ்விடத்துச் சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலின் திறத்தையும் அடியவர் அன்பின் திறத்தையும் சீர்தூக்கி, தம் கண் ஆர் அருவி பெருக ஆனந்தம் தனிப்பெருஞ்சலதியில் ஆழ்ந்தார் - தமது கண்களில் ஆனந்தவெள்ளம் உவட்டெடுக்கப் பேரின்பமாகிய ஒப்பில்லாத பெரியகடலிலழுந்தினார்கள், வங்கம் மேல் வந்தாள் பீடர் மிசை இருந்த மாணிழை விறலியை - மரக்கலத்தின்மேல் வந்த பாடினியின் பீடர்மேலிருந்த பத்திரர் மனைவியை, மன்னன் - இராசராச பாண்டியன்.

திருவருளாலன்பும், அன்பாற் திருவருளுமா யொன்றனை யொன்று தொடர்ந்துநிற்றலால் அவ்விரண்டின் திறத்தையும் பெரிதளந்தார் என்பார் கருணையின் திறனும் அடியவரன்பையுந்தூக்கி எனவும், அவை அவராலளத்தற்கரிதென்பார் தங்கணாருவிபெருக ஆனந்தத்தனிப்பெருஞ்சலதியிலாழ்ந்தார் எனவுங் கூறினார். (௬௧)

Koviloor Digital Library

இறக்குவித்தவட்குமுந்தமுத்தாரமெரிமணிக்கலன்றுகில்வரிசை
பெறக்கொடுத்தேனையவட்குமுண்மகிழ்ச்சிபெறச்சிலவரிசைதந்தவையிற்
சிறக்கவந்தொருங்குவைகிவானிழிந்ததெய்வதக்கோயில்புக்கிருந்த
வறக்கொடியிடஞ்சேர்பெரும்புலவோர்க்குமருங்கலனுதிகணல்கா.

(இ-ள்.) இறக்கு வித்தவட்கு - ஈழப்பாடினி கழுத்தினின்றுமிறங்கச்செய்த பத்திரர் மனைவியார்க்கு, முந்த - முற்பட, முத்தாரம் எரி மணி கலன் துகில் வரிசை பெற கொடுத்து - முத்துமாலிகையையும் தீப்போலச் செந்நிறம் வாய்ந்த இரத்தினமழுத்திய ஆபரணங்களையும் பீதாம்பரங்களையும் வரிசையாகப் பெறத்தந்து, ஏனை அவட்கும் உள் மகிழ்ச்சி பெற சில வரிசை தந்து - ஈழப்பாடினிக்கும் மனத்தில் மகிழ்ச்சியரும்பச் சிலவரிசைகள் கொடுத்து, அவையில் சிறக்க வந்து ஒருங்கு வைகி - சபையில் மேம்பட ஒருசேர இருந்து, வான் இழிந்த தெய்வதம் கோயில் புக்கு இருந்த - விண்ணினின்றும் இழிந்த தெய்வத்தன்மையையுடைய திருக்கோயிலிற்சென்று எழுந்தருளிய, அறக்கொடி இடம் சேர் பெரும் புலவோர்க்கும் அருங்கலன் ஆதி கள் நல்கா - உமாதேவியாரை இடப்பாகத்திலுடைய பெரிய புலவர் சிகாமணிக்கும் அரிய ஆபரணாதிகளைத்தந்து.

வெற்றியுற்றவராதலால் முற்படவரிசைபெறக் கொடுத்து எனவும், தோல்வியுற்றவளாயினும் தன்னால் வருவிக்கப்பட்டவளாதலால் உண் மகிழ்ச்சிபெறவரிசை தந்து எனவுங் கூறினர். (௬௨)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மன்னவர்வலிகளெல்லாந்தெய்வத்தின்வலிமுன்னில்லா
வன்னமாதெய்வஞ்செய்யும்வலியெலாமரண்மூன்றட்ட
முன்னவன்வலிமுன்னில்லாவெனப்பலர்மொழிவதெல்லா
மின்னபாண்மகளிற்காணப்பட்டதென்றிறும்பூதெய்தா.

(இ-ள்.) மன்னவர் வலிகள் எல்லாம் - அரசருடைய வலிமைகளெல்லாம், தெய்வத்தின் வலி முன் நில்லா - தெய்வத்தின் வலிமை முன்னில்லாவாம், அன்ன மா தெய்வம் செய்யும் வலி எல்லாம்-அந்தப்பெரிய தெய்வங்கள் செய்யும் வலிமைகளெல்லாம், அரண் மூன்று அட்ட முன்னவன் வலி முன் நில்லா என - திரிபுரங்களையும் நகைத்தெரித்த சிவபெருமான் வலிமை முன்னில்லாவாமென்று, பலர் மொழிவது எல்லாம் - பலருங் கூறுவதெல்லாம், இன்ன பாண் மகளில் காணப்பட்டது என்று இறும்பூது எய்தா - இந்தப் பாடினியாரிடத்துக் காணப்பட்டதென்று வியப்படைந்து.

அரசன்மக்கட்கூற்முதலின் அவனினும் ஏனைத்தேவர்கள் சிறந்தவர்கள் என்பார் மன்னவர் வலிகளெல்லாந் தெய்வத்தின்வலிமுன்னில்லா எனவும், அத்தெய்வங்கள் சிவபெருமான் ஆணைவழிப்பட்டொழுகுவன வென்பார் அன்னமாதெய்வஞ்செய்யும் வலியெலாமரண்மூன்றட்ட மன்னவன்வலிமுன்னிலா எனவும், இதுபலருங்கூறு முதுரை என்பார் எனப் பலர்மொழிவதெல்லாம் எனவும், அம்முதுரை இவர்பாலின்று நாமறிய நின்றது என்பார். இன்னபாண்மகளிற்காணப் பட்டதென்றிறும்பூதெய்தா எனவுங் கூறினர். ஆணைவழிப்பட்டொழுகுவன என்பது "யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகிவந்து மாதொருபாகனார்தாம்வருவர்" எனவும், "இங்குநாஞ்சிலர்க்குப்பூசை யியற்றினுலிவர்களேவர் - தங்குவான்றருவாரன்றேலத்தெய்வமத்தனைக்காண்-எங்கும்வாழ்தெய்வமெல்லா மிறைவனுணையாணிற்ப" எனவரும் ஏதுக்களால் அறிக. (௬௩)

Koviloor Digital Library

மின்னியல்சடைப்பிரானைவிடைகொடுவலஞ்செய்தேகி
யின்னியமியக்கஞ்செய்யவெழில்கொடன்கோயிலெய்தித்
தொன்னிதிபெற்றான்போலச்சுகுணபாண்டியனைப்பெற்று
மன்னியமகிழ்ச்சிவீங்கவைகினனிராசராசன்.

(இ-ள்.) மின் இயல் சடையிரானை விடை கொடு வலம் செய்து ஏகி - மின்னையொத்த சடையையுடைய பெருமானிடத்து விடைபெற்றுச் சென்று, இன் இயம் இயக்கம் செய்ய - இனிய வாச்சியங்களொலிக்க, எழில் கொள் தன் கோயில் எய்தி - பொலிவுமிக்க தன்கோயிலையடைந்து, தொல் நிதி பெற்றான் போல - தொன்றுதொட்டுள்ள சங்கநிதி பதுமநிதிகளைப் பெற்றவன்போல, சுகுண பாண்டியனை பெற்று - சுகுணபாண்டியனை யீன்று, மன்னிய மகிழ்ச்சி வீங்க - நிலைபெற்ற மகிழ்ச்சிமிக, இராச ராசன் வைகினான் - இராசராசபாண்டிய னிருந்தனன்.

நிதி சாதியொருமை. (௪௪)

இசைவாது வென்றபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௨௧௧௨.

நாற்பத்தைந்தாவது

பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இருளைக்கந்தரத்தில்வைத்தோன்றன்னிடத்தென்றுமன்பின்
றெருளைத்தந்தவட்குமாறுந்தெரிவையையிசையால்வெல்ல
வருளைத்தந்தளித்தவண்ணமறைந்தனந்தாயாய்ப்பன்றிக்
குருளைக்குமுலைதந்தாவிகொடுத்தவாறெடுத்துச்சொல்வாம்.

(இ-ள்.) இருளை கந்தரத்தில் வைத்தோன் - விடத்தினை ஸ்ரீ கண்டத்தில் வைத்த பெருமானார், தன் இடத்து என்றும் அன்பின் தெருளை தந்த வட்கு - தம்மிடத்தில் எப்பொழுதும் மெய்யன்பினை வைத்த பத்திரர் மனைவியார்க்கு, மாறும் தெரிவையை - பகையாயுள்ள ஈழப்பாடினியை, இசையால் வெல்ல அருளை தந்து - இசையினால் வெல்லத் திருவருள்வைத்து, அளித்த வண்ணம் அறைந்தனம் - பாலித்த திருவிளையாடலைக் கூறினோம், பன்றி குருளைக்கு தாயாய் முலை தந்து ஆவி கொடுத்த ஆறு எடுத்து சொல்வாம் - பன்றிக்குட்டிகளுக்குத் தாயாய்வந்து முலைகொடுத்துப் பாலித்த திருவிளையாடலை யினி யெடுத்துக் கூறுவாம். (௧)

முறையெனவிமையோர்வேண்டருளைத்தநஞ்சையின்றுசான்ற
புறையெனமிடற்றில்வைத்தவும்பரான்மதுரைக்காரந்
நிறையெனவிரிநீர்வையைத்தெற்கதுகுருவிருந்த
துறையெனவுளதோர்செல்வத்தொன்மலிமாடமூதூர்.

Koviloor Digital Library

பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம் -



Koviloor Digital Library

Koviloor Digital Library

(இ-ள்.) இமையோர் முறையென வேண்ட - தேவர்கள் முறையோவென்று குறையிரக்க, மூளைத்த நஞ்சு அயின்று - கடலிற் றோன்றிய விடத்தையுண்டு, சான்றாய் உறையென மிடற்றில் வைத்த - சாட்சியா யிருவென்று அவ்விடத்தை ஸ்ரீகண்டத்தில் வைத்தருளிய, உம்பரான் - சிவபுரத்தையுடைய பெருமானார் (எழுந்தருளிய), மதுரைக்கு ஆரம் திறை என எறி நீர் வையை தெற்கது - திருவாலவாய்க்கு முத்தங்களைத் திறையாக வீசும் வையைநதியின் தென்பாலுள்ளது, குரு விருந்தறை என உள்ளது ஓர் செல்வம் தொல் மணி மாடம் மூதூர் - குருவிருந்தறை யெனவுள்ள ஒப்பில்லாத செல்வமிக்க தொன்றுதொட்டுள்ள இரத்நமழுத்திய மாடங்கள் நெருங்கிய பெரியநகரம்.

விடத்துக்கு ஆற்றாது அயன்முதலியதேவர்கள் முறையிட்டனர் என்பார் முறையெனவிமையோர்வேண்ட எனவும், அவர்பாற்கொண்ட கருணையால் உண்டனர் என்பார்மூளைத்த நஞ்சயின்று எனவும், யாவர்க்குந்தாமிறைவரென்பதுமலச்சிமிழ்ப்புண்டபசுக்களுணர்ந்துய்யவைத்தனர் என்பார் சான்றாயுறையெனமிடற்றில்வைத்தவும்பரான் எனவுங்கூறினர். “ஐயனேயடியேங்க ளறியாமைத் தொட்குண்டகையரோமாதலினுன்கண்ணருள்பெற்றெய்தாது - வெய்யநறுஞ்சுவையமிழ்தம் பெறற்பொருட்டுவெவ்வினையேம் - பையரவான்மந்தரத்தாற்பாற்கடலைக்கடைந்தேமால் - துன்றியதீஞ்சுவையமிழ்தந்தோன்றாதுவிடந்தோன்றி - யின்றுசராசரமனைத்துமெரிசெய்துநிறுக்கிற் - றன்றினரூமரித்தாயுன்னருளன்றிமுயல்வதெல்லாம் - ஒன்றொழியவொன்றாமென்றுரைக்குமொழிமெய்யாமே-இதுபொழுதுகாத்திலையே லெமக்கிறுதியின்றேயாம்-விதுமுடித்தபெருங்கருணைவெள்ளமேயென்றிரந்தான் - மதுமலர்த்தார்விண்ணவருமனக்கலங்கிமுறையிட்டார்-அதுவுணர்ந்தெம்பெருமானுமஞ்சலீென்றருளி” எனவும் “சகமெலாம்பொடிபடுத்தெழுந்தழல்விடமிடற்றில்- திகழுவைத்தனன் முப்புரமெரியெழச்சிரித்தோன்-அகலருந்திறத்தெண்குணநிறைந்தபேராண்மைப்-பகவன்மேன்மைமற்றெம்மனோரளவிடற்பாற்றோ” எனவும் வரும் எதுக்களால் உணர்க. (௨)

தருநாதனாதிவானோர்தங்குருவிருந்துநோற்பக்
குருநாதனெனப்பேர்பெற்றுக்கோதிலாவரந்தந்தேற்றில்
வருநாதன்சித்திரத்தேர்வலவனுருடனேகஞ்சத்
திருநாதன்பரவவைகியிருக்குமச்சிறந்தவூரில்.

(இ-ள்.) தரு நாதன் ஆதி வானோர் தம் குரு இருந்து நோற்ப - பஞ்சதருக்களின் தலைவனாகிய இந்திரன்முதலிய தேவர்களுடைய குருவாகிய பிரகஸ்பதியிருந்து நோற்றலால், குரு நாதன் என பேர் பெற்று - குருநாதன் எனக் காரணப்பெயர் கொண்டருளி, கோது இல்லாத வரம் தந்து ஏற்றில் வருநாதன் - குற்றமில்லாத வரங்களையவர்க்குநல்கி யிடபவூர்தியில் வந்தருளுஞ் சிவபெருமான், சித்திரத் தேர் வலவனார் உடன் கஞ்சம் திருநாதன் பரவ வைகி இருக்கும் அச்சிறந்த வூரில்-சித்திரரதனென்னுங் கந்திருவனுடனே, தாமரை மலரில் வசிக்கும் இலக்குமி நாயகனாகிய திருமால் வணங்கவெழுந்தருளியிருக்கும் அந்தச் சிறந்த குருவிருந்தறையென்னுந் திருப்பதியில்.

சிவபெருமானுக்கு மன்றித் திருப்பதிக்கும் வந்தபெயரும் காரணப்பெயர் என்பார் குருவிருந்து நோற்ப எனவும், பிரகஸ்பதி பேறடைந்ததுமன்றி யோர் கந்திருவனும் திருமாலும் பேறடைய நின்ற திருப்பதியென்பார் சிறந்தவூர் எனவுங் கூறினர். (௩)

சுகலனென்றொருவேளாளனவன்மனைசுகலையென்பா
ளிகலருங்கற்பினாள்பன்னிருமகப்பெற்றாள்செல்வப்
புகலருஞ்செருக்காலன்னபுதல்வரைக்கடியாராகி
யகலருங்களிப்புமீதூரன்பினால்வளர்க்குநாளில்.

(இ-ள்.) சுகலன் என்று ஒரு வேளாளன் அவன் மனை சுகலை யென்பாள் - சுகலனென்றொரு வேளாளனுள்ளான் அவனுடைய மனைவி சுகலையென்னும் பெயருடையவள், இகல் அருங் கற்பினாள் பன்னிருமக பெற்றாள் - பகைமையில்லாத கற்பினையுடைய அந்தச் சுகலையென்பவள் பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்றாள், செல்வம் புகல் அருஞ் செருக்கால் அன்ன புதல்வரை கடியார் ஆகி - பெருஞ்செல்வத்தாலாகிய சொல்லுதற்கரிய இறுமாப்பால் அம்மைந்தர்களைக் குற்றங் கண்டவழி யொறுக்காதவர்களாகி, அகலருங் களிப்பு மீதூர் அன்பினால் - நீங்காத களிப்புமிக்க அன்போடு, வளர்க்கும் நாளில்-வளர்க்குங் காலையில்.

செல்வப்பெருக்கால் கல்வி பயிற்றுவிக்க மறந்தனர் என்பார் செல்வப்புகலருஞ் செருக்கால் எனவும், குணங்குற்றங்களை யறியாப்பருவத்தில் குற்றங் கண்டவழி யொறுத்துக் குணத்தின்பாற்படுத்த லொழிந்தனர் என்பார் அன்னபுதல்வரைக் கடியாராகி எனவும், பொருட்பேறுபோல மக்கட்பேறும் பெரிதுடையோம் என இறுமாந்தனர் என்பார் அகலருங்களிப்புமீ தூரன்பினால் வளர்க்கு நாளில் எனவுங் கூறினார். (௪)

தந்தையுந்தாயுமாயத்தறுகண்மிக்குடையராகி
மைந்தரும்வேடரோடுகூடிவெங்கானில்வந்து
வெந்தொழில்வேட்டஞ்செய்வார்வெயில்புகாப்புதற்கீழெய்தி
யைந்தவித்திருந்துநோற்குங்குரவனையங்குக்கண்டார்.

(இ-ள்.) தந்தையும் தாயும் மாய - தமது பிதாவுந் தாயுமிறக்க, தறு கண் மிக்கு உடையர் ஆகி - கொடுந்தொழிலை மிகவும் உடையவராகி, மைந்தரும் வேடரோடு கூடி - அப்பன்னிரு புதல்வரும் வேடரோடு கலந்து, வெங்கானில் வந்து வெந்தொழில் வேட்டம் செய்வார் - வெம்மை மிக்ககாட்டில் வந்து கொடுந்தொழிலாகிய வேட்டையாடுகின்றவர்கள், வெயில் புகாத புதல் கீழ் எய்தி - சூரியகிரணஞ் செல்லாத அடர்ந்த ஓர் புதலின் கீழ்ச்சென்று, ஐந்து அவித்து இருந்து நோற்கும் குரவனை அங்கு கண்டார் - ஐம்புலன்களையும் வென்றிருந்து தவஞ்செய்யும் பிரகஸ்பதியைப் புதலின்கீழ்ப் பார்த்தனர்.

தாய்தந்தையர் வளர்க்குங்காலே கூடவளர்ந்த கொடுந்தொழிலராதலால் தறுகண்மிக்குடையராகி யெனவும், அரசர்க்கன்றி யேனையோர்க்கு வேட்டம் உயிர்க்கேடாய் முடியுமாதலால் வெந்தொழில் வேடராகி யெனவும் கூறினார். மிக்கு செயவெனெச்சத்திரிபு. ஐந்து புலன்கள்மேல் நிற்றலால் பண்பாகுபெயர். (௫)

கைத்தலம்புடைத்தாக்குக்கல்லும்வெம்பரலும்வாரி
மெய்த்தவன்மெய்யிற்றூக்கயிசினார்வினையைவெல்லு
முத்தமன்யிக்கஞ்செய்தார்தவத்திறக்குவரென்றுன்னிச்
சித்தநொந்திளையவஞ்சத்தியனைச்செயிர்த்துநோக்கா.

Koviloor Digital Library

(இ-ள்.) கைத்தலம் புடைத்து நக்கு - கைகொட்டிச் சிரித்து, கல்லும் வெம்பரலும் வாரி மெய்தவன் மெய்யில் தாக்க வீசினர் - கல்லையுங் கொடியபருக்கைகளையும் பெருக்கிப் பொய்மை யொழிந்த தவமேற்சென்ற பிரகஸ்பதியின் மேனியிற்றாக்க எறிந்தார்கள், வினையை வெல்லும் உத்தமன் - வினையையொழிக்கும் உத்தம நெறியிற்சென்ற அப்பிரகஸ்பதி, இவர் தவத்தினுக்கு விக்கஞ்செய்தார் என்று உன்னி-இவர்கள் நமது தவத்தினுக்கழிவுசெய்தாரென்று கருதி, சித்தம் நொந்து - மனம் வருந்தி, இனைய வஞ்சம் நியரை வெகுண்டு நோக்கா - இந்த வஞ்சம்பூண்ட கொடியரைக் கோபித்துப்பார்த்து.

கொடுந்தொழிலிற் பயின்றவராதலால் என்றுங் கண்டறியாத ஓர் பெருவியப்பாக இருந்ததென்பார் கைத்தலம்புடைத்து நக்குஎனவும், சற்கருமம் கன்மமலத்தைப் போக்குவதென்பார் வினையை வெல்லும் உத்தமன் எனவுங் கூறினர். (சு)

தொழுந்தொழின்மறந்துவேடத்தொழிலுழந்துழல்வீர்நீர்மண்
ணுழுந்தொழிலுடையநீராற்பன்றியினுதரத்தெய்திக்
கொழுந்தழலனையவேனக்குருளையாய்த்தந்தைதாயை
யிழந்தலமுறுமினென்னுவிட்டனன்கடியசாபம்.

(இ-ள்.) தொழும் தொழில் மறந்து - (பெரியோரைக் காணில்வழிபட்டு) வணங்குந் தொழிலைக் கைவிட்டு, வேடத் தொழில் உழந்து உழல் வீர் - வேட்டுவர் தொழிலை மேற்கொண்டுழலுகின்ற செய்கையையுடையீர், நீர் மண் உழும் தொழில் உடைய நீரால்-நீங்கள் நிலத்தை யுழுந்தொழிலையுடைய குலத்திற்பிறந்ததன்மையால், பன்றியின் உதரத்து எய்தி - வராகத்தின் கருப்பத்தை யடைந்து, கொழுந்தழல் அனைய ஏனம் குருளையாய் - முதிர்ந்த நெருப்பை யொத்த வெய்ய கோபத்தையுடைய பன்றிக்குட்டிகளாய், தந்தை தாயை இழந்து அலமுறு மின் என்னு கடிய சாபம் இட்டனன்-(பிறந்தபோதே) தந்தைதாயிழந்து வருந்துங்களென்று கடுஞ்சாபம் அருளினர்.

பெரியோரைக் காணில் உபசரித்து வணங்குதலுங்கள் குலத்திற்குரிய தொழில் என்பார் தொழுந்தொழில் மறந்து எனவும், பாவத்திற்கஞ்சாது கல்லெறிதல் வேடர்குலத்துக்குரிய தொழில் என்பார் மறந்து வேடத்தொழிலு வந்து எனவும், உங்கள் குலத்திற்குரிய தொழில் உழுதொழிலாதலால் மூக்காலுழும் இழிபிறப்பை யடைமின் என்பார் ஏனக் குருளையாய் எனவும், இகழ்ந்த பழிகழியப் பிறந்த போதே யல்லலுறவீர் என்பார் தந்தைதாயை யிழந்தலமுறுமின் எனவுங் கூறினர்.

பாவத்தையனையமைந்தர்பன்னிருபேருமஞ்சிச்
சாவத்தையேற்றெப்போதுதணிவதிச்சாபமென்ன
வாவத்தையகற்றுமீசனருட்கழனினைந்துவந்த
கோவத்தைமுனிவுசெய்தக்கடவுளர்குரவன்கூறும்.

(இ-ள்.) பாவத்தை அனைய மைந்தர் பன்னிரு பேரும் அஞ்சி - பாவமுருவெடுத்ததை யொத்த பன்னிரண்டுமைந்தரும் அச்சங்கொண்டு, சாவத்தை ஏற்று - அருளிய சாபத்தை மேற்கொண்டு, எப்போது இசாபம் தணிவது என்ன - எக்காலையி லிந்தச்சாபம் ஒழிவதென்று குறையிரக்க, ஆவத்தை அகற்றும் ஈசன் அருள் கழல் நினைந்து - ஆன்மாக்களுக்கு வருமிடையூற்றை யொழித்தருளுஞ் சிவபெருமானது கருணைவடிவாகியதிருவடியை நினைந்து, வந்த கோவத்தை முனிவு செய்து அக்கடவுளர் குரவன் கூறும் - தமக்குவந்த சினத்தை வெறுத்து அத்தேவகுருவாகிய பிரகஸ்பதி கூறுகின்றார்.

Koviloor Digital Library

தாய்செய்த செய்கையால் வருக்கெடுதி யின்னதென முன்னரறியும் உணர் வினரல்லரதலால் அஞ்சியெனவும், அவர்களறியாமையி னியல்பை யுணர்ந்தமையால் வந்தகோபத்தை முனிவுசெய்து எனவும், ஆன்மாக்க ளுய்தற்பொருட்டுக்கொண்டருளிய திருக்கோலத்திருவுறுப்புகள் அருள்வடிவாதலால் அருட்கழல் எனவுங் கூறினர். (௮)

என்னையாளுடையகூடலேகநாயகனேயுங்கட்
கன்னையாய்முலைதந்தாவியளித்துமேலமைச்சராக்கிப்
பின்னையானந்தவீடுதருமெனப்பெண்ணோர்பாகன்
றன்னையாதரித்தோன்சொன்னான்பன்னிருதநயர்தாமும்.

(இ-ள்.) என்னை ஆளுடைய கூடல் ஏக நாயகனே - என்னை யாளாகவுடைய திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளே, உங்கட்கு அன்னையாய் முலை தந்து ஆவி அளித்து - (தாயிழந்தலமரும்) உங்களுக்குத் தாயாய் வந்து முலை கொடுத்துப் பாலித்து, மேல் அமைச்சர் ஆக்கி - சிலநாள் கழிந்த பின்னர் உங்களைப் பாண்டியனுக்கு மந்திரிகளாக்கி, பின்னை ஆனந்த வீடு தரும் என - பின்பு சிவகதி தந்தருளுமென்று, பெண் ஓர் பாகன் தன்னை ஆதரித்தோன் சொன்னான் - உமாதேவியை யோர் பாலுடைய அக்கடவுளை முதல்வனென்று பற்றிய பிரகஸ்பதி யருளினர், பன்னிரு தநயர் தாமும் - பன்னிரண்டு மைந்தரும்.

அவனையன்றி வேறு முதல்வரின்மையால் ஏகநாயகன் என்றார். (௯)

தொன்மைசால்குருவிருந்ததுறையதன்புறத்தவான
பன்மைசால்கானவாழ்க்கைப்பன்றிகட்கரசாய்வைகுந்
தன்மைசாறனியேனத்தின்றன்பெடைவயிற்றிற்சென்று
வன்மைசால்குருளையாகிப்பிறந்தனர்வழக்கான்மன்னோ.

(இ-ள்.) தொன்மை சால் குருவிருந்த துறை யதன் புறத்த ஆன - தொன்றுதொட்டுள்ள குருவிருந்த துறையின் புறத்திலுள்ள, பன்மை சால் கானம் வாழ்க்கை பன்றி கட்கு - பலவகைப்பட்ட காட்டில் வாழும் பன்றிகளுக்கு, அரசு ஆய் வைகும் தன்மை சால் தனி ஏனத்தின் தன்பெடை வயிற்றில் சென்று - வேந்தாய் நிலைபெற்ற தன்மைமிக்க ஒப்பில்லாத ஆண்பன்றியின் உயிர்த்துணையாகிய பெண் பன்றியின் கருப்பத்திலடைந்து, வன்மை சால் குருளை ஆகி பிறந்தனர் - வன்மை மிக்க குட்டிகளாகி யன்றே பிறந்தார்கள், வழக்கால் - சாபமிடையீடுபடாதென்னும் வழக்கினால்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார்வெகுளி - கணமேயுங் காத்தலரிது" என்றுந் திருக்குறளாலுணர்க. கானவாழ்க்கை இடைப்பிறவரல். (௧௦)

ஆனநாளொருநாளெல்லையரசருக்கரசனான
மீனவன்மதுரைநீங்கிமேற்றிசைக்கானநோக்கி
மானமாவேட்டஞ்செய்வான்மத்தமாவுகைத்துத்தண்டாச்
சேனைதன்புறம்பேமொய்ப்பச்செல்கின்றான்செல்லுமெல்லை.

(இ-ள்.) ஆன நாள் - இவ்வாறான காலையில், ஒருநாள் எல்லை அரசருக்கு அரசன் ஆன மீனவன் - ஒருநாளெல்லையில் அரசர்க்கரசனாகிய இராசராசபாண்டியன், மதுரை நீங்கி - மதுரையினின்றும் நீங்கி, மேற்றிசை கான நோக்கி - அம்மதுரைக்கு

Koviloor Digital Library

மேற்றிசையிலுள்ள அடவியை நோக்கி, மானம் மா வேட்டம் செய்வான் - பெரிய மிருகவேட்ட மாடுதற்பொருட்டு, மத்தம் மா உகைத்து - மதமயக்கத்தையுடைய யானையைச் செலுத்தி, தண்டா சேனை தன் புறம்பே மொய்ப்ப செல்கின்றான்-நீங்காத சேனைகள் தன்புறத்தே சூழ்ந்துவரச் செல்லுவானாயினான், செல்லும் எல்லை-அவ்வாறு செல்லுமளவில்.

மாவழங்கிடங்கடேரவல்லதோல்வன்காலொற்றர்
பாவடிச்சுவடுபற்றிப்படர்ந்துநாறழல்புலால்வாய்த்
தீவிழியுழுவையேனந்திரிமருப்பிரலைபுல்வாய்
மேவிடனறிந்துவல்லேவிரைந்துவந்தெதிரேசொன்னார்.

(இ-ள்.) மா வழங்கு இடங்கள் தேர வல்ல தோல்வன் கால் ஒற்றர் - மிருகங்கள் சஞ்சரிக்கும் இடங்களை யுணரவல்ல தொடுதோல் விக்கிய முருட்டுக்கால்களையுடைய தூதுவர்கள், பாவடி சுவடு பற்றி படர்ந்து - யானையின் காலடிச் சுவட்டைப்பற்றிப் பின்சென்று, நாறு அழல் புலால் வாய் தீவிழி உழுவை - காரணமின்றித் தோன்றுங் கோபாக்கினியையும் புலால்நாறும் வாயையும் தீக்கொப்புளிக்குங் கண்களையுமுடைய புலிகளும், ஏனம் திரி மருப்பு இரலை புல் வாய் மேவு இடன் அறிந்து-பன்றிகளும் திருகிய கொம்புகளையுடைய கலைமானும் மானும் இருக்கும் இடங்களையுணர்ந்து, வல்லே விரைந்து வந்து எதிரே சொன்னார் - கடுக விரைந்துவந்து பாண்டியன் முன்பு கூறினார்கள்.

அழல் கோபத்தின்மேல் நிற்றலால் உவமையாகுபெயர்.　　(சஉ)

மறத்துறைவேட்டமாக்கள்வல்லைபோயொடியெறிந்து
புறத்துவார்வலைகள்போக்கிநாயதன்புறம்புபோர்ப்ப
நிறைத்துமாவொதுக்கியீட்டும்படைஞராய்நிரைசூழ்நிற்ப
வறத்துறைமாறாக்கோலானானைமேல்கொண்டுநிற்ப.

(இ-ள்.) மறம் துறை வேட்ட மாக்கள் - கொலைத்தொழிலின் வழியே சென்ற வேட்டமாடுதலில் வல்லோர், வல்லை போய்-விரைந்து சென்று, ஒடியெறிந்து-ஒடிவீசி, புறத்து வார் வலைகள் போக்கி - புறம்பே வாராலாகிய வலைகளைக்கட்டி, நாய் அதன் புறம்பு போர்ப்ப நிறைத்து - நாய்கள் வலையின் புறம்பே சூழ்ந்துநிற்க அவற்றை நிறைத்து, மா ஒதுக்கி ஈட்டும் படைஞர் ஆய் நிரை சூழ் நிற்ப - மிருகங்களையொதுக்கி யோரிடத்தில் கூட்டும் சேனைவீராய் வரிசைபடச் சூழ்ந்து நிற்கவும், அறம் துறை மாறாத கோலான் ஆனைமேல் கொண்டு நிற்ப-மநுநூல்வழியிற் றிறம்பாத செங்கோலையுடைய இராசராசபாண்டியன் ஆனைமேலேறி யொருபால் நிற்கவும்.

ஒடியெறிதல் மூலைபோக்குதல். அறம் தானியாகுபெயராய் மநுநூல்மேல் நின்றது.　　(சங)

சில்லரிதுடிகோடெங்குஞ்செவிடுறச்சிலையாநிற்பப்
பல்வகைப்பார்வைகாட்டிப்பயில்விளியிசையாநிற்ப
வல்லியமிரலைமையன்மாவினம்வெருளாநிற்ப
வில்விறவலித்துவாங்கிமீளிவெங்கணைகடொத்தார்.

(இ-ள்.) சில்லரி துடி கோடு எங்கும் செவிடு உற சிலையா நிற்ப-சில்லரியென்னும் ஒருவகை வாச்சியமும் உடுக்கையும் கொம்பும் எவ்விடத்துஞ் செவிடுபட

Koviloor Digital Library

ஒலிக்காநிற்கவும், பல்வகை பார்வை காட்டி பயில் விளி இசையா நிற்ப - பலவகைப்பட்ட பார்வைகளையுங்காட்டிச் சைகைவிளி யொருபாலிசைக்கா நிற்கவும், வல்லியம் இரலை மையல் மான் இனம் வெருளா நிற்ப - புலியும் கலைமானும் மயக்கத்தையுடைய மான்கூட்டமுமஞ்சு, வில் இற வலித்து வாங்கி மீளி வெங்கணைகள் தூர்த்தார் - வில்முறியும்வண்ண மண்டிலாகாரமாக வளைத்து வெற்றியிக்க கொடிய பாணங்களைத் தூர்த்தனர்கள்.

புலிபோலப் புலியையும் மான்போல மானையுக்காட்டல் பார்வைகாட்டல். அம்மிருகங்கள் தம்முளழைக்குஞ் சைகைபோல விளித்தல் பயில்விளி. சில்லரி - ஒலிக்கும் ஒருகட்பறை. சில் ஒலி. (௧௪)

கலிநிலைத்துறை.

செறிந்தமான்முறிந்ததாள்சிதைந்தசென்னிசெம்புனற்
பறிந்தவாறுவெண்ணிணம்பரிந்துவிசுகையிரு
மறிந்தவேழுயர்ந்தவேழமாண்டவெண்குவல்லியம்
பிறிந்தவாவியோடும்வாய்பிளந்தவாய்விழுந்தவே.

(இ-ள்.) செறிந்த மான் - நெருங்கிய மான்கள், தாள் முறிந்த சென்னி சிதைந்த - கால்கள் முறிந்து தலையறுபட்டு, செம்புனல் ஆறு பறிந்த - உதிரவெள்ளம் பெருகின, எழ் உயர்ந்த வேழம் - எழுமுழமுயர்ந்த யானைகள் வெள் நிணம் பரிந்து - வெள்ளிய நிணங்களைச்சிந்தி, விசு கையிரு - வீசுங் துதிக்கையற்று, மறிந்த மாண்ட - மடங்கி வீழ்ந்திறந்தன, எண்கு - கரடிகளும், வல்லியம் - புலிகளும், பிறிந்த ஆவியோடும் - நீங்கிய பிராணனோடும், வாய் பிளந்த ஆய் விழுந்த - வாய் பிளந்து விழுந்தன.

முறிந்த, சிதைந்த, மறிந்த முற்றெச்சங்கள். எழுமுழமுயர்தல் "காலோர் நான்குந்தனிக்கையுங்கோசமும்-வாலுறுப்போடேழு மாநிலந்தோயப் - பாலுஞ்சங்கும்போலுங்கோறுபிரத-காலிரும் ஞான்றவொருதனிக்கையிறும்-வாயிறும்வாலிறு மருப்பிறுக்கோறவ்-வல்லதமுன்றுமுழச்சுற்றுமுடைத்தாகி-எழுமுழமுயர்ந்தொன்பதுமுழநீண்டதும்" எனவருஞ் சூத்திரத்தாலறிக. (௧௫)

தொட்டபுற்கிழங்குவாடைதொட்விரைந்துகண்ணியுட்
பட்டவும்பொறித்துவைத்தபார்வைவீழ்ந்தடுத்தவுங்
கட்டியிட்டவலைபிழைத்துஞமலிகௌவநின்றவு
மட்டிலாதவொட்டிநின்றமள்ளர்வேலின்மாய்ந்தவே.

(இ-ள்.) தொட்ட புல் கிழங்கு வாடை தொட - கல்லி யெடுத்துவைத்த புல்லின் கிழங்குவின் வாடை வீச, விரைந்து கண்ணி உட் பட்டவும் - விரைந்தோடிக் கௌவி வலையிற் பட்டனவும், பொறித்து வைத்த பார்வை வீழ்ந்து அடுத்தவும் - எழுதிநாட்டிய பார்வையை நோக்கி விரும்பிவந்தடுத்தனவும், கட்டி இட்ட வலை பிழைத்து ஞமலி கௌவ நின்றவும் - கட்டிய வலையினின்று தப்பி நாய்கள் கௌவ நின்றனவுமாகிய, மட்டிலாத-அளவில்லாதனவாகிய மிருகங்கள், ஒட்டி நின்ற மள்ளர் வேலின் மாய்ந்த - பதுங்கிநின்ற வேட்டமாக்கள் வேலினாலிறந்தன.

பார்வை வலைகளைப்போலப் புற்கிழங்குகளும் மிருகங் கருவியாதலால் தொட்டபுற்கிழங்குவாடை தொட என்றார். பட்ட, அடுத்த, நின்ற என்று முற்றுகள்பெயரெச்சத்தின்மேல் நின்றன. (௧௬)

பட்டமாவொழிந்துநின்றமறவிலங்குபல்சில
வட்டமாவளைந்துடுத்தவலையினுந்தியப்புறத்
தெட்டிநின்றகொலைஞர்மேலெதிர்ந்துமீளவெயில்வளைந்
தொட்டிமுனைமலையுமாப்பொறிக்கணங்களொத்தவே.

(இ-ள்.) பட்டமா ஒழிந்து - இறந்த மிருகங்களொழிய, நின்ற மறம் விலங்கு பல் சில - பிழைத்துநின்ற மிருகங்களுள் பல மிருகங்களும் சில மிருகங்களும், வட்டம் ஆக வளைந்து உடுத்த வலையின் உந்தி - மண்டிலமாக வளைந்து சூழ்ந்த வலையினின்றுந் தாவி, அப்புறத்து எட்டி நின்ற கொலைஞர் மேல் எதிர்ந்து மீள-வலையின் அப்புறத்தில் அடுத்துநின்ற வேட்டுவமாக்கள் மேற்பாய்ந்து மீளுதல், எயில் வளைந்து ஒட்டி முனை-மதிலை முற்றுகைசெய்து போர்செய்ய நின்ற வீரர்களோடு, மலையும் மா பொறிக் கணங்கள் ஒத்த - போர்செய்ய வமைத்த இயந்திரங்களாகிய மிருகங்களை யொத்திருந்தன.

ஒழிந்து செயவெனெச்சத்திரிபு. (௪௭)

வல்லியந்தொலைத்தகன்றுமான்றொலைத்தகன்றுவெங்
கல்லியங்குமெண்கினைத்தொலைத்தகன்றுகயவுவாய்
வெல்லிபந்தொலைத்துமள்ளர்விட்டவாளியிங்ஙனஞ்
சொல்லினுங்கடிந்துபோய்த்துணித்தமாவளப்பில.

(இ-ள்.) மள்ளர் விட்ட வாளி - சேனாவீரர்களெய்த அம்புகள், சொல்லினும் கடிந்துபோய் - (முனிவர்) சாபத்தினும் விரைந்துசென்று, வல்லியம் தொலைத்து அகன்று - புலிகளைத் தொலைத்துருவி, மான் தொலைத்து அகன்று - மானினங்களைத் தொலைத்துருவி, வெம் கல் இயங்கும் எண்கினை தொலைத்து அகன்று - வெப்பம்வாய்ந்த மலைகளிற் சஞ்சரிக்கும் கரடிகளைத்தொலைத்துருவி, கயவு வாய் வெல் இபம் தொலைத்து - பெரியவாயையுடைய வெற்றியையுடைய யானைமேற்றைத்து, இங்ஙனம் துணித்தமா அளப்பில - இவ்வாறு துண்டுபடுத்திய மிருகங்கள் அளவில்லாதன.

முனிவர்கள் சாபம் சபிக்கப்பட்டவர்கள்மேல் அன்றே செல்லுதலின் சொல்லினும் கடிந்தபோய் என்றார். இன்னுருபு எல்லைப்பொருள்மேல் நின்றது. (௪௮)

மடுத்தவாளியிற்பிழைத்துவலையைமுட்டியப்புறந்
தடுத்தமானைவெளவிநாயலைத்துநின்றவாதிநா
ளுடுத்தபாசவலையினின்றுமுய்குவாரையொய்யெனத்
தடுத்தவாவிளைத்துநின்றதையலாரையொத்தவே.

இ-ள். மடுத்த வாளியின் பிழைத்து - பாய்ந்த அம்பினின்றுந் தப்பி, வலையைமுட்டி அப்புறத்து அடுத்தமானை - கட்டியவலையினின்றுந் தாண்டி யப்புறஞ்சென்ற மானினை, நாய் வெளவி அலைத்துநின்ற - நாய்கள் கவ்வி யப்புறஞ்செல்லவொட்டாமல் வருத்திநின்றன, ஆதி நாள் உடுத்த பாசம் வலையினின்றும் உய்குவாரை - முன்னாளிலே விடாது தொடர்ந்த ஆணவமலமாகிய வலையினின்றுந் தப்பிப்பிழைக்க முயலும் பெரியோர்களை, ஒய்யெனதடுத்து அவாவிளைத்து நின்ற தையலாரை ஒத்த - விரைந்து செல்லவொட்டாமல் தடுத்து (ஆடையணிமுதலியவற்றால்) முன்னின்று ஆசையை விளைவிக்கும் பெண்கள் செயலை யொத்திருந்தன.

Koviloor Digital Library

ப்பிபசப்பாசம் என்ற மூப்பொருளும் அநாதியாதலால் ஆதிகள் எனவும், பசவேபேரற்றித்த சிற்றலால் உடைத்தபாசம் எனவும், போகநுகர்ச்சிக்கு வினைமு தலால் வயிவெனவுங் கூறினர் "ஒன்றதாயநேசத்தி யுடையதாயுடனுபாதி - அ ன்றதாயான்மாவின்ற னறிவொடுதொழில்யார்த்து - நின்றுபோர்திருவத்தைநிக ந்திச் செம்மினிற்களிம்பேய்ந் - தென்றமஞ்ஞானக்காட்டு மாணவமியைந்ததின் றே" எனவரும் அதனால் உணர்க. (௧௯)

மதியைநேர்வகிர்ந்தகோளியனையவான்மருப்புவெங்
கதியவேழமீதுதாதுகாலுநீலமுகையினி
லுதியவேலுழைந்தசெம்புனூழில்வீழுமுதிரநீர்
முதியகானவரையின்மீதுமொய்த்தநிரையையொத்தவே.

(இ-ள்.) மதியை நேர் வகிர்ந்து கோளியது அனையவால் மருப்பு - சந்திரனை ச் சரிபாதியாகப் பிளந்து கொளியதையொத்த வெள்ளியகோம்புகளையுடைய, வெ ம் கதிய வேழம் மீது - வெய்ய நடையையுடைய யானையின்மேல், தாது காலும் நீ லம் முகையினில் உதிய வேல்தமைழந்த தூழில் செம்புன் - மகரந்தத்தைச்சிந்தும் நீ லோற்பலத்தினரும்புபோல் விடம்பூசிய நனிவையுடைய வேல்தைத்தலால் அந்த யானையின் செவந்த சதைகளினின்றும், வீழும் உதிர நீர்-வீழாநின்ற உதிரவெள்ள மானது, முதிய கானம் வரையின்மீது மொய்த்த நிரை ஒத்த - பெரியகாட்டடர்ந்த மலையின்மேல் நெருங்கிய நிரைநிரையொத்திருந்தன.

உழைந்தகாரணப்பொருளில்வந்த பெயரெச்சமாதலால் தைத்தலால் என்று ம். நீலமுகையினில்நதிய என்பது பண்புபற்றிய வுவமையாதலால் விடம்பூசிய என ப் பொருளின்கணுத்தை விரித்தாம். தூழில்பானை. (௨0)

மன்னரோதைதுடியினோசைவயிரினோசைவாளிபோய்த்
தன்னவிழ்விலங்கினோசைதப்பியோடுமானின்மேற்
றுன்னுநாய்குரைக்குமோசைகானமூடுதொக்குவா
னுன்னுலாயுடன்றொலிக்குமுருமினோசைபுரையுமால்.

(இ-ள்.) மன்னர் ஓதை - வீரருடைய வீரகோஷமும், துடியின் ஓசை வயிரி ன் ஓசை - உடுக்கையினொலியும் ஊதுகொம்பின் முழக்கமும், வாளிபோய்தள்ள வீ ழ் விலங்கின் ஓசை - அம்புகள்சென்று தாக்கவீழு மிருகங்களினாரவாரமும், தப்பி ஓடும் மானின்மேல் துன்னும் நாய் குரைக்கும் ஓசை (வலையினின்றும்) தப்பியோ டிய மான்களின்மேல் தாவிச்செல்லும் நாய்கள் குரைக்கின்ற குரைப்பும், கானம் மூடு தொக்கு - காட்டில் ஒரு சேரத்திரண்டு, வான் உள் உலாய் உடன்று ஒலிக்கு ம் உருமின் ஓசை புரையும்-மேகத்திற்றோன்றி மிக்கொலிக்கும் இடியினோசையை யொத்திருக்கும். (௨௧)

இன்னவேறுபல்விலங்கெலாமலைத்திலங்குவேன்
மன்னரேறுதென்னர்கோமகன்குடக்கினேகுவா
னன்னபோதொராளைமேனவரசிருக்குமடவிவாய்
முன்னரோடிவந்துநின் றுவந்தசெய்திமொழியுமால்.

(இ-ள்.) இன்னப் வேறு விலங்கு எல்லாம் அலைத்து - இப்படி பல வேறு வகைப்பட்ட மிருகங்களையெல்லாம் வருத்தி, இலங்கு வேல் மன்னர் ஏறு தென்னர் கோமகன் - விளக்கும் வேலேந்திய அரசர்களுள் ஆண்சிங்கம்போன்ற இராசா ஈ

Koviloor Digital Library

ஜபாண்டியன், குடக்கின் எகுவான் (அங்குநின்றும்) மேற்றிசைநோக்கிச்செல்லுகின்றவனாயினான், அன்னபோது — அப்போது, ஓர் ஏனம் - ஒருபன்றியானது, ஏனம் அரசு இருக்கும் அடவி வாய் முன்னர் ஓடி வந்து நின்று - பன்றி வேந்திருக்கும்காட்டில் முற்பட ஓடிவந்து (ஒருபுடை ஒதுங்கி) நின்று, வந்த செய்தி மொழியும் - தான்வந்தசெய்தியைக் கூறுநிற்கும். (உஉ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எங்களுக்கரசேகேட்டியிங்குளவிருகமெல்லாந்
திங்களுக்கரசன்கொன்றுவருகின்றானென்றுசெப்ப
வெங்களிப்படைந்துபன்றிவேந்தனுமடுபோராற்றச்
சங்கையுற்றெழுந்துபோவான்றன்னுயிர்ப்பெடையைநோக்கா.

(இ-ள்.) எங்களுக்கு அரசே கேட்டி - எங்களுக்கரசனே கேட்பாய், இங்கு உள்ள விருகம் எல்லாம் - இக்காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம், திங்களுக்கு அரசன்கொன்று வருகின்றான் என்று செப்ப - இராசராசபாண்டியன் கொலைசெய்து வருகின்றானென்றுகூற, பன்றி வேந்தனும் வெம்களிப்பு அடைந்து - பன்றியரசனும் வீரச்செருக்கடைந்து, அடுபோர் ஆற்ற சங்கை உற்று எழுந்து போவான் - கொல்லும் போர்த்தொழில்செய்ய மேற்கொண்டெழுந்து போகின்றவன், தன் உயிர்பெடையை நோக்கா - தனது உயிர்போன்ற பெண்பன்றியைப்பார்த்து.

தன்னொடு போர்செய்யும் வீரரை யிதுகாறும் போர்செய்தற்குப் பெறாதிருந்த கவலை மிக்குடையதென்பார் கொன்று வருகின்றானென்று செப்பவெங்களிப்படைந்து எனவும், போர்பெற்றமையா லக்கவலையொழிந்ததென்பார் அடுபோராற்றச்சங்கையுற்றெழுந்து எனவுங் கூறினார். (உ௩)

இன்றுபாண்டியனைநேரிட்டிருஞ்சமராடிவென்று
வன்றிறல்வாகையோடுவருகுவனேயோவன்றிப்
பொன்றுவனேயோநீயுன்புதல்வரைப்பாதுகாத்து
நன்றிவணிருத்தியென்னநங்கைப்பேடின்னகூறும்.

(இ-ள்.) இன்று பாண்டியனை நேரிட்டு இரும் சமராடி வன்திறல் வென்று வாகையோடு வருகுவனேயோ - இப்பொழுது பாண்டியனை யெதிர்ந்துப் பெரிய போர்செய்து வலிய வீரத்தால் அவனைவென்று வெற்றிமாலைபுனைந்து வருவேனோ, அன்றி பொன்றுவனேயோ - இதுவன்றி யவனாலிறப்பேனோ, நீ உன் புதல்வரை பாது காத்து இவண் நன்று இருத்தி என்ன - நீ உன்மக்களைப் பாதுகாத்துச் சுகமாயிருப்பாயென்றுகூற, நங்கை பேடு இன்ன கூறும் - சிறந்த பெண்பன்றி யிதனைக் கூறுநிற்கும். (உ௪)

ஆவியங்கேகவிந்தவாகமிங்கிருப்பதேயிப்
பாவியோமேனாளிந்தப்பறழினைவகுத்ததெய்வ
மாவமராடிவென்றுவருதியேல்வருவேனன்றி
நீவிளிந்திடத்துமாய்வேனிமறலுக்குஞ்செயல்வேறுண்டோ.

(இ-ள்.) ஆவி அங்கு ஏக இந்த ஆகம் இங்கு இருப்பதே - எனது பிராணனங்குப் போர்க்குச்செல்ல இந்தச்சரீரம் இவ்விடத்துச்சுகமாயிருப்பதும் வழக்கோ, மேல் நாள் இ பாவியோம் இந்த பறழினை தெய்வம் வகுத்தது - முற்பிறப்பில் இந்தப் பாவமிகுதியையுடைய வெமக்கு இந்தக் குட்டிகளைத் தெய்வந்தந்தது, மா அம

Koviloor Digital Library

நடி வென்று வருதியேல் வருவேன் - (பாண்டியனோடு) பெரியபோர்செய்து வரு வாயாகில் வருவேன், அன்றி - அதுவன்றி, நீ விளிந்த இடத்து மாய்வேன் - நீ இறந்த இடத்தி லிறப்பேன், நிழலுக்கும் வேறுசெயல் உண்டோ - உனது தேகநிழல் போல விடாது பின்செல்லும் எனக்கும் வேறு செயலுளதோ (என்று கூற.)

தெய்வம் என்றது பழவினையை. கற்புடையாட்குக் கணவனியக்கி லியக்கமும், அவனியக்க மொழியின் தனக்கு இயக்கமின்மையு முடைமையால் ஆவியக்கே லிந்தவாக மிங்கிருப்பதே யெனவும், கணவன் பின்செல்லுதற்கோர் தடையும் ஈங்கட்பேற்று லின்பநுகர்த லின்மையுமுடைமையால் இப்பாவியோமேனுளிந்தப்பறழினைவகுத்ததெய்வம் எனவும், தேகம் அழிந்தவிடத்துத் தேகசாயையும் ஒருசேர அழிதல் இயல்பாதலால் நிழலுக்குஞ் செயல் வேறுண்டோ எனவுங் கூறியது. வகுத்தது தவ்வி தொகுத்தல். (௨௫)

போதுகமெழுகவென்றுப்பொருக்கெனவெழுந்துநீலத்
தாதுறழேனப்பாட்டிதன்புடைதழுவிச்செல்லும்
பேதுறுபறழைநாக்கிப்பின்றொடர்ந்தணைந்துசெல்லக்
காதெயிற்றெறுழிவேந்தன்காலெனநடந்தானன்றே.

(இ-ள்.) போதுகம் எழுக என்று - போவோம் எழக்கடவாயென்று பன்றியரசன் கூற, நீலம் தாது உறழ் ஏனம் பாட்டி - நீலோற்பலத்தின் மகரந்தத்தையொத்த கருநிறம்வாய்ந்த பெண்பன்றி, பொருக்கென எழுந்து - (தன்கணவனுக்குமுன் போருக்கு) விரைந்தெழுந்து, தன் புடை தழுவி செல்லும் பேது உறு பறழை நாக்கி - தனது பக்கலில் தழுவிச்செல்லு மயக்கமிக்க குட்டிகளைத்தள்ளி, பின் தொடர்ந்து அணைந்து செல்ல - பின்தொடர்ந்து நிழல்போலவிடாது தொடர, காது எயிறு எறுழி வேந்தன் - கொல்லும் வக்கிரதந்தங்களையுடைய அப்பன்றியரசன், கால் என சென்றான் - காற்றைப்போலப் போர்க்குவிரைந்து சென்றனன்.

வீரரும் அவர்மனைவிமார் வீரத்தைப் பாதுகாத்தலையே கண்ணாகவுடைமையால் பொருக்கெனவெழுந்து என்றார் "செம்புகாட்டியகண்ணிணைபாலெனத்தெளிந்தீர் - வெம்புகாட்டிடைநமைதொறும்வெரிநறப்பாய்ந்த - கொம்புகாட்டுதிரோதடமார்பிடைக்குளித்த - அம்புகாட்டுதிரோகுலமங்கையர்க்கம்மா" எனவருமதுவால் உணர்க. (௨௬)

பல்வகைச்சாதியுள்ளபன்றியின்கணங்களெல்லாம்
வெல்படைத்தறுகட்சேனைவீரராய்முன்புசெல்லச்
செல்லெனத்தெழித்துச்செங்கட்டீயுகமானமென்னு
மல்லல்வாம்புரவிமேல்கொண்டெழுந்தனன்வராகவீரன்.

(இ-ள்.) பல் வகை சாதி உள்ள பன்றியின் கணங்கள் எல்லாம் - பலவகைப்பட்ட சாதியாயுள்ள பன்றிக்கூட்டங்களெல்லாம், வெல் படை தறுகண் சேனை வீரர் ஆய் முன்பு செல்ல - வெல்லும் ஆயுதங்களை யேந்திய அஞ்சாமையையுடைய சேனைவீரராய் முன்னேசெல்ல, செல் என தெழித்து - மேகம்போலக் கோஷித்து, செம் கண் தீ உக - சிவந்த கண்களினின்றும் கோபாக்கினி சிந்த, வராகம் வீரன் - பன்றிகளுள் மிக்க வீரம்வாய்ந்த அரசன், மானம் என்னும் மல்லல் வாம் புரவி மேல் கொண்டு எழுந்தனன் - மானமாகிய மிகவுந் தாவுங் குதிரையின்மேற்கொண்டெழுந்தான்.

மானம் போரிற்பின் வாங்குதல் நேரிடின் உயிர்வாழாமை. (௨௭)

Koviloor Digital Library

முற்படுதூசியாகநடக்கின்றமுரட்காற்பன்றி
மற்படுசேனைநேரேவருகின்றமன்னர்மன்னன்
வெற்படுதடந்தோள்வன்றாள்வீரர்மேற்சீறிச்செல்லப்
பிற்படவொதுங்கிவீரர்பெய்தனரப்புமாரி.

(இ-ள்.) முன் படு தூசி யாக நடக்கின்ற - முன்னணியாகச் செல்லுகின்ற முரண் கால் பன்றி - முருட்டுக்கால்களையுடைய பன்றிகள், மல் படு சேனை நேரே வருகின்ற மன்னர் மன்னன் - மற்போரில் மிக்க தமது சேனைக்கு நேரே வருகின்ற இராஜராஜபாண்டியனுடைய, வெற்பு அடு தட தோள்வன் தாள் வீரர்மேல் சீறிசெல்ல - மலையைவென்ற பெரியதோளையு முருட்டுக்கால்களையுமுடைய சேனைவீரர்கள் மேல் சீறிப்பாய, வீரர்பின்பட ஒதுங்கி அப்புமாரிபெய்தனர் - அவ்வீரர்கள் பின்னே சிறிதொதுங்கிநின்று சரவருஷத்தைச் சொரிந்தார்கள். (௨௮)

சொரிந்தனசோரிவெள்ளஞ்சொரிந்தனவீழ்ந்தயாக்கை
சரிந்தனகுடர்களென்புதகர்ந்தனவழும்புமூளை
பரிந்தனசேனங்காகம்படர்ந்தனவுயிருமெய்யும்
பிரிந்தனவேனநின்றபிறைமருப்பேனவீரர்.

(இ-ள்.) ஏனம் சொரிந்தன சோரிவெள்ளம் சொரிந்தன-பாய்ந்தபன்றிகளுள் சில வருஷிக்கு மேகங்களைப்போல உதிரவெள்ளத்தைச்சிந்தின, யாக்கைவீழ்ந்த சில உடலறுபட்டுவீழ்ந்தன, குடர்கள்சரிந்தன - சில குடல்கள் சரிந்தன, என்புதகர்ந்தன - சில எலும்புகள் நுறுங்கின, வழும்பு மூளை பரிந்தன - சில வழும்பும் மூளைகளும் கசிந்தன, சேனம் காகம் படர்ந்தன - பருந்துகளுங் காகங்களும் பரவின, உயிரும் மெய்யும்பிரிந்தன - சில உயிரும் உடலும் தம்மினின்று நீங்கின, நின்ற பிறை மருப்பு ஏன வீரர்-உயிர்பிழைத்துநின்ற பிறையையொத்த வக்கிரதந்தங்களையுடைய ஏனப்பன்றி வீரர்கள்.

சொரிந்தன என்னும் வினைமுற்றுப் பெயராய் வினைமுதற் பொருள்மேல் நின்றது. (௨௯)

பதைத்தனரெரியிற்சீறிப்பஞ்சவன்படைமேற்பாய்ந்து
சிதைத்தனர்சிலரைத்தள்ளிச்செம்புனல்வாயிற்சோர
வுதைத்தனர்சிலரைவீட்டியுரம்புதைபடக்கோடூன்றி
வதைத்தனர்சிலரைநேரேவகிர்ந்தனர்சிலரைமாதோ

(இ-ள்.) பதைத்தனர் எரியில் சீறி - பதைபதைத்துத் தீப்போலக்கோபித்து, பஞ்சவன் படைமேல் பாய்ந்து சிலரை சிதைத்தனர் - பாண்டியனுடைய சேனைவீரர்கள்மேற் பாய்ந்து சில வீரர்களை யழித்தார்கள், செம்புனல் வாயில் சோர சிலரை தள்ளி உதைத்தனர் – உதிரவெள்ளம் வாயினின்றுஞ் சோரச் சிலவீரர்களைக் கீழே தள்ளி யுதைத்தார்கள், சிலரை உரம் புதைபட கோடு ஊன்றி வீட்டி வதைத்தனர்- சில வீரர்களை மார்புகளிற் புதைபடத் தமது வக்கிரதந்தங்களை யழுத்தி வதைசெய்தார்கள், சிலரை நேரே வகிர்ந்தனர் - சிலரை நேரே பிளந்தார்கள். (௩௦)

தாள்சிதைந்தாருஞ்சில்லோர்தலைசிதைந்தாருஞ்சில்லோர்
தோள்சிதைந்தாருஞ்சில்லோர்தொடைசிதைந்தாருஞ்சில்லோர்
வாள்சிதைந்தாருஞ்சில்லோர்வாயுறுத்தலரோன்வீட்டு
நாள்சிதைந்தாருஞ்சில்லோர்நராதிபன்சேனைவீரர்.

Koviloor Digital Library

(இ-ள்.) ராஜிபன் சேனைவீரர் - இராசராசபாண்டியனுடைய சேனைவீரர்களுள், தாள் சிதைந்தாரும் சில்லோர் - கால்முறிந்தவர்களும் சிலர், தலைசிதைந்தாரும் சில்லோர் - தலையறுபட்டு விழ்ந்தவரும் சிலர், தோள் சிதைந்தாரும் சில்லோர் - தோளறுபட்டு விழ்ந்தவரும் சிலர், தொடைசிதைந்தாரும் சில்லோர் - தொடையறுபட்டுவிழ்ந்தவருஞ்சிலர், வாள் சிதைந்தாரும் சில்லோர் - வாளையேந்திய கையறுபட்டு விழ்ந்தவரும் சிலர், வரையறுத்த அலரோன் இட்டும் நாள் சிதைந்தாரும் சில், லோர்-வரையறைசெய்த பிரமன் எழுதிய ஆயுள் நாளுலந்தவரும் சிலராயினார்கள்.

உயிர்ஒழிந்தவுடம்பை யுயர்திணைப்பொருள்மேல் வைத்துச் சிதைந்தார் எனக்கூறியது "படுமகன்கிடக்கைகாணூஉ - ஈன்றஞான்றினும் பெரிதுவந்தனளே" என்றாற்போல வந்தது. வாள் கைமேல் நின்றது விடாத ஆகுபெயர். (௩௧)

கண்டனர்கன்னிநாடுகாவலனமைச்சர்சிற்றங்
கொண்டனர்முசலநேமிகூற்றெனவிசியார்த்தார்
விண்டனர்மாண்டார்சேனைவீரருமனையவெல்லைப்
புண்டவழெயிற்றுவேங்கைப்புடைநின்றபேடைநோக்கா.

(இ-ள்.) கன்னி நாடு காவலன் அமைச்சர் கண்டனர் சிற்றம் கொண்டனர் - பாண்டிநாட்டரசனாகிய இராசராசபாண்டியனுடைய மந்திரிகள் கண்டு கோபங்கொண்டு, முசலம் நேமி கூற்று என வீசி ஆர்த்தார் - இருப்புலக்கைகளையுஞ் சக்கரங்களையும் எறிந்து கோஷித்தார்கள், சேனைவீரரும் விண்டனர் மாண்டார் - பன்றிச்சேனைவீரருமுயிர்விட்டிறந்தார்கள், அனைய எல்லை - அக்காலையில், புண் தவழ் எயிறு வேங்கை - (பகைவர்) தசையுலாவும் வக்கிரதந்தங்களை யுடையபன்றி யரசை, புடை நின்ற பேடு நோக்கா - பக்கலில் நின்ற பெண்பன்றி பார்த்து.

கண்டனர் கொண்டனர் விண்டனர் முற்றெச்சங்கள். (௩௨)

ஏவியசேனையெல்லாமிறந்தனவினிநாஞ்செய்ய
லாவதென்வாளாநாமுமழிவதிங்கென்னைதப்பிப்
போவதேகருமமென்றுபுகன்றதந்துணையைநோக்கிச்
சாவதையஞ்சாவேனத்தனியரசொன்றுசாற்றும்.

(இ-ள்.) ஏவிய சேனை எல்லாம் இறந்தன - (நாம் போர்முகத்து) விட்ட சேனைகளெல்லாம் மடிந்தன, இனி நாம் செயல் ஆவது என் - இனி நாம் செய்யக்கடவதென்ன, இங்கு வாளா நாமும் அழிவது என்னை - இவ்விடத்தில் பயனின்றி நாமு முயிர்விடுதலால் பலனென்னை, தப்பி போவதே கருமம் என்று புகன்றது - உயிர்தப்பிப் பிழைத்துப்போவதே காரியமென்று கூறியது, அ துணையை நோக்கி சாவதை அஞ்சாத ஏனம் தனி அரசு ஒன்று சாற்றும் - அந்தப் பெண்பன்றியைப் பார்த்து உயிர்விடுதலுக்கு அஞ்சாத ஒப்பற்ற பன்றி யரசு ஒரு செய்தி கூறுகிற்கும். (௩௩)

நன்னறிவுடையராகிநூலொடுபழகினாலும்
பெண்ணறிவென்பதெல்லாம்பேதைமைத்தாதலாலுன்
கன்னறிவுடைமைக்கேற்றகாரியமுரைத்தாய்மான
மென்னறிவுடையோர்க்கெல்லாமிருக்குமைத்தன்றேவிதால்.

(இ-ள்.) நன் அறிவு உடையர் ஆகி நூலொடு பழகினாலும் - நல்லறிய உணர்வுடையவராகி யாழ்ந்த நூலிற் பலகால் பயின்றும், பெண் அறிவு என்பது எல்லாம் - பெண்ணுணர்ச்சியென்று கூறுவதெல்லாம், பேதைமைத்து - பெரும்பேதை

Koviloor Digital Library

மையுடையது, ஆதலால் - ஆகையால், உன் கண் அறிவு உடைமைக்கு ஏற்ற காரியம் உரைத்தாய் - உன்பாலுள்ள உணர்ச்சியுடைமைக்குப் பொருந்திய செய்கையளவு கூறினாய், மானம் எண் அறிவுடையோர்க்கு எல்லாம் ஈது இழுக்கு உடைத்து அன்றோ - மானத்தைப் பெரும்பேறாகக்கருதும் உணர்வுடையவர்க்கெல்லாம் இச் செயல் குற்றமுடையதல்லவா.

சேனைமாயப்போரிற்பின்னிடுதல் போரில் மானமுடைய அரசனுக்குப் பெருந் தவறு என்றும்-மானம் எண்ணறிவுடையோர்க்கெல்லா மிழுக்குடைத்தன்றோ வீதாலென்றது "நுண்ணறிவுடையராய் நூலோடுபழகினும்-பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" என்னும் சூத்திரம் ஆசிரியவசனமாதலால் ஆசிரியவசனங்கூறல். கூறுவதெல்லாம் "உள்ளுவதெல்லாமுடனெய்தும்" என்றாற்போல வந்த ஒருமை பன்மை மயக்கம். (௩௪)

தூங்கிருள்வறுவாய்ச்சிங்கமிரண்டுறைதுறையின்மாடோர்
வாங்கிருமருப்புக்கேழல்வந்துநீர்பருகிமீளும்
வீங்கிருளுடற்காரேனமொன்றுறைதுறையில்வீரந்
தாங்கிருமடங்கனீர்க்குத்தலைப்படவஞ்சுமன்றே.

(இ-ள்.) தூங்கு இருள் வறுவாய் சிங்கம் இரண்டு உறை துறையின் மாடு - நிலைபெற்ற இரவில் ஈரம்புலர்ந்த வாயையுடைய இரண்டு சிங்கங்கள் பருகவசிக்கும் நீர்த்துறையின்கண், ஓர் வாங்கு இருமருப்பு கேழல் வந்து நீர் பருகி மீளும் - வளைந்த இரண்டு வக்கிரதந்தங்களையுடைய ஒருபன்றி வந்து நீர் பருகித்திரும்பும், வீங்கு இருள் உடல் கார் ஏனம் ஒன்று உறைதுறையில் - மிக்க கருநிறம் வாய்ந்த சரீரத்தையுடைய பெரிய பன்றி யொன்று பருகவசிக்கும் நீர்த்துறையில், வீரம் தாங்கு இருமடங்கல் - வீரமிக்க இரண்டு சிங்கங்கள், நீர்க்குதலைப்பட அஞ்சும் - தண்ணீர் பருகுதற்கு வர அஞ்சாநிற்கும்.

இரைதேடுங்காலம் இராப்போதாதலால் தூங்கிருள் எனவும், இரைதின்றபின் நீர் வேட்கைமிகுதலால் வறுவாய் எனவும், தனது குடிப்பிறந்தோர் வீரம் பெரிதெனலால் சிங்கமிரண்டுறை துறையின் மாடோர் வாங்கிருமருப்புக்கேழல் வந்து நீர்ப்ருகி மீளும் எனவும், ஏனமிருகங்களுக்கஞ்சாத வலிய சிங்கம் தனது குடிப்பிறந்தோர்க்கு அஞ்சியொழுகும் எனலால் வீங்கிருளுடற்காரேனமொன்றுறைதுறையில்வீரம் - தாங்கிருமடங்கனீர்க்குத்தலைப்படவஞ்சும் எனவுங் கூறிற்று. கருமை பெருமை. (௩௫)

அத்திடமரபின்வந்துபிறந்துளேனாதலாலே
கைத்திடுதாரான்வீரங்கவர்ந்திசைதிசையும்வானும்
வைத்திடவல்லேனன்றிமடிந்திடவல்லேனாயிற்
பொய்த்திடுமுடம்பேயன்றிப்புகழுடம்பழிவதுண்டோ.

(இ-ள்.) அ திடம் மரபின் வந்து பிறந்துள்ளேன் ஆதலால்-நான் அந்த விரம்வாய்ந்த குடிப்பிறப்பிற் பிறந்தவனாதலால், கைத்திடு தாரான் வீரம் கவர்ந்து - வேப்பமலர்மாலையை யணிந்த பாண்டியனுடைய வீரத்தைக் கொள்ளைகொண்டு, இசை திசையும் வானும் வைத்திட வல்லேன் - எனது பிரதாபத்தை யெட்டுத்திக்கிலும் விண்ணுலகத்திலும் நாட்டவல்லேன், அன்றி மடிந்திட வல்லேன் ஆயில்-அதுவன்றிப் போரிற் புறங்காட்டாது இறக்கவல்லேனாயில், பொய்த்திடும் உடம்பே

Koviloor Digital Library

அன்றி புகழ் உடம்பு அழிவது உண்டோ - நிலைபெறாத பூதவுடம்பு அழிவதல்லாமல் புகழுடம்பழிதலுளதோ (இல்லையென்றபடி.)

வைத்தல் கைத்தல் குணகுணிக்கு ஒற்றுமையுண்மையால் குணத்தைக் குணிமேலேற்றிக் கைத்திடுவாரான் என்றார். புகழுடம்பழியப் பூதவுடம்புவளர்த்தல் வினையோர்க்குரித்தென்பான் இசைத்தையும் வாளும் வைத்திடவல்லேலன் எனவும், பூதவுடம்பழியப் புகழுடம்புவளர்த்தல் தனக்கே யுரித்தென்பான் மடிந்திடவல்லேனும் பொய்த்திடுமுடம்பேயன்றிப் புகழுடம்பழிவதுண்டோ எனவுங்கூறினான் ()

கலித்திலைத்துறை.

நீநில்லெனத்தன்பெடைதன்னைநிறுத்திநீத்தென்
கானில்லெனவாழ்கருமாவின்கணங்களெல்லா
மூனில்லுயிருண்டனமென்றினியோடல்கூடற்
கோனில்லெனவார்ப்பவன்போலக்கொதித்துநேர்ந்தான்.

(இ-ள்.) நீ நில் என தன் பெடை தன்னை நிறுத்தி நீத்து - அஞ்சும் நீ நில்லாயென்று தனது பெண்பன்றியை நிறுத்தியதனினின்றும் பிரிந்து, என்கான் இல்லென வாழ் கருமாவின் கணங்கள் எல்லாம் - எனது காட்டையே மனையெனக்கொண்டு வாழும் பன்றியின் கூட்டங்களையெல்லாம், ஊனில் உயிர் உண்டனம் என்று இனி ஓடல் - உடம்பிலுள்ள உயிரைக் கொள்ளைகொண்டோம் இனிப் போரொழிந்தென்று செல்லாதே, கூடல் கோன் நில் என ஆர்ப்பவன்போல கொதித்து நேர்ந்தான் - பாண்டியனே நீ நில்லாயென்று வீரகோஷஞ்செய்பவனைப்போலப் பொங்கிப் போர்செய்ய எதிர்த்தான்.

இது தன் வீரத்தைப்புகழ்ந்து கூறினமையால் நெடுமொழிவஞ்சித்துறை. ()

நிலத்தைக்கிளைத்துப்பிலங்காட்டிநிமிர்ந்தநுள்வான்
றலத்தைப்புதைப்பத்தனியேனவரவுநோக்கி
வலத்தைப்புகழ்ந்தான்வியந்தான்சிலைவாங்கிவாளிக்
குலத்தைச்சொரிந்தான்பொருநைத்துறைக்கொற்கைவேந்தன்.

(இ-ள்.) நிலத்தை கிளைத்து பிலம் காட்டி - பூமியைப்பறித்துப் பாதலத்தைக்காட்டி, நிமிர்ந்த நுள் வான் தலத்தை புதைப்ப - மேலெழுந்ததூட்படலம் விண்ணுலகத்தைப்பொதிய; தனி ஏனம் வரவு நோக்கி - ஒப்பில்லாத பன்றியின்வருகையைப்பார்த்து, பொருநை துறைக் கொற்கை வேந்தன் - தாமிரபர்ணியின் துறைக்கும் வையையின் துறைக்கும் அரசனுகிய பாண்டியன், வலத்தை புகழ்ந்தான் வியந்தான் - அதன்வீரத்தைப் புகழ்ந்து மெச்சி, சிலை வாங்கி வாளி குலத்தை சொரிந்தான் - வில்லைவளைத்துப் பாணபடலமாகிய வருஷங்களை வருஷித்தான்.

தன்குலங்கள் மடிந்திடத்தலைக்கண்டும் அஞ்சாது போர்க்கு வருதலின் வீரனருமையை வீரனேயறிவான் என்பார் வலத்தைப் புகழ்ந்தான் வியந்தான் என்றார், கொற்கை என்றதை வையையின்றுறையென்றது சிலப்பதிகாரத்தில் அடியார்க்குநல்லாருரையிற் கண்டது. (௩அ)

குறித்துச்செழியன்விடுவாளியைக்கோலவேந்தன்
பறித்துச்சிலவாளியைவாய்கொடுபைம்புலென்னக்
கறித்துச்சிலவாளியைக்கால்கொடுதேய்த்துத்தேய்த்து
முறித்துச்சிலவாளியைவாலின்முறித்துநின்றான்.

Koviloor Digital Library

(இ-ள்.) குறித்த செழியன் விடு வாளியை - தன்னைக் குறியாகக்கொண்டு பாண்டியனெய்யும் பாணங்களை, கோலம் வேந்தன் பறித்து - பன்றியரசன் உடலி னின்றும் பறித்து, சில வாளியை பைம்புல் என்ன கறித்து - (அவற்றுள்) சிலபா ணங்களைப் பசும்புல்லைக் கறித்தல்போலக் கறித்து, சில வாளியை கால் கொடு தே ய்த்து தேய்த்து முறித்து - சிலபாணங்களைக் காலால் நிலத்தில் தேய்த்துத் தேய்த் து முறித்து, சிலவாளியை வாலில் முறித்தும் நின்றான் - சிலபாணங்களை வாலினு ல் முறித்தும் நின்றனன். (௩௯)

மானம்பொறாதுமதியின்வழிவந்தவேந்தன்
றானம்பொழிதருகவிழ்க்கும்புகர்த்தந்திகையி
லூனம்பொருதமுசலங்கொடுந்தேறியுய்த்தா
னேனம்பொறாதார்த்திடியேற்றினெழுந்ததன்றே.

(இ-ள்.) மதியின் வழி வந்த வேந்தன் மானம் பொறாது - சந்திரன் மரபில் வந்த இராசராசபாண்டியன் மானமிக்கூர்ந்து, தானம் பொழிதரு கவிழ்க்கும் புகர் தந்தி கையில் - கொண்ட மதப்பெருக்கினையாற்றும லொழுக்கும் புள்ளிதங்கிய மு கத்தையுடைய யானையின் துதிக்கையில், ஊனம் பொருத முசலம் கொடுத்து ஏறி உய்த்தான் - சிற்பநூல்வழிக்குற்றம் அறவகுத்த இருப்புலக்கையைக்கொடுத்து அந் த யானைமேலேறிச் செலுத்தினன், ஏனம் பொறாது ஆர்த்து இடியேற்றின் எழுந் தது-பன்றி கோபத்தையாற்றாது கோஷித்து இடியேறுபோலப் போர்க்கு எழுந்தது.

மிருகங்களுள் ஓர் பன்றியாலலைப்புண்டனன் எனப் பிறர் கூறும் பழிக்கு ஆற்றாது நொந்தனன் என்பார் மானம்பொறாது எனவும், நமது வீரத்தையுணர்ந்தி ருந்தும் நம்மையொத்த ஓர்மிருகத்தால் கொல்லக்கருதினனென்று கருதியது என் பார் ஏனம் பொறாதார்த்து எனவுங்கூறினார். (௪௦)

தந்திப்பொருப்பைத்துணிக்கென்றுதழன்றுசீற்ற
முந்திக்கதலிக்கொழுந்தண்டெனவூசற்கையைச்
சிந்திப்பிறைவாளெயிறோச்சிச்சிதைத்துவிட்ட
முந்திக்கடுந்தேர்மிசைப்பாய்ந்தனன்மூரித்தாரான்.

(இ-ள்.) தந்தி பொருப்பை துணிக்க என்று - யானையாகிய மலையைத் துண் டுபடுத்தக் கடவேனென்று கருதி, தழன்று சீற்றம் உந்தி-கொதித்துக் கோபங்கொ ண்டு, கதலி கொழுந்தண்டு என்ன ஊசல் கையை சிந்தி - வாழையின் கொழுவிய தண்டைப்போல ஊசல்போலாடுங் கையைத் துணித்து, பிறைவாள் எயிறு ஓச்சி சி தைத்து விட்ட - பிறைபோன்ற ஒள்ளிய வக்கிரதந்தத்தா லழுந்தக்குத்தி யழித்து க்கொல்ல, மூரிதாரான் - தொன்றுதொட்டுள்ள வேப்பமலர்மாலையணிந்த இராசரா சபாண்டியன், கடுந்தேர் மிசை முந்தி பாய்ந்தனன்-விரைந்து செல்லுந் தேரின்மே ன் முற்பட்டுப் பாய்ந்தனன்.

கடுந்தேர் கடியென்னும் உரிச்சொற்றிரிபு. (௪௧)

திண்டேர்மிசைநின்றடனேமிதிரித்துவிட்டான்
கண்டேனவேந்தன்விலக்கிக்கடுங்காலிற்பாய்ந்து
தண்டேருடையத்தகர்த்தான்பரிதன்னிற்பாய்ந்து
வண்டேறுதாரான்விடவேலைவலந்திரித்தான்.

(இ-ள்.) திண் தேர் மிசை நின்று அடல் நேமி திரித்து விட்டான் - திண்ணி யதேரின்மேல் ஆரோகணித்துக் கொல்லுஞ் சக்கரத்தைச் சுழற்றியெறிந்தனன், ஏ

Koviloor Digital Library

ன வேந்தன் கண்டு விலக்கி கடுங் காலில் பாய்ந்து தன் தேர் உடைய தகர்த்தான் - பன்றியரசன்கண்டு அதனை விலக்கிக் கடியகாற்றைப்போல விரைந்து பாய்ந்து த ண்ணியநிழல்வாய்ந்த தேர்சிதைபடும்படி யுடைத்தான், வண்டு ஏறு தாரான் பரி த ன்னில் பாய்ந்து விடம் வேலை வலம் திரித்தான் - வண்டுகள் குடிகொண்ட மாலை யையணிந்த பாண்டியன் குதிரைமேற்பாய்ந்து விஷம்பூசிய வேலினை வலம்படத்தி ரித்தனன். (௪௨)

சத்திப்படைமேல்விடுமுன்னர்த்தறுகண்வீரன்
பத்திச்சுடர்மாமணித்தார்ப்பரிமாவின்பின்போய்
மொத்திக்குடர்செம்புனல்சோரமுடுகிக்கோட்டாற்
குத்திச்செகுத்தான்பொறுத்தானலன்கூடல்வேந்தன்.

(இ-ள்.) சத்திப் படை வேல் விடு முன்னர் - வேலாயுதத்தைவிடுதற்குமுன், தறு கண் வீரன் - அஞ்சாமையையுடைய பன்றிவேந்தன், சுடர் பத்தி மா மணி தா ர் பரி மாவின் பின் போய் மொத்தி - இரத்தினவரிசையையுடைய பருத்த இரத்தினக் கழுத்திய கிண்கிணிமாலைபூண்ட அக்குதிரையின்பின்சென்று தாக்கி, குடர் செம் புனல் சோர - குடலும் உதிரமுஞ் சோர, முடுகி கோட்டால் குத்தி செகுத்தான் - விரைந்து தனது வக்கிரதந்தத்தால் குத்திக்கொன்றனன், கூடல் வேந்தன் பொறுத் தான் அலன் - பாண்டியன் மானமிக்கூர்ந்து. (௪௩)

மண்ணிற்குதித்துவலிகண்டுவராகவேந்தை
யெண்ணித்தலையிற்புடைத்தான்கையிருப்புத்தண்டாற்
புண்ணிற்படுசெம்புனலாறுபுடவிபோர்ப்ப
விண்ணிற்புகுந்தான்சுடர்கீறிவிமானமேலால்.

(இ-ள்.) மண்ணில் குதித்து-(குதிரையினின்றும்) நிலவுலகின்மேற்குதித்து, வலிகண்டு எண்ணி - அதன் வன்மையைக்கண்டு ஆராய்ந்து, கை இருப்பு தண்டால் வராகவேந்தை தலையில் புடைத்தான் - கையிலேந்திய இரும்பாலாகிய தண்டத்தால் தலையிலடித்தான், புண்ணில் படு செம்புனல் ஆறு புடவி போர்ப்ப - அடிபட்ட புண் ணின்றொழுகும் உதிரவெள்ளம் நிலவுலகைப்போர்க்க, சுடர் கீறி விமானம் மேல் வி ண்ணில் புகுந்தான் - சூரியமண்டிலத்தைக் கிழித்துச்சென்று விமானமேல் வீரசுவ ர்க்கஞ் சென்றனன்.

பன்றியைத் தலையிற்புடைக்கிலழியுமாதலால் எண்ணி எனவும், வீரசுவர்க் கம் புகுவோர் சூரியமண்டிலத்தின் வழியேசென்று திவ்ய தேகம்பெறுதலால் சுடர் கீறியெனவும், திவ்ய தேகம் பெற்றபின் விமானமேல் செல்லுதலால் விமானமேல் எனவுங் கூறினர். (௪௪)

வேனிற்கிழவோனில்விளங்கிவியந்துவானோர்
தேனிற்பொழிபூமழைபெய்யநனைந்துதெய்வ
கானத்தமுதுண்டிருகாதுங்களித்துவீர
வானத்தமுதுண்டரமங்கையர்கொங்கைசேர்ந்தான்.

(இ-ள்.) வேனில் கிழவோனில் விளங்கி - மன்மதனைப்போல விளங்கி, வா னோர் வியந்து பொழி பூமழை தேனின் பெய்ய நனைந்து - தேவர்களதிசயித்துப் பொழியும் புஷ்பவருஷம் தேனினைப்பெய்ய நனைந்து, தெய்வகானத்து அமுது இரு காதும் உண்டு - தேவகானமாகிய அமுதினை யிரண்டு காதாலும் பருகி, களித்து வீ ரவானத்து அமுது உண்டு - களிப்படைந்து வீரசுவர்க்கத்திலுள்ள தேவாமிர்தத்தை

Koviloor Digital Library

வாயாற்பருகி, அரமங்கையர் கொங்கை சேர்ந்தான்-அரமகளிர் சுவர்க்கத்தை யடைந்தனன்.

உம்மை இனைத்தென வறிபொருளில்வந்த முற்றுப்பொருட்டு. வீரசுவர்க்கஞ்சென்றவன் அரமகளிர் சுவர்க்கத்திலும் சேர்தல் முறையாதலால் அரமங்கையர் கொங்கை சேர்ந்தான் என்றார். கொங்கை சுவர்க்கம். (௬௫)

கலிவிருத்தம்.

பின்றுணையாயபெடைத்தனியேன
மென்றுணைமாயவிருப்பதுகற்போ
வென்றிலனேனும்விசும்படைவேனு
லென்றிகல்வேங்கையெதிர்த்ததுருத்தே.

(இ-ள்.) பின் - அதன்பின், துணை ஆய தனி பெடை ஏனம் - துணையாகநின்ற ஒப்பில்லாத பெண்பன்றியரனது, என் துணை மாய இருப்பது கற்பு ஓ - எனது உயிர்க்கேள்வனிறக்க நானிருந்துயிர்வாழ்வது கற்பியலோ, வென்றிலனேனும் விசும்பு அடைவேன் என்று - வெற்றிகொள்ளிலனுகிலும் வீரசுவர்க்கத்தை யடைவேனென்று, இகல் வேங்கை உருத்து எதிர்த்தது - பகைகொண்ட இராசராசபாண்டியனைக் கோபித்துப் போர்செய்ய எதிர்த்தது.

துணைவனுயிர்துறந்தபோதே யுடனுயிர்போலப் பிரியாதுநின்ற துணைவியும் உயிர்துறத்தல் கற்பியலாதலால் என்றுணைமாயவிருப்பதுகற்போ எனவும்,துணைவன் சென்ற வீரசுவர்க்கத்தில் தானுஞ்சென் றவனோடொருங்குறைதலை விரும்பியதாதலால் விசும்படைவேனென்று எதிர்த்தது எனவுங் கூறினார். (௬௬)

விறனவில்பேட்டைவிளிப்பதுவேந்தற்
கறனலவென்றவனாள்வினைமள்ளர்க்
கிறைமகனானசருச்சரனென்றோர்
மறமகனேர்ந்தமராடவளைந்தான்.

(இ-ள்.) விறல் நவில் பேட்டை விளிப்பது - வீரங்கூறிப் போர்க்கெதிர்ந்த பெண்பன்றியைக் கொல்வது, வேந்தற்கு அறன் அல என்று - இராசராசபாண்டியனுக்குப் போர்த்தருமமல்லவென்று, அவன் ஆள் வினை மள்ளர்க்கு இறை மகன் ஆன சருச்சரன் என்ற ஓர் மற மகன் நேர்ந்து - அப்பாண்டியனேவிய வினைமுயலும்மறவீரர்களுக்குப் பதியாகிய சருச்சரனென்று சொல்லப்பட்ட ஒருவீரன் எதிர்த்து, அமர் ஆட வளைந்தான் - (அப்பன்றியோடு) போர்செய்யச் சூழ்ந்தான்.

அரசர்கள் தம்மோடொத்த போர்வீரரோடு போர்செய்தல் தக்கது என்பார் பேட்டைவிளிப்பது வேந்தற்கறனல எனவும், வேட்டமாக்களின் தலைவன் என்பார் ஆள்வினைமள்ளர்க்கிறைமகன் எனவுங் கூறினார். (௬௭)

நனிபொழுதாடமராடினனஞ்சிற்
கனிசினவன்பெடைகாய்சினவேடத்
தனிமகனைத்தரைவிட்டினதாற்ற
லினியிலையென்னவிளைத்துயிர்சோர்வான்.

(இ-ள்.) நனி பொழுது ஆடு அமர் ஆடினன் - நெடும்போது வெற்றிதரும் போர்செய்தான், நஞ்சில் கனி சினம் வன் பெடை - நஞ்சைப்போலக் கொடுமைபழுத்த கோபத்தையுடைய வலியபெண்பன்றி, காய் சினம் தனி வேட மகனை தரை

Koviloor Digital Library

வீட்டினது - கொதித்தெழுங்கோபத்தில் தனக்கொருவர் நிகரில்லாதவேட்டுவவீர னைக் கீதி நிலத்தில் தள்ளியது, ஆற்றல் இனி இல்லை என்ன இளைத்து உயிர் சோர்வா ன் - போராற்றும் வன்மை இனிச்சிறிதுமில்லையென்று கண்டோர்கூற இளைத்துயி ர்சோருமவ்வீரன்.

பெண்ணென்றிகழ்ந்த போரிற்புகுந்த வீரனுக்கு இதுகாறும் அவன்செய்த போரினும் பெரிதாகத்தோன்றியதென்பார் கனிபொழுதாடமராடினன் என்றார். ()

இரும்புசெய்தண்டினையிம்மெனவோச்சிப்
பொரும்பெடைசென்னிபுடைத்துவிளிந்தான்
விருந்தினராயிருவோரும்விமானத்
தருந்திறல்வானமடைந்தனரன்றே.

(இ-ள்.) இரும்பு செய் தண்டினை இம்மென ஓச்சி - இரும்பாற்செய்த தண் டத்தை யிம்மென்று மனவிலோக்கி, பொரும் பெடை சென்னி புடைத்து விளிந் தான் - போர் செய்யும் அப்பெண் பன்றியின் தலையின்மேலடித்துத் தானும் இறந் தான், இருவோரும் விருந்தினர் ஆய் விமானத்து அருந்திறல் வானம் அடைந்தனர்- மடிந்த இருவரும் தேவர்கட்கு விருந்தினராய் விமானத்திலேறியரிய வீரசுவர்க்கத் தி லடைந்தார்கள்.

வீரர்களுயிர்விடும்பொழுதும் தம்மோடெதிர்ந்த வீரர்களுயிர் வாங்கித் தம் முயிர் விடுதல் அவர்கட்கியற்கையாதலால் சென்னிபுடைத்து விளிந்தான் எனவும், இருவரும் ஒருசேர வுயிரிழந்தமையால் சிறப்பால் உயர்திணை முடிபுதந்து அடைந் தனர் எனவுங் கூறினார். (௬௯)

வன்றிறன்மன்னவர்மன்னவனுந்தன்
பொன்றிகழ்மாநகர்புக்கனனிப்பால்
பன்றிவிழுந்தபருப்பதமாகா
நின்றதுபன்றிநெடுங்கிரியென்ன.

(இ-ள்.) வன் திறல் மன்னவர் மன்னவனும் - மிக்க வெற்றிவாய்ந்த இரா ஜராசபாண்டியனும், தன் பொன் திகழ் மாநகர் புக்கனன் - தன்னுடைய இலக்கு மி விளங்கும் பெரிய நகரிலடைந்தனன், இபால் - இப்புறம், பன்றி நெடுங்கிரி என் ன பன்றி விழுந்த பருப்பதம் ஆகா நின்றது - நெடியவராக கிரியென்று கண்டோர் சொல்லப் பன்றி வீழ்ந்த பருப்பதமாகிப் பொலிந்தது. (௭௦)

அன்றுதொடுத்ததனுக்கதுபேரா
யின்றும்வழங்குவதிம்பரிலந்தக்
குன்றிலருந்தவர்விஞ்சையர்கோபம்
வென்றவரெண்ணிலர்வீடுறநோற்பார்.

(இ-ள்.) இம்பரில் - இக்கிலவுலகில், அன்று தொடுத்து இன்றும் அதனுக்கு அது பேராய் வழங்குவது - அக்காலந்தொட்டு இதகாறும் அம்மலைக்குப் பன்றிமலை யென அப்பெயரேயாய் வழங்காநின்றது, அந்த குன்றில் அருந்தவர் விஞ்சையர் கோபம் வென்றவர் எண்ணிலர் - அந்த மலையில் அரிய தபோதனர்களும் வித்தியா தரர்களும் கோபம் வென்ற யோகிகளுமாகிய அளவிறந்தோர் வசித்து, வீடு உற நோற்பார் - மோக்ஷ மடையத் தவஞ்செய்கின்றார்கள்.

Koviloor Digital Library

தவத்திற் கிடையூறுயுள்ள கோபம் காமம் மயக்கம் என்னு முக்குற்றங்களுள் கோபங் கொடியதாதலால் கோபம் வென்றவர் என்றார். (௫௩)

கலிநிலைத்துறை.

என்றுகூறியவருந்தமிழ்க்கிறைவனைநோக்கித்
துன்றுமாதவரறிவிலாச்சூகரவுருவக்
குன்றின்மீதிருந்தவரொலாங்கோதறநோற்று
நின்றகாரணம்யாதெனக்குறுமுனிநிகழ்த்தும்.

(இ-ள்.) என்று கூறிய அருந்தமிழ்க்கு இறைவனை நோக்கி - என்று சொல்லியருளிய அகத்தியமுனிவரை வணங்கி, துன்றும் மாதவர் - நெருங்கிய பெரிய தபோதனர்களும், அறிவில்லாத சூகரம் உருவம் குன்றின்மீது இருந்தஅவர் எல்லாம் - அறிவில்லாத பன்றிவடிவமைந்த மலையின்மேல் இருந்த அவ்விஞ்சையர்முதலிய யாவரும், கோது அற நோற்று நின்ற காரணம் யாது என்ன - முக்குற்றமு மறத்தவஞ் செய்து நின்ற காரணம் யாதென்று வினவ, குறு முனி நிகழ்த்தும் - அந்த அகத்திய முனிவர் கூறியருள்கின்றனர்.

வடமொழிக்குப் பாணினிமுனிவ ரிறைவராதல்போல அதற்கெதிராகிய தென்மொழிக்கு அகத்திய முனிவரிறைவராதலால் தமிழ்க்கிறைவர் எனக் காரண ஆக்கப்பெயர்தந்து கூறினார். கோது என்பதனிறுதியில் இனைத்தென அறிபொருளில் வந்த முற்றும்மை தொகுத்தல். (௫௪)

வேனில்வேளெனவிளங்குவிச்சாதரனென்னுந்
தானயாழ்மகன்புலத்தியன்றவத்தினுக்கிடையூ
றானபாண்செயப்பன்றியாச்சபித்தனனறவோ
னேனமாகுவோனுய்வதென்றெனக்கெனமுனிவன்.

(இ-ள்.) வேனில் வேள் என்ன விளங்கு விச்சாதரன் என்னும் தானம் யாழ் மகன் - வேனிற்காலத்துக்குரிய மன்மதனைப்போல வடிவமைந்து விளக்கும் வித்தியாதரனாகிய தானங்களமைந்த வீணையில் வல்ல ஒரு யக்ஷன், புலத்தியன் தவத்தினுக்கு இடையூறு ஆன பாண் செய்ய - புலத்தியமுனிவர் தவத்திற் கிடையூறுயுள்ள இசைப்பாடல் பாட, அறவோன் பன்றியாக சபித்தனன் - அம்முனிவன் வராகமாகச் சாபந் தந்தனன், ஏனம் ஆகுவோன் என்று உய்வது எனக்கு என்ன - பன்றிவடிவாகும் அந்த யக்ஷன் எப்பொழுது அப்பன்றிவடிவத்தினின்று நீங்குந் தீர்வு எனக்குள்ளதென்று வினவ, முனிவன் - அப்புலத்திய முனிவன்.

புலத்திய முனிவன் தவத்தை யழித்தற்பொருட்டுப் பாடினன் என்பார் புலத்தியன் றவத்தினுக்கிடையூறான பாண்செய எனவும், அவன் செய்த தீங்குக்கு ஏற்பச் சபித்தனன் என்பார் பன்றியாச்சபித்தனன் எனவுங் கூறினார். (௫௫)

மன்னர்மன்னனுந்தென்னவன்வந்துநின்வனத்திற்
றுன்னுபல்வகைவிலங்கெலாந்தொலைத்துனைமாய்க்கும்
பின்னரிவ்வுருப்பெறுகெனப்பணித்தனனியக்க
னன்னவாறுவந்திறந்துபின்பழவுருவடைந்தான்.

(இ-ள்.) மன்னர் மன்னன் ஆம் தென்னவன் வந்து - இராசராசனாகிய பாண்டியன் வேட்டமேல் வந்து, நின் வனத்தில் துன்னு பல்வகை விலங்கு எல்லாம்

தொலைந்த - உனது காட்டில் நெருங்கிய பலவகைப்பட்ட மிருகங்களை யெல்லாங் கொன்று, உன்னை மாய்க்கும் - உன்னையுங் கொல்லுவான், பின்னர் இ உருபெறுக என பணித்தனன் - பின்பு இந்த யட்ச வடிவத்தைப் பெறக்கடவாயென்று பணித்தருளினன், இயக்கன் அன்ன ஆறு வந்து இறந்து பின் பழ உரு அடைந்தான்-அவ்வித்தியாதரன் அப்படியே வந்து பிறந்து பின்னர்ப் பண்டுள்ள உருவத்தை யடைந்தனன்.

பணித்தல் அருளிச்செய்தல் "விண்டலை யாவர்க்கும் வேந்தன் வண்டில்லை மெல்லங்கழிசூழ் - கண்டலையே கரியாக்கன்னிப் புன்னைக்கலந்தகள்வர் - கண்டிலையே வரக்கக்குலெல்லாமக்குல்வாய் விளக்கும் - மண்டிலமேபணியாய் தமியேற் கொருவாசகமே" என்றுந் திருக்கோவையாரில் பணியாய்என்பதற்கு நச்சினார்க்கினியார் எழுதிய உரையிற்காண்க. அடியார்க்கினியார் இதனைச் சிலப்பதிகாரத்தில் இசைச்சொல் என்றார். (௫௪)

ஆயபுண்ணியவிஞ்சையனாகமாய்க்கிடந்த
தூயநீரதாலவ்வரைமிமிசைத்துறந்த
பாயகேள்வியரிறைகொளப்பட்டதெவ்வுயிர்க்கு
நாயனார்மதுரேசருநயந்தவணுறைவார்.

(இ-ள்.) அ வரை ஆய புண்ணிய விஞ்சையன் ஆகம் ஆய் கிடந்த தூய நீரது அந்தமலை இவ்வாறாகிய புண்ணிய சொரூபத்தையுடைய யக்ஷன் சரீரமாயிருந்த பரிசுத்தத்தன்மையையுடையது, மிமிசை துறந்த பாய கேள்வியர் இறை கொளப்பட்டது - (அதனால்) தன்மேற் பரந்த நூற்கேள்வியையுடைய முனிவர்களால் வசிக்கப்பட்டது, எ உயிர்க்கும் நாயனார் மதுரேசரும் நயந்து அவண் உறைவார் - (பசுபதி யென்றும் பெயர்க் காரணத்தால்) அயன் முதலிய எல்லா வுயிர்கட்கும் இறைவராகிய சோமசுந்தரக்கடவுளும் அவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கின்றனர்.

புண்ணியவிஞ்சையன் என்றமையால் தூயநீரது என்றார். (௫௫)

என்றகத்தியன்விடைகொடுத்தியம்பினனிப்பாற்
பன்றியேற்றையும்பாட்டியும்பைம்புனத்திட்டுச்
சென்றவிந்தபின்பன்னிருகுருளையுந்திகைப்புற்
றன்றலக்கணேயுழந்தமையாரளந்துரைப்பார்.

(இ-ள்.) என்று அகத்தியன் விடை கொடுத்து இயம்பினன் - என்றகத்திய முனிவர் விடைதந்தருளினார், இபால் - இப்புறம், பன்றி ஏறும் பாட்டியும் பைம்புனத்து இட்டு சென்று அவிந்த பின் - ஆண்பன்றியும் பெண்பன்றியும் பசியவனத்தில் தங்குட்டிகளை யிட்டுப் போர்க்குச்சென்று இறந்தபின், பன்னிரு குருளையும் திகைப்புற்று-அப்பன்னிரண்டு குட்டிகளும் (தாய்தந்தைகளை யிழத்தலால்) மயங்கி, அன்று அலக்கண் நோய் உழந்தமை-அக்காலையில் துன்பநோயடைந்ததை, அளந்து உரைப்பார் யார் - வரையறுத்துக் கூறவோர் எவர் (ஒருவருமில்லை என்றபடி.)

இளங்குட்டிகளாதலால் தாய்தந்தைகளை யிழந்துற்ற துன்பம் பெரிதென்பார் அன்றலக்கணே யுழந்தமையாரளந்துரைப்பார் என்றார். ஏறு ஐகாரச்சாரியைபெற்று இடையில் வல்லொற்று விரிந்து ஏற்றையென நின்றது. (௫௬)

ஓடுகின்றனதெருமரலுறுவனநிழலைத்
தேடுகின்றனதாய்முலைத்தியபால்வேட்டு
வாடுகின்றனதாகவெம்பசிகனிவருத்த
வீடுகின்றனவெயில்சுட்டுவெதும்புகின்றனவால்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஓடுகின்றன தெருமரல் உறுவன-(பன்றிக்குட்டிகளும்) ஓடித் தாய்தந்தைகளைப் பெருமையால் சுழன்றும், நிழலை தேடுகின்றன தாய் முலை நிய பால் வேட்டு வாடு கின்றன - நிழலைத் தேடிச்சென்றும் தாய்முலை யினினிய பாலைவிரும்பி வாடியும், தாகம் வெம்பசி நனி வருத்த வீடுகின்றன - தாகமுங் கொடியபசியும் மிகவும் வருத்த உயிர்சோர்ந்தும், வெயில் சுட வெதும்புகின்றன-சூரியகிரணஞ் சுட்டு வருத்த வெம்பி வருந்தாநின்றன.

ஓடுகின்றன முதல்விடுகின்றன என்பதுகாறும் வினைமுற்றெச்சங்கள். (௫எ)

இன்னவாறிவையணங்குறுமெல்லைவேல்வல்ல
தென்னராகியதேவர்கடேவரங்கயற்கண்
மின்னனாளொடுமின்னவிர்விமானமீதேறி
யன்னகானகத்திச்சையாலாடல்செய்திருந்தார்.

(இ-ள்.) இன்ன ஆறு இவை அணங்குறும் எல்லை - இவ்வாறு இப்பன்றிகள் வருந்துங் காலையில், வேல் வல்ல தென்னர் ஆகிய தேவர்கள் தேவர் - வேல்வித்தையில் வல்ல சவுந்திரபாண்டியராய்த் திருக்கோலங்கொண்டருளிய அயன்முதலிய தேவர்கட்குக் கடவுளராகிய சோமசுந்தரக்கடவுள், அங்கயற் கண் மின் அன்னாளொடும் மின் அவிர் விமானம் மீது ஏறி - அங்கயற்கண்ணியாராகிய மின்னலையொத்த உமாதேவியாரோடும் ஒளிவீசி விளங்கும் விமானத்தின்மேலெழுந்தருளி, அன்ன கானகத்து இச்சையால் ஆடல் செய்திருந்தார்-அக்காட்டில் தமதிச்சையால் திருவிளையாட்டல் செய்தருளி யிருந்தனர்.

இச்சை யென்றது இச்சாசத்தியை. அதாவது சிவபெருமான் ஆன்மகோடிகளை யிரட்சித்தருள வேண்டுமெனத் திருவுளத்தில் நிகழ்ந்த வியாபாரசத்தி. "ஒன்றதாயிச்சா ஞானக்கிரியை யென்றொரு மூன்றாகி - நின்றிடுஞ்சத்தியிச்சையுயிர்க்கருணைசமாகும் - நன்றெலாஞானசத்தியானயர்ந்தறிவனாதன் - அன்றருட்கிரியை தன்னாலாக்குவனகிலமெல்லாம்" எனவரும் எதுவாலுணர்க. (௫அ)

ஏனமென்பறழுறுகணோய்க்கிரங்கினாரிச்சை
யானவன்புதந்தத்துயரகற்றுவானின்ற
மானவன்புடைப்பேடையின்வடிவெடுத்தயருங்
கானவன்பறழ்கலங்கஞர்கலங்கநேர்வந்தார்.

(இ-ள்.) ஏனம் மென் பறழ் உறுகண் நோய்க்கு இரங்கினார் - பன்றியின் மெல்லிய குட்டிகளுற்ற துன்பமிக்க பசிநோய்க்கிரங்கி, இச்சை ஆன அன்பு தந்து அதுயர் அகற்று வான் - தமதிச்சையாலாகிய அன்புகூர்ந்து அத்துன்பத்தை யொழித்தருள, நின்ற மானம் வன்பு உடைய பேடையின் வடிவு எடுத்து-நிலைபெற்ற மிக்க வலிமையையுடைய பெண்வராகத்தின் கோலங்கொண்டு, கானம் அயரும் வன் பறழ் கலங்கு அஞர் கலங்க நேர் வந்தார் - காட்டிற் சோரும் வலிய அந்தக் குட்டிகளின் வருத்தும் பசித்துன்பங்கெட எதிரே வந்தருளினார். (௫௯)

கிட்டுகின்றதந்தாயெதிர்குட்டியுங்கிட்டி
முட்டுகின்றனமொய்ப்பனமுதுகுறத்தாவி
யெட்டுகின்றனகால்விசைத்தெறிவனநிலத்தை
வெட்டுகின்றனகுதிப்பனவோடுவமீள்வ.

Koviloor Digital Library

(இ-ள்.) கிட்டுகின்ற தம் தாய் எதிர் - நெருங்கிய தமது தாய்க்கெதிரே, குட்டியும் கிட்டி முட்டுகின்றன மொய்ப்பன - பன்றிக்குட்டிகளும் நெருங்கி முட்டியும் மொய்த்தும், முதரு உறதாவி எட்டுகின்றன கால் விசைத்து எறிவன - (முதுகிற் பொருந்தத் தாவியெட்டியும் காலால் விசைத்தெறிந்து, நிலத்தை வெட்டுகின்றன குதிப்பன ஓடுவ மீள்வ - நிலத்தை வெட்டியும் குதித்தும் ஓடியும் திரும்பாநின்றன.

தாயிழுக்கலமரும் பன்றிகள் தரையைக் கண்டளவில் ஆராப்பெருமகிழ் வுற்றன என்பார் கிட்டிமுட்டுகின்றன மொய்ப்பனமுதருறத்தாவி யெட்டுகின்றன கால் விசைத்தெறிவன நிலத்தை வெட்டுகின்றன குதிப்பன வோடுவமீள்வ என்றார்-முட்டுகின்றன என்பது முதல் ஓடுவ என்பதுகாறும் முற்றெச்சங்கள். (௬௦)

ஏனமின்னமுங்காண்பரிதாகியவேன
மானமெய்ம்மயிர்முகிழ்த்திடத்தழுவிமோந்தருளின்
மானமென்முலையருத்திமாவலனும்வன்றிறனு
ஞானமும்பெருந்தகையுநற்குணங்களுநல்கா.

(இ-ள்.) ஏனம் இன்னமும் காண்பு அரிதாகிய ஏனம் - திருமாலாகியவராகம் இன்னமுங் காண்டற்கரிய வராகமானது, ஆனமெய்ம்மயிர் முகிழ்த்திட தழுவி மோந்து - தனது சரீரத்திலுள்ள மயிர்கள் சிலிர்க்கத் தழுவிமோந்து, அருளின் மானம் மென் முலை அருத்தி - தனது பேரருளால் சுரந்த பெரிய முலைப்பாலூட்டி, மாவலனும் வன் திறனும் ஞானமும் பெருந்தகையும் நற்குணங்களும் நல்கா - (பகைவர்க்குப் புறங்கொடாத) பெரிய வலிமையும் மிக்க சதுரப்பாடும் ஞானமும் பெருந்தகைமையும் ஏனைநற்குணங்களுமாகிய இவைகளை (அத்திருமுலைப்பாலோடு) கொடுத்தருளி.

சிவபெருமான் கொண்டருளுந் திருக்கோலத்தி னுறுப்புகள் யாவுந் திருவருள்வடிவே யாதலால் அருளின் மானமென்முலை யருத்தியெனவும், அத்திருவருளாலடைதற்கரிய பெரும்பேறுகள் யாவும் எளிதினெய்துமாகலால் மாவலனும் வன்றிறனும் ஞானமும் பெருந்தகையு நற்குணங்களும் நல்கா எனவுங் கூறினார். உறுப்புகள் யாவுந் திருவருள்வடிவென்றது "உருவருள்குணங்களோடு முணர்வருளுருவிற்றோன்றும் - கருமமுமருளான்றன்கரசரணாதிசாங்கம் - தருமருளுபாங்கமெல்லாந்தானருடனக்கொன்றின்றி - யருளுருவுயிருக்கென்றே யாக்கினனசிந்தனன்றே" எனவரும் நூலால் உணர்க. (௬௧)

துங்கமாமுகமொன்றுமேருகரமுகமா
வங்கம்யாவையுமானுடயாக்கையவாக்கிக்
கங்கைநாயகன்கடவுளர்நாயகன்கயற்கண்
மங்கைநாயகன்கருணையாந்திருவுருமறைந்தான்.

(இ-ள்.) துங்கமாமுகம் ஒன்றுமேருகரமுகமாக-உயர்ந்தபெரியமுகமொன்றுமே பண்டுள்ள பன்றிமுகமாக அமைத்து, அங்கம்யாவையும் மானுடயாக்கையாக ஆக்கி-ஏனையுறுப்புகளியாவையும் மானிட சரீரவுறுப்புகளாகச் சமைத்து, கங்கைநாயகன் கடவுளர்நாயகன் கயல்கண் மங்கைநாயகன்-கங்கையின் தலைவரும் தேவர்களிறைவரும் அங்கயற்கண்ணியார் கணவருமாகிய சோமசுந்தரக்கடவுள், கருணை ஆம்திரு உருமறைந்தான்-அருளுருவாகிய திருவுருவைக்கரந்தருளினார்.

Koviloor Digital Library

Kovileor Digital Library

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் -



Koviloor Digital Library

யாவையும் புனிதமாக்குந் தன்மைதோன்றக் கங்கைநாயகன் எனவும், பசுப் தியென்னும்பெயர்க் காரணந்தோன்றக் கடவுள்ர்நாயகன் எனவும், அருட்கிறைவர் என்பது தோன்றக் கயற்கண்மங்கைநாயகன் எனவும். அவர்கொண் டருளூர் திருக் கோலம் அவரிச்சைவழித்தென்பது தோன்றக் கருணையாந் திருவுருவெனவுங் கூறினர், (சுஉ)

இம்மையிப்பவத்தன்னையாயினிவருபவமுஞ்
செம்மைசெய்தசேதனத்தையுஞ்சேதனஞ்செய்தா
ரெம்மையெப்பவத்தாயினுமெனைப்பலவுயிர்க்கு
மம்மையப்பராய்க்காப்பவரவரலாலெவரே.

(இ-ள்.) இம்மை இப்பவத்து அன்னையாய் இனிவருப்வமும் செம்மை செய் து - இந்நிலவுலகில் இப்பிறப்பில் பன்றிக்குருளைகளுக்குத் தாயாய் இனியவைகட்கு வரும் பிறப்பையும் புனிதமாக்கி, அசேதனத்தையும் சேதனம் செய்தார் - அறிவில் லாத அவ்வுயிர்களையும் அறிவுடைய உயிர்களாகச்செய்தருளினர், எ பவத்து ஆயினு ம் எம்மையும் எனை பல உயிர்க்கும் அம்மை அப்பர் ஆய் காப்பவர் அவர் அல்லால் எவர் - எப்பிறப்பிலாயினும் எமக்கும் மற்றைப் பல வுயிர்களுக்கும் தாய்தந்தையரா ய் நின்று காப்பவரவரன்றியாருளர் (ஒருவரும் இல்லை என்றபடி.)

பன்றிகள் யாக்கைகளை மானிடயாக்கைகளாகச் செய்தமையால் அசேதன த்தையுஞ் சேதனஞ்செய்தார் எனவும், அச்சேதனயாக்கைகளால் நிலைநிலையாமைக ளையுணர்ந்து பற்றொழிந்து அதிபக்குவர்களாய்ச் சிவகதியடையச் செய்தருளினமை யால் இனிவருபவமுஞ் செம்மைசெய்து எனவும், சங்காரகாலத்தில் மாயையிலொ டுங்கிக்கிடந்த ஆன்மாக்களைச் சிருட்டிகாலத்தில் ஆணவமலபாகம் வருவித்தற்பொ ருட்டுத் தமது சத்தியால் தநுகரணபுவனபோகங்களைத் தந்தருளியென்று பாகம் வருமெனத் தமது திருவுளத்தில் அநவரதமும் அநுக்கிரகித்து நிற்றலால் அம்மைய ப்பராய்க் காப்பவர்எனவும், அவரன்றி முத்தியருள்பவர் வேறில்லாமையால் அவர லாலெவரேயெனவுங் கூறினர். நான்கனுருபு நிற்குமிடத்து இரண்டனுருபு நிற்றலா ல் உருபுமயக்கம், உம்மை செய்யுளாதலால் தொக்குநின்றது. (சுங)

பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்தபடலம் - முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்பட்த் திருவிருத்தம் - உஉ௫.

நாற்பத்தாறுவது

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்.

கலிநிலைத்துறை.

தந்தைதாயிழந்தலமருங்குருளையைத்தாயாய்
வந்துநாயகன்முலைகொடுத்தருளியவகையி
தந்தவாறிருமைந்தருமந்திராகி
யெந்தையார்சிவபுரம்புகுந்திருந்தவாறிசைப்பாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) தந்தை தாய் இழந்து அலமரும் குருளையை - தாய்தந்தைகளை யிழந்து வருந்தும் பன்றிக்குட்டிகளுக்கு, நாயகன் தாய் ஆய் வந்து முலை கொடுத்தருளிய வகை ஈது-சோமசுந்தரக்கடவுள் அன்னையாய்த் திருவுருக்கொண்டுவந்து பால் கொடுத்தருளிய திருவிளையாடலிது, அந்த ஆறிருமைந்தரும் மந்திரர் ஆகி - அந்தப் பன்னிரண்டு குமரர்களும் இராசராசபாண்டியனுக்கு அமைச்சர்களாய், எந்தையார் சிவபுரம் புகுந்திருந்த ஆறு இசைப்பாம் - எமது பெருமானார் சிவபுரத்தைப் பின்னரடைந்த திருவிளையாடலை யினிக் கூறுவாம்.

தந்தையாய பன்றி முற்பிறப்பில் ரிங்கியென்னும் பெயரையுடைய யக்ஷன். ()

ஆதிநாயகன்றிருவுருமறைந்தபினனைய
கோதிலாறிரண்டேனமாக்குமாருங்காலைச்
சோதியாறிரண்டருக்கர்போற்றோன்றியப்பொருப்பி
லோதியாய்ந்தபல்கலைஞராயொருங்குவீற்றிருந்தார்.

(இ-ள்.) ஆதி நாயகன் திரு உரு மறைந்த பின்-எல்லாத் தேவர்கட்கு முதல்வராகிய இறைவர் திருவுருவங் கரந்தருளிய பின்னர், அனைய கோது இல் ஆறிரண்டு ஏன மாகுமாரும் - அந்தக் குற்றமில்லாதவராக முகத்தையுடைய பன்னிரண்டு குமரர்களும், காலை சோதி ஆறிரண்டு அருக்கர் போல் தோன்றி - வைகறையி லுதயஞ்செய்த கிரணத்தையுடைய பன்னிரண்டு சூரியர்களைப்போல ஒளிவாய்ந்து, அ பொருப்பில் ஓதி ஆய்ந்த பல் கலைஞர் ஆய் ஒருங்கு வீற்றிருந்தார் - அவ்வராகமலையில் கற்றாராய்ந்த அறுபத்துநான்கு கலைகளிலும் வல்லராயொருசேரவீற்றிருந்தனர்கள்.

எல்லாத்தேவர்கட்கு முற்பட்டவன் என்பார் ஆதிநாயகன் எனவும், நூல்களையாராய்ந்து தம்முட்பகையின்றிச் சாந்தகுணம் வாய்ந்திருந்தனர் என்பார் ஒருங்கு வீற்றிருந்தார் எனவுங்கூறினார். "மன்னவெம்பிரான்வருகவென்னெனை மாலுமான்முகத்தொருவனுமறிவொ - முன்னவெம்பிரான்வருகவென்னெனை முழுதும்யாவையுமிறந்துநின்றோட்-பின்னவெம்பிரான்வருக" என்றார் திருவாசகத்தால் உணர்க.

அனையராயவர்வைகுநாளறைபுனற்கூடற்
புனிதநாயகனருட்டிறமுயிர்க்கெலாம்பொதுவா
யினியவாவனவென்பதையாவருந்தேற
வனிதைபான்மொழிமங்கைதன்மணாளனைவினவும்.

(இ-ள்.) அனையர் ஆய் அவர் வைகும் நாள் - அத்தன்மையரா யவர்களிருக்குங் காலையில், அறை புனல் கூடல் புனித நாயகன் அருள் திறம் - ஒலிக்கும் நீர்சூழ்ந்த மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளின்திறங்கள், உயிர்க்கு எல்லாம் பொது ஆய் இனிய ஆவன என்பதை - எல்லா வுயிர்களுக்கும் பொதுவமயாய் நின்றின்பந்தருவன என்று உண்மை நூல்கள் கூறுதலை, யாவரும் தேற - எவரும் எளிதிலுணர்ந்தய்ய, பால் மொழி வனிதை மங்கை தன் மணாளனை வினவும் - பால்போல இனிமை வாய்ந்த சொற்களையுடைய அங்கயற்கண்ணம்மையார் தமது கணவனை வினவுகின்றார்.

அவரவர் தரத்திற்கேற்பத் திருவருளும் பலவாறாய் நிற்கும் என்பார் அருட்டிறம் எனவும், பிரமன்முதல் பிபீலிகாந்தங்காறு மொருதன்மையவாய் நின்று பயப்பன என்பார் உயிர்க்கெலாம் பொதுவாயினியவாவன எனவுங் கூறினார். (௫)

வெவ்விலக்கிறும்வெய்யதாயசேதனவிலங்கா
மிவ்விலங்கெயிற்றேனமென்குருளைகட்கிரங்கிக்

Koviloor Digital Library

கைவிலங்கினையெய்தநீகருணையாய்முலைதந்
தவ்விலங்கறிவகற்றியதியாதெனவிறைவன்.

(இ-ள்.) வெவ்விலங்கினும் வெய்யது ஆய் - கொடிய மிருகங்களினுங் கொடியதாய், அசேதன விலங்கு ஆம் இ இலங்கு எயிறு ஏனம் மென் குறளை கட்கு இரங்கி - இழிந்த மிருகமாகிய இந்த விளங்கும் வக்கிரதந்தங்களையுடைய பன்றியினது மெல்லிய குட்டிகளுக்குக் கருணைகூர்ந்து, கை விலங்கினை எய்த நீ - சமணர்களேவிய) யானையை யெய்துகொன்ற நீ, கருணை ஆய் முலை தந்து அ விலங்கு அறிவு அகற்றியது யாது என்ன - தனது திருவருளால் தாயாய்வந்து முலைகொடுத்தருளியந்த மிருகத்தின் அறிவொழித்தருளியது யாதென்று வினவ, இறைவன்-சோமசுந்தரக்கடவுள்.

விக்கிரமபாண்டியனுக்கிரங்கி யவனைக் காத்தற்பொருட்டு யானையைக் கொன்ற தேவரீர் குடிகளுக்கிரங்கி யவர்களைக் காத்தற்பொருட்டாடிய பாண்டியன் வேட்டத்திற்பட்ட பன்றியின் குருளைகட்கு இரங்கிய காரணம் யாது என்பார் ஏனமென்குறளைகட்கிரங்கிக்கருணையாய் முலைதந்து அறிவகற்றியதியாதென்றார். (௪)

அகிலவேதமுமாகமபேதமுநம்மைச்
சகலசிவதயாபரனென்றுரைசால்பா
லிகலில்சேதனமசேதனமாகியவிரண்டும்
புகலில்வேறலவெமக்கவைபொதுமையவதனால்.

(இ-ள்.) அகில வேதமும் ஆகம பேதமும் நம்மை சகல சிவ தயாபரன் என்று உரை சால்பால் - எல்லா வேதங்களும் பலவகைப்பட்ட ஆகமங்களும் எல்லா ஆன்மாக்களிடத்தும் ஒருதன்மைத்தான தயாமூர்த்தியென்று கூறும் பெருந்தகைமையால், இகல் இல் சேதனம் அசேதனம் ஆகிய இரண்டும் - மாறுபடுதலில்லாத உணர்வுடைய வுயிர்களும் உணர்விலுயிர்களுமாகிய இரண்டு பொருள்களும், புகலில் - சொல்லுமிடத்து, எமக்கு அவை வேறு அல-எமக்கு அவைகள் வேறல்ல, பொதுமைய - ஒரு தன்மையன, அதனால் - அக்காரணத்தால்.

வேதாகமங்களின் கூற்று ஆப்தவாக்கியம் என்பது தோன்ற அகிலவேதமுமாகமபேதமும் எனவும், இருபத்தெட்டுவகைப என்பது தோன்ற ஆகமபேதமும் எனவுங் கூறினர். (௫)

தாயிழந்துவெம்பசித்தழலகஞ்சுடத்தழன்று
காயுமாதபம்புறஞ்சுடக்கானிடைக்கிடந்து
தீயுமேனமென்குருளைகடெருமரவிரங்கி
யாயுமாய்முலையளித்துயிரளித்தனமதனால்.

(இ-ள்.) தாய் இழந்து வெம்பசி தழல் அகம் சுட - தாயை யிழத்தலால் கொடிய பசியாகிய நெருப்பு உள்ளே சுட்டு வருத்தலாலும், தழன்று காயும் ஆதபம் புறம் சுட - கொதித்து வருத்தும் கடுவெயிலானது புறத்திற்சுட்டு வருத்தலாலும், கான் இடை கிடந்து தீயும் ஏனம் மென் குருளைகள் தெருமர இரங்கி - காட்டிற் கிடந்து தீயா நின்ற பன்றியின் மெல்லிய குட்டிகள் சுழன்று வருந்த அதற்கு இரங்கி, ஆயும் ஆய் முலை அளித்து உயிர் அளித்தனம் - தாயுமாகி முலைகொடுத்து அவ்வுயிர்களை யோம்பினேம், அதனால் - அக்காரணத்தால்.

Koviloor Digital Library

தம்மாற்கூறிய வேதாகமங்கள் தமக்குப் பொதுமைய வென்பதைக் கடைப்பிடித்தி யாவருமுய்ய அசேதனயாக்கையைக் கொண்டருளினர் என்பது தோன்ற இஃதிவு சிறப்புமைம தந்த துயுமாய் என்றார். (௬)

அளவிலாற்றலுந்திறனுநல்லரும்பெறற்கல்வி
விளைவுஞானமுங்கிடைத்தனர்மீனவற்கினிமேல்
வளைவிலாதகோலமைச்சராய்வளம்பலபெருக்கிக்
களைவில்பாசநீத்தெம்பெருங்கணத்தவராவார்.

(இ-ள்.) அளவு இல் ஆற்றலும் திறனும் அரும் பெறல் நல் கல்வி விளைவும் ஞானமும் கிடைத்தனர் - எல்லையில்லாத வன்மையையும் திறத்தையும் பெறுதற்கரிய நல்ல கல்வித்தேர்ச்சியையும் ஞானத்தையும் (நம்மால்) அடைந்தார்கள், மீனவற்கு இனிமேல் வளைவு இல்லாத கோல் அமைச்சர் ஆய் - பாண்டியனுக்கு இனிமேல் கோடாத செங்கோலையுடைய மந்திரிகளாய், பலவளம் பெருக்கி - (அப்பாண்டியனுக்கு) பல செல்வவளங்களையும் நாடோறும் பெருகச்செய்து, களைவு இல் பாசம் நீத்து எம் பெருங்கணத்தவர் ஆவர் - நீக்குதலில்லாத பாசங்களினின்று நீங்கி யெமது பெரிய சிவகணத்தலைவராவார்கள்.

எடுத்த காரியங்களை முற்றுவித்து வன்மை வேண்டுதலின் அளவிலாற்றல் எனவும், குணம் குற்றங்களையுணர்ந்து காரியங்களில் முயலுதற்குச் சதுரப்பாடுவேண்டுதலின் அதன்பின் திறனெனவும், அத்திறன் கல்வியறிவா லிடையூறின்றி முற்றுப்பெறுதலின் அதன்பின் அரும்பெறற்கல்வி விளைவு எனவும், அக்கல்வி விளைவு ஞானமின்றியிற் பயன்பெறுதலின் அதன்பின் ஞானமும் என முறைப்பட வைத்துக் கூறினமையாற் காரணகாரிய மாலையணி. வெட்டுவாய்தோறும் செம்பிற்கலந்த களிம்புபோல ஆன்மபோதத்தோடு கலந்துநிற்றலால் களைவில்பாசம் என்றார்.

என்றுநாயகனயகிக்கிறைகொடுத்தியம்பி
யன்றுமீனவன்கனவில்வந்தரசகேள்பன்றிக்
குன்றிலேனமாமுகத்தராய்ப்பன்னிருகுமரர்
வென்றிவீரராய்வைகுநர்மிக்கறிவுடையார்.

(இ-ள்.) என்று நாயகன் நாயகிக்கு இறை கொடுத்து இயம்பி - என்று சோமசுந்தரக்கடவுள் அங்கயற்கண்ணியார்க்கு விடைகொடுத்தருளி, அன்று மீனவன் கனவில் வந்து - அப்பொழுதே யிராசராசபாண்டியனுடைய சொப்பனத்தில் வந்தருளி, அரச கேள் - அரசனே கேளாய், பன்றிக்குன்றில் ஏனம் மாமுகத்தர் ஆய் பன்னிரு குமரர் வென்றி வீரர் ஆய் வைகுநர்-வராகமலையில் பன்றிமுகத்தையுடையவராய்ப் பன்னிரண்டு குமரர்கள் வெற்றிவாய்ந்த வீரர்களாய் வசிக்கின்றார்கள், மிக்க அறிவுடையார் - அவர்கள் அறிவின் சால்புடையவர்கள்.

அமைச்சராவோர்க்குத் தமதரசற்குப் பகைவர் புறங்காட்ட வாகைசூட்டும் வன்மையுடைமையும், முக்காலநிகழ்ச்சியையுமுணர்ந்து தொழிலை முட்டின்றி முடிக்கும் அறிவுடைமையும் வேண்டும் என்றுங் குறிப்புத்தோன்ற வென்றி வீராய் வைகுநர் மிக்கறிவுடையோர் எனக் கூறியருளினமையால் உதாரவணி. (௮)

அவரைநின்கடைக்கமைச்சராக்கோடியென்றளவில்
சிவபராஞ்சுடரருள்செயச்செழியர்கோவேந்தன்
கவலருங்களிப்புடையனுய்க்கண்மலர்ந்தெழுமான்
றவழ்நெடுந்திரைக்கருங்கடறத்திநீந்தெல்லை.

Koviloor Digital Library

(இ-ள்.) அவரை நின் கடைக்கு அமைச்சர் ஆக கோடி என்று அளவு இல் சிவபரஞ்சுடர் அருள் செய - அக்குமாரர்களை யுனது திருவாயிலில் மந்திரிக்கிழமை தந்துகொள்வா யென்று எல்லையில்லாத சிவபரஞ்சோதியாகிய சோமசுந்தரக்கடவுள் திருவருள் செய்ய, செழியர்கோ வேந்தன் கவலரும் களிப்பு உடையன் ஆய் கண் மலர்ந்து - இராசராசபாண்டியன் கவற்சி சிறிதுமில்லாத பெருங்களிப்பு உடையவனுகித் துயிலுணர்ந்து, எழுமான் நெடுந்திரை தவழ் கருங்கடல் தத்தி நீந்து எல்லை - சூரியன் தேரிற்பூட்டிய வேழுகுதிரைகளும் நெடிய அலைகள் தவழுங் கரிய கீழைக்கடலைத்தாவி நீந்தி யுதயமாகும் வைகறைப்போதில்.

சோமசூரியாக்கினிகளுக்கு ஒளிதரும் பேரொளி என்பார் அளவில் சிவபரஞ்சுடர் எனவும், களிப்புத்திளைக்குங் காலிடைக்கிடை கவலைவந்துறுவது என்பார் கவலருங் களிப்புடையனுய் எனவுங் கூறினார். (௯)

மாண்டகேள்விசான்மந்திரர்க்குணர்த்தியம்மலைமேற்
காண்டகேனமாவீரரைக்கொணர்கெனக்கருணை
பூண்டகாவலனமைச்சரும்போயவர்க்கண்டு
வேண்டவீரருமீண்டினார்மீனவன்றிருமுன்.

(இ-ள்.) மாண்ட கேள்வி சால் மந்திரர்க்கு உணர்த்தி - மாட்சிமைப்பட்ட நூற்கேள்வியில் மிக்க அமைச்சர்களுக்கு அறிவித்து, அமலை மேல் காண் தகு ஏனமா வீரரை கொணர்க என - அவ்வராகமலையின்மேல் வசிக்கும் பொலிவுமிக்கவராக வீரர்களைக் கொண்டுவரக்கடவீரென்று கூற, கருணை பூண்ட காவலன் அமைச்சரும் போய் - கருணையில் மிக்க பாண்டியன் சொல்வழி மந்திரக்கிழவர்களுஞ்சென்று, அவர் கண்டு வேண்ட - அக்குமாரர்களைக் கண்டு தமது அரசனுணையைக் கூற, வீரரும் மீனவன் திருமுன் ஈண்டினார் - அவ்வராக வீரர்களும் அப்பாண்டியனவைக் களத்துவந்தார்கள்.

குடிகளிடத்து அருளுடைமையால் கருணைபூண்ட காவலன் என்றார். (௧0)

வந்திறைஞ்சியவராகமாமைந்தரைநேர்கண்
டந்தமில்களிப்படைந்துவேந்தமைச்சியற்கிழமை
தந்துவேறுபல்வரிசையுந்தக்கவாநல்கிக்
கந்துசீறியகடகரிக்கைதவன்பின்னர்.

(இ-ள்.) வேந்து - பாண்டியன், வந்து இறைஞ்சியவராக மாமைந்தரை நேர் கண்டு அந்தம் இல் களிப்பு அடைந்து - தனது அவைக்களத்தில் வந்து வணங்கியவராக வீரர்களை நேரே பார்த்து எல்லையில்லாத மகிழ்ச்சியை யடைந்து, அமைச்சு இயல் கிழமை தந்து - மந்திரக்கிழமையையுங்கொடுத்து, பல் வேறு வரிசையும் தக்க ஆறு நல்கி - பலவகைப்பட்ட வெவ்வேறு வரிசைகளையும் அவர்கள் தகுதிக்கேற்றபடி செய்து, கந்து சீறிய கடகரி கைதவன் பின்னர் - கட்டுத்தறியை முறிக்கு மதமிக்க யானைச்சேனையையுடைய அப்பாண்டியன் பின்பு. (௧௧)

பழையமந்திரக்கிழார்மடப்பாவைபோல்வாரை
விழவுசால்கடிமங்கலம்விதியினாற்புணர்த்தி
யழகிதாமெனநடத்தினனனையரும்வீரக்
கழலினாற்கொருகவயமுங்கண்ணுறுமாய்நடப்பார்.

Koviloor Digital Library

(இ-ள்.) பழைய மந்திரக்கிழார் மடப்பாவை போல் வாரை - தன்பால் முன்றுள்ள அமைச்சர்கள் பெற்ற இளமைவாய்ந்த பதுமைபோன்ற பெண்களை, சால்சடி விழவு மங்கலம் விதியினால் புணர்த்தி - சிறப்புமிக்க விவாகோற்சவத்தை வேதவிதிப்படி பன்னிரு குமாரர்க்கும் கூட்டி, அழகிது ஆம் என்ன நடத்தினான் - (கண்டோர்) அழகிதென்று சொல்ல முடித்தான், அனையரும் வீரக்கழலினாற்கு ஒரு கவயமும் கண்ணும் ஆய் நடப்பார்-அக்குமாரர்களும் வீரகண்டையையணிந்த அப்பாண்டியனுக்குக் கவசமுங் கண்களுமாகி நடந்தார்கள்.

பாண்டியனுக் கோரிடையூறின்றிப் பாதுகாத்து வருவதால் கவயமுமாய் எனவும், தீவழியினின்று நல்வழியிற் செலுத்தலால் கண்ணுமாய் எனவுங் கூறினார்.

கலிவிருத்துறை.

உடம்பாமிரண்டிற்குயிரொன்றெனவொன்றியையவாய்
விடம்பாயரவம்விழுங்குமிரையொத்துநெஞ்சந்
திடம்பாடுகொள்ளவினைவாங்கிச்செழியன்கல்வி
யிடம்பாடுநல்கும்பயன்போன்மகிழ்வெய்தநின்றார்.

(இ-ள்.) செழியன் - பாண்டியன், உடம்பு ஆம் இரண்டிற்கும் உயிர் ஒன்று என ஒன்றி - அக்குமாரர்கள் பன்னிரண்டு சரீரத்திற்கும் உயிர் ஒன்று என்று கண்டோர்சொல்லக் கலந்து, ஐ வாய் விடம் பாய் அரவம் விழுங்கும் இரை ஒத்து - ஐந்துதலைகளையுடைய விடம்பரவிய சர்ப்பம்விழுங்கும் இரையையொத்து, நெஞ்சம் திடம் பாடு கொள்ள வினை வாங்கி - அவர்கள்மனம் சலனமின்றி நிற்கத் தனது கருமத்தைமுடித்து, கல்வி இடம் பாடு நல்கும் பயன்போல் மகிழ்வு எய்த நின்றார் - தான் கற்றகல்வி மிகவும் பயக்கும் பயனைப்போல மகிழ்ச்சியடையத் தொழிற்றலைநின்றார்கள்.

அறம்பொருள் இன்பவுபதைகளால் ஆராய்ந்துகொள்ளப்பட்ட அமைச்சர்கள் தெய்வமுதலியவற்றால் அரசனுக்கு வருந் துன்பத்தைச் சாந்திமுதலியவற்றால் ஒழித்துப் பகைவர் முதலியோரால் வருந் துன்பத்தை முன்னருணர்ந்து பாதுகாத்து அளவில்லாத தொழில்களால் வருந்தும் அவ்வரசன் பூபாரத்தைத் தமது பாரமாக மேற்கொண்டொழுகுவோர் அவராதலின் அவரொடு மனங்கலந்து அரசன் நடக்கவேண்டும் என்பார் உடம்பாமிரண்டிற்கும் உயிரொன்றென வொன்றியெனவும், ஐந்தலையால் விழுங்கு மிரையோருடலிற் சென்றமைதல்போல ஐபுருதாராய்ந்து தெளிந்த அமைச்சர்களிடத்து ஒருகாலையுமின் அமைச்சு நில்லாதென்னுங் கருத்தால் தம் கருமத்தை நெகிழ்த்துவிடுவ ராதலால் அவர்கள் கொண்ட கருத்தே யரசன் கொண்டொழுகவேண்டும் என்பார் ஐவாய் விடம் பாயரவம் விழுங்கும் மிரையொத்து எனவும், தன்கருமத்தில் முயலும் அமைச்சர்கள் அவ்வுரிமையாலவர் பிறர்போல் நில்லாது கேளிரா யொழுகுதலைப் பொறுதார் கூறுஞ் சொற்களைக்கேட்டரசனவரை யவமதியாது நன்குவப்பின் அக்கருமத்தின் கண்ணவர்க்கு மேன்மேலும் ஊக்கம்பிறக்கும் என்பார் நெஞ்சத்திடம்பாடு கொள்ளவெனவும், தன்னாட்டில் நிகழுஞ் செய்தியை யாராய்ந்துணரக், கண்போல்வாராயினும் அமைச்சர் செய்யுங் கருமங்களை நாடோறும் அரசன் ஆராயவேண்டும் என்பார் வினைவாங்கியெனவும், இம்மையிலொருவற்குக் கற்ற கல்வி பொருளையும் புகழையும் பெருக்கி மகிழ்வுறுத்தி மறுமையிலும் உயிர்சென்றுழிச்சென்று பயன்தந்து மகிழ்வுறுத்தும் என்பார் கல்வியிடம்பாடு நல்கும் பயன்போல் மகிழ்வெய்த எனவுங் கூறினார். (௧௩).

Koviloor Digital Library

நல்லாவின்பாலினறுந்தேன் கலந்தென்னப்பன்னூல்
வல்லாருமாகிமதிநுட்பருமாகிச்சோர்வில்
சொல்லாலடையார்மனமுங்களிதூங்கச்சொல்லிப்
பல்லார்பிறர்சொற்பயனாய்ந்துகவரவல்லார்.

(இ-ள்.) நல் ஆவின் பாலில் நறுந்தேன் கலந்தால் என்ன - நல்ல பசுவின் பாலில் நறுமணங்கமழும் தேன்கலந்தாற்போல, பல் நூல் வல்லாரும் ஆகி மதி நுட்பரும் ஆகி - பலநூல்களில் வல்லவருமாய் நுண்ணறிவுடையருமாய், சோர்வு இல் சொல்லால் அடையார் மனமும் களிதூங்க சொல்லி - இடையில் மறதியில்லாத சொற்களால் பகைவர் மனங்களிப்படையப்பேசி, பல்லார் பிறர் சொல் பயன் ஆய்ந்து கவரவல்லார் - பலரும் பிறருஞ் சொல்லுஞ் சொற்களினுள்ள பயனை யாராய்ந்து கைக்கொள்ள வல்லவராகி.

மநுநூல்முதலிய நூலுணர்ச்சியாகிய செயற்கையறிவோடு தெய்வந்தரவந்த இயற்கையாகிய நுண்ணறிவு அமைச்சர்கட்கு அமையின் அவ்வமைச்சர் பகைவர் செய்யும் சூழ்ச்சியை முன்னரறிந்தழித்து அப்பகைவர் அறிந்தும் அழித்தற்குக்கூடாத சூழ்ச்சியைச் சூழ்வர், இவர்கள் முன்னமே தெய்வந்தரப்பெற்று அஃது ஒருங்கே யமைந்திருத்தலின் அது அரசனுக்குப் பாலோடுகலந்த நறுந்தேன்போலிருந்ததென்பார் நல்லாவின்பாலினறுந்தேன் கலந்தென்னப்பன்னூல் - வல்லாருமாகிமதிநுட்பருமாகி யெனவும், பிறர்கூறுஞ் சொல்லிற் சோர்வுபோலாது அமைச்சர்கூறுஞ் சொல்லிற் சோர்வுவரில் தமது அரசன் ஆக்கத்தையொழித்துக் கேடுபயக்கும் ஆதலால் அதனை யவர்கள் காத்தோம்பவேண்டும் என்பார் சோர்வில் சொல்லால் எனவும், வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன்தருதல் என்னுங் குணங்களாலமைந்து பகைவரும் பகைமையொழிந்து நட்பினைவிரும்பும் வண்ணம் பேசுஞ்சொல் அமைச்சர்க்குவேண்டும் என்பார் அடையார்மனமுங் களிதூங்கச் சொல்லியெனவும், தம்பரிசனமாயினும் பகைவரும் விரும்பத் தாம் கூறுஞ் சொற்களை நிரைபடக்கோத்துக்கூறி அவர்கள் கூறுஞ் சொற்களில் வழுவுளவாயினும் அவற்றைநோக்கி யிகழாது பயனைமாத்திரங்கொண்டொழிதல் அமைச்சர்க்கு இன்றியமையாத குணம் என்பார் பல்லார் பிறர்சொற்பயனாய்ந்து கவரவல்லார் எனவுங்கூறினார். (௧௪)

பழையேமிறைவூழ்கொளப்பட்டமென்றேமாப்பெய்தா
ருழையேவல்செய்யுஞ்சிறுர்போலவொதுங்கிவேந்தன்
விழைவேதனைவிடம்போலவெறுத்துவெஃகா
ரழல்போலணுகாரகலார்நிழலன்னநீரார்.

(இ-ள்.) நிழல் அன்ன நீரார் - பாண்டியன் தேகசாயையைப்போல விடாது நிற்குந் தன்மையையுடைய பன்னிருகுமரரும், பழையேம்-நாம் பழையோம், இறைவூழ்கொளப் பட்டம் என்று ஏமாப்பு எய்தார்-அரசனால் முறையாக நன்குமதிக்கப் பட்டோமென்று இறுமாப்படையாது, உழை ஏவல் செய்யும் சிறுர்போல ஒதுங்கி-பக்கலில்நின்று ஏவிய ஏவல்செய்யுஞ் சிற்றுள்களைப்போல வொதுங்கி நின்று, வேந்தன் விழைவு ஏது - அரசன்விரும்பிய பொருள்யாதோ, அதனை விடம்போல வெறுத்து வெஃகார் - அதனை விஷம்போல வெறுத்து விரும்பாமல், அழல்போல் அணுகார் அகலார்-அரசனைத் தீப்போலக்கருதி யவனை யணுகவுமாட்டார் நீங்கவுமாட்டார்.

அரசன் சினக்கொள்ளுங்காலிவர் பழையர் எனக் கண்ணோடாது உயிரைக்கவர்தலால் பழையேம் என்றே மாப்பெய்தார் எனவும், அரசனால் நன்குமதிக்கப்பட்டோமென்று அவன் வேண்டாதனசெய்யின் அவ்வரசன் தம்மைவேறொருவராகக்கருதி மாறுபடுவானாதலால் கோளப்பட்டமென்றே மாப்பெய்தாரெனவும், அரசன் தமக்கினியனாயினும் அவனுறங்குங்கால் அவன் ஒளி யுலகங்காத்துவருதலால் அவனைக்கடவுளெனவும் தம்மைவழிபடு மக்களெனவுங்கருதிப் பணிந்தொழுகில் அவனாலெல்லாச்செல்வமும் எளிதில் வந்தெய்தும் ஆதலால் உழை யேவல்செய்யுஞ் சிறார்போல வொதுங்கியெனவும், அரசனுக்குச் சிறப்பாகவுரிய வாவி, மண்டபம் பூம்பொழில் நுகர்தல் முதலியவும் ஒப்பனையும் மேன்மையுமுதலியவற்றைத் தாமும் அவனோடொத்தவராகக் கருதுதற்கு அஞ்சி, விரும்பாது ஒழுகுவாராயின் அவனே விரும்பியெல்லாச்செல்வமுந் தருவானாதலால் விழைவேததனை விடம்போலவெறுத்து வெஃகார் எனவும், மிகவும் விட்டு நீங்கில் குளிர் நீக்காது மிகவும் அணுகில் சுடும் தீயைப்போல மிகவும்விட்டு நீங்கில் பயன்தராதும் மிகவும் அணுகில் சினங்கொண்டொறுக்கும் அரசன்பால் இடைநிலத்து நின்றொழுகவேண்டுதலால் அழல்போலணுகாரகலார் எனவுங்கூறினர். (௧௫)

மறுக்குஞ்செயனீத்துநடக்கையின்வையத்தோரை
யொறுக்கும்பொருளும்பணிகேட்கையினொன்னலாரைச்
செறுக்கும்பொருளுங்கவரார்விளைசெல்வமாக்க
ளிறுக்கும்பொருளேயிறைவற்கிவரீடுஞ்செல்வம்.

(இ-ள்.) மறுக்கும் செயல் நீத்து நடக்கையின் - தாம்விலக்கிய தீத்தொழில்களைவிலக்கி விதித்தவழி நடத்தலால், வையத்தோரை ஒறுக்கும்பொருளும் - தங் கோற்கீழ்வாழுங் குடிகளைத் தண்டித்தலால் வரும்பொருள்களையும், பணிகேட்கையின் - தாம்பணித்தபணியைக் கேட்டொழுகுதலால், ஒன்னலாரை செறுக்கும்பொருளும் - பகைவரைக் கோபித்தலால் வரும் பொருளையும், கவரார் - கைக்கொள்ளாது, விளை செல்வ மாக்கள் இறுக்கும் பொருளே - விளைதல் முதலியவற்றால் வருஞ் செல்வத்தையுடைய குடிகள் இறை யிறுக்கும்பொருளே, இறைவற்கு இவர் ஈட்டும் செல்வம் - அரசனுக்கு இவர்கள் தேடும்பொருள்களாம்.

மறுக்கும் செயலாவது தீக்கொளுவுதல், நஞ்சிடுதல், கருவியாற்கொல்லுதல், திருடுதல், ஆறலைத்தல், சூறையாடல், பிறர்மனைவியைவிரும்பல் முதலிய தீச்செயல்கள். விதித்தவழியாவது அதனையொழித்து அரசன்கோற்கீழடங்கி யொழுகுதல், ஒறுத்தல் துன்பஞ்செய்தல், பொருட்கோடல், கொல்லுதல் எனமுத்திறப்படும் அவற்றுள் துன்பம் தங்கோற்கீழ்வாழுங் குடிகள் குற்றஞ்செய்யின் அவரைத்துயராக்குதற்பொருட்டு ஒரோவழித்துன்பஞ் செய்யும் ஒறுப்பொன்றேயன்றிப் பொருள்கோடலின்மையால் பொருளுங்கவரார் எனவும், தாம்பணித்தபணி மேற்கொண்டொழுகுதலால் பகைவர்பால் திறைகோடலேயன்றி யவர் கருவூலத்துள்ள பொருள் முதலியவற்றைக் கவர்தல் செங்கோன்மையன்மையால் ஒன்னாரைச் செறுக்கும் பொருளுங் கவரார் எனவும், குடிகள்பால் தாம்கொண்ட அருளோடும், அதனால் அவர் தம்பாற்கொண்ட அன்போடும்கூடிவரும் ஆறிலொன்றும், மரக்கலத்தாலும் காலாலும்வருஞ் சுங்கப்பொருளும் அரசற்குரிய பொருள்களாதலால் விளைசெல்வமாக்களிறுக்கும்பொருளே யிறைவற் கிவரீட்டுஞ்செல்வம் எனவுங் கூறினர். (௧௬)

மறத்தானவேலான்மனக்கொள்கைதன்னெஞ்சுள்வான
நிறத்தாடிநிழலெனத்தோற்றநிறுத்துமற்ற

Koviloor Digital Library

தறத்தாறெனிலாற்றுவரன்றெனிலாக்கமாவி
யிறத்தான்வரினுமனத்தானுமிழைக்கவெண்ணார்.

(இ-ள்.) மறத்து ஆன வேலான் மனக்கொள்கை - கொலைத்தொழிலிற்பழகிய வேலையேந்திய இராசராசபாண்டியனுடைய மனக்கொள்கை, தம் நெஞ்சு உள் - தமது மனத்தில், வானம் நிறத்து ஆடி நிழல் என்ன தோற்ற - ஆகாயத்தைப்போலப் புறைநிறம்வாய்ந்த கண்ணாடிநிழல்போலப் புலப்படுதலால், நிறுத்து-அதனைச்சீர்தூக்கி, அது அறத்து ஆறு என்னில் ஆற்றுவர் - அக்கொள்கை மநுநூல்வழிப்பட்டதானால் செய்தலும், அன்று என்னில் ஆக்கம் ஆவி இறவரினும் - அல்லையாயின் தமது செல்வமும் உயிரும் அழிய அரசற்குக்கோபம் வரினும், மனத்தானும் இழைக்க எண்ணார் - தமது மனத்தாலாயினுஞ் சிறிதுஞ் செய்யக்கருதாது தவிர்தலும் உடையார்.

இங்கிதம், வடிவு, தொழில், சொல்முதலிய அளவைகளால் அரசன் மனக்கொள்கையை யளக்காது மனத்தொடு கண்ணு முகமுங்கலந்தன ஆதலால் அவற்றால் அளந்தனர் என்பார் மறத்தான வேலான் மனக்கொள்கை தந்நெஞ்சுள் வானநிறத்தாடி நிழலெனத்தோற்ற எனவும், அரசன் மனக்கொள்கையை முற்றுவித்தற்கு அதன் குணங்குற்றங்களை யாராய்தற்கு முன்னர்ச் சீர்தூக்கவேண்டும் ஆதலால் நிறுத்து எனவும், அமைச்சராவார் மநுநூல் கற்றுணர்தல் செய்வன தவிர்வன அறிதற்கேயாதலின் குணத்தையறிந்து முற்றுவிக்கில் அதனால்வரும் புகழ் மந்திரிகள் மேற்றேயாம் ஆதலால் மற்றதறத்தாறெனிலாற்றுவர் எனவும், குற்றமாயின் அதனை அரசன் யொழித்தற்பொருட்டு இடித்து உறுதிகூறுது அவனுக்கிறுதிபயக்குங் கருமத்தை முற்றுவிக்கில் அப்பழியை யுலகம் தம்மேலேற்றும் ஆதலால் ஆக்கமாவியிறத்தான்வரினு மனத்தானுமிழைக்கவெண்ணார் எனவுங்கூறினார். தந்நெஞ்சுள் எனத் திருத்துக. (௧௭)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

இன்னவாறொழுகும்பன்னிருவோருமீகையுந்தருமமும்புகழுந்
தென்னர்கோமகற்குவைகலும்பெருகத்திசையெலாம் விசயமுண்டாக்கிப்
பன்னகாபரணன்சிவபுரமடைந்துபரன்கணநாதருட்கலந்து [ன்.
மன்னிவீற்றிருந்தார்மன்னர்மன்னவனும்வான்பதமடைந்து வீற்றிருந்தா

(இ-ள்.) இன்ன ஆறு ஒழுகும் பன்னிருவோரும்-(அரசற்கு ஆவனசெய்து) இவ்வாறு நடக்கும் பன்னிரண்டு குமாரும், ஈகையும் தருமமும் புகழும் தென்னர் கோமகற்கு வைகலும் பெருக - பொருளும் அறமும் புகழ்ச்சியும் பாண்டியனுக்கு நாள்தோறும் வளர்ந்தோங்க, திசை எல்லாம் விசயம் உண்டாக்கி - எட்டுத்திக்குகளிலுங் கொற்றத்தை நாட்டி, பன்னகாபரணன் சிவபுரம் அடைந்து பரன் கணநாதர் உள் கலந்து மன்னி வீற்றிருந்தார் - சர்ப்பாபரணத்தையணிந்த சிவபெருமானார் சிவபுரத்தையடைந்து சிவக்கணநாதருள் தாமுங் கணநாதர்களாய்க்கலந்து நிலைபெற்று வசித்திருந்தனர்கள், மன்னர் மன்னவனும் வான்பதம் அடைந்து வீற்றிருந்தான் - இராசராசபாண்டியனும் இந்திரபதத்தையடைந்து சிறந்திருந்தனன்.

அரசங்கமாறனுள் பொருளே படை, குடி, அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஐந்திற்கு முக்கிய கருவி ஆதலால் ஈகை எனவும், அதனால் தருமமும் புகழும் நாள்தோறும பல்கலால் தருமமும் புகழும் வைகலும் பெருக எனவும், அதனாற் பகைவர் அவனடிக் கீழ்ப்படுதலால் திசையெலாம் விசயமுண்டாக்கியெனவுங் கூறினார். இது காரண மாலையணி. (௧அ).

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியபடலம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்பட்த் திருவிருத்தம் - ௨௨௭௩.

Koviloor Digital Library

நாற்பத்தேழாவது
கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தபடலம்.

கொச்சகக்கலிப்பா.

வரிக்குருகிப்பத்திரற்குப்பலகையிட்டமணிகண்ட
னரிக்குருளைவடிவானவடல்வீரர்க்கரசன்பார்
பரிக்குமமைச்சியலளித்தபரிசுரைத்தாம்பசுபதியாற்
கரிக்குருவிகுருமொழிகேட்டருளடைந்தகதைபகர்வாம்.

(இ-ள்.) வரிக்கு உருகி பத்திரற்கு பலகை இட்ட மணி கண்டன் - இசைப் பாடலுக்கு உருகிப் பாணபத்திரர்க்குப் பலகைதந்தருளிய ஸ்ரீகண்டராகிய சோம சுந்தரக்கடவுள், அரிக்குருளை வடிவு ஆன அடல் வீரர்க்கு - பன்றிக்குட்டிகளின் வடிவாகிய வெற்றிவாய்ந்த பன்னிரண்டு வீரர்களுக்கும், அரசன் பார் பரிக்கும் அரசியல் அளித்த பரிசு உரைத்தாம் - பாண்டியனாட்டினைத் தாங்கு மந்திரக்கிழமை கொடுத்தருளிய திருவிளையாடலைக் கூறினோம், பசுபதியால் - அச்சோமசுந்தரக்கடவுளால், கரிக்குருவி குரு மொழி கேட்டு அருள் அடைந்த கதை பகர்வாம் - கரிக்குருவியானது உபதேசமொழி கேள்வியுற்று அவரது திருவருளையடைந்த திருவிளையாடலைக் கூறுவாம்.

எல்லா வுயிர்கட்கும் பொதுமையன் என்பது தோன்றப் பசுபதி என்றார். ()

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மன்னவனிராசராசன்வானவர்க்கரசனான
பின்னவன்குமரனானபெருவலிமடங்கலன்னான்
றுன்னலரடுபோர்சாய்க்குஞ்சுகுணபாண்டியனிர்ஞால
மின்னறீர்த்தறக்கோலோச்சியீர்ங்குடைநிழற்றுநாளில்.

(இ-ள்.) மன்னவன் இராசராசன் வானவர்க்கு அரசன் ஆன பின் - இராசராசபாண்டியன் தேவர்களுக்கு அரசனா யிந்திரபதத்தை யடைந்தபின், அவன் குமரன் ஆன பெரு வலி மடங்கல் அன்னான் - அவனுடைய புத்திரனாகிய பெரிய வன்மைவாய்ந்த ஆண்சிங்கத்தை யொத்த, துன்னலர் அடு போர் சாய்க்கும் சுகுண பாண்டியன் - பகைவர் செய்யும் கொலைத்தொழில் வாய்ந்த போர்முனையைச்சாய்க்கும் சுகுணபாண்டியனானவன், சீர் ஞாலம் இன்னல் தீர்த்து அறக்கோல் ஓச்சி - கடல்சூழ்ந்த நிலவுலகிற்கு நலிவினை யொழித்துச் செங்கோலைச் செலுத்தி, ஈர்ங்குடை நிழற்றும் நாளில் - தண்ணிய தவளவட்டக்குடையால் நிழல்செய்யுங் காலையில்.

தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், விலங்குகளாலும் குடிகட்கு வரும் நலிவினை இன்னல் என்றார். (உ)

ஆற்றல்சாலொருவன்மேனாளாற்றவுமறனேயாற்றி
மாற்றமில்சிறிதுபாவஞ்செய்ததன்வலத்தால்வந்து
தேற்றமில்கயவராகிச்செனித்தலாற்காகமாகி
கூற்றெனவூற்றஞ்செய்யக்குருதிசோர்தலையதாகி.

(இ-ள்.) ஆற்றல் சால் ஒருவன் மேல் நாள் - வலிமைமிக்க வொருவன் முற்பிறப்பில், ஆற்றவும் அறனே ஆற்றி - பெரும்பாலும் (உயிர்க்குப் பற்றுக்கோடு

Koviloor Digital Library

கரிக்குருவிக்குபதேசித்த திருவிளையாடல்



Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆகிய) தருமத்தையே செய்து, மாற்றம் இல் சிறிது பாவம் செய்து அதன் வலத்தால் வந்து தேற்றம் இல் கயவாய் ஆகி செனித்தலால் - சிறுபான்மை மாறுதலில்லாத பாவத்தைச் செய்து அப்பாவவன்மையால் அசேனமாகிய கரிக்குருவியாய்ப் பிறத்தலால், காகம் ஆதி கூற்று என ஊற்றம் செய்ய - காகமுதலிய பறவைகள் இயமனைப்போல இடையூறு செய்ய, குருதி சோர் தலையது ஆகி - உதிரஞ் சிந்துந் தலையையுடையதாகி.

காகஞ் சிறிதாயினும் விடம் உயிர்க்கிறுதி தந்தே யொழிதல்போலப் பாவஞ் சிறிதாயினும் இழிபிறப்பைத் தந்தேயொழியும் என்பது தோன்ற மாற்றமில் பாவம் என்றார். (௩)

புட்கெலாமெளிதாயூறுபாடஞ்சிப்புறத்துள்வைகி
யுட்கிநீள்வனத்துட்போகிவழிமருங்கொருசார்நிற்குங்
கட்கவிழ்ந்தொழுகப்பூத்தகவிழிணர்மாமேல்வைகி
வெட்கமீதூரச்சாம்பிவெய்துயிர்த்திருக்குமெல்லை.

(இ-ள்.) புட்கு எல்லாம் எளிது ஆய் - எல்லாப் பறவைகளுக்கும் வருத்துதற்கு எளிய பறவையாய், ஊறு பாடு அஞ்சி - (அவைகள் செய்யும்) இடையூற்றுக்கு அஞ்சி, புறத்து உள் வைகி உட்கி - நகர்ப்புறத்திலிருந்தும் (அங்கும் பறவைகள் வருத்துதற்கு) அஞ்சி யாற்றாது, நீள் வனத்து உள் போகி - பெரிய காட்டிற்சென்று, வழி மருங்கு ஒரு சார் நிற்கும் - வழியில் ஒருபால் நிற்கும், கள் கவிழ்ந்து ஒழுக பூத்த - மதுவைக் கவிழ்த்துச் சிந்த மலர்ந்த, கவிழ் இணர் மாம் மேல் வைகி - கவிழ்ந்த பூங்கொத்துகளையுடைய மாமரத்தின்மேலிருந்து, வெட்கம் மீதூர சாம்பி வெய்துயிர்த்து இருக்கும் எல்லை - நாணமீதூரச் சோர்ந்து பெருமூச்செறிந்து வசிக்குமளவில்.

எல்லாப் பறவைகளும் வருத்த நிற்றலால் எளிதாய் எனவும், மாமரம் ஆதலால் கவிழிணர் மரம் எனவும், தன்னையொத்த பறவைச்சாதிகள் வருத்த நிற்றலால் வெட்கமீதூரச் சாம்பி யெனவுங் கூறினார். "அலையாது-கீழிணர் நின்ற மேற்பகைமாவின்" என வரும் ஏதுவால் காண்க. (௪)

விடையவனீறுபூசுமெய்யவன்பூண்டகண்டித்
தொடையவன்புறம்புமுள்ளுந்தூயவன்குடையுங்கையி
லுடையவன்றருமதீர்த்தயாத்திரையொழுக்கம்பூண்ட
நடையவனொருவனந்தநறுந்தருநிழலிற்சார்ந்தான்.

(இ-ள்.) விடையவன் நீறு பூசும் மெய்யவன் - சிவபெருமான் திருநீறுபூசுந் திருமேனியையுடையவனாய், பூண்ட கண்டி தொடையவன் - ஆபரணமாகப்பூண்ட உருத்திராட்சக்கண்டிகையாகிய மாலையையுடையவனாய், உள்ளும் புறம்பும் தூயவன் - அகமும் புறமுந் தூய்மையையுடையவனாய், கையில் குடையும் உடையவன் தருமதீர்த்தயாத்திரை ஒழுக்கம்பூண்ட நடையவன் ஒருவன் - கையிலேந்திய குடையையும் உடையவனாய்ப் புண்ணிய வடிவமாகிய தீர்த்த யாத்திரை செல்லும் நியதியே தனக்கோராபரணமாகப் பூண்ட நடைப்பிடியையுடைய வொருவன், அந்த நறுந்தரு நிழலில் சார்ந்தான் - அந்தநறு மணமிக்க மாமரத்தினிழலை யடைந்தனன்.

சிவபெருமானுக்கே யுரியதாதலால் விடையவனீறுபூசும் எனவும், உள்ளம் போலப் புறமுஞ் சிவவேடப் பொலிவால் தூயனாயிருத்தலால் புறம்பும் உள்ளுந் தூ

யவன் எனவும், புண்ணியதீர்த்தங்களிற் சென்றாடுதலே யொழுக்கமாகக் கொண்ட கடப்பாடுடைமையால், தருமதீர்த்தயாத்திரை யொழுக்கம் பூண்ட கடையவ னெனவுங் கூறினர். கடைப்பிடி ஈறுதொக்குக் கடையென நின்றது. விடையவனிது என்றது "திருவாலவாயான் திருநீறே" என ஆளுடையபிள்ளையாரருளிய திருப்பாசுரத்தால் உணர்க. (௫)

இருந்தவன்சிலரைநோக்கியியம்புவானெவர்க்கும்பேறு
தருந்தலந்தீர்த்தமூர்த்தித்தன்மையிற்சிறந்தவன்பு
வருந்தமிழ்மதுரைபொற்றாமரைத்தடஞ்சுந்தரேசப்
பெருந்தகையென்றுசான்றோர்பேசுவராதலாலே.

(இ-ள்.) இருந்தவன் - (அந்த மாமர நிழலில்) இருந்த முனிவன், சிலரை நோக்கி இயம்புவான் - அங்குள்ள சிலரைப் பார்த்துக் கூறுநின்றான், எவர்க்கும் பேறு தரும் தலம் தீர்த்தம் மூர்த்தி தன்மையில் சிறந்த - அடைந்த எவர்க்கு முத்திப்பயனை நல்கும்தலமும் தீர்த்தமு மூர்த்தியுமாகிய தன்மைகளுட் சிறந்துள்ளன, அன்பு வரும் தமிழ் மதுரை பொற்றாமரைத் தடம் சுந்தரேசப் பெருந்தகை என்று சான்றோர் பேசுவர் - கேட்போர்க்கு அன்புபயக்குந் தமிழ் வழங்கும் மதுரையும் பொற்றாமரைத் தீர்த்தமுஞ் சோமசுந்தரமூர்த்தியுமே யென்று பெரியோர் கூறுநிற்பர், ஆதலால் - ஆகையால். (௬)

ஓரிடத்தினையமூன்றுவிழுப்பமுமுள்ளதாகப்
பாரிடத்தில்லையெனைப்பதியிடத்தொன்றேயென்றுஞ்
சீருடைத்தாகுங்கூடற்செழுநகரிடத்தம்மூன்றும்
பேருடைத்தாகுமென்றாற்பிறிதொருபதியாதென்றான்.

(இ-ள்.) ஓர் இடத்து இனைய மூன்று விழுப்பமும் உள்ளது ஆக பார் இடத்து இல்லை - ஒருதானத்தில் தலமேன்மையுந் தீர்த்தமேன்மையு மூர்த்திமேன்மையு மாகிய இந்த மூன்று மேன்மையும் உளதாக இங்கன்றி நிலவுலகிலெங்குமில்லை, எனை பதி இடத்து ஒன்றே - மற்றைத் தலங்களில் ஒன்றேயுள்ளது, என்றும் சீர் உடைத்து ஆகும் கூடல் செழுநகர் இடத்து அ மூன்றும் பேர் உடைத்து ஆகும் என்றால் - எப்பொழுதும் திருவிழாச்சிறப்புடையதாகிய மதுரையென்னும் வளமிக்க திருநகரில் அம்மூன்றுமேன்மையும் பேர்பெற்றதாயுளதாமென்னில், பிறிது ஒரு பதி யாது என்றான் - (இவ்வாறு சிறந்த) வேறொருதலம் யாதுள்ளதென்று கூறினான்.

தலமேன்மை முதலிய மூன்றும் மதுரையிலுள்ளவே யெனைத்திருப்பதிகளிலில்லையென்பான் எனைப்பதியிடத்தொன்றே யென்றும், இவைகளாற் சிறந்து விளங்குவது மதுரையே என்பான் கூடற்செழுநகரிடத் தம்மூன்றும் பேருடைத்தாகுமென்றாற் பிறிதொருபதியாதென்றான் என்றுங் கூறினான். விழுப்பம் தொகுத்தல். (௭)

இம்மதுரேசன்சேவித்தேத்துவோர்க்கெளியனாகிக்
கைம்மலர்நெல்லிபோலக்கருதியவரங்களெல்லா
மிம்மையிலுடனேநல்குமேனையதலத்துளோரே
ரம்மையினன்றிநல்காராதலாலதிகனென்றான்.

(இ-ள்.) இம் மதுரேசன் சேவித்து ஏத்துவோர்க்கு எளியன் ஆகி - இந்த மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் தன்னை வணங்கும் அடியவர்க்கெளி

Koviloor Digital Library

யவனும், கைமலர் நெல்லி போல கருதிய வரங்கள் எல்லாம் இம்மையின் உடனே நல்கும் - கையிலேந்திய நெல்லிக்கனியைப்போல வேண்டிக் கருதிய எல்லா வரங்களையும் இப்பிறப்பில் உடனே தந்தருளுவன், ஏனைய தலத்து வானோர் அம்மையின் அன்றி நல்கார் - மற்றைத் தலங்களிலுள்ள மூர்த்திகள் மறுமையினன்றிக் கொடார்கள், ஆதலால் அதிகன் என்றான் - ஆகையால் சோமசுந்தரக்கடவுளே மேம்பட்டவனென்று கூறினான்.

கையிலேந்திய நெல்லிக்கனி தன்னை நோக்குவோர்க்குப் புறம்புபோலப் புலப்படாத அகவடிவையும் உடனே புலப்படுத்தல்போல வேண்டிய வரங்களை யிப்பிறப்பிலேயே யுடனே புலப்படத் தந்தருளுதலால் கைம்மலர் நெல்லிபோலக் கருதிய வரங்களெல்லாம் இம்மையினுடனே நல்கும் என்றார். (அ)

மற்றதுகேட்டுக்கொம்பர்வைகியகயவாய்ஞானம்
பெற்றதுபறவையாகிப்பிறந்ததும்பிறவுந்தேற்ற
முற்றதுநாமிச்சன்மமொழிப்பதற்கறவோனிம்மன்
சொற்றதேயுறுதியென்றுதுணிவுகொண்டெழுந்ததன்றே.

(இ-ள்.) அது கேட்டு கொம்பர் வைகிய கயவாய் - அதனைக் கேள்வியுற்ற அப்போதே கொம்பிலிருந்த கரிக்குருவியானது, ஞானம் பெற்றது பறவை ஆகி பிறந்ததும் பிறவும் தேற்றம் உற்றது - ஞானமடைதலால் பறவையாய்த் தான் வந்து பிறந்ததையும் மற்றுள்ளனவற்றையுந் தெளிந்து, நாம் இ சன்மம் ஒழிப்பதற்கு அறவோன் இம்மன் சொற்றதே உறுதி என்று - நாம் இந்தப் பிறப்பினை யொழித்தற்கு இம்முனிவன் இங்குக் கூறியதே யுறுதி பயப்பதென்று கருதி, துணிவு கொண்டு எழுந்தது - துணிந்து (மதுரைக்குச் செல்ல) எழுந்தது.

இறப்பு நிகழ்வெதிர் வென்னு முக்காலங்களில் நிகழு நிகழ்ச்சியையுணரு ஞானம்பெற்றதென்பார்ஞானம் பெற்றது பறவையாகிப் பிறந்ததும் பிறவுந் தேற்ற முற்றது என்றார். (கூ)

ஆய்மலர்க்கானநீங்கியாடகமாடக்கூடற்
போய்மலர்க்கனகஞ்சப்புண்ணியப்புனறோய்ந்தாம்பல்
வாய்மலர்க்கயலுண்கண்ணாண்மணாளனைவலஞ்செய்தன்பிற்
றோய்மலர்க்கழலினானையகத்தினாற்றொழுதர்ச்சித்தே.

(இ-ள்.) ஆய் மலர் கானம் நீங்கி - வண்டுகளாராயு மலர்களையுடைய காட்டினின்றும் நீங்கி, ஆடகம் மாடம் கூடல் போய் - பொற்றகடு வேய்ந்த மாடங்கள் நெருங்கிய மதுரையிற் சென்று, மலர் கனக கஞ்சம் புண்ணியம் புனல் தோய்ந்து - மலர்தலையுடைய பொற்றாமரைபூத்த புண்ணியதீர்த்தத்தில் படிந்து, ஆம்பல் வாய் மலர் கயல் கண்ணாள் மணாளனை வலஞ் செய்து - ஆம்பல் மலர்போன்ற திருவாயினையுடைய தாமரைமலர்போன்ற அங்கயற்கண்ணியார் கணவராகிய சோமசுந்தரக்கடவுளைப் பிரதக்ஷணஞ்செய்து, அன்பில் தோய் மலர் கழலினானை அகத்தினால் அர்ச்சித்து தொழுது-அடியவரன்பிற்கலந்த தாமரைமலரையொத்த திருவடியையுடைய அச்சோமசுந்தரக்கடவுளை மனத்தினாலருச்சனைசெய்து வணங்கி.

மானதபூசை செய்தது என்பார் அகத்தினாற்றொழுதர்ச்சித்து எனவும், அன்புஞ் சிவமும் அபேதம் என்பார் அன்பிற்றோய் மலர்க்கழலினான் எனவுங் கூறினார். ()

இன்னணமூன்றுவைகல்கழிந்தபினெம்பிராட்டி
தன்னமர்காதலானைத்தாழ்ந்தெதிர்நோக்கியைய

Koviloor Digital Library

வென்னையிக்கயவாய்செய்யுஞ்செயலிதன்வரவியாதென்ன
முன்னவனதன்றன்செய்திவரவெலாமுறையாற்கூறு.

(இ-ள்.) இன்னணம் மூன்று வைகல் கழிந்த பின் - இவ்வாறு மூன்றுதினங் கழிந்தபின்பு, எம்பிராட்டி தன் அமர் காதலானை தாழ்ந்து எதிர் நோக்கி - எமது பிராட்டியாராகிய அங்கயற்கண்ணியார் தம்மால் விரும்பப்பட்ட கணவராகிய சோமசுந்தரக்கடவுளை வணங்கி யெதிரே பார்த்து, ஐய - ஐயனே, இ கயவாய் செய்யும் செயல் என்னை - இந்தக் கரிக்குருவி செய்யும் செய்கையாது, இதன் வரவு யாது என்ன - இது இங்கு வருகை யாதென்று வினவ, முன்னவன் அதன் தன் செய்தி வரவு எல்லாம் முறையால் கூறு - அச்சோமசுந்தரக்கடவுள் அதனது முன்னிகழ்ந்த செய்தியும் இங்குவந்த செய்தியுமாகிய இவைகளை யெல்லா முறைபடக்கூறி.

மக்கள் நோய்தீரத் தாய் மருந்தருந்தல் போல ஆன்மாக்களுணர்ந்து வழிபட்டு மலச்சிமிழ்ப்பு ஒழித்துய்ய அறிந்தும் அறியார்போல வினவினர் என்பார் எம்பிராட்டி தன்னமர்காதலானைத் தாழ்ந்தெதிர்நோக்கிச் செய்யுஞ் செயலிதன் வரவியாதென்ன எனக் கூறினர். (௧௧)

பத்திமைநியமம்பூண்டபறவைமேற்கருணைநாட்டம்
வைத்திமையாதமுக்கண்மறைமுதலொருசேய்க்கன்று
நித்தியநிலைமைநல்கிநேர்ந்தவெங்கூற்றைக்காய்ந்த
சத்தியஞானமித்திஞ்சயத்தினையுபதேசித்தான்.

(இ-ள்.) இமையாத முக்கண் மறை முதல் - இமைத்தலில்லாத திரிநேத்திரங்களையுடைய சோமசுந்தரக்கடவுள், பத்திமை நியமம் பூண்ட பறவை மேல் கருணை நாட்டம் வைத்து - பத்திசெய்து வழிபடுதலையே கடப்பாடாகக் கொண்ட கரிக்குருவியின்மேல் திருநோக்கம் வைத்து, ஒரு சேய்க்கு அன்று நித்திய நிலைமை நல்கி - (தம்மை வழிபட்ட) மார்க்கண்டேயருக்கு அக்காலையில் நித்தியத்துவத்தைத் தந்தருளி, நேர்ந்த வெங்கூற்றை காய்ந்த சத்திய ஞான மித்திஞ்ச யத்தினை - அவர்மேலெதிர்ந்த கொடிய இயமனை உதைத்தருளிய உண்மைஞானமாகிய மித்திஞ்சய திருமந்திரத்தை, உபதேசித்தான் - (கரிக்குருவிக்கு) உபதேசித்தருளினர்.

குரு சந்தானம் விளக்கற்பொருட்டும் ஆன்மாக்களுணர்ந்து கதியடைதற்பொருட்டும் வேதங்களை யருளிய முதல்வன் என்பார் மறைமுதல் எனவும், இமைக்கிற் சூரிய சந்திரர் இயக்கமொழியும் என்பார் இமையாதமுக்கண் எனவும், என்றும் அழியாத்தன்மை யருளினர் என்பார் நித்தியநிலைமை நல்கி யெனவும், கூறினர். மித்திஞ்சயம் மூன்றெழுத்தோடு கூடிய திருமந்திரம். இதனைக் குருமுகத்திலுணர்க. இயமனை யுதைத்த வரலாறு முன்னர்க்கூறியதட்காண்க "ஆரணமாகமங்களருளினு முருவுகொண்டு - காரணனருளாலுகிற் கதிப்பவரில்லையாகும்-நாரணன்முதலாயுள்ளசுரர்நரர் நாகர்க்கெல்லாம் - சிரணிகுருசந்தானச்செய்தியுஞ் சென்றிடாவே" எனவரும் அதனால் மறைமுதல் என்றதற்குக் கூறியதுணர்க. (௧௨)

கலிவிருத்தம்.

உவமைபற்றவனுரைத்தமந்திரஞ்
செவிமடுத்தலுஞ்சிற்றுணர்ச்சிபோய்ப்
பவமகற்றிடப்படுகரிக்குரீஇ
கவலைவிட்டரன்கழல்வழுத்துமால்.

Koviloor Digital Library

(இ-ள்.) உவமை அற்றவன் உரைத்த மந்திரம் செவி மடுத்தலும் - தனக்கு நிகரில்லாத பெருமான் உபதேசித்தருளிய மந்திரத்தைக் காதிற்கேட்டலும், சிற்றுணர்ச்சி போய் - சிற்றறிவு நீங்கி, பவம் அகற்றிடப் படு கரிக்குருவி - (அத்திருமந்திரத்தால்) இனிவரும் பிறப்பு நீக்கப்பட்ட கரிக்குருவியானது, கவலை விட்டு அரன் கழல் வழுத்தும் - கவலையொழிந்து அப்பெருமான் திருவடியைத் துதிக்கும்.

யாவும் தனது சத்தியாலாக்கப் படுபொருள்கள் ஆதலால் தனக்குத்தானே யொத்தவன் என்பார் உவமையற்றவன் எனவும், அவனுலுரைத்தருளப்படுவது பேரறிவு நல்கிப் பிறவியையொழிக்கும் என்பார் சிற்றுணர்ச்சிபோய்ப் பவமகற்றிடப் படுகரிக்குரீஇ எனவும், அதனுலினிவரும் கவலையொழிந்ததென்பார் கவலைவிட்டு எனவுங்கூறினர். (கங)

எண்ணிலாவுயிர்க்கிறைவபோற்றிவான்
றண்ணிலாமதிச்சடிலபோற்றியென்
புண்ணியப்பயன்போற்றியங்கயற்
கண்ணிநாதநின்கருணைபோற்றியால்.

(இ-ள்.) எண் இல்லாத உயிர்க்கு இறைவ போற்றி - எல்லையில்லாத ஆன்மகோடிகளுக்குத் தலைவனே உன்னை வந்திக்கக்கடவேன், வான் தண் நிலாமதி சடில போற்றி - ஆகாயத்தில் தவழும் தண்ணிய கிரணம்வாய்ந்த சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடையவனே வணங்கக்கடவேன், என் புண்ணியப்பயன் போற்றி-எனது சிவபுண்ணியத்தின் பேறுயுள்ளவனே வந்திக்கக்கடவேன், அங்கயற்கண்ணி நாத நின் கருணை போற்றி - அங்கயற்கண்ணியம்மையார் தலைவனே யுனது திருவருளை வந்திக்கக்கடவேன்.

மலத்திற்சிமிழ்ப்புண்ட சிற்றறிவுடைய ஆன்மாக்களுக்கு முதல்வன் அம்மலத்தினீங்கிய பேரறிவுடையவனு யுணர்த்துவோன் ஆதலால் எண்ணிலாவுயிர்க்கிறைவ போற்றியெனவும், தன்னைச் சரணடைந்தோர் நலிவையொழித்தருளுந் தயாமூர்த்தியாதலால் வான் தண்ணிலாமதிச் சடிலபோற்றியெனவும், தான் செய்த சிவபுண்ணியம் இம்மையிலேயே பயக்கச்செய்தவன் ஆதலால் என் புண்ணியப் பயன் போற்றியெனவும், திருவருட்டுணைவனும் என்றுங் கருணையேயுடையவன் ஆதலால் அங்கயற்கண்ணிநாத நின்கருணை போற்றியெனவுந் துதித்தது. (கச)

தெளிதலின்றியேசெய்ததீமையால்
விளியுமென்னையுமாளல்வேண்டுமோ
வெளியரெங்குளாரென்றுதேர்ந்துதேர்ந்
தளியையாவதுன்னருளின்வண்ணமே.

(இ-ள்.) தெளிதல் இன்றியே - (குணங்குற்றங்களால்வரும்பயன்) தெளியாது, செய்த தீமையால் விளியும் என்னையும் ஆளல் வேண்டுமோ-நான் செய்த கொடுவினையால் இழிபிறப்புற்றிறக்குமென்னையும் ஓர்பொருளாகக்கருதி யாளவேண்டுமோ, எளியர் எங்கு உள்ளார் என்று தேர்ந்து தேர்ந்து அளியை ஆவது - (அடியேனையொத்த எளியரெங்குளரென்று நாடியவர்மேற் கருணையுடையையாயிருத்தல், உன் அருளின் வண்ணம் - உன் திருவருளின் திறம்.

முக்காலநிகழ்ச்சியையு முணரும் ஞானந் தோன்றினமையால்தான் முற்பிறப்பிற்செய்தது தனக்குத்தோன்றியதுஎன்னும் தெளிதலின்றியே செய்த தீமையால் விளியுமென்னையும் எனவும், அக்கொடுந்தொழிலால் ஓம்பப்பட்டவனல்லனென்னும்

Koviloor Digital Library

அளவேண்டுமோ எனவும், பசுக்களன்றி, யாதரிப்போர் ஒருவருமின்றிக்கவலு ம் எளியர் எக்குளரென்றாராடித் தனது முற்றமுணர்தற்றன்மையால் தனித்தனி பெருஞ்சோராடி யருள்செய்தலே யுன்னருளின் திறன் என்றும் எளியரெக்குளரெ ன்று தேர்ந்து தேர்ந்தளியையவே தன்னருளின்வண்ணம் எனவுங்கூறியது. (௧௫)

உம்மைநல்லறமுடையநீர்மையா
லிம்மையிம்மனுவியம்பினுயிது
வம்மைநன்னெறிக்கேதுவாதலான்
மும்மையுநலமுடையமொய்ம்பினேன்.

(இ-ள்.) உம்மை நல் அறம் உடைய நீர்மையால் - முற்பிறப்பி லடியேன்செ ய்த சிவபுண்ணியப்பேறு பெரும்பாலும் உடையனுதற்றன்மையால், இம்மை இம னு இயம்பினுய் - இப்பிறப்பில் இத்திருமந்திரத்தை யருளினுய், இது அம்மை நல் நெறிக்கு ஏது ஆதலால் - இது மறுமையில் சிவகதியிலுய்த்தற்குக் காரணமாதலால், மும்மையும் நலம் உடைய மொய்ம்பினேன் - உம்மை இம்மை அம்மை யென்னும் முத்திறத்துப்பேறுமடைந்த வலியனுயினேன்.

முற்பிறப்பில் சிவபுண்ணியப்பேறும் இப்பிறப்பில் திருமந்திரப்பேறும் வரு பிறப்பில் சிவகதிப்பேறும் ஒருங்குடையேன் என்னும் மும்மையும் நலமுடைய மொ ய்ம்பினேன் என்றது. (௧௬)

ஆயினும்மெனக்கையவோர்குறை
நியபுள்ளெலாமூறுசெய்தென்னைக்
காயுமானமுங்கழியக்கண்டபே
ரேயெனும்படிக்கெளியனுயினேன்.

(இ-ள்.) ஆயினும்- (நினது திருவருட்டுணையால் பெரும்பேறடைந்தேன்) ஆ னுலும், ஐய ஓர்குறை எனக்கு - ஐயனே யோர் குறையெனக்குள்ளது, தீய புள் எல்லாம் - கொடிய பறவைகளெல்லாம், மானமும் கழிய ஊறு செய்து என்னை கா யும்படிக்கு - வலிமையோடு மானமும் என்னினின்று நீங்க இடையூறு செய்து என்னை வருத்தும்படிக்கும், கண்ட பேர் ஏ என்னும்படிக்கு - பார்த்தபேர் ஏ என்று இழிந்து ஒட்டும்படிக்கும், எளியன் ஆயினேன் - எளியனுநிலையடைந்தேன்.

ஏ இழிப்புக்குறிப்பைபயுணர்த்தும் ஓரிடைச்சொல். உம்மை வலிமையுமன்றி என நிற்றலால் இறந்தது தழீஇய எச்சப்பொருட்டு. குறையென்றும் வினைமுதல் எளியனுதல் என்றும் பயனிலைகொண்டது. (௧௭)

என்னவக்குரீஇயியம்பவெம்பிரா
னன்னபுட்கெலாம்வலியையாகெனப்
பின்றுமக்குரீஇதாழ்ந்துபேதையேற்
கின்றுமோர்வரந்தருதியென்றதால்.

(இ-ள்.) என்ன அகுரீஇ இயம்ப - என்று அக்குருவி குறையிரக்க, எம்பி ரான் - எமது பெருமான், அன்ன புட்கு எல்லாம் வலியை ஆக என்ன - அப்பறவை களுக்கெல்லாம் வலியனுகக்கடவா யென்றருள, பின்னும் அகுரீஇ தாழ்ந்து-மீளவு ம் அந்தக்குருவி வணங்கி, பேதையேற்கு இன்றும் ஓர் வரம் தருதி என்றது - அறி வில்லாத அடியேனுக்கு இன்றும் ஓர்வரந் தந்தருளாயென்றிரந்தது.

Koviloor Digital Library

என்றும் அருள்வள்ளல் என்பது தோன்றப், பின்றுமக்குரீஇத் தாழ்ந்து பேதையேற் - கின்னுமோர் வரந்தருதி யென்றது என்றார். (௧அ)

வலியையென்பதென்மரபினுக்கெலாம்
பொலியவேண்டுமெப்போதுநீசொன
வொலியமந்திரமோதியோதிநாங்
கலியைவெல்லவுங்கருணைசெய்கென.

(இ-ள்.) வலியை என்பது - வலியையாகவென்ன எனக்கருளிய பேறு, என் மரபினுக்கு எல்லாம் - என்மரபிலுள்ள பறவைகளுக்கெல்லாம், எ போதும் பொலிய வேண்டும் - எந்நாளும் குறைவின்றி விளங்கவேண்டும், நீ சொன்ன ஒலிய மந்திரம் ஓதி ஓதி - நீயருளிய ஒலியையுடைய திருமந்திரத்தை யிடையீடின்றிப் பயின்று, நாம் கலியை வெல்லவும் கருணை செய்க என்ன - நாங்கள் துன்பத்தைப் புறங்காணவும் கருணை செய்தருளாயென்றிரக்க.

தானடைந்தபேறு தன்குலமுழுதும் அடையக் கருதுதல் ஆன்றோர் வழக்கென்னு மூதுரையை இக்கரிக்குருவி விளக்கியதென்பார் உளப்பாட்டுப் பன்மைப் பொருள்பட, நாம் கலியைவெல்லவுங் கருணைசெய்கென என்றது என்றார். இதனை யடியில்வருஞ் செய்யுளிற் காண்க. (௧௯)

ஆவதாகவென்றமரர்நாயகன்
மூவெழுத்தினுன்முடிந்தவம்மநு
தாவிறெய்வதமிருடிசந்தமோ
டோவிலோசைமூன்றொடுதெருட்டினான்.

(இ-ள்.) ஆவது ஆக என்று - குறையிரந்தது கைகூடக் கட்வதென்று, அமரர் நாயகன் - தேவர்கள் பெருமானாகிய சோமசுந்தரக்கடவுள், மூ எழுத்தினுல் முடிந்த அமநு - மூன்றெழுத்தினால் முடிந்த அத்திருமந்திரத்தை, தா இல் தெய்வதம் இருடி சந்த மோடு - கெடுதலில்லாத தெய்வம் ருஷிசந்தஸ் என்னும் இவைகளோடும், ஓவு இல் ஓசை மூன்றொடு-நீங்குதலில்லாத அநுதாத்தமுதலிய மூன்றொலிகளோடும், தெருட்டினான் - தெளிவுபெற அருளினார்.

மூவெழுத்தினுல் முடிந்த அம்மநு என்றது திரியம்பகம் என்னும் திருமந்திரம். சந்தஸ் என்றது காயத்திரி சந்தஸ். ஓசைமூன்று என்றது அநுதாத்தம், உதாத்தம், சொரிதம். (உ௦)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

குருமொழிபயின்றுமுள்வாய்க்குருவிதன்குலனுந்தன்போல்
அருமறைமுதல்வனீந்தவாற்றலாற்பறவையெல்லாந்
பெருமைசால்வலியானென்னும்பெயரவாயுலகின்மன்னக்
கருமவரிகண்டன்செம்பொற்கணைகழலடிசேர்ந்தன்றே.

(இ-ள்.) முள் வாய் குருவி குரு மொழி பயின்று - முள்போலக் கூரிய வாயையுடைய கரிக்குருவியானது குரு உபதேசத்தை யிடைவிடாது பழகி, தன் குலனும்-தன்சாதிப் பறவைகளும், தன் போல்-தன்னைப்போல, முதல்வன் ஈந்த அருமறை ஆற்றலால் - சோமசுந்தரக்கடவுளருளிய அரிய திரியம்பகமநுவின் வன்மையால், பறவை எல்லாம் - தன்சாதிப் பறவைகளெல்லாம், பெருமை சால் வலியான் என்னும் பெயர ஆய் உலகில் மன்ன - பெருமைமிக்க வலியானென்னும் பெய

Koviloor Digital Library

ளாயுளடயன வாயுலகில் நிலைபெற, கருமணி கண்டன் செம்பொன் கனை கழல் அடி சேர்ந்தன்று - கரிய நீலமணிபோன்ற ஸ்ரீகண்டத்தையுடைய அச்சோமசுந்தரக் கடவுளுடைய செவ்விய பொன்னாலாகிய ஒலிக்கும் வீரகண்டைகட்டிய திருவடியை யடைந்தது.

முன்வாய் முன்போலக்கூரியவாய் என நிற்றலால் பண்புவமைத்தொகை.()

இக்கரிக்குருவிதானோற்றெய்தியவரத்தைத்தன்போல்
ஒக்கலுமெளிதாவெய்தப்பெற்றதாலுலகின்மேன்மைத்
தக்கவனொருவன்வாழத்தன்கிளைவாழ்வதென்ன
மிக்கவரெடுத்துக்கூறும்பழமொழிவிளக்கிற்றன்றே.

(இ-ள்.) இ கரிக்குருவி தான் நோற்று எய்திய வரத்தை - இந்தக் கரிக்குருவி தான்வருந்தி நோற்றடைந்த வரத்தை, தன் போல் ஒக்கலும் எளிதாக எய்த பெற்ற தால் - தன்னைப்போலத் தன் சாதிப் பறவைகளெல்லாம் வருந்தாமல் எளிதாக அடையப் பெற்றதினால், உலகில் மேன்மை தக்கவன் ஒருவன் வாழ - உலகின்கண் மேன்மைபொடு நடுநிலைமையையுடைய வொருவன் வருந்தி முயன்றுவாழ, தன் கிளை வாழ்வது என்ன - அவன்கீழ் அவன் உறவினர் யாவரும் வாழ்வரென்று, மிக்கவர் எடுத்து கூறும் பழமொழி விளக்கிற்று - ஆன்றோரெடுத்துக் கூறுமூதுரையை விளக்கியது.

தக்கவன் வருந்திமுயன்றுவாழ்தல் அவன் கிளைவாழ்வதற்கு என்பார் தக்கவனொருவன் வாழத் தன்கிளை வாழ்வதென்ன வெனவும், மூதுரை ஆன்றோர் கூறு என்பார் மிக்கவரெடுத்துக்கூறும் பழமொழி விளக்கிற்று எனவுங் கூறினார் "அழுன்மண்டுபோழ்தி னடைந்தவர்கட்கெல்லாம் - நிழன்மரம்போலொப்பத் தாங்கிப் பழுமரம்போற் - பல்லார்பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே - நல்லாண்மகற்குக் கடன்" எனவரும் நூலால் உணர்க. (௨௨)

வேறு.

ஈசனடிக்கன்பில்லார்போலெளியாரில்லையாவர்க்கும்
ஈசனடிக்கன்புடையார்போல்வலியாரில்லையாவர்க்கும்
ஈசனடிக்கன்பின்மையினலெளிதாய்த்திரிந்தவிக்கயவாய்
ஈசனடிக்கன்புடைமையினல்வலிதாயிற்றேயெவ்வுயிர்க்கும்.

(இ-ள்.) ஈசன் அடிக்கு அன்பு இல்லார் போல் - சிவபெருமான் திருவடிக்கீழன்பில்லாதவர்போல, யாவர்க்கும் எளியார் இல்லை - எவருள்ளும் எளியவரில்லை, ஈசன் அடிக்கு அன்பு உடையார் போல் - அச்சிவபெருமான் திருவடிக்கீழன்புடையவர்போல, யாவர்க்கும் வலியார் இல்லை - எவருள்ளும் வலியவரில்லை, ஈசன் அடிக்கு அன்பு இன்மையினல் எளிது ஆய் திரிந்த இ கயவாய் - அப்பெருமான் திருவடிக்கீழன்பில்லாமையினல் எப்பறவைகளுள்ளும் எளிதாகத்திரிந்த இந்தக் கரிக்குருவி, ஈசன் அடிக்கு அன்பு உடைமையினல் எ உயிர்க்கும் வலிது ஆயிற்று - அப்பெருமான் திருவடிக்கீழன்புடைமையினல் எப்பறவைகளுள்ளும் வலிதாயிருந்தது.

சிவபெருமான் திருவடிக்கீழ் அன்பில்லாதவரே யெளிமையிற் சிறந்தோர்க்கு உவமிக்கப்படுவோர் என்பார் ஈசனடிக்கன்பில்லார்போ லெளியாரில்லை யெனவும், பிரமன் முதல் பிபீலிகாந்தம் காறும் என்பார் யாவர்க்கும் எனவும், அப்பெருமான் திருவடிக்கீழ் அன்புடையவரே வன்மையிற் சிறந்தோர்க்கு உவமிக்கப்படுவோர் என்பார் ஈசனடிக்கன்புடையார்போல் வலியாரில்லை யெனவும், இவ்விருசி

Koviloor Digital Library

Koviloor Digital Library

நாரைக்குமுத்திகொடுத்ததிருவிளையாடல்.



Koviloor Digital Library

றுத்தையும் கரிக்குருவி விளக்கியது என்பார் ஈசனடிக்கன்பின்மையினு லெளிதாய்த் திரிந்தவிக்கபவாய் - ஈசனடிக்கன்புடைமையினுல் வலிதாயிற்றே யெவ்வுயிர்க்கும் எனவுங் கூறினர். "பூமேலயனேடுமாலும் புகலரிதென் - றேமாறிநிற்க வடியே னிறுமாக்க - நாய்மேற்றவிசிட்டு நன்றுப்பொருட்படுத்த - நிமேனியாறுக்கே சென்றூதாய்கோத்தும்பீ" எனவரும் ஏதுவால் உணர்க. (உரு)

கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்தபடலம் - முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உஉசுசு.

நாற்பத்தெட்டாவது
நாரைக்கு முத்திகொடுத்தபடலம்

கலிவிருத்தம்.

அத்திதந்தவிமானமழகியார்
பத்திதந்தபறவைக்குமந்திர
சித்திதந்ததிறனிதுநாரைக்கு
முத்திதந்தகருணைமொழிகுவாம்.

(இ-ள்.) அத்தி தந்த விமானம் அழகியார் - அஷ்டகசங்களாற் சுமக்கப்பட்ட விமானத்திலெழுந்தருளிய சுந்தரவிடங்கப்பெருமானுர், பத்தி தந்த பறவைக்கு மந்திர சித்தி தந்த திறன் இது - அன்புசெய்து வழிபட்ட கரிக்குருவிக்கு மந்திரசித்தி தந்தருளிய திருவிளையாடலிது, நாரைக்கு முத்தி தந்த கருணை மொழிகுவாம் - நாரைக்குச் சிவகதி தந்தருளிய கருணைத்திறமாகிய திருவிளையாடலை யினிக் கூறுவாம்.

சிவபெருமான் திருவிளையாடலும் ஆன்மாக்களுக்குச் சிவஞானந்தருந் திருவருள் ஆதலால் முத்திதந்த கருணை மொழிகுவாம் என்றார். "உருவருள் குணங்களோடுமுணர்வரு ளுருவிற்றேன்றுங் - கருமமுமருள்" என்ற ஏதுவால் உணர்க.

தேக்குநீர்வையைநாட்டொருதென்புலத்
தாக்குமாடவைப்பொன்றுளதவ்வயின்
வீக்கும்யாழ்செயும்வண்டுக்குவீழ்நற
வாக்குதாமரைவாவியொன்றுள்ளதால்.

(இ-ள்.) தேக்கும் நீர் வையை நாடு ஒரு தென் புலத்து - நிறைந்தநீர் மயமாகிய வையைநதி சூழ்ந்த பாண்டிநாட்டில் ஓர்சார் தென்பாலில், ஆக்கும் மாடம் வைப்பு ஒன்று உள்ளது - சிற்பநூல் வழி சமைத்த மாடங்களையுடைய நகரம் ஒன்றுள்ளது, அவயின் - அவ்விடத்தில், வீக்கும் யாழ் செய்யும் வண்டுக்கு - நரம்பின் கட்டமைந்த வீணையினிசைபோல இசைபாடும் வண்டுகளுக்கு, வீழ் நற வாக்கு தாமரை வாவி ஒன்று உள்ளது - விரும்புந் தேனை வாக்காநின்ற தாமரைகளையுடைய தடாகம் ஒன்றிருக்கின்றது. (உ)

ஆழமிக்ககயர்தலையத்தலை
வாழுமீனமனைத்தையும்வாய்ப்பெய்து

குழனந்துமுத்தீனுந்துறைக்கணே
தாழ்வதோர்செய்யதாண்மடநாரையே.

(இ-ள்.) ஆழம் மிக்க கயந்தலை - அளவு அளத்தற்கரிய ஆழத்தையுடைய தடாகமோம், அதனில் வாழும் மீனம் அனைத்தையும் வாய்ப்பெய்து - அத்தடாகத்தில் வாழு மீன்களையெல்லாங் கொள்ளைகொண்டு, குழல் நந்து முத்து ஈனும் துறைக்கண் - சுற்றிருந் சங்குகள் முத்துகளையீனுந் துறையிலே, செய்ய தாள் ஓர் மடமை நாரை தாழ்வது - சிவந்த கால்களையுடைய ஒரு இளநாரை வாசஞ்செய்யா நின்றது. (௩)

சிறியநாண்மழையின்றியச்சேயிதழ்
வெறியதாமரையோடைவியன்கரை
இறைகொணாரையிருவினைப்பௌவமும்
வறியதாகிவறப்பவறந்ததால்.

(இ-ள்.) சிறிய நாள் மழை இன்றி - சிலநாள் மழையின்மையால், அ சேய் இதழ் வெறிய தாமரை ஓடை வியன் கரை இறை கொள் நாரை - அந்தச் சிவந்த இதழையுடைய வாசமிக்க தாமரைகள் நிறைந்த தடாகத்தின் விசாலித்த கரையிற்றங்கிய நாரையினது, இருவினை பௌவம் உம் வறியது ஆகி வறப்ப - நல்வினை தீவினை யென்னுங் கடலும் சிறிதுமில்லாது வறக்க, வறந்தது - அத்தடாகம் வற்றியது.

தடமும் பொய்கையும் வாவியும் மடுவுங் குளமும் ஓடையும் உருவால் வேறுபடினும் அவையெல்லாம் நீர்நிலையேயாதலால் இங்கு ஓடையென்றார். வேதாகம வழி நில்லாமையே பாவமும் அந்நூல் வழிநின்று அருள்வழி நில்லாமையே புண்ணியமும் ஆதலால் அவை பந்தம் என்பார் இருவினைப்பௌவமும் எனவும், அருள்வழி நிற்றல் வாய்த்ததென்பார் வறியதாகி வறப்பவறந்தது எனவுங் கூறினார். உம்மை உயர்வு சிறப்புப்பொருட்டு. (௪)

நனைசெறித்தனநோன்சிறைநாரையும்
இரைவிரும்பியவ்வாவியிகந்தொரீஇ
விரையவந்தொருகானிடைவீழ்ந்ததால்
புரையிலோர்க்கிடனாகுமப்பொங்கர்வாய்.

(இ-ள்.) நனை செறித்தால் அன்ன நோன் சிறை நாரையும் - நனைகளை இடையறாது செறித்தாலொத்த வெள்ளிய வலியசிறையையுடைய நாரையும், இரை விரும்பி அவ்வாவி இகந்து ஒருவி - இரையை விரும்பியத் தடாகத்தினின்று நீங்கி, விரைய வந்து ஒரு கான் இடை வீழ்ந்தது - விரைந்துவந்து ஒருகாட்டில் சோர்ந்து விழுந்தது, புரையிலோர்க்கு இடன் ஆகும் அ பொங்கர் வாய் - குற்றமில்லாத முனிவர்களுக்கு உறைவிடமாகிய மரச்செறிவையுடைய அக்காட்டில். (௫)

முத்தரானமுனிவர்குழாத்தொடும்
சுத்தவாநந்தவாரியுட்டோய்ந்துதன்
சித்தமாசகழீஇச்சிவமாகிய
சத்தியத்தவமாமுனிதங்குமால்.

(இ-ள்.) முத்தர் ஆன முனிவர் குழாத்தொடும் - சிவன்முத்தராகிய முனிவர்கூட்டத்தோடும், சுத்தம் ஆநந்தம் வாரி உள் தோய்ந்து - களங்கமில்லாத பேரி

Koviloor Digital Library

ன்பவெள்ளத்துள் மூழ்கி, தன் சித்தம் மாசு கழுவி - தனது மனத்தழுக்கைப்போக்கி, சிவம் ஆகிய சத்தியத்தவன் மாமுனி தங்கும் - சிவவடிவாகிய சத்தியத்தவன் என்னும் பெயரையுடைய பெரிய தபோதனனொருவன் வசிக்கின்றனன்.

பரஞானத்தால்வந்த சிவாநந்தவெள்ளம் என்பார் சுத்தவாநந்த வாரியெனவும், வெள்ளத்தில் மூழ்கினோர் புறத்தழுக்கு ஒழிதல்போலச் சிவாநந்தவெள்ளத்திலழுந்தினோர் ஆணவமலசத்தியாகிய மனஅழுக்கு ஒழிந்தார் என்பார் சித்தமாசு கழீஇ எனவும், அங்ஙனம் சிவம்பிரகாசிக்கும் என்பார் சிவமாகிய எனவுங்கூறினார்.

கூப்பிடெல்லைகுணித்துச்சதுரமாய்
யாப்பமைந்துசுற்றெங்கும்படித்துறைக்
கோப்பமைந்துகுளிர்சந்தியாமடம்
காப்பமைந்தோர்கயந்தலையுள்ளதால்.

(இ-ள்.) கூப்பிடு எல்லை சதுரம் ஆய் குணித்து யாப்பு அமைந்து - ஒரு குரோச அளவு சதுரமாய் வரையறுத்துக் கட்டுதலமையப்பட்டு, சுற்று எங்கும் படித்துறை கோப்பு அமைந்து-சுற்றிலும் எங்கும் படித்துறைக்கோவை யமையப்பட்டு, குளிர் சந்தியா மடம் காப்பு அமைந்த - தண்ணிய நிழல்செய்யும் சந்தியாமடம் காவலோடமைந்த, ஓர் கயந்தலை உள்ளது - ஒரு தடாகமுள்ளது. (எ)

விரைசெய்சண்பகம்பாதிரிவேங்கைதேன்
இரைசெய்வஞ்சியிலஞ்சிகுராமரா
நிரைசெய்கிஞ்சுகநீண்மருதாதியா
உரைசெய்பன்மரமும்புறத்துள்ளவால்.

(இ-ள்.) விரை செய் சண்பகம் பாதிரி வேங்கை - வாசம் வீசும் சண்பகமும் பாதிரியும் வேங்கையும், தேன் இரை செய் வஞ்சி இலஞ்சி குரா மரா - வண்டுகளொலிக்கும் வஞ்சியுமகிழும் குரவும் மராவும், நிரைசெய் கிஞ்சுகம் நீள் மருது ஆதியாக-வரிசையாயுள்ள முண்முருக்கும் நீண்ட மருதுமுதலாக, உரைசெய் பல் மரமும் புறத்து உள்ள - கூறும் பலமரங்களும் (அத்தடாகத்தின்) புறத்திலுள்ளன. (அ)

அந்தவாவியின்பேரதோதீர்த்தமென்
றிந்தஞாலமியம்புவதாவிரை
உந்தவாவுகொடுக்கவெழுந்துமுன்
வந்தநாரையதன்கரைவைகுமால்.

(இ-ள்.) அந்த வாவியின் பேர் - அந்தத் தடாகத்தின்பெயர், அதோ தீர்த்தம் என்று இந்த ஞாலம் இயம்புவது - அச்சோததீர்த்தமென இவ்வுலகினராற் கூறப்படுவது, இரை உந்து அவாவு கொடுக்க எழுந்து - இரையானதுமிக்க விருப்பினைக்கொடுக்க மேலெழுந்து, முன் வந்த நாரை அதன் கரை வைகும் - அத்தடாகத்தின்முன்வந்த நாரையானது அதன்கரையில் தங்காநிற்கும். (௯)

ஆய்ந்தமாதவரப்புனிதத்தடந்
தோய்ந்துதோய்ந்தங்கெழுந்தொறுந்தோட்புறம்
சாய்ந்தவார்சடைக்கற்றையிற்றத்துமீன்
பாய்ந்துபாய்ந்துபுரள்வனபார்த்தரோ.

(இ-ள்.) ஆய்ந்த மாதவர் - வேதாகமங்களை யாராய்ந்துணர்ந்த பெரிய தபோதனர்கள், அ புனிதம் தடம் தோய்ந்து தோய்ந்து எழுந்தோறும் - அந்த வா

Koviloor Digital Library

விரிவிய தடாகத்தில் நீராடி யெழுந்தோறும், தோள் புறம் சாய்ந்த வார் சடை தந்தையில் - பிடரில் சாய்ந்துகிடக்கின்ற நீண்ட சடாடவியில், தத்து மீன் பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்து - தவழ்கின்ற மீன்கள் தம்முட்பாய்ந்து புரள்தலைப் பார்த்து.

தோட்புறம் பிடர் ஆதலால் பிடர் என்றும். தோய்ந்து தோய்ந்து, பன்மைப்பொருளில் வந்த அடுக்கு. பாய்ந்து பாய்ந்து இடைவிடாமைப் பொருளில் வந்த அடுக்கு. அக்கு அசைநிலை. (௧௦)

ஈண்டையித்தவத்தோர் திருமேனியைத்
தீண்டவெத்தவஞ்செய்தனவேகொலென்
றுண்டைமீனமக்காகாவெனவிரை
வேண்டுகாரைவெறுத்தங்கிருந்ததால்.

(இ-ள்.) ஈண்டு இத்தவத்தோர் திருமேனியை தீண்ட - இவ்விடத்தில் இந்தத் தபோதனர்களுடைய திருமேனியைப் பரிசித்தற்கு, எதவம் செய்தன வே கொல் என்று - (மீன்கள்) என்னதவஞ்செய்தனவோவென்று கருதி, ஈண்டு மீன் நமக்கு ஆகா என - அவ்விடத்திலுள்ள அம்மீன்கள் நமக்கு இரையாகாவென்று, இரை வேண்டு காரை வெறுத்து அங்கு இருந்தது - இரைவேண்டிவந்த நாரை யதனை வெறுத்து அங்கு வசித்தது. (௧௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தந்நிகர்தவத்தோர்யாருந்தடம்படிந்தேறிநித்தம்
மன்னியகருமமுற்றிச்சந்தியாமடத்தில்வைகி
மின்னியமகுடஞ்சூடிவேந்தனாயுலகங்காத்த
பொன்னியற்சடையான்கூடற்புராணநூலோதுகின்றார்.

(இ-ள்.) தம் நிகர் தவத்தோர் யாரும் - தம்மையொத்த தவத்தினையுடைய வல்லோரும், தடம் படிந்து ஏறி மன்னிய நித்த கருமம் முற்றி - அத்தடாகத்தில் நீராடிக் கரையேறி இடைவிடாது என்றுமுள்ள நித்த கருமத்தைமுடித்து, சந்தியா மடத்தில் வைகி - சந்தியாமடத்திலிருந்து, மின்னிய மகுடம் சூடி வேந்தன் ஆய் உலகம் காத்த பொன் இயல் சடையான் கூடல் புராணம் நூல் ஓதுகின்றார்-விளங்கா நின்ற கிரீடத்தைத்தரித்துச் சவுந்தரபாண்டியராயுலகினைக்காத்தருளிய பொன்போலச் செந்நிறம் வாய்ந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுளுடைய திருவாலவாய் மான்மியநூலையோதி வருகின்றவர்களாயினார்கள். (௧௨)

அண்ணலெம்பெருமான்செய்தவருள்விளையாட்டுமாதிப்
பண்ணவன்சிறப்புங்கூடற்பழம்பதிச்சிறப்புந்தீர்த்தத்
தெண்ணருஞ்சிறப்புஞ்சேர்ந்தோர்க்கெளிவருமிறைவனென்னும்
வண்ணமுமெடுத்தொக்கூறக்கேட்டங்குவதியுநாளை.

(இ-ள்.) அண்ணல் எம்பெருமான் செய்த அருள் விளையாட்டும் - இறைவனுகிய எமது பெருமான் செய்தருளிய திருவிளையாடலையும், ஆதி பண்ணவன் சிறப்பும் - முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளாகிய சோமசுந்தரமூர்த்தியின் சிறப்பையும், கூடல் பழம் பதி சிறப்பும் - திருவாலவாயென்றும் தொன்றுதொட்டுள்ள தலச்சிறப்பையும், தீர்த்தத்து எண்ணரும் சிறப்பும் - தீர்த்தத்தின் வரையறுத்தற்கரிய சிறப்பையும், சேர்ந்தோர்க்கு எளிவரும் இறைவன் என்னும் வண்ணமும்-அடைந்தவர்க்கெளிய கருணைவள்ளலென்னுந் திறத்தையும், எடுத்து கூற

Koviloor Digital Library

அங்கு வதியும் நாரை கேட்டு - விரைந்து அம்முனிவர்கள்கூற அவ்விடத்துத் தங்கும் நாரை கேட்டு. (௧௩)

மடம்படுமறிவுநீங்கிவல்வினைப்பாசம்வீசித்
திடம்படுமறிவுகூர்ந்துசிவபரஞ்சோதிபாதத்
திடம்படுமன்புவாவென்றீர்த்தெழவெழுந்துநாரை
தடம்படுமாடக்கூடற்றனிநகரடைந்துமாதோ.

(இ-ள்.) மடம் படும் அறிவு நீங்கி - அறியாமைநீங்கி, வல்வினை பாசம் வீசி- (எழுந்த ஞானோதயத்தால்) வலிய ஆகாமியகன்மபந்தத்தை யொழித்து, திடம் படும் அறிவு கூர்ந்து - உயிர்க்குறுதி தரும் ஞானோதயம்பெற்று, சிவபரஞ்சோதி பாதத்து இடம் படும் அன்பு வா என்று ஈர்த்து எழ நாரை எழுந்து - சோமசுந்தரக்கடவுளின் திருவடியிற்பரந்த நேயம் வாவென்றிழுக்க நாரை அங்குநின்று மேலெழுந்து, தடம் படு மாடம் கூடல் தனி நகர் அடைந்து - விசாலித்த உபரிகைகள் நிறைந்த மதுரையாகிய ஒப்பில்லாத திருநகரையடைந்து.

பிராரத்தம் நுகரும்போதே யிடையிலேறும் வினையாதலால் ஆகாமியத்தை வல்வினை என்றார். ஞானோதயத்தால் ஒழித்து என்றது "ஏன்றவினையுடலோடேகு மிடையேறுவினை - தோன்றிலருளேசுடும்" என்ற திருவருட்பயனால் உணர்க. (௧௪)

வாங்கியதிரைசூழ்பொற்றாமரைபடிந்திமையாவேழந்
தாங்கியவிமானமேயதலைவனைத்தாழ்ந்துசூழ்ந்து
தேங்கியவருட்கணோக்கந்தெரிசித்துத்திருமுன்வைகி
யோங்கியகருணைமேனியுள்ளுறத்தியானஞ்செய்து.

(இ-ள்.) வாங்கிய திரை சூழ் பொன் தாமரை படிந்து - வளைந்த அலைகள் சூழ்ந்த பொற்றாமரைத்தீர்த்தத்தில் நீராடி, இமையாத வேழம் தாங்கிய விமானம் மேய தலைவனை தாழ்ந்து சூழ்ந்து - (தெய்வத்தன்மையால்) இமை கொட்டாத அஷ்டகசங்கள் சுமந்த விமானத்திலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை வணங்கிப் பிரதக்ஷிணம்செய்து, தேங்கிய அருள் கண் நோக்கம் தெரிசித்து - தன்மேல் தேக்கிய திருவருட்பார்வையைத் தெரிசித்து, திரு முன் வைகி ஓங்கிய கருணை மேனி உள் உறதியானம் செய்து - திருமுன்னரிருந்து (ஆன்மாக்களிடத்து) வளர்ந்தோங்கிய திருவருளாகிய திருமேனி தனதுள்ளத்திற்பதியத் தியானித்து.

சஞ்சிதகன்மம் ஒழிந்ததென்பார் தேங்கியவருட்கணோக்கந் தெரிசித்து எனவும், ஆன்மாக்களுணர்ந்து பூசித்துய்தற்பொருட்டுத் திருக்கோயிலுள் திருமேனி கொண்டருளினமையால் ஓங்கிய எனவும், திருவருளே திருமேனியாதலால் கருணைமேனி யெனவுங் கூறினார். சஞ்சிதகன்மம் திருவருணோக்கால் ஒழியும் என்றது "செய்யதிருக் - கண்ணருளானோக்கிக் கடியபிறப்பாற்பட்ட - புண்ணுமிருவினையும் போயகல" எனவரும் போற்றிப்பஃறொடையிற்காண்க. (௧௫)

இந்நிலைநியமமூவைந்தெல்லைஞான்றியன்றுபின்னாள்
அந்நிலையொழுகுநாரையாடககமலந்தோய்வான்
வன்னிலைமதில்சூழ்ஞாங்கர்வந்துழிப்பசியால்வெந்து
மின்னிலைவேல்போற்றுள்ளுமீன்கவர்ந்துண்குமென்னா.

(இ-ள்.) மூவைந்து எல்லை ஞான்று - பதினைந்துதினம், இ நிலை நியமம் இயன்று-இவ்வாறு செய் கடனைச் செய்து, பின் நாள் அந்நிலை ஒழுகு நாரை - மறுநாளில் அந்நியமத்தை முடிக்கும் நாரை, ஆடக கமலம் தோய்வான் - பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராட, வல் நிலை மதில் சூழ் ஞாங்கர் வந்த உழி - வலியநிலையையுடை

Koviloor Digital Library

ய சுந்தரமதியின்பக்கலில் வந்த இடத்து, பசியால் வெந்து - பசித்தழலால் நொந்துருகி, மின் இலை வேல் போல் துள்ளும் மீன் கவர்ந்து உண்ணும் என்று - விளங்குந் தகட்டினையுடையதாகிய வேலைப்போலத் துள்ளாநின்ற மீனைக் கொள்ளைகொண்டு உண்பேமென்று கருதி. (௧௬)

சிறிதுளத்துன்னிநாதன்றிருவருள்வலத்தாற்பின்னர்
அறிவுவந்தச்சோவிந்தவறப்பெருந்தீர்த்தத்துள்ளே
எறியுமீனருந்தவாசையெழுந்ததேயெனக்கிப்போதிப்
பிறவியென்றொழிவதென்றுப்பேரஞரடைந்துபின்னும்.

(இ-ள்.) சிறிது உளத்து உன்னி - சற்று மனத்திற்கருதி, நாதன் திரு அருள் வலத்தால் - சோமசுந்தரக்கடவுளுடைய திருவருளின் வன்மையால், பின்னர் அறிவு வந்து - பின்பு ஞானம்வந்து, அச்சோ - ஐயோ, இந்த அறம் பெருந் தீர்த்தத்து உள்ளே - இந்தத் தருமவடிவாகிய பெரிய தீர்த்தத்துள், எறியும் மீன் அருந்த ஆசை எழுந்தது - துள்ளு மீனைத்தின்ன எனக்கு இப்போது விருப்பமெழுந்தது, இ பிறவி என்று ஒழிவது என்று - (இக்கொடுமையால்) இந்தப்பிறவி யெப்பொழுதொழிவதென்று, பேர் அஞர் அடைந்து - பெருந்துன்பமடைந்து, பின்னும் - மீளவும். (௧௭)

சுந்தரச்செம்மல்பாதத்துணைமலரன்பிற்றோய்ந்து
சிந்தைவைத்திருக்குமெல்லைதேவருமறையுஞ்செய்யும்
வந்தனைக்கரியான்ஞானமனநினைவடிவாய்த்தோன்றி
யெந்தமக்கினியாய்வேண்டும்வரமென்கொலியம்புகென்றான்.

(இ-ள்.) சுந்தரச் செம்மல் மலர் பாதம் துணை அன்பில் தோய்ந்து - சோமசுந்தரக்கடவுளுடைய தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளிலும் வைத்த அன்பிற்படிந்து, சிந்தை வைத்திருக்கும் எல்லை - தனது மனத்தையங்குநிலையிற் பெயராது வைத்திருக்குந் தருணத்தில், தேவரும் மறையும் செய்யும் வந்தனைக்கு அரியான் - தேவர்களும் வேதங்களுஞ் செய்யும் வழிபாட்டிற்கு அணுகொணாதவராகிய அச்சோமசுந்தரக்கடவுள், ஞான மனம் நினை வடிவு ஆய்த் தோன்றி - ஞானமனத்திற்கேற்றிய திருவுருவோடு காட்சிதந்து, எம் தமக்கு இனியாய் வேண்டும் வரம் என் கொல் இயம்புக என்றான் - எமக்கு இனியவனே நீ வேண்டும் வரம் யாதென்று வினவினர்.

அன்பின்வடிவமிருந்தது என்பார் அன்பிற்றோய்ந்து சிந்தைவைத்திருக்குமெல்லை யெனவும், தேவர்கள் மலச்செமிழ்ப்புடைமையாலும் திரிவிதகரணங்களைக் கொண்டறிய நிற்றலால் வேதம்பாச ஞானமாதலாலும் அரியன் என்பார் தேவருமறையுஞ்செய்யும் வந்தனைக்கரியான் எனவும், சாதாரணமாகிய திருவுருக்கொண்டு வந்தனர் என்பார் மனநினைவடிவாய்த் தோன்றியெனவும் கூறினர். (௧௮)

கலிவிருத்தம்.

செய்யகான்மடநாரையுஞ்சென்றுதாழ்ந்
தையனேயிப்பிறவியறுத்துநின்
மெய்யர்வாழ்சிவலோகத்தின்மேவிநான்
உய்யவேண்டுமொன்றின்னமுமுண்டரோ.

(இ-ள்.) செய்ய கால் மட நாரையும் சென்று தாழ்ந்து - சிவந்த கால்களையுடைய இளமைதங்கிய நாரையும் புடைபெயர்ந்துவணங்கி, ஐயனே - ஐயனே, இ பிறவி அறுத்து நின் மெய்யர் வாழ் சிவலோகத்தின் மேவி நான் உய்ய

Koviloor Digital Library

வேண்டும் - இந்தப் பிறவி வேலையறுத்து உனது மெய்யன்பர் வாழும் சிவலோகத்தினையடைந்து அடியேன் பிழைக்கவேண்டும், இன்னமும் ஒன்று உண்டு - இன்னமும் ஒருவரமுள்ளது. (௧௯)

வள்ளலென்மரபுள்ளவுமற்றைய
புள்ளுமிந்தப்புனிதமலர்த்தடத்
துள்ளமீனுயிருண்ணினெக்காலமுந்
தள்ளொணாதபழிவந்துசாருமே.

(இ-ள்.) வள்ளல் - கிருபாவள்ளலே, என் மரபு உள்ளவும் மற்றைய புள்ளும் - என்மரபிலுள்ள பறவைச்சாதிகளும் ஏனைப்பறவைகளும், இந்த புனிதம் மலர் தடத்து உள்ள மீன் உயிர் உண்ணின் - இந்தக் களங்கமில்லாத பொற்றாமரைத் தீர்த்தத்திலுள்ள மீன்களுயிரைக் கொள்ளைகொள்ளில், எ காலமும் தள் ஒணாத பழி வந்து சாரும் – எந்தக்காலத்திலும் ஒழித்தற்கரிய பாவம் வந்தடையும். (௨௦)

என்றுமித்தடமீனிலவாகநீ
நன்றுசால்வரநல்கெனவெள்ளிமா
மன்றுளானும்வரந்தந்துபோயினான்
சென்றுநாரைசிவலோகஞ்சேர்ந்ததால்.

(இ-ள்.) என்றும் இ தடம் மீன் இலவாக - எப்பொழுதும் இந்தப் புனிததீர்த்தத்தில் மீன்களில்லாதிருக்கும்படி, நீ நன்று சால் வரம் நல்கு என்ன—நீ நன்மைமிக்க வரந்தந்தருளாயென்று குறையிரக்க, மா வெள்ளி மன்று உள்ளானும் வரம் தந்து போயினான் - பெருமைமிக்க வெள்ளியம்பலத்தில் நடித்தருளிய சோமசுந்தரக்கடவுளும் வரமருளிச் சென்றனர், நாரை சிவலோகம் சென்று சேர்ந்தது - நாரை சிவலோகத்தைச் சென்றடைந்தது. (௨௧)

இயங்களைந்துமியம்பவிமானமேற்
புயங்கணான்குமுக்கண்களும்பொற்பவான்
வியங்கொள்பூமழைவெள்ளத்துளாழ்ந்துபோய்
வயங்கொணந்திகணத்துள்வதிந்ததே.

(இ-ள்.) இயங்கள் ஐந்தும் இயம்ப - தேவவாச்சியங்களைந்துமொலிக்க, விமானம் மேல் - விமானத்தின்மேல், புயங்கள் நான்கும் முக்கண்களும் பொற்ப - நான்குபுயங்களு மூன்று கண்களும் அழகுசெய்ய, வான் வியம் கொள் பூமழை வெள்ளத்து உள் ஆழ்ந்து போய் - வானுலகோர் சிந்திய புஷ்பமாரியாலாகிய வெள்ளத்துள் மூழ்கிச் சிவலோகம் சென்று, வயம் கொள் நந்தி கணத்து உள் வதிந்தது - வெற்றிமிக்க நந்திநாயனார் சிவகணத்துள் தானும் ஒன்றாகத்தங்கியது. (௨௨)

அன்றுதொட்டின்றளவும்பொற்றாமரை
யென்றுரைக்குமெழின்மலரோடையிற்
சென்றுகைத்துத்திரிகின்றமீனலா
லொன்றுமற்றனநீர்வாழுயிர்களும்.

(இ-ள்.) அன்றுதொட்டு இன்று அளவும் - அக்காலந்தொட்டு இக்காலங்காறும், பொற்றாமரை என்று உரைக்கும் எழில் மலர் ஓடையில் - பொற்றாமரையென்று கூறும் பொலிவுமிக்க திருக்குளத்தில், சென்று உகைத்து திரிகின்ற மீன் அல்லால் - உலாவித் தாவித்திரிகின்ற மீன்களும் அன்றி, நீர்வாழ் உயிர்களும் ஒன்றும் அற்றன - நீரில் வாழும் உயிர்களும் சிறிதும் இன்றியொழிந்தன. (௨௩)

Koviloor Digital Library

அறுசீரடியாசிரியவிருத்தம்.

தன்கிளையன்றிவேற்றுப்பறவைகடாமுந்தன்போ
னன்கதியடையவேண்டிற்றேகொலிந்நாரைசெய்த
வன்பினில்வியப்போவீசனருளினில்வியப்போவன்பர்க்
கின்புருவானவீசனன்பருக்கெளிதேயைய.

(இ-ள்.) தன் கிளை அன்றி - தனது சாதிப்பறவைகளுமல்லாமல், வேற்று பறவைகள் தாமும் - வேறு சாதிப்பறவைகளும், தன் போல் - தன்னைப்போல, நன்கதி அடைய வேண்டிற்று - நல்ல சிவகதியையடைய வரமும் வேண்டியது, இ நாரை செய்த அன்பினில் வியப்பு ஓ - இந்த நாரை வழிபட்ட பத்திமையில் வியப்புளதோ, ஈசன் அருளினில் வியப்பு ஓ - (அப்பத்திமைக்கு அருளும் சோமசுந்தரக்கடவுளின் திருவருளில் வியப்புளதோ, அன்பர்க்கு இன்பு உரு ஆன ஈசன் அன்பருக்கு எளிதே - அடியார்களுக்கு அவரவர்கள்தோறும் இன்பவடிவாய் நின்ற அச்சோமசுந்தரக்கடவுளினடியார்க்கு அத்திருவருள் எளிது.

பொற்றாமரைத்தீர்த்தம் மீனில்லாதிருக்க வரம்பெற்றதால் தன் கிளையன்றி வேற்றுப்பறவைகள் தாமுந் தன்போல் நன்கதியடையவேண்டிற்று எனவும், அன்பே இன்புருவான சிவம் ஆதலால் அன்பர்க்கின்புருவான வீசன் எனவும், அன்பினில் வியப்போ என வினவினார்க்கு அன்பால் திருவருள் விளைதலால் ஈசனன்பருக்கெளிதேயெனவுங் கூறினர். "பக்குவமருளாற்பத்திமையுண்டாம் பத்தியாலவனருளுண்டாம்" எனவும், "கோடியேழன்றமை-குரம்பைதோறும்நாயுடலகத்தே-குரம்பைகொண்டின்றேன்பாய்த்திநிரம்பிய - அற்புதமானவமுததாரைகள் - எற்புத்துளைதொறுமேற்றினன்" எனவும் வரும் ஏதுக்களால் உணர்க. (௨௪)

கலிவிருத்தம்.

மறக்குறும்புகளைகட்டுமண்ணின்மே
லறப்பெரும்பயிராக்கியதன்பயன்
சிறக்கநல்கிடவுண்டுசெருக்குவான்
றுறக்கமெய்தியிருந்தான்சுகுணனும்.

(இ-ள்.) மறம் குறும்பு களை கட்டு - பாவமாகிய களையைக்களைந்து, மண்ணின்மேல் அறம் பெரும் பயிர் ஆக்கி - நிலவுலகின்மேல் தருமமாகிய பெரிய பயிரேற்றி, அதன் பயன் சிறக்க நல்கிட உண்டு செருக்குவான் - அவ்வறப்பயிராலாகிய பயன் மிகவும் ஈகைகூடக் கிளைஞருமன்றித் தானும் நுகர்ந்து இறுமாக்கும், சுகுணனும் - சுகுணபாண்டியனும், துறக்கம் எய்தி இருந்தான் - தேவருலகையடைந்து மகிழ்ச்சியோடிருந்தனன்.

குடிகட்குறுவரும் நிக்கிரகையொழித்தனன் என்பார் மறக்குறும்புகளை கட்டு எனவும், மநுநூல்வழிச்செங்கோலோச்சினன் என்பார் மண்ணின்மேல் அறப்பெரும்பயிராக்கியெனவும், அதனால் விளையும் பொருளின்பங்களைக் குறைவின்றி நுகர்ந்தனன் என்பார் அதன்பயன் சிறக்க நல்கிடவுண்டு எனவுங்கூறினர். (௨௫)

நாரைக்கு முத்திகொடுத்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம்-௨௩௨௧.

கூடற்காண்டம்முற்றிற்று

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருவாலவாயான திருவிளையாடல்.



Koviloor Digital Library

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்க்காண்டம்.

நாற்பத்தொன்பதாவது

திருவாலவாயானபடலம்.

சோமசுந்தரக்கடவுள்வணக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பாயுடையார்விடுத்தபழியழல்வழுதியுடல்குளிப்பப்பதிகமோதுஞ்
சேயுடையாரணந்திளைக்குஞ்செவியுடையாரளவிறந்ததிசைகளெட்டுந்
தோயுடையார்பொன்னிதழித்தொடையுடையார்விடவரவஞ்சுற்றுமால
வாயுடையார்புகழ்பாடப்பெறுவேமேல்வேண்டுவதிம்மனிதயாக்கை.

(இ-ள்.) பாய் உடையார் விடுத்த - பாயை யாடையாகவுடைய அமண்கையர் ஏவிய, பழி அழல் - அபிசாரயாகத்தின் சடத்தீ, வழுதி உடல் குளிப்ப - பாண்டியனுடலில் மூள, பதிகம் ஓதும் சேய் உடைய ஆரணம் திளைக்கும் செவி உடையார் - திருப்பதிகமோதிய பிள்ளைமைப்பருவத்தையுடைய கவுணியர் குலக்கொழுந்தின் தமிழ்வேதத்தை யிடையறாது நுகரும் திருச்செவியையுடையவரும், அளவு இறந்ததிசைகள் எட்டும் தோய் உடையார் - எல்லையின்றிப்பரந்த எட்டுத்திக்குகளையுமே பொருந்திய ஆடையாகவுடையவரும், பொன் இதழி தொடை உடையார் - பொன்னிறம் வாய்ந்த கொன்றைமலர்மாலையையுடையவரும், விடம் அரவம் சுற்றும் ஆலவாய் உடையார் - (தமது திருக்கரத்தில் கங்கணமாக அணிந்த) விஷத்தையுடைய பாம்பினால் எல்லைவரையறுந்த திருவாலவாயையுடையவருமாகிய சோமசுந்தரக்கடவுளின், புகழ்பாட பெறுவேமேல் இ மனிதயாக்கை வேண்டுவது-சீர்த்தியைப் பாடப்பெறுவேமாகில் இந்த மானுடசரீரம் எனக்கு இன்றியமையாததாம்.

சமணர் தவவேடத்திற்குரிய ஓரறிகுறியாதலால் பாயுடையார் எனவும், ஆளுடைய பிள்ளையாரை வருத்தச்செய்த யாகத்தீயாதலால் பழியழல் எனவும், அரசன் கோற்கீழ்வாழுங் குடிகள் செய்த தீங்கு அரசன்மேற்றாதலின் இத்தீ அரசனைப் பற்றுகவெனத் திருப்பதிகம் ஓதியருளினமையால் வழுதியுடல் குளிப்பப்பதிகம் ஓதும் எனவும், மதுரையில் பாண்டியன்முன் சமணரை வெல்லுங்காலம் பிள்ளைமைப்பருவமாதலால் சேய் எனவும், பதிஞானத்தை யெளிதிற்பயத்தற்குக் கருவியாதலால் ஆரணம் எனவும், தம்மக்கள் மழலையைப் பருகுதற்குச் செவியைக் காணியாகக்கொடுக்கும் பெற்றோர்போலப் பிள்ளையார் கூறுந் திருப்பதிகத்திற்குத் திருச்செவியை யிறைவர் கொடுத்தருளுவதால் ஆரணந்திளைக்குஞ் செவியுடையார் எனவும், "வேதண்டமேபுயங்கள் விண்ணே திருமேனி-மூதண்டகூடமே மோலியா"

Koviloor Digital Library

என நின்ற இறைவர்க்குத் திசைகளே யாடையாதலால் திசைகளெட்டுந் தோளு டையார் எனவும், திருவடையாளமாதலால் பொன்னிதழித்தொடையுடையார் எனவும், அவர் சீர்த்தியைப்பாடப்பெறில் மனிதப்பிறவி இன்றியமையாததால் புக ழ்பாடப்பெறவேமேல் வேண்டுவதிம்மனிதயாக்கையெனவுங் கூறினர். "கைதவத் தவென்றுயிரங் கயவருமொருங்கே - யெய்திமுத்தமிழ்விரகர்மேற் பழித்தழலிழைத் தார்" எனவும், "வெய்யநீக்கிதுவேந்தன் மேற்றெறும்விதிமுறையால்" எனவும், "செய்யனேதிருவாலவாய்மேவிய - ஐயனேயஞ்சலென்றருள்செய்யெனைப் - பொ ய்யராமவுணர்கொளுவுஞ்சுடர் - பையவேசென்றுபாண்டியற்காகவே" எனவும், "ஞானவாரமுதமுண்டார் நற்றவத்திருவையொத்த - மானினேர்விழியினாய்கேண் மற்றெனைப்பாலனென்று - நீ:னியஞ்சவேண்டாம்" எனவும், "பல்லுயிருங்களிகூர த்தம்பாடல்பரமர்பாற் - செல்லுமுறைபெறுவதற்குத் திருச்செவியைச்சிறப்பித்து" எனவும், "மானுடப்பிறவிதானும் வகுத்ததுமனவாக்காயம் - ஆனிடத்தைந்துமாடு மரன்பணிக்காகவென்றே" எனவரும் ஏதுக்களால் உணர்க. (௪)

அங்கயற்கண்ணம்மையார்வணக்கம்.

வேதநெடுமாலாதிவின்னாடர்மண்ணாடர்விரதயோகர்
மாதவர்யாவருங்காணமணிமுறுவல்சிறிதரும்பிமாடக்கூட
னாதனிருதிருக்கரந்தொட்டம்மியின்மேல்வைத்தகயனாட்டச்செல்வி
பாதமலரெழுபிறவிக்கடனீந்தும்புணையென்பர்பற்றிலாதோர்.

(இ-ள்.) வேதன் நெடுமால் ஆதி விண் நாடர் - பிரமனும் நெடிய திருமாலு முதலிய தேவர்களும், மண் நாடர் விரதயோகர் மாதவர் யாவரும் காண - மண்ணு லகிலுள்ளாரும் சிவயோகமே விரதநிலையாகவுடையவரும் பெரிய தபோதனருமாகிய வெல்லோருந் தரிசிக்க, மணி முறுவல் சிறிது அரும்பி - அழகிய புன்னகை சிறிது முகிழ்த்தருளி, மாடம் கூடல் நாதன் - நான்மாடக்கூடலிலெழுந்தருளிய சோமசு ந்தரக்கடவுள், இரு திருகரம் தொட்டு அம்மியின்மேல் வைத்த கயல் நாட்டச் செ (திருமணத்தில்) தமது இரண்டுதிருக்கைகளால் தீண்டி யம்மியின்மேல் வைத்தருள ப்பெற்றதங்கயற்கண்ணியார் திருவடித்தாமரைகளை, பற்று இல்லாதோர் - இரு வகைப்பற்றினின்றும் நீங்கிய முத்தர்கள், எழுபிறவி கடல் நீந்தும் புணை என்பர் - எழுபிறப்பாகிய கடலினைக்கடக்கு மரக்கலமென்று கூறுவர்.

தம்மக்கள் நோய்தீரத் தாய் மருந்து அருந்துதல்போலப் பிரமன் முதலிய வுயிர்த்தொகைகள் மலபந்தமொழிந்துய்ய நிட்களமாகிய சிவம் சகளமாய்த் தம் மை விரும்பச்செய்தருளினர் என்பார் யாவருங்காண மணிமுறுவல் சிறிதரும்பியெ னவும், உலகியல் நிலைபெறச்செய்தருளினர் என்பார் நாதனிருதிருக்கரந்தொட்டம் மியின்மேல்வைத்த பாதமலர் எனவும், சிருட்டிகாலந்தொட்டு மாறுதவந்துகொ ண்டேயிருத்தலால் பிறவிக்கடல் எனவும், சர்வான்மாக்களையும் தோற்றுவித்தூட்டி யுதக்தி யநுக்கிரகித்த நிர்பத திருவடிகள் என்பார் புணையெனவுங் கூறினர். "நங் கைவிருணமினைத்துஞ் செய்தாற்போலுடனைத்தும் - கங்கையினாற்செய்தளிக்கும்" எனவும், "சத்தியுஞ்சிவமுமாயதன்மையிவ்வுலகமெல்லாம் - ஒத்தொவ்வாவாணும் பெண்ணு முணர்குணகுணியுமாகி - வைத்தனளவனால்வந்த வாக்கமிவ்வாழ்க்கையெ ல்லாம்" எனவும், "பேசரியவுயிரையெல்லாம்பெற்றநோக்கிப் பெரும்போகமெவை யளித்துப்பிறப்பினைமொழித்திட் - டாசையுமடியருளத்தப்பருடனிருக்கும்" என வும் வரும் ஏதுக்களால் உணர்க. (௨)

Koviloor Digital Library

ஷ வேறு.

ஓலவாய்மறைகடேறாவொருவன்றன்னுலகந்தன்னைச்
சேலவாயுழலுநாரைக்கருளியசெயலீதம்ம
நீலவாய்மணிநேர்கண்டனெடியநான்மாடக்கூட
லாலவாயாகச்செய்தவருட்டிறமெடுத்துச்சொல்வாம்.

(இ-ள்.) ஓலம் வாய் மறைகள் தேறாத ஒருவன் - ஒலிவாய்ந்த வேதங்களுணராத இறைவராகிய சோமசுந்தரக்கடவுள், தன் உலகம் தன்னை - தனது சிவலோகத்தை, சேல் அவாய் உழலும் நாரைக்கு அருளிய செயல் ஈது - சேற்கெண்டையை விரும்பிச் சுழன்றுதிரியும் நாரைக்கு அருளிய திருவிளையாடலிது, நீலம் வாய் மணி நேர் கண்டன் நெடிய நான்மாடக்கூடல் ஆலவாய் ஆக செய்த அருள் திறம் எடுத்து சொல்வாம் - கருநிறம்வாய்ந்த நீலமணியையொத்த ஸ்ரீகண்டத்தையுடைய அச்சோமசுந்தரக்கடவுள் பரந்த நான்மாடக்கூடலாகிய மதுரையைத் திருவாலவாயாகச்செய்தருளிய திருவிளையாடலை யினி யெடுத்துக்கூறுவாம்.

அநுதாத்தம், உதாத்தம், சொரிதம் என்னும் ஒலி வேறுபாடுடைமையால் ஓலவாய் மறைகள் என்றார். (௩)

சித்திரமேருவென்றதிரண்டதோட்சுகுணன்பின்பு
சித்திரவிரதன்சித்ரபூடணன்றிண்டேர்வல்ல
சித்திரதுவசன்வென்றிச்சித்திரவருமன்வன்றோட்
சித்திரசேனன்சீர்சால்சித்ரவிக்கிரமனென்போன்.

(இ-ள்.) சித்திரம் மேரு வென்ற திரண்ட தோள் சுகுணன் பின்பு - அழகிய மேருவைவென்ற திரண்ட தோளையுடைய சுகுணபாண்டியன் பின்னர், சித்திர விரதன் சித்திர பூடணன் - சித்திரவிரதனும் சித்திரபூடணனும், திண் தேர் வல்ல சித்திர துவசன் வென்றி சித்திர வருமன் - திண்ணிய தேர்ப்போரில் வல்ல சித்திர துவசனும் வெற்றியையுடைய சித்திரவருமனும், வல் தோள் சித்திர சேனன் சீர் சால் சித்ர விக்கிரமன் என் போன் - வலிய தோளையுடைய சித்திரசேனனும் கீர்த்திமிக்க சித்திரவிக்கிரமனென்பவனும். (௪)

மணிகெழுதேரிராசமார்த்தாண்டனிராசசூடா
மணியணிமுடியிராசசார்த்தூலவழுதிசிந்தா
மணிநிகர்துவிசராசகுலோத்தமன்மடங்காவென்றி
மணிதிகழ்பொலம்பூணாயோதனப்பிரவிணன்மன்னோ.

(இ-ள்.) மணி கெழு தேர் இராச மார்த்தாண்டன் - இரத்திநம்பதித்த தேரையுடைய இராசமார்த்தாண்டனும், இராச சூடாமணி அணி முடி இராச சார்த்தூல வழுதி - இராசசூடாமணியும் அழகிய கிரீடஞ்சூடிய இராசசார்த்தூலபாண்டியனும், சிந்தாமணி நிகர் துவித ராசகுலோத்தமன் மடங்காத வென்றி மணி திகழ் பொலம் பூண் ஆயோதனப்பிரவீணன் - சிந்தாமணிபோன்ற கொடையையுடைய துவிதராசகுலோத்தமனும் நிலைதளராத வெற்றியையும் இரத்திநமயமாகிய பொன்னாலாகிய ஆபரணத்தையுமுடைய ஆயோதனப்பிரவீணனும். (௫)

இயம்பருந்திறலிராசகுஞ்சரன்பரவிராச
பயங்கரன்கைக்கும்பைந்தாருக்கிரசேனன்பாரைச்
சயங்கெழுதோண்மேலேந்துசத்துருஞ்சயன்வீமத்தேர்
வயங்கெழுமன்னன்வீமபராக்ரமவழுதிமாதோ.

Koviloor Digital Library

(இ-ள்.) இயம்பு அருந் திறல் இராச குஞ்சரன் பரவி ராச பயங்கரன் - சொல்லுதற்கரிய வெற்றியையுடைய இராசகுஞ்சரனும் பரவிராசபயங்கரனும், கமழும் பைந்தார் உக்கிர சேனன் பாரை சயம் செழு தோள் மேல் ஏந்து சத்துருஞ்சயன் - கமழும் பசிய வேப்பமலர்மாலையையணிந்த உக்கிரசேனனும் உலகினை வெற்றிமிக்க புயத்தின்மேலேந்திய சத்துருஞ்சயனும், வீமம் தேர் வயம் செழு மன்னன் வீம பராக்கிரம வழுதி - பீமரதமுடைய வெற்றிமிக்க அரசனும் வீமபராக்கிரமபாண்டியனும். (௬)

பெய்வளைவிந்தைசேர்ந்தபிரதாபமார்த்தாண்டப்பேர்த்
தெவ்வடுசிலையான்றேர்விக்கிரமகஞ்சுகன்றேரார்போர்
வௌவியசமரகோலாகலனெனும்வாகைவேலா
னவ்வியமவித்தசிந்தையதுலவிக்கிரமனென்போன்.

(இ-ள்.) பெய் வளை விந்தை சேர்ந்த பிரதாப மார்த்தாண்டப் பேர் தெவ் அடு சிலை யான் - அடுக்கிய வளையலையணிந்த விசயலட்சுமியைப் புணர்ந்த பிரதாபமார்த்தாண்டனென்னும் பெயரையுடைய பகைவரை வென்ற வில்லையுடையவனும், தேர் விக்கிரம கஞ்சுகன் தேரார் போர்வௌவிய சமரகோலாகலன் என்னும் வாகை வேலான் - ரதசேனையையுடைய விக்கிரமகஞ்சுகனும் பகைவரைப் போரில் வென்ற சமரகோலாகலனென்னும் வாகை மாலைபுனைந்த வேலையுடையவனும், அவ்வியம் அவித்த சிந்தை அதுல விக்கிரமன் என் போன் - பொறாமையையொழித்த மனத்தையுடைய அதுலவிக்கிரமனென்பவனும். (௭)

எழில்புனையதுலகீர்த்தியெனவிருபத்திரண்டு
வழிவழிமைந்தராகிவையகங்காத்தவேந்தர்
பழிதவிரதுலகீர்த்திபாண்டியன்றன்பாலின்பம்
பொழிதரவுதித்தகீர்த்திபூடணன்புரக்குநாளில்.

(இ-ள்.) எழில் புனை அதுல கீர்த்தி என இருபத்திரண்டு வழி வழி மைந்தர் ஆகி வையகம் காத்த வேந்தர் - தோற்றமிக்க அதுலகீர்த்தியுமென இருபத்திரண்டு பரம்பரை வழியேவந்த சந்ததிகளாகி யுலகினை மநுநூல்வழியோம்பிய பாண்டியருள், பழி தவிர் அதுல கீர்த்தி பாண்டியன் தன்பால் - குற்றத்தினின்றும் நீங்கிய அதுலகீர்த்திப்பாண்டியனிடத்து, இன்பம் பொழி தர உதித்த கீர்த்தி பூடணன் புரக்கும் நாளில் - மகிழ்ச்சி சிறக்கத்தோன்றிய கீர்த்தி பூடணனென்னும் பாண்டியன் செங்கோலோச்சிவருங்காலையில்.

திருவாலமான்மியமாகிய முதனூலில் மகாசேனன் என்னும் பாண்டியனைக் கூட்டி இருபத்துமூன்று பரம்பரை கூறப்பட்டிருக்கின்றன. (௮)

கருங்கடலெழுங்காவற்கரைகடந்தார்த்துப்பொங்கி
யொருங்கெழுந்துருத்துச்சீறியும்பரோடிம்பரொட்டுப்
பொருங்கடகரியுமெட்டுப்பொன்னெடுங்கிரியுநேமிப்
பெருங்கடிவரையும்பேரப்பிரளயங்கோத்தவன்றே.

(இ-ள்.) கருங் கடல் ஏழும் காவல் கரை கடந்து ஆர்த்து பொங்கி - பெரிய எழுகடலும் காவலாகிய கரையைக்கடந்து கோஷித்துக் கொதித்து, ஒருங்கு எழுந்து உருத்து சீறி - ஒருசேரவெழுந்து கோபித்து, உம்பர் ஒடு இம்பர் - விண்ணுலகமோடு மண்ணுலகும், பொரும் எட்டு கட கரியும் நெடும் பொன் எட்டு கிரியும் பெ

Koviloor Digital Library

ரும் கடி நேமி வரையும் பேர - போர்செய்யும் மதத்தையுடைய அஷ்டகசங்களு ம் நெடிய பொறகட்டிவிளையும் அட்டகுலபர்வதங்களும் பெரிய அச்சத்தைத்தரும் சக்கரவாளகிரியும் நிலைபெயர பிரளயம் கோத்த-மகாப்பிரளயமாக எங்குங் கோத் தன. (௯)

அப்பெருஞ்சலதிவெள்ளத்தழுந்தனவழிவிலாத
வெப்பெரும்பொழிலுமேழுதீபமுமிவற்றுட்டங்கி
நிற்பனசெல்வவானதிணைகளுநீண்டசென்னிப்
பர்ப்பதவகையுமீறுபட்டனவாகவங்கண்.

(இ-ள்.) அ பெருஞ் சலதி வெள்ளத்து அழுந்தின - அந்த மகாப்பிரளயவெ ள்ளத்திலழுந்தி, அழிவு இல்லாத எ பெரும் பொழிலும் ஏழு தீபமும் - அழிவில்லா த பெரிய நவகண்டங்கள் யாவும் சத்ததீவுகளும், இவற்றுள் தங்கி நிற்பன செல்வ ஆன திணைகளும் - இவைகளிலுள்ள நிலையியற்பொருள்களும் இயங்கியற்பொரு ள்களும், நீண்ட சென்னி பர்ப்பத வகையும் ஈறு பட்டன ஆக - உயர்ந்த சிகரங்க ளையுடைய மலைகளின் தொகுதிகளும் அழிந்தன, அங்கண் - அவ்விடத்து.

நவகண்டங்களாவன கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்வி தேகம், வடவிரோபதம், தென்னிரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்ட ம். சத்ததீவுகளாவன நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு

தேனிழிகுதலைத்தீஞ்சொற்சேணெடுங்கண்ணிகோயில்
வானிழிவிமானம்பொற்றாமரைவிளையாட்டின்வந்த
கானிழியிடபக்குன்றங்கரிவரைநாகக்குன்ற
மானிழிவரைவராகவரைமுதலழிவிலாத.

(இ-ள்.) தேன் இழி குதலை தீஞ்சொல் நெடுஞ்சேற் கண்ணி கோயில் - தே ன் புறங்கொடுக்கும் இனிய குதலைச்சொல்லையுடைய நெடிய அங்கயற்கண்ணம் மையார் திருக்கோயிலும், வான் இழி விமானம் பொற்றாமரை - விண்ணினின்று மிழிந்த விமானமும் பொற்றாமரைத்திர்த்தமும், விளையாட்டின் வந்தகான் இழி இ டபக்குன்றம் கரிவரை நாகக்குன்றம்-(மலர்ச்சோலைகளால்) மணம் வீசும் இடபம லையும் யானைமலையும் சர்ப்பமலையும், ஆன் இழி வரை வராக வரை முதல் அழிவில் லாத - பசுவுருத்திரிந்தமலையும் பன்றிமலையுமுதலிய தானங்கள் (அப்பிரளயத்தா ல்) அழியாது விளங்கின. (௧௧)

வெள்ளநீர்வறப்பவாதிவேதியன்ஞாலமுன்போல்
உள்ளவாறுதிப்பநல்கியும்பரோடிம்பரோனைப்
புள்ளொடுவிலங்குநல்கிக்கதிருடற்புத்தேண்மூவர்
தள்ளருமரபின்முன்போற்றமிழ்வேந்தர்தமையுந்தந்தான்.

(இ-ள்.) வெள்ள நீர் வறப்ப-மகாப்பிரளையஞ்சுவற, ஆதி -சிவபெருமானர், வேதியன் - பிரமனைத்தந்து, ஞாலம் முன்போல் உள்ள ஆறு உதிப்ப நல்கி - உலக முன்போலத்தோன்றச் சிருட்டித்து, உம்பரோடு இம்பர் - விண்ணுலகோடு மண்ணு லகையும், ஏனை புள்ளொடு விலங்கும் நல்கி - அவையொழிந்த பறவைகளோடு மிரு கங்களையும் (அவனூற்) சிருட்டித்து, கதிர் உடல் புத்தேள் மூவர் தள் அருமரபின் முன்போல் தமிழ்வேந்தர் தமையும் தந்தான் - ஒளியுருவத்தையுடைய சோமசூரி யாக்கினியென்று முத்தேவர்களுடைய நீங்குதலில்லாத மரபில் முன்போல் சேர சோழபாண்டியர் என்னும் அரசர் மூவரையுஞ் சிருட்டித்தார்.

Koviloor Digital Library

சிவபெருமானார் பிரமனைத்தந்து அவனால் யாவும் படைத்தார் என்பது "நிலவுமிச்சத்தன்னருளுருக்கொண்டிடுநிமலன் - தலைமைபெற்றிடுபுங்கவர்தம்மைமுன்றந்தே - உலகம்யாவையுமளித்தருள்செய்திடவுதவி - அலகிலாவுயிர்யாவையுமயங்கவிழ்ப்பன்" எனவருதல் காந்தம் தக்ஷகாண்டம் ததிசியுத்தரப்படலத்தில் காண்க. (கஉ)

விருத்தம்.

அங்கியமதிமரபென்னுமாழியுட்
டங்கியகலையெனாண்கிரட்டிதன்னொடும்
பொங்கியநிலாமதிபோலத்தோன்றினான்
வங்கியசேகரவழுதிமன்னனே.

(இ-ள்.) அங்கு இங்கிய மதி மரபு என்னும் ஆழி உள் - அவ்வாறு வந்த சந்திரன்மரபென்னும் பாற்கடலில், தங்கிய எண்ணான் கிரட்டி கலை தன்னொடும்-பொருந்திய முப்பத்திரண்டு கலைகளோடும், பொங்கிய நிலாமதிபோல - விளங்கித்தோன்றிய கிரணத்தையுடைய சந்திரன்போல, வங்கிய சேகரவழுதி மன்னன் தோன்றினான் - வங்கிய சேகரபாண்டியனென்னும் அரசன் வந்துதித்தான்.

வங்கிய சேகரன் வம்சசேகரன். (கங)

தாளணிகழலினான்றங்கணாயகன்
கோளணிபுரிசைசூழ்கோயில்சூழவோர்
வாளணிகடிநகர்சிறிதுவைகவைத்
தாளரியேறனையவனிகாக்குநாள்.

(இ-ள்.) தாள் அணி கழலினான் - காலிற்கட்டிய வீரகண்டையையுடைய வங்கிய சேகரபாண்டியன், தங்கள் நாயகன் கோள் அணி புரிசைசூழ் கோயில் சூழ-தங்கள் குலதெய்வமாகிய சோமசுந்தரக்கடவுளுடைய நவகோள்களுந்தவழு மதில்சூழ்ந்த திருக்கோயிலைச்சூழ, வாள் அணி கடி நகர் ஓர் சிறிது வைக வைத்து-ஒளிபொருந்திய காவல்பூண்ட நகரமொன்று சிறிதாகக் கோலித்தாபித்து, ஆளரி யேறு அனைய அவனி காக்கும் நாள் - சிங்கேற்றைப்போல இறுமாப்போடு நிலவுலகைக் காத்தவருநாளில். (கச)

செய்யகோன்மனுவழிசெலுத்துநீர்மையாற்
பொய்கெழுகலிப்பகைபுறந்தந்தோடத்தன்
வையகப்பல்வளஞ்சுரப்பவைகலும்
மெய்கெழுமன்பதைமிக்கவாலரோ.

(இ-ள்.) செய்யகோல் மநுவழி செலுத்தும் நீர்மையால் - செங்கோலை மநுநூல்வழி நடாத்துந்தன்மையால், பொய் கெழு கலிபகை புறந்தந்து ஓட - பொய்மிக்க கலியென்னும் பகைவன் புறங்காட்டியோட, தன் வையகம் பல்வளம் சுரப்ப-தன்னாடு பலவளங்களையுஞ் சுரத்தலால், வைகலும் மெய்கெழு மன்பதை மிக்க - நாடோறுந் தோற்றமிக்க மக்கட்பரப்புப் பல்கின.

மநுநூல்வழி செங்கோலோச்சுதலால் கலிபுருடன் புறந்தந்தோடினான் என்பார் செய்யகோல் மநுவழிசெலுத்து நீர்மையால் பொய்கெழு கலிப்பகை புறந்தந்தோட எனவும், வேதமும் வேதநூல்வழி வேள்வியும் வேள்வியால் மழையுஞ் சுரத்தலால் தன்வையகம் பல்வளஞ்சுரப்ப எனவும், வளத்தால் மக்கட்பரப்புப்பல்கும்

Koviloor Digital Library

ஆதலால் வைகறும் - மெய்செழுமன்பதை மிக்கவெனவுங்கூறினர். இது ஒன்றற்கொன்று காரணமாய் நிற்றலால் காரணமாலையணி. (௧௫)

பல்குறுமானிடப்பரப்பெலாமொருங்
கல்குறவிடங்குறைவாகவாய்மதுப்
பில்குறுதாரினன்பிறைமுடித்தவன்
மல்குறுகோயிலின்மருங்கரெய்தினன்.

(இ-ள்.) பல்குறும் மானிடப்பரப்பு எல்லாம் - பல்கிய மக்கட்பரப்புகள் யாவும், ஒருங்கு அல்குற - ஒருசேர வசிக்க, இடம் குறைவாக - இடங்குறைவுபட, ஆய் மது பில்குறு தாரினன் - குற்றமற்ற தேனைச்சிந்தும் மாலையையுடைய வங்கிய சேகரபாண்டியன், பிறை முடித்தவன் - சந்திரனையணிந்த சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள், மல்குற கோயிலின் மருங்கர் எய்தினன் - எழுந்தருளிய திருக்கோயிலின் பாங்கரடைந்தனன்.

பல்குறமுதலிய ஒருசொன்னீர்மைய. (௧௬)

கறையணிகண்டனைத்தாழ்ந்துகைதொழூ
திறையவநின்னருள்வலியினிந்நிலப்
பொறையதுவாற்றுவேற்கீண்டிப்போதொரு
குறையதுண்டாயினதென்றுகூறுவான்.

(இ-ள்.) கறை அணி கண்டனை தாழ்ந்து கைதொழுது - விடமணிந்த ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து கைகூப்பி, இறையவ - இறையவனே, நின் அருள் வலியின் - உனது திருவருள் வன்மையால், இ நிலம் பொறையது ஆற்றுவேற்கு - இப்பூபாரத்தைச் சுமக்கு மெனக்கு, ஈண்டு இ போது ஒரு குறையது உண்டாயினது என்று கூறுவான் - இவ்விடத்திலிப்பொழுது ஒருகுறையுளதென்று கூறத்தொடங்கினன்.

பொறையது, குறையது அது பகுதிப்பொருள் விகுதி. (௧௭)

இத்தனைமாக்களுமிருக்கத்தக்கதாப்
பத்தனங்காணவிப்பதிக்கணாதியே
வைத்தறைசெய்திடும்வரம்புகாண்கிலேன்
அத்தவற்றதனையின்றறியக்காட்டென்றான்.

(இ-ள்.) இ தனை மாக்களும் இருக்க தக்கது ஆக பத்தனம் காண - இவ்வளவு மக்கட்பரப்பும் வசிக்கும்படி தக்கதாக ஒரு நகரங்காண, இப்பதி கண் - இந்நகரில், ஆதியே வைத்து அறை செய்திடும் வரம்பு காண்கிலேன் - ஆதியிலே வரையறை செய்துவைத்த எல்லையையறியேன், அத்த - என திறைவனே, அதனை இன்று அறிய காட்டு என்றான் - அதனை யின்றடியேனுணரக் காட்டாயென்று குறையிரந்தான்.

நுண்ணியபொருளினுநுண்ணிதாயவர்
விண்ணிழிவிமானநின்றெழுந்துமீனவன்
நண்ணியவன்பினுக்கெளியசித்தராய்ப்
புண்ணியவருட்கடலாயிப்போதுவார்.

(இ-ள்.) நுண்ணிய பொருளினும் நுண்ணிதாயவர்-நுண்ணிய பொருள்களினும் நுண்ணிய பொருளாயுள்ள சோமசுந்தரக்கடவுள், விண் இழி விமானம் நின்று

எழுந்து-விண்ணினின்று இழிந்த விமானத்தினின்று மெழுந்தருளி, மீனவன் இன்னிய அன்பினர்க்கு எளிய சித்தர் ஆய்-வங்கிய சேகரபாண்டியனுடைய மிக்க அன்பிற்கு எளிய சித்தமூர்த்திகளாய், புண்ணியம் அருள் கடல் ஆகி போதவார்-சிவபுண்ணியத்தால் வாய்க்கும் கிருபாசமுத்திரமாய் வருகின்றவராயினர்.

வியஞ்சகமின்றி யறிவு நிகழ்ச்சியின்மையால் ஆலசித்தென்றும் அணுக்களுக்கு மலமொழித்துணர்த்தும் வியஞ்சகப்பொருளாய்த் தனக்கோர் வியஞ்சகம் வேண்டாது நிற்கும் சிவம் அதிருக்குமசித்து ஆதலால் நண்ணிய பொருளினு நண்ணியதாயவர் என்றார். "நாதுணர்வுணரா நண்ணியோன்காண்க" எனவும் "அறிவிக்க வறிதலாறுமழிவின்றி நிற்றலாறும் - குறிபெற்றசித்துஞ்சத்துங் கூறுவதயிருக்கிசன் - நெறிநித்தமுத்தசுத்தசித்தெனநிற்பனன்றே-பிறிவிப்பன்மலங்களெல்லாம் பின்றுயிர்க்கருளினாலே" எனவரும் ஏதுக்களால் உணர்க. (௧௯)

பாம்பினாற்கடிசூத்திரங்கோவணம்பசுந்தாட்
பாம்பினாற்புரிநூல்சன்னவீரம்வெம்பகுவாய்ப்
பாம்பினாற்குழைகுண்டலம்பாதகிண்கிணிநாண்
பாம்பினாற்கரகங்கணம்பரித்தனர்வந்தார்.

(இ-ள்.) பாம்பினால் கடி சூத்திரம் கோவணம் - பாம்பினால் அரைஞாணுங் கோவணமும், பசுந்தாள் பாம்பினால் புரிநூல் சன்ன வீரம் - காலில்லாத பாம்பினால் உபவீதமும் வீரசங்கிலியும், வெம் பகுவாய் பாம்பினால் குழை குண்டலம் பாத கிண்கிணி நாண் - கொடியபிளந்த வாயினையுடைய பாம்பினாற் சங்ககுண்டலமும் காற்சதங்கையும், பாம்பினால் கரகங் கணம் - பாம்பினாற் கையிலணியுங் கங்கணமுமாக, பரித்தனர் வந்தார் - தாங்கிவந்தருளினார்.

குழைசங்கம் பசுமை இளமை. "பச்சைத்தாளரவாட்டி படர்சடையாய்" எனவரும் ஏதுவால் உணர்க. சித்தமூர்த்திகள் திருக்கோலத்திற்கமையத் தாருகவன முனிவர்கொல்லவேவிய சர்ப்பங்களை யணியாகத் தரித்தமையால் அவற்றையே யிவ்வாறாகத் தரித்துவந்தருளினார் என்பார் பாம்பினாற்கடி சூத்திரக்கோவணம் என்றார் "ஏந்தியபின்னர்வேள்வி பெரியழற்றிடையேயெண்ணில் - பாந்தளங்கெழுந்த தியோர்பணியினாற்சிற்றத்தோடும் - போந்தனவவற்றைமாயோன் புள்ளினுக்கஞ்சித்தன்பால் - சேர்ந்திடுபணிகளோடுஞ் செவ்விதிற்புனைந்தானென்கோன்" எனவரும் ஏதுவால் உணர்க. (௨௦)

வந்தயோகர்மாமண்டபமருங்குநின்றங்கைப்
பந்தவாலவாயரவினைப்பார்த்துநீயிவனுக்
கிந்தமாநகரெல்லையையளந்துகாட்டென்று
ரந்தவாளராவடிபணிந்தடிகளைவேண்டும்.

(இ-ள்.) வந்த யோகர் மா மண்டபம் மருங்கு நின்று - வந்தருளிய சித்தமூர்த்திகள் மகாமண்டபத்தினருகு நின்று, அம் கை பந்தம் ஆலம் வாய் அரவினை பார்த்து - அழகிய திருக்கரத்திற்கட்டிய விஷம்பொருந்திய வாயையுடைய சர்ப்பத்தைப்பார்த்து, நீ இவனுக்கு இந்த மாநகர் எல்லையை அளந்து காட்டு என்றனர் - நீ யிக்குநின்ற வங்கிய சேகரபாண்டியனுக்கு இந்தப் பெரியநகரின் எல்லையை வரையறுத்துக் காட்டுவென்றேவினார், அந்த வாள் அரா அடிகளை அடி பணிந்து வேண்டும் - அந்த வொள்ளிய அரவம் சித்தமூர்த்திகளைத் திருவடிவணங்கி வேண்டாநிற்கும். (௨௧)

Koviloor Digital Library

பெருமவிந்நகரடியனேன்பெயரினுல்விளங்கக்
கருணைசெய்தியென்றிரந்திடக்கருணையங்கடலு
மருணயந்துநேர்ந்தனையதேயாகெனப்பணித்தா
னுருகெழுஞ்செலவுரகமுமொல்லெனச்செல்லா.

(இ-ள்.) பெரும - பெருமானே, இ நகர் அடியனேன் பெயரினுல் விளங்க. கருணை செய்தி என்று இரந்திட - இந்தநகரம் அடியேன் பெயரால் விளங்கத் திருவருள்செய்யா யென்றிரக்க, கருணை அம் கடலும் அருள் நயந்து நேர்ந்து அனையதே ஆக என பணித்தான் - அழகிய கிருபாசமுத்திரமாகிய சித்தமூர்த்திகளும் திருவருள் செய்திசைந்து அவ்வாறே யாகவெனப் பணித்தருளினுர். உரு கெழும் செலவு உரகமும் ஒல்லென செல்லா - அச்சமிக்க போக்கினையுடைய பாம்பும் விரைந்து சென்று,

உரகம் மார்பாற்செல்லுங் காரணத்தால் வந்த காரணப்பெயர். (௨௨)

கீட்டிசைத்தலைச்சென்றுதன்கேழ்கிளர்வாலை
நீட்டிமாநகர்வலம்படகிலம்படிந்துடலைக்
கோட்டிவாலைவாய்வைத்துவேற்கொற்றவற்கெல்லை
காட்டிமீண்டரன்கங்கணமானதுகரத்தில்.

(இ-ள்.) கீழ் திசை தலை சென்று - கீழைத்திசையின் கட்சென்று, தன் கேழ் கிளர் வாலை நீட்டி - தனது ஒளிவிளங்கும் வாலினைநீட்டி, மாநகர் வலம்பட நிலம் படிந்து உடலை கோட்டி வாலை வாய் வைத்து-பெரியநகர்க்குப் பிரதக்ஷிணமாகத் தேகத்தைவளைத்து வாலினை வாயினில்வைத்து, வேல் கொற்றவற்கு எல்லை காட்டி மீண்டு-வேலையேந்திய வங்கிய சேகரபாண்டியனுக்கு அந்நகரெல்லைகாட்டித் திரும்பி, அரன் கரத்தில் கங்கணம் ஆனது-சிவபெருமான் திருக்கரத்திற் பண்டுபோலக் கங்கணமாயிற்று. படிந்து செயவெனெச்சத்திரிபு. (௨௩)

சித்தர்தஞ்சினகரத்தெழுந்தருளினுர்செழியன்
பைத்தவாலவாய்கோலியபடிசுவரெடுத்துச்
சுத்தநேமிமால்வரையினைத்தொட்டகழ்ந்தெடுத்து
வைத்ததாமெனவகுத்தனன்மஞ்சுசூழிஞ்சி.

(இ-ள்.) சித்தர் தம் சினகரத்து எழுந்தருளினுர் - சித்தமூர்த்திகளாய்வந்த சோமசுந்தரக்கடவுள் தமதாலயத்திற் கெழுந்தருளினுர், செழியன் - வங்கிய சேகரபாண்டியன், பைத்த ஆலவாய் கோலிய படி சுவர் எடுத்து - படம்விரித்த பாம்பு கோலியவண்ணம் சுவர் எழுப்பி, சுத்தம் மால் நேமி வரையினை தொட்டு அகழ்ந்து எடுத்து வைத்தது ஆம் என - வாலிதாகிய பெரிய சக்கரவாளகிரியைப் பறித்தெடுத்து வைத்தாற்போல, மஞ்சு சூழ் இஞ்சி வகுத்தனன் - மேகஞ்சூழ்ந்த மதில் கட்டி முடித்தனன். (௨௪)

தென்றிசைப்பரங்குன்றமும்வடதிசையிடபக்
குன்றமுங்குடக்கேடகநகரமுங்குணபாற்
பொன்றலங்கிழித்தெழுபொழிற்பூவணநகரு
மென்றுநாற்பெருவாயில்கட்கெல்லையாவகுத்தான்.

Koviloor Digital Library

(இ-ள்.) நால் பெரு வாயில் கட்கு - அந்நகரின் நான்கு பெரியவாயில்களுக்கு, தென் திசை பரம் குன்றமும் வடதிசை இடபக் குன்றும் - தென்றிசையில் திருப்பரங்குன்றமும் வடதிசையில் இடபமலையும், குடக்கு ஏடக நகரமும் குணபால் பொன் நலம் பிழிந்த எழு பொழில் பூவண நகரும் - மேலைத்திசையில் திருவேடகமும், கீழைத்திசையில் விண்ணுலகைப் பிழிந்தேயாக்கிய சோலைசூழ்ந்த திருப்பூவணமும், என்றும் எல்லை ஆக வகுத்தான் - எப்பொழுதும் எல்லையாக அமைய அவ்வாயிலை யமைத்தனன்.

திருப்பரங்குன்றம் தெற்குவாயிலுக்கும் இடபமலை வடக்குவாயிலுக்கும் திருவேடகம் மேலைவாயிலுக்கும் திருப்பூவணம் கீழைவாயிலுக்கும் எல்லையாக வகுத்தனன் என்பார் தென்றிசைப்பரங்குன்றமும் நாற்பெருவாயில்கட்கு எல்லையா வகுத்தான் என்றார். (௨௫)

அனையநீண்மதிலாலவாய்மதிலெனவறைவர்
நனையவார்பொழினகரமுமாலவாய்நாமம்
புனையலாயதெப்போதுமப்பொன்னகர்தன்னைக்
கனையவார்கழற்காலிருன்பண்டுபோற்கண்டான்.

(இ-ள்.) அனைய நீள் மதில் ஆலவாய் மதில் என அறைவர் - அந்த நெடிய மதிலை யாலவாய் மதிலென்று நாளைக்குக் கூறுவர், நனையவார் பொழில் நகரமும் ஆலவாய் நாமம் எப்போதும் புனைய லாயது - மதுவையுடைய நெடிய சோலைசூழ்ந்த அந்நகரமும் திருவாலவாய் நகரம் என்னும் பெயரை யெப்பொழுதும் புனைந்தது, அ பொன் நகர் தன்னை - அந்த அழகிய திருவாலவாய் நகரத்தை, கனைய வார் கழல் காலினான் - ஒலித்தலையுடையவாரிற்கோத்த வீரகண்டைகட்டிய காலையுடைய வங்கிய சேகரபாண்டியன், பண்டு போல் கண்டான் - முன்போல வகுத்தனன்.

பிரளயகாலத்திற்கு முன்னிருந்ததுபோல வகுத்தனன் என்பார் பண்டு போற்கண்டனன் என்றார். (௨௬)

கொடிகளீண்மதின்மண்டபங்கோபுரம்வீதி
கடிகொள்பூம்பொழிலின்னவும்புதியவாக்கண்டு
நெடியகோளகைகிரீடம்வாணிழன்மணியாற்செய்
தடிகள்சாத்தியகலன்களும்வேறுவேறமைத்தான்.

(இ-ள்.) கொடி கள் நீள் மதில் மண்டபம் கோபுரம் வீதி - துவசங்கட்டிய நெடிய திருக்கோயிலின் திருமதிலும் திருமண்டபமும் திருக்கோபுரமும் திருவீதியும், கடி கொள் பூம் பொழில் இன்னவும் புதிய ஆக கண்டு - வாசமிக்க பூஞ்சோலையும் இவைபோன்ற பிறவும் புதியனவாக வகுத்த, அடிகள் சாத்திய நெடிய கோளகை கிரீடம் வாள் நிழல் மணி யால் செய்து - சோமசுந்தரக்கடவுள் சாத்தியருளிய நெடியவட்டவடிவாகிய பாகையையும் கிரீடத்தையும் விளங்கும் ஒளியையுடைய இரத்தினங்களானிழைத்துச்செய்து, கலன் களும் வேறு வேறு அமைத்தான் - திருவாபரணங்களையும் வெவ்வேறாக அமைத்தனன்.

கோளகைவட்டம் இது பண்பாகுபெயராய்த் தலைப்பாகையின்மேல்நின்றது.

பல்வகைப்பெருங்குடிகளிற்பரப்பெலாநிரப்பிச்
செல்வவாளவன்புரந்தரன்புரத்திறுஞ்சிறப்ப
மல்லன்மாநகர்பெருவளத்துறும்படவளர்த்தான்
தொல்லைநாட்குலசேகரன்போல்வருதோன்றல்.

Koviloor Digital Library

Koyiloor Digital Library

சுந்தரப்பேரம்பெய்த திருவிளையாடல்.



Koviloor Digital Library

(இ-ள்.) பல் வகை பெருங் குடிகளின் பரப்பு எல்லாம் நிரப்பி - பலவகைப் பட்ட குடிகளின் பரப்பையெல்லாங் குடியேற்றி, செல்வ வானவன் புரந்தரன் புரத்திலும் சிறப்ப - குபேரன் இந்திரன் என்னும் இவர்கள் நகரத்திலும் சிறந்தோங்க, மல்லல் மாநகர் பெருவளம் துளும்பிட - வளமிக்க பெரிய அத்திருவாலவாய்நகரில் மலைவளமுதலிய பெரியவளங்கள் முட்டின்றி நிரம்ப, தொல்லை நாள் குலசேகரன் போல் வரு தோன்றல் வளர்த்தான்-முன்னாளில் திருநகரங்கண்ட குலசேகரபாண்டியனைப்போல அவன்வழிவந்த வங்கிய சேகரபாண்டியன் வளர்த்து வந்தனன்.

பல்வகைப் பெருங்குடிகள் ஆவன அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர். மலைவளமுதலிய வளங்களாவன. மலைவளம், காட்டுவளம், நாட்டுவளம், கடல்வளம். மலைவளங்களாவன மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம், காட்டுவளங்களாவன தேனடை, தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி. நாட்டுவளங்களாவன செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர். கடல்வளங்களாவன உப்பு, முத்து, பவளம், சங்கு ஒக்கோலை. (உஅ)

திருவாலவாயானபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உஙசகூ.

ஐ ம் ப தா வ து.

சு ந் த ர ப் பே ர ம் பெ ய் த ப ட ல ம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அங்கணுரகமணிந்தருள்வடிவமடைந்தரசகமகிழக்
கங்கணவிடவரவங்கொடுகடிநகர்கண்டருண்முறையிதுவாஞ்
சங்கணிகுழையினர்பஞ்சவன்வழிபடுதம்பெயரெழுதியகூர்
வெங்கணைகொடுவளவன்படைமுடுகியவென்றியையினிமொழிவாம்.

(இ-ள்.) அங்கணர் உரகம் அணிந்தருள் வடிவம் அடைந்து - சோமசுந்தரக்கடவுள் சர்ப்பமணிந்தருளிய சித்தமூர்த்திகள் வடிவங்கொண்டருளி, அரசு அகம் மகிழ கங்கணம் விடம் அரவம் கொடு கடி நகர் கண்டருள் முறை இது ஆம்-வங்கிய சேகரபாண்டியனுடைய மனமகிழக் கங்கணமாகிய விஷத்தையுடைய சர்ப்பத்தால் காவல்பூண்ட திருநகரங் கண்டருளிய திருவிளையாடலிது, சங்கு அணி குழை யினர் - சங்கினால் விளைந்த குண்டலத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், பஞ்சவன் வழி படு தம் பெயர் எழுதிய கூர் வெம் கணை கொடு - அப்பாண்டியன் வழிபடற்குரிய தமது திருப்பெயர் வரைந்த கூரிய கொடிய அம்பால், வளவன் படை முடுகிய வென்றியை இனி மொழிவாம் - விக்கிரமசோழனுடைய சேனையைப் புறங்கண்ட திருவிளையாடலை இனி விதந்து கூறுவாம்.

வென்றி காரியவாகுபெயராய்க் காரணமாகிய திருவிளையாடலின்மேல் நின்றது. (க)

வெங்கயனிரைகொடிவங்கியசேகரன்வெண்குடைநிழலின்வாய்
வங்கமுலாவியதென்கடன்ஞாலமடந்தையுமாசறுசீர்ச்

Koviloor Digital Library

செக்கமலாலய்மக்கையும்வாலியதிண்பதுமாலயமே
னங்கையுமோவறமங்கலமானநயம்பெறுவாழ்வுறுநாள்.

(இ-ள்.) வெம் கயல் நின் கொடி வங்கிய சேகரன் வெண்குடை நிழலின் வாய் - (பகைவர்க்கு) வெம்மைதரும் நின்ற கயற்கொடியையுடைய வங்கிய சேகரபாண்டியனுடைய தவளவட்டக்குடை நிழலின்கீழ், வங்கம் உலாவிய தெள் கடல் ஞால மடந்தையும் - மரக்கலமுலாவுந் தெள்ளிய கடல்சூழ்ந்த பூதேவியும், மாசு அறு சீர் செம் கமலாலய மங்கையும் - குற்றமற்ற அழகுமிக்க செந்தாமரைக்கோயிலில் வசிக்கும் இலட்சுமியும், வாலிய திண்பது மாலயம் மேல் நங்கையும் - வெள்ளிய வாசமிக்க வெண்டாமரைக்கோயிலில் வசிக்கும் கலைமகளும், ஓவு அற மங்கலம் ஆன நயம் பெறு வாழ்வு உறு நாள் - ஒழிவறச் சுபகரமான நன்மைமிக்க வாழ்வினைப்பொருந்தக் காலையில்.

மநுநூல்வழி செங்கோலோச்சுதலாற் பாண்டியன் குடைநிழற் கீழ்வாழுங் குடிகள் நிலவளத்தாற் செல்வத்திலுங் கல்வியிலுமுட்டின்றி வாழ்ந்தனர் என்பார் ஞாலமடந்தையும் செங்கமலாலயமங்கையும் வாலியதிண்பதுமாலயநங்கையுமோவறமங்கலமானநயம்பெறுவாழ்வுறுநாள் எனக்கூறினர். (உ)

வேழமறப்படைசூழவெதிர்த்தவர்வீறுகெடுத்தடியிற்
றாழவடர்த்திகல்வாகைதொடுத்தலர்தார்புனைவிக்கிரம
சோழன்மதிக்குலநாயகனைப்பொருளுள்கருதித்தொலையா
வாழ்கடலுக்கிணையாமனிகத்தொடுமோடமருக்கெழுவான்.

(இ-ள்.) மறம் வேழம் படை சூழ எதிர்த்தவர் வீறு கெடுத்து - கொலைத்தொழிலையுடைய யானைச்சேனைசூழ எதிர்த்த பகைவருடைய செருக்கையொழித்து, அடி இல் தாழ அடர்த்து இகல் வாகை தொடுத்த அலர்தார் புனை விக்கிரம சோழன் - தனது காற்கீழொதுங்கிநிற்கவென்று வெற்றிக்குரிய வாகைமலராற் றொடுத்த மணமிக்க மாலையையணிந்த விக்கிரமசோழனென்பவன், மதிக்குல நாயகனை பொருளுள் கருதி - சந்திரமரபிற்றோன்றிய வங்கிய சேகரபாண்டியனோடு போர்த்தொழில்செய்ய நினைக்கும் வஞ்சினங்கருதி, தொலையாத ஆழ்கடலுக்கு இணை ஆம் அனிகத்தொடும் ஓடு அமருக்கு எழுவான் - (பகைவர்போர்க்கு) பின்னிடாத ஆழ்ந்தகடலுக்கொத்த சேனையோடும் (பாண்டியனோடு) வெற்றிமிக்க போர்த்தொழில்புரிதற்கு யுத்தசன்னத்தனாயினான். (௩)

கயபதிகாய்சினநரபதிபாய்துரகதபதியேமுதலா
வயமிகுதோள்வடதிசையினராதிபர்வலிகெழுசேனையினோ
டியமிடியேறிமிழிசையெனவாய்விடவிரதமதேறிநடாஅய்ப்
பயன்மலிகாவிரிநதியருகேயுறைபதிகொடுமேயினனால்.

(இ-ள்.) கயபதி காய் சினம் நரபதி பாய் துரகதபதியே முதலாக - கயபதியுங் கொல்லுங் கோபமிக்க நரபதியும் பாய்ந்து செல்லுந் துரகபதியுமுதலாக, வயம் மிகு தோள் வடதிசையின் நராதிபர் வலி கெழு சேனையின் ஒடு - வெற்றிமிக்க தோள்களையுடைய வடதிசை யரசர்களின் வன்மைமிக்க சேனைகளோடு, இயம் இடி யேறு இமிழ் இசை என்ன வாய் விட - வாச்சியங்கள் இடியேறொலிக்கும் முழக்கம்போல வாய்விட்டொலிக்க, இரதம் ஏறி நடாய் - தேரேறிநடத்தி, பயன் மலி காவிரி நதி அருகே உறை பதி கொடு மேயினன் - (நன்மகோடிகளுக்கு) பயன்

Koviloor Digital Library

த்ருதலில் மிக்க காவிரிநதியினயலே யிருக்கும் மருதநிலத்தூர் வழிக்கொண்டு போர்க்குச் சென்றனன்.

ஏ எண்ணேகாரம். (௪)

சிலைத்தெழுசெம்பியன்வெம்படைமள்ளர்செயிர்த்துமதிக்கடவுட்
குலத்தவனாட்டினிருந்தெழிலானிரைகொண்டுகுறும்புசெய்து
மலர்த்தடமேரியுடைத்துநகர்க்குவரும்பலபண்டமுமா
றலைத்துமுடுக்கிநடுக்கம்விளைத்துமமர்க்கடியிட்டனரால்.

(இ-ள்.) சிலைத்து எழு செம்பியன் வெம்படை மள்ளர் செயிர்த்து - கோஷித்தெழுந்த விக்கிரமசோழனுடைய கொடிய சேனைவீரர்கள் கோபித்து, மதி கடவுள் குலத்தவன் நாட்டின் இருந்த எழில் ஆன் நிரை கொண்டும் - சந்திரன்மரபிற்றோன்றிய வங்கிய சேகரபாண்டியனுடைய நாட்டிலுள்ள பசுக்களைக் கவர்ந்தும், குறும்பு செய்து மலர் தடம் ஏரி உடைத்தும் - கொடுந்தொழில்செய்து மலர்நிறைந்த தடாகங்களையும் ஏரிகளையும் உடைத்தும், நகர்க்கு வரும் பல பண்டமும் ஆறு அலைத்து முடுக்கி நடுக்கம் விளைத்தும் - நகர்க்குவரும் பலபண்டபங்களையுஞ் சூறையாடித் துரத்தி நடுக்கம் செய்தும், அமர்க்கு அடி யிட்டனர் - இவ்வாறுசெய்து போர்செய்தற்குத் தொடங்கினார்கள்.

கொண்டு என்பதனிறுதியில் எண்ணும்மை தொக்கது. "யாழுமெழுதியன்முத்தெழுதியிருளின் மென்பூச்சூழுமெழுதி" என்னவரும் திருக்கோவையாரில் எண்ணும்மை தொக்குநிற்றல் உணர்க. (௫)

மாறனறிந்தினியென்செய்துநேரியன்வன்படையோவளவின்
றேறியெதிர்ந்தமராடினெனக்கரிதிக்குறையைப்பிறையோ
டாறணிபூரணசுந்தரனெந்தையடித்தலமுன்குறுகாக்
கூறியிரந்துவரம்பெறுகென்றிறைகோயிலடைந்தனனால்.

(இ-ள்.) மாறன் அறிந்து இனி யென் செய்தும் - பாண்டியனுணர்ந்து இனி நாம் யாதுசெய்வோம், நேரியன் வல் படையோ அளவு இன்று-சோழன்சேனையோ அளவிறந்தன, ஏறி எதிர்ந்து அமராடின் எனக்கு அரிது - மேற்சென்றெதிர்ந்து போர்செய்யின் எனக்கு வெல்லுதலரிது, இ குறையை - இந்தக்குறைபாட்டினை, பிறையோடு ஆறு அணி பூரண சுந்தரன் எந்தை அடித்தலம் முன் குறுகா - சந்திரனோடு கங்கையையணிந்த சோமசுந்தரக்கடவுளாகிய எமது பிதாவின் திருவடித்தாமரையையடைந்து, கூறி இரந்து வரம் பெறுக என்று இறை கோயில் அடைந்தனன் - குறைகூறியிரந்துவரம் பெறக்கடவேனென்று அப்பெருமானார் திருக்கோயிலையடைந்தான்.

அடைந்தவர் குறையொழிக்கும் பெருமானார் என்பான் பிறையோடாறணி சுந்தரன் எனவும், எனது குறையையும் ஒழிப்பானென்பான் அடித்தலமுன்குறுகாக் கூறியிரந்து வரம்பெறுகவெனவுங் கூறினான். இது கருத்துடையடையணி. (௬)

அடைந்துபணிந்தருணாயகனேயடியேனொடுவிக்கிரமன்
றொடர்ந்தமராடவயற்புலமன்னவர்தொகையொடுபாசறைவாய்ப்
படர்ந்திறைகொண்டனனேபொரவொத்தபதாதியெனக்கிலையே
மிடைந்துவரும்படைமிக்கவிட்டதரன்வேறுளதோவிறைவா.

(இ-ள்.) அடைந்து பணிந்து - சந்நிதியை யடைந்துவணங்கி, அருள் நாயகனே - அருள் உருவாகிய பெருமானாரே, அடியேன் ஒடு விக்கிரமன் தொடர்ந்து அமர் ஆட - அடியேனோடு விக்கிரமசோழன் எதிர்ந்து போர்செய்ய, அயல் புலம் மன்னவர் தொகை யொடு - மறுநிலத்தரசர் கூட்டத்தோடு, பாசறை வாய் படர்ந்து இறை கொண்டனன் - படைவீட்டில் வந்திருத்தனன், பொர ஒத்த பதாதி எனக்கு இல்லை - போர்செய்தற்கொத்த சேனையோ எனக்கில்லை, மிடைந்து வரும் படை மிக்க இடத்து - நெருங்கிவருஞ் சேனைபோரின்மேல் அதிகரித்தபொழுது, இறைவா அரண் வேறு உளதோ - இறைவரே யும்மையன்றி யடைக்கலம் புகும் அரண்வேறுண்டோ (இல்லையென்றபடி.)

உம்மையன்றி யடைக்கலம் வேறில்லையென்பான் மிடைந்துவரும்படை மிக்கவிடத்தரண்வேறுளதோ இறைவா எனக் கூறினான். (௭)

என்னையினிச்செயுமாறெனமாறனிரந்துமொழிந்திடலு
முன்னவன்வானிடைநின்றசரீரிமொழிந்தருள்வான்முதனீ
யன்னவனோடமராடுபினாமுமடைந்துதவித்துணையாய்
நின்னதுவாகையெனப்பொருகின்றனநீயினியஞ்சலெனா.

(இ-ள்.) இனி செய்யும் ஆறு என்னை என - இனிச்செய்யும் வகை யாதென்று, மாறன் இரந்து மொழிந்திடலும் - பாண்டிய னிரந்துகூற, முன்னவன் - சோமசுந்தரக்கடவுள், வான் இடை நின்று - ஆகாயத்தில் நின்று, அசரீரி மொழிந்தருள்வான் - அசரீரி கூறியருள்கின்றவர், முதல் நீ அன்னவன் ஒடு அமர் ஆடு - முதலில் நீ அப்பாண்டியனோடு போர்செய், பின் நாமும் உதவி துணையாய் அடைந்து - பின்னர் உனக்கு நாமும் உதவியாய்வந்து, நின்னது வாகை என பொருகின்றனம் - உனதுவாகையென்று பிறர்கூறப் போர்செய்கின்றோம், நீ இனி அஞ்சல் என - நீ இனி அஞ்சுதலொழிகவென்றருள.

நீ வெற்றியடையச்செய்வோம் என்பார் நின்னதுவாகையெனப் பொருகின்றனம் என்றார். (௮)

சிந்தைகளித்திருகண்கடுளித்திருசெங்கைகுவித்திறைவ
னந்திமதிச்சடையந்தணனைத்தொழுதன்றுபுறப்படமுன்
வந்தனனொற்றுவனந்திவனைக்கயல்வந்ததுவிக்கிரமன்
வெந்தறுகட்படையென்றரசற்குவிளம்பினனப்பொழுதே.

(இ-ள்.) இறைவன் - பாண்டியன், சிந்தை களித்து இரு கண்கள் துளித்து இரு செங்கை குவித்து - மனங் களித்து இரண்டு கண்களினின்றும் ஆநந்தபாஷ்பம் பெருக்கிச் சிவந்த இரண்டுகைகளையுங்கூப்பி, அந்தி மதி சடை அந்தணனை தொழுது அன்று புறப்பட - அந்திக்காலத்தில் தோன்றிய சந்திரனையணிந்த சடாபாரத்தையுடைய சோமசுந்தரக்கடவுளை வணங்கி யப்போது (திருக்கோயிலினின்றும்) வெளிப்பட, முன் ஒற்றுவன் வந்தனன் - முன்னர்த் தூதுவன்வந்து, நந்தி வனைக்கு அயல் விக்கிரமன் வெம் தறுகண் படை வந்தது என்று அரசற்கு விளம்பினன் - இடபமலைக்கு அயலில் விக்கிரமசோழனுடைய கொடியசேனை வந்ததென்று பாண்டியனுக்குக் கூறினன், அ பொழுது - அந்தக்ஷணத்தில்.

வெற்றிபெற்றோமென அச்சம் ஒழிந்தான் ஆதலால் சிந்தைகளித்திரு கண்டுளித்து எனவும், நின்னது வாகையெனப் பொருகின்றனம் என்றதனால் அப்பொழுதே யெனவுங் கூறினர். (௯)

Koviloor Digital Library

அரசனியம்பலவதிரவலம்புரியலறவலங்குளைமா
னிரதமணைந்திடவிசைகொடுசிந்தைபினிடவலவன்கடவப்
புரசைநெடுங்கரிதிரையெறியுங்கடல்பொருபரிவிண்டொடுதேர்
விரைசெய்நறுந்தொடைவிருதர்கணம்புடைவிரவநடந்தனனால்.

(இ-ள்.) அரசன் - பாண்டியன், பல இயம் அதிர வலம் புரி அலற - பல வாச்சியங்களும் ஒலிக்கவும் வலம்புரிச்சங்கம் கோஷிக்கவும், அலங்கு உளை மான் இரதம் அணைந்திட-விளங்கும் புறமயிரையுடைய குதிரைபூண்ட தேரிலாரோகணிக்க, சிந்தை பின்னிட விசை கொடு வலவன் கடவ-தனதுமனமும் பின்னிட விசைத்துத் தேர்ப்பாகன் செலுத்த, புரசை நெடுங்கரி - கழுத்திடு கயிற்றையுடைய நெடியயானையும், திரை எறியும் கடல் பொரு பரி - அலைவீசுங் கடலையொத்த குதிரையும், விண் தொடு தேர் - ஆகாயத்தை யளாவுந் தேரும், விரை செய் நறுந்தொடை விருதர் கணம் - வாசம்வீசும் நல்லமலர் மாலையையணிந்த சயவிருதேந்திய வீரர்கூட்டமும், புடை விரவ நடந்தனன் - தன்னயலில்கலந்து வரச்சென்றனன். (௫௦)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அளந்துசூழ்திருவாலவாய்மதிலின்புறத்தகழாழிபோல்
வளைந்தசோழனெடும்படைக்கெதிர்வஞ்சிவேய்ந்தெழுபஞ்சவன்
கிளர்ந்தசேனையதிர்ந்துகிட்டினகிட்டியவ்விருபடைஞருங்
களஞ்சிறந்திடவஞ்சினங்கொடுகைவகுத்தமர்செய்வரால்.

(இ-ள்.) அளந்து சூழ் - வரையறுக்கப்பட்டுச்சூழ்ந்த, திருவாலவாய் மதிலின் புறத்து-திருவாலவாயின்மதிலின்புறத்தில், அகழ் ஆழி போல்-தோண்டிய கடல்போல, வளைந்த சோழன் - முற்றுகைசெய்த வளவிய சோழனுடைய, நெடும் படைக்கு எதிர் வஞ்சி வேய்ந்து எழு பஞ்சவன் - நெடியசேனைக்கு எதிரே வஞ்சிமாலையையணிந்து போர்க்கு எழுந்த பாண்டியனுடைய, கிளர்ந்த சேனை அதிர்ந்து கிட்டின - கோபமிக்கெழுந்த சேனைகள் கோஷித்து நெருங்கின, அ இரு படைஞரும் கிட்டி களம் சிறந்திட - அவ்விருதிறச்சேனைகளும் நெருங்கிப் போர்க்களஞ் சிறக்க, வஞ்சினம் கொடு கை வகுத்து அமர் செய்வர் - சபதங் கூறியணிவகுத்துப் போர்செய்வாராயினர்கள்.

போர்மேற் செல்லுதலுக்கு வஞ்சிமாலை அறிகுறியாதலால் வஞ்சிவேய்ந்து என்றார் "வட்கார்மேற்செல்லுதல் வஞ்சியாம்" என்ற ஏதுவால்உணர்க. (௫௧)

சையமொத்தெழுதேரினரொடுசையமொத்தெழுதேரரும்
மையன்மைக்கரிவீரரோடெதிர்மையன்மைக்கரிவீரரும்
கொய்யுளைப்பரிவயவரோடிகல்கொய்யுளைப்பரிவயவரும்
கையழற்படைவீசிமின்விடுகானெனப்பொருவாரரோ.

(இ-ள்.) சையம் ஒத்து எழுதேரினரொடு - மலையையொத்தெழுந்த தேர்வீரரோடு, சையம் ஒத்து எழு தேரரும் - மலையையொத்தெழுந்த தேர்வீரரும், மையல் மைகரி வீரரோடு எதிர் மையல் மைகரி வீரரும் - மதமயக்கத்தையுடைய கரிய யானை வீரர்களோடு எதிர்ந்த மதமயக்கத்தையுடைய கரிய யானைவீரரும், கொய் உளை பரி வயவரோடு இகல் கொய் உளை பரி வயவரும் - கொய்த புறமயிரையுடைய

Koviloor Digital Library

குதிரைவீரர்களோடு பகைத்த கொய்த புறமயிரையுடைய குதிரைவீரரும், கை அழல் படை வீசி மின் விடுக்கர் என பொருவார் - தமது கைகளால் நெருப்புச்சிந்தும் ஆயுதங்களைவீசி மின்னல்வீசும் மேகம்போலத் தம்முள் போர்செய்யத் தொடங்கினார்கள். (௧௨)

முடங்குவெஞ்சிலைவில்லரோடுமுடங்குவெஞ்சிலைவில்லரும்
விடங்கலுழ்ந்திடுவேலரோடும்விடங்கலுழ்ந்திடுவேலரு
மிடங்கைதோல்வலவாளரோடுமிடங்கைதோல்வலவாளரு
மடங்கலேறுமடங்கலேறுமலைப்பதென்னமலைப்பரால்.

(இ-ள்.) முடங்கு வெம் சிலை வில்லர் ஓடும்-வளைந்த கொடியவில் வீரர் ஓடும், முடங்கு வெம் சிலை வில்லரும் - வளைந்த கொடிய வில்வீரரும், விடம் கலுழ்ந்திடு வேலர் ஓடும்-விஷத்தைச்சிந்தும் வேல்வீரரோடும், விடங்கலுழ்ந்திடுவேலரும்-விஷத்தைச்சிந்தும் வேல்வீரரும், இடம் கை தோல் வலம் வாளர் ஓடும் இடம் கை தோல் வலம் வாளரும்-இடக்கையிற் கேடகமும் வலக்கையில் வாளுமேந்தியவீரரோடும் இடக்கையிற் கேடகமும் வலக்கையில் வாளுமேந்திய வீரர்களும், மடங்கல் ஏறும் மடங்கலேறு மலைப்பது என்ன மலைப்பர் - ஒரு சிங்கமேற்றோடு மற்றொரு சிங்கமேறு போர்செய்தல்போலத் தம்முட் போர்செய்தார்கள்.

ஒவ்வொருவீரரும் தம்மினமாகிய வீரர்களோடு போர்செய்தல் போர்முறையாதலால் அவ்வகைப் படைவீரரும் போர்செய்தார் என்பார் இவ்வாறு கூறினார். ()

அரவினன்னிலமம்புயம்பொறையாற்றுமீனவனாற்றல்கூர்
புரவியின்னிரைவையமேல்கொடுபோந்தநேரியர்வேந்தனேர்
விரவிமின்னியமுரசியம்பமிடைந்துவெஞ்சமராடுமா
றிரவிதன்னொடுமதியவன்பொரவேகினானிகராகுமால்.

(இ-ள்.) அரவின் - ஆதிசேடனாற் சுமக்கப்பட்ட, நல் நிலம் பொறை அம்புயம் ஆற்று மீனவன் - நல்ல பூபாரத்தை யழகியதோளில் வைத்தாற்றும் பாண்டியன், ஆற்றல் கூர் புரவியின் நிரை வையம் மேல் கொடு - வன்மைமிக்க குதிரையின் பந்திபூண்ட தேரின்மேலாரோகணித்து, போந்த நேரியர் வேந்தன் நேர் விரவி - போர்க்குவந்த சோழருட்சிறந்த வங்கிய சோழருக்கு நேரேகலந்து, மின்னிய முரசு இயம்ப மிடைந்து வெம் சமர் ஆடும் ஆறு - விளங்கும் போர்முரசு கோஷிக்க நெருங்கிக் கொடிய போராடும்வகை, இரவி தன் ஒடு மதியவன் பொர ஏகினான் நிகர் ஆகும் - சூரியனோடு சந்திரன் போர்செய்யச்சென்றதையொக்கும். (௧௪)

தான்றுமாவொலிதானையாறுதுளும்புமாவொலிதூண்டுதேர்
தன்றுமாவொலிபடையொடும்படைதாக்குமாவொலிபொருநரார்த்
தென்றுமாவொலிமன்னர்பைங்கழலேங்குமாவொலிவிங்கியந்
தென்றுமாவொலிவேறுபாடறிந்தகல்லெனலாயதே.

(இ-ள்.) தான்றும் மா ஒலி - தாவிச்செல்லும் குதிரையின் முழக்கமும், தானை - யாறு துளும்பும் மா ஒலி - மதநீர்பெருக்கும் யானையின் கலிப்பும், தூண்டு

Koviloor Digital Library

தேர் தள்ளும் மா ஒலி - செலுத்துந் தேரையிழுத்துச் செல்லுங் குதிரையின் கோஷமும், படை ஒடும் படை தாக்குமா ஒலி - ஆயுதத்தோடும் ஆயுதங்கள் தாக்கும் பெரிய அரவமும், பொருநர் ஆர்த்து எள்ளும் மா ஒலி - போர்வீரர்கள் தம்முள் ஆர்த்து ஒருவரையொருவர் நிந்திக்கும் பெரிய அதிர்ப்பும், மன்னர் பைங்கழல் ஏங்கும் மாஒலி - அரசர்கள் கட்டிய பசிய வீரகண்டையொலிக்கும் பெரிய ஆரவாரமும், வீங்கு இயம் தெள்ளும் மா ஒலி-மிக்க வாச்சியங்களொலிக்கும் பெரியகம்பலையும், வேறு பாடு திரிந்து கல்லெனல் ஆயது - தம்முள் வேறுபாடொழிந்து கல்லென எங்குமுழங்கியது.

பேரோசை யெங்குமிருத்தலால் ஓசை வேறுபாடு தெரிந்திலதென்பார் வேறுபாடு திரிந்து கல்லெனலாயது என்றார். (௧௫)

துடித்தவாளரவென்னவீசியதூங்குகையினவீங்குநீர்
குடித்தகாரொடுகார்மலைந்திடுகொள்கைபோலவுடன்றுடன்
றிடித்தவாயினவசனியேறினிருப்புலக்கையெடுத்தெறிந்
தடித்தசோரியொடாவிசோரவிழுந்தவெஞ்சினவானையே.

(இ-ள்.) துடித்த வாள் அரவு என்ன வீசிய தூங்கு கையின - துடிக்கும் ஒள்ளியபாம்புபோல வீசித்தொங்குந் துதிக்கைகளையுடையனவாகி, வீங்கு நீர் குடித்த கார் ஒடு கார் மலைந்திடு கொள்கை போல - மிக்க நீர்பருகிக் கறுத்தமேகத்தோடு மற்றொரு மேகம்போர்செய்யுங் கொள்கைபோல, உடன்று உடன்று அசனி ஏறு இன் இடித்த வாயின - கோபித்து இடியேற்றைப்போலக் கோஷிக்கும் வாயையுடையனவாகி, இருப்பு உலக்கை எடுத்து எறிந்து - இரும்பாலாகிய உலக்கையை யெடுத்து ஒன்றின்மேலொன்று வீசி, அடித்த சோரி யொடு ஆவி சோர வெம் சினம் ஆனை விழுந்த - அடித்தலாற்சோரும் உதிரத்தோடு உயிர்சோரக் கொடியகோபத்தையுடைய ஆனைகள் விழுந்துமரித்தன. (௧௬)

எய்தவாளிவிலக்குவார்பிறிதெய்யும்வாளிதமார்புபோழ்
செய்தபோதவராண்மைகண்டுசிரித்துவென்றிவியப்பரால்
வைதவாவடிவேலெறிந்திடவருவதைக்குறிவழியினுற்
கொய்ததார்மறவாளெறிந்துகுறைத்துவேறுபடுத்துவார்.

(இ-ள்.) எய்த வாளி விலக்குவார் - (பகைவர்) எய்யும் அம்பினைவிலக்கி, பிறிது எய்யும் வாளி தம் மார்பு போழ் செய்த போது-பிறிதும் அவர்கள் எய்யும் பாணங்கள் தமதுமார்பைப் பிளந்தபொழுது, அவர் ஆண்மை கண்டு சிரித்து வென்றி வியப்பர் - அவர்களாண்மையை நோக்கிச்சிரித்து வெற்றியை வியப்பார்கள், வைத வாத வடி வேல் எறிந்திட வருவதை-கூர்மையினின்று நீங்காத வடித்த வேலினைப் பகைவரெறியத் தம்மேல்வருதலை, குறி வழியினுல் கொய்ததார் மறம் வாள் எறிந்து குறைத்து வேறு படுத்துவார் - வருங் குறிதப்பாமல் கொய்த மலர்மாலையையணிந்த வெற்றியையுடைய வாளைவீசித் துண்டுபடுத்தி அவ்வேலைச் சிதைப்பார்கள்.

ஊறஞ்சாத ஆண்மையையுடைய வீரராதலால் மார்பு போழ்செய்த போதவராண்மைகண்டுசிரித்து வென்றி வியப்பர் எனவும், பினைவினை முதல்மேலேற்றிக் கொய்ததார் மறவாள் எனவுங் கூறினார். (௧௭)

Koviloor Digital Library

பின்னிடாதிருபடையுமொத்தமராடுமெல்லைபெரும்படைச்
சென்னிதன்றுணையானவுத்தரதேயமன்னவர்படையொடுந்
துன்னிஞாலமுடிக்குநாளெழுசூறைதள்ளவதிர்ந்தெழும்
வன்னியென்னவுடன்றெதிர்ந்தனர்வழுதிசேனையுடைந்ததே.

(இ-ள்.) பின் இடாத இரு படையும் ஒத்து அமர் ஆடும் எல்லை - புறங்காட்டாமல் இருவகைச்சேனைகளுந் தம்முளொத்துப் போர்செய்யுங் காலையில், பெரும் படை சென்னி தன் - பெரிய சேனையையுடைய சோழனுக்கு, துணை ஆன உத்தர தேயம் மன்னவர் படை ஒடும் துன்னி - துணையாய்வந்த வடதேசத்தரசர்கள் சேனையோடும் வந்து, ஞாலம் முடிக்கும் நாள் எழு சூறை தள்ள - உலகினைமுடிக்குங் கடைநாளிலெழுந்த சண்டமாருதம்வீச, அதிர்ந்து எழும் வன்னி என்ன உடன்று எதிர்ந்தனர் - ஒங்கியெழுந்த வடவாமுகாக்கினியைப்போலக் கோபித்தெதிர்த்தார்கள், வழுதி சேனை உடைந்தது - பாண்டியன்சேனை புறங்காட்டியோடியது

மின்னிலங்கிலைவாளொடுஞ்சிலைவில்லிழந்தனர்வீரரோ
பன்னலம்புனைதேரொடுங்கரிபரியிழந்தனர்பாகரோ
தென்னவன்பொருவலியிழந்தனனென்றுசெம்பியன்வாகையுந்
தன்னதென்றுதருக்குமேல்கொடுசங்கெடுத்துமுழக்கினான்.

(இ-ள்.) வீரர் - பாண்டியன் சேனைவீரர்கள், மின் இலங்கு இலை வாள் ஒடும் சிலை வில் இழந்தனர் - மின்னல்போல விளக்குந் தகட்டுவடிவாகிய வாளினோடும் வில்லினை யிழந்தார்கள், பாகர் - பாகர்கள், பல் நலம்புனை தேர் ஒடும் கரி பரி இழந்தனர் - பலநலம்பெற அலங்கரித்த தேர்களோடும் யானைகளையுங் குதிரைகளையு மிழந்தார்கள், தென்னவன் பொரு வலி இழந்தனன் என்று - பாண்டியன் போர்செய்தற்குரிய வீரத்தை யிழந்தனனென்று, செம்பியன் வாகையும் தன்னது என்று தருக்கு மேல் கொடு சங்கு எடுத்து முழக்கினான் - சோழன் வெற்றியுந் தன்னுடையதென்று இறுமாந்து சயசங்கமுழக்கினான்.

பாண்டியன்சேனை புறக்கட்டினமையால் அவன் போர் வன்மையை யிழந்தானென்று கருதினனென்பார் செம்பியன் வாகையுந்தன்னதென்று தருக்குமேல் கொடுசங்கெடுத்து முழக்கினன் என்றார். (௯)

அந்தவேலையின்முன்னருந்தமதருளெனக்குளிர்கடிபுனற்
பந்தர்நிழலளித்துமோடைபடுத்தியும்பகைசாயவே
வந்தவேடரவண்ணமேயொருமானவேடரசாய்வலஞ்
சிந்தவாகுலமூழ்குமிளவர்சேனைகாவலராயினர்.

(இ-ள்.) அந்த வேலையில் - அக்காலத்தில், முன்-முன்பு, அருமை தமது அருள் என்ன குளிர் கடி புனல் பந்தர் நிழல் அளித்தும் - அரிய தமதருளினைப் போலக் குளிர்ந்த வாசமூட்டிய தண்ணீர்ப்பந்தல் நிழல்பெற வைத்தும், ஓடை படுத்தியும் பகை சாய வந்த வேடர் - அகழியில்வீழ்த்தியும் பாண்டியனுக்குப் பகையாயுள்ள சோழர்களழியவந்த திருவேடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், அவ்வண்ணமே ஒருமானம் வேடு அரசு ஆய் வலம் சிந்த - அவ்வாறே ஒப்பில்லாதபோ

Koviloor Digital Library

ரில் மானமிக்க வேட்டுவர்க்கு அதிபதியாய் விக்கிரமசோழனிறுமாப்புக்கெட, ஆகுலம் மூழ்கு மீனவர் சேனை காவலர் ஆயினார்-தன்பத்திலழுந்திய வங்கிய சேகரபாண்டியனுடைய செஞபதியாக வந்தருளினார்.

பாண்டியர்பொருட்டு முன்னர்த் தண்ணீர்ப்பந்தல் வைத்துஞ் சோழனை மடுவில் வீட்டியும் அவர்களைக் காத்தருளியதுபோல இன்றுங் காக்கவந்தருளினர் என்பார் மானவேடராசாய் வலஞ்சிந்தவாகுலமூழ்கு மீனவர்சேனைகாவலராயினார் என்றார். (௨௦)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

குன்றவில்வேடன்சாபங்குழைவித்துச்சுந்தரேச
னென்றதன்னாமந்தீட்டியிட்டகூர்ங்கணைகடூண்டி
வென்றனமென்றுவாகைமிலைந்துவெண்சங்கமார்த்து
நின்றவன்சேனைமீதுநெறிப்படச்செலுத்தாநின்றான்.

(இ-ள்.) குன்றம் வில் வேடன் சாபம் குழை வித்து - மேருவில்லையுடைய வேட்டுவ வடிவங்கொண்டு வந்தருளிய சோமசுந்தரக்கடவுள் வில்லினை வளைத்து, சுந்தரேசன் என்ற தன் நாமம் தீட்டி இட்ட கூர்கணை கள் தூண்டி - சுந்தரேசனெனத் தமது திருநாமமெழுதிய கூரிய அம்புகளையேவி, வென்றனம் என்று வாகை மிலைந்து வெண் சங்கம் ஆர்த்து நின்றவன் சேனை மீது நெறிப்பட செலுத்தா நின்றான்- வென்றோமென்று வாகைமாலைசூடி வெள்ளிய சுரசங்கமுழக்கிநின்ற சோழன்மேல் வரிசைபட அம்பினைச் செலுத்துகின்றவராயினார். (௨௧)

அம்முனைவாளியொவ்வொன்றடல்புனைநூற்றுநூறு
தெம்முனைவீரர்தம்மைச்செகுத்துயிருண்ணநோக்கி
யிம்முனைவாளியொன்றுக்கித்துணைவலியாதென்னா
வெம்முனைமறவேற்சென்னிவியந்தநுமானமெய்தா.

(இ-ள்.) அமுனை வாளி ஒவ்வொன்று அடல் புனை தெவ் முனை நூற்று நூறு வீரர் தம்மை செகுத்து உயிர் உண்ண நோக்கி-அந்தக் கூரிய அம்பு ஒவ்வொன்றும் வெற்றிமாலைசூடிய பகைமுனையையுடைய பதினாயிரம் வீரர்களைக் கொள்ளைகொள்ளப்பார்த்து, இமுனை வாளி ஒன்றுக்கு இதுணை வலியாது என்னா-இந்தக் கூரிய அம்பொன்றுக்கு இவ்வளவு வலிமை யாதென்று, வெம் முனை மறம் வேல் சென்னி - கொடிய கூரிய கொலைத்தொழிலையுடைய வேலையேந்திய சோழன், வியந்து அநுமானம் எய்தா - அதிசயித்து அநுமானங்கொண்டு.

முட்டின்றி நிரம்பிய வன்மையையுடையதாய் ஓரம்பு பதினாயிரம்வீரரைக் கொல்லுதலால் இது கடவுட்டன்மையுடையதோ எனக் கருதினான் என்பார் அநுமானங்கொண்டு என்றார். அநுமானம் ஆனது புகைகண்டு நெருப்புண்டென உணர்தல். நூற்றுநூறு பண்புத்தொகையாய்ப் பதினாயிரம் என்னும் எண்மேல் நின்றது.()

அன்னகூர்வாளிதன்னைக்கொணர்கெனவதனைவாசித்
தின்னதுசுந்தரேசனெனவனாந்திருப்பதீது
தென்னவற்காலவாயான்றுணைசெய்தசெயலென்றஞ்சிப்
பொன்னிநாடுடையான்மீண்டுபோகுவான்போகுவானை.

Koviloor Digital Library

(இ-ள்.) அன்ன கூர் வாளி தன்னை கொணர்க என அதனை வாசித்து-அந்த க்கூரிய வாளியைக்கொண்டு வரக்கடவிரென்று வந்த அவ்வம்பினைவாங்கி வாசித்து, இன்னது சுந்தரசேன் என வரைந்து இருப்பது - இவ்வம்பு சுந்தரேசனுடையதென் று எழுதியிருக்கின்றது, ஈது தென்னவற்கு ஆலவாயான் துணை செய்த செயல் எ ன்று அஞ்சி - இச்செயல் பாண்டியனுக்குச் சோமசுந்தரக்கடவுள் துணையாய்நின்று செய்த செயலென்றச்சங்கூர்ந்து, பொன்னி நாடு உடையான் மீண்டு போகுவான் காவிரிசூழ்ந்த நாட்டையுடைய விக்கிரமசோழன் புறக்காட்டிச் சென்றனன், போ குவானை - செல்லும் அச்சோழனை. (௨௩)

செருத்துணையாகிவந்தவுத்தரதேயத்துள்ளார்
அருக்கரொட்டியர்வேறுள்ளார்யாவருஞ்சூழ்ந்துநில்லென்
றுருத்தனர்வைதுநீபோர்க்குடைந்தனைபோதியீதுன்
கருத்தெனிறுண்மையாவர்கண்ணதுன்மானமென்னும்.

(இ-ள்.) செரு துணை ஆகிவந்த உத்தர தேயத்து உள்ளார் - போர்க்குத் து ணையாய்வந்த வடதேசத்தரசர்களாகிய, அருக்கர் ஒட்டியர் வேறு உள்ளார் யாவரு ம் சூழ்ந்து - அருக்கரும் ஒட்டியரும் இவரொழிந்த ஏனையோருமாகிய எல்லோருஞ் சூழ்ந்து, நில் என்று உருத்தனர் வைது - நில்லென்று கோபித்து வைது, நீ போர்க்கு உடைந்தனை போதி - நீ போரில் தோற்றுப் புறங்கொடுத்துப் போகின்றாய், ஈது உன் கருத்து என்னின் - இவ்வாறு போதல் உன்கருத்து ஆனால், ஆண்மை யாவர் கண்ணது - ஆண்தன்மை யாரிடத்தது, உன் மானம் என் ஆம் - உனது மானம் யா துபயன்படும்.

வீரருட்சிறந்த நீயே புறக்கொடுத்துச் செல்வையாயின் உலகில் வீரம் என்ப தொன்றில்லையென்பார் ஈதுன்கருத் தெனினுண்மையாவர் கண்ணது எனவும், பழிக் கு நாணுதல் உனக்கே புரியதென்பார் உன்மானம் எனவும், அதனை நீயொழிக்கில் எங்குள்ளது என்பார் மானம் என்னும் எனவுங்கூறினார். (௨௪)

செல்லலைவருதியென்றுச்செயிர்த்தெழுந்திடியினார்த்துக்
கல்லெழுவனையதிண்டோட்கௌரியன்படைமேற்சென்று
வில்லிறவலித்துவாங்கிவேறுவேறாகிநின்று
சொல்லினுங்கடியவாளிதொடுத்தனர்விடுத்தார்த்தார்.

(இ-ள்.) செல்லலை - (போர்க்குடைந்து) போகாதே, வருதி என்று-வருவா யென்று கூறி, செயிர்த்து எழுந்து இடியின் ஆர்த்து - கோபித்தெழுந்து இடியேற் றைப்போல் வீரகோஷம் செய்து, கல் எழு அனைய திண் தோள் கௌரியன் படை மேல் சென்று - கற்றூணையொத்த திரண்ட திண்ணிய தோளையுடைய பாண்டியன் சேனைமேற்சென்று, வில் இற வலித்து வாங்கி-வில் முறிய இழுத்து வளைத்து, வே று வேறு ஆகி நின்று - தனித்தனி யொவ்வொருபாலும் நின்று, சொல்லினும் கடிய வாளி தொடுத்தனர் விடுத்தார் ஆர்த்தார் - (முனிவர்) சாபத்தினும் விரைந்து செல் லும் பாணங்கள் தொடுத்துவிடுத்து எக்கும் போர்த்தனர்.

வில்லி றொருகாலை முன்னேயூன்றி யதனிருகாலையும் ஒன்றாக்குமையால் வில் லிறவலித்து வாங்கி என்றார். (௨௫)

Koviloor Digital Library

வடுத்தவாமருமச்செம்புண்மறமகனுகின்ற
கடுத்தவாமிடற்றுமுக்கட்கண்ணுதற்சாமிதான்முன்
எடுத்தவாடகவிலன்னவிருஞ்சிலைவாளியொன்று
தொடுத்தவாடவர்தாம்விட்டசுடுசரந்தொலைத்துப்பின்னும்.

(இ-ள்.) வடு தவா மருமம் செம்புண் மறமகன் ஆகின்ற-வடுக்களினின்று நீங்காதமார்பத்தில் செவந்த புண்கள்வாய்ந்த வேட்டுவத் திருவுருவங்கொண்டுநின்ற, கடு தவா மிடறு முக்கண் கண்ணுதல் சாமி தான்-விடம் நீங்காதுறையும் ஸ்ரீகண்டத்தையும் திரிநேத்திரங்களையுமுடைய சோமசுந்தரக்கடவுள், முன் எடுத்த ஆடகம் (திரிபுரங்களை வெல்ல) முன்னர் ஏந்திய வில்லையொத்த, இரும் சிலை வில் அன்ன - பெரிய வில்லினை வளைத்து ஓர்பாணம் தொடுத்த, அ ஆவாளி ஒன்று தொடுத்து - அவ்வீரர்களேவிய காயாநின்ற அம்புகளை டவர் தாம் விட்ட சுடு சரம் தொலைத்து - ... யறுத்து, பின்னும் - மீளவும். ...ளிதொடுத்து என வாளாகூறி

நான்குநிலையும் அடங்குதற்கு இருஞ்சிலைவ... ...டநிலை, மண்டிலநிலை, பைசாசனுர். நான்கு நிலைகளாவன ஆலிடநிலை, பிரத்தியால... ...ல் முன்வைத்தல். பிரத்தியாலீ நிலை. ஆலிடநிலையாவது வலக்கால் வளைத்து இடக்க... ...ல். மண்டிலநிலை இருகாலும் வளை டநிலை வலக்கால் முன்வைத்து இடக்கால் வளைத்த... ...தல். "சிலையோர்நால்வகைநிலை த்தல். பைசாசநிலை ஒருகால் நின்று ஒருகால்வளைத்... ...காணிலைநின்றொருகான்முடக்கும்-பைசாசம்-ஆலிடமண்டிலம்பிரத்தியாலீடம் - ஒ... ...லித்திடக்கான்முந்துறும் - அதற் பைசாசமாமைய, வல... ...மண்... ...தன்மண்டிலநிலை - வலக்கான்முந் பெயராலிடநிலையதாகும், இருகான்மண்டலித்தி... ...ட்டைப்பெயராகும்" எனவருஞ் சூத் துற்றிடக்கான்மண்டலிப்பிற் - பிரத்தியாலீடமெ... திரங்களால் உணர்க. (உசு)

பத்தம்புதொடுத்துநாற்றுப்பத்தும... ...ன்றேனைச்சாய்த்தான்
பத்தம்புதொடுத்துநாற்றுப்பத்துவெ... ...வங்களிற்றைமாய்த்தான்
பத்தம்புதொடுத்துநாற்றுப்பத்துவாம்பரியை... ...யக்கொன்றுன் (உரு)
பத்தம்புதொடுத்துநாற்றுப்பத்துமாளிடனைவென்றுன.

(இ-ள்.) பத்து அம்பு தொடுத்து - பத்துப்பாணங்களைப் பிரயோகித்து, நாற்றுப்பத்து மான் தேனை சாய்த்தான் - குதிரைபூண்ட ஆயிரந்தேர்வீரர்களைக் கொன்றுன், பத்து அம்பு தொடுத்து நாற்றுப்பத்து வெம் களிற்றை மாய்த்தான் - பத்துப்பாணங்களை யேவிக் கொடிய ஆயிரம் யானைகளைச் சிதைத்தான், பத்து அம்பு தொடுத்து - பத்துப்பாணங்களை விடுத்து, நாற்றுப்பத்து வாம் பரியை கொன்றுன் - தாவாநின்ற ஆயிரக்குதிரைகளைக் கொன்றுன், பத்து அம்பு தொடுத்து - நூறுபாணங்களைச்சொரிந்து, நாற்றுப்பத்து மாளிடனை வென்றுன் - ஆயிரங்காலாட்களை வதைத்தான். (உஎ)

நூறம்புதொடுத்துநாற்றுநூறுவெம்பரிமேலெய்தான்
நூறம்புதொடுத்துநாற்றுநூறுவெங்கரிமேற்பெய்தான்
நூறம்புதொடுத்துநாற்றுநூறுதேர்சிதையவிட்டான்
நூறம்புதொடுத்துநாற்றுநூறுசேவகரையட்டான்.

(இ-ள்.) நூறு அம்பு தொடுத்து-நூறுபாணங்களைச் சிந்தி, நாற்று நூறு வெம் பரிமேல் எய்தான் - கடிய வேகத்தையுடைய பதினுயிரங்குதிரைகளைச் சிதைத்

Koviloor Digital Library

தான், நூறு அம்பு தொடுத்து - நூறுபாணங்களைவிட்டு, நூற்று நூறு வெம் கரிமேல் எய்தான் - கொடிய பதினாயிரம் யானைமேற் பொழிந்தான், நூறு அம்பு தொடுத்து - நூறம்பினை விடுத்து, நூற்று நூறு தேர் சிதைய விட்டான் - பதினாயிரம் தேரழிய விலினுன், நூறு அம்பு தொடுத்து - நூறுபாணங்களையேவி, நூற்று நூறு சேவகரை அட்டான் - பதினாயிரம் வீரர்களைக் கொன்றான். (௨௮)

ஆயிரம்வாளியானூறாயிரம்பரியைக்கொன்றான்
ஆயிரம்வாளியானூறாயிரங்கரியைவென்றான்
ஆயிரம்வாளியானூறாயிரந்தேரைச்சாய்த்தான்
ஆயிரம்வாளியானூறாயிரம்பேரைத்தேய்த்தான்.

(இ-ள்.) ஆயிரம் வாளியால் - ஆயிரம் பாணங்களால், நூறாயிரம் பரியை கொன்றான் - இலட்சங் குதிரைவீரர்களை வதைத்தான், ஆயிரம் வாளியால் - ஆயிரம் பாணங்களால், நூறாயிரம் கரியை வென்றான் - இலட்சம் யானைவீரர்களை யழித்தான், ஆயிரம் வாளியால் - ஆயிரம் பாணங்களால், நூறாயிரம் தேரை சாய்த்தான் - இலட்சம் தேர்வீரர்களை மடித்தான், ஆயிரம் வாளியால் - ஆயிரம் பாணங்களால், நூறாயிரம்பேரை தேய்த்தான் - இலட்சங் காலாட்களை யுருவழித்தான். (௨௯)

தடிந்தனதோளுந்தாளுந்தகர்ந்தனசென்னிமண்ணிற்
படிந்தனமடிந்தோர்யாக்கைபரிந்தனதும்பைத்தாமம்
மடிந்தனமையல்யானைமாண்டனதாண்டும்பாய்மான்
ஒடிந்தனகொடிஞ்சிமான்றேரொழிந்தனவொழிந்தசேனை.

(இ-ள்.) தோளும் தாளுந் தடிந்தன - தோளுங் கால்களும் அறுபட்டன, சென்னி தகர்ந்தன - தலைகளுடைபட்டன, மடிந்தோர் யாக்கை மண்ணில் படிந்தன - உயிரொழிந்தோர் சரீரம் நிலவுலகின்மேற்படிந்தன, தும்பை தாமம் பரிந்தன - தும்பைமலர்மாலை யழிந்தன. மையல் யானை மடிந்தன - மதமயக்கத்தையுடைய யானைகளிறந்தன, தாண்டும் பாய் மான் மாண்டன - தாண்டிப்பாய்ந்து செல்லுங் குதிரைகள் மடிந்தன, கொடிஞ்சி மான் தேர் ஒடிந்தன - மொட்டையுடைய குதிரை பூண்ட தேர்கள் நொறுங்கின, சேனை ஒழிந்தன - ஒழிந்த வினைச்சேனைகளும் சிறிதுமின்றி யொழிந்தன.

ஒழிந்த சேனை என்றது வில்வாட்சேனைகளை. (௩0)

ஆவிமுன்போகத்தாமுமருக்கமண்டிலத்தூடேகத்
தாவுவவென்னவாடுந்தலைபலசிலைவாள்பட்டுக்
கூவிளியெடுத்துவீழுங்குறைத்தலையாடப்பாதிச்
சாவுடனின்றுகைகள்கொட்டுவதாளமென்ன.

(இ-ள்.) ஆவி முன் ஏக - தமது உயிர் முன்னே செல்ல, தாமும் அருக்க மண்டிலத்து ஊடு ஏக - தாமும் சூரிய மண்டிலத்தின் வழியாகச்செல்ல, தாவுவ என்ன பல தலை ஆடும் - தாவுதல்போலப் பலதலைகளாடும், சிலை வாள் பட்டு கூவிளி எடுத்து வீழும் குறைத்தலை ஆட - வில்லில் எறிட்ட பாணங்களும் வாள்களும் பட்டுக் கூவிவீழுங் கவந்தங்களாட, பாதி சாவு உடல் நின்று தாளம் என்ன கைகள் கொட்டுவ - முற்றுஞ்சாகாத சரீரங்கள் நின்று தாளம்போடுதல்போலக் கைகளைச் சேர்த்துக்கொட்டுவன. (௩௧)

தறைவிழத்தனது சென்னிவீட்டினார் தம்மைநின்ற
குறையுடல்கைவேல்குத்தி நூக்குவகுரவைபாடி
யெறிபடுதலைகள்வாய்மென்றெயிறதுகறித்துவீழ்ந்து
கறுவினமார்பந்தட்டிநிற்பனகவந்தயாக்கை.

(இ-ள்.) தனது சென்னி தறைவிழ - தனது தலைநிலத்தின்மேல்விழ, வீட்டினார் தம்மை - அறுத்து வீழ்த்தினவர்களை, நின்ற குறை உடல் - விழாதுநின்ற கவந்தமானது, கை வேல் குத்தி நூக்குவ - கையிலேந்திய வேலாற்குத்திக் கீழே தள்ளுவன, எறிபடு தலைகள் - அறுபட்ட தலைகள், குரவை பாடி - குரவைப்பாட்டுப் பாடி, வாய் மென்று எயிறு கறித்து வீழ்ந்து கறுவின - பற்களைக்கடித்து வீழ்ந்து (ஒன்றோடொன்று) கோபித்து நின்றன, கவந்த யாக்கை - குறையுடல்கள், மார்பம் தட்டி நிற்பன - மார்பினைத்தட்டி (எதிர்ந்து) நிற்கின்றன.

குரவைப்பாட்டு கைகோத்தாடும்போது பாடும்பாட்டு. (௯௨)

ஒருவழிப்பட்டுவீழுமிருதலையொன்றற்கொன்று
மருவியகேண்மையாகிவாலெயிறிலங்கநக்குப்
பிரிவறவந்தாய்நீயுமென்றெதிர்பேசிப்பேசிப்
பரிவுறமொழிந்துமோந்துபாடிநின்றாடல்செய்த.

(இ-ள்.) ஒருவழிப்பட்டு வீழும் இருதலை - ஓரிடத்திலறுபட்டு வீழும் இரண்டு தலைகள், ஒன்றற்கு ஒன்று மருவிய கேண் [illegible] ஆகி - ஒன்றோடொன்று கலந்த நட்புடையனவாகி, வால் எயிறு இலங்க நக்கு - வெள்ளிய பற்கள் விளங்கச்சிரித்து, நீயும் பிரிவு அறவந்தாய் என்று - நீயும் (உயிர்கழிந்த பின்னும்) பிரிதலற என்னொடு வந்தாயென்று, எதிர் பேசி பேசி - தம்முளெதிரேபேசி, பரிவு உற மொழிந்து மோந்து - அன்பு மிகப்பேசி (ஒன்றற்கொன்று) மோந்து, பாடி நின்று ஆடல் செய்த - பாடி நின்று கூத்தாடுவன.

கேண்மைய என்னும் பலவின்பாலகர வீறுதொக்கது. கேண்மைத்தாகி என்னும் பாடத்தைக் கேண்மையாகி எனப் பாடங்கொள்க. (௯௩)

மாகவாறியங்குசேனம்வல்லிருட்குவையினன்ன
காகம்வன்கழுகுவெம்போர்க்களனிடையவிந்துவீழ்ந்தோ
ராகமேற்சிறகடிக்கொண்டசைவனவேடைநீக்கப்
பாகநின்றாலவட்டம்பணிப்பனபோன்றவன்றே.

(இ-ள்.) மாகம் ஆறு இயக்கு சேனம் - ஆகாயத்தின்வழி சஞ்சரிக்கும் பருந்தும், வல் இருள் குவையின் அன்ன காகம்-நடுவிருளின் திரட்சியையொத்த காகமும், வன் கழுகு-வலிய கழுகுகளும், வெம்போர்க்களன் இடை அவிந்து வீழ்ந்தோர் ஆகம் மேல்-கொடிய போர்க்களத்தில் மடிந்து வீழ்ந்தவருடைய உடலின்மேல், சிறகு அடிக்கொண்டு அசைவன - சிறகடித்துக்கொண்டு அசைந்துலாவல், வேடை நீக்க - இறந்தோர் வெப்பத்தை யொழிக்க, பாகம் நின்று ஆலவட்டம் பணிப்பன போன்ற - அவர்பக்கம் நின்று சிவிறியை வீசுதலொக்கும். (௯௪)

வெள்ளமாச்சோரியீர்ப்பமிதக்கின்றதேர்கள்வெம்பேய்ப்
பிள்ளைகண்மூழ்கிக்கீழ்போய்மறித்தெனப்பெயர்ந்துவீழ்வ
தெள்ளுநீர்க்கடலின்மீதூர்சிதைக்கலநிரையுந்தாக்கித்
துள்ளிமற்றவற்றைச்சாய்க்குஞ்சுறவமும்போன்றவன்றே.

Koviloor Digital Library

(இ-ள்.) மாசோரி வெள்ளம் ஈர்ப்ப - பெரிய உதிரவெள்ள மிழுக்க, மிதக்கின்ற தேர்கள் - மிதக்காநின்ற தேர்கள், வெம்பேய் பிள்ளைகள் மூழ்கி இழ்போய் மறித்தென - கொடிய பேயின் பிள்ளைகள் அவ்வெள்ளத்துள் முழுகியத் தேரின் கீழ்ச்சென்று மடக்க, பெயர்ந்து வீழ்வ - தலைகீழாகப் பெயர்ந்து வீழ்தல், தெள்ளும் நீர் கடலின்மீது ஊர் - தெளிந்த நீர்மயமாகிய கடலின்மேற்செல்லும், சிதைக்கலம் நிரையும் - பாய்மரத்தையுடைய மரக்கலவரிசையையும், தள்ளி தாக்கி அவற்றை சாய்க்கும் சுறவமும் போன்ற - தள்ளி மோதி யம்மரக்கலங்களைக் கீழே சாய்க்கும் மகரமீனையும் ஒத்திருந்தன.

தேரை மரக்கலமாகவும், பேய்ப்பிள்ளைகள் மறித்தலைச் சுறாமீன் சாய்த்தலாகவுங் கூறினமையால் பண்புவமை தொழிலுவமையணிகளாகக்கொள்க. மறித்தென செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சம். (௯௫)

கத்திநின்றொருபாலீர்ப்பக்கருங்கொடிசேனந்துண்டங்
கொத்திநின்றொருபாலீர்ப்பக்குடவயிற்றழல்கட்பூதப்
பத்திநின்றொருபாலீர்ப்பப்பட்டவராகங்கூளி
பொத்திநின்றொருபாலீர்ப்பவைம்பொறிபோலமன்னோ.

(இ-ள்.) ஐம்பொறிபோல - (மனத்தைத் தம்வழி யிழுக்கும்) பஞ்சேந்திரியங்களைப்போல, பட்டவர் ஆகம்-மடிந்தவர்கள் சரீரங்களை, கருங்கொடி - கரிய காகங்கள், கத்தி நின்று ஒருபால் ஈர்ப்ப - கூவிநின்றொருபக்க மிழுக்கவும், சேனம் - பருந்துகள், துண்டம் கொத்திநின்றொருபால் ஈர்ப்ப - அலகுகளாற் கொத்திநின்று ஒருபக்க மிழுக்கவும், குடம் வயிறு - குடம்போன்ற வயிற்றையும், அழல்கண்-கொதிக்கும் கண்களையுமுடைய, பூதம்பத்தி நின்று ஒருபால் ஈர்ப்ப - பூதவரிசைகணின்று ஒருபக்க மிழுக்கவும், கூளி பொத்தி நின்று ஒருபால் ஈர்ப்ப - பசாசுகள் மொய்த்து நின்று ஒருபக்கமீழுப்பன. (௯௬)

துடுவைவான்முறங்காறள்ளுந்துணைச்செவியரிசிகோட்டி
னுடுவைநேர்மணியின்குப்பையுரலடியுலக்கைதிண்கோ
டடுகலங்கடந்திச்சோரிமத்தகமடுப்பென்றியானைப்
படுகளம்விசயச்செல்வியடுமடைப்பள்ளிமானும்.

(இ-ள்.) வால் துடுவை - வால் துடுப்பும், கால் தள்ளும் துணை செவி முறம் - காற்றைவீசும் இரண்டு செவிகளும் முறமும், கோட்டின் உடுவை நேர் மணியின் குப்பை அரிசி - கொம்பினிடத்துள்ள நட்சத்திரங்களையொத்த முத்தின் கூட்டம் அரிசியும், அடி உரல் - கால் உரலும், திண் கோடு உலக்கை - திண்ணிய தந்தங்கள் உலக்கையும், அடு கலம் கடம் - சமைக்கும் பாத்திரங்கள் கதுப்பும், சோரி தீ - உதிரம் தீயும், மத்தகம் அடுப்பு-மத்தகம் அடுப்பும், (ஆகக்கொண்டு) யானை படுகளம் - யானைமடிந்த போர்க்களம், விசயச்செல்வி அடு மடைப்பள்ளிமானும் - வீர இலட்சுமி பாகஞ்செய்யும் மடைப்பள்ளியை ஒக்கும்.

மானும் என்பதை எல்லாவற்றோடுங் கூட்டிப் பொருள்கொள்ள நிற்றலால் பலவயிற்போலியுவமையணி. (௯௭)

பிணத்திரளைக்கோலிப்புண்ணீராற்றிளைப்பெருக்கியுண்பேய்க்
கணத்திரளையுதைந்துதாக்கிக்களையுடைத்தொருவன்பூத
நிணத்தொடும்வருமந்நேர்படவிருந்துகையா
லணைத்துவாய்மடுக்கும்வையையருந்தியபூதமென்ன.

Koviloor Digital Library

(இ-ள்.) வையை அருந்திய பூதம் என்ன - வையைநதியை (இரண்டு கைக ளாலுந்தடுத்து) நீர்பருகிய குண்டோதரனைப்போல, பிணத்தினை கோலி-பிணங்களை யரித்து, புண்ணீர் ஆற்றினை பெருக்கி-உதிரவெள்ளத்தைப்பெருக்கி, உண் பேய் க ணத்தினை உதைத்த நூக்கி-உண்ணவரும் பேய்க்கூட்டங்களைத்தள்ளி, கரை உடைத் து நிணத்து ஓடிவரும் அ நீத்தம் - கரையினையுடைத்து நிணங்களோடு வாராநின் ற அவ்வுதிரவெள்ளத்தின், நேர்பட இருந்து-எதிரேயிருந்து, ஒருவல் பூதம்-ஒரு வலிய பூதம், கையால் அணைத்து வாய் மடுக்கும் - தனது கைகளாற்றடுத்துப் பரு காநிற்கும். (௩அ)

புரத்தினுளுயர்ந்தகூடற்புண்ணியனெழுதியெய்த
சரத்தினிலவிந்தார்சென்னிக்குற்றுழிச்சார்வாய்வந்த
வரத்தினையறுக்கும்வைவேலயற்புலவேந்தர்நச்சு
மரத்தினையடுத்தசந்துங்கதழெரிமடுத்ததென்ன.

(இ-ள்.) புரத்தினுள் உயர்ந்த கூடல் புண்ணியன் - காசிமுதலிய புரிகளுளு யர்ந்தோங்கிய மதுரையிலெழுந்தருளிய அறவடிவாகிய சோமசுந்தரக்கடவுள், எ ழுதி எய்த சரத்தினில் -தம்பெயரெழுதிப் பிரயோகித்த பாணத்தால், சென்னிக்கு உற்ற உழி - விக்கிரமசோழனுக்கு இடையூறுவந்தவழி, சார்வாய் வந்த - ஊன்று கோல்போலத் துணையாயுதவவந்த, அரத்தினை அறுக்கும் வைவேல் அயல் புலம் வேந்தர் - அரத்தை யராவுங் கூரிய வேலையேந்திய அயல்நாட்டரசர்கள், நச்சு மர த்தினை அடுத்த சந்தும் - நஞ்சுமரத்தையடுத்த ,தனமரமும், கதழ் எரி மடுத்தது என்ன - விரைந்துபற்றுந் தீப்பற்றியதுபோல, அவிந்தார் - அழிந்தார்கள்.

காசிமுதலிய புரிகளாவன காசி, அயோத்தி, மதுரை, மாயை, காஞ்சி, அவ ந்திகை, துவாரகை. ஏழனுருபுகூட்டிப் பிரித்தப்பொருளில் வந்தது. துணையின் வந்த அரசர்கள் என்பார் சென்னிக்குற்றுழிச் சார்வாய்வந்த அயற்புலவேந்தர் என வும், என்றுங் கூரியதென்பார் அரத்தினையறுக்கும் வைவேல் எனவும், இயற்கையி ற்கெடுள்ள தீயோரைச்சார்ந்த நல்லோருங்கெடுவர் என்பார் நச்சுமரத்தினையடுத்த சந்துங் கதழெரிமடுத்தது தென்ன எனவுங் கூறினர். (௩௯)

மாசறுகாட்சியான்றன்வாளியாலவிந்தோர்தம்மை
மூசுவண்டென்னச்சூழ்ந்துமொய்த்தனபைத்தகூளி
காய்சினச்சேனங்காகங்கழுகினம்பற்றியீர்த்துப்
பூசலிட்டொன்றோடொன்றுபோர்செய்வான்றொடங்கிற்றம்ம.

(இ-ள்.) மாசு அறு காட்சியான் தன் வாளியால் அவிந்தோர் தம்மை - குற் றமற்ற தோற்றம் வாய்ந்த சோமசுந்தரக்கடவுளுடைய அம்பால் உயிரிழந்த வீரர்க ளை, பைத்த கூளி - பரந்த பசாசுகள், மூசு வண்டு என்ன சூழ்ந்து மொய்த்தன - மலரில் மொய்க்கும் வண்டைப்போலச் சூழ்ந்து மொய்த்தன, காய்சினம் சேனம் காகம் கழுகு இனம் - வருத்துங் கோபத்தையுடைய பருந்தும் காகமும் கழுகின் கூ ட்டங்களும், பற்றி ஈர்த்து - (தம்முள்) பிடித்திழுத்து, பூசலிட்டு - பெருங்கூச்சலி ட்டு, ஒன்று ஒடு ஒன்று போர் செய்வான் தொடங்கிற்று - (அவற்றுள்) ஒன்றுக் கொன்று போர்செய்யத் தொடங்கியது. (௪௦)

வெஞ்சினமறக்கோனம்பிவிடுகணைவெள்ளத்தாழ்ந்து
வஞ்சினமுறுதன்சேனைமடிந்ததுகண்டுமாழாம்

Koviloor Digital Library

தெஞ்சினபடையுஞ்சூழவேதிலார்நகையுஞ்சூழத்
துஞ்சினமறமுஞ்சூழச்சோழனுமுடைந்துபோனான்.

(இ-ள்.) வெம் சினம் மறம் கோல் நம்பி - கொடிய கோபத்தையும் கொலைத்தொழிலையுமுடைய அம்பினையேந்திய சோமசுந்தரக்கடவுள், விடுகணை வெள்ளத்து ஆழ்ந்து - பிரயோகித்த பாணவெள்ளத்திலழுந்தி, வஞ்சினம் உறுதன் சேனை - சபதங்கூறிப் போர்க்குவந்த தனது சேனை; மடிந்தது கண்டு மாழாந்து-மடிந்ததைக்கண்டு மயங்கி, தெஞ்சின படையும் சூழ ஏதிலார் நகையும் சூழ - மடியாதெஞ்சிய சேனையும் ஒருபாற்சூழவும் அயலார் அவமதிப்பு நகையும் ஒருபாற்சூழவும், துஞ்சின மறம் உம் சூழ - இழந்த வீரமு மொருபாற்சூழவும், சோழனும் உடைந்துபோனான் - விக்கிரமசோழனும் புறங்காட்டிச் சென்றனன்.

தோல்வியொடு சென்றான் என்பார் துஞ்சின மறமுஞ் சூழ என்றார். (௪௩)

வில்லொடுமேகமன்னவெஞ்சிலைவேடவேந்தன்
மல்லொடுபயின்றதென்னன்மலர்முகச்செவ்விநோக்கி
யல்லொடுமதிவந்தென்னவருணகைசிறிதுபூத்துச்
செல்லொடுபகைபோற்கொண்டதிருவுருமறைந்துபோனான்.

(இ-ள்.) வில் ஒடு மேகம் அன்ன வெம் சிலை வேடர் வேந்தன் - இந்திரதனுசோடுதோன்றிய மேகத்தையொத்த வேட்டுவர் பதியாய்வந்த சோமசுந்தரக்கடவுள், மல் ஒடு பயின்ற தென்னன் மலர் முகச் செவ்வி நோக்கி - மற்போரிற்பயின்ற பாண்டியனுடைய தாமரைமலர்போன்ற முகத்தின் பொலிவைப்பார்த்து, மதி அல் ஒடு வந்தால் என்ன - சந்திரன் இருளொடு வந்தாற்போல, அருள் நகை சிறிது பூத்து - கருணையொடுபுன்னகை சிறிதரும்பி, செல் ஒடு பகைபோல் கொண்ட-மேகத்தொடு பகைமைகொள்ளுதல்போலக் கொண்டருளிய, திரு உரு மறைந்து போனான் - திருவுருவ மறைந்தருளினார்.

கரிய திருவுருக்கொண்டு வந்தருளினமையால் செய்தருளிய புன்னகை இருளிடையெய்த சந்திரன்போலும் என்பார் அல்லொடு மதிவந்தென்ன என்றார். (௪௪)

பாடுவாயளிதேனூட்டும்பைந்தொடைச்செழியன்வென்றிக்
கோடுவாய்வைத்திட்டார்த்துக்குஞ்சரமுகட்டிலேறித்
தோடுவாய்திழிக்குங்கண்ணார்மங்கலந்துவன்றியேந்த
நீடுவார்திரைநீர்வேலிநீண்மதினகரிற்புக்கான்.

(இ-ள்.) பாடுவாய் அளிதேன் ஊட்டும் பைந்தொடை செழியன் - பாடும் வண்டுகளுக்குப் பரிசிலாக மதுவூட்டும் பசிய வேப்பமலர்மாலையையணிந்த வங்கிய சேகரபாண்டியன், வென்றி கோடு வாய்வைத்திட்டு ஆர்த்து - சயசங்கத்தை வாய்வைத்தூதி, குஞ்சரம் முகடு இல் ஏறி-யானையின் மத்தகத்திலேறி, தோடு வாய் திழிக்கும் கண்ணார் - காதிலணிந்த தோட்டின் வாயைக் கிழிக்கும் கண்களையுடைய சுமங்கலமகளிர்கள், துவன்றி மங்கலம் ஏந்த - நெருங்கி அட்டமங்கலங்களை யேந்திவர, நீடுவார் திரைநீர் வேலி - நீண்ட அலைகள் வீசும் நீர்வளம் நிறைந்த மருதநிலத்தோடு, நீள் மதில் நகரில் புக்கான் - நீண்ட மதில்சூழ்ந்த மதுரைத்திருநகரிற்புகுந்தான்.

அட்டமங்கலங்களை முன்னர்க்காண்க. (௪௫)

Koviloor Digital Library

Koviloor Digital Library



சங்கப்பலகைகொடுத்ததிருவிளையாடல்-

எண்சீரடியாசிரியவிருத்தம்.

சிலைவிற்சேவகஞ்செய்துவாகைவாங்கித்திருவளித்தசேவகற்குச்சிற ந்தபூசை, நிலைவித்தாய்மணிப்பொலம்பூணிறுவிச்சாத்தி நிழல்விரிக்கும் வெயின்மணியானெடியமேரு;மலைவிற்றானென்னவரிச்சிலையுநாமம்வரை ந்தகடுங்கூர்ங்கணையும்வனைந்துசாத்தி,யலைவித்தாழ்கடலுலகுக்ககலச்செ ங்கோலறம்பெருக்கும்வங்கியசேகரனுமண்ணல்.

(இ-ள்.) சிலைவில் சேவகம் செய்து - விற்சேவகஞ்செய்து, வாகைவாங்கி தி ரு அளித்த சேவகற்கு - வெற்றிகொண்டு அரசியற்செல்வந் தந்தருளிய சோமசுந் தரக்கடவுளுக்கு, சிறந்த பூசை நிலைவித்து-மேம்பட்ட பூசனைகளென்றும் நிகழச்செய் து, ஆய் மணி பொலம் பூண் நிறுவி சாத்தி-குற்றமில்லாத இரத்தினங்களழுத்திய பொ ன்னாலாகிய ஆபரணங்களைச் செய்வித்துச்சாத்தி, நிழல்விரிக்கும் வெயில் மணியால்- ஒளிபரப்பும் செவந்த இரத்தினங்களால், நெடியமேருமலைவில் தான் என்ன - நீண்ட மகமேருவென்றுகண்டோர்சொல்ல, வரிசிலையும் நாமம் வரைந்த கடுங்கூர்கணையும் வனைந்து சாத்தி-கட்டமைந்த வில்லையும் திருப்பெயர் வரைந்த கடிய கூரிய அம்பை யும் செய்து சாத்தி, தாழ்கடல் உலகுக்கு அலைவி அகல-ஆழமாகிய கடல்சூழ்ந்த நி லவுலகுக்கு, அலைவி அகல - ஐம்பகையும் ஒழிய, வங்கிய சேகரன் ஆம் அண்ணல்- வங்கிய சேகரபாண்டியன், செங்கோல் அறம் பெருக்கும் - தனது செங்கோலால் புண்ணியந் தழைத்தோங்கச் செய்துவந்தான்.

தன்வழிபாட்டிற்கிரங்கி விற்போர்செய்து வெற்றியருளினமை தன்மரபின் வழி வருவோர் உணர்ந்து வழிபட்டுய்தற்கோ ரறிகுறியாகச்செய்தனன் என்பார் மேருமலை விற்றானென்ன வரிச்சிலையு நாமம் வரைந்த கடுங்கூர்ங்கணையும் வனைந்து சாத்தியெனவும், தன்னாலும் தன் கிளைஞராலும் பகைவராலும் கள்வராலும் விலங் கு முதலியவைகளாலும் தன் கோற்கீழ்வாழுங் குடிகளுக்குவருந் தீங்கினையொழித் தான் என்பார் பிறவினை முதனிலைத்தொழிற்பெயர்ப் பொருள்படத் தாழ்கடலுலகு க்கு அலைவியொழிய எனவும், அவையேமன்பதைகள் தத்தம் வருணநிலை பிறழாது நிலைபெறச்செய்யும் அரசியலறம் ஆதலால் செங்கோலறம்பெருக்கும் எனவுங் கூ றினர். (சுஎ)

சுந்தரப்பேரம்பெய்தபடலம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உ௲௬௱.

ஐம்பத்தொன்றாவது.

சங்கப்பலகைதந்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நீவடிவாகிமேருவில்லிதன்னுமக்கோலெய்
தாடமராடித்தென்னனடுபகைதுரந்தவண்ணம்
பாடினஞ்சங்கத்தார்க்குப்பலகைதந்தவரோடொப்பக்
கூடிமுத்தமிழின்செல்வம்விளக்கியகொள்கைசொல்வாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) மேரு வில்லி - மேருவில்லேந்திய சோமசுந்தரக்கடவுள், வேடு உரு ஆகி - வேட்டுவத் திருவுருக்கொண்டு, தன் நாமம் கோல் எய்து - தமது திருப்பெயரெழுதிய அம்பினையெய்து, ஆடு அமர் கடி - வெற்றிதங்கிய போர்செய்து, தென்னன் அடு பகை தீர்ந்த வண்ணம் பாடினம் - வங்கிய சேகரபாண்டியனுடைய கொல்லும் பகைமைபூண்ட விக்கிரமசோழனை யோட்டிய திருவிளையாடலைக் கூறினோம், சங்கத்தார்க்கு பலகை தந்து - சங்கப்புலவர்களுக்குப் பலகைதந்தருளி, அவரொடு ஒப்ப கூடி - அவர்களோடு ஒருசேரவிருந்து, முத்தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை சொல்வாம் - இயலிசைநாடகமெனப் பெயர்பெற்ற முத்தமிழென்னுஞ் செல்வத்தைப் பொலிவுபெறச்செய்த திருவிளையாடலை யினியெடுத்துக் கூறுவாம்.

வடமொழிபோலத் தென்மொழியுஞ் சிறந்ததென்பார் அவரோ டொப்பக்கூடியெனவும், இலக்கணவரம்பில்லாத ஏனைப்பாஷைகள்போலாது வழுவற நிறுத்தினர் என்பார் முத்தமிழின் செல்வம்விளக்கிய எனவுங் கூறினார். இன்தவிர் வழிவந்த சரிதை. (க)

வங்கியசேகரன்கோல்வாழுநாண்மேலோர்வைகற்
கங்கையந்துறைசூழ்கன்னிக்கடிமதிற்காசிதன்னிற்
பங்கயமுளரிப்புத்தேள்பத்துவாம்பரிமாவேள்வி
புங்கவர்மகிழ்ச்சிதுங்கமறைவழிபோற்றிச்செய்தான்.

(இ-ள்.) வங்கிய சேகரன் கோல் வாழும் நாள் - வங்கிய சேகரபாண்டியனுடைய செங்கோல் செல்லுங்காலத்தில், மேல் ஓர் வைகல் - பண்டொருதினம், அம் கங்கை துறை சூழ் - அழகியகங்கையின் துறைசூழ்ந்த, கன்னி கடி மதில் காசி தன்னில் - அழியாத காவல்பூண்ட காசித்திருநகரில், பங்கயம் முளரி புத்தேள் - தாமரையில் வசிக்கும் பிரமன், பத்து வாம் புரவி வேள்வி - பத்து என்னும் வரையறையையுடைய தாண்டிச்செல்லும் அசுவமேதயாகங்களை, புங்கவர் மகிழ்ச்சி துங்க - தேவர்கள் மகிழ்கூர, மறை வழி போற்றி செய்தான் - வேதநூல் வழுவா தோம்பிச் செய்துமுடித்தனன்.

தான் வேதம்பயில்வோனாதலால் அதை உலகில் நிலைபெறச்செய்தான் என்பார் மறைவழிபோற்றிச் செய்தான் என்றார். (உ)

நிரப்பியவழிநாணன்னீராடுவானீண்டவீணை
நரப்பிசைவாணிசாவித்திரியெனுநங்கைவேத
வரப்பிசைமநுவாங்காயத்திரியெனுமடவாரோடும்
பரப்பிசைக்கங்கைநோக்கிப்படருவான்படருமெல்லை.

(இ-ள்.) நிரப்பிய வழி நாள் - செய்துமுடித்த பின்னாளில், நல் நீர் ஆடுவான் - நல்ல அவபிருதஸ்நானஞ் செய்தற்பொருட்டு, நீண்ட வீணை நரம்பு இசை வாணி - (இசைநூல்வழி) நீட்சியமைந்த நால்வகை வீணையிலமைந்த நரம்புகட்குரிய குரல்முதலிய இசையில் விருப்பமுள்ள சரஸ்வதியும், சாவித்திரி என்னும் நங்கை - சாவித்திரியென்னுமாதும், வேதம் வரப்பு இசை மநு ஆம் காயத்திரி என்னும் மடவார் ஒடு உம் - வேதங்களுக்கு ஓர்வரம்பாயிசைந்த மந்திரமாகிய காயத்திரியென்னும் பெண்ணும் ஆகிய இவர்களோடும், இசை பரப்பு கங்கை நோக்கி படருவான் - ஒலிபரப்பும் அலைகளையுடைய கங்கையை நோக்கிச் செல்வானாயினான், படரும் எல்லை - செல்லுங்காலையில்.

Koviloor Digital Library

வீணைஎன வாளா கூறினமையால் நால்வகை வீணைஎன்றும் - நால்வகை வீணைகளாவன பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ். பேரியாழ் இருபத்தொரு நரம்புடையது. மகரயாழ் பதினேழுநரம்புடையது. சகோடயாழ் பதினறுநரம்புடையது. செங்கோட்டியாழ் ஏழ்நரம்புடையது "ஒன்றேடிருபது மொன்பதும்பத்துடனே - நின்றபதினுறும் பின்னேழுங் - குன்றுத - நால்வகையாழிற்கு நன்னரம்பு சொன்முறையே - மேல்வகையநூலோர்விதி" என்றதனு லுணர்க. (௬)

நானவார்குழலினரம்மூவரிஞவின்செல்வி
வானவாறியங்கும்விஞ்சைமாதராளொருத்திபாடுங்
கானவாறுள்ளம்போக்கிநின்றனள்கமலயோனி
யானவாலறிவனேகியந்நதிக்கரையைச்சேர்ந்தான்.

(இ-ள்.) நானம் வார் குழலினர் அ மூவரில் - வாசமமைந்த நீண்ட கூந்தலையுடைய அந்த மூவருள், நாவின் செல்வி - நாவின்கிழத்தியாகிய சரஸ்வதி, வானம் ஆறு இயங்கும் விஞ்சை மாதராள் ஒருத்தி - ககனவழியிற் சஞ்சரிக்கும் வித்தியாதரஸ்திரியொருத்தி, பாடும் கானம் ஆறு உள்ளம் போக்கி நின்றனள் - பாடாநின்ற இசையின்வழியே தனதுமனத்தைச்செலுத்திச் செல்லுகையொழிந்துநின்றனள், கமலயோனி ஆன வால் அறிவன ஏகி-பிரமனாகிய பேரறிஞன்சென்று, அ நதிக்கரையை சேர்ந்தான் - அந்தக் கங்காதீரத்தையடைந்தனன். (௭)

நாமகள்வரவுதாழ்ப்பநங்கையரிருவரோடுந்
தாமரைக்கிழவன்மூழ்கித்தடங்கரையேறுமெல்லைப்
பாமகள்குறுகியென்னையன்றிநீபடிந்தவாறென்
னுமெனவெகுண்டாள்கேட்டவம்புயத்தண்ணல்சொல்வான்.

(இ-ள்.) நாமகள் வரவு தாழ்ப்ப - கலைமகள் வருகைதாழ்க்க, நங்கையர் இருவரோடும் - சாவித்திரி காயத்திரி என்னும் இரண்டுமாதர்களோடும், தாமரை கிழவன் மூழ்கி - தாமரையில் வசிக்கும் பிரமன்கங்கை நீராடி, தடங்கரை ஏறும் எல்லை - பெரியகரை ஏறுங்காலையில், பாமகள் குறுகி - அக்கலைமகளடைந்து, என்னை அன்றி நீ படிந்த ஆறு என் ஆம் என - (நின்னுயிரிறுஞ்சிறந்த) என்னையன்றி நீ நீராடிய வகை யாதென்று, வெகுண்டாள் - கோபித்தாள், கேட்ட அம்புயத்து அண்ணல் சொல்வான் - அதனைக் கேள்வியுற்ற பிரமன் கூறுவான். (௮)

குற்றநின்மேலதாகநம்மைநீகோபங்கொள்வ
தெற்றெனவினையதீங்கையெண்ணறுமாக்கடோற்ற
முற்றனையொழித்தியென்னுவுரைத்தனன்சாபமேற்கும்
பொற்றொடிமடந்தையஞ்சிப்புலம்புகொண்டவலம்பூண்டாள்.

(இ-ள்.) குற்றம் நின் மேலது ஆக - குற்றம் உனது மேற்றாக, நம்மை நீ கோபம் கொள்வது எற்று என - நம்மை நீ கோபிப்பது யாதென்றுகூறி, இனைய தீங்கை - இக்குற்றத்தை, எண் அறு மாக்கள் தோற்றம் உற்றனை ஒழித்தி என்னு உரைத்தனன் - அனந்த மானிடப்பிறப்படைந்து ஒழிப்பாயென்று சபித்தனன், சாபம் ஏற்கும் பொற்றொடி மடந்தை - சபிக்கப்பட்ட பொன்னுலாகிய வளையலையணிந்த கலைமகள், அஞ்சி புலம்பு கொண்டு அவலம் பூண்டாள் - அச்சமுற்றுப் புலம்பித் துன்பங்கூர்ந்தாள்.

Koviloor Digital Library

தவறு தன்னதாகக் கோபங்கொண்டமையால் அக்குற்றத்தை யொழிக்க அ ன்றமானிடயோனியிற்படுவாயென்பான் இனியதிங்ஙக எண்ணறுமாக்கேடோற் றம் - உற்றவினை யொழித்தியென்று வுரைத்தனன் எனக் கூறினர். (௬)

ஊனிடரகன்றேயுன்னருயிர்த்துணையாவேனிந்த
மாநுடயோனிப்பட்டுமயங்குகோவென்னவண்டு
தேனிடையழுந்திவேதஞ்செப்பும்வெண்கமலச்செல்வி
தானிடரகலநோக்கிச்சதுமுகத்தலைவன்சாற்றும்.

(இ-ள்.) ஊன் இடர் அகன்றேய் - உடம்பால்வருந் துன்பத்தினின்று நீங்கி னேய், உன் ஆர் உயிர் துணை ஆவேன் - உனது அரிய உயிர்த்துணைவியாகிய நான், இந்த மானிட யோனிப் பட்டு மயங்கு கோ என்ன - இந்த மானிடயோனியிற்பட்டு மயங்குவேனோ என்று குறையிரக்க, வண்டு தேன் இடை அழுந்தி வேதம் செப்பும் வெண் கமலச் செல்வி தான் - வண்டுகள் தேனிலழுந்தி வேதகீதம்பாடும் வெண் டாமரைச்செல்வி, இடர் அகல நோக்கி - அவளது துன்பமொழியப் பார்த்தருளி, ச துமுகத்தலைவன் சாற்றும் - நான்முகங்களையுடைய பிரமன் கூறுவான்.

பிறப்பொழிந்தோன் என்பார் ஊனிடரகன்றேய் எனவும், வெண்டாமரை யிலிருந்து வேதம் பயிலுதலால் இடைவிடாது மொய்த்துள்ள வண்டுகளும்பயின்று பாடியவென்பார் வண்டுதேனிடையழுந்தி வேதஞ்செப்பும் எனவுங் கூறினர். (எ)

முகிழ்தருமுலைநின்மெய்யாமுதலெழுத்தைம்பத்தொன்றிற்
றிகழ்தருமாகாராதிஹாகாரமீறுச்செப்பிப்
புகழ்தருநாற்பத்தெட்டுநாற்பத்தெண்புலவராகி
யகழ்தருகடல்சூழ்ஞாலத்தவதரித்திடுவவாக.

(இ-ள்.) முகிழ் தரும் முலை நின் மெய் ஆம் - தாமரையரும்பையொத்த த னத்தையுடைய உனது சரீரமாகிய, முதல் எழுத்து ஐம்பத்தொன்று இல் - முதலெ ழுத்தாகிய உயிர், மெய் என்றும் ஐம்பத்தோரக்கரத்தில், திகழ் தரும் ஆகார ஆதி ஹாகாரம் ஈறு ஆக செப்பி புகழ் தரும் நாற்பத்தெட்டும் - விளங்காநின்ற ஆகாரமு தல் ஹாகாரம் இறுதியாகச் சொல்லப்பட்டுப் பலரும் புகழும் நாற்பத்தெட்டெழுத் தும், நாற்பத்து எண் புலவர் ஆகி - நாற்பத்தெட்டுப் புலவர்களாகி, அகழ் தரு கட ல் சூழ் ஞாலத்து - (சகரரால்) தோண்டப்பட்ட கடல்சூழ்ந்த நிலவுலகத்தில், அவத ரித்திடுவ ஆக - பிறக்கக்கடவன.

ஆலாஸ்யமகாத்மியத்தில் நாற்பத்தெண்புலவரும் அகாரமுதல் ஸகரமீறாகிய நாற்பத்தெட்டெழுத்து எனவும், நாற்பத்தொன்பதாம் எழுத்தாகிய ஹகரம் அவற் றை யியக்கும் சிவவடிவு எனவுங் கூறப்பட்டிருக்கின்றன. (அ)

அந்தத்துவருணமெல்லாமேறிநின்றவற்றவற்றின்
மெய்த்தருதன்மையெய்திவேறுவேறியக்கந்தோன்ற
வுய்த்திடும்அகரத்திற்குமுதன்மையாயொழுகுநாதர்
முத்தமிழாலவாயெம்முதல்வரம்முறையானன்றே.

(இ-ள்.) அத்து வருணம் எல்லாம் - அந்தத்தக்க எழுத்துகள் யாவற்றினும்; ஏறி நின்ற - ஊர்ந்துநின்ற, அவற்று அவற்று இன் மெய் தரு தன்மை எய்தி - அவ் வவ்வெழுத்துகளின் வடிவிற்பிறைய முன்னிற்குந் தன்மையைப்பொருந்தி, வேறு

Koviloor Digital Library

வேறு இயக்கம் தோன்ற உய்த்திடும் அகரத்திற்கும் - வெவ்வேறு ஒலியியக்கந் தோன்றச்செலுத்தும் அகரவுயிர்க்கும், முதன்மை ஆய் ஒழுகு நாதர் - தலைமையாயியலும் இறைவர், முத்தமிழ் ஆலவாய் எம் முதல்வர் - இயலிசைநாடகமென்னு முத்தமிழும் நிலைபெறும் திருவாலவாயி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், அ முறையால் - அவ்வழக்கினால்.

மெய்யெழுத்துகள் அகரத்தோடன்றியியங்கும் ஆற்றலின்மையாலும், இகர முதலிய உயிரெழுத்துகளுள் இகரவுகரம் தத்தமக்குரிய ஒலிமுயற்சிகளோடு அவ் வகரத்தின் ஒலிமுயற்சியாகிய அங்காப்போடு பிறத்தலாலும், ஆகார ஈகார ஊகாரங்கள் அவற்றின் இனம் ஆதலாலும், எகர ஒகர ஐகார ஔகாரங்களுள் எகரம் நாமடங்கல்போல அகரக்கூறும் இகரக்கூறுந் தம்முளொத்து எகரமாகவும், ஒகரம் அகரக்கூறும் உகரக்கூறுந் தம்முளொத்திசைத்து நிற்பதொன்றாதலாலும், ஐகாரம் அகரமும் யகரமும் இகரமும் தம்முளொத்திசைத்து நிற்பதொன்றாதலாலும், ஔகாரம் அகரமும் வகரமும் உகரமுந் தம்முளொத்திசைத்து நிற்பதொனறாதலாலும் ஏறிநின்றவற்றவற்றின் - மெய்த்தகுதன்மையெய்திவேறு வேறியக்கந்தோன்ற-உய்த்திடும் அகரத்திற்கும் எனவும், அகரம்போலத்தான் ஏகனாகியும், பலவுயிர்கடோறும் விரவித்தன்னுருத்தோன்றாது நின்றும், விரவி விகாரமின்றியும் அந்த அகரத்தினுங் கலந்துநிற்றலால் அகரத்திற்கு முதன்மையாய் ஒழுகுநாதர் எனவுங் கூறினார் "அகரவுயிர்போலறிவாகி யெங்கும் - நிகரிலிறைநிற்கும் நிறைந்து" என்றும் ஏதுவால் உணர்க. (௯)

தாமொருபுலவராகித்திருவுருத்தரித்துச்சங்க
மாமணிப்பீடத்தேறிவைகியேநாற்பத்தொன்பா
தாமவராகியுண்ணின்றவரவர்க்கறிவுதோற்றி
யேமுறப்புலமைகாப்பாரென்றனன்கமலப்புத்தேள்.

(இ-ள்.) கமலப்புத்தேள் - தாமரையில் வசிக்கும் பிரமன், தாம் ஒருபுலவர்-ஆகி-சோமசுந்தரக்கடவுள் தாம் ஒருபுலவராய், திருவுருதரித்து - திருவுருவங்கொண்டருளி, மாமணி சங்கபீடத்து ஏறிவைகி - பெரிய இரத்தினங்களழுத்திய சங்கப் பலகையிலேறியிருந்து, நாற்பத்தொன்பது ஆம் அவர் ஆகி - நாற்பத்தொன்பதின்மராவாராகி, உள் உம் நின்று அவர் அவர்க்கு அறிவுதோற்றி - புறத்தினின்றருளியதுபோல அகத்தும் நின்று அந்நாற்பத்தென்மருக்கும் நுண்ணறிவினைப் புலப்படுத்தி, ஏமுற புலமை காப்பார் என்றனன் - அரணாக அவர்கள் புலமைத்திறத்தைக் காத்தருளுவரென்று அநுக்கிரகஞ்செய்தனன்.

கலைமகள் அக்கரரூபியாதலின் அவள் வேண்டுகோளுக்கிரங்கி யவ்வக்கரங்களுக்கு விதித்தமையால் அக்கலைமகள் முன்னிருந்தபடி பிரமனிடத்திருந்தனள் என்பதுதோன்ற அநுக்கிரகஞ்செய்தனன் என்றும். இறந்ததுதழீஇய எச்சவும்மைதொகுத்தல். (௪0)

அக்கரநாற்பத்தெட்டுமவ்வழிவேறுவேறு
மக்களாய்ப்பிறந்துபன்மாண்கலைகளின்வகைமைதேர்ந்து
தொக்கவாரியமுமேனைச்சொற்பதினெட்டுமாய்ந்து
தக்கதென்கலைநுண்டேர்ச்சிப்புலமையிற்றலைமைசார்ந்தார்.

(இ-ள்.) அக்கரம் நாற்பத்தெட்டும் - நாற்பத்தெட்டக்கரங்களும், அவ்வழி வேறு வேறு மக்கள் ஆய் பிறந்து - அன்றே வெவ்வேறு மானுடர்களாய்ப் பிறந்து,

Koviloor Digital Library

பன் மாண் கலைகளின் வகைமை தேர்ந்து - பலவகைப்பட்ட அறம்பொருளின்ப வீடுகளை புணர்த்த நூல்களி னுண்ணிய பொருள்களையு மறத்தெரிந்து, தொக்க ஆரியமும் - வரம்பில்லாத வடகலைக்கடலையும், ஏனை சொல் பதினெட்டும் ஆய்ந்து - அதுவொழிந்த பதினெட்டுப்பாடைகளையும் ஆராய்ந்து, தக்கதென்கலை நுண் தேர்ச்சி புலமையில்-அப்பாடைகளுட்சிறந்த தென்கலைக்கடலின் நுண்ணிய பொருளாராய்ச்சிப் புலமையில், தலைமை சார்ந்தனர் - தலைமைபெற்று விளங்கினார்கள்.

பதினெண்மொழிகளுள் வடமொழியுந் தென்மொழியுஞ் சிறந்தன ஆதலால் தென்கலையென்றமையின் பன்மாண்கலை என்றதை வடகலையென்றும். (௧௧)

கழுமணிவயிரம்வேய்ந்தகலன்பலவன்றிக்கண்டிக்
கொழுமணிக்கலனும்பூணுங்குளிர்நிலாநீற்றுமெய்யர்
வழுவறத்தெரிந்தசெஞ்சொன்மாலையாலன்றியாய்ந்த
செழுமலர்மாலையாலுஞ்சிவார்ச்சனைசெய்யுநீரார்.

(இ-ள்.) கழுமணிவயிரம் வேய்ந்த பலகலன் அன்றி - சாணைபிடித்த மாணிக்கத்தாலும் வயிரத்தாலும் புனைந்த பலவாபரணங்களையுமன்றி, கண்டி கொழு மணிக்கலனும் பூணும் - மகரகண்டிகையையும் அணிந்த, குளிர் நிலா நீறு மெய்யர்-தண்ணிய நிலவுபோன்ற திருநீறு சண்ணித்த மேனியையுடையவராய், வழுவு அற தெரிந்த செஞ்சொல் மாலையால் அன்றி - குற்றமற ஆராய்ந்த செஞ்சொல்லாற்றொடுத்த பாமாலையாலுமன்றி, ஆய்ந்த செழுமலர் மாலையாலும் - ஆராய்ந்த அன்றலர்ந்த மலர்மாலையாலும், சிவார்ச்சனை செய்யும் நீரார்-சிவார்ச்சனைசெய்யுந் தன்மையுடைடயவர்கள்.

ஆகமவிதியால் மலர்மாலையாலும் உழுவலன்பாற் பாமாலையாலும் சிவார்ச்சனைசெய்வோர் என்பார் சிவார்ச்சனைசெய்யு நீரார் என்றார். (௧௨)

புலந்தொறும்போகிப்போகிப்புலமையால்வென்றுவென்று
மலர்ந்ததண்பொருநைநீத்தவளங்கெழுநாட்டில்வந்து
நிலந்தருதிருவினான்றநிறைநிதிச்செழியன்செங்கோ
னலந்தருமதுரைநோக்கிநண்ணுவார்நன்றுமெல்லை.

(இ-ள்.) புலந்தொறும் போகி போகி புலமையால் வென்று வென்று - பலநாடுகள்தோறுஞ்சென்று கல்வித்திறத்தா லங்குள்ள பலரையும் வென்று, மலர்ந்த தண் பொருநை நீத்தம் வளம் கெழு நாட்டில் வந்து-பரந்த தண்ணிய தாமிரபர்ணியின் பிரவாகத்தால் வளமிக்க பாண்டிநாட்டில் வந்து, நிலம் தரு திருவின் ஆன்ற நிறை நிதி செழியன் - நிலவளந்தருஞ் செல்வத்தால் முட்டின்றி நிறைந்த பாண்டியனுடைய, செங்கோல் நலம் தரு மதுரை நோக்கி நண்ணுவார் - மநுநூல்வழி நடாத்தும் செங்கோற் செல்வமிக்க மதுரையைநோக்கி வருவாராயினார்கள், நன்றும் எல்லை - வருங்காலையில்.

பிறநாடுகளிற்சென்று புலவரை வென்றமைபோலப் பாண்டிநாட்டினும் புலவர்களை வெல்லச்சென்றனர் என்பார் நலந்தரு மதுரைநோக்கி நண்ணுவாரெனவும், குடிகளிறுக்கும் இறையன்றி யேனைநாட்டரசர்களும் திறையளத்தலால் முட்டின்றி நிறைந்ததென்பார் நிலந்தருதிருவினான்ற நிறைநிதி எனவும், கொடுங்கோல் குடிகட்குத் தீராவருத்தமயதென்பார் செங்கோல் நலந்தரு மதுரையெனவுங்கூறினார். "கொடுங்கோன்மறமன்னர் கீழ்வாழ்தலின்று" எனவரும் ஏதுவால் உணர்க. (௧௩)

Koviloor Digital Library

பற்பலகலைமாண்டேர்ச்சிப்பனுவலின்பயனாய்நின்ற
வற்புதமூர்த்தியெந்தையாலவாயடிகளங்கோர்
கற்பமைகேள்விசான்றகல்வியின்செல்வராகிச்
சொற்பதங்கடந்தபாதமிருநிலந்தோயவந்தார்.

(இ-ள்.) பற்பல கலைமாண் தேர்ச்சி பனுவலின் பயன் ஆய் நின்ற - பலவகைப்பட்ட நூல்களின் நுண்ணிய பொருளாராய்ச்சிக்குக் கருவிகளாகிய இலக்கண முதலிய நூலின்பொருளாய்நின்ற, அற்புதமூர்த்தி-ஞானமே திருமேனியாகக்கொண்டவரும், எந்தை ஆலவாய் அடிகள் - எமது பிதாவும் ஆகிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், அங்கு ஓர் கற்பு அமை கேள்வி சான்ற கல்வியின் செல்வர் ஆகி - அவ்விடத்து ஒப்பில்லாத பயிற்சியமைந்த நூற்கேள்வி நிறைந்த கல்விச்செல்வமுடையவராய், சொற்பதம் கடந்த பாதம் இருநிலம் தோயவந்தார் - சொல்லளவையைக்கடந்த தமது திருவடிகளைப் பெரிய நிலமகள் சூடவந்தருளினார்.

ஆகமவளவைக்கெட்டாத திருவடி என்பார் சொற்பதங்கடந்தபாதம் என்றார்.

அவ்விடைவருகின்றாரைநோக்கிநீராரைநீவி
ரெவ்விடைநின்றும்போதுகின்றனிரென்னவன்னார்
வெவ்விடையனையீர்யாங்கள்விஞ்சையரடைந்தோர்பாவம்
வெளவிடுபொருநைநாட்டின்வருகின்றேமென்னலோடும்.

(இ-ள்.) அ இடை வருகின்றாரை நோக்கி - அவ்விடத்து வரும் புலவர்களைப்பார்த்து, நீர் ஆர் - நீங்கள்யார், நீவிர் எ இடை நின்றும் போதுகின்றனிர். என்ன - நீங்களெந்த இடத்தினின்றும் வருகின்றீர்களென்று வினவ, அன்னார் - அப்புலவர்கள், வெம் விடை அனையீர் - வெய்ய காளையையொத்த புலவீர், யாங்கள் விஞ்சையர் - நாங்கள் புலவர்கள், அடைந்தோர் பாவம் வெளவிடு பொருநை நாட்டின் வருகின்றேம் என்ன லோடும் - அடைந்தவர் பாவத்தைப்போக்கும் தாமிரபர்ணி சூழ்ந்த பாண்டிநாட்டினைநோக்கி வருகின்றேமென்றுகூற. (௧௫)

தனிவருபுலவர்நீவிர்தண்டமிழாலவாயெங்
கனிவருகருணைமூர்த்திகனைகழலிறைஞ்சல்வேண்டு
மினிவருகென்னநீரோயெங்களுக்களவில்கோடி
துனிவருவினைகடீர்க்குஞ்சுந்தரக்கடவுளென்றார்.

(இ-ள்.) தனி வரு புலவர் - தனியேவந்தருளிய சோமசுந்தரக்கடவுளாகிய பெரும்புலவர், நீவிர் - நீங்கள், தண் தமிழ் ஆலவாய் எம் கனி வரு கருணை மூர்த்தி கனை கழல் இறைஞ்சல் வேண்டும் - தண்ணிய தமிழ்வழங்கும் திருவாலவாயிலெழுந்தருளிய எம்பாற்கனிந்த கிருபாமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுளின் ஒலிக்கும் வீரகண்டைகட்டிய திருவடிகளை வணங்கல்வேண்டும், இனி வருக என்ன - இப்பொழுதே வரக்கடவீரென்று திருவாய்மலர்ந்தருள, நீரோ - தேவரீரோ, எங்களுக்கு அளவு இல் கோடி துனி வரு வினைகள் தீர்க்கும் சுந்தரக்கடவுள் என்றார் - எங்களுக்கு அளவில்லாத பிறப்புகள்தோறும் வந்த எல்லையில்லாத துன்பத்தைத்தரும் இருவினைப்பந்தங்களையும் ஒழிக்கும் சோமசுந்தரக்கடவுளென்று கூறினார்கள்.

வந்த புலவர்களை யெதிர் தழுவித்தமது தெரிசனத்துக்கு அழைத்தனர் ஆதலால் நீரோ யெங்களுக்களவில் கோடிதனிவரு வினைகடீர்க்குஞ் சுந்தரக்கடவுள் என்றார் எனக் கூறினார். (௧௬)

Koviloor Digital Library

மறையினாறொழுகும்பன்மாண்கலைகள்போன்மாண்டகேள்வித்
துறையினாறொழுகுஞ்சான்றோர்சூழமீண்டேகிக்கூடற்
கறையினார்கண்டத்தாரைப்பணிவித்துக்காந்தாரொற்றைப்
பிறையினார்மகுடந்தோற்றாதறிஞராய்வந்தபெம்மான்.

(இ-ள்.) ஒற்றை பிறையின் ஆர் மகுடம் தோற்றாது அறிஞர் ஆய் வந்த பெம்மான்-ஒரிளஞ்சந்திரனையணிந்த சடாமகுடத்தை மறைத்துப் பெரும்புலவராய் வந்த சோமசுந்தரக்கடவுள், மறையின் ஆறு ஒழுகும் பல் மாண் கலைகள் போல் - (தாங்கற்ற) வேதத்தின் வழிப்பட்டொழுகும் பலவகைப்பட்ட நன்னியபொருளமைந்த நூல்கள்போல, மாண்ட கேள்வி துறையின் ஆறு ஒழுகும் சான்றோர் சூழ-மாட்சிமையமைந்த அடிப்பட்ட நற்கேள்வித் துறையின்வழியே செல்லும் அறிஞர் புடைசூழ, மீண்டு ஏகி - திரும்பிச்சென்று, கூடல் கறையின் ஆர் கண்டத்தாரை பணிவித்து காந்தர் - நான்மாடக்கூடலி லெழுந்தருளிய விடமமைந்த ஸ்ரீகண்டத்தையுடைய தம்மை வணங்கச்செய்து மறைந்தருளினார்.

வேதங்களின் சடங்கமாயுள்ள நூல்களென்பார் மறையினாறொழுகும் பன்மாண் கலைகள் எனவும், கற்றறிந்த நூற்பொருள்களை வலியுறுத்துவது சான்றோர் வாய்ச்சொல் என்பார் கேள்வித்துறையெனவுங் கூறினார். சடங்கம் ஆவன சிட்சை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிஷம், கற்பம். (௧௭)

விம்மிதமடைந்துசான்றோர்விண்ணிழிவிமானமேய
செம்மலைவேறுவேறுசெய்யுளாற்பரவியேத்திக்
கைம்மலையுரியினார்தந்தாடொழுதிறைஞ்சிமீண்டு
கொய்ம்மலர்வாகைச்செவ்வேற்செழியனைக்குறுகிக்கண்டார்.

(இ-ள்.) விம்மிதம் அடைந்து-வியப்பெய்தி, சான்றோர்-அறிவால் நிறைந்த நாற்பத்தெண்மரும், விண் இழி விமானம் மேய செம்மலை - விண்ணுலகினின்று மிழிந்த விமானத்திலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை, வேறு வேறு செய்யுள் ஆல் பரவி ஏத்தி - வெவ்வேறு செய்யுள்களாற்றொடுத்த பாமாலைசாத்தித் துதித்து வணங்கி, கை மலை உரியினார் தம் தாள் தொழுது இறைஞ்சி மீண்டு - யானைத்தோலைப் போர்த்தருளிய அச்சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, மீண்டு-திரும்பி, கொய் வாகை மலர் செம் வேல் - கொய்யும் வாகைமலர்மாலை சூடிய உதிரந்தோய்ந்த வேலையேந்திய, செழியனை குறுகி கண்டார்-வங்கிய சேகரபாண்டியனையடைந்து கண்டார்கள்.

வாகைமலர்மாலை என்றது வெற்றிமாலையை. தமக்குத் தெரிசனங்காட்டி மறைந்தருளினவர் சோமசுந்தரக்கடவுளே யெனத்தேர்ந்து பரவசம் அடைந்தனர் என்பார் விம்மிதமடைந்து எனவும், அவரது திருவருளாற்பொங்கியெழுந்த அன்பே வழிந்ததென்பார் வேறு வேறு செய்யுளாற் பரவியேத்தியெனவுங் கூறினார். (௧௮)

மறமலிநேமிச்செங்கோன்மன்னவன்வந்தசான்றோ
ரறமலிகேள்விநோக்கியவைக்களக்கிழமைநோக்கித்
திறமலியொழுக்கநோக்கிச்சிறியர்போலுமென்று
நிறைமலியுவகைபூத்தநெஞ்சினனிதனைச்செய்தான்.

(இ-ள்.) மறம்மலி நேமி செங்கோல் மன்னவன் - வெற்றிமிக்க சக்கரத்தையும் செங்கோலையுமுடைய வங்கிய சேகரன், வந்த சான்றோர் அறம்மலி கேள்வி

Koviloor Digital Library

நோக்கி - தன்பால்வந்த நாற்பத்தெண்மருடைய, அறம் மலி கேள்வி நோக்கி-அறமிக்க நூற்கேள்வியையும் உணர்ந்து, அவை களம் கிழமை நோக்கி - கல்விச்சபைக்குரிய உரிமைத்திறத்தையும் பார்த்து, திறம்மலி ஒழுக்கம் நோக்கி - பாகுபாடமைந்த கல்வித்திறப்பாட்டிற்குரிய ஒழுக்கத்தையுந்தேர்ந்து, சீரியர்போலும் என்னு - இவர்களைத்திறத்தினுங் குன்றுதவர் என்று கருதி, நிறை மலி உவகை பூத்த நெஞ்சினன் - நிறைந்து மலிந்த மகிழ்ச்சி கூர்ந்த மனமுடைய அப்பாண்டியன், இதனை சொன்னான் - இதனைக் கூறுவானாயினான்.

நாற்பத்தெண்மர் நூற்கேள்வி, கேட்போர்க்கு மறுமைப்பயனாகிய புண்ணியத்தையுறுத்தும் என்பார் அறமலிகேள்வியெனவும், நல்லவை நிறையவை என்பார் வாளா அவைக்களம் எனவும், அவ்வவைக்களன் அவர்களை யின்றியமையாவென்பார் கிழமைநோக்கி யெனவும், அருளும் தெய்வவழிபாடும் மேம்பாடும் தேர்ச்சியும் கட்டுரைவன்மையும் முற்றவுடையார் என்பார் திறமலியொழுக்கம் எனவுங்கூறினார் நல்லவை "புகழுந்தருமநெறிநின்றோர்பொய்காமம்-இகழுஞ்சினஞ்செற்றமில்லோர்-நிகழ்கலைகள் - எல்லாமுணர்ந்தோரிருந்தவிடமன்றோ - நல்லாரவைக்குநலன், நிறையவை " நலனடக்கஞ்செம்மை நடுவுநிலைநான்கும் - குலனென்றறிவுடையோர்கோதில் - புலனில்லோர் - சென்றுமொழிந்தனவுங் கேட்டோர்செறிந்தவிடம் - அன்றோநிறைந்தவவை" எனவருஞ் சங்கச்செய்யுள்களால் உணர்க. (௧௯)

திங்களங்கண்ணிவேய்ந்தசெக்கரஞ்சடிலநாதன்
மங்கலம்பெருகுகோயில்வடகுடபுலத்தின்மாடோர்
சங்கமண்டபமுண்டாக்கித்தகைமைசால்சிறப்புநல்கி
யங்கமர்ந்திருத்திரென்னவிருத்தினனறிஞர்தம்மை

(இ-ள்.) திங்கள் அம் கண்ணி வேய்ந்த செக்கர் அம் சடிலம் நாதன் - சந்திரனை அழகிய கண்ணிமாலையாக அணிந்த செவந்த சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள், மங்கலம் பெருகு கோயில் வடகுட புலத்தின்மாடு - மங்கலமிக்க திருக்கோயிலின் வடமேற்றிசையின் பக்கத்தில், ஓர் சங்கம் மண்டபம் உண்டாக்கி - ஒரு சங்கமண்டபம் கட்டுவித்து, தகைமைசால் சிறப்பு நல்கி - அவர்கள் தகுதிக்கு அமைந்த வரிசைகள் தந்து, அங்கு அமர்ந்து இருத்திர் என்ன - அவ்விடத்தில் விரும்பி வசியுங்களென்று, அறிஞர் தம்மை இருத்தினன் - நாற்பத்தெண்மரையும் இருக்கும்படி செய்தனன்.

அமர்ந்து விரும்பியென்றது " அகனமர்ந்து செய்யாளுறையும் " என்பதனால் உணர்க. (௨௦)

வண்டமிழ்நாவினோர்க்குமன்னவன்வரிசைநல்கக்
கண்டுளம்புழுங்கிமுன்னைப்புலவரக்கழகத்தோரை
மண்டினர்மூண்டுமூண்டுவாதுசெய்தாற்றன்முட்டிப்
பண்டையபுலனுந்தோற்றுப்படருழந்தெய்த்துப்போனார்.

(இ-ள்.) வண்மை தமிழ் நாவினோர்க்கு - வளவிய தமிழ்கொழிக்குஞ் செந்நாப்புலவர்களாகிய நாற்பத்தெண்மர்க்கும், மன்னவன் வரிசை நல்க கண்டு - வங்கிய சேகரபாண்டியன் வரிசைகொடுக்கக்கண்டு, உளம்புழுங்கி - மனங்கொதித்து, முன்னை புலவர்-பண்டு அந்நாட்டுள்ள புலவர்கள், அ கழகத்தோரை-அச்சங்கப்பலகையிலுள்ள புலவர்களை, மூண்டு மூண்டு மண்டினர்-ஒருசேரத்திரண்டு கூடிவந்து,

Koviloor Digital Library

வாதுசெய்த ஆற்றல் முட்டி - வாதஞ்செய்த தமது ஆற்றலிழந்து, பண்டைய புலனுந் தோற்று - முன்றுள்ள தமது அறிவுமிழந்து, படர் உழந்து எய்த்து போனார்- துன்பத்தால் வருந்தியிளைத்துப் புறங்காட்டிப்போயினார்.

சங்கப்புலவர்களால் தாங்கற்ற கல்வி தவறுபாடுற்றமையால் பண்டைய புலனுந்தோற்று என்றார். மூண்டு மூண்டு மிகுதிப்பொருளில்வந்த அடுக்குத்தொடர்.()

இனையர்போல்வந்துவந்துமறுபுலத்திருக்குங்கேள்வி
வினைஞருமதமேற்கொண்டுவினாய்வினாய்வாதஞ்செய்து
மனவலியினைப்பவென்றுவைகுவோரொன்றைவேண்டிப்
புனையிழைபாகநீங்காப்புலவர்முனண்ணினாரே.

(இ-ள்.) இனையர்போல் - இந்நாட்டுப்புலவர்கள்போல, மறுபுலத்து இருக்கும் கேள்வி வினைஞரும் வந்துவந்து - மறுதேயத்துள்ள நூற்கேள்வியில்வல்ல புலவர்களும் வந்து, மதம் மேற்கொண்டு வினாய் வினாய் வாதம் செய்து - தமது கொள்கையை மேற்கொண்டு வினவி வாதித்து, மனம் வலி இனைப்ப வென்று-மனவூக்கஞ் சோர அவர்களையும் வென்று, வைகுவோர் - வைகுஞ் சங்கப்புலவர்கள், ஒன்றை வேண்டி-ஒருபொருளைக்கருதி, புனையிழை பாகம் நீங்காத புலவர்முன் நண்ணினார்- உமாதேவியாரை யிடப்பாகத்தினின்றும் நீங்காத சோமசுந்தரக்கடவுளின் சந்நிதிமுன் அடைந்தனர்கள்.

மதமேற்கோடலாவது தாட்கொண்டதை விடாமை. ஒன்று என்னும் வரையறைப்பண்பு வரும் புலவர் சிறப்புக்கருவிமேல் நிற்றலால் பண்பாகுபெயர் (௨௨)

முந்துநூன்மொழிந்தார்தம்மைமுறைமையால்வணங்கியெம்மை
வந்துவந்தெவரும்வாதஞ்செய்கின்றார்வரிசையாக
வந்தமில்புலமைதூக்கியளப்பதாயெம்மனோர்க்குத்
தந்தருள்செய்திசங்கப்பலகையொன்றென்றுதாழ்ந்தார்.

(இ-ள்.) முந்து நூல் மொழிந்தார் தம்மை முறைமையால் வணங்கி - முதநூல் மொழிந்தருளிய சோமசுந்தரக்கடவுளை ஆகமவிதிப்படி வணங்கி, வரிசை ஆக எவரும் வந்து வந்து எம்மை வாதஞ் செய்கின்றார்-வரிசைப்பட எந்நாட்டிலுள்ள புலவர்களும் இடையறாதுவந்து எம்மோடு வாதிக்கின்றனர்கள், அந்தம் இல்புலமை தூக்கி அளப்பது ஆய்-(வரும்புலவர்களது) அளவில்லாத புலமைத்திறத்தைத் தூக்கியளக்குங் கருவியாக, எம்மனோர்க்கு சங்கப்பலகை ஒன்று தந்தருள் செய்தி என்று - எம்போலியர்க்குச் சங்கப்பலகையொன்று தந்தருளாயென்று, தாழ்ந்தார் - குறையிரந்து வணங்கினார்கள். (௨௩)

பாடியபாணற்கன்றுவலியவேபலகையிட்டார்
பாடியபுலவர்வேண்டிற்பலகைதந்தருளார்கொல்லோ
பாடியபுலவராகும்படியொருபடிவங்கொண்டு
பாடியபுலவர்காணத்தோன்றினார்பலகையோடும்.

(இ-ள்.) அன்று பாடிய பாணற்கு - அக்காலையில்பாடிய பாணபத்திரர்க்கு, வலிய பலகை யிட்டார் - பரிவுகூர்ந்து வலியப் பலகை தந்தருளிய சோமசுந்தரக்கடவுள், பாடிய புலவர் வேண்டில் - தம்மைப்பாடும் புலவர்கள் குறையிரந்து வேண்டுவாராயில், பலகை தந்தருளாரோ - பலகை கொடுத்தருளமாட்டாரோ, பாடிய புலவர் ஆகும்படி ஒரு படிவம் கொண்டு - பாடும் புலவராம் வண்ணம் ஒரு திரு

Koviloor Digital Library

வுருக்கொண்டு, பாடிய புலவர் காண பலகை ஒடும் தோன்றினர் - தம்மைப்பாடும் புலவர்கள் தரிசிக்கப் பலகையோடுந் தோன்றியருளினர்.

அவர் குறையிரக்காதிருக்கவே பலகைதந்தருளினர் என்பார் வலியவே பலகைதந்தார் என்றார். (௨௪)

சதுரமாயளவிரண்டுசாணதிப்பலகையம்ம
மதியினும்வாலிதாகுமந்திரவலியதாகு
முதியநும்போல்வார்க்கெல்லாமுழம்வளர்ந்திருக்கைநல்கு
மிதுநுமக்களவுகோலாயிருக்குமென்றியம்பியீந்தார்.

(இ-ள்.) சதுரம் ஆய் அளவு இரண்டு சாணது இ பலகை - சதுரவடிவாய் நீட்டலளவு இரண்டுசாணுள்ளதாகிய இந்தப்பலகை, நும் மதியின் வாலிது ஆகும் உங்கள் நுண்ணறிவைப்போலப் புனிதமுள்ளதாகும், மந்திர வலியது ஆகும்-மந்திர ஆற்றலுமுள்ளதாம், முதிய நும் போல் வார்க்கு எல்லாம் - அறிவின்மூத்த வுங்களை யொப்பவர்களுக்கெல்லாம், முழம் வளர்ந்து-முழநீளம்வளர்ந்து, இருக்கை நல்கும்- இருக்க இடந்தரும், இது நுமக்கு அளவு கோல் ஆய் இருக்கும் என்று இயம்பி ஈந்தார் - இப்பலகை பிறர்கல்விப் பரப்பையளத்தற்கு ஓரளவு கோலாக இருக்குமென்று சொல்லித் தந்தருளினர்.

குற்றமிகந்ததென்பார் மதியினும் வாலிதாகும் எனவும், அப்புலவர்கள் போல்வார்க்கு அன்றன்று தன்னினின்று முழம்வளர்ந்திடங் கொடுத்தலால் மந்திரவலியதாகும் எனவுங் கூறினர். (௨௫)

நாமகளுருவாய்வந்தநாவலர்தமக்குவெள்ளைத்
தாமரையமளிதன்னைப்பலகையாத்தருவதென்னக்
காமனைமுனிந்தார்நல்கக்கைக்கொடுகளிறுதாங்கு
மாமணிக்கோயிறன்னைவளைந்துதங்கழகம்புக்கார்.

(இ-ள்.) நாமகள் உரு ஆய்வந்த நாவலர் தமக்கு - கலைமகள் வடிவாய்வந்த சங்கப்புலவர்களுக்கு, வெள்ளைத்தாமரை அமளி தன்னை பலகை ஆக தருவது என்ன - வெண்டாமரையாசனத்தை, ஓர்பலகை வடிவாகவமைத்துத் தருதல்போல, காமனை முனிந்தார் நல்க - மன்மதனை முனிந்தெரித்த பெருமானர் தந்தருள, கைக்கொடு - தமது கையாலேற்று, களிறு தாங்கும் மாமணி கோயில் தன்னை வளைந்து - அஷ்டகசங்களாற் சுமக்கப்பட்ட பருத்த இரத்தினங்களழுத்திய திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்து, தம் கழகம் புக்கார் - தமதுசாலையிற் சென்றார்கள்.

நாற்பத்தெண்மருங் கலைமகள் திருவுருத்திரிந்தவர் ஆதலால் கலைமகள் வசிக்கும் வெண்டாமரையும் ஓர்பலகையாக வுருத்திரிந்ததென்பார் வெள்ளைத்தாமரையமளிதன்னைப் பலகையாத்தருவதென்ன எனக்கூறினர். (௨௬)

நாறுபூந்தாமநாற்றிநறும்பனிதோய்த்தசாந்தச்
சேறுவண்மலர்வண்டுசூசெழும்புகைதீபமாதி
வேறுபல்வகையாற்பூசைவினைமுடித்திறைஞ்சிக்கீர
னேறினன்கபிலனேடுபரணனுமேறினனே.

(இ-ள்.) நாறு பூதாமம் நாற்றி - வாசங்கமழு மலர்மாலை தொங்கத்தொடுத்து, நறும்பனி தோய்த்த சாந்தச்சேறு - நறுமணங்கமழும் பனிநீரிற்கலந்த வெஞ்ச

ந்தனைச்சுழும்பும், வெள் மலர் வெள் துகில் செழும்புகை தீபம் ஆதி வேறு பல்வகை ஆல் பூசனை வினை முடித்து - வெள்ளிய மலரும் வெள்ளாடையும் தூபமுந் தீபமு முதலிய பல வேறுவகை உபசாரங்களால் பூசனைத்தொழிலைமுடித்து, இறைஞ்சி-வணங்கி, கீரன் ஏறினன்-நக்கீரர் முன்னர் ஏறினர், கபிலன் ஒடு பரணன் உம் ஏறினன்-கபிலரோடு பரணரும் பின்னர் ஏறினர்.

சங்கமண்டபத்தைப் புனைந்தனர் என்பார் நாறுபூந்தாம நாற்றி எனவும், ஆவாகனமுதலிய சோடச உபசாரங்களென்பார் செழும்புகை தீபமாதி வேறு பல்வகையாற் பூசைவினை முடித்து எனவும், அந்நாற்பத்தெண்மருள் நக்கீரர் முதற்புலவர் என்பார் கீரன் ஏறினன் எனவுங்கூறினர். (உஎ)

இருங்கலைவல்லோரெல்லாமிம்முறையேறியேறி
யொருங்கினிதிருந்தார்யார்க்குமொத்திடங்கொடுத்துநாதன்
றருஞ்சிறுபலகையொன்றேதன்றுணைசெய்வோர்க்கெல்லாஞ்
சுருங்கிநின்றகலங்காட்டித்தோன்றுநூல்போன்றதன்றே.

(இ-ள்.) இருமை கலை வல்லார் எல்லாம் இ முறை ஒருங்கு ஏறி ஏறி - பெரிய நூல்கள்வல்ல ஏனைப்புலவர்களெல்லாம் இம்முறையாக ஒருசேர ஏறியேறி, நாதன் தரும் சிறு பலகை ஒன்று ஏ - சோமசுந்தரக்கடவுள் தந்தருளிய சிறிய பலகையொன்றிலே, இனிது இருந்தார்-தாம் மகிழ்கூர்ந்திருந்தார்கள், யார்க்கு உம் ஒத்து இடம் கொடுத்து-நாற்பத்தெண்மருக்கும் ஒக்கஇடங்கொடுத்து, தன் உரைசெய்வோர்க்கு - தன்னுளடங்கிய பொருளை விரித்துரை கூறுவோர்க்கு, சுருங்கி நின்று-எழுத்துகள் சுருங்கி நின்று, அகலம் காட்டி தோன்றும் நூல் போன்றது - பொருள் விரிக்குங்கால் அவரவர் நுண்ணறிவிற்கமைப் பொருள் விரிந்து விளங்கும் உத்தம காவியத்தை யொத்திருந்தது.

இரண்டு சாணளவுள்ளதாதலால் அளவிற்சிறிய பலகையென்பார் சிறுபலகையெனவும், நூல்வல்லோர் பலருள் ஒவ்வொருவருக்கும் தன்னளவு நீண்டு இடங்கொடுத்து நிற்றலால் சில எழுத்துகளாலாக்கப்பட்டு மதிநுட்பமுடைய பலர்க்கும் அவரவர் நுண்ணறிவிற்கமையப் பொருள் விரிந்து விளங்கும் உத்தமகாப்பியத்தை யொக்கும் என்பார் தன்றுணைசெய்வோர்க்கெல்லாம் சுருங்கிநின்றகலங்காட்டித் தோன்று நூல்போன்றது எனவுங்கூறினர். (உஅ)

மேதகுசான்றோர்நூலின்வினைபொருள்விளங்கத்தம்மி
லேதுவுமெடுத்துக்காட்டுமெழுவகைமதமுங்கூறும்
போதவைதெரிந்தபிள்ளைபூவையேபுறம்புபோந்து
வாதுசெய்வார்கள்வந்தான்மறுத்துநேர்நிறுத்துமன்றே.

(இ-ள்.) மேதகு சான்றோர் - மேன்மைமிக்க நாற்பத்தெண்மரும், நூலின் வினை பொருள் விளங்க - தாம் இயற்றிய நூலுள் ஆயுந்தோறும் வினையும் நுண்பொருள் விளங்க, தம் இல் - தம்முள், ஏது உம் எடுத்துக்காட்டும் எழுவகை மதமும் கூறும்போது - காரணமும் உதாரணமும் எழுவகைமதங்களும் ஆகிய இவைகளை விதந்து கூறும்பொழுது, அவை தெரிந்த கிள்ளை பூவை ஏ-அவைகளை ஐயமறத்தெரிந்து பயின்ற கிளிகளும் நாகணவாய்ப்புள்ளுமே, புறம்புபோந்து - புறத்திற்சென்று, வாது செய்வார்கள் வந்தால் - வாதிப்பவர் வரின், மறுத்து நேர் நிறுத்தும் - அவர்கள் மதத்தை மறுத்துத் தமது மதத்தையே நாட்டும்.

Koviloor Digital Library

எது ஆவன அதிகாரம் அவாய்நிலை முதலியன. எடுத்துக்காட்டு தான் சொல்லும் இலக்கணத்துக்கு இலக்கியம் எடுத்துக்காட்டல். எழுவகைமதங்களாவன உடன்படல், மறுத்தல், பிறர் தம்மதமேற்கொண்டு களைதல், தா அனுட்டித் தனது நிறுப்பு, இருவர் மாறுகோளொருதலை துணிதல், பிறர் நூற்குற்றங்காட்டல், பிறிதொடுபடான்றன் மதங்கொளல். தாம் கூறும் நூற்பொருளினிது விளங்குதற்கு இவை காரணம் என்பார் ஏதுவுமெடுத்துக்காட்டு மெழுவகைமதமுங் கூறும்போது எனவும், இவற்றைக்கேட்ட கல்லாரும் கற்றறிவுடையராவார் என்பார். அவை தெளிந்த கிள்ளைபூவையே புறம்புபோந்து - வாதுசெய்வார்கள் வந்தால் மறுத்துநேர் நிறுத்தும் எனவுங்கூறினர். (௨௯)

கலிவிருத்தம்.

ஆயவாறெண்புலவருமாய்ந்துணர்
பாயகேள்விப்பயன்பெறமாட்சியாற்
றூயபாட்டுெதாடங்கினர்செய்துகொண்
டேயவாறிருந்தாரந்தவெல்லைவாய்.

(இ-ள்.) ஆய ஆறெண் புலவரும்-கல்விக்கேள்வியின் மிக்க நாற்பத்தெண்மரும், ஆய்ந்து உணர்-பலநூல்களையும் ஆராய்ந்துணர்தலால், பாய கேள்வி பயன்பெற-பரந்த நூற்கேள்வியின் பயனைப் பயில்வோரடைய, மாட்சி ஆல் தூய பாடல் தொடங்கினர் செய்துகொண்டு ஏய ஆறு இருந்தார் - தமது நுண்ணறிவால் களங்கமில்லாத செய்யுள்களைத் தொடங்கிச்செய்து இச்சைப்படி யிருந்தனர்கள், அந்த எல்லை வாய் - அந்த அமையத்தில்.

ஒருவர் வசப்பட்டொழுகுதலிலர் என்பார் ஏயவாறிருந்தார் என்றார். (௩௦)

பலருஞ்செய்தபனுவலுமாண்பொருண்
மலருஞ்செல்வமுஞ்சொல்லின்வளமையுங்
குலவுஞ்செய்யுட்குறிப்புமொத்தொன்றியே
தலைமயங்கிக்கிடந்தவத்தன்மையால்.

(இ-ள்.) பலரும் செய்த பனுவலும் - நாற்பத்தெண்மருஞ்செய்த நூல்கள் யாவும், மாண் பொருள் மலரும் செல்வமும் - உயிர்க்குறுதிதரும் பொருட்சுவையாலும், சொல்லின் வளமையும் - சொற்சுவையாலும், குலவும் செய்யுள் குறிப்பும் - விளங்கும் அச்செய்யுள்களிற்போதரும் குறிப்புகளாலும், ஒத்து ஒன்றி-தம்முளொத்துப் பொருந்தியிருத்தலால், தலைமயங்கி கிடந்த - பாகுபாடு தெரியாது தலைமயக்கிக்கிடந்தன, அ தன்மையால் - அப்பெற்றியினால்.

குறிப்பாய்ப் பொருள்தந்து நிற்றல் உத்தமகாப்பியத்தின் இலக்கணம் ஆதலால் செய்யுட்குறிப்பும் எனவும், தம்முள் ஒருநிகராயுள்ள புலவர்களாதலால் ஒத்தொன்றியெனவுங்கூறினர். (௩௧)

வேறுபாட்டியாதுவியந்துநீர்
கூறுபாட்டிதுவென்றுங்கோதிலென்
றேறுபாட்டிதுவென்றுஞ்செஞ்செவே
மாறுபாடுகொண்டார்சங்கவாணரே.

(இ-ள்.) வேறுபாடு அறியாது - வேறுபாடுணராமல், வியந்து - தம்முள் அதிசயங்கூர்ந்து, இது நீர் கூறு பாடல் என்றும் - இச்செய்யுள் நீர் பாடிய செய்யுளெ

ன்றும், இத கோது இல் என் தேறு பாடல் என்றும் - இச்செய்யுள் குற்றமில்லாத் எனத் தேர்ச்சியலமைந்த செய்யுளெனவும், சங்கவாணர்-சங்கப்புலவர்கள், செஞ் செவே மாறுபாடு கொண்டார்-நேரே யொருவருக்கொருவர் பகைமைகொண்டனர்.

செய்யுள்கள் வேற்றுமையின்றி ஒருதன்மையவாயிருத்தலால் புலவர்கள் தம்முட்கூடி ஒருவர் இயற்றிய செய்யுளைத் தமது செய்யுளாக ஒவ்வொருவரும் பிணங்கினராதலால் செஞ்செவே மாறுகொண்டார் என்றார். (௩௨)

மருளுமாறுமயக்கறவான்பொருட்
டெருளுமாறுஞ்செயவல்லகள்வர்சொற்
பொருளுமாமதுரேசர்புலவர்மு
னருளுநாவலராய்வந்துதோன்றினர்.

(இ-ள்.) மருளும் ஆறும் - (ஒன்றனையொன்றாக) மயங்கும் வண்ணமும், மயக்கு அற-அம்மயக்கமற, வான் பொருள் தெளியும் ஆறும்-அந்தப் பெரிய பொருளைத் தெளியும் வண்ணமும், செயவல்ல கள்வர்-செய்யவல்ல கள்வரும், சொல்லும் பொருளும் ஆம் மதுரேசர் - சொல்லும் பொருளுமாகிய சோமசுந்தரக்கடவுள், புலவர் முன்-மாறுபட்ட அச்சங்கப்புலவர்கள் முன், அருளும் நாவலர் ஆய்வந்து தோன்றினர்-அருள் செய்யும் பெரும்புலமைத் திருவுருக்கொண்டுவந்து தோன்றினர்.

இருவினைப்பயன்களை யான்மாக்களுக்குத் தனது திருவருளாலூட்டுமாறு அவ்வான்மாக்களோடு விரவியுடனிற்றலால் மருளுமாறுந் தெருளுமாறுஞ் செயவல்ல கள்வர் எனவும், படிகம்போலத் தனதுசத்தியின் பேதமெல்லாம் தானாய்நிற்றலால் சொற்பொருளுமா மதுரேசர் எனவுங் கூறினர். "உலகுடல் கரணங்காலமுறுபலநியதிசெய்தி - பலவினைகொண்டு கன்மம் பண்ணுவதன்பதானால்-நிலவிடாதிவைதாஞ்சென்று நீங்கியுயிர் நிறுத்திக்கொள்ளா - தலமிலாவறிவனூணை யணைத்திடுமருளினாலே" எனவும் "ஒன்றெனமறைகளெல்லா முரைத்திடவுயிர்களொன்றி - நின்றவனென்றுபன்மை நிகழ்த்தவதென்னையென்னின் - அன்றவைபதிதானொன்றென்றறையுமக்காரக்கடோறும் - சென்றிடுமகரம்போல நின்றனன் சிவனுஞ்சேர்ந்தே" எனவும் "பொன்மைநிலாதிவன்னம்பொருந்திடப் பளிங்கவற்றின்-தன்மையாய்நிற்குமாபோற் சத்திதன்பேதமெல்லாம் -நின்மலன்றானாய்த்தோன்றி நிலைமையொன்றுமெய்திடான்" எனவரும் ஏதுக்களால் உணர்க. (௩௩)

வந்தநாவலர்வந்திக்குநாவலர்
சிந்தையாகுலஞ்செய்யமயக்குறும்
பந்தயாப்பைக்கொணர்கெனப்பாவல
ரெந்தையிங்கிவையென்றுமுன்னிட்டனர்.

(இ-ள்.) வந்த நாவலர் - வந்தருளிய பெரும்புலவராகிய சோமசுந்தரக்கடவுள், வந்திக்கும் நாவலர் சிந்தை ஆகுலம் செய்ய - தம்மைவணங்கும் புலவர்களுடைய மனம்வருந்த, மயக்குறும் பந்தம் யாப்பை கொணர்க என - மயக்கும் தளையமைந்த செய்யுளைக்கொண்டு வரக்கடவீரென்று பணிக்க, பாவலர் - அந்தப்புலவர்கள், எந்தை - எமது தந்தையே, இங்கு இவை என்று முன் இட்டனர் - இவ்விடத்தில் இச்செய்யுள்கள் தாமென்று திருமுன்வைத்தார்கள். (௩௪)

தூயசொல்லின்பொருளின்றொடர்ச்சியு
மாயநாவலரவ்வவர்தம்முது

Koviloor Digital Library

வாயபாடல்வகைதெரிந்தவ்வவர்க்
கேயவேயெடுத்தீந்தனரென்பவே.

(இ-ள்.) நாவலர் - சோமசுந்தரக்கடவுள், தூய சொல்லின் தொடர்ச்சியும் பொருளின் றொடர்ச்சியும் - குற்றமற்ற சொற்றொடரையும் பொருட்டொடரையும், ஆய-ஆராய்தலால், அவ்வவர் தம்முது ஆய பாடல் வகை தெரிந்து-அவ்வப்புலவர்களுடைய பொருண்முதிர்ச்சியமைந்த பாடல்களின் பாகுபாடுகளைத்தேர்ந்து,அவ்வவர்க்கு ஏய எடுத்து ஈந்தனர்-அவ்வப்புலவர்களுக்குப் பொருந்த எடுத்துத்தந்தருளினர்

வாங்குசங்கப்புலவர்மனங்களித்
தீங்குநீரெமரோடுமொருத்தரா
யோங்கிவாழ்திரென்றொல்லெனத்தங்களைத்
தாங்குசெம்பொற்றவிசிலிருத்தினர்.

(இ-ள்.) வாங்கு சங்கப்புலவர் மனம் களித்து - (அவற்றையேற்ற) சங்கப் புலவர்கள் மனங்களிகூர்ந்து, நீர் ஈங்கு எமர் ஓடும் ஒருத்தர் ஆய் ஓங்கி வாழ்திர் என்று-இவ்விடத்திலெம்மவரோடும் ஒருவராய்ச் சிறந்து வாழ்வீரென்று கூறி, ஒல்லென - விரைந்து, தங்களை தாங்கு செம்பொன் தவிசில் இருத்தினர் - தங்களைத் தாங்கிய செவந்த பொன்னாலாகிய ஆசனத்திலிருக்கச் செய்தார்கள். (௬௬)

பொன்னின்பீடிகையென்னும்பொன்னாரமேற்
றுன்னுநாவலர்சூழ்மணியாகவே
மன்னினார்நடுநாயகமாமணி
யென்னவீற்றிருந்தார்மதுரேசரே.

(இ-ள்.) பொன்னின் பீடிகை என்னும் பொன் ஆரம் மேல் - பொற்பலகையென்னும் பொன்னாரத்தில், துன்னும் நாவலர் - தங்கிய நாற்பத்தெண்மரும், சூழ் மணி ஆக - சுற்றிலும் பதித்த இரத்நங்களாக, மன்னினார் - இருந்தனர்கள், மதுரேசர் - சோமசுந்தரக்கடவுள், மாநடு நாயக மணி என்ன வீற்றிருந்தார் - பெரிய நடுநாயக மணியாக நிகரின்றியிருந்து விளங்கினர்.

இயைபு படவைத்து உருவகஞ்செய்தமையால் இயைபுருகவணி. (௬௭)

நதியணிந்தவர்தம்மொடுநாற்பத்தொன்
பதின்மரென்னப்படும்புலவோரெலா
முதியவான்றமிழ்பின்னுமுறைமுறை
மதிவிளங்கத்தொடுத்தவண்வாழுநாள்.

(இ-ள்.) நதி அணிந்தவர் தம் ஒடு நாற்பத்தொன்பதின்மர் என்ன ப்படும் புலவோர் எல்லாம் - கங்கையையணிந்த சடாபாரத்தையுடைய சோமசுந்தரக்கடவுளோடு நாற்பத்தொன்பதின்மரென்று சொல்லப்படும் புலவர்கள் யாவரும், முதிய வான் தமிழ் - தொன்றுதொட்டுள்ள பெரிய முத்தமிழும், பின்னும் முறை முறை மதி விளங்க தொடுத்து அவண் வாழும் நாள்-மீளவும் முறை முறையாகக் கற்போர்க்கு நுண்ணறிவுவிளங்க நூல்கள் செய்து அச்சங்கமண்டபத்தில் வாழுங்காலையில்.

கலித்துறை.

வங்கியசேகரன்வங்கியசூடாமணிதன்னைப்
பொங்கியதேசார்முடிபுனைவித்துப்புவிநல்கி

Koviloor Digital Library

மிக்கியல்பாசவினைப்பகைசாயவிருந்தாங்கே
சங்கியல்வார்குழையானடியொன்றியசார்புற்றான்.

(இ-ள்.) வங்கிய சேகரன் - வங்கிய சேகரபாண்டியன், வங்கிய சூடாமணி தன் ஐ - வங்கிய சூடாமணி பாண்டியனுக்கு, பொங்கிய தேசு ஆர் முடிபுனைவித்து - விளங்கும் ஒளிமிக்க மகுடஞ்சூட்டி, புவி நல்கி - பூபாரத்தை யவன் தோளிலேற்றி, மிக்கு இயல் பாசம் வினை பகை சாய இருந்த ஆங்கு - இந்நிலவுலகிலமைந்த பந்தமாகிய இருவினையென்றும் பகைமை கெட இருந்தபடியால், சங்கு இயல் வெண் குழையான் அடி ஒன்றிய சார்பு உற்றான் - வெள்ளிய சங்ககுண்டலத்தையணிந்த சிவபெருமானுடைய திருவடியின்கண் இரண்டறக் கலக்கு முத்திநிலையையடைந்தனன்.

இருவினையு மேலைக்குவித்தாதலா லவையொழிதலே பிறப்பறுதல் என்பார் பாசவினைப்பகைசாய என்றார். (௬௧)

சங்கப்பலகைதந்தபடலம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உ௬௩௨.

ஐம்பத்திரண்டாவது.

தருமிக்குப் பொற்கிழியளித்தபடலம்.

கலிநிலைத்துறை.

சொற்குவைதேரும்பாவலர்மேவத்தொகுபீட
மற்குவைகண்டத்தண்ணலளித்தவறைந்தேமாற்
றற்குவைதந்தாலுய்குவலென்றுந்தருமிக்குப்
பொற்குவைநல்கும்வண்ணமெடுத்துப்புகல்கிற்பாம்.


(இ-ள்.) சொல் குவை தேரும் பாவலர் மேவ - சொல்லின்வகைகளை யாய்ந்துணர்ந்த நாற்பத்தெட்டுப்புலவர்களும் வசிக்க, தொகு பீடம் - இரத்தினந்தொக்கபீடத்தை, அல்குவை கண்டத்து அண்ணல் அளித்தது அறைந்தேம் - இருள் ஓரிடத்துத் திரண்டிருந்தாலொத்த ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் தந்தருளிய திருவிளையாடலைக் கூறினோம், தற்கு உவை தந்தால் உய்குவல் என்றும் தருமிக்கு - தனக்கு அவற்றைத்தந்தால் பிழைப்பேனென்று குறையிரந்த தருமியென்னும் அந்தணனுக்கு, பொற்குவை நல்கும் வண்ணம் எடுத்து புகல்கிற்பாம் - பொற்குப்பையைத் தந்தருளிய திருவிளையாடலை யினி விதந்தெடுத்துக்கூறுவாம்.

சொல்லின் வகைபெயர், வினை, இடை, உரி இவற்றுள் இவைவழு, இவை வழுவல எனப் பிரகஸ்பதி இந்திரனுக்குத் தனித்தனி விதந்து ஆயிரந்தேவவருடங் கூறினர் ஆதலால் அவற்றினிலக்கணம் எல்லையில்லன என்பார் சொற்குவைதேரும் என்றார். (௧)

மன்னவர்மன்னன்வங்கியசூடாமணிமாறன்
றென்னவராகித்திகிரிபுரட்டுந்தென்கூடன்
முன்னவரன்னங்கண்டறியாதமுடிக்கேற்பப்
பன்மலர்நல்குந்தனம்வைக்கும்பணிபூண்டான்.

Koviloor Digital Library

தருமிக்குப்பொற்கிழியளித்த திருவிளையாடல்.



Koviloor Digital Library

Koviloor Digital Library

(இ-ள்.) மன்னவர் மன்னன் வங்கிய சூடாமணி மாறன் - அரசர்க்கரசனாகி ய வங்கியசூடாமணி பாண்டியன், தென்னவர் ஆகி திகிரி உருட்டும் தென் கூடல் முன்னவர் - சவுந்தரபாண்டியராகி யாக்கினைசக்கரஞ்செலுத்திய தென்றிசைக்க ண்ணதாகிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளுடைய, அன்னம் கண்டு அறியாத முடிக்கு ஏற்ப - பிரமனாகிய அன்னம் தேர்ந்துணராத திருமுடிக்குப் பொருந்த, பல் மலர் நல்கும் நந்தனம் வைக்கும் பணி பூண்டான் - பலமலர்களையு ந்தரும் நந்தவனத்தை வைத்துப்போற்றும் திருப்பணியை மேற்கொண்டனன்.

நந்தவனம் நந்தனம் என மரியது. சந்தோஷத்தைத் தரும் பூந்தோட்டம் என்று பொருள். (௨)

மாதவிபாதிரிதாதகிகூவிளமந்தாரந்
தாதவிழ்மல்லிகைமுல்லையிலஞ்சிதடங்கோங்கம்
வீதவழ்கொன்றைகரந்தைசெழுங்கரவீரந்தண்
போதவிழ்நந்திசெருந்திகுருந்தம்புன்னாகம்.

(இ-ள்.) மாதவி பாதிரி தாதகி கூவிளம் மந்தாரம் - குருக்கத்தியும் பாதிரி யும் ஆத்தியும் வில்வமும் மந்தாரமும், தாது அவிழ் மல்லிகை முல்லை இலஞ்சி தட கோங்கம் - மகரந்தத்தோடு மலருமல்லிகையுமுல்லையும் மகிழும் பெரிய கோங்கும், வீதவழ் கொன்றை கரந்தை செழு கரவீரம் - வண்டுகள் தவழுங் கொன்றையுங் கரந்தையும் வளவிய அலரியும், தண் போது அவிழ் நந்தி செருந்தி குருந்தம் புன்னாகம் - தண்ணிய போதவிழும் நந்தியாவர்த்தமும் செருந்தியுங் குருந்தும் புன்னாகமும் - (௩)

முண்டகமென்கடிநீலமுதற்பலமுப்போது
மெண்டிசையுங்கமழும்படிநந்தனமெங்குந்தே
னுண்டிசைவண்டுபடிந்துமுரன்றிடவுண்டாக்கி
வண்டிமிர்சண்பகநந்தனமுந்தனிவைத்தானால்.

(இ-ள்.) முண்டகம் மெல் கடி நீலம் முதல் பல - தாமரையும் மெல்லிய வாசமுடைய நீலமுதலிய பல மலரும், மு போதும்-காலைமாலை யுச்சியென்று முப் போதிலும், எண் திசையும் கமழும் படி - எட்டுத்திக்கிலும் நறுமணம் வீசும்படி, நந்தனம் எங்கும் - நந்தவனம் எங்கும், இசை வண்டு தேன் உண்டு படிந்து முரன்றிட உண்டாக்கி - இசைபாடும் வண்டுகள் மதுவுண்டு மகரந்தத்திற்படிந்து ரீங்கா ரஞ்செய்யவைத்து, வண்டு இமிர் சண்பக நந்தனமும் தனி வைத்தான் - வண்டுக ளொலிக்குஞ் சண்பகநந்தவனத்தையுந் தனியே வைத்தனன். (௪)

பொய்த்திடுநுண்ணிடைமங்கலமங்கையர்பொன்பூண்டா
ரொத்தெழுசண்பகமொய்த்தவரும்பருடைந்தெங்கும்
வைத்திடுநந்தனவாசம்விழுங்கிமணங்கான்று
பைத்துமலர்ந்தனகண்டுமகிழ்ந்துபரித்தோரான்.

(இ-ள்.) பொய்த்திடும் நுண் இடை மங்கல மங்கையர்-இளைத்த நுண்ணி ய இடையையுடைய சுமங்கலப்பெண்கள், பொன் பூண்டார் ஒத்து-பொன்னணி பூ ண்டதையொத்து, எழு சண்பகம் மொய்த்த அரும்பர் உடைந்து-எழுந்தோங்கிய ச ண்பகங்களில் மொய்த்த அரும்புகள் முறுக்குடைந்து, எங்கும் வைத்திடும் நந்தன ம் வாசம் விழுங்கி மணம் கான்று - எங்கும் வைத்த நந்தவனங்களிலுள்ள வாசங்

Koviloor Digital Library

கவே விருக்கி மனத்தைவிசி, பைத்து மலர்ந்தன - பசந்து மலர்ந்தன, பரிதேரான் கண்டு மகிழ்க்த - குதிரைபூண்ட தேரையுடைய வங்கிய சூடாமணி பாண்டியன்பார்த்த மகிழ்ந்த. (௫)

செருக்கியவண்டுவிழாமலர்கொய்துதெரிந்தாய்ந்து
நெருக்கியவிண்டைநிரைத்தொடைதொங்கனெடுந்தாம
மருக்கிளர்கண்ணிதொடுத்தணிவித்துவணங்காரூர்
கருக்கியகண்ணுதலார்திருமேனிகவின்செய்தான்.

(இ-ள்.) செருக்கிய வண்டு விழா மலர் கொய்து தெரிந்து ஆய்ந்து - கள்ளுண்டு களித்தவண்டுகள் மோவாத மலர்களைக்கொய்து காம்புமுதலியவற்றை யாய்ந்து, நெருக்கிய இண்டை நிரை தொடை தொங்கல் நெடுந்தாமம் மருக்கிளர் கண்ணி தொடுத்து - மலர் நெருங்கத்தொடுத்த இண்டைமாலையையும், வரிசையாயுள்ள தொடைமாலையையும் நெடிய தொங்கல்மாலையையும் வாசம் வீசுங் கண்ணிமாலையையும் தொடுத்து, வணங்கார் ஊர் கருக்கிய கண்ணுதலார் திருமேனி அணிவித்து கவின் செய்தான் - பகைவர் புரங்களை நகைத்தெரித்த சோமசுந்தரக்கடவுளுடைய திருமேனியை யழகுசெய்தனன்.

இண்டை தண்டவடிவமாகத் தொடுக்குமாலை, தொடை சரமாகத் தொடுக்குமாலை, தாமம் கோத்தமாலை, கண்ணிவட்டிவமாகத்தொடுக்குமாலை. (௬)

அன்னவிபன்பொழி மாமதுரேசரடித்தாழ்வோன்
பொன்னவிர்சண்பகமாலைபுனைந்தபுதுக்கோலந்
தன்னைவியந்திவர்சண்பகசுந்தரர்தாமென்று
முன்னரிறைஞ்சினனிம்பமணிந்தமுடித்தென்னன்.

(இ-ள்.) அன்ன விபன் பொழில் மாமதுரேசர் அடி தாழ்வோன் - அந்தப் பார்தசோலைசூழ்ந்த பெரிய மதுரையில் வசிக்குஞ் சோமசுந்தரக்கடவுளுடைய திருவடியை வணங்கும் பாண்டியன், பொன் அவிர் சண்பகமாலை புனைந்த புது கோலம் தன்னை - பொன்போல விளங்குஞ் சண்பகமலர்மாலையைச்சாத்திய புதிய திருக்கோலத்தை, வியந்து-அதிசயங் கூர்ந்து, இவர் சண்பகசுந்தரர் தாம் என்று - இவர் சண்பகசுந்தரக்கடவுளென்று, நிம்பம் அணிந்த முடி தென்னன்-வேப்பமலர் மாலைசூடிய மகுடத்தையுடைய அப்பாண்டியன், முன்னர் இறைஞ்சினன்-திருமுன் னின்று வணங்கினன்.

சண்பகத்திருக்கோலஞ்செய்வித்த இதுமுதல் சண்பகசுந்தரக்கடவுள் எனக் காரணக்குறியாக்கப் பெயரிட்டழைத்தனன் என்பார் சண்பகமாலை புனைந்த புதுக் கோலம்வியந்த சண்பகசுந்தரர் என்று இறைஞ்சினன் என்றார். (எ)

அன்னதொர்நாமம்பெற்றனரின்றுமணிக்கூடன்
முன்னவரந்தத்தாமமவர்க்குமுடிக்கேற்று
மின்னதொர்நிறச்சண்பகமாறனென்றேபேர்
மன்னிவிளங்கினன்வங்கியசூடாமணிதானும்.

(இ-ள்.) மணி கூடல் முன்னவர் - பொலிவமைந்த மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், இன்றும் அன்னது ஓர் நாமம் பெற்றனர் - இதுகாறும் அந்த ஒரு திருநாமம் பெற்றனர், அந்த தாமம் அவர்க்கு முடிக்கு ஏற்றும் இன்னது ஓர் நிறத்-அந்தச் சண்பகமாலையை அச்சோமசுந்தரக்கடவுட்குத் திருமுடியிற் சா

Koviloor Digital Library

த்திவரும் இத்தன்மையினால், வங்கிய சூடாமணி தானும்-வங்கிய சூடாமணி பாண்டியனும், சண்பக மாறன் என்றே பேர் மன்னி விளங்கினன்-சண்பகபாண்டியனெனப் பெயர்பெற்று விளங்கினான்-

சிவபெருமானுக்குச் சண்பகசுந்தரர் எனக் காரணப்பெயர் வந்தமைபோலச் சண்பகமாலைசாத்துங் காரணத்தால் சண்பகபாண்டியன் எனக் காரணவாக்கப் பெயர் அவனுக்கும் வந்ததென்பார் முடிக்கேற்றும் இவ்வதோர் சீராற் சண்பகமாறனென்றேபேர் மன்னிவிளங்கினன் என்றார். (அ)

சண்பகமாறன்சண்பகசுந்தரர்தம்பாடே
நண்பகமாறாநன்பணிசெய்யுநன்னாளிற்
பண்பகர்சொல்லார்தம்புடைமாரன்படுபோர்மூண்
டெண்பகவெய்வானாகியவந்தன்றிளவேனில்.

(இ-ள்.) சண்பக மாறன் - சண்பகபாண்டியன், சண்பக சுந்தரர் தம்பாடு-சண்பகசுந்தரக்கடவுளிடத்து, அகம் நண்பு மாறாத நன்பணி செய்யும் நல் நாளில் மனத்தால் நண்ணுதல் மாறாத நல்ல திருப்பணி செய்துவரும் பயன்மிக்க நாளில், பண்பகர் சொல்லார் தம்புடை - இசையென்று கேட்போர்கூறும் சொற்களையுடைய பெண்களிடத்து, மாரன் படு போர் மூண்டு - மன்மதன் போர்த்தொழில் தொடங்கி, எண்பக எய்வான் ஆகிய - அளவிறப்பத் தனது பாணங்களைப் பிரயோகிக்க, இளவேனில் வந்தது - இளவேனிற்காலம் வந்தது.

மனத்தொடுபொருந்திய திருப்பணிசெய்து வந்தனன் என்பார் நண்பகமாறா நன்பணிசெய்யும் எனவும், வாளுள் வீணாள்படாது நடந்தனன் என்பார் நன்னாள் எனவும் கூறினார். (கூ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மனிதர்வெங்கோடைதீர்க்கும்வசந்தமென்காலும்வேறு
துனிதவிரிளங்கால்வேண்டுஞ்சோலையுஞ்சோலைவேண்டும்
புனிதநீர்த்தடமும்வேறுபுதுமலரோடைவேண்டும்
பனிதருமதியும்வேறுபான்மதிவேண்டுங்காலம்.

(இ-ள்.) (அவ்விளவேனில்) மனிதர் வெம் கோடை தீர்க்கும் வசந்தம் மெல் காலும் - மக்களுடைய கொடிய வெப்பையாற்றும் மெல்லிய தென்றற்காற்றும், வேறு துனி தவிர் இளங்கால் வேண்டும்-வேறே தனது வெப்பையாற்றுவித்தற்கு மற்றோர் தென்றற்காற்றை விரும்பாநிற்கும், சோலையும் சோலை வேண்டும்-இளஞ்சோலையும் தனது வெப்பையாற்றுவித்தற்கோ ரிளஞ்சோலையை வேண்டாநிற்கும்,புனிதம் நீர் தடமும்-மாசில்லாத நீர்மயமாகிய பூந்தடமும், வேறுபுதுமலர் ஓடை வேண்டும் - (தனது) வெப்பாற்றுவித்தற்கு வேறோரன்றலர்ந்த மலரோடையை விரும்பாநிற்கும், பனிதரு மதியும் வேறு பால் மதி வேண்டும் - (மக்களுயிர்க்கு) தண்மைதருஞ்சந்திரனும் தனது வெப்பையாற்றுவித்தற்கு வேறொரு வெள்ளிய சந்திரனை விரும்பாநிற்கும், காலம் - காலமாயிருந்தது.

மக்கள் வெப்பொழிக்கும் தண்ணிய பொருள்களும் தமக்கோர் வேறு தண்ணிய பொருள்களை விரும்பாநிற்கும் எனக்கூறியது வெம்மை மிகுதியைக் குறிப்பாகத் தந்துநிற்றலில் குறிப்பணி. இது பெருங்காப்பியம் ஆதலால் இருதுவர்ணனை.()

Koviloor Digital Library

அண்டவான்றருமேற்சீறிச்செவந்தெழுந்தாங்குத்தேமா
தண்டளிரீன்றுவானந்தைவரநிவந்தகாசு
கொண்டிடையழுத்திச்செய்தகுழையணிமகளிர்போல
வண்டிறைகொள்ளப்பூத்துமலர்ந்தனசெருந்தியெல்லாம்.

(இ-ள்.) அண்டம் வான் தரு மேல் சீறி சிவந்து எழுந்தால் ஆங்கு - விண்ணுலகிலுள்ள பெரிய பஞ்சதருக்கள்மேற் கோபித்துச் செவந்தெழுந்தாற்போல, தேமா தண் தளிர் ஈன்று - மாமரமானது தண்ணிய தளிரைத்தந்து, வானம் தைவர நிவந்த - விண்ணுலகத்தையளாவ உயர்ந்தன, காசுகொண்டு இடை அழுத்தி செய்த குழை அணி மகளிர் போல - நீலமணிகொண்டு இடையிடையே யழுத்திச்செய்த குண்டலத்தையணிந்த பெண்கள்போல, செருந்தி எல்லாம் - செருந்திமரங்களெல்லாம், வண்டு இறை கொள்ள பூத்து மலர்ந்தன - வண்டுகளிடையிடையே வசிக்க முறுக்கவிழ்ந்து மலர்ந்தன.

புளிமா வன்றாதலால் தேமாவென்றார். மாமரங்கள் தளிர்த்தது கோபத்தில் தாஞ்சிறந்தனவென்று தேவதருக்களைக் கோபித்தெழுந்தனபோ லிருக்கின்றன எனக் கவிகூறுதலால் தற்குறிப்பேற்ற வுவமையணியும், சம்பந்தமில்லாதிருக்கச் சம்பந்தங்கற்பித்து வானந்தைவர நிவந்த எனக் கூறுதலால் தொடர்புயர்வு நவிற்சியணியும் விரவுதலாற் சங்கீரண அணி. செருந்தியெல்லாம் வண்டிறைகொள்ளப் பூத்துமலர்ந்தன என்றது நிறமும் வடிவும் பற்றிவந்த பண்புவமையணி. (கக)

செங்கதிர்மேனியான்போலவிழ்ந்தனசெழும்பலாச
மங்குலூர்செல்வன்போலமலர்ந்தனகாஞ்சிதிங்கட்
புங்கவன்போலப்பூத்தபூஞ்சினைமரவஞ்செங்கை
யங்கதிராழியான்போலலர்ந்தனவிரிந்தகாயா.

(இ-ள்.) செழும் பலாசம்-வளவிய முண்முருக்குகள், செங்கதிர் மேனியான்போல் அவிழ்ந்தன - சூரியனைப்போலச் செந்நிறம் வாய்ந்து மலர்ந்தன - காஞ்சி-காஞ்சிமரங்கள், மங்குல் ஊர் செல்வன் போல மலர்ந்தன - மேகவாகனனாகிய இந்திரன்போலக் கருநிறம்வாய்ந்து மலர்ந்தன, பூஞ்சினை மரவம்-பூத்த கொம்புகளையுடைய குங்குமமரங்கள், திங்கள் புங்கவன்போல பூத்த - சந்திரனைப்போல வெண்ணிறம் வாய்ந்து மலர்ந்தன, காயா - காயாஞ்செடிகள், செம் கை அம் கதிர் ஆழியான்போல் அலர்ந்தன - சிவந்த திருக்கரத்தில் அழகிய ஒளிவீசும் சுதரிசனம் என்னும் சக்கரத்தையேந்திய திருமாலைப்போல நீனிறம்வாய்ந்து மலர்ந்தன.

இது நிறம்பற்றிவந்த பலவயிற்போலியுவமையணி. (கஉ)

தரைகிழித்தெழுநீர்வையைத்தடங்கரையெக்கரல்கு
லரவமேகலைசூழ்ந்தென்னவலர்ந்துதாதுகுப்பஞாழன்
மரகதநிறத்தழைத்துவெண்முத்தரும்பிப்பொன்மலர்ந்துவாங்குந்
திரைகட்டற்பவளக்காடுசெய்வனகன்னிப்புன்னை.

(இ-ள்.) தரை கிழித்த எழு நீர் வையை தடகரை - பூமியைக்கிழித்து உவட்டெடுக்கும் நீர்மயமாகிய வையையின் பெரிய கரையாகிய பெண், எக்கர் அல்குல் - இடுமணலாகிய அல்குலில், அரவம் மேகலை சூழ்ந்தால் என்ன - ஒலியையுடைய மேகலாபரணத்தைச் சூழ அணிந்தாற்போல, ஞாழல் அலர்ந்து தாது உகுப்ப - குங்கும மரங்கள் மலர்ந்து மகரந்தத்தைச் சிந்துவன, கன்னி புன்னை-முதிராதபுன்னை

Koviloor Digital Library

மரங்கள், மரகதம் தழைத்து - இலைதழைத்து, வெள் முத்து அரும்பி - வெள்ளிய அரும்புகள் முகிழ்த்து, பொன் மலர்ந்து - மலர்பூத்து, வாங்கும் திரை கடல் பவளக்காடு செய்வன - வளைந்த அலைகளையுடைய கடலிற்றோன்றியபவளக்காட்டைச் செய்வன.

எக்கரை அல்குலாக உருவகஞ்செய்து கரையைப் பெண்ணுக வுருவகஞ்செய்யாமையால் வியனிலையுருவகவணியும், மேகலை சூழ்ந்தென்னத் தாதுகுப்ப நிரம்பற்றிய பண்புவமையுமாக அமைதலில் சங்கிரணவணி. இலையை மரகதமாகவும், முத்தை அரும்பாகவும், பொன்னை மலராகவும், பவளக்காட்டை மகரந்தமாகவும் உபமானங்களால் உபமேயங்களை இலக்கணையாகக்கூறுதலால் உருவகவுயர்வு நவிற்சியணி. (௧௩)

ஊடினார்போலவெம்பியிலையுதிர்ந்துயிரன்னாைக்
கூடினார்போலவெங்குங்குழைவரத்தழைத்துநீங்கி
வாடினார்போலக்கண்ணீர்வாரமெய்பசந்துமைய
னீடினாரலர்போற்பூத்துநெருங்கினமரங்களெல்லாம்.

(இ-ள்.) மரங்கள் எல்லாம் - மரங்கள் யாவும், ஊடினார் போல-பிணங்கிய பெண்கள் அணிகளை யணியாது நிற்றல்போல, வெம்பி இலை உதிர்ந்து - பழுத்து இலைகளைச்சிந்தி, உயிர் அன்னாரை கூடினார்போல - உயிரையொத்த மகிழ்நரைத்தழுவிய பெண்கள் குழைந்து நிற்றல்போல, எங்கும் குழைவர தழைத்து - எவ்விடத்தும் குழைகள் தோன்றத்தழைத்து, நீங்கி வாடினார்போல-தத்தமக்குரிய தலைவரினின்றும் பிரிந்துவாடு மகளிர்போல, கண்ணீர் வார மெய் பசந்து - கண்ணீர் சிந்த உடல் பசந்து, மையல் நீடினாரலர் போல் பூத்து நெருங்கின - பிரிவாற் காமமயக்குமேலிடாத பெண்களைப்போல மலர்கள் மலர்ந்து தம்முள் நெருங்கினின்றன.

கண்ணீர் கண்களினின்றுஞ் சிந்தும் நீர். கள்ளாகிய நீர். பசந்து பச்சைநிறமாய், பசலைபூத்து. குழைதலால் குழையெனத் தொழிலாகுபெயராய் நின்றமையால் குழைவரத்தழைத்து என்றார். ஒருதொடரிற் பலவுவமைகள் வந்தமையால் பலவயிற்போலியுவமையணி. (௧௪)

விழைதருகாதலார்தாமெலிவுறமெலிந்துநெஞ்சங்
குழைவுறக்குழைந்துநிற்குங்கோதிலாக்கற்பினார்போன்
மழைவறுங்கோடைதீப்பமரந்தலைவாடவாடித்
தழைவுறத்தழைத்துநின்றதழீஇயபைங்கொடிகளெல்லாம்.

(இ-ள்.) விழை தரு காதலார் தாம் - தம்மால் விரும்பப்பட்ட கணவர்கள், மெலிவுற மெலிந்து - மெலியத் தாமுமெலிந்து, நெஞ்சம் குழைவுற குழைந்து நிற்கும் கோது இல்லாத கற்பினார்போல் - அவர்கள் மனம் களிகூரத் தாமுங் களிகூர்ந்து நிற்குங் குற்றமில்லாத கற்புடை மகளிர்போல, மழை வறும் கோடை தீப்ப - மழைவறங்கூர்ந்த கோடையானது தீத்தலால், மரம் தலைவாட-மரங்கள் தீந்து தலைவாட, தழீஇய பைங்கொடிகள் எல்லாம் - அவற்றைத்தழுவிய பசிய கொடிகளெல்லாம், வாடி - தாமும் வாடி, தழைவுற தழைத்து நின்ற - (தென்றலால்) தழைக்கத் தாமுந் தழைத்துநின்றன.

கற்புடைமகளிர் தங்கணவர் வறங்கூரில் தாமும் வறங்கூர்தலும், அவர்மகிழ்கூரிற்று மகிழ்கூர்தலும்போல மரத்திற்படர்ந்த கொடிகள் அவ்வாறு நிற்றலால் தொழில்பற்றிவந்த உவமையணி. (௧௫)

Koviloor Digital Library

சேட்டிகைத்தென்காறள்ளத்தெண்மதுச்சிதறத்தும்பி
நீட்டிசைமுரலச்சாயாநின்றுபூங்கொம்பராட
னாட்டியப்புலவனாட்டநகைமுகம்வெயர்வைசிந்தப்
பாட்டிசைத்தாடாநின்றபாவைமார்போன்றவன்றே.

(இ-ள்') சேண் - நெடிய, தென் திசை கால் தள்ள - தென்றிசையில் நின்று வரு மந்தமாருதம் வீசுதலால், தெள் மது சிதற - தெள்ளிய தேன் சிந்தவும், தும்பி நீட்டு இசை முரல - வண்டுகள் நெட்டிசை பாடவும், சாயாநின்று பூங்கொம்பர் ஆடல் - ஒசிந்து பூங்கொம்புகளாடுதல், நாட்டியப் புலவன் ஆட்ட - கூத்துவல்லோன் ஆட்டுவிக்க, நகை முகம் வெயர்வை சிந்த - புன்னகையையுடைய முகத்தினின்றும் வேர்வு சிந்த, பாட்டு இசைத்து ஆடாநின்ற பாவைமார்போன்ற - பாடல் பாடியாடாநின்ற பதுமைபோல வுருவமைந்த கூத்தியரை யொத்திருந்தன.

இதுவுந் தொழிலுவமையணி. (கசு)

மலர்ந்தசெவ்வந்திப்போதும்வகுளமுமுதிர்ந்துவாடி
யுலர்ந்துமொய்த்தளிதேனக்கக்கிடப்பனவுள்ளமிக்க
குலந்தருநல்லோர்செல்வங்குன்றினுந்தம்பாலில்லென்
றலந்தவர்க்குயிரைமாறியாயினுங்கொடுப்பரன்றே.

(இ-ள்.) மலர்ந்த செவ்வந்தி போதும் வகுளமும் உதிர்ந்து வாடி உலர்ந்தும் - மலர்ந்த செவ்வந்திமலரும் மகிழமலரும் மூக்கழுகி வீழ்ந்து வாடியுலர்ந்தும், அளிகள் மொய்த்து தேன் நக்கக்கிடப்பன-வண்டுகள் மொய்த்துத் தேனுண்ணக்கிடப்பன, உள்ளம் மிக்க குலம் தரும் நல்லோர் செல்வம் குன்றினும்-உள்ளமிகுதியையுடைய நல்ல குடிப்பிறந்தோர் தமது செல்வங்குன்றினும், தம்பால்-தம்மிடத்து, இல் என்று அலந்தவர்க்கு உயிரை மாறியாயினும் கொடுப்பர் அன்றே - இல்லையென்று வருந்தி யிரந்தவர்க்கு உயிரை மாறியானும் கொடுப்பாரல்லவா.

உள்ளமிகுதி பெருந்த எண்ணம். இவ்வாக்கியங்கள் வேறாயிருப்பினும் ஒற்றுமையாயுள்ள உவமான உவமேயங்களின் தருமங்களை இரண்டுவாக்கியங்களில் தனித்தனி சொல்லுதலால் எடுத்துக் காட்டுவமையணி. (கஎ)

நாறியதண்ணந்தேமாநறுந்தளிர்கோதிக்கூவி
யூறியகாமப்பேட்டையுருக்குவகுயின்மென்சேவல்
வீறியசெங்கோல்வேந்தன்வெளிப்படத்தேயங்காவன்
மாறியவேந்தன்போலவொடுங்கியமயில்களெல்லாம்.

(இ-ள்.) மெல் சேவல் குயில் - மெல்லிய ஆண் குயில்கள், நாறிய தண் அம் தேமா நறுந்தளிர் கோதி - தளிர்த்ததண்ணிய அழகிய நறுமணங்கமழுந் தளிர்களைக்கோதி, காமம் ஊறிய பேட்டை கூவி - காமமரும்பிய பெண்குயில்களைக் கூவி, உருக்குவ - (அவற்றின் மனத்தை) இளகச்செய்வன, வீறிய செங்கோல் வேந்தன் வெளிப்பட - நிலமுழுதுஞ்செல்லும் செங்கோலையுடைய அரசன் போர்க்கு வர, தேயம் காவல் மாறிய வேந்தன்போல - நாடு காவற்றொழில் மாறிய குறுநிலமன்னன்போல, மயில்கள் எல்லாம் ஒடுங்கிய - மயில்கள் யாவுங் கூவாதொழிந்தன.

இதனால் குயில்களித்தலு மயிலோடுங்குதலுங்கூறி வேனிலின் தொழிற்றன்மை யுணர்த்துதலால் தொழிற்றன்மையணி. (கஅ)

Koviloor Digital Library

பொங்கரினுழைந்துவாவிபுகுந்துபங்கயந்துழாவிப்
பைங்கடிமயிலைமுல்லைமல்லிகைப்பந்தர்தாவிக்
கொங்கலர்மணங்கூட்டுண்டுகுளிர்ந்துமெல்லென்றுதென்ற
லங்கங்கேகலைகடேருமறிவன்போலியங்குமன்றே.

(இ-ள்.) தென்றல் - மந்தமாருதமானது, பொங்கர் இல் நுழைந்து - சோலைகளிற்றவழ்ந்து, வாவி புகுந்து - தடாகங்களில் தோய்ந்து, பங்கயம் துழாவி - தாமரைகளிலளாவி, பைங்கடி மயிலை முல்லை மல்லிகை பந்தர் தாவி - பசியவாசமிக்க இருவாட்சி மலரினும் மல்லிகைப் பந்தலினும் படர்ந்து, கொங்கு அலர் மணம் கூட்டுண்டு குளிர்ந்து மெல்லென்று - மகரந்தத்தையும் பரந்த மணத்தையுங் கொள்ளைகொண்டு தண்ணிதாய் மெத்தென்ற குணம்வாய்ந்து, அங்கு அங்கு ஏ கலைகள் தேறும் அறிவன் போல் இயங்கும்-ஆங்காங்குள்ள நூற்பொருள்களைத் தேர்ந்துணரும் உணர்வுடையோனை யொத்திருந்தன.

நூல்பயிலுமுணர்ச்சியுடையோன் பல இடங்களிலுஞ்சென்று அங்கங்குள்ள நூற்பொருளுணர்ந்த நன்னடைவாய்ந்து சாந்தகுணமுடையவனாய் ஒழுகுதல் போலத் தென்றல் பல இடங்களிலுஞ்சென்று தவழ்ந்து அங்கங்குள்ள குணங்களைக் கவர்ந்து தண்ணிதாய் மெத்தென்ற தன்மைவாய்ந்தது எனக் கூறுதலால் தொழிலுவமையணி. (கசு)

தாமரைகளாஞ்சிதாங்கத்தண்குயின்முழவமேங்க
மாமருதமருங்கிள்ளைமங்கலமியம்பத்தும்பி
காமரமிசைப்பமுள்வாய்கைதைவாளெடுப்பவேனிற்
கோமகன்மகுடஞ்சூடியிருப்பதக்குளிர்பூஞ்சோலை.

(இ-ள்.) வேனில் கோமகன் - வேனிற்காலமாகிய பேரரசன், தாமரை களாஞ்சி தாங்க - தாமரை மலர்களாகிய களாஞ்சியை யேந்தவும், தண் குயில் முழவம் ஏங்க - தண்ணிய குயிலோசைமுழவாக வொலிக்கவும், மாமருது அமரும் கிள்ளை மங்கலம் இயம்ப - பெரிய மருதமரத்தில் வசிக்குங் கிளிகளாகிய சுமங்கலப் பெண்கள் மங்கலப்பாட்டுப்பாடவும், தும்பி காமரம் இசைப்ப - வண்டுகளாகிய பாடகர்கள் இசைப்பாட்டுப் பாடவும், முள் வாய் கைதை வாள் எடுப்ப-முள்வாய்ந்த தாழைகள் மடலாகிய வாளையேந்தவும், மகுடம் சூடி - கிரீடஞ்சூடி, அ குளிர் பூஞ்சோலை இருப்பது - அந்தக்குளிர்ந்த பூஞ்சோலையாகிய அத்தாணியில் அரசுவீற்றிருக்கும்.

மலரைக் களாஞ்சியாகவும், ஓசையை முழவமாகவும், கிளியைப் பெண்களாகவும், வண்டுகளைப் பாடகர்களாகவும், மடலைவாளாகவும், உவமானங்களால் உவமேயங்களை யிலக்கணையாகக் கூறுதலால் உருவகவுயர்வு நவிற்சியணி. (உ0)

கலையினுனிறைந்தவிந்துகாந்தமண்டபத்திற்செய்த
மலையினுமெழுதுமாடமருங்கினுநெருங்குசோலைத்
தலையினுங்கமலவாவித்தடத்தினுந்தண்மூத்தார
முலையினுமன்றிக்கோடைமுடிவிடங்காணார்மைந்தர்.

(இ-ள்.) மைந்தர் - புருடர்கள், கலையினால் நிறைந்த இந்து காந்த மண்டபத்தில் - கலைகளாற் குறைவின்றி நிறைந்த சந்திரகாந்தக்கல்லாற்செய்த மண்டபத்திலும், செய்த மலையினும் - செய்குன்றத்திலும், எழுது மாடம் மருங்கினும்-சித்திர

Koviloor Digital Library

பொருந்திய உபரிகைகளிலும், நெருக்கு சோலை தலையினும் - மரங்கள் நெருங்கிய இளஞ்சோலைகளிலும், கமலம் வாவி நடத்திலும் - தாமரையோடைகளிலுள்ள உயர்ந்த இடங்களிலும், தண் முத்து ஆரம் முலையினும் அன்றி - தண்ணிய முத்தாரத்தை யணிந்த பெண்கள்முலையிலும் அல்லாமல், கோடை முடிவு இடம் காணார் - கோடை வெப்பாற்றுமிடம் வேறுகாணார்கள்.

இதனாற் குளிர்ச்சி யிவ்விடங்களில் உள்ளதெனப் போதரலாற் குறிப்பணி. மாதர்தனங்களிற் கோடைகாலத்திற்றண்மையும் குளிர்காலத்தில்வெம்மையும் உளதாதலால் தண்முத்தாரமுலையிலும் என எண்ணினர். (௨௧)

நிலந்தருதிருவினன்றநிழன்மணிமாடக்கூடல்
வலந்தருதடந்தோண்மைந்தர்வானமும்விழும்போக
நலந்தருமகளிரோடுநாகநாடவர்தஞ்செல்வப்
பொலந்தருவனையகாட்சிப்பூம்பொழினுகர்வான்போவார்.

(இ-ள்.) நிலம் தரு திருவின் ஆன்ற - மரக்கலத்தாலுமன்றி நிலவுலகுந் தருஞ் செல்வத்தால் நிறைந்த, நிழல்மணி மாடக்கூடல் வலம் தருதட தோள் மைந்தர் - ஒளியமைந்த இரத்தினங்கள் நிறைந்த நான்மாடக்கூடலாகிய மதுரைத்திருநகரில் வசிக்கும் வெற்றிமிக்க பருத்த தோளையுடைய புருடர்கள், வானமும் வீழும் போக நலம் தரும் மகளிர் ஒடு - விண்ணவரும் விரும்பும் போகநலத்தைத் தராநின்ற பெண்களோடு, நாகநாடவர் தம் செல்வம் பொலம் தரு அனைய காட்சி பூம் பொழில் நுகர்வான் போவார் - அவவிண்ணவர் செல்வமாகிய பொற்றருவாகிய கற்பகத்தையொத்த தோற்றத்தையுடைய தருக்கள் நெருங்கிய மலர்களையுடைய சோலையின்பத்தை நுகரச்சென்றார்கள்.

வானம் இடவாகுபெயர். பூம்பொழினுகர்தல் பெருங்காப்பியத்தின் ஒருறுப்பு. (௨௨)

ஷை வேறு.

மாத்தாண்மதமாவொருத்தின்மடங்கலெனச்செல்வாரும்
பூத்தாரொலிவாம்பரிமேற்புகர்மாவெனப்போவாரும்
பாத்தார்பரிதியெனவாம்பரித்தேருகைத்தூர்வாருந்
தேத்தாருளர்வண்டலம்பச்சிலம்பினடக்கின்றாரும்.

(இ-ள்.) மா தாள் மதமான் எருத்தில் மடங்கல் என செல்வாரும் - பெரிய காலையுடைய யானையின் பிடரில் சிம்மேற்றைப்போலச் செல்லுங் காளையரும்; பூதார் ஒலி வாம்பரிமேல் புகர்மா என்ன போவாரும் - பொலிவமைந்த கிண்கிணிமாலையி னொலிமிக்க தாவிச்செல்லுங் குதிரைமேல் யானைபோலச் செல்லும் விடலையரும், பாத்த ஆர் பரிதி என்ன - பகுதியமைந்த சூரியர்களைப்போல, வாம்பரி தேர் உகைத்து ஊர்வாரும் - தாவுங் குதிரைபூண்ட தேர்மேற்செல்லு மைந்தரும், தேன் தார் உளர் வண்டு அலம்ப - தேன்றுளிக்கு மாலையில்மூக்காலுழும் வண்டுகளொலிக்க, சிலம்பின் நடக்கின்றாரும் - மலைபோல் நடக்குந் திண்ணியரும்.

பகுதியமைந்த சூரியர் என்றது துவாதசாதித்தர்களை. மதமானெருத்தின் மடங்கலென, வாம்பரிமேற் புகர்மாவென, தேத்தாருளர் வண்டலம்பச் சிலம்பின் எனக்கூறியன இல்பொருளுவமையணிகள். (௨௩)

Koviloor Digital Library

நீலப்பிடிமேற்பிடிபோனெறிக்கொள்வாருந்தாள
மாலைச்சிவிகைமிசைவெண்மலராளெனச்செல்வாரு
மாலைக்கரும்பன்றுணைபோலணித்தார்ப்பரியூர்வாருங்
கோலத்தடக்கைபற்றிக்கொழுநருடன்போவாரும்.

(இ-ள்.) நீலம் பிடிமேல் பிடிபோல் நெறிக்கொள்வாரும் - கரிய பெண்யானையின்மேல் பெண்யானை செல்வதுபோலச்செல்லும் பேதையரும், தாளம் மாலை சிவிகை மிசை-முத்தவரிசை சூழ்ந்த பல்லக்கின்மேல், வெள் மலராள் என செல்வாரும் - வெண்டாமரையிற்செல்லுங் கலைமகள்போலச்செல்லு மங்கையரும், ஆலை கரும்பன் துணைபோல் - ஆலையிலமையுங் கருப்புவில்லேந்திய மன்மதனுடைய மனைவியாகிய இரதியைப்போல, தார் அணி பரி ஊர்வாரும் - கிண்கிணிமாலையென்னும் அணிபூண்ட குதிரைமேலேறிச்செல்லு மடந்தையரும், கோலம் தட கை பற்றி-சந்தனக்கோலம் அமைந்த நீண்ட கைகளைப்பற்றி, கொழுநர் உடன் போவாரும் - தந்தமக்குரிய கணவருடன் செல்லும் அரிவையரும். (௨௪)

சுருப்புக்கமழ்தேங்கண்ணித்தொடுபைங்கழலாடவருங்
கருப்புச்சிலைமன்னவனாற்கருவிப்படையன்னவரும்
விருப்புற்றெறிநீர்வையைவெள்ளைத்தாளந்தெள்ளிப்
பொருப்பிற்குவிக்கும்புளினம்புறஞ்சூழ்சோலைபுகுவார்.

(இ-ள்.) சுரும்புகமழ் தேன் கண்ணி பைங்கழல் தொடு ஆடவரும்-வண்டுகள் மொய்த்த நறுமணங்கமழுந் தேன்சிந்து மாலையையணிந்த வீரகண்டை கட்டிய புருடரும், கரும்பு சிலை மன்னவன் நால் கருவி படை அன்னவரும்-கரும்பு வில்லேந்திய மன்மதனது நான்கு சேனைகளையொத்த பெண்களும், விருப்புற்று - விரும்பி, எறிநீர் வையை வெள்ளை தாளம் தெள்ளி பொருப்பில் குவிக்கும் - கரையொடுமோது நீர்மயமாகிய வையைநதி வெள்ளிய முத்துகளைக்கொழித்து மலைபோலக்குவிக்கும், புளினம் புறம் சூழ் சோலை புகுவார் - மணற்குன்றுகள் புறஞ்சூழ்ந்த இளஞ்சோலையிற் குடியேறுவாராயினர்.

மன்மதன் சேனைபெண்களாதலால் படையன்னவர் என்றார். கருவியே சேனையாதலால் கருவிப்படை என்றது இருபெயரொட்டு. (௨௫)

கூந்தற்பிடியும்பரியுமூர்வார்கொழுநர்தடந்தோ
ளேந்தச்சயமாதென்னத்தழுவாவிழிந்துபொழில்வாய்ப்
பூந்தொத்தலர்பொற்கொடிதாதுகுமாறென்னப்புனைந்த
சாந்தக்கலவையுகப்போய்வனமங்கையர்போற்சார்ந்தார்.

(இ-ள்.) கூந்தல் பிடியும் பரியும் ஊர்வார் - புறமயிரையுடைய பெண்யானையையும் குதிரையையும் நடத்திச்சென்ற பெண்கள், கொழுநர் தட தோள் ஏந்த - தத்தமக்குரிய கணவர்கள் பணைத்த தோள்தர, சயமாது என்ன தழுவா-விசய இலக்குமியைப்போலத்தழுவி, இழிந்து - அப்புயங்களினின்றும் இறங்கி, பொழில் வாய் - சோலையில், பூ தொத்து அலர் பொன் கொடி - பூங்கொத்துகளலர்ந்த பொன்னிறம் வாய்ந்த பூங்கொடிகள், தாது உகும் ஆறு என்ன - மகரந்தத்தைச்சிந்தும் வகைபோல, புனைந்த கலவை சாந்தம் உக போய் - தாமணிந்த கலவைச்சந்தனம் உலர்ந்து சிந்தச்சென்று, வனமங்கையர்போல் சார்ந்தார் - வனத்தில் வாழுந் தெய்வமகளிர்போலச் சேர்ந்தார்கள்.

Koviloor Digital Library

பொழில்வாய் இரண்டனுருபு நிற்குமிடத்து ஏழனுருபுநிற்றலால் உருபு மயக்கம். (உ௬)

ஏமாசலமென்முலையார்நடையோவியமேயென்னப்
பூமாதவிசேர்வாரும்புன்னைநிழல்சேர்வாருந்
தேமாநிழல்சேர்வாருஞ்செருந்திநிழல்சேர்வாருங்
காமாயுதசாலைகள்போற்கைதைநிழல்சேர்வாரும்.

(இ-ள்.) ஏமாசலம் என் முலையார் - மேருவோவென்று மருளுந் தனங்களையுடைய பெண்களும், நடை ஓவியம் ஏ என்ன - நடைகற்ற சித்திரப்பாவையேயென்று கண்டோர்சொல்ல, பூ மாதவி சேர்வாரும் - பூக்கள்மலர்ந்த குருக்கத்திமரநிழலிற் சேர்கின்றவர்களும், புன்னை நிழல் சேர்வாரும் - புன்னைமரநிழலிற் சேருகின்றவர்களும், தேமா நிழல் சேர்வாரும் செருந்தி நிழல் சேர்வாரும் - மாமரநிழலிற் சேருகின்றவர்களும் செருந்திமரநிழலிற் சேருகின்றவர்களும், காமாயுத சாலைகள் போல் - மன்மதனுடைய அம்புகளைப்பரப்பிய ஆயுதசாலைகள்போல மலர்ந்த, கைதை நிழல் சேர்வாரும் - தாழையினிழலிற் சென்றடைவோரும். (உ௭)

கோடும்பிறைவாணுதலார்குழலைக்கருவிக்காரென்
றாடுந்தோகையவர்கண்ணோக்கிக்கணையென்றஞ்சி
யோடுங்கொடியினன்னாருருமாந்தளிரென்றயில்வா
னாடுங்குயிலன்னவர்பண்ணிசைகேட்டொதுங்கிநாணும்.

(இ-ள்.) கோடும் பிறை வாள் நுதலார் குழலை - வளைந்த பிறையையொத்த ஒள்ளியநெற்றியையுடைய பெண்களது கூந்தலை, கருவி கார் என்று தோகை ஆடும் - உலகிற்குத் தண்ணிக்காரணமாகிய குன்முதிர்ந்த மேகமென்று கருதி மயில்களாடும், அவர்கண் நோக்கி கணையென்று அஞ்சி ஓடும் - அம்மாதர்கள் கண்களைப்பார்த்து அம்பென்று கருதியஞ்சி ஓடாநிற்கும், கொடியின் அன்னார் உரு - பூங்கொடியையொத்த அப்பெண்களது வடிவத்தை, மாந்தளிர் என்று அயில்வான் - மாந்தளிரென்று கோதியுண்ண, நாடும் குயில் - நாடிவந்த குயில்கள், அன்னவர் பண் இசை கேட்டு ஒதுங்கி நாணும் - அவ்விடத்து அம்மாதர்கள் பாடும் பண்ணைக்கேட்டுத் தளர்ந்தொதுங்கி நாணமுறும்.

கூந்தலை மேகமாகவும் கண்ணையம்பாகவும் வடிவைமாந்தளிராகவும் மயிலுங் குயிலுங்கண்டு மயங்கின எனக் கூறுதலால் மயக்கவணி. (உ௮)

நீடுந்தரங்கமிரங்குநிறைநீர்நிலையேயன்றிப்
பாடுஞ்சுரும்புண்கழுநீர்பைந்தாட்குமுதம்பதுமந்
கோடும்பூத்தவென்னக்கொடியேரிடையார்குழையுந்
தோடுங்கிடந்தவதனத்தொகையாற்பொலிவசோலை.

(இ-ள்.) நீடும் தரங்கம் இரங்கும் - நீண்ட அலைகளொலிக்கும், நிறை - நிறைந்த, நீர் நிலையே அன்றி - மலரோடைகளேயல்லாமல், பாடும் சுரும்பு உண் கழு நீர் பைந்தாள் குமுதம் பதுமம் - இசைபாடும் வண்டுகள் மதுவுண்ணுங் குவளையையும் பசியதண்டையுடைய ஆம்பலையுந் தாமரைகளையும், கோடும் பூத்த என்ன - பூங்கொம்புகளும் பூத்தனபோல, கொடி ஏர் இடையார் - பூங்கொடிபோன்ற அழகிய இடையையுடைய பெண்களது, குழையும் தோடும் கிடந்த வதனம் தொ

Koviloor Digital Library

கை ஆல் - குண்டலத்தையும் தோட்டையும் அணிந்த முகசமூகங்களால், சோலை பொலிவ - சோலைகள் விளங்குகின்றன.

பெண்கள்முகம் தாமரையும், கண்குவளையும், வாய்ஆம்பலும் ஆக உவமான ச்சொல்லால் உவமேயத்தை யிலக்கணையாகச்சொல்லுதலால் உருவகவுயர்வு நவிற்சி யணியும், பூங்கொம்புகளிவைகளைப் பூத்தாற்போலெனக் கூறுதலால் அபூதவுவமை யணியும் விரவிநிற்றலால் சங்கீரணவணி. (௨௯)

பிடிகளென்னநடந்தாருடன்போய்க்கொழுநர்பெருந்தண்
கொடிகண்மிடைந்தவில்லிலியக்கர்போலக்குறுகிக்
கடிகொள்பனிநீர்தெளித்துவேடைதணித்துங்கன்று
மடிகள்பிடித்துஞ்சேடியவர்கைக்குதவியாவார்.

(இ-ள்.) கொழுநர் - தலைவர்கள், பிடிகள் என்ன நடந்தார் உடன் போய்-பெண்யானைகளைப்போல அதிராத நடையால் நடந்த தத்தமக்குரிய மனைவிமாரோடு சென்று, பெருந்தண் கொடிகள் மிடைந்த இல்லில் - மிக்கதண்ணிய பூங்கொடிகள் கட்டுக்கோப்புப்போல நெருங்கிய வீடுகளில், இயக்கர் போல குறுகி - யக்ஷர்கள் போலக் குடிபுகுந்து, கடி கொள் பனி நீர் தெளித்து வேடை தணித்தும் - வாசமிக்க பனிநீர்வீசி வெப்பந்தணித்தும், கன்றும் அடிகள் பிடித்தும் - நடத்தலால் கன்றிய அவர்கள் சிற்றடியைத்தடவியும், சேடியவர் கைக்கு உதவி யாவார்-தோழியர்கள் தமது கைகளாற் செய்யும் சிரமபரிகாரத்தைத் தாம் செய்து அவர்கைக்கு வரும் வருத்தந் தவிர்ப்பார்கள். (௩௦)

மைவார்தடங்கண்மடவார்வளைப்பாரகொம்பின்மலரைக்
கொய்வார்குமிழ்மோந்துயிர்ப்பார்குழையுஞ்செவியுங்குழலும்
பெய்வார்மகிழ்ச்சிசெய்வார்பேராமையல்கூர
வெய்வார்கணைபோற்றைப்பக்கொழுநர்மார்பத்தெறிவார்.

(இ-ள்.) மைவார் தடகண் மடவார் வளைப்பார் - மையெழுதிய நீண்ட பெரியகண்களையுடைய பெண்கள் பூம்கொம்புகளை வணக்குவார்கள், கொம்பின் மலரை கொய்வார் - அப்பூங்கொம்பிலுள்ள மலர்களைக் கொய்வார்கள், குமிழ் மோந்து உயிர்ப்பார் - குமிழம்பூவையொத்த நாசியில்மோந்து மூசுவார்கள், குழையும் செவியும் குழலும் பெய்வார் - குண்டலத்திலும் காதுகளிலுங் கூந்தல்களிலும் சூடுவார்கள், மகிழ்ச்சி செய்வார் - தத்தங் கணவர்களுக்கு மகிழ்ச்சிவிளைப்பார்கள், பேராத மையல் கூர - நீங்காத காமமீக்கூர, எய்வார் கணை போல் தைப்ப - மன்மதனெய்யும் நெடிய அம்புபோலப் பாய்ந்துருவ, கொழுநர் மார்பத்து எறிவார் - தங்கணவர் மார்பிலெறிவார்கள்.

மலர்சூட்டலும் எறிதலுங் கலவிக்குறிப்பை யுணர்த்திநிற்றலால் நுட்பவணி.

முத்தேர்நகையார்வளைப்பமுகைவிண்டலர்பூங்கொம்பர்ப்
புத்தேள்வண்டும்பெடையும்புலம்பிக்குழலிற்புகுந்து
தெத்தேயெனப்பாண்செய்துதீந்தேனருந்துந்துணையோ
டொத்தேழிசைபாடிக்களிநுண்ணும்பாணரொத்தே.

(இ-ள்.) முத்து ஏர் நகையார் வளைப்ப - முத்தினையொத்த அழகிய பற்களையுடைய பெண்கள் வணக்க, முகை விண்டு அலர் பூங்கொம்பர் புத்தேள் வண்டும் பெடையும் புலம்பி குழலில் புகுந்து-அரும்புகள் முறுக்கவிழ்ந்த மலரும் பூங்கொம்புகளிலுள்ள புதுமைவிளைக்கும் ஆண்வண்டுகளும் பெண்வண்டுகளும் நிலைகுலைந்து

Koviloor Digital Library

அவர் அளகாபாத்திரத்திற் குடியேறி, தெத்தே என பாண் செய்து - தெத்தேயென்று பண்பாடி, தம்மையொடு ஒத்த எழிசை பாடி கள் உண்ணும் பாணர் ஒத்த நிற்பேன் அருந்தும் - தமது மனைவியரோடு ஒருசேர குரல்முதலிய எழிசைகளையும்பாடிக் கள்ளிற்போர் பரிசிலாகத் தருமது வினையுண்ணும் பாணர்களையொத்து இனிய மதுவையுண்ணுகிற்கும்.

பாணர்போல இசைபாடியதற்குமாறுகக்கொடுத்தகள்ளுண்ணும் எனக்கூறியது மாற்றுநிலையணி. (௬௨)

ஷ வேறு.

இம்பர்வீடளிக்குந்தெய்வமகளிரேயென்பார்கூற்றம்
வம்பலமெய்யேபோலும்வளைக்கையார்வளைப்பத்தாழ்ந்து
கம்பமுற்றடிப்பூச்சிந்திமலர்முகங்கண்ணீர்சோரக்
கொம்பரும்பணிந்தவென்றாலுலகியல்கூறற்பாற்றோ.

(இ-ள்.) இம்பர் வீடு அளிக்கும் தெய்வ மகளிரோ என்பார் கூற்றம் வம்பு அல்ல மெய்யே போலும் - (இப்பெண்கள்) இந்நிலவுலகில் மோட்சசுகந்தரும் தெய்வப்பெண்களே யென்று கூறுவார்சொல் பொய்யல்ல மெய்ம்மையே, வளை கையார் வளைப்ப தாழ்ந்து - வளையலையணிந்த முன்கையையுடைய பெண்கள்வளைக்க வளைந்து, கம்பம் உற்று - நடு·கி, அடி பூசிந்தி - (அவர்கள்) காலில் மலர்சிதறி, மலர் முகம் கண்ணீர் சோர - மலராகிய முகமானது கண்ணீர்சிந்த, கொம்பரும் பணிந்த என்றால் - பூக்கொம்புகளும் வணங்கின ஆனால், உலகு இயல் கூறல் பாற்றோ - உலகிலுள்ள மக்களி·மையைக் கூறவேண்டுமோ.

கண்ணீர் கணணினின்றொழுகு நீர், கள்ளாகியநீர் எனப்பொருள்கொள்க. இது பெண்களின் வனப்பு மிகுதியைக் கூறுதலால் மிகுதி நவிற்சியணி. (௬௩)

மைக்கணொருத்திவெட்டாநிமிர்கொம்பைவளைக்குந்தோறுங்
கைக்குநேர்படாமைவாடுங்கடிமலர்க்கொடிபோனிற்பத்
தைக்கும்பூங்கணைவேளன்னுனொருமகன்றலைப்பட்டென்னை
யெய்க்கின்றாய்தோண்மேலேறிப்பறியெனவேந்திநின்றான்.

(இ-ள்.) மை கண்ணாள் ஒருத்தி - மையெழுதிய கண்களையுடைய ஒருமாது, எட்டாத நிமிர் கொம்பை - எட்டாமல் நிமிர்ந்த பூங்கொம்பினை, வளைக்குந் தோறும் - வளைக்குந்தோறும், கைக்கு நேர் படாமை (அப்பூங்கொம்பு) கைக்கு எட்டாமையால், வாடும் கடி மலர் கொடி போல் நிற்ப - வாட்டமுற்ற வாசமிக்க பூங்கொடிபோலச் சோர்ந்துநிற்க, தைக்கும் பூங்கணை வேள் அன்னான் ஒரு மகன் தலைப்பட்டு - பாய்ந்துருவு மலரம்பினையேந்திய மன்மதனையொத்த ஒரு விடன் எதிர்ப்பட்டு, என்னை எய்க்கின்றாய் - என்ன நீ யிளைத்திருக்கின்றாய், தோள் மேல் ஏறி பறி என ஏந்தி நின்றான் - என்தோளின்மேலேறி மலர் கொய்யென்று தோள்கொடுத்து நின்றனன்.

வேளன்னானொருமகன் என்றமையால் இதனால் வரைவின்மகளிர் செயல் கூறப்பட்டது. இது கலவியையுணர்த்தி நிற்றலால் உதாரஅணி. (௬௪)

தையலாளொருத்திவெட்டாமலர்க்கொம்பைத்தளிர்க்கைநீட்டி
யையநின்மருங்குறேவவருந்தலுமாற்றுக்கேள்வ
னெய்யெனவிதுவுமென்னையூடியமகளிரோயோ
கொய்யெனவளைத்துநின்றான்கண்முத்தங்கொழிப்பநின்றாள்.

Koviloor Digital Library

(இ-ள்.) தையலாள் ஒருத்தி - ஒருபெண், எட்டாத மலர்க் கொம்பை - தன் கைக்கெட்டாத பூங்கொம்பினை, தளிர் கை நீட்டி-மாந்தளிர்போல மென்மைவாய்க் த கைகளைநீட்டி., ஐயம் நுண் மருங்குல் நோவ வருந்தவும் - (காண்போர்க்கு உண் டோ இல்லையோவென்னும்) ஐயம் விளைக்கும் நுண்ணிய இடைவருந்த மெய்வருந்தி வளைக்க முயலவும், ஆற்றாத கேள்வன்-(அதுகண்டு) சற்றும் பொறாதகணவன், ஒய் யென-விரைந்துசென்று, என்னை-என்ன, இதுவும்-இப்பூங்கொம்பும், ஊடிய மகளி ரேயோ - கணவனொடு பிணங்கியபெண்ணோ, கொய் என வளைத்து நின்றான் - ம லர்கொய்யா யென்று அக்கொம்பினை வளைத்தான், கண் முத்தம் கொழிப்ப நின்றா ள் - கண்கள் முத்தம்போல நீருகும்படி புலந்து நின்றனள்.

கலவியினும் புலவி பெரிதெனக் கருதியதலைமகன் ஆதலால் தலைவிபுலத்தற் கேதுவாகக் கூறினனாதலால் என்னை இதுவும் ஊடியமகளிரேயோ எனவும், அவன் இன்பங் காரணமாகக் கூறியதுணராது பரத்தையர்பாற்கூடிய வின்பத்தைப்புக ழ்ந்துபேசின னெனக்கருதினளாதலால் கண்முத்தங்கொழிப்ப நின்றாள் எனவுங் கூறினர். ஒருவழிக்காரண நிகழப் பிறிதொருவழிக்காரியம் நிகழ்ந்தமை கூ றுதலால் தூரகாரிய வேதுவணி. ௫ (௩௫)

மைக்குழலொருத்திகாதில்வட்டப்பொன்னோலையூடே
திக்கயமனையான்கொய்தசெருந்திப்பூச்செருகிநோக்கி
யிக்குழையழகிதென்றானிடுவெங்கைக்கிடுதியென்று
வக்குழையோடும்வீசியன்பனுக்கலக்கண்செய்தாள்.

(இ-ள்.) மை குழல் ஒருத்தி-மேகம்போலக் கரிய கூந்தலையுடைய ஒருபெண், காதில் வட்டம் பொன் ஓலை ஊடு ஏ-காதிலணிந்த வட்டவடிவாகப் பொன்னாற்செ ய்த தோட்டில், திக்கயம் அனையான் கொய்த-திக்குயானையையொத்த ஒரு ஆடவன் தான் கொய்த, செருந்திப்பூ செருகி நோக்கி-செருந்திப் பூவினைச் செருகிப்பார்த்து, இ குழை அழகிது என்றான் - நான் இப்பொழுது சூட்டிய குண்டலம் சீரிதாயுள்ள தெனக் கூறினன், எங்கைக்கு இடு இடுதி என்று-இக்குண்டலத்தை யென் தங்கை க்கிடுவாய் இடுவாயென்று, அ குழையோடும் வீசி-அக்குண்டலத்தோடுந் தோட்டி னைவீசி, அன்பனுக்கு அலக்கண் செய்தாள் - தனது கணவனுக்குத் துன்பஞ்செய்த னள்.

தன்பாற்கொண்ட வூடல்நீக்கி, மகிழ்ச்சி யுறுத்தற்பொருட்டு மலர்கொய் து சூட்டிப் பண்டுள்ள கோலத்தினும் இது சிறந்ததென அன்புமிகையாற் றலைவன் கூறியதைக் கருத்து வேறுபடத் தலைவிகொண்டு நின்னால் விரும்பப்பட்ட பரத் தையர்க்குச் சூட்டுவாய் என்பாள் இடு எங்கைக்கிடுதி யென்று என்றாள். ஓர் தொழிற்குணம் பிறிதோர் தொழிற்குணமாகக் கருதநிற்றலால் பிறிதின் குணம்பெ றலணி. (௩௬)

மயிலிளம்பெடையன்னாளோர்மாதர்மாங்குடம்பைசெல்லுங்
குயிலிளம்பெடைதன்னாவிச்சேவலைக்கூவநோக்கிப்
பயிலிளங்களிறன்னானைக்கடைக்கணித்தரியுக்தேறும்
பயிலிளஞ்சோலைமாடோர்மாதவிப்பந்தர்சேர்ந்தாள்.

(இ-ள்.) இளமை பெடை மயில் அன்னாள் ஓர் மாதர் - இளமைதங்கிய பெ ண்மயிலையொத்த ஓர் பெண், மாகுடம்பை செல்லும் இளமை பெடை குயில்-

மாமரத்திற் செற்றிய கூண்டிற் செல்லாநிற்கும் இளமைதங்கிய பெண்குயில், தன் ஆவி சேவலை கூவ - தனதுயிரையொத்த சேவற்குயிலினைக்கூவ, நோக்கி (அதனை) பார்த்து, அயில் இளமை களிறு அன்னானை கடைக்கணித்து - வேலேந்திய முதிரா தருண்யானையையொத்த தனது கணவனுக்குக் கடைக்கண்ணாற் சமிக்ஞைசெய்து, அளியும் தேனும் பயில் இளமை சோலை மாடு - ஆண்வண்டும் பெண்வண்டும் தேனுண்டுகளித்தலாவும் இளஞ்சோலையின் பக்கத்துள்ள, ஓர் மாதவி பந்தர் சேர்ந்தாள் - ஒரு குருக்கத்திப்பந்தலின் கீழ்ச்சேர்ந்தனள்.

கூண்டில் செல்லுங் குயிற்பேடு சேவற்குயிலைக்கூவ, அதனையோர்பெண்ணோக்கித் தனதுகணவனைக் கடைக்கணித்து இளஞ்சோலையிற் குருக்கத்திப்பந்தலின் கீழ்ச்சென்றது கலவிக்குறிப்பை யுணர்த்தி நிற்றலால் உதாரவணி. (௩௭)

பாசிழையொருத்தியாற்றுப்புலவியாள்பைந்தாரான்முன்
பூசகில்வாசங்காலிற்போக்கியும்புனைபூண்காஞ்சி
யோசையைச்செவியிலுய்த்துங்கலவியினுருவந்தீட்டுந்
தூசினையுடுத்தும்போர்த்துந்தூதுவிட்டவள்போனின்றாள்.

(இ-ள்.) பாசு இழை ஒருத்தி - பசிய ஆபரணத்தையணிந்த ஒருபெண், ஆற்றாத புலவியாள் - ஊடலைச் சிறிதும் தணியாத ஊடலையுடையவளாகி, பைந்தாரான் முன் - பசிய கண்ணிச் சேர்ந்த தனது தலைவன்முன், பூசு அகிலில் வாசம் காலில் - பணிந்த அகில் மாலையையணிந்த குழம்பின் வாசத்[illegible] காற்றால் செலுத்தியும், போக்கியும் - தான்பூசிய அகிற்குழம்பைக் [illegible] - தானிடையிற்கட்டிய காஞ்சியை பூண் காஞ்சி ஓசையை செவியில் உய்த்தும் - தானிடையிற்கட்டிய காஞ்சியென்னும் ஓராபரணத்தினொலியையவன் செவியிற்செலுத்தியும், கலவியின் உருவம் தீட்டும் தூசினை உடுத்தும் போர்த்தும் - புணர்ச்சியிலுருவமெழுதிய ஆடையையுடுத்தும் போர்த்தும் (நிற்றலால்,) தூது விட்டவள் போல் நின்றாள் - தூதனுப்பினவள் போனின்றனள்.

கலவியிலுருவம் - அவது "பற்குறிநகக்குறிகள் பாணிகொடுதட்டல் - நற்கமிழ்துதுய்த்தல் களிகன்கெழுவணைத்தல்" எனவரும் செய்யுளால் உணர்க. தன் கணவனிடத்துச் சிறிதுந் தவறில்லாதிருக்க இன்பக் காரணமாகப் புலந்தனள் என்பது தோன்ற நிற்றலால் குறிப்பெச்சம். இதுவும் உதாரவணியுளடங்கும். (௩௮)

வாய்ந்தநாண்மலர்கொய்திவான்மெய்யிலம்மலர்த்தேந்தாது
சாந்தமான்மதம்போற்சிந்திக்கிடப்பவோர்தையல்யாரைத்
தோய்ந்தசாந்தென்றாளுள்ளத்துன்னையுஞ்சுமந்துகொய்த
வாய்ந்தசண்பகத்தாதென்றானெய்சொரியழலினின்றாள்.

(இ-ள்.) வாய்ந்த நாள் மலர் கொய்து ஈவான் மெய்யில் - மணம்வாய்ந்த அன்றலர்ந்த மலர்களைக்கொய்து தனது மனையாளுக்குக் கொடுக்கும் ஓராடவன் உடம்பில், அ மலர் தேந்தாது - கோய்யும் அம்மலரின் மணமிக்க மகரந்தம், சாந்தம் மான் மதம் போல் சிந்தி கிடப்ப - சந்தனத்திற்கலந்த மிருகமதம்போலச் சிந்திக்கிடக்க, ஓர் தையல் - ஒப்பில்லாத அம்மாது (அதனைக்கண்டு) யாரை தோய்ந்த சாந்து என்றாள் - எம்மாதுகூட்டத்தில் வந்த கலவையென்று வினவினாள், உள்ளத்து உன்னையும் சுமந்து கொய்த - என்மனத்தில் உன்னையும் சுமந்து மலர் கொய்தலால், ஆய்ந்த சண்பகம் தாது என்றான் - ஆராய்ந்த சண்பகத்தின் மகரந்தமென்று கூறினான், நெய் சொரி அழலின் நின்றாள் - நெய்சொரிந்து மூட்டிய நெருப்புப்போல ஊடல் முதிர்ந்து நின்றனள்.

Koviloor Digital Library

தன் தலைவிமேற்கொண்ட அன்பு மிகையால் கற்புடை மங்கையர் பலருள்ளும் தன் தலைவியை யுயர்த்திக் கூறுவான் உயர்வுசிறப்பும்மை தந்து உன்னையும் என, தலைவி கலவியின்பத்தின்பொருட்டு ஊடலின்மேற்சென்ற கருத்தினளாதலால் பரத்தையருமன்றியென இறந்தது தழீஇய எச்சவும்மையாக்கினள் என்பார்கவர் பொருள்பட உன்னையும் எனவும், தலைவன்மலர் கொய்யும்போது தன் தலைவிக்கியைந்த மலர்களிவை யிவையென ஆராய்ந்து கொய்தான் என்பார் சுமந்து எனவும், கற்புடை மகளிர் மணம் சண்பகமலர்போலும் வாசம்வாய்ந்ததென்பார் ஆய்ந்த சண்பகத்தாதென்ருன் எனவுங் கூறினர். "பங்கினையினையவர் பயிலிடமலினார் - கந்தனையனையவர் கலைதெரிகழகம் - சந்தனவனமல சண்பகவனமாம் - நந்தனவனமல நறைவிரிபுறவம்" எனவருஞ் செய்யுளாலுணர்க. (௩௯)

பிணியவிழ்கோதையாளோர்பேதைதன்பதிதன்னூட
றணியவந்தடியில்வீழத்தன்னிழலனையான்சென்னி
மணியிடைக்கண்டுகங்கைமணாளனையொப்பீரெம்மைப்
பணிவதென்னென்றுநக்குப்பரிவுமேற்பரிவுசெய்தாள்.

(இ-ள்.) பிணி அவிழ் கோதை யாள் ஓர் பேதை - கட்டவிழ்ந்த மலர்மாலையணிந்த ஒருபெண், தன் ஊடல் தணிய தன் பதி வந்து - தனதூடலைத் தணிவிக்க யாற்றத் தனது தலைவன் வந்து, அடி இல் வீழ - தன் பாதத்தின்மேல்விழ, தன் நிழல் அனையான் சென்னி மணி இடை கண்டு - அத்தலைவன் தலையிலணிந்த சூடாமணியிற் பிரதிபிம்பித்தலைக்கண்டு, கங்கை மணாளனை ஒப்பீர் (என்னையறியாது ஓர் பெண்ணைத் தலையிலொளித்து வைத்திருத்தலால் உமையாருணராமல்) கங்கையைச் சடையிற்கரந்த் இறைவனை யொப்பீர், எம்மை பணிவது என் என்று-எம்மை வந்து வணங்குவது யாது காரணமென்று, நக்கு-அசதியாடி, பரிவு மேல் பரிவு செய்தாள் - கணவன்கொண்ட துன்பத்தின்மேல் மற்றோர் துன்பமும் விளைத்தாள்.

இன்பங் காரணமாகப் பணிந்த தலைவன் பின்னுந் துன்பமிக்கூர அசதியாடுதலால் நக்குப்பரிவுமேற் பரிவுசெய்தாள் என்றார். தன்னிழலனையான் சென்னிமணியிடைக்கண்டு கங்கைமணாளனை யொப்பீர் என்ற வாக்கியத்திலுள்ள அடைமொழிகளால் அல்பொருட்செய்தி தோன்றக் கூறினமையால் சுருங்கச்சொல்லலணி. ௪0

மதுகைவாளொருவனங்கோர்மங்கைதன்வடிவைநோக்கிப்
பதுமமேயடிகைகாந்தள்பயோதரங்கோங்குகாவிப்
புதுமலர்விழிவாயாம்பற்போதுநும்மூரலெப்போ
ததனைவாய்திறந்துகாட்டிப்போமினென்றடுத்துநின்ருன்.

(இ-ள்.) மதுகை வாள் ஒருவன் - வலிய வாளினையேந்திய ஓராடவன், அங்கு ஓர் மங்கை தன் வடிவம் நோக்கி - அவ்விடத் தெதிர்ப்பட்ட ஓர் பரத்தையின் வடிவத்தைப் பார்த்து, அடி பதுமம் ஏ - உமதுகால் தாமரைமலரே, கை காந்தள் ஏ - உமது கைகள் காந்தள் மலரோ, பயோதரம் கோங்கே - உமது கொங்கைகள் கோங்கரும்புகளே, விழி காவி புதுமலர் ஏ - கண்கள் நீலோற்பலமலரே, வாய் ஆம்பல் போது ஏ-வாய் ஆம்பல் மலரோ, நும்மூரல் எப்போது - உமது தந்தபங்தி எந்தமலர், அதனை-அம்மூரலை, வாய் திறந்து காட்டி போமின் என்று-உமது வாயைத்திறந்து காட்டிப் போங்கொள்று, அடுத்து நின்ருன் - சமீபித்தெதிர் நின்றனன்.

Koviloor Digital Library

பரத்தையபாலின்பம் பெறக் கருதினேன் அவ்வின்பம் பெறுதற்கு ஏதுவா கிய புன்னகை பெருமையால் புன்னகைபெற ஏனையவையங்களை மலர்களாக உருவ கஞ்செய்து இதனை யுருவகஞ்செய்யும் ஆற்றலில்லேன் ஆதலின் அக்குறைபாடொ ழிய முறுவலைக்காட்டென்பான் நும்முரலெப்போ தகனை வாய்திறந்து காட்டிப் போமின் என்றான். இன்பங் காரணமாக நிகழ்ந்த குணத்தை மற்றொரு காரணத் தைக் கூறி மறைத்தலால் இது வஞ்சநவிற்சியணி. (௪௧)

விடைத்தனியேறன்னானோர்விடலையோர்வேற்கணாண்முன்
கிடைத்துநும்மிடத்தென்னெஞ்சங்கெட்டுவந்தொளித்ததல்குற்
றடத்திடையொளித்ததேயோதனத்திடையொளித்ததோபூம்
படத்தினைத்திறந்துகாட்டிப்போகெனப்பற்றிச்சென்றான்.

(இ-ள்.) தனி விடை ஏறு அன்னான் ஓர் விடலை - ஒப்பில்லாத காளையை யொத்த ஒருவிடன், ஓர் வேல் கண்ணாள் முன் கிடைத்து - ஒருவேல் போன்ற க ண்களையுடைய பரத்தையின் முன் எதிர்ப்பட்டு, நும் இடத்து - உம்மிடத்தில், எ ன் நெஞ்சம் கெட்டு வந்து ஒளித்தது - என்றுடைய மனம் என்னினின்று நீங்கிவ ந்து உம்பால் வந்தொளித்தது, அல்குல் தடத்து இடை ஒளித்ததேயோ - (அது) அல்குலாகிய உயர்ந்த இடத்திலொளித்ததோ, தனத்து இடை ஒளித்ததோ - உம துமுலைகளின் நடுவிலொளித்ததோ; பூ படத்தினை திறந்து காட்டி போக என - (இவற் பணிந்த) ஆடையிலொளித்ததோ ஆடையைத்திறந்து காட்டிப் பின்னர்ப் போகக்கட வீர் என்று, பற்றி சென்றான் - அவளை பின்பற்றிப் போயினன்.
றை மறைத்த) பொலிவமைந்த பூவேலைப்பாடமைந்த

புணர்ச்சிமேற் சென்ற தனது கருத்தினை வெளிப்படையாகக் கூறுதலால் இது வெளிப்படை நவிற்சியணி. (௪௨)

மாந்தளிரடியார்சாய்ப்பவளைந்தபூஞ்சினைவண்டன்னார்
கூந்தலிற்கிடந்தசெம்மற்கோதைமேல்விழ்ந்தகற்பி
னேந்திழையவரைநீத்துப்பலர்நுகர்ந்தெச்சிலாக்கும்
பூந்தொடியவரைத்துய்க்கும்பேதையர்போன்றதன்றே.

(இ-ள்.) மாந்தளிர் அடியார் சாய்ப்ப-மாந்தளிர்போன்ற மெத்தென்ற பாத ங்களையுடைய பெண்கள்வளைக்க, வளைந்த பூ சினைவண்டு-வளைந்த மலர்க்கொம்பிலு ள்ளவண்டுகள், அன்னார் கூந்தல் இல் கிடந்த-அப்பெண்களுடைய அளகபாரத்திலி ருந்த, செம்மல் கோதை மேல் விழ்ந்த - பழம் பூமாலையின்மேல் விழ்ந்தன (அவ்வீ ழ்ச்சி,) கற்பு இன் - கற்பினையுடைய, ஏந்திழையவரை நீத்து-இல்லறக்கிழத்தியரைக் கைவிட்டு, பலர் நுகர்ந்த எச்சில் ஆக்கும் - பலருந்தினைத்த எச்சிலாக்கிய, பூ தொ டியவரை துய்க்கும் பேதையர் போன்றது-பொலிவினையுடைய வளையலையணிந்த வி லைமாதரின்பத்தை நுகரும் அறிவினரை யொத்திருந்தது.

கொம்பிலுள்ள மலரைக் கற்புடைமகளிராகவும் கூந்தலிலுள்ள மலரை வி லைமாதராகவும் உவமைச்சேர்ப்பப் பொருளையும் விரித்து ஒருவமவாசகந்தோன்றக் கூறினமையால் ஒருவமைப்போலியுவமையணி. (௪௩)

கலிவிருத்தம்.

புல்லியமைந்தர்பொருள்கவர்ந்தாரென
வல்லியன்னமடந்தையர்கொய்தலி

Koviloor Digital Library

னல்லிநாண்மலரற்றபின்கைப்பொரு
ளில்லியென்னவிளைத்தனகாவெலாம்.

(இ-ள்.) புல்லி-தழுவி, மைந்தர் - ஆடவர் கையிலுள்ள, பொருள் கவர்ந்தார் என்ன - பொருளைக்கவர்ந்த விலைமாதரைப்போல, வல்லி அன்ன மடந்தையர் - பூங்கொடியையொத்த பெண்கள், கொய்தலின் - கொய்தலால், அல்லி நாள் மலர் அற்றபின் - அகவிதழையுடைய அன்றலர்ந்த மலர்களை ஒழிந்தபின், கை பொருள் இல்லி என்ன - கைப்பொருள் வறந்த வறியன்போல, கா எல்லாம் இளைத்தன-சோலைகளெல்லாம் வறங்கூர்ந்தன.

இழிந்த விலைமாதரைக் குலமகளிர்க்கு உவமையாகக்கூறியது உவமைவழுவாயினும் பூக்கொய்தலிற் பெரிது முயன்றனர் என்னுங் குணமிக்குத் தோன்றுதலால் வழுவன்றென்க. (௪௪)

மையுண்கண்ணியர்மைந்தரொடம்மலர்
கொய்யுஞ்செல்வநுகர்ந்துகொழுங்கணு
மெய்யுந்தோயிற்கொழுநரின்வேற்றுமை
செய்யும்பொய்கைதிளைப்பச்சென்றாரரோ.

(இ-ள்.) மை உண் கண்ணியர்-மையெழுதிய கண்களையுடைய பெண்கள், மைந்தரொடு - புருடரோடு, அமலர் கொய்யும் செல்வம் நுகர்ந்து-அம்மலர் கொய்யுஞ் செல்வத்தைப் பெரிதுந்தினைத்து, தோயில்-கலந்தால், கொழுங்கண் உம்மெய் உம்-மதர்த்த கண்களையும் உடம்பையும், கொழுநரின் - கணவரைப்போல, வேற்றுமை செய்யும் - வேறுபாடு செய்யும், பொய்கை திளைப்ப சென்றார் - பொய்கையில் நீராட்டயரச்சென்றார்கள்.

நீராட்டயர்ந்தோர்க்குக் கண் செவப்பும் உடம்பலசலும் பொய்கை தருதலால் கலந்த பெண்களுக்குக் கண் செவப்பும் உடம்பலசலுந் தருங் கணவரையொத்தது என்பார் ஒப்புப்பொருளில்வந்த இன்னுருபுதந்து கணவரின் வேற்றுமை செய்யும் என்றார். இது பெருங்காப்பியத்தின் ஒருறுப்பாகிய புனல் விளையாட்டு. (௪௫)

அன்னமன்னவராடுங்கயந்தலை
நன்னர்நீலநளினங்குமுதமென்
றின்னவன்றியெழின்முல்லைசண்பகம்
பொன்னங்கோங்கமும்பூத்ததுபோன்றதே.

(இ-ள்.) அன்னம் அன்னவர் - அன்னத்தையொத்த நடையையுடைய பெண்கள், ஆடும் கயந்தலை - நீர்விளையாட்டயரும்பொய்கையானது, நன்னர் - கட்டிணிய, நீலம் நளினம் குமுதம் என்ற - நீலோற்பலமுந் தாமரைகளும் ஆம்பலுமென்று சொல்லப்பட்ட, இன்ன அன்றி - இம்மலர்களுமல்லாமல், எழில் முல்லை - பொலிவுமிக்க முல்லையையும், சண்பகம் பொன் அம் கோங்கமும் - சண்பகத்தையும் பொன்னிறம் வாய்ந்த அழகிய கோங்கினையும், பூத்தது போன்றது - பூத்திருத்தலை யொத்தது.

நீராட்டயரப்புகுந்த மகளிர் பற்களும் உடலும் தனமும் பொய்கையில் தோன்றுதலால் அப்பொய்கை நீர்ப்பூவன்றிக் கொடிப்பூவும் கோட்டுப்பூவும் பூத்ததையொத்தது என்பார் இன்னவன்றி யெழின்முல்லை சண்பகம் பொன்னங்கோங்

மும் என்றார். கொடிப்பூமுல்லை, எனைய கோட்டுப்பூக்கள். முல்லைபல்லும், சண்பகம்மேனியும், தனம் கோங்குமாக உவமானச்சொல்லால் உவமேயத்தை யிலக்கணையாகக் கூறுதலால் உருவகவுயர்வு நவிற்சியணி. (௬௬)

கலிநிலைத்துறை.

குரவவோதியர்கயந்தலைகுறுகுமுன்கயலு
மரவும்யாமையுமலவனுமன்னமுமகன்ற
பருவரால்களுமிரிந்தனபகைஞர்மேலிட்டு
வருவரேலெதிர்நிற்பரோவலியிழந்தவரே.

(இ-ள்.) குரவம் ஓதியர் - குராமலரையணிந்த கூந்தலையுடைய பெண்கள், கயந்தலை குறுகு முன் - நீர்நிலைக்கு வருதற்கு முன்னே, கயலும் அரவும் யாமையும் அலவனும் அன்னமும் அகன்ற - சேற்கெண்டைகளும் பாம்பும் யாமையும் நண்டும் அன்னமும் அஞ்சியொளித்தன, பருவரால்களும் இரிந்தன - பருத்தவரால் மீன்களும் விலகியோடின, பகைஞர் மேலிட்டு வருவரேல் - பகைஞர்கள் மேலெழுந்து போர்க்கு வருவார்களானால், வலி இழந்தவர் எதிர் நிற்பரோ - வன்மையில்லாதவர்கள் போர்முனையினெதிரே நிற்பார்களோ (நில்லார் என்றபடி.)

கயல்கண் [illegible] பு இடைக்கும், யாமை அல்குலுக்கும், நண்டு முழ [illegible] ரால்களுக்கும் முன்னரே தோற்று நீர்நிலையையடை ந்த [illegible], வரால்கள் முழ [illegible] ந்தமையால் அகன்ற, இரிந்தன என்றார். முன்னர்க்கூறியதை முடித்தற்குப் பின்னருலகியல்பை விதந்துகூறுதலால் வேற்றுப்பொருள் வைப்பணி. (௬௭)

பண்ணெனுஞ்சொலார்குடைதொறும்பன்மலர்வீழ்ந்த
தண்ணெனுந்திரையலைதொறுநிரைநிரைதாக்கல்
கண்ணுநீலமுமுகங்களுங்கமலமும்வாயும்
வண்ணவாம்பலுந்தத்தமின்மலைவனவனைய.

(இ-ள்.) பண் என்னும் சொல்லார் - இசையோ என்று கேட்டோர் கூறுஞ் சொற்களையுடைய பெண்கள், குடை தொறும் - மூழ்குந்தோறும், பல் மலர் - நீலோற்பலமுதலிய மலர்கள், வீழ்ந்த தண் என்னும் திரை அலை தொறும் - மேலெழுந்து வீழும் தண்ணிய அலைகளலைக்குந்தோறும், நிரை நிரை தாக்கல் - வரிசைவரிசையாக அவயவந்தோறுமோதுதல், கண்ணும் நீலமும் - கண்களும் நீலோற்பலமலர்களும், முகங்களும் கமலமும் - முகங்களுந் தாமரைகளும், வாயும் வண்ணம் ஆம்பலும் - வாய்களுஞ் செந்நிறம்வாய்ந்த ஆம்பல்களும், தத்தம் இல் மலைவன அனைய - தங்கள் தங்களுக்குள்ளே போர்செய்தலை யொத்திருந்தன. (௬௮)

கூழைபாசியின்விரிந்திடமகிழ்ந்துநீர்குடையு
மாழையுண்கணார்கொங்கையுமுகங்களுமருங்கர்
சூழரும்பொடுமலர்ந்தசெந்தாமரைத்தொகுதி
யாழ்தரங்கநீரிடைக்கிடந்தலைவனவனைய.

(இ-ள்.) கூழை - கூந்தலானது, பாசியின் விரிந்திட - பாசிக்கொத்தைப் போலப் பரந்துதோன்ற, மகிழ்ந்து நீர் குடையும் மழை உண் கண்ணார் - மனமகிழ்ந்து நீராடும் மாவடுவின்பிளவை வென்ற கண்களையுடைய பெண்களுடைய, கொங்கையும் முகங்களும் - தனங்களுமுகங்களும் அசைதல், மருங்கர் - அவர்கள் பக்

Koviloor Digital Library

கலில், சூழ் அரும்பு ஒடு - சூழ்ந்த மொட்டுகளோடு, மலர்ந்த செந்தாமரைதொகுதி, மலர்ந்த செந்தாமரைகளின் கூட்டம், ஆழ் தரங்கம் நீர் இடை கிடந்து - ஆழ்ந்த அலைகளையுடைய நீரில்கிடந்து, அலைவன அன்ன - அசைதலை யொத்திருந்தன.

தூயநீர்குடைந்தேறுந்தன்றுணைவியைத்துணைவன்
வாயுங்கண்களும்வேறுற்றவண்ணங்கண்டென்க
ணேயவின்னுயிரனையவளெங்குளாளென்றான்
காயும்வேற்கணாள்முலைகுளிப்பாட்டினாள்கண்ணீர்.

(இ-ள்.) தூய நீர் குடைந்து ஏறும் தன் துணைவி ஐ - புனிதமாகிய நீரில்மூழ்கிக் கரையேறுந் தனது மனைவியை, துணைவன் - நாயகன், வாயும் கண்களும் வேறுற்ற வண்ணம் கண்டு - அவள் வாயுங் கண்களும் வேற்றுநிறமடைந்த வகையைக்கண்டு, என் கண் ஏய இன் உயிர் அனையவள் எங்கு உள்ளாள் என்றான் - என்னிடத்துப் பொருந்திய இனிய உயிர்போன்ற என்மனைவி யெவ்விடத்துள்ளாளோவென்று வினவினான், காயும் வேல் கண்ணாள் - கொல்லும் வேல்போன்ற கண்களையுடைய அப்பெண், கண் நீர் முலை குளிப்பாட்டினாள் - தனது கண்ணீரால் தனங்களைக் குளிப்பாட்டினாள்.

வாய் கண்கள் வேறுபடுதலாவன நீராட்டால் செந்நிறமாறி வாய் வெண்ணிறமடைதலும் வெண்ணிறமாறிக் கண் செந்நிறமடைதலுமாம். நிறமாறிய தன்மையால் தன்மனைவியை வேறொரு மாதாகக்கருதி, ஆடவரை வினவுமுறைமைபிறழ்ந்து அன்புமிகையால் வினவினான், இவன் தன்னையன்றி மற்றொருமாதிடத்தும் இவ்வாறு தானேயுளாயாடுவன் என்ற ஊடலில் முதிர்ந்தாள் என்பார் காயும் வேற்கணாண் முலை குளிப்பாட்டினாள் கண்ணீர் என்றார். (௫௰)

மங்கைநல்லவளொருத்திநீராடுவான்மகிழ்ந
னங்கைபற்றினளேகுவாளவன்குடைந்தேறும்
பங்கயக்கணாளொருத்தியைப்பார்த்தனன்சீச்சீ
யெங்கையெச்சினீராடலேனெனக்கரைநின்றாள்.

(இ-ள்.) மங்கை நல்லவள் ஒருத்தி - மங்கைப்பருவத்தையுடைய ஒருபெண், நீர் ஆடுவான் - நீராட, மகிழ்நன் அங்கை பற்றினள் ஏகுவாள் - தன் கணவனுடைய அங்கையைப்பற்றிச் செல்லுகின்றவள், அவன் குடைந்து ஏறும் - அந்நீர்நிலையில் மூழ்கிக் கரையேறும், பங்கயம் கண்ணாள் ஒருத்தியை பார்த்தனன் - தாமரைமலர்போலுங் கண்களையுடைய ஒருமாது தன்னெதிர்ப்படாநிற்கப் பார்த்தனன், எங்கை எச்சில் நீர் ஆடலேன் என்ன - இந்நீர் என்தங்கை எச்சில்செய்த நீர் இதில் நீராடேனென்று, கரை நின்றாள் - கரையிலேயே நீரில் இறங்காது நின்றனள்.

நீராடச்சென்ற இருவருள் தலைவன் தன்னெதிர்ப்பட்ட ஓர் மாதைப் பராக்காக நோக்க, தலைவி இவள் இவன் காமக்கிழத்தியாகவேண்டும் அதனாலன்றோ உவந்து நோக்கினான் என்று கருதினாள் என்பார் இகழ்ச்சிக்குறிப்புணர்த்தும் இடைச்சொற் புணர்த்திச் சீச்சி எங்கை யெச்சினீராடலே னெனக் கரைநின்றாள் என்றார். (௫௧)

வனைந்தபைங்கழலான்புனலாட்டின்மார்பி
னணிந்தகுங்குமத்தலையெறிநளினமொட்டழுந்தப்

Koviloor Digital Library

புனைந்தகோங்கையாவ்வடுப்படப்பொறித்தவள்யாரென்
றினைந்தழுங்கினளெய்சொரிபெரியெனவொருத்தி.

(இ-ள்.) வனைந்த பைங்கழலான் புனல் ஆட்டவில் – கட்டிய பசிய வீரகண்டையையுடைய தனது கணவன் நீராடுதலால், மார்பில் நனைந்த குங்குமத்து – மார்பில் நீரால்நனைந்த குங்குமச்சேற்றில், அலை எறி நளினம் மொட்டு அழுந்த – அலைகள் வீசுந் தாமரையினரும்புகளழுந்த, புனைந்த கோங்கையால் வடுப்பட பொறித்தவள் யார் என்று – முத்தாரமணிந்த தனது தனத்தால் காயம்படச் சுவடுசெய்த கமேச்சிழத்தி யெவளென்று, ஒருத்தி – ஒருமாது, நெய் சொரி எரி என – நெய் சொரிந்த தீப்போல, இனைந்து அழுங்கினள் – (கோபித்து) நொந்து வருந்தினள்.

இது பெண்கள் மடமையை யுணர்த்துதலால் உதாரவணி. (ருஙு)

வீழ்ந்தகாதலன்செய்ததீங்காகியவேலாற்
போழ்ந்தநெஞ்சினள்புலவிநோய்பொருளவன்காண
வாழ்ந்தநீரிடையழுந்துவாள்போன்றயர்ந்தயலே
தாழ்ந்தவன்னத்தைநோக்கிக்கைதாவெனவிரந்தாள்.

(இ-ள்.) வீழ்ந்த காதலன் – தன்னால் விரும்பப்பட்ட தலைவன், செய்த தீங்கு ஆகிய வேலால் – தனக்குச்செய்த தவறாகிய வேலினால், போழ்ந்த நெஞ்சினள்– பிளக்கப்பட்ட மனமுடையவள், புலவி நோய் பொருள் – ஊடல்நோய் பொருளாகி, அவன் காண – அத்தலைவன் காண, ஆழ்ந்த நீர் இடை அழுந்துவாள் போன்று – ஆழ்ந்த நீரிலழுந்துபவள்போலக் காட்டி, அயர்ந்து – சோர்ந்து, அயலேதாழ்ந்த அன்னத்தை நோக்கி – அருகில் தாமரைமலரில் தங்கிய அன்னத்தைப் பார்த்து, கைதா என இரந்தாள் – கைதாவென்று குறையிரந்தாள்.

தனது கணவன் தனக்கோர் சிறிது தவறுஞ் செய்யாதிருக்க இன்பங் காரணமாக ஊடினவள் அச்சூடன் முதிர்ந்தாள் என்பார். புலவிநோய் பொருள் எனவும், கலவிமேற் கருத்தினளாயினள் என்பார் நீரிடை யழுந்துவாள்போன்று எனவும், கைகொடேனெழயே எனக் கவர் பொருள்படக் கைதாவென விரந்தாள் எனவுங்கூறினர். கலவியை வேண்டினவள் அதனை மறைத்துப் பிறிதொன்றாக நீரிடையழுந்துவாள் போன்று அன்னத்தை நோக்கிக் கைதாளனச் சிலேடையாகக் கூறினமையால் தொழிற் பற்றிய சிலேடைய வநுதியணி. (ருஙு)

கரும்புபோன்மொழியாளொருகாரிகைவதனஞ்
சுரும்புசூழ்கமலங்களுட்கமலமாய்த்தோன்ற
விரும்புகாதலனையுற்றுமெலிந்தனன்மெல்ல
வரும்புமுல்லைகண்டையத்தினிங்கிச்சென்றணைந்தான்.

(இ-ள்.) கரும்பு போல் மொழியாள் ஒரு காரிகை வதனம் – கரும்பினிரதம்போலச் சொற்களையுடைய ஒரு மாதினுடைய முகம், சுரும்பு சூழ் கமலங்களுள்– வண்டுகள் சூழ்ந்த தாமரைக்கூட்டத்துள், கமலம் ஆய் தோன்ற–தானும் ஒரு தாமரைமலராய்ப் புலப்பட, விரும்பு காதலன் ஐயுற்று மெலிந்தனன்–அவளால் விரும்பப்பட்ட கணவன் தனது மனைவியின் முகமோ தாமரைமலரோ வென்று சந்தேகித்து வாடினன், மெல்ல அரும்பு முல்லை கண்டு – (அதுநோக்கி) அவள் மெல்ல முகிழ்த்த புன்னகையைநோக்கி, ஐயத்தின் நீங்கி சென்று அணைந்தான் – ஐயத்தினின்று நீங்கிப்போய்த் தனது மனைவியைக் கலந்தனன்.

Koviloor Digital Library

முகத்தைக் கமலமாக ஐயுற்றமையால் ஐயஅணியும், முறுவல் தோன்றினமையின் முகம் எனத் தெளிந்தமையால் தெரிதருதேற்ற வுவமையணியும் விரவுதலால் சங்கிரணவணி. (௫௪)

களித்தகாதலன்மொக்குள்வாய்த்தன்னிழல்கண்டு
தெளித்துவாணகைசெய்யமாற்றளென்றுசீறித்
தளிர்க்கைநீட்டினள்கண்டிலடடவினள்சலத்து
ளொளித்தியோவெனுவுதைத்தனள்பேதைமாதொருத்தி.

(இ-ள்.) களித்த காதலன் - தன்னால் விரும்பப்பட்ட தலைவன், மொக்குள் வாய் - நீர்க்குமிழியில், தன் நிழல் கண்டு - தனது நிழல் பிரதிபிம்பித்தலைப்பார்த்து, தெளிந்து வாள் நகை செய்ய - தனது மனைவியின் பிரதிபிம்பமெனத் தெளிந்து (அன்புமிகையால்) ஒள்ளிய புன்னகையரும்ப, மாற்றாள் என்று சீறி - (இங்குத் தோன்றுமிவள்) தன்னுடைய மாற்றாளென்று (அந்நிழலை) கோபித்து, தளிர் கை நீட்டினள் கண்டிலள் - தளிர்போன்ற மெத்தென்றகைகள் நீட்டிக் காணாது, தடவினள் - தடவிப்பார்த்து, சலத்து உள் ஒளித்தியோ என்னு - நீருள் ஒளித்தாயோ வென்று, பேதை மாது ஒருத்தி உதைத்தனள் - ஒரு பேதைப்பெண் உதைத்தாள்.

கணவன் தனது பிரதிபிம்பத்தைக்கண்டு புன்னகையரும்ப, தனது பிரதிபிம்பத்தையே மாற்றாள் எனநோக்கி மயங்கினமையால் மயக்கவணி. (௫௫)

நாறுசுண்ணமென்கலவையுநானமுந்தம்மின்
மாறிவீசிநின்றுடுவார்மாலைதாழகலத்
தூறுபாடறவந்தரத்தளிகவர்ந்துண்ப
வாறுசெல்பவர்பொருள்வௌவுமரட்டரேபோல.

(இ-ள்.) நாறு சுண்ணமும் மெல் கலவையும் - நறுமணங்கமழுஞ் சுண்ணப்பொடியையும் மெல்லிய கூட்டுவர்க்கத்தையும், நானமும்-மிருகமதத்தையும், தம் இல்-தம்முள், மாறி வீசி நின்று ஆடுவார்-மாறிமாறி ஒருவர்மேலொருவர் வீசி விளையாடும் ஆடவர் மகளிர்களுடைய, மாலை தாழ் அகலத்து-மலர்மாலை தாழ்ந்தசையும் மார்பில், ஊறுபாடு அற - தமக்கோர் கவலையில்லாமல், அந்தரத்து அளி கவர்ந்து உண்ப - (அவர்க்கு இடையே) மேலேநின்று வண்டுகள் கொள்ளைகொண்டுண்ணுதல், ஆறு செல்பவர் பொருள் வௌவும் அரட்டர் ஏ போலவ - வழியிற் செல்வோர் பொருளைக் கொள்ளையாடும் குறுநிலமன்னர் தொழிலையே யொத்திருந்தன.

இது தொழிலுவமையணி. (௫௬)

கொய்யுநீலமுங்கமலமுங்கொண்டுகொண்டநங்க
னெய்யும்வாளியினெறிவராலெறிந்திடுமெலனாக்
கையினாற்புடைத்தெறிந்தவர்கதிர்முகம்பட்டக்கண்
டையுவாணகைசெய்தகமகிழ்ச்சியுளாழ்வார்.

(இ-ள்.) கொய்யும் நீலமும் கமலமும் கொண்டு கொண்டு - தாங்கொய்த நீலோற்பலத்தையுந் தாமரையையுங் கைக்கொண்டு, அநங்கன் எய்யும் வாளியின் - மன்மதனெய்யும் அம்பைப்போல, எறிவர்-(ஆடவருமகளிரும்) எறியாநிற்பர், எதிர்

Koviloor Digital Library

றிந்த மலரை - தம்மேலெறிந்த மலரினை, கையினால் புடைத்து - கைகளால் தகைந்து தாக்கி, எதிர்ந்தவர் முகம்பட கண்டு - தம்மேலெறிந்தோர் முகத்திற்படப்பார்த்து, ஐதுவான் நகை செய்து - அழகிதாகப் புன்னகையரும்பி, அகம் மகிழ்ச்சி உள் ஆழ்வார் - மனத்திற் பொங்கியெழுந்த மகிழ்ச்சியிலழுந்துவார்கள். (௬௭)

வாசமென்பனிநீரொடுசுண்ணமும்வாரி
வீசுவாரிளம்பிடியொடுவேழமாநிரைபோற்
காசுலாந்தொடியில்லிடக்கைகளாலள்ளிப்
பூசுசாந்தவையழிந்திடப்புனிதநீரிறைப்பார்.

(இ-ள்.) வாசம் மெல் பனிநீரொடு - வாசமிக்க மெல்லிய பனிநீரோடு, சுண்ணமும் - சுண்ணப்பொடிகளையும், இளம்பிடியொடு வேழமா நிரைபோல் - இளமைதங்கிய பெண்யானையோடு ஆண்யானையின் கூட்டங்கள் நீரள்ளி வீசி விளையாடல்போல, வாரி வீசுவார் - (அவற்றை) அள்ளி வாரி (ஆடவருமகளிரும்) ஒருவர்மேலொருவர் வீசுவார்கள், காசு உலாம் தொடியில் இட கைகளால் - பதுமராகமிழைத்த வளையல் ஒளிவீசத் தமது கைகளால், புனிதம் நீர் அள்ளி - தூயநீரினையள்ளி, பூசு சாந்து அவை அழிந்திட இறைப்பார் - ஆடவர் மார்பிற்பூசிய சந்தனக்குழம்பழிய வீசுவார்கள். (௬௮)

அப்பெரும்புனற்றடங்குடைந்தாடுவாராயத்
தொப்பருந்தனியொருமகளொருவன்றன்முகத்துத்
துப்பைவென்றசெந்துவரிதழ்ச்செய்யவாய்த்தூநீர்
கொப்புளித்தனளாம்பலந்தேனெனக்குடித்தான்.

(இ-ள்.) அ பெரும்புனல் தடம் குடைந்து ஆடுவார் ஆயத்து - அந்தப்பெரிய நீர்மயமாகிய பொய்கையில் மூழ்கி நீர்விளையாட்டயரும் பெண்கள் கூட்டத்தில், ஒப்பு அருந்தனி ஒருமகள் - தன்னழகிற்கிணையில்லாத ஒருமாது, ஒருவன் தன் முகத்து - ஒரு ஆடவன் முகத்தில், துப்பைவென்ற செம் துவர் இதழ் செய்ய வாய் - பவளத்தைவென்ற செந்நிறம்வாய்ந்த இதழையுடைய சிவந்த தனது வாயினால், தூநீர் கொப்புளித்தனள் - புனிதமாகிய நீர் கொப்புளித்துமிழ்ந்தாள், ஆம்பல் அம் தேன் என்ன குடித்தான் - ஆம்பல் மலரிலுள்ள தேனிதுவென்று பருகினான்.

இதழ்ச்செவ்விதென்பது தோன்றற்கு இதழ் என வேண்டா கூறினார். (௬௯)

ஆழமவ்விடைச்செல்லலீரில்லெனவடுத்தோர்
வேழமன்னவன்விலக்குவான்போலொருவேற்க
ணேழைதன்னைக்கையால்வளைத்தேந்திவண்டறைதார்
சூழுமார்பணைத்திரதிதோடோய்ந்தவனொத்தான்.

இ-ள்.) அ இடை ஆழம் - (இறங்கும்) அந்நீரிலே ஆழமுள்ளது, செல்லலிர் இல் என - அங்குச் செல்லற்க நில்லாயென்று, ஓர் வேழம் அன்னவன் அடுத்து விலக்குவான்போல் - யானையையொத்த ஓராடவனடுத்து விலக்குவானைப்போல, ஒரு வேல் கண் ஏழை தன்னை கையால் வளைத்து ஏந்தி - வேல்போன்ற கண்களையுடைய ஒரு பெண்ணைக் கையால் வளைத்தேந்தி, வண்டு அறை தார் சூழும் மார்பு அணைத்து - வண்டொலிக்கு மாலைசூழ்ந்த தனது மார்பிலணைத்து, இரதி தோள் தோய்ந்தவன் ஒத்தான் - இரதியைக்கலந்த மன்மதனை யொத்தனன்.

அவன் கருத்துத் தழுவுதலின்மேற் சென்றதாதலால் விலக்குவான்போல் என்றார். தன் கருத்தை மறைத்து வேறுவகையாற் கூறினமையால் இலேசவணி. (௭௦)

Koviloor Digital Library

மாசினானமுஞ்சூடியமாலையுமெய்யிற்
பூசுசாந்தமுமார்பமும்பொய்கைக்குக்கொடுத்து
வாசமெய்யினிலம்புயவாசமுமயங்க
வாசைமைந்தரோடிளையவரகன்கரையடைவார்.

(இ-ள்.) மாசு இல் நானமும் சூடிய மாலையும் - குற்றமில்லாத மிருகமதத்தையும் சூடிய மலர்மாலையையும், மெய் இல் பூசு சாந்தமும் மார்பமும் பொய்கைக்கு கொடுத்து - தமதுடம்பிற்பூசிய சந்தனக்குழம்பையும் மார்பிலணிந்த தொய்யில் முதலியவற்றையும் நீர்நிலைக்குத்தந்து, வாசம் மெய்யினில் - வாசமிக்க தமது சரீரத்தில், அம்புயம் வாசமும் மயங்க - ஆம்பல் முதலிய மலரின் வாசமுமன்றித் தாமரைமலரின் மணமும் விரவிமயங்க, ஆசை மைந்தர் ஒடு இளையவர் - காதல்மிக்க தமது கணவர்களோடு, அகன் கரை அடைந்தார் - இடமகன்ற அப்பொய்கையின் கரையை யடைந்தார்கள்.

மார்பம் தொய்யில் முதலியவற்றின்மேல்நிற்றலால் விட்டவாகுபெயர். உம்மை இறந்தது தழீஇய எச்சப்பொருட்டு. தாமரை மணமுமன்றி யேனை மலர்மணமும் விரவ எனப் பொருள்கொண்டு எதிரது தழீஇய எச்சப்பொருட்டு எனினும் அமையும். ஒன்று கொடுத்து ஒன்று பெற்றனர் என்றமையால் இது பரிவருத்தனையணி.()

தையலர்சிலர்நனைந்தநுண்டானையுட்பொதிந்த
மெய்யெலாம்வெளிப்படக்கரையேறுவான்வெள்கி
யையதாபொலந்துகிலெனவன்பரைக்கூய்க்கண்
செய்யமாயனைக்கேட்குமாய்ச்சிறுமியரொத்தார்.

(இ-ள்.) தையலார் சிலர்-பெண்களுட்சிலர், நனைந்த நுண் தானை உள் பொதிந்த - நனைந்த நுண்ணிய ஆடையால் மறைபட்ட, மெய் எல்லாம் வெளிப்பட கரை எறுவான் வெள்கி - தமது சரீரத்தின் உறுப்புகள் முற்றும் புலப்படுதலால் கரையேற நாணங்கூர்ந்து, ஐய பொலம் துகில் தா என அன்பரை கூய் - ஐயனே பீதாம்பரமொன்று தரக்கடவாயென்று தத்தங் கணவரை யழைத்து, செய்ய கண் மாயனை கேட்கும் ஆய்ச்சிறுமியர் ஒத்தார் - (தமது துகிலை வாரியொளித்த) செவந்த கண்களையுடைய கண்ணமூர்த்தியை (நோக்கித் துகில் கொடுவென்று) குறையிரக்கும் ஆய்ச்சியரை யொத்தார்கள்.

ஒவ்வொரு மகளிரும் தத்தம் கணவர்களைத் தனித்தனிக் குறையிரந்தனர் ஆதலால் ஐயதா என்றார். (௯௨)

உலத்தைவென்றதோளாடவருச்சிமேற்பொறித்த
வலத்தகத்தொடுகுங்குமமளைந்துசெம்புனலாய்
மலர்த்தடங்குடைந்தவர்க்குநீராஞ்சனவட்டக்
கலத்தையொத்தனசுற்றநின்றுரொத்தகடிக்கா.

(இ-ள்.) உலத்தை வென்ற தோள் - திரண்ட கல்லையொத்த தோளையுடைய, ஆடவர் உச்சிமேல் பொறித்த அலத்தகத்து ஒடு-(ஊடலாற்றலைவணங்கிய) புருடருச்சியின்மேல் (பாததாடனத்தால்) தீட்டிய செம்பஞ்சுக்குழம்போடு, குங்குமம் மலர் தடம் அளைந்து - குங்குமச்சேற்றையும் மலர்ப்பொய்கைகள் கலந்து, செம்புனல் ஆய் - செவந்த நீராய், குடைந்தவர்க்கு நீராஞ்சன வட்டக்கலத்தை ஒத்தன -

Koviloor Digital Library

நீராடிக் கரையேறிய (ஆடவர் மகளிர்களுக்குக் கண்ணெச்சில் போக்க அமைத்த) நீராஞ்சனமாகிய வட்டவடிவாயுள்ள தட்டினை யொத்திருந்தன, கடிகா சூற்ற நின்ருர் ஒத்த-அப்பொய்கைகளைச் சூழ்ந்த வாசமிக்க சோலைகள் வளைக்க நின்ற மகளிர் களை யொத்திருந்தன.

செந்நிறம் பரத்தலும் சூழநிற்றலுமாகிய தருமசம்பந்தங்களினால் நீராஞ்சனமும் சுற்றச்சூழ்ந்துநிற்கும் மகளிரும் ஆகிய பொருள்களின பேதங்கள் அத்தியவசவிக்கப்படுதலால் தற்குறிப்பேற்ற அணி. (௬௩)

பட்டும்பன்னிறக்கலிங்கமும்பன்மணிக்கலனுங்
கொட்டுஞ்சாந்தமுநானமுங்குங்குமச்சேறுங்
கட்டுந்தாமமுந்தமதுகட்டழகெலாங்கவர
மட்டுண்கோதையராடவர்மனமெலாங்கவர்ந்தார்.

(இ-ள்.) பட்டும் பல் நிறம் கலிங்கமும் - பட்டாடைகளும் பலநிறம்வாய்ந்த பருத்தி ஆடைகளும், பல் மணி கலனும் - பல இரத்தினங்களழுத்திய ஆபரணங்களும், கொட்டும் சாந்தமும் நானமும் குங்குமச்சேறும் - பனிநீர்கலந்த சந்தனக்குழம்பும் மிருகமதமும் குங்குமக்குழம்பும், கட்டும் தாமமும் - மலராற்றொடுத்த மாலையும், தமது கட்டழகு எல்லாம் கவர - தமது பேரழகையெல்லாங் கொள்ளைகொள்ளமட்டு உண் கோதையர் - வாசமிக்க மாலையணிந்த பெண்கள், ஆடவர் மனம் எல்லாம் கவர்ந்தார் - தத்தங் கணவரது மனங்களையெல்லாங் கொள்ளைகொண்டார்கள்.

ஆடையணி முதலியவைகளால் தாம் அழகுபெருது தம்மால் அவை அழகுபெற்றன என்பார் தமது கட்டழகெலாங் கவர எனவும், அழகுக்கோரழகு செய்ததுபோலிருந்தனவென்பார் ஆடவர் மனமெலாங் கவர்ந்தார் என்ருர். இதனுல் இயல்பாகவே பேரழகுடையார் என்பது புலப்படுதலால் உதாரவணி. (௬௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காவியுங்கமலப்போதுங்கள்ளொழுகாம்பற்போது
மாவியுட்பூத்தபோலவாடியுட்பூப்பநோக்கி
யேவிரண்டன்னகண்ணாலநங்கனையேவல்கொள்ளும்
பூவிரிபொலங்கொம்பன்னார்புதுமதுநுகரப்புக்கார்.

(இ-ள்.) காவியும் கமலப்போதும் - நீலோற்பலமும் தாமரைமலரும், கள் ஒழுகு ஆம்பல் போதும் - தேன்சிந்தும் ஆம்பல் மலரும், ஆவி உள் பூத்த போல - தடாகத்திற் பூத்தனபோல, ஆடி உள் பூப்ப நோக்கி - கண்ணாடியுள் மலரத் தமது உருப்பார்த்து, இரண்டு ஏ அன்ன கண்ணால்-இரண்டுபாணங்களையொத்த கண்களால், அநங்கனை ஏவல் கொள்ளும் - மன்மதனை யேவல்கொள்ளும், பூவிரி பொலங் கொம்பு அன்னார் - மலர்விரிந்த பொற்கொம்புபோன்ற பெண்கள், புது மது நுகர புக்கார் - புத்தம் புதிய கள்ளைப் பருகப்புகுந்தார்கள்.

முன்னர் நீராடச்சென்றகாலையில் மலர்வறக்கூர்ந்த நீர்நிலைகள் தமது கண்களாலும் முகங்களாலும் வாய்களாலும் நீலோற்பலமும் தாமரையும் ஆம்பலும் பூத்தனபோல, அந்நீர்போலத்தெளிந்த கண்ணாடியும் தமதவயங்களாற் பூத்தன என்பார் ஆடியுட்பூப்பநோக்கி என்ருர். (௬௫)

பொன்னிறும்வெள்ளியாலும்பளிங்கினும்புலவன்செய்த
நன்னிறக்கலத்திற்கூர்வாணட்டெளவாக்கிச்சேடி

Koviloor Digital Library

மின்னனாரளித்ததேறற்சிறுதுளிவிரலிற்றெள்ளித்
துன்னிவீழ்களிவண்டோச்சித்தொண்டையங்கனிவாய்வைப்பார்

(இ-ள்.) பொன்னினும் வெள்ளியானும் பளிங்கினும் புலவன் செய்த - பொன்னினாலும் வெள்ளியினாலும் பளிங்கினாலும் சிற்பநூலில்வல்லோன் செய்த, நல் நிறம் கலத்தின் - நல்ல நிறம்வாய்ந்த கிண்ணத்தில், கூர்வாள் நட்டால் என்ன வாக்கி - கூரிய வாளை நட்டாற்போல வார்த்து, சேடி மின் அன்னார் அளித்த தேறல் - தோழியராகிய மின்னல்போன்ற பெண்கள் கொடுத்த மதுவில், சிறு துளிவிரலில் தெள்ளி - சிறுதுளியை விரலினாற்றொட்டுத் தெறித்து, துன்னி வீழ் களி வண்டு ஓச்சி - நெருங்கி வீழு மதுமயக்கினையுடைய வண்டுகளையோட்டி, தொண்டை அம் கனி வாய் வைப்பார் - கோவைக்கனிபோன்ற வாயிலக்கிண்ணத்தை வைப்பார்கள் (பருகுவார் என்றபடி.)

கள்ளுண்போர் மதுவினை விரலாற்றொட்டுத்தெறித்தல் முறையாதலால் விரலிற்றெள்ளியென்றார். (௬௬)

வள்ளத்துவாள்போல்வாக்குமதுக்குடந்தன்பாற்பெய்த
கொள்ளைத்தெண்மதுவைக்கொள்ளைகொளவந்தவள்ளமீதென்
றுள்ளத்துவெகுண்டுவைவாளூன்றிமார்பிடப்பதொத்த
கள்ளைச்சூழ்காளைவண்டுசெருச்செயல்காண்பவொத்த.

(இ-ள்.) வள்ளத்து வாள்போல் வாக்கு மதுக்குடம் - கிண்ணத்தில் வாள் நட்டதுபோல் வாக்காநின்ற கட்குடமானது, தன்பால் பெய்த கொள்ளை தெள் மதுவை - தன்னிடத்திற்கொண்ட மிக்க தெளிந்த கள்ளினை, கொள்ளை கொள்ள வந்த வள்ளம் ஈது என்று - சூறையாடவந்த கிண்ண மிதுவென்று, உள்ளத்து வெகுண்டு - தனது மனத்திற் கோபங்கூர்ந்து, வைவாள் ஊன்றி மார்பு இடப்பது ஒத்த - கூரிய வாளையூன்றி யவ்வள்ளத்தின் மார்பினைப் பிளத்தலொத்தன, கள்ளை சூழ் காளை வண்டு - கள்ளினை விடாதுசூழ்ந்த இளமைப்பருவமுடைய வண்டுகள், செரு செயல் காண்ப ஒத்த - போர்த்தொழிலைக் காண்போரை யொத்திருந்தன.

காண்ப பகரவீற்றுயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினைமுற்றாதலால் காண்போர் என்றும். இதுவு முன்னர்க்கூறிய விதிகொண்டு தற்குறிப்பு அணியாகக் கொள்க. (௬௭)

தணியலுண்டுள்ளஞ்சோருமொருமகட்டணியலுண்பான்
பிணியவிழ்கோதையாளோர்பெண்மகள்கலத்தில்வாக்குந்
துணிமதுத்தாரைதன்னைவாளெனத்துணிந்துபேதாய்
திணிகதிர்வாளால்வள்ளஞ்சிதைத்தியோவென்றுநக்காள்.

(இ-ள்.) தணியல் உண்டு உள்ளம் சோரும் ஒருமகள் - கள்ளுண்டு மனஞ்சோரும் ஒருபெண், தணியல் உண்பான் - அம்மதுவையுண்ண, பிணி அவிழ் கோதையாள் ஓர் பெண் மகள் - கட்டவிழ்ந்த மலர்மாலையணிந்த ஒருபெண், கலத்தில் துணி வாக்கும் மது தாரை தன்னை - வள்ளத்தில் துண்டுபோல் வாக்கு மதுதாரையை, வாள் என்ன துணிந்து - இது வாளென்று மயக்கால் துணிந்து, பேதாய் - அறிவில்லாதவளே, திணி கதிர் வாளால் - திண்ணிய கிரணமிக்க வாளினால், வள்ளம் சிதைத்தியோ என்று நக்காள் - இக்கிண்ணத்தை யழிக்கின்றாயோவென்று சிரித்தாள்.

இதுபோல் வருவனவற்றை யெல்லாம் ஒப்புமையால் ஒருபொருளை மற்றொரு பொருளாகத் துணிதலின் பாற்படும் ஆதலால், மயக்க அணியாகக்கொள்க.

மலர்தொறுஞ்சிறுதேனக்கித்திரிவண்டுமடவார்தங்கைத்
தலனெடுத்தோச்சவோடாதழீஇத்தடஞ்சாடிமொய்ப்ப
விலமெனப்பல்லோர்மாட்டுமிரந்திரந்தின்மைநீங்கா
தலமரும்வறியோர்வைத்தநிதிகண்டாலகல்வரேயோ.

(இ-ள்.) மலர் தொறும் சிறு தேன் நக்கி திரி வண்டு - மலர்கள்தோறுஞ் சிறிய மதுத்துளியை நக்கி வயிறு நிரம்பாது சுழன்றலைகின்ற வண்டுகள், மடவார் தம் கைத்தலன் எடுத்து ஓச்ச - பெண்கள் (மதுவள்ளத்தில் மொய்த்தலால்) தமது கையை மேலெடுத்து ஓட்ட, ஓடா - ஓடாதனவாய், தழீஇ தடசாடி மொய்ப்ப - தழுவிப் பெரிய மதுச்சாடிகளில் மொய்க்கின்றன. இலமென - நாம் வறியோமென்று, பல்லோர் மாடும் இரந்து இரந்து இன்மை நீங்காது அலமரும் வறியோர் - பலரிடத்தும் சென்றிரந்தும் வறுமை நீங்காது சுழன்றுதிரியும் வறியவர்கள், வைத்த நிதி கண்டால் அகல்வரேயோ - சேமஞ்செய்து வைத்தநிதி தமதெதிர்ப் புலப்பட்டா லதனைவிட்டு நீங்குவரோ (நீங்கார் என்றபடி.)

முன்னிரண்டடியிலுஞ் சொல்லப்பட்ட சிறப்புப்பொருளாற் பின்னிரண்டடியிலுஞ் சொல்லப்பட்ட வர்ணியமாகிய பொதுப்பொருள் சாதிக்கப்படுதலால் வேற்றுப்பொருள் வைப்பணி. (௬௯)

உண்டவளொருத்திகள்வாயுதிக்குந்தன்முகமுங்கண்ணுங்
கண்டுதாமரைகள்வேலைமுளைத்ததக்கள்ளையார
மொண்டுணுப்பேதைத்தும்பியம்மதுமுளரிவார்தே
னுண்டுளிசெறிவதென்றுநொடித்துக்கைபுடைத்துநக்காள்.

(இ-ள்.) உண்டவள் ஒருத்தி - மதுவைப்பருகிய ஒருபெண், கள்வாய் உதிக்கும் தன் முகமும் கண்ணும் - மதுவிற் பிரதிபிம்பித்த தனது முகத்தையுங் கண்களையும், கண்டு - பார்த்து, தாமரை கள் வேலை முளைத்தது - தாமரையானது மதுக்கடலில் முளைத்தது, அக் கள்ளை ஆர மொண்டு உண்ணுத பேதை தும்பி - அக்கள்ளை வயிறார மொண்டுண்ணாத மடமையையுடைய வண்டுகள், அமது முளரிவார் தேன் நுண் துளி செறிவது என்று நொடித்து - அம்மதுக்கடலிற் றோன்றிய தாமரை பொழிகின்ற சிறிய தேன்றுளியில் மொய்க்கின்றதென்று கூறி, கை புடைத்து நக்காள் - கைகொட்டிச் சிரித்தனள். (௭௰)

மங்கையாளொருத்திதானுண்டெஞ்சியமதுவுட்டோன்றுந்
திங்களைநோக்கியென்னைப்பிரிவின்கட்டீயாய்ச்சுட்டா
யிங்குவந்தகப்பட்டாயேயினிவிடேன்விடத்தியென்று
வங்கொருவள்ளங்கொண்டுசேமித்தாளருந்தல்செய்யாள்.

(இ-ள்.) மங்கையாள் ஒருத்தி - ஒரு மங்கைப்பருவத்தையுடைய பெண், தான் உண்டு எஞ்சிய மது உள் தோன்றும் திங்களை நோக்கி - தானுண்டு சேடமான மதுவிற் பிரதிபிம்பித்த சந்திரனைப்பார்த்து, பிரிவின்கண் என்னை தீ ஆய் சுட்டாய் - தலைவனைப்பிரிந்திருந்த காலையில் என்னைத் தீவடிவமாய் நின்று சுட்டனை, இங்கு வந்து அகப்பட்டாயே - இந்த மதுக்கிண்ணத்தில் வந்தகப்பட்டாய், இனி விடேன்-

Koviloor Digital Library

இனி யுன்னை வெளியில் விடேன், கிடத்தி என்று - இங்கே சிறைப்பட்டுக்கிடப்பா யென்று, ஆங்கு ஒரு வள்ளம் கொண்டு சேமித்தாள் - அவ்விடத்தில் மற்றொரு கிண்ணங்கொண்டு மூடி, அருந்தல் செய்யாள் - அம்மதுவைப்பருகாள்.

எல்லாரிடத்துந் தண்ணிதாய் என்பால் வெய்தாய் நின்றாய் என்பாள் தியாய்ச்சுட்டாய் எனவும், நீ நடுநிலைமையிழந்தவனாதலால் உன்னைச் சிறைப்படுத்தினே னென்பாள் இனிவிடேன் கிடத்தியெனவுங்கூறினாள். சேமித்தாள் முற்றெச்சம்.()

வெவ்வியநறவமுண்டவிளங்கிழையொருத்திகையிற்
கௌவியவாடிதன்னிற்கருங்கயனெடுங்கட்சேப்புங்
கொவ்வைவாய்விளர்ப்புநோக்கியென்னலங்கூட்டுண்டேகு
மௌவியமனத்தான்யாரென்றயர்கின்றாளயலாரெள்ள.

(இ-ள்.) வெவ்விய நறவம் உண்ட விளங்கிழை ஒருத்தி-கொடிய மதுவுண்ட விளங்கும் ஆபரணத்தையணிந்த ஒருபெண், கையில் கௌவிய ஆடி தன்னில் - தன் கையிலேந்திய கண்ணாடியில், கருங்கயல் நெடுங்கண் சேப்பும் கொவ்வை வாய் விளர்ப்பும் நோக்கி-கரிய கயல்போன்ற நெடிய கண்களிற்பரந்த செந்நிறத்தையுங் கோவைக்கனிபோன்ற வாயின் நிறந்திரிந்த வெண்ணிறத்தையும் பார்த்து, என் நலம் கூட்டுண்டு ஏகும் - என்பால் இன்பத்தைக் கொள்ளைகொண்டுபோன, ஔவியம் மனத்தான் யார் என்று - வஞ்சமனத்தையுடைய ஆட்வன் எவனென்று, அயலார் எள்ள அயர்கின்றாள் - அருகிலுள்ள பெண்கள் இகழச் சோர்வாளாயினாள்.

கள்ளுண்ணுதலால் வந்த கண் செவப்பும் வாய் விளர்ப்பும் கலவியால் வந்தனவென மயங்கினாளாதலால் என்னலங் கூட்டுண்டேகும் ஔவியமனத்தான் யாரென்றயர்கின்றாள் என்றார். (எஉ)

ஒருத்திகள்ளுண்கின்றாடன்னுருவமந்நறவுட்டோன்ற
வொருத்தியென்னுடன்வந்துண்பாள்காணெனவுண்டதோழி
யொருத்திவந்தென்செய்வாடன்னுருவமுநோக்கிப்பேதா
யொருத்தியோவிருவரென்றாளெச்சிலென்றுருத்துநக்காள்.

(இ-ள்.) கள் உண்கின்றாள் ஒருத்தி-மதுவுண்ணும் ஒருபெண், தன் உருவம் அ நறவு உள் தோன்ற - தனது வடிவம் அம்மதுவிற் பிரதிபலிக்க (அதனைநோக்கி) ஒருத்தி என்னுடன் வந்து உண்பாள் காண் என - ஒருபெண் என்னோடுவந்து அவளுமது உண்கின்றாள் பாராயென்று கூற, உண்டதோழி ஒருத்தி வந்து - முன்னரே மதுவுண்டு மயங்கிய தோழி யொருத்திவந்து, என் செய்வாள் - யாது செய்வாள், தன் உருவமும் நோக்கி - தனது உருவமும் அம்மதுவிற் பிரதிபலித்தலைப்பார்த்து, பேதாய்-அறிவில்லாதவளே, ஒருத்தியோ-(உன்னோடுண்பவள்) ஒருத்தியா, இருவர் என்றாள்-இரண்டுபேரென்று சொன்னாள், எச்சில் என்று உருத்து நின்றாள் - இது எச்சிற்பட்டதென்று அக்கள்ளைக்கொட்டி வாளாநின்றனள்.

முன்னர்க்கூறியது மடமையாலும் பின்னர்க்கூறியது மயக்காலும் எனக்கொள்க. (எங)

சாடியுணறவமுண்டாடன்னுருவேறுபாட்டை
யாடியுணோக்கிநானோவல்லனோவெனத்தான்கைக்கொண்
டோடினர்பிறருமுண்டோவுயிரன்னான்வந்திங்கென்னைத்
தேடினென்செய்கேனென்னைத்தேடித்தாசேடியென்றாள்.

(இ-ள்.) சாடி உள் நறவம் உண்டாள்-சாடியில் நிறைந்த கள்ளினை யுண்பவள், தன் உரு வேறுபாட்டை - தனது வடிவம் (அம்மதுவால்) வேறுபட்டிருத்தலை, ஆடி உள் நோக்கி-கண்ணாடியிற்பார்த்து, நானோ அல்லனோ-நான் தானோ வேறு மாதோ, என்னைத் தான் கைக்கொண்டு ஓடினர் பிறரும் உண்டோ-என்னைக் கைப்பற்றியோடியொளித்தவர் பிறருமுளரோ, உயிர் அன்னான் வந்து இங்கு என்னை தேடின்-உயிரையொத்த கேள்வன் வந்து இவ்விடத்தென்னைத்தேடில், என்செய்கேன்-நான் என்ன செய்வேன், சேடி-தோழியே, என்னை தேடி தா என்றாள்-என்னைத் தேடிக் கொடு என்று குறையிரந்தனள். (எச)

களித்தவளொருத்திநின்றவாடியுட்கணவன்றன்பி
னொளித்தவனுருவுந்தானுநேர்படவுருத்துநோக்கித்
துளித்தகண்ணீரளாகியேதிலாடோடோய்ந்தின்பங்
குளித்தனையிருத்தியோவென்றுரைத்தனள்கோபமூண்டாள்.

(இ-ள்.) களித்தவள் ஒருத்தி-கள்ளுண்டு களித்த ஒருபெண், நின்ற ஆடியுள்-நிலைக்கண்ணாடியில், தன் பின் ஒளித்தவன் கணவன் உருவும் தானும் - தன் பின்னொளித்து நின்ற கேள்வன் வடிவமுந் தனது வடிவமும், நேர்பட-அக்கண்ணாடியுட் பிரதிபலிக்க, உருத்து நோக்கி-கோபித்துப்பார்த்து, துளித்த கண்ணீரள் ஆகி-சிந்திய கண்ணீருடையவளாகி, ஏதிலாள் தோள் தோய்ந்து - அயலாள் தோளைப்புணர்ந்து, இன்பம் குளித்தனை இருத்தியோ என்று-இன்பத்தில் மூழ்கியிருக்கின்றாயோ வென்று, உரைத்தனள் கோபம் மூண்டாள் - உரைத்துச் சினத்தில் முதிர்ந்தாள்.

ஒளித்தநிற்றலால் தன் கணவனை யறியாதவளாதலால் தன்னிழலை யயலாளென்று மயக்கினள் என்பார் உருத்துநோக்கி என்றார். (எரு)

இளம்புளிந்தயிர்விராயவின்சுவைபொதிந்தசோறு
வளம்படவிருந்திநோடுமருந்துவார்வசந்தவீணை
களம்படுமெழாலினோடுகைவிரனடத்திக்காம
னுளம்புகுந்தலைப்பவெண்ணெய்ப்பாவைபோலுருகிச்சோர்வார்.

(இ-ள்.) இளம் புளி தயிர் விராய இன்சுவை பொதிந்த சோறு-இளம்புளிச்சுவைவாய்ந்த தயிர்கலந்த இனிய சுவைபொதிந்த சோற்றினை, வளம்பட விருந்தினோடும் அருந்துவார்-குறைவின்றிவந்த விருந்தினோடும் உண்பார்கள், வசந்த வீணை-வேனிற்காலத்திற்குரிய இசைவாய்ந்த வீணையில், களம் படும் எழாலினோடு - கண்டத்தெழுந்த இசையோடு, கைவிரல் நடத்தி - கையிலுள்ள விரல்களால் தடவி இசையெழுப்பி, காமன் உளம் புகுந்து அலைப்ப-மன்மதன் மனத்திற் குடிகொண்டு வருத்த, வெண்ணெய் பாவைபோல் உருகி சோர்வார் - வெண்ணெயாற்செய்த பதுமை போல மனமிளகிச்சோர்வார்கள்.

வசந்தவீணை என்றமையால் பாலையாழ் எனக்கொள்க. எழால் என்றது பெரும்பாலை யேழனுள் செம்பாலையை. அச்செம்பாலை காந்தாரம், ஆசிரி, தோடி, கௌளி, காந்தாரம், சேர்துருத்தி, உதையகிரி பிறவும் ஆம். (எசு)

இவ்விளவேனிற்காலத்தின்றுயிர்த்துணைவியோடும்
செவ்வியசெங்கோலேமிச்செண்பகமாறனோர்நாள்
கைவினைவல்லோன்செய்தகதிர்விடுகாந்தக்குன்றில்
வெவ்வியவெவ்வெடனிப்பாலிருந்தனன்வேறுவைகி.

Koviloor Digital Library

(இ-ள்.) இ இளவேனிற்காலத்து - இந்த இளவேனிற்காலத்தில், இன் உயிர் த்துணைவி ஒடும்-தனது இனிய உயிர்போன்ற தேவியோடும், செவ்விய செங்கோல் நேமி செண்பகமாறன்-கோடாத செங்கோலையும் ஆக்கினைசக்கரத்தையுமுடைய செண்பகபாண்டியன், ஓர்நாள்-ஒருதினம், கைவினை வல்லோன் செய்த-கைத்தொழில்வல்ல சிற்பநூற்புலவன்செய்த, கதிர்விடு காந்தம் குன்றில்-ஒளிவீசுஞ் சந்திரகாந்தக்கல்லாற் செய்த செய்குன்றத்தின்மேல், வெவ்விய வேனில் தீப்பான்-கொடிய வேனில் வெப்பினையாற்ற, வேறு வைகி இருந்தனன்-அவ்விளஞ்சோலையில் வேறோரிடத்தில் தங்கியிருந்தனன்.

தன்னிலையினின்றுங் கோடாதது என்னும் பொருள் பயத்தற்கு வெவ்விய என வாளாகூறினார். (எஎ)

மாந்தளிரீன்றுகோங்குவண்டளவரும்பித்தண்டேங்
காந்தள்செங்கமலமாம்பல்சண்பகக்கழுநீர்பூத்துச்
சாய்ந்தமென்கொடியுந்தானுந்தனியிடத்திருப்பானேரோ
யாய்ந்ததோர்நாற்றந்தோன்றவசைந்ததுவசந்தத்தென்றல்.

(இ-ள்.) மாந்தளிர் ஈன்று-மாந்தளிர் தளிர்த்து, கோங்கு வண் தளவு அரும்பி - கோங்கரும்பும் வளவிய முல்லையரும்பும் அரும்பி, தண் தேம் காந்தள் செங்கமலம் ஆம்பல் சண்பகம் கழுநீர் பூத்து - தண்ணிய வாசமிக்க காந்தள்மலரும் செந்தாமரைமலரும் ஆம்பல்மலரும் சண்பகமலரும் நீலோற்பலமலரும் பூத்து, சாய்ந்த மெல் கொடியும் தானும் தனி இடத்து இருப்பான் நேரே - (பாரத்தால்) ஒசிந்த மெல்லிய பூங்கொடியாகிய தனது மனைவியுந் தானுந் தனியிடத்திருக்குஞ் சண்பகபாண்டியனெதிரே, ஆய்ந்தது ஓர் நாற்றம் தோன்ற - நறுமணங்களுள் மேம்பட்ட ஓர் நறுமணந்தோன்ற, வசந்தத்தென்றல் அசைந்தது - வசந்தகாலத்திற்குரிய தென்றற்காற்று மெல்லென வந்தது.

மாந்தளிர் மேனியினிறமும் கோக்கரும்பு தனமும் முல்லையரும்பு பல்லும் காந்தள் கையும் தாமரைமுகமும் ஆம்பல் வாயும் சண்பகம் நாசியும் குவளை கண்ணும் கொடி இடையுமாக உவமானச்சொற்களால் உபமேயங்களை யிலக்கணையாகக் கூறுதலால் உருவகவுயர்வு நவிற்சியணி. (எஅ)

வெவ்வியவேலான்வீசும்வாசமோர்ந்தீதுவேறு
திவ்வியவாசமாகவிருந்ததுதென்றல்காவில்
வெளவியவாசமன்றுகாலுக்கும்வாசமில்லை
யெவ்வியல்வாசமேயோவிதுவெனவெண்ணங்கொள்வான்.

(இ-ள்.) வெவ்விய வேலான் - கொடிய வேலேந்திய சண்பகபாண்டியன், வீசும் வாசம் ஓர்ந்து - அன்று வீசிய நறுமணத்தை யாராய்ந்து, ஈது - இந்த நறுமணம், வேறு திவ்விய வாசம் ஆக இருந்தது - வேறே தெய்வத்தன்மையையுடைய வாசமாக இருந்தது, தென்றல்-தென்றற்காற்று, காவில் வெளவிய வாசம் அன்று - சோலையில் கவர்ந்துவந்த வாசமும் அல்ல, காலுக்கும் வாசம் இல்லை-இயல்பாகவே அக்காற்றுக்கு மணமுமில்லை, இது எ இயல் வாசமேயோ என-இந்தமணம் எதனியற்கை வாசமோவென்று, எண்ணங்கொள்வான் - ஆராய்வானாயினான்.

திவ்ய திவ்வின்னுலகில், ய பிறப்பது. அதனால் தெய்வத்தன்மையையுடைய என்றும். காற்றுக்குப் பரிசமும் சத்தமே யியற்கைக்குணங்களாதலால் காலுக்கும் வாசமில்லை என்றார். (எகூ)

சாஙூ

Koviloor Digital Library

திரும்பித்தன்றேவிதன்னைநோக்கினன்றேவியைம்பா
லிரும்பித்தைவாசமாகியிருந்ததுகண்டிவ்வாசஞ்
சுரும்பிற்குந்தெரியாதென்னச்சூழ்ந்திறும்பூதுகொண்டீ
தரும்பித்தைக்கியல்போசெய்கையோவெனவையங்கொண்டான்.

(இ-ள்.) திரும்பி தன் தேவி தன்னை நோக்கினன் - திரும்பித் தனது தேவியைப்பார்த்தனன், தேவி ஐம்பால் இரும்பித்தை வாசம் ஆகி இருந்தது கண்டு - அத்தேவியின் ஐந்துபகுப்பாயுள்ள பெரிய கூந்தலின் வாசமாயிருத்தலைக்கண்டு, இவ் வாசம் சுரும்பிற்கும் தெரியாது என்று - இந்த மணம் வண்டிற்குந் தெரியாதென்று, சூழ்ந்து இறும்பூது கொண்டு - ஆலோசித்து வியந்து, ஈது - இம்மணம், அரும்பித்தைக்கு இயல்போ செய்கையோ என - அரிய அக்கூந்தலுக்கு இயற்கையோ செயற்கையோ வென்று, ஐயங்கொண்டான் - சந்தேகித்தனன்.

ஐந்துபகுப்பாவன முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை, மயிரையுச்சியில் முடித்தல் முடி, பக்கல் முடித்தல் கொண்டை, பின்னே செருகல் சுருள், சுருட்டிமுடித்தல் குழல், பின்னிவிடுதல் பனிச்சை. தேவிவிளையாட்டுடையவள். (௮௰)

ஐயுறுகருத்தையாவராயினுமறிந்துபாட்டில்
செய்யுநரவர்க்கேயின்னவாயிரஞ்செம்பொனென்றக்
கையுறைவேலானீந்தபொற்கிழிகைக்கொண்டேகி
மெய்யுணர்புலவர்முன்னாத்தூக்கினர்வினைசெய்மாக்கள்.

(இ-ள்.) ஐயுறு கருத்தை - யான் ஐயங்கொண்ட இந்தக்கருத்தினை, யாவர் ஆயினும் அறிந்து பாடல் செய்யுநர் அவர்க்கு ஏ - எவராயினும் உணர்ந்து பாடல் செய்வோர்களுக்கே, இன்ன ஆயிரம் செம்பொன் என்று - இந்த ஆயிரஞ் செம்பொன் முடிப்பென்று, அ கை உறை வேலான் ஈந்த பொற்கிழி - அந்தக்கையில் வேலையேந்திய சண்பகபாண்டியன் கொடுத்த பொற்கிழியை, வினை செய் மாக்கள் கைக்கொண்டு ஏகி - அரசன் வினைசெய்யும் மாக்கள்கொண்டு சென்று, மெய் உணர் புலவர் முன் ஆக தூக்கினர் - உண்மைப்பொருளையுணர்ந்த சங்கப்புலவர்கள்முன் சங்கமண்டபத்திற்கட்டித் தூக்கினார்கள்.

இன்ன இகரச்சுட்டின் திரிபு. (௮௧)

வங்கத்தார்பொருள்போல்வேறுவகையமைகேள்விநோக்கிச்
சங்கத்தாரெல்லாந்தம்மிற்றனித்தனிதேர்ந்துதேர்ந்து
துங்கத்தார்வேம்பனுள்ளஞ்சூழ்பொருடுழாவியுற்ற
பங்கத்தாராகியெய்த்துப்படருறுமனத்தரானார்.

(இ-ள்.) வங்கத்து ஆர் பொருள்போல் - மரக்கலத்தில் நிறையப்பெய்த பலவேறுவகைப் பொருள்கள்போல, வேறுவகை அமை கேள்வி நோக்கி - வெவ்வேறுவகைப்பட அமைந்த நூற்கேள்விகளால் சோதனஞ்செய்து, சங்கத்தார் எல்லாம் - சங்கப்புலவர்களெல்லாம், தம் இல் தனித்தனி தேர்ந்து தேர்ந்து - தம்முள் தனித்தனி யாராய்ந்து, துங்கம் தார் வேம்பன் உள்ளம் சூழ்பொருள் துழாவி - உயர்ந்த வேப்பமலர்மாலையணிந்த சண்பகபாண்டியனது மனங்கருதிய மறைபொருளைத் தமதறிவாற்றலையோடி, உற்ற பங்கத்தார் ஆகி எய்த்து - உள்ளதைத் தெளிந்து கூறாத குறையுடையவராயிளைத்து, படர் உறும் மனத்தர் ஆனார் - துன்பமிக்க கருத்தினராயினார்கள்.

Koviloor Digital Library

பாண்டியன் கருத்துப் புலப்படப்பாடிப் பொற்கிழி பெறுதொழிற்தார் ஆத லால் உற்றபங்கத்தாராகி யெய்த்துப்படருறு மனத்தானுர் என்றூர். (அஉ)

கலிவிருத்தம்.

அந்தவேலையிலாதிசைவரில்
வந்தமாணவன்மணஞ்செய்வேட்கையான்
முந்தையாச்சிமமுயலும்பெற்றியான்
தந்தைதாயிலான்றருமியென்றுளான்.

(இ-ள்.) அந்த வேலையில் ஆதிசைவரில் - அந்தக்காலத்தில் ஆதிசைவர் மர பில், வந்த மாணவன் - வந்த ஒரு பிரமசாரி, மணம் செய் வேட்கையான் - கலியா ணமுடிக்கும் விருப்புடையவனுகி, முந்தை ஆச்சிமம் முயலும் பெற்றியான் - (நான் குநிலையுள்) முற்பட்ட பிரமசரிய நிலையுள் முயலுந்தன்மையுடையவன், தந்தை தாய் இல்லான் - தந்தை தாய்மாரில்லாதவன், தருமி என்று உள்ளான்-தருமி யென்றொ ருவனுள்ளான்.

ஆதிசைவர் ஆவார் சதாசிவமூர்த்தியின் சத்தியோ சாதம், வாமதேவம், அ கோரம், தற்புருடம், ஈசானம் என்னும் ஐந்து திருமுகங்களினின்று தோன்றிய கௌசிகர், காசியபர், பரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் பஞ்சருஷிகோ த்திரத்திற்சனித்த சிவப்பிராமணர்கள். பிரமசரியநிலையாவது வேதவத்தியயனமும் முண்முருக்கு, வில்வம், அரசு என்று மூவகையுள் ஒன்றாற்சமைந்த தண்டமுங்கொ ண்டு, விபூதியால் திரிபுண்டரம் நெற்றிமுதலிய தானங்களிற்றரித்து மான்றோல் கட் டிய உபவீதந்தாங்கித் தனது ஆசிரியனுக்குப் பணிவிடைசெய்து திரிகாலக்கட்னகளை யு முற்றிப் பவதிபிட்சாந்தேகி யென அந்தணர் வீட்டிற் சென்றிரந்தொழுகுதல் "தோற்றமுறுநல்லுபநயனஞ்செய்துகொண்டமறைச்சிறுவன் - ஆற்றன்மிகவுந்தரு ம் வேதவத்தியயனமொருவானுய்ப்- போற்றும்பலாசேசுவிளமேபோதியேயிம்மூவ கையுட் - சாற்றுங்கேசாந்தத்தளவோர்தண்டுதாங்கல்விதியாமால்- தகடீர்முஞ்சிமே கலைமான்றோறங்குபவீதந்தரித்துத்-தகவார்மனையிலனம்பிச்சைதரவேற்றுண்டுசெந்தழ ம்-இகவாதுகியாசிரியற்கியலும்பணியோகையிற்புரிந்து-சகமாதரிக்குந்திரிகாலசந்தி க்கடனுஞ்செயல்வேண்டும்" எனவருஞ் சூதசங்கிதையால் உணர்க. (அ௩)

ஒருவனுன்முகத்தொருவன்மார்புறை
திருவனுட்ருந்தேவனுலுரு
வருவநாலகன்றூனைத்தன்கலி
வெருவநாடிமுன்வீழ்ந்துவேண்டுவான்.

(இ-ள்.) ஒருவன்-ஏகனும், நான்முகத்து ஒருவன் - நான்குமுகங்களையுடைய பிரமனும், மார்பு உறை திருவன்-தனது மார்பில் இலக்குமியையுடைய திருமாலும், நாடு அருந்தேவன் - அன்னமும் வராகமுமாய் அடிமுடிகாண்டற்கரிய தேவனும், நால் உரு நால் அருவம் - உருவநான்கினும் அருவம் நான்கினும், (அருவுருவொன்றி னும்) அகன்றூனை-நின்று நீங்கிய சுத்தசிவமாகிய சோமசுந்தரக்கடவுளை, தன் கலி வெருவ நாடி-தனது வறுமையஞ்சியோட ஓர் பற்றுக்கோடாகக்கருதி நாடி, முன்வீ ழ்ந்துவேண்டுவான் - திருமுன் தண்டாகாரமாக வீழ்ந்து குறையிரப்பானுயினுன்.

தனக்கோரொப்புயர் விகந்துநின்றுன் என்பார் ஒருவன் எனவும், நாம் பெரி யோம் நாம் பெரியோமென்றிறுமாந்த பிரமன் திருமாலிவர்களினுமாப்பொழிய நி

Koviloor Digital Library

ன்ற இறைவன் என்பார் நாடருந்தேவன் எனவும், அரு, உரு, அருவுருவென மூந்திறப்பட்டு நிற்கும் பிரபஞ்சமூற்றும் தத்துவவடிவாதலால் அம்மூத்திறப்பட்டு நின்ற தத்துவங்களை யதிட்டித்துநிற்கும் அதிதெய்வங்களாகிய சிவமுதல் பிரமனிறுதிய முத்திறத்தொன்பது வர்க்கங்களிலும், ஒருவனே பலவேடங்கட்டி அவ்வவ்வியல்பினுறு நின்று நடித்துத் தன்னியல்பு சிறிதுந்திரியாது நிற்றல்போல வேற்றுமையின்றி நின்று அவ்வத்தொழில்களை நடத்தித் தன்னியல்பு சிறிதும் விகாரமின்றி நிற்குஞ் சுத்தசிவம் என்பார் நாலுரு அருவாலகன்றுனை யெனவுங்கூறினர். சிவம், சத்தி, நாதம், விந்து இந்நான்கும் அருவம். மகேஸ்வரன், உருத்திரன், திருமால், பிரமன் இந்நான்கும் உருவம், சதாசிவம் அருவுரு "சிவஞ்சத்திநாதம்விந்து சதாசிவன் றிகழுமீசன் - உவந்தருளுருத்திரன்றான் மாலயனொன்றினொன்றாய்ப் - பவந்தருமருவநாலிங் குருவநாலுபயமொன்றாய் - நவந்தருபேதமேக நாதனேநடிப்பனென்பர்" எனவரும் சுதவாயுணர்க. சிதைந்ததனால் என்றும் சுதுவால் அருவுருவொன்று வருவிக்கப்பட்டது. (அச)

> தந்தைதாயிலேன்றனியனாகிய
> மைந்தனேன்புதுவதுவைவேட்கையேன்
> சிந்தைநோய்செயுஞ்செல்லறீர்ப்பதற்
> கெந்தையேயிதுபதமென்றேத்தியே.

(இ-ள்.) தந்தை தாய் இல்லேன் தனியன் ஆகிய மைந்தனேன் - தந்தைதாய்களை யிழந்து ஓர் பற்றுக்கோடில்லாது நிற்கின்ற சிறியனாகியயான், புது வதுவை வேட்கை யேன் - புதிய கலியாணமுடித்தலில் விருப்பமுடையவனா யிருக்கின்றேன், சிந்தை நோய் செய்யும் செல்லல் தீர்ப்பதற்கு - (முடித்தற்குப் பொருளின்மையால்) மனத்தை வருத்தும் வறுமையை யொழித்தற்கு, எந்தையே இது பதம் என்று ஏத்தி - என்றந்தையே யிதுதானசமயமென்று வணங்கி.

தந்தைதாயில்லாத வெனக்குத் தேவரீரே தந்தையுந்தாயும் என்பான் எந்தையே எனவும், அவர்க்கு மக்கட்கொழித்தல் கடனாதல்போலத் தேவரீர்க்குக் கடன் என்பான் இது பதம் என்றேத்தியே எனவுங் கூறினான். (அரு)

> நெடியவேதநூனிறையவாகம
> முடியவோதியமுறையினிற்கெனும்
> வடிவிலில்லறவாழ்க்கையின்றிநின்
> னடியருச்சனைக்கருகனாவனோ.

(இ-ள்.). நெடிய வேதம் ஆகமம் நூல் - எல்லையில்லாத வேதாகமநூல்கள், நிறைய முடிய ஓதிய முறையில் - நிரம்பக் கடைபோகக் கற்றுணர்ந்த முறையில், நிற்கு என்றும் வடிவில் - தேவரீர்க்குரியதென்னுந் திருவுருவில், இல்லற வாழ்க்கை இன்றி - கிரகச்சிரம நிலையில்லாமல், நின் அடி அருச்சனைக்கு அருகன் ஆவனோ - உமது திருவடியருச்சனைக்கு அகம்படித்தொண்டனாவேனோ.

வேதாகமங்களை நிரம்பக் கற்றுணர்ந்தேன் என்பான் நெடிய வேதநூல் நிறையவாகமமுடிய வோதிய எனவும், அடியேன் கற்றுணர்ந்த அளவில் பிரமசரியநிலைநிற்போன் திருவடியருச்சனைக் கருகனாவனோவென்பதுணர்ந்தேனென்பான் முறையில் இல்லறவாழ்க்கையின்றி நின்னடியருச்சனைக் கருகனாவனோ எனவுங்கூறினான்.

Koviloor Digital Library

ஐயயாவையுமறிதியேகொலோ
வையைநாடவன்மனக்கருத்துணர்ந்
துய்யவோர்கவியுரைத்தெனக்கருள்
செய்யவேண்டுமென்றிரந்துசெப்பினன்.

(இ-ள்.) ஐய யாவையும் அறிதியே - ஐயனே நீமுற்றும் ஒருங்குணர்ந்தவனல்லவா, வையை நாடவன் மனம் கருத்து உணர்ந்து - வையைநாடுடைய சண்பகபாண்டியனுடைய மனக்கருத்தை யாராய்ந்து, உய்ய - அடியேன் பிழைக்க, ஓர் கவி உரைத்து - ஒருபாடல் செய்தருளி, எனக்கு அருள் செய்யவேண்டும் என்று இரந்து செப்பினன்-எனக்குத் திருவருள் செய்யவேண்டுமென்று குறையிரந்தனன்.

தேவரீர் எண்குணங்களுள் முற்றுமுணர்தல் ஓர் குணமாதலால் பாண்டியன் மனக்கருத்தையு முணர்ந்தாய் என்பான் வையைநாடவன் மனக்கருத்துணர்ந்து என்றான். "இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினானை - இறையவனை மறையவனை யெண்குணத்தினானைச் - சுரும்புயர்ந்த கொன்றையொடு தூமதியஞ்சூடுஞ் சடையானை விடையானைச் சோதியெனுஞ்சுடரை - அரும்புயர்ந்தவரவிந்தத்தணிமலர்களேறி யன்னங்கள்விளையாடுமகன்றுறையினருகே - கரும்புயர்ந்து பெருஞ்செந்நெனெருங்கிவிளைகழனிக் - கானாட்டுமுள்ளூரிற் கண்டுதொழுதேனே" எனவரும். ஆளுடையநம்பிகள் தேவாரத்தால் உணர்க. (௮எ)

தென்னவன்குலதெய்வமாகிய
மன்னர்கொங்குதேர்வாழ்க்கையின்றமிழ்
சொன்னலம்பெறச்சொல்லிநல்கினா
ரின்னறீர்ந்தவனிறைஞ்சிவாங்கினன்.

(இ-ள்.) தென்னவன் குலதெய்வம் ஆகிய மன்னர் - சண்பகபாண்டியன் குலதெய்வமாயுள்ள சவுந்தரபாண்டியர், கொங்குதேர் வாழ்க்கை இன் தமிழ்-கொங்குதேர் வாழ்க்கையென்னும் இனிய திருப்பாசுரத்தை, சொல் நலம் பெற சொல்லி நல்கினான் - சொற்சுவை பொருட்சுவைபெறத் திருவாய்மலர்ந்தருளித்தந்தனர், இன்னல் தீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினன் - வறுமையினின்று நீங்கிய தருமியென்னும் அந்தணன்வணங்கி மடியிலேற்றனன்.

சொன்னலம் என்றமையால் பொருணலம் உபலக்கணத்தாற் கொள்க. "கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி - காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ - பயிலியது கெழீஇயநட்பின் - மயிலியற்செறியெயிற்றரிவைகூந்தலின் - நறியவுமுளவோவறியும்பூவே" என்பது திருப்பாசுரம். கொங்குதேர்வாழ்க்கை - மணமாராய்ந்து திரிதலே வாழ்வாகவுடைய, அகம் சிறை தும்பி - உட்சிறையுடைய வண்டே, அறியும் பூ - நீ ஆராய்ந்துணர்ந்த பூக்களுள், பயிலது கெழீஇய நட்பின் - பழகிய மிக்க நட்பால், காமம் செப்பாது - விருப்பத்தாற் பொய்கூறாது, மயில் இயல் செறி எயிறு - மயில்போலுஞ் சாயலும் நெருங்கிய பற்களுமுடைய, அரிவை கூந்தலின்-பாண்டியன் தேவியார் கூந்தனறுமணம்போல், நறியவும் உளவோ-நல்ல பூக்களுமுளவோ, கண்டது மொழி-கண்ட வுண்மையைக்கூறு. மோ முன்னிலையசை. ஆலாஸ்யமகாத்மியத்தில் - " ஜாநாஸிவெ-ஷ-ஹஙாநு ஹூஸகஙஹர-ஹிதகுவெதாஜெ| தெவஙா:கெஙகஙாவெதஙெஙாஹஙநகிஙஹஙஃ" வருதல்காண்க. (௮௮)

Koviloor Digital Library

பொற்றளிர்ச்சடைப்புவனநாயகன்
சொற்றபாடல்கைக்கொண்டுதொன்னிதி
பெற்றெடுத்தவன்போன்றுபீடுறக்
கற்றநாவலர்கழகநண்ணினான்.

(இ-ள்.) பொன் தளிர் சடை புவனம் நாயகன் சொற்ற பாடல் கைக்கொண்டு - பொன் தளிர்விட்டாலொத்த சடாமுடியையுடைய புவனம் யாவைக்கும் இறைவனுகிய சோமசுந்தரக்கடவுள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரத்தை, கைக்கொண்டு - கையிலேற்று, தொல் நிதி பெற்று எடுத்தவன் போன்று-வைப்புத் திரவியம் பெற்றடைந்தவன் ஒத்து, பீடு உற கற்ற நாவலர் கழகம் நண்ணினான் - பெருமை மிகக் கற்றுணர்ந்த புலவர்கள் தமிழ்ச்சங்கத்தை யடைந்தனன்.

இறைவனருளிய திருப்பாசுரத்தால் அன்றே பொன்முடி பெற்றவன் ஒத்தான் என்பார் தொன்னிதிபெற்றெடுத்தவன் போன்று என்றார். (௮௯)

கல்வியாளர்தங்கையினீட்டினான்
வல்லையாவரும்வாங்கிவாசியாச்
சொல்லின்செல்வமும்பொருளுந்தூக்கியே
நல்லநல்லவென்றுவகைநண்ணினார்.

(இ-ள்.) கல்வி யாளர் தம் கையில் நீட்டினான் - சங்கப்புலவர்கள் கையில் அத்திருப்பாசுரத்தைத் தந்தனன், வல்லை வாங்கி யாவரும் வாசியா - விரைந்துவாங்கி யங்குள்ள புலவர்கள் யாவரும் வாசித்து, சொல்லின் செல்வமும் பொருளின் செல்வமும் தூக்கி - சொற்சுவையையும் பொருட்சுவையையுஞ் சீர்தூக்கி, நல்ல நல்ல என்று உவகை நண்ணினார் - மிகவும் நல்லனவென்று களிகூர்ந்தார்கள்.

சொற்கடோறும் சுவைகனிந்தொழுகலால் நல்லநல்ல வென்றார். இது வியப்புப் பொருளில்வந்த அடுக்குத்தொடர். (௯0)

அளக்கில்கேள்வியாரரசன்முன்புபோய்
விளக்கியக்கவிவிளம்பினார்கடன்
னுளக்கருத்துநேரொத்தலாற்சிரந்
துளக்கிமீனவன்மகிழ்ச்சிதூங்கினான்.

(இ-ள்.) அளக்கு இல் கேள்வியார் அரசன் முன்பு போய் - அளத்தற்கரிய நூற்கேள்வியையுடைய சங்கப்புலவர்கள் பாண்டியன் முன்சென்று, அகவி விளக்கி விளம்பினார்கள் - அத்திருப்பாசுரத்திலுள்ள பொருளை விளக்கிக் கூறினார்கள், தன் உளக்கருத்து நேர் ஒத்தலால் - தன்னுள்ளக்கருத்துக்கு முற்றும் ஒத்திருத்தலால், மீனவன் சிரம் துளக்கி மகிழ்ச்சி தூங்கினான் - சண்பகபாண்டியன் சிரக்கம்பஞ்செய்து களிப்பில் மூழ்கினன். (௯௧)

உணர்ந்தகேள்வியாரிவரோடொல்லைபோய்ப்
புணர்ந்தவாயிரம்பொன்னுமின்றமிழ்
கொணர்ந்தவேதியன்கொள்கவின்றென
மணந்ததாரினான்மகிழ்ந்தளிக்கினான்.

(இ-ள்.) உணர்ந்த கேள்வியார் இவரோடு ஒல்லை போய் - முற்றுமுணர்ந்த நூற்கேள்வியில் வல்ல சங்கப்புலவர்களோடு விரைந்து சென்று, புணர்ந்த ஆயிரம் பொன்னும் - ஒருசேரமுடிந்த ஆயிரம்பொன்னையும், இன் தமிழ் கொணர்ந்த வே

Koviloor Digital Library

நியன் இன்று கொள்க என - இனிய தமிழ்ப்பாசுரத்தைக் கொண்டுவந்த அந்தண னின்றே கொள்ளக்கடவனென்று, மணந்ததாரினன் - மணம் வீசுமலர் மாலையணிந்த சண்பகபாண்டியன், மகிழ்ந்து நல்கினன் - மகிழ்கூர்ந்து கொடுத்தனன்.

மனமொத்துக்கொடுத்தான் ஆதலால் மகிழ்ந்து நல்கினன் என்றார். (கஉ)

வேந்தனேவலால்விபுதர்தம்மொடும்
போந்துமீண்டவைப்புறம்புதூங்கிய
வாய்ந்தபொற்கிழியறுக்குநம்பியை
நேர்ந்துகீரனில்லெனவிலக்கினன்.

(இ-ள்.) வேந்தன் ஏவலால் - சண்பகபாண்டியனேவலினால், விபுதர் தம்மொடும் மீண்டு போந்து - சங்கப்புலவர்களோடுந் திரும்பிச்சென்று, அவை புறம்பு தூங்கிய - கல்விச்சங்கத்தின் புறத்துக்கட்டப் பட்டதையும், ஆய்ந்த பொன் கிழி அறுக்கும் நம்பியை-இவ்வளவின வெனவரை யறைப்பட்ட பொன்முடிப்பை யறுக்குந் தருமியை, கீரன் நேர்ந்து நில் என விலக்கினன் - நக்கீரனெதிர்ந்து நில்லாயென்று தடுத்தனன்.

திசைபோய புகழையுடைய நம்மிறுமாப்பொழிய மற்றொருவன் வந்து நம்முன் புகழடைந்து இப்பொற்கிழிபெற்றானே யென்னும் அழுக்காற்றால் தடுத்தனன் என்பார் நம்பியை நேர்ந்து கீரனில்லென விலக்கினன் என்றார். (கங)

குற்றமிக்கவிக்கென்றுகூறலுங்
கற்றிலானெடுங்காலம்வெம்பசி
யுற்றவன்கலத்துண்ணுமெல்லைகைப்
பற்றவாடினன்பண்புபற்றினன்.

(இ-ள்.) இ கவிக்கு குற்றம் என்று கூறலும் - (மறுத்தநக்கீரன்) இக்கவிக்கு இன்னது குற்றமென்று கூற, கற்றிலான்-பொருளிலக்கணங் கற்றுணராத தருமி, நெடுங்காலம் - அநேகநாள், வெம்பசி உற்றவன் - கொடும்பசியடைந்துழன்ற வொருவன், கலத்து உண்ணும் எல்லை - (பெற்றவுணவை) கலத்திலுண்ணுமளவில், கைபற்ற வாடினன் பண்பு பற்றினன் - (உண்ணற்கவென அவன்) கையை மற்றொருவன் வந்துபற்ற இழந்துவாடிய தீப்பசியாளனைப்போன்ற பெருந்துன்பம் அடைந்தான்.

பண்பும் தொழிலுமடங்குதலால் இது தொழிலுவமையணி. (கச)

உலர்ந்தநெஞ்சுகொண்டொதுங்கிநாயக
னலந்தருங்கழனண்ணினனவன்
மலர்ந்தபாடல்கொண்டறிஞர்வைகிடத்
தலர்ந்தசிந்தைகொண்டடைந்தமைந்தனே.

(இ-ள்.) அவன் மலர்ந்த பாடல்கொண்டு - சோமசுந்தரக்கடவுள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரத்தைக்கொண்டு, அறிஞர் வைகிடத்து அலர்ந்த சிந்தை கொண்டு அடைந்த மைந்தன் - தெய்வப்புலவர்கள் வசிக்குந் தமிழ்ச்சங்கத்தைக் களிகூர்ந்த மனத்தோடு அடைந்த தருமி, உலர்ந்த நெஞ்சு கொண்டு ஒதுங்கி - (பொற்கிழிபெறுமையால்) வாடிய மனத்தோடு ஒருபாலொதுங்கி, நாயகன் நலம் தரும் கழல் நண்ணினன் - அச்சோமசுந்தரக்கடவுளுடைய இன்பந்தருந் திருவடிகளை யடைந்தனன். (கரு)

Koviloor Digital Library

செய்யுள்கொண்டுபோய்த்திருமுன்வைத்துளப்
பையுள்கொண்டவப்பனவனென்னைநீ
மையுண்கண்டவிவ்வழுவுபாடலைக்
கையுணல்கினாய்கதியிலேற்கென.

(இ-ள்.) உளம் பையுள் கொண்ட அப்பனவன் - மனத்திற் கவலைகூர்ந்த அத்தருமி, செய்யுள் கொண்டு போய் திருமுன் வைத்து - திருப்பாசுரத்தைக்கொண்டு சென்று திருமுன்னர் வைத்து, மை உண் கண்ட - கரிய நிறம்வாய்ந்த ஸ்ரீகண்டத்தையுடைய பெருமானே, கதியிலேற்கு - நின்னையன்றி யோர் பற்றுக்கோடில்லாத வெனக்கு, நீ வழுவுபாடலை கையுள் நல்கினாய் என்னை என்று - நீ குற்றமுள்ள பாடலைப்பாடி யடியேன் கையிற்கொடுத்தாய் அது என்னகாரணமென்று.

கற்றிலானாதலால் இவ்வழுவுபாடலென நக்கீரன் கூறியவாறு கூறினன். ()

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வறுமைநோய்பிணிப்பப்பன்னாள்வழிபடுமடியேனின்பாற்
பெறுபொருளிழந்தேனென்றுபேசிலேன்யார்க்குமேலாங்
கறைகெழுமிடற்றோய்நின்றன்கவிக்குற்றஞ்சில்வாழ்நாட்சிற்
றறிவுடைப்புலவர்சொன்னாலாருனைமதிக்கவல்லார்.

(இ-ள்.) வறுமை நோய் பிணிப்ப பல்நாள் வழிபடும் அடியேன் - வறுமை நோய் பிணிக்க (அதனை யொழித்தற்பொருட்டு) பலநாளுங் குறையிரந்து வழிபட்ட அடியேன், நின்பால் பெறு பொருள் இழந்தேன் என்று பேசிலேன் - தேவரீரிடத்தில் (வறுமையை யொழித்தற்கு) அடையும் பொருளை யடைந்திலேனென்று குறைகூறிற்றிலேன், யார்க்கும் மேலாம் கறைகெழு மிடற்றோய் - பிரமன்முதலிய யாவர்க்கு மேம்பட்ட விடம்பொருந்திய ஸ்ரீகண்டத்தையுடைய பெருமானே, நின் தன் கவி குற்றம் - தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய பாசுரத்திற்குக் குற்றத்தை, சில் வாழ்நாள் சிற்றறிவு உடைய புலவர் சொன்னால் - சில வாணாளுஞ் சிற்றறிவுமுடைய புலவர்கள் கூறினால், உன்னை மதிக்கவல்லார் யார் - தேவரீரை நன்கு மதிக்கவல்லவரெவர்.

மூதாதை முதலியோர் தொட்டு வழிபடுதலுடையேம் என்பான் பன்னாள் வழிபடும் எனவும், அயன் முதலிய எல்லாத்தேவர்க்கும் பெரியோய் என்பான் யார்க்கு மேலாம் எனவும், சின்னாட்பல்பிணிச் சிற்றறிவுடைய பேதைமக்கள் நின்திருமொழிக்குக் குறைகூறுவராயின் ஒப்புயர்விகந்த நின்புகழென்னும் என்பான் ஆருனைமதிக்கவல்லார் எனவுங்கூறினான். (கஎ)

எந்தையிவ்விகழ்ச்சிநின்னதல்லதையெனக்கியாதென்னாச்
சிந்தைநோயுழந்துசைவச்சிறுவனின்றிரங்கயார்க்கும்
பந்தமும்வீடும்வேதப்பனுவலும்பயனுமான
சுந்தரவிடங்கனங்கோர்புலவனாய்த்தோற்றஞ்செய்தான்.

(இ-ள்.) எந்தை - எனது தந்தையே, இ இகழ்ச்சி நின்னது அல்லது எனக்கு யாது என்னா - இந்த இகழ்ச்சி தேவரீருடையதன்றி யெனக்கு யாதுளதென்று, சிந்தை நோய் உழந்து சைவச்சிறுவன் நின்று இரங்க - மனக்கவலையால் வருந்தி யாதிசைவனாகிய பிரமசாரி யிவ்வாறு நின்று அன்பமுற, யார்க்கும் பந்தமும் வீடும் வேதப்பனுவலும் பயனும் ஆன - எவர்க்கும் பந்தமும் மோக்ஷமும் வேதநூலும் அதன்பயனுமாயுள்ள, சுந்தரவிடங்கன் அங்கு ஓர் புலவனாய் தோற்றஞ் செய்தான்.

Koviloor Digital Library

சோமசுந்தரக்கடவுள் அவ்விடத்தில் ஓர் பெரும்புலவராய்த் திருவுருக்கொண்டருளினர்.

ஆன்மாக்களின் மலப்பிணிப்பொழிக்கத் தனுகரணபுவனபோகங்கள் தந்து வினைக்கேற்பவுடலின்றாட்டுதலால் பந்தமும் எனவும், அழுக்காலழுக்கை யொழித்தல்போலப் பந்தத்தால் மலபந்தத்தையொழித்துத் தன்றிருவடியிற் கூட்டியருளுதலால் வீடும் எனவும், இவற்றை யான்மாக்களுக் கறிவுறுத்தற்பொருட்டு வேதத்தைத் திருவாய்மலர்ந்து அதனுட்கிடையுந் தானுயிருத்தலால் வேதப்பனுவலும் பயனுமான எனவுங்கூறினன். (கூஅ)

கண்டிகைமதாணியாழிகதிர்முடிவயிரம்வேய்ந்த
குண்டலங்குடிகொண்டாகத்தழகெலாங்கொள்ளைகொள்ளத்
தண்டமிழ்மூன்றும்வல்லோன்றானெனக்குறியிட்டாங்கே
புண்டரநுதலிற்பூத்துப்பொய்யிருள்கிழித்துத்தள்ள.

(இ-ள்.) கண்டிகை மதாணி ஆழி கதிர் முடிவயிரம் வேய்ந்த குண்டலம் குடிகொண்டு - மகரகண்டியும் பதக்கமும் மோதிரமும் விளக்கமமைந்த மகுடமும் வயிரமிழைத்த குண்டலங்களும் குடியேறி, ஆகத்து அழகு எல்லாம் கொள்ளை கொள்ள-திருமேனியிலுள்ள பொலிவையெல்லாங் கூட்டுண்ண, தண் தமிழ் மூன்றும் வல்லோன் தான் என்ன குறியிட்டால் ஆங்கு- தண்ணிய இயலிசைநாடகமென்னு மூத்தமிழிலும் வல்லவன்றானேயென்று ஓர்குறி திட்டினாற்போல, புண்டரம் நுதலில் பூத்து பொய் இருள் கிழித்து தள்ள-திரிபுண்டரம் நெற்றியில் மலர்ந்து ஆன்மாக்களின் மலவிருளைக்கீண்டு புறம்போட்டவும்.

திரிபுண்டரத்தால் மும்மலங்களையுங் களைந்தருளுதல் "நீற்றுக்கோடி நிமிர்ந்துகாட்டியும்" என்றும் எதுவால் உணர்க. (கூகூ)

விரிகதிர்ப்படாத்திற்போர்த்தமெய்ப்பையுளடங்கிப்பக்கத்
தெரிமணிக்கடகத்திண்டோளிளையவரடைப்பையோடுங்
குருமணிக்களாஞ்சியம்பொற்கோடிகந்தாங்கமுத்தாற்
புரிமதிக்குடைக்கீழ்ப்பொற்காற்கவரிபால்புரண்டுதுள்ள.

(இ-ள்.) விரிகதிர் படாத்தில் போர்த்த மெய் பையுள் அடங்கி - பரந்த கிரணத்தையுடைய ஆடையால் போர்வைபோலச்செய்த கஞ்சுகத்தால் திருமேனிகரந்து, பக்கத்து - இரண்டுபக்கங்களிலும், எரி மணி கடகம் திண் தோள் இளையவர் - நெருப்புப்போலச் செந்நிறம்வீசுங் கடகத்தையணிந்த திண்ணிய தோள்களையுடைய இளைஞர்கள், அடைப்பையோடும் குருமணி களாஞ்சி அம் பொன் கோடிகம் தாங்க- அடைப்பையினோடும் நிறந்தங்கிய இரத்தினமழுத்திய களாஞ்சியையும் அழகிய பொன் விளிம்புடைய பூந்தட்டினையும் ஒருபாலேந்திவரவும், முத்து ஆல் புரி மதி குடை கீழ்-முத்தங்களாற் கோவைசெய்தமைத்த சந்திரனையொத்த தவளவட்டக்குடைநிழலின்கீழ், பொன் கால் கவரி பால் புரண்டு துள்ள - பொன்னாற்செய்த காம்பினையுடைய சாமரம் ஒருபால் புரண்டு துள்ளவும். (சOO)

சொல்வரம்பிகந்தபாதமென்பதுதோன்றவேத
நல்லபாதுகையாய்ச்சூட்டவின்றனகற்றுப்பாட
வல்லவர்மறையினூறுமருமுதல்கலைபோற்பின்பு
செல்லநூலாய்ந்தோர்வைகுந்திருந்தவைக்களத்தைச்சேர்ந்தான்.

Koviloor Digital Library

(இ-ள்.) சொல் வரம்பு இகந்த பாதம் என்பது தோன்ற - ஆகமவளவையைக் கடந்த திருவடியென்பது புலப்பட, வேதம் நல்ல பாதுகை ஆய் சூட - வேதங்கள் நல்ல பாதுகைகளாகச் சூடாநிற்கவும், கவின்றன கற்று பாட வல்லவர் - தாம் திருவாய்மலர்ந்த பாசுரங்களைக் கற்றுப்பாட வல்லவர்கள், மறையின் ஆறும் மநுமுதல் கலை போல் பின்பு செல்ல - வேதத்தின் சடங்கங்களும் மநுமுதலிய நூல்களும்போலப் பின்றொடர்ந்துவரவும், நூல் ஆய்ந்தோர் வைகும் திருந்து அவை களத்தை சேர்ந்தான் - நூல்களை யாராய்ந்த புலவர்கள் வசிக்கும் நிறையவைக்களத்தை யடைந்தனர்.

சடங்கமாவன சிட்சை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிஷம், கற்பம், நிறையவை. "கலையடக்கஞ்செம்மை நடுவுநிலை நான்கும் - குலனென்றறிவுடையோர் கோதில் - புலனில்லோர் - சென்றுமொழிந்தனவுங் கேட்போர் செறிந்தவிடம் - அன்றோநிறைந்தவவை" எனவருஞ் செய்யுளால் உணர்க. வேதங்களின்பின் சடங்கங்களும் மநுமுதலிய நூல்களுந் தொடர்ந்து நிற்றல்போல என்பார் மறையின் ஆறும் மநுமுதல் கலைபோல் என்றார். மெய்ப்பையுளடக்கி என்பதில் அடங்கியென்னும் வினையெச்சம் சேர்ந்தான் என்னும் வினைமுற்றின் முதனிலையையும், தாங்க, அள்ள, சூட, செல்லவென வேறு பல வடுக்கிய வினையெச்சங்கள் தனித்தனியம் முற்றின் முதனிலையையுங் கொண்டன. (௧௦௧)

ஆரவைகுறுகிநேர்நின்றங்கிருந்தவரைநோக்கி
யாரைநங்கவிக்குக்குற்றமியம்பினாரென்றுமுன்னங்
கீரனஞ்சாதுயானேபிழைத்தினேனென்றானின்ற
சீரணிபுலவன்குற்றம்யாதெனத்தேராக்கீரன்

(இ-ள்.) ஆர் அவை குறுகி - நிறையவைக்களத்தையடைந்து, நேர் நின்று - எதிரே நின்று, அங்கு இருந்தவரை நோக்கி - அச்சங்கமண்டபத்திருந்த புலவர்களைப்பார்த்து, நம் கவிக்கு குற்றம் இயம்பினார் யார் என்று முன்னம் - நமது பாசுரத்திற்குக் குற்றங்கூறிய புலவர் யாரென்று வினவுதற்கு முன்னம், கீரன் அஞ்சாது யானே பிழைத்தினேன் என்றான் - நக்கீரன் சிறிதுமஞ்சாமல் யானே குற்றங்கூறினேனென்று கூறினான், நின்ற சீர் அணி புலவன் குற்றம் யாது என்ன - அங்கு நின்றருளிய சிறப்புவாய்ந்த புலவர் சூளாமணியாகிய சோமசுந்தரக்கடவுள் குற்றம் யாதென்று வினவ, தேராத கீரன் - பொருளிலக்கணந் தெளிந்துணராத நக்கீரன்.

பொருளிலக்கண முணராதவன் என்பார் தேராக்கீரன் எனவும் சொற்குற்றமோ பொருட்குற்றமோ என்பார் யாதென எனவுங்கூறினார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. (௧௦௨)

சொற்குற்றமின்றுவேறுபொருட்குற்றமென்றான்றூய
பொற்குற்றவேணியண்ணல்பொருட்குற்றமென்னையென்றான்
றற்குற்றம்வருவதோரான்புனைமலர்ச்சார்பாலன்றி
யற்குற்றகுழற்குநாற்றமில்லையேயென்றானையன்.

(இ-ள்.) சொல் குற்றம் இன்று - சொற்குற்றமில்லை, வேறு பொருள் குற்றம் என்றான் - வேறே பொருட்குற்றந்தான் என்று கூறினான், தூய பொன் குற்றவேணி அண்ணல் - மாற்றுயர்ந்த பொன்னை உரசியுருத்திரித்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், பொருள் குற்றம் என்னை என்றான் - பொருட்குற்றம் யாதென்று

Koviloor Digital Library

வினவினார், தன் குற்றம் வருவது ஓரான்-தனக்குப் பெருந்தவறு வருதலை முன்று ணராத நக்கீரன், புனை மலர் சார்பு ஆல் அன்றி - அணிந்தமலரின் சேர்க்கையால ல்லாமல், அல்கு உற்ற குழற்கு நாற்றம் இல்லையே என்றான் - இருளுக்கு நட்பாயு ள்ள கூந்தலுக்கு இயற்கையிலே வாசமில்லையேயென்று கூறினான், ஐயன் - சோம சுந்தரக்கடவுள். (௪0௩)

பங்கயமுகமென்கொங்கைப்பதுமினிகுழலோவென்ன
வங்கதுமனைத்தேயென்றானாலவாயுடையான்றெய்வ
மங்கையர்குழலோவென்னவன்னதுமந்தாரத்தின்
கொங்கலரணைந்துநாறுங்கொள்கையாற்செய்கைத்தென்றான்.

(இ-ள்.) பங்கயம் முகம் மெல் கொங்கை பதுமினி குழலோ என்ன - தாம ரைமலர்போன்ற முகத்தையும் மெல்லிய தனத்தையுமுடைய பதுமினியின் கூந்த லோவென்று வினவ, அது உம் அனைத்து ஏ என்றான் - அக்கூந்தலும் அத்தன்மைத் தேயென்று கூறினான், ஆலவாய் உடையான் தெய்வ மங்கையர் குழல் ஒ என்ன - சோமசுந்தரக்கடவுள் விண்ணுலகிலுள்ள தெய்வப்பெண்கள் கூந்தலோவென்று வி னவ, அன்னதும் - அக்கூந்தலும், மந்தாரத்து இன் கொங்கு அலர் அணைந்து நாறு ம் கொள்கையால் - பஞ்சதருக்களிலொன்றாகிய மந்தாரத்தினுடைய வாசமிக்க ம லரைப்பொருந்தி நறுமணங்கமழுங் கொள்கையினால், செயற்கைத்து என்றான் - செயற்கையதேயன்றி யியற்கையதன்றென்று கூறினான்.

உத்தமசாதியாகிய பதுமினிப்பெண்கள் கூந்தல் இயற்கைமணமுடையதெ ன்பார் பதுமினிகுழலோவென்ன எனவும், இந்திராணிமுதலிய தெய்வமகளிர்க்கு ம் அன்னதேயென்பார் தெய்வமங்கையர் குழலோவென்ன எனவும், இவ்வியற் கையை யுணராதவன் என்பார் கொங்கலரணைந்து நாறுங்கொள்கையாற் கொள்கை த்தென்றான் எனவுங் கூறினார். (௪0௪)

பரவிநீவழிபட்டேத்தும்பரஞ்சுடர்திருக்காளத்தி
யரவுநீர்ச்சடையார்பாகத்தமர்ந்தஞானப்பூங்கோதை
யிரவினீர்ங்குழலுமற்றோவெனவஃதுமற்றேயென்னா
வெருவிலான்சலமேமுற்றச்சாதித்தான்விளைவுநோக்கான்.

(இ-ள்.) நீ பரவி வழிபட்டு ஏத்தும் - நீ துதித்து வழிபட்டு வணங்கும், ப ரஞ்சுடர் திருக்காளத்தி அரவு நீர் சடையார் பாகத்து அமர்ந்த ஞானப்பூங்கோதை இரவு இன் ஈர்ங்குழல் உம் அற்றோ என்ன - எல்லா ஒளிகட்கு மேம்பட்ட ஒளியா கிய திருக்காளத்தியிலெழுந்தருளிய சர்ப்பத்தையுங் கங்கையையும் அணிந்த சடாம குடத்தையுடைய இறைவரது இடப்பாகத்திலமர்ந்த தண்ணியகுழலும் அத்தன்மை த்தோவென்று வினவ, அஃதும் அற்று ஏ என்னா - அதுவும் அத்தன்மைத்தேயென் று, வெருவிலான் - சிறிதும் அச்சமின்றி, விளைவு நோக்கான் - பின்வருங் கெடுதி யைச் சிறிதுமுணராத நக்கீரன், சலம் ஏ முற்ற சாதித்தான் - (மற்கடம்போல) தான்கொண்ட கருத்தையே முடிவுகாறுஞ் சாதித்தனன்.

கருணாமூர்த்தியாதலால் அவன் வழிபடும் பிராட்டியாரிடத்தேனும் சலம் சி றிது நெகிழுமோவென ஆராய்ந்தாரென்பார் ஞானப்பூங்கோதை இரவினீர்ங்குழலு மற்றோ எனவும், சலமே பெரிதெனக் கருதினான் என்பார் அஃது மற்றேயென்னா

Koviloor Digital Library

வெருவிலான் எனவும், கேடுறவோர்சிறிதும் ஆராயார் என்பார் சலமேமுற்றச் சமதிந்தன் விளைவுநோக்கான் எனவுங் கூறினர்.

சந்திராதித்தர்களுக்கு ஒளிதருவோர் ஆதலாற் பரஞ்சுடர் என்றார். இதனை முன்னர்க்காண்க. (௬௦௩)

கற்றைவார்சடையானெற்றிக்கண்ணினைச்சிறிதேகாட்டப்
பற்றுவானின்றுமஞ்சானும்பரார்பதிபோலாக
முற்றுநீர்கண்ணானாலுமொழிந்தநும்பாடல்குற்றங்
குற்றமேயென்றான்றன்பாலாகியகுற்றந்தேரான்.

(இ-ள்.) கற்றை வார் சடையான் - நெருங்கிய நீண்ட சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், நெற்றி கண்ணினை சிறிது காட்ட பற்றுவான் - நெற்றிக்கண்ணினைச் சிறிதுகாட்ட (அத்தியால்) பற்றப்படுவோன், இன்னும் அஞ்சான் - இன்னமுஞ் சிறிதும் அஞ்சாதவனாய், உம்பரார் பதிபோல் - இந்திரனைப்போல, ஆகம் முற்றும் நீர் கண் ஆனாலும் - உடம்புமுழுது நீர்கண்களானாலும், மொழிந்த நும்பாடல் - கூறிய உமது செய்யுள், தன்பால் ஆகிய குற்றம் தேரான் - தன்னிடத்துள்ள குற்றத்தைச் சிறிதுமுணராத நக்கீரன், குற்றம் குற்றம் ஏ என்றான் - குற்றங் குற்றமேயென்று கூறினான்.

உருத்திரமூர்த்தியாதலால் கண்ணினைச் சிறிதே காட்டஎனவும், கேடுறுவோர் பிறர் தம்பாற் செய்யுங்கருணையைச் சிறிதும் உணரார் ஆதலால் மொழிந்தநும்பாடல் குற்றங் குற்றமேயென்றான் எனவுங் கூறினர். (௬௦௬)

கலிநிலைத்துறை.

தேய்ந்தநாண்மதிக்கண்ணியானுதல்விழிச்செந்தீப்
பாய்ந்தவெம்மையிற்பொறாதுபொற்பங்கயத்தடத்து
ளாய்ந்தநாவலன்போய்விழுந்தாழ்ந்தனனவனைக்
காய்ந்தநாவலனிம்மெனத்திருவுருக்கரந்தான்.

(இ-ள்.) தேய்ந்த நாள் மதி கண்ணியான் நுதல் விழி செந்தீ பாய்ந்த வெம்மையில் பொறாது - குறைந்த இளம்பிறையாகிய கண்ணிமாலையையணிந்த சோமசுந்தரக்கடவுளுடைய நெற்றிக்கண்ணுமிழ செந்நெருப்பிற்பரந்த வெப்பஞ் சிறிது பற்றுதலால், பொறாது - சற்றும் ஆற்றாது, பொன் பங்கயம் தடத்து உள் - பொற்றாமரைத் தடாகத்தில், ஆய்ந்த நாவலன் போய் விழுந்து ஆழ்ந்தனன் - பல நூல்களையும் ஆராய்ந்துணர்ந்த நக்கீரன் சென்று விழுந்தழுந்தினான், அவனை காய்ந்த நாவலன் இம்மென திருவுரு கரந்தான் - அந்நக்கீரனைச் சிறிது காய்ந்தருளிய புலவர் குலமணியாகிய சோமசுந்தரக்கடவுள் விரைந்து திருவுருமறைத்தருளினார்.

தமது திருவடிக்குப் பிழைசெய்தோர் மீட்டும் வந்தடையில் அப்பிழை நோக்காது அருளும்பேரருளாளர் என்பதுதோன்றத் தேய்ந்தநாண்மதிக்கண்ணியான் என்றார். (௬௦௭)


தருமிக்குப் பொற்கிழியளித்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உ௩௧௬.

Koviloor Digital Library

கீரனைக்கரையேற்றிய திருவிளையாடல்

Koviloor Digital Library



Koviloor Digital Library

ஐம்பத்துமூன்றாவது.

கீரனைக் கரையேற்றிய படலம்.

கலிவிருத்தம்.

மாரனைப்பொடிகண்டவனந்தணமைந்தனுக்
காரநற்கனகக்கிழியீந்ததறைந்தன
மேரனத்திரள்சூழ்மலரோடையிடத்தினுங்
கீரனைக்கரையேற்றியவாறுகிளத்துவாம்.

(இ-ள்.) மாரனை பொடி கண்டவன் - மன்மதனை நீறுபடுத்திய சோமசுந்தரக்கடவுள், அந்தண மைந்தனுக்கு-பார்ப்பனச் சிறுவனுக்கு, ஆர-மனங்களிக்க, நல் கனகக் கிழி ஈந்தது அறைந்தனம்-நல்ல பொன்முடிப்புத் தந்தருளிய திருவிளையாடலைக்கூறினும்,ஏர் அன்னம் திரள் சூழ் மலர் ஓடை இடத்து இன் உம் கீரனை கரை ஏற்றிய ஆறு கிளத்துவாம்-அழகிய அன்னக்கூட்டங்கள் சூழ்ந்த பொற்றாமரைத் தடத்தினின்றும் நக்கீரனைக் கரையேற்றிய திருவிளையாடலை யினியெடுத்துக் கூறுவாம்.

நிக்கிரகித்தல் பரிக்கிரகித்தற்கு ஏது என்பார் மாரனைப் பொடிகண்டவனென்றதற்கியையக் கீரனைக் கரையேற்றிய ஆறுஎன்றார். (க)

தாழ்ந்தவேணியனெற்றிமூளைத்ததழற்கணாற்
போழ்ந்தநாவலனுடகபங்கயப்பொய்கைவாய்
வீழ்ந்தரும்படர்வேலையில்வீழ்ந்தனன்விம்முறச்
சூழ்ந்தநாவலர்கண்டுபொருதுதுளங்குவார்.

(இ-ள்.) தாழ்ந்த வேணியன் நெற்றி மூளைத்த தழல் கண் ஆல் - நீண்ட சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுளது நெற்றியிற்றோன்றிய, தழல் கண்ணால் - அனற்கண்ணினால், போழ்ந்த நாவலன் - பிளக்கப்பட்ட நக்கீரன், ஆடக பங்கயம் பொய்கை வாய் வீழ்ந்து - பொற்றாமரைத் திருக்குளத்தில் வீழ்ந்து, அரும்படர் வேலையில் வீழ்ந்தனன் விம்முற-சொல்லுதற்கரிய துன்பக்கடலில் விழுந்துவருந்த, சூழ்ந்த நாவலர் கண்டு பொருது துளங்குவார் - (அந்நக்கீரனை) சூழ்ந்துநின்ற ஏனைச்சங்கப்புலவர்கள் நோக்கி மனம்பொருது வருந்துவாராயினார்கள்.

நக்கீரனுற்ற துன்பத்திலும் அவனைப் பிரிந்துநின்ற பெருந்துன்பத்தால் விழுங்கப்பட்டவராயினர் ஆதலால் கண்டுபொருது துளங்குவார் என்றார். (உ)

ஏன்றவேந்தனிலாக்குடியீட்டமுமின்கதிர்
கான்றநாயகமாமணிபோகியகண்டியு
மான்றஞானமிலாதவர்கல்வியுமானதே
சான்றகீரனிலாதவைகூடியசங்கமே.

(இ-ள்.) ஏன்ற வேந்தன் இல்லாத குடி ஈட்டம் உம் - தமக்கேற்ற அரசனையிழந்த குடிகளின் கூட்டத்தையும், மின் கதிர் கான்ற - விளங்கும் கிரணத்தைவீசிய, நாயக மாமணி போகிய கண்டியும் - நடுநாயகமணியையிழந்த கண்டிகையையும், ஆன்ற ஞானம் இல்லாதவர் கல்வியும் - நிறைந்த வுணர்வில்லார் கற்றகல்வியையும், சான்ற கீரன் இல்லாது அவை கூடிய சங்கம் ஆனது - நூற்கேள்வியாலமைந்த நக்கீரனில்லாது சபைகூடிய புலவர்சங்கம் ஒத்தது.

தம்முள் ஒருவழிப்பட்டு நின்றிலர் என்பார் ஒன்றவேந்தனிலாச்குடியிட்டும் எனவும், தமது ஒளியிழந்து நின்றனரென்பார் மின்கதிர்மான்ற நாயகமாமணிபோலியகண்டியும் எனவும், நக்கீரனை யிழந்தமிற்றலால் உணர்விழந்தனர் என்பார் அன்றஞானமிலாதவர் கல்வியும் ஆனது எனவுங் கூறினர். (௩)

ஐயசொற்பொருடன்வடிவானவராலவாய்
மைதழைத்தமிடற்றினர்தம்மொடும்வாதுதான்
செய்தவிப்பிழையோபெரிதெப்படிதிருமோ
யுய்வதற்புதமேயெனயாவருமுன்னினர்.

(இ-ள்.) சொல் பொருள் தன் வடிவானவர் - பதப்பொருளின் வடிவாயுள்ளவராகிய, ஆலவாய் மைதழைத்த மிடற்றினர் தம்மொடும் - திருவாலவாயிலெழுந்தருளிய கருநிறமிக்க ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுளோடும், வாது தான் செய்த இ பிழையோ பெரிது - வாதுசெய்த இந்தத்தவறு எல்லையில்லாதது, எப்படி திரும் - எவ்வாறுதிரும், உய்வது அற்புதம் என்ன - (அப்பிழையினின்றும்) தப்புவது அரிதென்று, யாவரும் உன்னினர், சங்கப்புலவர்களெவரும் கருதி வருந்தினர்கள்.

பொருள்தந்து நிற்பித் பதமன்றித் தாராதொழியிற் பதமாகைமையால் சொற்பொருள் தன்வடிவானவர் எனவும், பொருளால் வாதன்றிச்சொல்லால் வாதின்மையின் அப்பொருள் வடிவானவரோடு வாதசெய்தது பெருந்தவறுதலால் வாது தான்செய்த விப்பிழையோ பெரிதெனவும், அது நிர்வுக்குபாயம் வேறின்மையால், எப்படி திருமோ உய்வதற்புதமேஎன யாவருமுன்னினர் எனவுங்கூறினர், ஐய அசையிடைச்சொல். (௪)

எய்திவெள்ளிமலைபெயர்த்தானுமிறுத்ததன்
கையில்வீணைதொட்டின்னிசைபாடக்கனிந்தவன்
செய்ததீங்குபொறுத்ததுமன்றித்திண்டேரொடு
மொய்கொள்வாளுங்கொடுத்தனன்புண்ணியமூர்த்தியே.

(இ-ள்.) வெள்ளிமலை எய்தி பெயர்த்தானும் - கயிலையங்கிரியையடைந்து பெயர்த்த இராவணனும், இறுத்த தன் கையில் வீணை தொட்டு - (அக்கிரியைப்) பறித்த தனது கையிலுள்ள நரம்பாற்றொடுத்த வீணையைத்தடவி, இன் இசை பாட - இனிய சாமகீதம்பாட, கனிந்து அவன் செய்த தீங்கு பொறுத்தது உம் அன்றி - மனங்கனிந்து அவ்விராவணன்செய்த அபராதத்தைப் பொறுத்ததுமல்லாமல், திண் தேர் ஒடு மொய் கொள் வாளும் புண்ணிய மூர்த்தி கொடுத்தனன் - திண்ணிய தேரோடும் போர்த்தொழிற்குரிய சந்திரவாளையும் தருமசொரூபியாகி இறைவரும் தந்தருளினர்.

இராவணன் அளகையைவென்று சரவணத்திருப்பொய்கையையடையும் அமையத்தில் விமானம் செல்லாததிற்கு அதனை நந்திநாயனாரானுணர்ந்து இக்கயிலையை வேரோடுபெறிப்பேனென்று பறிக்கச், சிவபெருமானார் திருவிரலூன்றினர், அத்திருமலைக்கீழ் ஆயிரம்வருடம் ஆலையிற்பட்ட கரும்புபோல நசுக்குண்டழுந்தி வருந்தும் இராவணன் தனது அமைச்சர்களால் உணர்ந்து தனது தலையிலொன்றையும் கையையுஞ்சேதித்து அக்கைநரம்புகளால் வீணைகூட்டிச் சாமகீதம்பாட, அவ்விறைவர் கேட்டருளித் தேரும்வாளும் முன்றரைக் கோடியாயுளும் அருளப்பெற்றன

Koviloor Digital Library

ன் என்பது "இத்தலையெய்தலெந்தை யிறைவியோடமர்ந்தானென்னு-மைத்தருமிடற்றுநந்தி விலக்கவாண்முகத்தைநோக்கிக்-கைத்தலம்புடைத்தவெய்யோனகுதலுங்கனன்றுநந்தி-தய்த்தலைகுரங்காகுன்சீர் தொலைகவென்றுருத்துவைதான்-வைதலுந்தசக்கிரீபன்வான்றொடர் கயிலைவெற்பை - வெய்தினிலெடுப்பவெந்தை விரற்றலைநுனியானூன்றப்-பையுளுற்றழுதுமாழ்கிப் பரமனைப்பழிச்சிவெய்யோன்-ஐதுணர்சாமகான மறிவொடுபாடலுற்றான்" எனக் கூர்மபுராணத்திலும் "காயவனையாலைமிசைபரய்வகைய முக்கியகரும்பதெனவே - சேயுயர்விசும்புநிலனும்திரைக ளுந்திசைகளோடுதிர்தர-வாயொருபதுக்குருதி பொங்கியிடவங்குவருடங்களவையோர்-ஆயிரம்விலங்கலுளடங்கினன் முடங்கியலமர்ந்தலறினன், வான்றிகழ்வெள்ளிவெற்பின்கீழுற்றுவருந்துகின்ற - வூன்றிகழ்வேலினானை யமைச்சர்தாமுற்றுநோக்கித் - தேன்றிகழிதழியான்றன் திருச்செவிசாரநின்கை - தான்றிகழ்வீணையாகப் பாடுதிசாமமென்றார். அன்னதேகருமமென்னு வரக்கனுமறிவுட்கொண்டு - தன்னதுதலையிலொன்றைத்தடிந்து தன்கையிற்சேர்த்த - இன்னவினரம்பிற்றுத் தங்கிளைமுதலிசைகளேழாற் - பன்னருஞ்சாமகீதம் பரிவினாற்பாடலுற்றான். அவ்வழியவனும் பாடவரன்மகிழ்ந்தழைத்துக்கொண்டு - மூவ்வகையுலகுமாள மூன்றரைக்கோடியாண்டும் - எவ்வகைப்படையும் வெல்லுஞ்சந்திரவாளுமீந்தான்" என உத்தரகாண்டத்தினும் வருஞ் செய்யுள்களால் உணர்க. (ரு)

யாவராலுமகற்றரிதிப்பிழையாவர்க்குந்
தேவராமவரோதிருவுள்ளந்திரும்பினாற்
போவதேயிதுவேதுணிபென்றுபுகன்றுபோய்ப்
பாவலோர்பரன்றாணிழலிற்பணிந்தேத்துவார்.

(இ-ள்.) இ பிழை - இத்தவறு, யாவராலும் அகற்றரிது - (சிவ அபராதம் ஆகையால்) எவராலும் போக்குதலரிது, யாவர்க்கும் தேவர் ஆம் அவரோ திருஉள்ளம் திரும்பினால் போவது - அயன்முதலிய எவர்க்குந் தேவராகிய அச்சோமசுந்தரக்கடவுளே திருவுள்ளந் திரும்பில்போம், இது ஏ துணிபு என்று புகன்று போய் இதுவே துணிபன்றி வேறில்லையெனத் துணிந்துசென்று, பாவலோர் பரன் தாள் நிழல் இல் பணிந்து ஏத்துவார் - கபிலர்முதலிய தெய்வப்புலவர்கள் அச்சோமசுந்தரக்கடவுளின் திருவடிநிழற் கீழடைந்து வணங்கித் துதிப்பார்கள்.

இராவணன் இயற்றிய சிவவபராதத்திற்குத் தீர்வு அச்சிவபிரான் திருவுள்ளந் திரும்புதலே அதுபோல, இச்சிவஅபராதத்திற்குத் தீர்வு அவர் திருவுளந்திரும்புதலே எனத் துணிந்தார்களென்பார் இதுவே துணிபென்று புகன்றுபோய் எனவும், இவர்கொண்ட துன்பவேடையொழிவது ஏனை நிழலாலன்று என்பார் தாணிழலிற்பணிந்தேத்துவார் எனவுங் கூறினார். (சு)

திருத்தனேசரணஞ்சரணம்மறைச்சென்னிமே
னிருத்தனேசரணஞ்சரணந்நிறைவேதநூ
லருத்தனேசரணஞ்சரணந்திருவாலவா
யொருத்தனேசரணஞ்சரணங்களுனக்குநாம்.

(இ-ள்.) திருத்தனே சரணம் சரணம் - புனிதமானவனே நினக்கு அடைக்கலம், மறை சென்னி மேல் நிருத்தனே சரணம் சரணம் - வேதசிரசின்மேல் திருநடனஞ்செய்பவனே நினக்கு அடைக்கலம், நிறை வேதநூல் அருத்தனே சரணம் ச

ரணம் - நிறைந்த வேதநூற்பொருளாயுள்ளவனே நினக்கு அடைக்கலம், திருவால வாய் ஒருத்தனே உனக்கு நாம் சரணம் சரணங்கள் - திருவாலவாயிலெழுந்தருளி ய ஒருவனே நினக்கு நாங்களடைக்கலம்.

திருத்தனே என்றமையால் விசுத்ததேகம் எனப்படும் தூயவுடம்பினனாத லும், மறைச்சென்னிமேல் நிருத்தனே என்றது பரமான்மா எனப்படும் அநாதி போதம் ஆகாதிமுத்தத்தன்மையெனப்படும் இயல்பாகவே பாசங்களினீங்குதலும், இயற்கையுணர்வினனாதலும், நிறைவேதநூலருத்தனே என்றமையால் அளவிலாற்ற லுடைமையும்; திருவாலவாயொருத்தனே என்றமையால் சர்வஞ்ஞத்துவம் எனப் படும் முற்றுமுணர்தலும் ஆகிய ஐந்தகுணங்களும் இந்த நான்குவாக்கியங்களாற் பு லப்பட வணங்கினார்கள் என்பார். இவ்வாறு கூறினர். (எ)

பாயுமால்விடைமேல்வருவோய்பல்லுயிர்க்கெலாந்
தாயுந்தந்தையுமாகுநின்றண்ணளிதாமரைக்
கேயுமாதவன்போனல்லதீயவியற்றினோர்க்
காயுமின்பமுந்துன்பமுமாக்குவதாதலால்.

(இ-ள்.) பாயும் மால் விடைமேல் வருவோய் - பாய்ந்து விரைந்துசெல்லு ந் திருமாலாகிய விடையின்மேல் அடியவர்க்கருள விரைந்துவருபவனே, பல் உயி ர்க்கு எல்லாம் தாயும் தந்தையும் ஆகும் நின் தண் அளி - அயன்முதலிய பல வுயிர் களுக்கெல்லாம் தாயுந்தந்தையுமாய் நின்ற நினது தண்ணிய கருணையே, தாமரைக் கு ஏயும் ஆதவன் போல் - தாமரைக்கியைந்த சூரியன்போல, நல்ல தீய இயற்றினோ ர்க்கு - நல்வினையையுந் தீவினையையும் செய்தவர்களுக்கு, ஆயும் இன்பமும் துன்ப மும் ஆக்குவது - ஆராயும் இன்பத்தையுந் துன்பத்தையும் செய்யாநின்றது, ஆதலா ல் - ஆகையால்.

அடியார்கருதிய திருவுருவோடு விரைந்து வந்தருளுவன் என்பார். பாயு மால்விடைமேல் வருவோய் எனவும், அநுத்தசத்தியெனப்படும் பேரருளுடைய ன் என்பார் பல்லுயிர்க்கெலாந் - தாயுந்தந்தையுமாகு நின்றண்ணளியெனவும், தா மரை அலர்தலும்போது ஆதலும் உலர்தலும்ஆகிய விகாரமடைய நின்று சூரியன் அ விகாரியாதல்போல என்பார் தாமரைக்கேயு மாதவன்போல்எனவும், ஆன்மாக்கள் செய்த புண்ணியபாவங்களுக்கு ஈடாக அவ்வப்பயன்களை யுடனின்றூட்டி, அவிகா ரியாய் நிற்பது என்பார் நல்லதீயவியற்றினோர்க் - கேயுமின்பமுந்துன்பமுமாக்குவது எனவும் கூறினர். "மறைகளீசன்சொலச்சொல்வழிவாராவுயிரைவைக்குஞ்-சிறை கன்மாதிரயமிட்டபணிசெய்வோர்செல்வத்தோடும் - உறையுமாபதிகளும்பருலகங் கள்யோனிக்கெல்லாம் - இறைவனுமேயிருவின்பத்துன்பங்களியைவதாகும்" எ ன்ற திருவால் உணர்க. (அ)

அத்தகற்றசெருக்கினறிவழிகீரனின்
வித்தகக்கவியைப்பழுதென்றவிதன்மையான்
மத்தகக்கண்விழித்துவெதுப்பின்மலர்ந்தபொன்
முத்தகக்கமலத்திடைவிழமுடிக்கிறாய்.

(இ-ள்.) அத்த - இறைவனே, கற்ற செருக்கின் - கற்றுணர்ந்த இறுமாப்பி னால், அறிவு அழி கீரன் - உணர்வழிந்த நக்கீரன், நின் வித்தகம் கவியை பழுது எ ன்றவி தன்மையால் - உனது சதுரப்பாட்டையுடைய பாடலைத் தவறுஎன்று கூறிய

Koviloor Digital Library

விதண்டாவாதத்தால், மத்தகம் கண் விழித்து - நெற்றியிலுள்ள அனற்கண்ணைச் சிறிது திறந்தருளி, வெதுப்பு இன் - அதன் வெதுப்பினால், மலர்ந்த பொன் முத்து அகம் கமலத்து இடை விழ முடுக்கினாய் - மலர்ந்த பொன்னிறமாகிய முத்தங்களைத் தன்பாலுள்ள பொற்றாமரைத்தீர்த்தத்தில் விழச்செலுத்தி யருளினாய்.

முத்துப் பிறப்பிடங்களுள் தாமரை யொன்றாதலால் முத்தகக்கமலம் என்றார். தேவரீர் திருவடிக்குத் தீங்குசெய்தவன் என்பார் அறிவழி கீரன் எனவும், அவன்கூறியது வாதமன்று என்பார் விதண்டையால் எனவும், அத்தீங்கினை யொழித்தற்குத் தீங்கிழைச்செய்தீர் என்பார் மத்தகக்கண்விழித்து வெதுப்பின்கமலத்திடை விழமுடுக்கினாய் எனவுங் கூறினார். விதண்டை பிறர்கூறுங் கூற்றாலக்கூற்றை மறுத்துத் தன்றுட்கோளை நாட்டல். (௯)

இருணிறைந்தமிடற்றடிகேளினியிப்பிழை
கருணைசெய்துபொறுத்தருளென்றுகபிலனும்
பரணனும்முதலாகியபாவலர்யாவருஞ்
சரணமென்றுவிழுந்திரந்தாரடிசாரவே.

(இ-ள்.) இருள் நிறைந்த மிடறு அடிகேள் - கருமைமிக்க ஸ்ரீகண்டத்தை யுடைய அடிகளே, இனி - இனியேனும், கருணை செய்து இ பிழை பொறுத்தருள் என்று - அருள்செய்து இப்பிழையினைப் பொறுத்தருளாயென்று, கபிலனும் பரணனும் முதலாகிய பாவலர் யாவரும் - கபிலனும் பரணனுமுதலாகிய புலவர்களெல்லோரும், சரணம் என்று அடி சார விழுந்து - அடைக்கலமென்று திருவடியைச் சாரவீழ்ந்து; இரந்தார் - குறையிரந்தார்கள்.

தேவர்கள் தமதறியாமையின்றிச் செய்தபிழையையும் அவர் வேண்டுகோளாற் பொறுத்தருளிய கருணாமூர்த்தி நாமென்னுங் குறியீடுடையார் என்பார் இருணிறைந்தமிடற்றடிகேள் எனவும், அழுக்கினையழுக்கால் ஒழித்தல்போல நக்கீரன்செய்த தீங்கினை யொழித்தற்குச்செய்த தீங்கும் அநுக்கிரகமே என்பார் இப்பிழை கருணைசெய்து பொறுத்தருளென்று எனவுங் கூறினார். "தந்தைதாய்பெற்ற தத்தம் புதல்வர்கடஞ்சொலாற்றின்-வந்திடாவிடினுறுக்கி வளாரினாலடித்துத்தீய-பந்தமு மிடுவரெல்லாம் பார்த்திடிற்பரிவேயாகும் - இந்த நீர்முறைமையன்றோ வீசனார்செயலுமென்றும்" எனவரும் ஏதுவால் உணர்க. (௫௰)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அக்கிரவேலையாலமயின்றவெங்கருணைவள்ள
லிக்கீரமழலைத்தீஞ்சொலிறைவியோடெழுந்துபோந்து
நக்கீரன்கிடந்தசெம்பொனளினப்பூந்தடத்துறாய்கர்ப்
புக்கீரமதுரத்தீஞ்சொற்புலவர்தங்குழாத்துணின்றான்.

அக்கிரம் வேலை ஆலம் அயின்ற எம் கருணை வள்ளல் - அந்தப் பாற்கடலிற் றோன்றிய விடத்தையுண்டருளிய எமது கருணாமூர்த்தியாகியசோமசுந்தரக்கடவுள், இக்கு ஈர் அம் மழலை தீஞ் சொல் இறைவி ஒடு எழுந்து போந்து - கரும்பி னிரசத்தைவென்ற அழகிய மழலையாகிய இனியசொற்களையுடைய உமாதேவியாரோடெழுந்துவந்து, நக்கீரன் கிடந்த செம் பொன் நளினப் பூந்தடத்து ஞாங்கர் - நக்கீரனமுந்திய பொற்றாமரைத் திருக்குளத்தினயலில், புக்கு - அடைந்து, ஈரம் மதுரம்

Koviloor Digital Library

நிஞ் சொல் புலவர் தம் குழாத்து உள் நின்றான் - குளிர்ந்த இனியசொல்லாராய்ச் சிறப்புடைய புலவர்கூட்டத்துள் நின்றருளினார்,

அரைச்சட்டு உயர்வுகுறித்து நின்றது. நக்கீரன் உயர்ந்த சொற்களையுடைய வன். சொற்கள் செஞ்சொல், ஆக்கச்சொல், குறிப்புச்சொல் என மூவகைப்பட்டுச் செம்பொருள், ஆக்கப்பொருள், குறிப்புப்பொருளாகிய இவற்றை யுணர்த்திநிற்றலா ல் ஈரமதாத் நிஞ்சொற்புலவர் என்றார். செம்பொருளாவது செஞ்சொல்லுக்குரிய பொருளையுணர்த்தல், ஆக்கப்பொருளாவது அச்செம்பொருளின் சம்பந்தியையுண ர்த்தல். குறிப்புப்பொருளாவது அவ்விரண்டு பொருள்களினும் வேறாய பொருளை புணர்த்தல்.

அனற்கணானோக்கினான்பின்னருட்கணானோக்கவாழ்ந்த
புனற்கணேகிடந்தகீரன்பொறிபுலன்கரணமெல்லாங்
கனற்கணார்தமவேயாகக்கருணைமாகடலிலாழ்ந்து
வினைக்கணேயெடுத்தயாக்கைவேறிலன்புருவமானான்.

(இ-ள்.) அனல் கண்ணால் நோக்கினான் - நெற்றிக்கண்ணாற் சிறிதுநோக்கிய ருளிய சோமசுந்தரக்கடவுள், பின் அருள் கண்ணால் நோக்க - பின்னர் கருணைநோ க்கத்தாற் சிறிதுபார்த்தருள, ஆழ்ந்த புனல் கண் ஏ கிடந்த கீரன் - ஆழ்ந்தபொற்று மரைத் திருக்குளத்தி லழுந்திய நக்கீரன், பொறி புலன் கரணம் எல்லாம் - இந்திரி யங்களும் சத்தமுதலிய ஐம்புலன்களும் அந்தக்கரணங்களுமாகிய யாவும், கனல் கண்ணார் தம ஏ ஆக - அதற்கண்ணராகிய அப்பெருமானுருடைமையாக, கருணை மா கடலில் ஆழ்ந்து - திருவருளாகிய பெரியகடலிலழுந்தி, வினை கண் ஏ எடுத்த யாக் கை - இருவினையால்வந்த சரீரம், வேறு இல் அன்பு உருவம் ஆனான் - தம்மிலொன் றுபட்ட அன்பின்வடிவமாயிருந்தனன்.

அனற்கண்ணால் பொற்றாமரைத்தீர்த்தத்தி லழுந்திக்கிடத்தல்போல அருட்க ண்ணால் திருவருட்கடலி லழுந்தினன் என்பார் அருட்கண்ணால்நோக்கக் கருணைமாக டலிலாழ்ந்து எனவும், திருவருள்மேலிட்டால் தற்போதஞ் சீவியாமல் நின்றனன் என்பார், பொறிபுலன்கரணமெல்லாம்-கனற்கணார்தமவேயாக வெனவுங் கூறினார். வினைக்கண் என மூன்றனுருபு நிற்குமிடத்து ஏழனுருபுநின்றது உருபுமயக்கம்.

போதையாருலகமீன்றபுனிதையார்பரஞானப்பூங்
கோதையார்குழற்குத்திங்குகூறியகொடியநாவின்
றீதையார்பொறுப்பரோயோவவரன்றித்திருக்காளத்திக்
காதையார்குழையினாக்காளத்திகைலையென்று

(இ-ள்.) போதையார் - முற்றுமுணர்ந்தவரும், உலகம் ஈன்ற புனிதையார்- உலகமுற்றும் பெற்றருளிய பரிசுத்தமுடையவருமாகிய, பர ஞானப் பூங் கோதை யார் குழற்கு - ஞானப்பூங்கோதையார் திருக்கூந்தலுக்கு, தீங்கு கூறிய கொடிய நா வின் தீதை - பழுதுகூறிய கொடியநாவின் பொறுத்தற்கரிய தீமையை, அவர் அன்றி யார் பொறுப்பரேயோ-திருக்காளத்தியி லெழுந்தருளிய ஞானப்பூங்கோதையாரன் றிப் பொறுப்பாரெவருளர், திருக்காளத்தி காது ஆர் குழையினார்-(ஆதலால்) திருக் காளத்தியி லெழுந்தருளிய திருக்காதி லார்ந்த குண்டலத்தையுடைய காளத்தீசனு ளா, கைலை காளத்தி என்று - கைலை காளத்தியென்று.

செய்யுளாதலால் பின்முன்னாகக் காளத்திகைலையென்று எனவும், அபரஞா னம் அன்மையின் பரஞானப்பூங்கோதையார் எனவுங்கூறினார், (௬௫)

Koviloor Digital Library

எடுத்தசொன்மாறிமாறியிசையநேரிசைவெண்பாவாற்
றொடுத்தவந்தாதிசாத்தத்துணைச்செவிமடுத்துநேர்வந்
தடுத்தவன்கையைப்பற்றியகன்கரையேற்றினார்தாள்
கொடுத்தெழுபிறவிவேலைக்கொடுங்கரையேற்றவல்லார்.

(இ-ள்.) எடுத்த சொல் இசைய மாறி மாறி - கைலையென்றுங் காளத்தியென்றும் எடுத்த சொல்லினைப்பொருந்தச் செய்யுள்தோறுமாறிமாறி, நேரிசை வெண்பா ஆல் தொடுத்த அந்தாதி சாத்த - நேரிசைவெண்பாவினால் தொடுத்த திருஅந்தாதியாகிய மாலையைப் (பொற்றாமரைத் திருக்குளத்தில் ஆழ்ந்திக்கிடந்தபடி திருவடியில்) சாத்த, துணை செவி மடுத்து நேர் வந்து-இரண்டுதிருச்செவியினும்நிரம்பத் தேக்கி நேரே காட்சிதந்து, தாள் கொடுத்து (தம்மைச் சரண்புகுந்தோர்க்கு) திருவடியாகிய புணைதந்து, எழு பிறவி வேலை கொடுங்கரை ஏற்றவல்லார்-எழுபிறப்பாகிய கடலினின்றுமெடுத்து வளைந்த முத்தியாகிய கரையிலேற்றவல்ல சோமசுந்தரக்கடவுள், அடுத்தவன் கையை பற்றி அகன் கரை ஏற்றினார் - தம்மையடைந்த நக்கீரனுடையகையைப்பற்றி இடம்பரந்த அத்திருக்குளத்தினின்றுங்கரையிலேற்றியருளினார்.

ஆலாஸ்யமகாத்மியத்திலும் நக்கீரர் திரு அந்தாதியைத் திருக்குளத்தி லழுந்திக் கிடந்தபடி பாடினார் என்று கூறியிருக்கின்றதால் ஆழ்ந்திக்கிடந்தபடி என்றும் "சொல்லும்பொருளுமேதுத்திரியுநெய்யுமா - நல்லிடிஞ்சிலென்னுடையநாவாகச்-சொல்லரிய - வெண்பாவிளக்காவியன்கயிலைமேலிருந்த - பெண்பாகர்க்கேற்றினேன் பெற்று. பெற்றபயனிதவேயன்றேபிறந்தியான்-கற்றவர்களேத்துஞ்சீர்க்காளத்திக்-கொற்றவற்குத் - தோளாகத்தாடரவஞ்சூழ்ந்தணிந்தவம்மானுக் - காளாகப்பெற்றேனடைந்து. அடைந்துய்மினம்மானையும்மாவிதன்னைக் - குடைந்துண்ணவெண்ணிய வெங்கூற்றங்- கடந்தநுங் - கண்ணுளேபார்க்கும்பொழுதுங்கயிலாயத் - தண்ணலேகண்டீராரண். அரணமொருமூன்றுமாரழலாய்விழ-முரணம்புகோத்தமுதல்வன்-சரணமே - காணுமாலுற்றவன்றன்காளத்திகைதொழுது-பேணுமாலுள்ளம் பெரிது" என வருந் திருவந்தாதியில் ஒருபாசுரத்தில் கைலை யெனவும் மற்றொருபாசுரத்தில் காளத்தியெனவும் பாசுரங்கள்தோறுமாறிவரத் தொடுத்துப் பாடினமையால் எடுத்த சொன்மாறிமாறி யிசையஎன்றார். (௧௪)

கைதந்துகரையேறிட்டகருணையங்கடலைத்தாழ்ந்து
மைதந்தகயற்கண்ணாளை வந்தித்துத்தீங்குநன்கு
செய்தந்தோர்க்கிகலுமன்புஞ்செய்தமைபொருளாச்செய்யுட்
பெய்தந்துபாடுகின்றான்பிரானருணாடுகின்றான்.

(இ-ள்.) கைதந்து கரை ஏறிட்ட கருணை அம் கடலை தாழ்ந்து - திருக்கைகொடுத்துக் கரையேற்றியருளிய கிருபாசமுத்திரமாகிய சோமசுந்தரக்கடவுளை வணங்கி, மை தந்த கயற்கண்ணாளை வந்தித்து - மையெழுதிய அங்கயற்கண்ணியாரை வணங்கி, தீங்கு நன்கு செய் தந்தோர்க்கு இகல் உம் அன்பு உம் செய்தமை பொருள் ஆக - தீமையையும் நன்மையையுஞ் செய்தருளிய உயிர்களுக்குக் கோபத்தையும் கருணையையுஞ் செய்தருளினமையே பொருளாக, செய்யுள் பெய் தந்து - தனது பாசுரத்தில் அமைத்து, பிரான் அருள் நாடுகின்றான் - (கரையேறி) சோமசுந்தரக்கடவுளின் திருவருளை நாடும் நக்கீரன், பாடுகின்றான் - பாடுவானாயினான்.

தீமையைச்செய்த உயிர்களுக்கு இதனும் நன்மையைச்செய்தவுயிர்களுக்கு அன்புமென முறை நிரனிறையாகக்கொள்க. கோபந் தோன்றியவிடத்துக் கருணை உண்டாதலால் இதனும் அன்புஞ் செய்தமை பொருளாம் என்றார்.

அறனிலானிழைத்தவேள்வியழித்தபேராண்மைபோற்றி
மறனிலாச்சண்டிக்கீந்தமாண்பெருங்கருணைபோற்றி
கறுவிவீழ்கூற்றைக்காய்ந்தகனைகழற்கமலம்போற்றி
சிறுவனுக்கழியாவாழ்நாளளித்தருள்செய்திபோற்றி.

(இ-ள்.) அறன் இல்லான் - தருமநெறி சற்றுமில்லாத தக்கன், இழைத்த வேள்வி அழித்த - செய்த யாகத்தைச் சிதைத்த, பேர் ஆண்மை போற்றி - அளத்தற்கரிய ஆண்தன்மையை வந்திக்கக்கடவேன், மறன் இல்லாத சண்டிக்கு ஈந்த - பாபஞ் சிறிதுமில்லாத சண்டேசுரநாயனார்க்கு (தாமுண்டருளியபரிகலத்தையும் உடுப்பனவைகளையும் சூடும் பூமாலைகளையும்) தந்தருளிய; மாண் பெருங் கருணைபோற்றி - மாட்சிமைப்பட்ட திருவருளை வந்திக்கக்கடவேன், கறுவி வீழ் கூற்றை காய்ந்த - கோபித்து மார்க்கண்டேயர் உயிரைக் கவரவந்த இயமனை யுதைத்தருளிய, கனை கழல் கமலம் போற்றி - ஒலிக்கும் வீரகண்டைகட்டிய திருவடித்தாமரையை வந்திக்கக்கடவேன், சிறுவனுக்கு அழியாத வாழ் நாள் அளித்தருள் செய்தி போற்றி - அம்மார்க்கண்டேயருக்கு என்றும் அழியாதிருத்தலைக் கொடுத்தருளிய செய்கையைவந்திக்கக்கடவேன்.

தக்கன் சிவபிரானோடு மாறுபட்டு நின்றமையால் அறனிலான் எனவும், தந்தையின்தாளைத் தறித்தும் சிவபிரானருளைப் பெற்றமையால் மறனிலாச்சண்டி எனவும், மார்க்கண்டேயர் தன்னை யோர்பொருளாகக் கருதாமையால் கறுவிவீழ் எனவும், தம்வழிபாட்டிற் சிறிதுங் குன்றாது நின்றலால் சிறுவனுக்கழியா வாழ்நாளளித்தருள்செய்தி யெனவுங்கூறினார். சிவபிரானோடு மாறுபட்டமை "மற்றைவானவர்தமக்கெலாங்குடிமையேமுதலாக - இற்றைநாண்முதற்கொள்ளுநியிவற்குமுன்னிகுதியவிதன்னைக்-கற்றைவார்சடையுடையதோர்கண்ணுதற்கடவுளேபரமென்றே-சொற்றமாமறைச்சுருதிகள்விலக்குதி தவிபுனக்கிதுவென்றான்" எனவும், தந்தையின்தாளைத்தறித்தும் சிவபிரானருளைப் பெற்றமை "வந்தமிகைசெய்தாதைதாள்மழுவாற்றுணித்தமறைச்சிறுவர் - அந்தவுடம்புதன்னுடனேயரனார்மகனாராயினார் - இந்தநிலைமையறிந்தாராரிறிலாதார்தமக்கன்பு - தந்தவடியார்செய்தனவே தவமாமன்றோசாற்றுங்கால்" எனவும், மார்க்கண்டேயர் தன்னை யோர்பொருளாகக் கருதாமை என்றது "நீநமபின்றவாசகமென்றன்செவிகேட்ப - ஓதாநின்றாய்மேல்வருமூற்றறுணர்வில்லாய் - பேதாய்பேதாய்நீவளர்ப்பெறுவாயோ-போதாய்போதாயென்றுரைசெய்தான்புரிவிலான்" எனவும், தம்வழிபாட்டிற் சிறிதுங் குன்றாமை நின்றமை "எறிந்தான்பாசமீர்த்திடலுற்றா னிதபோழ்தில் - அறிந்தானுற்று மீசனையேத்தியடிநிழற் - பிரிந்தானல்லன்" எனவும் வரும் ஏதுக்களாலுணர்க. (கரு)

சலந்தரனுடல்கீண்டசக்கரப்படையாய்போற்றி
வலந்தருமதனைமாயோன்வழிபடக்கொடுத்தாய்போற்றி
மலர்ந்தசெங்கமலப்புத்தேளைச்சிரமரிந்தாய்போற்றி
சிலந்தியைமகுடஞ்சூட்டாவரசருள்செல்வம்போற்றி.

Koviloor Digital Library

(இ-ள்.) சலந்தரன் உடலம் கீண்ட சக்கரப் படையாய் போற்றி - சலந்தராசுரனுடைய சரீரத்தைப்பிளந்த சக்கராயுதத்தை யுடையவனே வந்திக்கக்கடவேன், வலம் தரும் மதனை மாயோன் வழிபட கொடுத்தாய் போற்றி - வெற்றியையுடைய மன்மதனைத் திருமால் வழிபட்டேத்தத் தந்தருளினவனே வந்திக்கக்கடவேன், அலர்ந்த செம் கமலம் புத்தேள் நடு சிரம் அரிந்தாய் போற்றி - மலர்ந்த தாமரைப் பீடத்தில் வசிக்கும் பிரமனுடைய நடுத்தலையைக் கொய்தவனே வந்திக்கக் கடவேன், சிலந்தியை மகுடம் சூட்டா அரசு அருள் செல்வம் போற்றி - சிலந்திக்கு மகுடஞ் சூட்டி யரசியலளித்த பெருஞ்செல்வமே யுன்னைவந்திக்கக்கடவேன்.

சலந்தராசுரன் என்பவன் இந்திரன்முதலியோரை வென்று பிரமன் புறங்காட்டியோடச்செய்து திருப்பாற்கடலையடைந்து திருமாலோடுபோர்செய்யத், திருமால் போர்க்காற்குறு புறங்காட்டியோடித் திருக்கயிலையையடைந்து சிவபெருமான் றிருவடிச்சரணடையத் திருமாலைநோக்கி யஞ்சற்கவென்றருளி யிருக்கும் சமயத்தில், அவ்வசுரனுந் திருக்கயிலையையடைந்து சிவபெருமானைநோக்கித் தன் பிரதாபங்களை முன்னர்க்கூறித் திருமாலைவிடுத்து நீ பிழைத்துப்போவென்று கூறினன், சிவபெருமான் புன்னகையரும்பி நெற்றிக் கண்ணால் அவனுடுவந்த ஆயிரங்கோடிவெள்ள அசுரர்களை நீருக்கித் திருவடிவிரல் நுதியாற் கீழே கீறி யோர்சக்கரம் உண்டாக்கி யிதனை யுன்றலைமீதில் எடுத்துவைக்கும் வன்மையுளதாயி னென்னுடன் போர்செய்வனென்றருள, அவனதற்கிசைந்து தன்றலைமீதெடுத்துவைக்க அந்தச்சக்கரம் தலைமுத லடிகாறும் இரண்டுகூறுயப் பிளந்தது என்பது "ஏற்றிலனவுணன்றன்னை யெம்பிரானகைத்துநோக்கி-யாற்றலையெனதுவாவிக்கெனவுரைத்தலங்குசெம்பொற் காற்றலைவிரலாற்கீறிக்கடிப்பினேர்நேமிபண்ணித்- தோற்றுமீதெடுக்கினின்னோடமர் செயத்துணிவலென்றான். என்றலுமவுணர்கோமா னிலங்குவாளெயிறுதின்று - பொன்றவழ்கிரிக்கூற்றை வருந்தொட்டுமெடுத்துப்பொங்கித்-தன்றலைமீதுவைப்பத் தலைமுதலடியீருகக்-குன்றிருகூறுசெய்தாலெனவுடல்குறைத்ததன்றே" எனக்கூர்மபுராணத்தில் சலந்தராசுரன் வதைப்படலத்தில் வருஞ்செய்யுள்களாலும், ஓர்கால்பிரமனைச் சனகர்முதலியோர்நோக்கி யுலகிற்குமுதல்வன் யாரெனவினவப், பிரமன் யானே முதல்வனென்று கூறியவளவில் திருமால் ஆங்குவந்து நின்னை யுந்தியிற்றந்தோன் யானிருக்க முதல்வனீயோவென்று கோபித்துக் கூறினன், இவ்வாறு நிகழுங்காலையில் இருக்குமுதலிய வேதங்கள் வந்து நீவிர் முதல்வரல்லீர் சிவபெருமானே முதல்வனென்றுகூறித் தெருட்டவும் தெளியா திவர்களிருமாந்திருக்குங் காலையில், அச்சிவபெருமானார் பேரொளிப்பிழம்பாய் நின்றருள, அதனை யயனோக்கி அவனது ஐந்தாமுகம் எனது நெற்றியிற்பிறந்த நீயோ முதல்வனென்றுகூற, அப்பெருமானார் வயிரவர்மேற் கடைக்கண் செலுத்தியருளினவுடன் அவர் தமது விரலி னகநுனியால் அப்பிரமன் ஐந்தாந் தலையைக் கொய்தனர் என்பது "முன்னமெனதுநுதலுப்பனுதித்தநீயோமுதல்வனெனப்-பின்னும்வெகுண்டுகூறுதலும் பிள்ளைப்பிறைதாழ்மணிமௌலிப் - பொன்னங்குடுமிவரைகுழைத்தபுனிதன்காரிமுகநோக்க-அன்னோனிடக்கைநகநுதியான்மலரோனைந்தாந்தலையகழ்ந்தான்" என மேற்படி புராணத்தில் வயிரவன் பலியிரந்த அத்தியாயத்தில் வருஞ் செய்யுளாலும், திருவானைக்காவென்னும் ஞானக்ஷேத்திரத்தில் வெண்ணாவலில் தனக்கிருக்கை யொன்று நூலாலியற்றி யிழ்யும் சிலம்பியொன்று அத்திருமரத்தின் கீழெழுந்தருளிய அமுதலிங்கேசனைத்தெரிசித்து எம்பிரானார் ஆலயமின்றி யெழுந்தருளி யிருக்கின்றனரோ யான் அரசனாகப்பிறந்திலனே, அந்தோ! யானென்செய்கேனெனக் கவலையுற்றுத் தன்னூலால் ஆலயமு மகா

மண்டபமுமியற்றி வழிபடு மந்நாளில் தன்னைப்போல் வழிபட்டுவரும் யானையொன்று தானமைக்கும் அந்கோயிலை நாள்தோறு மழித்துவருதலைக் கண்டு மனம்பொறு து அந்த யானையொடு முரணி யிரண்டு மிறந்து தேவவடிவம்பெற்றன, அன்று சிவபிரானார்காட்சிதந்து நமக்கு ஆலயங்கட்டுவித்தமையால் சோழர்குலத்தி லுதித்து அரசியல்நடத்தி நமக்குஆலயங்கட்டுவிக்க என வரந்தந்தருளினர் என்பது "கழிகாத ளத்தெழுங்கன்றுதலைப்பிரியாது-வழிபாடுசெயல்வேண்டு மற்றதற்குமநுவேந்தாய் - ஒழிபாதுபொருள்பலவு முறையர்தாப்பெற்றிலனென் - றழியாமற்றினநாவிஞலயஞ்செய்தெனத்துணிந்து. சிலம்பியாக்கையிற்றீர்ந்தவன்றிகிரியொன்றுருட்டி- அலம்புநிம்புனற்காவிரிநாடரசாள்வோர் - குலம்புகாவுலகாண்டு நங்குளாகழற்பணியற் - புலம்புதீர்ந்துயர்விட்டினைப்புணர்கெனப்புகன்று" எனத் திருவானைக்காப் புராணத்தில் கோசாணியப்படலத்தில் வருஞ் செய்யுளாலும், திருமால் மாயூரத்திருப்பதியில் இடபதீர்த்தத்தில் நீராடிச் சிவபெருமானை வழிபட்டு மன்மதனைப்பெற்றான் என்பது "வண்டமர்தழாயினுனுமதித்துவந்தாங்குமூழ்கி - எண்டருகாமனுதிமைந்தனையிவிதுபெற்றான்" என மாயூரப்புராணம் இடபதீர்த்தப்படலத்தில்வருஞ்செய்யுளாலும் உணர்க. (கள)

திரிபுரம்பொரியநக்கசேவகம்போற்றிமூவர்க்
கருளியதலைமைபோற்றியநங்கனையாகந்திய
வெரியிடுநயனம்போற்றியிரதிவந்திரப்பமீளக்
கரியவன்மகனுக்காவியுதவியகருணைபோற்றி.

(இ-ள்.) திரிபுரம் பொரிய நக்க சேவகம் போற்றி - திரிபுரங்களும் நீறுபட்டழிய முறுவலித்தருளிய ஆண்மைத்திறத்தை வந்திக்கக்கடவேன், மூவர்க்கு அருளிய தலைமை போற்றி - திரிபுராதிபர்களாகிய வித்துன்மாலி, தாரகாக்கன், கமலாக்கன் என்னு மூவரும் தத்தம் நெறியினின்று வழுவாதமுறையால் அவர்கட்கருளிய தலைமைப்பாட்டை வந்திக்கக்கடவேன், அநங்கனை ஆகம் திய எரி இடு நயனம்போற்றி-மன்மதனைச் சரீரம் நீறுக எரித்தருளிய நுதற்கண்ணினைவந்திக்கக்கடவேன், இரதி வந்து இரப்ப - அவன் தேவியாகிய இரதிவந்து குறையிரப்ப, மீள - மீளவும், கரியவன் மகனுக்கு ஆவி உதவிய கருணைபோற்றி - திருமால் மகனுகிய அம்மன்மதனுக்கு உயிர்கொடுத்தருளிய திருவருளை வந்திக்கக்கடவேன்.

திரிபுரதகனமும் திரிபுராதிபர்க்கு அருளியது முன்னர்க்காண்க. சனகர் முதலிய நால்வர்க்கும் சிவபெருமானார் திருக்கயிலையில் முத்திநிலை யுணர்த்தற்குச் சின்முத்திரையோடுகூடியகாலத்தில் அயன்முதலிய எல்லாவுயிர்களும் தத்தம் போகமிழந்து திருமாலிடைச்சென்றுகூற, திருமால் மன்மதனையேவில் அந்த யோகினைவிட்டு இமபருவதராசன் புத்திரியாராக அவதரித்த உமாதேவியாரைக் கூடி நமக்கும் போகந்தந்து குமாரக்கடவுளை யருளிச் சூரபன்மன் முதலியோரால் வந்த துன்பத்தையும் ஒழித்தருள்வாரென்ன, அப்வாறு செய்கின்றேமென்று பிரமன் தன்னகரிற் சென்று மன்மதனை நினைத்தனன், மன்மதனஃதுணர்ந்து பிரமனிடத்துவந்து என்னை நினைத்தகாரணம்யாதென்று வணங்கி வினவியவழி, சிவபெருமானார்யோகினைவிட்டு உமாதேவியாரை மணம்புணரத் திருக்கயிலைக்கு எங்கள் பொருட்டுச் செல்வாயென மனந்தெருட்டிவிடுக்க, அவன் திருக்கயிலையையடைந்து நந்திநாயனார் அறுமதியால் மேலைவாயில்வழிச்சென்று பஞ்சபாணங்களைச் சிறிதுதொடுக்க, அச்சிவபெருமானார் சிறிது நுதற்கண்ணைத் திறந்தருள மன்மதன் சாம்பராயினான் என்பது

“ஆரணன்றனதுவமர்தர்க் கரும்பெறன்ஞானபோதம்-ஓரிறைகாட்டுமுன்ன ருலகெலாமொருப்பாடொன்றி-ஈருடன்முயக்குமார்வ மின்றியேயிருந்தயார்க்குங்-காரணன்சிவனேயென்கைகழறவும்வேண்டற்பாற்றோ. விட்டவெம்பகழியைந்தும் வியத்தகுவிமலன்மீது - பட்டலுஞ்சிதிதேவேலைப் பார்த்தனன்பார்த்தலோடுங் - கட்டழல்பொதிந்தநெற்றிக்கண்ணை நகடிதேகாமற் - சுட்டதுகயிலைமுற்றுஞ் சூழ்புகைபரவிற்றன்றே” எனக் காந்தத்தில் மேருப்படலம் காமதகனபடலத்தில் வருஞ் செய்யுள்களாலும், தன்கணவ னுதற்கண்ணால் நீறுபட்ட அன்றே யிரதி உயிர்ப்பொடுங்கி வீழ்ந்து சிறிது தெளிந்து புலம்பிச் சிவபிரானார் திருவடியடையத் திருமணப்போதில் உன்கணவனுக் குயிர்கொடுக்கின்றோமென்றருளினர், அவ்வாறே திருமணத்திலிரதிவந்து குறையிரக்க அவட்குமட்டும் உருவினனாகவும் ஏனையோர்க்கு அருவினனாகவுமிருக்க மன்மதனுக்கு உயிர்தந்தனர் என்பது “ இனையகூறினளிரதிவேண்டிடுதலுமினைதீர்ந்த - புனிதனல்லருளெய்தியேமங்கைநீபுலம்பாய்கேள் - வனைகருங்குழற்கவுரியைமேவியாம்வரைபோதில் - உனதுகேள்வனையளிக்குதும்போதியென்றுரைசெய்தான். எரிபுனைநமதுகோக்காலிறந்தநின்னுடலநீறாய் - விரைவொடுபோயிற்றன்றேவேண்டினளிரதியன்னாட் - குருவமாயிருத்தியேனையும்பரோடிம்பர்க்கெல்லாம்-அருவினையாகியுன்றனரசியல்புரிதியென்றான்” என ஷை புராணத்தில் மோனநீங்குபடலத்திலும் திருக்கல்யாணப்படலத்திலும்வருஞ் செய்யுள்களாலும் உணர்க.(௧௮)

நகைத்திடவந்தவந்தநகுசிரந்திருகிவாங்கிச்
சிகைத்திருமுடிமேல்வைத்ததிண்டிறல்போற்றிகோயி
லகத்தவிசுடரைத்தூண்டுமெலிக்கரசாளமூன்று
சகத்தையுமளித்ததேவர்தம்பிரான்சரணம்போற்றி.

(இ-ள்.) நகைத்திட வந்த அந்த நகுசிரம் திருகி வாங்கி - நகைத்து வந்த அந்தநகுதலையை முறுக்கித் திருக்கரத்திற்கொண்டு, சிகை திரு முடி மேல் வைத்த திண் திறல் போற்றி - அழகிய சடாமுடிமேல் வைத்தருளிய திண்ணிய வீரத்தை வந்திக்கக்கடவேன், கோயில் அகத்து அவி சுடரை தூண்டும் எலிக்கு - திருக்கோயிலி லமருமமையத்தில் திருவிளக்கைத் தூண்டிய எலியினுக்கு, அரசு ஆள மூன்று சகத்தையும் அளித்த தேவர் தம்பிரான் சரணம் போற்றி - அரசியல்செலுத்த மூன்றுலகங்களையும் உரிமையாகத் தந்தருளிய தேவர்பெருமானே நின்திருவடியை வந்திக்கக்கடவேன்.

நகுசிரம் அண்டங்களையழிக்கும் அறுகுறையாதலால் திருகிவாங்கியென்றார். சிவபிரானாரைக் கொல்லத் தாருகவன முனிவர்களேவிய தலையைத் தமதுசடாமுடியிலணிந்தார் என்பது “சீற்றமாமுனிவர்வேள்வித் தீயில்வெண்டலைதானொன்று-தோற்றியேயுலகம்யாவுந் தொலையநக்கெழுந்ததன்றே. நக்கெழுசிரத்தையன்னோர் நாதன்மேல்விடுத்தலோடும் - அக்கணமனாகவற்றாலகிலமதிறவாவண்ணம் - முக்கணனருள்செய்தந்தமுண்டமுண்டகக்கைபற்றிச் - செக்கரஞ்சடைமேற்கொண்டுன் செயலினைப்புரிதியென்றான்.” எனக் காந்தம் ததீசியுத்தரப்படலத்தில் வருஞ் செய்யுளால் உணர்க. எலியமரும் திருவிளக்கையேற்றி யரசியல் பெற்றது தண்டலைநீணெறியென்னுந் திருத்தலத்தில் எனக் கேள்வி. (௧௯)

பொருப்பகழ்ந்தெடுத்தோன்சென்னிபுயமிறமிதித்தாய்போற்றி
யிருக்கிசைத்தவனேபாடவிரங்கிவாள்கொடுத்தாய்போற்றி

Koviloor Digital Library

Koviloor Digital Library

தருக்கொடுமிருவர்தேடத்தழற்பிழம்பானாய்போற்றி
செருக்குவிட்டவரோபூசைசெய்யநேர்நின்றாய்போற்றி.

(இ-ள்.) பொருப்பு அகழ்ந்து எடுத்தோன் சென்னி புயம் இறமிதித்தாய் போற்றி-திருக்கயிலையைப் பறித்தெடுத்த இராவணனுடைய பத்துச்சிரங்களும் இருபது புயங்களுமுறிய மிதித்தருளினவனே வந்திக்கக்கடவேன், இருக்கு இசைத்து அவனை பாட இரங்கி வாள் கொடுத்தாய் போற்றி - இருக்குவேதத்தைத் (தன் கையிலுள்ள வீணையில்) இசைத்து அவ்விராவணனே பாடத் திருவுளமிரங்கி வாள்கொடுத்தருளினவனே வந்திக்கக்கடவேன், தருக்கு ஒடும் இருவர் தேட-இறுமாப்போடும் பிரமனும் திருமாலும் அடிமுடிதேட, தழல் பிழம்பு ஆனாய் போற்றி-தீத்திரளாய் நின்றவனே வந்திக்கக்கடவேன், செருக்கு விட்டு அவரோ பூசை செய்ய நேர் நின்றாய் போற்றி - அவ்விறுமாப்பை யொழித்து அப்பிரமனுந் திருமாலுமே பூசனைசெய்து குறையிரக்கக் காட்சிதந்தருளினவனே வந்திக்கக்கடவேன்.

இராவணனை யொறுத்ததையும் அவனுக்கருளியதையு முன்னர்க்காண்க. பிரமனுக்கு ஓராயிரஞ் சதுரயுகஞ்சென்றால் ஒருதினமாம் அக்காலையில் மகா பிரளயந் தோன்றி உலகம் யாவும் அழியும், அக்காலை திருமால் ஆலிலையிற் கண்வளருங்காலம், அன்று சனலோகத்துள்ள முனிவர்கள் கூடிக் குறைகூறத் திருமால் வராகவடிவாய்ப் பாதலத்திற்சென்ற நிலவுலகை முன்னர்போலக் கொண்டுவந்து நிறுவி யாலிலையிற் கண்வளர்வன், அக்காலையில்பிரமன் ஏழிநாள் கடல்முதலியவற்றை முன்புபோல் நிறுவியுயிர்த்தொகைகளையுந் தந்து தன்னையன்றி யோர் கடவுளில்லையென் றிறுமாந்து ஆலிலையிற் கண்வளரும் திருமாலைநோக்கி யெல்லாவுலகையுந் தந்தமையால் யான் கடவுளெனக்கூற, அத்திருமால் உன்னைத் தந்தமையால் யான் கடவுளென்று கூற, இப்படியிருவருக்குட்கலாம் விளைந்து ஆயிரந் தேவவருடம் போர்செய்த காலையில் சிவபெருமானார் இவர்களகந்தையை யொழித்தருளவேண்டுமெனத் திருவுளமிரங்கி யோரழற்பிழம்பாயிடையில்நின்றருளி யிதனடிமுடிகாண்பவரோ கடவுளென அசரீரிகூறியருள, சிவபெருமானாரோ கடவுளென நாரதமுனிவன்கூறியதையுந் தமதகந்தையால் மறந்து அத்திருமாலும் பிரமனும் வராகமும் அன்னமுமாகித் தேடியுங் காணாது சலித்த இறுமாப்பொழிந்து அங்கோர் சிவலிங்கந்தாபித்துப் பூசித்து வழிபட்டபோதங்கால் அச்சிவபெருமானார் காட்சிதந்தருளினர் என்பது "மாலென்பவனு நிலத்தின்டனன்வல்லையேகி-மூலந்தெரிவானுணராமன் முரணுநிங்கிச்-சீலங்குறுகச்சிவலிங்கசரணென் றுபைய-ஞாலந்தனில்வந்தனல்வெற்பினைநண்ணிநின்றான். ஈசன்னருளாலிவைகூறினரேலோடும்-மாசின்வழியாமகந்தைத்திற னுதியாய -பாசத்தவிட்டியான்புகழ்பன்னியேத்தி - நேசங்கொடுபூசனைசெய்யநினைந்துமீண்டேன். வந்துகண்ணன்றனையனுகி வான்பொருள்யாமென்றிகலி - முந்துறவெஞ்சமரியற்றி முனிமொழியுமுணர்த்திலமால் - தந்தைவரவறியாமற் றண்முடியுந்தேடலுற்றேம்- அந்தமுறும்வேலைதனி லவனருளாலவற்புகழ்ந்தேம். இன்றுநிலனிருவிசும்பிற் கிளர்ந்தமடிமுடியுணரேம் - மீண்டுமவன்றன்னருளால் மிடல்பெற்றுவந்தனமால் - ஈண்டுசென்றனைவழிபட் டிருவருமன்னவன்றேற்றந் - காண்டுமெனயாறுணாப்பக் கண்ணுமக்கதர்மிசைசேர்ந்தான். இருவருமச்சிவனுருவை யியன்முறையாற்றுபித்து - விரைமலர்மஞ்சனஞ்சாந்தம் விளக்கேலாதியவமைத்துப் - பொருவருபூசனைபுரிந்து போற்றிசெய்துவணக்குதலும் - எரிசெழுசோதிக்கணித்தா வெந்தையவன்வந்தனனே. மைக்களமுமான்மழுவும் வரதமுடனபயமுறு - மெய்க்கரமுநாற்புயமும் விளக்குபணிக்கோடீபூணும் - செக்கருறுமதிச்சடையுந் சேயிழையோர்பாகமுமாய் -

Koviloor Digital Library

முக்கணிறைபாக்கானை முன்னின்றேயருள்புரிந்தான்" எனக் காந்தம் அடிமுடி தேடுபடலத்தில் வரும் செய்யுள்களாலுணர்க. (உ0)

பருங்கைமால்யானையேனம்பாய்புலியரிமான்மீன
மிருங்குறள்யாமைகொண்டவிகல்வலிகடந்தாய்போற்றி
குரங்குபாம்பெறும்புநாரைகோழியாணலவன்றேரை
கருங்குரீஇகழுகினன்புக்கிரங்கியகருணைபோற்றி.

(இ-ள்.) பருங்கை மால் யானை-பருத்த துதிக்கையையுடைய பெரியயானையும், ஏனம் பாய்புலி அரி மான் மீனம்-வராகமும் பாய்ந்து செல்லும் புலியும் சிங்கமுமீனமும், இருங்குறள் யாமை கொண்ட இகல்வலி கடந்தாய் போற்றி- பெரிய குறளுருவமும் ஆமையுங்கொண்ட மிக்க வன்மையைக் கடந்தவனே வந்திக்கக்கடவேன், குரங்கு பாம்பு எறும்பு நாரை கோழி ஆண் அலவன் தேரை கருங்குருவி கழுகு இன் அன்புக்கு இரங்கிய கருணை போற்றி - குரங்கும் பாம்பும் எறும்பும் நாரையுங் கோழியும் ஆண்ஞெண்டும் தவளையுங் கரிக்குருவியுங் கழுகுமாகிய இவைகளின் அன்புக்கு இரங்கியருளிய திருவருளை வந்திக்கக்கடவேன்.

யானையும் புலியுங்கொண்ட வன்மையையொழித்து அவற்றின் சருமத்தைப் போர்வையாகவும் உடையாகவுங் கொண்டருளினமையையும், கோழி காசியில் முத்தியடைந்தமையும் முன்னர்க்கூறியிருத்தலாலும், கரிக்குருவியும் நாரையும் திருவாலவாயில் முத்தியடைந்தமையையும் கூறியிருத்தலாலும் அவற்றைவிரித்திலம். இரணியாக்கன் உலகினைப் பாயாகச்சுருட்டிப் பாதலத்திலொளித்தகாலத்துத் திருமால் சுவேதவராகமாய்ச்சென் றவனைக்கொன்று உலகினை முன்போல் நிறுவி யிறுமாந்து அட்டகுலபர்வதங்களையுங் கொம்பிற்கோத்துவீசத், தேவர்கள் நடுங்கி முறையிடவும் சிவபிரானிரங்கி முருகக்கடவுளைநோக்கி யச்சுவேதவராகத்தி னிறுமாப்பொழித்து வருவாயென்றருள, அம்முருகக்கடவுள் கிராதத் திருவுருவங்கொண்டு அவ்வராகத்தோடு போர்செய்து வலியையொழித்துக் கொம்பைப்பறித்து அச்சிவபெருமானுர் மார்பிலணிவித்தனர் என்பதும்; இரணியன் எல்லாவுலகங்களையுந் தனதடிப்படுத்தித் தன்பெயரே யாவருங்கூறச்செய்து உலகினைவருத்திவருங்கால், தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி யவன்புத்திரனுகிய பிரகலாதன்பால் தனதோரம் சத்தை நிறுவி யவனுல் தன்பெயர் நிறுவ, அதற்கு இரணியன்பொறாதுபுடைக்கத் தூணில் நரசிம்மமாய்த்தோற்றி யவ்விரணியனுயிர்குடித்து அம்மயக்கால் தேவர்களைவருத்த, அவர்கள்வேண்டுகோளுக்கு இரங்கி வீரபத்திரரைநோக்கி யம்மயக்கொழித்து வருவாயென்றருள, அவ்வீரபத்திரர் சரபவடிவாய்ச்சென்று அந்நரசிம்மத்தின் வலியழித்து அதன்சருமத்தைப் போர்வையாகத்தந்தனர் என்பதும்; சோமகாசுரன் முன்னொருகால் வேதங்களைக் கொள்ளைகொண்டு கடலிலொளித்தனன், அதனை முனிவர்கள்கண்டு திருமாலுக்குணர்த்த அஞ்சலிசொன்றருளி மீனவுருக்கொண்டு அக்கடலிற் புகுந்து அவ்வசுரனுயிரைக்கவர்ந்து அவ்வேதங்களை யம்முனிவர்கட்கருளி யாவுநிலைகலங்க அக்கடலைக்கலக்கி யுலாவினன், தேவர்கள் அதனைக்கண்டஞ்சிச் சிவபெருமானைச் சரணடைய, அச்சிவபெருமா னஞ்சலிசொன்றருளி மகாசாத்தனைக்கூவியம் மீனத்தின்வலிசிந்தவாயென்றருள, அவர் பரதவருருக்கொண்டு கடல்சென்று வலைவீசி அம்மீனத்தின் கண்ணெலும்பைப்பறித்து அச்சிவபெருமான் திருவிரலில் ஆழியாகக்கோத்தனர் என்பதும்; முன்னொருகால் மாவலியென்பவன் எல்லாவுலகங்களையுந் தன்னடிப்படுத்தித் தேவர்களேவல்கேட்ப அரசுசெலுத்திவந்தனன், தே

Koviloor Digital Library

வர்கள் திருமாலையடைந்து எங்கள்குறையொழிக்க வேண்டுமென இரக்க, அவ்வாறேயொழிப்போம் அஞ்சன்மினென்றுகூறிக் காசிபர்பால் வாமனவுருக்கொண்டவதரித்து அவன்செய்யும் வேள்விச்சாலையையடைந்து மூன்றடிமண்ணிரக்க, அவன் தந்தோம் என்றவுடன் நிலவுலகையும் விண்ணுலகையும் இரண்டடியிலடக்கி ஓரடிக்கிடமில்லாமையால் அவன்தலையில்வைத்துப் பாதலத்திலழுத்தி யிறுமாப்படைய, தேவர்களஞ்சிச் சிவபெருமானைச் சரணடைய, வயிரவரைக்கூவி யிறுமாப்பொழிப்பாயென்றருள, வயிரவர்சென்று திருமாலோடு போர்செய்து வலியழித்து அத்திருமாலின் உடம்பின் தோலுரிவாங்கிச் சட்டையாகத் தரித்தனர் என்பதும்; தேவர்களும் அசுரர்களுந் திருப்பாற்கடல் கடைந்தகாலத்தில் மந்தரகிரியழுந்த, திருமால் ஆமையுருக்கொண்டு முதுகிற்சுமந்து கடைந்து அமுதெடுத்தபின்பு இறுமாந்து அக்கடலைக் கலக்கும்போது தேவர்கள் சிவபெருமானுக்குரைப்ப, அச்சிவபெருமான் மூத்தபிள்ளையாரைநோக்கி யதனிறுமாப்பொழிப்பாயென்றருள, அவர் பாதவுருக்கொண்டு சென்று வலைவீசி யக்கச்சபத்தினோடு வாங்கி மார்பிலணிவித்தனரென்பதும்; "பின்னுமோர்காலத்திற் செம்பொற்கண்ணன் பெற்றவரத்தின்வலியினாலே - தன்றுபுடவிமுழுதும் பாயிற்சுருட்டிப்பிலம்புக்கொளித்தகாலை - மன்றமுயர்பதிதன்னருளான்மாயோன் சுவேதவராகமாகிக் - கொன்றுமங்குற்றவனைச் சுவட்டிக்கோட்டின் மண்கொண்டுமுன்போலவைத்தான். ஆயவோர்காலைத்தருக்குமேவியண்டமனைத்து நடுநடுங்கப், பாயவரைகண்மருப்பிற்கோத்துப் பற்பலவாக வெடுத்தெறிசத்-தியதுவந்ததலைமேற்கென்று சிந்தைசெய்துவானுடர்யாரும் - மேயகயிலைப்பிரானைத்தாழ்ந்து விண்ணப்பஞ்செய்து விளம்பினரே. கேட்டபிரானுமுறுவலித்துக் கேசவமுருநறேக்கடப்பர்-தோட்டணிமார்பன்வதனநோக்கித் தன்னனவிப்பொழுதேயடைந்து - கோட்டடலேனக்குறும்படக்கி வருதியெனவக்குமரவேளும்-காட்டஞ்சேவந்தோர்பிராதனுமி நடந்தனன்கோலத்தினோடெதிர்ந்தான். கண்டபொழுதேசினந்து கோலக்காருக்கடலுநடுங்கவார்த்துக் - கொண்டவரைகள்பல மருப்பிற் கோத்துப்புவனக்குலையவீச - அண்டமனைத்தும்புரக்குஞ்செவ்வே ளத்தனையும்பொடியாகநூறி - மண்டமுடுகியெதிர்ந்தடற்றிமற்றதன்கோடுபிடுங்கினனே. கோடுபறித்தெழுந்தேங்கியன்கோமளமார்பிலணிந்துபோனான்" எனவும், மீட்டுமொருகாலத்துவெய்யவலியிரணியன்றன் - நாட்டுபெருந்தவத்தாலே நல்லவரம்பலபெற்று - வீட்டுமொருபகையின்றிவிரிபுவனத்தாட்படுத்துக் - கூட்டுநடுநடுக்கமுறக் கொடுந்தொழிலேதலைநின்றான். அக்காலமவனைவெலற் காயதிறனுறத்தேர்ந்து - நக்காலமெடுத்தயின்றநம்பர்திருவருள்பெற்றுத் - திக்காலநிமிர்ந்தபுகழ்த்திருமறுமார்புடையண்ணன் - முக்காலஞானமுணர்முனிவர்புகழவன்மைந்தன் - பக்கமொருதன் கூறுபதியசிறுவினன்வலிமை - நோக்கரமடங்கலாய்த்தூணின்றும்வெளிவந்து-தக்கபலவிரவல்லாக்காலத்திற்றனவானம் - புக்கவிடமல்லாதவிடத்தவனைப்புரிந்திருத்தி. செஞ்சபிளர்ந்துசெந்நீரிரம்பமாந்தினனதனால் - அஞ்சுவெறிதலைக்கொண்டாங் கமரர்களைவருத்திடலும் - மஞ்சுபொலிகாத்தான்பொன் மலரடிவீழ்ந்தவரிரப்பத்- துஞ்சபடர்வலிபிரற்பார்த்திதனைச்சொற்றனனால். வயவிரவிப்பொழுதேசரமடங்கல் வெறிமாய்த்து - நயமாரவருதியெனநக்கன்பிரானருள்செய்யச்- சயவிரபத்திரனுஞ்சரபவுருக்கொண்டெழுந்து - புயனேருமுடம்பிளர மடங்கல்வலிபொருதழித்து. ஈர்ந்துசெருமங்கவர்ந்துகிளர்பெருமான்பெரும்பியலிட் - டாண்டுவரங்கினன்போனான்" எனவும், சோமகனென்னுமசுரன்முன்னாட் சுருதியனைத்துங்கவர்ந்துகொண்டு - பாமருகுக்கடல்புக்க காலைப்பார்ப்பனமாக்கள்வெரீஇயிரப்ப - நாமமழுப்படையெம்பிரான்செய்நல்லருள்பெற்றுநறுந்துழாய்ப்பைந்- தாமமுகிலொருமீனமாகித்தா

ந்திரைமோதுஞ்சலதிபுக்கான். புக்குத்தருவனுயிர்சவட்டிப்போற்றிடுவேதமனைத்து
ங்கொண்டு - செக்குக்கசிவுளத்தார்காத்தநீட்டுபு சிந்தைத்தருக்குமேவித்- திக்குக்க
லங்கப்புவிகலங்கத்தேவருலகுநிலைகலங்கப் - பக்குப்பிலமும்வெரீஇக்கலங்கப்பாய்தி
ரையாழிகலக்கினனால். அப்பொழுதுபிரமனாதியமரரெல்லாருங்கயிலைநண்ணி-மேய
துமுற்றும்பரம்பரற்குவிண்ணப்பஞ்செய்யநகைமுகிழ்த்து - மாயமகரவலிசிதைத்து
வம்மெனச்சாத்தனையேவினனத் - தூயவன்மீன்வலைவீசுவோனாய்த்தொக்கதிரைக்க
டல்வாய்ப்புகுந்தான். காருந்துமாயணிமீன்பிடித்து கலியச்சவட்டிவிழியெனும்பு-
தேறும்படியிடந்தேகியெங்கள்சின்மயனங்கைவிரலிற்சேர்த்தான்" எனவும் "வேறு
மொருகாலத்துவெய்யமாவலியென்பான் - மாறுதவிர்த்தெவ்வுலகும்வயக்கியதன்
னடிப்படுத்துப் - பேறுதருமொருவேள்விபெயர்வரச்செய்திடல்குறித்தான் - சாறு
கொளுமவனைவெலத்தம்பிரானருள்பெற்று. ஆன்றதவக்காசிபற்குமதிதிக்குமொரும
கவாய்த் - தோன்றவிகழ்குறளுருவிற்றுன்றிமகக்களம்புகுந்து - மூன்றடிமண்கொ
டுவென்றுமொழிந்தபடியவன்கொடுப்ப - வென்றனனோங்கிநன்றகாவிண்ணிரண்
டடியுள்ளாக்கினான். ஓரடிமற்றவன்றலைமேலுறவைத்துப்பிலத்தழுத்திப் - பாரமிகு
செருக்கடைந்தான்பண்ணவர்மற்றதுதேர்ந்து - காரமலிசடையான்பானண்ணியிறை
ஞ்சினருரைப்ப-மாரனுடல்பொடித்தபிரான்வடுகனைக்கூயேவினான். அன்னவன்வந்
துடன்றுசமராடிவலியைச்சவட்டி - யுன்னரியவுடம்பின்றோலுரித் தொருசட்டையி
ற்பூண்டு - பின்னமறவொளிர்சட்டைநாதனெனும்பெயர்பூண்டான்" எனவும் "அதி
திமகாருந்திதிமகாருமார்கலிமுன்னர்க்கடைந்தகாலை - மதிதொடுமந்தரவெற்பமுந்த
வள்ளற்பரமன்கருணைபெற்றுப் - பொதிவலிமாலோர்கமடமாகிப் பொற்பமுறநினு
றச்சுமந்து - பதியுமமிர்தமெடுத்தபின்னர்த் தருக்கிப்பரவைகலக்கினனால். அந்தப்
பொழுதுதொழுதேவரமலற்குரைப்பவனையனும்மோர் - தந்தப்பிரான்முகநோக்கி
யாமைதருக்குமுழுதமுருக்குகென்னக் - கந்தப்பகன்றைத்தொடையலானுங்கருதம்
பரதவனாகிப்போகி-முந்தப்பிடித்தொருகச்சபத்தைமுருக்கித்திருக்கிக்கருக்கினனே.
மற்றதனோடுபெயர்த்துவந்துமாதேவன்மார்பிலணிந்தபோனான்" எனவும் மாயூரப்
புராணம் திருமாலவதார மூர்த்திகள் பூசித்தபடலத்தில் வருஞ் செய்யுள்களாலும்,
அவந்திநகரத்தில் வேளாளரிருவர்கள் நிங்காநட்பினராய் வாழ்ந்து ஊழ்வினையால்
யமபுரியடைந்து மீளவுங் குரங்காயும் நரியாயும் வந்து பிறந்து முற்பிறப்பின் பயி
ற்சியால் ஒருங்குகூடி வாழு நாளில் குரங்கு நரியை நோக்கி யுனக்கு இப்பிற
ப்பு வந்தகாரணம் என்னவெனவினவ, நரி அந்தணாளர்க்கு நிரம்பப் பொன் கொ
டுக்க வேண்டுமென்று பொருளீட்டி யிறையளவேனும் அவர்களுக்கு நான் கொ
டாமையால் இவ்வுருப்பெற்றே னென்றுகூறி, நீ யிவ்வுரு வடைந்ததற்குக் கார
ண மென்னவென்றுவினவக், குரங்கு பரதிரவியங் கவர்ந்து நான் வாழ்ந்தமையா
லிவ்வுருப் பெற்றேனென்று கூறிக் கவலுறுங் காலையில் இவைகளி னல்வினைப்
பயனால் அங்குவந்த காசிபமுனிவர் அவற்றைநோக்கி நீங்கள் மாயூரத்திருப்பதி
யில் இடபதீர்த்தத்திற்சென்று நீராடுமின்களென்றேவ, அவ்வாறேயிரண்டுஞ்செ
ன்றுநீராடித் தேவவுருவடைந்து சிவபிரானையும் அஞ்சனாயகியையும்வணங்கி விமா
னமேறித் திருக்கயிலையையடைந்தன வென்பது "என்றிரண்டும்பேசுபு, கன்றிநையு
ங்காலையில்-ஒன்றவற்றினன்மைபோல்-அன்றுகாசிபமுனி. ஆங்குமேவினானுளங்-தே
ங்குதன்புந்தேறினான்-வீங்குமுங்கள்வினைகெட - ஈங்குவம்மினென்றனன். முனிவ
ன்பின்னரிகலனும் - கனியவாவுகடுவனும் - இனியதாகவெய்தின - தனியமர்மாயூ
ரமே. இடபதீர்த்தப்பாலடைந் - தடர்தரும்வினையெலாம் - தொடர்புநீரமூழ்குமெ
ன் - றுடனுரைத்தனரோ. சொற்றவாறுமூழ்கின - உற்றதீமையோப்பின - பெ

த்தேவுருவெடும் - அத்தநீர்க்கெழுந்தன. முனிவனைப்புகழ்ந்தன - தனியனுயத ம்பிரான் - இனியவஞ்சனுயகி - பனிமலர்ப்பதத்தொழா. மானமீதமர்ந்தொரு-தா னமேவியாவரும் - ஆனசெய்தமைத்திட - ஞானமின்திவாழ்ந்தன” என மேற்படி புராணத்தில் நரியுங் குரங்கு முத்திபெற்றபடலத்தில் வருஞ் செய்யுள்களாலும், க ண்ணமூர்த்தி இந்திரப்பிரத்தத்தில் தருமன் யாகத்தைமுடித்து இருவரும் வேட்டை யாடச் சென்றவிடத்தில் ஓர் பாம்பு மலைபோலக் கிடத்தலைப் பார்த்து அதனருகு சென்று நீயாரென்று கண்ணமூர்த்திவினவ, என்பெயர் நகுடன் நான் முன்னொரு காலத்தில் அசுவமேதயாகஞ்செய்து விண்ணுலகஞ்சென்று இந்திரபதத்தையடை ந்து இந்திராணியைப் புணரக் கருதிய யான் சிவிகை சுமந்துசென்ற சத்த இருடி களையும் நோக்கிச் சர்ப்ப சருக்கள் என்றனன், முற்கோம்பு தாங்கிய அகத்தியர் சர்ப்பமாகக்கடவாயென்று சபிக்க அன்றுதொட்டுச் சர்ப்பமாயிங்குக் கிடக்கின்ற னன் அதற்கொரு நிர்வுபெற்றிலேனென்று வருந்திக் கூற, மாயூரமென்னுந் திருப் பதியிற்சென்று இடபதீர்த்தத்தில் நீராடினு லிவ்வுரு நீங்குமெனச் சிறிதும் பெயரு ம் வலியில்லாத யான் எவ்வாறு செல்லக்கூடும் என்று கூறியவுடன் அக்கண்ணமூர் த்தி தனது கரத்தால் தொட்டு எறிந்தனர், இடபதீர்த்தத்தில் விழ்ந்து அவ்வுரு நீத் துத் தேவவடிவம்பெற்றுச் சிவபிரானையும் உமாதேவியையும் பூசித்துத் தேவருலக டைந்தனனென்பது “கண்ணனுமுளத்திடைக் கருதியைம்முகத்-தண்ணன்மாயூரத் தையடைந்தியாவரும் - என்றுமோரிடபதீர்த்தம்படிந்திடில் - துன்னெனுமிவ்வு ருத்தொலையுமென்றனன். பெயர்வறக்கிடக்கும்யான்பிறக்குமத்தலத் - தயர்வுதீர்த் திடும்படி வடைவதெப்படி - யுயர்புளாய்சற்றுநோக் குரைத்தியாலெனச் - சயமிகு மவனிதசமைப்செய்தனன். வள்ளலைவணக்கிபிம்மாசுணத்தரு - விள்ளலையுறவ ருள்விளைத்தியென்றுநிங் - கள்ளலைமலரொருகரத்தெடுத்தனன் - எள்ளலையிலாதவ னெறிந்திட்டானரோ. எறிதலுமிடபதீர்த்தத்துவீழ்ந்தது - செறிதருபாப்புருச்சிதை யத்தேவுரு - வறிதரப்பெற்றதாங்கஞ்சனுயகி - பறிபுனைசெஞ்சடைப்பரனைப்போற் றிற்றே. போற்றுபுவிமானமேற்பொலிந்துவானவர் - ஆற்றுபன்மலரொடுசுவர்க்கம் புக்கது” என மேற்படி புராணத்தில் பாம்பு முத்தியடைந்தபடலத்தில் வருஞ் செ ய்யுள்களாலும், ஆற்றூரென்றுந் திருப்பதியிலுள்ள சிவதீர்த்தத்திலுள்ள ஒருதவளை, சிவனிரவில் பெருமழைபெய்ய அக்குளிருக் காற்றுது தீர்த்தத்தினின்று நீங்கிக் கீ ழைக்கரையிலுள்ள கவெல்மரத்தின்கீழ் வந்தது, அங்குப் பசியாலுயங்கிக்கிடந்த பா ம்பொன்று பற்றி விழுங்க வுயிர்விடு மமையத்தில் அஞ்சனக்கணம்மையார்வந்தருளி ஸ்ரீபஞ்சாக்கரமுபதேசித்தருள அன்றே சிவசாருப்பியம் அடைந்ததென்பது “இத் தருதவளையிவ்வாறியம்பியக்கமெருமேல்வை-உத்தமகும்பமாதத்துறுசிவநிசிதினத்து- வித்தகமுகில்களெல்லாம்வேலைவாய்மடுத்துவிண்ணில்- கொத்தெனத்திரண்டுமாருக் குளிர்மழைபொழிந்தவன்றே. பருவருஞ்சிதவாத பயத்தினுனீரினின்றும் - ஒருவரு ங்கீழ்பாற்கோட்டிறுத்தவோர்காவன்மூல - வெருவருந்திறத்தின்மேவ வெம்பசிப்பி ணிக்கோட்பட்ட - பொருவருமரவொன்றுக்குப்பொருக்கெனக்கவர்ந்ததன்றே. அரி வெனும்பெயரெனக்கே யமையுமிற்கமையாதென்று-பரிதரவடர்த்தன்மாணைப் பற்பட் க்வெர்தவோடும்-விரிபரமுழக்கமோவி வெற்றெலியெழுப்பிற்றத்தி-வரியராவிழியே லாது மறைப்பதமாவமாதோ. உயிர்விடுமமையமேவவொய்யெனவஞ்சனக்கட்-கு யின்மொழிபுமையாள்வந்து கூடினையர்தெழுந்துமோதச் - செயிரகலஃதப்போதே சிவபிரானுருவம்வாய்ந்து - பயிலணியாகவந்தப் பாம்பையேயணிந்ததம்மா” என ஆற்றூர்ப்புராணத்தில் மண்டூகமுத்தியடைந்த படலத்தில் வருஞ்செய்யுள்களாலும், திரேதாயுகத்தில் சான்மலிநாட்டில்வசிக்கும் விருத்தசிரவாவென்று முனிவனெற்

Koviloor Digital Library

தியில் சண்டனும் மனத்தில் பிரசண்டனுமென்று மிரண்டு மக்கள் கழுகுருவாயுதித்தனர் அவர்களை யம்முனிவன்னோக்கி நீங்கள் பறவைகளுக்கு வேந்தாகக் கடவீர் என்றுகூறப் பிதாவைவணங்கி இந்திரபதங்கிடைப்பினும் வேண்டோம், சிவபூசனை செய்து முத்தியடைதற்குரிய தலங்கூறவேண்டுமென வினவ, அம்முனிவன் மகிழ்கூர்ந்து வேதகிரியென்னுந் திருத்தலத்திற்சென்று சிவபெருமானைப் பூசிக்கக்கடவீரென்றுகூறத் தந்தைபால் விடைபெற்று அத்திருத்தலத்தில்வந்து பூசிக்கச் சிவபெருமானார்காட்சிதந்து இந்தத் திரேதாயுகஞ் சென்றபின் முத்திகொடுத்தருள்வோம் அதுகாறுஞ் சிவகணத்தலைவராயிருமென்றருளினர் என்பது "என்னையாளுடையானிறைகொண்டதோர் - முன்னைவேதகிரிபுக்குமுக்கணான் - தன்னைவாழ்த்தித்தொழுமின்றநயர்காள் - பின்னையாதும் பெறுததொன்றில்லையே - என்பதோதவிருவருந்தாழ்ந்தெழுந்- தன்பராயந்திடுவேதவெற்பண்ணினார் - நன்பராகநறுமலர்நிரினால் - முன்பராவியருச்சனைமுற்றினார். உற்றவிந்தத்திரதயுகஞ்சென்ற - பிற்றைமுத்தியையீது நம்பேரவை - யிற்றைநாண்முதலெய்திச்சிவகணக்-கொற்றநீர்மையுங் கொளுமென நல்கினான்" எனவும், திரேதாயுகத்தில் சம்பாதி சடாயுவென்னும் கழுகுருவமைந்த விருவரும் சகோதரர்களாயினும் வலிமையில் நாம்பெரியமெனத் தம்முட்பகைகொண்டு சூரியனைக்கண்டு மீள்வ மெனமேலெழுந்துபறக்க, அச்சூரியமண்டிலத்தி லிருக்கும் அஞ்சனென்னு முனிவன்பார்த்துச் சூரியகதியைத்தடுக்க நீங்களிருவிருமுயன்றீர் ஆகையால் அச்சூரியகிரணவெம்மையால் கரிந்து நிலத்தில்விழக்கடவீரென்று சபிக்க, முன்னேசென்ற முன்னோனாகிய சம்பாதி சிறைகருகியும் பின்னோனாகிய சடாயுவுடல்பொரிந்தும் நிலத்தில்வீழ்ந்து வருந்தி யம்முனிவனைநோக்கி யெங்களுக்கு அருளவேண்டுமென்றிரக்க, நீவிர் வேதகிரியிற் சிவபெருமானைப் பூசிக்கில் உய்வீரென்றருள அவ்வாறேசென்று பூசித்துய்ந்தனர் என்பது "எளியபிற்சிறியோர் தங்குறைபொறுத்தல் பெரியோர்தமியற்கையென்றால் - பாவியமும்புறம்பன்று பொறுத்தியெனவேதகிரிப்பாங்கரோகி - வாவியின்மஞ்சனத்தாலும் வாசநறும்போதாலு மழுவலானைக் - காவிமலர்க்களத்தானை யருச்சனைசெய்திறைஞ்சிவிழிக் களிபெய்தார். ஆயதிரேதாயுகத்தி லிருவருக்குமொருவருமொப்பரியான்றோன்றித் - தாயவுடற்படுதழலைத்தணித்துவலிபணித்ததன்பின் சம்பாதிக்குந் - தூயதொருசாநகியைத் துருவுகைக்கிராமன்விடுதூதர்தம்மால் - சேயசிறைபிறக்குமெனத் திருவருளைச்சுமந்த வருஞ்சென்றானன்றே" எனவும் திருக்கழுக்குன்றப்புராணத்தில்வருஞ் செய்யுள்களாலுமுறையேகாண்க. திருவெறும் பீச்சரத்தில் எறும்புபூசித்து முத்தியடைந்தது. அதற்குச்சான்றாகச் சிவபெருமான்திருமேனியில் எறும்பூர்ந்தசுவடேகரியாம். இத்தலம் ஆளுடையரசுகள் திருப்பதிகம்பெற்றது. ஞண்டு பூசித்து முத்தியடைந்தது வந்த இடத்திற் காண்க. (௨௧)

சாலநா னிழைத்ததீங்குக்கென்னையுந்தண்டஞ்செய்த
கோலமேபோற்றியஞ்சிக்கொடியனேன்றொடுத்தபுன்சொல்
மாலைகேட்டென்னையாண்டமலைமகண்மணாளபோற்றி
ஆலவாயடிகள்போற்றியம்மைநின்னடிகள்போற்றி.

(இ-ள்.) சாலநான் இழைத்ததீங்குக்கு என்னையும் தண்டம் செய்த கோலமே போற்றி - மிகவும் நான்செய்ததவறு நீர்தற்பொருட்டு என்னையும் ஒறுத்தருளிய புலவர் பெருமான்றிருவடிவே வந்திக்கக்கடவேன், கொடியனேன் அஞ்சி புன்சொல் தொடுத்த மாலை கேட்டு என்னை ஆண்டமலைமகள் மணாளபோற்றி - கொடுமையையுடையேன்செய்த தவறுக்கஞ்சிப் பொருட்சுவைநிரம்பாத சொல்லாற்றொடுத்

த மாலையாமிப அந்தாதியைத் திருச்செவிமடுத்தருளி யென்னையுங்கவையேற்றி யடி
மைகொண்ட அங்கயற்கண்ணியார் மணாளனைவந்திக்கக்கடவேன், ஆலவாய் அடி
கள்போற்றி - திருவாலவாயிலெழுந்தருளிய பெருமானைவந்திக்கக்கடவேன், அம்
மை நின் அடிகள்போற்றி - அங்கயற்கண்ணம்மையே நினதுதிருவடிகளை வந்திக்கக்
கடவேன் என்று (போற்றிக்கலிவெண்பாவால்துதித்த.)

போற்றிக்கலிவெண்பா. "திருத்தங்குமார்பிற்றிருமால்வரைபோல் - எருத்த
த்திலக்கியவெண்கோட்டுப் - பருத்த - குறுத்தாளொடுமூக்கிற்குன்றிக்கனில - நிறத்
தாற்பொலிந்தகிலமேழ் - உறத்தாழ்ந்து - பன்றித்திருவுருவாய்க் காணுதபாதங்கள்-
நின்றவாநின்றநிலைபோற்றி - அன்றியும் - புண்டரிகத்துள்ளிருந்தபுத்தேள் கழுகுரு
வாய் - அண்டாண்டமூடுருவவாக்கோடிப் - பண்டொருநாட் - காணாணிழியக்கன
கமுடிகவித்துக் - கோணாநின்றதுதிபோற்றி - நாணாளும் - பேணிக்காலங்கள்பி
றியாமைப்பூசித்த - மாணிக்காவன்றுமதிற்கடலூர் - காலா - வரத்திற்பெரியவலிதொ
லைத்தகாலன் - உரத்திலுதைத்தவுதைபோற்றி - கரத்தாமே - வெற்பன்மடப்பாவை
கொங்கைமேற்குங்குமத்தின் - கற்பழியும்வண்ணங் கசிவிப்பான் - பொற்புடைய -
வாமன்மகனைய்மலர்க்கணையொன்றேட்டியவக் - காமனழசழித்தகண்போற்றி - தூ
மப் - படமெடுத்தவாளரவம்பார்த்தடரப்பற்றி - விடமெடுத்தவேகத்தான்மிக்குச் -
சடல - முடங்கவலிக்குமுயலகன்றன்மொய்ம்பை - அடங்கமிதித்தவடிபோற்றி - நடு
ங்கத் - திருமான்முதலாயதேவாசுரர் - கருமால்கடனுகம்பற்றிக் - குருமாற - நிலமு
ண்டநின்றமுகில்போனெஞ்சழலவந்தெழுந்த - ஆலமுண்டகண்டமதுபோற்றி - சால
மண்டிப் - போருகந்தவானவர்கள்புக்கொடுங்கமிக்கடர்க்குந் - தாருகன்றன்மார்பிற்
றனிச்சூலம் - வீரங் - கொடுத்தெறியுமாகாளிகோபந்தவிர - எடுத்தநடத்தியல்புபோ
ற்றி - தடுத்த - வரைபெடுத்தவாளரக்கன்வாயாறுதிர - விரைபெடுத்துநெக்குடலமி
ற்றப் - புரைபெடுத்த - பத்தலையபொன்முடியுந் தோளிருபதும்நெரிய-மெத்தென
வேவைத்தவிரல்போற்றி - அத்தனைத்த-வானவர்கடாங்கூடி மந்திரித்தமந்திரத்தை-
மேனவிலவேடிவிதவிநிர்த்துத் - தானவருக் - கொட்டுக்குறையுரைத்தவவன்சிரத்
தை - வெட்டிச்சிரித்தவிறல்போற்றி - மட்டித்து - வாளுகத்தானல்லிலிங்கமாவகு
த்துமற்றதன்மேற் - பாலுகுப்பக்கண்டுபதைத்தோடி - மேனுகைத்தந் - கோட்டிய
வன்றாதையிருதாளெறிந்தவிளை - விட்டியசண்டிக்குவேறுக - நாட்டிங்கட் - பொ
ற்கோயிலுள்ளிருத்திப்பூமாலைபோனகமும் - நற்கோலமீந்தநலம்போற்றி - நிற்க - வ
லந்தருமாலுன்முதறும்வானவருங்கூடி - அலந்தருமால்கொள்ளவடர்க்குஞ் - சலந்
தரனைச் - சக்கரத்தாலீர்ந்தரிதன்றுமனைக்கண்சாத்துதலும் - மிக்கவஃதன்றீந்தவிற
ல்போற்றி - அக்கணமே - கட்டிருந்தாமலைமுக்கிரிந்தநால்வேதன் - தொக்கிருந்தவ
ண்ணந்துதிசெய்ய - மிக்கிருந்த - அன்னைத்தலத்தேபணிமாலையாங்கணிந்த - செங்
கைத்திறத்தவிறல்போற்றி - திங்களைத் - தேய்த்ததுவேசெம்பொற்செழுஞ்சடைமே
ற்சேர்வித்து - வாய்த்திமையோர்தம்மையெல்லாம்வன்சிறையிற் - பாய்த்திப் - பிர
மன்குறைவிரப்பப்பின்றுமவற்கு - வரமன்றளித்தவலிபோற்றி - புரமெரித்த - அன்
றைய்ந்தமூவர்க்கமர்ந்தவரமளித்து - நின்றுய்ந்தவண்ணநிகழ்வித்து - நன்று - நடை
காவன்மிக்கவருள்கொடுத்துக்கோயிற் - கடைகாவல்கொண்டவாபோற்றி - விடை
காவற் - றனவர்கட்காற்றாதன்னடைந்தான்மைவிறல் - வானவர்கள்வேண்டமயி
லூருஞ் - சேனைவனைச் - சேனாபதியாகச்செம்பொன்முடிகவித்து - வானுளவைத்த
வாம்போற்றி - மேருவின் - அதிர்த்தெழுந்தவந்தகனையண்டரண்டமுய்யக் - கொதித்
தெழுந்தசூலத்தாற்கோத்துத் - துதித்தங் - கவனிருக்கும்வண்ணமருள் கொடுத்தங்

Koviloor Digital Library

கேழேழ் - பவமறுத்தபாவனேகள்போற்றி - கவைமுகத்த - பொற்பாகனைப்பிளந்து கூறிரண்டாப்போகட்டு - மெற்பாசறைப்போகமேல்விலகி - நிற்பால - மும்மதத்த வெண்கோட்டுக்கார்நிறத்தபைந்தறுகண் - வெம்மதத்துவேகத்தான்மிக்கோடி - விம்மி - அடுத்திரைத்துப்பாயுமடுகளிற்றைப்போக - எடுத்தரித்துப்போர்த்தவிறைபோற்றி - தொடுத்தமைத்த - நான்மாலைகொண்டணிந்தநால்வர்க்கன் றுனிழற்கீழ் - வாண்மாலையாகும்வகையருளித் - தோண்மாலை - விட்டிலங்கத்தெக்கணமே நோக்கிவியந்தகுணம் - எட்டிலங்கவைத்தவிறைபோற்றி - ஒட்டி - விசையன்விசையளப்பான்வேடுருவமாகி - அசையவுடறிரியா நின்று - வசையினுற் - பேசுபதப்பான பிழைபொறுத்துமற்றவர்குப் - பாசுபதமீந்தபதம்போற்றி - நேசத்தால் - வாயினீர்கொண்டுமகுடத்துமிழ்ந்திறைச்சி - ஆயசிர்ப்போனகமாவங்கமைத்துத் - தூயசீர்க் - கண்ணிடந்தகண்ணப்பர்தம்மைமிகக்காதலித்து - விண்ணுலகமீந்தவிறல்போற்றி - மண்ணின்மேற் - காளத்திபோற்றிகயிலைமலைபோற்றியென - நீளத்திருனினைந்துநிற்பார்கள் - தாளத்தோ - டெத்திசையும்பன்முரசமார்த்திமையோர்போற்றிசைப்ப - அத்தனடிசேர்வார்களாங்கு" எனவருதல்காண்க. (உஉ)

கலிநிலைத்துறை.

> ஆவலந்தனேனடியனேற்கருளருளென்று
> கோவமும்பிரசாதமுங்குறித்துரைபனுவற்
> பூவலங்கலாற்பரனையும்பங்கிலங்கயற்கட்
> பூவைதன்னையுமுறைமுறைபோற்றியென்றேத்தா.

(இ-ள்.) ஆ-ஐயோ, அலந்தனேன்-வருந்தினேன், அடியனேற்கு அருள் அருள் என்று - அடியேனுக்கு அருளாயருளாயென்று, கோவமும் பிரசாதமும் குறித்து உரை - கோவத்தையும் பிரசாதத்தையுங் குறித்துக்கூறும், பனுவல் பூ அலங்கலால் - நூலாகிய பொலிவமைந்தமாலையால், பரனை உம் பங்கு இல் அங்கயற்கண் பூவை தன்னை உம் - சோமசுந்தரக்கடவுளையும் இடப்பாலிலமர்ந்த அங்கயற்கண்ணியாரையும், முறைமுறை போற்றி என்று ஏத்தா - முறைமுறையாகப் போற்றியென்றுதுதித்து.

கோவப்பிரசாதம் வருமாறு "தவறுபெரிதுடைத்தே தவறுபெரிதுடைத்தே - வெண்டிரைக்கருங்கடன்மேற்றுயில்கொள்ளும் - அண்டவாணனுக்காழியன்றருளியும் உலகமூன்றுமொருங்குடன்படைத்த - மலரோன்றன்னை வான்சிரமரிந்தும் - கானவேடுவன் கண்பரிந்தப்ப - வானநாடு மற்றவற்கருளியுங் - கடிபடுபூங்கணைக் காமனுருடலம் - பொடிபடவிழித்தும் பூதலத்திசைந்த - மானிடனுகியசண்டியை - வானவனுக்கியும் - மதிகடலுலகின்மன்னுயிர்கவரும் - கூற்றுவன்றனக்கோர்கூற்றுவனுகியும் - கடல்படுநஞ்சங்கண்டத்தடக்கியும் - பருவரைசிலையாப் பாந்தணுணுத் - திரிபுரமெரியவொருகணைதுரந்துங் - கற்கொண்டெறிந்த சாக்கியனன்பு - தற்கொண்டின்னருடான்மிகவளித்தும் - கூற்றெனத்தோன்றியுங் கோளரிபோன்றுந் - தோற்றியவாரணத் தீருரிபோர்த்தும் - நெற்றிக்கண்ணு நீள்புயநான்கும் - நற்குநந்நீச் சுவரற்கருளியும் - அறிவிலையோரா வரக்கனுருடல - நெறநெறவிறுதர வொருவிரலூன்றியுந் - திருவுருவத்தொடு செங்கணேறும் - அரியனதிண்டிற லசுரனுக்கருளியும் - பல்கதிரவோன் பற்கெடப்பாய்ந்தும் - மல்குபிங்கிருடிக்கு மாவரமீந்தும் - தக்கன்வேள்வி தகைகெடச்சிதைத்தும் - பிக்கவரநந்திமா காளர்க்கருளியுஞ் - செந்தீக்கடவுடன் கரதலஞ்செத்தியும் - பைந்தார்நெடும்படை பார்த்தற்கருளியும் - தெரிமதிதனையோர் காற்பு

யஃகெடுத்து - நிதிபயில்குபேரற்கு நினைகீர்த்தும் - சலந்தரனுடல் தான்மிகத்தடி-ந்தும் - மறைபயின்மாற்கண் டேயற்கருளியுந் - தாருகற்கொல்லமுன் காளியைப்படைத்தும் - சிரமலிசிலந்திக்கின் னரசளித்தும் - கார்மலியுருவக் கருடனைக்காய்ந்தும் - நலிவிற்றிருந்தறநெறியருளியும் - இன்னவைபிறவு மெங்களீசன் - கோபப்பிரசாதங் கூறுங்காலை - கடிமலரிருந்தோன் கார்க்கடற்கிடந்தோன் - புடமுறுசோலைப் பொன்னகர்காப்போன் - உரைப்போராகிறு மொண்கடல்மாநீர் - அங்கைகொண்டிறைக்கு மாதர்போன்றுளர் - ஒடுங்காப்பெருமை யும்பர்கோவே - அடங்காவைம்புலத் தறிவிற்சிற்றைக் - கிருமிகாவாற்கிளத்தும் பரமேயஃதான்று - ஒருவகைத்தேவரு மிருவகைத்திறமும் - மூவகைக்குணமும் நால்வகைவேதமும் - ஐவகைப்பூதமு மறுவகைவிரதமும் - எழுவகையோகசயு மெண்வகைஞானமும் - ஒன்பதின்வகையு மொண்மலர்சிறப்பும் - பத்தின்வகையு மாகியபரமனை - இன்பனைநினைவோர்க் கென்னிடையமுதினைச் - செம்பொனைமணியினைத் தேனினைப்பாலினைத் - தஞ்சமென்றெழுதுந் தன்னடியார்தம் - நெஞ்சம்பிரியா நிமலனைநீடியர் - செந்தழற்பவளச் சேணுறுவரையனை - முக்கட்செல்வனை முதல்வனைமூர்த்தியைக் - கள்ளங்கைவிட்டுள்ளமதருகிக் - கலந்தகசேர்ந்துதன் கழலிணையவையே - நினைந்திடவாங்கே தோன்றுநிமலனைத் - தேவதேவனைத் திகழ்சிவலோகனைப் - பாவநாசனைப்படரொளியுருவனை - வேயார்தோளி மெல்லியல்கூறனைத் - தாயாய்மன்னுயிர் தாங்குந்தந்தையைச் - சொல்லும்பொருளு மாகியசோதியைக் - கல்லுங்கடலு மாகியகண்டனைத்- தோற்றநிலையி றுதிபதொன்மையை - நிற்றிடைத்திகழு நித்தனைமுத்தனை - வாக்குமனமு மிறந்தமறையனைப் - புக்கமழ்சடையனைப் புண்ணியநாதனை - இனையதன்மைய னென்றறிவரியவன் - தனைமுன்விட்டுத் தாமற்றுவினைப்போர் - மாமுயல்விட்டுக் காக்கைபின்போக் - கவலர்போலவும் - விளக்கத்திருப்ப மின்மினிகவரும் - அலமரும்சிறப்பி லாதர்போலவும் - கச்சக்கொண்டு கடுந்தொழின்முடியாக் - கொச்சைத்தேவரைத்தேவரென் றெண்ணிப் - பிச்சரைப்போலவோர் - ஆரியப்புத்தகப் பேய்கொண்டுபுலம்புற்று - வட்டனைபேசுவர் மாணிடம்போன்று - பெட்டினையுரைப்போர் பேதையர்நிலத்துள் - றலைமின்றலையெண் பலமென்றுலதவ - அறுத்துநிறுப்போ ரொருத்தரின்மையில் - மந்திரமாகுவர் மாநெறிகடப்பவோர் - சித்திரம்பேசுவர் தேவரகெல் - இன்றோர்க்காய்த்தன ரின்னோர்க்கருளினரென் - றறியவுலகின் முன்னேயுரைப்ப - நில்லையாகிறு - மாடுபோலக் கூடிநின்றழைத்து - மாக்கள்போல வேட்கையின்டும் - இப்படிஞான மப்படியமைத்தும் - இன்னதன்மைய ரொன்றிருநிலத்து- முன்னேயறிய மூர்க்கமாக்களே - முன்னேகொண்டே காகூற்றம் - தவறுபெரிதுடைத்தே தவறுபெரிதுடைத்தே" எனவருதல் காண்க. (௨௫)

தேவதேவனைப்பின்பெருந்தேவபாணியொடுந்
தாவிலேழிசையேழுகூற்றிருக்கையுஞ்சாத்திப்
பூவர்சேவடிசென்னிமேற்பூப்பவீழ்ந்தெழுந்தான்
பாவலோர்களுந்தனித்தனி துதித்தனர்பணிந்தார்.

(இ-ள்.) தேவதேவனை - தேவர்கள் தேவனாகிய சோமசுந்தரக்கடவுளை, பின் பெருந் தேவபாணி யொடும் - பின்பு பெருந்தேவபாணியோடும், தா இல் ஏழிசை ஏழுகூற்றிருக்கையும் - கெடுதலில்லாத ஏழிசையமைந்த திருவெழுகூற்றிருக்கையையும், பூ ஆர் சேவடி சாத்தி - அருச்சித்த மலர்களிறைந்த சிவந்த திருவடிமேற்சாத்தி, சென்னிமேல் பூப்பமேல் விழுந்தான் - தமது சிரத்திற்றோய அத்தி

ருவடிமேல் பரவசப்பட்டுத் தண்டாகாரமாய் விழுந்தெழுந்தனன், பாவல்லோர்களும் தனித்தனி துதித்தனர் பணிந்தார்-நூலில்வல்ல கபிலர் முதலிய புலவர்களும் தனித்தனிதுதித்து வணங்கினார்கள்.

ஏழிசையென ஓர் திருப்பிரபந்தம் உளதென்பாரும் உண்டு. ஏழிசையென ஒருநூலின்மையால் ஏழிசையமைந்த திருவெழுகூற்றிருக்கையென்றும். பூவார் பூவர் குறுக்கும் வழி குறுக்கல். மேல் என்பதனை முதனிலைத்தீவகமாகக்கொண்டு பின்றுங்கொள்க. பூவல் செந்நிறம் அது இறுதிநிலைப்போலியாய்ப் பூவர் என நின்றதெனக்கொண்டு சே என்பதனைப் பொருளடையாக்கிச் செந்நிறம்வாய்ந்த சேவடியெனக்கொள்ளினும் அமையும். பெருந்தேவபாணி " சூலபாணியை சுடர்தருவடிவனை - நீலகண்டனை நெற்றியோர்கண்ணனை - பாலவெண்ணீற்றனை பரமயோகியை - காலனைக்காய்ந்த கறைமிடற்றண்ணலை - நூலணிமார்பனை நுண்ணியகேள்வியை - கோலமேனியை கொக்கரைப்பாடலை - வேலுடைக்கையனை விண்டோய்முடியனை - ஞாலத்தீயினை நாதனைகாய்ந்தனை.- தேவதேவனை திருமறுமார்பனை - காலமாகிய கடிகமழ்தாரனை-வேதகீதனை வெண்டலையேந்தியை-பாவநாசனை பரமேச்சுவரனை-கீதம்பாடியை கிளர்பொறியரவனை - போதணிகொன்றையெம் புண்ணியவொருவனை - யாதிமூர்த்தியை யமரர்கடலைவனை - சாதிவானவர் தம்பெருமான்றனை - வேதவிச்சையை விடையுடையண்ணலை - ஓதவண்ணனை யுலகத்தொருவனை - நாதனாகிய நன்னெறிப்பொருளினை - மாலைதானெரி மயானத்தாடியை - வேலைநஞ்சினை மிகவமுதாக்கியை - வேதவேள்வியை விண்ணவர்தலைவனை - ஆதிமூர்த்தியை யருந்தவமுதல்வனை - ஆயிரநூறுக் கறிவரியானை - பேயுருவுதந்த பிறையணிசடையனை - மாசறுசோதியை மலைமகள்கொழுநனை - சூரியமழுவனை கொலற்கருங்காலனைச் - சீரியவடியாற் செற்றருள்சிவனை - பூதிப்பையனை புண்ணியமூர்த்தியை - பீடுடையாற்றைப் பிராவணிதலைவனை - நீடியநிமலனை நிறைமறைப்பொருளினை - ஈசனையிறையனை யிறில்பெருமையை - நேசனைநினைப்பவர் நெஞ்சத்துள்ளனை - தாதணிமலரனை தருமனை பிரமனை - காதணிகுழையனை களிற்றினுரியனை - சூழ்சடைப்புனலனை சுந்தரவிடங்கனை - தார்மலர்க்கொன்றை தயங்குமார்பனை - வித்தகவிதியனை - தீதமர்செய்கைத் திரிபுரமெரித்தனை - பிரமன்பெருந்தலை நிறையதாகக் - கருமன்செந்நீர் கபாலநிறைத்தனை - நிறைத்தகபாலச் செந்நீர்நின்றும் - உறைத்தவுருவா ளாயனைத்தோற்றினை - தேவருமசுரருந் திறம்படக்கடைந்த - அராவமுணஞ்ச மமுதமாக்கினை - ஈரமினெஞ்சத் திராவணன்றன்னை - வீரமழித்து விறல்வாள்கொடுத்தனை-திக்கமர்தேவருந் திருந்தாச்செய்கைத் - தக்கன்வேள்வியைத் தளரச்சாடினை - வேதமுநீயே வேள்வியுநீயே - நீதியுநீயே நிமலனீயே - புண்ணியனீயே புனிதனீயே-பண்ணியனீயே பழம்பொருணீயே - யூழியுநீயே யுலகமுநீயே - வாழியுநீயே வரதனுநீயே - தேவருநீயே தீர்த்தமுநீயே - மூவருநீயே முன்னெறிநீயே - மால்வரைநீயே மறிகடனீயே-இன்பமுநீயே துன்பமுநீயே - தாயுநீயே தந்தையுநீயே - விண்முதல்பூத மைந்தவைநீயே - பத்தியுநீயே முத்தியுநீயே-சொலற்கருந்தன்மைத் தொல்லோய்நீயேயதனால்-கூடலாலவாய்க்குழகனாவ - தறியாதருந்தமிழ்பழித்தனனடியேன் - ஈண்டியசிறப்பினிணையடிக்கீழ்நின்று - வேண்டுமதுவினி வேண்டுவன்விரைந்தே. வெண்பா. விரைந்தேன்மற்றெம்பெருமான் வேண்டியதுவேண்டா - திகழ்ந்தேன்பிழைத்தேனடியேன் - விரைந்தென்மேற் - சீற்றத்தைத்தீர்த்தருளுந் தேவாதிதேவனே - யாற்றவுநீசெய்யாயருள் " திருவெழுகூற்றிருக்கை. " ஒருடம்பீருருவாயினை யொன்றுபுரிந்-தொன்றிநிரிதழ்க்கொன்றைசூடினை - மூவிலைச்சூலமேந்தினை - சுடருஞ்சென்னிமீமிசை-இருகோட்டொருமதி யெழில்பெறமிலைச்சினை-ஒருகணையிருதோள் செவியுறவாங்கி-

மூவெயிருந்திசை முரணரண்செருத்தனை - ஆற்றமுன்னெறிபயந்தனைசெறிய - இரண்டுடக்கி - ஒன்றுநினைவோர்க் குறுதியாயினை - அந்நெறியொன்று - மனம்வைத்திரண்டுநினைவிலோர்க்கு - முன்னெறியுலகங்காட்டினையந்நெறி - நான்கெனவூழிதோறினைவறச் - சொல்லுமைந்தலை யரவனைச்சந்தனை - நான்முகன்மேன்முகங் கபாலமேந்தினை - நான்முகமுப்புரிமார்பில் - இருவரக்கமொருங்குடனேந்திய - ஒருவநின்றுநிகளேறிருவர் - மூவுலகுழன்று காற்றிசையுழிதர - ஐம்பெருங்குன்றந்தழலாய்த்தோன்றினை - யாறுநின்சடைய தைந்துநின்னிலையது - நான்குநின்வாய்மொழி மூன்றுநின்கண்ணே - இரண்டுநின்குழையே யொன்றுநின்வேறே - யொன்றிய காட்சி யுமையவணடங்க - இருங்களிற்றுரிவை போர்த்தனைநெருங்கி - முத்திறன் மறை யைம்புலனடக்கிய - அறுதொழிலாளர்க் குறுதிபயந்தனை - ஏழிலின்னரம்பினைத்தனை - யாறிலமுதம் பயந்தனையயர்நில் - விறலியர்கொட்டு மழுத்தவேந்தினை- ஆலநீழலன்றிருந்தறநெறி - நால்வர்கேட்கநன்கினிதுரைத்தனை -- நன்றியில்லாமுந்நீர்ச்சூர்மாக் - கொன்றங்கிருவனா யெறிந்தவொருவன் - முதைபொருமிடற்றிருவடிவாயினை - தருமமூவகை யுலகமுணரக் - கூறுவைநால்வகை - இலக்கணவிலக்கிய நலத்தகமொழிந்தனை - ஐங்கணையவனொடு காலனையடர்த்தனை - அறுவகைச்சமையமும் நெறிமையில்வகுத்தனை - ஏழிசையிராவணன்பாடத் - தாழ்வாய்க்கேட்டவன்றலையளிபொருத்தினை - ஆறியசெத்தையாகியங்கதிர்த் - தேரொடுதிசைசெலவிடுத்தோன் - பற்பொருவேனந்திபிருங்கிருடியென் - றேற்றபூதமூன்றுடன்பாட-விருகண்மொந்தைபொருகணக்கொட்ட - மட்டுவிரியலங்கன்மலைமகள்காண - நட்டமாடியகம்பவநற்றுறு - நிதியேன்சொன்ன வறிவில்வாசகம் - வறிதெனக்கொள்ளாயாக வேண்டும்-வெறிகமழ்கொன்றையொடுவெண்ணிலவணிந்த-தேம்பாடியவண்ணல் -. பாதஞ்சென்னியுட்பரவுவன்பணிந்தே" வெண்பா.

பணிந்தேனின்பாதம்பரமேட்டிபானி
றணிந்தாலவாயிலமர்ந்தாய் - தணிந்தென்மேல்
மெய்வெறிவுதிரப்பணித்தருளுவேதியனே
யையுறவென்றிண்டியமர்ந்து. எனவருதல் காண்க. (உச)

துதித்தபிரானுக்கின்னருள்சுரந்துநீமுன்போல்
மதித்தநாவலர்குழாத்திடைவதியெனமறைநா
லுதித்தநாவினார்கருணைசெய்துருக்கரந்தயன்சேய்
விதித்தகோயில்புக்கமர்ந்தனர்விளங்கிழையோடும்.

(இ-ள்.) துதித்த பிரானுக்கு இன் அருள் சுரந்து - (திருப்பாசுரங்களால்) தன்னைத்துதித்த நக்கீரருக்கு இனியகருணைநிரம்பச்செய்து, நீ முன் போல் மதித்த நாவலர் குழாத்து இடைவதி என்ன - நீ முன்புபோல நின்னை நன்குமதிக்கும் புலவர் அவைக்களத்தினடுவில் வசிப்பாயென்று, மறை நூல் உதித்த நாவினார் கருணை செய்து - வேதங்கூறியருளிய திருவாக்கையுடைய சோமசுந்தரக்கடவுள் திருவருள்செய்து, உரு கரந்து விளங்கிழை யோடும் - புலவர்குளாமணியாய்வந்த தமதுதிருவுருக்கரந்தருளி யுமாதேவியாரோடும்; அயன் சேய் விதித்த கோயில் புக்கு அமர்ந்தனர் - பிரமன் புத்திரனாகிய விச்சுவகன்மா அமைத்த திருக்கோயிலிற்சென்றெழுந்தருளியிருந்தனர். (உரு)

கற்றபிராணுங்கலிலுருங்கழகமண்டபத்தி
லுற்றவாடகக்கிழியறுத்தந்தணற்குதவிக்
கொற்றவேந்தனும்வரிசைகள்பலசெயக்கொடுப்பித்
தற்றங்கியகல்வியின்செல்வராயமர்ந்தார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library



கீரனுக்கிலக்கணமுபதேசித்த திருவிளையாடல்.

Koviloor Digital Library

(இ-ள்.) கற்ற கீரனும் கலைஞரும் - நூல்களைக்கற்ற நக்கீரரும் கபிலர்முதலிய புலவர்களும், கழகம் மண்டபத்து இல் உற்ற ஆடகம் கிழி அறுத்து அந்தணர்க்கு உதவி-கல்விக்கழகமாகிய மண்டபத்தில் தொங்கவிட்ட பொற்கிழியையறுத்துத் தருமிக்குக் கொடுத்து, கொற்றம் வேந்தனும் சில வரிசைகள் செய்ய கொடுப்பித்து- வெற்றியையுடைய சண்பகபாண்டியனும் சில வரிசைகள் தமக்குச் செய்ய அவற்றையும் அத்தருமிக்குக் கொடுப்பித்து, அற்றம் நீங்கிய கல்வியின் செல்வர் ஆய் அமர்ந்தார் - குற்றத்தினின்று நீங்கிய கல்விச்செல்வமுடையவரா யந்தமண்டபத்தில் வசித்திருந்தனர்.

இருமாப்பொழிந்திருந்தன ரென்பார் அற்றநீங்கிய கல்வியின்செல்வரா யமர்ந்தார் என்றார். (உசு)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

சண்பகமாறனென்னுந்தமிழ்நர்தம்பெருமான்கூட
லம்பகநுதலிஞனையங்கயற்கண்ணிஞனை
வம்பகநிறைந்தசெந்தாமரையடிவந்துதாழ்ந்து
நம்பகநிறைந்தவன்பாற்பல்பணிநடத்திவைகும்.

(இ-ள்.) சண்பக மாறன் என்னும் தமிழ்நர் தம் பெருமான் - சண்பகபாண்டியனென்னும் தமிழர்பெருமான், கூடல் அம்பகம் நுதலிஞனை அங்கயற்கண்ணிஞனை - நான்மாடக்கூடலிலெழுந்தருளிய நுதற்கண்ணினையுடைய சோமசுந்தரக்கடவுளையும் அங்கயற்கண்ணியாரையும், வம்பு அகம் நிறைந்த செந்தாமரை அடி வந்து தாழ்ந்து - தன்னுள் மணநிறைந்த செந்தாமரைமலர்போன்ற திருவடிகளைவந்துவணங்கி, நம்பு அகம் நிறைந்த அன்பால் பல் பணி நடத்திவைகும் - சிவமே பொருளெனத்தேர்ந்த தனதுமனத்தில் நிறைந்த பத்திமையால் பலதிருப்பணிகளைநடாத்தி மகிழ்கூர்ந்திருந்தான்.

தனதுட்கிடையைப் பாசுரத்தாற் புலப்படுத்தினவர் சோமசுந்தரக்கடவுளேயென்று துணிந்தான் என்பார் வந்து தாழ்ந்து எனவும், முற்றுமுணர்தலில் இவனேயிறைவனெனத் தெளிந்தன னென்பார் நம்பகநிறைந்தவன்பாற் பல்பணிநடத்திவைகும் எனவுங் கூறினார். (உஎ)

தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உருசுசு.

ஐம்பத்துநான்காவது
கீரனுக்கு இலக்கணமுபதேசித்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கொன்றைவெய்ந்தெரியல்வேய்ந்தகூடலெம்பெருமான்செம்பொன்
மன்றலங்கமலத்தாழ்ந்துவழிபடுநாவலோரை
யன்றகன்கரையேறிட்டவருளுநாசெய்தேமிப்பாற்
றென்றமிழனையான்றேறத்தெருட்டியதிறனுஞ்சொல்வாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) கொன்றை அம் தெரியல் வேய்ந்த - கொன்றைமலராலாகிய அழகிய மாலையையணிந்த, கூடல் எம் பெருமான் - நான்மாடக்கூடலி லெழுந்தருளிய எமது சொக்கலிங்கப்பெருமான், செம் பொன் மன்றல் அம் கமலத்து ஆழ்ந்து - வாசம்நிறைந்த பொற்றாமரைத் திருக்குளத்திலமுழ்ந்தி, வழி படும்நா வல்லோனை - தன்னைவழிபட்டு அந்தாதிருபமாகத் துதித்த நக்கீரனை, அன்று அகன் கரை ஏறிட்ட அருள் உரை செய்தேம் - அக்காலமிவிடம்பரந்த கரையில் ஏற்றியருளிய திருவிளையாடலைக்கூறினோம், இ பால் தென் தமிழ் அனையான் தேற தெருட்டிய திறனும் செல்வாம் - இப்புறம் இலக்கணத்தை யக்கீரன் தெளிந்துய்ய அகத்தியமுனிவரால் தேற்றிய திருவிளையாடலையு மினிக்கூறுவாம்.

தமிழ் கருவியாகுபெயராய் நூலின்மேல் நின்றது. (க)

முன்புநான்மாடக்கூடன்முழுமுதலாணையாற்போ
யின்புறவறிஞரீட்டத்தெய்தியாங்குறையுங்கீரன்
வன்புறுகோட்டந்தீர்ந்துமதுரையெம்பெருமான்றாளி
லன்புறுமனத்தனுகியாய்ந்துமற்றிதனைச்செய்வான்.

(இ-ள்.) முன்பு நான்மாடக் கூடல் முழு முதல் ஆணையால் போய்-முன்னர் நான்மாடக்கூடலி லெழுந்தருளிய முதல்வராணையால் சென்று, இன்பு உற அறிஞர் ஈட்டத்து எய்தி ஆங்கு உறையும் கீரன் - மகிழ்ச்சிமிகப் புலவர் கூட்டத்தை யடைந்து அவர்களுடன் வசிக்கும் நக்கீரர், வன்பு உறு கோட்டம் தீர்ந்து - செருக்குப்பற்றிய மனக்கோட்டமொழிந்து, மதுரை எம் பெருமான் தாள் இல் அன்பு உறு மனத்தன் ஆகி - அம்மதுரையி லெழுந்தருளிய வெமது பெருமானுர் திருவடியிலன்புமிக்க மனத்தையுடையவராய், ஆய்ந்து இதனை செய்வான் - பின்வரும்வண்ணம் ஆராய்ந்த இந்நியமத்தை மேற்கொள்வாராயினர்.

தமக்கோர்முதல்வனின்றி நின்றனர் என்பார் முழுமுதல் எனவும், தம்மைப்போல ஓர்புலவர் எனக்கருதி யிறுமாந்தனர் என்பார் வன்புறு மனக்கோட்டந்தீர்ந்து எனவும், இறைவரெனத்தேர்ந்தனரென்பார் மதுரையெம்பெருமான்றாளில் அன்புறுமனத்தனுகியெனவுங்கூறினர். (உ)

கட்டவிழ்கடுக்கையண்ணல்கண்ணினுலவிந்தகாளை
மட்டவிழ்மலரோனுலுமாயவனுலுங்காக்கப்
பட்டவனல்லனன்றுநுதல்விழிப்படுதீநம்மைச்
சுட்டபோதுருப்பந்தீர்த்துக்காத்ததிச்சுவணகஞ்சம்.

(இ-ள்.) கட்டு அவிழ் கடுக்கை அண்ணல் கண்ணினால் அவிந்த காளை - கட்டவிழ்ந்த கொன்றைமலராலாகிய மாலையையணிந்த சிவபிரானுதற்கண்ணாற் சாம்பரான மன்மதன், மட்டு அவிழ் மலரோனாலும் மாயவனாலும் காக்கப்பட்டவன் அல்லன் - (படைத்தற்றொழிற்குரிய) மகரந்தத்தோடலர்ந்த தாமரையில்வசிக்கும் பிரமனாலும் (காத்தற்றொழிற்குரிய) திருமாலினாலும் ஒம்பப்பட்டவனல்லன், அன்று நுதல் விழிப் படு தீ நம்மை சுட்டபோது - அப்பெருமானது நெற்றிக்கண்ணிற்பொருந்தியதீ நம்மைச் சுட்டகாலையில், இ சுவண கஞ்சம் உருப்பம் தீர்த்து காத்தது - இப்பொற்றாமரைத்தீர்த்தம் அவ்வெம்மையை யொழித்தருளியது.

பிரமனுந் திருமாலும் இயற்றுந்தொழில்கள் சிவபெருமான் ஆணைவழி நிகழ்வனவென்பார் மலரோனாலு மாயவனாலுங் காக்கப்பட்டவனல்லன் எனவும், அப்

Koviloor Digital Library

பெருமானையொப்பது அவனது தீர்த்தம் என்பார் சுட்டபோதுருப்பந்தீர்த்தக்காத்த திச்சுவணகஞ்சம் எனவுங்கூறினர். (௩)

இப்பெருந்தடமேயெம்மையெம்மையுங்காப்பதென்றுக்
கப்பிலாமனத்தான்மூன்றுகாலமுமூழ்கிமூழ்கி
யப்பனையாலவாயெம்மடிகளையடியார்சேம
வைப்பினையிறைஞ்சிநித்தம்வழிபடுநியமம்பூண்டான்.

(இ-ள்.) இ பெருந் தடம் ஏ - இந்தப் பெரியதீர்த்தமே, எம்மை எம்மையும் காப்பது என்று - எம்மை யெப்பிறப்பினும் விடாது தொடர்ந்துகாப்பதென்று, கப்பு இல்லாத மனத்தான் - ஒன்றுபட்ட மனத்தையுடைய நக்கீரர், மூன்று காலம் உம் மூழ்கி மூழ்கி - திரிகாலங்களினு நீராடி, அப்பனை ஆலவாய் எம் அடிகளை அடியார் சேமவைப்பினை இறைஞ்சி - எவ்வுயிர்கட்கும் பிதாவும் திருவாலவாயி லெழுந்தருளிய எமதுகடவுளும் அடியவர்க்குச் சேமத்திரவியமுமாகிய சோமசுந்தரக்கடவுளைவணங்கி, நித்தம் வழிபடு நியமம் பூண்டான் - நாள்தோறும் வழிபட்டொழுகும் கடப்பாட்டில் நின்றனர்.

கப்பிலாமனத்தான் என்பது பிளவுபடாத மனமுடையவன் என்னும் பொருள்மேல்நிற்றலால் ஒன்றுபட்ட மனத்தையுடையநக்கீரர் என்றும். தம்போல்வாரையும் உளப்படுத்திக் கூறுதலால் எம்மையென்றார். மூழ்கி மூழ்கி என்பது மிகுதிப் பொருளில்வந்த அடுக்குத்தொடர். (௪)

மையறுமனத்தான்வந்துவழிபடுநியமநோக்கிப்
பையரவாரம்பூண்டபரஞ்சுடர்மாடக்கூட
லையனுமணியனாகியகமகிழ்ந்தவனுக்கொன்று
செய்யநன்கருணைபூத்துத்திருவுளத்திதனைத்தேர்வான்.

(இ-ள்.) மை அறு மனத்தான் வந்து வழி படும் நியமம் நோக்கி - குற்றமற்ற மனத்தையுடைய நக்கீரர் வந்து வழிபட்டொழுகுங் கடப்பாட்டை நோக்கி, பை அரவு ஆரம் பூண்ட பரஞ் சுடர்-படத்தையுடைய சர்ப்பத்தை யாரமாகப்பூண்ட பரஞ்சுடராகிய, மாடக்கூடல் ஐயனும் அணியன் ஆகி அகம் மகிழ்ந்து அவனுக்கு ஒன்று செய்ய நல் கருணைபூத்து-நான்மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளும் அண்மையராகித் திருவுளங் களிகூர்ந்து அந்நக்கீரருக்குப் பெரும்பேறொன்று கடைக்கணிக்கத் திருவருள்கூர்ந்து, திரு உளத்து இதனை தேர்வார் - திருவுள்ளத்திலிதனைத் தேறுவாராயினர்.

சோமசூரியாக்கினிகளுக்கு ஒளிதரும் பேரொளியாதலால் பரஞ்சுடர் என்றார் இதனை முன்னர்க்காண்க. சிவபெருமானுக்குச் செய்யும் வழிபாட்டாலுண்டாகும் பேறு அன்றேபலிக்கும் என்பார் ஒன்றுசெய்ய நன்கருணைபூத்து என்றார். (௫)

இலக்கணமிவனுக்கின்னுந்தெளிகிலவிதனாலாய்ந்த
நலத்தசொல்வழூஉச்சொலென்பதறிகிலனவைதீர்கேள்விப்
புலத்தவர்யாரைக்கொண்டுபோதித்துமிவனுக்கென்று
மலைத்தருவளைத்தமுக்கண்மன்னவனுன்னுமெல்லை.

(இ-ள்.) இலக்கணம் இவனுக்கு இன்னும் தெளிகில - இலக்கணம் இந்நக்கீரருக்கு இன்னமும் ஐயமறப் புலப்பட்டவில்லை, இதனால் - இத்தேர்ச்சி யின்மையால்,

Koviloor Digital Library

ஆய்ந்த லத்த சொல் வழு உச் சொல் என்பது அறிந்திலன் - ஆராய்ந்த விதந்தகு ணமுள்ள சொல்குற்றமுள்ள சொல் இவை யென்பதைச்சிறிதுமுணர்ந்திலன், நவை தீர் கேள்வி புலத்தவர் யாரை கொண்டு இவனுக்கு போதித்தும் என்று - குற்றத்தி னின்று நீங்கிய நூற்கேள்வியின் புலமையில்வல்லோ ரெவரைக்கொண்டு போதிப் போமென்று, மலை தநு வளைத்த முக்கண் மன்னவன் - மேருவை வில்லாகவளைத்த ருளிய சோமசுந்தரக்கடவுள், உன்னும் எல்லை-திருவுளத்திற்கருதியருளுங்காலையில்.

முற்றுமுணர்ந்த பெருமானாராக விளையோர்போல உன்னுமெல்லையென்றதெ ற்றுக்கெனின், ஒருவர்பா லொருவர் கற்கப்புகின் அவர்வன்மை முன்னருணர்ந்து கற்கவேண்டுமென வுலகியலறிவுறுத்தற்குத் திருவுளத்தமைத்தாரென விடைகொ டுக்க. (௬)

பங்கயச்செங்கைகூப்பிப்பாலினேர்மொழியாள்சொல்வா
ளங்கணுவங்கைநெல்லிக்கனியென்னவனைத்துங்கண்ட
புங்கவாநினதுசங்கைக்குத்தரம்புகலவல்லா
ரெங்குளாரேனுமென்னெஞ்சுதிப்பதொன்றிசைப்பேனையா

(இ-ள்.) பங்கயம் செங் கை கூப்பி - தாமரைமலர்போன்ற செவந்த திருக் கரங்களைக் குவித்து, பாலின் நேர் மொழியாள் சொல்வாள் - பாலையொத்த சொல் லையுடைய உமாதேவியார் கூறுவார், அங்கணு - அங்கணனே, அங்கை நெல்லிக் கனி என்ன - அங்கையிலேந்திய நெல்லிக்கனியைப்போல, அனைத்தும் கண்ட புங்க வா - யாவுமுணர்ந்தபெரியோய், நினது சங்கைக்கு உத்தரம் புகலவல்லார் எங்கு உ ள்ளார் - உனது திருவுள்ளநிகழ்ச்சிக்கு விடைகூறவல்லவர் எங்குளர், எனும் - ஆயி னும், ஐயா - ஐயனே, என் நெஞ்சு உதிப்பது ஒன்று இசைப்பேன் - என்மனத்தில் நிகழ்ந்த தொன்றைக் கூறுகின்றேன். (௭)

பண்டொருபோதுவெள்ளிப்பனிவரையிடத்துன்பாங்கர்ப்
புண்டவழ்குலிசக்கோமான்பூமகன்மாயப்புத்தே
ளண்டருஞ்சனகனாதியருந்தவர்பிறருமீண்டிக்
கொண்டனரிருந்தாரிக்குவலயம்பொறுதுமாதோ.

(இ-ள்.) பண்டு ஒரு போது வெள்ளி பனி வரை இடத்து - முன்னொருகாலை யில் வெள்ளிய இமபருவதத்தில், உன் பாங்கர் புண் தவழ் குலிசம் கோமானும் பூ மகனும் மாயப்புத்தேளும் அண்டரும் - உனதுபக்கலில் நிணந்தவழும் வச்சிரமேந் திய இந்திரனும் பிரமனுந் திருமாலுந் தேவர்களும், சனகன் ஆதி அருந் தவரும் பிற ரும் ஈண்டிக் கொண்டனர் இருந்தார் - சனகர்முதலிய அரியதவசிரேட்டரும் வித்தி யாதரர் முதலியோரும் நெருங்கியிருந்தனர், இந்த குவலயம் பொறுது - இவ்வுலகு பொறையாற்றாது.

திருக்கலியாணப்போது என்பார் பண்டொருபோது எனவும், வித்தியாதரர் முதலியோர் என்பார் பிறரும் எனவுங்கூறினர். குலிசக்கோமான் முதலியவற்றில் எண்ணும்மை தொக்கன. (௮)

தாழ்ந்ததுவடகீழெல்லையுயர்ந்ததுதென்மேற்கெல்லை
சூழ்ந்ததுகண்டுவானோர்தொழுதுனைப்பரவியைய
வூழ்ந்திடுமரவம்பூண்டோயொருவனின்றெப்பானங்கே
வாழ்ந்திடவிடுத்தாலிந்தவையநேர்நிற்குமென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) வடகீழ் எல்லை தாழ்ந்து - வடகிழக்கெல்லை தாழ்ந்தது, தென்மேற்கு எல்லை உயர்ந்தது - (பொறையின்மையால்) தென்மேற்கெல்லை யுயர்ந்தது, அது கண்டு சூழ்ந்து வானோர் தொழுது—அதனைக் கண்டு ஆலோசித்துத் திருமால்முதலிய தேவர்கள் வணங்கி, உன்னை பரவி - உன்னைத் துதித்து, ஐய ஊழ்ந்திடும் அரவம் பூண்டோய் - ஐயனே கருதிய பாம்பினை யாபரணமாகப் பூண்டவனே, நின் ஒப்பான் ஒருவன் அங்கே வாழ்ந்திட விடுத்தால் - நின்னையொப்பா னொருவன் தென்மேற் கெல்லையில்வாழ வேவினால், இந்த வையம் நேர் நிற்கும் என்றார் - இந்த வுலகஞ் சமமாய் நிற்குமென்று குறையிரந்தார்கள்.

உயிர்கள் தத்தமுயிர்க்குறுதியாகிய கர்மங்களைக் கைவிட்டு வருந்துமேயென்று கருதினார்கள் என்பார் சூழ்ந்து எனவும், கார்க்கோடகன் தன்னைப் பரமன் அணியாகப் பூண்டுகொள்ளத் தவமியற்றினன் என்பார் ஊழ்ந்திடும் எனவும், சர்வஞ்ஞத்தவத்தால் நின்னையொப்பவர் ஒருவருமில்லையாயினும் நின்னையென்று மிதையத்தில் வைப்பவர் எங்களுக்கு நின்னை யொப்பவர் என்பார் ஒருவனின்னொப்பான் எனவுங் கூறினர். (சு)

பைத்தலைபுரட்டுமுந்நீர்ப்பௌவமுண்டவனேயெம்மை
யொத்தவனனையான்வாழ்க்கைக்குரியளாகியவுலோபா
முத்திரையிமவான்பெற்றமுகிழ்முலைக்கொடியொப்பாளென்
றத்திருமுனியைநோக்கியாயிடைவிடுத்தாயன்றே.

(இ-ள்.) பைத்து அலை புரட்டும் முந்நீர் பௌவம் உண்டவனே - பரந்து அலைபுரளச் செய்யும் கடலையுண்ட அகத்தியமுனிவனே, எம்மை ஒத்தவன்-எம்மைப்போன்றவன், அனையான் வாழ்க்கைக்கு உரியள் ஆகிய உலோபாமுத்திரை அம்முனிவரன் இல்வாழ்க்கைக்குரியவளாகிய உலோபாமுத்திரை யென்பவள், இமவான் பெற்ற முலை முகிழ் கொடி ஒப்பாள் என்று - இமவான் பயந்த தனமாகிய அரும்பு அரும்பிய பூங்கொடியாகிய வுமையை யொப்பவளென்று, அ திரு முனியை நோக்கி ஆயிடை விடுத்தாய் - அந்த ஞானச் செல்வத்தையுடைய முனிவரனைப் பார்த்தருளி யத்தென்மேற்கெல்லைக்குச் செலுத்தினாய்.

என்றும் எம்மையும் உமாதேவியையும் இதயத்தில் வைப்பவர் அவர்களே என்பார் எம்மையொப்பவனனையான், உலோபாமுத்திரை முகிழ்முலைக்கொடி யொப்பாள் எனவுங்கூறினர். (௭0)

விடைகொடுபோவானொன்றைவேண்டினனேகுந்தேயந்
தொடைபெறுதமிழ்நாடென்றுசொல்லுபவந்நாட்டி
னிடைபயின்மனித்தரெல்லாமின்றமிழாய்ந்துகேள்வி
யுடையவரென்பகேட்டார்க்குத்தரமுரைத்தல்வேண்டும்.

(இ-ள்.) விடை கொடு போவான்-விடைபெற்றுச்செல்லும் அம்முனிவரன், ஒன்றை வேண்டினன்-ஒன்றை வேண்டுவானாயினன், ஏகும் தேயம் தொடை பெறு தமிழ் நாடு என்று சொல்லுப- அடியேன் செல்லுந் தேசம் தொடையமைந்த தமிழ் நாடென்றுகூறுவர், அந்த நாட்டின் இடை பயில் மனித்தர் எல்லாம் - அந்தத் தமிழ் நாட்டினிடத்துச் சஞ்சரிக்கு மனிதர்களெல்லாம், இன் தமிழ் ஆய்ந்து கேள்வி உடையவர் என்ப - இனிய தமிழ்நூலினை யாராய்ந்து அந்நூற் கேள்வி நிரம்ப வுடையவரென்றுகூறுவார்கள், கேட்டார்க்கு உத்தரம் புகல வேண்டும்-அத்தமிழ்நூலில் வினவினார்க்கு அமைய விடைகூறவேண்டும்.

தொடைபென்றது செய்யுளிலமைந்த மோனைமுதலிய தொடைவிகற்பங் களை. சில விளையை முதன்மேலேற்றித் தொடைபெறுதமிழ் என்முர். (௧௧)

சித்தமாசகலவந்தச்செந்தமிழியனூறன்னை
யத்தனேயருளிச்செய்தியென்றனன்னையான்றேற
வைத்தனைமுதனூறன்னைமற்றதுதெளிந்தபின்று
நித்தனேயடியேனென்றுநின்னடிகாண்பேனென்முன்.

(இ-ள்.) சித்தம் மாசு அகல - அறியாமையாகிய மனக்குற்றமொழிய, அந் த செந்தமிழ் இயல் நூல் தன்னை - அந்தச் செந்தமிழ்க்குரிய இலக்கணநூலினை, அத்தனே அருளிச்செய்தி என்றனன் - எமது இறைவனே யருளிச் செய்யாயென்று குறையிரந்தனன், அனையான் தேற முதநூல் தன்னை வைத்தனை - அம்முனிவரன் தெளிய முதனூலருளினை, அது தெளிந்த பின்னும்-அம்முதனூலினைத்தேர்ந்துணர்ந் தபின்னும், நித்தனே அடியேன் என்று நின் அடி காண்பேன் என்முன் - தனக் கோரிறுதியில்லோய் அடியேனுகிய யான் எப்பொழுது நின்திருவடி தரிசிப்பேனெ ன்று கூறினன். (௧௨)

கடம்பமாவனத்திலெம்மைக்கண்டனையிறைஞ்சியுள்ளத்
திடம்பெறயாதுவேட்டாயவையெலாமெம்பாற்பெற்றுத்
திடம்பெறமலயத்தெய்திருக்கெனவிடுத்தாய்சென்று
குடம்பெறுமுனியுமங்கேயிருக்கின்முன்கொடியினேடும்.

(இ-ள்.) கடம்ப மாவனத்தில் எம்மை கண்டனை இறைஞ்சி - பெரிய கடம் பாரணியத்தி லெம்மைக் கண்டுவணங்கி, உள்ளத்து இடம்பெற யாது வேட்டாய் - உன்மனத்தில் வரையறையற எவற்றை விரும்பினையோ, அவை எல்லாம் எம்பால் பெற்று - அவற்றையெல்லா மெம்மிடத்தி லிடையீடறப்பெற்று, திடம் பெற மலய த்து எய்தி இருக்க என விடுத்தாய் - மனஞ் சலியாது பொதியமலையிலிருக்கக் கட வாயென்று ஏவினய், குடம் பெறு முனியும் அங்கே சென்று கொடியினேடும் இரு க்கின்றான்-கலசயோனியாகிய அம்முனிவரனும் அத்திசையிலே சென்று உலோபா முத்திரையோடும் இருக்கின்றனன். (௧௩)

இனையதுன்றிருவுள்ளத்துக்கிசைந்ததேலிவற்குக்கேள்வி
யனையமாதவனைக்கூவியுணர்த்தெனவணங்குகூற
வினையநாணிகழ்ச்சியெல்லாமறந்திடாதின்றுசொன்று
யனையதேசெய்துமென்றுவறிவனைநினைந்தானையன்.

(இ-ள்.) உன் திரு உள்ளத்துக்கு இனையது இசைந்தது எல் - தேவரீர் திரு வுள்ளத்துக்கு யான்கூறியது இயைந்ததாகில், இவன்கு கேள்வி - இந்தக்கிரேறுக் குத் திருவுளத்திற் கருதிய நூற்கேள்வியை, அனைய மாதவனை கூவி உணர்த்து எ ன அணங்கு கூற - அந்த முனிவரனைக்கூவி யுணர்த்தியருளாயென்று உமாதேவி யார் கூற, இனைய நாள் நிகழ்ச்சி எல்லாம் மறந்திடாது இன்று சொன்னாய் - அந் நாளில் நிகழ்ந்த செய்தியை எல்லா மறவாதின்று கூறினாய், அனையது ஏ செய்தும் என்று ஐயன் அறிவனை நினைந்தான் - அதுவே செய்வோமென்று சோமசுந்தரக்க டவுள் அகத்தியமுனிவனைத் திருவுளத்திற் கருதினர். (௧௪)

Koviloor Digital Library

கலிநிலைத்துறை.

உடையநாயகன்றிருவுளமுணர்ந்தனன்முடிமே
லடையவஞ்சலிமுகிழ்த்தனனருந்தவவிமானத்
திடைபுகுந்தனன்பன்னியோடெழுந்தனனகல்வா
னடையனாகிவந்தடைந்தனனற்றமிழ்முனிவன்.

(இ-ள்.) உடைய நாயகன் திருஉளம் உணர்ந்தனன் - தம்மை யாளாகவுடைய சோமசுந்தரக்கடவுளின் திருவுள்ளக்குறிப்பையுணர்ந்து,நல் தமிழ் முனிவன்-நல்லதமிழாசிரியராகிய அகத்தியமுனிவர்,முடி மேல் அஞ்சலி அடைய முகிழ்த்தனன்-தமது தலைமேற் முகிழ்த்தகைகளை அஞ்சலி கூப்பி, அருந் தவம் விமானத்து இடை பன்னி யோடு புகுந்தனன் எழுந்தனன்-செய்தற்கரிய தவமாகிய விமானத்தில் தமது மனைவியோடு ஏறியெழுந்து, அகல்வான் நடையன் ஆகி வந்து அடைந்தனன் - பரந்த ககன நெறியில் உலாவுநடைத் தொழிலுடையவராய் வந்து சேர்ந்து.

உணர்ந்தனன், முகிழ்த்தனன், எழுந்தனன், வந்தனன் முற்றெச்சங்கள்.()

இயங்குமாதவத்தேரினும்பன்னியோடிழிந்து
புயங்கனாலயம்புகுந்துநாற்புயம்புடைகிளைத்துத்
தயங்குசெம்பவளாசலந்தன்னையுமதன்பால்
வயங்குமிந்திரநீலமால்வரையையும்பணியா.

(இ-ள்.) இயங்கும் மாதவம் தேரின் உம் பன்னி யோடு இழிந்து - சஞ்சரிக்கும் பெரிய தவமாகிய தேரினின்றும் தமது மனைவியோடிறங்கி, புயங்கன் ஆலயம் புகுந்து - சர்ப்பாபரணத்தை யணிந்த சோமசுந்தரக்கடவுளுடைய திருக்கோயிலுட்புகுந்து, நால் புயம் புடை கிளைத்து தயங்கு செம்பவளா சலம் தன்னை உம்-நான்கு திருப்புயங்கள் பக்கலிலே கிளைத்து விளங்கும் செவந்த பவளமலையாகிய அக்கடவுளையும், அதன் பால் வயங்கும் மால் இந்திர நீலம் வரையை உம்பணியா - அம்மலையின் வாமபாகத்தில் விளங்கும் பெரிய இந்திரநீல மலையாகிய அங்கயற்கண்ணியாரையும் வணங்கி. (கஞ)

பெருகுமன்புளந்துளும்பமெய்யானந்தம்பெருக
வருகிருந்தனனவயிற்கீரனுமம்பொன்
முருகவிழ்ந்ததாமரைபடிந்திறைவனைமுன்போ
லுருகுமன்பினாலிறைஞ்சுவானொல்லைவந்தடைந்தான்.

(இ-ள்.) பெருகும் அன்பு உளம் துளும்ப - பெருகிய அன்பு மனத்தினின்றும் ததும்பி வழியவும், மெய் ஆனந்தம் பெருக - அதனால் அழியாத இன்பந் தன்னைவிழுங்கிநிற்கவும், ஆவயின் கீரனும் அருகு இருந்தனன்-அவ்விடத்தில் நக்கீரரும் அருகிலிருந்தனர், அம் பொன் முருகு அவிழ்ந்த தாமரை படிந்து - அழகிய வாசனையொடு மலர்ந்த பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, இறைவனை முன்போல்-சோமசுந்தரக்கடவுளை முன்போல, உருகும் அன்பினால் இறைஞ்சுவான் ஒல்லை வந்து அடைந்தான் - நெக்குவிட்டுருகு மன்பினால் வணங்க விரைந்து வந்தடைந்தனர்.

அருளால் அன்புவிளைதலும் அந்த அன்பால் ஆனந்தமேலிடுதலும் உடைமையால் பெருகுமன்புளந்துளும்ப மெய்யானந்தம் பெருக என்றார் "அன்பினாலடியே

Koviloor Digital Library

றுவியோடீக்கையானந்தமாய்க்கசிந்துருக - என்பரமல்லாவின்னருடந்தாய்” என வரும் தேவால் உணர்க. (கள)

இருந்தமாதவச்செல்வனையெதிர்வரநோக்கி
யருந்தவாவிவற்கியற்றமிழமைந்திலவெம்பாற்
றெரிந்தநீபதையறிறப்த்தெருட்டெனப்பிணியு
மருந்துமாகியபெருந்தகைசெய்யவாய்மலர்ந்தான்.

(இ-ள்.) இருந்த மாதவம் செல்வனை எதிர் வர நோக்கி - தமது திருமுன்னரிருந்த அகத்தியமுனிவரை யண்மையில்வரத்திருக்கடைக்கண்சாத்தி, அருந்தவா- அரியதவத்தையுடையோய், இவற்கு இயல் தமிழ் அமைந்தில - இந்நக்கீரனுக்கு இயற்றமிழின் பாகுபாடுகள்நிரம்பில, எம் பால் தெரிந்த நீ அதை அறில் தப தெருட்டு என்ன - எம்மிடத்துத் தேர்ந்த நீ யவற்றைக் குற்றமறத் தேற்றுவாயென்றருள்செய்ய, பிணியும் மருந்தும் ஆகிய பெருந்தகை - நோயு மருந்துமாகிய சோமசுந்தரக் கடவுள், செய்ய வாய் மலர்ந்தான் - செவந்த திருவாய்மலர்ந்தருளினர்.

தமதாணைவழிநில்லாத உயிர்களுக்கு நோயும் நிற்போர்க்கு அந்நோய்தீர்க்கு மருந்தாகவும் நிற்றலால் பிணியும் மருந்துமாகிய என்றார். கோவப்பிரசாத முதலிய வற்றிற்காணக. (கஅ)

வெள்ளைமாமதிப்பிளவணிவேணியங்கருணை
வள்ளலார்பணிசிரத்தினுமனத்தினுந்தாங்கிப்
பள்ளமேழையும்பருகினேன்பணியுநக்கீர
னுள்ளமாசறவியாகரணத்தினையுணர்த்தும்.

(இ-ள்.) வெள்ளை மாமதி பிளவு அணி வேணி அம் கருணை வள்ளலார் பணி- வெண்ணிறம் வாய்ந்த பெருமைதங்கிய பிறையையணிந்த சடாமகுடத்தையுடைய அழகிய கிருபாவள்ளலாகிய சோமசுந்தரக்கடவுளருளிய திருப்பணியை, சிரத்தினும் மனத்தின் உம் தாங்கி-சிரத்தின்மேலு மனத்தின்மேலும் சூடி, பள்ளம் ஏழை உம் பருகினேன் - எழுகடலையும் பருகிய அகத்தியமுனிவர், பணியும் நக்கீரன் உள்ளம் மாசு அற - தம்மைப்பணியும் நக்கீரரது மனக்களங்கமொழிய, வியாகரணத்தினை உணர்த்தும் - வியாகரணத்தை யுணர்த்துவாராயினர். (கக)

இருவகைப்புறவுரைதழீஇயெழுமதயொடுநாற்
பொருளொடும்புணர்ந்தையிருகுற்றமும்போக்கி
யொருவிலையிரண்டழகொடுமுத்தியெண்ணான்கு
மருவுமாதிநூலினைத்தொகைவகைவிரிமுறையால்.

(இ-ள்.) இரு வகை புற வுரை தழுவி - பொது சிறப்பு என்னப்படும் இருவகைப்புறவுரையையு முன்னர்த்தழுவி, எழு மதம் ஒடு உம் நாற் பொருள் ஒடு உம் புணர்ந்து - உடன் படல் முதலிய எழுவகைமதங்களோடும் அறமுதலிய நான்குபொருளோடுங்கூடி, ஐ யிரு குற்றம் உம் போக்கி - குன்றக்கூறல் முதலிய பத்துவகைக் குற்றங்களையும் ஒழித்து, ஒருவு இல் ஐ யிரண்டு அழகு ஒடு உம் - நீங்குதலில்லாத சுருக்கச் சொல்லல் முதலிய பத்தழகோடும், உத்தி எண்ணான்கு உம் - நுதலிப்புகுதல்முதலிய முப்பத்திரண்டழகோடும், மருவும் ஆதி நூலினை தொகை வகை விரி முறையால் - பொருந்திய முதனூலைத் தொகைவகைவிரியென்னுமுறைகளால்.

புறவுரை நூல் நுதலிய பொருளல்லாதவை, அவை பாயிரங்களாதலால் இருவகைப் புறவுரையென்றார். எழுவகைமதங்களாவன உடன்படல், மறுத்தல், பிறர்தம்மதமேற்கொண்டு களைதல், தா அனுட்டித் தனது நிறப்பு, இருவர் மாறு கோளொருதலைதுணிதல், பிறர் நூற்குற்றங்காட்டல், பிறிதொடுபடா அன்றன்மதங்கொளல். நாற்பொருளாவன அறம், பொருள், இன்பம், வீடு. பத்துக் குற்றங்களாவன குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழு உச்சொற்புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத்தொடுத்தல்,மற்றொன்றுவிரித்தல், சென்றுதேய்ந்திறுதல், நின்றுபயனின்மை. பத்தழகுகளாவன சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின்வைப்பு, உலகமலையாமை, விழுமியதுபயத்தல், விளங்கிய வுதாரணத்தை யுடையதாதல். முப்பத்திரண்டுத் திகளாவன- நுதலிப்புகுதல், ஒத்துமுறைவைப்பு, தொகுத்துச் சுட்டல், வகுத்துக்காட்டல், முடித்துக்காட்டல், முடிவிடங்கூறல், தானெடுத்துமொழிதல், பிறன்கோட்கூறல், சொற்பொருள் விரித்தல், தொடர்சொற்புணர்த்தல், இரட்டுறமொழிதல், ஏதுவின்முடித்தல், ஒப்பின்முடித்தல், மாட்டெறிந்தொழுகல், இறந்ததுவிலக்கல், எதிரதுபோற்றல், முன்மொழிந்துகோடல், பின்னதுநிறுத்தல், விகற்பத்தின்முடித்தல், முடிந்ததுமுடித்தல், உரைத்துமென்றல், உரைத்தாமென்றல், ஒருதலைதுணிதல், எடுத்துக்காட்டல், எடுத்தமொழியின் எய்தவைத்தல், இன்னதல்லதிதுவெனமொழிதல், எஞ்சியசொல்லின் எய்தக்கூறல், பிறநூன்முடிந்தது தானுடன்படுதல், தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல், சொல்லின்முடிவினப் பொருண்முடித்தல், ஒன்றினமுடித்தல் தன்னினமுடித்தல், உய்த்துணரவைத்தல். தொகையாவது விரிந்துகிடக்கின்றவைகளைத்தொகுத்துக்கூறல், விரியாவது தொகுத்துக் கூறியவற்றை விரித்துக்கூறல், வகையாவது இடைநிகரனவாகக்கூறல். இவற்றை விரிக்கிற் பெருகும் ஆதலால் கற்றோர்வாய்க் கேட்க. (௨0)

கருத்துக்கண்ணழிவாதியகாண்டிகையானும்
விருத்தியானுநூற்கிடைப்பொருடுளக்கறவிளக்கித்
தெரித்துரைத்தனனுரைத்திடுதிறங்கண்டுநூலி
னருத்தமேவடிவாகியவாதியாசிரியன்.

(இ-ள்.) கருத்து கண்ணழிவு ஆதிய காண்டிகையானும் - கருத்துரையும் பதப்பொருளுமுதலிய காண்டிகையுரையாலும், விருத்தியானும் - பாட்டுமுதலியவிருத்தியுரையாலும், நூல்கிடைப்பொருள்துளக்கு அறவிளக்கி - அம்முதனூலினுட்கிடைப்பொருளினையை யமறத்தெருட்டி, தெரித்து உரைத்தனன் - உள்பொருளைவிளக்கிக்கூறினர், நூலின் அருத்தமே வடிவு ஆகிய ஆதி ஆசிரியன் உரைத்திடு திறம் கண்டு - அந்நூலின் பொருளே திருவுருவாகிய சோமசுந்தரக்கடவுள் அவர்போதிக்கும்வகையைக்கண்டு.

காண்டிகையுரையாவன - கருத்துரை, பதவுரை, உதாரணம், கடா, விடை, விருத்தியுரையாவன - பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினு, விடை, விசேடம், விரிவு, அதிகாரம், துணிவு, பயன், ஆசிரியவசனம். (௨௧)

தருக்குமின்பமுங்கருணையுந்தழைப்பமாதவனைத்
திருக்கரங்களான்மகிழ்ச்சியுட்டிலைத்திட்டத்தழுவிப்

பெருக்கவேண்டியபேறெலாம்பீடுறநல்கி
யிருக்கையிற்செலவிடுத்தனனாலவாயிறைவன்.

(இ-ள்.) தருக்கு உம் இன்பம் உம் கருணை உம் தழைப்ப - களிப்பும் இன்பமும் திருவருளும் பெருக, ஆலவாய் இறைவன் - திருவாலவாயிலெழுந்தருளியசோமசுந்தரக்கடவுள், மாதவனை - அந்த அகத்திய முனிவனை, திரு கரங்கள் ஆல் - தமது திருக்கரங்களால், மகிழ்ச்சி உள் நிறைந்திட தழுவி - ஆராமகிழ்ச்சியுளிடைவிடாதழுந்தத் தாம்புல்லி, பெருக்கவேண்டியபேறு எல்லாம் பீடு உற நல்கி - அவர் ஈட்டவேண்டிய பயன்களையெல்லாம் ஒருசேரச் சிறக்கக்கொடுத்து, இருக்கை இல் செலவிடுத்தனன் - பொதியமலையிற்செல்ல விடைகொடுத்தருளினர்.

தாம் போதித்தவண்ணம் அம்முனிவர் நக்கீரர்க்குப் போதித்தலால் தருக்கும், தமதாணைவழி யம்முனிவர் சிறிதும் வழுவாதுநிற்றலால் இன்பமும், ஆணைவழி நிற்போரே திருவருட்பேற்றுக்குரியராதலால் கருணையுந்தழைப்ப எனவுங்கூறினர்.

பொன்னனாளொடுங்குறுமுனிவிடைகொடுபோன
பின்னையாருயிர்க்கிழத்திதன்பிரானைநேர்நோக்கி
யென்னைநீயிவற்குணர்த்திடாதித்தவப்பொதியின்
மன்னனாலுணர்த்தியதெனமதுரைநாயகனும்.

(இ-ள்.) பொன் அன்னாள் ஒடு உம் குறு முனி விடை கொடு போன பின்னை - பொன்னையொத்த உலோபாமுத்திரையோடும் அகத்திய முனிவர் விடைபெற்றுச் சென்றபின், ஆர் உயிர்க்கிழத்தி - அரிய உயிர்போன்ற பிராட்டியார், தன் பிரானை நேர் நோக்கி - தமது தலைவராகிய சோமசுந்தரக்கடவுளை யெதிரே பார்த்தருளி, என்னை - யாதுகாரணம், நீ இவற்கு உணர்த்திடாது - தேவரீர் இந்த நக்கீரனுக்குப் போதியாது, இ பொதியில் தவம் மன்னனால் உணர்த்தியது என்ன - இந்தப் பொதியமலையில் வசிக்குந் தவசிரேட்டனாகிய அகத்தியமுனிவனாற் போதித்ததென்று வினவ, மதுரை நாயகனும் - மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளும். (உ௩)

தன்னைநித்தலும்வழிபடுந்தகுதியோர்சாலப்
பொன்னளிப்பவர்தொடுத்தமற்சரமிலாப்புனிதர்
சொன்னசொற்கடவாதவர்துகடவிர்நெஞ்சத்
தின்னவர்க்குநூல்கொளுத்துவதறனெனவிசைப்ப.

(இ-ள்.) தன்னை நித்தலும் வழிபடு தகுதி யோர் - (போதகாசிரியர்கள்) தம்மை வழிபட்டொழுகுவோர், சால பொன் அளிப்பவர் - மிகவும் பொருள் கொடுப்போர், தொடுத்த மற்சரம் இல்லாத புனிதர் - அழுக்காறடைதலில்லாத நல்லொழுக்கமுடையவர், சொன்ன சொல் கடவாதவர் - சொன்ன சொல்லைக் கடவாதவருமாகிய, துகள் தவிர் நெஞ்சத்து இன்னவர்க்கு - குற்றத்தினின்று நீங்கிய மனத்தையுடைய இவர்போல்வார்க்கு, நூல் கொளுத்துவது அறன் என இசைப்ப - போதிப்பது தருமமென்று பெரியோர் கூறுவர். (உ௪)

இவனெடுத்தமற்சரத்தினால்யாமுணர்த்தாதத்
தவனைவிட்டுணர்த்தினமெனச்சாற்றினன்கேட்டுக்
கவலைவிட்டகமகிழ்ச்சிகொண்டிருந்தனள்கதிர்கா
னவமணிக்கலம்பூத்ததோர்கொடிபுரைநங்கை.

Koviloor Digital Library

(இ-ள்.) இவன் எடுத்தமற்சரத்தினால் - இந்நக்கீரன் கொண்ட அழுக்காற்றால், யாம் உணர்த்தாது அதவனை விட்டு உணர்த்தினம் என சாற்றினான் - யாம் போதியாது இந்த அகத்திய முனிவனைவிட்டுப் போதித்தோமென்று கூறியருளினர், கதிர் கால் நவமணிக் கலம் பூத்தது ஓர் கொடி புரை நங்கை - ஒளிவீசும் நவரத்தினங்களழுத்திய ஆபரணங்களாகிய மலர்கள் பூத்தொசித்த ஒப்பில்லாத பூங்கொடியை யொத்த பிராட்டியார், கேட்டு கவலை விட்டு அகம் மகிழ்ச்சி கொண்டு இருந்தனள் - அதனைக் கேள்வியுற்றுக் கவலொழிந்து மனங் களிகூர்ந்திருந்தனர்.

கவலையாவது நமது பிரான் முற்றுமுணர்ந்தவனாக இந்த முனிவரனைக்கொண்டு போதித்தது யாதென நிகழ்ந்த ஐயத்தை. (உரு)

கற்றகீரனும்பின்புதான்முன்செய்தகவிகண்
முற்றுமாய்ந்துசொல்வழுக்களும்வழாநிலைமுடிபு
முற்றுநோக்கினானறிவின்றிமுழுதொருங்குணர்ந்தோன்
சொற்றபாடலிற்பொருள்வழுச்சொல்லினேனென்னா.

(இ-ள்.) கற்ற கீரனும்- அகத்தியர் பாற் கற்றுணர்ந்த நக்கீரனும், பின்புதான் முன்செய்த கவிகள் முற்றும் ஆய்ந்து- பின்னர்த் தான்முன்னர்ச்செய்தசெய்யுள்கள் முற்றும் ஆராய்ந்து, சொல் வழுக்களும் வழா நிலை முடிபும் உற்று நோக்கினான்- தான் புணர்த்திய வழூஉச்சொல் முடிபையும் வழாநிலைமுடிபையும் சிந்தித்து ஆராய்ந்து, அறிவு இன்றி - சற்றும் உணர்ச்சியில்லாமல், முழுது ஒருங்கு உணர்ந்தோன் சொற்ற பாடலில் பொருள் வழு சொல்லினேன் என்னா - முற்றும் ஒருசேரவுணர்ந்த பெருமானார் கூறியருளிய பாசுரத்தில் பொருள்வழுக் கூறினேனே அது என்ன மடமையென்று. (உசா)

மறையினந்தமுந்தொடாததாணிலந்தொடவந்த
நிறைபரஞ்சுடர்நிராமயநிருத்தற்குப்பிழைத்தேன்
சிறியகேள்வியோர்கழியவுஞ்செருக்குடையோரென்
றறிஞர்கூறியபழஞ்சொலென்னளவிற்றேயம்ம.

(இ-ள்.) மறையின் அந்தமும் தொடாத தாள் நிலம் தொட - பிரபலச் சுருதியாகிய உபநிடதமும் அறிதற்கரிய திருவடிகள் நிலத்தில் தீண்ட, வந்த நிறை பரஞ்சுடர் நிராமய நிருத்தற்கு பிழைத்தேன் - (தம்மையடைந்த ஓரந்தணன் பொருட்டுப் புலவருருக்கொடு) வந்தருளிய பரஞ்சுடராகிய ஞானநடனத்தையுடைய பெருமானார்க்குத் தவறு செய்தேன், சிறிய கேள்வியோர் கழியவும் செருக்கு உடையோர் என்று - முற்றுங் கல்லாதார் மிகவும் இறுமாப்படைவரென்று, அறிஞர் கூறிய பழஞ்சொல் என் அளவிற்று - ஆன்றோர் கூறிய முதுரை மடமையே னளவினதானது. (உஎ)

அட்டமூர்த்திதன்றிருவடிக்கடியனேன்பிழைக்கப்
பட்டதீங்கினாலெனையவனுதல்விழிப்படுதீச்
சுட்டதன்றியென்னெஞ்சமுஞ்சுடுவதேயென்றென்
றுட்டதும்பியவிழுமநோயுவரியுளாழ்ந்தான்.

(இ-ள்.) அட்டமூர்த்தி தன் திருவடிக்கு அடியனேன் பிழைக்க பட்ட தீங்கினால் - அட்டமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுளின் திருவடிக்கு அடியேன் அப

Koviloor Digital Library

ாதிபாப தீமையால், என்னை அவன் நுதல் விழிபடு தீ சுட்டது - பேதையேனை யப்பெருமானார் நுதற்கண்ணிலுள்ள தீபுறம்பே சுட்டது, அன்றி - அதுவுமன்றி, என் நெஞ்சமும் சுடுவதே என்று என்று - எனதறியாமை யெனது அகத்தையும் சுடுகின்றதே யாதுசெய்வேனென்று, உள் ததும்பிய விழுமம் நோய் உவரி உள் ஆழ்ந்தான் - தன்மனத்திற் பொங்கியெழுந்த துன்பநோயாகிய கடலிலழுந்தினான்.

அட்டமூர்த்தி என்றதற்கு முன்னர்க் கூறியது காண்க. நெஞ்சமும் என்ற எதிரது தழீஇய எச்சவும்மையாற் புறம்பும் என்றும். புறத்திற் சூடுண்டதற்குத் தீர்வுளது அகத்திருண்ட சூட்டிற்குத் தீர்வில்லையே யென்று கவன்றனன் என்பார் சுடுவதே யென்றென்று என மிகுதிப்பொருளில் வந்த அடுக்குத்தொடர்படக் கூறினார். (உ௮)

மகவையீன்றதாய்கைத்திடுமருந்துவாய்மடுத்துப்
பகைபடும்பிணியகற்றிடும்பான்மைபோலென்னை
யிகலிழைத்தறிவுறுத்தினாய்க்கேழையேன்செய்யத்
தகுவதியாதெனவரம்பிலாமகிழ்ச்சியுட்டாழ்ந்தான்.

(இ-ள்.) மகவை ஈன்ற தாய் - பிள்ளையைப் பெற்றதாய், கைத்திடும் மருந்து வாய் மடுத்து பகை படும் பிணி அகற்றிடும் பான்மை போல் - (அப்பிள்ளை படு நோய்க் காற்றாது) கசக்குமருந்தினை வலியவூட்டி முரணிவருத்தும் நோயை யொழிக்குந் தன்மைபோல, என்னை இகல் இழைத்து அறிவு உறுத்தினாய்க்கு - என்மேற் சினங்கொண்டருளி யறிவுறுத்திய தேவரீர்க்கு, ஏழையேன் செய்ய தகுவது யாது என்ன - அறிவில்லாத சிறியேன் கைம்மாறாகச் செய்யக் கிடந்தது யாதென்று, வரம்பு இல்லாத மகிழ்ச்சி உள் தாழ்ந்தான் - எல்லையில்லாத ஆநந்தத்தி லழுந்தினான்.

ஆன்மாக்களுக்கு இருவினையு நோயாதலால் அதனாற் பந்தமுறுமற்பொருட்டு இன்பதுன்பமாகிய மருந்தினை நுகர்வித்து ஒழிப்பாய் என்பான் மகவையீன்ற தாய் கைத்திடு மருந்துவாய் மடுத்துப் - பகைபடும்பிணி யகற்றிடும் பான்மைபோல் எனவும், அவ்வான்மாக்களுள் அடியேனும் ஒருவனாதலால் செய்த தீமையை யொழித்தற்பொருட்டுத் துன்பமாகிய மருந்தினை யூட்டினாய் என்பான் என்னை யிகலிழைத்து எனவும், அதனால் இன்பமுறுத்தினாய் என்பான் அறிவுறுத்தினாய் எனவுங் கூறினான். (உ௯)

மாதவன்றனக்காலவாய்மன்னவனருளாற்
போதகஞ்செய்தநூலினைப்புலவரோனோர்க்கு
மாதரஞ்செயக்கொளுத்தியிட்டிருந்தனனமலன்
பாதபங்கயமுழ்கியபத்திமைக்கீரன்.

(இ-ள்.) மாதவன் தனக்கு ஆலவாய் மன்னவன் அருளால் போதகம் செய்த நூலினை - அகத்தியமுனிவர் தனக்குத் திருவாலவாயி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளினால் போதித்த இலக்கண நூலினை, அமலன் பாதபங்கயம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

சங்கத்தார்கலகந்தீர்த்ததிருவிளையாடல் -



Koviloor Digital Library

மூழ்கிய பத்திமை கீரன் - அப்பெருமானுடைய திருவடித் தாமரையிலழுந்திய பத்திமையையுடைய நக்கீரன், புலவர் ஏனோர்க்கு உம் ஆதரம் செய்ய கொளுத்தி யிட்டிருந்தினன் - ஏனைச்சங்கப் புலவர்களுக்கும் விருப்பமிகப் புலப்படுத்தி யிருந்தனன்.

தான்கற்ற நூலினையயமற மற்றைப்புலவர்கட்குப் புலப்படுத்தினன் என்பார் ஆதரஞ் செயக்கொளுத்தி என்றார். (௫0)

கீரனுக்கு இலக்கணமுபதேசித்தபடலம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உருகசு.

ஐம்பத்தைந்தாவது.

சங்கத்தார்கலகந்தீர்த்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காமனைப்பொடியாக்கண்டகண்ணுதறொன்னூல்கீர
னுமநற்புலவற்கீந்தநலமிதுபொலம்பூங்கொன்றைத்
தாமனச்சங்கத்துள்ளார்தலைதடுமாற்றந்தேற
வூமனைக்கொண்டுபாடலுணர்த்தியவொழுக்கஞ்சொல்வாம்.

(இ-ள்.) காமனை பொடியாக கண்ட கண்ணுதல்-மன்மதனை நீறுக்கிய சோமசுந்தரக்கடவுள், தொல் நூல் - முதனூலினை, கீரன் நாமம் நல் புலவன்கு ஈந்த நலம் இது - நக்கீரனென்னும் பெயரினையுடைய வல்ல புலவர்க்கு அகத்திய முனிவரால் தெரித்தருளிய திருவிளையாடலிது, பொலம்பூ கொன்றை தாமன் - பொன்னிறம் வாய்ந்த கொன்றைமலரானாகிய மாலையை யணிந்த அக்கடவுள், அ சங்கத்து உள்ளார் தலைதடு மாற்றம் தீர-அந்தச்சங்கப்புலவர்கள் தந்தந்தலை தடுமாற்றத்தினின்றுநீங்க, ஊமனை கொண்டு பாடல் உணர்த்திய ஒழுககம் சொல்வாம்-வைசியர் குலத்துதித்த வூமைப்பிள்ளையாரைக்கொண்டு அப்புலவர்கள் இயற்றிய செய்யுளின் தாராதரத்தைத் தெரிவித்த திருவிளையாடலை யினிக் கூறுவாம். (க)

அந்தமில்கேள்வியோரெண்ணாறுவரும்வேறுவேறு
செந்தமிழ்செய்துதம்மிற்செருக்குறுபெருமைகூறித்
தந்தமின்மாறாய்த்தத்தந்தராதரமளக்கவல்ல
முந்தைநூன்மொழிந்தவாசான்முன்னர்வந்தெய்தினரே.

(இ-ள்.) அந்தம் இல் கேள்வியோர் எண்ணாறு வரும் - அளவறுத்தற்கரிய நூற்கேள்வியில் வல்ல நாற்பத்தெண்மரும், வேறு வேறு செந்தமிழ் செய்து - தம்முள் தனித்தனி பிரபந்தங்களைச் செய்து, தம் இல் செருக்கு உற பெருமை கூறி-தம்முள் இறுமாத்தலால் யாம் பெரியம் யாம் பெரிமெனக்கூறி, தந்தம் இல் மாறு ஆய் - தம்முள் மாறுபட்டு, தத்தம் தாராதரம் அளக்கவல்ல முந்தைநூல் மொழிந்த ஆசான் முன்னர் வந்து எய்தினர் - தத்தம் சிறுமை பெருமைகளையளந்தறியவல்ல

Koviloor Digital Library

முதநூல் கூறியருளிய பேராசிரியராகிய சோமசுந்தரக்கடவுள் திருமுன் வந்தடைந்தனர். (௨)

தொழுதனரடிகள்யாங்கடொடுத்தவிப்பாடறம்முள்
விழுமிதுந்திதுந்தூக்கிவேறுபாடளந்துகாட்டிப்
பழுதறுத்தையந்திரப்பணிக்கெனப்பணிந்தார்கேட்டு
முழுதொருங்குணர்ந்தவேதமுதல்வனுமுக்கண்மூர்த்தி.

(இ-ள்.) தொழுதனர் - வணங்கி, அடிகள் - அடிகளே, யாங்கள் தொடுத்த இ பாடல் தம்முள் - யாங்கள் பாடிய இப்பிரபந்தத்துள், விழுமிது உம் திது உம் தூக்கி வேறுபாடு அளந்து காட்டி பழுது அறுத்து ஐயம் திர பணிக்க என பணிந்தார் - இது குற்றமிகந்ததெனவும் இது குற்றமுள்ளதெனவு முன்னர்ச் சீர்தூக்கி அவற்றின் சிறுமை பெருமைகளைத் தெரித்து எம்மு ளெழுந்த இறுமாப்பினையொழித்து மயக்கினையொழிக்கப் பணித்தருளக்கடவாயென்று குறையிரந்தனர், முழுது ஒருங்கு உணர்ந்த வேதம் முதல்வன் ஆம் முக்கண் மூர்த்தி கேட்டு - முற்றுமுணர்ந்த வேதமுதல்வராகிய சோமசுந்தரக்கடவுள் கேட்டருளி. (௩)

இருவருந்தருவநீண்டவெரியழற்றூணிற்றோன்று
முருவெனவறிவானந்தவுண்மையாயுலகுக்கெல்லாங்
கருவெனமுளைத்தமூலலிங்கத்துணின்றுங்காண்டற்
கரியதோர்புலவனாகித்தோன்றியொன்றருளிச்செய்வான்.

(இ-ள்.) இருவரும் தருவ-பிரமனுந்திருமாலுந்தேட, நீண்டஎரி அழல் தூணில் தோன்றும் உரு என-எல்லையறவோங்கிய அக்கினித்தம்பத்தினின்றுந் தோன்றிய திருவுருவைப்போல, அறிவு ஆநந்தம் உண்மையாய்- சச்சிதானந்த வடிவாய், உலகுக்கு எல்லாம் கரு என முளைத்த மூலம் இலிங்கத்து உள் நின்றும்-உலகிலுள்ள சிவலிங்கங்களுக்கெல்லாம் பிறப்பிடமாக முன்னர்த்தோன்றிய இந்த மூலலிங்கத்தினிடத்தினின்றும், காண்டற்கு அரியது ஓர் புலவன் ஆகி தோன்றி ஒன்று அருளிச்செய்வான் - காணுதற்கரிய ஒர் பெரும்புலமைத் திருவுருக்கொண்டு தோன்றியொன்றருளிச்செய்வாராயினர்.

முன்னர்க் காந்தம் அடிமுடிதேடு படலத்தில் கூறியதுள் எரியழற்றூணிற்றோன்றும் உருவென என வருதலைக்காண்க. வாக்குமனாதீத கோசரமாகிய இறைவன் ஆன்மாக்களுக்கு அருளுதற்பொருட்டு அருளே திருமேனியாகக்கொண்டு திருக்கோயிலுள் அமர்ந்தருளுதலால் அறிவாநந்த வுண்மையாய் எனவும், மேருமுதலிய திருப்பதிகளிலெழுந்தருளிய அருட்குறிகள்தோன்றற்குக் காரணமாகநிற்றலால் உலகுக்கெல்லாங் கருவென முளைத்த மூலலிங்கத்துணின்றும் எனவுங் கூறினார். "அப்பதிலிங்கமெல்லா மருட்குறியதனிற்பின்பு - கப்புவிட்டெழுந்தவிந்தக் காரணமிரண்டினுக்கும் - ஒப்பரிதான ஞானவொளிதிரண்டன்னவிந்தத் - திப்பியவிலிங்கமூல லிங்கமாய்ச்சிறக்குமன்றே" என மூர்த்திவிசேடத்தில் வருஞ் செய்யுளால் உணர்க. உலகுக்கெல்லாம் - கருவெனமுளைத்த என்றதற்கு உலகத்தோற்றாவுக்கெல்லாங் காரணமாக முளைத்தருளியவெனப் பொருள் கொள்ளுதலும் ஒன்று, வேதத்தற்குப் பொருளருளிச்செய்த படலத்தில் "ஆதியிலான்மதத்துவமான வலர்மகன் பாகமு நடுவில் - நீதியின் விச்சாதத்துவமான நெடியவன்பாகமு முடிவில் - ஓதியசிவதத்துவமெனலான வுருத்திரபாகமு முதிக்கும் - பேதியிம்மூன்றிலெ

Koviloor Digital Library

ஸ்லிறத்துவங்கள் பிறக்குமிம் மூன்றிறுமுறையால்" எனவருஞ் செய்யுளா லுணர்க. (௪)

கலிநிலைத்துறை.

இம்மாநகருள்ளானொருவணிகன்றனபதியென்
றம்மாநிதிக்கிழவோன்மனைகுணசாலினியனையார்
தம்மாதவப்பொருட்டால்வெளிற்றறிவாளரைத்தழுவும்
பொய்ம்மாசறவினன்போலவதரித்தானொருபுத்தேள்.

(இ-ள்.) இ மாநகர் உள்ளான் ஒரு வணிகன் தனபதி என்று - இந்தப் பெரிய மதுரைத் திருநகரில் வசிப்பவன் ஒரு வைசியன் அவன் தனபதியென்று காரணப் பெயர்பெற்று, அமா நிதிக் கிழவோன் - அந்தப் பெரிய இருநிதிக்கு உரியவனாகிய குபேரனை யொத்தவன், மனை குண சாலினி - அவன் மனைவி குணசாலினி எனப் பெயருடையாள், அனையார் தம்மா தவம் பொருட்டால் - அவ்விருவருஞ் செய்த தவத்தினிமித்தமாக, வெளிறு அறிவாளரை தழுவும் பொய் மாசு அற - மந்தப் புத்தியுடையவரை விடாது தொடர்ந்த அஞ்ஞானமாகிய இருளொழிய, இனன் போல் ஒரு புத்தேள் அவதரித்தான் - சூரியனைப்போல ஒப்பில்லாத முருகக்கடவுளவதரித்தனர்.

வெளிற்றறிவு வெள்ளைப்புத்தி. முருகக்கடவுள் எனக் கூறியது வலைவீசிய படலத்திலும், இறையனார் அகப்பொருளில் நக்கீரர் உரையிலுங் காண்க. (௫)

ஓயாவிறன்மதனுக்கிணையொப்பானவனூமச்
சேயாமவனிடைநீருரைசெய்யுட்கவியெல்லாம்
போயாடுமினனையானதுபுந்திக்கிசைந்தானன்
றாயாவருமதிக்குந்தமிழதுவேயெனவறைந்தான்.

(இ-ள்.) ஓயாத விறல் மதனுக்கு இணை ஒப்பான் - குறைபடாத வெற்றியையுடைய மன்மதனுக்கு அழகிலொப்பவர், அவன் ஊமச்சேய் ஆம் - அப்பிள்ளை யூமைப்பிள்ளையாம், அவன் இடை நீர் உரை செய்யுள் கவி எல்லாம் போய் ஆடுமின் - அவரிடத்து நீங்கள் கூறிய பிரபந்தத்திலுள்ள பாடல்களையெல்லாம் போய்ச் சொல்லுங்கள், அனையான் புந்திக்கு அது இசைந்தால் - அப்பிள்ளையின் இதயத்துக்கு அந்நூல் பொருந்துமாகில், நன்று ஆய் யாவர் உம் மதிக்கும் தமிழ் அதுவே என்ன அறைந்தான் - மிகவும் யாவரு நன்கு மதிக்கும் பிரபந்த மதுவேயென்று கூறியருளினர். (௬)

வன்றாண்மழவிடையாயவன்மணிவாணிகனூம
னென்றாலவன்கேட்டெய்ந்நமிப்பாடலிற்கிடக்கு
நன்றானவுந்தீதானவுநயந்தாய்ந்ததன்றன்மை
குன்றாவகையறிவானெனமன்றாடியகூத்தன்.

(இ-ள்.) வல் தாள் மழவிடையாய்-விரைந்துசெல்லும் கால்களமைந்த இளமைபொருந்திய இடபவூர்தியையுடையாய், அவன் மணி வாணிகன் ஊமன் என்றால் - அப்பிள்ளை இரத்தினங்களை யாராயும் வைசியர் குலத்துதித்தவரும் ஊமையும் ஆகில், அவன் கேட்டு - அப்பிள்ளை கேட்டு, இ பாடலில் கிடக்கும் நன்று ஆன உம் தீது ஆன உம் நயந்து ஆய்ந்து - இப்பிரபந்தங்களிலமைந்து கிடக்கும் குணங்களையுங் குற்றங்களையும் விரும்பி யாராய்ந்து, அதன் தன்மை குன்றாவகை எங்

Koviloor Digital Library

ணம் அறிவான் என்ன - அவற்றின் றன்மையைக் குறையாதவண்ணம் எவ்வா றறிவானென்று வினவ, மன்று ஆடிய கூத்தன் - வெள்ளியம்பலத்திற் றிருக்கூத்தாடிய பெருமானார்.

மணிவாணிகன் ஆதலால்நயந்தாய்ந்ததன்றன்மை குன்றாவகையறிவான் என் ணம் என என்றார். (௭)

மல்லார்தடம்புயவாணிகமைந்தன்றனக்கிசையச்
சொல்லாழமும்பொருளாழமுங்கண்டான்முடிதுளக்காக்
கல்லார்புயம்புளகித்துளங்களிதூங்குவன்கலக
மெல்லாமகன்றிடுமுங்களுக்கென்றாலயஞ்சென்றான்.

(இ-ள்.) மல் ஆர் தட புய வாணிக மைந்தன் - மற்போர் நிறைந்த பெருத்த புயத்தையுடைய வைசியகுல சூளாமணியாகிய பிள்ளையார், தனக்கு இசைய சொல் ஆழம் உம் பொருள் ஆழம் உம் கண்டால் - தமக்குப் பொருந்தச் சொல்லாழ்ச்சியையும் பொருளாழ்ச்சியையும் நோக்கில், முடி துளக்கா கல் ஆர் புயம் புளகித்து உளம் களி தூங்குவன் - சிரக்கம்பஞ்செய்து மலையையொத்த தோள் புளகங் கூர்ந்து மனக்களிகூர்வர், உங்களுக்கு கலகம் எல்லாம் அகன்றிடும் என்று ஆலயம் சென்றான் - உங்களிடுள்ள கலகங்களெல்லா மொழியுமென்று திருக்கோயிலுட்சென் றருளினார்.

சொல்லாழ்ச்சியாவது நுண்ணிய பலபொருள்களைச் செறிந்துநிற்றல். பொருளாழ்ச்சியாவது இறைச்சிமுதலிய ஏதுக்களாற் பல்பொருள்பட நிற்றல். (௮)

பின்பாவலரெல்லாம்பெருவணிகக்குலமணியை
யன்பாலழைத்தேகித்தமதவையத்திடையிருத்தா
நன்பான்மலர்நறுஞ்சாந்துகொண்டருச்சித்தனர்நயந்தே
முன்பாலிருந்தருந்தீந்தமிழ்மொழிந்தாரவைகேளா.

(இ-ள்.) பின் பாவலர் எல்லாம் - பின்பு புலவர்களெல்லாம், பெருவணிகக் குலமணியை - பெரிய வணிகர்குல சிகாமணியை, அன்பு ஆல் அழைத்து ஏகி - அன்பினாலழைத்துச்சென்று, தமது அவையத்து இடை இருத்தா - தமது கழகத்திலிருத்தி, நல் பால் மலர் நறுஞ்சாந்து கொண்டு நயந்து அருச்சித்தனர் - நல்ல பகுப்பினையுடைய மலரையும் நறுமணங்கமழுஞ் சந்தனத்தையுங் கொண்டு விரும்பி யருச்சனைசெய்து, முன் பால் இருந்து அருந்தீந்தமிழ் மொழிந்தார் - முன்னரிருந்து அரிய இனிய தந்தஞ் செய்யுள்களைக் கூறினார்கள், அவை கேளா - அவற்றைக் கேட்டு.

தந்தஞ் செய்யுள்களைச் சீர்தூக்கும் பேராசிரியர் ஆதலால் நன்பான்மலர் நறுஞ்சாந்துகொண் டருச்சித்தனர் என்றார். (௯)

மகிழ்ந்தான்சிலர்சொல்லாழ்ச்சியைமகிழ்ந்தான்சிலர்பொருளை
யிகழ்ந்தான்சிலர்சொல்வைப்பினையிகழ்ந்தான்சிலர்பொருளைப்
புகழ்ந்தான்சிலர்சொல்லின்பமும்பொருளின்பமுமொருங்கே
இகழ்ந்தான்சிலர்சொற்றின்மையும்பொருட்டிண்மையுந்தேர்ந்தே.

(இ-ள்.) சிலர் சொல் ஆழ்ச்சியை மகிழ்ந்தான் - சிலர் கூறிய செய்யுள்களி லுள்ள சொல்லாழ்ச்சியை நோக்கி மகிழ்கூர்ந்தார், சிலர் பொருளை மகிழ்ந்தான் -

Koviloor Digital Library

சிலர் கூறிய செய்யுள்களிலுள்ள பொருளாழ்ச்சியை நோக்கி மகிழ்கூர்ந்தனர், சிலர் சொல் வைப்பினை இகழ்ந்தான் - சிலர் தத்தஞ் செய்யுளிற் செறித்த சொற்களைநோக்கி யிகழ்ந்தார், சிலர் பொருளை இகழ்ந்தான் - சிலர் தத்தஞ் செய்யுளிலமைத்த பொருளை நோக்கி யிகழ்ந்தனர், சிலர் சொல் இன்பம் உம் பொருள் இன்பம் உம் புகழ்ந்தான் - சிலர் கூறிய செய்யுளிலுள்ள சொற்சுவையையும் பொருட்சுவையையும் நோக்கிப் புகழ்ந்தனர், சிலர் சொல் திண்மை உம் பொருள் திண்மை உம் ஒருங்கே தேர்ந்து திகழ்ந்தான் - சிலர் கூறிய செய்யுளிலுள்ள சொல்லாற்றலையும் பொருளாற்றலையும் ஒருசேரத் தெளிந்து முகமலர்ந்தார்.

அவையவத்தக்கும் அவையவிக்கும் ஒற்றுமையுண்மையால் அவையவத்தின் றொழிற்குறிப்பினை யவையவிமேலேற்றி மகிழ்ந்தான், இகழ்ந்தான், புகழ்ந்தான், திகழ்ந்தான் என்றார். (௧௦)

இத்தன்மையனாகிக்கலைவல்லோர்தமிழெல்லாஞ்
சித்தங்கொடுதெருட்டுஞ்சிறுவணிகன்றெருள்கீரன்
முத்தண்டமிழ்கபிலன்றமிழ்பரணன்றமிழ்மூன்று
மத்தன்மையனறியுந்தொறுமறியுந்தொறுமெல்லாம்.

(இ-ள்.) இதன் மையன் ஆகி கலைவல்லோர் தமிழ் எல்லாம் சித்தம் கொடு தெருட்டும் சிறுவணிகன் - இப்பெற்றியராகி நூலில்வல்ல புலவர்கள் கூறிய செய்யுள்களையெல்லாம் தமது இதயத்தால் குணக்குற்றங்களைப் புலப்படுத்திய வைசியப்பிள்ளையார், தெருள் கீரன் முத்தண்டமிழ் கபிலன் தமிழ் பரணன் தமிழ் மூன்று உம் - நூலாராய்ச்சியிற் றேர்ந்த நக்கீரர் இயற்றிய இயலிசை நாடகம் வாய்ந்த செய்யுளும் கபிலர் செய்த செய்யுளும் பரணர் செய்த செய்யுளும் ஆகிய மூன்றையும், அதன்மையன் அறியுந்தொறும் அறியுந்தொறும் எல்லாம் - இதயத்தாற் புலப்படுத்தும் அப்பிள்ளையார் உணருந்தோறுமெல்லாம். (௧௧)

நுழைந்தான்பொருடொறுஞ்சொற்றொறுநுண்டீஞ்சுவையுண்டே
தழைந்தானுடல்புலனைந்தினுந்தனித்தான்சிரம்பனித்தான்
குழைந்தான்விழிவழிவேலையுட்குளித்தான்றனையளித்தான்
விழைந்தான்புரிதவப்பேற்றினைவிளைத்தான்களிதிளைத்தான்.

(இ-ள்.) பொருள் தொறும் நுழைந்தான் - பொருட்சுவைதோறு நுழைந்து, நுண் சொல் தொறும் தீஞ்சுவை உண்டே உடல் தழைந்தான் - நுண்ணிய சொற்கடோறு மமைந்த இனிய சுவையையுண்டு உடல் பூரித்து, புலன் ஐந்தினும் தனித்தான் சிரம்பனித்தான் குழைந்தான் - ஐம்புலன்களினும் செல்லாது ஒருபுலன் வழிபட்டுச் சிரக்கம்பஞ் செய்து மனங் குழைந்து, தன்னை அளித்தான் விழைந்தான் புரி தவம் பேற்றினை விளைத்தான் - தன்னைப்பெற்ற வணிகன் விரும்பிச் செய்த தவப்பயனைப் பலர்க்கும் புலப்படுத்திய அப்பிள்ளையார், விழி வழி வேலை உள் குளித்தான் களி திளைத்தான் - இன்பத்தினின்று கண்களின் வழியாய்ப் பொங்கி வழிந்த ஆநந்தபாஷ்பத்திற் குளித்துக் களிகூர்ந்தார்.

சத்த பரிச ரூப ரச கந்தம் என்னும் ஐம்புலன்களுள் சத்தத்தின் வழியே நின்றமையால் புலனைந்தினுந் தனித்தான் எனவும், பொருட்சுவை காமம், கருணை, நகை, வீரம், உருத்திரம், அச்சம், குறிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைப்படுதலால் பொருடொறும் எனவும், சொற்சுவை, குணம், அலங்காரம் என இருவகைப்படுதலால் சொற்றொறும் எனவுங் கூறினார். (௧௨)

Koviloor Digital Library

பல்காசோடுகடலிற்படுபவளஞ்சுடர்தரள
மெல்லாநிறுத்தளப்பானெனவியல்வாணிககுமரன்
சொல்லாழமும்பொருளாழமுந்துலைநாவெனத்தூக்க
நல்லாறறிபுலவோர்களுநட்டாரிகல்விட்டார்.

(இ-ள்.) பல் காசு ஒடு கடல் இல் படு பவளம் சுடர் தரளம் எல்லாம் நிறுத்து அளப்பான் என்ன - பலவகைப்பட்ட இரத்தினங்களோடு கடலிற் றோன்றிய பவளமும் விளக்கு முத்தங்களுமாகிய இவைகளை யெல்லாம் துலாக்கோலால் நிறுத்து அளவறுப்பவர்போல், இயல் வாணிக குமரன் - புருட விலக்கணங்க ளமைந்த வணிகப்பிள்ளையார், சொல் ஆழம் உம் பொருள் ஆழம் உம் நா துலை என தூக்க - செய்யுள்களி லமைந்த சொல்லாழ்ச்சியையும் பொருளாழ்ச்சியையும் தமது நாவையே துலையாகக்கொண்டு அளவறுக்க, நல் ஆறு அறி புலவோர்கள் உம் நட்டார் இகல் விட்டார் - நல்ல நூனெறிகளை யுணர்ந்த புலவர்கள் யாவரும் தம்முள் நட்புக்கொண்டு பகைமை விட்டார்கள்.

பவளத்தையு முத்தையுங் கூறினமையால் பல்காசு என்றது ஏனைமணிகளை.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உலகினுட்பெருகியந்தவொண்டமிழ்மூன்றும்பாடற்
றிலகமாய்ச்சிறந்தவாய்ந்ததெய்வநாவலருந்தங்கள்
கலகமாநவையிற்றீர்ந்துகாசறுபனுவலாய்ந்து
புலமிகுகோட்டிசெய்துபொலிந்தனரிருந்தார்போலும்.

(இ-ள்.) அந்த ஒள் தமிழ் மூன்று உம் - நக்கீரர் கபிலபரணர் கூறிய அந்த ஒள்ளிய முத்தமிழும், உலகின் உள் பெருகி-உலகத்தில் பரவி, பாடல் திலகம் ஆய் சிறந்த-நூல்களுக்கிட்ட தனித்தனி திலகங்களைப்போலச் சிறந்து விளங்கின, ஆய்ந்த தெய்வநாவலரும் தங்கள் கலகம் ஆம் நவையில் தீர்ந்து - ஆராய்ந்த தெய்வப்புலவர்கள் நாற்பத்தெண்மரும் தம்முட் கலகமாகிய குற்றத்தினின்று நீங்கி, காசு அறு பனுவல் ஆய்ந்து புலம் மிகு கோட்டி செய்து பொலிந்தனர் இருந்தார்-குற்றமற்ற நூல்களையாராய்ந்து அறிவான்மிக்க வாதஞ் செய்து விளங்கி யிருந்தார்கள்.

கற்றுணர்ந்த சான்றோர் தம்முட் கலாமின்றி யிருத்தலே யவர்கள் தொழி லென்பார் கலகமா நவையிற் றீர்ந்து எனவும், அவர்கள் தம்முளொன்று கூறல் அறிவின்மிக்கதே என்பார் புலமிகுகோட்டி செய்து எனவும், அவ்வாறிருத்தல் தேவருலகின்பத்திலும் பெரிதென்பார் பொலிந்தன ரிருந்தார் எனவுங் கூறினர். ()

சங்கத்தார் கலகந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௨௬௪௦.

ஐம்பத்தாறாவது


இடைக்காடன் பிணக்குத் தீர்த்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

குடைக்காடன்பசிக்கன்னக்குழியருத்திவேட்கையறக்கொடுத்தகங்
கைச், சடைக்காடன்புலவரிகழணிவித்தமுறைமிதுமேற்றன்னைப்பாடுங்,

Koviloor Digital Library

இடைக்காடன்பிணக்குத்தீர்த்ததிருவிளையாடல்



Koviloor Digital Library

தொடைக்காடன்பகன்றிகழ்ந்ததென்னவனை முனிந்துதன்னைத் தொழுது போன, விடைக்காடனுடன்போய்ப்பின் பெழுந்தருளிப்பிணக்கறுத்தவி யல்புசொல்வாம்.

(இ-ள்.) குடைக்கு ஆள் தன் பசிக்கு அன்னக்குழி அருத்தி வேட்கை அற கொடுத்த கங்கை சடைக்காடன் - குடையை யேந்தும் ஆளாகிய குண்டோதரனு டைய தீப்பசிக்கு அன்னக்குழி தந்தூட்டியப் பசிதணிவித்து நீர்வேட்கை யொழி யத் தந்தருளிய கங்காநதியை யணிந்த சடாடவியையுடைய சோமசுந்தரக்கடவுள், புலவர் இகல் தணிவித்த முறை இது - சங்கப்புலவர்கள் தம்முட்கொண்ட பகை மையையொழித்த திருவிளையாடலிது, மேல்-அதன்மேல், தன்னை பாடும் தொடை க்கு ஆடு அன்பு அகன்று இகழ்ந்த தென்னவனை முனிந்து - தன்மேற்பாடிய செய்யு ளை நன்குமதிக்கும் அன்பினை யொழிந்து இகழ்ந்த குலேசபாண்டியனை வெறுத்து, தன்னை தொழுதுபோன இடைக்காடன் உடன் போய் பின்பு எழுந்தருளி பிணக்கு அறுத்த இயல்பு சொல்வாம் - தன்னைத் தொழுதுசென்ற இடைக்காடனுடன் செ ன்று பின்பு பாண்டியன் வேண்டுகோளால் இந்திரவிமானத்தில் வந்தெழுந்தருளிப் பிணக்கினை யொழித்தருளிய திருவிளையாடலை யினிக்கூறுவாம்.

குடைக்கு தொடைக்கு இரண்டனுருபு நிற்குமிடத்து நான்கனுருபுநிற்றல் உருபுமயக்கம். தொடையென்னுஞ் செய்யுளின் ஒருறுப்புச்செய்யுள்மேல் நிற்ற லால் சினையாகுபெயர். (க)

இந்திரன்றன்பழிதீரத்தியரசளித்துப்பின்புகதியின்பமீந்த, சுந்தர ன்பொன்னடிக்கன்பு தொடுத்துநறுஞ்சண்பகத்தார்தொடுத்துச்சாத்தி, வந்தனைசெய்திருத்தொண்டின்வழிக்கேற்பச்சண்பகப்பூமாறவேந்த, னந் தாரசூடாமணியாஞ்சிவபுரத்துணிறைசெல்வ மடைந்தானிப்பால்.

(இ-ள்.) இந்திரன் தன் பழி தீரத்தி - இந்திரனுடைய பழியை யோட்டி, அரசு அளித்து - அவனரசுரிமையுந் தந்து, பின்பு கதி இன்பம் ஈந்த சுந்தரன் பொ ன் அடிக்கு - பின்னர் மோட்ச இன்பத்தையுந் தந்தருளிய சோமசுந்தரக்கடவுளு டைய பொன்போலும் அரிய திருவடிக்கீழ், அன்பு தொடுத்து - அன்புகூர்ந்து, நறு ஞ்சண்பகத்தார் தொடுத்து சாத்தி வந்தனை செய் திருத்தொண்டின் வழிக்கு ஏற்ப- நறுமணங்கமழுஞ் சண்பகமலரால் மாலைதொடுத்துச்சாத்தி வந்தித் தொழுகுந் திருத்தொண்டின் வழிபாட்டிற்குப்பொருந்த, சண்பகப்பூமாற வேந்தன் - சண்பக பாண்டியன் என்னும் அரசன், அந்தர சூடாமணி ஆம் சிவபுரத்துள் - புவலோக முதலிய விண்ணுலகேழிற்குஞ் சிகாமணியாய் விளங்கும் சிவபுரத்தினுள், நிறை செல்வம் அடைந்தான் - என்றும் அழியாத பெருஞ்செல்வமாகிய சிவபதத்தை ய டைந்தனன், இப்பால் - இப்புறம்.

சண்பகமாலை தொடுத்துச்சாத்திய திருப்பணிக்குப் பொருந்த என்றமையா ல் பதமுத்தியென்பது தோன்றச் சிவபுரத்துள் நிறைசெல்வம் அடைந்தான் எனவு ம், புவலோகம், சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோ கம், நவலோகம் என்னும் ஏழுலகங்களுக்கு மேலுள்ளதென்பதுதோன்ற அந்தர சூடாமணியாஞ் சிவபுரம் எனவுங் கூறினர். "நிலத்திற்றிகழ்ந்தநறுமலருநீருற்பவி த்தபோதெவையும்- அலத்தினமுந்தாவன்பினெடும்போதானந்தன்கழற்கணிந்தோர்- மலத்தினாதிமுத்தன்மலவயிரியுறையுஞ்சிவலோக - தலத்திற்புகுந்துநலத்தகைய

Koviloor Digital Library

தங்கராகிதிலவுமால் ” எனவருஞ் சிவபுண்ணியத் தெளிவாலும், இந்நூலில் “புலவோரகங்கடேர்துபோய்” எனவருஞ் செய்யுளில் காட்டிய வுதாரணங்களாலும் உணர்க. (௨)

ஆற்றன்மிகுபிரதாபசூரியன்வங்கிசத்துவசனளவில்சீர்த்தி
சாற்றரியவிரிபுமருத்தனன்சோழவங்கிசாந்தகன்முன்வென்றி
மாற்றரியபுகழ்ச்சேரவங்கிசாந்தகன்பாண்டிவங்கிசேசன்
றோற்றமுறுபரித்தேர்வங்கிசசிரோமணிபாண்டீச்சுரன்முன்மன்னோ.

(இ-ள்.) ஆற்றல்மிகு பிரதாப சூரியன்-வலிமைமிக்கபிரதாபசூரியனென்னும் பாண்டியனும், வங்கிசத்துவசன்-வங்கிசத்துவசபாண்டியனும், அளவு இல் சீர்த்தி சாற்று அரிய இரிபு மருத்தனன்-எல்லையில்லாத கீர்த்திவாய்ந்த சொல்லுதற்கரிய இரிபுமருத்தனபாண்டியனும்,சோழவங்கி சாந்தகன்-சோழவங்கி சாந்தகபாண்டியனும், மாற்று அரிய வென்றி புகழ் சேரவங்கி சாந்தகன் - தடுத்தற்கரிய வெற்றியும் புகழும் வாய்ந்த சேரவங்கி சாந்தகபாண்டியனும், பாண்டி வங்கி சேசன் - பாண்டி வங்கி சேசபாண்டியனும், தோற்றம் உறு பரி தேர் வங்கிச சிரோமணி பாண்டீச்சுரன் - காட்சிக்கினிய குதிரைபூண்ட ரதவங்கிச சிரோமணி பாண்டியனும் பாண்டீச்சுர பாண்டியனும்.

இரிபுமருத்தனன் பகைவரை மர்த்தனஞ் செய்பவன். சோழவங்கி சாந்தகன் சோழவம்சத்தரசர்களுக்கு இயமன்போன்றவன். சேரவங்கிசாந்தகன் சேரவம்சத்தரசர்களுக்கு இயமன்போன்றவன். (௩)

துணிவுடையகுலத்துவசன்வங்கிசபூடணமாறன்சோமசூடா
மணிகுலசூடாமணியேயிராசசூடாமணியேமாற்றார்போற்றிப்
பணியவரும்பூபசூடாமணியேகுலேசபாண்டியனேயென்னக்
கணிதமுறுபதினைவர்வழிவழிவந்துதித்துநிலங்காவல்பூண்டோர்.

(இ-ள்.) துணிவு உடைய குலத்துவசன் வங்கிச பூடணமாறன் - பகைவர்க்குப் புறங்கொடாத குலத்துவசபாண்டியனும் வங்கிச பூடணபாண்டியனும், சோம சூடாமணி குல சூடாமணி இராச சூடாமணி - சோமசூடாமணி பாண்டியனும் குலசூடாமணிபாண்டியனும் இராசசூடாமணி பாண்டியனும், மாற்றார் போற்றி பணியவரும் பூபசூடாமணி குலேசபாண்டியன் என்ன கணிதம் உறு பதினைவர் - பகைவர்கள் (போர்க்காற்றாது) துதித்து வணங்க நிற்கும் பூபசூடாமணி பாண்டியனும் குலேசபாண்டியனுமென்று எண்ணப்படும் பதினைந்து பாண்டியர்கள், வழிவழி வந்து உதித்து நிலம் காவல் பூண்டோர்-(அச்சண்பகபாண்டியன்) வழியேவந்து தோன்றி நிலவுலகைக் காக்குந் தொழில்பூண்டு நின்றார்கள்.

சண்பகபாண்டியன்பின் பிரதாபசூரியபாண்டியனும் அவன்பின் வங்கிசத்துவசபாண்டியனும் என்பார் வழிவழிவந்த எனவும்,இவர்கள் காலம் பாத்மகற்பத்தில் ருத்ரசாவர்ணிமன் வந்தரம் என்பார் மிகைபடவுதித்து எனவுங் கூறினார். (௪)

அத்தகையபாண்டியருட்குலேசபாண்டியனென்னுமரசன்றேன்மேல்
வைத்தவனிதலம்புரப்போனிலக்கணமுமிலக்கியமும்வரம்புகண்டோ
னெத்தகையபெருநூலுமெல்லைகண்டோனதனாலிவனுக்கேற
முத்தமிழோர்பயில்சங்கமிடங்கொடுத்ததனையமணிமுழவுத்தோளான்.

Koviloor Digital Library

(இ-ள்.) அதனையே பாண்டியர் உள் குலேச பாண்டியன் என்னும் அரசன் - அத்தன்மையையுடைய பதினைந்து பாண்டியர்களுள் குலேசபாண்டியனென்னும் பெயரையுடைய அரசன், தோள் மேல் அவனி தலம் வைத்து புரப்போன் - தனது புயாசலத்தின்மேல் பூபாரஞ் சுமந்து காப்பவனும்; இலக்கணம் உம் இலக்கியம் உம் வரம்பு கண்டோன்-இலக்கணமுமிலக்கியமுமாகிய இவைகளின் எல்லையையள வறுத்துணர்ந்தவனும், எதகைய பெரு நூலும் எல்லை கண்டோனும் ஆதலால், எவ்வகைப்பட்ட பொருநூலையும் எல்லைகண்டவனும் ஆதலால், இவனுக்கு எற - இந்தப் பாண்டியனுக்குச் சங்கப்புலவர்களோ டொருசேர எதிரிருக்க, முத்தமிழோர் பயில் சங்கம் இடம் கொடுத்தது - இயலிசை நாடகமென்னு முத்தமிழும் பயின்ற புலவர்கள் வசிக்கும் சங்கப்பலகை யிடங்கொடுத்தது, அணியமணி முழவு தோளான்-அந்த அழகிய மத்தளம்போலத் திரண்ட தோளையுடைய குலேசபாண்டியன்.

எத்தகைய பெருநூலும் என்றது அறுபத்துநான்கு கலைகளை. (௫)

கழிந்தபெருங்கேள்வியினனெனக்கேட்டுமுழுதுணர்ந்த கபிலன்றன்
பாற், பொழிந்தபெருங்காதன்மிகுகேண்மையினனிடைக்காட்டுப்புலவன்
றென்சொன், மொழிந்தரசன்றனைக்காண்டுமெனத்தொடுத்தபனுவலோடு
மூரித்தீந்தேன், வழிந்தொழுகுதாரானைக்கண்டுதொடுத்துரைப்பனுவல்
வாசித்தானால்.

(இ-ள்.) முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெருங்காதல் மிகு கேண்மையினன் இடைக்காட்டுப்புலவன் - நூல்முற்று முணர்ந்த கபிலரிடத்து நிரம்பிய பெரிய விருப்பமிக்க நட்பினராகிய இடைக்காட்டுப்புலவர், கழிந்த பெருங் கேள்வியினன் என்னகேட்டு - (அந்தக் குலேசபாண்டியன்) மிக்க பெரியநூற்கேள்வியில் வல்லோனென்ன (வல்லோர்) சொல்லக் கேள்வியுற்று, தென் சொல் மொழிந்து அரசன் தன்னை காண்டும் என்ன தொடுத்த பனுவலோடு - ஒரு பிரபந்தஞ் செய்து அந்த அரசனைக் காண்போமென்று புனைந்த பாமாலையோடு, மூரி தீந் தேன் வழிந்து ஒழுகு தாரானைகண்டு தொடுத்த உரைப்பனுவல் வாசித்தான் - மிகவும் இனிய தேன்வழிந்து சிந்தும் வேப்பமலர் மாலையையணிந்த பாண்டியனைப் பார்த்துத் தாம் தொடுத்த உரைப்பாமாலையைச் சொல்லிப் பிரசங்கித்தனர்.

உரைப்பா தனதுள்ளக் கிடையை வெளிப்படுக்கும் உரைபோலத் தொடுக்கும்பா. (௬)

வழுக்காதசொற்சுவையும்பொருட்சுவையும்பகிர்ந்தருந்தவல்லோ
னுள்ளத், தழுக்காற்றுற்சிரந்துளக்கானகமகிழ்ச்சிசிறிதுமுகத்தலர்ந்துகா
ட்டா, னெழுக்காயுந்திணிதோளானென்றுமுரையான்வாளாவிருந்தானு
ய்ந்த,குழுக்காதனண்புடையான்றனைமானம்புறந்தள்ளக்கோயில்புக்கான்

(இ-ள்.) வழுக்காத சொல் சுவையும் பொருள் சுவையும் பகிர்ந்து அருந்த வல்லோன்-தன்னியலினின்றும் வழுவாத சொல்லின் சுவையையும்பொருளின் சுவையையும் பகுத்து உண்ணவல்லோனாகிய குலேசபாண்டியன், உள்ளத்து அழுக்காறு ஆல் சிரம் துளக்கான்-மனத்திலெழுந்த பொறாமையால் சற்றும் சிரக்கம்பஞ் செய்யாதும், அகம் மகிழ்ச்சி சிறிதும் முகத்து அலர்ந்து காட்டான்-மனத்துட் பொங்கியெழுந்த மகிழ்ச்சியைச் சற்றுமுகத்திற் புலப்படுத்தாமலும், ஒன்றும் உரையான்-நன்றுதீதென்றுங் கூறாமலும், எழு காயும் திணி தோளான் வாளா இருந்தா.

Koviloor Digital Library

ன் - தானைவென்ற திண்ணிய தோளையுடைய அப்பாண்டியன் வாளா இருந்தனன், ஆய்ந்த குழு காதல் அன்பு உடையான் - நூல்களை யாராய்ந்த புலவரால் விரும்பப் பட்ட நட்பினையுடைய இடைக்காட்டுப்புலவர், தன்னை மானம் புறம்பு தள்ள - தம் ஐமமான மான மிடர் பிடித்துந்த, கோயில் புக்கான் - திருக்கோயிலுட் சென்றார்.

சொற்சுவை பொருட்சுவை இன்னவெனல் முன்னர்க்காண்க. அழுக்காற் றால் விளையுங் கேடுகள் இன்ன என்பார் அவை தோன்றச் சிரந்துளக்கான் மகிழ்ச் சிமுகத்தலர்ந்து காட்டான் ஒன்று முரையான் வாளா விருந்தான் என்றார். "அழுக் காறென வொருபாவி" என்றார் நாயனார். (எ)

சந்நிதியில்விழ்ந்தெழுந்துதமிழறியும்பெருமானேதன்னைச்சேர்ந்தார்
நன்னிதியேதிருவாலவாயுடையநாயகனேநகுதார்வேம்பன்
பொன்னிதிபோலளவிறந்தகல்வியுமிக்குளனென்றுபுகலக்கேட்டுச்
சொன்னிறையுங்கவிதொடுத்தேனவமதித்தான்சிறிதுமுடிதுளக்கானாகி.

(இ-ள்.) சந்நிதியில் விழ்ந்து எழுந்து - சோமசுந்தரக்கடவுள் திருமுன் விழு ந்தெழுந்து, தமிழ் அறியும் பெருமானே - தமிழருமை யறியும் எமது இறைவரே, தன்னை சேர்ந்தோர் நல் நிதியே - தம்மை யடைந்த வடியார் வைப்புப்பொருளே, திருவாலவாய் உடைய நாயகனே - திருவாலவாயி லெழுந்தருளிய தலைவரே, நகு தார் வேம்பன்-விளக்கும் வேப்ப மலர்மாலையை யணிந்த பாண்டியன், பொன் நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்குளன் என்று புகல கேட்டு-ஈட்டும் செல்வப்பொ ருட்குவைபோல எல்லையில்லாத கல்விப்பொருளிலு மிக்குளானென்று சொல்லக்கே ட்டு, சொல் நிறையும் கவி தொடுத்தேன் - சொற்சுவை நிறைந்த பாடல் அவன் மேற் றொடுத்தேன், சிறிதும் முடி துளக்கான் ஆகி அவமதித்தான் - (கேட்டு) சிறி துஞ் சிரக்கம்பஞ் செய்யாது நன்குமதியா திருந்தனன்.

அவமதித்தது முறையோ வென்பார் தமிழறியும் பெருமானே யெனவும், என்னை யவமதித்தது தேவரீரை யவமதித்தது போலன்றோ வென்பார் சேர்ந்தோர் நன்னிதியே யெனவுங் கூறினார். (அ)

பரிவாயின்மொழிதொடுத்துவருணித்தோர்க்ககமகிழ்ந்தோர்பயனு
நல்கா, விரிவாயதடங்கடலேநெடுங்கழியேயடுங்கான விலங்கேபுள்ளே,
பொரிவாயபாராமரநிரையேவான்றொடுகுடுமிப்பொருப்பேவெம்பு,மெ
ரிவாயகொடுஞ்சுரமேயெனவிவற்றோரஃறிணையொத்திருந்தானெந்தாய்.

(இ-ள்.) எந்தாய் - என்தந்தையே, பரிவு ஆய் இன்மொழி தொடுத்து வரு ணித்தோர்க்கு - அன்பாயின்சொல்லாற் செய்யுள்தொடுத்துத் தம்மைவருணித்த புலவர்களுக்கு, அகம் மகிழ்ந்து ஓர்பயனும் நல்காத விரிவு ஆய தடங்கடல் ஏ-மன மகிழ்ந்து ஒருபயனுங்கொடாதகடலும், நெடுங்கழி ஏ அடும் கானம் விலங்கு ஏ புள் ஏ - நெடியகழியும் கொல்லுங்காட்டில் வசிக்கு மிருகமும் பறவையும், பொரி வாய பாரை மரம் நிரை ஏ - பொருக்குப்பொருந்திய பருத்தவரையுடைய மரத்தி ன்வரிசைகளும், வான் தொடு குடுமி பொருப்பு ஏ - விண்ணுலகையளாவும் சிகரத் தையுடைய மலையும், வெம்பும் எரிவாய கொடுஞ் சுரம் ஏ என்ன இவற்று - சுடா நிற்கும் நெருப்புவாய்ந்த கொடியபாலையும் என்றுசொல்லப்பட்ட இவற்றுள், ஓர் அஃறிணை ஒத்து இருந்தான் - ஒரு அஃறிணைப்பொருளை யொத்திருந்தனன்.

Koviloor Digital Library

ஏகாரங்கள் எண்ணுப்பொருளில்வந்தன. கடல் முதலிய நிலையியற்பொருளும் விலங்குமுதலிய இயங்கியற்பொருளும் தம்மைப்பாடும் புலவர்களுக்கு ஈக்காற்றுணையு முதவாவாயினும் முகமலர்ச்சிகாட்டலும் இன்சொற் கூறுதலுமாகிய செயல்கள் தமக்கு இயல்பாகவே இன்மைபோல, அச்செயல்களையுடைய இவனவற்றை யிழந்திருந்தான் என்பார் அஃறிணையொத்திருந்தான் என்றார். (௯)

என்னையிகழ்ந்தனனோசொல்வடிவாய்நின்னிடம்பிரியா விமையப்
பாவை, தன்னையுஞ்சொற்பொருளானவுன்னையுமேயிகழ்ந்தனனென்றன
க்கியாதென்னு, முன்னைமொழிந்திடைக்காடன்றணியாதமுனிவீர்ப்பமுந்
திச்சென்றா, னன்னவுரைதிருச்செவியி னூறுபாடெனவுறைப்பவருளின்
மூர்த்தி.

(இ-ள்.) என்னையோ இகழ்ந்தனன் - என்னையா இகழ்ந்தனன், சொல்வடிவு ஆய் நின் இடம்பிரியாத இமையம் பாவை தன்னை உம்-சத்தவடிவமாய் நின்னிடப்பாகத்தினின்றும் பிரியாத பார்வதியாரையும், சொல் பொருள் ஆன உன்னையும் ஏ இகழ்ந்தனன்-அச்சத்தத்தின் பொருளாயுள்ள தேவரீரையுமே யிகழ்ந்தான், என்தனக்கு யாது என்னு - எனக்கு அவமதிப்பு யாதுளதென்று, முன்னைமொழிந்து-திருமுன்னின்றுகூறி, இடைக்காடன் தணியாத முனிவு ஈர்ப்ப முந்தி சென்றான்-இடைக்காட்டுப்புலவர் பொறுத்தற்கரிய சினமுன்னின்றிழுக்க முந்திச்சென்றனர், அன்ன உரை திரு செவியின் ஊறுபாடு என்ன உறைப்ப - அவ்வாசகம் திருச்செவியில் நாராசம்போலவெதுப்ப, அருளின் மூர்த்தி - கருணாமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுள்.

சொல்லும்பொருளும் ஒற்றித்து நிற்றல்போல ஒற்றித்துநின்றாய் என்பார் நின்னிடம்பிரியா விமையப்பாவை என்றார். (௧௦)

போனவிடைக்காடனுக்குங்கபிலனுக்குமகத்துவகைபொலியுமாற்றா
ன், ஞானமயமாகியதன்னிலிங்கவுருமறைத்துமையாநங்கையோடும், வா
னவர்தம்பிரானெழுந்துபுறம்போய்த்தன்கோயிலினேர் வடபால்வையை,
யானதித்தென்பாலோராலயங்கண்டங்கணினிதமர்ந்தான்மன்னோ.

(இ-ள்.) போன இடைக்காடனுக்கும் கபிலனுக்கும் அகத்து உவகைபொலியும் ஆறு ஆல் - தம்மைவணங்கிச்சென்ற இடைக்காட்டுப்புலவர்க்கும் கபிலர்க்கும் மனத்தில் களிப்புமிக்கு விளங்கும்வகையால், ஞானமயம் ஆகிய தன் இலிங்கவுரு மறைத்து-ஞானமயமாயுள்ள தமதருட்குறித்திருவுருவைமறைத்து, வானவர்தம்பிரான் உமை ஆம் நங்கையோடும் எழுந்து - தேவர்பெருமானாராகிய சோமசுந்தரக்கடவுள் உமையாராகிய அங்கயற்கண்ணியாரோடு மெழுந்தருளி, புறம்போய் தன்கோயிலின் நேர்வடபால்-தமது திருக்கோயிலினின்றும் புறம்பேசென்று அத்திருக்கோயிற்குநேரே வடதிசையில், வையை ஆனதி தென்பால் ஓர் ஆலயம் கண்டு-வையையாகியநதியின் தென்சாராக ஓராலயம் தமதிச்சையாற்சமைப்பித்து, அங்கண் இனிது அமர்ந்தான் - அவ்விடத்து மகிழ்ச்சியோ டெழுந்தருளியிருந்தார்.

அடியார்க்கெளியனென்பதனை இதனால் விளக்கினார் என்பார் போனவிடைக்காட்டனுக்குங் கபிலனுக்கும் அகத்துவகை பொலியுமாற்றால் தன்னிலிங்கவுருமறைத்துமையாநங்கையோடும் புறம்போய் என்றார். (௧௧)

சங்கவான்றமிழ்த்தெய்வப்புலவோருமுடனெழுந்துசைலவேந்தன்
மங்கைநாயகன்போனவழிபோயங்கிருந்தாரவ்வழிநாள்வைகற்

கங்குல்வாய்ப்புலரவரும்வைகறையிற்பள்ளியுணர்காலத்தெய்தி
யங்கணாயகனடியார்சேவிப்பாரிலிங்கவுருவங்குக்காணார்.

(இ-ள்.) வான் தமிழ் சங்கம் தெய்வப்புலவோரும் உடனெழுந்து - பெரிய தமிழ்ச்சங்கத்திலுள்ள தெய்வப்புலவர்களும் விரைந்தெழுந்து, சைலவேந்தன் மங்கை நாயகன் போனவழிபோய் அங்கு இருந்தார்-இமயபர்வதராஜன் புத்திரியாராகிய உமாதேவியார் மணாளர்சென்றவழித் தாமுஞ்சென்று அத்திருக்கோயிலிலிருந்தார்கள், அ வழிநாள் வைகல் — அந்நாளின் மறுநாளின், கங்குல்வாய் புலரவரும் வைகறையில் - இராப்போது கழியவரும் விடியற்போதில், பள்ளி உணர்காலத்து எய்தி - திருப்பள்ளியெழுச்சிக்காலத்தில் அடைந்து, அங்கண் நாயகன் சேவிப்பார் அடியார் - அழகிய திரிநேத்திரங்களையுடைய சோமசுந்தரக்கடவுளைச்சேவிக்கும் அடியவர்கள், இலிங்கம் உரு அங்கு காணார் - அருட்குறியின் திருவுருவத்தை யங்குக்காணாதவராய்.

சேவிப்பார் என்றும் வினைமுற்றுப் பெயரெச்சத்தின்மேலும் காணார் என்று முற்று எச்சத்தின்மேலும் நின்றன. செய்யுளாதலால் அடியார் சேவிப்பார் என நின்றது. (௧௬)

என்னவதிசயமோவீதென்றயிர்த்தாரிரங்கினாரிதனையோடி
மன்னவனுக்கறிவிப்பான்வேண்டுமெனப்புறப்பட்டுவருவாராவி
யன்னவரைப்பிரிந்துறையுமணங்கனையாரெனவுமலரணங்குநீத்த [டார்.
பொன்னவிர்தாமரையெனவும்புலம்படைந்து பொலிவழிந்த புரமுங்கண்

(இ-ள்.) ஈது என்ன அதிசயம் என்று அயிர்த்தார் இரங்கினார் - இது என்ன ஆச்சரியம் என்று சந்தேகித்து வருந்திவாடி, இதனை ஓடி மன்னவனுக்கு அறிவிப்பான் வேண்டும் என புறப்பட்டு வருவார் - இச்செய்தியை விரைந்துபோய்ப் பாண்டியனுக்கு அறிவிக்கவேண்டுமென்று புறப்பட்டு வரும் அடியவர்கள், ஆவி அன்னவரைப்பிரிந்து உறையும் அணங்கு அனையார் என்னவும் - பிராணனையொத்த தமது தலைவரைப்பிரிந்து கவலைமிக்கூர வசிக்கும் பெண்களைப்போலவும், அலர் அணங்கு நீத்தபொன் அவிர் தாமரை என்னவும் - இலக்குமி துறந்த பொன்போலவிளங்குந் தாமரையைப்போலவும், புலம்பு அடைந்து பொலிவு அழிந்த புரமும்கண்டார்- வறட்கூர்ந்து பொலிவினையிழந்த மதுரைத்திருநகரையுங்கண்டார்கள்.

அணங்கு தெய்வப்பெண்பொதுப்பெயர். அலர் அணங்கு இடத்தால் பொதுமையொழிந்து திரு என்பதன் மேல்நின்றது. அணங்கனையார் தெய்வப்பெண்களையொத்தவர் என்பது பொருள். என்றுங்கண்டறியாத இஃதோர்பெருவியப்பு என்பார் என்னவதிசயமோவீது என்றயிர்த்தார் எனவும், மதுரைத்திருநகரில் அத்தாணியிலிருந்து அரசுசெலுத்திய பெருமானையும் பெருமாட்டியையும் இழந்துநிற்றலால் கண்ணிழந்தது என்பார் பொலிவழிந்தபுரம் எனவுங்கூறினார். (௧௭)

அரசனிடைப்புகுந்துள்ளநடுநடுங்கிநாவுணங்கியரசேயாமொன்
றுரைசெயவஞ்சுதுமுங்கணாயகனைத்திருப்பள்ளியுணர்ச்சிநோக்கி
மரைமலர்ச்சேவடிபணியப்புகுந்தனமின்றுங்கவன்றன்வடிவங்காணேம்
புரமுநனிபுலம்படைந்ததென்றழல்வேலெனச்செவியிற்புகுத்தலோடும்.

(இ-ள்.) அரசன் இடை புகுந்து - பாண்டியனிடத்துச்சென்று, உள்ளம் நடுநடுங்கி நா உணங்கி - மனநடுக்குற்று நாப்புலர்ந்து, அரசே - எமது பெருமானே,

Koviloor Digital Library

யாம் ஒன்று உரைசெய்ய அஞ்சுதும் - யாங்களொன்றுகூற அஞ்சுகின்றோம், உங்கள் நாயகனை - உங்கள்பெருமானுரை, திருப்பள்ளி உணர்ச்சிநோக்கி மரை மலர்சே அடிபணிய புகுந்தனம் - திருப்பள்ளியெழுச்சியைநோக்கித் தாமரைமலர்போன்ற திருவடியை வணங்கச்சென்றோம், இன்று ஆங்கு அவன்தன் வடிவம் காணேம் - இப்பொழுது அத்திருக்கோயிலி லப்பெருமானுரது திருவருட்குறியையுந் தரிசித்திலோம், புரமும் கனிபுலம்பு அடைந்தது என்று - (அதனுல்) மதுரைத்திருநகரமும் மிகவும் வறங்கூர்ந்தது என்று, அழல் வேல் என்ன - நெருப்பிற்காய்ச்சிய வேலைநுழைத்தல்போல, செவியில் புகுத்தலோடும் - பாண்டியன்காதிற்செலுத்த,

உங்கள் குலதெய்வம் என்பார் உங்கள் நாயகன் எனவும், சொல்லற்கரிய செய்தி என்பார் உரைசெய அஞ்சுதும் எனவும், என்றுங்கேட்டறியாத கொடுஞ்சொல் என்பார் அழல்வேலெனச் செவியிற்புகுத்தலோடும் எனவுங்கூறினுர். (கச)

வழுதியரியணையிலிருந்தடி யிறவீழ்பழுமரம்போன் மண்மேல்யாக்கை, பழுதுறவீழ்ந்துயிரொடுங்கவறிவொடுங்கிமட்பாவைபடிந்தாங்கொல்லைப், பொழுதுகிடந்தறிவுசிறிதிபங்கவெழுந்தஞ்சலிக்கைப்போதுகூப்பி, யழுதிருகண்ணீர்வெள்ளத் தாழ்ந்தடியேனென்பிழைத்தேனண்ணலண்ணல்.

(இ-ள்.) வழுதி - (கேட்ட) குலேசபாண்டியன், அரி அணையின் இருந்து அடி இற வீழ் பழுமரம்போல்-சிம்மாதனத்தினின்றும் வேரறவீழ்ந்த ஆலமரம்போல, மண்மேல் யாக்கை பழுது உற விழ்ந்து உயிர் ஒடுங்க அறிவு ஒடுங்கி - நிலவுலகின்மேல் தனதுசரீரம் வடுப்படவிழ்ந்து பிராணனெடுங்க அறிவழிந்து, மண் பாவை படிந்தால் ஆங்கு ஒல்லைபொழுதுகிடந்து - நிலவுலகின்மேல் பாவையொன்று படிந்துகிடந்தாற்போலச் சிறிதுபொழுது இயக்கமின்றிச் சற்றுக்கிடந்து, அறிவு சிறிது இயங்க எழுந்து - உணர்ச்சி சிறிது எழ எழுந்து, அஞ்சலிகைப்போது கூப்பி அழுது - அஞ்சலியாகக் கைத்தாமரையைத் தலைமேற்குவித்து அழுது, இருகண் நீர் வெள்ளத்து ஆழ்ந்து - இரண்டுகண்களும் பெருக்கும் கண்ணீர்ப்பெருக்கி லழுந்தி, அண்ணல் அண்ணல் அடியேன் என்பிழைத்தேன்- எனதுபெருமானே பெருமானே யடியேன் திருவடிக்கு யாது அபராதஞ்செய்தேன்.

இருந்து நீக்கப்பொருளில்வந்த ஐந்தனுருபு. (கரு)

கொலைவினையோரவுணர்புரநொடிவரையிற்பொடியாகக்குனித்தமேருச்
சிலையினையோபழையசிவபுரத்தினையோவருவிமணிதெறிக்கும்வெள்ளி
மலையினையோதம்மைமறந்துனைநினைப்பார்மனத்தினையோவாழ்த்தும்வேத
தலையினையோவெங்குற்றுயெங்குற்றுயென்றென்றுதளருமெல்லை. [த்

(இ-ள்.) கொலைவினை ஓர் அவுணர்புரம் - கொலைத்தொழிலிற்றேர்ந்த அசுரர்கள் திரிபுரம், நொடிவரையில் பொடி ஆககுனித்த மேருசிலையினையோ - நொடிப்பொழுதில் நீறுபடவளைத்த மேருமலையிடத் திருக்கின்றேயோ, பழையசிவபுரத்தினையோ - எல்லாப்பதங்கட்கு மூத்தசிவபுரத்திருக்கின்றுயோ, அருவிமணி தெறிக்கும் வெள்ளிமலையினையோ - அருவிகள் இரத்தினங்களை அலைகளாலெடுத்தெறியும் வெள்ளிமலையிலிருக்கின்றுயோ, தம்மை மறந்து உன்னை நினைப்பார் மனத்தினையோ - தம்மைமறந் துன்னைச்சிந்திக்கும் அடியவருள்ளக் கோயிலிலமர்ந்தனையோ, வாழ்த்தும் வேதம் தலையினையோ - உன்னைத்துதிக்கும் வேதங்களின் சிரத்திலிருக்

கின்றாயோ, எங்கு உற்றாய் எங்கு உற்றாய் என்று என்று - இவ்விடங்களில் எவ்வி டத்துள்ளாய் எவ்விடத்துள்ளாயென்றுகூறி, நாளும் எல்லை - வருந்துங்காலையில்.

மகமேருவின் பலகொடுமுடிகளினடுவில் மூன்று கொடுமுடிகளுள அவற் றன் பிரமனுந் திருமாலும் உருத்திரமூர்த்தியும் தத்தந் திருவிளையாட்டால் எழுந்த ருளியிருத்தலால் மேருச்சிலையிலையோவெனவும், திருவருள்மேலிட்டால் தற்போ தஞ்செய்யாது நிற்றலால் தம்மைமறந்துநினைநினைப்பார் மனத்திலையோவெனவுங்கூறி னர் "அந்தவரையெட்டிறக்கு நடுவாகவணியுறவே - முந்திமுளைத்துளசிகர மூன்று ளவேழுவர்க்கும். நடவரையினடுவுச்சிதலின்முளைத்தசிகரத்தின் - வடிவுடையம னோவதிதான் மலரயன்வாழ்புரியதற்குக் - குடதிசையிற்கொடுமுடியில் வைகுண்ட க்கோவிந்தன் - இடம்வடபாற்குணதிசையிலெசோவதிசங்கரர்நடமே" எனவருஞ் செவ்வருமோத்தரத்திலும் "அடியாருள்ளத்தன்புமீதூரக் - குடியாக்கொண்டகொ ள்கையும்" எனவருங் கீர்த்தித்திருவகவலினுங்காண்க. (கசு)

சிலர்வந்தமன்னுவோரதிசயங்கண்டனம்வையைத்தென்சாராக
வலர்வந்தோன்படைத்தநாண்முதலொருகாலமுங்கண்டதன்றுகேள்வித்
தலைவந்தபுலவரோடுமாலவாயுடையபிரான்றானேசெம்பொன்
மலைவந்தவல்லியொடும்வந்திறைகொண்டுறைகின்றான்யாதோவென்றார்.

(இ-ள்.) சிலர்வந்து - பார்த்தவர்சிலர்வந்து, மன்னு-பாண்டியனே, ஓர் அதி சயம் கண்டனம் - ஒருபேரதிசயம்பார்த்தோம் (அஃதியாதெனின்) வையை தென் சார் ஆக - வையைநதியின் தென்பாலாக, அலர்வந்தோன் படைத்த நாள்முதல் ஒருகாலமும் கண்டது அன்று - தாமரைமலரில்வசிக்கும் பிரமன் உலகினைச்சிருட் டித்தகாலமுதற்கொண்டு ஒருகாலத்தும் (உள்ளதென்றுகேட்டதுமில்லை) பார்த்த துமில்லை, கேள்வி தலைவந்த புலவர் ஓடும் - நூற்கேள்வியின்மிக்க சங்கப்புலவர்க ளோடும், ஆலவாயுடைய பிரான் தானே செம்பொன் மலைவந்த வல்லியொடும் வந் து இறைகொண்டு உறைகின்றான் - திருவாலவாயையுடைய பெருமானார் தாமே உமாதேவியாரோடும் வந்து நிலைபெற்றெழுந்தருளியிருக்கின்றனர், யாதோ என் றார் - யாதுகாரணத்தாலோ (யாமறிகிலோமென்று) கூறினார்கள்.

இதற்குமுன்னர் அங்கு ஆலயமில்லையென்பது தோன்ற அலர்வந்தோன்ப டைத்த நாண்முத லொருகாலமுங் கண்டதன்று எனவும், சங்கப்புலவர்களிருத்த லால் சோமசுந்தரக்கடவுளென்பதுதோன்றக் கேள்வித்தலைவந்த புலவரோடும் ஆல வாயுடைய பிரான்றானே செம்பொன் - மலைவந்தவல்லியொடும் வந்திறைகொண்டு றைகின்றான் எனவும், காரணம் எங்களுக்குத் தெரியாதென்பது தோன்ற யாதோ எனவுங் கூறினார்கள். (கள)

அவ்வுரைதன்செவிநுழைந்து புகுந்திர்ப்பவெழுந்தரசனச்சத்தாழ் ந்து, தெவ்வர்முடித்தொகையிடறுங்கழற் காலானடந்தேகிச்செழுநீர் வையை, கௌவைநெடுந்திரைக்கரத்தாற்கடிமலர்தூ உய்ப்பணியத்தென் கரைமேல்வந்து, மௌவலிளமுகைமுரன்மாதினொடு மிருக்கின்றமணி யைக்கண்டான்.

(இ-ள்.) அ உரை - அந்தவார்த்தையானது, தன்செவி நுழைந்து புகுந்து ஈர்ப்ப அரசன் எழுந்து - தனதுசெவியினுழைந்து சென்று இழுக்கப் பாண்டியனெ ழுந்து, அச்சத்து ஆழ்ந்து - பயத்திலழுந்தி, தெவ்வர் முடிதொகை இடறும் கழல்

Koviloor Digital Library

காலால் நடந்து ஏகி - பணியும்பகைவர்கள் கிரீடக்கூட்டங்களையிடறுகின்ற வீரகண்டைகட்டியகாலினால் நடந்துசென்று, செழுநீர் வையை கௌவை நெடுந்திரை கரத்தால் கடிமலர் தூய்பணிய - தெள்ளிய நீர்மயமாகிய வையைநதியானது ஒலிக்கும் நெடிய அலையாகிய கைகளால் வாசமிக்க மலர்களைத்தூவிவணங்க, தென்கரைமேல்வந்த - அவ்வையைநதியின் தென்கரையின்கண்வந்து, மௌவல் இளமுகை மூரல் மாதினோடும் இருக்கின்ற மணியைகண்டான் - முல்லையினது மெல்லிய அரும்பையொத்த தந்தபந்திகளையுடைய உமாதேவியாரோடு மெழுந்தருளியிருக்கின்ற மாணிக்கம்போலும் அரியசோமசுந்தரக்கடவுளைத் தரிசித்தான்.

இங்ஙனின்றங்கெழுந்தருளுதற்கு யாதபராதஞ்செய்தோம் என்னும் அச்சத்தால் விழுங்கப்பட்டானாதலால் அச்சத்தாழ்ந்து என்றார். (௧௮)

படர்ந்துபணிந்தன்புருக்குங்கண்ணீர்சோர்ந்தாநந்தப்பௌவத்தாழ்ந்து
கிடந்தெழுந்துநாக்குழறித்தடுமாறிநின்றிதனைக்கிளக்கும்வேதந்
தொடர்ந்தறியாவடிசெவப்பநகர்புலம்பவுலகின்றதோகையோடிங்
கடைந்தருளுங்காரணமென்னடியேனாற்பிழையுளதோவையாவையா.

(இ-ள்.) படர்ந்து பணிந்து அன்பு உருக்கும் கண் நீர்சோர்ந்து - சென்றுவணங்கி யன்பாலுருக்கிய கண்ணீர்சிந்தி, ஆநந்தம் பௌவத்து ஆழ்ந்து கிடந்து எழுந்து நா குழறி தடுமாறிநின்று இதனைகிளக்கும் - ஆநந்தக்கடலிலழுந்தித் திளைத்து எழுந்து நாக்குழறுற்று நிலைதடுமாறி நின்றிதனைக்கூறுவான், வேதம் தொடர்ந்து அறியாத அடிசெவப்ப நகர்புலம்ப - வேதங்கள் பின்றொடர்ந் தறிதற்கரிய திருவடிகள்செவப்பூறவும் நகர்புலம்படையவும், உலகு ஈன்ற தோகையோடு இங்கு அடைந்தருளும் காரணம் என் - எல்லாவுலகங்களையும் பெற்றருளிய உமாதேவியாரோடு இவ்விடத்தில் அடைந்தருளுதற்குக்காரணம்யாது, அடியேன் ஆல் பிழையுளதோ- அடியேனாற் பாண்டிநாட்டிற்குத் தவறுநேரிட்டதோ, ஐயா ஐயா - ஐயனே ஐயனே (யானொன்றும் அறியேன்.)

அன்பு பிறவியைச்சுடும் பெருந்தீ ஆதலால் அன்புருக்குங்கண்ணீர் எனவும், தற்போதநிகழ்ச்சிகெடுதலால் தடுமாறியெனவும், அருட்போதமேலிடுதலால் நின்று எனவுங்கூறினார். அன்பு பெருந்தீ என்றது "அழுகேனின்பாலன்பாமனமாயழல்சேர்ந்த - மெழுகேயன்னார்மின்னார்பொன்னார்கழல்கண்டு - தொழுதேயுன்னைத் தொடர்ந்தாரோடுந் தொடராதே, பழுதேபிறந்தே னென்கொண்டுன்னைப் பணிகேனே" எனத் திருச்சதகத்தில்வருந் திருப்பாசுரத்தால் உணர்க. (௧௯)

அல்லதையென்றமராலென்பகைஞராற்கள்வராலரியகானத்
தெல்லைவிலங்காதிகளாலிடையூறின்றமிழ்நாட்டிலெய்திற்றோலோ
தொல்லைமறையவரொழுக்கங்குன்றினரோதவந்தருமஞ்சுருங்கிற்றோலோ
வில்லறனுந்துறவறனும்பிழைத்தனவோயானறியேனெந்தாயெந்தாய்.

(இ-ள்.) அல்லது - என்னாலன்றி, என் தமர் ஆல் - என்பரிசனங்களாலாயினும், என்பகைஞர் ஆல் - எனதுபகைவர்களாலாயினும், கள்வர் ஆல்-சோரர்களாலாயினும், அரியகானத்து எல்லைவிலங்கு ஆதிகள் ஆல் - செல்லுதற்கரிய காட்டிற் சஞ்சரிக்கு மிருகங்களாலாயினும், இன்தமிழ் நாட்டிற்கு இடையூறு எய்திற்றோ-இனியதமிழ்நாடாகிய பாண்டிநாட்டிற்கு இடையூறுநேரிட்டதோ, தொல்லை மறையவர் ஒழுக்கம் குன்றினர் ஒ - தொன்றுதொட்டுள்ள வேதநூலுணர்ந்த அந்தணர்

Koviloor Digital Library

தத்தமக்குரிய ஒழுக்கநெறியினின்று தவறினரோ, தவம் சுருங்கிற்று ஓ தருமம் சுருங்கிற்று ஓ - தவநிலைகுன்றியதோ தருமநிலைகுன்றியதோ, இல்லறனும் துறவறனும் பிழைத்தன ஓ - இல்லறமும் துறவறமும் தத்தம் நிலையினின்று தப்பினவோ, எந்தாய் எந்தாய் - என்றந்தையே என்றந்தையே, யான் அறியேன் - யானொன்றும் அறிகிலேன்.

என்றால் தீங்குவிளைந்ததோ வென்பான் அல்லது எனவும், என்னையன்றி என்பரிசனமுதலியோரால் தீங்குபுகுந்ததோ வென்பான் என்பகைஞராற் கள்வரால அரியகானத்-தெல்லைவிலங்காதிகளால் எனவும், அந்தணர் தத்தம் ஒழுக்கத்தினின்றும் முனிவர் தவநிலையினின்றும், அறங்காப் போர்காத்தலி னின்றும் வழுவாமலும், இல்லறமும் துறவறமும் தத்தம்நிலையினின்று வழுவாமலும் காப்போன்தான் என்பான் தொல்லை மறையவரொழுக்கங் குன்றினரோ தவந் தருமஞ் சுருங்கிற்றாலோ இல்லறனுந் துறவறனும் பிழைத்தனவோ எனவும், யானறிந்திடையூறுவந்ததில்லை, பிழைத்தனவில்லை யென்பான் யானறியேன் எனவுங் கூறினான் "மாநிலங்காவலனாவான்மன்னுயிர்காக்குங்காலை - தானதனுக்கிடையூறுதன்னாற்றன்பரிசனத்தால்-ஊனமிகுபகைத்திறத்தாற்கள்வரானுயிர்தம்மால் - ஆனபயமைந்துந்தீர்த்தறங்காப்போனல்லனோ" எனத் திருத்தொண்டர்புராணத்தினும் "மாண்ட-அறநெறிமுதற்றேயரசன்கொற்றம்" அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் - துறவோர்க்கெதிர்தலுந்தொல்லோர்சிறப்பின" எனவரும் ஏதுவாலும் உணர்க. சுருங்கிற்று ஒருமைவினையாதலால் வாக்கியபேதமாகத் தனித்தனி கூட்டிமுடிக்க. அன்றிக் கடைநிலைத்தீவகம் எனக்கொள்ளினும் அமையும். (௨௦)

கள்ளேறுகடுக்கைநறுஞ்சடையானேபோற்றிபெருங்கருணைபோற்றி
வெள்ளேறுகொடியுயர்த்தவிடையானேபோற்றியருள்விகிர்தாபோற்றி
புள்ளேறுகொடியுயர்த்தபுனிதனயன்றேறாதபுனிதாபோற்றி
வள்ளேறுசிறுகுழவிமதிநுதலங்கயற்கண்ணிமணாளபோற்றி.

(இ-ள்.) கள் ஏறு கடுக்கை நறுஞ் சடையானே போற்றி - தேன்குடியேறிய கொன்றைமலர்மாலையையணிந்த நறுமணங்கமழுஞ் சடாமுடியையுடையவனே யுன்னைவந்திக்கக்கடவேன், பெருங் கருணை போற்றி-உனது பெரியதிருவருளைவந்திக்கக்கடவேன், வெள் ஏறு கொடி உயர்த்த விடையானே போற்றி - வெண்ணிறமிக்ககொடியில் இடபத்தை யுயர்த்தினவனே வந்திக்கக்கடவேன், அருள் விகிர்தா போற்றி- கருணைவிகிர்தனே வந்திக்கக்கடவேன், புள் ஏறு கொடி உயர்த்த புனிதன் அயன் தேறாத புனிதா போற்றி - கருடக்கொடியையுயர்த்திய திருமாலும், பிரமனும் அடிமுடிதேடற் கரிதாய்நின்ற புனிதனே வந்திக்கக்கடவேன், வள் ஏறு சிறு குழவி மதி நுதல் அங்கயற்கண்ணி மணாளபோற்றி - கூரியநுனிவாய்ந்த இளம்பிறையையொத்த நெற்றியையுடைய அங்கயற்கண்ணியார்மணாளனே யுன்னைவந்திக்கக்கடவேன்.

விகிர்தம் வேறுபாடு, தன்னைச் சரணடைந்தோரிடத்தும் அடையாரிடத்துங் கருணையுஞ் சினமும் உடையவனாதலால் அருள்விகிர்தா என்றார் நிக்கிரகித்தலும் பரிக்கிரகித்தலாதலின். (௨௧)

பாதமலரிணைபோற்றிபன்னிரண்டுகையானைப்பயந்தாய்போற்றி
வேதமுடிகடந்தபரஞானத்திலாநந்தவிளைவேபோற்றி
போதவடிவாய்நால்வர்க்கனைசவிறந்துநிறைந்தபரம்பொருளேபோற்றி
மாதவளநீறணிந்தமன்னுவங்கயற்கண்ணிமணாளபோற்றி.

Koviloor Digital Library

(இ-ள்.) பாதம் மலர் இணை போற்றி - இரண்டுதிருவடித்தாமரைகளையும் வந்திக்கக்கடவேன், பன்னிரண்டு கையானை பயந்தாய் போற்றி - பன்னிரண்டு திருக்கரங்களையுடைய குமாரக்கடவுளை (தேவர்கள் சிறைநீக்குதற்பொருட்டு) தந்தருளினவனே வந்திக்கக்கடவேன், வேதம் முடி கடந்த பரஞானத்தில் ஆநந்த விளைவே போற்றி - வேதசிரசைக் கடந்த பரஞானத்தில் பக்குவர்க் குதிக்கும் பேராநந்த மாகியபேறே வந்திக்கக்கடவேன், போதம் வடிவு ஆய் நால்வர்க்கு அசைவு இறந்து நிறைந்த பரம் பொருளே போற்றி - உபதேசமூர்த்தமாய்ச் சநகர் முதலிய நால்வர்க்கும் அசைவிறந்து நிறைந்துநின்ற மேலானபொருளே வந்திக்கக்கடவேன், மாதவளம் நீறு அணிந்த மன்னு - மிக்க வெள்ளியதிருநீற்றையணிந்த இறைவனே, அங்கயற்கண்ணி மணாள-அங்கயற்கண்ணியார்மணாளனே, போற்றி-வந்திக்கக்கடவேன்.

பரஞானம் திருவருள்ஞானமாதலால் பாசஞானங் கடந்துநின்றதென்பார் வேதமுடிகடந்த பரஞானம் எனவும், தான் அசைவற்று நின்றவண்ணமே யாவும் அசைவற்றுநின்றன என்பார் நிறைந்த வெனவுங்கூறினார். பாசஞானமாவது "வேதசாத்திரமிருதிபுராணகலை ஞானம் - விரும்பசபைவைகரியாதித்திறங்கண்மேலாம்- நாதமுடிவானவெலாம்பாசஞானம்" எனவருஞ் சித்தியாராலும், போதவடிவாய் நால்வர்க்கசைவிறந்து நிறைதலாவது சநகர்முதலிய நால்வரும் அநேககாள் தவஞ்செய்து திருக்கயிலையையடைந்து நந்திநாயனாரால் சிவபிரானை வணங்கி வேதநூலுணர்ந்தும் எங்கள்மயக்கொழியாமையா லருளவேண்டுமெனக் குறையிரக்கச், சிவபெருமானு ரருள்கூர்ந்து பதிபசுபாசத்திறங்களை யுணர்த்தவும் அவை கைகூடாமையால் ஞானமுணர்த்தியருளவேண்டுமெனப் பின்னருமிரக்கப் புன்னகைபுரிந்தருளி யாமிருக்கும்வண்ணம் நீவிருமிருமினென் யோகநிலைகூடினர் அவ்வாறே யெல்லாவுயிர்களுந் தத்தந்தொழிலறநின்றன என்பவை "இருவருமுணராவண்ணலேனவெள்ளெயிறியாமை - சிரநிகாயனந்தகோடி நினைத்திடுமுரத்திற்சேர்கொள்- கரதலமொன்றசேர்த்திமோனமுத்திரையைக்காட்டி - ஒருகணஞ்செயலொன்றின்றியோகுசெய்வாரினுற்றான். நாகமார்சடிலத்தண்ணனாற்பெருந்தவருமுய்ய- யோகுசேர்நிலைமை காட்டுமொருகணத்துயிரின்பொம்மல் - வாகைவேடானுநிற்கமையலும்புணர்ப்புமற்ற - ஆகையாலகிலமெல்லாமரனென்கைதெரிந்ததன்றே" எனவருங் காந்தத்தாலும் உணர்க. (உஉ)

பொக்கமுடையார்செய்யும்பூசைதவங்கண்டுநகும்புராணபோற்றி
தக்கன்மகம்பொடியாகத்திருப்புருவநெரித்தகொடுந்தழலேபோற்றி
செக்கமலக்கண்ணிடந்தகண்ணனுக்குத்திகிரியருள்செல்வாபோற்றி
மைக்குவளையனையமணிகண்டாவங்கயற்கண்ணிமணாளபோற்றி.

(இ-ள்.) பொக்கம் உடையார் செய்யும் பூசை தவம் கண்டு நகும் புராண போற்றி - பொய்நெறியையுடையோர் செய்யும் பூசையையுந் தவத்தையுங் கண்டு புன்னகையரும்பும் பழையோனே வந்திக்கக்கடவேன், தக்கன் மகம் பொடியாக திருப்புருவம் நெரித்த கொடுந் தழலே போற்றி - தக்கனுடைய வேள்விநீறாகத் திருப்புருவத்தை நெரித்தருளிய கொடியநெருப்பே வந்திக்கக்கடவேன், செம் கமலம் கண் இடந்த கண்ணனுக்கு திகிரி அருள் செல்வா போற்றி - செவந்ததாமரைமலர்போன்ற தனதுகண்ணினைப் பறித்தருச்சித்த திருமாலுக்குச் சக்கரமருளிய வள்ளலே வந்திக்கக்கடவேன், மை குவளை அனைய மணி கண்டா - கரியகுவளைமலர்போலக் கருநிறம்வாய்ந்த ஸ்ரீகண்டத்தையுடையவனே, அங்கயற்கண்ணி மணாள போற்றி - அங்கயற்கண்ணிமணாளனே வந்திக்கக்கடவேன்.

தக்கன் யாகத்திலையச் சாம்பலாக்கின்மையால் கொடுந்தழலேயென்றடைதந் தாகூறினான். சலந்தரன் போரிலிறந்தபின் அவன் சுற்றத்தாரும் வினையரக்கர்களுஞ் சிலர்கோண்டு தேவரோடு போர்செய்தவருந்த, அவர்களாற்றுது வருந்தமடைந்து திருமாலிடத்து முறையிட்டு எங்களிடுக்க ணொழிக்கச் சிவபெருமானிடத்துச் சக்கரம்பெற்றுக் காப்பாயென்றுவேண்ட, அவ்வேண்டுகோளுக்கிரங்கி இமையமலை சாரலிற் பிரமனொடுஞ்சென்று ஒருதிருக்கோயிலியற்றிச் சிவலிங்கமொன்று தாபித்து ஆயிரந்திருநாமங்கள்கூறி ஒவ்வொரு திருநாமத்திற்கும் ஒவ்வொரு தாமரையாக ஆயிரந்திருநாமங்களா லருச்சித்து வழிபட்டொழுகுநாளில் ஒருநாள், அவர் அன்பின் வழிபாட்டைச் சோதித்தற்பொருட்டு ஒருதாமரையை மறைத்தருளுதலும், அருச்சிக்கும் அத்திருமால் ஒருமலரைக் காணுமையால் சிவபூசைக்கு முட்டுப்பாடுவந்ததேயென்று தளர்வுற்று அம்முட்டுப்பாட்டை யொழித்தற்குத் தமதுகண்ணிடந்தருச்சிக்க, சிவபெருமானுர் காட்சிதந்தருளி யருச்சித்த திருக்கண்ணையும் சுதரிசனம் என்றுஞ் சக்கரத்தையுந் தந்தருளினர் என்பது "வெண்ணெய்கமழுஞ்செங்கனிவாய்விமலனிமிலேறுயர்த்தருளும் - அண்ணல்பெயராயிரமோதிப்பொற்ருளிணையிலருச்சிக்கும் - தண்ணப்மலமாயிரத்தி னொன்றுகாணுன்றளர்வெய்திக் - கண்ணொன்றுனக்குஞ்செய்யமலர்க்கமலம்பறித்தச்சாத்தினுன். கடவுட்புள்ளேறுயர்த்தருளுங்காயாமேனித்திருநெடுமால் - உடையபேரன்பினைநோக்கியுள்ளத்துவகைமீதூர - அடைவின்வழிபாடினிதியற்றுமிலிங்கத்திடையாயிரங்கோடிச்-சுடராய்கெழுந்தாலெவருட்கட்டோளைபாகன்ருேன்றினுன். வையம்பொதிந்தசெங்கனிவாய்மாயோனன்புக்குண்மகிழ்வுற் - றையன்கையாற்புறகிலியடியிற்புனைந்தமலர்க்கண்ணும் - எய்தநல்கிச்சுதரிசனமென்றுஞ்சுடராழியுமீந்து - செய்யகமலக்கண்ணனெனும்பெயருஞ்சிறப்பிலெடுமெனித்தான்" எனவருங் கூர்மபுராணத்தாலுணர்க. செங்கமலம் செக்கமலம் மெல்லெழுத்தை வலிக்கவேண்டும் வழிவலித்தல். அங்கயற்கண்ணியாருஞ் சிலந்தனிந்தருளுதற் குறிப்புத்தோன்றச் செய்யுள்தோறும் உடன்கூறினான்.

௮௨. வேறு.

தென்னவனின்னவண்ணமேத்தினுன்செம்பொற்கூடன்
மன்னவன்கேட்டாகாயவாணியால்வையைநாட
வுன்னதுசோத்தநாங்கேட்டுவந்தனமினியதாயிற்
றின்னமொன்றுளதுகேட்டியென்றனனருளிச்செய்வான்.

(இ-ள்.) தென்னவன் இன்ன வண்ணம் ஏத்தினுன் - குலேசபாண்டியன் இவ்வாறு துதித்தான், செம் பொன் கூடல் மன்னவன் கேட்டு - செம்பொன்னிறைந்த நான்மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் திருச்செவிப்படுத்தி, ஆகாயவாணியால் - அசரீரியால், வையை நாட - வையைநாட்டையுடைய பாண்டியனே, உன்னது சோத்தம் நாம் கேட்டு உவந்தனம் - உனது சோத்தத்தை நாம் கேட்டு மகிழ்ந்தேம், இனியதாயிற்று - (அது எமக்கு) இனிதாயிருந்தது, இன்னம் ஒன்று உளது கேட்டி என்றனன் அருளிச் செய்வான் - இன்னமொன்றுள்ளது கேளாய் என்று அருளிச்செய்வாராயினர்.

சோத்தம் இழிந்தோர்செய்யும் வந்தனம் "சோத்துன்னடியமென்றோரைக் குழுமித் தோல்வானவர்கும் - தேத்தம்படிநிற்பவன் றில்லைபன்றளிவடுவள - வார்த்தன்வமிழ்தந்திருவுமதியுமிழந்தவதீ - பேர்த்துமினைப்பொழியாய்பழிநோக்காய் பெருங்கடலே" என்னுங் கோவைத்திருவாசகத்தில் கடைக்குறையாய்நின்ற சோத்

Koviloor Digital Library

று என்பதற்கு இழிந்தோர்செய்யுமஞ்சலி என நச்சினார்க்கினியர் எழுதிய உரையிற் காண்க. (உச)

இயம்பரும்பதிகடம்முளாலவாயேற்றமீங்குச்
சயம்புவாயநந்தமுள்ளதானவரியக்கர்சித்தர்
வயம்புரியரக்கர்வானோர்முனிவரர்மனிதருள்ளார்
நயம்பெறவிதியாற்கண்டநங்குறியநந்தமுண்டால்.

(இ-ள்.) இயம்பு அரும் பதிகள் தம்முள் ஆலவாய் ஏற்றம் - சொல்லுதற்கரிய பெருமைவாய்ந்த திருப்பதிகளுள் திருவாலவாயதிகம், ஈங்கு-இத்திருப்பதியில், சயம்பு ஆய் அநந்தம் உள்ள - சயம்புவாய் அளவில்லாத அருட்குறிகளுள்ளன, தானவர் இயக்கர் சித்தர் வயம்புரி அரக்கர் வானோர் முனிவரர் மனிதர் உள்ளார்- (அவற்றுள்) அசுரரும் யக்ஷரும் சித்தரும் வெற்றியை விரும்பிய அரக்கரும் தேவர்களும் முனிசிரேஷ்டர்களும் மனிதர்களுமாகவுள்ளவர், நயம் பெற விதியால் கண்ட நம் குறி அநந்தம் உண்டு - பெரும்பேறடைய ஆகமவிதியால் தாபித்த நமது அருட்குறி எல்லையின்றியுள்ளன. (உரு)

அக்குறிகளின்மேம்பட்டகுறியறுபத்துநான்கா
மிக்குறிகளின்மேம்பட்டகுறிகளெட்டினையவெட்டுத்
திக்குறைவானோர்பூசைசெய்தனவிவற்றியாம்வந்து
புக்குறைகுறிநந்தோழன்பூசித்தகுறியதாகும்.

(இ-ள்.) அ குறிகள் இல் மேம்பட்ட குறி அறுபத்து நான்கு ஆம் - அந்த அருட்குறிகளுள் மேம்பட்ட அருட்குறிகள் அறுபத்துநான்குள்ளன, இ குறிகள் இல் மேம்பட்ட குறிகள் எட்டு - இந்த அருட்குறிகளுள் மேம்பட்ட அருட்குறிகளெட்டாம், இனைய - இவ்வருட்குறிகள், எட்டு திக்கு உறை வானோர் பூசை செய்தன- எட்டுத்திக்கிலுமுள்ள இந்திரன் முதலிய தேவர்களாற் பூசிக்கப்பட்டன, இவற்று யாம் வந்து புக்கு உறை குறி - இவ்வருட்குறிகளுள் நாம் வந்து வசிக்கும் இவ்வருட்குறி, நம் தோழன் பூசித்த குறியது ஆகும் - நமது தோழனாகிய குபேரன்பூசித்த அருட்குறியாம்.

குறியது அது பகுதிப்பொருள்விகுதி. அவ்வருட் குறிகளின் திருநாமங்கள் இந்திரேஸ்வரர், அக்கினீஸ்வரர், யமேஸ்வரர், நிருதீஸ்வரர், வருணேஸ்வரர், வாயுவீஸ்வரர், குபேரேஸ்வரர், ஈசானியேஸ்வரர் என எட்டாம். (உசு)

அறைந்தவித்தெய்வத்தானமனைத்துமோரூழிக்காலத்
திறந்தநந்தோழன்கண்டவிலிங்கமாமதனாலிங்கே
யுறைந்தனமுறைதலாலேயுத்தரவாலவாயாய்ச்
சிறந்திடத்தகுவதின்றுமுதலிந்தத்தெய்வத்தானம்.

(இ-ள்.) அறைந்த இ தெய்வத்தானம் அனைத்தும் - கூறிய இந்தத்தெய்வத்தானங்களியாவும், ஓர் ஊழிக்காலத்து இறந்த-ஒருழிக்காலத்தி லழிந்தன, நம் தோழன் கண்ட இலிங்கம் ஆம் - நமது தோழனாகிய குபேரன் தாபித்த அருட்குறித்தானம் இது, அதனால் இங்கே உறைந்தனம்-அதனால் நமது இச்சையாலருட்குறியாக்கி யிங்கே வசித்தனம், உறைதலால் - நாம் வசித்தலால், உத்தர ஆலவாய் ஆய் இன்றுமுதல் இந்த தெய்வத்தானம் சிறந்திட தகுவது - உத்தரவாலவாயென்னுந் திருநாமமுடையதா யின்றுமுதல் இந்தத் தெய்வதலம் சிறக்கக்கடவது. (உஎ)

Koviloor Digital Library

ஓங்குதண்பணைசூழ்நீபவனத்தைநீத்தொருபோதேனு
நீங்குவமல்லேங்கண்டாயாயினுநீயும்வேறு
நீங்குளையல்லைகாடன்செய்யுளையிகழ்தலாலே
யாங்கவனிடத்தியாம்வைத்தவருளினால்வந்தேமென்று.

(இ-ள்.) ஓங்கு தண் பணை சூழ் நீபம் வனத்தை நீத்து ஒரு போது ஏனும் நீங்குவம் அல்லேம் - வளத்தாற் சிறந்த தண்ணிய வயல்சூழ்ந்த கடம்பவனத்தை நீக்கி யொருபொழுதாயினும் வேறிடத்தில் வசியோம், ஆயினும் - ஆனாலும், நீயும் வேறு நீங்கு உளை அல்லை - நீயும் எனக்கு வேறபராதியல்லை, காடன் செய்யுளை இகழ்தலால் - இடைக்காடன்செய்த உரைப்பாவை நீ யவமதித்தமையால், அவன் இடத்து யாம் வைத்த அருளினால் வந்தேம் என்று - அந்த இடைக்காடனிடத்தில் யாம்வைத்தகருணையினா லிங்குவந்தோமென்று.

வேறிடத்தில் வசியோம் நீயும் எனக்கு அபராதியல்லை யென்பது தோன்ற ஒருபோதேனும் நீங்குவமல்லேம் எனவும், நீயும் வேறு நீங்குளையல்லை யெனவுங் குறிப்பாற் கூறினார். கண்டாய், ஆங்கு அசைநிலைகள். காடன் முன்மொழிகெட்டுப் பின்மொழியிற் பொருள்சிறந்து நின்றது. இதனைத் தார்க்கிகர் நாமைகதேச நாமக் கிரகணம் என்பர். (௨௮)

பெண்ணினைப்பாகங்கொண்டபெருந்தகைப்பரமயோகி
விண்ணிடைமொழிந்தமாற்றமீனவன்கேட்டுவானோர்
புண்ணியாசிறியோர்குற்றம்பொறுப்பதுபெருமையன்றோ
வெண்ணியபெரியோர்க்கென்றுவேத்தினனிறைஞ்சினானே.

(இ-ள்.) பெண்ணினை பாகம் கொண்ட பெருந்தகை பரமயோகி — பெண்ணை வாமபாகத்திற்கொண்டருளியும் பெருந்தகைமை வாய்ந்த பரமயோகியாகிய சோமசுந்தரக்கடவுள், விண் இடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு-ஆகாயத்தில் அசரீரியாகக்கூறியருளிய திருமொழியைப் பாண்டியன் கேட்டு, வானோர் புண்ணியா-தேவர்கள்செய்த புண்ணியப் பெரும்பேறே, சிறியோர் குற்றம் பொறுப்பது எண்ணிய பெரியோர்க்கு பெருமை அன்று ஓ என்று - சிறியவர் குற்றத்தைப் பொறுத்தல் நன்கு மதிக்கப்படும் பெரியவர்க்குப் பெருமையல்லவா என்று, ஏத்தினன் இறைஞ்சினான் - துதித்து வணங்கினான்.

ஆன்மாக்களின் பந்தத்தை யொழித்தற்பொருட்டுப் போகங்களருளப் போகிபோலத்தான் பெண்ணினை யொருபாலுடையனாயினும் என்றும் அசிந்திதனாயிருத்தலால் பெண்ணினைப் பாகங்கொண்ட பெருந்தகைப்பரமயோகி யென்றார் "சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ்வுலகமெல்லாம் - ஒத்தொவ்வாவாணும்பெண்ணு முயர்குண குணியுமாகி - வைத்தனன்" எனவும் "தனக்கொன்றின்றி-அருளுருவுயிருக்கென்றே யாக்கினனசிந்தனன்றே" எனவும் வருஞ் சித்தியாரால் உணர்க. (௨௯)

அடிபணிந்தேத்தினானையருள்சுரந்தசையுமின்றுங்
கொடியணிமனையிற்போக்கிக்கோமளவல்லியோடு
முட்டுறைபுலவரோடுமொல்லைதன்கோயில்புக்கான்
வடதிருவாலவாயில்வந்துவீற்றிருந்தவள்ளல்.

(இ-ள்.) வடதிரு வாலவாயில் வந்து வீற்றிருந்த வள்ளல் - உத்தர திருவாயிலில் வந்து நிகரின்றியிருந்த சோமசுந்தரக்கடவுள், அடிபணிந்து ஏத்தினானை அருள் சுரந்து - தமது திருவடியை வணங்கித்துதித்த குலேசபாண்டியனைக் கருணைகூர்ந்து, அசையும் மின்னு கொடி அணி மனையில் போக்கி - துவளாநின்ற மின்னலையொத்த துவசங்கட்டிய மாளிகையிற்போக்கி, கோமளவல்லியோடும் உடன் உறை புலவர் ஓடும் ஒல்லை தன் கோயில் புக்கான் - பசுங்கொடியையொத்த உமாதேவியாரோடும் தம்மொடு வசிக்கும் சங்கப்புலவர்களோடும் விரைந்து தமது திருக்கோயிலுக்குச் சென்றருளினார். (௬௦)

மின்மதிச்சடையினான்பினடந்துபோய்விடைகொண்டேகு
மன்னவன்றன்னைப்பாடிவந்தவன்றன்னைமாட்சித்
தன்மைசால்சங்கவாணர்தம்மொடுங்கொடுபோயென்றும்
பொன்மகள்காணிகொண்டபுரிசைசூழ்கோயில்புக்கான்.

(இ-ள்.) மின் மதி சடையினான் பின் நடந்துபோய் விடை கொண்டு ஏகும் மன்னவன் - மின்னலையொத்த இளஞ்சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுளின் பின்னடந்து திருக்கோயிலிற்குச்சென்று விடைபெற்றுத் திரும்பும் பாண்டியன், தன்னை பாடி வந்தவன் தன்னை - தன்மேற்பாடிவந்த இடைக்காடரை, மாட்சி தன்மைசால் சங்கவாணர் தம்மொடுங் கொடுபோய் - கேள்வி மாட்சிமையின் பெற்றி மிக்க சங்கப்புலவர்களோடுங்கொண்டு சென்று, என்றும் - எந்நாளும், பொன்மகள் காணிகொண்ட புரிசைசூழ் கோயில் புக்கான் - திருமகள் தனக்கு ஆட்சியாகக்கொண்டு வசிக்கும் மதில்சூழ்ந்த தனது கோயிலிற் புகுந்தனன்.

ஏழனுருபுநிற்கும் இடத்து இரண்டனுருபு நிற்றல் உருபுமயக்கம். (௬௧)

விதிமுறைகதலிபூகங்கவரிவால்விதானந்தீபம்
புதியதார்நிறைநீர்க்கும்பங்கதலிகைபுனைந்தமன்றற்
கதிர்மணிமாடத்தம்பொற்சேக்கைமேற்கற்றோர்சூழ
மதிபுனைகாடன்றன்னைமங்கலவணிசெய்தேற்றி.

(இ-ள்.) விதிமுறை-நூலிற்கூறிய முறையால், கதலி பூகம் கவரி வால் விதானம் தீபம் புதியதார் நிறை நீர்க்கும்பம் கதலிகை புனைந்த மன்றல் கதிர்மணி மாடத்து - வாழையும் கமுகும் சாமரமும் மேற்கட்டியும் தீபமும் அன்றலர்ந்த மலராற்றொடுத்த மாலையும் பூரணகலசமும் துவசமுமாகிய இவைகளா லலங்கரித்த விழவமைந்த ஒளிமிக்க இரத்தினங்களழுத்திய உபரிகையில், அம்பொன் சேக்கை மேல்- அழகிய பொன்னாற்சமைந்த ஆதனத்தின்மேல், கற்றோர் சூழ மதி புனை காடன் தன்னை மங்கல அணி செய்து ஏற்றி-கற்றுணர்ந்த சங்கப்புலவர்கள் சூழ நுண்ணறிவையேயாபரணமாகப்பூண்ட இடைக்காட்டுப்புலவனை மங்கலவணி புனைந்திருத்தி,

சிங்கமான்சுமந்தபொன்னஞ்சேக்கைமேலிருந்துவெள்ளைக்
கொங்கவிழ்தாமந்தூசுகுளிர்மணியாரந்தாங்கி
மங்கலமுழவமார்ப்பமறையவராக்கங்கூற
நங்கையர்பல்லாண்டேத்தநன்மொழிப்பனுவல்கேட்டு.

(இ-ள்.) சிங்கமான் சுமந்த பொன் அம் சேக்கை மேல் இருந்து - சிங்கஞ் சுமந்த பொன்னாலாகிய அழகிய ஆசனத்தில் தானிருந்து, கொங்கு அவிழ் வெள்ளைத்

Koviloor Digital Library

தாமம் வெள்ளை தூசு குளிர்மணி ஆரம் தாங்கி - மகரந்தத்தோடு மலர்ந்த வெள்ளிய மலராற்றொடுத்த மாலையையும் வெள்ளாடையையும் குளிர்ந்த முத்தாரத்தையுந்தரித்து, மங்கலம் முழவம் ஆர்ப்ப - மங்கலவாச்சியங்களொருபாலொலிக்கவும், மறையவர் ஆக்கம் கூற - அந்தணர்கள் ஆசிவசனத்தை யொருபாற்கூறவும், நங்கையர் பல்லாண்டு ஏத்த - மங்கலப்பெண்கள் ஒருபாற் பல்லாண்டு பாடவும், நல்மொழி பனுவல் கேட்டு - நல்ல வுரைப்பாவினைக்கேட்டு.

பாட்டுடைத்தலைவன் வெண்மலர்மாலையும் வெள்ளாடையும் வெள்ளணியுந் தாங்கல் முறையாதலால் வெள்ளைக்-கொங்கவிழ்தாமந்தூசு குளிர்மணியாரந்தாங்கி என்றார். இதனைப் பின்னர்வரும் ஏதுவால் உணர்க. (௯௩)

அறிவுடைக்காடனுக்குமருமைமாண்புலமையோர்க்கு
முறைமையாலாரந்தூசுமுகிழ்முலைக்கொடியினன்னார்
நிறைநிதிவேழம்பாய்மான்விளைநிலநிரம்பநல்கி
யறைகழற்காலிற்பின்னேழடிநடந்திதனைவேண்டும்.

(இ-ள்.) அறிவு உடைய காடனுக்கும் - அறிவமைந்த இடைக்காடருக்கும், அருமை மாண் புலமை யோர்க்கும் - அரிய மாட்சிமைப்பட்ட புலமையில்வல்ல சங்கப்புலவருக்கும், முறைமையால் - வரிசைப்படி, ஆரம் தூசு முகிழ்முலை கொடியின் அன்னார் நிறை நிதி வேழம் பாய் மான் விளைநிலம் நிரம்ப நல்கி - முத்தாரங்களையும் பீதாம்பரங்களையும் அரும்பையொத்த தனத்தையுமுடைய பூங்கொடிபோன்ற பணிப்பெண்களையும் நிறைந்த பொருளையும் யானையையும் குதிரையையும் விளைநிலங்களையும் அவரவர்க்கியையவெறுக்கக் கொடுத்து, அறைகழல் காலில் பின் ஏழடிநடந்து இதனை வேண்டும் - ஒலிக்கும் வீரகண்டைகட்டிய காலாலவர்கள் பின் ஏழடிசென்று இதனை வேண்டுவான்.

விதிமுறை என்னுஞ் செய்யுள் முதலிதுகாறும் புலவர் பாடிய பாட்டைக் கேட்குந் தலைவனியல்பு கூறினார். "படுமுறைதொடர்செய்யுட்டெரிக்கவல்ல பாவலற்குக்குலங்குறிசீரொழுக்கமேன்மை - நீடழகார்சமயநூல்பிறநூன்மற்று நிகழ்த்துநூலிலக்கணநாற்கவியுளானுய் - நாடுறப்பிற்குறையிலனுய்கோயிலானுய் நாற்பொருளுமுணர்ந்தகலைதெளிந்துமுப்பான் - கூடுவயதிகழ்ந்தெழுபான்வயதிலேனுக் குறியுடையனுமிவவன்கவிதைகொள்ளே. கொள்ளுமிடம்விதானித்துத்தொடையினாற்றிக்கோடிதலிதோரணம்பாலிகைநிர்க்கும்பம் - தள்ளுபொறிவிளக்கொளிரமுரசியம்பத் தோகையர்பல்லாண்டிசைப்பமறையோர்வாழ்த்த-வெள்ளைமலர்துகில்புனைந்து தவிசின்மேவி வேறொருதவிசிருத்திச்செய்யுட்கேட்டே - உள்ளமகிழ்பொன்புயிபூணாடைமற்று முதவியேழடிபுலவனுடன்போய்மீளே" எனவரும் பொருத்தப்பாட்டியலால் உணர்க. (௯௪)

புண்ணியப்புலவீர்யானிப்போழ்திடைக்காடனார்க்குப்
பண்ணியகுற்றமெல்லாம்பொறுக்கெனப்பரவித்தாழ்ந்தா
னுண்ணியகேள்வியோருமன்னநீநுவன்றசொல்லாந்
தண்ணியவமுதாலெங்கள்கோபத்தீத்தணிந்ததென்றூ

(இ-ள்.) புண்ணியப்புலவீர் - புண்ணியவடிவமாகிய புலவர்களே, யான் இபோழ்து இடைக்காடனார்க்கு பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க என்ன பரவி

Koviloor Digital Library

தாழ்ந்தான் - அடியேனிப்பொழுது இடைக்காடனார்க்குச்செய்த குற்றங்களையெல்லாம் பொறுக்கக்கடவீரென்று துதித்து வணங்கினன், நுண்ணிய கேள்வியோரும் - நுண்ணிய நூற்கேள்வியில்வல்ல புலவரும், மன்ன - அரசனே, நீ நுவன்ற சொல் ஆம் தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீ தணிந்தது என்னா - நீ கூறிய சொல்லாகிய குளிர்ந்த அமுதினால் எங்கள் கோபமாகிய நெருப்புத்தணிந்ததென்று.

நெருப்பை யவித்தற்கு நீர் வேண்டும், கோபநெருப்பை யவித்தற்கு இன்சொல்லாகிய இன்னமுது வேண்டும் ஆதலால், செம்மொழிச்சிலேடை யணிபடத் தண்ணிய அமுது என்றார். அமுதுநீர், அமிர்தம். (௩௫)

இன்னமுமாலவாயெம்மிறையவன்கருணைநோக்காற்
பன்னரும்புகழ்மைகுன்றாப்பாக்கியமுனக்குண்டாக
வென்னநல்லாக்கங்கூறியேகினாராகவந்தத்
தென்னவன்குலேசன்செய்ததவமுருத்திரிந்தாலென்ன.

(இ-ள்.) இன்னமும் ஆலவாய் எம் இறையவன் கருணை நோக்கு ஆல் - இன்னமும் திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் கிருபாநோக்கத்தால், பன் அரும் புகழ்மை குன்றாத பாக்கியம் உனக்கு உண்டாக என்ன - சொல்லுதற்கரிய கீர்த்தி குன்றாத பெருஞ்செல்வம் உனக்குண்டாகக்கடவதென்று, நல் ஆக்கம் கூறி ஏகினார் ஆக - நல்ல ஆசிவசனங்கூறிச்செல்ல, அந்த தென்னவன் குலேசன் செய்த தவம் உருதிரிந்தால் என்ன - அந்தக் குலேசபாண்டியன்செய்த தவமுருத்திரிந்து மகப்பேறாக வுதித்தாற்போல. (௩௬)

எரிமருத்தவனிமுன்னாமெண்வகைமூர்த்தியன்பு
புரிமருத்துவனைச்சூழ்ந்தபொருபழிதுடைத்தோன்சோதி
விரிமருத்துடல்வான்றிங்கண்மிலைந்தவனருளின்வந்தா
னரிமருத்தனனாந்தென்னனடலரிக்குருளையன்னான்.

(இ-ள்.) எரி மருத்து அவனிமுன் ஆம் எண்வகை மூர்த்தி - தீ காற்று பிரிதிவி முதலிய வெண்வகைப்பொருளாயுள்ள அட்டமூர்த்தியும், அன்புபுரி மருத்துவனை சூழ்ந்த பொருபழி துடைத்தோன் - அன்புசெய்து வழிபட்ட இந்திரனைவிடாது சூழ்ந்த போர்விளைக்கும் பழியை யொழித்தருளினவனும், சோதி விரி மருந்து உடல் வான் திங்கள் மிலைந்தவன் - ஒளிவீசும் அமுதநிறைந்த சரீரத்தையுடைய பெருமைவாய்ந்த சந்திரனையணிந்தவனுமாகிய சோமசுந்தரக்கடவுளின், அருளின் - திருவருளால், அரிமருத்தனன் ஆம் தென்னன் அடல் அரி குருளை அன்னான் வந்தான் - அரிமருத்தனனென்னும் பாண்டியனாகிய வெற்றிபொருந்திய சிங்கக்குட்டியையொத்தவன் உதித்தனன்.

எங்கும் நிறைந்த பூரணன் என்பார் எரிமருத்தவனிமுன்னா மெண்வகைமூர்த்தியென்றார். பிரிதிவிமுதலிய எண்வகைப்பொருள் என்றது "இருநிலனாய்த்தீயாகி நீருமாகி யியமானனாயெறியுங்காற்றுமாகி - அருநிலையதிங்களாய்ஞாயிறாகி யாகாயமாயட்டமூர்த்தியாகி" எனவருந் திருத்தாண்டகத்தாலறிக. அரிமருத்தனன் பகைவரை மர்த்தனஞ்செய்பவன். அரித் என்னும் வடசொற்சிதைவு. (௩௭)

கலிநிலைத்துறை.

பரிசிலைப்புலவருக்கருள்குலேசன்பலபகல்கழீஇத்
திரிமருப்பிரலைவெம்மழுவெடுத்தவன்மதிச்சென்னிமேல்

Koviloor Digital Library

வரிசிலைப்படைபொறித்தவனெனப்பெறுவரமைந்தனு
மரிமருத்தனனிடத்தவனிவைத்தரனடியெய்தினான்.

(இ-ள்.) பரிசில் ஐ புலவருக்கு அருள் குலேசன் பல பகல் கழி இ - நிலமுதவியபெரும்பேறுகளைக் கற்றுணர்ந்தோர்க்கீயுங் குலேசபாண்டியன் பலதினங்கழித்து, திரிமருப்பு இரலை வெம்மழு எடுத்தவன் மதி சென்னிமேல் - திரிந்த கொம்பினையுடைய மானையும் கொடிய மழுவினையுமேந்திய சிவபெருமானாருடைய சந்திரனையணிந்த சிரத்தின்மேல், வரிசிலை படை பொறித்தவன் என்ன - கட்டமைந்த வில்லாகிய ஆயுதத்தாலடித்த அருச்சுநனைப்போல, வரம் பெறும் மைந்தன் ஆம் அரிமருத்தனன் இடத்து - வரம்பெற்ற காளையாகிய அரிமருத்தனனிடத்தில், அவனி வைத்து அரன் அடி எய்தினான் - பூபாரம் வைத்து அப்பெருமானார் திருவடிக்கீழிரண்டறக் கலந்தனன்.

பரிசில் பேறு "வரிசை கருதாது வான் போற்றடக்கைக் - குரிசினீ நல்கயாம் கொள்ளும் - பரிசில் - அடுகளமார்ப்பவமரோட்டித்தந்த - படுகளிநால்வாய்ப்பகடு" எனவரும் புறப்பொருள் வெண்பா மாலையில்வருஞ் செய்யுளுக்குக் கூறிய உரையிற் காண்க. அருச்சுநன் பாசுபதாஸ்திரம்பெறச் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தகாலை யிலவன் தவநிலையையழிக்கத் துரியோதனனேவிய மூகாசுரன் வராகவடிவாய் அவனைச் சேதிக்கவருதலை யச்சிவபெருமானார் திருவுளத்தெண்ணி வேட்டுவத்திருவுருக்கொண்டு அவ்வராகத்தைச் சேதித்து அவ்வருச்சுநனோடு சிறிது பொழுது போர்செய்தலே திருவிளையாட்டாகக்கருதி யவன் வில்லினாணியையறுக்க, அவ்வருச்சுநன் நாணறுபட்ட அவ்விற்கழுந்தால் அப்பெருமானார் திருமுடியில் மோதினான் என்பது பாரதம் அருச்சுநன் தவநிலைச்சருக்கத்திற் காண்க. (௩௮)

இடைக்காடன் பிணக்குத் தீர்த்தபடலம் - முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௨௯௪௮.

ஐம்பத்தேழாவது

வலைவீசின படலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மின்றிரித்தன்னவேணிவேதியனிடைக்காடன்பின்
சென்றுமீண்டனையான்கொண்டபிணக்கினைத்தீர்த்தவண்ண
மின்றுரைசெய்தாமுந்நெறிவலைவீசினாமுன்
மன்றலங்குழலினாளைமணந்துமீள்வண்ணஞ்சொல்வாம்.

(இ-ள்.) மின் திரித்தால் அன்ன வேணி வேதியன் - மின்னினைத் திரித்துவிட்டாலொத்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், இடைக்காடன் பின் சென்று மீண்டு - இடைக்காடன் பின்சென்று திரும்பியருளி, அனையான் கொண்ட பிணக்கினை தீர்த்த வண்ணம் இன்று உரை செய்தாம்-அவ்விடைக்காடன்

Koviloor Digital Library

28

வலைவீசின திருவிளையாடல் —



Koviloor Digital Library

Koviloor Digital Library

கொண்ட பிணக்கைத்தீர்த்த திருவிளையாடலை இப்பொழுது கூறினோம், முந்நீர் எறி வலை வீசி - கடலில் எறியும் வலையினை வீசி, ஞாழல் மன்றல் அம் குழலி ஞானை மணந்து மீள்வண்ணம் சொல்வாம் - குங்குமமலரின் வாசமிக்க அழகிய கூந்தலையுடைய உமாதேவியாரைத் திருமணஞ்செய்து திரும்பியருளிய திருவிளையாடலை யினிக் கூறுவாம்.

நெய்தனிலத் தலைவனுக்கு உமாதேவியார் புத்திரியாராக அவதரித்தமையால் அந்நிலக் கருப்பொருளாகிய குங்குமமரத்தை யிங்குக் கூறினர். (க)

அந்தமிலழகன்கூடலாலவாயமர்ந்தநீல
கந்தரனுலகமீன்றகன்னியங்கயற்கணாளாங்
கொந்தவிழலங்கற்கூந்தற்கொடிக்குவேறிட்த்துவைகி
மந்தணமானவேதமறைப்பொருளுணர்த்துமாதோ.

(இ-ள்.) அந்தம் இல் அழகன் கூடல் ஆலவாய் அமர்ந்தநீல கந்தரன்-எல்லையில்லாத பேரழகுடையவராகிய நான்மாடக் கூடலென்னுந் திருவாலவாயி லெழுந்தருளிய ஸ்ரீகண்டத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், உலகம்ஈன்ற கன்னி அங்கயற்கண்ணாள் ஆம் கொந்து அவிழ் அலங்கல் கூந்தல் கொடிக்கு-உலகங்கள் யாவையும் பெற்றருளியுங் கன்னிப் பருவத்தையுடைய அங்கயற்கண்ணியாராகிய மகரந்தத் தோடலர்ந்த மலராலாகிய மாலையையணிந்த கூந்தலையுடைய உமாதேவியார்க்கு, வேறு இடத்து வைகி மந்தணம் ஆன வேதம் மறை பொருள் உணர்த்தும் - ஏகாந்தத்தானத்திலிருந்தருளி யிரகசியமான வேதத்தின் கூடமான பொருளை யுபதேசித்தருளுவார்.

சிவத்தை மணந்த அண்டமீன் றளித்துங் கன்னியாயுள்ளாள் என்பது "சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும் - உவந்திருவரும் புணர்ந்திங்குல குயிரெல்லா மீன்றும் - பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்-தவந்தருஞானத்தோர்க்கித் தன்மைதான் றெரியுமன்றே" எனவருஞ் சித்தியாராலுணர்க. (உ)

நாதனின்னருளாற்கூறுநான்மறைப்பொருளையெல்லாம்
யாதுகாரணத்தான்மன்னோவறிகிலேமெம்பிராட்டி
காதரமடைந்தாள்போலக்கவலையுஞ்சிறிதுதோன்ற
வாதரமிலளாய்க்கேட்டாளஃதறிந்தமலச்சோதி.

(இ-ள்.) நாதன் இன் அருளால் கூறும் நான் மறைப்பொருளை எல்லாம் - சிவபெருமானாரினிய திருவருளினாற் போதித்த நான்குவேதங்களின் கூடமாயுள்ள பொருள்களையெல்லாம், யாது காரணத்தால் ஓ அறிகிலேம் - யாது காரணத்தினாலேயோ யாமுணரோம், எம்பிராட்டி காதரம் அடைந்தாள்போல கவலையும் சிறிதுதோன்ற - எமதுபிராட்டியார் மறந்தவர்போலக் கவலையுஞ் சிறிது திருமுகத்திலரும்ப, ஆதரம் இலளாய் கேட்டாள் - விருப்பமில்லாதவராய்க் கேட்டருளினர், அமலம் சோதி அஃது அறிந்து - மலரகிதராகிய பேரொளி வடிவாயுள்ள அப்பெருமானார் உணர்ந்து.

மறந்தவரல்லர் என்பார் காதரமடைந்தாள்போல எனவும், முன்னர்க்கேட்டதை மறந்தோர்க்குப் பின்னர்க் கேட்பதில் விருப்பமின்மை யியல்பாதலால் ஆதரமிலளாய்க் கேட்டாள் எனவுங் கூறினர். மன் அசைநிலை (ங)

Koviloor Digital Library

அராமுகமனையவல்குலணங்கினைநோக்கியேனை
யிராமுகமனையவுள்ளத்தேழைமார்போலவெம்பாற்
பராமுகையாகிவேதப்பயனொருப்படாதுகேட்டாய்
குராமுகையவிழ்ந்தகோதாயுற்றவிக்குற்றந்தன்னால்.

(இ-ள்.) அரா முகம் அனைய அல்குல் அணங்கினை நோக்கி - பாம்பின் படத்தை யொத்த அல்குலையுடைய உமாதேவியாரைப் பார்த்தருளி, ஏனை இராமுகம் அனைய உள்ளத்து ஏழைமார் போல - மற்ற இருள்போல இருண்ட மனத்தையுடைய இந்திராணி முதலிய தெய்வமாதர்போல, எம்பால் - எம்மிடத்தில், பராமுகை ஆகி வேதம் பயன் ஒருப்படாது கேட்டாய் - பராமுகமுடையையாய் வேதத்தின் பொருள் தேர்ச்சி பெறுமல் கேட்டனை, குரா முகை அவிழ்ந்த கோதாய்-குராவரும்பு மலர்ந்த அளகபாரத்தை யுடையாய், உற்ற இ குற்றம் தன் ஆல் - பொருந்திய இந்தப் பிழையினுல். (௭)

விரதமுமறனுமின்றிமீன்படுத்திழிஞரான
பரதவர்மகளாகென்றுபணித்தனன்பணித்தலோடும்
அரதனவாரந்தாழ்ந்தவாரமென்முலையாளஞ்சி
வரதநிற்பிரிந்துவாழவல்லனேயென்றுதாழ்ந்தாள்.

(இ-ள்.) விரதமும் அறனும் இன்றி மீன் படுத்து இழிஞர் ஆன பரதவர் மகள் ஆக என்று பணித்தவன் - நோன்பும் தருமமுஞ்சிறிதுமில்லாமல் மீன்பிடித்து இழி தொழிலுடையவரான நெய்தனிலத்தவர் புத்திரியாகக்கடவாயென்று பணித்தருளினர், பணித்தலோடும் - அவ்வாறு பணித்தருள, அரதநம் ஆரம் தாழ்ந்த ஆரம் மென் முலையாள் அஞ்சி - இரத்தினமாலைதோய்ந்தியசையும் சந்தனக்குழம்பையணிந்த மெல்லியதனத்தையுடைய உமாதேவியாரஞ்சி, வரத - வள்ளலே, நின் பிரிந்து வாழ வல்லனே என்று தாழ்ந்தாள் - (மரமுங்காழ்ப்பும்போலப் பிரியாதுநின்றயான்) தேவரீரைப் பிரிந்துவாழ வன்மையையுடையனேவென்று வணங்கினர்.

மாமுங் காழ்ப்பும்போலென்றது "ஒருவனேயிராவணுதிபாவகமுற்ருற்போலத் - தருவனிவ்வுருவமெல்லாந்தன்மையுந்திரியானுகும் - வரும்வடிவெல்லாஞ்சத்திசத்திதான்மாமுங்காழ்ப்பும் - இருமையும்போலமன்னிச்சிவத்தினேடியைந்துநிற்கும்" எனவருஞ் சித்தியாரால் உணர்க. (௮)

வீங்குநீர்ச்சடையானீங்குமெல்லியல்பரிவுநோக்கி
வாங்குநீர்க்கானல்வாழ்க்கைவலைஞர்கோன்மகளாய்வைகி
யாங்குநீவளர்நாள்யாம்போந்தருங்கடிமுடித்துமென்னுத்
தேங்குநீரமுதன்னுளைச்செலவிடுத்திருந்தானிப்பால்.

(இ-ள்.) வீங்கும் நீர் சடையான் நீங்கும் மெல்லியல் பரிவு நோக்கி - பெருக்கெடுக்குங் கங்கையையணிந்த சடாமகுடத்தை யுடைய பெருமானுர் தம்மி னின்று நீங்கும் உமாதேவியாருடைய கவலையை நோக்கி, வாங்கும் நீர் கானல் வாழ்க்கை வலைஞர் கோன் மகள் ஆய் வைகி-வளைந்த கடற்கரையிலுள்ள இளஞ்சோலையின் வாழ்க்கையையுடைய வலையால் முயன்றுண்ணும் பரதவர்தலைவன்புத்திரியாய்ப்பிறந்து, ஆங்கு நீ வளர் நாள் - அவ்விடத்தில் நீ வளருங்காலையில், யாம் போந்து அருங்

Koviloor Digital Library

கடி முடித்தும் என்று தேங்கும் நீர் அமுது அன்னனை செலவிடுத்து இருந்தான் - நாம்வந்து அரியதிருமணத்தை முடிப்போமென்று நிறைந்த நீர்மயமாகிய கடலிற் றோன்றிய அமுதினை யொத்த உமாதேவியாரைச் செல்ல ஏவி இருந்தருளினர், இ பால்-இப்புறம்.

கங்கையின்கணிடைச்சேரி என்றாற்போல வாங்குநீர்க்கானல் எனவந்தது. (௬)

அன்னதுதெரிந்துநால்வாயைங்கரக்கடவுடாதை
முன்னர்வந்திதனாலன்றேமூண்டவிச்செய்தியெல்லாம்
என்னவீர்ங்கவளம்போலாங்கிருந்தபுத்தகங்களெல்லாந்
தன்னெடுங்கரத்தால்வாரியெறிந்தனன்சலதிமீதால்.

(இ-ள்.) அன்னது தெரிந்து - அதனை யுணர்ந்து, நால் வாய் ஐங் கரம் கடவுள் - நான்றசையுந்திருவாயையும் ஐந்துதிருக்கரங்களையுமுடைய மூத்தபிள்ளையார், தாதை முன்னர் வந்து - தமது பிதாவின்முன் வந்து, இதனால் அன்றே இ செய்தி எல்லாம் மூண்ட என்ன - இதனாலல்லவோ இத்தீங்குகள் விளைந்தனவென்று, ஆங்கு இருந்த புத்தகங்கள் எல்லாம் ஈர்ங்கவளம் போல் தன்நெடுங் கரத்தால் வாரி சலதி மீது எறிந்தனன் - அவ்விடத்திருந்த திருமுறைகளையெல்லாந் தண்ணிய கவளம்போலத் தமது நெடிய திருக்கரத்தினால் வாரிக் கடல்மீதெறிந்தனர்.

யானைத்திருமுகம் என்பார் நால்வாய் எனவும், துதிக்கை யென்பார் நெடுங் கரம் எனவுங் கூறினார். (௭)

வரைபகவெறிந்தகூர்வேன்மைந்தனுந்தந்தைகையில்
உரைபெறுபோதநூலையொல்லெனப்பறித்துவல்லே
திரைபுகவெறிந்தானாகச்செல்வநான்மாடக்கூடல்
நரைவிடையுடையநாதனந்தியைவெகுண்டுநோக்கா.

(இ-ள்) வரை பக எறிந்த கூர் வேல் மைந்தனும் - கிரவுஞ்சகிரி பிளவுபட எறிந்த கூரியவேலையேந்திய குமாரக்கடவுளும், தந்தை கையில் உரை பெறுபோத நூலை ஒல்லென பறித்து - தமது பிதாவின் திருக்கரத்திலுள்ள புகழ்பெற்ற சிவஞானபோதமென்னு மெய்ந்நூலினை விரைந்துபறித்து, வல்லே திரை புக எறிந்தானாக - விரைந்து கடலில்வீழ எறிந்தருள, செல்வம் நான்மாடக் கூடல் நரைவிடை உடைய நாதன் - செல்வமிக்க நான்மாடக்கூடலிலெழுந்தருளிய வெள்ளிய இடபவூர்தியை யுடைய சோமசுந்தரக்கடவுள், நந்தியைவெகுண்டு நோக்கா-நந்திநாயனாரைச் சினந்து பார்த்தருளி. (௮)

அடுத்துநாமிருக்குஞ்செவ்வியறிந்திடாதிவரைவாயில்
விடுத்துநீயிருந்தாய்தீங்குவிளைந்ததுன்றனக்குமிந்தத்
தொடுத்ததீங்கொழியவின்றோர்சுறவுருவாகிவைய
முடுத்தகாரோதநீர்புக்குழல்கெனப்பணித்தான்மன்றே.

(இ-ள்.) அடுத்து நாம் இருக்கும் செவ்வி அறிந்திடாது - ஏகாந்தத்தானத்தை யடுத்து நாமிருக்கும் அமையத்தை யறியாமல், இவரை வாயில் விடுத்து நீ இருந்தாய் - இவரை வாயிலினின்றும் விடுத்து நீ வாளா இருந்தனை, தீங்கு விளைந்த

Koviloor Digital Library

து - (இதனால்) அபராதம் விளைந்தது, உன் தனக்கும் தொடுத்த இந்த தீங்கு ஒழிய உனக்கும் விளைந்த இந்த அபராதம் ஒழிதற்பொருட்டு, இன்று ஓர் சுறவு உரு ஆகி- இப்பொழுது ஒரு மகரமீன் வடிவாகி, வையம் உடுத்த கார் ஓதம் நீர் புக்கு உழல்க என பணித்தான் - நிலவுலகைச் சூழ்ந்த கரியகடலிற்சென்று சுழலக் கடவாயென்று பணித்தருளினர்.

அமையமுணாது விடுத்த அபராதத்திற்குத் தீர்வு இது என்பார் சுறவுரு வாகி வையம் உடுத்தகாரோத நீர்புக்குழல்கென என்றார். (௬)

வெருவருஞ்செலவின்வேழமுகத்தனை விதித்தசாபப்
பெருவலிதன்னைச்சாரும்பெற்றியாற்சாபங்கூறு
னருவரைநெஞ்சுபோழ்ந்தவள்ளிலைவடிவேற்செங்கை
முருகனைவணிகர்தம்மின்மூங்கையாகென்றுனிப்பால்.

(இ-ள்.) வெருவு அருஞ் செலவின் வேழ முகத்தனை - அஞ்சுதலில்லாத செலவினையுடைய யானைமுகக் கடவுளுக்கு, விதித்த சாபம் பெருவலி- இடுஞ் சாபமாகிய பெரியவன்மை, தன்னை சாரும் பெற்றியால் சாபம் கூறான் - தன்னை யடையுந் தன்மையாலவர்க்குச் சாபமிடாது, அருவரை நெஞ்சு போழ்ந்த அள் இலை நெடு வேல் செம் கை முருகனை - வெல்லுதற்கரிய கிரவுஞ்சகிரியின் மார்பைப் பிளந்த கூரியவெற்றிலைபோலத் தகட்டுவடிவமைந்த வேலையேந்திய செவந்த திருக்கரத்தையுடைய முருகக்கடவுளை, வணிகர் தம் இல் மூங்கை ஆக என்றான் - வைசியர்குலத்துள் ஊமையாக அவதரிப்பா யென்று சபித்தருளினர். இ பால் - இப்புறம். ()

நாயகனேவலாலேநாயகிவலைஞர்மாத
ராயதுநந்திப்புத்தேளடுசுறவாகிமுந்நீர்
மேயதுங்கருணைவள்ளன்மீன்படுத்தணங்கைவேட்டுப்
போயதுமவட்குக்கேள்விபுகன்றதுமுறையிற்சொல்வாம்.

(இ-ள்.) நாயகன் ஏவலாலே - சிவபெருமானுடைய ஏவலினால், நாயகி வலைஞர் மாதர் ஆயதும் - உமாதேவியார் பரதவர் திருமகளா யவதரித்ததையும், நந்தி புத்தேள் அடு சுறவு ஆகி முந்நீர் மேயதும் - நந்திநாயனார் கொல்லுதற்றொழிலையுடைய மகரமீன் வடிவமாகிக் கடலை யடைந்ததையும், கருணை வள்ளல் மீன்படுத்து அணங்கை வேட்டு போயதும்-கருணை சொரூபியாகிய அச்சோமசுந்தரக்கடவுள் அச்சுறவினைப் பிடித்து அம்மையாரைத் திருமணஞ்செய்து சென்றருளியதையும், அவட்கு கேள்வி புகன்றதும் - அவ்வம்மையார்க்குத் திருவுத்தரகோசமங்கையில் உபதேசஞ் செய்தருளியதையும், முறையில் சொல்வாம் - முறையாக இனிக் கூறுவாம். (௧௧)

கலிநிலைத்துறை.

சூழும்வார்திரைவையயந்துறைகெழுநாட்டுட்
கிழையார்கலிமுகத்ததுநெய்தலங்கிழ்நீ
ராழநீள்கருங்கழியகழ்வளைந்துகாரளைந்த
தாழைமுதெயிறுடுத்ததோர்தண்டுறைப்பாக்கம்.

(இ-ள்.) சூழும் வார் திரை வையம் அம் துறை கெழு நாட்டுள் கிழை ஆர் கலி முகத்தது - சூழ்ந்த நெடிய அலைகளையுடைய வையையின் அழகிய நீர்த்துறை

Koviloor Digital Library

மிக்க பாண்டிநாட்டின் கீழ்பாலுள்ள கடலின் முகத்திலுள்ளதாகிய, ஓர் தண் துறை பாக்கம்-ஒப்பில்லாத தண்ணிய நீர்த்துறைகள் வாய்ந்த நெய்தனிலத்தூரொன்று, நெய்தல் கீழ் நீர் ஆழம் நீள் கருங்கழி அகழ் வளைந்து - நெய்தனிலத்திலுள்ள கூவல்களமைந்த ஆழ்ந்த நீண்ட பெரிய கழியாகிய அகழியாற் சூழப்பட்டு, கார் அளைந்த தாழை மூது எயில் உடுத்தது-மேகங்களளாவிய தாழையாகிய பெரியமதிலாற் சூழப்பட்டுள்ளது.

நகரிற்கு அகழுமதிலும் அரணாதலாற் கழியையும் தாழையையும் அகழாகவு மதிலாகவும் உருவகஞ்செய்தார். கீழ்நீர் தானியாகு பெயராய்த் தானத்தின்மேல் நின்றது. (௧௨)

முடங்குமுள்ளிலையாற்புதைந்தெதிரெதிர்மொய்த்து
நுடங்குகைதைபோதொடுவளிநூக்கநின்றசைவ
மடங்குமெய்யராய்க்கையிருங்கேடகவட்டத்
தடங்கிவாள்பனித்தாடமராற்றுவாரனைய.

(இ-ள்.) முடங்கு முள் இலையால் புதைந்து எதிர் எதிர் மொய்த்து நுடங்கு கைதை - மடங்கிய முள்வாய்ந்த இலைகளால்மூடிபட்டுத் தம்முள் எதிரெதிரே நெருங்கித் துவளுந் தாழையானவை, போது ஒடு வளி நூக்க நின்று அசைவ-மலர்களோடு காற்றலைக்க நின்றசைதல், மடங்கு மெய்யர் ஆய் கை இருங் கேட்க வட்டத்து அடங்கி - வளைந்த சரீரத்தையுடையவராகிக் கையிலேந்திய பெரியகேடகத்துளடங்கி, வாள் பனித்து ஆடு அமர் ஆற்றுவார் அனைய - வாளையசைத்து வெற்றியைத் தரும் போர்செய்வோரை யொத்திருந்தன.

தாழையைப் போர்செய்வோர் ஆகவும், முள்ளிலைகளைக் கேடகமாகவும், மலரை வாளாகவும் உவமைக்கேற்பப் பொருளைவிரித்துணர்க. (௧௩)

புலவுமீனுணக்கோசையும்புட்களோப்பிசையும்
விலைபகர்ந்திடுமமலையுமீன்கொள்கம்பலையும்
வலையெறிந்திடுமரவமும்வாங்குமாரவமும்
அலையெறிந்திடுபரவைவாயடைப்பனமாதோ.

(இ-ள்.) புலவு மீன் உணக்கு ஓசையும்-புலானாற்றம்வீசு மீன்களைப் புலர்த்தும் சத்தமும், புள் கள் ஓப்பு இசையும் - கவரவருங் காக்கைமுதலிய பறவைகளை யோட்டு மோசையும், விலை பகர்ந்திடும் அமலையும் - மீன்விற்கும் ஆரவாரமும், மீன் கொள் கம்பலையும் - மீன்வாங்கு முழக்கமும், வலை எறிந்திடும் அரவமும் - வலைவீசுங் கம்பலையும், வாங்கும் ஆரவமும் - அவ்வலையை யிழுக்கும் அமலையும், அலை எறிந்திடு பரவை வாய் அடைப்பன-அலைவீசுங் கடலின்வாயை யடைக்காநிற்கும். (௧௪)

வாட்டுநுண்ணிடைநுளைச்சியர்வண்டலம்பாவைக்
கூட்டுகின்றசோறருகிருந்துடைந்தபைங்கைதை
பூட்டுகின்றனசித்திலம்பொருகடற்றரங்கஞ்
சூட்டுகின்றனகடிமலர்சூழல்சூழ்ஞாழல்.

(இ-ள்.) அருகு இருந்து உடைந்த பைங் கைதை - அருகேயிருந்து முறுக்கவிழ்ந்த தாழைமலர், வாட்டும் நுண் இடை நுளைச்சியர் - தனங்கள் வாட்டும் நுண்

Koviloor Digital Library

ளிய இலட்சையுடைய பரதவச்சிறுமியர், வண்டல் அம் பாவைக்கு சோறு ஊட்டுகின்ற - விளையாட்டிடத்துள்ள பதுமைக்குச் சோறூட்டா நின்றன, பொரு கடல் தரங்கம் - கரையோடுமோதுங் கடலலையானது, நித்திலம் பூட்டுகின்றன - முத்து மாலைபூட்டாநின்றன, குழல் சூழ் ஞாழல்-சோலையிற்சூழ்ந்த குங்குமமரங்கள், கடி மலர் சூட்டுகின்றன - மணமிக்க மலர்களைச் சூட்டாநின்றன.

சோறு என்றது அதன் மகரந்தத்தை. (௪௫)

நிறைந்ததெண்கடலாடிநீணெறியிடைச்செல்வோர்க்
கறந்தெரிந்தபோற்பொதிந்தசோறவிழ்ப்பனதாழை
சிறந்தமுத்தொடுபசும்பொனும்பவளமுந்திரட்டிப்
புறந்தெரிந்திடக்கொடுப்பனமலர்ந்தபூம்புன்னை.

(இ-ள்.) நிறைந்த தெள் கடல் ஆடி - நீர்நிறைந்த தெள்ளியகடலில் நீராடி, நீள் நெறி இடை செல்வோர்க்கு-நெடுந்தூரஞ் செல்லும் தீர்த்தயாத்திரையோர்க்கு, அறம் தெரிந்த போல் - அறநூலுணர்ந்தனபோல, (ஊட்டுதற்கு) தாழை பொதிந்த சோறு அவிழ்ப்பன-தாழைகள் கட்டமுதையவிழ்த்தல்போலமடல்களையவிழ்ப்பன, மலர்ந்த பூம் புன்னை - மலர்ந்த பொலிவினையுடைய புன்னைமரங்கள், சிறந்த முத்தொடு பசும் பொனும் பவளமும் திரட்டி புறம் தெரிந்திட கொடுப்பன - சிறந்த முத்தக்களோடு பசியபொன்னையும் பவளத்தையுந் திரட்டிப் புறத்திலுள்ளோர்க்குத் தெரியக்கொடுத்தல்போலக் கொடாநின்றன.

பொதிந்தசோறு, முத்த, பொன், பவளம் என்னும் உவமைச் சொற்களால் மகரந்தம் அரும்பு, மலர்கள் என்றும் உபமேயங்களை யிலக்கணையாகக் கூறுதலால் உருவகவுயர்வு நவிற்சியணி. (௪௬)

கொன்றுமீன்பகர்பரதவர்குரம்பைகடோறுஞ்
சென்றுதாவிமேற்படர்வனதிரைபடுபவள
மன்றல்வார்குழனுளைச்சியர்மனையின்மீனுணக்கு
முன்றில்சிப்பனகடலிடுமுழுமணிக்குப்பை.

(இ-ள்.) கொன்ற மீன் பகர் பரதவர் குரம்பைகள் தோறும் - பிடித்த மீன் களைவிற்கும் பரதவருடைய குடிசைகள்தோறும், திரை படு பவளம் சென்று தாவி மேல் படர்வன - கடலில்தோன்றிய பவளம்போய்த்தாவி மேலே படராநின்றன, கடல் இடும் முழு மணி குப்பை - அக்கடலி னலைகள்வீசும் பருத்தமுத்தினிராசிகள், (சென்று) மன்றல் வார் குழல் நுளைச்சியர் மனையின் மீன் உணக்கும் முன்றில் சீப்பன - வாசமிக்க நீண்டகூந்தலையுடைய பரதவப்பெண்கள் தத்தம் வீடுகளில் மீனினையுலர்த்து முற்றத்திற்வீழ்ந்து அதனிலைகளைக் குலைப்பன. (௪௭)

கூற்றம்போன்றகண்ணுளைச்சியர்குமுதவாய்திறந்து
மாற்றம்போக்கினர்பகர்தருங்கயற்குநேர்மாறுந்
தோற்றம்போக்குவவவர்விழித்துணைகளக்கயன்மீ
னூற்றம்போக்குவதவர்குழனறைமலர்க்கைதை.

(இ-ள்.) கூற்றம் போன்ற கண் நுளைச்சியர் குமுதம் வாய் திறந்து மாற்றம் போக்கினர் பகர்தரும் கயற்கு-இயமனையொத்த கண்களை யுடைய பரதவப்பெண்க

Koviloor Digital Library

ள் ஆம்பல்போன்ற வாயைத்திறந்து விலைபகருங் கயன்மீனுக்கு, அவர் விழி துணைக ள் நேர் மாறு ஆம் தோற்றம் போக்குவ-அப்பெண்களி னிரண்டுகண்களும் தத்தமக் கு நேரே பகையாயுள்ள காட்சியை யொழிப்பன, அவர் குழல் நகை மலர் கைதை அகயல் மீன் நாற்றம் போக்குவ-அப்பெண்களது கூந்தலிலணிந்துவிளங்குந் தாழை மலர்கள் அக்கயல்மீன் புலானாற்றத்தை யொழிப்பன.

கயலைவென்றன என்பார் நேர்மாறுந்தோற்றம் போக்குவ என்றார். (கஅ)

அலர்ந்தவெண்டிரைக்கருங்கழிக்கிடங்கரினரும்பர்
குலைந்தவிழ்ந்துதேன்றுளும்பியகுமுதமேயல்ல
கலந்தருங்கடலெறிகருங்காற்பனங்கள்வாய்
மலர்ந்தருந்தியகுமுதமுமொய்ப்பனவண்டு.

(இ-ள்.) அலர்ந்த வெள் திரை கருங் கழி கிடங்கரின் - பரந்த வெள்ளிய அலைகளையுடைய பெரியகழியாகிய கிடங்குகளில், அரும்பர் குலைந்து அவிழ்ந்து தேன் துளும்பிய குமுதமே அல்ல - அரும்பின் கட்டவிழ்ந்து கள்ததும்பிய ஆம்பல்மலரி ன்மட்டிலுமேயல்ல, கலம் தரும் கடல் எறி கருங்கால் பனங்கள் - மரக்கலந்தவழு ம் கடலலைமோதும் தூரையுடைய பனங்கள்ளை, வாய் மலர்ந்து அருந்திய குமுதம் உம் வண்டு மொய்ப்பன - வாய்திறந்துண்ட பரதவப் பெண்களுடைய வாயாகிய ஆம்பலிலும் வண்டுகள் மொய்க்காநின்றன. (கக)

ஆயபட்டினத்தொருவன்மேலாற்றியதவத்தாற்
றூயவானவர்தம்மினுந்தூயனாய்ச்சிறிது
தீயதீவினைச்செய்தியாற்றிண்டிமில்வாணர்
மேயசாதியிற்பிறந்துளான்மேம்படுமனையான்.

(இ-ள்.) ஆய பட்டினத்து - இவ்வாறு வளம்நிறைந்த அந்தப்பாக்கத்தில், ஒருவன்மேல் ஆற்றிய தவத்து ஆல் - அந்நெய்தனிலத் தலைவனொருவன் முற்பிறப்பி ற்செய்த பெருந்தவத்தினால், தூய வானவர் தம்மின் உம் தூயன் ஆய் - புனிதமுள் ளதேவர்களினும் புனிதமுள்ளவனாய், சிறிது தீய தீவினை செய்தியால் - கழிந்தபிற ப்பிற் சிறிதுசெய்த கொடியதீவினையின் பகுதியால், திண் திமில் வாணர் மேய சா தியில் பிறந்து உள்ளான் - திண்ணிய தோணியில் மீன்பிடித்து வாழ்வோர் பிறந்த பரதவகுலத்திற் பிறந்தவன், மேம்படும் அனையான் - (இழிகுலத்திற் பிறந்தவனாயி னும்) அவர்களுள் மேம்பட்ட அத்தலைவன்.

உமையாளைத் திருமகளாகப்பெறும் பேறுடையனாதலால் தூயவானவர்தம் மினுந்தூயனாய் என்றார். (உ0)

செடியகாருடற்பரதவர்திண்டிமினடத்தா
நெடியவாழியிற்படுத்தமீன்றிறைகொடுநிறைக்குங்
கடியவாயிலோனவர்க்கெலாங்காவலோனேற்றுக்
கொடியவானவனடிக்குமெய்யன்புசால்குணத்தோன்.

(இ-ள்.) செடியகார் உடல் பரதவர் திண் திமில் நடத்தா நெடிய ஆழியில் படுத்த மீன்திறை கொடு நிறைக்கும் கடிய வாயிலோன் - முடைநாற்றத்தையுடைய கரியசரீரத்தையுடைய பரதவர்கள் திண்ணிய தோணியைநடத்தி நீண்டகடலிற்பி

Koviloor Digital Library

டித்த மீனைத் திறையாகக்கொண்டு நிறைக்குங் காவல்பூண்ட வாயிலையுடையவன், அவர்க்கு எல்லாம் காவலோன் - அவர்களுக்கெல்லா மரசனாயுள்ளோன், ஏறு கொடிய வானவன் அடிக்குமெய் அன்புசால் குணத்தோன் - இடபக்கொடியையுடைய சிவபெருமானார் திருவடிக்கீழ் மெய்யன்புநிறைந்த குணத்தையுடையவன். (௨௧)

மகவிலாமையாலாற்றநாண்மறுமையோடிம்மைப்
புகலிலானெனவருந்துவானொருபகற்போது
தகவுசால்பெருங்கிளையொடுஞ்சலதிமீன்படுப்பா
னகலவார்கலிக்கேகுவானதன்கரையொருசார்.

(இ-ள்.) ஆற்ற நாள் மகவு இல்லாமையால் - அநேகநாள் புத்திரப்பேறில்லாமையால், மறுமையோடு இம்மை புகல் இல்லான் எனவருந்துவான் - பரலோகத்தோடு இகபோகத்தையும்பெறாதவனைப்போல வருந்துகின்ற அப்பரதவர்குலபதி, ஒருபகற்போது - ஒருதினம், தகவுசால் பெருங்கிளையொடும் - தத்தஞ்சாதிதருமத்திற் பெருந்தன்மையமைந்த பெரியசுற்றத்தாரோடும், சலதிமீன் படுப்பான்-கடலிலுள்ள மீனைப்பிடிக்க, அகலம் ஆர்கலிக்கு ஏகுவான் அதன்கரை ஒருசார் - பரந்த கடலிற்குச் செல்லுகின்றவன் அக்கடலின்கரையி லொருபக்கத்தில். (௨௨)

தக்கமேருமாமலைமகனோடையிற்றவத்தான்
மிக்கமீனவன்வேள்வியில்விரும்பியமகவாய்ப்
புக்கநாயகிதன்பதியாணையாற்புலவு
தொக்கமீன்விலைவலைஞன்மேற்றவப்பயன்றூர்ப்ப.

(இ-ள்.) தக்கமேருமா மலைமகன் - (மலைகளுள்) மேம்பட்ட இமபர்வதராசனுடைய, ஓடையில் - மலர்த்தடத்திலும், தவத்தால் மிக்க மீனவன் வேள்வியில்- தவத்தால் மேம்பட்ட பாண்டியன்யாகத்திலும், விரும்பியமகவு ஆய் புக்கநாயகி- விரும்பப்பட்ட புத்திரியாய்வந்தருளிய இறைவி, தன்பதி ஆணையால் - தமதிறைவன் அனுஞையால், புலவுதொக்க மீன்விலைவலைஞன் மேல்தவம் பயன் தூர்ப்ப - புலால் நாற்றமிக்க மீன்விற்கும் வலைஞர்கோமான் முற்பிறப்பிற்செய்த தவப்பேறுமுதிர.

மேருவின்சிறப்பாதலால் இமயத்தை மேருவென்றார். தக்கனுக்குப் புத்திரியாக அவதரித்த குறைநீக்கவருளாயென்று பெருமாட்டிபணியப், பெருமானார் இமபர்வதராசன் நின்னைப்புத்திரியாகப்பெறுதற்கு அநேகநாள் அரியதவஞ்செய்கின்றவன் அவனுக்குப் புத்திரியாக அவதரிப்பாய் யாம்வந்து மணம்புரிவோமென்றருள, விடைபெற்று இமயமலைக்குச்சென்று அங்குள்ள ஓர்மலர்த்தடத்தின் கரையில் அவ்வரசன் தவஞ்செய்தலைநோக்கி யவனுக்கு அருளுதற்பொருட்டு அத்தடத்திலுள்ள தாமரைமலரில் மகவுருவா யவதரித்தனர் என்பது "கற்பனைமுதலிய கடந்தகண்ணுதற் - றற்பரநிலையிகழ் தக்கன்றன்னிடைப் - பற்பகல்வளர்ந்தவன் பயந்தமாதெனச் - சொற்படுநாமமுஞ் சுமந்தளேனென. அன்னதோர்தடத்திடை யசலமன்னவன் - மன்னியகௌரிதன் மகண்மையாகவுந் - தன்னிகரிலாவரன் றனக்குநல்கவும்- முன்னுறவருந்தவ முயன்றனவிதன். மெய்த்தவமியற்றிய வெற்பன்காணிய-அத்தடமலருமோ ராவிந்தத்தின்மேற் - பைத்ததோர்குழவியின் படிவத்தாற்றனள்-எத்திறத்துயிரையு மீன்றதொன்மையாள்" எனக்காந்தம் பார்வதிப்படலத்தில்வருதல் காண்க. (௨௩)

Koviloor Digital Library

இச்சையாலவனன்பினுக்கிரங்குவாள்போலச்
செச்சைவாய்திறந்தழுதொருதிருமகவாகி
நெய்ச்சபாசிலைப்புன்னைநன்னிழலிற்கிடந்தாண்
மைச்சகாருடற்கொடுந்தொழில்வலைஞர்கோன்கண்டான்.

(இ-ள்.) இச்சை ஆல் அவன் அன்பினுக்கு இரங்குவாள்போல-தமதிச்சையா லவ்வரசனன்பிற்குக் இரங்கியருள்வார்போல, செச்சைவாய்திறந்து அழுது ஒருதிரு மகவு ஆகி - செவந்த திருவாய்திறந்தழுது ஒருதிருமகவாய், நெய்ச்ச பாசு இலை புன்னை நல் நிழலில் கிடந்தாள் - நெய்ப்பற்றையுடைய பசிய இலைகள் நிறைந்த புன்னைமரத்தினிழலிற்கிடந்தருளினர், மைச்ச கார் உடல் கொடுந்தொழில் வலைஞர் கோன் கண்டான் - கரிய பெரிய சரீரத்தையும் கொடியதொழிலையுமுடைய பரதவர் கோமான்பார்த்தனன்.

நெய்த்த, நெய்ச்ச, மைத்த, மைச்ச போலி. ஆலாஸ்யமகாத்மியத்தில் வலம்புரிச்சங்கமாய் வீசியவலையிலகப்பட்டுப் பின்னர் மகவுருவாயினர் எனக்கூறியிருக்கிறது. கருமை பெருமை. கருமையின்றிரிபு கார் ஆதலால் பெரிய என்றும். (௨௪)

கார்கொணீர்த்திருமாதுகொல்கரந்துநீருறையும்
வார்கொள்பூண்முலைமடந்தைகொல்வரத்துறைவாழ்க்கைத்
தார்கொள்பூங்குழலணங்குகொறடங்கணுமிமைப்ப
வார்கொலோமகவாகியீண்டிருந்தவளென்னு.

(இ-ள்.) கார் கொள் நீர் திருமாது கொல்- கடலில் தோன்றிய திருமாதோ, கரந்து நீர் உறையும் வார் கொள் பூண் முலை மடந்தை கொல் - மறைந்து நீரில்வசிக்கும் கச்சிறுக்கிய ஆபரணந்தாங்கிய தனத்தையுடைய நீரரமகளோ, வரத்து உறை வாழ்க்கை தார் கொள் பூங்குழல் அணங்கு கொல் - வரத்தில்வசிக்கும் வாழ்வினையுடையமாலையையணிந்த பொலிவமைந்த கூந்தலையுடைய வரவரமகளோ, தட கண்ணும் இமைப்ப - பரந்தகண்களு மிமைகொட்டாநின்றன, மகவு ஆகி ஈண்டு இருந்தவள் ஆர் கொல்லோ என்னு - பிள்ளைத் திருவுருவாகி யிவ்விடத்திருக்கும் பெண் யாரோவென்று.

காட்சிநிகழ்ந்த வழிப் பொழுதால் ஐயம்நிகழ்ந்ததென்பார் கார்கொணீர்த்திருமாதுகொல்கரந்துநீருறையும் - வார்கொள்பூண்முலைமடந்தைகொல்வரத்துறைவாழ்க்கைத்-தார்கொள்பூங்குழலணங்குகொல் எனவும், மானுடமாதெனத்தெளிந்தான் என்பார் தடங்கணுமிமைப்ப எனவும்,மானுடமாதருள் எந்நிலத்துமாதோவென ஐயநிகழ்ந்த தென்பார் ஆர்கொலோ மகவாகியீண்டிருந்தவளென்னு எனவுங் கூறினனென்றார். (௨௫)

பிள்ளையின்மையேற்கிரங்கியெம்பிரான்றமிழ்க்கூடல்
வள்ளனல்கியமகவிதுவேயெனவலத்தோ
டுள்ளவன்புகூர்ந்தெடுத்திருதோளுறப்புல்லித்
தள்ளருந்தகைக்கற்பினுடனதுகைக்கொடுத்தான்.

(இ-ள்.) பிள்ளை இன்மை யேற்கு இரங்கி எம்பிரான் தமிழ் கூடல் வள்ளல் நல்கிய மகவு இது ஏ என்ன-மகப்பேறில்லாத எனக்கு அருள்கூர்ந்து எமதுபெருமானாகிய தமிழ்நிறைந்த நான்மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளரு

Koviloor Digital Library

ளியமகப்பேறிதவேயென்று,வலத்தோடு உள்ளம் அன்புகூர்ந்து எடுத்து இருதோள் உறபுல்லி- ஊக்கத்தோடு மனத்தில் அன்புமிக்கெடுத்து இரண்டுதோள்களிலும்பொருந்தத்தழுவி, தன் அருந் தகை கற்பினாள் தனது கை கொடுத்தான் - நிகருதலில்லாத பெருந்தன்மைவாய்ந்த கற்பினையுடைய தன்தமனைவியின்கையிற்கொடுத்தனன்.

மீட்டும் ஒருவகையாகத் தெளிந்தான் என்பார் பிள்ளையின்மையேற்கிரங்கி யெம்பிரான்றமிழ்க்கூடல்வள்ளல் நல்கியமகவிதுவேயெனவும், தமிழ்பிறந்த எல்லையென்பார் தமிழ்க்கூடல் எனவும், இழந்த ஊக்கம் வந்தது என்பார் வலத்தொடு எனவுங்கூறினர். ஏகாரம் தேற்றம். (௨௬)

பிறவியந்தகன்றெரிந்துகண்பெற்றெனக்கழிந்த
வறியனீணிதிபெற்றெனவாங்கினாள்வலைஞ
ரெறியும்வேலையினார்த்தனர்கையெறிந்திரட்டிக்
குறியவாணகைவலைச்சியர்குழறினார்குரவை.

(இ-ள்.) பிறவி அந்தகன் தெரிந்து கண் பெற்றால் என்ன - பிறவிக்குருடன் (விடயங்களை) உணரக் கண்பெற்றாற்போலவும், கழிந்த வறியன் நீள் நிதி பெற்றால் என்ன - மிக்க வறுமையுடையோன் பெரிய வைப்பு நிதியைப் பெற்றாற்போலவும், வாங்கினாள் - (தன்கணவன்கையினின்றும்) வாங்கினாள், வலைஞர் எறியும் வேலையின் ஆர்த்தனர் - நெய்தனிலமாக்கள் அலைவீசும் கடல்போலக் கோஷித்தார்கள்,குறிய வாள் நகை வலைச்சியர் - சிறியவொள்ளிய நகையையுடைய அந்நெய்தனிலப்பெண்கள், கை எறிந்து இரட்டி - கைவீசி, குரவை குழறினர் - குரவைப்பாடல் பாடினார்கள்.

பிறந்தபோதே கண்ணில்லாதவனும், தோன்றியகாலந்தொட்டு வறங்கூர்ந்தவனும் இடையில் கண்ணையும் வைப்புநிதியையும்பெற்றால் அவர்கள்பெறுமகிழ்ச்சிக்கு ஒரெல்லையில்லாமைபோல, இயல்பாகவே மகப்பேறில்லாத நெய்தனிலத்தலைவி இடையில் மகப்பேறடைந்தமையால் அடைந்தமகிழ்ச்சி சொல்லளவையிற்பட்டதன்றென்பார் பெற்றெனவாங்கினாள் என்றார். (௨௭)

பிழையில்கற்புடைமனைவியும்பெறாதுபெற்றெடுத்த
குழவியைத்தடங்கொங்கையுங்கண்களுங்குளிரத்
தழுவிமுத்தமிட்டுச்சிமோந்தன்புளந்ததும்ப
வழகிதாகியமணிவிளக்காமெனவளர்ப்பாள்,

(இ-ள்.) பிழை இல் கற்பு உடைய மனைவியும் - தவறுதலில்லாத கற்பினையுடைய நெய்தனிலத்தலைவன் மனையாளும், பெறாது பெற்று எடுத்த குழவியை - வருந்திப்பெறாத தவத்தின் முதிர்ச்சியாற் பெற்றெடுத்த மகவினை, தட கொங்கையும் கண்களும் குளிர தழுவி - பருத்த தனங்களுங் கண்களுங் குளிர்ப்பேறப் புல்லி, முத்தம் இட்டு உச்சி மோந்து அன்பு உளம் ததும்ப - முத்தமிட்டு உச்சிமோந்து அன்பு மனத்தினின்று மீதூர, அழகிது ஆகிய மணி விளக்கு ஆம் என வளர்ப்பாள் - பொலிவமைந்த இரத்தினவிளக்கைப்போல் வளர்ப்பாளாயினாள்.

தனது கலங்காநிலையினின்றும் ஒருநாளும் பிறழாள் என்பதுதோன்றப் பிழையில் கற்பெனவும், உடல்விளர்த்து நரம்புபசந்து கண்குழிந்து ஊவெறுத்து வருந்திப் பெறாமைதோன்றப் பெறாதெனவும், முற்பிறப்பில் நரம்புதோன்ற வுடன்மெலிந்து கண்பஞ்சடைய நோற்றுப் பெற்றமைதோன்றப் பெற்றெடுத்து எனவும்,

Koviloor Digital Library

கொங்கை பால் சுரந்தமையும் கண்கள் மெத்தென்ற ஒளிபெற்றமையுந் தோன்றத் தடங்கொள்கையுங் கண்களுங் குளிரத்தழுவி யெனவும், மணிவிளக்கு என்றும் பொலிவழியாது நிற்றல்போலத் தமதியற்கைப்பொலிவோடுந் தவர்முதலியவை நிமிர்ந்து நீராட்டலும் ஊட்டலுமாகிய தொழில்களாற் பொலிவுமிக்கு வளர்தல் தோன்ற மணிவிளக்காம் எனவும், சாணைபிடித்த மணி என்பது தோன்ற அழகிதாகிய மணி யெனவுங் கூறினர். (உஅ)

புலவுமீன்விலைப்பசும்பொனாற்செய்தபல்பூணு
மிலகுமாரமும்பாசியுங்காசிடையிட்டுக்
குலவுங்கோவையுஞ்சங்கமுங்குலத்தினுக்கிசைய
வலகிலாதபேரழகினுக்கழகுசெய்தணிந்தாள்.

(இ-ள்.) புலவு மீன் விலை பசும் பொன்னாற்செய்த பல்பூணும் - புலால்நாற்றம் வீசு மீன்விற்றீட்டிய பசிய பொன்னாற்செய்த பல ஆபரணங்களையும், இலகும் ஆரமும் பாசியும் இடை காசு இட்டு குலவும் கோவையும்-விளங்கு முத்தும் பாசியும் ஆகிய இவற்றினோடு அவற்றி னிடையிடையே யிரத்தினங்களைக் கோவைசெய்து விளங்குங்கோவையையும், சங்கமும்-அக்குமணிகளையும், குலத்தினுக்கு இசைய-தமது குடிப்பிறப்பினுக்குப்பொருந்த, அலகு இல்லாத பேர் அழகினுக்கு அழகு செய்து அணிந்தாள்-எல்லையில்லாத பேரழகுக்கோரழகுசெய்தல்போல அணிந்தோம்பினள்.

பொன்னாற்செய்த அணியும் குடிப்பிறப்பிற் கேற்பச்செய்த தென்பார் குலத்தினுக்கிசைய வெனவும், இயல்பாகவே யமைந்த பேரழகிற் கிவை மிகை யென்பார் அலகிலாத பேரழகினுக்கு எனவுங் கூறினர். (உகூ)

தொண்டைவாய்வலைச்சிறுமியர்தொகையொடுந்துறைபோய்
வண்டலாடியுநித்திலமாமணிகொழித்துங்
கண்டன்ஞாழல்சூழ்கானலங்கடிமலர்கொய்துங்
கொண்டலோதிபின்றாழ்தரக்குரைகடல்குளித்தும்.

(இ-ள்.) தொண்டை வாய் வலைச்சிறுமியர் தொகையொடும் - கோவைக்கனி போலச் செவந்த வாயையுடைய பரதவச் சிறுமியர் கூட்டத்தோடும், துறைபோய் வண்டலாடியும் - கடற்றுறைக்குச்சென்று சிற்றில் கோலிவிளையாடியும், நித்திலம் மாமணிகொழித்தும் (முச்சிலால்) முத்தங்களைக் கொழித்தும், கண்டல் ஞாழல் சூழ் கானல் அம் கடிமலர் கொய்தும் - தாழையுங் குர்கும மரங்களுஞ் சூழ்ந்த இளஞ்சோலைகளிலுள்ள பொலிவு வாய்ந்த வாசமிக்க மலர்களைக்கொய்தும், கொண்டல் ஓதி பின் தாழ் தர குரை கடல் குளித்தும் - மேகம்போலக் கருநிறம்வாய்ந்த கூந்தல் பின்னாற்சரிய ஒலிக்குங் கடலில் நீராடியும்.

சிற்றில் விளையாட்டிற் கமைய அரிசியாகக் கொண்டார் என்பார் நித்திலமாமணி கொழித்தும் எனவுங் கூறினர். (௩0)

தளர்ந்தபைங்கொடிமருங்குலுந்தன்னுயிர்த்தலைவ
னளந்தவைகலுங்குறைபடவவனிடத்தார்வங்
கிளர்ந்தவன்புமொண்கொங்கையுங்கிளரநாட்சிறிதில்
வளர்ந்துவைகினாள்வைகலுமயிலொலாம்வளர்ப்பாள்.

(இ-ள்.) தளர்ந்த பைங்கொடி மருங்குலும் - ஒசிந்த பசிய கொடிபோன்ற இடையும், தன் உயிர்த்தலைவன் அளந்த வைகலும் குறைபட - தமதுயிர்க்கிழவராகிய

Koviloor Digital Library

சிவபெருமானார்வரையறுத்த நாளும் சிறுபிவரவும்,அவன் இடத்து ஆர்வம் பிளர்ந்த அன்பும் ஒன் றொன்றையும் மீள - அப்பெருமானாரிடத்தில் ஆசைமேலிட்டு விளங்குமன்பும் ஒன்னியதனைக்களும்வளர்ந்துதோன்றவும்,வைகலும் உயிர் எல்லாம் வளர்ப்பாள் - நாள்தோறும் எல்லா உயிர்களையு மோம்பி வளர்க்கும் பிராட்டியார், சிறிது காலில் வளர்ந்த வைகிருள் - சிறிது பொழுதில் வளர்ந்திருந்தனர்.

பெதும்பைப் பருவத்திற்கு மங்கைப்பருவத்திற்கு மிடையிலுள்ள நாள் என்பார் அளந்த வைகலும் எனவும், தொடர்புபற்றிச்செல்லும் அன்பு முதிர்ந்தவழி ஆசைவளரும் என்பார் அவனிடத்தார் வங்கிளர்ந்த அன்பும் எனவுங்கூறினார். குலைகுனிக்கு ஒற்றுமை யுண்மையால் குலைவிலையைக் குனிமேலேற்றி ஆர்வங்கிளர்ந்த அன்பு என்றார். (௩௧)

ஆலவாயுடைநாயகனேவியவாறே
மாலைதாழிளமதிச்சடைமகுடமுங்கரங்க
ளாறுமாகியவடிவுடைநந்தியுஞ்சுறவக்
கோலமாகிவெண்டிரைக்கடல்குளித்தினிதிருந்தான்.

(இ-ள்.) ஆலவாய் உடைய நாயகன் ஏவிய ஆறே - திருவாலவாயுடைய சோமசுந்தரக்கடவுள் ஏவிய வண்ணமே, மாலை தாழ் இள மதி சடை மகுடமும் கரங்கள் நாலும் ஆகிய வடிவு உடைய நந்தியும் - மாலைபோலத் தாழ்ந்தசையும் பிறையையணிந்த சடைமகுடத்தையும் திருக்கரங்கள் நாலையும்வாய்ந்த திருவுருவத்தையுடைய நந்திநாயகனும், சுறவம் கோலம் ஆகி வெள் திரை கடல் குளித்து இனிது இருந்தான்-மகரமீன் வடிவமைந்து வெள்ளிய அலைகளையுடைய கடலில்மூழ்கி மகிழ் கூர்ந்திருந்தனர்.

தமது அபராதத்திற்குத் தீர்வு பெற்றேமென்றுக் கருதினர் என்பார் இனிதிருந்தான் என்றார். (௩௨)

குன்றெறிந்தவேற்குமரனுங்கரிமுகக்கோவு
மன்றெறிந்ததந்திரமெலாஞ்சிரமிசையடக்காக்
கன்றெறிந்தவனறிவருங்கழன்மனத்தடக்கா
நின்றெறிந்தகன்மத்தெனவுழக்கிடாநிற்கும்.

(இ-ள்.) குன்று எறிந்த வேல் குமரனும் கரிமுகக்கோவும் - கிரவுஞ்சகிரி பிளவுபட எறிந்த வேலையேந்திய முருகக்கடவுளும் யானைமுகக்கடவுளும், அன்று எறிந்த தந்திரம் எல்லாம் - அக்காலையில் வீசிய நூல்களையெல்லாம், சிரம் மிசை அடக்கா - தமது தலையின்மேலடக்கி, கன்று எறிந்தவன் அறிவரும் கழல் மனத்து அடக்கா - விளங்கனிபுதிரக் கன்றினைவீசிய திருமால் அறிதற்கரிய திருவடியை மனத்திலிருத்தி, நின்று எறிந்த கல் மத்து என - பாற்கடலில் நிலைபெற்றுக் கலக்கிய மந்தரகிரியைப்போல, உழக்கிடாநிற்கும் - கலக்குவாராயினர்.

ஓரசுரன் கன்றின்வடிவெடுத்துத் தீங்கு புரியவரும் வரவைக் கண்ணபிரான் உணர்ந்து அக்கன்றினைக் குறுந்தடியாகக்கொண்டு விளவின் கனியோடு அவனுயிருஞ் சிந்தஎறிந்தார் என்பது "குறுந்தாம்பணைத்தகுழக்கன்றிருவாயசுரன்கொடுங்காலிற் - செறிந்தாங்குறநுமணிவண்ணான்செங்கட்மேலமலர்பரப்பி - அறிந்தோரினைப்பினிலங்கன்று குனிலாய்விளவின்கனியதனில் - எறிந்தான்விளவின்கனியோடும் வீழ்ந்தானுயிழந்தானே" எனவரும் கூர்மபுராணத்தால் உணர்க. (௩௩)

Koviloor Digital Library

ஒட்டுந்தோணியைப்படவினைக்கிழிபடவிசைபோய்த்
தட்டுஞ்சோங்கினைமேலிடுசரக்கொடுங்கவிழ
முட்டுஞ்சீறிமேல்வரும்பலசுறவெலாமுடுக்கி
வெட்டுங்கோடுகோத்தேனையமீனெலாம்வீசும்.

(இ-ள்.) தோணியையொட்டும் - தோணியை நெருங்கிமோதும், படவினை கிழிபட விசைபோய்த்தட்டும் - படவு பிளவுபட விசைத்துச் சென்று தாக்கும், சோங்கு இன் ஐ மேல் இடு சரக்கு ஒடுங் கவிழ முட்டும் - சோங்கு தன்னிடத்திற் செறித்த சரக்குகளோடுங் கவிழ்ந்து குப்புற அதன்மேற்பாயும், சீறி மேல்வரும் பல சுறவு எல்லாம் முடுக்கி வெட்டும் - கோபித்துத் தன்மேல்வரும் பல மகர மீன்களையெல்லாந் துரத்தித் துண்டிக்கும், கோடுகோத்து ஏனைய மீன் எல்லாம் வீசும் - தனது கொம்பிற் கோத்து மற்றுள்ள மீன்களையெல்லாம் திசைதோறும் சிந்தும்.

தோணி படவு சோங்கு என்னுமிவை மரக்கலத்தின் வேறுபாடுகள். ஐ உருபு மயக்கம். (௯௪)

தரங்கவாரிநீர்கலக்கலாற்றந்திரங்கொடுமே
லிரங்குவான்புலவோர்க்கமுதீகையாலெண்ணார்
புரங்கண்மூன்றையும்பொடித்தவனாணையாம்புனலிற்
கரங்கணான்கையுங்கரந்தமீன்மந்தரங்கடுக்கும்.

(இ-ள்.) எண்ணார் புரங்கள் மூன்றையும் பொடித்தவன் ஆணையால் - பகைவர்களது திரிபுரங்களையும் நீறுபடுத்திய சிவபெருமானாரது அநுஞையால், புனலில் கரங்கள் நான்கையும் கரந்த மீன் - கடலில் நான்குதிருக்கரங்களையும் கரந்துவந்தருளிய நந்திநாயனாரொன்று மீனம், தரங்கம் வாரி நீர் கலக்கலால் - அலைகளையுடைய கடல்நீரைக் கலக்குதலாலும், தந்திரம் மேல் கொடு இரங்கு வான் புலவோர்க்கு அமுது ஈகையால் - ஆகமங்களைத் தமது சிரத்திற்கொண்டு வருந்து மிக்க வறிவினையுடைய முனிவரர் முதலாயினோர்க்கு அவ்வாகமங்களின் பொருளைப் பின்னர்த் தந்தருளுதலாலும்; தரங்கம் வாரி நீர் கலக்கலால் - அலைகள்பரவக் கடலினுள்ள நீர் மறுகச்சுழலுதலும், தம் திரம் கொடு இரங்கு வான்மேல் புலவோர்க்கு அமுது ஈகையால் மந்தரம் கடுக்கும் - தமது நிலைமையால் கோஷிக்கும் விண்ணுலகிலுள்ள தேவர்களுக்கு அமுது தருதலுமுடைய மந்தரகிரியை யொக்கும்.

முனிவரர் முதலியோர் ஆகமத்தை யிழந்தனமென்று ஏக்கறலால் இரங்கு எனவும், அமுது நரை திரை மூப்பு மாற்றிப் பெரும்போகந் தருதல்போல ஆகமத்தின் பொருள் மும்மலங்களையுமாற்றி யழியாச் சிவபோகந் தருதலால் பொருளை யமுதெனவும், ஒருபால் நின்று கடைதலால் தந்திரங்கொடு இரங்கு எனவுங் கூறினார். இது ஏதுவின்கண்வந்த செம்மொழிச் சிலேடையணி. ஆல் முன்னர் ஏதுப்பொருளில் வந்த மூன்றனுருபின்மேலும் பின்னர்க் கட்டுரைச் சுவைபடநின்ற இடைச்சொல் மேலும் நின்றது. (௯௫)

தள்ளுநீர்த்திரைபோய்நுளைச்சேரிகள்சாயத்
துள்ளுநீர்குடித்தெழுமழைசூலிறப்பாயு
முள்ளுநீண்மருப்புடையமீன்மொய்கலமந்தத்
தெள்ளுநீர்த்துறைநடையறவின்னணந்திரியும்.

(இ-ள்.) துள்ளும் நீர் குடித்து எழுமழை சூல் இற பாயும் - தாவும் நீரைக் குடித்தெழுந்த மேகங்களின் கருச்சிதைய எழுந்துபாயும், முள்ளு நீள் மருப்பு உ

Koviloor Digital Library

டைய மீன் - முள்வாய்ந்த நீண்ட கொம்பினையுடைய மகரமீன், தள்ளும் நீர் திரை போய் - முத்தலைக்கொழிக்கும் நீர்மயமாகிய அலையின்வழியே சென்று, துனை சேரிகள் சாய-வலைஞர் சேரிகள் சாயவும், மொய் கலம் - நெருங்கிய மரக்கலமாவை, அந்த தெள்ளு நீர் துறை நடை அற - அந்தத் தெள்ளிய நீர்த்துறைகளில் சரித்தலொழியவும், இன்னணம் திரியும்-இவ்வாறு திரியா நிற்கும். (௩௬)

எற்றிதாலெனத்துறைமகன்யாமிதுபிடிக்கும்
பெற்றியாதெனக்கிளையொடும்பெருவலைப்பாசம்
பற்றியாழியூர்படவுகைத்தெறிந்தனன்படவைச்
சுற்றிவாய்கிழித்தெயிற்றிறப்பாய்ந்ததுசுறவம்.

(இ-ள்.) துறை மகன் - நெய்தனிலத்தலைவன், இது எற்று என-இது எப்படிப் பட்டதெனவும், இது யாம் பிடிக்கும் பெற்றியாது என-இதனை நாம் பிடிக்குந்தன்மை எவ்வகைத்தெனவும், (கருதி) கிளையொடும் பெருவலைப்பாசம் பற்றி ஆழி ஊர் படவு உகைத்து எறிந்தனன்-தனது உறவினரோடுஞ் சூழ்ந்து பெரிய வலைக்கயிற்றைப்பற்றிக் கடலிற்செல்லும் படவினை நடத்தி வீசினன், சுறவம் படவை சுற்றி வாய் கிழித்து எயிறு இற பாய்ந்தது - அம்மகரமீனானது படவைச் சூழ்ந்து வாய் பிளந்து தனது வச்சிரதந்தத்தா லப்படவு சிதையப் பாய்ந்தது. (௩௭)

படவுடைப்பவோர்தோணிமேற்பாய்ந்துமத்தோணி
விடவுறத்தெறித்தெறிந்திடவிசைத்தொருசோங்கி
னிடைபுகுந்துநீள்வலையெறிந்திங்ஙனம்வெவ்வே
றுடல்புகுந்துழலுயிரெனப்பரதனுமுழல்வான்.

(இ-ள்.) படவு உடைப்ப - படவினையுடைக்க, ஓர் தோணிமேல் பாய்ந்தும் அத்தோணி விட வுற தெறித்து எறிந்திட - ஒரு தோணிமேற் பாய்ந்தேறி வலைவீசியும் அந்தத்தோணி பிளவுபடத்தெறித்துச் சிதைக்க, விசைத்து ஒரு சோங்கின் இடை புகுந்து நீள் வலை எறிந்து - கால்விசைத்து ஒருசோங்கிற் புகுந்து நெடிய வலையை வீசி, இங்ஙனம் - இவ்வாறு, வெவ்வேறு உடல் புகுந்து உழல் உயிர் என - (வினைவசத்தால்) வெவ்வேறு யாக்கைகளிற் சென்று உழலும் உயிரைப்போல, பரதன் உம் உழல்வான் - அந்நெய்தனிலத்தலைவனு முழன்று திரிவானாயினன்.

படவுடையத் தோணிமேலேறியும், அத்தோணிசிதையச் சோங்கின் மேலேறியும் ஒருவனே மீன்பிடிக்கும் வினையா லிவ்வாறுழலுதலால் வினைவசத்தால் வெவ்வேறுயாக்கையிற் புகுந்துழலு முயிர்போல் என்றார். இது தொழிலுவமம் விடவுற ஒருசொல். (௩௮)

முன்னர்வீசிறுற்பின்றுறமுனைத்தெழுமுயன்று
பின்னர்வீசினுன்முன்றுறப்பெயர்ந்தெழும்வலத்தி
லுன்னிவீசிறுலிடம்படவுருத்தெழுமிடத்தின்
மன்னிவீசிறுல்வலத்தெழுமகரவேறதுதான்.

(இ-ள்.) மகர ஏறுதான் - மகரமீனானது, முன்னர் வீசினுல் பின் உற முனைந்து எழும் - முன்னே நின்று வலைவீசினுல் பின்னே பொருந்த எழுந்து தோன்றும், முயன்று பின்னர் வீசினுல் முன் உற பெயர்ந்து எழும் - முயன்று பின்னே நின்று

Koviloor Digital Library

வீசினால் முன்னே பொருந்தத் தலைநிமிர்ந் தெழாநிற்கும், வலத்தில் உன்னி வீசுமேல் இடம்பட உருத்து எழும் - வலப்பானின்று (பிடிக்குஞ்சூழ்ச்சி) கருதிவீசினால், இடம்பட உருத்து எழும் - இடப்பால் கோபித்தெழுந்து தோன்றும், இடத்தில் மன்னி வீசினால் வலத்து எழும்-இடப்பால் நின்று வீசினால் வலப்பா லெழாநிற்கும்.

அது பகுதிப்பொருள் விகுதி "கடல்வாழ்சுறவுமேறெனப்படுமே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் மகரவேறென்றார். (௩௯)

எறிவலைப்படுமகமலர்ந்தீர்ப்பவனுள்ள
மறுதலைப்படவலையினும்வழீஇப்பொருளாசை
நெறிமலர்க்குழனல்லவர்நினைவெனநினைவுற்
றறிபவர்க்கரிதாம்பரம்பொருளெனவகலும்.

(இ-ள்.) எறி வலைப்படும்-வீசிய வலையிலகப்படும், அகம்மலர்ந்து ஈர்ப்பவன் உள்ளம் மறுதலைப்பட (அகப்பட்டதெனக்கருதி) மனமகிழ்ந்திழுப்பவனுடைய மனஞ்சுழல, வலையினும் வழீஇ - வலையினின்றும் வழுவி, பொருள் ஆசை மலர் நெறி குழல் நல்லவர் நினைவு என்ன - பொருளாசையையுடைய மலரையணிந்த நெளிந்த கூந்தலையுடைய விலைமகளிர் நினைவைப்போலவும், நினைவுற்று அறிபவர்க்கு அரிது ஆம்பரம்பொருள் என்ன அகலும்-தியானித்துணர்வோமென்பார்க்கு உணர்தற்கரிய சிவபெருமானைப்போலவும் அகலாநிற்கும்.

விலைமகளிர் மனம்பொருளாசையால் ஒருவனிடத்தே நிலைபெறுமையாலும், நிட்களசொரூபியாகிய பரம்பொருள் ஆன்மபோதத்தாற் சுட்டியுணர்தல் கூடாமையாலும்,பொருளாசைநெறிமலர்க்குழனல்லவர்நினைவெனநினைவுற்றறிபவர்க்கரிதாம் பரம்பொருள் எனவுங்கூறினார். விலைமகளிருள்ளம் ஒருவனிடத்து நின்று வழுவுதல் போல வலையின்று வழுவுதலும், இறைவன் சுட்டியுணருமனத்திற்ககப்படாமைபோல வினை மீன்களைப்போலக் கருதிவீசும் வலையிலகப்படாமையாலும் இது ஒப்புமைக் கூட்ட வணியன்று. நினைவுற்றறிபவர்க்கரிதாம் என்றது "தன்னறிவதனாற்காணுந் தன்மையனல்லனீசன்" எனவருஞ் சிவஞானசித்தியாரால் உணர்க. (௪0)

ஏவலாளரோடின்னவாறின்னமீன்படுத்தற்
காவதாந்தொழிலியற்றவுமகப்படாதாக
யாவரோயிதுபடுப்பவரென்றிருங்கானற்
காவலாளனும்பரதருங்கலங்கனருழந்தார்.

(இ-ள்.) ஏவலாளரோடு இன்ன ஆறு இன்ன மீன்படுத்தற்கு ஆவது ஆம் தொழில் இயற்றவும் அகப்படாதாக - ஏவன் மக்களோடு இவ்வகையாக இந்த மகர மீனைப் பிடித்தற்கு ஏதுவாகிய தொழிலைச்செய்யவும் அகப்படாதொழிய, இது படுப்பவர் யாவரோ என்று - இதனைப் பிடிப்போர் எவரோ அவரை யுணரோமென்று, இருங் கானல் காவலாளனும் பரதரும் கலங்கு அனர் உழந்தார்-பெரிய கழிக்கரையிலிருந்து காவல் செய்யும் அந்நெய்தனிலத்தலைவனும் வலைஞரும் பெருந்துன்பத்தி லாழ்ந்தனர்.

ஆவதாந்தொழில் பிடித்தற்குக் கூடிய தொழில். கண்டோரு மனங்கலங்குந் துன்பம் ஆதலால் கலங்கனர் என்றார். (௪௧)

Koviloor Digital Library

சங்கலம்புதண்டுறைநெடுநாடனிச்சலதித்
துங்கமந்தரமெனக்கிடந்தலமருஞ்சுறவை
அங்கணார்ந்தெவன்பிடிப்பவனவனியானின்ற
மங்கைமங்கலக்கிழானெனமனம்வலித்திருந்தான்.

(இ-ள்.) சங்கு அலம்பு தண் துறை நெடுநாடன் - சங்குகளொலிக்குந் தண்ணிய கடற்றுறை மிக்க நாட்டையுடைய பரதவகுலபதி, இ சலதி துங்கம் மந்தரம் என்ன கிடந்து அலமரும் சுறவை - இக்கடலில் பெரிய மந்தரகிரியைப்போலக் கிடந்து சுழலும் மகரமீனினை, அணைந்து பிடிப்பவன் எவன் - வந்து பிடிப்பவன் யாவன், அவன் - அவனே, யான் ஈன்ற மங்கை மங்கலக் கிழான் என மனம் வலித்திருந்தான் - நான் அருந்தவத்தாற் பெற்ற மங்கையின் திருமணத்திற்குரியவனென் றுறுதிசெய்திருந்தனன்.

ஆங்கு என்னும் அசைநிலை அங்கு என நெடியதனைக் குறுக்கும் வழிக்குறுக்கல்.

நந்திநாதனுமினையனாயங்கயனாட்டத்
திந்துவாணுதலாருமங்கனையளாயிருப்பத்
தந்திநாலிரண்டேந்தியதபனியவிமானத்
துந்துநீர்ச்சடையார்மணமுன்னினாரன்றே.

(இ-ள்.) நந்தி நாதனும் இனையன் ஆய் - நந்திநாயகனாரு மித்தன்மையராயும், அங்கயல் நாட்டத்து இந்து வாள் நுதலாரும் - அங்கயற்கண்ணியாராகிய அர்த்தசந்திரனையொத்த ஒள்ளியநெற்றியையுடைய உமாதேவியாரும், அங்கு அனையள் ஆய் இருப்ப - அப்பரதவர்சேரியி லத்தன்மையராயுமிருக்க, நாலிரண்டு தந்தி ஏந்திய தபனியம் விமானத்து - அஷ்டகஜங்களேந்திய பொன்னாலாகிய விமானத்தில், உந்து நீர் சடையார் மணம் உன்னினார் - அலைவீசுங் கங்கையையணிந்த சடாமகுடத்தையுடைய பெருமானார் திருமணஞ்செய்தலைக் கருதியருளினார். (௬௩)

உயர்ந்தசாதியுந்தம்மினுமிழிந்தவென்றுன்னிக்
கயந்தநெஞ்சுடைவலைக்குலக்கன்னியைவேட்பான்
வியந்துகேட்பதெவ்வாறவர்வெறுக்குமுன்னவருக்
கியைந்தமீன்வலையுருவெடுத்தேகுதுமென்று.

(இ-ள்.) உயர்ந்த சாதியும் தம்மினும் இழிந்த என்று உன்னி - உயர்ந்த குலங்களுந் தங்குலத்தினும் இழிந்தனவென்று கருதி, கயந்த நெஞ்சு உடைய வலைக் குலம் கன்னியை வேட்பான் - பெருமையமைந்த மனத்தையுடைய வலைஞர்குலத்திற்றோன்றிய கன்னிப்பருவமுடையவளைத் திருமணமுடிக்க, வியந்து கேட்பது எவ்வாறு - மனமகிழ்ந்துகேட்ட லெவ்வகை, அவர் வெறுக்கு முன் - அவர்கள் வெறுத்து மறுப்பதற்குமுன், அவருக்கு இயைந்த மீன் வலை உரு எடுத்து ஏகுதும் என்று - அவர்களுக்குப் பொருந்த மீன்பிடிக்கும் வலைஞருருவங்கொண்டு செல்வோமென்று.

அநுலோமர் பிரதிலோமர் சங்கரர் என்னுங் குலத்தன்னாரும் தங்கள்குலத்தினும் ஏனைக்குலங்கள் தாழ்ந்தனவென்று கருதல் இயற்கையாதலால் "உயர்ந்தசாதியுந்தம்மினு மிழிந்தவென்றுன்னிக் - கயந்தநெஞ்சுடைவலைக்குலம் எனவும், இழிந்தகுலத்தினராயினுந் தமது குலத்தோர்க்கு மகட்கொடைநேர்தல் உலகியல்பாத

Koviloor Digital Library

லால் அவர் வெறுங்கு முன்னவருக் - கியைந்தபின் வலையுருவெடுத்தேகுதும்" எனவுங்கூறினர். (௫௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கருகிருண் முகந்தாலன்னகச்சினன்கச்சோடார்த்த
சுரிகையன்றோண்மேலிட்டதுகிலினன்குஞ்சிசூடு
முருகுகொப்புளிக்குநெய்தற்கண்ணியன்மூத்தவானோர்
இருவருமறையுந்தேடியிளைப்பவோர்வலைஞனானான்.

(இ-ள்.) கருகு இருள் முகந்தால் அன்ன கச்சினன் - மிக்க கருநிறம்வாய்ந்த இருளைமுகந்தாலொத்த கச்சிறுக்கி, கச்சு ஓடு ஆர்த்த சுரிகையன் - இறுக்கியகச்சிற்கட்டிய உடைவாளையுடையவனாகி, தோள் மேல் இட்ட துகிலினன் - தோளின் மேலிட்ட உத்தரீயத்தையுடையவனாகி, குஞ்சி சூடும் முருகு கொப்புளிக்கும் நெய்தல் கண்ணியன் - சிகையிற்சூடிய தேனைக்கொப்புளிக்கும் நெய்தல்மாலையையணிந்து, மூத்த வானோர் இருவரும் மறையும் தேடி இளைப்ப - இந்திரன் முதலியோர்க்கு மூத்த திருமாலும் பிரமனும் வேதங்களுந்தேடி (காணாமையால்) வேசற, ஓர் வலைஞன் ஆனான் - ஒரு வலைமகன்திருக்கோலங்கொண்டருளினர்.

நெய்தனிலத்துக் கருப்பொருளாதலால் நெய்தற்கண்ணியன் என்றார் "கச்சினன்கழலினன் செச்சைக்கண்ணியன்" என்றாற்போலக் குறிப்புவினைமுற்றுகள் எச்சம் ஆயின. (௫௫)

முழுதுலகீன்றசேற்கண் முதல்வியையருளிலார்போ
லிழிதொழில்வலைமாதாகச்சபித்தவாறென்னேயென்றும்
பழிபடுசாபமேறார்பரதராய்வரவும்வேண்டிற்
றழகிதுநன்றுநன்றேயாலவாயடிகள்செய்கை.

(இ-ள்.) உலகம் முழுதும் ஈன்ற சேல் கண் முதல்வியை - அண்டமுழுதும் பெற்றருளிய அங்கயற்கண்ணியாரை, அருள் இல்லார் போல் இழிதொழில் வலை மாது ஆக சபித்த ஆறு என்னே - கருணை சிறிதுமில்லார்போல இழிந்தொழிலையுடைய வலைஞர்குலகன்னியாகச் சபித்தகாரணம் யாதோ, என்றும் பழி படு சாபம் ஏறார் பரதர் ஆய் வரவும் வேண்டிற்று - எந்நாளும் பழிமிக்க சாபக்கோட்படாத பெருமானார் பரதவர்திருவுருக்கொண்டு திருமணமுடித்தற்கு வருகையும் வேண்டிற்று, ஆலவாய் அடிகள் செய்கை நன்று நன்று அழகிது - திருவாலவாயிலெழுந்தருளிய அப்பெருமானார்செய்கை நன்று நன்று அழகாயிருந்தது.

கடவுளர் எனப்படுந் திருமால்முதலியோர் விருந்தை முதலியோரால் சாபக்கோட்பட்டமையும், சிவபெருமானார் தாருகவனமுனிவர் முதலாயினோர் சாபக்கோட்படாமையும் உணர்த்துவார் பழிபடுசாபமேறார் எனவும், ஆன்மாக்களுய்தற்பொருட்டுப் பராசத்தியே திருமேனியாகநின்ற தற்சிவம் அப்பராசத்தி வலைஞர்கோன் திருமகளாகவும் தாம் வலைஞர்குலபதியாகவும் வருதற்குக் காரணம்யாதோ சிறிதும் உணரோம் என்பார் சபித்தவாறென்னே அடிகள்செய்கை நன்றுநன்று எனவுங்கூறினர். இது கவிகூற்றுத்துறை. சாபமேறார் என்றற்கு "சங்கையின்முனிவர்யாருஞ் சாற்றியசாபம்யாவும் - எங்கட்பெருமான்முன்னமெய்தியதில்லையன்னோர்- அங்கவன்றன்பாலுய்க்கு மளவையிலிறுதிநாளிற் - பொங்கெரியதன்மேற்செல்லும் பூளைபோன்மாய்ந்தவன்றே" எனக்காந்தம்தக்ஷயுத்தரப்படலத்தில் வருதல்காண்க. (௫௬)

Koviloor Digital Library

தன்பெருங்கணத்தளாரோர்தலைவருஞ்சலதிவாணன்
என்பதுதோன்றவேடமெடுத்தெறிவலைதோளிட்டு
வெந்புறமலைப்பக்காவிமீனிடுகுடம்பைதாங்கிப்
பின்புறநடந்துசெல்லப்பெருந்துறைப்பாக்கம்புக்கான்.

(இ-ள்.) தன் பெருங் கணத்தளாரோர் - தமது பெரிய சிவகணத்தலைவர்கள், தலைவரும் சலதி வாணன் என்பது தோன்ற - தமக்குத் தலைவராகிய சிவபெருமானும் நெய்தனிலவாழ்க்கையர் என்பதுதோன்ற, வேடம் எடுத்து எறி வலை தோள் இட்டு - வேடங்கொண்டு வீசும் வலையினைத் தோளின்மேலிட்டு, வெந் புறம் அலைப்ப - முதுகின்புறத்தை யலைப்ப, மீன் இடு குடம் பை காவி தாங்கி - மீன்போடுங் கூட்டைச் சுமந்துதாங்கி, பின்பு உற நடந்து செல்ல - பின்னே பொருந்த நடந்துவர, பெருந் துறை பாக்கம் புக்கான் - பெரியகடற்றுறையிலுள்ள அப்பாக்கத்தையடைந்தருளினார்.

பகற்போதிற் பரிசகங்கள் பின்னேவருதல் முறையாதலால் பின்புறநடந்து செல்ல என்றார். (௪௭)

கழித்தலைக்கண்டற்காடுங்கைதையுங்காவுநெய்தற்
சுழித்தலையிடங்குநீந்துச்சுலீரென்றுங்தோட்டுப்பெண்ணை
வழித்தலைசுமந்துவார்கள்வார்ப்பவாயங்காந்தாம்பல்
குழித்தலையலர்பூங்கானற்கொடுவலைச்சேரிசார்ந்தான்.

(இ-ள்.) கழி தலை கண்டல் காடும் கைதையும் காவும் நெய்தல் சுழித்து அலையிடங்கும் நீந்த - கழியின்கணுள்ள கண்டற் காட்டையும் தாழையையும் இளஞ்சோலையையும் நெய்தல்மலரைச்சுழித்த அலைக்கும் இடங்குகளையுங் கடந்து, சுலீர் என்றும் தோடு பெண்ணை - சுலீரென்றொலிக்கும் மடலையுடைய பனையானது, வழி தலை சுமந்த வார்கள் வார்ப்ப - வழியினின்று தலையிற்சுமந்த ஒழுகு மதுவினைவார்க்க, வாய் அங்காந்த ஆம்பல் குழிதலை மலர் பூங்கானல் கொடுவலைசேரி சார்ந்தான் - வாயைத்திறந்த ஆம்பல்கள் குழிகளில் மலரும் பொலிவுவாய்ந்த இளஞ்சோலைசூழ்ந்த அப்பாக்கத்திலுள்ள வலைஞர்சேரியை யணைந்தருளினார்.

சுலீர் ஒலிக்குறிப்பு "சுலீரென்னுந் தண்டோட்டுப்பெண்ணை" எனவருதல் காண்க. கண்டல் செந்தாழை. கைதைவெண்டாழை. "வெண்டோட்டுக்கைதை" என்றார்பிறரும். "கண்டகக்கைதைமுண்டமேடம்பு - கண்டல்புன்னைவண்டிமிர்ஞாழல்" என நெய்தனிலக்கருப்பொருளில்வருதல்காண்க. (௪௮)

பெருந்தகையமுதன்னாளைப்பெறுதுபெற்றெடுப்பானோற்ற
அருந்தவவலைஞர்வேந்தனதிசயமகத்துட்டோன்ற
வருந்தகையுடையகாளைவலைமகன்வரவுநோக்கித்
திருந்தமுகுடையநம்பியாரைநீசெப்புகென்றான்.

(இ-ள்.) பெருந்தகை அமுது அன்னாளை பெறுது பெற்று எடுப்பான் நோற்ற அருந் தவம் வலைஞர் வேந்தன் - பெருந்தகைமை வாய்ந்த அமுதமொத்த உமாதேவியாரைக் கருப்பம்வாய்ந்து பெறாமல் பெற்றெடுக்கத் தவஞ்செய்த அரிய தவத்தையுடைய வலைஞர்குலபதி, அதிசயம் அகத்து உள் தோன்ற வருந்தகை உடைய காளை வலை மகன் வரவு நோக்கி - ஒரு பெருவியப்புத் தன்மனத்தில் தோன்ற வாராநின்ற

Koviloor Digital Library

தகைசன்மவாய்ந்த காளைப்பருவத்தையுடைய வலைஞரது வருகையைப் பார்த்து, திருந்து அழகு உடைய நம்பி - திருந்திய அழகையுடைய நம்பியே, நீ யார் - நீ யார்; செப்புக என்றான் - சொல்லக்கடவாயென்று வினவினான்.

தம்மைச்சரணடைந்தோர் மலங்களைமுருக்கிச் சிவபோகத்தையருளுதலால் பெருந்தகையமுதன்னாள் எனவும், என்றுங் கண்டறியாத தோற்றத்தைக் கண்டவ ராதலால் அதிசயமகத்துட்டோன்ற எனவுங்கூறினார். நம்பி ஆணிற்சிறந்தவன். ௪௯

சந்தநான்மறைகடேறாத்தனியொருவடிவாய்த்தோன்றி
வந்தமீன்கொலைஞன்கூறுமதுரையில்வலைஞர்க்கெல்லாந்
தந்தைபோற்சிறந்துளானோர்தனிவலையுழவனல்ல
மைந்தன்யான்படைத்துக்காத்துத்துடைக்கவும்வல்லனாவேன்.

(இ-ள்.) சந்தம் நால் மறைகள் தேறாத தனி ஒரு வடிவு ஆய் தோன்றி வந்த மீன் கொலைஞன் கூறும்-சந்தமமைந்த நான்குவேதங்களும் அளந்து தெளியாத ஒப்பில்லாத ஒருதிருவுருவங்கொண்டு தோன்றிவந்தருளிய பரதவர்குலபதிகூறுகின்றார், மதுரையில் வலைஞர்க்கு எல்லாம் தந்தைபோல் சிறந்துள்ளான்-மதுரையிலுள்ளவலைஞர்களுக்கெல்லாம் பிதாவைப்போலக் காவல்பூண்டு சிறந்த, ஓர் தனி வலை உழவன் நல்ல மைந்தன் யான் - ஒரு ஒப்பில்லாத வலைஞர்குலபதியின் மேம்பட்ட புத்திரன் யான், படைத்து காத்து துடைக்கவும் வல்லன் ஆவேன் - படைத்துங் காத்தும் அழிக்கவும் வல்லவனாவேன்.

தமதியற்கைதோன்றப் படைத்துக் காத்துத் துடைக்கவும் வல்லனெனவும், கடல்வாணர் ஆகையால் கடலிற்குரிய முத்தொழிற்குணமும் தமக்குளவென்பதுதோன்றப் படைத்துக் காத்துந் துடைக்கவும் வல்லனாவேன் எனக்கவர்பொருள்படக்கூறினார். சந்தம் சந்தஸ் என்னும் வடமொழித்திரிபு, சந்தம் உக்தைமுதலிய சந்தோபேதங்களுக்கு அக்ஷர சங்கியை கற்பிப்பது. (௫௦)

அல்லதுவான்மீனெல்லாமகப்படவலைகொண்டோச்ச
வல்லவனாவேனென்னமற்றிவன்வலைஞன்கோலம்
புல்லியமகன்கொன்முன்னம்புகன்றசொல்லொன்றிப்போது
சொல்லியதொன்றிரண்டுஞ்சோதனைகாண்டுமென்னா.

(இ-ள்.) அல்லது - இஃதன்றி, வான் மீன் எல்லாம் அகப்பட வலைகொண்டு ஓச்ச வல்லவன் ஆவேன் என்ன - வான்மீனெல்லாம் சிக்கக் கோலவலைகொண் டெறியும்படி வல்லவனாவனென்று கூறியருள, இவன் வலைஞன் கோலம் புல்லியமகன் கொல்-இவன் வலைஞர்கோலங்கொண்டுவந்த ஒருபுருடனோ, முன்னம் புகன்ற சொல் ஒன்று - முன்பு கூறியவார்த்தையொன்று, இ போது சொல்லியது ஒன்று - இப்பொழுது கூறிய தொன்று, இரண்டும் சோதனை காண்டும் என்னா - இவ்விரண்டையும் சோதிப்போமென்று கருதி.

தமதுவரம்பிலாற்றலுடைமை தோன்ற வானிலுள்ள நட்சத்திரங்களெல்லாம் அகப்பட வலைவீசுவேம் எனவும், வந்தருளிய வேடத்திற்கியையப் பெரியமீன்களெல்லாமகப்பட வலைவீசுவேம் எனவும் பொருள்படக்கூறினானென்பதுதோன்ற வான்மீனெல்லாமகப்பட வலைகொண்டோச்சவல்லவனாவேனெனவும், ஓர்தேவனெனக்கருதினான் என்பது தோன்ற இவன் வலைஞன்கோலம்புல்லிய மகன்கொல்

Koviloor Digital Library

எனவும், முன்னர் வலைஞர்குலபதிமகள் எனக்கூறிப் பின்னர்ப் படைத்தற்கேற்பத் தடைக்கவும் வல்லன், வான்மீனெல்லாமகப்பட வலைகொண்டோச்சவல்லவன் எனக்கூறியதின் கவர்பொருளுணர்த்திலனென்பது தோன்ற, முன்னம்புகன்றசொல்லொன்றிப்போது - சொல்லியசொல்லிரண்டுஞ்சோதனைகாண்டுமென்று எனக்கூறினன் எனவுங்கூறினர். (௫௧)

தொண்டுறைமனத்துக்கானற்றுறைமகனஃதேலையிந்தத்
தண்டுறையிடத்தோர்வன்மீன்றழலெனக்கரந்துசீற்றங்
கொண்டுறைகின்றதையகுறித்ததுபிடித்தியேலென்
வண்டுறைகோதைமாதைமணஞ்செயத்தருவேனென்றான்.

(இ-ள்.) தொண்டு உறை மனத்து கானல் துறைமகன் அஃதேல் (சிவபெருமான்றிருவடிக்கு) தொண்டுபட்ட மனத்தையுடைய இளஞ்சோலைசூழ்ந்த கடற்றுறைத்தலைவன் அஃதாயில், ஐய - ஐயனே, இந்த தண் துறை இடத்து ஓர் வன்மீன் - இந்தத் தண்ணியதுறையிலிடத்து ஒருவலிய மகரமீன், தழல் என கரந்து சீற்றம் கொண்டு உறைகின்றது - வடவாமுகாக்கினியைப்போல ஒளித்துக் கோபங்கொண்டு வசிக்கின்றது, குறித்து அது பிடித்தியேல் - கருதி யதனைப்பிடிப்பாயாகில், என் வண்டு உறை கோதை மாதை மணம் செய தருவேன் என்றான் - எனது பெறுதற்கரிய வண்டுகள் மதவுண்டு வசிக்கு மாலையையணிந்த புத்திரியைத் திருமணமுடிக்கக் கொடுப்பேனென்று கூறினன்.

பிடிப்பது அரிது என்பதுதோன்றக் குறித்தது பிடித்தியேல் என்றான். (௫௨)

சிங்கவேறனையான்காலிற்செல்னடைப்படவிற்பாய்ந்து
சங்கெறிதரங்கந்தட்பத்தடங்கடல்கிழித்துப்போகிக்
கிங்கரனாகாளைவரையெனக்கிளைத்ததோண்மேற்
றொங்கலிற்கிடந்துஞான்றதொருமணிவலையைவாங்கி.

(இ-ள்.) சிங்க ஏறு அனையான் - சிம்மேற்றையொத்த வலைஞருருக்கொண்டுவந்த சிவபெருமானார், காலில் செல் நடை படவில் பாய்ந்து - காற்றைப்போலவிரைந்துசெல்லும் நடையையுடைய படவின்மேற் பாய்ந்து, சங்கு எறி தரங்கம் தட்ப தடங்கடல் கிழித்து போகி - சங்கினைவீசும் அலைகள்மேலெழுந்து தடுக்கவும் பரந்த கடலைக்கிழித்துச் சென்று, கிங்கரன் ஆன காளை - தமது ஏவலாளனான சிவகணத்தலைவனுடைய, வரை என்ன கிளைத்த தோள் மேல் தொங்கலில் கிடந்து ஞான்றது ஒரு மணி வலையை வாங்கி - மலைபோலக்கிளைத்த தோளின்மேல் மாலைபோலக் கிடந்தசையும் (விளிம்பிற்கோத்த) மணிகள்பொருந்திய வலையினைவாங்கி.

தரங்கம் என்பதனிறுதியில் உயர்வுசிறப்பும்மைதொகுத்தல். கிங்கரன்-பணிசெய்வோன். (௫௩)

செவ்வியினோக்கியாகந்திருகநின்றெறிந்தான்பக்கங்
கௌவியமணிவில்வீசவிசையொலிகறங்கிப்பாயப்
பைவிரித்துயிர்த்துநாகம்விழுங்கவாய்ப்பட்டமின்போல்
வெவ்வினைச்சுறவேறையன்விடுவலைப்பட்டதன்றே.

(இ-ள்.) ஐயன் - அப்பெருமானார், செவ்வியின் நோக்கி ஆகம் திருக நின்று எறிந்தான் - குறித்துப்பார்த்துத் தமது திருமேனி திருகநின்றுவீச, பக்கம் கௌவிய

Koviloor Digital Library

மணிவில் வீச - விளிம்பிற் பொருந்திய மணிகள் ஒளிவீசவும், விசை ஒலி கறங்கபா ய-வீசியவிசையால் (மேகத்தின் ஒலிபோல) ஒலிகோஷித்துப்பரவவும், பை விரித்து உயிர்த்து நாகம் விழுங்க வாய் பட்ட மீன் போல் - படத்தைவிரித்துப் பெருமூச் செறிந்து சர்ப்பம்விழுங்க அதன்வாயிற்பட்டமீனைப்போல, வெம் வினை சுற வேறு-கொடுந்தொழிலையுடைய மகரவேறு, விடு வலைப்பட்டது - வீசிய அவ்வலையில் அக ப்பட்டது.

ஆசம் திருநின்று என்பதற்குப் பைசாசம், மண்டிலம், ஆலீடம், பிரத்தியா லீடம் என்னும் போர்செய்தற்குரிய நான்கு நிலையையுங் கொள்க. இவற்றின் விரி வை முன்னர் உதாரணத்தோடு எழுதியிருக்கின்றனம் அங்குக்காண்க. வெவ்வினை சுறவேற்றின்பண்படை. (ருச)

மாசறுகேளிரன்பின்வலைப்படும்வலைஞர்கோன்றாய்
வீசியவலையிற்பட்டமீனினைச்சுருக்கிவாங்கிக்
காசெறிதரங்கமுந்நீர்க்கரையிடையிட்டான்கள்வாய்
மூசுதேனென்னவார்த்துமொய்த்தனபரதச்சாதி.

(இ-ள்.) மாசு அறு கேளிர் அன்பின் வலைப்படும் வலைஞர் கோன் - குற்றத் தினின்று நீங்கிய அடியவர் பத்திவலையிற்படும் வலைஞர்கோமானர், தாய் வீசிய வலை யில் பட்ட மீனினை சுருக்கி வாங்கி-தாவிவீசிய வலையிலகப்பட்ட மீனை அவ்வலையை ச்சுருக்கியிழுத்து, காசு எறி தரங்கம் முந்நீர் கரை இடை இட்டான்-இரத்திநங்களை வீசும் அலைகளையுடைய கடலின்கரையிற்போட்டனர், கள் வாய் மூசு தேன் என்ன ஆர்த்து பரதச்சாதி மொய்த்தன - மதுவில்மொய்த்த வண்டைப்போல ஆரவாரித் து வலைஞர்கூட்டம் நெருங்கின.

பெருமானுர்க்கு அடியவரோ கிளைஞர் ஆதலால் கேளிர் என்றார். (ருரு)

கிளையுநங்கோனும்வீசுவலைஞராய்க்கிளர்தோளாற்றல்
விளைவொடுமுயன்றுபன்னாள்வினைசெயப்படாதமீனிவ்
விளையவனொருவன்றானேயொருவிசையெறிந்தானீர்த்தா
னளியநங்குலத்தோர்தெய்வமகனிவனருமென்றார்.

(இ-ள்.) கிளையும் நம் கோனும் வீசு வலைஞர் ஆய் - கிளைஞரும் நமது குலப தியும் வீசாநின்ற வலைத்தொழிலினராய், கிளர் தோள் ஆற்றல் விளைவு ஒடு பல் நா ள் முயன்று வினை செய படாத மீன் - விளங்கும் புயவன்மையின் கிளர்ச்சியோடு பலநாளு முயன்றுவீசியும் அகப்படாதமீன், இ இளையவன் ஒருவன் தானே ஒருவி சை எறிந்தான் ஈர்த்தான் - இந்த இளைஞனொருவனே யொருதரம் வலைவீசியிழுத்த னன், இவன் நம் குலத்து அளிய ஓர் தெய்வமகன் ஆகும் என்றார் - இவன் நமதகு லத்திற்குரிய கருணையையுடைய ஒப்பில்லாத தெய்வமாவானென்றுகூறினார்கள்.

வலைவீசுதலில் நெடுநாட்பயின்று கைதேர்ந்த நமது குலபதிமுதலியோர் பல நாளுமுயன்று மகப்படாத மீன், மிகவும் பயிலாத வோரிளைஞன் ஒருகால் வீசியவலை யில் அகப்பட்டமையா லிவன் மானுடமக்களி லொருவனல்ல னென்பார் நங்குலத் தோர்தெய்வமக னிவனருமெனக் கூறினார் என்றார். அந்நெய்தனிலத்தோர்தெய்வ ம் வருணன் "வருணன்சேர்ப்பன் விரிதிரைப்புலம்பன்" எனவரும் நெய்தற்கருப் பொருளிற்காண்க. (ருசு)

Koviloor Digital Library

கைதைசூழ்துறைவனோகைமைக்கப்பம்பையேங்க
நொய்தெனுநுசுப்பிற்கள்வாய்நுளைச்சியர்குரவைதூங்கப்
பைதழைபகுவாய்க்கச்சைப்பரதவற்கலங்கன்ஞாழல்
செய்தெழுங்கோதைமாதைத்திருமணம்புணர்த்தினானே.

(இ-ள்.) கைதை சூழ் துறைவன் ஓகை மைக்க - தாழைசூழ்ந்த கடற்றுறையையுடைய வலைஞர்குலபதி மகிழ்ச்சியில் மிக்குப் பொலியவும், பம்பை ஏங்க - பம்பையென்னும் வாச்சியம் ஒருபாலொலிக்கவும், நொய்து என்னும் நுசுப்பின் கள் வாய் நுளைச்சியர் குரவை தூங்க - நொய்துபட்ட இடையையும் மதுமணக்கும் வாயையுமுடைய வலைமகளிர் ஒருபால் குரவைக்கூத்தாடவும், பை தழை பகுவாய் கச்சை பரதவற்கு - படம்விரித்த அரவத்தைக் கச்சையாகவுடைய பரதவர்குலபதியாக வந்த பெருமானார்க்கு, ஞாழல் செய்தெழும் அலங்கல் கோதை மாதை திருமணம் புணர்த்தினான் - குங்குமமலராற் றொடுத்த மாலையையணிந்த கூந்தலையுடைய தனது புத்திரியாராகிய உமாதேவியாரைத் திருமணஞ்சேர்த்தான்.

பம்பை நெய்தனிலப்பறை. பகுவாய் வினைத்தொகைநிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகைநிலைத்தொடராய் அரவின்மேல்நின்றது. குரவைகோத்தாடல் "குரவையென்பதெழுவர்மங்கையர்- செந்நிலைமண்டிலக்கடகக்கைகோத்து - அந்நிலைகொட்பநின்றாடலாகும்" என்பதனாற்காண்க. (௫௭)

அந்நிலைவதுவைக்கோலமாயினமருகனாரு
மின்னிலைவேற்கணாரும்விண்ணிடைவிடைமேல்கொண்டு
தந்நிலைவடிவாய்த்தோன்றித்தடங்கரைமீனுந்தானு
நன்னிலைவடிவேபோன்றுநந்தியாய்முந்தித்தோன்ற.

(இ-ள்.) அந்நிலை-அப்பொழுது, வதுவை கோலம் ஆயின மருகனாரும்-திருமணக்கோலங்கொண்டருளிய மருகனாராகியபெருமானாரும், மின் நிலை வேல் கண்ணாரும் - ஒளிநிலைபெற்றோங்கும் வேல்போன்ற கண்களையுடைய உமாதேவியாரும், விண் இடை - ஆகாயத்தில், விடை மேல் கொண்டு தம் நிலை வடிவு ஆய் தோன்றி - இடபவூர்தியின்மேலெழுந்தருளித் தமக்குரிய அருளுருவாய்ச் சகளீகரித்துத்தோன்றியருளி, தடம் கரை மீன் தானும் - பரந்த கடற்கரையிலுள்ள மகாமீனும், நல் நிலை வடிவே போன்று நந்தி ஆய் முந்தி தோன்ற - முன்னருள்ளதிருவுருவத்தையே வாய்ந்த நந்திநாயகராய் முற்பட்டுத்தோன்ற.

முன்னருள்ளதோன்ற என்னும் பாடத்தைத் தோன்றியெனப் பாடங்கொள்க, தமதிச்சையால் வாக்குமனாதீதகோசரமாகிய நிட்களசிவம் ஆன்மாக்கள் பொருளியல்புணர்ந்து வீடுபெறுதற்பொருட்டுத் திருவருளே திருமேனியாகக்கொண்டருளுதலால் தந்நிலைவடிவாய் என்றதற்குத் தமக்குரிய அருளுருவாய் என்றும் "உருவருள்குணங்களோடுமுணர்வருளுருவிற்றோன்றும் - கருமமுமருளரன்றன்கரசரணாதிசாங்கம் - தருமருளுபாங்கமெல்லாந்தானருடனக்கொன்றின்றி - அருளுருவுயிருக்கென்றேயாக்கினனசிந்தனன்றே" எனச் சிவஞானசித்தியாரில் வருதல்காண்க. ௫அ

கொற்றவெள்விடைமேற்காட்சிகொடுத்தவர்கருணைநாட்டம்
பெற்றமின்மேலைச்சார்பாற்பிணித்தவிப்பிறவிவாழ்க்கைச்
சிற்றறிவொழிந்துநீங்கிச்சேர்ப்பனல்லறிவுதோன்றப்
பொற்றடமேருவிரன்பூங்கழலடிக்கீழ்த்தாழ்ந்தான்.

Koviloor Digital Library

(இ-ள்.) கொற்றம் வெள் விடைமேல் காட்சி கொடுத்தவர் கருணை நாட்டம் பெற்றலில் - வெற்றியையுடைய வெள்ளிய இடபவூர்தியின்மேல் காட்சிதந்தருளிய பெருமானார் திருபாரோக்கம்பெறுதலால், முந்நீர்ச் சேர்ப்பன் - கடற்றுறையையுடைய வலைஞர்குலபதி, மேலை சார்பால் பிணித்த இ பிறவி வாழ்க்கை சிற்றறிவுஒழிந்து - முற்பிறப்பிலுள்ள கன்மச்சார்பினாற் கட்டுண்ட இந்தச்சனன உடல்வாழ்விற்கியைந்த சிற்றறிவினின்று நீங்கி, நல் அறிவு தோன்ற - நல்லுணர்வுதிக்க, பொன் மேரு தனு வீரன் பூ கழல் அடி கீழ் தாழ்ந்தான் - பொன்மேருவையே வில்லாகவுடைய வரம்பிலாற்றலையுடைய பெருமானாரது பொலிவமைந்த வீரகண்டையையணிந்த திருவடிக்கீழ் வணங்கினன்.

ஆணவமலத்திற்கட்டுண்ட ஆன்மா அருளேக்கத்தால் கன்மநசித்து அம்மலத்தினின்று நீங்குகையால் கருணைநாட்டம் - பெற்றலின்மேலைச்சார்பாற்பிணித்தவிப்பிறவிவாழ்க்கைச்-சிற்றறிவொழிந்து எனவும், திருவருளுதயம் ஆதலால் நல்லறிவுதோன்ற பூங்கழலடிக்கீழ்த்தாழ்ந்தான் எனவுங்கூறினார் " கண்ணுதலான்றன்கருணைக்கண்காட்டவந்தெய்தி-எண்ணுதற்கெட்டாவெழிலார்கழலிறைஞ்சி" எனத் திருவாசகத்தில் வருதல்காண்க. (ருகூ)

இரக்கமிலிழிந்தயாக்கையெடுத்துழலேழையேனைப்
புரக்கவின்றென்போல்வந்தபுண்ணியவடிவம்போற்றி
யரக்கெறிபவளச்செவ்வாயணங்கினைமணந்தென்பாசங்
கரக்கவெள்விடைமேனின்றகருணையேபோற்றியென்றான்.

(இ-ள்.) இரக்கம் இல் இழிந்த யாக்கை எடுத்து உழல் ஏழையேனை - கண்ணோட்டம் சிறிதுமில்லாத இழிந்தசரீரத்தை யெடுத்துழலும் அறிவில்லாதவென்னை, இன்று புரக்க என்போல் வந்த புண்ணிய வடிவம் போற்றி - இப்பொழுதென்னைக்காக்க என்னைப்போல என்குலவடிவங்கொண்டு வந்தருளிய தருமசொருபத்தை வந்திக்கக்கடவேன், அரக்கு எறி பவளம் செவ்வாய் அணங்கினை மணந்து - செந்நிறத்தைவீசும் பவளம்போன்ற செவந்ததிருவாயினையுடைய எனதுபுத்திரியாரைத் திருமணம்புணர்ந்து, என் பாசம் கரக்க வெள் விடைமேல் நின்ற கருணையே போற்றி என்றான் - எனது ஆணவமலச்சிமிழ்ப்புநீங்க வெள்ளிய இடபவூர்திமேல்நின்று காட்சிதந்தருளிய திருவருளையே வந்திக்கக்கடவேனென்று துதித்தான்.

மீன்கனையே யென்றுங்கொன்றுழலுதலால் - இரக்கமிலிழிந்தயாக்கையெனவும், சகலர்க்கு அவரவர்தரத்திற் கேற்பத் திருமேனிகொண்டருளி யருளுதலால் ஏழையேனைப்புரக்கவின்றென்போல்வந்த புண்ணியவடிவம்போற்றி யெனவும், பாசமோசனஞ்செய்தருள விடைமேற்காட்சிதந்தருளுதலால் என்பாசங்கரக்க வெள்விடைமேனின்றகருணையேபோற்றி யெனவுந்துதித்தனன். அவரவர்தரத்திற்கேற்ப என்றது " பலவிதமாசான்பாசமோசனந்தான்பண்ணும்" எனவருஞ் சிவஞானசித்தியாரிலும், திருமேனிகொண்டருளுதல் என்றது "எவ்வுலகத்துமூர்த்தியேதுகொண்டியங்கும்-அவ்வுலகத்துமேனியதுகொண்டங்கமருமீசன்" எனப் பூசாகரணத்திலும்வருந் திருவிருத்தங்களாலுணர்க. (கூ0)

அகவிலான்பரவிநின்றவன்பனைநோக்கிப்பன்னாண்
மகவிலாவருத்தநோக்கியுமையைநாமகளாத்தந்து
தகவினான்மணந்தேரியித்தரணியிற்றனதனென்ன
நகவிலாப்போகமூழ்கிநம்முலகடைவாயென்ன,

Koviloor Digital Library

(இ-ள்.) அகம் இல்லான்-அடியாரிதயமே தமக்குத் திருக்கோயிலாகக்கொண்டருளிய பெருமானார், பரவி நின்ற அன்பனை நோக்கி - தம்மைத் துதித்துநின்ற நெய்தற்றுறைவனை நோக்கி, பல் நாள் மகவு இல்லாத வருத்தம் நோக்கி - பலநாளும் மக்களில்லாமையால் நீவருந்தும் வருத்தத்தைப்பார்த்து, உமையை நாம் மகள் ஆக தந்து - நம்மினின்றும் பிரியாத உமாதேவியாரை நாம் உமக்குத் திருமகளாகத்தந்து, நவினூல் மணந்தேம் -(வேதாகமங்களிற்கூறிய) விதியால் திருமணமுடித்தோம், நீ இ தரணியில் - நீ யிந்நிலவுலகில், தனதன் என்ன - குபேரனைப்போல, நலிவு இல்லாத போகம் மூழ்கி நம் உலகு அடைவாய் என்ன - இகழ்ச்சியில்லாத பெரும் போகத்திலழுந்தி நமது சிவலோகத்தை யடைவாயென்று.

பிரமமணம் என்பார் நவினூல் எனவும், அறத்தின்வழியதென்பார் நலிவிலாப்போகம் எனவுங்கூறினர். அகவிலான் அத்துச்சாரியை தொக்குநிற்றல் செய்யுள் விகாரம். (௬௧)

பெண்ணினைவதுவைக்கீந்தபெருந்துறைச்சேர்ப்பற்கன்று
தண்ணளிசுரந்துநல்கித்தருமமால்விடைமேற்றோன்றி
விண்ணிடைநின்றான்சென்றான்வேத்திரப்படையானோடு
முண்ணிறையன்பரோடுமுத்தரகோசமங்கை.

(இ-ள்.) பெண்ணினை வதுவைக்கு ஈந்த பெருந்துறை சேர்ப்பற்கு - தனதுபுத்திரியாரைத் திருமணமுடித்தற்குக் கொடுத்த பெரியநெய்தற்றுறைத்தலைவனுக்கு, அன்று தண் அளி சுரந்து நல்கி-அக்காலையில் தண்ணிய திருவருள் சுரந்தருளி, தருமம் மால் விடைமேல் தோன்றி-தருமமாகிய பெரிய இடபவூர்தியி லாரோகணித்தருளி, விண் இடை நின்றான் - விண்ணில் நின்ற சிவபெருமானார், வேத்திரப்படையானொடும் உள் நிறை அன்பரோடும் உத்தரகோசமங்கை சென்றான் - வேத்திரப்படையை யேந்திய நந்திநாயனாரோடும் உள்ளத்தில் நிறைந்த மெய்யன்பரோடும் திருவுத்தரகோசமங்கைக்குச் சென்றருளினார்.

நிரம்ப அருளினர் என்பார் தண்ணளிசுரந்து என்றமையாது நல்கி என்றார்.

அங்கிருந்தநாதிமூர்த்தியாதிநான்மறைகளேத்துங்
கொங்கிருங்கமலச்செவ்விக்குரைகழல்வணங்கிக்கேட்பப்
பங்கிருந்தவட்குவேதப்பயனெலாந்திரட்டிமுந்நீர்ப்
பொங்கிருஞ்சுதைபோலட்டிப்புகட்டினான்செவிகளார.

(இ-ள்.) அநாதிமூர்த்தி அங்கு இருந்து - அநாதிமுத்தசித்தராகிய பெருமானார் அத்தலத்திலிருந்தருளி, ஆதி நான் மறைகள் ஏத்தும் கொங்கு இருங்கமலம் செவ்வி குரைகழல் வணங்கிக்கேட்ப-தொன்றுதொட்டுள்ள நான்குவேதங்களும்வணங்கும் வாசமிக்க பெருமைபொருந்திய தாமரைமலர்போலுஞ் செவ்விவாய்ந்த ஒலிக்கும் வீரகண்டையை யணிந்த திருவடியை வணங்கி முன்னர்த் திருவாலவாயிற் கேட்டருளுதல்போலக் கேட்டருள, பங்கு இருந்தவட்கு வேதம் பயன் எல்லாம் திரட்டி முந்நீர் பொங்கு இருஞ்சுதைபோல் அட்டி செவிகள் ஆர புகட்டினான் - இடப்பாகத்திலிருந்த பெருமாட்டியார்க்கு வேதப்பயன்களையெல்லாம் ஒருசேரத் திரட்டிக் கடலிற்றோன்றிய பெருமைவாய்ந்த அமுதைப் புகட்டுதல்போலச் செறித்துப் புகட்டியருளினார். (௬௨)

Koviloor Digital Library

வாதவூரடிகளுக்குபதேசித்த திருவிளையாடல்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

ஷ வேறு.

அவ்வேலையன்புடையாரறுபதினாயிரவர்க்குமளித்துப்பாச
வெவ்வேலைகடப்பித்துவிடாதபராநந்தவீடுநல்கி
மைவ்வேலையனையவிழியங்கயற்கணங்கையொடுமதுரைசார்ந்தா
னிவ்வேலைநிலம்புரக்கமுடிகவித்துப்பாண்டியனென்றிருந்தமூர்த்தி.

(இ-ள்.) இ வேலை நிலம் புரக்க - இந்தக் கடல்சூழ்ந்த நிலவுலகைக்காக்க முடிகவித்து பாண்டியன் என்று இருந்த மூர்த்தி - மகுடஞ்சூடிச் சவுந்தரபாண்டியனெனத் திருநாமம் வாய்ந்து செங்கோல்செலுத்திய சோமசுந்தரமூர்த்தி, அ வேலை - (உமாதேவியார்க்கு உபதேசித்தருளிய) அக்காலையில், அன்புடையார் அறுபதினாயிரவர்க்கும் அளித்து - (தமது அநுஞையால் அங்கிருந்த) அன்பிற் சிறந்தவர்களாகிய அடியவர்கள் சிவயோகியர்களாகிய அறுபதினாயிரவர்களுக்கும் உபதேசித்தருளி, பாசம் வெம் வேலை கடப்பித்து - ஆணவமலமாகிய வெய்ய கடலினைக் கடக்கச்செய்து, வீடாத பராநந்தம் வீடு நல்கி - என்றும் ஒருபடித்தாய் நிலைபெற்ற ஞானாநந்தத்தை விளைக்கு முத்திநிலையைத் தந்தருளி, மை வேலை அனைய விழி அங்கயற்கண் நங்கையொடும் மதுரை சார்ந்தான் - மையெழுதிய வேலையொத்த கண்களையுடைய அங்கயற்கண்ணியாரோடும் திருவாலவாயை யடைந்தருளினார்.

அங்கயற்கண்ணியார் என்பது திருநாமமாதலால் மைவேலையனையவிழியென அடைதந்து கூறினர். அறுபதினாயிரவர் என்றது சிவபெருமானார் அநுஞையால் திருவுத்தரகோசமங்கையென்னுந் திருப்பதியில் ஞானோபதேசத்தி னிமித்த மிருந்த அடியவரையும் சிவயோகியரையும். இவர்கள் பொருட்டேதிருவுத்தரகோசமங்கைக்குச் சென்றருளியதென்பார் அவ்வேலையளித்து என்றார். (கூச)

வலைவீசின படலம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உஎகக.

ஐம்பத்தெட்டாவது

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்.

கொச்சகக்கலிப்பா.

கலைவீசுமதிச்சடையோன்கடற்றுறைவன்றலைச்சென்று
வலைவீசியவன்பாசவலைவீசும்பரிசிதுமே
லலைவீசும்புனல்வாதவூரனாவந்தவிச்சைவலி
நிலைவீசிப்பணிகொண்டநெறியறிந்தபடிமொழிவாம்.

(இ-ள்.) கலை வீசும் மதி சடையோன் - கலையிழந்த பிறையையணிந்த சடாமகுடத்தையுடைய சோமசுந்தரக்கடவுள், கடல் துறைவன் தலை சென்று - கடற்றுறைவனாகிய நெய்தனிலத்தலைவனிடத்துச் சென்று, வலை வீசி அவன் பாசம் வலை வீசும் பரிசு இது - கடலில் வலையினை வீசி அவனது ஆணவமாகிய வலைக்கட்டினை

Koviloor Digital Library

யருத்தருளிய திருவிளையாடலிது, மேல் - இனி, அலைவீசும் புனல் வாதவூரரை — அலைவீசாநின்ற நீர்சூழ்ந்த வாதவூரடிகளை, வந்து-தேசிகமூர்த்தமாய் வந்தருளி, அவிச்சை வலி நீங்க விழி பணிகொண்ட நெறி - அஞ்ஞானமாகிய பிணிப்பினைச் சேதித்துப் பணிகொண்டருளிய திருவிளையாடலை, அறிந்தபடி மொழிவாம்-தெரிந்தவண்ணம் எடுத்துக்கூறுவாம்.

தக்கன் சாபத்தாற் பதினைந்து கலையையுமிழந்து ஓர் கலையையிழக்கின்ற சந்திரன் இந்திரனும் பிரமனையடைந்து வணங்கித் தனது குறைகூறி யிரக்கப், பிரமன் சிவபெருமானது கைப்பில் கருணைத்திறத்தை யெடுத்துக்கூறியவரைச் சரணடையின் நின்குறை தீர்ப்பாரென்று கூற, அதுகேட்டுப் பெரும்பேறு பெற்றேனெனக் களிகூர்ந்து திருக்கயிலை சென்று அப்பெருமானார் திருவடியை வணங்கித் தனது குறைகூறக், கருணைபூத்து அந்த ஓர் கலையினைத் தமது சடாமகுடத்திலணிந்து இக்கலைக்குத் தேய்வில்லை ஒழிந்தகலையும் நாடோறும் வளருமென்றருளினர் என்பது "எஞ்சியவிக்கலையிருக்கத்தேய்ந்தரு - விஞ்சியகலையெலாமேவநல்குதி - தஞ்சமின்னுவதியென்னத்தன்மதி - அஞ்சலையென்றனனருளிஞ்றியான். நிர்ந்தனவன்றியே திங்கடன்னிடை - ஆர்த்திகெகலையினையங்கையாற்கொளா - வார்த்திடுசடைமிசைவயக்கச்சேர்த்தினன் - சார்ந்திலதப்பமுதித்தக்கன்சாபமே. எந்தையவ்வழிமதியினை நோக்கியாதுநீ - சிந்தைசெய்திடேலெம்முடிச்சேர்த்தியசிறப்பால் - அந்தமில்லையிக்கலையினுக்கினிமேதகுநூல் - வந்துதோன்றுகின்கலையெலாநாடொறுமரபால்" எனக் காந்தத்தில் சந்திரசாபப்படலத்தில் வருதல் காண்க. (௧)

தொடுத்தவறுமையும்பயனுந்தூக்கிவழங்குநர்போல
வடுத்தவயல் குளனிரப்பியறம்பெருக்கியவனியெலா
முடுத்தகடலொருவர்க்குமுதவாதவுவரியென
மடுத்தறியாப்புனல்வையைக்கரையுளதுவாதவூர்.

(இ-ள்.) தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி வழங்குநர்போல - ஒருவனைச்சூழ்ந்த மிடியையும் அவன் பிறர்க்குப் பயன்படும் பயனையுஞ் சீர்தூக்கிக் கொடுப்பார்போல, அடுத்த வயல் குளன் நிரப்பி-அடுத்த வயலையுங் குளத்தையும் வறுமை தீர நீர்நிரப்பி, அறம் பெருக்கி - அவற்றால் பல தருமங்களையும் வளர்த்து, அவனி எல்லாம் உடுத்த கடல்-உலகை முற்றச்சூழ்ந்த கடலானது, ஒருவர்க்கும் உதவாத உவரி என்ன - ஒருவர்க்காயினுமுதவாத உவர்நீருடையதென்று, மடுத்து அறியாத புனல் வையைக்கரை வாதவூர் உள்ளது - அதிற் சற்றும் பாய்ந்தறியாத நீர்மயமாகிய வையைக்கரையின்கண் வாதவூரென்றோர் திருப்பதியுள்ளது.

உத்தமதானஞ்செய்வோர் என்பார் தொடுத்த வறுமையும் பயனுந் தூக்கி வழங்குநர்போல எனவும், அவர்போற் பயன்படுவனவற்றிற்கு உதவிப் பயன்படாதவற்று உதவிலரென்பார் அடுத்த வயல் குளனிரப்பி உடுத்த கடலொருவர்க்கு முதவாத வுவரியென மடுத்தறியா எனவுங் கூறினார். (௨)

விழவறாநகரெங்கும்விருந்தறாமனையெங்கு
மழவறாமதிற்றெங்குமறையறாவிடையெங்கு
முழவறாவரங்கெங்குமுகிலறாபொழிலெங்கு
முழவறாவயலெங்குமுடம்பறாவுயிரென்ன.

(இ-ள்.) உடம்பு அறாத உயிர் என்ன - தேகத்தினின்று நீங்காத உயிரைப் போல, நகர் எங்கும் விழவு அறா - நகரமெங்கணும் உற்சவங்களொழியா, மனை

எங்கும் விருந்து அறு - வீடுகளெங்கும் இருவகை விருந்தும் நீங்கா, மகிழ்வு எங்கும் மழவு அறு - மகிழ்ச்சிதோன்று மிடமெங்களும் பிள்ளைகள் நீங்கா, இடை எங்கும் மறை அறு - வேதமோதும் பாடசாலையெங்கும் வேதமோதுதல் நீங்கா, அரங்கு எங்கும் முழவு அறு - நாடகசாலை யெங்கணு மத்தளமுழக்கம் நீங்கா, பொழில் எங்கும் முகில் அறு - சோலையெங்கணு மேகந்தவழுதல் நீங்கா, வயல் எங்கும் உழவு அறு - வயலெங்களும் உழவுதொழில் நீங்கா.

உயிர்நீங்கிய வுடம்பு சிறிதும் பயன்படாமைபோல விழவு முதலியன நீங்கிய நகர் முதலியன சிறிதும் பயன்படா என்பார் விழவறு நகர் விருந்தறுமனை என்றார். பொன், மணி, நெல் முதலியவற்றால் வருமகிழ்ச்சி மகவில்லாதவிடத்து உளதாயின் அஃதோர் மகிழ்ச்சியன்றென்பார் மழவறு மகிழ்வெங்கும் எனவும், மரச்செறிவுள்ளவிடத்தே மழையறு என்பார் முகிலறு பொழிலெங்கும் எனவுங் கூறினார். இருவகைவிருந்து என்றது தம்மாலறியப்பட்டோரும் படாதோரும். (௩)

ஆயவளம்பதியதனினமாத்தியரிலருமறையின்
றூயசிவாகமநெறியின்றுறைவிளங்கவஞ்சனையான்
மாயனிடும்புத்தவிருளுடைந்தோடவந்தொருவர்
சேயவிளம்பரிதியெனச்சிவனருளாலவதரித்தார்.

(இ-ள்.) வளம் ஆய பதியதனில் - இவ்வாறு வளம் நிறைந்த வாதவூரில், அமாத்தியரில் - அந்தணர்குலத்தில் அமாத்தியர் மரபில், அருமறையின் துறை தூய சிவாகமநெறியின் துறை விளங்க - அரிய வேதநெறியின் பாகுபாடுகளும் களங்கமில்லாத சிவாகமநெறியின் பாகுபாடுகளும் விளங்கவும், வஞ்சனை ஆல் மாயன் இடும் புத்த இருள் உடைந்து ஓட - (திரிபுராதியரை) வஞ்சித்தற்பொருட்டு மாயையில் வல்ல திருமால்நிறுத்திய புத்தசமயமாகிய பேரந்தகாரம் சிதைந்தழியவும், ஒருவர் வந்து சேய இளம்பரிதி என்ன சிவன் அருளால் அவதரித்தார் - ஒருவர்வந்து செவந்த இளஞ்சூரியனைப்போலச் சிவபெருமானார் திருவருளாலவதரித்தனர்.

அந்தணர் குலத்தில் அமாத்தியர் மரபில் என்றது "அந்நகரின்மறையோரி லருள்புனைமாத்தியர்குலத்தில்" எனவும், புத்தரை வாதில் வென்றமைதோன்றப் புத்தவிருளுடைந்தோட என்றது "மருவாதநெறிபூண்ட மத்தனெனும்புத்தனுடன் - பெருவாதுவென்று" எனவும் வாதவூரடிகள் புராணத்தில் வருதல்காண்க. அமாத்தியர் என்றது பிராமணகுலத்தில் அரசர்க்கு அமைச்சுத்தொழில் பூண்டு நடப்போர் வேதத்தின்பாகுபாடுகள் கருமகாண்டம், ஞானகாண்டம். ஆகமத்தின் பாகுபாடுகள் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் அந்தணாளர்க்கு அமைச்சியல் உண்டு என்றது "அந்தணாளர்க்கரசுவரையின்றே" எனவருந் தொல்காப்பியச் சூத்திரத்தா லுணர்க. திரிபுராதிகள் செய்யுங் கொடுமைக்காற்றாது இந்திரன் முதலியோர் திருமாலைச் சரணடைந்துகூற, அத்திருமால் மேருவின் வடபால் வந்து ஒரு வேள்விசெய்து அவ்வேள்வியினின்றும் பல பூதகணங்களை வருவித்து அத்திரிபுராதியரோடு போர்செய்ய ஏவினர், அப்பூதகணங்கள் சென்று போர்செய்தற் காற்றாதுடைந்து மீண்டன, அஃதுணர்ந்த திருமால் இனி வாளாவிருப்பின் யாவருயிரையும் வாங்குவரொன்று கருதியோர் சூழ்ச்சியாலிவர்களை வெல்லவேண்டுமென்று புத்தசமயம் ஒன்றுண்டாக்கி அச்சமயவுருக்கொடுவந்து யாவரையும் சிவநேசம் வழுவமயக்கினர் என்பது "சாக்கியவுருவின்மாயனுங்கவர் புரத்திற்சார்ந்து - கோக்களிற்றுரிவைபோர்த்த கொன்றைவேணியன்மேலன்பு-நீக்கியவ்வவுணர்தம்மை நிகழ்த்துபுன்சமயந்தன்னில் - ஆக்கிநல்லிலிங்கபூசை யறிவொரமெசுற்றினனே" எனக் கூர்மபுராணத்தில் வருதல்காண்க. (௪)

Koviloor Digital Library

பேர்வாதவூரரெனப்பெற்றுத்தம்பிறங்குமறைச்
சார்வாயநூல்வழியாற்சடங்கெல்லாநிறைவெய்தி
நீர்வாயவிளமதிபோனிரம்புவார்வேதமுதற்
பார்வாயெண்ணெண்கலையும்பதினாறாண்டினிற்பயின்றார்.

(இ-ள்.) பேர் வாதவூரர் என பெற்று - நாமகரணம் வாதவூரரெனப் பெற்றருளி, தம் பிறங்கு மறை சார்வு ஆய நூல் வழி ஆல் சடங்கு எல்லாம் நிறைவு எய்தி - தமக்குரிய விளங்கும் வேதத்தின் சார்பாயுள்ள நூல்களின் வழியால் செய்யும் சடங்குகளெல்லாம் நிரம்ப வாய்ந்து, நீர்வாய இளமதிபோல் நிரம்புவார் - தண்ணிய தன்மைவாய்ந்த இளம்பிறைபோல வளரும் வாதவூரர், வேதம் முதல் பார் வாய் எண்ணெண் கலையும் பதினாறாண்டினில் பயின்றார்-வேதமுதலாக வுலகிலார்ந்த அறுபத்துநான்கு கலைகளையும் பதினாறுவயதில் நிரம்பப்பழகினார்.

சார்வாய வழிநூல் என்றது சிட்சை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம் என்ற ஆறங்கத்தையும் சிட்சை என்றது வேதத்தினுச்சாரண லக்ஷணத்தை யுணர்த்துவது. வியாகரணம் என்றது வேதத்தின் பதலக்ஷணத்தை விளக்குவது. சந்தம் என்றது வேதத்தில் உக்தை முதலிய சந்தோபேதங்களுக்கு அக்ஷர சங்கியை கற்பிப்பது, நிருத்தம் என்றது வைதிகச் சொல்லாராய்ச்சி. சோதிடம் என்றது காரணியம், வராகம் முதலியன லக்கினம், திதி, வாரம், நட்சத்திரம், கரணம்,யோகமுதலியவைகளால் வைதிககருமத்துக்குக் காலம் உணர்த்துவது. கற்பம் என்றது போதாயனீயம், பாரத்துவாசம், ஆபத்தம்பம், ஆத்திரையம்முதலிய சூத்திரத்திலிருந்து வைதிககருமத்தைப் பிரயோகிக்கு முறையைக் கற்பிப்பது. "மிக்கலையுஞ் செழுங்கரு மதிக்கலையுமிலக்குமவர் - உக்கலையுந்தோளர்புலி யதட்கலையர்நல்லருளால் - ஒக்கலையும்பிறக்கலையு மொழித்திடுமாகமகலையும்-எக்கலையுங்கற்றுணர்ந்தா ரீரெட்டாண்டெல்லையினில்" என வாதவூரடிகள் புராணத்திலும் வருதல் காண்க. (௫)

இத்தகையோர்நிகழ்செய்தியறிந்தவர்சென்றியம்பவரி
மர்த்தனபாண்டியன்கேட்டுவரவழைத்துமற்றவரைச்
சித்தமகிழ்வரிசையினாற்சிறப்பளித்துத்தன்கோயில்
வித்தகநன்மதியமைச்சின்றொழில்பூட்டிமேம்படுத்தான்.

(இ-ள்.) இத்தகையோர் நிகழ் செய்தி அறிந்தவர் சென்று இயம்ப - இத்தன்மையையுடைய வாதவூரர் வேதமுதலிய நூல்களில் வல்லவராகி நிகழுஞ் செய்தியை அறிந்த தக்கோர் சென்று கூற, அரிமர்த்தனபாண்டியன் கேட்டு அவரை வர அழைத்து - அரிமர்த்தனபாண்டியன் கேள்வியுற்று அவரை வருவித்து, சித்தம் மகிழ் வரிசையினால் சிறப்பும் அளித்து - மனமகிழ்தற்கு ஏதுவாகிய வரிசைகளோடு அமைச்சியற்கு உரிய சிறப்புப்பெயரையுங் கொடுத்து, தன் கோயில் வித்தகம் நல்மதி அமைச்சின் றொழில்பூட்டி மேம்படுத்தான்-தனது கோயிலில் சதுரப்பாடமைந்த நல்ல கூரிய மதிவாய்ந்த மந்திரித்தொழிலுரிமைவைத்து அவரை மேம்படுத்தினான்.

வரிசையினாலென்றது பொன் பூண் ஆடை முதலிய வரிசையை. அமைச்சியற்குரிய சிறப்புப்பெயர் என்றது தென்னவன் பிரமராயன் என அரசனிட்ட நாமகரணத்தை. சிறப்பு என்பதனிறுதியில் தொக்குநின்ற இறந்ததுதழீஇய எச்சவும்மை பெற்றோர் இட்ட வாதவூரர் என்னுந் திருநாமமும் அன்றியென்பதை யுணர்த்திற்று "தென்னவன்பிரமராய னென்றருள்சிறந்தநாமம் - மன்னவர்மதிக்கநல்கி வையக

Koviloor Digital Library

முய்வதாக - மின்னவமணிப்பூணுடை வெண்மதிக்கவிகைதண்டு - பொன்னவிர்கவரி வேழ மளித்தனன்பொருளைநாடன்" எனவரும் வாதவூரடிகள் புராணத்தில் வருஞ் செய்யுளால் உணர்க. (சு)

செற்றமிகுங்கருவிகளின்றிறனூலுமநுவேந்தன்
சொற்றபெருந்தொன்னூலுந்துளக்கமறவிளக்கமுறக்
கற்றறிந்தோராதலினுற்காவலற்குக்கண்போன்ற
முற்றுணர்ந்தவமைச்சரினுமுதலமைச்சராய்நிகழ்வார்.

(இ-ள்.) செற்றம் மிகு கருவிகளின் திறன் நூலும் மநுவேந்தன் சொற்ற பெருந் தொல் நூலும் துளக்கம் அற விளக்கம் உற கற்று அறிந்தோர் ஆதலினால் - கோபமிக்க சேனைகளின் பகுதியை யுணர்த்தும் நூலினையும் மநுவென்னும் அரசன் கூறிய பெருமைவாய்ந்த தொன்றுதொட்டுள்ள நூலையும் ஐயந்திரிபற விளங்கக் கற்றுணர்ந்தோராதலால், காவலற்கு கண்போன்ற முற்று உணர்ந்த அமைச்சரினும் முதல் அமைச்சர் ஆய் நிகழ்வார் - பாண்டியனுக்கு இரண்டு கண்களைப்போல வாய்ந்த முன்னுள்ள மந்திரிகளினும் முதலமைச்சாய் மேம்பட்டு விளங்குவாராயினர்.

கருவி சேனை "பொருள்கருவிகாலம் வினையிடனொடைந்தும்" என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகருரையிற்காண்க. அமைச்சராவார் போர்த்திறத்துக்குரிய சேனைகளின் போர்ப்பயிற்சியை யுணர்த்தும் நூல் முன்னர் உணரவேண்டுதலால் செற்றமிகுகருவிகளின்றிறனூலும் எனவும், அப்போர்த்திறத்தால் மாற்றவர் திறை கொண்டுலகியல் நடத்துமுறைமை யுணரவேண்டுதலால் மநுவேந்தன் சொற்ற பெருந்தொன்னூலும் எனவும், இவைகளை யையந்திரிபறக் கற்றுணர்ந்து ஏனை யமைச்சரினு மேம்பட்டு விளங்கினராதலால் முற்றுணர்ந்த அமைச்சரினு முதலமைச்சராய் நிகழ்வார் எனவும், ஏனை யவ்வமைச்சர்க ளரசனுக்குக் கெடுதிபயக்கும் நெறியைமாற்றி நன்மைபயக்கும் நெறியில் அவனைச் செலுத்தலால் காவலற்குக் கண்போன்ற எனவுங் கூறினர். (எ)

புல்லாதார்முரணடக்கிப்பொருள்கவர்வாரென்பதெவன்
செல்லாதபல்வேறுதீபத்துச்செங்கோன்மை
வல்லாருந்தத்தமதேத்தரியபொருள்வரவிடுத்து
நல்லாராயொப்புரவுநட்படையநடக்கின்றார்.

(இ-ள்.) செல்லாத பல் வேறு தீ பத்து செங்கோன்மை வல்லாரும் - அடைதற்கரிய பலவாக வேறுபட்ட தீவுகளில் செங்கோல் செலுத்தவல்ல அரசர்களும், தத்தம தேத்து அரிய பொருள் வரவிடுத்து - தங்கள் தங்கள் நாடுகளில் கிடைத்தற்கரிய பொருள்களை யனுப்பி, நல்லார் ஆய் - பகைமையில்லாதவர்களாய், ஒப்புரவு நட்பு அடைய நடக்கின்றார் - மனமொத்த நட்புக்கொண்டொழுக நடக்கும் பெருந்தகைமைவாய்ந்த வாதவூரர், புல்லாதார் முரண் அடக்கி பொருள் கவர்வார் என்பது எவன் - பகைவர் வலிமையை யடக்கி யவர்கள் பொருளைக் கொள்ளைகொள்வார் என்று கூறல் அவரது வன்மைக்குச் சிறந்ததன்று.

பகைத்திறந்தெரிந்து கடிதலும் மனத்திட்பமும் வினைத்தூய்மையும் உடையராயபொழுதலால் மாற்றரசரும் சாமோபாயத்தையேயென்று மேற்கொண்டொழுகினர் என்பார் செங்கோன்மைவல்லாரும் நல்லாராயெனவும், தாங்களாகே திறைகொணர்ந்திறுப்பர் என்பார் வரவிடுத்து ஒப்புரவு நட்படைய நடக்கின்றார் எனவும்,

Koviloor Digital Library

இவற்றால் என்றும் பகைமையொழிந்தனர் என்பார் புல்லாதார் முரணடக்கிப் பொருள்வேர்வாரென்பதேவன் எனவுங்கூறினர் "காதலித்தறஞ்செய்வோர்க்குக் கவச முங்கண்ணுமாகி - ஏதிலர்க்கிடும்பையாகி யிறைஞ்சினர்க்கின்பமாகி - ஆதுலர்க்கன் னையாகி யரனடிக்கன்புமிக்கார் - பூதலத்திறைவனாணை பொதுவறநடத்துநாளில்" என வாதவூரடிகள் புராணத்தில் வருஞ் செய்யுளாலும் உணர்க. (௮)

அண்ணலரிமருத்தனருக்கடல்வாதவூரமைச்சர்
கண்ணுமிடுகவசமும்போற்காரியஞ்செய்தொழுகுவார்
தண்ணளிசெய்தவனியெலாந்தங்கிளைபோற்குளிர்தூங்க
வண்ணமதிக்குடைநிழற்றிமுறைசெய்துவாழுநாள்.

(இ-ள்.) அடல் வாதவூர் அமைச்சர் - வெற்றிவாய்ந்த வாதவூரில் வந்தருளிய மந்திரியார், அண்ணல் அரிமருத்தனருக்கு - பெருந்தகைமைவாய்ந்த அரிமருந்தனபாண்டியருக்கு, கண்ணும் இடு கவசமும்போல் காரியம் செய்து ஒழுகுவார் - கண்ணையும் பூண்ட கவசத்தையும்போல வினைசெய்தொழுகி, தண் அளி செய்து அவனி எல்லாம் தம் கிளைபோல் குளிர் தூங்க - தண்ணிய கருணைசெய்து நிலவுலகிலுள்ள மக்கள் யாவரும் தமது கிளைஞர்போல வெம்மைநீங்கி மகிழ்ந்திருக்க, வண்ணம் மதி குடை நிழற்றி முறைசெய்து வாழுநாள் - நிறம்வாய்ந்த சந்திரன்போன்ற தவளவட்டக்குடையால் நிழல்செய்து செங்கோல் நடாத்தி வாழுங்காலையில்.

கண் தீயநெறியினின்று விலக்கி நன்னெறியிற் செலுத்தல்போல அரசனிடத்துத் தீயவொழுக்கங்களினின்று விலக்கி அறிவுறுத்தி நல்லொழுக்கத்திற்செலுத்தலால் கண்ணும் எனவும், தெய்வத்தால் வந்தவற்றையும் வருவனவற்றையும் சாந்தியாலும் மக்களால் வந்தவற்றையும் வருவனவற்றையும் சாமபேததானதண்டமாகிய உபாயங்களாலும் போக்குதலால் கவசமும் எனவும், இவ்விரண்டும் வினைசெயல்மேல் நிற்றலால் தொழிலும் தொழிலுடைப்பொருளும் ஒற்றுமையுண்மையாற் தொழின்மேலேற்றிக் கண்ணும் இடுகவசமும்போற் காரியம் எனவுங்கூறினர். (௯)

கலிநிலைத்துறை.

மெய்ம்மையாம்பொருள்விவேகமும்வேறுபாடாய
பொய்ம்மையாம்பொருள்விவேகமும்புந்தியுட்டோன்ற
இம்மையாசையுமறுமையிலாசையுமிகந்து
செம்மையாகியகருத்தராய்ப்பரகதிதேர்வார்.

(இ-ள்.) மெய்ம்மை ஆம் பொருள் விவேகமும் - நித்தியமாகிய பொருளுணர்ச்சியும், வேறுபாடு ஆய பொய்ம்மை ஆம் பொருள் விவேகமும் - திரிபுள்ள அநித்தியமாகிய பொருளுணர்ச்சியும், புந்தி உள் தோன்ற - தமது மனத்திலுதிப்ப, இம்மையில் ஆசையும் மறுமையில் ஆசையும் இகந்து - இகபோகத்தில் விருப்பும் பரபோகத்தில் விருப்புமாகிய இவற்றினின்று நீங்கி, செம்மை ஆகிய கருத்தர் ஆய் - சித்தசுத்தியையுடையவராய், பரகதி தேர்வார் - பரமுத்தியை ஆராய்வாராயினர்.

தனக்கோர் ஆக்கக்கேடின்றிச் சுட்டறிவிற்படாதுநின்ற சத்தென்பார் மெய்ம்மையாம் பொருள் எனவும், ஆக்கக்கேடுகளுடைத்தாய்க் காலத்தால் ஏகதேசமாதலும் இடத்தால் ஏகதேசப்படுதலும் அதுவதுவாய்ப் பலவேறு வகைப்படுதலும் உடைத்தாய்ச் சுட்டறிவிற்பட்டுநின்ற அசத்தென்பார் வேறுபாடாய பொய்ம்மையாம் பொருள் எனவும், இகபோகமும் பரபோகமும் இந்திரசாலம்போலத் தோன்றும்

Koviloor Digital Library

போதே இன்றுதலும் கனவைப்போல் முடிவுபோகாது இடையேயழிதலும், பேய்த்தேர்போல ஒருகாரணங்காட்டி நிலைபெறுமையுமுடைமையால் அதனியல்பறிந்து ஒழித்தனர் என்பார் இம்மையாசையு மறுமையிலாசையு மிகந்து எனவும், நித்த நைமித்த கருமங்களைச் சிவார்ப்பணமாகச் செய்ததால் வந்த பயன் என்பார் செம்மையாகிய கருத்தராய் எனவும், இதனாற் சிவனடிக்கீழ் இரண்டறக்கலந்து நிற்கும் பரமுத்தி வேட்கை மீதூர்ந்தனர் என்பார் பரகதி தேர்வார் எனவுங் கூறினர். மெய்ம்மையாம்பொருள்விவேகமும்வேறுபாடாய-பொய்ம்மையாம்பொருள்விவேகமும்புந்தியுட்டோன்ற என்றதனால் எல்லாயோனிகளினும்புக் குழலுதல்கழிதற்கு ஏதுவாகிய ஞானசாதனமும், இம்மையாசையு மறுமையிலாசையு மிகந்த என்றதனால் சத்தமாதியாகிய விடயங்களினுகர்வுகழிதற்கேதுவாகிய வாதனைநீக்கமும், செம்மையாகியகருத்தராய் என்றதனால் இருவினையொப்புக்கு மூலமாகிய சிவபுண்ணியமுதிர்ச்சியும், பரகதிதேர்வார் என்றதனால் சத்திநிபாதத்திற்கு மூலமாகிய மலபரிபாகமும் பெற்றும். இகபோகமும் பரபோகமும் இல்லையாதலும் இடையேயழிதலும் நிலைபெறுமையும் உடைய என்றதற்கு "மண்டனில்வாழ்வும்வானத்தரசயன்மாலார்வாழவும் - எண்டருபூதபேதயோனிகள்யாவுமெல்லாம் - கண்டவிந்திரமாசாலங்களுக்கழுதிரதங்காட்டி - உண்டுபோலின்றும்பண்பிலுலகிலையசத்துமென்பர்" எனவருஞ்சிவஞானசித்தியாராலும், சித்தசுத்தியென்றது "நித்தியநைமித்தியகன்மங்களிட்காமியமாகப் - பத்தியுறச்செய்வதனாற்பாவமெலாநாசமுறும் - ஒத்தியன்மற்றதனுளே யொழியாமலுறுசித்த - சுத்தியுளதாமென்றுசொல்லுமான்மறையனைத்தும்" எனவரும் சூதசங்கிதையாலும் உணர்க. (௫0)

புத்தராதியோர்புறவுரைநெறிகளுப்பொய்யா
நித்தவேதநூறழுவியவகவுரைநெறியுஞ்
சித்தமாசறுத்தரனருட்டெளிவியாவதனுன்
மித்தையாணவத்தொடக்கறுதில்லையாம்வீடும்.

(இ-ள்.) புத்தர் ஆதியோர் புற வுரை நெறிகளும் - புத்தர்முதலியோரது புறநூல்கூறு மார்க்கமும், பொய்யாத நித்தம் வேதம் நூல் தழுவிய அக வுரை நெறியும் - மெய்ம்மையையுடைய அழியாத வேதநூலைத்தழுவிய அகநூல்மார்க்கமும், சித்தம் மாசு அறுத்து அரன் அருள் தெளிவியா - மனக்குற்றத்தையொழித்துச் சிவபெருமான் திருவருளைத் தெளிவுறுத்தமாட்டா, அதனால் - தெளிவுறுத்தலின்மையால், மித்தை ஆணவம் தொடக்கு அறு - சடமாகிய ஆணவக்கட்டொழியா, வீடும் இல்லையாம் - முத்தியும் இல்லையாம்.

புறப்புறச்சமயம் புறச்சமயம் என்பார் புத்தராதியோர்புறவுரைநெறிகளும் எனவும், அகப்புறச்சமயம் அகச்சமயம் என்பார் அகவுரைநெறியும் எனவும், அவை சிவத்தைக் கத்தாவாகக் கொள்ளுதலுடையன என்பார் பொய்யாநித்த வேதநூறழுவிய எனவும், புறவுரை பதிபசுபாசம் ஆகிய திரிபதார்த்தம் உண்டெனக்கூறுதலும் சிவனைக் கத்தாவாகக்கொள்ளுகையுமின்மையாலும், அகவுரை திரிபதார்த்தம் உண்டெனலும் சிவனைக் கத்தாவாகக்கொள்ளுதலும் உடையவாயினும் சித்தாந்தசைவத்தினுண்மையாகிய முப்பத்தாறுதத்துவங்களையுங் கடந்துநின்ற சுத்தசிவத்தைக் கூறுதலின்மையால் சிவபெருமான்திருவருட்டிறத்தைப் புலப்படுத்தா என்பார் சித்தமாசறுத்தரனருட்டெளிவியா எனவும், அருட்டிறத்தை யுணர்த்தாமையால் ஆணவத்தொடக்கறுதலும் பரகதியடைதலும் இன்றென்பார் அதனால் மித்தையாணவத்தொடக்கறுவில்லையாம்வீடும் எனவுங் கூறினர். புறப்புறச்சமயம் ஆவன உலோகா

Koviloor Digital Library

யதம், சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்திமிகம், வைபாடிகம், ஆருகதம். புறச்சமயம் ஆவன - தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம். அகப்புறச்சமயம் ஆவன - பாடாணவாதம், சமவாதம், சங்கிராந்தவாதம், ஈஸ்வரவவிகாரவாதம், பரிணாமவாதம், சிவாத்துவிதம். அகச்சமயம் ஆவன - சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம். புத்தராதியோர் புறவுரைநெறிகள்சித்தமாசறுத்தானருள்தெரிவியா னென்பது " இருமுச்சமயத்தொருபேய்த்தேரினை - நீர்நசைதரவருநெடுங்கண்மான்கணம்-தவப்பெருவாயிடைப்பருகித்தளர்வொடும்-அவப்பெருந்தாபநீங்காதகணத்தன " எனவருந் திருவண்டப்பகுதியாலும் " அதனால் - புறச்சமயங்கள் சிறப்பிலவாகி - அருளின்மாந்தரைவெருளுறமயக்கி - அலகைத்தேரினிலேயிற்றிரும்" எனவரும் சங்கற்பநிராகரணத்தாலும் உணர்க. "மொய்தருபூதமாதிமோகினியந்தமாகப் - பொய்தருசமயமெல்லாம்புக்குநின்றிடும்புகன்று - மெய்தருஞ்சைவமாதியிருமூன்றும்வித்தையாதி - யெய்துதத்துவங்களேயுமொன்றுமின்றெம்மிறைக்கே" எனவருஞ் சிவஞானசித்தியாரால் அகப்புறச்சமயத்தையும், முக்கூற்றுப்புறச்சமயத்தோர்தெய்வங்கள் நிலைபெறுந் தத்துவங்களையும், சித்தாந்தசைவத்தெய்வமாகிய சுத்தசிவத்தினியல்பையுங் கூறியவாறுகாண்க. (௧௧)

பத்திசெய்தானருட்பெறும்பத்தருக்கன்றி
முத்தியெய்தரிதெனமறைமொழிவதப்பொதுநூல்
சத்தியப்பொருட்டெளிவெலாஞ்சத்திநிபாதர்க்
குய்த்துணர்த்தியதாகமமென்பர்மெய்யுணர்ந்தோர்.

(இ-ள்.) பத்திசெய்து அரன் அருள் பெறும் பத்தருக்கு அன்றி - அன்புசெய்து சிவபெருமான் திருவருள் பெறுதற்கும் அடியவருக்கல்லாமல், முத்தி எய்து அரிது என்ன அ பொது நூல் மறை மொழிவது - சிவகதியடைதல் அரிதென்று அப்பொதுநூலாகிய வேதங்கள் கூறுதற்கும், மெய் உணர்ந்தோர் - உண்மையையுணர்ந்த பெரியோர், சத்தியம் பொருள் தெளிவு எல்லாம் - உண்மைவடிவாகிய சிவத்தைத் தெளிந்த லெல்லாவற்றையும், சத்திநிபாதர்க்கு ஆகமம் உய்த்து உணர்த்தியது என்பர் - திருவருட்பதிவுடையோர்க்கு சிறப்புநூலாகிய ஆகமம் விளக்கி யுணர்த்தற்குமென்று கூறுவார்கள்.

எய்த முதனிலைத் தொழிற்பெயர். அ உயர்வுப் பொருளில் வந்த சுட்டு. பத்தியென்பது சிவபெருமான் உவப்பன செய்தலும் வெறுப்பன வொழிதலுமாம், உவப்பனசெய்தல் பத்தியோகத்தில் விட்ட முறையா லச்சிவபெருமானுண்மையை நினைத்தல், கேட்டல், காண்டல் செய்தபொழுது கண்ணீரரும்பல், உடல் புளகித்தல், தன்வசமழிதல், நாத்தழுதழுத்தல், உரைதமொறல், ஆடல், பாடல் முதலியன. வெறுப்பன வொழிதல் இவையல்லாதன. இது மெல்வினைப்பத்தி, வல்வினைப் பத்தியென இருதிறப்படும்; மெல்வினைப்பத்தி திருவலகு திருமெழுக்கிடுதல் முதலியனவும் அர்ச்சித்து வழிபடுதலுமாம். வல்வினைப்பத்தி வரம்பில்லாத அன்பின் முதிர்ச்சியால் பிள்ளையைக் கறிசமைத்தல், தந்தை காலைத்தறித்தல் முதலிய வழிபாடாம். இப்பகுதிப்பட்ட பத்தி யச்சிவபெருமானுர் திருவருளாலாதலும் அப்பத்திமையால் திருவருள் கைகூடுதலும் உடைமையால் பத்திசெய் தானருள்பெறும் பத்தருக்கு எனவும், அன்பின்வழி நிற்போர்க்கன்றி யேனையோர்க்குச் சிவகதி கைகூட லரிதாதலால் பத்தருக்கன்றி முத்தியெய்தரிதெனவும், வேதம் பலபொருள் படத்தோன்றும் தன்மையதாதலால் வேதத்தைப் பொ

Koviloor Digital Library

நூல் எனவும், ஆகமம் அதுபோலாது தெளித்துணர்க்கும் பாடியம்போலத் திரிபதார்த்த லட்சணங்களை யுணர்த்தி ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணிச் சிவஞானத்தை யுதிப்பித்து மோட்சத்தைக் கொடுத்தலால் சிறப்புநூல் எனவும், அவ்வாகமநூல் மந்ததரம்,மந்தம்,தீவிரம்,தீவிரதரம் என்னும் இவற்றுள் நாலாம் சத்திநிபாதர்க்கு உரியதாதலால் சத்தியப்பொருட்டெளிவெலாம் சத்திநிபாதர்க்குய்த்துணர்த்தியதாகமமென்பர் எனவுங்கூறினர். சத்தி திருவருள், நிபாதம் பதிவு. ஆகமம் ஆ என்பது பாசம் எனவும், க என்பது பசுவெனவும், ம என்பது பதியெனவும் பொருள்படுதலால் திரிபதார்த்த லக்ஷணத்தை யுணர்த்து நூல் எனவும், ஆ என்பது சிவஞானம், க என்பது மோக்ஷம், ம என்பது மலநாசம் ஆதலால் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணிச் சிவஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தைக்கொடுக்கும் நூல் எனவும் பொருளுணர்த்தல் காண்க. உவப்பனசெய்தல் "மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென் - கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம் - பொய்தான்றவிர்ந்துனைப்போற்றிசயசயபோற்றியென்னும் - கைதானெகிழவிடேலுடையாயென்னைக்கண்டுகொள்ளே" எனவும், வெறுப்பனவொழிதல் "வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற் - பொறுப்பவனே" எனவும், நினைத்தல், கேட்டல், காண்டல் என்பன "வெள்ளந்தாழ்விரிசடையாய்விடையாய் விண்ணோர்பெருமானேயெனக்கேட்டுவேட்டநெஞ்சாய்ப் - பள்ளந்தாழுறுபுனலிற்கீழ்மேலாகப் - பதைத்துருகுமவர்நிற்க" எனவும் வருந் திருவாசகத்தாலும், மெல்வினைப்பத்தி "ஆதியையர்ச்சித்தற்கங்கமுமங்கங்கே - தீதிறிறம்பலவுஞ்செய்வனவும் - வேதியனே - நல்வினையாமென்றேநமக்குமெளிதானவற்றை - மெல்வினையேயென்றதுநாம்வேறு" எனவும், வல்வினைப்பத்தி "வரங்கடருஞ்செய்யவயிரவர்க்குத்தங்கள் - கரங்களினாலன்றுகறியாக்க - இரங்காதே - கொல்வினையேசெய்யுங் கொடுவினையேயானவற்றை - வல்வினையேயென்றதுநாமற்று. பாதகமென்றும்பழியென்றும்பாராதே - தாதையைவேதியனைத்தாளிரண்டும் - சேதிப்பக் - கண்டீசர் தாமாம்பரிசளித்தார்கண்டாயே - சண்டீசர்தஞ்செயலாற்றான். செய்யிலுகுத்ததிருப்படிமாற்றதனை - ஐயவிதுவமுதசெய்கென்று-பையவிருந் - தூட்டியறுத்தவர்க்கேயூட்டியறுத்தவனை - நாட்டியுரைசெய்வதென்னோநாம்" எனவும் வருந் திருக்களிற்றுப்படியாராலும், பத்தி சிவபெருமான் திருவருளால் வருதலும் அப்பத்தியால் திருவருளால் கைகூடுதலும் "அவனருளாலேயவன்றாள்வணங்கி" எனவும், "அன்பினாலடியேனுவியோடாக்கை யானந்தமாய்க்கசிந்துருக - என்பரமல்லாவின்னருடந்தாய்" எனவும், பத்தருக்கன்றி முத்தியெய்தலரிது "பத்திசெய்யடியரைப்பரம்பரத்துய்ப்பவன்" எனவும் வருந் திருவாசகத்தாலும், வேதம் பொது ஆகமம் சிறப்பு ஆகமம் சத்திநிபாதர்க்கு உரியது "வேதநூல்சைவநூலென்றிரண்டேநூல்கள் - வேறுரைக்குநூலிவற்றின்விரிந்தநூல்கள் - ஆதிநூலநாதியமலன்றருநூலிரண்டும் - ஆரணநூல்பொதுசைவமருஞ்சிறப்புநூலாம் - நீதியினாலுலகர்க்குஞ்சத்திநிபாதர்க்கும் - நிகழ்த்தியதுநீண்மறையினொழிபொருள்வேதாந்தத் - தீதில்பொருள்கொண்டுரைக்குநூல்சைவம்பிறநூல் - திகழ்பூர்வஞ்சித்தாந்தமாகும்" எனவருஞ் சிவஞானசித்தியாராலும் உணர்க. (௧௨)

வேதவாகமச்சென்னியில்விளைபொருளபேதம்
பேதமாகியபிணக்கறுத்திருட்பிணியவிழ்த்து
நாதனாகியதன்னையுமென்னையுநல்கும்
போதனாகியகுருபரன்வருவதெப்பொழுதால்.

Koviloor Digital Library

(இ-ள்.) வேதம் ஆகமம் சென்னியில் விளை பொருள் - வேதாகமங்களின்சிரசில் விளையும் பொருளால், அபேதம் பேதம் ஆகிய பிணக்கு அறுத்து - அபேதம் பேதமென்னும் பிணக்கினையொழித்த, இருள் பிணி அவிழ்த்த நாதன் ஆகிய தன்னையும் என்னையும் நல்கும் போதன் ஆகிய குருபரன் வருவது எப்பொழுது என்று - ஆணவமலமாகிய கட்டினின்றும் நீக்கி எப்பொருட்கும் இறைவனாகிய தன்னையும் என்னையும் அருளாநிற்கும் போதகாசிரியனாகிய குருமூர்த்தி வந்தருளுதல் எக்காலையென்று.

இதுமுதல் மூன்றுசெய்யுளுங் குளகம் ஆதலால் மூன்றாஞ்செய்யுளின்முதலிலுள்ள வன்று என்பதனைக்கொண்டு கூட்டிப் பொருள் கொண்டாம். வேதவாகமச் சென்னிமேல் விளைபொருள் என்றது சித்தாந்தத்தை. வேதாந்தத் தெளிவு எனவும் ஆகமாந்தம் எனவுங் கூறப்படுதலால் வேதவாகமச்சென்னியில் விளைபொருள் எனவும், பொன்னிடத்துப் பல அணிகளுண்டாதல்போல இறைவனிடத்துப் பிரபஞ்சமுண்டாம் என்பது அபேதசித்தாந்தம் ஆதலால் அபேதம் எனவும், இருளும் வெளியும்போல இறைவனும்பிரபஞ்சமும் தம்மில் வேறு என்பது பேத சித்தாந்தம் ஆகையால் பேதம் எனவும், சித்தாகிய இறைவனிடத்தினின்று சடமாகிய பிரபஞ்சம் தோன்றுத எனவும், பிரபஞ்சக் காரியப்படுமிடத்து இறைவனால் காரியப்படவேண்டும் எனவுமறுத்தலால் பிணக்கறுத்தெனவும், சொற்பொருள்போல என வுவமைகூறும் பேதாபேதசித்தாந்தம் அபேதம்பேதம் எனக்கூறும் இரண்டின்கண்ணும் அடங்குதலால் கூறுதொழிந்தம், அறுத்தென்றகுறிப்பாற்றலால் விளைபொருள் என்றசித்தாந்தம் சுத்தாவத்தை யெனவும், அச்சுத்தாவத்தை யடைதற்குரிய பாகுபாடுகளுள் அமைந்த போகபோக்கியக்கருவிகளின் செறிவுநீங்கற் கேதுவாகிய நாலாஞ்சத்திநிபாதமாகிய தீவிரதரம்போதரலும், சிவபுண்ணியமுதிர்ச்சியால் சத்தாதிவிடயங்களில் விரும்புதல் ஒழிதற்குக் காரணமாகிய இருவினையொப்புவந்தவிடத்து அருட்சத்தியால், சென்ற நிராதாரமாகிய ஏகதேசத்தன்மை நீங்குதற்குக் காரணமான மும்மலநீக்கம்வருதலால் அதனையும் உள்ளடக்கி இருட்பிணியவிழ்த்த எனவும், சத்தாதிவிடயநுகர்ச்சி ஒழிதற்கேதுவாகிய வாதனைநீக்கமும் பாச வறிவிச்சை கழிதற்கேதுவாகிய ஞானப்பெருக்கமு முறையேபெறுதற்கு உபதேசமொழி காரணம் ஆதலால் நாதனாகியதன்னையுமென்னையுநல்கும் எனவும், உருக்கழிதற்குக்காரணம் குருவினருளேயாதலால் போதனாகியகுருபரன் எனவும், சாதாரத் திருவுருக்கொண்டுவந்தருளல் எல்லாயோனியிற்ும்புக்குழலுதல் ஒழிதற்குக்காரணமாகிய ஞானசாதனம் ஆதலால் வருவதெப்பொழுதெனவுங்கூறினர் "ஏடியசத்திநிபாதநாலுபாதநன்றும்வகையெண்ணரியஞானபாதன் - கூடுமவர்தமக்குணர்வாய்நின்றஞானக்கூத்தனொருமூர்த்திகொடுகுறிகிமோகம்- நீடியவேலைசகலர்கெழுவாறுநிறுத்திமலமறுக்குமிதுநிலையார்சுத்தம் - கேடில்புகழ்தருஞ்சரியைகிரியாயோகக் - கேண்மையரோவிவையுணர்த்தக்கினக்குறாலே" எனவருஞ் சிவப்பிரகாசத்தாலும் "இருவினைச்செயல்களொப்பிலீசன்றன் சத்திதோயக் - குருவருள்பெற்றஞான யோகத்தைக்குறுகிமுன்னைத்-திரிமலமறுத்துப்பண்டைச் சிற்றறிவொழிந்தஞானம் - பெருகிநாயகன்றன்பாதம் பெறுவதுசுத்தமாமே" எனவருஞ் சிவஞானசித்தியாராலும் உணர்க. (௧௩)

காவிலாதபொன்பிறக்கெளிவருங்கருணைக்
குரவனாருளன்றியிக்கொடியவெம்பாசம்
புரையில்கேள்வியாற்கடப்பதுபுணையிலலன்றி
யரவுநீர்க்கடல்கரங்கொடுநீந்துவதொக்கும்.

Koviloor Digital Library

(இ-ள்.) கரவு இல்லாத பேர் அன்பினுக்கு எளிவரும் கருணை குரவனார் அருள் அன்றி - கள்ளமில்லாத பெரிய அன்புக்கு எளிவந்தருளும் கிருபாமூர்த்தியாகிய ஞானாசிரியருடைய திருவருட்புணையின்றி, இ கொடிய வெம் பாசம் புணை இல் கேள்வியால்கடப்பது - இந்தக்கொடிய வெய்யபாசமாகிய கடலைக் குற்றமில்லாதநூற் கேள்வியாற் கடக்கத்தொடங்கல், புணையினால் அன்றி உரவு நீர் கடல் கரம் கொடு நீந்துவது ஒக்கும் என்று - மரக்கலத்தாலன்றிப் பெரியநீர்மயமாகியகடலினைக் கடத்தற்குக் கையினால் நீந்துதல் ஒக்குமென்று.

மெய்யன்பினர் என்பார் கரவிலாதபேரன்பினுக்கு எனவும், அவர்க்கெளியர் என்பார் எளிவருங்கருணைக்குரவனார் எனவும், திரோதானசத்திநிக்கிரகம் என்பார் அருள் எனவும், அவரது திருவருளால் மலமொழித்தல்கூடும் என்பார் அருளன்றியெனவும், சாத்திரஞானம் ஐயத்தையே விளைத்துநிற்கும் பாசஞானமாதலால் ஒழித்தலரிதென்பார் இக்கொடியவெம்பாசம்புணாயில்கேள்வியாற்கடப்பது புணையினாலன்றி-உரவுநீர்க்கடல்கரங்கொடுநீந்துதலொக்கும் எனவுங்கூறினார். எதிர்மறைமுகத்தாற் கரப்போர்க்கு ஒளிப்பார் என்பார் கரவிலாதபேரன்பினுக் கெளிவருங்கருணைக் குரவனார் எனவும், அவர்கள் கற்றல் கேட்டலால் பாசங்கடக்கக்கருதல் என்பார் கடல் கரங்கொடு நீந்துவதொக்கும் எனவுங் கூறினாரென்றலும் ஒன்று. எளிவரும் கருணைக்குரவனார்என்றது "இன்றெனக்கெளிவந்தருளிய எனவும்" "அருபரத்தொருவ னவனியில்வந்து-குருபரனாகி யருளியபெருமை" எனவும்வருந் திருவாசகத்தாலும், திரோதான்சத்திநிக்கிரகம் என்றது "முந்தநுகருந்துபயனந்தமுறவந்த வினையுமெதிர்வினையுமுடிவினையுதவுபயனால் - நேராகநேராதல்மேவுங்கான்முற்-சினமருவுதிரோதாயிகருணையாகி" எனவும், இக்கொடிய வெம்பாசம்கட்பது என்றது "நீடியகேவலசகலநிகழாவாறு நிறுத்திமலமறுக்கும்" எனவும், பாசஞானத்தால் ஒழித்தலரிது என்றது "பாசமாஞானத்தாலும் படர்பசுஞானத்தாலும்-ஈசனையறியவொண்ணாது" எனவும்வரும் சிவப்பிரகாசத் திருவிருத்தங்களாலும், கரப்போர்க்கு ஒளிப்பார் என்றது "ஓராதாருள்ளத் தொளிக்குமொளியானே" எனவருந் திருவாசகத்தாலும் உணர்க. "வரமுடன்புலியிற்றோன்று மறையவர்க்கிறைவருண்மை-தருமுணர்வென்னுங்காலஞ் சத்திநிபாதமெய்திப்-பரமவஞ்செழுந்துமொன்றும் பராபரமுணர்த்துஞான-குருபரன்திருத்தாள்சென்று கூடுதல்வேண்டுமென்று" எனவாதவூரடிகள் புராணத்திலுங்காண்க. (௧௪)

என்றிவ்வாதவூர்மறையவரின்பவீடெய்தத்
துன்றுமாசையாற்றொடக்குண்டுசுருதியாகமநூ
லொன்றுகேள்வியோர்வருந்தொறுமுணர்ந்தவரிடைத்தாஞ்
சென்றுகாண்டொறுமளவளாய்த்தேர்குவாரானார்.

(இ-ள்.) இ வாதவூர் மறையவர்-இந்தவாதவூரிலவதரித்த அந்தணாளர், இன்பம் வீடு எய்த துன்றும் ஆசையால் தொடக்குண்டு-பேரின்பவடிவாகிய பரகதியையடைய எல்லையின்றி யெழுந்த ஆசையினால் கட்டுண்டு, சுருதி ஆகமம் நூல் ஒன்று கேள்வியோர் வருந்தொறும் உணர்ந்து-வேதாகமநூல்களிற்பொருந்திய கேள்வியில் வல்லோர் வருந்தோறும் அவர்கள் பாற்பதி பசுபாச விலக்கணங்களை யுணர்ந்து, அவர் இடை தாம் சென்று காண் தொறும் அளவாய் தேர்குவார் ஆனார்-அவர்களிடத்துச்சென்று பார்க்குந்தோறுங் கலந்து தெளிவாராயினர்.

Koviloor Digital Library

சுருதி என்றது வேதாந்தத்தை. ஆகமம் என்றது ஆகமாந்தமாகிய சித்தாந்தத்தை. இவ்விரண்டும் சூத்திரமும் பாடியமும் போனிற்றலால் சுருதியாகமநூல் எனவும், ஆன்மபோதஞ் சிவியாது சிவாநுபவத்தை யடையக்கருதியது பெறுதற்குச் சாதனமாகிய கேட்டல் முதலிய நான்கினுள் திரிபதார்த்தத்தி னிலக்கணமாகிய ஞானோபதேசத்தைக்கேட்டலால் இன்பமிடெய்தத் தன்றுமாசையாற் றொடக்குண்டேவருந்தொறுமுணர்ந்து எனவும், கேட்டல் ஞானம் சிந்தித்துத் தெளியும்படி யையத்தை விளைத்தலால் அவரிடைத் தாம் சென்று கண்டொறு மளவளாய் எனவும், அவர்களால் பதியினுண்மை யித்தன்மைத்து, பசுவினுண்மை யித்தன்மைத்து, பாசத்தினுண்மை யித்தன்மைத்தெனச் சிந்தித்துப் பாசஞானம் அஞ்ஞானம், பசுஞானம் சுதந்தரமின்ஞானம், பதிஞானம் உண்மைஞானமெனத் தெளிதலால் தேர்குவாரானார் எனவுங் கூறினார். இவ்விரண்டு நூலும் ஒற்றுமையுடையன என்றதற்கு "வேதநூல் சைவநூலென் றிரண்டேநூல்கள்-வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்கள்-ஆதிநூலநாதியமலன்றருநூலிரண்டும் - ஆரணநூல்பொதுசைவ மருஞ்சிறப்புநூலாம்-நீதியினாலுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கு நிகழ்த்தியதுநின்மறையினொழிபொருள்வேதாந்தத்-தீதில்பொருள்கொண்டுரைக்குநூல்சைவம்பிறநூல்-திகழ்பூர்வஞ்சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" எனவருஞ் சிவஞானசித்தியாராலும், கேட்டல் முதலிய நான்கும் சிவாநுபவம் பெறுதற்குச் சாதனம் என்றது "முந்தியவொருமையாலே மொழிந்தவைகேட்டல்கேட்டல் - சிந்தனைசெய்தலுண்மை தெளிந்திடவதுதானுகவந்தவாறெய்தவிட்டை மருவுதலென்றுநான்காம்-இந்தவாறடைந்தோர்முத்தி யெய்திய வியல்பினோரே" எனவருஞ் சிவப்பிரகாசத்தாலும் உணர்க. "வளங்கெழுபயிலுள்ள வாவியுங்காவுமோடி - விளங்கிசைவண்டுதேன்டேன் மிகுமலர்த்தேடுமாபோல்-உளங்கொள நிமலனன்று ளோதினருண்மையெல்லாம் - அளந்தறிவுணர்ந்தநீரார் யாவரென்றுயுநாளில்"எனவரும் வாதவூரடிகள் புராணத்திலுங்காண்க.(௫)

எண்ணிலாரிட்டதளந்தளந்தறிபொருளெல்லா
முண்ணுநீர்விடாய்க்குவரிநீருண்டவரொப்ப
வண்ணலாரகத்தமைவுறுதரசனுக்குயிருங்
கண்ணுமாயமைச்சுரிமையுங்கைவிடாதியல்வார்.

(இ-ள்.) அண்ணலார்-பெருமைவாய்ந்த வாதவூரர், எண் இல்லார் இட்டது அளந்து அளந்து அறிபொருள் எல்லாம் - அளவில்லார் பலர்பாலும் வரையறுத்தாராய்ந்தறிந்த பொருள்களெல்லாம், உண்ணும் நீர் விடாய்க்கு உவரி நீர் உண்டவர் ஒப்ப அகத்து அமைவுறாது - பருகும் நீர்விடாய் தணித்தற்குக் கடனீரைப்பருகி நீர் விடாய் தணியாதார்போலத் தமது மனத்தில் நிரம்பாது, அரசனுக்கு உயிரும் கண்ணும் ஆய் - அரிமருத்தனபாண்டியனுக்கு இன்றியமையாத உயிருங்கண்ணுமாகி, அமைச்சு உரிமையும் கைவிடாது - அமைச்சியலுரிமையையும் கைவிடாமல், இயல்வார்-தாம்கொண்ட ஒழுக்கத்தில் வழுவாதொழுகுவாராயினர்.

பலர் வாய்க்கேட்டல் ஒருப்பாடெய்தாதற் கேதுவாதலால் தனித்தனி யொருவர்பாலுங் கேட்டுணர்ந்தனர் என்னும் பன்மைதோன்றப் பன்மைப்பொருள்பட அளந்து அளந்து எனவும், கேட்டலுஞ் சிந்தித்தலுந் தெளிதலும் பாசஞானமாய்ப் பதிஞானந் தாராதென்பதுதோன்ற அறிபொருளெல்லாமுண்ணுநீர்விடாய்க்குவரி நீரொப்ப எனவும், பதிஞானம் பெறகின்றனர் என்பதுதோன்ற அகத்தமைவுறாது எனவும், பதிஞானத்திற் பதிந்தனாயினும் தமதுநிலைகுலையாது போகநுகர்தற்கு உ

Koviloor Digital Library

யிரும் தீவழிவிலக்கற்குக் கண்ணும் இந்தியமமையாக் கருவிகளாக அமைதல்போல அரசன் எல்லாப்போகங்களையும் நுகர்தற்கும்நல்லொழுக்கத்தில் நடத்தற்குங் கருவியாயிருந்தனர் என்பது தோன்ற அரசனுக் குயிருங் கண்ணுமாய் எனவும், இதனு லமைச்சுரிமைதோன்றவும் சிறிதும் அதனில் வழுவாதுநின்றனர் என்பதுதோன்றவும் மிகைபட அமைச்சுரிமையுங் கைவிடாதியல்வார் எனவுங் கூறினர். கேட்டல் முதலிய மூன்றும் பாசஞானமேயன்றிப் பதிஞானம் அன்றென்பது "பாசமாஞானத்தாலும்படர்பசுஞானத்தாலும்-ஈசனையறியவொண்ணாதிறையருண்ஞானநண்ணித்-தேசுறுமதனுன்முன்னைச் சிற்றறிவொழிந்துசேர்ந்து - நேசமோடியைபரத்து நிற்பது ஞானநிட்டை" எனவருஞ் சிவப்பிரகாசத்தாலும், பதிஞானமடைவோர் எவ்வகைத்தொழிலினிற்பினும் தமது நிலைகுலையார் என்பது "நாடுகளிற்புக்குழன்றுங்காடுகளிற்சரித்துநாகமுழைபுக்கிருந்துந்தாகமுதறவிர்ந்தும் - நீடுபலகாலங்கணித்தராயிருந்தும்நின்மலஞானத்தையில்லார்நிகழ்ந்திடுவர்பிறப்பின் - ஏடுதருமலர்க்குழலார்முலைத்தலைக்கேயிடைக்கே - எறிவிழியின் படுகடைக்கேகிடந்துமிறைஞானம் - கூடுமவர் கூடரியவீடுங்கூடிக் - குஞ்சித்தசேவடியுங்கும்பிட்டேயிருப்பர்" எனவருஞ் சிவஞானசித்தியாராலுமுணர்க. (கசு)

கள்ளக்காதலனிடத்தன்புகலந்துவைத்தொழுகு
முள்ளக்காரிகைமடந்தைபோலும்பரைக்காப்பான்
பள்ளக்காரியுண்டவனிடத்துள்ளன்புபதிந்து
கொள்ளக்காவலனிடைப்புறத்தொழிலுமுட்கொண்டார்.

(இ-ள்.) கள்ளம் காதலன் இடத்து அன்பு உள்ளம் கலந்துவைத்து - சோரபுருடனிடத்துத் தலையன்பு தனது அகத்தேபதியவைத்து, ஒழுகும் காரிகை மடந்தைபோல் - (புறத்தே தனக்குரியகணவன்புறத்தொழிலில்) சிறிதும் வழுவா தொழுகு மாதுபோல, உம்பரை காப்பான் - தேவர்களைக்காக்க, பள்ளம் காரி உண்டவன் இடத்து அன்பு உள் பதிந்து கொள்ள - கடலிற் ஜேன்றிய .விஷத்தையுண்ட பெருமானுரிடத்தில் தலையன்பு உள்ளேபதிந்துகிடக்க, காவலன் இடை புறத் தொழிலும் உட் கொண்டார் - அரிமருத்தனபாண்டியனிடத்தில் அமைச்சியலாகியபுறத்தொழிலினையும் சிறிதும் வழுவாமல் உட்கொண்டொழுகினர்.

பள்ளம் "குழிப்பாடிநேரிது" என்றாற்போலக் கடல்மேல்நிற்றலால் விட்ட வாகுபெயர். "கடற்குட்டம்போழ்வர்"என்றார் பிறரும். தலையன்பு,இடையன்பு, கடையன்பு என அன்பு மூவகைப்படும். தலையன்பு-தலைவிதலைவன்பெயர்,குணம் கேட்டவழித் தன்வசமழிதல். இடையன்பு-அவனைக்கேட்டவண்ணங் கண்டபொழுது தன்வசமழிதல். கடையன்பு-கூடினபொழுது தன்வசமழிதல். தைல தாரைபோல் இடையறாது முறுகியெழுந்த தலையன்பு என்பார் அன்புகலந்து உள்ளன்புபதிந்து கொள்ள எனவும், தன்வசமழிந்து பரவசப்பட்டொழுகும் பெண் தன்கணவன் வழிபாடுகளில் ஐயுறாதொழுகினும் அவ்வன்பு சிறிதும்வழுவாது என்பார் ஒழுகுங் காரிகைமடந்தையெனவும், பிழைசெய்தலால் அரசனுணைவழிநின்ற பாடிகாவலர் வசப்பட்டு அவரிழுத்தவழியெல்லாம் பரதந்திரராய்ச் செல்லுகின்றேமென் றுணர்ந்த வுலகினர் அப்பாடிகாவலர்க்குந் தமக்குந் தலைவனான அரசனை யடையப்பெற்று அவனுணைவழிநிற்கின் பரதந்திரராகாது அப்பாடிகாவலரையும் தமதாணைவழிநிறுத்துஞ் சுதந்திரராதல்போல, வினைவசப்பட்டமையால் முதல்வனுணைவழிநிற்கும் இந்திரியங்க ளிழுந்தவழியெல்லாம் பாதந்திரப்பட்டலைப்புண்டுசென்றேமென்று தலைய

Koviloor Digital Library

என்பாருணர்ந்து அவ்விந்திரியங்களையுந் தம்மையுமுடைய அம்முதல்வர் திருவருள்வழிநின்று அவர்பணியின்றொழுகில் அவ்விந்திரியங்களை சமதாளாவழி நிற்பிக்கச்செய்துகொள்ளுஞ் சதந்திரராவேமெனத்தேர்ந்து பசுகரணங்கெட்டுச் சிவகரணமாய்நின்றவராதலால் சிறிதும் வழுவாதுநிற்கும் அவ்வமைச்சியலால்வரும் ஆகாமியம் அவர்க்கேறாதென்பார் பள்ளக்கரியுண்டவனிடத்துள் ளன்புபதியக்கொள்ளக்காவலனிடைப்புறத்தொழிலுமுட்கொண்டார் எனவுங்கூறினார் "இந்திரியமெனைப்பற்றிநின்றேயென்வசத்தி விசையாதே தன்வசத்தேயெனையிர்ப்பதிவற்றைத் - தந்தவன்றனுரை வழிநின்றிடலாலென்றன் தானதிந்திட்டிவற்றினொருமேன் தனையுடையான்றன்கள்-வந்தனைசெய்திவற்றின்வலியருளினால்வாட்டி வாட்டமின்றியிருந்திடவும்வருஞ்செயல்களுண்டேல் - முந்தறுடைச்செயலென்றுமுடித்தொழுகவினைகண்மூளா வண்ணமிடினன்றே" எனவருஞ் சிவஞானசித்தியாராலுணர்க. உள்ளன்புபதிந்தெனப்பாடமாதலால் காவலனிடையுறத்தொழிலும் என்றபாடத்தைக் காவலனிடைப்புறத்தொழிலும் எனப் பாடங்கொள்க. (கஎ)

இன்னசெய்கையினொழுகுவாரொருபொழுதேகித்
தென்னர்தம்பிரானவையிடைச்சென்றெதிர்நின்றா
ரன்னபோதடுபரிநிரைகாப்பவரரசன்
முன்னர்வந்துதாழ்ந்தொருசிறைநின்றிதுமொழிவார்.

(இ-ள்.) இன்னசெய்கையின் ஒழுகுவார் ஒருபொழுது ஏகி - இச்செய்கையினொழுகும் வாதவூரர் ஒருபோது அரசன் கோயிற்குச்சென்று, தென்னர் தம்பிரான் அவை இடை சென்று எதிர் நின்றார் - பாண்டியர்பெருமானாகிய அரிமருத்தனபாண்டிய னவைக்களத்திற்போ யவனெதிர்நின்றனர், அன்னபோது அடுபரி நிரை காப்பவர் - அக்காலையில் கொல்லும் குதிரைப்பந்தியைக்காக்குங் காவலாளர்கள், அரசன் முன்னர் வந்து தாழ்ந்து ஒருசிறை நின்று இதுமொழிவார் - அப்பாண்டியன் முன்வந்து வணங்கி யொருபாலொதுங்கிநின் றிதனைக்கூறுவார்கள்.

இன்ன, அன்ன இரு அசைச்சுட்டின் றிரிபுகள். (கஅ)

மறந்தவாதவேல்வலவநம்வயப்பரிவெள்ளத்
திறந்தவாம்பரிபோகநின்றெஞ்சியவெல்லா
நிறைந்தநோயவுநெடிதுமூப்புடையவுமன்றிச்
சிறந்தவாம்பரியொன்றிலைதேர்ந்திடினென்றார்.

(இ-ள்.) மறம் தவாத வேல் வலவ - கொலைத்தொழிலினின்று நீங்காத வேலெறிதலில் வல்ல அரசனே, நம் வயம்பரி வெள்ளத்து இறந்த வாம்பரிபோக - நமது வெற்றியையுடைய குதிரைக்கூட்டத்துள் மரித்த குதிரைகள்போக, நின்று எஞ்சிய எல்லாம் - இறவாது நின்ற சேடமாயுள்ள குதிரைகளெல்லாம், நிறைந்தநோயவும் நெடிது மூப்பு உடையவும் அன்றி - மிக்கநோயுடையனவும் கழிந்தமூப்புடையனவும் அல்லாமல், தேர்ந்திடின் - ஆராயின், சிறந்தவாம்பரி ஒன்று இல்லை என்றார் - சிறந்தனவாகுங் குதிரைகள் ஒன்றுமில்லையென்று கூறினார்கள்.

என்றும் பகைவரைக் கீழ்ப்படுத்தலில்வல்லது என்பார் மறந்தவாதவேல் எனவும், வேலெறிதலிற் சிறந்தோன் என்பார் வலவ எனவும், அரசன் வழிநிற்கும் தமது உரிமைத்திறம் புலப்படுத்தற்குத் தாழ்ந்தனர் என்பார் முன்னிலைப்பொரு

Koviloor Digital Library

ளாயுள்ள அரசனையுளப்படுத்தி நம்வயப்பரிவெள்ளத்த எனவும், நோயுமூப்புமில்லாத குதிரைகளில்லையென்பார் சிறந்தவாம்பரியெனவுங் கூறினர். எஞ்சிய வினைமுதற்பொருள்மேல் நிற்றலால் வினைமுற்றுப்பெயர் "மாறிடத்துழலும் வேற்படை" என்றூர்பிறரும். மூன்றுள்ளவாம்பரி என்றதில் வாம் சாதியடையாகக்கொள்க.(கக)

மன்றல்வேம்பனும்வாதவூர்வள்ளலைநோக்கி
யின்றுநீர்நமதறைதிறந்திருநிதியெடுத்துச்
சென்றுவேலையந்துறையில்வந்திறங்குவதெரிந்து
வென்றிவாம்பரிகொடுவரப்போமென்றுவிடுத்தான்.

(இ-ள்.) மன்றல் வேம்பனும் - வாசமிக்க வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியனும், வாதவூர் வள்ளலை நோக்கி - வாதவூரிலவதரித்த அந்தணரைப்பார்த்து, நீர் இன்று நமது அறைதிறந்து - நீர் இப்பொழுது நமது கருவூலத்தைத்திறந்து, இருநிதி எடுத்து சென்று - எல்லையில்லாத திரவியத்தை யெடுத்துச்சென்று, வேலை அம் துறையில் வந்து இறங்குவதெரிந்து - கடலின் அழகிய துறையில் வந்திறங்குங் குதிரைகளைத்தெரிந்து, வென்றிவாம்பரிகொடு வர போம் என்று விடுத்தான் - வெற்றியையுடைய தாவுங்குதிரைகளைக் கொண்டுவரச்செல்லுமென்று அனுப்பினன்.

வினைசெயுமந்திரிகளுள் கூரிய நுண்ணறிவுடையோர் இவரேயென்பான் வாதவூர் வள்ளலைநோக்கி யெனவும், பதினுன்குகோடிப் பொன்னென்பான் இருநிதியெனவும், நமக்கு வழிப்பகையாயுள்ள சோழன்கடற்றுறையில் என்பான் சுட்டாது வேலையந்துறையில் எனவும், ஆரியநாட்டுக்குதிரைகளென்பான் தெரிந்து எனவுங் கூறினன் "வாவுநன்மாதுரகங்கொடுவாருமெனவுடனுந்தன - தாவியுமாயரனன்புடையார்முகநாடிமொழிந்தனன். மீனவர்கோன்மொழியின்புடைவேணியனேசரிசைந்தபின்-ஆனனசோதியுடன்புவியாள்பவன்வாசிகொளும்படி. வானவிமானமெறுந்திருவாழ்வுளகோயில்புகுந்ததன் - ஈனமிலாநேதிவந்தபொன்னேழுகோடிவழங்கினன். தாதகிமார்பனெடும்புவிசார்தருமாழ்கடலின்கரை-நீதிலமாதுரகங்கொடுசேர்கெழுமாரியர்வந்தனர் - ஏதமிலாயதகண்டனமியாமெனவேதொழுதன்பொடு - மேதினிகாவலன்முன்சிலமேதகுதூதர்விளம்பினர்" எனவரும் வாதவூரடிகள்புராணத்தில் வருஞ்செய்யுள்களால் உணர்க. (உ0)

உள்ளம்வேறுபட்டமைச்சியனெறியினின்றொழுகும்
வள்ளலார்நிதியறைதிறந்தரும்பெறல்வயமான்
கொள்ளவேண்டியபொருளெலாங்கொண்டுதாழிறுக்கி
வெள்ளைமாமதிவேந்தனைவிடைகொடுபோவார்.

(இ-ள்.) உள்ளம் வேறுபட்டு அமைச்சு இயல் நெறியினின்று ஒழுகும்வள்ளலார் - மனம் வேறாய் அமைச்சியலின் வழியினின்று வழுவாதொழுகும் வாதவூரர், நிதி அறை திறந்து அரும்பெறல் வயமான் கொள்ள வேண்டிய பொருள் எல்லாம் கொண்டு - கருவூலத்தைத் திறந்து பெறுதற்கரிய பொருளையெல்லாங் கைக்கொண்டு, தாழ் இறுக்கி-தாழ் செறித்து, வெள்ளை மாமதி வேந்தனை விடை கொடு போவார்-வெண்ணிறம்வாய்ந்த கலைநிறைந்த சந்திரன்மரபிற்றேன்றிய அரிமருந்தபாண்டியனை விடைபெற்றுச் செல்கின்றவர்.

Koviloor Digital Library

கள்ளக்காதலவிடத் தன்புலன்றலைவர்த்து என்ன முன்னர் உபமான முகத் தாற்கூறியதனையே மீட்டும் உள்ளம்வேறுபட்டமைச்சியனெறியினின்றொழுகும் வ ள்ளலார் என அறுவதித்தார் அரசன்பணியினிற்பார்போ லின்று அவன் பொருளை யெல்லாம் அரன்பணியிற்செலுத்தற் பயன்நோக்கி.இதுகூறியதுகூறல் அன்றென்க. திருப்பெருந்துறையிலெழுந்தருளிய சிவபெருமானையடையும்வண்ணம் இப்பொரு ளைக்கொண்டுசெல்லுக என அரசன் ஏவுதலால் அவ்வரசன் பரமுத்தியிற்செலுத்தும் அருட்சத்தியையொத்தான் என்றும் பொருள்பயக்கும் "மெய்த்தவருற்றபெருந்து றைவித்தனைக்குறுகும்படி - இத்தகுநற்பொருள்கொண்டுநீரிப்படியிற்செலுமென்ற லின் - அத்தகுபுத்தியொழிந்துயிர்ப்புதமுத்திபெறும்படி-உய்த்துளசத்தியுடன்பொ ருவொத்தனனுத்தமபஞ்சவன்" என வாதவூரடிகள்புராணத்தில் வருதல்காண்க.()

எடுத்தபொற்சுமையொட்டகத்திட்டுமுன்னேக
விடுத்துவிண்டொடுதிண்டிறல்விடையவன்கோயி
லடுத்தவிழ்ந்தபொன்னம்புயத்தடம்படிந்தனைய
மடுத்தடங்கரைச்சித்திபைங்கரத்தனைவணங்கா.

(இ-ள்.) எடுத்த பொன் சுமை - (அரசன்பணியால் கருவூலத்தினின்றும்) எ டுத்த பொருட்சுமையை, ஒட்டகத்து இட்டு முன் ஏக விடுத்து - (பணிசெய்வோர்) ஒட்டகத்தின்மேலிட்டு முன்னேசெல்லவேவி, திண் திறல் விடையவன் விண் தொ டு கோயில் அடுத்து - திண்ணியவன்மைவாய்ந்த இடபவூர்தியையுடைய சோமசுந்த ரக்கடவுளின் வானளாவிய திருக்கோயிலையடைந்து, அவிழ்ந்த பொன் அம்புயம் த டம் படிந்து - மலர்ந்த பொற்றாமரைத்தீர்த்தத்தினீராடி, அனைய மடு தடம் கரை சி த்தி ஐங்கரத்தனை வணங்கா - அந்தப் பொற்றாமரைத்தீர்த்தத்தின் பரந்தகரையிலுள் ள சித்திவிநாயகக்கடவுளை முன்னர்ப்பணிந்து.

தாங்கருதிய எண்ணத்தை முற்றுவித்தற்கு வணங்கினர் என்பார் சித்தியை ங்கரத்தனைவணங்கா என்றார். திண்டிறல் ஒருபொருட்பன்மொழியாதலால் மிக்கவலி யெனப்பொருள்கொள்க. (௨௨)

கருணைநாயகியங்கயற்கண்ணியெம்பிராட்டி
யருணநாண்மலர்ச்செய்யசீரடித்தலமிறைஞ்சி
வருணனூர்பெருவயிற்றுநோய்வலிகெடுத்தாண்ட
தருணநாண்மதிச்சடையுடையடிகண்முன்றாழா.

(இ-ள்.) கருணை நாயகி அம் கயற் கண்ணி எம் பிராட்டி அருணம் நாள் மல ர் செய்ய சீர் அடித்தலம் இறைஞ்சி - பராசத்தியாகிய அங்கயற்கண்ணியார் என் னும் எமது பெருமாட்டியின் சிவந்த அன்றலர்ந்த தாமரைமலர்போலச் செம்மை வாய்ந்த அழகிய திருவடிகளைவணங்கி, வருணனூர் பெரு வயிறு நோய் வலி கெடுத் து ஆண்ட - வருணனுடைய பெரியவயிற்றினோயின்வன்மைகெடுத்தாட்கொண்ட, தருணம் நாள் மதி சடை உடைய அழகன் முன் தாழா - இளமைதங்கிய புதிய இ ளம்பிறையைச் சடையிலணிந்த சோமசுந்தரக்கடவுளை முன்னேவணங்கி.

மலநோயைமுருக்கிச் சிவஞானம்பெருக்க வணங்கினர் என்னுங் குறிப்புத் தோன்ற வருணனூர்பெருவயிற்றுநோய்வலிகெடுத்தாண்ட - தருணநாண்மதிச்சடை யுடையழகன்முன்றாழா என்றமையாற் குறிப்பணி. (௨௩)

Koviloor Digital Library

ஒன்றுவேண்டுமிப்பொருளெலாமுனக்குமைம்பொறியும்
வென்றுவேண்டுநின்னன்பர்க்குமாக்குகவெள்ளி
மன்றுவேண்டிநின்றாடியவள்ளலென்குறையீ
தென்றுவேண்டிநின்றேத்துவார்க்கிறைவனின்னருள்போல்.

(இ-ள்.) ஒன்று வேண்டும் - (அடியேனுக்கு) ஒருகுறையுளது அஃதே வேண்டும் (யாதென்னில்,) இ பொருள் எல்லாம் - இந்தப்பொருள்முற்றும், உனக்கும் ஐம் பொறியும் வென்று வேண்டும் நின் அன்பர்க்கும் ஆக்குக - தேவரீருக்கும் ஐம் பொறிகளையும் தம்வழிப்படுத்தித் திருவருளடையவிரும்பும் உமதடியவர்க்கும் பயன் படுத்தக்கடவீர், வெள்ளிமன்று வேண்டி நின்று ஆடிய வள்ளல் - வெள்ளியம்பலத் தைவிரும்பிப் (பதஞ்சலிவியாக்கிரபாதர்பொருட்டு) நின்று நிருத்தஞ்செய்தருளியவ ள்ளலே, என் குறை ஈது என்று வேண்டி நின்று ஏத்துவார்க்கு - அடியேன்குறையி துதான் என்று குறையிரந்துநின்று வணங்குவோர்க்கு, இறைவன் இன் அருளால் - அவ்வள்ளலா ரினியவருளினால்.

சிவனடியார்க்கு உபகரிக்கில் பாசத்தை யொழித்துச் சிவஞானந்தந்து சிவ னடிக்கீழ்வைக்கும் ஆதலால் நின்னன்பர்க்கும் ஆக்குக என்றார் "சிவஞானச்செய லுடையோர்கையிற்றானந் - திலமளவேசெய்திடினுநிலமலைபோற்றிகழ்ந்து - பவமா யக்கடலினழுந்தாதவகையெடுத்துப் - பரபோகந்துய்ப்பித்துப்பாசமதையறுக்கந் - தவமாரும்பிறப்பொன்றிற்சாரப்பண்ணிச் சரியைகிரியாயோகந்தம்மினுஞ்சாராமே- நவமாகுந்தத்துவஞானத்தைநல்கி - நாதனடிக்கமலங்களைண்ணுவிக்குந்தானே" என வருஞ் சிவஞானசித்தியாராலுணர்க. மன்றுவேண்டிநின்றாடியவள்ளல் என்னும் வி சேஷியம்!பதஞ்சலி வியாக்கிரபாதர் வேண்டுகோளுக்கு அருள்புரிந்தமைபோல அ டியேன் வேண்டுகோளுக்கு அருள்புரிக என்னும் கருத்தை யுட்கொண்டிருத்தலால் வாக்கியரூபமாகவந்த கருத்துடையடைகொளியணி. (உச)

ஆதிசைவனாமருச்சகனொருவனேரணைந்து
பூதியீந்தனனமக்கிதுபோலிலைநிமித்த
மீதுநன்னெறிக்கேதுவென்றிருகையேற்றணிந்து
வேதநாதனையிறைஞ்சினார்விடைகொடுமீண்டார்.

(இ-ள்.) ஆதி சைவன் ஆம் அருச்சகன் ஒருவன் நேர் அணைந்து - ஆதிசைவ னாகிய அருச்சகனொருவ னேரேவந்து, பூதி ஈந்தனன் - விபூதி தந்தனன், நிமித்தம் இதுபோல் நமக்கு இல்லை - (நமது கருத்தை முடித்தற்குரிய) நிமித்தம் வேறில்லை, நல் நெறிக்கு ஈது ஏது என்று இரு கை ஏற்று அணிந்து - நன்னெறியை யடைதற்கு இதுவே சாதனமென்று இரண்டுகைகளையும் நீட்டி வாங்கி யணிந்து, வேத நாதனை இறைஞ்சினார் விடை கொடு மீண்டார் - சோமசுந்தரக்கடவுளை முறைப்படி வணங் கி விடைபெற்றுத் திரும்பினார்.

ஐசுவரியத்தைத் தருதலால் பூதியெனவும் இரக்ஷித்தலால் இரக்ஷை என்னுங் கா ரணப்பெயரைத் திருநீறுடையதாதலால் இப்பொருளைத் தமது திருப்பணிக்கும் அடி யார்க்கும் பயன்படுத்திச் சிவபோகத்தையூட்டு ஞானைசுவரியத்தைத் தருதற்கு இஃ து ஓர்குறியெனக்கருதினார் என்பார் பூதியீந்தனனமக்கிதுபோலிலைநிமித்தம் எனவு

ம், பாசமாகிய தீநெறியினின்று விலக்கிச் சிவஞானமாகிய நன்னெறியிற் செலுத்தி இரக்ஷித்தற்குச் சாதனம் என்றுட்கொண்டார் என்பார் ஈது நன்னெறிக்கேதுவென்றும், பெரியோர்கொடுப்பதை இரண்டுகையாலும் ஏற்றல்முறை என்பார் இருகையேற்று எனவும், சிவன்திருமுன் இட்டிலர் என்பார் அணிந்து எனவுங் கூறினர் “பெருந்துறையுறைவாரன்பு பெறுந்திருவடியாராதி - இருந்தவர்தம்மின்மேன்மையெய்தினர்முகத்தைநோக்கித்- திருந்தியபொருளிதெல்லாந்திருப்பணிக்களியுமேலாம்-அருந்தவர்க்குதவுமில்லாதலந்தவர்க்களியுமென்றார்” எனவரும் வாதவூரடிகள்புராணத்தாலும், “பூதியினைத்தான்கொடுக்கையாற்பூதியென்னும்பேர்- ஓதுவர்வெண்ணீற்றிறக்கென்பேர் - இரக்ஷிக்கையாலேயுயிரினையெல்லாம் - இரக்ஷையெனும்பேராமிதற்கு. தன்னிருகையாலுங்கொடுத்திடுகதாழ்ந்தேற்க - தன்னிற்பெரியோர்கைத்தான். அணியற்கின்மலன்முன்னழலின்முன்னும் - உணர்வுதவுந்தேசிகன்முன்னும்” எனவருஞ்சைவசமயநெறித் திருக்குறளாலும் உணர்க. (௨௫)

கலிவிருத்தம்.

இன்னியமதிர்ந்தனவெழுந்தனபதாதி
துன்னியவிணைக்கவரிதுள்ளினதுகிர்க்காற்
பொன்னியன்மதிக்குடைநிழற்றினபொலங்கொண்
மின்னியமணிச்சிவிகைமேற்கொடுநடந்தார்.

(இ-ள்.) இன் இயம் அதிர்ந்தன - இனியவாச்சியங்களொலிக்கவும், பதாதி எழுந்தன - காலாட்படையெழுந்து முன்செல்லவும், துன்னிய இணைக் கவரி துள்ளின - நெருங்கிய இரண்டுசாமரைகளிருபாலுந் துள்ளவும், துகிர் கால் பொன் இயல் மதி குடை நிழற்றின - பவளத்தாற் காம்பமைந்து பொன்னால் அமைந்த சந்திரனையொத்த தவளவட்டக்குடைநிழல்செய்யவும், பொலம் கொள் மின்னிய மணி சிவிகைமேல் கொடு நடந்தார் - பொன்னால் விளக்கமமைந்த இரத்தினமழுத்திய பல்லக்கின்மேலெழுந்தருளிச்சென்றனர்.

இணைக்கவரி இணைத்தலமைந்த சாமரையெனினும் அமையும். மதிக் கவிகை என்றதனுல் முத்தாலமைந்த குடை எனக்கொள்க. அதிர்ந்தன, எழுந்தன, துள்ளின, நிழற்றின முற்றெச்சங்கள். (௨௬)

மற்றிவர்வழிப்படுமுன்மாறிநடமாடும்
வெற்றிவிடையாரிவர்வினைத்தொகையினொப்பும்
பற்றியவிருட்டுமலபக்குவமுநோக்கா
வுற்றடிமைகொண்டுபணிகொண்டருளவுன்னு.

(இ-ள்.) இவர் வழிப்படு முன் - இவ்வாதவூராளிகள் அங்குநின்றும் கடற்றுறைக்குச் செல்லும்வழியிற் படுமுன், மாறி நடம் ஆடும் வெற்றி விடையார் - கான் மாறித் திருநடனஞ்செய்தருளிய வெற்றிவாய்ந்த இடபவூர்தியையுடைய சோமசுந்தரக்கடவுள், இவர் வினைத் தொகையின் ஒப்பும் - இவ்வாதவூராளிக ளிருவினையொப்பையும், பற்றிய இருட்டு மல பக்குவமும் நோக்கா உற்று - விடாது தொடர்ந்த இருட்டையொத்த மலபரிபாகத்தையு நோக்கியருளி, அடிமை கொண்டு பணி கொண்டருள உன்னு - ஆட்கொண்டு தமது திருப்பணியில் நிறுத்தியருளத் திருவுளத்தமைத்து.

Koviloor Digital Library

சிவபுண்ணியமுதிர்ச்சியால் சுகதுக்கங்களைத்தருதற்குக் காரணமாகிய கன்ம மலம் ஒன்றற்கொன்று ஏறுது துலைபோலத்தம்முளொத்தல் இருவினையொப்பு என்பார் வினைத்தொகையின்ஒப்பும் எனவும், உயிரளவிலே யமைவுற்று நீங்காது நிற்பது என்பார் பற்றிய எனவும், தன்னுருவத்தையும் ஞானத்தையுங்காட்டாது என்பார் இருட்டு எனவும், தனது சத்தி கெடுதற்குரிய காரணங்களோடுங்கூடிப் பதனழியும் பருவமுடையதே மலபரிபாகம் என்பார் மலபக்குவமும் எனவும், உயிர் அறிவித்தபடியேயறியும் பருவம் அடைந்ததென்பார் நோக்காவுற்று எனவும், அன்று இறைவர் சாதாரத் திருவுருக்கொண்டுவந்தருளுவது என்பார் அடிமைகொண்டு பணிகொண்டருளவுன்னு எனவுங்கூறினர். தம்முளொத்தல் என்றது "நிட்டுமிருவினைக ளொராகநேராதல் - கூடுமிறைசத்திகொளல்": எனவும், உயிரளவிலே யமைவுற்று நீங்காது நிற்பது என்றது "அன்றளவியுள்ளொளியோடாவியிடையடங்கி-இன்றளவுநின்றதிருள்" எனவும், தன்னுருவத்தையும் ஞானத்தையுங் காட்டாதுநிற்பது என்றது "ஒருபொருளுங்காட்டா திருளுருவங்காட்டும் - இருபொருளுங்காட்டாதிது" எனவும் வருந் திருவருட்பயனாலும், தனது சத்தி என்றது "கூறியமூன்று மலத்தின்குணக்குறி - வேறுகிளக்கின்விகற்பங்கற்பம் - குரோதமோகங்கொலையஞர் மதர்நகை - விராயெண்குணனுமாணவமெனவிளம்பினை" எனவரும் இருபாவிருபஃதாலும், உயிர் அறிவித்தபடியேயறியும் பருவம் என்றது "சூரியகாந்தக்கல்லினிடத்தேசெய்யசுடர்தோன்றியிடச்சோதிதோன்றுமாபோல் - ஆரியனுமாசான்வந்தருளிற்றோன்ற அடிஞானமான்மாவிற்றோன்றுந்தோன்றத் - தூரியனுஞ்சிவன்றோன்றுந்தானுந்தோன்றுந் தொல்லுலகமெல்லாந்தன்னுள்ளேதோன்றும் - நேரியனுய்ப்பரியனுமாயுயிர்க்குயிராயெங்கும் நின்றநிலையெல்லாமுன்னிகழ்ந்துதோன்றும்" எனவருஞ் சிவஞானசித்தியாராலும், சாதாரத் திருவுருக்கொண்டருளுவது "பூவலயம் தன்னினின்றுநீங்காச்சகலர்க்கவர்போல-முன்னின்றுமும்மலந்தீர்த்தாட்கொள்கை- அன்னவனுக் - காதிகுணமாதவினுலாடுந்திருத்தொழிலுஞ் - சோதிமணிமிடற்றுச்சுந்தரமும் - பாதியாம் - பச்சையிடமும்பவளத்திருச்சடைமேல் - வைச்சநதியுமதிக்கொழுந்தும் - அச்சமுற - ஆடுமரவுமழகார்திருநுதன்மேல் - நீடுருவவன்னிநெடுங்கண்ணும் - கேடிலயம் - கூட்டுந்தமருகமுங்கோலவெரியகலும் - பூட்டரவக்கச்சும் புலியதளும் - வீட்டின்ப - வெள்ளத்தழுந்தவிடுந்தாளிறுமடியார்-உள்ளத்தினும்பிரியாவொண்சிலம்பும் - கள்ளவினை-வென்றுபிறப்பறுக்கச்சாத்தியவீரக்கழலும்-ஒன்றுமுருத்தோன்றுமனுள்ளடக்கி - என்றும் - இறவாதவின்பத்தெமையிருத்தவேண்டிப்-பிறவாமுதல்வன்பிறந்து" எனவரும் போற்றிப்பஃறொடையாலும் அறிக. (உஎ)

சந்தமறைதேடரியதங்கருணையாலோ
ரந்தணர்குலக்குரவனாகியடிநீங்கா
மைந்தர்பலர்தம்மொடுபெருந்துறையில்வந்தோர்
கொந்தலர்நெருங்கியகுருந்தடியிருந்தார்.

(இ-ள்.) சந்தம் மறை தேடு அரிய தம் கருணையால் - சந்தமமைந்த வேதம் தேடுதற்கு அரிய தமது திருவருளால், ஓர் அந்தணர் குலம் குரவன் ஆகி - ஒப்பில்லாத மறையவர் குலத்திற்றோன்றிய குருமூர்த்தமாகி, அடிநீங்காத மைந்தர் பலர் தம் ஒடு பெருந்துறையில் வந்து - தமது திருவடி ஞானத்தினின்றும் நீங்காத பல மாணவர்களோடு திருப்பெருந்துறையில்வந்து, அலர் கொந்து நெருங்கிய ஓர் குருந்து அடி இருந்தார் - பூங்கொத்துகள் நெருங்கிய ஒரு குருந்தமரத்தினடியில் எழுந்தருளியிருந்தனர்.

ஆன்மாக்களுக்குத் தநுகரணபுவனபோகங்களைத் தந்த அவமயம்நோக்கி ஆட்கொண்டருளும் இறைவர்க்கு உரிய அதிகுணம் - விந்து சத்தியின் காரியப்பாடாகிய வாக்கிற்கு அதீதப்பட்டு நின்றது என்பார் சதுமறை நிண்டரிய தங்கருணையால் எனவும், அந்தணர்க்கு அந்தணரே குருமூர்த்தம் ஆவர் என்பார். ஓர் அந்தணர் குலக்குரவருமெனவும், அடியவரோடும் கணநாதர்களோடும் வந்தனர் என்பார் அடிநங்சாமைந்தர் பலர் தம்மொடு எனவும், திருக்கயிலையில் நின்றும் வந்தருளினர் என்பார் பெருந்துறையில்வந்து எனவும், அத்திருப்பெருந்துறையிலுள்ள பூங்காவின் நடுவில் நின்ற குருந்த புண்ணியவிருக்ஷம் என்பார் ஓர் கொந்தலர் நெருங்கிய குருந்தடியிருந்தார் எனவுங் கூறினர். தங்கருணை என்பதற்கு இறைவர்க்கு உரிய அதிகுணம் என்றது. "நன்னெறியிஞ்ஞானகலர் நடுமலமொன்றனையும் - அந்நிலையேயுணர்வின்றறுத்தருளிப் - பின்னன்பு - மேவாவிளங்கும்பிரளயாகலருக்குத் - தேவாய்மலவன்மந்தீர்த்தருளிப் - பூவலயம் - தன்னின்மிசைக்காச்சகலர்க்கவர்போல - முன்னின்றுமும்மலந்தீர்த்தாட்கொள்கை - அன்னவருக்-காதிகுணமாதலினால்" எனவரும் போற்றிப்பஃறொடையானும், அந்தணர்க்கு அந்தணரே குருமூர்த்தம் ஆவார் என்பது "அந்தணரேயந்தணர்க்குத்தேசிகராவாரொழிந்தார்-தந்தமைக்குமந்தவரேதாம்" எனவரும் சைவசமயநெறித்திருக்குறளானும், அடியரோடும் கணநாதரோடும் திருக்கயிலையினின்று திருப்பெருந்துறைக்கு வந்தது என்றது "மைந்தகடன்மண்ணவர்கடம்முருவில்வம்மென்-றந்தவையபூதர்கணநாதரையழைத்தே-சிந்திதருதேசிகசிறந்தவடிவங்கொண் - டுந்தமனெடுங்கயிலையோங்கலநீங்கி. வெம்பிறவிவேலைதனில் வீழ்பவர்களெல்லாம் - நம்புசிவநாமமெனுநற்புணைபிடித்தால் - எம்பரனருட்கரையிலேறுதுறையாமால் - அம்புவிமொழிந்தனபெருந்துறையதன்பேர்" எனவும், புண்ணியவிருக்ஷம் என்றது "வாய்த்தவளவிவ்வகைவயங்குமதனுப்பண் - ஏத்தருதவச்சிலைகளெங்கணுநெருக்க - மீத்தகழறச்சுழைமுதனைழைத்தமிளிர்மெய்ம்மை - பூத்தறிருபோன்றெழில்பொருந்துமொர்குருந்தம்" எனவும்வரும் வாதவூரடிகள் புராணத்தானும் அறிக. (உ௮)

பொருங்கடலநீகமொடுபோய்ப்புறவடுத்த
விருங்கடமளப்பிலகடந்தெழுபிறப்பாங்
கருங்கடல்கடக்கவருவார்கருணைவெள்ளப்
பெருங்கடனிறைந்துறைபெருந்துறையடைந்தார்.

(இ-ள்.) பொரும் கடல் அநீகம் ஒடு போய் - கரையொடு மோதுங் கடலையொத்த சேனையோடு சென்று, புறவு அடுத்த இருங்கடம் அளப்பில கடந்து - முல்லைநிலமும் அடுத்த பெரிய பாலைநிலங்களுமாகிய அளவில்லாத நிலங்களைக்கடந்து, எழுபிறப்பு ஆம் கருங்கடல் கடக்க வருவார் - எழுபிறப்பாகிய பெரிய கடலைக் கடக்கவரும் வாதவூரடிகள், கருணைவெள்ளம் பெருங்கடல் நிறைந்து உறை பெருந்துறை அடைந்தார் - கிருபையாகிய நீர்மயமான பெரிய கடல் நிறைந்து வசிக்கும் திருப்பெருந்துறையை யடைந்தனர்.

ஒன்றைக்கடக்க முயல்வோர் முன்பு பலவற்றையுங் கடக்கும்படி பயிலவேண்டுதல்போலும் ஆதலால் புறவடுத்த இருங்கடமளப்பிலகடந்து எனவும், கடத்தலில் வைதேர்ந்த அவ்வாதவூரடிகள் சனனக்கடலைக் கடந்தனர் ஆதலால் எழுபிறப்பாங் - கருங்கடல்கடக்கவருவார் கருணைவெள்ளப் - பெருங்கடனிறைந்துறைபெருந்துறையடைந்தார் எனவுங்கூறினர். வெள்ளப்பெருங்கடல் வெள்ளம் பொருளடை.()

அடுத்திடவடுத்திடவகத்துவகைவெள்ள
மடுத்திடமுகிழ்த்தகைம்மலர்க்கமலமுச்சி
தொடுத்திடவிழிப்புனறுளித்திடவினைக்கே
விடுத்திடுமனத்தருள்விளைந்திடநடந்தார்.

(இ-ள்.) அடுத்திட அடுத்திட - (திருப்பெருந்துறையை) சேரச்சேர, அகத்து உவகை வெள்ளம் மடுத்திட - மனமாகிய விளைநிலத்தில் ஆராமகிழ்ச்சியென்னும் பிரவாக மடுத்தலால், முகிழ்த்த கைமலர் கமலம் உச்சி தொடுத்திட - (அதனால் தம்மை யறியாது) கூப்பிய கைத்தாமரை தலையிலேறவும், விழிபுனல் துளித்திட - கண்கள் ஆநந்தபாஷ்பம் சிந்தவும், வினைக்கு ஏ விடுத்திடும் மனத்து அருள் விளைந்திட - அரன்பணியிலே செலுத்தும் அம்மனத்தில் திருவருளாகிய பைங்கூழ் விளைந்து பயன்தரவும், நடந்தார் - நடந்தருளினர்.

உவகைவெள்ளமடுத்திட என்றமையால் மனத்தை விளைநிலம் ஆகவும், விளைந்திட என்றமையால் அம்மனத்தில் அருளாகிய பைங்கூழ்விளைந்து பயன் தருதலாகவும் பொருள் கூறினும். வினைக்கே விடுத்திடும் என்றதற்கு இருவினையொப்பு வாய்ந்தமையால் வினைக்கே விடைகொடுக்கும் எனப் பொருள் கூறுதலும் ஒன்று. பின் நிகழ்வதை முன்னுணர்த்தும் ஒருற்பாதம் என்பார் அடுத்திடவடுத்திட வகத்துவகை வெள்ளமடுத்திட எனவும், அதனால் விளையுங்காரியம் இவை என்பார் முகிழ்த்த கைம்மலர்க்கமலமுச்சி - தொடுத்திடவிழிப்புனறுளித்திட எனவும், அரன்பணியிற்செலுத்து மனத்தில் திருவருள் மிகூரும் என்பார் மனத்தருள்விளைந்திட எனவுங் கூறினர். அரன்பணியாவன "ஒழுக்கமன்பருளாசாரமுபசாரமுறவுசீலம் - வழுக்கிலாத்தவந்தானங்கள்வந்தித்தல்வணங்கல்வாய்மை - அழுக்கிலாத்துறவடக்கமறிவொடர்ச்சித்தலாதி - இழுக்கிலாவறங்களானுலிரக்குவான்பணியறங்கள்" என்பன சிவஞானசித்தியாரால் உணர்க. ஏழனுருபு நிற்குமிடத்து வினைக்கு என நான்கனுருபு நின்றது உருபுமயக்கம். (௯௦)

பித்திதுவெனப்பிறர்நகைக்கவருநாலாஞ்
சத்திபதியத்தமதுசத்தறிவுதன்னைப்
பொத்தியமலத்தினும்வெரீஇச்சுமைபொறுத்தோ
னொத்திழிபிணிப்புறுமொருத்தனையுமொத்தார்.

(இ-ள்.) இது பித்து என - இது பித்தென்று, பிறர் நகைக்க வரும் நாலாஞ் சத்தி பதிய-கண்டோர் நகைக்கவரும் நாலாஞ்சத்திநிபாதம் பதிய, தமது சத்தறிவு தன் ஐ பொத்திய மலத்து இன் உம் வெரீஇ - தமது உண்மையறிவை அன்றேமறைத்த மும்மலத்தினின்றும் வெருவி, சுமை பொறுத்தோன் ஒத்து - முன்பு சுமை சுமந்தவனையொத்து, இழி பிணிப்பு உறும் ஒருத்தனையும் ஒத்தார் - பின்பு சுமையிறக்கின ஒருவனையும் ஒத்தனர்.

நாலாஞ்சத்திநிபாதம் என்றது தீவிரதரம் ஏனைய மூன்றுமந்ததரம், மந்தம், தீவிரம். மந்ததரம் பாலில் நெய், ஒருவகையால் தோன்றியும் தோன்றாது மறைந்து உடனாய் நிற்றல்போலச் சிவம் ஒருவகையால் தோன்றியும் தோன்றாது மறைந்துடனாய்நிற்றல். மந்தம் பழத்தினிரதம் ஆராய்ந் தறியும் வழிவிளங்கித் தோன்றுவதா யுடனாய்நிற்றல்போலச் சிவம் ஆராய்ந்தறியும் வழிவிளங்கித் தோன்றுவதாயுட

Koviloor Digital Library

னாய்நிற்றல். தீவிரம் எள்ளின்கணெண்ணெய் இனிதுவிளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படாது உடனாய்நிற்றல்போலச் சிவம் இனிதுவிளங்கித் தோன்றினும் பிரித்தறியப்படா துடனாய்நிற்றல். தீவிரதரம் தீ இரும்பைத் தன்வண்ணமாக்குதல்போலச் சிவானந்தமேலிடச் செய்தல். இப்பருவங்களுக்கு வெயிலில் வெதும்பும் அரக்கும், வெயிலிலுருகும் மெழுகும், குட்டிவிளக்குநெய்யும், இடையறாதொழுகுந் தைலதாரையும் உபமானமாகக் கூறுதலுங்காண்க. அருள்வசத்தராய்த் தம்வசம் அழிந்துநிற்றலால் ஒன்றனையொருகாற்செய்து ஒருகாலிழத்தலைப் பித்திதுவெனப் பிறர் நகைக்கவருகாலாஞ்சத்திபதிய எனவும், சிவத்தொடுகலந்து பேரின்பநுகருஞ் சிவஞானவுணர்ச்சியைச் சத்தறிவு எனவும், முளை தவிடு உமிபோல உயிரைப்பிணித்து நின்ற சுகதுக்கங்களையும், அவை தோன்றுதற்குக் காரணமாகிய தநுகரணமுதலியவைகளையும், அச்சுகதுக்கங்களை நுகரும்வண்ணம் நிலைபெறுத்துதலையுமுடைய கன்மமாயை ஆணவம் என்னும்மும்மலங்களைப் பொத்தியமலத்தினும் வெரீஇ எனவும், சுமைசுமந்தோன் அச்சுமையா லாழ்த்தப்பட்டு வருந்துதல்போல் உயிர்ச்சுமையாகிய மலத்தால் யோனிகளிற்புக்குழலுதலில் சுமைபொறுத்தோனொத்து எனவும், அச்சுமையிறக்கியோன் இளைப்பொழிந்து சுகமுறுதல்போலப் பிறவித்துன்பமொழிந்து பேரின்பமுறுதலால் இழிபிணிப்புறுமொருத்தனையு மொத்தார் எனவுங்கூறினார். பித்தித என்றது "கொடிறும்பேதையுங் கொண்டதுவிடாதெனும் - படியேயாகிநல்லிடையறுவன்பிற் - பழமரத்தாணியறைந்தாற்போலக் - கசிவதுபெருகிக்கடலெனமறுகி - அகங்குழைந்தனுகுலமாய்மெய்விதிர்த்துச் - சகம்பேயென்றுதம்மைச்சிரிப்ப - நாணதுவொழிந்துநாடவர்பழித்துரை - பூணதுவாகக்கோணுதலின்றிச் - சதுரிழந்தறிமால்கொண்டுசாருங் - கதியதுபரமாவதிசயமாகக் - கற்றுமனமெனக்கதறியும்பதறியும்" எனவரும் போற்றித்திருவகவலானும், சத்தறிவு தன்னைப்பொத்திய என்றது "மும்மலநெல்லிருக்கு முளையொடுதவிடுமிப்போல் - மம்மர்செய்தணுவினுண்மைமறைத்திடும்" எனவும், மலத்தினும் வெரீஇச் சுமைபொறுத்தோனொத்து என்றது "மலமாயைகன்மமாயேயந்திரோதாயிமன்னிச் - சலமாரும்பிறப்பிறப்பிற்றங்கியிந்தனைமேன்மேலும் - நிலையாதகொள்ளிவட்டங்கறங்கெனநிமிடத்தின்கண் - அலமாருமிறையலுலையாதுயிர்டேக்குமன்றே" எனவருஞ் சிவஞானசித்தியாராலும் உணர்க. நீங்கியபாரணிலன் என்றாற்போல இழிபிணிப்புறுமொருத்தன் என்றார். சத்திநிபாதம் நால்வகைக்கு "இந்தனத்தினெரிபானெய்பழத்தினிரதம் - எள்ளின்கணெண்ணெயும்போலெங்குமுளனிறைவன் - வந்தனைசெய்தெவ்விடத்தும்வழிபடவேயருளு - மலமறப்போரான்மாவின்மலரடிஞானத்தால் - சிந்தனைசெய்தர்ச்சிக்கச்சிவனுளத்தேதோன்றித் - தீயிரும்பைச்செய்வதுபோற்சிவன்றன்னைப் - பந்தனையறுத்தத்தாளெக்கெடுத்தன்றுருவப் - பரப்பெல்லாங்கொடுபோந்துபதிப்பனிவன்பாலே" எனவருஞ் சிவஞானசித்தியாராலும் உணர்க. (௩௪)

நெருப்பிலிடுவெண்ணெயெனநெஞ்சுருகவென்னை
யுருக்குமிதனாலெனையொளித்தமலவாற்றல்
கருக்குமவனாகியெனையாள்கருணைவெள்ள
மிருக்குமிடனேயிதெனவெண்ணிநகர்புக்கார்.

(இ-ள்.) நெருப்பில் இடு வெண்ணெய் என - தீயிலிட்ட வெண்ணெய்போல, நெஞ்சு உருக என்னை உருக்கும் இதனால் - மனமிளக வென்னையுருக்கும் இத்தன்மையால், என்னை ஒளித்த மலம் ஆற்றல் கருக்குமவன் ஆகி - என்னையொளித்த ம

Koviloor Digital Library

லத்தின்வன்மையைத் தீப்பவனாகி, என்னை ஆள் கருணை வெள்ளம் இருக்கும் இடன் இது என்ன எண்ணி நகர்புக்கார் - என்னையாளுங் கிருபாவெள்ளம் இருக்கும் இடம் இதுவேயென்றுகருதித் திருப்பெருந்துறைத் திருநகரில் சென்றனர்.

தலையன்பு என்பார் நெருப்பிலிடுவெண்ணெயென நெஞ்சுருகவென்னை-உருக்குமிதனால் எனவும், உயிருணர்ச்சியின்காரியப்பாட்டைத் தடுக்கவல்லது என்பார் எனையொளித்தமலவாற்றல் எனவுங்கூறினார். கருக்குமவன் அவன் பகுதிப்பொருள் விகுதி. (௧௨)

காயிலையடைந்தகழுமுட்படைவலத்தார்
கோயிலையடைந்துகுளிர்வான்புனல்குடைந்து
வாயிலையடைந்துடலமண்ணுறவிழுந்து
வேயிலையடைந்தவரைமெய்ப்புகழ்வழுத்தா.

(இ-ள்.) காய் இலை அடைந்த கழுமுள் படை வலத்தார் - வருத்தும் தகட்டு வடிவமைந்த சூலப்படையை வலக்கரத்திலேந்திய பெருமானாது, கோயிலை அடைந்து குளிர் வான் புனல் குடைந்து - திருக்கோயிலையடைந்து தண்ணிய பெருமைவாய்ந்த சிவதீர்த்தத்தில் நீராடி, வாயிலை அடைந்து - திருவாயிலினையடைந்து, உடலம் மண் உற விழுந்து - சரீரம் நிலவுலகிற்படியத் தண்டாகாரமாகவீழ்ந்து, வேய் இல்லை அடைந்தவரை மெய் புகழ் வழுந்தா - மூங்கிலைத் திருக்கோயிலாகக்கொண்டருளிய அப்பெருமானாது உண்மைக்கீர்த்தியைத் துதித்து.

இறைமைக்குணமில்லார்மேல் அதனையேற்றிக் கூறும் பொய்ப்புகழ்போலதன்றென்பார் மெய்ப்புகழ் எனவுங்கூறினார். (௧௩)

ஆலயமருங்குவலமாகவருவார்முன்
மூலமறையோதிமுடியாதபொருடன்னைச்
சீலமுனிவோர்தெளியமோனவழிதேற்றுங்
கோலமுறைகின்றதோர்குருந்தையெதிர்கண்டார்.

(இ-ள்.) ஆலயம் மருங்கு வலம் ஆக வருவார் - திருக்கோயிலின் பக்கத்துப் பிரதக்கிணம்வரும் வாதவூரடிகள், முன் - தம்முன், மூலம் மறை ஓதியும் - தொன்றுதொட்டுள்ள வேதங்களைக் கற்றுணர்ந்தும், முடியாத பொருள் தன்னை - அறிதற்கரிய உண்மைப்பொருளை, சீலம் முனிவோர் தெளிய - தவசீலமமைந்த சநகர்முதலிய முனிவர்கள் தெளிந்துய்ய, மோனம் வழி தேற்றும் கோலம் - மௌனநிலைவழியினால் தெரித்தருளிய ஆசிரியத்திருக்கோலங்கொண்டபெருமானார், உறைகின்றது ஓர் குருந்தை எதிர் கண்டார் - எழுந்தருளியிருக்கும் ஒப்பில்லாத குருந்தவிருக்ஷத்தை யெதிரேபார்த்தனர்.

சநகர்முதலிய முனிவர்களுக்கு உண்மைப்பொருளைத்தெளிவித்தநிலைமையை முன்னே கூறியிருக்கின்றனம் அங்குக்காண்க. உயர்வுசிறப்பும்மைதொகுத்தல். ()

கலிநிலைத்துறை.

வேதநூலொருமருங்கினுமெய்வழிச்சைவப்
போதநூலொருமருங்கினும்புராணத்துட்கிடந்த
நீதநூலொருமருங்கினுநீள்கெழுசமய
பேதநூலொருமருங்கினும்வாய்விட்டுப்பிறங்க.

(இ-ள்.) வேத நூல் ஒரு மருங்கிறும் - வேதநூலொருபாலும், மெய் வழிச் சைவம் போத நூல் ஒரு மருங்கிறும் - உண்மைநெறியைக்கூறும் ஆகமமாகிய ஞானநூலொருபாலும், புராணத்துள் கிடந்த கீதம் நூல் ஒரு மருங்கிறும் - புராணப் பகுப்போடு வரையறைப்பட்ட இசையமைந்த சுமிருதிமுதலிய நூல்களொருபாலும், கிளை செழு பேதம் சமய நூல் ஒருமருங்கிறும் - பலவகைப்பட்ட ஒன்றோடொன்றொவ்வாத சமயநூலொருபாலும், வாய் விட்டு பிறங்க - வாய்திறந்தொலிக்கவும்.

வேதமும் ஆகமமும் சிவபெருமான் திருமுகங்களிற்றோன்றி முதனூலாயிருத்தலாலும், அவற்றுள் வேதம் சூத்திரமும், ஆகமம் பாடியமும்போல நிற்றலாலும் வேதத்தைமுதலிலும் ஆகமத்தைப் பின்னருங்கூறுவார் வேதநூலொருமருங்கிறும் மெய்வழிச்சைவப் - போதநூலொருமருங்கிறும் எனவும், அவ்வேதாகமங்களையுணர்ந்தோர் அவற்றைப் பிறர்க்கு இனிது விளக்குதற்பொருட்டுத் தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு என்னும் நால்வகையாப்பிற்கள், ஒன்றால் வழிப்படுத்துச்செய்த வழிநூல் எனக் கூறுவார், புராணத்துட்கிடந்த கீதநூலொருமருங்கிறும் எனவும், குருடர்கள் பலர்கூடி யானையைக் கையாற்றடவித் தத்தம் அறிவுக்குப் புலப்பட்டவண்ணம் வேறுவேறு கூறும் அதனிலக்கணங்களெல்லாம் கண்ணுடையவன் கண்டுகூறும் இலக்கணங்களுள் ஏகதேசமாயடங்குதல்போல, மற்றைச்சமயநூலார் தத்தம் சிற்றறிவிற்குப் புலப்பட்டவண்ணங் கூறும் அவ்வச்சமயநூல்களிற் கூறும் பொருளியல்புகளெல்லாம் முற்றுணர்வுடைய அவ்விறைவனருளிச்செய்யப்பட்ட வேதாகமங்களிற்கூறும் பொருளியல்பில் ஏகதேசமாய்க் காணப்பட்டு அடங்கும் பூர்வநூல் எனக்கூறுவார் கிளைசெழுசமயப் - பேதநூலொருமருங்கிறும் எனவும் கூறினார். புராணத்துள் மூன்றுருபு நிற்குமிடத்து ஏழனுருபுநிற்றல் உருபுமயக்கம் "ஓதுசமயங்கள்பொருளுணருநூல்கள் - ஒன்றோடொன்றொவ்வாமலுள பலவுமிவற்றுள் - யாதுசமயம்பொருணூலியாதிங்கென்னில்-இதுவாகுமதுவல்லதெனும்பிணக்கதின்றி - நீதியினாலிவையெல்லாமோரிடத்தேகாண - நின்றதியாதொருசமயமதுசமயம்பொருணூல் - ஆதலினாலிவையெல்லாமருமறையாகமத்தே - அடங்கியிடும்" எனவும் "அருமறையாகமமுதனூலனைத்துமுரைக்கையினால் - அளப்பரிதாமப்பொருளைப்பரனருளாலணுக்கள் - தருவர்கள்பின்றனித்தனியேதாமறிந்தவளவிற் - றர்க்கமொடுத்தரங்களினாற்சமயஞ்சாதித்த- மிருதிபுராணங்கலைகண்மற்றுமெல்லாம் - மெய்ந்நூலின்வழிபுடையாமங்கம்வேதாங்கம் - சுருதிசிவாகமமொழியச்சொல்லுவதொன்றில்லை - சொல்லுவார்தமக்கறையோசொல்லொணாதே" எனவருஞ் சிவஞானசித்தியாரால் உணர்க. (௯௫)

சுருதிகூறியவறமுதனான்குமத்தொன்னூற்
கரியதாங்கதிக்கேதுவென்றாகமங்காட்டுஞ்
சரியையாதிநாற்பாதமுந்தனித்தெரிந்துணர்ந்த
பெரியமாணவர்குழாமும்வினாவிடைபேச.

(இ-ள்.) சுருதி கூறிய அறம் முதல் நான்கும் - வேதங்கள் வகுத்துக்கூறிய தர்மார்த்த காமமோக்ஷம் என்னும் நான்கினையும், அ தொல் நூற்கு அரியது ஆம் கதிக்கு - அந்தத் தொன்னூலாகிய வேதநூலுக்கு அரிதாயுள்ள கதியையடைதற்கு, ஏது என்று ஆகமம் காட்டும் சரியை ஆதி நாற்பாதமும் - கருவி யிவையென்று ஆகமங்கள் எடுத்துக்காட்டும் சரியைமுதலிய நான்குபாதங்களையும், தனி தெரிந்து உண

Koviloor Digital Library

ர்ந்த பெரிய மாணவர் கழகமும் - பாகுபாடுசெய்து ஆராய்ந்த பெருமையமைந்தமா ணவர்கள்கூட்டமும், விஞ விடை பேச-அவற்றில் விஞவிடை யொருபால்பேசவும்.

அந்தொன்றூற்கரியதாம் ஏது என முடிக்க - வேதம் கருமகாண்டம், ஞான காண்டம் என இருவகைப்பட்டு யஞ்ஞாதி கருமங்களைச்செய்து புண்ணியலோகங்க ளையடைதலைக்கூறுதலும், இறைவன் தடத்தலக்கணத்தைக் கூறுதலுமே யன்றி, அவ்விறைவனையடையுஞ் சோபானங்களைக் கூறுதென்பார் சுருதிகூறியவறமுதனூன் குமந்தொன்றூற்-கரியதாம் எனவும், ஆகமம் பதி பசு பாசமென்று மூன்றனுள் பதிப்பொருள் மற்றைப் பாசபசுக்களுக்கு மேலாத லினிதுவிளங்கச் சொருபலக்கணத் தில்வைத்துக் கூறியப்பதியால் சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய சாயுச்சியங்களை யடைய முயலும் சத்திநிபாதர்க்குச் சரியை முதலிய நான்குபாதங்களையும் வகுத்துக்கூறுவதென்பார் ஏதுவென்றாகமங்காட்டும் - சரியையாதி நாற்பாதமும் எனவுங் கூறினார். "மறையும்-கருமநூல் ஞானநூலென விரண்டாங்கருமநூ லியனருச்சனைக்கு - வருவினையுணர்த்து ஞானநூலிவன்றன்வடிவிலாவடிவினையுணர்த்தும்" எனவரும் இப்புராணத்தாலும் "நிதியினாலுலகர்க்குஞ்சத்திநிபாதர்க்கும் - நிகழ்த்தியது" எனவருஞ் சிவஞானசித்தியாராலும் உணர்க. (கூசு)

சரியைவல்லமெய்த்தொண்டரும்சம்புவுக்கினிய
கிரியைசெய்யுநன்மைந்தருங்கிளர்சிவயோகந்
தெரியுஞ்சாதகக்கேளிருந்தேசிகத்தன்மை
புரியும்போதகச்செல்வருமளவிலர்பொலிய.

(இ-ள்.) சரியை வல்ல மெய் தொண்டரும் - சரியையில்வல்ல மெய்யடியாரும், சம்புவுக்கு இனிய கிரியை செய்யு நல் மைந்தரும் - இறைவன்திருவுளத்துக்கினிய கிரியையைச்செய்யும் நல்லமைந்தர்களும், கிளர் சிவ யோகம் தெரியும் சாதகம் கேளிரும் - விளங்குஞ் சிவயோகநிலையினின்றாராயுஞ்சாதகராகிய வுறவினரும், தேசிகத்தன்மை புரியும் போதகச் செல்வரும் அளப்பிலர் பொலிய - ஆசிரியத்தன்மைவாய்ந்த போதகாசிரியர்களும் அளவிலராகி யொருபால்விளங்கவும்.

சரியை தாசமார்க்கமாதலால் மெய்த்தொண்டரும் எனவும், கிரியை புத்திரமார்க்கமாதலால் நன்மைந்தரும் எனவும், சிவயோகம் சகமார்க்கமாதலால் கேளிரும் எனவுங்கூறினார். கேளிர் என்றமையாது சாதகர் என்றது இறைவன் திருவடியிலன்புமிகுந்து தமது மலங்களை யொழிப்போராதலால் சாதகக்கேளிர் என்றார் "அமலன்கமலமலரடிக்குற்றார்வம் - தமலமறுப்பார்சாதகர்" எனவரும் சைவசமயத் திருக்குறளாலுணர்க. சரியை, கிரியை, சிவயோகம் இவற்றின் விரிவை வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியபடலத்திற்காண்க. புறத்தொழிலொன்றால் உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடுசரியை. புறத்தொழில் அகத்தொழி லிரண்டால் அருவுருவத்திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடு கிரியை. அகத்தொழிலொன்றால் அருவுருவத்திருமேனியை நோக்கிச்செய்யும் வழிபாடு யோகம் என வறிக. (கூஎ)

ஒழித்தநோன்பினராடலர்பாடலருலகம்
பழித்தசெய்கையரழுகையர்நகையினர்பாசங்
கழிந்தகண்ணினுலாரூருக்கண்டுகொண்டுலகில்
விழித்தகண்குருடாத்திரிவீரரும்பலரால்.

(இ-ள்.) ஒழிந்த நோன்பினர் ஆடலர் பாடலர் - கருமாநுட்டானங்களையொழித்து ஆடியும் பாடியும், உலகம் பழித்த செய்கையர் அழுகையர் நகையினர் - உலகினர்பழிக்குஞ் செய்கையும் அழுகையும் நகையுமுடையவராய், பாசம் கழித்த கண்ணினுல் அரன் உரு கண்டு கொண்டு - ஆணவமலத்தினிநீக்கிய மனக்கண்ணினுலிறைவன்திருவுருவத்தைத் தரிசித்து, உலகில் விழித்த கண் குருடு ஆய் திரி வீரரும் பலர் - அவன் அவள் அது என்றும் பிரபஞ்சத்தில் விழித்தகண் குருடாகி யொருபால் திரியும் வீரர்களும் பலராம்.

இதுமுதல் மூன்று திருவிருத்தங்களால் சன்மார்க்கநிலையுடையோர்தன்மை கூறுகின்றார்.

ஞானநிட்டையுடையோர் விதித்தன செய்தலும் விலக்கியனவொழிதலும்வேண்டாது அவர்செய்வனவெல்லாம் தவமாம் என்பார் ஒழிந்த நோன்பினர் எனவும், பரமாநந்தமேலிடுதல் நோக்கி நிகழ்வன என்பார் ஆடலர் பாடலர் எனவும், இவர்கள் அறவொழியும் பாலர்குணத்தையும், ஒருகாற்செய்து ஒருகாலிழக்கும் உன்மத்தர்குணத்தையும், செய்விழுப்பினின்று செய்யும் பிசாசர் குணத்தையும் பொருந்தினவர் என்பார் உலகம்பழித்த செய்கைய ரழுகையர்நகையினர் எனவும், முப்பத்தாறு கருவிகளுங் கழன்று அருளிடத்தேநின்று சொரூபத்திலழுந்துவதாகிய சாக்கிரதாதீதத்தையுடையவர் என்பார்பாசங் - கழித்தகண்ணினுலரனுருக்கண்டுகொண்டுலகில் - விழித்தகண்குருடாய்த்திரிவீரர் எனவுங் கூறினார். "ஞாலமதின்ஞானநிட்டையுடையோருக்கு - நன்மையொடுதீமையில்லைநாடுவதொன்றில்லை - சீலமில்லைதவமில்லைவிரதமொடாச்சிரமச் - செயலில்லைதியானமில்லைசித்தமலமில்லை - கோலமில்லைபுலனில்லைகரணமில்லைகுணமில்லைகுறியில்லைகுலமுமில்லை - பாலருடனுன்மத்தர்பிசாசர்குணமருவிப் - பாடலினொடாடலிவைபயின்றிடினும்பயில்வார்" எனவரும் சிவஞானசித்தியாராலும் "நீக்கமிலநிமலசிவனுந்தகேவலமாமிர்மை - சாக்கிரங்களாதிசேர்ந்த சகலமாந்தன்மையாகும் - நீக்கமிலிரண்டுக்கூடாதொழியவோர்நிலையினிடும் - சாக்கிரவதீதஞ்சுத்தத் தகைமையதாகுந் தானே" எனவரும் சிவப்பிரகாசத்தாலும் அறிக. (௩அ)

காவிலுள்ளமாம்விசும்பிடைக்காசறவிளங்கும்
பரிவிலாச்சுடர்க்குதயமீறின்மையாற்பகலு
மிரவுநேர்படக்கண்டிலரியன்றுசெய்நித்த
விரதமாதிநோன்பிழந்துறைவிஞ்சையர்பலரால்.

(இ-ள்.) கரவு இல் உள்ளம் ஆம் விசும்பு இடை - கள்ளமில்லாத தமது இதயமென்னும் ஆகாயத்தில், காசு அற விளங்கும் பரிவு இல்லாத சுடர்க்கு உதயம் ஈறு இன்மையால் - குற்றமறவிளங்கும் மறுவேறுதலில்லாத சிவமென்னும் சூரியனுக்கு உதயமும் அஸ்தமனமும் என்றுமில்லாதிருத்தலால், பகலும் இரவும் நேர்படக் கண்டிலர் - சகலகேவலம் என்னும் பகலும் இரவும் தோன்றக்காணாராய், இயன்று செய் நித்த விரதம் ஆதி நோன்பு இழந்து உறை விஞ்சையர் பலர் - மனமொத்துச்செய்யு நித்தியகன்மமுதலிய தவங்களைக் கைவிட்டு ஏகாந்தத்தானத்தில் வசிக்கும் ஞானநிட்டையுடையோர்பலர் ஒருபாலிலும்.

மும்மலங்களின் குணங்களென்பார் கரவு எனவும், அம்மறைப்பு ஒழிந்தநின்ற உள்ளம் என்பார் கரவிலுள்ளமாம் எனவும், வின் சூரியன்தோன்றுதற்குத்

Koviloor Digital Library

தானமாய்நிற்றல்போலச் சிவசூரியன் தோன்றுதற்கு அடியவருள்ளமே தானம் என்பார் உள்ளமாம் விசும்பிடையெனவும், அநாதிமுத்தத்தன்மையுடையதென்பார் காசறவிளங்கும் எனவும், நிட்கள சிவம் என்பார் பரசிலாச்சுடர் எனவும், தோற்றமும் இறுதியும் இகந்தநின்றது என்பார் உதயமீறின்மையால் எனவும், கேவலமுஞ் சகலமும் நீங்கிய சுத்தநிலையில்நின்றவர் என்பார் பகலும் இரவு நேர்படக்கண்டிலர் எனவும், உறங்கினவன்கையிலுள்ள பாக்குத்தானேதவிர்தல்போல ஞானநிட்டைமேலிட்டால்தாமேயொழிந்தனவென்பார் நித்தவிரதமாதிநோன்பிழந்து எனவுங் கூறினார். பாசமுடையாருள்ளத்திற் ரோன்றாது அடியவருள்ளத்தில் விளங்கும் என்றது "தன்னுணர்வு - நேசத்தர்தம்பாலணிகழுந்ததிநெய்போல்" எனவும், பாசமுடையோருள்ளத்திற்றோன்றானென்றது "அருக்கனேர்நிற்பினுமல்லிருளேகாணார்க் - கிருட்கண்ணேபாசத்தார்க்கீசன்" எனவும்வரும் சிவஞானபோதத்தாலும், உறங்கினவன்கையிலுள்ள பாக்குத் தானேதவிர்தல்போல் என்றது "ஞாலநீதியுநான்மறைநீதியும் - பாலருன்மத்தர்பசாசரிலெனவும் - உறங்கினோன்கைவெறும்பாக்கெனவுந் - தானேதவிராதானுற்புரியா - தொழிந்திடினிரயத்தழுந்துதறிடமே" எனவருஞ்சங்கற்பநிராகரணத்தாலும் உணர்க. (௬௯)

உடையுங்கோவணமுண்டியுங்கைப்பலியுறவென்
றடையுங்கேளிருமரனடியார்கண்டிகலங்கண்
படையும்பாரிடமாயினும்பகலிராமுதலீ
றிடையின்றாமிடத்துறங்குவதிஃதவர்வாழ்க்கை.

(இ-ள்.) உடையும் கோவணமே - ஆடையுங் கோவணமே, உண்டியும் கைப்பலியே - உணவுங் கையிலேற்கும் பலியே, உறவு என்று அடையும் கேளிரும் அரன் அடியாரே - உறவென்றடைந்த சுற்றத்தாரும் சிவனடியவரே, கலனும் கண்டியே - ஆபரணமும் உருத்திராக்கக் கண்டிகையே, கண் படையும் பாரிடமே - படுக்கையும் நிலமே, ஆயினும் - (இவ்வாறு பிறர்க்கு) காணப்படினும், பகல் இராமுதல் இடை ஈறு இன்று ஆம் இடத்து - சகலமும் கேவலமும் முதலும் இடையும் இறுதியும் இல்லாத இடத்தில், உறங்குவது இஃதே அவர் வாழ்க்கை - உறங்குதலாகிய இத்தொழிலே அந்நிட்டையையுடையோர் பெருவாழ்வு.

பிரிநிலையில்வந்த ஏகாரம் தொக்குநின்றன. செய்யுள் ஆதலால் கண்டிகலன் என்றார். சுத்தநிலையாகிய சாக்கிராதீதம் கேவல சகலந்தோற்றம் கேடுநிலைகளினீங்கது ஆதலால் பகலிராமுதலீறிடையின்றாமிடத்து எனவும், பசுகரணம் சிவகரணமாய் நிற்றலால் சிவத்தோற்றமொன்றே பெற்றுப் பிரபஞ்சத்தோற்றரவில் விழியாதவராயிருத்தலால் உறங்குவதெனவுங் கூறினார் "சாக்கிரத்தேயதீதத்தைப்புரிந்தவர் கனுலகிற் - சருவசங்கநிவிர்த்திவந்ததபோதனர்களிவர்கள் - பாக்கியத்தைப்பகர்வ தெவனிம்மையிலேயுயிரின் - பற்றறுத்துப்பரத்தையடைபராவுசிவரன்றே - ஆக்குமுடிகவித்தரசாண்டவர்களரிவையரோ - டநுபவித்தங்கிருந்திடினுமகப்பற்றற்றிருப்பர்" எனவருஞ் சிவஞானசித்தியாரானுணர்க. (௭0)

இத்தகைப்பலதொண்டர்தங்குழாத்திடையால
மொத்தபைங்குருந்தடியினில்யோகவாசனத்திற்
புத்தகத்தெழுதியசிவஞானமெய்ப்போதங்
கைத்தலந்தரித்திருப்பதோர்கருணையைக்கண்டார்.

(இ-ள்.) இத்தகை பல தொண்டர் தம் குழாத்து இடை - இத்தன்மையையுடைய பல அடியவர் கூட்டத்திலிடையில், ஆலம் ஒத்த பைங்குருந்து அடியினில் யோக ஆசனத்தில் - வடவாலையொத்த பசிய குருந்தமரத்தினடியில் யோகாசனத்தில், புத்தகத்து எழுதிய மெய் சிவஞானபோதம் கைத்தலம் தரித்து இருப்பது ஓர் கருணையை கண்டார் - சிவஞானகோசத்திலெழுதிய உண்மையான சிவஞானபோதத்தினைத் திருக்கரத்தினில் தரித்திருக்கும் ஒப்பில்லாத திருவருள்வடிவாகிய ஞானாசிரியனைத் தரிசித்தனர்.

அடியவர் கூறுஞ் சிவாகமவொலியைக்கேட்டு ஏவலாளரால் தெரிந்துவந்து தரிசித்தனர் என்பார் இத்தகைப் பல தொண்டர் தங்குழாத்திடையாலம் - ஒத்த பைங்குருந்தடியினில் யோகவாசனத்தில் இருப்பதோர் கருணையைக்கண்டார் என்றார் "மாதவர்மிடும்பதிபுகுந்தழிமருங்கே - காதலுறைதண்டலையினன்குபுனைதொண்டர் - ஓதுசிவாகமவொலிப்பொலிவுகேளா - யாதிஃதெனத்துணையினேவலர்களென்றார். சென்றவர்கள்வந்துசிவபத்தர்பலர்சூழக் - கொன்றைமுடிவைத்தகுண வெற்பனைநிகரொப்பார் - நின்றதோர்குருந்தமரநிழலிலிருந்தார்-என்றலுமகிழ்ந்தனரினிப்பிறவியில்லார். ஏவலருரைத்தமொழிகேட்டரசெய்தும் - ஆவலொடுகாவிணையயார்த்தமலர்ந்து - மேவியமணிச்சிவிகைவிட்டினிதிழிந்தே - தேவர்பரவும்பரமதெய்வசபைகண்டார்" எனவரும் வாதவூரடிகள் புராணத்திற்காண்க. (௪௧)

மன்றுளாடியவானந்தவடிவமும்வடவா
லொன்றிநால்வருக்கசைவறவுணர்த்தியவுருவு
மின்றுநாயினேற்கெளிவந்தவிவ்வுருவென்று
வன்றுநாயகன்குறிப்புளத்துணர்த்திடவறிந்தார்.

(இ-ள்.) மன்று உள் ஆடிய ஆனந்த வடிவமும் - பொன்னம்பலத்திலாடியருளிய பேரானந்தத்திருவுருவமும், வடவால் ஒன்றி நால்வருக்கு அசைவு அற உணர்த்திய உருவும் - வடவாலநிழற்கீழெழுந்தருளிச் சநகர் முதலிய நால்வருக்கு முத்திநிலையை யையமறவுணர்த்திய திருவுருவமுமே, நாயினேற்கு இன்று எளிவந்த இ உரு என்று - நாயிற்கடைப்பட்ட எனக்கு இப்போது எளிதாய் வந்தருளிய இத்திருவுருவென்று, அன்று - அக்காலையில், நாயகன் குறிப்பு உளத்து உணர்த்திட அறிந்தார் - இறைவன் திருவருள் தமது மனத்திலுணர்த்தியருள உணர்ந்தனர்.

உருவும் என்பதனிறுதியில் தேற்றேகாரந் தொக்குநின்றது. தரிசித்த திருவுருவு தமக்குப் பேரின்பத்தை விளைத்தலால் மன்றுளாடிய வானந்தவடிவமும் எனவும், தாங்கருதியது அடையப்பெற்றமையால் வடவால் ஒன்றிநால்வருக்கசைவறவுணர்த்தியவுருவும் - இன்றுநாயினேற்கெளிவந்த விவ்வுருவென்று எனவும், திருவருள் முன்னின்றுணர்த்தச் சிவத்தை யுணருமுணர்ச்சி கைகூடுதலால் அன்றுநாயகன் குறிப்புளத்துணர்த்திடவறிந்தார் எனவுங்கூறினார். "அவனருளாலே யவன்றாள்வணங்கி" எனவரும் ஏதுவால் உணர்க. (௪௨)

முன்பணிந்தனரணிந்தனரஞ்சலிமுடிமே
லென்புநெக்கிடவுருகினரினியராயெலிவர்
தன்பெறும்வலைப்பட்டவரருள்வலைப்பட்டார்
துன்பவெம்பவவலையறுத்திடவந்ததொண்டர்.

Koviloor Digital Library

(இ-ள்.) வெம்பவம் துன்பம் வலை அறுத்திட்வந்த தொண்டர் - கொடிய பிறவித்துன்பமாகிய வலையையறுக்கவந்த வாதவூரடிகள், முன் பணிந்தனர் - திருமுன்னர்ப்பணிந்து, முடிமேல் அஞ்சலி அணிந்தனர் - தலைமேற் கைகளைக்கூப்பி, என்பு நெக்கிட உருகினர் - எலும்புகள் நெக்குக்கசிய வுருகி, இனியர் ஆய் எளிவந்து அன்பு என்னும் வலைப்பட்டவர் அருள் வலைப்பட்டார் - இனியவராய் எளிதாய்வந்து தமது அன்பென்னும் வலையிற்சிக்குண்ட பெருமானுரது திருவருளாகிய வலையிற் சிக்குண்டனர்.

பணிந்தனர், அணிந்தனர், உருகினர் முற்றெச்சங்கள். பிறவித்துன்பங்களாவன ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதி 'அத்தியான்மிகம் என மூவகைப்படும், அவையாவன "ஆதிதெய்விகமாதிபௌதிகம் - ஆதியத்தியான்மிகமென்ன - ஓதிய அக்கமூன்றிலத்தியான்மிகம் - மெய்யின்மனத்திலையமிலிரண்டே - வளியிற்பித்தில் விளையும்விளையில் - ஊறுகுதொழுநோயிலுதிப்பில்கொட்பில் - வெப்பிற்சூலையின் மக்களில்விலங்கில் - அலகையிற்கள்வரிற்பறவையினிருதரில் - மைந்தரின்மகளிரின் மணத்திடைத்தணப்பிற் - பேரறம்வளர்ப்பிற்பெருந்திருநுகர்விற் - சீரியயாக்கைமாதுயர்மாசு - மனத்துறுதுயரநினைப்பருஞ்சோகம் - அறிவுருவாக்கமடைவனல்பொருமை - மானமாக்கலம்பூணுதமறுத்தல் - இச்சையைநினைதலிருஞ்சினமிகுதல் - இனையவைமுதலாநினைவருந்திறத்த - ஆதிபௌதிகஞ்சீதமாமழை - உருப்பவிர்வேனிலுட்குவருகடுங்கால் - இருள்கீழிடுமின்பெருவிறலசனி - மன்னுயிர்க்குறுகண்டுனியவருந்தல் - ஆதியாயவிவருந்திறத்த - ஆதிதெய்விகம்பேதையாள்வயின் - கருக்குழியமுங்கல் பிறப்புறும்போது - திசைவருந்திமைவளைவில்பேதைமை - மடங்கலாருயிர்தொடக்கினவவ்வழி - யாவரும்விழையாக்கோள்வாய்நிரயத்து - வீழ்ந்தனவெழாஅவான்கழிதுன்பம் - இனையமாலையதுயரிடை" என ஞானமிர்தத்திற்கூறும் இவையெனவுணர்க. (சஅ)

காலமுங்கனுக்காட்சியுநிமித்தமுங்கடிந்தார்
சீலமாணவர்செவ்விதேர்தேசிகனென்ன
மூலவாகமமோதினுன்முறுக்கவிழ்கமுநீர்
மாலைசாந்தணிந்தடியின்மேல்வன்கழல்வீக்கி.

(இ-ள்.) காலமும் - தீக்கைபெறுதற்குரிய நன்முகூர்த்தமும், கனுக்காட்சியும் - தீக்கைபெறுதற்கு முன்காணும் நல்லகனுத்தோற்றமும், நிமித்தமும் - தீக்ஷைபெறுங்காலத்து நிகழும் நல்லநிமித்தமும், கடிந்தார் - ஆகிய இவைகளைக்கடந்துநின்ற, சீலம் மாணவர் செவ்விதேர் தேசிகன் என்ன - சீலத்தையுடைய சீடராகிய வாதவூரடிகளுடைய பருவத்தையுணர்ந்த ஆசிரியனைப்போல, மூலம் ஆகமம் ஓதினுன் - மூலவாகமங்களை யடியவர்பொருட்டுக் கூறியருளிய இறைவன், முறுக்கு அவிழ் கமுநீர் மாலைசாந்து அணிந்து - கட்டவிழ்ந்த கமுநீர்மாலையையும் சந்தனக்குழம்பையுமணிந்து, அடியின்மேல் வன்கழல்வீக்கி - திருவடிமேல் வீரகண்டையையும் அணிந்து.

ஏனையோர்க்கு ஆசாரியன் தீக்ஷைசெய்யுங்காலத்தில் காலத்தையுங் கண்டகனவையும் நல்லநிமித்தத்தையு முன்னர்த்தெரிந்து செய்யவேண்டுவதால் காலமுங் கனுக்காட்சியும் நிமித்தமும் எனவும், தீவிரதர மலபரிபாகமுடையவர் காலமுதலியவற்றைக்கடந்து நின்றவராதலால் கடிந்தார்சீலமாணவர் எனவும், அப்பக்குவர்க்குபதேசித்தருளுங் காலையில் உரியகுறிகளிவையாதலால் முறுக்கவிழ்கமுநீர்-மாலை

சாத்தனிட்டியின்மேல் லன்கழல்விக்கியெனவும், கௌசிகர், காசிபர், பாரத்துவசர், கௌதமர், அகத்தியர் இவர்கள்பொருட்டுச் சத்தியோசாதமுகத்தில் காமிகமுதலிய ஐந்தாகமங்களையும், வாமதேவமுகத்தில் தீத்தமுதலிய ஐந்தாகமங்களையும், அகோரமுகத்தில் விசயமுதலிய ஐந்தாகமங்களையும், தற்புருடமுகத்தில் ரௌரவமுதலிய ஐந்தாகமங்களையும், ஈசானமுகத்தில் புரோற்கீதமுதலிய எட்டாகமங்களையுங் கூறியருளினமையால் மூலவாகமமோதினான் எனவுங்கூறினார். காலமுதலியன வேண்டா என்பது "முத்திவிரும்பினருக்கெக்காலமுமுறையால் - உத்தமத்திருத்தமமாகும்" எனவருஞ் சைவசமயநெறித் திருக்குறளாலும், "வந்துநான்வறுமையுற்றேன் மாற்றெனநிலம்பாடென்று - சிந்தையுகுலமுற்றுன்னைச் செழும்பொருளீதல் செய்வார்க்-கிந்நாளளிக்கவேண்டு மெனவிதியின்மையாலே - அந்நாளிந்நாளாக வடிமைகொண்டருளவேண்டி" எனவரும் வாதவூரர்கள் புராணத்தாலும் உணர்க.

அண்ணல்வேதியரொழுக்கமுமன்புங்கண் டியாக்கை
யுண்ணிலாவுயிர்பொருள்புனலுடன்கவர்ந் துள்ளக்
கண்ணினுன்மலங்கழீஇப்பதகமலமுஞ்சூட்டி
வண்ணமாமலர்ச்செங்கரஞ்சென்னிமேல்வையா.

(இ-ள்.) அண்ணல்-இறைவர். வேதியர் ஒழுக்கமும் அன்பும் கண்டு - வாதவூரடிகள் பக்குவத்தையும் அன்பையும் பார்த்தருளி, யாக்கை உள் நிலாவு உயிர் பொருள் புனல் உடன் கவர்ந்து - உடலையும் உள்ளேவிளங்கும் உயிரையும் பொருளையும் உதகத்தோடு கடுக்கிலில் கைக்கொண்டு, உள்ளக்கண்ணினுல் மலம்கழீஇ - அகக்கண்ணினுல் மும்மலங்களையும்போக்கி, பதகமலமும் சூட்டி - தாமரைமலர்போன்ற திருவடித்திக்ஷையுஞ்செய்து, வண்ணம் மாமலர் செம் கரம் சென்னிமேல் வையா - செந்நிறம்வாய்ந்த பெருமைதங்கிய தாமரைமலர்போன்ற செவ்வந்திருக்கரத்தை மத்தகசையோகஞ்செய்து.

பார்க்கவேண்டுவன இவையென்பார் ஒழுக்கமும் அன்புங்கண்டு எனவும், செயற்கையால் அவருடைமையாய்நின்ற உடல்பொருள்களைத் தமக்குடைமையாக் கிக்கொள்ளுதலும், தாம் சுதந்திரரும் அவர்பரதந்திரருமாய் நிற்றலால் தமதருளாலன்றி யொன்றையுஞ்செய்யாது நிற்றலே உயிரைக்கொள்ளுதலும் என்பார் யாக்கை யுண்ணிலாவுயிர்பொருள் புனலுடன்கவர்ந்தெனவும், மீன் தனதுபார்வையால் தன்பிள்ளைகளைத் தன்வடிவாக்குதல்போலத் தமது அருணோக்கால் மும்மலங்களிற் பிழ்ப்புண்டுகிடந்த ஆன்மாவை யம்மலங்களினீக்கி யேகதேசவறிவினைக்கழிந்து வியாபகவறிவைத்தருஞ் சட்சுதீக்ஷை என்பார் உள்ளக்கண்ணினுல் மலங்கழீஇ எனவும், அவ்வியாபகவறிவினின்றும் வழுவாமல் நிறுவருட்பதிவுசெய்தனர் என்பார் பதகமலமுஞ்சூட்டி யெனவும், உள்ளும்புறம்பும் தம்வண்ணமாகச் சீடர் மலவாதனையொழித்தற்பொருட்டுச் செய்யும் பரிசதீக்ஷையென்பார் வண்ணமாமலர்ச் செங்கரஞ்சென்னிமேல்வையா எனவுங்கூறினார். கடுக்கிலில் கைக்கொண்டு என்றதை "துயிலைக்குடபால்வெற்பிலாதவன் சேர்ந்ததாலம் - பாயிருள்பரந்தபின்பு கடிகைபோர் பதினைந்தாம் - மேயவல்லுயிர்களெல்லாம் விழிதுயில்பயிலுங்காலைத் - தூய தொண்டர்க்குமவை தோலியுநல்லமையந்தோன்ற" எனவரும் வாதவூரடிகள்புராணத்திலும், சட்சுதீக்ஷையால் மலங்கழுவுதல் "திங்கள்சேர்சடையார்தம்மைச் சென்றவர்காணுமுன்னே - அங்கணார்குழைகூர்ந்த வருட்டிருநோக்கமெய்தித்-தங்கியபவத்தின்முன்னைச் சார்புவிட்டகலநீங்கிப் - பொங்கியவொளியினிழற் பொருவிலன்புருவமானார்" எனவருங் கண்ணப்பநாயனார்புராணத்திலுங்காண்க. (௪௫)

சூக்கமாகுமைந்தெழுத்தினிற்சுற்றியபாச
வீக்கநீக்கிமெய்யாநந்தம்விளைநிலத்துய்த்துப்
போக்குமீட்சியுள்புறம்பிலாப்பூரணவடிவ
மாக்கினானொருநிவகம்போல்வருமண்ணல்.

(இ-ள்.) ஒரு நிவகம்போல் வரும் அண்ணல் - ஒருபார்வைபோலவந்தருளிய இறைவர், சூக்கம் ஆகும் ஐந்தெழுத்தினில் - ஸ்ரீசூக்கும பஞ்சாக்கரத்தினால், சுற்றியபாசம் வீக்கம் நீக்கி - விடாதுசூழ்ந்த மலச்சிமிழ்ப்பினையொழித்து, மெய் ஆநந்தம் விளைநிலத்து உய்த்து - பேரின்பம்விளையும் நிலமாகிய தம்மொடுகூட்டி, போக்கு மீட்சி உள் புறம்பு இல்லாத பூரணவடிவம் ஆக்கினான் - கேடும் தோற்றமும் அகமும் புறமும் இல்லாத தமது பூரணவடிவமாகச்செய்தருளினார்.

சூக்கம் பிராகிருதச்சிதைவு. ஸ்ரீபஞ்சாக்கரம் உச்சரிக்குமுறையால் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் எனமூவகைப்படும்; அவற்றுள் இது சூக்குமம் என்பார் சூக்மாகுமைந்தெழுத்தினில் எனவும், அவற்றுள் நம ஒழித்தென்பார் சுற்றியபாசம்வீக்க நீக்கியெனவும், உச்சரிக்குமுறையினன்றித் திருவருளிடமாகத் தம்பாலமுத்துவார் என்பார் மெய்யாநந்தம் விளைநிலத்துய்த்து எனவும், தம்வயத்தராகலால் தோற்றக்கேடின்றும், அட்டமூர்த்தியாதலால் எங்குமிருத்தலின் இகந்துநின்றவரென்பார்போக்கு மீட்சியுள் புறம்பிலாப்பூரணவடிவம் எனவும், பக்ஷிமுதலியவற்றைப்பிடிப்போர் அவற்றிற்குரிய பார்வையைக்காட்டிப் பிடிப்பதுபோல வாதவூரடிகளைத் தமதருள்வலைப்படுத்தற்குச் சாதாரத் திருவுருக்கொண்டு வந்தனர் என்பார் ஒரு நிவகம்போல்வரு மண்ணல் எனவுங்கூறினார். "இறைசத்திபாசமெழின்மாயையாவி-உறநிற்குமோங்காரத்துள். விரியமநமேவியவைமீளவிடாசித்தம்-பெரியவினைதீரிற்பெறும். மாலார்திரோதமலமுதலாமாறுமோ - மேலாகிமீளாவிடின். சிவன்முதலேயமாறுசேருமேற்றிரும்-பவமிதநீயோதும்படி. வாசியருளியவை வாழ்விக்குமற்றதுவே-யாசிலுருவுமுமாமங்கு. ஆசினவநாப்பணடையாதருளினால்-வாசியிடைநிற்றல்வழக்கு" எனவரும் ஏதுக்களால் ஸ்ரீபஞ்சாக்கர உபதேசமுறையினைக் குருமுகத்தாலறிக. (௬௬)

பார்த்தபார்வையாலிரும்புண்டநீரெனப்பருகுந்
நிர்த்தன்றன்னையுங்குருமொழிசெய்ததுந்தம்மைப்
போர்த்தபாசமுந்தம்மையுமறந்துமெய்ப்போத
மூர்த்தியாயொன்றுமறிந்திலர்வாதவூர்முனிவர்.

(இ-ள்.) வாதவூர்முனிவர் - திருவாதவூரடிகள், இரும்பு உண்ட நீர் என்ன - நெருப்பிற்காய்ந்த இரும்பு சுவற்றியநீரைப்போல, பார்த்தபார்வையால் பருகும் நிர்த்தன்தன்னையும் - நோக்கியருளிய அருணோக்கால் மும்மலங்களையுஞ் சுவற்றிய இறைவனையும்; குருமொழிசெய்ததும் - உபதேசமொழி தன்மயமாக்கியதையும், தம்மைபோர்த்த பாசமும் - தம்மைவிடாது சூழ்ந்தபாசத்தையும், தம்மையும் - அதன்வழிப்படுந் தம்மையும், மறந்து - நினைந்தலொழிந்து, மெய்ப்போதம் மூர்த்தியாய் - ஞானநிட்டையுடையவராய், ஒன்றும் அறிந்திலர் - ஒன்றையும் சிறிதும் அறியாதவராயினார்.

குருமொழிசெய்தது என்றதை முன்னர்க்காண்க. இறைநிறைவிலமுந்து ஞானநிட்டையையடைந்தனர் என்பார் மறந்து மெய்ப்போதமூர்த்தியா யொன்றுமறிந்திலர் என்றார். (௬௭)

தேறலும்பாலுந்திங்கன்னலுமமுதமாய்த்தித்தித்
தூறுமுள்ளமுமுருக்கவுள்ளொளியுணர்ந்தின்ப
மானவாறதேக்கியபுறங்கசிவதொத்தொழியா
ஞானவாரிவந்திருந்தனனன்பர்தங்காவில்.

(இ-ள்.) தேறலும்பாலும் திங்கன்னலும் அமுதம் ஆய் தித்தித்து - தேறலும் பாலும் இனியகரும்பின்கட்டியு மமுதமாகத்தித்தித்த, ஊறும் உள்ளமும் உருக்க - புறமாகியவுடலையும் அகமாகிய இதயத்தையு முருக்க, உள் ஒளி உணர்ந்து - அகத்தேதோன்றிய திருவருட்பிரகாசத்தை யுணர்ந்த, இன்பம் ஆன ஆறு தேக்கிய - பேரின்பவெள்ளத்தால் மடுத்துத் தேக்கப்படுதலால், புறம் கசிவது ஒத்து - (அது) புறம்பேபொசிவதையொப்ப, அன்பர்தம் காவில் ஞானவாரி வந்து ஒழியா இருந்தனன் - வாதவூரடிகள் நாவில் ஞானக்கடலாகவந்து நீங்காது நிலைபெற்றனன்.

தேறலும்பாலுந் திங்கன்னலு மமுதமாய் என்பது "ஊறுயிராயுணர்வாயென்றுட்கலந்து - தேறலமுதமுமாய்த் தீங்கரும்பின்கட்டியுமாய் - வானோரறியாவழியெமக்குத் தந்தருளுந்-தேனார்மலர்க்கொன்றைச் சேவகனாய் எனவும், உள்ளொளி என்பது, "தெளிவந்ததேறலைச் சீரார்பெருந்துறையில் - எளிவந்திருந்திரங்கியெண்ணரியவின்னருளால் - ஒளிவந்தென்னுள்ளத்தி னுள்ளேயொளிதிகழ - அளிவந்த வந்தணனை" எனவும் "கள்வன்கடியன் கலதியிவனென்னாதே - வள்ளல்வரவரவந் தொழிந்தானென்மனத்தே - உள்ளத்துறுதுயரொன்றொழியாவண்ணமெல்லாம்-தெள்ளுங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ" எனவும்வருந்திருவாசகத்தாலுணர்க.

தொழுதகையினர்துளங்கியமுடியினர்துளும்ப
வழுதகண்ணினர்பொடிப்புறுமியாக்கையர்நாக்குத்
தழுதழுத்தவன்புரையினர்தமையிழந்தழல்வா
யிழுதையன்னமெய்யினர்பணிந்தேத்துவாரானார்.

(இ-ள்.) தொழுதகையினர் - கூப்பியகையினராய், துளங்கியமுடியினர் - கம்பித்ததலையையுடையவராய், துளும்ப அழுத கண்ணினர் - நீர்ததும்ப அழுதகண்ணினராய், பொடிப்புறும் யாக்கையர் - புளகித்த சரீரத்தையுடையவராய், அன்பு நாக்கு தழுதழுத்த உரையினர் - தலையன்பால் நாக்குத்தழுதழுப்பேறிய சொல்லினராய், தமை இழந்து அழல்வாய் இழுதை அன்னமெய்யினர் - தற்போதத்தையிழந்து நெருப்பிற்பட்ட வெண்ணெய்போல இளகுமேனியராய், பணிந்து ஏத்துவார் ஆனார் - வணங்கித்துதிப்பவராயினார்.

தலையன்பால் தம்வசமழிந்தவராதலால் தொழுதகையினர் தமையிழந்தழல் வாயிழுதையன்னமெய்யினர் எனக்கூறினார். அது "திருத்திகழ்விலைக்கிழுஞ் சிறந்தபோற்றிவிலைமேலும் - வாத்திருமேவுதரின மன்னவனென்னவந்தார் - உருத்தெரியாதாங் கோவணவுடையுங்குஞ்சி - விரித்தனகொழுங்கண்ணீர் மிகப்பொழி விழியுமானார். அன்புடனெருக்கிசிற்ப ரழுவர்கைதொழுவர்வீழ்வர்-இன்புறவெழுவர் பின்பாலெருவிரங்கியின்வர் - கன்பல்கைப்குள்கானார் ஞானநல்லறிவேகொண்டு-வேண்புனைபித்தர்பாலர் பிசாசர்தங்கொள்கையானார்" எனவரும் இவ்வடிகள்புராணத்தாற்காண்க. (௪௧)

பழுதிலாதசொன்மணியினாற்பத்திசெய்தன்பு
முழுதுமாகியவடத்திருமறைதொடுத்தலங்க

Koviloor Digital Library

லழுதுசாத்துமெய்யன்பருக்ககமகிழ்ந்தையர்
வழுவிலாதபேர்மாணிக்கவாசகனென்றார்.

(இ-ள்.) பழுது இல்லாத சொல் மணியினை பத்திசெய்து-வழுவில்லாதசொற்களாகிய மாணிக்கங்களை வரிசைப்படுத்தி, அன்புமுழுதும் ஆகியவடத்தினால் முறைதொடுத்த அலங்கல் - உழுவலன்பாகிய வடத்தால் முறையாகத் தொடுத்தக் கோத்த பாமாலையை, அழுதுசாத்தும் மெய் அன்பருக்கு ஐயர் அகம்மகிழ்ந்து - ஆநந்தமேலீட்டாலழுது சாத்தாநின்ற மெய்யடியாருக்கு இறைவர் திருவுள்ளமகிழ் கூர்ந்து, வழுவு இல்லாதபேர் மாணிக்கவாசகன் என்றார் - செயலுக்கியைந்தபெயர் மாணிக்கவாசகனென்றருளினார்.

கேட்போருள்ளத்தை யுருக்குதலால் அன்பு முழுதுமாகிய வடத்தினால் எனவும், புறவிருளைப் போக்குதல்போல ஆன்மாவி னகவிருளைப்போக்குதலால் பழுதிலாத சொன்மணி எனவும், தீக்ஷாநாமம் அதற்கியைந்ததாகலால் வழுவிலாத பேர் மாணிக்கவாசகனென்றார் எனவுங்கூறினார். தொடுத்த என்னும்பெயரெச்ச வீறு தொகுத்தல். (௩0)

பாட்டிற்கின்புறுகுருபரன்பாதமேற்கண்ணீ
ராட்டிச்சொன்மலரணிந்துதற்போதவின்னமுதை
யூட்டித்தற்பரஞானமாமோமவெங்கனலை
மூட்டிச்சம்புவின்பூசைமேன்முயற்சியரானார்.

(இ-ள்.) பாட்டிற்கு இன்பு உறுகுருபரன் பாதமேல் - தமது பாசுரத்திற்கு மகிழ்கூரும் குருமூர்த்தியின் திருவடிமேல், கண்ணீர் ஆட்டி - ஆநந்தபாஷ்பமாகிய திருமஞ்சனமாட்டி, சொல்மலர் அணிந்து - சொல்லாகியமலர்கொண்டருச்சித்து, தற்போதம் இன் அமுதை ஊட்டி - சிவபோதமாகிய இனிய அமுதினை நைவேதித்து, தற்பரஞானம் ஆம் ஓமம் வெம் கனலை மூட்டி - பரஞானமாகிய ஓமாக்கினியை மூட்டி, சம்புவின்பூசைமேல் முயற்சியர் ஆனார் - (இவ்வாறு) ஞானபூசையின்மேல் முயல்வாராயினார்.

தமக்கருளிய ஸ்ரீபஞ்சாக்கரத்தினால் இறைவன்திருவுருவே அந்த அக்கரவடிவாம்தன்மையை யுணர்ந்தனர் என்பார் குருபரன்பாதமேற்கண்ணீராட்டிச் சொன்மலரணிந்து எனவும், தாம் உடைமையும் இறைவன் உடைய்வறுமாகக்கருதி முயன்றனர் என்பார் தற்போதவின்னமுதை யூட்டித் தற்பரஞானமா மோமவெங்கனலைமூட்டி யெனவும், அங்கநியாச கரநியாசங்களும் அவ்வைந்தெழுத்தாற் செய்துகொண்டனர் என்பார் சம்புவின்பூசைமேன்முயற்சியரானார் எனவுங்கூறினார். இதனால் அர்ச்சித்தலும்,ஓமித்தலும்,தியானித்தலுமாகிய அந்தரியாகங் கூறினார். அக்கரமே இறைவன்திருவுரு என்றது "ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே - நாடுந்திருவடியிலேநகரம் - கூடும் - மகாமுதரம் வளர்தோள்சிகரம் - பகருமுகம்வாமுடியப் பார். சேர்க்குந்துடிசிகரம்சிக்கெனவவீசுகரம் - ஆர்க்குயகரமபயகரம் - பார்க்கிலிறைக் - கங்கிநகரமடிக்கீழ்முயலகனார் - தங்குமகரமதுதான்" எனவரும் உண்மைவிளக்கததாலும், அந்தரியாகம் என்றது "அஞ்செழுத்தாலான்மாவையாறுடையபரிசும் - அரூருவுமஞ்செழுத்தாலமைந்தமையுமறிந்திட் - டஞ்செழுத்தாலங்கரநியாசம்பண்ணி - ஆன்மாவினஞ்செழுத்தாலிதயத்தர்ச்சித் - தஞ்செழுத்தாற்குண்டவியினனலையோம்பி-அணைவரியகோதண்டமனைந்தருளின்வழிநின் - றஞ்செழுத்த

Koviloor Digital Library

விதிப்படிபுச்சரிக்கமதிபருக்கன் - அனையரவம்போற்றுன்று மான்மாவிலரனே" எனவரும் சிவஞானசித்தியாராலும் உணர்க. (௫௧)

ஆசைவெம்பவவாசனையற்றுமாணிக்க
வாசகப்பிரான்றேசிகன்மாணவரோது
மோசையாகமவுபநிடதப்பொருளெலாங்கேட்டு
நேசமங்குவைத்திருந்தனனதுகண்டுநிருத்தன்.

(இ-ள்.) ஆசை வெம் பவம் வாசனை அற்று - பந்தமாகிய கொடிய பிறவிக்குக் காரணமான மலவாசனையையொழிந்து, மாணிக்க வாசகப் பிரான் - மாணிக்க வாசகராகிய வாதவூர்வள்ளல், தேசிகன் மாணவர் ஓதும் - ஞானாசிரியரும் சீடர்களும் ஓதும், ஓசை ஆகமம் உபநிடதம் பொருள் எல்லாம் கேட்டு - ஒலிவடிவாகிய சித்தாந்த வேதாந்தங்களின் பொருள்முற்றுங்கேட்டு, அங்கு நேசம் வைத்திருந்தனன் - அவ்விடத்தி லன்புசெலுத்தியிருந்தனர், நிருத்தன் அதுகண்டு - ஞானநடத்தையுடைய இறைவர் அந்நிலையைப்பார்த்தருளி.

அந்தரியாகபூசையால் ஆன்மாவினிடத்ததாகிய வாதனைமலம் நீங்கிற்றாதலால் ஆசைவெம்பவவாசனையற்று எனவும், மாணவர் ஐயுற்றதனை வினவுதலும் ஆசிரியர் விடையருளுதலுமுடைமையால் தேசிகன்மாணவரோதும் - ஓசையாகியவுபநிடப்பொருளெலாம் எனவும், அந்தர்முகத்திலொழிந்துநின்ற மலமாயை கன்மங்கள் பகிர்முகத்தில் நீர்ப்பாசிபோல அற்றம்பார்ப்பன, அவற்றைக் கேட்டன் ஞானத்தால் ஒழிக்கத்தொடங்கினர் ஆதலால் கேட்டுநேசமங்குவைத்திருந்தனர் எனவுங் கூறினர். (௫௨)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

தித்திக்குமணிவார்த்தையின்னுஞ்சின்னாட் டிருச்செவியிலருந்தவுங்கைச்செம்பொனெல்லாம், பத்திப்பேரன்பளித்துக்கவர்ந்துவேண்டும் பணிகொடுபாண்டியனையிவர்பண்புதேற்றி, முத்திக்கேவிடுத்திடவும்புத்தைவாது முடித்திடவுந்திருவுள்ளமுன்னமெய்தி, யெத்தித்தொண்டரைக்கருமஞ்சிறிதுண்டிங்கே யிருத்தியெனவுருக்கரந்தானடியரோடும்.

(இ-ள்.) தித்திக்கும் மணி வார்த்தை - மதுரிக்கு மாணிக்கம்போலும் அரிய பாசுரங்களை, இன்னம் - இன்னமும், சில் நாள் - சிலநாளைக்கு, திரு செவியில் அருந்தவும் - திருச்செவியாகிய திருவாயாலுண்ணவும், கை செம் பொன் எல்லாம் பத்தி பேர் அன்பு அளித்து கவர்ந்து - அவர்கையிலுள்ள செம்பொன்முற்றும் பத்தியாகியதலையன்புதந்து கொள்ளைகொண்டு, வேண்டும் பணி கொடு - அவரால் தமது திருவுளத்திற்கமையும் பணிகளைக்கொண்டு, பாண்டியனை இவர் பண்பு தேற்றி - அரிமருத்தனபாண்டியனுக்கு இவரதுதன்மையைத் தெளிவித்து, முத்திக்கு ஏ விடுத்திடவும் - அவரையும் பரமுத்திக்கே செலுத்தவும், புத்தை வாது முடித்திடவும் - புத்தனை இவரால் வாதில்வெல்லவும், திரு உள்ளம் முன்னம் எய்தி - திருவுள்ளக்குறிப்புற்று, தொண்டரை எத்தி - வாதவூரடிகளுக்கு மறைத்து, இங்கு ஏ கருமம் சிறிது உண்டு இருத்தி என்ன - இவ்விடத்தே யுன்னுற் சிறிதகாரியம் உளது இருப்பாயென்று, அடியரோடும் உருகரந்தான் - தமதடியவரோடும் திருவுருக்கரந்தருளினர்.

வேண்டும்பணிகொண்டு என்பதையும், பாண்டியனை யிவர்பண்புதேற்றி முத்திக்கேவிடுத்திடவும் என்பதையும், புத்தைவாது முடித்திடவும் என்பதையும் பின்ன

Koviloor Digital Library

ர்க்காண்க. "எத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ" எனவருதல் காண்க. (௫௩)

கனவில்வருங்காட்சியெனக்கருணைமூர்த்தி காட்டிமறைத்தலுமன்பர்கலக்கத்தாழ்ந்து, நனவுகொல்லோகனவுகொல்லோவின்றுநாதன் ஞமலிக்குந்தவிசிட்டநலம்போலென்னை, நினைவரியதிருமேனிகாட்டியாண்டு நீத்ததைநையென்றையுற்று நெஞ்சந்தேறி, யினவடியாருடன்கூட்டா தேகினையோ வென்னையுமென் வினையையுமிங்கிருத்தியெந்தாய்.

(இ-ள்.) கனவில்வரும் காட்சி என்ன - கனவில்வந்தருளுங் காட்சியைப்போல, கருணைமூர்த்தி - கிருபாமூர்த்தியாகிய இறைவர், காட்டிமறைத்தலும் - தமது ஞானாசிரியத் திருவுருவைக்காட்டி மறைத்தருள, அன்பர்கலக்கத்து ஆழ்ந்து-வாதவூரடிகள் மனநிலைகலங்கி, இன்றுநாதன் ஞமலிக்கு தவிசு இட்ட நலம்போல் என்னை நினைவு அரிய திருமேனிகாட்டி ஆண்டு நீத்தது - இப்பொழுது இறைவர் நாய்க்கு ஆசனமிட்ட தகைமைபோல எளியேனுக்கு நினைத்தற்கரிய திருமேனியைப் புலப்படுத்தி யடிமைகொண்டு நீங்கியருளியது, நனவுகொல்லோ கனவுகொல்லோ என்று ஐயுற்று நெஞ்சம் தேறி - நனவோகனவோவென்று சந்தேகித்து மனந்தெளிந்து, இனம் அடியாருடன்கூட்டாது என்னையும் என்வினையையும் இங்கு இருத்தி - அடியார் திருக்கூட்டத்தோடு கூட்டாமல் என்னையும் எனதுவினையையும் இங்கிருக்கச்செய்து, எந்தாய் ஏகினையோ - என்றந்தையே சென்றருளினையோ.

தேடியுங்காணாது அயன்முதலிய கடவுளரயர்ந்திருக்க ஒன்றுக்கும்பற்றாத எளியேற்குக் காட்சிதந்தருளியது நாய்க்குத் தவிசிட்டதுபோலென்பார் நாதன்ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போலென்னை-நினைவரியதிருமேனிகாட்டி யாண்டு எனவும், மலவாதனைநீக்கத்திற்கு அடியார்கூட்டத்தோடு கூட்டுறவேண்டும் என்பார்-இனவடியாருடன்கூட்டா தேகினையோ எனவும், இவற்றைப் பிராரத்தவாதனை தாக்குதற்குரிய கருவிகளொழிந்து நிற்றலை யொழிந்து உடலுள்ளவளவும் பிராரத்துவநுகரக்கிடந்ததேயென்று கவலையுற்றேமென்பார் என்னையு மென்வினையையு மிங்கிருத்தியெனவுங் கூறினராகக்கூறினர். அயன்முதலியோரிருக்கத் தம்மையாண்டது என்றது "கேட்டாருமறியாதான்கேடொன்றில்லான் - கிளையிலான்கேளாதேயெல்லாங்கேட்டான் - நாட்டார்கள்விழித்திருப்பஞாலத்துள்ளே நாயினுக்குத்தவிசிட்டுநாயினேற்கே - காட்டாதனவெல்லாங்காட்டிப்பின்னுங் - கேளாதனவெல்லாங் கேட்பித்தென்னை - மீட்டேயும்பிறவாமற்காத்தாட்கொண்டான் - எம்பெருமான்செய்திட்டவிச்சைதானே" எனவும், உடலுள்ளவளவும் பிராரத்துவம் நுகரக்கிடந்ததேயென்று கவலையுற்றேமென்பார் என்றது "மானேர்நோக்கியுமையாள்பங்கா மறையீறறியாமறையோனே - தேனேயமுதேசிந்தைக்கரியாய் சிறியேன்பிழைபொறுக்குங்-கோனேசிறிதேகொடுமைபறைந்தேன் சிவமாநகர்குறுகப் - போனாரடியார்யானும் பொய்யும்புறமேபோந்தோமே" எனவும், அடியார்கூட்டத்தோடு கூட்டுறவேண்டும் என்றது "வணங்கத்தலைவைத்து வார்கழல்வாய்வாழ்த்தவைத் - திணங்கத்தன்சீரடியார்கூட்டமும்வைத்தெம்பெருமான்" எனவும்வருந் திருவாசகத்தால் உணர்க.()

வஞ்சவினைகொள்கலனாமுடலைத்தீவாய் மடுக்கிலேன்வரையுருண்டுமாய்ப்பேனல்லேன், வஞ்சொருகுவாளாலுங்குறைப்பேனல்லேன் றுதனேயகருவினதுடைமையென்றே, யஞ்சினேன்முனையுமறியாதாவி யையனேபி

Koviloor Digital Library

னைப்பிரிந்துமாற்றகில்லே,னென்செய்கோவெந்தாயோவெந்தாயோவென் றிரங்கினார்புரண்டழுதாரினையசொல்வார்.

(இ-ள்.) வஞ்சம் வினைகொள்கலன் ஆம் உடலை - தேவரீரைப்பிரிதலாற்று மையால் வஞ்சத்தையுடைய இருவினையென்னுஞ் சரக்கினையேற்றிய மரக்கலமாகிய இச்சரீரத்தை, தீவாய்மடுக்கிலேன் - தீயில்வீழ்த்திலேன், வரை உருண்டுமாய்ப்பே ன் அல்லேன் - மலையினின்றுருண்டு உடலைப்போக்கிலேன், நஞ்சு ஒழுகுவாளாலு ங்குறைப்பேன் அல்லேன் - நஞ்சுசிந்தும் வாளினாலுஞ் சேதிக்கிலேன், நாதனே அ துவும் நினது உடைமை என்றே அஞ்சினேன் - இறைவனே யவ்வுடலும் நின்னுடை மையாகையா லதற்கு நாம் யாவரென்று அஞ்சுகின்றேன், ஐயனே ஆவிதானேயும் அழியாது - பெருமானே உயிரும் எனதுடைமையன்மையால் அது ஆயினும் பிரிவா ற்றாது தானே அழியவேண்டும் அதுவும் அழியவில்லை, நினைபிரிந்து ஆற்றகில்லே ன் - (இவை யிவ்வாறிருக்க) தேவரீரைப்பிரிதலால் சிறிதும்பொறேன், எந்தாயோ எந்தாயோ என்செய்கோ என்று இரங்கினார் - என்றந்தையே என்றந்தையே நான் என்னசெய்யக்கடவேனோ சிறிதும் அறிகிலேனென்று இரங்கி, புரண்டு அழுதார் இனைய சொல்வார் - நிலமேற்புரண்டழுது இத்தன்மையுடையனவற்றைக்கூறி வருந் தலாராயினார்.

புன்னலியமும் பொன்விலக்குபோல இருத்தலால் வஞ்சவினைகொள்கலனாமு டலையெனவும், தலையன்புடையோர் தமதின்பநுகர்ச்சிக்குச் சாதனமாகிய பொருளி னின்று சிறிது பிரிவுவந்தவழி யதற்காற்றாது உடலைமாய்த்தற்கும் உயிரைத்துறத்த ற்கும் உரியராவர், அவர்போலும் இவ்வடிகளும் தலையன்புடையாராதலால் தாம் அ ளவும் அளவறுத்தற்கு அரிய சிவானந்தத்தினின்று சிறிது பிரிந்தனராதலால் இவரு மாய்த்தற்கும் துறத்தற்கும் தலைப்பட்டுநின்றனராயினும் அவை அவருடைமைகளல் லாமையால் என்செய்குவோமென்று அஞ்சி நடுநடுக்கிக் குலைந்தனராதலால் அஞ் சினேன் என்கோ என்றிரங்கினார் புரண்டழுதார் எனவும், ஆம்என்னும் இடைச்சொ ல் ஒப்புப்பொருள்மேல் நிற்றலால் கொள்கலனாமுடலையெனவுங்கூறினார். உடலையும் உயிரையும் துறந்திலேன் என்றதற்கு "அறுக்கிலேனுடற்றுணிபடத்தீப்புக் - கார்கிலே ன்றிருவருள்வகையறியேன் - பொறுக்கிலேனுடல்போக்கிடங்காணேன்போற்றிபோ ற்றியென்போர்விடைப்பாகா-இறக்கிலேனுனைப்பிரிந்தினிதிருக்கவென்செய்கேனிது செய்கவென்றருளாய்-சிறைக்கணேபுனனிலவியவயல்சூழ் - திருப்பெருந்துறைமே வியசிவனே" எனவும், உடலுமுயிரும்தம்முடைமையல்ல என்றதற்கு "அன்றேயென் றனாவியுமுடலுமுடைமையெல்லாமும் - குன்றேயனையாயென்னையாட்கொண்டபோ தேகொண்டிலையோ-இன்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மா னே - நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்நானோவிதற்குநாயகமே" எனவும், ஆம் ஒப் புப்பொருளில் வருதற்கு "ஆள்வாரிலிமாடாவேனோ" எனவும் வருந் திருவாசகத் தாலுணர்க. (௬௭)

மதியறுமொருபிறவிக்குருடன்கையில் வந்தபெருவிலைமணிபோன்மழ லைதேருஞ், சிறியனுமொருமதலைகையிற்கொண்ட செம்பொன்மணிவள்ள ம்போற்றேவர்யார்க்கு, மறிவரியாய்சிறியேனையெளிவந்தாண்ட வருமைய றியேன்றன்பத்தழுவத்தாழப், பிறிவறியாவன்பரொடு மகன்றுய்கல்லாப் பேதையேன்குறையலதெம்பிரானுலென்னே,

Koviloor Digital Library

(இ-ள்.) தேவர் யார்க்கும் அறிவு அரியாய் - அயன்முதலிய எல்லாத்தேவர்க்கும் அறிதற்கரியவனே, வறியன் ஆம் ஒரு பிறவி குருடன் கையில் வந்த பெருவிலை மணிபோல் - தரித்திரனாகிய ஒருபிறவியந்தகன்கையில் எளிதாய்க்கிடைத்த அளத்தற்கரியவிலையையுடைய மாணிக்கத்தினருமையை யவனறியாமைபோலவும், மழலைதேருத சிறியன் ஆம் ஒரு மதலை கையில் கொண்ட செம் பொன் மணி வள்ளம் போல்-மழலைச்சொல்லும் பயின்றறியாத சிறுபருவத்தையுடைய ஒரு குழந்தை கையிற்கொண்ட செவந்தபொன்னாற்செய்யப்பட்டு விளிம்பில் நவமணிபதித்த கிண்ணத்தினருமையை யக்குழந்தை யறியாமைபோலவும், சிறியேனை எளி வந்து ஆண்ட அருமை அறியேன் - அறிவிற்சிறிய என்னை யெளிதாய்வந் தடிமைகொண்ட அருமையை யானறியேனாதலால், துன்பத்து அழுவத்து ஆழ - துன்பமாகிய கடலிலழுந்த, பிறிவு அறியாத அன்பரொடும் அகன்றாய் - தனதுதிருவடிஞானத்தினின்றும் பிரிதலறியாத அடியவரோடும் என்னினின்றும் நீங்கியருளினாய், கல்லாத பேதையேன் குறை அல்லது - பிரியாமையைக் கற்றுணராத அறிவில்லேன் குறைபாடேயன்றி, எம்பிரானால் என் - எம்பிரானால் யாதுகுறையுள்ளது.

அழுவம் பரப்பு. பரவை என்றாற்போலக் கடல்மேல் நின்றது, துன்பத்து அத்துதவிர்வழிவந்த சாரியை. அருமையறியாமைதோன்ற வருந்தித்தேடியமணியும் வள்ளமும் அல்ல என்பார் பிறவிக்குருடன்கையில் வந்த பெருவிலைமணி யெனவும், மழலைதேருச் - சிறியனுமொருமதலை கையிற்கொண்ட செம்பொன்மணிவள்ளம் எனவும், அவர்போல அருமையறியாமைதோன்ற நின்றேன் என்பார் சிறியேனையெளிவந்தாண்ட அருமையறியேன் எனவும், திருவடி ஞானம் உடையனல்லனென்பார் பிறிவறியாவன்பரொடுமகன்றாய் கல்லாப்பேதையேன் குறையலது எனவுங் கூறினார். அருமையறியேன் என்றது "மையிலங்குநற்கண்ணிபங்கனே - வந்தெனைப்பணிகொண்டபின்மழக் - கையிலங்குபொற்கிண்ணமென்றலா - லரியையென்றுனைக்கருதுகின்றிலேன் - மெய்யிலங்குவெண்ணீற்றுமேனியாய் - மெய்மையன்பருன்மெய்ம்மைமேவினார் - பொய்யிலங்கெனைப்புகுதவிட்டுநீ - போவதோசொலாய்பொருத்தமாவதே" எனவருந் திருவாசகத்தாலுணர்க. (௫௯)

மண்ணாதியாறுறுமனந்துழாவித்தமோறிப்
புண்ணாகியெனைக்காணாதுழல்கின்றேனைப்போதவருட்
கண்ணாலவைமுழுதுங்களையநோக்கியான்யானென்
றெண்ணாவெனைத்தந்தாயெங்குற்றாயோவெந்தாயே.

(இ-ள்.) மண் ஆதி ஆறாறும் மனம் துழாவி தமோறி-பிருதிவிமுதல் நாதத்துவமிறுதியாகிய முப்பத்தாறு தத்துவங்களினும் மனஞ்சென்று நிலைதடுமாறி, புண் ஆகி என்னை காணாது உழல்கின்றேனை-புண்பட்டு மலச்சிமிழ்ப்பாலென்னை யுணராதுபெத்த நிலையிற்சுழல்கின்ற சிறியேனை, போதம் அருள் கண்ணால் அவை முழுதும் களையநோக்கி - ஞானநோக்கால் லவ்வத்துவா முற்றுங் களையும்படி நோக்கியருளி யான் யான் என்று எண்ணாமல் என்னை தந்தாய் - யான் யானென்று அவைகளைக் கருதாமல் என்னைத் தந்தருளிய, எந்தாய் எங்கு உற்றாயோ - என் தாதையே யெவ்விடத்திருள்ளாயோ (யானறியேன்.)

சகலாவத்தையில் கலைமுதலிய தத்துவங்களோடுங்கலந்து விடயங்களை நுகர்ந்து பிறந்திறந்துவரும் என்பார் மண்ணாதியாறுறு மனந்துழாவித்தமோறிப் புண்ணாகியெனவும், பளிங்கு தன்னையடுத்த பலநிறங்களாகிய பொருளியல்பைத் தன்பா

Koviloor Digital Library.

ந்காட்டி நிற்றல்போல ஆன்மாவும் தன்னால் சாரப்பட்ட தத்துவங்களினியல்பாகிய போதவியல்பே தன்பாற்காட்டிநிற்கும் என்பார் வினைக்கொண்டுதழல்கின்றேனை யெனவும், இக்குந் தத்துவ அத்துவா கூறினமையால் பதினொருமந்திரமும் எண்பத்தோருபதமும் ஐம்பத்தோரக்கரமும் இருநூற்றிருபத்துநான்கு புவனங்களும் ஐந்து கலைகளுமாகிய அத்துவாக்களும் என்பார் அவை முழுதும் எனவும், அவ்வத்துவாக்கள் ஒன்றினொன்றடங்கிக் கலை திரோதான சத்தியிலும் அது சிவத்திலும் அடங்க நானோக்கருளினர் என்பார் போதவருட்கண்ணால் அவைமுழுதுங் களையநோக்கி யெனவும், அப்போது இயல்பாகிய கருவிஞானம் தாமல்லவென்றொழிந்து தம்மியல்பு அறிந்தனர் என்பார் யான்யாரென்றென்றுவெனைத்தந்தாயெங்குற்றாயோவெந்தாயே எனவுங் கூறினார். சகலாவத்தை என்றது “உருவினைக்கொண்டுபோக போக்கியந்துன்னல்செப்பல் - வருசெயன்மருவிச்சத்த மாதியாம்விடயந்தன்னிற் - புரிவதற்செய்திக்கெல்லா யோனியும்புக்குழன்று - திரிதருஞ்சகலமான வவத்தையிற்றிவன்சென்றே” எனவும், படிகம்போல் ஆன்மாவும் உளதென்றது “பன்னிறங்களவைகாட்டும் படிகம்போலுள்ளம்-பலபுலன்களிறங்காட்டும் பரிசபார்த்திட் - டிந்நிறத்தொனிறமன்றென்றுதன்ற-னெழினிறங்கண்டருளினா லிந்நிறத்தின்வேறாய்ப்-பொய்ந்நிறவைம்புலனிறங்கள் பொய்யெனமெய்கண்டான் - பொருந்திடுவன்சிவத்தினோடும் போதான்பின்னை” எனவும்வரும் சிவஞானசித்தியாராலும், அத்துவாக்கள் களைய நானோக்கருளியதென்றது “மந்திரம்பதங்கள்வன்னம் புவனங்கடத்துவங்கள் - ஐந்தாங்கலைகளென்று மருவகையகற்றியந்தச் - சிந்தனைக்கரியமேலைச்சிவத்துடனறிவுசேரப் - பந்தனையொழிவார்தம்மேற் பரிந்தருட்பார்வைசெய்து” எனவரும் வாதவூரடிகள் புராணத்தாலும் அறிக. (ருஎ)

வானாதியைந்துமுதல்வகுத்தவோசைமுதலைந்து
மானாதியக்குமனமாதிநான்கும்வழியடைப்பத்
தேனாதியறுசுவையுங்கழியவூறுந்தெள்ளமுதம்
யானாரநல்கினையாலெங்குற்றாயோவெந்தாயே.

(இ-ள்.) வான் ஆதி ஐந்தும் - ஆகாயமுதல் பிருதிவி ஈறாகிய பஞ்சபூதங்களும், முதல் வகுத்த ஓசை முதல் ஐந்தும் - இவை தோன்றற்குக் காரணமாக வகுத்த சத்தமுதல் கந்தமிறுதியாகிய தன்மாத்திரைகளைந்தும், ஆனாது இயக்கும் மனம் ஆதி நான்கும் - (இவற்றினின்று) நீங்காது போக்குவரவுபுரியு மனமுதலிய அந்தக்கரணங்களும், வழி அடைப்ப - அவற்றின் வழிதூர, தேன் ஆதி அறுசுவையும் கழிய ஊறும் தெள்ளமுதம் யான் ஆர நல்கினை - தேன்முதலிய அறுவகைச்சுவைப்பொருளினும் இனிமை மிக ஊறுகின்ற பேரானந்தமாகிய தெள்ளமுதத்தினை யானனுபவிக்கத்தந்தருளினாய்,எந்தாய் எங்கு உற்றாய்-என்றந்தையே இப்போது எங்கொளித்தாய்.

வானாதி யைந்து பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். ஓசைமுதல் ஐந்து சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம். மனமாதி நான்கு மனம், புத்தி, சித்தம், அகங்காரம். தேனாதி யறுசுவை தேன், பால், கன்னல், கனி, சீனி, கற்கண்டு. பூததேகமாகிய தநு என்பார் வானாதியைந்தும் எனவும், சத்தமுதலிய விடயமாகிய போகம் என்பார் முதல் வகுத்த ஓசைமுதலைந்தும் எனவும், கரணம் என்பார் மனமாதி நான்கும் எனவும்,இவற்றால் கன்மம் நுகர்ச்சிக்குத் தானமாகிய புவனமும் அடங்கும் என்பார் ஆனாதியக்கும் எனவும்,இவை பிறவிவழியாய் வருதலில் அப்பிறப்பு நீங்க என்பார் வழியடைப்ப எனவும், அமுதம் நரை, திரை, மூப்பு ஒழித்தல்போல இது

Koviloor Digital Library

ஆணவம், மாயை, காமியம் என்று மும்மலங்களையும் ஒழிப்பதென்பார் உவமையாகு பெயராய்ச் சிவாநந்தத்தைத் தெள்ளமுதம் எனவும், ஒருபொருளை நுகராதார்க்கு நு கர்ந்தபொருளின் சுவையை யெடுத்துக்காட்டி நுகரச்செய்தல் வழக்காதலின் நுகர் ந்த அறுவகைச்சுவைப்பொருளினும் அகத்தும் புறத்தும் இனிமை சுரப்பது என்பார் தேனூறியறுசுவையுங் கழியவூறுந் தெள்ளமுதம் எனவும் கூறினர். சுவைசுவை யுடைப் பொருள்மேல் நிற்றலால் பண்பாகுபெயர். (௫அ)

மாசாய்மறைக்குமலவலியும்நாளும்வேறின்றி
யாசாவிகாரமலமாயினேனைப்பொருட்படுத்திப்
பேசாதவின்புருவினின்னோடென்னைப்பின்வைத்த
வீசாவெனையிங்கிட்டெங்குற்றாயோவெந்தாயே.

(இ-ள்.) மாசு ஆய் மறைக்கும் மலம் வலியும் நாளும் வேறு இன்றி - அந்த காரமாய் எனதிச்சாஞானக்கிரியைகளை மறைக்கும் ஆணவமல வலிமையும் நாளு ம் அபேதமாய், ஆசா விகார மலம் ஆயினேனை - பந்தப்படுத்தும் மாயாமலத்தின் காரியமாகிய தநுகரணபுவனபோகங்களிற் சுழலு மென்னையும், பொருள் படுத்தி - ஒருபொருளாக்கி, பேசாத இன்பு உருவின் நின்னோடு என்னை பின் வைத்த ஈசா - சொல்லுதற்கரிய பேரின்பவடிவாகிய நின்னுடனே யென்னைப் பின்வைத்தருளிய இறைவனே, எந்தாயே - என் தந்தையே, என்னை இங்கு இட்டு எங்கு உற்றாயோ - என்னை யிந்நிலவுலகிலிருத்தி எங்கொளித்திருக்கின்றாயோ (அடியேனறிகிலேன்.)

கேவல சகலாவத்தையிற்பட்டுவரும் என்னையென்பார் மாசாய் மறைக்கு மலவலியும் நாளும் வேறின்றி - ஆசாவிகாரமலமாயினேனை யெனவும், இவ்வவத் தையிற்சுழலும் நாயினேன் ஒருபொருளாகத் தேவரீர் கருதுதற்கு ஓரிலக்கல்லேன் என்பார் பொருட்படுத்தியெனவுங் கூறினர் என்றார். நின்னோடென்னைப் பின்வைத் த என்றது உபதேசமுறையிற் கூறிய முகத்தாலும், ஆன்மாவி னிச்சாஞானக்கிரி யைகளை மறைக்கும் என்றது "சிவனுமிச்சாஞானக்கிரியையாற் சிவனையொப்பன்- ஆவனென்றிடினநாதிமல மிவற்றினைமறைக்கும்" எனவருஞ் சிவஞானசித்தியாரா லும் உணர்க. (௫௯)

மேற்படி வேறு.

என்றுவாய்திறந்தரற்றினாரிரங்கினார்புனிற்றுக்
கன்றுநீங்கியவானெனக்கரைந்தநெஞ்சினராய்ச்
சென்றுகோபுரவாயிலின்புறம்புபோய்த்திரண்டு
நின்றகாவலன்றமர்களைநேர்ந்தனர்நோக்கா.

(இ-ள்.) என்று வாய் திறந்து அரற்றினார் இரங்கினார் - என்று வாய்திறந்து கதறி இரங்கி, புனிறு கன்று நீங்கிய ஆன் என கரைந்த நெஞ்சினர் ஆய் சென்று - இளங்கன்றினை நீங்கிய பசுவைப்போல இளகிய மனமுடையவராய்ச்சென்று, கோ புர வாயிலின் புறம்பு போய் - திருக்கோபுரவாயிற் புறம்பேபோய், திரண்டு நின்ற காவலன் தமர்களை நேர்ந்தனர் நோக்கா - அங்குத் திரண்டுநின்ற அரசன் பரிசனமா யுள்ளவரை நேர்ந்து பார்த்து.

அரற்றினார், இரங்கினார், நேர்ந்தனர் முற்றெச்சங்கள். (௬0)

துங்கவாசியிற்கடும்பரித்தொகையெலாமாடித்
திங்களின்றலைவருமெனமுன்புபோய்த்தென்னர்

Koviloor Digital Library

புங்கவன்றனக்குணர்த்துமின்போமெனவிடுத்தா
ரங்கணாயகன்பெருந்துறைநாயகனன்பர்.

(இ-ள்.) துங்கம் வாரியில் - பரந்த கடல் கரை புரண்டு வருதல்போல, கடும்பரி தொகை எல்லாம் - விரைந்துசெல்லும் குதிரைக்கூட்டங்களெல்லாம், ஆடித்திங்களின் தலைவரும் என்ன முன்பு போய் தென்னர் புங்கவன் தனக்கு உணர்த்துமின் போம் என - ஆடிமாதத்தில் வருமென்று நீங்கள் முன்னேசென்று பாண்டியர்களுட்சிறந்த அரிமருத்தனனுக்குக் கூறுங்கள் போமென்று, அங்கண் நாயகன் பெருந்துறை நாயகன் அன்பர் விடுத்தார் - அருளுக்குடைய இறைவரும் திருப்பெருந்துறையி லெழுந்தருளிய தேவர்பிரானுமாகிய சிவபிரானடியவராகிய வாதவூரடிகள் விடைதந்தருளினார்.

போம் வழக்கில்வந்த உம்மீறு தொக்குநின்ற முன்னிலைப்பன்மையேவல் வினைமுற்று. (௬௧)

புரசைமாவயப்புரவிதேர்ப்பொருநர்போய்ப்பொறிவண்
டிரைசெய்தார்முடிவேந்தன்முனிறைஞ்சினருள்ள
துரைசெய்தாரதுகேட்டொன்றுமுரைத்திலனிருந்தா
னிரைசெய்தார்ப்பரிவரவினைநோக்கியநிருபன்.

(இ-ள்.) புரசை மா வயம் புரவி தேர் பொருநர் போய் - யானையாளும் வெற்றியையுடைய குதிரையாளும் தேராளுமாகிய சேனைவீரர்கள் சென்று, பொறி வண்டு இரை செய்தார் முடி வேந்தன் முன் இறைஞ்சினர் - புள்ளிகளையுடைய வண்டுகள் மதுவுண்டொலிக்கு மாலைசூழ்ந்த கிரீடம் தரித்த பாண்டியன்முன் போய் வணங்கி, உள்ளது உரை செய்தார் - நிகழ்ந்த செய்தியைக் கூறினர், நிரை செய்தார் பரி வரவினை நோக்கிய நிருபன் - பத்திசெய்த கிண்கிணிமாலையையுடைய குதிரையின் வரவினைநோக்கிய அப்பாண்டியன், அதுகேட்டு - அதனைக்கேட்டு, ஒன்றும் உரைத்திலன் இருந்தான் - ஒன்றுங்கூறாது வாளா இருந்தனன்.

உள்ளவாறு என்றது "அக்கணர்தாமுந்தாமு மன்பொடுசிலசொற்கூறிச் - சங்கரேசிவனேபோற்றி யென்றவர்தாளில்வீழ்ந்து - செங்கரங்குவித்துச்சென்னி சேர்த்துவந்தனைகள்செய்து - பொங்கொளிமணிப்பூணாடை பொருளெலாமுவந்துநல்கி. முறைவிலாவாடைநீத்துக் கோவணமுடுத்துச்சென்னி - நறைமயிர்விரித்துநீற்றை மெய்யெலாம்நயப்பூசி - முறைமையன்றிதுதானென்று மொழிந்தவெம்முகமும்பாரார் - நிறையழிவித்தாரூர் நிருபவென்றிறைஞ்சிநின்றார்" எனவரும் வாதவூரடிகள் புராணத்தானுணர்க. புரசைமா கழுத்திடு கயிற்றையுடைய என்றமையால் மா என்றது பொதுமைநீங்கி யானைமேல் நின்றது. (௬௨)

வள்ளல்வாதவூர்முனிகளுமன்னவன்பரிமாக்
கொள்ளநல்கியபொருளெலாங்குருந்தில்வந்தாண்ட
பிள்ளைவான்மதிச்சடைமுடிப்பெருந்துறைமறையோர்க்
குள்ளவாதரம்பெருகமுன்வேண்டியாங்குய்ப்பார்.

(இ-ள்.) வள்ளல் வாதவூர் முனிவரும் - பெருவள்ளலாராகிய வாதவூரிலவதரித்த முனிசிரேட்டரும், மன்னவன் - அரிமருத்தனபாண்டியன், பரிமா கொள்ள நல்கிய பொருள் எல்லாம் - குதிரைகளைக் கொள்ளத்தந்த பொருள்களையெல்லாம், குருந்து இல் வந்து ஆண்ட பிள்ளை வான் மதி சடை முடி பெருந்துறை - குருந்தின்

MADALAYAM KOVIL... 630 307

Koviloor Digital Library

கீழ்வந்தடிமைகொண்ட ஒளிவாய்ந்த பிறையையணிந்த சடாமுடியையுடைய பெருமானுறொழுந்தருளிய திருப்பெருந்துறையிலுள்ள, மறையோர்க்கு உள்ளம் ஆதரம் பெருக - ஆதிசைவராகிய அந்தணர்களுக்குத் தம்பாலன்பு மீதூர, முன் வேண்டிய ஆங்கு உய்ப்பார் - அவர்களுக்கு முன்பு வேண்டியவண்ணம் கொடுத்து நிரப்பி.

இது குளகம் ஆதலால் உய்ப்பார் என்று முற்றை எச்சமாகக்கொள்க. வேண்டியாங்கு கொடுத்தல். (௯௩)

சிறந்தபூசைக்குந்திருவிழாச்சிறப்புக்குஞ்செல்வ
நிறைந்தவாலயத்திருப்பணித்திறத்துக்குநிரப்பி
அறந்தவாதபேரன்பர்க்குஞ்செலுத்தியத்தலத்தே
உறைந்தவாவறவின்னணமொழுகுநாள்கழிப்பார்.

(இ-ள்.) சிறந்த பூசைக்கும் திருவிழாச்சிறப்புக்கும் - மேம்பட்ட பூசனைக்கும் திருவிழாச்சிறப்பிறுக்கும், செல்வம் நிறைந்த ஆலயம் திருப்பணித்திறத்துக்கும் நிரப்பி - செல்வநிறைந்த ஆலயத்திருப்பணிவகைகளுக்கும் வேண்டுவனவற்றை நிரப்பி, அறம் தவாத பேர் அன்பர்க்கும் செலுத்தி - சிவபுண்ணியத்தினின்றும் நீங்காத பெரிய மெய்யன்பருக்கும் வெறுக்க நிரப்பி, அ தலத்து ஏ உறைந்து - அந்தத் திருத்தலத்திலேயே வசித்து, அவா அற இன்னணம் ஒழுகு நாள் கழிப்பார் - ஆசையற இவ்வாறு நிகழும் நாள்களைக் கழிப்பாராயினர். (௯௪)

எல்லைகூறியகுளிர்மதியடுக்கவந்தெய்த
மல்லல்யானையானின்னமும்வயப்பரிவந்த
தில்லையாலிதுவென்னெனவோலையுமெழுதிச்
செல்லவுய்த்தனன்வாதவூரமைச்சர்தந்திருமுன்.

(இ-ள்.) எல்லை கூறிய குளிர் மதி வந்து அடுக்க எய்த - வரையறுத்துக் கூறிய கற்கடகரவிவந்தடுக்க, மல்லல் யானை யான் இன்னமும் வயம் பரிவந்தது இல்லை - மதவளமிக்க யானைச்சேனையையுடைய பாண்டியன் இன்னமும் வெற்றியையுடைய குதிரைக்கூட்டம்வந்ததில்லை, இது என் என்ன ஓலையும் எழுதி - இது யாது என்று சினந்து திருமுகமும் எழுதி, வாதவூர் அமைச்சர் தம் திருமுன் - வாதவூரிலவதரித்த மந்திரியார்திருமுன்னர், செல்ல உய்த்தனன் - (ஏவலாளர்) செல்லும்படியனுப்பினன். (௯௫)

மன்னவன்றிருமுகங்கண்டுமுறைமையால்வாங்கி
அன்னவாசகந்தெரிந்துகொண்டாதியீறில்லா
முன்னவன்றிருவருட்கடன்மூழ்கியமுனிவர்
என்னைவேறினிச்செய்யுமாறென்றுநின்றயர்வார்.

(இ-ள்.) மன்னவன் திருமுகம் கண்டு முறைமையால் வாங்கி - பாண்டியனனுப்பிய திருமுகத்தைக்கண்டு வாங்குமுறைப்படிவாங்கி, அன்ன வாசகம் தெரிந்துகொண்டு - (அத்திருமுகத்திலமைந்த) அவ்வாசகத்தைத்தெரிந்து, ஆதி ஈறு இல்லாத முன்னவன் திரு அருள் கடல் மூழ்கிய முனிவர் - தனக்கு ஓர்முதலும் இறுதியுமில்லாத யாவர்க்கு முற்பட்டவனாயுள்ள இறைவனது திருவருட்கடலிலழுந்திய வாதவூரடிகள், வேறு இனி செய்யும் ஆறு என்னை என்று நின்று அயர்வார் - வேறேயினி நாஞ்செய்யக்கடந்தவகை யாதென்று நின்று வருந்துவாராயினர்.

Koviloor Digital Library

அரசனைக்கண்டால் எவ்வண்ணமோஅவ்வண்ணமே திருமுகத்தைக்கண்டு உபசரித்தனர் என்பார் முறைமையால்வாங்கி என்றார். திருமுகத்தில் வரைந்தவாசகம் இன்னது என்பதை "தென்னவனரசனேறுதென்னவன்பிரமராயன் - என்றுநல்ல மைச்சன்காண்கவெல்லையிறைக்கொண்டேகிக் - கொன்றுறுபரிகொளாமற்கோவலைக்கொண்டீந்த - மன்னர்தங்கருமஞ்செய்வார் வன்மையென்றுவகையுற்றேம். வையகமன்னராவெழ்வதின்மனைகடோறும்-எய்தியவுதரத்தியாலிரப்பதுபெருமையென்று - மெய்தகத்தம்மையாண்டவேர்தளைப்பிழைத்துவேறு - செய்வதுபலிக்குமென்று தேர்ந்ததுற்றுணிவுங்கண்டோம். மன்னவையடைந்துவாழ்தல்வஞ்சகஞ்சுமிழாகம் - தன்றுடன்மருவிவாழுந்தன்மையென்றுணர்விராயில் - துன்றுமிவ்வோலைகாணும்பொழுதகன்றுதர்தம்மோ - டிங்ககர்வருமொறுமெழுத்தௌவுரைந்துநின்முன்" எனவரும் வாதவூரடிகள் புராணத்தால் உணர்க. (௬௬)

சிந்தையாகியசெறுவினுட்சிவமுதலோங்கப்
பந்தபாசம்வேரறக்களைந்தருட்புனல்பாய்ச்சி
அந்தமாதியின்றாகியவாநந்தபோகந்
தந்ததேசிகவுழுவன்றன்கோயிலைச்சார்ந்தார்.

(இ-ள்.) சிந்தை ஆகிய செறுவின் உள் சிவமுதல் ஓங்க - இதயமாகியவயலுள் அன்பென்னும் பைங்கூழ்நெருங்கோங்க, பந்தபாசம் வேர் அற களைந்து-பந்தத்தொடக்காகிய களைகளை வேரோடறக்களைந்து, அருள்புனல்பாய்ச்சி - திருவருளாகிய நீரைச்செல்யாத்து, அந்தம் ஆதி இன்று ஆகிய ஆநந்தபோகம் தந்ததேசிக உழுவன் தன்கோயிலை சார்ந்தார் - தமக்கோரிறுதியுமுதலும் இல்லாத சிவாநந்தபோகமாகிய விளைவினைத்தந்தருளிய ஞானாசாரியராகிய வுழவரது திருக்கோயிலையடைந்தனர்.

நியாசத்தானமாதலால் சிந்தையாகிய செறுவினுள் எனவும், இடையறாது முறைவளர்ந்த அன்பேசிவமாதலால் அன்பைச்சிவமெனவும், இங்கு இருந்தகலம்போல மலவாதனைவந்து தாக்குதலால் அதனை யப்பயிர்க்குக் களையாக்கிப் பந்தபாசம் வேரறக்களைந்து எனவும், திருவருளிடமாகநின்று சிவபோகந்துய்க்கவேண்டுதலால் அருட்புனல்பாய்ச்சியெனவும், அதனால் விளைவது சிவபோகம் ஆதலால் அந்தமாதியின்றாகிய ஆநந்தபோகம் எனவும், அதனைத்தருவது முறைவளர்ந்த அந்த அன்பின் முதிர்ச்சியில் நின்றசிவமே யாதலால் தந்ததேசிக வுழவனெனவுங்கூறினார். அன்பேசிவம் என்றதை "அன்புசிவமிரண்டென்பரறிவிலார்- அன்பேசிவமாவதாருமறிகிலர் - அன்பேசிவமாவதாருமறிந்தபின் - அன்பேசிவமாயமர்ந்திருப்பாரே" எனவருந்திருமந்திரத்தால் அறிக. இது மிகைகுறைவில்லாத ஒற்றுமையுருவகவணி.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றுபகனேபொன்றுடரேறேயேறுகொடியுயர்த்த
மன்றுதென்றுபெருந்துறையெம்மணியேவழுதிபொருளெல்லாம்
நின்றலயத்துநின்னடியாரிடத்துஞ்செலுத்துநெறியளித்தாய்
மின்றனவனுக்கென்கொண்டுபரிமாச்செலுத்தப்பெறுமாறே.

(இ-ள்.) என் நாயகனே - எனது இறைவனே, பொன்றுடர் ஏறே - தேவர்களுக் கோரரசன்சிங்கமே, ஏறு கொடி உயர்த்தமன்று - இடபக்கொடியையுயர்த்தியருளிய மேவர்க்கு அரசே, தென்று - பாண்டியனுப்பவந்த உலகுகாத்தபெருமானே இவ்

Kovilur Digital Library

னே, வயவ பெருந்துறை எம்மணியே - திருப்பெருந்துறையிலெழுந்தருளிய வெம ணிந்...ர்ந்மே, வழுதிபொருள் எல்லாம் - பாண்டியன் பொருள்முற்றும், நின் ...த்தும் ம் நின் அ...டியார் இடத்தும் செறுத்தும் நெறிஅளித்தாய் - நினது ...யேனுக்குத்த நிறைது அடிட ...வரிடத்தும் செலவிடும் சிவபுண்ணியமார்க்கந்...த்த பெறும் ஆறு - ந்தருளினாய், பி... ...ன் நான் அவனுக்கு என் கொண்டு பரி... ...பெறும் வகை (சிறிதும் பின்பு நானவனுக்கு யா... ...கொண்டு - பெறும் வகை அறியேன் என்றபடி.)

பொன்னுடரோறே என்றது "முத்தாமுத்திதரவல்ல முகிழ்மென்முலையாளு மைபங்கா - சித்தாசித்தித்திறங்காட்டுஞ் சிவனேதேவர்சிங்கமே-பந்தாபத்தர்பலர் போற்றும் பரமாபழையனூர்மேய - அத்தாவாலங்காடா வுன்னடியார்க்கடியேனாவா னே" என ஆளுடைநம்பிகள் அருளிய தேவாரத்தாலுணர்க. (சுஅ)

என்னுவிறைஞ்சியெழுந்தேத்தியிரந்தாரெதிரோபெருந்துறையின்
மின்னார்சடைமேற்பிறைமுடிந்தோன்விசும்பினிறைந்ததிருவாக்கான்
மன்னனவற்குப்பரியெல்லாம்வருமென்றோலைவிடுதியெனச்
சொன்னனதுகேட்டகத்துவகைதுளும்பிவரைந்துசுருள்விடுத்தார்.

(இ-ள்.) என்னு இறைஞ்சி எழுந்து ஏத்தி இரந்தார் எதிரோ - என்று தண்டா காரமாக விழ்ந்து வணங்கியெழுந்து துதித்துக் குறையிரந்த வாதவூரடிக ளெதிரோ, பெருந்துறையில் மின் ஆர் சடைமேல் பிறை முடிந்தோன் - திருப்பெருந்துறையி லெழுந்தருளிய மின்னலையொத்த சடையின்மேல் பிறையையணிந்த இறைவர், விசும்பு இல் நிறைந்த திருவாக்கு ஆல் - அசரீரியால், மன் அனவற்கு பரி எல்லாம் வரும் என்று ஓலை விடுதி என்ன சொன்னான் - அரிமருத்தனபாண்டியனுக்குக் குதி ரைகளெல்லாம் வருமென்று ஓலையனுப்புவாயென்று கூறியருளினார், அதுகேட்டு அகத்து உவகை துளும்பி - அத்திருவாக்கைக்கேட்டு மனத்தில் மகிழ்ச்சி நிரம்பி, சுருள் வரைந்து விடுத்தார்-ஓலைப்பாசுரமெழுதி யனுப்பினார்.

அந்தவோலைப்பாசுரமுமறையக்கேட்டுநின்றுங்கோர்
சிந்தையானமகிழ்சிறப்பவிருந்தான்புரவித்தேரோடும்
வந்தவாதிச்செங்கதிரோன்மறைந்தானவனால்வையமெலாம்
வெந்தவேடைதணிப்பான்போன்முளைத்தானாதிவெண்கதிரோன்.

(இ-ள்.) அந்த ஓலை பாசுரமும் அறைய கேட்டு நின்று-அனுப்பிய அந்த ஓலை யின் வாசகத்தையும் வாசிக்கவல்லோனொருவன் வாசிக்கக் கேட்டு அசைவற்று, ஆங்கு ஓர் சிந்தை ஆனது மகிழ் சிறப்ப இருந்தான் - அறிந்த அப்பொழுதே தனது மனத்தில் நீங்காத மகிழ்ச்சியெழுந்து மீதூர இருந்தனன், புரவி தேரோடும் ஆதி வந்த செங்கதிரோன் மறைந்தான்-குதிரைபூட்டிய தேரோடும் முதலிலுதயஞ்செய் த சூரியன் அத்தமித்தனன், அவனால் வையம் எல்லாம் வெந்த வேடை தணிப்பான் போல் ஆதி வெண் கதிரோன் முளைந்தான்-அச்சூரியனால் நிலவுலகமுற்றும் வெந்து நிந்த வேடையைத் தணிப்பவன்போல முதலிலுள்ள சந்திரன் உதயஞ்செய்தனன்.

மனத்தை வேறுவிடயத்திற் போகாது பாசுரத்திலமைந்த பொருளில் நிறு த்தினன் என்பார் சிந்தையினை முதல்மேலேற்றிநின்று எனவும், கடைமாதம் ஆத லால் சந்திர சூரியர்கள் செல்லும் முதல்வீதியாகிய மேடவீதி என்பார் ஆதிச் செங்

Koviloor Digital Library

த்திரன், ஆதி வெண்சந்திரோன் எனவுங் கூறினர். செம்மை, வெண்மை இரண்டுஞ் சடுகின்ற பண்புகள். (௬௦)

அன்றுதுயிலும்வாதவூரடிகள்கனவிற்சுடர்வெள்ளி
மன்றுகிழவர்குருந்தடியில்வடிவங்காட்டியெழுந்தருளி
வெற்றிவேந்தன்மனங்கவரும்விசயப்பரிகொண்டணைகின்றேம்
இன்றுநீமுன்னேகுதியென்றருளிச்செய்யவெழுந்திருந்தார்.

(இ-ள்.) அன்று துயிலும் வாதவூர் அடிகள் கனவில் - அக்காலையில் துயில் கூரும் வாதவூரடிகள் சொப்பனத்தில், சுடர் வெள்ளி மன்று கிழவர் குருந்து அடியில் வடிவம் காட்டி எழுந்தருளி - விளக்கும் வெள்ளியம்பலத்துக்குரிய பெருமானார் குருந்தினடிக்கீழெழுந்தருளிய திருவுருவத்தோடெழுந்தருளி, வெற்றி வேந்தன் மனம் கவரும் விசயம் பரிகொண்டு அணைகின்றேம் - வெற்றியையுடைய அரசனது மனத்தை வன்மைப்போலிவால் கொள்ளைகொள்ளுங் குதிரையைக் கொண்டுவருகின்றோம், இன்று நீ முன் ஏகுதி என்றருளிச்செய்ய - இப்பொழுது நீ முன்னே விரைந்து செல்வாயென்றருளிச்செய்ய, எழுந்திருந்தார் - துயில் கூர்தலினின்றும் எழுந்தனர்.

கனவில் குருந்தடியிலெழுந்தருளிய பெருமானுரே மந்திரிக்கோலஞ்செய்து அரசனுக்கொரு கையுறையாக ஓர் மாணிக்கத்தையுங் கொடுத்துச் செல்ல விடைதந்தருளினர் என்பது "தோன்மதிக்குலத்தமன்னன் றுயர்செய்வனென்றேசற்று-நின்மனக்கவற்சிகொள்ளா தொழிகெனத்தேற்றிப் - பொன்மணிக்கலன்களெல்லாப் புந்தமிகப்பிறவுந்தந்து-மன்மனத்துவகைகூர மந்திரிப்பான்மைசெய்து. தென்றிசைக் கதிபன்றன்பாற் சென்றிதுகொடுத்துக்காண்டி - என்றுநன்மணியுமல்கி யேகெனவிடுத்தபின்னர்" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல்காண்க. (௭௫)

கனவினிடத்துந்தேவர்க்குக்காண்டற்கரியகருணையுரு
நனவினிடத்துங்கனவிடத்துமெளிதேயன்றேநமக்கென்ன
நினைவினிடைக்கொண்டிருக்கின்றார்திருத்தாளந்தச்சுடருள்ளத்
தினவிருளைத்தின்றெழுவதெனவெழுந்தானிரவியிரவொதுங்க.

(இ-ள்.) தேவர்க்கும் கனவின் இடத்தும் காண்டற்கு அரிய கருணை உரு - அயன் முதலிய தேவர்களுக்குங் கனவிலுங் காணுதற்கு அரிய அருளுருவம், நமக்கு நனவின் இடத்தும் கனவின் இடத்தும் எளிது ஏ அன்றே என்ன - நமக்கு நனவிலுங் கனவிலும் எளிதாயிருந்ததே யல்லவோவென்று, நினைவின் இடைக்கொண்டிருக்கின்றார் உள்ளத்து - நினைவிற்கொண்டிருக்கும் வாதவூரடிகளிதயத்தில், திருத்தாளந்தச் சுடர் இன இருளை தின்று எழுவது என்ன - ஆநந்த நடனத்தையுடைய இறைவனென்னும் ஞானசூரியன் நிரம்பிய ஆணவமாகிய இருளையோட்டி யெழுதல்போல, இரவு ஒதுங்க இரவி எழுந்தான் - புறவிருளொதுங்கச் சூரியனுதயஞ் செய்தனன்.

தேவர்கட்குக் கனவிலும் அரியராகி யடியேமுக்கு நனவிலுங் கனவிலும் எளியர் என்பார் கனவினிடத்துந் தேவர்க்குங் காண்டற்கரிய கருணையுரு - நனவினிடத்துங் கனவிடத்து மெளிதேயன்றே நமக்கு எனவும், ஆன்மாக்களுக்குப் பந்த முத்தி யருளுதற்பொருட்டு ஆனந்தநடனம், புரிந்தருளுடையர் என்பார் திருத்தாளந்தச்சுடர் எனவுங் கூறினர். "கனவேயுந்தேவர்கள் காண்பரியகனைகழலோன் -

Koviloor Digital Library

புனவேயனவனைத் தோளியொடும்புகுந்தருளி - மனவேயெனைப்பிடித் தாட்கொண்டவாநயந்து" எனவரும் திருவாசகத்தாலும், "ஊனடைமொருபாலொருபாலர்- ஞானடைந்தானடுவேநாடு" எனவரும் திருவருட்பயனாலும் உணர்க. (எஉ)

எழுந்தாருடையபெருந்துறையாரிருதாள்பணிந்தாரினிப்பிறப்பி
லழுந்தார்வழிக்கொண்டாரடைந்தாரகன்றார்நெறிகளவிர்திங்கட்
கொழுந்தார்சடையார்விடையார்தென்கூடலணைந்தார்பாடளிவண்
டுழுந்தார்வேந்தன்பொற்கோயிலுற்றார்காணப்பெற்றார்.

(இ-ள்.) இனி பிறப்பில் அழுந்தார் எழுந்தார்-இனிவரும்பிறப்பி லழுந்தாத வாதவூரடிகளொழுந்து, உடைய பெருந்துறையார் இருதாள் பணிந்தார் - தம்மை யாளாகவுடைய திருப்பெருந்துறையி லெழுந்தருளிய பெருமானாரது இரண்டுதிருவடிகளையும் வணங்கி விடைபெற்று, வழிக்கொண்டார் அடைந்தார் நெறிகள் அகன்றார் - வழிப்பட்டுச்சென்று அநேககாதவழிகளினின்று நீங்கி, அவிர் திங்கள் கொழுந்து ஆர் சடையார் விடையார் தென் கூடல் அணைந்தார் - விளங்கும் பிறையையணிந்த சடாமுடியையும் இடபவூர்தியையுமுடைய பெருமானாரது மதுரையைச்சேர்ந்து, பாடு அளி வண்டு உழுந்தார் வேந்தன் பொன் கோயில் உற்றார் காண பெற்றார் - இசைபாடும் வண்டுகள் உழாநின்ற வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியனது கோயிலையடைந்து அப்பாண்டியனைக் கண்டார்.

எழுந்தார், பணிந்தார், வழிக்கொண்டார், அடைந்தார், அகன்றார், அணைந்தார், உற்றார் முற்றெச்சங்கள். (எ௩)

மன்னர்பெருமானெதிர்வந்தமறையோர்பெருமான்வழிபாடு
முன்னர்முறையாற்செய்தொழுகிமுன்னேநிற்கமுகநோக்கித்
தென்னர்பெருமானெவ்வளவுசெம்பொன்கொடுபோயெவ்வளவு
நன்னரிவுளிகொண்டதெனக்கேட்டான்கேட்டநான்மறையோர்.

(இ-ள்.) மன்னர் பெருமான் - அரசர்களுக்கு அரசனாகியபாண்டியன், எதிர்வந்த மறையோர் பெருமான் முன்னர் முறையால் வழிபாடு செய்து ஒழுகி முன்னே நிற்க - தன்முன்வந்த அந்தணர்பெருமானாராகிய வாதவூரர் முன்றுள்ள முறைப்படி வந்தனை வழுவாது செய்து முன்னேநிற்க, முகம் நோக்கி - அவர்முகத்தைப் பார்த்து, தென்னர் பெருமான் எவ்வளவு செம் பொன் கொடுபோய் எவ்வளவு நன்னர் இவுளி கொண்டது என்ன கேட்டான் - அப்பாண்டியன் எவ்வளவு பொருள் கொண்டு எவ்வளவு இலக்கண மமைந்த குதிரைகள் வாங்கியதென்று வினவினான், கேட்ட நான் மறையோர் - அதனைக் கேள்வியுற்ற வாதவூரடிகள். ப்

அரசனைக்காணில் வணங்கலும் இருமென்னில் இருத்தலும் வழிபாடாதலம் ல் வழிபாடு முன்னர் முறையாற்செய்தொழுகி முன்னேநிற்க என்றார் "மதுரைமதி னவன்முனேகிமனமிலாவணக்கஞ்செய்து - கதிர்மறைசூ·· "யாளிந்தவின்கோண்மாமணிமுனல்கி - எதிருறநின்றபோதிலின்புறவழுதிநோக்கி - விதிமுறையிருப்பித்தென்னவிருந்தனர்விரிந்தநூலார்" எனவரும் வாதவூரடிகள்புராணத்தாலுணர்க.

பொன்றுமளவேவாவிலைகொண்டபுரவித்தொகையுமனைத்தவைதாம்
பின்னர்வரக்கண்டருளுதியெம்பெருமானிதனுற்றுரங்கபதி

யென்றுநாமம்பெறுதிமதியென்றாரென்றமந்திரர்க்குத்
தென்னவன்சிறந்தவரிசைவளஞ்செய்துவிடுப்பச்செல்கின்றார்.

(இ-ள்.) பொன்றும் அளவோ - பெற்ற செம்பொன்னுமெவ்வளவோ, விலை கொண்ட புரவித்தொகையும் அனைத்து-வாங்கிய குதிரைகளும் அவ்வளவே, அவை தாம் பின்னர் வர கண்டருளுதி - அக்குதிரைகள் சொல்லளவிலல்ல பின்னேவரக் கட்புலனால் காண்பாய், எம் பெருமான் - எமதுபெருமானே, இதனால் துரங்கபதி என்றும் நாமம் பெறுதி மதி என்றார் - அளவிலாதுவரும் இக்குதிரைக்கூட்டத்தால் துரங்கபதி யென்றுங் காரணப்பெயரும் பெறுவாய் என்றனர், என்ற மந்திரிக்கு - என்று கூறிய மந்திரியாருக்கு, தென்னவன் சிறந்த வரிசை வளம் செய்து விடுப்ப - பாண்டியன் தக்க வரிசைகளையும் உபசாரங்களையுஞ் செய்தனுப்ப, செல்கின்றார் - செல்லும் வாதவூரடிகள்.

எவ்வளவோ என்றதில் ஒகாரவினாவிடைச்சொல் தொக்குநின்றது. மதி முன்னிலையசை யிடைச்சொல். (௭௫)

பொன்னங்கமலத்தடம்படிந்துபுழைக்கைமதமாமுகக்கடவு
டன்னங்கமலசரணிறைஞ்சித்தனியேமுளைத்தசிவக்கொழுந்தை
மின்னங்கயற்கட்கொடிமருங்கில்விளைந்ததேனைமுகந்துண்டு
முன்னங்கருத்துமொழியுடம்புமூன்றுமன்பாய்த்தோன்றினார்.

(இ-ள்.) பொன் அம் கமலத் தடம்படிந்து - பொற்றாமரைத்தீர்த்தத்தில் நீராடி, புழைக்கை மதமா முகக்கடவுள் தன் அம் கமலம் சரண் இறைஞ்சி-துதிக்கை வாய்ந்த சித்திவிநாயகரது தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கி, தனியே முளைத்த சிவக்கொழுந்தை-சயம்புவாயெழுந்தருளிய சொக்கலிங்கமூர்த்தியாகிய, மின் அம் கயற்கண் கொடி மருங்கில் விளைந்த தேனை-விளங்கும் அங்கயற்கண்ணியாரென்னும் பூங்கொடியின்பக்கத்தில் முதிர்ந்து விளைந்த சுவைத்தேனினை, முகந்து உண்டு-கண்ணாகிய வாயினால் முகந்து பருகி, முன்னம் கருத்து மொழி உடம்பு மூன்றும் அன்பு ஆய் தோன்றினார் - திருமுன்னே தமது மனம் வாக்குக் காயமென்னு மூன்றும் அன்பினுருவாய் விளங்கினார்.

தமது இடப்பால் உமையார் வலப்பாலாதலால் மின்னங்கயற்கட்கொடிமருங்கில் எனவும், பூங்கொடியில் தேனரும்புதல் வழக்காதலால் விளைந்த தேனை யெனவும், தேனை வாயாற்பருகுதல்போல இத்தேனைக் கண்ணாற் பருகவேண்டுதலால் முகந்துண்டு எனவும், மதுவுண்டோன் அம்மதுவால் மனம் வாக்குக்காயங்கள் நிலைதடுமாறி மயக்கவடிவாய் நிற்றல்போல, இத்தேனைக் கண்களால் ஆரப்பருகினமையின் மனம் வாக்குக்காய மூன்றும் அன்பின்வடிவாய் நிற்றலால் கருத்துமொழி யுடம்பு மூன்று மன்பாய்த் தோன்றினார் எனவுங் கூறினார். (௭௬)

மன்னேயென்னையாட்கொண்டமணியேவெள்ளிமன்றாடு
மன்னேயடியேன் [illegible] டியவாறரசனிந்தநிதியெல்லா
முன்னேகொண்டேன்பணிகொண்டாய்முனியாதரசனினிமகிழ
வென்னேபுரவிவரும்வன்னமென்றுவேண்டிநின்றிடலும்.

(இ-ள்.) மன்னே - எனதிறைவனே, என்னை ஆட்கொண்ட மணியே - என்னை யடிமைகொண்ட மாணிக்கமே, வெள்ளி மன்று ஆடும் அன்னே - வெள்ளியம்

Koviloor Digital Library

பலத்தி லானந்தநிருத்தஞ் செய்யுந் தாய்போற் சிறந்த தலையளியுடையாய், அடியேன் வேண்டிய ஆறு - அடியேன் குறையிரந்து வேண்டியவண்ணம், அரசன் ஈந்த நிதி எல்லாம் முன்னே கொண்டு - பாண்டியன் கொடுத்த செம்பொன் முற்று முன்னமே கைக்கொண்டு, என்பணி கொண்டாய் - எனது பணியையுங் கொண்டருளினாய், அரசன் முனியாது கனி மகிழ - பாண்டியன் சீற்றங்கொள்ளாது மிகவு மகிழ்கூர, புரவி வரும் வண்ணம் என்னே என்று வேண்டி நின்றிடலும் - குதிரைகள் வரும் வகை யெவ்வாறென்று குறையிரந்து நிற்க.

வேண்டியவாறு என்றது "ஒன்றுவேண்டுமிப்பொருளலா முனக்குமைம் பொறியும் - வென்றுவேண்டுநின்னன்பர்க்கு மாக்குகவெள்ளி - மன்றுவேண்டிநின்றாடியவள்ளலென்குறையீ - தென்றுவேண்டிநின்றேத்தவார்க்கு" என முன்னர்வந்த செய்யுளாலுணர்க. (எஎ)

மெய்யன்புடையாயஞ்சலைநீவேட்டவண்ணம்விண்ணிரவி
வையம்பரிக்கும்பரியனையவயமாக்கொண்டுவருதுமென
வையன்றிருவாக்ககல்விசும்பாறெழுந்ததாகவதுகேட்டுப்
பொய்யன்பகன்றார்சிவன்கருணைபோற்றிமனையிற்போயினார்.

(இ-ள்.) மெய் அன்பு உடையாய் நீ அஞ்சலை - மெய்யன்பினையுடையாய் நீ பாண்டியனுக்கு அஞ்சுதலொழிவாய், வேட்ட வண்ணம் - நீ விரும்பியபடி, விண் இரவி வையம் பரிக்கும் பரி அனைய வயமா கொண்டு வருதும் என்ன - வானில் சூரியனது தேரைச் சுமந்து செல்லும் குதிரைகளையொத்த வெற்றியமைந்த குதிரைகளைக் கொண்டுவருவோமென்று, ஐயன் திருவாக்கு அகல் விசும்பு ஆறு எழுந்ததாக - சோமசுந்தரக்கடவுளின் திருவாக்கு அசரீரியாக எழ, அது கேட்டு - அத்திருவாக்கைக்கேட்டு, பொய் அன்பு அகன்றார் சிவன் கருணைபோற்றி மனையில் போயினார் - மெய்யன்புடைய வாதவூரடிகள் அக்கடவுளின் திருவருளைத் துதித்துத் தமது இல்லிற்குச் சென்றனர். (எஅ)

ஷை - வேறு.

கடிமனையடைந்தவெல்லைவாதவூர்க்காவலோரை
மடிமையில்சுற்றத்தோருங்கேளிருமாண்டகாத
லடிமையுள்ளாருமேதிலாளரும்பிறருமீண்டி
யிடிமழைவாய்விட்டென்னப்புந்திகளினையசொல்வார்.

(இ-ள்.) கடிமனை அடைந்த எல்லை - காவலமைந்த தமது இல்லினை யடைந்த சமையத்தில், வாதவூர் காவலோரை - வாதவூரிலவதரித்த அமைச்சரை, மடிமை இல் சுற்றத்தோரும் கேளிரும் - சோர்வில்லாத வுறவினரும் நட்பினரும், மாண்ட காதல் அடிமையுள்ளாரும் ஏதிலாளரும் பிறரும் ஈண்டி - மாட்சிமைப்பட்ட விருப்பத்தையுடைய அடிமை செய்வோரும் அயலாரும் ஏனையோரும் நெருங்கி, இடி மழை வாய் விட்டால் என்ன - இடிக்கு மேகம் வாய் திறந்தாற்போல, இனைய புந்திகள் சொல்வார் - இவ்வாறாகப் புத்திகளைச் சொல்வாராயினர்.

பலருந் திரண்டு கட்டுரைகழறுதலால் வாய்விட்டென்ன என்றார். வாய்விடுதல் ஒலித்தல். வாய்விட்டாலென்ன தொகுத்தல். (எகூ)

மந்திரக்கிழமைபூண்டமன்னவர்கருமஞ்செய்வ
தந்தணர்க்கறனேயல்லவமைச்சியலறத்தாறின்றால்

Koviloor Digital Library

வெந்திறலரசர்க்கேற்றசெய்வதேவேண்டுமென்னத்
தந்திரமறநூல்வல்லோர்சாற்றுவாரன்றோவையா.

(இ-ள்.) மந்திரம் கிழமை பூண்டு - அமைச்சியலுரிமைபூண்டு, மன்னவர் கருமம் செய்வது - அரசர்க்குரியதொழிலை மேற்கொண்டுசெய்தல், அந்தணர்க்கு அறனே அல்ல - மறையவர்களுக்குரிய தருமமேயல்ல, அமைச்சியல் அறத்து நின்றால் - மந்திரிஇலக்கணத்துக்குரிய தருமத்தில் நின்றால், வெம் திறல் அரசர்க்கு ஏற்ற செய்வதே வேண்டும் என்ன - மிக்க வெற்றிவாய்ந்த அரசர்களுக்கு ஏற்ற கருமங்களைச் செய்தலேவேண்டுமென்று, ஐயா - ஐயனே, தந்திரம் மறநூல் வல்லோர் சாற்றுவார் அன்றோ - மறநூலில்வல்ல பெரியோர் கூறுவாரல்லவா.

அந்தணர்தருமம் ஆவன - வேதமும் வேதாங்கமும் மிருதியும் புராணங்களும் ஆகிய இவைகளை யையந்திரிபற வோதுதலும், பிறர்க்கு ஓதுவித்தலும், விதிவழி யாகஞ்செய்தலும், பிறர்க்குச் செய்தலும், ஏற்போர்க்குக் கொடுத்தலும், தத்தம்நிலைக்கு ஏற்ப விதித்த இடங்களிற்சென்று ஏற்றலுமாம். மந்திரியிலக்கணத்திற்குரிய தருமம் ஆவன அரசன்மாறுபட்டவழி யவன்பக்கலிலிருந்து இடித்து அறிவு கொளுத்துதலும், வினைசெய்யுமிடத்து அதற்குவேண்டிய பொருளையும் சேனையையும் அதற்கேற்கச் செய்யுங்காலத்தையும், அது தொடங்கும்போது உபாயத்தையும், வருமிடையூற்றைநீக்கி வினைகைடபோகச்செய்தலையு முன்னர் ஆராய்ந்து, அவ்வினையைச்செய்யும்போது அதில் சோர்வில்லாமையும், குடிகளைக்காத்தலும், நீதிநூல்களைக்கற்று விலக்கியனவொழிந்து செய்வனவற்றை யுலகவியற்கையை யறிந்து அதற்குப் பொருந்தச்செய்தல் முதலியன. அரசர்க்கேற்ற கருமம் ஆவன மணி பொன்முதலிய பொருளின்பொருட்டுப் பகைவரையழித்தலும், இறைவாங்கலும் நாடுகாத்தலும், தருமம் ஈட்டும்பொருட்டுக் கடவுளர், அந்தணர், வறியவர்களுக்குக் கொடுத்தலும், இன்பத்தின்பொருட்டு ஐம்புலன்களை நுகர்தற்கு மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா முதலியனவும் அமைத்தல் - மறநூல் அறுபத்துநான்கு கலைகளுள் ஒன்றாதலால் தந்திரமறநூல் என்றார். (௮௦)

அரைசியலமைச்சநீதியாய்ந்தநுங்கட்குநாங்க
ளுரைசெய்வதெவனீர்செய்வதொன்றுநன்றுவதில்லை
விரைசெறிதாரார்க்கின்றுவெம்பரிவருவதாக
வரையறைசெய்தீர்நாளையென்சொலவல்லீரையா.

(இ-ள்.) அரைச இயல் அமைச்ச நீதி ஆய்ந்த நுங்கட்கு - அரசிலக்கணத்தையும் அமைச்சன் நடத்து நீதியையும் ஆராய்ந்தறிந்த உங்களுக்கு, நாங்கள் உரைசெய்வது எவன் - நாங்களெடுத்துக்கூறுவது என்னபயன்படும், நீர் செய்வது ஒன்று நன்று ஆவது இல்லை - நீர்செய்யுங்காரியங்களி லொன்றாயினும் ஒருவர்க்கும் பயன்படா, விரை செறி தாரார்க்கு இன்று வெம் பரி வருவது ஆக வரையறை செய்தீர் - வாசமிக்க மாலையையணிந்த பாண்டியனுக்கு இப்பொழுது விரைந்தசெல்லுங் குதிரைகள் வருவதாக நாள்வரையறுத்துவந்தீர், ஐயா - ஐயனே, நாளை என் சொல வல்லீர் - நாளைக்கு என்னகூறவல்லவராயீர்.

அரசன் நிலைப்போலத் தன்னினிக்கிய அமைச்சர்க்குப் பயன்கோடாதொழிதலும், அறமில் ஒறுத்தலும், இவற்றிற்கு இடைநிலத்துநிற்பின் அவர்க்குப் பயன்படுதலும் உடைமையே அரசிலக்கணம் ஆதலால் அரைசியல் என்றார். (௮௧)

Koviloor Digital Library

தழுவியகிளைஞர்நட்டோர்சார்வுளோர்தக்கசான்றோர்
குழுவினைக்காக்கவேண்டுங்குறிப்பிலீர்போலுநீவி
ரொழுகுறுசெயலினாலேயுஞ்செயலுமக்கேசால
வழகிதுபோலுமென்னக்கழறினாரதுகேட்டையன்.

(இ-ள்.) தழுவிய கிளைஞர் நட்டோர் - விடாது சூழ்ந்த சுற்றத்தாரும் நட்பினரும், சார்வுளோர் தக்க சான்றோர் - சார்ந்தவர்களும் நன்னெறியிலொழுகும்பெரியோருமாகிய, குழுவினை - கூட்டத்தை, நீவிர் காக்க வேண்டும் குறிப்பிலீர் போலும் - நீர் ஓம்பவேண்டுமென்னுங் குறிப்பொழிந்தீர்போலும், ஒழு குறு செயலினாலே - (அரசன்கருமத்தினின்றுவழுவி) நடக்குஞ் செயலாலே, உம் செயல் உமக்கே சால அழகிது போலும் என்ன கழறினார் - உமதுசெய்கை உமக்கே மிகவும் அழகாயிருக்கிறதுபோலுமென்று இடித்துக் கட்டுரைகூறினார்கள், ஐயன் அது கேட்டு - வாதவூரடிகளதனைக்கேட்டு. (௮௨)

சுற்றமுந்தொடர்புநீத்தேந்துன்பமுமின்பமற்றேம்
வெற்றுடன்மானந்தீர்ந்தேம்வெறுக்கைமேல்வெறுக்கைவைத்தே
செற்றமுஞ்செருக்குங்காய்ந்தேந்தீவினையிரண்டுந்தீர்ந்தேங் [ஞ்
கற்றைவார்சடையான்கோலங்காட்டியாட்கொண்டவன்றே.

(இ-ள்.) க ற வார் சடையான் கோலம் காட்டி ஆட் கொண்ட அன்றே - நெருங்கிய நீண்ட் ாமுடியையுடைய பெருமானார் தமது திருவருட்கோலத்தைக் காட்டி யடிமைகொ ட அப்பொழுதே, சுற்றமும் தொடர்பும் நீத்தேம் - உயிர்ச்சார்பாகிய சுற்றத்தையும் பொருட்சார்பாகிய எனதென்பதனையும் நீக்கினேம், துன்பமும் இன்பமும் அற்றேம் - அவற்றால்வருந் துன்பத்தையும் இன்பத்தையும் ஒழிந்தேம், வெறு உடல் மானம் தீர்ந்தேம்-பயனில்லாத தேகாபிமானமு மொழிந்தே வெறுக்கை மேல் வெறுக்கை வைத்தேம் - திரவியத்தின்மேல் வெறுப்புவைத்தேம், செற்றமும் செருக்கும் காய்ந்தேம்-அதனாலெழும் கோபத்தையும் இறுமாப்பையுமொழித்தேம், தீவினை இரண்டும் தீர்ந்தேம் - கொடிய நல்வினையிரண்டினின்றும் நீங்கினேம்.

உடல்பொருளாவிமூன்றும் தமக்குச் சுதந்திரமில்லையென்பார் கற்றைவார்சடையான்கோலங்காட்டியாட்கொண்டவன்றே யெனவும், அதனால் இவையொழிந்தோம் என்பார் சுற்றமுந்தொடர்புநீத்தேம் செற்றமுஞ்செருக்குங்காய்ந்தேம் எனவும், சுவர்க்காதிபோகங்களை நுகர்வித்தலின் நல்வினையும் பொன்விலங்குபோலுதலால் தீவினையிரண்டுமெ வுங் கூறினார் என்றார். இன்பம் என்பதனிறுதியில் எண்ணும்மை தொகுத்தல். (௮௩)

தந்தைதாய்குரவனாசான்சங்கரனிராசைபெண்டிர்
மைந்தர்பல்லுயிருஞ்சுற்றமாசிலாவிசனன்ப
ரந்தமில்பிறவியேழுமடிபலாகயென்பதோர்ந்தே
மெந்தையார்கருணைகாட்டியெம்மையாட்கொண்டவன்றே.

(இ-ள்.) எந்தையார் கருணைகாட்டி எம்மை ஆட்கொண்ட அன்றே - என் தந்தையாராகிய இறைவர் அருளேக்கருளி யடிமைகொண்ட அப்பொழுதே, சங்கரன் ஏ - அச்சிவபெருமானாரே, தந்தை தாய் குரவன் ஆசான் - தகப்பனும் தாயும்

Koviloor Digital Library

போதாசிரியரும் ஞானசிரியருமாவார், நிராசை - நிராசையே, பெண்டிரும் மைந்தரும் பல் உயிரும் - மனைவியும் புத்திரரும் பலகிளைஞருமாம், மாசு இல்லாத ஈசன் அன்பர் ஏ - குற்றமில்லாத அப்பெருமானடியவரே, சுற்றம் - கிளைஞராவார், அடு பகை ஏ - வருத்தம்பகையே, அந்தம் இல் பிறவி ஏழும் - முடிவில்லாத எழுபிறப்பாம், என்பது ஓர்ந்தேம்-என்று அறிவிற்பெரியோர் கூறுதலை உறுதியாக வுணர்ந்தேம்.

தேற்றப்பொருளில்வந்த ஏகாரம் தொகுத்தல். நிராசை சிவபோகத்தைத் தருதலால் பெண்டிர் மைந்தர் பல்லுயிரும் என்றார். (௮௪)

ஊரெலாமட்டசோறுநம்மதேயுவரிசூழ்ந்த
பாரெலாம்பாயலுன்னற்கோவணம்பரிக்குமாடை
சீரெலாஞ்சிறந்தசாந்தந்தெய்வநீறணிபூண்கண்டி
நீரெலாஞ்சுமந்தவேணிநிருத்தனாட்கொண்டவன்றே.

(இ-ள்.) நீர் எல்லாம் சுமந்த வேணி நிருத்தன் ஆட் கொண்ட அன்றே - கங்கைமுற்றுஞ்சுமந்த சடாமகுடத்தையுடைய இறைவர் அடியேனை யடிமைகொண்ட அப்பொழுதே, ஊர் எல்லாம் அட்ட சோறு நம்மதே - ஊர்முற்றுஞ் சமைத்த அன்னம் நம்முடையதே, உவரி சூழ்ந்த பார் எல்லாம் பாயல் - கடல்சூழ்ந்த நிலவுலகமுற்றும் படுக்கையே, துன்னல் கோவணம் பரிக்கும் ஆடை - பொல்லம்பொத்திய கோவணம் உடுக்கு முடையே, சீர் எல்லாம் சிறந்த சாந்தம் தெய்வம் நீறு - எல்லாச் சிறப்பு மிக்க சந்தனம் தெய்வத்தன்மையையுடைய விபூதியே, அணி பூண் கண்டி - அணியும் ஆபரணம் உருத்திராக்கக்கண்டிகையே.

கங்கைமுற்றும் சுமந்த என்றது முன்னர்க்காட்டிய சரித்திரத்தால் உணர்க. கூட்டுவார்க்குக் கூட்டியதென்பார் சீரெலாஞ்சிறந்த சாந்தம் என்றார். இறைவன் நி சை-விற்கலந்தமையால் பண்டையேகதேசவுணர்வு தூர்ந்துபோதலில், ஏகதேச வுடம்பினிலும் இன்ப துன்பங்கட்கு ஏதுவாகிய பிராரத்த வினையும் வெந்த ஆடை போல என்பாற் சத்திகெட்டு நிற்றலால் வரக்கடவதோர் கவலையில்லையென்பார் ஊரெலாமட்டசோறு நம்மதேயுவரிசூழ்ந்த - பாரெலாம்பாயலுன்னற் கோவணம் பரிக்குமாடை-சீரெலாம்சிறந்தசாந்தந் தெய்வநீறணிபூண்கண்டி எனக்கூறினார் என்றார் "புண்ணியமேறேக்குவிக்கும்பாவந்தாழ்நாக்கும் - புண்ணியனைப்பூசித்தபுண்ணியத் திருலே - நண்ணியஞானத்திருவிரண்டினையுமறுத்து ஞாலமொடுகீழ்மேலுநண்ணுறும் - என்றுமிகவோகத்தேமுத்திபெறுமிவன்றான் எங்கெழிலென்ஞாயிறெமக்கென்றதுறைவின்றிக் - கன்றுதறிநிறைவதனிற்கலந்தகாயங் - கழிந்தக்காலெங்குமாய்க்குருதான்போலிற்பன்" எனவருஞ் சிவஞானசித்தியாரால் உணர்க. (௮௫)


எழுசீரடியாசிரியவிருத்தம்.

இறக்கினுமின்றேயிறக்குகவென்றுமிருக்கினுமிருக்குகவேந்த
னொறுக்கினுமொறுக்கவுவகையுமுடனேயூட்டினுமூட்டுகவானிற்
சிறக்கினுஞ்சிறக்ககொடியநிரயஞ்சேரினுஞ்சேருகசிவனை
மறக்கிலம்பண்டைப்பழவினைவிளைந்தான்மாற்றுவார்யாரெனமறுத்தார்.

(இ-ள்.) இறக்கினும் இன்றே இறக்குக - (ஆதலால்) செத்தாலும் இப்பொழுதே சாகக்கடவேன், என்றும் இருக்கினும் இருக்குக - எப்பொழுதும் இருந்தாலு மிருக்கக்கடவேன், வேந்தன் ஒறுக்கினும் ஒறுக்க - அரசன் தண்டித்தாலுந் தண்டிக்

Koviloor Digital Library

Koviloor Digital Library



நரிபரியாக்கிய திருவிளையாடல்.

Koviloor Digital Library

கக்கடவன், உவகையும் உடனே ஊட்டினும் ஊட்டுக - அவ்வரசன் மகிழ்ச்சியை உடனே யூட்டினுலும் ஊட்டக்கடவன், வானில் சிறக்கினும் சிறக்க - விண்ணுலகி லிந்திரபதங் கிடைத்துச் சிறந்திருக்கினும் சிறந்திருக்கக்கடவேன், கொடிய நி நரகம் சேரினும் சேருக - கொடிய நிரகத்தைச் சேர்ந்தாலுஞ் சேரக்கடவேன், சிவனை மறக்கிலம் - சிவபெருமானை யொருகாலத்திலு மறவேம், பண்டை பழவினை வந்தால் மாற்றுவார் யார் என்ன மறுத்தார் - பிராரத்த வினைப்பயன்வந்தால் அதனை மாற்றவல்லார் யாரென்று அவர்கள் கட்டுரையை மறுத்துக்கூறினர்.

சுற்றமுந்தொடர்புநீத்தேம் என்பதுமுதல் இருசாறுங் குளகம் ஆதலால் மறுத்தார் என ஒருபயனிலைதந்துகூறினுர். இன்பதுன்பங்கணிகழ்தற்கு ஏதுவாகிய இந்திரியங்களுக்கும் எனக்கும் ஒருசுதந்திரமில்லையென இறைவன் அருள்வழி உறைத்து நிற்பில், பயிற்சிபற்றி யொரோவழி யவ்விந்திரியங்களின் குறும்புநிகழ்ந்தால் அதுவும் அவ்விறைவன்செயலேயென்று வழையாகித்து அவ்வருள்வழி வழுவாதொழுகப் பெற்றோராதலால், இறக்கினுமின்றேயிறக்குக்கூன்றுமிருக்கினுமிருக்குகவேந்தன் - ஒறுக்கினுமொறுக்கவுவகையுமுடனேயூட்டும்பட்டுகவானிற் - சிறக்கினுஞ்சிறக்க கொடியநிரகஞ் சேரினுஞ்சேருகசிவனை - விந்தைசே· என்று கூறினுர் என்றுர். "யானேதும்பிறப்பஞ்சேனிறப்பதனுக்கென்கடவன் - வானேயும்பெறில்வேண்டேன்மண்ணுள்வான்மதித்துமிரேன் - தேனேயுமலர்க்கொன்றைச்சிவனேயெம்பெருமானெம் - மானேயுன்னருள்பெறுநாளென்றென்றேவருந்துவனே" எனத்திருவாசகத்திலும் இக்கருத்தேபற்றி வருதலுணர்க. தம்போல்வாரை உளப்படுத்தி மறக்கிலம் எனப் பன்மைப் பொருள்படக் கூறுதலால் ஒருமை பன்மை மயக்கமன்று. (அசு)

வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - உஎகஎ.

ஐம்பத்தொன்பதாவது

நரிபரியாக்கியபடலம்.

ஆறுசீரடியாசிரியவிருத்தம்.

அரிகணைதொடுத்துவேழமட்டவன்செழியன்வாயிற்
றெரிகலையமைச்சரேற்றைத்தேசிகவடிவத்தீண்டி
வரிகழல்சூட்டியாண்டவண்ணமிவ்வண்ணமைய
னரிகளைப்பரிகளாக்கிநடத்தியவாறுஞ்சொல்வாம்.

(இ-ள்.) அரிகணை தொடுத்து - நாரசிம்மாஸ்திரந்தொடுத்து, வேழம் அட்டவன் - (சமணரேவிய) யானையைக்கொன்ற சோமசுந்தரக்கடவுள், செழியன் வாயில் கலைதெரி அமைச்சர் ஏறை - அரிமருத்தனபாண்டியன் தலைவாயிலிலுள்ள மநுநூலாராய்ந்த மந்திரிகளாகிய யானைகளுக்கு ஆண்சிங்கம்போன்ற வாதவூரடிகளை, தேசிக வடிவத்து ஈண்டி - ஞானசாரியத் திருவுருக்கொண்டு வந்தருளி, வரிகழல் சூட்டி ஆண்டவண்ணம் இ வண்ணம் - (வீரகண்டை) கட்டிய திருவடித்தீக்ஷை செய்து ஆண்டருளிய திருவிளையாடலித் திருவிளையாடல், ஐயன் - அச்சோமசுந்தர

க்கட்டுவர், நரிகளை பரிகள் ஆக்கி நடத்திய ஆறும் சொல்வாம் - நரிகளைக் குதிரைக ளாக்கி நடத்திய திருவிளையாடலையும் இனிக்கூறுவாம்.

வாதவூரடிகளை ஒருகவுருவஞ்செய்து அமைச்சர்களை யானையாக வுருவகஞ் செய்யாமையால் ஏகதேச வுருவகவணி. அரிக்களை அரிகளை தொகுத்தல் விகாரம்.

சுற்றமாம்பாசநீவித்துகளறுத்திருந்தார்தம்மை
மற்றைநாளழைத்துவேந்தன்வந்திலபோலுமின்னங்
கொற்றவாம்பரிகளென்னக்குறுமதிமுடித்தானன்ப
ரிற்றைநாண்முதலாமூன்றினீண்டுவவிறைவவென்று.

(இ-ள்.) சுற்றம் ஆம் பாசம் நீவி - உயிர்ச்சார்பாகிய பந்தத்தினின்று நீங்கி, துகள் அறுத்து இருந்தார் தம்மை - ஆணவமலக் குற்றத்தினை யொழித்திருந்த வாத வூரடிகளை, வேந்தன் மற்றை நாள் [illegible]து - பாண்டியன் பின்னாளில் வருவித்து, கொற்றம் வாம் பரிகள் இன் [illegible] ல போலும் என்ன - வெற்றியையுடைய தாவுங் குதிரைகள் இன்னமும் [illegible] லுமென்று வினவ, குறு மதி முடித்தான் அன்பர் இற்றை நாள் முதல் [illegible] ல் - பிறையையணிந்த சடாமகுடத்தை யுடைய இறைவர் அடியவராகிய அவ்வாதவூர்வள்ளல் இந்நாள்முதல் மூன்றுநாளுள், இறைவ ஈண்டுவ என்று - அரசனே யக்குதிரைகள் வருகின்றனவெனக்கூறி.

இறைவர் அருளுணர்வால் நாள்வரையறுத்தனர் என்பார் இற்றைநாண் முதலா மூன்றி லீண்டுவ விறைவ என்று என்றார். (௨)

சிந்தூரநுதன்மால்யானைச்செல்வவப்பரிக்குவேறு
மந்துரையகன்றவாகவகுக்கவுந்தண்ணீரூட்ட
நந்துறைதடங்கள்வேறுதொடுகநீணகரமெங்கு
மிந்துறைமாடமெல்லாமழகுசெய்திடுகவென்றார்.

(இ-ள்.) சிந்தூரம் நுதல் மால் யானை செல்வ - சிந்தூரத்தையணிந்த நெற் றியையு மதமயக்கத்தையுமுடைய யானைச்சேனையையுடைய பாண்டியனே, அ பரி க்கு வேறு சூழ் மந்துரா அகன்ற ஆக வகுக்க - வரும் அக்குதிரைகளுக்கு வேறே சூழக் குதிரைலாயத்தை விசாலமாகக் கட்டுக, தண்ணீர் ஊட்ட வேறு நந்து உறை தடங்கள் தொடுக - தண்ணீரைப் பருகுவிக்க வேறே சங்குகள் வசிக்கும் நீர் நிலைக ளைத் தோண்டுக, நீள் நகரம் எங்கும் - எல்லைநீண்ட மதுரைத்திருநகர் முற்றும், இந் து உறை மாடம் எல்லாம் அழகு செய்திடுக என்றார் - சந்திரன் தவழு மேன்மாடங் களையெல்லாம் ஒப்பனைசெய்கவென்று கூறினார்.

இயற்றுவோன் தொழிற்கு ஏவுவானையுங் கருத்தாவாக்கிக்கூறுதலால் வகு க்க, தொடுக, அழகுசெய்திடுக என்றார். (௩)

காவலன்கருமஞ்செய்வோர்கந்துகப்பந்தியாற்றி
யோவறநகரமெங்குமொளிபெறவழகுசெய்யத்
தாவுதென்கடலேழ்கண்டசகரர்போல்வகன்முன்றில்
வாவியுங்குளனுந்தொட்டார்மண்டொடுகருவிமாக்கள்.

(இ-ள்.) காவலன் கருமம் செய்வோர் - அரசனேவிய பணியைச்செய்யும் வேலையாளர்கள், கந்துகம் பந்தி ஆற்றி - குதிரைப்பந்தியை வகுத்து, நகரம் எங்கும் ஓவு அற ஒளிபெற அழகு செய்ய - நகர்முற்றும் ஒழியாது விளக்கம் பெற ஒப்ப

Koviloor Digital Library

லைசெய்யவும், மண் தொடு கருவி மாக்கள் - மண்வெட்டுங் கருவியாளர்கள், தாவு தண் கடல் ஏழ்கண்ட சகரர்போல் - அலைகள் தாவுந் தண்ணிய எழுகடலையுந் தோண்டிய சகரரைப்போல, மூன்று வைகலில் - மூன்றுதினத்தில், வாவியும் குளனும் தொட்டார் - நீர்நிலைகளையுங் குளங்களையுந் தோண்டினார்கள்.

சகரர் தோண்டுதலால் கடலுக்குச் சாகரம் என ஓர்காரணப்பெயர் வழங்குதல் காண்க. "சகரர்தொட்டலாற் சாகரமென்பெயர்தழைப்ப - மகரவாரிதிசிறந்தது" எனவருஞ் செய்யுளானுணர்க. அயோத்தியிலரசுபுரிந்த சகரன் என்னும் சூரியன் மரபில்வந்த அரசன் ஒருவன், தன்னுடைய புத்திரர்கள் வலிமையை நோக்கி அசுவமேத வேள்வியொன்று செய்தனன், அதனைத் தேவர்களால் உணர்ந்த இந்திரன் அந்த அசுவத்தைப் பாதலவுலகில் தவஞ்செய்துகொண்டிருந்த கபிலர் பின்கொண்டுபோய் மறைத்தனன், அக்குதிரை பின்சென்ற அஞ்சுமான் என்பவன் தேடியெங்குங் காணாமையால் தன் மூதாதையாகிய அச்சகரனுக்குக்கூற, அவன் தன் புத்திரராகிய அறுபதினாயிரஞ் சகரர்களுக்குக்கூற அவர்கள் எங்குந் தேடிக்காணாமையால் நூறுயோசனை யகலமும் ஆழமும்படத் தோண்டினர் என்பது "மைந்தநின்றிருமரபுளோ ரயோத்திமாநகர்வாழ் - விந்தைசேர்புயன் சகரனிம்மேதினிபுரந்தோன். விறல்கொள்வேந்தனுக் குரியவரிருவரில்விதர்ப்பை - பொறையினல்கிய போசனனென்றொருபுதல்வன் - பறவைவேந்தனுக் கிளையமென்சுமதிமுற்பயந்த - அறனின்மைந்தராறயுதர்மற்றஞ்சுமானவன்சேய். திண்டிறற்புனை சகரனுந்தனையர் சேவகந்தான் - கண்டுமுற்றியவயமகம்புரிதலுங்கனன்று - வண்டுறுற்றதார் வாசவற்குணர்த்தினர்வானோர் - ஒண்டிறற்பரிகபிலனதிடையினிலொளித்தான். வாவுவாசிபின்சென்றனனஞ்சுமான்மறுகிப் - பூவினோரிடமின்றியோடினன்புகுந்து-தேவர்கோமகன்கரந்தமையறிந்திலன்திகைத்து - மேவுதாதைதன்றாதைபாலுரைத்தனன் மீண்டு. கேட்டவேந்தனுமதலையர்க்கம்மொழிகிளத்த - வாட்டமீக்கொளச்சகரர்கள்வடவையின்மறுகி - நாட்டம்வெங்கனல்பொழிதரநானிலந்தடவித் - தோட்டுநுங்கினர்புவியினைப்பாதலந்தோன்ற. நூறியோசனையகலமுமாழமுநுடங்கக் - கூறுசெய்தனரென்பரால்" எனவரும் செய்யுள்களானுணர்க. (௪)

வரையறைசெய்தமூன்றுவைகலுங்கழிந்தபின்னாட்
கரையறுபரிமாவீண்டக்கண்டிலமின்னமென்னா
விரையறைவண்டார்தண்டார்வேம்பனும்விளித்துவந்த
வுரையறைநாவினாரையொறுப்பவனொத்துச்சீறா.

(இ-ள்.) வரையறை செய்த மூன்று வைகலும் கழிந்த பின்னாள் - வரையறுத்த மூன்றுநாளுங் கழிந்த வழிநாளில், இன்னம் கரை அறு பரிமா ஈண்டக்கண்டிலம் என்னா - இன்னமும் அளவிறந்த குதிரைகள் வரக்கண்டிலேமென்று, விரை அறை வண்டு ஆர் தண் தார் வேம்பனும் விளித்து - வாசங்கவர்ந்து ஒலிக்கும் வண்டுகள் நிறைந்த தண்ணிய வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியனும் அழைத்து, வந்த உரை அறை நாவினாரை ஒறுப்பவன் ஒத்து சீறா - வந்த மாணிக்கம்போன்ற திருப்பாசுரங்களைக்கூறு நாவினையுடைய வாதவூரடிகளை மிக்க தண்டஞ் செய்பவனை யொத்துச்சீறி. (௫)

என்னிவன்பரிமாக்கொண்டதென்றவைவருவவென்னாத்
தன்னெதிர்நின்றவஞ்சத்தறுகணார்சிலரைநோக்கிக்

Koviloor Digital Library

கொன்றுமிக்கள்வன்றன்னைக்கொண்டுபோய்த்தண்டஞ்செய்தெம்
பொன்னெலாமறவுகொண்டுவாங்குமின்போமினென்றான்.

(இ-ள்.) என் இவன் பரிமா கொண்டது - என்ன இவன் குதிரை வாங்கியது, என்று அவை வருவ என்று-எக்காலத்தில் அக்குதிரைகள் வருவனவென்று, தன் எதிர் நின்ற வஞ்சம் நிறைகளர் சிலரை நோக்கி - தன்னெதிரே நின்ற வஞ்சத்தையுடைய கொடியர் சிலரைப்பார்த்து, கொன்றும் இக்கள்வன் தன்னை கொண்டுபோய் தண்டஞ்செய்து - (பார்க்குந்தோறும்) அச்சந்தரும் இத்திருடனைக்கொண்டு சென்று கடுந் தண்டஞ்செய்து, எம்பொன் எல்லாம் அறவுகொண்டு வாங்குமின்போமின் என்றான் - எமது திரவியத்தை முற்றும் அறுதிசெய்து வாங்குங்கள் (ஒறுக்கவிரைந்து) செல்லுங்களென்று விடைகொடுத்தான்.

கருவூலத்திற் சேர்ந்த பொருளுள் இம்மியளவுக்குறையாது வாங்குங்கள் என்பான் பொன்னெலா மறவுகொண்டு வாங்கு மின்போமினென்றான் என்றார். "பாங்குநின்றின்னவாறு பகர்தலும்வெருட்சியெய்தி - ஈங்குநங்கருமஞ்செய்வனென்றிடர்செய்வான்றன்னைத் - தாங்கருந்துயரஞ்செய்து தகைந்துநந்தனத்தையெல்லாம் - வாங்குமின்றண்டலாளரென்றிகன்மன்னவன்சொன்னான்" என வாதவூரடிகள்புராணத்திறும் வருதல்காண்க. என் இகழ்ச்சிக்குறிப்பின்மேல் நின்ற வினாவிடைச்சொல். (௬)

கற்பிணிதோளான்சிற்றங்கண்டெதிர்கில்லாதஞ்சிச்
சுற்றியபாசம்போலத்தொடர்ந்துகொண்டேகிமள்ள
ரெற்பினிவகைதான்பொன்னுக்கியம்புமென்றெதிர்த்துச்சிறிச்
செற்றமில்சிந்தையார்மேற்செறிந்தகல்லேற்றினாரே.

(இ-ள்.) கல் திணி தோளான் சீற்றம் கண்டு - மலைபோலுந் திண்ணிய தோளையுடைய பாண்டியன் கோபத்தைக்கண்டு, மள்ளர் எதிர் நில்லாது அஞ்சி சுற்றிய பாசம்போல தொடர்ந்து கொண்டு ஏகி - தண்டஞ்செய்வோர் எதிர் நிற்றற்கு ஆற்றாமல் அஞ்சி விடாதசுழ்ந்த பந்தம்போலத் தொடர்ந்து கைக்கொண்டு சென்று, இனி பொன்றனுக்கு வகைதான் எற்று இயம்பும் என்று எதிர்த்து சீறி - இனி நீர்கவர்ந்த பொருளுக்கு வகை யாது சொல்லுமென்று முரணிக்கோபித்து, செற்றம் இல் சிந்தையார்மேல் செறிந்தகல் ஏற்றினார் - சினமில்லாத இதயத்தையுடைய வாதவூரடிகளின்மேல் திண்ணிய கல்லினை யேற்றினார்கள்.

நெருங்கிச்சூழ்ந்து சென்றனர் என்பார் சுற்றிய பாசம்போலத் தொடர்ந்து கொண்டேகி என்றார். (௭)

பொன்னெடுஞ்சயிலங்கோட்டிப்புரம்பொடிபடுத்தவீரர்
சொன்னெடுந்தாளையுன்னிநின்றனர்சுமந்தபார
மந்நெடுந்தகையார்தாங்கியாற்றினாரடைந்தவன்பர்
தந்நெடும்பாரமெல்லாந்தாங்குவாரவரேயன்றே.

(இ-ள்.) நெடும் பொன் சயிலம் கோட்டி - நெடிய மேருமலையை வளைத்து, புரம்பொடிபடுத்த வீரர் சொல்நெடுந்தாளை உன்னி நின்றனர் - திரிபுரங்களை நீறுபடுத்திய இறைவருடைய புகழ்வாய்ந்த அளத்தற்கரிய திருவடிகளைக்கருதி நின்றனர், சுமந்த பாரம் அ நெடுந்தகையார் தாங்கி ஆற்றினார்-வாதவூரடிகள் சுமந்த பாரத்தை அந்தப் பெருந்தகைமையையுடைய இறைவர் சுமந்து அவரினைப்பாற்றியருளினார், அடை

Koviloor Digital Library

ந்தஅன்பர் தம் நெடும் பாரம் எல்லாம் தாங்குவார் அவரோ அன்றே - தம்மையடைந்த அடியாரது பெரும்பாரங்களையெல்லாம் தாமேற்கொண்டு அருளுகின்ற இறைவர் அவரல்லவா.

அடியவர் இறைவர் வயத்தராய் நிற்றலால் அவர் பாரம் அவ்விறைவர் பாரம் என்பார் அன்பர் தந்நெடும்பாரம் எல்லாந்தாங்குவாரவரேயன்றே எனக்கூறினார். "வேண்டத்தக்கதறிவோய்நீ வேண்டமுழுதுந்தருவோய்நீ - வேண்டுமயன்மாற்கரியோய்நீ வேண்டியென்னைப்பணிகொண்டாய் - வேண்டிநீயாதருள்செய்தா யானு மதுவேவேண்டினல்லால் - வேண்டும்பரிசொன்றுண்டென் னிலதுவுமுன்றன்விருப்பன்றே" எனவரூந் திருவாசகத்தால் அறிக. தொடங்கிய முடித்தற்கு உலகறிந்த இயல்பை ஒருவழிப்பொருந்தவைத்து அன்பர் தந்நெடும்பாரமெல்லாந் தாங்குவாரவரேயன்றே என்றது வேற்றுப்பொருள் வைப்பணி. (௮)

சிலையதுபொறைதோற்றாதுசிவனடிநிழலினின்றார்
நிலையதுநோக்கிமாயநெறியிதுபோலுமென்னாக்
கொலையதுவஞ்சாவஞ்சர்கொடுஞ்சினந்திருகிவேதத்
தலையதுதெரிந்தார்கையுந்தாள்களுங்கிட்டியார்த்தார்.

(இ-ள்.) சிலை அது பொறை தோற்றாது சிவன் அடி நிழலின் நின்றார் நிலையது நோக்கி - கல்லின்பாரந்தோற்றாமல் சிவபெருமான் திருவடிநிழற்கீழ்நின்ற வாதவூரடிகளுடைய நிலையை நோக்கி, இது மாயம் நெறிபோலும் என்னா கொலையது அஞ்சா வஞ்சர் கொடுஞ்சினம் திருகி (பாரம் தோன்றாது) இவ்வாறு வருத்தமின்றி நிற்றல் அவர் கற்றமாயையின் வன்மையென்று கொலைத்தொழிலை யஞ்சாத கொடியர்கள் கொடிய கோபமிகுந்து, வேதம் தலையது தெரிந்தார் கையும் தாள்களும் கிட்டி ஆர்த்தார் - உபநிடதப்பொருள்களை யுணர்ந்த வாதவூரடிகளது கைகளிலுங் கால்களிலுங் கிட்டிபோட்டார்கள்.

நிலையது, கொலையது, தலையது இவற்றினிறுதியில் நின்ற அது பகுப்பொருள் விகுதி. (௯)

அக்கொடுந்தொழிலுமஞ்சாதிருந்தனரரனையுள்கி
யிக்கொடுந்தொழிலினார்தாமினிநனியொறுப்பரென்னாப்
புக்கதுகாண்டற்குள்ளம்பொறானெனவிரவிப்புத்தேண்
மிக்கதன்னொளிகண்மாழ்கிவிரிகடலழுவத்தாழ்ந்தான்.

(இ-ள்.) அரனை உள்கி அ கொடுந் தொழிலும் அஞ்சாது இருந்தனர்-இறைவனைச் சிந்தித்து அந்தக்கொடிய தொழிலினையும் அஞ்சாமலிருந்தனர், இ கொடுந் தொழிலினார் தாம் இனி நனி ஒறுப்பர் என்னா - இந்தக் கொடுந்தொழிலுடையவரும் இனி மிகவுந் தண்டிப்பாரென்று கருதி, புக்கு அது காண்டற்கு உள்ளம் பொறான் என - வந்து அதனைக்காண மனம் பொறாதவனைப்போல, இரவிப்புத்தேள் மிக்க தன் ஒளிகள் மாழ்கி விரிகடல் அழுவத்து ஆழ்ந்தான்-சூரியன் தனது மிகுந்த ஒளிகள் குன்றி விரிந்தகடலாகிய பரப்பில் மூழ்கிமறைந்தனன்.

சூரியன் அத்தமித்தலை இதனைக் காண்டற்கு அஞ்சி யொளித்தனன், எனக் கவி கூறுதலால் தற்குறிப்பேற்றவணி. (௧௦)

சுந்தரவிடங்கரன்பர்சூழ்துயரகற்றநேரே
வந்தெழுகாட்சிபோலவந்ததுசெக்கர்வான

Koviloor Digital Library

மிக்தவர்மார்பந்தூங்குமெனவெண்கோடுபோன்ற
நந்தரவுடுக்களெல்லாமயன்றலைமாலையொத்த.

(இ-ள்.) சுந்தரவிடங்கர் அன்பர் சூழ் துயர் அகற்ற நேரே வந்து எழுகாட்சி போல செக்கர் வானம் வந்தது - சோமசுந்தரக்கடவுள் வாதவூரடிகளை நெருக்குந் துன்பத்தை யொழிக்க நேரேவந்தெழுந்தருளுங் காட்சியையொப்பச் செக்கர்வானம் பரந்தது, இந்து அவர் மார்பம் தூங்கும் ஏனம் வெண்கோடு போன்றது - சந்திரன் அவரது மார்பில் தொங்கியசையும் வராகத்தின் வெள்ளிய கொம்பினையொத்தது, அந்தரம் உடுக்கள் எல்லாம் அயன் தலைமாலை ஒத்த - ஆகாயத்திற்றோன்றிய நக்ஷத்திரங்களெல்லாம் அத்திருமார்பிலணிந்த பிரமனுடைய தலைமாலையையொத்தன.

இது தற்குறிப்பேற்ற வணியுள் மிகை குறைவின்றிவந்த ஒற்றுமையுருவக வணி. (௧௧)

கழிபடுபிறவித்துன்பத்தொடுகடலழுவத்தாழ்ந்து
கழிபடுதனையுங்காப்பான்கன்றுதன்மூர்த்திபாதம்
வழிபடுமவனைத்தேறான்வன்சிறைப்படுத்ததென்னன்
பழிபடுபுகழ்போலெங்கும்பரந்ததுகங்குலீட்டம்.

(இ-ள்.) கழிபடு பிறவி துன்பம் தொடுகடல் அழுவத்து ஆழ்ந்து கழிபடு தனையுங் காப்பான் - கழிக்கும் பிறவித்துன்பமாகிய கடற்பரப்பி லழுந்திக் களைத் தளையுந் தன்னையுங்காக்க, கன்றுதல் மூர்த்திபாதம் வழிபடும் அவனை தேறான் - இறைவனது திருவடிக்கீழ் வழிபட்டொழுகும் வாதவூரடிக ளியல்பைச் சற்றுந்தெளியாது, வன்சிறைப் படுத்ததென்னன் - வலிய சிறையிற்படுத்திய பாண்டியனுடைய, பழிபடு புகழ்போல் எங்கும் கங்குல் ஈட்டம் பரந்தது - பழிபட்ட புகழைப்போல இருட்கூட்டம் எவ்விடத்தும் பரவியது.

இதுவும் தற்குறிப்பேற்றவணி. (௧௨)

கங்குல்வந்திறுத்தலோடுங்கருஞ்சிறையறையிற்போக்கிச்
சங்கிலிநிகளம்பூட்டித்தவத்தினைச்சிறையிட்டென்னச்
செங்கனல்சிதறநோக்குஞ்சினங்கெழுகாவலாளர்
மங்குலினிருண்டகண்டர்தொண்டனைமறுக்கஞ்செய்தார்.

(இ-ள்.) கங்குல் வந்து இறுத்தலோடும் - இராப்பொழுதுவந்து நிலைபெற, செங்கனல் சிதற நோக்கும் சினம் கெழு காவலாளர் - செந்நெருப்புச் சிந்தப்பார்க்குங் கோபமிக்க காவற்காரர்கள், சங்கிலி நிகளம் பூட்டி - விலங்கு பூட்டி, தவத்தினை சிறையிட்டால் என்ன - தவத்தினைச் சிறைக்கூடத்தி லிட்டாற்போல, கருஞ்சிறை அறையில்போக்கி - இருண்ட சிறைக்கூடத்திற் செலுத்தி, மங்குலின் இருண்ட கண்டர் தொண்டனை மறுக்கம் செய்தார் - மேகம்போல இருண்ட ஸ்ரீகண்டத்தையுடைய பெருமானடியாராகிய வாதவூரடிகளை வருத்தினார்கள்.

கருமை இரவின்மேல் நின்றது. (௧௩)

மிடைந்தவர்தண்டஞ்செய்யவெஞ்சிறைவெள்ளத்தாழ்ந்து
கிடந்தவர்கிடந்தோன்பூமேலிருந்தவன்றேடக்கீழ்மே
னடந்தவர்செம்பொற்பாதநகைமலர்புணையாப்பற்றிக்
கடந்தனர்துன்பவேலைபுலர்ந்ததுகங்குல்வேலை.

Koviloor Digital Library

(இ-ள்.) அவர் மிடைந்து தண்டம் செய்ய - அக்காவலாளர் நெருங்கித் துன்பஞ்செய்ய, வெஞ்சிறை வெள்ளத்து ஆழ்ந்து கிடந்தவர் - கொடிய சிறைத்துன்பமாகிய கடலிலழுந்திக்கிடந்த வாதவூரடிகள், கிடந்தோன் பூமேல் இருந்தவன் தேட கீழ்மேல் நடந்தவர் - பாற்கடலிலறிதுயிலமர்ந்த திருமாலும் தாமரைமலர்மேலிருந்த பிரமனும் வராகமாயும் அன்னமாயுங் கீழும் மேலுந்தேட அக்கீழிடத்து மேலிடத்தும் அவர்கட்குப் புலப்படாதுலவிய இறைவரது, செம்பொன் நகை பாதம் மலர் புணையாக பற்றி துன்பம் வேலை கடந்தனர் - செவந்த பொன்னிறத்தின் விளக்கம்வாய்ந்த பாததாமரையைத் தெப்பமாகப்பற்றி யத்துன்பக்கடலைக்கடந்தார், கங்குல் வேலை புலர்ந்தது - இராப்போதுங் கழிந்தது.

திருவடிஞானத்தில் நிலைத்தவராதலால் ஏனையோர்க்கரியதுன்பத்தைக்கடந்தனர் என்பார் செம்பொற்பாத நகைமலர்புணையாப்பற்றிக் - கடந்தனர் துன்பவேலையென்றார். (கச)

அந்தமிலழகன்றன்னையங்கயற்கண்ணியோடுஞ்
சுந்தரவமளிப்பள்ளியுணர்த்துவான்றொண்டர்சூழ
வந்தனைசெய்யுமார்ப்புமங்கலசங்கவார்ப்பும்
பந்தநான்மறையினார்ப்பும்பருகினார்செவிகளார.

(இ-ள்.) அந்தம் இல் அழகன் தன்னை அம் கயற் கண்ணியோடும் சுந்தரம் அமளி பள்ளி உணர்த்துவான் - (போகாங்கபூசனையிலமர்ந்தருளிய) எல்லையில்லாத பேரழகினையுடைய சோமசுந்தரக்கடவுளை அங்கயற்கண்ணியாருடன், சுந்தரம் அமளிப்பள்ளி உணர்த்துவான்-விளக்கம் அமைந்த திருப்பள்ளியெழுச்சியையுணர்த்த, தொண்டர் சூழ வந்தனை செய்யும் ஆர்ப்பும் மங்கல சங்க ஆர்ப்பும்-அடியவர் சூழநின்று வணங்கும் ஆரவாரத்தையும் மங்கலமமைந்த சங்கின் முழக்கத்தையும், பந்தம் நான் மறையின் ஆர்ப்பும் - கட்டமைந்த நான்குவேதங்களி னொலியையும், செவிகள் ஆர பருகினர் - செவிப்புலன்கள் தெவிட்டப்பருகினர்.

அமளிப்பள்ளி படுக்கை. இது ஒருபொருட்கிளவி. (கரு)

போதவாநந்தச்சோதிபுனிதமெய்த்தொண்டர்க்காக
நாதமாமுரசமார்ப்பநரிப்பரிவயவர்சூழ
வேதவாம்பரிமேற்கொண்டுவீதியில்வரவுகாணுங்
காதலான்போலத்தேர்மேற்கதிரவனுதயஞ்செய்தான்.

(இ-ள்.) போத வாநந்தச் சோதி - அறிவாநந்த ஒளியாகிய பேரொளி, புனிதம் மெய் தொண்டர்க்கு ஆக-நல்லொழுக்கத்தையுடைய வாதவூரடிகளுக்காக, நாதம் ஆம் முரசம் ஆர்ப்ப-நாததத்துவமென்னும் முரசமொலிக்கவும், நரி பரி வயவர் சூழ - நரியாகிய குதிரையின்மேல்வந்த வீரர்கள் சூழ்ந்துவரவும், வேதம் வாம் பரி மேற்கொண்டு வீதியில் வரவு-வேதமாகிய தாவுங் குதிரையின்மேலெழுந்தருளி மதுரைத்திருவீதியில் வருகையை, காணும் காதலான் போல-பார்க்கும் விருப்பமுடையவனைப்போல, தேர் மேல் கதிரவன் உதயம் செய்தான் - தேரின்மேற் சூரியனுதயஞ்செய்தனன். (கசா)

கயனெடுங்கண்ணியோடுங்கட்டவிழ்கடிப்பூஞ்சேக்கைத்
துயிலுணர்ந்திருந்தசோமசுந்தரக்கருணைவெள்ளம்

Koviloor Digital Library

பயினெடுஞ்சிகரநோக்கிப்பங்கயச்செங்கைகூப்பி
நயனபங்கயநீர்சோரநாதனைப்பாடலுற்றார்.

(இ-ள்.) கயல் நெடும் கண்ணி யோடும் - அங்கயற்கண்ணியாரோடும், கட்டு அவிழ் கடி பூஞ்சேக்கை துயிலுணர்ந்திருந்த சோமசுந்தரக் கருணைவெள்ளம்-கட்டவிழ்ந்த வாசமிக்க மலர்ப்பள்ளியில் திருத்துயிலுணர்ந்திருந்தருளிய சோமசுந்தரக் கிருபாவெள்ளம், பயில் நெடுஞ் சிகரம் நோக்கி - எழுந்தருளிய நெடியவிமானத்தை நோக்கி, பங்கயம் செங்கை கூப்பி நயன பங்கயம் நீர் சோர - தாமரைபோன்றசெவ்விதாரங்களைக் குவித்துக் கண்களாகிய தாமரை நீர்சிந்த, நாதனை பாடலுற்றார்-அச்சோமசுந்தரக்கடவுளைப் பாடத்தொடங்கினார்.

நெடுமை கண்ணிற்கு அடை-துயில் உணர்தல் நித்திரையினின்றும் எழுதல்.()

கொச்சகக்கலிப்பா.

எந்தாயனைத்துலகுமீன்றாயெத்தேவர்க்குந்
தந்தாய்செழுங்குவளைத்தாராய்பெருந்துறையில்
வந்தாய்மதுரைத்திருவாலவாயுறையுஞ்
சிந்தாமணியேசிறியேற்கிரங்காயோ.

(இ-ள்.) எந்தாய் - என்தந்தையே, அனைத்துலகும் ஈன்றாய் - எல்லாவுலகங்களையுந் தந்தருளினவனே, எதேவர்க்கும் தந்தாய் - அயன்முதலிய எல்லாத்தேவர்களுக்குந் தந்தையே, செழுங் குவளை தாராய் - அன்றலர்ந்த குவளைமலர்மாலையையுடையாய், பெருந் துறையில் வந்தாய் - திருப்பெருந்துறையில் ஞானாசாரியத் திருவுருக்கொண்டுவந்தருளினவனே, மதுரை திருவாலவாய் உறையும் சிந்தாமணியே-மதுரையென்னுந் திருவாலவாயிலெழுந்தருளிய சிந்தாமணி போல்பவனே, சிறியேற்கு இரங்காயோ - சிறியேனாகிய அடியேனுக்கு இரங்கியருளாயோ.

எல்லாவுயிர்களுள்ளும் தாமொருவராயினும் ஆண்ட உரிமைபற்றி எந்தாயெனவும், அனைத்துலகுமீன்றாய் என்பதுபற்றி எத்தேவர்க்குந் தந்தாய் எனவும், ஆசாரியத்திருக்கோலமாயெழுந்தருளினமைபற்றிச் செழுங் குவளைத்தாராய் எனவும், தாமுன்னர்ச் சிந்தித்ததருளினமைபற்றி மதுரைத் திருவாலவாயுறையுஞ் சிந்தாமணியே யெனவுங்கூறினார். (௧௮)

மூவாமுதலாய்முதுமறையாயம்மறையுந்
தாவாதசோதித்தனிஞானபூரணமாய்த்
தேவாதிதேவாய்த்திருவாலவாயுறையு
மாவார்கொடியாயடியேற்கிரங்காயோ.

(இ-ள்.) மூவாத முதலாய் - என்றும் மூத்தலில்லாத முதலாயும், முது மறையாய்-தொன்றுதொட்டுள்ள வேதங்களாயும், அ மறையும் தாவாத சோதி தனி ஞான பூரணம் ஆய் - அவ்வேதங்களாலும் அளந்து காண்டற்கு அரிய ஒப்பற்ற ஞானபூரணமாயும், தே ஆதி தேவாய் -தேவர்களுக்கெல்லா முதலாயுள்ள தேவனாயுமுள்ள, திருவாலவாய் உறையும் ஆ ஆர் கொடியாய் - திருவாலவாயி லெழுந்தருளிய இடபக்கொடியையுடையாய், அடியேற்கு இரங்காயோ - அடியேனுக்கு இரங்கியருளாயோ.

பின் தோன்றிய எல்லாத்தேவர்களுள்ளும் தான் என்றும்நிலைத்த இளமையுடையனாயிருத்தலால் மூவாத எனவும், எல்லாத்தேவர்களுக்கு முன்னே தனதிச்சையால்

Koviloor Digital Library

திருமேனிகொண்டருளினவனாதலால் முதலாய் எனவும், வேதசிகைகள் தன்னையே சுட்டியுணர்த்தலால் முதுமறையாய் எனவும், உணர்த்தற்குக்கருவியாகிய அந்நூலா லுணர்வரியனாதலால் அம்மறையுந் தாவாதசோதித் தனிஞானபூரணமாய்எனவும், தம்மை வழிபடும் உயிர்களுக்கு அவ்வத்தேவர்களருளுதல் சுதந்திரனாகிய தானே யவ்வத்தேவர்களிடத்துநின்று கூட்டிமுடிக்கவல்லனாதலால் தேவாதிதேவாய் எனவும் கூறினார் "யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகியாங்கே - மாதொருபாகனார்தாம்வருவர் மற்றத்தெய்வங்கள்-வேதனைப்படுமிறக்கும்பிறக்குமேல்வினையுஞ்செய்யும் - ஆதலாலிவையிலாதானறிந்தருள்செய்வனன்றே" எனவருஞ் சிவஞானசித்தியாரால் உணர்க. (௧௯)

முன்னாமுதுபொருட்குமுன்னாமுதுபொருளாய்ப்
பின்னாம்புதுமைக்கும்பின்னாகும்பேரொளியாய்த்
தென்னாமதுரைத்திருவாலவாயுறையு
மென்னாயகனேயெளியேற்கிரங்காயோ.

(இ-ள்.) முன் ஆம் முது பொருட்கும் முன் ஆம் முது பொருள் ஆய் - முன்னுள்ள பழம்பொருட்கு முன்னுள்ள பழம்பொருளாய், பின் ஆம் புதுமைக்கும் பின் ஆகும் பேர் ஒளி யாய் - பின்னுள்ள புத்தம் புதியபொருளுக்கும் பின்னுள்ள புத்தம் புதிய பெரிய ஒளியாகி, தென் ஆம் மதுரை திருவாலவாய் உறையும் என்நாயகனே - தெற்கின்கண்ணுள்ள மதுரையென்னுந் திருவாலவாயிலெழுந்தருளிய எனது நாயகனே, எளியேற்கு இரங்காயோ - எளியேனாகிய அடியேனுக்கு இரங்கியருளாயோ.

அண்டங்களின்தோற்றரவுக்கு முன்பிருத்தலில் முன்னாமுதுபொருட்கு முன்னாமுதுபொருளாய் எனவும், அவ்வண்டங்களின்தோற்றரவுக்குப் பின்னும் இருத்தலில் பின்னாம் புதுமைக்கும் பின்னாகும் பேரொளியாய் எனவுங்கூறினார் "முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே - பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே" எனவருந் திருவாசகத்தால் உணர்க. தோற்றரவு தோன்றல். (௨௦)

மண்ணாய்ப்புனலாய்க்கனலாய்வளியாகி
விண்ணாயிருசுடராயித்தனையும்வேறாகிப்,
பண்ணாயிசையாய்ப்பனுவலாயெங்கண்ணுங்
கண்ணாயென்னுறுகண்காணுவாறென்கொலோ.

(இ-ள்.) மண் ஆய் புனல் ஆய் கனல் ஆய் வளி ஆகி விண் ஆய் இரு சுடர் ஆய் - பிருதிவியாகியும் அப்புவாகியும் தேயுவாகியும் வாயுவாகியும் ஆகாயமாகியும் சோமசூரியராகியும், இத்தனையும் வேறு ஆகி - இவற்றினின்றும் வேறாகியும், பண் ஆய் இசை ஆய் பனுவல் ஆய் - பண்ணாகியும் அதனுடனின்ற இசையாகியும் அவற்றுலகமைந்த நூலாகியும், எங் கண்ணும் கண் ஆனாய் - எவ்விடத்தும் கண்களானாய், என் உறு கண் காணாத ஆறு என்னோ - அடியேன் படுந் துன்பத்தைக் காணாதவகையாது.

விச்சுவரூபி என்பார் மண்ணாய்ப்புனலாய்க் கனலாய்வளியாகி- விண்ணாயிருசுடராய் எனவும், விச்சுவாதிகன் என்பார் இத்தனையும் வேறாகி எனவும், அதற்கு அந்தரியாமியாய் உடனின்றான் என்பார் பண்ணாயிசையாய் எனவும், இவற்றைக் கூறும் வேதமுந்தானாய் நின்றான் என்பார் பனுவலாய்எனவும், இவ்வாறுநின்றவன் எங்குங்கண்ணுள்ளான் என்பார் எங்கண்ணுங்கண்ணாய் எனவுங்கூறினார். எடுத்த

Koviloor Digital Library

ல்முதலிய எட்டினையும் பாவிற்பண்ணுதலாற் பண்ணுமிசையாய் என்றதற்குப் பண்ணுடனின்ற இசையாய் எனப்பொருள்கூறினும் "உலகினையிறந்துநின்றதரனுருவென்பதோரார் - உலகவனுருவிற்றோன்றிப்போகுங்கிடுமென்றுமோரார் - உலகினுக்குயிருமாகியுலகுமாய்நின்றதோரார் - உலகினிலொருவனென்பருருவினையுணராரெல்லாம்" எனவருஞ் சிவஞானசித்தியாரால் உணர்க. (உ௧)

பொங்குஞ்சினமடங்கல்போன்றுருத்துவெங்கூற்ற
மங்கும்புரியாவருந்துன்பத்தாழ்ந்தநான்
மங்கும்படியறிந்தும்வந்தஞ்சலென்கிலையா
லெங்குஞ்செவியுடையாய்கேளாயோவென்னுரையே.

(இ-ள்.) பொங்கும் சினம் மடங்கல் போன்று உருத்து - கொதித்தெழுங் கோபமிக்க சிங்கத்தைப்போலக் கோபித்து, வெம் கூற்றம் அங்கும் புரியாத அருந் துன்பத்து நான் ஆழ்ந்து - கொடிய இயமன் யமபுரியிடத்தும் செய்தற்கு அரிய பெரியதுன்பத்திலடியேனழுந்தி, மங்கும் படி அறிந்தும் - மெலிவழியும் வகையைத் தெரிந்திருந்தும், வந்து அஞ்சல் என்கிலை - (நனவிலுங்கனவிலும் வந்து முன்னருளியதுபோல) வந்து அஞ்சாதேயென்றருளவில்லை, எங்கும் செவியுடையாய் - எவ்விடத்துங் காதுகளையுடையாய், என் உரை கேளாயோ - என்னுடைய முறையீட்டைக் கேட்டருளாயோ.

உயிர்களின்முறையீடு உணர்தற்கு எங்குஞ்செவியையுடைய விச்சுவரூபியாகிய தேவரீர் திருச்செவியில் அடியேன்முறை யிடேறாதகாரணம் யான் என்ன அபராதியானேனோ என்று இரங்கினோனென்பார் கேளாயோ என்னுரையேயென்றார். (உ௨)

பூட்டியருட்பாசமிருபாதம்பொறித்துடலிற்
கூட்டியடியாருளகப்படுத்தாட்கொண்டருமை
காட்டியவோவின்றென்னைக்கைவிட்டாய்வெய்யரென்னை
யாட்டியொறுக்குமிடத்தாரென்றுகொள்வாரே.

(இ-ள்.) அருள் பாசம் பூட்டி - திருவருளாகிய தளையிட்டு, உடலில் இருபாதம் பொறித்து - தலையில் இரண்டு திருவடித்தாமரைகளையுஞ் சூட்டி, அடியார் உள் கூட்டி அகப்படுத்து ஆட்கொண்டு - அடியவர்கூட்டத்துள் கடைப்பட்ட என்னையும் ஒருவனாகச்சேர்த்து நின்குற்றேவலி லொருப்படுத்தி யடிமைகொண்டு, அருமை காட்டியவோ - (மேலையோர்க்குங் காணுதற்கு அரிய) நினதருமையைக் காட்டினவனே, இன்று என்னை கை விட்டாய் - இப்பொழுது என்னைப் பற்றறக்கைவிட்டாய், வெய்யர் என்னை ஆட்டி ஒறுக்கும் இடத்து என்று கொள்வார் ஆர் - இக்கொடியவர்களடியேனைத் தங்கள்வழிப்படுத்தித் தண்டிக்குமிடத்தில் அஞ்சேலென்று அருள்செய்வோர் நின்னையன்றியார்.

உடலாகிய முதற்பொருள் சினைப்பொருளாகிய தலைமேல்நிற்றலால் முதலாகுபெயர். கடுத்தின்றுன்னெனவருதல்காண்க. காட்டியவன் காட்டியவோவிளி. (உ௩)

ஊராருனைச்சிரிப்பதோராயென்றன்னடிமைக்
காராயடியேனயர்வேனஃதறிந்தும்
வாராயரசன்றமரிழைக்கும்வன்கணோய்
பாராயுன்றன்மையிதுவோபரமேட்டி.

Koviloor Digital Library

(இ-ள்.) ஊரார் உன்னை சிரிப்பது ஓராய் என்று - ஊரிலுள்ளவருன்னைநகைப்பதைச் சற்றும் உணர்கிலையேயென்று, உன் அடிமைக்கு ஆர் ஆய் அடியேன் அயர்வேன் - உன்னடியவருளொருவராய்க்காணப்பட்டுக் கடைப்பட்ட அடியேன் சோர்வேன், அஃது அறிந்தும் - (முற்றுணர்வுடைமையால்) அதனையுணர்ந்தும், வாராய் - வருதலொழிந்தாய், அரசன் தமர் இழைக்கும் வன்கணேப் பாராய் - பாண்டியனுடைய பரிசனமாகிய தண்டக்காரர்செய்யுங் கடுந்துன்பத்தைப் பாராய், பரமேட்டி உன் தன்மை இதுவோ - பரமேட்டியே யுன்தன்மையிதுதானே.

அடியவர்பாரம் தன்பாரமெனக்கருதுவோன் என்பதற்கு இழுக்குவந்தது என்பார் ஊராருன்னைச்சிரிப்பதோராய் எனவும், உன் அடியவருள் யானும் ஒருவனு யினிச் சுட்டப்படேன் ஆதலின் அடியனல்லனே எனத் தன்னைச் சினந்துகூறினர் என்பார் பன்மைப்பாலை யொருமைப்பாலாக்கி ஆராயடியேனயர்வேன் அஃதறிந்தும்வாராயரசன்றமரிழைக்கும் வன்கணேப்பாராய்எனவும், இதனாலடியவர்திறத்து உன் கருணையிவ்வாறே என்பார் உன்தன்மையிதுவோபரமேட்டி எனவுங்கூறினர் "அக்குநின்றினைப்பார்தம்மையாண்டவாண்டகையையுன்னி-இக்குணார்த்தில்லைகொல்லோவென்று தம்மனத்தேசொல்லிச் - சங்கவெண்குழையாய்மன்னன் றனக்குவாம்பரிகளீதல்-நக்கடனாகுமென்றுநவின்றசொற்பொய்மையாமோ - ஊனுடம்புடையவாழ்க்கையொழித்துனக்கடிமையென்று - மாநிலம்புகலுமாறுவந்துனையடைந்தேன்றன்னை - மீனவன்றன்பான்மீளவிடுத்தனைவேலைநீருள் - ஆனபினங்கிராற்றுநீரெனவாவதுண்டோ - அறத்தனிச்செல்விபாக வன்பிலேனின்பாலென்று - வெறுத்திடலடியேற்கிங்கு வேறொருதுணையுமில்லை - செறுத்துயர்புரங்களெல்லாஞ் செற்றவனடியான்றன்னை-நிறுத்தினர்வெயிலிலென்றுனின்புகழ்க்கேற்றமாமோ. வானநாடவர்க்குமேலோய்வந்துனக்கடிமையிப்போ - தானநானிடும்பையுற்றாலாருனக்கடிமையாவார் - நானெனுமனத்தார்சொல்லுநல்லுரையன்றிநின்ற - வீனனுமொருவன்சொல்வதேறுமோவுளத்திலென்றார்" என வாதவூரடிகள்புராணத்திலும் இவ்வாறு முறையிடுதல் உணர்க.

கலிநிலைத்துறை.

என்றிரங்குவோரிரங்கொலியிளஞ்சிறாரழுகை
சென்றுதாயர்தஞ்செவித்தொளைநுழைந்தெனச்செல்லக்
குன்றிருஞ்சிலைகோட்டியகூடனாயகன்கேட்
டன்றுவன்சிறைநீக்குவான்றிருவுளத்தமைந்தான். ௩

(இ-ள்.) என்று இரங்குவோர் இரங்கு ஒலி - என்று வருந்திக்கூறும் வாதவூரடிகளின் முறையீடு, இளஞ் சிறார் அழுகை சென்று தாயர் தம் செவி தொளை நுழைந்தால் என்ன செல்ல - இளம்பிள்ளையினழுகைசென்று தாய்மார்செவிவாயிலாக நுழைந்தாற்போலத் தமது திருச்செவியிற்செல்ல, குன்று இருஞ் சிலை கோட்டிய கூடல் நாயகன் கேட்டு - மேருவைப் பெரியவில்லாகவளைத்த நான்மாடக்கூடலிலெழுந்தருளிய இறைவர்கேட்டு, அன்று - அக்காலையில், வன் சிறை நீக்குவான் திருவுளத்து அமைந்தான் - வலியசிறைக்களத்தினின்று நீக்கத் திருவுளத்திற்கருதினர்.

இளங்குழவியினழுகைகேட்ட தத்தந் தாய்மார் ஆற்றாது விரைந்து அவ்வழுகையைப் பரிந்துநீக்கி உபசரித்தல்போலத் தமது அடியவர் அழுகையொலிக்கு ஆற்றாது பரிவுகூர்ந்தனர் என்பது தோன்ற இளஞ்சிறாரழுகைசென்று தாயர்தஞ்செவித்தொளைநுழைந்தெனச்செல்ல, கூடனாயகன்கேட் - டன்றுவன்சிறைநீக்குவான்றிருவுளத்தமைத்தான் என்றார் "அவத்தொழில்புரியாமேன்மையன்பருக்கன்புசெய்து-

Koviloor Digital Library

பவக்கடலிடைவிழமேற்பரிக்கருட்பார்வைநல்கித் - தவப்பெருவடிவங்கொண்டுதோன்றித்தானுமையர் - செவிப்புலன்புகுந்ததன்பர் செப்பியமாற்றமெல்லாம். தந்தையென்பவன்மைந்தர்வாதைதவிர்ப்பதேகடனாதலால்" என வாதவூரடிகள்புராணத்தினும் வருதல்காண்க. (௨௫)

நந்தியாதியாம்பெருங்கணநாதரைவிளித்தான்
வந்தியாவரும்பணிந்தனர்மன்னவற்கின்று
முந்தியாவணிமூலநாள்வந்ததுமுனிவு
சிந்தியாமுனம்பரியெலாஞ்செறுத்துவான்வேண்டும்.

(இ-ள்.) நந்தி ஆதியாம் பெருங் கணநாதரை விளித்தான் - நந்திநாயனார்முதலிய பெரியகணநாதரை யழைத்தருளினார், யாவரும் வந்து பணிந்தனர் - அந்நந்திநாயனார்முதலிய யாவரும்வந்து வணக்கிநிற்ப, மன்னவற்கு - அரிமருத்தனபாண்டியனுக்கு, இன்று முந்தி ஆவணி மூல நாள் வந்தது-இப்பொழுது ஆவணிமாதத்தின் மூலநாள்வந்தது, முனிவு சிந்தியா முன்னம் - கோபங்கொள்ளுதற்குமுன்னே, பரி எல்லாம் செறுத்துதல் வேண்டும்-(பொருளுக்கு ஏற்ப) குதிரைகளையெல்லாம் இறுக்கவேண்டும்.

நந்தியாம்பெருங்கணநாதராவோர் நந்தி, பிருங்கி, மகாகாளர், கும்போதரன், திரும்பன், சக்குகன்னன். ஆவணிமாதத்தில்வரு மூலநக்ஷத்திரம் ஆடிமாதத்தினிறுதியில் வந்தமையால் ஆவணி மூலநாள் வந்ததென்றனர். (௨௬)

யாவரும்புனத்தியங்குறுநரியெலாமீட்டித்
தாவரும்பரியாக்கியத்தாம்பரிநடத்துஞ்
சேவகஞ்செய்வோராகிமுன்செல்லுமின்யாமும்
பாவகம்படவருதுமப்படியெனப்பணித்தான்.

(இ-ள்.) யாவரும்-நீவிரெல்லிரும், புனத்து இயங்குறும் நரி எல்லாம் ஈட்டி - காட்டிற் சஞ்சரிக்கு நரிகளையெல்லாந் திரட்டி, தாவரும் பரி ஆக்கி - தாவிச்செல்லுங் குதிரைகளாக்கி, அ தாம் பரி நடத்தும் சேவகம் செய்வோர் ஆகி முன் செல்லுமின் - அந்தத் தாவிச்செல்லுங் குதிரைகளைநடத்தும் பாகராகி முன்னேசெல்லுங்கள், யாமும் பாவகம்பட அப்படி வருதும் என பணித்தான் - நாமும் குதிரைத் தலைவர்பாவமாக அவ்வாறு வருவோமெனப் பணித்தருளினார். (௨௭)

ஏகநாயகனாணைபூண்டெழுகணத்தவரு
நாகநாடரும்வியப்புறநரியெலாந்திரட்டி
வேகவாம்பரியாக்கியவ்வெம்பரிநடத்தும்
பாகராயினரவர்வரும்பரிசதுபகர்வாம்

(இ-ள்.) ஏக நாயகன் ஆணை பூண்டு - ஒப்பற்ற இறைவராகிய சோமசுந்தரக்கடவுளுடைய ஆணையை மேற்கொண்டு, எழு கணத்தவரும் - நந்திநாயனார் முதலிய எழு சிவகணத்தவரும், நாக நாடரும் வியப்புற - பொன்னுலகத்தவரும் அதிசயிக்க, நரி எல்லாம் திரட்டி வேகம் வாம்பரி ஆக்கி - நரிகளையெல்லாம் ஒருசேரத் திரட்டி விரைந்துசெல்லுந் தாவுங் குதிரைகளாக்கி, அ வெம்பரி நடத்தும் பாகர் ஆயினர் - அந்த வேகத்தையுடைய குதிரைகளை நடத்தும் பாகரானார்கள், அவர் வரும் பரிசு அது பகர்வாம் - அவர்கள் வருந் தன்மையை இனிக் கூறுவாம். (௨௮)

Koviloor Digital Library

றூக்கியார்த்தசெம்பட்டினர்சுரிகையர்தொடுதோல்
வீக்குகாலினரிருப்புடற்காப்பினர்வெருளி
னோக்குபார்வையர்புண்டரநுதலினரிடியிற்
றூக்கியார்ப்பெழுநகையினர்தழன்றெழுசினத்தோர்.

(இ-ள்.) தூக்கி ஆர்த்த செம்பட்டினர் - மேலே தூக்கி யிறுகக்கட்டிய செம்பட்டுடையினரும், சுரிகையர் - உடைவாளையுடையவரும், தொடுதோல் வீக்கு காலினர் - தொடுதோல் கட்டிய காலினையுடையவரும், இருப்பு உடல் காப்பினர் - இருப்புக்கவசத்தையுடையவரும், வெருளின் நோக்கு பார்வையர் - வெறித்த பார்வையையுடையவரும், புண்டரம் நுதலினர் - திரிபுண்டரமணிந்த நெற்றியையுடையவரும், இடியில் தாக்கி ஆர்ப்பு எழு நகையினர் - இடிபோல முழங்கி ஒலியெழும் அட்டகாசமுடையவரும், தழன்று எழுசினத்தோர் - கொதித்தெழுங் கோபத்தையுடையவரும் (ஆகிய இவருள்.) (உசு)

வட்டத்தோல்வரிபுறங்கிடந்தசையவைவடிவா
டொட்டகையினர்சிலர்நெடுந்தோமரஞ்சுழல
விட்டகையினர்சிலர்வெரிநிடைநெடுவிசிகப்
புட்டில்வீக்கிவிற்றூக்கியபுயத்தினர்சிலரால்.

(இ-ள்.) வட்டத்தோல் - கேடகம், வரி புறம் கிடந்து அசைய-கவசம் இறுக்கிய முதுகிற்கிடந்தசைய, வை வடி வாள் தொட்ட கையினர் சிலர் - கூரிய வடித்த வாளையேந்திய கையையுடைய பாகர் சிலர், நெடுந் தோமரம் சுழல விட்ட கையினர் சிலர்-பெருஞ்சவளஞ் சுழலவிட்ட கையையுடைய பாகர் சிலர், வெரிந் இடை நெடு விசிகப்புட்டில் வீக்கி வில் தூக்கிய புயத்தினர் சிலர் - முதுகில் நெடிய அப்பறாத்தூணியைக்கட்டி வில்லைத் தொங்கவிட்ட தோளையுடைய பாகர் சிலர். (ஙo)

செம்படாஞ்செய்தபோர்வையர்சிலர்பசும்படத்தான்
மொய்ம்புவீக்கியகவயத்தர்சிலர்கருமுகில்போ
லம்புயம்புதைகாப்பினர்சிற்சிலரவிரும்
பைம்பொன்வாணிறப்படாஞ்செய்குப்பாயத்தர்சிலரால்.

(இ-ள்.) செம்படாம் செய்த போர்வையர் சிலர் - செவந்த ஆடையாற்செய்த போர்வையையுடையவர்கள் சிலர், பசும் படத்தால் மொய்ம்பு வீக்கிய கவயத்தர் சிலர் - பசிய ஆடையால் புயத்திலிறுகக்கட்டிய கவசத்தையுடையவர் சிலர், கருமுகில் போல் அம்புயம் புதை காப்பினர் சிற்சிலர் - கரிய மேகம்போல அப்பறாத்தூணியால் மூடப்பட்ட கரிய கவசத்தையுடையவர் சிலர், அவிரும் பைம்பொன் வாள் நிறம் படாம் செய்குப் பாயத்தர் சிலர் - விளங்கும் பசியபொன்னாலமைந்த ஒளிவாய்ந்த ஆடையாற்செய்த சட்டையையுடையவர்கள் சிலர். (ஙக)

பிச்சவொண்குடையார்பலர்கவரிவால்பிறங்கத்
தைச்சதண்குடையார்பலர்சல்லிசூழ்நாற்றி
வைச்சவெண்குடையார்பலர்வாணிலாமுத்த
மொய்ச்சவெண்குடையார்பலர்மொய்ம்பினரிவருள்.

(இ-ள்.) பிச்சம் ஒண் குடையார் பலர் - வெண்குடையாகிய வொள்ளிய குடையையுடையவர் பலர், கவரி வால் பிறங்க தைச்ச தண் குடையார் பலர்-கவரி

Koviloor Digital Library

வாலால் விளங்கத்தகத்த தண்ணிய குடையையுடையவர் பலர், சல்லி சூழ் நாற்றி வைச்ச வெண் குடையார் பலர் - சல்லிகள் சூழத் தொங்கவிட்டுவைத்த வெள்ளிய குடையையுடையவர்கள் பலர், வாள் நிலா முத்தம் மொய்ச்ச வெண் குடையார் பலர்-விளங்கும் வெள்ளிய கிரணத்தையுடைய முத்துக்களாற் கோவைசெய்த தவளக்குடையையுடையவர் பலர், மொய்ம்பினர் இவர் உள்-வலிமைவாய்ந்த இவர்களுள்.

தருமமாதிநாற்பொருளெனுந்தாளது ஞான
கருமகாண்டமாஞ்செவியது காட்சியைக்கடந்த
வொருமையாம்பரமபரமாமுணர்வெனுங்கண்ண
தருமையாம்விதிமுகத்தது நிடேதவாலதுவால்.

(இ-ள்.) தருமம் ஆதி நாற்பொருள் என்னும் தாளது - தருமமுதலிய நான்கு பொருள்களாகிய கால்களையுடையது, ஞான கரும காண்டம் ஆம் செவியது - ஞான காண்டம் கருமகாண்டமாகிய காதுகளையுடையது, காட்சியை கடந்த ஒருமை ஆம் பரம் அபரம் ஆம் உணர்வு என்னும் கண்ணது - விடயங்களைக்கடந்த ஒருப்பாடாகிய பரஞானம் அபரஞானமென்னுங் கண்களையுடையது, அருமை ஆம் விதி முகத்தது - அரிய விதியாகிய முகத்தையுடையது, நிடேதம வாலது - விலக்காகிய வாலையுடையது.

தருமம் ஆதிநாற்பொருள் அறம், பொருள், இன்பம், வீடு. பரஞானம் திருவருண்ஞானம். அபரஞானம் ஆகமஞானம். விதி நிடேதம் விதிவிலக்குகள். வேதத்தையே குதிரையாகக் கூறினமையால் இவ்வாறு கூறினார். (௩௩)

தந்திரங்களாற்புறவணிதரித்தது விரித்த
மந்திரங்களாற்சதங்கைதார்மணிச்சிலம்பணிந்த
தந்தரஞ்சுழல்சோமனுமருக்கனுமிதிக்குஞ்
சுந்தரப்பதம்பொறைகொளத்தூங்கிருபுடைத்தால்.

(இ-ள்.) தந்திரங்களால் புறவணி தரித்தது - ஆகமங்களால் புறத்திலணியும் ஆபரணங்களைத் தரித்துள்ளது, விரித்த மந்திரங்கள் ஆல் சதங்கை தார் மணி சிலம்பு அணிந்தது - அவ்வாகமங்கள் விரித்த மந்திரங்களினால் சதங்கையும் கிண்கிணிமாலையும் சிலம்பும் ஆகிய இவைகளை யணிந்தது, அந்தரம் சுழல் சோமனும் அருக்கனும் - ஆகாயத்திற்சுழலும் சந்திரனையுஞ் சூரியனையும், மிதிக்கும் சுந்தரம் பதம் பொறை கொள தூங்கு இருபுடைத்து - (பாதநூல்வழி) மிதிக்கும் அழகமைந்த கால்களைப் பொறுத்தற்கு நிலைபெற்ற இரண்டு புடைகளாக உடையது.

இருபுடைத்து என்றது குழம்பின்மேலிடந்துள்ள புடைப்புகளை. சிவாகமங்கள் தந்திரம், மந்திரம் எனப் பெயர்பெறுதலால், தந்திரங்களால் மந்திரங்களால் என்றார். வேதங்களை விளக்கஞ்செய்வன ஆகமங்களாதலால் வேதப்புரவிக்கு ஆகமங்களை யாபரணங்களாகக் கூறினார். (௩௪)

மாண்டதாரகப்பிரமயாங்கலினம்வாய்கிழியப்
பூண்டதாற்புறச்சமயமாம்பொருபடைமுரிய
மூண்டுபோரெதிர்வினைத்திகன்முடிப்பதுமுனரி
யாண்டகோமுகமெத்துளையாகமேவியதால்.

(இ-ள்.) மாண்ட தாரகப் பிரமம் ஆம் கலினம் வாய் கிழிய பூண்டது - மாட்சிமைப்பட்ட பிரணவமாகிய கடிவாளம் வாய் கிழியப் பூண்டுள்ளது, புறச் சம

Koviloor Digital Library.

யம் ஆம் பொருபடை முரிய மூண்டு எதிர் போர் விளைத்து இசல் முடிப்பது - அறுவகைப்பட்ட புறச்சமயங்களாகிய போர்செய்யுஞ் சேனைகள் முரிந்தோடக் கோபமூண்டு எதிர்நின்று போர்செய்து வெற்றிகொள்ளுந் தன்மையது, முளரி ஆண்ட கோமுகம் மந்துரா ஆக மேவியது - தாமரையைத் தவிசாக ஆட்சிகொண்ட பிரமனுடைய சதுமுகங்களை இலாயமாகப் பொருந்தியுள்ளது.

மந்திரம் என்றும் பாடத்தை மந்துரையென்றும் பாடம் ஆகக்கொள்க. (௫௫)

அண்டகோடிகளனைத்துமோர்பிண்டமாவடுக்கி
யுண்டநீரதாமுதுகின்மேலுபநிடக்கலனை
கொண்டவாலியவைதிகப்புரவிமேற்கொண்டான்
றொண்டர்பாசவன்றொடரவிழ்த்திடவருஞ்சோதி.

(இ-ள்.) அண்ட கோடிகள் அனைத்தும் ஓர் பிண்டம் ஆக அடுக்கி உண்ட நீரது ஆம் முதுகின்மேல் - அண்டகோடிகள் யாவையையும் ஒரு பிண்டமாக அடுக்கி யமைத்த தன்மையதாகிய முதுகின்மேல், உபநிடதம் கலனைகொண்ட வாலிய வைதிகம் புரவி - பிரபல சுருதியாகிய கல்லணையமைந்த களங்கமில்லாத வேதம் என்னுங் குதிரையின்மேல், தொண்டர் பாசம் வன்தொடர் அவிழ்த்திட வருஞ் சோதி மேற்கொண்டான் - அடியவரது பந்தமாகிய பெருஞ்சேமிழ்ப்பை யவிழ்க்கவரும் பேரொளியாகிய சோமசுந்தரக்கடவுள் ஆரோகணித்தருளினர்.

கலனை தொகுத்தல். (௫௬)

ஆனமந்திரக்கிழார்பொருட்டன்றியும்வென்றி
மீனவன்பிறப்பறுக்கவும்வார்கழல்வீக்கி
வானநாயகனேந்தியமறையுறைகழித்த
ஞானவாள்புறவிருளையுநக்கிவாளெறிப்ப,

(இ-ள்.) ஆனமந்திரக் கிழார் பொருட்டு அன்றியும் - தமக்கிமையந்த வாதவூரடிகள் பொருட்டல்லாமலும், வென்றி மீனவன் பிறப்பு அறுக்கவும் வார் கழல் வீக்கி - வெற்றியையுடைய அரிமருத்தனபாண்டியனது பிறப்பினையறுக்கவும் நீண்ட வீரகண்டையைக்கட்டி, வானம் நாயகன் - தேவர்கள் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுள், ஏந்திய மறை உறை கழித்த ஞானம் வாள் - திருக்கரத்திலேந்திய வேதமாகிய உறையினின்றுங் கழித்த ஞானமாகிய வாள், புறம் இருளையும் நக்கி வாள் எறிப்ப - அகவிருளையுமன்றிப் புறவிருளையு நீக்கி யொளியை வீசவும்.

உம்மை வாதவூரடிகள் பிறப்பறுக்கக் கழல்வீக்கியதுமன்றி, பாண்டியன் பொருட்டும் என நிற்றலால் இறந்ததுதழீஇய எச்சப்பொருளது. வேதம் பிரமஞானத்தை யுணர்த்தலால் மறையை உறையாகவும் ஞானத்தை வாளாகவும் உருவகஞ்செய்தார். "ஞானவாளேந்துமையர் நாதப்பறையறைமின் - மானமாவேறுமையர் மதிவெண்குடைகவிமின்" எனத் திருவாசகத்தில் வருதல் காண்க. (௫௭)

சாய்ந்தகொண்டையுந்திருமுடிச்சாத்தும்வாள்வைரம்
வேய்ந்தகண்டியுந்தொடிகளுங்குழைகளும்வினையைக்
காய்ந்தபுண்டரநுதலும்வெண்கபெங்கமுங்காப்பு
மாய்ந்ததொண்டர்தமகம்பிரியாதழகெறிப்ப,

(இ-ள்.) சாய்ந்த கொண்டையும் - ஒருபாற்சாய்ந்த மயிர்க்கொண்டையும், திருமுடிச்சாத்தும் - திருத்தலைச்சாத்தும், வாள் வைரம் வேய்ந்த கண்டியும் - ஒளி

விசம் வயிரமிழைத்த கண்டியும், தொடிகளும் குழைகளும் - கையிலணிந்த கங்கணங்களுங் குண்டலங்களும், பிறையை காய்ந்த புண்டர நுதலும் - அடியவர் சஞ்சித வினையை யொழிக்கும் திரிபுண்டரம் அணிந்த நெற்றியும், வெள் கலிங்கமும் காப்பும் - வெள்ளிய ஆடையும் திருநுதற்காப்பும், (ஆகிய இவை) ஆய்ந்த தொண்டர் தம் அகம் பிரியாது அழகு எதிப்ப - தம்மைச் சிந்திக்கும் அடியவர் இதயத்தினின்றும் நீங்காது பொலிந்து ஒருபால் விளங்கவும்.

திருமுடிச்சாத்து தெப்பி. (௩௮)

பிறக்குமாசையோர்மறந்துமிங்கணுகன்மின்பிறப்பை
மறக்குமாசையோரிம்மெனவம்மினன்பரைவேந்
தொறுக்குநோய்களைவானெனவொருவனும்பிறவி
யறுக்கவந்தனனென்பபோற்பரிச்சிலம்பலம்ப.

(இ-ள்.) பிறக்கும் ஆசையோர் மறந்தும் இங்கு அணுகன்மின் - பிறக்கும் விருப்பமுடையோர் மறந்தும் இங்குவருத லொழியுங்கள், பிறப்பை மறக்கும் ஆசையோர் இம்மென வம்மின் - பிறப்பு இனி வேண்டாமென்னுங் கருத்துடையோர் விரைந்து வருங்கள், அன்பரை வேந்து ஒறுக்கும் நோய்களை வான் என - அடியவரை அரசன் தண்டிக்கு நோயைக் களைய வருவானைப்போல, ஒருவனும் - ஒப்பில்லாத இறைவரும், பிறவி அறுக்க வந்தனன் என்பபோல் - (அடியவர்) பிறவியை யறுக்கவந்தருளினரென்று கூறுதல்போல, பரி சிலம்பு அலம்ப - வேதக்குதிரையின் காற்சிலம்பு ஒருபால் ஒலிக்கவும். (௩௯)

கங்கையைச்சடைமுடியின்மேற்கரந்தனையவள்போ
லெங்கடம்மையுங்கரந்திடென்றிரந்துகாவேரி
துங்கபத்திரியாதியாநதிகளுஞ்சூழப்
பொங்கிவீழ்வபோலொலியலுங்கவரியும்புரள.

(இ-ள்.) கங்கையை சடை முடியின்மேல் கரந்தனை - கங்காநதியைச் சடாமுடியின்மேலொளித்தாய், அவள் போல் எங்கள் தம்மையும் கரந்திடு என்று இரந்து - அக்கங்கையைப்போல எங்களையும் அச்சடாமுடியின்மே லொளிப்பாயென்று குறைகூறி, காவேரி துங்கபத்திரி ஆதியாம் நதிகளும் சூழ பொங்கி வீழ்வ போல் - காவேரி துங்கபத்திரி முதலிய நதிகளுஞ்சூழ மேலெழுந்து விழுதல்போல, ஒலியலும் கவரியும் புரள - (ஒருபால்) ஈயோட்டியும் சாமரமும் புரளவும். (௪0)

வாவிநாறியவாலிதழ்த்தாமரைமலரோ
னாவினானுமைநாயகனான்மறைபரியா
மேவினானெனத்தானொருவெண்குடையாகிப்
பாவினானெனமுடியின்மேற்பானிலாக்கால.

(இ-ள்.) வாவி நாறிய வால் இதழ் தாமரை மலரோன் நாவினான் - நீர்நிலையில் முளைத்தெழுந்த பொலிவமைந்த இதழ்கள்நெருங்கிய தாமரைமலரில்வசிக்கும்பிரமன்நாவில்வசிக்கும் கலைமகள், உமை நாயகன் நான் மறை பரியாக மேவினான் என - அங்கயற்கண்ணியாராகிய இறைவர் நான்குவகைப்பட்டவேதமே அசுவமாகக் கொண்டெழுந்தருளினரென்று, தான் ஒரு வெண் குடை ஆகி பாவினாள் என்ன - (ஒருபால்) தான் ஒருதவளவட்டக்குடையாகி நிழல்தருதல்போல, முடியின் மேல் பால் நிலா

Koviloor Digital Library

கால - திருமுடியின்மேல் முத்தங்கோவைசெய்த (தவளவட்டக்குடையாய்) வெள்ளியகிரணத்தை வீசவும். (சுச)

முறையினேதியபுராணமூவாறுநாமொழியு
மிறைவனுமிவன்படைத்தளித்தழிப்பவனிவனே
மறையெலாமுறையிடும்பரம்பொருளெனவாய்விட்
டறையுமாறுபோலியங்களீரொன்பதுமார்ப்ப.

(இ-ள்.) முறையின் ஓதிய புராண மூவாறும் - முறைப்படவகுத்த பதினெண்புராணங்களும், இவன் - இவ்வேதப்பரிமேலெழுந்தருளிய இவன், நாம் மொழியும் இறைவன் ஆம்-நம்மால் விதந்துகூறப்படும் இறைவன், படைத்து அளித்து அழிப்பவன் இவனே-படைத்துக்காத்த இளைப்பொழிக்குமிவனே,மறை எல்லாம் முறையிடும் பரம்பொருள் என்ன வாய்விட்டு அறையும் ஆறுபோல்-வேதங்களெல்லாமுறையிடும்பரம்பொருளென்று வாய்திறந்துகூறும்வகைபோல, ஈரொன்பது இயங்களும் ஆர்ப்ப - பதினெட்டுவாச்சியங்களும் (ஒருபால்) முழங்கவும்.

புராணம் பதினெட்டு பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம்,பௌடியம், நாரதியம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், மற்சம், கூர்மம், காருடம், பிரமாண்டம். இவற்றுள் சைவபுராணம் பத்தும், விஷ்ணுபுராணம் நான்கும், பிரமபுராணம் இரண்டும், அக்கினிபுராணம் ஒன்றும், சூரியபுராணம் ஒன்றும் ஆதலால் முறையினேதியபுராணமூவாறும் என்றார். சைவபுராணம் பத்து - சைவம், பௌடியம், மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மற்சம், கூர்மம், பிரமாண்டமாம். விஷ்ணுபுராணம் நான்கு - காருடம், நாரதியம், வைணவம், பாகவதமாம். பிரமபுராணம் இரண்டு - பிரமம், பதுமமாம். அக்கினிபுராணம் ஒன்று - ஆக்கினேயமாம். சூரியபுராணம் ஒன்று - பிரமகைவர்த்தமாம். "பிரமநற்பாற்பம்வைணவஞ்சைவம்பெருலகேத்துபாகவதம் - அருமறைதெளித்தபௌடியம்நாரதிய மார்க்கண்டமாக்கினேயம்-கருதரும்பொருள்சேர்பிரமகைவர்த்தமிலிங்கநல்வராகமெய்க்காந்தம் - மருவுவாமனஞ்சொல்கூர்மமீண்மற்சங்காருடஞ்சிறந்தவாயவியம்" எனவருங் கூர்மபுராணத்தால் உணர்க. புராணம் வேதத்திற்கு வழிநூல் ஆதலால் இறைவனுலருளிய முதனூலாகிய வேதத்தின்கருத்தும் இவ்வாறே எனக்கூறும், இவனேமறையெலாமுறையிடும் பரம்பொருளென என்றது எனக்கூறினர். (சுஉ)

மிடைந்தமாயவாம்பரித்திரண்மேற்றிசைநோக்கி
நடந்தநாயகனுன்மறைப்புரவியுநாப்ப
ணடைந்ததாலெழூந்தூளிகளண்டமுந்திசையும்
படர்ந்தபோம்வழியாதெனமயங்கினன்பரிதி.

(இ-ள்.) மிடைந்த மாயம் வாம் பரித்திரள் - நெருங்கிய மாயையாலமைந்த தாவுங் குதிரைக்கூட்டங்கள், மேல் திசை நோக்கி நடந்த - மேலைத்திசையைநோக்கிநடந்தன, நாயகன் நான்மறை புரவியும் நாப்பண் அடைந்தது - இறைவர் ஆரோகணித்தருளிய வேதப்பரியும் அவற்றினடுவேவந்தது, எழும் தூளிகள் அண்டமும் திசையும் படர்ந்த - (அவற்றால்) எழுந்ததூளிகள் அண்டங்களிலும் எண்டிசைகளிலும்பரந்தன, பரிதி போம் வழி யாது என்ன மயங்கினன் - சூரியன் தான்செல்லும் கதிநெறியுணராது தமோதி யெதுவென்று மயங்கிச் சுழன்றனன்,

Koviloor Digital Library

கீழ்த்திசையினின்று வருதலால் மேற்றிசைநோக்கி என்றார் "குதிரையைக் கொண்டுகுடகாடதன்மிசைச் - சதுர்படச்சாத்தாய்த்தானெழுந்தருளியும்" எனவ ருந் திருவாசகத்தால் உணர்க. (௪௩)

பள்ளமாக்குவதிட்டரிளைப்பள்ளத்தைமேடு
சொள்ளவாக்குவபாரொலாம்விலாழிகொப்புளித்து
வெள்ளமாக்குவதூளியால்வெள்ளத்தைவெறிதா
யுள்ளதாக்குவபுள்ளுருவுருக்கொண்டபரிமா.

(இ-ள்.) புள்ளுரும் உருக் கொண்ட பரிமா - வஞ்சவுருவக்கொண்டகுதிரை கள், இடரிளை பள்ளம் ஆக்குவ - மேட்டினைப் பள்ளமாக்குகின்றன, பள்ளத்தை மேடு சொள்ள ஆக்குவ - பள்ளத்தினை மேடாக்குவன, விலாழி கொப்புளித்து பார் எல்லாம் வெள்ளம் ஆக்குவ - வாய்நுரையைக் கொப்புளித்து நிலவுலகமுற்றிலும் அந்நுரையால் வெள்ளமாக்காநின்றன, தூளியால் வெள்ளத்தை வெறிது ஆய் உள்ளது ஆக்குவ-குரத்தினெழுந்த தூளியால் அவ்வெள்ளத்தை வறப்பச்செய்வன. (௪௪)

கொய்யுளைப்பரியெழுந்ததூள்கோப்பவான்கங்கை
வையையொத்ததேழ்பசும்பரிசெம்பரிமாவாச்
செய்ததொத்ததுசிந்துரந்திசைக்கயமுகத்துப்
பெய்ததொத்ததாலொத்ததுபெரும்பகன்மாலை.

(இ-ள்.) கொய் உளை பரி எழுந்த தூள் கோப்ப - கொய்த புறமயிரையுடைய குதிரையின் குளம்பினின்றும் எழுந்த தூசிப்படலம் எங்கும் கோத்தலால், வான் கங்கை வையை ஒத்தது - ஆகாயகங்கை வையைநதியை யொத்தது, ஏழ் பசும் பரி செம் பரிமா ஆக செய்தது ஒத்தது - ஏழுபச்சைக் குதிரைகளையுஞ் செங்குதிரைக ளாகச் செய்ததை யொத்தது, திசை கயம் முகத்து சிந்துரம் பெய்தது - திக்கு யானைகளின் முகத்தில் சிந்தூரத்தை யப்பியதொத்தது, பெரும்பகல் மாலை ஒத்தது - பெரிய பகற்பொழுது செக்கர் வானத்தை யொத்தது.

நடுப்பகல் என்பார் பெரும்பகல் எனவும், செக்கர் வானம் என்பார் மாலையெ னவுங் கூறினார். (௪௫)

விளம்புகின்றவச்சம்புவெம்பரித்திரண்மிதிக்குங்
குளம்புகிண்டியவெழுந்ததூள்குன்றிறகரிந்தோன்
வளம்புகுந்தடைவார்குரவழிபுரிவேள்விக்
களம்புகைந்தெழுதோற்றமேயல்லதுகடாதால்.

(இ-ள்.) விளம்புகின்ற அ சம்பு வெம்பரித்திரள்-சொல்லாநின்ற அந்நரியாகி ய வெம்மையுடைய குதிரைக்கூட்டங்கள் (புகலப்படுகின்ற அச்சிவபெருமானுடை ய வெம்மையுடைய குதிரைக்கூட்டங்கள்,) மிதிக்கும் குளம்பு கிண்டிய எழுந்த தூள் - (நிலத்தில்நீயே) மிதிக்குங் குளம்புகள் கிண்டுதலாலெழுந்த தூள், குன்று இறகு அரிந்தோன் வளம் புகுந்து அடைவார் - மலைகளின் சிறையரிந்த இந்திரனு டைய அரசியலை (அசுவமேதயாகஞ்செய்து) விரும்பியடைவோர், குரம் வழி புரி வேள்விக்களம்புகைந்து எழு தோற்றமே அல்லது-அவ்வசுவம் குளம்புவைத்தவழி ச்செய்யும் யாகமண்டபத்தினின்று புகைந்தெழும் புகைக்காட்சியை யொப்பதன்றி, கடாது - (மற்றொன்றினை) ஒவ்வாது.

விளம்புகின்ற அச்சம்பு செம்மொழிச்சிலேடை. (௪௬)

Koviloor Digital Library

மட்புலந்திசைவான்புதைபூழியுண்மறைந்து
கொட்புறும்பரிச்சதங்கைதாரொலியினுங்குளிர்வான்
பெட்புறுங்குரலொலியினுஞ்செவியினிற்பிறிது
கட்புலங்களாற்கண்டிலர்வழிவரக்கண்டோர்.

(இ-ள்.) மட்புலம் திசை வான் புதை பூழியுள் மறைந்து - நிலவுலகும் எட்டுத்திசையும் விண்ணுலகுமாகிய இவைகளைப் புதைத்த புழுதியுள் மறைந்து, கொட்புறும் பரி சதங்கை தார் ஒலியினும் - கொள்ளிவட்டம்போற் சுழன்று வரும் குதிரைகளின் சதங்கை கிண்கிணிமாலைகளின் முழக்காலும், குளிர் வான் பெட்புறும் குரல் ஒலியினும்-சூற்கொண்ட மேகம் விரும்பும் அவற்றின் குரலரவத்தாலும், வழி வர - அவை வழியில் வர, கண்டோர் - பார்த்தவர்களுள், செவியினில் பிறிது கண் புலங்களால் கண்டிலர்-செவிப்புலனாலல்லாமல் கட்புலனால் ஒருவரும் பார்த்திலர்.

புழுதியுள் மறைந்து வருதலின் அவற்றின் ஆரவாரத்தால் அறிந்தனர் என்பது கருத்து. (சஎ)

தாழிசையொருபோகுகொச்சகம்.

தரங்கமெறிமுத்திவைவிலாழியலதார்மா
விரங்குமொலியல்லதிரையேங்குமொலியின்ன
துரங்கமலமற்றிவைசுரர்க்கரசனின்றும்
புரங்கொலவிடுத்திடவரும்புணரியென்பார்.

(இ-ள்.) இவை தரங்கம் எறி முத்து - இவைகள் கடலினலைகள் வீசுமுத்துகள், விலாழி அல்ல-குதிரைகளின் வாய்நுரையல்ல, தார் மா இரங்கும் ஒலி அல்ல-கிண்கிணிமாலையையணிந்த குதிரைகள் கனைக்கும் ஒலியல்ல, திரை ஏங்கும் ஒலி - அலைகள் ஒலிக்கும் ஆரவாரமாம், இன்ன துரங்கம் அல்ல - வரும் இவை குதிரைகளல்ல, இவை - (இங்குப் புடைபெயர்ந்துதோன்றும்) இவை, சுரர்க்கு அரசன் இன்றும் புரம் கொல விடுத்திட வரும்புணரி என்பார் - இந்திரன் இப்பொழுதும் மதுரையையழிக்க ஏவவருங் கடல்களென்று கூறுவார்.

வாய்நுரையோ, கிண்கிணிமாலை யோசையோ, குதிரையோ என ஐயுற்று வினவினார்க்கு உபமேய தருமத்தையொழித்து உபமான தருமத்தை யாரோபித்தற் பொருட்டு முத்தும் அலையொலியும் கடலும் ஆகக் கூறினமையால் அவநுதியணி.()

இம்பருலகுள்ளவலபண்டினையபாய்மா
வும்பருலகாளிபரியேகொலதுவொன்றே
வெம்பரிதிவெம்பரிகொலேழவைகளேழும்
பைம்பரிகள்யாவினையபாய்பரிகளென்பார்.

(இ-ள்.) இனைய பாய் மா - இந்தக்குதிரைகள், பண்டு இம்பர் உலகு உள்ள அல்ல - முன் இந்நிலவுலகிலுள்ளனவல்ல, உம்பர் உலகாளி பரியே - இந்திரன் குதிரையோ, அது ஒன்றே - அக்குதிரை யொன்றாதலால் அதுவல்ல, வெம் பரிதி வெம்பரி கொல் - வெம்மைவாய்ந்த சூரியனுடைய குதிரைகளோ, ஏழ்-அவைகள் ஏழு, அவைகள் ஏழும் பைம்பரிகள் - (அதுவுமன்றி) அக்குதிரைகளேழும் பச்சைக்குதிரைகள், இனைய பாய் பரிகள் யா என்பார் - (இவையல்லவாயின்) இக்குதிரைகளெவையென (கண்டோர்பிறரை) வினவுவார்கள்.

Koviloor Digital Library

இக்குதிரைகள்போலும்உள்ள குதிரைகள் முன் நிலவுலகிலுள்ளனவெனக்கே ட்டறியேம் என்பார் இம்பருலகுள்ள வலபண்டிகையபாய்மா எனவும், ஆதலின் இந்திரனது உச்சைச் சிரவமோ என வினவினார்க்கு இவை பலவாதலால் அதுவல்ல என்பார் அதுவொன்றே யெனவும், அன்றிச் சூரியன் குதிரையோ என வினவினார்க்கு அது என்றால் ஏழாதலுமன்றிப் பச்சைக்குதிரைகள், இவை அல்லவாயின் எந்த அண்டத்திலுள்ளனவோ என்பார் யாவிலைய பாய்பரிகள் என்பார் என்றார். இதில் மயக்கவணியும் விலக்கணியுங்கலந்துவருதலிற் சேர்வையணி. யா பலவின்பாலில் வந்த வினாவிடைச்சொல். (௫௯)

வெம்பணிகளைப்பொரவெகுண்டெழுவதேயோ
பைம்புனலுடுத்தமுதுபார்முதுகுகிறு
மும்பருலகைப்பொரவுருத்தெழுவதேயோ
வம்பரமுகட்டளவடிக்குரமழுத்தும்.

(இ-ள்.) வெம் பணிகளை பொர - (பாதலவுலகில் வசிக்கும்) ஆதிசேடன் முதலிய கொடிய நாகங்களோடு போர்செய்ய, வெகுண்டு எழுவதேயோ - கோபித்து எழுந்ததோ (என்று கண்டோர் கூற) பைம் புனல் உடுத்த முது பார் முதுகு கிறும் - கரிய நீர்மயமாகிய கடல்சூழ்ந்த தொன்றுதொட்டுள்ள நிலவுலகின்முதுகைக் குளம்பாற்பிளந்துச் செல்லும், உம்பர் உலகை பொர உருத்து எழுவதேயோ - தேவருலகோடு போர்செய்யக்கோபித்து எழுந்ததோ (என்று கண்டோர் கூற) அம்பரம் முகடு அளவு - ஆகாயத்திறுச்சியளவும், அடி குரம் அழுத்தும்-காற்குளம்புதோய அழுத்திச்செல்லாநிற்கும்.

என்று கண்டோர் கூற செல்லெச்சம். (௬௦)

உத்தரதிசைப்புரவிதெற்கடையுமாறு
மத்தகையதெற்குளவடக்கடையுமாறு
மித்தகைகுடக்கொடுகுணக்கடையுமாறுஞ்
சித்தர்விளையாடலின்வெளிப்படுதல்செய்யா.

(இ-ள்.) உத்தர திசை புரவி-வடதிசையிலுள்ள குதிரைகள், தெற்கு அடையும் ஆறும் - தென்றிசையிலடையும் வகையையும், அ தகைய - அந்தத் தன்மையன போல, தெற்கு உள்ள வடக்கு அடையும் ஆறும் - தென்றிசையிலுள்ள குதிரைகள் வடதிசையி லடையும் வகையையும், இ தகை குடக்கு ஒடு குணக்கு ஒடு அடையும் ஆறும் - இவ்வாறு மேலைத்திசையிலுள்ள குதிரைகள் கிழைத்திசையை யடையும் வகையையும், கிழைத்திசையிலுள்ள குதிரைகள் மேலைத்திசையி லடையும் வகையையும், சித்தர் விளையாடலின் - சித்தர் திருவிளையாடலைப்போல, வெளிப்படுதல் செய்யா - வெளிப்படுத்தி.

சித்தர் விளையாடலின் என்றது "தெற்கிருப்பவர்போல் வடதிசையிற்சென்று - புக்கிருப்பதங்கிழக்குளார்போலமேற்றிசையின் - கக்கிருப்பதும்யாவருநாடிடைநிலத் - தக்கதன்றியேயிந்திரசாலமாத்தனைத்தும்" என எல்லாம்வல்ல சித்தர் திருவிளையாடற்படலத்தில் வருதல் காண்க. ஒடுவுருபைப் பின்னுங் கூட்டிப் பொருள் கொள்க. (௬௧)

மறைமரபுசாலவரும்வன்னிமிவைபொலனிக்
துறைவருளமுந்துடுமிரும்பணிதொடுக்கு

Koviloor Digital Library

மறவனுளமுஞ்சுடு மைச்சரையொறுக்கு
மிறைவழுதியுள்ளமுமினிச்சுடுவதென்பார்.

(இ-ள்.) மறை மரபு சால வரும் வன்னி இவை-வேதத்தின் வழிநூலாகிய கலைநூலிற்கூறும் விதிமுற்றும் அமைந்த குதிரைகளாகிய இவை, பொன்னி துறைவன் உளமும் சுடும்-காவேரிநீர்த்துறையையுடைய சோழனது மனத்தையுஞ் சுடாநிற்கும், இரும்பனை தொடுக்கும் மறவன் உளமும் சுடும் - பெரிய பனைமலராற்றொடுத்த சேரனுடைய மனத்தையுஞ் சுடாநிற்கும், இனி அமைச்சரை ஒறுக்கும் இறைவழுதி உள்ளமும் சுடுவது என்பார் - இனி வாதவூரடிகளை யொறுத்து வருத்தும் பாண்டியனது மனத்தையுஞ் சுடுமென்று கண்டவருட்சிலர் கூறுவார்.

கண்டவருட்சிலர் என்றது குறிப்பெச்சம். வழிநூல் முதனூல் முடிபை ஒருசேரத் தழுவிநிற்றலால் மறை மரபுசாலவரும் எனவும், சேர சோழர்கள் பாண்டியன் வழிப்பகைஞர் ஆதலால் பொன்னித்துறைவனுளமுஞ் சுடுமிரும்பனைதொடுக்கு மறவனுளமுஞ்சுடும் எனவும், நமது அமைச்சரியல்பை யுணராது என்ன தவறு செய்தோம் என்னும் எண்ணம் பாண்டியன் மனத்தைச் சுட்டுவருத்தலால் அமைச்சரையொறுக்கும் - இறைவழுதியுள்ளமு மினிச்சுடுவதென்பார் எனவுங் கூறினர்.()

முந்தையொருதந்திரிபொருட்டரசன்முன்னு
வந்தமிலனீகமொட்டரும்பரியில்வந்தாங்
கிந்தமறைமந்திரியிடும்பைதணிவிப்பான்
வந்தனர்கொலிப்பரிவரும்பொருநரென்பார்.

(இ-ள்.) முந்தை ஒரு தந்திரி பொருட்டு - முன்பு சவுந்தரசாமந்தர் என்னும் ஒரு சேனாதிபதியின்பொருட்டு, அரசன் முன்னு அந்தம் இல் அனீகம் ஒடு அரும் பரியில் வந்தது ஆங்கு—குலபூஷணபாண்டியன்முன்பு எல்லையில்லாத சேனைகளோடு இலக்கணங்களமைந்த குதிரையின்மேல் வந்தருளியதுபோல, இந்த மறை மந்திரி இடும்பை தணிவிப்பான் இ பரி வரும் பொருநர் வந்தனர் கொல் என்பார் - இந்த மறையவர் குலத்திற்றோன்றிய வாதவூரடியாரென்னும் அமைச்சருடைய துன்பத்தைத் தணிவித்தற்பொருட்டுச் சோமசுந்தரக்கடவுள் இந்தக்குதிரையில் வரும் வீரராக வந்தனரோ என்று சிலர் கூறுவார்கள்.

"சவுந்தரசாமந்தனெனத்தானைகாவலனொருவன்" என முன்னர்க்கூறுதலால் ஒரு மந்திரியென்னும் பாடத்தை ஒரு தந்திரியெனப் பாடங்கொள்க. (௫௫)

காமனிவனேகொலறுகாலுழுகடப்பந்
தாமனிவனேகொல்பொருதாரகனைவென்றோன்
மாமனிவனேகொன்மலைவன்சிறகரிந்த
நாமனிவனேகொலெனநாரியரயிர்த்தார்.

(இ-ள்.) காமன் இவனே - (இக்குதிரைவீரன் பேரழகனாயிருத்தலால்) மன்மதனிவன்றானோ, அறுகால் உழு கடப்பம் தாமன் இவனே - (இளமையும் ஆளவில் வல்லமையு முடைமையால்) வண்டுகள் மூக்காலுழுங் கடப்பமாலையையணிந்த முருகக்கடவுளிவன்றானோ, பொரு தாரகனை வென்றோன் மாமன் இவனே - (தனது மாயையால் நமது மனத்தைக் கவர்தலால்) போர்செய்யுந் தாரகாசுரனை வென்ற முருகக்கடவுள் மாதுலனாகிய திருமாலிவன்றானோ, மலைவன் சிறகு அரிந்த நாமன் இவ

Koviloor Digital Library

லோ என - (பெரும் போகமுடையவருகத் தோன்றுதலால்) மலைகளின் வலிய சிறைகளரிந்த இந்திரனிவன்றானோ வென்று, நாரியர் அயிர்த்தார் - ஒருபால் நின்று தனித்தனிகூறி ஐயங்கொண்டார்கள்.

கண்டவழி ஐயுற்றனராதலால் ஐயத்துறைப் பொருள்மேல் நின்றது. இது தலைவன்பால் நிகழ்ந்தால் நூலுணர்ச்சியால் ஒருதலை துணியான், பெண்கள்பால் நிகழ்ந்தால் துணிதலரிதாகும் என்பர். வாக்கியங்கள்தோறும் ஐயப்பொருளில்வந்த கொல் என்னும் இடைச்சொல் தந்து கூறினார். இக்குதிரையிரன் போழகனேயிருத்தல் முதலியன குறிப்பெச்சங்கள். (௫௪)

அடுத்திடுவர்கண்ணிறையவண்ணலழகெல்லா
மடுத்திடுவர்கைவளையைமாலைவிலையென்னக்
கொடுத்திடுவர்மாலைகள்கொடுத்திடுதியன்றே
லெடுத்திடுதியெங்கள்வளையெங்கள்கையிலென்பார்.

(இ-ள்.) அடுத்திடுவர் கண் நிறைய அண்ணல் அழகு எல்லாம் மடுத்திடுவர் - சிலர் அடுத்துத் தமது கண்ணுமிப வாயால் தெவிட்ட இறைவரது வனப்பையெல்லாம் பருகுவர், கை வளையை மாலை விலையென்ன கொடுத்திடுவர் - தமது கையிலணிந்த வளையலை மாலைக்குவிலையாகக் கொடுப்பார்கள், மாலைகள் கொடுத்திடுதி - அதற்கு மாறாக உமது திருமார்பிலணிந்த மாலைகளைக் கொடுப்பீர், அன்றேல் - அல்லையாயின், எங்கள் கையில் எங்கள் வளை எடுத்திடுதி என்பார் - எங்கள் கையில் எங்கள் வளை வளை யெடுத்துத்தாரும் என்று கூறுவார்கள்.

இறைவரைக்கண்டு ஒருதலைக்காமமுற்ற பெண்கள் தமது உடல் மெலிவால் கைவளை சோர்தலால் கைவளையை மாலைவிலையென்னக் கொடுத்திடுதி எனவும், கழி காமத்தால் இயற்கைப்புணர்ச்சியை யுடையவரொத்து மயங்கித் தம்மைத் தலைவன் மெய்யுறத்தீண்டிக் குறிப்பறிதல் என்னும் பொருள்மேல் நின்ற மெய்தொட்டுப் பயிறல் விரும்பினராதலால் அன்றேல் எடுத்திடுதி யெங்கள் வளை யெங்கள் கையிலென்பார் எனவுங் கூறினார். (௫௫)

ஏந்தன்முடிமாலைமலர்சிந்தினவெடுத்துக்
கூந்தலின்மிலைந்துமதன்வாகைமலர்கொள்வார்
சாந்தவையசிந்தினதனந்தடவியண்ணற்
றோய்ந்தளவிலாமகிழ்ந்துறும்பினவராவார்.

(இ-ள்.) ஏந்தல் முடி மாலை சிந்தின மலர் எடுத்து - இறைவர் திருமுடியிலணிந்த மாலையினின்றுஞ் சிந்தின மலரை யெடுத்து, கூந்தலில் மிலைந்து - தமது கூந்தலின்மேற்சூடி, மதன் வாகை மலர் கொள்வார் - (சிலர்) மன்மதனை வென்று வாகைமலர்மாலையைக் கொள்வார்கள், அவைய சிந்தின சாந்து தனம் தடவி - அவ்வாறு திருமார்பினின்றுஞ் சிந்திய சாந்தினைத் தமது தனத்தின்மேற் சிலர் பூசி, அண்ணல் தோய்ந்த அளவு இல்லாத மகிழ்ந்துறும்பினவர் ஒத்தார் - இறைவனைப் புணர்ந்த எல்லையில்லாத மகிழ்ச்சியில் மிதந்தவரையொத்தார்கள்.

தமது பொலிவழிவை இறைவர்க்குக் காட்டுவார்போன்று மாலையினின்றுஞ் சிந்தியமலரைச் சூடுதலும் திருமார்பினின்றுஞ் சிந்திய சந்தனத்தைத் தமது தனத்தின்மேற் பூசுதலும் உடையராய் மகளிர் செய்தலால் தற்காட்டுறுதல் என்னுந் துறை

Koviloor Digital Library

ப்பொருளடங்க, முடிமாலைமலர்சிந்தின வெடுத்துக் கூந்தலின் மிலைந்து எனவும், சாந்தணையசிந்தின தனந்தடவியணைவல்-தோய்ந்தளவிலாமகிழ்ந்துளும்பினவர் எனவும், புணர்ந்தவர்க்கு இத்துறைப்பொருளுடைமையால் ஒத்தார் எனவும் கூறினர். (௬௬)

பொட்டழகன்மார்பிலிடுபோர்வைகவசப்பே
ரிட்டதுமெய்நம்முயிர்தடுத்தமையினென்பார்
கட்டழகன்மாலையதுகண்ணியெனவோதப்
பட்டதுமெய்நம்முயிர்படுத்தமையினென்பார்.

(இ-ள்.) பொட்டு அழகன் மார்பில் இடு போர்வை - திலதமணிந்த இறைவர் தமது திருமார்பிலிட்ட போர்வை, நம் உயிர் தடுத்தமையின் - (அத்திருமார்பு கவராது) நம்முயிரைத் தடுத்தமையால், கவசப்பேர் இட்டது மெய் என்பார்-(அப்போர்வை) கவசம் எனப் பெயர் பூண்டது மெய்யேயென்று சிலர் சொல்லுவார்கள், கட்டழகன் மாலையது - பேரழகினையுடைய இறைவர் திருமுடியிற் சூடிய மாலை, நம் உயிர் படுத்தமையின் - நமது உயிரைக் கொள்ளை கொள்ளுதலால், கண்ணியென ஓதப்பட்டது மெய் என்பார் - (அம்மாலைக்கு) கண்ணியெனப் பெயர் கூறப்பட்டது உண்மையேயென்று சிலர் கூறுவார்.

கவசம் உயிர்காத்தலும் கண்ணி புட்படுத்தலுமுடைமையா லிவ்வாறு கூறினார்கள். இடையீடின்றிப் புணர்ந்த பெண்கள்போல நம்முயிர் தடுத்தமையின் என்றமையால், ஏமஞ்சான்ற வுவகைத்துறைப் பொருளினும், தமது ஆற்றாமையால் தம்மோடும் அவரோடும்பட்ட சிலவார்த்தைகள் கூறுவார்போல நம்முயிர்படுத்தமையினென்றமையால், உயிராக்காலத் துயிர்த்தலும் என்னுந் துறைப் பொருளினும் வந்தன. (௬௭)

இச்சையால்வடிவெடுப்பவனிந்திரசால
விச்சைகாட்டுவானெனப்பரிவீரனிலுலகைப்
பிச்சதேற்றிடமயக்கியுங்காமனிற்பெரிது
நச்சமாதரைமயக்கியுமிங்ஙனநடந்தான்.

(இ-ள்.) இச்சையால் வடிவு எடுப்பவன் இந்திரசால விச்சை காட்டுவான் என்ன - தமது இச்சையால் வடிவெடுத்தருளு மிறைவர் இந்திரசாலவித்தை காட்டுவார்போல, பரி வீரனில் உலகை பிச்சு ஏற்றிட மயக்கியும் - குதிரைவீரனைப்போலப் புலப்பட்டு உலகிலுள்ளவர்களை மயங்க மயக்கியும், காமனில் பெரிது நச்சமாதரை மயக்கியும் இங்ஙனம் நடந்தான் - மன்மதனைப்போலத் திருவுருக்காட்டி மிகவும் விரும்பி மயக்கப் பெண்களை மயக்கியும் இவ்வாறு நடந்தருளினர்.

இந்திரசாலவித்தை காட்டுவோன் அவரவர்க்குப் பலவுருக்காட்டி மயக்குதல்போல இறைவ ரவரவர்க்கியைந்த திருக்கோலங்காட்டுதலால் இந்திரசாலவிச்சை காட்டுவானெனப்பரிவீரனிலுலகைப் - பிச்சதேற்றிடமயக்கியுங்காமனிற்பெரிது-நச்சமாதரைமயக்கியு மிங்ஙனநடந்தான் என்றார். அது பகுதிப்பொருள்விகுதி. (௬௮)

தாவுகந்துகமிந்தியமொத்தனசயமா
வாவுதிண்கணமள்ளர்கண்மனங்களையொத்தார்
மேவியம்மனந்தொறுமிடைவிடாதுநின்றியக்கு
மாவியொத்ததுமேவருமருமறைப்பரியே.

Koviloor Digital Library

(இ-ள்.) தாவு சக்கரம் இந்திரியம் ஒத்தன - தாண்டிச்செல்லுங் குதிரைகள் (மெய் வாய் கண் மூக்கு செவியென்னும்) இந்திரியங்களை யொத்தன, சயமா வாவு திண் கண மள்ளர்கள் மனங்களை ஒத்தார்-வெற்றியையுடைய அக்குதிரைகள் விரைந்துசெல்ல நடத்தும் திண்ணிய சேவகவீரர்கள் மனங்களை யொத்தனர், அ மனம் தோறும் இடைவிடாது மேவி நின்று இயக்கும் ஆவி - அம்மனங்கள் தோறு மிடைவிடாமல் பொருந்திநின்று அவற்றைச் செலுத்துகின்ற உயிரை, நடுவரும் அருமறை பரி ஒத்தது - நடுவில்வரும் அரிய வேதப்பரி யொத்தது.

சத்தாதி விடயங்களைச் சோத்திராதி இந்திரியங்கள் நுகர்தற்கு மனங்கருவியாய் நிற்றலால் தாவுசக்கரமிந்திரிய மொத்தனசயமா - வாவுதிண்கணமள்ளர்கண் மனங்களையொத்தார் எனவும், இவற்றை அறிவித்து நின்றியக்குங் கருவி ஆன்மா ஆதலால் மேவியம்மனந்தொறு மிடைவிடாதுநின்றியக்கும் - ஆவியொத்ததுநடுவருமறைப்பரியே எனவுங் கூறினர். (௫௯)

துன்றுமின்னியமுழக்கமுந்தாகதவொலியு
மன்னவீரர்வாயரவமுந்திசைசெவிடடைப்பக்
கன்னிமாமதில்சூழ்கடிநகர்க்கணைக்காத
மென்னவெய்தினான்மறைப்பரிப்பாகனவ்வெல்லை.

(இ-ள்.) துன்றும் இன் இயம் முழக்கமும் தாகதம் ஒலியும் அன்ன வீரர் வாய் அரவமும் திசை செவிடு அடைப்ப - நெருங்கிய இனியவாச்சியங்களினொலியுங் குதிரைகளின் கனைப்பும் அக்குதிரைவீரர்கள் வாயாலெழுப்பு மொலியும் ஆகிய இவற்றால் எட்டுத்திசைகளுஞ் செவிடுபட, மறை பரிபாகன் - வேதமாகிய குதிரையின்மேல் வந்தருளிய அழகர், கன்னிமாமதில் சூழ் கடிநகர்க்கு அரைக்காதம் என்ன எய்தினான் - கன்னித்தன்மையையுடைய பெரியமதில் சூழ்ந்த காவல்பூண்ட மதுரைத்திருநகர்க்கு அரைக்காத மென்று சொல்ல வெழுந்தருளினார், அ வெல்லை - அக்காலையில்.

கன்னிமதில் என்றது குணவணி. (௬௦)

தாழிசையொருபோகு கொச்சகம்.

கண்டவர்கடிதோடிக்கடிநகர்குறுகிக்கார்
விண்டவழ்மணிமாடத்தநிசிறையிடைநின்ற
கொண்டலினனையார்முன்குறுகினர்மலர்செவ்வி
முண்டகவதனத்தார்முகிழ்நகையினர்சொல்வார்.

(இ-ள்.) கண்டவர் கடிது ஓடி நகர் குறுகி - பார்த்தவர் விரைந்து சென்று காவல்பூண்ட மதுரைத்திருநகரையடைந்து, கார் விண் தவழ்மணி மாடத்து அநிசிறையிடைநின்ற கொண்டலின் அனையார்முன் குறுகினர் - மேகந்தவழும் அழகிய மாடத்தின் ஒருபுறத்துள்ள வருத்தஞ் சிறைக்களத்தி லொதுங்கிய மேகத்தை யொத்த வாதவூரடிகள் முன் சென்று, மலர்செவ்வி முண்டகம் வதனத்தார் முகிழ் நகையினர் சொல்வார் - மலரும் பருவத்தையுடைய தாமரையையொத்த முகத்தினராய்ப் புன்னகைபூத்துக் கூறுவார்கள்.

மேகம் கைம்மாறு கருதாதுலகிற்கு இன்பம் தருவதுபோல் ஆன்மாக்களுக்குப் பிறவி வெப்பொழித்துப் பேரின்பந் தரும் அருளமுத் திருமொழியருளுதலால் கொண்டலினனையார் என்றார். (௬௧)

மன்னவனெறிகோடாமந்திரரடலேறே
பன்னிறமெழுமுன்னீர்ப்பரவைகள்வருமாபோற்
றுன்னினவருகின்றதுரகதமுளவெல்லாம்
பொன்னெயின்மணிவாயில்புகுவனவிதுபோதில்.

(இ-ள்.) மன்னவன் நெறிகோடாத மந்திரர் அடல் ஏறே - பாண்டியனது அரசியலினின்றும் வழுவாத அமைச்சர்களுள் வெற்றி வாய்ந்த ஆண்சிங்கம்போல்வாய், பல்நிறம் முன் நீர் எழுபரவைகள் வரும் ஆறுபோல் - பலநிறங்கள் வாய்ந்த தோன்றுதொட்டுள்ள நீராகிய எழுகடலும் வரும் வகைபோல, துன்னினவருகின்ற துரகதம் உள்ள எல்லாம் - (பலநிறங்கள்வாய்ந்து) நெருங்கிவாராநின்ற குதிரைகளெல்லாம், இதுபோதில் பொன் எயில் மணிவாயில் புகுவன - இக்காலையில் பொன்னாலமைந்த மதிலின் அழகியவாயிலிற் புகா நிற்கும். (௬உ)

ஒல்லையிலதுமன்னற்குரையுமினெனமேரு
வில்லவனருள்பெற்றவேதியர்பெருமான்போய்ச்
செல்லதுதலையிட்டதிருமகனருகெய்தி
மல்லணிதிணிதோளாய்வருவனபரியென்றார்.

(இ-ள்.) ஒல்லையில் இது மன்னற்கு உரையுமினென - விரைந்துசென்று இச்செய்தியைப் பாண்டியனுக்குக் கூறுங்களென, மேருவில்லவன் அருள்பெற்ற வேதியர் பெருமான்போய் - மேருவில்லையுடைய இறைவரருள்பெற்ற வாதவூரடிகள் சென்று, செல் தலையிட்ட திருமகன் அருகு எய்தி - மேகத்தைத் தலையிட்ட பாண்டியன் பக்கலிற்சென்று, மல் அணி திணி தோளாய் பரிவருவன என்றார் - மற்போர் வாய்ந்த திண்ணியதோளையுடையாய் குதிரைகள் வாராநின்றனவெனக் கூறியருளினார்.

அது பகுதிப்பொருள்விகுதி. பாண்டியன் மேகங்களுக்குத் தலையிட்டதை மதுரைக்காண்டத்திற் காண்க. (௬௩)

மருத்தெனவருகின்றமாக்கடலெனமன்னன்
றிருத்தணிகடகப்பூண்டெறித்திடவுடல்வீங்கப்
பெருத்தெழுமகிழ்தூங்கிப்பெருவிலைமணியார
மருத்திகொள்கலைநல்கியமைச்சனைமகிழ்வித்தான்.

(இ-ள்.) மருத்து என்ன - காற்றைப்போல, வருகின்ற மாகடல் என்ன - வாராநின்றன குதிரைவெள்ளமென்றுகூற, மன்னன் - பாண்டியன், திருத்த அணிகடகப் பூண் தெறித்திட உடல்வீங்க - சிறப்ப அழகுசெய்யும் கடகமாகிய ஆபரணம் பூட்டுவிட்டுத் தெறிக்கும்படி சரீரம் பூரிக்க, பெருத்து எழுமகிழ் தூங்கி பெருவிலை மணியாரம் அருத்திகொள் கலை நல்கி அமைச்சனை மகிழ்வித்தான் - மிகுந்தெழுந்த மகிழ்ச்சி தலைசிறந்து அளத்தற்கரிய விலையுள்ள முத்தாரங்களையும் விருப்பஞ்செய்யும் பீதாம்பரங்களையுங் கொடுத்து மகிழ் சிறக்கச்செய்தனன்.

திருத்த வலித்தல் விகாரம். இது அகரவீறு தொக்குநின்றது. (௬௪)

ஏந்தரியணைநீங்கியெழுதியதலைவாயிற்
போந்தருகொளிர்மாடம்புகுந்தரியணைமேவிக்

Koviloor Digital Library

காந்தளின்விரனல்லார்கவரிகள்புடைவீச
வாய்ந்தவர்புறஞ்சூழவடிபரிவரவேற்பான்.

(இ-ள்.) அரி ஏந்து அணை நீங்கி - சிங்கஞ் சுமந்த ஆசனத்தினின்று நீங்கி, எழுதிய தலைவாயில் போந்து அருகு ஒளிர் மாடம் புகுந்து அரி அணை மேவி - சித்திரமெழுதிய தலைவாயிலில்வந்து அதனருகில் விளங்கும் உபரிகையிற் சென்று சிம்மாசனத்தில் வீற்றிருந்து, காந்தளின் விரல் நல்லார் கவரிகள் புடை வீச - காந்தள் போன்ற விரல்களையுடைய பெண்கள் சாமரங்களைப் பக்கங்களினின்று வீசவும், ஆய்ந்தவர் புறம் சூழ - நூலாராய்ந்த அமைச்சர் முதலியோர் புறத்திற் சூழவும், அடு பரி வரவு ஏற்பான் - (பகைவரை) கொல்லுங் குதிரையின் வரவினை யெதிர் கொள்வா னாயினன்.

ஆய்ந்தவர் என்றது அமைச்சர், சேனாபதியர், புரோகிதர் முதலியோர் "அமைச்சர்புரோகிதர்சேனாபதியர் - தவத்தொழிற்றூதுவர்சாரணரொன்றிவர் - பார்த்திபர்க்கைம்பெருக்குழுவெனப்பட்டவர்" எனவரும் எதுவாலுணர்க. "முத்தமிழின்றிறனவிழும்புலவர்சூழ முதுமறையோர்மங்கலச்சொன்முறையிற்கூறக் - கைத்திகழும்வளைபுலம்பக்கலன்கண்மின்னக் கன்னியர்களிருபாலுங்கவரிவீசக் - கொத்தலரும்பலமலரின்வாசந்தோய்ந்து குலவுமிளந்தென்றல்வரமாதர்பாட - மெத்துமணிமுத்தமெறூம்பணிகள்பூண்டு வெண்மதியின்றோற்றம்போல்வீற்றிருந்தான்." என வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (௬௫)

பரனருள்விளையாடல்காட்டியபரிவெள்ளம்
வருவனசிறுகாலந்தாழ்த்தலுமதிவேந்தர்
புரவலன்மனம்வெள்கிப்பொய்யிதுவெனவுள்கி
யருகணையுறைவோனைக்குறித்தனனழல்கண்ணான்.

(இ-ள்.) பரன் அருள் விளையாடல் காட்டிய-சோமசுந்தரக் கடவுளின் திருவருள் விளையாட்டைப் புலப்படுத்த, வருவன பரிவெள்ளம்சிறுகாலம் தாழ்த்தலும்-வருங் குதிரைக்கூட்டம் சிறிது பொழுது வாராது தாழ்ப்ப, மதிவேந்தர் புரவலன் மனம் வெள்கி இது பொய் என்ன உள்கி - சந்திரன் மரபிற்றோன்றிய அரசர்களுள் சிறந்த அரிமருத்தனபாண்டியன் மனநாணி இவர்கூறிய இச்செய்தி பொய்யென்று கருதி, அருகு அணை உறைவோனை அழல் கண்ணான் குறித்தனன் - தனது பக்கலிலுள்ள தண்டலாளரைச் சினங் கொப்புளிக்குங் கண்களையுடைய அப்பாண்டியன் பார்த்தனன். (௬௬)

மன்னவனினைவாற்றுன்மந்திரர்பெருமானைத்
துன்னினர்கொடுபோயத்தோள்வலிமறமள்ள
ருன்னரிதெனவஞ்சாதொறுத்தனருரவோர்தந்
தென்னவர்தமையுள்ளிச்சேவடிதுதிசெய்வார்.

(இ-ள்.) மன்னவன் நினைவு ஆறல் - அரிமருத்தன பாண்டியன் கருத்தின்படி, மந்திரர்பெருமானை - மந்திரிகளுக்குத் தலைவராகிய வாதவூரடிகளை, அதோள்வலி மறம் மள்ளர் துன்னினர் கொடுபோய் - அந்தப்புயவலியையும் கொலைத்தொழிலையுமுடைய தண்டலாளர்கள் கொண்டுசென்று, அஞ்சாது உன் அரிது என்ன ஒறு

Koviloor Digital Library

த்தனர் - சற்றும் அஞ்சாமல் நினைத்தற்கரிய கடுந்தண்டமென்று கண்டோர்கூறத் தண்டித்தனர், உரவோர் தம் தென்னவர் தம்மை உள்கி - அவ்வாதவூரடிகள் தமக்குத் தலைவராயுள்ள சவுந்தரபாண்டியராகிய சோமசுந்தரக்கட்வுளைச் சிந்தித்து, சேவடி துதிசெய்வார்-செவந்த திருவடிகளைத் துதிப்பாராயினார்.

அரசன் கட்பார்வையால் அவன் உள்ளக்கருத்தினை யுணர்ந்தனர்களென்பார் உன்னரிதென வொறுத்தனர் என்றார் "நுண்ணியமென்பாரளக்குங்கோல்காணுங்காற் - கண்ணல்லதில்லைபிற." எனவருந் திருக்குறலால் உணர்க. (சுஎ)

கலிநிலைத்துறை.

பூவார்முளரிப்புத்தேளறியாநெறிதந்தாய்
பாவார்தென்சொற்பனுவன்மாலைப்பணிகொண்டாய்
தேவாதேவர்க்கரசேசிறியேனுறுதுன்ப
மாவாவென்றுவஞ்சேலென்னையறனேயோ.

(இ-ள்.) பூ ஆர் முளரி புத்தேள் அறியாத நெறி தந்தாய் - பொலிவமைந்த தாமரைமலரில் வசிக்கும் பிரம னறிதற்கரிய திருவடி ஞானத்தை யருளினாய், பா ஆர் தென் சொல் பனுவல் மாலை பணி கொண்டாய் - பாக்களால் நிறைந்த தென்சொல்லாகிய மலராற்றொடுத்த நூல் மாலையைச் சாத்தும் பணியையும் அடியேன்பாற் கொண்டருளினாய், தேவா - தேவனே, தேவர்க்கு அரசே - அயன் முதலிய தேவர்களுக்கு இறைவனே, சிறியேன் உறு துன்பம் ஆவா என்று அஞ்சேல் என்னாய் அறனேயோ – சிறியே னடையு மிக்க துன்பத்திற்கு ஐயோ வென்றிரங்கி யஞ்சற்க வென்றருளாய் (ஆதலால்) தருமசொரூபியாகிய தேவரீருக்கு இதுவுந் தருமமோ.

அயன் முதலிய தேவர்கள் ஏமாறி நிற்க, நாயிற்கடைப்பட்ட என்னையும் ஓர் பொருட்படுத்தி நனவில்வந்தருளிப்பணியுங்கொண்டளுந்தேவரீர், உமதுஅருள்வழி நிற்கும் அடியேனைப் பிறர் ஒறுத்தால் அஞ்சற்க வென்னாது வாளா இருத்தலும் தருமமோ என்பார் இவ்வாறு கூறினார். அயன் முதலிய தேவர்கள் ஏமாறிநிற்க என்றதற்கு " வண்ணந்தான்சேயதன்றுவெளிதேயன்ற னேகனேகனுருவுருவிலிறந்தாயென்றங்-கெண்ணந்தான்றடுமாறியிமையோர்கூட்ட மெய்துமாறறியாதவெந்தா யுன்றன்-வண்ணந்தானதுகாட்டிவடிவுகாட்டி மலர்க்கழல்களவைகாட்டிவழியற்றேனைத்-திண்ணந்தான்பிறவாமற்காத்தாட்கொண்டாய் எம்பெருமானென்சொல்லிச்சிந்திக்கேனே" எனவருஞ் திருச்சதகத்தால் உணர்க. (சுஅ)

நெஞ்சேயுரையேசெயலேயெல்லாநினவென்றாய்
வஞ்சேபோலுமஃதேலின்றுவாராயோ
பஞ்சேரடியாள்பாகாகூடற்பரமேட்டீ
யஞ்சேலென்றுவிதுவோவருளுக்கழகையா.

(இ-ள்.) நெஞ்சே உரையே செயலே எல்லாம் நின என்றாய்-மன வாக்குக் காயமென்னும் திரிகரணங்களெல்லாம் நின்னுடையன வென்று கூறியருளினாய், வஞ்சே போலும் - அதுவஞ்சனைபோலும், அஃதேல் இன்று வாராயோ - அஃதேல் (அவ்வாறுகூறியருளினமை) இன்று உண்மையானால் வந்தருள மாட்டாயோ, பஞ்சு ஏர் அடியாள் பாகா - செம்பஞ்சுக்குழம்பூட்டிய அழகிய திருவடியையுடைய உமாதேவியாரை யிடப்பாகத்திலுடையவனே, கூடல் பரமேட்டி - நான்மாடக்கூடலி லெழுந்தருளிய இறைவனே, ஐயா - ஐயனே, அஞ்சேல் என்று இதுவோ

அருளுக்கு அழகு - அஞ்சாதேயென்று கூறியருளாத இதுவோ உனது திருவருளுக்கு அழகு.

நின்னை மனத்தால் சிந்தித்தலும் வாக்கால் துதித்தலும் காயத்தாற் பணிதலுமே பணியாகக்கொண்டு அடியேனை யாண்டனை யென்பார் நெஞ்சே யுனையே செயலோ வெல்லா நினவென்றாய் எனவும், என்னை யின்று பராதினனுக்கினை யென்பார் வஞ்சேபோலும் எனவும், அவ்வாறு பணிகொண்டமை உண்மையாயின் வந்தருளாது வாளாவிருப்பாயோ என்பார் அஃதே யின்றுவாராயோ எனவும், அடியவருளொருவனல்லனாயினும் நினக்கு அடியவன் எனப் பெயர்பூண்ட நாயினேன் குறைகூறில் அஞ்சற்கவென அருளுதலன்றோ திருவருளின் கடன் என்பார் அஞ்சே லென்னாவிதுவோ வருளுக்கழகேயோ எனவுங் கூறினார். "சிந்தனைநின்றனக்காக்கிநாயினேன்றன் கண்ணிணைநின்திருப்பாதப்போதுக்காக்கி - வந்தனையுமம்மலர்க்கேயாக்கிவாக்குன் மணிவார்த்தைக்காக்கியைம்புலன்களார - வந்தனையாட்கொண்டுள்ளேபுகுந்தவிச்சை மாலமுதப்பெருங்கடலேமலையேயுன்னைத் - தந்தனைசெந்தாமரைக்காடனையமேனித் தனிச்சுடரேயிரண்டுமிலித்தனியனேற்கே" எனத் திருச்சதகத்தில் வருதல் காண்க. (௬௯)

காவிநேருங்கண்டாநாயிற்கடையான
பாவியேனைப்பொருளாக்கொண்டென்பணிகொண்டா
யாவியோடிவ்வுடலுநினதேயன்றேயின்
றேவிவாளாவிருந்தால்யாரென்னுடையானே.

(இ-ள்.) காவி நேரும் கண்டா - நீலோற்பலத்தையொத்த ஸ்ரீகண்டத்தை யுடையவனே, நாயிற் கடையான பாவியேனை பொருளாக கொண்டு என் பணிகொண்டாய் - நாயினுங் கடைப்பட்ட பாவியாகிய என்னையும் ஒருபொருளாகக் கருதி யாட்கொண்டு எனது வேலையுங் கைக்கொண்டருளினாய், ஆவியோடு இ உடலும் நினதே அன்றோ - எனதுயிரோடு இவ்வுடம்பும் உன்னுடைமையே யல்லவா, இன்று ஏவி வாளா இருந்தால் என் உடையானே யார் - இப்பொழுது கைவிட்டு வாளா இருப்பின் அடியேனை யாளாகவுடையவனே (அஞ்சேலென்றருளுவார்) யாவர்.

கடலிற்றோன்றியவிடம் தம்மைவருத்த ஆற்றாது அஞ்சி யோலமிடுந் தேவர்களின்பொருட்டு அதனையுண்டு அவர்களைக்காத்தோய் என்பார் காவிநேருங்கண்டாவெனவும், அயன்முதலியோர் வாளாவிருப்ப என்னையும் ஒருபொருளாகக்கருதி யாட்கொண்டருளினாய் என்பார் நாயிற்கடையான பாவியேனைப் பொருளாக்கொண்டென்பணிகொண்டாய் எனவும், என்று அடிமைகொண்டாயோ அன்றே என்னுடலுயிர் நின்னுடையன அல்லவோ என்பார் ஆவியோடிவ்வுடலு நினதேயெனவும், அவற்றிற்கு இடையூறுவராவழிக்காவாது தவிர்த்திருக்கில் காப்பவர் எவர் என்பார் இன்றேவிவாளாவிருந்தால் யாரென்னுடையானே" எனவுங் கூறினார் "அன்பராகிமற்றருந்தவமுயல்வார் அயனுமாலுமற்றழலுறமெழுகாம் - என்பராய்நினைவாரெனைப்பலர் - நிற்கவிங்கெனையெற்றினுக்காண்டாய் - வன்பராய்முருடொக்குமென்சிந்தை - மரக்கலன்செவியிரும்பினும்வலிது - தென்பராய்த்துறையாய்சிவலோகா - திருப்பெருந்துறைமேவியசிவனே" எனத் திருவாசகத்தில் வருதல்காண்க. காவிநேருங் கண்டா என்னும் விசேஷியம் என்தேந்துன்பத்தையொழிப்பாயென்னும் கருத்தையுட்கொண்டிருத்தலால் கருத்துடையடைகொளியணி. (௭௦)

Koviloor Digital Library

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றிரந்திரங்குமன்பரிருசெவியூடேயெங்குங்
கன்றிளஞ்செவியினல்லான்கனைகுரலோசைபோல
வொன்றியசின்னங்காளங்காகளமொலிக்குமோசை
வென்றிகொள்புரவிச்சென்றாடிசையெலாம்விழுங்கக்கண்டார்.

(இ-ள்.) என்று இரந்து இரங்கும் அன்பர் இரு செவி ஊடே - என்றுகுறை கூறிவருந்தும் அடியவர் தமதுஇரண்டுசெவித்தொளையினடுவே, எங்கும் இளங் கன்று செவியின்-(தாயைப்பிரிந்து) வருந்தும் இளங்கன்று காதில், நல் ஆன் கனை குரல் ஓசை போல-ஈன்றபசுவைத்தேடிக்கதறுமோசை சென்றடைதல்போல, ஒன்றிய சின்னம் காளம் காகளம் ஒலிக்கும்ஓசை விழுங்க-பொருந்திய சின்னமும் சிறுசின்னமும் பெருஞ்சின்னமு மொலிக்கும் ஓசைசெவிப்புலனைவிழுங்கவும், வென்றிகொள்புரவிசென்றாள் திசைஎல்லாம் விழுங்க கண்டார் - வெற்றிமிக்க குதிரைத்திரளாலெழுந்த சென்றாள் திசைமுற்றும் விழுங்கவும் கேட்டுங் கண்டுங் களிகூர்ந்தார்.

கேட்டலைக்கண்டு எனவும் உபசரித்தது புலன்மாறிவருதல். (௭௧)

வழுதியுமறிந்துவாதவூரனை விளித்துவந்த
தொழுகுலவமைச்சர்தம்பாற்றுகடவிரன்புகூர்ந்தெம்
பழுதறுகருமநும்போற்பரிக்குநர்யாரையென்று
வெழுதருமகிழ்ச்சிமேற்கொண்டளவளாயிருக்குமெல்லை.

(இ-ள்.) வழுதியும் அறிந்து - பாண்டியனுமுணர்ந்து, வாதவூரனை விளித்து வந்த தொழு குலம் அமைச்சர் தம் பால் துகள் தவிர் அன்பு கூர்ந்து - வாதவூரடிகளையழைத்துத் தன்பால்வந்த மறையவர்குலத்தில் தோன்றிய அம்மந்திரியாரிடத்துக் குற்றத்தினின்று நீங்கிய தலையன்புகூர்ந்து, எம் பழுது அறு கருமம் நும்போல் பரிக்குநர்யார் என்று - எமது குற்றமற்ற அரசகாரியங்களை உம்மைப்போலமேற்கொண்டு முடிக்கவல்லுநர் எவரென்று, எழுதரும் மகிழ்ச்சி மேற்கொண்டு அளவளாய் இருக்கும் எல்லை-அளவறுத்தற்கு அரியமகிழ்ச்சிமீக்கூர்ந்து அளவளாவிமனங்கலந்திருக்குங்காலையில். (௭௨)

பாயிருட்படலங்கீறிப்பல்கதிர்பரப்பித்தோன்றுஞ்
சேயிளம்பரிதிவானோரனையராய்ச்சிறந்தகாட்சி
மேயினபாகரோடும்விலாழியாற்பரவைசெய்யும்
வாயினவாகிவந்தமாயவாம்பரிகளெல்லாம்.

(இ-ள்.) மாயம் வாம் பரிகள் எல்லாம் - மாயையால் வடிவெடுத்துவந்ததாவிச்செல்லுங் குதிரைகளெல்லாம், பாய் இருள் படலம் கீறி - பரந்த இருளின் திரட்சியைக்கிழித்து, பல் கதிர் பரப்பி தோன்றும் சேய் இளம் பரிதி வானோர் அனையர் ஆய்-ஆயிரங்கிரணங்களை விரித்து உதயஞ்செய்த செவந்த இளஞ்சூரியர்களையொத்த பொலிவினையுடையவராய், சிறந்த காட்சி மேயின பாகரோடும் - சிறந்த தோற்றத்தைவாய்ந்த வாதுவர்களோடும், விலாழியால் பரவை செய்யும் வாயின ஆகிவந்த - வாய்நுரைநீரால் வெள்ளப்பரப்பையெங்குஞ் செய்விக்கும் வாய்களையுடையனவாகிவந்தன.

துவாதசாதித்தர்களென்பார் சேயிளம்பரிதிவானோர் என்றார். (௭௩)

Koviloor Digital Library

வண்டுழுதாரினன்றன்மரபின்மன்னவருமுன்னாட்
கண்டறியாதகாட்சிக்கவனவாம்பரியைநோக்கி
யண்டர்நாயகன்போனாமுமாயிரங்கண்பெற்றாலு
முண்டமையாவென்றுள்ளக்குறிப்பொடுமுவகைபூத்தான்.

(இ-ள்.) வண்டு உழு தாரினன் - வண்டுகள் மூக்காலுழும் வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியன், தன் மரபில் மன்னவரும் முன் நாள் கண்டு அறியாத காட்சி கவனம் வாம் பரியை நோக்கி - தனது மரபில்தோன்றிய அரசர்களும் பண்டு பார்த்தறியாத தோற்றத்தையும் வேகத்தையுமுடைய தாவுங்குதிரைக்கூட்டங்களைப்பார்த்து, அண்டர் நாயகன்போல் நாமும் ஆயிரம் கண் பெற்றாலும் - இந்திரன்போல நாமும் ஆயிரங்கண்களைப்பெற்றிருப்பினும், உண்டு அமையா என்று உள்ளம் குறிப்பொடும் உவகைபூத்தான் - (அக்கண்களால் இக்குதிரைகளின்பொலிவு)பருகிமுடியாவென்று மனக்குறிப்போடு மகிழ்சிறந்தான். (௭௪)

தானெனமகிழ்ச்சியென்னத்தலைதடுமாறிவேந்தன்
மானவெம்பரிமேல்வந்தவயவரைவியந்துமிக்கா
ரானவரிவருள்யாரென்றமைச்சரைவினவவையா
யானதுவறியேனென்றார்யாரையுமறியவல்லார்.

(இ-ள்.) வேந்தன் தான் என்ன மகிழ்ச்சி என்ன தலைதடுமாறி - அரிமருத்தனபாண்டியன் தானெனவும் மகிழ்ச்சியெனவும் பாகுபாடுசெய் துணராது மயங்கி, மானம் வெம் பரி மேல் வந்த வயவரை வியந்து - வேகமாகிய வேகத்தையுடையகுதிரையின்மேல்வந்தருளிய குதிரைவீரரைமெச்சி, இவர் உள் மிக்கார் ஆனவர் யார் என்று அமைச்சரை வினவ - இக்கூட்டத்தினருள் தலைவராய் மேம்பட்டவர் எவரென்று மந்திரியாரை நோக்கிவினவ, யாரையும் அறியவல்லார் ஐயா யான் அது அறியேன் என்றார் - வந்தகுதிரைவீரர்களெவரையும் உணரவல்ல அவ்வமைச்சர் ஐயனே யானும் (உன்னைப்போலொருவனாக வேறுநின்றமையால்) அதனை யுணரேனென்று கூறினார்.

என்றது கண்டறியாத காட்சியை யின்றுகண்ட வியப்பாலெழுந்தமகிழ்ச்சிக்கு ஒரெல்லையில்லையென்பார் தானெனமகிழ்ச்சியென்னத் தலைதடுமாறியெனவும், குதிரைகளை வருவித்தவராயினும் இவருள்தலைவனென நின்னைப்போலயாரும் அறியேனென்பார் யானதுவறியேன் எனவுங்கூறினார். மானம் பெருமை, அளத்தற்கரிய வேகத்தின்மேல் நின்றமையால் பண்பாகுபெயராய்நின்றது "மானமாவேறுமையர்" எனவரும் தொடரால் உணர்க. (௭௫)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

அண்டமெலாமாதாரமாகத்தாங்குமாநந்தத்தனிச்சோதியண்டந்தா
ங்கும், சண்டமறைப்பரிதனக்காதாரமாகித்தரிக்கவொருகாலத்துமசைவி
லாத, புண்டரிகத்தாளசையப்பாசநீக்கும்புனிகரத்தாற்பரிபூண்டபாசம்
பற்றிக், கொண்டரசனெதிர்போந்துமன்றவெங்கள்குதிரையேற்றஞ்சிறி
துகாண்டியென்றார்.

(இ-ள்.) அண்டம் எல்லாம் ஆதாரம் ஆக தாங்கும் ஆநந்தம் தனி சோதி-அண்டங்கள் முற்றும் ஆதேயமாக அவற்றிற்கு ஆதாரமாய்ப் பொறுத்தலுக்கும் பே

Koviloor Digital Library

ரின்பவடிவாகிய ஒப்பற்ற பேரொளியாகிய இறைவர், அண்டம் தாங்கும் சண்டம் மறை பரி தனக்கு ஆதாரம் ஆகி தரிக்க-அண்டம்தாங்கிய வேகத்தையுடையவேதமாகிய குதிரை தமக்கோ ராதாரமாய்ப் பொறுத்துய்ப்ப, ஒரு காலத்தும் அசைவு இல்லாத புண்டரிகம் தாள் அசைய - எக்காலத்தும் அசைதலில்லாத தாமரைமலர்போன்ற திருவடியசைய, பாசம் நீக்கும் புனை கரத்தால் பரி பூண்ட பாசம் பற்றிக்கொண்டு - அடியவர்பாசத்தினை நீக்கும் குவளைமாலையையணிந்த திருக்கரத்தினால் குதிரைபூண்ட பாசத்தினைப் பற்றிக்கொண்டருளி, அரசன் எதிர் போந்து-பாண்டியனெதிரேவந்து, மன்னு - அரசனே, எங்கள் குதிரையேற்றம் சிறிது காண்டி என்றார்-எங்கள் குதிரையேற்றத்தைச் சற்றுக்காண்பாயென்று கூறியருளினார்.

உயிர்க்குயிராய் விரவி யவ்வுயிர்த்தொகையை யியக்கும் இறைவர் என்பார் அண்டமெலாமாதாரமாகத்தாங்கு மாநந்தத்தனிச்சோதியெனவும், இலட்சுமி சாபத்தால் கோட்டான்வடிவமான பிரமனிட்ட முட்டையில் தோன்றிய வேதப்பரிஎன்பார் அண்டந்தாங்குஞ் சண்டமறைப்பரியெனவும், இந்திரசாலவிச்சைகாட்டுவான் போலத் திருவுருச்சமைந்தவராதலால் ஆதேயத்தைத் தனக்கோ ராதாரமாகக்கொண்டனர் என்பார் தனக்காதாரமாகித்தரிக்க எனவும், திருவருளேதிருவடியாதலால் அதற்குச் சலனமில்லையென்பார் ஒருகாலத்து மசைவிலாதபுண்டரிகத்தாள் எனவும் கொண்டருளிய திருக்கோலத்திற்கேற்ப அசைத்தருளினர் என்பார் அசைய எனவும், அடியவர்.ஆணவமலமாகிய பாசத்தைநீக்கியருளுந் திருக்கரத்தால் பாண்டியன் பாசத்தை யொழித்தருளுதற்குக் குதிரையின் கடிவாளமாகிய பாசத்தைப்பற்றினார் என்பார் பரிபூண்ட பாசம்பற்றிக்கொண்டு எனவும், ஐங்கதிபேதமும் இருவகைச்சாரியும் நாகபந்தம், 'விருத்தம், சுடுவீதிமுதலிய விசித்திரவிகற்பமும் என்பார் குதிரையேற்றம் எனவுங்கூறினார். பிரமன் சாமவேதங்கூறுநாவிலும், அவன் யாகஞ்செய்யும்போது கண்ணினின்றுவழிந்த நீரிலும், அவன்செய்த யாகத்திலும் இந்திரன்முதலிய திக்குப்பாலகர் எண்மரிடத்திலும், கடலிற்றோன்றிய அமிர்தத்திலும், கருப்பப்பையிலும், இலக்ஷ்மிசாபத்தால் கோட்டான்வடிவமைந்த பிரமனிட்டமுட்டையிலும் ஆகிய எழிடத்திலும், பஞ்சகல்யாணியென்னுங் குதிரைகள்தோன்றினவென அசுவநூல் கூறுதலால் அண்டந்தாங்கும் என்றனர் "மிக்கசெழுமறைநாவிற்கமலநாதன்-விழிப்புனலேவிண்ணோர்களெண்மர்தம்பான் - மைக்கடன்மேலமிர்தத்திலங்கிமீதில்-மல்குகருப்பையிலாகவண்டந்தன்னிற் - றொக்கவெழுபேதமெனு மிவற்றிற்றோன்றுந்-தொன்மையவாயிரிரண்டு துணைத்தாளூற்றி - ஒக்கவெளுக்கும்பரிகளுளவாய்வானில்- ஒண்புனலிற்செல்லுநெறியுளவுமாகி" எனவரும் வாதவூரடிகள்புராணத்தாலும் உணர்க. அண்டமெலாமாதாரமாகத்தாங்குஞ்சோதி, மறைப்பரிதனக்கோராதாரமாகித்தரிக்க எனவும், ஒருகாலத்து மசைவிலாத புண்டரிகத்தாளசைய எனவும், பாசநீக்கும் புனைகரத்தாற் பரிபூண்டபாசம்பற்றிக்கொண்டு எனவும் சொல்லாலும் பொருளாலும் விரோதப்படுந்தன்மைதோன்றக் கூறினமையால் விரோதவணி. அண்டம் முட்டை. (௭௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இசைத்தவைங்கதியுஞ்சாரியொன்பதிற்றிரட்டியாதி
விசித்திரவிகற்பந்தோன்றவேந்தனுமவையுமன்றித்
திசைப்புலத்தவருமேலைத்தேவருமருளமேற்கொண்
டசைத்தனரசைவற்றெல்லாவுலகமுமசைக்கவல்லார்.

(இ-ள்.) இசைத்த ஐங் கதியும் - (அசுவநூலில்) கூறிய மல்லகதி முதலிய ஐந்து கதிகளும், சாரி - இருவகைச்சாரியும், ஒன்பதிற்று இரட்டி ஆதி விசித்திர விக

Koviloor Digital Library

ற்பம்-ஈரசபேர்தமுதலாகப் பதினெட்டுவகை முதலிய விசித்திரவிகற்பங்களும், தோன்ற - புலப்பட, வேந்தரும் அவையும் அன்றி - அரசனும் அரசசபையுமல்லாமல், திசைப்புலத்தவரும் மேலை தேவரும் மருள - அட்டதிக்குப்பாலரும் விண்ணுலகிலுள்ளதேவருமயங்க, மேற்கொண்டு-ஆரோகணித்தருளி, அசைவு அற்று எல்லா உலகமும் அசைக்கவல்லார் அசைத்தனர்-அசைவறநின்று எல்லாவுலகங்களையும் அசைக்கவல்ல இறைவர் அசைத்தருளினார்.

அசைவுளதாயில் எக்காலத்தும் எவ்விடத்தும் இளைப்பின்றி ஐந்தொழிலியற்றல்கூடாமையின் குறைவிலாற்றலுடைமை யென்னுங் குணந்தோன்ற அசைவற்று என்றார். ஐந்துகதிகள் ஆவன - மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி. (எஎ)

ஆண்டகைமையவர்போனின்றவடுகணத்தவருந்தத்தங்
காண்டகுபுரவியெல்லாநடத்தினர்காட்டக்கண்டு
பாண்டியனவரைநோக்கிநுங்களிற்பதியாந்தன்மை
பூண்டவர்யாவரென்றானிவரென்றார்புரவிவீரர்.

(இ-ள்.) ஆண்டகையவர் போல் நின்ற அடுகணத்தவரும் - ஆண்டன்மையையுடைய வீரர்போலுருக்கொண்டு நின்ற வெற்றியையுடைய சிவகணத்தலைவர்களும், தத்தம் காண் தகு புரவி எல்லாம் நடத்தினர் காட்ட - தங்கள் தங்கள் கட்புலங்களுக்கு இனிய குதிரைகளையெல்லா நடத்திக்காட்ட, பாண்டியன் கண்டு அவரை நோக்கி நுங்களில் பதி யாம் தன்மை பூண்டவர் யாவர் என்றான் - அரிமருத்தனபாண்டியனறோக்கி அக்குதிரைப்பாகரைப்பார்த்து உங்களில் தலைமைத்தன்மை பூண்டு நின்றவர் எவரென்று வினவினான், புரவி வீரர் இவர் என்றார் - அக்குதிரைப்பாகர்கள் இவரென்று சுட்டிக்காட்டினார்கள்.

குதிரைநடை தவுரிதகம், ஆக்கிராந்திதம், வல்கிதம், இரேசிதம், புலிதம் என ஐவகைப்படும், தவுரிதகம் மெல்ல நடத்தல். ஆக்கிராந்திதம் விரைந்து நடத்தல். வல்கிதம் இருகாற்றூக்கி யாடி நடத்தல். இரேசிதம் சுற்றியோடல், புலிதம் முழுவோட்டம். இந்த ஐவகை நடையுந்தோன்றக் காட்டினார்கள் என்பார் நடத்தினர் காட்ட என்றார். (எஅ)

சுட்டுதற்கரியசோதிசுருதிவாம்புரவியோடு
மட்டவிழ்தாரினான்முன்வருதலுங்கருணைநாட்டம்
பட்டுளமயங்கித்தன்னைமறந்தெழீஇப்பாண்டிவேந்தன்
றட்டவிழ்கமலச்செங்கைத்தலைமிசைக்கூப்பிநின்றான்.

(இ-ள்.) சுட்டுதற்கு அரிய சோதி-சுட்டிக் கூறுதற்கு அரியபேரொளியாகிய இறைவர், சுருதி வாம் புரவியோடு மட்டு அவிழ் தாரினான் முன் வருதலும்-வேதமாகிய தாவுங்குதிரையோடு தேனொழுகு இதழவிழ்ந்த மாலையையணிந்த பாண்டியன்முன் வந்தருள, கருணை நாட்டம் பட்டு - திருவருணோக்கம்படுதலால், பாண்டி வேந்தன் உளம் மயங்கி தன்னை மறந்து எழீஇ - பாண்டிநாட்டரசனாகிய அரிமருத்தனபாண்டியன் மனநிலைமாழ்கித் தன்னைமறந்தெழுந்து, தட்டு அவிழ் கமலம் செங்கை தலைமிசை கூப்பி நின்றான் - தட்டம்போல மலர்ந்த தாமரைமலர்போன்ற தனதுகைகளை முடிமேற்குவித்துநின்றனன்.

Koviloor Digital Library

மனவாக்கிற் ககோசரப்பட்டு நின்றவர் என்பார் சுட்டுதற்கரியசோதியெனவும், பாண்டியன் கனவில்வந்தருளுதலால் கிருபாநோக்கம்படுதலின் பிறவிகள்தோறும் ஈண்டிய சஞ்சிதகன்மபந்தம் ஒழிந்தனன் என்பார் பாண்டியன், உளமயங்கித் தன்னைமறந்தெழுந்து எனவும், அஃதொழிய இறைவர் பணியில் நின்றனன் என்பார் தட்டவிழ்கமலச்செங்கை தலைமிசைக்கூப்பிநின்றான் எனவுங் கூறினர் "வெளிப்படவரியமேனி விண்ணவன் கண்ணுநெஞ்சுங் - களிப்புறவருதல்கண்டுங் கண்டிலன் கன்னிநாடன் - ஒளித்தலகெல்குறிபோன்உருபவமொழித்துஞானம் - அளித்திடினன்றியாவரவன்றிறந்தெரியவல்லார்" என வாதவூரடிகள் புராணத்தில் பாண்டியன் அருட்பார்வையடைந்திலனெனக் கூறினமையால், அடைந்ததன்மையை இதனால் உணர்க. (எக)

பின்னவனாணையாலேமறைப்புண்டபெருநீர்க்கூடன்
மன்னவனறிவுதோன்றவின்றொருவயமர்வீரன்
றன்னைநாங்கண்டெழுந்துதடங்கரங்கூப்பிநின்ற
தென்னெனத்தவிசின்மீளவிருந்திடநாணிநின்றான்.

(இ-ள்.) பின் அவன் ஆணையாலே மறைப்புண்ட பெருநீர் கூடல் மன்னவன் அறிவு தோன்ற - பின்பு அவ்விறைவராணையால் நீங்கிய ஆணவமலத்தால் மூடப்பட்ட வையைசூழ்ந்த மதுரைக்கு அரசனாகிய அரிமர்த்தனபாண்டியனுக்குத்தற்போதமேலெழ, இன்று ஒரு வயம் மா வீரன் தன்னை - இப்பொழுது வெற்றியையுடைய ஒருகுதிரைவீரனை, நாம் கண்டு எழுந்து தட கரம் கூப்பி நின்றது என் என்ன - நாம்பார்த்து நீண்டகைகளைத் தலைமேற்குவித்ததென்ன அறியாமையென்று, தவிசில் மீள இருந்திட நாணி நின்றான் - சிம்மாசனத்தில் மீளவுமிருக்க நாணங்கூர்ந்து வாளாநின்றனன்.

இறைவன் சுதந்திரனாதலால் பாசத்தடையுள்ள உயிர்கள்யாவும் அவன் ஆணைவழிநிற்றலால் பின்னவனாணையாலே மறைப்புண்ட எனவும், அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோகம், கொலை, விதனம், மதம், நகையாகிய இவை தற்போதம் ஆதலால் மன்னவனறிவுதோன்ற எனவும், இவற்றுளொன்றாதலால் இன்றொருவயமாவீரன் - தன்னைநாங்கண்டெழுந்துதடங்கரங்கூப்பிநின்ற - தென்னென எனவும், அசதியிலெழுந்தவன்போலப் பிரக்குக்காட்டுதலால் நின்றான்எனவுங்கூறினர். அ0

நிற்பின்றான்முகத்தைநோக்கிநேர்நின்றமறைமாவீரர்
பொற்குன்றாம்புயத்தாயுன்றன்பொருளெலாங்கொண்டுபோந்தன்
சொற்குன்றாவமைச்சன்றானேநமக்குநஞ்சூழலிங்கா
மற்குன்றாநமர்க்குமாரவழங்கினான்வழங்கலாலே.

(இ-ள்.) நேர் நின்ற மறை மா வீரர் - பாண்டியனெதிரேநின்ற வேதப்பரியையுடைய இறைவர், நிற்கின்றான் முகத்தை நோக்கி - தம்மெதிரே யகந்தைகொண்டுநின்ற பாண்டியன் முகத்தைப்பார்த்து, பொன் குன்று ஆம் புயத்தாய் - மேருவையொத்த புயத்தையுடைய பாண்டியனே, உன் தன் பொருள் எல்லாம் கொண்டு போந்த - உன்னிடத்துள்ள பொருள்முற்றுங் கொள்ளைகொண்டுவந்த, உன்சொல் குன்றாத அமைச்சன்தானே - உனது சொல்வழிநின்ற வாதவூர்மந்திரியே, நமக்கும் நம் சூழல் நீங்காத மல் குன்றாத நமர்க்கும் ஆர வழங்கினான் - நமக்கும் நம்பக்

Koviloor Digital Library

கவிந்நின்று நீக்காத மற்போரில் மேம்பட்ட சமரபரிசாத்தார்க்கும் தெவிட்டக்கொடுத்தனன், வழங்கலால் - (அவ்வாறு) கொடுத்தலால். (அக)

வானவர்தமக்கேயன்றிமனிதருக்கிசையத்தக்க
வானவன்றறிஞரிட்டவிலைவரம்பகன்றநூலின்
மானமுள்ளனவாய்நல்லவாசிகளுனக்குவந்த
வூனமில்பரிமாவிற்கும்வாணிபமுரைப்பக்கேட்டி.

(இ-ள்.) வானவர் தமக்கு ஏ அன்றி - (இக்குதிரைகள்) தேவர்களுக்கு இசைந்தனவேயல்லாமல், மனிதருக்கு இசைய தக்க ஆன அன்று - மனிதர்களுக்கு இசையத்தக்கனவல்ல, அறிஞர் இட்ட விலை வரம்பு அகன்ற - குதிரைநூலுணர்ச்சியின்வல்லோர் வரையறுத்த விலையினெல்லையைக் கடந்துள்ளனவாய், நூலின் மானம் உள்ளன ஆய் - அசுவநூலிற்கூறிய இலக்கணங்கள்முற்றுமுடையனவாய், நல்லவாசிகள் உனக்கு வந்த - நன்மையமைந்த குதிரைகளுனக்குவந்தன, ஊனம் இல் பரிமாவிற்கும் வாணிபம் உரைப்ப கேட்டி - குற்றம் என்பனவையில்லாத குதிரைகளுக்கும் வாணிபத்தை யாம் சொல்லக்கேட்பாய்.

குற்றங்கள் ஆவன கொம்புபோல நீண்டகாதுகளும், முறுக்கியகாதுகளும், நஞ்சபாதமும், கொள்ளிக்காலும், வெளுத்தகண்ணும், நிலிகுறையாமையும், உருத்திரமூர்த்தியைப்போல நிலகண்டமும், பிசமில்லாமையும், ஏறக்குறைய விருக்கும் பெரியபிசமும், பதுமையும் அக்கினியும் சித்திரமும்போல அசைவில்லாமையும் முகம் வால் காற்கால்களாகிய இவைகளிற் சுழியில்லாமையுமாம். நஞ்சபாதம் மூன்றுகால் விளர்த்து ஒருகால் கறுத்தது. கொள்ளிக்கால் மூன்றுகால் கறுத்து ஒருகால் விளர்த்தது "கொம்புகன்னந்திருகுகன்னநஞ்சபாதம் - கொள்ளிக்கால்வெள்ளிக்கண்மணிகுன்று - வெம்புதழற்சடலமுகப்பானோர்கண்டம் - அண்டப்பாழ்விலக்கியவண்டமாதல் - செம்பொறியாமக்கினிசித்திரங்கள்மூன்று - சிறந்தினியமட்டிற்பாலனப்பமென்றே - அம்புவியோர்மொழிந்தபழுது" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல்காண்க. (அஉ)

இன்னவாம்பரிகளென்பாலின்றுநீகயிறுமாறி
நின்னவாக்கொள்ளுநீராலின்னவாம்பரியேநானே
யென்னவாயிருந்தவேனுமெனக்குமுன்றனக்குங்கொண்டு
மன்னவாகருமமில்லைபரிவிலைவழக்கிதென்றார்.

(இ-ள்.) மன்னவா - பாண்டியனே, என் பால் இன்ன வாம் பரிகள் - என்னிடத்திலின்ற இத்தன்மையுள்ள குதிரைகளை, இன்று நீ கயிறு மாறி நின்ன ஆக கொள்ளும் நீரால் நின்ன பரியே ஆம் - இப்பொழுது நீ கயிறுமாறி நின்னுடையனவாகக் கொள்ளுந்தன்மையால் அவை நின்னுடைய குதிரைகளேயாம், நானே என்ன ஆய் இருந்த ஏனும் - நாளைக்கு எத்தன்மையனவா யிருந்தனவாயினும், எனக்கும் உன் தனக்கும் கொண்டு கருமம் இல்லை - எனக்கும் உனக்கும் இதனிமித்தமான காரியம் ஒன்றுமில்லை. பரிவிலை வழக்கு இது என்றார் - அசுவவாணிபத்தின்வழக்கம் இதுதானென்று கூறினார்.

கயிறுமாறிய அன்றே நின்னுடைமை அதற்குக்கெடுபிவரின் என்பால் பெறவேண்டியபழியொன்றுமில்லை என்பார் எனக்கும் உன்றனக்குங் கருமமில்லை என்றார். (அங)

Koviloor Digital Library

அப்பொழுதரசன்றானுமகமகிழ்ந்ததற்குநேர்ந்தெம்
மெய்ப்புகழமைச்சர்தம்மின்மேம்படுவாதவூர
ரொப்பருந்திறத்தராகியும்மிடைநட்பான்மிக்க
துப்புரவுடையராஞரொனநனிசொல்லினனே.

(இ-ள்.) அரசன் தானும் அப்பொழுது அகம் மகிழ்ந்து அதற்கு நேர்ந்து - அரிமருத்தனபாண்டியனும் அக்காலையில் மனங்களிகூர்ந்து அதற்கு உடன்பட்டு, எம் மெய் புகழ் அமைச்சர் தம்மில் மேம்படு வாதவூரர் - எமது உண்மைவாய்ந்த கீர்த்தியமைந்த மந்திரிமார்களுள் மேம்பட்ட அமைச்சராகிய வாதவூரர், ஒப்பு அருந்திறத்தர் ஆகி - (உணர்ந்த காரிய நடத்தும்) திறத்தில் தமக்கு ஒருவரும் ஒப்பில்லாதவராய், உம் இடை நட்பால் - உம்மிடத்துக்கொண்ட நட்பினால், மிக்க துப்புரவு உடையர் ஆனர் என - எமக்கு மேம்பட்ட களைகணுமுள்ளவராயினாரென்று, நனி சொல்லினன்- (வாதவூரடிகளை) புகழ்ந்து கூறினன்.

எனக்குக் கண்ணுங்கவசமும்போலுள்ளார் என்பான் எம்மெய்ப்புகழமைச்சர்தம்மில் எனவும், அவர்களுள்ளும் நானுடனும் அவருமிரும் என்பான் மேம்படு வாதவூரர் எனவும், நான் நுகரும் பொருள்களிட்டுந்திறத்தில் ஒப்பிகந்தவர் என்பான் ஒப்பருந் திறத்தராகி யெனவும், வேற்றுத்தேயத்து ஐம்புலனுகர்ச்சிகளையும் ஈட்டித் தருதற்கு ஓர்களைகணுயும் இருந்தார் என்பான் உம்மிடைநட்பான்மிக்க துப்புரவுடையரானர் எனவுங் கூறினன். துப்புரவு ஐம்புலநுகர்ச்சி. (அச)

உரகதவாரந்தோற்று துயர்மறைப்பரிமேல்வந்தார்
மரகதநிறத்துநிம்பமாலைதாழ்மார்பினற்குக்
குரகதங்கயிறுமாறிக்கொடுப்பவர்பொதுமையாய
துரகதவிலக்கணங்கள்சொல்லுவான்றொடங்கினரோ.

(இ-ள்.) உரகதம் ஆரம் தோற்று - சர்ப்பாபரணந் தோன்றுமல், உயர் மறை பரிமேல் வந்தார் - இலக்கணமுற்றுமமைந்த வேதப்புரவியின்மேல் வந்தருளிய சோமசுந்தரக்கடவுள், மரகதம் நிறத்து நிம்பம் மாலை தாழ் மார்பினற்கு - மரகதம் போலும் பசியநிறம்வாய்ந்த வேப்பமலர்மாலையையணிந்த மார்பையுடைய பாண்டியனுக்கு, குரகதம் கயிறுமாறி கொடுப்பவர் - குதிரையைக் கயிறுமாறிக்கொடுக்கலுற்றவர், பொதுமை ஆய துரகத இலக்கணங்கள் சொல்லுவான் தொடங்கினர்-பொதுவாயுள்ள குதிரைகளினிலக்கணங்களைச் சொல்லத்தொடங்கினர்.

குதிரையின் பொதுவிலக்கணம் என்பார் பொதுமையாயதுரகதஇலக்கணங்கள் என்றார். (அரு)

காயும்வேன்மன்னவோரிக்கடும்பரியமையம்வந்தால்
ஞாயிலுந்தாண்டிச்செல்லுநாட்டமுநுழையாச்சால
வாயிலுநுழையுங்கண்டவெளியெலாம்வழியாச்செல்லுந்
தீயவெம்பசிவந்துற்றுற்றின்னுதவெனிலுந்தின்னும்.

(இ-ள்.) காயும் வேல் மன்ன - கொல்லும் வேலையேந்திய பாண்டியனே ஓர் இக்கடும் பரி அமையம் வந்தால்-ஒப்பில்லாதவேகத்தையுடைய இக்குதிரைகள் சமையம் வருமானால், (ஓரிகடும் பரி அமையம் வந்தால் - நரிகளாகிய வேகத்தை

Koviloor Digital Library

யுடைய குதிரைகள் சமையம் வருமானால்,) ஞாயிறும் தாண்டி செல்லும் - மதிலை யுமன்றி மதிலிலுள்ள உதப்புகளையும் கடந்து போகாநிற்கும், நாட்டமும் நுழையா த சாலம் வாயிலும் நுழையும் - கண்களும் நுழையாத பலகணிவாயில் வழியிலு நுழையும், கண்ட வெளி எல்லாம் வழியாக செல்லும்-கண்களுக்குப் புலப்படும் எல் லா வெளியிலும் வழியாகச் செல்லும், தீய வெம் பசி வந்தாற்றால் தின்னாத எல்லாம் தின்றும் - கொடிய பசிவந்தால் தின்னாத பொருள்களையும் தின்றும்.

ஒப்பில்லாத இந்தக்குதிரைகளென்றும் பொருளோடு கரியாகிய குதிரையெ ன்றும் வேர்பொருளும் படக் கூறுவார் ஆதலால் ஒரிக்கடும்பரியெனவும், நடையி யியல் கூறுவார்போன்று குதிரை யியல்பு கூறுவார் அமையம் வந்தால் - ஞாயிறுந் தாண்டிச்செல்லும் நாட்டமுந்நுழையாச்சால வாயிலுநுழையுங்கண்டவெளியெலா ம்வழியாச்செல்லும் - தீயவெம்பசிவந்தாற்றாற் றின்னாதவெல்லாந்தின்றும் எனவுங் கூறினார். அமையம் போர்ச்சமையம். ஞாயிறும் என்பதனிறுதியில் நின்ற உம்மை மதிலும் அன்றியென நிற்றலால் இறந்தது தழீஇய வெச்சப்பொருட்டு. மற்றை வாயில் வழியாகவும் அன்றியென நிற்றலால் வாயிலும் என்பதனிறுதியில் நின்ற உம்மையும் அப்பொருட்டு. (அசு)

கலிவிருத்தம்.

பொருவில்சீரிலக்கணப்புரவியொன்றுதா
னொருவனதிடைவதிந்துறையினொல்லென
மருவுறுந்திருமகண்மல்லற்செல்வமும்
பெருகுறுக்கீர்த்திகள்பல்குமபெற்றியால்

(இ-ள்.) பொருவு இல் சீர் இலக்கணப்புரவி ஒன்றுதான் - ஒப்பில்லாத சிற ப்புவாய்ந்த இலக்கணமமைந்த குதிரையொன்று, ஒருவனது இடை வதிந்து உறை யின் - ஒருவனிடத்திருந்தால், மல்லல் செல்வமும் பெருகுறு கீர்த்திகளும் பல்கும் பெற்றியால் - வளமிக்க செல்வமும் நிறைந்த புகழ்களும் வளர்ந்தோங்குந் தன்மை யால், ஒல்லென திருமகள் மருவுறும் - விரைந்துவந்து சீதேவி வசிப்பாள்.

இலக்கணமமைந்த குதிரை யொன்றால் வரும் பயன் இதுவாயின் பலவற்றா ல் வரும் பயன் அளவுபடுமோ என்பார் புரவி யொன்றுதான் - ஒருவனதிடைவதி ந்துறையின் என்றார். என்றும்மை தொகுத்தல். (அஎ)

செய்த்திடுமாந்தளிர்நிறத்தநாவின
வைத்திடுகுளம்புகளுயர்ந்தவார்ந்துநே
ரொத்திடுமெயிற்றின வுரமுங்கண்டமும்
பைத்திடுமராப்படம்போன்றபாடலம்.

(இ-ள்.) செய்த்திடும் மாந்தளிர் நிறத்த நாவின - செய்ப்பற்று மிகுந்த மாந் தளிர்போன்ற நிறத்தையுடைய நாவையுடையனவாகி, வைத்திடு குளம்புகள் உயர் ந்த - நிலத்தின்மேல் வைக்குங் குளம்புகளுயர்ந்தனவாகி, வார்ந்து நேரொத்திடும் எயிற்றின - நீண்டு தம்முளொத்த பற்களையுடையனவாகி, உரமும் கண்டமும் பை த்திடும் அரா படம் போன்ற பாடலம் - மார்புங் கழுத்தும் விரித்த பாம்பின்படம் போலுள்ள குதிரைகள், பாடலம் - பாடலமென்றும் பெயரா யுடையனவாம்.

போன்ற வினைமுற்றுப்பெயர். உயர்ந்த, எயிற்றின முற்றெச்சங்கள். "உயர் நாசுமுடைத்தாய்" எனவும், "வெண்மை-நிறைந்துதமிலொத்திலகு மெயிற்றவாகி".

Koviloor Digital Library

எனவும், "நாவுஞ்சுதவிளைந்தளிர்போலு மருணந்தோய்ந்தே" எனவும், "உரத்திறுடன் கழுத்தரகபடமேபோன்று" எனவும் வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (அஅ)

அகலியநுதலினவாய்ந்தகுஞ்சிபோ
னிகரறுகொய்யுளைநிறமொன்றுயின
புகரறுகோணமூன்றுபிப்பொற்புறு
முகமுடையனவயமொய்கொள்கோடகம்.

(இ-ள்.) அகலிய நுதலின - பரந்த நெற்றியையுடையனவாகி, ஆய்ந்த குஞ்சிபோல் - சிக்கறுத்த சிகைபோல, நிகர் அறு கொய்யுளை நிறம் ஒன்று ஆயின - (வாய்ந்து) ஒப்பில்லாத கொய்த புறமயிர் ஓரே நிறம் வாய்ந்தனவாகி, புகர் அறு மூன்று கோணம் ஆகி பொற்பு உறு முகம் உடையன - குற்றமற்ற முக்கோணமுடைய வாய்ப்பொலிவு மிகுந்த முகங்களையுடைய குதிரைகள், வயம் மொய் கொள் கோடகம் - வெற்றியும் வலிமையும்மிக்க கோடகம் என்னும் பெயரையுடையனவாம்.

உடையன குறிப்புமுற்றுப் பெயரெச்சம். "நெற்றியகன்று" எனவும், "உளையினுடன்றலைமயிரு நிறமொன்றுகி" எனவும், முக்கோணமெனத்திகழுமுகத்தவாகி" எனவும் வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (அகூ)

முட்டியசமரிடைமுகத்தில்வாளினல்
வெட்டினுமெதிர்ப்பதாய்க்குரங்குவேங்கைதோல்
பட்டிமைநரியரிசரபம்பாய்முய
லெட்டியகதியினவிவுளியென்பவே.

(இ-ள்.) முட்டிய சமர் இடை - நெருங்கிய போரில், முகத்தில் வாளினல் வெட்டினும் எதிர்ப்பது ஆய் - சம்முகங்களில் வாளால் வெட்டினாலும் எதிர்த்துப் போர்செய்வதாய், குரங்கு வேங்கை தோல் பட்டிமை நரி அரி சரபம் பாய் முயல் எட்டிய கதியின - குரங்கும் ஆண்புலியும் யானையும் வஞ்சத்தையுடைய நரியும் சிங்கமும் சரபப்பட்சியும் பாய்ந்து செல்லு முயலும் ஆகிய இவற்றின் கதியைப்பொருந்திய கதியையுடைய குதிரைகள், இவுளி என்ப - இவுளியென்னும் பெயரையுடையனவென அசுவநூலுணர்ந்தோர் கூறுவர். (கூ0)

உன்னதநீளமுண்டாகிச்சங்குவெண்
கன்னலின்வாலியவிலாழிகால்வதாய்ப்
பின்னமாகியதனிவன்னம்பெற்றுமை
வன்னமுமுடையதுவன்னியாவதே.

(இ-ள்.) உன்னதம் நீளம் உண்டாகி - உயரமும் நீளமுமுடையதாகி, சங்கு வெண் கன்னலின் - சங்கைப்போலவும் வெண்கரும்பைப்போலவும், வாலிய விலாழி கால்வது ஆய் - வெண்ணிறம் வாய்ந்த வாய்நுரையைக் கக்குவதாய், தனி பின்னம் ஆகிய வன்னம் பெற்று மை வன்னமும் உடையது - ஒப்பில்லாத கருமை கலந்த பொன்னிறம் வாய்ந்து அவற்றுள் கரிய நிறமே மிகவுமுடைய குதிரை, வன்னி ஆவது - வன்னியென்னும் பெயரையுடையது.

கருமைகலந்த பொன்னிறம் கபிலம். (கூக)

Koviloor Digital Library

திணிதருகழுத்தினிற்சிறந்ததெய்வத
மணியுளதாகியெண்மங்கலத்ததா
யணிதருபஞ்சகல்யாணமுள்ளதாய்க்
குணிதருநிரதகுதிரையாவதே.

(இ-ள்.) திணி தரு கழுத்தினில் சிறந்த தெய்வதமணி உள்ளது ஆகி - திண்ணிய கண்டத்தில் குற்றமில்லாத தேவமணிபெற்று, எண் மங்கலத்தது ஆய் - எட்டு மங்கலங்களை யுடையதாகி, அணிதரு பஞ்ச கல்யாணம் உள்ளது ஆய் - அலங்காரம் பொருந்திய பஞ்சகல்யாணத்தையுடையதாய், குணிதரு நிரது குதிரை ஆவது - இவ்வாறு வரையறுக்குந் தன்மையையுடைய பரி - குதிரையென்னும் பெயரையுடையது.

குற்றமுள்ள சுழிகள் சந்திரச்சுழி, அண்டாவர்த்தச்சுழி, கௌவகச்சுழி, காகாவர்த்தச்சுழி, முன்வளையச்சுழி, கேதாரிச்சுழி, கேசாவர்த்தச்சுழி, பட்டடைச்சுழி யென்று எட்டுவகைப்படும் ஆதலால் சிறந்த என்றார். தெய்வதமணி கழுத்தில் வலமாகச் சுழித்திருத்தல். எட்டு மங்கலங்களாவன முகம், மார்பு, தலை, வால், நான்குகால் என்றும் எட்டுறுப்புகளிலும் வெண்மை கலந்திருத்தல். பஞ்சகல்யாணம் முகம், நான்குகால் என்றும் ஐந்துறுப்புகளிலும் வெண்மை கலந்திருத்தல். குற்றமுள்ள சுழிகளிவையென்பன "தாவிலச்சந்திரச்சுழியாமண்டாவர்த்தந் - தன்னுடையடியிற்சுழியாமுடலிற்பக்கம் - மேவுசுழிகௌவகமாங்காகாவர்த்தம் - மேன்மையிழ்முன்வளையச்சுழிதானும் - பாவுசெழுங்கேதாரியடியிற்சேர்ந்த - பயனில்கொடுஞ்சுழிகேசாவர்த்தமாகும் - பூவமருங்கச்சையிற்பட்டடையேயாகப் - புகன்றசுழியிச்சுழிஎண்புணராவாமே" எனவரும் வாதவூரடிகள் புராணத்தாலும், எட்டு மங்கலங்கள், பஞ்சகல்யாணம், "உலாசெய்வர்முகமார்புச்சிவால்காலென்றுரைத்தவெட்டுறுப்பிலும்வெண்மை - விரவியதட்டமங்கலந்தலைவால் வியனுரமென்றவிம்மூன்றும் - ஒருவியவுறுப்பைந்திலும் வெள்ளையுள்ளதுபஞ்சகல்யாணி" என இப்படலத்தில் பின்வருஞ் செய்யுளாலும் உணர்க. (௬௨)

குங்குமங்கருப்புரங்கொழுந்திண்காரகிற்
பங்கமான்மதமெனக்கமழும்பாலதாய்ச்
சங்கமுமேகமுஞ்சரபமுங்கொடுஞ்
சிங்கமும்போலொலிசெய்வதாம்பரி.

(இ-ள்.) குங்குமம் கருப்புரம் கொழு திண் கார் அகில் பங்கம் மான்மதம் என கமழும் பாலது ஆய் - குங்குமத்தையும் கருப்பூரத்தையுங் கொழுவிய திண்ணிய கரிய அகிற்குழம்பையும் மிருகமதத்தையும்போல நறுநாற்றம் வீசுந் தன்மையதாய், சங்கமும் மேகமும் சரபமும் கொடுஞ் சிங்கமும்போல் ஒலிசெய்வது - சங்கினையு மேகத்தையுஞ் சரபப்பக்ஷியையுங் கொடிய சிங்கத்தையும்போலக் கோஷிக்குங் குதிரை, பரி ஆம் - பரியென்றும் பெயரையுடையதாம்.

இந்த நறுநாற்றங்களை விரித்துக் குங்குமங் கருப்புரங் கொழுந்திண் காரகிற் - பங்கமான்மதமெனக் கமழும்பாலதாய் எனவும், நரி, பூனை; காக்கை, பேய், நரி, நாய், பன்றி இவைகளைப்போலக் குரலொழிந்தது என்பதுதோன்றச் சங்கமு மேகமுஞ் சரபமுங்கொடுஞ் - சிங்கமும்போலொலிசெய்வதாம்பரி எனவும் கூறினார். நறுநாற்றங்களைத்தொகுத்து "நற்றநறுங்கந்தமிகச்சிறந்து" என்பதனுலா

Koviloor Digital Library

ம், குரலொழிந்த என்றது "நரிவெருகுகருங்காகமலகையோரி - ஞாளிசெழுக்சேழ லெனுங்குரலின்றுகி" என்பதனாலும் வாதவூரடிகள் புராணத்திற் காண்க. (௧௩)

நாலுகால்களுங்கடைந்தெடுத்துநாட்டினாற்
போல்வதாய்க்கொட்புறும்போதுசுற்றுதிக்
கோலையொப்பாகிமேற்கொண்டசேவகன்
காலினுளடங்குவதாகுங்கந்தரம்.

(இ-ள்.) கந்தகம் - கந்தகமென்னும் பெயரையுடைய குதிரை, நாலுகால்களும் கடைந்து எடுத்துநாட்டினால் போல்வது ஆய் - தனது நாலுகால்களும் கடைந்தெடுத்துச் சேர்த்தாலொத்ததாய், கொட்புறு போது - சுழன்றுவரும் காலையில், சுற்று திக்கோலை ஒப்பாகி - கொள்ளிவட்டத்தையொத்து, மேற்கொண்ட சேவகன் காலினுள் அடங்குவது ஆகும்-மேலே யேறிய வீரன் காலினுள் அடங்கி நடப்பதாம்.

கொள்ளிவட்டம் தீப்பொறி. கொட்புறும், ஒப்பாகி ஒருசொல். (௧௪)

அரணமூந்துருக்கமுமாறுந்தாண்டிடு
முரணினவாகியிம்முற்றிலக்கணப்
புரணமெல்லாநிறைபுரவிபோந்தன
விரணவேலாய்வயதெட்டுச்சென்றவால்.

(இ-ள்.) இரணம் வேலாய் - (பகைவரை) புண்படுத்தும் வேலையேந்திய பாண்டியனே, அரணமும் துருக்கமும் ஆறும் தாண்டிடும் முரணின ஆகி - கோட்டையையும், மலைமேற்கோட்டையையும் ஆற்றையுங் கடந்து செல்லும் வலிமையையுடையனவாகி, இ முற்று இலக்கணம் புரணம் எல்லாம் நிறை புரவி போந்தன - இங்கு முடிவு பெறக்கூறிய இலக்கணப்பொலிவு எல்லாங் குறைவின்றி நிறைந்த குதிரைகள் வந்தன, வயது எட்டு சென்ற - அவை எட்டுவயது சென்றவைகள்.

புரணம் ஒளி. முற்று என்னும் வினைப்பகுதி வினையெச்சத்தில்வந்து, தொக்குநின்ற கூறிய என்னும் பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தது. (௧௫)

பகைத்திறமுருக்குமிப்பரிகண்மன்னநீ
உகைத்திடத்தக்கவென்றோதிவேதநூற்
சிகைத்தனிச்சேவகர்திரும்பித்தம்மனோர்
முகத்தினைநோக்கினார்மொய்த்தவீரரும்.

(இ-ள்.) மன்ன - அரசனே, பகை திறம் முருக்கும் இ பரிகள்- பகைவர் திறத்தைக் கெடுக்கு மித்தக்குதிரைகள், நீ உகைத்திட தக்க என்று ஓதி - நீ செலுத்தத் தக்கவைகள் என்று கூறி, வேதநூல் சிகை தனி சேவகர் திரும்பி - வேதமாகிய நூலின் சிகையிலுள்ள ஒப்பில்லாத இறைவர் திரும்பி, தம்மனோர் முகத்தினை நோக்கினார் - தம்மவராகிய பரிசனங்களின் முகத்தை நோக்கியருளினார், மொய்த்த வீரரும் - தம்மைச்சூழ்ந்த வீரர்களும்.

ஞானகாண்டத்திறுதியிடை சிவமே பொருளெனத்தேற்றுதலால் வேதநூற் சிகைத்தனிச்சேவகர் என்றார். (௧௬)

வாம்பரிமறைக்கெலாம்வரம்புகாட்டுவ
தாம்படிகண்டவரறிவும்பிற்படப்

Koviloor Digital Library

போம்படி முடுக்கினர் புரவியாவையும்
வேம்பணி தோளினன் வியப்புமெய்தியே.

(இ-ள்.) வாம்பரி மறைக்கு எல்லாம் வரம்பு காட்டுவது ஆம்படி - தாவிச் செல்லுங் குதிரைகளின் இலக்கணங்களைக்கூறும் அசுவநூலிலுள்ள விதிகட்கு எல்லாம் எல்லைகாட்டவும், கண்டவர் அறிவும் பிற்பட போம்படி புரவி யாவையும் முடுக்கினர் - பார்த்தவரறிவும் பின்னிடச்செல்லவும் குதிரைகளெல்லாவற்றையுஞ் செலுத்தினார்கள், வேம்பு அணி தோளினன் வியப்பும் எய்தி - வேப்ப மலர்மாலையணிந்த தோளையுடைய பாண்டியன் அதிசயமுங் கூர்ந்து.

அசுவநூலிற்கூறிய விதிகட்கு மேற்கோளாக இருந்தன என்பார் வரம்புகாட்டுவதாம்படி யெனவும், ஒருபொருளை அளந்தலறிவாலாதலால் அந்த வறிவாலுமளத்தற்கு அரிதென்பார் கண்டவரறிவும் பிற்பட எனவுங்கூறினர். வியப்பும் என்பதனிறுதியில் நின்ற உம்மை உயர்வு சிறப்புப்பொருட்டு, வியப்புமன்றி மகிழ்ச்சியும் என நிற்றலால் எதிரது தழீஇய எச்சப்பொருட்டு. (௧௭)

ஆத்தராய்மருக்குறையமைச்சர்யாரையும்
பார்த்தசையாமுடியசைத்துப்பைப்பயப்
பூத்தவாணகையொடுமகிழ்ச்சிபொங்கினன்
நிர்த்தனுநடத்தினன்றெய்வமாவினை.

(இ-ள்.) ஆத்தர் ஆய் அருகு உறை அமைச்சர் யாரையும் பார்த்து - தனக்கு உயிர்போல்வாராய்ப் பக்கத்திலுள்ள மந்திரிகளெல்லோரையும் நோக்கி, அசையாத முடி அசைத்து - (ஒருகாலத்தும்) கம்பியாத தலையைக் கம்பித்து, (சிரக்கம்பஞ் செய்து என்றபடி) பைப்பய பூத்த வாள் நகையொடு மகிழ்ச்சி பொங்கினன் - மெல்ல மெல்ல அரும்பிய ஒள்ளிய புன்னகையோடு மகிழ்ச்சிமிக்கூர்ந்தான், தெய்வம் மா வினை நிர்த்தனும் நடத்தினன் - தெய்வத்தன்மையையுடைய வேதப்பரியைச் சிவபெருமானும் நடத்தியருளினார்.

அரசனுடலும் மந்திரியுயிரும் ஆதலால் ஆத்தராய் எனவும், அமைச்சர் அருகிருப்போர் என்றும்பொருட்டாதலால் அருகுறை யெனவும், எக்காலத்தும் யாவர்பொருட்டும் அசையாததாதலால் அசையாமுடியெனவும், தான் முன்கொண்ட வியப்பின்காரியமாகிய புன்னகை மகிழ்ச்சிக்குக் காரணமாய் நிற்றலால் காரணகாரியப் பொருள்பட பூத்தவாணகையொடுமகிழ்ச்சிபொங்கினன் எனவுங்கூறினர். (௧௮)

இருவகைச்சாரியுமெதிர்ந்துவட்டமாய்
வருவழிநெருஙிழிபோன்மறுகெலாமொரு
துரகதமேநிலைநின்றதோற்றமொத்
தொருவறநடத்தினரொருகணத்தினே.

(இ-ள்.) இரு வகை சாரியும் எதிர்ந்து வட்டம் ஆய் வருவழி - இடசாரி வலசாரி யென்றும் இருவகைச்சாரியையும் பொருந்திக் குதிரைகளெல்லாம் மண்டிலமாய்வருமிடத்து, நெருநிழி போல் மறுகு எல்லாம் ஒரு துரகதமே நிலை நின்ற தோற்றம் ஒத்து - கொள்ளிவட்டம்போல வீதிகளெல்லாம் ஒருகுதிரையே நிலையாய்நின்ற காட்சியையொத்து, ஒரு கணத்தின் ஒருவு அற நடத்தினர் - ஒருகணப்பொழுதில் ஒன்றன்பின் ஒன்று தொடர்புநீங்காமல் சிலகணையிரர்களும் நடத்தினர்கள்.

இடசாரிவந்தது வலசாரியும் உடனேவருதலால் எதிர்ந்த என்றார். (௧௯)

Koviloor Digital Library

இந்நிலையலமருமிவுளிமேலொரு
மின்னிலைவேலினான்வினவத்தங்கையின்
மன்னியகங்கணம்விடுத்துமாநகர்
தன்னிலைகாட்டியதன்மையொத்ததே.

(இ-ள்.) இ நிலை அலமரும் இவுளி-இவ்வாறு கொள்ளி வட்டம்போலச் சுழன்றுவருங் குதிரைகள், மேல் ஒரு மின் நிலை வேலினான் வினவ-முன்னாளில் ஒப்பில்லாத மின் தன்னிலை திரிந்து வந்தாற்போன்ற வேலையேந்திய வங்கியசேகர பாண்டியன் குறையிரந்துகேட்க, தம் கையில் மன்னிய கங்கணம் விடுத்து - (சித்தமூர்த்தியாய் வந்து) தமது கையில் பொருந்திய நாககங்கணத்தை விடுத்து, மாநகர் தன்னிலை காட்டிய தன்மை ஒத்தது - முன்னிருந்த பெரிய மதுரைத் திருநகரி னிலையைக் காட்டிய தன்மையை யொத்திருந்தன.

இவுளிசாதி யொருமை யாதலால் ஒத்தது என ஒருமை முடிபுதந்தார். மண்டிலித்து வருதல் தொழிலுவமையணி. (௬00)

பன்னிறமுடையவாம்பரியும்வீதியுட்
பின்னியவாவெனப்பின்னிவட்டமாய்த்
தன்னிகர்மதுரையாந்தையல்கையணி
துன்னியபன்மணித்தொடியும்போன்றவே.

(இ-ள்.) பல் நிறம் உடைய வாம் பரியும் - பலநிறங்களையுடைய தாவுங்குதிரைகளும், வீதி உள் பின்னிய ஆறு என்ன பின்னி வட்டம் ஆய் - வீதியில் தம்மிற் பின்னிநின்ற வகைபோலச் செறிந்து மண்டிலமாகி, தன் நிகர் மதுரை ஆம் தையல்-தனக்குத்தானேயொத்த மதுரைத்திருநகரென்னுமங்கை, கை அணி பல் மணி துன்னிய தொடியும் போன்ற - தனதுகையிலணிந்த பலவகை யிரத்தினங்களை யிழைத்த கங்கணத்தை யொத்திருந்தன.

பலநிறங்களையுடையகுதிரைகள் பலநிறங்களையுடைய இரத்தினங்களும் அவை மண்டிலித்தலால் அவற்றாலாகிய தொடியையும் ஒத்திருந்தன எனலால் ஒப்புமைக் கூட்டவணி. பரிபோன்ற எனமுடிக்க (௬0௧)

இந்தியனுதலினாரிடித்தபொற்சுணஞ்
சிந்தியமறுகிடைநடக்குந்திண்பரிப்
பந்தியினெழுந்ததூள்சுவணப்பாரின்மா
வுந்தியவெழுந்தபொற்பூழியொத்ததே.

(இ-ள்.) இந்து இயல் நுதலினார் இடித்த பொன் சுண்ணம் சிந்திய மறுகு இடை - சந்திரனையொத்த நெற்றியையுடைய பெண்கள் இடித்த பொன்னிறம்வாய்ந்த சுண்ணங்கள் சிந்திக்கிடக்கின்ற வீதியில், நடக்கும் திண்பரி பந்தியின் எழுந்ததூள்-நடக்காநின்ற திண்ணிய குதிரைப்பந்திகளினின்றும் எழுந்த சுண்ணத்தூள், சுவணப் பாரில் மா உந்திய எழுந்த பொன் பூழி ஒத்தது - பொன்னுலகில் உச்சைச்சிரவமென்னுங் குதிரை குளம்பாற்கிளைக்க மேலெழுந்த பொற்பராகத்தை யொத்திருந்தது. (௬0௨)

தேவருமனிதருந்திருந்துகூடலார்
யாவருமுவப்புறவிவுளிவிட்டமன்

Koviloor Digital Library

காவலன்முன்குதி இக்கருணைமாக்கடன்
மாவருதிறனெலாம்வகுத்துத்தேற்றுமால்.

(இ-ள்.) தேவரும் மனிதரும் திருந்த கூடலர் யாவரும் உவப்புற-தேவர்களும்(விண்ணகரத்து) மனிதர்களும் செல்வவளமிக்க மதுரைத்திருநகரிலுள்ள அனைவரும் விரும்ப, கருணைமாகடல் - கிருபையென்னும் பெரிய வெள்ளமாகிய சோமசுந்தரக்கடவுள், இவுளி விட்டு மண் காவலன் முன் குதி-குதிரையினின்றிறங்கி நிலவுலகைக்காக்கும் பாண்டியன் முன்சென்று, மாவரு திறன் எல்லாம் வகுத்து தேற்றும்-குதிரைவந்த வரலாற்றின் முறையெல்லாவற்றையும் வகைசெய்து தெளியக்கூறுவாராயினர்.

இன்னகுதிரை இந்நாட்டினின்று வந்தது எனத் தனித்தனிகூறத் தொடங்கினர் என்பார் மாவருதிறனெலாம் வகுத்துத் தேற்றுமால் என்றார். (௪௦௬)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வளங்கொள்காம்போசமிப்பரியிம்மாமந்தரமிந்தவாம்புரவி
விளங்குகாந்தாரமிக்குரங்குளைவான்மீகமிக்கந்துகஞ்சிந்து
துளங்கில்பாஞ்சாலமிக்கனவட்டந்துருவமிக்குதிரையித்துரகங்
களங்கமிலிமயப்பருப்பதமிந்தக்கற்கியின்மண்டலங்கலிங்கம்.

(இ-ள்.) இ பரி - இந்தக்குதிரை, வளம் கொள் காம்போசம் - வளமிக்க காம்போசநாட்டிலுள்ளது, இமா மந்தரம் - இந்தக்குதிரை மந்தரகிரியிலுள்ளது, இந்த வாம் புரவி விளங்கு காந்தாரம் - இந்தத் தாவிச்செல்லுங்குதிரை (சோலைகள்முதலியவற்றால்) விளங்குங் காந்தாரநாட்டிலுள்ளது, இ குரங்குளை வான் மீகம் - இந்த வளைந்த புறமயிரினையுடைய குதிரை வான்மீகநாட்டிலுள்ளது, இ கந்துகம் சிந்து - இந்தக்குதிரை சிந்துநாட்டிலுள்ளது, இ கனவட்டம் துளங்கு இல் பாஞ்சாலம் - இந்தக்குதிரை (பகைவர்களால்) கலக்குதலில்லாத பாஞ்சாலநாட்டிலுள்ளது, இ குதிரை துருவம் - இந்தக்குதிரை துருவநாட்டிலுள்ளது, இ துரகம் களங்கம் இல் இமயப் பருப்பதம் - இக்குதிரை குற்றமில்லாத இமயமலையிலுள்ளது, இந்த கற்கியின் மண்டலம் கலிங்கம் - இந்தக்குதிரையினுடைய கலிங்கநாடாம்.

உமாதேவியார் அவதரிக்கவும் இறைவர் திருமணமுடிக்கவும் உள்ள திருமலையாதலால் களங்கமில் என்றார். பரி முதலியன சாதியொருமை. (௪௦௭)

ஆரியமிந்தப்பாடலமிந்தவச்சுவங்கூர்ச்சரமிந்தச்
சீரியதுரங்கங்கேகையமிந்தத்திறலுறுகொய்யுளையவனம்
வேரியம்பணைசூழ்மக்கமிக்கொக்குவிரிபொழில்வனுபுசமிந்தப்
போரியலிவுளிபல்லவமிந்தப்பொலம்புனைதார்நெடும்பாய்மா.

(இ-ள்.) இந்த பாடலம் ஆரியம் - இந்தக்குதிரை ஆரியநாட்டிலுள்ளது, இந்த அச்சுவம் கூர்ச்சரம் - இந்தக்குதிரை கூர்ச்சரநாட்டிலுள்ளது, இந்த சீரிய துரங்கம் கேகயம் - இந்தச்சிறந்தகுதிரை கேகயநாட்டிலுள்ளது, இந்த திறல் உறு கொய்யுளை யவனம் - இந்த வெற்றிமிக்க குதிரை யவனநாட்டிலுள்ளது, இ கொக்கு வேரி அம்பணை சூழ் மக்கம் - இந்தக்குதிரை வாசமிகுந்த மலர்கள்நிறைந்த அழகிய வயல்சூழ்ந்த மக்கநாட்டிலுள்ளது, இந்தபேர் இயல் இவுளி விரிபொழில்வனுபுசம்-

Koviloor Digital Library

இந்தப்பெருமைவாய்ந்த குதிரை மலர்கள்விரிந்த சோலைசூழ்ந்த வனாயுசநாட்டிலுள்ளது, இந்த பொலம் புனைதார் நெடும் பாய்மா பல்லவம் - இந்தப் பொன்னாலாகிய கிண்கிணிமாலையயணிந்த நெடிய குதிரை பல்லவநாட்டிலுள்ளது.

மணத்தால் மலரைக்கொள்ள நிற்றலால் தானியாகுபெயராய் மலர்மேலும், உடைமைக்கும் உடையதற்கும் ஒற்றுமையுண்மையால் விரிதற்றொழில் மலர்மேலும் நின்றன. (௪௦௫)

கற்றவர்புகழ்சவ்வீரமிக்கோரங்கன்னிமாராட்டமிவ்வன்னி
கொற்றவர்பயில்வாசந்திகமிந்தக்கோடகங்காடகங்கன்ன
லுற்றகான்மீரமிவ்வயமிந்தவுத்தமகோணமாளவமிவ்
வெற்றிசேர்குந்தங்கந்தரமிந்தவிறல்புனையரிசவுராட்டம்.

(இ-ள்.) இ கோரம் கற்றவர் புகழ் சவ்விரம் - இந்தக்குதிரை கற்றுணர்ந்தவர் புகழுஞ் (செல்வமிக்க) சவ்வீரநாட்டிலுள்ளது, இ வன்னி கன்னி மாராட்டம் - இந்தக்குதிரை அழியாத மாராட்ட நாட்டிலுள்ளது, இந்த கோடகம் கொற்றவர் பயில்வாசந்திகம் - இந்தக்குதிரை அரசர்கள் வசிக்கும் வாசந்திகநாட்டி லுள்ளது, இ அயம் காடு அகம் கன்னல் உற்ற கான்மீரம்-இந்தக்குதிரை காடுகளில் கரும்பு நெருங்கிய கான்மீரநாட்டிலுள்ளது, இந்த உத்தம கோணம் மாளவம்-இந்த உத்தமசாதிக்குதிரை மாளவநாட்டிலுள்ளது, இ வெற்றி சேர் குந்தம் கந்தரம் - இந்த வெற்றிமிக்க குதிரை கந்தரநாட்டிலுள்ளது, இந்த விறல் புனை அரி சவுராட்டம் - இந்த வெற்றிவாய்ந்த குதிரை சவுராட்டநாட்டிலுள்ளது. (௪௦௬)

விரிபொழிற்சாலிவேய்மிகுகிள்ளைவேறுதிவாந்தரமிந்தத்
துரகதமிந்தக்குரகதங்கொண்டல்சூழ்குருக்கேத்திரமின்ன
பரவுபல்வேறுதேயமுமுள்ளபரியெலாமிவன்றருபொருளின்
விரவியநசையாற்கொணர்ந்திவர்வந்தார்வேந்தகேளிந்தவாம்பரியுள்.

(இ-ள்.) வேய் மிகு கிள்ளை விரி பொழில் சாலி - ஒப்பனைமிக்க குதிரைமலர்விரிந்த சோலை சூழ்ந்த சாலிநாட்டிலுள்ளது, இந்த துரகதம் வேறு திவாந்தரம்- இந்தக்குதிரை வேறு திவாந்தரத்திலுள்ளது, இந்த குரகதம் கொண்டல்சூழ் குருக்கேத்திரம் - இந்தக்குதிரை மேகஞ்சூழ்ந்த சோலைகள் நெருங்கிய குருக்ஷேத்திர நாட்டிலுள்ளது, இன்ன - இவைபோல, பரவு பல் வேறு தேயமும் உள்ள பரி எல்லாம் - இடம்பரந்த பலவகைப்பட்ட வெவ்வேறு தேயங்களிலுமுள்ள குதிரைகளை யெல்லாம், இவன் தருபொருளின் விரவிய நசையால் இவர் கொணர்ந்து வந்தார் - இவ்வாதவூராளி கொடுத்த பொருளில் மிக்க விருப்பால் இவ்வீரர்கள் கொண்டு வந்தார்கள், வேந்த — பாண்டியனே, கேள் - இன்னங்கேளாய், இந்த வாம் பரி உள் - வந்த இந்தத் தாவிச்செல்லுங் குதிரைகளுள்.

மழைவளமிக்க நாடு என்பார் கொண்டல் சூழ் குருக்கேத்திரம் என்றார். ()

வெண்ணிறஞ்செவப்புப்பொன்னிறங்கறுப்பும்வேறறவிரவியநான்கு
வண்ணமுள்ளனவும்வேறுவேறுயமரபுமைவண்ணமும்வந்த
வெண்ணியவிவற்றின்சிறப்பிலக்கணத்தையியம்புதுங்கேளெனவிகல்கா
யண்ணலங்களிற்றூற்கருமறைப்பரிமேலழகியாரடைவுறவிரிப்பார்.

(இ-ள்.) வெண்ணிறம் செவப்பு பொன்னிறம் கறுப்பும் வேறு அற விரவி அந்நான்கு வண்ணம் உள்ளனவும் - வெண்ணிறமும் செந்நிறமும் பொன்னிறமும் கருநிறமும் ஆகிய இந்நான்கு நிறமும் வேறுபாடறக்கலந்து அந்நான்கு நிறங்களையுடைய குதிரைகளும், வேறு வேறு ஆய மாவும் - அந்நான்கு நிறங்களையுந் தனித்தனியுடைய குதிரைகளும், ஐவண்ணமும் வந்த - ஐந்து வண்ணங்களையுடைய குதிரைகளும் வந்தன, எண்ணிய இவற்றின் சிறப்பிலக்கணத்தை இயம்புதும் கேள் என - கருதப்படு மிக்குதிரைகளின் சிறப்பிலக்கணத்தைச் சொல்லுவோம் கேளாயென்று, இகல் காய் அண்ணல் அம் களிற்றுக்கு அருமறை பரிமேல் அழகியார் அடைவுற விரிப்பார் - பகைவரைக்கொல்லும் பெருமையமைந்த அழகிய யானைச்சேனையையுடைய பாண்டியனுக்குச் சொல்லுதற்கரிய வேதப்புரவிமேல்வந்தருளிய சுந்தரவிடங்கப்பெருமானார் முறைப்படி கூறுவாராயினார்.

முன்னர்க்கூறியது பொதுவிலக்கணம் என்பார் எண்ணிய இவற்றின் சிறப்பிலக்கணத்தை யென்றார். வெண்ணிறம் செவப்புப் பொன்னிறம் என்பவற்றினிறுதியில் எண்ணும்மை விகாரத்தாற் றொக்கன. (௧௦௮)

வெள்ளிநித்திலம்பால்சந்திரன்சங்குவெண்பனிபோல்வனவெள்ளைத்
துள்ளியபுரவிமாதுளம்போதுகவிர்த்தசெம்பஞ்சியின்குழம்பிற்
றெள்ளியநிறத்தசெம்பரிமாமைசிறைக்குயில்வண்டுகார்முகில்போ
லொள்ளியகரியபரியெரியழலானுரோசனைநிறத்தபொற்பரியே.

(இ-ள்.) வெள்ளி நித்திலம் பால் சந்திரன் சங்கு வெண் பனி போல்வன - வெள்ளியையு முத்தையும் பாலையுஞ் சந்திரனையும் சங்கையும் வெள்ளிய பனியையும்போல நிறம்வாய்ந்த குதிரைகள், துள்ளிய வெள்ளை புரவி - தாவிச்செல்லும் வெள்ளைக்குதிரைகளாம், மாதுளம் போது கவிர்த்த செம்பஞ்சியின் குழம்பில் தெள்ளிய நிறத்த செம்பரி - மாதுளம்பூவையும் சிவிய செம்பஞ்சாலாகிய குழம்பையும்போலத் தெளிந்த செந்நிறத்தையுடைய குதிரைகள் செங்குதிரைகளாம், மா மை சிறைக் குயில் வண்டு கார் முகில் போல் ஒள்ளிய கரிய பரி - கரியமையும் சிறையையுடைய குயிலும் வண்டும் கரியமேகமும் ஆகிய இவைகளைப்போல ஒளிவாய்ந்த குதிரைகள் கருங்குதிரைகளாம், எரி அழல் ஆன் உரோசனை நிறத்த - நெருப்பு பசுவின்கோரோசனையாகிய இவைகளைப்போல நிறம்வாய்ந்த குதிரைகள், பொன் பரி - பொன்னிறம்வாய்ந்த குதிரைகளாம்.

"ஒண்மணிக்கோட்டுவிசைக் கவிர்புரி நரம்பும்" என்ற காந்தருவதத்தையாரிலம்பகச் செய்யுளில் கவிர் என்றதற்குச் சிவியென நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் உணர்க. சிவிய - சிக்கறுத்த. (௧௦௯)

தெரிதரவகுத்தவிந்நிறநான்குஞ்செறிந்ததுமிச்சிரமிதன்பே [ண்மை
ருரைசெய்வர்முகமார்புச்சிவால்காலென்றுரைத்தவெட்டுறுப்பினும்வெ
விரியதட்டமக்கலந்தவால்வியனிறமென்றவிம்மூன்று
மொருவியவுறுப்போரைந்திலும்வெள்ளையுள்ளதுபஞ்சகல்யாணி.

(இ-ள்.) தெரி தர வகுத்த இ நிறம் நான்கும் செறிந்தது - தோன்றவகுத்த வெண்மைமுதலிய இந்நான்கு நிறமுங் கலந்த குதிரையை, மிச்சிரம் இதன்பேர் உரை செய்வர் - மிச்சிரமென இதன்பெயர் கூறுவார், முகம் மார்பு உச்சி வால் கால்

Koviloor Digital Library

என்று உரைத்த எட்டு உறுப்பினும் வெண்மை விரவியது அட்டமங்கலம் - முகமும் மார்பும் உச்சியும் வாலும் காலும் என்று சொல்லப்பட்ட எட்டுறுப்புகளிலும் வெண்ணிறங்கலந்துள்ள குதிரை அட்டமங்கலமெனப் பெயரையுடையது, தலை வால் வியன் உரம் என்ற இ மூன்றும் ஒருவிய உறுப்பு ஒரைந்திலும் வெள்ளையுள்ளது பஞ்சகல்யாணி - தலையும் வாலும் பரந்த மார்பும் என்று சொல்லப்பட்ட இந்த மூன்றுறுப்புகளினின்று நீங்கிய உச்சி நான்கு கால்கள் என்னும் ஐந்துறுப்புகளிலும் வெண்மைநிறமுள்ள குதிரை பஞ்சகல்யாணியென்னும் பெயரையுடையது. (௧௧௦)

அணிகிளர்கழுத்தில்வலஞ்சுழித்திருந்தாலறிந்தவரதனையேதெய்வ
மணியெனவிசைப்பர்முகந்தலைநாசிமார்பமிந்நான்குமிவ்விரண்டு
பணிதருசுழியுநுதனடுப்பின்னைப்பக்கமுமொவ்வொருசுழியுந்
துணிதரவிருப்பதிலக்கணமுளதிச்சுழியிலதிலக்கணவழுவே.

(இ-ள்.) அணி கிளர் கழுத்தில் வலஞ் சுழித் திருந்தால் அறிந்தவர் அதனையே தெய்வ மணியென இசைப்பர் - ஆபரணம் விளக்குங் கண்டத்தில் வலமாகச் சுழித்திருந்தா லசுவநூலுணர்ந்தவர் அந்தச்சுழியையே தேவமணியென்று சொல்லுவார்கள், முகம் தலை நாசி மார்பம் இ நான்கும் - முகம் தலை நாசி மார்பு என்னும் இந்நான்குறுப்புகளிலும், இவ்விரண்டு பணிதரு சுழியும் - இவ்விரண்டாகச்சொல்லப்பட்ட சுழிகளும், நுதல் நடு பின்னைப் பக்கமும் ஒவ்வொரு சுழியும் துணிதர இருப்பது - நெற்றியினடுவிலும் பின்பக்கத்திலும் ஒவ்வொரு சுழியும் ஐயமறப் புலப்பட இருக்குங் குதிரை, இலக்கணம் உளது - இலக்கணங்களையுடைய குதிரை, இ சுழி இலது இலக்கண வழு - இச்சுழிகளில்லாத குதிரை இலக்கண வழுவுடையது.

" சிரமதனிலிரண்டுசெழுந்தொடையைப்பின்னான்கு - சிறந்தவுரந்தனிலிரண்டுநுதன்மேலொன்று, குரவமிசைநின்றசுழியொன்றிரேழு - குலவியவிரைந்தசுழிகுறையாவாகி" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (௧௧௧)

பிரிவுறவுரத்திலைஞ்சுழியுளதுபேர்சிரீவற்சமாநுதலி
லிருசுழியாதன்முச்சுழியாதலிருக்கினுநன்றதுவன்றே
லொருவறநான்குசுழிவலம்புரியாயுள்ளதுநல்லதுவன்றி
யிருசுழிமுன்னங்கால்களின்மூலத்திருக்கினுநல்லதென்றிசைப்பார்.

(இ-ள்.) பிரிவுற உரத்தில் ஐஞ்சுழியுளது பேர்சிரீ வற்சமாம் - கலவாமல் மார்பில் ஐந்துசுழிகளையுடைய குதிரை பெயர் சிரீவற்சம், நுதலில் இருசுழி ஆதல் முச்சுழி ஆதல் இருக்கினும் அது நன்று - நெற்றியி லிரண்டு சுழியாயினு மூன்று சுழியாயினு நேரேயிருந்தாலும் அது நல்லது, அன்றேல் ஒருவு அற நான்கு சுழிவலம் புரியாய் உள்ளது நல்லது - அல்லையாயின் நீங்காமல் நான்கு சுழிவலம்புரியாயுள்ள குதிரை நல்லது, அன்றி - அதுவல்லாமல், இருசுழி முன்னங்கால்களின் மூலத்து இருக்கினும் நல்லது என்று இசைப்பார் - இரண்டு சுழிகள் முன்னங்கால் மூலத்திருந்தாலும் நல்லதென்று சொல்வார்கள்.

நெற்றியில் இரண்டுசுழியாயினும் மூன்றுசுழியாயினும் நேரேயிருத்தற்கு சிரீவிருட்சமென்று அசுவநூலுணர்ந்தோர் கூறுவர் என்பார் இருசுழியாதல் முச்சுழியாதல் என்றார். (௧௧௨)

Koviloor Digital Library

களநடுவிரட்டைச்சுழியுடைப்பரிதன்கருத்தனுக்கறமிடிகாட்டு
மளவறுதுன்பமரணமுண்டாக்குமவைகணைக்காலுளவாகி
லுளபயந்துன்பநிகளபந்தனமேலுதடுமுற்காலடிகபோலம்
வளர்முழந்தாளிந்நான்கினுஞ்சுழிகண்மன்னினுந்தலைவனைவதைக்கும்.

(இ-ள்.) களம் நடு இரட்டை சுழி உடைய பரி தன் கருத்தனுக்கு அற மிடி காட்டும் - கண்டத்தினடுவில் இரட்டைச்சுழியையுடைய குதிரை தன் யஜமானனுக்கு மிகவும் வறுமையைத்தரும், அளவு அறு துன்பம் மரணம் உண்டாக்கும் - அளவில்லாத துன்பத்தையு மரணத்தையுந்தரும், அவை கணைக்கால் உள்ள ஆகில் உள்ள பயம் துன்பம் நிகள பந்தனம் - அச்சுழிகள் கணைக்காலி லுள்ளனவாகில் என்றும் நீங்காத பயத்தையும் துன்பத்தையும் தளை பூணுதலையுங்கொடுக்கும், மேலுதடு முன்காலடி கபோலம் வளர் முழந்தாள் இ நான்கினும் சுழிகள் மன்னினும் - மேலுதடு முன்காலடி கபோலம் வளரு முழந்தாளாகிய இந்த நான்குறுப்புகளிலும் சுழிகள் பொருந்தினும், தலைவனை வதைக்கும் - யஜமானனைக் கொல்லும். (௧௧௩)

இச்சுழியுடையபுரவிபந்தியில்யாத்திருக்கினும்பழுதிவைகிடக்க
வச்சமில்பரிக்குப்பிராயநாலெட்டாமவத்தைபத்தாகுமொவ்வொன்றில்
வைச்சதுமூன்றுவருடமுமிரண்டுமதியமும்பன்னிருநாளு
நிச்சயித்தனரான்றோரின்னமுமொருசார்நிகழ்த்திடுமிலக்கணமதுகேள்.

(இ-ள்.) இ சுழி உடைய புரவி - இந்தச்சுழிகளையுடைய குதிரைகளை, பந்தியில் யாத்திருப்பினும் பழுது - குதிரைப்பந்தியில் கட்டியிருப்பினுங் குற்றமாம்; இவை கிடக்க - இவைநிற்க, அச்சம் இல் பரிக்கு பிராயம் நாலெட்டு ஆம் அவத்தை பத்தாகும் - (பகைவர்க்கு) அஞ்சுதலில்லாத குதிரைக்கு வயது முப்பத்திரண்டாம் அவத்தைகள்பத்தாம், ஒவ்வொன்றில் வைச்சது மூன்று வருடமும் இரண்டு மதியமும் பன்னிருநாளும் - ஒவ்வோரவத்தைகளுக்குங் காலவரையறைசெய்து வைத்திருத்தல் மூன்று வருடமும் இரண்டு மாதமும் பன்னிரண்டுநாளுமென, நிச்சயித்தனர் ஆன்றோர் - நிச்சயஞ்செய்தனர் ஆன்றோர், இன்னமும் ஒரு சார் நிகழ்த்திடும் இலக்கணம் அதுகேள் - இன்னமும் ஒருவகைபற்றி அசுவநூலோர்கூறு மிலக்கணத்தைக் கேளாய்.

அவத்தை தசை. அது பகுதிப்பொருள் விகுதி. (௧௧௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எவ்வண்ணபேதமிகுந்திருந்தாலும்வெள்ளைகலந்திருந்ததானு
லவ்வண்ணப்பரிநன்றுகரும்புரவிக்கடேறுமகன்மார்பேறுஞ்
செவ்வண்ணமிருக்கினதுசயமுளதப்படிவெண்மைசேர்ந்தாலந்த
மைவ்வண்ணப்பரியின்பேர்வாருணமாஞ்சயங்கொடுக்குமாற்றார்போரில்.

(இ-ள்.) எ வண்ண பேதம் மிகுந்திருந்தாலும் வெள்ளை கலந்து இருந்தது ஆனால் அ வண்ணப் பரி நன்று - எந்தநிறத்தின் பேதங்கள் மிக்கிருப்பினும் வெள்ளைகலந்திருக்குமாகில் அந்த நிறத்தையுடைய குதிரை ஜயசாயகம் எனப் பெயர்பெற்று நன்மையைத்தரும், கரும்புரவிக்கு அகடேறும் அகல்மார்பேறும் செவ்வண்ணம் இருக்கின் அது சயம் உளது - கரியநிறம்வாய்ந்த குதிரைக்கு வயிற்றிலாயினும் அகன்ற மார்பிலாயினும் செந்நிறங்கலந்திருக்கின் அது வெற்றி பெறுவது, அப்படி வெ

Koviloor Digital Library

ண்மைசேர்ந்தால் அந்த மை வண்ணப் பரியின்பேர் வாருணம் ஆம் - அவ்வாறு வயிற்றிலு மார்பிலும் வெண்மைகலந்திருந்தா லந்தக் கரியநிறத்தையுடைய குதிரையின் பெயர் வாருணமென்றும் பெயராம், மாற்றார் போரில் சயங்கொடுக்கும்-அது பகைவர் போரில் வெற்றியைத்தரும். (௧௫)

மகவளிக்கும்பிடர்வெளுப்புமகிழ்வளிக்குமுரவெளுப்புமணித்தார்க்கண்டத், தகவெள்ளுப்புப்பொருள்கொடுக்குமுகவெளுப்புச்சயங்கொடுக்குமதன்பின்பக்கத், தகவெளுப்புச்சுகம்பயக்குமிடவெளுப்புச்சந்தானந்தழைக்குஞ்செல்வ, மிகவளர்க்குந்தனம்பலதானியநல்குவலப்புறத்துவெள்ளைமாதோ.

(இ-ள்.) பிடர் வெளுப்பு மகவு அளிக்கும் - பிடரின்வெளுப்புப் புத்திரப்பேறுதரும், உரம் வெளுப்பு மகிழ்வு அளிக்கும் - மார்பின் வெளுப்பு மகிழ்ச்சியைத்தரும், மணி தார் கண்டத்து அகம் வெளுப்பு பொருள் கொடுக்கும் - இரத்தினமாலையையணிந்த கழுத்தினிடத்துள்ள வெளுப்புப்பொருளைத்தரும், முகம் வெளுப்பு சயங்கொடுக்கும் - முகத்திலுள்ள வெளுப்பு வெற்றியைத்தரும், அதன் பின்பக்கத்து அகம் வெளுப்பு சுகம்பயக்கும் - அதன் பின்பக்கத்தினிடத்துள்ள வெளுப்புச் சுகத்தைத்தரும், இடம் வெளுப்பு சந்தானம் தழைக்கும் செல்வம் மிகவளர்க்கும் - இடப்பாலுள்ள வெளுப்புச் சந்ததிதழையச்செய்யும் செல்வத்தை மிகவும் வளர்க்கும், வலப்புறத்து வெள்ளை தனம் பலதானியம் நல்கும் - வலப்பாலுள்ள வெளுப்புத்தனத்தையும் பலதானியங்களையுந் தரும். (௧௬)

நற்புறம்வான்முகமூன்றும்வெளுத்தபரிவென்றிதருநாபிதொட்டு
முற்புறமெல்லாம்பரிதியெனச்செவந்துமதியெனப்பின்முழுதும்வெள்கும்
பொற்புடையவயப்பரிக்குப்பகல்விசயமதியெனமுற்புறம்புவெள்கிப்
பிற்புறமெல்லாங்கதிர்போற்செவந்தபரிக்கிராவிசயம்பெருக்குமன்றே.

(இ-ள்.) நல் புறம் வால் முகம் மூன்றும் வெளுத்த பரி வென்றி தரும் - நல்லமுதுகும் வாலுமுகமுமாகிய இந்த மூன்றுறுப்புகளும் வெளுத்துள்ள குதிரை வெற்றியைத்தரும், நாபி தொட்டு முன்புறம் எல்லாம் பரிதி என்ன செவந்து மதி என்ன பின் முழுதும் வெள்கும் பொற்பு உடைய வயம் பரிக்கு பகல் விசயம் - உந்தி தொடங்கி முன்புறமெல்லாஞ் சூரியனைப்போலச் செந்நிறம் வாய்ந்து சந்திரனைப் போலப் பின்பக்க முழுதும் வெளுத்திருக்கும் பொலிவினையுடைய வெற்றிவாய்ந்த குதிரைக்குப் பகல் விசயமென்று பெயர், மதி என்ன முன் புறம்பு வெள்கி பின் புறம் எல்லாம் கதிர்போல் செவந்த பரிக்கு இரா விசயம் - சந்திரனைப்போல முன்பக்கமெல்லாம் வெண்ணிறம் வாய்ந்து பின்பக்கமெல்லாம் சூரியனைப்போலச் செந்நிறம்வாய்ந்த குதிரைக்கு இராவிசயமென்றுபெயர், பெருக்கும்-(இவை மணி பொன் முதலிய பல செல்வங்களும்) பெருகச்செய்யும். (௧௭)

வந்தனவாலிவ்விரண்டுவகைப்பரியும்புரவிபடிவைத்தாலொத்த
பந்தெனவுநின்றுலோமலையெனவுமொலித்தாலோபகடுசீறும்
வெந்தறுகணரியெனவும்வேகத்தாற்காற்றெனவுமிறிக்குங்கூத்தாற்
சந்தநடமகனெனவுநடக்கிலரிகளிறெனவுந்தகையதாகி.

Koviloor Digital Library

(இ-ள்.) இரண்டுவகைப் பரியும் வந்தன - இந்த இரண்டுவகையுள்ள குதிரைகளும் வந்தன, புரவி அடி வைத்தால் ஒத்த பந்து என்னவும் - குதிரை காலைக் கீழ்வைத்தால் ஒருதன்மையான பந்தைப்போலவும், நின்றால் ஓ மலை என்னவும் ஒலித்தால் ஓ படு சீறும் வெந்தறு கண் அரி என்னவும் வேகத்தால் காற்று என்னவும் - நின்றாலோ மலையைப்போலவும் முழக்கஞ்செய்தாலோ யானையைக் கோபிக்குங் கொடுமைவாய்ந்த சிங்கத்தைப்போலவும் வேகத்தினால் காற்றைப்போலவும், மிதிக்கும் கூத்தால் சந்தம் நடமகன் என்னவும் நடக்கில் அரிகளிறு என்னவும் தகையது ஆகி - (பரதநூற்படி) மிதித்து நடிக்குங் கூத்தினால் அழகமைந்த நாட்டியப்புலவன்போலவும் நடந்தால் சிங்கத்தையும் யானையைப்போலவுந் தன்மையையுடையதாகி.

"தருக்கிமருத்தெறுங் கவனத்தன்மையெய்தி" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (௧௧௮)

குலமகள்போற்கவிழ்முகமுங்கருநெய்தலெனக்கண்ணுங்கொண்டு
கார்போ, னிலவியசீர்வண்ணமுங்கார்நெய்தலெனக் கடிமணமுநிறைந்து
நாற்ற, மலரகில்சந்தெரிமணிப்பூணலங்கரிக்கிலாறுதமகிழ்ச்சியெய்தி, யி
லகுவதுத்தமவாசியென்றுரைப்பர்பரிவேதத்தெல்லைகண்டோர்.

(இ-ள்.) குலமகள்போல் கவிழ் முகமும் - குலப்பெண்போலக் கவிழ்ந்த முகமும், கருநெய்தல் என்ன கண்ணுங் கொண்டு - கருநெய்தல் மலரை யொத்த கண்களுமாகிய இவைகளைக்கொண்டு, கார்போல் நிலவிய சீர் வண்ணமும் - மேகம்போலக் கருநிறம் வாய்ந்த விளங்குஞ் சிறந்த நிறமும், கார்நெய்தல் என்ன கடிமணமும் நிறைந்து - கருநெய்தலைப்போல மிக்க மணமு நிறைந்து, நாற்றம் அலர் அகில் சந்து - நறுநாற்றத்தால் மிக்கவாசத்தையுடைய அகிற்குழம்பையும் சந்தனக்குழம்பையுமொத்து, எரி மணி பூண் அலங்கரிக்கில் ஆறுத மகிழ்ச்சி எய்தி - நெருப்பைப்போலச் செந்நிறம்வாய்ந்த இரத்தினங்களழுத்திய ஆபரணங்களை யலங்கரித்தால் நீங்காதமகிழ்ச்சிகூர்ந்து, இலகுவது - விளக்குங் குதிரையை, பரி வேதத்து எல்லை கண்டோர் உத்தம வாசி என்று உரைப்பர் - அசுவநூலின் வரம்பைக்கண்ட புலவர்கள் உத்தம சாதிக் குதிரையென்று சொல்வார்கள்.

இன்ன நிறம் கூடாது என்பதும் இன்னநிறந் தக்கதென்பதும் "உருத்திகல் செப்புலி புள்ளிபக்கழுதைசெந்நாய் - ஒன்புகைசாரிபி றுடன்கரியகாகம்-தரித்ததழற் புகைநிறமும் புனையவோகித் - தருக்கிமருத்தெறுங்கவனத் தன்மையெய்தி - விரித்தகதிர்வெண்டரளந் திங்களிலம் - மென்கமலத்தாதுசெழுங் கனகங்காயா - அரத்தமலர்நல்லபசுங் கிளிபோல - அமைந்தவொளிதயங்கியவந் தத்தவாசி" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (௧௧௯)

நூறுவிரலுத்தமவாம்பரிக்குயர்வீரெட்டுவிரனூறுநீக்கிக்
கூறுவிரன்மத்திமவாம்பரிக்கறுபத்தோன்றதமக்குதிரைக்கென்ப
விறல்புகழாயவொருநரிப்பரியைப்பூசனைஞ்செய்திறைஞ்சிப்பாச
மாறுவராலெனமணித்தார்சதங்கைசிலம்பணிவித்துமகிழ்க்கோமாறன்.

(இ-ள்.) உத்தமவாம் பரிக்கு உயர்வு நூறுவிரல் - தாவிச்செல்லும் உத்தமசாதிக்குதிரைக்கு உயரம் நூறுவிரலளவாம், மத்திமவாம் பரிக்கு ஈரெட்டு விரல் நூறு நீக்கி கூறு விரல் - தாவிச்செல்லு மத்திமசாதிக்குதிரைக்கு உயரம் பதினாறு

Koviloor Digital Library

விரலளவு நூறுவிரலளவினின்றும் கழித்த மிகையாகக் கூறும் எண்பத்துநான்கு விரலளவாம், அதமக்குதிரைக்கு அறுபத்தொன்று - அதமசாதிக்குதிரைக்கு உயரம் அறுபத்தொரு விரலளவாம், என்ப-என்றுகூறுவார், ஒருநர் ஈறு இல் புகழ் ஆய இபரியை பூசனஞ்செய்து இறைஞ்சி பாசம் மாறுவர் என்ன-வாக்குமொருவர் முடிவில்லாத புகழமைந்த இக்குதிரையைப்பூசித்துக் கயிறுமாறுவர் என இறைவர்கூறியருள,மதி கோ மாறன் மணித்தார் சதங்கை சிலம்பு அணிவித்து-சந்திரன் மரபிற்றோன்றிய பாண்டியன் அரதனமாலையையும் சதங்கையையும் சிலம்பையும் அணிவித்து.

உண்மைதோன்றக் கவர்பொருள்படக் கூறுவார் ஒருநரிப்பரி என்றார். ஒரு நரியாகிய குதிரையென்பது பொருள். ஒருநர் நகரம் பெயரிடைநிலை. (௧௨௰)

கொத்தவிழ்தார்நறுஞ்சாந்தங் கொண்டுசெழும்புகை தீபங்கொடுத்துப்பூசை, பத்திமையாற்செய்திறைஞ்சியெதிர்நிற்பவாலவாய்ப்பரனைநோக்கிக், கைத்தலந்தஞ்சிரமுகிழ்த்து வாழியெனப்பரிகொடுத்தான்கயிறுமாறி, முத்தொழிலின்மூவராய்மூவர்க்குந்தெரியாதமுக்கண்மூர்த்தி.

(இ-ள்.) கொத்து அவிழ் தார் நறுஞ்சாந்தம் கொண்டு - பூங்கொத்தினின்று மலர்ந்த மலராற்றொடுத்த மாலையையும் நறுநாற்ற மிகுந்த சந்தனத்தையுங்கொண்டு,செழும்புகை தீபம் கொடுத்து - மிக்க தூபத்தையுந் தீபத்தையுந்தந்து, பூசை பத்திமையால் செய்து இறைஞ்சி எதிர் நிற்ப - பூசனையை அன்போடுசெய்து வணங்கியெதிரே நிற்க, முத்தொழிலின் மூவர் ஆய் மூவர்க்கும் தெரியாத முக்கண்மூர்த்தி - தோற்றம் நிலை இளைப்பொழித்தலென்னு மூன்றுதொழிலின்பொருட்டுப் பிரமன் விட்டுணு உருத்திரமூர்த்தியாகி, அம்மூவர்க்கும் அறியொணாத இறைவர், ஆலவாய் பரனை நோக்கி கைத்தலம் தம் சிரம் முகிழ்த்து வாழி என்ன கயிறுமாறி பரிகொடுத்தான்-திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை யெதிர்நோக்கி இரண்டு திருக்கரங்களையுந் தமது திருவடியின்மேற்குவித்துப் பாண்டியன் வாழக்கடவனெனக் கயிறுமாறிக் கொடுத்தருளினர்.

ஒருவனே கூத்தில் இராவணன் முதலியோர் வேடங்கட்டி நடித்தும் அவ்விகாரங்களின்றி நிற்றல்போல, ஆன்மாக்களுக்குப் பந்தம் விடருளுதற்பொருட்டுச் சுத்தசிவமொன்றே படைப்பாதித்தொழில்கட்குப் பிரமன் முதலியோராய் நிற்றலால் முத்தொழிலின் மூவராயெனவும், இப்பேதம் குணகுணிபாவமாய்த் தம்முடனின்ற சத்தியாற் காணப்பட்டுத்தாம் விகாரமில்லாதவராய்த் தம்மை யவர்களாலறியொணாதாராதலால் மூவர்க்குந் தெரியாத முக்கண்மூர்த்தி யெனவுங் கூறினார். "ஒருவனேயிராவணாதிபாவகமுற்றுற்போலத் - தருவனிவ்வுருவமெல்லாந்தன்மையுந்திரியானாகும் - வரும்வடிவெல்லாஞ்சத்தி சத்திதான்மரமுங்காழ்ப்பு- மிருமையும் போலமன்னிச் சிவந்தனோடியைந்துநிற்கும்" எனவருஞ் சிவஞான சித்தியாரானுமறிக. (௧௨௧)

மேற்படி வேறு.

உபநிடக்கலனைவாசியொன்றலாளின்றமாயக்
கவனவாம்புரவியெல்லாங்கொடுத்திடக்கவர்ந்துவிறு
தவனவில்விளங்குந்தென்னன்றன்பெருங்கோயிலுய்ப்பப்
பவனமுங்கடலும்போலக்கொண்டுபோய்ப்பந்திசேர்த்தார்.

(இ-ள்.) உபநிடம் கலனை வாசி ஒன்று அல்லால் - பிரபல சுருதியாகிய கல்லனையையுடைய குதிரை யொன்றொழிய, நின்ற மாயம் கவனம் வாம் புரவி எல்

Koviloor Digital Library

ளம் கொடுத்திட - நின்ற மற்றை வஞ்சத்தையும் வேகத்தையுமுடைய தாவுங் குதிரைகளையெல்லாங் கொடுக்க, கவர்ந்து - கைக்கொண்டு, வீறு தவனனில் விளங்கும் தென்னன் - கிளர்ந்தெழுந்த சூரியனைப்போல விளங்கும் பாண்டியன், தன் பெருங் கோயில் உய்ப்ப - தனது பெரிய கோயிலில் (அவற்றை) செலுத்த, பவனமும் கடலும்போலக் கொண்டுபோய்ப் பந்தி சேர்த்தார் - காற்றையுங் கடலையுங் கொண்டு போவதுபோலக் கொண்டுபோய்க் குதிரைலாயத்திற் சேர்த்தினார்கள்.

காற்று, கடல் முதலிய உபமானச் சொற்களால் வேகத்தையும் பரப்பையுமுடைய குதிரையாகிய உபமேயத்தை யிலக்கணையாகக் கூறுதலால் உயர்வு நவிற்சியணி. குதிரையைக்கண்ட பெருமகிழ்ச்சி மீக்கூர்தலால் அதனால் விளங்கினன் என்பார் வீறுதவனனின்விளங்குந்தென்னவன் என்றார். (௧௨௨)

வாசிவாணிபர்க்குத்தென்னன்வெண்டுகில்வரிசையாக
வீசினன்பாணற்கேவல்செய்தவர்வெள்குவாரோ
கூசிலாநேசர்க்காப்பான்குதிரையினிழிந்தேற்றந்தத்
தூசினையிரண்டாங்கங்கையென்முடிசூடிநின்றார்.

(இ-ள்.) வாசி வாணிபர்க்கு தென்னன் வெண் துகில் வரிசையாக வீசினன்- குதிரை வணிகராய்வந்த இறைவர்க்கு அரிமர்த்தனபாண்டியன் வெள்ளிய ஆடையை வரிசையாகத் தந்தனன், பாணற்கு ஏவல் செய்தவர் வெள்குவாரோ - பாணபத்திர னேவலாளனென விறகுவிற்று இசைவென்ற அவ்விறைவர் அதனையேற்க நாணுவாரோ (நாணார் என்றபடி,) கூசு இலாத - சிறிதும் நாணாத, நேசர் காப்பான் - வாதவூரடிகளைக் காத்தற்பொருட்டு, குதிரையின் இழிந்து ஏற்று - குதிரையினின்று மிறங்கி அந்த வெள்ளாடையை வாங்கி, அந்த தூசினை இரண்டு ஆம் கங்கை என்ன முடி சூடி நின்றார் - அந்த ஆடையை முன்னணிந்த கங்கைக்கு இரண்டாவது எனக் கண்டோர் கூறத் தமது திருமுடியிற் சூடிநின்றருளினார்.

பாணபத்திரனையிசைவாதிற் காத்தற்பொருட்டு அவரால்விழித்துத்தள்ளினவனென்று தம்மைகூறி விறகெடுத்துத் திரிந்து இசைவென்ற இறைவர் தமது அன்பராகியவாதவூரடிகளைக் காத்தற்பொருட்டு ஏவலாளனெனச்சொல்லக்கூசார் என்பார் பாணற்கேவல்செய்தவர்வெள்குவாரோ-கூசிலாநேசர்க்காப்பான் குதிரையினிழிந்தேற்று என்றார். பாண்டியன் கொடுத்த ஆடையை ஓர் பொருளாகக்கருதாது செண்டாலேற்றார் என்றும் நம்மை யவமதித்தானே யெனப் பாண்டியன் கோபிக்க வாதவூரடிகள் அப்பாண்டியனைத் தேற்றினரென்றும் "வெம்பரியிலண்ணலை வியந்ததமிழ்மாறன் - கம்பமுடியெய்தவொரு கைவிரல்சுழற்று - அம்பொன்விலையில்லதொரருங்கலையளித்தான் - எம்பரமர்செண்டின்மிசை யேற்றுநகைசெய்தார். ஏற்றவெண்கலையைநேசமெய்திலனொருவன்சென்று-காற்றெனவிரைவினெய்திக் கடிதவன்கரத்தில்வாங்கிப் - போற்றிலன்முடியின்மீது புனைந்திலனென்றுமாறன் - சீற்றினன்மறைப்பிரானே செஞ்சிடைவெகுட்சிகொண்டான். எஞ்சிசைமன்னரன்பாலீந்தமென்கலைகள்யாவுஞ் - செண்டிடைக்கேடலன்றோ தேயநல்லியற்கையென்றே - வஞ்சமில்வாதவூரர் மாமதுரேசனெஞ்சிற் - கொண்டுளமுனிவுதீரக் குறைந்தமுன்னின்றுசொன்னார்" வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (௧௨௩)

இனையதுசிவன்பாலார்தியிழிந்துபின்றேற்றுச்சென்னி
புனைவதென்னிவர்கையோடும்புனைந்ததிக்குடையும்பூண்ட

Koviloor Digital Library

கனலராப்பூணுமன்னன்கவருமோவென்றுதம்மில்
வினவினர்வெகுண்டுசொன்னூர்கணத்தனிவீரரெல்லாம்.

(இ-ள்.) கணம் தனி வீரர் எல்லாம் - ஒப்பில்லாத சிவகணவீரர் யாவரும், இனைய தூசு - இந்த ஆடையை, இவன் பால் ஊர்தி இழிந்து நின்று ஏற்று சென்னி புனைவது என் - இப்பாண்டியனிடத்து ஊர்தியினின்று மிறங்கி யெதிரே நின்று வாங்கித் தமது திருமுடியிற் சூடுவது யாது, இவர்-இவ்விறைவர், கை ஓடும் புனைந்த திக்கு உடையும் பூண்ட கனல் அரா பூணும் மன்னன் கவருமோ என்று - தமது திருக்கரத்திலேந்திய பலியோட்டையும் தாமணிந்த திக்காகிய ஆடையையும் அணியாகப் பூண்டவிடத்தையுடைய சர்ப்பாபரணத்தையும் பாண்டியன் கொள்ளைகொள்வானென்று கருதியோவென்று, தம்மில் வினவினர் வெகுண்டு சொன்னூர் - தம்முள் ஒருவரோடொருவர் உசாவிக் கோபித்துக் கூறினூர்கள். (கஉச)

அறந்தருகோலான்வெவ்வேறடுபரிவயவர்யார்க்கு
நிறந்தருகலிங்கமீந்தானேர்ந்தவைவாங்கியன்பிற்
சிறந்தருள்வடிவாய்வந்தார்செழுமறைப்புரவியோடு
மறைந்தனர்மறைந்தாரொக்கமாயவாம்பரியேல்வந்தார்.

(இ-ள்.) அன்பில் சிறந்த அருள் வடிவாய் வந்தார் - வாதவூரடிகள் கொண்ட தலையன்பினூல் மேம்பட்ட கருணையுருவாய் வந்தருளிய இறைவர், அறம் தரு கோலான் - மநுநீதியினின்று வழுவாத செங்கோலை யேந்திய பாண்டியன்; வெவ்வேறு - தனித்தனியாக, அடுபரி வயவர் யார்க்கும் நிறம் தருகலிங்கம் ஈந்தான் - (பகைவரை) கொல்லும் குதிரையில் வந்த வீரர்களெல்லோர்க்கும் ஒளிமிக்க பீதாம்பரங்களைத் தந்தனன், நேர்ந்து அவை வாங்கி செழுமறை புரவியோடும் மறைந்தனர் - முற்பட்டு அப்பீதாம்பரங்களை வாங்கி நலமிக்க வேதப்பரியோடு மறைந்தருளினர், மாயம் வாம்பரிமேல் வந்தார் ஒக்க மறைந்தார் - தாவிச்செல்லும் நரிகளாகிய குதிரையின்மேல்வந்த சிவகணவீரர்களும் ஒக்கமறைந்தனர்கள்.

மாயம் என்றமையால் நரியாகிய என்றும். (கஉரு)

இருமைக்குந்துணையாய்நின்றவிருபிறப்பாளர்க்கேற்ப
வருமைத்தாஞ்சிறப்புநல்கியவரிடத்தவரையுய்த்துப்
பருமத்தயானைவேந்தன்பகற்கதிர்வானத்துச்சி
வருமப்போதெழுந்துசெம்பொன்மாடநீள்கோயில்புக்கான்.

(இ-ள்.) இருமைக்கும் துணை ஆய் நின்ற விருபிறப்பாளர்க்கு ஏற்ப - இகபரபோகங்களிரண்டிற்குந் தனக்கோர் பற்றுக்கோடாய் நின்ற வாதவூரடிகளுக்குப் பொருந்த, பருமத்த யானை வேந்தன் - கவசத்தையணிந்த யானைச்சேனையையுடைய பாண்டியன், அருமைத்து ஆம் சிறப்பு நல்கி - (பிறரடைதற்கு) அரிய வரிசைகளைத்தந்து, அவர் இடத்து அவரை உய்த்து - அவ்வாதவூரடிகள் வசிக்குமிடத்தில் அவர் சென்றருளச்செலுத்தி, பகற்கதிர் வானத்து உச்சிவரும் அப்போது எழுந்து செம்பொன் மாடம் நீள் கோயில் புக்கான் - சூரியன் வானுச்சியில் வரும் நடுப்பகலில் அங்கு நின்று மெழுந்து சிவந்த பொன்னாலமைந்த உபரிகையாகிய உயர்ந்த தனது கோயிலிற் சென்முன். (கஉகு)

Kavilai Digital library

ஏனைமந்திருந்தத்தமில்புகப்புரவிபார்த்த
மாநகராருந்தத்தமனைபுகப்பரியின்பாக
ராளவர்தாமுங்கோயிலடைந்துதம்விளையாட்டெல்லா
மீனெடுங்கண்ணிறைட்குவிளம்பினரிருந்தான்றே.

(இ-ள்.) ஏனை மந்திரும் - மற்றை யமைச்சர்களும், தந்தம் இல் புக - தங்கள் தங்கள் வீட்டிற்குச் செல்லவும், புரவி பார்த்த மாநகராரும் தந்தம் மனை புக - குதிரைக்கூட்டங்களைக் கட்புலப் களிகூரப் பார்த்த பெரிய நகரிலுள்ளவரும் தங்கள் தங்களுக்குரிய இல்லத்திற்குச் செல்லவும், பரியின் பாகர் ஆனவர் தாமும் கோயில் அடைந்து - வேதப்புரவியின்மேல் வந்தருளிய விறைவரும் தமது திருக்கோயிலையடைந்து, தம் விளையாடு எல்லாம் நெடுமீன் கண்ணினாட்கு விளம்பினர் இருந்தார் - தமது திருவிளையாடல்களையெல்லாம் நெடிய அங்கயற்கண்ணியார்க்குக் கூறியிருந்தருளினர்.

நெடுமை திருக்கண்மேல் நின்றது. (௧௨௭)

நரிபரியாக்கியபடலம் முற்றிற்று.

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௨௧௨௪.

அறுபதாவது

பரிநரியாக்கியபடலம்.

கலிநிலைத்துறை.

ஞானநாயகனுணையானரிபரிவெள்ள
மானவாறுரைசெய்தமீண்டப்பரிநரியாய்ப்
போனவாறுகண்டமைச்சரைப்புரவலன்கறுப்ப
வானவாறுபோல்வையைநீர்வந்தவாறுரைப்பாம்.

(இ-ள்.) ஞானம் நாயகன் ஆணையால் நரி பரி வெள்ளம் ஆன ஆறு உரைசெய்தும் - அறிவுருவாகிய இறைவரது ஆணையினால் நரிகள் குதிரைகளான திருவிளையாடலைக் கூறினும், மீண்டு அ பரி நரி ஆய் போன ஆறு கண்டு அமைச்சரை புரவலன் கறுப்ப - மீள அந்தக்குதிரைகள் நரியாக வுருத்திரிந்த வகையைப் பார்த்து வாதவூரடிகளைப் பாண்டியன் கோபிக்க, வானம் ஆறுபோல் வையை நீர் வந்த ஆறு உரைப்பாம் - ஆகாயகங்கையைப்போல வையையாறுவந்த திருவிளையாடலைக் கூறுவாம்.

மீண்டு செயவெனெச்சத்திரிபு. (௧)

செருக்குறுரியமுழக்கமுந்தானையுமிமிர
மருங்கிலாதவர்வந்தெதிர்மங்கலமேந்த
வரங்கொல்வேலினனருளியவரிசையோடணைந்து
புரங்கொல்வேதியர்க்கன்பர்தந்திருமனைபுகுந்தார்.

Koviloor Digital Library



பரிநரியாக்கியதிருவிளையாடல்.

Koviloor Digital Library

(இ-ள்.) நெருங்கு ஆரியம் முழக்கமும் தானையும் மிமிர - நெருங்கிய பதினெண் வாச்சியத்தி னாரவாரமும் சேனைகளும் ஒருபால்நெருங்கவும், மருங்கிலாதவர் எதிர் வந்து மங்கலம் ஏந்த - இடையில்லாத பெண்கள் எதிர் போந்து அட்டமங்கலங்களை யொருபாலேந்தவும், அரம் கொல் வேலினன் அருளிய வரிசையோடு அணைந்து - அரத்தால் அராவிய வேலையேந்திய பாண்டியன் தந்த வரிசைகளோடு சென்று, புரம் கொல் வேதியர்க்கு அன்பர் தம் திருமனை புக்கார் - திரிபுரங்களை நகைத்தெரித்த அறக்கடவுளாகிய இறைவர்க்குத் தலையன்புபூண்ட வாதவூரடிகள் தமது திருமனையிற் சென்றனர்.

திரிபுரங்களை நகைத்தெரித்தது மறம் ஆனாலும் தீவழியிற் செல்லுவோரை யொறுப்பது அறம் ஆதலால் புரங்கொல் வேதியர் என்றார். (௨)

உடுத்தசுற்றமுங்கழகமுமொட்டியநட்பு
மடுத்தகேண்மையால்வினவுவாரவரவர்க்கிசைய
வெடுத்தவாய்மையான்முகமனுமகிழ்ச்சியுமீந்து
விடுத்தவாதவூராளிகள்வேறிடத்திருந்து.

(இ-ள்.) உடுத்த சுற்றமும் கழகமும் ஒட்டிய நட்பும் - புறத்திற்சூழ்ந்த வுறவினரும் தம்மொடு கற்ற ஒரு சாலை மாணாக்கரும் நீங்காத நட்பினரும், அடுத்த கேண்மையால் வினவுவார் அவர் அவர்க்கு இசைய-விடாதுதொடர்ந்த நட்பினால் வினவும் அவரவர்களுக்குப் பொருந்த, எடுத்த வாய்மையால் முகமனும் மகிழ்ச்சியும் ஈந்து விடுத்த வாதவூராளிகள் வேறிடத்து இருந்து - விதந்துகூறும் இனிய வசனங்களால் உபசாரவார்த்தைகளையும் மகிழ்ச்சியையும் வழங்கி யவரவர் தம்மில்லிற்குச் செல்லவேவிய வாதவூரடிகள் ஏகாந்ததானத்திலிருந்து.

கழகம் இடவாகு பெயராய்க் கல்வி பயின்றார்மேல் நின்றது. (௩)

கரந்தைசூடியவாலவாய்க்கண்ணுதனுமன்
றிரந்தவண்ணமேயாங்கொடுபோகியவெல்லாம்
பரந்தவன்பருந்தானுங்கொண்டெம்மையும்பணிகொண்
டரந்தைநீர்த்தனனன்றியுமரசனுக்கிசைய.

(இ-ள்.) கரந்தை சூடிய ஆலவாய் கண்ணுதல் - கரந்தைமலரைச்சூடிய திருவாலவாயி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், நாம் அன்று இரந்த வண்ணமே - நாமக்காலையில் குறையிரந்தபடியே, யாம் கொடு போகிய எல்லாம் பரந்த அன்பரும் தானும் கொண்டு - நாம்கொண்டுபோன பொருள்முற்றையும் அன்புசிறந்த அடியவரும் தாமுங் கைக்கொண்டு, எம்மையும் பணி கொண்டு அரந்தை நீர்த்தனன் - எம்மையு மேவல்கொண்டு பிறவித்துன்பத்தையு மொழித்தனர், அன்றியும் அரசனுக்கு இசைய - அதுவன்றியும் பாண்டியனுக்கு ஏற்ப.

அன்பரும் தானும் என்றமையால் பன்மைமுடிபேலாது நீர்த்தனன் என ஒருமைமுடிபு ஏற்றது சிறப்பினால். (௪)

நல்லவாம்பரிசெலுத்தினனமக்கினிக்கவலை
யில்லவாம்படியாக்கினனின்னமொன்றுலகை
வெல்லவாம்படிதன்னருள்விளைக்குமாநந்தம்
புல்லவாம்படியெமைத்தவம்பூட்டுவான்வேண்டும்.

(இ-ள்.) வாம் நல்ல பரி செலுத்தினன் - தாவிச்செல்லும் நல்லகுதிரைகளை யுஞ் செலுத்தினர், நமக்கு இனி கவலை இல்லையாம்படி ஆக்கினன் - (அரசனால்) நமக்கு இனி விவகாரங்களால் கவலையில்லாதவண்ணமுஞ்செய்தனர், (அவரால்) உலகை வெல்ல ஆம்படி - அவனவளது வென்று சுட்டப்படும் பிரபஞ்சத்தைவெல்லவும், தன் அருள் விளைக்கும் ஆனந்தம் புல்ல ஆம்படி - தமது திருவருளாலுண்டாகும் பேரானந்தத்தையடையவும், எம்மை தவம் பூட்டுவான் இன்னம் ஒன்று வேண்டும் - எம்மைத் தவநெறியிற்செலுத்த இன்னமொரு பெரும்பேறுவேண்டும்.

குதிரைகள் வந்துவிட்டமையால் அரசனோடு நமக்கு இனித் தொடர்பில்லையெனக்கருதினர் என்பார் நமக்கினிக் கவலையில்லவாம்படியாக்கினன் எனவும், இனித் தொடர்பு இல்லாமையால் சிவஞானநெறியில்நிற்க அவ்விறைவரருள்வேண்டுமெனக்கருதினர் என்பார் இன்னமொன்றுலகை - வெல்லாவாம்படி தன்னருள்விளைக்குமானந்தம் - புல்லவாம்படியெமைத்தவம்பூட்டுவான் வேண்டுமெனக்கருதினர் எனவுங்கூறினர். (ரு)

என்றவாதரந்தலைக்கொளவிகபரத்தாசை
யொன்றுமின்றியேயுணர்விறுக்குள்ளுணர்வாகத்
துன்றுபூரணமாகியசுந்தரச்சோதி
மன்றுளாடியசேவடிமனம்புதைத்திருந்தார்.

(இ-ள்.) என்ற ஆதரம் தலைக் கொள-என்று கருதுதலால் வந்த விருப்பமிக்கூர, இக பரத்து ஆசை ஒன்றும் இன்றியே-இகபரங்களிலுள்ள ஆசை சிறிதுமில்லாமலே, உணர்விறுக்கு உள் உணர்வு ஆக துன்று-அறிவிறுக்கு உள்ளீடாகிய அறிவாக நிறைந்த, பூரணம் ஆகிய சுந்தரச் சோதி மன்று உள் ஆடிய சே அடி மனம் புதைத்து இருந்தார் - எங்கும் பூரணமான சோமசுந்தரக்கடவுளுடைய வெள்ளியம்பலத்தன் நடனஞ்செய்தருளிய செவந்த திருவடிகளைத் தமதுமனத்தி லிடையறு திருத்தியிருந்தனர்.

ஆன்மா தன்னையறியமாட்டாத இந்திரியமுதலியவற்றைத் தானறிந்தறிவித்துடனிற்றல்போலத் தன்னையறியமாட்டாத ஆன்மாவைத் தானறிந்தறிவித்துடனிற்பவன் இறைவனாதலால் உணர்விறுக்குள்ளுணர்வாகத்துன்று எனவும்,உபலக்கணத்தால் ஆன்மாவைக்கூறவே ஏனைப் பிருதிவிமுதல் சூரியசந்திரர்காறும் அவ்வாறுநிற்பவனாதலால் பூரணமாகிய எனவும் கூறினர். உணர்விறுக்குள்ளுணர்வாக என்றது "பொறிபுலன்கரணமெல்லாம்புருடனுலறிந்தான்மாவை - அறிதராவவையேபோலவான்மாக்களைத்தமெக்குஞ்- செறிதருஞ்சிவன்றனுலேயறிந்திடுஞ்சிவனைக்காணு- அறிதருஞ்சிவனேயெல்லாமறிந்தறிவித்துநிற்பன்" எனவரும் சிவஞானசித்தியாராலும் பிருதிவிமுதல் சூரியசந்திரர்காறும் அவ்வாறுநிற்றல் "நாடொறும்-அருக்கனிற் சோதியமைத்தோன்றிருத்தகு - மதியிற்றண்மைவைத்தோன்றிண்டிறற் - றீயின்வெம்மைசெய்தோன்பொய்தீர் - வானிற்கலப்புவைத்தோன்மேதகு - காலிறுக்கங்கண்டோனிழறிகழ் - நீரின்சுவைநிகழ்த்தோன்வெளிப்பட - மண்ணிற்றிண்மைவைத்தோனென்றென் - றெனைப்பலகோடியெனைப்பலபிறவும் - அனைத்தனைத்தவ்வயினடைத்தோன்" எனத் திருவண்டப்பகுதியிலும் வருதல்காண்க. (சு)

நாளையுத்திருவாலவாய்நாயகன்றமரா
யாளமன்கடந்தருளுமென்றதனையுக்காண்பா

Koviloor Digital Library

ஞாளைவெம்பரித்தூளிபோர்ப்புண்டமெய்கழுவி
மீளவேண்டுவான்போற்கடல்குளித்தனன்வெய்யோன்.

(இ-ள்.) நாளையும் திருவாலவாய் நாயகன்-வரும் நாளைப்பொழுதிலும் திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள், தமரை ஆள மண் சுமந்தருளுமென்று அதனையுங் காண்பான் - தம்முடைய அடியவராகிய வாதவூரடிகளையாட்கொண்டருளத் திருமுடிமேல் மண்சுமந்தருளுவரென்று அத்திருவிளையாடலையுங்காண, ஞாளை வெம் பரி தூளி போர்ப்புண்ட மெய் கழுவி மீள வேண்டுவான் போல் - ஊளையிடும் நரிகளாகிய கொடியவேகத்தையுடைய குதிரைகளின் தூளியால் புதைபட்ட தனது உடலைக்கழுவித் திரும்ப விரும்பினவன்போல, வெய்யோன் கடல் குளித்தனன் - சூரியன் கடலிற்குளித்தனன்.

இதனால் சூரியாத்தமன வர்ணனை கூறப்பட்டது. (௭)

ஈசனாடல்வெம்பரிக்குழாத்தெழுந்தசெந்தூளான்
மாசுமூழ்கியவண்டத்தைவானிலாவென்னுந்
தூசினாலவைதுடைப்பவனெனமணித்தொகுதி
வீசுமாழியுண்முளைத்தனன்வெண்மதிக்கடவுள்.

(இ-ள்.) ஈசன் ஆடல் வெம் பரிக் குழாத்து எழுந்த செந் தூளால் - இறைவன் திருவிளையாடலாலாகிய கொடியநரிகளென்னுங் குதிரைக்கூட்டத்தாலெழுந்தசெந்தூளியினால், மாசு மூழ்கிய அண்டத்தை - அழுக்குப்படிந்த அண்டத்தினை, வால் நிலா என்னும் தூசினால் அவை துடைப்பவன் என்ன-வெள்ளிய தனது கிரணமென்னும்வெள்ளாடையினா லவ்வழுக்கினைத் துடைப்பவன்போல, மணி தொகுதி வீசும் ஆழியுள்- முத்த இராசிகளை யலைகளால்வீசுங் கடலில், வெள் மதிக் கடவுள் முளைத்தனன் - சந்திரனுதயஞ்செய்தனன். (அ)

சேயதாரகைவருணமாத்தீட்டியவான
மாயவேட்டினையிருளெனுமஞ்சனந்தடவித்
தூயவாணிலாவென்னும்வெண்டுசினாற்றுடைப்பான்
பாயவேலையின்முளைத்தனன்பனிமதிக்கடவுள்.

(இ-ள்.) சேய தாரகை வருணம் ஆக தீட்டிய வானம் ஆய ஏட்டினை - தொலையிலுள்ள நக்ஷத்திரங்களையே யெழுத்தாகவெழுதிய ஆகாயமென்னும் ஏட்டினுக்கு, இருளென்னும் அஞ்சனம் தடவி, அந்தகாரமென்னு மையிட்டு, தூய வாள் நிலா என்னும் வெண் தூசினால் துடைப்பான் - புனிதமாகிய வொள்ளிய தனதுகிரணமென்னும் வெள்ளாடையினால் அவ்வேட்டைத் துடைக்க,பனி மதிக் கடவுள் பாய வேலையில் முளைத்தனன் - தண்ணிய கிரணத்தையுடைய சந்திரன் பரந்தகடலி லுதயஞ்செய்தனன்.

இவ்விரண்டு செய்யுள்களாலும் சந்திரோதயவர்ணனை கூறப்பட்டது. (௯)

கள்ளொழுக்குதார்மீனவன்கடிமனைபுகுந்த
புள்ளுவப்பரிநள்ளிருட்போதுவக்தெய்தப்
பிள்ளையாகியமதிமுடிப்பிரான்விளையாட்டா
லுள்ளவாறுதம்வடிவெடுத்தொன்றோடொன்றுசாவும்.

Koviloor Digital Library

(இ-ள்.) கள் ஒழுக்கு தார் மீனவன் கடிமனை புகுந்த புன்குவம் பரி - தேனையொழுக்கும் வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியனது காவல்வாய்ந்த மனையிற்புகுந்த மாயவேடம்பூண்டகுதிரைகள், நள் இருள் போது வந்தெய்த - நடுநிசிவேளைவர, பிள்ளை ஆகிய மதி முடி பிரான் விளையாட்டால் - இளஞ் சந்திரனை யணிந்த சடாமுடியையுடைய இறைவர் திருவிளையாட்டினால், உள்ள ஆறு தம் வடிவு எடுத்து ஒன்றோடு ஒன்று உசாவும் - உள்ளபடி தமது உருவெடுத்து ஒன்றினோடொன்று உசாவலாயிற்றும். (௬௦)

சங்கினோசையும்பிணைப்பறைபோசையுஞ்சரிந்த
மங்குலோதியரழுகுரலோசையும்வடந்தாழ்
கொங்கைசேப்புறக்கையெறிபோசையுங்குளிற
வெங்குநாஞ்செவிபருகுவமின்னமுதென்ன.

(இ-ள்.) சங்கின் ஓசையும் பிணைப்பறை ஓசையும் - சங்கின் தொனியும் சாக்காட்டுப்பறையின் முழக்கும், சரிந்த மங்குல் ஓதியர் அழுகுரல் ஓசையும் வடம் தாழ் கொங்கை சேப்புற கை எறி ஓசையும் எங்கும் குளிற - பின்னே சரிந்துகிடக்கின்ற மேகத்தையொத்த கூந்தலையுடைய பெண்கள் அழாநின்ற குரலினரவமும் முத்த வடந்தங்கிய தனங்கள்செவக்க மார்பில் கைபால் அறையும் ஒலியும் எவ்விடத்தும் ஆரவாரிக்க, இன் அமுது என்ன நாம் செவி பருகுவம்-இனிய அமிர்தம்போல நாம் செவியாலவா அவற்றைப் பருகுவோம். (௬௧)

வாம்பரித்திரளாகிநாமனித்தரைச்சுமந்து
தாம்புசங்கிலிதொடக்குண்டுமத்திகைதாக்க
வெம்பலுற்றனம்பகலெலாமிப்பொழுதிண்டு
நாம்படைத்தனநம்முருநம்விதிவலத்தால்.

(இ-ள்.) நாம் வாம் பரித்திரள் ஆகி மனித்தரை சுமந்து - நாம் (விதிவசத்தால்) தாவிச்செல்லுங் குதிரைகளாகி மனிதர்களைச் சுமந்து, பகல் எல்லாம் தாம்பு சங்கிலி தொடக்குண்டு மத்திகை தாக்க வெம்பல் உற்றனம் - பகற்பொழுதெல்லாம் கயிற்றாலுஞ் சங்கிலியாலுங் கட்டுப்பட்டுக் கோலாலடிக்க வருந்தியுழன்றோம், நம் விதி வலத்தால் இப்பொழுது ஈண்டு நம் உரு நாம் படைத்தனம் - நமது ஆகூழின்வன்மையால் இப்பொழுது இவ்விடத்தில் நமது உண்மைவடிவத்தைப்பெற்றோம். ௬௨

கானகந்தனிலொழுகுநாண்முதலிந்தக்கவலை
யானதன்பநாமறிந்திலமின்னமுமார்த்த
மானவன்றொடர்வடுக்கனுமத்திகைத்தழும்பும்
போனவன்றினிப்புலருமுன்போவதேகருமம்.

(இ-ள்.) கான் அகந்தன்னில் ஒழுகும் நாள் முதல் இந்த கவலை ஆன துன்பம் நாம் அறிந்திலம் - காட்டில் சஞ்சரிக்கும் நாண்முதலாக இந்தக்கவலையான துன்பத்தை நாம் சற்றும் அறிந்திலோம், இன்னமும் ஆர்த்த மானம் வல் தொடர் வடுக்களும் மத்திகை தழும்பும் போன அன்று - இன்னமும் நம்மைக்கட்டிய பெரியவலியசங்கிலியழுந்திய வடுவும் கோலாலடித்தலாலுண்டாகிய தழும்பும் மறைந்தனவல்ல, இனி புலரு முன் போவதே கருமம் - இனி விடியுமுன் நாம் ஓடிப்போவதே அறிவு.

வேலை மனத்திலிடைவிடாதென்றுமுள்ளது. (௬௩)

Koviloor Digital Library

உள்ளமாரநாந்தின்பதற்கூன்சரிந்தொழுகு
கொள்ளைநாகிலநந்திலநுழைந்தளையொதுங்கும்
கள்ளநீள்கவைக்கான்ஞெண்டுமிலவினிக்கடலை
கொள்ளினோடுபைம்பயறுபுற்கொள்வகையடாதால்.

(இ-ள்.) உள்ளம் ஆர நாம் தின்பதற்கு ஊன் சரிந்து ஒழுகும் கொள்ளை நாகு இல - மனமார நாம்தின்னத் தசைசரிந்து தொங்கும் கட்புலனில்லாதநத்தைகளில்லை, நந்து இல - சங்குகளுமில்லை, அளை நுழைந்து ஒதுங்கும் கள்ளம் நீள்கவைக்கால் ஞெண்டும் இல - வளையில் நுழைந்து பதுங்கும் கள்ளத்தையுடைய நீண்டபிளவுபட்ட கால்களையுடைய நண்டுகளுமில்லை, இனி கடலை கொள்ளினோடு பைம்பயறு புல் கொள் வகை அடாது - இனிக் கடலையும் கொள்ளோடு பசியபயறும் புல்லுமாகிய இவைகளை நாம் தின்னும்வகை நமக்குத்தக்கதல்ல.

நத்தையும் சங்கும் பரிசவுணர்ச்சியோடு நாவுணர்ச்சியாகிய இரண்டும் உடைமையால் கொள்ளையென்றார் "முரணந்தாதிநாவறிவொடீரறிவுயிர்". (௧௪)

நாடிக்காவலன்றமருளார்நகருளார்கண்டாற்
சாடிக்காய்வரோபுலருமுன்சங்கிலித்தொடர்நீத்
தோடிப்போவதேசூழ்ச்சியென்றூக்கமுற்றொருங்கே
கூடிப்பேசினவூளைவாய்க்குறுநரிக்குழாங்கள்.

(இ-ள்.) ஊளை வாய் குறு நரி குழாங்கள் - ஊளையிடும் வாயையுடைய உருவிற்சிறிய நரிக்கூட்டங்கள், காவலன் தமருள்ளார் நகர் உள்ளார் நாடி கண்டால் சாடி காய்வரோ - அரசன் பரிசனமாயுள்ளவரும் நகரிலுள்ளவரும் தேடி நம்மைப்பார்த்தால் அடித்து வருத்துவார்கள், புலரு முன் சங்கிலி தொடர் நீத்து ஓடி போவதே சூழ்ச்சி என்று - விடிதற்குமுன் சங்கிலித்தொடக்கினையொழித்து ஓடிவிடுவது தக்க ஆலோசனையென்று, ஊக்கம் உற்று ஒருங்கே கூடி பேசின - மனவூக்கங்கொண்டு ஒருசேரத் தம்முள்ளே கூடிப்பேசின.

ஊக்கம் ஒரு தொழிலின்மேல் மனமெழுதல். (௧௫)

வெறுத்தகாணமுங்கடலையும்விரும்பினகோழூன்
றுறுத்தநாகுநந்தலவனைச்சங்கிலித்தொட்டை
முறித்தகால்களிற்கட்டியகயிற்றொடுமுளையைப்
பறித்தவூளையிட்டெழுந்தனபோம்வழிபார்ப்ப.

(இ-ள்.) காணமும் கடலையும் வெறுத்த - கொள்ளையுங் கடலையையும்வெறுத்து, கோழ் ஊன் துறுத்த நாகு நந்து அலவனை விரும்பின - கொழுவியமாமிசம் தறுத்த நத்தையையும் சங்கையும் நண்டுகளையும் விரும்பி, சங்கிலி தொடரை முறித்த-சங்கிலிகளைமுறித்து, கால்களில் கட்டிய கயிறு ஒடு முளையை பறித்த - கால்களிற்கட்டிய கயிற்றோடு முளைகளைப்பறித்து, ஊளையிட்டு எழுந்தன போம் வழி பார்ப்ப - ஊளையிட்டெழுந்து போகும்வழிகளைப் பார்க்கின்றன.

வெறுத்த, விரும்பின, முறித்த, பறித்த, எழுந்தன முற்றெச்சங்கள். (௧௬)

நின்றநீளிலைப்பந்தியுனொருங்குமாநிரையைச்
சென்றுதாவிவாளெயிறுறச்சிதைபடக்கடித்து

Koviloor Digital Library

மென்றுசோரியைக்குடிப்பனவிக்கியமுனியோ
டொன்றவோடவேயண்டத்திறூறுசெய்வனவால்.

(இ-ள்.) நின்ற நிர் நிலை பந்தியுள் நெருங்கும் மா நிரையை - தாம்நின்ற நெடிய நிலையையுடைய இலாயத்தில் நெருங்கிய குதிரைவரிசைகளை, தாவி சென்று வாள் எயிறு உற - தாவிப்போய் மோதி வாள்போன்ற பற்களழுந்த, சிதைபட கடித்து மென்று - (அக்குதிரைகளின்வன்மை) அழியக் கடித்துமென்று, சோரியை குடிப்பன - (அவற்றின்) உதிரத்தைக் குடிப்பன, விக்கிய முனியோடு ஒன்ற ஓட - கட்டிய முனியோடோடுதலால், அண்டத்தில் ஊறு செய்வன - (அம்முனிகள்) பீசத்தில் தாக்கிப் புண்படுத்தாநிற்கும்.

ஏகாரம் இசைநிறைத்தலின்வந்தது. (௧௭)

ஊளையோசைகேட்டிம்மெனவுறக்கநீத்தெழுந்து
காளைவீரராய்மந்துரைகாப்பவர்நெருந
லாளிபோல்வருபரியெலாநரிகளாய்மற்றை
யொளிமானிரைகுடர்பறித்துண்பனகண்டார்.

(இ-ள்.) ஊளை ஓசை கேட்டு - நரிகளின் ஊளையைக்கேட்டு, இம்மென உறக்கம் நீத்து எழுந்து காளை வீரர் ஆய் மந்துரை காப்பவர் - விரைந்து நித்திரையினின்று நீங்கியெழுந்து காளைப்பருவத்தையுடைய வீரர்களாய்க் குதிரைலாயத்தைக்காப்பவர்கள், நெருநல் ஆளி போல் வரு பரி எல்லாம் நரிகள் ஆய் - நேற்றைப்பொழுதில் ஆளிபோலவந்த குதிரைகளெல்லாம் இற்றைப்பொழுதில் நரிகளாய், ஒளி மான் நிரை குடர் பறித்து உண்பன கண்டார் - வரிசையாகக் கட்டிய குதிரைக் கூட்டங்களின் குடர்களைப் பிடுங்கியுண்ணுதலைப் பார்த்தார்கள்.

உண்பன என்னும் வினைமுற்றுப்பெயர் உண்ணுதற்செயல்மேல் நின்றது. ()

காண்டலுஞ்சிலவலியுளகடியமுள்ளரணந்
தாண்டியோடினசிலநரிசாளரமுழையைத்
தூண்டியோடினசிலநரிசுருங்கையின்வழியா
யீண்டியோடினநூழில்புக்கேகினசிலவே.

(இ-ள்.) காண்டலும் - பார்க்கவும், சில வலி உள்ள - சில வலிமையுள்ள நரிகள், கடிய முள் அரணம் தாண்டி ஓடின - கூர்மையமைந்த முள்நாட்டிய கோட்டையைத் தாண்டிச்சென்றன, சில நரி சாளரம் முழையை தூண்டி ஓடின - சிலநரிகள் பலகணியின் துவாரத்தைப் பெருவெளிசெய்து ஓடின, சில நரி சுருங்கையின் வழியா ஈண்டி ஓடின - சிலநரிகள் கோட்டையின் கள்ளவழியின்வழியாக நெருங்கியோடின, சில நூழில் புக்கு ஏகின - சிலநரிகள் சாந்துறைவழியிற்புகுந்துசென்றன. (௧௯)

முடக்குகாலுடைச்சம்புவுமுப்படைத்தாற்ற
லடக்குமோரியுங்கண்குருடாகியநரியு
மொடுக்குநோயுழந்தலமருமிகலறுமோடு
மிடக்கர்கண்டிலபந்திபிறகிடந்தனவேங்கி.

Koviloor Digital Library

(இ-ள்.) முடங்கு கால் உடைய சம்புவும் - முடங்கிய காலையுடைய நரியும், மூப்பு அடைந்து ஆற்றல் அடங்கும் ஓரியும் - மூப்பினையடைந்து வலிமையொடுங்கிய ஓரியும், கண் குருடு ஆகிய நரியும் - குருட்டுக்கண்களையுடைய நரிகளும், ஒடுங்கு நோய் உழந்து அலமரும் இகலரும் - உடம்பொடுங்குவதற் கேதுவாகிய பிணியில்வருந்திச் சுழலு நரியும், ஓடும் இடங்கள் கண்டில பந்தியில் ஏங்கி கிடந்தன - ஓடி மறையுமிடங்களைக் காணுதனவாகி இலாயத்தில் வருந்திக்கிடந்தன.

நரி முற்றினால் ஓரியெனப் பெயர்பெறுதலால் மூப்படைந்தாற்றலொடுங்கு மோரி என்றார். ஒடுங்குநோய் காலங்கரந்த பெயரெச்சம் ஆதலால் ஏதுப்பொருளில் வந்தது "மற்றிந்நோய்தீருமருந்து" என்றாற்போல. (௨௦)

கிட்டியோடினர்வெருட்டுவோர்கீழ்விழக்கடித்துத்
தட்டியோடுவசிலவெதிர்தடுப்பவரடிக்கீ
ழொட்டியோடுவசிலகிடந்தூளையிட்டிரங்குங்
குட்டியோடணைந்தெயிலிறக்குதிப்பனசிலவே.

(இ-ள்.) கிட்டி ஓடினர் வெருட்டுவோர் கீழ் விழ சில கடித்து தட்டி ஓடுவ - தம்மைநெருங்கி யோடிவந்தவரும் அச்சமுறுத்துவோருங் கீழேவிழச் சிலநரிகள் கடித்து அவர்கையிற்படாமல் ஓடுகின்றன, சில எதிர் தடுப்பவர் அடிக்கீழ் ஒட்டி ஓடுவ - சிலநரிக ளெதிர்நின்று தடுப்போருடைய காலின்கீழ் ஒதுங்கியோடுகின்றன, சில கிடந்து ஊளை யிட்டு இரங்கும் குட்டியோடு அணைந்து எயில் இறகுதிப்பன - சில பெட்டைநரிகள் செயலின்றிக்கிடந்து ஊளையிட்டுவருந்தும் குட்டிகளோடு அணைந்து மதில்சிதைபடக் குதித்தோடுகின்றன.

"ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை-பெட்டையென்னும் பெயர்க் கொடைக்குரிய" என்ற தொல்காப்பியச்சூ - இல் கொடை என்றமிகையால் நரிக்கும் பெட்டை கொள்க. வந்த இடங்களிலும் இவ்வாறு கொள்க. (௨௧)

மறம்புனைந்தவேன்மீனவன்மாளிகைதள்ளிப்
புறம்படைந்தவிந்நரியெலாம்பொய்கையுய்யான
மறம்பயின்றநீண்மனைமறுகாலயங்கவலைத்
திறம்படர்ந்தபன்மாடநீணகரெலாஞ்செறிந்த.

(இ-ள்.) மறம் புனைந்த வேல் மீனவன் மாளிகை தள்ளி புறம்பு அடைந்த இ நரி எல்லாம் - வாகைமாலைசூடிய வேலையேந்திய பாண்டியனுடைய கோயிலைக்கடந்து புறம்பேபோன இந்நரிகளெல்லாம், பொய் கை உய்யானம் அறம் பயின்ற நீள் மனை மறுகு ஆலயம் கவலை திறம்படர்ந்த பல்மாடம் நீள் நகர் எல்லாம் செறிந்த - நீர்நிலைகளின்கரைகளும் பூந்தோட்டங்களும் நெடிய அன்னசத்திரங்களும் வீதிகளும் ஆலயமும் முச்சந்திகூடுமிடங்களும் பலதிறப்பட்டுப் பரவிய பலமாடங்களும் நெடிய நகரமுமாகிய இவையெல்லாவற்றினும் நெருங்கின. (௨௨)

மன்றுஞ்சித்திரகூடமுமாடமுமணிசெய்
குன்றுந்தெற்றியுமுற்றமுநாளொடுகோள்வந்
தென்றுஞ்சுற்றியபொங்கருமெங்கணுநிரம்பி
யொன்றுஞ்சுற்றமோடூளையிட்டுழல்வனநரிகள்.

(இ-ள்.) நரிகள் - நரித்திரள்கள், மன்றும் சித்திரகூடமும் மாடமும் மணி செய் குன்றும் - அம்பலமும் சித்திரகூடங்களு மாடங்களும் இரத்தினமிழைத்த செ

Koviloor Digital Library

ய்க்குன்றங்களும், தெற்றியும் முற்றமும் நாளொடு கோள் வந்து என்றும் சுற்றிய பொழில்களும் எங்கணும் நிரம்பி - திண்ணைகளும் முன்றில்களும் நக்ஷத்திரங்களோடு சூரியன்முதலிய நவகோள்கள்வந்து எப்போதும் சூழ்ந்துலாவிய சோலைகளுமாகிய எவ்விடத்திலும் நிரம்பி, ஒன்றும் சுற்றமொடு வலையிட்டு உழல்வன - பிரியாத தம் கிளையோடு வலையிட்டுழன்று திரியாநின்றன. (௨௩)

கரியினோசையும்பல்லியவோசையுங்கடுந்தேர்ப்
பரியினோசையுமின்றமிழோசையும்பாணர்
வரியினோசையுநிரம்பியமணிநகரெங்கு
நரியினோசையாய்க்கிடந்ததுவிழித்ததுநகரம்.

(இ-ள்.) கரியின் ஓசையும் பல் இய ஓசையும் கடுந்தேர் பரியின் ஓசையும் இன் தமிழ் ஓசையும் பாணர் வரியின் ஓசையும் - யானையின் முழக்கமும் பதினெண்வாச்சியங்களின்சப்தமும் விரைந்துசெல்லுந் தேரிற்பூண்ட குதிரையின்கனைப்பும் இனியதமிழ்ச்செய்யுளின் ஆரவாரமும் இசைப்பாணர்பாடு மிசையினதிர்ப்புமாகிய, நிரம்பிய மணி நகர் எங்கும் நரியின் ஓசையாய் கிடந்தது - இவைகள்நிறைந்த அழகியநகரமுற்று நரிகளின்கோஷமாய்க்கிடந்தது, நகரம் விழித்தது - நகரத்திலுள்ளவர்களும் விழித்தனர்.

நகரம் இடவாகுபெயராய் அஃறிணைச்சொல்லாய் நிற்றலால் விழித்ததுஎன அஃறிணை யொருமைமுடிபுதந்தார். (௨௪)

விழித்தஞாளிகள்விழித்தனகேகயம்வெருவி
விழித்தகோழிகள்விழித்தனமதுகரம்வெருண்டு
விழித்தவோதிமம்விழித்தனகுருகினம்விரைய
விழித்தவாரணம்விழித்தனகருங்கொடிவெள்ளம்.

(இ-ள்.) ஞாளிகள் விழித்த - நாய்கள்விழித்தன, கேகயம் விழித்தன - மயில்கள்விழித்தன, கோழிகள் வெருவி விழித்த - கோழிகளஞ்சிவிழித்தன, மதுகரம் விழித்தன - வண்டுகள்விழித்தன, ஓதிமம் வெருண்டு விழித்த - அன்னங்களஞ்சி விழித்தன, குருகு இனம் விழித்தன - பறவையின் கூட்டங்கள் விழித்தன, வாரணம் விரைய விழித்த - யானைகள் விரைந்து விழித்தன, கருங் கொடி வெள்ளம் விழித்தன - கரிய காக்கையின் கூட்டங்கள் விழித்தன.

நரிகளின்கோஷமிகுதியைக்குறித்துநிற்றலால் இது மிகுதிநவிற்சியணி. (௨௫)

அட்டில்புக்கனநிணத்தினையழற்பசியுருக்கப்
பட்டடுக்கியகருங்கலமுருட்டுவபாகு
சுட்டசோறுபல்லுணவுவாய்மடுப்பனசூழ்ந்த
குட்டியுண்ணவுங்கொடுப்பனகூவிளிகொள்வ.

(இ-ள்.) அட்டில் புக்கன - சமையல்வீட்டிற்புகுந்த நரிகள், அழல் பசி நிணத்தினை உருக்கப்பட்டு - நிற்கும்பசியால் தமதுடலிலுள்ள நிணமுருக்கப்பட்டு, அடுக்கிய கருங் கலம் உருட்டுவ - ஒன்றன்மேலொன்றாக அடுக்கிய கரியபாத்திரங்களை யுருட்டாநின்றன, பாகு சுட்ட சோறு பல் உணவு வாய் மடுப்பன - கருப்பம்பாகையும் வெந்த அன்னத்தையும் மற்றுள்ள பலவுணவுகளையும் தின்னாநின்றன, சூழ்ந்த குட்டி உண்ணவும் கொடுப்பன - தம்மைச்சூழ்ந்த குட்டிகளுண்ணவும் அவ்வுணவைக் கொடுக்கின்றன, கூவிளி கொள்வ - பேரிரைச்சலிடாநின்றன. (௨௬)

Koviloor Digital Library

புறவுபூவைபைங்கிள்ளைகள்பூந்தலைச்சேவல்
பிறவும்வாருவவுறங்கியபிள்ளையைக்கொடுபோய்
நறவுநாறியகுமுதவாய்நகையெழநக்கி
யுறவுபோல்விளையாடுவவூறுசெய்யாவால்.

(இ-ள்.) புறவு பூவை பைங்கிள்ளைகள் பூ தலை சேவல் - புறாவும் நாகணவாய்ப்புள்ளும் பசியகிளிகளும் முண்முருக்கம்பூவையொத்த சூட்டுப்பொருந்திய தலையையுடைய சேவலுமாகிய, பிறவும் வாருவ - மற்றைப்பறவைகளையும் வாராநின்றன, உறங்கிய பிள்ளையை கொடு போய் நறவு நாறிய குமுதம் வாய் நகை எழ நக்கி- (தாய்மாரிடத்தில்) உறங்கினபிள்ளைகளைக் கொண்டுசென்று அப்பிள்ளைகளின் மணங்கமழும் ஆம்பல்போன்றவாயினின்றும் புன்னகையெழத் தமதுவாயால் பரிசவின்ப மிகநக்கி, ஊறு செய்யா உறவு போல் விளையாடுவ - துன்பஞ்செய்யாமல் தமக்கு உறவுபோல (அப்பிள்ளைகளோடு) விளையாடாநின்றன. (உஎ)

பறிப்பவேரொடுமுன்றில்வாய்ப்படர்பசுங்கொடியைக்
கறிப்பநாகிளங்காயெலாங்கரும்புதேன்கவிழ
முறிப்பவாயிட்டுக்குதட்டுவவண்டுவாய்மொய்ப்பத்
தெறிப்பவூளையிட்டாடுவதிரிவனபலவே.

(இ-ள்.) பல - பலநரிகள், முன்றில் வாய் படர் பசுங் கொடியை பறிப்ப-முன்றிலிற்படர்ந்த பசியகொடிகளைப்பறிப்பன, நாகு இளம் காய் எல்லாம் கறிப்ப-அவற்றிலுள்ள இளங்காய்களையெல்லாம் ஒருபால் கடிக்காநின்றன, தேன் கவிழ் கரும்பு முறிப்ப - சாறுசிந்தக் கரும்பினைமுறிப்பன, வண்டு வாய் மொய்ப்ப- வண்டுகள் வாயின்மொய்க்க, வாயிட்டு குதட்டுவ - அவற்றைவாயிலிட்டு ஒருபால் குதட்டாநின்றன, தெறிப்ப ஊளையிட்டு ஆடுவ திரிவன - (காலால் மண்ணை) தெறிப்பன ஊளையிட்டாடி (ஒருபால்) திரியாநின்றன. (உஅ)

ஆயிரம்பொரிதிரிமருப்படல்கெழுமேட
மாயிரங்கருந்தாதுநேராக்கையவேன
மாயிரங்கவிரனையசூட்டவிர்தலைக்கோழி
யாயிரங்குறும்பார்ப்பொடுமாருயிர்செகுப்ப.

(இ-ள்.) ஆயிரம் பொரிதிரி மருப்பு அடல் கெழு மேடம் - அளவில்லாதபொருக்குப்பொருந்திய முறுக்கியகொம்பையுடைய வலிமைமிக்க தகர்களும், ஆயிரம் கருந்தாது நேர் ஆக்கைய ஏனம் - அளவில்லாத இரும்பினையொத்த முருட்டுடலினையுடையபன்றிகளும், ஆயிரம் கவிர் அனைய சூட்டு அவிர்தலை கோழி - அளவில்லாத முண்முருக்கமலரையொத்த சூட்டுவிளங்கும் தலையையுடைய சேவற்கோழிகளும், ஆயிரம் குறும்பார்ப்பும் - அளவில்லாத கோழிமுதலிய பறவைக்குஞ்சுகளுமாகியஇவற்றின், ஆர் உயிர் செகுப்ப - பெறுதற்கரிய உயிரினையழிக்காநின்றன.

ஒடு என்னொடு. மேடம் ஏனம் கோழி இவற்றினிறுதியில் எண்ணொடு கூட்டுக. ஆயிரம் அளவின்மைமேல் நின்றது. (உகூ)

பின்றொடர்ந்துநாய்குரைப்பொடுதுரந்திடப்பெயர்ந்து
முன்றொடர்ந்துயிர்செகுப்பனவெஞ்சினமூட்டி
வன்றடம்புயமள்ளர்போய்வலிசெயப்பொறுது
தன்மிவந்துசெம்புனலுகக்கடிப்பனவநந்தம்.

Koviloor Digital Library

(இ-ள்.) நாய் பின் தொடர்ந்து குரைப்பு ஒடு துரந்திட - நாய்கள் பின்னே தொடர்ந்து அரவத்தோடு துரத்த, பெயர்ந்து முன் தொடர்ந்து உயிர் செகுப்பன- தம்நிலையினின்று மீண்டு நாய்களின் முன்சென்று அவற்றினுயிர்களை வாங்காநிற்கும் நரிகளும், வெம் சினம் மூட்டி வல் தட புய மள்ளர் போய் வலிசெய- வெய்யகோபத்தைமூள்வித்து வலிய பெரியதோள்களையுடைய வீரர்கள் துன்பஞ்செய்ய, பொருது கன்றி வந்து செம் புனல் உக கடிப்பன அநந்தம் - ஆற்ருது கோபமுதிர்ந்துநேர்ந்து அவர்களுடலினின்று உதிரஞ்சோரக்கடிக்கும் நரிகளுமளவில்லாதன.

செகுப்பன, கடிப்பன என்னும் நரிகள் வினைமுதல்மேல்நின்றன. தொடர்ந்திட என்றும்பாடத்தைத் துரந்திட எனப்பாடங்கொள்க. (கூ0)

பன்றிவாய்விடுமிரக்கமும்பல்பொறிமுள்வாய்
வென்றிவாரணச்சும்மையுமேழகத்தொலியு
மன்றிநாய்குரைப்போசையுமாடவரார்ப்பு
மொன்றியூளைவாய்நரிக்குரற்கொப்பதுண்டொருசார்.

(இ-ள்.) பன்றி வாய் விடும் இரக்கும் - பன்றிகளொலிக்கு முழக்கமும், பல் பொறி முள் வாய் வென்றி வாரணம் சும்மையும் - பலபொறிகளையும் முள்வாய்ந்த வாயையும் வெற்றியையுமுடைய சேவற்கோழிகளின் கூக்குரலும், மேழகத்து ஒலியும் - தகர்களின் ஆரவாரமும், அன்றி நாய் குரைப்பு ஓசையும் ஆடவர் ஆர்ப்பும் ஒன்றி - இவைகளுமன்றி நாய் குரைக்குமோசையும் வீரர்களதிர்ப்பும் தம்முளொருசேரக்கூடி, வாய் ஊளை நரி குரற்கு ஒரு சார் ஒப்பது உண்டு - வாயாலூளையிடும்நரிகளின் குரலுக்கு ஒருபால் ஒக்கும்.

இதனால் நரிக்குரலின் மிகுதியைக் கூறினமையால் மிகுநவிற்சியணி. இரக்கம் அம் பகுதிப்பொருள்விகுதி. (கூக)

கங்குலெல்லைகாணியநகர்கண்விழித்தாங்கு
மங்குறோய்பெருவாயில்கடிறத்தலுமாறு
தெங்குமீண்டியநரியெலாமிம்மெனவோடிப்
பொங்குகாரிருட்டுணியெனப்போயினகானம்.

(இ-ள்.) கங்குல் எல்லை காணிய நகர் கண் விழிந்தால் ஆங்கு - இரவின்முடிவைக்காண நகரம் கண்களைவிழித்தாற்போல, மங்குல் தோய் பெரு வாயில்கள் திறத்தலும் - மேகந்தவழும் பெரியமதிலின்வாயில்களைத்திறக்க, மாறுது எங்கும் ஈண்டிய நரி எல்லாம் இம் மென ஓடி - (போக இடமில்லாமையால்) எவ்விடத்தும் நெருங்கிய நரிகளெல்லாம் விரைந்தோடி, பொங்கு கார் இருள் துணி என்ன கானம் போயின - உலகினைப் புதைத்த கரிய இருளின் துண்டுகள் (சூரியகிரணத்துக்கு உடைந்து) காட்டிற்குச் சென்றனபோல காட்டிற்குச்சென்றன.

உவமைக்கும் பொருட்கும் ஒற்றுமையுண்மையால் பொருளின்செயலை உவமைக்கேற்றிக் காட்டிற்குச் சென்றனபோல என்றனம். (கூஉ)

ஈறிலாச்சிவபரஞ்சுடரிரவிவந்தெறிப்பத்
தேறுவாரிடைத்தோன்றியசிறுதெய்வம்போல
மாறிலாதபன்செங்கதிர்மலர்ந்துவாளெறிப்ப
வீறுபோயொளிமழுங்கினமின்கணமெல்லாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) ஈறு இல்லாத சிவ பரஞ் சுடர் இரவி வந்து எதிப்ப - முடிவில்லாத பரஞ்சுடராகிய சிவசூரியன் உதயஞ்செய்து திருவருளொளிவீச, தேறுவார் இடை தோன்றிய சிறு தெய்வம் போல - பதியிலக்கணத்தை யாராய்வோரிடத்துப் புலப்பட்ட சிறுதெய்வங்களைப் பொருளெனக்கருதல் ஒழிதல்போல, மாறு இல் ஆதபன் செங் கதிர் மலர்ந்து வாள் எதிப்ப - தன்னிலையினின்று மாறாத சூரியனது கிரணங்களைப்பரவி ஒளியைவீச, மீன் கணம் எல்லாம் வீறு போய் ஒளி மழுங்கின - நக்ஷத்திரங்கூட்டங்களெல்லாம் தமது பெருமைகெட்டுக் கிரணமழுங்கின.

சிவஞானத்தாற் பதியிலக்கணத்தை யாராய்வாருக்குத் தத்துவங்கடோறும்நின்ற அவ்வத்தெய்வங்கள் பொய்த்தேவர்களாகக்கழிந்து தத்துவங்களைக்கடந்துநின்ற நிட்களசிவம் பொருளாய்நின்றுவிளங்கும் என்பார் தேறுவாரிடைத்தோன்றிய சிறுதெய்வம்போல எனவுவமையிலும் வீறுபோயொளிமழுங்கின மீன்கணமெல்லாமெனப் பொருளிலுங்கூறினார். "அத்தேவர்தேவரவர்தேவரென்றிங்ஙன்- பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே - பத்தேதுமில்லாதென்பற்றற நான்பற்றிநின்ற-மெய்த்தேவர்தேவற்கேசென்றூதாய்கோத்தும்பீ" எனத் திருவாசகத்திவ்வருதல்காண்க. (௩௩)

அண்டருக்கரிதாகியமறைப்பொருளழுகைத்
தொண்டருக்கெளிதாகிமண்சுமந்தருள்வருத்தங்
கண்டருட்கழல்வருடுவான்கைகளாயிரமுங்
கொண்டருக்கவெங்கடவுளுங்குணகடலுதித்தான்.

(இ-ள்.) அண்டருக்கு அரிதாகிய மறைப்பொருள் - தேவர்கள்கனவிலுங்காணுதற்கு அரியவேதத்தினுட் கிடையாகிய இறைவர், அழுகை தொண்டருக்கு எளிதாகி மண் சுமந்தருள் வருத்தம் கண்டு - (பாண்டியன் தமர்செய்யுங் கொடுமைக்கு ஆற்றாது வருந்தி) அழும் வாதவூரடிகளுக்கு நனவிலெளிதாய் (கூலியாள் திருவுருக்கொண்டு) மண்சுமந்தருளும் வருத்தத்தைநோக்கி, அருள் கழல் வருடுவான்- (அவ்விறைவரது) திருவருள்வடிவாகிய திருவடியினைப்புத்திரவருட, கைகள் ஆயிரமும் கொண்டு அருக்க வெங் கடவுளும் குண கடல் உதித்தான் - ஆயிரங்கரங்களையுங்கொண்டு வெய்யகிரணத்தையுடைய சூரியனும் கீழைக்கடலினுதயஞ்செய்தனன்.

சூரியன்கிரணத்துக்குக் கரம் என்பது ஓர் பரியாயநாமமாதலால் கைகள் எனவும், திருவருளே அங்கங்களாதலால் அருட்கழல் எனவுங் கூறினார். உம்மை உயர்வு சிறப்புப்பொருட்டு. (௩௪)

கவனவெம்பரிசெலுத்திமேற்கவலைதீர்ந்துள்ளே
சிவமுணர்ந்தவர்சிந்தைபோன்மலர்ந்தசெங்கமல
முவமையில்பரம்பொருளுணர்ந்துறையிறந்திருந்தோர்
மவுனவாயெனவடங்கினமலர்ந்தபைங்குமுதம்.

(இ-ள்.) வெம் கவனம் பரி செலுத்தி - மிக்க வேகத்தையுடைய குதிரைகளைப்பாண்டியனுக்குச் செலுத்தலால், மேல் கவலை தீர்ந்து உள்ளே சிவம் உணர்ந்தவர் சிந்தைபோல் - இனிவருங் கவலைதீர்ந்து தமதான்மாவிலே விரவிய சிவத்தைத்தரிசித்துநின்ற வாதவூரடிகளது மனம்போல, செங்கமலம் மலர்ந்த - செந்தாமரைகள்

Koviloor Digital Library

மலர்ந்தன, உவமை இல் பரம் பொருள் உணர்ந்து உரை இறந்து இருந்தோர் மவு னம் வாய் என்ன - தமக்கொப்பில்லாத அச்சிவத்தையுணர்ந்து வசனித்த லொழிந் திருந்த சிவஞானிகளது மௌனமுடைய வாயைப்போல, மலர்ந்த பைங்குமுதம் அடங்கின - (சந்திரோதயத்தால்) மலர்ந்த பசியகுமுதமலர்கள் குவிந்தன.

உவமைக்கும் பொருளுக்கும் ஒற்றுமையுண்மையால் பொருளின்கணுமிலால் ஆணவமலத்தோற்றத்தால் அவனவளதுவென்னும் பிரபஞ்சத்தோற்றாவில்லாலோ தல் முதலிய வாக்கின்செயலிற்புகுந்து அவ்வாணவமல இருளிற்போக்கும் நீட்கள சிவத்தோற்றத்தால் அது ஒழிந்துநின்றனர் என விரித்துப்பொருள்கொள்க. செலுத் தி காரணப்பொருளில்வந்த வினையெச்சம். (௩௫)

பந்தியாளர்கள்யாதெனப்பகர்துமென்றச்சஞ்
சிந்தியாவெழுந்தொல்லைபோய்த்திரண்மதங்கவிழ்க்குந்
தந்தியாவரசிறைகொளுமிருக்கையைச்சார்ந்து
வந்தியாவுடல்பனிப்புறவந்ததுமொழிவார்.

(இ-ள்.) பந்தியாளர்கள் யாது என்ன பகர்தும் என்று அச்சம் சிந்தியா எழு ந்து - குதிரைலாயக் காவலர்கள் என்னவென்று (பாண்டியன்முன்சென்று) கூறு வோமென்று அச்சங்கொண்டெழுந்து, ஒல்லை போய் - விரைந்துசென்று, திரள் மத ம் கவிழ்க்கும் தந்தியான் அரசு இறை கொள்ளும் இருக்கையை சார்ந்து - மிக்கமத த்தைக் கவிழ்க்கின்ற யானைச்சேனையையுடைய பாண்டியன் அரசிருக்கும் அத்தா ணியையடைந்து, வந்தியா உடல் பனிப்புற வந்தது மொழிவார் - வணங்கி தேக ம் நடுங்க (ஒருபால் ஒதுங்கி நின்று) நடந்தசெய்தியைச் சொல்வாராயினர்.

பரிகள் நரியாயினவென வென்றுங் கேட்டறியாதவராதலால் புதுமையுடை தலின் யாதெனப்பகர்து மென்றச்சஞ் சிந்தியவெனவும், தாம் நடந்தசெய்தியைச் சொல்லுதற்குக் கூசினராதலின் உடல் பனிப்புற எனவுங்கூறினர். “ துயவன்றுர கத்தொழிலாளர்கள் - கோயிலின்கடைக்கூக்குரல்செய்துபோய் - மாயவெம்பரிவந் தவெல்லாநரி - ஆயவென்றரசற்கெதிர்கூறினார் ” என வாதவூரடிகள் புராணத்திலு ம் வருதல்காண்க. (௩௬)

காற்றினுங்கடுக்கதியவாய்க்கட்கினியவாய்
நேற்றுவந்தவாம்பரியெலாம்நின்றவாம்பரிக்குக்
கூற்றெனும்படிநரிகளாய்நகரெலாங்குழுமி
ஊற்றஞ்செய்துபோய்க்காட்டகத்தோடியவென்றார்.

(இ-ள்.) காற்றினும் கடுக் கதிய ஆய் - காற்றைப் பார்க்கிலு மிக்க வேகத் தையுடையனவாகி, கட்கு இனிய ஆய் - பார்ப்போர் கட்புலங்களுக்கு இன்பம் பய க்கும் ஒளியையுடையனவாகி, நேற்று வந்த வாம் பரி எல்லாம் - நேற்றைப்பொழு தில்வந்த தாவிச்செல்லுங் குதிரைகளெல்லாம், நின்ற வாம் பரிக்கு - (நோயின்றி ந மதலாயத்தில்) நின்ற தாவிச்செல்லுங் குதிரைகளுக்கு, கூற்று என்னும்படி நரிகள் ஆய் - (உயிரைக் கொள்ளைகொள்ளும்) இயமனென்று சொல்லும்படி நரிகளாகி, ந கர் எல்லாம் குழுமி ஊற்றம் செய்து போய் - மதுரைத்திருநகர் முற்றுநெருங்கியங் குள்ளோர்க்குத் துன்பஞ்செய்து சென்று, காடு அகத்தே ஓடிய என்றார் - காட்டினி டத்தேயோடினவென்று கூறினார்கள்.

Koviloor Digital Library

சுருங்கச்சொல்லல் தோன்றக் கட்புலங்களுக்கு இனியவாய் நேற்றுவந்த குதிரைகள் இன்று முன்னுள்ள குதிரைகளுக்கும் இயமனாய் நரிகளாயின என்பார் நேற்றுவந்த வாம்பரியெலாம் கூற்றெனும்படி நரிகளாய் ஓடினவென்றார். (௩எ)

கருத்துருதவிச்சொல்லெனுங்கடியகால்செவியாந்
துருத்தியூடுபோய்க்கோபமாஞ்சுடுதழன்மூட்டி
யெரித்ததிப்பொறிசிதறிடக்கண்செவந்திறைவ
னுருத்தவாறுகண்டமைச்சரும்வெருவினரொதுங்கி.

(இ-ள்.) கருத்து உருத இ சொல் என்னும் கடிய கால் - (காவலாளர் கூறிய) மனத்திற்கிசையாத இச்சொல்லென்னுங் கடுங்காற்று, செவி ஆம் துருத்தி ஊடு போய்-தனது செவியாகிய துருத்தியின் வாயிலாகச்சென்று, கோபம் ஆம் சுடு தழல் மூட்டி - சினமாகிய சுட்டு வருத்துந் தீயை மூட்டுதலால், எரித்த தீ பொறி சிதறிட - எரிந்தெழுந்த அத்தீ (கண்ணாகிய உலைமுக்கின் வாயிலாக) பொறியைச்சிந்த, இறைவன் கண் செவந்து உருத்த ஆறு கண்டு - பாண்டியன் கண் செவந்து கோபித்த வகையைப்பார்த்து, அமைச்சரும் வெருவி ஒதுங்கினர் - (பக்கலிலுள்ள) மந்திரிகளும் அஞ்சி யொருபால் ஒதுங்கினர்கள்.

எல்லைகடந்த கோபம் என்பார் அமைச்சரும் வெருவின ரொதுங்கி என்றார். "இந்தவாறொலி கேட்டிருகண்டழல் - சிந்தவாகஞ் சிறுவெயர்ப்பெய்தவே - அந்த மாறன் வெருட்சிகண்டண்ணலார் - வந்தமாய நரிப்படைமாற்றினர்" என வாதவூரடிகள் புராணத்திலும் வருதல் காண்க. சிலவற்றை உருவகஞ்செய்து கண்ணை யுருவகஞ்செய்யாமையால் வியனிலை யுருவகவணி. செவி, கண் சாதியொருமைகள். வெருவினர் என்று முற்றின்விகுதியைப் பிரித்து ஒதுங்கி என்பதனோடு கூட்டுக "செய்தவேள்வியான்" என்றாற்போல. (௩அ)

அமுதமுண்டவனஞ்சமுண்டாலெனமுதனாட்
சமரவெம்பரிமகிழ்ச்சியுட்டாழ்ந்தவனவையே
திமிரவெங்குறுநரிகளாய்ச்சென்றவேயென்று
வமராஞ்சியவாணையானாரஞராழ்ந்தான்.

(இ-ள்.) அமுதம் உண்டவன் - அமுதை நுகர்ந்தவன், நஞ்சம் உண்டால் என்ன-நஞ்சினை மீளவுண்டாற்போல, முதல்நாள்-முன்னாளில், சமரம் வெம்பரி மகிழ்ச்சி உள் தாழ்ந்தவன் - போர்த்தொழிலுக்குரிய கொடிய குதிரை வரவின் மகிழ்ச்சியாகிய வெள்ளத்திலழுந்தினவன், அவையே - அக்குதிரைகளே, திமிரம் வெம் குறு நரிகள் ஆய் சென்றவே என்று - இருள்போலுங் கருநிறம் வாய்ந்த வெய்ய சிறுநரிகளாகவா கழிந்தனவென்று, அமரர் அஞ்சிய ஆணையான் - தேவர்களஞ்சும் ஆணையையுடைய அப்பாண்டியன், ஆர் அஞர் ஆழ்ந்தான் - நிறைந்த துன்பமாகிய கடலிலழுந்தினான்.

அமுத நுகர்ந்தவன் மகிழ்கூர்ந்து மீட்டும் அவனே நஞ்சுண்டு துயர்கூருதல்போல மகிழ்கூர்ந்த பாண்டியனே துன்புகூர்ந்தனன் என்றதனால் மெய்ப்பாடு மகிழ்ச்சியும் அவலமுமாம். மகிழ்ச்சியுட்டாழ்ந்தவன் அஞராழ்ந்தனன் எனறமை யால் விரோதவணி. (௩௯)

Koviloor Digital Library

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அருமிருக்குந்தொல்லமைச்சர்தமைநோக்கிவாதவூராளியென்னுங்
கருமிருட்டுமனக்கள்வனம்முடையபொருண்முழுதுங்கவர்ந்துகாட்டிற்
குருதிநிணக்குடர்பிடுங்கித்தின்றுதிரிநரிகளெல்லாங்குதிரையாக்கி
வரவிடுத்தானிவன்செய்தமாயமிதுகண்டீரோமதிநூல்வல்லீர்.

(இ-ள்.) அருகு இருக்கும் தொல் அமைச்சர் தம்மை நோக்கி - தன்னருகிலிருக்கும் தொன்றுதொட்டுள்ள மந்திரிமார்களைப்பார்த்து, வாதவூராளி என்னும் கருகு இருட்டு மனம் கள்வன் - வாதவூர் மறையவனென்னும் கருநிறத்தில் முதிர்ந்த இருளையொத்த கள்ளம் வாய்ந்த மனத்தையுடையவன், நம் உடைய பொருள் முழுதும் கவர்ந்து (நல்லொழுக்க நடைகாட்டி) நம்முடைய பொருள் முற்றுங் கொள்ளைகொண்டு, குருதி நிணம் குடர் பிடுங்கி தின்று காட்டில் திரி நரிகள் எல்லாம்-உதிரஞ்சிந்தும் நிணப்பசைவாய்ந்த குடல்களைப் பிடுங்கித் தின்று இடுகாட்டில் திரிகின்ற நரிகளையெல்லாம், குதிரை ஆக்கி வரவிடுத்தான் - குதிரைகளாகச் செய்தனுப்பினான், மதி நூல் வல்லீர் - அறிவுநூலில் வல்ல மந்திரிகாள், இவன் செய் மாயம் இது கண்டீர் - இவன் செய்த இந்திரசாலவித்தையாகிய இதனைப் பார்த்தீர்களா.

தன்பொருள் முற்றுங்கவர்ந்து அரனடியார்களுக்குச் செலவுசெய்தது இவ்வித்தையைக் கற்றற்கேயெனக் கருதினானாதலால் கருமிருட்டு மனக்கள்வன் எனவும் மாயமிது எனவுங் கூறினான் என்றார். இது அவலமென்று மெய்ப்பாட்டானிகழ்ந்தது "மூட்டெழுமழல்போன்மன்னன் முனிவுடைமுகத்தனாகி - ஈட்டுநம்பொருள்களெல்லா மிரப்பவர்தமக்கூட்டி - காட்டுளாநரிகளெல்லாம் நற்பரியாக்கிநம்முன்- காட்டினனிவன்செய்மாயங் கண்டிரோவமைச்சிரென்றான்" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (௬௦)

இம்மாயஞ்செய்தானையென்செய்வதெனவுலகிலெமருக்கெல்லாம்
வெம்மாசுபடுபாவம்பழியிரண்டும்படவிழுக்குவிளைத்துத்தீய
கைம்மாறுகொன்றான்றன்பொருட்டினியாமேதுரைக்கக்கடவேமென்று
சும்மாதுசிரந்தூக்கியெதிராடாதிருந்தாரச்சூழ்வல்லோர்கள்.

(இ-ள்.) இ மாயம் செய்தானை என் செய்வது என்ன - இந்த இந்திரசாலவித்தையைச் செய்தவனை யான் ஒறுக்குந் தண்டம் யாதென்று (அருகிருக்கும் அமைச்சரை) வினவ, உலகில் எமருக்கு எல்லாம் - உலகிலுள்ள எம்மவராகிய அமைச்சர்களுக்கெல்லாம், வெம் மாசு படு பாவம் பழி இரண்டும் பட இழுக்கு விளைத்து - மிக்க களங்கமமைந்த பாவமும் பழியுமாகிய இரண்டும் என்றும் உண்டாக மறுவுண்டாக்கி, தீய கைம்மாறு கொன்றான் தன்பொருட்டு - அரசனுக்குச்செய்யும் பிரதியுபகாரத்தை வேரோடறக்களைந்த தீயனாகிய வாதவூராளியின்பொருட்டு, இனி யாம் எது உரைக்கக்கடவேம் என்று - இனி நாம் வேறென்ன கூறக்கடவேமென்று, அச்சூழ்வல்லோர்கள் - அச்சூழ்ச்சியில் வல்ல மந்திரிகள், சும்மாது சிரம் தூக்கி எதிராடாது இருந்தார் - வாளாதலையையிறக்கி எதிர்பேசாதிருந்தனர்கள்.

வாளாது என நின்றாற்போலச் சும்மாது எனநின்றது. து பகுதிப்பொருள் விகுதி. இதனால் மந்திரிகளின் மெய்ப்பாடாகிய அவலங்கூறப்பட்டது. கொன்றான் என்பதன் ஆன் விகுதியைப் பிரித்துத் தீய என்பதனோடு கூட்டுக. (௬௧)

Koviloor Digital Library

அவ்வேலைமனக்கினியபரிசெலுத்தியரசகாரியநன்றாக்கி
வெவ்வேலைமனக்கவலைவிடுத்தனமென்றகமகிழ்ச்சிவிளைவுகூர
மைவ்வேலைவிடமுண்டவானவனைநினைந்தறிவுமயமாமின்ப
மெய்வ்வேலையிடைவீழ்ந்தார்விளைந்ததறியார்வந்தார்வேந்தன்மாட்டே.

(இ-ள்.) அ வேலை - அக்காலையில், மனக்கு இனிய பரி செலுத்தி - பாண்டியன் மனத்றக்கு இனியகுதிரைகளைச் செலுத்தி, அரச காரியம் நன்று ஆக்கி - அப்பாண்டியன்பணியைத் திருந்த முடித்து, வெம்வேலை மனம்கவலை விடுத்தனம் என்று - பெரியகடல்போலப் பொங்கியெழுந்த மனக்கவலையைப் பற்றற வொழிந்தோமென்று, அகம் மகிழ்ச்சி விளைவுகூர - மனமகிழ்ச்சி விளைந்தோங்க, மை வேலை விடம் உண்ட வானவனை நினைந்து - கரியகடலிற்றோன்றியவிடத்தை நுகர்ந்து தேவர்களுக்கருளிய தேவதேவனைச் சிந்தித்து, அறிவு மயம் ஆம் இன்பம் மெய் வேலை இடை வீழ்ந்தார் - அச்சிவமயமாகிய பேரின்பமென்னும் அழிவில்லாத கடலிலழுந்திய வாதவூரடிகள், விளைந்தது அறியார் - நடந்த செய்தியையறியாது, வேந்தன் மாடுவந்தார் - அரசனிடத்துவந்தனர்.

கன்மவேள்வி, தவவேள்வி, செபவேள்வி, தியானவேள்வி, ஞானவேள்வி யென்னும் ஐந்தனுள் ஞானவேள்வி ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என ஐந்துவகைப்படும்; அவற்றுள் சிந்தித்தலாவது ஏனைநான்குவேள்விகளைப்போலப் போகத்தையூட்டாது வீட்டையடைவித்தலால் அறிவுமயமா மின்பமெய்வேலையிடைவீழ்ந்தார் என்றார். அரசனழைக்கவந்தனர் என "நரியினிற்றொகுதியெல்லாம் நற்பரித்திரள்களாக்குஞ் - சரியையைக்கொண்மினென்னத் தாடொழுதவர்களோடி - இருபிறப்புடையராகியினிப்பிறப்பில்லார்தம்மை - விரைவினிற்குறுகிநம்மையழைத்தனன்வேந்தனென்றார்" என வாதவூரடிகள்புராணத்தில் வருதல் காண்க. (௬௨)

வந்தவரைச்செவந்தவிழிப்பொறிசிதறக்கடுகடுத்துமறவோனோக்கி
யந்தமிலாப்பொருள்கொடுபோய்நல்லவயப்பரிகொடுவந்தழகிதாகத்
தந்தனையன்றோவரசகருமமுடித்திசைநிறுத்தத்தக்கோர்நின்போ
லெந்தவுலகுளரேயோவெனவெகுண்டானதுகேட்டவீசன்றொண்டர்.

(இ-ள்.) வந்தவரை-வந்த வாதவூரடிகளை, மறவோன் செவந்த விழி பொறி சிதற கடுகடுத்து நோக்கி - பாண்டியன் கோபத்தழலால்செவந்தகண்களினின்றுந் தீப்பொறிசிந்தச் சினமுறுகிப்பார்த்து, அந்தம் இல்லாத பொருள் கொடு போய் - எல்லையில்லாதபொருளை யெம்மிடத்தினின்றுங் கொண்டுபோய், நல்ல வயம் பரி கொடு வந்து அழகிதாக தந்தனை அன்றோ - இலக்கணமமைந்த வெற்றிவாய்ந்த குதிரைகளைக்கொண்டுவந்து அழகாகக் கொடுத்தாயல்லவா, அரச கருமம் முடித்து இசை நிறுத்த தக்கோர் நின்போல் எந்த உலகு உளரேயோ என்ன வெகுண்டான் - இராசகாரியத்தை முடித்துப் புகழைநிறுத்த நின்னைப்போலத் தக்கவர்கள் எந்தவுலகிலிருக்கின்றார்களென்று கோபித்தான், அது கேட்ட ஈசன் தொண்டர் - அதனைக் கேட்ட சிவபிரானடியவர்.

இது புகழ்வதுபோலப் பழித்திறங்கூறுதலால் இலேசவணி. (௬௩)

குற்றமேதப்புரவிக்கெனக்கேட்டார்கோமகனுங்குற்றமேது
மற்றதாலரையிரவினரியாகியயனின்றபுரவியெல்லாஞ்

Koviloor Digital Library

செற்றுவார்குருதியுகநிணஞ்சிதறக்குடர்பிடுங்கித்தின்றுநேர்வந்
துற்றபேர்க்கூற்றமிழைத்தூர்கலங்கக்காட்டகத்திலோடிற்றன்றே.

(இ-ள்.) அ புரவிக்கு குற்றம் ஏது என்ன கேட்டார் - வந்த அக்குதிரைகளுக்குக் குற்றம் யாதென்றுவினவினர், கோமகனும் - பாண்டியனும், அரை இரவில் - நடுச்சாமத்தில், நரி ஆகி - நரிகளாகி, அயல் நின்ற புரவி எல்லாம் வார் குருதி உக நிணம் சிதற செற்று - பக்கத்தில்நின்ற குதிரைகளையெல்லாம் மிகவும் உதிரஞ்சிந்தவும் நிணஞ்சிந்தவுங்கொன்று, குடர் பிடுங்கி தின்று நேர் வந்துற்றபேர்க்கு கூற்றம் இழைத்து - குடல்களைப் பிடுங்கித்தின்று எதிர்வந்தோர்க்குத் துன்பஞ்செய்து, ஊர் கலக்க காட்டகத்தில் ஓடிற்று - ஊரிலுள்ளோர் நிலைகலங்கக் காட்டிலோடின, (அதனால்) குற்றம் ஏதும் அற்றது - குற்றங்கூறச் சிறிதுமில்லாதனவென்று.

புரவிசாதி யொருமை. இதுவும் அவ்வணி. (௪௪)

கண்ணுமிடுகவசமும்போற்காரியஞ்செய்தொழுகியதுங்காலம்பார்த்தெம்
மெண்ணரியநிதியீட்டங்கவர்வதற்கோநின்னமைச்சினியற்கைநன்றாற்
புண்ணியவேதியர்மரபிற்பிறந்தனமென்றொருபெருமைபூண்டாயேநீ
பண்ணியகாரியம்பழுதுபிறராகிற்றண்டிக்கப்படுவரென்றான்.

(இ-ள்.) கண்ணும் இடு கவசமும்போல் காரியம் செய்து ஒழுகியதும்-என் கண்ணையும் மேனியின் கவசத்தையும்போல என் அரசகாரியத்தை முட்டின்றி முடித்து இதுகாறும் நடந்ததும், காலம் பார்த்து - சமயம் பார்த்து, எம் எண்ணரிய நிதி ஈட்டம் கவர்வதற்கோ - எமது எல்லையில்லாத பொருட்குப்பையைக் கொள்ளை கொள்வதற்கோ, நின் அமைச்சின் இயற்கை நன்று - உன் அமைச்சிலக்கணம் நன்றாயிருந்தது, புண்ணியம் வேதியர் மரபில் பிறந்தனம் என்று ஒரு பெருமை பூண்டாயே - வேதமோதுதல் முதலிய நல்லொழுக்கம் வாய்ந்த அந்தணர் மரபிற் பிறந்தோமென்று ஒரு பெருமையையும் பூண்டாயே, நீ பண்ணிய காரியம் பழுது - நீயோ செய்த காரியம் பெரும்பழுது, பிறர் ஆகில் தண்டிக்கப்படுவர் என்றான் - ஏனை வருணத்தாராயி னொறுக்கப்படுவரென்று கூறினான்.

என் முதாதைதொட்டு ஈட்டிய பொருளென்பான் எம் எண்ணரிய நிதி யீட்டம் எனவும், நீ கொண்ட பெருமை, சிறுமை யென்பான் இகழ்ச்சிக்குறிப்பில்வந்த ஏகாரந்தந்து பெருமைபூண்டாயேயெனவும், அந்தணரை அரசனொறுத்தல் மநுநூல் முறையன்று என்பான் பிறராகில் தண்டிக்கப்படுவரென்றான் எனவுங் கூறினானெனக் கூறினார் "தன்னெறியில்வழுவினோர்க டமக்குறுதுயரஞ்செய்தல்-வன்றிறலரசர்நீதி யயின்மறைவல்லாளர் - சென்றுயர்தவத்தினிற்போர் தெரிவையர்விருத்தர்பாலர்- என்றிவர்க்குறுகண்செய்த லெம்மனோரியல்பன்றென்று" என வாதவூரடிகள் புராணத்திலும் வருதல் காண்க. (௪௫)

தண்டலாளர்களிவனைக்கொடுபோய்நம்பொருண்முழுதுந்தடுத்துமீர்
த்தும், மிண்டுமல்வலிசெய்தும்வாங்குமெனவெகுண்டரசன்விளம்பக்கூ
ற்று, மண்டுமேன்மறஞ்செய்யும்வலியுடையார்கதிரையிருளடுத்துப்பற்றி
க், கொண்டுபோதலென்னக்கொடுபுறம்போயறவோனைக்கொடுமைசெ
ய்வார்.

(இ-ள்.) தண்டலாளர்கள்-பொருள் தண்டுவோர்கள், இவனை கொடுபோய்-இவனைக் கொண்டுசென்று, நம் பொருள் முழுதும் - நமது பொருள் முற்றும், தடுத்

Koviloor Digital Library

தும் ஈர்த்தும் - எவ்வினையிலுஞ் செல்லாமல் தடைசெய்தும் இழுத்தும், மிண்டினால் வலிசெய்தும் வாங்கும் என - உங்கள் ஆணையினின்றும் தவறினால் வருத்தியும் வாங்குங்களென்று, அரசன் வெகுண்டு விளம்ப - பாண்டியன் கோபித்துக்கூற, கூற்றும் மண்டுமேல் மறம் செய்யும் வலியுடையார் - இயமனும் போர்க்கு வருவானாயில் போர்செய்யும் வன்மையையுடைய அத்தண்டலாளர்கள், கதிரை இருள் அடுத்து பற்றிக்கொண்டு போனால் என்ன - சூரியனை யந்தகாரம் நெருங்கிப் பற்றிக்கொண்டு போனாற்போல; கொடு புறம்போய் - கொண்டு புறத்தே சென்று, அறவோனை கொடுமை செய்வார் - வாதவூரடிகளை வருத்துவாராயினார்கள்.

கூற்றும் உம்மை உயர்வு சிறப்புப்பொருட்டு. கதிரை யிருளடுத்துப் பற்றிக்கொண்டு போனாலென்ன இல்பொருளுவமையணி. தடுத்து என்றமையால் கிறியேற்றினின்றுந் தப்பாது நிறுத்துதல் "தண்டல்செய்வன்கணாளர் தங்களைநோக்கிநங்கண் - கண்டிடமுன்னில்லாமற் கடிதினிவற்கொண்டேகி - மண்டழல்வெயிலினூடு வளைப்பினிறுத்திநம்பாற் - கொண்டுளதனங்களெல்லாங் குறைவறவாங்குமென்றான்" எனவரும் வாதவூரடிகள் புராணத்திற் காண்க. (௬௬)

கதிர்நோக்கிக்கனன்மூட்டுங்கடும்பகலுச்சியிலிரவிக்கடவுணேர்நின்
றெதிர்நோக்கநிலைநிறுத்திக்கரங்களிலுநுதலிலுங்கல்லேற்றிச்செந்தீப்
பிதிர்நோக்கத்தவரொறுப்பவாற்றாராய்வீழ்ந்திருளைப்பிளப்போன்செந்தீ
மதிநோக்கத்தனிச்சுடரையழைத்தழுது துதிசெய்வார்வாதவூரார்.

(இ-ள்.) கதிர் நோக்கி - (தண்டலாளர்கள்) சூரியனை நோக்கி, கனல் மூட்டும் கடும் பகல் உச்சியில் - வெப்ப மூட்டும் கடிய உச்சிப்போதில், இரவிக்கடவுள் நேர்நின்று எதிர் நோக்க நிலைநிறுத்தி - அச்சூரியனை நேரில் நின்று வாதவூரடிகள் எதிரே நோக்கக் கிற்றில் நிறுத்தி, கரங்களிலும் நுதலிலும் கல் ஏற்றி - கைகளிலும் நெற்றியிலும் கல்லினை யேற்றி, செந்தீ பிதிர் நோக்கத்தவர் ஒறுப்ப ஆற்றார் ஆய் வீழ்ந்து - செவந்த நிப்பிதிரைச்சிந்தும் கண்களையுடையவர் தண்டிக்கப்,பொறாதவராய் விழுந்து, இருளைப் பிளப்போன் செந்தீ மதி நோக்கம் தனிசுடரை அழைத்து அழுது - சூரிய சந்திரர் அக்கினியென்னும் கண்களையுடைய ஒப்பில்லாத பேரொளியை யழைத்தழுது, வாதவூரார் துதிசெய்வார் - வாதவூரடிகள் துதிசெய்வாராயினார். (௬௭)

கொச்சகக்கலிப்பா.

நாதவோநாதமுடிவிறந்தநாடகஞ்செய்
பாதவோபாதகனுமென்னைப்பணிகொண்ட
வேதவோவேதமுடிவின்விளைந்ததனிப்
போதவோபோதநெறிகடந்தபூரணவோ.

(இ-ள்.) நாத ஓ - நாததத்துவத்திலுள்ளவனே, நாதமுடிவு இறந்த நாடகம் செய்பாத ஓ - நாததத்துவத்தைக்கடந்த திருநடனஞ்செய்யுந் திருவடிகளையுடையவனே, பாதகன் ஆம் என்னை பணிகொண்ட - பாதகனாகிய வென்னையுந் தன் பணியினிறுத்திய, வேத ஓ - வேதவடிவாயுள்ளவனே, வேதமுடிவின் விளைந்த தனிபோத ஓ - வேதசிரசில் விளைந்த ஒப்பில்லாத போதவடிவாயுள்ளவனே, போதம் நெறி கடந்த பூரண ஓ - அப்போத நெறியையுங் கடந்துநின்ற பூரணவடிவாயுள்ளவனே.

பிரபஞ்சத்தோற்றவுக்கு நாததத்துவம் சிவத்திற்குத் திருமேனியாதலால் உயிர்களைப் பெத்தத்திற் செலுத்தும் ஊனநடனமுடையாய் என்பார் நாதவோவெ

Koviloor Digital Library

னவும், அப்பெத்தத்தைக்கழற்றி முத்தியில்விடுக்கும் ஞானநடனமுடையாய் என்பர் நாதமுடிவிறந்தநாடகஞ்செய்பாதவோ வெனவும், ஒழுக்கமுதலிய தன்பணிப திறனையும் ஆன்மாக்களுய்ய வேதவாயிலாக வருளினவன் என்பார் என்னைப்பணிகொண்டவேதவோ எனவும், அப்பணிகளில் நின்றோர்க்கு அபரஞானங் கைகூடும் என்பார் வேதமுடிவின்விளைந்தவிப்போதவோ எனவும், அவ்வேத வுணர்ச்சியால் பரஞானங்கூடவருள்வோன் என்பர் போதநெறிகடந்தபூரணவோ வெனவும் கூறினர். வேதமே ஆகமமும் ஆகமமே வேதமுமாக நிற்றலால் வேதம் எனவும், திருவருண்ஞானத்தை யுணர்த்துவது ஆகமமுடிவாதலால் வேதமுடிவெனவுங் கூறினர். சுத்தத்துவஞ் சிவத்திற்குத் திருமேனியென்றது "வித்தையோடீசர்சாதாக்கியஞ் சத்திசிவங்களைந்தும் - சுத்ததத்துவஞ்சிவன்றன் சுதந்தரவடிவமாகும்" எனவும், சிவபணியென்றது "ஒழுக்கமன்பருளாசாரமுபசாரமுறவுசீலம் - வழுக்கிலாத்தவந்தானங்கள் வந்தித்தல்வணங்கல்வாய்மை - அழுக்கிலாத்துறவடக்கமறிவொடர்ச்சித்தலாதி - இழுக்கிலாவறங்களானாலிரங்குவான்பணியறங்கள்" எனவும் சிவஞானசித்தியாரில் வருதல்காண்க. (௪௮)

ஐயவோவென்னுடையவன்பவோவன்பர்க்கு
மெய்யவோமெய்யில்வினையேன்றலைவைத்த
கையவோசெய்யகழற்காலவோகாலனைக்காய்
செய்யவோவேதப்பரியேறுஞ்சேவகவோ.

(இ-ள்.) ஐய ஓ - ஐயனே, என் உடைய அன்ப ஓ - என்னுடைய தலையன்பாயுள்ளவனே, அன்பர்க்கு மெய்ய ஓ - தலையன்பினையுடைய அடியார்களுக்குஉண்மைநிலையருள்வோனே, மெய் இல் வினையேன் தலை வைத்த கைய ஓ - மெய்நெறியில்லாத வினையிற்கட்டுண்ட புன்மையேன் சிரத்தில் சையோகஞ்செய்த திருக்கரத்தையுடையவனே, செய்ய கழல் கால ஓ - செவந்த வீரகண்டைகட்டிய திருவடியையுடையவனே, காலனை காய் செய்ய ஓ - இயமனை யுதைத்தருளிய செந்நிறமுடையவனே, வேதம் பரி ஏறும் சேவக ஓ - வேதப்புரவியின்மேல் வந்தருளிய சேவகனே.

அன்பர்க்குத் தன்னிலையருளி யின்பமருள்வோன் ஆதலால் அன்பர்க்கு மெய்யவோ எனவும், தமக்கருளியகாலத்திலருள்கூர்ந்த திக்கைகளாதலால் வினையேன் றலைவைத் தகையவோ செய்யகழற்காலவோ வெனவும், தம்மையடைந்தோர்க்குப் பிறரால்வருந் துன்பங் களைவோனாதலால் காலனைக்காய்செய்யவோ வேதப்பரியேறுஞ்சேவகவோ வெனவுங்கூறினர். "அளிபவருள்ளத்தமுதேபோற்றி" எனவருந் திருவாசகத்தால் உணர்க. (௪௯)

அத்தவோகல்லாக்கடையேனையாட்கொண்ட
பித்தவோபொய்யுலகைமெய்யாகப்பேதிக்குஞ்
சித்தவோசித்தந்தெளிவித்தெனைத்தந்த
முத்தவோமோனமயமானமூர்த்தியவோ.

(இ-ள்.) அத்த ஓ - எப்பொருட்கும் இறைவனே, கல்லாத கடையேனை ஆட்கொண்ட பித்த ஓ - நினக்கு அன்புசெய்தலைச் சிறிதும் பழகியறியாத கடைப்பட்ட என்னையும் அடிமைகொண்டபித்தனே, பொய் உலகை மெய் ஆக பேதிக்கும் சித்த ஓ - ஆன்மாக்களுக்குப் பக்குவம்வருவிக்கப் பொய்யாகிய அவனவாறவென்றும் பிரபஞ்சத்தை மெய்ம்மையாகப் பேதித்து விளைக்குந் தலைமட்டுஞ் சித்தனே, சித்தம்

Koviloor Digital Library

தெளிவித்து - (அப்பெத்தமயக்கினின்றுநீக்கி) அடியேன் மனந் தெளியச்செய்து, எ ன்னை தந்த முத்த ஓ - என்னியலையுணரவருளிய முத்தனே, மோன மயம் ஆன மூர் த்திய ஓ - மௌனவடிவாகிய மூர்த்தியே.

பிரமன்முதலிய பல்லுயிர்களும் பரதந்திரர்களாதலால் அவர்களுக்குச் சுதந் திரனே இறைவனுவானுதலால் அத்தவோ எனவும், தேவர்கள் வருந்திநிற்கத் தன் னையோர்பொருட்படுத்தி யாண்டமையால் கடையேனையாட்கொண்ட பித்தவோ எ னவும், பெத்தம் அருளுதல் முத்திக்கு ஏதுவாதலால் பொய்யுலகை மெய்யாகப் பே திக்குஞ்சித்தவோ எனவும்,சாதாரத் திருவுருக்கொண்டுவந்தருளி ஆன்மதரிசனமும் ஆன்மசுத்தியும் ஆன்மலாபமும்பெற அருளினமையால் சித்தந்தெளிவித்தெனையாண் டமுத்தவோ எனவுங்கூறினர். ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, ஆன்மலாபம் என்றது "மன்னருடன்னின்மன்னுயிர்மன்றுதல் - இன்னுயிர்த்தரிசனமென்பர்நல்லோர் - சு த்திதன்போதந்தோன்றாதிருக்கை - அத்தகுமிலாபநேயத்தழுந்தல்" எனவரும் உரு பசொருபவகவலிற்காண்க. ஓ முறையீட்டில்வந்த இடைச்சொல். (ருo)

ஒருபோகுகொச்சகக்கலிப்பா.

என்றேறியபுகழ்வேதியரிரங்குந்துதிசெவியிற்
சென்றேறலும்விடையேறுசுந்தரன்மற்றிவர்செயலை
மன்றேறவுமுடிமேனதிமண்ணேறவுமுதியா
ளன்றேறியதேரோடும்விண்ணடைந்தேறவுநினைந்தான்.

(இ-ள்.) என்று ஏறிய புகழ் வேதியர் - என்று புகழ்நிறைந்த வாதவூரடிகள், இரங்கும் துதி - அழுது முறையிடுந் துதி, செவியில் சென்று ஏறலும் - தமது திருச் செவியூடுசென்றடைய, விடை ஏறு சுந்தரன் - இடபவூர்தியி லாரோகணித்தருளும் சோமசுந்தரக்கடவுள், இவர் செயல் மன்று ஏறவும் - இவ்வாதவூரடிகள் தம்மைச் சரணடைந்த செய்தி பலரும் அறியவும், நதிமுடிமேல் மண் ஏறவும் - கங்கையை யணிந்த சடாமுடியின்மேல் மண் சுமையேறவும், முதியாள் அன்று ஏறிய தேர் ஓடும் - பிட்டுவாணிபஞ் செய்யு முதியவளாகிய வந்தி அக்காலையி லேறிய விமான மோடும், விண் அடைந்து ஏறவும் - சிவபுரத்தையடையச் செல்லவும்,நினைந்தான்- திருவுளத்திற் கருதினர்.

அடைந்து செயவெ னெச்சத்திரிபு - மற்று அசைநிலை. (ருக)

கங்கைப்புனல்வடிவாகியகௌவைத்திரைவையைச்
சங்கச்சரியறலாமலர்த்தாரோதியைநோக்கா
வங்கக்கடல்பேரூழியில்வருமாறெனவெவரு
மிங்கற்புதமடையப்பெருகென்றானருள்குன்றான்.

(இ-ள்.) கங்கை புனல் வடிவு ஆகிய கௌவைதிரைவையை - தமது திருமு டியிலுள்ள கங்கைநீரின் வடிவான முழக்கத்தையுடைய அலைகள் எறியும் வையை நதியாகிய, சங்கம் சரி - சங்கமேவளையலாகவும், அறல் ஆம்மலர்தார் ஓதியை நோக்கா - கருமணலே மலர்மாலையையணிந்த கூந்தலாகவுமுடைய மங்கையைப் பார்த்து, வங்கம் கடல் பேர் ஊழியில் வரும் ஆறு என - மரக்கலமூருங்கடல் மகா பிரளயகாலத்தில் நிலைபெயர்ந்து வரும் வகைபோல, இங்கு எவரும் அற்புதம் அடைய - இந்நிலவுலகி லெவரும் வியப்படைய, அருள் குன்றான் பெருகு என்று ன் - அடியாரிடத்திற் கருணை சிறிதுங் குன்றாத இறைவர் பெருக்கெடுத்து வருவா யென்றருளினர்.

Koviloor Digital Library

குண்டோதரன் நீர்வேட்கை தணித்தற்பொருட்டுத் தமது சடாமுடியிலுள்ள கங்கையை நிலவுலகில் ஓர் நதியாகவர அருளினமை முன்னர் அன்னக்குழியையும் வையையையும் அழைத்த திருவிளையாடலிற் கூறியிருத்தலால் கங்கைப்புனல் வடிவாகிய கௌவைத்திரைவையை என்றார். (௫௨)

தும்பைச்சடைமுடியானொருசொல்லாட்வுமுன்னாள்
வம்பைப்பொருமுலையால்வரிவளையால்வடுவழுத்துங்
கொம்பைத்தவங்குலைப்பானடுங்கோபங்கொடுநடக்குங்
கம்பைப்பெருநதியிற்கடுங்கதியால்வரும்வையை.

(இ-ள்.) தும்பை சடை முடியான் ஒரு சொல்லாடவும் - தும்பைமலர்மாலையை யணிந்த சடாமுடியையுடைய சோமசுந்தரக்கடவுள் பணித்தருளவும், முன்னாள் - முற்காலையில், வம்புஐ பொருமுலையால் வரிவளையால் வடு அழுத்தும் கொம்பை - கச்சொடுபோர்செய்யு முலைகளாலும் வரியமைந்தவளைகளாலும் வடுச்செய்த பூங்கொம்பு போன்ற உமையாரை, தவம் குலைப்பான் - இடப்பாகம்பெற முயலும் தவத்தைக் குலைக்க, அடுங்கோபம் கொடு நடக்கும் கம்பை பெருநதியில் - வருத்தக் கோபங்கொண்டு நடக்குங் கம்பையென்னும் பெரிய நதியைப்போல, வையை கடுங்கதியால் வரும் - வையை நதி மிக்க வேகத்தோடு வாரா நிற்கும்.

கம்பை மூன்றாமுருபு நிற்குமிடத்து இரண்டாமுருபு நிற்றலால் உருபு மயக்கம். கடு உரிச்சொற்றிரிபு. தற்புருடகற்பத்தில் பிரமன் வேண்டுகோளால் தக்கன் மகளாகி, அவ்வியல்பருவருத்து இமயமலையரசன் தவத்தால் திருமகளாய்ச் சிவபெருமானை மணந்து மந்தர பருவதத்திலெழுந்தருளி யிருக்குங் காலையில், அவ்விறைவர் பின்னேவந்து திருக்கண்புதைத்தருள, சந்திர சூரியரியக்கமாறுதலா லுலகிருண்டு பல்லூழிக்காலம் சிருட்டியாதியாகிய தொழில் மாறுதலால், அவ்விறைவியார் திருமுகத்தைநோக்கித் தவறு நினைக்குவந்தது, இதற்குத் தீர்வு காஞ்சித்திருப்பதியில் எம்மைப் பூசிக்கவேண்டுமென இறைவரருள, அப்பணிமேற் கொண்டங்குச் சென்று அப்பெருமானைக் கம்பாநதியிற் பூசித்தொழுகுநாளில், அவ்விறைவர் அவ்விறைவியார் அன்பை ஆராய்தற்பொருட்டு மகாபிரளயம்போலப் பெரு வெள்ளம் பெருகிவரக்கருதினர், அவ்வாறே வர அவ்விறைவியார் துணுக்குற்றுத் தாம்கோலிய இறைவர்மேல் இவ்வெள்ளம் வருமேயென்று மனநிலைகலங்கி யவ்விறைவரைத் தழுவினர் எனக் காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலத்தில் "ஒருகோடியெழுந்த செம்பேறுயர்வரைக்குவடுதன்னை - இருகொழுந்திருபாற்போக்கித்தழீஇ பெருவெழுந்தவல்லே - முருகவேள்வேதியும்பர்த்தன் வலமுழந்தாளூன்றிக் - கருமணிப்பாவையன்னாள் கணவனைத்தழுவிக்கொண்டாள். மணிமுலைக்குவட்டினோடு வளைக்கையாநெருக்கிப்புல்லித் - தணிவருங்காதல்விம்மக் காதலிதழுவலோடுந் - திணிபிருளறக்குஞ்சோதி திருவுருக்குழைந்தகாட்டி - அணிவளைத்தழும்பினோடு முலைச்சுவடணிந்தகோயர்" எனவருஞ் செய்யுள்களா லுணர்க. (௫௩)

பத்திக்குளிர்கமுகின்குலைபரியக்கனைமுரியக்
குத்திப்பழஞ்சிதறச்செறிகோட்டங்களைவிட்டி
முத்திக்கொடுகதலிப்புதன்முதுசாலிகள்பரித்துத்
தத்திப்பலதருவேரொடுந்தள்ளிக்கடுகியதே.

(இ-ள்.) பத்தி குளிர் கமுகு இன் குலைபரிய பழம் சிதற - வரிசையாயுள்ள கமுகுகளின் குலையினின்று நீக்கிப் பழங்கள்சிதறும்படி, கனைமுரியகுத்தி - கனை

Koviloor Digital Library

முரியமோதி, செறி கோட்டங்களை வீட்டி - இருபாலும் நெருங்கிய வயல்களையழித்து, கதலிபுதல் முந்தி கொடு - வாழைமரமாகிய புதலை முந்தி வாரிக்கொண்டு, முருசாலிகள் பரித்து - பெரிய நெற்போர்களை யகழ்ந்து சுமந்து, தத்தி - எங்குந் தவழ்ந்து, பல தரு வேர் ஒடும் தள்ளி கடுகியது - பலவிருட்சங்களை வேருடனே தள்ளி விரைந்து சென்றது.

பரிய செய்தெனெச்சத்திரிபு. முந்தி முத்தி வலித்தல்விகாரம் "குறுந்தாள்" என்றாற்போல. வாழையைப் புல் என்றது "புறக்காழனவேபுல்லெனப்படுமே என்ற சூத்திரத்திற்குப் பனையுந் தெங்குங் கமுகு முதலாயின புல்லெனப்படும்" என்றமையால். (௫௪)

பல்லாயிரஞ்செந்தாமரைபரப்பிக்கொடுவரலா
னல்லாயிரங்கண்ணனெழினயக்குங்குளிர்நளினங்
கல்லாரமுங்கடிமுல்லையுங்கரும்புங்கொடுவரலால்
வில்லாயிரங்கொடுபோர்செயும்வேள்வீரனுமானும்.

(இ-ள்.) பல் ஆயிரம் செந்தாமரை பரப்பி கொடுவரலால் - பலவாகிய ஆயிரம் செந்தாமரைமலர்களைப் பரப்பிக்கொண்டுவருகையால், நல் ஆயிரம் கண்ணன் எழில் நயக்கும் - அழகிய ஆயிரங் கண்களையுடைய இந்திரன் தோற்றத்தையொக்கும், குளிர் நளினம் - குளிர்ந்த தாமரையையும், கல்லாரமும் கடிமுல்லையும் கரும்பும் கொடுவரலால் - குவளையையும் வாசமமைந்த முல்லை மலரையும் கரும்பினையுமேந்திக்கொண்டு வருகையால், வில் ஆயிரம் கொடு போர் செய்யும் வேள் வீரனும் மானும் - அளவில்லாத வில்லுகளையேந்திப் போர்செய்யும் மன்மதனையு மொக்கும்.

தாமரை, குவளை, முல்லை மன்மதனுக்குப் பாணங்களும் கரும்புவில்லும் ஆதலால் வேள்வீரனு மானும் என்றும். நயக்கும் உவமவாசகம். (௫௫)

மணிமாலையுமலர்மாலையுஞ்சிதறுவிறுமருங்கே
யணிகாஞ்சியுமொளிர்சங்குமலறப்புடையெறியாக்
கணியாவெழின்முகதாமரைகண்ணீரொடுகவிழத்
தணியாமுனிவுடனூடியதடங்கண்ணியர்போலும்.

(இ-ள்.) மணி மாலையும் மலர் மாலையும் சிதறு—மாணிக்கமாலையினையும் மலராலாகிய மாலையினையுஞ் சிதறி, இறுமருங்கு ஏ - தன்னாலுடைந்த கரைகளின் பக்கத்தே, அணி காஞ்சியும் ஒளிர் சங்கமும் அலற - வரிசைபட நிற்குங் காஞ்சிவிருட்சங்களும் விளங்குஞ் சங்குகளுமொலிக்க, புடை எறியா - பக்கங்களில் வீசி, கணியா எழில் முக தாமரை கண்ணீரொடு கவிழ - அளவிடுதற்கு அரிய அழகுவாய்ந்த முகம்போன்ற தாமரைமலர்கள் கள்ளாகிய நீரைச் சிந்த வருகையால் (அவ்வெள்ளம்) மணிமாலையும் மலர்மாலையும் சிதறு (தங்கணவர்கலவியிற்பூட்டிய) முத்தமாலையையும் பூமாலையையுங் கழற்றிவீசி, இறுமருங்கு ஏ - முறியுமிடையில், அணி காஞ்சியும் - அணிந்த காஞ்சியென்னும் ஆபரணமும், ஒளிர் சங்கமும் - விளங்கும் வளையலும், அலற - ஒலிக்க, புடை எறியா - பக்கத்தில் வீசி, கணியா எழில் - அளவுசெய்தற்கு அரிய பொலிவு, முக தாமரை - முகமாகிய தாமரையினின்று, கண்ணீரொடுகவிழ - கண்ணீரோடுசிந்த, தணியாத முனிவு உடன் ஊடிய தட கண்ணியர் போலும் - (கணவர்) ஆற்றுதற்கரிய கோபத்தோடு ஊடிய பரந்த கண்ணையுடைய பெண்களையொக்கும்.

Koviloor Digital Library

இது செம்மொழிச் சிலேடையுருவகவணி. முன்னதற்கு ஒடு உருபு மயக்கமாகக் கொள்க. (ருசு)

வரையுந்தியமதுமுல்லையினெய்பாறயிர்மருதத்
தரையுந்தியகரும்பின்குறைசாறோடுவரன்றி
யிரையுந்தெழுநீர்வையையிந்நன்னகர்வைகுந்
திரையுந்தெழுகடறம்மிடஞ்சென்றாலதுபோலும்.

(இ-ள்.) வரை உந்திய மது - குறிஞ்சி நிலத்தில் மலிந்த தேனையும், முல்லையின் நெய் பால் தயிர் - முல்லைநிலத்திலுள்ள நெய்யையும் பாலையுந் தயிரையும், மருதத் தரை உந்திய கரும்பு இன் குறை சாறு ஒடு வரன்றி - மருதநிலந்தந்த கரும்பினைத் தகர்த்துக்கொண்ட பாகோடுவாரி, இரை உந்து எழு நீர் வையை - ஒலித்துக் கரையொடுமோதி எழுந்த புனிதமான நீர்மயமாகிய வையைநதியானது, இ நல் நகர் வைகும் திரை உந்து எழு கடல் - இந்த அழகிய மதுரைத் திருநகரில் நிலைபெற்ற அலை வீசியெழும் எழுகடல்களும், தம் இடம் சென்றால் அதுபோலும் - தத்தமக்குரிய இடத்தை நாடிபெயர்ந்து செல்லுஞ் செயலையொக்கும். (ருஎ)

கல்லென்றதிர்சும்மைப்புனல்கடிமாமதிற்புறம்போ
யில்லங்களுஞ்சிறுகுச்சிலுமறித்திட்டிருங்கடல்வாய்ச்
செல்லுங்கலநாவாய்பலதிமில்போற்சுமந்தேகிப்
புல்லும்புரிசையுந்தள்ளியுள்புகுகின்றதையன்றே.

(இ-ள்.) கல்லென்று அதிர் சும்மை புனல் - கல்லென்றொலிக்கும் ஆரவாரத்தையுடைய வையைப்பெருக்கு, கடி மா மதில் புறம் போய் - காவல்பூண்ட பெரிய மதிலின்புறத்தேபோய், இல்லங்களும் சிறு குச்சிலும் மறித்திட்டு - வீடுகளையுஞ் சிறுகுடிசைகளையுங் கீழ்மேலாகப் பெயர்த்து, இருங் கடல் வாய் செல்லும் கலம் நாவாய் பல திமில் போல் சுமந்து ஏகி - பெரியகடலிற்செல்லும் மரக்கலங்களையும் உருக்களையுந் தோணிகளையும்போலச் சுமந்துசென்று, புல் உம் புரிசை உம் தள்ளி - கமுகு தெங்கு முதலியவற்றையும் மதிலையுந்தள்ளி, உள் புகுகின்றது - உள்ளேபுகாநின்றது. (ருஅ)

மறுகும்பலபொருளாவணமணிவீதியுமன்றுஞ்
சிறுகுங்கணமதமாநிரைசேருந்தெருவும்போய்
முறுகுஞ்சினமொடுதெண்டிரைமுரிப்புனறாவிக்
குறுகும்படிகண்டஞ்சினர்கொடிமாநகருள்ளார்.

(இ-ள்.) தெண் திரை முரி புனல் - தெள்ளிய அலையையுடைய வையையென்னும் பெருவெள்ளம், மறுகும் - வீதிகளிலும், பல பொருள் ஆவணம் மணி வீதியும் - பலபண்டங்கள் நிறைந்த அழகிய கடைவீதிகளிலும், மன்று உம் - அம்பலங்களிலும், சிறுகும் கண் மத மா நிரை சேரும் தெருவும் தாவி போய் - சிறுகிய கண்களையுடைய யானைகளின்பந்திகள்சேர்ந்த தெருவிலுந் தாவிச்சென்று, முறுகும் சினமொடு - கன்றியகோபத்தோடு, குறுகும்படி - வரும்வகையை, கொடி மா நகர் உள்ளார் கண்டு அஞ்சினர் - துவசக்கட்டிய பெரியநகரிலுள்ளவர்கள் பார்த்து அஞ்சினார்கள். (ருகூ)

சிலர்மைந்தரையெடுப்பார்களுஞ்சிலர்மைந்தரைக்காணா
தலமந்தழுவாருஞ்சிலரங்கைத்தளிர்பற்றிக்
குலமங்கையர்தமைக்கொண்டுய்யப்போவார்களுங்குறுகுந்
தலமெங்கெனத்திகைப்பார்களுந்தடுமாறுகின்றாரும்.

Koviloor Digital Library

(இ-ள்.) சிலர் மைந்தரை எடுப்பார்களும் - ஒருபாற் சிலபேர்பிள்ளைகளையெடுப்பவர்களும், சிலர் மைந்தரை காணாது அலமந்து அழுவாரும் - ஒருபாற் சிலபேர் பிள்ளைகளைக்காணாமல் சுழன்றழுவார்களும், சிலர் குலமங்கையர் தம்மை அங்கை தளிர் பற்றிகொண்டு உய்ய போவார்களும் - ஒருபாற் சிலபேர்கள் தமது மனைக்கிழத்தியரை அழகிய கையாகிய தளிரைப்பற்றி யழைத்துக்கொண்டு பிழைக்கத்தப்பிப் போவார்களும், சிலர் குறுகும் தலம் எங்கு என்ன திகைப்பார்களும் - ஒருபாற் சிலபேர்கள் அடையுமிடம் எங்கேயென்று மயங்குவார்களும், சிலர் தமோறுகின்றாரும் - ஒருபாற் சிலபேர்கள் எவ்வாறுய்வோமெனத் தமோறுகின்றவர்களும். (சுo)

பொன்னுள்ளனபணியுள்ளனபொருள்பேணல்செய்வாரு
மன்னுஞ்சிலபொருள்கைக்கொளமறப்பார்களுமாட
மின்னுங்கொடிநெடுமாளிகைமேலேறுகின்றாரு
மிந்நன்னகர்துயர்மூழ்குதற்கேதேதுவென்பாரும்.

(இ-ள்.) பொன் உள்ளன பணி உள்ளன - உள்ளநிதிகளும் உள்ள ஆபரணங்களுமாகிய, பொருள் பேணல் செய்வாரும் - பொருள்களைப் பாதுகாப்பவர்கள் ஒருபாலும், மன்னும் சில பொருள் கைக்கொள மறப்பார்களும்-நிலைபெற்ற இன்னுஞ் சிலபொருள்களைக் கைக்கொண்டுபோக மறப்பவர்களொருபாலும், மாடம் மின்னுங் கொடி நெடு மாளிகைமேல் ஏறுகின்றாரும் - வீடுகளில்விளங்குங் கொடிகட்டிய நெடிய உபரிகைகளின்மே லேறுகின்றவரொருபாலும், இ நல் நகர் துயர் மூழ்கு தற்கு ஏது ஏது என்பாரும் - இந்த அழகியநகரம் துன்பத்திலழுந்துவதற்குக் காரணம்யாது என்றுசொல்வாரொருபாலும்.

அச்சத்தால் எல்லாப்பொருள்களையுங் கைக்கொண்டிலரென்பார் சிலபொருள்கைக்கொளமறப்பார்கள் எனக்கூறினர். நகர் இடவாகுபெயராய் நகரிலுள்ளவர்மேல் நின்றது. (சுக)

நேற்றும்பரிநரியாயினநெடுமாநகரெங்கு
மூற்றஞ்செய்தவென்பார்களுமொருகாலமுமிந்த
வாற்றின்பெருக்கிலையென்றயர்வாருங்கடலரசன்
சீற்றங்கொடுமுன்போல்வருஞ்செயலேகொலென்பாரும்.

(இ-ள்.) நேற்றும் பரி நரி ஆயின - நேற்றைப்பொழுதும் குதிரைகள் நரிகளாய், நெடுமா நகர் எங்கும் ஊற்றம் செய்த என்பார்களும் - நெடிய பெரிய இந்நகர்முற்றிலும் இடையூறு யாவர்க்குஞ் செய்தனவென்று சொல்வோரொருபாலும், ஒருகாலமும் இந்த ஆற்றின்பெருக்கு இல்லை என்று அயர்வாரும் - ஒருகாலத்திலும் இவ்வாறு ஆற்றுப்பெருக்கில்லையே யென்று சோருகின்றவர்களும், கடல் - கடலானது, அரசன் சீற்றம் கொடு - உக்கிரகுமார பாண்டியர் மேற் கோபங்கொண்டு, முன்போல் வரும் செயலே கொல் என்பாரும் - முன்போல் வந்து வருத்தியசெயலேயென்று ஒருபாற் சொல்வாருமாய். (சுஉ)

நங்கோமகன்செங்கோல்பிழைத்தனனோவெனநவில்வா
ரங்கோல்வளைபங்கன்விளையாட்டோவெனவறைவா
ரிங்காரிதுதணிப்பாரெனவிசைப்பாரிதுதணிப்பான்
பொங்காலமுண்டருள்சுந்தரனலதியாரெனப்புகல்வார்.

(இ-ள்.) நம் கோ மகன் செங்கோல் பிழைத்தனன் ஓ என நவில்வார் - நமதரசன் செங்கோல் தவறினனோவென்று சொல்வாரும், அம் கோல்வளை பங்கன்

Koviloor Digital Library

விளையாட்டு ஓ என அறைவார் - அழகிய கோல்போலத் திரண்ட வளையலையணிந் த உமாதேவியாரை யிடப்பாகத்திலுடைய பெருமான் திருவிளையாடலோ வெனக் கூறுவாரும், இது தணிப்பார் இங்கு ஆர் என்ன இசைப்பார் - இப்பெருக்கைத் தணி ப்பவர் இந்நிலவுலகில் யாருள்ளாரெனக் கூறுவாரும், இது தணிப்பான் - இப்பெ ருக்கினைத் தணிப்பவன், பொங்கு ஆலம் உண்டருள் சுந்தரன் அல்லது - கொதித் தெழுந்த விஷப்பெருக்கினை உண்டருளும் சோமசுந்தரப்பெருமானன்றி, யார் என்ன புகல்வார் - எவருள்ளாரென்று சொல்லுகின்றவரும்.

கழிந்ததற்கு இரங்கிக்கூறுகின்றமையால் கழியும்பொருளில்வந்த ஓகாரந் தந்து நங்கோமகன் செங்கோல் பிழைத்தனனோவென கவில்வாரெனவும், தம்மக்க ளிடத்துக் குற்றம் நிகழின் உடனே பொறுத்துத் தீர்க்குந் தாதைபோல, பாண்டியர் மரபிலுள்ளோரிடத்துக் குற்ற நிகழ்ந்துழி உடனே பொறுத்துத் தீர்க்கும் இறைவராத லால் தெரிநிலை ஓகாரந்தந்து அங்கோல்வளைபங்கன் விளையாட்டோவென வறை வார்.எனவும், அவன்முதலிய தேவர்கள் முறையிட்டால் அவர்கள் துன்பத்தை யொழித்தற்பொருட்டு விடப்பெருக்கையுண்டமைந்த இறைவரே யிப்பெருக்கைத் தணிவித்து நம்மையுய்விக்க வல்லரென்பார் இங்ஙனிது தணிப்பாரென விசைப்பா ரிது தணிப்பான். பொங்காலமுண்டருள் சுந்தரனலதியாரெனப் புகல்வாரெனவுங் கூறினாரென்றுர் என்க. (௬௩)

அடுத்தாயிரங்குண்டோதரரெதிரேற்றிருந்தகல்வாய்
மடுத்தாலுமிதடங்காதெனமதிப்பாரிதுதனையு
மெடுத்தாயிரமுககங்கையினிறைவன்சடையேறக்
கொடுத்தாலலதடங்காதிதன்கொடுங்கோபமதென்பார்.

(இ-ள்.) ஆயிரம் குண்டோதரர் அடுத்து எதிர் ஏற்றிருந்து அகல்வாய் மடுத் தாலும் - அளவில்லாத குண்டோதரர்களடுத்து எதிர் சென்று தடுத்துப் பாதலம் போல அகன்றவாயாற்பருகினாலும், இது அடங்காது என்ன மதிப்பார் - இப்பெரு க்கு அடங்காதென்று கருதுவாரும், இதுதனை உம் எடுத்து - இப்பெருக்கையும் எடு த்து, ஆயிரமுககங்கையின் - ஆயிரமுகங்களையுடைய கங்கையைப்போல, இறைவன் சடை ஏற கொடுத்தால் அல்லது அடங்காது இதன் கொடுங்கோபம் அது என்பார்- பெருமானார் தமது சடாடவியில் வசிக்க இடங்கொடுத்தாலன்றி இப்பெருக்கின் கொடியகோபம் சிறிதும் அடங்காதென்று ஒருபாற் கூறுவாரும்.


தம்மரபிலுள்ளோர் கர்ணபரம்பரையாற் கூறும் வரலாற்றினை யொருவாறு ணர்ந்தவராதலால் அடுத்தாயிரங் குண்டோதரரெதிரேற்றிருந்தகல்வாய் மடுத்தாலு மென்றனர் "உண்டற்குரியவல்லாப் பொருளை - உண்டனபோலக் கூறலுமரபே" என்ற சூ-இன் எதிரதுதழீஇய எச்ச உம்மையால் எடுத்தற்குரியதல்லாத பொருளை யும் எடுத்து என்றார். ஆயிரமும் ஆயிரந்துறைகள். (௬௪)

வானுறிழிநதியாயிரமுகத்தால்வருவதுபோ
லானதெழுநீத்தந்தணிபாவாறுகண்டன்பு
தானுமியசிவனன்பரையொறுக்குந்தறுகண்ணர்
போனார்தமதகத்தேயுளபொருள்பேறுதல்கருதா.

(இ-ள்.) வான் உற இழி நதி - ஆகாயத்தின் வழியின்றிழியுங் கங்கையான து, ஆயிரமுகத்து ஆல் வருவதுபோல் - ஆயிரமுகத்தோடுகூடி வருதல் போல, ஆனது எழு நீத்தம் - இடைபமுதெழுந்த நீர்ப்பெருக்கானது, தணியாத ஆறுகண்டு-

Koviloor Digital Library

Koviloor Digital Library



மாண்கமந்த திருவிளையாடல்.

Koviloor Digital Library

கடு நடை நீங்காதவளைகையைக் கண்டு, அன்புதான் ஆகிய சிவன் அன்பரை ஒறுக்கும் தறுகண்ணர் - தலையன்பேதானாய் நின்ற சிவபெருமானடியவரைத் தண்டிக்கும் மறவர்கள், தமது அகத்து எ உள்ள பொருள் பேணுதல் கருதாபோனர் - தமது வீட்டிலுள்ள பலவகைப்பொருள்களையும் பாதுகாத்தல் கருதிச்சென்றனர்கள்.

அன்பே சிவவடிவம் என்பது முன்னர்க்காட்டிய உதாரணத்தால் உணர்க.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வழுதிதன்றமர்விட்டேகமதுரைநாயகன்பாலேகி
யழுதிசைபாடுந்தொண்டிலகப்படும்பாதம்போற்றித்
தொழுதுகொண்டறிவாயூறுஞ்சுகப்பெருங்கடலின்மூழ்கி
யெழுதுசித்திரம்போன்மன்னியிருந்தனர்வாதவூரர்.

(இ-ள்.) வழுதிதன் தமர்விட்டு ஏக - பாண்டியனது பரிசனங்களாகிய தன்டலாளர்கள் கைவிட்டுப்போக, மதுரைநாயகன்பால் ஏகி - மதுரைத்திருநகரிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளிடஞ்சென்று, அழுது இசைபாடும் தொண்டில் அகப்படும் பாதம்போற்றி - அன்பாலழுது நெக்குருகித் திருப்பாசுரங்கள்பாடுந் தமது பணியிற்கட்டுண்ட திருவடிகளைத்துதித்து, தொழுதுகொண்டு - வணங்கி, அறிவாய் ஊறும் சுகம் பெருங்கடலில் மூழ்கி - ஐம்புலவுணர்ச்சியிற் சுரக்கும் பேரின்பசுகமாகிய அளத்தற்கரிய கடலில்மூழ்கி, வாதவூரர் எழுதுசித்திரம்போல் மன்னி இருந்தனர் - வாதவூரடிகள் எழுதியசித்திரம்போல வசைவற்றுத் திருவடிஞானத்திற் பேராதிருந்தனர்.

பண்டைப்பயிற்சிவசத்தாற் புலப்படும் பிரபஞ்சம் சுட்டுணர்விற்பட்டதாதலால் அதனைக்காணுந்தோறும் இறைவனுள்ளும் புறமுமிருக்கின்றான் எனத்தலைப்பட்டுணரும் நின்மலதுரியாதீத நிலையினிற்பிற் பசுகரணங்கெட்டுச் சிவகரணமாகுமாதலால் அறிவாயூறுஞ் சுகப்பெருங்கடல் எனவும், தொழிற்பட்டுநிற்குங் கருவிகளொன்றனோடுங்கூடாது நிற்குநிலையிற் கூடிநிற்றலால் எழுதுசித்திரம்போல்மன்னியிருந்தனர் எனவுங்கூறினார் "ஆற்றேனுகைவவயவஞ்சுவைதரு—கோற்றேன்கொண்டுசெய்தனன்" எனத்திருவண்டப்பகுதியில் வருதல்காண்க. (சுசு)

பரிநரியாக்கியபடலம் முற்றிற்று.

ஆக பாயிரமுள்படத் திருவிருத்தம் - உகூகo.

அறுபத்தொன்றாவது

மண்சுமந்தபடலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பண்சுமந்தமறைநாட்டும்பொருள்பதஞ்சுமந்தமுடியார்மனம்
புண்சுமந்ததுயர்தீரவந்தபரிநரிகளாயபட்டிபோனபின்
விண்சுமந்தசுரநதியெனப்பெருகுவித்தவையைதுவிடையவன்
மண்சுமந்ததிருமேனிமேலடிவடுச்சுமந்தகதையோதுவாம்.

Koviloor Digital Library

(இ-ள்.) பண்சமந்த மறைநாடும் அரும்பொருள் - இசையமைந்த வேதங்களால் ஆராய்ந்தறியப்படும் மெய்ப்பொருளாகிய இறைவரது, பதம் சுமந்த முடியார் - திருவடிகள் தாங்கப்பெற்ற வாதவூரடிகளுடைய, மனம் புண்சுமந்த அயர்பிரவந்த பரிநரிகள் ஆய் அடவி போனபின் - நெஞ்சம் புண்படுதற்குக் காரணமாகிய துன்பம்நீங்க வந்த குதிரைகள் நரிகளாய்க் காட்டிற்சென்றபின், விண்சுமந்த சுரநதி என்ன பெருகுவித்த வையை இது - ஆகாயத்தாற் சுமக்கப்பட்ட கங்காநதியென்று கண்டோர் கூறப் பெருகும்படிசெய்தவையை நதியின்வரலாறு இத்திருவிளையாடல், விடையவன் - இடபவூர்தியையுடைய சோமசுந்தரக்கடவுள், மண்சுமந்து திருமேனிமேல் அடிபடு சுமந்ததை ஓதுவாம் - மண்ணைச்சுமந்து தமது திருமேனியின்மேல் பாண்டியன் பிரம்படிச்சுவட்டைச் சுமந்தருளிய திருவிளையாடலை யினிக்கூறுவாம்.

திருவடித்தீக்கைபெற்றமையால் பண்சுமந்தமறைநாடும் பொருள்பதஞ்சுமந்த முடியார் என்றார். சுமந்த என்னும்பெயரெச்சம் கருவிப்பொருள்கொண்டமையால் புண்படுதற்குக் காரணமாகிய அயர் என்றும். (க)

கருங்கடற்றிரையிடைக்கிடந்துசுழல்கலமெனக்ககனமுகடளாய்
வரும்புனற்பரவையுட்கிடந்தநகர்மறுகியுட்கமறவேலினு
ரொருங்கமைச்சரைவிளித்துநீர்கரைசமைத்தொதுக்கிவருமோதநீர்ப்
பெருங்கதத்தினையடக்குவீரெனவமைச்சருந்தொழுதுபோயினர்.

(இ-ள்.) ககனம் முகடு அளாய்வரும்புனல் பரவை உள் - வானத்துச்சியை யளாவிவரும் வையைப்பெருக்கின் பரப்பில், கருங்கடல் திரை இடைகிடந்து சுழல் கலம் என்ன - பெரியகடலின் அலையிற் கிடந்துசுழலு மரக்கலம்போல, கிடந்த நகர் மறுகி உட்க - கிடந்த மதுரைத்திருநகர் நிலைகெட்டு ஒளிமழுங்க, மறம் வேலினன் - கொலைத்தொழிலையுடைய வேலையேந்திய பாண்டியன் (நோக்கி) அமைச்சரை ஒருங்குவிளித்து - தனதுமந்திரிகளை யொருசேர அழைத்து, நீர் - நீங்கள், வரும் ஓதம் நீர் கரைசமைத்து ஒதுக்கி பெரும் கதத்தினை அடக்குவீர் என்ன - வாராநின்ற வெள்ளப்பெருக்கைக் கரைபோட்டுத்தடுத்து அதன் பெரியவேகத்தினைத் தடுப்பீரென்று கூற, அமைச்சரும் தொழுது போயினர் - அம்மந்திரிமார்களும் வணங்கி அவ்வாறுரையை மேற்கொண்டு சென்றார்கள்.

பரவை பரப்பு. அகரச்சுட்டுத்தொகுத்தல். (உ)

வெறித்தடக்கைமதயானைமந்திரிகள்வேறுவேறுபலகுடிகளுங்
குறித்தெடுத்தெழுதியெல்லையிட்டளவுகோல்கிடத்திவரைகீறியே
யறுத்துவிட்டுநகரெங்கணும்பறையறைந்தழைத்துவிடுமாளெலாஞ்
செறித்துவிட்டவரவர்க்களந்தபடிசெய்மினென்றுவருவித்தனர்.

(இ-ள்.) வெறி தட கை மதயானை மந்திரிகள் - மதநாற்றமிக்க நீண்டதுதிக்கையையுடைய மதயானைச்சேனையையுடைய அமைச்சர்கள், வேறு வேறு பலகுடிகளும் குறித்து எடுத்து எழுதி - தமது பாண்டிநாட்டிலுள்ள வெவ்வேறுவகைப்பட்ட பலகுடிகளையும் குறித்தெடுத்துப் பட்டோலையிலெழுதி, எல்லை இட்டு - (இத்தினத்தில் முடிவுபெறவேண்டுமென) ஒருகாலவெல்லைகூறி, அளவுகோல் கிடத்தி வரைகீறி அறுத்துவிட்டு - அவ்வக்குடிகளுக்கேற்ப அளவுகோலால் அளந்து எல்லை கீறி வரையறைசெய்து, நகர் எங்கணும் பறை அறைந்து அழைத்து - தமதுநகர் முழுதும் பறைசாற்றுவித்து வரித்து, விடும் ஆள் எல்லாம் செறித்துவிட்டு - அக்குடி

ஸ்பட்டனவும், அவ்விறைவர் பிட்டினை நோற்றவளாதலால் உறழ்வுபொருவில்வந்த இன்பநுபுதந்து அன்பரினுற்றநோற்ற தவமிறைபேறுதய்ப்பாள் எனவுங்கூறினர் 'ஜீ தமன்மறையுளோரொருவிதிவாக்கியங்களைப்பற்றிநல்வேள்வி- ஆதிகண்முயலத் தனி! இல்லா வருமறைமுடிவினுமுழக்கும் - மேதகுமுனது தலைமையைத்தனி யாதெ. வரோவிளங்கெழுயொருபால் - நாதனேயிவர்தாம்பரவசத்தினராய் நனு கிலராய் டின்மன்னே" எனவரும் சிவதத்துவவிவேகத்தாலும் பிட்டேட்டுதல் பின்வருஞ்செய்யுளாலும் உணர்க. (அ)

வைகலுமவித்தசெவ்விப்பிட்டினைமருங்குநான்கு
கைகளாய்முளைத்தமுக்கட்கரும்பினையரும்புமூரல்
செய்கதிர்முகத்தாநந்தத்தேறலையாலவாயெம்
மையனையகத்தானோக்கியன்பினூலருத்திவிற்பாள்.

(இ-ள்.) வைகலும் அவித்த செவ்வி பிட்டினை - நாள்தோறும் அவித்த பக்குவத்தையுடையபிட்டை, மருங்கு நான்கு கைகள் ஆய் முளைத்த முக்கண் கரும்பினை - பக்கத்தில் நான்குகைகளையுடையதாய் முளைத்த மூன்றுகண்களையுடைய கரும்பினை, அரும்புமூரல் செய்கதிர்முகத்து ஆநந்தம் தேறலை - அரும்பிய புன்னகை செய்யும் விளக்கம்வாய்ந்த திருமுகத்தில்விளையும் பேரின்பத்தேனை, ஆலவாய் எம் ஐயனை அகத்தால் நோக்கி - திருவாலவாயிலெழுந்தருளிய எமது ஐயனாகிய சோமசுந்தரக்கடவுளை மனத்தினால் தியானித்து, அன்பினூல் ஊட்டி - அன்பால் முன்னூட்டி, விற்பாள் - பின்புவிற்பாள்.

பக்கத்தில் நான்குகப்புவிட்டெழுந்த மூன்றுகணுக்களையுடைய கரும்பு எனவும், நான்கு திருக்கரங்களையுடைத்தாய்த் தோன்றிய மூன்றுகண்களையுடைய கரும்பு எனவும் பொருள்கொண்டு இல்பொருளுவமையணியாகக்கொள்க, (௯)

வளைந்தமெயயுடையவந்தமாதவநரைமூதாட்டி
அளந்தபங்கடைப்பான்கூலியாள்கிடையாமலாற்றத்
தளர்ந்தினியென்னேமன்னன்றண்டிக்கினென்செய்கேனென்
றுளந்தடுமாறிக்கூடலுடையநாயகனையுன்னு.

(இ-ள்.) வளைந்த மெய் உடைய அந்த மாதவம் நரை மூதாட்டி அளந்த பங்கு அடைப்பான் கூலியாள் கிடையாமல் ஆற்ற தளர்ந்து - கூனிய சரீரத்தையுடைய அந்தப் பெரிய தவத்தையுடைய நரைத்த முதியவள் தனக்கு அளந்துவிட்ட பங்கினையடைத்தற்குக் கூலியாள் கிடையாமல் மிகவுந் தளர்ந்து, இனி என்னே - இனிச்செய்வகையாது, மன்னன் தண்டிக்கின் என்செய்கேன் என்று - (அதனால்) அரசன் தெரிந்து தண்டித்தால் யாதுசெய்வேனென்று, உளம் தடுமாறி - மனந்தடுமாறி, கூடல் உடைய நாயகனை உன்னு - மதுரைத் திருநகரையுடைய இறைவனைக் கருதி.

" ஆங்கவட்களந்தளிக்குங் கோலகூறையடைப்பதின்றி - ஓங்கலைப்புதுநீர்வையை யுடைப்பினையடைக்குமெல்லை - நீங்குளதறுசனுளர் சென்றதற்குறுகண்செய்ய - ஈங்கெமக்குறதியாவ ரியாவரோயென்றிரங்கி. பிட்டினைக்கூலிகொண்டு பெருங்கரையடைப்பாரின்றி - நெட்டிலைச்சூலமேந்து நின்மலன்கோயிலெய்தி - மட்டிறந்தளர்ந்தகொங்கை மார்பினிற்கண்ணீர்வார - எட்டுருத்திரண்டபாத மிறைஞ்சிநின்றிதனைக்கூறும்." எனவரும் வாதவூரடிகள் புராணத்தாலும் உணர்க. (௧௦)

Koviloor Digital Library

பிட்டுவிற்றுண்டுவாழும்பேதையேனிடும்பையென்ப
தெட்டுணையேனுமின்றியிரவியெங்கெழுகென்றிந்நாள்
மட்டுநின்னருளாலிங்குவைகினேற்கின்றுவந்து
விட்டதோரிடையூறையமீனவனாணையாலே.

(இ-ள்.) பிட்டு விற்று உண்டு வாழும் பேதையேன் இடும்பை எட்துணை - பிட்டினைவிற்று உண்டு வாழாநின்ற எளியேன் துன்பமென்பது, எள்துணையேனும் இன்றி - எள்ளளவேனு மில்லாமல், இரவி எங்கு எழுக என்று இந்நாள்மட்டும் நின் அருளால் இங்கு வைகினேற்கு - சூரியனெங்கெழினு மெமக்கென்ன என்று இந்நாள்காறும் நினது திருவருளாலொருகவலையுமின்றி யிருந்தவெனக்கு, ஐய - ஐயனே, மீனவன் ஆணையால் ஓர் இடையூறு இன்று வந்துவிட்டது - பாண்டியனாணையால் ஒருகவலையின்று வந்துவிட்டது.

தேசபந்தமுற்றதந் திருவருளா லாதலால் இந்நாள்மட்டு நின்றிருவருளா லிங்கு வைகினேன் எனவும், உயிர்ச்சார்பும் பொருட்சார்பு மின்மையல் கவலை யிழந்தவளாதலால் இரவியெங்கெழுகென்றெனவும், அரசனாணைக் கீழடங்கிவாழ்த லால் மீனவனாணையால் எனவுங் கூறினளென்றனளென்க. எழுக என்று வியங் கோளிறு தொக்கது. (௧௧)

துணையின்றிமக்களின்றித்தமரின்றிச்சுற்றமாகும்
பணையின்றியேன்றுகொள்வார்பிறரின்றிப்பற்றுக்கோடாம்
புணையின்றித்துன்பத்தாழ்ந்துபுலம்புறும்பாவியேற்கின்
றிணையின்றியிந்தத்துன்பமெய்துவதறனோவெந்தாய்.

(இ-ள்.) துணை இன்றி மக்கள் இன்றி தமர் இன்றி சுற்றம் ஆகும் பணை இன்றி - வேறொருதுணையுமில்லாமல் மக்களுமில்லாமல் உரிய கிளைஞருமில்லாமல் கிளைச்சுற்றமாகும் கொழுகொம்புமில்லாமல், ஏன்று கொள்வார் பிறர் இன்றி -(ஒரு) இடையூறுவரில் தாங்குவார் பிறருமில்லாமல், பற்றுக்கோடு ஆம் புணை இன்றி துன்பத்து ஆழ்ந்து புலம்புறும் பாவியேற்கு - களைகணாகிய மேற்கூறுந் தெப்பமில்லா மல் துன்பக்கடலி லழுந்திப் புலம்பாநின்ற பாவியாகிய வெனக்கு, எந்தாய் - எந் தந்தாய், இன்று இணை இன்றி இந்த துன்பம் எய்துவது அறனோ - இப்பொழுது தனக்கோ ரொப்பில்லாத இந்தத் துன்பம் வந்து முடிவது தருமப்பகுதியோ.

அறம் அவரது ஆணையாதலால் யாருமில்லார்க்கு அறக்கடவுள் துணைநிற்கும் என்பது என்பாலொழிந்து பெருந்துன்பம் வரக்கூட்டுவது முறையோ என் பாள் இணையின்றி யிந்தத் துன்பம் எய்துவதறனோ என்றாள். (௧௨)

தேவர்க்குமரியனாகுந்தேவனேயன்பராவார்
யாவர்க்குமெளியனாகுமீசனேவேந்தனாணைக்
காவற்செங்கோலார்சீற்றங்கடுகுமுன்கூலியாளாய்
ஏவற்செய்வாரைக்காணேனேழையேனினியென்செய்கேன்.

(இ-ள்.) தேவர்க்கும் அரியனாகும் தேவனே - தேவர்களுக்குமரியனாகிய தேவனே, அன்பராவார் யாவர்க்கும் எளியன் ஆகும் ஈசனே - அடியவராயவரெவ ர்க்கும் எளியனாகிய ஈசனே, வேந்தன் ஆணை காவல் செங்கோலார் சீற்றம் கடுகு முன் - பாண்டியனுடையதாகிய பாதுகாக்குஞ் செங்கோல் முறைமை மேற்கொ

Koviloor Digital Library

ஷ்ட மந்திரிகளுடைய கோபம் என்னைவந்தடைதற்குமுன், கூலியாள் ஆய் ஏவல் செய்வாரை காணேன் - எனக்கோர் கூலியாள்வந்து (அரசனேவிய) ஏவலைச் செய்வாரை புணரேன், ஏழையேன் இனி என் செய்கேன் (ஆதலால்) ஏழையேனாகிய யான் இனி யாது செய்யப்போகின்றேன். (௧௩)

கூலியாள்வருவதுண்டோவென்றுதன்கொங்கைமுற்றத்
தாலிபோற்கண்ணீர்சோர்வாள்குறித்துமுன்பருத்தும்பிட்டை
வேலைநீர்ஞாலங்காணமிசைந்தவரிடும்பைதீர்ப்பான்
பாலினேர்மொழியாள்பாகமறைத்தருட்படிவங்கொள்வார்.

(இ-ள்.) கூலியாள் வருவது உண்டோ என்று - கூலியாள் வருகையுண்டாவென்று கூவி, தன் கொங்கைமுற்றத்து - தனது கொங்கையாகிய முற்றத்தில், ஆலிபோல் கண்ணீர் சோர்வாள் - மழைத்துளிபோலக் கண்ணீர் சிந்து முதியவள், முன்பு குறித்து அருத்தும்பிட்டை - முன்பு தன்னைச் சிந்தித்தூட்டும் பிட்டினை, வேலை நீர் ஞாலம் காண மிசைந்தவர் இடும்பை தீர்ப்பான் - கடல்சூழ்ந்த நிலவுலகு காண உண்டருளிய இறைவர் அவள் துன்பத்தைத் தணித்தற்பொருட்டு; பாலின் நேர் மொழியாள் பாகம் மறைத்து - பாலையொத்த இனிய சொல்லையுடைய உமாதேவியார் பாகத்தை மறைந்தருளி, அருள் படிவம் கொள்வார் - தமது திருவருளால் திருவுருக் கொள்வாராயினர். (௧௪)

குறட்குநீரருத்திவையைக்குடினையாயொழுகுங்கங்கை
அறற்குழல்பிரிவினாற்றாதன்பினவ்வளைக்காண்பான்
மறக்கயனெடுங்கண்ணாளைவஞ்சித்துவடிவமாறிப்
புறப்படுவாரைப்போலப்போதுவார்போதமூர்த்தி.

(இ-ள்.) போதமூர்த்தி - ஞானமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுள், குறட்கு நீர் அருத்தி - குண்டோதரனுக்கு நீரூட்டி, வையை குடிஞை ஆய் ஒழுகும் கங்கை - வையைநதி வடிவா யிடையறாதொழுகுங் கங்கையென்னும், அறல் குழல் பிரிவின் ஆற்றாது - கருமணலை கூந்தலாகவுடைய மங்கையின் பிரிவினையாற்றாது, அன்பினால் அவளைக் காண்பான் - அன்பா லவளைக்காண, மறம் கயல் நெடும் கண்ணாளை வஞ்சித்து - கொலைத்தொழிலையுடைய கயல்போன்ற நெடிய கண்களையுடைய அங்கயற்கண்ணியாரை வஞ்சித்து, வடிவம் மாறி புறப்படுவாரைபோல போதுவார் - திருவுருவமாறிப் புறப்படுவாரைப்போல வாராநின்றார்.

தமது அடிமைத்திறத்திற்குன்றாத வந்தியைக் காத்தற்பொருட்டுத் தமதிச்சையால் வேறுதிருவுருக்கொண்டு வருதலை, வஞ்சித்து வடிவமாறிப் புறப்படுவாரைப்போலப் போதுவார் எனக் கவிகூறுதலால் தற்குறிப்பேற்றவணி. (௧௫)

கொச்சகக்கலிப்பா.

அழுக்கடைந்தபழந்துணியொன்றரைக்கசைத்துவிழுத்தொண்டர்
குழுக்கடந்தவிண்டைகிர்சுமையடைமேற்கூடைகவிழ்த்
தெழுக்கடந்ததிசைகடந்திட்டினைகடந்ததிருத்தோண்மேன்
மழுக்கடைந்துவிளங்கியவாய்மண்டொடுதிண்படையேந்தி.

(இ-ள்.) அழுக்கு அடைந்த பழந்துணி ஒன்று அரைக்கு அசைத்து - அழுக்கினையடைந்த பழந்துணி யொன்றினை யிடையிற்கட்டி, விழு தொண்டர் குழுக்கள்

Keviloor Digital Library

தந்த இஞ்ஞை நிகர் சுவை யடை மேல் கூடை கவிழ்த்து - சிறந்த தொ... ர் டந்தந்த கன்னிமாலையையொத்த சுவையடையின்மேல் கூடையை எழு கடந்து - அலையும் வென்று, திசை கடந்திட்டு - எட்டுத்திசைகளை, இணை கடந்த திரு தோள் மேல் - ஒப்பிகந்த திருத்தோளின்மேல், மழுக்கு து விளங்கிய வாய்-மழுக்குதலடைந்து விளங்கிய வாயையுடைய, திண் மடு படை ஏந்தி - திண்ணிய மண்வெட்டுங் கருவியையேந்தி.

விச்சுவரூபியாய் நிற்றலால் திசைகடந்திட்டிணை கடந்த திருத்தோள், ருர் "வேதண்டமேபுயங்கள் விண்ணேதிருமேனி - மூதண்டகூடமே மோலி கோதண்டம் - ஒற்றைமாமேரு வுமாபதியார்நின்றாடப் - பற்றமோசிற்றம்... எனவருஞ் செய்யுளால் உணர்க.

திடங்காதல்கொண்டறவோர்திருவேள்விதருமமுது
மிடங்காவல்கொண்டுறைவாளருத்தமுதுமினிதுண்டு
மடங்காதபசியினர்போலன்னைமுலைப்பாலருந்த
மடங்காதபெருவேட்கைமகவுபோற்புறப்பட்டார்.

(இ-ள்.) திடம் காதல் கொண்டு - உறுதியாக அன்புகொண்டு, அறவோர் திரு வேள்வி தரும் அமுதும் - முனிவர்கள் அழகிய யாகத்தில் தரும் அவியுணவையும், இடம் காவல் கொண்டு உறை வாள் அருத்து அமுதும் - இடப்பாகத்தைத் தமக்கு ஓம்படையாகக்கொண்டு வசிக்கும் உமாதேவியார் நுகர்விக்கும் இன்பவமுதையும், இனிது உண்டும் அடங்காத சியினர் போல் - முட்டின்றி நுகர்ந்து மடங்காத பசியையுடையவர்போல, அன்னை முலைப்பால் அருந்த மடங்காத பெரு வேட்கை மகவுபோல் புறப்பட்டார் - தாயின் முலைப்பாலைப் பருக மடங்காத பெரிய விருப்பத்தையுடைய பிள்ளைபோலப் புறப்பட்டருளினர். (௧எ)

ஆலுமறைச்சிரமுடியாரடிக்கமலநிலஞ்சூடக்
கூலிகொடுத்தென்வேலைகொள்வாருண்டோவென்றென்
றோலமறைத்திருமொழிபோலுரைபரப்பிக்கலுழ்கண்ணீர்
வேலையிடைப்படிந்தயர்வாள்வீதியிடத்தணைகின்றார்.

(இ-ள்.) ஆலும் மறை சிரம் முடியார் - ஒலிக்கும் வேதமுடியிலுள்ள இறைவர், அடி கமலம் நிலம் சூட - தமது திருவடித்தாமரையை நிலமகள் சூட, கூலி கொடுத்து என் வேலை கொள்வார் உண்டோ என்று என்று - கூலிகொடுத்து என் வேலையைக்கொள்வாரு மிக்குண்டோ என்று என்று, ஓலம் மறைத் திருமொழிபோல் உரை பரப்பி-ஒலிவடிவாகிய சிறந்த வேதவாக்கியம்போலக் கூறியருளி, கலுழ் கண்ணீர் வேலை இடை படிந்து அயர்வாள் வீதி இடத்து அணைகின்றார் - அழுங் கண்ணீராகிய கடலில் மூழ்கிச்சோரும் வந்தியின் வீதியில் வருவாராயினர்.

காந்தருவத்தை யாரிலம்பகத்தில் ஆலும் என்பதற்கு ஒலிக்குமென நச்சினார்க்கினியர் எழுதியது காண்க. (௧அ)

தந்தைதாய்பிறரின்றிவருகின்றதனிக்கூலி
மைந்தனார்வாய்மலருங்குரல்கேட்டுவந்தியுந்தன்
சிந்தையாகுலமிழந்துநல்கூர்ந்தார்செல்வமகந்
தந்தபோதெழுமகிழ்ச்சிநிலைக்கொள்ளப்புறம்போந்தாள்.

Koviloor Digital Library

(இ-ள்.) தந்தை தாய் பிறர் இன்றி வருகின்ற - தந்தையுந் தாயும் பிறருமில்லாது வருகின்ற, தனி கூலி மைந்தனார் வாய் மலரும் குரல் கேட்டு - தனியாய கூலியாளாயுள்ளவர் வாய்மலர்ந்தருளுங் குரலைக்கேட்டு, வந்தியும் தன் சிந்தை ஆகுலம் இழந்து - வந்தியுந் தனது மனத்திலெழுந்த துன்பத்தை யிழந்து, நல் கூர்ந்தார் அகம் செல்வம் தந்தபோது எழு மகிழ்ச்சி — வறுமையுற்றோர் வீடு வைப்புநிதிதந்த காலையில் அவர்க்கு மீதூர்ந்த மகிழ்ச்சியைப்போல, தலைக்கொள்ள புறம் போந்தாள் - மகிழ்ச்சிமீக்கூர வீட்டினின்றும் புறம்பே வந்தனள்.

சூழ்ந்ததலைக் கொள்ளவெனக் கூட்டுக. ஏனைத்தேவர்கள்போலப் பிறப்பிறப்பிலனாதலால் தந்தைதாய் பிறரின்றியெனவும், ஒருவருமின்மையால் தனியெனவுங் கூறினார் "தாயுமிலிதந்தையிலி தான்றனியன்காணேடீ" எனத் திருச்சாழலில் வருதல்காண்க. (கசு)

அவ்வேலையெனத்தன்பாலின்னருள்சுரந்துவருகாளை
தன்னையழைத்தெனக்களந்தகரையடைத்துத்தருவாயோ
வென்னவிசைத்தனளாகவடைக்கின்றேனெனக்கன்னை
பின்னையதற்கிடுங்கூலியாதென்றார்பெருமுதியாள்.

(இ-ள்.) அன்னை என்ன தன்பால் இன் அருள் சுரந்து வருகாளை தன்னை அழைத்து - தாய்போலத் தன்னிடத்தி லினிய கருணைகூர்ந்து வாராநின்ற காளைப்பருவமுடைய பெருமானாரை யழைத்து, எனக்கு அளந்த கரை அடைத்து தருவாயோ என்ன இசைத்தனளாக - எனக்கு அளந்து நிறுத்திய கரையை யடைத்துத் தருவாயோ வென்று கூற, அடைக்கின்றேன் - (நீ கூறியவாறு உடைகரையை) அடைத்துத் தருகின்றேன், பின்னை அன்னை - பின்பு தாயே, எனக்கு அதற்கு இடுங் கூலி யாது என்றார் - எனக்கு அதற்குக்கொடுக்குங் கூலி யாதென்று வினவினார், பெரு முதியாள் - பெரிய முதியோ ளாகிய வந்தி. (உ0)

பிட்டிடுவேனுனக்கென்றாளதற்கிசைந்துபெரும்பசியாற்
சுட்டிடநான்மிகமெலிந்தேன்சுவைப்பிட்டிலுதிர்ந்தவெலா
மிட்டிடுவாயதுமுந்தத்தின்றுநானிளைப்பாறிக்
கட்டிடுவேனின்னுடையகரையென்றார்கரையில்லார்.

(இ-ள்.) உனக்கு பிட்டு இடுவேன் என்றாள் - (கூலிக்குப்பிரதியாக) உனக்குப் பிட்டுக்கொடுப்பேனென்று கூறினாள், கரை இல்லார் அதற்கு இசைந்து பெரும் பசியால் சுட்டிட நான் மிகமெலிந்தேன் - தமக்கோரளவில்லாத இறைவர் அதற்குடம்பட்டுப் பெரிய பசியினால் சுடப்பட நாமிகவு மெலிந்தோம், சுவை பிட்டில் உதிர்ந்த எல்லாம் இட்டிடுவாய் - இன்சுவையமைந்த பிட்டினின்றுதிர்ந்த பிதிர்களையெல்லா முன்னர்க்கொடுப்பாய், அது முந்த தின்று நான் இளைப்பாறி நின் உடைய கரை கட்டிடுவேன் என்றார் - அதனை முந்தநுகர்ந்து நானிளைப்பு நீங்கி உனக்களந்துவிட்ட கரையைக் கட்டுவேனென்று கூறியருளினார்.

" இரும்பசியுடையே னன்னேயினிய பிட்டளிப்பையாகில், குரம்புகோண்டடைப்பேன்யானே கோலறைமுழுதமென்னக் - கரும்புறத்துதிர்ந்த மேலிட்ட பிட்டினைக்கரத்தாலள்ளி-விரும்பியங்கதனைக்கொள்வா யென்றனள்விருப்பமிக்காள்" எனவரும் வாதவூரடிகள் புராணத்தானுமுணர்க. (உக)

Koviloor Digital Library

தெள்ளியடுசிற்றுண்டிசிக்கடைந்தபொதிநீக்கி
யள்ளியெடுத்தருந்தப்பாவென்றிட்டாளரைக்கசைத்த
புள்ளியுடைத்துகினீத்தார்புறத்தானைவிரித்தேந்தி
யொள்ளியதென்றவளன்புமுடன்கூட்டியமுதுசெய்தார்.

(இ-ள்.) தெள்ளி அடு சிற்றுண்டி சிக்கு அடைந்த பொதி நீக்கி - தெள்ளிப் பாகஞ்செய்த சிற்றுணவாகிய பிட்டினைச் சிக்கமைந்த மூடுபோர்வையை நீக்கி, அள்ளி எடுத்து அப்பா அருந்து என்று இட்டாள் - கையினாலள்ளியெடுத்து அப்பனே புசியென்று கொடுத்தவள், அரைக்கு அசைத்த புள்ளி உடைத்துகில் நீத்தார் - இடையிற்கட்டிய புள்ளிகள் வாய்ந்த புலித்தோலாடையை நீக்கிவந்தருளிய பெருமானார், புறம் தானை விரித்து ஏந்தி - புறம்பேயுள்ள ஆடையை விரித்து ஏந்தி, ஒள்ளியது என்று அவள் அன்பும் உடன் கூட்டி அமுது செய்தார் - இது அமுதினுஞ் சிறந்ததென்று அவளது அன்பினையு முடன்கூட்டி யமுதுசெய்தருளினார்.

சிக்கம் அடைந்த பொதிநீக்கி அள்ளி என்றதற்கு உறிபோலுருவமைந்த பிட்டினை நீக்கி யுதிர்த்த பிதிர்களை யள்ளியெனவும் பொருள் கொள்ளுதலும் ஒன்று. சிக்கம் ஈறுதொக்கது. சிக்கு அமைந்த போர்வை என்றது பலநாளும் பிட்டினை மூடியபோர்வையாதலா லதன் பசையேறி முறுகிய போர்வை. உயர்ந்தோர்பா லிழிந்தோர் ஆடை விரித்தேற்றல் முறையாதலால் புறத்தானை விரித்தேந்தி யென்றார். "கூற்றுதைத்தமலபாதர் குறுந்துணிக்கரியசிவை - யேற்றிடும்பிட்டுவாங்கி யின்புறவமுதுசெய்து - மாற்றரும்பசியையன்னே மாற்றினை யினிப்போய்வையை - யாற்றினின் கூற்றிறுண்டா மருக்கரையடைப்பேனென்றார்" என வாதவூரடிகள் புராணத்திலும் வருதல் காண்க. (உஉ.)

அன்னைமுலைத்தீம்பாலினரியசுவைத்திந்தத்
தென்னவனாயுலகாண்டதிருவாலவாயுடைய
மன்னர்பிரான்றனக்கேயாமென்றென்றுவாய்மலர்ந்து
சென்னியசைத்தமுதுசெய்தார்தீவாய்நஞ்சமுதுசெய்தார்,

(இ-ள்.) இந்த அன்னை முலை தீம்பாலின் அரிய சுவைத்து - இப்பிட்டுத் தாய் முலையினினிய பால் போல அரிய சுவையையுடையது, அந்த தென்னவன் ஆய் உலகு ஆண்ட திருவாலவாய் உடைய மன்னர் பிரான் தனக்கே ஆம் என்று என்று வாய்மலர்ந்து - அந்தச் சவுந்தரபாண்டியராயுலகினையாண்ட திருவாலவாயினையுடைய அரசர்க் கரசராகிய இறைவர்க்கே யிப்பிட்டமுது தக்கது தக்கதென்று திருவாய்மலர்ந்தருளி, தீவாய் நஞ்சு அமுது செய்தார் - தீயைப்போலும் வெம்மை வாய்ந்த நஞ்சினையமுதுசெய்தருளிய பெருமானார், சென்னி அசைத்து அமுது செய்தார் - (நன்றாயிருக்கின்றதென்று) சிரக்கம்பஞ்செய்து அமுது செய்தருளினார்.

அந்த என்றுஞ் சுட்டுத்திரிபு உயர்வு குறித்து நின்றது. (உங.)

தந்தையொடுதாயின்றித்தனிக்கூலியாளாக
வந்தவெனக்கொருதாயாயருள்சுரந்துமாறுத
இந்தவிளைப்பொழித்தனையேயினிவேலைத்தலைச்சென்றுன்
சிந்தைகளிப்பப்பெருவேலைசெய்வேனென்றிசைத்தெழுந்தார்.

(இ-ள்.) தந்தை ஒடு தாய் இன்றி தனி கூலியாளாக வந்த எனக்கு - தந்தையுந் தாயுமில்லாமல் தனியனாய்க் கூலியாளாய்வந்த எனக்கு, ஒருதாய் ஆய் அருள்

Koviloor Digital Library

சுரந்து - ஒரு அன்னையாய்க் கருணைசுரந்து, மாறாத இந்த இளைப்பு ஒழித்தனையே - நீங்காத இந்த விளைப்பினையொழித்தாயன்றோ, இனி வேலை தலை சென்று - இனி வேலை மேற்போய், உன் சிந்தை களிப்பு எழ வேலை செய்வேன் என்று இசைத்து எழுந்தார் - உனது மனத்திற் களிப்புத்தோன்ற வேலைசெய்வேனென்று எழுந்தார்.

நீ செய்த உதவிக்குக் கைம்மாறு செய்யவேண்டுமல்லவா என்பார் வேலைத்தலைச்சென்றுன் சிந்தைகளிப்பெழ வேலை செய்வேனென் றிசைத்தெழுந்தார். என்றனர். (௨௪)

தந்திவாய்மருப்பிடறிவருங்குடி ஞைத்தடங்கரையில்
வந்தியான்வந்தியாளென்றேட்டில்வரைவித்துப்
புந்தியாலுரையானூற்பொருளினாலளப்பரிய
அந்திவான்மதிச்சடையார்கரையடைப்பாராயினர்.

(இ-ள்.) தந்தி வாய் மருப்பு இடறி வரும் குடிஞை தடகரையில் வந்து - யானையின்வாயிலுள்ள கொம்பினையிடறி வாராநின்ற வையையின் பெரியகரையில் வந்து, யான் வந்தி ஆள் என்று ஏட்டில் வரைவித்து - நான் வந்தியாளென்று ஏட்டிற் பதிவித்து, புந்தியால் உரையால் - மனத்தாலும் வாக்காலும், நூல்பொருளின் ஆல் - வாக்காலமைந்த நூற்பொருளாலும், அளப்பு அரிய அந்திவான் மதிச்சடையார் கரை அடைப்பார் ஆயினர் - வரையறுத்தற்கரிய செக்கர்வானத்திற்றோன்றிய இளஞ்சந்திரனை யணிந்த சடாமுடியையுடைய இறைவர் கரையடைக்கத் தொடங்கினார். (௨௫)

வெட்டுவார்மண்ணைமுடிமேல்வைப்பார்பாரமெனக்
கொட்டுவார்குறைத்தெடுத்துக்கொடுபோவார்சுமடுவிழத்
தட்டுவார்சுமையிறக்கியெடுத்ததனைத்தலைபடியக்
கட்டுவாருடன்சுமந்துகொடுபோவார்கரைசொரிவார்.

(இ-ள்.) மண்ணை வெட்டுவார் - மண்ணினைவெட்டுவார், முடிமேல்வைப்பார் - வெட்டியமண்ணை முடியின்மேல் வைப்பார், பாரம் என்ன கொட்டுவார் - (என்றும் எடுத்தறியாாதலால்) பாரமென்று கொட்டுவார், குறைத்து எடுத்து கொடுபோவார் - அதனைக்குறைத்து எடுத்துக்கொண்டு போவார், சுமடுவிழ தட்டுவார் - சும்மாடு கீழேவிழக் கூடையைத்தட்டுவார், சுமை இறக்கி - எடுத்தமண் சுமையை யிறக்கி, எடுத்து அதனை தலைபடிய கட்டுவார் - மீள எடுத்து அச்சுமையைத் தலையிற்படிந்து நிற்கக்கட்டுவார், உடன் சுமந்து கொடுபோவார் - சேரச்சுமந்துகொண்டு போவார், கரை சொரிவார் - அதனைக் கரையிற் கொட்டுவார்.

"மெய்த்தவம்புரிவார்தம்மின் விழுப்பமிக்குடையவனை - இத்தடங்கரையவல்லேயெம்பிரியடைப்பாயென்னப் - பைத்தவெம்பகுவாய்நாகம் பனிமதிப்பாதிகொள்ளக் - கொத்துடன்முடிக்கவல்லார்கோலகறையடைக்கலுற்றார். பேர்ப்பர்மண்கூடைபெய்வர்பிறைமுடிமேற்சும்மாடு - சேர்ப்பர்பின் சுமந்துவையைத் திண்கரைசொரிந்துமீள்வர் - வேர்ப்பர்மெய்யிளைப்பார்போல மென்றுபிட்டிரதநாவிற் - பார்ப்பரவ்வன்னைதன்மேற் பரிந்தருட்பார்வைசெய்வார். பிட்டு நன்றென்றுகூறிப் பிறைமுடியசைப்பர்வேடன் - இட்டமென்றசையிற்சாலவிசறுக்காமிதென்பார் - கொட்டுடன்கவிழ்ந்தகூடை கொண்டுபின்முடல்செய்வார் - வெட்டிமண்குவிப்பாரோடி

Koviloor Digital Library

விரைந்தடிபாய்ந்தயிர்வார். பரிவுடைமனத்திருளும்பரமர்தஞ்செய்திகண்டு-களை யிளையடைத்தல்வேண்டுமென்றுதக்கருமங்கூறுள் - உரனுடைவழுதிநாதர் காண்ப றேனுநன்செய்வார்-இருவினையுடையேன்மற்றிங் கென்செய்வேனெனநினைந்தாள். மற்றிவன்விலைமைவெள்ளி மன்றனின்றுடுநின்ற - கொற்றவராதிந்துபின்றும் கூடை மண்களைமேலேற்றி - உற்றவிக்களையையின்னே யொல்லையிலடைப்பேனின்னே - சற்றிதற்கிரங்காதேகுன் றகவுடைமலையிலென்றார்." என வாதவூரடிகள் புராணத் தில் வருதல் காண்க. (உகு)

இவ்வண்ணமிவரொருகாலிருகால்மண்சுமந்திளைத்துக்
கைவ்வண்ணமலர்கன்றக்கதிர்முடிமேல்வடுவழுந்த
மைவ்வண்ணமறியாதமலரடிசெம்புனல்சுரந்து
செவ்வண்ணம்படைப்பவொருசெழுந்தருவின்மருங்கணைந்தார்.

(இ-ள்.) இவ்வண்ணம் - இப்வாறு, இவர் ஒருகால் இருகால் மண் சுமந்து இளைத்த-இப்பிறைவர் ஒருதடவை அல்லது இரண்டு தடவை மண்ணைச்சுமத்தலால் சிரமெலிந்த, கை வண்ண மலர் கன்ற-திருக்கரங்களாகிய செந்நிறம் வாய்ந்த தாமரைமலர்கள் கன்றவும், கதிர் முடிமேல் வடு அழுந்த-விளக்கம்வாய்ந்த திருமுடிமேல் வடு அழுந்தவும், மை வண்ணம் அறியாத மலர் அடி - மேகம்போலுங் கருநிறம் வாய்ந்த திருமாலறியாத தாமரைமலர்போன்ற திருவடி, செம்புனல் சுரந்து செவ்வண்ணம் படைப்ப - உதிரஞ்சுரந்து செந்நிறம் படைக்கவும், ஒரு செழுந்தருவின் மருங்கு அணைந்தார் - ஒரு செழித்த மரத்தின் கீழொருபா லொதுங்கியருளினர்.

கொன்றைமரத்தினிழலில் அடைந்தனரென "சிறந்தமண்கூடைவேணித் திருமுடிக்கோட்டையாக - நிறங்கிளர்கொன்றைநீழ லிறைமணலணையதாக - உறு ந்தொழிந்துயற்சியாலே யுயக்கிமெய்யிளைத்தார்போல - மறந்துலகென்குமான வள்ளலார்பள்ளிகொண்டார்" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (உஎ)

தருமேவுமலைமகளுஞ்சலமகளுமறியாமல்
திருமேனிமுழுதுநிலமகடீண்டித்திளைப்பெய்தக்
குருமேவுமதிமுடியைக்கூடையணைமேற்கிடத்தி
வருமேருவனையார்தம்வடிவுணர்ந்துதுயில்கின்றார்.

(இ-ள்.) தரு மேவும் மலைமகளும் - மரங்கள் நெருங்கிய இமயபர்வத அரசன் புத்திரியாராகிய உமாதேவியாரும், சலமகளும் அறியாமல் - கங்காதேவியாரு முணராமல், திருமேனி முழுதும் - தமது திருமேனி முற்றும், நிலமகள் தீண்டி திளைப்பெய்த - பூதேவி தீண்டி யிடையறாது நகர, குருமேவும் மதி முடியை - நிறந்தங்கிய சந்திரனையணிந்த சடாமுடியை, கூடை அணைமேல் கிடத்தி - கூடையாகிய கொட்டையின்மேற் சேர்த்து, வரும் மேரு அனையார் - வாராநின்ற மேருமலையை யொத்த பெருமானார், தம் வடிவு உணர்ந்து துயில்கின்றார் - தமது திருவுருவைப் பலருமுணரத் துயில்கூர்ந்தருளுவாராயினர்.

திளைப்பெய்த ஒருசொல் நீர்மைய. உணர்ந்து செயவெனெச்சத்திரிபு. (உஅ)

அத்தருவேபாலகெடுத்தருவாகவலைபுரட்டித்
தத்திவரும்புனலடைப்பார்சகமிமுழுதுணர்ந்த
மெய்த்தவராய்க்கண்களிப்பமெய்புணர்ச்சிமோனமயச்
சுத்தவுருத்தெளிவிப்பாரெனத்துயிலுந்துயிலுணர்ந்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) அசரு ஏ - அக்கொன்றை விருட்சமே, ஆல நெடுந்தரு ஆக - நெடிய கல்லாலவிருட்சமாகவும், அலை புரட்டி தத்திவரும் புனல் அடைப்பார்-அலைகள் மர முதலியவற்றைக் கீழ்மேலாகப் பெயர்த்துக் கரைகடந்துவரும் வையைநதியின் பெருக்கினை யடைப்பவர், சநகன் ஆதி முழுது உணர்ந்த மெய்தவர் ஆய் - சநகர் முதலிய முற்றுமுணர்ந்த உண்மையையுடைய முனிவர்களாகவும், கண்களிப்ப-கண்களிகூர, மெய் உணர்ச்சி மோனம் மயம் சுத்தம் உரு தெளிவிப்பார் என்ன - சச்சிதாநந்தமயமான தமது நிட்களவடிவத்தைத் தெளிவிப்பவர்போல, துயிலும் துயில் உணர்ந்தார் - திருக்கண் முகிழ்க்கும் நித்திரையினின்று நீங்கி யருளினர்.

மோனம் என்றமையால் ஆநந்தமென்றனம். இதில் விரியுருவகவணியும் உவமையணியுங் கலந்துவருதலால் கலவையணி. (உக)

ஆடுவார்சாமமெனத்தித்திக்குமமுதவிசை
பாடுவார்நகைசெய்வார்தொழில்செய்வார்பராக்கடையக்
கோடுவார்மணல்குவிப்பார்குதிப்பார்தூளெழவடிபாய்ந்
தோடுவாருடன்மீள்வாருன்மத்தரெனவிருப்பார்.

(இ-ள்.) ஆடுவார்-சற்று நடிப்பார், சாமம் என்ன தித்திக்கும் அமுதம் இசை பாடுவார் - சாமகீதம்போலத் தித்திக்கு மினிய கீதத்தைச் சற்றுப்பாடுவார், நகை செய்வார் - புன்னகையரும்பி யருள்வார், தொழில் செய்வார் பராக்கு அடைய - தொழின்மேல் நிற்பவர் பராக்குப்பார்க்க, கோடு - நீர்க்கரையில், வார் மணல் குவிப்பார் - மிக்க மணற்குவை குவிப்பார், தூள் எழ குதிப்பார் - தூளெழக் குதித்தருள்வார், அடி பாய்ந்து ஓடுவார்-திருவடி பரப்பி யோடுவார், உடன் மீள்வார்-உடனே திரும்புவார், உன்மத்தர் என்ன இருப்பார் - பித்தேறினவர்போல வாளா இருந்தருள்வார்.

அமுதம் விட்டவாகுபெயராய் இனிமை மேல்நின்றது. கோட்டு என்பது கோடு எனத்தொகுத்தல். (கூo)

வேலையினுலறவருந்தியிளைத்தார்போன்மெய்வேர்வை
காலமிசைமூச்செறிந்துவாயொலியாற்காற்றழைத்துச்
சாலநெடும்பசியினர்போற்றளர்ந்தடியாளிடும்பிட்டின்
மேலடைந்தவிருப்பினராய்மீண்டுமவள்பாலணைவார்

(இ-ள்.) வேலையினால் அற வருந்தி இளைத்தார்போல் - வேலையினால் மிகவும் வருந்தி யிளைத்தவர்போல, மெய் வேர்வை கால - திருமேனியில் வெயர்வை சிந்த, மிசை மூச்சு எறிந்து - மேல்மூச்சிட்டு, வாய் ஒலியால் காற்று அழைத்து - வாய் விடுதலால் காற்று வருவித்து, சால நெடும் பசியினர் போல் தளர்ந்து - மிகவும் பெரிய பசியையுடையவர்போல மெலிந்து, அடியாள் இடும் பிட்டின்மேல் அடைந்த விருப்பினர் ஆய் - அடியவளாகிய அவ்வந்தியிடும் பிட்டின்மேல் மிக்க விருப்புடையவராய், மீண்டும் அவள் பால் அணைவார் - மீளவும் அவளிடத்துச் செல்வார். (கூக)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இடும்பைநோய்வெள்ளநீந்தியின்பநீர்வெள்ளத்தாழ்ந்த
கொடும்புறமுதியாண்முன்போய்க்கூறுவார்கோலுக்கேற
விடம்படுகரைகளெல்லாமடைபடுகின்றவின்னங்
கடும்பசியுடையேனன்னேபிட்டிடுகடிதினென்றார்.

(இ-ள்.) இன்பமே தோய் வெள்ளம் நீந்தி - அன்பமயமாகிய கடலினைக்க டந்து, இன்பம் நீர் வெள்ளத்து ஆழ்ந்த - பேரின்பமாகிய கடலிலழுந்திய, கொடும் புறம் முதியாள் முன் போய் கூறுவார் - வளைந்த முதுகினையுடைய முதிய வந்தியி டம்பாற்சென்று கூறுவார், சோறுக்கு ஏற இடம் பகு கரைகள் எல்லாம் அடைபடுகி ன்ற - அரசனளந்துவிட்ட சோறுக்கு இசைய அளந்த கரையெல்லாம் அடை படாநின்றன, இன்னம் மெய்ப்பசி உடையேன் - இன்னமும் மிக்க பசியினையுடையேன், அன்னை-தாயே, கடிதின் பிட்டிடு என்றார்-விரைந்து பிட்டிடுவாயென்றனர் (௩௨)

ஆங்கவளப்போதட்டசிற்றுணவளித்தாளையன்
வாங்கியங்கையுநாவுங்கனலெழவாயிற்பெய்து
பாங்கிருகொடிறுமொற்றிப்பதமுறப்பருகிக்கொண்டு
நீங்கிமுன்போலப்போந்துநெடுங்கரையடைக்கலுற்றார்.

(இ-ள்.) ஆங்கு - அவ்விடத்தில், அவள் - அவ்வந்தி, அப்போது அட்ட சிற் றுணவு அளித்தாள் - அக்காலையில் பாகஞ்செய்த சிற்றுணவினைக் கொடுத்தனள், ஐயன் வாங்கி அங்கையும் நாவும் கனல் எழ வாயில் பெய்து - பெருமானார் வாங்கி யழகிய திருக்கரமும் நாவும் சுட வாயிற்போட்டு, பாங்கு இரு கொடிறும் ஒற்றி - பக்கத்திலுள்ள இரண்டு கபோலத்திலும் சிறிது ஒதுக்கி, பதம் உற - சுடுகை நீங் கி யுண்ணும் பதமாக, பருகி கொண்டு நீங்கி முன்போல போந்து - உண்டுகொண்டே யப்பு நின்று நீங்கி முன்போலப்போய், நெடுங் கரை அடைக்கலுற்றார் - வந்திக்கு அளந்த நெடிய கரையையடைக்கத் தொடங்கினார். (௩௩)

பிட்டுவாய்மிதப்பவுண்பார்பெருவலியுடையார்போல
வெட்டுவாரெடுத்தமண்ணைக்கொண்டுபோய்வேற்றுப்பங்கிற்
கொட்டுவாருடைப்புமாறுங்கொள்கைகண்டார்த்துத்தின்றோ
டட்டுவாரயனின்றாரைத்தழுவ்வார்களிப்புத்தாங்கி.

(இ-ள்.) பிட்டு வாய் மிதப்ப உண்பார் - பிட்டு வாய்நிரப்பெய்து உண்கு வார், பெருவலி உடையார்போல வெட்டுவார் - மிக்க வன்மையை யுடையவரைப் போல மண்ணினை வெட்டுவார், எடுத்த மண்ணை கொண்டுபோய் வேறு பங்கில் கொ ட்டுவார் - எடுத்த மண்ணினைக் கொண்டு சென்று பிறருக்கு அளந்த பங்கிற் கொட் டுவார், உடைப்பு மாறும் கொள்கை கண்டு ஆர்த்து தின்று தோள் தட்டுவார் - உடை ப்பு மாறும் வகையைக்கண்டு களிப்பால் கோஷித்துத் தின்னிய தோளைத் தட்டுவா ர், அயல் நின்றாரை களிப்பு தாங்கி தழுவுவார் - பக்கலில் நின்றவரைக் களிப்பு மீ தூர்ந்து புல்லிக்கொள்ளுவார்.

எல்லாம் வல்ல இறைவராதலால் ஒருகொட்டால் பிறர்க்கு அளந்த கரையு டைப்பை யடைத்து மாற்றினமையால் களிப்புத்தாங்கி யயனின்றாரைத் தழுவுவார் என்றார். (௩௪)

எடுத்தமண்கூடைபோடுமிடறிவிழ்வார்போலாற்றின்
மடுத்திடவிழ்வர்நீந்திவல்லைபோய்க்கூடைதள்ளி
யெடுத்தகன்கரைமேலேறியடித்தடித்திரம்போக்கித்
தொடுத்தகட்டவிழ்ப்பர்மீளத்துன்றுவர்தொடுவர்மண்ணை.

(இ-ள்.) எடுத்த மண் கூடை யோடும் இடறி விழ்வார்போல் - எடுத்த மண் கூடையோடும் காலிடறி விழ்பவர்போல, ஆற்றில் மடுத்திட விழ்வர் - வெள்ளத்தி

Koviloor Digital Library

ல் தலைப்பெய விழாவிற்பர், வல்லை நீந்திபோய் கூடை தள்ளி எடுத்து அகன் கரை மேல் ஏறி - விரைந்து நீந்திச்சென்று கூடையைக் கையால் தள்ளியெடுத்து இடமகன்ற கரைமேலேறி, அடித்து அடித்து ஈரம் போக்கி தொடுத்த கட்டு அவிழ்ப்பர் - அக்கரையின்மேற் கூடையை யடித்து அடித்து ஈரத்தினைப்போக்கித் தலையிற்கட்டிய சும்மாட்டை யவிழ்ப்பார், மீள தூன்றுவர் - மீளவும் வேலைமேலிறங்குவார், மண்ணை தொடுவர் - மண்ணினைத் தோண்டுவார்.

மண்கூடை உருபும் பயனுந்தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகையிலே த்தொடராதலால் "சாதிகுழூஉப்பரண்" என்றுஞ் சூ - இல் - பிற என்ற விதையால் இலைமொழி யீறு திரியாது நின்றது. (௩௫)

கொட்டுமண்சுமந்துசெல்வர்கூடையையுடைப்பில்விழத்
தட்டுவரெடுப்பார்போலத்தாவிவீழ்ந்தலையிலோட
விட்டொருமரத்தைப்பற்றிமிதப்பர்திண்கரையிலேற
முட்டுவர்சுழியிலாழ்வர்சேட்சென்றுமுளைப்பர்மீள்வர்.

(இ-ள்.) கொட்டு மண் சுமந்து செல்வர் - ஒரு கொட்டுமண்ணைச் சுமந்து செல்வார், உடைப்பில் கூடையை விழ தட்டுவர் - உடைப்பினிற் கூடையை விழும்படி சுமையடையினின்றுந்தட்டுவார், எடுப்பார் போல தாவி வீழ்ந்து அலையில் ஓட விட்டு ஒருமரத்தைபற்றி மிதப்பர் - எடுப்பவர்போலத் தள்ளி வெள்ளத்தில்வீழ்ந்து அலையில் கூடை ஓடவிட்டு ஒருமரத்தைப் புணையாகப்பற்றி மிதப்பார், திண் கரையில் ஏற முட்டுவர் - திண்ணியகரைமேலேற நெருங்குவார், சுழியில் ஆழ்வார் - சுழியிலழுந்துவார், சேண் சென்று முளைப்பர் மீள்வர் - நெடுந்தூரத்திற்சென்று மேலெழுந்து திரும்புவார். (௩௬)

கொட்டினைக்கழலப்பார்ப்பர்கோப்பர்கோலிடையாப்பிட்டுத்
தட்டுவருயிர்ப்புவிங்கித்தள்ளிநின்றிளைப்பர்கச்சிற்
பிட்டினைநுகர்வர்வேலைவினைகெடப்பிறர்க்குமள்ளி
யிட்டுமாறோச்சநோக்கிநகைப்பர்கையிரண்டுந்தாக்கி.

(இ-ள்.) கொட்டினை கழல பார்ப்பர் - மண்வெட்டுங் கொட்டினைக்கோலினின்றுங் கழல அதனை நோக்கியருள்வார், கோப்பர் கோலிடையாப்பிட்டு தட்டுவர் - அக்கோலிற்கோப்பவராய்க் கோலில் கோத்து இறுக இடையில் சிம்புபொருந்த யாப்பிட்டுத் தட்டுவார், உயிர்ப்பு விங்கி தள்ளி நின்று இளைப்பர் - பெருமூச்செறிந்து நின்று இளைப்பார், கச்சு இல் பிட்டினை நுகர்வர் - கச்சிற்பெய்த பிட்டையுண்பார், வேலை வினைகெட பிறர்க்கும் அள்ளி இட்டு - வேலைமேற் செல்வோர்முயற்சிகெடப் பிறருக்கும் அள்ளிக் கொடுத்து; மாறு ஓச்ச நோக்கி - அவர்களை யாளோட்டிகள் பிரம்பாலடிக்கப்பார்த்து, கை இரண்டும் தாக்கி நகைப்பர் - கையிரண்டுங்கொட்டி நகைத்தருளுவார். (௩௭)

வானத்தின்மண்ணிற்பெண்ணின்மைந்தரிற்பொருளிலாசை
தானற்றுத்தமையுநீத்துத்தத்துவமுணர்ந்தயோகர்
ஞானக்கண்கொண்டேயன்றிநாடருஞ்சோதிமன்றே
ரூனக்கண்கொண்டுங்காணவுடன்விளையாடல்செய்வார்.

(இ-ள்.) வானத்தில் மண்ணில் பெண்ணில் மைந்தரில் பொருளில் - சுவர்க்காதிபோகங்களின்மேலும் நிலவுலகவாழ்க்கைமேலும் பெண்கள்மேலும் புத்திரர்

Koviloor Digital Library

மேலும் பொருள்மேலும், ஆசை தான் அற்று தம்மையும் நீத்த - உள்ளவிருப்பை யொழித்து, உடற்போதத்தையும் தற்போதத்தையும் ஒழித்து, தத்துவம் உணர்ந்த யோகர் - உண்மைநிலையையுணர்ந்த சிவயோகிகள், ஞானம் கண் கொண்டே அன்றி நாடு அரும் சோதி - திருவருள் ஞானமாகிய கண்ணினாலல்லாமல் ஊனக்கண்ணினால் நாடுதற்கரிய பரஞ்சோதியாகிய சோமசுந்தரக்கடவுள், மன்னோர் ஊனக் கண்ணும் கொண்டு காண - நிலவுலகவாழ்க்கை விருப்புடையோருனக்கண்ணினாலுங் கண்டுகளிக்க, உடன் விளையாடல் செய்வார் - அவருடன் தாமொருவராய் நின்று திருவிளையாடல் செய்வாராயினார்.

பெத்தக்காலத்தினுடலே தானென்றும் அறிவெழுதலால் அதனையு முடன் கூட்டித்தமையும் எனவும், தத்துவங்கியதிசெய்தலே உண்மைநிலை யாதலால் அதனைத் தத்துவம் எனவும், (அவனருளாலேயவன்றாள்) வணங்குதலால் ஞானக்கண்கொண்டேயன்றியெனவும், ஆன்மாக்கள் பெத்தம் ஒழித்தற்குத் திருக்கோயில்கொண்டருளியதுபோல மானுடத்திருமேனி பலருங்காணக் கொண்டமையால் ஊனக்கண் கொண்டுங்காண வென்றார். கொண்டும் என்பதில் நின்ற இறந்தது தழீஇய எச்சவும்மையைப் பிரித்துக் கண் என்பதனோடு கூட்டுக. (௫௮)

அருளினாலுலகமெல்லாமாக்கியுமளித்துநீத்தும்
பெருவிளையாடல்செய்யும்பிறைமுடிப்பெருமானிங்
னொருவிளையாடல்செய்யவோச்சுகோற்கையராகி
யருகுநின்றேவல்கொள்வாரடைகரைநோக்கப்புக்கார்.

(இ-ள்.) அருளினால் உலகம் எல்லாம் ஆக்கியும் அளித்தும் நீத்தும் பெருவிளையாடல்செய்யும் பிறைமுடிபெருமான் - (ஆன்மாக்களுய்ய) தமது திருவருளால் உலகங்களைப் படைத்தும் காத்தும் அழித்தும் வரும் அளத்தற்கரிய திருவிளையாடல்செய்யும் இளஞ்சந்திரனையணிந்த இறைவர், இங்ஙன் ஒருவிளையாடல் செய்ய - இவ்வாறு ஒரு திருவிளையாடலைச் செய்ய, ஓச்சுகோல் கையர் ஆகி - வேலைமேல் ஒழிபவரை வேலையிற் செலுத்துங் கோலை யேந்திய கையையுடையவராகி, அருகு நின்று ஏவல் கொள்வார் - பக்கலில் நின்று ஏவல்வாங்கு முயற்சியுடையோர், அடைகரை நோக்க புக்கார் - அடைபட்ட கரைகளைப்பார்க்கப் போயினர். (௫௯)

நெட்டலையொதுங்கியோடநிலப்புறவரைபோலிட்டுக்
கட்டியகரைகளெல்லாங்கண்டுகண்டொப்புநோக்கி
யட்டமேசெல்வார்திங்களாயிரந்தொழுதாள்பேரால்
விட்டபங்கடைபடாமைகண்டனர்வெகுளிமூண்டார்.

(இ-ள்.) நெடு அலை ஒதுங்கி ஓட - நெடிய அலைகள் ஒதுங்கி யொருபாலோட, நிலப்புற வரைபோல் இட்டு கட்டிய கரைகள் எல்லாம் கண்டு கண்டு ஒப்பு நோக்கி - மேடா யுயர்ந்துநிற்க மலைபோல மண்போட்டுக்கட்டிய கரைகளையெல்லாம் சென்று சென்று பார்த்து அவரவர்க் களந்துவிட்டமை தம்மி லொத்திருத்தலைப்பார்த்து, அட்டமே செல்வார் - குறுக்கே செல்லும் அதிகாரிகள், திங்கள் ஆயிரம் தொழுதாள் பேரால் விட்ட பங்கு அடைபடாமை கண்டனர் - நூறுவருடஞ்சென்ற வந்திக்கு அளந்துவிட்ட கரை யடைபடாமையைக் கண்டு, வெகுளி மூண்டார் - கோபமூண்டனர்.

ஆயுள் வரையறைசெய்யும் நூலோருள் ஒருசாரார் பத்துமாதம் ஓராயுளாகக் கொள்ளுகையால் திங்களாயிரந் தொழுதாள் என்றார். அட்டம் திசைச்சொல்.

Koviloor Digital Library

வந்திக்குக்கூலியாளாய்வந்தவன்யாரென்றோடிக்
கந்தர்ப்பனெனநேர்நின்றகாளையைநோக்கியேடா
வந்தப்பங்குள்ளவெல்லாமடைபட்டதெவனீயின்ன
மிந்தப்பங்கடையாய்வாளாதிருத்தியாறம்பியென்றார்.

(இ-ள்.) வந்திக்கு கூலியாள் ஆய் வந்தவன் யார் என்று ஓடி - வந்தியென்னு முதியாளுக்குக் கூலியாளாய் வந்தவனெவனென்றோடி, கந்தர்ப்பன் என்ன நேர் நின்ற காளையை நோக்கி - மன்மதனைப்போல நேரேநின்ற காளைப்பருவத்தையுடைய இறைவனைப்பார்த்து, ஏடா - எண்டா, அந்த பங்கு உள்ள எல்லாம் அடைபட்ட - அந்தப் பங்குகளாய்ப் பிறர்க்குள்ளனவெல்லா மடைபட்டன, நீ இன்னம்-நீ இன்னமும், இந்தபங்கு அடையாய்-இந்த வந்தியின் பங்கினையடையாமல், வாளாது இருத்தி - சும்மா இருக்கின்றாய்; தம்பி எவன் என்றார் - தம்பியே யாதுகாரணம் என்றார்கள். (௬௪)

வேறுரையாதுதம்மையுணர்ந்தவர்வீறுதோன்ற
விறிலாரிறுமாப்பெய்தியிருந்தனராகமேலிட்
டாறுவந்தடுத்தபங்கிலடைகரைகல்லிச்செல்ல
மாறுகொண்டோச்சவஞ்சிமயங்கினார்வலியகோலார்.

(இ-ள்.) வேறு உரை யாது - அவர்கள் வினாவிற்கு வேறொன்றும் வாய்திறவாது, தம்மை உணர்ந்தவர் ஈறு இல்லார் - தமது தன்மையைப் பிறரானுணர்தற்கரியராய்த் தாமே யுணர்ந்துநின்ற அழிவில்லாத இறைவர், வீறு தோன்ற இறுமாப்பு எய்தி இருந்தனராக - நிகரின்மைதோன்ற இறுமாப்படைந்திருக்க, ஆறு மேலிட்டு வந்து - வெள்ள மேலிட்டு வந்து, அடுத்த பங்கு இல் அடை கரை கல்லி செல்ல - அடுத்த பிறர் பங்குகளி லடைபட்ட கரைகளையெல்லாம் அகழ்ந்துபோக, மாறு கொண்டு ஓச்ச அஞ்சி - கோலாலடிக்க வஞ்சி, வலிய கோலார் மயங்கினர் - வலிய கோலையேந்திய தண்டக்காரர்கள் மயங்கினார்கள்.

அயன் முதலியோரா லுணர்தற்கரியாரென்பார் தம்மை யுணர்ந்தவர் எனவும், அடித்து வேலை வாங்கும் அதிகாரிகளென்பார் வலிய கோலார் எனவுங்கூறினார்.

பித்தனேயிவன்றானென்பாரல்லதுபேய்கோட்பட்ட
மத்தனேயிவன்றானென்பார்வந்தியையலைப்பான்வந்த
வெத்தனேயிவன்றானென்பாரிந்திரசாலங்காட்டுஞ்
சித்தனேயிவன்றானென்பாராரென்றுந்தெளியோமென்பார்.

(இ-ள்.) இவன்தான் பித்தனே என்பார் - (தண்டத்தலைவர்களுள்) சிலர் இவன் பித்தனோ வென்பாரும், அல்லது இவன்தான் பேய் கோட்பட்ட மத்தனே என்பார் - அன்றி இவன் பேயாற் கொள்ளப்பட்ட வெறியனோ வென்பாரும், இவன்தான் வந்தியை அலைப்பான் வந்த எத்தனே என்பார் - இவன் வந்தியை வருத்தவந்த எத்தனோ என்பாரும், இவன்தான் இந்திரசாலம் காட்டும் சித்தனே என்பார் - இவன் இந்திரசாலவித்தையைக் காட்டும் சித்தனோ வென்பாரும், ஆர் என்றும் தெளியோம் என்பார் - இவன் யாரென்றும் யாம் சிறிதும் அறியோமென்பாரும். ௬௫

பாடல்கின்னரனேயென்பார்பண்ணரினுற்பாணிக்கேற
வாடல்கின்னரனேயென்பாருரும்பெறற்செல்வத்தாழ்ந்து

Koviloor Digital Library

வாடியமகனோவென்பாரிசைபடவாழ்ந்துகெட்ட
வேடவிழ்தாரினாருள்யார்மகனிவன்கொலென்பார்.

(இ-ள்.) பாடல் விஞ்சையனோ என்பார் - இசைவழாது பாடும் வித்தியாதரனோ வென்பாரும், பண்ணின் ஆல் பாணிக்கு ஏற ஆடல் விஞ்சையனோ என்பார் - பண்ணோடு தாளத்திற்கேற்ப ஆடும் பரதநூல் வல்லானோ என்பாரும், அரும் பெறல் செல்வத்து ஆழ்ந்து வாடிய மகனோ என்பார் - பெறுதற்கரிய செல்வத்திலழுந்தி யிடையி லச்செல்வங்குன்றிய மகனோ என்பாரும், இசை பட வாழ்ந்து கெட்ட ஏடு அவிழ் தாரினாருள் - புகழ்பட வாழ்ந்து இடையில் வாழ்க்கை கெட்ட இதழவிழ்ந்த மாலையையணிந்த அரசர்களுள், இவன் யார் மகன் கொல் என்பார் - இவன் யாருடைய புத்திரனோ என்பவரும். (௪௪)

கரும்பனும்விரும்பநின்றகட்டழகுடையனென்பா
ரரும்பெறலிவன்றான்கூலிக்காட்செய்ததெவனோவென்பா
ரிரும்பெருங்குரவரற்றதமியனோவென்பார்வேலை
புரிந்தவனல்லனென்பாரதுமேனிபுகலுமென்பார்.

(இ-ள்.) கரும்பனும் விரும்ப நின்ற கட்டழகு உடையன் என்பார் - கரும்பு வில்லையேந்திய மன்மதனும் விரும்பநின்ற பேரழகுடையவனென்பவரும், அரும் பெறல் இவன் தான் கூலிக்கு ஆட் செய்தது எவனோ என்பார் - பெறுதற்கரிய இவன் கூலியின்பொருட்டு அடிமைசெய்தது யாதென்பாரும், இரும்பெருங்குரவர் அற்ற தமியனோ என்பார் - பெருமைவாய்ந்த இருமுது குரவரையுமிழந்து வருந்திய தனியனோவென்பவரும், வேலைபுரிந்தவனல்லன் என்பார் - வேலை சிறிதுஞ் செய்து பழகியறியாதவனென்பாரும், அது மேனி புகலும் என்பார் - அதனை இவனது மேனியே கூறுமென்பாரும்.

இரும்பெரு ஒருபொருட் பன்மொழி, இருமுதுகுரவர் தாய்தந்தையர். (௪௫)

கூலியுங்கொண்டான்றானேகணக்கிலுங்குறிக்கச்சொன்னான்
வேலையுஞ்செய்யானின்சொல்விளம்பினுங்கேளான்கல்லின்
பாலறைமுனியேயாகிப்பராமுகம்பண்ணிநின்றா
னேலநாமிதனைவேந்தற்குணர்த்துதுமென்றுபோனார்.

(இ-ள்.) கூலியும் கொண்டான் - (வந்தியிடத்தில் முயலுதற்கு முன்னமே) கூலியுங்கொண்டவன், தானே கணக்கிலும் குறிக்க சொன்னான் - தானே பட்டோலையிலும் பதியக்கூறினான், வேலையும் செய்யான் - சிறிதும் வேலையையுஞ் செய்யான், இன் சொல் விளம்பினும் கேளான் - இன் சொற் கூறினுங் காதுகொடான், கல்லின்பால் அறை முனியே ஆகி பராமுகம் பண்ணிநின்றான் - கல்லினிடத்தறைந்தமரமுனிபோலாகி நமது சொல்லைச் சற்றுங் கேளாது நின்றவன், நாம் இதனை வேந்தற்கு ஏல உணர்த்துதும் என்றுபோனார் - நாம் இச்செய்தியை அரசனுக்குப்பொருந்த வுணர்த்துவோமென்று தண்டக்காரர்கள் போயினர்.

கல்லிலறைந்த மரமுனி தானே சிதைதல்போல நாஞ் சொல்லுஞ்சொல் இவனுக்கேறில என்பார் கல்லின்பாலறை முனியேயாகிப் பராமுகம்பண்ணி நின்றான் என்றார் "குன்றின்மேற்கொட்டுந் தறிபோற்றலைதகர்ந்து-சென்றிசையாவாஞ் செவிக்கு" என்றார் பிறரும். இது தொழிலுவமையணி. (௪௬)

Koviloor Digital Library

தலைமகன்றிருமுன்றாழ்ந்துசாற்றுவரடிகேளிந்த
வலைபுனனகரார்தந்தம்பங்கெலாமளந்தவாற்றான்
மலையினும்வலியவாகச்சுமத்தினர்வளைந்தசிற்றான்
விலைநரையாட்டிதன்பங்கடைத்திலள்வென்றிவேலோய்.

(இ-ள்.) தலைமகன் திருமுன் தாழ்ந்து சாற்றுவார் - பாண்டியன் சந்நிதியிற்சென்று வணங்கிச் சொல்லுவார்கள், அடிகேள் - அடிகளே, இந்த அலைபுனல் - இந்தப்பெருவெள்ளத்தை, நகரார் தந்தம் பங்கு எல்லாம் அளந்த ஆறு ஆல் மலையினும் வலிய ஆக சுமத்தினர் - நகரிலுள்ள குடிகள் தத்தமக்குரிய பங்குகளையெல்லாம் அளந்துவிட்டபடியே மலையைப்பார்க்கிலுந் திண்ணியனவாகக் கரைபோட்டுத் தடுத்தனர், சிற்றான் விலைவளைந்த நரை ஆட்டி - பிட்டுவிற்கும் முதுகுவளைந்த முதியவள், வென்றி வேலாய் - வெற்றி வாய்ந்த வேலினையுடைய அரசனே, தன் பங்கு அடைந்திலள் - அளந்துவிட்ட தன் பங்கினை யடைத்திலள்.

சுமந்தனரென்னும் பாடத்தினைச் சுமத்தினர் எனப் பாடங்கொள்க. (சஎ)

வேளையும்வனப்பினாலேவென்றவனொருவன்வந்தி
யாளெனவிங்கேவந்துபதிந்தனனரசர்செல்வக்
காளைபோற்களிப்பன்பாடுமாடுவன்காலம்போக்கி
நீளுவன்வேலையொன்றுநெஞ்சினுநினைதல்செய்யான்.

(இ-ள்.) வேளையும் வனப்பினாலே வென்றவன் ஒருவன் - மன்மதனையுந் தன்னழகினாலே வென்ற ஒருகாளைபோல் வானொருவன், வந்தி ஆள் என்ன இங்கு வந்து பதிந்தனன் - வந்தியின் ஆளென்று இங்குவந்து பெயர் பதிவித்தனன், அரசர் செல்வம் காளைபோல் களிப்பன் - அரசர் பெற்ற செல்வப்புத்திரர்கள் போலக் களிகூர்வான், பாடும் ஆடுவன் - பாடுவானுடுவான், காலம்போக்கி நீளுவன்-காலத்தை வாளாகழித்து நீட்டிப்பான், வேலை ஒன்றும் நெஞ்சினும்நினைதல் செய்யான்-வேலையைச் சிறிது மனத்திலுங் கருதான்.

ஆளெனவந்தவன் ஆட்செய்வோர்க்குரிய குணமின்றி யிருந்தனன் என்பார் அரசர் செல்வக்காளைபோற் களிப்பன் எனவும், ஏற்ற கூலிக்கியைய வேலை செய்திலன் என்பார் வேலையொன்று நெஞ்சினு நினைதல் செய்யான் எனவுங் கூறினார். (சஅ)

ஆண்டகைவனப்பைநோக்கியடிக்கவுங்கில்லேமஞ்சி
யீண்டினேமென்றுகூறவிம்மெனவமைச்சரோடும்
பாண்டியனெழுந்துநாம்போய்ப்பங்கடைபட்டவெல்லாங்
காண்டுமென்றெறிநீர்வையைக்குடிரையங்கரையைச்சார்ந்தான்.

(இ-ள்.) ஆண் டகை வனப்பு ஐ நோக்கி அடிக்கவும் கில்லேம் - ஆணிற்சிறந்த இலக்கணம்வாய்ந்த வந்தியாளின் பேரழகினைக்கண்ணுற்று அடிக்கவுமனங்கொண்டிலேம், அஞ்சி ஈண்டினேம் என்று கூற - அச்சமுற்று இங்கு வந்தேமென்று தன்பரிசனங்கூற, இம் மென அமைச்சரோடும் பாண்டியன் எழுந்து - விரைந்து மந்திரிமாரோடும் அரிமருத்தனபாண்டியனெழுந்து, நாம் போய் - நாஞ் சென்று, அடைபட்ட பங்கு எல்லாம் காண்டும் என்று - அடைபட்ட அவரவர்க் களந்துவிட்ட

Koviloor Digital Library

பங்குகளையெல்லாங் காண்போமென்று, எறி நீர் வையை குடிஞை அம் கரையை - கரையொடுமோதும் நீர்மயமாகிய வையைநதியின் அழகியகரையினை, சார்ந்தான் - அடைந்தவன்.

அரசகுமாரனெனக் கருதினராதலால் அடிக்கவுங்கில்லேமெனவும், நின்னுளைக்கஞ்சிவந்தனம் என்பாராதலால் அஞ்சியீண்டினம் எனவுங் கூறினர் என்றனர். அடிக்கவுங் கில்லேம் கில் எதிர்மறைப்பொருளையுணர்த்தும் ஓரிடைச்சொல். (௩௯)

எடுத்ததிண்கரைகளெல்லாமிறைமகனுள்ளத்தோகை
மடுத்தனனோக்கிச்செல்வான்வந்திபங்கடைப்பாரின்றி
அடுத்தநோன்கரையைக்கல்லியழித்தெழுவெள்ளநோக்கிக்
கடுத்துநின்றெங்குற்றானிக்கரைசுமந்தடைப்பானென்றான்.

(இ-ள்.) எடுத்த திண் கரைகள் எல்லாம் - அவரவர் தத்தம் பங்குகளிலெடுத்த திண்ணியகரைகளையெல்லாம், இறை மகன் உள்ளத்து ஓகை மடுத்தனன் நோக்கி - பாண்டியன் தனதிதயத்தில் மகிழ்கூர்ந்து கண்ணுற்று, செல்வான் - செல்லுகின்றவன், வந்தி பங்கு அடைப்பார் இன்றி - வந்தியென்னு முதியவளுக்கு அளந்தபங்கினையடைப்பவரில்லாமல், அடுத்த நோன் கரையையும் கல்லி - பக்கத்தடுத்த (அடைபட்ட) வலியகரையையுங் கல்லி, அழித்து எழு வெள்ளம் நோக்கி - அழித்தெழுந்துபாயும் பெருக்கினைப்பார்த்து, கடுத்து நின்று - பெருங்கோபங்கொண்டுநின்று, இ கரை சுமந்து அடைப்பான் எங்கு உற்றான் என்றான் - இக்கரையைச்சுமந்தடைக்கவந்த வந்தியாளெங்குச் சென்றானென்று தன்னாணைமேற்கொண்டு நிற்பவரை வினவினான்.

மடுத்தனன் முற்றெச்சம். சுமந்து முதனிலைதிரியாதுவந்த பிறவினை வினையெச்சம். கரையென்பதனிறுதியில் உயர்வுசிறப்பும்மைதொகுத்தல். (௪௦)

வள்ளறன்கோபங்கண்டமாறுகோற்கையரஞ்சித்
தள்ளருஞ்சினத்தராகித்தடக்கைதொட்டீர்த்துப்பற்றி
உள்ளொடுபுறங்கீழ்மேலாயுயிர்தொறுமொளித்துநின்ற
கள்வனையிவன்றான்வந்தியாளெனக்காட்டிநின்றார்.

(இ-ள்.) வள்ளல் தன் கோபம் கண்ட - பாண்டியன்கொண்ட சினக்குறிப்பை நோக்கிய, மாறு கோல் கையர் அஞ்சி - மாறாகிய கோலையேந்திய கையையுடையோரச்சங்கூர்ந்து, தள்ளரும் சினத்தர் ஆகி - நீங்குதலில்லாத கோபமுடையவராகி, தட கை தொட்டு பற்றி ஈர்த்து - இறைவரது நீண்ட திருக்கரத்தைத்தொட்டிழுத்து, உள் புறம் கீழ் மேல் ஆய் - அண்டங்களினுள்ளும் புறம்புங் கீழுமேலும் நிறைந்து, உயிர் தொறும் ஒளித்து நின்ற கள்வனை - அங்குள்ள உயிர்கள்தோறும் விரவி யவ்வுயிர்களுக்குத் தோன்றாத் தன்மையாய்க் கரந்துநின்றவனை, இவன் தான் வந்தி ஆள் என காட்டி நின்றார் - இவன்தான் வந்தியென்னு முதியவளாளென்று தெரிவித்து நின்றனர்.

ஒடு எண்ணொடு. ஒரு ஆரியநாட்டினன் கொண்டுவந்தனனென "விழித்தலுங் கடிதுசென்றவாரியன்பே[illegible]கி - மொழிக்கவல்சிந்தியந்த முன்னவன்றன்னை யெய்த - அழைத்தலும்வருதல்செய்யா தஞ்சிநின்றிரங்கல்கண்டு - பழித்தவர்சென்னைபற்றியீர்த்தனன்பரிவிலாதான்" என வாதவூரடிகள்புராணத்தில்வருதல்காண்க.

Koviloor Digital Library

கண்டனன்கனன்றுவேந்தன்கையிற்பொற்பிரம்புவாங்கி
யண்டமுமளவிலாதவுயிர்களுமாகமாகக்
கொண்டவன்முதுகில்வீசிப்புடைத்தனன்கூடையோடு
மண்டனையுடைப்பிற்கொட்டிமறைந்தனனிறைந்தசோதி.

(இ-ள்.) வேந்தன் கண்டனன் கனன்று - பாண்டியன்கண்டு கோபித்து, கையில் பொன் பிரம்பு வாங்கி - கையில் பொற்பூண்கட்டிய பிரம்பினையேந்தி, அண்டமும் அளவு இல்லாத உயிர்களும் ஆகம் ஆக கொண்டவன் - பல்லாயிரகோடியண்டங்களுமவற்றிலுள்ள அளவு இல்லாத உயிர்களும் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளிய இறைவருடைய, முதுகு இல் வீசி புடைத்தனன் - திருமுதுகின் மேலோச்சியடித்தனன், நிறைந்தசோதி - எங்குநிறைந்த ஒளியாகிய அவ்விறைவர், மண் தன்னை உடைப்பில் கொட்டி கூடையோடு மறைந்தனன்-மண்ணையுடைப்பிற்கொட்டிக் கூடையோடு மறைந்தருளினார்.

ஆன்மாக்கள் உடல், பொறி, கரணங்களைக் கருவியாகக்கொண்டு விடயங்களையுணர்தற்கு இறைவன் உலகே யுருவாகவும் ஏனையவற்றைப் புறத்துறுப்பாகவும் அகத்துறுப்பாகவுங்கொண்டு அவ்வான்மாக்களுக்குணர்த்த விச்சுவரூபியாய் நிற்றலால் அண்டமுமளவிலாத வுயிர்களுமாமாகக்கொண்டவன் என்றார். "உலகமேயுருவமாக யோனிகளுறுப்பதாக - இலகுபேரிச்சாஞானக் கிரியையுட்கரணமாக-அலகிலாவுயிர்ப்புலன்கட்கறிவினையாக்கியைந்து-நலமிகுதொழில்களோடு நாட்கமுடிப்பனுதன்" எனச் சிவஞானசித்தியாரில்வரும் ஏதுவாலுணர்க. கண்டனன் முற்றெச்சம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பாண்டியன்முதுகிற்பட்டதச்செழியன்பன்னியருடம்பினிற்பட்ட
தாண்டகையமைச்சர்மேனிமேற்பட்டதாசிளங்குமரர்மேற்பட்ட
தீண்டியகழற்கால்வீரர்மேற்பட்டதிவுளிமேற்பட்டதுபருமம்
பூண்டவெங்கரிமேற்பட்டதெவ்வுயிர்க்கும்போதன்மேற்பட்டவத்தழும்பு

(இ-ள்.) எ உயிர்க்கும் போதன்மேல் பட்ட அ தழும்பு-எல்லாவுயிர்கட்கும் உணர்த்துவோன் திருமேனிமேல்பட்ட அடித்தழும்பு, பாண்டியன் முதுகில்பட்டது-பாண்டியன்முதுகின்மேற்பட்டது, அ செழியன் பன்னியர் உடம்பினில் பட்டது - அப்பாண்டியன் மனைவியருடம்பின்மேற்பட்டது, ஆண்டகை அமைச்சர் மேனி மேல்பட்டது-அப்பாண்டியன் மந்திரிமார்களினுடம்பின்மேற்பட்டது, அரசு இளங்குமரர் மேல்பட்டது - அரசகுமாரர்மேற்பட்டது, ஈண்டிய கழல்கால்வீரர் மேல் பட்டது-வெற்றியாற்கிடைத்த வீரகண்டையையணிந்த கால்களையுடைய வீரர்கள் மேற்பட்டது, இவுளிமேல்பட்டது - அப்பாண்டியனேறுங் குதிரைமேற்பட்டது, பருமம் பூண்டவெம் கரிமேல்பட்டது - கவசம்பூண்ட கொடியயானையின்மேற்பட்டது. (௫௩)

பரிதியுமதியும்பாம்புமைங்கோளும்பன்னிறம்படைத்தநாண்மீனு
மிருநிலம்புனல்காலெரிகடுங்கனல்வானென்னுமைம்பூதமுங்காருஞ்
சுருதியுமாறுசமயவானவருஞ்சுரர்களுமுனிவருந்தொண்டின்
மருவியமுனிவர்கணங்களும்பட்டமதுரைநாயகனடித்தழும்பு.

(இ-ள்.) மதுரைநாயகன் அடித்தழும்பு - மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின், அடி தழும்பு - திருமேனிமேற்பட்ட அடித்தழும்பு, பரிதியும்

மதியும் பாம்பும் ஐங்கோளும் - சூரியனுஞ் சந்திரனும் ராகுகேதுக்களும் இவையொழிந்த செவ்வாய்முதலிய ஐந்துகிரகங்களும், பல் நிறம்படைத்த நாள் மீனும் - பல நிறங்களைப்பெற்ற நக்ஷத்திரங்களும், இருநிலம் புனல் கால் எரிகடுங் கனல்வான் என்றும் ஐம்பூதமும் - பெரியபிருதிவியும் அப்பும் காற்றும் எரியுங் கடியதீயும் ஆகாயமென்றும் ஐந்துபூதங்களும், காரும் - மேகமும். சுருதியும் ஆறுசமய வானவர் உம்-வேதங்களும் அறுவகைப்பட்டசமயங்களிலுள்ள தேவர்களும், சுரர்களும்-மற்றைத்தேவர்களும், முனிவு அரும் தொண்டில் மருவிய முனிவர்கணங்களும் பட்ட - வெறுப்பில்லாத திருவடித்தொண்டிற்கலந்த முனிவர் கூட்டங்களும் அடிபட்டன.

அஃறிணைப்பொருளோ டுயர்திணைப்பொருள் விரவிவரினும் மிகுதியால் பட்டவென அஃறிணைமுடிபேற்றன. (௫௪)

வானவர்மனிதர்நரகர்புள்விலங்குமாசுணஞ்சிதலெறும்பாதி
யானபல்சரமுமலைமரங்கொடிபுல்லாதியாமசரமும்பட்ட
வூனடைகருவும்பட்டனதழும்போடுதித்தனவுயிரிலோவியமுந்
தானடிபட்டசராசரசடங்கடமக்குயிராயினோன்றழும்பு.

(இ-ள்.) சர அசரசடங்கள் தமக்கு உயிர் ஆயினோன் தழும்பு - சரம் அசரமாகிய பொருள்களின் உடம்புகள்தோறுமுள்ள உயிர்களுக்கு உயிராயுள்ளோன் திருமேனியிற்பட்டதழும்பு, வானவர் மனிதர் நரகர் - தேவர்களு மனிதரும் நரகருமாகிய உயர்திணைப்பொருள்களும், புள் விலங்கு மாசுணம் சிதல் எறும்பு ஆதி ஆன பல்சரமும் - பறவையும் மிருகமும் பாம்பும் செல்லும் எறும்புமுதலிய அஃறிணைப்பொருளுமாகிய சரங்களும், மலை மரம் கொடி புல் ஆதியாம் அசரமும்-(அவ்வஃறிணைப்பொருளின் பகுதியாகிய) மலையுமரமும் கொடியும் புல்லுமுதலிய அசரங்களுமாகிய, பட்ட - (இவைகள்) பட்டன, ஊன் அடை கருவும் பட்டன-தாய்மாருதரத்திலிருக்குங் கருவுகளும்பட்டன, தழும்பு ஓடு உதித்தன - பிறக்குங்குழந்தைகளும் அத்தழும்போடு பிறந்தன, உயிர் இல் ஓவியமும் அடிபட்ட-உயிரில்லாத சித்திரங்களும் அடிபட்டன.

சித்திரங்கள் உயிரில்லனவாயினும் உடம்போடு கூடிநிற்றலால் அடிபட்டன என்றார். (௫௫)

தன்னனைமாயோன்விழித்தனன்கமலச்சோதியும்யாதெனவியந்தான்
விண்ணவர்பெருமான்வெருவினான்வானோர்வேறுளார்மெய்பனிப்படைந்
வண்ணயாழியக்கர்சித்தர்சாரணர்தம்வடுப்படாவுடம்பினிற்பட்ட [தார்
புண்ணையாதென்றுதத்தமிற்காட்டிமயங்கினார்புகுந்தவாறறியார்.

(இ-ள்.) மாயோன் தன்னனை விழித்தனன் - திருமால் (அடிபட்டமையால்) நடுக்குற்றுவிழித்தான், கமலம் சோதியும் யாது என்ன வியந்தான் - தாமரையில் உதிக்கும் பிரமனும் இது என்னகாரணமென்று வியப்படைந்தான், விண்ணவர்பெருமான் வெருவினான் - தேவர்கட்கு அரசனாகிய இந்திரனும் அஞ்சினான், வானோர் வேறு உள்ளோர் மெய் பனிப்பு அடைந்தார் - அவனொழிந்ததேவர்களும் ஏனையோரும் உடல் நடுக்குற்றார், வண்ணம் யாழ் இயக்கர் சித்தர் சாரணர் - பெருவண்ணமுதலிய பாடற்றொழிலமைந்த வீணையையேந்திய இயக்கரும் சித்தருஞ் சாரணரும், புகுந்த ஆறு அறியார் - நிகழ்ந்தவகையையறியாமல், தம் வடுப

டாத உடம்பினிற்பட்ட புண்ணையாது என்று தந்தம் இல் காட்டிமயங்கினர் - தமது தழும்புபடாத மேனியிற்பட்ட புண்ணினை இது எவ்வகையாய்வந்ததென்று தம் முள்காட்டி மயங்கினார்கள்.

விச்சுவரூபியென முன்னர்க்காட்டிய ஏதுவால் யாவும் அடிபட்டனவென்றார்.

ஏகநாயகனெவ்வுயிர்களுந்தானேயென்பதுமன்பினுக்கெளிய
னாகியதிறனுங்காட்டுவானடிபட்டங்கொருகூடைமண்கொட்டி
வேகநீர்சுருங்கக்கரையினையுயர்த்திமிகுத்துடன்வேலைநீத்தொளித்துப்
போகியவாறுகண்டுகோற்கையர்போய்நரையாட்டியைத்தொடர்ந்தார்.

(இ-ள்.) ஏகநாயகன் - எப்பொருட்கும் இறைவன், எ உயிர்களும் தானே என்பதும் - எல்லாவுயிர்களும் தானேயென்பதையும், அன்பினுக்கு எளியன் ஆகிய திறன் உம் - அடியவரன்பினுக்குத் தானெளியவனாகிய திறத்தையும், காட்டுவான் (பலர்க்கும்) காட்ட, அடிபட்டு - பிரம்படிபட்டு, அங்கு - அவ்வுடைப்பில், ஒருகூடைமண்கொட்டி - ஒருகூடைமண்ணைக்கொட்டி, நீர் வேகம் சுருங்க - விரைந்துவரும்பெருக்கின் வேகம்குறைபட, கரையினை உயர்த்தி மிகுத்து - கரையையுயர்த்தி மேடாக்கி, வேலை உடன் நீத்து - வேலையையுடனேயொழித்து, ஒளித்து போகிய ஆறுகண்டு - கரந்துபோனவகையைக்கண்டு, கோல் கையர் போய் - கோலேந்திய தண்டக்காரர் சென்று, நரையாட்டியை தொடர்ந்தார் - வந்தியைத்தொடர்ந்தார்கள்.

ஏகநாயகனெவ்வுயிர்க்குந்தானேயென்பது காட்ட அடிபட்டு எனவும், அன்பினுக்கு எளியனாகிய திறன்காட்ட அங்கொரு கூடைமண்கொட்டி - வேகநீர் சுருங்கக் கரையினையுயர்த்தி மிகுத்து எனவு முறைநிரனிறையாகக்கொள்க. (௫௭)

வன்புதாழ்மனத்தோர்வலிசெயவின்னமன்னனான்மறுக்கமுண்டேயோ
முன்புபோகியவாளென்செய்தானென்னாய்முடியுமோவினியெனத்திரங்கி
யென்புபோல்வெளுத்தகுழலினாள்கூடலிறையினைநோக்கிநின்றிரங்க
வன்புதேனாகவருத்தியசிற்றாணமுதுசெய்தருளினாரருளால்.

(இ-ள்.) வன்பு தாழ் மனத்தோர் வலிசெய - கடிய மனத்தையுடைய தண்டக்காரர்கள் துன்பஞ்செய்ய, இன்னம் - இன்னமும், மன்னனால் மறுக்கம் உண்டேயோ - பாண்டியனால் நமக்கோர் கெடுதியுண்டோ, முன்பு போகிய ஆள் - முன்னம் நமக்கு ஈடாகச்சென்ற கூலியாள், என் செய்தான் - யாது செய்தானோ, இனி என் ஆய் முடியுமோ என்ன - இனி யாதாய் முடியுமோவென்று, திரங்கி - திரைந்து, என்புபோல் வெளுத்த குழலினாள் - எலும்புபோல வெளுத்த கூந்தலையுடைய வந்தி, கூடல் இறைவனை நோக்கி நின்று இரங்க - நான்மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளைத் தியானித்து நின்று வருந்த, அன்பு தேன் ஆக அருத்திய சிற்றாண் - அவ்வன்னைதனது அன்பே தேனாக அதனோடு கலந்தூட்டிய சிற்றாணை, அமுதுசெய்தருளினார் அருளால் - திருவமுது செய்தருளிய சோமசுந்தரக்கடவுள் திருவருளால். (௫௮)

கண்ணுதனந்நிகணத்தவர்விசும்பிற்கதிர்விடுதிப்பியவிமான
மண்ணிடையிழிச்சியன்னைவாவென்றுவல்லைவைத்தமரர்பூமழையும்
பண்ணிறைமிதவோதையும்வேதப்பனுவலுந்துந்துபியைந்தும்
விண்ணிடைமிரச்சிவனருளடைந்தோர்மேவியசிவபுரத்துய்த்தார்.

Koviloor Digital Library

(இ-ள்.) கண்ணுதல் - சிவபெருமானருளையால், நந்திகணத்தவர் - நந்திநாயனாராலேவப்பட்ட சிவகணத்தோர், விசும்பின் - சிவபுரத்தினின்றும், கதிர் விடுதிப்பிய விமானம் - ஒளிவீசுந் தேவவிமானத்தை, மண் இடை இழிச்சி - நிலவுலகிற் செலுத்தி, அன்னைவா என்று - தாயே வாவென்று, வல்லை வைத்து - விரைந்தேற்றி, அமரர் பூமழையும் - தேவர்கள் சிந்து மலர்மழையும், பண் நிறை - இசை நிறைந்த, கீத ஒதையும் - கீதவோசையும், வேதம் பனுவலும் - வேதநூல் கோஷமும், துந்துபி ஐந்து உம் - பஞ்ச துந்துபிகளின் முழக்கமும், விண் இடை நிமிர - ஆகாயத்தில் நிமிர்ந்தோங்க, சிவன் அருள் அடைந்தோர் மேவிய சிவபுரத்து உய்த்தார் - அச்சிவபெருமான் திருவருளையடைந்தவர் அடையும் சிவபுரத்திற் செலுத்தினார்கள்.

ஐந்து துந்துபி தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி. (௫௧)

மன்றுடையானோர்கூடைமண்கொட்டிமறைந்ததுமடைகரைநீண்ட
குன்றெனவுயர்ந்ததன்மையுந்தன்மேற்கோலடிபட்டதுநோக்கி
யென்றன்மேற்பட்டதென்றன்மேற்பட்டதிதுவெனவதுவெனவமைச்சர்
நின்றவருணர்த்துநிகழ்ச்சியும்பிறர்பானிகழ்ச்சியுநோக்கியந்நிருபன்.

(இ-ள்.) மன்று உடையான் ஓர் கூடை மண் கொட்டி மறைந்ததும் - வெள்ளியம்பலத்தையுடைய சோமசுந்தரக்கடவுள் ஒருகூடை மண்ணைக்கொட்டி மறைந்தருளியதும், அடைகரை நீண்ட குன்று என்ன உயர்ந்த தன்மையும் - அடைபட்டகரை உயர்ந்த மலையைப்போல நிமிர்ந்தோங்கிய தன்மையையும், தன்மேல் கோல் அடிபட்டதும் நோக்கி - தன்மேற் றனது பிரம்படிபட்ட தன்மையையும் நோக்கி, என் தன்மேல் பட்டது என் தன்மேல் பட்டது - என்மேற்பட்டது என்மேற்பட்டது, இது என்ன அது என்ன - இத்தழும்புயாது அத்தழும்புயாது, நின்றவர் அமைச்சர் உணர்த்தும் நிகழ்ச்சியும் - என்று தன்னருகினின்ற மந்திரிகள் அறிவிக்கும் செய்தியையும், பிறர்பால் நிகழ்ச்சியும் - பிறரிடத்து நிகழ்ந்த செய்தியையும், நோக்கிய நிருபன் - கண்ணுற்ற அரிமருத்தன பாண்டியன்.

வையைக்கரையில் நின்ற வாதவூரடிகள்மேற் பிரம்படிபட நமது இறைவர் கூலியாளாய் வந்து பிரம்படி பட்டனரோவென்று வருந்துங்காலையில் ஆரியர்கள் வந்து நிகழ்ந்த திருவிளையாடல்களைக்கூற, அவர்களோடு இறைவர் மண்சுமந்த இடத்தைக் காட்டுங்கொன்று சென்று கண்டு வருந்தி முறையிட்டனர் என "மையலையுந்திருமிடற்றுர் மெய்யிலடிவாதவூர்-ஐயருடம்பிறும்வந்து படுதலுமேயயர்வெய்தி - உய்யவெவிளையாட்கொள்ள வுகந்தொருவர்க்காளாகி - மெய்யொழுந்தருளினரோ வென்றென்றுமிகநொந்து. தம்பெருமையறியாத தம்மிறைவர்தமக்கிரங்கிக் - கம்பிதமுங்கண்ணீரும் வரக்கவற்சியுறும்போதில் - வெம்பிறவிதொலைத்தார்முன் னாரியர்கள்விரைந்தோடி - யும்பர்பிரான்றிருவிளையாட் டெல்லாமங்குரைத்தார்கள். வேட்டுருகும்பெருங்காதல் வித்தகரித்தன்மையெலாம் - கேட்டுமனந்தளர்ந்துமிகக் கிளர்ந்தவிழிப்புனல்பொங்க - வாட்டிகழுஞ்சடையண்ணன் மண்சுமந்தவிடங்கொடுபோய்க் - காட்டுமெனமொழிந்தவரோ டவ்விடநேர்கடிதெய்தி. பிரமனுடன்றிருமாலும் பிறப்பகலப்பல்காலும் - பரிவினுடன்றருமலரோ பத்தரிடும்பச்சிலையோ - புரிதருசெஞ்சடையோசற் புதமதியோபச்சிலையோ - விரியரவின்பலபடமோ மண்சுமக்குஞ்சும்மாடு. கலையறியும்புகழ்வையைக் கரைதிருவம்பலமாக - அலையெறியும் புனலோசை யந்தரதுந்துமியாகத் - தலைவனடங்கண்டார்க ளரவமெனுந்தவமுனியு

Koviloor Digital Library

ங் - கொலைதவிரும்புலியென்றுங் குலமுனியுமானாரோ" என வாதவூரடிகள் புராணத்தில் வருதல் காண்க. (சுo)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உள்ளத்தாசங்கைபூண்டானாகமண்ணுடைப்பிற்கொட்டிக்
கள்ளத்தாராகிப்போனார்ககனத்தாராகிச்சேனை
வெள்ளத்தார்பிறருங்கேட்பமீனவற்குவகைவெள்ளங்
கொள்ளத்தாமழைத்தாகாயவாணியாற்கூறலுற்றார்.

(இ-ள்.) உள்ளத்து ஆசங்கை பூண்டானாக - தன்மனத்தில் ஐயங்கொள்ள, மண் உடைப்பில் கொட்டி - (சுமந்த) ஒருகூடை மண்ணை யுடைப்பினிற்கொட்டி, கள்ளத்தார் ஆகிபோனார் - கரந்துபோன பெருமானார், ககனத்தார் ஆகி - விண்ணினிடத்தாராகி, சேனை வெள்ளத்தார் பிறரும் கேட்ப - பாண்டியன் சேனைவெள்ளத்திலுள்ளவரும் அமைச்சர் முதலானவருங்கேட்க, மீனவற்கு உவகை வெள்ளம் கொள்ள - பாண்டியனுக்கு மகிழ்ச்சிவெள்ள மீதூர, தாம் அழைத்து - தாமே யழைத்து, ஆகாயவாணி ஆல் - அசரீரியால், கூறலுற்றார்-திருவாய்மலர்ந்தருளுவார்.

திருவுருவந்தோற்றாது நின்றனர் என்பார் ககனத்தாராகியென்றார். (சுக)

மறத்தாறுகடந்தசெங்கோல்வழுதிநின்பொருள்களெல்லா
மறத்தாற்றினீட்டப்பட்டவனையவைபுனிதமான
திறத்தாலேநமக்குநம்மைச்சேர்ந்தவர்தமக்குமார்வ
முறத்தாவில்வாதவூரனுதவினனாதலாலே.

(இ-ள்.) மறத்து ஆறு கடந்த - பாவநெறியைக்கடந்த, செங்கோல் வழுதி - செங்கோலையேந்திய பாண்டியனே, நின் பொருள்கள் எல்லாம் - உன்னுடைய பொருள் முற்றும், அறத்து ஆற்றின் ஈட்டப்பட்ட - அறநெறியில் நின்று தேடப்பட்டன, அனையவை - (ஆதலால்) அப்பொருள் முற்றும், புனிதம் ஆன திறத்தால் - குற்றத்தினின்று நீங்கிய வகையால், நமக்கும் நம்மை சேர்ந்தவர் தமக்கும் - நமக்கும் நம்மைச் சரணடைந்த அடியார்களுக்கும், ஆர்வம் உற - மகிழ்ச்சி மேலிட, தா இல் வாதவூரன் உதவினன் - கெடுதலில்லாத வாதவூராளி கொடுத்தனன், ஆதலால் - ஆகையால்.

மநுநூலறத்தினின்றும் வழுவாததென்பார் மறத்தாறுகடந்த செங்கோல் எனவும், அவ்வழியினின்று குடிகளை வருத்தாது ஈட்டினதென்பார் நின்பொருள்களெல்லாம் அறத்தாற்றினீட்டப்பட்ட எனவும், நல்வழியினின்றீட்டப்பட்ட பொருளாதலால் குற்றமிகந்தவென்பார் அனையவை புனிதமான திறத்தால் எனவும், அதுவே நமக்கு நம்மையடைந்தவர்க்கும் பயன்படுமென்பார் வாதவூரனுதவினனெனவுங் கூறியருளினார். (சுஉ)

அனையனைமறுக்கஞ்செய்தாயரும்பிணப்புலவுத்தீவாய்
வனநரித்திரளையீட்டிவாம்பரியாக்கித்தந்தேங்
கனையிருட்கங்குற்போதிற்கழிந்தனபின்னுந்தண்ட
வினையர்பால்விடுத்துத்துன்பம்விளைத்தனையதுபொறுதேம்.

(இ-ள்.) அனையனை மறுக்கம் செய்தாய்-(உன்னை நன்னெறிப்படுத்திய) வாதவூரனைத் துன்பஞ்செய்தாய், அரும்பிணம் புலவு தீவாய் வனம் நரி திரளை ஈட்டி-

Koviloor Digital Library

அழிந்த பிணங்களின் புலால் நாறும் சுடுகாட்டிலுள்ள நரித்திரள்களைத்திரட்டி, வாம் பரி ஆக்கி தந்தேம் - தாவிச்செல்லுங் குதிரைகளாக்கித் தந்தனம், கனை இருள் கங்குல் போதில் கழிந்தன - மிக்க இருளமைந்த நடுநிசியில் நரிகளாய்க்கழிந்தன, பின்றும் தண்ட வினையர் பால் விடுத்து - பின்னுங் கடுந்தண்டஞ் செய்வோரிடத் தொப்புவித்து, துன்பம் விளைத்தனை - பெருந்துன்பத்தை விளைவித்தாய், ஆதலால் - ஆகையால்.

உன்னை யிருமைப்பயனையும் நுகர்விக்கும் பெரியோனுக்கு நீ தீங்கு விளைத்தமையால் அதற்குத் தண்டமாக நாமே நரிகளைப் பரியாக்கிக் கொடுத்தோம் என்பார் நரித்திரளையீட்டி வாம்பரியாக்கித் தந்தேமெனவும், அதுவு மமையாது முன்னுள்ள குதிரைகளையுங் கொன்று நின்னகரிலுள்ளோர்க்குந் தீங்கு அவற்றால் விளைவித்தனம் என்பார் கனையிருட்கங்குற்போதிற்கழிந்தனவெனவும், காரணமுணராது பின்னும் ஒறுத்தமையால் வெள்ளத்தை விடுத்தனம் என்பார் ஆதலால் எனவுங் கூறினார்.

வருபுனல்பெருகப்பார்த்தேம்வந்திகைப்பிட்டுவாங்கிப்
பருகிவந்தாளாய்மாறுபட்டனமண்போகட்டுப்
பொருகரையுயரச்செய்துபோகியவ்வன்னைபோல்வாள்
பெருகியவிடும்பைதீர்த்தெம்பேருலகடையச்செய்தேம்

(இ-ள்.) வரும்புனல் பெருகபார்த்தேம் - வையைநதியில்வருநீர் பெருக்கெடுத்துவரச்செய்தேம், வந்தி கைப்பிட்டு வாங்கி பருகிவந்து ஆள் ஆய் மாறுபட்டனம் - வந்தியின் பிட்டினைவாங்கித்தின்று அவளுக்கு ஆளாகிவந்து நின்பிரம்படிபட்டோம், மண்போகட்டு பொருகரை உயர செய்துபோகி - உடைப்பில் மண்ணைக்கொட்டி யலைமோதும் (அவளுக்களந்துவிட்ட) கரையுயரச்செய்துபோய், அ அன்னைபோல்வாள் பெருகிய இடும்பை தீர்த்தேம் - தாய்போன்ற அவ்வந்தியின் மிக்கதுன்பத்தைத் தீர்த்தேம், பேர் உலகு அடைய செய்தேம் - (பின்னர் அந்தவந்தியை நமது) பெரியசிவபுரமடையச்செய்தருளினோம்.

வந்தியும் நமது அடித்தொண்டில் நிற்பவளாதலால் அகத்தால்தரும் பிட்டினைப்புறத்தில்வாங்கி நுகர்ந்தோம் என்பார் வந்திகைப்பிட்டுவாங்கிப் பருகியெனவும், அடியார்க்கெளியோம் என்பார் வந்தாளாய் எனவும், நமது அடியவர்திறத்தையும் நமது திறத்தையும் மலப்பிணிப்புடையோர்க்கு உணர்த்தக்கருதினம் என்பார் மாறுபட்டனம் எனவும், அவ்வந்தியின் துன்பம் ஒழித்தற்கே மண்போட்டுக் கரையுயர்த்தினம் என்பார் மண்போகட்டுப் பொருகரையுயரச்செய்து போகியெனவுங்கூறியருளினார். (௯௩)

இத்தனையெல்லாஞ்செய்ததிவன்பொருட்டிந்தவேத
வித்தகன்றன்மையொன்றுமறிந்திலைவேட்கையென்பால்
வைத்துனக்கிம்மையோடுமறுமையுந்தேடித்தந்த
வுத்தமன்றொடைசந்தாதிப்புறப்பற்றுமொழிந்தநீரான்.

(இ-ள்.) இதனை எல்லாம் செய்தது இவன்பொருட்டே-இவ்வளவெல்லாஞ் செய்தது இவனிமித்தமே, இந்த வேதவித்தகன் தன்மை ஒன்றும் அறிந்திலை-இந்தச் சிவன்முத்தனாகிய வாதவூராளியின்தன்மையை (நிமலச்செமிழ்ப்புடையவனாதலால்) சிறிதும் அறிந்திலை, வேட்கை என்பால் வைத்து - தனது விருப்பமுற்றும் என்னிடத்துவைத்து, உனக்கு இம்மையோடு மறுமையும் தேடிதந்த உத்தமன் - உனக்கு

Koviloor Digital Library

இருமைப்பயன்களையு மீட்டிக்கொடுத்த என் அருள்வழிநின்றவன், தொடை சந்த ஆதி புறப்பற்றும் ஒழிந்தநீரான் - (அரசியலங்கத்திற்கேற்ப) மாலைசந்தனமுதலிய புறப்பற்றையு மொழிந்ததன்மையையுடையவன்.

நாம் செய்த திருவிளையாடலெல்லாம் இவ்வாதவூராளியின்பொருட்டே என் பார் இத்தனையெல்லாஞ்செய்த திவன்பொருட்டு எனவும், எம் திருவருளோ டுடன் தையாய் நிற்பவன் என்பார் இந்தவேதவித்தகன் எனவும், எம்மால்வைத்த நேயத் தால் உனக்கு இருமைப்பயனையுந்தந்தவன் என்பார் உனக்கிம்மையோடு மறுமையு ந்தேடித்தந்த உத்தமன் எனவும், அகப்பற்றுமன்றி யரசியலுக்கேற்ற புறப்பற்று மொழிந்தவன் என்பார் தொடைசந்தாதிப் புறப்பற்றுமொழிந்த நீரான் எனவுங் கூறினர். (௬௫)

நிறையுடையிவனையிச்சைவழியினானிறுத்தியான்ற
மறைவழிநின்றுநீதிமன்னவர்க்களந்தவாழ்நாள்
குறைபடாதானுச்செல்வவாரியுட்குளித்துவாழ்கென்
றிறையவன்மொழிந்தமாற்றமிருசெவிநிரப்பத்தென்னன்.

(இ-ள்.) நிறை உடைய இவனை - (நமதடிக்கீழ் அன்பின்வழி) நிற்றலையுடை ய இவனை; இச்சைவழியினால் நிறுத்தி - அவனிச்சைவழிபிற்செல்ல நிறுத்தி, ஆன்ற மறைவழிநின்று - அமைந்த வேதத்தின்வழிநூலாகிய மநுநூல்வழிநின்று, நீதிமன் னவர்க்கு அளந்த வாழ்நாள் குறைபடாது - நீதியையுடைய அரசர்க்கு வரையறுத் த ஆயுள் நாள் குறைபடாமல், ஆனாத செல்வம் வாரி உள் குளித்து - நீங்காத இம் மையின்பக்கடலில் மூழ்கி, வாழ்க என்று - வாழக்கடவாயென்று, இறையவன்மொ ழிந்தமாற்றம் இருசெவி நிரப்ப - இறைவர்கூறியருளிய அசரீரி தனது இரண்டு செ வித்துளைகளையுந்தூர்ப்ப, தென்னன் - அரிமருத்தனபாண்டியன்.

வாதவூராளி தனது சிவயோகநிலையில் நின்று முட்டின்று முடித்தற்குப் புற த்தில் நீ காத்தொழுகவேண்டும் என்பார் இச்சைவழியினால் நிறுத்தியென்றார். (௬௬)

அச்சமுற்றுவகையீர்ப்பவதிசயவெள்ளத்தாழ்ந்து
பொச்சமிலன்பரெங்குற்றாரெனப்புகுந்துதேடி
நச்சரவசைத்தகூடனாயகன்கோயினண்ணி
விச்சையிலிருக்கின்றாரைக்கண்டுபோயிறைஞ்சிவீழ்ந்தான்.

(இ-ள்.) அச்சம் உற்று - (அந்தத் திருவார்த்தைக்கு) அஞ்சி, உவகை ஈர்ப்ப- மகிழ்ச்சி யொருபால் நின்றிழுக்க, அதிசயம் வெள்ளத்து ஆழ்ந்து - என்றுங் கண்ட றியாத வியப்பென்னும் பெருக்கி லழுந்தி, பொச்சம் இல் அன்பர் எங்கு உற்றார் எ ன்ன புகுந்து தேடி - மெய்யன்பினையுடைய வாதவூரடிகள் எங்குச் சென்றனரொன் று பல இடங்களிலுந் தானேசென்று தேடி, நச்சு அரவு அசைத்த கூடல் நாயகன் கோயில் நண்ணி - நஞ்சினையுடைய சர்ப்பத்தைக் கச்சாகக்கட்டிய நான்மாடக்கூ டலி லெழுந்தருளிய இறைவர் திருக்கோயிலையடைந்து, விச்சையில் இருக்கின்றாரை கண்டு - சிவஞானநிலையில் நிற்கும் அவ்வாதவூரடிகளைத் தரிசித்து, போய் இறைஞ்சி வீழ்ந்தான் - அருகிற்சென்று வணங்கித் திருவடிமேல் விழுந்தனன்.

வாதவூரடிகளுக்குத் தான்செய்த தீங்கினை யஞ்சிக்கூசினன் என்பார் அச்சு முற்று எனவும், புலையனென்னாது செய்த பேரபராதத்தையு மிறைவர் பொறுத் தருளினர் என்று கருதினன் என்பார் உவகையீர்ப்ப எனவும், என்றுங் கேட்டறியாத

Koviloor Digital Library

மியப்பெய்திஞனென்பார் அதிசயவெள்ளத்தாழ்ந்த எனவுங் கூறினர். பொச்சம் பொய். ஆதலின் பொச்சமிலன்பர் என்றதற்கு மெய்யன்பினையுடையஎன்றும். கள

தொல்லைநீருலகமாண்டுசுடுதுயர்நரகத்தாழ
வல்லவென்னறிவுக்கேற்றவண்ணமேசெய்தேனீரென்
னெல்லைதீர்தவப்பேறாய்வந்திகபரவேதுவாகி
யல்லல்வெம்பிறவிநோய்க்குமருமருந்தானீரையா.

(இ-ள்.) ஐயா - ஐயனே, தொல்லை நீர் உலகம் ஆண்டு - தொன்றுதொட்டுள்ள கடல்சூழ்ந்த நிலவுலகினையாண்டு, சுடு துயர் நரகத்து ஆழவல்ல என் அறிவுக்கு ஏற்ற வண்ணமே - சுட்டுவருத்துந் துன்பத்தை யுறுத்தும் தீவாய் நரகத்திலாழ்த்தவல்ல என் சிற்றறிவிற்குத் தக்கபடியே, செய்தேன் - தேவரீர் திறத்துத் தீங்கிழைத்தேன், நீர் என் எல்லை தீர் தவப்பேறு ஆய் வந்து இகபரம் ஏது ஆகி - தேவரீரே யடியேனது அளவிறந்த தவப்பயனாய் அமைச்சராய் வந்தருளி எனக்கு இம்மை மறுமைப்பயன்களுக்குக் காரணமாகி, அல்லல் வெம்பிறவி நோய்க்கும் அருமருந்து ஆனீர் - துன்பம் விளைக்கும் கொடிய பிறவிநோயொழித்தற்கும் பெறுதற்கரிய மருந்து மாயினீர்.

ஆணவமலத்தின் காரியமாகிய அறிவுமுற்று முடையேனென்பார், சுடுதுயர் நரகத்தாழ்த்தவல்ல வென்னறிவுக்கு எனவும், தன் மூதாதை முதலியோர் தவங்களையுந் தன் தவத்தோ ளேப்படுத்தினன் என்பார் என் எல்லை தீர்தவம் எனவும், அத்தவப்பயனே இப்பொழுது பலித்ததென்பான் பேறாய் வந்திக பரவேதுவாகி எனவும், இவற்றினிறுதியி லெய்தும் பரமுத்திக்கும் ஏதுவானீர் என்பான் அல்லல் வெம்பிறவிநோய்க்கு மருமருந்தானீரையாவெனவுங் கூறினன் என்றார். (சுஅ)

செறுத்துநானும்மையென்றுமிழைத்தவித்தீங்குதன்னைப்
பொறுத்துநீர்முன்போலுங்கள்புவியெலாங்காவல்பூண்டு
மறுத்துடைத்தாள்வதாகென்றிரந்தனன்மண்ணிலாசை
வெறுத்தவர்நகையுட்டோன்றவேந்தனைநோக்கிச்சொல்வார்.

(இ-ள்.) நான் செறுத்து - நான் கோபமுற்று, உம்மை என்றும் இழைத்த இ தீங்கு தன்னை - உமது தன்மையைச் சிறிதுங் கருதாது செய்த இந்தக்கொடிய அபராதத்தை, நீர் பொறுத்து - நீர் பொறுத்தற்குரியீராதலால் பொறுத்து, முன் போல் உங்கள் புவி எல்லாம் காவல் பூண்டு - முன் அமைச்சியலிலிருந்ததுபோல இப்போது உங்களரசியலில் வைகி யுலகமுற்றுங் காவல்பூண்டு, மறு துடைத்து ஆள்வது ஆக என்று இரந்தனன் - உலகில் குற்றத்தையொழித்து ஆள்வதுபோல அடியேன் மலக்குற்றத்தையும் ஒழித்து ஆளக்கடவீரென்று குறையிரந்தான்; மண்ணில் ஆசை வெறுத்தவர் நகை உள்தோன்ற - நிலனுள் ஆசையை வெறுத்த வாதவூரடிகள் புன்னகையுள்ளே யரும்ப, வேந்தனை நோக்கி சொல்வார் - அரசனை நோக்கிக் கூறவாராயினர்.

ஆகவியப்பேலிறதொக்கை. (கசு)

பாய்திரைபுரளுமுந்நீர்படுகடலுலகக்கெல்லா
மாயிரஞ்செங்கணான்போலரசுவீற்றிருப்பிருங்க
ளாயகனருளிச்செய்தவண்ணமேபணிசெய்வீர்
தூயவரன்றேனுங்கள்குழல்சேர்ந்தொழுகவல்லார்.

Koviloor Digital Library

(இ-ள்.) பாய் திரை புரளும் முந்நீர் படுகடல் உலகுக்கு எல்லாம் - பாய்ந்து செல்லும் அலைகள் புரளும் முந்நீர்வாய்ந்த கடல்சூழ்ந்த நிலவுலகுக்கெல்லாம், ஆயிரம் செங்கண்ணான்போல்-ஆயிரங்கண்களையுடைய இந்திரனைப்போல, அரசு வீற்றிருப்பீர் - அரசியலில் வீற்றிருப்பீர், உங்கள் நாயகன் அருளிச்செய்த வண்ணமே நயந்து செய்வீர் - உங்களிறைவ ரருளிச்செய்தபடியே விரும்பிச்செய்யுங்கள், நுங்கள் சூழல் சேர்ந்து ஒழுகவல்லார் - உங்கள் பக்கஞ்சேர்ந்து உமது ஆணைவழியொழுகவல்லவர், தூயவர் அன்றஒ - மனமாசொழிந்தவ ரல்லவா. (எ0)

உம்மைநானடுத்தநீரா லுலகியல்வேதநீதி
செம்மையாலிரண்டுநன்றாய்த்தெளிந்ததுதெளிந்தநீரான்
மெய்மையாஞ்சித்தசுத்திவிளைந்ததுவிளைந்தநீராற்
பொய்மைவானவரினீந்திப்போந்ததுசிவன்பாற்பத்தி.

(இ-ள்.) உம்மை நான் அடுத்த நீர் ஆல்-உம்மை நான்சேர்ந்ததன்மையினால், உலகியல் வேத நீதி இரண்டும் - உலகியலும் வேதவொழுக்கமுமாகியஇரண்டும், நன்று ஆய் செம்மையால் தெளிந்தது - திருந்தமாய் முறைப்படி தேர்ச்சி வந்தது, தெளிந்த நீர் ஆல் - அவையிரண்டுந் தெளிந்ததன்மையால், மெய்மை ஆம் சித்த சுத்தி விளைந்தது - உண்மையாகிய சித்தசுத்தியுண்டாகியது, விளைந்த நீர் ஆல் - அதுவுண்டானதன்மையால், பொய்மை வானவரின் நீந்தி - பொய்த்தேவர்களை மெய்த்தேவரெனக்கொண்ட அன்புகழன்று, சிவன்பால் பத்தி போந்தது - மெய்த்தேவராகிய சிவபெருமானிடத்து அன்புபிறந்தது.

தருமவொழுக்கங்களை யுணர்தலே சித்தசுத்திக்கு ஏதுவாதலால் தெளிந்தநீரால் மெய்மையாஞ்சித்தசுத்திவிளைந்தது எனவும்,அதனாற்பொய்மைமெய்மைகளைப் பகுத்துணரு நல்லுணர்ச்சிவிளைதலால் சிவன்பாற்பத்திபோந்தது எனவுங்கூறினார் "கருமத்தான்ஞானமுண்டாங்கருமத்தைச்சித்தசுத்தி - தருமத்தாலிகந்தசித்தசுத்தியைத்தருமநல்கும்" எனவேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலத்தினும், "விங்கியபத்திபற்பலபிறப்பில் வேதங்களுரைத்திடும்படியே - தீங்கறுகருமமியற்றியபலத்தாற்சிவனருள்செய்திடவருமால்" எனவரும் வாயுசங்கிதையாலும் அறிக.

வந்தவிப்பத்தியாலேமாயையின்விருத்தியான
பந்தமாம்பவஞ்சவாழ்க்கைவிளைவினுட்பட்டதுன்பம்
வெந்ததுகருணையாகிமெய்புணர்வின்பந்தன்னைத்
தந்ததுபாதஞ்சூட்டித்தன்மயமாக்கிற்றன்றே.

(இ-ள்.) வந்த இ பத்தியால் ஏ - வந்த இத்தலையன்பினால், மாயையின் விருத்தி ஆன பந்தம் ஆம் பவஞ்சம் வாழ்க்கை விளைவின் உள்பட்ட துன்பம் வெந்தது - மாயாமலத்தின் விருத்தியான தொடக்காகிய பிரபஞ்சவாழ்வின் மிகுதியில் சிமிழ்ப்புண்ட துன்பம் அழிந்தது, கருணை ஆகி - அதனால் திருவருள்கூடி, மெய் உணர்வு இன்பம் தன்னை தந்தது - சச்சிதானந்தத்தைக்கொடுத்து, பாதம் சூட்டி தன்மயம் ஆக்கிற்று - சத்திநிபாதம்வருவித்துத் தன்மயமாக்கியது.

மாயாமலத்தின்விருத்தி - பொய்யை மெய்யென்றுகருதுதல், பொய்சொல்லுதல், கண்டதைமறந்து மயங்கல், காமவிருப்பால் மூர்ச்சித்தல், விரும்பியபொருளை யில்லையெனவொளித்தல், கொல்லக்கருதல், உயிர்க்கு இறுதிவருமென அஞ்சுதல் என எழுவகைப்படும். ஆதலின் மாயையின் விருத்தியான பந்தமாம் பவஞ்சம்

Koviloor Digital Library

எனவும், அத்தலையன்பால் திருவருள்வந்துறுதலால் கருணையாகி யெனவும், அத்திருவருள் சிவத்தொடுகூட்டுதலால் மெய்யுணர்வின்பம் எனவும், சந்திசேபாதம்வருவித்தலால் பாதேஞ்சூட்டித் தன்மயமாக்கிற்றன்றே யெனவுங் கூறியருளினர். மாயாவிருத்தி எழுவகையென்றது "அஞ்ஞானம்பொய்யயர்வேமோகம் - பைசாசுநியமாச்சரியம்பயம் - ஆயவேழ்குணனுமாயைக்கருவிலே" எனவரும் இருபாவிருபஃதாலும், அதனால் திருவருள்கூடி என்றது "ஆங்கவனருளாற்பத்தியுண்டாகும்பத்தியாலவனருளுண்டாம்" எனவரும் வாயுசங்கிதையாலும், அத்திருவருள் சிவத்தொடு கூட்டும் என்றது "சுத்தமாஞ்சத்திஞானச்சுடராகுஞ்சிவமொழிந்தச் - சத்திதானின்றுமுன்னைத் தகவிலாமலங்கள்வாட்டி யத்தனையருளும்" எனவருஞ் சிவப்பிரகாசத்தாலும் அறிக. தந்தது முற்றெச்சம். குளகமோ யிவ்விரண்டு செய்யுள்களும் நின்றன. இவற்றிற்கூறியவை யொன்றுக் கொன்று காரணமாய் நிற்றலால் காரணமாலையணி. (௭௨)

சச்சிதானந்தமாமத்தனிப்பரசிவனேதன்ன
திச்சையாலகிலமெல்லாம்படைத்தளித்திறுசெய்யும்
விச்சைவானவரைத்தந்தமேலவன்பிறவித்துன்பத்
தச்சமுற்றடைந்தோர்க்காறுவின்பவீடளிக்குமன்னோன்.

(இ-ள்.) சச்சிதானந்தம் ஆம்-உண்மையறிவானந்தவடிவாகிய, அ தனி பர சிவனே-அந்த ஒப்பில்லாத சிவபெருமானே, தன் அது இச்சையால் அகிலம் எல்லாம்-தனது இச்சையினால் உலகமுற்றையும், படைத்து அளித்து ஈறு செய்யும் விச்சை வானவரை தந்த - தோற்றி நிலைபெறுத்து ஒடுக்கு முத்தொழிலையுடைய பிரமன் திருமால் உருத்திரமூர்த்திகளைக் கொடுத்தருளிய, மேலவன்-பெரியோன், அன்னோன் பிறவி துன்பத்து அச்சம் உற்று அடைந்தோர்க்கு ஆறாத இன்பம் வீடு அளிக்கும்-அவனே பிறவித்துன்பத்துக்கு அஞ்சித் தன்னை யடைந்தோர்க்கு நீங்காத இன்பத்தையுடைய பரமுத்தியைக் கொடுத்தருளுவான்.

பிறவித்துன்பம் தன்னைப்பற்றி வருதல் முதலிய மூவகைத்துன்பங்கள். இச்சை - ஆன்மாக்களுக்கு மலபாகம் வருவித்தற்பொருட்டு வைத்தநேயம். "மலர்மகனுமின்று வையமும்படைத்துமாலாய் - அலைவறநிறுத்தி முக்கணுருயாயழித்து" என இங்ஙனிலும் "காத்தும்படைத்துங் கரந்தும்விளையாடி" எனத் திருவாசகத்திலும் வருதல் காண்க. (௭௩)

மந்தரங்கயிலைமேருபருப்பதம்வாரணாசி
யிந்தநல்லிடங்கடோறுமிகபரபோகமியார்க்குந்
தந்தருள்செய்தெம்போல்வார்தம்மனம்புறம்போகாமற்
சிந்தனைதிருத்திஞானத்திருவுருவாகிமன்றும்.

(இ-ள்.) மந்தரம் கயிலைமேரு பருப்பதம் வாரணாசி - மந்தரகிரியும் ஸ்ரீகயிலையும் மேருவும் ஸ்ரீபர்வதமும் காசியும், இந்த நல் இடங்கள் தோறும் - ஆகிய இந்தத் திருப்பதிகடோறும், இகபரம் போகம் யார்க்கும் தந்தருள் செய்து - இகபோகம் பரபோகமாகிய இவைகளை யெவ்வுயிர்களுக்குந் தந்தருளி, எம்போல்வார் தம் மனம் புறம்போகாமல் - எம்போலியர் மனம் விடயங்களிற் சென்றுழலாமல், சிந்தனை திருத்தி ஞானத்திரு உரு ஆகி மன்றும் - அம்மனத்தைத் திருத்தி ஞானத்திருவுருவாய் எழுந்தருளியிருப்பான்.

Koviloor Digital Library

சுத்ததத்துவபுவனத்தில் வசிக்கும் அசிந்திரனுகிய இறைவன் ஆன்மாக்களு க்குப் பாகம் வருவித்தற்பொருட்டுப் புறத்தே திருக்கோயில் கொண்டருளுருவாய மாந்தனன் என்பார் இந்த நல்லிடங்கடோறு மிகபாபோகம் யார்க்கும் தந்தருள்செ ய்துமன்றும் எனவும், அகத்தே யுயிர்களிடமாகக்கொண்டு அமர்ந்தனன் என்பார் எம்போல்வார் தம்மனம் புறம்போகாமற் சிந்தனை திருத்திஞானத் திருவுருவாகிமன் றும் எனவுங் கூறியருளினர். (எச)

ஒப்பவர்மிக்கோர்வேறற்ெறாருவனுயெங்குந்தங்கு
மப்பரஞ்சுடரேயிந்தவாலவாயுறையுஞ்சோதி
கைப்படிகனிபோன்மேனாட்கண்ணுவனாதியோர்க்கு
மெய்ப்பொருள்விளங்கித்தோன்ருவேதத்தைவிருத்திசெய்தான்.

(இ-ள்.) ஒப்பவர் - தன்னேடொப்பவரும், மிக்கோர் - தன்னின் மிக்கோ ரும், வேறு - தனக்கு வேருயுள்ள பொருளும், அற்று - இகந்து, ஒருவனுய் எங்கு ம் தங்கும் அ பரஞ்சுடரே - ஏகனுய் எங்கும் நிறைந்த அவ்விறைவனே, இந்த ஆல வாய் உறையும் சோதி - இந்தத் திருவாலவாயிலெழுந்தருளிய பெருமானே, கைப டி கனிபோல் - உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனிபோல, மேல் நாள் கண்ணுவன் ஆதியோர்க்கு - (அவனே) முன்னுளிற் கண்ணுவன் முதலிய முனிவர்களுக்கு, மெ ய்ப்பொருள் விளங்கி தோன்ருத வேதத்தை விருத்திசெய்தான் - உண்மைப்பொரு ள் விளங்கிப் புலப்படாத வேதத்தின் பொருளைக் கடாவிடைகளால் விரித்துக் கூறி யருளினவன்.

உயிர்கள்தோறும் விரவிநிற்றலால் வேறற்று எனவும், அட்டமூர்த்தியாய் நிற்றலால் எங்குந்தங்கும் எனவுங் கூறியருளினர். (எரு)

தன்னருளானஞானத்தபனியமாகுந்தில்லைப்
பொன்னகரிடத்திலென்னைப்போகெனப்பணித்தானீரு
மன்னதற்கிசைந்தீராகென்ருலவாயடிகடம்மைப்
பன்னருந்துதியாலேத்திவிடைகொடுபணிந்துபோவார்.

(இ-ள்.) தன் அருள் ஆன ஞானம் தபனியம் ஆகும் - தனது திருவருள் வ டிவான சிதாகாயமாகிய பொன்னம்பலமென்னும், தில்லை பொன் நகர் இடத்தில் போக என்ன என்னை பணித்தான் - அழகிய தில்லையென்னுந் திருப்பதியி லடையக் கடவாயென்று பணித்தருளினன், நீரும் அன்னதற்கு இசைந்தீர் ஆக என்று-நீரும் அதற்கு இசைந்தீராகக்கடவீரென்று பாண்டியனுக்குக்கூறி, ஆலவாய் அடிகள் தம் மை - மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை, பன் அரும் துதியால் ஏத்தி- சொல்லுதற்கரிய தோத்திரப்பாக்களால் துதித்து, விடைகொடு பணிந்து போவார்- விடைபெற்று வணங்கிச்செல்லுவார். (எசு)

தன்ெறாடக்கறுத்தநாதன்ருட்டொடக்குண்டுபோவார்
பின்ெறாடர்ந்தரசன்செல்லப்பெருந்தவர்நின்மினின்மி
னென்றனர்செலவுங்கூப்பிடெல்லைசென்றணியனுகிச்
சென்றடிபணிந்தத்தென்னன்விடைகொடுதிரும்பினனே.

(இ-ள்.) தன் தொடக்கு அறுத்த நாதன் தாள் தொடக்குண்டு போவார் - தனது பாசபந்தத்தை யறுத்தருளிய இறைவனது திருவடிக்கீழ்ச் செலுத்து முழுவ

Koviloor Digital Library

வந்பரற் கட்டுண்டு செல்லும் வாதவூரடிகளது, பின் தொடர்ந்து அரசன் செல்ல - பின்னே தொடர்ந்து பாண்டியன் செல்ல, பெருந்தவர் நின்மின் நின்மின் என்றன ர்-வாதவூரடிகள் நில்லு நில்லுமென்று, செல்லவும் - சென்றருளவும், கூப்பிடு எல் லை சென்று - கூப்பிடுதூரஞ் சென்று, அணியன் ஆகி அதென்னன் அடிபணிந்து வி டைகொடு திரும்பிபோனான் - சமீபித்த அப்பாண்டியன் அவ்வாதவூரடிகள் திருவ டியை வணங்கி விடைபெற்றுத் திரும்பிச்சென்றனன். (எஎ)

> அறந்தவர்போகமீண்டுதொல்னகரடைந்தநதென்ன
> னறந்தருபங்கினாயையடைந்துதான்பிரம்புநீட்டப்
> புறந்தருகருணைவெள்ளம்பூரிப்பத்தாழ்ந்துநெஞ்ச
> நிறைந்ததுவாய்கொள்ளாமனின்றெதிர்துதிப்பதானான்.

(இ-ள்.) துறந்தவர்போக - வாதவூரடிகள் சிதம்பரத்திற்குச் சென்றருள, தென்னன் மீண்டு தொல் நகர் அடைந்து - பாண்டியன் மீண்டு தொன்றுதொட் டுள்ள மதுரைத்திருநகரை யடைந்து, அறம்தரு பங்கினானை அடைந்து தாழ்ந்து-அறம்வளர்த்த உமாதேவியார்பாகத்தையுடைய சோமசுந்தரக்கடவுளையடைந்துவ ணங்கி, தான் பிரம்புநீட்ட புறம் தருகருணைவெள்ளம் பூரிப்ப - தான்பிரம்பினையோ ச்ச முதுகுதந்தருளிய கிருபாவெள்ளம்விழுங்க, நெஞ்சம் நிறைந்து - (அதனால்) த னதுமனமென்றுங் குளநிறைந்து, வாய்கொள்ளாமல் - புனதுவாயாகிய குளவா ய்கொள்ளாமல் வழிந்ததுபோல, எதிர் நின்று துதிப்பது ஆனான் - திருமுன்னின்று துதிக்கத்தொடங்கினான்.

இப்பாகம் உமாதேவியார் திருவுருவாதலால் அறந்தருபங்கு என்றார்.(எஅ)

கொச்சகக்கலிப்பா.

> அடையாளம்படவொருவனடித்தகொடுஞ்சிலைத்தழும்புந்
> தொடையாகவொருதொண்டன்றொடுத்தெறிந்தகல்லும்போற்
> கடையானேன்வெகுண்டடித்தகைப்பிரம்புமுலகமெல்லா
> முடையானேபொறுத்ததோவுன்னருமைத்திருமேனி.

(இ-ள்.) உலகம் எல்லாம் உடையானே - உலகமுற்றுமுடைய பெருமானே, உன் அருமை திருமேனி - உனது அரியதிருமேனி, அடையாளம்பட - வடுப்பட, ஒருவன் அடித்த கொடுஞ்சிலைதழும்பும் - அருச்சுனனடித்த வளைந்தவில்லின் தழு ம்பையும், ஒருதொண்டன் - ஒருதொண்டராகிய சாக்கியநாயனார், தொடை ஆக தொடுத்து எறிந்த கல்லும்போல் - மாலையாகத்தொடுத்தெறிந்த கல்லையும்போல, கடையானேன் வெகுண்டு அடித்த கைப்பிரம்பும் பொறுத்ததோ - நாயிற்கடை ப்பட்ட அடியேனறியாமையாற் கோபித்தடித்த கைப்பிரம்பினடியையும் பொறு த்தருளியதோ.

தன்னைநோக்கித் தவஞ்செய்த அருச்சுனன் தவநிலையைக்குலைக்கத் துரியோ தனனேவலாற்போந்த மூகனென்னும் ஒரு அசுரன் பன்றிவடிவாய்வர, சிவபெரு மான் கருணைகூர்ந்து அவன்தவத்திற்கிரங்கி கிராதத் திருவேடங்கொண்டு வந்தருளி யப்பன்றியை வடிக்கணையாலெய்ய, அவ்வருச்சுனனும் அப்பன்றிவருகையையுணர்ந் து கோடியம்பொன்றெய்ய இவ்விரண்டாலும் பன்றிபிறந்தது, இதனைக்கிராத வேடங்கொண்டுவந்த பெருமான் ஓர்திருவிளையாடல்கருதி, அடா நான் எய்தவராக த்தை நீ யெவ்வாறெய்பலாமெனக்கடிந்து கூறிப் போர்விளைத்தனன், அதனால் நா

Koviloor Digital Library

ணற்றவிற்கழுந்தால் அவ்வருச்சுனன் திருமுடிமேல்தாக்கிய அடி யனைத்துயிர்மேலும்பட்டது என்பது பாரதத்தின் வரலாறு. சங்கமங்கையென்னும்பதியில் அவதரித்துப் பலநூல்களையு மாராய்ந்து பிறப்பினையொழிக்க வேண்டுமென்னுங் கருத்தினராய், காஞ்சித்திருப்பதியில்வந்து பௌத்தசமயநெறியிற்புகுந்து அச்சமயநூலையும் புறச்சமயநூல்களையு முணர்ந்து இவை முத்திநெறிகூட்டுஞ் சமயங்களல்லவெனவும், சைவசமயநெறி யொன்றுமே முத்திநெறியிற் கூட்டுஞ்சமயமென்றுணர்ந்து அந்நெறியை யச்சமயத்திலிருந்தபடியே கடைப்பிடித்துச், சிவபெருமானிடத்துத் தலையன்புபூண்டொழுகுஞ் சாக்கியநாயனார் ஓர்நாள் வெள்ளிடையில் ஓர்சிவலிங்கந் தோன்றக்கண்டு விரைந்தோடிப் பரவசத்தால் தம்மைமறந்து செய்யும்வகையுணராராய்ப் பக்கத்திற்கிடந்த ஒருகல்லை மலரெனக்கருதி யெறிந்தனரென்பது திருத்தொண்டர்புராணவரலாறு "உழுந்துருளுமெல்லைதனில்வில்லினொடுநாணுறவுரத்தொடெதிரோடிவரிவிற் - கழுந்துகொடுமாமுடியின் மோதுமுனிழந்ததுயர்கண்ணிபடுபீலிமதியின் - கொழுந்தமுதசோரவிடநாகர்சுடிகைத்தலை குலைந்துமணிசிந்தநதியாள் - எழுந்ததடமோதியகல்வானிவுறவேடனுமிளைத்தவசமுற்றனனரோ" எனப்பாரதத்திலும் "காடோருஞ்சிவலிங்கங்கண்டுண்ணுமதுநயந்து - மாடோர்வெள்ளிடைமன்னும்சிவலிங்கங்கண்டுமன - நீடோடுகளியுவகைநிலைமைவரச்செயலறியார் - பாடோர்கற்கண்டதனைப்பதைப்போடுமெடுத்தெறிந்தார். அகநிறைந்த பேருவகையடங்காதவாதரவால் - மகவுமகிழ்ந்துவப்பார்கள் வன்மைபுரிசெயலினால் - இகழ்வனவேசெய்தாலு மிளம்புதல்வர்க்கின்பமே - நிகழுமதுபோலதற்கு நீள்சடையோர்தாமகிழ்வார்" எனத்திருத்தொண்டர்புராணத்திலும் வருதல்காண்க. (எகூ)

கடியேறுமலர்மகன்மான்முதலாய்கடவுளரும்
படியேழுமளவிறந்தபல்லுயிருநீயேயோ
முடியேறமண்சுமந்தாய்முதுகுதனிலடிபட்ட
தடியேனும்பட்டேனின்றிருமேனியானேனே.

(இ-ள்.) கடி ஏறும் மலர் மகன் மால் முதல் ஆய கடவுளரும் - வாசமிக்க தாமரைமலரில் வசிக்கும் பிரமனும் திருமாலுமுதலிய தேவர்களும், படி ஏழும் அளவு இறந்த பல் உயிரும் நீயேயோ - ஏழுலகங்களும் அளவில்லாத பல ஆன்மகோடிகளும் நீயேயல்லவா, (அதனால்) முடி ஏற மண் சுமந்தாய் - திருமுடியிலேற மண்ணைச் சுமந்தருளினாய், முதுகு தனில் அடிபட்டது அடியேனும் பட்டேன் - திருமுதுகி லடிபட்ட அடியை யடியேனாகிய நானும் பட்டனன், (இக்குறியீட்டால்) நின் திருமேனி ஆனேன் - உனது திருமேனியும் யானாகவிருந்தனன்.

பிருதிவி முதலிய பஞ்சபூதங்களும் சூரிய சந்திரர்களும் ஆன்மாவுமாகிய அட்டமூர்த்தியுமாய் நின்றாயென்பான் கடியேறு மலர்மகன் மான்முதலாய கடவுளரும் - படியேழுமளவிறந்தபல்லுயிரு நீயேயோவெனவும், அதனாலன்றே யானு மடிபட்டேனென்பான் முதுகுதனிலடிபட்ட தடியேனும் பட்டேனெனவும், இவ்வேதுவால் என்னுடம்பும் நின்னுடம்பே யென்பான் நின்றிருமேனியானேனே எனவுங் கூறினான். (அ0)

கைக்குமருந்தின்சுவைபின்காட்டுமாறெனவினைக்கும்
பொய்க்குமருங்கலனாகிமண்ணுண்டுபுலைநரகந்
துய்க்குமருந்துயர்களைவான்மாறாய்நின்றுணையடிக்கே
யுய்க்குமருந்தவரிவொன்றறியாமையொறுத்தேனே

Koviloor Digital Library

(இ-ள்.) கைக்கும் மருந்து - கசப்பேறிய மருந்து, இன் சுவை பின் காட்டும் ஆறு என - (பிணியாளிக்கு) இனிய சுவையைப் பின்காட்டும் வகைபோல, வினைக்கும் பொய்க்கும் அருங்கலன் ஆகி - கன்மமலத்திற்கு மாயாமலத்திற்கும் ஓரரிய ஆபரணமாகி, மண் ஆண்டு - நிலவுலகையாண்டு, புலை நரகம் துய்க்கும் அருந்துயர்க்களைவான் - மறுமையில் இழிந்தநரகத்தில் திளைக்கும் அரிய துன்பநோயைக்களைய, மாறு ஆய் - அதற்குப் பகைமையாகி, நின் தனை அடிக்கு ஏ உய்க்கும் மருந்தவர் - உன் திருவடிக்கீழே செலுத்து மருந்தாயுள்ளவர், இவர் ஏ என்று அறியாமை ஒறுத்தேன் - இவ்வாதவூரடிகளேயென்று சற்று முணராமல் தண்டித்தேன்.

கசக்கு மருந்து பின் நோயாளிக்கு இன்பந்தருவதென்பான் கைக்கு மருந்தின் சுவை பின் காட்டுமாறென எனவும், நரகிலழுந்துந் துன்பநோயைக் களைவதென்பான் மாறாய் எனவும், அந்நோயைக்களைந்து திருவடியின்பம் தருதற்கு முன்னர் எனக்கு வெறுப்பு விளைக்கு மருந்தாய் நின்றனரென்பான் நின்றுனையடிக்கே யுய்க்கு மருந்தவர் எனவும், அம்மருந்தின் மான்மியத்தைச் சிறிதுமுணராதிகழ்ந்தேனே யென்பான் அறியாமையொறுத்தேனே யெனவுங்கூறினன். பிரிநிலைப்பொருளில்வந்த ஏகாரந்தொக்கது. (அக)

பாதியுமையுருவானபரமேட்டியெனக்கிம்மை
யூதியமும்பரகதியுமுறுதியெனவிளைவிக்கும்
நீதியினான்மந்திரியாய்நின்னருளாயவதரித்த
வேதியரையறியாதேவெறுத்துநானொறுத்தேனே

(இ-ள்.) பாதி உமை உரு ஆனபரமேட்டி - தனது திருமேனியிற் செம்பாதியுமாதேவியார் திருவுருவாயமைந்த இறைவனே, எனக்கு இம்மை ஊதியமும் பரகதியும் உறுதி என விளைவிக்கும் நீதியின் ஆல் - எனக்கு இம்மைப்பயனு மறுமைப் பயனும் உயிர்க்குறுதியென்று தேற்றுவிக்கும் நீதியால், மந்திரி ஆய் - அமைச்சுவடிவாக, நின் அருள் ஆய் அவதரித்த வேதியரை - நினது திருவருளாய் வந்து அவதரித்த அந்தணரை, அறியாதே — சிறிது முணராமலே, நான் வெறுத்து ஒறுத்தேன் - நான் அருவருத்துத் தண்டித்தேன் (இஃது என்ன அறியாமை.)

நினது திருவருளே நிலைபெற் புக்குழலும் அடியேனுக்கு இம்மைப்பயனு மறுமைப்பயனும் உயிர்க்குறுதியெனத்தேற்றி முத்தியில் விடுத்தற்கு அமைச்சுவடிவாகவந்ததென்பான் மந்திரியாய் நின்னருளாயவதரித்த எனவும், அத்திருவினை மேலிட்டால் அவர்பால் நிகழ்ந்த செய்தியைச் சற்றுமுணராது இகழ்ந்தேன் என்பான் அறியாதே வெறுத்து எனவும், அதுமட்டும் அமையாது பின்னருந் தீவினை விளைத்தேனென்பான் ஒறுத்தேனேயெனவுங் கூறினன். ஆய் செயவெனெச்சத்திரிபு. (அஉ)

மாயாவிருத்தியினான்மாழாந்துமாதவரை
யாயாதொறுத்தேனருநரகத்தாழ்ந்துநான்
வீயாமனின்றனையார்மெய்மைபொலாந்தேற்றியவென்
றூயாறுய்த்தன்னாளிதென்றயிபேன்செய்கைம்மாறே.

(இ-ள்.) மாயா விருத்தியினால் மாழாந்து - மாயாமலவிருத்தியா லறிவுமயங்கி, மாதவரை ஆயாது - அளத்தற்கரிய தவத்தையுடைய வாதவூராரியல்பைச் சற்றுமுணராது, ஒறுத்தேன் - வருத்தத் தண்டித்தனன், நான் அருநரகத்து ஆழ்ந்து வீயாமல் - அதற்கிடாகப் புலையே எடைதற்கரிய தீவாய்நரகிலழுந்தி யழியாமல்,

Koviloor Digital Library

இன்று அடியார் மெய்ம்மை எல்லாந் தேற்றிய என் தாய் ஆனாய்-இப்பொழுது அவரது உண்மையை முற்றுமுணராத எனக்குத் தேற்றுவித்தலால் எனக்கு ஓரன்னையானாய், தண் அளிக்கு தமியேன் செய் கைம்மாறு என் - உனது தண்ணிய கருணைக்குத் தனியேனாற் செய்யப்பட்ட பிரதியுபகாரம் யாதுளது.

மாயாமலத்தின் குணங்களை முன்னர்க் கூறியிருக்கின்றாம். அவரது செயல் நலங்களா லவர்பெருமையை யுணராமைக்கு ஏது மாயாமலவிருத்தியே யென்பான் மாயாவிருத்தியினான்மாழாந்து மாதவரையாயாதொறுத்தேனெனவும், பிள்ளைமைக் குணத்தால் தம்மக்கள் தியனசெய்து தீமை நுகராமல் அவை யொழிந்தற்குத் தாய்மார் நல்லறிவு கொளுத்துதல்போல, அம்மாயாமலத்தின் குணங்களால் அவரை யொறுத்தலால் வந்த நரகின் பயனுகராது அவரது மெய்ம்மையைத் தேற்றுவித்தலால் ஓரன்னையானாய் என்பான் என் தாயானாய் எனவும், அத்தண்ணளிக்கு அடியேன் செய்யுங் கைம்மாறில்லையென்பான் தமியேன் செய் கைம்மாறென்னெனவுங் கூறினான். தேற்றிய காரணப்பொருளில் வந்த செயவெனெச்சம். (அங)

நின்னையுணர்ந்தவர்வேதநெறிவேள்விசெய்தூட்டு
மின்னமுதிற்கழிசுவைத்தோவிவளிடும்பிட்டெவ்வுயிர்க்கு
மன்னவனேசெந்துவர்வாய்மலர்ந்தமுதுசெய்தனையா
லன்னையிலாவுனக்கிவளோரன்னையாய்வந்தாளோ.

(இ-ள்.) இவள் இடும் பிட்டு - இவ்வந்தியிட்ட பிட்டு, நின்னை யுணர்ந்தவர்- நின்னிறைமைத்தன்மையை யுணர்ந்த முனிசிரேஷ்டர்கள்,வேதம் நெறி-வேதத்திற் கூறிய விதியினின்று,வேள்வி செய்து ஊட்டும் இன் அமுதில் கழிசுவைத்தோ-வேள்வியைச்செய்து உண்பிக்கும் இனிய அவியினும் மிக்க சுவையினையுடையதோ, எவ்வுயிர்க்கும் மன்னவனே - பசுபதியே, செம் துவர் வாய் மலர்ந்து அமுது செய்தனை - சிவந்த பவளம்போன்ற திருவாய்மலர்ந் தமுதுசெய்தருளினை, அன்னை இல்லாத உனக்கு - தாயில்லாத உனக்கு, இவள் ஓர் அன்னை ஆய் ஓ வந்தாள் - இவ்வந்தி ஓர் தாயாகவா வந்தனள்.

தாயில்லாத நீ அடியேன்கடைத்தேற ஒருதாய் தேடினாயோ என்பான் செந்துவர் வாய்மலர்ந்தமுது செய்தனையெனக் கூறினான். ஆய் செயவெனெச்சத்திரிபு. இறுதியில்நின்ற வினாப்பொருளில்வந்த ஓகாரத்தைப் பிரித்துக்கூட்டுக. (அச)

அன்றுசிறுத்தொண்டரிடும்பிள்ளைக்கறியமுது
மென்றுசுவைதெரிந்தவேடனிட்டவூனும்போ
னன்றுநனையாட்டியிடுபிட்டுநயந்தருந்தி
யென்றுமடியார்க்கெளிவந்தாயெந்தாயே.

(இ-ள்.) அன்று - அக்காலையில், சிறுத்தொண்டர் இடும் பிள்ளைக்கறி அமுதும் - சிறுத்தொண்டநாயனார் பாகஞ்செய்தூட்டிய பிள்ளைக்கறி யமுதினையும், மென்று சுவை தெரிந்த வேடன் இட்ட ஊனும்போல் - (எம்பெருமானுக்கு ஈதிசைந்ததோவென்று முன்பு) மென்று சுவைபார்த்த கண்ணப்பநாயனார் ஊட்டிய இறைச்சியையும்போல, நன்று நனையாட்டி இடு பிட்டும் நயந்து அருந்தி - (இக்காலையில்) பதமாக வந்தியிட்ட பிட்டினையும் விரும்பியுண்ணுதலால், எந்தாய்-என் தந்தையே, என்று உம் அடியார்க்கு எளிவந்தாய் - எக்காலையிலும் அடியவர் திறத்து எளிதாக வந்தருளினை (ஆதலால் நீயே யருளிற்பெரியாய்.)

Koviloor Digital Library

திருச்செங்காட்டங்குடியி லவதரித்து அரசனுக்கு மந்திரிக்கிழமை பூண்டு தொண்டர்களுக்கு மிகச்சிறியராய் அன்பு பூண்டொழுகுவதால் சிறுத்தொண்டரென்றும் பெயர்வாய்ந்த நாயனார், ஓர்கால் தமது அன்பினை யுலகினரறிந்துய்ய அடியவருருக்கொண்டுவந்த சிவபெருமானைத்தரிசித்து எமதில்லில் அமுதுசெய்தருளவேண்டுமென விரக்க, பெருமானார் ஐந்துவயதுள்ள குழந்தையைத் தாய் பிடிக்க தந்தை யரிந்து அவ்விறைச்சியைச் சமைத்து வூட்டவல்லவரிருந்தா லுண்பேமென்று கூற, தம்மனைவியராகிய வெண்காட்டு நங்கையாரோடு சொல்ல, புத்திரனைத் துணித்து கொடுப்பவரும் உடன்பட்டுக் கொலைசெய்வாரும் உலகிலில்லையே நம்முடைய புத்திரசிகாமணியாகிய சீராளனிருக்கின்றானேயெனத் தங்கணவர் மனமகிழக் கூறினர், பள்ளிக்குச்சென்ற தமது பிள்ளையை யழைப்பித்து அவ்வாறே செய்வித்து அமுது நுகர்வித்தனரென்பதும்; தொண்டைநாட்டில் உடுப்பூரில் வேடர்குலத்துக்கு அரசனாயிருந்த நாகன் என்பவன் செய்த தவமே யுருக்கொண்டாற்போல அவதரித்துத் திண்ணனார் எனப் பெயர்பூண்டு வேடர் தொடர்ந்துவர வேட்டஞ்சென்று வேட்டமாடி ஓர் பன்றியைக்கொன்று பசியாறலாமென்று காடனை யங்கு நிறுத்தி நாணனோடு பொன்முகலிநதிக்குச் சென்று அவனோடு குடுமித்தேவரை வணங்க மலைமேற் செல்லும்போதே, முற்றிய தலையன்புவாய்ப்ப எதிர்சென்று கண்டபொழுதே கண்ணீர்வாரப் புளகம்போர்ப்பப் பரவசத்தராய்ச் சிவபெருமானைத் தழுவிக்கொண்டு பெருமானே வேடுவர்போலத் தனியேயிருக்கின்றாயே இறைச்சிகொண்டுவந்து கொடுப்போரிங்குண்டோவென்று சென்று, அக்காடன் மூட்டிய தீயில் பன்றியிறைச்சியைக் காய்ச்சித் தனது வாயிலதக்கிச் சுவைபார்த்துத் தேக்கிலையாற்செய்த கல்லையிலிட்டுத் தேன்பெய்து, அந்நதியினீரை வாயிலும் திருப்பள்ளித்தாமம் சிரசிலுங் கொண்டுவந்து, சிவகோசரியார் திருமுடியிலருச்சித்த பத்திரபுஷ்பங்களைத் தாம் காலிற்றொடுத்த தொடுதோலால் தள்ளிவாய் நீரால் மஞ்சனஞ்செய்து தமது தலையிலிருந்த பத்திரபுஷ்பங்களைச் சாத்திக் கல்லையிற் கொண்டுவந்த விறைச்சியை யமுதுசெய்வித்தனர் என்பதும், பெரியபுராணத்தில் சிறுத்தொண்டநாயனார்புராணத்தில் "சேதமதியரவிருடன் செஞ்சடைமேற்செறிவித்த - நாதனடியார்தம்மை நயப்பாட்டுவழிபாட்டான் - மேதகையாரவர்முன்பு மிகச்சிறியராயடைந்தார் - ஆதலினாற்சிறுத்தொண்டரென நிகழ்ந்தாரவனியின்மேல். இத்தன்மைநிகழுநாளிவர்திருத்தொண்டிருக்கையிலே - அத்தர்திருவடியிணைக்கீழ்ச்சென்றணையவவருடைய - மெய்த்தன்மையன்புநுகர்ந் தருளுதற்குவிடையவர்தாம் - சித்தமகிழ்வயிரவராய்த் திருமலைநின்றணைகின்றார். யாதுமரியதில்லையினியீண்டவருளிச்செய்யுமென - நாதன்றானுமொருகுடிக்குநல்லசிறுவனொருமகனைத் - தாதையரியத்தாய்பிடிக்கும்பொழுதிற் றம்மின்மனமுவந்தே-தீதின்மையமைத்தகறியாமிட்டுண்பதெனமொழிந்தார். அரியதற்பின்மனைவியாரவரை நோக்கியுரைசெய்வார் - பெரியபயிரவத்தொண்டர் தாமமுதுசெய்யப்பெறுமதற்கிங்-குரியவகையாலமுதமைப்பேமொருவனாகியொருகுடிக்கு- வருமச்சிறுவன்றனைப்பெறுமாறெங்ஙனென்றுவணங்குதலும். மனைவியார்தம்முகநோக்கிமற்றிந்திறத்துமைந்தர்தகைமை - நினைவுநிரம்பநிதிகொடுத்தாற்றருவாருளரோ நேர்நின்று - தனையன்றன்னைத்தந்தைதாயரிவரில்லதாழாமே - எனையிங்குய்யநீபயந்தான்றன்னையழைப்போமியாமென்றார். இனியமழலைக்கிண்கிணிக்காலிரண்டுமடியின்புடையிடுக்கிக் - கனிவாய்மைந்தன்கையிரண்டுங் கையாற்பிடிக்கக்காதலனும்-தனிநீடுவகையுறுகின்றானென்றுமகிழ்ந்தகைசெய்யத் - தனிமாமகனைத்தாதையார் கருவிகொண்டுதலையரிவார். பரிசுவிளங்கப்பரிகலமுந்திருத்தீப்பாவாடையிலேற்றித்- தெரியுங்கண்ணாற்சேர்த்தாலிச் செழும்போனகமுங்கறியமுதும்-வரிசையினின்முன்

Koviloor Digital Library

படைத்தெடுத்து மன்றும்பரிகலக்கான்மேல் - விரிவெண்டுகிலின்மிசைவைக்கவிமலர்பார்த்தங்கருள்செய்வார்" எனவும், கண்ணப்பநாயனார் புராணத்தில் "கானவர்குலம்விளங்கத் தத்தைபாற்கருப்பம்நீட - ஊனமில்பலிகள்போக்கி யுறுகடன்வெறியாட்டோடும் - ஆனவத்திங்கள்செல்ல வளவில்செய்தவத்தினாலே - பான்மதியுவரியீன்று லெனமகப்பயந்தபோது. அண்ணலைக்கையிலேந்தக் கருமையாலுரிமைப்பெருந்-திண்ணனென்றியம்புமென்னத் திண்சிலைவேடரார்த்தார். மாகமார்திருக்காளத்தி மலையெழுகொழுந்தாயுள்ள - ஏகநாயகரைக்கண்டா ரெழுந்தபேருவகையன்பின் - வேகமானதுமேற்செல்ல மிக்கதோர்விரைவினோடு - மோகமாயோடிச்சென்றார் தழுவினார்மோந்துநின்றார். நெடிதுபோதுயிர்த்துநின்று நிறைந்தெழுமயிர்க்காறேறும் - வடிவெலாம்புளகம்பொங்க மலர்க்கணீரருவிபாய - அடியனேற்கிவர்தாமிங்கே யகப்பட்டாரச்சோவென்று - படியிலாப்பரிவுதானோர் படிவமாம்பரிசுதோன்ற. வெம்மறக்குலத்துவந்த வேட்டுவச்சாதியார்போற் - கைம்மலைகரடிவேங்கை யரிதிரிகானந்தன்னில் - உம்முடன்றுணையாயுள்ளா ரொருவருமின்றிக்கெட்டேன் - இம்மலைத்தனியேநீரிங் கிருப்பதேயென்றுநைந்தார். கானவர்போனதோரார் கடிதினிற்கல்லையின்கண் - ஊனமுதமைத்துக்கொண்டு மஞ்சனமாட்டவுன்னி - மாநதிநன்னீர்தூய வாயினிற்கொண்டுகொய்த - தூநறும்பள்ளித்தாமங் குஞ்சிமேற்றுதையக்கொண்டார். இலைத்தனர்நாயனாரொன் றீண்டச்சென்றெய்திவெற்பின் - முலைத்தெழுமுதலைக்கண்டு முடிமிசைமலராக்காலில் - வலைத்தபொற்செருப்பான்மாற்றி வாயின்மஞ்சனநீர்தன்னை - விலைத்தவன்புமிழ்வார்போல விமலனார்முடிமேல்விட்டார். தலைமிசைசுமந்தபள்ளித் தாமத்தைத்தடங்காளத்தி - மலைமிசைத்தம்பிரானார் முடிமிசைவணங்கிச்சாத்திச் - சிலைமிசைபொலிந்தசெங்கைத் திண்ணனார்சேர்த்தகல்லை-இலைமிசைபடைத்தவூனின் திருவமுதெதிரேவைத்து. கொழுவியதசைகளெல்லாங் கோலினிற்றெரிந்துகோத்தங் - கழலுறபதத்திற்காய்ச்சிப் பல்லினாலதுக்கினாவிற் - பழகியவினிமைபார்த்துப் படைத்தவிவ்விறைச்சிசால - அழகிதுநாயனீரேயமுதுசெய்தருளுமென்றார்" எனவும் வருதலாலுணர்க. வாதவூரடிகளுக்கு முன்னேயிவ்வரலாறு நிகழ்ந்ததால் அன்று என்றார். "பொருட்பற்றிச்செய்கின்ற பூசனைகள்போல்விளங்கச் - செருப்புற்றசீரடிவாய்க்கலசமூனமுதம் - விருப்புற்றவேட்டனார்சேடறியமெய்குளிர்ந்தங் - கருட்பெற்றுநின்றவாதோணோக்கமாடாமோ" எனத் திருத்தோணோக்கத்தில் வருதல் காண்க. சிறுத்தொண்டநாயனார் சரித்திரம் பிற்காலத்து நிகழ்ந்தது. (௮௫)

நரியாவும்பரியாக்கிநடத்தியுமம்பரமன்றித்
தரியாயான்றருதுகிலைத்திருமுடிமேற்றரித்துமறைக்
கரியாய்நீயென்பாசமறுக்கவருந்திருமேனி
தெரியாதேபரியாசைதிளைத்திறுமாந்திருந்தேனே.

(இ-ள்.) நரி யாவும் பரி ஆக்கி நடத்தியும் - நரிகள் முழுமையுங் குதிரைகளாக்கி நடத்தியும், அம்பரம் அன்றி தரியாய்-திசைகளையன்றி மற்றொன்றையு மாடையாகத் தரிக்காதவனே, யான் தருதுகிலையும் திருமுடிமேல் தரித்தும் - கடையேன் கொடுத்த ஆடையினையும் தனது திருமுடியின்மேல் தரித்தும், மறைக்கு அரியாய் - வேதங்களுணர்தற்கரியாய், நீ என் பாசம் அறுக்கவரும் திருமேனி தெரியாதே - நீ யெனது மலத்தொடக்கை யறுக்கவந்தருளிய திருமேனியைச் சிறிது முணராமலே, பரி ஆசை திளைத்து இறுமாந்திருந்தேன் - குதிரைபெறும் ஆசையிலழுந்தி யேக்கழுத்த முற்றுவாளா இருந்துகெட்டேன் (இது என்ன புன்மை.)

தமிலெ வென்பரவிறுதியி இதிவு சிறப்பும்மை தொகுத்தல். (அ௬)

விண்சுமக்கும்புள்ளாய்விலங்காய்ச்சுழன்றுமனம்
புண்சுமக்குஞ்சூழ்ச்சிவலியுடையபுத்தேளிர்
மண்சுமக்குமள்ளராய்வந்திலரேவந்தக்காற்
பண்சுமக்குஞ்சொல்லிபங்கன்பாதமுடிகாண்பாரே.

(இ-ள்.) விண் சுமக்கும் புள் ஆய் - வானிற்பறக்கும் அன்னவடிவாகியும், விலங்கு ஆய் - பன்றியின் வடிவாகியும், சுழன்று - (அடிமுடிதேட) சுழன்று, மனம் புண் சுமக்கும் சூழ்ச்சி வலி உடைய புத்தேளிர் - நெஞ்சு புண்படும் ஆலோசனையின் வன்மையையுடைய பிரமனுந் திருமாலும், மண் சுமக்கும் மள்ளர் ஆய் - (உடைப்படைக்க) மண் சுமக்குந் திண்ணியராய், வந்திலரே - அந்தோ வாராதொழிந்தாரே, வந்தக்கால் - வரில், பண் சுமக்கும் சொல்லி பங்கன் பாதம் முடி காண்பார் - இசையமைந்த சொற்களையுடைய உமாதேவியாரிடப்பாகத்தையுடைய இறைவன் திருவடியையுந் திருமுடியையும் எளிதாகக்காண்பார்.

ஆகாயத்தின் மேற்பறத்தலால் விண் சுமக்குமெனவும், திருமால் பிரமர் காணவேண்டுமெனக்கொண்ட சூழ்ச்சி பயன்படாது முடிதலின் மனம் புண்சுமக்குஞ் சூழ்ச்சியெனவுங் கூறினர். (அஎ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றுபலமுறையாலேதுதித்தடைந்தோர்க்கன்பரிவரிவரைத்தேறி
னன்றுமிகபரபோகம்வீடுபெறலெளிதென்றுநகைத்தார்வேந்த
னன்றுதிருப்பணிபூசைபிறவுநனிவளம்பெருக்கியழகார்வெள்ளி
மன்றுடையாரடிக்கன்புமுயிர்க்கன்புஞ்சார்ந்தொழுகிவாழுநாளில்.

(இ-ள்.) என்று பலமுறையாலே துதித்து இவர் அடைந்தோர்க்கு அன்பர் - என்று பலமுறையானுந்துதித்து இச்சோமசுந்தரக்கடவுள் தம் திருவடிக்கீழடைந்த அன்பர்க்கு அன்பர், இவரை தேறின் - இவரை மனவாக்குக்காயங்களொருப்பட்டுத்தெளிந்தால், இகபர போகம் - இகபரபோகங்களையும், வீடு-பரமுத்தியையும், நன்றும் பெறல் எளிது என்று-மிகவும் அடைதலெளிதென்று, நகை தார் வேந்தன்-விளங்கும் வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியன், அன்று - அக்காலந்தொட்டு, திருப்பணி பூசை பிறவும்-திருப்பணிகளையும் பூசையையும் திருவிழாமுதலியவற்றையும், நனி வளம் பெருக்கி-மிகவும் சிறந்தோங்க நடத்தி, அழகு ஆர் வெள்ளி மன்று உடையார் அடிக்கு அன்பும் உயிர்க்கு அன்பும் சார்ந்து ஒழுகி - பொலிவுநிறைந்த வெள்ளியம்பலத்தையுடைய சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிக்கீழன்பும் உயிர்கண்மேலன்பு மிடையறாது பூண்டொழுகி, வாழும் நாள் இல் - அரசியல் செய்து வாழும் நாள்களில்.

இகபரபோகங்கள் துய்த்தபின் கன்மசமத்துவம் வந்து பரமுத்தியடைவதாதலால் இகபரபோகம் வீடு என எண்ணினர். (அஅ)

முன்புபெருந்துறையார்க்குமடியார்க்குமறந்தெரிந்தமுறையாலீட்டுந்
தன்பொருள்போயுடன்பலவாய்த்தழைத்துவருபயனேபோற்றலையுவாவி
னன்பனிகான்மதிகண்டவுவரியெனப்பலசெல்வநாளுமோங்க
வின்புறவான்சநாதனெனுமகப்பெற்றின்பத்தின்பத்தாழ்ந்தான்.

Koviloor Digital Library

(இ-ள்.) முன்பு பெருந்துறையார்க்கும் - முன்பு திருப்பெருந்துறையி லெழுந்தருளிய இறைவர்க்கும், அடியார்க்கும் - அவரடியவர்களுக்கும், அறம் தெரிந்த முறையால் ஈட்டும் - அறநூலில் ஆராய்ந்துணர்ந்த விதிவழியா லீட்டிய, தன்பொருள் போய் உடன் பல ஆய் தழைத்துவரு பயனே போல் - தனது பொருள் (வாதவூரடிகளால்) சென்று சேரப் பலவாய்ப் பெருகிவரும் வருவாய்போல, தலை உவாவின் - பௌரணையில், நன் பனி கால் மதி கண்ட உவரி என்ன - மிக்க தண்மையை வீசும் சந்திரனைக்கண்ட கடல் பொங்குதல்போல, பல செல்வம் நாள் உம் ஓங்க - பல செல்வங்களும் எந்நாளும் பல்கிவளர, இன்பு உறுவான் - இன்பமடையும் அரிமருத்தனபாண்டியன், சகநாதன் என்னும் மகபெற்று - சகநாதனென்னும் நாமத்தையுடைய புதல்வனைப்பெற்று, இன்பத்து உள் இன்பத்து ஆழ்ந்தான் - இகபோகத்துள் கவலையின்றி யழுந்தி வாழ்ந்தனன்.

மணிபொன் நெல்முதலியனவாகச் செல்வம் பலவகைப்படுதலால் பல செல்வம் எனவும், நோயின்மையால் இன்புறுவான் எனவும், செல்வமும் நோயின்மையு நன்மகப்பேறுமாகிய இவைகளு ளொன்றுங் குறைவின்றி வாழ்தலால் இன்பமென்றுமையாத இன்பத்தாழ்ந்தானெனவுங் கூறினர். (அரு)

அம்மகனை முடிசூட்டியரசாக்கிவாதவூரமைச்சர்சார்பான், மெய்ம்மை
நெறிவிளங்கியிருவினையொப்பிலரன்கருணைவிளைந்தநோக்கால், மும்மைம
லத்தொடர்நீங்கிச்சிவானந்தக்கடற்படிந்துமுக்கண்மூர்த்தி, செம்மலர்த்
தாணிழலடைந்தான் றிறலரிமர்த்தனனென்றுந்தென்பார்வேந்தன்.

(இ-ள்.) திறல் அரிமர்த்தனன் என்னும் தென்பார் வேந்தன் - வன்மையையுடைய அரிமருத்தனனென்னும் பாண்டிநாட்டரசன், அ மகனை முடிசூட்டி அரசு ஆக்கி - அந்தச் சகநாதனென்னுந் தன் புத்திரனை (பூபாரம்பொறுத்தற்கு) மகுடஞ்சூட்டி யரசனாக்கி, வாதவூர் அமைச்சர் சார்பு ஆல் மெய்ம்மை நெறி விளங்கி - வாதவூரடிகளைச் சார்ந்திருத்தலால் நித்தியப்பொருள் புலப்பட்டு, இருவினை ஒப்பு இல் - (அதனால்வந்த) கன்ம சமத்துவத்தினால், அரன் கருணை விளைந்த நோக்கு ஆல் - (கைகூடிய) சிவபெருமான் திருவருட்பார்வையால், மும்மை மலம் தொடர் நீங்கி - ஆணவமாயை காமியமென்னுந் தளையினின்று நீங்கி, சிவானந்தம் கடல் படிந்து - சிவபோகமென்னுஞ் சாகரத்தில் முழுகி, முக்கண்மூர்த்தி செம்மலர் தாள் நிழல் அடைந்தான் - அச்சிவபெருமானுடைய செவந்த தாமரைமலர்போன்ற திருவடி நிழற்கீழிரண்டறக்கலந்தனன்.

வாதவூரடிகளால் பொய்ம்மை நெறியினின்று நீங்கினன் என்பார் மெய்ம்மை நெறி விளங்கியெனவும், அதனாற் கன்மசமத்துவம் எய்தினன் என்பார், இருவினையொப்பில் எனவும், அப்பாகத்தால் திருவருள் கூடி மலச்சிமிழ்ப்பு நீங்குமென்பார் அரன்கருணை விளைந்த நோக்கால் மும்மலத்தொடர் நீங்கியெனவும், அன்று சிவத்தோடுடனின்று பேரின்பநுகர்ந்தான் என்பார் சிவானந்தக்கடற்படிந்து எனவும், உடல் நீக்கத்திற் பரமுத்திபெற்றான் என்பார் முக்கண்மூர்த்தி செம்மலர்த்தாணிழலடைந்தான் எனவுங்கூறினர். தொடர் என்றமையால் நீங்கியெனப் பாடங்கொள்க. இது ஒன்றனையொன்று காரணமாகத் தொடர்ந்து கிற்றலாற் காரண மாலையணி. (௬௰)

வேறு.

வழுதியால்விடுக்கப்பட்டவாதவூர்முனிகட்மைப்
பழுதிலாப்பாடல்கொள்வார்பதிபலபணிந்துபோந்து

Koviloor Digital Library

முழுதுணர்மறையோர்வேள்விப்புகையண்டமுடிகீண்டூழி
யெழுவடவரைபோற்றோன்றுமெழிற்றில்லைமூதூர்சேர்ந்தார்.

(இ-ள்.) வழுதி யால் விடுக்கப்பட்ட வாதவூர் முனிகள் - பாண்டியனால்விடுக்கப்பட்ட வாதவூர் முனிவர், தம்மை பழுது இல்லாத பாடல் கொள்வார் பல பதி பணிந்து போந்து - தம்மால் குற்றமில்லாத பாசுரங்களைக் கொண்டருளு மிறைவரது பல திருப்பதிகளையும் வணங்கிச்சென்று, முழுது உணர் மறையோர் வேள்வி புகை - முற்றுமுணர்ந்த அந்தணர் செய்யும் வேள்வித்தூமம், அண்டம் முடி கீண்டு - அண்டத்தின் முகட்டைக்கிழித்து, ஊழி எழு வடவரைபோல் தோன்றும் - ஊழிதோறும் வளர்ந்தோங்கும் வடதிசையிலுள்ள கயிலைமலைபோல உயர்ந்து விளங்கும், எழில் தில்லை மூதூர் சேர்ந்தார் - அழகிய தில்லையென்னும் தொன்றுதொட்டுள்ள திருப்பதியைத் தரிசித்தனர்.

திருக்கயிலை யுயர்ச்சிபோல உயர்ந்து விளங்கும் என்பார் ஊழியெழு வடவரைபோற் றோன்றும் என்றார். (கூக)

வேறு.

வீதிதொறும்விழ்ந்துவிழ்ந்திறைஞ்சியாலயத்தெய்திமெய்மையான
சோதியறிவாநந்தச்சுடருருவாஞ்சிவகங்கைதோய்ந்துமேனி
பாதிபகிர்ந்தவள்காணப்பராநந்தத்தனிக்கூத்துப்பயிலாநிற்கு
மாதியருளாகியவம்பலங்கண்டுகாந்தநேரயம்போற்சார்ந்தார்.

(இ-ள்.) வீதி தொறும் - திருவீதிகள்தோறும், வீழ்ந்து வீழ்ந்து இறைஞ்சி - விழுந்து வணங்கி, ஆலயத்து எய்தி-சிவாலயத்தையடைந்து, மெய்மை ஆன சோதி-உண்மைவடிவாகிய பேரொளியும், அறிவு ஆநந்தம் சுடர் உருவாம் - அறிவாநந்த வடிவாகிய சுடர்ப்பிழம்புமாகிய இறைவரது திருவுருவாகிய, சிவகங்கை தோய்ந்து-சிவகங்கையினீராடி, மேனி பாதி பகிர்ந்தவள் காண - தமது திருமேனியிற் செம்பாதிபங்குகொண்ட சிவகாமியன்னையார் (ஆன்மாக்களுய்ய) கண்டருள, பராநந்தம் தனி கூத்து பயிலா நிற்கும் ஆதி அருள் ஆகிய அம்பலம் கண்டு - ஒப்பில்லாத ஆநந்தத் திருநடஞ்செய்தருளும் அவ்விறைவரது திருவருளாகிய பொன்னம்பலத்தைத் தரிசித்து, காந்தம் நேர் அயம் போல் சார்ந்தார் - காந்தத்தினெதிர்ப்பட்ட இரும்புபோலத் தமது மனத்தை யீர்ப்ப அடைந்தனர்.

திருவீதிகளிலுள்ள அந்தணர் மூவாயிரவருஞ் சிவகணநாதர்களாதலால் வீதிதொறும் வீழ்ந்து வீழ்ந்திறைஞ்சியெனவும்,செய்யுளாதலால் சச்சிதாநந்தத் திருவுருவை மெய்மையான சோதி அறிவாநந்தச்சுடர் எனவும்,அட்டமூர்த்தத்துள் ஒன்றாதலால் சுடருருவாஞ் சிவகங்கையெனவும், ஞான அம்பலமாதலால் ஆதியருளாகிய அம்பலம் எனவுங்கூறினார், "அண்டத்திறைவருளாலணிதில்லை-முண்டத்திருநீற்று மூவாயிரவர்களுந் - தொண்டத்தொகைமைக்கணநாதராய்த்தோன்றக் - கண்டப்பரிசுபெரும்பாணர்க்குங்காட்டினார்" எனவும், "கற்பனைகடந்தசோதி கருணையேயுருவமாகி - அற்புதக்கோலநீடி யருமறைச்சிரத்தின்மேலாஞ் - சிற்பரவியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துணின்று" எனவும் பெரியபுராணத்தில் வருதல் காண்க. (கூஉ)

அன்றுகுருந்தடியிலடிவைத்தாண்டகோலமேயருளாநந்த
மன்றிலிடத்தெதிர்தோன்றிவாவென்பானொனமூரன்மணிவாய்தோற்றி
நின்றதனிப்பெருங்கூத்தர்நிலைகண்டாரஞ்சலித்தார்நிலமேல்வீழ்ந்தா
ரொன்றரியபுலன்கரணவழிநிந்திமெய்யுன்பினுருவமனார்

Koviloor Digital Library

(இ-ள்.) அன்று - அக்காலையில், குருந்து அடியில் - குருந்தமரத்தடியில், அடிவைத்து ஆண்ட கோலமே - திருவடிசூட்டி யடிமைகொண்ட திருக்கோலமே, அருள் - பின்னரும் தமது திருவருளால், ஆநந்தம் மன்றின் இடத்து எதிர் தோன்றி வா என்பார் என்ன - பேரின்பம் விளைக்கும் பொன்னம்பலத்தி லெதிரே காட்சிதந்தருளி வாவென்றருள்வார்போல, மூரல் மணி வாய் தோற்றி - புன்னகையை அழகிய திருவாயிற் புலப்படுத்தி, நின்ற தனிபெருங் கூத்தர் நிலை கண்டார் - நின்றருளிய ஒப்பில்லாத அளவுசெய்தற்கரிய ஆநந்தநடன முடையாரது நிலையெனக்கண்டு தரிசித்து, அஞ்சலித்தார் - சிரமேலஞ்சலிகூப்பி, நிலம் மேல் வீழ்ந்தார் - நிலத்தின்மேல் தண்டாகாரமாக வீழ்ந்து, ஒன்று அரிய புலன் கரணம் வழி நீந்தி - ஒருப்படுதலில்லாத ஐம்புலன்களும் அந்தக்கரணங்களுஞ் செல்லும் வழியைக்கடந்து (ஒருப்பட்டு) மெய் அன்பின் உருவம் ஆனார் - தலை யன்பின் வடிவமாயினார்.

அருளவந்தருளிய சாதாரத் திருவுருவே நடராசரது நிலையெனத் துணிந்தாராதலால் கோலமே கூத்தர் நிலையெனக்கொண்டு கூட்டுக. என என்னும் இடைச்சொல் எஞ்சிநிற்றலால் சொல்லெச்சம். (கங)

வண்டுபோற்புண்டரிகமலரில்விளை சிவாநந்தமதுவைவாரி
யுண்டுவாசகம்பாடியாடியழல்வெண்ணெயெனவுருகுந்தொண்டர்
விண்டுழாவியகுடுமிமன்றுடையான்றிருவாக்கான்மிகுந்தநேயங் [ண்.
கொண்டுபோய்க்குணதிசையிலருந்தவர்வாழ்தபோவனத்தைக்குறுகியங்க

(இ-ள்.) வண்டு போல் - வண்டைப்போல, புண்டரிக மலரில் விளை சிவாநந்த மதுவை வாரி உண்டு - தில்லைவனமாகிய தாமரைமலரில் விளையுஞ் சிவாநந்தமாகிய தேனைவாரிநுகர்ந்து, வாசகம் பாடி ஆடி அழல் வெண்ணெய் என்ன உருகும் தொண்டர் - திருப்பாசுரங்கள் பாடியாடித் தீயிற்பட்ட வெண்ணெயைப்போலமனமுருகும் அடியார், விண் துழாவிய குடுமி மன்று உடையான் திருவாக்கு ஆல் - ஆகாயத்தையளாவிய சிகரத்தையுடைய பொன்னம்பலத்தையுடைய இறைவரது திருவாக்கினால், மிகுந்த நேயம் கொண்டு போய் - மிக்க தலையன்புகொண்டுசென்று, குண திசையில் அருந்தவர் வாழ் தபோ வனத்தை குறுகி - மேலைத்திசையி லரிய தபோதனர்கள் வசிக்குந் தபோவனத்தையடைந்து, அங்கண் - அவ்விடத்தில்.

பிரமாண்டம்-பிரமபுரம் எனவும், இப்பிரமாண்டத்தினுள்ளிருக்குந்தில்லைவனம் புண்டரிகமெனவும் சாந்தோக்கிய உபநிடதத்திற்கூறப்படுதலால் புண்டரிகமலர் எனவும், கண்டபத்து என்னுந் திருப்பதிகம் அருளிச்செய்தலால் வாசகம்பாடி யெனவும், எல்லாவுயிர்களுக்கும் பந்தவழக்கறுக்கும் அம்பலமாதலால் மன்று எனவும், பொன்னம்பலத்திற்குக் கீழ்பாலுள்ளதாதலால் குணதிசையெனவும், மத்தியந்தனர்முதலிய முனிவர்கள் வசிக்கும் தில்லைவனமாதலால் அருந்தவர்வாழ் தபோவனம் எனவுங்கூறினார். "பிரமபுரமென்றெடுத்துரைக்கப் பிரமஞானவதிகார - வரமனிியசரீரத்தில்வயங்குதகரமெனச்சிறந்தா - தரமாரிதயகமலத்திற் றோன்றுந்தகராகாசமே - பரமசிவமென்றெம்மறையும்பகராநிற்கும்பண்ணவர்காள்" எனச் சூதசங்கிதையில் சாந்தோக்கிய உபநிடதத் தமைந்த தாற்பரியம் பின்னுமுரைத்தஅத்தியாயத்திலும் "விண்டேயிருகண்ணீர்விழவீழ்ந்தின்னடிமுடிமேற் - கொண்டேபினெழுந்தன்பொடுகுறையாவருணிறையா - வண்டேர்குழலுமைபங்கனை வண்டில்லையுளின்னே - கண்டேனெனநற்பாடல்கருத்தாரவுகாத்தான்" என வாதவூரடிகள்புராணத்திலும் வருதல்காண்க. (கச)

Koviloor Digital Library

குறிகுணங்கள்கடந்ததனிக்கூத்தருருவெழுத்தைந்தின்கோடுவாளோச்சிப்
பொறிகரணக்காடெறிந்துவீசிமனப்புலந்திருத்திப்புனிதஞ்செய்து
நிறைசிவமாம்விதைவிதைத்துப்பசுபோதக்களைகளைந்தருணன்னீர்கால்பாய
வறிவுருவாய்விளைந்ததனிப்பராநந்தவமுதருந்தாதருந்திநின்றார்.

(இ-ள்.) குறி குணங்கள் கடந்த தனி கூத்தர் உரு எழுத்து ஐந்து - நிறமுங் குணமுமாகிய இலக்கணங்களைக்கடந்த ஒப்பில்லாத ஆநந்தக்கூத்தையுடைய இறைவனது திருவுருவாகிய ஸ்ரீபஞ்சாக்ஷர மென்னும், கோடு வாள் ஓச்சி-அரிவாள்கொண்டு வீசி, பொறி கரணம் காடு எறிந்து வீசி-ஐம்பொறிகளும் அந்தக்கரணங்களுமாகிய அடவியைப் பற்றறவழித்து, மனம் புலம் திருத்தி புனிதம் செய்து-மனமாகிய புலத்தைத் திருத்திச் செப்பஞ்செய்து, நிறை சிவம் ஆம் விதை விதைத்து-எங்கும் நிறைந்த சிவமாகிய விதையைவிதைத்து, பசு போதம் களைந்து - ஜீவபோதமாகிய களைகளைக்களைந்து, அருள் நல் நீர் கால் பாய - திருவருளாகிய சிறந்த நீர்கால் வழிய நிரம்பிப்பாய, அறிவு உரு ஆய் விளைந்த தனி பராநந்தம் அமுது அருந்தாது அருந்தி நின்றார் - சிவஞானவடிவாய்விளைந்த ஒப்பில்லாத சிவபோகமென்னும் அமுதினை யான்மபோதவழிநின்று நுகராமல் திருவருள்வழிநின்று நுகர்ந்துநின்றனர்.

திருவடி நகரமாகவும், திருவுதரம் மகரமாகவும், திருத்தோள்சிகரமாகவும், திருமுகம் வகரமாகவும், திருமுடி யகரமாகவும், இருத்தலால் கூத்தருருவெழுத்தைந்து என்றார் "ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே - நாடுந்திருவடியிலேநகரம்— கூடும் - மகரமுதரம்வளர்தோள்சிகரம் - பகருமுகம்வாமுடியபார்" எனத்திருவுண்மைவிளக்கத்தில் வரும் வெண்பாவாலுணர்க. இன் தவிர்வழிவந்தசாரியை. இது இயைபுருவகவணி. (௬௫)

மானிரையுங்குயவரியும்வந்தொருங்குநின்றுரிஞ்சமயங்குகானத்
தானிரைகன்றெனவிரங்கிமோந்துநக்கவாநந்தவருட்கண்ணீராக்
கானிறைபுள்ளினம்பருகக்கருணைநெடுங்கடலிருக்குங்காட்சிபோலப்
பானிறவெண்ணீற்றன்பரசைவின்றிச்சிவயோகம்பயிலுநாளில்.

(இ-ள்.) மயங்கு கானத்து-மரநெருக்கா லிருள்மிக்க தபோவனத்தில், மான் நிரையும் குயவரியும் வந்து ஒருங்கு நின்று உரிஞ்ச-மான்கூட்டமும் புலிக்கணமும் வந்து தம்முட்பகையின்றி யொருசேரநின்று ஒருபாலுரிஞ்சவும், ஆன் நிரை கன்று என்ன இரங்கி மோந்து நக்க-பசுக்கூட்டங்கள் தமது இளங்கன்றென்று அன்புகூர்ந்து மோந்து ஒருபால் நக்கவும், அருள் ஆநந்தம் கண் நீர்-உள்ளத்தினிறைந்த திருவருள் மேலெபொங்கிவழிதல்போல வழியும் ஆநந்தபாஷ்பத்தை, கான் நிறை புள் இனம் பருக-தபோவனத்தினிறைந்த பறவைக்கூட்டங்கள் ஒருபால் பருகவும், கருணை நெடுங் கடல் இருக்கும் காட்சிபோல - பெரிய கிருபாவெள்ளமிருக்குந் தோற்றம்போல, பால் நிறம் வெண் நீறு அன்பர் அசைவு இன்றி சிவயோகம் பயிலும் நாளில்-பால்போலும் வெண்ணிறம்வாய்ந்த திருநீறணிந்த வாதவூரடிகள் சித்திரம்போல அசைவின்றி யிருந்து சிவயோகஞ்செய்தருளுங்காலத்தில்.

புலி அரிவாள்போலும் வரிகளையுடையது ஆதலால் குயவரி என்றது உவமைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகைநிலைத்தொடர். (௬௬)

புத்தர்சிலரிலங்கையினும்போந்துமுவாயிரமெய்ப்போதவேத
வித்தகரோடேழுநாள்வரையறுத்துச்சூளொட்டிவிவாதஞ்செய்வா

Koviloor Digital Library

றி.த்தகையநாளேழில்யாமிவரைவேறுமெனுமெண்ணம்பூண்ட்
சித்தமுடையவராகவவர்கனவிலெழுந்தருளித்தேவதேவர்.

(இ-ள்.) புத்தர் சிலர் இலங்கையினும் போந்து - சிலபுத்தர்களிலங்கையினின்றும்வந்து, மூவாயிரம் - மூவாயிரமென்னு மிலக்கத்தையுடைய, மெய் போதம் வேத வித்தகர் ஓடு - சிவஞானம்பெற்ற அந்தணர்களோடு, ஏழு நாள் வரை அறுத்து சூள் ஒட்டி விவாதம் செய்வார் - ஏழுதினம் வரையறுத்துச் சபதங்கூறித் தருக்கஞ்செய்வாராயினர், இ தகைய நாள் ஏழில்-இவ்வாறு வரையறுத்த ஏழுதினத்தில், யாம் இவரை வேறும் என எண்ணம் பூண்ட - யாமிவர்களை வெல்வோமென்றெண்ணங்கொண்ட, சித்தம் உடையவர் ஆக - மனமுடையவராய்த் தில்லைமூவாயிரவரிருக்க, தேவதேவர் அவர் கனவில் எழுந்தருளி - இறைவர் அவர்கள் சொப்பனத்திலெழுந்தருளி.

சிவவேடம்பூண்ட தவசியொருவர் நாடுகள்தோறுஞ்சென்று வளங்காணவேண்டி ஈழநாட்டிற்குச் சென்று நிற்குந்தோறும் இருக்குந்தோறும் பொன்னம்பலம் வாழ்கவெனக் கூறியுலாவ, அதுகேள்வியுற்ற புத்தர்சிலர் தமதரசனிடத்திற்கூற, அவ்வரசன்கேள்வியுற்றுத் தனதுவேவுகாரரால் வருவித்து அந்தப்பசியையைநோக்கி நீர் கூறும் பொன்னம்பலம் என்பது யாது அது தெரியக்கூறுமென, அவரத்தலத்தின் மான்மியங்களை யெடுத்துக்கூறும்போது அவ்வரசனோ டொருங்கிருந்த புத்தகுரு கேட்டுச் சினங்கூர்ந்து அக்கோயிலைப் புத்தன் பள்ளியென வாதில்வென்றுசெய்வேனென்னத் தனது சீடரோடு சென்றனனென வாதவூரடிகள்புராணத்தில் "நண்ணுமாதிமாதவனலங்கொளீழநாடனும் - அண்ணலுறைவிருந்தவூரடைந்துசேரிடந்தொறும் - எண்ணிலாதகாலம்வாழி தில்லைமன்றமென்றுகூர் - உண்ணிலாவுமன்பினு லுரைக்கவேதொடங்கினான். நீறுதிருவஞ்செழுத்துமிலாநிருபாதிருவம்பலமென்று - கூறும்பொருளிங்கிதுவாகுமென்றான்குன்றுமெனுங்குணத்தான் - தேறும்பிடகமூன்றுமுரைசெய்யுந்தலைவனல்லாது -வேறுங்கடவுளொன்றுளதோவென்றேபுத்தன்வெகுண்டுரைப்பான். சென்றேதில்லையெனும்பதியிற்சேர்வேன்வாதுசெய்தவன்றான் - இன்றேநடிக்குங்கழலிடுநீடுங் கொடியுமீக்கறுப்பேன் - ஒன்றேகடவுள்புத்தனென வுலகோரறியவுரைத்தந்த - மன்றேபோதிநிழற்பெருமாள்பள்ளியென்னவழங்குவிப்பேன்" எனவருதல்காண்க. (௯௭)

வாதவூரனைவிடுத்துவாதுசெய்வீரெனவிழித்துமறையோரந்தப்
போதவேதியனைவனம்புகுந்தழைத்தாரப்போதுபொதுவிலாடும்
வேதநாயகன்பணித்தவழிநின்றுரெதிர்மறுப்பமீண்டுபோந்து
காதராகுலமூழ்கியிருந்தார்முத்தழனிமிர்த்துக்கலியைக்காய்வார்.

(இ-ள்.) வாதவூரனை விடுத்து வாது செய்வீர் என்ன-வாதவூராளியைக்கொண்டு வாதுசெய்யக்கடவீரென்று இறைவர் சொப்பனத்திலருள, விழித்து - துயிலுணர்ந்து, மறையோர் - தில்லைமூவாயிரவர், அந்த போத வேதியனை வனம் புகுந்து அழைத்தார்-அந்தச் சிவஞானத்தையுடைய வாதவூரடிகளைத் தபோவனத்திற்சென்றழைத்தார்கள், அ போது - அக்காலையில், பொது இல் ஆடும் வேதநாயகன் பணித்தவழி நின்றார் - பொன்னம்பலத்தில் திருநடனஞ்செய்தருளும் இறைவரருளிய அருளின்வழிநிற்கு மவ்வாதவூரடிகள், எதிர் மறுப்ப - அவர்வார்த்தையை மறுக்க, முத்தழல் நிமிர்த்து கலியை காய்வார் - ஆகவநீய முதலிய மூன்று அக்கினியையும்வளர்த்தி உலகிலுள்ள துன்பத்தைநீக்கும் அம்மறையவர், மீண்டு போந்து காதரம் ஆகு

Koviloor Digital Library

லம் மூழ்கி இருந்தார் - திரும்பிவந்து (எவ்வாறு வெல்வோமென்றும்) அச்சத்தால் துன்பத்திலழுந்தி இருந்தனர்கள்.

தில்லையிலிருக்கவென முன்னருளியதால் வேதநாயகன்பணித்தவழிநின்றுர் என்றுர். (௯௮)

பின்னுமவர்கனவின்கண்மன்றுளுடம்பிரியாதபெருமான்வந்து
முன்னவனைப்பெருந்துறையிற்குருந்தடியிலாட்கொண்டமுறையினுனு
மின்னிசைவண்டமிழ்மணிபோற்பாடுங்காரணத்தாலும்யாமன்றிட்ட
மன்னியபேர்மாணிக்கவாசகனென்றழைமின்கள்வருவனென்றுன்.

(இ-ள்.) பின் உம் - மீளவும், அவர் கனவின் கண் - அம்மறையவர் சொப்பனத்தில், மன்று உள் உடம் பிரியாத பெருமான் வந்து - பொன்னம்பலத்தில் ஆநந்த நடனத்தினின்று நீங்காத இறையவர் தாம் வந்து, முன் அவனை பெருந்துறையில் குருந்து அடியில் ஆட்கொண்ட முறையினாலும் - முன்பு அவனைத் திருப்பெருந்துறையிற் குருந்தமரத்தினடியில் அடிமைகொண்டருளிய முறைமையினாலும், இன் இசை வண் தமிழ் மணிபோல் பாடும் காரணத்தாலும் - இனிய இசையமைந்த தமிழ்ப்பாசுரங்களை மாணிக்கம்போலப் பாடுங்காரணத்தினாலும், யாம் அன்றிட்ட மன்னிய பேர் மாணிக்க வாசகன் என்று அழைமின்கள்-நாமருளிய நிலைபெற்றபெயர் மாணிக்கவாசகன் ஆதலால் அப்பெயரிட்டு அழையுங்கள், வருவன் என்றுன்-வருவானென்றருளினார்.

அப்பெயர் கூட்டம் ஆதலால் நமது ஆணை என்றுண்வான் என்பார் மாணிக்கவாசகனென்றழைமின்கள் வருவனென்றுன் என அருளினர். (௯௯)

உறக்கமொழிந்தறவோர்சென்றவர்நாமமொழிந்தழைப்பவுணர்ந்துநாத
னறக்கருணையிதுவோவென்றவரோடுமெழுந்துநகரடைந்துமண்ணுந்
துறக்கமுநீத்தருவருந்தார்மன்றுடுந்துணைக்கமலந்தொழுதுமீண்டோர்
நிறக்கனகமண்டபத்திற்புக்கிருந்தாரறிஞர்குழாநெருங்கிச்சூழ.

(இ-ள்.) உறக்கம் ஒழிந்து அறவோர் சென்று அவர் நாமம் மொழிந்து அழைப்ப - நித்திரையினின்றும் நீத்த தில்லைவாழந்தணர்கள் வாதவூரடிகள் திருப்பெயரையிட்டழைக்க, உணர்ந்து (இறைவர் திருவருள் என்று) அறிந்து, நாதன் அறம் கருணை இது ஓ என்று அவரோடும் எழுந்து நகர் அடைந்து - இறைவரது திருவருள் இவ்வாறோ என்று வந்த அந்தணர்களோடு எழுந்து திருத்தில்லைநகரையடைந்து, மண்ணும் துறக்கமும் நீத்து அருவருந்தார் - நிலவுலக இன்பத்தையுஞ் சுவர்க்க இன்பத்தையும் வெறுத்து அருவருத்த அவ்வடிகள், மன்று ஆடும் துணைக் கமலம் தொழுது மீண்டு - பொன்னம்பலத்தில் நடித்தருளும் இரண்டுதிருவடிகளையும் வணங்கித் திரும்பி, ஓர் நிறம் கனக மண்டபத்தில் அறிஞர் குழாம் நெருங்கிச்சூழ புக்கு இருந்தார்- வண்ணமமைந்த ஒரு பொன்மண்டபத்தில் அந்தணர்முதலிய சான்றோர் கூட்டம் நெருங்கிச் சூழச்சென்றிருந்தனர்.

நம்மைத் தில்லைக்குச்செல்கவென அன்றருளிய காரணங்களுள் இது ஒன்றோ வென்று தேர்ந்தனர் ஆதலால் இதுவோவென்று எனவும், சிவபுண்ணியவடிவாதலால் அறக்கருணையெனவுங் கூறினர். (௮00)

Koviloor Digital Library

ஷ வேறு.

நத்துநீர்கலத்திற்போந்தபிவரப்போர்வைதாங்கும்
புத்தரைவேறுவைத்துப்புகன்மினும்மிறையுநூலு
மத்தலைநின்றேரெய்துங்கதியுமென்றூழ்ந்தகேள்வி
மெய்த்தவநெறிமாணிக்கவாசகர்வினுவினூரே.

(இ-ள்.) நத்தும் நீர் கலத்தில் போந்த - அலைகள்தாவுங்கடலில் மரக்கலத்தி னின்றும்வந்த, சிவரம் போர்வை தாங்கும் புத்தரை வேறு வைத்து-கடுக்காயிற்றோ ய்ந்த போர்வையைத்தாங்கிய புத்தர்களை வேறுவைத்து, நும் இறையும் நூலும் அ தலை நின்றோர் எய்தும் கதியும் புகன்மின் என்று - நுமதுகடவுளையும் நுமதுகடவுள் கூறியநூலையும் அந்நூல்வழிநின்றோ ரடையுமுத்திநிலையையும் சொல்லுங்களென்று, ஆழ்ந்த கேள்வி மெய் தவம் நெறி மாணிக்க வாசகர் வினுவினூர் - வேதாகமங்களிற் றிளைத்த நுண்ணிய நூற்கேள்வியில்வல்ல உண்மையாகிய சைவதவநெறியினின்றரு ளிய மாணிக்கவாசகர் வினவியருளினூர்.

சிவரம் என்னும் பாடத்திற்கு இவ்வாறுபொருள்கூறி வருகின்றனர். திருநீறி ல்லாத புத்தர்முகத்தைப் பரிசிக்கலாகாதென இடையில் திரையிட்டதாக வாதவூர டிகள் புராணத்திற் கூறியிருக்கின்றது. இங்கும் அப்பொருள்பயக்கப் புத்தரை வே றுவைத்து என்றூர் "மணிமண்டபமதெய்தியவர்தியமுகநாடிலிட்டோ - நந்துமென வேயெழினிகொண்டுமறைவித்தெதிரிருந்தனர்நலங்கொளணைமேல்" எனவாதவூர டிகள்புராணத்தில் வருதல்காண்க. (௬0௧)

கனவினுநீறுகாணுக்கைதவர்காட்சியானு
மனவநுமானத்தானும்வாசகப்பெருமான்றம்மை
வினவியமூன்றுமுத்தேசாதியின்விதித்தார்வேத
மனையவர்கேட்டமூன்றுமநுவாதஞ்செய்துட்கொள்ளா.

(இ-ள்.) கனவினும் நீறு காணுத கைதவர்- சொப்பனத்திலும் திருநீற்றைக்கா ணுத வஞ்சகர்களாகிய புத்தர்கள், காட்சியானும் மனம் அநுமானத்தானும் - காட்சி யளவையாலு மனத்தாற்கருதும் அநுமான அளவையாலும், வாசகப் பெருமான் த ம்மை வினவிய மூன்றும் உத்தேசம் ஆதியின் விதித்தார் - மாணிக்கவாசக அடிகள் தம்மை வினவிய மூன்றுவினுக்களுக்கும் உத்தேசமுதலிய மூன்றால் விடைதந்தரு ளினர், வேதம் அனையவர் கேட்ட மூன்றும் - வேதத்தையொத்த வாதவூரடிகள் கேள்வியுற்ற அம்மூன்றினையும், அநுவாதம் செய்து உட்கொள்ளா - அநுவாதஞ் செய்துட்கொண்டருளி.

புத்தசமயிகளுக்கு அளவைகளுள்காட்சியும் அநுமானமுமே அளவைகளாத லால் காட்சியானு மனவநுமானத்தானும் எனவும், கருதலளவையே அநுமானம் ஆ தலால் அநுமானம் என்னுது மனவநுமானத்தானும் எனவும், தமது கடவுளாவான் பரதுக்கதுக்கனுகிய புத்தன எனவும், நூல்விம்மாயபிடகம், குத்திரபிடகம், அதன் மபிடகம் என மூன்றுவகைப்படும் எனவும், முத்தி குற்றவீடு, கந்தவீடு என இருவ கைப்படும் எனவும், இவற்றை உத்தேசம், இலக்கணம், சோதனையென்னு மூன்று போதப்பிரகாரத்தால் விரித்தனர் ஆதலால் வினவியமூன்றும் உத்தேசாதியின்விதித் தார் எனவும், பிறர்கூறுங்கூற்றைத் தாமெடுத்துக்கூறுதல் அநுவாதமாதலால் அநு வாதஞ்செய்துட்கொள்ளா எனவுங்கூறினூர். உத்தேசமுதலியவற்றின் விரிவைத் த

டாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலத்திற்காண்க. அளவை இரண்டே என்பது "மருவியவளவைகாட்சிமானமென்றிரண்டிவற்றால்" எனவும், கர்த்தாபுத்தன், நூல் பிடகம் என்பன "முழுதுணர்ந்துலகிற்கோறல் முதல்செயன்முனிந்துமற்றும்- பழுதிலாவருளினாலேபரதுக்கதுக்கனாகித் - தொழுதுவானவரும்போற்றத்தொல்பிடகங்களான - வழுவிலாகமங்கள்சொன்னமாதவனுதவுவான்" எனவும், வீடு குற்றவீடு, கந்தவீடு என இருவகைப்படுதல் "வீட்டின்மருவியல்குற்றங்கந்தமெனவழங்கிடும்" எனவும் சிவஞானசித்தியார் பரபக்கத்தில் வருதல்காண்க. (௪௦௨)

இன்றிவர்க்கநுமானாதியெடுப்பதென்னென்றுகாட்சி
யொன்றுகொண்டவர்கடாமேயுடம்படன்மறுத்தார்காட்சி
யன்றியேதின்மையாலேயநுமானவளவையாலு
நின்றவன்றுங்கோனாதிநிறுத்தியமூன்றுமென்றார்.

(இ-ள்.) இன்று இவர்க்கு அநுமான ஆதி எடுப்பது என் என்று - இப்பொழுது இப்புத்தர்கள்கூறிய வினாக்களுக்கு அநுமானமுதலிய அளவைகளால் எடுத்துக்காட்டி மறுப்பது யாதென்று, காட்சி ஒன்று கொண்டு - காட்சியளவையொன்று கொண்டே, அவர்கள் தாம் உடம்படன் மறுத்தார் - அப்புத்தர்கள் உடம்பட்டொழுகுங் கொள்கையைமறுத்தனர், காட்சி - (நீர்கொண்ட அளவைகளுள்) காட்சியளவை யொன்றே, அன்றி - (அதனோடும்) அன்றி, ஏது இன்மையால் - ஏதுக்களில்லாமையால், அநுமான அளவையாலும் - அநுமான வளவையினாலும், உம் கோன் ஆதி நிறுத்திய மூன்றும் நின்ற அன்று என்றார் - உமது கடவுள் முதலிய மூன்று பொருள்களும் நிலைபெறா என்றும் அருளினார்.

அநுமானம் தன்பொருட்டு, பிறர்பொருட்டென இருவகைப்படுதலாலும், உரை-தந்திரம், மந்திரம், உபதேசம் என முத்திறப்படுதலாலும் அநுமானாதியெனவும், அநுமானம் சகசவேது, காரியவேது, அநுபலத்தியேதுவென்னு முத்திறத்தாள் அடங்குதலால் ஏதின்மையாலே எனவும், பரதுக்கதுக்கன் எமதுகடவுள் என்றனை, பரதுக்க துக்கனாயின் விதவைப்பெண்கள் கணவனைக்குறித்துக் காமத்தால் வருந்துகைக்கும், கண்ணிவைத்துப் பறவை கிடைக்கவில்லையேயென்று வருந்தும் வேடர்களுக்கும் இரங்கவேண்டுமே, இரங்கில் அவன் தன்மம் மிகவும் நன்றாயிருந்தது அதனால் எவ்வாறு அவன் கடவுளாவான் எனவும், எங்கள் புத்தக்கடவுள் முன்பு பலதருமங்களைச்செய்து சர்வஞ்ஞனாய் ஆன்மாக்கள்வீடடைதற்கும் அறஞ்செய்தற்கும் ஆகமங்கள் கூறினன் என்றாய், உமதுகடவுள் செய்தற்குமுன்பு நூல்செய்தவர்யார், அவனுக்கு ஆசிரியன் என்பாயானால், அவனுக்கும் ஒரு ஆசிரியன்வேண்டுமெனத் தொடர்ச்சிவருத லுண்மையால் அநவத்தாதோஷம்வரும் ஆதலால் உமதுநூல் பொய்நூல் எனவும், கந்தங்களைந்துஞ் சேட்டைகெடுதல்பாத தக்கமெனறும், கர்ப்பூரதீபம்போலச் சேரக்கெடுகை முத்தியின்பம் என்றும் முத்திநிலைகூறினாய், கந்தமைந்துங் கெட்டால் முத்தியிற்செல்வாரியார் ஆதலால் முத்திநிலை யில்லையெனவும் மறுத்தார் என அறிக. "கருதிலவன்பரதுக்கதுக்கனாகிற் - கணவனிழந்தோர்கட்குங்கணிக்குத்தித்- திரியுமவர்நயினார்க்குமிரங்குவோன்றன்செயலறத்துக்கழகியதாம்" எனவும், "முன்றாகப்பலவறங்கள்புரிந்தெம்மிறைவன் - முழுதுணர்ந்தங்கருளினாலுயிர்கண்முத்தியடையப் - பின்றாகப்பிடகநூலுரைத்தானென்று பேசினாயிவன்முன்புபேரறங்கள் புரிநாம் - சொன்றாரிவனைப்போன்முன்னொருவனென்னில் - அவனுக்குச்சொன்னாரெனத்தொடர்ச்சியாகி - அன்றாய்பினவத்தைபடும்" எனவும் "ஐந்துகந்தஞ்

Koviloor Digital Library

சந்தானத்தழிதல்பந்ததுக்கமறக்கெடுகைமுத்தியின்பமென்றறைந்தாய்கந்தம் - ஐந்து மழிந்தான்முத்தியணைபவர்யார்" எனவும் சிவஞானசித்தியார் பரபக்கத்தில் வருதல்காண்க. ஏதுவின்மை தொகுத்தல். (௧௦௩)

பொன்றுதன்முத்தியென்பார்பூசுரர்பிரானைநோக்கி
யின்றெமைக்காட்சியொன்றால்வென்றனமென்றீரா
னன்றுநுங்கடவுடன்னையளவையானாட்டியெம்மை
வென்றிடுமென்றாரைந்தும்வென்றவர்முறுவல்செய்யா.

(இ-ள்.) பொன்றுதல் முத்தி என்பார் - பஞ்சகந்தங் கெடுதலே முத்தியென்றுகூறும் புத்தர்கள், பூசுரர் பிரானை நோக்கி - வாதவூரடிகளைப்பார்த்து, இன்று எம்மை காட்சி ஒன்றால் வென்றனம் என்றீர் ஆனால் - இப்பொழுது எங்களைக்காட்சியளவை ஒன்றினாலேயே வென்றோமென்று கூறுவீராயில், நன்று - அக்கூற்றை நன்றாயிருந்தது, நும் கடவுள் தன்னை அளவையால் நாட்டி எம்மை வென்றிடும் என்றார் - நுமதுகடவுளை அக்காட்சியளவினாலேயே நிலைநிறுத்தி யெங்களை வெல்லுமென்றுகூறினார்கள், ஐந்தும் வென்றவர் முறுவல் செய்யா - ஐம்புலன்களையும் வென்ற வாதவூரடிகள் புன்னகையரும்பி. (௧௦௪)

பிறவியந்தகர்க்குவெய்யோன்பேரொளிகாட்டலாமோ
மறைகளாலளவைதன்னாற்றேவரான்மனத்தால்வாக்கா
லறிவருஞ்சோதியெங்கோனவன்றிருநீற்றுத்தொண்டின்
குறிவழியன்றிக்காணுங்கொள்கையானல்லனென்றார்.

(இ-ள்.) பிறவி அந்தகர்க்கு - பிறவிக்குருடர்களுக்கு, வெய்யோன் பேர் ஒளி காட்டல் ஆமோ - சூரியனுடைய பெரியவொளியைக் காட்டுதலொண்ணுமோ, மறைகளால் அளவையால் தேவரால் மனத்தால் வாக்கு ஆல் அறிவரும் சோதி-வேதங்களாலும் காட்சிமுதலிய அளவைகளாலுந் தேவர்களாலு மனத்தினாலும் வாக்கினாலும் அறிதற்கரிய பேரொளியாயுள்ளான், எம் கோன் - எமதுகடவுள், அவன் திருநீறு தொண்டின் குறிவழி அன்றி - அவனது திருநீற்றடிமையின் குறிவழியில் நிற்போர்க்கு அன்றி, காணும் கொள்கையன் அல்லன் என்றார்-ஏனையோரால் கண்டுணருந்திறத்தின னல்லனென்றருளினார்.

திருநீறாகிய திருவேடத்தில் சிவபெருமான் எழுந்தருளிநிற்றலால் திருநீற்றுத்தொண்டின் குறிவழியன்றிக் காணுங்கொள்கையானல்லன் என்றார் "தாபரசங்கமங்களென்றிரண்டுருவினின்று-மாபரன்பூசைகொண்டுமன்னுயிர்க்கருளைவைப்பன்" எனச் சிவஞானசித்தியாரில் வருதல்காண்க. (௧௦௫)

தேற்றமில்லாதாருங்கள்சிவனுக்குந்திருநீற்றுக்குந்
தோற்றமெப்படிதிட்டாந்தஞ்சொல்லுமினென்றார்தூயோர்
வேற்றுமையறநாமின்னேவிளக்குதுமதனைநீங்க
டோற்றபினுமக்குத்தண்டம்யாதுகொல்சொன்மினென்றார்.

(இ-ள்.) தேற்றம் இல்லாதார் - சிறிது மனந்தெளிதலில்லாத புத்தர்கள், நுங்கள் சிவனுக்கும் திருநீற்றுக்கும் தோற்றம் எப்படி - உங்களது கடவுளுக்கும் திருநீற்றினுக்கும் இயைபு எவ்வாறு, திட்டாந்தம் சொல்லுமின் என்றார்-திருட்டாந்தம் கூறுமென்று புத்தர்கள் வினவினார்கள், தூயோர் - வாதவூரடிகள், வேற்றுமை

அறமாம் இன்னே அதனை விளக்குதும் - விபரீதமற இப்பொழுதே யதனைக் காட்சி யளவையால் விளக்குவோம், நீங்கள் தோற்றபின் - நீங்கள் தோல்வியடைந்த பின், நமக்கு தண்டம் யாது சொல் சொன்மின் என்றார் - உங்களுக்குத் தண்டம் யாது அதைச் சொல்லுங்களென்று விடையருளினார்.

திருநீற்றுத் தோன்றின் குறிவழியன்றி என்றமையால், சிவனுக்குத் திருநீற் றக்கும் தோற்ற மெப்படி நிட்டார்த்தஞ் சொல்லுமினென்றனர். (௧௦௬)

செக்குரலிடையிட்டெம்மைத்திரிப்பதுதண்டமென்று
வெக்கராம்புத்தர்தாமேயிசைத்தனரெரிவாய்நாகங்
கொக்கிறகணிந்தாரன்பருலர்ந்தகோமயத்தைவாங்கிச்
செக்கரந்தழல்வாய்ப்பெய்துசெவந்திடவெதுப்பிவாங்கி.

(இ-ள்.) செக்கு உரல் இடை இட்டு எம்மை திரிப்பது தண்டம் என்று - செக்காகிய உரலிலிட்டு எங்களை யாட்டுதலே தண்டமென்று, எக்கர் ஆம் புத்தர் தாமே இசைத்தனர் - (போர்செய்தற்கு) எழுந்த புத்தர்களே யுடன்பட்டுக் கூறினார்கள், எரி வாய் நாகம் கொக்கு இறகு அணிந்தார் அன்பர் - நஞ்சமாகிய அக்கினியை வாய்ந்த சர்ப்பத்தையுங் கொக்கிறகையும் அணிந்த இறைவரன்பராகிய வாதவூரடிகள், உலர்ந்த கோமயத்தை வாங்கி - உலர்ந்த கோமயத்தினைக் கைக்கொண்டு, செக்கர் அம் தழல் வாய் பெய்து - செந்நிறம்வாய்ந்த நெருப்பிற்பெய்து, செவந்திட வெதுப்பி வாங்கி - செவப்பேற வெதுப்பியெடுத்து.

எக்கராம்புத்தர் என்றதற்கு ஆம் என்பதனை "ஆள்வாரிலிமாடாவேனோ" என்றுந்தொடருள் ஆம் உவம வுருபிடைச்சொல்லாக நின்றாற்போல ஆம் என்பதனை இடைச்சொல்லாகக்கொண்டு மறைந்த மொழிகளவிபோன்ற புத்தர் எனப் பொருள் கொள்ளுதலும் ஒன்று. "சால்சுழிஇவருதம், டவ்வி, மறைந்த மொழிகிளவிகள். (௧௦௭)

இவ்வண்ணமிருக்குமெங்களிறைவண்ணவடிவுமந்தச்
செவ்வண்ணமேனிபூத்ததிருவெண்ணிறதுவுமென்று
மெய்வண்ணமுணர்ந்தவேதவித்தகரவைமுன்காட்ட
வுய்வண்ணமறியாமூடருள்ளமுமுயிருந்தோற்றார்.

(இ-ள்.) எங்கள் இறை வண்ண வடிவும் - எங்களிறைவரது திருநிறத்தோற் றமும், அந்த செவ்வண்ணம் மேனிபூத்த திருவெண்ணீறும் - அந்தச் செந்நிறம்வாய்ந்த திருமேனியிற்பூத்த திருவெண்ணீற்றின் தோற்றமும், இ வண்ணம் இருக்கும் என்று - இப்படியிருக்குமென்று கூறி, மெய் வண்ணம் உணர்ந்த வேதவித்தகர் அவை முன் காட்ட - உண்மை நிலையையுணர்ந்த அந்தணராகிய வாதவூரடிகள் அவைக்களத்திருள்ளோர் முன் காட்ட, உய் வண்ணம் அறியாத மூடர் - பிழைக்கும் வகையை யுணராத மூடர்கள், உள்ளமும் உயிரும் தோற்றார் - வெல்வோமென்னுந் தமது கருத்தையும் (தோற்றலால்) உயிரையு மிழந்தார்கள்.

உலர்ந்த கோமயத்தை நெருப்பிலிட்டு எடுத்த காலையில் அதிற்பற்றிய தீ திருமேனியினிறமாகவும், அத்தீயின்மேற்பூத்த நீறு திருமேனியிற்பூத்த நீறாகவும் காட்சியளவையால் இயைபு காட்டினர் என்பார் அவை முன்காட்ட எனவும், புத்தர்கட்குக் காட்சியளவையே முக்கியப் பிரமாணமாதலால் உள்ளமுமுயிருந்தோற்றார் எனவுங் கூறினார். (௧௦௮)

Koviloor Digital Library

இங்கிவர்தோற்றவண்ணங்கேட்டவிறப்பதின்பந்
தங்குவிடென்றுதேற்றுஞ்சமயத்திலாழ்ந்தவாத்திக்
கொங்கிவர்தாரான்மூங்கைக்குயிற்பெடையெனத்தானீன்ற
மங்கையைக்கொண்டுதில்லைமல்லன்மாநகரில்வந்தான்.

(இ-ள்.) இங்கு இவர் தோற்ற வண்ணம் கேட்டு - இவ்விடத்தி லிப்புத்தர்கள் தோற்ற செய்தியைக் கேள்வியுற்று, அவர் இறப்பது இன்பம் தங்கு விடு என்று தேற்றும் சமயத்தில் ஆழ்ந்த - அப்புத்தர்களால் பஞ்சகந்தங்கெடுதலே இன்பமிக்க முத்தியென்று தேற்றப்படும் புத்தசமயத்திலழுந்திய, ஆத்தி கொங்கு இவர் தாரான் - ஆத்திமலராலாகிய மகரந்தம் பரந்த மாலையையணிந்த சோழன், மூங்கை குயில் பெடை என்ன - கூவுதலொழிந்த பெண்குயில்போல, தான் ஈன்ற மங்கையை கொண்டு தில்லை மல்லல் மாநகரில் வந்தான் - தான் பெற்ற மூங்கைப்புத்திரியை யழைத்துக்கொண்டு தில்லையென்னுந் திருநாமம் வாய்ந்த வளமிக்க பெரிய திருநகரெல்லையில் வந்தனன். (௧0௧)

யாவரோயாகவின்றிங்கென்மகண்மூங்கைதீர்த்தோ
ராவரோவென்றோரென்றானாற்றவுமானம்பூண்டு
சாவதேமுத்தியென்பார்மணிமுதன்மூன்றுந்தங்க
டேவரோவென்றென்றுள்கிச்செய்யவுந்தீராதாக.

(இ-ள்.) யாவர் ஏ ஆக - வென்றவர் தோற்றவர் யாராயினுமாகுக, இன்று - இப்பொழுது, இங்கு என்மகள் மூங்கை தீர்த்தோர் ஆவரோ வென்றோர் என்றான் - இவ்விடத்தில் எம்மகள் மூங்கைத்திறத்தைத் தீர்த்தோராவாரோ வென்றவர்களென்று கூறினான், ஆற்றவும் மானம் பூண்டு-மிகவும் அபிமானத்தை மேற்கொண்டு, சாவதே முத்தி என்பார் - பஞ்சகந்தங்கெடுதலே முத்தியென்று கூறும் புத்தர்கள், மணி முதல் மூன்றும் - மணிமுதலிய மூன்று பொருள்களும், தங்கள் தேவரோ என்று என்று உள்கி செய்யவும் தீராதாக - தங்கள் புத்ததேவர்களே யென்றென் றிடைவிடாது சிந்தித்துப் பரிகாரஞ்செய்யவும் அது தீராதிருக்க.

மணிமுதல் மூன்று மணிமந்திர அவிழ்தம். இவற்றை முன்னே விரித்தனம். தேவர் எனப் பன்மைப்படக்கூறியதனால் தண்ணங்கரன் முதலிய இருபத்தொருவரை. "இருபதிற்றொருவராகவெண்ணுமுன்புத்தரெல்லாம்" எனவருதல்காண்க. ()

அந்தணர்பெருமான்முன்போயரசன்றன்மகளைப்போகட்
டிந்தநோய்நீரோதீர்க்கவேண்டுமென்றிரந்தானையன்
சுந்தரநாதன்மன்றுளாடியதுணைத்தாடன்னைச்
சிந்தைசெய்தருட்கணோக்காற்றிருந்திழையவளைநோக்கா.

(இ-ள்.) அரசன் அந்தணர் பெருமான் முன் போய் - சோழன் வாதவூரடிகள் முன்சென்று, தன் மகளை போகட்டு - தனது ஊமைப்புத்திரியைப்போட்டு, இந்த நோய் நீரே தீர்க்கவேண்டுமென்று இரந்தான் - இந்த நோயைத் தேவரீரே தீர்த்தருளவேண்டுமென்று குறைகூறி யிரந்தனன், ஐயன் - வாதவூரடிகள், சுந்தர நாதன் - பேரழகையுடைய இறைவரது, மன்று உள் ஆடிய துணை தாள் தன்னை சிந்தை செய்து - பொன்னம்பலத்தில் நடித்தருளு மிரண்டு திருவடிகளையுஞ் சிந்தித்து, அருள் கண் நோக்கால் திருந்திழை யவளை நோக்கி - தமது திருவருட்பார்வையாலப்பெண்ணினைப் பார்த்தருளி. (௧௧௧)

Koviloor Digital Library

வேறுவேறிறைவன்கீர்த்திவினாவுரையாகப்பாடி
யீறிலானன்பர்கேட்பவிறைமொழிகொடுத்துமூங்கை
மாறினாள்வளவன்கன்னிமடவரல்வளவன்கண்டு
தேறினான்சிவனையெல்லாத்தேவர்க்குந்தேவனென்று.

(இ-ள்.) ஈறு இலான் அன்பர் - தமக்கோரிறுதியில்லாத இறைவரது அன்பராகிய வாதவூரடிகள், வேறு வேறு இறைவன் கீர்த்தி வினாவுரை ஆக பாடி கேட்ப - பலவேறு வகைப்பட அவ்விறைவரது கீர்த்திகளை வினாக்களாகப் பாடி வினவியருள, வளவன் கன்னி மடவரல் - சோழன் புத்திரியாகிய கன்னிப்பெண், இறை மொழி கொடுத்து மூங்கை மாறினாள் - விடைகொடுத்து ஊமைத்தன்மை மாறினாள், வளவன் கண்டு - அச்சோழன் பார்த்து, சிவனே எல்லாத்தேவர்க்கும் தேவன் என்று தேறினான் - சிவபெருமானாரே யெல்லாத்தேவர்களுக்குந் தேவரென்று தெளிந்தனன்.

"பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொங்கரவம் - பேசுவதுந்திருவாயான் மறைபோலுங்காணேடீ" என வினாவாகப்பாடி வினவ, "பூசுவதும்பேசுவதும் பூண்பதுவுங்கொண்டென்னை - ஈசனவனெவ்வுயிர்க்கு மியல்பானான்சாழலோ" என விடையாகச் சோழன் புதல்வன் செய்யுள் தொடுத்துக் கூறினளாதலால் இறையென்றது இறைமொழி கொடுத்தெனவும், இவ்வண்ணம் பலவகை வினாக்கள் திருச்சாழலில் வருதலால் வேறு வேறு எனவும், புத்தசமயம் பொய்ச்சமயம் எனக் கண்டு தெளிந்தவனாதலால் தேறினான் எனவுங் கூறினார். (௧௧௨)

பின்பராவாரம்பூண்டபிரானருள்விளையப்பாடு
மன்பனைமுனிவர்மூவாயிரவரையடியிற்றாழ்ந்து
முன்பவர்சொன்னவாறேமூர்க்கரைத்தடிந்துமன்று
ளின்பனைநடங்கண்டேத்தியிறைமகன்சைவனானான்.

(இ-ள்.) பின்பு - பின்னர், அரவு ஆரம் பூண்ட பிரான் அருள் விளைய பாடும் அன்பனை - பாம்பினை யாரமாகப்பூண்டருளிய இறைவரது திருவருள் விளங்தோக்கப் பாடியருளும் வாதவூரடிகளையும், முனிவர் மூவாயிரவரை அடியில் தாழ்ந்து - ஏனை முனிவர்களையும் தில்லைமூவாயிரவரையுந் திருவடியில் வணங்கி, அவர் முன்பு சொன்ன ஆறே - அப்புத்தர்கள் முன் சொன்னபடியே, மூர்க்கரை தடிந்து - அந்த அறிவிலிகளை வெட்டி, மன்று உள் இன்பனை - பொன்னம்பலத்தில் ஆநந்தத் திருநடனஞ்செய்தருளும் இறைவரை, நடம் கண்டு ஏத்தி - திருநடனங்கண்டு துதித்து, இறை மகன் சைவன் ஆனான் - சோழன் சைவனாயினான். (௧௧௩)

மாசறுமணிபோற்பன்னாள்வாசகமாலைசாத்திப்
பூசனைசெய்துபன்னாட்புண்ணியமன்றுளாடு
மீசனதடிக்கீழெய்தியீறிலாவழிவாநந்தத்
தேசொடுகலந்துநின்றார்சிவனருள்விளக்கவந்தார்.

(இ-ள்.) சிவன் அருள் விளக்க வந்தார் - சிவபெருமான் திருவருட்டிறத்தைப் பல்லுயிர்களுக்கும் விளக்கவந்தருளிய வாதவூரடிகள், பல் நாள் பூசனை செய்து - பலநாளும் ஞானபூசைசெய்து, பல் நாள் - பலநாளும், மாசு அறு மணிபோல் - குற்றமற்ற மாணிக்கம்போல, வாசகமாலை சாத்தி - திருவாசகமெனவும் திருக்கோவைத்திருவாசகம் எனவுங் கூறும் மாலைதொடுத்துச்சாத்தி, புண்ணிய மன்று உள்

ஆநிம் ஈசனது அடிக்கீழ் எய்தி - சிவபுண்ணியவடிவாகிய சிதம்பரத்தில் ஞானநடனஞ்செய்தருளும் இறைவரது திருவடிக்கீழடைந்து, ஈறு இல்லாத அறிவு ஆநந்தம் தேசு ஒடு கலந்து நின்றார் - முடிவில்லாத சிதாநந்தமாகிய ஒளிப்பிழம்போடு பாலொடு கலந்த நீர்போலக் கலந்து நின்றருளினார்.

ஞானபூசனையாவது பிருதுவி முதலிய தத்துவங்களெல்லாஞ் சடமெனக் காணும் பூதசுத்தியும், அவ்வாறு காணுதல் திருவருளாலெனக்கருதும் ஆன்மசுத்தியும், அக்கருத்தால் கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியு நிலை அத்திருவருளென்று நிற்குந் திரவியசுத்தியும், ஸ்ரீபஞ்சாக்கரம் ஐந்தும் ஐந்து முதல்களாகக்கருதும் மந்திரசுத்தியும், இறைவர் எங்கு நிறைந்திருக்கின்றாரென வுணரும் இலிங்கசுத்தியும் ஆகிய இவ்வைந்தையுங்கொண்டு இறைவனை வழிபட்டுத்துதிப்பது "மண்முதல்காணமெல்லா மறுவசத்தாக்கிஞானக் - கண்ணினி லூன்றியந்தக் கருத்தினுலெலையுநோக்கி - எண்ணியஞ்செழுத்துமாறி யிறைநிறையுணர்ந்துபோற்றல் - புண்ணியன்றனக்குஞான பூசையாய்ப்புகலுமன்றே" எனவரும் சிவப்பிரகாசத்தாலும், இறைவரை வணங்கிச் சிதம்பரத்தைச் சூழ்ந்த திருவீதியிற் போகுங்காலையில் "ஆடுங்குலாத்தில்லை யாண்டானைக்கொண்டன்றே" என்னுந் திருப்பதிகத்தையும், கோயின் மூத்த திருப்பதிகத்தையும், கீர்த்தித்திருவகவலையும், திருவண்டப்பகுதியையும், போற்றித்திருவகவலையும் பாடி, அங்குச் சுண்ணத்துகளையிடிப்பவர் பாடலைக்கேட்டுத்திருப்பொற்சுண்ணமெடுத்தோதி, அங்குநின்று சோலைக்கு வருங்காலையில் விளையாடுகின்ற சிறுமியர்களைப்பார்த்து அவர்கள் சொல்லுவதாகத் திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, திருக்கோத்தும்பி என்னும் இவைகளை யருளி, அச்சோலையிற் கூவுங் குயிலைப்பார்த்து இவ்வாறு கூவுவாய் என்று குயிற்பத்தும், கிளியைப்பார்த்துத் திருத்த சாங்கமும் அச்சப்பத்தும் இவைகளைப் பாடியருளி, புத்தரை வென்றபின் திருப்படையாட்சியும், திருப்படையெழுச்சியும், அச்சோப்பத்தும், யாத்திரைப்பத்து மோதியருளிப் பன்னசாலையிலெழுந்தருளியிருக்குங்காலையில் இறைவர் ஓரந்தணத் திருவுருக்கொண்டு வந்தருளி யாமிருப்பது பாண்டிநாடு, நீர் ஓதிய திருப்பாசுரங்களைக்கேட்க விருப்புற்று வந்தனமெனக் கூறியருள, அவரை யுபசரித்திருக்கச்செய்து தாம் மதுரையில் நின்று திருப்பெருந்துறைக்குச்சென்று கூறிய "நமச்சிவாயவாழ்க" என்னும் சிவபுராணமும், அற்புதப்பத்தும், அதிசயப்பத்தும், குழைத்தபத்தும், சென்னிப்பத்தும், ஆசைப்பத்தும், வாழாப்பத்தும், அடைக்கலப்பத்தும், செத்திலாப்பத்தும், புணர்ச்சிப்பத்தும், அருட்பத்தும், திருவார்த்தையும், எண்ணப்பதிகமும், திருவெண்பாவும், பண்டாய நான்மறையும், திருப்பள்ளியெழுச்சியும், திருவேசறவும், ஆநந்தமாலையும், உயிருண்ணிப்பத்தும், பிரார்த்தனைப்பத்தும், திருப்பாண்டிப்பதிகமும், அடியவர் திருப்பொய்கையிலெழுந்த அக்கினியுட்புகக்கண்டு அருளிய திருச்சதகமும், திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று ஓதியருளிய நீத்தல் விண்ணப்பமும், திருவாரூரிலருளிய திருப்புலம்பலும், சீகாழியிலருளிய பிடித்தபத்தும், திருக்கழுக்குன்றத்திலருளிய திருக்கழுக்குன்றப்பதிகமும், திருவண்ணாமலைக்குச்சென்று அங்குச் சிலநாள் வசித்து அங்குள்ள பெண்கள் வைகறையில் தநுரவியில் நீராடச்செல்லும் இயல்பைக்கண்டு அவர்கள் கூறுவதாகக் கூறிய திருவெம்பாவையும், அம்மானையாடும் பெண்கள் சொன்ன பாடலாக அருளிய திருவம்மானையும் தில்லையிலருளியவைகளையும் வாதவூரடிகள் கூற, அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருக்கை தொட்டு வரைந்து, நடராசப் பெருமானைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு ஒரு கோவையுங் கூறவேண்டுமென்றனர், அத

ந்கு உரைத்த அவ்வாறே கூற அத்திருக்கோவையையுந் திருக்கைதொட்டெழுதி மு
டித்து அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருவெழுத்து என்று திருக்கோவைத்
திருவாசகத்தினிறுதியில் வரைந்து சேர்த்த திருமுறையைத் திருவம்பலத்தின் வா
யிற்படியில் வைத்தருளினர் ஆதலால் மாசறுமணிபோற் பன்னாள் வாசகமாலைசா
ர்த்தி யெனவும், திருவாயிற்படியில் வைத்த திருமுறையைக் கண்ணுற்று வியப்பெய்
தித் தில்லைமூவாயிரவரும் அருச்சித்தெடுத்து வாசித்து முடித்து இது வாதவூராளி
கூறினவை, இவை யெழுதிமுடித்தவர் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எனக்
கேட்டு ஆநந்தபரவசத்தராகி யிதன்பொருளையுணர்ந்து மகிழ்கூரவேண்டும் என்றுள்
ளத்தினராய் வாதவூரடிகளை வணங்கி நிகழ்ந்த செய்தியைக் கேள்வியுற்று கண்
ணீர்வாரப் புளகரும்பநின்று இப்பத்திலாழ்ந்து இத்திருமுறையிலடங்கிய பொருளை
த் தெரித்தருளவேண்டுமென்று இரக்க, நம் உணர்த்தியருளுவோம் வாருமென்று
வந்தவர்களோடு திருவம்பலஞ்சென்று இங்குநின்ற பெருமானாரோ யிதற்குப் பொரு
ளாவார் எனக்காட்டி யங்குநின்றோர் யாவருங்காணத் திருவடிநிழலிற் கலந்தனரா
தலால் ஈசனடிக்கேயெய்தி யிதிலாவதிவாதத் - தேசோடுகலந்துநின்றார் எனவுங்
கூறினர். வாதவூரடிகள்புராணத்தில் "ஐயரக்குறையுநாளிலாடகமன்றிலாடு-மெய்
யர்தங்குருவுருவாலே வேதியவடிவங்கொண்டு - தய்யமுப்புரிநூன்மார்புந் துலங்கு
புத்தகமுந்தோன்றச் - செய்யமென்பாததோயச் சென்றுமுன்னுநின்றார். பாண்
டியோடென்றபின்னர்ப் பரிவுடன்செறிவுகூறி-ஈண்டுநீர்வருதல்வேண்டுங் காரியமியம்
புகென்ன - ஆண்டநாயகன்றனை யாகியபகருமதம்மைக் - காண்டலேவென்றுபி
ன்றுங் கருத்துறவிதனைச்சொன்னார். ஆதியமன்றுளாடு மையனையன்பினாலே -
ஓதியதமிழ்ப்பாட லுள்ளவையோதவென்ன - மாதுயரகலவின்னே வந்தனனெ
ழுதல்வேண்டும் - வேதியர்பெருமானின்று விளம்பிடும்விளக்கவென்றார். அங்கவ
ருரைத்தவெல்லா மம்பலத்தாடுமையர் - செங்கையிலேடுவாங்கித் தெளிவுறவரைந்த
பின்னர்ப் - பொங்கியவருளினாலும் புகன்றிடாகலத்தைப்பல் - பங்கினர்தம்மைக்கோ
வை பாடுதல்வேண்டுமென்றார். மன்னியதவத்தின்மிக்கா ரதற்குளமகிழ்ந்துகூற -
மூன்றுமவிருந்தகோவை யெழுதினர்முடித்தபின்னர்ப்-பொன்னவிர்வேணியார்தாம்
புத்தகத்தேமித்தங்கம்-மின்னெனமறைந்தார்சொன்னவித்தகரயர்ச்சிகொண்டார்.
மெய்த்தவவாதவூரர் விளம்பிடவெழுதமிந்தப் - புத்தகமன்றுளாடல் புரிந்தவனெ
ழுதாமென்று - முத்தியையுதவுங்கோவை முடிவிடத்தெழுதிப்பின்னர்ச் - சித்திர
மலர்க்கையாலே திருந்தமைக்காப்புஞ்செய்தார். வெண்பிறைமுடித்தவேணி வித்தக
ருலகுக்கெல்லாம் - கண்புனல்வாதவூரர் கற்றவமுணர்த்தவெண்ணி - எண்பெறுமு
னிவர்மின்றோ நிறைந்தவம்பலத்துவாயில் - வண்படிமிசையுண்மை வாசகமுறை
யைவைத்தார். செந்தமருவுந்தொல்லைத் தில்லைநன்னகரிலுள்ளார் - தந்திருமுன்பு
சென்று சாத்திநூரிக்கர்க்கும - அந்தணர்மொழிக்கபின்ன ரதிசயமிகவென்றேடு-
வந்தனர்படிமேலணைவல் வைத்தபுத்தகங்கண்டார்கள் - திருச்சதகமுதலாகச் சிறந்
ததமிழ்முறையும் - விரிந்தவசப்பொருட்கோவை விளக்கவொருநானூறும் - உரைத்
தவர்பின்முடித்தவிடத் தயர்வாதவூரன்மொழி - தரித்தெழுதுமம்பலவனெழுத்தே
ன்றசாத்திருர். புரைநயன்றிருநாமம் புகழுமருந்தவர்சொல்ல - யாவரிதன்பொரு
ட்டேனே யின்றுணர்வோமென்றெண்ணி - மாறுபடமன்றகன்றேகி மறைவல்லோர்
போதிநீதல் - விரைவுடன்பெறுவாது வென்றவர்முன்சென்றார்கள். சென்றவர்தந்
திருமுன்பு திருமுறைவைத்தண்டர்பிரான் - இன்றுசெயுஞ்செயலிதுவென் றியம்பி
னர்நின்றேல்லோரும் - ஒன்றுமென்புன்படவுவந்தருளப்புவியிதில் - அன்றுசெ
ய்தவமதியெவன்றமுதாரன்பாளர். அல்லெறும்பிறவியில்லா ரன்னைசெயுஞ்

Koviloor Digital Library

Koviloor Digital Library



பாண்டியன்சுரந்தீர்த்ததிருவிளையாடல்.

Koviloor Digital Library

செயல்யாவும் - சொல்லியபின்புலியூரர் தொழுதமனங்களிகூர்ந்து - தில்லையிலெம்பெருமானைச் செப்பியவித்தமிழ்மாலை - நல்லவரும்பொருள்கூற வேண்டுமெனநவின்றார்கள். ஒங்குபுகழ்த்திருவாத வூருறையும்பெருமானார் - தேங்கியமெய்ச்சிவஞானச்சிந்தையுடன்களிகூர்ந்து - பூங்கனகப்பொதுவெதிரே போய்ப்பகர்வேனெனப்போக - ஆங்கவர்முன்சென்றுரு மன்பொடுபின்சென்றார்கள். நின்றபுகழ்ப்புலியூரர்நேசமுடன்புடைசூழச் - சென்றருளுக்கிடமான செம்பொனினம்பலமெய்தி - யொன்றியவித்தமிழ்மாலைப் பொருளிவரென்றுரைசெய்து - மன்றதனிற்கடிதேகி மறைந்தனரங்கவர்காண" எனவரும் செய்யுள்களாலுணர்க. திருப்பதிகங்களருளிய முறையை யிங்குக்கூறிற் பெருகுமாதலால் வாதவூரடிகள் புராணத்திற்காண்க. (௧௧௪)

மண்சுமந்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரமுள்படத் திருவிருத்தம் - ௩௦௫.

அறுபத்திரண்டாவது

பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வானலமுதமதிமுடிமேன்மதுரைப்பெருமான்மண்சுமந்து
தேனலமுதவாசகனைக்கதியில்விடுத்ததிறனிதுமேற்
பானன்மணிவாய்க்கவுணியனைவிடுத்துச்சமணர்படிற்றொழுகுங்
கூனல்வழுதிசுரந்தணித்தாட்கொண்டகொள்கைகூறுவாம்.

(இ-ள்.) மதுரை பெருமான் - திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள், வான் - விண்ணில், அல் அமுதம் மதிமுடிமேல் மண் சுமந்து - இருளிலுலவும் அமுதம்வாய்ந்த பிறையையணிந்த சடாமுடியின்மேல் மண் கூடை சுமந்து, தேன் நல் அமுதவாசகனை கதியில் விடுத்த திறன் இது - தேன்போலுமினிய அமுதம்போன்ற வாக்கின் செல்வராகிய மாணிக்கவாசகரைப் பரமுத்தியிற் செலுத்திய திருவிளையாடலிது, மேல் - இனி, பால் நல் மணிவாய் கவுணியனை விடுத்து - பால் மணக்கு மிகவு மழகிய திருவாயையுடைய ஆளுடைய பிள்ளையாரை யேவி, சமணர் படிறு ஒழுகும் - சமணர்கள் வஞ்சவொழுக்கமாகிய சமயநெறியினின்றொழுகும், நல் கூன் வழுதி சுரம் தணித்து ஆட்கொண்ட கொள்கை கூறுவாம் - நல்ல கூன்பாண்டியனது சுரத்தைத்தணித்து அவனை யடிமைகொண்ட திருவிளையாடலைச் சொல்வாம்.

கேட்போர்க்குத் தேன்போலு மினிய சுவையை முன் பயந்து பின்னர்ப் பிறவிப்பிணியை யொழித்தலால் தேனலமுதவாசகர் எனவும், இளமைப்பருவந்தோன்றப் பானல் மணிவாய் எனவும், ஆளுடைய பிள்ளையார் திருக்கையாற் றடவுந் தவப்பேறுடைமையால் நல்வழுதியெனவுங் கூறினர். (௧)

வாகுவலத்தான்சகநாதவழுதிவேந்தன்மகன்வீர
வாகுவன்சேய்விக்கிரமவாகுவன்சேய்பராக்கிரம

Koviloor Digital Library

வாகுவனையான்மகன்சுரதமாறனனையான்றிருமைந்தன்
வாகுவலத்தான்மறங்கடிந்துமண்ணாளுங்குங்குமத்தென்னன்.

(இ-ள்.) வாகு வலத்தான் - புயவலிமையையுடைய, சகநாத வழுதி வேந்தன் - சகநாதபாண்டியனுடைய, மகன் - புத்திரனானவன், வீரவாகு - வீரவாகு என்னும் பெயரையுடையவன், அவன் சேய் - அவன் புத்திரனானவன், விக்கிரமவாகு - விக்கிரமவாகு என்னும் பெயரையுடையவன், அவன் சேய்-அவன் புத்திரனானவன், பராக்கிரமவாகு - பராக்கிரமவாகு என்னும் பெயரையுடையவன், அனையான் மகன் - அப்பாண்டியனுடைய புத்திரனானவன், சுரதமாறன் - சுரதபாண்டியன், அனையான் திருமைந்தன் - அந்தப்பாண்டியனுடைய அழகிய புத்திரன், வாகு வலத்தால் - புயவலிமையால், மறம் கடிந்து - பகைவரை வென்று, மண் ஆளும் - நிலவுலகையாளும், குங்குமத்தென்னன் - குங்குமபாண்டியன். (உ)

அன்னான்குமரன்கருப்புரபாண்டியனுமவன்சேய்காருணிய
மன்னுமவன்றன்மகன்புருடோத்தமனுமவன்றன்மகனாகு
மின்னார்மௌலிச்சத்துருசாதனபாண்டியனும்விறல்வேந்த [ன்.
னின்னான்மகன்கூன்பாண்டியனுமிவன்றோள்வலியாலிசைமிக்கா

(இ-ள்.) அன்னான் குமரன் - அப்பாண்டியனுடைய புத்திரனானவன், கருப்புரபாண்டியன் ஆம் - கருப்பூரபாண்டியனும், அவன் சேய் - அவன் புத்திரனானவன், காருணிய மன் ஆம் - காருணிய பாண்டியனும், அவன் தன் மகன்-அவனுடைய புத்திரனானவன், புருடோத்தமன் ஆம் - புருடோத்தமபாண்டியனும், அவன் தன் மகன் ஆகும் - அவன் புத்திரனாவான், மின் ஆர் மௌலி - ஒளிநிறைந்த கிரீடத்தையுடைய, சத்துரு சாதன பாண்டியன் ஆம் - சத்துரு சாதனபாண்டியன், விறல் வேந்தன் - வெற்றியையுடைய அரசனாகிய, இன்னான் மகன் - இப்பாண்டியனுடைய புத்திரன், கூன்பாண்டியன் ஆம் - கூன்பாண்டியனாவான், இவன் தோள் வலியால் - இப்பாண்டியன் தனது புயவலிமையால், இசை மிக்கான் - புகழில் மேம்பட்டவனாயினான்.

சத்துருசாதனன் மெலியச்செய்யும் பகைவரைக் கீழ்ப்படுத்தினவன். (௩)

திண்டோள்வலியாற்குடநாடர்செம்மறனையுமாரலங்கல்
வண்டோலிடுதாரிரவிகுலமருமான்றனையுமலைந்துபுறங்
கண்டோர்குடைக்கீழ்நிலமூன்றுங்காவல்புரிந்துகோலோச்சிப்
புண்டோய்குருதிமறக்கன்னிப்புகழ்வேல்வழுதிநிகழ்நாளில்.

(இ-ள்.) திண் தோள் வலியால் - திண்ணிய தோளின் வலிமையால், குடநாடர் செம்மல் தனை உம் - மேற்றிசை நாட்டிலுள்ளோர் அரசனாகிய சேரனையும், ஆர் அலங்கல் - ஆத்திமாலையில், வண்டு ஒலிடு தார் - வண்டுகளொலிக்கும் வரிசையையுடைய, இரவி குலம் மருமான் தனை உம் - சூரியன் மரபிற்றோன்றிய சோழனையும், மலைந்து புறங்கண்டு - போர்செய்து வென் கண்டு, ஓர் குடை கீழ் - ஒருதவளவட்டக்குடைநிழலில், நிலமூன்றும் காவல் புரிந்து - மூன்றுலகங்களையுங் காத்து, கோல் ஓச்சி - செங்கோல் செலுத்தி, புண் தோய் குருதி - பகைவருடலிற் புண்பட்டுத்தோய்ந்து உதிரம் வாய்த்தலால், மறக்கன்னி புகழ் வேல் வழுதி - வீர இலக்குமி புகழும் வேலையேந்திய அக்கூன்பாண்டியன், நிகழ்நாளில் - அரசியல் செய்துவருங் காலையில்,

Koviloor Digital Library

வழிப்பகைவராயுள்ள அரசனைப் புறங்கண்டான் என்றதனால் ஏனை யரசர் களையும் வென்றான் என்பது தானே புலப்படுதலால் ஓர் குடைக்கீழ் நிலமூன்றுங் காவல் புரிந்த எனவும், உதிரந்தோய்தல் வீர இலக்குமிக்குக் குறிகலமாதலால் புண்டோய் குருதிமறக்கன்னிப் புகழ்வேல் எனவுங் கூறினார். மூன்றனுருபு நிற்குமிடத்து நான்கனுருபுவந்தது உருபுமயக்கம். (ச)

விண்டுழாவுங்கைம்மாவும்வெறுக்கைக்குவையுமணிக்குவையும்
வண்டுவீழுந்தாரளகவல்லியாயமொடுநல்கிக்
கண்டுகூடற்கோமகனைக்காலில்வீழ்ந்துதன்னாடு
பண்டுபோலக்கைக்கொண்டுபோனான்றேனார்பனந்தாரான்.

(இ-ள்.) தேன் ஆர் பனந்தாரான் - மதுநிறைந்த பனைமலர்மாலையையணிந்த சேரன், விண் துழாவும் கை மாவும் - மேகமண்டிலத்தைத் துழாவுந் துதிக்கையையுடைய யானையையும், வெறுக்கை குவையும் - பொற்றிரளையும், மணி குவையும் - இரத்தினக்கூட்டத்தையும், வண்டு வீழும் தார் அளகம் வல்லி ஆயம் ஒடு - வண்டுகள் வீழும் மாலையையணிந்த கூந்தலையுடைய பெண்கள் கூட்டத்தோடு, கூடல் கோமகனை கண்டு நல்கி - பாண்டியனைத் தரிசித்துக்கொடுத்து, காலில் வீழ்ந்து தன் நாடு பண்டுபோல கைக்கொண்டு போனான் - (அதுவுமமையாது) அவன் காலில் வீழ்ந்து தனது வஞ்சிநாட்டினை முன்போலக் கைவசமாக்கிச் சென்றனன்.

பாண்டியனொடு போர்செய்து வெல்லுந் திறனின்மையால் திறையாக மணி பொன் முதலியவற்றைக் கொடுத்ததுமன்றிக் காலினும் வீழ்ந்து தன்னரசுரிமை பெற்றனன் என்பார் காலில் வீழ்ந்து தன்னாடு பண்டுபோலக் கைக்கொண்டு போனான் என்றார். (ரு)

சென்னிக்கோனுந்தானீன்றதிலதப்பிடியையுலகமெலா
மின்னிக்கோதில்புகழொளியால்விளக்குஞ்சைவமணிவிளக்கைக்
கன்னிக்கோலமங்கையருக்கரசிதன்னைக்கௌரியற்கு
வன்னிக்கோமுன்மணம்புணர்த்திவாங்கினான்றன்வளநாடு.

(இ-ள்.) சென்னிக்கோன் உம் - வளவர்கோனும், தான் ஈன்ற - (அரிய தவத்தால்) தான் பெற்ற, திலதம் பிடியை - திலதமணிந்த பெட்டையானையையொத்த மங்கையர்க்கரசியாரை, உலகம் எல்லாம் - உலகமுற்றும், மின்னி - பரந்து விளங்கி; கோது இல் புகழ் ஒளியால் - குற்றமில்லாத தமது சீர்த்தியாகிய ஒளியினால், விளக்கும் சைவ மணிவிளக்கை - விளக்காநின்ற சைவத்திற்கு ஒரு இரத்தின தீபம்போல்வாரை, கன்னி கோலம் - கன்னிப்பருவம் வாய்ந்த, மங்கையருக்கு அரசி தன்னை - மங்கையர்க்கரசியாரை, கௌரியற்கு - கூன்பாண்டியனுக்கு, வன்னிக்கோ முன் மணம் புணர்த்தி - தீக்கடவுள் முன்பு மணஞ்செய்வித்து, தன் வளம் நாடு வாங்கினான் - தனது வளமிக்க புனனாட்டைப் பெற்றனன்.

திலதப்பிடி இல்பொருளுவமையில்வந்த ஆகுபெயர். பூதிசாதனங்களில் வழுவாது நிற்றலால் வந்த புகழாதலால் கோதில் புகழ் எனவும், ஒளிபோல எங்கும் பரவுதலால் புகழொலியால் எனவும், புறவிருளையது ஓட்டுதல்போல அகவிருளை யோட்டுதலால் விளக்கும் எனவும், சாதனமில்லாது என்றும் விளக்கும் பொருளாதலால் ஏனை விளக்கென்னாது மணிவிளக்கெனவும் கூறினார். அரிய தவப்பேற்றையுடையனாதலால் சென்னிக்கோனிறுதியில் நின்ற உம்மை உயர்வு சிறப்புப்பொ

Koviloor Digital Library

ருட்டு. பெண்யானையென்றது பெட்டையானை யென்றது முன்னர் எடுத்துக்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்தானுணர்க. (௬)

வேறு.

வளவர்கோன்செழியன்கற்பின்மங்கையர்கரசியாருக்
களவறுநிதியஞ்செம்பொற்கலிங்கமுமணியும்போகம்
விளைநிலமனையவாயவெள்ளமும்பிறவுந்தென்ன
னுளமகிழ்சிறப்பவேந்தர்வரிசையாலுதவிப்பின்னர்.

(இ-ள்.) வளவர்கோன் - சோழன், செழியன் - பாண்டியனுடைய, கற்பின் மங்கையர்க்கரசியாருக்கு-தேவியாரென்னும் கற்பின் சூளாமணியாகிய மங்கையர்க்கரசியார்க்கு, அளவு அறு நிதியம் உம் செம்பொன் கலிங்கமும் அணியும் - வரம்பில்லாத பொன்னும் பீதாம்பரமும் ஆபரணங்களும், போகம் விளைநிலம் அனைய ஆயம் வெள்ளமும் - ஐம்பொறி நுகர்ச்சிகளாகிய ஐந்துபோகங்களும் விளைதற்குரிய விளைநிலத்தையொத்த பாங்கிமார் கூட்டங்களும், பிறவும் - மற்றையவற்றையும், தென்னன் உளம் மகிழ் சிறப்ப - கூன்பாண்டியன் மனமகிழ்கூர, வேந்தர் வரிசையால் உதவி - அரசர்க்குச்செய்யும் வரிசையாற் கொடுத்து, பின்னர்-பின்பு.

நிதியம் என்பதனிறுதியில் எண்ணும்மை தொகுத்தல். (௭)

கோதறுகுணத்தின்மிக்ககுலச்சிறையென்பானங்கோர்
மேதகுகேள்வியானைவிடுத்தனன்மீண்டுதென்னன்
காதலியோடுமாயக்கடவுள்செம்பதுமக்கோயின்
மாதரைமணந்துசெல்வான்போல்வந்துமதுரைசேர்ந்தான்.

(இ-ள்.) கோது அறு குணத்தில் மிக்க குலச்சிறை என்பான் அங்கு ஓர் மேதகு கேள்வி யானைவிடுத்தனன்-குற்றமற்றகுணத்தில் மேம்பட்ட குலச்சிறையென்னுந்திருநாமம்வாய்ந்த தனதிடத்துள்ள நூற்கேள்வியில் மேம்பட்ட மதிவல்லோரொருவரையும் மங்கையர்க்கரசியாரோடு அனுப்பினான், தென்னன் மீண்டு-(அங்குநின்றும்) பாண்டியன் திரும்பி, காதலியோடு - தனது தேவியாரோடு, மாயக்கடவுள்-திருமால், செம்பதுமம் கோயில் மாதரை மணந்து செல்வான்போல் வந்து - செந்தாமரையென்னுங் கோயிலில் வசிக்குந் திருமகளை மணந்து செல்லுதல்போலச் சென்று, மதுரை சேர்ந்தான் - மதுரைத்திருநகரை யடைந்தனன்.

மங்கையர்க்கரசியாரைப்போல நல்லொழுக்கமும் நுண்ணறிவுஞ் சிவநேயமு மிக்குடையாராதலால் ஓர் மேதகு கேள்வி யானை விடுத்தனன் என்றார். செல்வான் என்னும் வினைமுற்றினின்று பிரிந்துநின்ற தொழிற்பெயர் செயப்படுபொருளேற்று நின்றது. (௮)

மலர்மகண்மார்பன்பொன்னிமன்னவன்பயந்ததெய்வக்
குலமகளுடனேவந்தகுலச்சிறைகுணனுங்கேள்வித்
தலைமையுமறிவுமிக்கதன்மையுந்தூக்கிநோக்கி
நலமலியமைச்சனாக்கிநிலம்புரக்குநாளில்.

(இ-ள்.) மலர்மகள் மார்பன் - இலக்குமிதேவி வசிக்குந் திருமார்பையுடைய திருமால்போன்ற பாண்டியன், பொன்னி மன்னவன் - காவிரிநாடாளுஞ் சோழன், பயந்த தெய்வம் குலமகள் உடனே வந்த குலச்சிறை - (அரிய தவத்தால்) பெ

Koviloor Digital Library

ற்ற தெய்வத்தன்மையையுடைய மங்கையர்க்கரசியாருடனே தரப்பட்டுவந்த குலச்சிறையாருடைய, குணனும் சேள்வி தலைமையும் மதியும் மிக்க தன்மையும் தூக்கி நோக்கி - குணத்தையும் நூற்கேள்வியின் சிறப்பையும் கூரிய நுண்ணறிவையும் மேம்பட்ட நல்லொழுக்கப் பெற்றியையும் ஏனையமைச்சர்களின் இயல்புகளோடு சீர்தூக்கி யாராய்ந்து பார்த்து, நலம் மலி அமைச்சன் ஆக்கி - நன்மைமிக்க முதலமைச்சராக்கி, நானிலம் புரக்கும் நாளில் - பெரிய வுலகைப் பாதுகாத்தொழுகுங் காலையில்.

நலமலியமைச்சனுக்கி என்றமையால் முதலமைச்சர் என்றும். உடனேவந்த என்றதற்கு மங்கையர்க்கரசியாரோடு அவதரித்த எனப் பொருள் கூறுவாரும் உண்டு. அதற்கு ஏதுவின்மை புணர்க. (கூ)

வல்வினைவலியான்மெய்யில்வலியகூனடைந்தான்போலக்
கொல்வினையிலராய்வஞ்சங்கொண்டுழன்றுடுத்தபாசம்
வெல்வினையறியாநக்கவேடர்சொல்வலையிற்பட்டு
நல்வினையுதவாத்தென்னனுன்மறையொழுக்கநீத்தான்.

(இ-ள்.) வல்வினை வலியால் - முன்னைத் தீவினையின் வன்மையால், வலிய கூன் மெய்யில் அடைந்தான்போல-மிக்க கூனை யுடம்பிலடைந்தவன்போல, கொல்வினை இலர் ஆய்-கொல்லுந்தொழி லொன்றுமட்டு மில்லாதவராய்,வஞ்சம் கொண்டு உழன்று - வஞ்சனைகளையெல்லாங் கைக்கொண்டு சுழன்று,உடுத்த பாசம் - தம்மை விடாது சூழ்ந்த மலபந்தத்தை, வெல்வினை அறியாத - வெல்லுஞ் சற்கருமங்களைச் சிறிதுமுணராத, நக்கன் வேடர் - அருகவேடம்பூண்ட சமணர்கள், சொல் வலையில் பட்டு - கூறும் பொய்மொழியாகிய வலையிற் சிமிழ்ப்புண்டு, நல்வினை உதவாத தென்னன் - முன்னை நல்வினை வந்துதவப்பெறாத பாண்டியன், நால்மறை ஒழுக்கம் - நான்கு வேதங்களும் விதந்துகூறும் நல்லொழுக்கங்களை, நீத்தான்-கைவிட்டனன்.

தீவினைப்பயனுல் அவயவப்பழுது அடைதல்போல அப்பயனுல் அவர்கள் சொல்வலையிற்பட்டான் என்பார் நல்வினை உதவாத என்முர். மும்மலங்களை யொழித்தற்குரிய சற்கருமங்களை முன்னர்க் கூறினும் அவற்றை முன்னர்க்காண்க. நக்கவேடம் நிலைமொழியீற்று மெய்கெட்டது. (௧0)

போதவிழ்தாரானக்கர்புன்னெறியொழுக்கம்பூண்டோ
னுதலிற்கன்னிநாடுமமணிருண்மூழ்கிப்பூதி
சாதனநெறியாஞ்சைவசமயமுமுத்திச்செல்வ
மாதவநெறியுங்குன்றமறைந்ததுவேதநீதி

(இ-ள்.) போது அவிழ்தாரான் - போதவிழ்ந்த மாலையையணிந்த பாண்டியன், நக்கர் புல் நெறி ஒழுக்கம் பூண்டோன் ஆதலில் - அருகவேடம் பூண்டோரது புல்லிய மார்க்கத்திற்கூறும் ஒழுக்கங்களைக் கைக்கொண்டவனுதலால், கன்னி நாடும் அமண் இருள் மூழ்கி - பாண்டிநாடுஞ் சமணுகிய அந்தகாரத்திலழுந்தி, பூதிசாதனம் நெறி ஆம் சைவசமயமும் - திருநீறிடலும் ஸ்ரீபஞ்சாக்கர முச்சரித்தலுமாகிய நன்னெறிக்குரிய சைவசமயமும், முத்தி செல்வம் மாதவம் நெறியும் குன்ற - பரமுத்தியாகிய அழியாச்செல்வத்தைத்தரும் அளத்தற்கரிய பெருமைவாய்ந்த சிவபுண்ணிய வழியும் குறைபாடடைய,வேதம் நீதி மறைந்தது-வேதவொழுக்கங்குன்றியது.

Koviloor Digital Library

சிவபுண்ணியங்களை முன்னர்க் கூறியிருக்கின்றோம், அங்குக்காண்க. போது இன்னிளிவாய்க்கொள்ளுமலர். அரசன் வழிப்பட்டது உலகு ஆதலால் கன்னிநாடுங் குன்ற எனவும், வேதமே ஆகமமாதலால் வேதநீதியெனவுங் கூறினார். (௧௧)

பறிபடுதலையும்பாயினுடுக்கையும்பாசிப்பல்லு
முறிபொதிகலனுமத்திநாத்தியென்றுரைக்குநாவு
மறிவழியுளம்போனாணற்றழிந்தவெற்றரையுங்கொண்டு
குறிகெடுமணங்குசூழ்ந்தாங்கமணிறைகொண்டதெங்கும்.

(இ-ள்.) பறிபடுதலையும்-மயிர் பறிக்கப்பட்ட தலையையும், பாயின் உடுக்கையும் – பாயாகிய ஆடையையும், பாசி பல்லும் - பாசி படர்ந்த பல்லையும், உறிபொதி கலனும் - உறியிற்பொதிந்த கமண்டலத்தையும், அத்தி நாத்தி என்று உரைக்கும் நாவும் - உள்ளதை யிலதெனக்கூறும் நாவையும், அறிவு அழி உளம்போல் - அறிவை யொழிந்த மனம்போல, நாண் அற்று அழிந்த வெற்றரையும் கொண்டு - அரைஞாணற்றொழிந்த வெற்றிடையையுங்கொண்டு, குறிகெடும் அணங்குசூழ்ந்தால் ஆங்கு- பொலிவழிந்த மூதேவி சூழ்ந்தாற்போல, அமண் எங்கும் இறைகொண்டது - சமணப்பள்ளி யெங்கு நிறைந்துள்ளது.

அத்தி நாத்தி நரகம் சுவர்க்கம் கருத்தா இம்மூன்று பொருள்களையு மில்லை யெனல். மனத்திற்கு ஞானம் ஆபரணமாதல்போல இடைக்கு அரைஞாண் ஆபரணமாதலால் அறிவழியுளம் போனாணற்றழிந்த வெற்றரையும் எனவும், பொலிவழிந்தபொருளை யெவருங் குறித்தலின்மையால் மூதேவியைக் குறிகெடுமணங்கும் எனவுங் கூறினார். அமண் சாதியொருமை. (௧௨)

அருந்தமிழ்ப்பாண்டிவேந்தற்குறுதியாவாக்கஞ்செய்யு
மருந்தினிற்சிறந்தகற்பின்மங்கையர்க்கரசியாரும்
பெருந்தகையமைச்சுநீரிற்குழைத்தன்றிப்பிறங்கப்பேறு
தருந்திருநீறிடாராய்ச்சிவனடிச்சார்பினின்றார்.

(இ-ள்.) அருந்தமிழ் பாண்டி வேந்தற்கு உறுதியாக -பெறுதற்கரிய தமிழ் வழங்கும் பாண்டிநாடாளும் பாண்டியனுக்கு உயிர்க்குறுதியாக, ஆக்கம் செய்யும் மருந்தினில் - இன்பஞ்செய்யும் அமுதுபோல, சிறந்த கற்பின் மங்கையர்க்கரசியாரும் - மேம்பட்ட கற்பினையுடைய மங்கையர்க்கரசியாரும், பெருந்தகை அமைச்சும் - (அரசனுக்கு) பெரும்பேறு விளைக்கும் அமைச்சராகிய குலச்சிறைநாயனாரும், நீரில் குழைத்தல் அன்றி-நீரிற் குழைத்தாலல்லாமல், பிறங்க பேறு தருந் திருநீறு இடார் ஆய் - விளங்க விளக்கந்தருந் திருநீற்றை யணியாராகி, சிவன் அடி சார்பில் நின்றார் - சிவபெருமானார் திருவடிநிழற் சார்பினின்றார்கள்.

சமணிருளிற் புக்கொழுகும் பாண்டியனுக்கு அஞ்சி விதிப்படி திருநீற்றை நீரிற்குழைத்தணியாமல் மறைவுபட அணிந்துவந்தனர் என்பார் நீரிற்குழைத் தன்றிப் பிறங்கப் பேறுதருந் திருநீறிடாராய் எனவும், அகத்திற் சிவநேச மிக்கொழுகினர் என்பார் சிவனடிச்சார்பினின்றார் எனவும், மருந்து உயிர்க்குறுதி தருதல் போலப் பாண்டியனுக்கு இம்மை மறுமை யின்பங்களைப் பெருக்குவதென்பார் உறுதியாவாக்கஞ்செய்யும் மருந்தினிற்சிறந்த கற்பினெனவுங் கூறினார். பாண்டியனுக்கு அஞ்சி என்றது "ஒங்கியசைவவாய்மை யொழுக்கத்தினின்றதன்மை - பூங்கழற் செழியன்முன்பு புலப்படாவகைகொண்டுய்த்தார்" என ஆளுடைய பிள்ளையார் புராணத்தில் வருதல் காண்க. (௧௩)

Koviloor Digital Library

பொய்யுரைபிதற்றுமிந்தப்புன்சமன்களைகட்டீண்டு
மெய்யுரைவேதநீதிவியன்பயிர்தலைச்செய்தோங்கச்
செய்யுநரெவரோவென்றுசிந்தையிற்கவலைபூண்டு
நையுநராகிக்கூடலுடையானைவணங்கப்போனார்.

(இ-ள்.) பொய் உரை பிதற்றும் இந்த புன் சமண்களை கட்டு-பொய்மொழிகளை மலைவுபடக்கூறும் இந்தப் புல்லிய சமணாகிய களையைக்களைந்து,ஈண்டு-இவ்விடத்தில்,மெய் உரை வேத நீதி வியன் பயிர் தலைச்செய்து ஓங்கச் செய்யுநர் எவரோ என்று - (உயிர்க்குறுதிதரும்) உண்மைமொழியாகிய வேதவொழுக்கமென்னும் பொலிவுமிக்க பைங்கூழானது தலையெடுத்து ஓங்கச்செய்யும் வல்ல வுழவர் யாரோவென்று, சிந்தையில் கவலை பூண்டு - மனத்திற் பெருங்கவலைகொண்டு, நையுநர் ஆகி - வருந்துவோராகி, கூடல் நாதனை வணங்க போனார்-திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை வணங்கச்சென்றார்கள்.

பிதற்றல் முன்னொடுபின் மலைவுபடக் கூறல். பாண்டியன் என்று சமணிருளிற் படிந்தனனோ அன்றுதொட்டுப் பெருங்கவலையுற்றனர் என்பார் சிந்தையிற் கவலைபூண்டு எனவும், சமணிருளொழிந்து சைவவொளிபரவச் சென்றனர் என்பார் கூடலுடையானை வணங்கப்போனார் எனவுங் கூறினார். நையுநராகி என்றது "ஆங்கவர் தாங்களங்கணரும் பெறற்றமிழ்நாடுற்ற - தீங்கினுக்களவுதேற்றாச் சிந்தையிற்பரிவு கொண்டே" என ஆளுடையபிள்ளையார் புராணத்தில் வருதல்காண்க. இது மிகைகுறையின்றி வந்த வொற்றுமையுருவகவணி. (கச)

பேதுற்றமுனிவர்க்கன்றுபெருமறைவிளக்கஞ்செய்த
வேதத்தின்பொருளேயிந்தவெஞ்சமண்வலையிற்பட்டுப்
போதத்தையிழந்தவேந்தன்புந்தியைமீட்டிப்போதுன்
பாதத்திலடிமைகொள்வாயென்றடிபணியுமெல்லை.

(இ-ள்.) பேதுற்ற முனிவர்க்கு - (வேதத்தின்பொருளை யுணராது) அறிவுமயங்கிய கண்ணுவர் முதலிய முனிவர்களுக்கு, அன்று - அக்காலையில், பெருமறை விளக்கம் செய்த வேதத்தின் பொருளே - வேதத்தினளவறுத்தற்கரிய பொருளையையந்திரிபற விளக்கிய அவ்வேதத்திறுட்கிடைப்பொருளாயுள்ளவனே, இந்த வெம் சமண் வலையில்பட்டு போதத்தை இழந்த வேந்தன் புந்தியை மீட்டு - இந்தக் கொடியசமணாகிய வலையிற்சிக்கிச் சிவஞானத்தைக் கைவிட்ட பாண்டியன் மனத்தைத்திருப்பி, இ போது உன் பாதத்தில் அடிமைகொள்வாய் என்று அடிபணியும் எல்லை - இக்காலையில் தேவரீர் திருவடிக்கீழ்த் திருத்தொண்டுசெய்ய அவனைக்கொண்டருள்வீரென்று திருவடியை வணங்குஞ்சமையத்தில்.

மறைப்பொரு ளுணர்தல் முனிவர்கள் தத்தங்கடப் பாடாதலால் அதனையுணராக்காலத்து மயங்கினர் என்பார் பேதுற்ற முனிவர்க்கு எனவும், அம்மறைப்பொருள் தானே ஆதலால் அதனை யெளிதினுணர்த்தினை யென்பார் பெருமறைவிளக்கஞ்செய்த - வேதத்தின் பொருளே எனவும், நீ எங்குநிற்பினும் தாய்முலையிற்பால்போலச் சைவசமயத்தில் நிற்றலால் புன் சமயப்புல்லொழுக்கத்தையொழித்து நன்சமயத்தை விளக்க நீயே வந்தருளவேண்டு மென்பார் வேந்தன் புந்தியை மீட்டிப்போதுன் - பாதத்திலடிமை கொள்வாய் எனவுங் குறையிரந்தார் என்க "நிறை பராபரம் விஞ்ஞான நிராமய மென்று நூல்கள் - அறைபரம் பிரமமாகுமித

Koviloor Digital Library

ஒருவாகுமே - மறையிதன்பொருளே யிந்தச் சுந்தரவடிவாயிங்ஙன் - உறைசிவ லிங்கமென்றே யென்பர் நூலுணர்ந்தநல்லோர்" என இந்நூலில் வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலத்தில் வருதல் காண்க. இது தமது கருத்தோடு கூடிய விசேஷியத்தைச் சொல்லுதலால் கருத்துடையடைகொளியணி. (கரு)

வேதியனொருவன்கண்டிவேடமும்பூண்டோன்மெய்யிற்
பூதியன்புண்டரீகபுரத்தினும்போந்தோன்கூட
லாதியைப்பணிவான்வந்தான்மங்கையர்க்கரசியாரு
நீதியவமைச்சரேறுநேர்படவவனைநோக்கா.

(இ-ள்.) வேதியன் ஒருவன் - அந்தணனொருவன், கண்டிவேடமும் பூண்டோன் - உருத்திராட்சக்கண்டிகையாகிய சிவவேடமும் பூண்டவன், மெய்யில்பூதியன் - தனது சரீரத்தில் திருநீற்றுப் பூச்சினன், புண்டரீக புரத்தினும்போந்தோன்- புலியூராகிய சிதம்பரத்தினின்றும் வந்தவன், கூடல் ஆதியை பணிவான் வந்தான்- நான்மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை வணங்கவந்தனன், மங்கையர்க்கரசியாரும் நீதிய அமைச்சர் ஏறும் - பாண்டிமாதேவியாரும் மந்திரிகளாகிய யாளைகளுக்கு ஆண்சிங்கம்போன்ற மநு நீதியையுடைய குலச்சிறைநாயனாரும், அவனை நேர்பட நோக்கா - அம்மறையவனை யெதிரே பார்த்து. (கசு)

எங்கிருந்தந்தணீர்வந்தனிரென்றுராய்ந்த
புங்கவன்சென்னிபொன்னிநாட்டினும்போந்தேனென்று
னங்கவர்க்குண்டானபுதுமையாதறைதிரென்றூர்
சங்கரற்கன்புபூண்டோனுண்டென்றுசாற்றுகின்றான்.

(இ-ள்.) அந்தணீர் எங்கு இருந்து வந்தனிர் என்றார் - அந்தணரே யெந்த நாட்டினின்று இங்குவந்திரென்று வினவினர், ஆய்ந்த புங்கவன் - வேதநூல்களை யாராய்ந்த அவ்வந்தணன், சென்னி பொன்னி நாட்டினும் போந்தேன் - சோழனுடைய காவிரிநாட்டினின்றும் இங்கு வந்தவன், என்றான் - என்று கூறினான், அவர்- அவர்கள், அங்கு உண்டான புதுமை யாது அறைதிர் என்றார் - அந்நாட்டிலுண்டான புதுமையாது கூறுமி னென்று வினவினர், சங்கரற்கு அன்பு பூண்டோன் உண்டு என்று சாற்றுகின்றான் - சிவபெருமானுக்கு அன்பு பூண்ட அம்மறையவன் ஒரு புதுமையுண்டென்று சொல்லலுற்றான்.

முன்னின்ற அங்கு அசைநிலை. (கஎ)

ஏழிசைமறைவல்லாளர்சிவபாதவிதயரென்னக்
காழியிலொருவருள்ளார்காரமண்கங்குல்சீப்ப
வாழியிரவியென்னவொருமகவளித்திபென்ன
வூழியிலொருவன்றனையுள்கிநோற்றொழுகுகின்றூர்.

(இ-ள்.) ஏழிசை மறை வல்லாளர் சிவபாத இதயர் என்ன - ஏழிசையமைந்த வேதநூலில் வல்ல அந்தணர் குலத்திற்றோன்றிய சிவபாதவிரதயரென்று, காழியில் ஒருவர் உள்ளார் - சீகாழியென்னுந் திருப்பதியி லொருவருள்ளார், கார் அமண் கங்குல் சீப்ப - கரியசமணராகிய அந்தகாரத்தைக் கெடுக்க, ஆழியில் இரவி என்ன - கடலிற்றோன்றிய சூரியனைப்போல, ஒருமகவு அளித்தி என்ன - ஒருபுத்திரப்பேறு தந்தருளாயென்று, ஊழியில் ஒருவன் தானை உள்கி நோற்று ஒழுகும் நாளில் -

Koviloor Digital Library

வழியில யாவையுந் தன் சத்தியாலொடுக்கி நின்ற இறைவரது திருவடிகளைச் சிந்தித்துத் தமது மனைவியாராகிய பகவதியாரோடு தவஞ்செய்து நிகழும் நாளில்.

காழி காளியென்னும் பெயரையுடைய நாகம் பூசித்தலால் வந்தகாரணப்பெயர் " மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்மிகுத்தே - ஆதியருமறைவழக்கமருகி யரனடியார்பாற் - பூதிசாதனவிளக்கம் போற்றல் பெருதொழியக்கண் - டேதமில்சீர்ச்சிவபாதவிரதயர்தாமிடருழந்தார். மனையறத்திலின்பமுறுமகப்பெறுவான்விரும்புவார் - அனையநிலைத்தலைநின்றே யாடியசேவடிக்கமலம் - நினைவுறமுன்பரசமயநிராகரித்து நீறாக்கும்-புனைமணிப்பூண்காதலனைப் பெறப்போற்றுந்தவம் புரிந்தார்" எனவும் ஆளுடையபிள்ளையார் புராணத்தில் வருதல் காண்க. (௧அ)

ஆயமாதவர்பாலீசனருளினாலுலகமுய்யச்
சேயிளங்கதிர்போல்வந்தான்செல்வனுக்கிரண்டாண்டெல்லை
போயபின்மூன்றுமாண்டிற்பொருகடன்மிதந்ததோணி
நாயகன்பிராட்டியோடும்விடையின்மேனடந்துநங்கை.

(இ-ள்.) ஆய மாதவர் பால் - சற்புத்திரப்பேறு விரும்பித் தவஞ்செய்த சிவபாதவிரதயரிடத்து, ஈசன் அருளினால் - இறைவர் திருவருளால், உலகம் உய்ய - உலகிலுள்ள வுயிர்கள் புறச்சமயப்பற்றுவிட்டுச் சிவபெருமானார் திருவடி நேயச்சார்பால் பிழைக்க, சேய் இளங்கதிர்போல் வந்தான் - செவந்த கிரணங்களையுடைய இளஞ்சூரியனைப்போல அவதரித்த, செல்வனுக்கு - பிள்ளையாருக்கு, இரண்டு ஆண்டு எல்லை போயபின் மூன்று ஆம் ஆண்டில் - இரண்டுபருவத்தெல்லை கடந்து மூன்றும்பருவ நிகழ்காலத்தில், பொரு கடல் மிதந்ததோணி நாயகன் - கரையொடு மோதும் கடலில் மிதந்த தோணிபுரத் தெழுந்தருளிய இறைவர், பிராட்டியோடும்- உமாதேவியாரோடும், விடையின் மேல் நடந்து - இடபவூர்தியின் மேற் சென்றருளி, நங்கை - அப்பிராட்டியாருடைய.

மகாப் பிரளைய மூலகினையழித்தற்பொருட்டுப் பரவ, அப்பிரளையத்தின்மேல் சீகாழிதோணியாக மிதத்தலால் தோணிபுரம் என ஓர்காரணப்பெயர் பூண்டமையால் பொருகடன் மிதந்த தோணியென்றார். வந்தான் வினைமுற்றுப் பெயரெச்சமாய் நின்றது. (௧௯)

திருமுலைப்பாலினோடுஞானமுந்திரட்டிச்செம்பொற்
குருமணிவள்ளத்தேந்திக்கொடுப்பவப்பாலன்வாங்கிப்
பருகியெண்ணிறந்தவேதாகமமிவைபற்றிச்சார்வாய்
விரிகலைபிறவுமோதாதுணர்ந்தனன்விளைந்தஞானம்.

(இ-ள்.) திருமுலைபாலினோடு ஞானமும் திரட்டி - திருவருள்வடிவாகிய திருமுலைப்பாலோடு சிவஞானத்தையுந் திரட்டி, செம்பொன் குருமணிவள்ளத்து ஏந்தி கொடுப்ப - செம்பொன்னாலமைந்த நிறம் வாய்ந்த அழகிய திருக்கிண்ணத்திலேந்திக் கொடுத்தருள, அ பாலன் வாங்கி பருகி - அப்பிள்ளையார் வாங்கிப்பருகி, எண் இறந்த வேதாகமம் - அளவிறந்தவேதாகமங்களையும், இவை பற்றி சார் வாய் விரிகலை பிறவும் - இவ்வேதாகமங்களைப்பற்றிச் சார்புநூல்களாக விரிந்த பிறவற்றையும், ஓதாது உணர்ந்தனன் - பிறர்பால் ஓதாதுணர்ந்து தமமே யுணர்ந்தருளினார், ஞானம் விளைந்தது - சிவஞானம் விளைந்தது.

விளிந்தது என்பதில் துவ் விகுதி தொகுத்தல். வேதாகமமிவைபத்தி என்றதலைவேதாகமம் முதனூல், சார்வாய் விரிகலைபிறவும் என்பன காருடம், தக்கிண முதலிய ஆகமங்கட்களும், சிக்கை, கற்பசூத்திர முதலிய வேதாங்கங்களுமாம். இவ்விரண்டு நூலுக் கூறவே இடை நின்றவழிநூலு மடங்கும், அவையாவன மிருதி, புராணம், கலைகள், உபாகம முதலியன. சிவபிரானுர் கட்டளையால் அம்மை திருமுலைப்பால் பொற்கிண்ணத்தருளுதலின் இயற்றுவோர் தொழிலுக்கு ஏவுவோர் கர்த்தா ஆதலால் இறைவர்தொழிலாக இங்குக்கூறினர். அவர்கள் வேண்டுகோளின்படி யிறைவரிரக்கியருள, திருவாதிரைத் திருநக்ஷத்திரத்தி லவதரித்தருளிச் சிவஞானம்வளர்தல்போல வளர்ந்தரும் பிள்ளைமைப்பருவத்தில்தீர்த்தமாடச்சென்ற தமது தந்தையார்பின் செல்ல, அவர்கண்டு தமது பிள்ளையாரைத் தீர்த்தக்கரையிலோர் பால்வைத்து ஸ்நானஞ்செய்யும்போது அகமருஷணமந்திரஞ் செபித்து மூழ்கியெழுதற்குமுன், பண்டையுணர்ச்சிதோன்ற மனவருத்தமுற்றுத் தமது பிதாவைக்காணுத காரணத்தாலுந் தோணியப்பரை நோக்கி அம்மே யப்பாவென்று கண்ணீர்பெருக்க, அத்தோணியப்பர் திருவுளமிரங்கி யிறைவியாரோ டெழுந்தருளிச் சிவஞானங்குழைத்துத் திருமுலைப்பாலூட்டியருளப் பருகி, அன்றே வேதாகமமுதலிய நூல்களை அநாயாசமாக ஓதாதுணர்ந்து சிவஞானம் பெற்றனர் என்பது "பெருத்தெழுமன்பாற் பெரியநாச்சியாருடன்புகலித் - திருத்தோணிவீற்றிருந்தார் சேவடிக்கீழ்வழிபட்டுக் - கருத்தமுடிக்கிடப்பரவுக்காதலியார் மணிவயிற்றில் - உருத்தெரியவரும் பெரும்பேறுலகுய்யவுளதாக. பிள்ளையார்தமைக்கரையில்வைத்துத்தாம் பிரிவஞ்சித் - தெள்ளுநீர்புகமாட்டார் தேவியொடுந்திருத்தோணி - வள்ளலாரிருந்தாரையெதிர்வணங்கிமணிவாவி - உள்ளிழிந்துபுனல்புக்காருலகுய்ய மகப்பெற்றார். நீராடித் தருப்பித்துநியமங்கள்பலசெய்வார் - நேராகத்திருமஞ்சனர்காண்பதன்முன்செய்ததற்பின் - ஆராதவிருப்பினலகமருடம்படியவழி - பேராதமூழ்கினர்பெருங்காதல் பெற்றோராய். மறைமுனிவர்மூழ்குதலுமற்றவர் தம்மைக்காணு - திறைதிரியாவொருநிலைமைதலைக்கிடாவிசர்ப்பென் - முறைபுரிந்தமுன்னுணர்வு மூளவழத் தொடங்கினர் - சிறைபுனல்வாவிக்கரையினின்றருளும்பிள்ளையார். அந்நிலையிற் றிருத்தோணிவீற்றிருந்தாருஞ்சேக்கால் - முன்னிலைமைத்திருத்தொண்டு முன்னியவர்க்கருள்புரிவான் - பொன்மலைவல்லியுந் தாமும்பொருவிடைமே லெழுந்தருளிச் - சென்னியிளம்பிறைதிகழச்சேரும்பொய்கைமருங்கணைந்தார். அழுகின்றபிள்ளையார்தமைநோக்கியருட்கருணை - எழுகின்றதிருவுள்ளத்திறைவர்தாமெவ்வுலகும் - தொழுகின்றமலைக்கொடியைப்பார்த்தருளித் தனமுலைகள் - பொழிகின்றபாலடிசில் பொன்வள்ளத்தூட்டென்ன. ஆரணமுமுலகேழுமீன்றருளி யனைத்தினுக்குங் - காரணமாய்வளம்பெருகுகருணைதிருவடிவான - சீர்பெருகுசிவபெருமானருளுதலுஞ்சென்றணைந்து - வாரிணக்குந்திருமுலைப்பொன்வள்ளத்துக்கறந்தருளி. எண்ணரியசிவஞானத்தின்னமுதங்குழைத்தருளி - உண்ணடிசிலெனவூட்டவுமையம்மையெதிர்நோக்கும் - கண்மலர்நீர்துடைத்தருளிக்கையிற்பொற்கிண்ணமளித் - தண்ணலையங்கழுகைதீர்த்தங்கணரருள்புரிந்தார். சிவனடியேசிந்திக்குந்திருப்பெருகுசிவஞானம் - பவமதனையறமாற்றும்பாங்கினிலோங்கியஞானம் - உவமையிலாக்கலைஞானமுணர்வரிய மெய்ஞ்ஞானம் - தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தாரந்நிலையில்" என ஆளுடையபிள்ளையார்புராணத்தில் வருதல்காண்க. (௨௰)

சம்பந்தமறுப்போன்ஞானநாயகன்ஞானத்தோடு
சம்பந்தஞ்செய்யுஞானசம்பந்தனுகாவில்

Koviloor Digital Library

வம்பந்தமுலைமெய்ஞ்ஞானவாணியுங்காணிகொள்ள
வம்பந்தமறைகளெல்லாமருந்தமிழாகக்கூறும்.

(இ-ள்.) சம்பந்தம் அறுப்போன் - மைதுபாசத்தொடக்கை யறுத்தருளும், ஞானநாயகன் - இறைவர், ஞானத்தோடு சம்பந்தம் செய்யும் - சிவஞானத்தோடு சம்பந்தஞ்செய்தலால் வந்த, ஞானசம்பந்தன் ஆக - திருஞானசம்பந்தரென்னுந் திருநாமமுடையவராக, நாவில் - அவரது திருநாவில், வம்பு அந்தம் முலைமெய்ஞ்ஞான வாணியும் காணி கொள்ள - கச்சினழகுவாய்ந்த திருத்தனத்தையுடைய ஞானவாணியானவள் தனக்கு உறைவிடமாகக்கொள்ள, அம்பந்தம் மறைகள் எல்லாம் - அழகிய பந்தமமைந்த வேதங்களினுண்பொருளையெல்லாந் திரட்டி, அருந்தமிழ் ஆக கூறும் - அரிய தமிழ்ப்பாசுரங்களாகக் கூறியருள்வாராயினர்.

பந்தம் வேதத்திஞெருறுப்பு. சிவஞானப் பால்பருகியதால் திருஞானசம்பந்தர், எனக் காரணப்பெயர் பூண்டது " யாவர்க்குந்தந்தைதாயெனு மவரிப்படியளித்தார்-ஆவதனுலாளுடைய பிள்ளையாராயகில - தேவருக்குமுனிவருக்குந் தெரிவரிய பொருளாகும் - தாவிறனிச்சிவஞான சம்பந்தராயினர்" எனவும், ஞானவாணி குடிகொண்டனள் என்பது "விண்ணிறைந்தபெருகொளியால்விளங்குமழவிடைமேலே- பண்ணிறைந்தவருமறைகள் பணிந்தேத்தப்பாவையுடன் - எண்ணிறந்தகருணையினு லின்றுணையெதிர்காட்டி - யுண்ணிறைந்துமொழிந்தெழுந்த வுயர்ஞானத்திருமொழியால்" எனவும் ஷை புராணத்தில் வருதல் காண்க. அம்பந்த மறைகளெல்லா மருந்தமிழாகக்கூறும் என்றவை "தோடுடையசெவியன்" முதலிய திருப்பதிகங்களை. உக

கரும்பினிற்கோதுநீத்துச்சாறடுகட்டியேபோல்
வரம்பிலாமறையின்மாண்டபொருளெலாமாணத்தெள்ளிச்
சுரும்பிவர்கொன்றைவேணிப்பிரானிடந்தோறும்போகி
விரும்பியதென்சொன்மாலைசிவமணம்விளையச்சாத்தி.

(இ-ள்.) கரும்பினில் கோது நீத்து-கரும்பினின்றுங் கோதினை யொழித்து, சாறு அடு கட்டி ஏ போல் - சாற்றினைக் காய்ச்சிக்கொண்ட கட்டியைப்போல, வரம்பு இல்லாத மறையின் - எல்லையில்லாத வேதத்திலுள்ள, மாண்ட பொருள் எல்லாம் மாண தெள்ளி - மாட்சிமைப்பட்ட பொருள் முற்றையுங்கொழித்து, சுரும்பு இவர் கொன்றை வேணி பிரான் இடம் தோறும் போகி - வண்டுகள் பரந்த கொன்றைமலர்மாலையையணிந்த சடாமகுடத்தையுடைய இறைவர் வசிக்கும் திருப்பதிகள் தோறுஞ்சென்று, விரும்பிய தென்சொல் மாலை - யாவரும் விரும்ப அமைத்த தமிழ்ச்சொல்லாகிய மலராற்றொடுத்த திருப்பதிகமாலையை, சிவமணம் விளைய சாத்தி - சிவமணங் கமழச்சூட்டி.

வேதத்தைக் கரும்பாகவும் கருமகாண்டத்தைக் கோதாகவும் ஞானகாண்டத்தை இரதமாகவுங் கொண்டனர் என்பார் கரும்பினிற் கோதுநீத்துச் சாறடுகட்டியேபோல் எனவும், அந்த இரதமமைந்தது என்பார் விரும்பிய எனவும், வடசொலினுஞ் சிறந்தது என்பார் தென்சொன்மாலையெனவும், மலர்மாலைக்கு நறுமணமுண்மைபோலத் திருப்பதிகமாலை சிவஞானநறுமணம் பொதிந்ததென்பார் சிவமணம் எனவும், என்றும் வாடாதது என்பார் விளையச்சாத்தியெனவுங் கூறினர். (உஉ)

பருமுத்தமுலையாள்பங்கனருளினாற்பசும்பொற்றூளந்
திருமுத்தின்சிவிகைகாளந்தெண்முத்தின்பந்தரின்ன

நிருமித்தவகைபோற்பெற்றுப்பாலையைநெய்தலாக்கிப்
பொருமுத்தநதிசூழ்விழிப்பொற்படிக்காசுபெற்று.

(இ-ள்.) பருமுத்தம் முலையாள் பங்கன் அருளினால் - பருத்த முத்துவடத்தையணிந்த தனத்தையுடைய உமாதேவியாரை யிடப்பாகத்திலுடைய இறைவரது திருவருளால், பசும்பொன் தாளம் - பசிய பொன்னாலமைந்த தாளத்தையும், திருமுத்தின் சிவிகை - பொலிவமைந்த முத்தாலமைந்த சிவிகையையும், காளம் - திருச்சின்னத்தையும், தெள் முத்தின் பந்தர் - முற்றிய முத்துப்பந்தலையும், இன்ன - ஆகிய இவைகளை, நிருமித்த வகைபோல் பெற்று - சிருட்டித்த வகையைப்போலப் பெற்று, பாலையை நெய்தல் ஆக்கி - பாலைநிலத்தை நெய்தனிலமாகச்செய்து, பொரு முத்த நதி சூழ் வீழி படி பொன்காசு பெற்று - கரையொடுமோது முத்தங்களை வீசுங் காவிரிநதிசூழ்ந்த திருவீழிமிழலையின் திருப்படியிலுள்ள பொற்காசினைப்பெற்று.

திருக்கோலக்காவிற் சென்றெழுந்தருளித் திருக்கரங்களாலொத்தறுத்துத் தேவாரமோதி யருளுதலையே யிறைவர் பொற்றாளமருளினர் என்பதையும், திருநெல்வாயிலரத்துறையி லெழுந்தருளிய இறைவரை வணங்குதற்கு அடியவர் திருக்கூட்டத்தோடு மெல்ல நடந்துசென்று மாறன்பாடியி லன்றிரவில் வசித்தருளுங்காலையில் வழிவந்த வருத்தத்தைத் திருவுளத்திலமைத்து அவ்விறைவர் அங்குள்ள மறையவர் கனவிலடைந்து முத்துச்சிவிகையையு முத்துக்குடையையும் பொற்சின்னத்தையும் நம்பாற்பெற்றுப் பிள்ளையாரிடத்துச்சென்று கொடுமென்றருள, அம்மறையவர் வைகறையிலெழுந்து திருக்கோயிலையடைந்து அவைகளைக்கண்டு வணங்கி யதிசயித்துக் கைக்கொண்டு அம்மாறன்பாடியில் பிள்ளையாரை யெதிர்கொள்ளச்சென்று இறைவரருளியதைக் கூறிக்கொடுக்க, தமக்கும் வந்தருளியதாலவற்றை மகிழ்கூர்ந்து பெற்றனர் என்பதையும், முதிர்வேனிற்காலம் வரத் திருச்சத்தி முற்றத்துக்குச்சென்று இறைவரைத் தரிசித்துத் திருப்பட்டீச்சுரத்துக்கு எழுந்தருளுகையில் அவ்விறைவரருளினால் சிவபூதங்கள் முத்துப்பந்தல் கொண்டணைந்து வெயில்வெப்பந் தணிதற்கு ஈதருளினர் என்றும் ஒலியும் அப்பந்தரும் ஆகாயத்திற்றோன்ற வுணர்ந்து இது நம்மிறைவர் அருளென ஏற்றுக்கொண்டனர் என்பதையும், திருவணிபள்ளியென்றுந் திருப்பதியைப் பாலைநிலமாக்கி, அப்பாலைநிலத்தை நெய்தனிலமாக்கினர் என்பதையும், திருவீழிமிழலையிற்சென்று இறைவரை வணங்கி யங்குறையுநாளில் உலகு பசிக்க மழையின்மையாற் சிறுவிலைக்காலம் வர, இறைவர் கனவிலெழுந்தருளி யுனக்குக் கவலையில்லையாயினும் அடியவர் வருத்தந்தீர இங்குச் சிலநாளிருந்து நாமருளும் பொற்காசைப் பெறுவாயெனக் கொடுத்தருளப்பெற்று வந்தருளினர் என்பதையும் "கையதனாலொத்தறுத்துப்பாடுதலுங் கண்டருளிக்கருணைகூர்ந்த - செய்யசடைவானவர்தமஞ்செழுத்து மெழுதியசெம்பொற்றாளங்கள் - ஐயரவர்திருவருளாலெடுத்த பாடலுக்கிசைந்தவளவாலொத்த - வையமெலாமுய்யவருமறைச்சிறுவர்கைத்தலத்துவந்தவன்றே" எனவும், "அற்றைநாளிர வப்பதியின்னிடைச்-சுற்றநீடியதொண்டர்கள்போற்றிடப் - பெற்றமூர்ந்தபிரான்கழல்பேணுவார் - வெற்றிமாதவத்தோருடன்மேவுவார். இந்நிலைக்கணெழில்வளர்பூந்தராய் - மன்னனார்தம்வழிவருத்தந்தினை - அன்னமாடுந்துறைநீரரத்துறைச் - சென்னியாற்றர்திருவுளஞ்செய்தனர். ஏறுதற்குச்சிவிகையிடக்குடை - கூறியூதக்குலவுபொற்சின்னங்கள் - மாறின்முத்தின்படியினன்மன்னிய - ஈறிலாதநிமலரருளுவார். நீடுவாழ்பதியாகுநெல்வாயிலின் - மாடமாமனைதோறுமறையோர்க்குக் - கூடவொக்கக்கனவிற்குலமறை - தேடுசேவடிதோன்றமுன்சென்றபின். ஞானசம்பந்தனம்பாலணைகின்றான் - மானமுத்தின்சிவிகைம

Koviloor Digital Library

ணிக்குடை - ஆனசின்னம் பாற்கொண்டருங்கலைக் - கோனவன்பாலணைந்துகொடுமென. ஆயபோழ்தினரவெனுமார்ப்புடன் - தூயமுத்தின்சிவிகைசுடர்க்குடை-மேயசின்னங்கள்கொண்டுமெய்யன்பரோ - டேயவந்தணர்தாமெதிர்தோன்றினார். வந்துதோன்றியவந்தணர்மாதவர் - கந்தவார்பொழிற்காழிநன்னாடர்முன் - அந்தமில்சிரரத்துறையாதியார் - தந்தபேரருடாங்குவீரென்றனர். மெய்ம்மைபோற்றிவிடாதவிருப்பினால் - தம்மையுன்றும்பரிசுதந்தாள்பவர் - செம்மைநித்திலயானச்சிறப்பருள்-எம்மையாளவைப்பாணின்றளித்ததே” எனவும், “ வெம்மைதருவேனிலிடை வெயில்வெப்பந்தணிப்பதற்கு - மும்மைநிலைத்தமிழ்விரகர் முடிமீதேசிவபூதந் - தம்மையறியாதபடிதண்டரளப்பந்தரெடுத் - தெம்மைவிடுத்தருள்புரிந்தார்பட்டீசரென்றியம்ப. அவ்வுரையுமணிமுத்தின்பந்தருமாகாசமெழச் - செவ்வியமெய்ஞ்ஞானமுணர்சிரபுரத்துப்பிள்ளையார் - இவ்விளைதானீசர்திருவருளாகிலிசைவதென - மெய்விரவுபுளகமுடன்மேதினியின்மிசைதாழ்ந்தார். அதுபொழுதேயணிமுத்தின்பந்தரினையருள்சிறப்பக் - கதிரொளியமணிக்காம்புபரிசனங்கள்கைக்கொண்டார் - மதுரமொழிமறைத்தலைவர்மருங்கிமையோர்பொழிவாசப்-புதுமலராலப்பந்தர்பூம்பந்தரும்போலும்” எனவும், “ மண்ணின்மிசைவான்பொய்த்துநதிகடப்பி-மன்னுயிர்கள்கண்சாம்பியுணவுமாறி - விண்ணவருஞ்சிறப்பில்வரும்பூசையாற்றல்-மிக்கபெரும்பசியுலகில்விரவக்கண்டு - பண்ணமருமொழியுமையாண்முலையின்ஞானப்-பாலறாவாயருடனரசும்பார்மேற் - கண்ணுதலான்றிருநீற்றுச்சார்வினோர்க்குங் கவலைவருமோவென்றகருத்திற்கொண்டார். வானாகிநிலனாகியனலுமாகி மாருதமாயிருசுடராய்நீருமாகி - ஊனாகியுயிராகியுணர்வுமாகி யுலகங்களனைத்துமாயுலகுக்கப்பால் - ஆனதவடிவாகிநின்றார்செய்ய வடிபரவியன்றிரவுதுயிலும்போது - கானாடுகங்காளர்மிழலைமூதூர் காதலித்தார்கனவினில்வந்தருளிச்செய்வார். உலகியல்புநிகழ்ச்சியாலணைந்தீய - உறுபசிநோயுமையடையாதெனினும்பால்-நிலவுசிவநெறிசார்ந்தோர்தம்மைவாட்டம் நீக்குதற்குநித்தமொரோர்காசுநீடும் - இலகுமணிப்பீடத்துக்குணக்குமேற்கும் யாமளித்தோமுமக்கிந்தக்காலந்தீர்ந்தால் - அலகில்புகழீர்தவிர்வதாகுமென்றே யருள்புரிந்தார்திருவீழிமிழலையையர்” எனவும் ஷை புராணத்தில் வருதலாலும், “ கள்ளம்பொழினணிபள்ளிதடங்கடமாக்கியஃதே -வெள்ளம்பணிநெய்தலாக்கியவித்தகன்வெண்குருகுப் - புள்ளொண்டவளப்புரிசங்கொடாலக்கயனுளத் - தள்ளத்தடம்புனற்சண்பையர்காவலன்சம்பந்தனே ” எனவருந் திருச்சண்பை விருத்தத்தாலும் அறிக.(௨௩)

அருமறைவணங்குங்கோயிற்கதவினையடைக்கப்பாடிப்
பரனுறைபதிகளெங்குந்தொழுதனர்பாடிப்பாடி
வருமவர்நுங்கணாட்டுவணங்கவும்வருவரென்னாத்
தருமநூலணிந்ததெய்வத்தாபதன்சாற்றலோடும்.

(இ-ள்.) அருமறை வணங்கும் கோயில் கதவினை அடைக்கபாடி - அரியவேதம்பூசித்து வணங்குந் திருக்கோயில் (தான்செல்லுதற்கமைத்த) திருக்கதவினையென்றுஞ் செல்லும் நெறியாக அடைக்கவுந் திறக்கவும் பாடியருளி, பரன் உறைபதிகள் எங்கும் தொழுதனர் பாடிபாடி வருமவர் - இறைவரெழுந்தருளுந் திருப்பதிகளெங்குஞ் சென்று வணங்கித் திருப்பதிகங்கள்பாடி வரும் பிள்ளையார், நுங்கள் நாட்டு வணங்கவும் வருவர் என்னா - உங்கள் பாண்டிநாட்டிலும் சோமசுந்தரக்கடவுளை வணங்கவும் வருவரென்று, தருமம் நூல் அணிந்த தெய்வத் தாபதன் சாற்றலோடும் - (வேதத்தில்விதித்த) தருமத்தின்படி யுபவீதமணிந்த பூசுரன் கூற.

Koviloor Digital Library

திருமறைக்காட்டிற் சேர்ந்த வேதம் பூசித்த முடிப்போன திருக்கதவினை யாளுடையரசுகளால் திறப்பித்துப் பின்பு அது திறக்கவுமூடவுமா யிருக்கும்படி திருப்பதிகம் ஓதியருளினர் எனபதை "அருமறைகடிருக்காப்புச்செய்தவைந்தவக்கதவந்திறந்திடவம்மறைகளோதும் - பெருமையவன்புடையடியாரணைந்துநீக்கப் பெருமைமிகுலன்றமுதலாகப்பின்னை - ஒருபுடையோர்வாயிலமைத்தொழுகுந்தன்மையுள்ளபடிகேட்டருளியுயர்த்தசண்பைத்- திருமறையோர்தலைவர்வியப்பெய்திநின்று- திருநாவுக்கரசருக்குச் செப்புகின்றார். அப்பரேவேதவனத்தையர்தம்மை யபிமுகத்தத்திருவாயிலதிற்புக்கே - யெப்பரிசுநாமிறைஞ்ச வேண்டுகோயிவ்வாயிற்திருக்காப்பு நீக்குமாறு - மெய்ப்பொருள்வண்டமிழ்பாடியருளுமென்ன விளங்குமொழிவேந்தரதுமேற்கொண்டென்னை - இப்பரிசுநீரருளிச்செய்திராகி லிதுசெய்வேனெனப்பதிகமெடுத்துப்பாட. பாடியவப்பதிகப்பாட்டானபத்துப்பாடவிரம்பியபின்னும் பைம்பொன்வாயிற் - சேமியர்பொற்கதவுதிருக்காப்புநீங்காச் செய்கையினாலவாகீசர்சிந்தைசோர்ந்து - திருக்கடைக்காப்பிலரிதுவேண்டிநின்றெடுக்கத்திருக்கதவுநீக்கக்காட்ட - அடியசேவடியார்தமடியார்விண்ணோரார்ப்பெழுந்ததி லாண்டமனைத்துழந்த. புறம்புவந்தணைந்தபோது புகலிகாவலனைநோக்கி - திறந்திளர்மணிக்கபாடந்தவுமடைப்பதற்கத் - திறந்தவாறடைக்கப்பாடியருளுநீரென்றார்திய - மறம்புரியமணர்செய்த வஞ்சனைகடக்கவல்லார். அன்றரசருளிச்செய்ய வருமறைப்பிள்ளையாரும் - வென்றிவெள்விடையார்தம்மை விருப்பினாற்சதுரமென்றும் - இன்றமிழ்ப் பதிகப்பாட லிசைத்திடவிரண்டுபாலும்-நின்றவக்கதவுகாப்பு நிரம்பிடவடைத்தவன்றே" என ஷேபுராணத்தில் வருதல்காண்க. வருமவர் அவர் பகுதிப்பொருள்விகுதி.

கற்பலர்கொடியன்னாருந்தென்னவல்கண்போல்வாரு
மற்புனையமண்பேயோட்டியன்றுதங்கோமான்மெய்யிற்
பொற்புறுநீறுகண்டுபூதிசாதனத்தாலெய்துஞ்
சிற்பரவீடுகண்டமகிழ்ச்சியுட்டிளைத்தோரானார்.

(இ-ள்.) கற்பு அலர் கொடி அன்னாரும் தென்னவன் கண் போல்வாரும் - கற்பாகியமலர்மலர்ந்த பூங்கொடியையொத்த பாண்டிமாதேவியாரும் பாண்டியனது கண்போன்ற குலச்சிறையாரும், அன்று அல் புனை அமண் பேய் ஓட்டி - அன்றே யிருளையொத்த சமணராகிய பேய்களைத் துரத்தி, தம் கோமான் மெய் இல் பொற்பு உறு நீறு கண்டு - தமது தலைவனாகிய பாண்டியனது உடம்பில் பொலிவுமிக்க திருநீற்றைக்கண்டு, பூதிசாதனத்தால் எய்தும் சிற்பரவீடுகண்ட மகிழ்ச்சி உள் - பூதிசாதனங்களாலடையும் ஞானமயமாகிய பரமுத்தியைக் கண்கூடாகக்காணலால் விளையுஞ் சிவானந்தத்தில், திளைத்தோர் ஆனார் - தேக்கெறியநுகர்ந்த சிவஞானமுடையவர்போலாயினார்கள்.

அமண்-சமணரதுகூட்டம். வந்த மறையவன் வாய்மொழியைக் கேட்டவன்றே தமதுகருத்து முற்றியதாமகிழ்ச்சியிலாழ்ந்தனர் என்பார் தங் கோமான்மெய்யிற் - பொற்புறுநீறுகண்டு பூதிசாதனத்தாலெய்துஞ் - சிற்பரவீடுகண்ட மகிழ்ச்சியுட்டிளைத்தோரானார். என்றார். (௨௫)

தங்கள்பேர்திட்டியோலைவிண்ணப்பஞ்சண்பைநாடர்
புங்கவர்க்குணர்த்தவந்தப்பூசுரன்கையிற்போக்கி
மங்கையர்க்கரசியாருமரசற்குமருந்தன்னாரு
மங்கயற்கண்ணிகோனைப்பணிந்துதம்மகத்திற்புக்கார்.

(இ-ள்.) சண்பை நாடர் புங்கவர்க்கு உணர்த்த - சீகாழியிலவதரித்தவரும் மேலானவருமாகிய பிள்ளையார்க்கு உணர்த்த, தங்கள்பேர் விண்ணப்ப ஓலை தீட்டி - தங்கள்பேரால் விண்ணப்பத்திருமுக மெழுதி, அந்த பூசுரன் கையில் போக்கி - அந்தமறையவன்கையிற் கொடுத்துப் போக்கி, மங்கையர்க்கு அரசியாரும் அரசற்கு மருந்து அன்னாரும் - பாண்டிமாதேவியாரும் கூன் பாண்டியனுக்கு மலநோயையொழிக்கும் அமுதை யொத்த குலச்சிறையாரும், அங்கயற்கண்ணிகோனை பணிந்து தம் அகத்தில் புக்கார் - அங்கயற்கண்ணியாரிறைவராகிய சோமசுந்தரக்கடவுளை வணங்கித் தமது கோயிலையடைந்தார்கள்.

கிருஷ்ணாவதாரத்தில் கோபாலமக்கள் யாவரும் துருவாசமுனிவரை யவமதித்துத் தங்களுளொருவன் கர்ப்பிணிமாதென வேடங்கொள்ளச்செய்து அம்முனிவராச்சிரமத்தை யடைந்து இவளுக்குப்பிறப்பது ஆணோ பெண்ணோவென்று வினவ, அவர் இவர்கள் கருத்தையுணர்ந்து பிறப்பது ஆணுமல்ல பெண்ணுமல்ல உங்கள் மரபையழிப்பதற்கு இருப்புலக்கை பிறக்குமென்று சபித்தனர், அந்தச் சாபம் எளிதல்லாமையா லுடனேயவன் வயிற்றினின்றும் ஓரிருப்புலக்கை வீழ, அதனைக் கண்ணமூர்த்தியுணர்ந்து இச்சாபமிகக் கொடிதல்லவாவென்று அதனை யராவிச் சமுத்திரத்திற்கொண்டு போடும்படி கட்டளையிட்டனர், அவ்வாறேயராவிய இருப்புத்துளைக்கொண்டுபோய்ப்போட அதில் ஓர் வேப்பம் வித்தளவு நின்ற இருப்புத்துண்டை யக்கடலில் விழுங்கிய ஒருமீன் வலைகாரன் கையிலகப்பட்டது, அதனை வாங்கிய ஒரு வேட்டன் மீன்வயிற்றிலுள்ள இருப்புத்துண்டைக் கண்டு அதனைக் கூர்மையாக்கித் தன் அம்பின் தலையில்வைத்தனன், சமுத்திரத்திற் போடப்பட்ட இருப்புத்துள்கள் அலைகளால் ஒதுக்கப்பட்டு அக்கடற்கரையில் சண்பைகளாக முளைத்துக் கதிர்விட்டிருந்தன. ஓர்காலத்தி லக்கோபால குமாரர்கள் கடற்கரைக்குச் சென்று விளையாடி வருவோமென இரண்டுபகுதியாகப் பிரிந்துபோய் விளையாடும்போது, ஒருவர்மேலொருவர் அச் சண்பைக் கதிர்களைக் கொய்து வீசி யிறந்தனர், இது தெரிந்த அக்கண்ணமூர்த்தி நமக்கு மரணதசை சமீபித்ததென்று ஓராலவிருக்ஷத்தின் ஆலிலையையேயாசனமாகக்கொண்டு ஒருபாதத்தைமடித்து ஒருபாதத்தைத் தூக்கிக்கொண்டு அமர்ந்திருக்கும்போது, பக்ஷிசாலங்களைத் தேடிவந்த அவ்வேடன் தூக்கியிருந்த பாதத்தைச் செம்பருந்தெனக்கருதி அந்தப் பாணத்தைத் தொடுக்க அதுபட்டு அக்கண்ணமூர்த்தி பரமபதமடைந்தனர். இந்தப் பிரமகத்தியாற் கோட்பட்ட அம்முனிவர் நலிவுற்றுச் சீகாழியையடைந்து இறைவனைப் பூசித்து அச்சண்பைத் தோஷத்தால்வந்த தோஷத்தை மாற்றிக்கொண்ட காரணத்தால் சீகாழிக்குச் சண்பையென்பது ஒரு திருநாமமாக அறிக. (௨௬)

பண்படுவேதச்செல்வன்வல்லைபோய்ப்பழனவேலிச்
சண்பையர்பிரானைக்கண்டுபறியுண்டுதலைகளெல்லாம்
புண்படத்திரியுங்கையர்பொய்யிருள்கடந்தார்தந்த
வெண்படுமோலைகாட்டிப்பாசுரமெடுத்துச்சொன்னான்.

(இ-ள்.) பண்படு வேதச் செல்வன் வல்லைபோய் - இசையமைந்த மறைவலாளன் விரைந்துசென்று, பழனம் வேலி சண்பையர் பிரானைகண்டு - வயலையேவேலியாகவுடைய சீகாழியி லவதரித்த பிள்ளையாரைத் திருமறைக்காட்டில் தரிசித்து, தலைகள் எல்லாம் பறியுண்டு புண்பட திரியும் கையர் பொய் இருள் கடந்தார்தந்த - தலைகளெல்லா மயிர்பறிக்கப் படுதலால் புண்ணாகத்திரியும் கீழ்மக்களாகிய சமணர

Koviloor Digital Library

ஆ பொய்மொழியாகிய அந்தகாரத்தை யொழித்த பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாருங் கொடுத்த, என் படும் ஓலை காட்டி பாசுரம் எடுத்து சொன்னான் - மதிக்கத்தக்க திருமுகத்தைக்காட்டி யத்திருமுகத்தில் வரைந்த வாசகத்தை யெடுத்துக் கூறினான்.

செய்யுளாக வாசகத்தை வரைந்திருத்தலால் பாசுரம் என்றார். திருமறைக் காட்டிற் கண்டு என்றது "காதலால் மிக்கோர்தாங்கள் கைதொழுங்கருத்தினாலே- போதவிழ்சோலைவேலிப் புகலிகாவலனார் செய்ய - பாதங்கள்பணிமினென்று பரிசனமோக்கடம்மை - மாதவஞ்சுருதிசெய்த மாமறைக்காட்டில்விட்டார்" என ஷைபுராணத்தில் வருதல்காண்க. (௨௭)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வெங்குருவேந்தரடிபணிந்தடியேன்குலச்சிறைவிளம்பும்விண்ணப்ப
மிங்கெழுந்தருளிச்சமணிருளொதுக்கியெம்மிறைமகற்குநீறளித்துப்
பொங்கிரும்பணைசூழ்தென்றமிழ்நாட்டைப்பூதிசாதனவழிநிறுத்தி
யெங்களைக்காக்கவென்றபாசுரங்கேட்டெழுந்தனர்கவுணியர்க்கிறைவர்.

(இ-ள்.) வெங்குரு வேந்தர் அடிபணிந்து - சீகாழியிலவதரித்த பிள்ளையார் திருவடிகளை வணங்கி, அடியேன் குலச்சிறை விளம்பும் விண்ணப்பம் - அடியேனாகிய குலச்சிறை யத்திருவடிகளுக்கு அறிவிக்கும் விண்ணப்பமாவது, இங்கு எழுந்தருளி - இவ்விடத்திலெழுந்தருளி, சமண் இருள் ஒதுக்கி - சமணாகிய இருளினைக்கடிந்து, எம் இறை மகற்கு நீறு அளித்து - எமது அரசனுக்குத் திருநீற்றுச்செல்வந் தந்து, பொங்கு இரும்பணை சூழ் தென் தமிழ் நாட்டை - விளங்கும் பெரிய வயல்சூழ்ந்த தென்றிசையிலுள்ள பாண்டிநாட்டை, பூதிசாதனம் வழி நிறுத்தி - பூதிசாதனங்களின் வழியில் நிறுத்தி, எங்களை காக்க என்ற பாசுரம் கேட்டு - எங்களைக் காக்கக்கடவீரென்னும் பொருளைக்குறித்த பாசுரத்தினைக்கேட்டு, கவுணியர்க்கு இறைவர் எழுந்தனர் - கவுணியகோத்திரத்துக்குத் தலைவராகிய அப்பிள்ளையாரெழுந்தருளினார்.

பாண்டிநாடு முற்றும் பூதிசாதனங்களிழந்ததனவென்பார் பூதிசாதனவழி நிறுத்தி என்றார். தேவர்களுக்குக் குருவாகிய பிரகஸ்பதி ஒருகால் என்னை யொப்பாருளருண்டோவென்று இறுமாப்படையப் பெருமானார் இவன் அகங்காரத்தை யொழிக்கவேண்டுமென்று திருவுளத்தடைத்துத் தேவர்களுக்குக் குருவாயிருக்கும் அதிகாரத்தை யொழித்தருள, அப்பிரகஸ்பதி யுணர்ந்து இந்தச் சிவ அபராதத்தை யொழிக்குந் திருப்பதியை நாடிச் சீகாழியை யடைந்து பெருமானாரைப் பூசித்துப் பண்டுபோலத் தேவகுரு அதிகாரத்தைப்பெற்ற காரணத்தால் வெங்குரு எனச் சீகாழிக்கு ஒரு திருநாமம் என வுணர்க. (௨௮)

ஆதகாதிதுவென்றோதுவார்நாவுக்கரையர்நீர்சிறியவரவரோ
பாதகமஞ்சார்தம்மொடும்பன்னாட்பழகியவெனையவர்செய்த
வேதனையளந்துகூறுவதென்னைவிடுகதில்லம்மவோவுமக்கிப்
போதுநாள்கோள்கள்வலியிலவென்னப்புகலியர்வேந்தரும்புகல்வார்.

(இ-ள்.) ஆ இது தகாது என்று ஓதுவார் நாவுக்கரையர் - ஆ இது தக்கதன்றென்று மறுத்துக்கூறும் திருநாவுக்கரசுகள், நீர் சிறியவர் - நீரோ பிள்ளைமைப்பருவமுடையீர், அவர் ஓ பாதகம் அஞ்சார் - அவர்களோ கொலைமுதலிய பாதகஞ்செ

ய்தற்குச் சிறிது மஞ்சார்கள், தம் ஒடும்பல் நாள் பழகிய என்னை-அவர்களோடும் பலநாள் பழகிய வென்னை, அவர்செய்தவேதனை அளந்து கூறுவது என்னை-அவர்கள் செய்த துன்பங்களை யளந்து சொல்வதால் வரும் பயன் யாது, விடுக - (அக்கருந்தை) விடக்கடவீர், அம்ம - கேண்மின், உமக்கு இப்போது நாள் கோள்கள் வலியில என்ன - உமக்கு இக்காலையில் நக்ஷத்திரங்களும் நவகோள்களும் தத்தமக்குரிய நிலை பிறழ்ந்து செல்வனவென்று கூறியருள, புகலியர் வேந்தரும் புகல்வார் - சீகாழியிலவதரித்த பிள்ளையாருங் கூறியருளுவாராயினர்.

ஆ, ஓ என்னும் இடைச்சொற்கள் இரக்கப்பொருளில்வந்தன. அம்மஎன்னும் இடைச்சொல் கேண்மின் என்னும் பொருளில்வந்தது. அவர் சமயத்திற் புகுந்து அவரோடிடைவிடாது பழகிய பயிற்சியையுஞ் சற்றுங் கருதியிரங்காது எம்முயிர்க்கிறுதி செய்ய, நீற்றறையிலிட்டும் விஷங்கலந்த பாலூட்டியும் மதயானை பாயத்தூண்டியும் கற்றூணோடு பிணித்துக் கடலிற்போட்டும் பெருந்துன்பம் விளைத்தலால் நட்டார்க்கும் இடுக்கண்செய்யும் பெரும்பாதகர்கள் என்பார் அவரோ பாதகமஞ்சார் எனவும், அளந்து கூறுவதென்னையெனவுங் கூறியருளினர். தேவருலகைச் சூரபத்மனென்னு மசுரனடைந்து அவர்களோடு போர்செய்ய, தேவேந்திரன் முதலியோர் அவனோடு போரேற்றுத் தோற்று இனிச் சிவபெருமானார் திருவடித்துணையே நமக்குப் புகலிடமாவதெனக் கருதிச் சீகாழியில்வந்து இறைவனை வழிபட்டு நிற்கக் கருணைகூர்ந்து முருகக்கடவுளை யவர்களிடுக்கண்களைகவெனத் தந்தகாரணத்தாலவர்களுக்குப் புகலிடமாய் நிற்றலில் சீகாழிக்குப் புகலியென்பது ஒருதிருநாமம். இல் அசைநிலை. (௨௧)

எந்தையெம்பெருமானருளிலார்போலவின்னணமிசைப்பதெனவர்செய்
வெந்தவேதனையினுய்ந்தநீர்நாள்கோள்விலங்குபுள்ளவுணர்பேய்பூத
மந்தமில்பலவுமம்மையோடப்பனாணையானடப்பனவவர்நஞ்
சிந்தையேகோயில்கொண்டுவீற்றிருப்பத்தீங்கிழையாவெனவெழுந்தார்.

(இ-ள்.) எந்தை - என் தந்தையே, எம்பெருமான் அருளிலார் போல - எமது பெருமானார் திருவருள் பெறாதவர்போல, இன்னணம் இசைப்பது என் - இவ்வாறு கூறுவதுயாது, அவர் செய் வெந்த வேதனையின் நீர் உய்ந்த (அது) அத்தியர்கள்செய்தலால் நொந்து கன்றியவேதனையினின்று நீர் தப்பிப் பிழைத்தகாரணத்தாலல்லவா, நாள் கோள் விலங்கு புள் அவுணர் பேய் பூதம் அந்தம் இல்பலவும் - நக்ஷத்திரங்களும் நவகோள்களு மிருகங்களும் பறவைகளும் அசுரர்களும் பேய்களும் பூதங்களும் ஆகிய அளவில்லாதவுயிர்கள் யாவும், அம்மையோடு அப்பன் ஆணையால் நடப்பன - அம்மையப்பராகிய நம்மிறைவரது ஆணை வழிப்பட்டு நடக்காநின்றன, அவர் நம் சிந்தையே கோயில்கொண்டு வீற்றிருப்ப-அப்பசுபதியாயுள்ள அவர் நமது இருதயத்தையே திருக்கோயிலாகக்கொண்டு நிகரின்றி யெழுந்தருளியிருத்தலால், தீங்கு இழையா என்ன எழுந்தார்-(அவைசிறிதும்)தீங்குசெய்யா என்று திருப்பதிகமோதியெழுந்தருளினார்.

காரணத்தால் சொல்லெச்சம். திருநாவுக்கரசுகள் விலக்க ஆளுடையபிள்ளையார் திருப்பதிகங்கூறி எழுந்தருளினர் என்பது "அரசரருளிச்செய்தின்றூர் பிள்ளையந்தவமங்கையர்வஞ்சனைக்கோரவதியில்லை - உரைசெய்வதளதுறகோடானுந்திய வெழுந்தருளவுடன்படுவதொன்றுதென்னப் - பரசவருநம்பெருமான்கழல்களென்றுற்பழுதணையாதெனப்பகர்ந்து பரமர்செய்யவினைசெய்மலர்த்தாள்போற்றிப் புகலிவேந்தர் - வேயுறுதோளியையெடுத்து விளம்பினரே" என ஷை புராணத்திலும்,

Koviloor Digital Library

நாள் முதலியன நம்மை நலியா என்பது "வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்லவீணைதடவி-மாசறுதிங்கள்கங்கைமுடிமேலணிந்தெ னுளமேபுகுந்தவதனால் - ஞாயிறுதிங்கள்செவ்வாய்புதன்வியாழம்வெள்ளி சனிபாம்பிரண்டுமுடனே - ஆசறுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. நஞ்சணிகண்டனெந்தைமடவாடனோடும்விடையேறுமெங்கள்பரமன் - துஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனால் - வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னுமிகையானபூதமவையும் - அஞ்சிடுநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. வாள்வரிவதளதாடைவரிகோவணத்தர்மடவாடனோடுமுடனாய் நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவந்தெனுளமேபுகுந்தவதனால்-கோளரியுழுவையோடு கொலையானைகேழல்கொடுநாகமோடுகரடி - ஆளரிநல்லநல்ல வவைநல்லநல்ல வடியாரவர்க்குமிகவே" எனவருந் திருப்பதிகத்தாலும் அறிக. (௬0)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மாமுரசொலிப்பச்சங்கங்காகளம்வாய்விட்டேங்கச்
சாமரைபனிப்பமுத்தின்பந்தரின்றாளத்தெய்வக்
காமருசிவிகைமேற்கொண்டமணிருள்கழுவுஞ்சோதி
யாமெனநெறிக்கொண்டீசனிடந்தொறுமடைந்துபாடி.

(இ-ள்.) மா முரசு ஒலிப்ப - பெரிய முரசமொருபாலொலிக்கவும், சங்கம் காகளம் வாய்விட்டு ஏங்க - சங்கமுந் திருச்சின்னமும் வாய்திறந்து ஒருபாலொலிக்கவும், சாமரை பனிப்ப - சாமரை மொருபால் வீசவும், முத்துப்பந்தரின் - முத்துப் பந்தலின் கீழ், தாளம் தெய்வக் காமரு சிவிகைமேற் கொண்டு - முத்தாலமைந்த தெய்வத்தன்மைபொருந்திய விருப்பஞ்செய்யுந் திருச்சிவிகை மேலாரோகணித்து, அமண் இருள் கழுவுஞ் சோதி ஆம் என்ன நெறிக்கொண்டு - அமணர் கூட்டமாகிய இருளையோட்டு மிளஞ்சூரியனைப்போல வழிக்கொண்டு சென்று, ஈசன் இடம் தொறும் அடைந்துபாடி - அங்குள்ள இறைவர் திருக்கோயில்கள் தோறுமடைந்து திருப்பதிகம் பாடியருளி.

திரு அகத்தியான்பள்ளி, திரு இடும்பாவனம், திரு உச்சாத்தான முதலிய திருப்பதிகளைவணங்கித் திருப்பதிகம் பாடியருளினர் என்பார் ஈசனிடந்தொறு மடைந்து பாடியெனவுங் கூறினர். (௬௧)

செம்பியனாடுநீங்கித்தென்னவனாடுநண்ணி
வெம்பியசுரமுமுல்லைப்புறவமுமேகவில்லைத்
தும்பிகைநீட்டிவாங்குமலைகளுந்துறந்துபாகத்
தம்பிகையுடையான்கூடனகர்ப்புறனணுகச்செல்வார்.

(இ-ள்.) செம்பியன் நாடு நீங்கி - சோணாட்டினின்று நீங்கி, தென்னவன் நாடு நண்ணி - பாண்டிநாட்டையடைந்து, வெம்பிய சுரமும் - (சூரியனால்) வெப்பமடைந்த சுரத்தையும், முல்லை புறவமும் - முல்லைநிலத்தையும், மேகம் வில்லை தும்பிகை நீட்டி வாங்கும் மலைகளும் துறந்து - மேகத்திற்றோன்றிய இந்திரதனுசை யானைதுதிக்கை நீட்டி வளைக்கு மலைகளையுங்கடந்து நீங்கி, பாகத்து அம்பிகை உடையான் கூடல் நகர் புறன் அணுக செல்வார் - இடப்பாகத்தில் உமாதேவியாரையுடைய சோமசுந்தரக்கடவுளின் திருவாலவாயின் புறத்தில் பொருந்தச் செல்வாராயினர். (௬௨)

Koviloor Digital Library

புண்ணியநீற்றுத்தொண்டர்குழாத்தினுட்புகலிவேந்தர்
நண்ணியசிவிகைமீதுநகைவிடுதரளப்பந்தர்
கண்ணியதோற்றந்தீம்பாற்கடல்வயிறுதித்துத்தீர்ந்து
விண்ணியன்முழுவெண்டிங்கள்விளக்கமேயொத்ததன்றே.

(இ-ள்.) புண்ணியம் நீறு தொண்டர் குழாத்தினுள் - திருநீற்றுப்பூச்சினையுடைய அடியவர் கூட்டத்தினடுவில், புகலி வேந்தர் நண்ணிய சிவிகைமீது நகைவிடு தரளம் பந்தர் கண் இயல் தோற்றம் - சீகாழியிலவதரித்த பிள்ளையாரெழுந்தருளிய முத்துச்சிவிகையின்மேல் ஒளிவீசும் முத்துப்பந்தலின் கண்களுக்குப் புலப்படுங் காட்சி, தீம் பால் கடல் வயிறு உதித்து தீர்ந்து - இனிய பாற்கடலின் வயிற்றிற்றோன்றி யதனினின்று நீங்கி, விண் இயல் முழுவெள் திங்கள் விளக்கம் ஒத்தது - விண்ணிற் சஞ்சரிக்குங் கலைகணிறைந்த சந்திரனது தோற்றத்தை யொத்திருந்தது.

சிவபுண்ணியத்தை விளைத்தலால் திருநீற்றுக்குப் புண்ணியம் என்பது காரணப்பெயர். அடியவர் கூட்டத்தினடுவுள் தோன்றுதலால் பாற்கடலினடுவிற்றோன்றிய சந்திரனாகவும், மேலே புலப்பட்டு விளங்குதலால் தீர்ந்து விண்ணியன் முழுவெண்டிங்கள் விளக்கமொத்தது எனவுங் கூறுதலால் ஒப்புமைக்கூட்ட வுவமையணி. கஙு

தேம்படுகுமுதச்செவ்வாய்ச்சிரபுரச்செல்வர்முன்னம்
போம்பரிசநத்தார்தம்மிற்பொன்னெடுஞ்சின்னமார்ப்போர்
தாம்பரசமயசிங்கஞ்சமணிருள்கிழியப்பானு
வாம்படிவந்தாரென்றென்றார்த்தெழுமோசைகேளா.

(இ-ள்.) தேம் படு குமுதம் செவ்வாய் சிரபுரம் செல்வர் முன்னம்-இனிமை பொதிந்த குமுதம்போன்ற செவ்வாயையுடைய சீகாழியிலவதரித்த பிள்ளையார் முன்னே, போம் பரிசநத்தார் தம்மில் பொன் நெடுஞ் சின்னம் ஆர்ப்போர் தாம் - செல்லும் பரிசநங்களுள் பொன்னாகிய நெடிய திருச்சின்னம் ஊதுவோர், பரசமய சிங்கம் - பரசமயகோளரி, சமண் இருள் கிழிய - சமணாகிய அந்தகாரஞ் சிதைந்தோட, பானு ஆம்படி வந்தார் என்று என்று ஆர்த்து எழும் ஓசை கேளா - இளஞ்சூரியன் வந்ததுபோல் வந்தருளினரென்று ஒலித்தெழுங் கோஷத்தைக்கேட்டு.

திருமால் பாற்கடல் கடைந்து அமிர்தெடுத்துத் தேவர்களை நிரைப்பட இருத்தி யவ்வமிர்தத்தைப் பகிர்ந்து கொடுத்துவரும்போது, இராகு கேதுக்க ளிரண்டும் தங்களுருவத்தை யொளித்து அவர்களோடிருப்பதைக்கண்டு பகிர்ந்துவந்த சட்டுவத்தினா லவர்கள் தலைகளைவெட்ட உடலிழந்த அப்பாம்புகள் உடல் தருவோன் சிவபெருமானேயன்றி வேறில்லையென்று சீகாழியையடைந்து பூசித்த காரணத்தால் சிரபுரம் எனத் திருநாமம் வந்ததென வறிக. (கச)

நின்றுண்டுதிரியுங்கையரெதிர்வந்துநீவிர்நுங்கள்
கொன்றறஞ்சொன்னதேவைக்கும்பிடவந்தாலிந்த
வென்றிகொள்சின்னமென்கொல்வீறென்கொல்யானைவென்றீ
ரொன்றனர்தடுத்தாரொன்றுமீறிலாரனடியார்தம்மை.

(இ-ள்.) நின்று உண்டு திரியும் கையர் - நின்றுகொண்டே யுண்டுதிரியும் சமணராகிய கீழ்மக்கள், எதிர் வந்து - பிள்ளையா ரெதிரேவந்து, நீவிர் - நீங்கள், நுங்கள் - உங்களுடைய, கொன்று அறம் சொன்ன தேவை கும்பிடவந்தால் - அனைத்

Koviloor Digital Library

தையுஞ் சங்கரித்தத் தருமக்கூறிய கடவுளை வணங்குவதால், இந்த வெற்றி கோன் சின்னம் என்சொல் பிற என்சொல் யானை வென்றீர் என்றனர் - இந்த வெற்றியமைந்த சின்னம் என் பரசமயகோளரியென்றும் பெருமையேன் (அப்பெயருக்கு ஏற்ப) எச்சமயத்தாரை வென்றீரென்று கூறி, என்று உம் ஈறு இல்லான் அடியார் தம்மை தடுத்தனர் - எக்காலத்துத் தலைக்கோ ரிறுதியில்லாதவனது அடியவரைத் தடுத்தார்கள்.

உயிர்களைக் கொன்றறஞ்சொன்னவனால் கொலை நிறைந்தது என இழிவுபடுத்துக்கூறுவார் கொன்றறஞ்சொன்னான் எனக் கூறினர் எனவும், அது உயிர்களின் விளைப்பொழித்தலென்பது தேறாத புல்லறிவினரெனக்கூறுவார் திரியுங்கையர் எனவும் சொன்னார். (கூடு)

மாமதமொழுகச்செல்லுந்திண்டிறன்மத்தவேழந்
தாமரைநூலாற்கட்டத்தடைபடவற்றேகொற்றக்
காமனைமுனிந்தார்மைந்தர்கயவர்தந்தடையைநீத்துக்
கோமணிமாடமூதூரடைந்தரன்கோயில்புக்கார்.

(இ-ள்.) மாமதம் ஒழுக செல்லும் திண்திறல் மத்தம் வேழம்-கரிய மதமொழுகச்செல்லும் திண்ணிய மதமயக்கத்தையுடைய யானையை, தாமரை நூலால் கட்ட - தாமரைநூலினாற்பிணிக்க, தடைபட வற்று ஓ - (அப்பிணிப்பு) தடைபடுக்கவல்லதோ, (இல்லையென்றபடி) கொற்றம் காமனை முனிந்தார் மைந்தர் - வெற்றியையுடைய மன்மதனை எரிபடுத்திய இறைவர் புத்திரராகிய பிள்ளையார், கயவர் தம் தடையை நீத்து - கீழ்மக்களாகிய சமணரது தடையினின்று நீங்கி, கோ - (எல்லா நகரங்களுக்கும்) அரசத்தன்மை வாய்ந்த, மணிமாடம் மூது ஊர் அடைந்து - இரத்தினமழுத்திய மாடங்கள் நெருங்கிய தொன்றுதொட்டுள்ள மதுரைத்திருநகரையடைந்து, அரன் கோயில் புக்கார் - இறைவர் திருக்கோயிலுட்சென்றனர்.

பிள்ளையாரை மதயானையாகவும், சமணர்செய்த தடையைத் தாமரைநூலாகவும், அத்தடை பிள்ளையாரைத் தடைபடுத்தவல்லது அன்மையால் தடைபடவற்றே எனவுங் கூறுதலால் ஒப்புமைக்கூட்ட வுவமையணி. (கூசு)

கைம்மலைச்சாபந்தீர்த்தகருணையங்கடலைத்தாழ்ந்து
மும்முறைவளைந்தஞானமுகிழ்முலைப்பாவியோடு
செம்மணிவள்ளத்தீந்ததிருவொடுந்தொழுதாநந்த
மெய்ம்மயவெள்ளத்தாழ்ந்துநின்றனர்வேதச்செல்வர்.

(இ-ள்.) வேதச்செல்வர் - பிள்ளையார், கைமலை சாபம் தீர்த்த கருணை அம் கடலை தாழ்ந்து - வெள்ளையானையின் சாபத்தைத் தீர்த்தருளிய அழகிய கிருபைக்கடலைப்பணிந்து, மும்முறை வளைந்து - பிரதக்ஷிணஞ்செய்து, ஞானம் - சிவஞானத்தை, முகிழ்முலை பாவியோடு செம்மணி வள்ளத்து ஈந்த திருவொடும் தொழுது - தாமரையரும்பையொத்த திருமுலைப்பாலோடு மாணிக்கத்தாலமைந்த பொற்கிண்ணத்தில் தந்தருளிய உமாதேவியாரோடும் வணங்கி, ஆநந்தம் மெய் மய வெள்ளத்து ஆழ்ந்து நின்றனர் - சிவாநந்தமென்று மென்றுமுள்ள வெள்ளத்திலழுந்தி நின்றனர்.

கடலை வணங்கி வெள்ளத்திலழுந்தினரென இரண்டுபொருளுக்குஞ் சம்பந்தங் கூறுதலால் தகுதியணி. (கூஎ)

Koviloor Digital Library

மறைவழிநின் றுநின்னைவந்திசெய் துய்யமாட்டா
நிறைவழிவஞ்சநெஞ்சச்சமணாநெறிகளெல்லாஞ்
சிறைபடவாதுசெய்யத்திருவுளஞ்செய்திகூற்றைக்
குறைபடவுதைத்தோயென் றுகுறித்துரைபதிகம்பாடி.

(இ-ள்.) கூற்றை குறைபட உதைத்தோய்-இயமனை யுயிர்சிதைய மார்க்கண்டேயருக்காக உதைத்தருளியவனே, மறை வழி நின்று நின்னை வந்தி செய்து உய்ய மாட்டாத நிறைவு அழிவஞ்சம் நெஞ்சம் சமணரை-வேதத்தில்விதித்தவழியில் நின்று நின்னை வணங்கிப்பிழைக்க அறியாத அறிவினிறைவழிந்த வஞ்சம்பொதிந்த மனத்தையுடைய சமணரை,நெறிகள் எல்லாம் சிறைபட வாதுசெய்ய திருவுளம் செய்தி என்று-அவர்கள் புன்னெறியெல்லாஞ் சிறைப்பட்டொழிய வாதுசெய்யும்படி திருவுளம் செய்வாயென்று, குறித்து உரை பதிகம் பாடி - குறித்துக்கூறுந் திருப்பதிகம் பாடியருளி.

அடியவர்க்காக இயமனையுதைத்தருளிய கருணாமூர்த்தி யாதலால் சமணரை வாதில்வெல்ல வருள்புரிவாய் என விசேஷியத்தை வாக்கியரூபமாகக் கூறுதலால் கருத்துடையடைகொளியணி. இவ்வாறே “ ஆலமேயமுதமாகவுண்டு வானவர்க்களித்துக் - காலனைமாற்கண்டற்காக் காய்ந்தனையடியேற்கின்று - ஞாலநின்புகழே யாக வேண்டுநான்மறைகளேத்தும் - சீலமேயாலவாயிற் சிவபெருமானேயென்றார்” என ஷெ புராணத்தில் வருதல்காண்க. சமணாநெறிகளெல்லாஞ் சிறைபடவாதுசெய்யத் திருவுளஞ்செய்தியென்று குறித்ததிருப்பதிகங்கள் “காட்டுமாவதுரித்துரிபோர்த்துடல் - நாட்டமூன்றுடையாயுரைசெய்வனான் - வேட்டுவேள்விசெயாவமண்கையரை - யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. வேதவேள்வியைநிந்தனைசெய்துழல் - ஆதமில்லியமணொடுதேரரை - வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே - பாதிமாதுடனாயபரமனே - ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென் - ஆலவாயிலுறையுமெம்மாதியே” எனவருதல்காண்க. (கஅ)

வேண்டுகொண்டருளைப்பெற்றுமீளுமப்போதுகண்டு
மூண்டவைம்பொறியுஃவென்றவாகீசமுனிகளென்ன
வாண்டுளாரொருவர்வேண்டவவர்திருமடத்திலன்பு
பூண்டெழுகாதலோடும்போயினார்புகலிவேந்தர்.

(இ-ள்.) வேண்டு கொண்டு அருளைபெற்று மீளும் அப்போது - திருவடியை வேண்டித் திருவருளைப்பெற்றுத் திரும்புமக்காலையில், மூண்ட ஐம்பொறியும் வென்ற வாகிசமுனிகள் என்ன ஆண்டு உள்ளார் ஒருவர்கண்டுவேண்ட - (தத்தம்புலன்களிற்செல்ல) மூளும் ஐந்திந்திரியங்களையும்வென்ற திருநாவுக்கரசுகளைப்போல அங்குள்ள ஓர்சிவயோகிகள் குறையிரக்க, அவர்திருமடத்தில் - அவரதுதிருமடத்தில், புகலிவேந்தர் - சீகாழியிலவதரித்தபிள்ளையார், அன்புபூண்டு எழுகாதலோடும் போயினார் - அன்புகூர்தலால் மேலெழுந்த விருப்பத்தோடு மடைந்தருளினார்.

உயிர்கள்பாற்கொண்ட அன்பே ஆசையைத்தருதலால் அன்புபூண்டெழுகாதலோடும் என்றார். திருநாவுக்கரசுகள் திருப்பூந்துருத்தியில் திருமடமொன்றமைத்து உழவாரத்தொண்டுசெய்துகொண்டு அங்குறைந்தருளும் நாளில், திருஞானசம்பந்தப்பிள்ளையார் சமணரைவாதில்வென்று சோணாட்டுக்கெழுந்தருளித் திருநாவுக்கரசுகளைக் காணவேண்டுமென்னும் விருப்பால் திருப்பூந்துருத்திக்குவர, அஃதுணர்

Koviloor Digital Library

ட்.ரு திருநாவுக்கரசுகளும் எதிர்கொண்டு சிவிகையைத்தாங்கிப் பிள்ளையாரால் அப்ப
ரேயென்றழைக்கச் சிவிகைதாங்கும் பெருவாழ்வுபெற்றேனென் றளவளாவித் தா
மமைத்த திருமடத்தி லெழுந்தருளச்செய்தனர் என்பது "அங்குறையுந்தன்மைவே
ண்டி நாமடிபோற்றுவதென்று - பொங்குதமிழ்ச்சொல்விருத்தம் போற்றியபாடல்பு
ரிந்து - தங்கித்திருத்தொண்டுசெய்வார் தம்பிரானுருள்பெற்றுத் - திங்களும்ஞாயி
றுந்தோயுந் திருமடமங்கொன்றுசெய்தார். பொன்னிவலங்கொண்டதிருப் பூந்துரு
த்தியவரிருப்பக் - கன்மனத்துவல்லமணர்தமைவாதிற்கட்டழித்துத் - தென்னவன்
கூனிமிர்த்தருளித் திருநீற்றிளொளிகண்டு - மன்னியசீர்ச்சண்பைநகர் மறையவனுர்
வருகின்றூர். நிந்தமிழ்நாட்டிடைநின்று மெழுந்தருளிச்செம்பொன்னி - வாய்ந்தவ
ளந்தருநாட்டு வந்தணைந்தார்வாக்கினுக்கு - வேந்தரிருந்தமைகேட்டு விரைந்தவர்பா
ற்செல்வனெனப் - பூந்துருத்திவளம்பதியின் புறம்பணையில்வந்திருந்தார். சண்பை
வருந்தமிழ்விரகரெழுந்தருளத்தாங்கேட்டு - மண்பரவும்பெருங்கீர்த்தி வாகீசர்மன
மகிழ்ந்து - கண்பெருகுங்களிகொள்ளக் கண்டிறைஞ்சுங்காதலினுல் - எண்பெருகு
ம்விருப்பெய்த வெழுந்தருளியெதிர்சென்றூர். காழியர்கோன்வருமெல்லை கலந்தெ
ய்திக்காதலித்தார் - குழுமிடைந்திடுநெருக்கிற் காணுமேதொழுதருளி - வாழியவர்
தமைத்தாங்கு மணிமுத்தின்சிவிகையினைத் - தாழுமுடலிதுகொண்டு தாங்குவன்யா
னெனத்தரித்தார். வந்தொருவரறியாமே மறைந்தவடிவொடும்புகலி, அந்தணனுரே
றியெழுந்தருளிவருமணிமுத்தின் - சந்தமணிச்சிவிகையினைத் தாங்குவாருடன்றாங்
கிச் - சிந்தைகளிப்புறவருவார் தமையாருந்தெளிந்திலரால். திருஞானமாமுனிவர
ரசிருந்தபூந்துருத்திக் - கருகாகவெழுந்தருளி யெங்குற்றூரப்பரென - உருகாநின்று
ம்மடியே ளும்மடிகடாங்கிவரும் - பெருவாழ்வுவந்தெய்தப் பெற்றிங்குற்றேனென்
றூர். கழுமலக்கோன்றிருநாவுக் கரசருடன்கலந்தருளிச் - செழுமதியந்தவழ்சோலை
ப்பூந்துருத்தித்திருப்பதியின் - மழுவிடைனுடைமானேந்து திருக்கரத்தார்மலர்த்தாள்க
ள் - தொழுதருகியின்புற்றுத் துதிசெய்தங்குடனிருந்தார்" எனத் திருநாவுக்கரசு
கள் புராணத்தில்வருதல்காண்க. (நகூ)

அங்கெழுந்தருளியெல்லினமுதுசெய்திருப்பவற்றைக்
கங்குல்வாயமணர்செய்யுங்கருதருஞ்செயலுந்தங்கண்
மங்கலமரபின்வந்தாள்வருத்தமுங்காணவஞ்சிச்
செங்கதிரவன்போய்மேலைச்செழுங்கடல்வெள்ளத்தாழ்ந்தான்.

(இ-ள்.) அங்கு எழுந்தருளி - அத்திருமடத்திற்கெழுந்தருளி, எல்லின் அமு
து செய்திருப்ப - பகற்பொழுதில் திருவமுதுசெய்து வீற்றிருப்ப, அற்றை கங்குல்
வாய் - அந்நாளிரவிற்பொழுதில், அமணர் செய்யும் கருதரும் செயலும் - சமணர்
கள் செய்யும் நினைத்தற்கரிய கொடுஞ்செயலையும், தங்கள் மங்கலம் மரபின் வந்தா
ள் வருத்தமும் காண - தங்களது மங்கலமமைந்த மரபில்வந்த பாண்டிமாதேவியா
ருடைய வருத்தத்தையுங்காண, செங்கதிரவன் அஞ்சிபோய் - சூரியன் பயந்து செ
ன்று, செழுமேலை கடல் வெள்ளத்து ஆழ்ந்தான் - செழித்த மேலைக்கடலி லத்தமித்
தனன். (சுo)

மாறுகொளமணர்செய்யும்வஞ்சனைக்கிடனுயொத்து
வேறறநட்புச்செய்வான்வந்தெனவிரிந்தகங்கு
லீறறமுளைத்தவான்மீனிளமலர்பறித்தசென்னி
யூறுபட்டெழுந்தமொக்குளொத்தவக்கங்குலெல்லை.

Koviloor Digital Library

(இ-ள்.) மாறு கொள் அமணர் செய்யும் வஞ்சனைக்கு இடன் ஆய் - (சைவத்தொடு) பகைமைகொள்ளும் சமணர்கள் செய்யும் வஞ்சனைக்குக் கொள்கலனாய், ஒத்து வேறு அற நட்பு செய்வான் வந்தால் என்ன - அவர்களொடு கலந்து ஒருமைப்பட நட்புச்செய்ய வந்தாற்போல, கங்குல் விரிந்தது - இராப்பொழுது பரந்தது, அ கங்குல் எல்லை - அந்த இராப்பொழுதில், ஈறு அற முளைத்த வான்மீன் இனம் - எல்லைகெட முளைத்த நக்ஷத்திரக்கூட்டங்கள், அவர் பறித்த சென்னி ஊறுபட்டு எழுந்த மொக்குள் ஒத்த - அச்சமணர்கள் மயிர் பறித்த தலையில் புண்பட்டெழுந்த கொப்புளங்களை யொத்தன.

விரிந்தது என்னும் வினைமுற்றினிறுதி தொகுத்தல். (௪௧)

கலிநிலைத்துறை.

வைதிகத்தனியிளஞ்சிறுமடங்கலேறடைந்த
செய்தியைத்தெரிந்தயன்மலையிடங்களிற்றிரண்ட
கைதவத்தவெண்ணாயிரங்கயவருமொருங்கே
யெய்திமுத்தமிழ்விரகர்மேற்பழித்தழல்விளைத்தார்.

(இ-ள்.) தனி - ஒப்பில்லாத, வைதிகம் - வைதிகமென்னும், இளஞ் சிறு மடங்கல் ஏறு அடைந்த செய்தியை தெரிந்து - இளஞ்சிங்க ஏறு தமது நாட்டிலடைந்தருளிய செய்தியைத்தெரிந்து, அயல் மலை இடங்களில் திரண்ட கைதவத்த எண்ணாயிரம் கயவரும்-அயலிலுள்ள மலையிடங்களில் கூடிய வஞ்சனையையுடைய எண்ணாயிரஞ் சமணரும், ஒருங்கே எய்தி-ஒருசேரவந்து, முத்தமிழ்விரகர்மேல் பழித்தழல் விளைத்தார்-முத்தமிழ்விரகர் திருமடத்தின்மேலே ஆபிசாரவேள்வி செய்தார்கள்.

வலியால் துரத்தல் தக்கதன்றென்று பாண்டியனோடு எண்ணி ஆபிசாரஞ்செய்து திருமடத்தில் தீக்கொளுவித் துரத்தலே தக்கதென்று கருதினாராதலால் முத்தமிழ்விரகர்மேற் பழித்தழல் விளைத்தார் என்றார். "வந்தவந்தணன்றன்னைநாம் வலிசெய்துபோக்கும் - சிந்தையன்றியச்சிறு மறையோனுறைமடத்தில் - வெந்தழற்படவிஞ்சைமந்திரத்தொழில்விளைத்தால் - இந்தநன்னகரிடத்திரானெனுமென்றிசைத்தார், ஆவதொன்றிதுவேயாகி லதனையேவிரைந்துசெய்யப் - போவதென்றவனைப்போக்கிப்பொய்பொருளாகக்கொண்டான்" என ஷையர் புராணத்தில் வருதல் காண்க. (௪௨)

மெய்யில்சிந்தையாரத்தழற்கடவுளைவிளித்தாங்
கெய்தியெம்பகையாயினோரிருக்கையையமுது
செய்துவாவெனப்பணித்தனர்சிறுவிதியகத்துக்
கையிழந்தவன்செல்லுமோவஞ்சினான்கலங்கி.

(இ-ள்.) மெய் இல் சிந்தையார் - பொய்யமைந்த மனத்தையுடைய சமணர்கள், அ தழற்கடவுளை விளித்து - அந்தத் தீக்கடவுளை யழைத்து, ஆங்கு எய்தி-அவ்விடத்தடைந்து, எம்பகையாயினோர் இருக்கையை அமுதுசெய்து வா என்ன பணித்தனர் - எமக்குப் பகையாயுள்ளவர் உறையுளைவாய் மடுத்துவரக்கடவாயென்று கூறினர், சிறு விதி மகத்து கை இழந்தவன் செல்லுமோ - தக்கன் வேள்வியில் கையிழந்தவனாதலாற் செல்லுவானோ, கலங்கி அஞ்சினான் - மனந் துணுக்குற்றஞ்சினான்.

"ஆதிமந்திரமஞ்செழுத்தோதுவார்நோக்கு - மாதிரத்தினுமற்றைமந்திரவிதி வருமோ - பூதிசாதனர்மடத்திற்கும்புனைந்தசாதனைகள் - சாதியாவகைகண்டமண்

குண்டர்கடளர்ந்தார்" என ஷெ புராணத்தில் வருதல் காண்க. தக்கன்யாகத்தித் சிவபெருமானருள்வழி வீரபத்திரக்கடவுள் சென்று நீ முறைப்படி யிறைவனுக்கு அவியை முன்தருகவெனக் கூற, அவன் மறுத்தவுடனே கோபமூண்டு தக்கன் முதலியோரைச் சாடிச்சேர்ந்தபோன திக்கடவுளின்மையைத் தடிந்தனர் என்பது காந்தம்யாக சக்கரப்படலத்தில் "அண்டர்கோன்விழ்ந்திடவலமர்தோடிய - திண்டிறலக்கிலைத்திறக்கோள்சேவகன் - கண்டனனக்கவன்கரத்தையொல்லையில் - துண்டமதாகவேதுணித்துவிட்டிறன்" எனவருதல் காண்க. (சங)

ஈனர்தாஞ்சட்டத்தீயினையெடுத்தனரேகி
ஞானபோனகர்மடத்தினிற்செருகினார்நந்தா
தானதீப்புகையெழுவதையடியவர்கண்டு
வானநாயகன்மைந்தருக்குணர்த்தினார்வல்லே.

(இ-ள்.) ஈனர்தாம் சட்டத்தீயினை எடுத்தனர் ஏகி - இழிமக்களாகிய சமணர்கள் கட்புலக்களுக்குத் தோன்றாத் தீயினையெடுத்துச் சென்று, ஞான போனகர் மடத்தினில் செருகினார் - சிவஞானத் திருவமுதுசெய்த பிள்ளையார் திருமடத்தினிலிட்டார்கள், நந்தாது ஆன தீ புகை எழுவதை - கெடாதபற்றியெழுந்த தீயின்புகை மேலெழுவதை, அடியவர் கண்டு வல்லே வான நாயகன் மைந்தருக்கு உணர்த்தினார் - அடியவர்கள்பார்த்து விரைந்து இறைவர்புத்திரராகிய பிள்ளையார்க்குத் தெரிவித்தனர்.

அரசன்முன்பு மந்திரத்தழலால் மடத்தைக்கொளுத்தித் துரத்துவோமென்றவர் தம்மந்திரத்தொழில் பயன்படாதொழிந்ததை யரசனறியில் நமது மேன்மையைத் தாழ்ப்படுத்தி மறுக்குவிட்டிருக்கும் விருத்தியையுமொழிப்பானென்றஞ்சித் தீக்கொளுவினார் என்பார் சட்டத்தீயினையெடுத்தனரேகி - ஞானபோனகர்மடத்தினிற் செருகினார் என்றார் "தளர்ந்தமற்றவர்தாஞ்செய்ததீத்தொழில்சரியக் - கிளர்ந்தவச்சமுங்கெழுமியகீழ்மையோர்கூடி - விளக்குமின்முடிவேந்தனி தறியினம்மேன்மை - உலக்கோலனமர் விருத்தியுமொழிக்குமென் றுணர்வார்" என ஷெ புராணத்தில் வருதல் காண்க. (சச)

சிட்டர்நோக்கியத்தீயினைத்தென்றமிழ்க்கூட
லட்டமூர்த்தியையங்கிருந்தருமறைப்பதிகந்
துட்டர்பொய்யுரைமேற்கொண்டுதொன்முறைதுறந்து
விட்டவேந்தனைப்பற்றெனப்பாடினார்விடுத்தார்.

(இ-ள்.) சிட்டர் நோக்கி - யாவர்க்குமேலாகிய ஆளுடையபிள்ளையார் பார்த்தருளி, அ தீயினை - அந்தத்தீயை, துட்டர் பொய் உரைமேற் கொண்டு - துட்டர்களுடைய பொய்மொழியைக் கைக்கொண்டு, தொல்முறை துறந்துவிட்ட வேந்தனை பற்று என - தன் முதாதை முதலியோரைத்தொட்டுவந்த மநுநூல் முறைமையைக் கைவிட்டொழிந்த பாண்டியனைப் பையச்சென்று பற்றுகவென்று, தென்தமிழ்க்கூடல் அட்டமூர்த்தியை அங்கு இருந்த அருமறை பதிகம் பாடினார் - தென்பாலுள்ள தமிழ்வழங்கும் நிலமாகிய நான்மாடக்கூடலி லெழுந்தருளிய இறைவனையங்கிருந்தவண்ணமேயுரிய வேதசாரமாகிய திருப்பதிகம்பாடி, விடுத்தார் - விடுத்தருளினார்.

Koviloor Digital Library

அட்டமூர்த்தியென்றது முன்னர்க் காண்க. அரசன் முறையினின்று வழுவினமையாலும் பாண்டிமாதேவியார் திருமங்கலங்காத்தற் கருத்துடையராதலாலும் தொன்முறை துறந்துவிட்ட வேந்தனைப் பற்றெனவிடுத்தார் என்றார் "என்பொருட்டவர்செய்த தீங்காயினுமிறையோன் - அன்பருக்கெய்துமோவென்றுபின்னையுமச்சம் - முன்புறப்பின்புமுனிவுறமுத்தமிழ்விரகர் - மன்புரக்குமெய்முறைவழுவெனமனங்கொண்டார். வெய்யதீங்கிதுவேந்தன்மேற்றெனும் விதிமுறையால் - செய்யனேதிருவாலவாயெனுந் திருப்பதிகம் - சைவர்வாழ்மடத்தமணர்களிட்டதீத்தழல்போய்ப் - பையவேசென்று பாண்டியற்காகெனப்பணித்தார். பாண்டிமாதேவியார் தமது பொற்பிற்-பயிலு நெடுமங்கலநாண்பாதுகாத்தும்" எனவரும் ஷைபுராணத்தா லுணர்க "செய்யனேதிருவாலவாய்மேவிய - ஐயனேயஞ்சலென்றருள்செய்யெனைப் - பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர் - பையவேசென்றுபாண்டியற்காகவே" என்பது திருப்பதிகம். (௬௫)

அடுத்ததக்கணத்தரசனைவெப்புநோயாகித்
தொடுத்ததிட்டபல்கலன்களுந்துகளெழப்பனிநீர்
மடுத்தசாந்தமுங்கலவையுமாலையுங்கருகப்
படுத்தபாயலுஞ்சருகெழப்புரவலன்பதைத்தான்.

(இ-ள்.) அ கணத்து ஏ அரசனை அடுத்தது - அப்பொழுதே பாண்டியனையடுத்து, வெப்பு நோய் ஆகி தொடுத்தது - சுரநோயாகித் தொடுத்தது, இட்டபல்கலன்களும் துகள் எழ - (அவ்வெம்மையால்) அணிந்தபல ஆபரணங்களும் வெந்து பொடியாகவும், பனிநீர்மடுத்த சாந்தமும் கலவையும் மாலையும்கருக - பனிநீர்கலந்த சந்தனமும் கூட்டுவர்க்கமு மலர்மாலையும் கரிந்துநீயவும், படுத்தபாயலும் சருகு எழ - படுத்தபடுக்கையுஞ் சருகாயெழவும், புரவலன் பதைத்தான் - பாண்டியன் பதைத்தனன்.

அடுத்தது முற்றெச்சம் தேற்றத்தில்வந்த ஏகாரந்தொகுத்தல். (௬௬)

வளவர்கோன்றிருமடந்தையுமந்திரரேறுந்
தளர்வடைந்துநன்மருத்துநூல்விஞ்சையர்தமைக்கூஉய்ப்
பளகில்பன்மருந்தருத்தவும்பார்வையினாலும்
விளைவதேயன்றிவெஞ்சுரந்தணிவதுகாணார்.

(இ-ள்.) வளவர்கோன் திருமடந்தையும் மந்திரர் ஏறும் தளர்வு அடைந்து - சோழன் திருமகளாராகிய மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மனநிலைதளர்ந்து, நல் மருத்துநூல் விஞ்சையர் தம்மைகூய் - நல்ல ஆயுள் நூலுணர்ந்த கல்வியில் வல்லவரையழைத்து, பளகு இல் பல்மருந்து அருத்தவும் - குற்றமில்லாத ஆயுள் நூற்படியமைந்த பலமருந்தினையூட்டுதலினும், பார்வையினாலும் - (அதற்கேற்ப) உபசரிப்பதிலும், விளைவது ஏ அன்றி வெம் சுரம் தணிவது காணார் - மேலுமேலும் பெருகுதலேயல்லாமல் அந்தக்கொடுஞ்சுரநோய் சிறிதுந்தணிவதைக்காணாராயினர்

என்னும்மைக்கேற்ப வினையெச்சத்தினின்று பிரிந்த தொழிற்பெயராகக் கொண்டு பொருள்கூறினும். (௬௭)

சவலைநோன்புழந்திம்மையுமறுமையுஞ்சாரா
வவலமாசரைவிடுத்தனரனைவரும்பார்த்துத்

Koviloor Digital Library

தவவலத்தினுமருந்தினுந்தணிந்திலதாகக்
கவலையெய்தினரிருந்தனர்விடிந்ததுகங்குல்.

(இ-ள்.) சவலைநோன்பு உழந்து - பயனில்லாததவத்தினை வருந்தித்தேடி, இம்மையும் மறுமையும் சாராத - இம்மைப்பயனையு மறுமைப்பயனையுமடையாத சவலம் மாசர்கள் விடுத்தவர் - வலியில்லாத அழுக்கடைந்த சமணர்களாயேவினர், அனைவரும் - அச்சமணரெல்லோரும், பார்த்து - (நேற்றிரவில் நாஞ்செய்ததீங்குவிளைந்ததோவென்று) நோக்கி, தவம்வலத்தினும் - தவவலத்தினாலும், மருந்தினும் - மருந்தினாலும், தணிந்திலது ஆக - தணியாதாக, கவலை எய்தினர் இருந்தனர் - துன்பமுற்றவர்களாயிருந்தார்கள், கங்குல் விடிந்தது - இராப்பொழுதுவிடிந்தது.

மனம்போல வுடலையும் தூய்தாகக் கொள்ளாதவராதலால் மாசர் எனவும் தாங்கள்செய்தநிந்தை தங்களுக்கே விளைந்ததாதலால் பார்த்து எனவும், இனித்தமது கோட்பாட்டுக்குக் கேடுதிவந்ததென்று கருதினராதலால் கவலையெய்தினர் எனவுங் கூறினர் "ஆனவன்பிணிநீங்கவழியமணர்களெல்லாம் - மீனவன்செயல்கேட்டலும் வெய்துயிர்த்தழிந்து - போனகங்குறுட் புகுந்ததின்விளைவுகொலென்பார் - மானமுந்தெரியாவகைமன்னன்மாடணைந்தார். என்றவனுரைப்பக்குண்டரெண்ணைங்கெட்டிருந்தவெல்லை" எனவும் ஷெ. புராணத்தில் வருதல்காண்க. (௪௮)

வட்டவாழியொன்றுடையதேர்ப்பரிதிதன்மருமான்
பெட்டகாதல்கூர்மருகனைப்பற்றியபிணிகேட்
டிட்டகாரிருளெழினியையெடுத்தெடுத்தங்கை
தொட்டுநோக்குவான்வந்தெனத்தொடுகடன்முளைத்தான்.

(இ-ள்.) வட்டம் ஆழி ஒன்று உடையதேர் பரிதி - வட்டமாகிய ஒருருள்பூண்ட தேரையுடைய சூரியன், தன்மருமான் பெட்ட காதல்கூர் மருகனை பற்றியபிணிகேட்டு - தனது புத்திரனாகிய சோழன்விரும்பிய அன்புமிக்க மருகனைவிடாது பற்றிய சுரநோயைக்கேள்வியுற்று, இட்டகார் இருள் எழினியை அங்கைதொட்டு எடுத்து எடுத்து நோக்குவான் வந்தால் என்ன - மறைவாக இட்ட கரிய இருளாகிய திரையினைத் தனதுகரங்களால் தொட்டு எடுத்து நோக்கவந்தாற்போல, தொடுகடல் முளைத்தான் - சகரர்தோண்டியகடலில் முளைத்தனன்.

சூரியன் கிரணத்துக்குக் கரம் என்பது ஓர்பரியாய நாமமாதலால் கையெனவும், சிறுகச்சிறுக ஒழித்தலால் எடுத்து எடுத்து எனவுங்கூறினர். (௪௯)

வாலிதாகியசைவவான்பயிரினைவளர்ப்பான்
வேலியாகியோரிருவரும்வேந்தனைநோக்கிக்
காலபாசமுஞ்சுடுமிநோயருமறைக்காழிப்
பாலராலன்றித்தீர்த்திடப்படாதெனப்பகர்ந்தார்.

(இ-ள்.) வாலிது ஆகிய - மறுவில்லாத, சைவம் வான்பயிரினைவளர்ப்பான் - சைவமென்னும் பெரியபயிரினைவளர்க்க, வேலி ஆகியோர் இருவரும் - வேலியாயுள்ள பாண்டிமாதேவியாருங் குலச்சிறையாரும், வேந்தனை நோக்கி - பாண்டியனைப்பார்த்து, காலபாசமும் சுடும் இ நோய் - காலனுடையபாசத்தையுஞ் சுடாநின்ற இந்தநோய், அருமறை காழிபாலர் ஆல் அன்றி - அரியவேதங்கள்நிறைந்த சீகாழியிலவதரித்த பிள்ளையாராலன்றி, தீர்த்திடப்படாது என்ன பகர்ந்தார் - (ஏனையோரால்) தீர்க்கப்படாதென்று கூறினார்கள்.

Koviloor Digital Library

மற்றைச்சமயங்களாகிய பயிர்களிலும் சைவமென்னும்பயிர் உயிர்க்குறுதித
ரும் பெரும்பயனை விளைத்தலால் வான்பயிர் எனவும், பிள்ளையார் திருவவதாரஞ்செ
ய்த திருப்பதியாதலால் அருமறைக்காழியெனவும், முன்னரே சமணர்செய்த தீங்
கால் இந்நோய் விளைந்ததென வுணர்ந்தோர் ஆதலால் பாலரானன்றித் தீர்த்திடப்ப
டாதெனப் பகர்ந்தார் எனவுங்கூறினர் "பாண்டிமாதேவியாரும் பயமெய்தியமை
ச்சர்பாரம் - பூண்டவர்தம்மைநோக்கிப் புகலியில்வந்துநம்மை - ஆண்டுகொண்டவ
ர்பாற்கங்கு லமணர்தாஞ்செய்ததீங்கு - மூண்டவாறிதனையதாகி முடிந்ததோவென்
றுகூற. கொற்றவனமைச்சனாருங் குலச்சிறையாருந்தாழ்ந்து - மற்றிதன்கொடுமை
யிந்த வஞ்சகர்மதில்கண்மூன்றுஞ் - செற்றவரன்பர்தம்பாற் செய்ததீங்கரசன்பாங்
கு - முற்றியதிவர்கடீர்க்கின் முதிர்வதேயாவதென்பார். இருதிறத்தவருமன்னனெ
திர்பணிந்திந்தவெப்பு - வருதிறம்புகலிவந்த வள்ளலார்மதுரைவந்து - அருகர்கள்
செய்ததீய வறுசிதமதனால்வந்து - பெருகியவிதற்குத்தீர்வு பிள்ளையாரருளேயென்
று" என ஷெ புராணத்தில் வருதல்காண்க. பாசமும் என்பதனிறுதியில் நின்ற உம்
மைகொலைமிகுதியை யுணர்த்திநிற்றலால் உயர்வுசிறப்புப்பொருட்டு. (௫௰)

பொய்யர்சார்பினைவிடாதவனிங்குநீர்புகன்ற
சைவர்நீறிட்டுப்பார்ப்பதுதகுவதோவென்ன
வையநீயெனைத்திறத்தினுலாயினுநோய்தீர்ந்
துய்யவேண்டுமேயிதனில்யாதுறுதியென்றுரைத்தார்.

(இ-ள்.) பொய்யர் சார்பினை விடாதவன்-பொய்ச்சமயத்தராகிய சமணரது
தொடர்ச்சியினை விடாதபாண்டியன், ஈங்கு நீர்புகன்றசைவர் நீறிட்டுபார்ப்பது தகு
வது ஓ என்ன-இவ்விடத்து நீவிர்கூறிய சைவர்கள் நீறுபூசி இந்நோயைப்பார்ப்பது
தக்கதோவென்று கூற, ஐய-ஐயனே, நீ எனைதிறத்தினுல் ஆயினும் நோய்தீர்ந்து - நீ
எந்தவகையினுலாயினு நோயினின்றுநீங்கி,உய்யவேண்டும் ஏ-பிழைக்கவேண்டுமல்ல
வா, இதனில் - இதைப்பார்க்கிலும், உறுதியாது என்று உரைத்தார் - (இவ்விருதிறத்
துள்) உனக்கு உறுதிபயப்பது யாதென்றுகூறினர்.

நோயினின்று நீங்குவது தக்கதோ, சைவர் நீறிட்டுப்பார்ப்பது தகாதென்ப
தோ உறுதியென்று வினவினர் என்பார் யாதுறுதியென்றார். (௫௧)

அழைமினீண்டெனவரசனுமிசைந்தனனார்வந்
தழையுமந்திரத்தலைமகன்றனிநகரெங்கும்
விழவுதூங்கநன்மங்கலவினைகளால்விளக்கி
மழலையின்றமிழ்விரகர்தம்மடத்தில்வந்தெய்தா.

(இ-ள்.) ஈண்டு அழைமின் என்ன அரசனும் இசைந்தனன் - இவ்விடத்தில
ழையுங்களென்று அரசனுமுடன்பட்டான், ஆர்வம் தழையும் மந்திரம் தலைமகன்-
அன்புமிக்க குலச்சிறையார், தனி நகர் எங்கும் விழவுதூங்க - ஒப்பில்லாத மதுரை
த்திருநகர்முழுதும் விழாமகிழ்ச்சிகொள்ள, நல்மங்கலம் வினைகளால் விளக்கி - நல்
ல அட்டமங்கலத்தொழில்களாலெங்கு மழகுபெறச்செய்து, மழலை இன்தமிழ்விர
கர் தம்மடத்தில் வந்து எய்தா - செவிக்கினிய முத்தமிழ்விரகராகிய பிள்ளையார்தி
ருமடத்தில்வந்தடைந்து.

அட்டமங்கலங்களாவன-சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு,
விளக்கு, கொடி, இணைக்கயல். பாண்டிநாடு சமண்பற்றொழிந்து பூதிசாதனங்கொ

Koviloor Digital Library

ண்டு என்றஞ்சுமோ எனப்பெருங்கவலை கொண்டவராதலின் அக்கவலை யின்றொழி ந்தின்புற்றனர் ஆதலால் ஆர்வம் தழையும் எனவும், குணியைக் குணமாகக்கூறுவது ஓர்மரபு வழுவமைதியாதலால் இனிமையையுணர்த்த மழலையெனவுங் கூறினார். தமிழ்விரகர் ஒருவரே முத்தமிழிலும் பேரறிவுடையார். (௫௨)

அன்றுகேள்வியாலருந்தியஞானவாரமுதை
யின்றுகண்களாலுண்டுகண்பெற்றபேறெய்திச்
சென்றிறைஞ்சினாரெழுந்திருந்தியமண்சூழ்ச்சி
வென்றசிந்தையீரென்றனர்பூந்தராய்வேந்தர்.

(இ-ள்.) அன்று - அக்காலையில், கேள்வியால் - (அந்தணன்கூறிய) சொல்லால், அருந்திய - (தமதுசெவியால்) பருகிய, ஆர்ஞானவமுதை - சுவைநிறைந்த ஞானவமிர்தத்தை, இன்று கண்களால் உண்டு - இப்பொழுது தமதுகண்களாற்பருகி, கண்பெற்றபேறு எய்தி - அக்கண்கள்பெற்றபயனையடைந்து, சென்று இறைஞ்சினார் - அண்மையிற்சென்று வணங்கினார், பூந்தராய் வேந்தர் - சீகாழியிலவதரித்தபிள்ளையார், தீ அமண் சூழ்ச்சி வென்ற சிந்தையீர் எழுந்திரும் என்றனர் - கொடியசமணரது தீய எண்ணத்தை வென்ற கருத்துடையீரெழும் என்றருளினார்.

செவியாற்பருகியதுபோலக் கண்களாலும் பருகினரென்பார்கள் பெற்றபேறெய்தியென்றார். சங்கநிதி பதுமநிதியென்று மிரண்டுநிதிகளும் தம்பால்வந்து குறையிரப்பார்வேண்டியகொடையப் பூவுந்தாராயுமாய்ப்பூசித்தலால் பூந்தராய் எனச் சீகாழிக்கு ஓர்பரியாயநாமமெனவுணர்க. (௫௩)

நன்றிருந்தனிரேயெனநகைமலர்த்தடந்தார்
வென்றிமீனவன்கற்பினார்தம்மையும்வினவ
வென்றுநம்மருளுடையவர்க்கெவன்குறையென்று
வொன்றுசேண்மைகூரன்பினாரிதனையுமுரைப்பார்.

(இ-ள்.) நன்று இருந்தனிர் ஏ என்ன - சுகமாயிருக்கின்றீரவென்று, நகை மலர் தட தார்வென்றி மீனவன் கற்பினார் தம்மையும் வினவ - விளங்கும் பெரியவாகைமலராலாகிய வெற்றிமாலையையணிந்த பாண்டியன் இல்லறக்கிழமைபூண்ட மங்கையர்க்கரசியாரையும்வினவ, என்றும் - எக்காலத்தும், நம் அருள் உடையவர்க்கு எவன் குறைஎன்று - உமது திருவருளைப்பெற்றுடையார்க்குக் குறை யாதுளதென்று - ஒன்றுசேண்மை கூர் அன்பினார் இதனையும் உரைப்பார் - ஒருமைப்பட்ட தம்பால்மிகுந்த அன்பினையுடைய குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் இச்செய்தியைக்கூறுகின்றார்கள்.

வெப்புறும்பாண்டிய னிப்பிணிதீர்க்க உங்களாற்கூறப்பட்டவர் வல்லராயின வரை யழையுமென மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாருஞ் சென்றனரென ஷை புராணத்திற்கூறுதலால் வென்றிமீனவன் கற்பினார் தம்மையும்வினவ என்றார் "பாயுடைப்பாதகத்தேரர் திருமடப்பாங்கர்ச்செய்த-தீவினைத்தொழிலைநோக்கி யுள்ளழி திருவுள்ளத்தான் - மேயவத்துயரங்க விருப்புறவிளைவினோடு - நாயகப்பிள்ளையார்த நற்பதம்பணிவாராகி. மன்னவனிடும்பைதீர மற்றவன்பணிமேற்கொண்டே- அன்னமென்னடையிருவு மணிமணிச்சிவிகையேறி - மின்னிடைமடவார்சூழ வேற்படையமைச்சனாரும் - முன்னிலாந்தேசுச்சைவ முதல்வனார்மடத்தைச்சார்ந்தார்" எனவருதல்காண்க. தெளிவுபற்றி நிகழ்காலம் இறந்தகாலமாக இருந்தனிர் என்று வினவியருளினமையிற் காலவழுவமைதி. (௫௪)

Koviloor Digital Library

கையர்மாளவுநீற்றினாற்கவுரியன்றேய
முய்வதாகவுமின்றுநும்மருளினாலொலிநீர்
வையைநாடன்மேல்வெப்புநோய்வந்ததாலதனை
யையதீர்த்திடல்வேண்டுமென்றடியில்வீழ்ந்திரந்தார்.

(இ-ள்.) கையர் மாளவும் - கீழ்மக்களாகிய சமணர்கள் இறுதியடையவும், நீற்றினால் கவுரியன் தேயம் உய்வது ஆகவும்-திருநீற்றுச்செல்வத்தால் பாண்டியனாடு பிழைக்கவும், இன்று - இப்பொழுது, நும் அருளினால் - தேவரீர்திருவருளால், ஒலிநீர் வையைநாடன்மேல் வெப்புநோய்வந்தது-ஒலிக்கும் நீர்மயமாகிய வையைநாட்டையுடைய பாண்டியன்மேல் சுரநோய்வந்தது, ஐய - ஐயரே, அதனை தீர்த்திடல் வேண்டும் என்று அடியில்வீழ்ந்து இரந்தார் - அந்நோயைத் தீர்த்தருளவேண்டுமென்று திருவடிமேல் வீழ்ந்து குறையிரந்தார்கள்.

பாண்டியனுக்கு வெப்புநோய்வந்தது சமண்சமயமிறத்தற்கும் பூதிசாதனங்கள் பாண்டிநாடு பரவுதற்குமே என்பார் வெப்புநோய்வந்தது எனவும், அது தேவரீர் திருவருளாலென்பார் அருளினால் எனவுங் கூறினார். (௫௫)

இரந்தவன்பருக்கன்னதாகென்றருள்சுரந்து
பரந்தநித்திலயானமேற்பனிக்கதிர்மருமான்
சுரந்தணிப்பலென்றேகுவானொத்துமெய்ச்சுருதி
புரந்தளிப்பவர்பாண்டியன்கோயிலிற்புகுவார்.

(இ-ள்.) இரந்த அன்பருக்கு அன்னது ஆக என்று அருள் சுரந்து - குறையிரந்த வவ்விருவர்களுக்கும் அவ்வாறே யாகக்கடவதென் றருள்பொழிந்து, நித்திலம்பரந்த யானம்மேல் - முத்துகள்பரவிய சிவிகையின்மேல், பனிக்கதிர் மருமான் சுரம் தணிப்பல் என்று ஏகுவான் ஒத்து - சந்திரன்மரபிற்றோன்றிய பாண்டியனது சுரத்தைத்தணிப்பேனென்று ஏகுதற்குத் திருவுளமியைந்து, மெய்ச்சுருதி புரந்து அளிப்பவர் பாண்டியன் கோயிலுள் புகுவார் - உண்மையாகிய வேதநெறியைப் பாதுகாத்து வளர்த்தருளும் பிள்ளையார் பாண்டியன் கோயிலுட்செல்வாராயினர்.

பெருங்கருணைசெய்தார் என்பார் அருள் சுரந்து என்றார். (௫௬)

வாயிலெங்கணுந்தூபமுமங்கலவிளக்குந்
தோயகும்பமுங்கொடிகளுஞ்சுண்ணமுந்துவன்றிச்
சேயகாகளவொலிமன்னன்செவிப்புலன்சுவைப்பக்
கோயிலெய்தினாரமணர்தங்கோளரியனையார்.

(இ-ள்.) வாயில் எங்கணும் - மாடவாயில்கடோறும், தூபமும் மங்கல விளக்கும் - தூபங்களு மங்கல தீபங்களும், தோயம் கும்பமும் கொடிகளும் சுண்ணமும் துவன்றி - சலம்பூரித்த பூரணகலசங்களும் துவசங்களும் மணங்கமழுஞ் சுண்ணப்பொடிகளும் நெருங்கவும், சேய காகள ஒலி - செந்நிறம்வாய்ந்த திருப்பொற்சின்னத்தின் கோஷத்தை, மன்னன் செவிப்புலன் சுவைப்ப - கூன்பாண்டியனது செவிப்புலன் சுவைக்கவும், அமணர் தம் கோளரி அனையார் - சமணர்களாகிய யானைகளுக்கு ஆண்சிங்கம்போன்ற பிள்ளையார், கோயில் எய்தினர்-பாண்டியன் கோயிலையடைந்தருளினர்.

பொன்னாற்செய்த திருச்சின்னமாதலால் சேயகாகளம் என்றார். (௫௭)

Koviloor Digital Library

காவலோன்மருங்கிட்டதோர்கதிர்மணித்தவிசின்
மேவினாரவர்நோக்கினான்மீனவன்றெளிந்து
வாவிதாழ்செழுந்தாமரையெனமுகமலர்ந்து
பாவியேன்பிணிதணித்தெனைப்பணிகொண்மினென்றான்.

(இ-ள்.) காவலோன் மருங்கு இட்டது ஓர் கதிர்மணி தவிசில் மேவினார் - பாண்டியன் தனது தலைப்பக்கத்திலிட்ட ஒப்பில்லாத இரத்நிமமழுத்திய பொன்னா ற்சமைந்த பீடத்தின்மேலெழுந்தருளினார், அவர் நோக்கினால் - அவரது திருவருட் பார்வையால், மீனவன் தெளிந்து - பாண்டியன் சிறிதுபிணி நீங்கி, வாவிதாழ் செழுந்தாமரை என்ன முகமலர்ந்து - தடாகத்தில் நிலைபெற்றன்றலர்ந்த தாமரைமலர் போல முகமலர்ச்சி கூர்ந்து, பாவியேன் பிணி தணித்து - அறியாமையாற் புன்சம யத்தொடக்குண்ட பாவியாகிய எனது ஆற்றற்கு அரிய சுரநோயைத்தணித்து, என்னை பணிகொண்மின் என்றான் - அடியேனைப் பூதிசாதன நெறிநின்று மலத்தொடக் கறப் பணிகொள்ள வேண்டுமென்று குறையிரந்தான்.

திருநோக்கத்தால் சிறிது பிணிதவிர்ந்து முழுமடம் ஒழிந்தான் என்பார் தெ ளிந்து பணிகொண்மினென்றான் என்றார். தனது தலைப்பக்கத்திட்ட பீடம் என்றது "கண்டவப்பொழுதேவேந்தன் கையெடுத்தெய்தநோக்கித்-தண்டுணர்முடியின்பா ங்கர்த் தபனியப்பீடங்காட்ட - வண்டமிழ்விரகர்மேவி யதன்மிசையிருந்தார்" எனவும், சிறிதுபிணி தவிர்ந்தது என்றது "செழிபருபிள்ளையார்தந் திருமேனிகாண ப்பெற்று - விழியுறநோக்கலாலே வெம்மைநோய்சிறிதுநீங்கி" எனவும், பூதிசாதன நெறிநின்று என்றது "என்றுமுன்கூறிப்பின்னும் யானுற்றபிணியைத்தீர்த்து - வெ ன்றவர்பக்கஞ்சார்வேன் விரகுளேடேலகழுமென்ன" எனவும் ஷை புராணத்தில் வருதல் காண்க. (ருஅ)

புலைத்தொழிற்குவித்தாயினோர்கேட்டுளம்புழுங்கிக்
கலைத்தடங்கடனீந்தியகாவலோயுன்றன்
வலப்புறத்துநோயிவரையுமற்றைநோயெமையுந்
தொலைத்திடப்பணியென்றனர்கைதவன்சொல்வான்.

(இ-ள்.) புலைத்தொழிற்கு வித்து ஆயினோர் கேட்டு - இழிமைத்தொழில் மு ளைத்தற்கு வித்தாயுள்ள சமணர்கள் கேட்டு, உளம் புழுங்கி - மனம் புழுங்கி, கலை தட கடல் நீந்திய காவலோய் - நூல்களாகிய பரந்த கடலை நீந்திய பாண்டியனே, உன் தன் வலப்புறத்து நோய் இவரையும் - உனது வலப்பாலிலுள்ள சுரநோயை இவரையும், மற்றை நோய் எம்மையும் - இடப்பாலிலுள்ள சுரநோயை யெம்மையு ம், தொலைத்திட பணி என்றனர் - தொலைக்கப் பணிப்பாயென்று கூறினார்கள், கை தவன் சொல்வான் - பாண்டியன் கூறுவான்.

பாண்டியன் தலைப்பக்கத்தில் பொற்பீடமமைத்ததையும், அதிலெழுந்தருள ச்செய்த என்பிணியைத் தவிர்க்க எனக் கூறியதைக்கேட்டும் பொறாதவராய்க் கூ றினார் என்பார் உளம்புழுங்கிப் பணியென்றனர் என்றார். "பிள்ளையார்செம்பொன் மணிப்பீடத்திலிருந்தபொழு - துள்ளநிறைபொறாமையினாலுழையிருந்தாரமணர்- கொள்ளுமனத்திடையச்சமுறத்தமுகக்கோபத்தீத் - துள்ளியெழுமெனக்கண்கள் சேவந்தபலசொல்லுவார்" என ஷை புராணத்தில் வருதல் காண்க. (ருக)

அலையசெய்திசொன்றிசையுமூன்சமணருமசோகன்
றலைநிலைந்துசைப்பிலியாற்றடவியுங்கரத்துக்

Koviloor Digital Library

கனைகொளாலிநீர்சிதறியுநெய்சொரிகனல்போற்
சினவிமேலிடக்கண்டனர்தீர்ந்திடக்காணார்.

(இ-ள்.) அனைய செய்திர் என்று இசையுமுன் - அவ்வாறே செய்யுங்களென்று சொல்லுதற்கு முன்னே, சமணரும்-சமணர்களும், அசோகன் தனை நினைந்து-அருகக்கடவுளைத் தியானித்து, கைபீலி ஆல் தடவியும் - கையிலேந்திய மயிற்பீலிக் கற்றையால் தடவவும், கரத்து - கையிலேந்திய, கனை கொள் ஆலி நீர் சிதறியும் - கமண்டலத்தில் நிறைந்த நீரை வீசவும், நெய் சொரி கனல்போல் - நெய்வார்த்த தீயைப்போல, சினவி மேலிட கண்டனர் தீர்ந்திடகாணார் - சுரங்கொதித்து மேலெழக் கண்டாரேயன்றித் தீரக்காணாராயினர்.

தடவி, சிதறி செயவெனெச்சத்திரிபுகள். (கூ0)

தீயர்மானமிக்குடையராய்ச்செருக்கழிந்திருப்பப்
பாயகேள்வியோர்புண்ணியப்பையுணீறள்ளிக்
காயுநோயதுதணித்திடக்கருதினாரதனை
மாயநீறெனவிலக்கினார்மாயைசெய்தழிவார்.

(இ-ள்.) தீயர் - கொடுந்தொழிலையுடைய சமணர்கள், மானம் மிக்கு உடையர் ஆய் செருக்கு அழிந்து இருப்ப - மான மிகவுமுடையவரா யிறுமாப்பழிந்து வாளா இருக்க, பாய கேள்வியோர் - பரந்த நூற்கேள்வியையுடைய பிள்ளையார், புண்ணியம் பை உள் நீறு அள்ளி - திருநீற்றுப்பையிலுள்ள விபூதியைத் திருக்கரத்தாலள்ளி, காயும் நோய் அது தணித்திட கருதினார் - சுட்டு வருத்தஞ் சுரநோயைத் தணிக்கக்கருதினார், மாயை செய்து அழிவார் - வஞ்சச்செயல்களைச் செய்தழியுஞ் சமணர்கள், அதனை மாயம் நீறு என்ன விலக்கினார் - அத்திருநீற்றை மாயையில் வல்ல நீறென்று விலக்கினார்கள். (கூக)

அண்டநாயகன்றிருமடைப்பள்ளிநீறள்ளிக்
கொண்டுவாருமென்றருமறைக்கவுணியர்கூறக்
கண்டுகாவலனேவலர்கைக்கொடுவந்தார்
வண்டுலாவுதார்வழுதிநோய்தணிப்பவர்வாங்கி.

(இ-ள்.) அண்டம் நாயகன் - பல்லாயிரகோடி யண்டங்களுக்கும் இறைவராகிய சோமசுந்தரக்கடவுளது, திருமடைப்பள்ளி நீறு அள்ளிக்கொண்டு வாரும் என்று - திருமடைப்பள்ளியிலுள்ள சாம்பலை யள்ளிக்கொண்டு வாருமென்று, அருமறை கவுணியர் கூற - (அருகிலுள்ளவரை நோக்கி) அரிய வேதங்களை யோதாதுணர்ந்த பிள்ளையார் கூறியருள, காவலன் ஏவலர் கண்டு கைகொடு வந்தார் - பாண்டியனேவல் செய்வோர் தெரிந்து கையிலள்ளிக்கொண்டு வந்தார்கள், வண்டு உலாவு தார் வழுதி நோய் தணிப்பவர் வாங்கி - வண்டுகள் தேனுண்டுலாவும் மாலையையணிந்த பாண்டியன் சுரநோயைத் தணித்தருளும் பிள்ளையார் திருக்கரத்தில் வாங்கி.

ஆலாஸ்ய மகாத்மியத்தில் திருமடைப்பள்ளி நீறு என்று கூறியிருத்தலால் இங்கும் அவ்வாறு கூறினார். (கூஉ)

மருந்துமந்திரம்யாவையுமறையுரைப்பதும்
பொருந்துமின்பவீடளிப்பதும்போகமும்பொருளுந்
திருந்துமாலவாயரன்றிருநீறெனச்செப்பி
யருந்துமின்னமுதனையசொற்பதிகமதறைந்து.

(இ-ள்.) மருந்து மந்திரம் யாவையும் - மருந்து மந்திரங்களெல்லாவற்றையும், மறை உரைப்பதும்-வேதம் விதந்து கூறுவதும், இன்பம் பொருந்தும் வீடு அளிப்பதும்- இன்பம் பொருந்திய பாமுத்தியைத்தருவதும், போகமும் பொருளும் - போகமும் பொருளுமாயுள்ளதும், திருந்தும் ஆலவாயான் திருநீறு என்ன செப்பி - திருந்திய திருவாலவாயான் திருநீறேயெனக் கூறியருளி, அருந்தும் இன் அமுது அனைய சொல் பதிகம் அது அறைந்து - பருகுமினிய தேவாமிர்தத்தையொத்த இனிய சொற்களமைந்த திருப்பதிகமருளி.

திருப்பதிகத்தில் "மாலொடயனறியாத வண்ணமுமுள்ளது நீறு - மேலுறை தேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு - ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவது நீறு - வாலமுதண்டமிடற்றெம்மாலவாயான்திருநீறே" எனவருந் திருப்பாசுரத்துள் "ஏலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவது நீறு" என்றமையால் மருந்து எனவும், "மந்திரமாவது நீறு" என வருதலால் மந்திரம் எனவும் "வேதத்திலுள்ளது நீறு" எனவருதலால் மறையுரைப்பதுவும் எனவும் "முத்திதருவது நீறு" எனவும் "அருத்தமதாவது நீறு" என வருதலால் பொருளும் எனவும் "இருமைக்குமுள்ளது நீறு" என வருதலால் போகமும் எனவும் திருநீற்றுத் திருப்பதிகத்துள் அடங்கிவருதலால் அவற்றைத்தொடுத்தும் "திரு ஆலவாயான்திருநீறே" என இறுதியில் வருதலால் "திருந்துமாலவாயான்திருநீறு" என விதந்தும் பதிகமதறைந்து என்றார். (௬௫)

மெய்யிலிட்டனர்வருடலும்வெஞ்சுரந்துறந்த
மையில்சிந்தையோர்வெகுளியிற்றணிந்ததுவாசஞ்
செய்ததண்பனிநீர்விரைசசந்தனந்திமிர்ந்தா
லெய்துதன்மையதாயினதிறைவலப்பாகம்

(இ-ள்.) மெய்யில் இட்டனர் வருடலும் - பாண்டியன் உடம்பில் வலப்பாலிட்டுத்தடவ, வெம் சுரம் - கொடிய சுரமானது, துறந்தமை இல் சிந்தையோர் வெகுளியில் தணிந்தது - இருவகைப்பற்றையுந் துறந்த குற்றமில்லாத மனமுடையவர்கள் கோபத்தைப்போலத்தானே தணிந்தது, இறை வலப்பாகம் - (ஆதலால்) பாண்டியனது வலப்பாகம், வாசம் செய்த - மணம் வீசிய, தண் பனி நீர் விரைசந்தனம் திமிர்ந்தால் எய்து தன்மையது ஆயினது - தண்ணிய பனிநீர் கலந்த வாசமமைந்த சந்தனத்தைப் பூசினாலொத்த குளிர்ச்சியையுடையதாயது.

எய்து உவமவாசகம். துறவிகட்கு வெகுளி தானேயொழிதலால் வெகுளியிற்றணிந்தது என்றார். (௬௬)

பொழிந்ததண்மதுத்தார்புனைபூழியர்கோனுக்
கிழிந்தசெய்கையர்கைதொடவெரியிடுசுரத்தாற்
கழிந்ததுன்பமுங்கவுணியர்கைதொடச்சுரந்தீர்ந்
தொழிந்தவின்பமுமிருவினையொத்தபோலொத்த

(இ-ள்.) தண் மது பொழிந்த தார்புனை பூழியர் கோனுக்கு - தண்ணிய தேனைச் சொரிந்த மாலையையணிந்த பாண்டியனுக்கு, இழிந்த செய்கையர் கை தொட எரியிடு சுரத்தால் கழிந்த துன்பமும் - இழிவுபட்ட தொழிலினையுடைய சமணர்கள் கையாற்பரிசிக்க மூளுஞ்சுரத்தால் மேலிடுஞ் சுரநோய்த்துன்பமும், கவுணியர் கை தொட சுரம் தீர்ந்து ஒழிந்த இன்பமும் - ஆளுடைய பிள்ளையார் திருக்கையாற் பரிசிக்க, சுரம் தீர்ந்து ஒழிந்த இன்பமும்-சுரநோய் நீங்கொழிதலால் வந்த இன்பமும், இருவினை ஒத்தபோல் - கன்மசமத்துவம் வந்ததுபோல, ஒத்த- (அவ்விரண்டும்) தம்முளொத்தன.

Koviloor Digital Library

சமணர்கள் பரிசத்தால் வருந்திங்கும் பிள்ளையார் பரிசத்தால் வருநன்மையுந் தம்முளொத்திருத்தலால் இருவினையொத்தபோலொத்தவென்றார் "மன்னவன்மொழிவனென்னே மதித்தவிக்காலமொன்றில் - வெந்நரகொருபாலாகும்வீட்டின்பமொருபாலாகும் - அன்றுநஞ்சொருபாலாகுஞ் சுவையமுதொருபாலாகும் - என்வயினொன்றினுற்றே னிருதிறத்தியல்புமென்றான்" என ஷை புராணத்தில் வருதல் காண்க. (சுரு)

ஐயவிச்சுரமாற்றரிதாற்றரிதென்று
வையைநாடவன்வல்லமண்மாசுதீர்ந்தடியே
னுய்யவேண்டுமேலதனையுமடிகளேயொழித்தல்
செய்யவேண்டுமென்றிரந்தனன்சிரபுரக்கோனை.

(இ-ள்.) வையை நாடவன் - வையைநதிசூழ்ந்த கன்னிநாட்டையுடைய பாண்டியன், ஐய - ஐயனே, இ சுரம் - இந்த இடப்பாலுள்ள சுரநோய், ஆற்று அரிது ஆற்று அரிது என்று - சகித்தலரிது சகித்தலரிதென்று கூறி, வல் அமண் மாசு தீர்ந்து - கொடியசமண்சமயமாகிய அழுக்கினின்று நீங்கி, அடியேன் உய்யவேண்டும் எல் - அடியேனாகிய யான் பிழைக்கவேண்டுமாகில், அதனையும் - அச்சுரநோயையும், அடிகளே ஒழித்தல் செய்யவேண்டும் என்று சிரபுரம் கோனை இரந்தனன் - தேவரீரேயொழித்தருளவேண்டுமென்று ஆளுடையபிள்ளையார்பால் குறையிரந்தனன்.

சமணாகிய சேற்றிற்படிந்தேனென்பான் வல்லமண்மாசுதீர்ந்து எனவும், அடியேன் புனிதமாதல் தேவரீராலென்பான் அடிகளேயொழித்தல்செய்யவேண்டுமென்றிரந்தனன் எனவுங் கூறினான் "வெந்தொழிலருகர்தோற்றீர் என்னைவிட்டகல நீங்கும் - வந்தெனையுய்யக்கொண்டமறைக்குலவள்ளலாரே - இந்தவெப்படையநீங்கவெனக்கருள்புரிவீரென்று - சிந்தையாற்றொழுதுசொன்னான் செல்கதிக்கணியனானான்" என ஷை புராணத்தில் வருதல்காண்க. (சுசு)

பிள்ளையாரிடப்பாகமும்பண்டுபோற்பெருமான்
வெள்ளைநீறுதொட்டங்கையானீவுமுன்மேனா
ளுள்ளகூனொடுவெப்புநோயொழிந்துமீனுயர்த்த
வள்ளன்மாசறக்கடைந்தவிண்மணியெனப்பொலிந்தான்.

(இ-ள்.) பிள்ளையார் - ஆளுடையபிள்ளையார், இடப்பாகம் உம் - (சமணர்தீர்க்கமுயன்ற) இடப்பாகத்தையும், பண்டுபோல் - முன்புபோல, பெருமான் வெள்ளைநீறு தொட்டு - இறைவரது திருவெண்ணீற்றைத்தொட்டு, அங்கையால் நீவு முன் - அழகிய திருக்கரத்தால் தடவுதற்கு முன்னே, மேல் நாள் உள்ள கூன் ஒடு வெப்புநோய் ஒழிந்து - முன்னாளிலுள்ளமுடத்தோடு சுரத்தினின்று நீங்கி, மீன் உயர்த்த வள்ளல் - மீனக்கொடியையுயர்த்திய பாண்டியன், மாசு அற கடைந்த விண்மணி என்ன பொலிந்தான் - மாசுநீங்கச் சாணையிற்பிடித்த சூரியனைப்போல விளங்கினான்.

கூன் இடப்பாலுள்ளதாதலால் உள்ள கூனோடு வெப்புநோயொழிந்து என்றார் "திருமுகங்கருணைகாட்டத் திருக்கையினீறுகாட்டிப் - பெருமறைதுதிக்குமாற்றாற் பிள்ளையார்போற்றிப்பின்னும் - ஒருமுறைதடவவங்க ணொழிந்துவெப்பகன்று நீங்கி - மருவுதீப்பிணியுநீங்கிவழுதியு முழுதுமுய்ந்தான்" என ஷை புராணத்தில் வருதல் காண்க. (சுஎ)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

அன்னதொருகாரணத்தாற்சவுந்தரியபாண்டியனென்றாகியன்ன,தெ ன்னவர்கோன்கவுணியர்கோன் றிருநோக்காற்பரிசத்தாற்றெருட்டும்வாக் காற், பொன்னடிதாழ்ந்தைந்தெழுத்துமுபதேசப்பேறடைந்தபொலிவா ல்வஞ்சந், துன்னமணர்நெறியிகழ்ந்துதொல்வேதநெறியடைந்துதூயனா னான்.

(இ-ள்.) அன்ன தென்னவர் கோன் - அந்தக்கூன்பாண்டியன், அன்னது ஒருகாரணத்து ஆல் சவுந்தரியபாண்டியன் என்று ஆகி - கூனிமிர்ந்த அக்காரணத் தினால் சவுந்தரியபாண்டியனெனப் பெயர்பூண்டு, கவுணியர் கோன் - ஆளுடையபி ள்ளையாரது, திரு நோக்கு ஆல் பரிசத்தால் தெருட்டும் வாக்கு ஆல் - சட்சுதீக்ஷை யாலும் பரிசதீக்ஷையாலும் விளங்கும் வாசகதீக்ஷையாலும், பொன் அடி தா ழ்ந்து-(அவரது) பொன்போலும் அரிய திருவடியை வணங்கி, ஐந்தெழுத்தும் உப தேசம் பேறு உம் அடைந்த பொலிவு ஆல்-ஸ்ரீபஞ்சாக்கரமு முபதேசப்பேறுமடை ந்த விளக்கத்தால், வஞ்சம் துன் அமணர் நெறி இகழ்ந்து-வஞ்சனையைப்பொருந்திய சமணரது புன்னெறியை யருவருத்து, தொல் வேதம் நெறி அடைந்து தூயன் ஆனா ன்-தொன்றுதொட்டுள்ள வேதநெறியைக் கைக்கொண்டு புனிதனாயினான்.

அன்ன அசைச்சுட்டின்திரிபு. திருமந்திரங்களெல்லாவற்றிலும் சிறந்ததாத லால் உம்மைகள் உயர்வு சிறப்புப்பொருளில்வந்த என்றும்பொருளன. உபதேச த்தினிறுதியில் எண்ணும்மை தொகுத்தல். வெப்புநோயோடு மும்மலங்களினின்று நீங்குகையால் திருநோக்கால் பொன்னடிதாழ்ந்து எனவும்,மலவாதனைபோல இடை யில்வந்த வெப்புநோய்வாதனையொழிய ஸ்ரீபஞ்சாக்கரத்தை வலக்கரத்தில் நெதித் துப்பரிசித்தலால் ஐந்தெழுத்தும் எனவும், சமணநெறியைக்கைவிட்டு வேதநெறியை க்கைக்கொள்ளப் பதிபசுபாசத்திலுண்மையான ஸ்ரீபஞ்சாக்கரத்தை யுபதேசித்த லால் உபதேசப்பேறடைந்தபொலிவால் எனவுமுறை நிரனிறையாகக் கூறினர். ()

பாண்டியன்சுரந்தீர்த்தபடலம் முற்றிற்று.

ஆகப்பாயிரமுள்படத் திருவிருத்தம் - ௩௱௭௩.

அறுபத்துமூன்றாவது


சமணரைக்கழுவேற்றியபடலம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பஞ்சவனடைந்தநோயைப்பாலறுவாயர்தீர்த்து
நஞ்சணிகண்டனீறுநல்கியவண்ணஞ்சொன்னோ
மஞ்சலராகிப்பின்றும்வாதுசெய்தடங்கத்தோற்ற
வஞ்சரைக்கழுவேறிட்டவண்ணமுஞ்சிறிதுசொல்வாம்.

(இ-ள்.) பஞ்சவன் அடைந்தநோயை-பாண்டியனடைந்த சுரநோயை, பால் அறுவாயர்தீர்த்து - சிவஞானப்பாலையமைந்தமணங்கமழும் திருவாயையுடைய ஆளு

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

டையபிள்ளையார் நீர்த்த, நஞ்சு அணிகண்டன் நீறுநல்கியவண்ணம் சொன்னேம் - நஞ்சினை நிறுத்திய ஸ்ரீகண்டத்தையுடைய இறைவரது திருநீற்றினையருளிய திருவிளையாடலைக்கூறினேம், பின்னும் அஞ்சலர் ஆகி - பின்னருஞ்சிறிதுமஞ்சாராகி, வாதுசெய்து அடங்க தோற்றவஞ்சரை - வாதஞ்செய்து ஒருசேரத்தோற்ற என்னுமிரஞ்சமணர்களை, கழு ஏறிட்டவண்ணம் உம் சிறிதுசொல்வாம்-அவர் கழுவிலேற்றிய திருவிளையாடலையுஞ் சிறிதெடுத்துக்கூறுவாம்.

தமது ஆபிசாரவேள்வித்தீ திருமடத்திற்செல்லாமையும், அத்தீங்கால் பாண்டியனுக்குவிளைந்த வெப்புநோயைத் தீர்க்காமையுமாகிய தமதுதோல்விக்குச் சிறிதும் அஞ்சலர் என்பார் அஞ்சலராகி யெனவும், கழுவேற்றிய திருவிளையாடலின்றிறமுற்றுங் கூறிலம் என்பார் சிறிதுசொல்வாம் எனவுங்கூறினர். (க)

தென்னவன்றேவியாருமமைச்சருட்சிறந்தசிங்க
மன்னவன்றானுங்காழியந்தணரடியில்வீழ்ந்தெம்
மன்னவன்வெப்புங்கூனும்பாசமுமாற்றினீரோ
யின்னமுமடியேம்வேண்டுங்குறைசெயத்தக்கதென்றார்.

(இ-ள்.) தென்னவன் தேவியாரும் - சவுந்தரியபாண்டியன் தேவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் உள்சிறந்த சிங்கம் அன்னவன் தான் உம்-மந்திரிமார்களுட்சிறந்து மேம்பட்ட ஆண்சிங்கத்தையொத்த குலச்சிறையாரும், காழி அந்தணர் அடியில்வீழ்ந்து - சீகாழியிலவதரித்த பிள்ளையார்திருவடிமேல் தண்டாகாரமாகவிழுந்து, எம் மன்னவன் வெப்பும் கூனும் பாசமும் மாற்றினீர் - எமது அரசனுடைய மாற்றுதற்கரிய சுரநோயையுங் கூனையும் மலத்தையுமொழித்தீர், இன்னம் உம் அடியேம் வேண்டும் குறைசெய் தக்கது என்றார் - இன்னமும் சிற்றடியேங்கள் வேண்டுங்குறைமுடிக்கக் கடவது என்று குறையிரந்தார்கள்.

இன்னம் இனியென்னும் இடைச்சொற்றிரிபு. தக்கது வியங்கோட்பொருளில் துவ் விகுதிவருதலால் வேண்டுகோடற்பொருளில்வந்த வியங்கோள்வினைமுற்று. துவ்விகுதி வியங்கோட்பொருளில் "கொள்ளப்படாது மறப்பதறிவிலன்கூற்றுக்களே" எனவருந் திருப்பாசுரத்தாலறிக. "கொற்றவன்றேவியாருங் குலச்சிறையாருநிற்கு - செற்றவர்செய்யபாத தாமரைசென்னிசேர்த்தி -பெற்றனம்பெருமையின்று பிழைத்தனம்பிறவாமேன்மை - உற்றனன்மன்னனென்றே யுளங்களித்துவகைமிக்கார்" என ஷை புராணத்தில் வருதல்காண்க. (உ)

கன்னிநாடெங்குமிந்தக்காமரண்காடுமூடித்
துன்னினதிதனையின்னேதுணித்திடல்வேண்டுமென்று
ரன்னவராலவாயார்திருவுள்ளமறிவேனென்று
வுன்னியமனத்தராகியொய்யெனக்கோயில்புக்கார்.

(இ-ள்.) அன்னவர்-அந்தமங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், கன்னி நாடு எங்கும் - பாண்டிநாடுமுற்றும், இந்த கார் அமண் காடுமூடி துன்னினது-இந்த இழிந்த சமணாகிய அடவிபரந்து நெருங்கினது, இதனை இன்னே துணித்திடல்வேண்டும் என்றார்-இக்காட்டை யிப்பொழுதே திருநீறாகிய வாளால் சேதித்தருளவேண்டுமென்று குறையிரந்தார்கள், ஆலவாயார் திரு உள்ளம் அறிவேன் என்று - திருவாலவாயிலெழுந்தருளிய இறைவர் திருவுள்ளத்தை யறிவேமென்று, உன்னியமன

Koviloor Digital Library

ந்தார் ஆகி-கருதியதிருவுள்ளத்தையுடையவராகி, ஒப்பென கோயில்புக்கார்-(ஆளு டைய பிள்ளையார்) விரைந்து திருக்கோயிலுக்குச்சென்றருளினார்.

கார் என்னும் பண்பு இழிவுமேல் நின்றது. (௩)

அவ்விருவோருங்கூடவடைந்துபொற்கமலம்பூத்த
திவ்வியதீர்த்தந்தோய்ந்துசேணெடுங்கண்ணிபாக
னவ்வியங்கமலச்செங்கைநாதனைத்தாழ்ந்துவேந்தன்
வெவ்வியவெப்புநீத்தார்தொழுதிதுவினவுகின்றார்.

(இ-ள்.) அ இருவோரும் கூட அடைந்து - அந்தமங்கையர்க்கரசியாரும் குல ச்சிறையாரும் வரச்சென்றருளி, பொன் கமலம்பூத்த திவ்வியதீர்த்தம் தோய்ந்து- பொற்றாமரைமலர்ந்த தெய்வத்தன்மையையுடைய தீர்த்தத்தில்நீராடி, நெடுஞ்சேல் கண்ணிபாகன்-நெடிய அக்கயற்கண்ணியாரை யிடப்பாகத்திலுடையவனும், நவ்வி- மானையேந்திய, அம் கமலம் செங்கை நாதனை-அழகிய தாமரைமலர்போன்ற சேவ ந்த திருக்கரத்தையுமுடைய சோமசுந்தரக்கடவுளை, வேந்தன் வெவ்விய வெப்பு நீத் தார் தாழ்ந்து தொழுது - பாண்டியனது கொடியசுரநோயைத்தீர்த்த ஆளுடைய பிள்ளையார் விதிப்படி தாழ்ந்துவணங்கி, இது வினவுகின்றார்-இதுவினவாநின்றார்.

திவ்வியம் தெய்வத்தன்மையையுடையது. (௪)

காயமேயொறுத்துநாளுங்கைதவம்பெருகநோற்கும்
பேயரையிம்மையோடுமறுமையும்பேறற்றாரை
நீயுரைசெய்தவேதவேள்வியைநிந்தைசெய்யுந்
தீயரையொறுத்தல்செய்யத்திருவுளஞ்செய்தியென்றார்.

(இ-ள்.) காயம் ஏ ஒறுத்து-(இதுதவமென்று) சரீரத்தினையேவருத்தி, நாளு ம் கைதவம் பெருகநோற்கும் பேயரை - எந்நாளும் பாவமே பெருக விரதநோற்றொ ழுகு மப்பேய்க்குணமுடையவரும், இம்மை உம் மறுமை உம் பேறு அற்றாரை-இம் மையிலு மறுமையிலுமடையும் பயனையிழந்தவரும், நீ உரைசெய்த வேதம் வேள்வி யை நிந்தைசெய்யும் தீயரை -(ஆன்மாக்களுய்ய) தேவரீரருளிய வேதத்தையும் வேள்விகளையு மிகழ்ந்தொழுகும் பொல்லாதவருமாகிய சமணர்களை, ஒறுத்தல் செ ய்ய திருவுளம் செய்தி என்றார்-தண்டிக்கத் திருவுளஞ்செய்தருள்வாயென்று குறை யிரந்தனர்.

தலைமயிர்பறித்தல், வெயிலில்நிற்றல் சூரியகிரணத்தால் வெதும்பியபாறையி ற்கிடத்தல் முதலியசெயல்களால் உடலைவருத்துதலே அவர்களுக்குத் தவமாதலால் காயமேயொறுத்து எனவும், ஆளுடையபிள்ளையார் திருமடத்தில் நெருப்பிடல், திரு நாவுக்கரசரைச் சிற்றறையிலிடுதல், நஞ்சூட்டுதல், மதயானைமுன்விடுதல், கற்றூணிற் கட்டிக் கடலில்விடுதல் முதலிய பெரும்பாதகங்களைச் செய்துவந்ததால் கைதவம்பெ ருகநோற்குமெனவும் "வேதவேள்வியைநிந்தனைசெய்துழல் - ஆதமில்லியமணொடு தேரரை - வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே - பாதிமாதுடனாயபரமனே - ஞால நின்புகழேமிகவேண்டுந்தென் - ஆலவாயிலுறையுமெம்மாதியே. வேட்டுவேள்விசெ யும்பொருளைவிளி - மூட்டுச்சிந்தைமுருட்டமண்குண்டரை - ஓட்டிவாதுசெயத்தி ருவுள்ளமே - காட்டிவல்லையுரித்தவெங்கள்வனே - ஞாலநின்புகழேமிகவேண்டுந்தெ ன் - ஆலவாயிலுறையுமெம்மாதியே. அந்தணாளர்புரியுமருமறை - சிந்தைசெய்யா வருகர்திறத்தினைச் - சிந்தவாதுசெயத்திருவுள்ளமே - வெந்தநீறதணியும்விகிர்தனே.

Koviloor Digital Library

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென் - ஆலவாயிலுறையுமெம்மாதியே" எனத் திருப்பதிகம் ஓதியருளினமையால் " நியுணரசெய்தவேதவேள்வியைநிந்தைசெய்யும் - நீயமையொறுத்தல்செய்யத்திருவுளஞ்செய்தியென்றார்" எனவுங் கூறினர். (ரு)

வெம்மதவேழங்காய்ந்தவிடையவர்விசும்பிற்சொல்வா
ரெம்மனோராவீர்நுங்கட்கிசைந்ததேயெமக்கும்வேண்டுஞ்
சம்மதமதனால்வெல்லத்தக்கவராகநீரே
யம்மதமுடையார்தோற்கத்தக்கவராகவென்று.

(இ-ள்.) வெம்மதம் வேழம் காய்ந்த விடையவர் - கொடியமதத்தையுடைய யானையைக் கோபித்தருளிய இடபவூர்தியையுடைய பெருமானார்,விசும்பு இல் சொல்வார் - அசரீரியாகச் சொல்லியருளுவார், எம்மனோர் ஆவீர் - எம்முடையவராவீர்,நுங்கட்கு இசைந்தது ஏ எமக்கும் வேண்டும் சம்மதம் - உங்கள்கருத்துக்கு இசைந்ததே யெமக்கும் வேண்டியசம்மதம், அதனால் நீர் ஏ வெல்லத்தக்கவர் ஆக - அதனால் நீங்களே வெல்லக்கடவீர், அ மதம் உடையார் தோற்க தக்கவர் ஆக என்று - அந்தச்சமணர்கள் தோற்கத்தக்கவராகக்கடவரொன்று.

மங்கையர்க்கரசியாரையுங் குலச்சிறையாரையும் ஆளுடையபிள்ளையாரோடுளப்படுத்தி எம்மனோராவீர் என்றருளினர். (சு)

எம்மொழிதேறினீர்போயிறைமகனவையத்தேறிச்
செம்மையிலாரைவாதுசெய்திர்நீரனையார்தோற்று
வெம்முனைக்கழுவிலேறிவிளிகுவரொன்னக்கேட்டு
மைம்மலிகளத்தான்மைந்தர்தொழுதுதம்மடத்திற்புக்கார்.

(இ-ள்.) எம் மொழி தேறினீர் - எமதுவாய்மைமொழியாகிய வேதாகமங்களைத் தெளிந்துதுணிந்தவர்களே, போய் - சென்று, இறைமகன் அவையத்து ஏறி - பாண்டியனது சபைக்களத்திலேறி, செம்மையில்லாரை - மனத்திருத்தமில்லாத சமணர்களை, நீர் வாது செய்திர் - நீங்கள் வாதுசெய்வீர், அனையார் தோற்று - அச்சமணர்கள் வாதில் தோல்வியடைந்து, வெம் முனைகழுவில் ஏறிவிளிகுவர் என்ன கேட்டு - கொடியமுனையையுடைய கழுவின்மேலேறி மரிப்பாரொன்று கூறக்கேட்டருளி, மைமலி களத்தான் மைந்தர் - கருமைநிறைந்த ஸ்ரீகண்டத்தையுடைய பெருமானார் புத்திரராகிய பிள்ளையார், தொழுது தம்மடத்தில் புக்கார் - வணங்கித்தமது திருமடத்திற்குச் சென்றருளினர்.

" நாதர்தமருண்முன்பெற்று நாடியமகிழ்ச்சிபொங்கப் - போதுவார்பணிந்துபோற்றி விடைகொண்டுபுனிதநிற்றின் - மேதகுகோலத்தோடும் விருப்புறுதொண்டர்சூழ - மூதெயிற்கபாடநீடு முதற்றிருவாயில்சார்ந்தார்" என ஷை புராணத்தில் வருதல்காண்க. (எ)

இருவருமீண்டுதத்தமிருக்கையிற்போகியற்றைப்
பருவமங்ககலப்பின்னட்பாண்டிமாதேவியாரும்
பெருமதியமைச்சரோடும்பிள்ளையார்மடத்திற்போகி
யருகரைவெல்லுஞ்சூழ்ச்சியாதெனவளந்துதேர்வார்.

(இ-ள்.) இருவரும் மீண்டு தத்தம் இருக்கையில் போகி - மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாருந் திரும்பித் தங்கள்கோயிலுக்குச்சென்று, அற்றை பருவம்

Koviloor Digital Library

அந்து அகல - அந்நாள் நீக்க, பின் நாள் - வழிநாளில், பாண்டிமாதேவியாரும் பெருமதி அமைச்சர் ஏறும் - மங்கையர்க்கரசியாரும் நுண்ணிய அறிவையுடைய குலச்சிறையாரும், பிள்ளையார் மடத்தில் போகி - ஆளுடைய பிள்ளையார் திருமடத்திற்குச்சென்று, அருகரைவெல்லும் சூழ்ச்சி யாது என்ன அளந்து தேர்வார்-சமணர்களைவெல்லும் விநயம் யாதென்று அநுமானமுதலிய அளவைகளா லளவுசெய்து தெளிவாராயினர். (அ)

பேரருணிறைந்தகாழிப்பெருந்தகையுடன்போய்த்தங்கோன்
சீரவைகுறுகியீதுசெப்புவார்செய்யகோலாய்
காரமண்காடேயெங்குங்கழியவுமிடைந்ததின்ன
வேரொடுங்களைந்தாற்சைவவிளைபயிரோங்குமென்றார்.

(இ-ள்.) பேர் அருள் நிறைந்தகாழி பெருந்தகை உடன்போய்-பெரியகருணை சான்ற சீகாழியிலவதரித்த பிள்ளையாரோடுசென்று, தம் கோன் சீர் அவைகுறுகி ஈது செப்புவார் - தமதரசனுடைய பாண்டியனது அவைக்களத்தையடைந்து இதனைச்சொல்லாநின்றார், செய்யகோலாய் - செங்கோலையுடையபாண்டியனே, கார் அமண் காடே எங்கும் கழியவும் மிடைந்தது - கரியசமண்காடே யெவ்விடத்தும் மிகவும் நெருங்கியது, இன்னது வேர் ஒடும் களைந்தால் சைவம் விளைபயிர் ஓங்கும் என்றார் - இக்காட்டினை வேரோடுக்களைந்தால் சைவமென்னும் விளையும்பயிரோங்கிச்செழிக்கும் என்றனர்.

காடுமூடிய இடங்களில் விளைபயிரோங்காதாதலால் காடுகளைந்தால் ஓங்கும் என்றமையால் இது இயைபுருவகவணி. இன்னது என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்றின் தவ் விகுதிதொகுத்தல். (௯)

அவ்வண்ணஞ்செய்வதேயென்றரசனுமனுச்ஞைசெய்யச்
செவ்வண்ணவெண்ணீற்றண்ணலனுச்ஞையுந்தெரிந்துதேய
முய்வண்ணமிதுவென்றங்கனுண்மகிழ்ந்திருந்தார்நீண்ட
பைவண்ணவாரம்பூண்டார்புகழெங்கும்பரப்பவல்லார்.

(இ-ள்.) அவ்வண்ணம் செய்வது என்று அரசனும் அனுச்ஞைசெய்ய - அவ்வாறே செய்யக்கடவீரென்று பாண்டியனும் விடைகொடுக்க, செவ்வண்ணம் வெண்ணீறு அண்ணல் அனுச்ஞையும் தெரிந்து-செந்நிறத்தையும் வெண்ணீற்றையுமுடைய சோமசுந்தரக்கடவுளருளிய விடையையும் ஆராய்ந்து தெளிந்து, தேயம் உய்வண்ணம் இது என்று - பாண்டிநாடு சமணிருளினின்று கடைத்தேறும்வகை வாய்ந்த காலம் இக்காலமேயென்று, நீண்டபைவண்ணம் ஆரம்பூண்டார் - பரந்தபடத்தையுடைய நிறம்வாய்ந்த சர்ப்பாபரணம்பூண்ட இறைவரது, புகழ்-கீர்த்தியை, எங்கும் பரப்பவல்லார் - எவ்விடத்தும் நிறுத்தவல்ல பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும், அங்கண் உள்மகிழ்ந்திருந்தார் - அவ்விடத்தில் மனமகிழ்ந்திருந்தனர். (௧0)

கலிவிருத்தம்.

அந்தவேலையருகந்தக்கையனாக்
குந்தவேற்கட்குலமடமாதரு
மைந்தராயிபமக்களுக்கண்ணழல்
சிந்தநோக்கிச்சழ்ந்திவைசெப்புவார்.

Koviloor Digital Library

(இ-ள்.) அந்தவேலை - அக்காலையில், அருகந்தர்கையரா - அருகராகிய கீழ் மக்களை, குந்தம் வேல் கண் குலமடமாதரும் - வேல்போன்ற கண்களையுடையவரா கிய அவர் மனைக்கிழத்திமார்களும், மைந்தர் ஆகிய மக்கள் உம் - அவர்கள் புத்திரர் களாகிய மக்கள்மாரும், கண் அழல் சிந்தநோக்கி - கண்களினின்றுங் கோபத்திச் சிந்தப்பார்த்து, இகழ்ந்து இவைசெப்புவார் - நிந்தித்து இவற்றைக்கூறுவார்கள். ௧௧

செழியர்கோமகன்மூழ்கியதீப்பிணி
கழியமாற்றும்வலியின்றிக்கற்றிலா
மழலைவாயொருமைந்தற்குத்தோற்றுவெம்
பழிவிளைத்தீர்பகவன்றமர்க்கெலாம்.

(இ-ள்.) செழியர் கோமகன் - பாண்டியர்வழிவந்த சவுந்தரியபாண்டியன், மூழ்கிய தீ பிணிகழிய மாற்றும் வலி இன்றி - தன்னைவிழுங்கிய சுரநோயினின்று நீங்கத் தீர்க்கும்வன்மையில்லாமல், கற்று இல்லாத மழலைவாய் ஒருமைந்தன் கு-கற் காத மழலைச்சொல்வாய்ந்த திருவாயையுடைய இளம்பருவமமைந்த ஒருபிள்ளைக்கு, தோற்று - தோல்வியடைந்து, பகவன் தமர்க்கு எல்லாம் - நமது அருகக்கடவுளின் தமராகிய அடிகள்மார்க்கெல்லாம், வெம்பழிவிளைத்தீர் - கொடியபழியையின்று தே டினீர். (௧௨)

சாம்பராடுஞ்சமயம்புகுந்துவெம்
பாம்பணிந்தவனேபகவானென
வேம்பனுங்கள்விரதநெறியெலாஞ்
சோம்பலெய்தத்துறந்தானிகழ்ந்தரோ.

(இ-ள்.) சாம்பர் ஆடும் சமயம் புகுந்து - சாம்பல் பூசும் சமயத்தில் நுழை ந்து, வெம் பாம்பு அணிந்தவனே பகவான் என்ன - கொடிய சர்ப்பத்தையணிந்த பி த்தனையே யறுகுணங்களையுமுடைய இறைவனென்று, வேம்பன் - பாண்டியன், று ங்கள் விரதநெறி எல்லாம் சோம்பல் எய்த - உங்களது விரதநெறி முழுமையும் சோ ர்வடைய, இகழ்ந்து துறந்தான் - அருவருத்துக் கைவிட்டான்.

அறுகுணங்களாவன ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கிய ம். இக்குணங்களையுடையோன் நமது அருகனைப் பித்தனைப் பகவானென்று துணி யச்செய்திர் என்பார் சாம்பராடுஞ் சமயம் புகுந்து வெம் - பாம்பணிந்தவனே பக வானென என்றார். (௧௩)

ஏதுமக்குநிலையினியென்றவப்
போதுமற்றவர்தம்மைப்புறகிட
வாதுசெய்தற்கெழுந்தனர்வஞ்சகர்
போதுமென்னத்தடுத்தனர்பூவைமார்.

(இ-ள்.) பூவை மார் - அவரவர்க்குரிய மனைக்கிழத்தியர்கள், இனி உமக்கு நிலை ஏது என்ற அப்போது - இனி யுங்களுக்குப் பற்றுக்கோடாயுள்ளார் யாரென் று கூறிய அக்காலையில், அவர் தம் ஐ புறகிட வாது செய்தற்கு வஞ்சகர் எழுந்தன ர் - ஆளுடைய பிள்ளையாரைப் புறங்காணும்படி வாதுசெய்ய எண்ணாயிரஞ் சமணர் களும் எழுந்தார்கள், போதும் என்ன தடுத்தனர் - தோற்றது அமையுமென்று எதிர் நின்று தடுத்தார்கள். (௧௪)

Koviloor Digital Library

செல்லன்மின்களுமக்கிதுசெவ்வியன்
றல்லல்கூரவருந்துன்பத்தாழயா
மெல்லிகண்டகனவுண்டிதனையாஞ்
சொல்லுகேமின்றுகேண்மெனச்சொல்லுவார்.

(இ-ள்.) செல்லன் மின்கள் - போதலொழியுங்கள், இது நமக்கு செவ்வி அன்று - இக்காலம் உங்களுக்கு வெற்றிதருங் காலமல்ல, யாம் - நாங்கள், அல்லல் கூர-துன்பமடையவும், அருந்துன்பத்து ஆழ-பிறர் அடைதற்கரிய துன்பத்திலழுந்தவும், எல்லி கண்ட கனவு உண்டு - நேற்றிரவிற்கண்ட சொப்பனமுண்டு, இதன் ஐ-இக்கனுக்கனை, யாம் இன்று சொல்லுகேம் - யாம் இப்போது சொல்லாநின்றேம், கேண்மென சொல்லுவார் - கேளுங்களென்று சொல்லுவார்கள்.

இது சாதியொருமை. (௧௫)

கலித்துறை.

இடையறாதுநம்பாழியும்பள்ளியுமெங்குஞ்
சடையர்முஞ்சியர்சாம்பலர்தாங்கியசூலப்
படையர்தீவிழிப்புலவுவாய்ப்பாய்பெரும்புலித்தோ
லுடையராய்ச்சிலர்வந்துவந்துலாவுதல்கண்டேம்.

(இ-ள்.) இடையறாது - நீங்காமல், நம்பாழி உம் பள்ளி உம் எங்கு உம் - நமது தேவர் கோயிலும் முனிவர் வாசஞ்செய்யு மிடங்களுமாகிய எவ்விடங்களிலும், சிலர் சடையர் முஞ்சியர் சாம்பலர் தாங்கிய சூலப்படையர் - சிலர் சடையையுடையவரும் முஞ்சிப்புல்லாலமைந்த அரைஞாணுடையவரும் வெள்விச்சாம்பற் பூச்சினையுடையவரும் தோளிற்கொண்ட சூலாயுதக் குறியையுடையவரும், தீ விழி புலவுவாய் பாய் பெரும் புலித்தோல் உடையர் ஆய் - தீக்கொப்புளிக்குங் கண்களும் புலால் நாறும் வாயும் பாயாநின்ற புலித்தோலாடையு முடையவராகி, வந்து வந்து உலாவுதல் கண்டேம் - இடையறாது வந்து சஞ்சரித்தலைக் கண்டனம்.

முஞ்சியர் என்றமையால் பிரமசரிய நிலையுடையவராகியும், சாம்பலர் என்றமையால் வானப்பிரத்த நிலையுடையவரும், சடையர் சூலப்படையர் புலித்தோலுடையர் என்றமையால் சந்நியாச நிலையுடையவரும் எனக் கொள்க. (௧௬)

கன்னியிற்றுறவன்னங்கள்கணவனிற்றுறவின்
மன்றுமாரியாங்கனைகணூல்வாங்குமக்குசைக
ளென்னமூவகைப்பெண்டவப்பள்ளிகளெல்லாஞ்
சின்னவெண்பிறைக்கோட்டுமாசிதைக்கவுங்கண்டேம்.

(இ-ள்.) கன்னி இல் துறவு அன்னங்கள் - கன்னிப்பருவத்தில் துறவுபூண்ட அம்சங்களும், கணவனில்-கணவனின்று, துறவின் மன்றும் ஆரி யாங்கனைகள்- துறவுபூண்ட ஆரியாங்கனைகளும், நூல்வாங்கும் அக்குசைகள் - மங்கலசூத்திரமிழந்த அக்குசைகளும், என்ன மூவகைப்பெண் தவப்பள்ளிகள் எல்லாம்-என்று சொல்லப்பட்ட மூவகை நிலையையுடைய தவப்பெண்கள் வாசஞ்செய்யு மிடங்களையெல்லாம், சின்ன வெண்பிறை கோடு மா சிதைக்க உம் கண்டேம் - வெள்ளிய இளஞ்சந்திரனையொத்த கொம்பினையுடைய யானைகளழிக்கவுங் கனவு கண்டோம்.

கன்னிப்பருவத்தில் ஆசாரியனிடத்து உபதேசம்பெற்றுத் துறவுபூண்டு பள்ளியில் தவமேற்கும் பெண்களுக்கு அம்சம் எனவும், இல்வாழ்க்கையிற் கணவனை

Koviloor Digital Library

ெ வாழுங்காலையில் துறவுபூண்டு உபதேசம்பெற்றுத் தவநோற்கும் பெண்களுக்கு ஆரியாங்கனைகளெனவும், மங்கலமிழந்த பெண்களுள் துறவுபூண்டு உபதேசம்பெற்ற பெண்களுக்கு அக்குசைகளெனவும் சமண பரிபாஷையில் வழங்குதலால் கன்னியிற்றுற வன்னங்கள் கணவனிற்றுறவின்-மன்னுமாரியாங்கனைகளால் வாங்குமக்குசைகள் - என்னமூவகைப்பெண்டவப்பள்ளியென்றார். (௧௭)

முண்டிதஞ்செய்ததலையராய்முறுக்குறிதூங்கு
குண்டிகைத்தடங்கையராய்க்கோவணம்பிணித்த
தண்டுதாங்கியசுவலராய்ச்சடையன்பேர்நாவிற்
கொண்டசைத்தனராயெங்குங்குலாவவுங்கண்டேம்.

(இ-ள்.) முண்டிதம் செய்த தலையர் ஆய்-(அறவிகள்) முண்டிதஞ்செய்த தலையையுடையவராகியும், முறுக்கு உறி தூங்கு குண்டிகை தட கையர் ஆய்-முறுக்கிய உறியில் நிலைபெற்ற குண்டிகையை யேந்திய நீண்ட கையையுடையவராகியும், கோவணம்பிணித்த தண்டு தாங்கிய கையர் ஆய்-கோவணங்கட்டிய தண்டத்தை யேந்திய, சுவலர் ஆய்-பிடரையுடையவராகியும், சடையன்பேர்-சடையையுடைய சிவனது பெயரை, நாவில் கொண்டு அசைத்தனர் ஆய்-தமது நாவிற்கொண்டு கூறுவோராகியும், எங்கும் குலாவ உம் கண்டேம்- எவ்விடத்துஞ் சஞ்சரிக்கவும் பார்த்தோம்.

காந்துவெங்கதமுடையதோர்கயந்தலைவந்து
சூழ்ந்துகொண்டுநம்மடிகண்மார்கணமெலாந்துரத்தி
யேந்துபூஞ்சினையலைந்திடவிரங்கிவண்டிரியப்
பாய்ந்துபிண்டியைவேரொடும்பறிக்கவுங்கண்டேம்.

(இ-ள்.) காந்து வெங்கதம் உடையது ஓர் கயந்தலை வந்து - சுட்டுவருத்துங் கடிய கோபத்தையுடைய ஒரு யானைக்கன்று வந்து, நம் அடிகள் மார் கணம் எல்லாம் சூழ்ந்துகொண்டு துரத்தி - நமது அடிகள்மார் கூட்டங்களையெல்லாஞ் சுற்றிக்கொண்டு துரத்தி, ஏந்து பூஞ்சினை அலைந்திட - மேகத்தையேந்திய மலர்நிறைந்த கொம்புகளலையவும், வண்டு இரங்கி இரிய - வண்டுகளொலித்துப் புறந்திலோடவும், பிண்டியை பாய்ந்து - அசோகமரத்தின்மேற் பாய்ந்து, வேரொடும் பறிக்க உம் கண்டேம் - வேரோடும் பற்றறப் பறிக்கவும் பார்த்தனம்.

யானைக்கன்றென்றது ஆளுடைய பிள்ளையாரை. சினை என்றது சமணசமயப் பகுப்பினை. வண்டு இரிய என்றது அப்பகுப்புகளிலுள்ள அடிகண்மாரை. "மழவிடையிளங்கன்றென்று வந்தநங்கழகந்தன்னை - உழறிடச்சிதறியோடி யொருவருந்தடுக்கவஞ்சி - விழவொருபுகலுமின்றி மேதினிதன்னைவிட்டு - நிழலிலாமரங்களேறி நின்றிடக்கண்டோமென்ன" என ஷ புராணத்தில் வருதல் காண்க. (௧௮)

அந்தமூவிலைவேலினுமயின்முனைக்கழுவின்
பந்திமீதுநீரேறவுங்கண்டுளம்பனிப்பச்
சந்தமார்பகஞ்சேப்பவந்தளிர்க்கரம்புடைத்துக்
கந்தவார்குழல்சோரவுங்கலுழவுங்கண்டேம்.

(இ-ள்.) அந்தம் மூவிலை வேலினும்-இறுதிசெய்யும் மூன்று கவருள்ள சூலாயுதத்திலும், அயில் முனை கழு இன் பந்தி மீது நீர் ஏறவும் கண்டு-கூரிய முனையையுடைய வரிசைப்பட நட்ட கழுவின்மேல் நீங்களேறவும் பார்த்து, உளம் பனிப்ப-மனம் நடு

Koviloor Digital Library

ட்குதலால், சந்தம் மார்பு அகம் சேப்ப-சந்தனக்குழம்பமைந்த மார்பிடம் செவக்க, அம் தளிர் கரம் புடைத்து-அழகிய தளிர்போல மென்மைவாய்ந்த கைகளால் அடித்துக்கொண்டு, கந்தம் வார் குழல் சோர உம் கழுழ உம் கண்டேம்-நறுமணங்கமழும் நீண்ட கூந்தல் சோரவும் பேரிரைச்சலிட்டு காங்களழவும் பார்த்தனம். (உo)

தள்ளருந்திறலிந்திரசாலமோகாதி
யுள்ளவிஞ்சையிவ்வெல்லைவந்துதவிலவொன்றுங்
கள்ளராற்பழிபட்டவோகனலில்வெந்தனவோ
வெள்ளங்கொண்டவோசேமத்திற்கிடப்பவோவிளம்பீர்.

• (இ-ள்.) தள் அருந்திறல் இந்திரசாலம் மோகம் ஆதி உள்ள விஞ்சை - நீக்குதற்கரிய வன்மையையுடைய இந்திரசாலமு மோகனமுதலியனவாகவுள்ள வித்தைகளும், இ எல்லை வந்து ஒன்றும் உதவில-இச்சமையத்தில் வந்து சிறிது முதவவில்லை, கள்ளரால் பழிபட்ட ஓ-திருடரால் பறிக்கப்பட்டனவோ, கனலில் வெந்தன ஓ - நெருப்பில் வெந்தனவோ, வெள்ளம் கொண்ட ஓ-வெள்ளத்தால் வாரிக்கொண்டு போகப்பட்டனவோ, சேமத்தில் கிடப்ப ஓ - காவலில் வைக்கப்பட்டனவோ, விளம்பீர் - சொல்லுங்கள்.

மோகன முதலியன ஆகருஷணம்,வசியம் அதிரிச்சியம்,அஞ்சனம், வயத்தம்பம், வாதம். "பள்ளிகள்மேலுமாடு பயிலமண்பாழிமேலும் - ஒள்ளிதழசோகின்மேலு முனைவுசெய்வளங்கையிற் - கொள்ளுமண்டபக்கண்மேலுங்காகையோடாந்தையிய-புள்ளினமாலைதம்மிற் பூசலிட்டழிவுசாற்றும். சிர்மலியசோகுதன்கீழிருந்தநந்தேவர்மேலே - வேரொடுசாய்ந்துவீழக்கண்டனமதன்பின்னாக - ஏர்கொண்முக்குடையுந்தாமு மெழுந்தனகாற்றிப்போக - ஊருளோரோடிக்காணக் கண்டனமென்னப்பார். குண்டிகைதகர்த்துப்பாயும் பீதியோர்குரத்தியோடப் - பண்டிதர்பாழிநின்றுங் கழுதைமேற்படர்வார்தம்மின் - ஒண்டொடியியக்கியொரு மூலையிட்டுப்புலம்பியோடக் - கண்டனமென்றுசொன்னார்கையறுகவலையுற்றார். கானிடைநட்டமாடுங் கன்றுதலுண்டரெல்லாம் - மீனவன்மதுரைதன்னில் விரவிடக்கண்டோமென்பார் - கோனவன்முறும்வெய்ய கொழுந்தழன்முழுக்கண்டோம்-ஆனவனெழுங்கண்டோ மதிசயமிதுவாமென்பார்" என ஷெபுராணத்திலும் வருதல் காண்க.

தாவுநீவளர்த்தெழுகரிதன்னையாடரவை
யாவையேமுன்னம்மனோர்பட்டதுமறிந்திர்
காவலன்பிணிதணித்திலிரினிச்செயுங்கருமம்
யாவதாகுமோவதனையுமெண்ணுமினென்றார்.

(இ-ள்.) தாவு நீ வளர்த்து எழு கரி தன்னை ஆடு அரவை - எழுந்தெரியும் அபிசார வேள்வித்தீயினை வளர்த்து அதினின்று மெழுந்த யானையையும் ஆடாநின்ற சர்ப்பத்தையும், ஆ ஐ ஏ முன் நம்மனோர் பட்டதும் அறிந்திர் - பசுவினையுமேவி முன்பு நம்முடைய அடிகள்மார் தோல்வி யடைந்ததையு மறிந்திருக்கின்றீர்கள், காவலன் பிணி தணித்திலிர் - பாண்டியனுடைய சுரநோயை யின்று தணியாதொழிந்தீர்,இனி செய்யும் கருமம் யாவது ஆகும் ஓ-(இவ்வாறு இவைகள் முடிந்தமையால்) இனிச் செய்யுங் காரியம் எவ்வாறு முடியுமோ, அதனையும் எண்ணுமின் என்றார்-அக்காரியத்தையும் ஆலோசித்துப் பாருங்களென்றனர்.

முற்காலத்தில் நம்மடிகண்மார் பல மாயங்கள் செய்து தோல்வியடைந்தார்கள். இப்பொழுது நீங்கள் தோல்வியடைந்தீர்கள். எதிர்காலத்தில் நீங்கள் செய்ய

Koviloor Digital Library

க்கடவது என்ன இருந்தது என்பார் இனிச்செயுங் கருமம் - யாவதாகுமோ வதனை யு மெண்ணுமினென்றனர் என்றனர். யானையெய்தபடலம், நாகமெய்தபடலம், மாயப் பசு வதைத்தபடலம் இவைகளில் எழுகரி தன்னை யாடரவை-ஆவையேவி முன்னம் மனோர்பட்டது மறிந்திர் என்ற வரலாற்றைக்காண்க. (உஉ)

இற்றைவைகலுக்கேகன்மினென்றனரறத்தைச்
செற்றவஞ்சகர்செல்லுவார்திரும்பவுங்கையைப்
பற்றியீர்த்தனர்பெண்டிர்சொற்கேட்பதும்பழுதென்
றுற்றதீவினைவழிச்செல்வாரொளித்தனர்செல்வார்.

(இ-ள்.) இற்றை வைகலுக்கு ஏகன்மின் என்றனர் - இந்நாளிற் செல்லுத லொழியுங்கள் என்று கூறினார்கள், அறத்தை செற்ற வஞ்சகர் செல்லுவார்-புண்ணி யத்தை வேரோடுங் களைந்த தீயர்கள் செல்லவும்,திரும்பவும் கையைபற்றி ஈர்த்தன ர்-மீளவுங் கையைப்பற்றி யிழுத்துத் தடைசெய்ய, பெண்டிர் சொல் கேட்பது உம் பழுது என்று உற்ற தீவினை வழி செல்வார் - பெண்கள் சொற்களைக் கேட்டொழுகு வதுங் குற்றமென்று தம்மைவிடாது தொடர்ந்த போகூழின்வழியிற் செல்லுகின்ற சமணர்கள், ஒளித்தனர் செல்வார் - (அவர்கள் கண்களுக்குப்புலப்படாது) கரந்து செல்லுவாராயினர்.

குவ்வுருபு எல்லைப்பொருள்மேல் நின்றது. உம்மை இரண்டனுள் முன்னது செல்லன்மினென்று தடுத்ததுமன்றி யென்பதன்மேல் நிற்றலால் இறந்தது தழீஇய எச்சம். பின்னது நூலறிவில்லாத இழிவின்மேல் நிற்றலால் இழிவுசிறப்பு. என்றனர், ஒளித்தனர் முற்றெச்சங்கள். (உரு)

கொங்கலர்க்குழல்சரிந்திடக்குரத்தியர்பின்னு
மெங்கள்சொற்கொளாதேகுவீர்பரிபவமெய்தி
யுங்களுக்கிடையூறுவந்துறுகெனச்சபித்தா
ரங்கதற்குமஞ்சார்செல்வாரழியுநாளடுத்தார்.

(இ-ள்.) கொங்கு - மகரந்தம் பரந்த, அலர் - மலரையணிந்த, குழல் சரிந்தி ட - கூந்தல் சரிய, குரத்தியர் - ஆசிரியன் மனைவிமார், பின் உம் - மீளவும், எங்கள் சொல் கொள்ளாது பரிபவம் எய்தி ஏகுவீர் - எங்கள் சொல்லுக்குச் சிறிதுஞ் செவி கொடாது துன்பங்கூர்ந்து செல்லுகின்றீர், உங்களுக்கு இடையூறுவந்து உறுக எ ன்ன சபித்தார்-உங்களுக்குப் (பால்மணங்கமழும் வாயையுடைய சிறுவனால்) இடை யூறுவந்தடுக்கவென்று சபித்தனர், அழியும் நாள் அடுத்தார் - அழியுங்காலம் வந்தடு த்த எண்ணாயிரஞ் சமணர்களும், அங்கு - அவ்விடத்து, அதற்கும் அஞ்சார் செல் வார் - அச்சாபத்திற்கும் அஞ்சாது செல்வாராயினர்.

அஞ்சார் முற்றெச்சம். உம்மை கனத்திறத்திற்கு மன்றியென நிற்றலால் இறந்தது தழீஇய வெச்சப்பொருட்டு. உறுகவியங்கோ ளிறுதொக்கது. (உச)

புட்களும்பலவிரிச்சியும்போகலென்றெதிரோ
தட்கவுங்கடந்தேகுவார்தடக்கயலுகைப்பக்
கட்கவிழ்ந்தலர்கிடங்கர்சூழ்கடிநகர்ப்புறம்போ
யுட்குநெஞ்சராயாவருமோரிடத்தீண்டி.

(இ-ள்.) புட்களும் பலவிரிச்சியும் போகல் என்று எதிரோ தட்கவும் - பற வைகளும் பலசகுனங்களும் போகற்கவென்று தம்மெதிரோ தடைசெய்யவும், கட்

ந்து எருவர்-(அந்தத் தன்னிமித்தங்களைக்கண்டும்) ஒழியாது செல்லுஞ் சமணர்கள், தடம் கயல் உகைப்ப - தடாகத்திலுள்ள கயல்கள் எழுந்துபாய்தலால், கள்கவிழ்ந்து அலர்தெடங்கர் சூழ்கடிநகர் புறம்போய் - தேனைச்சிந்தித் தாமரைகளலரும் அகழ்சூழ்ந்த காவல்பொருந்திய நகர்ப்புறஞ்சென்று, உட்கும் நெஞ்சர் ஆய் - பொலிவிழந்த மனத்தையுடையவராய், யாவர் உம் ஓர் இடத்து ஈண்டி - அச்சமணர்களெல்லோரும் ஓரிடத்திற்கூடி.

பேசேல் ஒருவரைக்கூறுஞ் சொலியல்லாமையால் எதிர்மறை வியங்கோள்வினைமுற்றாகக்கொள்க. தட்க என்றமையால் நன்னிமித்தமல்லவென்பது பெற்றாம்.

யாதுசூழ்ச்சியென்றெண்ணுவாரிறைவனைக்கண்டீ
தோதிநாமவனருமதியுறுதிகொண்டயலை
வேதிலாளனைவாதினல்வேறுமென்றிசைந்து
போதுவார்நகர்புகுந்துவேத்தவைக்களம்புகுவார்.

(இ-ள்.) சூழ்ச்சியாது என்று எண்ணுவார் - வெல்லும் விரகம் எவ்வாறென்று ஆலோசிக்குஞ் சமணர்கள், இறைவனை கண்டு ஈது நாம் ஓதி - அரசனைக்கண்டு நாம்கொண்ட இக்கருத்தைக்கூறி, அவன் அருமதி உறுதிகொண்டு - அப்பாண்டியனது உடம்பாட்டினுறுதியைப்பெற்று, அயலை ஏதிலாளனை - அந்த அயலானை, வாதினல் வேறும் என்று - வாதினால்வெல்வோமென்றுசூழ்ந்து, இசைந்துபோதுவார் - தம்முளொத்து எழுந்துசெல்லும் அச்சமணர்கள், நகர் புகுந்து - மதுரையையடைந்து, வேத்து அவைக்களம் புகுவார் - அவ்வரச னவைக்களத்தில் செல்வாராயினர்.

அரசன்கோற்கீழ்வாழ்பவராகலின் நாட்டில் தாமொருகாரியத்தை நடத்தக்கருதில், அவனுடன்பாடன்றிச் செய்யப்புகின் அந்நாட்டரசனால் தீங்குவிளைவது திண்ணமாதலால் நாமவனருமதியுறுதிகொண்டு எனக்கருதினர் என்று கூறினர். வேத்தவை வலிக்கும் வழிவலித்தல். (உகூ)

ஆயபோதிளங்காலையிற்கவுணியரால
வாயர்சேவடிபணிந்துதம்மடத்தினிற்செல்லக்
காயுமாதவச்செல்வனைக்கங்குல்சூழ்ந்தாங்கு
மாயவஞ்சகர்வந்திடைவழித்தலைமறித்தார்.

(இ-ள்.) ஆயபோழ்து - (அச்சமணர்களரசனவைக்களம்) செல்லுமக்காலத்தில், இளங்காலை இல் - இளம்பொழுதில், கவுணியர் ஆலவாயர் சே அடி பணிந்து தம்மடத்தினில் செல்ல - ஆளுடையபிள்ளையார் திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் செவ்வியதிருவடிகளைவணங்கித் தமது திருமடத்திற்குச்சென்றனர், காயும் ஆதவன் செல்வனை - சுட்டெரிக்குஞ் சூரியனை, கங்குல் சூழ்ந்தால் ஆங்கு - இருள்புறத்திற்சூழ்ந்தாற்போல, மாயம் வஞ்சகர் இடைவழி தலைவந்து மறித்தார் - மாயையால்வஞ்சிக்கும் சமணர்கள், நடுவழியில்வந்து மறித்தனர்.

இளங்காலை என்றது சூரியனுதித்த ஒருமுகூர்த்தகாலையை. சூழ்ந்தாலாங்கு தொகுத்தல். (உஎ)

மறித்தகையர்பின்செல்லமுன்மன்னவைகுறுகிக்
குறித்தவாளரித்தவிசின்மேற்கோச்சையர்பெருமா
னெறித்தசேயிளம்பரிதியினேறியிற்றிருந்தார்
பறித்தசித்தலைப்புலையர்கள்பொருதிவைபகர்வார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மறிந்தவையர் - வழிமறித்த கீழ்மக்களாகியசமணர்கள், பின்செல்ல - தமதுபின்னேவர, கொச்சையர் பெருமான் - சீகாழியிலுள்ள அந்தணர்பெருமானாராகிய பிள்ளையார், முன் மன் அவை குறுகி - முன்பு அரசனவைக்களத்தையடைந்து, குறித்த - (அந்தப்பாண்டியன்) காட்டிய, வாள் அரி தவிசு இன்மேல் - ஒளிவாய்ந்த சிம்மாசனத்தின்மேல், எறித்தசேய் இளம்பரிதியின் எறிவிற்றிருந்தார் - ஒளிவீசுஞ் செவந்த இளஞ்சூரியனைப்போல எதிரிகளின்றி யிருந்தனர், மறித்தமயிரைப்பறித்தலால், சிதலை புலையர்கள் பொருது இவைபகர்வார் - சிப்பற்றியதலையையுடைய கீழ்மக்கள் ஆற்றாது இவற்றைக்கூறுவாராயினர்.

இருடிகளெல்லாரினு மேம்பட்டவராயிருந்த பெருமைவாய்ந்த பராசர் என்னும் பிரமரிஷி, ஓர்காலத்தில் இருடிகளைநோக்கி யுங்களுள் ஒருவராவது பந்தத்தையொழித்து உயிர்க்குறுதிதரும் விரதாதிகளை யநுட்டிப்பவருளரோவென்றுவினவ, அவர்கள் இவன் நம்மை யிகழ்ந்தானென்று சினங்கொண்டு நீயுமச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்த முன்னைவிடாதிருக்க அநுபவிப்பாயென்று சபித்தார்கள், அச்சாபம் ஏற்ற அந்தரிஷி அச்சாபத்தின்படியே மச்சகந்தியைப்புணர்ந்து மச்சகந்தம் வாய்ந்து ஓர்யோசனைதூரம் துர்க்கந்திக்கச் சுழன்று நெடுநாள்வருந்தி நல்வினைவந்துவாய்க்கச் சிவநேயமுதித்துச் சிவபிரானையன்றிப் போக்கவல்லகடவுளர் யாருண்டென்றுதுணிந்து, அவ்விறைவனைச்சென்றடைந்து பூசித்துப் பேறுபெறுந்தலம் யாதென்று ஆராய்ந்து தேர்ந்து சீகாழியையடைந்து விதிப்படியருச்சித்து ஒழுகுநாளில்,அவ்விறைவன் கருணைகூர்ந்து எழுந்தருளி, உனக்குவேண்டுவரம்யாதென்றுவினவ,எமதுபெருமானே இத்துர்க்கந்தத்தையொழித்தருளவேண்டுமென்றிரக்க, பெருமானும் இவனென்ன கொச்சைமுனிவனோவென்று திருவாய்மலர்ந்து அத்துர்க்கந்தத்தைப்போக்கிச் சுகத்தையருளினர், அவ்வரமேற்றமுனிவன் பூசித்துப்பேறடைந்தமையால் சீகாழிக்குக் கொச்சையென்பது ஓர்பரியாயநாமம் எனவறிக. (உஅ)

மழலையின்னமுந்தேர்கிலாமைந்தகண்மணியொன்
றுழல்கருங்கொடியிருந்திடக்கனியுதிர்ந்தாங்குன்
சுழல்கொல்விஞ்சையினன்மையான்மன்னனைத்தொடுத்த
தழலவித்தனமென்றுநீதருக்குறத்தகுமோ.

(இ-ள்.) மழலை - மழலைச்சொல்லினையே, இன்னமும் தேர்கிலாத மைந்த- இன்னமுந்தெளியாத சிறுவனே, கண்மணி ஒன்று உழல்கருங்கொடி இருந்திட- கண்மணியொன்றே யிரண்டுகண்களினுஞ்சென்றுழலுங் கரியகாக்கையேறியிருக்க, கனி உதிர்ந்தாலாங்கு - பனம்பழம் சிந்தினாற்போல, உன்சுழல்கொள் விஞ்சையின் நன்மையால் - உனது மயங்குதற்குரிய வித்தையின் பலத்தால், மன்னனைதொடுத்த தழல் அவித்தனம் என்று நிதருக்கு உறதகும் ஓ-பாண்டியனைப்பற்றிய சுரநோயையொழித்தோமென்று நியகங்கரிக்கக்கூடுமோ.

கற்றறிவில்லாய் என்பார் மழலையின்னமுந் தேர்கிலாமைந்த எனவும், ஒரு கண்மணி காக்கைபார்க்குங்கண்ணிற் சென்றடைந்து பார்வைதருதலால் கண்மணியொன்றுழல் கருங்கொடியெனவும், களிந்துவிழுஞ்சமையத்தில் காகமேறப் பனம்பழம்விழுந்தது என்பது "காகதாலிபலநியாயம்" ஆதலால் இருந்திடக்கனி யுதிர்ந்தாங்கு எனவும், சுரநீங்குஞ்சமையத்திலுன் விந்தைகள் பலித்தனவாதலால் உன்சுழல்கொள்விஞ்சையினன்மையான் மன்னனைத்தொடுத்த - தழலவித்தனம் எனவும், அதனுல் நியிறுமாந்திருப்பது தக்கதன்று ஆதலால் நிதருக்குறத்தகுமோ எனவுங்கூறி

Koviloor Digital Library

ஞர்களென்றார். "காகத்திருகண்ணிற்கொன்றேமணிகலந்தாங்கு" எனக்கோவைத் திருவாசகத்தில்வருதல்காண்க. (௨௯)

நந்துநாகுநீர்வண்டுசென்னடைவழியெழுத்தாய்
வந்துவிழினும்வீழுமவ்வழக்கினின்கையிற்
சிந்துசாம்பருஞ்சிறுசொலுமருந்துமந்திரம்போற்
சந்துசூழ்மலையான்சுரந்தணித்தனகண்டாய்.

(இ-ள்.) நந்து - சங்கும், நாகு - நத்தையும், நீர்வண்டு - நீர்வண்டும், செல் நடைவழி - செல்லுஞ்சேற்றுவழியில், எழுத்து ஆய் வந்து விழினும்வீழும் - எழுத்தாகவந்து வீழ்ந்தாலும் ஒருகால்வீழும், அவழக்கு இல் - அந்தவழக்கைப்போல, நின்கையில் சிந்துசாம்பரும் சிறுசொலும் மருந்தும் மந்திரம்போல் - உனதுகையாற்சிந்தியசாம்பலும் உனதுவாயாற்சொல்லிய பொருளமையாதபாடலும் மருந்து மந்திரமும்போல, சந்துசூழ்மலையான் சுரம் தணித்தன - சந்தனமரஞ்சூழ்ந்த பொதியமலையையுடைய பாண்டியன் சுரநோயையொழித்தன, கண்டாய்-காணாய்.

சங்கும் நத்தையும் நீர்வண்டும் சேற்றிலூழுதுசென்றவழி, அவ்வுழுதல் ஓர் காலத்தில் எழுத்தாய்க் காணப்படுதலு லகவழக்குளென்பார் நந்து நாகு நீர் வண்டுசென்னடைவழி யெழுத்தாய்வந்து விழினும்வீழு மவ்வழக்கினில் எனவும். அதுபோல ச்சாம்பலும் பாடலும் ஓர்காலத்தில் நோயொழித்தாலும் ஒழிக்கும் என்பார் நின்கையிற்சிந்து சாம்பருஞ் சிறுசொலுமருந்து மந்திரம்போல் சந்துசூழ்மலையான் சுரந் தணித்தனவெனவும், இது நிச்சயம் என்பார் தெளிவுபற்றி எதிர்காலத்தை யிறந்த காலமாகக் கண்டாய் எனவும், பொருளமையாத சொற்கள் என்பார் சிறுசொலும் எனவுங்கூறினார் என்றார். இல் ஒப்புப்பொருளில்வந்த ஐந்தனுருபு. நடைவழி ஒருபொருட்கிளவிகள். (௩௦)

உங்கண்மந்திரமேடொன்றிற்றீட்டுகவோரேட்
டெங்கண்மந்திரந்தன்னையுந்தீட்டுகவிரண்டு
மங்கிவாயிடின்வெந்ததுதோற்றதவ்வங்கி
நுங்கிடாததுவென்றதென்றொட்டியேநுவலா.

(இ-ள்.) உங்கள் மந்திரம் ஏடு ஒன்றில் தீட்டுக - உங்கள்மந்திரத்தை யோரேட்டிலெழுதக்கடவீர், ஓர் ஏடு எங்கள் மந்திரம் தன்னையும் தீட்டுக - ஒரு ஏட்டிலில் எங்கள்மந்திரத்தையும் எழுதக்கடவேம், இரண்டும் அங்கிவாய் இடின்-இந்த இரண்டேட்டினையும் தீயிலிட்டால், வெந்தது தோற்றது - ஏடுவெந்தசமயம்தோற்றது, அ அங்கிநுங்கிடாதது வென்றது என்று - அந்நெருப்பு நுகராத ஏட்டிலுள்ள சமயம் வெற்றிகொண்டதென்று, ஒட்டிநுவலா - உடன்பட்டுக்கூறி.

மந்திரமே சமயமாதலால் தோற்றது, வென்றது என்றார். தீட்டுக வியங்கோள் வினைமுற்றாதலால் முன்னிலையிலும் தன்மையிலும்வந்தன. (௩௧)

செக்கர்ஞ்சடையானுறைபதிகளிற்செய்யத்
தக்கதன்றவனோடுநிலைபிழைத்துநஞ்சார்வாய்
விக்கமெம்மனோர்க்கியற்றுவான்வேறொருதலத்திற்
புக்கமர்ந்துவாதஞ்செயப்போதுகமென்று.

(இ-ள்.) செக்கர் ஆம் சடையான் உறைபதிகளில் செய்ய தக்கது அன்று - செவந்த அழகியசடையையுடைய சிவனதுதலங்களில் இதுசெய்யத்தக்கவாதல்ல,

அவன் நடுநிலை பிழைத்து - அச்சிவனடுவுநிலைமையினின்றுந்தப்பி, நம் சார்வு ஆய்- உங்களுக்குப்பற்றுக்கோடாய், எம்மனோர்க்கு வீக்கம் இயற்றுவான் - எங்களுக்குக் கெடுதிசெய்வான், வேறு ஒருதலத்தில் புக்கு அமர்ந்து வாதம் செய போதகம் என்னு - வேறொருதலத்திற் சென்றிருந்து வாதஞ்செய்யப் போகக்கடவோமென்று.

வீக்கம் என்னுந்தொழிற்பெயர் விக்கம் என்றது குறுக்கும் வழிக்குறுக்கல். வீ கெடுதி. (கூஉ)

வென்றிமாமுரசுறங்கிடாவியனகர்ப்புறம்போய்
மன்றல்வேம்பன்முன்கதழெரிமடுத்திடிற்பிழைப்ப
தொன்றுவேவதொன்றீதுகொண்டுமர்களுமெமரு
மின்றுவெல்வதுந்தோற்பதுங்காண்டுமென்றெழுந்தார்.

(இ-ள்.) மா - பெரிய, வென்றி முரசு உறங்கிடாத வியன் நகர் புறம்போய்- வெற்றிமுரசு உறங்காத பெரிய இந்நகர்ப்புறம்பேசென்று, மன்றல் வேம்பன்முன்- வாசங்கமழும் வேப்பமலர்மாலையையணிந்த பாண்டியன்முன்னே, கதழ் எரிமடுத்திடில் - விரைந்தெரியுந் தீயிற்பெய்தால், பிழைப்பது ஒன்று வேவது ஒன்று - வேகாதிருப்பதொன்று வெந்தொழிவதொன்று, ஈதுகொண்டு - ஆகிய இந்த ஏதுவைக் கொண்டு, உமர்களும் எமரும் இன்று வெல்வதும் தோற்பதும் காண்டும் என்று எழுந்தார் - உம்மவர்களும் எம்மவர்களும் இப்பொழுது வெற்றிகொள்வதையும் தோல்வியடைவதையும் காண்பேமென்றெழுந்தார்கள்.

சமயத்துக்குரிய மந்திரம் எழுதிய ஏடென முன்னர்க்கூறுதலால் வாளாகதழெரிமடுத்திடில் எனவும், வெல்வதொன்று தோற்பதொன்று காண்டற்குப், பிழைப்பதொன்று வேவதொன்று என்றமையால் ஈதுகொண்டு எனவுங்கூறினார் என்றார். மழலையின்னமுழ் என்பதுதொடங்கி, வென்றிமாமுர சுறங்கிடா என்பதுகாறுங் குளகம் ஆதலால் இவ்வாறுகூறிச் சமணர்களெழுந்தார் எனமுடிக்க. (கூகூ)

ஒருபோருகொச்சகம்.

ஈட்டுவஞ்சநெஞ்சரேயெழீஇநகர்ப்புறம்புபோய்க்
கீட்டிசைக்கணோரழற்கிடங்குதொட்டெழுந்துவா
னீட்டுகோடரங்குறைத்துநிறையவிட்டுநெட்டெரி
மூட்டினார்தமாதரார்வயிற்றுமிட்டுமூட்டினார்.

(இ-ள்.) வஞ்சம் ஈட்டும் நெஞ்சர் ஏ எழீஇ - வஞ்சத்தைத்தேடு மனத்தையுடைய சமணர்களே முன்னெழுந்து, நகர் புறம்பு போய் - மதுரைத்திருநகரின்புறம்பேசென்று, கீழ் திசைகண் ஓர் அழல் கிடங்கு தொட்டு - கீழைத்திசையில் ஓர் நெருப்புவளர்க்குங் குழியைத்தோண்டி, எழுந்து வான் நீட்டு கோடரம் குறைத்து- கிளைத்து விண்ணையளாவிய மரக்கொம்புகளைத்தறித்து, நிறையவிட்டு - (அக்குழி) நிறையப்பெய்து, நெடு எரி மூட்டினார் - பெருநெருப்பிட்டுமூட்டினார்கள், தம்மாதரார் வயிறும் இட்டு மூட்டினார் - தமதுமனைக்கிழத்தியர் வயிற்றிலும் இட்டு மூட்டினார்கள்.

இது காரணமாகக் கழுவிலேறி யுயிரிழத்தலால் மாதரார் வயிற்றுமிட்டு மூட்டினார் என எதிரது தழீஇய எச்சவும்மை தந்துகூறினார். (கூச)

ஞானமுண்டமுனிவர்தம்மைவெள்ளியெள்ளிநாயினு
மீனரங்கியைத்தடுத்திருப்பவெண்ணிராயிர

Koviloor Digital Library

ஞானதொண்டருடனெழுந்துசண்பைவேந்துமரசனு
மானனாருமந்திரக்கிழாரும்வந்துவைகினார்.

(இ-ள்.) ஞானம் உண்ட முனிவர் தம்மை எள்ளி எள்ளி - சிவஞானமுண்டருளிய முனிவராகிய ஆளுடையபிள்ளையாரை யடிக்கடியிகழ்ந்து, நாயினும் ஈனர் அக்கியை தடுத்து இருப்ப - நாயினுங்கடைப்பட்ட இழிசனராகிய சமணர்கள் தாம் வளர்த்ததீயினைத் தம்வழிப்படுத்தி யக்கிருக்க, எண்ணிராயிரர் ஞானதொண்டர் உடன் எழுந்து - பதினறாயிரமென்றும் இலக்கமமைந்த அடியார் திருக்கூட்டத்தோடெழுந்து, சண்பைவேந்தும்-சீகாழித் திருநகர்க்கரசராகிய பிள்ளையாரும், அரசனும் மான் அன்னாரும் மந்திரக்கிழாரும் வந்துவைகினார் - சவுந்தரியபாண்டியனும் பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் அங்குவந்து தங்கினார்கள்.

எள்ளி எள்ளி பன்மைப்பொருளில்வந்த அடுக்குத்தொடர். இன் என்னும் ஐந்தனுருபு இழிவுகுறித்தற்கண்வந்த எல்லைப்பொருட்டு. உம்மை இழிவு சிறப்புப் பொருட்டு. (௩௫)

உள்ளவிழ்ந்தமுலைசுரந்தொழுக்குபாலருந்தியே
துள்ளியோடுகன்றுபின்றொடர்ந்துசெல்லுமாவென
வெள்ளியம்பலத்துளாடும்வேதகீதர்காதல்கூர்
பிள்ளைபோனவாறுதம்பிராட்டியோடுமெய்தினார்.

(இ-ள்.) உள் அவிழ்ந்த - மனமலர்தலால், முலைசுரந்து ஒழுக்கு பால் அருந்தியே - முலைசுரந்தொழுக்கும் பாலைப்பருகி, துள்ளி ஓடு கன்றுபின் தொடர்ந்து செல்லும் ஆன் என்ன - துள்ளியோடாநின்ற இளங்கன்றின் பின்னேசெல்லும் பசுவைப்போல, வெள்ளி அம்பலத்து உள் ஆடும் வேதகீதர் காதல்கூர் - வெள்ளியம்பலத்தில் நடித்தருளும் சாமவேதகீதப்பிரியராகிய இறைவர் காதல்கூர்ந்து, பிள்ளை போன ஆறு - தமதுபிள்ளையார்சென்றவழியில், தம்பிராட்டியோடும் ஏகினார் - தமதுபிராட்டியாரோடுஞ் சென்றருளினார்.

முலைசுரந்து பாலொழுக்குதற்கு அன்பு காரணமாதலால் உள்ளவிழ்ந்த என்றார். (௩௬)

ஆறினொடிரண்டடுத்தவாயிரஞ்சமணரும்
வேறுவேறுதாமுயன்றமந்திரங்கள்வேறுவே
றாறுநீர்சுரந்தவோலையிற்பொறித்தொருங்குபோய்ச்
சீறிவானிமிர்ந்தெழுந்ததீயின்வாய்நிரப்பினார்.

(இ-ள்.) ஆறின் ஒடு இரண்டு அடுத்த ஆயிரஞ்சமணரும் - ஆறென்னும் எண்ணினோடு இரண்டென்னு மெண்ணடுத்த எண்ணாயிரஞ் சமணர்களும், வேறு வேறு தாம் முயன்ற மந்திரங்கள் - தனித்தனி தாம் பழகிவந்த மந்திரங்களை, வேறு வேறு ஊறு நீர் சுரந்த ஓலையில் பொறித்து - தனித்தனியாக நீருறிச்சுரந்த பச்சோலையிலெழுதி, ஒருங்குபோய் - ஒருசேரத் திரண்டுபோய், சீறி வான் நிமிர்ந்து எழுந்த தீயின் வாய் நிரப்பினார் - கோபித்து ஆகாயத்தை யளாவிய நெருப்பின் வாயிலிட்டு நிரப்பினார்கள்.

பயிற்சியாற் பல என்பார் வேறு வேறு தாமுயன்ற மந்திரங்கள் எனவும், இட்டவேடு பல என்பார் ஒருங்குபோய் நிரப்பினார் எனவும். பச்சோலையிலெழுதினார் என்பார் ஊறுநீர் சுரந்த வோலையிற் பொறித்து எனவுங் கூறினார். "மையனை

Koviloor Digital Library

ஞ்சுடைய மனருந்தம்பொருள்வரைந்த - கையிலேட்டினைக் கதவுசெந்நியினிலிடுவா ர் - உய்யுமோவிதுவென வுறுங்கவலையாமுணர்வால் - நையுநெஞ்சினராகியே நடுங்கி நின்றிட்டார்'' என ஷை புராணத்தில் வருந் திருப்பாசுரத்தாலும் பலர் என்பதறிக.

அக்கிவாய்மடுத்தவேடனைத்துமக்கணத்தினே
யிக்குவாயுலர்ந்ததோடெனக்கரிந்துசாம்பரா
யுக்கவாறுகண்டுநீசருட்கிடந்துபொங்கவே
திக்குளார்கள்கண்டபேர்சிரித்துளார்களாயினர்.

(இ-ள்.) அக்கிவாய் மடுத்த ஏடு அனைத்தும் - நெருப்பிலிட்ட ஏடு முற்றும், அ கணத்தின் ஏ - அக்கணப்போழ்திலேயே, இக்கு வாய் உலர்ந்ததோடு என்ன - கரும்பில் காய்ந்த தோட்டைப்போல, கரிந்து சாம்பர் ஆய் உக்க ஆறு கண்டு நீசர் உள்கிடந்து பொங்க - கருகிச் சாம்பலா யுருவழிந்த வகையைக்கண்டு புலையராகி ய சமணர்களது மனத்திற் புழுக்கம் நிறைந்து பொங்கியெழ, திக்கு உள்ளார்கள் கண்டபேர் சிரித்துளார்கள் ஆயினர் - அந்தத் திக்கிலுள்ளவர்களுட் பார்த்தபேர்கள் சிரிக்கத் தொடங்கினர்கள்.

தோடு கரும்பின் கணுவில் வாய்ந்த தோடு. ஏடு சாம்பலாயின என்பது "அஞ்சுமுள்ளத்தராகியு மறிவிலாவமணர் - வெஞ்சுடர்ப்பெருந் தியினில்விழுத்திய வேடு - பஞ்சுதீயினிற்பட்டதுபடக்கண்டுபயத்தால் - நெஞ்சுசோரவும்பீலிகைசோ ரவும்நின்றார்'' எனவும், திக்குளார்கள் கண்டபேர் சிரிக்க என்றது "அருகர்தாமிட் டவேடு வாங்கச்சென்றணையும்போதில் - பெருகுதீக்கதுவவெந்து பேர்ந்தமைகண்ட மன்னன் - தருபுனல்கொண்டுசெந்தீத் தணிப்பித்தான்சமணரங்குக் - கருகியசாம் பலோடுங் கரியலான்மற்றென்காண்பார். செய்வதொன்றறிகிலாதார் திகைப்பினற் றிரண்டசாம்பல் - கையினற்பிசைந்தூற்றிப் பார்ப்பதுகண்டமன்னன் - எய்திய நகையினோடு மேடினமரித்துக்காணும் - பொய்யினன்மெய்மையாக்கப் புகுந்தகீர் போமினென்றான்'' எனவும் ஷை புராணத்தில் வருதல் காண்க. (கூஅ)

விரிந்தவேதநாவர்தாம்விரித்தவேதமெய்ப்பொருள்
வரைந்தபுத்தகத்தைவண்கயிற்றினல்வகிர்ந்துதா
மருந்தஞானவமுதளித்தவம்மைபேரகப்படத்
தெரிந்தவேடெடுத்தடுத்ததீயின்வாயிலிட்டனர்.

(இ-ள்.) விரிந்த வேதம் நாவர் - பரந்த வேதங்கள் வாழுந் திருநாவையுடை ய பிள்ளையார், தாம் விரித்த வேத மெய்ப்பொருள் வரைந்த புத்தகத்தை - தாம் வி ரித்தருளிய வேதசாரத்தி றுண்மைப்பொருளாகிய தமிழ்வேதம் எழுதிய திருமுறை யை, வண் கயிற்றின் ஆல் வகிர்ந்து - சாத்திய திருக்கயிற்றினால் வகிர்ந்து, தாம் அ ருந்த ஞான அமுது அளித்த அம்மை பேர் அகப்பட-தாம் பருகச் சிவஞான வமுது தந்தருளிய உமையம்மையார் திருப்பேருதயமாக, தெரிந்த ஏடு எடுத்து-புலப்பட்ட அத் திருவேட்டினையெடுத்து, அடுத்த தீயின் வாயில் இட்டனர் - தமதருகிலடுத்த தீயின் வாயிற் பெய்தருளினர்.

திருமுறையிற்கயிறுசாத்தி யுதயமான திருப்பதிகவேட்டினைத் தீயிலிட்டனர் என்பார்தாம் - அருந்தஞானவமுதளித்த வம்மைபேரகப்பட - தெரிந்தவேடெடுத்த டுத்த தீயின்வாயிலிட்டனர் என்றார். திருப்பதிகம். திருநள்ளாறு - பண் தக்கராகம் "போகமார்த்தபூண்முலையா டன்னோடும்பொன்னகலம் - பாகமார்த்தபைங்கண்வெ

ன்றேற்றன்னைப்பரமேட்டி-ஆகமார்த்ததோலுடையன் கோவணவாடையின்மேல்-நாகமார்த்தஎம்பெருமான்மேயது நள்ளாறே. தஞ்புனலும்வெண்பிறையுந் தாங்கிய சடையன் - நஞ்புகல்லார்மல்குகாழி ஞானசம்பந்தனல்ல - பஞ்புநள்ளாறேத்தும் பாடல்பத்தும்வல்லார் - உஞ்புக்கிய வானவரோடுலகுறைவாரே" என வறிக. செக்கிணைற்றவரேபொருளென்றுதாந்தெரிந்த - பொங்கிசைத்திருப்பதிகன்முறை யினைப்போற்றி - எக்ஞுதனேபரம்பொருளெனத்தொழுதெடுத்தே - அங்கையான் முடிமிசைக்கொண்டு காப்புநாணவிழ்த்தார். சாற்றுமெய்ப்பொருட்டுரு திருமுறை யினைத்தாமே - நீற்றுவண்ணையோன் மறித்ததும்வந்துநேர்ந்தளதால் - நாற்றடம் புயத்தண்ணலார்மருவுநள்ளாறு - போற்றுமப்பதிகம்போகமார்த்த பூண்முலையாள். அத்திருப்பதிகத்தினையமர்ந்தகொண்டருளி - மைத்தவெங்கடுமிடற்றுநள்ளாறரைவ ணங்கி - மெய்த்தாற்றிருவேட்டினைக்கழற்றிமெய்மகிழ்ந்து - கைத்தலத்திடைக்கொ ண்டனர்வெஞ்சியர்தலைவர். நன்மையுய்க்குமெய்ப் பதிகத்திருதனென்றெடுத்தும்-எ ங்லையாருடை யிசன்றுமமெயென்றும் - மன்றுமெய்ப்பொருளாமெனக்காட்டி டவன்னி - தன்னிலாவெனத்தளிரிளவளரொளிபாடி. செய்யதாமரையக விதழினு மிகச்செவந்த - கையிலேட்டினைக்கைதவனபேரவைகாண - வெய்யதியினில்வெற் றரையவர்சிந்தைவேவ - வையமுய்ந்திடவந்தவர்மகிழ்ந்துமுன்னிட்டார்" என ஷை புராணத்தில் வருதல்காண்க. அப்போதருளிய திருப்பதிகம் திருநள்ளாறு-திருவிரா கம்-பண்-சாதாரி. "தளிரிளவளரொளிதனதெழிறருதிருமலைமகள் - குளிரிளவள ரொளிவனமுலையணியிவைகுலவலில் - நளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தாமமே-மிளிரிளவளரெரியிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. சிற்றிடையரிவைதன் வனமுலை யிணையொடுசெறிதரு - நற்றிறமுறுகழுமலநகர் ஞானசம்பந்தன் - கொற்றவனெதிரி டை யெரியினிலிடவிவைகூறிய - சொற்றெரியொருபது மறிபவர்துயரிலர்தூயரே" எனவறிக. (௧௧)

மறைபுலப்படுத்தநால்வரைந்தவேடநந்தநா
ளறைபுனற்கிடந்ததாமெனப்பசந்ததரசனு
நிறையமைச்சுமரசியாருநின்றபேருமந்தணர்க்
கிறைவனைப்புகழ்ந்தளப்பிலின்பவெள்ளமூழ்கினர்.

(இ-ள்.) மறை புலப்படுத்த நால்வரைந்த ஏடு - வேதத்தின்பொருளை வெளி ப்படுத்திய திருமுறையினின்றுங் கைக்கொண்ட ஏடு, அநந்த நாள் - அநேககாலம், அறைபுனல் கிடந்தது ஆம் என்ன பசந்தது - ஒலிக்கும் நீரிற்கிடந்ததுபோலப் பச ந்தகாட்டியது, அரசனும் நிறை அமைச்சும் அரசியாரும் நின்றபேரும் - பாண்டி யனும் நன்னறிவுநிறைந்த குலச்சிறையாரும் பாண்டிமாதேவியாரும் அங்குநின்ற வர்களும், அந்தணர்க்கு இறைவனைபுகழ்ந்து - மறையவர்களுக்குத் தலைவராகிய பி ள்ளையாரைப்புகழ்ந்து, அளப்பு இல் இன்பவெள்ளம் மூழ்கினர் - எல்லையில்லாத பேரின்பவெள்ளத்தி லழுந்தினர்கள்.

"மாலமன்னவனவையின்முன்வளர்த்தசெந்தியின் - ஞானமுண்டவரிட்ட வேடிகைத்தாழிகையில் - ஈனமின்மைகண்டியாவரும்வியப்புறவெடுத்தார் - பான் மைமுன்செயிற்பச்சையும்புதுமையும்பயப்ப" என ஷை புராணத்தில்வருதல்காண்க.

வெந்தசிக்கையமணர்வாதுவெல்வதற்குவேறிடம்
புந்திசெய்துவந்தவப்பொதுத்தலம்பொதுக்கடிந்
தந்தருளர்வாதுவென்றவன்றுதொட்டுஞானசம்
பந்தனென்றநாமமேபடைத்துயர்ந்ததின்றுமே.

Koviloor Digital Library

(இ-ள்.) வெந்த சிந்தை அமணர்வாது வெல்வதற்கு - (தமது ஏடுவெந்தது போல) வெந்தழிந்த மனத்தையுடைய சமணர்கள் வாதில்வெல்ல, வேறு இடம்புந்தி செய்துவந்த அ பொதுத்தலம் - வேறிடம்வேண்டுமென்று கருதிவந்த அந்தப் பொதுவிடமானது, அந்தணாளர் வாதுவென்ற அன்றுதொட்டு - பிள்ளையார் அவர்களைவாதில்வென்ற அக்காலந்தொட்டு, பொதுகடிந்து ஞானசம்பந்தன் என்ற நாமம் ஏ படைத்து - பொதுமைநீக்கி ஞானசம்பந்தனென்ற திருநாமத்தையேபெற்று, இன்று உம் உயர்ந்தது - இக்காலத்திலு முயர்ந்துவிளங்கியது.

வாதுசெய்ய இருவருக்கும்பொதுமையாயுள்ள இடம், வென்ற அந்நாள்தொட்டு இந்நாள்காறும் ஞானசம்பந்தனென்னப் பெயர்வாய்ந்ததென்பார் வாதுவென்றவன்றுதொட்டு ஞானசம்பந்தனென்ற நாமமேபடைத்துயர்ந்ததின்றுமேஎன்றார்.

அன்னவேடுமுறையினோடி றுக்கியந்தணாளர்கோன்
மன்னைநோக்கவினையினோடுபாயுடுத்தமாசர்தாஞ்
சொன்னசூள்புலப்படத்துணிந்தும்வாய்மைநாணொரீஇக்
கன்னிநாடனவைசிரிப்பவாற்றலாதுகதறுவார்.

(இ-ள்.) அந்தணாளர்கோன் அன்ன ஏடு முறையினோடு இறுக்கி - அந்தணர்க்கரசராகிய பிள்ளையார் அந்தவேட்டினைத் திருமுறையிற்சேர்த்துக்கட்டி, மன் ஐ நோக்க - பாண்டியனைப்பார்த்தருள, வினையினோடு பாய் உடுத்த மாசர்தாம்-தீவினையோடு பாயையும் ஆடையாகவுடுத்த சமணமுக்கடைந்தவர், சொன்ன சூள் புலப்பட - சொன்னசபதம்விளங்க, துணிந்தும் - தெரிந்தும், வாய்மைநாண் ஒருவி-உண்மையு நாணமுமாகிய இவற்றினின்றுநீங்கி, கன்னிநாடன் அவைசிரிப்ப-கன்னிநாட்டையுடைய பாண்டியனது சபையிலுள்ளோர்சிரிக்க, ஆற்றலாது கதறுவார்-சிறிதுஞ் சகியாது வாய்விட்டுக்கதறுவாராயினர்கள்.

சொன்ன சூள் என்றது ஏடுவெந்தசமயம் தோற்றது எனவும், வேகாதது வென்றது எனவும் கூறியசபதம். ஏடுவெந்ததால் தமதுசமயந்தோற்றதெனந்தெரிந்தும் மீளவுஞ் சபதம் ஒட்டுதலால் வாய்மைநாணொரீஇ - கன்னிநாடனவைசிரிப்ப எனவுங்கூறினார். ஏட்டைத் திருமுறையிற்சேர்த்தது என்றது "எடுத்தவேட்டினை யவையின்முன்காட்டியம்முறையில்-அடுத்தவண்ணமே கோத்தலும்" என ஷை புராணத்தில் வருதல்காண்க. (சஉ)

ஏடநாங்களெழுதியிட்டபச்சையேடெண்ணாயிரம்
வீடவந்தநீவரைந்துவிட்டவோலையொன்றுமென்
வாடலின்றிநீரிலிட்டவண்ணமானதாவிதுன்
பாடவஞ்செய்விஞ்சைகொண்டுபாவகற்பிணித்ததே.

(இ-ள்.) ஏட - ஏட - நாங்கள் எழுதி இட்ட பச்சை ஏடு எண்ணாயிரம் வீட - நாங்களெழுதிப்போட்ட பச்சையோலையெண்ணாயிரமும் வெந்துசாம்பலாக, நீவரைந்துவிட்ட அந்த ஓலை ஒன்றும் - நீயெழுதிப்பெய்த அந்த ஓலையொன்றுமட்டும், வாடல் இன்றி நீரில் இட்டவண்ணம் ஆனது என் - சிறிதும்வாடாது முன்னையிலும் நீரிற்பசுஞ்செய்த பசியநிறம்படைத்ததுயாது, இது - இவ்வாறுனது, உன்பாடவம் செய் விஞ்சைகொண்டு பாவகன்பிணித்தது - நீகற்ற (பார்ப்போர்க்கு) மகிழ்ச்சிசெய்யும் வித்தையைக்கொண்டு நீயைத்தம்பித்ததேயாகும்.

ஏட தோழன் முன்னிலைப்பெயர். (சங)

Koviloor Digital Library

உங்களேடுமெங்களேடுமும்பர்வானளாய்விரைஇப்
பொங்கியோடும்வையைநீரிலிடுகவிட்டபோதுதா
னங்குநீரெதிர்க்குமோலைவெல்லுமோலையன்றியே
துங்கவேலைசெல்லுமோலைதோற்குமோலையாவதே.

(இ-ள்.) உங்கள் ஏடும் எங்கள் ஏடும் - உங்களுடைய ஏட்டையும் எங்களுடைய ஏட்டையும், வான் உம்பர் அளாய் விரைஇ பொங்கி ஓடும் வையை நீரில் இடுக - விண்ணின்மேலளாவிவிரைந்து கரைவழிந்து ஓடாநின்ற வையைப்பெருக்கிலிட்டக்கடவோம், இட்டபோதுதான் - (அவ்வாறு) இட்டகாலையில், அங்கு நீர் எதிர்க்கும் ஓலை வெல்லும் ஓலை - அப்பெருக்கினீரிலெதிர்ந்துசெல்லுமோலை வென்ற ஓலையாம், அன்றி - (அவ்வாறு) அல்லாமல், துங்கம் - பெரிய, வேலைசெல்லும் ஓலை தோற்கும் ஓலை ஆவது - (பெருக்கின்வழிப்பட்டு) கடலிற்சென்றொடுங்கும் ஓலைதோற்கும் ஓலையாம்.

ஓலை என்றது இக்குச்சமயத்தினை. "தென்னவனவையுட்கொண்டு செப்பிய மாற்றந்தேரா-சொன்னதுபயனுக்கொண்டு சொல்லுவார்தொடர்ந்தவாது-முன்னுறவிருவாற்செய்தோ முக்காலிலொருக்கால்வெற்றி-யென்னினுமுடையோமெய்மையினியொன்றுகாண்பதென்றார். நீடுமெய்ப்பொருளினுண்மை நிலைபெறுந்தன்மையெல்லாம் - ஏறவெழுதிமற்ற வேட்டிலையாறுமூன்றும் - ஓடுநீராற்றிலிட்டாலொழுகுதல் செய்யாதங்கே - ஏடுமுன்றக்குமேடு நற்பொருள்பரிப்பதென்றார்" என ஷை புராணத்தில்வருதல்காண்க. (௪௪)

வென்றுவிறலடைந்தவர்க்குவிறலழிந்துதோற்றபே
ரென்றுமேவலடிமையாவதென்றிசைந்துகைதவக்
குன்றுபோலுநின்றகுண்டர்கூறலோடுமீறிலா
மன்றுளாடுமடிகண்மைந்தர்வாய்மலர்ந்துபேசுவார்.

(இ-ள்.) வென்று விறல் அடைந்தவர்க்கு - வென்று பெருமையடைந்தவர்களுக்கு, விறல் அழிந்து தோற்றபேர் என்றும் ஏவல் அடிமை ஆவது என்று இசைந்து - தமதுபெருமைகெட்டுத் தோற்றவர்கள் எக்காலத்தும் குற்றேவல்செய்யு மடிமைகளாகக்கடவரென்று உடன்பட்டு, கைதவம் குன்றுபோலும் நின்ற குண்டர் கூறலோடும் - வஞ்சகமலைபோலும் நின்ற கீழ்மக்கள் கூறவும், ஈறு இல்லாத மன்று உள் ஆடும் அடிகள் மைந்தர் வாய்மலர்ந்து பேசுவார் - என்றுமுள்ள வெள்ளியம்பலத்தில் நடித்தருளு மிறைவர் புத்திரராகிய பிள்ளையார் திருவாய்மலர்ந்து கூறுவாராயினர். (௪௫)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அடியார்பதினாறாயிரவருள்ளார்சிவனையவமதித்த
கொடியார்நீவிருமக்கேற்றதண்டமிதுவோகொன்றைமதி
முடியாரருளாலுங்களைநாம்வென்றேமாயின்மூவிலைவேல்
வடிவாணிரைத்தகழுநுனையிலிடுவேமதுவேவழக்கென்றார்.

(இ-ள்.) அடியார் பதினாறாயிரவர் உள்ளார் - நமக்கு ஏவல்செய்யும் அடியவர்களோ பதினாறாயிரம்பேருள்ளார், (அவரேயமையும்) நீவிர் சிவனை அவமதித்த கொடியார் - நீங்களோ சிவபெருமானை நிந்தித்த கொடியவர்கள், உமக்கு ஏற்ற தண்டம் இது ஓ - உங்களுக்குத்தக்கதண்டம் இதுவோ, கொன்றை மதி முடியார்

Koviloor Digital Library

அருளால் - கொன்றைமாலையையும் இளஞ்சந்திரனையுமணிந்த சடாமுடியையுடையவவ்விறைவரது திருவருளால், உங்களை நாம் வென்றேம் ஆயின் - உங்களைநாங்கள் வென்றோமானால், மூவிலை வேல் வடிவாள் நிரைத்த கழுமுனையில் இடுவேம் அதுஏ வழக்கு என்றார் - சூலம்போல வரிசையாகநட்ட கழுவின்முனையில் உங்களையேற்றுவோம், அதுவே வழக்கு என்றருளினார்.

மூவிலைவேலாகிய வடித்தவாள் எனக்கொண்டு சூலம் எனப்பொருள்கொள்க. நமது ஏவல்செய்யும் அடியவர்கள் சிவனது வழிபாட்டினின்றவர்கள் அவர்களேயமையும் என்பார் அடியார் பதினாறுயிரவருள்ளார் எனவும்; நீங்கள் சிவனைநிந்திப்போராதலால் எமக்கு இயையீர் என்பார் சிவனையவமதித்த கொடியார் நீவிர் எனவும்; நிந்தையாளராதல் உமக்குத்தக்க தண்டம் கழுவிலேற்றுதலென்பார் அதுவேவழக்கென்றார் எனவுங் கூறினார். (௬௬)

ஊழின்வலியாலமணரதற்குடன்பட்டார்களஃதறிந்து
சூழியானைக்குலச்சிறையுந்தச்சர்பலரைத்தொகுவித்துக்
காழினெடியபழுமரத்திற்சூலவடிவாக்கழுநிறுவிப்
பாழிநெடியதோள்வேந்தன்முன்னேகொடுபோய்ப்பரப்பினார்.

(இ-ள்.) ஊழின் வலியால் - போகூழின்வன்மையினால், அமணர் அதற்கு உடன்பட்டார்கள் - சமணர்களதனுக்கு இயைந்தார்கள், அஃது அறிந்து-அதனையறிந்து; சூழி யானை குலச்சிறையும் - முகபடாத்தையணிந்த யானையையுடைய குலச்சிறையாரும், தச்சர் பலரை தொகுவித்து - பலதச்சரைவருவித்து, காழின் நெடிய பழுமரத்தில் - வயிரத்தால் முதிர்ந்த ஆலமரத்தால், சூலவடிவு ஆக கழு நிறுவி - சூலவடிவாகக் கழுக்களையமைத்து, பாழி நெடிய தோள் வேந்தன் முன் ஏ கொடுபோய் பரப்பினார் - பருத்த நீண்டதோளையுடைய அரசன்முன்னே கொண்டு சென்று அவற்றைப் பரப்பினர். (௬௭)

தேறலாதார்தமைக்காழிச்செம்மனோக்கியினிவம்மி
னீறுபூசிக்கண்டிகையும்பூண்டுநிருத்தரெழுத்தைந்து
மூறவோதிப்பாசமொழித்துய்மினென்றுவறநோக்கிக்
கூறினார்மற்றதுகேட்டுக்குண்டரெரியிற்கொதித்துரைப்பார்.

(இ-ள்.) காழி செம்மல் தேறலாதார் தம்மை நோக்கி - சீகாழியிலெழுந்தருளிய பிள்ளையார் உண்மைநெறியைத் தெளிந்துணராத சமணர்களைப்பார்த்து, இனி வம்மின் - இனியாவது இங்குவாருங்கள், நீறு பூசி கண்டிகையும் பூண்டு நிருத்தர் எழுத்து ஐந்தும் ஊற ஓதி - திருநீற்றைப்பூசியுருத்திராக்கக் கண்டிகையுந்தரித்து இறைவர் ஸ்ரீபஞ்சாக்கரத்தை உருவேற நாவாலோதி, பாசம் ஒழித்து உய்மின் என்று - மலத்தையொழித்துப் பிழையுங்களென்று, அறம் நோக்கி கூறினார் - தருமநிலையைநோக்கிக் கூறியருளினார், அது கேட்டு - அந்தவார்த்தையைக்கேட்டு, குண்டர் - கீழ்மக்களாகிய சமணர்கள், எரியில் கொதித்து உரைப்பார் - நெருப்பைப்போல மனங்கொதித்துப் பேசுவாராயினர்.

சைவமெய்யொழுக்கம் உண்மை என்பது உணர்ந்தீர் ஆதலால் இனி இச்சமயத்தில் வாரும் என்பார் இனி வம்மின் எனவும், அறிவின்மையாலேன் கேடுறுகின்றீர்கள் என இரங்கினார் என்பார் அறநோக்கிக் கூறினார் எனவுங் கூறினார். (௬௮)

Koviloor Digital Library

முன்புதீயில்வென்றனமேநீரில்யாதாய்முடியுமென்ன
வன்புபேசியெமையிணக்கியகலநினைந்தாயல்லதைநீ
பின்புவாதுசெயத்துணியும்பெற்றியுரைத்தாயல்லைபுலா
லென்புபூணியடியடைந்தவேழாய்போதியெனமறுத்தார்.

(இ-ள்.) முன்பு தீயில் வென்றனம் - முன்னர்த்தீயில் வென்றோம், நீரில் யாது ஆய் முடியும் என்ன - நீர்ப்பெருக்கி லெவ்வாறுமுடியுமோ என்று, அன்பு பேசி - பிரியவசனம்பேசி, எம்மை இணக்கி அகல நினைந்தாய் அல்லது - (குளோட்டிய) எம்மையுடன்படுத்தி யிச்சூளினின்றும் நீங்க நினைத்தாயன்றி, நீ பின்பு வாது செய்ய துணியும் பெற்றி உரைத்தாய் அல்லை - நீ பின்பு எம்மோடுவாதுசெய்யத் துணியுந்தன்மையைக் கூறினையல்லை, புலால் என்பு பூணி அடி அடைந்த ஏழாய் போதி என்ன மறுத்தார் - நாற்றமுடைய எலும்பை யாபரணமாகப்பூண்டவனது பாதத்தைச் சரணடைந்த அறிவில்லாய் நீபோவாயென்று இகழ்ந்து அவ்வசனத்தை மறுத்தார்கள்.

தம்மனது வெத்தைக்காட்டினார் ஆதலால் புலால் என்பு எனவும், நீங்கள் சைவியல்லீர் என்றாராதலால் பூணியடியடைந்த எனவும், இதைப்பகுத்தறியு முணர்ச்சியில்லீர் என்றார் ஆதலால் ஏழாய் எனவும், உமதுவார்த்தைக்கிசையேம் என்றாராதலால் போதி யெனவும் கூறினார் என்றார். (௪௯)

பூகந்தவழும்பழுமரத்தையுதைத்துக்கரைமாறிடவோதுக்கிப்
பூகந்தடவிவேர்கீண்டுபொருப்பைப்பறித்துப்புடைபரப்பி
மாகந்துழாவிக்கடுகிவரும்வையைப்புனலைமந்திரத்தால்
வேகந்தணிவித்தேடெழுதியிடுத்தார்முன்போல்வெள்காதார்.

(இ-ள்.) பூகம் தவழும் பழுமரத்தை உதைத்து கரைமாறிட ஒதுக்கி - கருங்குரங்கு தவழும் ஆலமரத்தைக்கல்லிக் கரைகள் உடைபட அங்கொதுக்கி, பூகம் தடவி - கமுகின்மரத்தை யலைத்தொழுர்தால்தடவி, வேர் கீண்டு பொருப்பை பறித்து புடைபரப்பி - வேரோடற மலையைப்பறித்துப் பக்கங்களிற்பரப்பி, மாகம் துழாவி கடுகிவரும் வையை புனலை - விண்ணினை யலையாகிய கையினால்துழாவி விரைந்துவரும் வையையினீர்ப்பெருக்கினை, மந்திரத்தால் வேகம் தணிவித்து - தமதுமந்திரத் தினால் சலத்தம்பஞ்செய்து, முன்போல் வெள்காதார் - முன்போல நாணமடையாதவராகிய சமணர்கள், ஏடு எழுதிவிடுத்தார் - ஏட்டில் அத்தி நாத்தியென்று எழுதி யாற்றிலிட்டனர்.

முன்பு தமக்குத்தோல்விகண்டும் நாணுதிருத்தலால் முன்போல் வெள்காதார் என்றார். அத்திநாத்தியென்றெழுதினார் என்றது "படுபொருளின்றிநெல்லிற்பதடிபோலுள்ளிலார்மெய் - சுடுபவர்பொருளையத்திநாத்தியென்றெழுதியாற்றிற் - கடுகியபுனலைக்கண்டேடவிடுற்றவையிலேடு - விடுதலும்விரைந்துகொண்டுவேலைமேற்படர்ந்ததன்றே" என் புராணத்தில் வருதல்காண்க. (௫௰)

சிறையேய்புனல்சூழ்வேறுபுரச்செல்வர்யாருந்தெளிவெய்த
மறையேவாய்மைபுரையாயின்மறைகண்மூழுதுந்துணிபொருட்டான்
பிறையேய்வேணிப்பிரானுநீத்பெருநீறேதிரேசெல்கவென
முறையேபதிகமெழுதித்தேழுதிவிட்டார்முழங்கிவருபுனலில்.

Koviloor Digital Library

(இ-ள்.) சிறை ஏய் புனல்சூழ் - சிறையால் தடையுண்ட நீர்சூழ்ந்த, வேணு புரம் செல்வர் - சீகாழியிலவதரித்த பிள்ளையார், யாரும் தெளிவு எய்த - எவருந்தெளிய, மறை ஏ வாய்மை உரையாகில் - வேதமே மெய்மொழியானால், மறைகள் முழுதும் துணிபொருள் தான்-வேதங்கள்முற்றும் துணிந்துகூறும் பொருள், பிறை ஏய் வேணிபிரான் ஆகில் - இளஞ்சந்திரனையணிந்த சடாமுடியையுடைய சிவபிரானேயானால், பெருநீர் எதிரே செல்க என்ன - பெருக்கெடுத்துவரும் வையைநீரினெதிரேசெல்லக்கடவதென்று, முறை ஏ பதிகம் எடுத்து எழுதி முழங்கி வருபுனலில் விட்டார் - முறையாகத் திருப்பதிகம் ஓதிவரைந்து ஒலித்துவரும் வெள்ளத்தில் விட்டனர்.

வேதமேவாய்மைமொழியென்பதும் அவ்வேதந்துணிபொருள் பரசிவம் என்பதும் "உலகியல்வேதநூல் ஒழுக்கமென்பதும் - நிலவுமெய்ந்நெறிசிவநெறியேயென்பதும் - கலதிவாயமணர்காணகிலார்களாயினும் - பலர்புகழ்தென்னவனறியும் பான்மையால்" எனவும் ஷை புராணத்தில்வருதல்காண்க. திருப்பதிகம் "வாழ்கவந்தணர் வானவரானினம் - வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக - ஆழ்கதீயதெல்லாமரனுமமே - சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. வேதம்முதல்வன்முதலாகவிளங்கிவையம் - ஏதப்படாமேயுலகத்தவரேத்தல்செய்யப் - பூதம்முதல்வன்முதலேமுதலாய்ப் பொலிந்த - சூதன்ஒலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே. அற்றன்றியந்தண் மதுரைத்தொகையாக்கினனும் - தெற்றென்றுதெய்வந்தெளியார்கரைக்கோலைதெண்ணீர் - பற்றின்றிப்பாங்கெதிர்விரவும்பண்புநோக்கில் - பெற்றொன்றுயர்த்தபெருமானுமன்றே" என்பது. முறையே என்றது. "வாழ்கஅந்தணர்" என்பதனால் அறிக. வேணு என்னும் பெயரையுடைய ஒரு இந்திரன் தன்னொடு போர்செய்யவந்த கசமுகாசுரனோடு போர்செய்ய ஆற்றுதலங்கித் தன்னரசிழந்து விண்ணாட்டினை விட்டுச் சீகாழியில்வந்து சிவபெருமானை வழிபட்டுப் பூசித்தொழுகுங்கால், இறைவர் அருள்கூர்ந்து காட்சிதந்தருளி யுன்கருத்தென்னவென வினவ, கசமுகாசுரனால் தோல்வியடைந்து விண்ணாடிழந்து தேவர்சரணடைந்தே னென்றிரந்துகூறும்போது மூத்தபிள்ளையாரை வருவித்துத் தேவேந்திரனுக்குப்பகைஞனுயுள்ள கசமுகாசுரனைக்கொன்று இவனுடைதருவாயென்றருள, அவ்வாறுசென்று அவனொடுதமது வலக்கொம்பாற்பொருதவென்று அவ்வேணுவைச் சுவர்க்கலோகத்திற்குடியேற்றிய காரணத்தால் வேணுபுரம் என்பது சீகாழிக்கு ஓர்பரியாயநாமம் என அறிக.()

தேசம்பரவுங்கவுணியர்கோன்விடுத்தவேடுசெழுமதுரை
யீசனருளாங்கயிறுபிணித்தீர்ப்பநதியிலெதிரேற
நாசஞ்செய்யும்பொறிவழியேநடக்குமுள்ளமெனச்சென்று
நீசரேடெண்ணாயிரமுநீத்தவழியேயொழுகியவால்.

(இ-ள்.) தேசம் பரவும் கவுணியர் கோன் விடுத்த ஏடு - எல்லாநாடுகளுங் கைகூப்பித்துதிக்கும் கவுணியகோத்திரத்தார் தலைவராகிய பிள்ளையார் பெருக்கில் விட்ட ஏட்டினை, செழுமதுரை ஈசன் அருள் ஆம் கயிறு பிணித்து ஈர்ப்ப நதியில் எதிர் ஏற-நீர்வளத்தாற்பொலிந்த திருவாலவாயிலெழுந்தருளிய இறைவர்தமது திருவருளாகிய கயிற்றாற்கட்டியிழுத்தலால், நதியில் எதிர் ஏற - வையைநதியினெதிர் செல்லவும், நாசம் செய்யும் பொறிவழி ஏ நடக்கும் உள்ளம் என்ன - கெடுதிசெய்யும் இந்திரியத்தின்வழியே செல்லும் மனம்போல, நீசர் ஏடு எண்ணாயிரமும் நீத்தம் வழி ஏ சென்று ஒழுகிய - இழிமக்களாகிய எண்ணாயிரஞ்சமணர்களும் தனித்தனி விடுத்த எண்ணாயிரவேடுகளும் வெள்ளத்தின்வழிப்பட்டே சென்று நடந்தன.

Koviloor Digital Library

"திருவுடைப்பிள்ளையார்தந்திருக்கையாலிட்டவேடு - மருவுறும்பிறவியா
ற்றின்மாதவர்மனஞ்சென்றாற்போல் - பொருபுனல்வையையாற்றிலெதிர்ந்துநீர்கிழி
த்துப்போகும் - இருநிலத்தோர்கட்கெல்லாமிதுபொருளென்றுகாட்டி. அத்தினத்தி
யென்றெழுதியந்திற் - கடுகியபுனலைக்கண்டுமவாவின்றாற்கையிலேடு - விடுதலும்வி
ரைந்துகொண்டுவேலைமேற்படர்ந்ததன்றே" என ஷை புராணத்தில் வருதல்காண்க.

சிங்கமனையாரெழுதுமுரையாறெதிரேறத்தெரிந்தமா
ரங்கணறும்பூமழைபொழிந்தாரறவோர்துகில்விண்ணெறிந்தார்த்தார்
கங்கையணிந்தார்திருத்தொண்டர்கண்ணீர்க்கடலிலழுந்தினார்
வெங்கணமணர்நடுங்கியுடல்வெயர்வைக்கடலிலழுந்தினார்.

(இ-ள்.) சிங்கம் அனையார் எழுதும் உரை ஆறு எதிர் ஏற தெரிந்து - சமண
ர்களாகிய யானைகளுக்கு ஆண்சிங்கமொத்தபிள்ளையார் எழுதிவிட்ட திருப்பாசுரம்
ஆற்றினெதிரேறவுணர்ந்து, அமரர் அங்கண் நறும் பூ மழை பொழிந்தார் - தேவர்க
ளவ்விடத்தினறுமணங்கமழுமலர்மழை சொரிந்தார்கள், அறவோர் துகில் விண்
எறிந்து ஆர்த்தார்-முனிவர்கள் உடையை விண்ணின்மேலே வீசிக்கோஷித்தார்கள்,
கங்கை அணிந்தார் திருத்தொண்டர் கண்ணீர் கடலில் அழுந்தினார் - கங்காநதியைய
ணிந்த பெருமானாடியவர்கள் ஆனந்தக்கண்ணீர்ப் பெருக்கிலழுந்தினார்கள், வெங்க
ண் அமணர் உடல் நடுங்கி வெயர்வை கடலில் அழுந்தினார் - கொடுமையையுடைய
சமணர்கள் உடல் நடுக்கிக்கொப்புளித்த வெயர்வையாகிய கடலில் மூழ்கினார்கள்.

"ஏடெதிர்ந்துச்செல்லும் போழ்திமையோர்களெல்லாம் - நீடியவாழ்த்தி
ற்போற்றிநிமிர்ந்தபூமாரிதூர்த்தார் - ஆடியல்யானைமன்னனற்புதமெய்திநின்றான் -
பாடுசேரமணரஞ்சிப்பதைப்புடன்பணிந்துநின்றார்" எனவரும் ஷை புராணத்திற்
காண்க. (௫௩)

வேமேயென்பதறியாதேவெல்வேமென்றேசூளொட்டி
நாமேயிட்டவேடெரியில்வேவக்கண்டுநதிக்கெதிரே
போமேயின்னம்வெல்வேமென்றிட்டவேடும்புணரிபுகத்
தாமேதம்மைச்சுடநாணிநின்றாரமணர்தலைதூக்கி.

(இ-ள்.) வேம் ஏ என்பது அறியாது ஏ - நாமிடுமேடுவெந்து கரியுமேயெ
ன்பது சிறிதுமுணராமலே, வெல் வேம் என்றே சூள் ஒட்டி - வெற்றியடைவோ
மென்றே சபதஞ்செய்து, நாம் ஏ இட்ட ஏடு எரியில் வேவ கண்டும் - நாமேகொண்
டுபோய்ப்போட்ட ஏடு தீயில்வெந்து கரியக்கண்கூடாகப்பார்த்தோம், இன்னம் நதி
க்கு எதிரே போம் ஏ வெல்வேம் என்று இட்ட ஏடும் - இனியாவது நதிக்கெதிரேவ
ருமே அதனாலாயினும் வெற்றிகொள்வேம் என்று கருதுதலால் பெய்த ஏடும், புணரி
புக - கடலிற்செல்லுதலால், தாம் ஏ தம்மை சுட - (பிறரன்றி) தாமேதம்மைச்சுட்
டுவருத்துதலால், அமணர் நாணி தலைதூக்கிநின்றார் - சமணர்கள் நாணங்கூர்ந்து
தலையிறக்கிட்டுநின்றார்கள்.

சமணர்கள் தம்முட்கூடி ஒருவர்க்கொருவர் பேசுவதாகக் கூறுவதால் என்
று என்னும் இடைச்சொல்லடியாகப்பிறந்த வினையெச்சம் காரணப்பொருண்மே
ல்நிற்றலின் வெல்வேம் வேம் என்னும் உளப்பாட்டுத் தன்மைவினைமுற்றுக்
இசைய என்று கருதுதலால் எனப்பொருள்கூறினும். வெந்து கருகியது கழிகா
லமாதலால் வேம் என இறந்தகாலத்தன்மைப்பன்மை வினைமுற்றாகவும், நதியி

டுதல் பின்னராதலால் வெல்வேம் என எதிர்காலத்தன்மைப்பன்மை வினைமுற்றாக வுங்கூறினர். போம் புகும் என்னும் வினைமுற்றின்றிரிபு. ஏகாரங்கள் தேற்றப்பொருளில்வந்தன. புக காரணகாரியப்பொருளில்வந்த இறந்தகாலவினையெச்சம். சமணர்கள்தெரிந்தும் தம்மைத்தாமே யிடரிற்புகுத்துதலால் தாமே தம்மைச்சுட என்றார். "கலைவுமெய்தாவண்ணங் கடலின்மேற்செல்லுமேடு - நாணிலாவமணர்தம்மை நட்டாற்றில்விட்டுப்போகச் - சேணிடைச்சென்றுநின்றர் தெறினர்திகைத்தார் மன்னன் - ஆணையில்வழுவமாட்டாதஞ்சுவாரணையமீண்டார்" என ஷ புராணத்தில்வருதல்காண்க. (௫௪)

பொருப்பேசிலையாப்புரங்கடந்தபுனிதனேயெத்தேவர்க்கும்
விருப்பேய்போகம்வீடுதருமேலாங்கடவுளெனநான்கு
மருப்பேய்களிற்றான்முடிதகர்த்தான்மருமானறியக்குருமொழிபோ
னெருப்பேயன்றிவேகவதிநீரும்பின்னர்த்தேற்றியதால்.

(இ-ள்.) பொருப்பு ஏ சிலை ஆக புரம் கடந்த புனிதனே — மேருவேவில்லாகத் திரிபுரங்களைவென்ற சிவபெருமானே, எ தேவர்க்கு உம் விருப்பு ஏய் போகம் வீடுதரும் மேலாம் கடவுள் என்ன - எல்லாத்தேவர்களுக்கும் இச்சைவாய்ந்த போகத்தையு மோக்ஷத்தையுந்தாராநின்ற மேலாகியகடவுளென்று, நான்கு மருப்பு ஏய் களிற்றான் முடிதகர்த்தான் மருமான் அறிய - நான்குகொம்புகள்வாய்ந்த ஐராவதத்தையுடைய இந்திரன்முடியைத்தகர்த்த உக்கிரகுமாரப் பெருவழுதியார் மரபில்வந்த சவுந்தரியபாண்டியனுணர்ந்துதெளிய, குருமொழிபோல் - ஞானசாரியனுபதேசமொழியைப்போல, நெருப்பு ஏ அன்றி வேகவதி நீரும்பின்னர் தேற்றியது - நெருப்பேயல்லாமல் வையைப்பெருக்கினீரும் பின்பு தெளிவித்தது.

ஆகமவளவையாலன்றிக் காட்சியளவையாலுணர்த்தின வென்பார் நெருப்பேயன்றி வேகவதி நீரும் பின்னர்த்தேற்றியதால் என்றார். (௫௫)

பொய்யின்மறையின்புறத்தமணர்புத்தர்க்கன்றிவாய்மையுரை
செய்யுமறைநூல்பலதெரிந்துஞ்சிவனேபரமென்றறியாதே
கையில்விளக்கினெடுங்கிடங்கில்வீழ்வார்போலக்கலங்கிமனத்
தையமடைந்தபேதையர்க்குமறிவித்தனவேயவையன்றே.

(இ-ள்.) பொய் இல் மறையின் புறத்து அமணர் புத்தர்க்கு அன்றி - உண்மையமைந்த வேதத்தின் புறநூலோதியுணர்ந்த சமணர் புத்தர்களுக்கேயல்லாமல், வாய்மை உரைசெய்யும் மறைநூல் பலதெரிந்தும் - மெய்ம்மைப்பொருளைக்கூறும் வேதத்தையும் அதைத்தழுவிய அசநூல்பலவற்றையும் ஆராய்ந்தும், சிவனே பரம் என்று அறியாது - சிவபெருமானே யிறைவனென்றுணராமல், கையில் விளக்கினெடுங் கிடங்கில் வீழ்வார்போல - கையிலேந்திய விளக்கோடுங் கிணற்றில் வீழ்வாரைப்போல, கலங்கி மனத்து ஐயம் அடைந்த பேதையர்க்கு உம் - நிலைகலங்கி மனத்தில் ஐயங்கொண்ட ஏனைப்புறச்சமயத்தவர்க்கும், அவை அறிவித்தன - அந்நெருப்பும் வையைப்பெருக்குந்தெரிவித்தன.

புறப்புறச் சமயிகளாதலால் பொய்யின்மறையின் புறத்தமணர் புத்தர்க்கன்றியெனவும், உண்மைப்பொருளை விரிக்கும் வேதமும், மிருதி, புராணம், இதிகாசமுதலியன அவ்வேதத்தைத்தழுவியம் நிற்றலால் மறைநூல்பலவும் எனவும், இவற்றையை யமற ஆராய்தலால் தெரிந்தும் எனவும், அம்முதனூல்முதலியன சிவனை

Koviloor Digital Library

வே யிவைரவோவுணர்த்தலால் சிவனே பரமென்றறியாது எனவும், தருக்கம் மீமாஞ்சைமுதலிய புறச்சமயிகளெயாதலால் கலக்கிமனத்தையடைந்தபேதையர்க்கும் எனவுங்கூறினர். (௫௬)

கண்டுகூடற்கோமகனுங்கற்புநிறைந்தபொற்புடைய
வண்டுகூடுந்தாரளகவளவன்மகளுமந்திரியுந்
தொண்டுகூடுமடியாருங்காழிக்கரசைத்தொழுதுதுதி
விண்டுகூடற்கரியமகிழ்வெள்ளத்தழுந்திவியந்தனரால்.

(இ-ள்.) கூடல் கோமகனும் - மதுரைத்திருநகரையாளும் பாண்டியனும், கற்பு நிறைந்த பொற்பு உடைய - கற்புசான்ற பேரழகையுடைய, வண்டு கூடும் தார் அளகம் வளவன் மகளும் மந்திரியும் - வண்டுகள் மதுவுண்டுநெருங்கிய மாலையையணிந்த கூந்தலையுடைய சோழன்புதல்வியாராகிய மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், தொண்டு கூடும் அடியாரும் கண்டு - திருத்தொண்டு பூண்ட அடியவர்களும்பார்த்து, காழிக்கு அரசை தொழுது துதிவிண்டு - சீகாழிக்கு இறைவராகிய பிள்ளையாரைவணங்கித் துதிமொழிகூறி, கூடற்கு அரிய மகிழ்வெள்ளத்து அழுந்தி வியந்தனர் - பிறரடைதற்கரிய ஆநந்தவெள்ளத்திலழுந்தி வியப்புற்றார்கள். (௫௭)

நன்றிதேருர்பின்புள்ளமானமிழந்துநாணழிந்து
குன்றுபோலுந்தோணிபுரக்கோமானெதிரேயாங்களுமக்
கின்றுதோற்றேமெமையீண்டுநீரோவென்றீரெனநேர்ந்து
நின்றுகூறக்கவுணியர்கோனனையாருய்யுநெறிநோக்கா.

(இ-ள்.) நன்றி தேரார் - செய்நன்றிதேராத சமணர்கள், பின்பு உள்ள மானம் இழந்து நாண் அழிந்து - பின்பு எஞ்சிநின்ற மானத்தையிழந்து நாணங்கெட்டு, குன்றுபோலும் தோணிபுரம் கோமான் எதிரே - மலைபோலும் பலராலுங் காணப்படும் சீகாழியிறைவராகிய பிள்ளையாரெதிரே, யாங்கள் உமக்கு இன்றுதோற்றேம் - நாங்களுமக்கு இப்பொழுதுதோற்றேம், எம்மை ஈண்டு நீரோவென்றீர் எனநேர்ந்து நின்றுகூற - எங்களையிவ்விடத்தில் நீரோவென்றீரென்று உடன்பட்டுச்சொல்ல, கவுணியர்கோன் அனையார் உய்யும் நெறிநோக்கா - அப்பிள்ளையார் அச்சமணர்கள் உயிர்பிழைக்கும்வகையை நோக்கியருளி.

குன்றுபலராலும் அறியநிற்றல்போலத் தோணிபுரம் பலராலும் அறியநிற்றலால் குன்றுபோலும் என்றது தொழில்பற்றிவந்த வுவமையணி. நேர்நின்றுஒருசொல்.

இன்னமறத்தாறிசைக்கின்றேநீரேன்வாளாவிறக்கின்றீ
ரன்னையனையானெம்மிறைவனவனுக்காளாயுய்மின்க
ளென்னவேடசிறியாய்நீயெவ்வாறெங்கட்கடாதமொழி
சொன்னதென்றுமானமுளார்கழுவிலேறத்தொடங்கினர்.

(இ-ள்.) இன்னம் அறத்தாறு இசைக்கின்றேம் - இன்னமும் அறநெறியோக்கிக் கூறுகின்றேம், நீர் என் வாளா இறக்கின்றீர் - நீங்களேன்பயனின்றி யுயிரிழக்கின்றீர், அன்னை அனையான் எம் இறைவன் அவனுக்கு ஆள் ஆய் உய்மின்கள் என்ன - (பாலர்க்கு[illegible]செய்தலால்) தாயையொத்தவனுமாகிய எமது இறைவனுக்கு அடிமைப்பட்டு உயிர்பிழையுங்களெனக்கூறியருள, ஏட-ஏடா-நீ சிறியாய்-நீயோபால் மணக்குமும் வாயையுடைய பிள்ளைமைப்பருவமுடையாய், எங்கட்கு அடாதமொ

Koviloor Digital Library

ழி சொன்னது ஏ ஆறு என்று - எங்களுக்குத் தகாதவார்த்தை கூறியது எவ்விதமெ ன்று, மானம் உள்ளார் கழுவில் ஏற தொடங்கினர் - சமயாபிமானமுள்ளவர்கள் கழுவின்மேலேறத்தொடங்கினர்கள்.

கருணாமூர்த்தியென்பார் இன்னமறத்தாறிசைக்கின்றே நீரேன்வாளாவிறக்கி ன்றீர் - அன்னையன்னையானெம்மிறைவ னவனுக்காளாயுய்மின்கள் என்ன என்றார் எனக்கூறினர். ஏடதோழன் முன்னிலைப்பெயர். இறைவனவன் அவன் பகுதிப்பொ ருள்விகுதி. (ருகூ)

மேற்படி வேறு.

மதத்தினின்மானமிக்கார்தாங்களேவலியவேறிப்
பதைத்திடவிருந்தாரேனைப்பறிதலையவரைச்சைவ
விதத்தினாறொழுக்கம்பூண்டவேடத்தார்பற்றிப்பற்றிச்
சிதைத்திடர்செய்தேறிட்டார்திரிதலைக்கழுக்கோறன்னில்.

(இ-ள்.) மதத்தினில் மானம் மிக்கார் - (சமணருள்) தமது மதத்தில் மான மிகுதியையுடையோர்கள், தாங்கள் ஏவலிய ஏறி பதைத்திட இருந்தார்-தாமே வலியக் கழுவிலேறி யுயிர்பதைக்க விருந்தனர், ஏனை - அவரொழிந்த, பறிதலையவரை-மயிர் பறித்ததலையையுடைய சமணர்களை, சைவம் விதத்தின் ஆறு ஒழுக்கம் பூண்டவேடத்தார் - சைவத்தின் பாகுபாடுள்ள தவவொழுக்கம்பூண்ட திருவேடத்தையுடையவர்கள், பற்றி பற்றி சிதைத்து இடர்செய்து - பிடித்துப்பிடித்து அலைத்துத்துன்பஞ் செய்து, திரிதலை கழுக்கோல் தன்னில் ஏறிட்டார் - மூன்றுகவரையுடைய கழுமரத் திலேற்றினர்கள். (கூ0)

வழிவழிவருமாணுக்கர்சாதற்குவருந்திநெஞ்ச
மழிபவர்திருநீறிட்டாரதுபெட்டாதயர்வாராவி
னிழிவில்கோமயத்தையள்ளிப்பூசினாரிதுவுங்கிட்டா
தொழிபவராவின்கன்றைத்தோளிலிட்டுயிரைப்பெற்றார்.

(இ-ள்.) வழிவழிவரும் மாணுக்கர் - வழிவழிவந்தமாணுக்கர்களும், சாதற்கு வருந்தி நெஞ்சம் அழிபவர் - சாவவருந்தி மனமழிவோரும், திருநீறு இட்டார்- திருநீறுதரித்தார், அதுகிட்டாது அயர்வார் - அத்திருநீறுகிடையாது சோர்வோர், ஆ இன் இழிவு இல் கோமயத்தை அள்ளி பூசினார் - பசுவினது விலக்கில்லாத கோமயத்தினையள்ளிப் பூசினர்கள், இது உம் கிட்டாது ஒழிபவர் - இக்கோமயங் கிடைக்கப்பெறாதோர், ஆ இன்கன்றை தோளில் இட்டு உயிரைப்பெற்றார்-பசுவின்க ன்றைத்தோளின்மேற்போட்டு உயிர்பிழைத்தார்கள்.

சமணர்களுளிவர்கள் கொலையுண்டிலர் என்பார் உயிரைப்பெற்றார் என்றார். கன்றின்று பத்துநாட்குதகமுடையதும், கன்றீனுதகொரியும், வியாதியையுடைய தும், கன்றுசாவப்பெற்றதும், மூப்புடையதும், மலடும், மலத்தைத்தின்னுதலுமு டைய பசுக்களின் கோமயம் குற்றமுடையதாதலால் இழிவில் கோமயம் என்றார் "பிறந்திலையகன்றுபெருக்கன்னிபிணியா-லிறந்தகன்றுமாகாவிழுக்கு,மூப்புமலடுமு டைமலந்தின்பதெறும் - ஆத்தாறுந்தூய்தலவாகா" எனவருஞ் சைவசமயநெறித்தி ருக்குறள்களால் உணர்க. (கூக)

கூறிட்டமூன்றுங்கிட்டாதயர்பவர்குற்றந்தீர
நீறிட்டார்நெற்றியோடுதிருமலகோமயத்தின்

Koviloor Digital Library

சேறிட்டார்நெற்றியோடுநெற்றியைச்செறியத்தாக்கி
மாறிட்டபாசந்தன்னைமறித்திட்டுப்பிறப்பைவெல்வார்.

(இ-ள்.) கூறிட்ட மூன்றும் பெறாது அயர்பவர் - அங்குக்கூறிய மூன்றும் பெறாது வருந்துவோர்கள், குற்றம் நீர நீறு இட்டார் நெற்றியோடும் - குற்றம்நீங்கத்திருநீறிட்டவர் நெற்றியினோடும், நிருமலகோமயத்தின் சேறு இட்டார் நெற்றியோடும் - குற்றமில்லாத கோமயத்தின் குழம்பினையிட்டவர் நெற்றியினோடும், நெற்றியை செறிய தாக்கி - தமதுநெற்றியைப் பொருந்தச்சேர்த்து, மாறிட்ட பாசம் தன்னை மறித்திட்டு பிறப்பைவெல்வார் - இயல்பாகவேதம்மோடு பகைகொண்ட மும்மலங்களையுமொழித்துப் பிறப்பினையொழிப்பார்கள். (௬௨)

மற்றிவர்தம்மையூற்றஞ்செய்திலர்மடிந்தோர்யாருஞ்
சுற்றியசேனங்காகநரிகணாய்த்தொடர்ந்துகௌவிப்
பற்றிநின்றீர்த்துத்தின்னக்கிடந்தனர்பருமயானை
வெற்றிகொள்வேந்தன்காழிவேந்தனைத்தொழுதுநோக்கா.

(இ-ள்.) இவர் தம்மை ஊற்றம் செய்திலர் - (மேற்கூறிய) இவர்களை யிடையூறுசெய்யாதொழிந்தனர், மடிந்தோர் யாரும் - கழுவிலேறி உயிரிழந்தவரெல்லாரும், சுற்றியசேனம் காகம் நரிகள் நாய்தொடர்ந்து கௌவி பற்றிநின்று ஈர்த்து தின்ன கிடந்தனர் - சூழ்ந்த பருந்தும் காகமும் நரிகளுநாயுந் தொடர்ந்து வாயாற்கவ்விப்பிடித்து நின்றிழுத்துத் தின்னக்கிடந்தார்கள், பருமம் யானை வெற்றிகொள் வேந்தன் - கவசமணிந்தபகைவரது யானைச்சேனையை வெற்றிகொண்டபாண்டியன், காழிவேந்தனை தொழுது நோக்கா - சீகாழிக்கரசராகிய ஆளுடையபிள்ளையாரை வணங்கிப்பார்த்து. (௬௩)

இன்றுநீரிட்டவேடிங்கியாவருங்காணநேரே
சென்றதேயெங்கேயென்றானதனையாஞ்செம்பொற்கூடன்
மன்றவரருளாலின்னேவருவிப்பமென்றுவாது
வென்றவர்நதியின்மாடேமேற்றிசைநோக்கிச்செல்வார்.

(இ-ள்.) இன்று நீர் இட்ட ஏடு - இப்பொழுது தேவரீர் நதியிலிட்டதிருவேடு, இங்கு யாவரும் காண நேரே சென்றது ஏ - இவ்விடத்திலெல்லோரும் பார்க்க எதிரேபோயினதே, எங்கு ஏ என்றான் - (அது இப்பொழுது) எங்கேயென்றுவினவினன், அதனை - அத்திருவேட்டினை, யாம் - நாம், செம்பொன் கூடல் மன்றவர் அருளால் - செம்பொன்னிறைந்த நான்மாடக்கூடலிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவருளால், இன்னே வருவிப்பம் என்று - இப்பொழுதே வருவிப்போமென்று, வாதுவென்றவர் - வாதில்சமணரைவென்ற ஆளுடையபிள்ளையார், நதியின் மாடு ஏ - வையைநதியின் கரையினயலிலே, மேல்திசை நோக்கி செல்வார் - மேற்றிசையை நோக்கிச்செல்வாராயினர். (௬௭)

செல்லுநர்காணவோலைகாவதஞ்செல்வதப்பா
லொல்லையங்கொளித்தலோடும்வியந்தவனொருங்குகூடிக்
கொல்லையான்மெய்த்துவின்றார்சிலர்தமைக்குறித்துநீரில்
வெல்லையுள்விசேடமுண்டோவியன்கண்டிசையினென்றார்.

Koviloor Digital Library

(இ-ள்.) செல்லுநர் காண - போவோர்பார்க்க, காவதம் செல்வது ஒலை-ஓர் காததூரஞ்செல்லும் ஒலை, அ பால்-அப்புறம், ஒல்லை-விரைந்து, அங்கு ஒளித்தலோடும்-அங்கொளிக்க, அவண் வியந்து யாவரும் ஒருங்குகூடி-அவ்விடத்து அதிசயித்து யாவரும் ஒருசேரக்கூடி, கொல்லை ஆன் மேய்த்து நின்றார் சிலர் தம்மை குறித்து-முல்லைநிலத்தில் பசுக்களைமேய்த்து நின்ற இடைச்சிறார்களுட் சிலரைப்பார்த்து, நீர்-நீங்கள், இ எல்லை உள் விசேடம் உண்டோ இவண்கண்டது இசைமின் என்றார்-இந்த எல்லையில் விசேடம் யாதாவதொன்றுள்ளதா இவ்விடத்தில் நீங்கள் பார்த்ததுளதாயிற் சொல்லுங்களென்று வினவினார்கள். (கூரு)

அவ்விடைச்சிறார்கள்யாங்களொன்றையுமறியேமென்ன
வெவ்விடைவிசேடங்காணல்வேண்டுமெத்திறத்துமென்னாத்
தெவ்விடைவாதுசெய்யத்திருவுளக்கருணைசெய்த
வெவ்விடைக்கொடியினானைப்பாடினார்வேதநாவார்.

(இ-ள்.) அ இடைச்சிறார்கள் யாங்கள் ஒன்றையும் அறியேம் என்ன-அந்த இடைச்சிறுவர்கள் நாங்களொருவிசேடத்தையு மறியோமென்றுகூற, எ திறத்தும் - எவ்வகையாலும், இ இடைவிசேடம் காண்டல் வேண்டும் என்னா - இவ்விடத்திலுள்ள விசேடத்தைக் காணவேண்டுமென்று, தெவ் இடை வாதுசெய்ய திரு உளம் கருணைசெய்த வெம் விடை கொடியினானை - பகைவராகிய சமணரிடத்து வாதஞ் செய்யும்படி திருவுள்ளத்தோடு கருணைபூத்த கடுநடையையுடைய இடபக்கொடியை யுயர்த்தியருளிய பெருமானை, வேதம் நாவார் பாடினார் - வேதங்குடிகொண்ட திருநாவினையுடைய ஆளுடையபிள்ளையார் திருப்பதிகம்பாடியருளினார்.

திருப்பதிகம் "வன்னியுமத்தமுமதிபொதிசடையினன் - பொன்னியதிருவடிபுதமலரதுகொடு - மன்னியமறையவர்வழிபடவடியவர் - இன்னிசைபாடலரேடகத்தொருவனே. கோடுசந்தனமகில்கொண்டிழிவையைநீர் - ஏடுசென்றணைதருமேடகத்தொருவனை - நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன - பாடல்பத்திவைவல்லார்க்கில்லைபாவமே" எனவருதல் காண்க. (கூகூ)

பாட்டின்மேற்கருணைவைத்தார்சயம்புவாய்ப்பராரைவில்லக்
காட்டினுளிருப்பநேரேகண்டுதாழ்ந்தெழுந்துசண்பை
நாட்டினார்வலங்கொண்டேத்தியெதிர்நின்றார்நகைத்தார்நிம்பத்
தோட்டினனதுகேட்டங்கேதோன்றினான்றானையோடும்.

(இ-ள்.) பாட்டின்மேல் கருணை வைத்தார் - அத்திருப்பாசுரத்தின்மேலருள் வைத்த இறைவர், சயம்பு ஆய் பராரை வில்லம் காட்டின் உள் இருப்ப-சுயம்புமூர்த்தமாய்ப் பருத்த தூரையுடைய வில்வக்காட்டில் எழுந்தருளியிருக்க, சண்பை நாட்டினார் நேரே கண்டு தாழ்ந்து எழுந்து - சீகாழித் திருநாட்டினையுடைய பிள்ளையாரெதிரே தரிசித்து வணங்கியெழுந்து, வலங்கொண்டு ஏத்தி எதிர் நின்றார்-பிரதக்ஷிணஞ்செய்து துதித்து எதிரே நின்றனர், நகை தார் நிம்பம் தோட்டினன் அதுகேட்டு அங்கு தானை யோடும் தோன்றினான் - விளங்கும் வேப்பமலரி னிதழாற்றொடுத்த மாலையையுடைய பாண்டியன் அவ்விடத்தில் சேனையோடும் வந்தனன். (கூஎ)

அந்தமாவிலிங்கத்தீசனுயிரமதியங்கண்ட
முந்தைவேதியராய்த்தோன்றிமுத்தமிழ்க்கரசைநீயென்

Koviloor Digital Library

மைந்தனுமிளையோனொப்பாய்வருகெனநீறுசாத்திச்
சிந்தைநிவார்வங்கூரத்திருவருள்சுரந்துநின்றார்.

(இ-ள்.) அந்த மா இலிங்கத்து ஈசன் - அந்தப் பெருமையமைந்த இலிங்கத்தி லெழுந்தருளிய இறைவர், ஆயிர மதியம் கண்ட மூத்த வேதியர் ஆய் தோன்றி - ஆயிரம்பிறைகண்ட முதுமையையுடைய அந்தணராய்க் காட்சிதந்தருளி, முத்தமிழ்க்கு அரசை - இயலிசைநாடகமென்ற மூன்று தமிழுக்கும் அரசராகிய பிள்ளையாரை, நீ என் மைந்தன் ஆம் இளையோன் ஒப்பாய் வருக என்ன - நீ யெனது புத்திரனாகிய இளஞ்சிறுவனை யொப்பா யிங்கு வருகவென்று, நீறுசாத்தி - திருநீறு தரித்த, சிந்தை நின் ஆர்வம் கூர திருவருள் சுரந்து நின்றார் - திருவுளத்தில் மகிழ்ச்சிப்பத் திருவருள் சுரந் தெதிர் நின்றருளினார்.

என் மைந்தனு மிளையோனொப்பாய் என்றது எனது இளங்குமாரனாகிய முருகக்கடவுளை யொப்பாயென்ற பொருள் உள்ளிட்டது. (௬௮)

நின்றவந்தணனையன்றுநிருமலஞானமீந்தா
ரென்றுகண்டிறைஞ்சியையநீரில்யானிட்டவேடு
சென்றதிங்கெடுத்தீர்நீரேயஃதநஞ்செல்வர்க்கேற்ற
தன்றதைத்தருதிரென்றாராறுமுகச்செம்மலன்னார்.

(இ-ள்.) ஆறுமுகம் செம்மல் அன்னார் - ஆறு திருமுகங்களையுடைய முருகக்கடவுளையொத்த பிள்ளையார், நின்ற அந்தணனை - தம்மெதிரே நின்றருளிய முதுவேதியனை, அன்று - மதலைப்பருவத்தில், நிருமலம் ஞானம் ஈந்தார் என்று கண்டு இறைஞ்சி - சிவஞானந் தந்தருளிய இறைவரென்று கண்டு வணங்கி, நீர் இல் யான் இட்ட ஏடு இங்கு சென்றது நீர் எடுத்தீர் - வைகைநதி நீரில் யானிட்ட ஏடு இங்கு வந்ததை நீவிரே யெடுத்தருளினீர், அஃது நம் செல்வர்க்கு ஏற்றது அன்று - அத்திருவேடு நமது புத்திரர்க்கு விளையாடத்தக்கதல்ல, அதை தருதிர் என்றார் - அதனைத் தந்தருளுமென்று இரந்து நின்றனர்.

ஐய அசைநிலையிடைச்சொல். (௬௯)

இன்னமும்பன்னாளெம்மையிடந்தொறும்பாடியெஞ்சும்
புன்னெறியொழுகுவாரைவென்றநம்புனிதவீடு
பின்னர்நீபெறுதியென்றுவேடுதந்தாசிபேசி
மின்னெனமறைந்துநின்றார்வேதியராயவேடர்.

(இ-ள்.) வேதியர் ஆய வேடர் - முதிய அந்தணத் திருவுருக்கொண்டு வந்தருளிய இறைவர், இன்னம் உம் பல் நாள் எம்மை இடம் தொறும்பாடி - இன்னமும் பலதினம் எம்மைத் தலங்கடோறும் சென்று பதிகம்பாடி, எஞ்சும் புல் நெறி ஒழுகுவாரை வென்று - குறைபாடுடையும் புல்லிய சமயநெறியிலொழுகும் புன்மையாளரை வெற்றிகொண்டு, நம் புனிதம் வீடு - நமது மாசிலாத முத்திநெறியை, பின்னர் நீ பெறுதி என்று ஏடு தந்து ஆசிபேசி - பின்பு நீ பெறுவாயென்று ஏடு தந்தருளி ஆசியைனக்கூறி, மின் என மறைந்து நின்றார் - மின்னல்போல மறைந்தருளினார்.

புனிதமில்லாத முத்திகளிருத்தலால் இந்த முத்தி புனிதமுத்தி யென்றார். பெண்களின்பமே முத்தியென்றும் உலகாயதன் முத்தியும், உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்றும் பஞ்சகந்தங்கெடுதலே முத்தியென்றும் சௌத்திராந்திகன் முத்தியும், முக்குணங்கெடுதலே முத்தியென்றும் நிகண்டவாதி முத்தியும், கன்மங்கெடுதலே முத்தியென்றும் பிரபாகரன் முத்தியும், ஆணவமலங்கெடுத

Koviloor Digital Library

லே முத்தியென்னும் பேதவாதிமுத்தியும், இந்தச் சரீரமுந்தியிலு மழியாத நித்திய மாயிருக்கும் என்னும் சிவசமவாதி முத்தியும், சிவான்மாவுக்கு விவேகஞான முண் டாதலே முத்தியென்று மாயாவாதி முத்தியும், ஆன்மா கெடுதலே முத்தியென்றும் பாற்கரியன் முத்தியும், பசுகரணங்கெட்டுச் சிவகரணமாதலே முத்தியென்றுஞ் சங்கிராந்தவாதி முத்தியும், ஆன்மா கேவலத்திற் கிடத்தல்போல முத்தியிலுங் கிடக்கும் என்றும் பாடாணவாதி முத்தியும் பழிசேர் முத்திகளாதலால் புனிதமில்லாத முத்திகளெனவும், ஆன்மாக்களுக்குத் திருவருண்ஞானங் கைடக்கணித்து மும்மல ங்களையு நீக்கித் தனது திருவடியிற் கூட்டுதலே புனிதமுத்தியெனவும் உணர்க. "அரிவையரின்புறமுத்திகந்தமைந்த மறமுத்திதிரிகுணமுமடங்குமுத்தி - விரிவு வினைகெடுமுத்திமலம்போமுத்தி விக்கிரகநித்தமுத்திவிவேகமுத்தி - பரவுமுயிர்கெடு முத்திசித்திமுத்தி பாடாணமுத்தியிவைபழிசேர்முத்தி-நிரிமலமுமகலவுயிரருள்சே ர்முத்தி திகழ்முத்தியிதமுத்தித்திறமதாமே" எனவருஞ் சிவப்பிரகாசத்தாலறிக.()

தாதையார்கவர்ந்துமீளத்தந்தவேடதனைவாங்கிப்
போதையார்ஞானமுண்டார்புரிசடைப்பிரானார்வெளவி
யீதையாமிரந்துவேண்டத்தந்தனரென்றுகூறிக்
கோதையார்வேலினுற்குக்காட்டவக்கொற்கைவேந்தன்.

(இ-ள்.) தாதையார் கவர்ந்து மீள தந்த ஏடதனை - தமது தந்தையாராகிய இறைவர் கவர்ந்து மீட்டுந் தந்தருளிய திருவேட்டினை, போதையார் ஞானம் உண்டார் வாங்கி - திருநீலாயகியாரளித்த சிவஞானப்பாலருந்திய பிள்ளையாரேற்று, புரி சடை பிரானார் வெளவி-புரிபோன்ற சடையையுடைய பெருமானார் கவர்ந்து, ஈது ஐ யாம் இரந்து வேண்ட தந்தனர் என்று கூறி - இதனை நாமிரந்துவேண்டத் தந்தருளினரென்று கூறி, கோதை ஆர் வேலினன்கு காட்ட - முன் கைத்தோற்கட் டிலேந்திய வேலையுடைய பாண்டியனுக்குக் காட்டியருள, அ கொற்கை வேந்தன் - அந்தக் கொற்கைத் துறையையுடைய பாண்டியன்.

ஏடது அது பகுதிப்பொருள் விகுதி. (எக)

கச்சானவரவமார்த்தகருணையங்கடலிற்றோன்றும்
விச்சானஞானமுண்டீராற்றலின்விளைவுதேறு
தச்சானவலியானும்மையளந்தனனடியேனிந்தத் [ன்.
துச்சானபிழைதீர்த்தாள்கென்றிறைஞ்சினன் றுணர்த்தார்வேம்ப

(இ-ள்.) கச்சு ஆன அரவம் ஆர்த்த கருணை அம் கடலில் தோன்றும் விச்சு ஆன ஞானம் உண்டீர் - கச்சையாயமைந்த பாம்பினை யிடையிற்கட்டிய கிருபை யென்னுங் கடலில் தோன்றிய முத்திக்கு வித்தாகிய சிவஞானவமுதுண்டருளிய பெருமானரே, ஆற்றலின் விளைவு அடியேன் தேறுது-உமது திருவருளின் வன்மை யின் பயனை யடியேன் சிற்றறிவாற் சிறிது முணராது, அச்சு ஆன வலியால் நும்மை அளந்தனன் - எனது தற்போதவலியால் தேவரீரை யளந்தறியத்தொடங்கி னேன், இந்த துச்சு ஆன பிழை தீர்த்து ஆள்க என்று துணர் தார் வேம்பன் இறை ஞ்சினன் - இந்த இழிவான அபராதத்தைத் தீர்த்து ஆளக்கடவீரென்று வேம்பின் பூங்கொத்தாலமைந்த மாலையையுடைய பாண்டியன் வணங்கினான்.

வித்து விச்சு போலி. (எஉ)

Koviloor Digital Library

அங்கெடுமேருவாங்குமாடகச்சிலையினார்க்குப்
பொன்னெடுஞ்சிகரக்கோயின்மண்டபம்புயலைக்கீண்டு
மின்னெடுமதியஞ்சூடுங்கோபுரமேகந்தாவுங்
கன்னெடும்புரிசைவீதியாவையுங்களிப்பக்கண்டான்.

(இ-ள்.) அம் நெடு மேரு வாங்கும் ஆடகம் சிலையினார்க்கு - அழகிய நெடிய மேருமலையைப் பொன்வில்லாக வளைத்தருளிய பெருமானார்க்கு, பொன் நெடும் சிகரம் கோயில் மண்டபம் புயலை கீண்டு மின் நெடு மதியம் சூடும் கோபுரம்-பொன்னலமைந்த நெடிய சிகரத்தையுடைய திருக்கோயிலும் திருமண்டபங்களும் மேகமண்டிலத்தைக்கிழித்து விளங்கும் கலைகணிறைந்த சந்திரனைச்சூடிய திருக்கோபுரமும், மேகம் தாவும் கல் நெடும் புரிசை வீதி யாவையும் களிப்ப கண்டான் - மேகங்கள் தவழும் கல்லாலமைந்த நீண்ட மதிலும் அந்தணர் முதலியோர் வீதிகளுமாகிய எல்லாவற்றையும் கண்டோர் களிகூரச் சிற்பநூல் விதிப்படி யமைத்தனன்.

மண்டபம் என்றவை அர்த்தமண்டபம், மகாமண்டபம்,பதுமமண்டபம் என்று மிவற்றை. (எ௩)

அற்றைநாளாதியாகவேடகமென்னுநாமம்
பெற்றதாலேடகத்தின்மேவியபிரானைப்பாண்டிக்
கொற்றவன்சமணரோடுங்கூடியபாவமெல்லாம்
பற்றறப்பூசைசெய்து பாசமுங்கழியப்பெற்றான்.

(இ-ள்.) அற்றை நாள் ஆதியாக ஏடகம் என்னும் நாமம் பெற்றது-அந்நாள் முதலாகத் திருவேடகமென்னுந் திருநாமம் பெற்றது, ஏடகத்தில் மேவிய பிரானை-அத்திருவேடகத்தி லெழுந்தருளிய இறைவனை, பாண்டி கொற்றவன் சமணரோடும் கூடிய பாவம் எல்லாம் பற்று அற பூசைசெய்து-பாண்டிநாட்டரசன் சமணரோடும் பழகியதால் வந்த பாவங்களெல்லாம் வேரோடு பற்றறப்பூசித்து, பாசம் உம் கழிய பெற்றான் - மும்மலங்களுங் கழியப் பேறுபெற்றனன்.

ஏடகம் ஏடுதங்கிய இடமாதலால் ஏடகம் என்பது காரணப்பெயர். பாசமும் என்பதினின்ற உம்மை பிறப்புங்கழிய என்பதின்மேல் நிற்றலால் எதிரது தழீஇய எச்சவும்மை. (எ௪)

நறைகெழுதுழாயினானுங்கலுழனுநாகர்வேந்து
முறையினாலுகங்கண்மூன்றும்பூசித்துமுடியாவின்ப
நிறையருள்பெற்றாரன்னநிராமயவிலிங்கந்தன்னை
யிறுதியாமுகத்திற்பாண்டியிறைமகன்பூசைசெய்தான்.

(இ-ள்.) நறை கெழு துழாயினானும் - வாசமிக்க துழாய்மாலையையணிந்த திருமாலும், கலுழனும் நாகர் வேந்தும் - கருடனும் நாகலோகத்தாரரசனாகிய ஆதிசேடனும், முறையினால் உகங்கள் மூன்றும் பூசித்து முடியாத இன்பம் நிறை அருள் பெற்றார் - முறையாகத் திரேதாயுக முதலாக மூன்றுகங்களிலும் பூசனை செய்து அழிவில்லாத பேரின்ப நிறைந்த இறைவர் திருவருளைப் பெற்றார்கள், அன்ன நிராமய இலிங்கம் தன்னை - அந்த மாசில்லாத சிவலிங்கத்தை, இறுதியாம் உகத்தில் - கலியுகத்தில், பாண்டி இறைமகன் பூசைசெய்தான் - பாண்டிநாட்டரசனாகிய சவுந்தரியபாண்டியன் பூசித்தனன். (எ௫)

Koviloor Digital Library

அங்கண்மாநகர்கண்டாங்கோராண்டிறைகொண்டுகாழிப்
புங்கவரோடும்பின்னாட்பூழியர்பெருமான்மீண்டு
மங்கலமதுரைசேர்ந்துவைகுநாணீற்றுச்செல்வ
மெங்கணும்விளங்கச்சின்னாளிருந்துபின்ஞானச்செல்வர்.

(இ-ள்.) அங்கண் - அத்திருப்பதியில், மாநகர் கண்டு - (தான்வசிப்பதற்கு) பெரியநகரொன்றமைத்து, ஆங்கு - அவ்விடத்தில், காழி புங்கவர் ஓடும் - சீகாழியி லவதரித்த பிள்ளையாரோடும், ஓர் ஆண்டு இறைகொண்டு-ஒருவருடம்வசித்து, பின் நாள் - வழிநாளில், பூழியர்பெருமான் - பாண்டியர்பெருமானாகிய சவுந்தரியபாண் டியன், மீண்டு - மீள, மங்கலம் மதுரைசேர்ந்து வைகும் நாள் - மங்கலமமைந்த மதுரைத் திருநகரைச்சார்ந்து வாழுங்காலையில், ஞானச்செல்வர் - சிவஞானப்பெ ருஞ்செல்வராகிய பிள்ளையார், நீறு செல்வம் எங்கண் உம் விளங்க சில் நாள் இருந் து - திருநீறாகிய செல்வம் எவ்விடத்தும் ஒருபடித்தாய்விளங்கி நிலைபெற்றோங்கச் சிலநாள்வசித்து, பின்-பின்பு.

சமணமுக்கால் பாண்டிநாடுமுற்றும் ஒளிகுன்றியிருந்த பயிற்சிவசத்தால் வழக்கமாறிய திருநீற்றுப்பயிற்சியேறுதல் சிறுகச் சிறுக ஆதலால் நீற்றுச்செல்வம் எங்கணும்விளங்கச் சின்னாளிருந்து என்றார். (௭௬)

வடபுலத்துள்ளவீசன்பதிகளும்வணங்கிப்பாடக்
கடவமென்றெழுந்துகூடற்கண்ணுதற்பெருமான்றன்னை
யிடனுறைகயற்கணாளையிறைஞ்சிப்பல்வரனும்பெற்று
விடைகொடுதமிழ்நாடெங்கும்பணிந்தனர்மீண்டுபோவார்.

(இ-ள்.) வடபுலத்து உள்ள - வடதிசையிலுள்ள, ஈசன்பதிகள் உம் வணங்கி பாடக்கடவம் என்று எழுந்து - இறைவர் எழுந்தருளிய திருப்பதிகளையும்வணங்கிப் பாடக்கடவோமென்று அத்திருப்பதியினின்றெழுந்து, கூடல் கண்ணுதல் பெருமா ன் தன் ஐ - நான்மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளையும், இடன் உறை கயல் கண்ணாளை இறைஞ்சி - இடப்பாலிலெழுந்தருளிய அங்கயற்கண்ணம் மையாரையும் வணங்கி, பல்வரனும்பெற்று விடைகொடு - பலவரத்தையும்பெற்றுவி டையேறாது, தமிழ்நாடு எங்கு உம் பணிந்தனர் மீண்டுபோவார் - தமிழ்நாடுமுற்றும் வணங்கித் திரும்பி ஆளுடையபிள்ளையார் செல்வாராயினர். (௭௭)

தன்பெருங்கற்பினாளுமமைச்சனுந்தமிழ்நர்கோனும்
பின்புமுனந்தண்காழிப்பிரானடிபிரிவிறரா
யன்புதந்தவர்பானட்டவன்றுதொட்டானுக்கேண்மை
யின்பமுந்துன்பமாகிவிளைந்துமுன்னிர்ப்பப்போனார்.

(இ-ள்.) தன்பெருங் கற்பினாள் உம் அமைச்சன் உம் தமிழ்நர்கோன் உம்- தனது பெருங்கற்பினைவாய்ந்த மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் தமிழ்நா ட்டார்க்கரசனாகிய சவுந்தரியபாண்டியனும், அம் தண்காழி பிரான் அடி பிரிவு ஆற் றார் ஆய் - அழகிய தண்ணியசீர்காழியில் திருவவதாரஞ்செய்த பிள்ளையார் திருவடி ச்சாரபினின்று பிரிதற்குச் சிறிதும் ஆற்றாராகி, அன்புதந்து அவர்பால்நட்ட அன்று தொட்டு-முதலிய அன்புசெய்து அப்பிள்ளையாரிடத்திற் சிநேகித்த அக்காலந்தொட்

Koviloor Digital Library

ம, ஆருங்கேண்மை இன்பம் உம் - நீங்காத சிநேகத்தாலாகிய இன்பமும், துன்பம் ஆகிவிளைந்து முன் ஈர்ப்ப-துன்பமாய்முடிந்து முன்னேநின்றிழுக்க, பின்பு உம் முன் உம்போனார்-பின்னுமுன்னுந் தொடர்ந்துசென்றனர்கள்.

பெரியோரிடத்து அன்புகொண்ட நட்பால்விளைவது இன்பமேயாதலால் கேண்மையின்பமும் எனவும், அவரினின்று பிரிதல் அவ்வின்பத்தினும் பெருந்துன்பமாய் முடியுமாதலால் இன்பமுந் துன்பமாகி விளைந்து எனவும் கூறினார். (௭௮)

சண்பையர்தலைவர்தாமுமனையராய்த்தம்பின்செல்லு
நண்புடையவரைநோக்கிநம்மிடத்தன்புநீங்காப்
பண்பினராகிநீறுபாதுகாத்தீசன்சீர்த்தி
மண்படவாழ்மினீதுமறுக்கன்மினின்மினென்றார்.

(இ-ள்.) சண்பையர் தலைவர் தாம் உம் அனையர் ஆய் - சீர்காழியிலுள்ள அந்தணர்கள் தலைவராகிய பிள்ளையாரும் அவர்கள்போலப் பிரிதற்கு ஆற்றாததன்மையராகி, தம்பின் செல்லும் நண்பு உடையவர் ஐ நோக்கி - தமக்குப்பின்வரும் நட்புடைய பாண்டியன்முதலியோரைப் பார்த்தருளி, நம் இடத்து அன்புநீங்காத பண்பினர் ஆகி - இப்போது நம்மிடத்துக்கொண்ட அன்பினின்றுநீங்காத தன்மையராகி, நீறுபாதுகாத்து-திருநீற்றுநெறியையோம்பி, ஈசன் சீர்த்தி - இறைவனதுகீர்த்தி, மண்படவாழ்மின் - நீர் இவ்வுலகில்நிலைபெறவாழுங்கள், ஈது மறுக்கன்மின் - இதனைமறுக்காதிருங்கள், நின்மின் என்றார் - (எமது ஆணைவழி) நில்லுங்களென்றருளினார்.

அவர்போலத் தாமும் பிரிவாற்றாதவராயினார் என்பார் அனையராய் எனவும், அவர்கள்வழிபாட்டிற்கேற்பத் தாமும் நட்புடையவராயினார் என்பார் நண்புடையவரைநோக்கி எனவும், இன்றுபோல் என்றும் ஒருபடித்தாக நம்மிடத்தன்பினராயிருக்கவேண்டுமென்றனர் என்பார் நம்மிடத்தன்புநீங்காப் பண்பினராகி எனவும், என்று நமக்கு அன்பாயினீரோ அன்றே திருநீற்றுநெறியைப் பாதுகாத்தொழுகுதல் நுங்கடன் என்பார் நீறு பாதுகாத்து எனவும், அத்திருநீற்றுநெறியில் என்று நிற்றற்குரியராயினீரோ, அன்றே சிவபெருமானை வழிபட்டவராவீர் ஆதலால் அதனையடைதற்குரிய புநிசாதனைக்களுலகினிலைபெறச்செய்யவேண்டும் என்றனர் என்பார் ஈசன் சீர்த்தி மண்படவாழ் மின் எனவும், நம்மிடத்தன்பினர் ஆதலால் இந்நெறியைக் கைக்கொள்ளவேண்டும் என்றனர் என்பார் ஈது மறுக்கன்மின் எனவும், இதனை நமது ஆணைவழியே யோம்புதற்கு நில்லுங்கள் என்பார் நின்மினென்றாரெனவுங் கூறினார். (௭௯)

ஆளுடைப்புகலிவேந்தருண்மொழிமறுக்கவஞ்சித்
தாளுடைப்பதுமச்செந்தாடலையுறப்பணிந்துமீண்டு
வாளுடைத்தானைத்தென்னன்மதுரையில்வந்தான்கஞ்சத்
தோளுடைச்சிங்கமன்னார்சோழர்கோனாடுபுக்கார்.

(இ-ள்.) ஆளுடைய புகலிவேந்தர் அருள்மொழிமறுக்க அஞ்சி-நம்மையாளாவுடையசீகாழியிலவதரித்த பிள்ளையார் அருளியதிருமொழியைமறுத்தற்கஞ்சி, தாள் உடைய பதுமம் செம் தாள் - தண்டினையுடைய தாமரைமலர்போன்ற செவந்த திருவடிகளை, தலை உற பணிந்து வாள் உடைய தானை தென்னன் - தனதுமுடி சேர்த்து தாழவணங்கி வாளினையேந்திய சேனையையுடையபாண்டியன், மீண்டு மதுரை இல் வந்தான்-திரும்பிமதுரைக்குவந்தனன், கஞ்சம் தோள் உடைய சிங்கம்

Koviloor Digital Library

அன்னார்-தாமரைமலர்மாலையையணிந்த தோள்களையுடைய சிங்கவேற்றையொத்த பிள்ளையார், சோழர் கோன் நாடுபுக்கார் - சோழர்குலாதிபதியின் சோழநாட்டிற் கெழுந்தருளினார். (அ0)

ஞானமாமதநீர்சோரஞானசம்பந்தரென்னு
மானமாயானைவந்துகடம்பமாவனத்திற்றுன்னு
மூனமாஞ்சமணரென்னுத்தருக்களையொடித்துவெண்ணீ
றானமாப்பூழியள்ளித்தூற்றியதவனியெங்கும்.

(இ-ள்.) ஞானம் மாமதம் நீர்சோர-சிவஞானமென்னும் பெரியமதநீர்சிந்த, ஞானசம்பந்தர் என்னும் மானமாயானைவந்து - திருஞானசம்பந்தராகிய பெரியமகத்துவமுடையயானைவந்து, மாகடம்ப வனத்தில் துன்னும் - பெரியகடம்பவனத்தில்நெருங்கிய, ஊனம் ஆம் சமணர் என்னும் தருக்களை ஒடித்து - உள்ளீடில்லாதசமணர்களென்னும் மரங்களை வேரோடறவொடித்து, வெள் நீறு ஆனமாபூழி அள்ளி-வெள்ளிய திருநீறாகிய பெரியபுழுதியையள்ளி, அவனி எங்கு உம் தூற்றியது-நிலவுலகமுற்றிலும் பரவத்தூற்றியது.

புறப்புறச்சமயநெறியையொழித்துப் பூதிசாதனங்கள் எங்கும்பரவச்செய்தனர் என்பார் அவனியெங்குந் தூற்றியது எனவும், அது ஏனைநாடுகளிலும் பாண்டிநாட்டிலே மிக்கது என்பார் கடம்பமாவனத்திற்றுன்னும் ஊனமாஞ்சமணரென்னுந் தருக்களையொடித்த எனவுங்கூறினார். இது சிலேடைமையின்றிவந்த ஒற்றுமையுருவகவணி. (அக)

கலிநிலைத்துறை.

ஆதியாலயத்தடலைகொண்டாழிசூழ்காழிச்
சோதிவேதியர்பாண்டியன்சுரந்தணித்துடலிற்
பேதியாதகூனிமிர்த்தலாற்பிறங்குகற்பாதிப்
பூதியாவினுஞ்சிறந்ததவ்வட்டில்வாய்ப்பூதி.

(இ-ள்.) ஆழி சூழ்காழி சோதிவேதியர் - கடல்சூழ்ந்த சீகாழியில் சைவப்பொலிவமைந்தபிள்ளையார், ஆதி ஆலயத்து அடலைகொண்டு-சோமசுந்தரக்கடவுளின் திருவாலயத்திலுள்ள சாம்பலைக்கைக்கொண்டு, பாண்டியன் சுரம் தணித்து-பாண்டியனது சுரத்தையொழித்து, உடலில் பேதியாத கூன் நிமிர்த்தலால்-சரீரத்தில் ஒற்றுமையுள்ள கூனினைநிமிர்த்தியருளியதால், பிறங்கு கற்பம் ஆதி பூதியாவின் உம் - விளங்கும் கற்பமுதலிய விபூதி யெவற்றிலும், அ அட்டில்வாய் பூதி சிறந்தது-அந்த ஆலயத்தின் மடைப்பள்ளியிலுள்ள விபூதிசிறந்து விளங்கியது.

விபூதிகற்பம், அநுகற்பம், உகற்பம், அகற்பம் என நான்குவகைப்படும். கற்பம் ஆவது குற்றமில்லாத பசுவின் கோமயம் பூமியில் விழுதற்குமுன் சத்தியோசாதமந்திரத்தால் தாமரையிலையிலேற்று வழும்பினை நீக்கிப் பஞ்சகவ்வியத்தை வாமமந்திரத்தினால் வார்த்து அகோரமந்திரத்தை யுச்சரித்துப் பிசைந்துருட்டித் தற்புருடமந்திரத்தால் ஓமாக்கினியிலிட்டு விளைந்தபின் ஈசானமந்திரத்தை யுச்சரித்து எடுத்துப் புனிதமான வஸ்திரத்தால் வடிகட்டி நவபாண்டத்தில் காயத்திரி மந்திரத்தை யுச்சரித்து வைப்பது. அநுகற்பம் ஆவது காட்டில் மேடரவியிற்சென்று உலர்ந்துகிடந்த கோமயங்களை யெடுத்து உரலிலிடித்துக் கோசலத்தை வாமதேவ மந்திரத்தினால் வார்த்து அகோரமந்திரத்தினால் பிசைந்துருட்டிப்

Koviloor Digital Library

பதைப்பாப்பித் தற்புருடமந்திரத்தினால் ஓமாக்கினியில் தகனம்பண்ணி யீசானமந்திரத்தால் எடுப்பது. உகற்பம் ஆவது காட்டில் மரங்களொடு மரங்களுரிஞ்சி யுண்டாகிய அக்கினியினாலே விளைந்த சாம்பலையும் செங்கற்சூளை குயவன் சூளையாகிய இவைகளில் விளைந்த சாம்பலையும் எடுத்துப் பஞ்சகவ்வியத்தை முற்கூறிய விதியால் வார்த்துப் பிசைந்துருட்டி யோமாக்கினியிலிட்டுத் தகனம்பண்ணி யெடுப்பது. அகற்பம் ஆவது இடிவிழுந்த இடத்திலும் மலையுச்சியிலும் பூமியிலும் விளைந்த திருநீற்றினையெடுத்து மூலமந்திரம் லோமந்திரங்களினாற் சுத்திசெய்வது. "சொன்னவிவை யல்லாச்சாம்பலிதமெல்லாம் - நல்லனவேயென்றுளத்தாரூடு. பங்குனிமாதம்பசானத்தாண்டெய்ந்தபசு - மங்கலமாக்கொள்கோமயம். இருநான்குபஞ்சதசி யேழிரண்டு தன்னில் - வாமகுக்கொள்கோமயம். ஏற்றிடுசோதத்தா லானின்மனையிலையின் - மாற்றிடுமேலைவழும்பு. பெய்ததனிற்கவ்வியத்தை வாமத்தினாற்பிசைக - பையவ கோரம்பகர்ந்து. உருட்டிப்புருடத்தோ மாக்கிதனில்வைக்க - திரட்டிப்பதர்மேற் செறிந்து. அன்றெடுத்தன்றுருட்டி யன்றழலின்வைத்திடுக. அன்றி யுலர்த்திச் சுடலுமாம். விளைந்ததனைத்தூ ளெம்பிசானம்-அளைந்தேயெடுக்கவவையாய்ந்து. கறுப்புச்செவப்புக் கடியதொருஅமம்-வெறுப்புடனே பீதம்விடு. வடித்திடுதூயநவவத் திரத்தினாலே - எடுக்கவேகும்பத்தினிது. திருநீற்றின்காயத்திரிமந்திரத்தால்-வாமா லழுதலத்தினவை. கந்தமலர்பெய்துவாய் கட்டிநவவத்திரத்தால் - எந்தவைமிதென் றேபேணி. அணிசதினமுமறையுமுறையின் - எனுசவிருதான்கற்பமென்று. கட்டு வாத்தாங்கற்பமினி யனுகற்பந்தனையும் - இட்டமுறக்கூறவங்கேளிங்கு. வனந்தனிற்பிற்றிமைமோதத்திற்சென்றே - உலர்ந்தமயங்கொண்டோரிடத்து. வைத்திடித்துத் தூளாக்கி வார்த்ததனிற்கோசலத்தைக் - கைத்தலத்தினாலேகலந்து. அள்ளிப்பிசைந்துருட்டி யங்கிதனில்வைத்தெடுத்துக் - கொள்கமுனஞ்சென்றமனுக்கொண்டு. இதனனுகற்பமென்பருபகற்பம்-அதுதனையுஞ்சொல்வாமறி. வன்னிவனந்தன்னி லுறவியப்பாய்வாய்த்தபொடி - தன்னையெடுத்திடுகதான். வார்த்திடுகவானேந்தமற் றதனிற்கையாலே - சேர்த்திடுகபாசஞ்செறிந்து. அள்ளிப்பிசைந்துருட்டி யங்கிதனி லவைத்தெடுத்துக் - கொள்கமுனஞ்சொன்னமனுக்கொண்டு" எனவருஞ் சைவசமயநெறித் திருக்குறளால் உணர்க. கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்னுந் திருநீறு மூன்றினும் கற்பஞ் சிறந்ததாயிற்றென்பார் கற்பாதிப் பூதியாவினுஞ் சிறந்த தவ்வட்டில் வாய்ப்பூதி என்றார். (௮௨)

சமணரைக் கழுவேற்றியபடலம் முற்றிற்று.

ஆ. பாயிரம் உட்படத் திருவிருத்தம்-௩௨௫௫.

அறுபத்துநான்காவது

வன்னியுங்கிணறும் இலிங்கமுமழைத்தபடலம்

எழுசீரடியாசிரியவிருத்தம்.

சென்னிவெண்டிங்கண்மிலைச்சியமதனைச்சிவனருளடைந்தசம்பந்தர்
துன்னிருஞ்சமணக்குழுவினையேற்றித் துணித்தவாறிசைத்தனம்வணிகக்
கன்னிதன்மன்றற்கரியினைமாற்றுள்காணவக்கண்ணுதலருளால்
வன்னியுங்கிணறுமிலிங்கமுமாக்குவந்தவாறெடுத்தினியுரைப்பாம்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

(இ-ள்.) சென்னி - தமது சடாமுடியில், வெள் திங்கள் மிலைச்சிய மதுரை சிவன் அருள் அடைந்த சம்பந்தர் - வெள்ளிய இளம்பிறையையணிந்த திருவாலவாயிலிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவருண்ஞானத்தைப்பெற்ற பிள்ளையார், நூன் இருஞ் சமண் ஐ - நெருங்கிய பெரிய எண்ணாயிரஞ் சமணர்களை, கழுமுனை ஏற்றி நூனித்த ஆறு இசைத்தனம் - கழுமுனையிலேற்றித் தொலைத்தருளிய திருவிளையாடலை யெடுத்துக்கூறினும், வணிகக்கன்னி தன் மன்றல் கரியினை மாற்றாள் காண - வணிகர் குலத்திற்றோன்றிய வொரு கன்னிப்பெண் தன் கலியாணத்திற்குச் சாட்சியாகவுள்ள பொருள்களைத் தனது மாற்றவள் கண்டஞ்ச, அ கண்ணுதல் அருள் ஆல் - அச்சோமசுந்தரக்கடவுளின் திருவருளால், வன்னி உம் கிணறு உம் இலிங்கம் உம் ஆங்குவந்த ஆறு-வன்னியுங் கிணறும் சிவலிங்கப்பெருமானும் அவ்விடத்தில்வந்த திருவிளையாடலை, இனி எடுத்து உரைப்பாம் - இனியெடுத்துக் கூறுவாம்.

வேரோடறக்களைந்தனர் என்பார் நூனித்தவாறு என்றார். (௧)

பொன்மலர்க்கைதைவேலிசூழ்வேலைப்புறத்தொருபட்டினத்துள்ளான்
மின்மணிக்கொடும்பூணொருகுலவணிகன்வேறுவேறும்பலசெல்வத்
தன்மையிற்சிறந்தோன்மகவிலனாகித்தன்மனக்கினியதோர்காட்சி [தான்.
நன்மனக்கொடியோடறம்பலபுரிந்தோர்நகைமதிக்கொம்பை யீன்றெடுத்

(இ-ள்.) பொன் மலர் கைதை வேலிசூழ் வேலைபுறத்து ஒருபட்டினத்து உள்ளான் - பொன்போலமலர்தலையுடைய தாழைகளே வேலியாகச்சூழ்ந்த கடலின் கரையிலுள்ள ஒருபட்டினத்தில்வசிக்கும், மின் மணி கொடும்பூண் ஒருகுலம் வணிகன் - விளங்கும் இரத்தினமழுத்திய வளைந்த ஆபரணத்தையணிந்த வணிககுலத்திற்றோன்றிய ஒருவன், வேறு வேறு ஆம் பல செல்வம் தன்மையில் சிறந்தோன் - வெவ்வேறுவகைப்பட்ட பலசெல்வங்களின்வகையின் மேம்பட்டவன், மகவு இலன் ஆகி - புத்திரப்பேறில்லாதவனாகி, தன் மனத்துக்கு இனியது ஓர் காட்சி நல் மனை கொடியோடு - தனதுமனத்துக்கினிய ஒப்பில்லாத தோற்றத்தையுடைய அழகுவாய்ந்தமனைக்கிழத்தியுடன், பல அறம் புரிந்து - பலதருமங்களைச்செய்து, ஓர் நகைமதி கொம்பு ஐ ஈன்று எடுத்தான் - விளங்குஞ்சந்திரோதயஞ்செய்த ஒருகொம்புபோன்ற பெண்மகவைப் பெற்றெடுத்தனன்.

கடற்றுறையையடுத்த நகரம் பட்டினம் ஆதலால் வேலைப்புறத்தொரு பட்டினத்துள்ளான் எனவும், செல்வம், மணி, பொன், தானியமுதலாகப் பலவகைப்படுதலால் வேறுவேறும்பலசெல்வம் எனவும், முப்பத்திரண்டுவகையாயிருத்தலால் அறம் பல எனவுங்கூறினார். சந்திரோதயஞ்செய்யும் பூங்கொம்பு இல்லாமையால் ஓர் நகைமதிக்கொம்பு என்றது இல்பொருளுவமையணி. (௨)

அத்தனவணிகற்குரியநன்மருகனவன்முதற்கடிமணமுடித்தோன்
முத்தமிழ்மதுரைப்பதியுளானவற்கேமுறையினானேற்றுநான்பயந்த
வித்தகமயிலைக்கொடுப்பலென்றனையவியற்குலவணிகர்கோன்றன்னோ
டொத்தபல்கிளைஞர்யாவருமறியவுணர்த்தினன்சிலபகலொழிய.

(இ-ள்.) அதனம் வணிகற்கு உரிய நல்மருகன் முத்தமிழ் மதுரைபதி உள்ளான் - அந்தப்பலவகைப்பட்ட தனங்களையுடைய வைசியனுக்குரிய நல்லமருமக

Koviloor Digital Library

ருயுள்ளவன் இயலிசைநாடகமென்னு முத்தமிழும் வழங்கும் மதுரைத்திருநகரில்வ சிப்பவன், அவன் - அவ்வணிகன், முதல் கடிமணம் முடித்தோன் - முதலிலொருக லியாணமுடித்தவன், (ஆயிறும்) அவற்கு ஏ - அந்தவணிகனுக்கே, முறையினல் - நூலிற்கூறிய முறையினல், நோற்று நான் பயந்த வித்தகம் மயிலை கொடுப்பல் என் று - தவஞ்செய்து நான்பெற்ற சதுரப்பாடுள்ள மயில்போன்ற பெண்மணியைக்கொடு ப்பேனென்று, அனைய இயல்குல வணிகர் கோன் - அந்தமரபமைந்த வணிகர்குலத் துக்கு அதிபதியாயுள்ளவன், தன் ஒடு ஒத்த பல் கிளைஞர் யாவர் உம் அறிய உணர்த் தினன் - தன்னேடொத்த பலசுற்றத்தாரெல்லோரும் உணரத்தெரிவித்தனன், சில பகல் ஒழிய - சிலநாள் கழிய.

மரபிலுஞ் செல்வத்திலுந் தன்னேடொத்த சுற்றத்தார் அவனுக்குப்பலர் எ ன்பார் தன்னேடொத்த பல்கிளைஞர் எனவும், அவர்களுக்கெல்லாம் ஒருசேர வுணர் த்தினன் என்பார் யாவரும் அறியவுணர்த்தினன் எனவுங் கூறினர். வேறுவேறும்ப லசெல்வத்தன்மையிற் சிறந்தோன் என முன்னர்க்கூறியவதனல் தன வணிகற்கு என்பதற்குத் தனவணிகன் என்றும்பெயரையுடையவனுக்கு எனப்பொருள் கொள் ளுதலும் ஒன்று. (௬)

ஊழ்வினைவலியாலாருயிரிழந்தானுயிர்க்குடம்பனையதன்கற்பின்
சூழ்கதிர்மணிப்பூண்மனைவியுமிறப்பத்துணிந்தனளவரிருவோர்க்கு
மாழ்கடற்கிளைஞர்செயத்தகுங்கடன்களாற்றியச்செய்தியைமதுரை
வாழ்தருமருகற்குணர்த்துவானேலைவிடுத்தனர்மருமகன்வாங்கா.

(இ-ள்.) ஊழ்வினை வலியால் ஆர் உயிர் இழந்தான் - போ கூழின்வன்மை யால் பெறுதற்கரிய உயிரிழந்தவன், உயிர்க்கு உடம்பு அனைய - அவனுயிருக்கு ஓர் சரீரத்தையொத்த, கதிர் சூழ் மணிப்பூண் - ஒளிமிகுந்த இரத்தினமழுத்திய ஆபரணத் தையணிந்த, தன் கற்பு இன் மனைவி உம் இறப்பதுணிந்தனள் - அவனதுகற்பிற்குரி யமனைவிபிழத்தியுமுயிர்விடத் துணிந்தாள், அவர் இருவோர்க்கு உம் - அவர்களிருவ ருக்கும், ஆழ் கடல் கிளைஞர் செயத்தகு கடன்கள் ஆற்றி - ஆழ்ந்த கடலைப்போலப் பரந்த சுற்றத்தார் பலருங்கூடிச் செய்யவேண்டுங் கடன்களையெல்லாஞ் செய்துமு டித்து, அ செய்தியை - அந்தச்செய்தியை, மதுரை வாழ்தரு மருகற்கு உணர்த்து வான் - மதுரையின்வாழும் அவன் மருமகனுக்குத் தெரிவிக்க, ஓலை விடுத்தனர் - ஓலையனுப்பினர்கள், மருமகன் வாங்கா - அம்மதுரையில்வசிப்போனதனைவாங்கி()

தன்னருண்மாமன்றுஞ்சினன்கூடத்தாரமுந்துஞ்சியதிப்பா
லன்னவர்க்களவின்றாகியதனமுண்டவனனிநாண்மகவின்றிப்
பின்றெருபெண்ணைப்பெற்றனனவளைத்தனக்கெனப்பேசினனனைய
கன்னியைமணந்துசெல்கெனமுடங்கற்கழறியபாசுரந்தெரியா.

(இ-ள்.) தன் அருள் மாமன் துஞ்சினன்-உன்மேற் கருணையையுடைய மாம னு மிறந்தனன், கூட தாரம் உம் துஞ்சியது-அவனேடுகூட வுன் மாமியும் இறந்தன ள், இ பால் - இப்புறம், அன்னவர்க்கு அளவு இன்று ஆகிய தனம் உண்டு - அவர் களுக்கோ அளவில்லாத பொருளுண்டு, அவன் நனி நாள் மகவு இன்றி-அவ்வணிக னே அநேகநாள் பிள்ளையில்லாமல், பின் ஒருபெண்ணை பெற்றனன்-பின்பு ஒரு பெ ண்ணைத் தவத்தினுற் பெற்றுன், அவளை தனக்கு என்ன பேசினன் - அவளை யுன

Koviloor Digital Library

க்கேயென்று உயிர்வாழ்நாளிற் பலருமறிய வற்புறுத்திப் பேசினன், அனைய கன்னி யை மணந்து செல்க என - உன் மாமன் மகளாகிய அக்கன்னியை விவாகமுடித்து ப் போகக்கடவாயென்று, முடங்கல் கழறிய பாசுரம் தெரியா - ஓலைசெப்பிய வாச கத்தைத்தெரிந்து.

தன் என்பது முன்னிலையிலிட வழுவமைதியாய் வருதலால் தன் எனவும், இறந்ததுதழீஇய எச்சப்பொருளில் வந்த செஞ்சொல் ஆதலால் உம்மை கொடா து இறுதியி லும்மைதந்து தன்னருண்மாமன் றஞ்சினன்கூடத் தாரமுந்தஞ்சியது எனவும், பொருளாலுயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாதலால் அஃறிணை யிறுதிதோன்றத் தாரமுந்தஞ்சியது எனவுங்கூறினர். "எஞ்சுபொருட்கிளவி செஞ் சொலாயின்-பிற்படக்கிளவார்முற்படக்கிளத்தல்"என்பது தொல்காப்பியச்சூத்திரம்.

விழ்ந்தனன்றரைமேற்புரண்டனனுயிர்ப்புவிங்கினன்விழிப்புனல்வெ
ள்ளத், தாழ்ந்தனன்விம்முற்றம்மவோவென்றென்றரற்றினன்கிளைஞர்நட்
படைந்து, வாழ்ந்தவர்தழுவத்தழீஇத்தழீஇக்கரைந்தான் மற்றவர்தேற்றி
டத்தெளிந்து, சூழ்ந்தவெந்துயர்நீத்தொருதலைமாமன்றொன்னகர்க்கேகு
வான்றுணிந்தான்.

(இ-ள்.) தரைமேல் விழ்ந்தனன் புரண்டனன் - நிலத்தின்மேல் வீழ்ந்து புர ண்டு, உயிர்ப்பு வீங்கினன் விழிப்புனல் வெள்ளத்து ஆழ்ந்தனன் - நெட்டுயிர்ப்பெறி ந்து பொழியுங் கண்ணீர் வெள்ளத்திலழுந்தி, விம்முற்று அம்ம ஓ என்று எனறு அர ற்றினன் – விம்மிஐயகோவென்றென் றோலமிட்டுக் கதறி, கிளைஞர் நட்பு அடைந்து வாழ்ந்தவர் தழுவ தழீஇ தழீஇ கரைந்தான் - சுற்றத்தாரும் நட்பினரும் தழுவத்தா னும் எதிரே தழுவித்தழுவி யழுதனன், அவர் தேற்றிட தெளிந்து - அவர்கள் தே ற்ற ஒருவாறு தெளிந்து, சூழ்ந்த வெம் துயர் நீத்து - தன்னை விடாதுதொடர்ந்த கொடிய துன்பத்தினின்று நீங்கி, ஒருதலை - துணிந்து, மாமன் தொல் நகர்க்கு ஏகு வான் துணிந்தான் - தனது மாமனது தொன்றுதொட்டுள்ள பட்டினத்துக்குச்செ ல்ல ஒருப்பட்டனன்.

வீழ்ந்தனன் புரண்டனன் வீங்கினன் ஆழ்ந்தனன் அரற்றினன் என்னு முற்று களெச்சமாய் ஒன்றனை யொன்றுகொண்டு முடிந்து கரைந்தனன் என்றும் வினைமு ற்றின் முதனிலையைக்கொண்டன. அம்ம ஓ புலம்பலில் வந்த இடைச்சொற்கள். உற வினர்க்கும் நட்பினர்க்கும் ஏற்றபடி தழுவவேண்டுதலால் தழீஇத் தழீஇயென இர ட்டித்துக் கூறினராதலால் இது அடுக்கன்று. (௬)

அங்குளகிளைஞர்சிலரொடுங்கூடியருங்கடிமதுரைநீத்தேகிப்
பொங்கிருங்கழிசூழ்பட்டினக்குறுகிப்புகுதுவான்வரவறிந்தங்குத்
தங்குதங்கிளைஞர்வினவநேர்வாரைத்தழீஇத்தழீஇச்செலவிடுத்தேகிக்
கொங்கிவர்தளவத்தாரினன்மாமன்கோயில்புக்கிருந்தனனாக.

(இ-ள்.) அங்கு உள்ள கிளைஞர் சிலரொடு உம் கூடி - அம்மதுரையிலுள்ள சுற்றத்தார் சிலரோடுங்கூடி, அருங்கடி மதுரை நீத்து ஏகி - கடத்தற்கரிய காவல் வாய்ந்த மதுரையினின்று நீங்கிப்போய், பொங்கு இருங்கழிசூழ் பட்டினங் குறுகி புகுதுவான் வரவு அறிந்து - நீரால் மிக்க பெரிய கழிகள் சூழ்ந்த பட்டினங் குறுக வருமவ்வணிகன் றனது வரவினை யுணர்ந்து, அங்கு தங்கு தம் கிளைஞர் வினவ நே

ர்வரை - தம்மநகரையில் வசிக்கும் சுற்றத்தாருள் எதிர்சென்று வினவ வருவாரை, தழீஇ தழீஇ செலவிடுத்து ஏகி - தழுவித்தழுவி யவர்கள் தத்த மனையிற்செல்ல வனுப்பித் தான் சென்று, கொங்கு இவர் தளவம் தாரினான் — மகரந்தம்பரந்த முல்லை மலர்மாலையையணிந்த வணிகன், மாமன் கோயில் புக்கு இருந்தனன் ஆக - தனது மாமன் மனையிற் சென்றிருக்க.

குறுகி செயவெனெச்சத்திரிபு. (எ)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நாள்சிலகழிந்தபின்னர்நாய்கரேறனையானன்ன
வாள்புரைகண்ணினாளைமதுரையிற்கொடுபோயங்கென்
கேளிர்முன்வேட்பலென்றுகிளந்துதன்மாமனீட்டு
நீள்பெரும்பொருள்கள்மற்றுங்கைக்கொடுநெறியிற்செல்வான்.

(இ-ள்.) சில நாள் கழிந்தபின்னர் - சிலநாள்சென்றபின், நாய்கர் ஏறு அனையான் - வணிகருள் சிங்கத்தையொத்தவன், அன்னவாள் புரை கண்ணினாளை மதுரையில் கொடுபோய் - அந்தவாளையொத்த கண்களையுடைய மாமன்மகளை மதுரைத்திருநகரிற்கொண்டுசென்று, அங்கு என் கேளிர்முன் வேட்பல் என்று கிளந்து - அவ்விடத்திலெனது சுற்றத்தார்முன் மணஞ்செய்வேனென்றுகூறி, தன்மாமன் ஈட்டும் நீள் பெரும்பொருள்கள் மற்று உம் கைக்கொடு நெறியில் செல்வான் - தனது மாமன் தேடிய எல்லையில்லாத பெரியபொருள்களையும் வேறுள்ளனவற்றையுந் தனது கைவசஞ்செய்து வழியிற் செல்லுகின்றவன்.

பொருள்கள் என்றது நிதிகளை. மற்றும் என்றது ஆடையணிமுதலியவற்றை. விவாகஞ்செய்து மனைக்கிழத்தியென்று பலரும் அறியச்செய்வேன் என்பான் அங் கென்கேளிர்முன் வேட்பலென்று என்றான் என்றார். (அ)

வழிவிடவருவார்தம்மைநிறுத்திப்பின்மதுரைமூதூர்க்
கெழுதருசுற்றத்தாரைமுன்சென்மினென்றுபோக்கித்
தொழுபரிசனமுந்தானுந்தோகையும்வைகலொன்றிற்
கழிவழியரைமேற்பெய்தகாவதமாகப்போவான்.

(இ-ள்.) வழி விட வருவோர் தம்மை நிறுத்தி - தன்னைவழியனுப்ப வருகிற சுற்றத்தாரை நிறுத்தி, பின் - பின்பு, மதுரை மூதூர் கெழுதரு சுற்றத்தாரை முன்சென்மின் என்று போக்கி - மதுரையென்னுந் தொன்றுதொட்டுள்ள வூரினின்று தம்மோடுவந்த மிக்கசுற்றத்தாரை முன்னேசெல்லுங்களென்று போகச்செய்து, தொழு பரிசனம் தான் உம் தோகை உம் - தன்னைவணங்கும் பரிசனங்களுந்தானும் மயில்போன்ற மாமன்மகளும், வைகல் ஒன்றில் கழி வழி - நாளொன்றுக்குக் கழியும்வழி, அரை மேல்பெய்த காவதம் ஆக போவான் - மேலே அரையென்று மிலக்கம்பெய்த காதமாகச் செல்வானாயினான்.

ஒன்றரைக்காதவழி நாளொன்றுக்குச் செல்வான் என்பார் வைகலொன்றிற் கழிவழியரைமேற்பெய்த காவதமாகப் போவான் என்றார். “திணைபால்பொருள் பல” என்றுஞ் சூ-இல். பன்மையொருமுடிபினவென்றது வாளா “ஒருமுடிபின” எனக் கூறினமையால் பரிசனமுந் தானுந் தோகையும் என்ற தொடரில் சிறப்பால் போவான் என்றும் உயர்திணையாண்பான் முடிபுதந்தார். (௯)

Koviloor Digital Library

வெங்கதிர்வேலைசெல்லும்வேலைவந்தணையுமுன்ன
மிங்கிருந்தொழிகமென்றுப்புறம்பயமூதூரெய்தி
யங்கிறைகோயின்முன்னிக்கூவனீராடியங்குத்
தங்கியவன்னிமாடேபோனகஞ்சமைத்துண்டல்வாய்.

(இ-ள்.) வெங்கதிர் வேலை செல்லும் வேலை வந்து அணையும் முன்னம் - சூரியன்மேலைக்கடலிலத்தமிக்கும் சமையம்வந்தடைதற்கு முன்னே, இங்கு இருந்து ஒழிகம் என்று புறம் பயம்மூது ஊர் எய்தி - இத்திருப்பதியிலிருந்து இந்நாள் கழிப்போமென்று திருப்புறம்பயமென்றுந் தொன்றுதொட்டுள்ள திருப்பதியை யடைந்து, அங்கு இறை கோயில் முன்னி - அவ்விடத்து இறைவரெழுந்தருளிய திருக்கோயிலையடைந்து, கூவல் நீர் ஆடி - திருக்கிணற்றின் தீர்த்தமாடி, அங்கு தங்கிய வன்னிமாடு ஏ போனகம் சமைத்து உண்டு - அவ்விடத்தில் நிலைபெற்றவன்னிமரத்தடியிலேபோனகஞ் சமைத்து அருந்தி, அல் வாய் - அன்றிரவில். (௬0)

மலைவைத்தசிலையான்கோயின்மருங்கொருபடியினும்பர்த்
தலைவைத்துத்துயிலுமெல்லை விதிவழிச்சாரவந்தோர்
கொலைவைத்தவிடவாய்நாகங்கடித்ததுகொதித்துநீண்ட
விலைவைத்தகொடும்பூணாய்கன்விடந்தலைக்கொண்டுமாய்ந்தான்.

(இ-ள்.) மலை வைத்த சிலையான் கோயில் மருங்கு - மலையேவில்லாகக்கொண்ட பெருமானார் திருக்கோயிலின்பக்கத்து, ஒருபடியின் உம்பர் தலை வைத்து துயிலும் எல்லை - ஒருபடியின்மேல் தலைவைத்துத்துயில் கூருஞ்சமையத்தில், விதிவழி - போ கூழின் வழியே, சாரவந்து - பொருந்தவந்து, கொலைவைத்த விடம் வாய் ஓர் நாகம் கொதித்து கடித்தது - கொலையமைந்தவிடம் பொருந்திய ஒருபாம்பு கோபித்துக்கடித்தது, நீண்ட இலைவைத்த கொடும் பூண் நாய்கன் - ஒளிமிக்கவனைந்த வெற்றிலைச்சரப்பணியணிந்த வணிகன், விடம் தலைக்கொண்டு மாய்ந்தான் - விஷந்தலைக்கேறி யிறந்தனன். (௬௧)

அங்குளபரிசனங்களாவலித்திரங்கிச்சூழக்
கொங்கைகள்புடைத்துச்சேடிக்குறுமிடைமகளிரேங்கச்
சிங்கவேறனையானாகந்தீண்டிடாதொதுங்கிப்போந்த
பங்கயமலர்கொம்பன்னாள்பாவைபோற்புறம்புநின்றாள்.

(இ-ள்.) அங்கு உள்ளபரிசனங்கள் ஆவலித்து இரங்கி சூழ - அவ்விடத்து நீங்காது சூழ்ந்த ஏவலாளர்கள் வாய்திறந்தழுது மனமைந்து ஓர்பாற்சூழவும், குறு இடைசேடிமகளிர் - குறுகிய இடையையுடைய தோழிப்பெண்கள், கொங்கைகள் புடைத்து ஏங்க - தனத்தின்மேற் கையாலறைந்து ஒருபால்வருந்தவும், சிங்கம் ஏறு அனையான் ஆகம் தீண்டிடாது ஒதுங்கி - ஆண்சிங்கத்தையொத்த வணிகனது சரீரத்தைத்தீண்டாமல் ஒதுங்கி, போந்த பங்கயம் மலர் கொம்பு அன்னாள் - (பட்டினத்தினின்று) வந்ததாமரைமலர்ந்த பூங்கொம்பையொத்த வணிககுலக்கன்னி, பாவை போல் புறம்பு நின்றாள் - பாவையைப்போல அசையாது புறம்பே நின்றனள்.

பங்கயமலர்கொம்பு இல் பொருளுவமையணி. (௬௨)

கலிநிலைத்துறை.

ஆளியேறன்னவனரவின்வாய்ப்பட்டதுமகிந்தது
மீளிவேலுண்கணாள்கைகுலைத்தழுவதும்விழுவதும்

கேளிர்சூழ்ந்தயர்வதுஞ்சோர்வதுங்கண்டிளங்கிளியனாள்
வாளியேறுண்டதோர்மயிலின்வீழ்ந்துயங்கினாண்மயங்கினாள்.

(இ-ள்.) ஆளி ஏறு அன்னவன் அரவின்வாய்ப்பட்டது உம் அவிந்தது உம் - ஆளியேற்றையொத்தவணிகன் பாம்பின்வாய்ப் பல்லாற்பட்டதையும் இறந்ததையும், மிளிவேல் உண்கண்ணார் கைகுலைத்து அழுவது உம் விழுவது உம் - பெருமை வாய்ந்த வேலினைவென்ற கண்களையுடைய தோழிப்பெண்கள் கையசைத்தழுதலையும் விழுதலையும், கேளிர் சூழ்ந்து அயர்வது உம் சோர்வது உம் கண்டு - சுற்றத்தார் சூழ்ந்து வருந்துதலையுஞ் சோர்தலையும்பார்த்து, இளங்கிளி அன்னாள் - இளங்கிளியையொத்த வணிகக்கன்னி, வாளி ஏறு உண்டது ஓர்மயிலின் - அம்பாலேறுண்ட ஒருமயில்போல, வீழ்ந்து உயங்கினாள் மயங்கினாள் - நிலத்தின்மேல்விழுந்து சோர்ந்தனள் மயங்கினாள்.

அவனிறந்தது என்றுங்கண்டறியாத பெருவியப்பாதலால் கைகுலைத்தெனவும், கேளிர் சூழ்ந்து என்றமையால் மிளிவேலுண்கணார் என்றது தோழியர் எனவும், பிறந்தகாட்டொட்டுத் துன்பம் உணராதவள் ஆதலால் வாளியேறுண்டதோர் மயிலின் வீழ்ந்துயங்கினாள் எனவுங்கூறினார். (கங)

வடிக்கணுட்செருகினவருகியதுயிர்ப்பழல்வாய்ப்படுந்
தொடுத்தபூங்கோதைபோற்சோர்ந்ததாகங்கரஞ்சோர்ந்தன
வடித்தளிர்சோர்ந்தனகன்னியன்னப்பெடையன்னவ
ளிடிக்கெதிர்ப்பட்டுவீழ்ந்தாளெனக்கிடந்தனளென்செய்வாள்.

(இ-ள்.) கன்னி அன்னம்பெடை அன்னவள் - இளமைவாய்ந்த பெண்ணன்னத்தையொத்த கன்னியின், வடி - மாவடுவின் பிளவையொத்த, கண் உள் செருகின - கண்களுள்ளேசெருகின, உயிர்ப்பு அருகியது - மூச்சடங்கியது, அழல் வாய்படும் - நெருப்பிற்பட்ட, தொடுத்தபூங்கோதைபோல் ஆகம் சோர்ந்தது - தொடுத்த மலர்மாலைபோலச் சரீரஞ்சோர்ந்தது, கரம் சோர்ந்தன - கைகள்சோர்ந்தன, அடி தளிர் சோர்ந்தன - பாதமாகவுருத்திரிந்த தளிர்கள்சோர்ந்தன (அதனால்) இடிக்கு எதிர்ப்பட்டு வீழ்ந்தாள் என்ன - இடிக்கு எதிர்ப்பட்டு வீழ்ந்தவள்போல, கிடந்தனள் - சோர்ந்துகிடந்தாள், என்செய்வாள் - வேறென்னசெய்வாள்.

எவருக்கும் வணிகனைத்தீண்டற்கு அருகளல்லாக்கன்னித்தன்மையளாதலால் என்செய்வாள் என்றார். அடித்தளிர் என்றது திரிபணி. (கச)

சாயும்பூங்கொம்பரிற்சூழ்ந்திறந்தான்புறஞ்சார்ந்தழூஉ
மாயமென்மகளிர்மீண்டன்பனேயெங்கைதன்னாவியும்
போயதேகொல்லெனமடியுறக்கொடுங்கையாற்புறந்தழீஇத்
தூயநாசெறிந்திளைப்பாற்றினார்சிறிதுயிர்தோற்றவே.

(இ-ள்.) சாயும் பூங்கொம்பரின் - சாய்ந்துவிழும் பூங்கொம்பைப்போல, இறந்தான் புறம் சார்ந்து சூழ்ந்து அழூஉம் - இறந்தவன்புறத்திற்சார்ந்து சூழ்ந்து அழாநின்ற, ஆயம் என்மகளிர் மீண்டு - தோழியர் என்றும்பெண்கள் அவனினின்றுதிரும்பி, அன்பனே எங்கைதன் ஆவி உம் போயது ஏ கொல் என்ன - தனக்கு அன்பனாகிய வணிகனே எமது தங்கையினுயிரும் போனதோவென்று, மடி உற - தமது மடியிற்பொருந்த, கொடுங்கை ஆல் புறந்தழீஇ - வளைந்தகைகளாற் புறத்திற்றழுவி,

Koviloor Digital Library

சிறிது உயிர்தோற்ற - சிறிதுசுவாசம் புலப்பட, தூயதூசு எறிந்து இளைப்பு ஆற்றினார் - வெள்ளியவஸ்திரத்தைக்கொய்து வீசி யிளைப்பாற்றினர்கள். (௧௫)

மெய்கழிந்தின்னுயிர்மீண்டுதன்யாக்கையின்மெல்லவே
கைகலந்தாங்கிருகாலியங்குற்றனகண்களும்
பொய்கைநீலஞ்சிறிதவிழ்ந்தெனவலர்ந்தனபூவையை
மைகழிநாண்முதனான்குநால்வேலியாய்வளைந்தவே.

(இ-ள்.) மெய்கழிந்த இன் உயிர் மீண்டு தன்யாக்கையை மெல்ல ஏ கைகலந்தால் ஆங்கு - உடம்பினின்றுங்கழிந்த இனிய உயிர்திரும்பி மெல்லவந்தாற்போல, இருகால் இயங்குற்றன - இரண்டுகால்களும் அசைந்தன, கண்கள் உம் - இரண்டுகண்களும், பொய்கை நீலம் சிறிது அவிழ்ந்தால் என்ன அலர்ந்தன-நீர்நிலையிற் குவளை சிறிதுமலர்ந்தாற்போலத் திறந்தன, பூவையை - அக்கன்னியை, மைகழி நாண் முதல் நான்கு உம் - குற்றத்தினின்று நீங்கிய நாணமுதலியநான்கும், நால்வேலி ஆக வளைந்த-நான்குவேலியாக (கற்பென்னும்பயிரைப் பாதுகாத்தற்கு) வளைந்துசூழ்ந்தன.

நாண்முதல் நான்கு என்றது நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்குகுணங்களையும். நாணம் ஆவது - தனது தனந்தோன்றும்போதுடன் றோன்றித் தனக்குக்கணவனாவான் குணத்தையன்றிப் பிறர்குணத்தைக்கேட்பதற்குக்கூசிச் சாமளவும் உடனிற்பது. மடம் அறியாமை, அதாவது அந்நாணத்தால் தன்கணவனிதத்தையன்றி மற்றொன்றையுங் கனவிலுமறியாமை,அச்சம் பயம். அதாவது தன்கணவனையன்றிப் பிறரைக்காணுதற்கு அஞ்சுதல். பயிர்ப்பு அருவருப்பு. அதாவது தேனையுண்ணும்வண்டு மலத்தைக்காணி லருவருப்பதுபோலக் கணவன்சுகத்தையன்றிப் பிறர்சுகத்தைக்கான்ற சோற்றைப்போல அருவருத்தல். இந்நான்குகுணமும் ஒருசேரநின்ற வழியன்றிக் கற்புநிலைபெறாதாதலால் நால்வேலியாகவளைந்தனென்றார்.

கையெறியுங்குழற்கற்றைசோருந்திரிகாறுளி
நெய்யெனக்கண்புனல்கொங்கைமுற்றத்துகநெஞ்சுகும்
பையவாய்விடும்புறம்பார்க்குநாணெடுந்தளைப்படுஞ்சிறு
தெய்வந்தொட்டாளெனத்தேம்பிவிம்மாந்தொளிதேயுமால்.

(இ-ள்.) கை எறியும் - நிலத்திற்கையெறிவாள், கற்றை குழல் சோரும் - நெருங்கியகூந்தல்சோர்வாள், திரிகால் நெய்துளி என்ன - திரிசிந்து நெய்த்துளியைப்போல, கண்புனல் கொங்கை முற்றத்து உக நெஞ்சு உகும்-கண்கள் சிந்தும்நீர் தனமாகிய முன்றிலிற்சிந்தமனம்உடைவாள். பைய வாய்விடும் - மெல்லவாயைத்திறப்பாள், புறம்பார்க்கும் - புறத்திற்சிறக்கணித்துப்பார்ப்பாள், நாண் என்றும் தளைப்படும் - நாணம் என்னுங்கட்டிற்பட்டுத் தலைவளைப்பாள், சிறுதெய்வம் தொட்டால் என்ன - சிறுதெய்வம் பற்றினாற்போல, தேம்பி விம்மாந்து ஒளிதேயும் - மெலிந்து கவலையால்விம்மி ஒளிகுன்றுவாள்.

இதன்மெய்ப்பாடு அவலம். (௧௭)

வணங்கில்செல்வந்தழீஇப்பிறந்தநாடொட்டொருவைகலு
மணங்கெனக்கனவிலுங்கண்டிலாளன்பன்மேலன்பென
விணங்குதன்னுருவமாய்நிறைவரம்பிற்றெனவிருந்தோர்பெண்
ணணங்குவாய்விட்டழுதாலெனப்புலம்பலுற்றுளரோ.

Koviloor Digital Library

(இ-ள்.) வணக்கு இல் செல்வம் தழீஇ - குறைவில்லாதபெருஞ்செல்வத்தை யடைந்த, பிறந்தாள் தொட்டு ஒருவைகல் உம் அணங்கு என்ன கனவில் உம் கண்டிலாள் - பிறந்தநாள்தொட்டு ஒருநாளாயினுந் துன்பம் என்பது இதுவென்று சொப்பனத்திலும் அறியாத அக்கன்னிப்பெண், அன்பன்மேல் அன்பு என - அன்பன்மேற்கொண்ட அன்பு எனப்படுதல், இணங்கு தன் உருவம் ஆய் நிறைவரம்பிற்று என - பொருந்திய தனதுவடிவாய்நிறைந்த அளவினதென்று கண்டோர்கூற, ஓர் பெண் அணங்கு இருந்து வாய்விட்டு அழுதால் என்ன - ஒரு பெண்தெய்வமிருந்து வாய்விட்டழுதாற்போல, புலம்பல் உற்றாள் - அழத்தொடங்கினாள்.

அன்பன்மேற்கொண்ட தனதுருவே பொருவடிவென்றுசொல்ல இருந்தது என்பார் அன்பனமேலன்பென இணங்கு தன்னுருவமாய் நிறைவரம்பிற்றெனவிருந்தது என்றார். என என்றும் எச்சத்தினின்று பிரிந்த செயப்பாட்டுவினைத்தொழிற்பெயர் வினைமுதலாய்நின்றது. என படு விகுதிதொக்குவந்த செயப்பாட்டுவினையெச்சம். (௪௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

என்றாயகனேயோவென்னிருகண்மணியேயோவென்னையின்றாள்
றன்றாவியன்னதனிமருகாவோமுருகாவோதாரார்முல்லை
மன்றாவோவணிகர்குலமணியேயோவிடவரவின்வாய்ப்பட்டாயோ
வுன்றாநிழலானவென்னைவிடுத்தெவ்வண்ணமொளிப்பதேயோ.

(இ-ள்.) என் நாயகன் ஏ ஓ - எனது நாயகனே, என் இருகண்மணி ஏ ஓ-எனது இரண்டுகண்மணியே, என்னை ஈன்றாள் தன் ஆவி அன்ன தனிமருகா ஓ-என்னைப்பெற்றவளது உயிரையொத்த ஒப்பில்லாத மருகனே, முருகா ஓ - இளமைப்பருவத்தில் முருகக்கடவுளையொத்தவனே, முல்லைதார் ஆர் மன்றா ஓ - முல்லைமலர் மாலையையணிந்த மன்னனே, வணிகர்குலமணி ஏ ஓ - வணிகர்குலத்துக்கு ஓர்மாணிக்கமே, விடம் அரவின்வாய்ப்பட்டாய் ஓ - விஷத்தையுடைய பாம்பின்வாயிற்பட்டனையோ, உன் தாம் நிழல் ஆன என்னைவிடுத்து எவ்வண்ணம் ஒளிப்பது ஏ ஓ-உனது தேகநிழல்போலவிடாதுதொடர்ந்த என்னைத்தனியேவிடுத்து எவ்வாறு ஒளிப்பது அதுமுறையா.

தனது தந்தையால் காட்டிய கணவனாதலால் என்னாயகனேயோ வெனவும், தனக்குரிமை மாமனாதலால் என்னிருகண்மணியேயோ வெனவும், தன்னை யீன்றாளுக்குரிய உடன்பிறந்தாள் புத்திரனாதலால் என்னை யீன்றாள் தன்னாவியன்ன தனிமருகாவோவெனவும், கட்டிளமையுடையோனாதலால் முருகாவோவெனவும், வணிகர் மரபி னாகுடியில் வந்தவனாதலால் தாரார்முல்லை மன்னாவோ வணிகர்குலமணியேயோவெனவும், தேகநிழல்போலக் கணவனினின்றும் பிரியாத கற்பினளாதலால் உன்றாநிழலான வென்னையெனவும், நீ என்னை யிங்குவிடுத்தொழிவது முறையோவென்பாள் என்னை விடுத்தெவ்வண்ண மொளிப்பதேயோ வெனவுங் கூறினாள். (௪௯)

பொன்னாட்டின்மடவாரைப்புணர்வதற்கோநம்மளகாபுரத்துவேந்த
னன்னாடடிமடவாரைமணப்பதற்கோவுனைக்கடித்தநாகர்வேந்தன்
றன்னாட்டின்மடவாரைத்தழுவுதற்கோவென்றுவித்தலைவாவென்னை
யிக்காட்டிலிருத்தியெனைவஞ்சித்துப்போயினவாறென்னேயென்னே.

Koviloor Digital Library

(இ-ள்.) பொன் நாட்டின் மடவாரை புணர்வதற்கு ஓ-பொன்னுலகிலுள்ள அரம்பையரைச் சேர்வதற்கா, நம் அளகாபுரத்து வேந்தன் நல் நாட்டின் மடவரை மணப்பதற்கு ஓ - நமது அளகாபுரத்திலுள்ள குபேரனது நல்ல நாட்டிலுள்ள இயக்கமாதரைக் கலத்தற்கா, உன்னை கடித்த நாகவேந்தன் தன் நாட்டின் மடவாரை தழுவுதற்கு ஓ - உன்னைக்கடித்த அரவரசனாட்டிலுள்ள பெண்களைத் தழுவுதற்கா, என் ஆவி தலைவா - எனது உயிர்போன்ற தலைவனே, என்னை இந்நாட்டில் இருத்தி - என்னை யிந்நிலவுலகிலிருத்தி, என்னை வஞ்சித்து போயின ஆறு என்னே என்னே - என்னை வஞ்சித்துப்போன வகை யாதுகாரணம் யாதுகாரணம்.

இந்நிலவுலக மடவாரின்பத்திலும் அரம்பையர் முதலியோரின்பத்தைப் பெரிதாகக் கருதினையோ என்பாள் பொன்னாட்டின் மடவாரைப் புணர்வதற்கோ நம் மளகாபுரத்து வேந்தன் நன்னாட்டின் மடவாரை மணப்பதற்கோ வுன்னைக்கடித்த நாகவேந்தன் தன்னாட்டின் மடவாரைத் தழுவுதற்கோவெனவும், உன்னுரிமை மாமன் மகள் யானிருக்க அதுநோக்காது அவர்களை விரும்பிய காரணம் என்னையென்பாள் என்னை வஞ்சித்துப்போயினவா றென்னேயென்னே யெனவுங்கூறினாள். (௨௦)

தென்னுலகிற்புகுந்தனையோபணிந்தனையோமாதுலனைத்தேவியோடுந்
தன்னிருதோளுறவாரத்தழுவினனோநானுமுடன்சார்ந்தேனாகி
லென்னுரியகுரவரையுங்கண்ணாரக்காணேனோவெனையீங்கிட்டாய்
பின்னுரியபரிசனமுங்கைவிட்டாய்தனிப்போயென்பெற்றாயையா.

(இ-ள்.) தென் உலகில் புகுந்தனையோ - பிதிருலகிற் புகுந்தாயோ, மாதுலனை தேவியோடு உம் பணிந்தனையோ - உனது மாமனை மாமியோடும் வணங்கினாயோ, தன் இருதோள் உற ஆரதழுவினன் ஓ - தனது இரண்டு தோள்களாலும் பொருந்த நிரம்ப உன்மாமன் உன்னைத் தழுவினானோ, நான் உம் உடன் சார்ந்தேன் ஆகில் - நானும் உன்னுடன் வருவேனானால், என் உரிய குரவரை உம் கண் ஆர காணேனோ - எனக்குரிய தாய்தந்தையரையுங் கண்களாரக்கண்டு களிக்கேனோ, என்னை ஈங்கு இட்டாய் - என்னை யிவ்விடத்திலிருத்தினாய், பின் உரிய பரிசனம் உம் கை விட்டாய்-பின்பு உனக்குரிய பரிசனங்களையுங் கைவிட்டனை, ஐயா தனி போய் என் பெற்றாய் - ஐயனே நீ தனித்துப்போ யென்னபயன் பெற்றனை (அதனைக்கூறாய்.)

இந்நிலவுலகில் உனக்கு உடலாயிருந்த நானும் அவரைக்கண்டு களிக்கச்செய்யாது கவலையுறச்செய்தமை யுனக்குப் பெரும்பயனாமோ என்பாள் தனிப்போயென் பெற்றாய் என்றாள். (௨௧)

வரிசைமருமகனரவால்விளிந்ததுநானறைபோயமனத்தோடிங்குப்
பரிவுறலுமெனைப்பயந்தார்நோற்றபயனன்றாகப்பலித்ததேயோ
பெரிதவரிக்கட்கலக்கங்காணாமுனிறந்தன்றேபிழைத்தாரந்தோ
வரியதிலுமரியபயனிதுவன்றேயெவர்பெற்றாரவர்போலம்மா.

(இ-ள்.) வரிசை மருமகன் அரவு ஆல் விளிந்ததும் - மருமகன் முறை வாய்ந்தவன் பாம்பினாலிறந்ததும், நான் அறைபோய மனத்தோடு இங்கு பரிவுறல் உம் - நான் ஓட்டைபோன மனத்துட னிவ்விடத்துத் துன்பமடைதலுமாகிய, இ கண் கலக்கம் - இந்தக் கண்கலக்கத்தை, காணாமுன் - காண்பதற்குமுன், பெரிது - மிகவும், அவர் இறந்து அன்று ஓ பிழைத்தார் - அத்தாய்தந்தைமார்க ளிறந்தல்லவா இத்துன்பத்தினின்று தப்பினார்கள், (ஆதலால்) என்னை பயந்தோர் நோற்ற பயன் நன்று

Koviloor Digital Library

ஆக பலித்தது ஏ ஒ - என்னைப்பெற்றவர்கள் தவஞ்செய்தலாலான பயன் பெரிதும் அவர்களுக்கு இம்மையிலேயே பலித்ததோ, இது அரியதில் உம் அரிய பயன் அன்றே ஒ - இது அரிய தவப்பலனினும் பெறுதற்கரிய பயனல்லவா, அவர்போல் எவர் பெற்றார் - அத்தாய்தந்தையர்கள்போல யார் பெற்றனர்.

இன்று நேரிட்ட தன்பத்தினை யென் தாய்தந்தையர் கண்டால் ஆற்றற்கரிய எல்லையில்லாத துன்பக்கடலில் மூழ்கி மடிவார்கள் என்பாள் இறந்தன்றோ பிழைத்தார் எனவும், அதனால் தாம் இம்மையிற்செய்த தவப்பயனை யிம்மையிலே பெற்றனர் என்பாள் அப்பயன்றோர் நோற்ற பயனன்றாகப் பலித்ததேயோ வெனவும், அவர்கள் செய்த தவம் மிகவும் பெரிதென்பாள் அரியதிலு மரிய பயனிதுவன்றோ எனவும், இம்மையிற் பலிக்கத் தவஞ்செய்தவர்களுள் இவர்கள்போற்செய்தவர் ஒருவருமில்லையேன்பாள் எவர் பெற்றா ரவர்போல் எனவுங் கூறினாளாகக்கூறினார். அந்தோ அம்மா இரக்கப்பொருளில் வந்த இடைச்சொற்கள். (௨௨)

உன்காதன்மாமனென்னைப்பயந்தவன்றேயுறவறியவுனக்கேபேசிப்
பின்காதன்மனைவியொடுமுயிரிழந்தான்யானுமந்தப்பெற்றியாலே
யென்காதலுயிர்போகவெற்றுடம்போவிருக்குமுடனிறப்பேனென்னாத்
தன்காதற்றுணையிழந்தவன்றிலெனவிருந்தழுதாடமியளானாள்.

(இ-ள்.) உன் காதல் மாமன் - நின்னால் விரும்பப்பட்ட மாமன், என்னை பயந்த அன்றே - என்னைப்பெற்ற அப்பொழுதே, உறவு அறிய - சுற்றத்தாரறிய, உனக்கு ஏ பேசி - உனக்கே மனைவியாக என்னைப்பேசி, பின் காதல் மனைவியொடு உம் உயிர் இழந்தான் - பின்பு தன்னால் விரும்பப்படு மனையாளோடு முயிர் நீத்தான், யான் உம் அந்த பெற்றியால் - நானும் அந்தத்தன்மையால், என் காதல் உயிர்போக - என்னால் விரும்பப்படு முயிராகிய நீயிறக்க, வெறு உடம்பு ஒ இருக்கும் - பயனில்லாத இச்சரீரமாகிய நானோ வுலகிலிருப்பேன், உடன் இறப்பேன் என்னா - நின்னுடனே நானு மிறப்பேனென்று, தன் காதல் துணை இழந்த அன்றில் என்ன - தன்னால் விரும்பப்படும் ஆணன்றிலை யிழந்த பெட்டையன்றிலைப்போல, தமியள் ஆனாள் இருந்து அழுதாள் - தனியாளாகிய அக்கன்னியிருந்தழுதனள்.

என்னுயகோவேயோ என்பது முதலிதுகாறும் மெய்ப்பாடு அழுகை. (௨௩)

மேற்படிவேறு.

நன்னகருறக்கநீங்கிநடுக்கமுற்றழுங்கக்காழித்
தென்னகர்ஞானச்செல்வர்சிவனகர்தொறும்போய்ப்பாடி
யந்நகரடைந்தாரங்கோரணிமடத்திருந்தார்கேட்டு
தென்னெனவாள்விட்டாய்ந்துகோயிலினிடைவந்தெய்தி.

(இ-ள்.) நல் நகர் உறக்கம் நீங்கி நடுக்கம் உற்று அழுங்க - நல்ல திருப்புறம்பயம் என்றுந் திருப்பதியிலுள்ளவ ருறக்கத்தினின்று நீங்கி நடுக்கமடைந்து வருந்த, காழி தென் நகர் ஞானச்செல்வர் - சீகாழியென்னு மழகிய திருநகரிற் திருவவதாரஞ்செய்த சிவஞானச்செல்வராகிய பிள்ளையார், சிவன் நகர்தொறும் போய் பாடி - சிவபிரானெழுந்தருளிய திருப்பதிகள்தோறுஞ் சென்று பாடி, அ நகர் அடைந்தார் - அத்திருநகரை யடைந்து, அங்கு ஓர் அணிமடத்து இருந்தார் கேட்டு - அவ்விடத்து ஒப்பில்லாத அழகிய திருமடத்திலெழுந்தருளிய பிள்ளையார் கேள்வியுற்று,

Koviloor Digital Library

ஈது என் என்ன ஆள்விட்டு ஆய்ந்து - இவ்விரவி லிவ்வழுகையோசை யென்னவெ ன்று திருக்கூட்டத்தி லொருவனை விட்டாராய்ந்து, கோயிலினிடை வந்து எய்தா - (நடந்த செய்திதெரிந்து) திருக்கோயிலை வந்தடைந்து.

இரவில் நிகழ்ந்த செய்தியையும் வணிகக்கன்னியழுது வருந்துவதையுங்க ண்டு நகரிலுள்ளவர் துயில்நீத்துத் தாமும் வருந்தினர் ஆதலால் நன்னகருறக்க நீங்கி நடுக்கமுற்றழுங்க என்றார். (௨௪)

கன்னிநீயாரையுற்றதென்னெனக்கன்னிதாழ்ந்து
தன்னருமரபுமீன்றார்தம்மையுமருகற்கென்றே
யுன்னினர்மன்றல்பேசியிறந்ததுமுயிரன்னானோ
டிந்நெறியடைந்தீங்குற்றநிகழ்ச்சியுமெடுத்துச்சொன்னாள்.

(இ-ள்.) கன்னி - கன்னியே, நீயார் - நீயார், உற்றது என் என்ன - இங்கு நிகழ்ந்தது என்னவென்று வினவியருள, கன்னி தாழ்ந்து-அக்கன்னி வணங்கி, தன் அருமரபு உம் - தனது பெறுதற்கரிய மரபினையும், ஈன்றார் தம்மை உம் - பெற்றவர் களையும், மருகற்கு என்று எ - மருமகனுக்கென்றே, உன்னினர் மன்றல் பேசி இறந் தது உம் - (ஈன்றவர்) கருதி யென்னை மணம்பேசி யிறந்ததையும், உயிர் அன்னான் ஓடு - என்னுயிரையொத்த தலைவனோடு, இ நெறி அடைந்து-இவ்வழியில் வந்து, ஈங் கு உற்ற நிகழ்ச்சி உம் எடுத்து சொன்னாள் - இவ்விடத்தில் நடந்த செய்தியையும் . எடுத்துக்கூறினாள்.

நால்வகை வருணத்துள் ஒன்றாதலால் அருமரபு என்றார். கன்னி என்பதன் முதலில் அகரச்சுட்டுத் தொகுத்தல். (௨௫)

தந்தையுந்தாயுமன்னோர்தமியளாயிரங்கும்பேதைப்
பைந்தொடியாவிகாப்பான்பாம்புகோட்பட்டான்மாடே
வந்தவனாகமெல்லாமருந்துருவாகும்வண்ணஞ்
சிந்தைசெய்தருட்கண்வைத்தார்குதித்ததுநீவாய்நஞ்சம்.

(இ-ள்.) தந்தை உம் தாய் உம் அன்னார் - (எல்லாவுயிர்களுக்கும்) பிதாவை யுந் தாயையுமொத்த பிள்ளையார், தமியள் ஆய் இரங்கும் பேதை பைந்தொடி ஆவி காப்பான் - ஓர் பற்றுக்கோடிழந்தவளாய் வருந்தும் பசிய வளையலையணிந்த கன்னி ப்பெண்ணினுயிரைக் காத்தற்பொருட்டு, பாம்பு கோட்பட்டான் மாடு ஏ வந்து - பாம்பா லுயிர்கொள்ளப்பட்ட வணிகனிடத்து வந்து, அவன் ஆகம் எல்லாம் மருந் து உரு ஆகும் வண்ணம் சிந்தை செய்து - அவனது சரீரமுற்றும் அமுதமாகும்படி திருவுளங்கொண்டு, அருள் கண் வைத்தார்-திருபாநோக்கம் வைத்தருளினார், நீவா ய் நஞ்சம் குதித்தது - நீயையொத்த நஞ்சு இருக்க இடம் பெறாதிறங்கியது.

உயிர்களிடத்துப்பெருங்கருணையாளர் என்பார் தந்தையுந்தாயுமன்னோர் என வும், தன்னுயிர்க்கோர் கொழுகொம்பாயுள்ள கணவனையன்றி வேறுதுணை யில்லாத வள் என்பார் தமியளாய் எனவும், அவளைக் காத்தல் பேரருளாண்மையென்பார் பேதைப் பைந்தொடியாவிகாப்பான் எனவும், அவனது உடல்முற்றும் அமுதருவா கும் வண்ணம் செய்தனர் என்பார் ஆகமெல்லா மருந்துருவாகும்வண்ணம் சிந்தை செய்தருட்கண்வைத்தார் எனவும், திருவருட்பார்வையா லமுது குடிகொண்டமை யால் நஞ்சிருத்தற்கு இடம்பெறாதொழிந்ததென்பார் நீவாய் நஞ்சம் குதித்தது என வுங்கூறினார். (௨௬)

Koviloor Digital Library

எழுந்தவனுறங்கினான்போலிறந்தவன்யாருங்கண்டு
தொழுந்தகைஞானவேந்தைத்தொழுதனர்துதிசெய்தார்வத்
தழுந்தினர்கன்னியன்னமனையவளின்பத்தீந்தேன்
பொழிந்தொருபுறத்தேகஞ்சம்பூத்ததோர்கொம்பினின்றாள்.

(இ-ள்.) இறந்தவன் உறங்கினான்போல் எழுந்தனன்-நஞ்சாலிறந்தவன் நித்திரைசெய் தெழுந்தவனைப்போல எழுந்தனன், யார் உம் கண்டு - எவரும் அதிசயித்துப்பார்த்து, தொழும் தகை ஞானவேந்தை துதிசெய்து தொழுதனர் - வணங்குந்தன்மையையுடைய சிவஞானச்செல்வராகிய பிள்ளையாரை வாழ்த்தித்தொழுது, ஆர்வத்து அழுந்தினர் - இன்பத்திலழுந்தினார்கள், கன்னி அன்னம் அனையவள் - கன்னி யன்னப்பெடையையொத்த வணிகர்குலப்பெண், இன்பம் தீந்தேன் பொழிந்து ஒருபுறத்து ஏ கஞ்சம் பூத்தது ஓர்கொம்பின் நின்றாள் - இன்பமாகிய இனிய தேனைச்சொரிந்து ஒருபுறத்திலே தாமரைமலர்ந்தநின்ற ஒரு பூங்கொம்பைப்போல வொதுங்கிநின்றனள்.

தனது கணவன் உயிர்த்தெழுந்தமையால் ஆராமகிழ்ச்சி முகத்திலரும்பநின்றனள் என்பார் இன்பத்தீந்தேன் பொழிந்தொருபுறத் தேகஞ்சம்பூத்து எனவும், தன்னால் விரும்பப்பட்ட கணவனைக்காணில் மெல்லியவொசியும் உடம்பினராய் நிற்றல் கற்புடைமகளிர்க்கிலக்கணம் என்பார் ஓர் கொம்பின் எனவுங் கூறினார். (௨௭)

தலைவனையிறந்தபோதுந்தனியுயிர்பெற்றபோதுஞ்
சிலைநுதல்காதன்மாமன்செல்வியாயிருந்துந்தீண்டா
நிலைமையுமன்புங்கற்பினீர்மையும்வியந்துநோக்கி
மலைமகண்ஞானமுண்டார்வணிகனைநோக்கிச்சொல்வார்.

(இ-ள்.) இறந்தபோது உம் தனி உயிர் பெற்றபோது உம் - தனக்குக் கணவனிறந்தகாலத்திலும் ஒப்பில்லாத உயிர்பெற்றெழுந்தகாலத்திலும், சிலைநுதல் - வில்லைப்போலவளைந்த நெற்றியையுடையாள், காதல் மாமன் செல்வி ஆய் இருந்தும் - அவனால் விரும்பப்பட்ட மாதுலன் புத்திரியாயிருந்தும், தலைவனை தீண்டாத நிலைமை உம் - தனக்குத்தலைவனானவனைப் பரிசியாத நிலைமையையும், அன்பு உம்- (அவன்மேற்கொண்ட) ஆராஅன்பினையும், கற்பின் நீர்மை உம் - (கணவனானகாலத்துக்கொண்டொழுகும்) கற்பின்தன்மையையும், மலைமகள் ஞானம் உண்டார் - உமாதேவியாரருளிய சிவஞானவமுது பருகியபிள்ளையார், வியந்து நோக்கி - அதிசயித்துப்பார்த்து, வணிகனை நோக்கி சொல்வார் - தம்மாலுயிர்பெற்ற வணிகனைநோக்கிக்கூறியருளுவார்.

தனக்கு உரிமைச்சுற்றமான தலைவனாவான் மரித்து உயிர்பெற்றெழுந்தகாலத்தும் கன்னித்தன்மையழியுமேயென்று பரிசித்தற்கஞ்சி யொதுங்கிநின்றனளாதலால் தீண்டாநிலைமையும் எனவும், பரிசியாநிற்பினும் குன்றாத அன்பினளாயிருத்தலால் அன்பும் எனவும், இதனால் மணமுடித்தபின் இல்வாழ்க்கையிற் குன்றாத கற்பினளாய் நின்றொழுகுவாள் எனத் திருவுளத்தடைத்தலால் கற்பினீர்மையும் வியந்துநோக்கியெனவுங் கூறினார். (௨௮)

வருதிநின்மரபுக்கெல்லாமணியனாயுன்றன்மாமன்
ஒருதிருவனையாளின்பஞ்சாருநாடின்பம்வந்து
பெருகுநாளன்றியென்றன்மெய்தொடப்பெறுவளின்றே
திருமணமுடித்துக்கொண்டுபோகெனச்செப்பலோடும்.

Koviloor Digital Library

(இ-ள்.) நின்மரபுக்கு எல்லாம் மணி அன்னாய் - உன் வணிகமரபுக்கெல்லாம் நடோரயசமணிபோல்வாய், வருதி - இங்கு வருவாய், உன்தன் மாமன் தருதிரு அனையாள்-உனது மாமன்பெற்ற திருமகளையொத்த இக்கன்னி, இன்பம் சாரும் நாள்-நீ பெருமகிழ்ச்சியுற்ற காலத்திலும், துன்பம் வந்து பெருகுநாள் - பெருந்துன்பம் வந்து கூடியகாலத்திலும், அன்றி—அல்லாமல், என்று உன் மெய்தொட பெறுவள்-எக்காலத்தி லுன்னுடம்பினைப் பரிசிக்கப்பெறுவாள், (ஆதலால்) ஈண்டு ஏ - இப்பொழுதே, திருமணம் முடித்துக்கொண்டு போக என செப்பலோடு உம் - விவாகத்தை முடித்துக்கொண்டே போகக்கடவாயென்று கூற.

தன்மரபிலுள்ளவரை விளக்கஞ்செய்தலால் நின்மரபுக்கெல்லா மணியனாய் எனவும், அவன் தமதருள்வழி நிற்பச்செய்பவர் ஆதலால் வருதியெனவும், உன் மனைக்கிழத்தியேயாதலால் உன்றன் மாமன் தருதிரு வனையாளெனவும், கணவனின்புறுங்காலத்துந் துன்புறுங்காலத்துங் கற்புடைமகளிர் மணமுடித்தபினன்றியேனைக்காலத்திற் பரிசியாராதலில் இவள் கூசாது நின்னைப் பரிசித்தற்கு மணமுடித்துச் செல்கவென் றருளினராதலால் இன்பஞ்சாருநா டுன்பம்வந்து பெருகுநாளன்றி யென்றுன்மெய்தொடப் பெறுவளீண்டே-திருமணமுடித்துக்கொண்டு போகென எனவும் அருளினர் என்றார். (௨௧)

செங்கணேறனையானையன்றிருமொழிதலைமேற்கொண்டு
பங்கயன்படைத்தசாதிநான்கையும்பாதுகாப்பீ
ரெங்குலவணிகரின்றிக்கரிகளுமின்றியீங்கே
மங்கலமுடிக்கும்வண்ணம்யாதெனவணங்கிச்சொன்னான்.

(இ-ள்.) செங்கண் ஏறு அனையான் - செவந்த கண்களையுடைய சிங்கேற்றையொத்த வணிகன், ஐயன் திருமொழி தலைமேல் கொண்டு - ஆளுடைய பிள்ளையார் அருளிய திருமொழியைச் சிரத்தின்மேற்கொண்டு, பங்கயன் படைத்த சாதி நான்கை உம் - பிரமன் வகுத்த நான்குசாதிகளையும், பாதுகாப்பீர் - தத்தம் நிலையில் வழுவாது நிற்கப் பாதுகாக்கவல்லீர், எம் குலம் வணிகர் இன்றி - எமது மரபிலுள்ள வைசியருமில்லாமல், கரிகள் உம் இன்றி - சாக்ஷிகளுமில்லாமல், ஈங்கு ஏ-இவ்விடத்தே, மங்கலம் முடிக்கும் வண்ணம் யாது என்ன - திருமணமுடிக்கும் வகை யாதென்று, வணங்கி சொன்னான் - வணங்கிக்கூறினான்.

ஓர்காலத்தில் சலப்பிரளையத்தா லுலகமூழ்கியழியத் திருப்பாற்கடலி லறிதுயிலமர்ந்த திருமால் ஆயிரந்திருமுகங்களோடு சிவபிரானைச் சிந்தித்திருக்குங்காலையில், அத்திருமா லுந்தித்தாமரையில் அப்பிரான் திருவருளாற் பிரமன் றோன்றினன், அவன்முகத்தில் அந்தணர்கள் பார்ப்பனிமார்களோடு முன்பு தோன்றினர், தோளில் க்ஷத்திரியர் தமது தேவிமாரோடு தோன்றினர், தொடையில் வைசியர்கள் தங்கள் மடவாரோடு தோன்றினர், காலில் சூத்திரர் தங்கள் மனைவியரோடு தோன்றினார்கள் என்பான் பங்கயன் படைத்த சாதி நான்கையும் எனவும், ஆக்கல், காத்தல், அழித்தல் என்னு முத்தொழிலையுமுடைய அடிகளாதலால் அவ்வருணத்தார் தம் நிலையினின்று வழுவாதிருக்க அறமுரைத்தவர் தேவரீரே யென்பான் பாதுகாப்பீர் எனவும், எங்கள் குலமரபு குலத்தினரும் சாக்ஷிப்பொருள்களுமின்றி மணமுடிக்கும் வழக்கின்மையால் இங்கு மணமுடித்தலடாதே யென்பான் எங்குலவணிகரின்றிக் கரிகளுமின்றி யீங்கே மங்கலமுடிக்கும்வண்ணம் யாதென எனவுங் கூறினான். " சகமெலாம்பூருவத்திற் சலப்பிரளையத்தின்மூழ்கிப் - பகவருமந்

Koviloor Digital Library

தாரம் படைத்தாயிருந்தகாலை - முகமோராயிரங்கொண்ட முராரிபாற்கடற்கணை ம்மன் - அலர்தழ்மலர்த்தாள்சிந்தித் தநிதயிலமர்ந்தானன்றே. அன்னமானுபித்தா னத் தாலிரன்கதிர்போற்செய்ய - பொன்னவிர்கமலமொன்று பூத்திருந்தஃதப்பூவி ல் - பன்னகபோனனுயிரைப் படிசகத்துயிர்படைப்பான் - மென்னடைப்பறவலாட் டி விழையுநான்முகனுதித்தான். மறுமடையுடைக்குஞ்செந்தா மரைமலர்ப்பீடமே லோன் - விறுமுகத்தினின் முன்றோற்ற விளங்குவாசவையான்முன்னோர் - கதமெ னமடவாரோடு முதித்தனர்கவின்செய்தோளின் - வதுவைசெய்மடவாரோடு மன் னவருதித்தாரன்றே. வுருவிளுய்கர்மாதருடனுதித்தனராற்பின்னோர் - சாருமாமட வாரோடேந்தாளிடையுதித்தாராக." எனச் சூதசங்கிதையில் சாதிவரலாறுரைத்தவ பிப்பிராயத்தில் வருதல்காண்க. (௯0)

கன்னியையீன்றஞான்றேயுனக்கென்றுகாதன்மாம
னுன்னியதுறவினுள்ளாரறிவரேயுனக்கிதன்றி
வன்னியுங்கிணறுமிந்தவிலிங்கமுங்கரிகண்மைந்தா
விந்நிலைவதுவைசெய்திடியெம்முரைகடவாதென்றார்.

(இ-ள்.) மைந்தா - வணிகர்குலக்காளையே, கன்னியை ஈன்ற ஞான்று ஏ - இப்பெண்ணைப்பெற்றகாலத்தே, உனக்கு ஏ என்று - உனக்கேயுரியவளென்று, உன் காதல் மாமன் - உன்னால்விரும்பப்பட்ட நின்மாதுலன், உன்னியது - கருதியது, உறவின் உள்ளார் அறிவர் - உனது சுற்றத்தாருமறிவர், ஈது அன்றி - இதுவுமல்லா மல், உனக்கு - உன்மணமுடித்தற்கு, வன்னி உம் கிணறு உம் இந்த இலிங்கம் உம் கரிகள் - வன்னியும் கிணறும் இக்குள்ள இலிங்கமூர்த்தியும் சாக்ஷிப்பொருள்கள், (ஆதலால்) இ நிலை - இவ்விடத்தே, எம் உரை கடவாது வதுவை செய்தி என்றார்- எமதுவார்த்தையைக்கடக்காமல் மணமுடிப்பாயென்றருளினார்.

என்குலவணிகரின்றி யென்றதற்கேற்ப, கன்னியையீன்றஞான்றே யுனக்கெ ன்றன் காதன்மாமன் - உன்னியதுறவினுள்ளாரறிவர் எனவும், கரிகளுமின்றியெ ன்றதற்கேற்ப வன்னியுங்கிணறு மிந்தவிலிங்கமுங் கரிகளெனவும் அருளினார். வன்னி யுங்கிணறு மிந்தவிலிங்கமும் எனத்திணைவிரவி மிகுதியால் கரிகள் என அஃறிணைமு டிபெற்றன. (௯க)

மாசறுமனத்தான்காழிவள்ளலைப்பணிந்துநீரே
தேசிகர்குரவர்நட்டோர்தெய்வமுங்கிளையுமென்றுப்
பேசியவாறேவேள்விப்பெற்றியானிறீஇத்தான்வேட்ட
பாசிழையோடுந்தாழ்ந்துவிடைகொடுபரவிப்போனான்.

(இ-ள்.) மாசு அறு மனத்தான் - குற்றமற்றமனத்தையுடையவணிகன், காழிவள்ளலை பணிந்து - சீகாழியில் திருவவதாரஞ்செய்த வள்ளலாரைவணங்கி, நீர் ஏ - தேவரீரே, தேசிகர் குரவர் நட்டோர் தெய்வம் உம் கிளை உம் என்று-ஆசிரியருங்குர வர்களும் சிநேகரும் தெய்வமும் சுற்றமும் எங்களுக்கென்றுகூறி, பேசிய ஆறு ஏ-அ வ்வள்ளலாருரைத்தவண்ணமே, வேள்வி-கலியாணத்தை, பெற்றியால் இறுவி-முறை யால்முடித்து, தான்வேட்ட பாசிழையோடு உம் தாழ்ந்து விடைகொடு பரவிபோ னான் - தான்விரும்பியமாதுலன் மகளோடு அவரைவணங்கி விடைபெற்றுத் துதித் துச்சென்றனன்.

பாசிழை பசிய ஆபரணத்தையுடையவள். தேசிகரைக் கூறினமையால் கு ரவர் குரவர், அரசன், உபாத்தியாயன், பிதா, தமையன், உலகினர்க்குத் தனித்தனி

Koviloor Digital Library

யாயிருந்தல்போலன்றி யெல்லாருந் தேவரீரே யென்பான் தேசிகர் குரவர் கட்டோர் செய்வழுங் கினியுமென்று எனவும், அவர் ஆணைவழி நின்றனன் என்பார் பேசியவாறே வேள்வி பெற்றியானிறீஇ யெனவுங்கூறினன். (௯௨)

ஏவல்செய்யாயத்தாருமடியருமீண்டவிண்டிக்
காவல்செய்மதுரையூதூர்குறுகித்தன்காதன்மாமன்
பூவையைமணந்தவண்ணங்கேட்டங்குப்புடைசூழ்சுற்றம்
யாவருமுவப்பவின்புற்றிருந்தனனிளங்கோமன்னன்.

(இ-ள்.) ஏவல்செய் ஆயத்தார் உம் அடியர் உம் ஈண்ட - தாம் ஏவிய ஏவலைச்செய்யும் தோழியர்களும் பரிசனங்களும் நெருங்கிவர, இளங்கோமன்னன்-வணிகர்குலத்தலைவன், ஈண்டி காவல்செய் மதுரைமூதூர்குறுகி - காவலாளர்களொருங்கிக்காக்கு மதுரையென்னுந் தொன்றுதொட்டுள்ள நகரையடைந்து, தன்காதல் மாமன் பூவையை மணந்தவண்ணம் - தன்னால்விரும்பப்பட்ட மாமன்மகளைக்கலியாணமுடித்தவகையை,அங்குபுடைசூழ் சுற்றம் யாவர் உம் கேட்டு உவப்ப-அவ்விடத்திற்பக்கத்திற்சூழ்ந்த சுற்றத்தாரெல்லாருங்கேட்டு மகிழும்படி, இன்பு உற்று இருந்தனன்-மகிழ்கூர்ந்திருந்தனன்.

குறுகி செயவெனெச்சத்திரிபு. இது நிகழ்காலத்தின்மேலும் உவப்ப எதிர்காலத்தின்மேலும் நின்றன. (௯௩)

தன்பெருந்தனமுமானிட்டியதனமுமீட்டி
மன்பெருநிதிக்கோனென்னவாணிபம்பெருக்கிநாய்க
னின்புறுகாதலார்களிருவருமீன்றகாத
னன்பொருண்மகிழ்ச்சிசெய்யநலம்பெறவாழுநாளில்.

(இ-ள்.) நாய்கன் தன்பெருந்தனம் உம் மாமன் ஈட்டிய தனம் உம் ஈட்டி-மதுரையிலுள்ள வணிகன் தனது பெரியபொருளையுந் தன்மாமன்தேடியபொருளையும், மன்பெரு நிதிக்கோன் என்ன - நிலைபெற்ற குபேரனைப்போல, ஈட்டி–திரட்டி, வாணிபம் பெருக்கி - வாணிகத்தைவிருத்திசெய்து, இன்பு உறு காதலார்கள் இருவர் உம் ஈன்றகாதல் நன்பொருள் மகிழ்ச்சிசெய்ய - தன்னாலின்பமுகரப்பட்ட மனைவியரிருவரும்பெற்ற விருப்புவிளைக்கு நல்லபுதல்வர்கள் மகிழ்ச்சியைவிளைக்க, நலம்பெறவாழும் நாள் இல்-பொலிவுபெறவாழுங்காலத்தில்.

செல்வப்பொருளிலும் புத்திரப்பேறு இம்மைமறுமை இன்பங்களைத்தரும் பெரும்பொருளாதலால் நன்பொருள் எனவும், செல்வப்பொருளுடையார்க்குப் புத்திரப்பேறில்லையாயின் பெருந்துன்பு விளைக்குமாதலால் மகிழ்ச்சிசெய்யஎனவும், இவ்விருவகைச்செல்வமும் நிரம்பவமைதலால் நலம்பெறவாழுநாளில் எனவுங்கூறினார். பொருள் பிள்ளை "தம்பொருளென்பதம்மக்கள்" எனவருந் திருக்குறளால் உணர்க. (௯௪)

மூத்தவள்சிறுவர்சாலமூர்க்கராயுள்ளாரோனை
மாத்தளிரியலினட்கோர்மைந்தனுண்டிவனுமன்ன
நீத்தொழிலுகமன்னபிமூர்களுமல்லற்செல்வம்
பூத்தநீணியமத்தூடுபோய்விளையாடல்செய்வார்.

Koviloor Digital Library

(இ-ள்.) மூத்தவள் சிறுவர்சால மூர்க்கர் ஆய் உள்ளார் — மூத்தாள்மக்கள் மிகவும் முரட்டுத்தன்மையுள்ளவர், ஏனைமாதனிர் இயலினுட்கு ஓர்மைந்தன்உண்டு- மாந்தளிர்போலுமென்மைவாய்ந்த இளையாளுக்கு ஒருபுதல்வனுண்டு, இவன் உம்- பிப்பிள்ளையும், தீ தொழில் நாகம் அன்ன அன்ன சிறார்கள் உம் - நெருப்பைப்போல வருத்துந் தொழில்வாய்ந்த பாம்பையொத்த அந்த மூத்தாள்பிள்ளைகளும், மல்லல் செல்வம்பூத்த நீள் நியமத்து ஊடுபோய் விளையாடல் செய்வார் - வளமமைந்தசெல்வஞ்சிறந்த நெடியவீதியிற்சென்று விளையாடுவார்கள்.

இளையாள்மகன் நற்குணம்வாய்ந்தவள் என்பதுதோன்ற உயர்வுசிறப்பும்மை தந்து இவனும் எனவும், வணிகர்தெரு ஆதலால் மல்லற்செல்வம்பூத்த நீணியமமெனவுங்கூறினர். அன்ன சுட்டுத்திரிபு. (௯௫)

முந்தியமனாட்டிமைந்தர்முகிழ்முலையிளையபாவை
மைந்தனையொருநாட்சீறியடித்தனர்வருந்தியீன்ற
சந்தணிமுலையாண்மாற்றுடனையனைவைதாளீன்ற
பைந்தொடிதானுஞ்சீறியிளையளைப்பழித்துவைவாள்.

(இ-ள்.) முந்தியமனாட்டிமைந்தர் - மூத்தாள்பிள்ளைகள், முகிழ்முலை இளைய பாவைமைந்தனை ஒருநாள் சீறி அடித்தனர் - அரும்பையொத்ததனத்தையுடைய இளையாள்பிள்ளையை யொருநாள்கோபித்து அடித்தார்கள், வருந்தி ஈன்ற சந்து அணி முலையாள் - வருந்திப்பெற்ற சந்தனக்குழம்பணிந்த தனத்தையுடைய அந்த,இளையாள், மாற்றாள் தனயனைவைதாள் - (அடித்த) தனது மாற்றாள்புத்திரனைவைதனள், ஈன்றபைந்தொடிதானுஞ்சீறி - பெற்ற பசியவளையலையணிந்த மூத்தாளும்கோபித்து, இளையளைபழித்துவைவாள் - இளையாளைநிந்தித்து வைவாளாயினள். (௯௬)

எந்தவூரெந்தச்சாதியார்மகள்யாவர்காணச்
செந்தழல்சான்றாவென்கோன்கடிமணஞ்செய்துவந்த
கொந்தவிழ்கோதைநீயென்கொழுநனுக்காசைப்பட்டு
வந்தவாளானகாமக்கிழத்திக்கேன்வாயும்வீறும்.

(இ-ள்.) நீ எந்த ஊர் எந்தச்சாதி - நீயெந்தவூராள் எந்தச்சாதியாள், யார்மகள் - நீயாருடையபுத்திரி, யாவர்காண - (எங்கள்சுற்றத்தாருள்) யார்பார்க்க, செந்தழல் சான்று ஆக - செவந்த அக்கினிசாக்ஷியாக, என்கோன் கடிமணம் செய்து வந்த கொந்து அவிழ் கோதை - எனதுகணவன் மணஞ்செய்து முடித்துக்கொண்டுவந்த மகரந்தம்பரந்த கூந்தலையுடையபெண்ணு, என்கொழுநற்கு ஆசைப்பட்டுவந்தவள் ஆனகாமக்கிழத்திக்கு - என்புருடன்மேலாசைப்பட்டுவந்த காமக்கிழத்தியாகியவுனக்கு, வாய் உம் வீறு உம் ஏன் - வாயும் வீறும் என்னத்துக்கு.

ஊரும்பேரும்,ஒருவனாற்பெறப்பட்டவளெனவும் நீயறியப்பட்டவளல்லளென்பாள் எந்தவூர் எந்தச்சாதியார்மகள் எனவும், அதுவுமன்றி யெங்கள் சுற்றத்தாருள் யார்காண என்கணவனால் விவாகஞ்செய்யப்பட்டவள் என்பாள் யார்காணவென் கோன் கடிமணஞ்செய்துவந்த கொந்தவிழ்கோதையெனவும், இவர்களன்றி அக்கினிசாக்ஷியாயிருமுண்டோவென்பாள் செந்தழல்சான்றா எனவும், இவ்வேதுக்களின்மையால் என்புருஷன்மேலாசைப்பட்டு வந்தவளென்பாள் என்கொழுநற்காசைப்பட்டுவந்தவளான காமக்கிழத்திக்கு எனவும், நானும் என்மக்களும் எல்லாப்பொருளுக்கும் உரியவராயிருக்க, ஒருபற்றுமில்லாத நீயுரியவள்போலப்பேசுவது தக்கதோ என்பாள் வாயும் வீறும் ஏன் எனவுங்கூறினர். (௯௭)

Koviloor Digital Library

உரியவன்றீமுன்னாகவுன்னைவேட்டதற்குவேறு
கரியுளதாகிற்கூறிக்காட்டெனக்கழறலோடு
மெரிசுடவாடிச்சாய்ந்தவிணர்மலர்க்கொம்பிற்சாம்பித்
தெரியிழைநாணஞ்சாய்ப்பநின்றிதுசெப்புகின்றாள்.

(இ-ள்.) உரியவன் தீமுன் ஆக உன்னைவேட்டதற்கு - எனக்குரியகணவன் அக்கினிசாக்ஷியாக உன்னைமணமுடித்ததற்கு, வேறுகரியுளது ஆகில் கூறி காட்டு என்ன கழறலோடும் - வேறுசாக்ஷியிருக்குமானால் சொல்லிக்காட்டென்றுகூற, எரிசுடவாடி சாய்ந்த இணர்மலர் கொம்பில் - தீக்கொளுவவாடிக்கருகிய பூக்கொத்துகள்மலர்ந்த கொம்பைப்போல, தெரியிழை சாம்பி நாணம் சாய்ப்பநின்று-ஆராய்ந்த ஆபரணத்தையுடையவள் புலர்ந்து நாணம் தலையைச்சாய்க்கநின்று, இது செப்புகின்றாள்-இதனைக்கூறுகின்றாள்.

பார்த்த அயலாராயினும் உண்டோ என்பாள் என்பார் வேறு கரியுளதாகில் எனவும், மூத்தாளைப்போலன்றி யவள்கணவனுக்குத் தானுரியளாயிருக்கவும் எந்தவூர் எந்தச்சாதியார்மகள் என்கொழுநனுக் காசைப்பட்டுவந்தவளான காமக்கிழத்தியெனவும், அக்கினிசாக்ஷியாக என்புருடனால் விவாகஞ்செய்யப்பட்டவளா, யார்பார்த்தது என்று மூத்தாள் வினவியதற்கு ஆற்றற்கரிய கடுந்துன்பமிழந்தனள் என்பார் எரிசுடவாடிச்சாய்ந்த இணர்மலர்க்கொம்பிற்சாம்பி நாணஞ்சாய்ப்ப எனவுங்கூறினார். (௩அ)

அரவின்வாய்ப்பட்டவைகலாருயிரளித்தஞானப்
புரவலரருளாலென்கோன்புறம்பயநாதன்வன்னித்
தருவொடுகிணறுங்காணச்செய்தனன்சாறம்மூன்று
கரிகளுமுள்ளவென்றாள்கற்பினாலொப்பிலாதாள்.

(இ-ள்.) கற்பினால் ஒப்பிலாதாள் - கற்பால் தனக்கொப்பில்லாத மாமன் புதல்வியானவள், அரவின் வாய்பட்ட வைகல் - பாம்பின்வாய்ப்பட்டகாலத்தில் ஆர் உயிர் அளித்த ஞானம் புரவலர் அருளால் - பெறுதற்கரிய உயிர்தந்த சிவஞான சம்பந்தவேந்தர் திருவருளினால், என் கோன் - எனதுதலைவன், புறம்பயம் நாதன் - திருப்புறம்பயத்திலெழுந்தருளிய சிவலிங்கப்பெருமானும், வன்னிதரு கிணறு உம் காணசாறு செய்தனன் - வன்னிமரமுங்கிணறும் சாக்ஷியாக என்னைக் கலியாணஞ் செய்தனன், அ மூன்று கரிகள் உம் உள்ள என்றாள் - அம்மூன்றுசாக்ஷிகளும் உள்ளனவென்றாள்.

கற்புடையமடவாருள்மேம்பட்டவள் என்பார் கற்பினாலொப்பிலாதாள் எனவும், என்னைவேட்டது என்கணவனுயிர்தந்தபிள்ளையார் ஏவலாள்என்பாள் என்பார் அரவின்வாய்ப்பட்டவைகலாருயிரருளித்தஞானப் - புரவலரருளாலென்கோன் புறம்பயநாதன்வன்னித் - தருவொடுகிணறுங்காணச்செய்தனன்சாறு. எனவுங்கூறினார்..ஒடு எண்ணொடு. (௩௯)

மாற்றவணகைத்துநன்றுநன்றுநின்மன்றல்வேள்விக்
கேற்றனகரியேசொன்னாயிங்குமக்கரிகண்மூன்றுந்
தோற்றுமேலதுவுமெய்யேயென்றனடோகையோடும்
வேற்றுமையிலாதசாயலியையவள்விழுமங்கூரா.

Koviloor Digital Library

(இ-ள்.) மாற்றவள் நகைத்து - மாற்றாள்நகைகொட்டி, நன்று நன்று - (உன்வார்த்தை) நன்றுநன்று, நின்மன்றல் வேள்விக்கு ஏற்றன கரி ஏ சொன்னாய் - உன்கலியாணத்துக்குத்தக்க சாக்ஷிகளே கூறினாய், இங்கு உம் அ கரிகள் மூன்று உம் தோற்றுமேல் - இவ்விடத்துமச்சாக்ஷிகள் மூன்றுங்காணப்படுமானால், அது உம் மெய் ஏ என்றனள் - அதுவுமுண்மையேயென்று கூறினள், தோகையோடு உம் வேற்றுமை இல்லாத சாயல் இனியவள் - மயிலோடும் வேறுபடாத சாயலையுடைய இனியாள், விழுமம் கூரா - துன்பங்கூர்ந்து.

உலகிலில்லாத செய்தியென்பாள் மாற்றவளகைத்து நன்றுநன்று எனவும், இல்லாதகாரியத்துக்குத்தக்க சாக்ஷிகளென்பாள் நின்மன்றல்வேள்விக்கேற்றன கரியேசொன்னாய் எனவும், இது பொய் என்பாள் இங்குமக்கரிகள்மூன்றுந் தோற்றுமேலதுவுமெய்யே யென்றனள் எனவுங் கூறினாள் என்றார். (௪0)

வெவ்வுயிர்ப்பெறியவில்போய்மெல்விரனெரிக்குங்கையா
லவ்வயிறதக்கும்விழுங்கண்புனல்வெள்ளத்தாழுங்
கொவ்வையாய்துடிக்குநாணந்தலைக்கொளுநக்கூசுமன்றோ
தெய்வமேயாவாவென்றுமென்செய்கேன்சிறியேனென்றும்.

(இ-ள்.) வெவ்வுயிர்ப்பு எறிய - கொடியபெருமூச்சுவீச, இல் போய்-வீட்டிற்குச்சென்று, மெல் விரல் நெரிக்கும் - மெல்லியவிரலைநெரிப்பாள், கை ஆல் அ வயிறு அதுக்கும் விழும் கண்புனல் வெள்ளத்து ஆழும் - தனதுகைகளினாலந்தவயிற்றினைப்பிசைவாள் நிலத்தின்மிது விழுவாள் கண்ணீர்வெள்ளத்தழுந்துவாள், கொவ்வைவாய் துடிக்கும் - கோவைக்கனிபோன்ற அதரந்துடிப்பாள், நாணம் தலைக்கொளும் கூசும் - நாணமிக்கூர்வாள்கூசுவாள், ஆவா தெய்வம் ஏ என்றும் - ஐயோ தெய்வமேயென்பாள், சிறியேன் என் செய்கேன் என்றும் - துணையில்லாதசிறியேனென்னசெய்வேனென்பாள்.

அகரச்சுட்டு வயிற்றின்மென்மைமேல் நின்றது. ஆற்றற்கரிய துன்பமிகுதியையுணர்த்தற்குத் தனித்தனி நெரிக்கும் அதுக்கும் விழும் ஆழும் துடிக்கும் தலைக்கொளும் கூசும் என்றும் எனமுடித்துக் கூறினார். ஆவா என்றது வியப்பில்வந்த குறிப்பிடைச்சொல். (௪௧)

தாதைதாயிறந்தவன்றேதமியளாயிங்குப்போந்த
பேதையேற்காருண்டையபேதுறும்வணிகற்கன்று
மாதுலனாகிஞாதிவழக்கறுத்துரிமையீந்த
நாதனேயேதிலாள்வாய்நவையினிற்காத்தியென்னா.

(இ-ள்.) ஐய - சோமசுந்தரக்கடவுளே, தாதை தாய் இறந்த அன்று ஏ - தந்தையுந்தாயுமிறந்த அப்பொழுதே, தமியள் ஆய் இங்குபோந்த பேதையேற்கு ஆர் உண்டு - தனியளாயிங்குத் துணையின்றிவந்த பேதையளாகிய வெனக்கு உன்னையன்றியார்துணையுண்டு, பேதுறும் வணிகற்கு - (மாமனையிழத்தலால் அவன் ஞாதிகளினால்) துன்புற்றுமயக்கும் வணிகனுக்கு, அன்று மாதுலன் ஆகி ஞாதிவழக்கு அறுத்து - அக்காலையில் மாமனாகி ஞாதியின்வழக்கினையொழித்து, உரிமை ஈந்த நாதன் ஏ - (மாமன்தந்த) பொருளுரிமையை (ஞாதிகளினின்றும்) வாங்கித்தந்த இறைவனே, ஏதிலாள் வாய் நவையினில் - மாற்றாள்பழித்துக் கூறும் பழிமொழியினின்று நீக்கி, காத்தி என்னா - என்னைக்காப்பாயென்று வருந்திக்கூறி.

Koviloor Digital Library

தந்தைதாயரை காலிழந்தவிறாலன்றோ இப்பழிமொழிவந்ததென்பாள் தமிய ளாயிங்குப்போந்த பேதையேற்கு எனவும், என்னைப்போலத் தன்மாமனையிழந்த எங்குலவணிகனுக்கு அவன் மாமனுருக்கொடுவந்து ஞாதிகள் வழக்கொழித்து உரி மைதந்த தயாநிதியாதலால் இன்றுமாற்றாள் வழக்கினையொழித்து இல்லறவாழ்க்கை யுரிமையைத்தந்தருளவேண்டும் என்பாள் ஆருண்டையபேதுறும் வணிகற்கன்று மா தலனாகி ஞாதிவழக்கறுத்துரிமையீந்த நாதனேயெனவுங் கூறினாள். மாமனாகவந்து வழக்குரைத்தபடலத்தில் மாதுலனாகி ஞாதிவழக்கறுத்துரிமையீந்த நாதனே யென் றவரலாறு காண்க. (௪௨)

அன்றிரவுண்டியின்றித்துயிலின்றியழுங்கிப்பின்னாட்
பொன்றிணிகமலவாவிப்புண்ணியப்புனறோய்ந்தண்ட
நின்றிழிவிமானக்கோயினிரம்பியவழகர்முன்னாச்
சென்றிருதாளில்வீழ்ந்துதன்குறைசெப்பிவேண்டும்.

(இ-ள்.) அன்று இரவு உண்டி இன்றி துயில் இன்றி அழுங்கி - அன்றிரா த்திரியுணவில்லாமலும் நித்திரையில்லாமலும் வருந்தி, பின் நாள் - வழிநாளில், புண் ணியம் பொன் திணி கமலம் வாவி புனல் தோய்ந்து - புண்ணியவடிவமாகிய பொ ன்னிறம்வாய்ந்த பொற்றாமரைத்தீர்த்தத்தில் நீராடி, அண்டம் நின்று இழி விமானம் கோயில் நிரம்பிய அழகர் முன் ஆக சென்று - விண்ணுலகினின்று மிழிந்ததெய்வ விமானமமைந்த திருக்கோயிலில் நிரம்பியவழகராகிய சோமசுந்தரக்கடவுள் சந்நிதி முன்சென்று, இரு தாளில் வீழ்ந்து - இரண்டுதிருவடிகளிலும்விழுந்து, தன் குறை செப்பி வேண்டும் - தனது குறைகளையெடுத்துக் கூறி வேண்டுவாள். (௪௩)

அன்றெனைக்கணவன்வேட்டவிடத்தினிலதற்குச்சான்றாய்
நின்றபைந்தருவுநீயுங்கிணறுமந்நிலையேயிங்கு
மின்றுவந்தேதிலாள்வாய்நகைதுடைத்தெனைக்காவாயேற்
பொன்றுவலென்றாள்கற்பின்புகழினைநிறுத்தவந்தாள்.

(இ-ள்.) கற்பின் புகழினை நிறுத்தவந்தாள் - கற்பால்வரும் புகழினையுலகினி லைநிறுத்தவந்தவள், அன்று - அக்காலையில், என்னை கணவன் வேட்ட இடத்தினில்- என்னையென்கணவன் மணமுடித்த இடத்தில், அதற்கு சான்று ஆய் நின்ற பைந்தரு உம் நீ உம் கிணறு உம் - அதற்குச்சாக்ஷியாய் நின்ற பசியவன்னிமரமும் நீயும் கூவ லும், அ நிலை ஏ - அப்படியே, இங்கு உம் - இவ்விடத்தும், இன்று வந்து ஏதிலாள் வாய் நகை துடைத்து - இக்காலையில்வந்து மாற்றாள் வாயிற்பிறந்த பழிமொழியைப் போக்கி, என்னைகாவா யேல் - என்னைப்பாதுகாவாயானால், பொன்றுவல் என்றாள்- உயிர்விடுவேனென்று கூறினாள்.

இங்கும் என்றதில் உம்மை அங்கன்றியென்பதைத் தழுவிநிற்றலால் இறந்த துதழீஇ இய உயர்வு சிறப்புப்பொருட்டு. (௪௪)

அல்லலுற்றழுங்கிநின்றாள்பரிவுகண்டந்தண்கூட
லெல்லையில்கருணைமூர்த்தியருளினாலெவருங்காணத்
தொல்லையின்படியேயன்னாள்சொல்லியகரிகண்மூன்று
மொல்லைவந்திறுத்தகோயிலுத்தரகுணபாலெல்லை.

(இ-ள்.) அல்லல் உற்று அழுங்கி நின்றாள் பரிவு கண்டு - துன்பமுற்றுவருந் திக்குறையிரந்துநின்ற வணிகமாதின் துன்பத்தைநோக்கி, அம் தண் கூடல் எல்லை

Koviloor Digital Library

இல் கருணைமூர்த்தி அருளினால் - அழகிய தண்ணிய கோன் மாடக்கூடலிலெழுந்தருளிய வரம்பில்லாத அருண்மூர்த்தமாயுள்ள பிரானார் திருவருளால், எவர் உம் காண - யாவருங்கண்டதிசயிக்க, தொல்லையின்படியே - முன்னர்த் திருப்புறம்பயத்திலுள்ள படியே, அன்னாள் சொல்லியகரிகள் மூன்று உம் - அவ்விளையாள் மூத்தாளிடத்துச் சொன்ன சாக்ஷிகள்மூன்றும், கோயில் உத்தரகுணபால் எல்லை ஒல்லைவந்து இறுத்த - திருக்கோயிலின் வடகீழ்த்திசையெல்லையில் விரைந்துவந்து நிலைபெற்றன.

அருள்மூர்த்தம் என்றது முன்னர்க்கூறியதனாலுணர்க. அடியவர்க்கிரங்குங் கருணைமூர்த்தியாதலால் அருளினால் ஒல்லைவந்திறுத்த என்றார். (௬௫)

அன்னபோதிளையாண்மூத்தாட்கொண்டுபோயாலவாயெம்
முன்னவன்றிருமுன்றாழ்ந்துகாட்டுவாண்முகிறோய்சென்னி
வன்னியீதிலிங்கமீதுகிணறிதென்மன்றற்சான்றாத்
துன்னியவென்றாள்கண்டாண்முடித்தலைதூக்கிநின்றாள்.

(இ-ள்.) அன்னபோது - அக்காலையில், இளையாள் - இளையாளானவள், மூத்தாள் கொண்டுபோய் - மூத்தாளைக்கொண்டுசென்று, ஆலவாய் எம் முன்னவன் திருமுன்தாழ்ந்து காட்டுவாள் - திருவாலவாயிலெழுந்தருளிய எமது இறைவர் சந்நிதியில் வணங்கிக்காட்டுமென்றவள், முகில் தோய்சென்னி - மேகந்தவழும் தலையையுடைய, வன்னி ஈது - வன்னிமரமாகிய இதுவும், இலிங்கம் ஈது-சிவலிங்கமூர்த்தமாகிய இதுவும், கிணறு இது - கூவலாகிய இதுவும், என் மன்றல் சான்று ஆக துன்னிய என்றாள் - என்கலியாணத்திற்குச் சாக்ஷிப்பொருளாக இருந்தன என்று கூறினாள், கண்டாள் (அவற்றை) பார்த்த மூத்தவள், முடிதலை தூக்கி நின்றாள் - தலைகவிழ்ந்துநின்றனள்.

இளையாள் கூறியதையவமதித்தது பெருந்தவறாய் முடிந்ததேயென்று தனாக்குறுதலால் நாணினள் என்பார் முடித்தலைதூக்கிநின்றாள் என்றார். (௬௬)

அவ்விடைத்தருவுநீருமன்றுபோலின்றுசான்றா
யிவ்விடைப்பட்டவென்னவதிசயமெவர்க்குந்தேறாத்
தெய்வமுமெளிவந்தங்கைக்கனியெனத்திருவினன்னாள்
கைவசப்பட்டதென்றாற்கற்பினுக்கரிதேதம்ம.

(இ-ள்.) அ இடை - அவ்விடத்தில். தரு உம் நீர் உம் அன்று போல் இன்று சான்று ஆய் இ இடைப்பட்ட என்ன அதிசயம் - வன்னியுங்கிணறும் மணமுடித்த அக்காலத்திலிருந்தனபோல இக்காலையில் சாக்ஷிப்பொருள்களா யிவ்விடத்திருந்தன இவையென்ன வதிசயம், எவர்க்கு உம் தேறாத தெய்வம் உம் எளிவந்து அம் கை கனி என்ன - அயன்முதலிய தேவர்களெல்லோர்க்கும் தெளிந்தறிதற்கரிய பரசிவமூர்த்தமும் எளிதாய் வந்து அகங்கையிலுள்ள நெல்லிக்கனிபோல, திருவின் அன்னாள் கைவசப்பட்டது என்றால் - திருமகளையொத்த வணிகமாதின் கைவசப்பட்டதாயின், கற்பினுக்கு அரிது ஏது-கற்பினிலைக்கு அடைதற்கரிய பொருளேது (எவையும் எளிய என்றபடி.)

வன்னியுங் கிணறும் சுட்டப்படும் பொருள்களாதலா லங்குள்ள நிலையியற்பொருள்கள் இயங்கியற்பொருள்களா யிங்குவருதல் கற்பினியலால் ஒருகாற்கூடினுங் கூடுமாதலால் கற்பினைப் புகழ்வாராய் அவ்விடைத்தருவு நீருமன்றுபோ லின்று சான்றாய் இவ்விடைப்பட்ட வென்னவதிசயம் எனவும், அயன்முதலிய தேவர்களா

Koviloor Digital Library

அஞ் சுட்டுதற்கரிய சிவலிங்கப்பெருமான் அன்பிற்கன்றிக் கற்பினுக்கும் எளிவந்தருளினமையால் கற்பினுக்கரிதேதம்மா எனவுங்கூறினர். இது கவிகூற்றுத்துறை. அம்மாவியப்பிடைச்சொல். தெய்வமும் என்பதனிறுதியினின்ற உம்மை அருமை மேல் நின்றது. (சஎ)

மங்கைதன்கற்புமீசனிடத்தவள்வைத்தவன்பு
மங்கணனவட்குச்செய்தவருளையும்வியந்துநோக்கி
மங்கலநகராரெல்லாமகிழ்ச்சியுளாழ்ந்தார்முல்லைத்
தொங்கலான்முதுமனைட்டியொருத்தியுந்துன்பத்தாழ்ந்தாள்.

(இ-ள்.) மங்கைதன் கற்பு உம் - வணிகமாதின் கற்பினிலைமையையும், ஈசன் இடத்து அவள் வைத்த அன்பு உம் - சிவபெருமானிடத்து அவள் வைத்த நேயத்தையும், அங்கணன் அவட்கு செய்த அருளை உம் வியந்து நோக்கி - அப்பெருமானவளுக்குச்செய்த திருவருளையும் அதிசயித்துப்பார்த்து, மங்கலம் நகரார் எல்லாம் மகிழ்ச்சியுள் ஆழ்ந்தார் - மங்கலமமைந்த மதுரைத்திருநகரிலுள்ளவர் யாவரும் ஆராமகிழ்ச்சியி லழுந்தினர், முல்லை தொங்கலான் முதுமனைட்டி ஒருத்தி உம் துன்பத்து ஆழ்ந்தாள் - முல்லைமலராற்றொடுத்த மாலையையணிந்த வணிகனது மூத்த மனையாளொருத்திமட்டுந் துன்பக்கடலிலழுந்தினள்.

அவள் கற்பையும் கொண்ட சிவநேயத்தையும் அவற்றிற்கிரங்கிய இறைவர் திருவருளையும் நகரிலுள்ளார் கருதுந்தோறும் ஆராமகிழ்ச்சி மீதூர்ந்தனர் என்பார் நகராரெல்லாமகிழ்ச்சியு ளாழ்ந்தார் எனவும், மூத்தாள்மட்டுந் தான்கூறியதில் நிறுத்தற்கின்றாய் முடிந்ததேயென்னுந் துன்பமதிகரிக்க அதிலழுந்தினள் என்பார் முதுமனைட்டி யொருத்தியுந் துன்பத்தாழ்ந்தாளெனவுங் கூறினர். (சஅ)

மேதகுவணிகர்மூத்தவினைக்கொடியாளைப்பொல்லாப்
பாதகியிவளாமென்றுபழித்தனர்படிறுபேசிக்
கோதறுகுணத்தினளைக்குடிப்பழுதுரைத்தாய்நீயென்
காதலியாகாயென்றுகணவனுந்தள்ளிவிட்டான்.

(இ-ள்.) மேதகுவணிகர் - குணத்தின்மேம்பட்டவணிகர்கள், மூத்தவினைக் கொடியாளை பொல்லாதபாதகி இவள் ஆம் என்று படிறுபேசி பழித்தனர் - கொடியதீத்தொழிலையுடைய மூத்தாளைக் கொடியசண்டாளியிவளாமென்று அவர்கள் கொடுமையையெடுத்துப் பேசிப்பழித்தார்கள், கோதறு குணத்தினளை நீ குடிப்பழுது உரைத்தாய் - குற்றமற்றகுணத்தினையுடைய என் இளையாளைக் குடிப்பிறப்பை நீபழித்துக்கூறினாய் (ஆதலால்) நீ என்காதலி ஆகாய் என்று கணவன் உம் தள்ளிவிட்டான் - நீ யென்மனைவியாகாயென்று புருடனும் அவளை யருவருத்துத் தள்ளினான்.

இளையாள்குடிப்பிறப்பேயென்குடிப்பிறப்பு ஆதலால் என்குடிப்பிறப்பையிகழ்ந்தாய் என்பான் கோதறுகுணத்தினளைக் குடிப்பழுதுரைத்தாய் எனவும், கணவன்குடிப்பிறப்பைப்பழித்தவள் கற்பினிலைதிரிந்தவளாதலால் அவளுக்கு மனைக்கிழத்தியாகாளென்பான் நீயென்காதலியாகாயென்று கணவனுந்தள்ளிவிட்டான் எனவுங்கூறினன். (சகூ)

அந்நிலையிளையாள்கேள்வனடியில்வீழ்ந்திரப்பாளைய
வென்னதுகற்பையின்றுநிறுத்தினளிவண்மாற்றுளன்

றன்னோயில்லாதேற்கன்னையாயினளிவளும்யானு
மின்றுயிருடல்போல்வாழ்வேமெனத்தழீஇத்தம்மினட்டார்.

(இ-ள்.) அ நிலை - அப்பொழுது, இளையாள் - இளையாளானவள், கேள்வன் அடியில் வீழ்ந்து இரப்பாள் - தனது கணவன் திருவடிமேல்விழ்ந்து குறையிரப்பாள், ஐய - ஐயனே, என் அது கற்பை இன்று நிறுத்தினள்-எனது கற்பினிலையை 'யிப்பொழுது நிலைநிறுத்தினள் (ஆதலால்)' இவள் மாற்றாள் அன்று - இவளெனக்குமாற்றாளல்ல, அன்னை இல்லா தேன்கு அன்னை ஆயினள் - தாயில்லாத வெனக்கு இப்பொழுது தாயானாள், இவள் உம் யான் உம் இன் உயிர் உடல்போல் வாழ்வேம் என தழுவி தம்மில் நட்டார் - இம்மூத்தவளும் நானும் இனியவுயிரும் உடலும்போல இயைந்து வாழ்வேமென்று இளையாள்பணிந்துகூறிக் கணவனுடன்பாடுபெற்றுத் தம்முள் வேற்றுமையின்றி யிருவரும் தம்முட்கலந்தொழுகினார்கள்.

மூத்தாள் உலகினோரறிய எனது கற்பினை நிறுத்தவந்தவள் என்பாள் என்னது கற்பை யின்று நிறுத்தினள் எனவும், ஆதலால் அவள் எனக்குத் தாய்போலப் பேருதவுடையாளாதலால் அன்னையேயன்றி மாற்றாளன்று எனவும், இனி யுயிருமுடலும்போலக் கலந்து வாழ்வேமென்பாள் இன்றுயிருடல்போல் வாழ்வேம் எனவுங் கூறினாள் என்றார். (௫௦)

உடம்பினாலிரண்டேயன்றியுயிர்ப்பொருளிரண்டற்றுள்ள
மடம்படுமழுக்காறற்றுமைந்தருமனையராக
விடம்படுமைவாய்நாகம்விழுங்கிரையொத்துத்தம்மி
லிடம்படுமன்புற்றின்புற்றிருவருமிருந்தார்மன்னோ.

(இ-ள்.) உடம்பின் ஆல் இரண்டு ஏ அன்றி உயிர்பொருள் இரண்டு அற்று - (புறத்தினின்றுகாண்போர்க்கு) சரீரத்தா லிரண்டாகப் புலப்படுதலன்றி யுயிராகிய பொருளொன்றாய், உள்ளம் மடம் படும் அழுக்காறு அற்று - மனத்தி லறியாமையாலுண்டாகும் பொறாமையொழிந்து, மைந்தர் உம் அனையர் ஆக - பிள்ளைகளு மத்தன்மையராக, விடம் படும் ஐவாய் நாகம் தம் இல் விழுங்கு இரை ஒத்து - விடம்பொருந்திய ஐந்தலையையுடைய பாம்பு விழுங்கிய இரையையொத்து, தம்மில் இடம் படும் அன்பு உற்று இன்பு உற்று இருவர் உம் இருந்தார் - தம்முள்ளே மிக்க அன்பு வாய்ந்து இன்புகூர்ந்து அவ்விருவரும் வாழ்ந்திருந்தார்கள்.

காண்பார்க்கு உடம்பாலிருவராகப் புலப்படுவாரென்பார் உடம்பினாலிரண்டே எனவும், இரண்டுடம்பிற்கும் ஒருயிராயினர் என்பார் அன்றி யுயிர்ப்பொரு ளிரண்டற்றெனவும், உயிர்போல மனமும் ஒன்றாயிற்றென்பார் உள்ளமடம்படு மழுக்காறற்று எனவும், உயிருமனமும் ஒன்றானமையால் இரண்டாகக் காணப்படும் உடல்களுக்குத் தனித்தனி யுண்ணப்படும் உணவும் ஒன்றாயிருந்தது என்பார் உவமையால் விளக்க விடம்படுமைவாய் நாகம் விழுங்கிரையொத்து எனவும், இவர்கள்போல இவர் மக்களுமிருந்தனர் என்பார் மைந்தரு மனையராகவெனவுங் கூறினார். (௫௧)

அருந்ததியனையாள்கேள்வற்காயுளுமானுச்செல்வப்
பெருந்தனநிறைவுஞ்சீருமொழுக்கமும்பீடும்பேறு
தருந்தவநெறியுங்குன்றாத்தருமமும்புகழும்பல்க
விருந்தனள்கமலச்செல்வியென்னவீற்றிருந்துமன்னோ.

Koviloor Digital Library

(இ-ள்.) அருந்ததி அனையாள் - அருந்ததியை யொத்தவள், கேள்வற்கு ஆயுள் உம் - தனது கணவனுக்கு ஆயுளும், ஆனாத செல்வம் பெருந்தனம் நிறைவு உம் சீர் உம் ஒழுக்கம் உம் பீடு உம் - நீங்காத பெரிய பொருட்செல்வ நிறைவுஞ் சிறப்பும் ஒழுக்கமும் பெருமையும், பேறு தரும் தவம் நெறி உம் குன்றாத தருமம் உம் புகழ் உம் பல்க - பயன்தருந் தவநெறியுங் குறையாத தருமமுங் கீர்த்தியும் பெருக, கமலச்செல்வி என்ன வீற்றிருந்து இருந்தனள் - திருமகளைப்போல நிகரின்றியிருந்தாள்.

கற்புஞ்சிவநேயமுமுடையளாதலால் கணவனுக்கு இவைபல்க இருந்தாள் என்றார். (௫௨)

பொன்னவிர்கமலம்பூத்தபொய்கைசூழாலவாயெம்
முன்னவன்விளையாட்டெல்லைகண்டியார்மொழியவல்லா
ரின்னமுமளவின்றென்பவெங்குருநாதசாமி
சொன்னவாறுங்கட்கெண்ணெண்காதையுஞ்சொன்னேனம்ம.

(இ-ள்.) அவிர் பொன் கமலம்பூத்த பொய்கைசூழ் ஆலவாய் எம்முன்னவன் விளையாட்டு எல்லைகண்டு யார்மொழியவல்லார் - விளங்கும் பொற்றாமரைபூத்த பொய்கைசூழ்ந்த திருவாலவாயிலெழுந்தருளிய எமது சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடலினளவையை யாராய்ந்து இவ்வளவினவெனச் சொல்லவல்லவர்யாவர், இன்னம் உம் அளவு இன்று என்ப - இன்னமு மளவில்லையெனக்கூறுவார், எம் குருநாதசாமிசொன்ன ஆறு - எமதுகுருமூர்த்தியாகிய சோமசுந்தரக்கடவுள் அருளியபடி, உங்கட்கு எண்ணெண்காதை உம் சொன்னேன் - முனிவிர் உங்களுக்கு அறுபத்துநான்கு திருவிளையாடலையுஞ் சொல்லினேன்.

அகத்தியமுனிவர் தம்முறவினராகிய ஏனைமுனிவர்களையு முளப்படுத்திக்கூறுதலால் எம் என உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாகக்கூறினர். குருநாதசாமி என்றது சிவபிரானுக்குக் குருநாதசாமியெனப் பொருள்கொள்க. ஓர்கால் பிரமன் தேவர்களோடு திருக்கயிலைக்குச்சென்று சிவபெருமானைத் திருவடிவணங்கி மீளுங்காலையில் முதற்கோபுரவாயிலில் ஒன்பதிலக்க வீரர்கள் சூழ்ந்துபோற்றப் பொன்னாசனத்தி லெழுந்தருளியிருக்கு முருகக்கடவுள் பிரமனைநோக்கி இங்கு வருகவென, வந்த அப்பிரமன் திருவடி வணங்காது கைகூப்பியபோது உனக்கியாது வருமென வினவ, இறைவரருளால் எல்லா அண்டங்களையும் படைக்குந்திறன் வருமென்றனன், முருகக்கடவுள் புன்னகைசெய்தருளி வேதாகமங்கள் வருமோவென, அவ்விறைவரருளால் சில வறிந்திருக்கின்றேனென, இருக்குவேதம் வருமோவென்று வினவ நன்றென்று வேதத்திற்கு முதலாயுள்ள பிரணவத்தைப் பிரமன்கூறி வேதங் கூறத்தொடங்கினன், நில்லாயென்று அப்பிரணவத்தின்பொருள் என்னென்று வினவ அதன்பொருள் கூறத்தெரியாது பிரமன் மயங்கிநிற்க, அவனைக் குட்டியுதைத்து விலங்குபூட்டிக் கந்தமாதனத்தில் சிறைக்களத்திற் படுத்தினர், இதனைத் தேவர்களாலுணர்ந்த இறைவர் நந்திநாயனாரால் அப்பிரமன் சிறையை விடுவிக்க வுணர்த்த அதற்கு மியையாதிருத்தலை யவ்விறைவருணர்ந்து தாமே சென்றருளி முனிந்துகூற அம்முருகக்கடவுள் பிரமன் சிறையை விடுவித்தனர், பின்னர் அவ்விறைவர் மகிழ்கூர்ந்தருளி மடித்தலத்திலிருத்திப் பிரணவத்தின்பொருள் என்னவென்று வினவ அம்முருகக்கடவுள் திருவாய்மலர்ந்தருளினரென்பது " ஐயகேளொளியாதிகாலந்தனிலளித்த - மையுலாவருகளத்தினனளப்பிலாமறைகள் - செய்யவாகமம்பற்பலபுரிந்ததிற்பிலயான்-உய்யுமாறருள்செய்தன வவையுணர்ந்துடையேன். என்றநான்முகனிவை

த்தருமவத்திறனிருக்காம் - ஒன்றுங்கிளம்புதியெனமுருகவேளுரைப்ப - நன்றெனு
மறையெவற்றிற்குமாதியெனவில்வான் - நின்றதோர்தனிமொழியைமுன்னோதினனெ
நியால். எட்டொனுறவக்குடிலையின்பயனினைத்தின்றே - கட்டுரைத்திலன்மயக்கலு
மிதன்பொருள்கருதாய் - சிட்டிசெய்வதித்தன்மையதோவெனுச்செல்வன் - குட்டி
னுளையஞன்குமாமுடிகளுங்குலுங்க. மறைபுரிந்திடுஞ்சிவனருண்மதலைமாமலர்மேல்-
உறைபுரிந்தவன்விழ்தரப்பத்திறுறுதைத்து - நிறைபுரிந்திடுபரிசகரைக்கொடேநிகள
ச் - சிறைபுரிந்திடுவித்தனன்கந்தமாஞ்சிலம்பில். கடிகொள்பங்கயன்காப்பினையெம்
பிரான் - விடுதல்கூறிவிடுத்தனனிக்கெனைத் - தடைபடாதவன்றன்சிறைநீக்குதி -
குடிலையன்னவன்கூறற்கெளியதோ. மைதிகழ்ந்தமணிமிடற்றண்ணன்முன் - வெய்
தெனச்சென்றுமேவியவன்பதங் - கைதொழுஉநின்று கந்தன்மொழிந்திடும் - செய்
திசெப்பச்சிறுநகையெய்தினன். சாற்றருந்திறற்சண்முகவெம்பிரான் - வீற்றிருந்த
வியனகர்முன்னுறு - ஏற்றினின்றமிழ்ந்துவிண்ணேறொலாம் - போற்றமுக்கட்புனித
னுட்போயினன். மைந்தநின்செய்கையென்னேமலரயன்சிறைவிடென்று - நந்திகம்
பணியாலேமிகவின்றதங்கேளாய்காமும் - வந்தனைத்திடினுங்கேளாய்மறுத்தெதிர்
மொழிந்தாயென்னுக்-கந்தனைவெகுள்வான்போலக் கழறினன்கருணைவள்ளல். உய்
த்தறுக்கமலத்தண்ணலோன்காம்பற்றிச்செவ்வேள் - அத்தன்முன்விடுத்தலோடுமா
ங்கவன்பாமன்றன்னை - மெய்த்தகுமன்பாற்சூழ்ந்துவெள்ளினனிற்பநோக்கி - எய்த்
தனைபோலும்பன்னுளிருஞ்சிறையெய்தியென்றான். அருளுருவாகுமீசனயற்கதுபுக
ன்றபின்னர் - முருகவேள்முகத்தைநோக்கிமுறுவல்செய்தருளைநல்கி - வருதியாலைய
வென்றமலர்க்கையுய்த்தவனைப்பற்றித் - திருமணிக்குறங்கின்மீதுசிறந்துவீற்றிருப்
பச்செய்தான். காமருகுமரன்சென்னிகதுமெனவுயிர்த்துச்செக்கர்த்-தாமரைபுரை
யுங்கையாற்றழுவியேயயனுந்தேற்று - ஓமெனவுரைக்குஞ்சொல்லி னுறுபொருளுன
க்குப்போமோ - போமெனிலதனையின்னேபுகலெனவிறைவன்சொற்றான். முற்று
ருக்குமாதிமுதல்வகேளுலகமெல்லாம்-பெற்றிடுமவட்குநீமுன் பிறருணராதவா
ற்றுற் - சொற்றதோரினையமூலத்தொல்பொருள்யாருங்கேட்ப - இற்றெனவியம்ப
லாமோமறையினுலிசைப்பதல்லால். என்றலுநகைத்துமைந்தவெமக்கருண்மறையி
னென்றுத் - தன்திருச்செவியைநல்கச்சண்முகன்குடிலையென்னும் - ஒன்றொருபத
த்திறன்மையுரைத்தனனுரைத்தல்கேளா - னறருள்புரிந்தானென்பஞானநாயகனு
மண்ணல்" எனக் காந்தம் அயனைச்சிறை புரிபடத்திலும் சிறைநீக்குபடலத்திலும்
வருதல் காண்க. (௫௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

என்றுதென்மலைமேலிருந்தமாதவத்தோனின்னருட்குருபரன்றனையு
மன்றவன்றிருவாய்மலர்ந்தவாசகமுமருள்கனிந்தொழுகவுள்ளடக்கித்
தென்றமிழாலவாய்த்தனிப்பதியைச்சென்னிமேற்பன்னிரண்டும்ப
ரொன்றலவத்திமையாவங்கயற்கண்ணியுடனுறையொருவனைநினைந்தான்.

(இ-ள்.) என்று தென்மலைமேல் இருந்த மாதவத்தோன் - என்று பொதிய மலையிலிருந்த பெரிய அகத்தியமுனிவர், இன் அருள் குருபரன் தனை உம் - இனிய அருள்வாய்ந்த குருபரனாகிய முருகக்கடவுளையும், அன்று - அக்காலையில், அவன் திருவாய்மலர்ந்த வாசகம் உம் - அக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய திருமொழியையும், அருள் கனிந்து ஒழுக - திருவருள் பழுத்தொழுக, உள் அடக்கி - தமது மனத்திலடக்கி, தென் தமிழ் ஆலவாய் தனி பதியை-இமயமலைக்குத் தென்பாலுள்ள தமிழ்வழங்கு நிலமாகிய ஒப்பில்லாத திருவாலவாயென்னும் திருப்பதியை, சென்னிமேல் - பிரமரந்திரத்துமேல், பன்னிரண்டு உம்பர் - துவாதசாந்தமாகிய நிராமயதானத்

Koviloor Digital Library

தில், ஒன்றவைத்து-(அம்மனத்தைப்) பொருந்தவைத்து, இமையாத அங்கயற்கண்ணி உடன் உறை ஒருவனை நினைந்தான் - இமையாத அங்கயற்கண்ணியாராகிய அருட்சத்தியாரோடு எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளைத் தியானித்தார்.

வைத்து செயப்படுபொருள் குன்றாத வினையெச்சம் ஆதலால் மனத்தைவைத்து என முடிக்க. இச்செய்யுள் குளகம்ஆதலால் சொன்னேன் என்று முடிக்க. (ருச)

பரவசமடைந்துவழிகவர்ந்துண்ணும்பழிப்புலவேடர்போயொளிப்ப [ம்
விருள்வெளிகடந்துதிருவருள்வழிச்சென்றெண்ணிலாச்சராசர மனைத்து
புரையறநிறைந்துகாட்சிகண்காண்பான்புதைபடத்தனித்தபூரணமா
யுரையுணர்விறந்தவுண்மையாநந்தவுணர்வினையுணர்வறவுணர்ந்தான்.

(இ-ள்.) பரவசம் அடைந்து-பசுகரணங்கெட்டுச் சிவகரணமடைந்து, வழி கவர்ந்து உண்ணும் பழி புலம் வேடர் போய் ஒளிப்ப - ஆறலைத்துண்ணும் பழியையுடைய பஞ்சேந்திரியமென்னும் வேடர்கள் போயொளிக்க, இருள் வெளி கடந்து-கேவல சகலங்கள் என்னும் அவத்தைகளைக்கடந்து, திரு அருள்வழி சென்று - திருவருள் வழியேசென்று, எண் இல்லாத சராசரம் அனைத்தும் உம்-அளவில்லாத சராசரங்களெவற்றிலும், புரை அற நிறைந்து - குற்றமற நிறைந்து, காண்பான் கண் காட்சி புதைபட - ஞாதுருஞானஞேயங்கள் என்னுஞ் சங்கற்பனைகளொழிய, தனித்த பூரணம் ஆய் - ஒப்பிகந்த பூரணவடிவாய், உரை உணர்வு இறந்த - வேதாகமவளவைகளையும் சுட்டறிவையுங் கடந்த, உண்மை ஆநந்தம் உணர்வினை - சச்சிதாநந்த வடிவத்தை, உணர்வு அற உணர்ந்தான் - தற்போதமற வுணர்ந்தருளினார்.

கருவிகளின் வசப்படுதலொழிந்து இறைவன் வியாபகத்தைத் தலைப்பட்டு நிற்றலால் பரவசமடைந்து எனவும், வினைவசத்தால் இந்திரியங்களின் வசப்பட்டுப் பரதந்திரராய் நிற்றலொழிதலால் வழிகவர்ந்துண்ணும் பழிப்புலவேடர்போயொளிப்ப எனவும், கேவலம் ஆவது ஆன்மா தனது இச்சாஞானக்கிரியைகளி னிகழ்ச்சி சிறிதுமில்லாமல் ஆணவமலத்தோடுகூடி நிற்பது. சகலமாவது மாயாமலத்தால் போகபோக்கியத்தைப் பொருந்தி யெல்லா யோனிகளிலும் புக்குழல்வது. இவற்றைக்கடந்து இருவினையொப்பும் சத்திநிபாதமும் அடைதலாகிய சுத்தாவத்தையை யடைதலால் இருள்வெளிகடந்து திருவருள் வழிச்சென்று எனவும், உயிர்களிற் கலந்துநின்று அவற்றின் ஞானக் கிரியைகளை விளக்குங் காட்டுமுபகாரமும், அவ்வுயிர்களை யதிட்டித்துக்கொண்டு அவை செல்லுமாறெல்லாமறிந்து செலுத்தி யவ்விடயங்களிற் கலந்துசெல்லுங் காணுமுபகாரமும் இறைவனுடைமையால் எண்ணிலாச் சராசரமனைத்தும் புரையறநிறைந்து எனவும், ஞாதிருஞானஞேயங்கள் சங்கற்பனு ஞானமாகிய பாவனுஞானங்களாதலால் காட்சிகண்காண்பான்புதைபட எனவும், தோய்ந்துந்தோயாது அகம்புறம் எங்கணும் நிற்றலால் தனித்த பூரணமாய் எனவும், விந்துவின் காரியமாகிய சொற்பிரபஞ்சம் உரையும், கருவிகளைப்பற்றி யுணரும் உணர்வு சுட்டுணர்வும் ஆதலால் உரையுணர் விறந்தவெனவும், செய்யுளாதலால் காண்பான்கண்காட்சி யென்றது காட்சி கண்காண்பான், உண்மையுணர்வு ஆநந்தமென்றது உண்மையாநந்த வுணர்வு எனவுங்கூறினார். (ருரு)

வன்னியுங்கிணறுமிலிங்கமுமழைத்தபடலம் - முற்றிற்று.

ஆ பாயிரம் உள்படத் திருவிருத்தம்-ஙஙச௦.

Koviloor Digital Library

அறுபத்தைந்தாவது

அருச்சனைப்படலம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

கன்னிதன்வதுவைக்கரிகளாயிலிங்கக்கடவுளுங்கவைக்கருங்கோட்டு
வன்னியும்படுநீர்க்கூவலும்வந்தவழியிதுமதுரைநாயகனைச்
சென்னியில்வைத்தமுனிவனைப்பூசைசெய்துமாதவரொருங்கெய்திப்
பன்னிறமலர்தூஉயாலவாயரனைப்பரவியபரிசதுபகர்வாம்.

(இ-ள்.) கன்னி தன் வதுவை கரிகள் ஆய் - வணிகக்கன்னியின் கலியாணத்துக்குச் சாக்ஷிப்பொருள்களாய், இலிங்கக்கடவுள் உம் கவை கருங்கோடு வன்னி உம் படுநீர் கூவல் உம் வந்தவழி இது-சிவலிங்கமூர்த்தியும் பிளவுபட்ட கரிய கொம்பையுடைய வன்னிமரமும் நீர்சுரக்குங் கிணறுமாகிய இவைவந்த திருவிளையாடலிது, மதுரை நாயகனை - திருவாலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளை, சென்னியில் வைத்த முனிவனை பூசைசெய்து - அவரதசாந்தத்தானத்தில் வைத்தப்பரவிய அகத்தியமுனிவனைப் பூசனைசெய்து, மாதவர் ஒருங்கு எய்தி - பெரிய தபோதனர்களொருசேர வடைந்து, பல் நிறம் மலர் தூய் ஆலவாய் அரனை பரவிய பரிசு அது பகர்வாம் - பலநிறம் வாய்ந்த மலர்களாலருச்சித்துத் திருவாலவாயிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளைத் துதித்த முறைமையைக் கூறுவாம்.

அது பகுதிப்பொருள் விகுதி. இது திருவிளையாடலன்மையாததாதலால் பரிசு என்றதற்கு முறையென்றும். (க)

போதவானந்தத்தனிக்கடல்பருகும்புயல்புரைமுனிவனைவசிட்ட
மாதவனாதிமுனிவருமுலோபாமுத்திரைதன்னொடும்வரித்துப்
போதொடுசாந்தமான்மதந்தீபம்புகைமுதல்கருவிகைக்கொண்டு
மேதகுசிறப்பாலருச்சனைசெய்துபின்னுமோர்விருந்துணாசெய்வார்.


(இ-ள்.) போதம் ஆநந்தம் தனி கடல் பருகும் புயல் புரை முனிவனை - ஞானானந்தமாகிய ஒப்பில்லாத கடலைப்பருகிய மேகத்தையொத்த அகத்தியமுனிவரை, உலோபா முத்திரை ஒடு உம் - உலோபாமுத்திரையோடும், வசிட்ட மாதவன் ஆதி முனிவர் உம் வரித்து - வசிட்டர் முதலாகிய முனிவர்களும் அழைத்து, போது சாந்தம் மான்மதம் தீபம் புகை முதல் கருவி கைக்கொண்டு மேதகு சிறப்பு ஆல் அருச்சனை செய்து - மலருஞ் சந்தனமு மிருகமதமும் தீபமும் தூபமுமுதலிய பூசாகருவிகளைக் கைக்கொண்டு தக்க அருச்சனைசெய்து, பின் உம் ஓர் விருந்து உணா செய்வார் - மீளவும் ஒருவிருந்திடுதல் செய்கின்றார்கள்.

ஒடு எண்ணுப்பொருட்டு. (உ)

கொச்சகக்கலிப்பா.

கோட்டஞ்சிலைகுனித்தகூடற்பிரானாடல்
கேட்டஞ்செவிபடைத்தபேறடைந்தேங்கேட்டபடி
காட்டங்களிப்பகருமலர்தூஉய்க்கண்டிறைஞ்ச
வேட்டங்கள்யாங்களெனவோதினர்மெய்த்தவரே.

(இ-ள்.) கோடு அம் சிலை குனித்த கூடல் பிரான் ஆடல் - மேருமலையையழகியவில்லாகவளைத்த நான்மாடக்கூடலிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் தி

Koviloor Digital Library


Koviloor Digital Library

Koviloor Digital Library

ருவினையாடலை, கேட்டு அம் செவிபடைத்த பேறு அடைந்தேம் - கேட்டு அழகிய செவியினை நாங்கள் பெற்றபலனை யின்றடைந்தோம், கேட்டபடி - தேவரீர் கூறியருள நாங்கள் கேட்டவண்ணம், நாட்டம் களிப்ப நறுமலர் தூய் கண்டு இறைஞ்ச - கண்கள்களிப்பத்தரிசித்து நறுமணங்கமழுமலர் தூவி வணங்க, யாங்கள் வேட்டங்கள் என மெய்தவர் ஓதினார் - யாங்கள்விரும்பினோமென்று மெய்மைவாய்ந்த வசிட்டாதிமுனிவர்கள் கூறினார்கள்.

கோடு சினைப்பெயர்முதல் மேல்நிற்றலால் சினையாகுபெயர். யாங்கள் எனப்பகுதிப்பொருள் விகுதியேற்றுவருதல்போல வேட்டங்கள் என விகுதிப்பொருள் விகுதியேற்றுவந்தது. (௩)

என்றவறவோரெதிரேமுகமலர்ந்து
குன்றமடக்குங்குறுமுனிவன்கூறுவா
னன்றுமுனிகாளிதனைநானுள்ளத்தெண்ணியாங்
கொன்றமொழிந்நீரென்றான்பின்னும்வியந்தோதுவான்.

(இ-ள்.) என்ற அறவோர் எதிர் ஏ முகமலர்ந்து - என்றுகூறிய வசிட்டாதி முனிவரெதிரே முகமலர்ச்சிகொண்டு, குன்றம் அடக்கும் குறுமுனிவன் கூறுவான் - விந்தமலையையடக்கிய அகத்தியமுனிவன் கூறுகின்றான், முனிகாள் நன்று - முனிவர்களேயிவ்வினாநல்லது, நான் உள்ளத்து எண்ணிய ஆங்கு - நான்மனத்திலெண்ணியபடி, இதனை ஒன்ற மொழிந்தீர் என்றான் - இதனைப் பொருந்தவினாவினீரென்று, பின் உம் வியந்து ஓதுவான் - பின்னும் அதிசயித்துக் கூறுவான்.

என்றான் முற்றெச்சம். சிவபெருமானருளிய பணியால்திருக்கயிலையினின்று நீங்கிப் பொதியமலையையடையுங்காலையில் விந்தமலை விண்ணுலகின்முகடுதோய வளர்ந்திருத்தலை நோக்கிச் சிறிதுவழிவிடுகவெனப்பணிக்க, சந்திரசூரியர்களியக்கமற வுயர்ந்துநிற்குமென்னை மதியாது குறியையாகிய நீ கூறுமொழிக்கஞ்சி வழிவிடுவேனோவென்று அஞ்சாது அம்மலைகூற, முனிவரர் சினங்கொண்டு நகைத்துத்தமது திருக்கரத்தைப்பிரமாண்டமளவு நீட்டியம்மலையினுச்சியின்மேல்வைத்து நிலத்திலழுத்தினர்என்பது "சேயுயர்நிவப்பிற்றுகிச்சேண்புகும்விந்தமென்னும்-மாயிருங்குவடு கேண்மோ மற்றியாம்பொதியவெற்பிற் - போயிருந்திடவேயுன்னிப் போந்தனமதனுக்கின்னே - நீயொருசிறிதுசெல்லு நெறியளித்திடுதியென்றான். எதிகதிர்மதியினுக்கு மேகருந்திறத்தால்வான - நெறியினையடைத்துத்தொல்லை நெடியமால்போன்றுநின்றேன் - குறியநிற்கஞ்சியாறு கொடுப்பனோவெனதுதோற்றம் - அறிகிலைமீண்டுபோகென்றவ்வனாமொழிந்ததன்றே. கேட்டலுமதனைச்சீற்றங்கிளர்ந்திடநகைத்துநாதன் - தாட்டுணையுன்னித்தொன்னுட்சதமகன்வேண்டவாழி - மாட்டுறச்செறிந்தகையை மலரயன்பதத்தின்காறும் - நீட்டினன்றவமேயன்றி நெடும்பொருள்பிறவுமுண்டோ - அற்புதமமரர்கொள்ள வாற்றவுங்குறியோன்விந்த - வெற்பினதும்பர்த்தன்னின் மீயுயர்குடங்கைசேர்த்தி - வற்புறலூன்றவல்லேமற்றதுபுவிக்கட்டாழ்ந்து - சொற்பிலம்புகுந்துசேடன் றென்னிலையடைந்ததன்றே" எனக் காந்தபுராணம் விந்தம்புலம்புகு படலத்திற் காண்க. (௪)

பண்ணுன்மறைமுடியுந்தேறும்பரசிவனை
யெண்ணுலளவிறந்தவெக்கலையாற்கண்டுமுளக்
கண்ணுலறியாதார்வீட்டின்பங்காண்பரோ
மண்ணுறியாறுநீந்ததனிமாதவரோ.

Koviloor Digital Library

(இ-ள்.) மண் ஆதி ஆறாறு உம் - முப்பத்தாறுதத்துவங்களையும், நீத்த தனி மாதவர் ஏ - நீக்கிய ஒப்பில்லாத பெரிய தபோதனர்களே, பண் - இசையமைந்த, நால் மறைமுடி உம் தேறாத பரசிவனை - நான்குவேதங்களின் சிரசுகளாகிய பிரப ஞ்சருதிகளும் அறிதற்கரிய பரசிவத்தினை, எண் ஆல் அளவு இறந்த - ஒன்றிரண்டென்னும் எண்களாலளத்தற்கரிய - ஏ கலை ஆல் கண்டு உம் - எந்தநூலாலுமுணர்ந்து ம், உளம் கண் ஆல் அறியாதார் - ஞானக்கண்ணாலுணராதவர் - வீடு இன்பம் காண்பர் ஓ - மோக்ஷவின்பங்காண்பார்களோ. (காணார்கள் என்றபடி.)

விந்துவின்காரியப்பாடாகிய வேதங்களாலறிதற்கரிய விறைவன் அவற்றின் வழிநூல் சார்புநூல்களாலறிதற்கெளியன் அல்லன் என்பார் எக்கலையாற் கண்டும் வீட்டின்பங்காண்பரோ எனவும், பலகலைகள் என்பார் எண்ணாலளவிறந்தவெனவும், திருவருளாலாகிய பார்வையாலுணரவேண்டும் என்பார் எதிர்மறைமுகத்தால் உளக்கண்ணாலறியாதார் வீட்டின்பங்காண்பரோ வெனவும், போகங்களைப் பற்றுதற்குரிய கருவிகளென்பார் மண்ணாதியாறாறுநீத்ததனிமாதவரேயெனவுங் கூறினார். முப்பத்தாறுதத்துவங்களாவன ஆன்ம தத்துவம். (௨௪) வித்தியாதத்துவம் (௭) சிவதத்துவம் (௫) ஆன்மதத்துவம் பூதம் (௫) புலன் (௫) ஞானேந்திரியம் (௫) கன்மேந்திரியம் (௫) அந்தக்கரணம் (௪) ஆ (௨௪) வித்தியாதத்துவம் காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன் மாயை. சிவதத்துவம் சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சத்தி, சிவம். (௫)

அஞ்செவியினூறுபடக்கேட்டபடியாலவாய்ப்
பஞ்சமுகச்சோதிப்பரனைப்போயர்ச்சித்து
நெஞ்சநெகக்கண்டுநினையாவழிநினைந்து
வஞ்சவினைவேர்களைவான்வம்மின்களென்றானே.

(இ-ள்.) அம் செவியில் ஊறுபட கேட்டபடி - உங்களழகியசெவியிற் சுவடுபடக் கேட்டவண்ணம், ஆலவாய் பஞ்சமுகச்சோதிபரனை போய் அர்ச்சித்து - திருவாலவாயிலெழுந்தருளிய ஐந்து திருமுகங்களையுடைய சோமசுந்தரக்கடவுளை நாஞ்சென்று அருச்சனைசெய்து, நெஞ்சம் நெகக்கண்டு-மனம் நெக்குவிட்டுருகத்தரிசித்து, நினையாத வழி நினைந்து - தற்போதவழியால் நினையாதவண்ணம், நினைந்து - அருட்போதவழியால்நினைந்து, வஞ்சம் வினைவேர் களைவான் - வஞ்சமமைந்த ஆகாமிய வினையைவேரோடறக்களைய, வம்மின்கள் என்றான் - வாருங்களென்றார்.

பிராரத்துவம்புசிக்கும்போது இடையிலேறுதலால் வஞ்சவினையென்றார். (௬)

மங்கலவோரைவருதினத்தில்வானிழிந்த
கங்கைபடிந்துலகநாயகனைக்கைதொழுது
புங்கவர்முன்சங்கற்பஞ்செய்தருச்சைபூண்டொழுகி
யங்கவர்வாயாசிமொழிகேட்டகமகிழ்ந்தே.

(இ-ள்.) மங்கல ஓரை வருதினத்தில் - சுபமுகூர்த்தங்கூடிய தினத்தில், வான் இழிந்த கங்கைபடிந்து - ஆகாயத்தினின்றுவந்த கங்காதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, உலகநாயகனை கைதொழுது - விச்சுவநாதனைக் கைகூப்பிவணங்கி, புங்கவர் முன் சங்கற்பஞ்செய்து அருச்சை பூண்டு ஒழுகி - தம்மையொத்த முனிவர்கள்முன் சங்கற்பஞ்செய்து அவருடன்பாடுபூண்டு நடந்து, அங்கு அவர்வாய் ஆசிமொழிகேட்டு அகம் மகிழ்ந்து - அவ்விடத்தில் அவர்கள் ஆசிவசனங்கேட்டு மனமகிழ்ச்சிகொண்டு.

Koviloor Digital Library

பகீரதன்பொருட்டு அவன்வேண்டுகோளால் ஆகாயத்தினின்றிழிந்த கங்கையாதலால் வானிழிந்த கங்கையெனவும், உலகம் விச்சுவம் ஆதலால் விச்சுவநாதனை உலகநாதன் எனவும், தானெடுத்தகாரிய முட்டின்றிமுடிந்த பயன் கைகூடுதற்குச் செய்யுங்கடனாதலால் புங்கவர்முன் சங்கற்பஞ்செய்து எனவுங்கூறினார்.(எ)

ஐம்புலனுங்கூடற்பெருமானடியொதுக்கி
நம்பனுருவைந்தெழுத்துநாவாடக்கைகூப்பித்
தம்புனிதசைவதவத்தெய்வத்தேர்மேற்கொண்
டும்பர்வழிநடக்கலுற்றார்கணற்றவரே.

(இ-ள்.) நல்]தவர் - நல்லவசிட்டாதிமுனிவர்கள், ஐம்புலன் உம் கூடல் பெருமான் அடி ஒதுக்கி - தமதுபஞ்சேந்திரியங்களையும் நான்மாடக்கூடலி லெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுளின் திருவடியில் நிலைபெறச்செய்து, நம்பன் உரு ஐந்தெழுத்து உம் நா ஆட கைகூப்பி - சிவபெருமான் திருவுருவாகவமைந்த ஸ்ரீபஞ்சாக்கரங்களையும் நாவுச்சரிக்கக் கைகுவித்து, தம்புனிதம் சைவம் தவம் தெய்வம் தேர் மேற்கொண்டு - தம்மாற்கொள்ளப்பட்ட களங்கமில்லாத சைவநெறியினின்று வழுவாத தவமாகிய தெய்வத்தன்மைவாய்ந்த தேர்மேலேறி, உம்பர்வழி நடக்கலுற்றார்கள் - ககனநெறியாகச் செல்லத்தொடங்கினார்கள்.

புலன்வழிச்செல்லும் பரதந்திரராகாது அவற்றைத் தம்வழிப்படுத்துஞ் சுதந்திரராயினார் என்பார் ஐம்புலனுங் கூடற்பெருமா னடியொதுக்கி யெனவும், நகரந் திருவடியாகவும் மகரம் திருவயிறாகவும் சிகரம் திருத்தோளாகவும் வகரம் திருமுகமாகவும் யகரந் திருமுடியாகவுங் கொண்டருளினர் என்பார் நம்பனுரு வைந்தெழுத்தும் எனவும், ஓர்காலத்து வாதனையால் நழுவாது நிலைபெறுதற்கு உச்சரித்தனர் என்பார் நாவாடக்கைகூப்பி யெனவுங்கூறினார். "ஆடும்படிகேணல்லம்பலத்தானையனே - நாடுந்திருவடியிலேநகரம் - கூடு, மகாமுதரம்வளர்தோள்சிகரம் - பகருமுகம் வாமுடியப்பார்" எனவரும் உண்மைவிளக்கத்தால் உணர்க. (அ)

செய்யசடையர்திருநீறுசண்ணித்த
மெய்யர்தவநோற்றிளைத்தமேனியினருட்புறம்புந்
துய்யரணிகண்டிகையர்தோலுமருங்குடைய
ரையதவத்துக்கணிகலம்போற்போதுவார்.

(இ-ள்.) செய்ய சடையர் - செவந்த சடாமுடியையுடையவரும், திருநீறு சண்ணித்த மெய்யர் - திருநீறுபூசிய மேனியையுடையவரும், தவம் நோற்று இளைத்த மேனியினர் - தவஞ்செய்திளைத்த உடம்பினையுடையவரும், உள்ளும் புறம்பும் துய்யர் - அகமும் புறமுந்தூயரும், அணிகண்டிகையர் தோல் உம் மருங்கு உடையர் - உருத்திராட்சக்கண்டிகையையணிந்தவரும் புலித்தோலையும் இடையில் ஆடையாகவுடையவர்களுமாகிய முனிவர்கள், ஐயதவத்துக்கு அணிகலம்போல் போதுவார் - அழகியதவத்திற்கு ஆபரணம்போல வருவாராயினர்.

மரவுரியும் அன்றியெனநிற்றலால் இறந்தது தழீஇய உயர்வுசிறப்புப்பொருட்டு. இவை தவத்தின் அறிகுறிகளாதலால் தவத்துக்கணிகலம்போல் என்றார். ஐய அகரவிற்றுரிச்சொல். (கு)

Koviloor Digital Library

அறுசீரடியாசிரியவிருத்தம்.

புண்ணியந்தழைக்குந்தெய்வத்தலங்களும்புலன்கள்வென்றோர்
நண்ணியவனமுந்தீர்த்தநதிகளுந்தவத்தோர்நோற்கும்
வண்ணமுநோக்கிநோக்கிமலயமாமுனிவன்காட்டக்
கண்ணிணைகளிப்பநோக்கிக்கைதொழுதிறைஞ்சிச்செல்வார்.

(இ-ள்.) புண்ணியம் தழைக்கும் தெய்வம் தலங்கள் உம் - வசிப்போர்க்குப் புண்ணியம் பெருகத்தழைத்தோங்குந் தெய்வத்தன்மையையுடைய திருப்பதிகளையும், புலன்கள் வென்றோர் நண்ணிய வனம் உம் - ஐம்புலன்களையும்வென்ற முனிவர்கள் வாசஞ்செய்யும் தபோவனங்களையும், தீர்த்த நதிகள் உம் - தீர்த்தங்கள் ஆகிய நதிகளையும், தவத்தோர் நோற்கும் வண்ணம் உம் நோக்கி நோக்கி - தவத்தினையுடையோர் தவநிலையினின்று நோற்கும் வகையையும்பார்த்து ஆராய்ந்து, மலயமாமுனிவன்காட்ட - பொதியமலையில்வசிக்கும் அகத்தியமுனிவர் காட்டியருள, கண் இணை களிப்ப நோக்கி கைதொழுது இறைஞ்சி செல்வார் - தமது இரண்டுகண்களுங் களிகூரப்பார்த்துக் கைகூப்பிவணங்கிச் செல்வாராயினர்.

நோக்கி என்றும் இரண்டனுள் முன்னது பார்த்து என்றும் பொருள்மேலும் பின்னது ஆராய்ந்து என்றும் பொருள்மேலும் நின்றன. (௧௦)

சீறுதொழிலிலங்கைவேந்தைச்செகுத்திடவிராமன்பூசித்
தாறணிவிருபக்கண்ணனருள்பெறுதலமீதும்ப
ரேறிவீழ்ந்திறந்தோர்முன்னமெண்ணியவெண்ணியாங்கே
மாறியபிறப்பினல்குமலையிதுகாண்மின்காண்மின்.

(இ-ள்.) சீறு தொழில் இலங்கைவேந்தை செகுத்திட இராமன் பூசித்து - கோபித்தலே தொழிலாக மேற்கொண்ட இலங்கை நகரையாளும் இராவணனை வெற்றிகொள்ள இராமமூர்த்தி பூசனைசெய்து, ஆறு அணி விருபக்கண்ணன் அருள் பெறு தலம் ஈது - கங்கையையணிந்த விருபாக்கரது திருவருளைப்பெற்ற ஏமகூடமாகிய திருப்பதியித்தலம், உம்பர் ஏறி வீழ்ந்து இறந்தோர் - சிகரத்தின்மேலேறிவீழ்ந்து உயிர்விட்டவர், முன்னம் எண்ணிய எண்ணிய ஆங்கு - முன்பு கருதினவற்றைக்கருதினபடியே யடைய, மாறிய பிறப்பில் நல்கும் மலை இது - மறுமையில் கொடுத்தருளும் திருப்பருப்பதம் இந்தத்திருமலை, காண்மின் காண்மின் - இவற்றைக்கண்டு தரிசியுங்கள்.

சானகியைச் சிறையிட்ட இராவணனைவெல்ல இராமமூர்த்திபூசித்துப்பேறுபெற்றதலம் ஏமகூடம் ஆதலால் இராமன்பூசித் தாறணி விருபக்கண்ண னருள் பெறுதல மீது எனவும், மறுமையில் புத்திமுத்தியென்று மிரண்டிலொன்றடையக்கருதித் தன்மேலேறிவீழ்ந் துயிர்விடுவோர்க்குக் கருதியவாறருளுவது திருப்பருப்பதம் ஆதலால் உம்பர் ஏறிவீழ்ந்திறந்தோர் முன்னம் எண்ணியவெண்ணியாங்கே - மாறிய பிறப்பினல்கு மலையிதுகாண்மின்காண்மின் எனவுங்கூறினர். திருப்பருப்பதத்தில் சுவாமி திருப்பெயர் பருப்பதேசுவரர். அம்மைதிருப்பெயர் பருப்பதமங்கையம்மை. ஏமகூடம் என்பது "ஒக்கொளிமணியுந் தபனியத்திரளுங் கோமளச்சந்தனக்குறடும் - சக்கரமிக்குயிர்க்குங் கழைசெற்றணியுங் கையெரிக்கொண்டெழுருவி - மைந்தடைத்திசையென் களிறுகளுக்கு மன்றுபேரோதையினெழுங் - அந்தரவேம

Koviloor Digital Library

கூடத்தி னமர்விருபாக்கனேயெனவும்" எனக்காஞ்சிப்புராணத்தில் இருபத்தெண்டளிப்படலத்தில் வருதல்காண்க. (௧௧)

சுரபிநீள்செவியிலிங்கச்சுடருருவாயினன்ற
னிரவினிற்றிருத்தேர்மன்றனடக்குமூரிவ்வூர்மேலை
யுரவுநீர்க்கரைத்தேண்மாதத்துயர்ந்தகார்த்திகையிற்றேரூர்ந்
தரவுநீர்ச்சடையான்வேள்விநடக்குமூரவ்வூர்காண்மின்.

(இ-ள்.) சுரபி நீள் செவி இலிங்கம் சுடர் உரு ஆயினன் தன் இரவினில் திருத்தேர் மன்றல் நடக்கும் ஊர் இ ஊர் - பசுவினது நீண்டசெவியைப்போல விளக்கம்வாய்ந்த சிவலிங்கத்திருவுருவங்கொண்ட இறைவரது சிவராத்திரியில் அழகிய ரத மகோற்சவநடக்குந் திருக்கோகர்ணம் இத்திருப்பதியாம், உரவு - பெரிய, மேலை நீர்கரை - மேற்குக்கடலின்கரையில், தேள்மாதத்து-விருச்சிகமாதத்தில், உயர்ந்தகார்த்திகையில் - நக்ஷத்திரங்களிலுயர்ந்த கார்த்திகை நக்ஷத்திரத்தில், அரவுநீர் சடையான்-பாம்பையுங் கங்கையையும் அணிந்த சடாமகுடத்தையுடைய இறைவர், தேர் ஊர்ந்து - தேரிலாரோகணித்தருள, வேள்வி நடக்கும் ஊர் - திருவிழாநடக்கும் திருவஞ்சைக்களம், அ ஊர் - அத்திருபதியாம், காண்மின் - கண்டு தரிசியுங்கள்.

முருகக்கடவுளுக்கு முலைப்பாலருத்தி வளர்த்தலால் உயர்ந்த கார்த்திகையென்றார். ஊர்ந்து செயவெனெச்சத்திரிபு. திருக்கோகர்ணத்தில் சுவாமிதிருப்பெயர் மாபலநாதர். அம்மைதிருப்பெயர் கோகர்ணநாயகியம்மை. திருவஞ்சைக்களத்தில் சுவாமிதிருப்பெயர் அஞ்சைக்களத்தப்பர். அம்மைதிருப்பெயர் உமையம்மை. (௧௨)

விற்பயிறடக்கைவேடன்மென்றவூன்பாகம்பார்த்தோன்
பொற்புறுகிரியீதண்டம்புழைபடவிடத்தாணீட்டி
யற்புதன்காளிதோற்பவாடியதிதுமாநீழற்
கற்புடையொருத்திநோற்கும்பிலமிதுகாண்மின்காண்மின்.

(இ-ள்.) வில் பயில் தட கைவேடன் மென்ற ஊன்பாகம் பார்த்தோன் பொற்பு உறுகிரி ஈது - வில்லையேந்திய நீண்டதிருக்கரத்தையுடைய கண்ணப்பநாயனர் ஊட்டுதற்குச் சுவைபார்க்கமென்ற தசையினைப் பாகம்பார்த்த இறைவர் எழுந்தருளிய பொலிவுமிக்க திருக்காளத்தியென்னுந் திருமலை யித்திருப்பதியாம், அற்புதன் காளிதோற்ப - ஞானமே திருமேனியாகவுடைய இறைவர்காளி தோற்படையும்படி, அண்டம்புழைபட இடத்தாள் நீட்டி ஆடியது இது - அண்டங்கள் தொளைபட இடக்கால் நீட்டியாடியருளிய திருவாலங்காடென்னுந் திருப்பதி யித்தலமாம், மாநீழல் கற்பு உடைய ஒருத்தி நோற்கும் பிலம் இது - மாமரத்தினிழலின்கீழ்க் கற்பினையுடைய உமாதேவியார் தவஞ்செய்யும் பிலத்துவாரமாகிய காமக்கோடிபீடமென்னுந் திருப்பதியித்தலமாம், காண்மின் காண்மின் - இவற்றைக்கண்டு தரிசியுங்கள்.

விற்பயில் தடக்கைவேடன் மென்றவூன்பாகம்பார்த்தோன் என்பதன்வரலாற்றை முன்னர்க்காண்க. நிம்பன், சும்பன் என்னும் அசுரர்களால் இந்திரன்முதலியோர் தமது செல்வத்தை யிழந்து உமாதேவியார் திருவடிகளைச் சரணடைந்து தமது துன்பத்தையெடுத்துக்கூற, கருணைகூர்ந்திரங்கி யஞ்சற்கவென்றருளிக் கயிலையங்கிரியின் சாரலில் அம்மை தனியேவந்தெழுந்தருளியிருக்கும்போது,அவ்வசுரர்களின்பரிசாரகராகிய சண்டன் முண்டனென்று மிருவர் அங்குவந்து நியார் தனி

Koviloor Digital Library

த்திரத்திற்குக் காரணம்யாது சம்பன் என்னும் அசுரேந்திரன் மூவுலகிற்கும் அதிப
ன் அவனிடம் வருகவென்றுகூற, நாம் தவம் இங்குச் செய்துகொண்டிருக்கின்றோம்
ஆதலவரோடிவை யாடிலமென்று உமாதேவியார் மறுத்தருளினர். அதுகேட்ட அவ்வ
சுரரிருவரும் சம்பனென்னும் அவ்வசுரேந்திரனுக்குக்கூற அவன்கேட்டு இனியொரு
தரம் சென்றழையுங்கள் வாராராயின் வலிந்துபற்றி வருகவென்றேவ, அவர்கள்செ
ன்று நெருங்கும்போது உமையார் கோபித்த அளவில் திருத்தோளினின்று ஓர்பெ
ண்தோன்றி யவர்களைக்கொன்று அவ்வுமையாரால் சாமுண்டியெனப் பெயர்பெற்று
விளங்கினள், அவ்வசுரர்களோடுவந்த வீரர்களுள் எஞ்சிய சிலர்சென்று அவ்வசுரேந்
திரனுக்குணர்த்த, அவன் தூமக்கண்ணன்முதலிய அசுரவீரர்களையேவ அவர்கள் நெ
ருங்கியபோது அபிராமிமுதலிய சத்தமாதர்களைத்தந்து அவர்களைப்போரில்வதைத்த
தைக்கேள்வியுற்று நிசும்பனென்னு மசுரேந்திரன் சேனைகளோடு போர்க்குவந்து
அவனுமிறந்தபின் அவன்மூத்தோனாகிய சம்பனும் போரில்வந்து மடிந்தனன்.

அதுகேட்ட அவர்கள் மருகனாகிய இரத்தவீசனென்னும் அசுரன் போர்க்குவந்
தானிலையில் சத்தமாதர்களாயுதத்தால் தொளைப்புண்ட அவனுடல் சிந்தும் ஒவ்வோ
ரிரத்தத்துளியிலும் அசுரவீரர்கள் பலர் தோன்றி பெருக்கும்போர்செய்தலை, அச்சத்த
மாதர்கள்கண்டதிசயித்து உமாதேவியார்க்குக்கூற, உமாதேவியார் மாயையானது
அவ்வுமாதேவியார் கோபமுற்றுத்திரண்டு ஒருவடிவெடுத்தாற்போலக் காளியென்
னும் பெயர்கொண்டுதோன்ற, அக்காளியைநோக்கியருளி நாம் அவனோடு போர்செ
ய்யும்போது சிந்துமுதிரத்தையுந் தசையையும் விழாது கபாலத்திலேந்தி யருந்துக
வென்றுகூறி யப்பணியிற்றிருத்தியவளையும்வதைத்துக் காளியைநோக்கி நீ தேவர்
களை யவருலகிற்குடியேற்றிப் நியாவர்க்கும்வேண்டி யாக்குவரங்களைத்தந்து வ
டாரணியமாகிய திருவாலங்காட்டிற்குச்சென்று அங்குப் பெருமானாரோடு நடனஞ்
செய்து அவர்பாலுறைவாயென்றுவரமருள, வரமேற்று அங்குச்சென்று தன்னோடுவ
ந்த வேதாளமுதலிய கணங்கள் மிருகமுதலிய பலவுயிர்களுங்கொன்றுதொலைக்க வ
சித்திருக்குங்காலத்தில், நாரதமுனிவரால் திருக்கயிலையினின்று சுநந்தமுனிவர்க்கும்
கார்க்கோடகமுனிவர்க்குந் திருநடனதரிசனந் தரிசிப்பிக்கத் திருவுளங்கொண்டு ஐய
னார்முதலியோர்சூழ வடாரணியத்தை யடைந்தருளுங்காலையில், தன்சேனையிலுள்
ள இடாகினிமுதலியோரால் தெரிந்த காளி போர்க்குவந்துநோக்கிப் போரால் வெ
ல்வதரிதென்று சிந்தித்து நடனத்தால்வெல்வதகருதி யெம்மோடு நடஞ்செய்யவ
ல்லையோவென, அதற்குப் பெருமானிசைந்து தம்மைநோக்கித் தவஞ்செய்யுமு
னிவர்களையும் அயன்முதலிய தேவர்களையும் வரித்துச் சண்டதாண்டவஞ்செய்து
வென்றனரென்பது "தானவர்போலுக்கஞ்சித் தருநிழலிங்கிப்பூமேற் - கானவர்
போலமல்கிக் கலங்கினர்கடவுண்மூவர் - ஆனவர்மாற்றலாற்று ரருளினையளித்தியெ
ன்ன - வானவர்போற்றத்தேவி மாற்றுதிர்வருத்தமென்றே. மணிசெறிபூசன்மேவி
வளரொளிமல்கவோடி - அணிபெறமேமரச்சண்ட முண்டருமாங்குமேவித் - தனி
யுறுமொருபயனைச் சம்பனிப்புவளமுற்றும் - பணிசெயவமர்வனன்னோன் பயிலி
டம்படர்ந்தியென்ன. மின்னொளியேதுமுன்னம் விளம்பினனென்னவெய்யோன் - தி
ண்டிதம்பற்றிச்சென்று மெனவவர்சேரச்சேறி - கண்டுவெம்படைகண்மேனி யெ
க்கனும்யத்தியின் - மூன்பெர்சண்டமுண்டர் படைபெலாமுருக்கினாரால். வலிந்
தெழுஞ்சண்டனோடு முண்டனைவதைத்தவாற்குற் - பொலிந்தசாமுண்டியென்றே
புடமிற்புகைமேல - மலிந்துளமகிழ்வாயென்று மேக்கவயில். முழங்கரியென்
னச்சிந முனிவோடுமேழுவர்தம்மை - வழங்கினளண்டகோடி மடிதரவொடிய
லுந்திக் - சேழ்க்கெனவேதிளர். அதிவருமவையமேவி யகிலமுமச்சமேவுங் - குதி

Koviloor Digital Library

யுருமுருவினின்றுந் தோன்றினள்கோபமுற்றுஞ் - செறிதருமுருவமென்னத் தெறுமுகங்காளமாக - வெறியுறுகாளிதோற்றம். சோரியங்கவர்கள்மேனி சொரிதருதுளியொன்றேனும் - பாரிடையுறாதுநின்கை பற்றியகபாலத்தேந்தி-வாரியின்னிறைச்சியோடு வாய்மடுத்திடுதியென்ன. தனிமுதலாயபெம்மான் றாண்டவநிருத்தமேவற் - குனிவனமடைந்தின்பா லுற்றிடுதுவனைகமேவி - முனிவரோடமலனோடு முதிர்நடமருளிச்செய்து - கனிவொடுமவன்பால்வைகிக் காசினிபோற்றவாழ்தி. ஊழியிற்கொள்ளுங்கால வுருத்திரவடிவமூழிப் - பாழிவெங்கனலைச்சீறும் வயிரவப்படிவமாக - வாழிமாமறையோனாதி வானவர்நடுங்கியின்னே - பூழியாமுலகமென்ன வஞ்சினர்புழுங்கிவேர்த்தார். என்றனக்கியைந்தசெய்கை நின்றனக்கியையுமாகில் - நன்றெனக்கேட்பனென்ன நயந்தனையேதுநீயாம் - ஒன்றெனத்துணிவலின்னவுவந்திடினிருத்தமென்றாள் - குன்றெனத்திரண்டதோளா னன்றெனக்குளிர்ந்தநெஞ்சம். அங்கவர்புரிவினைக்கியங்கணனவனிமீது - தங்கவோர்திருத்தாளூன்றித் தாளொன்றுககனமேற்றிப் - பங்கயக்கரமொன்றோங்கும் பாதமேற்கவசமீந்தோர்-செங்கரமூன்றுந்தாண்மேற் சென்றுறவுருவஞ்செய்ய. ஒருங்குலகூழிமேவாதருளளித்தலகநாதன், முருங்கடற்பவுரியாய முறையுறுநிலையமேவ - மருங்குறுகாளிமோகமருவினண்மயங்கிவிழ்ந்து -பெருங்கையாலவனிபற்றிப் பீடுபெற்றுவிமேவி" எனவருந் திருவாலங்காட்டுப்புராணத்தாலும், வேதமே சிவபெருமான்பணியால் தளிர்த்துப் பூத்துக்காய்த்து மாமரமாய் நிற்றலால் மாநீழல் எனவும், இறைவர் திருக்கண்புதைத்தநீங்கால் உமையார் கருநிறம்வாய்ந்தமையால் அக்கருநிறம் நீங்கிக் கவுரநிறம்பெற்று அத்தீங்குதீரக் கச்சித்திருப்பதியையடைந்து பிலமாகிய காமகோடிபீடத்திருந்து தவஞ்செய்தலால் மாநீழற் - கற்புடையொருத்தி நோற்கும்பிலமிதுகாண்மின் எனவுங்கூறினார். இறைவர்பணியால் வேதங்கள் தளிர்த்துப்பூத்துக்காய்த்து மாமரமாய்நிற்றல் "பகுப்பின்றிமன்னும் பழமாமறைதன்னைநோக்கி - வகுக்கும்படைப்பின்பொருட்டுத்தனிமாவதாகிச் - செருக்குந்திறல்வல்லமயானத்தின் மேற்றிசைக்கண் - தொகுக்குந்தளிர்பூகனிதுன்றவயங்குகென்றான். தாவரும்பழமாமறைதம்பிரானருளான் - மேவருந்தனிச்சூதமாய் மயானத்தின்மேல்பாற் -பூவரும்பிமென்றளிர்கனிபுதுமலர்துறுமி - ஓவருங்குளிர்நிழல்குலாயோங்கியதன்றே" எனக் காஞ்சிப்புராணம் திருவேகம்பப்படலத்திலும் "ஆயினுநினக்குமைந்தராகிய வுலகத்துள்ளோர் - மேயினவலக்கணிப்பா னுதல்விழிவிழித்தாங்கண்டாய்-பாயினவிருளானியுங் காளிமம்படைத்தாயென்ன. வெயில்கிடந்திமைக்குஞ்செம்பொன் விலங்கலின்வடபாலெய்திச் - செயிர்தபுதவங்களாற்றிக் காளிமந்தீர்ந்துநீஞ்சொற் - குயிலனாய்கவுரியாகிக் குழைகிழித்தொழுகும்வாட்கண் - மயிலனார்மாடவீதிவளநகர்க்காஞ்சிநண்ணி. திருந்தநம்பூசையாற்றி விழிபுதைசெயலால்வந்த - அருந்தவறொழிவாயாக. கடாமதக்களிற்றைவென்ற கஞ்சுகப்புராணனை - விடாதுளத்தமைத்துநீநெறிச்சென்மங்கைவில்லிடும் - வடாதுகுன்றிவர்ந்துசொன்ன வைப்பனைந்துகாதலிற் - றடாதவன்புமீக்கொளுந் தவஞ்செயத்தொடங்கினாள். தணந்தநோய்தணந்திடத் தழீஇயினார்தழுவலும் - வணங்குலாயனத்தினிர் வயங்குபாலினீங்கியாங் - கிணங்குகாளிமத்துவக்கு நீங்கியேற்றரக்கருக்-கணங்குறத்துகன்னியாகவண்டமீன்றவன்னையும். கவுரவாணிறத்தளாய்க் களிப்புமிக்குமேலெழ. ஆயிடைநின்றாநந்தப் பரவெளியாம்பி லச்சூழலினையச்செல்வாள் - பாயமணிப்பெருவாய்தலெழுனையுந்தான்றுறந்துபையவுள்புக் - கேயுமருட்பீடத்தினியனோக்கி விம்மிதமிக்கெய்தியந்த - மாயிரும்பீடத்தலையின் முக்கோணவடிவினெலா மகிழவைகி. நின்மலமாய்ப்பேரொளியாய் நிறைவாகியானந்த நிலையாயோங்குஞ் - சின்மயத்தினிரண்ட

ன்றியென்றன்றிக்கலந்தசெயலற்றுத்தன்றன் - தன்மையெலாமொழிந்துளம்போற்றபனியப்பெற்றிருவுருகெஞ் சவியாவண்ணம் - நன்மையதாஞ்சிவயோகத்தினிதிருந்தானுலகமெலாநடலைமாய" என ஷெ புராணத்தில் திருக்கண்புதைத்த படலத்திலும். வழுவாய்ப்படலத்திலும், தவஞ்செய்தவிலத்தினைக் காமக்கோடிபீடம் என்றது "ஒருமுறையக்கட் காமமார்தரும முறைநூர்தமக்குமத்தருமச் - தருபயன்கோடியாதலிற்காடத் தடத்திழிகடாம்படுகளுழிப் - பெருவளாவதனப்பிள்ளையைக்குகனைப்பெற்றவளவர்பிலமதநான் - கருதருகாமக் கோடியென்றுலகிற் காரணப்பெயரினால்வயங்கும்" என ஷெ புராணத்தில் விரட்டகாசப்படலத்திலும் வருதல்காண்க. திருக்காளத்தியில் சுவாமிதிருப்பெயர் காளத்தீஸ்வரர். அம்மைதிருப்பெயர் ஞானப்பூங்கோதை. திருவாலங்காட்டில் சுவாமிதிருப்பெயர் ஊர்த்ததாண்டவர். அம்மைதிருப்பெயர் வண்டார்பூங்குழலியம்மை. ஸ்ரீகாஞ்சிபுரத்தில் சுவாமிதிருப்பெயர் திருவேகம்பநாதர். அம்மைதிருப்பெயர் காமாக்ஷியம்மை. (கங)

திருமறுமார்பன்காவற்செயல்பெறவரனைப்பூசித்
திருகரமுகிழ்த்துநேர்நின்றேத்திடமிதுவாமோத்தி
னுரைவரம்பகன்றமுக்கணுத்தமன்சந்தைகூட்டி
யருமறையறவோர்க்கோதுவித்திடமதனைக்காண்மின்.

(இ-ள்.) திருமறு மார்பன் காவல்செயல்பெற — திருமகளையும் ஸ்ரீவற்சமென்ற மறுவையும் பொருந்திய மார்பையுடைய திருமால் காக்குந் தொழிலையடைய, அரனைப்பூசித்து இருகரம் முகிழ்த்து நேர்நின்று ஏத்து இடம் இது ஆம் - சிவபெருமானைப் பூசனைசெய்து இரண்டுகைகளையுங்கூப்பி நேரேநின்று துதிக்கும் திருமாற்பேறு என்றதிருப்பதி யித்தலமாம், ஓத்து இன் உரை - வேதத்தின்பொருளாகிய, வரம்பு அகன்ற முக்கண் உத்தமன் - அளவையாலளத்தற்கரிய திரிநேத்திரத்தையுடைய இறைவர், சந்தை கூட்டி அருமறை அறவோர்க்கு ஓதுவித்த இடம் - சந்தைகூட்டிப் பெறுதற்கரிய வேதத்தினை முனிவர்களுக்கு ஓதியருளிய திருவோத்தூரென்றதிருப்பதி, அதனைகாண்மின் - அதுவாம், அவற்றைக்கண்டு தரிசியுங்கள்.

சந்தைகூட்டலாவது தாம் கூறிய வேதவாக்கியங்களை யொருசேரச்சொல்லுவித்தல். திருமால் ஓர்காலத்தில் குபனென்னும் அரசன்பொருட்டுத் ததீசிமுனிவரோடு போர்செய்யுங்காலையில் தன்சக்கரத்தைத்தூண்டியபோது அவர்மெய்யிற்றுக்கி வாய்மடிந்தபோனதைக்கண்டு, இனியசுரர்களையழித்து எவ்வாறுலகம் புரப்பது எனக் கவலைகூர்ந்து, தேவர்களால் சலந்தரனைத்தடிந்த சுதரிசனமென்னும் சக்கரம் சிவபெருமானிடத்துள்ளதென்றுணர்ந்து சென்றுத்திருப்பதியையடைந்து, நீண்டச் செவந்தபெருமானைவழிபட்டு நாடோறும் ஆயிரந்தாமரைகளாலருச்சித்தொழுகுநாளில் ஓர்நாள், இறைவர் அவரன்பைப் பரிசோதித்தற்பொருட்டு ஓர்தாமரையைமறைத்தருளத் தமது சிவபூசைக்குக் குறைபாடுவந்ததேயென்று வருந்தித் தமது கண்ணிடந்தருச்சிக்க, அவ்விறைவர் கருணைகூர்ந்து அச்சுதரிசனத்தையருளி வேண்டியாங்குப் பெறுதற்குரியவரையாக்கினமையால் இத்தலத்திற்குத்திருமாற்பேறு எனக் காரணப்பெயர்வந்ததென்பது "குலவியங்கவல்பூண்ட குபனெனுமரசற்காகச் - சிவநெறித் ததீசியோடுஞ் செருச்செய்தான்விடுத்தவாழி -தவமுனிவயிரயாக்கை தாக்குவாய்மடிந்திலைபெ-லைய்வாமனத்தருநிறைச்சமர்துறந்தமாயோன். சேயிழைக்கவுரிசென்னை வழிபாச்செவர்தரிதோன்றிப் - பாயொளிப்பவளக்குன்ற ரெனப்பெயர்படைத்து நான்காம் - ஆயிரமுகக்கமலங்களருந்தவர்வழுத்தவைகும் - காயனூர்தமைக்காண்

Koviloor Digital Library

டோறு நாரணனிறும்பூதுற்றான். நிறைபெருங்காதல்கூர வாயிடைநியமம்பூண்டு-மிறைவழியிகந்துபாசு பதத்தனிவிரதமாற்றி-முறைபெறவெண்ணீறங்க முழுவதும் பொதிந்துபாசப் - பொறைதவிர்த்தருளுமும்மைப் புண்டரநுதலிற்றீட்டி. மாயிருங்கமலப்போது கைக்கொடுமோட்சிசான்ற - ஆயிரந்திருநாமத்தா னித்தலுமருச்சித்தேத்தி - மேயினன்றிருமாலன்னோன் பத்தியின்விளைவுகாண்பான் - பாயிரமறைகடேறும் பரம்பொருளொருநாளங்கண். நறைவாருமிதழ்துறுத்த செழும்பொகுட்டு நளினமாயிரத்திலொன்று - மறைவாகத்திருவுள்ளம் வைத்தருளக்கருவிமுகில் வாட்டுமேனி - இறையோனும் பண்டுபோற்பவன்முதலா மாயிரம்பேரொடுத்துக்கூறிக்-குறையாதபேரன்பிற் பதுமமலர்கொடுபூசை புரியுமெல்லை. பன்றுமொருதிருப்பெயர்க்கு நறுங்கமலங்காணுமை பதைத்துநோக்கி - என்னினிமேற்செயலென்று தெரிக்துணர்ந்துதனதுவிழி யிடந்தபெம்மான் - கொன்மலர்த்தான் மிசைசாத்திக் களிகூர்ந்தானுறுப்பினையுங்கெடுப்பதல்லால் - மென்மையுறத்தாங்கொண்ட விரதத்தை விடுவர்களோ கொள்கைமேலோர். இறைவரவுகண்டஞ்சிப் புடைமருவுமிமையவரோட்டெடுப்பநோக்கி - நிறையுவகைதலைசிறப்பத் திருநெடுமாலிருநிலத்தின் வீழ்ந்துதாழ்ந்து - முறைமையினுலட்டாங்க பஞ்சாங்கமுறவணங்கி முடிகையேற - மறைமொழியிற்றுதித்தாடி யாநந்தவிழிமாரிவெள்ளத்தாழ்ந்தான். ஆங்கவனையெதிர்நோக்கி நின்பூசைக்ககமகிழ்ந்தே முனக்கிஞ்ஞான்று - தேங்கமலவிழியளித்தேம் பதுமாக்கனெனும்பெயரிற்றிகழ்வாயிவ்வூர் - பாங்குபெறுதிருமாற்பே றெனப்பொலிகவென்றருளிப்பானுகோடி - தாங்குகதிர்ச்சுதரிசனப்பெயராழித் தனிப்படையுமுதவியெங்கோன்" எனக் காஞ்சிப்புராணம் திருமாற்பேற்றுப்படலத்திலும், பிரமன்முதலிய தேவர்களுக்கு முறையே வேதங்களோதுவித்தமையாலும், காம்பீலிதேசத்தில்வசிக்கும் விண்டுசன்மாவென்றும் பெயரையுடைய ஒரு அந்தணன்புத்திரன் பதினாறுவயதுகாறும் அந்தகனாய் மூகையாயிருந்தவன் அத்தலத்தையடைந்து ஆறுமாதந் தவஞ்செய்து மூகைநீங்கி வேதமோதித்தெளிந்து, மூன்றுநாள் தவஞ்செய்து கண்பெற்றமையாலும் அதற்குத் திருவோத்தூர் எனக்காரணப்பெயர்வந்தது என்பது "காதன்மாதினைநாவகத்திருவிய கடவுளைமுதலானோர்க் - காதிமாமறையோதுவித்தோதுவித்திடுமுறையருள்செய்து - மாதொர்பாகனுர் பெருகியகருணையின் வதிந்தனரச்சுழல் - நிதுநிர்த்திருந்தீர்த்தமாய்ப்பொலிந்தசே யாறுசூழ்திருவோத்தூர். பொதியவிழ்ந்தநெட் டிதழ்மலர்ப்புதுமதுப் பொழிநறுஞ்சினையேறிக்-குதிகொள்வானரம் வருக்கையின்கொழுஞ்சுளை மந்திவாய்கொடுத்தோம்பும் - ததைமணப்பொழி னிவந்து விண்ணிழற்றிய தனிநகர்க்காம்பீலி - வதியும்விண்டுசன் மாவெனப்பெயரிய மறையவன்றருமைந்தன் — விளையும்பீட்கரு வுமிழ்ந்தநாண்முதலிரு விழியிலான்பதினாறுண் - டளவுமூமையா விருந்தவன்மென்மல வஞ்சியத்திருவோத்தூர்ப் - பிளவு வெண்மதி வேணியார்த்தொழுதறு திங்கண்மாதவம்பேணி - இரிவருந்திறன்மூகைமைநீந்தெலா வேதமுமினிதோதிப். புரிவளைக்குலம் வயிறுளைந்திடந்தொறும் பூசலிட்டரிநீறும் - எரிமணிக்குவை நிலாத்தவழ்கம்பையி னிருங்கரைத்தலைவகிக்-கரியகண்டனை நினைந்தனன்மூன்றுநாள் காமுறுதவமாற்றி - உரியதன்னிருகண்களும்படலநீத் தொளிபெறும்பயன்பெற்றான்" என ஷை புராணத்தில் இருபத்தெண்டளிப்படலத்திலும் வருதல்காண்க. திருமாற்பேற்றில் சுவாமிதிருப்பெயர் பவளக்குன்றர். அம்மைதிருப்பெயர் கருணைநாயகி. திருவோத்தூரில் சுவாமிதிருப்பெயர் வேதநாயகர். அம்மைதிருப்பெயர் கருணைநாயகி. (கச)

அடிமுடிவிலங்கும்புள்ளுருமளந்திடாதண்டங்கீண்டு
நெடுகியநெருப்புமின்றங்கிலையிதுமுள்வாய்க்கங்க

Koviloor Digital Library

வடிவெடுத்திருவர்நோக்குமலையிதுபல்வேறூழி
யிடையுறமுன்னும்பின்னுமிருக்குமிக்குன்றைக்காண்மின்.

(இ-ள்.) அடி முடி - திருவடியையுந் திருமுடியையும், விலக்கு உம் புள் உம் அளந்திடாத - வராகவுருவங்கொண்ட திருமாலும் அன்னவடிவங்கொண்ட பிரமனுங் கட்புலன்களாலளத்தற்கரிதாய், அண்டம் நீண்டு நெடுகிய நெருப்பு நின்றமலை இது - பல்லாயிரங்கோடி யண்டங்களையுங்கிழித்து அப்பாற்சென்ற அக்கினிமலையாய் நின்ற அருணாசலமென்னுந்திருப்பதி யித்தலமாம், இருவர் முள் வாய் கங்கம் வடிவு எடுத்து இருவர் நோக்கும்மலை இது - இருவர்கள் முள்போலக் கூரியவாயையுடைய கழுகுருவங்கொண்டுநோக்குந் திருக்கழுக்குன்றமென்னுந்திருப்பதி யித்தலமாம், பல்வேறு ஊழி இடை உற முன் உம் பின் உம் இருக்கும் இ குன்றை காண்மின் - பலவேறுவகைப்பட்ட ஊழிக்காலங்கள் தன்தோற்றத்துக்கு இடையில்வந்து கழிய அதற்கு முற்பொழுதும் பிற்பொழுதும் நிலைபெற்றிருக்கும் விருத்தகிரியென்னுந் திருப்பதி யிதுவாம் இவற்றைக்கண்டு தரிசியுங்கள்.

பிரமன் ஓர்காலத்தில் எல்லாவற்றையும் படைத்தலால் நானேயிறைவனென்று அகங்காரங்கொண்டு திருமாலோடு போர்செய்யுங்காலையில் யாவரும் நடுக்கமுறச், சிவபெருமானார் கருணைகூர்ந்து இருவருக்கும் இடையேயோரக்கினிமலையாய் நின்றருளும்போது, அவ்விருவருங் கண்டு கலங்கி யிதனடிமுடிகளொன்றனுள் ஒன்றனை யறிபவரே பெரியரென்று திருமால் வராகவடிவங்கொண்டு திருவடியறியச்சென்றனர், பிரமன் திருமுடி யறிவனென்று அன்னவடிவங்கொண்டு சென்றனன் பலகாலிடந்தும் பறந்துஞ்சென்று காணுதிளைத்துச் செருக்கொழிந்தனர் என்பது "மண்டுலகெலாநமது கற்பனைகளென்றே - புண்டரிகவேதியன் மதர்த்தரிபுரத்தில் - தண்டியெதிர்கொண்டபெருக தங்கவிசைவண்டார் - வண்டுளபமாயவனை வைதுவாவழக்கும். என்பெருவருக்கொருவ ரெத்தலையுடைத்தார் - கன்றினர்புயத்தின்மிசை கைத்தலமடித்தார் - சென்றருகுதித்தனர் நெருக்கினர்நிமிர்ந்தார் - துன்றியகனற்பொறி சுறக்கெழவிழித்தார். ஆரணனுநாரணனு மானவிருவோரும் - தாரணியிலேமிகு சமர்த்தொழில்விளைத்தார் - ஏரணியவேதகதி யில்லையெவருக்குங் - காரணனையேதொழுதல் காரியமிதென்றார். நடுக்கமுறுமுனிவரெலாமமரரெலாம்பயந்த விராகமிது - படுக்கைபுரிதிருமாலும்பங்கயத்தி லுறைமயனும்பகைமைதீர - அடுக்கியிடும்புவனமெலாமடக்கழியா திருப்பமனத்தருள்வதாகித் - தடுக்கரியதழலுருவத்தொருவரையாயிருவரையுந்தடுப்பதானான். கண்ணிலளவிடலரியசுடரினைக்கண் டிருவருமாய்கவலையாளர் - எண்ணியிதனடிமுடியையறிபவரேபெரியவரென்றிசைத்தார்த்து - மண்ணினடியறிவனெனப்பணைவிடையிற் றாக்கமிக்கோன்வராகமானான் - விண்ணின்முடியறிவனெனவெகினவடிவெடுத்தயனும்விரைந்துபோனான். இன்னதாய வன்சேவலுக்கவிழ்த்ததன் - முன்னமேயழற்கிரிமுடியைத்தேடவே - அன்னமாய்ப் பறந்தவனாக்கனத்திலே - மன்றுமோராயிரக்காதம்பாவினான். பூவுலகையரியகன்றுமேலின்முறைமுறையேபுகுந்துபோந்த - காவலுறுமாவலிதன்போகவதியெனும்புரமுங்கடந்துமேவித் - தேவர்தொழும்பரஞ்சுடர்வாளாடகேச்சரங்காத்துஞ் சிரத்தம்பேற்றி - மூவுலகமுதலனந்தா லேழுலகமளந்தமதன்முடிவுகாணான். ஐந்திநேன்முடியறிந்தேனிலேனெனும் - பொய்களையுமைக்கிறும்பொருந்தவேயுனா செய்தனைபிதியிலவென்றுதேம்பினான்" என அருணாசலபுராணத்திலும்,

கிரேதயுகத்தில் சண்டன் பிரசண்டனென்று மிருவரும், திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயுவென்று மிருவரும், துவாபரயுகத்தில் சம்புகுத்தன், மாகுத்தனெ

Koviloor Digital Library

ன்றுமிருவரும்,கலியுகத்தில் பூடாவும் விருத்தாவும் கழுகுருவாய்ப் பூசித்ததைத் திருக்கழுக்குன்றப்புராணத்திலும்,மகாப்பிரளயத்தின்வழிநாள் பிரமன் அப்புவைச் சிருட்டித்துத் தனது வீரியத்தை விட்டபோது அது முட்டையாய் மிதக்க அதனை யுடைத்தனன், அதினின்று முக்குணங்தோன்றி, அம்முக்குணத்தினின்றும் ஐம்பூதங்கள் தோன்றின,அக்காலையில் திருமால் தம்மிடத்துத்தோன்றிய மதுகயிடவர்கள் அகங்கரித்து அத்திருமாலோடேபோர்செய்ய அவர்களை யத்திருமால் கொன்றனர், அவ்வசுரர்கள் அப்பிரமன்படைத்த வெள்ளத்தின்மேல் தமது மேதையைத் தூர்த்தார்கள் அதனால் உலகிறுக்கு மேதினியெனப் பெயர்வந்தது,அது இறுகும்படி சிவபிரானைத் தியானிக்க இறைவர் எல்லையில்லாத கொடுமுடிகளையுடைய பழமலையுருவங்கொண்டு நின்றனர் என்பது "பூருவந்தனிநான்முகன்புனலையேபடைத்து - வீரவிந்தவைவிட்டனன்முட்டையாய்மிதப்ப - மூரிமுட்டையைத்தகர்த்தனன்முக்குணந்தோன்றிச் - சோர்விலாதவைம்பூதமுந்தோன்றினகுணத்தில். மாயன்கையினான்மதுவுடன்கைட வன்மடிந்தான் - தோயமீதினில்மேதையைத்தூர்த்தனர்புவிக்கு - மேயநாமமுமேதினியாயதுவிரிஞ்சன் - ஏயமீதினியிறுகிடச்சிவன்பதநினைந்தான். பங்கயன்புனலிறுகிடப்பரமனைநினைப்பத் - தங்குபாதலமனைத்திறுக்கப்புறந்தாளாய் - அங்கணண்டமீதளவிலாக்கொடுமுடியாகி - எங்கணும்முதுகுன்றமாய்நின்றனனெங்கோன். மிடியன்வாயிலிற்பொன்மழைமிக்கொளலொப்பத் - துடியலூற்றினிற்பிரளயந்தோன்றியதென்னக் - கடிகமழ்ந்தசெங்கமலனுமெண்ணமுங்கடந்து - படியுமண்டரண்டங்களும்பழமலைபரப்பி. மத்தில்வெண்ணெய்போல்வரையுழிமேதையுஞ்சிவணி - ஒத்தபூதரம்புவிக்குரஞ்செய்தலாலுகந்து - சித்தநான்முகன்சிவன்செயலென்பதைமறந்து - பத்தியின்மையாற்பற்பலபூதரம்படைத்தான். நாலுமூன்றிரண்டொன்றதாநாலுகதன்மம் - மேலுமிவ்வரைக்கீண்டுகதன்மமுமில்லை" என விருத்தகிரிப்புராணத்திலும் வருஞ்செய்யுள்களாலுணர்க. திருக்கழுக்குன்றப்புராணத்தில் எடுத்துக்காட்டியிருத்தலை முன்னர்க் காண்க. அருணாசலத்தில் சுவாமி திருப்பெயர் அருணாசலேசர். அம்மைதிருப்பெயர் உண்ணாமுலையம்மை. திருக்கழுக்குன்றத்தில் சுவாமிதிருப்பெயர் வேதகிரீசர். அம்மைதிருப்பெயர் பெண்ணினல்லாளம்மை. திருமுதுகுன்றத்தில் சுவாமி திருப்பெயர் பழமலைநாதர். அம்மை திருப்பெயர் பெரியநாயகியம்மை.(கரு)

அவுணரிற்கள்வனானவந்தகற்காய்ந்துமூன்று
புவனமுங்கவலைதீர்த்தபுண்ணியன்புரமீதாகும்
தவலரும்புரங்கண்மூன்றுந்தழனுதற்றிருக்கண்சாத்திப்
பவமறுமூவரன்பிற்பட்டவன்பதியைக்காண்மின்.

(இ-ள்.) அவுணர் இல் கள்வன் ஆன அந்தகன் காய்ந்து - அசுரர்களில் வஞ்சகனாகிய அந்தகாசுரனைக் கோபித்து, மூன்று புவனம் உம் கவலை தீர்த்த புண்ணியன் புரம் ஈது ஆகும் - மூன்றுலகங்களிலும் உள்ள துன்பத்தை யொழித்தருளிய புண்ணிய வடிவினையுடைய இறைவரெழுந்தருளிய திருவீரட்டானமாகிய திருக்கோவலூர் என்னுந் திருப்பதி யித்தலமாம், தவல் அரும்புரங்கள் மூன்று உம் - கெடுதலில்லாத திரிபுரங்கள் மூன்றின்மேலும், நுதல் தழல் திருக்கண் சாத்தி - நெற்றித்திருக்கண்சாத்தியருளி, பவம் அறும் மூவர் அன்பு இல் பட்டவன் பதியை காண்மின் - சிவஞேயத்தாற் பிறப்பொழிந்த வித்துன் மாலிமுதலிய திரிபுராதிகள் மூவர்பத்தியில் தலைப்பட்ட இறைவர் வாழும் திருவீரட்டானமென்னுந் திருவதிகையாகிய திருப்பதி யித்தலமாம் இவற்றைக்கண்டு தரிசியுங்கள்.

திரிபுராதிபர் வரலாற்றை முன்னர்க்காண்க. பவமறுமூவரன்பிற் பட்டவர் என்பது "பூவார்மலர்கொண்டடியார் தொழுவார்புகழ்வார்வானோர்கள் - மூவார்புரங்களெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார் - தூமாமழைநின்றதிர வெருவித்தொறுவினிரையோடும் - ஆமாம்பிணைவந்தணையுஞ் சாரலண்ணாமலையாரே" என ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தால் உணர்க. இரணியாக்கன் புத்திரனாகிய அந்தகாசுரன் பிரமதேவரைக்குறித் தவஞ்செய்து வரங்கள் பெற்று இந்திரன்முதலிய தேவர்களை வருத்தும்போது அவர்கள் சிவபெருமானைச் சென்றடைக்கலம்புக, அவர்கட்கு அஞ்சன்மினென்று அபயங்கொடுத்துப் போர்முகத்தேற்ற அசுரர்களையெல்லாங் கொன்று அவ்வந்தகாசுரனைச் சூலத்தாற்குத்திச் சூலத்திலேந்தித் தேவர்களைக் காத்தனர் என்பது "அடன்மிகுமிரணியாக்கனென்றவைப்போ லளித்திடுமந்தகாசுரன்முன்-மடலயிற்கமலத்தயனடிவணங்கி மனம்விழைந்திடும்வரம்பெற்று - மிடல்கெழுமமரர்க்கிறைவன்வெஞ்சமரில் வெங்கொடுத்தோடிடக்கண்டாங் - கிடர்செயுங்கொடுங்கோல்செலுத்திவிண்ணவருக் கிறைவனாயிருந்தனனன்றே. அடைந்தமையறிந்துமாயனைமுதலோர்தங்களையஞ்சன்மினென்று - மடந்தையோர்பாகமெழுந்தவனோடும்வந்த வல்லசுரர்தின்மார்பம்-இடந்துயிர்பிட்டியந்தகாசுரனையெரியுமிழ்சூலத்தாற்குத்திப்-படர்ந்தவானிடையினெடுத்தவானிரவிபாய்ந்தெதிர்படவெறுப்பினனால்" என இலிங்கபுராணம் அந்தகாசுரனுக்குச் சிவனருள்புரிந்த வத்தியாயத்தில் வருதல் காண்க. திருக்கோவலூரிற் சுவாமி திருப்பெயர் வீரட்டானேசர். அம்மை திருப்பெயர் சிவானந்தவல்லியம்மை. திருவதிகையில் சுவாமி திருப்பெயர் திருவதிகைநாதர், அம்மை திருப்பெயர் திருவதிகைநாயகி. (௧௬)

சத்தியஞானாநந்தத்துவமசைவற்றாடும்
நித்தியபரமாநந்தநிறையருண்மன்றமீது
முத்தியங்குதித்தோரெய்தும்பதியிதுமுதனூனான்கும்
பத்தியிற்பூசித்தேத்தும்பதியிதுவாகும்பார்மின்.

(இ-ள்.) சத்தியம் ஞானம் ஆநந்தத்துவம் அசைவு அற்று ஆடும் - உண்மையறிவாநந்த வடிவாகிய இறைவர் அசைவிறந்து ஆநந்த நிருத்தஞ்செய்யும், நித்திய பரமாநந்தம் நிறை அருள் மன்றம் ஈது - அழிவில்லாத மேலான இன்பம் என்றும் நிறைந்த அருள்வடிவாகிய திருவம்பலமென்றுந் திருப்பதி யித்தலமாம், அங்கு உதித்தோர் முத்தி எய்தும் பதி இது - தன்னிடத்திற் பிறந்தவர்கள் யாவரு முத்தியடைதற்கேதுவாகிய திருவாரூரென்றுந் திருப்பதி யித்தலமாம், முதல் நூல் நான்கு உம் பத்தியில் பூசித்து ஏத்தும் பதி இது ஆகும் பார்மின் - முதனூலாகிய இருக்குமுதலிய நான்குவேதங்களும் பூசனைசெய்து துதித்தற்கு எல்லையாகிய வேதாரணியமென்றுந் திருப்பதி யித்தலமாம், பார்மின் - கண்டு தரிசியுங்கள்.

"நிலையமிதற்கிணையிங்கிலையென்றுன்மன்றேறி-அலைவறநிற்கும்படியுமுவந்தான்' எனவருங் கோயிற்புராணத்தால் அசைவற்றாடும் எனவும், "இடம்படுமுடம்பின்மூலத் தெழுந்தரற்சுழுனைநாடி-உடன்முளைத்தொளியேயாகி யொளியிலஞ்செழுத்துமொன்றும்-நெடுங்குழலோசையாகி நிலவுமப்பேரோசைபோயங்-கடங்கியவிடமேயென்றுமம்பலமதாகும்" எனத் திருவாதவூரடிகள் புராணத்தில் வருதலால் நித்தியபரமாநந்த நிறையருள் மன்றம் எனவும், "சதுரம்மறைதான்றுதிசெய்துவணங்கும் - மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா - இதுநன்கிறைவைத்தருள்செய்கவெனக்குன் - கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே" எனவரும் ஆளுடைய பிள்ளை

Koviloor Digital Library

யார் தேவாரத்தால் முதலானுன்கும் பத்தியிற் பூசித்தேத்தும் பதியெனவுங்கூறினார். சிதம்பரத்தில் சுவாமி திருப்பெயர் நடராசர். அம்மை திருப்பெயர் சிவகாமியம்மை. திருவாரூரில் சுவாமி திருப்பெயர் வன்மீகநாதர். அம்மை திருப்பெயர் அல்லியங்கோதையம்மை. வேதாரணியத்தில் சுவாமி திருப்பெயர் மறைக்காட்டீசர். அம்மை திருப்பெயர் யாழைப்பழித்த மொழியம்மை. (கஎ)

பிரமன்மான்முதலாந்தேவர்பிரளையத்திறவாவண்ணம்
பரமனார்தோணியேற்றும்பன்னிருநாமம்பெற்ற
புரமிதுசடாயுசம்பாதிகள்பெரும்பூசைசெய்ய
வரமளித்திருணோய்தீர்க்குமருந்துறைபதியீதாகும்.

(இ-ள்.) பிரமன் மால் முதல் ஆம் தேவர் பிரளையத்து இறவாத வண்ணம்- பிரமன் திருமால்முதலிய தேவர்கள் மகா பிரளயகாலத்தில் இறவாதபடி, பரமனார் தோணி ஏற்றும் - இறைவர் தோணியிலேற்றிய, பன்னிருநாமம் பெற்ற புரம் இது - பன்னிரண்டு திருநாமம்பெற்ற சீகாழியென்னுந் திருப்பதி யிதுவாம், சடாயு சம்பாதிகள் பெரும் பூசை செய்ய வரம் அளித்து இருள் நோய் தீர்க்கும் மருந்து உறை பதி ஈது ஆகும் - சடாயு சம்பாதிகளென்னுங் கழுகு வடிவமுற்றவர்கள் ஆகமவிதிப்படி பூசையைச்செய்ய வரமருளி, அவர்கள் ஆணவமலநோய் தீர்க்கு மருந்தாயுள்ள இறைவர் எழுந்தருளிய திருப்பதி யித்தலம் இதுவாகும்.

பன்னிருநாமம் பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை, கழுமலம், "பிரமனூர் வேணுபுரம்புகலிவெங்குருப்பெருநீர்த்தோணி - புரமன்னுபூந்தராய்பொன்னஞ்சிரபுரம்புறவஞ்சண்பை - அரன்மன்னுதண்காழி கொச்சைவயமுள்ளிட்டாங்காதியாய- பரமனூர்பன்னிரண்டாய்நின்ற திருக்கழுமலநாம்பரவுமூரே" என்வரும் ஆளுடைய பிள்ளையாரருளிய தேவாரத்தாலுணர்க. காழி,தோணிபுரம்,சண்பை, வெங்குரு,புகலி, பூந்தராய், சிரபுரம், கொச்சை, வேணுபுரம் ஆகிய இத்திருப்பெயர்களின் வரலாற்றைப்பாண்டியன் சுரந்தீர்த்தபடலத்திலும், சமணரைக் கழுவேற்றியபடலத்திலுங் கூறியிருக்கின்றனம் அங்குக்காண்க. பிரமபுரம் மகாபிரளயத்தில் யாவையுமொடுக்கி வழிநாள் பிரமன் முதலியோரைத் தந்து பிரமனைநோக்கி யாவும் படைப்பா யென்றருள, நின்னருளின்றிப் படைத்தற்கியலாதென்று பிரமன் கூறியபோது, படைத்தற்குச் சத்தியென்னேவலாலன்றி யியலாது ஆதலால் மூலலிங்கத்தை வணங்கிப் பூசித்துத் தீர்த்தமொன்றமைத்துச் சத்திபெற்றவர் அநேகர், அதுபோல நீயும் அத்தடத்தில் நீராடிமூலலிங்கத்தைத் தரிசித்துப் பூசிப்பாயென்றருள,அவ்வாறே நீராடிப் பூசித்துப் படைக்குஞ் சத்தியைப்பெற்ற காரணத்தினால் பிரமபுரமென வத்திருப்பதிக்கு ஓர் திருநாமம். உரோமசனென்னு முனிவன் பல சிவதலங்களிலுஞ் சென்று தவங்கள் செய்தும் சிவஞானங் கைகூடாமையால் சீகாழிக்கு வரும்போது பசுபோதமொழிந்து சிவபோத மேலிட மகிழ்கூர்ந்து, சிவபெருமானாரை வழிபட்டுப் பூசித்துச் சிவஞானம்பெற்று ஆணவமுதலிய மலங்களினின்று நீங்கிப் பரகதிபெற்ற காரணத்தால் கழுமலமென அத்திருப்பதிக்கு ஓர் திருநாமம். காவிரிப்பூம்பட்டினத்தை யாளுஞ் சிபிச்சக்கரவர்த்தியென்னுஞ் சோழன் மநுநீதிவழுவாது செங்கோல் செலுத்திவருநாளில் வேள்வி செய்தற்பொருட்டுச் சீகாழியையடைந்து பிரமதீர்த்தத்தில் நீராடி யிறைவரை வணங்கி வேள்வி தொடங்கியபோது, அவன் சிவ

Koviloor Digital Library

கருணையை யுலகினர்க்குணர்த்த இறைவர் திருவுளங்கொண்டு இந்திரனையும் அக்கி
னியையும் ஏவ, இந்திரன் கழுகாகவும் அக்கினி புறாவாகவு முருக்கொண்டு அப்புறா,
அரசனை யடைக்கலம் புகக் கழுகு என்னிரையைக்கொடுத்து என்பசி யொழிப்பா
யென்று கூற, அடைக்கலம் புகுந்த புறாவைக் கொடேன் என் தசையைக் கொடுப்
பேனென்று தலைநாட்டி யொருதட்டில் புறாவையும் தன் தேகமாமிசத்தை யொரு
தட்டிலுமிட நில்லாமையால் தான் தலையிலேறி யிறைவரருள்பெற்று அரிந்ததசையுங்
கூடி வரம்பெற்ற காரணத்தால் அத்திருப்பதிக்குப் புறவமென்பது ஓர் திருநாமம்.
சீகாழிப்புராணம் பிரமபுரவத்தியாயத்தில் "தன்றும்பழையமுதண்டந் தொலைந்
தரான்றுந்தொலையாமல் - என்றும்பிரமன்றனைத்தந்து மேலைப்பொருளுந்தரலாலீ-
தொன்றும்பிரமபுரமிதில் வாழொளியேபிரமவிக்கமிந்நீர் - என்றும்பிரமதடமென
வே பெறிற்ஞாலத்திலங்கிலவே" எனவும், கழுமலவத்தியாத்தில் "மாற்றரியவெ
மதிருவாக்கிறுன் மலங்கழுவவிளங்குதலா லிவ்வூர்க்கென்றும்-சாற்றரியகழும
லமென்றுரும்" எனவும், புறவவத்தியாயத்தில் "தென்றலங்தேர்க்காளையெழில்கவர்
ந்த நுதல்விழிபழகநிலாவிரவை - மன்றநிலம்பரித்திருநிவருநா ளுன்னிருதாளிலவா
யுஞானந் - தென்றுமிசைவிளக்கிவிரும்புறவினுக்கூன்கொடுத்தனைவந்தேத்துமிவ்
வூர் - பென்றலரும்புறவமெனப் பொலிவவுமிங்கருளுகெனப்புகன்றுபின்னும்" என
வரும் செய்யுள்களாலுணர்க.

அருணன் புத்திரராகிய சம்பாதி சடாயுவென்பவ ரிருவரும் முத்திநெறி ய
டையும் விருப்பினராய்த் திருக்கயிலைக்குச்சென்று பெருமானுரை வணங்குதற்பொரு
ட்டு அம்மலைச்சாரலின் மேலேறிச் செல்லுங்கால், அங்குள்ள சிவகணங்கள்தடுக்க,
அவர்களை வணங்கி நாங்கள் ஞானமடையும் வண்ணம் பெருமானுரை வணங்குதல்
மேலே பறந்து வட்டமிடுதலேயென்று கூற, அவ்வாறுயின் செய்யுங்களென் றேவி
யபோது சம்பாதி மேலெழுந்து சூரியமண்டிலத்துக்கு அணித்தாகச் செல்லும்போ
து சிறைகருகி விந்தியமலையில் விழுந்தனன், சடாயும் அவ்வாறே சென்று சிறைகரு
கி யித்தலத்திலுள்ள மந்திரகுண்டத்தில் விழுந்து முன்னைய வடிவம்பெற்று நீராடி
யருச்சித்துச் சிவபெருமானு ரருள்பெற்றிருந்தனன் என்பது "பொருந்திடும்பற
வைச்சாதிமேலெழுந்து போற்புறச்சாய்ந்தாழ்ந் துயர்ந்து - திருந்தும்விண்மீதில்வ
ட்ட மிட்டேறிச்செல்வது தெய்வதாயகற்கும் - வரும்பெருமகிழ்ச்சிகூர்தரச் செய்யு
மாதலான்ஞானசாதகமாம் - அரும்புகழிலகுமவரவர்சாதி தருமமேயனைவரும்விழை
வார். வன்றிறன்மகிமைமிச்சிலவாசத்தழ்ந்திட வருந்திமேலெழுந்தே - ஒன்றனைமு
டுக்கத்தந்தன்விலாகாய வெளிகடந்தோடிமேற்பாறு - தன்றழலொழுகுமண்டிலமணி
த்தாய் செருக்குமவ்வளவையிற்றழுந்து - வென்றிகுழ்சிறகுவெந்து சம்பாதிவிந்தி
யவரைதனில்விழுந்தான். தரித்திடுசபதக்கூறியேதனையத்தன்னெழின்முக்கிறுற்
றி - விரித்தவன்சிறகைபுணர்ந்திருவருஞ்சூழ் வேகமாய்ப்பறந்தனர்கதிரோன்-எரி
த்திடுகிரணந்தாங்கரிதாகியீனயவனிலகியகந்த - புரிச்சரகாண்டவனத்தின்மந்திரப்
பொற்குண்டமேற்புகழ்பெறவிழுந்தான். கண்டபின்குண்டந்தனிற்றினமூன்றிற்கவி
ழுதபடிவம்வாய்ந்தெழுந்தே - தண்டகாரணியமிதவெனவுணர்ந்துதபனியவுலகினி
லுறையும் - அண்டர்போற்றிடுசெல்வயித்தியநாத வள்ளலையருச்சனைபுரியும் - மண்
டோதலிறுத்தீர்த்தநீராடிவந்து மூவலஞ்செய்துபணிந்தான்" எனப் புள்ளிருக்கு
வேளூர்ப்புராணத்தில் வருஞ் செய்யுளாலுணர்க. சீகாழியில் சுவாமி திருப்பெயர்
பிரமபுரீசர். அம்மை திருப்பெயர் திருநிலைநாயகி. புள்ளிருக்குவேளூரிற் சுவாமி தி
ருப்பெயர் வயித்தீசர். அம்மை திருப்பெயர் தையனாயகி. (கஅ)

Koviloor Digital Library

மதிநுதலிமயச்செல்விமஞ்ஞையாய்வழிபட்டேத்தும்
இதுதுலாப்பொன்னித்தானமெம்மனோர்மூன்றுகோடி
மதிபெறுமுனிவர்வந்துவழிபடுமூதூரீதிப்
பதியறக்கடவுள்பூசைபண்ணியதானங்காண்மின்.

(இ-ள்.) மதி நுதல் இமயம் செல்வி - இளஞ்சந்திரனையொத்த நெற்றியையுடைய மலையரசன் புத்திரியாராகிய உமாதேவியார், மஞ்ஞை ஆய் வழிபட்டு ஏத்தும் இது - மயிலுருவாய் வழிபட்டுத் துதிக்கும் இத்திருப்பதி, துலா பொன்னி தானம் - துலாரவியில் தன்னில் மூழ்குவோர்க்கு முத்திதரும் காவிரித்தீர்த்தத்தையுடைய மாயூரமென்னூர் திருத்தலமாம், எம்மனோர் மூன்றுகோடி மதிபெறு முனிவர் வந்து வழிபடும் மூதூர் ஈது - எம்போலியராகிய சிவஞானம்பெற்ற மூன்றுகோடி முனிவர்கள் வந்து வழிபட்டுப்பூசிக்கும் தொன்றுதொட்டுள்ள திருக்கோடிகாவென்னூந் திருப்பதி யித்தலமாம், இ பதி-இத்திருப்பதி, அறக்கடவுள் பூசை பண்ணிய தானம் - இயமன் பூசித்துப் பேறுபெற்ற தலமாம், காண்மின் - இவற்றைக் கண்டு தரிசியுங்கள்.

தக்கன் செய்த வேள்விச்சாலையை யடைந்து தமது திருவுருவை நீக்கிச் சூக்குமவுருக்கொடு நின்றருளிய இறைவியை நோக்கி நீ மயிலுருக்கொண்டு பிரமன் பூசித்த நமது தலத்தையடைந்து பூசித்தால் நாமும் அங்கே மயிலுருக்கொடு வருவோமென்றருள, அவ்வாறே மயிலுருக்கொண்டு இறைவி பூசித்தனள் என்பது "சூக்குமவுடம்புதாங்கி யொருபுறந்துதைந்துநிற்கும் - வாக்குமனுநீதச்சீர் வாய்ந்தபூரணியைநோக்கிப் - போக்குநீதவிர்தியென்ற தேற்றிலாய்போதல்செய்தாய் - வீகுமற்றதற்குத்தக்க பயனுமேதகவிற்பெற்றாய். எனவுரைத்தருளநாணி யிறைஞ்சினளெம்பெருமாட்டி-கனமருள்கண்டன்மேனி கழித்திடும்பொழுதோர்தோகை-இனமெனவுடையப்பாது காத்திரங்கிலையாலற்றால்-அனநடையணங்கேதோகை யாயதோருருவங்கொண்டு-பிரமன்முனெமைப்பூசித்த பெருந்தலத்தெய்தியாங்கே - வரமுறநமைப்பூசித்து மருவுதியாமுமாங்குப்-பரவுமோர்மஞ்ஞையாகிப் பரவுவோர்துணையாயின்னே - கரவறச்சேறியென்றான் கடுவிடைநடாத்தினானே. இலகவானவர்தம்பிழையாவையுமிரிந்து - விலகமாமலராளியூர்மேவிடுமுன்னர்த் - திலகமாகியமூவர்தந்தேவருள்சிந்தித் - துலகம்யாவையுமீன்றவளொருமயிலானாள். உற்றதான்புகழ்க்கௌரிமாயூரமாயுவந்து - நற்றவஞ்செயப்பெற்றகாரணத்தினானலஞ்சேர்-மற்றவத்தலங்கௌரிமாயூரமென்றொருபேர் - பெற்றதிவ்வுலகத்தொடெவ்வுலகமும்பேச" எனவும்,

சிவபெருமான் அண்டங்களெல்லாவற்றையும் பார்த்தருளும் ஓர் திருவிளையாடலைக்கருதி இடபவூர்தி மேற்கொண்டு பிரமன்முதலிய எல்லாத்தேவர்களும் தத்தமூர்தியோடு பின்னர் வரக் கடைக்கணித்திட, அவ்விடபவூர்தி கருடன்முதலிய வூர்திகள்வேகந் தளர்ந்து பின்னிற்க முன் விரைந்துசென்று செருக்கடையும்போது இறைவர் திருவுளத்திற்கருதித் திருவிரலாற் சிறிதூன்றினர், பாதலத்திற்சென்று வருந்திக் குறையிரந்து வேண்டிட அவ்விடபவூர்தி மேலெழக் கருணைகூர்ந்து காவிரிநடுவிலெழுந்த வவ்விடபவூர்தியை நோக்கி மேற்றிசையை நோக்கியிருந்து இங்கு ஸ்நானஞ்செய்வோர்க்கு வேண்டும் வரங்களைத்தருவாய் உன் ஒரு அம்சத்திலிங்கிருப்பாய் மற்றை யம்சத்தா லென்னைத் தாங்குவாய் இன்னும் வேண்டுவன கேளென்றருள, அவ்விடபம் வணங்கிச் சிவஞானம் அருளவேண்டுமென்றிரக்க, அருள்கூர்ந்து துலாரவியில் அமாவாசையில் எல்லாத் தீர்த்தங்களும் வந்து ஸ்நானஞ்செய்யும் நாம் உத்தர

Koviloor Digital Library

திசையில் முளைத்தருள்வோம் அதற்கு உத்தரமாயூரம் எனத் திருப்பெயர் வழங்கும்
என்றருளினராதலால் தலைப்பொன்னித்தலம் என்றனர். அது "கயிலையங்கிரியின்
மேய கன்றுதன்மயூரேசன் - மயிலுருவமைந்துதேவி வசித்தநாளண்டமுற்றும் -
பயிலொருவிநோதத்தாலே பார்த்தனன்மீன்வாவென்னி - வெயில்விடுமணிப்பொற்
கோட்டு விடைபெரும்வரைமேற்கொண்டு. மலர்மிசையிருக்கையாறும் வாரிதிக்கிட
க்கையாறும் - பலர்புகழ்தாவவேந்தும் பண்ணவர்மற்றுளோரும் - அலர்தருதத்தமூ
ர்த்தி விவர்ந்தடனையுமாறு-கலர்கொளாக்கருணைகல்விக் கடவினுனேற்றையம்மா.
பரவுமெம்பெருமானும் பாய்விடைதொடர்ந்துமேவும் - உரவுபெற்றனவோமற்
றோ ரூர்தியென்றழுக்காறெய்தி - விரவுபல்லண்டமுற்றும் விரைந்தொருகொடியிற்
சூழ்ந்த - புரவுசேர்திருமாயூரப் பொன்னியாற்றிடைவந்தன்றே. மாயவனுதிமற்
றை வானவருந்திபாவுந் - தூயதற்றொடர்தலின்றித் தேர்லவியினமைந்தாங்காங்குச்-
சேயவாய்க்கழிந்தகின்ற திறனுக்காவிரிக்குரப்பன் - மேயதன்விறலுமெண்ணி வி
டையேறசெருக்கிற்றன்றே. செருக்கலுமஃதுள்ளோர்ந்த சின்மயக்கருணைமூர்த்தி-
பொருக்கெனவிடபவேற்றைப் புண்ணியமலர்த்தாளொன்றின் - திருக்கிளர்விரலொ
ன்றுலே சிறிதழுத்தினைப்போது - வெருக்கிளரிடபவேறு விரைந்துபாதலம்புக்கன்
றே. பாதலம்புக்கவாலைப் பாவியேன்செருக்குப்பூண்டு - சாதலக்கமையுந்துன்பந் தா
க்கினேனுவாவென்று - நிதலத்திடபவேறு சிந்தைமாழாந்ததேம்பிக் - காதலக்கண்
ணிர்வாரத் துதிபலகரைந்ததன்றே. என்றுசெக்குருகியிவ்வா றேத்திடுமிடபவேற்றை-
அன்றாம்பெருமானுள்ள மிரக்கமிக்காம்பிலத்த - நின்றமேலெழுகவென்னு நிகழ்
த்தினவிசைத்தலேடும் - ஒன்றுதன்பொன்னியாற்றி னடுவுற்றதவகைப்பூப்ப - நதி
நடுவமர்ந்துமேவுங் குன்றையயமர்ந்தநோக்கி - மதிமுடிப்பகவனேறே வயங்கு
மிக்குநீயிருப்பட் - பதிதாவேந்தனுான்றும் பச்சிமம்பார்த்துமேவி-விதியுளியாடுவோ
ர்க்கு வேண்டுவகொடுத்தவாழ்த்தி. உன்றொருகூற்றினிங்கே யுறைந்தனைமற்றைக்
கூற்றுற் - பன்றொருநம்மைத்தாக்கிப் பாலொலாம்புகழவாழ்வாய் - பின்றொருதீர்த்த
மாடார் பிறக்குமித்திர்த்தந்தேய்வார் - தன்றொருநின்னைப்போற்றிற் றுயரொழிந்
தின்பந்துய்ப்பார். இன்றுமெவ்வரங்கள்வேண்டு மியம்புதிதருதுமென்ன - மன்று
ம்வல்விடபந்தாழ்ந்த மாதேவமாபூரேச - அன்றுவன்செருக்காலன்றோ துயர்ப்பில
ம்புக்குமீண்டேன் - பன்றுமற்றதிருண்மை ஞானம்பாலித்தியென்ன. பகருமவ்வி
ருப்புற்றுயைப் பசியமாலாசிவைக்கண் - நிகருந்திர்த்தமெல்லா நெருங்கிவந்திங்கீர்
மூழ்கும்-புகரிலத்தினைத்துதியிப் போதிரந்ததுகிரப்பத்-தகர்தலில்யாமித்திர்த்தத் துத்த
ரத்தமுமைப்போம். ஒக்குமத்தாலமென்று முத்தரமாயூரப்பேர்-தாக்கும்" எனவும்,

மார்க்கண்டேயரால் உதையுண்டு மாண்டுயிர் பெற்றெழுந்த இயமன் இவ்வ
பாரதந்திர்க்குந்தல மாயூரமென்று கருதிவந்து அதற்கு ஈசானதிக்கில் அங்கோர் சிவ
லிங்கந் தாபித்துப் பூசித்துத் தன்பெயரால் ஊரும் சிவலிங்கமும் பெயர்பெறப் பெ
ரும்பேறு பெற்றவன் என்பது "உதையொன்றகொண்டுயிர் மாண்டானமன்பின்
னுயிரளிப்பக் - கதையென்றவைபொ டெழுந்தினிச்செய்யக் கடவதென்னென் -
திதையென்றவெற்பத் தவைபாவமேறு மிறக்குமவளந் - ததையொன்றுபூம்பொ
ழின் மயூரமாந்தலஞ் சார்ந்தனனே. சார்ந்ததிருமுனர்த் தீர்த்தம்படிந்து தவாத
வினை - சாந்தபொலிதிரு வெண்ணிறுபூசி யெழுத்தைந்தெண்ணி - ஓர்ந்துதிருப்பெ
ருங் கோயிலைச்சார்ந்தரு கிப்பணிந்து - தேர்ந்தபெருவள்ள லாரடிப்பூசனை செய்த
னனே. புண்ணியமாருஞ் சுரூபசிபாதமும் போற்றிசெய்து - கண்ணியவத்தலத் தீ
சானதிக்குக் கேர்த்தாயர்-தன்னியமென்மைச் சிவலிங்கமொன்றங் கமையநிறீஇத் -

தண்ணியதீர்த்தமுந் தொட்டரும்பூசை சமைத்தனனே. கூடியவன்பி னொருநீயருச்சித்த கோசத்தியம் - நீடியபேரு ளோடுறைவோமந் நிறைகுறியும் - பாடியல்வாவியு மூருநின்பேராற் பரவுகவென் - முடியகூத்தன் மொழிந்தான்மறைந்தன னுவயினே" எனவும் மாயூரப்புராணம் மாயூரப்படலத்திலும், இடபவரலாற்றுப்படலத்திலும், தருமன் பூசித்த படலத்திலும், திருக்கோடிகா வென்னுந் திருப்பதியில் அகத்தியமுனிவர் வந்து பூசித்திறுமாக்க, அவ்விறுமாப்பொழிய உன்னைப்போல் மூன்று கோடி யகத்தியர்கள் நம்மைப்பணிந்து பூசித்தனரென அசரீரியெழ அம்முனிவர் அதிசயித்துப் பூசித்துச் செருக்கொழிந்தனர் என்பது "பொதியின்மலைத்திருமுனிவன்பொன்னி படிந்தமை பூசைபுரிவானெண்ணி - விதிமுறையந்தலத்தனாக நின்னைப்போன் முக்கோடிமிக்கான்றால்-மதிபுனையுமகத்தியர்கள் பணிந்ததெனச் சீரமிலா மாற்றந்தோற்ற-வதிசயித்தெய்தினனதனாற் திருக்கோடிகாவனத்துநகர்ந்தானம்" எனச் சிதம்பரப்புராணம் திருச்சிற்றம்பலச்சருக்கத்திலும் "கருக்கோடியொழிக்கும்பொன்னிக் கரைக்கோடியடைந்தரும்பன் - மருக்கோடிமலர்கடவி மனமிறுமாப்பநின்போல் - உருக்கோடிமும்மையன்ப ருள்ளனவுருவிற்காட்டிச் - செருக்கோடியகலக்காத்தான் திருக்கோடிகாவொன்றுண்டால்" எனச் சீகாழிப்புராணம் புராணவரலாற்றிலும் வருதல் காண்க. மாயூரத்தில் சுவாமி திருப்பெயர் வதானியீசர். அம்மை திருப்பெயர் அபயப்பிரதாம்பிகை. திருக்கோடிகாவில் சுவாமி திருப்பெயர் கோடீசர். அம்மை திருப்பெயர் வடிவாம்பிகை. திருத்தருமபுரத்தில் சுவாமி திருப்பெயர் தருமலிங்கேசர். (௧௯)

கோடுநான்குடையவேழந்தாபதன்குறைந்தகோட்டைப்
பாடறநோற்றுப்பெற்றபதியிதுமாலைசாத்துந்
தாடகைமானங்காப்பான்றாழ்ந்துபூங்கச்சிட்டீர்க்கும்
பீடுறுகலயனன்பினிமிர்ந்தவெம்பிரானூரீதால்.

(இ-ள்.) நான்கு கோடு உடையவேழம் - நான்குகொம்பினையுடைய ஐராவதமென்னும் வெள்ளையானை, தாபதன் குறைந்த கோடு ஐ - சிவப்பிரியனென்னும் ஒருமுனிவனால் குறைபட்ட இரண்டுகொம்பினையும், பாடு அற - துன்பமற, நோற்றுபெற்றபதி இது - தவஞ்செய்துபெற்ற திருவெண்காடென்னுந் திருப்பதியித்தலமாம், மாலைசாத்தும் தாடகை மானம்காப்பான் தாழ்ந்து - மலர்மாலைசாத்தியதாடகையென்னும் ஓரரக்கியினது மானத்தைக்காக்கத்தாழ்ந்துநின்று, பூகச்சிட்டு ஈர்க்கும் - அழகியகச்சினைப் பூட்டியிழுத்த, பீடு உறு கலயன் அன்பில் நிமிர்ந்த எம்பிரான் ஊர் ஈது - பெருமைமிக்க குங்கிலியக்கலயநாயனார் அன்பினால் நிமிர்ந்த எமதிறைவரெழுந்தருளிய திருப்பனந்தாளென்னுந் திருப்பதியித்தலமாம்.

தாரகன்குறைத்த எனவழங்கும் பாடத்தைத் தாபதன் குறைந்த எனத்திருத்துக. பொன்னுலகத்தி லிந்திரன் பவனிகாணச்சென்ற துருவாசமுனிவர் களிப்புற்றுச் சுவர்ணமாலையொன்றைக் கையுறையாகவழங்க அதனைவாங்கி வெள்ளையானைமேல்வைத்தனன், அந்தயானை துதிக்கையாலெடுத்துச் சிதறியபோது அம்முனிவன்கண்டு கனன்று காட்டானையாகவெனச்சபிக்க, சாபமேற்ற அந்தயானை குறையிரந்து சுவேதாரணியமாகிய திருவெண்காட்டிற் சென்றுலவும்போது சிவப்பிரியமுனிவர் முற்கலமுனிவராகிய தமது தந்தையார் விடைபெற்று அத்திருவெண்காட்டிற்சென்று பூசித்துவருங்கால், ஓர்நாள் நீராடி யாயிரந்தாமரைகளைக் கொய்துவரும்போது காட்டானையான வெள்ளையானை பெட்டையானையோடுவந்து கோபித்துக்கு

Koviloor Digital Library

த்தபது. அம்முனிவர் சோர்ந்தவிழ்ந்து எழுந்து மலர்கள்சிதறாமல் எடுத்துக்கொண்டு திருக்கோயிலுக்குச்சென்றனர், பின்னர் அத்தயானையின் கொம்புகளுள் இரண்டுகொம்புகள் அவர்மார்பில் தைத்தருவாது அதன்வயிற்றில் அழுந்தின, அதனை நோக்கி முன்னையசாபத்தோடு இந்தச்சாபமுமுண்டாயதோவென்றுகருதி யவர்பாற் சென்று குறையிரந்து அறிவுவந்து தன்பெயராலொரு சிவலிங்கந்தாபித்துப் பூசித்துப் பழையசாபமுமொழிந்து உள்ளேபொதிந்த இரண்டுகொம்பும் எழுந்து நான்கு கொம்புகளாக வரங்கள்பெற்று விண்ணுலகஞ்சென்றது என்பது—

"பொன்னுலகிடத்தின்முன்னே புரந்தரன்பவனி போந்தான்-முன்னியபவவினை முநிதுருவாசன்சேர்ந்து-மன்னிறைகளை கமாலை கையுறையாகத்தந்தான்-மன்னவனதனைவாங்கி வாரணத்தலைமேல்வைத்தான். வெண்கரியதனைக்காலான் மிதித்தறத்தெறிந்ததற்கே-கண்கனல்சொரியநோக்கி முநிவரன்கனன்றுகூறும்-தன்பொலன்மணமாலை தனையறத்தெரிதலாலே-மண்புடைமதமாய்க்காட்டு வாரணமாகவென்றான். மோகமானதுபோயானை முனிவனேதமியேற்கிந்தச் - சோகநீங்குவதென்றென்று தடிக்கையல்வணங்கிக்கூற - நாகமேயுனதுசாப நடுக்கமுந்திருவெண்காட்டில்-ஏகிநலமதமென்றேகி முனிவரவிருக்கைசேர்ந்தான். பற்பலபிடிகள்சூழப் பயமறத்திரிந்ததிப்பால்-முற்கலயோகிதந்த முனிசிவப்பிரியனென்பான்-அற்பகற்புரிவதெல்லா மாவருச்சனைகளாகும் - கற்பனைந்தெழுத்தேயாகுங் கேட்பதாகமங்களாகும். மைந்தறமறிவான்முத்தமரிந்திடவோரத்தைநாடித்-தந்தையைப்பணிந்துசவாவரந்தருதலமேதென்றான்-அந்தமாமுனிவன்கூற மாறுறைதிருவெண்காட்டில்-முந்திபேயுறைவார்க்கெல்லா முத்திமுத்தினத்திலாகும். ஒருபகற்பொழுதுமுன்சொல்லுயர்கவிதனைவுக்கணைத் - தரியபூந்தடத்திற்புக்கோ ராயிரங்கமலங்கொய்து - பெருகியகமையாப்கொண்டு மீண்டனன்பிடியோடந்தப் - பொருகரிவரவுகண்டுகடிதிளிற்போவதானான். ஓடியமுனிவன்றன்னைத் தொடர்ந்தடர்ந்தொருகைவேழம்-கூடியங்கவன்றன்மார்பிற் குத்தினகொடியகோட்டால் - வாடியமுனிவன்வீழ்ந்தான் மபக்மேமுடனேசிந்தித் - தேடியமலர்விடாதே யெழுந்தனன்றுவட்சியோடு. எழுந்தவன்தயத்தன்னே பிறையவனெழுந்தோனைந்தம் - அழுந்தியகடினத்தாலே யடற்கரிமருப்புமும - விழிந்ததக்களிற்றின்றிய வயிற்றினிரத்தமாரி - பொழிந்திடப்பழையதான நினைவுடன்பொருமிற்றன்றே. முநிதுருவாசனிட்ட சாபமொமுடியக்காலேனும் - இறுஞ்சிவப்பிரியன்சாப மிடுமேலோவென்றுமென்று - மனங்களாந்தவனையெய்திப் பணிந்துகைம்மறமாக்கூறுஞ் - சினங்கொடுன்றனைநான்செய்த பிழையெலாந் தீர்க்கவேண்டும். ரோவொருவகையொளிக்கி றணங்கியகேள்வியாளர்-மாவடதருவின்கீழில் வதிதவர்மகிழ்ந்துபோற்றி - மூவறபுராணநூலு மவரிடைமுறையாற்றேர்ந்து - தாபதவேடவேகித்தந் தவங்களைப்புரிந்ததன்றே. தன்பெயரதனுலந்தத் தலத்திலோரிலிங்கந்தாபித் - திவ்புகையொளிரீர்மாலை யெடுத்தருச்சனையும் பண்ணி - அன்புடன்வலமுஞ்செய்த தந்தநாளதனிலோர்நாட் - பொன்புனைசடையினூர்த் தோன்றிமுன்புலவர்போற்ற. விழியிடத்தமைக்குச்சாத்து மேகமேனியனார்முன்னூன் - பொழிமதக்களிவைக்கோத்த பொருளெனவடியேற்கென்று - மழிவிலாதளித்தச்சாப மற்றுமென்றனைத்துப்போற்ற - வழிபெருங்கருணைவாரி மழையெனவரங்களித்தான். உட்புறதயிரண்டுகோடு முதாம்விட்டெழுந்தனான்காப் - பெட்புறப்பழயசாபம் பேர்ந்திடவினையேர்த்தேன் - தப்பநின்றடத்தழுந்தி யதிருறைதலைவனுனை - ட்புடன்வலஞ்செய்வார்க்கும் பாகநிகல்குவேமோ" எனத் திருவெண்காட்டுப்புராணத்தில் ஐராவத வெப்பிரியச்சருக்கத்திலும்,

Koviloor Digital Library

தாடகையென்னும் ஒரு அரக்கி பெருமானாரை வழிபட்டுப் பூசித்துவருங்காலோர்நாள் திருப்பள்ளித்தாமஞ்சாத்தக் கைகலைத் தூக்கியகாலையில், இடையிற் கலை நழுவ எவ்வகையாலிடுக்க முயலினும் அந்தக்கலை சோர்தலைநோக்கிக் கவலையுறும் போது அப்பெருமானார்தாழ்ந்து பூசனையேற்று வரந்தந்தருளி யவ்வாறேயென்றும் நின்றருள, அக்காலத்தில் செங்கோல் செலுத்திவந்த சோழர்பிரான் திருமேனிவளைவாகவிருந்த சிவலிங்கப்பெருமானை நேர்நிறுத்தித் தரிசிக்க முயன்று வருந்துவதைத் திருக்கடவூரில் தூபப்பணி செய்துகொண்டிருந்த குங்கிலியக்கலயநாயனார் கேள்வியுற்று அங்குச்சென்று சிவலிங்கப்பெருமானுக்கும் தம்முடையகழுத்திற்கும் கயிறுபூட்டித் தமது சிவநேயவலியால் வலித்து நேரேநிறுத்தித் தரிசித்துச் சோழர்பெருமானுக்கு மகிழ்ச்சிசெய்வித்தனர் என்பது "ஊர்தொறும்பலிகொண்டுய்க்கு மொருவனதருளினாலே - பாரினிலார்ந்தசெல்வ முடையராம் பண்பினீடிச் - சீருடையரிசிநெல்ல செழுங்கறிதயிர்நெய்பாலால் - ஆர்தருகாதல்கூரவடியவர்க்குதவுநாளில். செங்கண்வெள்ளேற்றின்பாகன் திருப்பனந்தாளின்மேவும்- அங்கணன்செம்மைகண்டு கும்பிடவரசனூர்வம் - பொங்கித்தன்வேழமெல்லாம் பூட்டவும்நேர்நில்லாமை - கங்குலும்பகலுந்தீராக் கவலையுற்றழுங்கிச்செல்ல. மன்னவன்வருத்தங்கேட்டு மாசறுபுகழின்மிக்க - நன்னெறிக்கலயனார்தா நாதனைநேரே காணும் - அந்நெறிதலைநின்றுனென் றரசனைவிரும்பித்தாமும் - மின்னெறித்தனைய வேணி விகிர்தனைவணங்கவந்தார். மழுவுடைச்செய்யகையர் கோயிலின்மருங்கு சென்று - தொழுதுபோந்தன்பினோடுந் தொன்மறைநெறிவழாமை - முழுதலகினையும்போற்றமுன்றெரிபுரப்போர்வாழும் - செழுமலர்ச்சோலைவேலித் திருப்பனந்தாளைச்சேர்ந்தார். காதலாலரசனுற்ற வருத்தமுங்களிற்றினோடுந் - தீதில்வன்சேனை செய்யுந் திருப்பணி நேர்படாமை - மேதினிமிசையேயெய்த்து வீழ்ந்திளைப் பதுவு நோக்கி - மாதயக்கலயர்தாமு மனத்தினில்வருத்தமெய்தி. சேனையுமானைபூண்ட திரளுமெய்த்தெழாமைநோக்கி - யானுமிவ்விளைப்புற்றெய்கு மிதுபெறவேண்டுமென்று - தேனலர்கொன்றையார்தந் திருமேனிபூங்கச்சேய்ந்த - மானவன்கயிறுபூண்டு கழுத்தினால்வருந்தலுற்றார். நண்ணியவொருமையன்பி னூறுபாசத்தலை-திண்ணிய தொண்டர்பூட்டி யிளைத்தபின்றிறம்பிகிற்க - ஒண்ணுமோகலயனார்த மொருப்பாடுகண்டபோதே - அண்ணலார்நேரேநின்றா ரமரரும்விசும்பிலார்த்தார். பார்மிசைநெருங்கவெங்கும் பரப்பினபயில்பூமாரி - தேர்மலிதானைமன்னன் சேனையுங்களிறுமெல்லாங் - கார்பெறுகானம்போலக் களித்தனகைகள்கூப்பி - வார்கழல்வேந்தன்றொண்டர் மலரடிதலைமேல்வைத்து" எனப்பெரியபுராணம் குங்கிலியக்கலயநாயனார் புராணத்திலும் வருதல்காண்க. திருவெண்காட்டில் சுவாமி திருப்பெயர் சுவேதாரணியேசர். அம்மை திருப்பெயர் பிரமவித்தியாநாயகி. திருப்பனந்தாளில் சுவாமி திருப்பெயர் சடையப்பநாதர். அம்மைதிருப்பெயர் பெரியநாயகி. (௨௦)

கரிமுகத்தவுணற்காய்ந்தகரிமுகத்தண்ணல்பூசை
புரிசிவநகரமீதுதாரகற்பொருதுசெவ்வேள்
அரனையர்ச்சித்ததார்க்கீழ்மணற்குறியான்பாலாட்டிப்
பரன்முடிமாலைசூடுஞ்சேய்வளம்பதியீதாகும்.

(இ-ள்.) கரிமுகத்து அண்ணல் கரிமுகத்து அவுணன்காய்ந்த - யானைமுகத்தையுடைய மூத்தபிள்ளையார் கயமுகாசுரனைக்கொன்று, பூசைபுரி சிவநகரம் ஈது - சிவபூசைசெய்த திருச்செங்காடென்னுந் திருப்பதியித்தலம், செவ்வேள் தாரகன் பொருது அரனை அர்ச்சித்தது-முருகக்கடவுள் தாரகாசுரனைக்கொன்று பெருமானா

ளைப் பூசித்ததமாய், ஆர்த்தெழ் மணக்குறி அன்பால் நாட்டி - ஆத்திமரத்தின்கீழ்ச் சிவலிங்கந்தாபித்துப் பசுவின்பாலா லபிடேகஞ்செய்து, பரன்முடிமாலைசூடும் சேய்வளம்பதி ஈது ஆகும் - அப்பெருமானார் திருமுடியிற்சூடிய மாலையைச் சூடுதற்கு எல்லைபுமையுள்ள வளமிக்க திருப்பதி யித்தலமாம்.

இந்திரனால் தோல்வியடைந்த அசுரேந்திரன் தனது குருவாகிய சுக்கிரன் சூழ்ச்சியால் விபுதையென்றுந் தங்குலப்பெண்ணை, வசிட்டமுனிவர் மரபிற்றோன்றிய மாதங்கமுனிவர்பாற் செலவிடுத்தனன், அவள் அவர் தவநிலையை நோக்கித் தானுந் தவநிலையையுடையவளாய் அம்முனிவர் கருத்தின்படி பெட்டையானையாய்ப் புணர்ந்து கயமுகாசுரனைப் பெற்றனள், அவன் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து அளவில்லாத வரம்பெற்றுத் தேவர்களை வருத்துங்காலையில் அத்தேவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி யச்சிவபிரானார் உமாதேவியாரோடு காவிற்சென்று சித்திரமண்டபத்தை யணைய, அம்மண்டபத்தில் பிரணவம் அம்மை திருநோக்குப் பட்டவுடன் இரண்டுகூறாய் ஆண்யானை பெண்யானை யுருக்கொண்டு புணரும்போது மூத்தபிள்ளையார் தோன்றித் தமது தாய்தந்தையரை வணங்கித் தலைமைபெற்றுத் திருக்கோயிலின் தலைவாயிலில் எழுந்தருளியிருந்தனர், அதுதெரிந்த இந்திரன்முதலிய தேவர்கள் சென்று வணங்கிக் குறையிரப்பக் கருணைகூர்ந்து மதங்கமாபுரியை யணைந்து அவ்வசுரனைத் தனது கொம்பினால் வதைக்க அத்தேகத்தைவிட்டு மூடிகவுருக் கொண்டவை அசுரன் தோளினின்று மிழிந்து நீ யெனக்கு வாகனமா யிருவென்று ஊர்தியாகக்கொண்டருளினர், அக்கயாமுகாசுரன் உதிரம் பரந்தால் திருச்செங்காடென்றுந்திருப்பெயர்பெற்ற தலத்தில் ஓர் சிவலிங்கந் தாபித்துப் பூசித்ததால் கணபதிச்சரமென்றுந் திருப்பெயர் பெற்றதென்பது—

“ நதியம்பாமன்றுளே யடைதருபுனிதன்சொல்லை - வேதியர்தலைவனான விரிஞ்சன்மெய்யுணர்விற்பூத்த - காதலன்புலன்களாய பகைஞராக்கடந்தகாட்சி - மாதவமுனிவர்க்கீசன் வசிட்டனென் றுரைக்கும்வள்ளல். அன்னவன்மரபின்வந்தோ னதிஞர்க்குமதிநன்மேலாய் - மன்னியநெறிக்கணின்றோன் மாதங்கனென்றும்பேரோன் - உன்னருமறைகள்யாவு முணர்ந்தவருயர்ந்தவீசு - தன்னையிங்கடைவனென்றுத் தவந்தனையியற்றலுற்றான். அயவன்றன்பாலின்றோ ரசுரகன்னிகை வைத்தேற்றி - வியிலையென்னினன்று ளெய்தியேயவன்றனோடு - மேயினகாலையாங்கோர் வேழமாமுகத்தனுங்கள் - நாயகனாகத்தோன்றி நற்றவம்புரிவ னன்றே. முருந்தெனமுறுவலாறு முனிவனீசனைவளர - இருந்தவம்புரிந்தேன்பன்னா ளின்றதுமுடிவதாகப் - பொருந்திணையின்பினினைப் புரிவியவந்தேனென்ன் - வருந்தவுமுதம்பெற்ற மாக்கள்போன்மகிழ்ச்சியுற்றான். மெல்லியறானுமங்கோர் வெம்பிடியாகித்தோன்றி - எல்லையில்காதல்பின்று மிக அம்முனிவன்றானு - மல்லலங்களிறதாகி வாருயர்புழைக்கைநீட்டிப்-புல்லினனுற்றந்தாவேபுணர்ச்சியிற்சிறந்ததன்றே. அயன்முதலிவர்வானத்தமர்தருபுலவராற்றுஞ் - செயன்முறைக்கடன்களியாவுஞ் சிந்தனைத்திருக்கும்வண்ணம் - வயமுகத்தடவுகொண்டவயிர்த்திமெருப்பினால்வாய்க்-கயமுகத்தவுணனுங்கேதேமெனவுதயஞ்செய்தான். இன்னணமருந்தவமியற்றுமெல்லியிற் - பொன்னவிர்சடைமுடிப்புனிதநாயகன் - அன்னதானடியே யவுணருக்கிறை - முன்னுறவர்தனன்மூரியேற்றின்மேல். தமின்மகிழ்வெய்தியவிந்திரன்-ஆதிவோர்களியாயத்தனுமியே - போதகத்தப்புகர்முகப்புக்கவன் - பாதமுற்றுப்பணிந்தயன்னர். நிறைவன்றன்னைநோக்கி நெடியபல்படைகளேவிற் - செனறிவன்றன் னைக்கொள்ளா சிவனருள்வரத்தின்சால் - இன்றினிச்செய்வதென்னென் நிறைய

Koviloor Digital Library

ணையுன்னியெந்தை - தன்றிருக்கோட்டிலொன்று தடக்கையின்முரித்துக்கொண்டான். தடக்கையிலேந்துகோட்டைத் தந்தியாமவுணன்மீது - விடுத்தலுமனையன்மார்பை வெய்தெனக்கீண்டுபோகி - உடற்படிமிசையேவீழ்த்தி யொல்லையிலோடித்தெண்ணீர்க் - கடற்படிந்தமலன்மைந்தன் கரத்தில்வந்திருந்ததன்றே. ஏடவிழலங்கற்றிண்டோ ளிபமுகத்தவுணன்மார்பில் - நீடியகுருதிச்செந்நீர் நித்தமாயொழுகும்வேலைப் - பாடுறவருங்கானன்றிற் பாத்தலினதுவேசெய்ய - காடெனப்பெயர்பெற்றின்னுங் காண்டகவிருந்ததம்மா. ஆய்ந்தநல்லுணர்வின்மேலோ ரறிவினுமணுகாவண்ணல் - ஈந்ததொல்வரத்தான்மாயா விபமுகத்தண்ணல்வீழ்ந்து - விந்தனன்போன்று தொல்லை மெய்யொரீஇவிண்ணுமண்ணுங் - கீந்திடவெரிகண்ணாந்தச் சீற்றத்தோராகுவானன். தேக்கியநதிசேர்கின்ற சென்னியன்செம்மறன்னைத் - தாக்கியவருதலோடுஞ் சாரதன்றோளிவீங்கி - நீக்கருந்துப்பிற்றாக்கி நிகமைச்சுமந்தியென்று - மேக்குயர்பிடரிற்றுவி வீற்றிருந்தூர்தலுற்றான். மீண்டுசெங்காட்டிலோர்சார் மேவிமெய்ஞ்ஞானத்தும்பர் - தாண்டவம்புரிந்ததாதை தன்றுருத்தாபித்தேத்திப் - பூண்டபேரன்பிற்பூசை புரிந்தனன்புவியுளோர்க்குக் - காண்டகுமனையதானங் கணபதீச்சரமதென்பர்" எனக்காந்தம் கயமுகனுற்பத்திப்படலத்திலும்,

முருகக்கடவுள் வீரவாகுமுதலியவீரர்களுந் தேவர்களுஞ்சூழக் கிரவுஞ்சகிரியைச் சமீபித்தபொழுது நாரதமுனிவர்வணங்கி இங்கேதோன்றுவது கிரவுஞ்சகிரி, அதனருகில் மாயநகரமென்றொன்றுளது அதில் சூரபன்மனுக்கு இளையோனாகிய தாரகனிருக்கின்றனன் அவனைவென்றால் அவன்மூத்தோனைவெல்லுத லெளிதென்றுகூற,அவ்வாறேசெய்துமென்றருள்கூர்ந்து வீரவாகுமுதலியோரை யேவினர். அவர்கள் போர்க்குச்சென்று கிரவுஞ்சத்தின்மாயையால் சோர்ந்துகிடத்தலையுணர்ந்து அம்முருகக்கடவுள் போர்க்குச்சென்று திருக்கைவேலினால் தாரகனையும் கிரவுஞ்சத்தையுமழித்து மயக்கந்தீர்ந்தெழுந்த வீரவாகுமுதலியரோடு காசிமுதலியதிருப்பதிகளைக்கடந்து மண்ணியாற்றில்வருங்காலையில் சூரியனத்தமித்தனன், அங்குத் தேவகம்மியனால் ஒருநகரும் திருக்கோயிலும் நிருமித்து அங்குறைந்தருளினமையால் சேய்ஞலூரெனக் காரணப்பெயர் அந்நகர்க்குவந்தது. அங்குச் சிவலிங்கந்தாபித்துப் பூசித்துப் பெறுதற்கரிய ஆயுதத்தையும் பெற்றருளினர் என்பது "விண்டுழாய்நிமிர் கிரவுஞ்சகிரியினைவிண்ணோர் - கண்டுளம்பதைபதைத்தனர்மகபதிகலக்கம் - கொண்டுநின்றனனாரதனணுகியேகுமரன்-புண்டரீகநேர்பதந்தொழுதின்னனபுகல்வான். தூயநான்மறையந்தணர்முனிவரீச்சுரத்திற் - போயவெல்லையினெறியதாய் வரவரப்புணர்த்து-மாய்வுசெய்துபின் குறுமுனிசூளினிவ்வடிவாய்-ஏயதொல்பெயர்க் கிரவுஞ்சமால்வரையிதுதான். நேரிலிக்கிரிக்கொருபுடைமாயநீணகரிற்-சூரெனப்படுமவுணருக்கிளவலாந்துணைவன்-போரிலச்சுதனேமியை யணியதாப்புனைந்தோன்-தாரகப்பெயர்வெய்யவன்வைகுறுன்சயத்தால். இன்னவன்றனையடுதியேலெளிதுகாணினையோன் - முன்னவன்றனைவென்றிடலெனமுனிமொழிய - மின்றுதண்சுடர் வேலவனவற்றினைவினவி - அன்னவன்றனை முடிக்குதுமிவணெனவறைந்தான். தாரகனென்பதோர் பேரோனைச்சஞ்சலமுறுகிரவுஞ்சத்தை - ஓரிறைசெல்லுமினுட்கீறி யுள்ளுயிருண்டு புறந்தேகிப் - பாரிடர்தம்மையிலக்கத்தோர் பதின்மர்களாகவுமாக்கின்ற - வீரனைமீட்டிவண்வருகென்றே வேற்படைதன்னைவிடுத்திட்டான். அச்சமோர்சிறிதுமில்லா வவுணர்கோறுவமேற்செல் - நச்சரவென்னச்சீறி நணுகலுமவன்மார்பென்னும் - வச்சிரவரையின்மீது வானுருமேறுற்றென்னச் - செச்சையந்தெரியல்வீரன் செலுத்தும்வேல்பட்டதன்றே. தாரகன்மார்பமென்னுந் தடம்பெருவரையைக்கீண்

Koviloor Digital Library

டு - சிரிவரிவேல்சத்திற் சேர்ந்தபட்டுருவிச்சென்று - வீரமும்புகழுங்கொண்டு விளக்கியசெல்லவைக்கட் - சோரியுந்தகளுமாடித் தன்னைணமீண்டதன்றே. வீசுபேரொளிவிற்றுகளிப்வா - முசின்மன்னியினகன்களைநன்னா - ஈசனுமவனையெய்தபுவேதா - தேசவன்முதல்வரின்னையென்பார். பிறையணிச்சடை பெருந்தகைதானம் - இறுதியில்லனவிருந்தவைற்றுல் - நேயதாகுமிக் கதிக்கனைதன்னில் - இறைவவிட்பிடையிருந்தருளென்றுர். மெய்விதித்தொழிலில் வேதவிகர்க்கும் - கைவலோயோருகணம்படுமுன்னர் - இப்விடத்தினிலெமக்கொருமூதூர் - செவ்விதிற்புனைவுசெய்குதியென்றுன். வீரவேனிதவிளம்புதலோடும் - அரும்வானவர்களம்மொழிகேளா - பொலாமுடைய விக்கர்செய்கு - ஊரதென்றுபெய ரோதினரன்றே. அவ்வக்காலயிலாறுமாமுகனுடையடிகள் - தெய்வக்கம்மியற் கொண்டொருசிகரமியற்றிச் - சைவத்தந்திரவிதிபுனிதாடியதானை - எவ்வெக்காலமுநிலையதோருருவுசெய்திட்டான். இருவருமுணர்கிலாதிருந்ததாள்களைச் - சரவணமிசைவரு தநயன்பூசனை-புரிதலுமுமையொரு புடையிற்சேர்தர - அருள்விடைமிசை யண்ணறோன்றினன். ஆயதகாலைதன்னி லருவுருவாகுமண்ணல் - சேயினைநோக்கியுன்றன் வழிபடற்குவகைசெய்தே - நீயிதகோடியென்று நிரந்தபல்புவனமுற்றும் - வயெனமுடிவுசெய்யும் படைக்கலத்திறைவயீந்தான" என ஷெ புராணத்தில் தாரகன்வதைப்படலத்திலும் குமாரபுரிப்படலத்திலும்,

திருச்சேய்ஞாரில் பிராமணர்குலத்தில் எச்சதத்தனென்பவர் திருமைந்தராகத் திருவவதாரஞ்செய்து விசாரசர்மாவெனப் பிள்ளைத்திருநாமம்பெற்று வேதமோதப் பார்ப்பனச்சிறுவரோடு வேதபாடசாலைக்குச்செல்லும்போது, ஓரிடையன் தன்னைக்குத்திவபசுவைத் தடியாலடித்ததைப்பார்த்து ஓ இது பெரும்பாதகம் என அவனைவிலக்கித் தாமே யிடையூறின்றி மேய்த்து வருங்காலையில், பசுக்கள் கனிகூர்ந்து பால்சுரப்பதைக்கண்டு குடத்திற்பிடித்து அம்திருக்கு மண்ணியாற்றங்கரையில் ஆத்திமரத்தின்கீழ் மணலால் சிவலிங்கமும் ஆலயமும் சமைத்துப் பூசித்து வருவதை ஒருபிராமணன்கண்டு அவ்வூரிலிருக்கும் அந்தணர்களுக்கு உணர்த்த, அதனையுணர்ந்த எச்சதத்தர் சினங்கொண்டு மண்ணியாற்றங்கரைக்குச்சென்று ஒளித்துநின்று தம்மைந்தர்செய்கையைக் கேள்வியுற்றபடி யறிந்து பால்நிறைத்த குடங்களைக் காலாற்சிந்த, அதைக்கண்ட நாயனார் அவர்காலைத்தறித்துத் தமதுநிலையில் வழுவாது நின்றனர். இறைவர்காட்சிதந்து நம்பொருட்டுப் பெற்றதந்தையிழுந் காலைத்தறித்தனை ஆதலால் இனிநாமே யுனக்குத்தந்தையென்று குடும்ப்ருமாலைமுதலியவற்றை யருளினர் என்பது "ஓதுகிடையிருடன்போவாரூரானிரையிறுடன்புக்க - போதமற்றக்கொருபுனிற்றுபோற்றுமவன்மேன்மருப்போச்ச - யாதுமென்றுங்கூசாதே யெடுத்தகோல்கொண்டவன்புடைப்ப - மீதுசென்றுமிகும்பரிவால் வெருண்டுவிலக்கிமெய்யுணர்ந்து. யானேயினியிந்நிரைமேய்ப்ப னென்றுராற்றிடைமகனும் - தானேயிறைஞ்சிவிட்டகன்றுன் ருழுமறையோரிசைவினுல் - ஆனேருக்கும்பேராய மனிப்பாரேகிப்பைபக்கூழ்க்கு - வானேயென்னநிரைகாக்கவந்தார்தெய்வமறைச்சிறவர் - தம்மையனைந்தவான்முலைப்பா லுமேபொழியக்கண்டே - செம்மைநெறியேயுறமனத்திற் றிருமஞ்சனமாங்குறிப்புணர்ந்தே - எம்மையுடையவள்ளலா ரெய்தநினைந்ததெளிந்ததனின் - மெய்ம்மைச்சிவனூர்பூசனையைவிரும்பும்வேட்கை விளைந்தெழுநும். செயலிப்படியேபலநாளுஞ் சிறந்தபூசைசெய்வதற்கு - முயல்வுற்றதவேந்திருவிளையாட் டாகமூர்த்தலணிமார்பர் - இயல்பிற்புரியுமத்திதனைக்கண்டிருந்ததையறியாத - அயன்மற்றுருவனப்பதியி லந்தணாளர்க்கறி

Koviloor Digital Library

வித்தான். சென்றமறையோன்திருமகனார் சிறந்தவூரானிரைகொடுபோய் - மன்றன்மருவும்புறவின்கண்மேய்ப்பார் மண்ணிமணற்குறையில் - அன்றுதிரளக்கொடுசென்றவதனையறிந்துமறைந்தப்பால் - நின்றகுரவின்மிசையேறிநிகழ்வதறியவொளித்திருந்தான். மேலாம்பெரியோர்பலகாலும் வெகுண்டோனடிக்கவேறுணரார் - பாலார்திருமஞ்சனமாட்டும் பணியிற்சலியாததுகண்டு - மாலாமறையோன்மிகச்செயிர்த்து வைத்ததிருமஞ்சனக்குடப்பால் - காலாலிடறிச்சிந்தினான் கையாற்கடமைத்தலைநின்றான். சிந்தும்பொழுதிலதுநோக்குஞ் சிறுவரிறையிற்றீயோனைத் - தந்தையெனவேயறிந்தவன்றன் றாள்கள்சிந்துந்தகுதியினால் - முந்தைமருங்குகிடந்தகோலெடுத்தார்க்கதுவேமுறைமையினால் - வந்தமழுவாயிடவெறிந்தார் மண்மேல்வீழ்ந்தான்மறையோனும். எறிந்தவதுவேயர்ச்சனையி லிடையூறகற்றும்படையாக - மறிந்ததாதையிருதாளுந் துணித்தமைந்தர்பூசனையில் - அறிந்தவிடையூறகற்றினாராய் முன்போலருச்சித்திடப்புகலுஞ்-செறிந்தசடைநீண்முடியாருந் தேவியோடும்விடையேறி. பூதகணங்கள்புடைசூழப் புராணமுனிவர்புத்தேளிர் - வேதமொழிகளெடுத்தேத்த விமலமூர்த்திதிருவுள்ளங் — காதல்கூரவெளிப்படலுங் கண்டுதொழுதுமனங்களித்துப் - பாதமலர்கண்மேல்விழுந்தார் பத்திமுதிர்ந்தபாலகனார். தொடுத்தவிதழிசூழ்சடையார் துணைத்தாணிழற்கீழ்விழுந்தவரை - எடுத்துநோக்கிநம்பொருட்டாலீன்றதாதைவிழவெறிந்தாய் - அடுத்ததாதையினியுனக்கு நாமென்றருள்செய்தணைத்தருளி-மடுத்தகருணையாற்றடவி யுச்சிமோந்துமகிழ்ந்தருள. அண்டர்பிரானுந்தொண்டர்தமக் கதிபனாக்கியனைத்துநாம் - உண்டகலமுமுடுப்பனவுஞ் சூடுவனவுமுனக்காகச் - சண்டீசனுமாம்பதந்தந்தோ மென்றங்கவர்பொற்றடமுடிக்குத் - துண்டமதிசேர்சடைக்கொன்றை மாலைவாங்கிச்சூட்டினார்” எனப் பெரியபுராணம் சண்டீசநாயனார் புராணத்திலும் வருதல்காண்க. திருச்செங்காட்டங்குடியில் சுவாமி திருப்பெயர் கணபதீஸ்வரர். அம்மை திருப்பெயர் திருக்குழன்மாதம்மை. திருச்சேய்ஞலூரில் சுவாமி திருப்பெயர் சத்தகிரீசர். அம்மை திருப்பெயர் சகிதேவிநாயகி.(உக)

கறுவிவீழ்காலன்மார்பிற்சேவடிக்கமலஞ்சாத்திச்
சிறுவனுக்காயுளீந்தசேவகப்பெருமான்மேய
அறைபுனற்பழனமூதூரதுவிதுவானைதந்த
குறையுடற்போர்வைபோர்த்தகொற்றவன்கோயில்காண்மின்.

(இ-ள்.) கறுவிவீழ் காலன் மார்பில் - கோபித்து மார்க்கண்டேயர்மேற் பாசம்வீசிய இயமன் மார்பின்மேல், சே அடி கமலம் சாத்தி - செவந்த திருவடியாகிய தாமரையை நீட்டி, சிறுவனுக்கு ஆயுள் ஈந்த சேவகம் பெருமான் மேய - அம்மார்க்கண்டேயருக்குத் தீர்க்காயுள் தந்தருளிய வீரராகிய இறைவர் எழுந்தழுந்தருளிய, அறை புனல் பழனம் மூது ஊர் அது - ஒலிக்கும் நீர்வளமிக்க வயல்சூழ்ந்த வீரட்டானமாகிய திருக்கடவூர் என்னுந் திருப்பதி யத்தலமாம், இது - இந்த வீரட்டானமாகிய வழுவூரென்னுந் திருப்பதி, ஆனை தந்த குறை உடல் போர்வை போர்த்த கொற்றவன் கோயில் - ஆனைகொடுத்த அதனுடலினின்று நீங்கிய தோலாகிய போர்வையைப் போர்த்தருளிய வீரனெழுந்தருளிய திருக்கோயில், காண்மின் - அவற்றைக்கண்டு தரிசியுங்கள்.

மிருகண்டுயமுனிவர் புத்திரராகிய மார்க்கண்டர் தமது தந்தை தாயர்களால் தமக்கு ஆயுளெல்லை பதினாறென்றுணர்ந்து தீர்க்காயுளடையத் திருக்கடவூரடைந்து சிவபிரானாரை வழிபட்டுப்பூசித்துவருங்கால் வரையறைப்பட்ட ஆயுள்கழிந்ததென்

Koviloor Digital Library

று இயமன் வந்து பாசம்வீச இறைவர் அவனை யுதைத்து வென்று நீர்க்காயுள் தந்தனர் என்பது "தேப்படுந்திறமெல்லாமொழியவிமையவரும் - மேதக்ககேள்விமுனிவோரும் வேந்தும்விதியுமொர்பால் - சாதத்தலமர்ந்ததிருமாலு முள்ளித்தகவனத்தி-ஓதப்பொலியுந்திருக்கடவூ ரென்றொருதலமே. அந்தத்தலத்தைம்படைமார்பிலக்கவணிசெய்குழை - கந்தச்செவியிற்பொலியச்சிறு தண்டைதாள்விளக்க - வந்தற்புதத்துயர்மார்க்கண்ட னென்றுமழமுனிவன் - கந்தப்புதுமலர்தூய்ப்பெருமானைக்கண்டேத்தினனே. இவ்வண்ணம்பூசனையாற்றிடுகாலையெழுபுலிங்கம் - செவ்வண்ணமாயவுலோசனம்வீசத்திருக்குளத்தோ - டவ்வண்ணமாயபெருமானருட்குரியானைவளைத் - தெவ்வண்ணமேவிமறலிபகடுசெலுத்தினனே. கூற்றுவரக்கண்டுசங்கரவோவோவென்றுசமுண்டு - போற்றுபிரமன்முதலோர்க்குயிர்தந்தபுண்ணியவோ - ஏற்றமிசையுவந்தொள்ளடியானொபெதிர்பவவோ - தோற்றுபயந்தவிர்த்தாள்புகலென்றுதுதித்தனனே. துதிக்குமதருக்கிரங்கிச் சயம்பெருஞ்சோதிமறை - மதிக்குங்கருணைப்பிழம்பாயவன் வெளிவந்தவிலிங்கத் - திதிக்கும்படியுற்றனமென் றருளிச்செறிந்தவினை - முதிக்கும்படிபெதிர்நின்றவன் மார்பிலுதைத்தனனே. உதையொன்றுகொண்டுயிர் மாண்டானமன்"என மாயூரப்புராணம் தருமன் பூசித்த படலத்திலும்,

மாயூரத்தின் தென்மேற்றில் தாருவனமென்று ஒன்றிருந்தது, அவ்வனத்தில் வசிக்குமுனிவர்கள் சற்கருமமே தனிமுதலென்று துணிந்து மற்றைக் கடவுளரை யிகழ்ந்தும் அவர்கள் பன்னியர்கள் கற்புநிலையில் மேம்பட்டோமென்று திருமகள் முதலியோ ரிகழ்ந்தும் ஒழுகுநாளில், திருமாலை யம்முனிவர் தவநிலையைச் சோதித்தற்பொருட்டு ஏவித் தாம் அவர்கள் பன்னியர்கள் கற்புநிலையைச் சோதித்தற்பொருட்டுச் சென்றருளினமையால் அவர்கள் தத்தம் நிலைகுலைந்து இது சிவபெருமானால் விளைந்ததென்றுணர்ந்து ஓர் அபிசாரவேள்விசெய்து அதினின்று தோன்றிய யானையை அப்பெருமானை யழிக்க வேவினார்கள், அந்தயானை விடைபெற்றுச்சென்று தேவர் முதலியோர் அஞ்ச அப்பெருமானை யெடுத்து விழுங்கியது, அஞ்சற்கவென்று தேவர்களுக்கருளி யுள்ளேசென்ற விறைவர் அதனுடலைப்பிளந்து தோலைக்கொண்டு மேலெழுந்து போர்த்தருளினர் என்பது "இயங்குபல்லுயிருமேனை யுயிர்களுமியாயின்பம்-முயங்குமான்மியத்ததாகி முழுமறைமுடியினுளுந்-தயங்குமுண்மையதேயாய தவாபுகழ்மாயூரத்தின்-வயங்குதென்மேல்பாற்குரு வனமெனும்வனமொன்றுண்டால். அத்தருவனத்தில்வாழு மருந்தவமுனிவர்பல்லோர் - சுத்தவில்லொழுக்கம்புண்டுகருமமேதனிபாமலதிச்-சத்தநிவின்பருபத் தனிமுதல்வேறின்றென்றும்-வித்தகமருவிநின்றார் மேல்வரும்வினைவுதேறார். அனையபன்முனிவர்தங்களில்லறக்கிழமையாளு - னையமென்கூந்தற்செவ்வாய்ப் பார்ப்பனநல்லார்பல்லார் - புனையவாங்கற்புப்போலப் பொற்புமேம்பட்டோமென்று - வினையயாவரையுமெண்ணித்தருக்குலாய்த்திருப்பரம்மா. அன்னவர்செருக்குக்கண்டு மென்றவற்கருளிப்போக்கி - முன்னவன்மாயூரேசன் முகுந்தனாதினைத்தானம்மா - மன்னவன்வந்தாழ மாயமாதவேடமேன் - சென்னவம்முனிவர்பாற்போய்ச் சோதனைபுரிதியென்றான். காண்டலுக்கருப்புவில்லான் கணைக்கெலாமிலக்கமாகி - மூண்டவெங்காமம்பொங்கப் பருகுவார்போலமொய்த்துப் - பூண்டமால்பானையுண்ட வெள்ளிலங்கனியேபோன்று - மாண்டதத்தவமுமுள்ளச் செருக்குமாண்டவரேயானார். என்னிலாவண்டத்தன்று மிவைதரவியாபித்தன்ளே - என்னிலாவனப்புமுற்று மெழுந்தோருக்குற்றவென்ன - என்னிலாவுயிர்களுக்கு மெந்நான்றுங்களைகளைய - என்னிலாமறைக்குமெட்டா லிவங்குமோருருவக்கொள்வான். பலியிடவந்தமாதர் டாம்பான் முகமுங்கண்ணும் - வலிகெழுபுயமுமார்பும் வயங்குசெங்கையுங்காது

ம் - பொலிதிருவரையுங்கோசப் பொற்புமற்றனைத்துநோக்கி - மெலிவருமயக்கம் பூண்டார் வேளுந்தன்வலிதெரிந்தான். வண்ணங்கிளர்குலமடவார் பலருமிவ்வண்ணந்தழைதரன்மலிகற்புத் - திண்ணங்குலைதரவவணின்றேகி யோர்சிறையுற்றான் மறைமுறையுற்றான் - தண்ணம்புயமகடமுவுந்தனியொரு தயலாடலின்மயன்முதிர்வுற்றே - எண்ணந்தபவுயர்தவமுங்கெடவுடை முனிவோர்யாவருமிதுநேர்வார். நாமுந்தவநிலைகெட்டுக்குலைதர நம்மாதருமுயர்நிலையற்றுத் - தோமும்புனைதரவிது செய்தவனுயர் சூதப்பொழில்வளைமாயூரத் - தாமுஞ்சிறுமதியுங்கொக்கிறகு மலங்குஞ்சடைமுடியவனேயென் - றேமுற்றுறமொழிமறைதேர்முனிவருடன்றாரழல் சினமுற்றாரோ. அவ்வேலையினிஃதென்னுருவதென வச்சுற்றஞ்சலணங்கோவாச் - செவ்வேலுடைமழவோடுஞ்சென்றுயர் தேவன்புடையொருசிறைநின்றாள் - மைவேலையின்வருகொடுவாரணமுயர் வள்ளற்பரனைவிழுங்கிற்றால் - எவ்வேதமுனிகதறப்பெருவலி யிமையோர்களுமுளம் வெருவுற்றார். மதவேழத்திறலுற்றானதனுடல் வகிராமேற்பொலியதள்கொண்டே - இதமாமிதுவென மெய்யிற்போர்த்திருண்மழைமுடியகதிரெனநின்றான். முழுமறையுணர்ந்தோர்கொண்ட கோளுமொய்குழலார்கற்பும் - வழுவுகாரணத்தானுமம் வழுவூரென்றுரைப்பார்" என ஷை புராணம் யானையுரித்தபடலத்திலும் வருதல்காண்க. திருக்கடவூரில் சுவாமிதிருப்பெயர் அமுதகடேசர். அம்மைதிருப்பெயர் அபிராமியம்மை. (௨௨)

பங்கயக்கடவுளீந்தபரிகலம்வாங்கிக்கொண்ட
அங்கணனிடமீதாடலனங்கனையமுதுசெய்த
செங்கணனிருக்கையீதுமேழகச்சென்னிதன்னை
மங்கலமாமற்கீந்தமருகனாரிருக்கைகாண்மின்.

(இ-ள்.) பங்கயம் கடவுள் ஈந்த பரிகலம் வாங்கிக்கொண்ட அங்கணன் இடம் ஈது - தாமரையில்வசிக்கும் பிரமன்தந்த அவன்தலையாகிய பரிகலத்தைக்கைக்கொண்ட இறைவர் எழுந்தருளியிருக்குந் திருக்கண்டியூர் என்னுந் திருப்பதியித்தலமாம், ஆடல் அனங்கனை அமுதுசெய்த செங்கண்ணன் இருக்கை ஈது - வெற்றியையுடைய மன்மதனை நீறாக்கிய அனற்கண்ணையுடைய இறைவர் எழுந்தருளிய திருக்குறுக்கையென்னுந் திருப்பதியித்தலமாம், மேழகம் சென்னிதன்னை - ஆட்டுந்தலையை, மங்கலம் மாமற்கு ஈந்த மருகனார் இருக்கை ஈது - மங்கலமமைந்த தமது மாமனாகிய தக்கனுக்குத் தந்தருளிய இறைவர்வசிக்குந் திருப்பதியாகிய திருப்பறியலூர் என்னும் திருப்பதி யித்தலமாம், காண்மின் - இவற்றைக்கண்டுதரிசியுங்கள்.

ஈது என்பதைப் பின்னுங்கூட்டுக. பிரமன் ஓர்காலத்தில் யாவுஞ்சிருட்டித்தலால் யானே யிறைவனென்று செருக்கடைய நான்கு வேதங்களும் நீ யிறைவனல்லை சிவபெருமானே யிறைவனென்று கூற, அகந்தையாற் பிரமனிகழ்ந்தபோது சிவபெருமான் வெளிப்பட்டு வயிரவர் திருமுகத்தைநோக்க அவனடுத்தலையைக் கொய்தனர் என்பது "கலைவெண்டிங்களுழலக்கனைத்தும் படைத்துக்காத்துக்காய்ந்திடுதல்-நினையுமெனதுவினையாட்டே லபயவரதம்பிடித்துநெளிந் - தெனையொப்பவர்யாரெனத் திசைதோறிருக்குந்தேவரெல்லோரும் - முனிவீரென்னையிலையொவ்வார் யானேமுதல்வனெனவுரைத்தான். இருவர்மொழியுங்கேட்டிகழா விருக்குவேதமாங்கெய்திப் - பருவமுகில்போனிறத்தோயும் பங்கேருகமேலுறைவோயும் - விரியும்புவனமனைத்திருக்குங் கடவுளல்லீர்விரிகடலிற் - கருகும்விடமுண்டுமையளித்த கருணைக்கடலேமுதலாவான். என்னக்குடிலைதெருட்டவுளந் தெருளாதெதினைப்பாகளு

Koviloor Digital Library

டெங் - கன்னிப்படலைத்துழாய்மார்பன் செம்மாந்துறைதல்கண்ணுற்றுங் - குன்னற்
கரியபேரொளியா முக்கட்பெருமானொருகோடி - மின்னுக்கதிரொண்டிசையளப்ப
விசும்புடைத்துவெளிநின்றான். முன்னமெனதுநுதலுப்ப ளுதித்தநீயோ முதல்வ
னெனப் - பின்றும்வெகுண்டுகூறுதலும் பிள்ளைப்பிறைதாழ்மணிமவுலிப்- பொன்ன
க்குடுமிவரைகுழைத்த புனிதன்காரிமுகநோக்க - அன்றேனிடக்கைநகநுதியான்
மலரோனைந்தாந்தலையகழ்ந்தான்" எனக் கூர்மபுராணம் வயிரவன் பலியிரந்த அத்
தியாயத்திலும்,

உமாதேவியார் தக்கன் யாகசாலையில் அவன் புத்திரியென்னும் நாமமொ
ழியத் திருமேனியை விடுத்து மலையரையனும் மேனையுஞ்செய்யும் பெருந்தவத்
துக்கிரங்கி யவர்களுக்கோர் புத்திரியாய்த் திருவவதாரஞ்செய்து சிவபெருமானு
டையடைய நோற்றிருந்தனர், சிவபெருமானார் சினந்து தக்கன் வேள்வியை வீரபத்
திரக்கடவுளாற் சிதைத்துக் கடுவனத்தில் அக்கடுமரத்தின்கீழ் யோகுகூடி யிருக்கு
ங்காலையில் பிரமன்முதலிய எல்லாத்தேவர்களு முணர்ந்து சூரபன்மன் முதலிய அ
சுரர்களாற் கடுந்துன்ப முறுகின்றேம் போகமுமிழந்தோம் இறைவர் யோகுதவிர்ந்
து அம்மையை மணப்பாராயின் நன்மை பெறுவோமென்று கருதி மன்மதனைத் தூ
ண்ட, அவன் தேவியாகிய இரதி யுன்பாணம் இறைவனை யாதுசெய்யும் நீதான் கே
டுறுவாயென்று கூறமறுப்புங் கேளானாகி யரிதகிவனஞ்சென்று அவ்விறைவர்மேல்
தாமரைக்கணைதொடுக்க, அவ்விறைவர் நுதற்கண் திறந்து எரித்தனரென்பது "தக்க
னிலுறையும்பன்ன சாலையையடைந்தாளங்குந் - தொக்கவருமையாடாம லிருந்தன
ர்தனைவன்வார்த்தை-புக்கதுபுந்திபூடுபொருசினந்தலைமேற்கொண்டு-நக்கனள்பாவி
நீயோ தந்தையாகலத்தாயென்று- புரிதருமகமுநீயும் பொருக்கெனக்கெடுகவென்று-
விரிதரவைதமூலக் கனலைமேலெழுப்பியம்மை-யரியதன்னுருக்கரந்தாள். பரம்பரன்
முனிந்தபோது படர்நுதல்விழியினின்றும்-வரம்பறுசெங்கையாவும் வரம்பறுபடை
கடாக்க - நிரம்பியவண்டமுற்று நெறுநெறுநெறவென்றுக்குத் - திரம்பெறுதழிய
கக்குத் தீவிழிகுருதிபொங்க. ஓடியபேரையெல்லா மொருங்குற வளைத்துக்கொ
ண்டு - நீடியவாளால்சிசி நிலத்தவர் தலையைத்தள்ளிக் - கூடியகொடுமைத்தக்க
னெதிர்நின்றுகொடிற்றின்மேலோர் - பாடியகரத்தாற்றுக்கிப் பல்லெலாஞ்சிதற
வீழ்த்தி. தண்ணியவருளால்யாக சாலையில் மாண்டோர்க்கெல்லாம் - நண்ணியவு
யிரைநல்கி நகுவிடையுகைத்தெழுந்து - புண்ணியஞ்சோழநாட்டுப் பொலிதலா
லுயிர்கடோறும் - அண்ணியபெருமான்சொற்ற வரிதகிவனத்தையுற்றான். அனை
யமாதருவிழி லனவில்பல்லுயிருண்மேன்மை - தனையவாமுயிர்களின்பஞ் சார்
தரும்பொருட்டுவாசம் - கனையவாமலர்மேலாற்கு காகணைப்பள்ளியாற்கும் வினை
யமாமறைக்குமெட்டா விமலன்யோகத் திருந்தான். பிறவாதபிறந்துபதுமத்தம
ரும் பெண்ணமுதை - மறவாதநோன்புழந்த மலையானுமேனையுங்கண் - டிறவா
நமகிழ்ச்சியெழ வெடுத்தணைத்துமோந்துபொருள் - உறவாதலனாயடைந்ததொ
க்கு மெனவளர்த்தனரால். பிறைபொருவவளருமொரு பெண்ணரசே ழாண்டள
வும் - உறைசிறுவீடியற்றிடுதல் முதற்பலவாடலினமர்ந்து - மறைவரியகவுமார ம
ருவுதலுங் கலாயத் - திறையவனைமணம்புணர்வா னெண்ணியியற்றினடவமே.
என்றவாறுடன்கூறு மிம்மொழியுணர்ந்ததென்றற் - கன்றமேறுலவுமாரன் கரு
தியதென்னையென்றான் - இன்றங்கேமோகனைத் தெய்வயோகிருக்குஞ்சோதி - செ
ன்றுதேவியைச்சேர்பாக்குச் செய்திடவேண்டுமென்றான். எழுபரித்தே ரொன்றா
ழை விருளறவிழுக்கிறைவன் - செழுவியவிருப்புத்தானைக் குறுஞ்சிதலரித்திட்டா
லும் - பழுதறுதழலைவெண்ணெய்ப் பாகுசென்றடர்த்திட்டாலும் - தொழுதகுபிரா

லைரின்வகை நொடிமலர்க்கணையென்செய்யும். கண்ணுதற்பிரான்மேற்சேறல் காரியமன்றுசொன்னேன் - ஒண்ணுதன்மொழியென்றெள்ளே அயிருனையன்றியில்லேன்- எண்ணுதல்செய்துகொண்ட வெழுச்சியைத்தவிர்தியென்றாள். வளமுறத்தளிர்த்துப் பூத்த வனின்றமாந்தருவொன்றதனடியே - உளமுறமேவியுயிர்க்குயிராய வொருவனைப்பொருதொழில்பூண்டு - களமுறநின்றோன் கருப்புவில்வாங்கிக் கடிப்புறக்குணத்தொனியெழுப்பித் - தளமுறப்பொலியும் விகசிதமமைந்த தாமரைமலர்தொடுத்தெய்தான். எய்தசெங்கமலக் கணையெனுந்தெய்வ மென்செய்வாமேழையேமென்று - செய்தவமதிக்குஞ் சிவபிரான்பாலுஞ் செல்லுவமாறுபட்டந்தோ - வெய்தமைநிமை யறுதன்மெய்யென்று விதிர்விதிர்த்தஞ்சுபுசென்று-பொய்தருமுளத்துப்புகாமலப்பெருமான் புறத்துறப்பட்டதையன்றே. திறக்குமுன்னஞ்சி நடுங்குபுபதறித் தென்றிசையோடினனங்கே - திறக்குமெம்பெருமா னுதல்விழிச்செந்தீ நேருறச்சென்றுசுட்டிடலு - நறக்குலமலரே வுடையவனழகு நயத்தகுமேனியுமெரிந்து - பறக்குமொண்கொடியு மிரதமுங்கரியும் பரியுமற்றெரிந்தனமாதோ" எனத் திருக்குறுக்கைப்புராணம் யோகீசப்படலத்திலும் காமனெழுச்சிப்படலத்திலுங் காமதகனப் படலத்திலும்,

தக்கன்-தனதுமருகனாகிய சந்திரன் தனது ஆணைவழியொழுகாது உரோகணியென்னு மொருத்தியிடத்துக் காதல்கொண்டிருத்தலைத் தன்புத்திரியாகிய அவ்வுரோகணியாலுணர்ந்து சந்திரன் கலைதேய்ந்தழியச் சபித்தனன், அச்சாப மேற்றசந்திரன் சிவபெருமானாரைச்சரணடைந்து அப்பெருமானாரால் சாபந்தீர்ந்துய்ந்ததைக் கேள்வியுற்ற தக்கன் ஏனைமருகரைப்போல வப்பெருமானாரையுங்கருதி யவமதித்து, பிரமனையடைந்து யானொரு தவஞ்செய்யக்கருதினன் அதற்குரியதலம் யாதென்றுவினவ, அப்பிரமன் நிலவுலகில் கீழைக்கடலுக்கு மேற்புறத்தில் காவிரிக்கரைக்குத்தெற்கில் என்பெயரால் பிரமகாடென்று ஒன்றுகண்டனன் அங்குச்சென்று வேள்விசெய்யென்று ஏவினன், அவ்வாறே யங்குவந்து வேள்விச்சாலை யொன்று இயற்றித் திருமாலை யெச்சனாகக்கொண்டு அச்சிவபெருமானாரை யிகழ்ந்தமையால் திருமால் முதலிய வெல்லோரு மொறுக்கப்பட்டு மீட்டும் அவ்விறைவரருளா லுயிர்பெற்றெழுந்து பெருமானாரைத் துதித்து வணங்கினார்கள், அவ்விறைவர் கருணைகூர்ந்து இத்தலத்தில் நீங்கள் அறியாமையாற்செய்த அபராதத்தைப் பறிசெய்தோம் ஆதலாலித்தலத்திற்குப் பறியலென்று ஒரு காரணப்பெயர் பெறுமென்றருளினர் என்பது "அனையவன்மதிப்போர்ந்தையனும் வாளாவனாகினன்சதியொடுங் கயிலை - துனையமற்றொருநாண்மதிபெறுமருகன் றுடியடையொருமகள்பாலே-நினைதருநசை வைத்ததுதெரிந்ததனை நீக்கெனக்கொளாமைதேர்ந்தவனை - இனைதரவொருநாட்கொருகலையாத்தேய்ந்திறுதி யென்றுரைத்தனன் கொடியோன். கொடியவன்மொழியாலுட்கு நாளொன்றுகுறைவதுகண்டவவ்வரலோன் - நெடியவன்முதலாமமருமஞ்சிநிந்த துங்கண்டுவான்கயிலை - அடிகளையடைந்துகாத்தி யென்பதன்முனங்கைதொட்டெடுத்தனன்சடில - முடிமிசைவைத்தோர்நாமமும் பூண்டான்முருக்கினுமம்மதியே. அதுதெரிதக்கனாகியமூர்க்க னழுக்கறுத்திருந்தனன்பின்னர் - கதுமெனவெழுந்துமதுமலர்ப்பொருட்டுக் கடவுளையடைந்தடிபணிந்து - சதுமுகமகமொன்றியற்றுதல் குறித்தேன்றகுமிடம்புகலெனவனையான் - விதுமுடிப்பெருமான் விரைந்தருள்புரியுமேதகுதலமுளத்தாய்ந்து. குணகடன்மேல்பால்யோசனைக்கப்பாற்குலவு காவிரிக்கரைத்தென்பால் - அணவுமோர்வனமுண்டதை நகர்கண்டேனப்பெருந்தானத்தினெல்லை - புணர்தருஞ்சுற்றும்யோசனையளவுபோற்றுமவ்வெல்லையுளழலோற்-குணை

Koviloor Digital Library

ந்தருநிசையிலழல்வளர்த்திடுத லுத்தமமாகுமென்றுரைத்தான். படுமகச்சாலையடைந்தவக்கோடியோன் பைந்துழாய்முகில்வரக்கண்டு - நெடுமரமௌனமற்றவனடிவீழ்ந்த நிலவவெண்மகம்புரந்தளித்தி-டுவமர்களைத்தனிவனுருவனைங் கழித்தனனெனைவோன்றமுனையோன் - தடுவெரியவன்போலிருந்தனன் கேடுசாருமேற்றடுப்பவரெவரே. பரவியவருணைமூர்த்தி பத்திரப்பிரானைநோக்கி - விரவியவிவரையெல்லாம் விரைத்தெழுப்பிநீகவென்றான் - வரவியலவருந்தாழ்ந்த மாண்டவர்பலருமின்னே-உரவுபெற்றெழுகவென்று னுறக்கமுற்றெழுந்தாற்போல. ஆதலினின்றுநாங்க ளவமதித்திருந்ததற்கக் - காதலினடிகள்கண்டித் ததுபெருங்கருணையாகு - மேதகுமிதற்குத்தைமா றேதுண்டுமெய்மையேயுன் - பாதபங்கயங்கள்பல்காற் பணிதரலன்றியைய. என்றுரைத்தடியில்வீழ்ந்த விரைத்துழாய்மாலையாற்கு - நன்றுளக்கருணைபூத்த மாயமுனைக்கலுற்றான் - குன்றுகைக்கொண்டாய்நீயுங் கூடியபிறருமின்னே - சென்றுமுன்பிரமன்போற்றச் சிருட்டிகாந்தருமோர்தேத்து. வயங்குநங்குறியொன்றுண்டு மற்றதுகண்டுபோற்றில் - இயங்குநபாதகம்போ மெம்மருட்பேறுமுண்டாம் . பயங்கெளர்முக்கட்டைம பதிசெய்தோமித்தேத்தற்குற் - றயங்குமித்தானமென்றும் பதியவென்றொருபேர்சார்க" எனமாயூரப்புராணம்தக்கன் மகம்புரிபடலத்திலும் யாகசங்காரப்படலத்திலும் வருஞ் செய்யுள்களாலுணர்க. திருக்கண்டியூரில் சுவாமி திருப்பெயர் வீரட்டேசர். அம்மை திருப்பெயர் மங்கைநாயகியம்மை. திருக்குறுக்கையில் சுவாமி திருப்பெயர் வீரட்டேசர். அம்மை திருப்பெயர் ஞானம்பிகையம்மை. திருப்பறியலூரில் சுவாமி திருப்பெயர் வீரட்டேசர். அம்மை திருப்பெயர் இளங்கொம்பம்மை. (௨௩)

திண்டிறலவுணன்றன்னைப்பெருவிறற்றிட்டுநேமி
உண்டிடவிருந்தாக்கொண்டோனுறைபதியொருத்திமன்றல்
கண்டிடுகரியாய்க்கூவல்கண்ணுதலிலிங்கம்வன்னி
எண்டிசையறியக்காட்டநின்றிடமிதனைக்காண்மின்.

(இ-ள்.) திண் திறல் அவுணன் தன்னை - திண்ணியவலிமைவாய்ந்த சலந்தராசுரனை, பெருவிறல் திட்டும் நேமி உண்டிட விருந்து ஆக கொண்டோன் உறைபதியும் - அங்குட்டத்தால் நிலத்தில்வரைந்த சக்கராயுதம் உயிருண்ணவிருந்தாக நேர்ந்த இறைவரெழுந்தருளிய திருவிற்குடியென்னும் திருவீரட்டானம் இத்தலமாம், ஒருத்திமன்றல் கண்டிடுகரி ஆய் - ஒருவைசியப்பெண்ணை மணஞ்செய்தற்குச் சாட்சியாக, கூவல் கண்ணுதல் இலிங்கம் வன்னி - கிணறும் சிவலிங்கமும் வன்னிமரமும், எண்திசை அறிய காட்டநின்ற இடம் - எட்டுத்திசையிலுள்ளோரும் (அம்மணத்தை) உணரும்படி புலப்படுத்திநின்ற திருப்புறம்பயமென்னுந் திருப்பதி. இதனைகாண்மின் - இத்தலமாம் இதனைக்கண்டு தரிசியுங்கள்.

சலந்தராசுரனைவென்றதும் ஒருவைசியப்பெண்ணை வைசியன்மணஞ்செய்தற்குச் சாட்சியாகக் கிணறும் சிவலிங்கமும் வன்னிமரமும் நின்றதும் முன்னர்க் காண்க. திருவிற்குடியில் சுவாமிதிருப்பெயர் வீரட்டானேசர். அம்மை திருப்பெயர் மைவார்குழலியம்மை. திருப்புறம்பயத்தில் சுவாமிதிருப்பெயர் சாட்சிவரதநாதர். அம்மைதிருப்பெயர் கரும்பன்னசொல்லம்மை. (௨௪)

சாமகண்டத்தன்றன்னைத்தானருச்சித்ததென்னர்
கோமகன்பிரமசாயைகுறைத்ததிப்பதியாங்கங்கை

Koviloor Digital Library

மாமகந்தோறும்வந்துவந்துதற்படிந்தோர்விட்டுப்
போமகம்போகமூழ்கும்புனிதநீர்ப்பதியைக்காண்மின்.

(இ-ள்.) சாமகண்டத்தன் தன்னை தான் அருச்சித்த தென்னர் கோமகன் பிரமசாயை குறைத்தது இ பதி-சாமகண்டத்தராகிய இறைவரை யருச்சனைசெய்த வழுதியர்குலத்திற்றோன்றிய வரகுணபாண்டியரது பிரமகத்தியையொழித்தருளிய இறைவர் எழுந்தருளிய திருவிடைமருதூரென்னுந் திருப்பதியித்தலமாம், கங்கை-கங்கைநதியானது, தன்படிந்தோர் விட்டு போம் அகம் போக மாமகம் தோறும் வந்துவந்து மூழ்கும் புனிதம் நீர் பதியை காண்மின் - தன்னிடத்து ஸ்நானஞ்செய்தோர் தன்பால் விட்டுப்போகும் பாவங்கழிய மாமகந்தோறும் வந்து ஸ்நானஞ்செய்யும் புனிதமாகிய தீர்த்தத்தையுடைய கும்பகோணமென்னுந்திருப்பதியித்தலமாம் இதனைக்கண்டுதரிசியுங்கள்.

வரகுணபாண்டியர் பிரமகத்தியொழிந்தது வரகுணபாண்டியனுக்குச் சிவலோகங்காட்டிய படலத்திற்காண்க. கங்கை,யமுனை, நருமதை,சரஸ்வதி,கோதாவரி, காவிரி, பயோட்டிணி, சரயு, கன்னியாகுமரியென்னு நவநதிகளும் தம்மிடத்துவந்து நீராடுவோர் பாவங்களையொழித்துப்போதலால் அப்பாவங்களைச் சுமக்கலாற்றாது ஓரிடத்தி லொருசேரக்கூடிச் சிவபெருமானு ரிடத்துக்குறைகூறப் பெண்ணுருக்கொண்டு திருக்கயிலைக்குச்சென்று இறைவர் திருவடிகளை வணங்கித் தமது குறைபாடு கூற, அவ்விறைவர் புன்னகைகொண்டு நீங்கள் வருந்துதலொழிக, கும்பகோணத்தில் அக்கினித்திக்கில் ஒரு தீர்த்தமுண்டு, அந்தத்தீர்த்தத்தில் வியாழன் சிங்கராசியில் வரும்போது வரு மகநக்ஷத்திரத்தில் நீங்கள் சென்று நீராடுவீர்களாகில் நீங்கள் சுமந்த பாவங்கள் விடுபடும், அந்த நக்ஷத்திரமும் பன்னிரண்டுவருடத்துக்கொருதரம் உத்தமமாகும் அதுவுஞ் சமீபித்தது அங்குச்சென்று நீராடுங்கள் போமென்றருளினார் என்பது "திரைமேயெறிதெய்வக்கங்கை தீம்புனல்யமுனைமேலோர் - உரைநருமதையெஞ்ஞான்று மொளிர்சரச்சுவதிவான்றாழ் - வரைபெயர்த்தெறியுங்கோதா வரிவளமருதபொன்னி - தரையகழ்ந்தொழுகாநிற்கும் பயோட்டிணிசரயுமற்றும். கன்னியாகுமரியென்னக் கரைபொருநதியொன்பானுந் - துன்னியாருயிர்கடம்பாற் றோய்ந்தொழித்திடுபாவங்கள் — மன்னியார்ப்பெடுத்துப்பற்ற மற்றவைசுமக்கலாற்றா - துன்னியாங்கயிலைமேவி யுரைசெய்வாம்பெருமாற்சென்று. ஓரிடத்தொருங்குகூடியொன்பதுமடவாராகிப் - பாரிடத்தொகையோடாடும் பரம்பரன்கயிலைமேவி - நாரிடத்தமருந்தெய்வ நகுமலர்ப்பாதம்போற்றி - யாரிடத்துரைப்போமைய வடியரேமடையுந்துன்பம். யாதுநந்துன்பமென்னி லெப்புவனத்துள்ளாரு - மோதும்வெம்பாவமெம்பான் முழுகியேதொலைப்பாரானார் - காதுமப்பாவமெல்லாங் கலந்தெமைவருத்தாநிற்கும் - ஓதுமற்றிதற்குத்தீர்வொன் றும்பர்தம்பிரானேயென்றார். கன்னியர்மொழிந்தவார்த்தை கண்ணுதற்பெருமான்கேட்டு - மின்னியமுறுவல்பூத்து மேதகுநதிகாளொன்று - முன்னியவேண்டாயாரு மொழிபுகழ்க்கும்பகோண - மன்னியவழலோன்றிக்கில் வயங்குமோர்தீர்த்தமுண்டால். ஆயவத்தீர்த்தந்தன்னி லாண்டளப்பவன்சிங்கத்து - மேயமாமகநாண்மூழ்கில் விடுபடும்பாவமெல்லாம்-தூயவத்தலமிவ்வெள்ளி மலையினுந்தூயதாகும் - பாயகம்பிரியமெல்லா மாவயிற்பதியுமன்றே அத்தலத்தந்தநாளு மாண்டுபன்னிரண்டுக்கோர்கால் - உத்தமமாகமேவு மற்றதுமணித்தாயுற்ற - தெத்தலங்களினுமேலா மத்தலத்தின்னேசென்று - புந்தமுதனையீர்மூழ்கும் போமென்றான்கருணைமூர்த்தி" எனக் கும்பகோணப் புராணம் விசுவநா

தர் வரவுப்படலத்தால் உணர்க. இதனால் தலமுந் தீர்த்தமுங் கூறப்பட்டன. திருவிடைமருதில் சுவாமி திருப்பெயர் மருதீசர். அம்மை திருப்பெயர் நலமுலைநாயகி.

குருமொழிதந்தைக்கீந்தெங்குருவுறைமலையிதெங்கோன்
கருமுகில்வண்ணத்தண்ணல்கண்ணிடந்தடியிற்சாத்தப்
பொருவிறலாழியீந்தபுரமிதுநந்தியெந்தை
திருவுருவடையநோற்றதலமிதுதெரிந்துகாண்மின்.

(இ-ள்.) குருமொழி தந்தைக்கு ஈந்த எம் குரு உறைமலை இது-உபதேசமொழியைத் தமது பிதாவாகிய இறைவர்க்கு உபதேசித்து எமது குருவாகிய சாமிநாதக் கடவுள் எழுந்தருளிய திருவேரகமாகிய சாமிமலையென்னுந் திருமலையிம்மலை, எம் கோன் - எமது தலைவராகிய சிவபெருமானார், கருமுகில் வண்ணத்து அண்ணல்- கரியமேகம்போலுந் திருநிறத்தையுடைய திருமால், கண் இடந்து அடியில் சாத்த பொருவிறல் ஆழி ஈந்த புரம் இது - தமது கண்ணினையிடந்து திருவடியில் தாமரை மலராகச்சாத்தப் போர்செய்தற்குரிய வெற்றிவாய்ந்த சுதரிசனமென்னுஞ் சக்கரத்தை, பூசித்த அத்திருமாலுக்கு அருளிய திருவீழிமிழலையென்னுந் திருப்பதி யித்தலமாம், நந்தி எந்தை திரு உரு அடைய நோற்ற தலம் இது - நந்திநாயனார் எமது தந்தையாராகிய இறைவரது திருவுருவத்தை யடையும்படி தவஞ்செய்த திருவையாறென்னுந்திருப்பதி இத்தலமாம், தெரிந்துகாண்மின் - ஞானக்கண்ணாலுணர்ந்து தரிசியுங்கள்.

குமாரக்கடவு ளிறைவர்க்குபதேசித்தருளியதும் திருமால் தாமருச்சிக்குந் தாமரைமலர் ஆயிரத்துள் ஒன்றுகுறையக் கண்ணிடந்துசாத்திச் சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைப்பெற்றமையு முன்னர்க்காண்க. சிலாதமுனிவர் தவத்தால் அவர்வேள்விக் குழிநிலத்திற்றோன்றி வேதங்கள் முற்றுமுணர்ந்து பருவமேழுசென்றபின் மித்திராவருணரென்றுமுனிவர் இனிவரும்பருவத்தில் உயிர்நீங்குவரெனக்கேட்ட அச்சிலாதமுனிவர் மனம்வருந்தத், தமது தந்தையைநோக்கி மனம்வருந்தற்கவென்றுமொழிந்த இறைவரைவணங்கித் துதிக்குங்காலையில் அவ்விறைவர் விடைமேலெழுந்தருளி யுனபா லியமன் அணுகானென்று திருவாய்மலர்ந்து திருக்கரத்தையவர்சென்னிமேற் சாத்தினர், அன்றே சந்திரசடாதாரரா யவ்விறைவ ருருக்கொடுதோன்றினர் என்பது "செப்பின்னாிருந்தவச்சிலாத னச்சநன்கியற்றவாளெண்ணிச் - சேறேவும்பப்புழுகத்தகூன்கொழுவாற் திருத்தவுழுதயங்நிலத்தில்-ஓகையுற்றிடயருநித்தனனதகண் டேப்புடலமரர்களியாரும் -.நாவிளர்தருவினறுமலர்தூவி நவையறவழுத்தினர்பெரிதம். இருந்தபின்னர்மா னிடவுருவாகவென்றுருவம்- தெரிந்தாலுணர் வொழிநாச்சிந்தினைகுழைந்து - பரிந்துநோக்கிமற் றென்றுடைத் தாதைபன்னிய - விரிந்தநான்மறையாவையும் விளக்குறத்தெரித்தான். பருவமேழுசெல்காலைபிற் பழமறைமுழுதந் - தெரியுமித்திராவருணராந்திறமுனிவர்-அருகுவந்திவி யோர்பருவத்தினிலாவி - ஒருவுமென்றனர் செய்தனருணர்விலுணர்ந்தே. அவவாசகக்கேட்டறுமருருகச்சிலாதன் - சாயநெஞ்சகந் தளர்தலுந்தளரனிதளரல் - மாய்வதில்லையா னென்றவன்மனக்கோளக்கூறிப் - பாயுமால்விடைப் பாகனைப்பணிந்தனன்றுதித்தேன். வழுத்தல்கேட்டலு மதிமுகிழணிந்தவார்சடைமேற்- குழைத்தபைந்தளிர்க் கொன்றைதாழ்குழகனெவந்தாவி - அழிக்குங்கூற்றுவ றுன்றுழையணுகிடவென்று - தழைத்தகாதலாற் றலையின்மேற்றன்கரம்வைத்தான். வைத்தகாலையின்மதியணிசெஞ்சடைதோன்றப் - பைத்தபாம்பணி பரமனல்லுருவுகொ

Koviloor Digital Library

ண்டுறைந்தேன்"என இலிங்கபுராணம் சிலாதன்மகவுவேண்டித் தவம்பண்ணினவத்தியாயத்தாலும்,நந்திநாயனார் காலனைவென்ற வத்தியாயத்தாலும்அறிக. சுவாமிமலையில் சுவாமிதிருப்பெயர் சாமிநாதக்கடவுள். திருவீழிமிழலையில் சுவாமிதிருப்பெயர் வீழியழகர். அம்மைதிருப்பெயர் சுந்தரகுசாம்பிகை. திருவையாற்றில் சுவாமிதிருப்பெயர் செம்பொற்சோதீசர். அம்மைதிருப்பெயர் அறம்வளர்த்தநாயகி. (௨௬)

முடங்குகாற்சிலந்தியானைமலைமகண்முளரிநாட்டத்
தடங்கடல்வண்ணனோற்றதவநகரிதுமுச்சென்னி
மடங்கலேறனையானாமவரையிதுகுடைந்தோர்பாவம்
அடங்கலும்பருகும்பொன்னியாறிதுகாண்மின்காண்மின்.

(இ-ள்.) முடங்குகால் சிலந்தியானை மலைமகள் முளரிநாட்டம் தட கடல்வண்ணன் நோற்ற தவநகர் இது - முடங்கியகால்களையுடைய சிலந்தியும் யானையும் உமாதேவியாரும் தாமரைபோன்ற கண்களையும் பரந்த கடல்போன்ற நீலநிறத்தையுமுடையதிருமாலும் பூசித்தத்தவஞ்செய்த ஞானகேத்திரமாகிய திருவானைக்காவென்னுந் திருநகர் இத்தலமாம், முச்சென்னி மடங்கல் ஏறு அனையான் நாமம் வரை இது - மூன்றுசிரசையுடைய ஆண்சிங்கத்தையொத்த திரிசிரா என்னும் அரக்கனுடைய பெயர்வாய்ந்த திரிசிராமலையென்னுந் திருமலை இத்திருப்பதியாம், குடைந்தோர்பாவம் அடங்கல் உம் பருகும் பொன்னி ஆறு இது - தன்பால் நீராடுவோர் பாவமுற்றும் போக்கும் காவிரியென்னுநதி இத்தீர்த்தமாம், காண்மின் காண்மின்- இவற்றைக்கண்டு தரிசியுங்கள்.

இதனால் தலமுந்தீர்த்தமுங் கூறப்பட்டன. சிலந்தியும் யானையும் பூசித்தது முன்னர்க்காண்க. ஆன்மாக்கள் போகமடைய உமாதேவியாரோடு கூடியிருந்த இறைவர் அவ்வான்மாக்கள் முத்தியையடைய யோகத்திருந்தகாலையில் அவ்வுமாதேவியார் அவமதிப்புநகைபுரிந்தனர், இஃதுணர்ந்த இறைவர் இப்பிழைதீர ஞானகேத்திரமாகிய திருவானைக்காவென்றுந் திருப்பதியையடைந்து நம்மைப்பூசித்து நோற்பாயென்றருள, அவ்வாறே யிறைவிசென்றருளி யப்புனலைச் சிவலிங்கமாகத்திரட்டித் தாபித்துப்பூசித்து வேண்டி யாங்குவரமும் பெற்றருளினர் என்பது "சம்புமுனிதவம்புரியத் தகுஞானகேத்திரத்தில் - உம்பர்தொழச்சென்றதற்பி னுலகமெலாஞ்சிற்றின்ப - வம்புநெறியொழுகுறவிம் மாதுடனாகியநாமே - நம்புமுயிர்வீடணுக நல்யோகத்திருந்தனமால். இளமைபெருங்கற்பொருவ லெதிராதவெழிலொத்த-வளமையுறுமன்பனைத்து மல்கியிடம்பிரியாத - பிளவுமதிநிகர்நுதலிப் பெண்ணரசிதனை நோக்கா - தளவினெடுநாள்யோகத் தமர்ந்திருந்தவெமைநோக்கி. அள்ளிலைவேற்கணாத ரருகிருந்தோர்பார்த்திருப்ப - வெள்ளனகைபுரிந்திட்டா ளிவளதனால்விரிகின்ற - கள்ளவினைகழுவுவான் கதங்காட்டிநமைப்பிரிந்திட் - டுள்ளமுனைந்திருந்தியெனவொருசாபமுறுத்தினமால். சின்னாளிங்கெமைப்பிரிந்து திகழ்ஞானகேத்திரத்தின் - மன்னுநின்றருந்தவத்தின் மனம்லவத்துநமைப்பூசை - தன்னார்வத்தொடும்புரிந்து சூழ்ந்தமியாகியபின்-பின்னுமங்கருள்வழங்கு வமியாவைபேணென்றும். உயிரினுக்குலவாவின்பச் சுவையினையுதவுமுத்தி-இயலினையுணரப்பூசை யியற்றுவாள்சுவையைநல்கும் - செயிரறுபுனலைக்கொண்டு சிவலிங்கமாக்கமுன்னி - அயிர்வரித்தார்க்குமந்தத் தீர்த்தத்தினறலைச்சார்ந்தாள். நீக்கமில்லாமலெங்கு நிறைந்தபூரணத்தினின்று - தாக்கறநின்றவந்தத் தாணுவின்சரணம்போற்றிப் - போக்கறுதீர்த்தந்தன்னைப்

Koviloor Digital Library

பொன்னெனத்திரட்டித்தேசு - தேக்கொளிவிலிங்கமாக்கித் திகழ்தரவிருத்தினாளால்.
நீத்தகுக்கலன்றொறுந்தொறுமுள்ள நெகிழ்தரவுருகியிவ்வாறத் - தெச்சமில்பூசை
புரிகுவளென்றுரைத்த வினிதுபூசனைமுடிந்ததாயின் - முச்சகம்பழிச்சு முதல்வனைத்த
னைத்த முறைமையமைத்தவனாகி - வெச்செனவுயிர்த்துப் புளகமெய்போர்ப்ப
விழுந்தகுதெகிழ்விளம்பினளால். எவ்வுயிர்க்குமெஞ்ஞான்று மிருக்கிழவனாய்நிற்கும்-
அவ்வுயிரின்கிழவனையே யருக்கிழவனெனச்சார்ந்த - கொவ்வைநறுங்கனிவாயாள்
கொண்கர்திருவருளேறக்கி - முவ்வுலகுமேளிதய்ய முன்னிவரங்கொள்ளுமால்" என
னத்திருவானைக்காப் புராணம் சம்புமுனிதவம்புரிபடலத்திலும், அகிலாண்டநாயகி
யாராதனைப்படலத்திலும்,

இராமமூர்த்தி இராவணனையவனைவென்று விபூஷணனுக்கு மகுடஞ்சூட்டி ய
யோத்திக்குச்சென்றகாலத்தில் தம்முடன்வந்த விபூஷணன் விடைபெறுங்காலையில்
திருமால் திருவுருவொன்றும் விமானமொன்றுங்கொடுப்பப் பெற்று, இலங்கைக்குச்
செல்லும் அவ்விபூஷணன் காவிரிநதிக்கரையிற்சென்று நீராடித் திருமால்பூசனையை
முடித்து அக்காவிரியில் மணல்மேட்டிலிருத்தி யமுதுசெய்து இலங்கைக்குச்செல்
வோன் விமானத்தையெடுக்க அதுபெயராது வேரூன்றினமையைக்கண்டு கவலையு
ற்றிருந்தபோது திருமால்கனவில்வந்து நீகவலையடையற்க, இது ஞானக்ஷேத்திரமெ
ன்றுந் திருப்பதி, இங்குத்திருமகளுந் தவஞ்செய்கின்றனள், ஆதலாலிங்கேவசிப்
போம் ஆதலால் இலங்கைக்குவாரோம், திருமகள் நடனஞ்செய்யும்படி நாம் செய்
வித்தலால் ரெங்கமென இத்தானத்துக்கு ஓர் நாமமும் எமக்குச் ரெங்கநாதனெ
ன ஓர்திருநாமமும்வழங்கும், நீ ஆண்டுக்கோர்தரமிங்குவந்து எம்மையும் வெண்ணா
வலின்கீழெழுந்தருளிய இறைவனையும் வணங்கி வேண்டியவரம்பெறுவாயென்று
விடைதந்து வெண்ணாவலின்கீழெழுந்தருளிய இறைவனைப்பூசித்துத் திருமகளை நட
மியக்கி வரம்பெற்றனர் என்பது "வானவர்க்கிடையூறுற்று மறமலியரக்கர்சேனை-
வானரப்படையாற்றுக்கி வன்பகைகடந்தயோத்தி - தானமர்ந்தரசுபூண்ட தசரத
ராமன்பாங்கர் - வெனவில்கடத்திண்டோள் விபூடணன்விடைகொள்காலை. திரும
றுமார்பத்தண்ண திருவுருவொன்றஞ்சிறப்பத் - தருவளர்விமானமொன்று முவந்தவ
னளிப்பக்கொண்டு - மருவியவயோத்திநீங்கி மன்னியவிலங்கைசேர - வெருவரு
ந்தானையோடும் விடனிலனெறியச்செல்வான். நாகவெற்றுயருழந்து விண்ணண்ணி
னவெனவும் - குரவமர்பிபகோன்றையாங்கோபத்தினவிந்த-விரவியன்னவனருடா
விளக்கினுமெனவும்- பரவுதண்புனற்காவிரிகள்ளூறப் படர்ந்தான். கார்த்தபூம்பொ
ழில் கலந்தயர்வுயிர்த்தபின்னரக்கன் - ஆர்த்தெழுந்துசெல் காவிரியளிபுனலாடிச்-சீர்
த்தவெண்பொடி கண்மணிதிகழ்மெய்யணிந்து - கீர்த்திமேம்படுங் கேசவன்பூசையு
ம்புரிந்தான். பூசைமுற்றுறப்புரிந்தபின் புயனிறந்தவனைக் - காசகல்கியவிமானத்
துத் தேவித்தவனைத் - தேசமல்கியவெக்கரிலிருத்தினன்சிறப்ப - ஆசைமல்கியவ
றுசுவையடிசிலுமயின்றான். இலங்கைமாநக ரிளிப்புகுவாமெனவெழுந்திட்-டலங்
கன்மார்பகந் தபல்வரவிமானத்தையெடுத்து - வலங்கொடோளினுற் பெயர்த்தனன்
மற்றதுபெயரா - நிலங்கொண்டென்றிய தநிந்தனனேடுந்துயருழந்தான். கவலையுற்றவ
னிருந்துழிக்கனவிடைத்தோன்றிப்-புவனமுண்டவன் விபூடணனேனப்புகல்வா
ன் - சவலைநெஞ்சினையுடையையாய்த் தளரலையிந்த - அவனிஞானகேத்திரமென வ
ழைந்திடப்படுமால். திங்கள்சூடினர் மேவியசிவதலந்தோறுந் - தங்குமுள்ளமென்
கூறினுந்துழாய்த்தவாழ்பாரும்-இங்குடோநமுழுவதமிருந்தவெண்ணாவற்- பொ
ங்குநீழல்வாழ் புனிதனைப்போற்றிடவிதேன். திருவின்மாதரா ளுடகஞ்செய்யு

Koviloor Digital Library

மித்தானத் - தருவமாநகரொன்றுசிரங்கமென்றுளதா - மருவுசிரங்கநாதரொன்றெம க்குலைவழங்கும் - பொருவில்பூசனைவிழாமுதலெமக்கிவண்பொலியும். ஆண்டுதோ றுமிங்கடுத்துநியெமதடிமலரும் - ஈண்டுநாவலினிறைவனுர்பாததாமரையும்-பூண்ட வன்பினுற்போற்றுதிபோதியென்று - நீண்டமாதவனிகழ்த்தினன் மறைந்தனன் மாதோ. பதுமைநன்கியற்றிடும் பாவைநோக்குபு - கதுமெனநாவலிற் கலந்தகண் ணுதல் - விதுவணிசடைமுடி விளங்கமுன்னுறீஇ - எதுவரங்கொள்கென விறைஞ்சி மாதவன். சிரங்ககனெனச் சிறத்தல்வேண்டுமால் - ஓரங்கமீரியலானவுத்தம - கூர ங்கிநேருருக் குழகவென்றனன் - பேரங்கமறையினுன் பெறுகவென்றனன்" என ஷெ புராணம் திருமால் வழிபடுபடலத்திலும் வருதலும்,

இராவணன் தனக்குப் பகைவராய்வரும் வீரர்களைத்தடுக்கத் திரிசிரா,கரன், தூடணன் என்று மூவர்களையும் காவலாளர்களாக இங்கு நிறுத்தி யரசுசெய்து வரு ங்காலையில், கரனும் தூடணனும் பகைவர்களைவென்று அந்த இராவணனை யடைந்த னர்கள், திரிசிராமட்டும் அவன் அநுமதியால் தென்கையிலையிலிருந்து ஆலயம்கோ புரமுதலியவற்றைத் தெய்வத்தச்சனுல் சமைப்பித்து அத்திருமலையின் கீழ்நகரொ ன்று சமைத்துச் சிவபெருமானுளை வழிபட்டுவருங்கால் பெருந்தவம் ஒன்று செய் தனன், இறைவர் திருக்காட்சிதக்தரு ளாமையால் தன்தலை மூன்றனு ளிரண்டனை யரிந்து நெருப்பி லாகுதியாகப்பெய்து மற்றதையும் அரியத்தொடங்கியபோது கா ட்சிதந்து உனக்குவேண்டியவரம் யாதென, தேவரீர்க்கும் இநகர்க்கும் என்பெய ரோ வழங்கவேண்டுமென்று குறையிரப்ப அவ்வரந்தந்தருளினர் என்பது "தூட்ணன் கரனிருவரு மிரும்பகைதொலைத்து - வீடணன் திருத்தமயனக்கழைப்ப வவ்விற லோன் - மாடணைந்தன ரிராவணன் றனதனுமதியால் - ஏடணைந்ததார்த் திரிசிரன் பின்னுமக்கிருந்தான். தண்டவெண்பிறை முடியனையநுதினந் தொழுது - மண்ட பங்களு நவமணிகுயிற்றியமதிலுங் - கொண்டறங்கிய கோபுரச்சிகரமுங் குழுமி - அண்டரின் புறமயன் சமைத்திடும்படி யமைத்தான். முத்தினஞ்செறிதட மொரு நான்கினுமுழுகி - அத்தனின்புற வருச்சனைபுரிந்தன னதன்பின் - மெய்த்தவம் பல வியற்றின னுங்கவன்மெலிந்தும் - பத்திசோதனைபறிந்திட விறுத்தனன் பரமன். இன்னமென்னெதிர் முன்னவன் ருேன்றிடாதிருந்த - சென்னகாரணமெனச் சொ லித்தன் றலையிரண்டை - வன்னிமீதரிந் தாகுதி கொடுத்தனன் மற்றைச் - சென்னி தன்னையு மரிந்திடக் கரத்துவாள் சேர்த்தான். அனையன்வாளினுல் விரைந்துதன் கழுத்தினையரிய - நினையுமெல்லையில் விடையின்மேற் ருேன்றினு னிமலன் - கனக மாமலர் மதுமலர்சொரிக் திருகரத்தாற் - புனையுமால்விடைக் கெதிர்நடந் திறைஞ்சி னுன்போற்றி. நாதநாதனே யுனக்கு மிந்நகர்க்கு மென்னுமம் - ஆகவேவரந் தருதி யென்றிறைஞ்சினுனவனுக் - கேகநாதனு மப்படியாக வென்றியம்பி - மாகமீதினில் வலிமழவிடையொடு மறைந்தான்" எனத் திரிசிராமலைப் புராணம் திருநகரச்சருக் கத்தில் வருதலுங்காண்க. திருவானைக்காவலில் சுவாமி திருப்பெயர். அமுதலிங்கே சர். அம்மை திருப்பெயர் அகிலாண்டநாயகி. திரிசிராமலையில் சுவாமி திருப்பெ யர் தாயுமானேசர். அம்மை திருப்பெயர் மட்டுவார் குழலியம்மை. (உஎ)

இந்நதிவெண்முத்தாரமெனக்கிடந்திலங்குஞ்சென்னி
மன்னவனுடிதென்பதமிழறிவையைப்பேர்யா
றந்நதிறக்கமண்மேல்வழுக்கிவீழ்ந்தாங்குத்தோற்றித்
தென்னவனுடுசேய்த்தாத்தெரிவதேகாண்மினென்ருன்.

Koviloor Digital Library

(இ-ள்.) இ நதி வெள்முத்தாரம் என்ன கிடந்து இலங்கும் சென்னிமன்னவன் நாடு ஈது என்ப - இந்தக்காவிரி நதியானது வெள்ளியமுத்த மாலையைப்போல கிடைபெற்று விளங்குஞ் சோழநாடு இந்நாடென்று சொல்லுவார்கள், தமிழ் அறிவை வையை பேர் யாறு அந்நதி - தமிழ்வேதத்தின் சுவையையறிந்த வையையென்னும் பெருநதி அங்குத் தோன்றும் நதி, துறக்கம் மண்மேல் வழுக்கி வீழ்ந்தால் ஆங்கு தென்னவன் நாடு தோற்றி செய்தது ஆக தெரிவது காண்மின் என்றான் - விண்ணுலகு நிலவுலகின்மேல் வழுக்கி விழுந்ததற்போலப் பாண்டிநாடு காணப்பட்டுத் தூரமாக அங்குப் புலப்பட்டுத் தோன்றுவது அதனைக் காணுங்களென்றருளினர்.

ஆளுடைய பிள்ளையார் விடுத்த தேவாரம் எதிர்செலச் செலுத்தியதால் தமிழறிவையையென்றார். (௨௮)

பொங்கர்மென்புதல்களென்னப்பொருநதிசிறுகாலென்னக்
கொங்கலர்தடஞ்சிற்றூறற்குழியெனப்பழனஞ்சில்லி
தங்குமென்பாத்தியென்னத்தாழைதாழ்சிறுபுல்லென்னப்
பைங்குலைக்கதலிமஞ்சட்பாத்திபோற்றோன்றக்கண்டார்.

(இ-ள்.) பொங்கர் மென் புதல்கள் என்ன - மரச்செறிவுகள் மெல்லிய புதல்களைப்போலவும், பொருநதி சிறுகால் என்ன - கரையொடு மோதும் நதிகள் சிறிய கால்வாயைப்போலவும், கொங்கு அலர் தடம் - மலரின் மகரந்தம்பரந்த தடாகங்கள், சிற்றூறல் குழி என்ன - சிறிய ஊற்றுவாய்ந்த குழிகளைப்போலவும், பழனம் சில்லி தங்கும் மென் பாத்தி என்ன - வயல்கள் சிறுகீரை தங்கிய மெல்லிய பாத்திகளைப்போலவும், தாழை தாழ் சிறு புல் என்ன-தென்னைகள் உருவிற்சிறிய புல்லைப்போலவும், பைங்குலை கதலி மஞ்சள் பாத்திபோல் - பசிய குலைகளையுடைய வாழைகள் மஞ்சட்புதல் நிறைந்த பாத்தியைப்போலவும், தோன்ற கண்டார் - (தங்கள் கண்களுக்கு) புலப்படப் பார்த்தார்கள்.

சேய்மையினின்று பார்ப்போர்க்கு அங்குள்ள பொருள்கள் சிற்றுருவாகப் புலப்படும் ஆதலால் இவ்வாறு கூறினர். (௨௯)

பன்னிறமாடமாலையுபரிகைப்பந்திசெய்குன்
றன்னம்வெண்குருகுசெம்போத்தழகுபைங்கிள்ளைமஞ்ஞை
இன்னபுள்வேறுவேறொழுங்குபட்டிருப்பதொப்ப
மின்றுபூங்கொடியப்புட்கள்சிறகெனவிதிர்ப்பக்கண்டார்.

(இ-ள்.) பல் நிறம் மாடம் மாலை உபரிகை பந்தி செய்குன்று - பலநிறங்களை வாய்ந்த மாடத்தின் வரிசைகளும் உபரிகையின் வரிசைகளும் செய்குன்றங்களும், அன்னம் வெண் குருகு செம்போத்து அழகு பைங்கிள்ளை மஞ்ஞை இன்ன புள் வேறு வேறு ஆய் ஒழுக்குபட்டு இருப்பது ஒப்ப - அன்னங்களும் வெள்ளிய நாரைகளும் செம்போத்துகளும் அழகிய பசிய கிளிகளும் மயில்களும் இவைபோன்ற ஏனைப் பறவைகளும் தனித்தனியாய் நின்று ஒழுங்குபட்டிருத்தலை யொத்துத் தோன்றவும், மின்று பூங்கொடி - (அம்மாடங்களிற்கட்டிய) விளங்கும் பொலிவினையுடைய கொடிகள், அ புள்கள் சிறகு என்ன விதிர்ப்ப - அப்பறவைகளின் சிறைகளைப்போல அசைந்து தோன்றவும், கண்டார் - பார்த்தார்கள்.

பன்னிறம் என்றது வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமையென்னும் நிறங்களின் வேறுபாடுகளை. (௩௦)

Koviloor Digital Library

கண்டுநாட்டுநகர்வளங்கணடந்துநடந்துகண்கள்விருந்
துண்டுமீள்வகல்விசும்பாறொழுகிவலமாவருமுனிவர்
விண்டுழாவுங்கொடுங்குன்றுந்தளிப்புத்தூரும்விரிபொழில்வாய்
வண்டுபாடன்மயிலாடல்பயிலாடானைவளநகரும்.

(இ-ள்.) நாடு நகர் வளங்கள்கண்டு-நாட்டுவளத்தையும் நகர்வளத்தையும்பார்த்து, நடந்து நடந்து - பையப்பையச் சென்றுசென்று, கண்கள் விருந்து உண்டு மீள - தமதுகண்கள் விருந்து நுகர்ந்து தம்பால்மீள, அகல் விசும்பு ஆறு ஒழுகிவலம் ஆக வரும்முனிவர் - அகன்றககனமாகிய நெறிவழிச்சென்று பிரதட்சிணமாகவாராநின்ற முனிவர்கள், விண்துழாவும் கொடுங்குன்று உம் - ஆகாயத்தையளாவுந் திருக்கொடுங்குன்றமென்னுந் திருப்பதியும், தளிப்புத்தூர் உம் - திருத்தளிப்புத்தூரென்னுந் திருப்பதியும், விரி பொழில்வாய் - மலர்விரிந்தசோலைகளில், வண்டுபாடல் - வண்டுகள்பாடுதலும், மயில் ஆடல் - மயில்களாடுதலும், பயில் ஆடானை வளம் நகர் உம் - இடையறாதசெய்யும் திருவாடானையென்னுந் திருப்பதியும்.

தனித்தனி யொவ்வொருதிருப்பதிகளையுங் கண்டுகளிக்குங் கருத்தினர் ஆதலால் கண்கள் விருந்துண்டு மீளவென்றார். திருக்கொடுங்குன்றத்தில் சுவாமிதிருப்பெயர் கொடுங்குன்றேசர். அம்மைதிருப்பெயர் அமுதவல்லி. திருவாடானையில் சுவாமிதிருப்பெயர் ஆதிரத்தினேசர். அம்மைதிருப்பெயர் அம்பாயிரவல்லியம்மை.

சரதவேதம்பரவுபுனவாயினகருந்தவசித்தர்
இரதவாதஞ்செய்துசிவனுருவங்கண்டவெழினகரும்
வரதனுகியரனுறையுங்கானப்பேருமலைமகளை
விரதயோகநெறிநின்றுமணந்தார்சுழியல்வியனகரும்.

(இ-ள்.) சரதம் வேதம் பரவுபுனவாயில் நகர் உம் - உண்மையமைந்தவேதங்கள்வணங்கும் திருப்புனவாயிலென்னுந் திருப்பதியும், தவசித்தர் இரதவாதம் செய்து சிவன் உருவம் கண்டஎழில் நகர் உம்-இறைவர்தவத்தையுடைய சித்தருருவம்வாய்ந்து பொன்னனையாள்பொருட்டு இரசவாதஞ்செய்து தமது திருவுருவத்தை நியமித்த அழகிய திருப்பூவணமென்னுந் திருப்பதியும், வரதன் ஆகி அரன் உறையும் கானப்பேர் உம் - பெருவள்ளலராகி யிறைவரெழுந்தருளிய காளையார்கோயிலென்னுந் திருப்பதியும், மலைமகளை விரதம் யோகம் நெறி நின்று மணந்தார் சுழியல் வியன் நகர் உம் - உமாதேவியாரைச் சிவயோகநெறியினின்று பின்னர் ஆன்மாக்களுய்யும்வண்ண மணந்தருளிய விறைவர் எழுந்தருளிய திருச்சுழியலென்னும் பெருமைமிக்கதிருப்பதியும்.

தவசித்தர் இரதவாதஞ்செய்துசிவனுருவக்கண்ட என்றது இரசவாதஞ்செய்தபடலத்திற்காண்க. இயற்றுவோன் றொழிலுக்கு ஏவுவானும் வினைமுதல் ஆதலால்தவசித்த ரிரதவாதஞ்செய்துசிவனுருவங்கண்ட என்றார். திருப்புனவாயிலில் சுவாமிதிருப்பெயர் பழம்பதிநாயகர். அம்மைதிருப்பெயர் பரங்கருணையம்மை. திருப்பூவணத்தில் சுவாமிதிருப்பெயர் பூவணநாதர். அம்மைதிருப்பெயர் மின்னும்பிகை. காளையார் திருக்கோயிலில் சுவாமிதிருப்பெயர். காளையீசர். அம்மைதிருப்பெயர் மகமாயியம்மை. (கஉ)

மறவாளிலங்கையிறைமகனைவதைத்தபழியான்மருண்டரியன்
றறவாணேமியளித்தவனையர்ச்சித்தகன்றவணிநகரும்

Koviloor Digital Library

நிறவான்முத்தும்வயிரநிரையும்பொன்னும்விளைபொருனைத்
துறைவாய்ப்பிறவாக்கடவுள்வேய்வயிற்றிற்பிறந்ததொன்னகரும்.

(இ-ள்.) மறம் வான் இலங்கை இறைமகனை - கொலைத்தொழில்வாய்ந்த வானையேந்திய இலங்கைநகர்க்கு அரசனாகிய இராவணனை, அரிவதைத்தபழியால் மருண்டு - இராமமூர்த்திசேதித்தலால்வந்த பிரமசாயையால்மயங்கி, அன்று அறவாள் நேமி அளித்தவனை - அக்காலையில் மிகவும் ஒளிவாய்ந்த சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைத் தமக்கருளியபெருமானை, அர்ச்சித்து அகன்ற அணிநகர் உம் - அருச்சனைசெய்து அப்பிரமசாயையினின்று நீங்கிய அழகிய இராமேச்சரமென்னுந் திருப்பதியும், நிறம் வான் முத்து உம் வயிரம் நிரை உம் பொன் உம் விளை பொருனை துறைவாய் பிறவாது - ஒளிவாய்ந்த முத்தமும் வயிரவரிசையும் கனகமும் விளையுந்தாமிரபர்ணியின் துறையிற்றோன்றாது, கடவுள் வேய் வயிற்றில்பிறந்த தொல் நகர் உம் - தெய்வத்தன்மையையுடைய மூங்கிலின் வயிற்றிற்றோன்றிய முத்தமாகிய இறைவர் எழுந்தருளிய தொன்றுதொட்டுள்ள நகரமாகியதிருநெல்வேலியென்னுந்திருப்பதியும்.

மூங்கிலின்கீழ் எழுந்தருளியிருத்தலால் கடவுள்வேய் எனவும், மூங்கிலில் முத்தந்தோன்றுதலால் பெருமானை முத்தமாகவுருவகஞ்செய்து பொருனைத்துறைவாய்ப்பிறவாத கடவுள் வேய்வயிற்றிற்பிறந்த எனவுங்கூறினர். இராமமூர்த்தி இராவணனைக்கொன்று விபீடணனுக்கு அரசியல்தந்து கந்தமாதனத்தில் வந்திருந்தகாலையில்முனிவர்களொருசேரவந்துதம்மைப்புகழ்ந்தபோது அவர்களைநோக்கி இராவணனைக்கொன்றபழிதீராமாறுசெய்வதென்று வினவினர், தசரதன்புத்திரரே இத்தானம் அதிவிசேடமுடையது ஆதலாலிங்குச் சிவலிங்கதாபனஞ்செய்து பூசித்தால் அப்பழியினின்றுநீங்கிவேண்டியாங்குப்பெறலாமென்றுகூற, அதற்குஉடம்பாடுகொண்டுசானகியாற்குவித்த மணற்குன்றைச் சிவலிங்கமாகத்தாபித்துத் தனுவின் கோடியாற் றீர்த்தமொன்றுகண்டுபூசித்துப்பழிதீர்த்தவேண்டியவரம்பெற்றனர்என்பது "பெருஞ்சிலைதெரித்தன்றுப் புகலுமிலங்கைபோற்றும் - நிருதனைக்கொன்றபாவநீங்கிடவெனக்குநீங்கள் - ஒருபரிகாரமென்றுரைசெய்வாருதவராஞோர்-வருதியாலிராமவாய்மைவரதனேயிலமன்று. ஒதியவாறுனன்றேயுமையொருபாகன்றன்னைப் - பூதலமுய்யப்பூசைபுரிதிநீயித்தக்கந்த - மாதனமுத்தில்கு மற்றிதினிலங்கமூர்த்தி - காதனைகாட்டிற்றிருஞ்சிலைநகையெல்லாம். இச்சிதிலிலிங்கந்தாபித்திடும்பலமியம்பலாற்றுன் - பற்பலன்றுறுமாக்கள் பாலதோபகருந்தன்மை - கண்டசோரசிலிங்கத் கண்டதிற்கோடிபெறு - தக்கசிறுவிலிங்கச் சோதியைத்தொழுவார்க்குண்டாம். பெட்கெழுமித்தலிங்க ஞாலமேலுன்றன்பேரால் - நயங்கொளிலிங்கிராமேச் சுரமெனத்தழைக்கூரும் - உயக்கிருவிளையாக்காட்டக் குதவககுருமற்றிப் - வயங்கருளிலிங்கமையா வல்லியிற்புரிகவென்றார். ஈதிவன்செய்கையாக விலவல்லுவதற்குச்சற்றுப் - போததின்முன்னிராமன் புறமதிவதனநாடி - மாதவர்க்குந்தவேலை வந்ததுநிறப்பாய்வல்லை - சீதைவாலுகத்தாற்செய்த சிவனருட்குறியைவென்றார். வடம்பிரியாதகோட்கை மலைவளர்சேதன்மருங்கு - இடம்பிரியாதகாட்சி யிலிங்கமாமீசன்றன்னைக் - கடம்பிரியாவிலக்கற் கந்தமாதனமாங்கார்கோட் - டடம்பிரியாதசேதத்தன்னிலேதாபித்திட்டான். தாவனஞ்செய்ததாறுத்தனக்கிடேற்செய்வான் - கூவலொன்றழ்ந்தான்வில்லின் கோடியாற்குழகன்முன்னிற் - சேவுறுமறுவார்திரேசையும்பிரதிட்டைசெய்தான் - காவலனயோத்திவேந்தன் கவுசலைகான்மென்றான். அசலைவருக்கேற்நீர்க்கு மக்கிணைற்றுதகமேன்மை - பேசி

Koviloor Digital Library

னமுமக்குமுன்னே பெருந்தவமுனிவீர்பின்னர் - ஈசனையிலிங்கமூர்த்தி யிசைந்தரு ளெம்பிரானைப் - பூசனைபுரியனுற்றான் புரவலனிராகவன்றான். மும்முறைவலங்கொ ண்டீசன் முன்பினின்றன்பினுடிக் - கைம்மலர்த்தட்டமிட்டுக் காருந்தன்கண்ணீர் காலச் - செம்மனங்கொண்டுநின்றான் சிவபிரான்கவுரியோடும் - இம்மெனவெளி வந்தங்க ணிராவகற்கருள்வதானுன். கேட்டியாவிராமநம்மைக் கிளர்தருக்கோடி. நீரில்-ஆட்டியேயன்பினுய வகன்றுறைச்சேதுவின்கண் - நாட்டியவிலிங்கந்தன்னை ஞாலமேற்காணப்பெற்றார் - ஈட்டியபாவம்யாவு மில்லையாமுண்மையென்றான். அ ன்றிநின்கையிலேந்து மத்தனுக்கோடிமுந்நீர் - சென்றதிற்படிந்துநின்னுற் செய்திடு மிலிங்கங்கண்டோர் - முன்றருபவங்களெல்லா முடித்துடன்பெறுவர்முத்தி - உன் றனக்குரைத்தவார்த்தை யுண்மையீதுண்மையென்றான்” எனச்சேதுபுராணம் இரா மனருச்சனைச்சருக்கத்தில்வருதல்காண்க. திருவிராமேச்சரத்தில் சுவாமிதிருப்பெ யர் இராமநாதேசர். அம்மைதிருப்பெயர் சுருவார்குழலியம்மை. திருநெல்வேலியிற் சுவாமிதிருப்பெயர் வேணுநாதர். அம்மைதிருப்பெயர் காந்திமதியம்மை. (௬௬)

துளபக்குன்றைக்கொன்றைமுடிக்குன்றமாக்குந்தொன்னகரும்
அளகைப்பொறித்தகொடியிளையோன்மானேர்நோக்கினுனைமகள்
புளகக்குன்றைமணந்துமுதலிருந்தபொருப்பும்போர்விசயன்
வளைவிற்றாக்கவடுக்கிடந்தமுடியோன்மேயவளநகரும்.

(இ-ள்.) துளபம் குன்று ஐ கொன்றை முடி குன்றம் ஆக்கும் தொல் நகர் உம் - (அகத்திய முனிவரால்) துளபமாலையணிந்த நீலமலைபோன்ற திருமாலைக் கொன் றைமலர்மாலையையணிந்த சடாமுடியையுடைய மாணிக்கமலையாக்கும் தொன்று தொட்டுள்ள திருக்குற்றாலமென்னுந் திருப்பதியும், அளகு ஐ பொறித்த கொடி இ ளையோன் - கோழியை யெழுதிய கொடியையேந்திய முருகக்கடவுள், மான் நேர் நோக்கின் ஆனை மகள் புளகம் குன்றை மணந்து முதல் இருந்த பொருப்பும்-மான் போன்ற பார்வையையுடைய தெய்வயானையாரின் புளகரும்பிய தனமாகிய மலை யைக்கலந்து தானமாகக்கொண்டெழுந்தருளிய திருப்பரங்குன்றமென்னுந் திரும லையும், போர் விசயன் வளைவில் தாக்க வடு கிடந்த முடியோன் மேய வளம் நகர் உம்-போர்த்தொழிலையுடைய அருச்சுநன் வளைந்தவில்லினுல் மோதஅதனுல் வடுப்ப ட்ட திருமுடியையுடைய இறைவனெழுந்தருளிய வளமிக்க திருவேடகமென்னுந் திருப்பதியும்.

முதல் இடம். அளகு கோழி. “சுரன்முதல்வந்தவுரன்மாய்மாலை, மலையுறை யளகின்வாடலொடுபெறுகுவிர்” எனவரும் இலக்கியங்களாலுணர்க. பொதியமலை யைநோக்கிச்செல்லும் அகத்தியர்திருக்குற்றாலமென்னுந்திருப்பதிக்குவந்தகாலையில், அங்குள்ள வைணவர்கள் அவர்சிவவேடப்பொலிவைநோக்குதற்குக் கண்கள்கூசி யி கழ்ந்துரையாட, அங்கு நின்று மீண்டு ஒருபாகவதருருக்கொண்டு சென்றனர், அங் குள்ளஅவ்வந்தணர்கள் எதிர்சென்றுவணங்கி யுபசரிக்காம்அழகர் மலைக்குச்சென்று தரிசித்து அத்திகிரிக்குச் செல்கின்றேம் இங்கோர் திவ்ய திருப்பதி யுளதென்று கே ட்டுவந்தனமென்றனர். அதகேட்ட அந்தணர்கள் அவர் பாலன்புகூர்ந்து திருமால் திருக்கோயிலைச் சுட்டிக்காட்ட அங்கு அவர்களோடு சென்று திருமஞ்சனஞ்செய்ய விரும்பினேம் அதற்கு வேண்டும் உபகரணங்கள் வேண்டுமென்று கூற, அவ்வாறே மறையவர்கள் கொண்டுவந்து கொடுப்ப அவற்றை வாங்கி விதிப்படி சுத்திசெய்து நாம் பூசித்தலைப் பாருமென்று அவ்வந்தணர்களுக்குக்கூறி யத்திருமால் முடிமேல்

தமது திருக்கரத்தை வைத்துக் குழைத்துச் சிவலிங்கமாக்கிப் பூசித்தனர் என்பது "குறமுனிவருங்கவர்தஞ்செய லுணர்ந்தகுற்றாலமென்றமூதூர் - மறுகினிடையே நடந்தமாயவன்ற னாலயமுன்வருதலோடும் - நெறிவருமவ்வாலயத்திற்செறிகின்ற வைணவர்கணெடிதநோக்கிச் - செறுநர்தமைக்கண்டுபதைபதைப்பார்போல் வெய்துயிர்த்துச்செயிர்த்துச்சொல்வார். ஒல்லாதகண்டிகையுநீறுமணிந் தனையதனுநூலநிற்றேவர் - எல்லாருமதியவையமேற்றோறுக் கடியவனீயீண்டுச்செல்லச்-செல்லாதகைத்தகைத்திவொருகோறும் கொண்டிளையாற்சிதியைபோலும் - நில்லாயெம்பெருமான்றன்மா நகரமறுகாதுநீங்குகென்றார். என்றிடலும்வெகுளாதநகைசெய்த மறைநெறிவயிகந்தநின்றீர்-நன்றியிலனுறைகின்றதனாலினித் திறமெவருஞ்சொன்றாரில்லை - நன்றநெறியென்றவத்தேறும்பான்மை யுணர்வேனுனிம்மூதூர்-சென்றிடுநிலையேனுன்முனியற்கயானீண்டுச்செல்வனென்றான். பொதியமலைதனிலேகுமுனிவனிது புகன்றிடலும்பொருதகீயிப் - பதியதனில்வருவதம்பாவமாமீண்டுபெயர்திரென்ன-இதசாதமொழிந்திர்கடொல்லோர்க ளூன்முறையு மீதேயென்று - விதியருளுந்தக்கனூர்வழிமுறையோர் தமைநீங்கிமீண்டுசெல்வான். ஆளுடைய நாயகன்பாலன்புடையான் மாயவன்றனடியனேபோற் - கோளுடையமாயத்தான் மேனிகொண்டு மீண்டுமங்கட்குறுகலோடும்-நீளிடையில்வரக்கண்ட வயிணவர்களெதிர்சென்றநெடிதுபோற்றித் - தாளிடையில்வீழ்ந்திடலு நாரணனுக்காகவெனச்சாற்றிநின்றான். அடிமுறையின்வணங்கியெழும் வேதியர்தங்களைநோக்கியரிபாலன்பு-முடிவிலதம்பாலென்றமொழிந்தனரால் சுதரணைமுன்னிவர்தாம் - படியதனிலுமக்குநிகர்யாருமில்லை நலமக்கண்டபரிசால்யாமும் - தொடர்வரியபேருணர்வுபெற்றனமென்றேயின்னுஞ்சொல்லலுற்றான். முத்திதருபேரழகர்திருமலையி னிடையுற்றோமுன்னேயின்னே-அத்திசிரிதனிலிருப்பச்செல்கின்றோ நம்பெருமானமருங்கோயில்-இத்தலமேலுளதென்பாதுபரவும் விருப்புடையோமென்னவன்னோர் - கைத்தலத்தோர்விரற்சுட்டியதுதிருமா லிருக்கையெனக்காட்டினரால். காட்டுதலுங்கைதொழுதமாலுறையு மாதிரத்தைக்கடிதகன்னி - ஈட்டமுடன்வலஞ்செய்துகண்ணபிரானடியிணையையிறைஞ்சியேத்திப் - பாட்டிலுறுதொல்லடியார்தமைநோக்கி யிவரைவழிபடுதற்குள்ளம் - வேட்டனமான்மஞ்சனமேமுதலியன கொணர்மின்கள்விரைவிலென்றான். அருகுமதிநதிபுனையுஞ்செஞ்சடையெம் பெருமானையகத்துட்கொண்டு - சிறுமுறுவுடையமுனிநாரணனார் திருமுடிமேற்செங்கையோச்சி - குறுகுறுவெனவிருத்தியொள்ளாக்கிற் புனைபாவைக்கோலமீது - மறுகுதழலுற்றென்னக்குழைவித்தோர் சிவலிங்கவடிவஞ்செய்தான்" எனக் காந்தம் திருக்குற்றாலப்படலத்திலும்,

மகேந்திரபுரத்தினின்று திருப்பரங்குன்றத்திற் கெழுந்தருளித் தம்மை நோக்கி நோற்றிருந்த பராசரமுனிவர் புத்திரர்களாகிய அறுமுனிவர்களுக்கு முபதேசித்த முருகக்கடவுள் அங்கெழுந்தருளி யிருக்குங்காலையில், இந்திரன்-திருமால் முதலியோரிடத்துத் தமது புத்திரியாராகிய தெய்வயானையாரை யம்முருகக்கடவுளுக்குத் திருமணமுடிக்கச் சூழ்ந்து மேருமலையிலுள்ள தனது மனைவியாகிய இந்திராணியையும் புதல்வியாரையும் அரவால் வருவித்து, திருமாலோடு குமாரக்கடவுளெழுந்தருளிய திருக்கோயிலுட்சென்று வணங்கி யெமது சிறையை நீக்கியெங்களைத் தேவிர் பாதுகாத்தீர் அதற்குக் கைமாறு வேறிலேன், என் புத்திரியாரைத் திருமண முடிக்கவேண்டுமென்றிரப்ப, அம்மாது எம்மை மணம்புரிதற்கு விரும்பி அநேககால் தவம்புரிந்தமையால் அவ்வாறேயென்றருள, மகிழ்கூர்ந்து தனது புத்திரியா

Koviloor Digital Library

னைத் திருமணஞ்செய்வித்தனன் என்பது "விருத்தமதாகுமிவ் விழைவையிந்திரன்-
திருத்தகுமாலயன் றேவர்தேர்வுற - உரைத்தனன்வினவலு முவகைபெற்றுநின்-கரு
த்தானன்றுலெனக் கழறன்மேயினார். பன்னிருமொய்ம்புடைப் பகவன்பாற்படப் -
பின்னலஞ்சுரிகுழற் பிடியும்பொய்கைவாய்-முன்னுறவருந்தவ முயன்றுவைத்தனள்-
இன்னுழியதன்பய னெய்திற்றேகொலாம். கயலுறழ்விழியுடைக் கடவுள்யானையை-
வியல்வரையெதிர்ந்திடு வேற்கையண்ணலுக் - கியல்புளிவதுவையா லீதற்கிவ்விடை-
முயலுதிகடிதென மொழிந்துவைகினார். மற்றதுபோழ்தினின் மகத்தின்செம்மலோ
ர்-ஒற்றனைநோக்கியே யொல்லைமேருவாம் - பொற்றையின்மனைவியைப் புதல்வித
ன்றுடன் - இற்றையில்விரித்தனை யேகுநீயென்றான். என்றலுந்தூதுவ னிசைந்து
மேருவிற் - சென்றனன்புலோமசைத் தெரிவைமுன்புபோய் - நின்றனன்வணங்கி
ன னினதுசிந்தைபோல் - ஒன்றியகேளென வுரைத்தன்மேயினான். ஆடுறுபசியினோ
ராக்கங்கண்டுழி - நீடுறுமுவகையா னிறைவுபெற்றென - மாடுறுபுலோமசை வடிவ
ங்காண்டலுங்-கூடினர்தன்மையுங் குரிசிலெய்தினான். அப்போதுவானோர்குழுவோ
டயிராணிகேள்வன் - செப்போதுகொங்கைமகடூஉமணஞ்செப்பன்முன்னி - ஒப்போ
துநீர்மையிலதாமொருவன்கழற்கே - கைப்போதுதூவிப்பணிந்தேத்திக்கழறலுற்றான்-
கன்னின்றமொய்ம்பினவுணக்கனைகட்டல்செய்தாய் - இந்நின்றதேவர்சிறைமீட்டனை
யென்றனக்கு - முன்னின்றதொல்சீர்புரிந்தாயதுமுற்றுநாடிச் - செய்நன்றியாகச்
சிறியேன்செயத்தக்கதுண்டோ. முந்தேதமியேன்பெறுமங்கை யிம்மொய்வரைக்க
ண் - வந்தேயமர்வாளவடன்னைவதுவைசெய்து - கந்தேபுரைநின்பெருந்தோளிற்க
லத்தியாங்கள்-உய்ந்தேம்பிறவிப்பயன்பெற்றனமோங்கவென்றான். என்றூர்தனையி
லமரேசனையெந்தைநோக்கி - அந்நங்கைதானுமிகநோற்றனளாதலானீ - முன்றும்ப
டிமணநாளைமுடித்துமென்னத் - தன்னங்கடந்தமகிழ்வெய்தித்தருக்கிநின்றான். அன்
னதோர்காலையி லந்தரநாதன் - பன்னிருமொய்ம்பு படைத்திடுபுத்தேள் - முன்னரி
ருந்து முறைப்படவன்னான் - பொன்னடிபூசை புரிந்திடலுற்றான். அன்றுழியிந்திர
னறுமுகேசன் - தன்னொருகையிடை தையலைநல்கி - நின்னடியேனிவ னோர்ந்த
னனென்னாக் - கன்னலுமிழ்ந்த கடிப்புனலுய்த்தான்" என ஷை புராணம் தெய்வ
யானையம்மை திருமணப்படலத்திலும் வருதல் காண்க. அருச்சுனன் விற்றழும்பு பூ
ண்டதை முன்னர்க் கூறியிருக்கின்றாம் அங்குக்காண்க. திருக்குற்றாலத்தில் சுவா
மி திருப்பெயர் குறும்பலாவீசர். அம்மை திருப்பெயர் குழல்வாய்மொழியம்மை. ௩௪

கொண்டல்படியுந்திருவாப்பனூருந்தொழுதுகுளிர்திரைக்கை
வண்டுபடியுங்கமலமுகைவையைப்பிராட்டியெதிர்வணங்கிக்
கண்டுபணிந்துதிசையெட்டும்விழுங்கியண்டங்கடந்துலகம்
உண்டநெடியோனெனவுயர்கோபுரமுன்னிறைஞ்சியுள்புகுதா.

(இ-ள்.) கொண்டல் படியும் திரு ஆப்பனூர் உம் தொழுது - மேகங்கள் படி
யுஞ் சோலைகள்சூழ்ந்த திருவாப்பனூரென்னுந் திருப்பதியுமாகிய மேற்கூறியவைகளை
வணங்கி, குளிர் திரை கை வண்டு படியும் கமலமுகை வையை பிராட்டி எதிர் கண்டு
வணங்கி பணிந்து-குளிர்ந்த அலைகளாகிய கைகளால் வண்டுகள் படியும் தாமரைய
ரும்புகளை யரிந்துவரும் வையைநதியென்னும் மாதரசியைப்பார்த்து வணங்கித் தா
ழ்ந்து, திசை எட்டு உம் விழுங்கி அண்டம் கடந்து - எட்டுத்திசைகளையுந் தனது ப
ரப்பால் மூடி அண்டங்களை யுருவி மேற்சென்று, உலகம் உண்ட நெடியோன் என்
ன உயர் கோபுரம் - உலகங்களையுண்ட திரிவிக்கிரம மூர்த்தங்கொண்ட திருமாலைப்

Koviloor Digital Library

போல வுயர்ந்த திருக்கோபுரத்தை, முன் இறைஞ்சி உள்புகுதா-முன்னர் வணங்கி
யுள்ளேசென்று.

பணிந்து என்றும் எச்சத்தைச் செயவெனெச்சத் திரிபாகக்கொண்டு, வை
யைநதியென்றும் பிராட்டியானவள் திசைக்கையால் எதிரேவணங்கிக் கண்டு பணி
ய உயர்ந்த கோபுரம் எனப் பொருள் கொள்ளலும் ஒருவாறமையும். விண்டுழாவுந்
கோடுங்குன்றும் முதல் திருவாப்பனூரும் என்பதுகாறுங் குளகமாதலால் தொழுது
என்றும் எச்சப்பயனிலைகொண்டு முடிக்க. தூபிமுதலிய மூன்றும் இலிங்கங்கள்
எனப்படும். அவை தூபியும், சிவலிங்கமும், பத்திரலிங்கமுமாம். தூபி தூலலிங்
கமாம். சிவலிங்கம் சூக்குமலிங்கமாம். பலிபீடம் பத்திரலிங்கமாம். திருக்கோபுர
த்தைச் சிவபெருமானாகக் கருதிப் பூசிக்கவேண்டுதலால் கோபுர முன்னிறைஞ்
சியென்றார். "குறித்தச்சிவனெனக் கோபுரத்தைப்பூவும் - பறித்தருச்சித்தேத்துக
பாங்கால். தூலலிங்கமாந்தூபி சூக்குமமாமுள்ளிலிங்கம் - மேலும்பலிபத்திரம்"
எனவருஞ் சைவசமயநெறித் திருக்குறள்களாலுணர்க.

பாண்டிநாடாளுஞ் சோழாந்தகனென்னும் பாண்டியன் அரசியல்செய்து வரு
ங்கால் ஓர்கால் வேட்டைமேற்செல்ல மனங்கொண்டு சேனையோடுகீழைத்திசைநோ
க்கிச்சென்று வேட்டமாடும்போது ஓர் மான் எதிர்ப்பட, அப்பாண்டியன் சேனையி
னின்று நீங்கி யம்மானின்பின்தனியேசென்று அதனைவீழ்த்தி நடந்த இளைப்பாற்சோ
ர்ந்து ஒருவிருக்ஷத்தின்கீழ்த்தனாயி லவசமுற்றுக்கிடந்தனன், அரசனைக்குற்றுனெ
ன நாடிவந்த அமைச்சர்கள் மூர்ச்சித்துக்கிடக்கும் பாண்டியனுக்குச் சீதளோபசா
ரஞ்செய்து உயிர்ப்பு இயங்கச்செய்தமையால் அரசன்விழித்துச் சிறிதாகாரங்கொ
ண்டு இளைப்பொழிக என்ற அமைச்சர்களைநோக்கித் தேவருணவாயினும் சுயம்பிலிங்
கதெரிசனமின்றி நிலையாவுடலைப் போற்றிலேனென வுறுதிகூறினன், அதைக் கேள்
வியுற்ற அமைச்சர்கள் அங்குமிங்குந்நாடிக்காணலமையால் அரசனிறந்துபடில் யாது
செய்வோமென்று வருந்தி ஓர் கொன்றைமரத்தினிழற்கீழ் ஆப்பினைக்கடாவி யதன்
மேல் ஓர் மொக்கணியைச்சாத்திச் சிவலிங்கம்போலக்கண்டு திருப்பள்ளித்தாம மு
தலியவற்றால் அலங்கரித்து, அப்பாண்டியன்பாற் சென்று எம்பெருமான் ஓர்
கொன்றைமரத்தின்கீழ் எழுந்தருளியிருக்கின்றனர் என்று கூற, அரசன் ஆராவி
ன்பக்கடலுளாழ்ந்தென்னை யடிமைகொள்ள விங்ஙனெழுந்தருளினிரோவென்
றவணங்கி யானந்தபாஷ்பம்பெருக ஆடித்தட்டமிட்டுத் துதித்துப் பின்னர் உண்டு
நீர்பருகி யசைவுநீங்கி யிறைவர்க்கு ஆலயங்கண்டு மீள்வமெனச் சமீபத்திற்சென்று
பார்க்கும்போது, முனைவடிவாயிருப்ப நான் கொண்ட சிவவிரதத்திற்குப் பங்
கம்வந்ததே யாது செய்வேனெனக் கலங்கி யுடைவாளுருவி மிடறரிவேனெனப்
பாண்டியன் கூறியது திருச்செவியி லேறியபோது, இறைவர் கருணைகூர்ந்து நின்
னையத்தால் ஆப்புடையீசனெனத் தோன்றினும், எமது இடப்பாலிற் குரவங்கு
ழலாள் எனுமாதேவியானா ளிருவிப்பூசிப்பாயென்று அசரீரி கூறியருள, அப்பாண்
டியன் மகிழ்கூர்ந்து அவ்வாறேயமைத்தனன் என்பது "தேனேந்தியமலராள்காந்த
தனைகோசிரவாய்த்தவனெதிர்பொருநேரார் - னேந்தியவடிவேலேந்தலின் மயிலூ
ர்சேந்தனில்வருமுயர்கோமான் - மீனேந்தியகொடியால் வேந்தரினிவன்வேள்வேந்
தெனவெதிருடையோனின் - வானேந்திசைதிகழ்சோழாந்தகனென வாழ்பாண்டிய
ன்முனைமுனமுரைநாள். மருவேட்டம்புயன்மதியாற்கண்டனவகை காட்டுங்கவினி
றைதேறும் - தருவேட்டகைவின்மிசைநீட்டுப்பணிதருகோட்டும்பறும்வயமாவும் -
உருவேட்டச்சேறுமுழல்வாட்செங்கையருளையாச்சங்கமுமுடன்மேவத் - திருவேட்ட

ஞ்செயும்வினைகேட்டிந்திரதிசைமேற்சென்றனன் விரைவாயால். மங்குலந்தரமேற்பாய்ந்துமண்ணிடைக்குதிக்குமானைக்-கல்குலக்குழையுங்காளிற் காவதமளாயிற்கூடித்-தங்குலமதிக்குவந்ததனிமறுத்துடைப்பானென்ன-வெங்குலவரைப்பொற்றோளான்கணையொன்றால்வீட்டினானே-சீதவம்புயநேர்பார்க்கச் செங்கதிர்செல்லுமேல்வை-தாதவிழ்நறுந்தேன்வேப்பந்தார்முடிச் செழியர்செய்த - மாதவமனையானெய்த்தவருத்தமும்பசியுமுளப்-பாதவநிழலிற்போகியவசமுற்றயர்ந்தான்பார்மேல். அமைச்சியற்பாரம்பூண்டவறிஞர்கள் விரைந்துசீதம் - சமைச்சலர்வாசநீர்தூந்துருத்தியார்தமைக்கூயுள்ளக் - கமைச்சினவேலான்கொண்டவிடாய் தணித்திடலுங்கண்கள் - இமைச்செதிர்விழித்துச் சோமசுந்தரக்கடவுளென்றான். செம்புலம்படர்வெள்வேலான்சிறிதயர் ·வுயிர்த்தனோக்கி - அம்புவியரசேமானையடும் விளையாட்டினெய்தி - வெம்புகானிடையித்தூரம்போந்தமெய்மெலிவையின்னே - உம்பரினமுதமன்ன வுணவுகொண்டொழித்தியென்றார். இருந்துவாய்மலர்ந்துமெல்லவியம்புவான்வேந்தன்மூலந் - திருந்தியசயம்புலிங்கதெரிசனஞ் செய்தாலன்றி-யருந்துதற்கடிசிலேயன்றகங்கையானமைந்தசாவா - மருந்துறிலேனுமாழிவிடமெனமதிப்பேனென்றான். சிறுமைகண்டறியாச்செல்வத்திருமதுரையர்கோனெய்து-மறுமையைநோக்கிவாளாவிருந்திடின்மரபிற்பின்னர்ப்-பொறைமை கூர்புவனந்தாங்கப் புதல்வரும்பிறருமில்லை - வெறுமையாந்தேயம்யாமும்வெளிற்றறிவுடையமாவேம்.நாமுயிர் துறப்பவேந்தனலியினுநலிகவின்று-போமுயிர்மீட்குஞ்சூழ்ச்சியீதெனப் புணர்ப்பினெண்ணித்-தேமுயிர்த்தலர்ந்தகொன்றைச் செழுந்தருவடியிற்றென்றல் - ஆமுயிர்ப்பசையுநீழல்வாளுகப்பரப்பினங்கண். நிவந்தவாளானமன்னபெருமுனை நிறுவிநுண்ணூற் - செவந்தபட்டாடைசாத்தித்தேய்வை மட்டித்துத்தாமம் - உவந்தணிந்தாரம்பூட்டியுற்றுநேர்கண்டாருள்ளம் - கவர்ந்தழகெறிப்பக்கைசெய்வினையினாலிலிங்கங்கண்டார். வழுதியுளுவகையீர்ப்பச் சயம்புவைவணங்கவுன்னும் - பொழுதிருகாமுந் தேர்ச்சித்துலைவர்கைபொருந்தப்பற்றப் - பழுதில்வெற்பசைந்தாலென்னப்பைப்பயநடந்துவண்டின் - றொழுதிசூழ்சடையிலங்கஞ்சேணிடைதோன்றலோடும். காண்டலுங்கண்ணீர்வாரிகளாபுரண்டோடக்காவின் - நீண்டகைகுவித்துப் பூண்டநியதியைமுடித்தப்பின்னர்-ஆண்டகைமுகைவெண்மூரலருந்திநீர்பருகியன்பு - மாண்டமெய்வருத்தநீங்கிமந்திரர்க்குரைப்பதானான். தனித்தனிபோயவர்மறையச்சிலர்தொடரப்போயடுத்துச்சயம்புமூர்த்தி - குனித்தசேவடிதொழலுமப்புவடிவாயிருந்தகொள்கைபாராப் - பணித்தவளமதிவேந்தன்றான்பிடித்தசிவவிரதபங்கநோக்கி - மனித்தவுடலெடுத்தபயன்முதலொடும்போய்முடிந்ததெனவருந்தினானால். யானெடுத்தசிவவிரதப்பெரும்பத்திநெறிபிறழாதிந்நாட்காறும் - ஊனெடுத்தபயனடையச்சயம்புதரிசனஞ் செய்ததுண்டேலிந்தத்-தேனெடுத்தவலரிதழியடிபிளப் பிதகுறியாய்த்திகழ்கவன்றேற்-கூடனெடுத்தவாள்கொடுகன்மிடறரிந்துமாய்வனெனக்கூறலோடும். நின்றுடையபேரன்பாலியாம்பிடியுண்டலர்கடுக்கை நிழலிலோரேழ் - தொன்னிலங்கீழுருவியாப்புடையவிசனெனத்தோன்றினேம்பாற்-பொன்னனையாடனைக்குரவங்கமழ்குழலாளெணநிறுவிப்பூசிப்பாய்நீ-என்னலுமம்மொழிவானின்றிழியமுத மெனச்செவிபுக்கினிப்பக்கேட்டான்'' என்று திருவாப்பனூர்ப்புராணம் ஆப்பனூர்ச்சருக்கத்தில்வருதல்காண்க. மொக்கணியென்றது குதிரைக்கு ஊட்டும் கொள்நிரப்பியபை ''மொக்கணியருளியமுழுத்தழன்மேனி - சொக்கதாகக்காட்டியதொன்மையும்'' எனக்கீரத்திருவகவலில் வருதல்காண்க. சுவாமி திருப்பெயரும்அம்மைதிருப்பெயரும் முன்னர் வந்ததுகாண்க. (௫௭)

Koviloor Digital Library

மறுகுதோறும்பணிந்தெழுந்துவளைந்துவளைந்துபொற்கோயில்
குறுகிவிதியாற்பொற்கமலங்குடைந்துசெய்யுங்குறைநிறுவி
உறுதிபெறவைந்தெழுத்தெண்ணியூற்றுமதத்துநாற்றடந்தோட்
சிறுகண்ணைங்கரத்துச்சித்தியானையடிவணங்கா.

(இ-ள்.) மறுகுதோறும் பணிந்து எழுந்து வளைந்துவளைந்து பொன்கோயில் குறுகி - திருவீதிகள்தோறும் பணிந்துஎழுந்து பிரதக்ஷிணம்செய்து பொன்னாற்சமைந்ததிருக் கோயிலையடைந்து, விதியால் பொன்கமலம் குடைந்து - ஸ்நானவிதிப்படி பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, செய்யும் குறைநிறுவி - செய்துமுடிக்குங் கடன்களைச்செய்துமுடித்து - ஐந்து எழுத்து உறுதிபெற எண்ணி - ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுயிர்க்குறுதிபெறக்கணித்து, ஊற்றுமதத்து நால்தடந்தோள் சிறுகண்ண ஐங்கரத் துசித்தியானை அடிவணங்கா - ஊற்றுகின்றமதத்தையும் நான்காகநீண்ட திருத்தோள் களையும் சிறியகண்களையும் ஐந்துதிருக்கரங்களையுமுடைய சித்திவிநாயகக்கடவுள து திருவடியைவணங்கி.

மலையருகு, ஆற்றங்கரை, புண்ணியபூமி, பிரமவிருக்ஷத்தினடி, தருப்பையி னடி முதலிய சுத்தஸ்தலத்தில் எட்டங்குலவளவின்கீழே யஸ்திரமந்திரத்தினா லெடுத்தமிருத்திகையைச் சுத்திசெய்தற்பொருட்டுப்பூசி நீராடவேண்டுதலால் விதி யாற்குடைந்தென்றார். "ஒப்பநோயிலாக்கங்கூறுடலின்மண்பூசி - முப்பொழுதுமூ ழ்கார்முயன்று" எனச்சைவசமய நெறித்திருக்குறளால் உணர்க. (௯௬)

மும்மையுலகுநான்மறையுமுறையாலீன்றவங்கயற்கண்
அம்மையடிகண்முடியுறத்தாழ்ந்தன்புகொடுத்தின்னருள்வாங்கி
வெம்மையொளிகான்மணிக்கனகவிமானத்தமர்ந்ததனிச்சுடரின்
செம்மையடித்தாமரைவேணிச்சிரமேன்மலரப்பணிந்தேத்தா.

(இ-ள்.) மும்மை உலகு உம் நால்மறை யும்முறையால் ஈன்ற அங்கயற்கண் அம்மை அடிகள் முடி உறதாழ்ந்து அன்புகொடுத்து இன் அருள்வாங்கி - மூன்றுல கங்களையும் நான்குவேதங்களையு மாகமங்களையு முறைப்படி பெற்றருளிய அங்கயற் கண்ணியம்மையின் திருவடிகள் தமது சடாமுடியிற்பொருந்த வணங்கி அன்பினையீ ந்து இனிய திருவருளைவாங்கி, வெம்மை ஒளிகால் மணிகனகம் விமானத்து அமர் ந்த தனிசுடர் இன் - விரும்பும் ஒளியைவீசும் இரத்தினமழுத்திய பொன்னாற்சமை ந்த விமானத்திலெழுந்தருளிய ஒப்பில்லாத ஒளிப்பிழம்பாகிய சோமசுந்தரக்கடவு ளின், செம்மை அடி தாமரை வேணி சிரம்மேல் மலரபணிந்து ஏத்தா - செவந்ததிரு வடித்தாமரைகள் தமது சடாமுடியிற் பூப்பப்பணிந்து துதித்து.

பந்தமுறுத்த ஆன்மாக்களுக்குத் தநுகரணபுவனபோகங்களைத்தந்து பாசமுறு த்த வேதங்களைத் தந்தமையால்மும்மையுலகு நான்மறையுமுறையாலீன்ற என்றார். வேதமேயாகமமாதலால்மறையும் எனவும், அன்பால் திருவருள் கைகூடுதலால் அன்புகொடுத்தின்னருள் வாங்கியெனவுங்கூறினார். மும்மையுலகு நான்மறையும் எ ன்றதுசொன்முரணணி, அன்புகொடுத்தின்னருள் வாங்கியென்றது மாற்றுநிலை யணி. (௯௭)

ஷ வேறு.

அன்றிருபோதுமுண்டிதுறந்திராவுறக்குந்திவாள்
என்றெழுமுன்னீராடிநியதிகளியற்றியைந்தும்

Koviloor Digital Library

வென்றுளத்தன்புபாயவிளைமுழுமுதலைப்பார்மேல்
மின்றிரண்டென்னநின்றவிமானமீதிருப்பக்கண்டார்.

(இ-ள்.) அன்று இரு போது உம் உண்டி துறந்து - அந்நாளில் பகன்மாலையென்னு மிரண்டுகாலத்தும் முண்ணுமுணவையொழித்து நோற்று, இரா அறுக்கும் தீவாள் என்று எழு முன்னீர் ஆடி - இருளைச் சிதைக்குந்தீயுமிழும் வாளையேந்திய (வெய்யகிரணத்தையுடைய) சூரியன் உதயஞ்செய்தற்குமுன் பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, நியதிகள் இயற்றி - செய்யுங்கடன்களைச் செய்துமுடித்து ஐந்து உம்வென்று - பஞ்சேந்திரியமாகிய களைமுற்றுங்களைந்து, உளத்து அன்பு பாய விளைமுழுமுதலை-தமது இதயமென்னும் விளை நிலத்தில் அன்பாகிய வெள்ளமடுக்கவிளைந்த பெரும்பேறாகிய சோமசுந்தரக்கடவுளை, பார்மேல்மின்றிரண்டால் என்னநின்ற விமானம்மீது இருப்பகண்டார் - நிலவுலகின்மேல் மின்னலொருசேர ஓரிடத்தில் திரண்டிருந்தாற்போல நிலைபெற்றவிமானத்தின்மே லெழுந்தருளியிருக்கக்கண்டு தரிசித்தார்கள்.

தீவாள் தீயுமிழும் வாள், வெய்யகிரணம் என நிற்றலால்செம்மொழிச்சிலேடையணி. (ரு-அ)

வாசமஞ்சனந்தேன்கன்னல்பைங்கனிமறுவிலானைந்
தாசறுமமுதமைந்துதென்மலையாரம்வாசம்
வீசுதண்பனிநீர்வெள்ளமான்மதம்விரைமென்போது
தூசணிமணிப்பூணல்லசுவையமுதின்னதாங்கா.

(இ-ள்.) வாசம் மஞ்சனம் தேன் கன்னல் பைங்கனி - வாசமமைந்த திருமஞ்சனமும் தேனுங் கருப்பஞ்சாறும் பசியபழங்களின்சாறும், மறு இல் ஆன் ஐந்து ஆசு அறும் அமுதம் ஐந்து - குற்றமில்லாத பஞ்சகவ்வியங்களும் புனிதமாகிய பஞ்சாமிர்தமும், தென்மலை ஆரம் வாசம் வீசு தண்பனிநீர்வெள்ளம் - பொதியமலையிற்றோன்றிய சந்தனமாகிய குழம்பும் வாசம்வீசும் தண்ணியபனிநீரின்பெருக்கும், மான்மதம் விரைமெல் போது தூசு அணி மணி பூண் நல்லசுவை அமுது இன்னதாங்கா - மிருகமதமும் வாசமமைந்த மெல்லியமலரும் ஆடையும் அழகிய இரத்தினமழுத்திய ஆபரணமு மினியசுவையமைந்த திருவமுதம் இவைபோல்வனவும் ஆயினவற்றைக்கையிலேந்தி.

பஞ்சாமிர்தம்-பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, இவைரச பஞ்சாமிர்தம் எனப்படும். இவற்றோடு பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம் என மூன்றையுங்கூட்டினும் பலபஞ்சாமிர்தம் எனப்படும். ஆனைந்து-பால், தயிர், நெய், கோமயம், கோசலம். பைங்கனி - எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், தமரத்தம்பழம், குளஞ்சிப்பழம், மாதுளம்பழம். செய்யுளாதலால் அபிஷேகத்திரவியங்களை முன்பின்னாகக் கூறினார். முறை பின்னர்க்காண்க. (ரு-க)

சதவுருத்திரத்தாலாட்டிமட்டித்துச்சாத்திப்பூட்டிப்
பதமுறமனுவாலட்டபாலமுதருத்திப்பஞ்ச
விதமுறுவாசம்பாகுவெள்ளிலையளித்துப்போகம்
உதவுறுதூபதீபாதிகள்பலவுவப்பநல்கா.*

Koviloor Digital Library

(இ-ள்.) சத உருத்திரத்தால் ஆட்டி - சதருத்திரமந்திரத்தினா லபிடேகஞ்செய்து, மட்டித்து - சந்தனக்குழம்பையு மிருமேதத்தையும்பூசி, சாத்தி - மலர்மாலைசாத்தி, பூட்டி - இரத்தினமழுத்திய ஆபரணங்களைப்பூட்டி, பதம் உற அட்ட - பாகமமையச்சமைத்த, பால் அமுது - பாலமைந்த பாயசான்னத்தை, மறுவால் அருத்தி - சுவாகாந்தமூல மந்திரத்தினால் நிவேதித்து, பஞ்சவிதம் உறு வாசம் பாகு வெள்ளிலை அளித்து - ஐந்துவிதமாகவமைந்த வாசனைத்திரவியத்தையும் பாக்கையும் வெற்றிலையையும் தந்து, போகம் உதவு உப நிபாதிகள் பல உவப்ப நல்கா - வேண்டியார்க்குப் போகங்களைத்தரும் உபநிபமுதலியவற்றையு மிறைவர் மகிழ்கூரத்தந்து.

உபநிபாதிகள் பலவெனக்கூறல் ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புட்பதானம், பானீயம், ஆராத்திரிகை, ஜபசமர்ப்பணைகள். இவற்றின்விரிவை மூர்த்திவிசேடத்திற்காண்க. பாயசான்னமாவது - வேண்டிய அரிசியும் அதிற்பாதிகொண்ட பயற்றம்பருப்பும் அரிசியினிருமடங்கேனு மும்மடங்கேனு நான்மடங்கேனுங்கொண்ட பாலுங்கூட்டிப் பாகம்பண்ணப்பட்டது. சதருத்திரமாவது - யசுர்வேதம் பிரமன்முதல் சதாசிவமீறாக முறையே யேற்றங்கூறுதலால் அதனுள் நடுக்கண்டமாகிய சதவுருத்திரமநுக்களை யோகாமத்தால் உருத்திரகணங்களைச் சங்காரக்கிரமத்தில்வைத்து அதிசிவபரியந்தம் வரைப்படுத்திக்கூறுதல். ஆட்டியெனப்பொதுப்படகூறினாரேனும் முன்னர்ச் சந்தனாதித்தயிலத்தினால் அபிஷேகமும், பின்னர்ப் பஞ்சகவ்வியமும், அதன்பின் பஞ்சாமிர்தமும், பாலும், தயிரும், நெய்யும், தேனும், கரும்பின்சாறும், பழச்சாறும், இளநீரும், சந்தனக்குழம்பும், பனிநீரும், மிருமேதமும் திருமஞ்சனமும் என முறையாகக்கொள்க. இளநீரும் தயிலமும் அதிகாரத்தாற் கொள்ளப்பட்டன. ஆனைந்து என்றமையால் பாலும் தயிரும் நெய்யுங்கொள்க. பாலமுதருத்தி எனக் கூறினாரேனும் தற்புருடமுகம் கன்மசாதாக்கியம் ஆதலால் அத்திருமுகத்தளித்து எனக்கொள்க. "தற்புருடவத்திரத்திற் றானைவேத்தியமும் - அற்புதமாக்காமென்றறி" எனவருஞ் சைவசமயநெறித் திருக்குறளால் அறிக. வாசம் ஐந்து என்றது மூர்த்திவிசேடத்திற்காண்க. "கலன்களாதியுங்கற்கரடாதியும் - பொலன்கொடைபசுந்தாதியும்புங்கவற் - கிலங்கவேயளித்தோர்நிலனின்மிசை - நலங்கெடுத்தற்றேவினைகன்றுவார்" எனச் சிவபுண்ணியத்தெளிவில் வருதலால் போகமுதவு உபநிபாதிகள் என்றார். மறுவாலருத்தியென்றதற்குப் பஞ்சவாயு மந்திரத்தால் நிவேதித்து எனப் பொருள்கொள்ளலும் ஒன்று. (௪0)

ஐம்முகச்சைவச்செந்தீயகத்தினுந்துடுவையார
நெய்ம்முகந்தருத்திப்பூசைநிரப்பினால்வேதஞ்சொன்ன
மெய்ம்மறைநூற்றுப்பத்தால்மூவிலைவில்லநீலங்
கைம்மலரேந்திச்சாத்திக்கடவுளையுவப்பச்செய்து.

(இ-ள்.) ஐமுகம் - ஈசானமுதல் சத்தியோசாத மீறாகிய மந்திரத்தால், சைவம் செம் தீ அகத்தின் உம் - சிவவேள்வியினிடத்தும், துடுவை ஆர நெய் முகந்து அருத்தி பூசை நிரப்பி - செய்த்தெப்பால் நிரம்ப நெய்யை முகந்து வார்த்து ஆகுதி பண்ணிச் சிவபூசையை முடித்து, நால் வேதம் சொன்ன மெய் மறை நூற்றுப் பத்தால் மூவிலை வில்லம் நீலம் - நான்குவேதங்களுங்கூறிய உண்மைவாய்ந்த சகஸ்திரநாம திருமந்திரத்தால் மூன்றிதளம் வாய்ந்த வில்வத்தையு நீலோற்பலமலரையும்,

Koviloor Digital Library

கைமலர் ஏந்தி சாத்தி கடவுளை உவப்ப செய்து - தமது கைகளாகிய மலரிலேந்தி ச் சாத்திச் சோமசுந்தரக்கடவுளை மகிழ்கூர வருச்சித்து.

ஈசானமுதல் அத்திரம் இறுதியாகிய பதினொரு மந்திரத்துள் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதமாகிய ஐந்து திருமந்திரங்களால் சிவவேள்வி நடத்தவேண்டுதலால் ஐம்முகச்சைவச்செந்தீ யகத்திருந்தடுவையார-செய்ம்முகந்தருத்திப்பூசை பிரப்பியென்றார். வேதம் சூத்திரமும் ஆகமம் பாடியமுமாதலால் ஆகமத்தையுங்கூட்டி நால்வேதம் எனவுங் கூறினர். நூற்றுப்பத்து பண்புத்தொகை நிலைத்தொடர் ஆதலால் ஆயிரத்தின்மேல் நின்றது. (சுக)

வாசமஞ்சனநீரொடுமந்திரமலர்கைக்கொண்டு
பூசையின்பயனைமுக்கட்புண்ணியன்கையினல்கி
நேசநெஞ்சூறக்கண்கணிறையநீரூறிச்சோர
வீசனையிறைஞ்சியாருமஞ்சலித்தேத்தல்செய்வார்.

(இ-ள்.) வாசம் மஞ்சன நீரோடு மலர் கைக்கொண்டு - வாசமமைந்த திருமஞ்சன நீரோடு மலரைக் கையிலேந்தி, மந்திரம் - ஸ்ரீபஞ்சாக்கரத்தால், பூசையின் பயனை - சிவபூசையால் வந்த பயனை, முக்கண் புண்ணியன் கையில் நல்கி - திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானுக்கு அர்ப்பணஞ்செய்து, நெஞ்சு நேசம் ஊற கண்கள் நிறைய நீர் ஊறி சோர-தமதிதயத்தில் அன்பு சுரக்கவும் கண்களினிறைய நீர் சுரந்து சோரவும், யார் உம் ஈசனை இறைஞ்சி அஞ்சலித்து ஏத்தல் செய்வார் - வசிட்டாதி முனிவர்களெல்லோரும் அச்சிவபிரானை வணங்கிக் கைகூப்பித் துதிப்பாராயினார்கள். (சுஉ)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

பழியொடுபாசமாறுகெடவாசவன்செய்பணிகொண்டவண்டசரணம்
வழிபடுதொண்டர்கொண்டநிலைகண்டுவெள்ளிமணிமன்றுளாடிசரணஞ்
செழியன்விளிந்திடாதபடிமாறியாடறெளிவித்தசோதிசரண
மெழுகடல்கூவிமாமியுடன்மாமனாடவிசைவித்தவாதிசரணம்.

(இ-ள்.) பழி பாசம் ஆறு உம் கெட வாசவன் செய்பணி கொண்ட அண்ட சரணம் - பழியும் பாசமுமாகிய ஆறுஞ் சிதைய இந்திரன்செய்த குற்றேவலைக் கைக்கொண்ட பல்லாயிரகோடி யண்டங்களுக்கும் இறைவரே யடியேன் அடைக்கலம், வழிபடு தொண்டர் கொண்ட நிலைகண்டு - தம்மை வழிபட்ட பதஞ்சலி வியாக்கிர பாதர் கைக்கொண்ட விரதநிலைகண்டு, மணி வெள்ளி மன்று உள் ஆடி சரணம் - அழகிய வெள்ளியம்பலத்துள் நிருத்தஞ்செய்தவரே சரணம், செழியன் விளிந்திடா தபடி மாறி ஆடல் தெளிவித்த சோதி சரணம் - இராசசேகரபாண்டியன் உடைவாளின் மேற்பாய்ந் துயிர் துறவாதவண்ணம் திருவடிமாறி நடித்தருளிய பேரொளிப் பிழம்பே யடைக்கலம், எழுகடல் கூவி மாமி உடன் மாமன் ஆட இசைவித்த ஆதி சரணம் - ஏழுகடலையுங்கூவி மாமியாகிய காஞ்சனமாலையோடு மலயத்துவசபாண்டிய னீராடச்செய்வித்தருளிய முழுமுதலே யடைக்கலம்.

பாசம் ஐந்தாதலால் விருத்திராசுரனைக்கொன்ற பழியொடுகூட்டி ஆறு என்றார். முற்றும்மை தொகுத்தல். ஒடு எண்ணிடைச்சொல். பாசம் ஐந்தாவன ஆணவம், மாயை, கன்மம், திரோதானம், மாயேயம். இவை மலங்கள் எனவும் படும். கன்மமலமானது நெல்லின்கண் முளை, முளைத்தற்சத்தியையத் தோற்றுவிப்பதுபோ ர

Koviloor Digital Library

உயிரின்கண்ணுள்ள சுகதுக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவித்தல். மாயாமலம் ஆவது முளைப்பதற்கு அநுகூலஞ்செய்து உடனிற்குந் தவிடுபோல, அச்சுகதுக்கங்கள் அவ்விடத்துத் தோன்றுதற்குத் துணைக்காரணமாய் நின்று தன் காரியமாகிய தநுகரண முதலியவற்றையும் உயிரையும் இயைவித்துநிற்றல். ஆணவமலமாவது அம்முளை அவ்விடத்துத் தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமியைப்போல அவற்றை முளைப்பித்து அச்சுகதுக்கங்களை யுயிர் நுகரும்வண்ணம் நிலைபெறுத்துதல். மாயேயமலமாவது அச்சுகதுக்க விளைவுகளுக்கெல்லாம் இடனாய் நின்று ஆன்மாவின் அறிவிச்சை செயல்களை யேகதேசப்படுத்தி நிற்றல். திரோதானமலமாவது அம்மலங்கட்கு அநுகூலமாய் நின்று பக்குவம் வருங்காறும் அவ்வான்மாவை மறைத்துப் பாகம் வருவித்து நிற்றல். "மும்மலநெல்லினுக்கு முளையொடுதவிடுமிப்போல் - மம்மர்செய்தணுவினுண்மை வடிவினைமறைத்துநின்று - பொய்மைசெய்போகபந்த போத்திருத்துவங்கள்பண்ணும் - இம்மலமூன்றினோடு மிருமலமிசைப்பனின்னும். மாயையின்காரியத்தை மாயேயமலமதென்று - மேயுமும்மலங்கடத்தந் தொழிலினையியற்றவேவும் - தூயவன்றனதோர்சத்தி திரோதானகரியதென்றும் - ஆயவிம்மலங்களைந்து மணுக்களையணைந்துநிற்கும்" எனச் சிவஞானசித்தியாருள் வருதல் காண்க. திருநடனத்தைத் தரிசித்தபின்றன்றி நியம மேற்கொண்டனராதலால் வழிபடு தொண்டர்கொண்ட நிலைகண்டு என்றார். (௪௩)

வெங்கரியாவிசோரநரசிங்கவாளிவிடுவேடரேறுசரணம்
புங்கவர்தேறவாதிமறைபுட்கிடந்தபொருளோதுபோதசரணம்
வங்கமதேறிவேலைமகரம்பிடித்தவலையாண்மணாளசரணம்
கங்கணநாகம்விசிநகரெல்லைகண்டகறைகொண்டகண்டசரணம்.

(இ-ள்.) வெம் கரி ஆவி சோர - சமணரேவிய கொடிய யானையினுயிர் உடலிவாழ்க்கையினின்று நீங்க, நரசிங்கவாளி விடு வேடர் ஏறு சரணம் - நரசிங்கபாணத்தை யேவிய வேடர்களுக்குள் ஆண்சிங்கம்போலும் வீரம்வாய்ந்த திருவுருக்கொண்டு வந்தவரே அடைக்கலம், புங்கவர் தேற - கண்ணுவர் முதலிய முனிவர்கள் ஐயந்திரிபற, ஆதிமறை உள் கிடந்த பொருள் ஓது போத சரணம் - முதனூலாகிய வேதத்துள் இலைமறைகாய்போற் பொதிந்த பொருளை யுணர்த்தியருளிய போதகாசிரியத் திருவுருக்கொண்டுவந்தவரே யடைக்கலம், வேலை வங்கம் அது ஏறி மகரம்பிடித்த வலையாள் மணாள சரணம் - கடலில் படகிலேறிச் சுறாமீனைப் பிடித்தலால் நெய்தனிலத்தலைவன் புத்திரியாராகிய இறைவியாரை மணந்த மணவாளத் திருக்கோலமுடையவரே யடைக்கலம், கங்கணம் நாகம் வீசி நகர் எல்லை கண்ட கறை கொண்ட கண்ட சரணம் - (பாண்டியன் வேண்டுகோளால்) கங்கணமாகத் திருக்கரத்திலணிந்த பாம்பினைவிட்டு மதுரைத் திருநகரெல்லை கண்டருளியகரியநிறங்கொண்ட ஸ்ரீகண்டத்தை யுடையவரே யடைக்கலம்.

படகு வங்கம் என்றது இனம்பற்றி. அது பகுதிப்பொருள் விகுதி. (௪௪)

மைந்தனிலாழிமேருமகவானகந்தைமடிவித்தநித்தசரணஞ்
சுந்தரநாமவாளிபணிகொண்டுகிள்ளிதொகைவென்றவீரசரணம்
வெந்திறன்மாறன்முன்கலுருவானைகன்னன்மிசைவித்தசித்தசரண
முந்தியகல்லின்மாதர்பெறவட்டசித்திமுயல்வித்தயோகிசரணம்.

(இ-ள்.) மைந்தனில் - தனதுபுத்திரனாகிய உக்கிரகுமாரபாண்டியனால், ஆழிமேருமகவான் அகந்தை மடிவித்த நித்தசரணம் - கடலின் அகந்தையையும் மேரு

Koviloor Digital Library

வினகந்தையையும் இந்திரனகந்தையையும் அழித்த சித்தரேயடைக்கலம், சுந்தரம் நாமம் வாளிபணிகொண்டு கிள்ளிதொகைவென்ற வீரசரணம் - சோமசுந்தரத்திருப்பெயரெழுதிய அம்பினைப் பணிகொண்டு விக்கிரமசோழனுடைய சேனகூட்டத்தைவென்ற வீரரேயடைக்கலம், வெம் திறல் மாறன் முன் கல் உரு ஆனை கன்னல் மிசைவித்தசித்தசரணம் - விரும்பும் வெற்றிவாய்ந்த அபிடேகபாண்டியன் முன்பு கல்லானை கரும்புதின்னச்செய்த சித்தரேயடைக்கலம், முந்தியகல்லின் மாதர்பெற அட்டசித்தி முயல்வித்த யோகிசரணம் - (பட்டமங்கையென்னுந்திருப்பதியில்) முற்பட்ட பாறைவடிவமைந்த இயக்கமாதர்களறுவரும் அடைய அட்டமாசித்தியை யருளிய யோகியேயடைக்கலம். (கூரு)

திருமணிமைந்தன்மைந்தன்முடிசூடவிற்றதிருமல்குசெல்வசரண
மருமகனென்றுமாமனுருவாய்வழக்குவலிபேசுமைந்தசரணங்
குருமொழிதந்துநாரைகுருவிக்குவீடுகுடிதந்தவெந்தைசரணம்
வருபழியஞ்சிவேடமகனுக்கிரங்குமதுராபுரேசசரணம்.

(இ-ள்.) மைந்தன் மைந்தன் - (தமதுபுத்திரனாகிய உக்கிரகுமாரபாண்டியன்) புத்திரனாகிய வீரபாண்டியன் புத்திரன், முடிசூட - மகுடஞ்சூட, திருமணிவிற்ற திருமல்கு செல்வசரணம் - (வணிகவுருக்கொண்டு) இரத்தினங்களைவிற்றருளிய பொலிவுமிக்க செல்வரேயடைக்கலம், மாமன் உரு ஆய் மருமகன் என்று வழக்குவலிபேசு மைந்தசரணம் - மாதுலன்வடிவாய் (ஒருவணிகமகனை) மருமகனென்றுகொண்டு (மன்றிலேறிஞாதிகளோடு) வழக்கினைவன்மையோடு பேசியருளிய வணிகர்கோவே அடைக்கலம், நாரைகுருவிக்கு - நாரைக்குங் குருவிக்கும், குருமொழி தந்து வீடுகுடிதந்த எந்தைசரணம் - உபதேசித்து மோட்சவீட்டிலவைகுடியேறச்செய்த என்தந்தையேயடைக்கலம், வருபழி அஞ்சி - பாண்டியர்மரபிற்குவரும்பழிக்கஞ்சி, வேடமகனுக்கு இரங்கு மதுராபுரேசசரணம் - ஓர்வேடனுக்கு இரங்கியருளிய மதுராபுரிக்கு ஈசனேயடைக்கலம். (கூசு)

விருத்தகுமாரபாலவருண்மேனிகொண்டுவிளையாடுமண்ணல்சரணங்
குரத்தியைநச்சுபாவியுயிருண்டுசோரிகுடைவாகைவேலசரணங்
கருத்திசைபாணனுளினிசைபாடிமாறுகளைவேதகீதசரண
நரித்திரண்மாவைமீளநகரங்கலங்கநரிசெய்தநம்பசரணம்.

(இ-ள்.) விருத்தகுமார பால அருள் மேனிகொண்டு விளையாடும் அண்ணல் சரணம் - விருத்தரும் குமாரரும் பாலருமாகத் திருவருளே திருமேனியாகக்கொண்டு விளையாடியருளிய இறைவரேயடைக்கலம், குரத்தியை நச்சுபாவி உயிர் உண்டு சோரிகுடைவாகை வேலசரணம் - ஆசிரியன்மனைவியை விரும்பிய சித்தனென்றுங் கொடும்பாவியினுயிருண்டு உதிரத்தில்மூழ்கிய வெற்றிமாலையைவேய்ந்த வேலேந்திய திருக்கரத்தையுடையவரே அடைக்கலம், கருத்து இசைபாணன் ஆள்-தமது திருவுள்ளத்திற்கிசைந்த பாணபத்திரருக்கு அடிமையென்று, இன் இசைபாடி மாறுகளை வேதகீதசரணம் - இனிய இசையைப்பாடி யவர்க்குப்பகைவனாகிய ஏமநாதனைவென்ற சாமவேதகீதரே யடைக்கலம், நரித்திரள் மாவை மீள நகரங்கலங்க நரிசெய்த நம்பசரணம்-நரிக்கூட்டங்களாகிய குதிரைகளை மீளவும் நகரிலுள்ளோர் நிலைகலங்க நரிகளாகச்செய்த தலைவரே யடைக்கலம். (கூஎ)

Koviloor Digital Library

முற்பலாறிரண்டுசிறுபன்றியுண்ணமுலைதந்தவன்னைசரணம்
பொற்புறுமாயவாவையடலேறுகொண்டுபொருதட்டசிட்டசரணம்
பற்பலஞாலமெங்குமடையப்பிரம்புபடுமட்டமூர்த்திசரணங்
கற்பினொருத்திமன்றலறிவிக்கமூன்றுகரிதந்தவள்ளல்சரணம்.

(இ-ள்.) முன்பல் - முன்னாளில், ஆறிரண்டு சிறுபன்றி உண்ண முலை தந்த அன்னை சரணம் - பன்னிரண்டு பன்றிக்குட்டிகளுண்ண முலைப்பாலூட்டிய அவற்றின்தாயாயுள்ள இறைவரே யடைக்கலம், பொற்பு உறு மாய ஆவை அடல் ஏறுகொண்டு பொருது அட்ட சிட்ட சரணம்-(சமணர்களேவிய) பொலிவுமிக்க மாயப்பசுவைவெற்றிவாய்ந்த அதிகாரநந்தியைக்கொண்டு போர்செய்துவென்ற மேலானவரே யடைக்கலம், பற்பல ஞாலம் எங்கும் அடைய பிரம்புபடும் அட்டமூர்த்தி சரணம் - பலவுலகிலுமுள்ள வுயிர்கள் யாவுந் தழும்புபடப் பிரம்படிபட்ட அட்டமூர்த்தியே யடைக்கலம், கற்பின் ஒருத்தி மன்றல் அறிவிக்க மூன்று கரிதந்த வள்ளல் சரணம்- கற்பினையுடைய வொரு வைசியப்பெண்ணின் கலியாணத்தை யவள் மாற்றாளுக்குணர்த்த வன்னி கிணறு சிவலிங்கமென்னும் மூன்று சாக்ஷிப்பொருள்களைத் திருப்புறம்பயத்திலுள்ளபடி வெளிப்படுத்திய திருவருட்கொடையாளரே யடைக்கலம்.

எங்கும் நிறைந்தவர் என்னும் பொருள் போதர அட்டமூர்த்தி என்றார். (சஅ)

அளவைகளாலும்வேதமுதனூல்களாலுமயன்மாயனாலுமளவாக்
களவையுனக்குநாமகுணசின்னசாதிகதிசெய்தியில்லையவையு
முளவெனயாமறிந்துதுதிசெய்யவேகொலுலகஞ்செயன்பினெளிதாய்
விளையருண்மேனிகொண்டிவ்வறுபத்துநாலுவிளையாடல்செய்தபடியே.

(இ-ள்.) அளவைகளால் உம் வேதம் முதல் நூல்களால் உம் - காட்சியநுமான வளவைகளாலும், வேதமுதலிய உரையளவையாலும், அயன் மாயனால் உம் - பிரமனாலும் திருமாலாலும், அளவாத களவை-அளத்தற்கரிதா யொளித்துநின்ற இறைவரே, உனக்கு நாமம் குணம் சின்னம் சாதி கதி செய்தி இல்லை-அதனால் தேவரீருக்கு (சவிகற்பவுணர்ச்சியாலுணரப்படும்) பெயருங் குணமுங் குறியுஞ் சாதியும் பிறப்பும் தொழிலுமாகிய அறுவகையுமில்லை, அவை உம் உள என்ன யாம் அறிந்து துதிசெய்ய ஏ கொல்-நாமமுதலிய ஆறும் தேவரீருக்குள்ளனவென்று யாங்களுணர்ந்து துதிசெய்யவோ, உலகம் செய் அன்பின் எளிது ஆய்-உயர்ந்தோர் செய்யும் பத்திமையால் காண்டற்கெளிதாய், விளை அருள்மேனி கொண்டு - சுரக்குந் திருவருளே திருமேனியாகக்கொண்டு, இவ் அறுபத்துநாலு விளையாடல் செய்தபடி - (தேவரீர்) இவை முதலிய அறுபத்துநான்கு திருவிளையாடலைச் செய்தவண்ணம் (இஃதோர் பெருவியப்பு) என்றபடி.

காட்சி வாயிற்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக்காட்சியென நான்குவகைப்படுதலானும், அநுமானம் தன்பொருட்டநுமானம், பிறர்பொருட்டநுமானம் என இருவகைப்படுதலானும் அளவைகளாலும் எனவும், வேதாகம முதனூலும், மிருதிபுராணம் கலைகள் உபாகமங்கள் வழிநூலும், காருடம் தக்ஷிண முதலிய ஆகமாங்கங்களும் சிக்ஷை கற்பசூத்திரமுதலிய வேதாங்கங்களும் சார்புநூலுமாய்ப் பலபட நிற்றலால் வேத முதனூல்களாலும் எனவும், ஐயந்திரிபின்றி விடயங்களை நேரே யறியுங் காட்சியளவையும், மறைந்துநின்ற பொருளை யதனினின்று நீங்காத என்றும் அதனுடனிகழும் ஏதுவைக்கொண்டுணரும் அநுமானவளவையு

ம்போலாகாது அறியக்கூடாத பொருளை யாத்தவாக்கியமாகக்கொண் டுணரநிற்ற
லால் அளவை மூன்றனுள் உரையளவையுளடங்கிய வேதாகமத்தைப் பிரித்த வே
த முதனூல்களாலும் எனவும், பரதந்திரராய் மலப்பிணிப்புடையராதலால் அயன்
மாயனாலும் எனவும், அப்பொருள்களா லுணரப்படாத அவற்றொடு விரவியுடனாய்
நின்றியக்குதலால் அளவைக்களவையெனவும், அசிந்திதராய் நிற்றலால் உனக்கு நா
மகுண சின்னசாதிகதி செய்தியில்லை.யெனவும், சிந்திதராய்ப் பத்திவலையிற்படுவோ
ர் ஆதலால் அவையும் உளவென யாமறிந்து துதிசெய்ய வேகொ லுலகஞ்செயன்பி
னெளிதாய் எனவும், திருவருளே கரசரணாதி முதலிய திருவுருக்கொண்டமையால்
விளையருண்மேனிகொண்டு எனவும், இவை முதலியனவென்பது தோன்ற நிற்றற்கு
ப் பலவறிபால் விகுதிதந்து இவ்வெனவுங்கூறினார். முன்னர்த் தொகுத்துக் கூறின
வற்றை யவ்வப்படலங்களாலுணர்க. "திசைமுகன்சென்று தேடினர்க்கொளித்தும்-
முறையுளியொற்றி முயன்றவர்க்கொளித்தும் - ஒற்றுமைகொண்டு நோக்குமுள்ள
த் - தற்றவர்வருந்த வுறைப்பவர்க்கொளித்தும் - மறைத்திறநோக்கி வருந்தினர்க்
கொளித்தும் - இத்தந்திரத்திற் காண்டுமென்றிருந்தோர்க் - கத்தந்திரத்தி னவ்வயி
னொளித்தும்" எனத் திருவண்டப்பகுதியில் வருதல் காண்க. (சக)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எனத்துதித்தவசிட்டாதியிருடிகளைக்குறுமுனியையெறிதேனீப
வனத்துறையுஞ்சிவபெருமானிலிங்கத்தின்மூர்த்தியாய்வந்துநோக்கிச்
சினத்தினைவென்றகந்தெளிந்தீர்நீர்செய்தபூசைதுதிதெய்வத்தான
மனைத்தினுக்குமனைத்துயிர்க்குநிறைந்துநமக்கானந்தமாயிற்றென்னா.

(இ-ள்.) என்ன துதித்த வசிட்டாதி இருடிகளை குறுமுனியை - என்று துதித்
த வசிட்டர் முதலிய முனிவர்களையும் அகத்தியமுனிவரையும், தேன் எறி நீபம் வ
னத்து உறையும் சிவபெருமான் - தேன்வீசுங் கடம்பவனத்தில் வசிக்குஞ் சோமசுந்
தரக்கடவுள், இலிங்கத்தில் மூர்த்தியாய் வந்து நோக்கி - சிவலிங்கத்தில் சகளத்திரு
மூர்த்தம் வாய்ந்து தோன்றிப் பார்த்தருளி, சினத்தினை வென்று அகம் தெளிந்தீர் —
கோபத்தை வேரோடறக்களைந்து மனந்தெளிந்த முனிவர்களே, நீர் செய்த பூசை
துதி - நீங்கள் செய்த பூசனையும் துதியும், தெய்வத்தானம் அனைத்தினுக்கு உம்-நாம்
வசிக்குந் தெய்வத்தன்மை வாய்ந்த திருத்தலங்களுக்கும், அனைத்து உயிர்க்கு உம்
நிறைந்து-பிரமன் முதலிய வுயிர்த்தொகைகளுக்குந் திருத்தியாய், நமக்கு ஆனந்தம்
ஆயிற்று - நமக்கும் பெருமகிழ்ச்சியாய் முடிந்தது.

எல்லாத்தலங்களிலுமுள்ள சிவலிங்கங்கள் இத்தலத்திலுள்ள சிவலிங்கத்தினி
ன்று தோன்றினமையால் தெய்வத்தான மனைத்தினுக்கும் எனவும், எல்லா வுயிருள்
ளும் விரவி யுடனிற்றலால் அனைத்துயிர்க்கு நிறைந்து நமக்கானந்தமாயிற்று எனவுங்
கூறினார். நமக்கு என்பதனிறுதியில் இறந்தது தழீஇய உயர்வு சிறப்பும்மை தொகுத்
தல். தவத்திற்குச் சினம் பகையாதலால் சினத்தினை வென்றகந்தெளிந்தீர் என்றார்.

சிறந்தவருள்சுரந்துகுறுமுனியைவருகென்றுகரஞ்சிரமேல்வைத்துப்
புறந்தடவியெமையொப்பாய்நீயேநின்கற்புடையபொலங்கொம்பன்னா
ளறந்தழையுமுமையொப்பாளாதலினாலுமையொப்பாரகிலத்தியாரே
நிறைந்ததவம்புரிந்தோனுந்தவத்துறுதிபெற்றோனுநீயேயன்றோ.

Koviloor Digital Library

(இ-ள்.) சிறந்த அருள் சுரந்து குறுமுனியை வருக என்று கரம் சிரம் மேல் வைத்து புறம் தடவி - மேம்பட்ட திருவருள் சுரந்து அகத்தியமுனியை வரக்கடவாயென்று தமது திருக்கரத்தை யவரது சென்னிமேல் வைத்து முதுகுதைவந்து, நீ எம்மை ஒப்பாய் - நீயே யெம்மை யொப்பாய், நின் கற்பு உடைய பொலக் கொம்பு அன்னாள்-உனது மனைக்கிழத்தியாகிய கற்பினையுடைய கற்பகப் பூங்கொம்புபோன்ற உலோபாமுத்திரை, அறம் தழையும் உமை ஒப்பாள் - முப்பத்திரண்டறங்களுந் தழையச்செய்த உமாதேவியாரை யொப்பாள், ஆதலினால் அகிலத்து உம்மை ஒப்பார் யார்-ஆதலால் உலகிலும்மை யொப்பவர்களெவர்களுளர், நிறைந்த தவம் புரிந்தோன் உம் தவத்து உறுதிபெற்றோன் உம் நீ எ அன்று ஓ-முட்டின்றி நிறைந்த தவஞ்செய்தவனும் அத்தவத்தாலாகிய பயனைப்பெற்றவனும் நீயேயல்லவோ.

முப்பத்திரண்டறங்களாவன பிதிர்யாகமுதலிய முப்பத்திரண்டு தருமங்கள் "தெய்வந்தென்புலத்தார்பூத மானிடம்பிரமமென்றோர் - ஐவகையெச்சம்பூர்த்தந் துறந்தவர்மடங்களன்பு - செய்யுமில்வாழ்வார்க்கில்ல மனைக்குபகரணந்தேம்பூப்-பெய்தமைதண்ணீர்ப்பந்த ரெக்களும்பிறக்குசோலை. இரப்பவர்குருடரெவ்வ முற்றவர்ப்புரத்தல்வெங்கோய் - தாக்குநன்மருந்துநாவாய் மகவினையோம்பல்சுண்ணம் - பரித்தபாகடையேயெண்ணெய் பைம்புனல்குளிப்பவேண்டும் - மருக்கிளர்துவர்களாதி மலரணைகலனுன்கன்னி. கடிமணம்விளக்குமாறுக் கடனொழித்திடுதலீசன் - அடியவர்விழைவவிலை யக்கோமாமணிவெண்ணீறு - மடியிலாக்கடவுள்பூசை யுபகரணங்கள்பாசக் - தடிதருவேதவாய்மைச் சைவநூல்புராணநல்கல். சிவபிரானடிக்கீழ்ப்பத்தி செவியறியுறுத்தலோடும் - உவகையினபயம்யார்க்கும் வழங்குதலுள்ளிட்டோதும் - நவையிரியறமென்றுன்கு நாடொறுநிகழ்ச்சிமாணப்-பவநெறிதாக்குஞானப் பைந்தொடிநிறுவிப்பின்னர்" எனக் காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலத்தில் வருதல் காண்க. (௫௧)

உனக்கினியவரமினியாந்தருவதெவனுனக்கரிதாவொன்றுங்காணே
மெனக்கருணைசெய்திலிங்கத்திடையிச்சைவடிவாய்ச்சென்றிருந்தானுக
தனக்கரியவரநல்குஞ்சிவலிங்கந்தன்பெயராற்றாபித்தான்றன்
னினக்கருணைவசிட்டாதிமுனிவர்களுந்தம்பெயராலிலிங்கங்கண்டார்.

(இ-ள்.) உனக்கு அரிது ஆக ஒன்றும் காணேம் - உனக்குப் பெறுதற்கரிதாயுள்ள பொருளொன்றுமில்லை, (ஆதலால்) இனி உனக்கு இனிய வரம் யாம் தருவது எவன் என்ன - இனி புன்மனத்துக்கினிய வரம் எம்மால் தருவது யாது எதென்று, கருணைசெய்து இலிங்கத்து இடை இச்சை வடிவு ஆய் சென்று இருந்தான் ஆக - அருள்செய்து (இறைவர்) சிவலிங்கத்திடத்துத் தமது இச்சையாற்கொண்ட திருவுருவாய் மறைந்திருந்தருள, தனக்கு அரிய வரம் நல்கும் சிவலிங்கம் தன் பெயர் ஆல் தாபித்தான் - தனக்குப் பெறுதற்கரிய வரத்தைத் தந்தருளுஞ் சிவலிங்கத்தைத் தன்பெயரால் தாபித்துப் பூசித்தனன், தன் இனம் கருணை வசிட்டன் ஆதி முனிவர்கள் உம் தம்பெயரால் இலிங்கம் கண்டார்-தனது கூட்டமாயுள்ள வசிட்டர் முதலிய முனிவர்களும் தமது பெயரால் சிவலிங்கங்கள் தாபித்துப் பூசித்தார்கள்.

அகத்தியர் தம்பெயரா லோர்சிவலிங்கந்தாபித்துப் பூசிக்கத் திருவுளங்கொண்டவர் என்பார் உனக்கினியவரமினியாந் தருவதெவனுனக்கரிதாவொன்றுங்காணேம்-எனக்கருணைசெய்து எனவும், இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய சுதந்தி

... MADALAYAM
... R-630 307

Koviloor Digital Library

ரர் என்பார் இச்சைவடிவாய் எனவுங்கூறினர். இருந்தான் என்னும் வினைமுற்றின் பின் ஆக என்றும் இடைச்சொற்புணர்ந்து வினையெச்சப்பொருள் தந்து நின்றது.

ஏத்தியருச்சனைசெய்து நினைவிலரிதாயன்பிலெளியவட்ட
மூர்த்தியையங்கயற்கண்ணியன்பனைமுப்போதும்போய்முடிதாழ்ந்தின்பம்
பூத்தமனத்தினராகிக்கருவித்தேன்பொதிந்தசிறுபுட்போலந்த
மாத்தலனில்வசிட்டாதிமுனிவர்தபோவனஞ்செய்துவதிந்தார்மன்னே.

(இ-ள்.) ஏத்தி அருச்சனைசெய்து - (தாம் தாபித்த சிவலிங்கங்களை) துதித்து அருச்சித்து, நினைவில் அரிது ஆய் அன்பில் எளிய அட்டமூர்த்தியை - நினைத்தற்கரியவராய் அன்பினுக்கு எளியவராகிய அட்டமூர்த்தியாயுள்ள இறைவரும், அங்கயற்கண்ணி அன்பனை - அங்கயற்கண்ணியார் தலைவருமாகிய சோமசுந்தரக்கடவுளை, முப்போது உம்போய் முடிதாழ்ந்து - காலையுச்சி மாலையென்னுங்காலத்திரயங்களினும் சென்று தலைவணங்கி, இன்பம்பூத்த மனத்தினர் ஆகி - ஆராவின்பம்நிறைந்த மனத்தினராகி, கருவிதேன் பொதிந்த சிறுபுள்போல் - மிக்க தேனடையில்மூசிய வண்டுகளைப்போல, அந்தமாதலனில் வசிட்டர் ஆதிமுனிவர் தபோவனஞ்செய்து வதிந்தார் - அந்தப்பெருமைவாய்ந்த மதுரையென்னுந் திருப்பதியில் தபோவனம் ஒன்றமைத்து இடையறாது வசித்தார்கள்.

கருவிகூட்டம்-கருவித்தேன் மிக்கதேன் என்பதுபொருள். இதுதானியாகு பெயர்ாய்த் தேனடைமேல்நின்றது. நினைவில் அன்பில் நான்கனுருபு நிற்குமிடத்து ஏழனுருபுநிற்றலால் உருபுமயக்கம். உம்மைமுற்று. எங்கும் பரிபூரணனென்னும்பொருள் போதர அட்டமூர்த்தியென்றமையால் சுட்டறிவிற்கெட்டாத நிட்களன் என்பது தோன்ற நினைவிலரிதா யட்டமூர்த்தியெனவும், பத்திவலையிற் படுவோனாதலால் சகளத்திருவுருவந்தோன்ற அன்பிலெளிய அங்கயற்கண்ணியன்பனையெனவும் முறை நிரனிறையாகக்கொள்க. (௫௩)

அருச்சனைப்படலம் முற்றிற்று.

ஆகப்பாயிரம் உள்படத் திருவிருத்தம் - ௩௩௯௩.

திருவாலவாய்க்காண்டம் முற்றிற்று.

திருவிளையாடற்புராணம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்.

பரஞ்சோதிமாமுனிவர் அருளிச்செய்த மதுரையறுபத்துநான்குதிருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா.

காப்பு.

நாற்றிக்கும் போற்று நதிமதுரைச் சொக்கரையாம்
போற்றிக் கலிவெண்பாப் போற்றிசெயச்—சீற்றமதன்
றைக்குஞ் சரமுகத்தான் சாயவிழித் தோனுதவு
கைக்குஞ் சரமுகத்தான் காப்பு.

பூமேவு கற்பகநா டாளும் புரந்தரனூர்
தீமை விருத்திரனைச் செற்றபழி—போமாறு
பொற்கமலந் தோய்ந்து விமானமிசைப் பூசிப்ப
நற்கருணை செய்த நலம்போற்றி—நற்றவத்தோ
ரீசனூர் சாத்து மெழின்மலரைக் கால்சிதைத்த
வாசவனூர் வெள்ளானை மண்ணிழிந்து—பூசனைசெய்
தல்லற் படுசாபந் தீர வருள் சுரந்த
மல்லற் கருணை வளம்போற்றி—நல்வணிகன்
கண்டுவந்து கூறக் கனவினருட் சித்துருவங்
கொண்டுவந்து காடெறிந்து கோநகரம்—கண்டிடெனக்
கொத்தலரு நிம்பக் குலசே கரனையெதிர்
சித்தரா யாட்கொண்ட சீர்போற்றி—பத்தி
மலையத் துவசன் மகந்தன்னின் மூன்று
முலையுத் தமியாய் முளைத்துக்—கலைமுழுதுங்
கற்றுமுடி சூடிக் கயற்கண்ணி வெங்கலியைச்
செற்றுலகை யாண்டிருந்த சீர்போற்றி—கொற்றமணித்
தேரேறி யெட்டுத் திசைவென்று நந்திகணப்
போரேறி வென்றெதிர்க்கும் போதிலொரு—வாரேறு
கொங்கை மறைந்தமதிக் கொம்பைமணஞ் செய்துமுடி
மங்கலஞ் செய்த வளம்போற்றி—யங்கனக
மன்றுடல் வேட்டவிரு மாதவர்க்கும் வெள்ளி மன்று
ணின்றுடிக்காட்டு நிலைபோற்றி—குன்றமென
முன்ன மலைபசித்தீ மூளுங் குறள் வீரற்
கன்னமலை யீந்தவருள்போற்றி—பின்னுமவன்
வெய்யபசிக் கன்னக் குழியுநீர் வேட்கைக்கு
வையையுந் தந்த வரம்போற்றி—யையைதனை
யின்றுள் கடலாட வேண்ட வெழுகடலுஞ்
சான்று வரவிறுத்துந் தாள்போற்றி—வான்றுழ

Koviloor Digital Library

வாழுமல யத்துவச மன்னனைக்கூடத் தேவியொடு
மாழிபடி வித்த வருள்போற்றி—வேள்விவரு
வில்வளைக்கை நங்கை விறலுக் கொருமாச்
செல்வனைப் பெற்ற திறம்போற்றி—செல்வனுக்கு
மன்றன் முடித்த வனசெண்டு வேல்கொடுத்து
வென்றிமுடி சூட்டும் விறல்போற்றி—வன்றிறல்வேல்
வேலை சுவற விடுத்துக் கொருமான்
ஞாலம் புரந்த நலம்போற்றி—வேல்வலக்கைச்
சேயனைய வுக்ரன் கிரிகிரியெறிந் திந்திரன்போர்
சாயமுடி சிந்து சயம்போற்றி—யாயவரி
வண்டலம்பு தார்க்குமரன் மேருமணிமுடிமேற்
செண்டெறிந்து வைப்பெடுத்த சீர்போற்றி—பண்டொருநா
ளாறறியந்தணருக் காதி மறைப்பொருளைத்
தேற விரித்த திறம்போற்றி—யிறவடந்த
தென்னன் குமாரன் திருமுடிக்கு வாணிபராய்
நன்மணிகள் விற்ற நலம்போற்றி—நன்னகர்மேல்
வென்றி வருணன் விடுத்த கடல்பருகத்
தன்றமுகி லென்கேவுஞ் சூழ்போற்றி—கன்றியவன்
வான்மாரி யேழும் விடுப்பமழை நான்கும்போய்
நான்மாட மான நலம்போற்றி—தேவிதழி
வைத்த முடிமறைத்து மாடகே ரெக்கெக்குஞ்
சித்தரா யாடியருள் சீர்போற்றி—சித்தராய்
மன்னவன் கைக்கரும்பை வாங்கிக்கல் யானைக்குத்
தின்ன வளித்த திறல்போற்றி—தென்னவன்மேல்
வெங்க ணமணர் விடுத்த களிற்றைநர
சிங்கசரந் தொட்டெய்த சீர்போற்றி—தொங்குதிரை
மூப்பிளைய காளை முதியுண் குழவியெனக்
கோப்பருவங் கொண்ட குணம்போற்றி—மாப்பெரியோர்
தேறடைத் தன்னைபொரு தென்னன் றனக்கிரங்கி
மாறிநடஞ் செய்த மலர்போற்றி—பாறடைந்தோர்
வஞ்சி யுயிரிழப்ப வாடு மறப்பழியை
யஞ்சி வெளிசெய்த வறம்போற்றி—வஞ்சமனத்
தாயைப் புணர்ந்தமகன் றந்தை தனைவதைத்த
தீயபழி தீர்த்தவருட் சீர்போற்றி—தாயனைய
வாசான் மனைவிதன்மே லாசைவைத்த மாணவனைக்
கூசாமற் கொன்ற கொலைபோற்றி—மாசமணர்
வல்வித்தை செய்துவிடு வன்வஞ்ச வாளரவைக்
கொல்வித்த நல்ல குணம்போற்றி—வல்லமணர்
கூரியகோட் டாவை வரவிடுப்பக் கொல்லேற்றால்
சிரியஞ் சாய்த்த விறல்போற்றி—தாரணியில்

Koviloor Digital Library

வெந்திறல்வேன் மீனவன்முன் மெய்க்காட்டிட் டன்புடைய
மந்திரியைக் காத்த வளம்போற்றி—நொந்திரந்த
கொற்கையர்கோ வேந்தன் குறையிரப்பச் சித்தராய்ப்
பொற்குவை தந்த புகழ்போற்றி—நற்குவளை
மையேற்ற வாட்கண் வணிகமட வார்க்குவளை
கையேற்றி மாலேற்றுங் கைபோற்றி—மைதீரப்
பட்டமங்கைப் பாறையுரு நீத்தாறு பைந்தொடியார்க்
கட்டசித்தி யீந்த வருள்போற்றி—கட்டவிழார்த்
தாரார்க் கரையிரவிற் றாழ்திறந்து காப்படைத்துச்
சீரார் விடைபொறித்த சீர்போற்றி—யாரானை
மூண்டுபொருந் தென்னன் முனைப்போர்க்குத் தண்ணீர்தந்
தாண்ட கருணை யறம்போற்றி—யீண்டயன்மால்
வன்மனத்துக் கெட்டான் வடிவெடுத்துப் பொன்னனையா
ளன்மனையிற் சென்ற நடைபோற்றி—தென்னனெதி
ராயிர வாம்பரிக்கோ ராடவனை யோடையினில்
வீய வலந்திரித்த வேல்போற்றி—தூயவள
மொல்கு மடியார்க் குலவாத் தனிக்கோட்டை
நல்குங் கருணை நலம்போற்றி—நல்வணிகன்
மாமனென வந்து வழக்குரைத்து ஞாதியர்பாற்
சேமநிதி வாங்கியருள் சீர்போற்றி—கோமகனை
யாட்டி யவன்பழிதீர்த் தாண்டச்சிவலோகங்
காட்டி யருள்கருணைக் கண்போற்றி—பாட்டிசைக்குப்
பாண னடிமையெனப் பாடி விறகெடுத்த
நாண மிலாத நடைபோற்றி—பாணனுக்குச்
செந்தமிழாற் றீட்டுந் திருமுகத்தைச் சேரனிடைத்
தந்தருளிச் செய்த தனம்போற்றி—வந்திறைஞ்சி
யற்பொழியு மாரிவெள்ளத் தாழ்ந்திசைக்கும் பாணனுக்குப்
பொற்பலகை யிட்ட புகழ்போற்றி—கற்றதனான்
மாட்சிபெறு பாடினியை வாதுக்குத் தோற்றுடன்
றேட்சுமையாத் தாங்குவித்த ருள்போற்றி—காட்சிபெற
மாயாமல் வெஞ்சுரத்து வல்லேனக் குட்டிகட்குத்
தாயாய் முலைகொடுத்த தாய்போற்றி—வீயாத
வேனயிரண் டாறனையு மீராறு மந்திரியா
மீனவனுக் கீந்த விறல்போற்றி—மானவலி
யெய்த்தெளிய தான விரும்புட் குபதேசம்
வைத்துவலி தந்த வரம்போற்றி—சித்தநெகிழ்
பத்தியினாற் சூழ்ந்துவழி பாடுசெய்யு நாரைக்கு
முத்தி கொடுத்த முறைபோற்றி—சித்தரணி
கோளரவு நான்மாடக் கூடலை யாலவாய்
வாளகிரி போல்வளைந்த மாண்போற்றி—கோளமரிற்

Koviloor Digital Library

போற்றிக்கலிவெண்பா.

சுந்தரப்பே ரம்பெய்த சோழன் கடற்சேனைக்
கந்தரங் கடந்த வருள்போற்றி—செந்தமிழ்நா
லாய்ந்தவர் கல்வி யளந்தறியும் பொற்பலகை
யீந்த கருணை யிசைபோற்றி—வேந்தனிடை
சொற்சுவையாற் பாட லெடுத்துத் தருமிக்குப்
பொற்கிழி தந்த புகழ்போற்றி—நக்கீரன்
மெய்வெந் தழற்கண்ணால் வெந்தோடை வீழ்ந்தோனைக்
கைதந்தே றிட்ட கனைபோற்றி—மைதவிர
வேதமுறுங் கீரற் கியற்றமிழைத் தென்மலய
மாதவனாற் றேற்றுவித்த மாண்போற்றி—போதணிந்த
மங்கல மண்டபத்து வந்துமன் சங்கத்தார்
சங்கையறத் தேற்றுந் தமிழ்போற்றி—சங்கையாய்ப்
போனவிடைக் காடன்பின் போய்ப்பாடல் கேட்டரசன்
மானநிதி நல்குவிக்கு மாண்போற்றி—மீன்மகனாய்ச்
செங்கையொரு நான்குடைய திண்மீன் பிடித்துவலை
மங்கையை வேட்ட மணம்போற்றி—துங்கமறை
யான்றதிரு வாதவூ ரந்தணருக் கைந்தெழுத்தின்
மூன்றுபொரு டேற்று முறைபோற்றி—தேன்றதும்பும்
வேம்புநறுந் தாரான்முன் வெவ்வாய் நரித்திரளை
வாம்பரியாத் தந்த வரம்போற்றி—வாம்பரிக
ளின்ற பரிக ளினம்பிடுங்கி யூளையிட்டுத்
தின்றுநரி யாக்குஞ் செயல்போற்றி—யன்றொருத்திக்
காளாய் முதுகி லடிபட்டு மண்சுமந்து
தாளாண்மை செய்த சயம்போற்றி—கோளமணர்
வீறுகெடக் கூனிமிர்த்து வெப்பொழித்துப் பாண்டியனை
நீறுபுனை வித்த நிலைபோற்றி—சீறமண
ரன்னெறியும் வேதநெறி யாறுந் தமிழறிய
வெங்கழுவி லேற்றும் விறல்போற்றி—யங்கொருத்தி
மன்றற்குச் சான்றாக வன்னி கிணறிலிங்க
மன்றழைத்துக் காட்டு மருள்போற்றி—யன்றிறைவ
னாற்றிய வாட லறுபத்து நான்கினையுஞ்
சாற்றிய தென்முனிவன் றாள்போற்றிச்—சாற்றிய
வன்னைக்கேட் டர்ச்சித்த மாமுனிவர் தாள்போற்றி
தன்னைக் கயற்கண்ணி தாள்போற்றி—யன்னவருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணைமுகப் போது.

போற்றிக்கலிவெண்பா முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்த்தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்தது.

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபாண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதநாயகனால்வேதமும்பொருள்களுமருளி
யங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (க)

வெற்றவேயடியாரடிமிசைவீழும்விருப்பினன்வெள்ளைநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து
மொற்றைவெள்விடையனும்பராதலைவனுலகினியற்கையையொழிந்திட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (உ)

செந்துவர்வாயாள்சேலனகண்ணாள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பாரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பாம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ங)

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்கோயின்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ச)

செய்யதாமரைமேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்தினிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (ரு)

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்
கலைமலிகரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (சு)

முத்தின்றாழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற
சுத்தமார்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ
லத்தனுருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (எ)

நாவணங்கியல்பாமஞ்செழுத்தோதிநல்லராய்நல்லியல்பாகுங்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற
வேவணக்கியல்பாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (அ)

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினாற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற
வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (௯)

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குண்டராயுள்ளார்சாக்கியர்தங்கள்குறியின்கணெறியிடைவாரா
வண்டநாயகன்றானமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. (௧௦)

பன்னலம்புணரும்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மந்நலம்பெறுசீராலவாயீசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுண்ஞானசம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவீற்றிருப்பவரினிதே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீலமாமிடற் - றாலவாயிலான்
பாலதாயினார் - ஞாலமாள்வரே. (௧)

ஞாலமேழுமா - மாலவாயிலார்
சீலமேசொலீர் - காலன்வீடவே. (௨)

ஆலநீழலா - ராலவாயிலார்
காலகாலனார் - பாலதாமினே. (௩)

அந்தமில்புக - ழெந்தையாலவாய்
பந்தியார்கழல் - சிந்தைசெம்மினே. (௪)

ஆடலேற்றினான் - கூடலாலவாய்
பாடியேமனம் - நாடிவாழ்மினே. (௫)

அண்ணலாலவாய் - நண்ணினான்றனை
யெண்ணியேதொழத் - திண்ணமின்பமே. (௬)

அம்பொனாலவாய் - நம்பனார்கழல்
நம்பிவாழ்பவர் - துன்பம்வீடுமே. (௭)

அரக்கனார்வலி - நெருக்கனாலவா
யுரைக்குமுள்ளத்தார்க் - கிரக்கமுண்மையே. (அ)

அருவனாலவாய் - மருவினான்றனை
யிருவரேத்தநின் - றுருவமோங்குமே. (௯)

Koviloor Digital Library

ஆரநாகமாஞ் - சீரனாலவாய்த்
தேரமண்செற்ற - வீரனென்பரே. (௧௦)

அடிகளாலவாய்ப் - படிகொள்சம்பந்தன்
முடிவிலின்றமிழ் - செடிகணீக்குமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

செய்யனேதிருவாலவாய்மேவிய
வையனேயஞ்சலென்றருள்செய்யெனைப்
பொய்யராமமணர்கொளுவுஞ்சுடர்
பையவேசென்றுபாண்டியற்காகவே. (௧)

சித்தனேதிருவாலவாய்மேவிய
வத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெத்தராமமணர்கொளுவுஞ்சுடர்ப்
பத்திமன்றென்னன்பாண்டியற்காகவே. (௨)

தக்கன்வேள்விதகர்த்தருள்ாலவாய்ச்
சொக்கனேயஞ்சலென்றருள்செய்யெனை
யெக்கராமமணர்கொளுவுஞ்சுடர்
பக்கமேசென்றுபாண்டியற்காகவே (௩)

சிட்டனேதிருவாலவாய்மேவிய
வட்டமூர்த்தியனேயஞ்சலென்றரு
ளிட்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பட்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (௪)

நண்ணலார்புரமூன்றெரியாலவா
யண்ணலேயஞ்சலென்றருள்செய்யெனை
யெண்ணிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பண்ணியற்றமிழ்ப்பாண்டியற்காகவே. (௫)

தஞ்சமென்றுன்சரண்புகுந்தேனையு
மஞ்சலென்றருளாலவாயண்ணலே
வஞ்சஞ்செய்தமணர்கொளுவுஞ்சுடர்
பஞ்சவன்றென்னன்பாண்டியற்காகவே. (௬)

செங்கண்வெள்விடையாய்திருவாலவா
யங்கணாவஞ்சலென்றருள்செய்யெனைக்
கங்குலாரமண்கையரிடுங்கனல்
பங்கமிறென்னன்பாண்டியற்காகவே. (௭)

தூர்த்தன்வீரந்தொலைத்தருளாலவா
யாத்தனேயஞ்சலென்றருள்செய்யெனை
யேத்திலாவமணர்கொளுவுஞ்சுடர்
பார்த்திபன்றென்னன்பாண்டியற்காகவே. (௮)

Koviloor Digital Library

தாவினாயன்றானறியாவகை
மேவினாய்திருவாலவாயாயரு
டூவிலாவமணர்கொளுவுஞ்சுடர்
பாவினான்றென்னன்பாண்டியற்காகவே. (௯)

எண்டிசைக்கெழிலாலவாய்மேவிய
வண்டனேயஞ்சலென்றருள்செய்யெனைக்
குண்டராமமணர்கொளுவுஞ்சுடர்
பண்டிமன்றென்னன்பாண்டியற்காகவே. (௧௦)

அப்பனாலவாயாதியருளினால்
வெப்பந்தென்னவன்மேலுறமேதினிக்
கொப்பஞானசம்பந்தனுரைபத்துஞ்
செப்பவல்லவர்தீதிலாச்செல்வரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் – கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துட
னாட்டமூன்றுடையாயுரைசெய்வனான்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. (௧)

மத்தயானையினீருரிமூடிய
வத்தனேயணியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண்
சித்தரையழிக்கத்திருவுள்ளமே. (௨)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந்
திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியப்பேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (௩)

ஓதியோத்தறியாவமணாதரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (௪)

வையமார்புகழாயடியார்தொழுஞ்
செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப்
பையவாதுசெயத்திருவுள்ளமே. (௫)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவாயாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சேறிவாதுசெயத்திருவுள்ளமே. (௬)

Koviloor Digital Library

பண்டடித்தவத்தார்பயில்வாற்றெழுந்
தொண்டருக்கெளியாய்திருவாலவா
யண்டனேயமண்கையரைவாதினிற்
செண்டடித்துளறத்திருவுள்ளமே. (௭)

அரக்கன்றன்கிரியேற்றவன்றன்முடிச்
செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்ப்
பரக்குமாண்புடையாயமண்பாவரைக்
கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. (௮)

மாலுநான்முகனும்மறியாநெறி
யாலவாயுறையுமண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரைச்
சாலவாதுசெயத்திருவுள்ளமே. (௯)

கழிக்கரைப்படுமீன்கவர்வாரம
ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. (௰)

செந்தெனுமுரலுந்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமணுசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

நாலடிமேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ
லாதமில்லியமணொடுதேரரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
பாதிமாதுடனாயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (௧)

வைதிகத்தின்வழியொழுகாதவக்
கைதவமுடைக்காரமண்டேரரை
யெய்திவாதுசெயத்திருவுள்ளமே
மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
னாலவாயிலுறையுமெம்மாதியே. (௨)

மறைவழக்கமிலாதமாபாவிகள்
பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறியவாதுசெய்த்திருவுள்ளமே
மறியுலாங்கையின்மாமழுவாளனே

Koviloor Digital Library

ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௩)

அறுத்தவங்கமாறாயினநீர்மையைக்
கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமே
முறித்தவாண்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௪)

அந்தணாளர்புரியுமருமறை
சிந்தைசெய்யாவருகர்திறங்களைச்
சிந்தவாதுசெயத்திருவுள்ளமே
வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௫)

வேட்டுவேள்விசெயும்பொருளைவிளி
மூட்டுசிந்தைமுருட்டமண்குண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே
காட்டிலானையுரித்தவெங்கள்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௬)

அழலதோம்புமருமறையோர்திறம்
விழலதென்னுமருகர்திறத்திறம்
கழலவாதுசெயத்திருவுள்ளமே
தழலிலங்குதிருவுருச்சைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௭)

நீற்றுமேனியராயினர்மேலுற்ற
காற்றுக்கொள்ளவுநில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே
யாற்றவாளரக்கற்குமருளினாய்
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௮)

நீலமேனியமணர்திறத்துநின்
சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர்
கோலமேனியதாகியகுன்றமே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஆலவாயிலுறையுமெம்மாதியே. (௯)

அன்றுமுப்புரஞ்செற்றவழகநின்
துன்றுபொற்கழல்பேணாவருகரைத்

Koviloor Digital Library

தென்றவாதுசெயத்திருவுள்ளமே
கன்றுசாக்கியர்காணுத்தலைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்
ஞலவாயிலுறையுமெம்மாதியே. (௧௦)

கூடலாலவாய்க்கோனைவிடைகொண்டு
வாடன்மேனியமணரைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப்
பாடல்வல்லவர்பாக்கியவாளரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண் - கொல்லி,

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லானைமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௧)

ஆகமத்தொடுமந்திரங்களமைந்தசங்கதபங்கமாப்
பாகதத்தொடிரைத்துரைத்தசனங்கள்வெட்குறுபக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துநின்றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௨)

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சத்திரத்தின்மடிந்தொடிந்துசனங்கள்வெட்குறநக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௩)

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௪)

கூட்டினார்கிளியின்விருத்தமுரைத்ததோரொலியின்றொழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
காட்டியேவருமாடெலாங்கவர்கையராக்கசிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௫)

கனகநந்தியும்புட்பநந்தியும்பவணநந்தியுங்குமணமா
சுனகநந்தியுங்குனகநந்தியுந்திவணநந்தியுமொழிகொளா
வனகநந்தியர்மதுவொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௬)

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலம்மெனவாசக
மந்தணம்பலபேசிமாசறுசீர்மையின்றியநாயமே
யந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௭)

Koviloor Digital Library

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனார்மிகைசெற்றதிப்
பாலனைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிகள்பேசியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௮)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியன்னடிபோற்றிலார்
சாமவத்தையினார்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாய்சகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௯)

தங்களுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணாதநற்சேவடி
யெங்கணாயகனேத்தொழிந்திடுக்கேமடுத்தொருபொய்த்தவம்
பொங்குநூல்வழியன்றியேபுலவோர்களைப்பழிக்கும்போலா
வங்கதர்க்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே. (௧௦)

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்திருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளக்கும்முடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநீற்றுப்பதிகம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்திருவாலவாயான்றிருநீறே. (௧)

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறுவுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (௨)

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௩)

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௪)

Koviloor Digital Library

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகெடுப்பதுநீறுவந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறுதிருவாலவாயான்றிருநீறே. (௫)

அருத்தமதாவதுநீறுவவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறுவானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறுபுண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்ததிருவாலவாயான்றிருநீறே. (௬)

எயிலதுவட்டதுநீறுவிருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறுபாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறுசுத்தமதாவதுநீறு
வயிலைப்பொலிதருசூலத்தாலவாயான்றிருநீறே. (௭)

இராவணன்மேலதுநீறுவெண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறுபாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறுதத்துவமாவதுநீறு
வராவணங்குந்திருமேனியாலவாயான்றிருநீறே. (௮)

மாலொடயனறியாதவண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண்மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்குமின்பந்தருவதுநீறு
வாலமதண்டமிடற்றெம்மாலவாயான்றிருநீறே. (௯)

குண்டிகைக்கையர்களோடுசாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுநீறுகருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளாரோத்தந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்துமாலவாயான்றிருநீறே. (௧௦)

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
றேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாசுரம் - பண் - கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. (௧)

அரியகாட்சியராய்த்தமதங்கைசேர்
எரியரேறுகந்தேறுவர்கண்டமுங்

Koviloor Digital Library

கரியர்காடுறைவாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர்பெற்றியே. (௨)

வெந்தசாம்பல்விரையெனப்பூசியே
தந்தையாரொடுதாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரால்
எந்தையாரவரெவ்வகையார்கொலோ. (௩)

ஆட்பாலவர்க்கருளும்வண்ணமுமாதிமாண்பும்
கேட்பான்புகிலளவில்லைகிளக்கவேண்டா
கோட்பாலனவும்வினையுங்குறுகாமையெந்தை
தாட்பால்வணங்கித்தலைநின்றவைகேட்கதக்கார். (௪)

ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டாசுடர்விட்டுளனெங்கள்சோதி
மாதுக்கநீங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கீரிறையேவந்துசார்மின்களே. (௫)

ஆடும்மெனவுமருங்கூற்றமுதைத்துவேதம்
பாடும்மெனவும்புகழல்லதுபாவநீங்கக்
கேடும்பிறப்பும்மறுக்கும்மெனக்கேட்டீராகில்
நாடுந்திறத்தார்க்கருளல்லதுநாட்டலாமே. (௬)

கடிசேர்ந்தபோதுமலரானகைக்கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண்டங்காட்டிடத்தாதைபண்டு
முடிசேர்ந்தகாலையறவெட்டிடமுக்கண்மூர்த்தி
அடிசேர்ந்தவண்ணமறிந்தார்சொலக்கேட்டுமன்றே. (௭)

வேதம்முதல்வன்முதலாகவிளங்கிவையம்
ஏதம்படாமேயுலகத்தவரேத்தல்செய்யப்
பூதம்முதல்வன்முதலேமுதலாப்பொலிந்த
சூதன்ஒலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே. (௮)

பாராழிவட்டம்பகையானலிந்தாட்டவாடிப்
பேராழியானதிடர்கண்டருள்செய்தல்பேணி
நீராழிவிட்டேறிநெஞ்சிடங்கொண்டவற்குப்
பேராழியீந்தபுகழும்புகழுற்றதன்றே. (௯)

மாலாயவனுமறைவல்லவனான்முகனும்
பாலாயதேவர்பகரில்லமுதூட்டல்பேணிக்
காலாயமுந்நீர்க்கடைந்தார்க்கரிதாவெழுந்த
ஆலாலமுண்டங்கமரர்க்கருள்செய்ததாமே. (௧௦)

அற்றன்றியந்தண்மதுரைத்தொகையாக்கினானும்
தெற்றென்றுதெய்வந்தெளியார்க்கரைக்கோலைதெண்ணீர்
பற்றின்றிப்பாங்கெதிர்வினவும்பண்புநோக்கிற்
பெற்றொன்றுயர்த்தபெருமான்பெருமானுமன்றே. (௧௧)

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
எல்லார்களும்பரவுமீசனையேத்துபாடல்
பல்லார்களுமதிப்பப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானோருலகாளவும்வல்லரன்றே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வீடலாலவாயிலாய்விழுமியார்கணின்கழற்
பாடலாலவாயிலாய்பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய்கபாலிநீள்கடிம்மதிற்
கூடலால்வாயிலாய்குலாயதென்னகொள்கையே. (௧)

பட்டிசைந்தவல்குலாள்பாவையாளோர்பாகமா
வொட்டிசைந்ததன்றியும்முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய்கூடலாலவாயிலா
யெட்டிசைந்தமூர்த்தியாயிருந்தவாறிதென்னையே. (௨)

குற்றநீகுணங்கணீகூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீதொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீயருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்துமுன்னுரைப்பதென்முகம்மனே. (௩)

முதிருநீர்ச்சடைமுடிமுதல்வநீமுழங்கழ
லதிரவீசியாடுவாயழகனீபுயங்கனீ
மதுரனீமணாளனீமதுரையாலவாயிலாய்
சதுரனீசதுமுகன்கபாலமேந்துசம்புவே. (௪)

கோலமாயநீண்மதிற்கூடலாலவாயிலாய்
பாலனாயதொண்டுசெய்துபண்டுமின்றுமுன்னையே
நீலமாயகண்டனேநின்னையன்றிநித்தலுஞ்
சீலமாயசிந்தையிற்றேர்வதில்லைதேவரே. (௫)

பொன்றயங்கிலங்கொளிந்நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய்பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய்கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலேநினைப்பதேநியமமே. (௬)

ஆதியந்தமாயினாயாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய்சோதியுள்ளொர்சோதியாய்
றீதம்வந்தவாய்மையாற்கிளர்தருக்கினார்க்கலா
லோதிவந்தவாய்மையாலுணர்ந்துணாக்கலாகுமே. (௭)

கறையிலங்குகண்டனேகருந்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத்தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய்மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினானினைப்பதேநியமமே. (௮)

தவணைவிடையினாய்த்தலைமையாகமொடேறுங்
கோவணவுடையினாய்க்கூடலாலவாயிலாய்
தீவணம்மலர்மிசைத்திசைமுகனுமாலுநின்
றாவணமளக்கிலார்தூக்கமெய்தவர்களோ. (௯)

தேற்றமில்வினைத்தொழிற்றேரருஞ்சமணரும்
போற்றிசைத்துநின்கழற்புகழ்ந்துபுண்ணியங்கொளார்
கூற்றுதைத்ததாளினாய்க்கூடலாலவாயிலாய்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின்றதென்னநன்மையே. (௧௦)

போயநீர்வளங்கொளும்பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினா
லாயசொல்லின்மாலைகொண்டாலவாயிலண்ணலைத்
தீயதிரவென்றுவார்கள்சிந்தையாவர்தேவரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

தி ரு வி ய ம க ம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்ததிருக்கையேயானபாடலுகந்ததிருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலநஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. (௧)

பாதிவாயுடன்கொண்டதுமாலையேபாம்புதார்மலர்க்கொன்றைநன்மாலையே
கோதினீறதுபூசிடுமாகனேகொண்டநற்கையின்மானிடமாகனே
நாதனாடொறுமாடுவதானையேநாடியன்றுரிசெய்ததுமானையே
வேதநூல்பயில்கின்றதுவாயிலேவிகிர்தனூர்திருவாலநல்வாயிலே. (௨)

காடுநீடதுறப்பலகத்தனேகாதலாளினைவார்தமகத்தனே
பாடுபேயொடுபூதமசிக்கவேபல்பிணத்தசைநாடியசிக்கவே
நீடுமாநடமாடவிருப்பனேநின்னடித்தொழநாளுமிருப்பனே
யாடலின்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே. (௩)

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாதமோதினர்பாவமறுத்தியே
துண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தியே
கண்டுகாமனைவேவவிழித்தியேகாதலில்லவர்தம்மையிழித்தியே
யண்டநாயகனேமிகுகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. (௪)

சென்றுதாதையுகுத்தனன்பாலையேசிறியன்புசெகுத்தனன்பாலையே
வென்றிசேர்மழுக்கொண்டுமுன்காலையேவிடவெட்டிடக்கண்டுமுன்காலையே
நின்றமாணியையோடினகங்கையோனிலவமல்கியுதித்தனகங்கையா
லன்றுநின்றுருவாகத்தடவியேயாலவாயரனாத்தடவியே. (௫)

நக்கமேகுவர்நாடுமோரூருமேநாதன்மேனியின்மாசுணமூருமே
தக்கபூமனைச்சுற்றக்கருளொடேதாரமுய்த்ததுபாணற்கருளொடே
மிக்கதென்னவன்றேவிக்கணியையேமெல்லநல்கியதொண்டர்க்கணியையே
யக்கினாமுதண்கலனேருமேயாலவாயரனாருமையோடுமே. (௬)

Koviloor Digital Library

வெய்யவன்பல்லுகுத்ததுகுட்டியேவெங்கண்மாசுணங்கையதுகுட்டியே
ஐயனேயனலாடியமெய்யனேயன்பினானினைவார்க்கருண்மெய்யனே
வையமுய்யவன்றுண்டதுகாளமேவள்ளல்கையதுமேவுகங்காளமே
ஐயமேற்பதுரைப்பதுவீணையேயாலவாயரன்கையதுவீணையே. (எ)

தோள்கள்பத்தொடுபத்துமயக்கியேதொக்கதேவர்செருக்கைமயக்கியே
வாளரக்கனிலத்துக்களித்துமேவந்தமால்வரைகண்டுகளித்துமே
நீள்பொருப்பையெடுத்தவுன்மத்தனேநின்விரற்றலையான்மதமத்தனே
யாளுமாதிமுறித்ததுமெய்கொலோவாலவாயரனுய்த்ததுமெய்கொலோ. (அ)

பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிநேடிடமாலொடே
துங்கநற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே
செங்கயற்கணினாரிடுபிச்சையேசென்றுகொண்டுறைசெய்வதுபிச்சையே
யங்கியைத்திகழ்விப்பதிடக்கையேயாலவாயரனாரதிடக்கையே. (கூ)

தேரரோடமணர்க்குநல்கானையேதேவர்நாடொறுஞ்சேர்வதுகானையே
கோரமட்டதுபுண்டரிகத்தையேகொண்டநீள்கழல்புண்டரிகத்தையே
நேரினார்களழித்ததுநாகமேநீள்சடைத்திகழ்கின்றதுநாகமே
யாரமாகவுகந்ததுமென்பதேயாலவாயரனாரிடமென்பதே. (௧௦)

ஈனஞானிகட்ம்மொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
யானவானவர்வாயினுளத்தனேயன்பரானவர்வாயினுளத்தனே
நானுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைநற்றமிழ்பத்துமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

வேதியாவேதகீதாவிண்ணவரண்ணாவென்றென்
றோதியேமலர்கடூவியொருங்கிநின்கழல்கள்காணப்
பாதியோர்பெண்ணைவைத்தாய்படர்சடைமதியஞ்சூடு
மாதியேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௧)

நம்பனேநான்முகத்தாய்நாதனேஞானமூர்த்தி
யென்பொனேயீசாவென்றென்றேத்திநானேசற்றென்றும்
பின்பினேதிரிந்துநாயேன்பேர்த்தினிப்பிறவாவண்ண
மன்பனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௨)

ஒருமருந்தாகியுள்ளாயும்பரோடுலகுக்கெல்லாம்
பெருமருந்தாகிநின்றாய்பேரமுதின்சுவையாய்க்
கருமருந்தாகியுள்ளாயாளும்வல்வினைகடீர்க்கு
மருமருந்தாலவாயிலப்பனேயருள்செயாயே. (௩)

செய்யநின்கமலபாதஞ்சேருமாதேவர்தேவே
மையணிகண்டத்தானேமான்மறிமழுவொன்றேந்துஞ்
சைவனேசாலஞானங்கற்றறிவிலாதநாயே
னையனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௪)

Koviloor Digital Library

வெண்டலைகையிலேந்திமிகவுமூர்பலிகொண்டென்று
முண்டதுமில்லைசொல்லியுண்டதுநஞ்சுதன்னைப்
பண்டுனைநினையமாட்டாப்பளகனேனுளமதார
உண்டனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௫)

எஞ்சலில்புகலிதென்றென்றேத்தினானேசற்றென்றும்
வஞ்சகமொன்றுமின்றிமலரடிகாணும்வண்ணம்
நஞ்சினைமிடற்றில்வைத்தநற்பொருட்பதமேநாயேற்
கஞ்சலென்றாலவாயிலப்பனேயருள்செயாயே. (௬)

வழுவிலாதுன்னைவாழ்த்திவழிபடுந்தொண்டனேனுன்
செழுமலர்ப்பாதங்காணத்தெண்டிரைநஞ்சமுண்ட
குழகனேகோலவில்லிகூத்தனேமாத்தாயுள்ள
வழகனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௭)

நறுமலர்நீருங்கொண்டுநாடொறுமேத்திவாழ்த்திச்
செறிவனசித்தம்வைத்துத்திருவடிசேரும்வண்ணம்
மறிகடல்வண்ணன்பாகாமாமறையங்கமோது
மறிவனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௮)

நலந்திகழ்வாயினூலாற்சருகிலைப்பந்தர்செய்த
சிலந்தியையரசதாளவருளினாயென்றுதிண்ணங்
கலந்துடன்வந்துநின்றன்கருதிநான்காண்பதாக
வலந்தனாலாலவாயிலப்பனேயருள்செயாயே. (௯)

பொடிக்கொடுபூசிப்பொல்லாக்குரம்பையிற்புந்தியொன்றிப்
பிடித்துநின்றுள்கவென்றும்பிதற்றினேனிருக்கமாட்டேன்
வெடிப்பவென்றிலங்கைக்கோன்வந்தெடுத்தலுமிருபதுதோ
ளடர்த்தனேயாலவாயிலப்பனேயருள்செயாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

முளைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன்முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானைவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணாக்கோத்துத்
தொளைத்தானைச்சுடுசரத்தாற்றுவளநீறாத்
தூமுத்தவெண்முறுவலுமையோடாடித்
திளைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௧)

விண்ணுலகின்மேலார்கண்மேலான்றன்னை
மேலாடுபுரமூன்றும்பொடிசெய்தானைப்
பண்ணிலவுபைம்பொழில்சூழ்பழனத்தானைப்
பசும்பொன்னினிறத்தானைப்பானீற்றானை

Koviloor Digital Library

புண்ணிலவுசடைக்கற்றைக்கங்கையானைக்
கரந்துமையோடேறாகியிருந்தான்றன்னைத்
தெண்ணிலவுதென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௨)

நீர்த்திரளைநீள்சடைமேனிறைவித்தானை
நிலமருவிநீரோட்கண்டான்றன்னைப்
பாற்றிரளைப்பயின்றாடவல்லான்றன்னைப்
பதைத்தெழுந்தவெங்கூற்றைப்பாய்ந்தான்றன்னைக்
காற்றிரளாய்மேகத்தினுள்ளேநின்று
கடுங்குரலாயிடிப்பானைக்கண்ணார்நெற்றித்
தீத்திரளைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௩)

வானமிதுவெல்லாமுடையான்றன்னை
வலியரவக்கச்சானைவன்பேய்சூழக்
கானமதினடமாடவல்லான்றன்னைக்
கடைக்கண்ணான்மங்கையுமைநோக்காவென்மே
லூனமதுவெல்லாமொழித்தான்றன்னை
யுணர்வாகியடியேனதுள்ளேநின்ற
தேனமுதைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௪)

ஊரானையுலகேழாய்நின்றான்றன்னை
யொற்றைவெண்பிறையானையுமையோடென்றும்
பேரானைப்பிறர்க்கென்றுமரியான்றன்னைப்
பிணக்காட்டினடமாடல்பேயோடென்று
மாரானையமரர்களுக்கமுதீந்தானை
யருமறையானான்முகனுமாலும்போற்றுஞ்
சீரானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௫)

மூவனைமூர்த்தியைமூவாமேனி
யுடையானைமூவுலகுந்தானேயெங்கும்
பாவனைப்பாவமறுப்பான்றன்னைப்
படியெழுதலாகாதமங்கையோடு
மேவனைவிண்ணோர்நடுங்கக்கண்டு
விரிகடலினஞ்சுண்டமுதமீந்த
தேவனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௬)

துறந்தார்க்குத்தூநெறியாய்நின்றான்றன்னைத்
துன்பந்துடைத்தாளவல்லான்றன்னை
யிறந்தார்களென்பேயணிந்தான்றன்னை
யெல்லிநடமாடவல்லான்றன்னை

Koviloor Digital Library

மறந்தார்மதின்மூன்றுமாய்த்தான்றன்னை
மற்றொருபற்றில்லாவடியேற்கென்றுஞ்
சிறந்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௭)

வாயானைமனத்தானைமனத்துணின்ற
கருத்தானைக்கருத்தறிந்துமுடிப்பான்றன்னைத்
தூயானைத்தூவெள்ளையேற்றான்றன்னைச்
சுடர்த்திங்கட்சடையானைத்தொடர்ந்துநின்ற
தாயானைத்தவமாயதன்மையானைத்
தலையாயதேவாதிதேவர்க்கென்றுஞ்
சேயானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௮)

பகைச்சுடராய்ப்பாவமறுப்பான்றன்னைப்
பழியிலியாய்நஞ்சமுண்டமிர்தீந்தானை
வகைச்சுடராய்வல்லசுரர்புரமட்டானை
வளைவிலியாயெல்லார்க்குமருள்செய்வானை
மிகைச்சுடரைவிண்ணவர்கண்மேலப்பாலை
மேலாயதேவாதிதேவர்க்கென்றுந்
திகைச்சுடரைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௯)

மலையானைமாமேருமன்னினானை
வளர்புன்சடையானைவானோர்தங்க
டலையானையென்றலையினுச்சியென்றுந்
தாபித்திருந்தானைத்தானேயெங்குந்
துலையாகவொருவரையுமில்லாதானைத்
தோன்றாதார்மதின்மூன்றுந்துவளவெய்த
சிலையானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௧௦)

தூர்த்தனைத்தோண்முடிப்பத்திறுத்தான்றன்னைத்
தொன்னரம்பினின்னிசைகேட்டருள்செய்தானைப்
பார்த்தனைப்பணிகண்டுபரிந்தான்றன்னைப்
பரிந்தவற்குப்பாசுபதமீந்தான்றன்னை
யாத்தனையடியேனுக்கன்பன்றன்னை
யளவிலாப்பல்லூழிகண்டுநின்ற
தீர்த்தனைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்த்தேவாரம்

முற்றுப்பெற்றது.

Koviloor Digital Library

உ

சிவமயம்.

சூசீபத்திரம்.

பக்கம்.	படலம்.	பாடற்றொகை.
௧	பாயிரம்	௯௦
௨௮	திருநாட்டுப்படலம்	௬௦
௯௨	திருநகரப்படலம்	௧௦௯
௧௨௦	திருக்கைலாயப்புகழ்ச்சி	௭
௧௨௩	புராணவரலாறு	௨௫
௧௩௪	தலவிசேடம்	௨௩
௧௪௪	தீர்த்தவிசேடம்	௩௬
௧௫௭	மூர்த்திவிசேடம்	௩௭
௧௭௨	பதிகம்	௧௫
௧௭௯	இந்திரன் பழிதீர்த்தபடலம்	௯௭
௨௧௮	வெள்ளையானைச் சாபந்தீர்த்தபடலம்	௩௧
௨௨௯	மதுரைக்காண்டம் திருநகரங்கண்டபடலம்	௪௭
௨௪௯	தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம்	௮௧
௨௮௪	திருமணப்படலம்	௧௧௯
௩௬௫	வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியபடலம்	௨௮
௩௭௭	குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்	௨௨
௩௮௪	அன்னக்குழியையும் வையையும் அழைத்தபடலம் ...	௨௭
௩௯௭	எழுகடலழைத்தபடலம்	௧௫
௪௦௩	மலயத்துவசனை யழைத்தபடலம்	௩௧
௪௧௭	உக்கிரகுமாரபாண்டியனது திருவவதாரப்படலம் ...	௪௫
௪௩௫	உக்கிரகுமாரனுக்கு வேல்வளை செண்டுகொடுத்தபடலம் ...	௬௬
௪௬௧	கடல்சுவற வேல்விட்டபடலம்	௨௦
௪௬௭	இந்திரன்முடிமேல் வளையெறிந்தபடலம்	௫௧
௪௮௯	மேருவைச் செண்டாலடித்தபடலம்	௪௧
௫௦௭	வேதத்துக்குப் பொருளருளிச்செய்தபடலம்	௪௨
௫௨௭	மாணிக்கம்விற்றபடலம்	௯௩
௫௭௦	வருணன்விட்டகடலை வற்றச்செய்தபடலம்	௧௯
௩	கூடற்காண்டம் நான்மாடக்கூடலானபடலம்	௨௬
௧௬	எல்லாம்வல்ல சித்தரானபடலம்	௨௪
௨௫	கல்லானைக்குக் கரும்பருத்தியபடலம்...	௨௯
௩௭	யானையெய்தபடலம்	௪௨
௫௫	விருத்தகுமாரபாலரானபடலம்	௩௩
௭௧	கான்மாறியாடினபடலம்	௨௬
௮௭	பழியஞ்சினபடலம்	௪௪
௧௦௪	மாபாதகந்தீர்த்தபடலம்	௪௧
௧௧௯	அங்கம்வெட்டினபடலம்	௨௮
௧௩௦	நாகமெய்தபடலம்	௨௩
௧௪௦	மாயப்பசுவதைத்தபடலம்	௩௮
௧௫௪	மெய்க்காட்டிட்டபடலம்	௪௧
௧௭௦	உலவாக்கிழியருளியபடலம்	௧௯
௧௭௯	வளையல்விற்றபடலம்	௩௬
௧௯௪	அட்டமாசித்தியுபதேசித்தபடலம்	௨௯
௨௦௪	விடையிலச்சினையிட்டபடலம்	௩௦

Koviloor Digital Library

பக்கம்.	படலம்.	பாடற்றொகை.
௨௧௬	தண்ணீர்ப்பந்தல்வைத்தபடலம்	௩௭
௨௩௨	இரசவாதஞ்செய்தபடலம்	௩௦
௨௪௫	சோழனைமடுவில்வீட்டியபடலம்	௨௨
௨௫௪	உலவாக்கோட்டையருளியபடலம்	௧௮
௨௬௨	மாமனாவந்து வழக்குரைத்தபடலம்	௩௭
௨௭௭	வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியபடலம்	௬௮
௩௦௬	விறகுவிற்றபடலம்	௭௦
௩௩௭	திருமுகங்கொடுத்தபடலம்	௩௦
௩௫௧	பலகையிட்டபடலம்	௧௮
௩௫௯	இசைவாதுவென்றபடலம்	௪௪
௩௭௮	பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்தபடலம்	௬௩
௪௦௧	பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியபடலம்	௧௮
௪௧௦	கரிக்குருவிக்குபதேசஞ்செய்தபடலம்...	௨௩
௪௧௩	நாரைக்கு முத்திகொடுத்தபடலம்	௨௫
௪௨௭	திருவாலவாய்க்காண்டம் திருவாலவாயானபடலம் ...	௨௮
௪௩௭	சுந்தரப்பேரம்பெய்தபடலம்	௪௪
௪௫௩	சங்கப்பலகைதந்தபடலம்	௩௬
௪௬௮	தருமிக்குப்பொற்கிழியளித்தபடலம்...	௧௦௭
௫௦௯	கீரனைக் கரையேற்றியபடலம்	௨௭
௫௩௧	கீரனுக்கிலக்கணமுபதேசித்தபடலம்...	௩௦
௫௪௩	சங்கத்தார் கலகந்தீர்த்தபடலம்	௧௪
௫௪௮	இடைக்காடன் பிணக்குத்தீர்த்தபடலம்	௩௮
௫௬௬	வலைவீசினபடலம்	௬௪
௫௧௧	வாதவூரடிகளுக்குபதேசஞ்செய்தபடலம்	௮௬
௬௪௧	நரிபரியாக்கியபடலம்	௧௨௭
௬௩௨	பரிநரியாக்கியபடலம்	௬௬
௭௧௭	மண்சுமந்தபடலம்	௧௧௪
௭௬௧	பாண்டியன்சுரந்தீர்த்தபடலம்	௬௮
௮௦௨	சமணரைக்கழுவேற்றியபடலம்	௮௨
௮௩௬	வன்னியுங்கிணறு மிலிங்கமுமழைத்தபடலம்	௫௫
௮௬௨	அருச்சனைப்படலம்	௫௩

சூ சி ப த் தி ர ம் மு ற் றி ற் று.

Koviloor Digital Library

இரண்டாங்காண்டம் சோதநபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ரு	கக	துஞ்சாதறில்	துஞ்சாதநீதல்
எ	கரு	பற்றிட	வற்றிட
கங	உ0	ஐந்துகனி வாழைக்கனி, பலாக்கனி, மாங்கனி	கூ0ரு-ம் பக்கம் ஙஉ-ம் வரியிற் காண்க
ஙஎ	கக	சித்தமூர்த்திகள்றிருவருளால்	சித்தமூர்த்திகளின் றிருவருளா[ல்
சு0	உரு	அக்காலேகொடுத்தான்	அக்காலேயைகொடுத்தான்
சுஎ	உஉ	மூப்பகன்று	பூவிற்
ஷை	உசு	கடகமாய்	கடகமுமாய்
சுக	கஎ	வைத்தகன்றுள்	வைத்தகன்றுன்
ஷை	உச	அகன்றுள்	அகன்றுன்
எஅ	ஙஉ	காலெதல்	காலெடுத்தல்
அஉ	ஙஎ	வரூந்தமும்	வருத்தத்தையும்
கூகூ	சு	யானலலெ	யானலனெ
கசஉ	உங	தாமிருக்கும்	தானிருக்கும்
கஙங	கஎ	துலேயெனவருமிடந்தோறும்	தொலேயெனக்கொள்க
கசுக	உரு	கடலாகிய	கடலுமாகிய
கஎங	உசு	றொன்று	றென்று
ககூ0	ஙஉ	கோடாருப்பில்	கோடாயிருப்பில்
உஉங	கஉ	முழக்கத்தோடு	முழக்கமுமாகிய இவைகளோடு
ஷை	கங	கடலொலியோடொன்று	கடலொலியொன்று
ஙசங	கஉ	கான	காண
ஙஎஉ	ங0	உதாரணி	உதாரவணி
ஙஎரு	சு	திக்கு	தூக்கு
ஷை	அ	மூள்ளாளர	மூள்ளாளம்
சஉஅ	உச	கயல்காட்டச்செ	கயலுட்டச்செல்விபாதமலர்
சசு0	கஎ	நீருக்தம்	நிருக்தம்
சஎ0	கஎ	வட்டிவ	வட்டவடிவ
சகூகூ	கசு	அல்கு	புறங்கா
ருகஉ	உங	அடையார்	அடியார்
எருஎ	ஙஉ	மத்தியந்தன	மத்தியந்தின
எகூசு	உஎ	முனிவர்களேயுந்தில்லேமூவாயிரவரையும்	முனிவர்களாகிய திருவுடையந்தணர்மூவாயிரவரையும்
அஎஉ	கஎ	அடிமுடிகளொன்றனுள்	அடிமுடிகளிரண்டனுள்
அஎஎ	உசு	யாவையும்	யாவரும்
		ஆலயம் எனவருமிடந்தோறும்	ஆலயம் எனக்கொள்க.

மூன்றாங்காண்டத்தில் விடுபட்டவைகளுள் ரு0க-ம் பக்கத்தில் "கொங்குதேர்வாழ்க்கை" என்னுந்திருப்பாசுரத்துள் உவவுகபெற்றி அஃறிணையை யுயர்திணையாக்கிக் கூறினமையால் உவமவாயிற்படுத்தினர் என்க.

ருகூ-ம் பக்கத்தில் "நகைத்திடவந்த" என்னுஞ்செய்யுளில் "எலிக்கரசாள" என்றது வேதாரணியத் திருத்தலத்தி லெலிக்கருளியதெனவும், ருஉரு-ம் பக்கத்தில் ஞெண்டுபூசித்தது கற்கடேச்சரத் திருத்தலத்தில்எனவும், அஅஎ-ம் பக்கத்தில் "மறிநுதலிமயச்செல்வி" என்றசெய்யுளில் "அறக்கடவுள் பூசைபண்ணியதானம்" தருமதேவதை பூசைசெய்த திருவாவடுதுறையென்னுந் திருத்தலம் எனவுங்கொள்க.

மதுரைக்காண்டம் உங-ம் பக்கத்தில் பந்தமாந்தொடக்கு என்றது - ஆம் ... றும் வினையிடைச்சொல் விரிந்துநின்ற இருபெயரொட்டு என்க. உஎஅ-ம் பக்கம் "அல்லுமெல்லும்" என்னும் செய்யுளில் "எந்தையோடைவர்" என்றதில் ஐவர்பஞ்சசுரர், வசுபூர்ணர், சொச்சவிந்தியர் யக்ஷர், வித்தியாதரர் என்க. ங0ரு-ம் பக்கத்தில் "மின்னரமிதுனம் எனச்செல்வார்" என்னுஞ்செய்யுளுக்குக் மின்னரம்மிதுனமென்னும் பக்ஷிகளேப்போலச் செல்வார் எனக்கொள்க. சஉச-ம் பக்கம் "குடபுலத்தரசும்" என்றசெய்யுளில் "அடல்கெழுதொண்டைத்தண்டாரரசனும்" என்றதற்கு வெற்றிமிக்க தண்ணிய ஆதொண்டைமலர்மாலையையணிந்த ஆதொண்டையரசனும் எனக்கொள்க.